3944

Madras Legislative Assembly debates

Vol III No 1 — 11

6th July — 19th July 1957

One set for binding.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Saturday, the 6th July 1957.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at Nine of the clock, Mr. Speaker (THE HON. Dr. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Cycle rickshaws.*

* 67 Q.—SRI S. PAKKIRISAMI PILLAI: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any applications from young men for licences and badges for driving cycle rickshaws have been rejected during this year in the City of Madras;

(*b*) if so, how many; and

(*c*) the steps taken to provide alternate employment to such young men?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes Sir.

(*b*) About 50.

(*c*) The applicants concerned did not have previous licences to draw or to drive rickshaws for which reason they were not recruited to a profession which it is the policy of Government to eliminate in view of its degrading and debilitating nature. The question of providing alternative employment does not arise, as the usual sources and agencies for employment are open to the applicants.

SRI S. PAKKIRISAMI PILLAI: வேலை இல்லாத இந்தக் காலத்திலே ஒரே ரிக்ஷாவுக்கு லைசென்சு வாங்கும் ஒரு வாய்ப்பு இரண்டு அல்லது மூன்று பேர்களுக்குக்கிடைத்தால் நல்லது அல்லவா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ரிக்ஷா இழுப்பதைக் கூடிய சீக்கிரத்தில் எடுத்து விடுவது என்பதுதான் இந்த அரசாங்கத்தினுடையவும் மத்திய அரசாங்கத்தினுடையவும் கொள்கை, இது ரொம்ப கேவலமான தொழில் என்ற காரணத்தால். ஆகையால், இதுவரையில் ரிக்ஷா இழுப்பவர்கள் இப்பொழுது பாதிக்கப்படவில்லை. இனி புதிதாக லைசென்சு வழங்குவது இல்லை என்பது தான் இந்த அரசாங்கம் அனுசரித்துவரும் கொள்கை.

SRI A. A. RASHEED: What exactly will be the time taken by the Government to abolish the rickshaws totally in the Madras State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: There is a phased programme, according to which rickshaw-plying is to be wholly abolished. I cannot tell the hon. Member what exactly the time will be within which rickshaws will be totally abolished.

[6th July 1957

**Sri P.S. CHINNADURAI** : யலம் வாரிக் கொட்டும் வேலையில் பல ஆயிரக்கணக்கான பேர்கள் தமிழ்நாட்டில் ஈடுபட்டிருக்கின்றார்கள். அதை விடக் கேவலமாக சைக்கிள் ரிக்ஷா உந்துவதை சர்க்கார் கருதுகிறார்களா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : உடல்நிலையைப் பற்றி கவனித்தால, அதைவிடக் கேவலமானது என்று அரசாங்கம் மட்டும் அல்ல, யாவரும் கருதக் கூடும்.

**Sri K. VINAYAKAM** : Probably, the Government are actuated by humanitarian considerations that dragging a rickshaw is an inhuman act and so on. Are the Government aware that rickshaw is the cheapest mode of conveyance which can negotiate small lanes for which the City of Madras is famous and if so, what is the alternative mode of transport which the Government suggest, apart from the cycle and auto-rickshaws which are costlier?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : From the point of view of the user of the rickshaw, this may be a cheaper mode of conveyance. But we have to take into consideration the fate of the puller of the rickshaw. This is not in vogue in several countries and foreigners who come here are even greatly surprised to see the sight of men pulling rickshaws carrying other men.

**Sri M. JAGANNATHAN** : May I know when this discovery that rickshaw-pulling is degrading and debilitating in nature was made? What is the reason for the Government not discovering it earlier and preventing it at that stage itself?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : 'Discovery' is not the proper word for that. The view that it is degrading and debilitating has been there always. I do not know whether the hon. Member could tell me when the discovery was made that palanquin-bearing is bad.

61200

**Sri S. B. ADITYAN** : சைக்கிள் ரிக்ஷா ஓட்டுவது கேவலமானதும் மனிதத்தன்மை அற்றதும் ஆன தொழில் என்று மந்திரி அவர்கள் சொன்னார்கள். சைக்கிள் ரிக்ஷா ஓட்டுவதைவிட சாதாரண ரிக்ஷா இழுப்பது இன்னும் கேவலமானதும், அதிகப்படி மனிதத் தன்மை அற்றதுமாக இருக்கும்போது, அதை முதலிலே ஒழிப்பதற்கு அரசாங்கம் திட்டமிடுமா என்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னதே தான் அரசாங்கம் அனுசரித்து வரும் கொள்கை.

**Sri V. K. KOTHANDARAMAN** : ரிக்ஷாக்களுக்கு லைசென்சு கொடுக்கும் முறையிலே சர்க்காருடைய 'பாலிஸியை' நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், அதே நேரத்தில் புதிய லைசென்சுகள் கொடுப்பதில்லை என்று சொன்னாலும், ஏற்கெனவே லைசென்சு வாங்கியிருக்கக் கூடியவர்கள் தாங்களாகவே லைசென்சு வாங்க வில்லை என்று சொன்னால், அவர்களுக்கு மட்டிலும் லைசென்சு கொடுக் காமல் நிறுத்துவதை நடைமுறையிலே கொண்டுவருவார்களா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : இத்தகைய புகார்கள் மதுரையிலும் வேலூரிலும் எனக்குக் கிடைத்தன. இதுவரை சைக்கிள் ரிக்ஷாக்களும் கை ரிக்ஷாக்களும் வைத்துக்கொண்டிருந்தார்களே, அவர்கள் எல்லோருக்கும் அந்த ரிக்ஷாக்களை மீண்டும் ஓட்டுவதற்கு லைசென்சு கொடுத்து விடலாம் என்று அதிகாரிகளுக்கு நான் சொல்லியிருக்கிறேன்.



6th July 1957]

**Sri K. VINAYAKAM** : I fully realize the barbarous aspect involved in pulling rickshaws. But comparatively, driving a cycle rickshaw is much easier. Therefore, will the Government consider the possibility of issuing licences for cycle rickshaws? If the Government still persist that they cannot think of issuing licences for these, what is the alternative mode of living which the Government suggest for those who will be thrown out of employment?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : I do concede pulling cycle rickshaws is not so bad as drawing hand-rickshaws. But still, even those who drive cycle-rickshaws do stand to have their health considerably deteriorated. But the Government still do make a difference between cycle rickshaws and hand-rickshaws. So far as cycle rickshaws are concerned, as I have already stated, licences are refused only to those who have not so far been engaged in pulling cycle rickshaws. So, there is no question of people engaged in pulling cycle rickshaws being thrown out of employment on account of the present policy pursued by the Government.

**Sri. A. VEDARATHNAM PILLAI**: தலைவர் அவர்களே, இப்பொழுது லைசென்சு பெற்றவர்களுடைய லைசென்சு ரத்து செய்வது இல்லை என்று மந்திரி அவர்கள் சொன்னார்கள். அந்தப் பரம்பரையில் வந்த அவர்களுடைய பிள்ளைகளுக்கு வேலை கொடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : பொதுவாக நாட்டிலுள்ள வேலை இல்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்குத் திட்டம் வகுத்து நிறைவேற்றிப் பார்ப்பதைத் தவிர, வேறு குறிப்பாக எந்தத் தொழிலிலாவது இருக்கின்றவர்களுக்கு, அதிலும் கேவலமான தொழிலில் இருக்கின்றவர்களுக்கு—அவர்களுடைய பிள்ளைகளுக்கு—தொழில் கொடுப்பதற்காக பிரத்தியேகமான திட்டம் ஒன்றும் இல்லை.

**Sri P. G. MANICKAM** : சைக்கிள் ரிக்ஷா ஓட்டுபவர்களும், கை ரிக்ஷா இழுப்பவர்களும் பெரும்பாலோர் ஹரிஜனங்களாகவே இருக்கிறார்கள். ரிக்ஷா இழுப்பது ஈனத் தொழில் என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்ள வேண்டியது தான். ஆகையால், அந்தத் தொழிலை உடனடியாக ஒழித்து விட்டு, இவர்களுக்கெல்லாம் சர்க்கார்த் தொழிற்சாலையில் உடனடியாக வேலை கொடுப்பதற்கு கவர்ன்மெண்டார் முன்வருவார்களா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : எந்தத் தொழிலும், எவ்வளவு ஈனமாகக் கருதப்பட்டாலும், அதை உடனடியாக ஒழிப்பது என்பது அசாத்தியம். ஆனால், எவ்வளவு சீக்கிரம் இதைப் படிப்படியாக எடுக்க முடியுமோ அப்படி எடுத்துவிட்டு, அதனால் ஏற்படக்கூடிய வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகப்படுத்தாமல், அதை அகற்றப்பார்க்கின்றோம். இந்தக் கொள்கையை அனுசரிப்பதனால் வேலையை இழக்கின்றவர்களுக்கு வேலை கிடைக்கச் செய்வதற்குத் தான் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

**Sri P. S. SANTHANAM** : அந்தத் தொழிலைச் செய்து கொண்டிருந்தவர்கள் வேலையை இழப்பதனால், அவர்கள் வாழ்க்கை நடத்துவதற்காக அவர்களை வேறு துறையில் ஈடுபடுத்த அரசாங்கம் ஏதாவது திட்டம் வைத்திருக்கிறார்களா ?

**Thr Hon. Sri M. BHAKTAVATSALAM** : இதைப்பற்றி நான் முன்பே சொல்லியிருக்கிறேன். இதுவரை அந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களுடைய வாழ்க்கை பாதிக்கப்படவில்லை. எந்தத் தொழிலை இழக்கின்றவர்

களுக்கும் வேறு வேலை கொடுப்பது என்பது, பொதுவாக வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்காக எடுத்துக்கொள்ளப்படும் திட்டங்களைச் சார்ந்ததாகும்.

9-10 p.m. **Sri V. SANKARAN** : மதுரை போன்ற நகரங்களிலே சைக்கிள் ரிக்ஷாக்கள் மிகவும் பிரபலமாக இருக்கிறது. மிகவும் மலிவாகவும் இருக்கிறது. வக்கீல்கள் டாக்டர்கள் இவர்களெல்லாம் ட்ரௌஸர் அழுக்குப் படமால் போக சைக்கிள் ரிக்ஷா ரொம்ப சௌகரியமானதாய் இருக்கிறது. இதை நிறுத்திவிட்டால் அதற்குப் பதிலாக வேறு வாகனுதிகள் இடையாது. அதனுல்தான் இது மிகப் பிரபலமாக இருக்கிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : இருக்கலாம், டாக்டர்கள். லாயர்கள் எல்லாரும் நீட்டாக ட்ரெஸ் செய்துகொண்டு நிஜார் போட்டுக் கொண்டு போக இவைகள் வசதியாக இருக்கலாம். அதே சமயத்தில் அந்த ரிக்ஷாக்களை இழுக்கிறவர்கள் நிலையைக்கருதவேண்டும். மதுரையிலே இப்போது இருக்கிற ரிக்ஷாக்களை குறைப்பதாக இல்லை. ஆனுல் இவைகளை அதிகப்படுத்துவதில்லை என்பதுதான் சர்க்கார் தற்காலம் அனுசரிக்கும் கொள்கை.

**Sri K. SATTANATHA KARAYALAR** : பார வண்டி இழுப்பவர்கள், மாட்டுக்குப் போட்டியாக மனிதன் போட்டியிடும் இந்தப் போட்டியை நிறுத்த வேண்டாமா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : சைக்கிள் ரிக்ஷாவைப் படிப்படியாக நிறுத்த வேண்டுமென்று சொன்னுல், பெரும் பார வண்டி இழுப்பதை நிறுத்த வேண்டியதில்லை என்று அர்த்தம் அல்லவென்று கனம் அங்கத்தினருக்குச் சொல்லுகிறேன்.

**Sri K. ANBAZHAGAN** : தலைவர் அவர்களே, இந்த சைக்கிள் ரிக்ஷா இழுக்கிற தொழில் குறித்து அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது, ஈனமான தொழில் என்று சொன்னுர்கள். இந்தக் காலத்தில் உடலை வருத்தி செய்யும் எந்தத் தொழிலும் ஈனமான தொழிலல்ல என்ற கருத்து இருக்கிற நேரத்திலே ரிக்ஷா இழுப்பது துன்பமான ஒரு தொழில், வருந்தத்தக்க ஒரு தொழில், கடினமான ஒரு தொழில் என்றே இனி சொல்லப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : சைக்கிள் ரிக்ஷாவைப் பொருத்தமட்டும் அது ஈனம் என்று சொல்லவில்லை. இப்படி இழுப்பதால் உடல் நிலை கெட்டுப்போகிறது என்றுதான் குறிப்பிட்டேன்.

**Sri K. VINAYAKAM**. Before the Government adopted this attitude, there were about 3,000 cycle-rickshaws and also ordinary rickshaws. After this policy was adopted, the Police authorities are sticking to a figure like 1,000 per year. What is the holy aspect or sanctity about this figure 1,000 ? Why should they not put the figure at 1,500, when it was comparatively 3,000 before ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : Sir, there is no sanctity at all about any figure or any statistics. But some figure has to be fixed. Government do not stick to any particular figure. Government consider the situation every year, and there should be no difficulty if they think that the figure one thousand should be increased to one thousand two hundred or one thousand five hundred.



**Sri V. SANKARAN** : இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன்னர் மதுரையிலே எழு எட்டு ஆடோ ரிக்ஷாக்கள் வந்தன. அது அங்குள்ள ஜனங்கள் ஆதரவில்லாமல், மதுரையிலேயிருந்து எடுபட்டு போய்விட்டது. இப்படி இருக்கும்போது இந்த சைக்கிள் ரிக்ஷாவை எடுத்துவிட்டால் அதற்கு பதிலாக அங்கு வேறு போக்குவரத்து சாதனம் இருக்காது. அங்குள்ள பொது ஜனங்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கும் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : இப்போது சைக்கிள் ரிக்ஷா இழுக்கிற நிலைமையை பற்றித்தான் சொன்னேன். மதுரை ஜனங்கள் ஆடோ ரிக்ஷாக்களை ஆதரிக்க முன் வரவேண்டும்.

### *Appointment of Sub-Postmasters as Stamp-vendors.*

* 68 Q.—**Sri K. R. VISWANATHAN** : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

**(a) whether the Government have received any representation, dated 3rd September 1956, from one Sri Rajagopala Iyengar of Jayamkondan to the effect that the Board's Standing Orders relating to the appointment of Sub-Postmasters as Stamp-vendors should be amended ; and**

(b) if so, the action taken thereon?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : (a) Yes.

(b) the matter is engaging the attention of the Government.

**Sri K. R. VISWANATHAN** : ஸார் இந்த ஸப்-போஸ்ட்மாஸ்டர்களை பத்திரம் கொடுக்கும் எஜெண்டுகளாக நியமிப்பது அவர்களுக்கு அதிக வருமானம் கொடுக்கும் நோக்கத்தோடா, அல்லது இப்படி விற்பதால் சர்க்காருக்கோ பொதுமக்களுக்கோ நன்மை உண்டு என்ற நோக்கத்திலேயா ?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : கனம் அங்கத்தினர் சொன்னதுபோல நோக்கம் ஒன்றுமில்லை இப்போது போஸ்ட்மாஸ்டர்களில் மூன்று பிரிவுகள் இருக்கின்றன, அதாவது போஸ்ட்மாஸ்டர், ஸப்-போஸ்ட்மாஸ்டர், பிராஞ்ச் போஸ்ட்மாஸ்டர். போஸ்ட்மாஸ்டர்களுக்கும், ஸப்-போஸ்ட்மாஸ்டர்களுக்கும் சென்ட்ரல் கவன்ர்மெண்ட் ஸ்கேலில் அதிக சம்பளம் கிடைக்கிறது. பிரான்ச் போஸ்ட்மாஸ்டர்களுக்கு அப்படி அல்ல. ஆகையால் இந்தக் கமிஷன் அவர்களுக்கு இல்லாமல் ஏன் செய்யக்கூடாது என்ற யோசனையில்தான்.

**Sri A. GOVINDASAMY** : போஸ்ட்மாஸ்டர்கள் மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள். ஸ்டாம்ப் வெண்டர் நம் அரசாங்கத்தைச் சேர்ந்தது. இப்போது இருக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க இவைகளை இரண்டு தனிப்பட்ட நபர்கள் பார்ப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : வேலையில்லா திண்டாட்டத்தை ஒழிக்கும் திட்டத்திலே இதுவும் உட்பட்டிருக்கும்.

**Sri K. R. VISWANATHAN** : போஸ்ட்மாஸ்டர்களும், ஸப்-போஸ்ட்மாஸ்டர்களும் இந்த ஸ்டாம்பு விற்பதில் பொதுமக்களுக்கோ அல்லது சர்க்காருக்கோ சௌகரியம் இல்லாதிருப்பதால் இதை மாற்றித் தனி யாரிடம் விட்டு இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க அரசாங்கம் முன்வருமா ?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : கனம் அங்கத்தினர் நினைப்பது போல்தான் நானும் நினைக்கிறேன். இதைப்பற்றி கூடிய சீக்கிரம் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

SRI M. S. SELVARAJAN : இந்த ஸ்டாம்ப் விற்கும் வேலையை போஸ்ட்மாஸ்டர்களிடம் கொடுக்கும் காரணம் அவர்களிடம் ஸ்டாம்ப்கள் பாதுகாக்கப்பட்டு பத்திரமாக இருக்கும் என்ற காரணத்திற்கா, அல்லது விற்கும் பணம் நாணயமாக பாதுகாக்கப்படும் என்ற நம்பிக்கை இருக்கிறதாலா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இரண்டும் இருக்கிறது என்ற நம்பிக்கையால்தான். அதோடு ஸெக்யூரிடியும் வாங்குகிறார்கள்.

*Mica ore.*

* 69 Q.—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) Whether the Government are aware of the existence of mica ore near Savariapuram attached to Srivenkateswarapuram village in Tiruchendur taluk; and

(b) if so, the action taken in the matter?

**THE HON. SRI R. VENKATARAMAN : (a) A detailed geological and mineral survey of the area around Srivenkateswarapuram village in Tiruchendur taluk, Tirunelveli district, was carried out by the Geological Survey of India during the field season 1946-47 but no occurrence of mica ore was reported from Savariapuram.**

(b) Does not arise.

SRI M. S. SELVARAJAN : சமீபத்தில் கூட அந்த இடத்தில் மைகா தென்படுவதாக அதிகாரிகள் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதா ? ஆகவே மறுபடியும் எங்கெங்கெல்லாம் கிணறுகள் தோண்டப்படுகின்றதோ அந்த இடங்களில் எதாவது தென்பட்டால் சர்க்காருக்கு செலவில்லாமல் பரிசீலனை செய்து நடக்கக்கூடியது என்று அறிந்தால் சர்க்கார் மீண்டும் பரிசீலனை செய்வார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஒரு ஜியலாஜிகல் சர்வே நல்ல முறையில் நடத்தப்பட்ட பிறகு, வேறு யாரோ கிடைக்கிறது என்று சொன்னால், மீண்டும் பணத்தை செலவழித்து விரயமாக்குவது சரியல்லவென்று நினைக்கிறேன்.

SRI T. T. DANIEL : Sir, may I know whether the Government have made a general survey to find out the deposits of mica in the State? Are the Government aware that huge deposits of mica are available in Kanyakumari district, and will the Government be pleased to make a survey and start a mica industry in that district?

THE HON. SRI R. VENKATARAMAN : I have no information about Kanyakumari district. A separate question may be put.

*Bus service from Gudiyatham*

* 70 Q.—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether the Government have received resolution No. 460, passed at the meeting of the Gudiyatham Municipal Council on 26th October 1956, for the running of more buses from that place;

(b) if so, when;

(c) the places suggested in the said resolution ; and

(d) the action taken thereon?



THE HON. SRI V. RAMIAH : (a) No, Sir.

(b), (c) & (d) Do not arise.

SRI K. VINAYAKAM : Have similar requests been made from other municipalities, for example, Walajabad?

THE HON. SRI V. RAMIAH : I have no information.

MR. SPEAKER : The Hon. Minister can ask for notice.

SRI V. K. KOTHANDARAMAN : பொது ஜன சௌகரியத்தை முன்னிட்டும், நகர சபைகளின் பொருளாதார நெருக்கடி தீர்வதற்கு அரசாங்கம் அதிகப் பணம் கொடுக்க முடியாத நிலையில் இருப்பதை முன்னிட்டும், நகர சபைகளோ அல்லது தனிப்பட்ட மற்றவர்களோ நடத்துவதற்கு மேலும் பஸ் ரூட்டுகளை அனுமதிக்கக் கூடாதா ?

MR. SPEAKER : முனிஸிபாலிடியிலிருந்து ரெஸல்யூஷன் ஒன்றும் வரவில்லையென்று சொன்னார். இதற்கு தனிக் கேள்வி கேட்கவேண்டும்.

SRI V. K. KOTHANDARAMAN : ரெஸல்யூஷனை அனுப்பிவைத்திருக்கிறார்கள். அதனுடைய காப்பியை எனக்கும் அனுப்பியிருக்கிறார்கள் . . . .

MR. SPEAKER : ரெஸல்யூஷன் வரவில்லையென்று சொன்ன பிறகு எப்படிக் கேட்கமுடியும்.

SRI K. VINAYAKAM : What is the policy of the Government? Is it in favour of issuing licences to municipalities to run bus services in their areas just as the Government are carrying on enterprises like the State Trading Corporation? The municipalities are now suffering for want of sufficient funds. They can augment their revenues if they run utility services in their areas.

MR. SPEAKER : I suppose what I said to Mr. Kothandaraman applies to Mr. Vinayakam also. I have no objection if the Hon. Minister will answer the question.

THE HON. SRI V. RAMIAH : A separate question may be put, Sir.

SRI A. GOVINDASAMY : நண்பர் கோதண்டராமன் கேள்விக்கு எலெக்ட்ரிஸிடி மந்திரி பதில் சொல்லுகிறபோது இந்தத் தகவல் அவர்களுக்கு வரவில்லையென்று சொன்னார்கள். முனிஸிபாலிடி போட்ட தீர்மானம் லோகல் அட்மினிஸ்ட்ரேஷன் மினிஸ்டருக்கு வந்திருக்கிறதா ?

THE HON. SRI V. RAMIAH : அவர்களுக்கும் வரவில்லை.

*Refugees from Ceylon*

* 71 Q.—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the Officer appointed to go into the question of rehabilitation of the refugees from Ceylon has submitted his report; and

(b) if so, the nature of his recommendations?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) The Special Officer has suggested several methods of providing employment to the repatriates and these are under consideration.

SRI K. R. VISWANATHAN : இலங்கையில் இந்தியர்களை இலங்கை குடி மக்களாகப் பதிவு செய்து கொள்வதில் கஷ்டம் ஏற்பட்ட பிறகு எத்தனை பேர்கள் தமிழ் நாட்டிற்குப் திரும்பி வந்திருக்கிறார்கள் ? அவர்களில் எத்தனை பேர் தங்களுக்கு உதவி வேண்டுமென்று அரசாங்கத் தாருக்கு விண்ணப்பம் செய்துள்ளார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எத்தனை பேர்கள் இங்கே வந்திருக்கிறார்கள் என்று அடுத்த கேள்விக்கு பதில் கொடுக்கும்போது சொல்கிறேன். எத்தனை பேர்கள் உதவி கோரியிருக்கிறார்கள் என்பதுபற்றி இப்போது என்னிடம் தகவல் இல்லை.

SRI S. B. ADITYAN : பாகிஸ்தானிலிருந்து இந்தியாவிற்குத் திரும்பி வந்த அகதிகளுக்கு வியாபாரத் துறையிலும் உத்தியோகத் துறையிலும் அரசாங்கம் என்ன என்ன உதவிகளையெல்லாம் செய்ததோ, அப்படிப் பட்ட உதவிகளை யெல்லாம் இப்பொது இலங்கையிலிருந்து திரும்பி வருபவர்களுக்கும் அரசாங்கம் செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : " ஸ்பெஷல் ஆபீஸர் " அதைப்பற்றி சில சிபாரிசுகள் செய்திருக்கிறார்கள். அந்த சிபாரிசுகள் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

SRI M. ALAGIRISAMY : " தமிழ் அரசு " " திராவிட நாடு " என்றெல்லாம் நமது ராஜ்யத்தில் பேசப்படுவதாவது, இலங்கை போன்ற பிற நாடுகளில் வசிக்கும் தமிழர்களுக்கும், அங்குள்ள பூர்வ குடிகளுக்கும் இடையே நிலவி வரும் உறவை பாதிக்கக்கூடிய நிலையில் இருப்பது கனம் மந்திரி அவர்களுக்குத் தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது கனம் அங்கத்தினரின் அபிப்பிராயம் என்பதை நான் தெரிந்துகொள்கிறேன்.

SRI M. JAGANNATHAN : செல்வம் கொழிக்கும் இன்பத் தமிழகத்தில் வாழ வகை அறியாமல் அன்று இங்கிருந்த வறுமையால் பீடிக்கப்பட்ட தமிழர்கள் இலங்கைக்குப் பிழைக்கச் சென்று இப்போது அங்கேயிருந்தும் துரத்தப்படுகிறார்கள். மறுபடியும் பட்டிக்காட்டில் பசியால் வருந்தி உயிர் துறக்கக்கூடிய நிலையில் அவர்களை விட்டுவிடாமல், அவர்கள் வாழ வழிவகை செய்வதற்கு நமது தமிழ் நாட்டில் எதாவது நல்ல உத்தியோகங்களைக் கொடுக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவர்களுடைய நல் வாழ்க்கையைக் காப்பதற்காகத் தான் தனியாக ஒரு அதிகாரி நியமிக்கப் பட்டார். அவர் பரிசீலனைகள் செய்து சிபாரிசுகளை அனுப்பியிருக்கிறார். அதை கவனித்து, அவற்றில் சாத்தியமானவைகளை கூடிய சீக்கிரத்தில் நிறைவேற்றுவதில் தான் அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டிருக்கிறது.

SRI A. GOVINDASAMY : இலங்கையிலிருந்து திரும்பிவரும் தமிழர்களுடைய நிலையை உயர்த்துவதற்கு அந்த அதிகாரி என்ன என்ன சிபாரிசுகள் செய்திருக்கிறார்கள்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சிபாரிசுகளை சுருக்கமாகக் கூறுகிறேன், **His recommendations are as follows :—**

(1) Provision of employment in Government service by relaxing age and educational qualifications prescribed in respect of those who are graduates or S.S.L.C. holders and by giving priority in respect of those seeking employment as menials.



(2) Provision of employment in mills and factories for manual labourers.

(3) Grant of loan to artisan repatriates.

(4) Major industries like textile mills, cement factories, fish-canning factories and sugar factories.

(5) Small-scale industries, e.g., Ambar Charka spinning, hand-pounding of rice, poultry farming, bee-keeping, match making, coir making, palmyra fibre and brush making, salt production, boat building, manufacture of fishing nets, chank industry, leather goods making, brick making and manufacture of bolts and nuts.

(6) Other schemes like raising coconut and palmyra plantations, re-opening of Kayalpatnam minor port and Co-operative Bus Transport.

(7) Grant of concession to repatriates with mercantile experience such as treating them as established importers and exporters, granting them loans and granting exemption from sales-tax to those with a turnover of Rs. 20,000 a year or less.

(8) Preferential treatment in recruitment to the Mercantile Navy and Railway.

(9) Securing employment in the tea and coffee plantations in the Nilgiris.

(10) Concession in school and college fees and preference in admission in training schools and professional and industrial institutions.

SRI K. ANBAZHAGAN : இலங்கையிலிருந்து தமிழ் நாட்டிற்குத் திரும்பிவரும் மக்களில் பெரும்பாலோர் வாழ்க்கைத் துறையில் மட்டுமல்லாமல் கல்வித் துறையிலும் மிக மிகப் பிற்பட்டவர்கள். அவர்களையெல்லாம் அகதிகள் என்று தனியாகக் கருதி, அவர்களிடமிருந்து விண்ணப்பங்களை எதிர்பாராமல் அவர்கள் இந்த நாட்டுக்குத் திரும்பிய உடனேயே எதாவதொரு பெரிய தொழிலில் அவர்களை ஈடுபடுத்துவதற்கு அரசாங்கம் திட்டமிடுமா ? அப்படியானால், மத்திய அரசாங்கத்தார் மற்ற நாட்டு அகதிகளுக்காகக் கொடுக்கும் பேருதவிகளைப் போன்று, இலங்கை அகதிகளுக்காகப் பெரிய தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்குப் பேருதவி தரவேண்டும் என்று அந்த அரசாங்கத்தாரை நமது அரசாங்கத்தார் கேட்பார்களா ? அப்படிப்பட்ட பெரிய தொழிலை ஆரம்பிக்கும்போது அதை திருநெல்வேலி அல்லது ராமனாதபுரம் மாவட்டத்தில் அமைக்க அரசாங்கம் திட்டமிடுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அந்த அகதிகள் பல ஜில்லாக்களைச் சேர்ந்தவர்கள். இலங்கையிலிருந்து திரும்பிவரவேண்டிய அவசியம் ஏற்பட்டபிறகு அவர்கள் தங்கள் சொந்த இடங்களுக்குச் செல்லப் பிரியப்படுகிறார்கள். அவ்வாறு தங்கள் சொந்த இடங்களுக்குச் சென்றிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் முக்கியமாக ராமனாதபுரம், தஞ்சாவூர், திருச்சி, திருநெல்வேலி ஆகிய நான்கு ஜில்லாக்களைச் சேர்ந்தவர்கள் பெரும்பாலோர். அவர்கள் எல்லோரையும் ஒரே இடத்தில் வைத்து ஒரு பெரிய தொழில் நடத்துவது என்பது அவ்வளவு உகந்தது அல்ல. மேலும் பெரிய தொழில்களில் வேலை கொடுக்க அவ்வளவு வசதி இல்லை. ஆகவேதான் சிறு சிறு தொழில்களை கிராமங்களில் அமைத்து ஆங்காங்கே உள்ள அகதிகளுக்கு அவை பயன்படும்படி செய்யும் திட்டம் அரசாங்கத்தின் முக்கிய கவனத்தில் இருந்துவருகிறது.

[6th July 1957

SRI K. VINAYAKAM : Sir, Will the Government be pleased to give us an idea of the time-limit before which the recommendations of this officer could be profitably implemented?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I am sorry I cannot give the hon. Member any idea of the time-limit before which the recommendations would be implemented. But I can assure him that the Government would not cause any avoidable delay and they are interested in taking decisions as early as possible.

SRI M. S. SELVARAJAN : அரசாங்கத்திற்கும், இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியுள்ளவர்களுக்கும் மத்தியில், இரண்டு பேர்களுடைய காரியங்களையும் கவனிக்கக்கூடிய ஒரு ' லியாசன் ' அதிகாரியை நிய மிப்பதுபற்றி அரசாங்கம் கவனிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த விஷயமும் மற்ற எல்லா விஷயங்களும் இப்பொழுது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

SRI A. GOVINDASAMY : இலங்கையிலிருந்து திரும்பிவருகிற அகதிகளுக்கு வேலை கொடுப்பதற்காகப் பல திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமானால் அதிகச் செலவு ஏற்படும் என்பது கனம் மந்திரி அவர்கள் கொடுத்த பதலிலிருந்து தெரிகிறது. ஆகவே இதற்கு மத்திய அரசாங் கத்தின் உதவியை நமது அரசாங்கம் கோருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : திட்டங்கள் வகுக்கப்பட்ட பிறகு, எந்த எந்தத் திட்டங்களுக்கு மத்திய அரசாங்கத்தின் உதவியை அவசியம் கோரவேண்டும் என்பதுபற்றி அரசாங்கம் யோசிக்கும்.

SRI V. SANKARAN : இலங்கையிலிருந்து இங்கே திரும்பி வரும் தமிழர்களை ஸ்ரீ அன்பழகன் அவர்கள் சொல்வது போல் வேலை கொடுப்பதற்காகத் தனியாக அகதிகள் என்று அழைக்கப்பட்டு ஒதுக்கி வைத்தால்; வடக்கே கௌரவக் குறைவாகக் கருதப்பட்டது போல தமிழ் நாட்டு அகதிகளுக்கும் கௌரவக் குறைவு ஏற்படக்கூடிய நிலைமை ஏற்படாதா ? அப்படி அவர்களை ஓரிடத்தில் ஒதுக்கி வைத்தால், அவர்கள் தமிழ் நாட்டு மக்களுடன சேர்ந்து கலந்து வாழ்வதற்கு இடம் கொடுக்காத தவறை செய்வதாக ஆகும் என்று சர்க்கார் கருதுகிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் கூறும் அபிப்பிராயமும் கவனிக்கப்பட வேண்டியதுதான்.

SRI M. JAGANNATHAN : பிற அகதிகளுடைய நலன்களைக் காப்பதற்கு மத்திய சர்க்கார் முன்வந்திருப்பதைப் போல், இலங்கையிலிருந்து வெளி யேற்றப்படும் தமிழர்களையும் அகதிகளாகவே கருதி அவர்களுடைய முழு நலன்களையும் கவனிப்பதற்கு மத்திய அரசாங்கத்தாரை முன்வரும்படி செய்வதற்கு இந்த அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் முன்பு கூறியது போல், இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு முன்பு எந்த வகையில் மத்திய அரசாங்கத்தாரின் உதவியை அவசியம் கோர வேண்டும் என்பதை கவனிக்கவேண்டும்.

SRI M. S. SELVARAJAN : திருச்செந்தூர் தாலுகாவில் மாத்திரம் 9,943 இலங்கை இந்தியர்கள் தாயகம் திரும்பி இருக்கிறார்கள் என்று தெரிகிறது. அவர்களுக்காக கூட்டுறவு முறையில் மில் ஆரம்பிப்பதற்கு அனுமதி வேண்டும் என்று இந்த சர்க்காருக்கு விண்ணப்பம் வந்திருக் கிறதா ?



6th July 1957]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : திருச்செந்தூர் தாலுகாவில் மட்டும் 9,000 அகதிகள் வந்திருக்கிறார்கள் என்று சொல்வது சரியல்ல என்பது என்னிடமுள்ள தகவல்களிலிருந்து புலப்படுகிறது. அவர்களுக்காக மில் நடத்த வேண்டுமென்ற கோரிக்கையைப் பற்றி இப்போது என்னிடம் தகவல் இல்லை.

SRI K. RAMACHANDRAN : மற்ற அகதிகளைப் பொறுத்தவரையிலும் மத்திய அரசாங்கம் தானே நடவடிக்கை எடுத்ததுபோல, இந்த இலங்கை அகதிகளைப் பொறுத்தவரையில் தானே நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். 9.30 a.m.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மத்திய அரசாங்கம் தானே நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதைப் பற்றி எனக்குத் தெரியாது. பார்லிமெண்டு அங்கத்தினர்கள் இந்தக் கேள்வியை அங்கே கேட்டு பதிலை நமக்குத் தெரிவித்தால் அதன்பேரில் நாம் என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதை யோசிக்கலாம்.

SRI A. GOVINDASAMY : இப்போது பச்சைத் தமிழர் ஆட்சி நடக்கிறது என்று சொல்லப்படுகிறது. (கனம் ஸ்ரீ ஆர். வெங்கட்டராமன் : நீங்கள்தான் சொல்கிறீர்கள்.) நாங்கள் அல்ல. பெரியார் அப்படிச் சொல்கிறரே. நம் முடைய பழந்தமிழர்கள் இலங்கையில் படுகின்ற தொல்லைகளைப் பொறுத்த விஷயம் ஆதலால், அவர்களுக்கு ஆறுதல் சொல்கின்ற முறையில் நமது முதல் அமைச்சர் இலங்கைக்கு ஒரு முறை போய் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பழந்தமிழர்கள், புதிய தமிழர்கள் என்று நாங்கள் பாகுபாடு செய்வது இல்லை. இலங்கை வாழ் இந்தியர்களின் நிலைமையைத் தெரிந்து கொண்டு ஆறுதல் அளிப்பதற் காகவும் நமது முதல் அமைச்சர் இலங்கைக்குச் சென்றாக வேண்டிய அவசியமும் இல்லை.

SRI V. K. KOTHANDARAMAN : பாஷாவாரி மாகாணம் பிரிக்கப்பட்ட பிறகு, கேரள சர்க்கார் சிலோனில் இருந்து வெளியேற்றப்பட்ட அகதி களுக்கு உடனடியாகச் சலுகை செய்ய திட்டமிட்டிருக்கிறார்கள். நம் தமிழ் நாட்டிலும் என் உடனடியாக அப்படிச் செய்யக் கூடாது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் அவர்களுக்கு என்னைக் காட்டிலும் கேரள அரசாங்கம் எடுத்துக்கொள்கிற நடவடிக்கைகள் எல்லாம் என்ன என்ன என்பது நன்றாகத் தெரிந்திருக்கும். அதை என்னிடம் அவர்கள் கொடுத்தால் அதைப் பின்பற்றி இந்த அரசாங்கமும் நடவடிக்கை எடுக்க உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

*Refugees from Ceylon.*

* 72 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Home be pleased to state the number of persons who returned to Madras since March 1956 from Ceylon after the receipt of quit notice from the Government of Ceylon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Five thousand eight hundred and ninty-four persons returned to this State from Ceylon after receipt of quit notice from the Government of Ceylon during the period from 5th March 1956 to 25th May 1957. The figure includes persons who returned to Malabar and South Kanara districts up to 31st October 1956 and persons who returned to Kanyakumari district from 1st November 1957.

SRI M. JAGANNATHAN : கனம் தலைவர் அவர்களே, பல்லாயிரக் கணக்கான இந்தியர்கள் நீண்ட நெடுங்காலமாக இலங்கையில் வசித்துக் கொண்டு வந்திருந்த போதிலும் அவர்களுக்கு அங்கே பிரஜா உரிமை

மறுக்கப்படுகிறது. அம்மாதிரி மறுக்கப்படுவதைத் தடுப்பதற்கு மத்திய அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க இந்த அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : இதுபற்றி கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

**Sri M. LAZAR** : முன்பு இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு வந்து கொண்டிருந்த தமிழர்கள் தங்கள் சொத்துக்களைப் பணமாகவும், வேறு பொருள்களாகவும் கொண்டு வருவதற்குத் தடைகள் இருந்தனவா ? இதுவரையிலும் அம்மாதிரித் தடைகள் இருந்திருக்குமானால் இனிமேல் அந்தத் தடைகளை நீக்குவதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத் திருக்கிறார்களா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : தனிக் கேள்வி வேண்டும்.

**Sri K. ANBAZHAGAN** : ஏறக்குறைய ஆறாயிரம் தமிழர்கள் இலங் கையில் இருந்து இந்தியாவுக்குத் திரும்பி வந்திருக்கிற நிலையில், கனம் அமைச்சர் அவர்கள் நான் கேட்ட முதல் கேள்விக்குப் பதில் அளிக்கையில் பெருந் தொழிலை ஒரு இடத்தில் நிறுவி அவர்களைக் குடியேற்றுவதைக் காட்டிலும் பல ஜில்லாக்களிலும் அவர்கள் பரவலாக வசிப்பதற்கு ஏற்ற வகையில் சிறு சிறு தொழில்களை ஆங்காங்கே அவர்களுக்கு அமைத்துக் கொடுப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்துவதாகச் சொன்னார்கள். இருந்தாலும் இவ்வளவு பெரிய எண்ணிக்கையிலுள்ள மக்களுக்கு உடனடி யாக நிவாரணம் கொடுப்பது அரசாங்கத்தின் கடமையால் அவர்களை ஒரு பெருந் தொழிலில் ஈடுபடுத்த ஏதாவது திட்டம் உண்டா என்று கேட்கிறேன் ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : நான் முன்பே கூறியபடி இலங்கையில் இருந்து இப்போது வந்திருக்கக் கூடியவர்கள் 5,894 பேர்கள். இது அல்லாமல் அவர்களாகவே வந்திருக்கக் கூடியவர்கள் 8,872 பேர்கள். ஆக இலங்கையில் இருந்து வந்தவர்கள் பதின்மூன் றாயிரத்துக்கு மேல் உள்ளார்கள். அவர்களாகவே வந்துள்ளவர்களில் கூடப் பலர் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரையும் சேர்த்து ஒரு இடத்தில் வைப்பது சரி அல்ல. ஆகவே சிறு சிறு தொழில்களை ஆங்காங்கே ஏற்படுத்தி அவர்களுககு வேலை அளிப்பதில் தான் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

**Sri V. ARUNACHALA THEVAR** : இந்த பதின்மூன்றாயிரம் இலங்கை வாழ் இந்திய அகதிகள் இந்தியாவுக்கு வருவதற்கு முன்னால் 1947-ல் சுதந்திரம் வருவதற்கு முன்னால், இலங்கையில் வெள்ளைக்கார ஆட்சியில் பிரிட்டிஷ் பிரஜைகளாக இருந்தார்களா ? இந்தியப் பிரஜை களாகவே இருந்தார்களா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : இது பற்றி என்னிடம் தகவல் இல்லை.

**Sri K. SATTANATHA KARAYALAR** : சுமார் பதிமூவாயிரம் பேர்கள் வந்ததிலே தொழில் துறையில் இருந்து எத்தனை எத்தனை பேர்கள் வந்தார்கள் என்று சொல்ல முடியுமா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : இந்த விவரம் என்னிடம் இல்லை.

**Sri K. VINAYAKAM** : Sir, what is the total number of refugees that have come to India so far? How does it compare with the recent inflow of refugees into this country? Is there any abatement in the inflow after the visit of our Prime Minister to Ceylon?





**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : I have only these figures with me. Between 5th March 1956 and 26th May 1957, the number of those who returned to Madras State after receiving the quit notice is 5,894, the number of those who returned of their own accord is 8,082, the number of those who returned after receiving the notice from 5th March 1956 to 31st October 1956 to Malabar and South Kanara is 655, whereas the number of those who returned on their own accord is 453 and the number of those who returned during the period 1st November 1956 to 26th May 1957 to Kanyakumari is only 35 and those who returned on their own accord were only 44. I have no other particulars with me.

**Sri V. SANKARAN** : சிலோனில் இருந்து திரும்பியவர்கள் பல ஜில்லாக்களைச் சேர்ந்தவர்கள். ஆகையால் அவரவர்கள் தங்கள் தங்கள் ஜில்லாவிலேயே வசிக்க வேண்டுமென்று நினைப்பார்கள். ஸ்ரீ அன்பழகன் குறிப்பிட்டதுபோல அவர்கள் எல்லோரையும் பலாத்காரமாக ஒரேயிடத்தில் வாழச் செய்வது அவர்களுடைய கௌரவத்திற்கே குறைவானது இல்லையா என்று அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : ஒரு பெரிய தொழிலை ஆரம்பித்து அவர்களை ஓரிடத்தில் வாழச் செய்வதில் பலாத்காரம் இல்லை. இருந்தாலும் அது சாத்தியமில்லை என்று தான் சொல்கிறேன்.

**Sri D. THASARATHAN** : கிழக்குப் பாகிஸ்தானில் இருந்து மேற்கு வங்காளத்துக்கு வந்த அகதிகள் எவ்வளவு பேர்கள் என்று சொல்வார்களா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : இந்தக் கேள்வி பார்லிமெண்டில் கேட்கப் படவேண்டும்.

**Sri M. JAGANNATHAN** : The Hon. Minister said in his reply that the Government of India were taking sufficient steps to prevent the expulsion of Indians from Ceylon. Am I to understand that inspite of the action taken by the Central Government no less than 13,000 Indians have been expelled from Ceylon? Is it due to the half-hearted measures taken by the Government of India?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : I have not exactly said so. I only said that the Government are going into this question. The number of those who were sent out compulsorily is not 13,000. Their number is only 5,894. As I have already pointed out, those who returned of their own accord are 8,082.

**Sri A. A. RASHEED** : Have the Government full information regarding the displaced persons expected in this country?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : I have no information with me.

**Sri K. ANBAZHAGAN** : தலைவர் அவர்களே, இதேபோன்று அகதிகள் வடநாட்டில் பல பகுதிகளிலிருந்து வருகிறார்கள். பல மாகாணங் களிலும் அவர்கள் மத்திய அரசாங்க உதவியால் தனித்தனிக் காலனிகளை அமைத்துப் பெரிய கட்டிடங்களிலும், தொழில் ஸ்தாபனங்களிலும் வாழ்ந்து பிழைத்து வருகிறார்கள். இதை நம்முடைய அரசாங்கம் அறியுமா ?

**Hhe Hon. Sri M. BHAKTAVATSALAM** : மற்ற ராஜ்யங்களில் என்ன நடக்கிற தென்று எனக்கு அதிகமாகத் தெரியாது. ஆனால் மேலை நாட்டிலிருந்து வந்த அகதிகள் சென்னையிலும் இருக்கிறார்கள். அவர்களிடம்

இனிஷீயேடிவ் இருக்கிறது. உழைக்கும் ஆற்றல் இருக்கிறது. அரசாங்கத்தின் உதவி ஒருபுறம் இருந்தாலும் அவர்களாகவே தம்முடைய சொந்த முயற்சியினால் சென்னை நகரில் மிக வெற்றிகரமாகப் பல வியாபாரங்கள் செய்து வருகிறார்கள் என்பதை நான் அறிவேன். அத்தகைய ஆற்றல் நம்முடைய அகதிகளுக்கும் வேண்டும். எல்லாவற்றையும் அரசாங்கத்தின் பொறுப்பாக்கிவிட்டுப் புகார் சொல்லிக் கொண்டிருப்பதில் பயன் இல்லை.

**Sri V. K. RAMASWAMY MUDALIYAR** : Have the Government of India given a direction to this Government to rehabilitate the refugees from West Pakistan and, if so, did they give us any grant?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : I would like to have notice. I do not have particulars with me now. Perhaps, there has been some correspondence in the matter between this Government and the Government of India.

**Sri A. VEDARATHNAM PILLAI** : இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு வந்தவர்களுடைய புள்ளி விவரத்தை கனம் மந்திரி அவர்கள் கொடுத்தார்கள். இதில் மீன் பிடிக்கும் கட்டுமரங்களில் வந்து கொண்டிருக்கிற ஏராளமான பேர்களுடைய எண்ணிக்கையும் அடங்கி யிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : அது திருட்டுத்தனமாக வருவது. அதைப் பற்றியும் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

9-40 a.m. **Sri P. S. SANTHANAM** : தலைவர் அவர்களே, வெளி நாடுகளில் சென்று திரும்பி குடும்பத்தோடு வந்திருக்கும் மாணவர்கள் அங்கு ரிக்கார்டு செய்துவிட்டு வரவில்லை. ஆகவே அவர்களுடைய திறமையைக் கண்டு தமிழகத்திலுள்ள பாடசாலைகளில் சேர்த்துக் கொள்ளுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : இது பற்றி குறிப்பிட்ட விபரங்களை எனக்கு கொடுத்தால் இதுபற்றி கவனிக்கிறேன்.

**Sri M. JAGANNATHAN** : இலங்கையிலிருந்து எத்தனை பேர்கள் வெளி யேற்றப்பட்டார்கள் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த எண்ணிக்கையில் எத்தனை பேர்கள் தேயிலை தோட்டங்களிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள் என்பதை அறிவிக்க முடியுமா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : அந்த விபரங்கள் தற்போது என்னிடம் இல்லை.

**Sri M. S. SELVARAJAN** : இப்போது கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்கள் கடந்த ஐந்தாறு மாதங்களுக்குட்பட்டது என்று நினைக்கிறேன். ஆனால் கடந்த இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்பே அங்கிருந்து தமிழர்கள் வெளியேற்றப்பட்டு வருகிறார்கள். ஆகவே இரண்டு மூன்று வருங்களுக்கு முன்னாலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள் எத்தனை பேர்கள் என்பதை கணக்கெடுக்க அரசாங்கம் முன் வருமா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : அவ்வப்போது இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களுடைய எண்ணிக்கை சர்க்காருக்கு கிடைத்து வருகிறது. 1956 மார்ச் மாதத்திருந்து அதிகமாக வெளியேற்றப்பட்டு வருகிறார்கள். அதனால்தான் அந்த தேதியிலிருந்து கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது.

**Sri R. KRISHNASAMY NAIDU** : இலங்கையிலிருந்து கட்டுமரங்களிலும் மற்றும் பலவிதங்களில் கள்ளத்தனமாக வந்து கொண்டிருப்பவர்களும் இந்த எண்ணிக்கையில் உட்பட்டது என்று கருதலாமா ?

6th July 1957]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இலங்கையிலிருந்து திருட்டுத்தனமாக நல்ல வார்த்தையாக சொல்லவேண்டுமானால் சட்ட விரோதமான முறையில் பலரும் வெளியேறுவது ஒருபுறமிருக்க, இங்கிருந்தும் பலர் அவ்விதமாக அங்கு போய்கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் நாம் கணக்கில் சேர்த்துக்கொள்ள இயலாது.

SRI A. GOVINDASAMY : இலங்கையிலிருந்து திருட்டுதனமாக வெளியேறுகிறவர்கள் எத்தனை பேர்கள் என்ற புள்ளி விவரங்களை சர்க்கார் கொடுக்க முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கள்ளத்தனமாக வருகிறவர்களின் கணக்கை சர்க்கார் எவ்விதம் எடுக்க முடியும்.

SRI A. SENAPATHY GOUNDER : ஸரி, இலங்கை அரசாங்கம் தமிழர்களை வெளியேற்றவில்லை என்றும் அங்கு சுலபமாக சம்பாதித்து வியாபாரம் செய்து ஜீவிப்பவர்களைத்தான் வெளியேற்றுகிறார் என்றும், தமிழர்களை அவர்கள் வேலைக்கு வைத்துக்கொள்ளுவார்கள் என்றும் அங்குள்ள ஒரு முன்னாள் மந்திரி கூறினார். ஆகவே இந்த அரசாங்கம் தமிழர்களை அனுப்புங்கள் என்று இலங்கை அரசாங்கத்தினிடம் கேட்டால் இலங்கை அரசாங்கம் இவர்களை வெளியேற்றாமல் வேலைக்கு வைத்துகொள்ளுவார்கள் என்று தோன்றுகிறது. இவ்விதம் செய்ய அரசாங்கம் முன்வருமா என்று கேட்கிறேன் ?

THE HON. SRI M.. BHAKTAVATSALAM : இந்த நாட்டிலேயே வேலையில்லா திண்டாட்டம் இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலைமையில் அவர்களை அனுப்புங்கள் என்று எவ்விதம் நாம் கேட்க முடியும்.

SRI A. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, இலங்கையிலிருந்து திரும்புகிறவர்களை கிராமப்புறங்களில் சிறு சிறு தொழில்களை ஏற்படுத்தி அதில் ஈடுபடுத்தலாம் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஏற்கனவே இங்கு சிறு சிறு தொழில்களிலும், விவசாயத் துறையிலும் ஈடுபட்டிருந்தவர்கள்தான் அதனால் வாழ முடியாமல் இலங்கைக்குக் குடியேறினார்களாதலின் திரும்பவும் அதே துறையில் ஈடுபடுத்த விரும்புவதுவெற்றியளிக்குமா என்று கேட்கிறேன் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பழைய காலம் பழைய காலமாகவே இருக்கும் என்று திராவிடமுன்னேற்ற கழகமும் கனம் அங்கத்தினர் அவர்களும் கருதமாட்டார்கள் என்று நம்புகிறேன்.

MR. SPEAKER : Questions are over.

**[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

## II.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1957-58.

### DEMAND I—LAND REVENUE DEPARTMENT.

MR. SPEAKER : We shall now proceed with the voting on Demands for Grants. To-day, we shall take up Demand I—Land Revenue Department.

According to the decisions arrived at by the Business Advisory Committee, four hours are allotted for the Land Revenue Demand. A large number of Members have given notice of Cut Motions. It is the practice in this House for all Opposition Groups to decide and move one Cut Motion on which there will be discussion and voting will generally take place on that motion. May I ask the hon. Leader of the Opposition to state if all the Opposition groups

[Mr. Speaker] [6th July 1957

have come to an agreement as to which Cut Motion should be moved, and by whom. I would like to know from the Hon. Minister for Land Revenue how much time he would require for making his speech at the time of the introduction of the Demand and for replying to the debate.

THE HON. SRI M. A. MANICKAVELU : Half an hour at the time of reply, Sir.

MR. SPEAKER : That means, we have 3½ hours at our disposal. It is now 9-45 a.m. The Hon. Minister will reply at 1-15 p.m.

SRI K. VINAYAKAM : On a point of order, Sir. The usual practice in this House is to move all the Cut Motions given notice of and to vote on one Cut Motion insisted upon by the Members of the House.

MR. SPEAKER : The convention in this House has been that all the Opposition Parties and all those who have given notice of Cut Motions will select one Cut Motion and that alone will be moved. Then, there will be discussion and voting on that Cut Motion. That has been the convention in the House. But all those who have given notice of Cut Motions can take part in the debate during the 3½ hours available for discussion.

SRI A. GOVINDASAMY : சாதாரணமாக வெட்டுப் பிரேரணை கொடுத்திருக்கிற அங்கத்தினர்கள் அவைகளை பிரேரேபிக்கவும், அதை இன்னொரு அங்கத்தினர் ஆமோதிக்கவும் செய்கிற பழக்கம்.

MR. SPEAKER : அவ்விதம் வேண்டியதில்லை. **I am only telling** the House about the practice. The practice is that one Member moves the Cut Motion. We shall follow that convention. If hon. Members want a change, I have no objection. We shall call a meeting of the Business Advisory Committee and consider what changes should be made and we shall follow them from the next Demand. So far as this Demand is concerned, we shall follow the usual practice. Only one Cut Motion agreed upon by all the Opposition Parties will be moved and everybody can take part in the debate. If there is no unanimity among the Opposition Parties as to which Motion should be moved, I will call upon Sri Sattanatha Karayalar to move his Cut Motion as he has given notice of the first Cut Motion.

*SRI P. S. CHINNADURAI : **Sir, a point of order.** சபாநாயகர் அவர்களே ! கனம் நிதி அமைச்சர் அவர்கள் ஆற்றிய பட்ஜெட் உரையில் பருத்தியினுடைய விலை சம்பந்தமாக கொடுக்கப்பட்டிருக்கின்ற தகவல்கள் ஒன்று அச்சுப்பிழையாக இருக்கவேண்டும், அல்லது அதிகாரிகள் கொடுத்த தகவல்களிலுள்ள தவறுதல்களாக இருக்கவேண்டும் என்று என்னுடைய பேச்சில் குறிப்பிட்டிருந்தேன். அதற்கு இது வரையிலும் நிதி மந்திரி அவர்கள் எந்தவிதமான விளக்கமும் கொடுக்கவில்லை. இவ்விதமான தெளிவான உண்மைபற்றிய தவறான தகவல் கொடுக்கப்பட்டிருக்கும் நிலையில் மானியங்களின் மீது விவாதம் தொடருவது சபையின் ஒழுங்குகளுக்கு உட்பட்டதா என்பதை அறியவிரும்புகிறேன்.



6th July 1957]

MR. SPEAKER : The Hon. the Minister for Finance is not here. When he returns on Monday, I shall put this question to him.

Coming to the first point of order, I wish to state that with reference to a point of order raised in 1951 the then Speaker gave a ruling that he was not bound to call every Member who had given notice of a Cut Motion to move or to call Members in the order in which they were placed in the list.

SRI K. VINAYAKAM : May I know whether this convention has been evolved in the Mother of Parliaments or whether it has been set up by us singularly for our Assembly?

MR. SPEAKER : It has been the practice in this House and I suppose if it had been followed in this House it must have been taken from the Mother of Parliaments. Any way, let us proceed on the basis of this convention. If the Member wants a change, I have no objection.

SRI A. GOVINDASAMY : இந்த வெட்டுப் பிரேரணைகளை கொடுத்திருக்கின்ற எல்லா அங்கத்தினர்களும் தனித்தனியாக பிரேரேபிக்கவேண்டாம் என்றால் எதன் மீது வோட்டு எடுப்பது என்பதை அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : எல்லா பிரேரணைகளையும் எடுக்கவேண்டாம். எதாவது ஒரு பிரேரணையை எடுத்து வோட்டு எடுக்கவேண்டியது. இந்த விபரங்களை கனம் அங்கத்தினர் கேட்பதைப்பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன். கனம் அங்கத்தினர் அவர்கள் இதற்கு முன்னாலும் இந்த சபையில் அங்கத்தினராக இருந்தவர். அவர்கள் இந்த விபரத்தைப்பற்றி கேட்பதற்கு நான் ஆச்சரியப்படுகிறேன்.

SRI A. GOVINDASAMY : எற்கனவே கடந்த ஐந்து ஆண்டு காலமாக இந்த சபையில் இருந்த அனுபவத்தின் காரணமாகத்தான் சொல்லுகிறேன். இதுவரையிலும் எல்லா வெட்டுப்பிரேரணைகளையும் அந்தந்த மெம்பர்கள் அந்தந்த டிமாண்ட் வரும்போது பிரேரேபிக்கப்படுவதும் அதை ஆமோதிப்பதும் வழக்கம்—ஆகவே இதை பிரேரேபிக்கக்கூடிய உரிமையாவது அங்கத்தினர்களுக்கு அளிக்கக்கூடாதா என்று தான் கேட்கிறன்.

SRI K. VINAYAKAM : Sir, when a Bill is piloted in the House, all the amendments given notice of by Members are moved and at the time of voting, only such of those amendments as the Members insist should be voted on, are put to vote. But the Hon. Speaker is suggesting a different one, and I wish to know whether it is followed in the Mother of Parliaments in England?

MR. SPEAKER : What the hon. Member suggests is correct so far as Bills are concerned. So far as Cut Motions to Budget Demands are concerned only one Cut Motion is moved. I have no objection, if the House so desires, to permit every Member to move his Cut Motion which means 3½ hours will be reduced by another half hour.

SRI K. VINAYAKAM : Then we shall have the convention set up wholly by our House, Sir.

MR. SPEAKER : Will the Hon. Leader of the Opposition decide which cut motion will be moved and by whom?

[6th July 1957

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Yes, Sir. That has been done. Sri Sattanatha Karayalar will do it.

MR. SPEAKER : I have no objection. In regard to this particular Grant, I shall ask Mr. Karayalar to move his Cut Motion. With regard to the other points raised, I shall decide the matter later on and if it is so desired, we shall change the order in the next Grant.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 96,95,600 under Demand No. I—Land Revenue Department."

MR. SPEAKER : Motion moved—

"That the Government be granted a sum not exceeding Rs. 96,95,600 under Demand No. I—Land Revenue Department."

SRI K. SATTANATHA KARAYALAR : Sir, I move—

"That the allotment of Rs. 96,95,600 under Demand No. I —Land Revenue Department—be reduced by Rs. 100 to discuss policy."

MR. SPEAKER : "That the allotment of Rs. 96,95,600 under Demand No. I—Land Revenue Department—be reduced by Rs. 100 to discuss policy."

The Demand and the Cut Motion are before the House for discussion.

SRI A. GOVINDASAMY : '**To dicuss policy**' என்றுதான் அவர் கட்மோஷனில் இருக்கிறது. அதில் எப்படி வோட்டு எடுப்பது.

MR. SPEAKER : That is why I said that if hon. Members come to a unanimous decision on the Cut Motion to be moved and the Member who should be moving it, it would be convenient.

SRI K. SATTANATHA KARAYALAR : This is only a general discussion on the Demand and anything could be spoken on this.

MR. SPEAKER : Yes. Who will take part first in the discussion?

SRI K. SATTANATHA KARAYALAR : I will initiate, Sir.

MR. SPEAKER : Yes, Mr. Karayalar will speak now.

9.50 a.m. SRI K. SATTANATHA KARAYALAR : சபாநாயகர் அவர்களே, இந்த மான்ய கோரிக்கையில் நான் எனது வெட்டுப் பிரேரணையின் மூலம் சில அவசிய அவசர பிரச்னைகளை சபையின் முன்னிலையில் வைக்க அவா உறுகிறேன். இந்த இலாகாவின் அடிப்படையிலேதான் நில உடைமையையும் இன்று நிலத்தின் பால் சார்ந்திருக்கக்கூடிய நில வரையையும், நாம் பல காலமாக கையாண்டு வரக்கூடிய கொள்கைகளையும் பற்றி விவாதிக்கக்கூடிய ஒரு சந்தர்ப்பம். இந்த நில உடைமையைப் பொறுத்தமட்டிலே நீண்ட நெடுநாள்களாக கர்ண பரம்பரையாக நாம் ஒரே கொள்கையைதான்



6th July 1957] [Sri K. Sattanatha Karayalar]

அடிப்படையாகக்கொண்டுவருகிறோம். நிலத் தீர்வை என்பது ஒரு காலத்திலே
நம் சர்க்காரின் மிகமுக்கியமான வருவாய்க்கு துறையாக இருந்தது. ஆனால்
அந்த முறை, கழிந்த காலத்தில் இருந்த முறை சரியானதல்ல. அதை பற்ற
அமைக்கவேண்டுமென்று நீண்ட நெடு நாட்களாக பல பொருளாதார
வல்லுனர்களும் அரசாங்கத் துரையில் முன்னின்று நமக்கு வழி காட்டி
யவர்களும் கூறி வந்தார்கள். நமது தேசீய எழுச்சி பரம்பரையிலே முத
லில் **Faizpur Congress Session**-ல் என்று நினைக்கிறேன். 1936-ம்
இதைப்பற்றி ஒரு தீர்மானம் நிறைவேற்றினோம். இன்று இருக்கக்கூடிய
வரிமுறையை மாற்றி அமைத்து ஒரு அடிப்படையாக சமத்துவமான
பேசிக் டாக்ஸ் கொண்டுவரவேண்டுமென்று அன்று ஒரு தீர்மானப்
கொண்டு வந்தோம். அதுதான் தேசீய காங்கிரஸின் முதலாவதான தீர்மா
னம். அந்த அடிப்படையில்தான் முதல் தேர்தலிலே மங்களகரமான
மஞ்சள் பெட்டியில் வோட்டு கேட்ட காலத்தில் காங்கிரஸ் கட்சி தேர்தல்
அறிக்கையில் அன்று கூறி இருந்தது. அந்த குறிப்பு கொஞ்சகாலப்
அதற்குப் பிறகு வந்த இன்னொரு தேர்தலிலும் கூட, 1937-ல், அதன் பிறகு
1946-ல் உள்ள தேர்தல் அறிக்கையிலும் அது கூறப்பட்டுள்ளது. சமீபத்
திலே உள்ள தேர்தல் அறிக்கையிலே ஏதோ ஆட்சிக்கு வந்த பிறகு அதில்
ஏற்படக்கூடிய சிக்கல்களின் அடிப்படையில் அது ஒருவேளை விட்டிருக்கலாம்
விவேகத் திறமையினால் அது அவசியமில்லை என்று விட்டிருக்ககூடும்.
ஆனால் அதே நேரத்தில் முதன்முதலாக நாம் கைக்கொண்ட குறிக்கோளை
யும், கொள்கையையும் மாற்றியது நியாயமா என்பதை ஓரளவு
சிந்திக்க இந்த சபை அங்கத்தினர்களை நான் கோருகிறேன். நில உடமை
நம் நாட்டிலே, அதுவும் குறிப்பாக தமிழகத்திலே சுமார் 250 வேலி வரை
யில் ஒரு தனி மனிதனுக்கு இருப்பதாகத் தெரிகிறது. சாதாரணமாக
ஒரு வேலி நிலத்திற்கு 5,000 ரூபாய் வருமானம் என்று வைத்துப் பார்ட்
போமேயானால் இந்த ஒரு தனி மனிதருக்கு பல லட்சம் ரூபாய் வருமானம்
வரக்கூடும். அதே நேரத்திலே நிலத் தீர்வை அடிப்படையிலே ரெவன்யூ
இலாகாவிற்கு அவர் கொடுக்கக்கூடிய தொகை மிகக் குறைந்த தொகை
யாக, சுமார் 12,000 ரூபாயாகத்தான் இருக்கும். அதே அளவு வரு
மானம் உள்ளவர்கள், தொழில் துறையில் ஈடுபட்டிருக்கக் கூடியவர்கள்,
பஸ் உடமையாளர்கள், பெரிய ஹோட்டல் நடத்துபவர்கள் போன்ற தனி
மனிதர்கள் லட்சத்திற்கு அதிகமே சில லட்சம் ரூபாய்கள் வருமான வரியாக
செலுத்த வேண்டியிருக்கிறது. இந்த அடிப்படையிலேதான் இந்தத்
தீர்வை முறை இருக்கிறது. பேசிக் டாக்ஸ் கொண்டுவந்து, ஒரு எக்கருக்கு
இன்ன வரி என்ற அடிப்படையில் ஒரு தீர்வை அமைக்கவேண்டும். ஒரு
ரூபாய்க்கு மேல் இரண்டு ரூபாய் என்று வைத்தால் நஞ்சைக்கு ஒரு தரம்
புஞ்சைக்கு ஒரு தரம் என்று இரு தரமாகப் பிரித்து ஒரு அடிப்படை தீர்வை
நாம் அமைக்கலாம். அப்படி அமைத்தால் இன்று சர்க்கார் சொல்லக்
கூடும், அது நமது வருவாயை பெரிதும் பாதிக்கும் என்று. ஆனால்
1943-ம் ஆலோசகர் ஆட்சி இருந்த காலத்தில் ஸ்ட்ராத்தி என்பவர் இதை
உறுதியாகக் கூறியிருக்கிறார்கள். ரெவன்யூ இலாகா புள்ளி விவரத்தை
வைத்துக்கொண்டு அவர் அன்று கொடுத்த கணக்கில் நியாயமாக, உபரி
யாக இன்று நமக்குக் கிடைக்கக்கூடிய வருமானத்தை விட அதிக வரு
மானம் வரும் என்று அவர் அதில் குறிப்பிட்டார். அடுத்தபடியாக, நாம்
இன்றுநிலவில் இருக்கக்கூடிய நியாயவாரச் சட்டத்தையும், சாகுபடியாளர்
பாதுகாப்புச் சட்டத்தையும் பற்றி சில வார்த்தைகள் சொல்ல அவா
உறுகிறேன். இந்த இரண்டு சட்டங்களும் கழிந்த சட்டசபைக் காலத்தில்
தான் நிறைவேற்றப்பட்டது. ஆனால் அதன் பிறகு இதுவரை, சுமார் ஒரு
வருஷம் வரை அதை அமல் நடத்துவதில் சர்க்கார் தரப்பிலிருந்து என்
னென்ன நடவடிக்கைகள் எடுத்தது என்பதை நான் தெரிந்துகொள்ள
விரும்புகின்றேன். ஒருவேளை தேர்தல் காலத்திலே நாம் கட்சி வாதம்
பிடித்துக்கொண்டு தேர்தல் நடத்தினோம். அன்று இதைப்பற்றி, ஏழை
மக்களுக்காக, அல்லல் படுபவர்களுக்காக இயற்றப்பட்ட திட்டத்தை நாம்
மறந்துவிட்டோம். இதைப்பற்றி யூ. என். ஓ.வி லிருந்து விஸிட்டிங் பிரப
ஸராய் (**Visiting Professor**) வந்த டார்ட்னர் என்பவர் **Implementation**
**of Land Reforms** பற்றி எழுதிய **Thesis**-ல் குறிப்பிடுகிறார்,
இந்தியாவிலே ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் தவறுதலாக சட்டத்தை

[Sri K. Sattanatha Karayalar] [6th July 1957

நிறைவேற்றிவிட்டு அதைத் திருத்தாமல் இருக்கிருர்கள் என்று குறிப்பிட் டார்கள். இந்த நியாயவாரச் சட்டம். சாகுபடியாளர் பாதுகாப்புச் சட்டம். இந்த இரண்டையும் அமல் நடத்துவதற்கு எந்தவிதமான மெஷினரியும் அதற்காக ஒரு திட்டமும் அமைக்கப்படவில்லை, என்பதை முதலில் குறி பிட்டேன். இதனுல் ஏற்படக்கூடிய சிக்கல்கள், அல்லல்கள் எத்தனை என்று எனக்குப் பிறகு பேசக்கூடிய அன்பர்கள் கூறுவார்கள் என்று நினைக்கிறேன். சமீபத்திலே கையேறுவாரம்தார், மாட்டு ஏறு வாரம்தார் சட்டங்கள் செல்லு படியாகாது என்று நீதிமன்றத்திலிருந்து ஒரு தீர்ப்பு கொடுக்கப்பட்டது. ஆனுல் கழிந்த சட்டசபை கூட்டத்திலே அவசர அவசரமாக விற்பனை வரி சட்டத்தைக் கொண்டு வந்து ஒரு மணி நேரத்தில் சட்டமாக்கிய சர்க்கார் இது விஷயமாக ஒரு திருத்தம் கொண்டு வர வேண்டிய அவசியம் அவர் களுக்குத் தோன்றேவேயில்லை. ஒரு வேளை அவர்கள் அதற்குவேண்டிய சட்ட நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருப்பதாகக் கூறலாம். ஆனுல் அதில் அவர்கள் நல்ல முறையில் ஒரு அக்கறையும் எடுக்கவில்லை என்பதை முதலில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த நியாயவார சட்டமும், சாகுபடி யாளர்கள் சட்டமும் ஏற்பட்ட பிறகும் கழிந்த காலத்தில் எத்தனை நில வேளியேற்றங்கள் நடந்திருக்கின்றன நம் நாட்டில்? ஊருக்கு ஊர், இடத்திற்கு இடம், ஜில்லாவிற்கு ஜில்லா பார்த்தால் விவசாயிகளை நிலத் திலிருந்து வெளியேற்றிக் கொண்டிருக்கிருர்கள். இதைத் தடுக்க யாரும் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுத்ததாகத் தெரியவில்லை. சட்டத் தில் நிலத்திலிருந்து வெளியேற்றக் கூடாதென்று பொறிக்கப்பட்டிருக்கி றது. ஆனுல் நடைமுறையிலோ, ஸி. பி. ஸி. 144, 155 செக்ஷன்படி தர்க்கம் ஏற்பட்டால் கோர்ட்டிற்கு கொண்டுபோய் வைக்க சர்க்கார் பொறுப் பேற்றிருக்கிருர்கள். இதனுல் விவசாயிகளுக்கு ஏற்படக்கூடிய அல்லல் எத்தனையோ இருக்கின்றன. இந்த சட்டத்தை அமலுக்குக் கொண்டுவர வேண்டும். அதுவும், சாதாரணமாக ஹரிஜனங்கள் பெருவாரியாக விவ சாயத்தில் ஈடுபட்டிருக்கிருர்கள். அப்படி ஈடுபட்டிருக்கக்கூடியவர்களுக்கு, விவசாயத்துறையில் ஈடுபட்டிருக்கக் கூடியவர்களுக்கு, மஹாத்மா காந்தி அண்ணலுடைய அடியைப் பின்பற்றி இன்று இங்கு ஆட்சிபீடத்தில் வீற் றிருக்கும் அன்பர்கள், அவர்கள் சொன்ன அதே குறிக்கோளை நிறைவேற்ற உழுபவனுக்கே நிலம், படிப்பவனுக்கே ஏடு என்ற அடிப்படையில் விவ சாயிகளுக்கே நிலம் இருப்பதற்கு, விவசாயிகளுக்கு சாஸ்வதமாக நிலம் கிடைக்க என்னென்ன சட்டங்கள் இயற்றினீர்கள், ஒவ்வொரு ஜில்லா அதி காரிகளுக்கும் அதற்காக என்னென்ன உத்தரவு அனுப்பி இருக்கிறீர்கள் என்று தெரிந்தால் நன்ருக இருக்கும்.

இந்த நியாய வார சட்டத்தின் கீழ் ஒரு விவசாயி பயிரிடுகின்ருன் என்ருல் அவனுக்கும் நிலச்சுவான்தாருககும் தர்க்கம் ஏற்பட்டால் இந்தத் தர்க் கத்தை நிரூபிப்பதற்கு, கோர்ட்டிலே சில தெளிவுகள் கேட்கப்படுகின்றன. ரேகை மூலம் அந்தத் தெளிவுகள் இருக்க வேண்டியது மிகவும் அவசியம் என்று ஆர்.டி.ஓ. கருதுகிருர். அப்படிச் செய்யும்போது பல சிக்கல்கள் இருக்கின்றன. எழுதப்படிக்கத் தெரியாத விவசாயி, ஓட்டை சட்டியில் சாப்பிடுகிறவன், அடியிலேகரையான் அரிக்கக்கூடிய வாழ்க்கை நடத்தும் ஹரிஜன நண்பர் பெரிய நிலச்சுவான்தாரரிடம், உடைமையாளரிடம் போய் நாங்கள் கொடுத்த நெல்லுக்கு நீங்கள் ரசீது தரவேண்டுமென்று கேட்க துணிவானு? துரதிர்ஷ்டவசமாக விவசாயி இந்தப் பரிதாப நிலையில் இருக்கிருன். அவனுக்கு இந்த சட்டத்தினுல் உண்மையிலேயே பலனில்லை. விவசாயத் தொழில் சங்கங்கள், ஸ்தாபனங்கள் இயங்குகின்ற இடங்களைத் தவிர மற்ற இடங்களில் நிலச்சுவான்தார்கள் **written receipt** கொடுப் பதே இல்லை. இதனுல் ரேகை மூலம் விவசாயிக்கு ஒரு ஆதாரமும் இல்லை. இம்மாதிரி விவசாயி கொடுத்த பொருள்களுக்கு தகுந்த "ரிகார்டு" இல்லை என்று கோர்ட்டில் பலவிதமான சிக்கல்கள் ஏற்படுகின்றன.

அடுத்தபடியாக, இந்த சட்டத்தின்படி நிலச்சுவான்தார் ஒரு நிலத்தை குத்தகைக்கு கொடுத்தால் குத்தகைப்பாட்டு அடை ஓலை எழுதிக்கொடுக்க தவறினுல் அவர்மீது நவடிக்கை எடுக்கலாமென்று ஒரு ஷரத்து இருக்கிறது. குத்தகைப்பாட்டு அடை ஓலையை விவசாயி மூன்று பிரதிகள் எழுதி, ஒன்று தாசில்தார் ஆபீசில் தாக்கல் செய்துவிட்டு, இன்னுென்றை நிலச்சொந்தக் காரருக்கு ரிஜிஸ்டரில் அனுப்பிவிட்டு, தன் கையில் ஒரு நகல் வைத்துக்



6th July 1957] [Sri K. Sattanatha Karayalar]

கொண்டால் செல்லுபடியாகும் என்று சொல்லப்பட்டுருக்கிறது. இம்மாதிரி தாலுகா ஆபீசிலும், ஜில்லா ஆபீசிலும் பல ஆயிரக்கணக்கான சீட்டுகள் போய்ச்சேர்ந்து விடுகின்றன. இவைகளை ரிஜிஸ்டர் செய்வதற்கு ஒரு நிரந்தர மான மார்க்கம் இல்லை. தாசில்தாரைக் கேட்டால் இதுபற்றி நல்ல முறையிலே தெரியாது என்று சொல்லிவிடுகிருர்கள். இந்த துரதிர்ஷ்டவசமான நிலை மையில் விவசாயி வாழ்கிருன்.

இப்படி ரிஜிஸ்தர் செய்வதற்கு சர்க்கார் தவறியதோடு, அதே நேரத் திலே இந்த சட்டத்தில் இருக்கிற ஷரத்துப்படி ஒரு நிலச்சுவான்தார் அடை ஓலை எழுதிக்கொடுக்க தவறிவிட்டால் சில நடவடிக்கை எடுக்க மார்க்கம் இருக்கிறது. நான் வெகு வினயத்தோடு இந்தச் சபையிலே கேட்டுக்கொள்கிறேன். எவ்வளவு நிலச்சுவான்தார்கள் மீது, எந்தெந்த ஊரிலே எந்தெந்த ஜில்லாவிலே அவர்கள் அடை ஓலை எழுதிக் கொடுக்கத் தவறியதற்காக சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கி ருர்கள் என்று சொன்னுல் அது வெகு நல்ல காரியமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். எனக்குத் தெரிந்த வரையில் திருநெல் வேலி மாவட்டத்திலே இப்படி ஒரு நிலச்சுவான்தார் கூட அடைஓலை எழுதிக் கொடுக்கத் தவறியதற்காக நடவடிக்கைக்கு உள்ளானதாகத் தெரியவில்லை. அதன் அர்த்தம் ஒரு வேளை எல்லா நிலச்சுவான்தார் களும் ஒழுங்காக குத்தகைப் பாட்டு அடை ஓலை எழுதிக் கொடுத்திருக்கிருர் கள் என்று இந்த சபை கருதுகிறதோ என்று நான் நினைக்கிறேன். ஆனுல் உண்மையிலே அப்படி இல்லை. எழுதப் படிக்கத் தெரியாத விவசாயிகள் இந்தப் பிரச்னையில் நிமிர்ந்து நின்று நிலச்சுவான்தார்க ளோடு போராட அஞ்சி நெஞ்சம் ஒடிந்து அடங்கி அல்லலுற்று வாழ் கின்ருர்கள் என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : Five minutes more.

SRI K. SATTANATHA KARAYALAR : அடுத்தபடியாக நமது நாட்டில் சில விருதா நிலங்கள் (waste lands) இருக்கின்றன. ஜமீன் ஒழிப்புக்குப் பிறகு **'assessed waste lands'** இருக்கின்றன. அவர்கள் **relinquish** செய்த சில நிலங்கள் இருக்கின்றன. நீண்ட நெடுங்காலமாக ஏழைகள் விவசாயம் செய்யக் கூடிய நிலங்கள் இருக்கின்றன. இந்த நிலங்களெல்லாம் இவர்களுக்கு இதுவரை பட்டா செய்யப்படவில்லை. இதே போல குளம், புறம்போக்கு நிலங்கள் எவ்வளவோ இருக்கின் றன. நீண்ட நெடுங்காலமாக 17, 18, 20 வருஷங்களாக நிலத்தில் பயிர் செய்யக் கூடிய விவசாயி இன்று வெளியேற்றப்படக் கூடிய ஒரு நிலை இருக்கிறது. தண்ணீர் தேங்குவதற்கு அந்தக் குளம் தேவை என்று சொல்லுகிருர்கள். உலகமே பிரளயத்தில் மூழ்கினுலும் இந்த இடத்தில் தண்ணீர் போய்த் தேங்காது. குளம் புறம்போக்கு என்று ஒரு ஷரத்து இருப்பதால் அந்த நிலங்கள் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட மாட்டாது என்று சொல்லுகிருர்கள். **Waste lands** எத்தனை ஏகர், **relinquish** செய்த நிலங்கள் எவ்வளவு, காட்டு இலாகாவிற்கு ஒதுக்கப்பட்ட நிலம் எத்தனை ஏகர், குளம் புறம்போக்கு நிலங்கள் எவ்வளவு, எத்தனை விவசாயிகள் இருக்கிருர்கள் முதலிய புள்ளி விவரங்களை அறிந்துகொள்ள நான் அவா உறுகின்றேன். **Hindu Religious Endowment Board** என்ற **quasi Government body** யிடம் இருக்கக் கூடிய நிலங்கள் கூட நல்ல முறையில் விநியோகிக்கப் படவில்லை. லட்சக்கணக்கான நிலங்களை இடைக் குத்தகைக்காரர்கள் குத்தகைக்கு எடுத்துக்கொண்டு விவசாயியிடம் கொடுக்காமல் இருக்கிருர்கள். இதைப் பரிசீலனை செய்து விவசாயிகள் எந்தெந்த நிலத்தில் இதுவரை பயிர் செய்துகொண்டு வந்தார்களோ அந்த நிலத்தை எல்லாம் அவர் களுக்கே குத்தகைக்கு விட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த நியாய வாரச் சட்டத்தைப் போலீஸ்காரர்கள் எவ்வாறு அமுல் நடத்துகிருர்கள் என்பது பற்றி இன்னொரு சந்தர்ப்பத்தில் பேசிக்கொள் கிறேன். தயவு செய்து ஒரு தனி 'மெஷினரியிடம்' இந்தப் பொறுப்பைக் கொடுக்கக் கோருகிறேன். பஞ்சாயத்து இலாகா கையில் இதை

[Sri K. Sattanatha Karayalar] [6th July 1957

ஒப்படைத்தால் மிகவும் நன்மையாக இருக்கும். யார் நிலங்களை வைத் திருந்தார்கள் என்பது அவர்களுக்குத்தான் நேரடியாகத் தெரியும். உத்தியோகஸ்தர்கள் கையில் பொறுப்பைக் கொடுத்தால் அவர்களுக்கு நேரடியாக விஷயம் தெரியாது. இப்பொழுது ஊரிலே பஞ்சாயத்து நிர் வாகம் காங்கிரஸ் கையிலேதான் இருக்கிறது. தயவு செய்து இந்தப் பொறுப்பை அவர்களிடம் ஒப்படைத்தால், தவறி நடந்தால் ஊரிலே உள்ளவர்கள் பழி சொல்லுவார்கள் என்று அஞ்சி ஒழுங்காக நடப்பார்கள் என்று நம்புகிறேன். அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**MR. SPEAKER :** பல அங்கத்தினர்கள் பேச வேண்டுமென்று சொல்லியிருப்பதால் ஒவ்வொருவரும் 10 நிமிஷங்கள்தான் பேசவேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

10-10 a.m. **SRI S. LAZAR :** கனம் தலைவர் அவர்களே, இன்றையதினம் நமது ரெவின்யூ மந்திரி அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற மான்யக் கோரிக்கையை ஆதரிக்கின்ற முறையிலே ஒருசில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகின்றேன். இப்பொழுது இருக்கக் கூடிய நிலவரித் திட்டம் பல வருஷங்களாக நாட் டிலே அமுலில் இருந்துவந்த காலத்திலே நல்ல முறையில்தான் நடந்து வந்திருக்கிறது. ஏதோ மாறுதல் வேண்டுமென்ற காரணத்திற்காக அதிலே குற்றங் குறைகள் கண்டுபிடிக்கலாமொழிய, நடைமுறையில் பார்க்கும் பொழுது, அனுபவ ரீதியாகப் பார்க்கும்பொழுது அது நல்ல முறையிலேதான் நடந்துவந்திருக்கிறது. அதுமட்டுமல்ல. ஏதோ தனிப் பட்ட நிபுணர் அதிலே இருக்கக் கூடிய குறைகளை எடுத்துச் சொன்ன போதிலும்கூட, நிபுணர்கள் சொல்வதெல்லாம் அனுபவ ரீதியில் இருக்க முடியாது என்ற காரணத்தால், அனுபவ ரீதியாக இருப்பதை அனுசரித்து அந்த முறையை நீடித்து வைத்திருக்க வேண்டுமென்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். இந்த சந்தர்ப்பத்தில் ரெவின்யூ இலாகா உத்தியோகஸ்தர்கள்—போர்டு மெம்பரிலிருந்து கீழ் தரப்பிலே இருக்கக் கூடிய கிராம தலையாரி வரையுள்ள அதிகாரிகள்— செய்திருக்கும் சேவை மிகவும் பாராட்டுகின்ற முறையிலே அமைந்திருக்கிற தென்பதை இந்த சபையின் முன் சமர்ப்பிக்க ஆசைப்படுகிறேன். நான் என் குறிப்பிடுகிறேனென்றால், சுயராஜ்யம் வரக்கூடிய நாளுக்கு முன்பு இந்த இலாகாவில் இருக்கக் கூடிய உத்தியோகஸ்தர்களுக்கு இருந்த வேலைகள் என்னென்ன, ஆனால் அதே சமயத்தில் இன்றைய தினம் அவர்கள் செய்யும் வேலை என்னென்ன ? என்னென்ன வேலைகள், எத்தனையெத்தனை வேலைகள் அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பார்க்கும்போது அவர்கள் மனப்பூர்வமாக நல்ல எண்ணத் தோடு திறமையோடு செய்வதோடு கூட—நான் இன்னும் முக்கியமாகக் குறிப்பிட விரும்புவது என்னவென்றால்,—காலத்திற்கேற்றவாறு இப் பொழுது ஏற்படுகின்ற மாறுதலுக்குத் தக்கவாறு, ஜனநாயக எழுச்சிக்கு தக்கவாறு அவர்கள் தங்கள் மனப்பான்மையை மாற்றிக்கொண்டு மக்க ளோடு மக்களாக, அவர்களுடைய நல்வாழ்வுக்காகத் தொண்டாற்ற முன்வந்திருப்பது பாராட்டத் தக்க காரியம் என்று நான் சொல்ல ஆசைப் படுகின்றேன்.

சர்க்கார் உத்தியோகங்களிலே இருக்கும் என். ஜி. ஓ.க்களுக்கும் கல்விச் சலுகைகள், வைத்தியச் சலுகைகள் முதலியவைகளுக்காக நல்லதொரு மான்யம் ஒதுக்கியிருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. அவர்களுக்குக் கொடுப்பதோடுகூட மட்டும் நின்றுவிடாது அதே சலுகைகளை கிராம உத்தி யோகஸ்தர்களுக்கும் கொடுத்து, அதிலும் முக்கியமாக அவர்களுக்கு சம்பள உயர்வு கொடுத்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. இந்த சந்தர்ப்பத்தில் ஒன்று நான் சொல்ல ஆசைப்படுகின்றேன். கிராம உத்தி யோகஸ்தர்களுடைய பிரச்னைகளைப் பற்றி பேசக்கூடிய நேரத்திலே நாம் ஒரு காரியத்தை நன்றாக மனதிலே கொள்ள வேண்டும். அதாவது இவர்களைக் கௌரவ உத்தியோகஸ்தர்களாகக் கருத வேண்டுமா அல்லது சம்பளம் வாங்கக் கூடிய உத்தியோகஸ்தர்களாகக் கருத வேண்டுமா என்பதைப் பற்றி முதலில் தீர்மானித்துவிட வேண்டும். ஏனென்றால்



6th July 1957] [Sri S. Lazar]

இன்றைக்கு இவ்வளவு கிளர்ச்சி அவர்களிடையே இருப்பதற்குக் காரணம் கிடையாது. கௌரவ உத்தியோகஸ்தர்களாக இருக்க ஆசைப்பட்டால், அவர்களுக்குக் கௌரவ உத்தியோகஸ்தர் என்ற முறையிலே ஏதோ ஒரு "அலவன்ஸ்" கொடுக்கலாம். அந்த முறையில் இன்றையதினம் அவர் களுக்கு அலவன்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்கள் மற்ற உத்தியோகஸ்தர்களைப் போலக் கருதப்பட வேண்டுமென்று சொன்னால் மற்ற உத்தியோகஸ்தர்களை நடத்தும் ரீதியிலே நடத்தலாம். அந்த முறையில் பார்க்கும்போது இன்றையதினம் ஒவ்வொரு கிராமத்திற்கும் உத்தியோகஸ்தர்கள் இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை மனதிலே கொண்டு, மூன்று அல்லது நான்கு கிராமங்களுக்கு ஒரு உத்தியோகஸ்தர் இருந்தால் போதும் என்ற அடிப்படையிலே மாற்றி அமைக்க முன்வரவேண்டும். தொழிற்சங்கங்கள் அமைக்கக் கூடிய ரீதியில் தொழிற்சங்கங்கள் இயங்கக் கூடிய முறையிலே கிராம உத்தியோகஸ் தர்கள் சங்கங்களை அமைத்துக்கொண்டு புரட்சி செய்வதற்குப் பதிலாக அவர்கள் இந்த இரண்டிலே ஒன்று முடிவு செய்து கொள்ள வேண்டும். கௌரவ உத்தியோகஸ்தர்களாக சேவை செய்ய ஆசைப்படுகின்றீர்களா, அல்லது மற்ற சம்பளம் வாங்கும் உத்தியோகஸ்தர்கள் போல் சேவை செய்ய ஆசைப்படுகின்றீர்களா என்ற முடிவு கண்டு, அந்த முடிவுப்படி அவர்களுக்கு அளிக்க வேண்டுமென்று நான் கூற ஆசைப்படுகிறேன். மற்ற சம்பள உத்தியோகஸ்தர்களைப் போல் சேவை செய்ய அவர்கள் முன்வருவார்களானால், மற்ற அதிகாரிகளுக்குக் கொடுக்கக் கூடிய சம்ப ளத்தைப் போல் உயர்ந்த சம்பளம் கொடுப்பதிலே எந்த விதமான ஆட்சேபனையும் இருக்க முடியாது. அப்படி அவர்கள் முடிவு செய்தால் சர்க்கார் அவர்களுக்கு அம்முறையில் செய்து கொடுக்க வேண்டுமென் பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

நிலச்சீர்த்திருத்தம் சம்பந்தமாக கொண்டுவந்திருக்கக்கூடிய ஒன்றி ரண்டு சட்டங்களில் உள்ளபடியே சில குறைகள் இருக்கத்தான் செய்கின்றன. ஏதோ கனம் அங்கத்தினர் திரு. கரையாளர் சொன்னதுபோல "நிலச்சு வான்தார்கள் பாதிக்கப்படவில்லை ஆனால் தொழிலாளர்கள் மட்டும் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள்" என்பது பொருத்தமான வாதமல்ல. பல இடங்களில் நிலபிரபுக்களும் பாதிக்கப்பட்டுத்தான் இருக்கிறார்கள். அதே சமயத்தில் நிலத்திலே வேலை செய்யக்கூடிய விவசாயிகளும் பாதிக்கப்பட்டுதான் இருக் கிறார்கள். ஆகவே இரண்டு தரப்பிலே பார்க்கும்போது ஒரு சில சிக்கல்கள் இருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. ஆகவே அந்த சிக்கல்களை தீர்க்கக் கூடிய முறையிலே நிலச் சீர்த்திருத்தங்கள் செய்யவேண்டுமென்றுஅரசாங் கத்தை கேட்டுக்கொண்டு இத்துடன் என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்ளுகின்றேன்.

**SRI G. NARAYANASWAMY NAIDU :** கனம் சபாநாயகர் அவர் களே, இந்த நிலப் பிரச்னை, ரெவின்யூ பிரச்னை இவைகளெல்லாம் சென்ற சட்ட சபையிலே வெகு திட்டமாக, பலமாக வாதிக்கப்பட்டு, அவைகளைப்பற்றி ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம் என்பது எல்லோருக்கும் தெரியும். சென்ற சட்டசபையிலே எட்டாக் காலத்திலிருந்து ஒரு புதிய சரித்திரத்தை உண் டாக்கியிருக்கின்றோம். அந்தச் சரித்திரம், ஆளுகின்ற கட்சிக்குப் பலமாக ஆதரவையும், பலத்தையும், மக்களிடத்திலே நம்பிக்கையையும் ஏற்படுத்தி தான் சென்ற தேர்தலிலே ஆளும் கட்சி முழு மூச்சோடு வெற்றியடைந்தி ருக்கிறது. ஆனதினாலே, அந்தச் சட்டத்தைப்பற்றி துருவித் துருவி ஆராய் ந்து, அதிலே இருக்கும் கெடுதலையும், அதிலே இருக்கும் பலவீனங்களையும் ஓரளவு சீர்செய்தால் தான் நிச்சயமான மக்களுக்கு நல்ல வழி ஏற்படும். புதிய ஒரு சமுதாயம் அமைப்பதற்கு அது வழிகாட்டியாகவும் இருக்கும். ஆனால், சட்டம் எப்படி அமுல் நடத்தப்படுகிறது என்பதைப்பற்றி எதிர்த் தரப்பிலிருந்து திரு. கரையாளர் அவர்கள் சில வார்த்தை சொன்னார்கள். அதை முழு மூச்சாகவும் பலமாகவும் நான் ஆதரிக்கின்றேன். இந்தச் சட்டங் களுடைய வழிகள் ரொம்ப சரியாக இருந்தாலும் அவைகளை அமுல் நடத் தும்போது அனுபவ சாத்தியமாக இல்லை. யாருக்காக அந்தச் சட்டங்கள் செய்யப்பட்டனவோ, அவர்களுக்குப் போதுமான அளவு பயனுள்ளதாகவும் அவைகள் அமையவில்லை. 10-15 p.m.

[Sri G. Narayanaswamy Naidu] [6th July 1957

நியாய வாரச் சட்டத்திற்கு முன்பு பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் வந்த நேரத்திலே 40 சதவிகிதம் விவசாயிகள் சாகுபடி செய்து வந்தார்கள். நியாய வார சட்டம் வந்த பிறகு 15 சதவிகிதம் விவசாயிகள் தான் இன்று நிலத்திலே அமர்ந்திருக்கின்றார்கள். காரணம் என்ன? வசதியுள்ளவர்கள், கொஞ்சக் கொஞ்சமாக—பண்ணை முறையில் எவ்வளவு நிலம் தான் சாகுபடி செய்யலாம் என்ற வரம்பை நாம் நிச்சயிக்காததன் காரணமாக—விவசாயிகளிடத்திலிருந்து பல்வேறு வழியாக—நியாயமாகவோ அநியாயமாகவோ—அதிகாரிகளிடத்தில் இருக்கும் செல்வாக்கு காரணமாக, பல சாட்சிகளைக் காட்டி, நிலத்தைக் கைப்பற்றி, பண்ணை சாகுபடிக்கு நிலத்தைச் சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

அதிலே பெரிய குறைபாடு இருப்பது சம்பந்தமாக நான் சென்ற சட்டசபையிலே தெரிவித்திருக்கின்றேன். தஞ்சை ஜில்லாவிலுள்ள பெரிய மிராசுதாரர்களும், மனிதர்களுக்குச் சமமாக, ஏழை பங்காளன் என்று சொல்லப்படும் கடவுளும் சொந்தமாக ஏராளமான நிலம் வைத்துக்கொண்டிருப்பதன் காரணமாக, அங்கிருக்கும் கோயிலில் உழைக்கும் குடிகளுக்கு குத்தகை சாகுபடி செய்து பிழைக்க நிலம் கொடுக்கப்படுவதில்லை. மனிதனோடு போட்டி போட்டுக்கொண்டு கடவுளும் நிலத்தை சொந்தப் பண்ணை வைத்து நடத்தும் முறையை தஞ்சை ஜில்லாவில் பார்க்கின்றோம். அந்த வகையில் தீவிரமாக முயர்ச்சி செய்யப்பட்டு வருகிறது. அதன் காரணமாக, பெரிய பெரிய நிலச்சுவான்தார்கள் வெளி ஜில்லாக்களிலிருந்து அங்கு வந்து நிலத்தைக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். குடி குத்தகை மாவுக்கு ரூ. 5 என்றால் வெளியில் இருப்பவர்களுக்கு ரூ. 1–8–0 முதல் ரூ. 2-க்கு கிடைக்கிறது. ஏழை பங்காளன் என்று சொல்லி கொள்கிற கடவுள் பணக்காரன் பங்குக்கு மாறுகிறது. இதிலிருந்து ஏழை விவசாயிகளைக் காப்பாற்றுவதற்கு நில வரம்பை நிர்ணயித்து சட்டம் இயற்றிவிடவேண்டும். அதே சந்தர்ப்பத்தில், கோயில் குடிகளுக்குத்தான் அந்த நிலம் கொடுக்கப்படவேண்டும். அப்படியில்லாமல் கோயில் நிலங்கள் வெளி ஜில்லாக்களிலிருந்து வரும் நிலச்சுவான்தார்களுக்கு குத்தகைக்கு—அதாவது டெபாசிட் கட்டுகின்றவர்களுக்கு கொடுக்கப்படுகிறதென்றால் அப்படிப்பட்ட கடவுளை ஈரோட்டுப் பெரியார் ஒழிக்கத்தேவையில்லை, ஆஸ்திகத்தைக் காப்பாற்றுவதாகச் சொல்லிக்கொண்டு காவி வஸ்திரம் உடுத்திக்கொண்டிருக்கிறார்களே—கடவுளுக்குப் பதிலாக—அவர்களே ஓரளவு இப்பொழுது அழித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் திட்டமாக சபை உணரவேண்டும். அவர்கள் ஏதோ மயக்கத்தின் காரணமாக, தாங்கள் நல்ல ஸ்தாபனங்களை நடத்தி வருகின்றோம் என்ற எண்ணத்தில், கடவுள் என்றும் மடாதிபதிகள் என்றும் வைத்துக்கொண்டு அங்கிருக்கும் குடிகளுக்கு நிலத்தைக் குத்தகைக்குக் கொடுக்காமல், சொந்தப் பண்ணை வைத்துக்கொள்வதாகச் சொல்லி, கொஞ்சங் கொஞ்சமாக நிலத்தை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். இவர்களுடைய நிலம், வசதிகள் எல்லாம் சர்க்காருடைய பலம் இல்லாவிட்டால், ஒரு மணி நேரம் கூட தாக்குப்பிடிக்க முடியாது. கடவுளைக் காப்பாற்ற சர்க்கார் முன்வராவிட்டால் எந்தக் கோயிலும் மடமும் ஒரு அரிசிகூட வைத்துக்கொண்டிருக்கமுடியாது" ஏனென்றால், ஜனங்களுடைய தேவையை அனுசரித்து, கடவுளும் இப்பொழுது ஜனங்களுக்காக இரங்கி நிலத்தை அவர்களுக்கு குத்தகைக்கு விடவேண்டியிருக்க, கடவுளும் மனிதர்களுக்குச் சமமாக, தன் நிலையிலிருந்து இறங்கி, நிலத்திலே வேலை செய்பவர்களை விரட்டிவிட்டு, நிலத்தின் மேலே போட்டி போட்டிக்கொண்டு சொந்தப் பண்ணை வைப்பதெல்லாம் எதைக்காட்டுகிறது? மனிதனும் கடவுளும் சமம் என்ற நிலையைத் தான் காட்டுகிறது. சிற்றுளியும் சிறு தொழிலும் போட்டியிடும் நிலைமையை ஆஸ்திகர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் உண்டாக்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால், அதிலிருந்து ஒரு வழிவகை கண்டுபிடிக்கவேண்டும். அதுவும் இந்த வருஷத்தில் செய்து ஆகவேண்டும். காலங்கடந்துவிட்டது என்று சொல்வதில் பயன் இல்லை. இப்பொழுது விட்டுவிட்டால் இனி ஐந்து வருஷத்திற்கு இதே நிலைமை தான் நாட்டில் இருக்கும், தஞ்சைக் குடிகள் நிலத்தின் பக்கம் போக முடியாத நிலை தான் ஏற்படும், வீட்டிலிருந்தும் அப்புறப்படுத்தப்பட்டு விடுவார்கள் என்று நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.



6th July 1957] [Sri G. Narayanaswamy Naidu]

பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தை நாம் சென்ற சட்டசபையிலே நிறைவேற்றினோம். இப்பொழுது ஓரளவு பண்ணையாள் இல்லாத நிலைமையை அங்கு இருக்கும் நிலச் சுவான்தாரர்கள் உண்டாக்கி விட்டார்கள். எந்த இடத்திலும் பண்ணையாள் கிடையாது. கொஞ்சங் கொஞ்சமாக பண்ணையாளை வெளியேற்றி,—அங்கே கூலியாளை கொண்டுவந்து,—களவடி முதலிய சலுகைகளை நிறுத்தி, வீட்டை விட்டும் அப்புறப்படுத்த ஏற்பாடுகள் செய்துகொண்டிருக்கிறார்கள். இந்தத் தினக்கூலி முறையை எவ்வளவு என்று நிச்சயிக்கவில்லை. அதற்காக ஆங்காங்கே போர்டுகள் நியமித்து, ஜில்லாவாரியாக தினக்கூலி என்ன கொடுக்க வேண்டும் என்று நாம் அறிவித்துவிட வேண்டும். அப்படி அறிவித்தால் மாத்திரம் போதாது. அதை அமுல் நடத்தவும் ஏற்பாடு செய்ய வேண்டும். இப்பொழுது யாருக்காக சட்டம் செய்தோமோ, அந்த நபர்களே இப்பொழுது இல்லாமல் செய்யப்பட்டு விட்டார்கள். பண்ணையாள் என்ற நிலைமை மாறிவிட்டது. எல்லோரும் கூலிகள் என்று ஆயிவிட்டது. தஞ்சை ஜில்லாவைப் பொறுத்தவரையில், அங்கு யாருமே கூலியாளாக இருப்பது இல்லை. பண்ணையாட்களைத்தவிர, கூலி ஆட்கள் என்பவர்கள் ஒரு கிராமத்திலே வசிக்க முடியாது. எவன் நிலத்தை உழுது பயிரிடுகிறானோ அவனுக்குத்தான் மனை கொடுக்கப்படும். அந்த மனையிலே இருப்பவன் பண்ணையாள் என்பதும் சட்டம். இந்த சட்டம் வந்த பிறகு பண்ணையாள் நிலைமை மாறி, தினக்கூலியாக ஆக்கப்பட்டு, இன்றைக்கு அவர்கள் அதிக கூலி கேட்டால், ராமநாதபுரத்திலிருந்தும் வேறு இடங்களிலிருந்தும் ஆட்களை கொண்டுவருவதால் அவர்களுக்கு அன்றாட வாழ்க்கைக்கே கஷ்டம் ஏற்படுகிறது. இந்த விஷயத்தில் அரசாங்கம் தீவிரமான கவனத்தை செலுத்தாவிட்டால் ஏற்கனவே இருந்ததைவிட கடுமையான, கேவலமான நிலை இந்த குறுவை, சம்பா அறுவடையில் ஏற்படும் என்று சர்க்காருக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

புறம்போக்கு நிலங்களை எல்லாம் ஏதோ ஒரு சிலர் அனுபவித்து வருகிறார்கள். அவைகள் பெரும்பாலும் ஏழைமக்கள் கையில் இல்லை. சென்ற வருஷம் மக்கள் கையில் இருந்த புறம்போக்கு நிலங்கள் ரெவின்யூ அதிகாரிகள் அதிக மடங்குத் தீர்வை விதித்து சாகுபடி செய்ய முடியாமல் செய்வதற்கும் ஏற்பாடுகள் நடந்திருக்கிறது. சென்ற பத்து அல்லது பதினைந்து வருஷங்களாக, தாழஞ்சேரி, பாக்கம், ராதாநல்லூர் போன்ற இடங்களில் புறம்போக்கு நிலங்கள் தரிசாக மாற்றப்பட்டு, மாடு மேய இடம் வேண்டும், தங்க இடம் வேண்டும், என்று சாக்குப் போக்கு சொல்லி மடங்குத்தீர்வை அதிகப்படுத்தியதன் காரணமாக நிலத்தை விட்டு அப்புறப்படுத்தியிருக்கிறார்கள். உணவு உற்பத்தியை பெருக்குவதற்கு பதிலாக தரிசை உற்பத்தி செய்துகொண்டிருக்கிறார்கள். சர்க்கார் போதுமானகவனம் செலுத்தி தனியாக ரெவின்யூ இன்ஸ்பெக்டரை நியமித்து ஒவ்வொரு கிராமத்திலும் எவ்வளவு புறம்போக்கு இருக்கிறது, மாடுமேய எவ்வளவு இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது, அது இப்போது அதற்கு பயன்படுகிறதா, அந்த இடங்கள் யார் கையில் இருக்கிறது, அதனை யார் அனுபவித்து வருகிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். பெரிய நிலச்சுவான்தார்கள் வைத்துக்கொண்டிருக்கிற நிலங்களுக்கு மடங்குத்தீர்வை போடாமல், குடிகள் வைத்திருக்கிற இடங்களுக்கு மடங்குத்தீர்வை விதிக்கக் காரணமென்ன என்பதைப் புரிந்துகொண்டு, நிலமில்லாத மக்களிடத்தில் குத்தகைக்கு விடலாம். அதனால் உணவு உற்பத்தி பெருகும், அதோடு அரசாங்கத்தின் வருமானம் அதிகமாகும். இப்போது அவைகளெல்லாம் தரிசாக இருப்பதால், பலபேர்கள் பிழைப்பு இல்லாமல் ஏற்கெனவே மிராசுதார்களால் பாதிக்கப்பட்டு இருப்பதோடுகூட, கொஞ்சம் கொஞ்சம் சாகுபடி செய்துகொண்டிருந்தவர்கள் சென்ற இரண்டு மூன்று வருஷங்களாக அப்புறப்படுத்தபட்டிருக்கிறார்கள். இந்த குத்தகை முறை சமீபத்திலே ரொம்ப கடுமையாகி சென்ற காலத்தைவிட குத்தகைக் காரர்கள் குறைவாக நெல் அளக்க குறைந்த குத்தகைக்கு விடுகிறார்கள். நாங்கள் டெபாசிட் கட்டுகிறோம், அதிக நெல் கொடுக்கிறோம் என்று சொன்னால்கூட அவர்களுக்கு கொடுக்கவில்லை. வேறு யாரோ எங்கிருந்தோ வருகிறவர்களுக்கு அவசரம் அவசரமாக கொடுக்கப்படுகிறது. அந்தக் குத்தகையும் யாருக்கு கொடுத்தார்கள், எவ்வளவுக்கு கொடுத்தார்கள் என்று அந்த கிராமத்திலே அறிவிக்கப்படுவதில்லை. ஏலம் விடுகிறார்கள். அதற்குப்

போதுமான அளவு வரவில்லையென்று அறிவித்து சென்ற வருஷ குத்தகையைவிட குறைத்துக் குறைத்து விடுகிறார்கள். அதனால் அதிக பாதகம் ஏற்படுகிறது. நிலங்களிலிருந்து வரும் வருமானம் அரசாங்கத்திற்கு குறைகிறது. நாற்பது அல்லது ஐம்பது என்று வந்த இடத்திலே இருபது ஆனாலும் குத்தகைக்கு விடுகிறார்கள். அதன் காரணமாக பண்ணை நிலத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக அதிகப்படுத்த அவர்கள் உத்தேசிக்கிறார்கள். மாயவரம் வைத்தியநாத சுவாமி கோயிலிலெல்லாம் "பண்ணை சாகுபடி" என்ற பலமான போர்டு போட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 600 அல்லது 700 வேலியிலிருந்து குடிகள் அப்புறப்படுத்தப்பட்டு வருகிறார்கள். இவ்வளவு பண்ணை சாகுபடிக்கு கொண்டுவரப்பட்டதென்றால் பல நூற்றுக்கணக்கான குடிகள் அப்புறப்படுத்தப்பட்டு விட்டார்கள் என்பதுதான் அதனுடைய பொருள். நாம் இந்த விஷயத்திலே போதுமான அளவு கவனம் செலுத்தாவிட்டால் எதற்காக சட்டம் செய்தோமோ, யாருக்காக செய்தோமோ அது அவர்கள் பக்கத்திலே சென்று எட்டிப்பார்ப்பதற்குள் பலன் பூராவும் வேறு ஒருவர் ஆக்கிரமித்து விடுவார்கள் என்றுதான் அர்த்தம். எவ்வளவு சீக்கிரம் இந்த ரெவின்யூ அதிகாரிகள் கவனிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கவனிக்க வேண்டும். புறம்போக்கு நிலங்கள் சர்க்கார் கையிலிருக்கவேண்டும். கர்ணீகர் கையில் அவரிஷ்டமாக விடக்கூடாது. இந்த சட்டங்களெல்லாம் நல்ல முறையில் நடப்பதாக பக்கத்தில் உள்ள நண்பர் தெரிவித்தார். அதிகாரிகள் சௌகரியமாக நடக்கிறார்கள் என்று சொன்னார். ஏற்கெனவே அறுபது கலம் வாங்கியது போய் திருப்பி நாற்பது கலம் அளக்க வேண்டியிருந்தால் இப்போது 42½ கலம் அளக்க வேண்டுமென்று தீர்ப்புக்கொடுக்கப்படுகிறது. யாருக்காக இந்தச் சட்டங்களை செய்தோமோ, எதற்காக செய்தோமோ அதில் நூற்றில் பதினைந்து பெற்றவர்கள் போக 85 சதவீதம் அவர்களை அடையாமல், சட்டம் செய்ததிலே உள்ள பலன்கள் பொருள் உள்ளவர்கள் வாதாடுவதற்கு பணபலம் உள்ளவர்களை அடைகிறது, இப்படியே 85 பாகம் மக்களுக்கு கிடைக்காமல் நடத்தப்பட்டு விட்டது; இதை அரசாங்கத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன். சட்ட அமைப்பு காரணமாக திறமையாக வாதிக்கிறவர்கள் ஜெயிக்கிறார்கள். திறமை இல்லாமல் பொருள் வசதி இல்லாமல் நியாயம் கிடைப்பது கஷ்டமாயிருக்கிறது. ஆனால், இதில் கொஞ்சம் கொஞ்சம் மாறுதல் ஏற்படுத்தியிருக்கிறோம். பலமான மாறுதல் ஏற்படுத்தப்பட்டாலொழிய யாதொரு பிரயோஜனமும் இல்லை. மக்களும், அதிகார வர்க்கத்திலுள்ள அவ்வளவுபேரும், உழவர் வீட்டு குழந்தை ஐந்தாவது படிக்க வேண்டுமென்றால் சேகரித்த நெல் அவர்களுக்கு வரவேண்டும்.

நகரத்திற்கு சென்றாலும் பங்களா யார் வைத்திருக்கிறார்களோ, எங்கு எங்கு காப்பி குடிக்க முடியுமோ, எங்கு வசதி கிடைக்குமோ அவர்களுடைய பிரதிபலிப்புத்தான் ஏற்படுகிறது. குற்றம் சொல்வதற்காக சொல்லவில்லை. நடைமுறையில் ஏழைமக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

சில இடங்களில் **conciliation** ஆபீஸர்கள் சரிவர நடப்பதில்லை. நிச்சயமாக **conciliation** கோர்ட் சரியாக அமைந்திருந்தால் சர்க்கார் நிர்வாகம் நல்ல முறையிலே ஏற்படும். நல்ல அமைப்பு ஏற்படுத்திவிட்டால் நாம் செய்த சட்டங்கள் உண்மையிலேயே பலனளிக்கும். நில வரம்புச் சட்டம் உடனடியாக கொண்டுவரவேண்டும். அதிகப்படியான நிலங்களை நிலச்சுவாந்தார்களிடமிருந்து வாங்கி ஏழைகளுக்கு கொடுக்கவேண்டும். நிர்ணயம் செய்து விட்டால் அதிக நிர்பந்தம் ஏற்படாது. அதன் காரணமாக சட்டம் ஓரளவு நல்ல முறையிலே பாதுகாக்கப்படும். மேலும் மேலும், பண்ணை சாகுபடி நிலம் குறையும். அதிகாரிகள் அல்லது **conciliation** ஆபீஸருக்கு சரியாக ஒத்துவராவிட்டால் போலீஸ் மூலமாக ஒரு மரம் போய்விட்டது என்று காட்டி போலீஸ் ஸ்டேஷனில் அடைத்து நிலம் வேண்டாமென்று எழுதி வாங்கி விடுகிறார்கள். கடவுளுக்கு ஆசை போகவில்லை; பண்டார சந்நிதிகளுக்கு ஆசை போகவில்லை. குடிகளுக்கு நிலம் வேண்டாமென்று நிலத்தை கொடுத்து விட்டார்கள் என்றால் அதனைப் பார்க்க வேண்டும். காரணம் அவர்கள் அப்புறப்படுத்தப்படுகிறார்கள். கஷ்டப்படுகிறார்கள். நிர்ப்பந்தப் படுத்தப்படுகிறார்கள். விரக்திக்கு கொண்டும் வரப்படுகிறார்கள். இதை யெல்லாம் சென்ற சட்டசபையில் பல காலங்களிலே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். திரும்பச் சொல்ல வேண்டிய





அவசியமில்லை. இன்றைய சர்க்கார், இவைகளை யெல்லாம் கவனிக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

* **Sri. K. RAMACHANDRAN**: அவைத் தலைவர் அவர்களே, நில உடைமைக்கு வரம்பு கட்டவேண்டும் என்றும், நிலச்சீர்திருத்தங்கள் செய்து கூட்டுறவு விவசாய முறையை அமுலுக்குக் கொண்டுவரவேண்டும் என்றும், விவசாயத் தொழிலாளர்களின் கூலியை நிர்ணயிக்கவேண்டும் என்றும் எனக்கு முன் பேசிய அங்கத்தினர்கள் சொன்னதை நான் ஆதரிப்பதுடன், இரண்டொரு முக்கியமான பிரச்னைகளைப்பற்றி மட்டும் நான் இங்கே விவாதிக்கலாம் என்று நினைக்கிறேன். நில வெளியேற்றம் ஒரு முக்கியமான பிரச்னையாக இருக்கிறது. ராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள ஜமீன் பகுதிகளில் ஆயிரக்கணக்கான விவசாயிகள் வெளியேற்றப்பட்டு வருகிறார்கள். இந்த வெளியேற்றம் ஏன் நடக்கிறது என்பதை நாம் சிறிது உன்னிப்பாக கவனிக்கவேண்டும். குளம் கோர்வை நிலங்கள் என்று சொல்லப்படும் நிலங்களிலிருந்து இந்த விவசாயிகள் வெளியேற்றப்பட்டு வருகிறார்கள். குளம் கோர்வை நிலங்கள் என்றால் அர்த்தம் என்ன என்பதற்கு அந்தப் பதத்திலேயே விளக்கம் இருக்கிறது. குளத்திலே இருக்கும் நிலம் குளங்கோர்வை நிலம் ஆகும். அந்தப் பிராந்தியத்தில் குளம் என்றால் கண்மாய் என்று அர்த்தம். இந்தக் கண்மாய்கள் தமிழில் உள்ள "ப" என்ற எழுத்தைப்போல் இருக்கும். அப்படிப்பட்ட கண்மாய்யைச் சுற்றி மூன்று பக்கங்களிலும் சில நிலங்கள் இருக்கும். நான்காவது பக்கமாகிய குளத்தின் கரைப்பக்கத்தில் உள்ள நிலங்களுக்கு குளங்கோர்வை நிலங்கள் (குளங்கோர்வை நிலங்கள்) என்று பெயர். குளங்கரை நிலங்களைப் பற்றி சரியாகப் புரிந்துகொள்ளப்படாததால் தான் இன்று ராமநாதபுரம் ஜில்லாவில் அந்த நிலங்களில் விவசாயம் செய்பவர்கள் வெளியேற்றப்படுகிறார்கள்.

நிலத்தை ஒட்டிய கண்மாய்ப் பகுதியில் (குளங்கோர்வை நிலங்களில்) சாகுபடியாளர்கள் விவசாயம் செய்துவருவது தொன்றுதொட்டு வந்த வழக்கம். கண்மாயைச் சுற்றி நஞ்சை நிலங்களும், புஞ்சை நிலங்களும், இருக்கும். நஞ்சை நிலங்களுக்குக் குளத்திலிருந்து தண்ணீர் பாயும். புஞ்சை நிலங்களுக்கும் குளத்திற்கும் சம்பந்தம் இருக்காது.

புஞ்சை நிலங்கள் வானம் பார்த்த நிலங்களாக இருக்கும். வானத்துடனும் குளத்துடனும் சம்பந்தப்பட்ட நிலங்கள்தான் குளங்கோர்வை நிலங்கள் ஆகும். குளத்தில் தண்ணீர் அதிகமாக இருந்தால் குளங்கோர்வை நிலங்களுக்கு லாபம். மழை பெய்தாலும் குளங்கோர்வை நிலங்களுக்கு லாபம். அந்தக் குளங்கோர்வை நிலங்களின் தன்மை என்ன? சாதாரணமாக, அந்தப் பகுதியில் நஞ்சை நிலங்களிலிருந்தோ புஞ்சை நிலங்களிலிருந்தோ விளையும் அளவை விட அதிகமாகக் குளங்கோர்வை நிலங்களில் விளையும். இப்படிப்பட்ட குளங்கோர்வை நிலங்கள் ஒவ்வொரு கிராமத்திற்கும் சுமார் 200 அல்லது 300 ஏக்கருக்கு இருக்கின்றன. இதில் பயிர் செய்யும் விவசாயிகள் பரம்பரை பட்டா பாத்தியதையுடன் நூற்றுக்கணக்கான வருஷங்களாகப் பயிர் செய்துவருகிறார்கள். இந்த நிலங்களின் பாத்தியதையை நூற்றுக்கணக்கான வருஷங்களாக அனுபவித்து வந்த விவசாயிகள், பாடுபட்டுப் பயிர் செய்துவரும் அந்த விவசாயிகள், இன்று வெளியேற்றப்பட வேண்டிய அவசியம் என்ன என்று பார்த்தால், குளத்திற்குப் பாதுகாப்புக் கொடுக்கப்படுவதற்காக இவர்கள் வெளியேற்றப்படுகிறார்கள் என்பதே முக்கியமான காரணமாகச் சொல்லப்படுகிறது. இந்த நூறு வருஷங்களாகக் குளத்திற்குப் பாதுகாப்பு இல்லையா? இந்த நூறு வருஷங்களில் குளம் அழிந்தா போய் விட்டது? இப்போது என்ன அவசியமான பாதுகாப்பு வந்து விட்டது? இந்த நிலங்கள் முன்பு ஜமீன்தார்களால் இனமாகக் கொடுக்கப்பட்டவை.

அது எப்படி இருந்தாலும், இன்று ராமநாதபுரம் ஜில்லாவில், அந்த நிலங்களில் ஏராளமான மக்களின் பொருளாதாரப் பிரச்னையும், வாழ்வுப் பிரச்சனையும் பொதிந்து கிடக்கிறது. அந்த நிலங்களிலிருந்து விவசாயிகளை வெளியேற்றிவிட்டால், பெரும்பான்மையான விவசாயிகள் கஷ்டஜீவனம் செய்து செத்து மடியும் நிலைமைதான் ஏற்படும். சரி, கண்மாய்க்குப் பாதுகாப்பு அவசியம்தான். நஞ்சை விவசாயத்திற்குக் கண்மாய்

மிகவும் அவசியம். அந்த முறையில் கண்மாயின் பாதுகாப்பு எப்படி பாதிக்கப்படும்(?) இப்போது, " மூளைமால் " என்ற கண்மாயில் தண்ணீர் பிடிக்கும் பகுதியை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு நிர்ணயித்திருக்கிறார்கள். அந்தப் பகுதியிலும் ஓரளவு நீக்கக்கூடிய அளவில்தான் ராமநாதபுரம் பகுதியில் நிலைமை இருக்கிறது. அதில் ஒரு பகுதியை நீக்கி விட்டு பெரும்பான்மையான குளங்கரை நிலங்களிலிருந்து விவசாயிகளை வெளியேற்றாமல் இருந்தால் அங்குள்ள விவசாயிகள் முன்னேற முடியும் ; அவர்களுடைய பொருளாதார நிலைமை உயரும். உதாரணமாக, ராஜசிங்கமங்களம் என்ற கண்மாய் ஒரு மிகப் பெரிய கண்மாய். ராமநாதபுரம் ஜில்லாவில் அந்தக் கண்மாய் இருக்கிறது. தென் பகுதியிலேயே அவ்வளவு நிலப்பரப்புக்கொண்ட கண்மாய் கிடையாது. அந்தக் கண்மாயில்தான் சுமார் 3,000 எக்கர் நிலங்களிலிருந்து விவசாயிகள் வெளியேற்றப்படுகிறார்கள். அவர்களுக்கு வெளியேற்ற (எவிக்ஷன்) நோட்டீஸ் போய்க்கொண்டேயிருக்கிறது. ஒவ்வொரு கிராமத்திலும் 100 அல்லது 200 எக்கர் நிலங்களிலிருந்து விவசாயிகள் வெளியேற்றப்படுகிறார்கள், மேலும், பரமக்குடி தாலூகாவில் நயினார்கோயிலுக்குப் பக்கத்தில் பல்லவராயனேந்தல்ராமம் என்ற கிராமம் இருக்கிறது. அங்கே 35 குடிகள் தான் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் ஹரிஜனக் குடிகள். அவர்களுடைய நிலைமை என்ன ? அந்தக் கண்மாயின் பரப்பு சுமார் 60 எக்கர். அதில் 45 அல்லது 50 எக்கர் வரையில் விவசாயம் நடக்கிறது. இதில் இந்த 35 விவசாயக் குடும்பத்தினர் பயிர் செய்கிறார்கள். இந்த நிலங்கள் கண்மாயில் நிலங்களாக இருப்பதால் இவற்றை விட்டுவெளியேற வேண்டுமென்று வெளியேற்ற நோட்டீஸ் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆகவே, இன்று அவர்கள் ஊரை விட்டே போகக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இது ஒரு உதாரணம். மேலும், பாதிக்கப்பட்ட விவசாயிகள் ஸெட்டில்மெண்ட் கோர்ட்டுகளுக்கும் மற்றக் கோர்ட்டுகளுக்கும் சென்று பணத்தை விரயம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

இந்தப் பிரச்னை சம்பந்தமாக சென்ற வருஷம் டிசம்பர் மாதம் அந்தப் பகுதியிலிருந்து ஒரு தூது கோஷ்டி வந்தது. விஷயங்களை ஆராய்வதற்கு ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அப்போது தூதுகோஷ்டியிடம் பதிலளிக்கப்பட்டது. ஆனால் இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இன்றைக்கும் வெளியேற்ற நோட்டீஸ் அங்கே வந்து கொண்டிருக்கிறது. உத்தேசமாக, சுமார் 30,000 எக்கர் நிலங்களிலிருந்து 12,000 விவசாயக் குடும்பங்கள் வெளியேற்றப்படுகின்றன. நான் உத்தேசமாகத்தான் கூறுகிறேன். ஆனாலும் சரியான புள்ளி விவரப்படி இதைவிட அதிகமாகத்தான் இருக்குமே தவிர குறைவாக இருக்காது. தயவுசெய்து இந்தப் பிரச்னையை பரிசீலனை செய்து உடனடியாகத் தீர்க்கவேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். பிரச்னையைத் தீர்க்காவிட்டால் அந்தப் பகுதியில் விவசாய மக்களின் ஒத்துழைப்பை இந்த சர்க்கார் பெற முடியாது என்பதை வலியுறுத்திக் கூறுகிறேன். அங்கே குளங்கோர்வை நிலங்களிலிருந்து விவசாயிகள் வெளியேற்றப்படுவதைத் தடுப்பதற்காக, உடனே ஒரு மந்திரிசபைக் குழுவையோ, ஒரு சட்டசபைக் குழுவையோ, அல்லது வேறு எதாவது ஒரு கமிட்டியையோ அமைத்து, பிரச்னையைப் பரிசீலனை செய்த பின்னர் அவசியமான சட்டத்தைப் போடவேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். இந்த விஷயத்தில், சட்ட சம்பந்தமான சிக்கல்கள் இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. ஹைகோர்ட் தீர்ப்புகள் சாதகமாக இல்லை என்றும் சொல்லப்படுகிறது. ஹைக் களை யெல்லாம் பார்த்தால் விவசாயிகளின் நிலைமை மிகவும் மோசமாகி அவை விடும். சட்ட சம்பந்தமான சிக்கல்களைப் பார்க்காமல் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் விவசாயத்திற்கு லாயக்கான புறம்போக்கு நிலங்கள் இருக் இன்றன. அந்த நிலங்களை ஹரிஜன விவசாயிகளுக்கும் மற்ற ஜாதி ஏழை விவசாயிகளுக்கும்—பொதுவாக நிலமில்லாதவர்களுக்கு—ஜாரி செய்து தரு வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசாங்கத்தாரைக் கேட்டுக் கொள்கிறேன்.





அடுத்தபடியாக, நியாய வாரச் சட்டத்தையும், விவசாயிகள் பாதுகாப்புச் சட்டத்தையும் பற்றி ஓரிரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அந்தச் சட்டங்கள் நல்ல சட்டங்கள்தான். ஆனால் அவைகளை அமல் நடத்துவதில் சில கஷ்டங்கள் இருக்கின்றன. உதாரணமாக, ஒரு சாகுபடியாளர் நிலத்தைவிட்டு தான் வெளியேற்றப்படாமல் இருக்க வேண்டுமானால் சாதாரணமாக அவர் கோர்ட்டுக்குப் போக வேண்டியிருக்கிறது. நிலச்சுவாந்தார் விவசாயியை வெளியேற்றினால் விவசாயி உடனே கோர்ட்டுக்குப் போக வேண்டியிருக்கிறது. கோர்ட்டுக்குப் போனால் கோர்ட்டில் என்ன பார்க்கிறார்கள் ? நிலத்தை உழுபவனின் (விவசாயின்) **possession**-ல் அந்த நிலம் இருக்கிறது என்று நிரூபிக்க வேண்டும். அதை நிரூபிப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. நிலச்சுவாந்தார்கள் விவசாயிகளுக்கு குத்தகைச் சீட்டை எழுதிக் கொடுப்பதில்லை ; வாய் மொழியாகக் குத்தகைக்கு விடுகிறார்கள். " வாய்மொழி "-யை கோர்ட்டில் ஒப்புக்கொள்வதில்லை. அடங்கல் கணக்கில் நிலத்தின் சொந்தக்காரர் பெயர்தான் இருக்கும், உண்மையாக சாகுபடி செய்பவனின் பெயர் இருக்காது. சாகுபடியாளருடைய பெயர் அடங்கல் கணக்கில் இருந்தால் அது ஒரு நல்ல அத்தாட்சியாக இருக்கும் ; அதைக் கொண்டு நிரூபிக்க முடியும். இந்தமாதிரியான ஒரு சிக்கலை அகற்றிவிட்டால்தான் இந்தச் சட்டத்தினால் நமக்குப் பயன் ஏற்படும். இப்போது இருக்கக்கூடிய அடங்கல் கணக்கில் சாகுபடி செய்பவர்கள் யார் என்கிற விவரத்தையும் குறிக்கும்படியாக உடனே உத்திரவு போடவேண்டும். இந்த உத்திரவு போடுவதனால் இன்னும் பல பிரச்சனைகளைத் தீர்க்க முடியும்.

பண்ணை முறையிலும் இதேமாதிரியான சிக்கல்தான். அந்த நிலத்தை அநுபவித்துக் கொண்டிருப்பவன் யார் என்று நிர்ணயிப்பதில் பல கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. (Absentee Landlord) ஆப்செண்டி லாண்டு லார்டாக எத்தனையோ மைல்களுக்கு அப்பால் நிலத்திற்கு உடையவர்கள் இருக்கிறார்கள். அவற்றிலே பலகாலமாகப் பயிரிட்டு வருகின்ற விவசாயிகளுடைய விவரம் அடங்கல் கணக்கில் இல்லாத காரணத்தினால் பல ஜமீன்தார்கள், ஆதீனங்கள் இன்றைக்கு இந்த நிலங்கள் எல்லாம் பண்ணையில் இருப்பதாக வாதாடிக் கொண்டிருக்கிறார்கள். இதற்குப் பல தஸ்தாவேஜிகள் இருக்கலாம். குத்தகைச் சீட்டுகள் இருக்கலாம். ஆனால் அவற்றில் உண்மையிலேயே பயிரிடுகின்றவனின் விவரம் இல்லாத காரணத்தினால் பொய் தஸ்தாவேஜிகளைக் காட்டி அந்த நிலத்தில் அந்த விவசாயி பயிரிடவே இல்லை என்று வாதாடி அவர்கள் ஜயித்துக் கொண்டு போய்விடுவார்கள். இந்தக் குறைபாட்டை நீக்க இனி அடங்கல் கணக்கில் யார் யார் எந்த எந்த நிலங்களைப் பயிரிட்டு வருகிறார்கள் என்பதான கணக்கையும் எழுதி வைக்கவேண்டுமென்று உத்திரவு போடவேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். இதைச் செய்தால் நாம் கொண்டு வந்துள்ள சட்டத்தினால் உண்மையிலேயே விவசாயிகளுக்கு நல்ல பயன் ஏற்படும் என்று சொல்லிக் கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

* **Sri A. SENAPATHI GOUNDER** : கனம் சபாநாயகர் அவர்களே, ரெவின்யூ இலாகா மானியத்தின்பேரில் சில விஷயங்களைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். லோயர் பவானி பிரதேசத்தில் இருந்த தரிசு நிலங்கள் எல்லாம் இப்போது லோயர் பவானி நதியின் நீரினால் பாசன வசதி பெறுவதனால் நல்ல நிலங்களாக மாறி வருகின்றன. இந்தச் சமயத்தில் அங்கே விதிக்கப்படும் தீர்வை முறையினால்தான் விவசாயிகளுக்குக் கஷ்டம் ஏற்படுகிறது. இப்போது தீர்வை முறை எப்படி இருக்கிறது என்றால் எந்த எந்தப் பயிரை எந்த எந்த விவசாயி செய்கிறானோ அவனுக்கு அந்தப் பயிரின் மேல் ஒரு தீர்வை விதிக்கப்படுகிறது. உதாரணமாகப் பருத்தியைப் பொறுத்த வரையில் 20 ரூபாய் என்றும், நெல் சாகுபடி செய்தால் பதினைந்து ரூபாய் என்றும், இதர புஞ்சை தான்யங்களுக்குப் பத்து ரூபாய் என்றும் தீர்வை விதிப்பது நடைமுறையில் இருந்து வருகிறது. அதனால் பல சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஒரு விவசாயி இன்ன பயிரை இன்ன விஸ்தீர்ணம்தான் செய்தான் என்று நிர்ணயம் செய்யும் விஷயத்தில் அவன் அங்குள்ள கிராம கர்ணத்தினிடத்தில் பல்விதமான அல்லல்களுக்கு ஆளாகிறான். அந்தமுறையை மாற்றி 10-42 a.m.

[Sri A. Senapathi Gounder] [6th July 1957

அங்கேயுள்ள பூமியின் தரத்தை மாத்திரம் கணக்கில் எடுத்துக்கொண்டு தீர்வையை நிர்ணயம் செய்துவிடும்படியாக, ரெவின்யூ மந்திரி அவர்களிடத்திலும், அதிகாரிகளிடத்திலும் ஏற்கனவேயே சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு இப்போது துரிதமாக நடவடிக்கை எடுத்துக்கொண்டிருப்பதாக கேள்விப்படுகிறேன். அந்த நடவடிக்கையை சீக்கிரம் எடுத்து புஞ்சை, நஞ்சை, தோட்டக்கால் என்கிற மூன்று முறையில் பூமியைப் பிரித்து இன்ன பூமிக்கு இவ்வளவு தீர்வை என்பதாக நிர்ணயம் செய்துவிட்டால் விவசாயி தன்னிடம் இருக்கும் நஞ்சை பூமி எவ்வளவு, புஞ்சை பூமி எவ்வளவு, தோட்டக்கால் பகுதி எவ்வளவு என்று கணக்கிட்டுக் கொண்டு கஷ்டம் இல்லாமல் தீர்வையைச் செலுத்திவிட வசதி ஏற்படும். இந்த முறையை துரிதமாக மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இதன்பேரில் சீக்கிரம் உத்திரவும் போடவேண்டுமென்று தாழ்மையுடன் வேண்டிக் கொள்ளுகிறேன்.

அதேபோல நமது மாகாணத்தில் அநேகமாக நஞ்சை நிலங்களைத் தவிர புஞ்சை மிகுந்த பிரதேசங்கள்தான் அதிகம். இதிலும் பலதரப்பட்ட பூமிகள் இருக்கின்றன. ஏதோ ஒரு காலத்தில் இந்த நிலங்களுக்கு ஏக்கருக்கு நான்கு அணு தீர்வை என்றும், மற்ற இடங்களில் ஒரு ரூபாய் என்றும் விதிக்கப்பட்டது. அன்றைக்கு இருந்த முறையில் அந்தத் தீர்வையை விதித்துள்ளார்கள். இப்போது வெகு காலத்திற்குப் முன்பு நான்கணு விதிக்கப்பட்ட பூமி இப்போது நல்ல பூமியாகவும், உயர்ந்த பூமி என்று கருதப்பட்டது மட்டமாகவும் போயிருக்கிறது. முன்பு நான்கணு தீர்வை விதிக்கப்பட்ட பூமி இப்போது உயர்ந்த பூமியாக இருந்தால் இதன் தீர்வையை இன்னும் கொஞ்சம் கூடுதலாக ஆக்கினாலும் பரவாயில்லை. பூமியின் தராதரத்திற்கு ஏற்ப தீர்வை விதிப்பு முறையை மாற்றியமைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இதற்கு மறுபடியும் ஒரு சர்வே நடத்தினால் கூட நல்லது என்று ரெவின்யூ அமைச்சரிடத்தில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். வரி விதிப்பு பூமியின் தரத்திற்கு ஏற்பத்தான் அமையவேண்டும் என்பதை வற்புறுத்துகிறேன்.

மேலும் கிராம உத்தியோகஸ்தர்கள் விஷயத்தில் ஒன்று சொல்ல விரும்புகிறேன். கிராமங்கள் முன்பு ஏதோ ஒரு வகையில் பிரிக்கப்பட்டிருக்கின்றன. சில பெரிய கிராமங்களும் இருக்கின்றன. குட்டிக் கிராமங்களும் இருக்கின்றன. பத்தாயிரம் பேரீஜ் துகை உள்ள இடங்களும் இருக்கின்றன. இரண்டாயிரம் ரூபாய் கிஸ்தி உள்ள கிராமங்களும் இருக்கின்றன. நான் சொல்வது என்னவென்றால் இவைகள் எல்லாவற்றையும் இப்போது பரிசீலனை செய்து ஒரு கிராமத்திற்கு இவ்வளவு பேரீஜ் (கிஸ்து தொகை) என்று இருக்க வேண்டுமென்று நிர்ணயித்து, பல குட்டி கிராமங்களை ஒன்றாக இணைத்து ஒரேமாதிரி யூனிட்டுகளாக எல்லா கிராமங்களையும் செய்தால் இன்று அதிகமாக இருக்கக்கூடிய கிராம அதிகாரிகளின் எண்ணிக்கையும் கூடக் குறையும். இவ்விடங்களில் கிராம அதிகாரிகளுக்கு அதிகச் சம்பளம் கூடக் கொடுக்கலாம். இதனால் மொத்தத்தில் சர்க்காருக்குச் செலவு குறையுமே தவிர அதிகமாகாது. இதையும் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தப்படியாக சர்க்கார் விவசாயிகளுக்கு ஏராளமாகக் கடன் உதவி செய்து வருகிறார்கள். விவசாயிகளும் திரும்பத் திரும்பக் கடன் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்தக் கடன் எதற்காக வாங்கப்பட்டதோ அதற்காகச் செலவு செய்யப்படுவதில்லை. அதை வாங்குவதிலும் பல கஷ்டங்கள் இருக்கின்றன. கடன் வாங்கும் தொகையில் பெரும் பகுதியைக் கூட அவர்கள் செலவழித்துத்தான் இந்தத் தொகையை வாங்கவேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். இதைமாற்றி லோன் கொடுப்பதானால் விவசாயிகளுக்கு உடனடியாகக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிக் கொடுக்கும் நேரத்திலும் அந்தக் கடன் எந்தக் காரணத்திற்காக அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறதோ அந்தக் காரணத்திற்காகவே அவர்கள் அந்தப் பணத்தைச் செலவிடுகிறார்களா என்பதையும் கண்காணிக்கவேண்டும். அந்த முறையில் பார்த்தால் இன்று என்னுடைய தாலுக்காவில் எழுபது லட்சம் ரூபாய் வரையில் கடன் கொடுத்திருக்கிறார்கள். ஆனால்

6th July 1957] [Sri A. Senapathi Gounder]

இந்த எழுபது லட்சம் ரூபாயும் விவசாயத்திற்காகப் பயன்படுத்தப்பட்டது என்று சொன்னால் அதை நம்பமுடியாத நிலைமைதான் இருக்கிறது. மேலும் இந்த வருஷம் கூட இரண்டு மூன்று லட்சம் ரூபாய் வரையில் கொடுப்பதற்கு வகை செய்திருக்கிறார்கள். நான் சொல்வது என்னவென்றால் இந்த (கடனை) லோனை விவசாயிகளுக்கு ரொக்கமாகக் கொடுப்பதை காட்டிலும் அவர்களுக்குத் தேவையான பண்டங்களாகக் கொடுப்பது நல்லது. பம்புசெட்டு வைப்பதற்கு, மோட்டார் வைப்பதற்கு என்று தாசில்தாரிடம் சொல்லிவிட்டு பணத்தை வாங்கிக் கொண்டுபோய் வேறுவகையில் அவர்கள் செலவிடாமல் இருக்க வேண்டுமென்றால் அந்தப் பணத்துக்கு அவர்களுக்குப் பம்புசெட்டாகவும், மோட்டாராகவுமே கொடுத்துவிட்டால் உண்மையில் விவசாயத்திற்கே அந்த லோன் பயன்பட்டதாக ஆகும். இனிமேல் கொடுக்கப்படும் கடனை ரொக்கமாகக் கொடுக்காமல் அத்தியாவசியமான பண்டங்களாகவே கொடுத்துவிடவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். இதுதான் மிகவும் உபயோககரமாக இருக்குமென்று நம்புகிறேன்.

அடுத்தப்படியாக இப்போது பொதுவாக தாலுக்கா எந்த ஆபீசுகளில் எந்தக் காரியமாக விண்ணப்பம் அனுப்பினாலும் உடனடியாக அது கவனிக்கப்படுவதே இல்லை. அதற்குக் காரணம் என்னவென்றால் அங்கேயுள்ள குமாஸ்தாக்கள், அதிகாரிகள் இவர்களிடம் நேரில் சென்று அந்தப் பேப்பரை எடு, இந்தப் பேப்பரை எடு என்று உரிமையோடு சொல்லக்கூடிய பழக்கப்பட்டவர்களுடைய வேலைகளேதான் கவனிக்கப்படுகின்றன. மற்ற பேர்களுடைய விஷயங்கள் அப்படியே போடப்பட்டுவிடுகின்றன. தானே அவர்களாகவே அதைச் செய்ய முன்வருவது இல்லை. நீண்டகாலமாக நடந்து வந்த பழக்கம் மாறிவிட்டது. இப்போது தாலுக்கா ஆபீஸ்களில் உள்ளவர்களைத் தெரிந்துகொண்டவர்களுக்குத்தான் அங்கே எந்தக் காரியம் ஆனாலும் சுலபத்தில் நடக்குமே தவிர கிராமங்களிலுள்ள ஒன்றும் தெரியாத பாமர மக்களுடைய விஷயம் கவனிக்கப்படுவதே இல்லை. ஒரு பேப்பரை அனுப்பிவிட்டு பேசாமல் இருந்தால் போதும். தானாகவே அந்தக் காரியம் நடைபெற்றுவிடும் என்று எதிர்பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தால் ஏமாறவேண்டியதுதான். ஒன்றும் நடைபெறுவது இல்லை. இந்த நிலைக்குத் தாலுக்கா நிர்வாகம் வந்து கொண்டிருக்கிறது. இந்த நிலைமையை சர்க்கார் உடனடியாக திருத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். நிர்வாக இயந்திரம் தெரிந்தவர், தெரியாதவர் என்று பாரபட்சம் காட்டாத முறையில் அன்றாட வேலைகளை ஒழுங்காகச் செய்யக் கூடிய வகையில் அதைத் திருத்தி அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

சர்க்கார் தரிசு நிலங்களைப்பற்றி பல நண்பர்கள் பேசினார்கள். என்னுடைய பிரதேசத்தில் சுமார் 800 ஏக்கர் தரிசு நிலங்கள் இருக்கின்றன. இந்த பூமிகளை நிலமில்லாத விவசாயிகளுக்கு கொடுத்து நல்ல முறையில் விவசாயம் செய்யவேண்டுமென்று கருதி அரசாங்கம் நாலைந்து ஆண்டுகளுக்கு முன்பு இதற்கென்று ஒரு காலனி ஏற்படுத்தி நிலங்களை பிரித்து கொடுத்து அவர்களுக்கு வீட்டு வசதி குடிதண்ணீர் வசதி இவைகளும், பயிர் செய்வதற்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்து கொடுத்தார்கள். பணம் கொடுக்கப்பட்டது. ஆனால் அவர்கள் அந்த இடத்தில் நன்றாக பயிர் செய்யாமல் கையிலிருந்த பணம் செலவழியும் வரை இருந்தார்கள். பின்னால் அங்கிருந்து ஓடிப்போய்விட்டார்கள். இவ்விதம் சரியாக அவர்களால் பயிர் செய்யமுடியவில்லை. காரணம் மழை இல்லை. பூமி மானாவாரியாக இருக்கிறது. ஆகவே சர்க்காருடைய நோக்கம் நிறைவேறாமல் போயிற்று. ஆகையினால் உண்மையிலே அங்கு பயிர் செய்வதற்கு தயாராய் இருக்கிற அங்குள்ள நிலமில்லாத விவசாயிகளுக்கு இந்த தரிசு நிலங்களை விநியோகித்து அவர்கள் பயிர் செய்வதற்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

***Sri A. RAMACHANDRA REDDIAR** : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்கள் கோரியிருக்கிற வருவாய் இன மானியத்தை ஆதரித்து ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன்.

[Sri A. Ramachandra Reddiar] [6th July 1957

கிராமத்தில் விவசாயம் பிரதானமாக இருந்து வருகிறது. விவசாயத்தில் கிடைக்கிற வருமானத்தைதான் மற்ற இலாகாக்கள் எதிர்பார்த்து கொண்டிருக்கிறது. அதுபோல் கிராமத்தில் பஞ்சாயத்து இருக்கின்றது. அந்த பஞ்சாயத்தின் அடிப்படையான வருமானமும் விவசாயத்தை பொறுத்தது தான். கிராமத்திற்கு கிராமம் இவ்விஷயத்தில் கொடுக்கப்படுகிற வரி மாறுபட்டு இருக்கின்ற காரணத்தால் சென்ற ஆண்டில் இந்த சட்ட சபையில் ரூபாய்க்கு இரண்டு அணு "ஸர்சார்ஜ்" போடப்பட்டது. இது பஞ்சாயத்து போர்டுக்கு உதவிகரமாக இருக்கும் என்று சொல்லுகின்றார்கள். ஆனால் இந்த பணம் பஞ்சாயத்துகளுக்கு கிடைப்பதில்லை. இதனால் ஸ்தல ஸ்தாபனத்தின் கீழ் இருக்கும் அநேக கிராமங்களிலும் இப்போது சர்க்கார் இந்த அபிவிருத்தி திட்டங்களை நிறைவேற்றிக்கொள்ளாமல் இருக்கிறது. இந்த 'ஸர்சார்ஜ்' வந்த உடன் கிராமத்திற்கு உடனடியாக கிடைக்கும் என்று நினைத்தோம். அது கிடைப்பதற்கு வழியில்லை. அதை கொடுத்தால்தான் எதாவது திட்டங்களை கிராமத்தில் நிறைவேற்ற முடியும். அடுத்தபடியாக கிராம அதிகாரிகளுடைய நிலைமையில், இப்போதுள்ள பட்ஜெட் பற்றுக்குறையாக இருந்தாலும், அவர்கள் நீண்ட நாட்களாக கோரிவந்திருக்கும் குறைகளுக்கு பரிகாரம் தேடியிருக்கின்றது. இதற்காக நான் இந்த சர்க்காரை பாராட்டிக்கொள்கிறேன். அவர்களுடைய கோரிக்கையின் படி. அவர்களுடைய எல்லா குறைகளும் இதில் தீர்க்க இயலவில்லை என்று தெரிகிறது. கிராம அதிகாரிகளில் அதிலும் கணக்குப் பிள்ளை என்கிற வேலை ரொம்பவும் பொறுப்பான வேலை. அவர்கள் சர்க்காருக்கு வேண்டிய புள்ளிவிவரங்கள் தயாரிக்க வேண்டும். இருபத்திநான்கு விதமான ரிஜிஸ்தர்கள் வைத்திருக்கவேண்டும். ஸ்தல அபிவிருத்தி வேலைகளில் ஊக்கம் அளிப்பதற்கு இவர்கள் ரொம்பவும் முக்கியமானவர்கள். ஆனால் அவர்களுக்கு கொடுக்கப்படும் ஊதியம் போதாது, அதோடு இப்போது கொடுக்கப்பட்டிருக்கும் அதிகப்படி உயர்வும் போதுமானது அல்ல என்பதை இந்த சபையிலுள்ள எல்லா அங்கத்தினர்களும் நன்றாக அறிவார்கள். ஆனால் இப்போதுள்ள நிலையில் கூடுதல் கொடுக்க முடியாது என்று தெரிகிறது. ஆயினும் அவர்களுக்கு வேறு விதமான வழிகளில் சில ஏற்பாடுகள் செய்தால் அவர்களுக்கு உதவியாக இருக்கும் என்று கருதுகிறேன். இப்போது பஞ்சாயத்துகளில் குரூப் ஸிஸ்டத்தில் பில்-கலெக்டர் என்ற உத்தியோகஸ்தர் இருக்கிறார். அதாவது ஒவ்வொரு வீட்டில் சென்று வரிகளை பிரிக்கவும் பஞ்சாயத்தினுடைய பட்ஜெட்டை தயாரிக்கவும் செய்யவேண்டும். இந்த வேலையை கிராம கணக்குப்பிள்ளையிடம் ஒப்படைத்தால் அந்த சம்பளத்தை இவர்களுக்கு கொடுக்கலாம். இதுதவிர சிற்சில இடங்களில் அதாவது ரொம்பவும் ஆயிரம் ஜனங்கள் குறையாத உள்ள இடங்களில் போஸ்ட் ஆபீஸ் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த வேலையையும் கிராம அதிகாரிகளிடம் ஒப்படைக்கலாம். ஸ்டாம்ப் வெண்டர் என்றிருக்கிற ஸ்தானத்தையும் இவர்களுக்கு அளித்தால் நேரடியாக சர்க்கார் பணம் கொடுக்கவில்லை யென்றாலும் வேறு விதமாக இந்த இனத்தில் அவர்களுக்கு வருவாய் கிடைக்கும். இதற்காக் அவர்களை கௌரவ உத்தியோகஸ்தர்கள் என்று நினைத்து விடக்கூடாது. இவ்விதமாக நாட்டுக்கு பல வழிகளிலும் முக்கியமான வேலைகளை செய்துவரும் இவர்கள் எல்லோரையும் ஸ்திரமாக்கவேண்டும், என்றும் எடுத்துச் சொல்லிக்கொள்கிறேன். அடுத்தபடியாக ஜில்லா கலெக்டர் அவர்கள் இருக்கிறார்கள். எங்கள் ஜில்லாவாகிய வடஆற்காடு ஜில்லாவை பொறுத்த வரையில் அங்கு 11 தாலூக்காக்கள் இருக்கின்றன. இருபத்தாறு லட்சம் ஜனத்தொகை இருக்கிறது. ஆகவே அந்த ஜில்லாக்களிலுள்ள குறைகளை எல்லாம் ஆர்வத்தோடு தெரிந்துகொள்ள வேண்டுமென்று ஜில்லா அதிகாரிகள் ஆவலுள்ளவர்களாகயிருக்கின்றார்கள். என்றாலும்கூட, பெரிய ஜில்லாவாக இருக்கின்ற காரணத்தால் அங்குள்ள எல்லா குறைகளையும் அறிந்துகொள்ள முடியவில்லை. இதனால் பல பயனுள்ள மார்க்கங்கள் இருந்தாலும் அதை பெற்றுக்கொள்ள முடியவில்லை. ஆகவே இந்த ஜில்லா அமைப்பில் நன்றாக ஆலோசித்து ஒரு புனரமைப்பு செய்யவேண்டியது மிக அவசியம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். மற்ற ஜில்லாக்களில் அப்படியல்ல. உதாரணமாக செங்கல்பட்டு ஜில்லாவை எடுத்துக்கொண்டால் அங்கு 7 தாலூகாக்கள் ஒரே கலெக்டரின் கீழ் இருக்கிறது. அதே

6th July 1957] [Sri A. Ramachandra Reddiar]

சமயத்தில் 11 தாலுகாக்கள் கொண்ட வட ஆற்காடு ஜில்லாவும் ஒரே கலெக்டரின் கீழ்தான் இருக்கிறது. மேலும் துரதிருஷ்டவசமாக அங்கு ஜனத்தொகையின் விஸ்தீர்ணம், வருமானம் இவைகளின் அடிப்படையில் கிராண்ட் கொடுப்பதில்லை. கொடுக்கப்படுவதும் அங்கு காலாகாலத்தில் வந்து சேருவதில்லை. இந்த காலதாமதத்தால் ஒதுக்கப்படும் தொகை அந்த துறையில் வருஷக் கடைசி வரை செலவு செய்யப்படாமல் நிலுவையாக நின்றுவிடுகிறது. ஆகவே, இந்த விஷயத்தில் அரசாங்கம் கவனம் செலுத்தி, மேற்பார்வை செய்து ஜனத்தொகை, ஜில்லாவின் வருமானம், விஸ்தீர்ணம் இவைகளின் அடிப்படையில் அங்கு கிராண்ட் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கல்வி அதிகாரிகள் விஷயத்தில் எங்கள் ஜில்லா பெரிய ஜில்லாவாக இருக்கின்ற காரணத்தால் இரண்டு கல்வி அதிகாரிகள் நியமிக்கவேண்டும் என்று சொல்லி இரண்டு போஸ்டுகளும் ஸாங்ஷனுய்விட்டது என்று தெரிகிறது. இதை கூடியசீக்கிரமே நடைமுறைக்கு கொண்டுவந்தால் கல்வி நிர்வாகத்திற்கு நன்ருக இருக்கும் என்பதையும் தெரிவித்துகொள்கிறேன். அதுவும் தவிர குறிப்பாக என்னுடைய தொகுதியாகிய வந்தவாசி தொகுதியில் இருக்கும் ஷிஸ்டம் டாங்க், மைனர் இறிகேஷன் டாங்க் இவைகளை நன்ருக ரிப்பேர் செய்யவேண்டும். ஷிஸ்டம் டாங்க்குக்கு ஸ்பெஷலாக ரிப்பேர் செய்வதற்கு (allotment) செய்திருப்பதாக தெரியவில்லை. அவ்விதம் (allotment) செய்யப்படாமல் இருப்பது எனக்கும் ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. அந்த ஏரிகளில் எல்லாம் இப்போது நீர் மட்டங்கள் மிகவும் குறைந்து இருக்கிறது. இம்மாதிரி அங்குள்ள ஏரிகளிலுள்ள நீர் மட்டங்களை உயர்த்தி பாதுகாத்து கொடுத்தால் விவசாயம் நன்ருக நடைபெற முடியும்.

ராமராஜ்யம் வேண்டும், ராமராஜ்யம் வேண்டும் என்று நாம் சொல்லுகிருேம். அதன் அடிப்படையில் கிராமங்களுக்கு உடனடியாக நீர்ப்பாசன வசதி செய்துகொடுத்தால் கிராம மக்கள் நன்ருக ஆர்வத்தோடு சாகுபடி செய்ய ஏதுவாயிருக்கும். அதுவும் தவிர சென்ற வருஷத்தில் 60, 40 சத விகிதம் என்ற நியாய வாரச் சட்டத்தை நிர்ணயித்தார்கள். அந்தச் சட்டம் வட ஆற்காடு ஜில்லாவிற்கு அமலுக்கு வந்திருக்கிறதா? அம்மாதிரி வந்தால் எந்த அடிப்படையிலே அந்த வாரத்தை நிர்ணயிக்கிருர்கள். 60, 40 என்று இருப்பது தெரிகிறது. ஆனுல் சராசரி, ஐந்து வருட வருமானத்தை வைத்துக்கொண்டு அதை நிர்ணயிக்க வேண்டும் என்று சொல்கிறதை நன்ருகத் தெளிவு படுத்தவேண்டும். கிராமக்கள் அதைப்பற்றி நன்கு தெரியாமல் தவிக்கிருர்கள். இந்தச் சட்டம் வட ஆற்காடு ஜில்லாவில் அமலுக்கு வரவில்லை.

**The Hon. Sri M. A. MANICKAVELU:** நியாய வாரச் சட்டம் வட ஆற்காட்டில் அமலுக்கு வரவில்லை என்று சொல்வதற்கு என்ன காரணம்? எந்தத் தாக்கீதைக்கொண்டு அவர் அப்படிச் சொல்கிருர் என்று அறிய விரும்புகிறேன்.

**Sri A. RAMACHANDRA REDDIAR:** சரி பாதிய ாகத்தான் கொடுக்கப்பட்டு வருகிறது. 60, 40 இன்னும் சில இடங்களுக்கு அமலுக்கு வரவில்லை.

**The Hon. Sri M. A. MANICKAVELU:** தாங்கள் எப்படி நியாய வாரம் கொடுக்கின்றீர்?

**Sri A. RAMACHANDRA REDDIAR:** அதனுல்தான் குறிப்பாகச் சொல்கிறேன். நான் சரி பாதி வாரத்தில்தான் நிலத்தை விட்டுக்கொண்டு வருகிறேன். நாம் செய்திருக்கிற சட்டங்கள் நியாயமான முறையில் நன்கு நடத்தப்பட வேண்டும். அது தனியாரின் இஷ்டத்தைப் பொறுத்ததல்ல. நான் ஒரு நிலச்சுவான்தாராக இருந்தாலும் கூட அங்கு நியாயத்தை நிலைநாட்ட வேண்டுமென்ற அவா கொண்டுதான் சமீபத்தில் வினோபா பாவே அவர்கள் சமீபத்தில் அங்கு வந்தபோது, அதிகப்படியான நல்ல தரமுள்ள நிலத்தை நாங்கள் வினியோகம் செய்திருக்கிறோம் எங்கள் பாகத்தின் சுற்றுப்புறமுள்ள நிலச்சுவாந்தார்களும் நிலம் கொடுத்திருக்கிருர்கள். இந்தச் சட்டத்தை அங்குள்ள மக்கள் வரவேற்கிருர்கள் என்பதை நான் இங்கு எடுத்துக் கூற விரும்புகிறேன். அதிர்ஷ்டவசமாக

[Sri A. Ramachandra Reddiar] [6th July 1957

ரெவின்யூ மந்திரி அவர்கள் எங்கள் ஜில்லாவைச் சேர்ந்தவர்தான். ஆகவே அங்குள்ள ஏழை விவசாயிகளுக்கு அவர் வேண்டிய ஆக்கம் அளிப்பார்கள் என்று நம்பி இருக்கிறோம். ஆகவே அவர்கள் சிறந்த வகையில் பட்ஜெட்டைத் துருவிப் பார்த்து நமக்கு பாரபட்சம் இல்லாமல் கிராண்ட் வருகிறதா என்று பார்த்து வேண்டியது செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொண்டு எனது வார்த்தையை முடித்துக் கொள்ளுகிறேன்.

11-00 * SRI S. M. ANNAMALAI : இம்மாநிலச் சட்டமன்றத் தலைவர் அவர்களே. இப்பொழுது நான் இந்தச் சட்டமன்றத்தின் முன்னால் வைத்திருக்கும் என்னுடைய வெட்டுப் பிரேரணையைத் தாக்கல் செய்து அதன் மூலமாக சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். மதிப்பிற்குரிய ரெவின்யூ தமைச்சரவர்களுக்கு நன்கு தெரியும், சென்ற மே மாதம் பதினேழாந் தேதியன்று வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த களம்பூர் என்ற இடத்திலிருந்து ஒரு மகஜர் வந்திருக்கிறது. அதிலே அங்குள்ள விவசாயிகளின் குறைகளைப் பற்றி நன்றாக விளக்கமாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒரு விவசாயிக்கு இன்றைக்கு இருக்கக்கூடிய நியாய வாரத்தை வைத்துப் பார்த்தால், அதாவது அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய புள்ளி விவரத்தில் அதிகமாகவே போட்டு 65, 35 என்ற வாரத்தை அவர்கள் நிர்ணயித்தார்கள். அதன்படி அவர்கள் செலவிடக்கூடிய செலவுகளை எடுத்து அலசிப் பார்த்து அதற்குரிய உரு கணக்கை ரெவின்யூ அமைச்சரவர்களிடம் தாக்கல் செய்துள்ளார்கள். அதன்படி ஒரு விவசாயி இரண்டு ஏக்கருக்கு 351 ரூபாய் செலவிடுகிறான். அவனுக்கு வரக்கூடிய வருமானம் 390 ரூபாய் 12 அணா. அவன் பயிரிட்டு அறுவடை செய்ய நான்கு மாதங்கள் ஆகின்றன. இந்த நான்கு மாதங்களுக்கு அவனுக்குச் சராசரி மாதம் ஒன்றுக்கு 9 ரூபாய் 15 அணா கிடைக்கிறது. அதாவது ஒரு நாள் ஒன்றுக்கு 5 அணா நான்கு தம்படிதான் கிடைக்கிறது. இதில், ஒரு ஆண், ஒரு பெண், ஒரு 12 வயது பையன், ஒரு ஜதை மாடுகள் இவ்வளவு வேலை செய்தால்தான் அவனுக்கு நாள் ஒன்றுக்கு 5 அணா 4 தம்படி கிடைக்கிறது. அது மட்டுமல்ல மூட்டை ஒன்றுக்கு விலை ரூபாய் 21-8-0 வீதம் மேனி வைத்துக் கணக்குப் பார்த்தால் அவனுக்கு நாள் ஒன்றுக்கு 5 அணா 4 தம்படிதான் வருகிறது. மூட்டையின் விலை குறைந்தால் அவன் தன்னுடைய நிலத்தை விற்றுத்தான் அந்தக் கடனைக் கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்த அளவில்தான் இந்த நாட்டில் நியாய வாரச் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. வந்தவாசி தொகுதி உறுப்பினர் சொன்னார், இந்தச் சட்டம் அங்கு அமலுக்கு வரவில்லை என்று. வட ஆற்காடு மாவட்டத்தில் இது அமலுக்கு வரவில்லை என்று சொன்னார்கள். காரணம் அங்குள்ள வாரம் பயிரிடுவோருக்கு இதனால் நஷ்டம் ஏற்படுகிறது. ஆகையால் அதை நிர்ப்பந்தித்து மிராசுதாரர்களிடம் சென்று நியாய வாரப்படி கொடுங்கள் என்று கேட்போமேயானால் அதனால் இப்பொழுது கிடைப்பதை விடக் குறைவாய்த்தான் வருகிறது. ஆகவே, திருச்சி, தஞ்சைமாவட்டங்களைத் தவிர்த்து மற்ற மாவட்டங்களுக்கு வாரத்தை உயர்த்த வேண்டுமென்று பல ஆண்டுகளாகச் சொல்லி வருகிறோம். அதே அடிப்படையில்தான் நான் முன் சொன்ன மகஜர் வந்திருக்கிறது. **Practice is better than example** என்பது போல, விவசாயத்தில் நானே நேரிடையாக ஈடுபட்டவன். 250 குடும்பங்களிடம் கேட்டு நீங்கள் என்ன செலவிடுகிறீர்கள், அதற்குள்ள புள்ளி விவரங்களைத் தாருங்கள் என்று கேட்டு அவர்கள் கொடுத்த புள்ளி விவரங்களைச் சேகரித்து ரெவின்யூ அமைச்சரவர்களிடம் அனுப்பியுள்ளோம். ஆகையால், அதை பரிசீலனை செய்து ஆவன செய்ய வேண்டுகிறேன். நியாய வாரச் சட்டம் இருக்கிறதே, அதன் அடிப்படையே தப்பு. விவசாயி என்ற வார்த்தையை அந்தச் சட்டத்தில் படித்தால் நேரிடையாக உழைக்கிறவனுக்கு அது பயன்படவில்லை. நேரிடையான உழைப்பு என்று சொல்லும்போது குத்தகைக்காரன் வரப்பின் மேலே நின்றுகொண்டு ஏர் ஓட்டு என்று சொல்கிறானே அவனுக்குத்தான் அது பயன்படுகிறதே யொழிய ஏரைப் பிடித்து மாட்டை ஓட்டுகிறவனுக்கும், காலையில் ஆறு மணிக்குச் சென்று மாலையில் ஆறு மணி வரையில் வயலில் பாடுபடுகிறானே அவனுக்கு உபயோகப்படவில்லை.

6th July 1957] [Sri S. M. Annamalai]

மாட்டேருவாரம், கையேறுவாரம், அவைகளுக்கு இந்தச் சட்டம் பொருந்தாது என்று சொல்லியிருக்கிறது, உயர்நீதி மன்றத்தில். விவசாயி என்பவர் யார் என்று நிர்ணயம் செய்யவேண்டும். ஏரைப் பிடித்து, நிலத்தில் அண்டை வெட்டுகிறானே, கவலை அடிக்கிறானே, உழைக்கிறானே அந்த விவசாயிகளுக்கு இந்த நியாயவாரச் சட்டம் பயன் படவேண்டுமேயொழிய வரப்பின்மீது நின்றுகொண்டு அந்த நிலத்தை உழுதாயா, இந்த நிலத்தை உழுதாயா என்று கேட்டு அதிகாரம் செய்கிறவனுக்கு இந்தச் சட்டம் பயன்படக்கூடாதென்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக மூன்று மாதத்திற்குள் சட்டம் கொண்டுவருவதாக கனம் நிதி அமைச்சரவர்கள் சொல்லுகிறார்கள். மதிப்பிற்குரிய சுப்பிரமணியம் கமிட்டி ரிப்போர்ட்டு தயாரித்திருக்கிறது. பிறகு ராமமூர்த்தி கமிட்டியும் ரிபோர்ட்டு தயாரித்திருக்கிறது. பிறகு புலி வருகிறது, புலி வருகிறது என்று சொன்னார்கள். கடைசியில் பார்த்தால் யார் மீது புலி பாயவேண்டுமோ அவர்களை விட்டுவிட்டு தஞ்சையிலும், திருச்சியிலும் பாய்ந்து, மாட்டு ஏர் வாரக்காரர்கள், கையேறு வாரக்காரர்கள் மீது பாய்ந்து அதனால் அவர்கள் அல்லல்பட்டிருக்கக்கூடிய அழகிலே நியாயவாரச் சட்டம் பயன்படுகிறதேயொழிய, உண்மையிலேயே பாமர மக்களுக்கு பயன்படவில்லை. பட்ஜெட் என்றால் ரகசியம் என்று சொல்லுகிறார்கள். அதுபோல சட்டம் கொண்டுவருவதற்கு முன்னால் அதை ரகசியமாக வைக்கக் கூடாதா? புலி வருகிறது, சட்டம் கொண்டுவரப்போகிறோம் என்று முன்னதாகவே சொல்லிவிட்டால், நிலச்சுவான்தார்கள் யார் தன்னுடைய நிலத்தை பயிரிடுகின்றானோ அவனோடு உள்ள ஒப்பந்த திட்டத்தை மாற்றிவிடுகிறார்கள். விவசாயி, நிலச்சுவான்தாரிடம் சரியான வாரத்தை வாய் மொழியாகக் கேட்டால், உடனே அவர்கள் போலிஸுக்கு விவசாயின்மீது நிலத்தில் துராக்கிருதமாக (trespass) பிரவேசித்ததாக 447 செக்ஷன் பிரகாரம் (complaint) கொடுத்து விடுகிறார். விவசாயிக்கு 30 ஆண்டுகளாக அந்த நிலத்தில் அவர் பயிர் செய்ததை நிரூபிப்பதற்கு கையில் ஒருவிதமான ரிகார்டுமில்லாமல் தவிக்கின்றான். இதைப் பயன்படுத்திக்கொண்டு நிலச்சுவான்தார் விவசாயி நிலத்தில் துராக்கிருதமாக பிரவேசித்துவிட்டான் என்று 447 செக்ஷன் பிரகாரம் (complaint) கொடுத்து சமாளித்துக்கொள்ளுகிறார்கள். விவசாயி அநியாயமாக வெளியேற்றப்படக் கூடிய இந்த அவல நிலையில் தான் நியாயவாரச் சட்டம் பயன்படுகின்றது.

அகில இந்திய ரீதியில் சட்டம் கொண்டுவரப்போகிறோம் என்று சொல்லப்படுகிறது. வட நாட்டிலே விளைவது கோதுமை, இங்கே விளைவது நெல். அங்கு நிலத்தில் ஒரு சுற்றுவட்டத்திலே ஓட்டுவார்கள். தமிழ் நாட்டில் வரப்புக்கு நேராக ஓட்டுவோம். அங்கு ஏரு ஓட்டுகின்ற முறை வேறு. இங்கு ஓட்டுகின்ற முறை வேறு. அகில இந்திய ரீதியில் அல்லாமல், இங்கு இருக்கக்கூடிய நிலைமைக்கேற்ப, பண்பாட்டுக்குத் தகுந்தபடி விவசாயிகளுக்கேற்றவாறு நியாய வாரச் சட்டம் கூடியசீக்கிரம் மூன்று மாதத்திற்குள் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இல்லையேல், "யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு" என்ற நிலைதான் ஏற்படும்.

அப்படி நல்ல முறையிலே ஒரு சட்டம் கொண்டுவருவதற்குள் பயிர் வைக்கின்ற விவசாயிகள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவதைத் தடுக்க இடைக்கால பாதுகாப்பு (Interim protection) உடனடியாக அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**The Hon. Sri M. A. MANICKAVELU** : ஏற்கனவே பயிரிடுகின்ற 11·1
விவசாயிகள் வெளியேற்றப்படாமல் தடுப்பதற்கும், நியாயவாரம் கிடைப்பதற் a.m
கும், சட்டங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இன்னும் மூன்று மாதங்களில் சட்டம் கொண்டுவர வேண்டுமென்று கனம் அங்கத்தினர் கேட்கிறார். எனக்கு எந்தச் சட்டம் என்று புரியவில்லை.

**Sri S. M. ANNAMALAI** : யார் நிலங்களைப் பயிர் வைக்கின்றார்கள் என்று திட்டவட்டமாக ஒரு குறிப்பு இல்லாத காரணத்தினாலே 447 செக்ஷன் பிரகாரம் அவர்கள் நிலத்திற்குள் துராக்கிருதமாக புகுந்தார்கள் [illegible]

[Sri T. K. Subbiah] [6th July 1957

அவர்கள் உடனடியாக அவர்களுக்கு நிலப் பரிவர்த்தனை செய்து, அவர்களுக்கு உடனடியாக நிலங்களைப் பட்டா செய்ய முயர்ச்சி செய்யவேண்டும். மராமத்து இலாகா வேலையைத் துவங்குவதற்கு அந்தக் கிராம வாசிகள் தடையாக இருந்தால் திட்டம் தாமதம் ஆகிவிடும். இந்த ஆண்டு செலவு செய்ய மான்யக் கோரிக்கை 15 லட்சம் ரூபாய் செலவு செய்யப்படாமல் தடங்கல் ஏற்படும். ஆகவே, ஆக்க வேலைக்கு இடையூறு இல்லாத வகையில், அந்த வேலையும் நிரந்தரமாக நடைபெறவேண்டும். அதேசமயத்தில் விவசாயிகளும் பாதிக்கப்படாமல், 5 ஏக்கர், 10 ஏக்கர் நிலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு கொடுக்க வகை செய்யவேண்டும். அவர்கள் காத்திருந்து நஷ்டம் அடையாத வகையில் இந்த ஆண்டு மராமத்து இலாகா வேலை செய்வதற்கு முன்பாக ரெவின்யூ இலாகா புறம்போக்கு நிலங்களை விநியோகம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகின்றேன்.

11-23 a.m. **Sri S. B. ADITYAN :** சபைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய பேச்சுக்களிலே, முக்கியமாக இன்று காலை பேசிய பேச்சுகளிலே, நிலச் சட்டங்களைக் கொண்டு வரவேண்டுமென்று சிலர் கோரியதை நாம் கேட்டோம். கனம் அங்கத்தினர் ஒருவர், நியாயவார சட்டம் கொண்டுவரவேண்டும் என்று கூறினார். இன்னொரு அங்கத்தினர், நில வெளியேற்றத் தடுப்புச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கூறினார். அதற்கு ரெவின்யூ மந்திரி அவர்கள், "இந்தச் சட்டங்கள் சட்டப் புத்தகத்திலே இருக்கின்றன" என்று சொன்னார்கள். உண்மையிலேயே சட்டத்தை நிறைவேற்றுவது ஒன்று; அதை அமுலாக்குவது மற்றொன்று. இதுவரை இரண்டு நிலச் சட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். 1955-ம் ஆண்டில் நில வெளியேற்றத் தடைச் சட்டம், அதாவது பாதுகாப்புச் சட்டம் என்ற பெயரால் நிறைவேற்றியிருக்கிறோம். அதற்குபின், நியாய வாரச் சட்டத்தை, அதாவது 60, 40 சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம். ஆனால், வடாற்காடு ஜில்லாவிலிருந்து வந்த மெம்பர்கள் சொன்னபோதும், ஏனைய ஜில்லாக்களிலிருந்து வந்த மெம்பர்கள் சொன்னபோதும், "இவை போதுமான அளவுக்கு அமுலில் இல்லை" என்ற உண்மையை எடுத்துச் சொன்னார்கள்.

உதாரணமாக, என்னால் சொல்லமுடியும். செங்கற்பட்டு ஜில்லாவில் நில வெளியேற்றம் ஏராளமாக நடந்து கொண்டிருக்கிறது. இரண்டு நாட்களுக்கு முன்னால், ரெவின்யூ அமைச்சரைப் பார்த்து, 1,500 பேர்கள் கையெழுத்திட்ட மகஜர் ஒன்றை அவரிடம் கொடுத்தேன். அதிலே, நில வெளியேற்றம் ஏராளமாக நடப்பதாகவும், இதுபற்றி புகார் செங்கற்பட்டு நகரத்திலுள்ள ரெவின்யு டிவிஷனல் ஆபீசரிடம் கொடுத்ததாகவும், அவர் அதன்மேல் எந்தவிதமான நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை என்றும் கண்டிருந்தது. இதுதான் இன்று நாம் காணும் உண்மை நிலை. ஆகவே, நில வெளியேற்றச் தடைச் சட்டம் போதுமான அளவு அமுல் நடத்தப்படவில்லை என்பது புலனாகிறது.

இரண்டு நிலச்சட்டங்களை நாம் நிறைவேற்றியிருக்கிறோம். இன்னும் நிலச் சட்டம் வந்துகொண்டிருக்கிறது. ஏற்கனவே நாம் நிறைவேற்றிய நிலச் சட்டங்கள் அமுல் படுத்தாமல் இருக்கும்போது, மேலும் புதிய புதிய நிலச் சட்டங்களைக் கொண்டுவருவதில் என்ன பயன்? என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன்.

இது ஏன் அமுலாக்கப்படவில்லை என்றால், இப்படி சட்டம் நிறைவேற்றியிருக்கிற விஷயமே மக்களுக்குத் தெரியாது. ஆகையால், முதலாவது நாம் செய்ய வேண்டிய காரியம் கிராமங்களிலே, எழுதப்படிக்கத் தெரியாத மக்கள் பெருவாரியாக வசிக்கும் கிராமங்களிலே, இந்த நில வெளியேற்றத் தடைச் சட்டத்தை நிறைவேற்றியிருப்பதையும், நியாயவாரச்சட்டத்தை நிறைவேற்றியிருப்பதையும் தமுக்கு அடித்து, வாய்ச் சொல் மூலமாக வெட்டியான் தலையாரியைத் தெருத் தெருவாக அனுப்பி பகிரங்கப்படுத்த வேண்டும்.

ஏற்கனவே நான் சொல்லியபடி, சுமார் 300 மனுக்கள் செங்கற்பட்டு ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர் வசம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கொடுக்கப்பட்டு மூன்று மாதங்கள் ஆகின்றன. ஒரு ரூபாய் ஸ்டாம்ப் ஒட்டி...

6th July 1957] [Sri S. B. Adityan]

செய்து கொண்டிருக்கிறார்கள். "எங்கள் நிலத்திலிருந்து வெளியேற்றி விட்டார்கள்; கூடியசீக்கிரத்தில் எங்களிடம் நிலத்தைக் கொடுங்கள்" என்று சட்டத்தில் குறிப்பிட்டபடி ஒரு ரூபாய் ஸ்டாம்ப் பேப்பரில் எழுதிக் கொடுத்தும், மூன்று மாத காலமாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை. இதற்கு காரணம் என்னவென்று தெரியவில்லை. ஆகையால் நான் யோசனை சொல்வது என்னவென்றால், முதலாவது: இரண்டு நிலச் சட்டங்கள் நிறைவேற்றியிருப்பதை கிராமங்களிலுள்ள மக்களுக்குத் தெரியக்கூடிய அளவுக்கு பகிரங்கப்படுத்த வேண்டும். இரண்டாவதாக: ரெவின்யு டிவிஷனல் ஆபீசர்களுக்கு சர்க்கார் உத்திரவிடவேண்டும். அதாவது, மனுக்கள் வந்தால், அவைகளை மாதக்கணக்கில் கையிலே சும்மா வைத்திருக்காமல், அப்போதைக்கப்போது பைசல் செய்யவேண்டுமென்று அரசாங்கம் உத்திரவிடவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மேலே குறிப்பிட்ட இரண்டு பொதுவான பிரச்னைகள் போக, குறிப்பாக நெல்லை ஜில்லாவின் பிரச்னை இரண்டொன்றைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். ஒன்று பனைவரி. மற்ற ஜில்லாக்களில் பனை மரத்துக்கு வரி இல்லை. ஆனால், நெல்லை ஜில்லாவிலும், இராமநாதபுரம் ஜில்லாவில் ஒரு பகுதியிலும் பனை மரத்துக்கு வரி போடப்பட்டது. பிரிட்டிஷார் இந்த நாட்டை ஆண்டுகொண்டிருந்தபோது, பனை மரங்களுக்கு வரி போட்டார்கள். இந்த வரி அநியாயமான வரி, தவறான வரி, பச்சை மரத்துக்கு வரி போடுவது பாவம் என்று பிரசாரம் செய்யப்பட்டது. பிரிட்டிஷார் போட்ட இந்த வரியை எதிர்த்து காங்கிரஸ்காரர்கள் உட்பட—பொதுமக்கள் பெருவாரியாக கிளர்ச்சி செய்ததன் காரணமாக வெள்ளைக்காரர்கள் வெளியேறிவிட்டார்கள். சுதந்திர அரசாங்கம் வந்த பிறகு, திரு. காளா வெங்கட ராவ் அவர்கள் ரெவின்யூ மந்திரியாக இருந்த காலத்தில், திரு. கோபால் ரெட்டி அவர்கள் நிதி மந்திரியாக இருந்த காலத்தில், "இந்த வரியை ரத்துசெய்வோம்" என்று வாக்களிக்கப்பட்டது. பல ஆண்டுகள் கடந்து உருண்டோடி விட்டன. இருந்தாலும் சட்டசபையில் அங்கத்தினர்களுக்குக் கொடுத்த வாக்குறுதி நிறைவேற்றப்படாமல் இருந்தது. அதன்பிறகு, ராஜாஜி மந்திரி சபை அமைத்து, இங்கே ஆட்சி நடந்தபோது 1954-ம் ஆண்டு, பிப்ரவரி மாதத்தில் இந்தப் பனை வரியை ரத்து செய்கின்றோம் என்று அரசாங்கம் உத்தரவு செய்தது.

அந்த உத்தரவில் என்ன கண்டிருக்கிறது? அதிலுள்ள அந்த தவறைதான் நான் இப்போது எடுத்துச் சொல்லுகிறேன். பனைவரி ரத்து என்று சொன்ன அதேநேரத்தில் பனை மரத்திற்கு வரி போடுவதற்குப் பதிலாக நில வரியைக் கூட்டுவதற்காக, ஏக்கரா ஒன்றுக்கு இரண்டணா வீதம் சேர்த்து வரி போட்டு விட்டார்கள். அப்பொழுது என்ன ஆகிறது? பெயர் மட்டும் தானே மாறி இருக்கிறது? பனை மரத்துக்கு விதித்த வரி அப்படியே தானே இருக்கிறது என்று நான் கேட்க விரும்புகிறேன். ஆகவே, 1954-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் போட்ட உத்திரவிலே சில மாறுதல் செய்ய வேண்டுமென்று நான் கோருகிறேன்.

அந்த உத்தரவிலே தவறு நடந்தது. பாரபட்சமாக நடந்தது, என்னவென்றால்—நான் முக்கியமாகச் சொல்லவேண்டியது—பனை மரத்துக்கு வரி இராமநாதபுரம் ஜில்லாவைப் பொறுத்தவரையில் அங்கு பூராவாக ரத்து செய்யப்பட்டது. இராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தூர் தாலூகாவிலிருந்து பனைவரி ரத்து செய்யப்பட்டது. அதற்குப் பதிலாக வேறு ரூபத்தில் வரி போடாமல் ரத்து செய்யப்பட்டது. ஆனால், திருநெல்வேலி ஜில்லாவிலே மட்டும் பனைவரியை ரத்து செய்கிறோம் என்று சொல்லி, நிலத்தின்மீது உபரி வரியாக, ஏக்கரா ஒன்றுக்கு இரண்டணா அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. ஒரு கிராமத்துக்கு 400 முதல் 500 ரூபாய் வரையில் அரசாங்கத்திற்கு வருமானம் இந்த வகையில் வருகிறது. ஆகையால், நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், 1954-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் வெளியிட்ட உத்தரவில், இராமநாதபுரம் ஜில்லாவுக்கு என்ன சலுகை கொடுக்கப்பட்டதோ, எப்படி இராமநாதபுரம் ஜில்லாவில் பனைவரி ரத்து செய்யப்பட்டதோ, அதேபோல், திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள பனைவரி—இப்போது வேறு ரூபமாக நிலத்தின்மீது உபரி

[Sri S. B. Adityan] [6th July 1957

வரியாக விதிக்கப்படுகிறதே அந்த வரி—ரத்து செய்யப்படவேண்டும். அந்த உத்திரவை இந்த அளவுக்குத் திருத்தியமைக்க வேண்டுமென்று அரசாங்க திற்கு நான் ஆலோசனை சொல்லுகிறேன்.

இது முக்கியமாக இந்தச் சமயத்தில் தேவைப்படுகிற காரணம் திருநெல் வேலி ஜில்லாவில் மழை பொய்த்துப் போய் அங்கு பஞ்ச நிலைமை ஏற் பட்டிருக்கிறது. நிதி அமைச்சர் அவர்கள் தம்முடைய உரையில்கூட இதைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறார். அங்கு மக்கள் வரி கொடுக்க மிகவும் கஷ்டப்படுகிற இந்த நேரத்தில் பணவரிக்குப் பதிலாக திருநெல்வேலி ஜில்லாவில் புகுத்தப்பட்ட உபரி நில வரியை (Land revenue surcharge) ரத்துசெய்ய வேண்டுமென்று நான் கோருகிறேன். இப்படிச் செய்வதினால், அந்தப் பகுதியில் இருக்கும் பெருவாரியான மக்களிடையே ஆளுகின்ற கட்சிக்குச் செல்வாக்கு குறைவாயிருப்பதற்கு இந்த உபரி நிலவரியும் ஒரு காரணமாகும். ஆகவே, நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வது என்ன வென்றால், ஆளும் கட்சிக்குச் செல்வாக்கு தேட வேண்டும் என்ற முறையி லாவது பணவரிக்குப் பதிலாக போடப்பட்டிருக்கும் உபரி நில வரியை ரத்து செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்னும் ஒரு ஆலோசனை கூறி என் உரையை முடித்துக் கொள்கின் றேன். அதாவது, "உணவு உற்பத்திப் பெருக்கம்" (Grow More Food Campaign) என்ற ஒரு திட்டம் அமுல் செய்யப்பட்டது. அந்தத் திட்டம் 1946-ம் வருஷத்தில் அமுல் செய்யப்பட்டது என்பது அங்கத்தினர்கள் எல்லோருக்கும் ஞாபகம் இருக்கலாம். அப்பொழுது உணவுப் பங்கீடு முறை (ration) இருந்தது. உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டு மென்று வெள்ளைக்காரர்கள் காலத்திலே கொண்டு வந்த திட்டத்தை, திரு. பிரகாசம் அவர்கள் முதல் மந்திரியாக இருந்த காலத்திலும் தொடர்ந்து நடத்தினார்கள். உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமென்ற திட்டத்திலே கிணறுகள் வெட்டுவதற்கு மானியம் கொடுக்கப்பட்டது. அதற் காக கிணறு ஒன்றுக்கு 300 முதல் 500 ரூபாய் வரையில் மானியம் கொடுக் கப்பட்டது. அப்படிக் கொடுக்கப்பட்ட பணத்தை இந்த ஆண்டிலே திரும்பக் கொடுத்துவிடவேண்டுமென்று சர்க்கார் கெடுபிடியாக நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். நெல்லை ஜில்லாவிலும், இன்னும் மற்ற ஜில்லாக்களிலும் இம்மாதிரி செய்கிறார்கள் என்று கனம் அங்கத்தினர்கள் சொன்னார்கள். அதற்குக் காரணம் கிணறுகள் சரியானபடி வெட்டப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. பத்து அல்லது எட்டு ஆண்டுகளுக்கு முன்னால் வெட்டப் பட்ட கிணறுகளை இப்பொழுது போய்ப் பார்த்து, அவைகள் சரியானபடி வெட்டப்படவில்லை என்ற காரணத்தைச் சொல்லி, முன்னால் மானியமாகக் கொடுத்த தொகையை இப்பொழுது திருப்பிக் கேட்கிறார்கள். இதைப்பற்றி ரெவின்யு மந்திரி அவர்களிடம் நேரில் சொல்லியிருக்கிறேன்.

இந்தப் பணத்தைத் திருப்பக் கேட்பதற்கு இன்னொரு காரணத்தையும் சொல்கிறார்கள். அதாவது, கிணற்றில் ஆறு அடி தண்ணீர் இல்லை என் பது. நெல்லை ஜில்லாவில் எட்டு ஆண்டுகள் ஆகியும், சில ஜில்லாக்களில் ஆறு ஆண்டுகள் ஆகியும், இத்தனை காலத்திற்குப் பிறகு, முன்னால் மானிய மாகக் கொடுக்கப்பட்ட ரூ. 400 அல்லது ரூ. 500 என்னும் தொகையைத் திரும்பக் கொடுக்கச் சொல்லும்போது, கிணற்றில் ஆறு அடி தண்ணீர் இல்லை என்ற காரணம் சொல்லப்படுகிறது. அந்தப் பகுதிகளில் கிணற்றில் ஆறு அடித் தண்ணீரைப் பார்க்கவே முடியாது. நிதி அமைச்சர் அவர் கள், தம்முடைய பட்ஜெட் உரையில், "ஆனால், நம் ராஜ்யத்தின் தெற்கு முனையில் மட்டும் இரண்டு பருவ மழையும் பொய்த்தன. திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கரன்கோயில், நாங்குனேரி, ஸ்ரீவைகுண்டம் ஆகிய பகுதி களிலும், கன்னியாகுமாரி மாவட்டம் முழுவதிலும் மழை மிகவும் குறைவு. இந்த இடங்களில் உள்ள சில பகுதிகளில் பயிர்கள் எல்லாம் வாடி, மக்களுக்கு ஓரளவு அல்லல் ஏற்பட்டது. இப்போது, இந்தப் பகுதிகளில் பஞ்ச நிவாரண வேலைகள் வேண்டிய அளவிற்கு மேற்கொள்ளப்பட்டுள் ளன" என்று செல்லியிருக்கிறார்கள். அதாவது, இந்தப் பகுதியில் மழை இல்லை. மழை பெய்யாமலிருக்கும்போது கிணற்றிலே எப்படித் தண்ணீரைக் காண முடியும்? அதுவும் 6 அடித் தண்ணீரை எப்படிப்



6th July 1957] [Sri S. B. Adityan]

பார்க்கமுடியும்? கிணற்றில் ஆறு அடித் தண்ணீர் இல்லை என்ற காரணத் திற்காக, பத்து ஆண்டுகளுக்கு முன்னால் கொடுத்த தொகையைத் திருப்பிக் கொடுக்கச் சொல்லி, அதற்காக ரொம்ப கெடுபிடியான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சாமான்கள் ஜப்தி செய்யப்படுகின்றன. வீட்டுக் கதவைப் பிடுங்கிக் கொண்டும் போய்விடுகிறார்கள். மழை இல்லாத இடங்க ளில் ஆறு அடித் தண்ணீரை கிணற்றில் எப்படி காட்ட முடியும்? இதை ஆலோசனை செய்து, அரசாங்கம் இந்த விஷயத்தில் தலையிட்டு, இது மத்திய அரசாங்கத்திடமிருந்து கிடைத்த மானியம் என்றால், உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். கெடுபிடியான ஜப்தி முதலிய நடவடிக் கைகளை உடனடியாக நிறுத்தவேண்டும் என்று கனம் ரெவின்யூ மந்திரி அவர்களுக்கு ஆலோசனை கூறி, என்னுடைய வார்த்தையை இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.

* SRI J. MATHA GOWDER : சபாநாயகர் அவர்களே, ரெவினியூ 11-3
மந்திரிஅவர்கள் கோரியிருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரித்துச் சில a.m
வார்த்தைகள் பேச விரும்புகிறேன். நிலவரியை ஒரு அஸ்திவாரமாகக் கொண்டுதான் நாட்டை நல்ல முறையில் கொண்டு செல்ல முடியும். இதரவரி யினங்கள் நிலவரி என்னும் அஸ்திவாரத்தின் மேல் எழுப்பப்படும் மேல் கட்டிடங்கள் போன்றவை. நாட்டை நல்ல முறையில் நிர்வாகம் செய்வதற்காகத்தான் இந்த வரிகளையெல்லாம் விதிக்கிறோம்.

இந்த நில வரியானது மிக முக்கியமான வரி ஆகும். இதன் மூல மாகத்தான் தொன்று தொட்டு அரசாங்கம் நல்ல முறையில் நடத்தப்பட்டு வந்திருக்கிறது. ரெவினியூ மந்திரி அவர்கள் கோரியிருக்கும் மானியத் தொகை அவ்வளவு அதிகம் என்று சொல்லிவிட முடியாது. அதை அதிகரிக்கவேண்டுமென்று நான் யோசனைகூற விரும்புகிறேன். காரணம் என்னவென்றால், நில வரியை ரெவினியூ அதிகாரிகள்—அதாவது தண்டல் காரர் முதற்கொண்டு கலெக்டர் வரையுள்ள அதிகாரிகளை வைத்துக்கொண்டு தான் வசூல் செய்கிறோம். இதை வசூலிப்பதற்கு எத்தனையோ சிப்பந்தி கள் வேண்டியிருக்கிறது. அதே சிப்பந்திகள் நில வரியை மட்டும் வசூல் செய்துகொண்டு இருந்துவிடுவது இல்லை. உதாரணமாக, ஒரு கிராம மணிய யக்காரர், கணக்கப்பிள்ளை, நிலவரியை மாத்திரம் வசூல் செய்துவிட்டு சும்மா இருப்பது இல்லை. ஒருவர் பிறந்தது முதற்கொண்டு சாகும் வரை யிலும், அவரைப்பற்றி சகல கணக்குகளையும் வைப்பது கிராம அதிகாரி களுடைய கடமையாக இருக்கிறது. ஜனனத்திலிருந்து மரணம் வரை யில் அவர்தான் கணக்கு எடுக்கிறார். அப்படியிருந்தும், அவர்களுக்குப் போதிய ஊதியம் கொடுப்பதில்லை என்று நாமே பேசிக்கொண்டிருக்கி றோம். அப்படியிருக்க அவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் மானியம் அதி கம் என்று சொல்லிவிட முடியாது. அப்படிச் சொல்வது தவறு என்று நான் நினைக்கிறேன்.

நீலகிரி ஜில்லாவைப் பொறுத்தவரை, அங்குள்ள கிராம அதிகாரி களையும் மற்ற ஜில்லா கிராம அதிகாரிகளையும் ஒப்பிட்டுப் பார்க்கக்கூடாது. அவர்கள் குளிர்ப்பிரதேசத்தில் வசிக்கிறார்கள். நீலகிரியிலுள்ள மற்ற இலாகா சிப்பந்திகளுக்கு hill allowance கொடுக்கப்படுகிறது. குளிர், மழை முதலியவைகளிலிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ள, கம்பளி, உடை முத லியவைகள் தைத்துக்கொள்வதற்காக அதிகச் செலவு ஏற்படும் என்ற காரணத்தால் hill allowance கொடுக்கப்படுகிறது. ஆனால், கிராம அதி காரிகளுக்கும், மற்ற கிராம சிப்பந்திகளுக்கும்—அதாவது மணியக்காரர், கர்ணம், தண்டல்காரர், தலையாரி போன்றவர்களுக்கு hill allowance கொடுக்கப்படுவதில்லை. ஆகவே, நீலகிரி, இன்னும் இதுபோன்ற மலைப் பிரதேசங்களிலுள்ள கிராம சிப்பந்திகளுக்கும் மலை அலவன்ஸ் கொடுக்க வேண்டுமென்று சர்க்காரை மிகப் பணிவோடு நான் கேட்டுக்கொள்ளுகின் றேன்.

அவர்களை உதாசீனம் செய்துவிட்டால் கிராம நிர்வாகம் நல்ல முறையில் நடக்காது என்பதை நாம் நன்றாகத் தெரிந்திருக்கிறோம். அப்படிப்பட்ட வர்களுக்கு ஓரளவு உற்சாகம் கொடுப்பது சர்க்காருடைய கடமை என்பதை யும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[Sri J. Matha Gowder] [6th July 1957

மலை அலவன்ஸ் கொடுக்க இந்த வருஷ பட்ஜட்டில் அதிகத் தொகை ஒதுக்கவில்லையென்றால், அதற்கு ஓரளவு மலைப் பிரதேசத்தில் உள்ள நிலங்களுக்கு—எக்கர் ஒன்றுக்கு ஒரு அணு வீதம் சர்ச்சார்ஜ் அதிகமாக விதித்து, இவர்களுக்கு மலை அலவன்ஸ் கொடுக்க உடனடியாக ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். சர்ச்சார்ஜ் விதித்தால் ஏராள மான சிறுநிலச் சொந்தக்காரர்கள் பாதிக்கப்படுவார்களோ என்று சர்க்கார் கருதினால், 50 எக்கருக்குமேலே நிலம் வைத்திருப்பவர்களுக்கு இந்த வரி விதிக்கலாம். அப்படிப்பட்டவர்கள் நீலகிரிப் பிரதேசத்தில் அதிகமாக இருக்கிறார்கள். உதாரணமாக, ஒவ்வொரு வெள்ளைக்கார கம்பெனிக்கும் சொந்தமாக ஆயிரக்கணக்கான எக்கர் நிலங்கள் இருக்கின்றன. இப்பொழுது அவர்கள் கொடுக்கும் வரியை இரட்டித்தாலகூட அவர்கள் பாதிக்கப் படமாட்டார்கள். சுமார் 50 எக்கருக்கு கீழ் நிலம் வைத்திருப்பவர்களுக்கு தற்போது இருக்கும் முறைப்படி வரியை விதித்துவிட்டு, 50 எக்கருக்கு மேல் வைத்திருப்பவர்களுக்கு அதிக வரியை விதித்தால் எந்தவிதமான இடைஞ்சலும் இருக்காது என்று நான் நினைக்கிறேன். மலைப்பிரதேசத்தில் ஒரு எக்கர் நிலம் எழாயிரம் ரூபாய்வரை மதிப்பிடப்படுகிறது. ஐம்பது எக்கர் வரை வைத்திருப்பவர்களைக்கூட ஏழை என்று கருதிவிடமுடியாது. இருந்தாலும் 50 எக்கருக்குமேல் வைத்திருப்பவர்களுக்கு வரி விதிக்கலாம், அதிலும் இரண்டு மடங்காக வரியை வசூல் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அந்தத் தொகையில் ஓரளவை கிராம அதிகாரிகளுக்கு சம்பள உயர்வு மூல்மாகவும் **hill allowance** மூலமாகவும் கொடுக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேநேரத்தில் கிராம போலீஸ் என்ற பெயரில் தண்டல்காரர், தலை யாரி முதலியவர்கள் இருக்கிறார்கள். அந்தக் கிராமப் போலீசாருக்கு—மலைப்பிரதேசத்தில் இருப்பவர்களைப் பொறுத்தவரையில்—கொடுக்கப்படும் சம்பளம் குறைவு. கம்பளி உடை ஒன்று தயார் செய்துகொள்ளவேண்டு மானால் 6 மாத சம்பளத்தைச் செலவு செய்யவேண்டும். போலீஸ் காரர்களுக்கு மலைப் பிரதேசத்தில் கம்பளி உடை கொடுக்கப்படுகிறது. அதேமாதிரி கிராம போலீஸ்காரர்களுக்கும் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன். தவிர நீலகிரியிலே லீஸ் நிலங்களாக இருக்கின்றன. சர்க்காருக்குச் சொந்தமான நிலங்கள் லீஸ் நிலங்களாக கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் உருளைக்கிழங்கு சாகுபடி செய்யப்படுகிறது. சாகுபடி செய்பவர்கள் காலந்தோறும் லீஸை ரெனியூ செய்கிற முறை வைத்துக்கொண்டிருப்பதால், நிலத்தை நல்ல முறையிலே வைப்பதில்லை. அடுத்த வருஷம் ரெனியூ செய்கிறார்களோ இல்லையோ என்ற நிலையில் இருக்கிறார்கள். அந்த நிலங்களை, நிலமில்லாத வர்களாகப்பார்த்து பட்டா செய்துவிட்டால் அவர்கள் நல்ல முறையிலே சாகுபடி செய்வார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன். மண் அரிப்பு ஏற்படாதிருப்பதற்காக சர்க்கார் வேண்டிய தொகை ஒதுக்கியிருக்கிறது. அதன் பயனாக நீலகிரியில் நல்ல பலன் ஏற்பட்டிருக்கிறது. இந்த வரு ஷம் மண்ணரிப்பு தொகையை நல்ல முறையில் மறுபடியும் அவர்களுக்கு உற்சாகம் கொடுக்க செலவு செய்து தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். இன்றைக்கு நம் நாட்டில் 40 சதவீதம் உணவுப் பொருள் உற்பத்தி அதிக ரிக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறது. 40 சத வீதம் உற்பத்தி செய்ய வேண்டியதில் உருளைக்கிழங்கு ஒரு முக்கியமான உணவுப்பொருள். உரு ளைக்கிழங்கு சாகுபடிக்கு தற்போது நல்ல முறையில் நிலம் இல்லாத கார ணத்தால் உற்பத்தி குறைந்துகொண்டு வருகிறது. சர்க்கார் இடத்திலே இருக்கும் புரம்போக்கு நிலங்களை சரியானபடி சர்வே செய்து நிலம் இல்லாத வர்களுக்கு அதைக்கொடுத்து உருளைக்கிழங்கு சாகுபடி செய்வதற்கு உற் சாகம் கொடுத்தால்தான் உணவுப்பொருள் உற்பத்தி அதிகரிக்கும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தற்போது அவர்களுக்கு இருக்கும் நிலத்தைவைத்துக்கொண்டு மறுபடியும் சாகுபடி செய்துகொண்டு போனால், மண்ணின் தரம் குறைகிறது. நல்ல பலன் கிடைக்கவேண்டிய காரணத் தால புரம்போக்கு நிலங்களை சர்க்கார்கொடுத்து உதவி செய்யவேண்டும். அதேநேரத்திலே மத்திய சர்க்காரிடத்திலே வெலிங்டன் பிரதேசத்தில் இரண்டாயிரம் எக்கர் 99 வருஷ லீஸுக்கு வாங்கப்பட்டிருக்கிறது. தொண் ணூற்றொன்பது வருஷத்திற்குப் பிறகு ஆயிரம் எக்கர் ஸெண்ட்ரல் கவர்ன்



6th July 1957] [Sri J. Matha Gowder]

மெண்டிடம் இருக்கிறது. அதை என்ன செய்கிறார்கள் என்றால் ஏலத்தில் விட்டு விவசாயத்திற்கு கொடுக்கிறார்கள். ஏலத்தில் 10 அல்லது 20 மடங்கு அதிகம் கொடுத்து வருஷந்தோறும் கைமாறும் காரணத்தால் சரியான பலன் ஏற்படுவதில்லை. அந்த நிலத்தில், மத்திய சர்க்காருக்குத் தேவை யான நிலத்தை வைத்துக்கொண்டு, பாக்கியை அவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

* **Sri P. S. CHINNADURAI** : மதிப்புக்குறிய சபாநாயகர் அவர் 11. களே, . . . .

**Mr. SPEAKER** : கட்சித் தலைவர் என்ற சலுகை இதில் கிடையாது. பத்து நிமிஷந்தான் பேசவேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன்.

**Sri P. S. CHINNADURAI** : மதிப்புக்குறிய சபாநாயகர் அவர்களே, நிலவுடமைக்கு உச்ச வரம்பு கட்டவேண்டும். இவ்வாறு உச்ச வரம்பு கட்ட சட்டம் கொண்டுவர இந்த ராஜ்ய சர்க்கார் முயற்சி எடுக்காததை கண்டித்து என்னுடைய வெட்டுப்பிரேரணையை சபை முன்பு வைத்து அதை சபை ஏற்றுக்கொள்ளவிரும்புகிறேன். விவசாயத்தை நம்பியுள்ள நம் நாட்டிலே நிலப்பிரச்னை தீர்க்கப்படுவது மிகவும் அவசியமானது, அவசரமானது. நிலப்பிரச்னை தீர்க்கப்படாத வரையில் இந்த நாட்டு மக்களின் வாழ்க்கை யில் பொருளாதார ஏற்றத்தாழ்வு என்றும் சிக்கலுக்கு ஒரு பொழுதும் முடிவு காண்பதற்கு முடியாது. சோஷலிஸ பொருளாதார அமைப்பிலே கூட நிலப்பிரச்னை தீர்க்கப்படுவது என்பது ஒரு முக்கியமான அம்சம்.

**(Deputy Speaker in the Chair).**

இவைகளையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டுதான் நம் தேச பிதா காந்திஜி இந்த நாட்டிலே உழுபவனுக்கு நிலம் சொந்தமாக்கப்படவேண்டும் என்ற லட்சியத்தை முதன் முதல் எல்லோருக்கும் அறிவித்தார். இன்றைக்கு காந்திஜி மறைந்து கிட்டத்தட்ட பத்து ஆண்டுகள் ஆகப்போகிறது. இதற்கிடையிலே காந்தீயப் பாதையிலே காந்தியின்பேரால் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவர்கள் தங்களுடைய கடமையை மறந்து தாங்கள் செய்ய வேண்டிய செயலை மறந்து இருந்த காரணத்தால் இன்னும்கூட நிலப் பிரச் னைக்கு முடிவு காணமுடியாத நிலைமை நீடிக்கிறது. பத்து ஆண்டுகளுக்குள் எப்போதோ நில சீர்திருத்தம்கொண்டு வந்திருக்க முடியும். நில உடமைக்கு உச்சவரம்பு கட்டியிருக்கமுடியும். அதை செய்ய தவறியிருக்கிறார்கள் ஆளும் கட்சிக்காரர்கள். தற்சமயம் ஆட்சியில் இருக்கிற காங்கிரஸ் கட்சிக்காரர்கள் தான் முன்னரும் ஆட்சியில் இருந்திருக்கிறார்கள். அவர்களும் கொண்டு வரவில்லை உச்ச வரம்பு கட்டுகிற சட்டம். இந்த சர்க்காரும் கொண்டு வரவில்லை. இதற்கு மாறாக இந்த இடைக்காலத்திலே நிலம் உழுகிறவர் களுக்கு சொந்தம் என்று சொன்னார்கள். சோஷலிஸ பாணியில் நிலம் உழுபவனுக்கு சொந்தம், நெற்கதிர் அறுப்பவனுக்கு சொந்தம், துணி வெளுப்பனுக்கு சொந்தம் என்று கேலி சொன்னார்கள். நல்லவேளையாக காந்திஜியின் உபதேசத்தை மக்கள் மறக்காத காரணந்தான் இப்பொழுது ஆட்சியிலுள்ள காங்கிரஸ்காரர்கள்கூட நில சீர்திருத்தம் கொண்டு வர வேண்டும் என்ற அவசியத்தை உணரக்கூடிய நிர்பந்தம் ஏற்பட்டிருக்கி றது. நில சீர்திருத்தம் கொண்டுவருவது இன்னும் தாமதமாக்கப்படு கிறது. இதே பிரதமர் அவர்கள் இதற்கு முன்பு முதன் முதலாக இந்த பிரமதர் பொறுப்பை ஏற்றுக்கொண்டபோது நிலசீர்திருத்தம் கொண்டு வரப்போவதாகச் சொன்னார். குடியாத்தம் உபதேர்தலிலே இதைப்பற்றி பிரசாரம் ஆகியது. ஆனால் குடியாத்தம் உபதேர்த்தல் முடிந்து மூன்று ஆண்டுகள் கழிந்து போனாலும் இன்னும் நில சீர்திருத்தம் அகண்ட சபை யில் கொண்டுவர ஆலோசனை நடத்தப்படுவதாகச் சொல்லப்படுகிறதே தவிர உடனடியாக நில சீர்திருத்தம் ஏற்பட வழி வகை எதும் செய்யப்படவில்லை என்பது மிகவும் வருத்தத்திற்குறிய விஷயமாகும். நில உச்ச வரம்பு சட்டம் வருகிறது. என்று சொல்லுவதானது அதிக நிலத்தை வைத்துக் கொண்டிருப்பவர்கள் அதை பிரித்துக்கொள்ளவேண்டும் என்பது நோக்க மல்லை. உணவு உற்பத்தி பெருக நிலப்பிரச்னை சரியானபடி தீர்க்கப்பட வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்தி வேண்டிக்கொள்கிறேன். உச்ச வரம்பு கட்டுகிற சட்டம் உடனடியாகக் கொண்டுவந்தால் உற்பத்தி பெருகு

வழிமுறைகள் ஏற்படும். கால தாமதம் செய்வது மிக ஆபத்தானது. எனக்கு முன்னாலே பேசிய பல நண்பர்கள், ஆட்சியாளர் கட்சியில் உள்ளவர்களும், நல்லமாதிரியான சட்டங்கள்கொண்டுவரவேண்டியதன் அவசியத்தை சூசமாக குறிப்பிட்டார்கள். குறிப்பாக மாயவரம் கனம் அங்கத்தினர் நாராயணசாமி நாயுடு அவர்கள் அதை வலியுறுத்தி கூறியிருக்கிறார்கள். மாயவரம் அங்கத்தினர் ஸ்ரீ நாராயணசாமி நாயுடு அவர்கள் இதனை எவ்வளவு நன்றாக வலியுறுத்திக் கூற முடியுமோ அவ்வளவு நன்றாக வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள். எங்கள் தரப்பில் இருக்கிறவர்கள் இதைச் சொன்னாலும் "இவர்கள் ஏதோ இரண்டு பேர்கள் சட்டசபைக்கு வந்திருக்கிறார்கள்." என்று சொல்லக்கூடும். ஆனால், இங்கே நல்ல வேளையாக மாயவரம் அங்கத்தினர் ஸ்ரீ நாராயணஸ்வாமி நாயுடு அவர்கள் இதனைக் கூறியிருக்கிறார்கள். அவர்கள் சொன்னதையாவது அரசாங்கத்தார் ஏற்றுகொள்வார்கள் என்று நான் நினைக்கிறேன். உச்சவரம்புகட்டுவதற்கான சட்டத்தை உடனே கொண்டுவருவதற்குரிய சூழ்நிலையானது சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறது என்று இதற்கு முன்பே கூறியிருக்கிறார்கள். அந்தச் சூழ்நிலையைப் பக்குவமாகப் பயன்படுத்திக்கொள்வதற்கு இந்த அரசாங்கம் முன்வர வேண்டும் என்பதுதான் எனது வேண்டுகோள் ஆகும். அவ்வாறு முன்வராமல் காலம் கடத்திக்கொண்டிருப்பார்களானால், வீணாக மக்களின் கோபத்திற்கு ஆளாக வேண்டிய அவசியம் நேரிடும் என்று நான் எச்சரிக்கை செய்யாமல் இருக்க முடியவில்லை. இதை மிக அலட்சியமாக கவனிப்பவர்கள் இருப்பார்கள். முதுகுளத்தூர் உபதேர்தல் அவர்களுடைய கண்களைத் திறந்துவிட்டும் என்று சொல்ல விரும்புகிறேன். முதுகுளத்தூர் உபதேர்தலில் முடிவு இநத ராஜ்யத்திற்கு ஏற்பட்டிருக்கும் மிக மோசமான படுதோல்வி ஆகும். வேறு ஒரு ஜனநாயக நாடாக இருக்குமேயானால், இந்தத் தோல்வியை மிகப் பெரிதாகக் கருதியிருப்பார்கள். நல்லதொரு ஜனநாயகப் பண்பாட்டையும், ஜனநாயக சம்பிரதாயத்தையும் நோக்கிச் செல்ல வேண்டிய இந்த சர்க்கார் முதுகுளத்தூர் உபதேர்தலின் முடிவை ஒரு சரியான படிப்பினையாக எடுத்துக்கொண்டு, நில உடமைக்கு உச்ச வரம்பு கட்டும் சட்டத்தை உடனே கொண்டுவர வேண்டும் என்பதுதான் என்னுடைய முதல் வேண்டுகோள் ஆகும். மேலும், விநோபாஜி அவர்களால் தோற்றுவிக்கப்பட்டிருக்கும் இயக்கத்தின் மூலமாகவே இந்த நாட்டில் நிலப் பிரச்னையானது தீர்ந்துவிடும் என்று தோரணையில் இந்த ராஜ்யத்தின் அமைச்சர்கள் பலர் பேசி வந்திருப்பதை அரசாங்கத்தாரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அம்மாதிரியான ஒரு எண்ணத்தை நாட்டிலே வளர்ப்பதன் மூலம் சட்டத்தின் மூலம் பரிகாரம் காணவேண்டிய அவசியம் இருப்பதை இந்த அரசாங்கத்தார் தவிர்க்க முற்படுகிறார்களோ என்ற சந்தேகம் எனக்கு ஏற்படுகிறது. விநோபாஜீ அவர்களின் இயக்கத்தினால் ஒரு உரிய சூழ்நிலையைதான் உண்டாக்க முடியும். அந்த இயக்கத்தின் மூலம் மக்கள் பயன் பெற வேண்டுமானால் சரியான சட்டங்களை இயற்றியாக வேண்டும் என்று சொல்லவிரும்புகிறேன். நில உடமைக்கு உச்ச வரம்பு கட்டுவதை யார் எதிர்ப்பார்கள்? எதிர்ப்பவர்கள் எத்தனை பேர்கள் இருக்க முடியும்? அவர்கள் அரசாங்கம் கொண்டுவரும் உச்சவரம்புச் சட்டத்தை எதிர்த்து சமாளிக்க முடியுமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

ஸ்ரீ. ஆர். சிதம்பரபாரதி எழுந்தார்.

DEPUTY SPEAKER : The hon. Member is not yielding. The hon. Member P. S. Chinnadurai may continue his speech.

SRI P. S. CHINNADURAI : இந்த ராஜ்யத்தில் நில உடமைக்கு உச்ச வரம்பு கட்டும் சட்டத்திற்கு மிகச் சிலரே எதிர்பாளர்களாக இருப்பார்கள் ஆனால் உச்ச வரம்பு கட்டும் சட்டத்திற்கு ஆதரவாக இருப்பவர்களோ மிகப் பலராக இருப்பார்கள். அந்த மிகப் பலருடைய கூட்டத்தின் மத்தியிலே இந்த மிகச் சிலரின் ஆட்சேபங்கள் அமிழ்ந்து போய்விடும் என்று நான் உறுதியாகக் கூறுகிறேன். ஆகவே மக்களின் ஆதரவு இருக்கிறது. அரசாங்கத்திற்கு மக்களின் ஆதரவைத் திருப்பித் தருவதற்கு விநோபாஜீ

அவர்கள் தமது வாழ்வையே அர்ப்பணித்திருக்கிறார்கள். இந்த நல்ல நிலைமையைப் பயன்படுத்திக்கொண்டு நில உடமைக்கு உச்சவரம்பு கட்டும் சட்டத்தை அரசாங்கம் கொண்டுவர வேண்டும். மேலும் மேலும் " அகில இந்திய ரீதியில் கவனிக்கப்படுகிறது " என்று காலம் கடத்தாமல், உடனடியாகச் செயலில் இறங்கி, இந்தியாவிற்கே வழிகாட்டும் முறையில் நில உடமைக்கு உச்சவரம்பு கட்டும் சட்டத்தை அரசாங்கத்தார் கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு நான் என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

* **Sri K. R. VISWANATHAN** : கனம் உதவி அவைத் தலைவர் அவர்களே, நில வருவாய் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் மானியத்தை ஆதரித்து சில விஷயங்களை அரசாங்கத்தாரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஜமீன் பிரதேசங்கள் சர்க்காரால் எடுத்துக்கொள்ளப்பட்டு பல ஆண்டுகள் ஆகின்றன. ஜமீன் பிரதேசங்களில் குடியிருக்கும் குடியானவர்களுக்கு கடன் உதவிகள் இன்னும் சரியாகக் கிடைப்பதில்லை. அவர்களுக்குக் கடன் கொடுக்க மறுப்பதற்கு அதிகாரிகள் கூறும் காரணம் நிலங்கள் சரியாக இன்னும் ஸர்வே செய்யப்படவில்லை என்பதுதான். இன்னும் சில நாட்களில் ஸர்வே முடிந்துவிடும் என்றும், அப்போது கொடுக்கப்படும் என்றும் சொல்லப்படுகிறது. மற்றக் குடியானவர்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகளும் இவர்களால் சரியாக அனுபவிக்கப்படவில்லை. ஆயிரம் ரூபாய் அல்லது இரண்டாயிரம் ரூபாய் என்று அதிக அளவில் கடன்கள் கேட்டவர்களுக்கு மட்டும் 'ஸர்வே செய்த பிறகு கடன் கொடுக்கப்படும்' என்றால் அர்த்தம் இருக்கிறது. 300 ரூபாய் அல்லது 500 ரூபாய் என்று குறைந்த அளவில் கடன் கேட்பவர்களுக்கும், ஸர்வே செய்த பிறகு கடன் கொடுக்கப்படும் என்று சொல்கிறார்கள். இதன் காரணமாக அந்த விவசாயிகள் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். சாதாரணமாகவே, கடன் கேட்பவர்களுக்குக் காலத்தில் கடன் கொடுக்கப்படுவதில்லை என்று புகார் இருந்துவருகிறது. ஆதலால், 500 ரூபாய்க்கு உட்பட்ட தொகை கடன் கேட்பவர்களுக்கு சர்வே செய்யாமலேயே கொடுப்பதற்கு அரசாங்கத்தார் உத்தரவுபோட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 11-45 a.

அடுத்தபடியாக, கூட்டுப் பட்டா உடையவர்களுக்குக் கடன் கொடுப்பதை அரசாங்கம் அரிதாக்கியிருக்கிறது. கூட்டுப்பட்டா உடையவர்கள் கடன் கேட்கும் போது அவர்கள் உண்மையாக நிலம் உடையவர்களாக இருந்தால் நிலம் கூட்டுப் பட்டாவாக இருந்தாலும், அவர்களுக்குக் கடன் கொடுக்க வேண்டும் என்றும் உத்தரவு போடவேண்டும் என்றும் சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஜமீன் பிரதேசங்களில் சில கோயில்கள் இருக்கின்றன. அந்தக் கோயில்களுக்குச் சொந்தமான இனாம் நிலங்கள் இருக்கின்றன. முன்பு அந்த நிலங்கள் மூலம் வரும் வருவாய் ஜமீன் உத்தியோகஸ்தர்களிடம் கொடுக்கப்பட்டு, கோயில்கள் பராமரிக்கப்பட்டு வந்தன. இன்று அவைகளை சர்க்கார் எடுத்துக்கொண்ட பிறகு, நிலங்களைப் பயிரிடுபவர்கள் மட்டும் பயிரிட்டுக் கொண்டேயிருக்கிறார்கள்; ஆனால் கோயில்கள் பராமரிக்கப்படவில்லை. இம்மாதிரியான minor inam நிலங்களையெல்லாம் ஒழுங்குபடுத்தி, ஜமீன் பிரதேசங்களிலுள்ள கோயில்கள் சரியான முறையில் பராமரிக்கப்படுவதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்ய வேண்டும். இதை இந்த சட்டசபையில் பல தடவை குறிப்பிட்டிருக்கிறேன். ஆனால், இது விஷயமாக இன்றுவரையில் எந்த வித நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. சீக்கிரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்போது கிராம உத்தியோகஸ்தர்களுக்கு ஊதிய உயர்வும், பிரயாணப் படியும் கொடுக்க முன்வந்தது குறித்து அரசாங்கத்தாரை நான் பாராட்டுகிறேன். கிராம உத்தியோகஸ்தர்களில் ஊராளுபவர்கள், கர்ணங்கள் முதலியவர்கள் பல கிராமங்களில் உத்தியோகத்தில் பரம்பரை பாத்தியதை உடையவர்களாக இருக்கிறார்கள். இதன் காரணமாக, பல கிராம உத்தியோகஸ்தர்கள் உத்தியோகஸ்த்திற்குத் தகுதியில்லாத

வர்களாகவும் நேர்மையாக நடக்காதவர்களுமாக இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்கிறார்கள். ஆகையால் கிராம உத்தியோகஸ்தர்கள் உத்தியோகங்களுக்கு இருக்கும் பரம்பரை பாத்தியதை முறையை ஒழித்துவிடவேண்டும் என்று நான் அரசாங்கத்தாருக்கு யோசனைகூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக இந்த வருவாய் இலாகாவைச் சேர்ந்த மைனர் இர்ரிகேஷன் மேஸ்திரி எனபவர்கள் நேரிடையாக இந்த ரெவின்யூ இலாகாவின் கீழ் வேலை செய்து கொண்டு வருகிறார்கள். அவர்களைப் பற்றி இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சட்டம் செய்தார்கள். எட்டாவது வகுப்பு வரைக்கும், மேலே படித்திருந்தால்தான் உத்தியோகத்தில் இருக்கலாம். இல்லாதவர்கள் இருக்கக் கூடாது என்ற சட்டம் செய்தார்கள். இதனால் பாதிக்கப்பட்டவர்கள் பல பேர். இவர்கள் எல்லாம் முன்பே பல ஆண்டுகளாக வேலை செய்து கொண்டிருந்தவர்கள். ஆகவே இந்தப் புதிய விதி எங்களை பாதிக்கக்கூடாது என்று இவர்கள் கேட்டுக் கொண்டார்கள். உடனே அரசாங்கத்தாரும் இவ்விஷயத்தைப் பரிசீலனை செய்து இந்தப் புதிய உத்திரவினால் வேலையில் இருந்து நீக்கப்பட்டவர்களை எல்லாம் திரும்பவும் வேலைக்கு எடுத்துக் கொண்டுவிட வேண்டுமென்று சொன்னார்கள். அப்படி நீக்கப்பட்டவர்கள் மறுபடியும் வேலையில் அமர்த்தப் பட்டார்கள். மேலும் இன்னொரு உத்திரவின் மூலம் அரசாங்கத்தார் அவர்களுக்கு முன்பு இருந்த சம்பளச்சலுகை எல்லாம் கொடுக்கப்படவேண்டுமென்றும் செய்தார்கள். ஆனால் இந்தமாதிரியாக முதலில் போட்ட சட்டத்தினால் வேலையில் இருந்து நீக்கப்பட்டவர்களைத் திரும்பவும் வேலைக்கு எடுத்துக் கொண்டாலும் இரண்டாவதாகப் போட்ட சம்பள சலுகை திருச்சி மாவட்டத்தில் அவர்களில் பலருக்கு இன்னமும் கொடுக்கப் படாமலேயே இருக்கின்றன. ஏதோ குறைந்தது 25 ரூபாயோ என்னமோ இன்னமும் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இவ்விஷயத்தில் கவனம் செலுத்தி சர்க்கார் உத்திரவுப்படி அவர்களுடைய சம்பளங்களை விரைவில் திருத்தி அமைக்கவேண்டும். மேலும்.................

DEPUTY SPEAKER : May I know whether the point referred to by the hon. Member, comes under Land Revenue. I think it will come under " District Administration ". I hope the hon. Member will confine his remarks to the Demand under discussion.

**Sri K. R. VISWANATHAN :** நிலவரி வசூலில் சில குறையீடுகள் உள்ளன. எங்கள் தொகுதியில் சில கிராமங்களில் முன்பு ஆயக்கட்டுகள் நன்றாக இருந்தன. அதனால் நஞ்சைப் பயிர் விளைத்தார்கள். நஞ்சை பயிரிட்டதன் காரணமாக அவர்களுக்கு நஞ்சை வரி விதிக்கப்பட்டது. அவர்களும் நஞ்சை வரிதான் கட்டி வந்தார்கள். ஆனால் இப்போது ஆயக்கட்டு பாழாகிப் போனதன் காரணமாக நஞ்சை பயிரிட முடியவில்லை. புஞ்சைதான் பயிரிட்டு வருகிறார்கள். ஆனால் எப்பொழுதும் போல் கிராம அதிகாரிகள் அவர்களிடமிருந்து நஞ்சைப் பயிருக்குள்ள தீர்வையைத்தான் வசூலித்து வருகிறார்கள். பெரம்பலூர் தாலூக்காவில் கிழுமத்தூர் கிராமத்தில் ஆயக்கட்டு நஞ்சைப் பயிர் சாகுபடிக்குப் பிரயோஜனப் படாததாக இருந்தாலும், நஞ்சை நிலங்களுக்கு சர்க்கார் தண்ணீர் சப்ளை செய்யாவிட்டாலும் நஞ்சை வரிதான் கொடுக்க வேண்டுமென்று வசூலிக்கிறார்கள். இதைப்பற்றி பல் மகஜர்கள் எழுதப்பட்டன. கலெக்டருக்கும், சர்க்காருக்கும், போர்டுக்கும் பல விண்ணப்பங்கள் கொடுத்தும் இதுவரையிலும் அவ்வாறு வரி வசூல் செய்யக் கூடாது என்று சொல்வதற்கு யாரும் முன்வரவில்லை. சென்ற ஆண்டில் அந்த கிராமத்தில் இருந்தவர்கள் எல்லோரும் சேர்ந்து நில வரி கொடுக்கக் கூடாது என்று முடிவு செய்து ஒரு பசலிக்குக் கட்டாமல் போட்டுவிட்டார்கள். ஆனால் இப்போது போலீஸ் காரர்களின் உதவியைக் கொண்டு நிலவருவாய் இலாகா அதிகாரிகள் அந்தத் தீர்வையை வசூலிக்க வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இம்மாதிரியான கஷ்டங்கள் விவசாயிகளுக்கு வராமல் இருக்க வேண்டுமானால் குடிமக்களுக்குச் செய்ய வேண்டிய நன்மைகளை உடனடியாகச் செய்ய வேண்டுமென்பதாகக் கேட்டுக் கொண்டு நான் இந்த மானியத்தை ஆதரிக்கிறேன்.

6th July 1957]

* SRI A. P. C. VEERABAHU : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ரெவின்யூ இலாகா மானியத் தொகையை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

கிராம ஊழியர்களுக்கு நலம் செய்ய முன் வந்ததனுல், நிலத்திலே நேரிடையாக உழைப்பவர்களுக்கு அதிகப் பங்கு கொடுத்து அதன் மூலம் உழைப்பவனுக்கு நிலம் சொந்தம் என்ற கருத்துக்கு நாட்டிலே ஆக்கம் தேடுவதற்காக, பண்ணையிலே வேலை செய்கின்ற உழைப்பவனுக்கும் கூட உரிமையை உண்டாக்கிக் கொடுத்து, அந்தச் சட்டங்களை எல்லாம் வெற்றிகரமாக அமுல் நடத்துவதற்காகக் கோரி இருக்கும் இந்த மானியத்தை ஆதரிப்பதைத் தவிர வேறு வழி ஒன்றும் இல்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஆனுல் இந்தச் சட்டங்களை அமுலாக்குவதில் ஏற்படுகின்ற கஷ்டங்களைப் பற்றியும், குறைபாடுகளைப் பற்றியும் இங்கே வெகுவாகப் பேசப்பட்டு வருகிறது. இந்தக் குறைபாடுகளை எல்லாம் உண்மையிலேயே நீக்க வேண்டுமானுல் நில உடமை உச்ச வரம்பை நிர்ணயிப்பது அவசியம் ஆகும் என்பதை சர்க்கார் ஏற்கனவே உணர்ந்து கவர்னர் பெருமான் தம்முடைய உரையில் குறிப்பிட்டிருப்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் அங்கத்தினர்களின் கவனத்திற்கும் அமைச்சருடைய கவனத்திற்கும் கொண்டுவர விரும்புகிறேன்.

ஏற்கனவே உத்தேசித்துள்ள இந்தக் கருத்தைப் பரிசீலனை செய்து, அதற்குப் பிறகு இந்த கருத்துக்குச் சட்ட ரூபம் கொடுத்து, இடையேயுள்ள தடைகளை எவ்வளவு சீக்கிரம் அகற்றி நில உடமைக்கு உச்ச வரம்பைக் கட்டுகிறோமோ அவ்வளவு சீக்கிரம் தான் உண்மையிலேயே நிலத்தில் உழைப்பவனுக்கு நிலம் சொந்தம் என்கிற நிலைமையை உண்டாக்க முடியும். அம்மாதிரி சட்டத்தை நிறைவேற்றுங்காலையில் நிலத்தின் சொந்தக்காரருக்கும், நிலத்தில் பாடுபடும் விவசாயிகளுக்கும் ஏற்படக்கூடிய சங்கடங்களைப் போக்குவதற்கு வேண்டிய வசதிகள் எல்லாம் இருக்கவேண்டுமென்றும் இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

ஏற்கெனவே நாம் கொண்டு வந்திருக்கக் கூடிய சட்டங்களினுல் விவசாயிகள் நல்ல அநுகூலத்தைப் பெற முடியாது இருப்பதற்குக் காரணம் நிலச்சுவாந்தாருக்கும், பாடுபட்டு உழைக்கின்ற விவசாயிகளுக்கும் இடையில் குத்தகைதார் என்று இருக்கிற இடைத் தரகர்கள்தான் என்பதை அரசாங்கத்தாரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதுமாத்திரம் அல்ல. ஏற்கனவே கோயில்களுக்கும், மடங்களுக்கும் சொந்தமாக இருக்கக்கூடிய நிலங்களை மொத்தமாகக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டுள்ள குத்தகைத்தார்களினுல் தான் அந்நிலங்களிலே நேரிடையாக உழைத்துப் பாடுபடுகின்ற விவசாயிகளுக்கு எவ்விதமான பயனும் கிடைக்காமல் போய்க் கொண்டிருக்கிறது. அதை மறந்து ஆண்டவனுக்கு அதிக ஆசை ஏற்பட்டுவிட்டது என்பதாக வீணுகப் பேசுவதில் பயன் என்ன? ஆண்டவன் நம் முன்னுல் பதில் சொல்வதற்கு இல்லை. இல்லாத ஒன்றை கற்பித்து ஆண்டவனுக்கு ஆசை இருக்கிறது என்று சொல்வது பயன் தராது. ஆண்டவன் கோயிலுக்குச் சொந்தமான நிலங்களை குத்தகைக்கு எடுத்துக் கொள்கிற தரகர்களுக்கு ஆசை அதிகமாகிவிட்டது என்று சொல்வதே மிகவும் பொருத்தம். அதுதான் நிதர்சனமான உண்மை என்பதை இந்தச் சபையில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்தப் பிரச்சனையை மாற்றியமைக்க விரும்பினுல் உடனே கூட்டுறவு விவசாயத்தை நாட்டில் ஏற்படுத்த முன் வரவேண்டும். கூட்டுறவு விவசாய முறையைக் கொண்டு வருவதன் மூலம் உழைப்பவனுக்கு அதிகப் பங்கும் கிடைக்கும். "நான் நிலத்தின் சொந்தக்காரன். ஆகவே உழைக்கமாட்டேன்." என்றிருக்கிற நிலச்சுவாந்தார்களின் மனப்பான்மையில் மாறுதல் ஏற்படுவதற்குச் சாத்தியம் உண்டு. ஆகையால் இந்த நாட்டில் கூட்டுறவு விவசாயத்தை அமுலுக்குக் கொண்டுவருவதற்காக ஏனைய நாடுகளுக்கு நிபுணர்களை அனுப்பி பார்த்து அறிந்து பரிசீலனை செய்து கொண்டு வருவதைக் காட்டிலும், சர்க்காருடைய கையில் மடத்து நிலங்கள் இருக்கின்றன, இவைகளை உடனே கூட்டுறவு அடிப்படையில் விவசாயம் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தால் நமக்கே சொந்த அநுபவம் ஏற்பட்டுவிடும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[Sri A. P. C. Veerabahu] [6th July 1957

இன்னொன்று கூடச் சொல்ல விரும்புகிறேன். உணவு உற்பத்தியை இன்னும் அதிகம் பெருக்குவதற்காக வரி விகிதாசாரத்தில் கூட கொஞ்சம் மாறுதல் செய்யலாமோ என்று நினைக்கிறேன். அதாவது வியாபாரத்திற்காகவும், ஏற்றுமதிக்காகவும் உள்ள பண்டங்களுக்குக் கொஞ்சம் அதிக வரியும், இந்த நாட்டின் சுயதேவையைப் பூர்த்தி செய்துகொள்வதற்காகவென்றே ஒதுக்கப்படுகிற பண்டங்களுக்குக் கொஞ்சம் குறைவாகவே வரியைத் தேடுவதன்மூலம் உணவு உற்பத்தியின் பெருக்கத்தில் ஊக்கம் ஏற்படக் கூடுமா என்பதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக ஏற்கனவே கொண்டுவரப்பட்டுள்ள ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டத்தில் ஒரு குறைபாடு இருக்கிறது என்பதைக் கனம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டத்தில், இந்த நிலம் ஜமீனுக்குச் சொந்தமா, அல்லது பாடுபடுகிறவனுக்குச் சொந்தமா என்று நிர்ணயிப்பதில் தனக்குச் சொந்தம் என்பதை ஜமீன்தாரே, நிரூபிக்கவேண்டுமென்ற பொறுப்பு இருந்தது. நிலச் சொந்தக்காரன் இதற்காக வாதாட வேண்டியது இல்லை. "இது என்னுடையது தான் என்று அவன் நிரூபிக்க வேண்டாம். ஜமீனுக்குச் சொந்தம் இல்லை" என்று சொல்லிவிட்டால் போதும். போதுமான தஸ்தாவேஜிகளை எல்லாம் எடுத்துக் கொண்டுவந்த "இந்த நிலம் ஜமீனுக்குத் தான் சொந்தம்" என நிரூபிக்க வேண்டிய பொறுப்பு ஜமீன்தார்களையே சாரும். ஆனால் சட்டத்திலுள்ள அந்தப் பிரிவு ஸ்பஷ்டமாக அதைத் தெரிவிக்காததனால் நிலம் ஜமீனுக்குச் சொந்தமில்லை என நிலத்தை வைத்துக் கொண்டிருப்பவனே நிரூபிக்கவேண்டுமென்பதாக சில இடங்களில் தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்டது. இதை எதிர்த்து ஹைக்கோட்டுக்குக் கூட அப்பீல் செய்திருக்கிறார்கள். நியாயமன்றத்தினாலே சரியான தீர்ப்பு வழங்கப்படும் என்று நம்பினாலும், நாமே சட்டத்தைக் கொண்டுவரும் போது ஸ்பஷ்டமாகக் கொண்டுவந்துவிட்டால் ஹைக்கோர்ட்டு, சுப்ரீம் கோர்ட்டு இவற்றின் வேலை குறையும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே இந்தச் சட்டத்திற்கும் சரியான திருத்தத்தைக் கொண்டுவரவேண்டுமென்பதாகவும் சொல்லிக் கொள்ளுகிறேன்.

அதோடுமாத்திரம் அல்ல. ஜமீன்களுக்குச் சொந்தமான குளம், புறம்போக்கு முதலிய இடங்களில் உள்ள மரம் தங்களுக்குத் தான் சொந்தம் என்று சொல்லிக்கொண்டு அதன் மூலம் குளத்தையும், குளத்திற்குப் பக்கத்திலுள்ள கிராமப் புறம்போக்கு நிலங்களையும் கூடத் தங்களுக்குத்தான் சொந்தம் என ஜமீன்தார்கள் வாதாடுகிறார்கள். தங்கள் கருத்துக்கு ஆதரவு தேடும் வகையில் அவர்கள் சில பொய் தஸ்தாவேஜிகளைக் கொண்டு வந்து அதிலுள்ள மரங்கள் தாங்கள் வைத்தது தான் என முதலில் தீர்ப்பை வாங்கிக் கொண்டுவிடுகிறார். மரங்கள் இவர்களுக்குத்தான் சொந்தம் என்றவுடன் அந்த மரங்கள் உள்ள நிலம் அவர்களுக்குத் தான் சொந்தம் என சிலச் சில இடங்களில் தீர்பாகியிருக்கிறது. இதற்கு ஒரு பாதுகாப்பு சட்டத்தில் இல்லாவிட்டால் கிராம நிலங்கள், மேய்ச்சல் புறம்போக்கு, குளக்கரை புறம்போக்கு எல்லாம் தனிப்பட்டவர்களுக்கு சொந்த நிலமாக மாறிவிடும். இதனால் கிராமத்தின் பொதுச் சொத்து பாதிக்கப்படும். ஆகவே ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டத்திலேயே கிராமப் பொது சொத்துக்குப் பாதுகாப்புத் தேடவேண்டுமென்பதாகவும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

திருநெல்வேலி ஜில்லாவில் மணிமுத்தார் அணை கட்டி முடிந்து அக்டோபர் மாதத்தில் பொதுமக்களுடைய உபயோகத்திற்கு திறந்து விடப்படும் என்று தெரிகிறது. அதில் 45 ஆயிரம் எக்கர் நிலம் வரையில், இப்போது ஒரு போக நஞ்சையாக இருக்கிறது. இந்த நிலங்களுக்கு இப்போது தண்டதீர்வை இருக்கிறது. இதை அரசாங்கம் புனராலோசனை செய்ய வேண்டும். இனிமேல் இருபோக நிலமாக மாறும் போது "வாட்டர் டாக்ஸ்"ஸும் விதிக்கப்படும். இவ்வளவு நிலங்களும் இருபோக நிலமாக மாறவேண்டும் என்பதற்காகத்தான் இத்தனை பெரிய திட்டத்தை மேற்கொள்ளப்பட்டது. ஆகவே முன்னாலிருந்து வருகிற தண்ட தீர்வையிலிருந்து



6th July 1957] [Sri A. P. C. Veerabahu]

இந்த நிலங்களுக்கு விதிவிலக்குஅளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, பேச சந்தர்ப்பம் அளித்ததற்கு நன்றி தெரிவித்து கொண்டு என்னுடைய பேச்சை முடித்து கொள்கிறேன்.

* **Sri C. NATARAJAN** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான் இந்த வெட்டுப்பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். சட்டசபையில் வந்திருக்கக்கூடிய மான்யத்தில் ஏழை விவசாயிகளுக்கு எந்தவிதமான நன்மையும் ஏற்பட போவதில்லை என்பது குறிப்பிடத் தக்கது. ஏனென்றால் இன்று கிஸ்தி செலுத்துபவர்களை பார்த்தால், ஒரு விவசாயி ஐந்து அணா செலுத்துவதற்கு சுமார் ஐந்து வருடங்கள் கழித்து அந்த ஐந்து அணா கிஸ்தி செலுத்திய ரசீது பெற்று இருக்கிறான் என்பதற்கு என்னிடம் அடையாளம் இருக்கிறது. இதை நான் கிராம அதிகாரியாக இருந்த சமயத்தில் பார்த்திருக்கிறேன். ஆகவே இதில் நான் கூறுவது என்னவென்றால் சுமார் ஐந்து ரூபாய் வரை கிஸ்தி செலுத்துபவர்களை வரி செலுத்துவதிலிருந்து விதிவிலக்கு அளிக்க வேண்டும். இதை நான் மந்திரி அவர்களின் கவனத்திற்காக சொல்லுகிறேன். இதே போன்று cess வசூலிக்கப்படுகிறது. இந்த வரி வெள்ளையன் காலத்திலே இதற்கு மூன்று அணா என்று ஏற்படுத்தப்பட்டிருந்தது. இதற்காக கல்வி, சுகாதாரம், தொழில், இவைகளில் செலவழிக்கிறோம் என்று சொல்லி வந்தார்கள் அன்று. இப்போது அந்த வரி மூன்று அணாவிலிருந்து ஏழு அணா உயர்த்தப்பட்டிருக்கிறது. இவ்விதமாக அதிகமாக வரிகள் கூட்டப்பட்டிருக்கிறது. இதனால் மிகவும் பாதிக்கப்படுகிறவர்கள் விவசாயிகள். நாம் ஏற்கெனவே நமது வருமானத்தில் இன்றைக்கு 25 சதவிகிதம் வரை வரியாக கொடுத்து வருகிறோம். அதற்கு மேலும் இது அவசியம்தானா என்பதை அரசியலார் ஆலோசித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே போன்று, இன்று மிராசுதார்கள் சார்பிலும் கோவில்கள் சார்பிலும் பல லட்சக்கணக்கான எக்கர் நிலங்கள் இருந்து வருகிறது. அந்த நிலங்களுக்கு அடிப்படை வரி விதிக்கப்படவில்லை. அந்த நிலங்களுக்கு எல்லாம் வெறும் நான்கு அணா, எட்டு அணா என்று மாத்திரம் தற்காலிகமான வரிகள் இருக்கிறதே தவிர அடிப்படையான வரி எதுவும் இல்லை. இவ்விதமான நிலங்களிலிருந்து அடிப்படையாக வரி வசூலிக்க வேண்டிய கடமை அரசியலாருடையது. அவ்விதம் வரி விதித்தால் ஏழை விவசாயிகளுக்கு, அதாவது ஐந்து ரூபாய்க்கு கீழே வரி செலுத்துபவர்களுக்கு வரிவிலக்கு அளிப்பதில் எந்த விதமான கஷ்டமும் இருக்காது என்று கூறிக்கொள்வதுடன், இதை நன்றாக ஆலோசித்து இவ்விதமான வரிவிலக்கு அவர்களுக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நில உடமை வரம்பு சட்டத்தை உடனே கொண்டுவர வேண்டுமென்று பல நண்பர்கள் கூறினார்கள். நில உடமைக்குள்ள வரம்பு கட்டினால்தான் கூட்டுறவு முறையில் அரசியலார் நல்ல மகசூலை காண முடியும். இதைப் பற்றி பல ஆண்டுகளாக பலர் முன்னிலையிலும் இந்த அபிப்பிராயம் வைக்கப்பட்டிருக்கிறது. இதில் நாம் அதிகமான முன்னேற்றத்தை காண முடியவில்லை. தரிசு நிலங்கள் புறம்போக்கு நிலங்கள் அதிகமாக அதிலும் என்னுடைய, தொகுதியாகிய கள்ளக்குறிச்சி தொகுதியில் அதிகமாக இருக்கிறது. கள்ளக்குறிச்சி தாலூகாவில் பலருக்கு இந்த நிலங்கள் தற்காலிகமாக விவசாயம் செய்ய உத்திரவு வழங்கப்படுகிறது. இவ்விதம் கொடுக்கப்படுவது ஓராண்டுக்கு மாத்திரம் என்று உத்தரவு வழங்கப்படுகிறது. பின்னால் கூடுதல் ஒரு ஆண்டு காலத்திற்கு ஒரு முறை உத்தரவு வாங்கவேண்டும். அவ்விதம் உத்தரவு வாங்குவது சாமான்ய காரியமல்ல. இவ்விதம் இருந்தால் அதில் சரியான விதத்தில் பயிர் செய்ய முடியாது. ஆகவே கொடுக்கப்பட்டிருக்கும் நிலங்களுக்கு அவர்களுடைய பெயரில் பட்டா வழங்க வேண்டும். பட்டா வழங்கவில்லை என்றாலும்கூட அவர்களுக்கு குறைந்தது பத்து ஆண்டுகளுக்கு நிரந்தரமாக கொடுக்கவேண்டும். அதோடு விவசாயிகளாகிய அவர்களுக்கு பல குறைகள் இருந்து வருகிறது. பட்டா யார் பேருக்கு இருந்து வருகிறது என்பதை பார்த்தால் நூறு வயதான பெரியவர்களிடம் கேட்டிருக்கிறேன். அந்த கிராமத்தில் அவ்விதம் ஒரு பெயருள்ள ஒரு நபரே இருக்காது, அவருடைய பெயரில் பட்டா இருக்கும். நிலத்தை உண்மையில் வைத்திருக்கிறவர்கள் எனக்கு பட்டா வரவில்லை

என்று கூறுகிறார்கள். பட்டா கொடுப்பது நிலம் வாங்கினவர்களுக்கு உடனே கொடுக்க வேண்டும். அப்போதுதான் உண்மையில் யார் பேரில் பட்டா இருக்கிறது என்று கண்டறிந்து கொள்ளவும் முடியும். ஆகவே நிலம் வாங்கியவர்களுக்கு உடனேயே பட்டா கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கிராம உத்தியோகஸ்தர்கள் விஷயத்தில் அவர்கள் முழு நேர ஊழியர்கள் போன்று வேலை செய்து வருகிறார்கள் என்று கூறுகிறேன். அவர்களிடம் அரசாங்கம் அதிகமாக வேலைவாங்கிவருகிறது. நான் கிராம அதிகாரியாக வேலை பார்த்த நேரத்தில் கேள்வி பட்டிருக்கிறேன். அந்த கிராமத்தில் எத்தனை ஆடுகள், எத்தனை கோழிகள் என்று கணக்கெடுத்து 24 மணி நேரத்திற்குள் அனுப்ப வேண்டும், என்றெல்லாம் உத்தரவு வரும். இந்த விஷயத்தில் உண்மையை அறிந்து எழுதுவதற்கு முடியாத காரணத்தால் அவர்கள் உண்மையை மறைக்கவேண்டி யிருக்கிறது. இவ்விதம் அதிகமாக வேலை செய்கிற அவர்கள் ஊதியத்தை கூட்டிக் கொடுங்கள் என்று கேட்கும் நேரத்தில் பணமில்லை என்றும் இதைவிட அதிகமாக ஒன்றும் செய்ய முடியாது என்றும் கூறிக்கொண்டே போகிறார்கள். ஆகவே, அவர்களிடம் வாங்கும் வேலையை குறைக்க வேண்டும். அவர்களுடைய வேலை நேரத்தை நிர்ணயிக்க வேண்டும். அப்போதுதான் அவர்களுடைய வேலை குறையும். அதே போன்று ஆங்கிலேயன் இருந்த காலத்தில் எந்த எந்த ரிக்கார்டுகள் இருந்ததோ அதே ரிகார்டுகள்தான் இன்றும் கிராம அதிகாரிகளிடம் இருக்கின்றது. இதுவரை அந்த ரிகார்டுகளை மாற்றி அமைத்ததாக தெரியவில்லை. அவர்கள் வைத்திருக்கும் கணக்குகளில் என்ன எழுத வேண்டும் என்று அங்கிருக்கிற கணக்குப் பிள்ளைக்கே தெரியாது. இம்மாதிரி கணக்குகள் இருந்து வருகிறது. இம்மாதிரி சில மாறுதல்கள் அவசியமாக வேண்டியிருக்கிறது. இது தவிர அங்கு வைத்திருக்கும் சில்லறை கணக்கு ஏற்பாட்டை தலைப்புகள் வகையில் சரியான ரிக்கார்டுகளாக வழங்க வேண்டும். அதற்கான அத்தாட்சி அரசியலார் வழங்கவேண்டும். ஆகவே, பலவிதத்திலும் கூடுதல் வேலை செய்யும் அவர்களுக்கு எவ்வளவு தூரம் ஊதியத்தை கூட்டிக் கொடுக்க முடியுமோ அவ்வளவு தூரம் கூட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இத்துடன் என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

2-0 p.m. * **SRI K. R. NALLASIVAM** : உதவி சபாநாயகர் அவர்களே, நிலச்சீர்திருத்தத்தைப் பொறுத்த வரையில் எல்லோரும் குறிப்பிட்டுப் பேசினார்கள். அதில் நான் ஒரு குறிப்பிட்ட விஷயத்தை வற்புறுத்த விரும்புகிறேன். நிலச்சீர்திருத்தத்தை கடந்த ஐந்தாண்டு காலமாகவே சர்க்கார் கொண்டு வருவதாகச் சொல்லிக் கொண்டு இன்னும் கொண்டு வரவில்லை. அகில இந்திய அடிப்படையிலேயும், மாகாண அடிப்படையிலேயும் இதற்கென்று பல யோசனைகள் கூறப்பட்டன. பல கமிட்டிகளும் நியமிக்கப்பட்டன. அவைகள் தேசம் பூராவும் சென்று விசாரித்தது. ஆனால் நடைமுறையில் கொண்டு வர நாளாகும் போல் இருக்கிறது. எந்த நோக்கத்திற்காக நிலச்சீர்திருத்தம் வேண்டுமென்று கோருகிறோமோ அந்த நோக்கம் சிதறுண்டு போகும் என்று தோன்றுகிறது. ரெவின்யூ மந்திரி அவர்கள் ஒரு இடத்தில் பேசியிருக்கிறார், சமீபத்தில் நாங்கள் நிலச்சீர்திருத்தம் கொண்டுவரப் போவதில்லை என்று. அதை வைத்துக் கொண்டு சம்பந்தப்பட்ட நிலச்சுவாந்தார்கள் எல்லாம் இப்பொழுது விலைவாசிகள் ஏறிக்கொண்டிருப்பதினால் நிலத்தை ஏராளமாக வேகமாக விற்றுக் கொண்டிருக்கிறார்கள். நாம் எந்த நோக்கத்திற்காக இந்த நிலச்சீர்திருத்தம் வேண்டுமென்று கோருகிறோமோ அந்த நோக்கம் சிதறுண்டு போகும் என்பதில் சந்தேகமில்லை. இதை சர்க்கார் மனதில் வைத்துக் கொண்டு, செய்வதாய் இருந்தால் உடனடியாகச் செய்யவேண்டும். இல்லை என்றால் நாங்கள் செய்யப் போவதில்லை என்று சொல்லுங்கள். அப்படியானால் நிலச் சொந்தக்காரர்களாவது தங்கள் போக்கில் நிலத்தை வைத்துக் கொண்டிருப்பார்கள். ஆகவே, இதில் காலம் கடத்தவேண்டாம். இந்த நிலச்சீர்திருத்தத்தை வெகு சீக்கிரமாகக் கொண்டு வரவேண்டும் என்று இந்த ஜனங்கள் விரும்புகிறார்கள். அடுத்தபடி, இந்த தண்ணீர் தீர்வை விஷயத்தில் எல்லோரும் ஒரே மாதிரியாகத்தான் அபிப்பிராயப் படுகிறார்கள் இந்த ராஜ்யத்தில் ஒரே மாதிரியான அடிப்படையில் எல்லா இடங்களிலும்



ஒரேபோல் தீர்வை நிர்ணயிக்கப்படவேண்டும். எல்லோரும் இதேபடிதான் அபிப்பிராயப்படுகிறார்கள். தண்ணீர் தீர்வையைப் பொறுத்த வரையில் சாதாரணமாக இது எல்லோரும் எளிதாகப் புரிந்துகொள்ளக் கூடியதுதான். ஒவ்வொரு இடத்திற்கு ஒவ்வொரு தீர்வை. காவேரியில் இருந்து ஒரு நாள் தண்ணீர் விடப்பட்டால் அதற்கு ஒரு தீர்வை, வேறு ஒரு ஆற்றிலிருந்து விடப்பட்டால் அதற்கு வேறொரு தீர்வை. ஒரேமாதிரி தீர்வை கிடையாது. ஆகவே நான் சொல்வது என்னவென்றால், ஒரே ஒரு மாதிரியான அளவில்தான் தண்ணீர் தீர்வை இருக்கவேண்டும். ஒரு போகத்திற்கு ஒரு இடத்தில் ஐந்து ரூபாய் இருக்கும், இன்னொரு இடத்தில் பத்து ரூபாய் இருக்கும். எல்லாருக்கும் தெரிகிற இந்த அநியாயம் சட்டபூர்வமாக நடந்து கொண்டிருக்கிறது. இந்த அநியாயத்தை நீக்குவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும், தண்ணீர் தீர்வையை ஒரு முகப்படுத்துவதின் மூலமாக. அடுத்தபடியாக, கீழ் பவானி பிரதேசமிருக்கிறது. இதைப்பற்றி சொல்லிச் சொல்லிப் புளித்துப் போய்விட்டது. மந்திரிமார்களுக்கும் கேட்டுக் கேட்டு புளித்து விட்டது. அந்த நிலங்களில் கிணறு வெட்டக் கூடாது என்று சொன்னார்கள். அதை அவர்கள் ஒப்புக் கொண்டார்கள். கிணறுகள் ஏதாவது இருந்தால் அவைகளில் பம்ப்செட்டு வைக்கக் கூடாது என்று உத்தரவு போட்டார்கள். அதையும் ஏற்றுக் கொண்டார்கள் அங்குள்ள மக்கள். இன்னும் வாயைக்கூட கட்டுவதற்கு உத்தரவு போட்டால் அதையும் அவர்கள் செய்வார்கள் என்றால் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை. இதேபோல் மேலும், மேலும் விவசாயிகளின் கையைக் கட்டும் விதத்தில் உத்தரவுகள் போட்டுக் கொண்டேபோனால் சர்க்காருக்கு அறிவிப்பு கொடுத்துவிட்டு சர்க்காரின் உத்தரவை மீற அவர்கள் தயாராய் இருக்கிறார்கள் என்று நான் இங்கு சொல்ல விரும்புகிறேன். அடுத்தபடியாக, புறம்போக்கு. அது சாதாரண விஷயம். சர்க்காரின் கீழ் இருக்கும் இந்த புறம்போக்கு நிலங்களை ஏழைகளுக்கு நஞ்சை ஒரு ஏக்கரும், புஞ்சை பத்து ஏக்கரும் கொடுக்கவேண்டுமென்று கூறப்பட்டு உத்தரவு இருக்கிறது. இதை எடுத்து நடத்துகிற முறை மிகவும் மோசமாய் இருக்கிறது. ஆகவே நான் சொல்வது இந்த நிலச்சீர்திருத்தம் கொண்டுவந்து ஏழைகளுக்கு ஒரு நிவாரணம் கொடுப்பதற்கு முன், அவர்களுக்கு மன ஆறுதல் ஏற்பட இந்த புறம்போக்கு நிலங்களை அவர்களுக்கு பட்டா செய்து கொடுக்கவேண்டிய வழிவகைகள் செய்ய வேண்டும். இந்த புறம்போக்கு நிலங்களைப் பொறுத்த மட்டில் அவைகளை ஏழை மக்களுக்கு கொடுக்கச் செய்ய ஒரு தாக்கீது கொடுப்பார்களேயானால் அது வேகமாய் நடக்கும் என்று நினைக்கிறேன். அடுத்தபடி, இந்த கூட்டுப் பட்டாவைப் பற்றிச் சொன்னார்கள். விவசாயிகளிடம் பட்டா நம்பர் கேட்டால் கால் நம்பர் சொல்வார்கள், கால் நம்பர் கேட்டால் பட்டா நம்பர் சொல்வார்கள். ஆக விவசாயிகள் பல விதத்தில் அவதிப்படுகிறார்கள். ஆகவே, விரைவில் இதற்கெல்லாம் சகல ரோக நிவாரணியாக இந்த நிலச்சீர்திருத்தத்தைக் கொண்டு வருவதுதான் சரியான வழி. கடைசியாக ஒரு விஷயம். கழிந்த சட்டசபையிலே இது ஒரு முக்கிய விஷயமாக இருந்தது. நமது ரெவன்யூ மந்திரி அவர்கள்தான் அன்றும் ரெவன்யூ மந்திரியாய் இருந்தார்கள். நெசரத்பேட்டை என்பது ஒரு இனாம் கிராமம். குறிப்பாக இதைப்பற்றி ரெவன்யூ மந்திரி அவர்களுக்கு அதிகமாகத் தெரியும். அந்த கிராமம் ஒரு இனாம் கிராமமாகும். அந்த கிராமத்தில் சுமார் 99 ஏக்கர் புறம்போக்கு நிலத்தை இன்று இங்கு அமைச்சராக இருக்கக் கூடிய ஒருவரது மருமகன் அனுபவித்துக் கொண்டிருக்கிறார். இரண்டு மூன்று வருடங்களாகவே ஒரு பெரிய அநீதி இழைக்கப்பட்டு வருகிறது. இதை தவிர்க்க மந்திரியவர்களே நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்பி இருந்தேன். சோஷயலிஸ்ட் கட்சி சார்பாக 150 தொண்டர்கள் அந்த அநியாயத்தை எதிர்த்து சிறை சென்றார்கள். அது குறித்து அன்று அந்தோனி பிள்ளை அவர்கள் ஒரு அவசரப பிரேரணை கொண்டு வந்தார்கள். அன்று, மாணிக்கவேலு நாயக்கர் அவர்கள் அதைப் பற்றி கவனித்து வேண்டியது செய்கிறேன் என்று சொன்னதால் அந்த இயக்கம் நிறுத்தப்பட்டது. அந்த நிலம் புறம்போக்கு நிலமா என்று சந்தேகம் கிளப்பப்பட்டு அது ஒரு Tribunal-க்கு விடப்பட்டிருக்கிறது. அந்த 99 ஏக்கர் நிலம் புறம்போக்கு நிலமா என்பதுபற்றி முடிவு செய்ய. ஒரு சந்தேகம் கிளப்பப்பட்டு அது Tribunal-க்கு விடப்பட்டு இரண்டு வரு

[Sri K. R. Nallasivam] [6th July 1957

டங்களாகிறது. இன்னும் முடிவு வரவில்லை. அந்த **Tribunal**-லில் இந்தக் கேஸ் இருக்கும் போது சம்பந்தப்பட்ட வரதப்பன் என்று நினைக்கிறேன், அவர் போலீஸ் மந்திரியின் மருமகன். அவர் அந்த 99 ஏக்கர் 99 செண்ட் நிலத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறார். அதுமாத்திரமல்ல. தனக்கு சொந்தம் இல்லாத நிலத்தை தனக்குச் சொந்தம் என்று சொல்லிக் கொண்டு, அது அவருக்குச் சொந்தமா இல்லையா என்று யோசித்துக் கொண்டிருக்கும்போது இன்றைக்கு அதை விற்றுக் கொண்டு வருகிறார் நான். . . .

**DEPUTY SPEAKER**: The matter is pending in Court and therefore *sub-judice*. I do not think it is reasonable for the hon. Member to speak on that subject. Let him proceed to the next point.

**Sri K. R. NALLASIVAM**: அதாவது அந்த நிலத்தைச் விற்றுக் கொண்டிருக்கிறார். அதைத் தடை செய்யவில்லை. அங்குள்ள ஜனங்களுக்கு சுடுகாட்டிற்கு போவதற்கோ அல்லது இடுகாட்டிற்குப் போவதற்கோ ஒரு பாதையும் கிடையாது. இந்த நிலங்களை அதற்குக் கொடுத்தால் மிகவும் வசதியாய் இருக்கும். ஆகவே இந்த விஷயத்தை ரெவன்யூ மந்திரியவர்கள் முக்கியமாக கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்காக அங்கு ஒரு இயக்கம் நடத்தப்பட்டது என்பதையும் அவர் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். கடைசியாக நான் திரும்பவும் சொல்ல விரும்புவது என்னவெனில், இந்த நிலச்சீர்திருத்தத்தை பொறுத்த வரையில் சர்க்கார் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும். இல்லாவிடில் அது எங்கு போய் நிற்கும் என்று சொல்ல முடியாது.

* **Sri P. APPAVU**: **On a point of order, Sir** வரதப்பன் நிலங்களை விற்றதாகச் சொன்னார்கள். எந்த ஒப்பந்தத்தின் பேரில் அது கூட்டுறவு சங்கத்திற்கு விற்கப்பட்டது என்று தெரியுமா ?

**DEPUTY SPEAKER**: அதைப்பற்றிப் பேசக்கூடாதென்று நான் சொல்லி விட்டேன். அதைப்பற்றி பேசக்கூடாது.

12-20 p.m. **Sri S. RAMASWAMY THEVAR**: உப தலைவர் அவர்களே, இந்த வெட்டுப் பிரேரணையைப் பற்றிப் பேசும்போது பல அங்கத்தினர்கள், விவசாயிகளுக்காக ஏற்படும் எல்லா சட்டங்களும் நல்ல முறையில் இயற்றப் பட்டிருந்தாலும் கூட அவைகள் சரியான முறையில் அமல் நடத்தப்படவில்லை, பல கோளாறுகள் அதில் ஏற்பட்டிருக்கிறது, உழைப்பவனுக்கு சரியான ஊதியம் கிடைப்பதில்லை என்பதைப் பற்றி எல்லாராலும் இங்கு பேச்சு நடந்தது. உண்மையிலே சட்டங்கள் எல்லாம் நல்லமுறையில் அமலாக்கப்பட்டு மக்களுக்குப் பயன் ஏற்படும் வகையில் செய்ய வேண்டும் ; வெறும் சட்டங்களை மாத்திரம் போட்டு விட்டால் ஆகாது என்பதை நாம் எல்லோரும் அறிவோம். ஜமீன் ஒழிப்பு ஏற்பட்ட காலத்தில் மக்களுக்கு ஏற்பட்ட ஒரு மகிழ்ச்சி இன்று இல்லை என்பதை நான் எடுத்துச் சொல்லுகிறேன். இனாம் ஒழிப்பு வருகிறது என்றவுடன் மக்கள் இனாம்தார்களுடைய பிடியிலிருந்து நாம் நீங்கிவிட்டோம் என்று மகிழ்ச்சி அடைந்தார்கள். எதிர் காலத்தில் பார்க்கும்பொழுது பெரிய கஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். இனாம்தார்கள் செலுத்திய வரிகளுக்கு மேல் இன்று மக்கள் வரி செலுத்தவேண்டியிருக்கிறது. நல்ல முறையிலே நேர்மையான முறையிலே வரி வசூலிக்கப்படாததால் மக்கள் திண்டாடுகிறார்கள். எங்கள் பகுதியிலே அறந்தாங்கி தாலுகாவில் 75 சத விகிதம் இனாம் கிராமங்கள்தான். இனாம் கிராமங்கள் சர்க்கார் வசமானபின் சர்க்கார் நேர்மையான முறையை விட்டு, வேறு வழிகளிலே வரியை வசூலிக்கிறார்கள். இனாம் ஒழிப்பு வந்த பிற்பாடு வரிகளை அதிகமாக போட்டிருக்கிறார்கள். இங்குள்ள இனாம்தார்கள் மாத்திரம் சர்க்காரிடம் முறை செய்துகொண்டார்கள், உயர் நீதி மன்றம் மூலம் நீதி கேட்டார்கள். ஓர் அளவிலே, அதாவது பக்கத்து சர்க்கார் கிராமத்திலே என்ன வரி விதிக்கப்படுகிறதோ அதே அளவிலேதான் அந்த இனாம் கிராமங்களுக்கும்

6th July 1957] [Sri S. Ramasami Thevar]

வரி வசூலிக்கப்படவேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்கள். ஆனால் இப்பொழுது அப்படி நடப்பதில்லை. அந்த இனாம்தார்களுடைய நிலங்களுக்கு மாத்திரம், அதாவது பண்ணை நிலங்களுக்கு மாத்திரம் அந்த அளவு வசூலிக்கப்படுகிறது. ஏற்கனவே குடிக்காணியாச்சியாக இருந்த ரயத்துகளுக்கு அந்தச் சலுகை கிடையாது. இந்தப் பகுதியில் ஒரு ஏக்கருக்கு ரூபாய் 4, 5 வீதம் வரி வசூலிக்கப்படுகிறது. குடியானவர்களிடம் அதை [illegible] மடங்கு வசூலிக்கப்படுகிறது.

அதுமட்டுமல்ல, இன்னும் கிராமங்கள் சரியான முறையில் செட்டில்மெண்டு ஆகவில்லை. குடியானவன் தனக்கு எவ்வளவு நிலம் இருக்கிறது என்று கேட்டால் சொல்லுவதற்கு ஆள் இல்லை. வரியை மாத்திரம் கொடு என்று கேட்கிறார்கள். எவ்வளவுதான் நிலம், நிலத்திற்குள்ள தீர்வை எவ்வளவு என்று குறிப்பிடுவது கிடையாது. உள்ளபடியே ரசீது கேட்டாலும் கூட பசலியையும் போட்டு, வந்த தொகையையும் மாத்திரம் குறிப்பிட்டு கொடுக்கிறார்கள். இதை கவனிக்கவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். கிராமத்திலே பாகுபாடு இல்லாமல் வரி வசூலிக்கப்படவேண்டும். ஜமீன்தார் நிலத்திற்கு ஒரு அளவும் குடிகாணியாச்சியாக இருந்த ரயத்துகளுக்கு அதிகமான அளவு வரியும் வசூலிக்கக்கூடாது. இதைத் தடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கோட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் பகுதியிலே இனாம் ஒழிப்பான பிற்பாடு வரிகள் சரியான முறையிலே அந்தந்த வருஷத்திலே வசூலிக்கப்படவில்லை. ஓரிரண்டு வருஷங்களில் 'ரிட்' மனுக்கள் காரணமாக தடைகள் இருந்ததால் அந்த வருஷங்களில் வசூலிக்கப்படவில்லை. பின்பு புயல் ஏற்பட்டதன் காரணமாக அந்த ஆண்டிலும் வசூலிக்கப்படவில்லை. இப்படி 5, 6 ஆண்டுகளாக வசூலிக்காமல் இருந்துவிட்டு, இப்பொழுது திடீரென்று எல்லா பசலிகளுக்கும் சேர்த்து ஒரேயடியாக கொடுக்கவேண்டுமென்று கெடுபிடியாக வசூலிக்கிறார்கள். அதற்கு விவசாய மக்கள் தவணை கேட்டாலும் கொடுப்பதில்லை. கண்டிப்பாக கொடுத்துத்தான் தீரவேண்டுமென்று ஜப்தி முதலிய நடவடிக்கைகள் எடுக்கிறார்கள். உதாரணமாக சொல்லுகின்றேன். ரூபாய் 100 செலுத்தவேண்டியதற்காக சென்ற மாதம் 21-ம் தேதி ஒரு குடியானவன் ரூபாய் 100 வரியாக செலுத்தியிருந்தும் 24-ம் தேதி குடியானவன் வீட்டில் இல்லாத சமயத்தில் அதிகாரிகள் சென்று குதிரிலிருக்கும் நெல்லையெல்லாம் கொட்டிக்கொண்டு போய்விட்டார்கள். விவசாயியின் மனைவி ஒன்றும் தெரியாமல் அழுதுகொண்டிருக்கும் பொழுது வீட்டிலுள்ள சாக்குகளை எடுத்து அவைகளில் தானியத்தை கொட்டிக்கொண்டு போய்விட்டார்கள். ஓரளவு சட்டம் வேண்டியதுதான். சட்டம் மக்களுக்கு பயன் படவேண்டியது. ஆனால். இன்றுள்ள சட்டங்களெல்லாம் பணக்காரர்களுக்கும் நிலப் பிரபுக்களுக்கும் பயன்படுகிறதே ஒழிய, ஏழை மக்களுக்கு பயன்படுவதாகத் தெரியவில்லை.

இன்று ஒரு விவசாயி தனக்கு எவ்வளவு வரி விதிக்கப்படுகிறது என்று கேட்டால் சொல்லுவார் இல்லை. கணக்குப் பிள்ளையிடம் போனால் கிராம முனிசீபிடம் போகச் சொல்லுகிறார். அவரிடம் கேட்டால் ரெவின்யூ இன்ஸ்பெக்டரிடம் போகச் சொல்லுகிறார். அவரை அணுகினால் எஸ்டேட் மானேஜர், தாசில்தாரிடம் கேட்கவேண்டுமென்று சொல்லுகிறார் அவர்களைக் கேட்டால் உங்கள் சர்க்காரைக் கேளுங்கள் என்கிறார்கள். இந்த முறையில் நிர்வாகம் நடைபெறுகிறது. உள்ளபடி அச்சிட்ட ரசீது கொடுப்பது இல்லை. இந்தப் பெரிய குறை சர்க்காரில் இருந்து வருகிறது. மற்ற எல்லா இலாக்காக்களிலும் ரசீது கொடுத்தால் அதற்கு அடிக்கட்டை (counter-foil) உண்டு. நிலவரிக்கு ரசீது கொடுத்தால் அதற்கு அடிக்கட்டை கிடையாது. கொடுத்த பணத்தை வரவு வைக்காமல்கூட ஒளித்துவிடலாம். இம்மாதிரி பல கணக்குகள் விடுபட்டிருக்கின்றன. வாங்கக்கூடிய பணத்திற்கு ரசீதும் அதற்கு அடிக்கட்டையும் இருக்கவேண்டியது அவசியம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். உழுபவனுடைய நிலத்தின் அளவு என்ன, எவ்வளவு தீர்வை கட்டவேண்டும் என்பதெல்லாம் தெரியவேண்டும், இந்த விவரங்களெல்லாம் விவசாயிகள் தெரியாமல் தவிக்கிறார்கள்.

[Sri S. Ramasami Thevar] [6th July 1957

ஒன்று சொல்லுகிறேன். சட்டம் சரியான முறையிலே அமுல் நடத்தப் படாத காரணத்தினாலே விவசாயிகள் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். எங்கள் ஊரிலே செடில்மெண்டுபடி விநியோகிக்கப்பட்டு ஒரு குடியான வனுக்குக் கிடைத்த நிலத்தை உழமுடியாமல் மூன்று, நான்கு வருஷங் களாக தவிக்கிறான். அதனால் அவனிடமிருந்து சொத்து உடைமை அத் தனையும் விற்று கோர்ட்டுக்குப் போய் செலவழித்து ஓரளவு பயனடைந் தான். அப்படியிருந்தும்கூட, அவன் சாகுபடி செய்த தானியத்தை அறு வடை செய்வதற்கு முன்பு சர்க்காரிடம் பாதுகாப்பு கேட்டான். உடனே மறு தரப்பிற்குத் தெரியப்படுத்தி ஏதாவது அவர்கள் கூறிக்கொள்ள வேண்டுமா என்று கேட்டார்கள். பிறகு பல சட்டப் பிரச்னைகள் ஏற்பட்டு விட்டதால் அந்த விவசாயி அறுவடைசெய்ய முடியாமல் போய்விட்டது. கார்த்திகை மாதம் அறுக்கப்படவேண்டிய கார் நெல் பங்குனி மாதம் வரையில் அறுவடை செய்யப்படவில்லை. பிறகு **Revenue Divisional Officer** ரெவின்யூ இன்ஸ்பெக்டர் அவர்களே நேரிடையாகச் சென்று அறுவடைசெய்து கண்டுமுதல் செய்யவேண்டுமென்று உத்தரவிட்டிருந் தார்கள். அவர்கள் என்ன செய்தார்கள் என்றால், பங்குனி மாதம் தான் வந்தார்கள். அதற்கு இடையிலே நெல் எல்லாம் கொட்டி உதிர்ந்து போய்விட்டது. ஏழை விவசாயி என்ன செய்வான்? அவன் கதி என்ன ஆகும்? பணக்காரர்களுக்கு தயவு தாக்ஷண்யம் காட்டப்படுகிறதே தவிர, ஏழைகளுக்கு சட்டம் பயன்படுவதில்லை என்பதை குறிப்பிடுகிறேன். அடுத்த படியாக சம்பா அறுவடை வைகாசி வரையில் ஆகவில்லை. ஆர். டி. ஓ. அவர்கள் உத்தரவு பிறப்பித்திருந்தாலும்கூட அதிகாரிகள் அங்கு போகா மல் வைகாசியிலும் அறுவடையாகாமல் நெல் எல்லாம் கொட்டிப்போய் விட்டது. அப்படியிருந்தும்கூட அவனுக்கு விரோதியாக உள்ளவர்கள் அவன் நெல்லை கொள்ளை அடித்துவிட்டதாக குற்றம்சாட்டி போலீஸ் உதவி கொண்டு அவனை ஓரிரண்டு நாள் போலீஸ் லாக்கப்பில் வைத் திருந்தார்கள். கொடுமை அதிகாரிகளுக்குத் தெரிந்து, பிறகு அவன் விடுதலை செய்யப்பட்டான். இவ்விதமாக நாட்டிலே நடைபெறுகிறது. இது போன்ற காரியங்களெல்லாம் நடைபெறாமல் தடுக்கப்படவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அறந்தாங்கிப் பகுதியில் இம் மாதிரி அட்டூழியங்கள் நடக்கின்றன. இந்த அட்டூழியங்களையெல்லாம் உடனடியாக போக்கவேண்டுமென்று நான் மறுபடியும் கேட்டுக்கொள்ளு கிறேன்.

அடுத்தப்படியாக, எங்கள் பகுதியில் கடன் வசதிகள் சரியான சமயத்தில் கிடைப்பதில்லை. இதனால் மக்கள் பெரும் கஷ்டத்தை அனுபவிக்கிறார்கள். இருபது மைல்கள் நடந்து வந்து மனுச்செய்துகொண்ட மக்களிடம் நாளை வா, நாளை வா என்று சொல்லுகிறார்கள் அதிகாரிகள். பலதடவைகள் அவர்கள் வரவேண்டியதாக இருப்பதால் எவ்வளவோ செலவினங்கள் ஏற்படுகின்றன. இம்மாதிரி நிலையிலே அவர்கள் மேலும் லஞ்சம் முதலிய வகைகளிலும் செலவழிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. இவைக ளெல்லாம் தடுக்க அரசாங்கம் தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**Sri A. GOVINDASAMY**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நண்பர் சட்டநாத கரையாளர் கொண்டு வந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்தும், நான் என் சார்பிலே மூன்று வெட்டுப் பிரேரணைகள் கொடுத்திருக்கிறேன், அதனையும் இந்த நேரத்தில் வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

நம் நாட்டின் உணவுப் பிரச்னை தீரவேண்டுமானால், நில சீர்திருத்தச் சட்டம் வரவேண்டுமென்பதை அரசாங்கமே ஒத்துக்கொண்டுதான் இருக்கிறது. இதற்கு சான்றாக, நிலச்சீர்திருத்தம் வந்த காஷ்மீரிலும், சைனாவிலும் நல்ல நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அந்த முறையில் நம் அரசாங்கம் நில சீர்திருத்தச் சட்டம் கொண்டுவருகிறோம், கொண்டு வருகிறோம் என்று சொல்வதானது, நிலச்சுவான்தார்களே, உஷாராக இருங்கள் என்று எச்சரிக்கும் நிலைமைதான் ஏற்படுகிறது. சென்ற ஆண் டிலே, நமது மந்திரி அவர்கள் நில சீர்திருத்த சட்டம் என்றைக்காவது



6th July 1957] [Sri A. Govindasamy]

ஒரு நாள் புலி போல வரும் என்ற உறுதியை அவர்கள் சொன்னார்கள். பிறகு நிலச் சீர்திருத்தம் படிப்படியாக கொண்டுவரப்போகிறோம் என்று சொன்னார்கள். பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம், நியாய வார சட்டம் என்ற நிலத்திலிருந்து பாதுகாப்பு அளிக்கிற முறையில் கொண்டு வந் தார்கள். மூன்றாவது நிலவுடமைக்கு வரம்பு கட்டுகிற சட்டத்தை கொண்டு வர ஏன் தயங்குகிறார்கள் என்று புரியவில்லை. கொண்டு வருகிறோம் என்று சொன்ன மாத்திரத்தில் தஞ்சையில் உள்ள நிலப்பிரபுக்கள் சீறி எழுந்தார்கள்; மாநாடு கூட்டினார்கள். அது தேர்தல் காலத்தில் ஒரு கட்சியாக மாறியது. இருந்தாலும் அந்தக் கட்சி வெற்றி பெறாததற்கு காரணம் பொது மக்கள் அவர்கள் கொள்கையை விரும்பி ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை ஆட்சியாளர்கள் நன்கு உணரவேண்டும். நேற்றுகூட மந்திரி கக்கன் சொன்னார்கள், நிலச்சுவாந்தார்கள் எதிர்க் கிறார்கள் என்ற காரணத்தினால்தான் பயப்படுகிறோம் என்று. ஆளும் கட்சியிலே பல பேரும், எங்கள் தரப்பிலே ஒரு சிலரும் இருந்தாலும்கூட இது பொது மக்களுக்கு நன்மை தருமா என்று பரிசீலிக்கும் நிலையில், பொதுவாக நன்மை இருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும். இந்த நிலவுடமைக்கு வரம்பு கட்டும் சட்டத்தை உடனடியாகக் கொண்டுவர ஆவன செய்யவேண்டும். தஞ்சை பண்ணையாள் சட்டத்தை கொண்டு வந்ததற்காக ராஜாஜியை பாராட்டினார்கள். நிலச் சீர்திருத்த சட்டத்தை கொண்டு வந்து நமது மந்திரி பாராட்டுதல்களைப் பெறவேண்டும். இந்த நிலையிலே அகில இந்திய ரீதியில் சட்டம் வரும் என்று சொல்லுகிறார்கள். மத்திய சர்க்கார் காலம் கடத்தும். நிலத்தில் வருகிற வருமானத்திற்கு வரி போடுகின்ற நிலையில், நில வரம்பு போடுவதா, வேண்டாமா என்று முடிவுக்கு வராமல் காலம் கடத்துவது பிரயோசனம் இல்லையென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இரண்டாவதாக, ஆண்டவன், மடம், இவைகளுக்குள்ள நிலத்தை யெல்லாம் அரசாங்க உடமையாக்க வேண்டும். நான் மட்டும் சொல்ல வில்லை. தஞ்சையில் இருந்து வரும் அங்கத்தினர் திரு நாராயணசாமி அவர்களும், காங்கிரஸ் கட்சி மணி அவர்களும் சொன்னார்கள். கோயில் சொத்தை (நிலங்களை) இடையிலே இருக்கின்ற தரகர்கள் அனுபவிப்பதாக எனக்குப் பின்னால் வீற்றிருக்கிற அங்கத்தினர் திரு வீரபாகு அவர்கள் சொன்னார்கள். இந்த மாதிரி யாரும் குறுக்கிடாமல் பார்த்துக்கொள்ள அரசாங்கம் ஏற்றுக்கொண்டு நிலத்தில் உழுகின்ற ஆதிதிராவிட மக்களுக்கு கூட்டுப் பண்ணைகள் ஏற்படுத்தி சாகுபடி செய்ய ஏற்பாடு செய்தால் மக்களுக்கு பயன்படக்கூடிய முறையில் இருக்கும். ஆண்டவனுக்கும் அதிகம் வேண்டியதில்லை. ஓரளவுதான் வேண்டும். ஆண்டவனும் தன் தேவையை குறுக்கிக்கொள்ள வேண்டும். ஏழை மக்களுக்கு புறம் போக்கு நிலங்களை ஜாரி செய்தால், உணவு உற்பத்தி பெருகமுடியும் என்று அரசாங்கம் உணர்ந்தும் செய்யாமல் காலதாமதம் செய்து வரப் படுகிறது. அதை உடனடியாகச் செய்யவேண்டும். கல்பட்டு விஷயமாக, இதனால் ஆதிதிராவிட பிரச்னை நன்றாக தீரும். மந்திரி அவர்கள் வந்து பார்த்தபோது 60 ஏக்கர் நிலம் ஒதுக்கித் தருவதாக வாக்குறுதி கொடுத் தார்கள். ஆனால் 7 அல்லது 8 ஏகர்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்ற நிலங்களையும் ஒதுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

நெய்வேலி பகுதியில் 22 கிராமங்களை ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கின் றன. 39 கிராமங்களுக்கு விதி விலக்கு அளிக்கப்பட்டதாக தெரிகிறது. நில ஆர்ஜிதம் செய்கிறபோது நிலம் எந்த அளவுக்கு பெறுமானம் இருந்தும் அந்த அளவுக்கு கொடுக்காமல் ரூபாய் 250-தான் கொடுக்கப் படுகிறது. 1947-ல் இருந்த விலைதான் கொடுக்கப்படுகிறது, நில ஆர்ஜிதம் செய்யப்படுகிறபோது ஒருவருக்கு 10 ஏக்கர் இருந்தால் சில ஏக்கரை எடுத்தும் சிலவற்றை எடுக்காமலும் விட்டு விடுகிறார்கள். அந்த மாதிரி ஆர்ஜிதம் செய்கிற காலத்தில் நிலத்தில் வீடு இருந்தால் வீட்டு மதிப்பு உதாரணமாக ரூபாய் 1,000 மதிப்பிட்டாலும், வீடு கட்டி 20 ஆண்டு ஆனால் ஒரு ஆண்டுக்கு நூற்றுக்கு ரூபாய் 4 வீதம் 800 கழிவு செய்து ரூபாய் 200 வருகிறது. இந்த விஷயத்தில் கவனம் செலுத்தி போதுமான காம் பென்ஸேஷன் கொடுக்க வழி செய்யவேண்டும். இன்றைய நில விலையில் 15 சத வீதம் அதிகம் கொடுக்க வேண்டும்.

[Sri A. Govindasamy] [6th July 1957

இராம உத்தியோகஸ்தர்களுக்கு இப்போது சம்பளம் ஓரளவு உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் செய்த முயற்சி ஓரளவு வெற்றி பெற்றாலும் அவர்கள் நடத்திய கிளர்ச்சி காரணமாக கிட்டத்தட்ட 300 பேர் வேலையில் இருந்து ஸஸ்பெண்ட் செய்யப் பட்டிருக்கிறார்கள். அவர்களை உடனடியாக வேலையிலிருந்து நீக்காமலும், நிறுத்திவைக்காமலும், மறுபடியும் வேலைகொடுத்து ஆதரிக்கவேண்டும். இந்தச் சம்பள உயர்வு அவசியம் என்று உணர்ந்துதான் சம்பளம் கொடுத்திருக்கிறது. ஆகவே இந்தமாதிரி ஸஸ்பெண்ட் செய்தவர்களுக்கு உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இந்த மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் வாங்கவேண்டிய பாரத்தில் தாசில்தார் கையெழுத்து செய்யவேண்டியிருக்கிறது. சில தாசில்தார்கள் ஏழை மாணவர்கள், பிற்பட்ட மாணவர்கள், ஆதி திராவிட மாணவர்கள் போய் ஸர்டிபிகேட் கேட்டால் காலம் கடத்துகிறார்கள்.

**DEPUTY SPEAKER** : இதைப்பற்றி டிஸ்டிரிக்ட் அட்மினிஸ்ட்ரேஷனில் பேசலாம்.

உதவி சபாநாயகர் மணி அடித்து அடுத்தபடியாக ஸ்ரீ கோதண்டராமன் அவர்களைக் கூப்பிட்டதால் அங்கத்தினர் சொற்பொழிவை முடித்துக் கொண்டார்.

* **SRI V. K. KOTHANDARAMAN** : கனம் தலைவர் அவர்களே, என் சார்பில் வந்திருக்கும் வெட்டுப் பிரேரணை மிக மிக முக்கியமானது என்பதைத் தெரிவித்துக் கொண்டு சில விஷயங்களைப் பற்றிக் கூற முன் வந்துள்ளேன்.

2.50 புரட்சிக் கவி பாரதியார், "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம், வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்" என்றும் "தனி யொருவனுக் குணவில்லை யெனில், ஜகத்தினை யழித்திடுவோம்" என்றும் மிகப் புரட்சிகரமாகப் பாடியிருக்கிறார். அந்த அடிப்படையில் தான், கராச்சியில் காங்கிரஸ் மகாசபை கூடிய 1931-வது வருஷம் முதற்கொண்டு சமீபத்தில் டெல்லியில் காங்கிரஸ் காரியக்கமிட்டிக் கூட்டம் நடந்த நாள் வரையிலும் நிலச் சீர்த்திருத்தங்களைப் பற்றி காங்கிரஸ்காரால் தீர்மானங்கள் போடப்பட்டு வந்திருக்கின்றன. நிலச் சீர்த்திருத்தச் சட்டங்களை கொண்டுவர வேண்டுமென்றும், நில உடைமைக்கு உச்சவரம்பு கட்டவேண்டுமென்றும், சிறு நில விவசாயிகளுக்கு வரிகளைத் தள்ளுபடி செய்யவோ குறைக்கவோ செய்ய வேண்டுமென்றும், விவசாயிகளின் வருமானத்திற்கு வரி போடவேண்டுமென்றும் பல விதமாக 1931-வது ஆண்டு முதற்கொண்டு இன்று வரையில் காங்கிரஸால் தீர்மானங்கள் போடப்பட்டு வந்திருக்கின்றன. மேலும், 1936-வது ஆண்டில் தேர்தல் நடந்தபோது காங்கிரஸ் தேர்தல் அறிக்கையிலும்கூட இந்தத்திட்டங்கள் போடப்பட்டிருந்தன என்பதும் நாம் அறிந்த விஷயம். ஆனால், இன்றைக்கு, 26 ஆண்டுகளுக்குப் பிறகும்கூட, 10 ஆண்டு ஜனநாயக ஆட்சிக்குப் பிறகும்கூட, நடைமுறையில் ஒரு சிறிய அளவுக்காவது நிலச் சீர்த்திருத்தம் ஏற்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் ஏற்படவில்லை என்பதைத் தான் நாம் பார்க்கிறோம். "சமீபத்தில் தானே நில வெளியேற்றத் தடுப்புச் சட்டம், குத்தகை வாரச் சட்டம் ஆகிய சட்டங்களைக் கொண்டுவந்தோம்' என்று சொல்லலாம். அந்தச் சட்டங்கள் விவசாயிகளுக்கு எவ்வளவு பயன் அளித்தன என்பதைப்பற்றி என் மதிப்பிற்குரிய காங்கிரஸ் அங்கத்தினர்களே எடுத்துக்கூறினார்கள், ஆயிரக்கணக்கான மனுக்கள் ஏழை, பாமர விவசாயிகளிடமிருந்து அதிகாரிகளுக்கும் அரசாங்கத்தாருக்கும் வந்திருந்தும்கூட, இதுவரையிலும் ஒன்றும் செய்யப்படவில்லை. சட்டங்களைப் பொறுத்தவரையில்—விவசாயிகளைப் பொறுத்த சட்டமாக இருந்தாலும் சரி, தொழிலாளர்களைப் பொறுத்த சட்டமாக இருந்தாலும் சரி—சுருக்கமாகச் சொல்லப்போனால், காங்கிரஸ் சர்க்காரால் கொண்டுவரப்படும் சட்டங்கள் முன்னால் பார்த்தால் ராவுத்தர் குதிரை போலவும், பின்னால் பார்த்தால் செட்டியார் குதிரை என்பதைப் போல், நிலப்பிரபுக்களுக்கும் சாதகமாக இருக்கும், ஏழை விவசாயிகளுக்கும் சாதகமாக இருக்கும். முதலாளிகளுக்கும் சாதகமாக இருக்கும்.

6th July 1957] [Sri V. K. Kothandaraman]

ஏழைத் தொழிலாளர்களுக்கும் சாதகமாக இருக்கும். காங்கிரஸ் சர்க்காரின் சட்டங்கள் பாமர மக்களுக்குப் பயன்படும்படியாக இல்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நிலச் சீர்த்திருத்தச் சட்டங்களை உடனடியாகக் கொண்டுவந்தாகவேண்டும். அவைகளைக் கொண்டுவராவிட்டால், உணவு நெருக்கடி ஏற்படும்; உணவுப்பற்றுக்குறை ஏற்படும்; உணவுப் பொருள்களின் விலைகள் மேலும் ஏறிக்கொண்டே போகும்; கள்ள மார்க்கெட்டுக்காரர்கள் இந்த நிலையைப் பயன்படுத்திக்கொண்டேயிருப்பார்கள். இவ்வளவையும் பார்த்துக்கொண்டே, "வெகு சீக்கிரத்தில் மசோதாவைத் தயாரித்துவிடுகிறோம், மூன்று மாதங்களுக்குள் மசோதா வரப்போகிறது" என்று அரசாங்கத்தார் சொல்வதைப் பார்த்தால், இதுவரையில் வந்துள்ள சட்டங்கள் எப்படி இருக்கின்றனவோ அப்படிப்பட்ட சட்டம் தான் வருமோ என்ற சந்தேகம் எழுகிறது.

புறம்போக்கு நிலங்களை எடுத்துக்கொண்டால், 73 லட்சம் புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. அவைகள் ஏழை, பாமர விவசாயிகளுக்குக் கொடுக்கப்படவில்லை. நிலத்திற்கு சொந்தமாக உள்ளவர்கள்தான் தரிசு நிலங்களையும் பட்டா செய்துகொண்டிருக்கிறார்களே தவிர, ஏழை விவசாயிகளுக்கு அவை பட்டா செய்து கொடுக்கப்படவில்லை. இது சம்பந்தமாகவும் ஆயிரக்கணக்கான மனுக்கள் தாசில்தார்களுக்கும், மற்ற அதிகாரிகளுக்கும் சர்க்காருக்கும் அனுப்பப்பட்டிருந்தும், அவை கவனிக்கப்படவில்லை. விவசாயிகளுக்கும் மிராசுதார்களுக்கும் தகாறுகள் ஏற்பட்டுவருகின்றன. மடாதிபதிகளுக்கும் கோவில்களுக்கும் சொந்தமான நிலங்கள் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்படவில்லை. அதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. தரிசு நிலங்களை உடனடியாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் ஏழை விவசாயிகளுக்கும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அவைகளை அவர்களுக்குக் கொடுப்பதோடு அவர்களுக்கு விவசாயம் செய்வதற்கும் வசதிகள் செய்து கொடுக்கவேண்டும். இந்தக் காரியங்களைச் செய்தால்தான் உணவு உற்பத்தியை அதிகப்படுத்த முடியும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

(Mr. Speaker in the Chair.)

வியாபாரிகள் மீது பலவிதமான வருமான வரிகளைப் போடுகிறோம். அதே போன்று நிலச்சுவான்கள் மீதும் வரி போட வேண்டும். இந்த வரியை மத்திய சர்க்கார் போட முடியாத நிலை இருக்கிறது. இந்த வரியை ராஜ்ய சர்க்கார் தான் போட வேண்டியிருக்கிறது. ஆகவே இந்த வரியை ராஜ்ய சர்க்கார் போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உடனடியாக ராஜ்ய சர்க்கார்கள் நிலச்சீர்த்திருத்தச் சட்டங்களைக் கொண்டுவரவேண்டும் என்றும், நிலச்சுவான்களுக்கு வருமான வரி போட வேண்டும் என்றும் நேருஜி அவர்களும் ஒரு மாதத்திற்கு முன்புகூட வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள். அப்படியிருந்தும் பெரும் விவசாயிகளுக்கு வருமான வரி போடவோ, நிலச் சொத்தின் பேரில் வரி போடவோ அரசாங்கம் தயங்குகிறது. இவைகளையெல்லாம் பார்க்கும்போது "இன்றைக்கு நிலப் பிரபுக்களுக்குச் சாதகமான நிலைமை தான் இருக்கிறது. முதலாளிகளுக்குச் சாதகமான நிலைமை தான் இருக்கிறது" என்று சொன்னால், நேற்றைய தினம் கனம் மந்திரி ஸ்ரீ சி. சுப்ரமணியம் அவர்கள் "நாங்கள் நிலப் பிரபுக்களுக்கோ முதலாளிகளுக்கோ சாதகமாக இருப்பவர்கள் அல்ல. அவர்களுக்கு பயப்படுபவர்கள் அல்ல" என்று சொன்னார்கள். அவர் அவ்வாறு கூறியதை நாங்கள் வரவேற்கிறோம். அதற்காக நாங்கள் சந்தோஷப்படுகிறோம். அவர் கூறியது உண்மையானால், உடனடியாக தைரியமாக நிலச் சீர்த்திருத்தச் சட்டங்களைக் கொண்டுவர வேண்டும். பெரிய நிலச்சுவான்கள் பேரிலும், நிலச் சொத்தின் பேரிலும் வரி போட்டால் தான், துண்டு விழும் பட்ஜெட்டிற்கு பதிலாக உபரி பட்ஜெட்டை இந்த சபையில் சமர்ப்பிக்க முடியும். அந்த முறையை கையாண்டு தான் பக்கத்திலுள்ள கேரள ராஜ்ய சர்க்கார் உபரி பட்ஜெட்டை சமர்ப்பித்திருக்கிறார்கள் என்பதை நாம் பார்க்கிறோம். ஆகவே அந்த அடிப்படையில் பெரிய நிலச் சொந்தக்காரர்களுக்கு வரி போட வேண்டும்; நிலச் சீர்த்திருத்தம் செய்ய வேண்டும்; நில வரம்பு சட்டம் வேண்டும். நிலமுடைய விவசாயிகளின் நில உடைமைக்கு உச்ச வரம்பு கட்டி; அந்த அளவிற்கு மேல் அவர்கள்

வைத்திருக்கும் நிலத்தை நிலமில்லாத விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும். "அப்படிச் செய்து விவசாய அபிவிருத்தியில் கவனம் செலுத்தினால் தான், பஞ்சத்தைப்போக்க முடியும்; உணவுப் பொருள்களின் விலையைக் குறைக்க முடியும்" என்பது தான் சொல்லாமலேயே கனம் மந்திரிகளுக்கும், கனம் அங்கத்தினர்களுக்கும் என்னைவிட நன்றாக தெரியும். தெரிந்துகொண்டிருந்தால் மட்டும் போதாது, உடனடியாக அமலுக்கு கொண்டுவர வேண்டும். இதையெல்லாம் சொன்னால், கனம் மந்திரி ஸ்ரீ கக்கன் அவர்கள் "தாழ்த்தப்பட்ட மக்கள் இப்போது எவ்வளவோ முன்னேற்றம் அடைந்திருக்கவில்லையா? கைத்தறி நெசவாளர்கள் நிலங்கள் பாதுக்காக்கப் படவில்லையா? இவையெல்லாம் காந்தியார் கொள்கைப்படி தானே ஏற்பட்டிருக்கிறது?" என்று சொல்கிறார்கள். அவர்கள் சொல்வதை நான் வரவேற்கிறேன். மகாத்மா காந்திஜி அவர்கள் அறிவுரைகளை நமக்குக் கொடுத்தார்கள். ஆனால் மகாத்மா காந்தி சொன்னபடி நாம் நடந்திருக்கிறோமா என்று பார்க்கவேண்டும். 1931-வது வருஷத்தில் அவர் தலைமையில் கீழ் போடப்பட்ட திட்டங்களை இன்றுவரையில் நிறைவேற்றவில்லை என்றால், மகாத்மா காந்திஜிக்கு நாம் மதிப்புக் கொடுத்திருக்கிறோமா என்று பார்க்க வேண்டும். அவருக்கு மட்டும் அல்ல. இந்த தேசத்தின் பெருமைக்குரிய ஜவஹர்லால் நேருஜியை "உடனடியாக நிலச்சீர்த்திருத்தத்தைச் செய்ய வேண்டும்" என்று சொல்லியிருக்குபோது அவருடைய வார்த்தைக்கு மதிப்புக் கொடுக்கிறோமா என்றால் அதுவும் இல்லை. ஜவஹர்லால் நேருஜியே நில வருமான் வரி போட வேண்டும் என்று சொல்லியிருக்கும்போது, நிலப்பிரபுக்களுக்கு வருமான வரியோ, நிலச் சொத்து வரியோ போடுவதற்கு நமது சர்க்கார் என் தயங்கவேண்டும். சர்க்கார் தயங்குவதால் தான் "இது நிலப்பிரபுக்களுக்குப் பக்கபலமாக இருக்கும் சர்க்கார். ஆகவேதான் அவர்கள் மீது வரி போடுவதற்கு பயப்படுகிறார்கள்" என்று திட்டவட்டமாக எண்ணவேண்டிய நிலையில் இருக்கிறோம். விவசாயம் சம்பந்தமான எல்லா விஷயங்களையும் மேற்பார்வை பார்க்க வேண்டிய கிராம கர்ணங்களுக்கும் கிராம முன்சீபுகளுக்கும் போதிய சம்பளம் கொடுக்கவேண்டும். அவர்களுக்கு ஏதோ நான்கு, ஐந்து ரூபாய் சம்பள உயர்வு கொடுத்துவிட்டால் மட்டும் அவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்ந்துவிடாது. அவர்களுக்குப் போதுமான சம்பளம் கொடுக்கப்படாத காரணத்தால்தான், யார் அவர்களுக்குப் பணம் கொடுக்க முன்வருகிறார்களோ அவர்களுக்கு நிலங்களை பட்டா செய்து கொடுக்கிறார்கள். இதைத் தடுப்பதற்கு கிராம உத்தியோகஸ்தர்களுக்கு போதிய சம்பளம் கொடுக்க வேண்டும்.

அந்த அளவுக்கு அவர்கள் நிலச்சுவான்தார்களுக்குச் சாதகமாகவே, ஏழை விவசாயிகளுக்குப் பாதகமாகவே தங்கள் அதிகாரத்தை உபயோகிக்கக் கூடிய நிலைமை உண்டாகிவிடுகிறது. இந்த விஷயம் ஸ்ரீ ராஜாஜி முதன் மந்திரியாக இருந்த காலத்திலேயே வந்தது. அப்பொழுது அவரே சொன்னார், "அவர்களுக்கு மாமூல் இருக்கிறது. அவர்களுடைய சம்பளத்தில் உயர்வு வேண்டியது இல்லை" என்பதாக. இந்தக் கருத்து அன்றைய தினத்திலிருந்தே பேசப்பட்டு வருவதைப் பார்த்தோம். இந்த அமைப்பில் தான், இந்த கண்ணோட்டத்தில் தான், இந்த அடிப்படையில்தான் இன்றைய தினம் நான்கு, ஐந்து, ஏழு என்கிற முறையில் கிராம அதிகாரிகளுடைய ஊதியம் உயர்த்தப்பட்டிருக்கிறதே தவிர உண்மையிலேயே அவர்களுடைய மனோபாவத்தை மாற்றும் வகையில் ஊதியம் உயர்த்தப்படவில்லை. உண்மையிலேயே ஏழை விவசாயிகளுக்கு நல்வாழ்வு உண்டாகவேண்டுமென்றால், அவர்களுக்கு இருந்து கொண்டிருக்கக் கூடிய தொந்தரவுகள் எல்லாம் போகவேண்டுமென்றால் அவர்களுடைய சம்பளத்தை நல்ல முறையில் உயர்த்திக் கொடுத்து அவர்கள் மிராசுதாரர்களின் தயவை எதிர்பார்த்து நிற்காமல் செய்ய வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொண்டு நான் முடித்துக் கொள்கிறேன்.

**Mr. SPEAKER:** இன்னும் இரண்டு அங்கத்தினர்கள் பேசவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நான் முதலில் ஸ்ரீ முத்துகுமாரஸ்வாமி அவர்களையும், ஸ்ரீ எம். பி. சுப்ரமணியம் அவர்களையும் ஐந்து ஐந்து நிமிஷங்கள் பேசும்படியாக அழைக்கிறேன். பின்னர் ஸ்ரீ வி. கே. ராம

ஸ்வாமி முதலியார் பத்து நிமிஷங்கள் பேசுவார். அதன் பிறகு கனம் மந்திரி பதில் அளிப்பார். இப்போது ஸ்ரீ எம். ஸி. முத்துகுமாரஸ்வாமி அவர்களை ஐந்து நிமிஷம் பேசும்படியாக அழைக்கிறேன்.

*Sri M. C. MUTHUKUMARASWAMY : கனம் சபாநாயகர் அவர்களே, இன்று லாண்டு ரெவின்யூ மந்திரி அவர்களால் கோரப்பட்டிருக்கும் இந்த மானியத்தை ஆதரித்து இரண்டொரு விஷயங்கள் சொல்ல ஆசைப் படுகிறேன்.

இன்றைக்கு மாகாண சர்க்காருக்கு வரக்கூடிய வருமானங்களில் மிக உயர்ந்து இந்த நிலத்தின் வரிமூலமாகத்தான் வருகிறது என்ருலும்கூட இன்னும் அந்த வருமானத்தை அதிகமாக்கிக் கொள்ளலாம். எப்படி என்ருல் பல இடங்களில் ஏராளமான புறம்போக்கு நிலங்கள் தேங்கிக் கிடக்கின்றன. அவைகளை நிலம் இல்லாத ஏழை விவசாயிகளுக்குப் பகிர்ந்து கொடுத்தால் அவர்கள் அதில் விவசாயம் செய்து உணவு உற்பத்தியையும் பெருக்குவார்கள். தீர்வை கட்டுவதன் மூலம் சர்க்காருடைய வருமானத்தையும் அதிகப் படுத்துவார்கள், என்று சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த அளவில் நம்முடைய ராஜ்யம் பூராவிலும் உள்ள நிலங்கள் வீணுகக் கிடக்கின்ற தரிசு நிலங்கள் எவ்வளவு என்பதைக் கணக்கிட ஒரு சர்வேயரை நியமித்து அவர் கொடுக்கின்ற கணக்குப்படி வீணுக உள்ள நிலங்களை எல்லாம் உடனடியாக ஏழை விவசாயிகளுக்குப் பகிர்ந்து கொடுக்க ஏற்பாடு செய்தால் உணவு உற்பத்தியும் அதிகரிக்கும். அதனுல் சர்க்காருக்கும் வருமானம் கிடைக்கும். அதோடு அமைச்சர் பெருமான் பலயிடங்களுக்குச் சுற்றுப்பிரயாணம் செய்கிருர்கள். அப்படிச் செய்யும் நேரத்தில் விவசாய காலத்தில் விவசாயம் செய்யப்படாது இருக்கும் நிலங்கள் கண்ணில்பட்டால் அந்த நிலங்களைப் பற்றியும் உடனடியாக விசாரணை செய்து வைத்துக் கொண்டால் ஏழை மக்களுக்கு அந்த நிலங்களைக் கொடுப்பதற்கு வசதியாக இருக்கும் என்பதாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

விவசாய மக்களுடைய நன்மைக்காகத்தான் நாம் பல சட்டங்களைக் கொண்டு வந்திருக்கிருேம். அவற்றினுல் உண்மையிலேயே இன்றைய தினம் விவசாயிகளுக்கு நன்மை கிடைக்கவில்லை என்று பலரும் சொல்லியிருக்கிருர்கள். இன்னும் நான் அறிகிறேன். ஜில்லாக் கலெக்டர்களுக்கு ஒவ்வொரு ஜில்லாவிலும் உள்ள விவசாயிகள் எத்தனை பேர் என்பதைக் கணக்கெடுத்து அனுப்பும்படியாக சர்க்கார் குறிப்பும் கூட அனுப்பியிருப்பதாக தெரிகிறது. ஆனுல் நேரடியாக அவர்கள் எந்த இடத்திற்காவது சென்று கணக்கு எடுக்கிருர்களா என்று பார்த்தால் இல்லை என்றுதான் வருத்தத்தோடு சொல்ல வேண்டியிருக்கிறது. அவர்கள் கணக்கு எடுக்கும் போது மிராசுதார்களுக்கு உள்ளாகவே இருந்து கொண்டு சாகுபடி செய்கிற விவசாயிகளைக்கூடச் சேர்க்காமல் விட்டுவிடுகிருர்கள். இதைவைத்துக் கொண்டு பின்னர் மிராசுதாரர்கள் அந்தச் சாகுபடியாளரிடம் உள்ள நிலம் சொந்தப் பண்ணையில் இருந்ததாகவும், அவன் சாகுபடியாளன் இல்லை எனச் சொல்லி, இந்தக் கண்க்கைக்காட்டி நிலத்திலிருந்து வெளியேற்றி விடுகிருர்கள். இதையும் சர்க்கார் கவனிக்கவேண்டும்.

அடுத்தபடியாக இன்று இந்த இலாகா காரியாலயங்களுக்குச் சென்று பார்த்தால் தெரியும். யானைக் கொட்டகை போல ஒரு பெரிய இடத்தில் கொஞ்சம்கூட வசதி இல்லாமல் இந்த உத்தியோகஸ்தர்களை அடைத்து வைத்திருக்கிருர்கள். இவர்களுக்கு இராக்காலங்களில் மின்சார விளக்கு வசதி கூடக் கிடையாது. வெளியே மின்சார விளக்கு இருக்கிறது. உள்ளே லாந்தரில் மண்ணெண்ணெய் விளக்கை வைத்துக் கொண்டு இவர்கள் வேலை செய்கிருர்கள். இதைப் பார்க்கும்போதே பரிதாபம் உண்டாகிறது. கடந்த மாதத்தில் நான் நன்னிலத்திலுள்ள காரியாலயத்திற்குச் சென்றேன். உட்காரக்கூட இடம் இல்லை. கேட்டால் "பாருங்கள் இங்கு வசதி ஒன்றுமே இல்லை" என அவர்கள் பரிதாபகரமாகச் சொல்கிருர்கள். ஆகவே சர்க்கார் உடனடியாக இந்தக் காரியாலயங்களுக்கு எல்லாம் மின்சார வசதி செய்து கொடுப்பதோடு நாற்காலி, பெஞ்சு போன்றவைகளையும் கொடுத்து உதவ வேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக பண்ணையாள் சட்டத்தில் விவசாயிகளுக்குப் பாதகமான ஒரு இடம் இருக்கிறது. பண்ணையாளை மிராசுதார் எப்போது வேண்டுமானாலும் நீக்கிக்கொள்ளலாம். சரியாக வேலை செய்யவில்லை என்று ஒரு நோட்டீஸ் கொடுத்து நீக்கிவிடலாம் என்று இருப்பது மிகவும் பாதகமானது. இப்படி நீக்கினால் அவர்கள் கோர்ட்டுக்குப் போகவும், கோர்ட்டார் அந்தத் தீர்ப்பை ஊர்ஜிதம் செய்யும்படியாகவும் செய்தால் பொருத்தமாக இருக்கும். இதையும் அமைச்சர் அவர்கள் கவனத்தில் வைத்துக்கொண்டு ஆவன செய்ய வேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

10-7 p.m. **Sri M. P. SUBRAMANIAM**: கனம் அவைத்தலைவர் அவர்களே, இந்த ரெவின்யூ இலாகா மான்யத்தில் சில வார்த்தைகளை நான் கூற விரும்புகிறேன். சர்க்கார் தரிசு நிலங்களை நிலம் இல்லாத ஏழை விவசாயிகளுக்குப் பகிர்ந்து கொடுக்க முயற்சி எடுத்து வருவதாகப் பலகாலமாகக் கூறிவந்திருக்கிறார்கள். சேலம் மாவட்டத்தில், ஆத்தூர் வட்டாரத்தில் நான்கு தனித் தாசில்தார்களைப் போட்டு ஏறக்குறைய முப்பதாயிரம் ஏக்கரா பகிர்ந்து கொடுக்கப்பட்டன என்பதையும் நான் அறிவேன். இருந்தாலும் ஏற்கெனவே பகிர்ந்து கொடுக்கப்பட்டவை எல்லாம் நிலவளம் நீர்வளம் இல்லாதவை. இன்னும் இருபதாயிரம் ஏக்கரா நிலம் பகிர்ந்து கொடுக்கப்படாமல் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. இதற்கு அரசாங்கம் கூறுகிற காரணம் இதை வைத்துக் கொண்டு கூட்டுறவு பண்ணை போன்ற பல புதிய திட்டங்களை ஏற்படுத்தப் போகிறோம் என்பதாகத்தான் அன்று அமைச்சர் அவர்களே கூறியிருக்கிறார்கள். இதன் அடிப்படையில் கடந்த ஏழு, எட்டு ஆண்டு காலமாக ஆத்தூர் தாலுகாவில் கூட்டுறவு முறையில் பழவகைப் பொருளை வைப்பதற்கும், கூட்டுப்பண்ணைகளை ஏற்படுத்துவதற்கும்ஆன திட்டங்களை, சேலம் கூட்டுறவு பண்டசாலையில் இருந்து 20 லட்சம் ரூபாய் பணத்தைக் கொடுத்து ஆரம்பிக்கலாம் என்றும் அவ்வப்போது கலெக்டர், ஜில்லா அதிகாரிகள், மற்ற அரசாங்க உத்தியோகஸ்தர்களும் அரசாங்கத்திற்கு பல திட்டங்களை அனுப்பியிருக்கிறார்கள். மற்ற அரசாங்கத்திற்கும் விண்ணப்பத்துக்கொண்டிருக்கிறார்கள். எந்த திட்டமும் இதுவரையில் அமுலாக்கப்படவில்லை. அந்த ஒதுக்கிவைக்கப்பட்ட நிலமும் விவசாயிகளுக்குப் பகிர்ந்து அளிக்கப்படவில்லை. இங்கே ஒதுக்கிவைக்கப்பட்டுள்ள இடம் நில வளம் உடையது. நீர்வளமும் உடையது. இதை உடனடியாக விவசாயிகளுக்காவது பகிர்ந்து அளிக்க அரசாங்கம் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். பகிர்ந்து அளிப்பதோடு மட்டுமல்லாமல் அங்குள்ள விவசாயிகள் அவற்றை கூட்டுறவு சங்க அடிப்படையில் விவசாயம் செய்வதற்கும் வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும். அதற்கு வேண்டிய வாய்ப்பு நிறைய ஆத்தூர் வட்டாரத்தில் இருக்கிறது என்பதையும் கனம் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இப்படிச் செய்யாவிட்டால் எவ்வளவுதான் நிலத்தை விவசாயிகளுக்குப் பகிர்ந்து கொடுத்தாலும் விவசாயிகள் அவற்றைச் சாகுபடி செய்ய முன்வரமாட்டார்கள். அவர்களுக்கு நிலத்தைப் பண்படுத்த முதல் போடுவதற்கு வசதிகள் இல்லை. முன்பே பண்படுத்தப்பட்டு விவசாயத்திற்கு லாயக்காகவுள்ள நிலங்களில் பயிரிட ஆரம்பித்துவிடுவார்கள் என்பதையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இவற்றையெல்லாம் பண்படுத்தி விவசாயத்திற்கு லாயக்காக ஆக்கி அவர்களுக்குக் கொடுப்பது என்றால் அதிகப் பணம் தேவைப்படுமே என்று அரசாங்கம் கருதலாம். இப்போது நம் அரசாங்கத்தினிடத்தில் உள்ள டிராக்டர்கள், புல்டோசர்கள் போன்றவைகள் ஒரு ஆண்டில் பெரும்பகுதி நாட்கள் சில இடங்களில் சும்மா இருப்பதாக ஆடிடர்-ஜெனரல் ரிபோர்ட்டில் கூறப்பட்டிருக்கிறது. இவைகளை எல்லாம் வேலை இல்லாத காலங்களில் ஆத்தூர் போன்ற பகுதிகளுக்கு அனுப்பி வைத்து அங்குள்ள தரிசு நிலங்களை விவசாயத்திற்கு லாயக்குள்ளதாக நிச்சயம் பண்படுத்த முடியும். அதோடு மாத்திரம் அல்ல. சேலத்திலுள்ள ஜில்லாக் கலெக்டர் ஒரு திட்டம் தயாரித்து மாநில அரசாங்கத்தாருக்கு அனுப்பியிருப்பதாகவும் தெரிகிறது. அதாவது கள்ளச் சாராயம் காய்ச்சும் குற்றத்திற்காக சிறையில் இருக்கப்பட்ட அதிகமான கைதிகளைக் கொண்டு இந்த நிலங்களைப் பண்படுத்தவும், இவற்றில் விவசாயம் செய்யவும் கூடும் என்று சொல்லியிருப்பதாக தெரிகிறது இப்படிச்செய்தால் அந்தக்கைதிகளுடைய மனப்பான்மையும் மாறும். அவர்களுக்கும் தொழில் செய்து பிழைக்க

அக்கரை உண்டாகும். இதையும் கருத்தில் கொண்டுதான் அங்கே கூட்டுறவு முறையில் சாகுபடி செய்வதற்குரிய வாய்ப்பு இருக்கின்றது என நான் முன்பு சொன்னேன். இப்படி கூட்டுறவு முறையில் சாகுபடி செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யாது நிலத்தைப் பகிர்ந்து அளிப்பதால் மட்டும் பயன் இல்லை என்பதை மீண்டும் வற்புறுத்திக் கூறுவேன். காரணம் எனக்குத் தெரிந்தே, இந்த மாதிரியாக நிலம் பகிர்ந்து அளிக்கப்பட்டவர்கள், அதில் பயிரிடாமல், கந்தாயம் கூடக் கட்டமுடியாமல் திரும்பவும் ரத்துசெய்துவிடவேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். பல அதிகாரிகளுக்கும், சேலம் மாவட்டத்தில் தற்போதும் குடியில்லாதவர்களுக்கும்கூட நிலம் பகிர்ந்து கொடுக்கப்பட்டிருக்கிறது. இதனால் எப்படி நிலம் பயிர் செய்யப்படும்; இதை உடனடியாகக் கண்காணிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக இந்த சபையில் விவசாயிகள் நில வரியின் பேரால் கட்டப்படுகிற பணத்திற்கு அச்சடித்த ரசீது கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். இதே அவசியத்தை பலமுறை வற்புறுத்திக் கூறப்பட்டிருக்கிறது. இதனால் கிராம அதிகாரிகளிடையே பல தவறுதல் நடக்கிறது. ஆகவே இவ்விஷயத்தில் அதாவது அச்சடித்த ரசீது வழங்கப்படுவதற்கு அரசாங்கம் உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும். இறுதியாக நான் சொல்லுவது என்னவென்றால் பல இடங்களில் விவசாயிகளுக்கு கிணறு வெட்டுவதற்காக மான்யங்கள் இனமாகக் கொடுத்து வந்தார்கள். ஆனால் சில இடங்களில் கிணறு வெட்டப்பட்டு தண்ணீர் இல்லாததினால் அப்படியே வேலைகளை விடப்பட்டிருக்கிறது. இதனால் கிணறு கோரியபடி வெட்டப்படவில்லை என்று அரசாங்கம் கருதி இதற்காகக் கொடுத்த பணத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. இதை நிறுத்தி வைப்பதற்காக எம். எல். ஏக்கள் தலையிட வேண்டியிருக்கிறது என்றெல்லாம் கூறப்பட்டது. ஆதலால் அந்தப் பணத்தை முழுவதும் செலவு செய்யப்பட்டிருந்தால் அந்தப் பணத்தை அவர்களிடமிருந்து வாங்கவேண்டிய அவசியமில்லை என்று கருதி **write off** செய்வது நல்லது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

***Sri V. K. RAMASWAMY MUDALIYAR** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ரெவின்யூ டிபார்ட்மெண்டை பொறுத்த அளவில் பேப்பர்கள் போனால் சரியாக கிடைப்பதில்லை என்று புகார்கள் அதிகமாக இருந்துகொண்டிருக்கிறது. அதே மாதிரி ஒரு ஏழை ரெவின்யூ டிபார்ட்மெண்டில் போய் ஏதாவது கடன் வாங்குவதற்காக ஒரு மனு, அதிலும் முக்கியமாக நிலத்தைப் பற்றி மனுக்கள் அனுப்பினால் பதில் கிடைப்பதில்லை. இன்னும் ஒன்று, மனுக்கள் ஏதாவது அனுப்புவதாய் இருந்தால், அதற்கு உண்டு அல்லது இல்லை என்று ஒரு உத்தரவை பிறப்பிக்க வேண்டும். முக்கியமாக ஒரு நபர் ஒரு மனு கொடுத்தால் அதோடு 10, 12 காப்பிகளும், கையில் வைத்திருக்க வேண்டியிருக்கிறது. ஏனென்றால் கொடுத்த மனுக்கள் சரியாக பதிவு செய்யப்படுவதில்லை. சில மனுக்கள்தான் பதிவு செய்யப்படுகிறது. அநேகமாக மனுக்கள் பதிவு செய்யப்படுவதில்லை என்று எங்கும் புகார் வந்துகொண்டிருக்கிறது. ஆகையால், ஒவ்வொரு மனுவையும் பதிவு செய்து நல்லபடியாக நடவடிக்கை எடுத்து தக்க பதில் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதே மாதிரி கடன் விண்ணப்பங்கள் வருகிறது. அதில் முக்கியமாக லஞ்ச ஊழல்கள் இருப்பதாகத் தெரிகிறது. ஏதாவது ஒரு குடியானவன் மாடு வாங்குவதற்கோ அல்லது உரம் வாங்குவதற்கோ மனு கொடுத்தால், உடனடியாக அவனுக்குக் கடன் கிடைப்பதில்லை. அவ்விதம் கிடைத்தாலும் கடனாகக் கிடைக்கிற முழு தொகையும் அவனுக்குக் கொடுக்கப்படுவதில்லை. அதற்கும் லஞ்சம் கொடுக்க வேண்டியிருக்கிறது. இதைப்பற்றி மந்திரி அவர்கள் கவனிக்க வேண்டும். இது தவிர பல இடங்களிலும் சர்வே செட்டில்மெண்ட் நடக்கிறது. இதற்காகப் பெரிய தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த சர்வே அதிக காலமாக நடந்து வருகிறது. இன்னும் இது எவ்வளவு காலம் நடக்குமென்று சர்க்கார் உறுதியாக ஒன்றும் சொல்லவில்லை. இதைப் பற்றி தீவிரமான

நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்னும் கூடுதல் உத்தியோகஸ்தர்களை நியமித்தாவது இந்த சர்வே செட்டில்மென்டை சீக்கிரமாக முடிக்கவேண்டும். ஜமீன் கிராமங்களில் இந்த சர்வே ஆகாமல் இருக்கும் காரணத்தால் அங்குள்ள குடியானவர்களுக்கு கடன் வசதி கிடைக்கவில்லை. இதனால் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இதைப்பற்றி சர்க்கார் உடனே நடவடிக்கை எடுத்து அந்தந்த பிராந்தியத்திலுள்ள சர்வே செட்டில்மெண்ட் ஆவது வரையிலும் அங்குள்ள ஏழைக் குடியானவர்களுக்கு கடன் வசதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதேபோல்தான் காம்பென்சேஷன் (compensation) கொடுப்பதிலும் எஸ்டேட் முதலியவைகளை எடுத்து " இன்டரிம் பேமெண்ட் " (Interim Payment) கொடுத்துவிட்டு, அதில் திடீரென்று ஆட்சேபணை கொடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. அந்த எஸ்டேட்டுகளுக்கு மாத்ரம் ஒரு தடவைதான் ட்ரிபூனல் (Tribunal) போகிறார்கள். இதை மாற்றி இரண்டு மூன்று தடவையாவது போகலாம். இம்மாதிரியுள்ளவைகளை சீக்கிரமாக பரிசீலனை செய்து ஒரு முடிவுக்கு வரவேண்டும். அப்படி ஏதாவது முடிவு செய்தால்தான் அந்த இடத்தில் கஷ்டப்படும் குடியானவர்களுக்கு ஏதாவது நன்மைகள் ஏற்படும் என்பதைச் சொல்லிக்கொள்ளுகிறேன். அதைப்போல் புறம்போக்கு நிலங்களை (waste lands) பதித்துக் கொடுப்பதில் சரியாக பட்டா கொடுப்பதில்லை என்று பலர் சொன்னார்கள். ஒவ்வொரு ஜில்லாவிலும் தரிசு நிலங்கள் அதிகமாக இருக்கின்றன. அங்குள்ள ஏழை விவசாயிகள் இந்த நிலங்களைப் பதித்து கொடுக்க வேண்டுமென்று நேராக முறையிட்டும் மனுக்கள் போட்டிருந்தும் அவர்களுக்குச் சரியான காலத்தில் முறைப்படி அந்த நிலங்கள் வழங்கப் படவில்லை. சாதாரணமாக தரிசு நிலங்களை பதித்துக் கொடுக்கப்படுகிறதென்றால், அந்த விபரங்களை அந்தந்த தாலுகா ஆபீஸ்களில் இதைப் பற்றி பிரச்சாரம் செய்திருந்தால் அவர்கள் உடனே அந்த தரிசு நிலங்களுக்காக மனுப்போடுவார்கள். மனு போட்டால் உடனுக்குடன் அவைகளை விசாரித்து வழங்க வேண்டும். தரிசு நிலங்கள் சாகுபடி செய்யாமல் இருப்பதினால், உணவு உற்பத்தி அதிகமில்லாமல் இருக்கிறது. இதை அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதோடு நிலங்களுக்கு சரியான முறைபடி பட்டா செய்து கொடுக்கப்படவில்லை என்று பொதுவாக எல்லா ஜில்லாக்களிலிருந்தும் புகார் இருந்துகொண்டிருக்கிறது. ஒவ்வொரு வருஷமும் ஜமாபந்தி கழிந்த உடன் அந்தந்த சர்வே நம்பர்களைப் போட்டு பட்டா கொடுக்கப்பட வேண்டும். இது தவிர பல இடங்களிலும் தீர்வைக்கு ரசீது கொடுக்கப்படாததைப்பற்றி பலர் சொன்னார்கள். சென்ற வருஷம் இதே பிரச்னையைப்பற்றி சட்டசபையில் பேசப்பட்டிருக்கிறது. பணம் கொடுத்ததற்கு சரியான விதத்தில் அச்சடித்த ரசீது கொடுக்கப்படவேண்டும். சில ஜமீன் கிராமங்களில் துண்டு ரசீதுகள் கொடுக்கிறார்கள். சென்ற வருஷத்தில் இம்மாதிரியாக சட்டசபையில் பேசிய சமயத்தில் மந்திரி அவர்கள் அவைகளை உடனே கவனிப்பதாகச் சொன்னார்கள். ஆனால் நாளது வரையிலும் அது கவனிக்கப்படவில்லை. தொகை கட்டியதற்கு துண்டு ரசீது கொடுக்காமல் அச்சு ரசீது கொடுக்க வேண்டும். கிராம உத்தியோகஸ்தர்களைப்பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகளைப்பற்றிச் சொல்லிக் கொள்ளுகிறேன். அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற ஊதியம் மிகவும் குறைவு. முக்கியமாக " பிளாக் டெவலெப்மெண்ட் " ஏரியாக்களில் பல புதிய உத்தியோகஸ்தர்களை நியமித்திருக்கிறார்கள். அந்த உத்தியோகஸ்தர்களுக்குப் பதில் அந்த வேலையை இவர்களிடம் கொடுத்து வேலை செய்யலாம். கிராம சேவக், " Social Education Officer" என்றெல்லாம் பல உத்யோகஸ்தர்களைப் போட்டிருக்கிறது. இந்த வேலைகளை அந்தந்த பிராந்தியத்தில் இருக்கும் கிராம உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுத்து அவர்களுடைய ஊதியத்தைக் கொஞ்சம் அதிகப்படுத்தலாம். கெஜட் பதவியில்லாத உத்தியோகஸ்தர்களுக்கு ஊதியம் கூட்டிக் கொடுப்பதற்காக மத்திய சர்க்கார் கிராண்ட் கொடுத்திருக்கிறது. அதைப் போல் இவர்களுடைய ஊதியத்தை அதிகப்படுத்துவதற்கு மத்திய சர்க்காரிலிருந்து ஏன் கிராண்ட் வாங்கக்கூடாது ? இவர்கள்தான் " லாண்ட் ஸென்ஸஸ் " எடுத்தார்கள். இது மத்திய சர்க்காருடைய உத்தரவின் பேரில்தான்.



அடுத்ததாக கால்நடைகளைப் பற்றி ஒரு கணக்கு ராஜ்யம் பூராவும் இவர்கள்தான் தயாரித்தார்கள். இதுவும் மத்திய சர்க்காருடைய உத்தரவுதான் என்று கேள்விப்பட்டேன்.

நம்முடைய சர்க்கார் இதைப்பற்றி சிபார்சு செய்தும் மத்திய அரசாங்கம் கேட்கவில்லை என்று கேள்விப்பட்டேன். அது வருந்தத்தக்கதாகும். இதைப்பற்றி அமைச்சரவர்கள் மத்திய அரசாங்கத்தினிடம் கொஞ்சம் நன்றாக வாதித்து சில மார்க்கங்கள் பெற்று அவர்களுக்குக் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கன்னியாகுமரி ஜில்லாவில், நான் கேள்விப்பட்ட வரையில் சுமார் 40,000 ஏக்கர் வரையில் போதுமான மழை இல்லாத காரணத்தால் அநேக நிலங்கள் 40,000 ஏக்கர் வரை சாகுபடி செய்ய முடியாமல் போய்விட்டதாகக் கேள்விப்பட்டேன். அமைச்சரவர்கள் அங்கு போய் பார்த்துவிட்டு அவர்கள் கஷ்டப்படுவது வாஸ்தவந்தான் என்று சொன்னதாக அறிகிறேன். அங்கும் சரி, இன்னும் மற்ற பஞ்சப் பிரதேசங்களிலும் மழை இல்லாத காரணத்தால் ரெமிஷன் கொடுக்க வேண்டும். பஞ்ச வஜா மனுக்கள் இன்னும் பைசலாகவில்லை. டிலேக்களைத் தவிர்த்து அவர்களுக்கு உடனடியாக பஞ்ச வஜா கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இம்மாதிரியான டிலேக்களுக்கு, ஜில்லாக்கள் பெரிதாக இருப்பதினால்தான். ஆகவே நான் சொல்லுவது என்னவென்றால் ஒவ்வொரு ஜில்லாவையும் இரண்டு அல்லது மூன்று ஜில்லாக்களாகப் பிரிக்க வேண்டும். அப்படிச் செய்து ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் ஒவ்வொரு கலெக்டரைப் போட வேண்டும் என்பதுதான் என்னுடைய எண்ணம். அவசியமானால் ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர்களை எடுத்துவிடலாம். கலெக்டர்களைப்போட்டு அவர்கள் தீவிரமாக வேலை செய்ய சர்க்கார் கவனிக்க வேண்டும். மலபார் ஜில்லா நம்மிடம் இருந்தபோது ஒரு ஜில்லாவாக இருந்தது. ஆனால் கேரளத்தில் போனவுடன் அது மூன்று ஜில்லாக்காளாக பிரிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் நம் சர்க்காரும் ஒவ்வொரு ஜில்லாவையும் இரண்டு மூன்றாகப் பிரித்து பொது மக்களுக்கும் குடியானவர்களுக்கும் நல்ல முறையில் உதவி செய்யும்படி செய்வதற்கு சர்க்கார் கவனம் செலுத்த வேண்டும். ஆகவே இதைப்பற்றி யோசனை செய்து உடனடியாக உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இத்துடன் எனது வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

* THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் சபாநாயகர் அவர்களே, 1-21
இந்த மான்யத்தின் பேரில் பல அங்கத்தினர்கள் விரிவாகப் பேசினார்கள். p.m.
அவர்கள் 1936-ம் வருட காங்கிரஸ் சம்பவத்தில் ஆரம்பித்து இன்றைய தினம் வரையில் பல விஷயங்களைப்பற்றியும் பேசினார்கள். 1936-ல் இருந்து இதுவரையிலும் ஒன்றும் செய்யாமல் இல்லை. இந்த லாண்ட் ரெவின்யூ ஸிஸ்டம் இருக்கிறதே, அதை மாற்றி அமைப்பதில் எந்த மாதிரி அதை மாற்றி அமைத்தால் அது நல்ல மாதிரியாய் இருக்கும் என்று யோசனை செய்து அதற்காக கமிட்டிகள் நியமித்து கமிட்டிகள் ரிப்போர்ட் செய்திருக்கிறார்கள். நம் நாட்டில் லாண்ட் ரீபாரம் கமிட்டி ஒன்று போர்ட் மெம்பர் திருவாளர் இ. எம். வி. சுப்பிரமணியம் தலைமையில் 1950-ல் நியமிக்கப்பட்டு அவர்கள் ரிபோர்ட் செய்திருக்கிறார்கள். அந்த ரிபோர்ட்டிலே, இந்த லாண்ட் ரெவின்யூ ஸிஸ்டத்தை மாற்றி அமைப்பதில் சில நன்மைகள் இருந்தபோதிலும் கூட தற்கால நிலைமையில் இந்த முறையை மாற்றி அமைப்பது அவ்வளவு உசிதம் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அதையொட்டி சமீபகாலத்தில் ஏற்பட்ட " டாக்ஸேஷன் என்கொயரி கமிட்டியும் " இப்பொழுது இந்த லாண்ட் ரெவின்யூ முறையை மாற்றியமைப்பது உசிதமல்ல என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகையால் இப்பொழுது நாம் இந்த லாண்ட் ரெவின்யூ முறையை மாற்றி ஒரு அடிப்படை வரியை, பேஸிக் டாக்ஸ், ஏற்படுத்தி நிலம் மூலமாக அக்ரிகல்சர் இன்கம்டாக்ஸ் என்ற முறையில் வரி போடலாம் என்று ஒரு சாரரின் உத்தேசம். முதன் முதலாக இந்த வெட்டுப் பிரேரணையை ஆரம்பித்தவர், அவர் வந்த பிராந்தியத்தில் அமலில் இருக்கிறது என்று எனக்குத் தெரியும். ஆனால் அங்கே இருக்கிற நிலவரங்கள் வேறு. இருந்தாலும் அதைப்பற்றியும் யோசிக்கும்

பார்த்ததில் அது இப்பொழுது இருக்கிற முறையை விட எந்த விதத்திலும் மேம்பட்டதாகாது என்பதுதான் அரசாங்கத்தின் அபிப்பிராயம். ஏனென்ருல், இப்பொழுது நமது ராஜ்யத்திலே சிறிய பட்டாதார்கள்தான் அதிகம். 1, 2, 5 ரூபாய் கிஸ்தி கட்டுகிறவர்கள் அதிகம் பேர்கள் இருக்கிருர்கள். பெரிய வரிகள் கொடுக்கிறவர்கள் குறைந்தபட்சம்தான். அதற்குப் புள்ளி விவரங்கள் கொடுக்கிறேன். அதாவது, பத்து ரூபாய்க்கு குறைவாக வரி கொடுக்கிறவர்களின் எண்ணிக்கை முப்பத்தொன்பது லட்சத்து நாற்பத்திமூவாயிரத்திச் சில்லரை. பத்து ரூபாய்க்கு மேல் 30 ரூபாயக்கு உள்பட வரி செலுத்துகிறவர்களின் எண்ணிக்கை, ஆறு லட்சத்தி தொண்ணுத்தைய்யாயிரம் சில்லரை. ஆக இந்த இரண்டு இனத்திலும் சேர்ந்து 46,39,000 சில்லரை பட்டாதாரர்கள் இருக்கிருர்கள். 100-க்கு மேல் வரி செலுத்துபவர்களின் எண்ணிக்கை 39,794 பட்டாதார்கள்தான். ஆகவே நாம் இப்போது ஒரு பேஸிக் டாக்ஸ் என்று ஒரு குறைந்த பட்ச அளவில் ஒரு வரியை வைத்துக்கொண்டு இந்த வருமான வரியை வைக்கவேண்டுமென்ருல், பெரிய பட்டாதாரர்களுக்குத்தான் போட முடியும். அவர்களின் வருமானத்தின் மேல்தான் வரிபோட நேரிடும். அப்படிப் போட்டால் அக்ரிகல்சர் இன்கம்டாக்ஸ், நூற்றுக்குமேல் வரி கொடுப்பவர்களுக்குத்தான் போட முடியும். அப்படியானுல் நமக்கு வருமானம் வராது. இப்பொழுது நில வரி சுமார் 6 கோடி வருகிறது. ஆகவே ஓரளவுக்கு இதை ஈடுகட்ட வழி தேட வேண்டும். அப்படிப் பார்த்தால் இந்த வருமான வரியால் நமக்கு ஆதாயம் அதிகப்படாது. இருக்கிற ஆதாயத்திற்கே பங்கம் ஏற்படும். அது மாத்திரமல்ல. நம்முடைய நாட்டில் இருக்கிற விவசாயிகள் அநேகமாக எழுத்தறிவு இல்லாதவர்கள். இம்மாதிரியான ஒரு வரி போட்டால் அவர்கள் கணக்கு வைக்க வேண்டி வரும். நகரத்தில் இருக்கிறவர்களே கணக்கு வைக்க கஷ்டமாயிருக்கிறது என்று சொல்லுகிருர்கள். கணக்கு வைக்கும் முறை கூடாதென்று எதிர்த்து அநேக அங்கத்தினர்கள் பேசியிருக்கிருர்கள். அப்படி இருக்கும்போது கிராமாந்திரத்தில் உள்ள விவசாயிகள் அவர்களுடைய வருமானத்தைப்பற்றி ஒரு கணக்கு வைத்து அதிலிருந்து வரி போடுவது என்ருல் அது சாத்தியமல்ல. எப்படி இன்கம்டாக்ஸ் அதிகாரிகள் வரி போடுவதை குறை கூறுகிருர்களோ அதேபோல் இங்கும் ஏற்படும். அப்படி ஏற்பட்டால் அப்போதுதான் அங்கத்தினர்களுக்கு இதில் கஷ்டம் இருக்கிறது என்று தெரியும். அதை முன்கூட்டியே அறிந்துதான் சொல்லுகிறேன்.

**Sri T. S. RAMASWAMI PILLAI**: கன்னியாகுமரி ஜில்லாவில் இப்பொழுது அக்ரிகல்சர் இன்கம்டாக்ஸ் இருக்கிறது. அரசாங்கம் அதைத் தொடர்ந்து நடத்திப்போக உத்தேசமா ? அல்லது அதை இங்கும் புகுத்த உத்தேசமா ?

**The Hon. Sri M. A. MANICKAVELU**: கன்னியாகுமரி ஜில்லாவைப் பற்றிய பிரச்னை சமீபகாலத்தில் ஏற்பட்ட பிரச்னையாகும். ஆகவே கொஞ்சம் கொஞ்சமாக அதைப் பரிசீலனை செய்து வேண்டியது செய்யப்படும். உடனடியாகத் தீர்த்துவிட முடியாது. அவைகளையெல்லாம் யோசித்துக் கொண்டுதான் வருகிருேம். ஆகையினுலே இந்த சந்தர்ப்பத்தில் இப்பொழுது இருக்கக்கூடிய முறையை தவிர்த்து வேறு புது மாதிரியான முறையைக் கைக்கொள்வதில் பிரயோசனமில்லை. மேலும் இரண்டு நிபுணர்கள் கமிட்டிகள் இதற்கு விரோதமாக யோசனை சொல்லியிருந்தார்கள். ஏற்கனவே நமது ராஜ்யத்திலே **Plantations Agricultural Income-tax** ஏற்படுத்தியிருக்கிருேம். அது இப்பொழுது எப்படி வேலை செய்கிறது என்று **experiment** செய்கிருேம். அதனுல் பாதகமா, சாதகமா என்பதையெல்லாம் பரிசீலனை செய்து கூடுமானுல் பின்பு கொண்டு வரலாம். தற்காலிகமாக இல்லை. தற்காலிகமாக இல்லையென்ருல் எப்பொழுதுமே இல்லை என்று அர்த்தமில்லை. யோசனை செய்து செய்யலாம். விவசாயிகளுக்கு இப்பொழுது எழுதப் படிக்கத் தெரியாவிட்டாலும் நாகரீகம் அதி வேகமாக வளர்ந்துகொண்டு போகக்கூடிய இந்தக் காலத்தில் கூடிய சீக்கிரம் விவசாயிகள் கணக்கு வைக்கத் தெரிந்துகொண்டு விடுவார்கள். அப்பொழுது இதைப்பற்றிப் பார்க்கலாம் என்பதுதான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.



புறம்போக்கு நிலங்களைப்பற்றி பிரமாதமாகப் பேசப்பட்டது. சுற்றுப பிரயாணம் செய்யும்பொழுது அநேக பகுதியில் நிலங்கள் பயிரிடப்படாமல் சும்மா இருப்பதைப் பார்க்கலாம். ஏன் இந்த நிலங்களை அரசாங்கம் சும்மா விட்டு வைத்திருக்கிறது ? இவைகளை நிலம் இல்லாதவர்களுக்கு பிரித்துக்கொடுக்கக்கூடாதா ? என்று தோன்றலாம். முதலில் எனக்குக் கூட அப்படித்தான் தோன்றியது. ஆனுல் இப்பொழுதுதான் விஷயங்களெல்லாம் தெரிந்தன. எப்படி இருக்கிறது என்ருல், புறம்போக்கு நிலங்கள் அநேக வகைகளாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. முக்கியமாக கால் நடைகளுக்காக **grazing** புறம்போக்கு நிலங்கள் இருக்கவேண்டியது அவசியம். மனிதர்கள் விவசாயம் செய்து உணவு சாப்பிடுவது எவ்வளவு அவசியமோ, அதுபோல கால்நடைகள் மேய்வதற்கு நிலங்கள் இருக்க வேண்டியது முக்கியம். அவைகளுக்கு மேய்வதற்கு நிலங்கள் இல்லாமல் இருந்தால் கால்நடைகள் உயிர் வாழமுடியாது. கால்நடைகள் உயிர் வாழ்ந்தால்தான் விவசாயம் செழிக்கும். இல்லாவிட்டால் பிரயோசனமில்லை. ஆகையால் கால்நடைகளுக்கு தேவையான நிலங்களை ஒதுக்கி வைக்கவேண்டும். தற்கால விதி பிரகாரம் ஒரு மாட்டுக்கு ஒரு ஏக்கர் நிலம் ஒதுக்கப்படவேண்டும். ஒரு பகுதியில் 100 மாடுகள் இருந்தால் 100 ஏக்கர் நிலம் ஒதுக்கப்படவேண்டும். அநேக இடங்களிலே விதிப்பிரகாரம் இல்லை. ஆகையால் **grazing lands**-ஐ குறைத்துவிட்டால் பிரயோஜனமில்லை. அடுத்தபடியாக புறம்போக்கு நிலங்கள் காட்டிலாகாவிற்கு வேண்டியிருக்கிறது. அதுவும் ஒரே இடத்தில் நெருக்கமாக எல்லா நிலத்தையும் கொடுத்துவிடமுடியாது. நடுவில் ஒரு " பெல்ட் " இருக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறது. ஏரி புறம்போக்கு நிலம் அதிகமாக இருக்கிறது. **tank-beds** விவசாயத்திற்கு கொடுக்கவேண்டுமென்று சொல்லிகிருர்கள். அந்த நிலத்தைக் கொடுத்து விட்டால் தண்ணீர் தேங்குவதற்கு இடமில்லை. அதனுல் ஆயக்கட்டு பாதிக்கப்படுகிறது. அதுமட்டுமல்ல. 'டாங்கிற்கு' எதிர் புறத்தில் (**fore-shore**) இருக்கிற நிலங்களையும் கொடுக்கவேண்டுமென்று சொல்லுகிருர்கள். அந்த நிலத்தை கொடுத்தால் உழுது சாகுபடி செய்தால் **foil loosen** ஆகி " ஸில்ட் " படிந்துவிடுகிறது. இப்பொழுது இருக்கக்கூடிய பெரிய பிரச்னை பழைய கண்மாய்கள், ஏரிகள், குளங்கள் எல்லாம் நிறைய தூர்ந்துபோய்விடுகிறது. "ஸில்ட்" எடுப்பது மிக மிக அவசியமாக இருக்கிறது. அப்பொழுதுதான் ஏரியில் போதுமான தண்ணீர் நிற்கும். சாதாரணமாக ஆறு, ஒன்பது மாதங்கள் தண்ணீர் நின்ற ஏரிகளிலெல்லாம் இப்பொழுது இரண்டு, மூன்று மாதங்களுக்குத் தான் தண்ணீர் நிற்கிறது. உதாரணமாக வட ஆற்காடு ஜில்லாவில் காவேரிப்பாக்கம் என்ற ஒரு பெரிய ஏரி இருக்கிறது. இப்பொழுது அதில் 12 அடி மண் தூர்ந்துபோய் இருக்கிறது. அதில் படிந்துள்ள "ஸில்டை" எடுப்பதற்கு ஒரு கோடி ரூபாய் ஆகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஒரு கோடி ரூபாயும் அரசாங்கம் செலவு செய்ய தயாராக இருக்கிறது. ஆனுல் பிரச்னை என்னவென்ருல், மண்ணை எடுத்து எங்கே போடுவது என்பதுதான். சுற்றிலும் நஞ்சை நிலம். அதிக தூரத்திற்கு மண்ணை எடுத்துச்செல்ல வேண்டுமென்ருல், ஒரு கோடி ரூபாய் என்பது மூன்று, நான்கு கோடி ரூபாய் ஆகும். ஆகவே அரசாங்கம் இதைப்பற்றி யோசனை செய்துகொண்டிருக்கிறது. 12 அடி " ஸில்ட் " எடுக்காவிட்டாலும், கொஞ்சமாவது எடுத்தால் ஓரளவுக்கு பிரயோசனமாக இருக்கும். இதைத் தவிர சிறிய ஏரிகளிலெல்லாம்கூட " ஸில்ட் " எடுக்கவேண்டுமென்பதற்காக தீவிரமாக வேலை செய்ய வேண்டுமென்று அரசாங்கம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எச்சரிக்கை விடுத்திருக்கிறது. இவ்விதமாக **tank-bed lands, communal lands, grazing lands** இவைகளெல்லாம் போக கொஞ்சம் நிலம் பாக்கி இருக்கிறது. இவைகள்தான் **assessed waste lands** என்று சொல்லப்படுகிறது. இந்த நிலங்களில் இரண்டு தரம் இருக்கிறது. ஒன்று **valuable** மற்ருென்று **non-valuable** சாதாரணமாக **non-valuable lands** ஹரிஜனங்களுக்கு மாத்திரம்தான் இலவசமாகக் கொடுக்கப்படுகிறது. மற்றவர்களுக்கு ஒரு மதிப்பு பணம் வாங்கிக்கொண்டு கொடுக்கப்படுகிறது. இது உடனடியாகக் கொடுக்கப்படவேண்டுமென்பதில்லை. 20, 30 தவணையில் கூட கொடுக்கிருர்கள். சென்ற இரண்டு, மூன்று வருஷங்களாக நிலம் இல்லாதவர்களுக்கு புறம்போக்கு நிலத்தை பகிர்ந்து கொடுக்கவேண்டுமென்பதற்காக தீவிரமாக வேலை செய்ய அதற்கென்று தனியாக ஒரு

தாசில்தார், டெப்யூடி தாசில்தார், மற்றும் சில சிப்பந்திகள் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இந்த வருஷம் வரையிலே சுமார் 78,525 ஏகரா நிலம் ஜாரி செய்யப்பட்டிருக்கிறது. பெருவாரியான நிலங்கள் ஜாரி செய்யப்பட்டது சேலம் ஜில்லாவில் ஆத்தூரில்தான். அங்கு 30,000 ஏகரா நிலம் ஜாரி செய்யப்பட்டிருக்கிறது. ஹோசூர் முதலிய இடங்களிலும் ஏற்னவே 20,000, 30,000 ஏகரா நிலம் ஜாரி செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் 20,000 ஏகர் ஜாரி செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே கூடுமானவரையில் அரசாங்கம் எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொண்டு கொடுக்கக்கூடிய புறம்போக்கு நிலங்களை நிலம் இல்லாதவர்களுக்கு விநியோகிப்பதற்கு ஏற்பாடு செய்துகொண்டுதான் இருக்கிறது என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

எனக்கு இப்பொழுது ஒரு விஷயம் ஞாபகம் வருகிறது. ஆத்தூரில் 30,000 ஏக்கர் நிலம் கொடுத்தோம். அவைகள் உடனே பயிர் செய்யப்படும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் பயிர் செய்யப்படவில்லை. நிலம் வாங்கிக் கொண்டவர்களுக்கு போதுமான பணவசதி இல்லாததால் உடனடியாக அவர்கள் நிலத்தை உழுது பயிர்செய்ய முடியவில்லை. அதற்காக அரசாங்கம் கடன் கொடுப்பதற்காக ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறது. எல்லாம் செய்துகூட அவர்கள் நல்ல முறையிலே சாகுபடி ஆரம்பிக்க முடியவில்லை.

அடுத்தபடியாக நில சீர்திருத்தத்தைப் பற்றி விவாதிக்கப்பட்டது. புலி, சிறுத்தை, கரடி வருகிறது என்றெல்லாம் பேசப்பட்டது. புலியும் வரவில்லை, கரடியும் வரவில்லை. நில சீர்திருத்தம் கொண்டுவருவதுதான் சர்க்காரின் அடிப்படை கொள்கை. ஏற்கெனவே நான் சொல்லியிருக்கிறேன். மந்திரி சபையின் ஒரு உப கமிட்டி நில சீர்திருத்தத்தை ஒரேயடியாக **Comprehensive Bill** கொண்டுவந்து தீர்த்துகட்டிவிடுவது என்று முடிவு செய்தது. ஆனால் அந்தமாதிரி ஒரு **Comprehensive Bill** கொண்டுவரும் சந்தர்ப்பத்திலே சட்ட முட்டுக்கட்டைகள் ஏற்பட்டன. அதற்காக நில சீர்திருத்தத்தை ஒரேயடியாகக் கொண்டுவராமல் பிரித்து பல பகுதிகளாகக் கொண்டுவருவதாக தீர்மானிக்கப்பட்டது. முதல் கட்டமாக நிலத்திலிருந்து விவசாயிகள் வெளியேற்றத்தை தடுப்பதற்காக சாகுபடியாளர் பாதுகாப்பு சட்டம் கொண்டுவரப்பட்டது. இரண்டாவதாக நியாய வார சட்டம் கொண்டுவரப்பட்டது. மூன்றுவது கட்டம்தான் பாக்கி. அதுவும் சீக்கிரத்திலே கொண்டுவருவதாக உத்தேசம். அதை உடனடியாகக் கொண்டுவராததற்குக் காரணம் ஒரு தனிப்பட்ட மனிதரிடம் உபரியாக இருக்கும் நிலத்தை எடுத்து மற்றவர்களுக்கு விநியோகம் செய்யமுடியாது சட்டப்படி. அந்த நிலங்களையெல்லாம் அரசாங்கம் எடுத்துக்கொண்டு, பிறகு சர்க்கார் மூலமாக மற்றவர்களுக்கு பிரித்துக் கொடுக்கவேண்டும். இதற்காக நிலச்சொந்தக்காரர்களுக்கு **compensation** கொடுக்கவேண்டும். இதில் சில தொந்தரவுகள் இருக்கின்றன. அப்பொழுது இருந்த முறையிலே அதிகப்படியாக **compensation** கொடுக்கவேண்டியதாக இருந்தது. இப்பொழுது அரசியல் சட்டத்தை திருத்தி பொதுக் காரியங்களுக்காக நிலம் விநியோகம் செய்யவேண்டுமானால் குறைந்தபட்ச **compensation** கொடுக்கலாம் என்று சட்டம் ஏற்பட்டிருக்கிறது. அதனால் அந்தக் கஷ்டமில்லை. இருக்கிற கஷ்டம் என்னவென்றால் ஒருவரிடம் இருக்கும் நிலத்தை உடனடியாக எடுத்து மற்றவர்களுக்குக் கொடுக்க முடியாது. முதலில் அவைகளை அரசாங்கம் எடுத்துக்கொண்டு பிறபாடு தான் மற்றவர்களுக்குக் கொடுக்க முடியும். அதற்குள்ளே சில சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. இந்தியா பூராவும் அந்தந்த ராஜ்யத்தில் இருக்கும் நிலைமைக்கேற்ப கூடியவரையில் ஓரளவுக்கு நில சீர்திருத்தம் ஒரே வகையில் (**uniformity**) செய்யப்படவேண்டும் என்று மத்திய சர்க்கார் சொல்லியிருக்கிறார்கள். இது விஷயமாக அவர்கள் ஒரு கமிட்டியும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இன்னும் இரண்டு, மூன்று மாதங்களில் அந்தக் கமிட்டியின் ரிபோர்ட்டு கிடைத்துவிடும். அதையும் ஆலோசனை செய்து நாம் பிறகு நிலச் சீர் திருத்தம் கொண்டுவரலாம். தேர்தல் முடிந்து பட்ஜெட் கூட்டம் இப்பொழுதுதான் நடைபெறுகிறது. இவ்வளவு நாளாய் பட்ஜெட் தயாரிப்பதில் அரசாங்கம் ஈடுபட்டிருந்தது. இப்படி இருக்கையில் தேர்தல் ஆன உடனே நிலச் சீர்திருத்தத்தை ஏன் உடனே கொண்டு வரக்கூடாது என்று சிலர் கேட்கிறார்கள் ?





அடுத்தபடியாக சட்ட சபை கூட்டம் வரப்போகிறது. அதற்குப்பிறகும் ஒரு "செஷன்" வரப்போகிறது. நாம் எல்லோரும் நிதானமாக இது விஷயமாக வாதம் செய்து தீர ஆலோசித்து தகுந்த நில சீர்திருத்தத்தை கொண்டுவரலாம். அவசரமில்லை. செய்கிற காரியத்தை நன்றாகச் செய்வோம். இல்லாவிட்டால் அவசரக் கோலம் அள்ளித் தெளித்தது போல் ஆகும். நான் என்ன சொல்லுகிறேன் என்றால் பொறுத்திருந்து எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய வகையில் ஒரு நல்ல மசோதா கொண்டுவரலாமென்று குறிப்பாக நம்முடைய நண்பர் சின்னதுரை அவர்களுக்கு சொல்லிக்கொள்ளுகிறேன்.

நியாய வாரச் சட்டத்தைப்பற்றி அநேக அங்கத்தினர்கள் என்ன என்னவோ குறிப்பிட்டார்கள். அநேகமாக 60 : 40 வாரத்தைப்பற்றிதான் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். அநேகமாக 60 : 40 வாரம் என்றும் 35 : 65 என்றும், 33–1/3:66–2/3 என்றும் பல விகிதங்கள் இருக்கின்றன. பம்பு செட்டு வைத்து தண்ணீர் இறைத்தால் ஒருவித வார விகிதம் இருக்கிறது. இந்தச் சட்டத்திலே சில குறைபாடுகள் இருப்பதாகச் சில அங்கத்தினர்கள் சொன்னார்கள். வாஸ்தவம். குறைபாடுகள் இருக்கும். சட்ட வழக்கறிஞர்கள் இருக்கிற வரையில், சட்டம் இருக்கிறவரையில், இம்மாதிரி இருக்கத்தான் செய்யும். சட்டம் என்று ஏற்பட்டால் அது எல்லாவிதத்திலும் perfect-ஆக இருக்க முடியாது. சட்டம் perfect-ஆக இருந்துவிடும் என்றால், மதராஸ் ஆக்ட் 44, மதராஸ் ஆக்ட் 54 என்றெல்லாம் ஏன் வரவேண்டும் ? சட்டம் இருந்தால் அதற்கு வியாக்கியானம் இருக்கிறது. அம்மாதிரி வகையில் சில குறைபாடுகள் இருக்கலாம்.

திருத்தச் சட்டம் கொண்டுவந்து குறைபாடுகளை நாம் போக்கிக் கொள்ளலாம். அதற்கான படி சட்டங்களை திருத்திக்கொள்ளலாம். ஆனால் இந்தச் சட்டத்தை நிறைவேற்றி இன்னும் ஒரு வருஷம் கூட ஆகவில்லை. குறைபாடு காணும்போதெல்லாம், உடனுக்குடனே திருத்த மசோதா கொண்டுவர முடியாது. எல்லாவற்றுக்குமாகச் சேர்ந்து ஒழுங்காக, மொத்தமாக ஒரு திருத்த மசோதா கொண்டுவர வேண்டுமே தவிர, ஒவ்வொன்றுக்கும் ஒரு திருத்த மசோதா கொண்டுவருவது சாத்தியம் இல்லை. ஒவ்வொரு மசோதாவையும் முதலில் இந்தச் சபையில் கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டும். இந்தச் சபைக்கு மேல் இன்னொரு சபை இருக்கிறது. அங்கும் இதை நிறைவேற்ற வேண்டும். இப்படியாக, தாமதம், கஷ்டம் எல்லாம் இருக்கிறது.

நிலவுடமைக்கு உயர்ந்த பட்ச வரம்பு நிர்ணயிக்க வேண்டுமென்று அநேக அங்கத்தினர்கள் சொன்னார்கள். **Comprehensive Legislation** கொண்டுவர வேண்டுமென்று யோசித்தபோதே இதைப்பற்றியெல்லாம் முடிவு செய்து வைத்திருக்கிறோம். ஆனால், அந்த முடிவு என்னவென்று இப்பொழுது சொல்வதற்கில்லை. அது ரகசியமாக இருக்கிறது. அது முடிவு செய்யப்பட்டிருக்கிறது. நான் முதலில் சொன்னதுபோல், இந்தக் கமிட்டியினுடைய ரிப்போர்ட் வந்ததும், இதையெல்லாம் யோசனை செய்து, நல்ல முறையிலே உயர்ந்தபட்ச வரம்பு (**ceiling**) கட்டாயம் ஏற்படும். அப்படிப்பட்ட சட்டம் வருவதற்குள்ளாகவே நிலத்தைப் பங்கிட்டுக்கொண்டு விடுகிறார்களே என்று சில அங்கத்தினர்கள் சொன்னார்கள். பிரிப்பதற்காகத்தானே மசோதா கொண்டுவரவேண்டுமென்று சொல்கிறார்கள். தானே பிரிந்து போகிறார்கள் என்றால், இன்னும் சல்லிசாகப் போய்விடும். அதைப்பற்றி பயப்படவேண்டியதில்லை.

என்னுடைய ஜில்லாவிலிருந்து இரண்டு அங்கத்தினர்கள் பேசினார்கள். "நியாய வாரச் சட்டமானது வடாற்காடு ஜில்லாவில் அமுலில் இருக்கிறதா, இல்லையா ? இது ரொம்ப ஆச்சரியமாக இருக்கிறது," என்று எதிரில் இருக்கும் ஒரு அங்கத்தினர் சொன்னார். அவர் இருக்கிற தொகுதி களம்பூர் தொகுதி. நியாய வாரச் சட்டம் வராததற்கு முன்னால், அதிக வாரம் கொடுக்கவேண்டும் என்று கிளர்ச்சி செய்தார்கள், கெடுபிடி செய்தார்கள். அவ்வளவெல்லாம் தெரிந்தவர்களுக்கு சட்டம் வந்தது தெரியவில்லை என்று சொன்னால், அது முழுப் பூசணிக்காயை இலைச் சோற்றில் மறைப்பதாகும்.

[6th July 1957

**SRI S. M. ANNAMALAI :** On a point of order, Sir, சட்டமன்றத் தலைவர் அவர்களே, ஒழுங்குப் பிரச்னை ஒன்று எழுப்ப விரும்புகிறேன். சட்டம் வந்ததே எனக்குத் தெரியவில்லை என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் அப்படிச் சொல்லவில்லை. சட்டம் வந்தது எனக்குத் தெரியும். அதனால் நஷ்டம் ஆகிறது விவசாயிகளுக்கு என்று தான் நான் சொன்னேன்.

**MR. SPEAKER :** The Hon. Minister will continue.

**THE HON. SRI M. A. MANICKAVELU :** : அவருக்கு என்ன தோன்றுகிறது என்றால், நியாய வாரச் சட்டம் வந்தும், அங்கு அதிகப் பலன் கிடைக்கவில்லையே என்று. தஞ்சை, திருச்சி ஜில்லா போன்ற இடங்களில், இந்தச் சட்டம் வருவதற்கு முன்னால் மிராசுதார்களுக்கு 60 முதல் 70 சத விகிதம் வரையில் வாரம் கிடைத்து வந்தது. ஆனால், விவசாயிக்கு 40, 35, 30 என்ற விகிதம் கிடைத்து வந்தது. அப்படியிருந்த சமயத்தில், நியாய வாரச் சட்டம் வந்தவுடன் ஒரேயடியாகத் தூக்கிவிட்டது. இருபத்தைந்து பர்சன்ட், 35 பர்சன்ட் என்று வாங்கிக்கொண்டிருந்த விவசாயிக்கு எல்லாம் 60 பர்சன்ட் வந்துவிட்டது. எழுபத்தைந்து பர்சன்ட் 65 பர்சன்ட் வாங்கிக் கொண்டிருந்த மிராசுதார்களுக்கு 40 பர்சன்ட் ஆகக் குறைந்து விட்டது. ஆகவே, அங்கு வித்தியாசம் ஜாஸ்தி.

போளூர் தொகுதி மெம்பர் என்ன நினைக்கிறார் என்றால், பத்து சத விகிதம் தானே நியாய வாரச்சட்டத்தின் மூலம் அதிகம் கிடைக்கிறது என்று. ஏற்கெனவேயே 50 பர்சன்ட் வாரம் கிடைத்து வந்தது. சட்டம் வந்ததும் 60 பர்சன்ட் கிடைக்கிறது. அவ்வளவு. தானே ? என்று நினைக்கிறார்கள். வட ஆற்காடு ஜில்லாவில் உள்ள விவசாயிகளுக்கு 10 பர்சன்ட் உயர்வாகக் கிடைக்கும்போது, தஞ்சை ஜில்லாபோன்ற இடங்களில் அதிகாமாகக் கிடைக்கிறதே என்று நினைத்தால், அவர்களுக்கு எத்தனை சதவிகிதம் முன்னைவிட உயர்ந்திருக்கிறதோ அந்த அளவு வடஆற்காடு ஜில்லாவில் இருப்பவர்களுக்கும் உயரவேண்டுமென்று நினைத்தால், மிராசுதார்கள் zero-தான் வாங்கிக் கொண்டு போகவேண்டும். அல்லது அவர்களுக்கு ஐந்து பர்சன்ட் தான் வரும். அது முறையாகாது. முன்பு ஏதோ மிராசுதார்கள் அதிகம் எடுத்துக்கொண்டிருந்தார்கள். இப்பொழுது அப்படி இல்லை. ஏற்கெனவே 50 : 50 என்று இருந்ததற்குப் பதிலாக இப்பொழுது 60 : 40 என்று விவசாயிகளுக்கு முன்னைவிட அதிகம் கிடைப்பதற்காகச் சட்டம் செய்யப்பட்டது. இதனால், விவசாயிகளுக்கு ஓரளவுக்கு அதிகமாகக் கிடைத்துவருகிறது.

வந்தவாசித் தொகுதி அங்கத்தினர் பேசும்போது, செய்யாறு அணைக்கட்டு விஷயமாக ஒன்றும் செய்யவில்லை என்று சொன்னார்கள். தூசி மாமந்தூர் செய்யார் அணைக்கட்டில் இருக்கிறது என்று ஞாபகம். 60 ஆயிரம், 65 ஆயிரம் ரூபாய் செலவு செய்து கால்வாயைச் சுத்தப்படுத்துவதற்காக ஏற்கெனவே தொகை " ஸாங்ஷன் " செய்யப்பட்டு, வேலை ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது என்று நான் நினைக்கின்றேன்.

கிராம உத்தியோகஸ்தர்களைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். அவர்களுடைய ஊதியத்தை நமது நிதி அமைச்சர் அவர்கள் இப்பொழுது சற்று உயர்த்தியிருப்பதினால், அங்கிருந்து வரும் சப்தம் குறைந்திருக்கிறது. இம்மாதிரி அவர்களுடைய ஊதியத்தை உயர்த்தியிருப்பதால், ஒரு வருஷத்திலே 30 லட்சம் ரூபாய் வரையில் சர்க்காருக்கு அதிகம் செலவாகிறது. கிராம அதிகாரிகளுக்கும் கிராம சிப்பந்திகளுக்கும் ரூ. 7, ரூ. 5, ரூ. 4 என்று ஊதிய உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவுதானே கொடுக்கப்பட்டது என்று அவர்கள் நினைக்கலாம். ஆனால் இதனால் சர்க்காருக்குச் செலவு ஏற்படுவது 30 லட்சம் ரூபாய் குறைவு என்று அவர்கள் கருதினாலும், சர்க்காருக்குச் செலவாகும் தொகை அதிகம். இப்பொழுது இருக்கக்கூடிய நிலைமையில் அவ்வளவுதான் முடியும்.

அவர்களுக்கு நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் ஒரு விஷயத்தை உணரவேண்டும். கிராம உத்தியோகஸ்தர்கள் தங்களை மற்ற முழு நேர உத்தியோகஸ்தர்கள் போல் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

அவர்கள் **Part time officers** தான். முழு நேர உத்தியோகஸ்தர்களை போல் சம்பளம் கோருகிருர்கள். ஆனல், தாங்கள் முழு நேர உத்தியோகஸ்தர்கள் அல்ல என்பதை மறந்துவிட்டு, மற்றவர்களைப்போல் அதிக சம்பளம் கோருகிருர்கள். அதுமாதிரி முழுநேர உத்தியோகஸ்தர்களாக இருக்கவேண்டுமென்ருல், அதிகப்படியாகக் கொடுப்பதில் யாதொரு ஆட்சேபனையும் இல்லை. எனக்குத் தெரிந்தவரை, அவர்கள் முழு நேர ஊழியர்களாக இருக்கப் பிரியப்படவில்லை. அவர்கள் **freedom** உடனும், **liberty** உடனும், யாதொரு கட்டுப்பாடும் இல்லாமல் இருக்கவேண்டுமென்று விரும்புகிருர்கள். முழு நேர ஊழியராக இருந்தால் ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கு மாற்றப்படுவார்கள். ஆனல், கிராம உத்தியோகஸ்தர்கள் அப்படி மாற்றப்படுவதில்லை. கிராம முன்சீப் தலைமுறை தலைமுறையாக ஒரே ஊரில் இருந்து வருகிருர். தகப்பன், பிள்ளை, பேரன் இப்படியாக அவர்கள் கிராம முன்சீப் வேலை பார்த்துவருவதோடு கூட, ஒரே ஊரிலேயும் இருந்துவருகிருர்கள். அவர்களை ஊர் ஊராக மாற்றப்படுவதில்லை. **Part-time** ஆபீசர்கள் என்ருல் இம்மாதிரி சௌகரியங்கள் எல்லாம் இருக்கின்றன. முழு நேர உத்தியோகஸ்தர்கள் என்ருல் அப்படி அல்ல. இன்றைக்கு கன்யாகுமரி ஜில்லாவில் இருந்தால், நாளைக்கு கோயம்பத்தூர் ஜில்லாவுக்கு மாற்றலாம் என்று இருக்கிறது. நான் அவர்களிடம் பழகியதிலிருந்து தெரிந்து கொண்டது என்னவென்ருல், அது எல்லாம் அப்படியே இருக்கட்டும்; சம்பளத்தை மாத்திரம் ஜாஸ்தி பண்ணுங்கள் என்பது தான். அவர்களில் பெரும்பாலோர் **Honorary Officer** களாக "**free**" ஆக இருக்கப் பிரியப்படுகிருர்கள். சிறுபான்மையோர்தான் முழுநேர உத்தியோகஸ்தர்களாக இருக்கவேண்டுமென்று விரும்புகின்ருர்கள். இப்பொழுதுதான் அவர்களுக்கு சம்பள உயர்வு ஏற்பட்டிருக்கிறது.

கிராம உத்தியோகஸ்தர்கள் ஜனங்களிடமிருந்து பெறுகின்ற தொகைக்கு ரசீது கொடுக்கவேண்டும் என்பதைப்பற்றி சில அங்கத்தினர்கள் சொன்னர்கள். அதைப்பற்றி முன்பே நான் சொல்லியிருக்கிறேன். **Triplicate** ரசீது புத்தகங்கள் அச்சடிக்க ஆர்டர் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த ரசீது புத்தகத்திலுள்ள மூன்று நகல்களில், முதல் நகல் வரி செலுத்தியவருக்கு கொடுக்கப்படும்; இரண்டாவதை கிராம முன்சீப் வைத்துக் கொள்வார்; மூன்ருவது நகலை கிராமக் கர்ணம் வைத்துக்கொள்வார். அச்சடித்த ரசீது கேட்கப்பட்டது; ஆனல் அச்சடித்த ரசீது கொடுப்பதோடு மட்டுமல்லாமல், கார்பன் முறையும் அனுஷ்டிக்கப்படுகிறது. ரசீது பாரங்கள் அச்சடித்து வருவதில் சற்று காலதாமதம் ஏற்படலாம். ஏனென்ருல் 50 ஆயிரம், 70 ஆயிரம் புத்தகங்களுக்கு மேல் அச்சடிக்க வேண்டியிருக்கிறது கேட்கலாம், என் இதையெல்லாம் முன்னே செய்திருக்கக்கூடாது என்று. தேர்தல் வந்திருக்காவிட்டால், இவைகளெல்லாவற்றையும் அச்சடித்திருக்கலாம். தேர்தல்கள் சம்பந்தமான அச்சுவேலைகள் ஜாஸ்தியாக இருந்தது, அச்சகத்திலே. ஆக, இப்படியாக, தேர்தல் சம்பந்தமான அச்சு வேலை ஜாஸ்தியாக இருந்ததால், அச்சிட்ட ரசீதுகள் வழங்குவதில் ஒரு முட்டுக்கட்டையான நிலை ஏற்பட்டது. அச்சிட்ட ரசீது தான் கேட்டார்கள். நாங்கள் ஒரு படி மேலே போய், கார்பன் லிஸ்டத்திற்கு ஏற்பாடு செய்து வருகிருேம்.

"**Disciplinary action**" ஐப்பற்றி பேசப்பட்டது. அது எல்லாம் ஒன்றும் இருக்காது, என்று நான் நினைக்கிறேன். அதையெல்லாம் வாபஸ் வாங்கி விட்டார்கள். சம்பளம் அதிகம் வேண்டும் என்பதற்காக கிளர்ச்சி செய்தது, ஆகியவற்றுக்காக "**Disciplinary action**" எடுத்துக்கொண்டதைதான் வாபஸ் வாங்கியிருக்கிருேமே தவிர, மற்ற "**Disciplinary action**" ஏதாவது இருந்தால், அது வேறு சமாசாரம். அது தனிப்பட்டது. ஏதோ "**Disciplinary action**"-ஐ வாபஸ் வாங்கிவிட்டார்கள் என்று சாக்குச் சொல்லி எல்லா "**Disciplinary action**"-ஐயும் வாபஸ் வாங்கிவிடவேண்டுமென்று கேட்டால், அது முடியாது. ஆகவே அதிக ஊதியம் வேண்டும் என்பதற்காக கிளர்ச்சி செய்ததன்பேரில் "**Disciplinary action**" எதுவும் இருக்காது என்று நான் நினைக்கிறேன்.

[Sri M. A. Manickavelu] [6th July 1957

கடன் கொடுப்பதிலே, ஷோத்திரியம், இனும் நிலம் சம்பந்தப்பட்ட வரையில் தொந்தரவு இருக்கிறது. அப்படிப்பட்ட நிலங்களின் பேரில் கடன் கொடுப்பதற்காக விதிகளை எவ்வளவு தளர்த்த முடியுமோ அவ்வளவோ தளர்த்தியிருக்கிறோம். அதாவது, நில செக்யூரிடி இல்லையென்றால், "பர்ஸனல் செக்யூரிடி"யின் பேரில் கடன் கொடுக்கலாம் என்றும் செய் திருக்கிறோம். நிலம் "சர்வே" ஆகாததன் காரணமாக, நிலத்தை செக் யூரிடியாக ஏற்றுக்கொள்வதற்கு முடியாமலிருக்கிறது. இருந்தாலும், சர்வே ஆகாவிட்டாலும், Rough and Ready Survey என்ற முறையில் குத்து மதிப்பாக, தோராயமாக "சர்வே" ஆனாலும் அப்படிப்பட்ட நிலங்களின் பேரில் கடன் கொடுக்கலாம் என்று ஏற்பாடு செய்திருக்கிறோம். அதனால், இப்பொழுது நிர்ப்பந்தம் கொஞ்சம் குறைந்திருக்கிறது என்று நான் நினைக்கிறேன்.

அடுத்தபடியாக, ஜில்லாக்கள் புனரமைப்பு Reorganization of Districts ஏற்படவேண்டுமென்று, அதாவது ஜில்லாக்களின் எல்லைகளைத் திருத்தி யமைக்கவேண்டுமென்று கனம் எதிர்க்கட்சித் தலைவர் தாராளமாகச் சொல்லிவிட்டார். ஒரு ஜில்லாவை இரண்டு மூன்று ஜில்லாக்களாகப் பிரிக்கவேண்டுமென்று சொன்னால், என்ன ஆகிறது. ஒவ்வொரு ஜில்லா வுக்கும் ஒவ்வொரு கலெக்டர், இன்னும் இதர அதிகாரிகளை நியமிக்க வேண்டும். பணத்திற்கு எங்கே போவது. அதற்காகப் பணம் அவர் "வோட்" செய்வாரா என்று நான் கேட்கிறேன்.

இப்போது நிர்வாகம் அதிக விரிவாக போய்விட்டது. தாலூகா jurisdiction-க்கு headquarters தாசில்தார் ஏற்படுத்தப் பட்டது. முன்பு எல்லாம் 50 அல்லது 100 பெடிஷன்கள் வந்த இடத்தில் இப்போது ஆயிரக்கணக்கில் வருகிறது. மந்திரிகளுக்கும் அதே மாதிரி அநேக பெடிஷன்கள் வருகின்றன. ஜேபி போரவில்லை. போகும் வழிகள் எல்லாம் கொடுக்கும் போதும் வாங்கிக் கொள்கிறோம். பெடி ஷன்கள் அதிகமாய் விட்டன. போடும் பெடிஷன்களுக்கு பதில் இல்லை என்று சொன்னார்கள். கூடுமானவரையில் பதில் அனுப்புகிறோம். அதிக மாகிவிட்டால் முடியவில்லை. இதில் முக்கியம் முக்கியமில்லாதது என்று பார்க்கவேண்டும். இப்போது எல்லாம் கலந்து ஒரே கும்பலாக போய்விடு கிறது. முக்கியமானதை ஜாக்கிரதையாக பார்க்க வேண்டும்.

இப்போது ஜில்லாக்களைப் பொறுத்தமட்டில் ஒவ்வொரு ஜில்லாவும் 25 லட்சம் ஜனத்தொகை உடையதாக இருக்கிறது. சேலம் 33 லட்சம், கோயம்பத்தூர் 31 லட்சம், வட ஆற்காடு 28 லட்சம். குறைவாக இருக்கிற ஜில்லா கன்னியாகுமரி, 8 லட்சத்தி சில்லரை. செங்கல்பட்டு 18 லட்சம், ராமனாதபுரம் 20 லட்சம். மற்றது எல்லாம் 25 அல்லது 28 லட்சத்துக்கு மேல். இப்போது ராஜ்ய புனரமைப்பு தீர்ந்து போய்விட்டது. இப்போது ஜில்லா புனரமைப்பு கட்டத்தில் இருக்கிறோம். இதற்காக ஒரு மந்திரிகள் கமிட்டி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. எந்த வகையில் எப்படி எப்படி செய்தால் சரியாக வேலையானது நடக்குமோ அந்த வகையில் ஏற்பாடுசெய்யப்போகி றோம். எப்படி ராஜ்ய புனரமைப்பு சமையத்தில் ஒரு பகுதி இன்னொரு பகுதி யில் சேர்த்தபோது, சிலருக்கு கஷ்டம் ஏற்பட்டதோ அதேமாதிரி இந்த ஜில்லா புனரமைப்பு விஷயத்திலும் ஏற்படலாம். ஒரு பகுதியை மற்றொரு பகுதி யுடன் சேர்க்கும் போது ஒரு கிளர்ச்சி ஏற்படலாம். நாங்கள் வருஷம் வருஷமாக இங்கு இருந்தோம் அங்கு சேர்கிறார்களே என்று. எது நியாயமாக எப்படி எப்படி திருத்தி அமைக்க வேண்டுமோ அப்படி அமைக்கபோகிறோம். இப்போது ஜில்லா jurisdiction பெரிதாக இருக்கிறது. பனைமர வரி.

**MR. SPEAKER** : May I remind the Hon. Minister that I have to put the Demand to vote on the expiry of four hours? Granting that the discussion on the Demand started at 10, I should put it to vote at 2 o'clock. I should like the Hon. Minister to finish his speech before two minutes to 2.

**The Hon. Sri M. A. MANICKAVELU:** Very good, Sir, I will hurry up.

பீனமா வரிக்கு பதில் பழைய வரி இருந்ததை வைத்திருக்கிறோம். குறைவாக இருந்ததை போட்டிருக்கிறோம். ராமனுதபுரத்திலே அடிப் படை வரி அதிகமாகி இருந்தது. அதனுல் பீனா வரியை எடுத்தாகி விட்டது.

அடுத்தபடியாக **hill allowance** கம்பளி கொடுக்க உத்தரவாகி இருக்கிறது. ஒரு கம்பளியும் ஒரு கோட்டும் கிடைக்கும். நாசரத்து விஷயம் சொன்னார்கள். அது கோர்ட்டில் இருப்பதால் ஒன்றும் சொல்லுவதற்கில்லை. அதோடு அவகாசமும் இல்லை. படி சீக்கிரம் கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். அதற்கு நடவடிக்கை எடுக் கப்படும்.

கல்லுப்பட்டியில் 22 ஏக்கர் ஆக்கிரமித்து இருந்தார்கள். இப்போது 23 ஏக்கர் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

**Well subsidy** இந்த வேலையெல்லாம் குறித்த காலத்தில் முடிக்கவேண்டும். அதற்கு 1956 மார்ச் வரை தவணை கொடுக்கப்பட்டது. அப்போதும் முடிக்கவில்லை. இந்த வருஷம் செப்டம்பர் வரை தவணை கேட்டோம். சமீபத்தில்தான் உத்தரவு வந்தது. 1958 பிப்ரவரியீ வரை கேட்டிருக்கிறோம். அதற்குள் தீர்க்கப்படாது பணத்தை சாப்பிட்டவர் களுக்கு ஒன்றும் செய்ய முடியாது. பணத்தை வசூல் பண்ணிதான் தீரவேண்டும்.

கனம் அங்கத்தினர் ஒருவர் சர்வே பற்றி குறிப்பிட்டார். சர்வே ஒரு வருஷத்துக்குள் முடிந்துவிடும். எல்லா செட்டில்மெண்டும், 1960 அல்லது 1961-ல் முடிந்துவிடும். அப்படி எவையெல்லாம் ரயத்துவாரி நிலம், பிரைவேட் நிலம் எல்லாம் ஜமீன் காலத்தில் இஷ்டப்பிரகாரம் கொடுக்கப் பட்டது. இப்போது எஸ்டேட் அபாலிஷன் ஆக்ட் பிரகாரம் உத்தியோகஸ் தர்கள் செய்யவேண்டும். "ரயத்" நிலத்தை "ரயட்டுக்கு" கொடுக்க வேண்டும். தவருக செய்தால் அங்கே இருக்க முடியாது. இப்படி பரிசீலனை பண்ணி செய்வதில் சிலருக்கு இடைஞ்சல் வருகிறது; அனேக வருஷம் அனுபவித்து வந்ததால் சட்டம் இடம் கொடுக்கும் வரை அதிக கஷ்டம் ஏற்படாமல் செய்ய முடியுமே தவிர, சட்டத்துக்கு விரோதமாக என்றும் செய்ய முடியாது. இனி பேசினுல் சபாநாயகர் பெல் அடிப்பார். இன்னும் ஏதாவது விட்டு போய்விட்டிருந்தால் கூடுமான வரையில் பார்த்து செய்கிறேன்.

கடைசியாக இவ்வளவு விரிவாக எல்லா விஷயங்களையும் சொன்னதால் அந்த **cut motion**-யை வாபஸ் வாங்கிகொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**Sri K. SATTANATHA KARAYALAR:** Sir, with the permission of the House, I may be permitted to move the second Cut Motion also.

**Mr. SPEAKER:** The hon. Member has moved the first Cut Motion. He cannot move another now. Is he withdrawing the Cut Motion?

**Sri K. SATTANATHA KARAYALAR:** No, Sir.

**Sri V. K. KOTHANDARAMAN:** On a point of order, Sir, இப்போது எந்த **cut motion**-ல் ஓட்டு எடுக்கப் போகிறது. கனம் அங்கத்தினர் கரையாளர் **move** பண்ணியிருக்கிற cut motion-வா, அல்லது எல்லாரும் **move** பண்ணியிருக்கிறவைகளையா?

MR. SPEAKER : எல்லா cut motion-யும் எடுத்து கொள்ள முடியாது. எதிர் கட்சிகள் எல்லாம் சேர்ந்து ஒரு cut motion-ஐ தான் move செய்ய வேண்டும். அந்த cut motion-ஐ தான் ஓட்டுக்கு விடப்படும். இப்போது பாக்கி motion-களை move கூட செய்ய வில்லை. அதனால் ஓட்டு எடுக்க முடியாது.

Sri K. Sattanatha Karayalar and Sri M. Annamalai rose.

MR. SPEAKER : I don't allow any further discussion in the matter.

The question is—

'That the allotment of Rs. 96,95,600 under Demand No. I—Land Revenue Department—be reduced by Rs. 100.'

The motion was put and lost.

MR. SPEAKER : I now put the original motion to the vote of the House. The question is :

That the Government be granted a sum not exceeding Rs. 96,95,600 under Demand No. I—Land Revenue Department.

The Demand was put and carried and the Grant was made.

MR. SPEAKER : I want to say one thing now. I should like all the leaders of parties from Monday onwards to meet together and tell me which particular motion they are going to move. Then we shall have that motion moved for all practical purposes. Members who have given notice of other cut motions will be given preference in speaking over those who have not.

The House will now adjourn till Monday when Demand VII—General Sales Tax and other Taxes and Duties Administration will be taken up.

The House will now adjourn and meet again at 9 a.m. on Monday, the 8th July 1957.

The House then adjourned.



## III.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

110. *Notification issued with G.O. Ms. No. 1190, Home, date 1st May 1957, exempting Jeep No. 61848 belonging to th American Embassy at New Delhi (Technical Co-operatio Mission) from payment of the tax leviable under the Madras Moto Vehicles Taxation Act, 1931. [Laid on the table of the Hous under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act 1931 (Madras Act III of 1931).]*

111. *Notification issued with G.O. Ms. No. 767, L.A., date 11th May 1957, amending the rules for the conduct of election of members and presidents of panchayats in Madurai taluk o Madurai district.*

112. *Short review of the activities of the Boiler Departmen for the half-year 1956–57. (For the period from 1st April to 30th September 1956.)*

113. *Notification issued with G.O. Ms. No. 1174, Home, date 29th April 1957, exempting from payment of the tax leviable under section 11 of the Travancore-Cochin Vehicles Taxation Act, 1950, all transport vehicles as defined in the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939) except Motor Vehicles of the description given in clauses (c) and (d) of sub-item (ii) of item 4 of Schedule I of the Travancore-Cochin Vehicles Taxation Act, 1950, which were operating on routes common to the State of Kerala and to Kanyakumari district of Shencottah taluk in Madras State. [Laid on the table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931. (Madras Act III of 1931).]*

114. *Notification issued with G.O. Ms. No. 1603, Revenue, dated 11th April 1957, authorizing the Personal Assistant (not below the rank of Deputy Collector) to the Collectors of the districts to exercise and perform all the powers and duties conferred on the District Collectors under section 5 of the Madras Land Revenue (Surcharge) Act, 1954 (Madras Act XIX of 1954). [Laid on the table of the House under section 5 of the Madras District Collectors' Powers (Delegation) Act, 1956.]*

115. *White Paper on Lignite Project, Neiveli.*

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

## Monday, 8th July 1957.

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

### I.—QUESTIONS AND ANSWERS.

### STARRED QUESTIONS.

*Betting on horse races.*

* 73 *Q.*—SRI N. K. PALANISAMI AND SRI M. JAGANNATHAN: Will the Hon. the Minister for Home be pleased to state when the Government are going to abolish the betting on horse races in this State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: As the hon. Members are aware, the Government have already passed legislation to abolish betting on horse races in this State. The question as to when it should be given effect to will be taken up for consideration by the Government early in 1958.

SRI K. ANBAZHAGAN: இத்தகைய குதிரைப் பந்தயத்தை ஒழிப்பது, காங்கிரஸ் தலைவராக விளங்கிய உத்தமர் காந்தியடிகளின் சிறந்த நோக்கமாக இருந்தபோதிலும், காங்கிரஸ் அரசாங்கம் பல ஆண்டுகளாகவே இதை ஒழிக்காமல் கடத்திவருவதன் நோக்கம் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: குதிரைப் பந்தயத்தை ஒழிக்க வேண்டும் என்று காந்தியடிகள் கூட கருதியதாக நான் நினைக்கவில்லை. குதிரைப் பந்தயத்திலுள்ள "பெட்டிங்" ஒழிக்கப்பட வேண்டும் என்று தான் பலர் வற்புறுத்தி வருகிறார்கள். ஆனால் பெட்டிங் இல்லாமல் குதிரைப் பந்தயம் நடத்துவது சாத்தியமில்லை என்றும் இன்று புலப்படுகிறது. இந்த விஷயமாக, 1949-ம் ஆண்டில் இந்த சட்டசபையில் ஒரு சட்டம் இயற்றப்பட்டது. குதிரைப்பந்தயத்தில் பெட்டிங்கைத் தவிர்க்கக்கூடிய வகையில், அதற்கு முன்பிருந்த சட்டம் திருத்தியமைக்கப்பட்டது. ஆனால் அந்தச் சட்டம் எப்போது அமலுக்கு வர வேண்டும் என்பதைப் பற்றி அரசாங்கம் முடிவு செய்யவேண்டுமென்று அந்தச் சட்டத்தில் காணப்பட்டிருந்தது. அதற்குப் பிறகு, இரண்டு, மூன்று முறை இந்த விஷயத்தை கவனித்து அந்தச் சட்டத்தை அமலுக்குக் கொண்டு வருவது பற்றி அரசாங்கம் யோசித்தது. ஆனால், அவ்வாறு யோசிக்கையில், "பெட்டிங் இல்லாமல் குதிரைப் பந்தயம் நடத்துவது சாத்தியமில்லை. குதிரைப் பந்தயமே குதிரை வளர்ப்புக்குப் பெரிதும் உதவியாக இருக்கிறது. குதிரை வளர்ச்சி தேசீயத் தேவை. சில சைனியங்களுக்கு குதிரைகள் வேண்டியிருக்கின்றன. குதிரைப்பந்தய ஸ்தாபனங்கள் இருப்பதால்தான் கோடிக் கணக்கான ரூபாய்கள் செலவழிக்கப்பட்டு குதிரைகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. குதிரைப் பந்தயம் தவிர்க்கப்பட்டுவிட்டால், அதற்குப் பிறகு குதிரை வளர்ப்பு நின்றுபோய்விடும். ஆகவே இந்தச் சட்டத்தை அமல் நடத்தும் விஷயத்தை ஐந்து ஆண்டுகளுக்கு (அதாவது 1958 வரையில்) தள்ளிப் போட்டுவிட்டு 1958-ல் முடிவு செய்ய வேண்டும்" என்று தீர்மானிக்கப்பட்டது. அதைப்பற்றித்தான் முந்தைய பதிலில் குறிப்பிட்டேன்.

SRI A. A. RASHEED : Is it a fact that breeding of horses [8th July 1957 might be affected on the abolition of horse races?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : That is exactly what I said in Tamil.

SRI K. SATTANATHA KARAYALAR : குதிரைப் பந்தயத்தில் தற் சமயம் ஓடும் குதிரைகளில் எத்தனை சதவிகிதம் நம் நாட்டில் வளர்க்கப்பட்ட குதிரைகள் என்றும், எத்தனை சத விகிதம் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதியான குதிரைகள் என்றும் சொல்ல முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றிய தகவல் என்னிடம் இல்லை. அனேகமாக அவைகள் நம் நாட்டில் வளர்க்கப்பட்ட குதிரைகள்தான்.

SRI K. ANBAZHAGAN : குதிரைப் பந்தயத்தை வளர்ப்பதன் மூலமாக குதிரைகள் வளர்க்கப்படுகின்றன என்று கூறும் இந்த அரசாங்கம் குதிரைப் பந்தயத்தை வளர்ப்பதன் மூலமாக சூதாட்டமும் வளர்க்கப்படுகிறது என் பதை உணர வேண்டும். அதை இந்த அரசாங்கம் உணருமேயானால், நாட்டில் சூதாட்டம் ஒழிக்கப்படுவது இன்றியமையாததா அல்லது குதிரை கள் வளர்க்கப்படுவது இன்றியமையாததா என்பதைத் தீர்மானித்து குதிரை கள் வளர்க்கப்படுவதற்கு வேறு வழி இல்லையா என்று அரசாங்கம் ஆராய்ந்து குதிரைப் பந்தயத்தை ஒழித்துவிட்டு, குதிரைகளை வளர்ப் பவர்களுக்கு " ஸப்ஸிடி " கொடுத்து குதிரைகளை வளர்க்க இந்த அரசாங் கம் உடனடியாகத் திட்டமிடுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சூதாட்டம் அடியோடு தவிர்க்கப்படவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் கருத்து. அதனால் தான் அரசாங்கம் நான் முன்பு குறிப்பிட்ட சட்டத்தை இயற்றியிருக்கிறது. ஆனாலும் நான் முன்பு கோரியது போல், சூதாட்டம் இல்லாமல் குதிரைப் பந்தயம் நடத்த முடியாது என்ற நிலைமையும் இருக்கிறது. குதிரைப் பந்த யத்தின் மூலம்தான் குதிரைகள் வளர்க்கப்படக் கூடும் என்றும் புலப்படு கிறது. ஆகவே இரண்டுக்கும் மத்தியமமாக, அந்தச் சட்டத்தை அமல் நடத்தும் விஷயத்தை கொஞ்ச காலம் ஒத்திவைத்துவிட்டு பிறகு எடுத்துக் கொள்ளலாம் என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

SRI S. LAZAR : குதிரைப் பந்தயம் மனிதர்களின் வாழ்க்கையில் ஒரு சிலருக்கு இன்பம் தரும் பொழுதுபோக்காக இருந்துவருவதால், குதிரைப் பந்தய ஒழிப்பு சட்டமாக்கப்படுவது தனி மனிதனின் அடிப்படை உரிமையை பாதிக்கக்கூடிய காரியம் என்று கருதி, அந்தச் சட்டத்தை, அமலுக்குக் கொண்டுவராமல் இருப்பதற்கான நடவடிக்கையை அரசாங்கம் எடுக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் முன்பே கூறியது போல் அரசாங்கம் முன்பே சட்டசபையில் சட்டமியற்றிருக்கிறது. அந்தச் சட்டத்தை ரத்துசெய்யும் நோக்கம் அரசாங்கத்திற்கு இல்லை. ஆனால் அந்தச் சட்டத்தை எப்போது அமலுக்குக் கொண்டுவர வேண்டும் என் பதைப் பற்றிதான் அரசாங்கம் யோசிக்க வேண்டியிருக்கிறது.

SRI M. P. SUBRAMANYAM : 1953-ம் ஆண்டிலிருந்து ஐந்தாண்டு காலம் கழிந்த பிறகு (அதாவது 1958-ல்) குதிரைப் பந்தயத்தைத் தடுப் பதற்கான சட்டத்தை அமல் நடத்துவது பற்றி யோசிக்கலாம் என்று கனம் அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். இந்த ஐந்தாண்டு காலத்தில் குதிரை வளர்ப்பதில் எந்த விதத்திலாவது மாற்றம் ஏற்படும் என்று கனம் அமைச்சர் அவர்கள் நினைக்கிறார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த ஐந்தாண்டு காலத் தில் குதிரை வளர்ப்பு பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்பட்டால், அதற்குப் பிறகு இந்தச் சட்டத்தை அமல் நடத்தும் விஷயத்தை எடுத்துக்கொள்ளலாம் என்று அரசாங்கம் அபிப்பிராயப்படுகிறது.



8th July 1957]

SRI A. A. RASHEED : What is the total income from the betting on horses?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : That varies from year to year. I do not have the figures with me just now.

SRI V. K. KOTHANDARAMAN : குதிரைப் பந்தயத்தை எடுத்து விட்டால் குதிரைகள் பாதுகாக்கப்படமாட்டா என்று நினைக்கும் இந்த சர்க்கார் மதுவிலக்கை கொண்டுவந்திருப்பதன் காரணமாக தென்னை மரங்கள் வளர்க்கப்படுவது பாதிக்கப்படும் என்று நினைக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கள் இறக்குவதனால்தான் தென்னைமரம் பாதிக்கப்படுகிறது. கள் இறக்குவதை நிறுத்திவிட்டால், தென்னைமரங்கள் இன்னும் செழிப்பாக வளரும் என்பது சர்க்காரின் உறுதியான அபிப்பிராயம். (பலத்த ஆரவாரம்.)

SRI T. S. RAMASWAMY PILLAI : சட்டசபையில் பல வருஷங் களுக்கு முன்பே இயற்றப்பட்ட சட்டத்தை இத்தனை வருஷங்களுக்குப் பிறகும் இந்த அரசாங்கம் அமலுக்குக் கொண்டுவராதது, அரசாங்க நியதிக்கு விரோதமானது என்றும், அப்படிச் செய்வதை நீடிப்பது ஜன நாயகத்திற்கே விரோதமானது என்றும் இந்த அரசாங்கம் கருதவில்லையா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எந்த சட்டசபை அந்தச் சட்டத்தை நிறைவேற்றியதோ அந்த சட்டசபையே, அரசாங்கம் எப்போது அந்தச் சட்டத்தை அமலுக்குக் கொண்டுவரவேண்டும் என்று கருதுகிறதோ அப்போது அமலுக்குக் கொண்டுவருவதற்கு அரசாங்கத்திற்கு அதிகார மும் கொடுத்திருக்கிறது. ஆகையால் இதில் ஜனநாயகத்திற்கோ அர சாங்கத்திற்கோ விரோதமானது எதுவும் இல்லை.

SRI K. ANBAZHAGAN : இந்தக்காலத்தில் குதிரைகளை வளர்ப்பதற் காவது குதிரைப் பந்தயத்தை நடத்தியாக வேண்டும் என்றுகூறும் இந்த அரசாங்கத்தாருக்கு, சாதாரணமாக, எத்தனையோ ஏழை மக்கள் குதிரைப் பந்தயத்தில் ஈடுபட்டு அதிலே பணத்தையெல்லாம் இழந்து தற்கொலை செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதும், எத்தனையோ ஏழைகள் சொத்தை யெல்லாம் இழந்து அவல நிலையில் இருக்கிறார்கள் என்பதும் தெரியுமா ? அது தெரிந்திருக்குமானால் இந்த அரசாங்கம் குதிரையைவிட மனிதனை மேலாகக் கருதுகிறதா, அல்லது மனிதனை விட குதிரையை மேலாகக் கருதுகிறதா ? என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அரசாங்கம் மனிதனை விடக் குதிரையை மேலாகக் கருதவில்லை ; குதிரை மனிதனுக்கு வேண்டிய ஒரு கருவி என்றுதான் கருதுகிறது. இதனால்தான் இப்போது ரொம்ப ஏழையாக இருப்பவர்கள் குதிரைப் பந்தயத்திற்குப் போகமுடியாதபடி செய்திருக்கிறோம். அதாவது, குதிரைப் பந்தய மைதானத்தில் முதல் இரண்டு வேலிகளை (என்குளோஷர்) எடுத்துவிட்டோம். இப்போது குறைந் தது 5 ரூபாய் கொடுத்துச் செல்ல வேண்டும். கொஞ்சம் சௌகரியமாக இருப்பவர்கள் " லிக்கர் பெர்மிட் "-ஐ பெற்று மது அருந்துவது போல், கொஞ்சம் பண வசதியுள்ளவர்கள்தான் இப்போது குதிரைப் பந்தயத்திற்கு போக முடியும். ஆகவே ஏழைகள் குதிரைப் பந்தயத்திற்குப் போவதைத் தடுக்கக்கூடிய வகையில் குதிரைப் பந்தயம் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது.

SRI S. LAZAR : குதிரைப் பந்தயங்கள் நடத்தப்படுவதால் பல மக்களுடைய நலன்கள் பாதிக்கப்படுகின்றன என்பதற்காக குதிரைப் பந்த யங்களை சட்டமூலமாகத் தடுத்தால், தனிப்பட்ட மனிதர்களுடைய அடிப்படை உரிமை பாதிக்கப்படக்கூடும். ஆகவே குதிரைப் பந்தயத்தை சூதாட்டம் என்று சொல்பவர்கள் அதை சட்டரூபமாகத் தடுக்க வேண்டும் என்று நினைப்பதற்கு பதிலாக, தனிப்பட்ட மனிதர்களை அணுகி அவர்களிடம் குதி ரைப் பந்தயத்திலுள்ள கெடுதல்களை உணர்த்துவதற்கான பிரசாரத்தை நடத்துவார்களா என்று அறிய ஆசைப்படுகிறேன்.

[8th July 1957

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த விஷயத்தில் வெறும் பிரசாரம் செய்வதில் பயனில்லை என்பதுதான் அரசாங்கத்தின் கருத்து.

SRI K. R. NALLASIVAM : குதிரைப் பந்தயத்தின் மூலமாக குதிரை வளர்ப்பு சாத்தியமாகிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியே கால்நடை வளர்ப்பு நல்ல முறையில் நடப்பதற்காக கோழிச் சண்டைப் பந்தயம், மாட்டுப் பந்தயம் போன்ற இதர கால்நடைப் பந்தயங்களையும் நடத்த சர்க்கார் தயாராய் இருக்கிறார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கால்நடை வளர்ச்சிக்கு இம்மாதிரி பந்தயங்களை நடத்தவேண்டிய அவசியம் இல்லை என்பது சர்க்காருக்கு நன்றாகப் புலப்படுகிறது. மேலும், இப்போது கால்நடைக் கண்காட்சிகள் நடைபெறுகின்றன. உயர்ந்த ரகங்களுக்குப் பரிசுகள் அளிக்கப்படுகின்றன இவைகளே கால்நடை வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கப் போதுமானது.

SRI A. V. P. ASAITHAMBI : கால்நடையின் வளர்ச்சிக்கு கண்காட்சி, உயர்ந்த ரகங்களுக்குப் பரிசு முதலியவை போதுமானது என்று கருதுகிற சர்க்கார் குதிரை வளர்ச்சிக்கும் கண் காட்சி, பரிசு முதலிய திட்டங்களை ஏற்படுத்திவிட்டு குதிரைப் பந்தயத்தை ஒழித்துவிடக் கூடாதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : குதிரை வளர்ச்சி, கால்நடை வ்ளர்ச்சியைப் போன்றது இல்லை. குதிரை விலை அதிகம். ஆகவே, வெறும் கண்காட்சிகளையோ, பரிசுகளையோ வைத்துவிட்டால் குதிரை வளர்ப்பு சாத்தியமாகும் எனச் சர்க்கார் கருதவில்லை என்று முன்பே தெரிவித்திருக்கிறேன்.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னது போல மிக மிக ஏழை மக்கள் குதிரைப் பந்தயம் ஆட முடியாத அளவில் உள் நுழைவு கட்டணமே ஐந்து ரூபாய் வசூலிக்கப் படுகிறது என்று சொன்னாலும், முதலில் உயர்ந்த நிலையில் இருப்பவர்கள் பந்தயம் கட்டிக் கட்டி கடைசியில் ஆண்டியாகி விடுவதோடு, இந்த நாட்டிலேயே அன்னக்காவடிகளாக மாறிவிடுகிறார்களாதலின் அந்த நிலையை மாற்ற அரசாங்கத்தார் முன்வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஓரளவு ஏழை மக்களும் பாதிக்கப்படுகிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியாதது அல்ல.

SRI V. K. KOTHANDARAMAN : குதிரைப் பந்தயத்தின் மூலமாக அரசாங்கத்திற்கு வருஷா வருஷம் எவ்வளவு வருமானம் வருகிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைத்தான் முன்பே சொன்னேன். வருஷா வருஷம் வருமானம் வேறுபடும். நிலையான வருமானம் வராது. சென்ற ஆண்டின் வருமானம் என்ன என்கிற புள்ளி விவரமும் என்னிடம் இல்லை.

*Water-supply schemes.*

* 74 Q.—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether the protected water-supply scheme of taking water from Coleroon to Jayankondan through pipes proposed and recommended by the District Planning Board and the District Collector has been sanctioned; and

(b) if not, the reasons for the delay?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) No, Sir.

(b) The scheme is not included in the State Second Five-Year Plan. As it is not possible to render financial assistance for schemes outside the Plan, the scheme has not been sanctioned.

8th July 1957]

SRI K. R. VISWANATHAN : இந்தப் பகுதியில் குடி தண்ணீர் தட்டு மிகவும் அதிகமாக இருக்கிறது. குடிமக்களுக்குப் பிரதான உணவுப் பொருளாகக் கருதப்படுகிற குடி தண்ணீர் இல்லாத காரணத்தால் ஏரியில் இருக்கிற சேறுடன் கூடிய தண்ணீரை உபயோகித்து நரம்புச் சிலந்தி முதலிய நோய்களுக்கு உள்ளாகி மிகுந்த அல்லல் படுகிறார்கள். ஆகவே, ஜில்லா திட்டக் குழுவினால் சிபார்சு செய்யப்பட்டுள்ள இந்த இன்றியமையாத திட்டத்தை, சர்க்கார் மக்களுக்குக் குடி தண்ணீர் வசதி செய்து கொடுப்பதையே தம்முடைய முதல் கடமையாகக் கொண்டிருக்கிற காரணத்தால் இனியாவது காலந் தாழ்த்தாமல் சாங்ஷன் செய்வார்களா என்று அறியவிரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இம்மாதிரி நல்ல குடி தண்ணீர் தேவைப்படுகிற பகுதிகள் அநேகம் இருக்கின்றன. அதற்கு எல்லாம் திட்டம் போட்டு வேலை செய்துகொண்டு வருகிறோம். **spill over schemes** இருக்கின்றன. அம்மாதிரி முன்பே தீட்டப்பட்டுள்ள திட்டங்களுக்குப் போதுமான பணம் இல்லாமல் இருக்கிறது. இந்தச் சமயத்தில் புதிய ஒரு திட்டத்தை எடுத்துக்கொள்வது சாத்தியம் இல்லை.

*Protected water-supply to Tenkasi.*

* 75 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether there is any scheme to supply protected water to Tenkasi Panchayat area, and, if so, the present stage?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir. The preparation of detailed plans and estimates for the scheme is in progress.

SRI K. SATTANATHA KARAYALAR : இன்னும் அது முடிவாகவில்லை என்றால் அது எந்த நிலையில் இருக்கிறதென்றாவது சொல்ல முடியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தத் திட்டத்திற்கு 29 லட்ச ரூபாய் செலவாகும். வருஷத்தில் 20,300 ரூபாய் செலவாகும். இதற்கு வேண்டிய பிளான், எஸ்டிமேட்டு எல்லாம் தயாராகிக் கொண்டு வருகின்றன.

SRI K. SATTANATHA KARAYALAR : பிளான்ஸ், எஸ்டிமேட்டு எல்லாம் தயாராகிக் கொண்டிருக்கிறதென்றாலும் இந்தத் திட்டத்திற்கு அடிகோலியாகிவிட்டது அமைச்சருக்குத் தெரியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : ஆரம்ப காலக் கட்டத்தின் வேலை பஞ்சாயத்து மூலதனத்தைக் கொண்டு ஆரம்பிக்கப்படும். பிறகு சர்க்கார் கடன் மூலமாகவும், அதற்குப் பிற்பாடு மத்திய சர்க்காரின் கிராண்டு மூலமாகவும் பூர்த்தி செய்வதாக உத்தேசம்.

SRI K. R. NALLASIVAM : பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் திட்டம் நிறைவேற்றப் பட்டுள்ள சில இடங்களில் ஹரிஜனங்களுக்குப் பைப் வைத்துக் கொடுக்கப்படவில்லை ; பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் திட்டம் நிறைவேற்றப்படுகிற இடங்களில் எல்லாம் கண்டிப்பாக அந்த ஊரிலுள்ள ஹரிஜனங்களுக்கு பைப்பு போட்டுக் கொடுக்க வேண்டுமென்ற ஒரு நிபந்தனையை ஏற்படுத்த முடியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அம்மாதிரி கொடுப்பதாகத் தான் உத்தேசம். மின்சார விஷயத்திலும் அப்படித்தான். ஆனால் குறிப்பிட்ட சமூகத்தினர் அவ்விடத்திற்கு நான்கைந்து மைல்கள் தள்ளி அப்பால் வசிப்பார்களேயானால் அவ்வளவு தூரத்திற்குக் குழாய்களை எடுத்துப் போவது கடினம். செலவும் அதிகமாகும். அருகாமையில் இருந்தால் கண்டிப்பாக அவர்களுக்கு வசதி செய்து கொடுக்க உத்தேசம்.

SRI M. S. SELVARAJAN : குறிப்பிட்ட பஞ்சாயத்து ஒன்றில் பாதுகாக்க பட்ட குடிதண்ணீர் திட்டம் நிறைவேற்றப்படும்போது, குறிப்பிட்ட சில பகுதிகள் அதிக தூரத்தில் இருக்கின்றன என்பதற்காக பைப் வசதி செய்து கொடுக்கப்படா விட்டாலும், வரி வாங்கும்போது அப்பிரதேசத்தை விலக்குவதில் சட்டமூலமாகக் கஷ்டம் உண்டாகிறது. ஆகவே இனி பாது காக்கப்பட்ட குடி தண்ணீர் திட்டத்தை நிறைவேற்றும்போது அந்தப் பஞ் சாயத்து பகுதி பூராவுக்கும் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கண்டிப்பாய் செய்வார்களா ? தூரத்தைப்பற்றியும் கவலைபடாதவாறு செய்வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தக் கஷ்டத்தை எப்படி நிவர்த்திக்கலாம் என்பதுநான் இப்போது யோசனையில் இருக்கிறது.

SRI K. SATTANATHA KARAYALAR : இந்தத் திட்டத்திற்கு வேண்டிய பணம் ஐந்து, ஆறு லட்சம் ரூபாய்க்குமேல் பஞ்சாயத்துகளால் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதனுல்தான் தைரியமாக பஞ்சாயத்துப் பணத்தைக் கொண்டு வேலைத் திட்டத்தை ஆரம்பிக்கலாம் என்று சொன்னேன்.

SRI G. GOMATHI SANKARA DIKSHITAR : மேஜர் பஞ்சாயத்தாகிய இடமும், ஆயிரக்கணக்கான மக்கள் வாழ்கின்ற இடமுமான விக்கிரசிங்கபுரத் தில் குடிதண்ணீர் திட்டத்தை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறை வேற்றிக் கொடுக்காமல் போனுலும் அந்தத் திட்டத்தைக் கொண்டு வருவ தற்கு சர்க்கார் உத்தேசித்திருக்கிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : குடி தண்ணீர் திட்டத்தைக் கொண்டுவருவதற்குச் சர்க்கார் எப்போதும் தயாராக இருக்கும்.

SRI K. ANBAZHAGAN : இத்தகைய குடிதண்ணீர் திட்டங்களை எல்லாம் சர்க்கார் நிறைவேற்றிக் கொடுக்கிறுர்கள் என்கிற பேச்சு வந்தவுடனேயே தனியாய் தாங்கள் தாங்களாகவே கட்டிக் கொள்ள உத்தேசித்திருந்த குடி தண்ணீர் வசதிக்கான திட்டங்களையும் நிறுத்திவிடுகிற காரணத்தால் இத்திட்டங்களைக் காலதாமதம் செய்யாமல் திட்டமிட்டவுடனேயே நிறை வேற்றி வைப்பதன் அவசியத்தை அரசாங்கம் உணர்ந்து முயற்சி எடுத்துக் கொள்ளுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : குடிதண்ணீர் திட்டங்களை மிகவும் அவசியமானதாகக் கருதித்தான் இவற்றில் அதிகப்படியாகக் கவனம் செலுத்தி வருகிறது.

SRI K. SATTANATHA KARAYALAR : இந்தத் திட்டம் என்ன ? இதை ஒரு கம்போஸிட் ஸ்கீமா ? அல்லது தென்காசிக்கு மாத்திரம் ஒரு தனியான திட்டமா ? இந்தத் திட்டத்தை எந்த முறையில் வகுத்திருக்கிறுர் கள் என்பதைத் தயவு செய்து சொல்ல முடியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தத் திட்டம் தென்காசி, குற்றுலம், மேலகரம், இலஞ்சி ஆகிய எல்லாவற்றையும் சேர்த்து 99 லட்சம் ரூபாயில் போடப்பட்டிருக்கிறது. குற்றுலத்திற்குத் தனியாக ஒரு திட்டம் இருக்கிறது. இந்தத் திட்டம் நிறைவேறினுல் இந்தத் திட்டத்தைத் தவிர்த்து மற்ற திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

SRI A. P. C. VEERABAHU : பஞ்சாயத்துக் குடிதண்ணீர் திட்டத்திற்கு மத்திய சர்க்கார் கொடுக்கும் மான்யத்திலிருந்து தொகை ஒதுக்கப் படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதைக் கொஞ்சம் தனிக் கேள்வியாகக் கொடுத்தால் நான் பதில் சொல்ல முடியும்.





SRI M. KANDASAMI PADAYACHI : மேட்டுப்பாங்கான இடங்களுக்கு குடிதண்ணீர் சப்ளை செய்ய ஓவர் டாங்கு கட்டி, குழாய் வெல்களை அமைத் துக் கொடுக்க சர்க்கார் உதவி செய்யுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : குடிதண்ணீர் வெற்றிகரமாக நடக்க வேண்டுமென்றுல் தண்ணீர் வரக்கூடிய ஆழம் வெட்டினுல்தான் அது நடைபெறும்.

SRI K. SATTANATHA KARAYALAR : இந்தத் திட்டத்திற்கு அஸ்தி வாரக் கல்போட்டு இரண்டு ஆண்டுகளுக்குமேல் ஆகின்றன. இனியாகிலும் காலதாமதம் செய்யாமல் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற சர்க்கார் நட வடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : நான் சொன்னதுபோல் எவ் வளவு சீக்கிரம் இந்தத் திட்டத்தை ஆரம்பிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

*Protected water-supply scheme to Sirkali.*

* 76 *Q.*—SRI C. MUTHIAH PILLAI: Will the Hon. the Minister for Revenue be pleased to state when the protected water-supply scheme for Sirkali Panchayat will be sanctioned?

THE HON. SRI M. A. MANICKAVELU : The protected water-supply scheme for Sirkali Panchayat will be taken up in its turn.

SRI C. MUTHIAH PILLAI : நான் அரசாங்கத்தில் விசாரித்ததில் இந்த திட்டத்தை 470-வது ஐட்டமாக பட்டியலில் சேர்த்திருக்கிறுர்கள். ஆனுல் அப்பகுதியில் காலரா அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இதை உடனடியாக கொண்டுவருவதற்கு அரசாங்கம் முன் வருமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த விஷயத்தில் வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகிறது. முன்னேற்றமும் இருந்து வருகிறது. இருந்தாலும் சீர்காழி பஞ்சாயத் 48-வது "ராங்க்" -இல் இருப்பதால் சீக்கிரம் நடைபெறும்.

*Protected water-supply to Courtallam.*

* 77 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether there is any proposal to supply protected water to Courtallam; and

(*b*) if so, the details of the scheme and when it will be taken up for execution?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) A composite water-supply scheme for Tenkasi, Courtallam, Melagram and Ilanji Panchayats in the Tirunelveli district which contemplates the supply of water at the rate of 15 gallons *per capita*, has been sanctioned. The proportionate capital cost and the maintenance charge for the Courtallam Panchayat towards the scheme are Rs. 2·08 lakhs and Rs. 2,770 per annum respectively. The preparation of detailed plans and estimates for the scheme is in progress.

[8th July 1957

SRI. K. SATTANATHA KARAYALAR : இந்த திட்டத்திற்கு **foundation** போட்டாய்விட்டது என்பது சர்க்காருக்கு தெரியுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் மெம்பர் குறிப்பிடுவது எந்த திட்டம் என்று தெரியவில்லை.

SRI K. SATTANATHA KARAYALAR : A composite water-supply scheme for Tenkasi, Courtallam, Melagramam and Ilanji Panchayats in the Tirunelveli district என்பதற்கு ?

THE HON. SRI M. A. MANICKAVELU : போடப்பட்டிருக்கிறது. குற்றாலத்தில் ஏற்படுத்தவேண்டும் என்றிருக்கிற திட்டத்தையும் சீக்கிரத்தில் நிறைவேற்றலாம் என்றுதான் திட்டமிடப்பட்டிருக்கிறது. அதாவது அது ஒரு tourist சென்டராக இருப்பதால் கூடிய சீக்கிரமே நிறைவேற்றி வைக்கப்படும்.

SRI G. GOMATHI SANKARA DIKSHITAR : அம்பாசமுத்திரம், விக்கிரமசிங்கபுரம், வீரவநல்லூர் முதலிய இடங்களுக்கு குடிதண்ணீர் கிடைப்பதற்காக சர்க்கார் ஒரு ஏற்பாடு செய்திருந்தது. அந்தத் திட்டம் இப்போது கைவிடப்பட்டிருப்பதாக தெரிகிறது. அவ்விதம் கைவிடப்பட்டிருந்தால் அதை திரும்பவும் எடுக்க சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அப்படி ஏதாவது திட்டமிட்டிருந்தால் அதைப்பற்றி கவனிக்கலாம். இதல்லாமல் பல திட்டங்களும் போடப்பட்டு வருகின்றன. அவைகளில் சில பணக்குறைவினால் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கிறது.

SRI M. P. SUBRAMANIAM : ஸார், பெரிய பஞ்சாயத்து, முனிஸிபாலிடி இவைகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் ஏற்பாட்டை செய்து கொடுப்பதற்கு நிதி வசதியில்லை என்று இருந்தால் அரசாங்கம் இதற்காக ஒரு கோடி ரூபாய் கடன் எழுப்ப முன் வருமா ? அப்படியில்லையென்றால் பெரிய முனிஸிபாலிடி, மேஜர் பஞ்சாயத்து இவைகளுடைய பொறுப்பில் கடன் எழுப்புவதற்கு அரசாங்கம் அனுமதி கொடுக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த கடன் வாங்கும் விஷயமாக நிதி அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். கனம் அங்கத்தினர் அவர்கள் ஏன் அதில் கவனம் செலுத்தவில்லை என்று தெரியவில்லை.

SRI A. P. C. VEERABAHU : குற்றாலத்தில் எந்த இடத்தில் இருந்து தண்ணீர் சப்ளை செய்யவேண்டுமென்று சர்க்கார் நினைத்ததோ அந்த இடத்திலிருந்து சப்ளை எடுப்பதற்கு தகராறு ஏதாவது இருப்பதாக சர்க்காருக்குத் தெரியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : தகராறு இருப்பதாக எனக்குத் தெரியாது. அப்படி ஏதாவது இருந்தால் அதைப்பற்றி கனம் அங்கத்தினர் அவர்கள் தெரிவித்தால் விசாரிக்கிறேன்.

SRI K. SATTANATHA KARAYALAR : ஸார், குற்றாலத்திலிருந்து குடிதண்ணீர் திட்டத்திற்கு, அங்குள்ள பழைய அருவி, சிற்றருவி, தேனருவி, ஐந்தருவி இவைகளில் எந்த அருவியிலிருந்து தண்ணீர் எடுக்கலாம் என்று அரசாங்கம் கருதியிருக்கிறது ?

THE HON SRI M. A. MANICKAVELU : அங்குள்ள எல்லா அருவியிலுள்ள தண்ணீரும் நல்ல தண்ணீர்தான். எந்த அருவியிலிருந்து குறைந்த செலவில் தண்ணீர் கொண்டு வரமுடியுமோ அந்த அருவியிலிருந்து தண்ணீர் எடுத்துக்கொள்ளப்படும்.

8th July 1957]

**Sri K. RAMACHANDRAN** : இந்த தண்ணீர் திட்டம் பல பஞ்சாயத்துகளிலும் கொண்டுவரவேண்டுமென்று ஒரு லிஸ்டு தயாரித்து இருப்பதாக தெரிகிறது. இந்த லிஸ்டிலிருந்து ஏதாவது பஞ்சாயத்துக் குடிதண்ணீர் சப்ளைக்காக பணம் வசூலித்து வரக்கூடிய பஞ்சாயத்துகளுக்கு இதில் முதலிடம் கொடுத்து உடனடி நிறைவேற்றப்படுமா ?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : இந்தத் தண்ணீர் திட்டத்திற்கு போதுமான பணம் வசூலித்து இருந்தால் அதைப்பற்றி அரசாங்கம் கவனிக்கும்.

**Sri K. SATTANATHA KARAYALAR** : இந்த தண்ணீர் எடுப்பதில் குற்றாலத்தில் அருவியிலிருந்து தண்ணீர் எடுக்கும் போது அதன் கீழ் இருக்கும் நிலங்களுக்கு அதில் பாத்தியதை உண்டு என்று சிலர் சொல்லி வருவது அரசாங்கத்திற்கு தெரியுமா ?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : இந்த விஷயத்தில் பயிர் குடிக்கிற தண்ணீர் மனிதன் குடிப்பது இல்லை.

**Sri A.S. DURAISWAMI REDDIAR** : அக்கிராசனர் அவர்களே, சென்னையை அடுத்து இருக்கும் பஞ்சாயத்துகளில், சென்னையிலுள்ள மக்கள் அதிகமாக அங்கு வந்து குடியேறுவதால் அங்கு குடிதண்ணீர் கஷ்டம் அதிகமாக இருக்கிறது. ஆகவே, அந்த பஞ்சாயத்துகளில் உடனடியாக வரிசை கிரமத்தை எதிர்பாராமல் குடித்தண்ணீர் கொண்டு வருவதற்கு முன்ஜாக்கிரதை எடுக்கப்படுமா ?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : சென்னையில் சேர்க்கப்பட்டிருக்கும் பிரதேசங்களில் தண்ணீர் கஷ்டமாக இருக்கிறது. இப்பொழுதுள்ள இடங்களுக்கு தண்ணீர் வசதிக்காக கார்ப்பரேஷன் பெரிய திட்டமிட்டு கடன் வேண்டும் என்று கேட்டிருக்கிறது. அதன் பின்னால் மற்ற பகுதிகளும் கவனிக்கப்படும்.

**Sri K. SATTANATHA KARAYALAR** : வயலுக்கு தண்ணீர் கொடுக்கப்படுவதைவிட குடிக்கும் தண்ணீருக்கு சர்க்கார் திட்டத்தில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : அப்படி குடிதண்ணீருக்கு முக்கியத்துவம் கொடுத்துத்தான் இந்த திட்டங்கள் போடப்பட்டிருக்கிறது.

**Sri M. S. SELVARAJAN** : ஸார், குற்றாலத்திலுள்ள எல்லா அருவிகளிலும் எல்லா காலங்களிலும் தண்ணீர் கிடையாது. அதன் கீழ் உள்ள ஆற்றுபடுகையில் தண்ணீர் கிடைக்கும். தூத்துக்குடி தண்ணீர் சப்ளைக்கு வல்லநாடு என்ற இடத்தின் அருகில் ஆற்றுப் படுக்கையிலிருந்து தண்ணீர் எடுத்து சப்ளை செய்து வருகிறார்கள். அம்மாதிரி குற்றாலத்திலும் ஆற்றுப்படுக்கையிலிருந்து தண்ணீர் எடுத்து சப்ளை செய்வதற்கு பரிசீலனை செய்ய அரசாங்கம் முன்வருமா ?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : அவசியப்பட்டால் அப்படி பரிசீலனை செய்யலாம்.

**Sri K. R. VISWANATHAN** : தலைவர் அவர்களே, இந்த பாதுகாப்பு குடிதண்ணீர் திட்டங்கள் எல்லாம் பற்றி ஒரு பட்டியல் இருப்பதாகவும், அதில் ஒவ்வொன்றும் நிறைவேற்றப்பட்ட பிறகு தான் புதிய திட்டங்களுக்கு ஸாங்ஷன் கொடுக்கப்படும் என்றும் தெரிகிறது. சில புதிய திட்டங்கள் மிகவும் அத்தியாவசியமாக இருக்கின்ற காரணத்தால் இந்த பட்டியலின்படி ஸாங்ஷன் கொடுப்பதற்கு முன்னால் இம்மாதிரியான அவசரதிட்டங்களுக்கு ஸாங்ஷன் கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : இந்த விஷயத்தில் இதற்கு அந்தந்த பஞ்சாயத்துக்கள் வரிபோட்டு வசூல் செய்து பணம் கொடுத்தால் அதை அரசாங்கம் உடனே செய்வதற்கு முன் வரும்.

[8th July 1957

**Sri K. ANBAZHAGAN**: தலைவர் அவர்களே, இவ்வளவு சிறந்த திட்டங்கள் போடப்பட்டிருந்தும் அந்தந்த துறையிலுள்ள அதிகாரிகளின் அசமந்த தன்மையின் காரணமாகவே தாமதம் ஏற்படுகிறது என்பது நாடறிந்த உண்மையாகும். ஆகவே, சில திட்டங்களை அவசரமான நடவடிக்கையாக பிரித்து "Emergency programme" கருதி உடனடியாக இதற்கு வேண்டிய ஏற்பாடு செய்ய அரசாங்கம் முன் வருமா ?

**The Hon. Sri M. A. MANICKAVELU**: கூடுமான வரையில் இதில் துரிதமாக ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. இந்த பாதுகாப்பு குடி தண்ணீர் திட்டத்தில் உபயோகிக்க வேண்டிய சில பைப்புகள் நம்மிடம் இல்லை. இதற்கு நல்ல "காஸ்ட் ஐயர்ன்" பைப் வேண்டியிருக்கிறது. இதனாலும் தாமதம் ஏற்படுகிறது. இது வந்த உடன் இந்த திட்டங்கள் துரிதமாக ஆரம்பிக்கப்படும்.

**Sri T. S. RAMASWAMY PILLAI**: ஸர், இந்த திட்டத்திற்கு ஒரு சில இடங்களில் அஸ்திவாரக்கல் போட்டாய்விட்டது என்று சொன்னார்கள். அதன் பின் எஸ்டிமேட் தயாராகவில்லை என்றும் சொல்லுகிறார்கள். சாதாரணமாக எஸ்டிமேட் தயாரித்தபின்தான் அஸ்திவாரக்கல் போடுவதா அல்லது அதற்கு முன் போடுவது வழக்கமா ? இங்கே எப்படி நடக்கிறது என்று அறிய ஆசைப்படுகிறேன்.

**The Hon. Sri M. A. MANICKAVELU**: சில பெரிய திட்டங்களிலும் முதலாவதாக எஸ்டிமேட் தயாரித்த பிறகும் பின்னால் திருத்தி எஸ்டிமேட் தயாரிப்பது உண்டு. இதனால் அந்த திட்டங்கள் வெற்றிகரமாகவும் பணலாபமும் கிடைக்கிறது. அதனால் அஸ்திவாரக்கல் போட்ட பிறகு எஸ்டிமேட் தயாரிப்பதில் கெடுதி ஒன்றும் இல்லையே.

**Sri G. GOMATHI SANKARA DIKSHITAR**: இந்த குடிதண்ணீர் திட்டம் இதுவரை எங்கள் பிரதேசத்தில் நடைபெறாமல் இருப்பதால் அங்கு காலரா போன்ற வியாதிகள் அதிகமாக வந்துகொண்டிருப்பது சர்க்காருக்குத் தெரியுமா ? மேலும் பஞ்சாயத்து போர்டுக்கு இதை உடனடியாக நடத்துவதற்கு சர்க்கார் கடன் கொடுத்து இதை உடனே அமலுக்கு கொண்டுவர சர்க்கார் கவனம் எடுக்குமா ?

**The Hon. Sri M. A. MANICKAVELU**: அப்படி ஏதாவது குறிப்பிட்ட பஞ்சாயத்து கடன் கேட்டால் அதைப்பற்றி கவனித்து அதன்படி வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கலாம்.

9-20 a.m. **Sri N. S. RAMALINGAM**: உடையார்பாளம் தாலூகாவில் எவ்வளவு ஆழம் வெட்டினாலும் தண்ணீர் கிடைக்காமல் வரண்டு இருக்கிறது. அந்த பகுதிகளில் "ட்யூப் வெல்" இறக்கி ஓவர்டாங்க் கட்டி தண்ணீர் சப்ளை செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**The Hon. Sri M. A. MANICKAVELU**: கேள்வி சரியாக கேட்கவில்லை. ஓவர்ஷெட் டாங்க் கட்டி தண்ணீர் சப்ளை செய்யலாம்.

**Sri N. MARUDACHALAM**: கோவை முனிசிப்பாலிட்டி தண்ணீர் திட்டத்திற்காக அரசாங்கத்திடம் பணம் கடன் கேட்டிருக்கிறது. அதைக் கொடுக்க உத்தேசம் உண்டா ?

*Housing for pavement dwellers.*

* 78 Q.—**Sri N. K. PALANISAMI**: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any statistics have been taken recently about the pavement dwellers in the City;

(b) whether the Corporation of Madras has submitted any scheme during 1956-57 for housing them; and

(c) if so, the action taken thereon?



8th July 1957]

**The Hon. Sri R. VENKATARAMAN**: (a) No statistics have been taken recently about the pavement dwellers in the City. In 1953, the Corporation of Madras made a civic survey of the pavement dwellers and the survey revealed that there were about 6,500 families of platform-dwellers spread throughout the City.

(b) Yes, Sir.

(c) The scheme was forwarded to the Government of India in May 1957. The approval of the Government of India is awaited.

**Sri K. ANBAZHAGAN**: தலைவர் அவர்களே, தெருவோரங்களில் தங்கி வாழ்க்கை நடத்துகிற நிலைமையில் 6,500 குடும்பத்தார் சென்னை நகரில் இருக்கிறார்கள் என்ற நிலையில் சாதாரணமாக தெருவோரத்தில் படுப்பதும் தூங்குவதும் தவறு என்பதினால் போலீஸ்காரர்கள் விடியற்காலையில் தங்கவொட்டாமல் அவர்களை விரட்டியடிக்கிறார்கள் என்பது அரசாங்கத்திற்கு தெரிய வருமா ?

**The Hon. Sri R. VENKATARAMAN**: அதைப்பற்றி புகார் செய்தால் என்ன நடக்கிறது என்று விசாரணை செய்கிறேன்.

**Sri S. PAKKIRISAMI PILLAI**: நடைபாதை ஓரத்தில் குடியிருக்கும் வீடில்லா குடும்பத்தினருக்கு, அவர்களுக்கு இன்னொரு இடத்தைக் கண்டுபிடித்து வீடுகள் கட்டிக்கொடுத்தாலும் இன்னும் ஆயிரக்கணக்கான மக்கள் சென்னையிலே இந்த குடியிருப்பு வசதிக்காக பசியுடன் காத்திருக்கிறார்கள். மொத்தமாக இதை நீக்குவதற்கு என்ன திட்டம் அரசாங்கத்திடம் இருக்கிறது ?

**The Hon Sri R. VENKATARAMAN**:—இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் யோசனையில் இருக்கிற காலத்தில் சென்னை சர்க்கார் 7 கோடி 35 லட்சம் ரூபாய் செலவில் ஸ்லம் கிளியரன்ஸ் தலைப்பின் கீழ் ஸ்லம்களிலும் சேரிகளிலும் இருக்கிறவர்களுக்கு வீடுகட்டவேண்டுமென்று திட்டம் வகுத்து அனுப்பியது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 1 கோடி 68 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதன்படி, சென்னையில் இருக்கிற நடைபாதையில் வசிக்கிறவர்களுக்கு 1,300 குடும்பங்களுக்கு கொருக்குப்பேட்டை சர்வே நம்பர் 1874-ல் இடம் கொடுக்கத் திட்டம் வகுக்கப்பட்டு இந்திய சர்க்காருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. சாங்ஷன் வந்தவுடன் இது எடுத்துக் கொள்ளப்படும்.

**Srimathi T.N. ANANDANAYAKI**: அப்படி நடைபாதையில் வசிக்கும் ஏழைகளுக்காக தயாரிக்கப்பட்ட திட்டத்திலே வடக்குப் பகுதியை, ஸ்லம் கிளியரன்ஸ்-க்கு கார்பொரேஷனுக்கும் தெற்குப் பகுதியை விட்டி இம்ப்ரூவ்மெண்ட் ட்ரஸ்ட்-க்கும் கொடுக்க யோசனை உண்டா ?

**The Hon. Sri R. VENKATARAMAN**: ஆமாம் வடக்கு பகுதியில் இருக்கிற சேரிகளை சரிவரச் செய்வதற்கு கார்பொரேஷனிடமும், தெற்கு பகுதியை விட்டி இம்ப்ரூவ்மெண்ட் ட்ரஸ்ட்டிடமும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

**Sri P G. MANICKAM**: இவர்களுக்குள் எந்த ஜாதியைச் சேர்ந்தவர்கள் அதிகம் பேர் இருக்கிறார்கள் ? இவர்கள் மிக ஏழைகளாக இருப்பதால் அவர்களது வாழ்க்கைத்தரத்தை உயர்த்த சர்க்கார் ஏதாவது நடவடிக்கைகள் எடுக்கப்போகிறதா ?

**The Hon. Sri R. VENKATARAMAN**: ஏழை ஜாதி என்று ஒரு ஜாதி இருக்கிறது. அந்த ஜாதிக்காரர்கள்தான் அங்கு இருக்கிறார்கள்.

**SRI K. ANBAZHAGAN :** இத்தகைய நடைபாதை வாசிகளில் அதிகம் பேர்கள் கூலி வேலை செய்து தங்கள் வயிற்றைக் கழுவிக் கொள்கிறவர்கள் என்ற நிலைமை இருக்கிற காரணத்தால், அவர்கள் குடியிருப்புக்காக ஒதுக்கப்படும் இடங்கள் மிகத்தொலைவில் இருப்பதால், அவர்கள் கூலி வேலை செய்து பிழைக்கத் தடை ஏற்படுவதால், அவர்கள் அங்கு குடியேற திருப்தியற்றவர்களாக இருப்பதால், எவ்வளவுக்கெவ்வளவு நகரத்தில் நடுப்பகுதிக்குப் பக்கத்தில் இந்த இடங்களை அமைக்க முடியுமோ அப்படி அமைக்க அரசாங்கம் முன்வருமா ? அதேபோல் கூவம் ஆற்றின் படுகையில் சிறு குடிசைகள் கட்டிக்கொண்டிருப்பவர்களை கார்பொரேஷன் அதிகாரிகளும் வேறு சில அதிகாரிகளும் மிரட்டி அவைகளைப் பிரிக்கச் சொல்வதை நிறுத்திவைத்து சில காலம் இடையில் அவர்கள் அங்கு வாழ அரசாங்கம் அனுமதிக்குமா ?

**THE HON. SRI R. VENKATARAMAN :** நகரத்தின் சுகாதாரமே மிக முக்கியம் என்பதை அங்கத்தினர் நன்கு அறிவார்கள். கூவம் நதியின் கரையிலும் பக்கிங்காம் கனல் கரைகளிலும் வீடுகள் கட்டிக்கொண்டு அசுத்தம் செய்வதால் நகரத்தின் சுகாதாரம் கெடுபடுகிறது. அதைத் தடுப்பதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. முதல் கேள்விக்கு, சர்க்கார் எவ்வளவு அருகாமையில் அவர்களுக்கு வீடு அமைத்துக்கொடுக்க முடியுமோ அப்படி அமைத்துக் கொடுக்கிறோம். அருகாமையில் வீடு அமைத்துக் கொடுக்க வேண்டும் என்பதற்காக புதிதாக சேரிகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் சர்க்கார் அதை மறுக்கிறது.

**SRI K. VINAYAKAM :** Sir, the task of clearing these slums or improving the slums in the North of the City is entrusted to the Corporation whereas in the South of the City it is given to the City Improvement Trust. Have Government in their possession any statistics to show how many slums have been cleared or improved in the South and North Madras?

**THE HON. SRI R. VENKATARAMAN :** In my first answer I explained that we have submitted schemes to the Government of India for sanction and their sanction was awaited. Therefore, I say that not even a single slum has been cleared; the sanction of the Government of India is awaited.

**SRI A. V. P. ASAITHAMBI :** நடைப்பாதையில் உள்ள வீடற்றவர்களை கோவில்களில் குடியேற்றினால் என்ன ?

**THE HON. SRI R. VENKATARAMAN :** கோவில்கள் அசுத்தமாகி விடும்.

**SRIMATHI T. N. ANANDANAYAKI :** நடைபாதையில் இருக்கும் மக்களுக்கு அருகாமையில் வீடு அமைத்துக்கொடுப்பது கஷ்டம் என்று சொல்லப்பட்டது. ஆனால் சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு அருகாமையில் இடம் இருப்பதால் அங்கு வீடு கட்டிக் கொடுக்கப்படுமா ? விலகி இருந்தாலும் இந்த நடைபாதை மக்களை அங்கு குடியேற்ற போலீஸ் உதவி பெற்றுகுடியேற்ற சர்க்கார் முன்வருமா ?

**THE HON. SRI R. VENKATARAMAN :** கொருக்குப்பேட்டை அவ்வளவு வெகு தூரத்தில் இருப்பதாக சென்னை நகர மக்கள் நினைக்க மாட்டார்கள். நடைபாதையில் இருக்கிறவர்கள் அங்கேயே இருக்க வேண்டுமென்று சொன்னால் அவர்களுக்கு நல்ல இடம் பார்த்து கொடுத்துவிட்டு அங்கிருந்து அப்புறப்படுத்த வேண்டியது நமது கடமை.

**SRI P. S. CHINNADURAI :** உலகத்திலுள்ள சிறந்த நகரங்களின் வரிசையில் ஒன்றாக இருக்கிற சென்னைமா நகரத்தில் இவ்வாறு நடைபாதையில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் வசிக்கிறார்கள் என்பது நம்முடைய





அரசாங்கத்திற்கு பெருமை அளிக்கக்கூடியதா ? பெருமை அளிக்கக் கூடியதில்லை என்றால் அவர்களின் வீடு கட்டும் திட்டத்திற்காக போடப்பட்ட தொகையில் கால் பங்குக்குக் குறைவாக ஒரு தொகையை இப்பொழுது அனுமதித்திருப்பது என் ?

**THE HON. SRI R. VENKATARAMAN :** உலகத்திலுள்ள அழகான நகரங்களில் சென்னையும் ஒன்று என்று சொல்லிக்கொள்வதில் எனக்கும் பெருமைதான். ஆனால் திடீரென்று ஒரே நாளில் எல்லோருக்கும் வீடு கட்டிக்கொடுப்பது என்பது இயலாத காரியம். சர்க்கார் தங்களுக்கு எவ்வளவு வேண்டுமென்று எழுதினார்கள். திட்டம் 6,000 கோடி ரூபாயிலிருந்து 4,800 கோடியாக குறைந்தபோது அந்தத் தொகையும் குறைக்கப்பட்டது.

**SRI R. KRISHNASAMI NAIDU :** நடைபாதையில் குடியிருப்பவர்களுக்கு எல்லாம் வீடு வசதி செய்து கொடுக்கப்படுகிறது என்ற செய்தி வந்தால் சென்னையில் குடியேறும் ஜனங்கள் அதிகமாகிவிடமாட்டார்களா ? ஆகவே இந்த திட்டத்தில் நிரந்தரமாக நடைபாதையில் குடி இருப்பவர்களுக்குத்தான் வீடு கொடுக்கப்படும் என்பதற்கு, அப்படி இருப்பவர்கள் யார் என்பதை என்ன ஆதாரத்தின் பேரில் கணக்கிடப்படுகிறது.

**THE HON. SRI R. VENKATARAMAN :** அது கிரமம்தான். அது ஒரு கிரமமான பிரச்சனைதான். இருந்தாலும் நடைபாதையில் இருக்கிறவர்களுக்கு புதிதாக இடங்கள் கட்டிக்கொடுத்துவிட்டு, அவர்களைக் குடியேற்றிய பிறகு புதிதாக நடைபாதையில் குடியேற விடாமல் தடுப்பதே சர்க்காரின் நோக்கம்.

**SRI P. DURAISAMI REDDIYAR :** இந்தத் திட்டங்களெல்லாம் கவர்ன்மெண்டார் ரொம்பவும் ஆலோசனை செய்யவேண்டியிருக்கிறது. நடைபாதையில் இருப்பவர்களுக்கு எல்லோருக்கும் வீடு கட்டிக்கொடுப்பது என்றால், வீட்டில் இருப்பவர்கள் எல்லோரும் நடைப்பாதையில் வந்து தங்கி விடுவார்கள். அதனால் யார் நடைபாதையில் வசிப்பவர்கள், யாருக்காக திட்டம் நல்லது என்று தெரிந்து அந்த அளவிலே பரிசீலித்து வீடுகட்டிக் கொடுக்கும் திட்டம் ஏற்பட்டால் மிகவும் நன்றாக இருக்கும். 9-46 p.m.

**THE HON. SRI R. VENKATARAMAN :** கனம் அங்கத்தினருடைய யோசனையை சர்க்கார் ஏற்றுக்கொள்ளுகிறது.

**SRI A. A. RASHEED :** Is the Hon. Minister aware that there are able-bodied beggars, and diseased persons among pavement dwellers and would the diseased beggars be isolated from pavement dwellers?

**THE HON. SRI R. VENKATARAMAN :** Yes, we have a scheme and actually there is a place for able-bodied beggars and they are taken there. There is a Beggars' Home also.

**SRI P. S. CHINNADURAI :** நடைபாதையில் வசிப்பவர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்க சிறிது காலதாமதம் ஏற்படுமாதலால், அதற்கு இடையிலே உடனடியாக ராணுவத்திலே இருந்து கூடாரங்களை தற்காலிகமாக வாங்கி அவர்களுக்கு போட்டுக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**THE HON. SRI R. VENKATARAMAN :** அவ்வாறு கொடுப்பதற்கு ஒன்றும் யோசனையில்லை.

**SRI A. VEDARATHNAM PILLAI :** இம்மாதிரி [illegible] வசிப்பவர்களுடைய 'சென்ஸஸ்' அரசாங்கம் எழுதிருக்கிறதா? [illegible] அவர்களுடைய எண்ணிக்கை எவ்வளவு ?

**THE HON. SRI R. VENKATARAMAN :** [illegible] வருஷத்தில் எடுத்த 'சென்ஸஸ்' பிரகாரம் 6,500 குடும்பங்கள் [illegible]

[8th July 1957

**Sri R. SRINIVASA IYER**: Have the Government ascertained the views of the pavement-dwellers whether they are prepared to go away from places, where they are working either as coolies or otherwise and which are very near to the places where they now live?

**The Hon. Sri R. VENKATARAMAN**: It is not proposed to ascertain the opinion of the pavement-dwellers any more than it is necessary to ascertain the opinion of diseased persons with regard to treatment.

**Sri N. MARUDACHALAM**: சென்ற வருஷம் "ஸ்லம் கிலியரன்ஸ்" திட்டத்திற்கு பணம் கொடுப்பதாகச் சொல்லி, மறுபடியும் கொடுக்காமல் நிறுத்தியதற்குக் காரணமென்ன ?

**The Hon. Sri R. VENKATARAMN**: அது மாதிரி என்னிடம் தகவல் ஒன்றுமில்லை. எந்த இடத்தில் கொடுப்பதாகச் சொன்னார்கள்,, யார் கொடுக்கவில்லை என்பதை யெல்லாம் சொன்னால் பொறுத்தமாக இருக்கும்.

**Sri G. GOMATHI SANKARA DIKSHITAR**: மற்ற இடங்களைவிட சென்னை நகரத்தில் "ஸ்லம் கிலியரன்ஸ்" வேலை வேகமாக நடைபெறுகின்றது என்ற விவரத்தை சென்னை நகரத்தில் "ஸ்லம் கிலியரன்ஸ்" அதிகமாக நடை பெறுகின்றது என்ற புள்ளி விவரத்தை சர்க்கார் வெளியிடுவார்களா ?

**The Hon. Sri R. VENKATARAMAN**: இன்னும் "ஸ்லம் கிலியரன்ஸ்" வேலை அதிகமாக நடைபெறவில்லை என்றுதான் வருத்தத்துடன் சொல்லிக்கொள்ளுகிறேன்.

**Sri M. P. SUBRAMANIAM**: இப்பொழுது நம்முடைய அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிற திட்டத்தில் 1,300 குடும்பங்களுக்கு புனர் வாழ்வு அளிப்பதற்காக கோரியிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் 6,500 குடும்பங்கள் நடைபாதையில் வசிப்பதாகச் சொல்லுகிறார்கள். அப்படியென்றால் 6,500 குடும்பங்களை புனர்வாழ்வில் அமைப்பதற்கு எவ்வளவு ஐந்தாண்டு திட்டங்கள் ஆகும் என்று அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri R. VENKATARAMAN**: கனம் அங்கத்தினர் அவர்கள் முதலில் செய்வது. இரண்டாவது செய்வது, மூன்றாவது செய்வது. என்று படிப்படியாக வேலைசெய்கிறார்கள் என்பதைசற்று உணர்ந்துகொள்ள வேண்டும். நான் பதில் சொல்லும் பொழுது முதலில் 1,300 குடும்பங்களுக்கு இப்பொழுது ஏற்பாடு செய்யப்படுகிறது என்று சொன்னேன்.

**Srimathi T. N. ANANDANAYAKI**: 6,500 குடும்பங்களில் எத்தனை பேர் வடக்கு சென்னையில் வாழ்கிறார்கள் எத்தனை பேர் தெற்கு சென்னையில் வாழ்கிறார்கள் என்பதை அரசாங்கம் தெரிவிக்க முடியுமா ?

**The Hon. Sri R. VENKATARAMAN**: அதற்கு என்னிடம் புள்ளி விவரமில்லை.

**Sri S. LAZAR**: Is there a similar scheme for any of the mufassal tours in the State?

**The Hon. Sri R. VENKATARAMAN**: இப்பொழுது "லோ இன்கம் குரூப் ஹவுஸிங்" கட்டுவதைத்தவிர வேறு திட்டங்கள் சென்னைக்கு வெளியிலிருக்கிற ஊர்களைப்பற்றி இல்லை.

**Mr. SPEAKER**: Question hour is over.



8th July 1957]

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1957-58 —*cont.*

### DEMAND VII—GENERAL SALES TAX AND OTHER TAXES AND DUTIES ADMINISTRATION.

**Mr. SPEAKER**: We shall now proceed to Demand VII—General Sales Tax and Other Taxes and Duties Administration, to be presented by the Hon. the Minister for Industries. The time allotted for this demand is four hours. Will the Hon. Minister be able to tell me how long he will take for his reply?

**The Hon. Sri R. VENKATARAMAN**: I would take about ten minutes in the beginning and thirty minutes at the end.

**Mr. SPEAKER**: That means the discussion will start at 10 of the clock—and the Minister will reply at 1-30 p.m.

I would also like to know whether the Opposition groups have come to an agreement as to what exactly the cut motion they propose to move is.

**The Hon. Sri R. VENKATARAMAN**: Sir, on the recommendation of the Governor, I move—

"that the Government be granted a sum not exceeding Rs. 1,36,91,700 under Demand VII—General Sales Tax and Other Taxes and Duties Administration."

***The Hon. Sri R. VENKATARAMAN**: கனம் சபாநாயகர் அவர்களே, ஆரம்பத்தில் எந்த விதமான முன்னுரையும் சொல்லவேண்டாம் என்று நினைத்திருந்தேன். ஆனால் வந்திருக்கிற வெட்டுப்பிரேரணைகளெல்லாம் பாது விற்பனை வரியைப் பற்றி மாத்திரம்தான் இருக்கின்றன. இந்த மான்யக் கோரிக்கையில் வேறு எந்த விஷயங்களும் கவனிக்கப்படவில்லை என்று மக்கள் சந்தேகப்படாத நிலைமையில் இதில் என்னென்ன வரிகள் அடங்கியிருக்கின்றன என்பதை எடுத்துச்சொல்லுவதற்கு தங்களிடம் 10 நிமிட நேரம் கோரியிருக்கிறேன். இந்த மான்யக்கோரிக்கையில் **entertainment tax, betting tax, tobacco duties, motor spirit tax, General Sales tax** ஆகிய ஐந்து வரி விதிப்புகள் அடங்கியிருக்கின்றன. **Entertainment tax**-ஐ பொறுத்த வரையில், அதாவது கண்காட்சி, சினிமாக்கள் மீது வரியைப் பொறுத்த வரையில் "ரிவைஸ்டு எஸ்டிமேட்" பிரகாரம் ரூ. 1,04,00,000 வருமானம் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் செலவு 92 லட்ச ரூபாய். புதியதாக வந்திருக்கும் அங்கத்தினர்கள் திடீரென்று யோசனை செய்யலாம், "ஏன் 1 கோடி ரூபாய் வசூல் செய்வதற்கு இவர்கள் 92 லட்ச ரூபாய் செலவழிக்கிறார்கள்" என்று. அப்படியில்லை. இந்த வரிவிதிப்பின் கீழ் வருகின்ற வருமானத்தில் 90 சதவிகிதம் ஸ்தல ஸ்தாபனங்களுக்குக் கொடுக்கப்படுகின்றன. 92 லட்ச ரூபாய் ஸ்தல ஸ்தாபனங்களுக்குக் கொடுப்பதற்காக ஏற்படுகின்றது. இதில் பல விஷயங்களை ஆலோசனை செய்வதற்கு இடமிருக்கிறது. சினிமாக்களுக்கு போகலாமா, வேண்டாமா ?. எத்தனை வயதிற்குப் பின்னால் இருப்பவர்கள் சினிமா பார்க்கலாம் ? சினிமாக்களுக்கு இன்னும் கொஞ்சம் அதிகமாக வரி விதிக்கலாமா ? சினிமா வசனங்கள் எழுதுகிறவர்களுக்குக்கூட வரி விதிக்கலாமா ? (சிரிப்பு) இதில் இம்மாதிரி பல பிரச்சினைகள் எழக்கூடும். அது ஏதாவது ரொம்ப காரசாரமாகப் போய் விட்டால், அதை கனம் சபாநாயகர் ஒழுங்குப் பிரச்சினை மூலமாக தீர்த்து விடுவார்கள் என்று நம்புகிறேன்.

[Sri R. Venkataraman] [8th July 1957

அடுத்தபடியாக "**betting tax**" பந்தயங்களின் மீது விதிக்கின்றவரி. இதில் நம்முடைய "ரிவைஸ்டு எஸ்டிமேட்" பிரகாரம் ரூ. 9,60,000 வரும் Totalizator லிருந்து என்று எதிர்பார்க்கிறோம். இதனுடைய செலவு ரூ. 4,000 தான். ஒரு சதவிகிதம் என்ற கணக்கில் ரேஸ் கிளப்புகள் வரி வசூலிப்பதற்காக கொடுக்கப்படுகிறது. "Totalizator" மூலமாக வருகின்ற மொத்த பணத்தில் 10 சதவிகிதம் சர்க்கார் எடுத்துக்கொள்ளுகிறது. அது இண்டியைப் பொறுத்தவரையில். உதகமண்டலத்தைப் பொறுத்தவரையில் சர்க்கார் 5 சதவிதம் வரியாகப் பெற்றுக்கொள்கிறது. சட்டப்படி சர்க்காருக்கு 12½ சதவிகிதம் வரியாக எடுத்துக்கொள்வதற்கு உரிமை உண்டு என்றாலும், 10 சதவிகிதம்தான் எடுத்துக்கொள்ளுகிறது. ஆகவே இந்த விவாதத்தில் ஈடுபடுகின்ற அங்கத்தினர்கள் இந்த வரியை அதிகரிக்கலாமா என்றெல்லாம் சொன்னால், நிதி அமைச்சர் அடுத்த வருஷத்தில் இதையெல்லாம் யோசிப்பதற்கு உபயோகமாக இருக்கும். அது மாத்திரமல்ல. குதிரைப்பந்தயங்கள் வேண்டுமா, வேண்டாமா என்றெல்லாம் கேள்வி நேரத்தில் விவாதிக்கப்பட்டது, அதெல்லாம்கூட இந்த வரி விதிப்பின்கீழ் விவாதிக்கப்படலாம். குதிரைப்பந்தயம் மாத்திரம் விடலாமா, வேறு கால்நடைகள் பந்தயம் விடக்கூடாதா என்றெல்லாம் கேட்டார்கள். நான் மேல் நாட்டிற்குச் சென்றிருந்த பொழுது ஒரு பந்தயம் பார்த்தேன் . அங்கு ஆமைகளை பந்தயத்தில் விடுகிறார்கள். சர்க்காரையும் ஆமையும் பந்தயம் விட்டால் ஆமை ஜெயித்துவிடும் என்று கனம் அன்பழகன் சொல்லுவார்கள். அவ்வாறு சொன்னால், அதற்கு ஒரு சிறு உதாரணம் சொல்லி பதில் கூறலாம் என்று நினைக்கிறேன்.

19-ந் தேதியன்று மதுரையில் கதவடைப்பு நடந்தது. மந்திரி 22-ந் தேதி அங்கு போய்சேர்ந்தார். பத்திரிகையில் எழுதியிருக்கிறது—"ஆமை வேகத்தில் செல்கிற மாகாண சர்க்கார் இதைச் சரியாக கவனிக்குமா ?" என்று. அப்படி எழுதியிருந்தது ஒரு பத்திரிகையில். ஆகவே, "ஆமை வேகத்தில்" என்று எதிர்க் கட்சிக்காரர்கள் சொல்வது—இரண்டு மூன்று நாட்களுக்குள்ளாக ஒரு பிரச்னையைத் தீர்த்தால், அதற்கு ஆமை வேகம் என்று அர்த்தம்.

அடுத்தப்படியாக, புகையிலை வரி. இதிலிருந்து நமக்கு வரக்கூடிய வருமானம் 30 லட்சத்து 10 ஆயிரம் ரூபாய். இதை வசூலிக்க தனியாக செலவுகள் கிடையாது. விற்பனை வரி வசூலிப்பதற்காக இருக்கிற அதிகாரிகளே இதையும் வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதற்குப் பிறகு, மோட்டார் எண்ணெய் மீது போடுகின்ற வரி. பெட்ரோல் மீது காலனுக்கு ஆறணா வரி விதிக்கின்றோம். இதன் மூலமாகக் கிடைக்கும் வருமானம் ஒரு கோடியே மூவாயிரம் ரூபாய். நான் எதிர்பார்க்கின்றேன்—இதைப்பற்றி விவாதம் நடக்கின்றபோது நண்பர் ஸ்ரீ ராமசாமி அவர்கள் சொல்லலாம். "இந்தப் பெட்ரோலைவிட்டு வண்டி ஓட்டுவது கஷ்டமாக இருக்கிறது என்பதற்காகத்தான் கன்யாகுமரியில் தள்ளு மாடல் வைத்து நடத்துகிறோம்" என்று அவர் சொல்லலாம் நண்பர் ஸ்ரீ ராமசாமி அவர்களுக்கு முன்கூட்டியே சொல்லி விடுகிறேன். அவர்கள் எந்த நாட்டிலிருந்து வந்தாரோ, எந்த நாட்டைப்பற்றி அடிக்கடி பெருமையாகக் குறிப்பிடுகிறாரோ, அந்த நாட்டிலிருந்து கொண்டுவந்த சீதனத்தைச் சீராட்டிப்பாராட்டிக் காப்பற்றவேண்டுமென்பதற்காகவே அங்கே வைத்துக் கொண்டிருக்கிறோம் என்று அவருக்குச் சொல்ல விரும்புகிறேன்.

இவைதான் முக்கியமாக இந்த மான்யத்தில் அடங்கி யிருக்கின்றன. இதைப்பற்றி விவாதம் நடக்கின்றபோது சொல்லக்கூடிய குற்றச்சாட்டுகளையும் குறைகளையும் கவனித்து, என்னால் இயன்ற அளவு பதில் சொல்ல விரும்புகிறேன்.

8th July 1957]

MR. SPEAKER : Motion moved—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,36,91,700 under Demand VII—General Sales Tax and Other Taxes and Duties Administration".

The Opposition parties have decided to take up cut motion standing in the name of Sri K. Ramachandran. I now call upon the hon. Member Sri K. Ramachandran to move his cut motion.

SRI K. RAMACHANDRAN : Sir, I move—

"That the allotment of Rs. 1,36,91,700 under Demand VII—General Sales Tax and Other Taxes and Duties Administration—be reduced by Rs. 100".

MR. SPEAKER : Cut motion moved—

"That the allotment of Rs. 1,36,91,700 under Demand VII—General Sales Tax and Other Taxes and Duties Administration—be reduced by Rs.100".

Both the Demand and the cut motion are now before the House for discussion.

SRI K. RAMACHANDRAN : அவைத் தலைவர் அவர்களே, கனம் தொழில் மந்திரி அவர்கள் விற்பனை வரிக்காக கோரியிருக்கும் மான்யத்தின் மீது நான் இந்த வெட்டுப் பிரேரணையை இப்பொழுது பிரேரித்தேன். அதாவது, உணவுத் தானியங்களுக்கும், பாலுக்கும், பாலின் உப பொருள் களுக்கும் விற்பனை வரியிலிருந்து. . . .

SRI K. R. NALLASIVAM : On a point of information, Sir.

MR. SPEAKER : Point of information இப்பொழுது கேட்கக் கூடாது. Point of order வேண்டுமானால் கேளுங்கள். ஆனால், point of information-ஐப் point of order ஆகமட்டும் தயவு செய்து கேட்டு விடாதீர்கள்.

SRI K. R. NALLASIVAM : On a point of order, Sir. முந்தா நாள் நோட்டீஸ் கொடுக்கப்பட்ட வெட்டுப் பிரேரணையை நான் முன்னுடியே பிரேரேபிக்கவில்லை என்பதற்காக நான் இப்பொழுது பிரேரேபிக்க முடியாமல் போய்விட்டது. ஆகவே, வெட்டுப் பிரேரணை ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வெட்டுப் பிரேரணையைப் பிரேரேபிக்க தலைவர் அவர்கள் தயவு செய்து அனுமதிக்கும்படியாக நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : இதைப்பற்றி முந்தாநாள் நான் சொன்னபோது கனம் அங்கத்தினர் சபையில் இல்லை என்று நான் நினைக்கிறேன். அதாவது, மான்யத்தின்மீது பல பேர்கள் வெட்டுப் பிரேரணைகள் கொடுத்திருந்தாலும் ஒரே ஒரு வெட்டுப் பிரேரணைதான் பிரேரேபிக்கப்பட வேண்டும், அப்படி ஒரு வெட்டுப் பிரேரணை பிரேரேபிக்கப்பட்ட பிறகு, அதன் மீது கனம் அங்கத்தினர்கள் பேசினால் போதும் என்று நான் சொன்னேன். ஆகவே, ஒரு வெட்டுப் பிரேரணைதான் இந்த மான்யத்தில் பிரேரிக்கப்பட்டு விவாதம் நடக்கும். ஆதாவது 32-வது வெட்டுப் பிரேரணை இப்பொழுது பிரேரேபிக்கப்பட்டிருக்கிறது. மற்ற எந்த வெட்டுப் பிரேரணையும் [illegible] பிரேரணை செய்ய வேண்டியதில்லை என்பது என்னுடைய தீர்ப்பு.

SRI K. RAMACHANDRAN : அவைத் தலைவர் அவர்களே, இந்த 9-1 a.m. வெட்டுப் பிரேரணையிலே அடங்கியுள்ள விஷயங்கள் மிக [illegible]. முக்கியமாக, உணவு தானியங்கள், பால், தயிர், மோர் [illegible] பாலின் உபபொருள்களை விற்பனை வரி விதிப்பிலிருந்து விலக்களிக்க வேண்டும்.

[Sri K. Ramachandran] [8th July 1957

என்பது ஒன்று. இரண்டாவது நான் நீண்ட நாளாகக் கோரி வருகிற ஒரு கட்டத்தில் விற்பனை வரி கொண்டுவர வேண்டும் என்பது. மூன்றாவது சிறு சிறு வியாபாரிகளுக்கு இந்த விற்பனை வரியினுடைய தொந்தரவுகள் இருக்கக் கூடாது என்ற முறையிலே, 20 ஆயிரம் ரூபாய் உள்ள சிறிய வியாபாரிகளை இந்தச் சட்டத்திலிருந்து விதி விலக்கு அளிக்க வேண்டும் என்பது.

முதலாவது, உணவு தான்யங்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமென்று பல முறை நான் சொல்லியிருக்கிறேன். அதைப் பற்றி, சென்ற கூட்டத்தில், கவர்னர் பெருமான் உரையிலே மந்திரி அவர்கள் பேசும்போதுகூட, தாங்கள் ஒரு **comprehensive legislation** கொண்டுவரப்போவதாகவும், அதிலே இதைப்பற்றியெல்லாம் விவாதித்து முடிவு எடுப்பதாகவும் சொன்னார்கள். அதுபோல், ஒருமுனை விற்பனை வரியைப் பற்றியும் சொன்னார்கள். ஆனால், இப்பொழுது இருக்கும் நிலைமையைப் பார்த்தால்—அதிலும் நிதி மந்திரி அவர்களின் பட்ஜட் உரையைப் பார்த்தால், இந்த விற்பனை வரியை உண்மையிலேயே ஒரு காமதேனுவாக நினைத்து, அதிகமான வரியை விற்பனை வரியின் மூலமாகவே அவர்கள் எடுத்துக்கொள்வதற்கு முற்பட்டிருப்பது நன்றாகத் தெரிந்திருக்கிறது. கனம் அங்கத்தினர்கள் எல்லோருக்கும் தெரியும்—நயா பைசா வந்ததன் காரணமாக விற்பனை வரியிலே அதிக வரி விதிக்க வேண்டிய நிலைமையிலே, அதன் மூலமாக ஒரு கோடியே எழுபது லட்சம் ரூபாய் அதிகமாக மந்திரி அவர்கள் பெறப் போவதாகச் சொல்லியிருக்கிறார். விற்பனை வரியைப் பொருத்தவரையிலும் ஒரு நிரந்தரமான **comperhensive legislation** வரப்போகிறது என்று சொல்லிக்கொண்டு, அதே சமயத்தில் விற்பனை வரியிலிருந்தே அதிக வரியைப் பொதுமக்களிடமிருந்து வசூலிக்க வேண்டிய நிலைமையைப் பார்த்தால், இந்த அரசாங்கத்திலே இருக்கக் கூடியவர்கள் விரிவான ஒரு சட்டம் கொண்டுவருவார்கள் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். உணவு தானியங்களைப் பொருத்த வரையிலும் கேரள அரசாங்கம் வரியிலிருந்து விதிவிலக்கு அளித்திருக்கிறது. அதுபோலவே, என் நாமும் விதிவிலக்கு அளிக்கக் கூடாது? இந்த வரி சாதாரண ஏழை எளிய மக்களை வெகுவாகப் பாதிக்கிறது. ஆகவே, இந்த வரித் தொந்தரவுகள் வரிப் பளுவுகள் உணவுத் தான்யங்களைப் பொருத்தவரையில் இருக்கக்கூடாது. பொருளாதார நிலையில் ரொம்பவும் பின்தங்கியிருக்கும் ஏழை மக்களுடைய நிலையை உயர்த்தப்போகிறவர்கள் உணவு தான்யங்களாகிய உப்புக்கு வரி, அரிசிக்கு வரி என்று விதிப்பதால், அவ்வரியிலிருந்து ஏழை மக்களை விடுவிக்க வேண்டும் என்பதற்காகத்தான், உணவு தான்யங்கள் மீது வரி விதிக்கக் கூடாது என்று சொல்லி வருகிறேன். ஆகவே, என்னுடைய வெட்டுப் பிரேரணையை சபை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

பாலுக்கும், பாலின் உபப் பொருள்களுக்கும் இவ் வரி இருக்கக் கூடாது. அவைகளுக்கு இவ் வரிவிதிப்பிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும். நம் நாட்டிலுள்ள குழந்தைகள் சரியான வளர்ச்சியில்லாமல் இருக்கின்றன, அவைகள் நல்ல பலமுள்ள பிரஜைகளாக வளருவதில்லை என்பதற்கெல்லாம் காரணம், நம் நாட்டில் பாலினுடைய உற்பத்தி குறைவாக இருப்பதும், பால் சாப்பிடுவது மிகவும் குறைவாக இருப்பதும்தான் என்பது எல்லோரும் அறிந்த விஷயம். இதை மனதிற்கொண்டுதான் அரசாங்கம் ஒவ்வொரு வருஷமும் "பால் பெருக்கு தினம்" கொண்டாடுகிறார்கள். குழந்தைகளுக்குப் பால் இலவசமாக விநியோகம் செய்கிறார்கள். பால் நம்முடைய குழந்தைகளுடைய வளர்ச்சிக்கு முக்கியமான ஒரு பொருள். நம் நாட்டின் வருங்காலப் பிரஜைகள் நல்ல பலம் உடையவர்களாக இருக்க வேண்டுமானால், அவர்கள் பால், மற்றும் அதிலிருந்து கிடைக்கும் உப பொருள்களை அதிகமாக உட்கொள்ள வேண்டுமே. ஆகவே, இவைகளுக்கு இந்த வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

8th July 1957] [Sri K. Ramachandran]

சாதாரண ஜனங்கள் நல்ல குழம்பு, சாம்பார், முதலியவைகள் செய்து சாப்பிடாவிட்டாலும்கூட, சோற்றிலே மோரை ஊற்றியாவது சாப்பிடக் கூடிய நிலைமையில் அவர்களை விட்டு வைக்க வேண்டும், அந்த முறையிலே நான் சர்க்காரைக் கேட்டுக் கொள்வது என்னவென்றால், ஏழை மக்களுடைய நன்மையை மிகவும் கருதக்கூடியவர்களாக சர்க்கார் இருக்கிறார்கள் என்பதை காண்பிக்கக்கூடிய வகையிலாவது தயிர், மோர் போன்ற பாலின் உப பொருள்களுக்கு விதி விலக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏழை மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் உண்மையிலே இந்த சர்க்காருக்கு இருக்குமானால், இன்றைக்கு அவர்களுக்கு நிவாரணம் அளிக்கக் கூடிய முறையில் உணவுத் தானியங்கள் மீதும், பால், பாலின் உப பொருள்கள் மீதும் கண்டிப்பாக இந்த வரி விதிக்கப்படக்கூடாது. அந்த முறையிலே அப்பொருள்களுக்கு விதி விலக்கு அளிக்கும்படியாக சர்க்காரை நான் கண்டிப்பாக கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஒரு முனை விற்பனை வரியைப்பற்றி பல இடங்களில் பேசப்பட்டு வந்தது. சட்டசபையிலும் பல மெம்பர்கள்—இரு தரப்பிலிருந்தும்—காங்கிரஸ் மெம்பர்கள் உட்பட எடுத்துரைத்தார்கள். ஒரு முனை விற்பனைவரியைப்பற்றிப் பல இடங்களில் பேசப்பட்டது. இங்கும் இருதரப்பிலும் பல அங்கத்தினர்கள் காரசாரமாக எடுத்துரைத்தார்கள். ஒரு பொருள் மீது 2 சத விகிதம் வரி என்று வைத்துக்கொண்டோமானால், அது பலகைகளிலிருந்து மாறி வரும்போது 2 சத விகிதம் பலகைகளிலிருந்து ஒவ்வொரு கட்டத்திலும் ஏற்றப்படுகிறது. முடிவில், அதாவது **u'timate consumer**—பொது ஜனங்கள் வாங்கும்போது அதிக விலை ஏற்றப்பட்டு, 4 கட்டம் அல்லது 5 கட்டம் சுமத்தப்பட்டு, விலை அதிகமாகக் கூடிய நிலை ஏற்படுகிறது என்பதை எல்லோரும் உணருவார்கள். இம்முறைக்கு பதில் ஒரு கட்ட வரி கொண்டு வந்தால் வருமானம் பாதிக்கப்பட்டுவிடும் என்று அரசாங்கம் கருதுவதாக பத்திரிக்கை குறிப்புகளிலிருந்து தெரிந்தது. இதனால் வருமானம் பாதிக்கும் நிலை இல்லை. இந்த வரியை 5 கட்டம் 4 கட்டம் என்று வருத்தி வசூலிப்பதற்கு பதிலாக, இப்போது காலணாவுக்கு 5 கட்டத்தில் 1¼ அணா ஆகிறதே தவிர, அரை அணா அல்லது முக்காலணா ஒரு கட்டத்தில் விதித்தால் இப்போது கிடைக்கக்கூடிய வரிக்கு குறையாத வரி கிடைக்கும். ஒரு கட்ட விற்பனை வரி இருந்தால் அதிலிருந்து வியாபாரிகள் தப்பித்துக்கொள்ளநேரும் என்று நினைப்பதாகத் தெரிகிறது. வியாபாரிகள் தப்பித்துக்கொள்வதும் அதற்குள் அகப்பட்டுக் கொள்வதும் அரசாங்க நிர்வாகத்தைப் பொருத்தது, வசூலிப்பவர்கள் திறமையை பொருத்தது. வியாபாரிகள் தப்பித்துக்கொள்வார்கள் என்று சொல்வதை நாம் ஒப்புக்கொள்ள முடியாது. நாலு கட்ட அல்லது 5 கட்ட வரி விதிப்பு இருந்தால்தான் ஒரு கட்டத்திலாவது நிச்சயம் வசூலிப்போம் என்று சொல்வது ஜயநாயகத்துக்குப் பொருந்தாது. நிர்வாகத்திறமை குறைவு என்று எடுத்துச் சொல்வதற்கு பதில் வியாபாரிகள் மீது குற்றச்சாட்டு கூடாது. ஒரு கட்ட விற்பனை வரியை விதித்தால் தப்பலாம் என்று பார்த்தால், வெளி நாட்டிலிருந்து வரும் பொருள்களுக்கு துறைமுகங்களிலும், ரயில் நிலையங்களிலும் விதித்து விடலாம். இதிலிருந்து அவர்கள் தப்ப முடியாது. ஏனென்றால், இவைகள் அரசாங்கத்தின் முழுப் பொருப்பில் இருக்கின்றன. வெளிநாட்டிலிருந்து வரும் எதுவுமே தப்பமுடியாது, உள்நாட்டு விளை பொருள்களைப் பார்த்தால் ஒரு கட்டத்தில் போட்டு திறம்பட வசூலிப்பதால் வியாபாரிகள் மேலும் மேலும் பொருள்களின் விலையை ஏற்றக்கூடிய நிலை ஏற்படாது. ஆகவே இப்போதிருப்பதற்கு பதிலாக ஒரு முனை விற்பனை வரியைக்கொண்டுவர வேண்டும். இந்தப் பிரேரணையை சபை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

**Small dealers**-ஐப்பற்றிய வரையில் இப்போது ஓரளவு, சின்ன வியாபாரிகளுக்கு விதி விலக்களிக்கப்பட்டிருக்கிறது. சாதாரணமாக, காலணா, ஓரணாவிற்கு விற்பனை செய்யக்கூட மளிகைக்கடைக்கு விதி விலக்கில்லை. ஒரு மளிகைக்கடை என்றால் குறைந்தது 50 அல்லது,

60 சாமான்களாவது இருக்கும். அவைகளை வைக்க வேண்டுமானால் பெரிய இடமாகத்தான் இருக்கும். ஒரு சாமானுக்கு ஒரு தட்டு வீதம் அவ்வளவு சாமான்களையும் வைக்கவேண்டும். ஆகவே இடம் பெரிதாக இருக்கிறது, சாமான்கள் அதிகம் இருக்கிறது, கூட்டம் அதிகம் இருக்கிறது என்று இதை வைத்துக்கொண்டு அதிகாரிகள் தொந்தரவு செய்யக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். அந்தமாதிரிச் சிறியவியாபாரிகள் அந்த அதிகாரிகள் விதிக்கும் வரியை கட்டமுடியாத நிலையில் வியாபாரத்தை மூடிவிடவேண்டிய நிலை ஏற்படுகிறது. நடைமுறையில் அதிகாரிகள் நடந்துகொள்ளக்கூடிய தால் ஏற்படக்கூடிய கஷ்டம் சிறிய வியாபாரிகளை பொருளாதாரத்துறையில் முன்னேற முடியாமல் செய்கிறது. சிறு வியாபாரிகள் என்ற இப்போதுள்ள ஒரு லெவலை, 20 ஆயிரம் வரை வியாபாரம் செய்யக்கூடிய வியாபாரிகளை நீக்கவேண்டுமென்று சொல்லுகிறது. சின்ன வியாபாரிகள் வரியை கொடுக்க முடியாத காரணத்தால் தொழிலை மூடிவிட்டுப்போகும் நிலையை போக்க அவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்படலாம் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஆகவே, என்னுடைய வெட்டுப் பிரேரணையின் அடிப்படை நோக்கம் என்னவென்றால் ஏழை மக்கள் மீது இந்த வரிச்சுமை விழக்கூடாது. சினிமாவுக்கு இன்றைய தினம் மூன்று அணா இருக்கக்கூடியதை ஆறு அணா ஆக்கட்டும்; அதனால் வருமானம் அதிகமாகும். உணவுப் பொருள்கள் மீது வரியை எடுத்துவிட்டு மற்ற பொருள்களின் மீதுள்ள வரியை ஒரு கட்ட வரியாகக் கொண்டு வருவேன் என்று சொன்னால் சினிமாவுக்கு வரியை தாராளமாகப்போடட்டும், ஆட்சேபணையில்லை. ஏழை மக்களை பாது காக்க வேண்டும். ஆகவே இந்த வெட்டுப் பிரேரணையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இந்த சபையைக் கேட்டுக்கொள்கிறேன்.

**Mr. SPEAKER**: ஒவ்வொரு அங்கத்தினரும் 10 நிமிடங்களுக்கு மேலாகப் பேசாமல் இருந்தால் மிகவும் அனுகூலமாக இருக்கும்.

10-09 a.m. * **Sri R. SRINIVASA IYER**: Mr. Speaker, Sir, I am grateful to the Hon. Minister for Industries for pointing out the several taxes that are included in this Demand. But for all Members to understand clearly, at least in future, I suggest that these taxes are listed under the Demand. Perhaps the absence of the list is the reason for cut motions being limited only to general sales tax. I know that a closer scrutiny of the books supplied to us will enable us to know all these taxes. But I am not pleading only on my own behalf.

Sir, sales tax is a substitute or rather one of the main items of revenue to make up for the loss consequent on the introduction of Prohibition. Most of the cut motions distributed to us, I find, relate to the single-point tax. Two cut motions relate to exemption of foodstuffs, food materials, and foodgrains. I will come to these a little later. As for the single-point levy of the tax, I may say that this has been the subject of controversy from 1939 onwards. The sponsors of the single-point sales tax seem to be mainly traders. I desire to point out that they forget that they are not being taxed. They are only collectors as some other collectors of revenue. They are collectors of the sales tax from the common man that pays the tax. They do not themselves pay. The reason put forward by the trades association for the introduction of the single-point sales tax is, I find, that the collection expenses are very high. Rupees 11 crores is the approximate amount that we

8th July 1957] [Sri R. Srinivasa Iyer]

expect and the actual collection expenses come to Rs. 45 lakhs, as found in the books distributed to us. This is a very low percentage when compared with the expenses for collection of land revenue. So far as the reduction of collection expenses is concerned, I dare say that the Government know what percentage the collection charges should bear to the tax collected. The next point urged for the introduction of single-point tax is that there are large arrears. I desire to point out that large arrears are there not because any trader is not able to pay, but because he does not pay. There is evasion. Traders are expected to maintain accounts and pay the tax. Whenever they collect tax, they should keep it separately. If they do so, there will be no difficulty in paying arrears.

It was pointed out that some traders had been sent to jail for not paying sales tax in time or that they had been fined if they were not regular in payment of tax. I do not know if there are many cases where people had been sent to jail. In this connexion I may say that in Japan the civic consciousness of the people is far high. There the people collect the tax from others and pay it to the Government, because they are also responsible for the running of the Government. When such civic consciousness develops in India, there will be no trouble about collection of arrears at all.

Then, Sir, comes the question of harassment of businessmen by the officials. This question is intertwined with evasion of sales tax. I have already pointed out in this House that lorry loads of very valuable commodities are being transported outside this State. These transactions are not brought into account at all. I do not now want to expatiate on the several instances that I have come across. I had to dispense with certain people from being examined as witnesses because they would not produce their accounts. This shows the civic consciousness of these traders. If evasion of tax has got to be detected, certainly there will be some sort of trouble, when officials go and make a search of their accounts or want to know whether the traders are really keeping proper accounts. This does not mean that there is harassment by officers.

I have already suggested in this House, when the Sales Tax Amendment Bill was under discussion, that it was better to license all traders. All traders may be issued licences on payment of a small sum.

That is also suggested by the Trade Associations that traders should be licensed.

The next point is the single-point levy of sales tax. People who advocate the levy of single-point sales tax are not constructive and they have not suggested on what commodities it should be levied. I can understand that commodities which are produced in factories, like cement, coffee, tea or sugar could be subjected to a single-point levy. But what are the other commodities on which a single-

point sales tax could be levied. My hon. Friend who spoke before me said that the levy could be at three pies at five times, but he did not say on what commodities. It is rather difficult to identify and when once there is a levy, there is no stamp on that commodity that it had been taxed already. Those who advocate a single-point sales tax should better give constructive suggestions and work out on what commodities a single-point levy should be imposed and they should also say whether the Government will not lose a pie out of the Rs. 11 crores odd of tax under this head. Without giving some constructive suggestions, let us not go about generalising that single-point will be better than multi-point tax.

In this connection, I desire to point out that in Bombay, Madhya Pradesh, Bihar and the Uttar Pradesh, they tried this single-point levy, but failed to make the revenue and they have again changed over to multi-point taxation. There is also the report of the Taxation Enquiry Committee, a Committee of experts who have gone into this matter. By a single-point levy, we will be losing more than what we expect under this Demond. I will point out one or two cases. What about oil seeds, like gingelly, etc.? I will leave out coconut under exemptions. But there are several other oil seeds. Take for instance castor seeds. This is a commercial commodity and how to tax it at a single-point.

Sir, in the matter of controlling or rather administering sales tax, I desire to suggest that a separate detection staff or intelligence section should be started. Of course, I know that there will be representations that this would be an additional harassment. Well, when it comes to a question of taxation, people must be prepared to undergo some sort of harassment.

I will also suggest that there should be co-operation and co-ordination between the Sales Tax Department and the Income-tax department. People who pay sales tax at a certain percentage are also income-tax assessees. The Income-tax department have all the powers to call for all accounts and examine them. Whatever account is accepted by the Income-tax department can be accepted by the Sales Tax department also. Therefore, I make bold to give this suggestion. I find that last year also the Hon. Revenue Minister suggested the implementation of the suggestion but I find that no steps have so far been taken. Now that a special officer Dr. P. S. Loganathan, has been appointed, to go into the whole question, I believe that he would be evolving proper methods of collection of sales tax, without harassment either to officers or the persons who pay taxes.

There is one more thing. The Central Government have removed newspaper from the definition of goods. In the business of daily newspapers, weeklies and monthlies, they are making huge profits, more so from advertisement. When contractors are asked to pay sales-tax on their turn-over, I would suggest that these





newspaper owners or editors who make a lot of money from advertisements may also be included in the definition of goods and taxed.

There is one other thing. On the question of economy in administration, I have to refer to the Sales-tax Tribunal which is situated at Madras and has got to deal with cases arising from far off Tinnevelly district. Men who do not get justice going up to the Deputy Commissioner have to go to Madras before the Appellate Tribunal spending a lot of money. I suggest that following the method adopted by the Andhra Government, we may establish tribunals in districts with District Judges, abolishing the Tribunal at Madras. We can appoint the District Judge in each district to be the sales-tax Tribunal, as gentlemen of the standard of District Judges are only the President of the Tribunal here.

I also find that in the 1957 Audit Report that has been circulated to us, a loss of about Rs. 5 lakhs odd has been pointed out under this head due to remissions granted and to misappropriation. Of course, that is a matter for the Government to look into and see that there are no misappropriations or remissions and such things are reduced to the minimum. A modern State which has to find the wherewithal to provide all the amenities that people demand, has got to be strict in the methods of taxation.

In this connection I cannot speak without referring to the fact that we have got also to understand and remember that there is agitation in the administration departments for greater amenities without a corresponding effort that they must also turn out the maximum amount of work. I do not want to say what I have got in my mind, but I will say that I am sorry to note that the tendency is developing that the go-slow policy that is advocated and adopted in Mills and other factories is also being adopted in certain of the Government departments, in the lower orders. I find that the amount of work turned out some ten years or seven years ago is not turned out now in the departments. I do not mean to attack any particular department or departmental head. But that is what is happening. But it has to be accepted that in many offices we find that most educated youngmen are adopting this policy and consequently there is lowering of efficiency. To this extent there is difficulty and we have to think of not losing a good portion of our income in the revenue of our State. At the same time we should not hazard into new places and new methods of taxation. Thus, when this method of multi-point tax has been found to work well, we cannot afford to adopt other dubious methods, just as some proprietors do, dismissing a servant to-day and afterwards finding himself in difficulty, calling the old servant again. I am therefore against the introduction of single-point sales-tax whatever the reasons or arguments might be. As I have pointed out such a change cannot work well. There is power vested in the Government under Section 6 of the General Sales Tax Act to exempt certain goods or certain classes of goods. The

latter portion has been included in the recent Sales Tax Amendment Act. Vegetables have been included in the exemption list, but yam is not considered to be a vegetable.

THE HON. SRI R. VENKATARAMAN : May I just point out that it is not considered a perishable vegetable? It is a vegetable, of course.

SRI K. VINAYAKAM : After some time, it also perishes.

* SRI R. SRINIVASA IYER : It is better that we make all taxation enactments clear both to the tax-payer and to the tax-collector. ' Vegetable ' has to be defined. Shall we say, plantain leaves are vegetables? They are not, but they are exempt from sales tax. We do not eat them. That is why, in the beginning, I pointed out that cut motions are worded in different ways. Some mention about foodstuffs, some about food materials and others about food-grains. We eat groundnut, which is a commercial crop. Will we call it foodstuff? Certain articles are specifically exempted from sales tax now. Coconut is one such. It is an edible, but it is a commercial crop. We had been agitating for its exemption from sales tax and last year we thought our demand was almost met. The Hon. the Minister for Revenue, while moving the demand last year, agreed to exempt coconut from sales tax. We have to grow coconuts, now that we have lost Kerala, which is the best coconut-growing area in the whole world. It is but proper that we encourage and develop this industry. While agreeing to exempt coconut the Hon. the Minister for Revenue said that just then he could not think of exemption since there were new unexpected demands for money on account of the cyclone, etc. Sir, that situation has changed and it is time that we included coconut in the exemption list. Then, Sir, when we exempt vegetables from sales tax, we should exempt all vegetables. There is some argument about green chillies not being exempted. It is said that it is not being taken independently and has to be taken along with some other foodstuffs. So, this also has to be considered when we take up the question of exemption. Then, the rate of tax on foodgrains has been lowered. Is groundnut a grain? There are several grains which are grown but which are not edibles. Take biscuits. Biscuits are manufactured abroad and imported into this country. There is an import tax. Are we to subject biscuits to sales tax also? Therefore it is, I suggest that everything should be made clear. The rule of interpretation is that taxation measures should be interpreted in favour of the subject as far as possible. Do not use dubious terms ' food materials ', ' food-stuffs ' and ' foodgrains '. While, therefore, advocating that the multi-point levy has got to continue if we are not to lose any portion of this valuable revenue, I say that in any taxation measure, we must make everything clear. I hope Dr. P. S. Loganathan, the world-renowned economist, who is examining this question, will evolve some method which will enable the Government to bring in a consolidated Bill amending the Sales Tax Act very soon.

8th July 1957]

*SRI R. KRISHNASAMI NAIDU : கனம் சபாநாயகர் அவர்களே, விற்பனை வரி இலாகா மானியத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். வியாபரிகளுக்கு விற்பனை வரியின் மூலம் ஏற்படும் கஷ்டங்களைப் பற்றி இம்முறை மட்டுமின்றி இதற்கு முன்பும் இந்த சபையில் இரு தரப்பு அங்கத்தினர்களும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். வியாபாரிகளுக்கு விற்பனை வரி விஷயத்தில் நிர்வாக முறையினால் பல கஷ்டங்கள் இருக்கின்றன என்பதை யாரும் குறைத்துச் சொல்லுவதற்கில்லை. வியாபாரிகள் கணக்குகளைச் சரியாக வைத்துக்கொள்வதற்காகவே அதிகமான ஆட்களை வேலையில் வைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. சிறிய வியாபாரிகள் கூட அவர்களுடைய வருவாய் நிலை அனுமதிக்கும் அளவிற்கும் அதிகமாக ஆட்களை வேலையில் வைத்துக்கொண்டு கஷ்டப்படுகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், விற்பனை வரியினால் கஷ்டப்படுகிறவர்கள் அதிகமாக இருக்க, அவர்களை விட அதிகமான அளவில் வரியிலிருந்து தப்பித்துக்கொள்பவர்களின் எண்ணிக்கை இருக்கிறது என்பதையும் மறுப்பதற்கில்லை. அரசாங்கத்திற்கு விற்பனை வரியின் மூலம் கிடைத்துவரும் வருமானத்தின் அளவை விட வரியிலிருந்து தப்பித்துக்கொள்பவர்கள் கொடுக்க வேண்டிய தொகையின் அளவு அதிகமாக இருக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் அதற்காக ஒழுங்காக வியாபாரம் செய்துவருபவர்களுக்கு அரசாங்கம் நிர்வாகத்தினால் ஏற்பட்டுவரும் கஷ்டங்களை அதிகரிக்க வேண்டிய அவசியம் இல்லை. இந்தப் பிரச்னைகளையெல்லாம் கவனிப்பதற்கு சர்க்காரால் நியமிக்கப்பட்டிருக்கும் டாக்டர் லோகநாதன் அவர்கள் சரியான முடிவு காண்பார்கள் என்று நானும் நம்புகிறேன். விற்பனை வரியால் ஏற்படும் கஷ்டங்களுக்காக அரசாங்கத்தாரையோ, மற்ற தரப்பினரையோ குறை கூறவேண்டிய அவசியம் இல்லை. இந்தக் கஷ்டங்களை எல்லோரும் உணருகிறோம். இந்தக் கஷ்டங்களை எவ்வாறு நிவர்த்தி செய்வது என்று எல்லோரும் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே அந்தக் கஷ்டங்களை நிவர்த்தி செய்வதற்கு நாம் நல்ல முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம். அந்த முயற்சி நல்ல பலன் அளிக்கும் என்று நாம் நம்பலாம்.

ஒருமுனை விற்பனை வரியைப் பொறுத்த வரையில், சில பொருள்களுக்கு ஒரு முனை விற்பனை வரி விதிக்கலாம் என்று யோசனை கூறப்படுகிறது. நானும் அந்த யோசனையை சில சமயங்களில் குறிப்பிட்டு வருகிறேன். பருத்திக்கொட்டைக்கு சுலபமாக ஒரு முனை விற்பனை வரி விதிக்கலாம். பருத்தியைக் கொட்டை பிரித்துப் பஞ்சு எடுக்கும் தொழிற்சாலைக்குக் கொண்டு (ginning factory) வந்து அதிலிருந்து பஞ்சு எடுக்க வேண்டும். ஜின்னிங் பாக்டரியில் இவ்வளவு பஞ்சுக்கு இத்தனை பொதி பருத்திக்கொட்டை கிடைக்கிறது என்று நிர்ணயித்துவிடலாம். அப்படி நிர்ணயித்து பருத்திக்கொட்டைக்கு ஒரு முனை விற்பனை வரி விதிக்கலாம். மற்ற சில பொருள்களுக்கு ஒரு முனை விற்பனை வரி விதித்திருப்பதைப் போல உடனடியாக பருத்திக்கொட்டைக்கும் ஒரு முனை விற்பனை வரி விதித்தால் மிகவும் சௌகரியமாக இருக்கும் என்று கருதுகிறேன். டாக்டர் லோகநாதன் அவர்களுடைய ரிப்போர்ட்டோ ஆலோசனையோ அரசாங்கத்திற்கு வரும் வரையிலும் வியாபாரிகளிடத்தில் அதிகாரிகள் சுமுகமாக நடந்துகொள்ள வேண்டுமென்று அதிகாரிகளுக்கு அரசாங்கம் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது விற்பனை வரி அதிகாரிகள் பல இடங்களில் கடைகளில் சென்று சோதனைகள் செய்வதுடன் மட்டுமின்றி, சில கணக்குகளைச் சோதனை செய்ய வேண்டுமென்று கூறி வியாபாரிகளுடைய வீடுகளிலும் சோதனையிடுகிறார்கள். அதிகாரிகள் அவர்களுக்கு இருக்கும் அதிகார வரம்பையும் மீறிக் கூட சோதனை நடத்துகிறார்கள் என்ற புகார்கள் பரவலாக இருந்து வருகின்றன. இப்படிப்பட்ட காரியங்களைத் தங்களுக்கு அவமானமாக வியாபாரிகள் கருதுகிறார்கள். வியாபாரிகளுடைய இந்தக் கருத்தையும் நாம் புறக்கணிக்கக்கூடாது. வியாபாரிகளுடன் மிகவும் சுமுகமாக நடந்து கொள்ள வேண்டும் என்றும், வியாபாரிகள் சமுதாயத்தில் [illegible]

கொந்தளிப்போ, கோபக் கனலோ ஏற்படாதவாறு சோதனைகளை நடத்த வேண்டும் என்றும், அதிகாரிகளுக்கு அரசாங்கம் தெரிவிப்பது மிகவும் அவசியம் என்று கருதுகிறேன்.

சினிமாப் படக் காட்சிகளுக்கு வரி விதிப்பது கூட இந்த மானியப் பிரேரணையில் காணப்படுகிறது என்று நான் கருதுகிறேன். சினிமாப் படக் காட்சிகளுக்கு அதிக வரி விதிக்கலாம் என்றே நான் கருதுகிறேன். அப்படி வரி விதிப்பதன் மூலம் ஏழை எளியவர்களுக்கோ சமுதாயத்திற்கோ கஷ்டம் ஏற்படும் என்று நான் கருதவில்லை. இந்த சந்தர்ப்பத்தில் ஒன்று கூற நான் விரும்புகிறேன். கிராமப் புறங்களில் இரு சினிமாத் தியேட்டர்கள் ஒன்றுக்கொன்று மிக அருகாமையில் இருக்கக்கூடிய இடங்களிலும் அவைகளுக்கு லைசென்ஸுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சின்னப் பஞ்சாயத்துக்களில் கூட ஒரு சினிமாக் கொட்டகைக்கும் மற்றொரு சினிமாக் கொட்டகைக்கும் இடையில் நான்கு பர்லாங் தூரத்திற்கு மேல் இருந்தால் அவைகளுக்கு லைசென்ஸுகள் கொடுக்கலாம் என்று விதிகள் நிர்ணயிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

ஆகவே கிராமப் புறங்களில் போய்ப் பார்த்தால் தெரியும். தங்களுடைய உழைப்பின் மூலமாகக் கிடைக்கிற சிறிய வருவாயையும் கூட அவர்கள் இந்தச் சினிமாக் கொட்டகைகளுக்குச் சென்று இழந்துவிட்டு வருகிறார்கள் என்கிற விஷயம். முனிசிபல் ஏரியாக்களில் இத்தனை சினிமாத் தியேட்டர்களுக்கு மேல் இருக்கக் கூடாது என்று நாம் கட்டுப்பாடு செய்திருப்பது போலவே, இத்தனை ஜனத்தொகை உடைய பஞ்சாயத்து ஏரியாக்களைத் தவிர இதர சிறிய சிறிய கிராமங்களில் எல்லாம் சினிமாத் தியேட்டர்களை ஏற்படுத்தக் கூடாது என்றே அரசாங்கம் ஒரு ஏற்பாடு செய்ய வேண்டும்.

இதன் மூலம் கிராம மக்கள் யாருக்கும் எவ்விதத் தீங்கும் உண்டாகப் போவதில்லை. அவர்களுடைய ஒழுக்கம் வளர்வதற்கோ, நாகரிகம் வளர்வதற்கோ, கல்வி வளர்வதற்கோ இந்தக் காட்சிகளைப் பார்த்தாக வேண்டிய அவசியமும் கிடையாது. அதற்கு மாறாக இந்தப் படங்களைப் பார்த்துக் கொண்டு வருகிற மக்களுடைய ஒழுக்கம், பண்பாடு, நாகரிகம், செல்வம் எல்லாம் நாளுக்கு நாள் சிதைந்து சிதைந்து வருகிறதை நாம் எல்லோரும் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். சினிமாக் கதைகள் எல்லாம் இந்த வகையில்தான் அமைந்திருக்கின்றன. நகரங்களை எடுத்துக்கொண்டால் பஸ்ஸுக்காக சில நிமிஷங்கள் காத்திருந்து பொறுமையிழந்து குறை கூறுகிறவர்கள் எத்தனை பேர்கள். சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை வந்தால் அவசியம் சினிமாவுக்குத்தான் போக வேண்டுமென்ற எண்ணத்தில் அது கடமையென்றுகூட எண்ணி பெரிய க்யூ வரிசையில் இரண்டு மணிக்கும், மூன்று மணிக்கும் வெய்யில் உச்சி மண்டையைப் பிளக்கிற நேரத்தில் வியர்வை ஒழுக டிக்கெட்டுகளுக்காக நின்றுகொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கலாம். இப்படிப்பட்ட மனோபாவம் நாட்டில் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டு வருவதை நம்முடைய துரதிருஷ்டம் என்றுதான் சொல்லவேண்டும். சினிமாப் பார்க்க வேண்டுமென்ற ஒரு வெறி நாளுக்கு நாள் வளருகிறது. முக்கியமாக நம்முடைய நாகரிகச் சிதைவுக்கும், ஒழுக்கச் சிதைவுக்கும், பண்பாடு சீரழிந்து போவதற்கும் ஜனத்தொகை பெருகுவதற்கும் இந்தச் சினிமாதான் காரணம் என்பதை யாராலும் மறுக்க முடியாது. தணிக்கை போர்டார் இவ்விஷயத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டி இருக்கிறது, வெறும் கதை வசனத்தைப் படித்துவிட்டு அனுமதிப்பது என்று இராமல், கதை, வசனம், நடிப்பு, நடிக்கும்போது அவர்கள் மக்கள் உள்ளத்திலே உண்டாக்க விரும்புகிற உணர்ச்சி இவைகளை எல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு படத்தைத் தணிக்கை செய்ய வேண்டுமென்பதாக நான் கேட்டுக்கொள்ளுகிறேன். சினிமாப் படங்களின் மூலமாக நல்ல கருத்துக்களை, உயர்ந்த அறிவை மக்களிடையே பிரச்சாரம் செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதை நான் ஒப்புக்கொண்டாலும், அந்த முறையில் படங்கள் தயாரிக்கப்படுவது இல்லாத காரணத்தினால் இதிலே அதிக கவனம் செலுத்தவேண்டும் என்பதாகச்

8th July 1957] [Sri R. Krishnasami Naidu]

சொல்ல விரும்புகிறேன். நம் நாட்டு எதிர்கால மக்களின் ஒழுக்கம், பண்பாடு, நாகரிகம், கலாச்சாரம், எல்லாவற்றையும் வளர்க்கவோ, அழிக்கவோ கூடிய மிக முக்கியமான பிரசார சாதனமாக சினிமாப் படங்கள் இருக்கின்றன. ஆகவே நம்முடைய எதிர்காலம் எப்படி இருக்க வேண்டும் என்பதைச் சிந்தித்துப் பார்த்து இது விஷயத்தில் அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் சினிமாத் தியேட்டர்களைச் சுத்தமாக வைத்துக்கொள்வதற்கும் தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் முடித்துக்கொள்ளுகிறேன்.

Sri V. K. KOTHANDARAMAN: கனம் தலைவர் அவர்களே, இந்த மான்யத்திற்கு என்னுடைய பெயரிலே உள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்தும், ஸ்ரீ ராமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுப் பிரேரணையை ஆதரித்தும் பேசுவதற்கு நான் முன்வந்துள்ளேன். 10-34 a.m.

இன்றைக்கு பல முனை விற்பனை வரி இருப்பதன் காரணமாக அரசாங்கத்தின் வருமானம் பாதிக்கப்படுகிறது; பொது மக்களும் பாதிக்கப்படுகிறார்கள். பெரிய பெரிய வியாபாரிகளும் கொள்ளை லாபம் அடிப்பதற்குச் சாதகமாக இருக்கிறது; அதே சமயத்தில் சிறிய சிறிய வியாபாரிகளையும் தவறான பாதையில் இழுத்துச் செல்வதற்குக் காரணமாக இருக்கிறது; அதே போன்று உணவுப் பொருள்களுக்கு விற்பனை வரி போட்டிருக்கிற காரணத்தினால் உணவுப் பொருள்களின் விலை ஏறுவதற்கும் காரணமாக இருக்கிறது; இவற்றையெல்லாம் இப்போது விளக்கிச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக சர்க்கரையின்பேரில் இப்போது போட்டு இருக்கக்கூடிய விற்பனை வரியை எடுத்துக்கொண்டால் சென்னை நகரத்தைப் பொறுத்த மட்டில் பல முனை விற்பனை வரி மாத்திரமல்ல. ஒரு ரூபாய்க்கு ஒரு அணா வீதம் எக்ஸ்ட்ரா டாக்ஸ் வேறு 14-4-56-ல் இருந்து போடப்பட்டிருக்கிறது. இந்தச் சென்னையில் மாத்திரம் 5 வாகன் சர்க்கரை இறக்குமதி செய்யப்படுகிறது. அந்தச் சர்க்கரை ஆந்திராவில் இருந்தும், கான்பூரில் இருந்தும் இறக்குமதி செய்யப்படுகிறது. இங்கே இருக்கக்கூடிய ராயபுரம் ஸ்டேஷனிலும், சால்ட் கொட்டகையிலுமே இறக்குமதி செய்யப்படுகிறது. நாள் ஒன்றுக்கு ஐந்து வாகன் என்று சொன்னால் ஒரு வாகனில் 200 மூட்டைகள் வீதம் ஆயிரம் மூட்டைகள் இறக்குமதி செய்யப்படுகின்றன. ஒரு மூட்டைக்குச் சராசரி எட்டு ரூபாய் வைத்துக்கொண்டாலும் ஒரு நாள் ஒன்றுக்குச் சர்க்காருக்கு எட்டாயிரம் ரூபாய் வருமானம் வரவேண்டும். அப்படிப் பார்த்தால் ஒரு மாதத்திற்கு இரண்டு லட்சத்து நாற்பது ஆயிரம் ரூபாய் சென்னை நகரத்தை பொறுத்தமட்டில் வரவேண்டும். அதுபோன்று வருகிறதா என்றால் நிச்சயமாக வரவில்லை என்பதை நான் சர்க்காருக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இது எப்படி ஒளிக்கப்படுகிறதென்றால் பெரிய பெரிய வியாபாரிகள் எல்லாம் தப்பான பெயர்களில் வரவழைப்பது, வந்த சர்க்கரையை அங்கிருந்து கொண்டே அதிகாரிகளின் உதவியோடு பலபல சிறிய வியாபாரிகளின் பேரில் பொய்யாகப் போட்டு அப்புறப்படுத்தும் வியாபாரத்தில் ஈடுபடுகிறார்கள். இதனால் பொதுமக்களும் பாதிக்கப்படுகிறார்கள். சிறிய வியாபாரிகளும் பாதிக்கப்படுகிறார்கள். பெரிய வியாபாரிகள் இந்த டாக்ஸைக் கொடுக்காமல் ஏமாற்றி விடுவதால் அரசாங்கத்திற்கும் வருமானம் குறைந்துபோகிறது.

பல முனை விற்பனை வரியினால் சர்க்காருடைய வருமானம் எப்படிப் பாதிக்கப்படுகிறது என்பதைச் சர்க்கார் பரிசீலனை செய்ய விரும்பினால் சென்னை நகரிலுள்ள இந்த இரண்டு ரயில்வே நிலையங்களில் மாத்திரம் வந்து இறங்குகின்ற சர்க்கரை மூட்டைகள் எத்தனை, அவை எங்கிருந்து வந்திருக்கின்றன, யார் பெயருக்கு வந்திருக்கின்றன, என்பன போன்ற சரியான தகவலைச் சேகரிக்க ஏற்பாடு செய்தால் நன்றாகத் தெரியும். இவற்றைக் கண்காணிக்க சர்க்கார் இப்போது அதிகமான அதிகாரிகளை

[Sri V. K. Kothandaraman] [8th July 1957

போட்டிருக்கிறார்கள். அந்த அதிகாரிகளும் பெரிய வியாபாரிகளுக்கு எப்படி உடந்தையாக இருந்துவருகிறார்கள் என்பதும் தெரியவரும் என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

இது மாத்திரமல்ல. இப்போது வெல்லத்திற்கு ஒரு முனை வரி இருக்கிறது. நூற்றுக்கு ஐந்து ரூபாய் வரி விதிக்கப்படுகிறது. ஆனால், புளி, நாட்டுச் சர்க்கரை முதலியவற்றிற்கு பல முனை விற்பனை வரி தான் விதிக்கப்படுகிறது. இதனால் பெரிய வியாபாரிகள் என்ன செய்கிறார்கள் என்றால், தங்களுக்கு வருகின்ற வெல்ல மூட்டைகளை எல்லாம் நாட்டு சர்க்கரை மூட்டையாக வைத்து, விற்கும்போதும் அப்படியே செய்து நூற்றுக்கு ஐந்து ரூபாய் வரி கட்டுவதற்குப் பதிலாக, ஒரு ரூபாய் ஒன்பதணா கட்டி சர்க்காரை ஏமாற்றுகிறார்கள். இந்த முறையில் தவறுகள் நடக்கின்றன.

குறிப்பாக 1939-ம் ஆண்டில் விற்பனை வரியைக் கொண்டுவந்த போது ரூபாய்க்கு ஒரு தம்படி வீதம் வசூலித்தார்கள். ஒரு தம்படி கணக்கின்படியே வருஷம் ஒன்றுக்கு அரசாங்கத்திற்கு அப்போது மூன்று கோடி ரூபாய் வருமானம் வந்ததாகத் தெரிகிறது. ஒரு தம்படி விதிக்கப்பட்ட காலத்தில் விலைவாசிகள் எப்படி இருந்தன என்பது நமக்குத் தெரியும். இப்போது முன்பு இருந்த விலைவாசிக்கு நான்கு மடங்குக்கு மேல் உயர்ந்துவிட்டது. ஒரு தம்படி கணக்கின்படியே பார்த்தாலும் இப்போது நமக்கு, தற்கால விலைவாசிகளை அனுசரித்து 12 கோடி ரூபாய் வருமானம் வரவேண்டும். ஒரு தம்படி வரி என்றால் 12 கோடி வருமானம் வர வேண்டுமென்றால் மூன்று தம்படி வரி என்றால் 36 கோடி ரூபாய் வருமானம் வர வேண்டும். ஆந்திரா, கேரளம் இவை பிரிந்துவிட்டதன் காரணமாக மூன்றில் ஒரு பங்கு வருமானம் போய்விட்டது என்றாலும் 24 கோடி ரூபாய் வந்தாகவேண்டும். ஆனால் பத்து கோடி சில்லரை தான் வந்துகொண்டிருக்கிறது. இது பலமுனை வரியினால் ஏற்படுகிற விளைவு என்பதைச் சிந்தித்துப் பார்த்தால் தெரியும் என்று சொல்ல விரும்புகிறேன். அதே போன்று உணவுப் பொருள்களைப் பொறுத்தவரையில் அதை பாங்கில் அடகு வைத்து பணம் கொடுக்கப்படுகிறது—விவசாயிகள் என்கிற பெயரில், நிலம் யார் பெயரில் இருக்கிறதோ அவர்களுடைய பெயரில் ஆயிரம் மூட்டை விளைவு என்று எடுத்துக்கொண்டால் பத்தாயிரம் மூட்டை விளைந்தது என்று பாங்கியில் அடகு வைத்து பணம் வாங்குகிறார்கள். அதற்கு Tax கிடையாது. இந்த மாதிரி எனக்குச் சொந்தமாக நிலம் இருக்கிறது என்று சொல்லி உணவுப் பொருள்களை பாங்கில் வைத்து எந்த விதமான Tax-ம் கொடுக்காமல் ஏமாற்றிக்கொண்டு வருகின்றனர். ஆகையினால் விவசாயிகளாக இருந்தாலும் கூட அவர்கள் பேரிலும் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு வருமான வரி விதிப்பதாக இருந்தால் வியாபாரிகள் அதிகமாக பாதிக்கப்பட மாட்டார்கள். சர்க்காருடைய வருமானமும் அதிகரிக்கும் என்பதை நாம் பார்த்தாக வேண்டும். இந்த நிலைமையிலே இப்போது இதே போன்று பல முனை விற்பனை வரி இருப்பதால் இது பொதுமக்களைப் பாதிக்கிறது. சிறு வியாபாரிகளைப் பாதிக்கிறது. சர்க்காரினுடைய வருமானமும் பாதிக்கப்படுகிறது. ஆகவே இந்தப் பல முனை விற்பனை வரியை மாற்றி ஒரு முனை வரியாக்க வேண்டும். அதிலும் உணவுப் பொருள்களின் மீதுள்ள விற்பனை வரியை பரிபூரணமாகத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றுதான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். சமீபத்தில் கேராளாவில் உணவுப் பொருள்களின் மீதுள்ள வரியை பரிபூரணமாகத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். மற்ற பல பொருள்களின் மீது ஒரு முனை விற்பனை வரி போடுகிறார்கள். சமீபத்தில் மத்திய சர்க்கார் நிதி மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் உணவுப் பொருள்கள் மீது விற்பனை வரி விதிக்க வேண்டிய அவசியமில்லை என்று பேசி இருக்கிறார்கள் என்பதை எல்லோரும் அறிந்திருப்பார்கள். ஆகவே உணவுப் பொருள்கள் மீதுள்ள வரியை நீக்கவேண்டுமென்று எல்லோரும் கூறுகின்றனர். இந்த விற்பனை வரி முறைகளைப் பற்றி பரிசீலனை செய்து ஒரு முடிவுக்கு வருவதற்காக டாக்டர் லோகநாதன் அவர்களை அரசாங்கம் நியமித்திருக்கிறது. அவருக்கு வியாபாரிகளுடைய குறைகள் எல்லாம்



8th July 1957] [Sri V. K. Kothandaraman]

தெரியாது என்றுதான் சொல்லுவேன். ஏற்கனவே இதற்கென்று சட்ட சபை அங்கத்தினர்கள் அடங்கிய Sales tax அட்வைஸரி கமிட்டி ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதிலிருந்து இதுவரையிலும் எந்தவிதமான ஆலோசனையும் வரவில்லை என்று தெரிகிறது. தனிப்பட்ட அதிகாரியைப் போடுவதன் மூலம் பொது மக்களுடைய நிலைமையையும் மற்ற வியாபாரிகளுடைய நிலைமையையும் நன்றாகப் புரிந்துகொள்ள முடியாது. ஏற்கனவே எப்படி ஒரு கமிட்டி அமைக்கப்பட்டதோ அதே போன்று வியாபாரிகளுடையவும், மற்றும் இருக்கக்கூடிய எல்லாக்கட்சிகளுடைய பிரதிநிதிகளும் அரசாங்க அதிகாரிகளும் சேர்ந்த ஒரு கமிட்டியை அமைத்து பரிசீலனை செய்வதின் மூலமாகத்தான் இவைகளை எல்லாம் நாம் சரியான முறையில் புரிந்துகொள்ள முடியும். அப்போதுதான் இதைப் பற்றி ஒரு நல்ல முடிவுக்கு வர முடியும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இதைப் பற்றி சொல்லுகின்ற நேரத்தில் "இதில் சர்க்காருக்கு மாத்திரம் பொறுப்பு அல்ல, எதிர்க் கட்சிக்காரர்களுக்கும் பொறுப்பு இருக்கிறது" என்று சொல்லி தட்டிக் கழிக்கிற நேரத்தில் இன்றைக்கு கம்யூனிஸ்டுகள் எங்கே போகிறார்கள், என்ன பேசுகிறார்கள், எங்கே லெட்டர் அனுப்புகிறார்கள், எங்கே இருந்து லெட்டர் வருகிறது என்றெல்லாம் கவனித்துக் கொண்டிருக்கிற C.I.D. இலாகாவை கொண்டு யார் எல்லாம் சர்க்காரை ஏமாற்றிக்கொண்டு வரி கொடுக்காமல் இருக்கிறார்கள் என்பதையும், இதிலுள்ள அதிகாரிகள் என்னென்ன தவறான பாதைகளில் போகிறார்கள் என்பதையும் கண்டுபிடிக்க ஏன் உபயோகிக்கக் கூடாது என்று கேட்கிறேன். ஆகவே இதில் கவனம் செலுத்தினால் அரசாங்கத்தை ஏமாற்றுபவர்களை கண்டுபிடிக்க முடியும் என்பதை இந்த நேரத்தில் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். அப்படியில்லை என்றால், மேலும் மேலும் விலைவாசி உயர்ந்துகொண்டுதான் இருக்கும். வியாபாரிகளுடைய நிலைமையும் மோசமாகத்தான் இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதோடு இன்றைக்கு காய்கறிகளுக்கு விற்பனை வரி இல்லை என்று சொல்லுகிற நேரத்தில் வெங்காயம், வெற்றிலை போன்றவைகளுக்கு வரி போடாமல், வெள்ளைப் பூண்டு, பச்சை மிளகு, தேங்காய், இவைகளுக்கு வரி போடப்பட்டிருக்கிறது. வெங்காயத்திற்கும் வெள்ளைப்பூண்டிற்கும் பெரிய வித்தியாசம் இல்லை. இரண்டும் ஒரே விதத்தில்தான் சாகுபடியாகிறது. இரண்டும் அழுகும் தன்மையுடையதுதான். தேங்காயும் அழுகும் தன்மையுடையதுதான். ஆகவே இந்தப் பொருள்களின் மீதுள்ள வரியைக் கண்டிப்பாக தள்ளுபடி செய்ய வேண்டும். ஆகவே இம்மாதிரியான வரிகள் இருக்கக் கூடாது என்றும், அவைகளை உடனடியாகத் தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

*SRI A. V. P. ASAITHAMBI : அவைத் தலைவர் அவர்களே! பொது விற்பனை வரியைப் பற்றி கொண்டு வந்த மான்ய கோரிக்கைகளை முன் மொழிந்த கனம் தொழில் அமைச்சர் வெங்கட்ராமன் அவர்களை ஆதரித்து சிலர் பேசினார்கள். ஆனால் இந்த பக்கத்தில் இருக்கிற எங்களுடைய தோழர்கள் அதை எதிர்த்து ஒரு முனை வரியை கொண்டுவர வேண்டுமென்று பேசினார்கள்—இந்த மான்ய கோரிக்கையை முன் மொழிந்த கனம் மந்திரி அவர்கள் பேசுகிறபொழுது அவர்களுடைய திறமையை யெல்லாம் நமக்கு நன்றாக எடுத்துக்காட்டினார்கள்—இந்த சபையில் கேட்கப்படுகிற ஒவ்வொரு கேள்விகளுக்கும் பதில் சொல்லவேண்டிய கடமை மந்திரிகளுக்கு உண்டு. அந்த மாதிரி எழுப்பப்படுகிற கேள்விகளுக்கு நேரடியான பதிலை சர்க்கார் கட்சித் தலைவர் கனம் சுப்பிரமணியம் அவர்கள் தராவிட்டாலும் நாம் கேட்காத சில கேள்விகளுக்கு பதில் சொல்லுவார்கள். அதே போன்று கனம் வெங்கட்ராமன் அவர்கள்.... 10-47 a.m.

SRI R. CHIDAMBARA BHARATHI : Sir On a point of order கனம் மெம்பர் அவர்கள் Sales tax demand-ஐப் பற்றி பேசுகிறாரா அல்லது மந்திரிகளைப் பற்றி பேசுகிறார்களா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : இதில் point of order-ஏது ஒன்றுமில்லை.

**Sri A. V. P. ASAITHAMBI** : நாம் கேட்காத கேள்விகளை கற்பனை செய்துகொண்டு அதற்கெல்லாம் பதிலளித்து தன்னுடைய திறமையை அதன் மூலம் நமக்கு காட்டினார். ஆனால் அவர் ரொம்பவும் திறமையுள்ளவர் என்பது அவர் சொல்லாமலே நமக்குத் தெரியும். அவர் இந்த சட்ட சபைக்கு தேர்ந்து எடுக்கபடவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்டது டெல்லிக்கு—இவருடைய திறமையை அறிந்துதான் இங்கு எத்தனையோ பேர்கள் இருந்தும் இந்த இலாகாவை நடத்த இவர்தான் தேவை என்பதை அறிந்து காமராஜ் அவர்கள் தன்னுடைய மந்திரி சபையில் எடுத்துக் கொண்டார்கள். மேலும் இந்த விற்பனை வரியைப் பற்றியும் மற்ற வரிகளைப் பற்றியும் குறிப்பிடுகிறபொழுது, ஒரு விஷயத்தை நாம் கவனிக்க வேண்டும். இந்த விற்பனை வரி என்பது உண்மையில் **turn-over tax** என்பதுதான் பொருத்துமானது **sales tax** என்பது பொருத்தமல்ல. பொதுவாக இந்த வரியானது எந்த காலத்தில் போட வேண்டியது என்பதை பற்றி எண்ணி பார்க்கிறபொழுது இதெல்லாம் நெருக்கடியான நேரத்தில், யுத்த காலத்தில், பணம் திரட்ட முடியாத நேரத்தில் அவசர உதவியாக இம்மாதிரி வரிகளை போடவேண்டும். அதே போல் மது விலக்கு திட்டத்தை கொண்டுவந்தபோது அதில் கிடைத்துக் கொண்டிருந்த வருமானத்தை சரிகட்டுவதற்காக இந்த வரியை போட்டார்கள். இப்போது அது உணவுப் பொருள்களின் மீதும் விதிக்கக் கூடிய நிலைமையில் வந்து விட்டது. இப்போது உடனடியாக மூன்று காரியங்களில் ஒன்றை அரசாங்கம் செய்யவேண்டும்—இந்த வரியை அடியோடு நீக்க வேண்டும் என்பது ஒன்று, அடியோடு முடியாவிட்டாலும் ஒரு முனை விற்பனை வரியாவது உடனடி கொண்டு வர வேண்டும் இரண்டு, அதுவும் முடியாவிட்டால் உணவுப் பொருள்களை பொறுத்த வரையிலாவது இந்த வரிகளை நீக்கவேண்டும் என்பது மூன்று.

இதிலே சர்க்கார் எதைச் செய்கிறதோ, அதை அவர்களின் கையில் நாம் விட்டு விடவேண்டியதுதான். என்னென்ன விஷயங்களை நாங்கள் சொல்ல வேண்டுமோ அவைகளைச் சொல்லி விளக்க வேண்டியது எங்கள் கடமை. ஏனென்றால் நாங்கள் மக்களிடம் சொல்லலாம் இன்னின்னமாதிரி செய்யுங்கள் என்று நாங்கள் சொன்னோம்; அவர்கள், செய்கிறார்களோ இல்லையோ அதை நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்வதுதான் எங்கள் வேலையாய் இருக்க முடியுமே தவிர நாங்கள் வேறு ஒன்றும் செய்வதற்கு இல்லை. இந்த விற்பனை வரி இந்த நாட்டிலுள்ள பணக்காரர்களை மாத்திரம் பாதிக்கக் கூடியதாய் இருந்தால் நாங்கள் வாயைத் திறக்க மாட்டோம். ஆனால் இது பணக்காரர்களை பாதிப்பதாய் இல்லை. ஆனால், பணக்காரர்கள் இந்த வரியை சர்க்காருக்கு வசூலித்துக் கொடுக்கும் ஏஜெண்டுகள் மாதிரி இருக்கிறார்கள். ஏழை மக்கள், தொழிலாளர்கள், அன்றாடம் கூலி வேலை செய்து பிழைக்கிறவர்கள்தான் இந்த வரியினால் மிகவும் கஷ்டப் படுகிறார்கள். இந்த விற்பனை வரி......

**Sri S. LAZAR** : **On a point of order, Sir,** வரவு செலவுத் திட்டம் சமர்பிக்கப் பட்டபோது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அதை வரவேற்றார்கள். இப்பொழுது அதே கழகத்தின் சார்பாக பேசக் கூடிய அங்கத்தினர் இப்பொழுது இந்த மான்யத்தை ஆதரிக்கிறாரா அல்லது எதிர்க்கிறாரா என்று தெரிவிக்க வில்லை.

**Mr. SPEAKER** : **This is not a point of order.**

**Sri A. V. P. ASAITHAMBI** : இந்த விற்பனை வரி சாதாரண பொது மக்களைப் பாதிக்கக் கூடிய பொருள்களின் மீது இருப்பதால், அப்பொருள்களின் விலைவாசி உயர்கிற காரணத்தால் அவைகளின் மேல் உள்ள வரியை நீக்கவேண்டும். இந்த விற்பனை வரிக்குப் பதிலாக, புதிய வரிகள் ஏதாவது போடுவதற்கு வழி இருக்கிறதா என்பதை ஆலோசிக்க வேண்டும். இந்த விற்பனை வரி மதுவிலக்கினால்தான் வந்தது. ஆனால் மதுவிலக்கினால் வரக் கூடிய நஷ்டம் என்ன அதற்குப் பதிலாக அந்த நஷ்டத்தை ஈடுகட்டுவதற்கு பணக்காரர்களையே பாதிக்கக் கூடிய அளவில் வேறு





ஏதாவது வரி விதிக்க முடியுமா என்று அமைச்சர்களோ அல்லது மற்றவர்களோ யோசித்து ஒரு திட்டம் கொண்டு வரவேண்டும். இந்த மதுவிலக்கு காரணமாக சர்க்காருக்கு ஏற்பட்ட நஷ்டம் 18 கோடி ரூபாய். இந்த 18 கோடி ரூபாய் சர்க்காருக்கு நஷ்டமானதை ஈடுகட்ட இந்த வரியைப் போட்டார்கள். ஆனால் இன்றைய தினம் அந்த 18 கோடி ரூபாய் நஷ்டத்தை ஈடுகட்ட என்ன செய்யப்பட்டிருக்கிறது என்றால் பொது மக்களின் நன்மைக்கு, ஏழைத் தொழிலாளர்களின் நன்மைக்காக, மிகவும் கஷ்டப்படும் ஏழைகளின் நன்மைக்காக மதுவிலக்குச் சட்டம் கொண்டு வரப்பட்டது என்று சொல்லி அதன் பயனாக ஏற்பட்ட நஷ்டத்தை ஈடுகட்ட இந்த விற்பனை வரி போடப்பட்டு இந்த விற்பனை வரியே இவ்வேழைகளைக் கொல்லக் கூடிய அளவில் இருக்கிறது. எனவே நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், இந்த விற்பனை வரியை நீக்கி விட்டு வேறு ஏதாவது வரியைப் போடுங்கள். முன்பு, கள்ளுக்கடைகள் மூலம் சர்க்காருக்கு 18 கோடி ரூபாய் வருமானம் வந்தது. இந்த நாட்டிலுள்ள பெரிய ஹோட்டல்களை மூன்று அல்லது நான்கு பிரிவுகளாகப் பிரித்து அவைகளை ஏலத்திட்டத்தின் கீழ் கொண்டு வந்தால் கள்ளுக்கடைகள் மூலம் அரசாங்கத்திற்குக் கிடைத்த வருமானத்தை விட இந்த ஹோட்டல்கள், இந்த காப்பிக்கடைகள் மூலம் அரசாங்கத்திற்கு கிடைக்கும் வருமானம் அதிகமாய் இருக்கும். ஏனெனில் இந்த காப்பி ஹோட்டல்கள் எல்லாம் இன்று நல்ல லாபகரமான விதத்தில் நடைபெறுகின்றன. உதாரணமாக ஒரு பெரிய ஹோட்டலை எடுத்துக் கொள்வோம். அந்த ஹோட்டலுக்கு உள்ள லைசென்ஸ் டெண்டர் முறையிலோ ஏல முறையிலோ கொடுக்கப்படவேண்டும். அந்த முறையில் கொண்டு வந்தால் அது ஏழைகளைப் பாதிக்காது, அதனால் விலை ஏறி விடுமே என்று சொல்ல முடியாது. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் காப்பிக்கும், தேயிலைக்கும் வரியைச் சற்று உயர்த்தி விட்டார் என்று அறிந்தவுடனே ஹோட்டல்களில் காப்பிக்கும், டீக்கும் உள்ள விலை உயர்த்தப் பட்டது. நான் சொல்லியபடி செய்தால் அப்படி வராது. உதாரணமாக, ரெயில்வே ஸ்டேஷன் காப்பி ஹோட்டல்களை எடுத்துக் கொண்டால் இந்த ஹோட்டலிலிருந்து மாதமொன்றுக்கு 1,000 ரூபாய், 1,500 ரூபாய்க்கு மேல் வாடகை வசூலிக்கப்படுகிறது. அக்கடைகளில் உள்ள விலைகள் வெளியே உள்ள கடைகளில் உள்ள விலையைப் போலவே இருக்கிறது. அந்தமாதிரி ஏல முறைக்கு கொண்டுவந்து அந்த ரூபாயை வசூலிக்க நாம் பாடு படவேண்டும். அடுத்தபடி, பத்திரிகைகளை எடுத்துக் கொண்டால் அதில் வருகிற விளம்பரத்திற்கு தனி வரி போடலாம். விளம்பரத்தின் மூலம் லட்சம், லட்சமாக ரூபாய் வருமானம் பெருகிற பத்திரிகைகள் நம் நாட்டில் இருக்கின்றன. விளம்பரம் வாங்கிக் கொடுப்பவர்களுக்கு 20 சத வீதமும், 25 சத வீதமும் கமிஷன் கொடுக்கிறார்கள். பெரிய பத்திரிகைகளை கணக்கெடுத்து, குறிப்பாக ஆடிட் பீரோவில் சேர்ந்திருக்கிற பத்திரிகைகளை கணக்கெடுத்து ஒவ்வொரு விளம்பரத்திற்கும் 25 சத வீதம் விளம்பர வரி போடவேண்டும். அந்த அளவிற்கு சர்க்கார் வரி போட்டு பணம் வசூலித்தால் இந்த மது விலக்கினால் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு கட்ட முடியும். அப்பொழுது விற்பனை வரி தேவையில்லை. அப்படிச் செய்ய வேண்டும். இந்த விற்பனை வரி என்பது அவசர காலத்தில் போட வேண்டியதாகும். யுத்த காலத்தில் "எக்ஸஸ் ப்ராபிட் டாக்ஸ்" (**Excess profit tax**) போட்டார்கள். யுத்தம் முடிந்த பிறகு அந்த வரி எடுக்கப்பட்டது. மதுவிலக்கினால் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடுகட்ட இந்த விற்பனை வரி போடப்பட்டது. நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், இந்த உணவுப் பொருள்களின் மேல் உள்ள வரியை எடுத்து விட்டு புத்தகத்தின் மீது வரி போடலாம். நானும் ஒரு புத்தக வியாபாரிதான். இருந்தபோதிலும் சொல்கிறேன். [illegible] "எண்டெர்டெயின்மெண்ட் டாக்ஸ்." அதற்கு வேண்டி நாங்கள் வக்காலத்து வாங்கிப் பேசுவோம் என்று நினைக்க வேண்டாம். நாங்களும் தான் வரி கொடுக்கிறோம். சினிமாவிற்கு வசனம் எழுதுகிறவர்கள் என்றால் கேவலம் அல்ல. தேர்தல் காலத்தில் சினிமாதான் காங்கிரஸ் கட்சிக்கு வேண்டியிருந்தது. அந்த வரியைக் கட்டுவதில் எங்களுக்கு எதிர்ப்பு இல்லை. மந்திரிகளும் சினிமா பார்க்கிறார்கள். அவர்கள்

வேண்டுமானால் இலவசமாகப் போகலாம். சினிமாவில் ஆபாசம் இருக்கிறது என்கிறார்கள். சினிமாவில் இருக்கிற ஆபாசங்களை நாங்களும் கண்டிக்கிறோம். கோவில்களில் சுற்றியிருக்கிற சிலைகளில் கூட எவ்வளவோ ஆபாசம் இருக்கிறது. ஆகவே, ஏழைகளின் மீது சர்க்கார் வரி விதிக்காமல் இப்பொழுது இருக்கும் கொள்கையை மாற்றி விட்டு, உணவுப் பொருள்களின் மீதுள்ள வரியை உடனே எடுத்து விட்டு படிப்படியாக இந்த விற்பனை வரியையே அடியோடு நீக்கி விட்டு வேறு வரிகளை விதிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

10-57 a.m. **Sri R. CHIDAMBARA BHARATHI:** கனம் சபா நாயகர் அவர்களே, தொழில் அமைச்சரவர்களின் டிமாண்டை நான் வரவேற்று பேச விரும்புகிறேன். அப்படி வரவேற்றுப் பேசும்போதும், சிலவிஷயங்களைச் சொல்ல விரும்பும்போதும் என் மனதில் தோன்றும் ஒரு உணர்ச்சியை இங்கு நான் சொல்லிகொள்வது எல்லோரும் ஏற்றுக் கொள்வதாய் இருக்கும் என்று நம்புகிறேன். இங்கு பேசிய சில நண்பர்கள் உழவிற்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்று கூறினார்கள். உழவிற்கும், தொழிலுக்கும் எழுத்தில் எழுதி வந்தனை செய்யப் போகிறார்களா என்று கேட்கிறேன்? அல்லது நாட்டில் இருக்கும் மக்கள் நல்ல முறையில் வாழ, அவர்கள் செம்மையாக வாழ உதவி செய்யப் போகிறார்களா என்பது சந்தேகமாய் இருக்கிறது. அதற்கு காரணம் என்னவென்றால், வரியின் கொள்கையையே சிலர் ஆட்சேபிக்கிறார்கள். வரி போடுவது பணக்காரர்களுக்கு மாத்திரமாய் இருந்தால் நாங்கள் ஆட்சேபிக்க மாட்டோம் என்கிறார்கள். நமது நிதியமைச்சர் அவர்கள் முதல் நாள் பேசிய பேச்சில் பணக்காரர்களின் மேல்தான் வரி சுமை கூடுதல் இருக்கிறது என்றும் ஏழைகளின் மேல் போடப்படும் வரி மிகவும் குறைவு என்றும் விளக்கமாக கூறியிருந்தார்கள். அதை அப்படியே எதிர்க்கும்போது ஏற்படும் உணர்ச்சி என்னவென்றால், வெள்ளரித் தோட்டத்தில் விக்கிரமாதித்தன் கதை தான் ஞாபகத்திற்கு வருகிறது. வெள்ளரித் தோட்டத்தில் பேசினால் கருணை ஏற்படும், நல்ல உணர்ச்சி ஏற்படும், வெள்ளப் பெருக்கெடுத்தோடும் நியாய முடிவாய் இருக்கும். ஆனால், வீட்டிற்குச் சென்றால் அல்பத்தனம் வந்து விடும் என்று ஒரு கதை உண்டு. அது சரித்திரமா, புராணமா என்பதைப் பற்றி நான் கூறவில்லை. எனக்கு அதைப்பற்றி கவலை கிடையாது. நான் இதை என் சொல்கிறேன் என்று கேட்டால் சட்டசபைக்கு வரும்போது ஒரு பேச்சு, சட்டசபைக்கு வெளியில் சென்றால் வேறு விதமான பேச்சு என்று பேசுகிறார்கள் சில அங்கத்தினர்கள். நாட்டின் முன்னேற்றத்திற்கு வரி போடுவது மிகவும் முக்கியமானதாகும். வரி இல்லாவிட்டால் ஒன்றும் நடக்காது. அது மாத்திரமல்ல. எந்த கூட்டம் நடைபெற்றாலும், வெளியேயும், உள்ளேயும், கிராம அதிகாரிகளுக்கு சம்பளம் உயர்த்தப் படவேண்டும், என். ஜி. ஒக்களுக்கு சம்பள உயர்வு வேண்டுமென்று கூறுகிறார்கள். மதுவிலக்குச் சட்டம் கொண்டு வந்த போது அதனால் ஏற்படுகிற நஷ்டத்தை ஈடுகட்ட ராஜாஜி இந்த விற்பனை வரியைக் கொண்டு வந்தார்கள் என்று சொன்னார்கள். இப்பொழுது அதை எடுக்க வேண்டும், அப்பொழுது உள்ளதை விட இப்பொழுது வருமானம் கூடுதல் வருகிறதே; அந்த நஷ்டத்தை ஈடுகட்டியதோடு கூடுதல் வரி வசூலிக்கிறார்களே என்றும் சொல்லப்பட்டது. நான் கேட்கிறேன், 1937-ல் கொடுக்கப்பட்ட சம்பளமா இன்று சர்க்கார் சிப்பந்திகளுக்குக் கொடுக்கப்படுகிறது. அதை சிந்தித்துப் பார்க்க மறுக்கிறார்கள். வரி போடுவதின் அடிப்படையை யாரும் ஆட்சேபிக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். இன்றையதினம் நம் நாட்டின் முன்னேற்றத்திற்கான காரியங்களை ஆலோசிக்கும்போது, நம் நாடு முன்னேற்றம் அடைய, அதற்கான கொள்கைகளை யோசிக்கும்போது, இன்றைய தினம் வரிக்காக கேட்கப்பட்டிருக்கும், இச்சட்டசபையைக் கேட்டிருக்கும் அந்த டிமாண்ட் மிகவும் நியாயமானதே. எல்லோரும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாய், உள்ளன்போடு, நாட்டின் மீது நல்ல உணர்ச்சியோடு, நம்மை தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கும் மக்களுக்கு நல்லது செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு தான் நமது சர்க்கார் இயங்கி வருகிறது. அது, வெள்ளிரித் தோட்டத்தில் உள்ள

8th July 1957] [Sri R. Chidambara Bharathi]

விக்கிரமாதித்தன் கதை போல் இருக்குமானுல் அதை நிச்சயம் ஒப்புக் கொள்வார்கள், மக்கள் ; அதை மறுக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். காரணம் என்னவென்ருல், வரி கோடிக்கணக்கில் இருக்கிறது. அதற்கு ஏற்படும் செலவும் "டிமாண்டில்" கேட்கப்படுகிறது. அது அநேகமாக 100-க்கு 5 சத விகிதத்திற்கும் குறைவாகத் தான் இருக்கிறது. கணக்குப் பார்த்தால் தெரியும். 95 பங்கு வசூல் செய்வதற்கு முற்படுகிருர்கள். பேசியவர்களின் சிலர் இவ்வளவு வரி போடுவது அக்கிரமம், அநியாயம் என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். வெள்ளைப் பூண்டிற்கும் வெங்காயத் திற்கும் வித்தியாச மில்லை என் று குறிப்பிடுகிருர்கள். பார்த்தால் பேசுவது அழகாக இருக்குமாம். மனிதர்களாக பிறக்கிறவர்கள் இறப்பது நிச்சயம். சீக்கிரம் இறப்பவர்கள் யார், நாள் சென்று இறப்பவர்கள் யார் என்று டாக்டர் கூறக்கூடும். வெங்காயம் சீக்கிரமாக அழுகும். அதற்காகத் தான் அதற்கு வரி வேண்டிய தில்லை. வெள்ளைப்பூண்டுக்கு வரி விதிப்பது நியாயம். வெள்ளைப் பூண்டு வெகு சீக்கிரம் அழுகக்கூடிய பொருள் அல்ல. வெங்காயம் சீக்கிரம் அழுகக்கூடிய பொருள்.

மொத்தமாக பட்ஜெட் விவாதத்தின் போது வரிக் கொள்கையைப் பற்றி பேசும் பொழுது கருணைக் கிழங்கு மீது வரியை எடுத்துவிடவேண்டும், உருளைக் கிழங்குமீது வரி இல்லாமல் இருக்கிறது என்று சொன்ஞர்கள். கருணைக் கிழங்கு வெகு சீக்கிரமாக அழுகும் பொருள் அல்ல. பார்க்கப் போனல் அதில் பெரிய பகுதி வரி இல்லாமலேயேதான் மக்கள் சாப்பிட்டு விடுகிருர்கள். மொத்தத்தில் இவ்வளவு ரூபாய்க்கு மேல் வியாபாரம் செய்பவர்களுக்குத்தான் வரி உண்டு என்று சர்க்கார் நிர்ணயம் செய்திருக் கிருர்கள். ரூபாய் 10,000-க்கு குறைந்து வியாபாரம் செய்கிறவர்கள் இந்த வரி விதிப்பின்கீழ் கட்டுப்படமாட்டார்கள். ரூபாய் 7,500-க்கு மேல் வியா பாரம் செய்பவர்கள் வருஷத்திற்கு ரூபாய் ஆறு லைசென்ஸுக்காகக் கொடுக்கிருர்கள். ரூபாய் 10,000-க்கு மேல் வியாபாரம் செய்பவர்கள்தான் வரி கொடுக்கிருர்கள். அம்மாதிரி கருணைக் கிழங்கு மட்டும் வியாபாரம் செய்பவர்கள் நம் தமிழ் நாட்டில் கிடையவே கிடையாது. பல கிழங்குக ளுடன் சேர்த்து கருணைக் கிழங்கையும் வியாபாரம் செய்யும் மொத்த வியாபாரிகள் வெகு சிலர்தான் இருப்பார்களே தவிர, சில்லரை வியாபாரி கள் அநேகமாக லைசென்ஸ் கட்டும்படியான அளவுக்கு வியாபாரம் செய்ப வர்களாகத்தான் இருப்பார்கள். ஆகையால் கருணைக் கிழங்குக்கு வரி கொடுப்பவர்கள் ஏழைகள் அல்ல, பணக்காரர்கள்தான் என்பதை கனம் அங்கத்தினர்கள் தெரிந்து கொண்டிருக்க முடியும்.

அடுத்தபடியாக, சில கனம் அங்கத்தினர்கள் பேசும்பொழுது அழகான பதங்களை உபயோகப்படுத்துகிருர்கள். வியாபாரிகள் கொள்ளை லாபம் அடிக் கிருர்கள், சாமான்களைப் பதுக்குகிருர்கள் என்றெல்லாம் கூறப்பட்டது. ஆனல் அதே சமயத்தில் வியாபரிகள் நல்லவர்கள் என்றும் கூறுகிருர்கள். பலகட்ட வரியை எடுத்துவிட்டு ஒருமுனை வரியைக் கொண்டுவரவேண்டு மென்று வாதிக்கும்பொழுது, வியாபாரிகளைப் போன்று நல்லவர் கள் இல்லை, அவர்கள் ஒழுங்காக கணக்குகளை வைத்துக்கொண்டிருப்பவர் கள் என்றெல்லாம் கூறுகிருர்கள். அப்படிச் சொல்லுவதில் அர்த்த மில்லை. நாங்கள் எப்பொழுதுமே வியாபாரிகளை நல்லவர்கள் என்று மதிக்கின்ரேம். பால் இருக்கும் வரையிலே பசுவின் கன்றுக்கு பால் வார்ப்பது எவ்வளவு முக்கியமும் நியாயமுமான கடமையோ, அதே போன்று வியாபாரிகளிடமிருந்து வரி வசூலித்து பிரஜைகளுக்கு நன்மை செய்வதில் தவறு இல்லை என்று நாங்கள் கருதுகிரேம். ஒரு முறை வியாபாரிகள் பதுக்கிறவர்கள் என்றும், அதே சமயத்தில் வியாபாரிகளைப்போல் நல்லவர் கள் கிடையாது என்றும் சொல்லுவதில் அர்த்தமில்லை. நான் வியாபாரி களுக்காக வககாலத்து வாங்கி பேசுவதாகக் கருதவேண்டாம். வியாபா ரிகளின் உணர்ச்சியும் அதுதான்.

சில்லரை வியாபாரிகளில் வெற்றிலை வியாபாரிகள் தான் அதிகம். வெற்றிலை கடைகளில் மலைபழம், எலுமிச்சம் பழம் இம்மாதிரி சாமான்கள் இருக்கின்றன. இவர்கள் 7,500 ரூபாய்க்கு மேற்பட்டு வியாபாரம் செய்ப

வர்களாய் இருந்தால் ரூபாய் ஆறுதான் லைசென்ஸ் கட்டணமாக கட்ட வேண்டியிருக்கும். இவர்களுக்கு விற்பனை வரி கிடையாது. ஒரு நண்பர் பேசும்போது 20,000 ரூபாய்க்கு மேற்பட்டு வியாபாரம் செய்பவர்களுக்குத் தான் வரி விதிக்கவேண்டுமென்று கூறினார். ரூபாய் 10,000-க்கு மேல் வியாபாரம் செய்பவர்கள்தான் பணக்காரர்கள். வரி விதிப்பிலிருந்து விலக்களிக்கும் முன்பாக அது யாரை பாதிக்கும், யாருக்கு சிரமத்தை உண்டாக்கும் என்பதைப் பற்றி சிந்திக்கவேண்டும். இப்படிச் சொல்லும் நண்பர்கள் பணக்காரர்களுக்கு கருணை காட்டுகிறார்களா அல்லது ஏழைகளுக்கு கருணை காட்டுகிறார்களா என்பது தெரியவில்லை. ரூபாய் 10,000-க்கு மேல் வியாபாரம் செய்பவர்கள் சில்லரை வியாபாரிகளாக இருப்பார்களா என்பதை கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ரூபாய்க்கு இரண்டு அணா, நான்கு அணா லாபம் சம்பாதித்து வருஷத்திற்கு 20,000 ரூபாய்க்கு விற்பவர்கள்தான் வரி கொடுக்கிறார்கள். ரூபாய்க்கு 20,000-க்கு விற்பவர்கள் எவ்வளவு தூரம் பணம் படைத்தவர்களாக இருக்க வேண்டும், எவ்வளவு முதலீடு செய்திருப்பார்கள் என்பதை கனம் சக அங்கத்தினர்கள் சிந்தித்துப் பார்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

வெற்றிலைக்கு சென்ற தடவைதான் விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இது நியாயம் என்று ஒப்புக்கொள்ளுகிறேன். சர்க்காரும், சர்க்காரைச் சார்ந்த நிர்வாகத்தை நடத்துவதற்கு உதவும் சட்டசபை அங்கத்தினர்களும் சிந்தித்துப் பார்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன். வெற்றிலைக்கு வரியிலிருந்து விலக்கு அளிப்பதினால், வெற்றிலை வாங்கி உபயோகப்படுத்துகிறவர்களுக்கு பலன் இருக்கிறதா என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். வரி இருந்த காலத்தில் காலணாவுக்கு ஆறு, ஏழு வெற்றிலைகள் கிடைத்தன கிராமங்களில். அப்பொழுது நான்கு, ஐந்து அணாவுக்கு விற்ற வெற்றிலையை இப்பொழுது ஆறு, எட்டு அணா கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. காலப் போக்கை காரணமாகக் காட்டுகிறார்கள் வியாபாரிகள். இந்நிலையில் வெற்றிலை கொடிக்கால் வைத்து உற்பத்தி செய்கிறவர்களுக்காவது இந்த வரி விலக்கிலிருந்து நன்மை ஏற்பட்டிருக்கிறதா என்றால் நன்மை ஏற்படவில்லை. வரியை எடுக்க முற்படும் முன்னால், வரி விதிப்பினால் ஏழை மக்கள் பாதிக்கப்படுகின்றார்களா என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஏதோ ஒன்று, இரண்டு "ஐட்டம்கள்" வேண்டுமானால் அம்மாதிரி இருக்குமே ஒழிய, மற்றபடி மிகுந்த இனங்கள் ஏழைகளை பாதிக்கக்கூடியதாக இருக்காது. என்னுடைய பேச்சை பத்து நிமிடங்களில் முடிப்பதற்கு நான் கடமைப்பட்டிருப்பதால், இந்த விஷயத்தை விவரமாக விளக்குவதற்கு வசதி இல்லை. நன்றாகச் சிந்தித்துப் பார்த்தால், மிகுதியாக உள்ள சாமான்கள் மீது நியாயமான வரி விதிக்கப்பட்டிருப்பது விளங்கும். வரியை எடுக்க காரணம் காட்டும்பொழுது உற்பத்தி செய்பவர்களுக்கும், வாங்குகிறவர்களுக்கும் லாபம் இருக்கிறதா என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். வரியை எடுப்பதினால் வாங்குவோருக்கு நன்மை இருக்கிறதா என்பதை ஆலோசித்து வரியை எடுப்பதற்கு கிளர்ச்சி செய்யவேண்டும், அரசாங்கத்திற்கு யோசனை கூறவேண்டுமென்று கூறிக்கொண்டு, இந்த மான்யத்தை ஆதரிக்கிறேன்.

11-08 a.m. * **Sri G. ANNAMALAI MUTHURAJA**: கனம் சபாநாயகர் அவர்களே, விற்பனை வரி சம்பந்தமாக சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். பெரிய வியாபாரிகள், வருஷத்திற்கு 20,000 ரூபாய்க்கு வியாபாரம் செய்யக் கூடியவர்கள் விற்பனை வரி கொடுக்கிறார்கள். கணக்குகளை அவர்கள் சரிவர வைத்துக்கொள்ளாததற்குக் காரணம் ஒருமுனை வரியைப் போடாததுதான். ஒருமுனை வரி விதித்தால் அவர்கள் கணக்குகளை நல்ல முறையில் நேர்மையாக வைத்துக் கொள்ளுவார்கள் என்று அபிப்பிராயப்படுகிறேன். மேலும் சில வியாபாரிகள் கணக்கு சரிவர வைத்துக்கொள்ளாததற்குக் காரணம் அவர்கள் வியாபார முறையில் கடைகள் வைத்து வியாபாரம் செய்யாமல், லாரிகளில் சரக்குகளை ஏற்றிக்கொண்டு சந்தைகளுக்குக்கொண்டு போய் வியாபாரம் செய்கிறார்கள். அவர்களிடத்தில் கணக்குகளை நேரில் பார்த்து கணக்கு மூலமாக வரி வசூல் செய்வதற்கு சரிவர ஆதாரம் கிடையாது.

அவர்கள் வியாபாரம் செய்வதற்கு ஒரு இடம் வைத்துக்கொள்ளாததால் கணக்குகளைப் பார்ப்பதற்கு சந்தர்ப்பம் கிடையாது. பெரிய மில் முதலாளிகள் நெல்லை கொள்முதல் செய்து அந்த இடத்திலேயே பெரிய வியாபாரிகளுக்கு மொத்தமாக விற்கும் பொழுது, கணக்கை நேர்மையாக எடுத்து ஒரு முனை வரி விதித்து வசூல் செய்தால், சர்க்காருக்கு அதிக நஷ்டம் ஏற்படாது. அதனால் பலவித நன்மைகள் விளையும். வியாபாரிகளும் நல்ல முறையிலே நேர்மையான வகையிலே கணக்கு வைத்துக் கொடுப்பார்கள் என்று நாம் எதிர்பார்க்கின்றோம்.

அதோடுகூட, சில பொருள்களுக்கு விற்பனை வரியை எடுத்துவிட்டார்கள். எடுத்துவிட்டாலுங்கூட சில பேர் வியாபாரிகளிடத்திலே கணக்குக் கேட்டு பார்க்கும்போது காட்டவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. விற்பனை வரியை எடுத்ததற்கும், ஆபீசிலே கணக்குகளைக் கொண்டுபோய்க் காண்பிக்க வேண்டுமென்று நிர்ப்பந்தப்படுத்துவதற்கும் எந்தவிதமான பொருத்தமும் இல்லாமல் இருக்கிறது. விற்பனை வரியை சில பொருள்களுக்கு எதற்காக எடுத்தார்கள் ? அவர்களிடத்திலே கணக்கு கொண்டுவர வேண்டுமென்று கேட்டால், விற்பனை வரியை எடுத்ததன் அர்த்தம் என்னவென்றே தெரியவில்லை.

அப்படித்தான் கணக்குக் கேட்கிறார்களே, அந்தக் கணக்கை வியாபாரம் செய்யும் இடத்தில் பார்ப்பதோடு நிறுத்திக் கொள்கிறார்களா ? இல்லை. மேலும் சந்தேகப்பட்டால் வியாபாரிகளுடைய வீட்டுக்கே சென்று விடுகிறார்கள். வீட்டுக்குப் போய் கணக்கைச் சோதனைப்போட்டு, அவர்களிடத்திலிருக்கும் கையிருப்பு ரூபாய்களைச் சோதிப்பதற்காக இரும்புப்பெட்டியை முதற்கொண்டு திறந்து காண்பிக்கச்சொல்கிறார்கள். இம்மாதிரியான நிர்ப்பந்தங்கள் சில வியாபாரிகளுக்கு ஏற்படுகின்றன. அப்படிச் செய்வது நியாயம் இல்லை என்று நான் கருதுகின்றேன். வியாபாரம் செய்யும் இடத்தில்தான் கணக்கு இருக்கும். அங்குதான் விசாரித்து விவரம் பெற்றுக்கொள்ள வேண்டும். அப்படியில்லாமல் அதிகாரிகள் வியாபாரிகளுடைய வீட்டுக்குச் சென்று குடித்தனம் செய்யும் பெண்பிள்ளைகள் இருக்கும் இடங்களுக்கு வந்து, கணக்குகளைப் பார்ப்பது சரியல்ல என்று நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

பழ வியாபாரம் சம்பந்தமாகக் கணக்குக் கேட்பதும் கூடாது. அதைத் தவிர்க்கும்படியாகக் கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை இத்துடன் முடித்துக் கொள்கின்றேன்.

* SRI T. S. RAMASWAMY PILLAI: சபாநாயகர் அவர்களே, இந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் பேச ஆசைப்படுகிறேன். முக்கியமாக தமாஷா வரி, betting tax-ஐப் பற்றி பேசி, இப்பொழுது உடனடியாக ஜனங்களைப் பாதிக்கக்கூடிய, உணவு தானியங்கள் மீதுள்ள வரியைப்பற்றி பேசாமல் இருந்துவிடுவது உசிதம் அல்ல என்பதற்காக, சர்க்காருடைய கவனத்தை வேறுவிதமாகத் திருப்பவேண்டும் என்ற காரணத்திற்காக நான் ஒருசில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். 11-1 a.m.
விற்பனை வரி, அதிலும் முக்கியமாக உணவுத் தானியங்கள் மீதுள்ள விற்பனை வரியிலிருந்து எத்தனை கோடி ரூபாய் வருமானம் வந்த போதிலுங்கூட, அது ஏழை பாமரர்களைப் பாதிக்கக் கூடியது என்று இதற்கு முன்னால் நான் குறிப்பிட்டிருக்கிறேன். இந்தச் சபைத் தலைவரும் நிதி அமைச்சருமான நண்பர் கனம் ஸ்ரீ சுப்ரமண்யம் அவர்கள் பதில் உரையில் குறிப்பிட்டபோது சில கணக்குகளைத்தெரிவித்தார். அதிலே, 80 சதமானம் உள்ள கிராம மக்கள் இதைக் கொடுக்கவில்லை என்றும், 20 சதமானம் உள்ள நகரவாழ் மக்களே இதைக் கொடுக்கிறார்கள் என்றும் அவர்கள் குறிப்பிட்டபோது நான் ஆச்சரியத்தை அடைந்தேன். உணவுத் தானியங்கள் மீதுள்ள விற்பனை வரி முக்கியமாக இந்த நாட்டிலுள்ள குடிசைவாழ் மக்களை, பாமர மக்களைத்தான் அதிகமாக பாதிக்கிறது என்று நான் கூற ஆசைப்படுகிறேன்.

[Sri T. S. Ramaswamy Pillai] [8th July 1957

விற்பனை வரி, விவசாயத் தொழிலாளிகளும் அதாவது, ஒவ்வொரு உணவுத் தானியத்தையும் உற்பத்தி செய்கிறார்களே, அவர்களும் கூட அரிசியையோ மற்ற உணவு தானியங்களையோ வாங்க வேண்டுமென்றால், அவர்களும் விற்பனை வரியைக் கொடுத்துத்தான் வாங்க வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். உதாரணத்திற்காக சொல்கிறேன்—கன்னியாகுமரி ஜில்லாவில் மாத்திரமல்ல, கோயமுத்தூர், மதுரை, ஆகிய எந்த ஜில்லாவிலாகட்டும், எந்த தானியங்களை உற்பத்தி செய்தாலும் சரி, உற்பத்தி செய்யக் கூடிய தொழிலாளர்—அவர்கள் ஹரிஜனத் தொழிலாளர்களாக இருந்தாலும் சரி, இதர தொழிலாளர்களாக இருந்தாலும் சரி, விவசாயத் தோழர்கள்—அறுவடை காலத்தைத் தவிர மற்ற காலங்களில், அதாவது களை எடுத்தல், நாற்று நடுதல் ஆகிய வேலைக்குக் கூலியாக காசு வாங்குகிறார்கள். அந்தக் காசைக் கொண்டு, அவர்கள் அரிசியோ வேறு தானியங்களோ விலைக்கு வாங்குகிறார்கள். அவ்வாறு வாங்கும்போது அவர்களும் ஓரளவு விற்பனை வரியைக் கொடுத்துத்தான் வாங்க வேண்டிய நிலைமை இருக்கிறது. இந்த நாட்டிலே பல லட்சக்கணக்கான கிராமங்களிலே உறையும் பாமரர்கள் மீது இத்தகைய வரியைச் சுமத்துவது என்பது சமதர்ம பாணியிலுள்ள ஒரு சமுதாயத்தை அமைப்போம் என்ற லட்சியத்திற்குப் பொருத்தமானது அல்ல என்று நான் மிகப் பணிவுடன் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அது மட்டும் அல்ல. வேறு எந்த ராஜ்யத்திலும் கூட—கேரள ராஜ்யத்தோடு நான் ஒப்பிட விரும்பவில்லை—வங்காளம், பீகார், ஒரிஸ்ஸா, மத்திய பாரதம், பம்பாய் ஆகிய எந்த ராஜ்யத்திலும் கூட—ஆந்திரத்தையும் மைசூரையும் தவிர—உணவுத் தானியங்கள் மீது விற்பனை வரி இருப்பதாகத் தெரியவில்லை. அப்படியிருந்தும், நம்முடைய ராஜ்யத்தில் மட்டும் ஏன் விற்பனை வரி இருக்கவேண்டும் என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

அது மட்டும் அல்ல. நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் பேசும்போது, ''கேரளத்தில் ஒரு தலைக்குள்ள வருமானம் (*per capital* ncome) ரூபாய் 357 ஆக இருக்கும்போது, நம்முடைய தமிழ் நாட்டிலே ரூ. 311 ஆகத்தான் இருக்கிறது'' என்று குறிப்பிட்டார். ஆகையால்தான் நான் கருதுகிறேன்—அங்கு உணவு தானியங்கள் மீது விற்பனை வரி விதிக்கப்படவில்லை. இங்கிருந்து கேரளாவோடு சேர்ந்துள்ள மலபார் ஜில்லாவிலே ஏற்கெனவே விதிக்கப்பட்டிருந்த வரியைக் கூட அவர்கள் எடுத்துவிட்டார்கள். ஆனால், கன்யாகுமரி ஜில்லா இங்கு வந்ததைப்பற்றி மதிப்பிற்குரிய நண்பர் அவர்கள் பேசும்போது, ''நீங்கள் வரும்போது கொண்டு வந்த சீதனம்'' என்று குறிப்பிட்டார்கள். அப்போதே அவர்களுடைய கண்ணோட்டம் புரிகிறது. நாங்கள் ஏதோ மருமகள் போல் இங்கே வந்திருப்பதாக, அந்தக் கண்ணோட்டத்தில் தான் அவர்கள் பார்க்கிறார்கள் என்று தோன்றுகிறது. நான் அவருக்குக் கூற விரும்புகிறேன்—அப்படிப் பார்க்க வேண்டாம் என்று. மாற்றாந் தாயிடமிருந்து பெற்ற தாயினுடைய வீட்டுக்கு வந்திருக்கிறோம் என்ற தோரணையில்தான் நாங்கள் கருதுகிறோம். மாற்றாந்தாய் கூட விதிக்கத் துணியாத சில வரிகளை எங்களுடைய பெற்ற தாயே விதிப்பது என்றால் அதைப்பற்றி என்ன சொல்வது ?

உணவுத் தானியங்கள் மீதுள்ள விற்பனை வரியை எடுத்துவிட்டால், ஏழை எளிய மக்கள் ஒவ்வொரு கவளம் சோறு சாப்பிடும்போதும் இந்த அரசாங்கத்தை நினைத்து சந்தோஷப்பட்டு வாழ்த்துவார்கள். இந்த வரியை இப்படியே நீடித்து வாங்கிக் கொண்டிருந்தால், ஒவ்வொரு கவளம் அரிசிச் சோற்றைச் சாப்பிடும்போதும், உணவுத் தானியங்களைச் சமைத்துச் சாப்பிடும்போதெல்லாம், '' நாங்கள் இவ்வளவு வரியைக் கொடுக்கிறோமே '' என்று மனம் புழுங்குவார்கள். அப்படி வைத்துவிட வேண்டாம் இந்த அரசாங்கம் என்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன். அதிலும் குறிப்பாக சோஷலிச சமுதாயத்தை உருவாக்கப் போகிறோம் என்று சொல்லிவிட்டு இதை நீடித்து வைத்திருக்க வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.



8th July 1957] [Sri T. S. Ramaswamy Pillai]

சோஷலிச சமுதாயத்தை உருவாக்குவது என்றால், உணவு உற்பத்தி அதிகரிக்கப்பட வேண்டும், அப்படி உற்பத்தி செய்வது நல்ல முறையில் விநியோகிக்கப்படவும் வேண்டும். அப்படி விநியோகிக்கப்படும்போது, அதன்மீது விதிக்கக்கூடிய வரிக் கொள்கையைப்பற்றி சற்று யோசிக்க வேண்டும். கூடியவரை ஏழை, பாமரர்கள் மீது உள்ள வரியைக் குறைத்து, யார் அதிகமாகக் கொடுக்க முடியுமோ அவர்களிடமிருந்து வரியை வசூலிக்க வேண்டியது சோஷலிச பாணியில் சமுதாயத்தை உருவாக்குவதில் முக்கியமாக கவனிக்கவேண்டிய ஒன்றாகும். இதை மறந்துவிடக்கூடாது. இந்த வரியானது, குறிப்பாக ஹரிஜனத் தோழரை மிகவும் அதிகமாகப் பாதிக்கிறது. கன்யாகுமரி ஜில்லாவிலிருந்து இங்கு வந்திருக்கும் இதர அங்கத்தினர்களை நான் கேட்டுக் கொள்கிறேன் ''இதை நீங்களும் ஆதரிக்கப் போகிறார்களா ?'' என்று. ஆதரிப்பதை கன்யாகுமரி மக்கள் விரும்பமாட்டார்கள். காங்கிரஸ் மெம்பர்கள் கூட, இதை ஆதரிக்க முடியாது. அங்குள்ள பொது ஜனக் கூட்டங்களிலேயும், தெருத் தெருவாகவும் '' உணவு தானியங்களுக்கு வரி விதிக்கப்படுகிறது '' என்று கன்யாகுமரி மக்கள் கூக்குரல் இடுகின்றார்கள். அந்த ஜில்லாவில் ஒரு கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது. அங்கிருந்து வந்த காங்கிரஸ் அங்கத்தினர்களுக்கும் எத்தனையோ மகஜர்கள் அங்குள்ள மக்களிடமிருந்து வந்திருக்கும். அவர்களுடைய உள்ளம் கொதித்து இருந்தபோதிலும் சரி, சட்டசபையில் அவர்களுடைய உள்ளக்கிடக்கையைச் சொல்ல முடியாத நிலைமையில் இருக்கிறார்கள்.

உணவுத் தான்யங்கள் மீது வரியைப்பற்றி குறிப்பிடும்போது, சர்க்கார் பெஞ்சிலிருந்து மிகவும் அகங்காரத்துடனே கூறுகிறார்கள் : '' நாங்கள் முன்னே அவ்விதம் இருந்த போதிலும் கூட எங்களைப் பெருவாரியான மக்கள் ஆதரித்திருக்கிறார்கள் '' என்று. தயவு செய்து அவர்கள் பார்க்க வேண்டும், இப்பொழுது எத்தனை சகவிகிதம் மக்கள் அவர்களை ஆதரித்திருக்கிறார்கள் என்று. முதல் தேர்தலில் எத்தனை சதவிகிதம் ஆதரித்தார்கள் என்று கணக்கெடுத்துப் பார்க்கக் கோருகிறேன். சபாநாயகர் அவர்களே, முதல் தேர்தலில் 85 சதமானம் ஜனங்கள் இவர்களை ஆதரித்திருந்தால், சென்ற தேர்தலில் 45 சதமானமாகக் குறைந்திருக்கிறது. இதை அவர்கள் சற்று பார்க்கவேண்டும். பாமர ஏழை ஜனங்கள் மீதுள்ள வரியை எடுப்பதாயிருந்தால், இனி நிச்சயமாக அவர்கள் இந்தச் சர்க்காருக்கு அதிகமாக ஆதரவு தருவார்கள் என்று நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதோடு கூட, இன்று நமக்கு அதிருஷ்டவசமாக, முதல் மந்திரியாக இருக்கக்கூடியவர்கள் எல்லா இடங்களிலும் சென்று, ஏழைகள், விவசாயிகள், பாமரர்கள் ஆகியவர்களுக்கு என்ன குறை இருக்கிறது என்று நேரடியாகச் சொல்லும்படி கேட்கிறார். நாங்கள் இப்பொழுது நேரடியாகச் சொல்கிறோம். அங்கிருந்து வந்திருக்கும் சட்டசபை அங்கத்தினர்கள் கூறுகிறார்கள். அரிசியின் மீதும், மற்ற உணவுத் தானியங்கள் மீதும் விதித்திருக்கக்கூடிய வரியை எடுத்துவிட வேண்டுமென்று கோருகிறார்கள். முதல் மந்திரி அவர்கள் அங்கங்கே சென்று மக்களுடைய குறைகளைத் தெரிந்து கொள்கிறார்கள். அப்படிக் கேட்டாலும், பாமர மக்கள், தங்களுடைய குறைகளை எடுத்துச் சொல்லக் கூடத் தெரியாத, வாயில்லாப் பூச்சிகளாக, அப்பாவிகளாக இருக்கிறார்கள். அவர்களிடம் செல்லும்போது, அவர்கள் எதைக் கோருகிறார்கள் ? உணவுத் தானியங்கள் மீது உள்ள வரியை எடுங்கள் என்று அவர்கள் கோருகிறார்கள். உணவு தானியங்களின்மீது வரிகளை எடுங்கள். தற்போது உணவு தானியங்களின் மீது வரிபோடுவதால் சுமார் 15 கோடி ரூபாய் வருமானம் கிடைக்கிறது. நாங்கள் சொல்வது என்னவென்றால் உணவு தானியங்களின் மீது விதிக்கும் வரிகளுக்குப் பதிலாக வேறு சாதனங்களின்மீது விற்பனை வரி விதிப்பதற்கான வழி வகைகளை அரசாங்கம் ஆராயவேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[Sri T. S. Ramaswamy Pillai] [8th July 1957

இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னொரு விஷயத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். புகையிலை மீது வரி விதிக்கப்படுகிறது. இப்பொழுது **Kannyakumari district**-ல் ஒரு புதிய சம்பிரதாயம் நிலவி வருகிறது. அதாவது அங்கு **import tax** என்ற முறையில் ஒரு வரி புகையிலை மீது விதிக்கப்படுகிறது. சாதாரணமாக, திருநெல்வேலி ஜில்லாவிலிருந்து அங்கு புகையிலை கொண்டுவர வேண்டுமானால் ஒரு **licence** வாங்கவேண்டும். அந்த **licence** வாங்குவதற்கு ரூ. 1,000 செலவு ஆகும். இது தவிர, அங்கு வியாபாரம் செய்வதற்கு இன்னொரு **licence** வாங்கவேண்டும். அதற்கும் 1,000 ரூபாய் கொடுக்கவேண்டும். இப்படி அங்கு புகையிலை வியாபாரம் செய்கிறவர்கள் ஒரு இக்கட்டான நிலையில் இருக்கிறார்களே தவிர, அங்குள்ளவர்கள் **agriculture Income-tax, Basic tax** கொடுக்கவேண்டும். மற்ற ஜில்லாக்களில் இருப்பவர்கள் அம்மாதிரியான வரிகளை கொடுக்க வேண்டியது இல்லை. ஆகையால் அங்குள்ளவர்கள் இரண்டு தடவை **licence** வாங்கும்படியான நிலையை போக்க அரசாங்கம், தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

11-22 a.m.

**Sri A. P. C. VEERABAHU:** சபாநாயகர் அவர்களே, நான் விற்பனை மானிய கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். வேறு மாகாணங்களின் அனுபவத்தைக்காட்டி நம்முடைய வரி விகிதாச்சாரங்களை அமைக்க வேண்டும் என்று சொல்வது, அவ்வளவு பொருத்தமாகாது. நம்முடைய இராஜ்யத்தின் வரி விகிதங்களின் அமைப்பை அடிப்படையாக சில இனங்களில் மாற்றி அமைப்பது பெரிய சிக்கல்களுக்கு கொண்டுபோய்விடுமே தவிர, உதவியாக இருக்காது. எதிர் கட்சியிலுள்ளவர்கள் நமக்கு உதவியாக ஆலோசனை கூறியதாக கருதக் கூடாது. நம்மை சிக்கல்களுக்குள் இழுத்து செல்வதே அவர்களுடைய நோக்கம். நம்முடைய வரி விதிப்பு கொள்கையை மக்கள் எவ்வளவு தூரம் ஆதரிக்கிறார்கள் என்பதை எதிர்கட்சி உபதலைவர் குறிப்பிட்டுவிட்டு, 1937-ம் வருஷம் ஆதரித்த அளவில் இப்போது மக்கள் காங்கிரஸ் சர்க்கரை ஆதரிக்கவில்லை என்று சொன்னார். 1937-வது வருஷத்தில் அன்னியர் ஆதிக்கத்தின் எதிர்ப்பு இருந்தது. இப்போது நமக்கு எதிர் கட்சிகளின் எதிர்ப்புதான் இருக்கிறது. அவர்களின் எதிர்ப்பு இருந்த போதிலும், சென்ற தேர்தலில் 8 சத விகிதம் மக்கள் அதிகமாக இந்த வரி விதிப்பு கொள்கைக்கு ஆதரவு அளித்து வோட்டு போட்டு இருக்கிறார்கள் என்பதை அவர்கள் உணரவேண்டும். நம்முடைய ராஜ்ய வருமானத்திலே, இம்மாதிரி விற்பனை வரிகளின் மூலமாக சுமார் 11 கோடி ரூபாய் வந்த போதிலும், அவ்வரிகளை கொண்டு வேறு நல்ல காரியங்களுக்கு சர்க்கார் உதவி செய்து கொண்டு வருகின்றன. இவ்விஷயத்தில் மத்திய சர்க்கார் ஆலோசனை கூறியதாகவும் சொல்லப்பட்டது. ஆனால், இந்த வரிகளினால் கிடைக்கக்கூடிய அதிக வருமானத்தை சர்க்கார் என்ன விதத்தில் உபயோகித்துகொண்டு வருகிறார்கள் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துக்காட்ட விரும்புகிறேன், கல்விக்கும், விவசாயிகள் சாதனங்கள் வாங்குவதற்கும் மான்யம் நமது சர்க்கார் கொடுக்கின்றன. தவிர, இந்த வரிகளெல்லாம் நிரந்தரமானவை என்று யாரும் கருதக்கூடாது. அது சர்க்கார் கொள்கை அல்ல என்று இந்த சட்டசபையில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். உதாரணமாக, நமது கனம் நிதி மந்திரி அவர்கள் **Budget** பிரசங்கத்தின்போது, உணவு தானியங்களின் மீது வரி விதிப்பதை 1·9யிலிருந்து ஒரு சத விகிதத்திற்கு குறைக்கப்படும் என்று சொன்னதை நான் இந்த சமயத்தில் அங்கத்தினர்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். ஆனால், வேறு எந்த இனங்களுக்கு ஒரு சத விகிதம் வரி விதிக்கலாம் என்று பார்க்கும் போது, **pulses**-க்கு கூட 1 சத விகிதம்தான் "விதிக்கலாம்" என்று தோன்றுகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு கவளா உணவுக்[illegible] வரி போடவேண்டுமென்று சொல்லப்பட்டது. சாதாரணமாக [illegible]களில் '**Cooked food**' விற்கப்படுகிறது. அதற்கும் வரி [illegible]

9th July 1957] [Sri A. P. C. Veerabahu]

அளிக்கப்படவேண்டுமா என்பதை ஆராயவேண்டும். ஏனென்றால் **hostel**-களை நடத்துபவர்களுக்கு அதிக லாபம் கிடைக்கிறது. ஆனால் அதே சமயத்தில் உணவு பண்டங்களுக்கும் 1 சத விகிதம் வரி விதிக்க முடியுமா என்பதை சர்க்கார் ஆலோசனை செய்யவேண்டும்.

தவிர, கிராம பகுதியில் இப்பொழுது வியாபாரம் கொஞ்சம் பெருகி வருகிறது. ஆனால் அங்குள்ள மக்கள் சரியாக கணக்கு வைத்துக்கொள்வது இல்லை. அவர்களை '**harassment**' க்கு உட்படுத்தக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாக, நகர பகுதியிலுள்ள மக்கள் **1937**-வது வருஷத்திலிருந்து இதுவரைக்கும், அதாவது 20 வருஷ காலமாக விற்பனை வரி அதிகாரிகளின் '**harassment**' க்கு உள்ளாகுகிறார்கள் என்று சொல்லப்பட்டது. கிராமமக்கள் இப்பொழுதுதான் கொஞ்சம் அதிகமாக வியாபாரம் செய்துகொண்டிருப்பதாலும், அவர்களுக்கு சரியாக கணக்குவைக்க தெரியாததாலும், அவர்களுக்கு ரூபாய் 10,000-த்திலிருந்து ரூபாய் 20,000 வரைக்கும் வரி விலக்கு கொடுக்க முடியுமா என்று சர்க்கார் பரிசீலனை செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது **Panchayat**-களுக்கு சினிமா காட்சிகளின் மீது விதிக்கும் வரியின் மூலம் ரூபாய் 92 லக்ஷம் கிடைக்கிறது. சர்க்கார் இந்த சினிமா தொழில்மீது இன்னும் எவ்வளவு அதிகமான வரி விதிக்கலாம் என்று ஆராயவேண்டும். ஏனென்றால், சினிமா தொழில் ஒரு கேந்திர தொழில். அது அதிக வருமானத்தை கொடுக்கிறது. அதை நடத்துகிறவர்கள் ஒரு நிமிஷத்தில் **multi millionaire**களாகி விடுகிறார்கள். வருமானத்தை பெருக்க வேண்டும் என்ற இந்தச் சந்தர்ப்பத்தில், இந்த தொழிலின் மூலமாக இன்னும் எவ்வளவு வருமானம் சர்க்காருக்கு கிடைத்து வரவு செலவு கணக்கை சரிப்படுத்த முடியும் என்று சர்க்கார் ஆராயவேண்டும். **Panchayat**-களுக்கு கிடைக்கக்கூடிய இந்த வருமானத்தை சர்க்கார் எடுத்துக்கொண்டால், **Panchayat**-களுக்கு வருமானம் இல்லாமல் அவர்கள் கஷ்டபடவேண்டிய நிலைமை ஏற்படும். ஆதலால், சர்க்கார் வேறு எந்த முறையில் இந்த தொழிலின் மீது வரி விதிக்கலாம் என்பதை ஆராய வேண்டும்.

தவிர, **petrol** மீதும் **diesel oil** மீதும் விதிக்கும் வரியின் விகிதாசாரத்தில் அதிக வித்தியாசமிருக்கிறது. **Petrol**-மீது 6 அணா வரி போடப்படுகிறது. ஆனால் **diesel oil**-மீது $1\frac{1}{2}$ அணாதான் வரி விதிக்கப்படுகிறது. இதனால் **petrol consumption** குறைந்து, **diesel oil** அதிகமாக செலவாகிறது. கிராமத்திலுள்ள விவசாயிகளெல்லாம், **diesel oil** மீதுள்ள வரி குறைவாகயிருப்பதால், **diesel oil**-ஐத்தான் அதிகமாக உபயோகிக்கிறார்கள். இதனால் சர்க்காருக்கு கிடைக்கக்கூடிய வருமானம் குறைந்துக்கொண்டு போகிறது. ஆதலால், **diesel oil** மீது விதிக்கும் வரியின் விகிதாசாரத்தை உயர்த்த முடியுமா என்று சர்க்கார் ஆலோசனைசெய்யவேண்டும். இதனால் விவசாயிகளுக்கு அதிக வரி கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டாலும், சர்க்காருக்கு அதிக வருமானம் கிடைக்கும். வேண்டுமானால், விவசாயிகளுக்கு இதர வழிகளில் உதவி புரியலாம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த விஷயத்தை சர்க்கார் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய மாகாணத்தில், 'விறகு கிடைப்பது' மிக பெரிய பிரச்னையாக இருக்கிறது. விறகு எல்லோருக்கும் வேண்டிய அத்தியாவசியமான பொருள். இதற்கு, வரி விலக்கு அளிப்பதற்கு ஆலோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கேள்வி நேரத்திலும், இந்த மான்ய விவாதத்திலும், குதிரை பந்தயத்தை ஒழிக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறது. 'சூது ஒழிப்பு' சர்க்காருடைய லட்சியமாக இருக்கும்பொழுது, அதைப்பற்றி எல்லோரும் சாதகமாக ஆலோசனைகள் சொல்லும்பொழுது, அதை ஒழிக்க நடவடிக்கைகளை சீக்கிரமாக எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

[8th July 1957

11-31 a.m.

*SRI P. M. MUNUSAMI GOUNDER : சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் நமது அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் விற்பனை வரி சம்பந்தமான இந்த மான்யத்தை ஆதரித்து, சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். முக்கியமாக, நம்முடைய சர்க்காருக்கு வரவேண்டிய வருவாய் சரியான முறையில் வருவதில்லை என்பதைத்தான், நான் அழுத்தம் திருத்தமாக சொல்ல ஆசைப்படுகிறேன். பல அங்கத்தினர்கள் பேசும் பொழுது, விற்பனை வரி ஒரு முனை வரியாகத்தான் இருக்கவேண்டு மென்றும், பல முனை வரியாய் இருப்பதால், எல்லா மக்களும் பாதிக்கப் படுகிறார்கள் என்று சொன்னார்கள். மற்றும், நம்முடைய சமுதாயத்தில் பெரும்பாலும் ஏழைகளாகயிருப்பதால், பல முனை வரி விதிப்பதனால், மேலும் மேலும் ஏழைகளாகி விடுகிறார்கள் என்று சொன்னார்கள். அந்த வாதத்தை நான் ஒத்துக்கொள்ளும் விஷயத்தில் தீவிரமாக யோசிக்கும்படி அங்கத்தினர்களை கேட்டுக்கொள்கிறேன். காரணம் என்ன வென்றால், நாம் தீட்டிய பல திட்டங்களுக்கு பணம் ஏராளமாக வேண்டி யிருக்கிறது. அதே சமயத்தில், ஒரு முனை வரி விதிக்கவேண்டுமென்றும், அனேக பண்டங்களுக்கு இந்த வரியினின்று விதி விலக்கு அளிக்க வேண்டுமென்றும் கோரப்படுகிறது. இதனால் நமது வருவாய் பெரிதும் குறைந்து நமது திட்டங்கள் நல்லமுறையிலே நடைபெறாது பாதிக்கப்படும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஒரு முனை வரி தேவை என்று சொல்லும்பொழுது, அதே நேரத்தில் பல முனை வரியினால் தற்போது என்ன கஷ்டங்கள் இருக்கிறது, அவற்றை எவ்வாறு நிவர்த் திக்கலாம் என்று பல அங்கத்தினர்கள் சொல்கிறார்கள். வர்த்தகம் செய்யும் வியாபாரிகள் சொல்லுகிறார்கள் என்பதை வைத்துக்கொண்டு, சர்க்கார் இதில் தீவிரமாக முனைந்துவிடக்கூடாது என்று சொல்லிக்கொள்ள ஆசைபடுகிறேன்.

ஒரு முனை வரி விதிப்பதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. தற்சமயம், பல முனை வரி இருக்கும்பொழுதே, சர்க்காருக்கு வரவேண்டிய பூரா வரி பணம் வசூலாவதில்லை. இதற்கு காரணம் வியாபாரிகளும் சர்க்காரைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களும்தான். வியாபாரிகள் பலவித கணக்குகளை வைத்துக்கொண்டிருப்பதோடு, சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் அவர்களது கணக்கை நல்ல முறையில் கண்காணிப்பது இல்லை. அவர்கள் சோம்பலின் காரணத்தினாலும், மற்ற ஊழல்கள் காரணமாகவும், சர்க்காருக்கு கிடைக்க வேண்டிய வரி கிடைப்பதில்லை. உதாரணமாக, சினிமா சம்பத்தப்பட்ட வரையில், நான் சில இடங்களில் பார்த்த ஊழல்களைப்பற்றி சொல்லு கிறேன். சினிமா கொட்டகையில் உபயோகப்படுத்தும் எல்லா டிக்கட்டு களுக்கும் தாசில்தார் "சீல்" (seal) வைத்திருக்கவேண்டும். அப் படியில்லாமல், கொஞ்ச டிக்கட்டுகளுக்கு மட்டும் "சர்க்கார் சீல்" போட்டுக் கொண்டு, மற்றபடி சினிமா செல்பவர்களிடமிருந்து நேராக பணத்தைப் பெற்றுக்கொண்டு "டிக்கட்" இல்லாமல் உள்ளே அனுமதிக்கப்படுகிறார் கள். இதை சர்க்கார் கண்காணித்து, தங்களுக்கு வரவேண்டிய வரு வாயை அடைவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். இம்மாதிரி தவறுகளை கவனிப்பதற்கென, தனிப்பட்ட தணிக்கை அதிகாரி இருக்கிறார்களா என்பது தெரியவில்லை. இந்த விஷயத்தை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

அதிக வருவாய் இல்லாதவர்கள்தான், தற்சமயம், சினிமாவைப் பார்க் கிறார்கள். பணக்காரர்கள் அதிகமாக பார்ப்பதில்லை. ஏழைகளுக்கு அதிக வருவாய் கிடையாது. ஆதலால், அவர்களுக்கு "விற்பனை வரி கூடாது" என்றும், வேண்டிய வசதிகள் செய்துகொடுக்க வேண்டுமென்றும் சொல் லும் சமயத்தில், அவர்களுக்கு கிடைக்கும் பணத்தை சினிமாக்களில் விரயம் செய்யாமல் தடுக்க வழிவகைகள் செய்யவேண்டும். சினிமாக் களில், 3 மணிக்கு டிக்கட் கொடுக்கிறார்கள் என்றால் 1 மணிக்கே சினிமாக் கொட்டகைக்குச் சென்று "க்யூ" வரிசையில் டிக்கட்டுக்காக நிற்க ஆரம்பித்து விடுகிறார்கள். குறைந்த கட்டணம் உள்ள வகுப்பு களுக்குத்தான் அதிக ஏழை ஜனங்கள் போகிறார்கள். உயர் வகுப்பு களுக்கு போகும் பணக்காரர்களின் எண்ணிக்கை மிக சொற்பமே.



8th July 1957] [Sri P. M. Munusami Gounder]

குறைந்த கட்டணத்தின் மீது அதிக அளவில் வரிபோட்டால், ஏழை மக்கள் அதிகமாக சினிமாவுக்கு போகமாட்டார்கள் என்று நம்புகின்றேன். என்னுடைய வாதம் என்ன வென்றால், பணக்காரர்கள், எவ்வளவு வரி விதித்தாலும், அதனால் கவலைப்பட மாட்டார்கள். இதோடு, சினிமாபடம் பிடிப்பவர்கள்மீதும், சினிமாவிற்காக கதை, வசனம் எழுதுபவர்கள்மீதும் எவ்வளவு அதிகவரி போட முடியுமோ அந்த அளவுக்கு போடவேண்டு மென்று விரும்புகிறேன். ஒருவர் ஒரு படத்துக்கு, கதை, வசனம் இவை எழுதுவதன் மூலம் ஆயிரக்கணக்கான ரூபாய் பெற வசதி இருக்கிறது. அவர்கள் ரூபாய் 10,000 பெற்றுக் கொண்டாலும், குறைந்த தொகைக்கே (voucher) ரசீது கொடுக்கிறார்கள். ஆதலால் இது விஷயத்தையும் சர்க்கார் கவனித்து ஆவன செய்ய தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தப்படியாக, மோட்டர் வாகனங்கள் விற்கப்படும்போது, சர்க்காருக்கு வரவேண்டிய விற்பனை வரி கிடைப்பதில்லை. சென்னையில் விற்கப்படும் மோட்டார்கார், லாரி, பஸ் சேஸிஸுகள் சாதாரணமாக இங்கு டெலிவரி எடுப்பதென்றால் வரி செலுத்தவேண்டும். ஆனால், வரி கொடுக்காமல் இருப்பதற்காக, மோட்டார் கார்களை, சித்தூர் அல்லது பங்களூர் விலாசம் கொடுத்து (delivery) எடுத்துக்கொள்கிறார்கள். இதனால் சர்க்காருக்கு ஆயிரக்கணக்கில் நஷ்டம் ஏற்படுகிறது. ஆகையால், எங்கு (delivery) எடுத்தாலும், எந்த விலாஸம் கொடுத்தாலும் சர்க்காருக்குச் சேரவேண்டிய வரியை, இழக்காமல் இருப்பதற்கு தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக, புகையிலை சம்மந்தமாக கிராமங்களில் புகையிலையை உற்பத்தி செய்கிறவர்கள் அதை டவுன்களுக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்கிறார்கள். அப்படி உற்பத்தி செய்யும் குடியானவர்கள் தங்கள் சொந்த உபயோகத்திற்கென்று ஒரு ஏக்ராவை வரியின்றி வைத்துக்கொள்ள விதிகளை தகுந்தபடி மாற்றி அமைக்கவேண்டும்.

A.C.T.O.-க்கள் ஏழைகளிடமிருந்து வரி வசூல் செய்யும்போது அவர்களை கொடுமைப் படுத்தாமல் இருக்கும்படி செய்யவேண்டும். அத் துடன், நான் சொல்லிய யோசனைகளை நல்ல முறையிலே பரிசீலனை செய்து சர்க்கார் தங்களுக்கு கிடைக்கவேண்டிய வருமானத்தை பூராவும் பெற வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மானியத்தை ஆதரித்து என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* SRI P. S. CHINNADURAI : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இன்று சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விற்பனை வரியும் இதர வரிகளும் சம்பந்தமான மானியப் பிரேரணைக்கு கனம் அங்கத்தினர் ஸ்ரீ ராமச்சந்திரன் அவர்கள் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரிப்பதுடன், நான் ஏற்கெனவே கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணையின் கருத்தினையும் வலியுறுத்தி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இங்கே கோரப் படும் மானியத்தில் இதர செலவினங்களும் உட்பட்டிருந்த லும் அவை களின் மீது எந்த விதமான வெட்டுப் பிரேரணையும் வரவில்லை என்று கனம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அது எதிர் கட்சியிலே இருக்கின்ற அங்கத்தினர்களின் கவனக் குறைவைக் குறிப்பிடவில்லை ; அதற்குப் பதி ல க விற்பனை வரி சம்பந்தமாக அவர்கள் எவ்வளவு கவனமாக இருக்கி றார்கள் என்பதனைத்தான் குறிப்பிடுகின்றது என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

விற்பனை வரியின் மூலம் வரும் வருமானம் கிட்டதட்ட 11 கோடி ரூபாய் ஆகும். விற்பனை வரியிலிருந்து உணவு தானியங்களுக்கு விலக்கு அளிக்கவேண்டும் என்று ஒரு கோரிக்கையை எதிர் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்கள் மட்டுமின்றி ஆளும் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர் களிலும்கூட ஒரு சிலர் வற்புறுத்துவதை இங்கே நாம் காண முடிகின்றது. ஆனால் இந்த மானிய கோரிக்கையின் மீது முடிவு எடுக்கும்போது, அந்த அங்கத்தினர்கள் தங்களுடைய மனச்சாட்சிக்கு முதலிடம் கொடுப்பது

யாத நிர்பந்த நிலையின் காரணமாக, மானிய கோரிக்கை கனம் அமைச்சர் அவர்கள் கோருகின்றவாறே எற்றுக்கொள்ளப்படக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது என்பதை நான் உணர்வேன்.

மகாத்மா காந்தி அடிகள் உணவு தானியங்களுக்கு விற்பனை வரி விதிக்கக்கூடாது என்று சொன்னது எனக்கு நினைவு இருக்கிறது. அண்மையிலே, இந்நாட்டின் பிரதம மந்திரியாக இருக்கின்ற பண்டித நேருஜீ அவர்கள் கூட "உணவு தானியங்களுக்கு விற்பனை வரி விதிப்பது அவ்வளவு விவேகமானதுதானா ?" என்ற கருத்தை தெரிவிப்பதையும் நான் இங்கே குறிப்பிட்ட விரும்புகிறேன்.

"உணவு தானியங்களுக்கு விற்பனை வரி விதித்தால் அதனைச் செலுத்துபவர்கள் நகரங்களிலே இருக்கின்ற தொழிலாளர்களும் நகர மக்கள் பலரும் தானே தவிர, கிராமங்களில் இருக்கிறவர்கள் அல்ல" என்று பட்ஜெட் விவாதத்திற்கு பதிலளிக்கையில் கனம் நிதி அமைச்சர் அவர்கள் கூறினார்கள். கனம் நிதி அமைச்சர் அவர்களுக்கு கிராம வாழ்க்கையைப் பற்றிய பரிச்சயம் விட்டுப்போயிருக்கும் காரணத்தினாலும், சிறிய வியாபாரிகளின் தொழில் நுணுக்கங்களைப்பற்றி போதிய அளவு அவர்களுக்குத் தெரிந்திருக்காத காரணத்தினாலும் தான், அம்மாதிரி அவர்கள் சொன்னார்கள் என்று நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். காரணம், கிராமங்களிலுள்ள சிறிய கடைக்காரர்கள் பெரிய கடைகளுக்குச் சென்றுதான் தானியத்தை வாங்கி வருகிறார்கள். அவர்கள் அங்கே விற்பனை வரி செலுத்தி விட்டுத்தான் வருகிறார்கள். இதை சந்தைகளில் மிகத் தெளிவாகக் காணலாம். சந்தை வியாபாரிகள் பில் போடுவதில்லை. ஆனாலும் சந்தை வியாபாரம் செய்யும் வியாபாரிகள் விற்பனை வரி செலுத்திவிட்டுத் தான் தங்களுக்கு வேண்டிய சோளத்தையோ, அரிசியையோ, பயரையோ வாங்கிக் கொண்டு வருகிறார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

குறிப்பாக கோவை ஜில்லாவில் கிராமங்களிலுள்ளவர்கள், அரிசியை விலைக்குத் தான் வாங்க வேண்டியிருக்கிறதே தவிர, அவர்களுக்கு சொந்த நிலத்தில் நெல் விளைவதில்லை. அங்கே பெரிய மிராசுதார்களின் நிலைமை வேறாக இருக்கலாம் ; போதிய வசதியுள்ளவர்களின் நிலைமை வேறாக இருக்கலாம் ; தஞ்சாவூர் ஜில்லாவில் சொந்த நிலமுடையவர்களின் நிலைமை வேறாக இருக்கலாம். அத்தகையோரைப்பற்றி நான் குறிப்பிடவில்லை. சாதாரண நிலைமையிலுள்ள எழை விவசாயிகளையும், கூலியாட்களையும், சிறு நில விவசாயிகளையும் பற்றித் தான் நான் குறிப்பிடுகிறேன். அவர்கள் உணவு தானியங்களுக்கு விதிக்கப்படும் விற்பனை வரியினால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களிடம் தனியாக விற்பனை வரி வசூலிக்கப்படாவிட்டாலும், அதற்கு அதிகமாகவே "விலை" ரூபத்தில் வாங்கப்பட்டு விடுகிறது.

எந்த வகையில் பார்த்தாலும், விற்பனை வரியிலிருந்து உணவு தானியங்களுக்கு விலக்குக் கொடுப்பது மிகவும் அவசியமாகும். மகாத்மா காந்திஜீ இங்கே இல்லை என்ற காரணத்தினாலோ, பண்டித நேருஜீ இங்கே வந்து வலியுறுத்திக் கூற மாட்டார்கள் என்ற காரணத்தாலோ, இந்த சபையில் எதிர் கட்சிக்காரர்கள் தானே கூறுகிறார்கள் என்ற காரணத்தாலோ, இந்த அமைச்சரவை விற்பனை வரியிலிருந்து உணவு தானியங்களுக்கு விலக்குக் கொடுக்கத் தயங்கினால் அது தர்மம் ஆகாது என்று நான் சொல்லிக்கொள்ள விரும்பிகிறேன்.

உணவு தானியங்களின் மீது போடப்பட்டிருக்கும் விற்பனை வரியானது உயிர் வாழ்வதற்கே போடும் வரி என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உயிர் வாழ்வதற்கு வரி போடுவது உண்டா ? உணவு தானியங்கள் இல்லாவிட்டால் உயிர் வாழ முடியாது. அந்த உணவு தானியங்களுக்குப் போடும் வரி உயிர் வாழ்வதற்குப் போடும் வரி ஆகும். "நமக்கு வருமானம் கொடுக்கச்கூடிய இனங்கள் எல்லாம் உபயோகிக்கப்பட்டு விட்டனவா (exhausted) என்ன, நாம் உணவு தானியங்களுக்கு விற்பனை வரி போடுவதற்கு ?" என்று நான் கேட்க விரும்புகிறேன்.

8th July 1957] [Sri P. S. Chinnadurai]

அத்துடன், விற்பனை வரி சம்பந்தப்பட்டவரையில் நிர்வாகத்தில் பல விதமான ஊழல்கள் இருக்கின்றன என்பதை இங்கே நான் வலியுறுத்துகிறேன். லஞ்சமும் ஊழலும் தாண்டவமாடுகின்றன என்று இங்கே குறிப்பிடும்போது, அது ஏதோ தங்கள் மீது சுமத்தப்படும் குற்றம் போல் கனம் அமைச்சர்கள் எடுத்துக்கொள்வதைக் காண நான் மிகவும் வருத்தப்படுகிறேன். இருந்தபோதிலும், அதைச் சொல்லாமல் விட்டுவிடுவேனானால் என் கடமையில் தவறியவன் ஆவேன் என்று கருதி அதை மிகவும் வலியுறுத்திக் கூறுகிறேன். மற்ற எந்த இலாகாவைக் காட்டிலும் அதிகமாக இந்த இலாகாவில் ஊழல் நிரம்பியிருக்கிறது, அதிகாரிகளிடையே லஞ்சம் மிகவும் தாண்டவமாடுகிறது. தற்போது போடப்பட்டிருக்கும் விற்பனை வரி சரியான அளவில் வசூலிக்கப்பட்டு சர்க்காரிடம் சேர்க்கப்படாத நிலைமை கூட இந்த லஞ்சத்தால் தான் உருவாகியிருக்கிறது. ஆங்காங்குள்ள அதிகாரிகள் வியாபாரிகளிடம் லஞ்சம் வாங்கிக்கொண்டு விற்பனை வரியை சரியாக வசூலிப்பதில்லை என்பதை இங்கே நான் கூறாமல் இருக்க முடியவில்லை. அதற்கு வியாபாரிகளும் உடந்தையாக இருக்கலாம். ஆனால் இதற்கு முடிவே காணமுடியாதா ? சரியான முடிவுகாண அரசாங்கத்தார் முன்வர மாட்டார்களா ? விற்பனை வரியை வசூலித்துவரும் இன்றைய நிர்வாக இயந்திரத்தை இதே முறையில் தொடர்ந்து இயக்கிக்கொண்டு போனால், அது கனம் அமைச்சர் அவர்களுக்குப் பெருமையைக் கொடுக்காது. கனம் அமைச்சர் அவர்கள் தம் பதவிக் காலத்தில் பெருமைக்குரிய சாதனை ஏதேனும் ஒன்றைச் செய்யவேண்டும். அப்படிச் செய்தால் தான் நல்லதொரு புதிய கொள்கை நிலைநாட்டப் படும். நல்லதொரு புதிய கொள்கையை நிலைநாட்டுவதால் மக்களின் சுபீட்சத்திற்கு வழிகோல முடியும்.

நல்லதொரு புதிய கொள்கையை நாட்டும் முயற்சியில் எது குறுக்கிட்டாலும் கனம் அமைச்சர் அவர்கள் அதை கவனிக்கக்கூடாது. கனம் அமைச்சர் அவர்கள் புதிதாக ஏற்படுத்திக்கொண்டிருக்கும் தொடர்பின் செல்வாக்கு அவர்களுடைய கொள்கை நிலைநாட்டப்படுவதற்குத் தடையாக இருந்தாலும், தொழிலாளர்கள் வர்க்கத்திலிருந்து வந்திருக்கும் அமைச்சர் அவர்கள் மனம் தளராமல், தைரியத்தை வரவழைத்துக்கொண்டு துணிச்சலாகச் செயல் படுவதற்கு முன்வர வேண்டும். ‘ உணவு தானியங்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்குக் கொடுத்தே தீருவேன். அதற்குத் தடையாக யாரும் இருக்க முடியாது ’ என்ற உறுதிப்பாட்டுடன் கனம் அமைச்சர் அவர்கள் தம் கொள்கையை நிலைநாட்ட முயலவேண்டும். கொள்கைக்காக ராஜிநாமா செய்பவர்கள் இருக்கிறார்கள். கனம் ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்களும், கனம் ஸ்ரீ வி. வி. கிரி அவர்களும் தங்கள் கொள்கைக்குத் தடை ஏற்பட்ட காலத்தில் பதவியை ராஜிநாமா செய்தார்கள். கனம் ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் ராஜிநாமா செய்தபோது, அவர்களை வருந்தி வருந்தி அழைத்து மந்திரி சபையில் சேர்த்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. உணவு தானியங்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கவேண்டும் என்ற கொள்கைக்காக கனம் அமைச்சர் அவர்களுக்குப் பின்னால் நிற்க கோடிக் கணக்கான மக்கள் இருக்கிறார்கள். அவருக்குப் பின்னால் நிற்பதற்கு அவரது கட்சியைச் சேர்ந்த பல அங்கத்தினர்கள் உறுதிப்பாட்டுடன் இருக்கிறார்கள் ; அவர்களைவிட அதிகமான எண்ணிக்கையில் மற்ற கட்சிகளைச் சேர்ந்த பல அங்கத்தினர்களும் உறுதிப்பாட்டுடன் இருக்கிறார்கள். உணவு தானியங்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கும் விஷயத்தில் போதிய அக்கறை காட்டி சீக்கிரம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக குதிரைப் பந்தயச் சூதாட்டத்தின் மூலமாக சர்க்காருக்கு பதினான்கு லட்சத்து ஐயாயிரம் சொச்சம் ரூபாய் வருகிறதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. சூதாட்டத்தை எப்போது ஒழிப்பது என்பதில் இப்போது இரண்டுவிதமான கருத்துக்கள் இருப்பதை நான் அறிவேன். பொதுவாக குதிரைப் பந்தயத்தை ஒழித்துவிடவேண்டுமென்பதில் அபிப்பிராய பேதம் இல்லை. ‘ இந்தச் குதிரைப் பந்தயச் சூதாட்டத்தின் மூலமாக வருகின்ற வருமானத்தை ஏற்றுக்கொள்வது தகுதியா [illegible] அதை வேண்டா [illegible]

[Sri P. S. Chinnadurai] [8th July 1957

மென்று ஒதுக்கிவிடுவதால் என்ன நஷ்டம் ஏற்படப்போகிறது ?' என்பதை எல்லாம் சிந்திக்கவேண்டும். குதிரைப் பந்தய ஒழிப்புச் சட்டத்தை உடனடியாக அமுலாக்குவதில் உள்ள தயக்கம் என்ன என்பது தான் எனக்குத் தெரியவில்லை. முன்பு எந்தக் காரணத்தைக்கொண்டு அதை அமுலாக்காமல் ஒத்திவைத்திருந்தாலும் சரி என்னுடைய மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் பதவியில் இருக்கிற காரணத்தால் இதில் இனி ஒரு சிறிது காலமும் தாமதம் ஏற்படுவதை நான் விரும்பமாட்டேன். புதிதாகச் சட்டம் இயற்றுவதானால் காலதாமதம் ஏற்படலாம். இயற்றி வைக்கப்பட்டிருக்கிற சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவதில் இனி காலதாமதம் இருக்கக்கூடாது. சூதாட்டத்தின் காரணமாக சர்க்காருக்கு வந்துகொண்டிருக்கிற வருமானம் குறைந்துவிடுமே என்கிற எண்ணத்தில் நமக்குள் கருத்து வேற்றுமைக்கு இடம் இருக்கக்கூடாது. இந்தப் பாவப் பணம் பதினான்கு லட்சம் ரூபாய் நம் கஜானாவுக்கு வரவேண்டுமா என்று கேட்கவிரும்புகிறேன். இந்தப் பாவப் பணத்தை வேண்டாம் என்று ஒதுக்கவேண்டிய ஆற்றலும், துணிச்சலாக இந்தச் சட்டத்தை உடனடியாக அமுலாக்கியே தீருவோம் என்கிற உறுதியும் அமைச்சருக்கும், சர்க்காருக்கும் உண்டானால் இதை எல்லோரும் பாராட்டுவார்கள். உடனடியாக இதை அமுல் படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.

*SRIMATHI KAMALAMBUJA AMMAL : கனம் சபாநாயகர் அவர்களே,
11-52 a.m. இந்த மானியத்தை ஆதரித்து, அதன் பேரில் நான் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன்.

முதலாவதாக வரி எதுவுமே போடாமல் இந்த அரசாங்கத்தை நடத்த முடியாது என்பதை இங்கு கூடியிருக்கிற நாமும், நம்மைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய பொதுமக்களும் நன்றாக உணர்ந்து கொள்ளமுடியும். எப்படி குறைந்த பட்ச வருமானம் உடைய குடும்பத்திற்குப் பலவிதமான சங்கடங்கள் ஏற்படுமோ அப்படி குறைந்தபட்ச வருமானமுடைய சர்க்காருக்கும் பலவித சங்கடங்கள் உண்டாகும். வருமானத்தை அதிகப்படுத்திக்கொள்ள வரி போடுவது இன்றியமையாததாகும். ஆனால் நம்மில் சிலர் மக்களிடையே சென்று "உணவுப் பொருள்களுக்கு எல்லாம் வரி போடுவதா ? இது அநியாயம்" என்று சொல்லும் போது மக்களும் கூட "ஆமாம்" என்று சொல்கிறார்கள். அதேசமயத்தில் சர்க்கார் கட்சியிலுள்ள நாங்கள் சென்று "வரி போடாமல் அரசாங்க நிர்வாகத்தை நடத்துவது என்பது இயலாத காரியம். உணவுப் பொருள்களுக்கு ஒரு பர்சண்ட் வரி போட்டிருப்பது அதிகமாகுமா ? இதனால் அரசாங்கத்திற்கு பெருத்த உதவி அளிக்கிறதே" என்று சொன்னாலும் இதற்கும் "ஆமாம்" என்கிறார்கள். ஆகவே பொதுமக்கள் இன்றையதினம் நாம் அவர்களை எப்படி இயக்கினாலும், அப்படி இயங்குகின்ற சக்தியாக இருக்கிறார்கள் என்பதனால் நாம் மிகவும் பொறுப்போடு நடக்கக் கடமைப்பட்டுள்ளோம் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

எல்லாப் பொருள்களுக்குமே ஒரு முனை விற்பனை வரியைக் கொண்டு வருவதனால் சில சிரமங்கள் ஏற்படும். குறிப்பாக சர்க்கரை, காப்பிக் கொட்டை, தேயிலை போன்ற பெருள்களுக்கு ஒரு முனை வரி விதிக்க முடியும். மற்ற பொருள்களுக்கும் இதுபோலவே விதிக்க வேண்டுமென்றால் முடியாத காரியம். இதை அரசாங்கத்தார் நன்கு பரிசீலிக்க வேண்டும்.

தற்போது காய்கறிகளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளித்திருக்கிறார்கள். காய்கறி வகையைச் சேர்ந்த கருனைக் கிழங்குக்கு வரி விலக்கு அளிக்கப்படவில்லை. இதைச் சொல்ல வரும்போது நான் ஏதோ சர்க்கார் பேரில் குறை சொல்ல வருவதாக யாரும் நினைக்கக்கூடாது. "எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் நாட்டிலுள்ள கஷ்டங்களைக் குறைபாடுகளை அங்கத்தினர்கள் எடுத்துச் சொல்லவேண்டும். இந்த உரிமையை எங்கள் கட்சி அங்கத்தினர்களுக்கும் கொடுத்திருக்கிறோம்" என் எங்களுடைய அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதன்படி இருக்கக்கூடிய உண்மையான நிலவரத்தைத்தான் நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

8th July 1957] [Srimathi Kamalambuja Ammal]

குறிப்பாக நமது அரசாங்கம், காய்கறிகள் சீக்கிரத்திலே அழுகிப் போய் விடுமாதலால், 1954-ம் வருஷம் ஏப்ரல்மீ 1-ந்தேதியில் காய்கறிகளுக்கு எல்லாம் விற்பனை வரியிலிருந்து விலக்கு அளித்தார்கள். ஆனால் மறுபடியும் 1954-ம்வருஷம் டிசம்பர் மாதம் 29-ந் தேதியில் உருளைக்கிழங்கு, வெங்காயம், பச்சை மிளகாய், இஞ்சி முதலியவைகளுக்கு வரி விலக்கு உண்டு என்று வைத்துவிட்டு கருணைக் கிழங்குக்கு வரி விலக்கு அளிக்காமல் விட்டுவிட்டார்கள்.

கருணைக்கிழங்கும் கூட சாதாரணமாக மற்ற காய்கறிகளைப் போலவே கெட்டுவிடக்கூடிய தன்மை உடையது தான். மேலும் உருளைக்கிழங்கு வெங்காயம், பச்சை மிளகாய், இஞ்சி முதலியவைகளை விசேஷகாலங்களில் அதிகமாக வரவேற்பார்கள். ஆனால் கருணைக்கிழங்குக்கு விசேஷ காலங்களிலும்கூட வரவேற்பு இருப்பது இல்லை. சாதாரணமாக வீடுகளிலும் கூட அதிகமாக உபயோகப்படுத்தமாட்டார்கள். கருணைக் கிழங்குகளின் தரம் முதலாவதாகப் பயிரிடும் விவசாயிகளுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். அடுத்தபடியாக வியாபாரம் செய்யும் வியாபாரிகளுக்கும் தெரிந்திருக்கும். மூன்றாவதாக, வீட்டிலே சமைக்கும் பெண்களுக்கும் தெரிந்திருக்கும். வீட்டுப் பெண்களே சொல்வார்கள். கருணைக்கிழங்கை நாள்பட வைத்து விட்டால் கருத்துப் போய்விடும். நன்றாக வேகாது கெட்டுப் போயிருக்கும். ஆகவே, மற்ற காய்கறிகளைப் போலவே கருணைக் கிழங்கும் சீக்கிரத்தில் கெட்டுவிடக்கூடிய காய்கறியாதலால் இதற்கும் வரி விலக்கு அளிக்க வேண்டுமென்பதாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

குதிரைப் பந்தயத்தைப் பொறுத்த வரையில் ஒரு வார்த்தை. குதிரைப் பந்தயத்தில் ஏழை மக்கள், பெண்கள் முதலியவர்கள் அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள், இதை ஒழித்துவிடவேண்டுமென்று பலர் சொன்னார்கள். இதை ஒழித்துவிடவேண்டியது அவசியம் என்றாலும் அவர்கள் சொல்கிறது போல ஏழை மக்களுக்கு அதிகமான கஷ்டம் இல்லை. உள்ளே நுழைவதற்கே ஐந்து ரூபாய் கட்டணம் வசூலிக்கப்படுவதால் பெரும்பாலும் பணக்காரர்கள் தான் பாதிக்கப்படுகிறார்கள். பணம் இல்லாதவர்கள் அந்த இடத்திற்குப் போகமாட்டார்கள். அவர்களிடமிருந்து பணம் அரசாங்கத்திற்கு வருவதில் பாவம் ஒன்றும் இல்லை. பணக்காரர்களிடமிருந்து கட்டாயம் வசூல் செய்யத்தான் வேண்டும். ஆகவே குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதைவிட மிகவும் முக்கியமாக கையால் போடுகிற சண்டையை ஒழித்துவிட்டால் நலமாக இருக்குமென்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். குத்து சண்டை என்று சொல்லிக்கொண்டு மனிதர்கள் ஒருவருக்கொருவர் முகத்தில் குத்திக் கொள்வது பார்ப்பதற்கே பயங்கரமாக உள்ளது. இந்தக் குத்துச் சண்டையையே எடுத்துவிட்டால் ரொம்ப நன்றாக இருக்கு மென்று நான் நினைக்கிறேன்.

ஆகவே சில இனங்களில் வரி விதிக்காமல் இருப்பது என்பது முடியாத காரியம். வரியைக் கொடுப்பதற்கு மக்களும் உண்மையை உள்ளபடி தெரிவித்துக்கொண்டால் கஷ்டப்படமாட்டார்கள். பணக்காரர்களாக இருக்கிறவர்களிடமிருந்து அவர்களுடைய பங்கை வரியாக வாங்கினால்தான், ஏழை எளிய மக்களும் தங்களுடைய பங்கை விருப்போடு செலுத்த முன் வருவார்கள். ஆகையால் இப்படிப்பட்ட வரி விதிப்பதற்குப் பொதுமக்களிடமிருந்து யாதோரு எதிர்ப்பும் இருக்காது என்பது நிச்சயம். ஆகவே இந்த மானியத்தை நான் ஆதரித்து அதை வரவேற்கிறேன்.

* **Sri M. SELVARAJ** : மன்றத் தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினர் ராமசந்திரன் அவர்கள் கொண்டு வந்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இப்போது ஏழைகளை பாதிக்கிற விற்பனை வரி இந்த சபையில் விவாதத்திற்கு வந்திருக்கிறது. இப்போது இருக்கிற பல முனை விற்பனை வரியால் சில்லறை கடை வியாபாரிகளுக்கும் கஷ்டம், அதோடு அவர்களிடமிருந்து சாமான்கள் வாங்கும் பொது மக்களுக்கு, ஏற்கனவே செலுத்திய விற்பனை வரியும், இந்த வியாபாரியினுடைய லாபத்தையும் சேர்த்து கொடுக்கவேண்டியிருக்கிறது

இதனால் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட வேண்டியிருக்கிறது. ஒரு முனை விற்பனை வரிகொண்டு வந்தால் வரியின் மூலம் கிடைக்கும் வருமானம் குறையும் என்று கனம் மந்திரி அவர்கள் கௌன்ஸிலில் கூறியிருக்கிறார்கள். Number of assessees குறைகிறது என்றும் கூறியிருக்கிறார்கள். வருமானம் கூடுதல் உள்ளவர்களை கண்டு பிடித்து அவர்களின் மீது கூடுதல் வரி விதித்து சரி செய்யவேண்டும் என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். மேலும் இப்படிப்பட்ட விற்பனை வரி நடைமுறைக்கு வந்து பத்து ஆண்டு காலமாகிறது—இவ்வளவு காலமாக வரி உயர்ந்து கொண்டிருக்கிறதே தவிர வருவாய் அந்த அளவுக்கு உயரவில்லை. மேலும் இந்த விற்பனை வரிகளால் கெட்ட எண்ணங்களும் எந்த அளவில் இந்த விற்பனை வரியிலிருந்து தப்புவது என்ற எண்ணங்களும் வியாபாரிகளிடையே நிலவி வருகிறது. அவர்களுக்கும் வருவாய் கம்மியாக இருக்கிறது என்று அவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். பொதுவாக ஏழை வியாபாரிகளுக்கு விதிவிலக்கு அளிக்கும் முறையில் (turnover) இப்போது நிர்ணயித்திருக்கும் தொகையிலிருந்து பத்து ஆயிரத்திற்கு மேல் 15,000 வரை இருக்கவேண்டும்—மேலும். இப்பொழுது மணிலா பயிறுக்கு purchase point-லியே விற்பனை வரியை வசூலித்து வருகிறார்கள். ஆனால் இதற்கு முன்பு இராஜகோபாலாச்சாரியார் அவர்களுடைய ஆட்சி காலத்தில் இங்கிருந்து 99 சத விகிதம் மணிலாப்பயிறு வெளி நாட்டுக்கு போய்க் கொண்டிருந்தது—அச்சமயத்தில் வெளி நாட்டு வியாபாரிகளிடமிருந்து மொத்தமாக பணம் வசூலிப்பதற்காக இந்த வரியை அந்த இடத்திலேயே (Purchase point) வசூலித்து வந்தார்கள். ஆனால் இப்போது நம் நாட்டினுடைய நிலைமை மாறிவிட்டது. மணிலா பயிறு இப்பொது மில்கள் மூலமாகவும் செக்குகள் மூலமாகவும் ஆட்டி எண்ணெய்யாக்கப் படுகின்றன. அந்த சமயத்தில் இதற்கு ரிபேட் கொடுத்து வந்தார்கள். இப்போது இந்த ரிபேட் சம்பந்தமாக எவ்வளவோ வேலைக்காரர்கள், குமஸ்தாக்கள், இவர்களுக்கு எல்லாம் அதிகப்படியான செலவு ஏற்படுகிறது. இந்த வரி விதிப்பின் பேரில் Stay order-கள் வாங்கி இருப்பதாகவும் தெரிகிறது. ஆகவே இதைமாற்றி Groundnut போன்றவைகளுக்கு அந்த பொருள்களை விற்பனை செய்யும் போது வரிகள் வசூலிக்கவேண்டும். இப்போது ஒவ்வொரு ஜில்லாவிலும் Marketing Committee ஒன்று நடந்துவருகிறது. ஆனால் பல வியாபாரிகள் பல பெயர்களிலும் பலவிதமாக வாங்கி, Purchase point-லும் சரியான விதம் வரி செலுத்தாமல் அரசாங்கத்தை ஏமாற்றிக்கொண்டு வருகிறார்கள். ஆகவே Sales point-ல் வரி விதிப்பு இருக்குமானால், அதை இந்த Marketing Committee மூலமாகவோ அல்லது வேறு வழிகளிலோ வசூலித்து வந்தால் இதைவிட நான்கு பங்கு அதிகாமாக வசூலிக்கலாம். இவ்விதமாக கிடைக்கும் வருமானத்தால், ஏற்கனவே வரி விதிக்கப்பட்டிருக்கும் உணவு தான்யங்களின் மீதுள்ள வரியை எடுக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இதில் சில வியாபாரிகள் பல விதமான விலாசங்களின் பெயரில் லாரிகளில் கொண்டு போய் விடுகிறார்கள். இதற்கென்று கணக்கு சமர்ப்பிக்க ஒரு trip sheet முக்கியமான போலீஸ் ஸ்டேஷனில் வைக்கப்பட்டிருந்தால், அதிலிருந்து இந்த வரி விதிப்பிலிருந்து தப்பித்து கொள்ள முடியாது. இவ்விதமாக வருமானத்தை அதிகப்படுத்தலாம். ஆகவே கனம் மந்திரி அவர்கள் உணவு தான்யங்களின் மீது விதித்திருக்கும் வரியை நீக்கி விட்டு இந்த மான்ய கோரிக்கையை சமர்ப்பிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

(Deputy Speaker in the Chair.)

12-05 p.m. * SRI A. A. RASHEED : Sparrows are entering the hall and disturbing the proceedings with their noise. Will they be prevented from competing with Members? (Laughter.)

DEPUTY SPEAKER : They cannot be controlled by anybody.

8th July 1957]

SRI A. A. RASHEED : Mr. Deputy Speaker, the tanners have to pay nearly three per cent sales tax. One per cent is levied by the Central Government and the remaining two per cent by the State. You are well aware, Sir, that this trade is earning nearly 25 to 30 crores of rupees annually by way of foreign exchange. But unfortunately, this trade is the most affected by this levy, since it has to pay nearly three per cent. In the interests of foreign exchange and in the interests of the trade itself, which is yet to develop from a cottage industry into one on modern lines, I would request the Government to exempt especially tanned hides and skins from sales tax. These are exported outside. This kind of exemption will not only give an incentive to the traders to export more but also will earn more foreign exchange.

Sir, I have already spoken in this House about single-point levy of sales-tax and many on the other side of the House welcome it. If I advocate it, it does not mean that I am opposing the Demand for Grant before the House but, as a businessman, I know where the shoe pinches. So, I request that when the consolidated Bill amending the Sales Tax Act is brought in, single-point levy may be provided for.

As regards the entertainment tax on dramas and dramatic performances, I request the Minister in-charge of the Bill to exempt these, even though by the exemption hon. Gentlemen opposite may be benefited more. (Interruption). They are adept in the art of enacting dramas. In order to encourage the art and culture of our land, we must exempt dramatic performances and dances from this tax.

As regards the tax on betting on horses, if it is proved that the breeding of horses may be affected by the abolition of races, I think we must at least raise the tax from 10 to 15 per cent, which we are entitled.

Sir, Madras is famous for its very high tax on motor vehicles. It is said that Madras is the highly taxed State in the whole world in respect of motor vehicles. Apart from this tax, we have to pay sales tax at the rate of six annas per gallon of petrol. From Re. 1-4-0 to Rs. 1-8-0 in the pre-war days, the price of petrol has risen to three rupees per gallon now. It is not only the rich people who are using vehicles but there are others also. Our standard of living has not gone up and we should not try to do any harm to the automobile industry which in its own way is helping to raise the standard of living of our people. Therefore, the rate of sales tax on petrol should be reduced.

With these words, I support the Demand.

* SRI M. J. JAMAL MOIDEEN : Mr. Deptuy Speaker, Sir, I rise to support the Demand before the House. All the same, I have to state that this sales tax is a distress tax. I say, distress

tax' for the reason that whereas in the case of income-tax, super-tax and the Corporation tax or even the agricultural income-tax for that matter, a person is called upon to pay tax only when he has made a profit, sales tax is payable whether a person makes a profit or not. Even when he incurs a loss, he has got to pay the tax. That is why I call it 'distress tax'. The State is getting nearly Rs. 10 to Rs. 11 crores from this tax as it exists to-day. We have to find a substitute source if we have to dispense with this sales tax. Particularly the sales tax on foodgrains alone comes to Rs. 5 crores. This does not mean that I advocate taxation on foodgrains. We have got to find an alternative before we suggest to the Government that sales tax particularly on foodgrains has to be eschewed. I have to say that not only I but most of our people welcome the attitude taken by our Chief Minister and the Hon. the Minister for Industries in asking Dr. Lokanathan to go into this sales tax question fully and recommend to Government whether it will be feasible to have a single point tax for all commodities or whether we should continue the present taxation as it is. The Government have given the assurance that whatever may be the recommendation of Dr. Lokanathan, that will be implemented as far as possible. I think it is a very good move in the right direction. We all welcome it. I find, of course, that Dr. Lokanathan is already conducting an enquiry. He has already circulated the questionnaire. In some cases in our State there is single point tax, that is, on essential goods. Whether we should have single-point tax on all commodities or we should continue to have this multi-point tax, is under consideration, and this enquiry has been undertaken by Dr. P. S. Lokanathan. He will have to see how the introduction of the single-point tax will affect the revenues of the State. I do not think that sales tax as such can be given up, though it is, as I called in the beginning, a distress tax. But it has come to stay as a necessary evil, if I can use a strong expression in this August House. But this is how I feel about it. Of course, in foreign countries they levy either sales tax or purchase tax. Here it is not well defined whether it is sales tax or purchase tax. In the case of some commodities, it is sales tax and in the case of others, it is purchase tax. I think much of the trouble and much of this lacuna and the alleged harassment by the officers can be avoided if the Government apply their mind more thoroughly to the question and define whether it is a tax at the purchase point or sales point. This will obviate so many difficulties, I should think. In Western countries, which we call generally civilised countries, where the tax structure has been in existence for generations, they have classified the commodities into definite categories, and on these classifications, the tax structure is based. They call it purchase tax. In some cases, the tax is high as 30 per cent to 35 per cent. This is only at a single-point, and that too on definite articles which are used only as luxury articles. When I was in England in 1947, the purchase tax was 100 or even 120 per cent. But the people did not feel the pinch of it so much as

8th July 1957] [Sri M. J. Jamal Moideen]

we feel it here to-day, because those articles which were subject to this high taxation were luxury goods. There were no taxes on utility goods. If we can devise some such means—it may not perhaps be possible in this financial year—to classify articles and commodities on which taxation has to be levied, I think that will obviate so many difficulties and also reduce the machinery which is there for administering sales tax affairs.

Some of my friends were referring to the tax on groundnuts at the purchase point. At that time, it was not to penalise the European houses that Sri C. Rajagopalachari introduced it at the purchase point. But he gave the benefit of single-point tax for groundnuts as well as my own industry, namely, hides and skins. He fixed the tax at the last point and gave relief. We were asked to take out licences. For those who have taken out licences, the tax was shifted from the sale value to the purchase value, because the sale value included some other items like labour. According to the Government of India Act, 1935, no commodity, which is exported, can be taxed by any of the State Governments. Apart from Article 286 of the Constitution, under the Government of India Act, 1935, these commodities could not be taxed on there export sales. That is why it was decided that the tax should be levied on the purchase value. Now the interpretation given is that it is purchase tax. That is why I say that there is confusion in the minds not only of the authorities but also of the people. There should be no confusion in the interpretation of the rules and law. I should think that the Government will have to apply their mind more thoroughly to the tax structure and if need be revise it. I am sure Dr. Lokanathan's help will be utilised to the full advantage, and that the Government will do the needful. With these words, I support the Demand. I support the Demand not because I belong to this side of the House. The other day the Leader of the House said that every member of his party is free to express his views. But as I already stated, there is no alternative for us except to support this Demand. So, I support it and I thank you, Sir, for having given me this opportunity.

SRI K. SATTANATHA KARAYALAR : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மான்யக் கோரிக்கை மீது வந்திருக்கும் வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல அவா உறுகின்றேன். நமது சர்க்காருக்கு நல்ல வருவாய், அதாவது சுமார் 11 கோடி ரூபாய் வருவாய் கொடுக்கக்கூடிய ஒரு இலாகா இது. ஆனால் பொது மக்களும் வியாபாரிகளும் இந்தத் தீர்வையை மட்டில் இதை நாட்டை பிடித்த ஒரு தீராத பிணியாக கருதக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. இந்த வரி முறை இன்று பல நாடுகளிலும் அமுலுக்கு வந்து ஒரு நிரந்தரமாக இடம் பெற்றுவிட்டது. அதே நேரத்திலே மக்கள் காட்டக்கூடிய மிகப் பெரிய வெறுப்பின் காரணங்களை மனதில் கொண்டு, மக்களுக்கு அதிக துன்பம் இல்லாத முறையிலே, சாதாரண மக்கள் பாதிக்கப்படக்கூடாத முறையிலே தொல்லையில்லாமல் இந்த வரியை விதிக்கவேண்டும். ஒருமுனை வரி விதிக்கவேண்டுமென்று இந்தச் சபையில் இதுவரையில் பேசிய அங்கத்தினர்கள் சிலர் குறிப்பிட்டார்கள். அதே நேரத்திலே ஒருமுனை வரி விதிப்பதால் பல சிக்கல்கள் இருக்கின்றன என்று ஒரு சில நண்பர்கள் குறிப்பிட்டார்கள்

ஒரு முனை வரியாக மாற்றினால் சர்க்காருக்கு கிடைக்கக்கூடிய வருவாய் கணிசமான அளவுக்குக் குறையும் என்று சர்க்கார் தரப்பிலே வாதிக்கப் பட்டது. ஓரளவுக்கு நான் அதை ஒத்துக்கொள்கிறேன். அப்படிக் குறை வதன் அடிப்படை காரணமென்ன ? ஒருமுனை விற்பனை வரியாக மாற்ற வேண்டுமென்று கூறும்பொழுது, வரியை எந்த இனத்துக்கும் ரத்து செய்ய வேண்டுமென்று யாரும் கூறவில்லை. அதற்குப் பதிலாக ஒருமுனை வரியாக அதை ஒரே இடத்தில் வசூலிக்கவேண்டுமென்று தான் அங்கத்தினர்கள் சொல்லுகிறார்கள். அப்படிச் செல்லும்பொழுது, இன்று சாதாரணமாக வரி விதிப்பிலிருந்து சுமார் 30, 40 சதவிகிதம் வரை தப்பித்துக்கொள்கிறார் கள், அது அதிகமாய் போய்விடும் என்று சர்க்கார் தரப்பில் சந்தேகிக்கக் கூடும். அப்படி வரியை மாற்றி ஒரே இடத்தில் போடும்பொழுது, ஒரு இனத்திற்கு எத்தனை தடவை எவ்வளவு தொகை கிடைக்கின்றதோ அந்தத் தொகையை ஒரு இடத்திலே நல்ல முறையிலே நல்ல நிர்வாகத்தைக் கொண்டு வசூலிக்கவேண்டும். அதற்கு ஒரு நல்ல 'மெஷனரி' வேண்டும். எக்ஸைஸ் டிபார்ட்மெண்ட் போன்று நல்ல இலாகாவின் மூலம் வேண்டிய திறமையான ஆட்களை ஒவ்வொரு இடத்திலும் பொறுக்கி வைத்து ஒரு இலாகா அமைத்தால், இந்த வரியை நல்ல முறையிலே வசூலிக்கக்கூடும்.

ரூபாய் 10,000-க்கு மேற்பட்டு வியாபாரம் செய்பவர்கள்தான் இந்தத் தீர்வை கொடுக்கவேண்டும். ரூபாய் 10,000 குறைந்தபட்சமாய் வைத் திருப்பது உண்மையிலே ஒரு கஷ்டமான காரியம். நாள் ஒன்றுக்கு 30 ரூபாய் வியாபாரம் செய்யக்கூடிய சிறிய கடையாக இருந்தாலும் விற்பனை வரி கொடுக்கவேண்டியிருக்கிறது. கிராமத்தில் இருக்கக்கூடிய வியாபாரி ஒரு மூட்டை அரிசி எடுத்துக்கொண்டு வந்து கடையிலே வைத்து கால் படி, அரை படியாக விற்று ஒரு நாளைக்கு ஒரு மூட்டை விற்கலாம். அந்த சர்வசாதாரண வியாபாரிக்குக்கூட விற்பனை வரி உண்டு. இந்த நாட்டிலே 25 சதவிகிதம் நகரத்தில் வாழக்கூடிய மக்கள் தான் (urban population) வாங்கிச் சாப்பிடுகிறார்கள், அவர்கள் தான் உணவு தான்யங்களுக்கு வரி கொடுக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. இந்தத் தொகை, அதாவது 25 சதவிகிதம் எவ்வளவு தூரம் சரி என்பதுபற்றி நான் சந்தேகிக்கிறேன். இன்று வியாபாரத்தில் speculators இருக்கக்கூடிய சூழ்நிலையில் சிறு நிலச்சுவான்தார் உற்பத்தி செய்யக்கூடிய உணவு தான்யங்களை அப்படியே வாங்கி பாங்குகளில் பணயம் வைத்திருக்கிறார்கள், அல்லது பிற இடங் களுக்கு அனுப்பிவிடுகிறார்கள். யார் உற்பத்தி செய்கின்றார்களோ அவர் களே முதலில் தானியத்தை விலைக்கு விற்றுவிட்டு, அவர்களுக்கு வேண்டியதை விற்பனை வரியும் கொடுத்து வாங்கக்கூடிய நிலைமையில் நம்முடைய நாட்டின் பொருளாதாரம் இன்று இருக்கிறது என்று சொல்லப் படுகிறது. நம் நாட்டில் விற்பனை வரி விதிப்பதற்கு குறைந்தபட்ச 'turnover' விற்றுமுதல் ரூபாய் 10,000 என்று வைத்திருக்கிறார்கள். ஆனால் பம்பாயில் ரூபாய் 30,000 என்று வைத்திருக்கிறார்கள். அதே போல நம் ராஜ்யத்திலும் விற்பனை வரி விதிப்பதற்கு ரூபாய் 25,000 குறைந்தபட்ச விற்றுமுதலாக வைத்தால் நன்மை தரக்கூடிய ஒரு விஷயமாகும்.

உணவு தான்யங்களுக்கு விற்பனை வரியை ஒரு சதவிகிதமாக குறைத்த துடன் அந்த இனத்தில் பருப்பு வகைகளையும் அந்த இனத்தில் சேர்த்துக் கொள்ளுவது நியாயமாக இருக்கும். உணவு தான்யங்கள் மீது விற்பனை வரியை ரத்துசெய்யவேண்டும் என்று சில நண்பர்கள் கோரினார்கள். அதை நான் ஆமோதிக்கிறேன். உணவு தானியங்களுக்கு விற்பனை வரி ரத்து செய்யப்பட்டால் சர்க்காருக்கு வரவேண்டிய வருவாயில் ரூபாய் 2 கோடி நஷ்டமாகுமென்று இந்தச் சபையிலே வாதிக்கப்படுகிறது. ஒட்டு மொத்தமாக பார்க்கப்போனால், மத்தியதரப்பினர்கள்தான் பாதிக்கப்படக் கூடிய ஒரு சூழ் நிலையில் இருக்கிறார்கள். ஆகையால் பெரிய மனது கொண்டு உணவு தானியங்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

8th July 1957] [Sri K. Sattanatha Karayalar]

'Perishable Articles' ஆகிய இஞ்சி, வெள்ளைப் பூண்டு, பச்சை மிளகாய், சேனை, கருணைக்கிழங்கு, வெங்காயம் முதலியவைகளுக்கு இப்பொழுது வரி விதிக்கப்படுகிறது. இவைகள் சாதாரணமாக வீடுகளில் தினம் உபயோகப்படுத்தக்கூடிய மிக அத்தியாவசியமான பொருளாக இருக்கிறது. 'காண்டிமெண்ட்ஸ்' மிகவும் தேவையான பொருள்களாக இருக்கின்றன. இவைகளுக்கு கண்டிப்பாக விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கவேண்டுமென்று கோருகிறேன்.

பாலைப் பொறுத்தமட்டில், அதை உபயோகிப்பவர்கள் பணக்காரர்கள் தான் என்று சொல்லப்பட்டது. மதுவிலக்கிற்குப் பிறகு சேரிகளில் இன்று டீ கடைகளும் அவைகளில் முறுக்கும் நிரந்தரமாக அமைந்துவிட்டன. அந்தக் கடைகளிலே அதோடு பத்திரிகையும் இருக்கும். ஆகையால் பாலுக்கு விதிக்கக்கூடிய வரியை கட்டாயம் நீக்கவேண்டும். மத்திய தரப்பினர், அதாவது மாதம் சுமார் 100, 200 ரூபாய் வருவாய் வரக்கூடிய இனத்தவர்கள்தான் இந்நாட்டிலே அதிகம் இன்று பாதிக்கப்படுகிறவர்கள். நாட்டிலே மிகவும் பாதிக்கக்கூடிய ஒரு இனத்தவர்கள் இருப்பார்களானால், இம்மாதிரி வருவாய் வரக்கூடிய இனத்தவர்கள்தான் அவர்கள் என்று நான் உறுதியாகச் சொல்லமுடியும். கண்டிப்பாக பாலுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கடைசியாக ஒரே ஒரு விஷயத்தை இந்தச் சபை முன்னிலையிலே வைக்க ஆசைப்படுகிறேன். குறிப்பாக இன்று பெரிய கம்பெனிகள், அதாவது டாடா கம்பெனி, லீவர் பிரதர்ஸ் போன்றவைகள் ஏராளமாக தேங்காய், 'புல் தைலம்' இவைகளை எங்கள் வட்டாரம் போன்ற இடங்களிலிருந்து வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். இப்படி வாங்கக்கூடிய பொருள்களுக்கு எந்தவிதமான விற்பனை வரியும் கொடுப்பதில்லை. ஒரு வேளை எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர் குறிப்பிட்டதுபோல் அரசியல் சட்டத்தில் 286 ஷரத்துப் பிரகாரம் இவர்களுக்கு பாதுகாப்பு இருக்கலாம். அப்படியிருக்கும்பொழுது 'காண்டிராக்ட்' முறையில் வாங்குகிறார்கள். வெளியிலே விற்பனை வரி கொடுத்து வாங்கக்கூடிய அதே விலை கொடுத்து வாங்குகிறதில்லை. வாங்கக்கூடிய தொகை லாபம் டிவிடெண்டு கொடுக்கும் பொழுது பங்குதாரர்களுக்கு லாபமாக வந்து சேருவதுமில்லை. பெருவாரியாக விவசாயப் பொருள்கள் இப்படி தொழில்களுக்குப் போவதிலே எவ்வளவு வரி விதிக்கலாம் என்பதுபற்றி சிந்திக்கவேண்டும். இந்தச் சபையிலே எனக்கு முன்பு பேசிய பட்டுக்கோட்டை நண்பர் குறிப்பிட்டது போல் 'Sales Tax Appellate Tribunal' ஒவ்வொரு ஜில்லாவிலும் இருக்கவேண்டும் அல்லது ஜில்லா ஜட்ஜுக்கு இந்த அதிகாரம் கொடுத்தால் மிகப் பெரிய சௌகரியமாக இருக்கும் என்று மிகப் பணிவன்புடன் இச் சபையின் முன்பு சமர்ப்பித்துக்கொள்ளுகிறேன்.

Sri K. S. G. HAJA SHERIFF: Sir, I rise to support the Demand moved by the Hon. Minister. I congratulate the Hon. the Minister for Finance on his bringing down the levy of sales tax on foodgrains from 1-9/16th to 1 per cent. But he has qualified this reduction by saying that only paddy, rice, wheat, and millets will come under this reduced rate. But may I suggest that all foodstuffs including perishables should benefit by this reduction, because under the prevailing high cost of living, all will be benefited if all the foodstuffs are brought under this reduced rate? Sir, I quite realise that Dr. P. S. Lokanathan, an eminent economist, is appointed by the local Government to study the whole tax structure and then advise the Government as to how best the sales tax administration can be simplified. I am sure that he is taking the necessary steps. He has also issued a questionnaire to

12-28 p.m.

[Sri K. S. G. Haja Sheriff] [8th July 1957

many mercantile and commercial bodies for answer. At the same time I would suggest for the consideration of the Government that the whole thing should be levied at one single-point, and not at multi-points. An argument may be advanced that by introducing this single-point levy, there will be loss of revenue. But may I suggest that there would not be loss of revenue? On the other hand, the revenue will become much more. Evasion will be very negligible. If the Government think that there will be loss of revenue, they can increase the rate of tax. Suppose a particular item is taxed at 4 per cent, they can just increase it to 6 per cent, and if the Government still feel that the amount is not sufficient, they can again increase it by two more per cent so that there may not be any evasion, and there would not be any loss to Government. I quite concede what the Opposition members have said that there should be less of rigidity in the collection of this tax or that there should be no harassment. There might be some harassment. If at all there is any, it is only to see that the public revenue is safeguarded and that more revenue is brought in so that the various schemes which the Government have piloted, for the benefit of the people, can be executed successfully. I thank you, Sir.

12-31 p.m. SRI T. VELUCHAMI : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, நான் இந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்துப் பேசுகின்றேன். போதிய பேச்சுத் திறமை இல்லாத காரணத்தால், நான் இந்த விற்பனை வரியைப் பற்றி அவ்வளவு தெளிவாக எடுத்துச் சொல்ல முடியாமற் போனாலும், கனம் மந்திரி அவர்கள் அந்த விஷயத்தை நன்றாகக் கவனித்து, நான் சொல்லக்கூடியது நம் நாட்டில் சோஷலிச சமுதாயத்தை உண்டாக்கு வதற்கு அடிப்படையாகவும், முக்கியமாகவும் உள்ள காரியமாக இருப்பதால், அவசியமானால் தனியாகவும் என்னிடம் விளக்கம் கேட்டு, தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று முதலில் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

நம்முடைய சோஷலிச சமுதாய லட்சியத்திற்கு அடிப்படையாகவுள்ள இந்தக் கூட்டுறவு ஸ்தாபனங்களை யுத்த காலத்திலே நாம் மிகவும் கவனத்தோடு வளர்த்து வந்ததோடு, கூடுதலான அக்கரையும் எடுத்துக்கொண்டு, அதற்கென பணமும் ஒதுக்கி வந்தோம். இன்னும் வளர்த்துவருவதற்கு விரும்புகிறோம். யுத்த காலத்திலே, அதாவது பத்து வருஷங்களுக்கு முன்பாக மக்களுக்கு நல்ல முறையிலே சேவை செய்து வந்தன, பிரதம கூட்டுறவு பண்டகசாலைகள். யுத்தம் முடிந்த பிற்பாடு, அந்தக் கூட்டுறவு பண்டகசாலைகள் உயிரற்ற நிலைமையை அடைந்துவிட்டன. அதற்கு மூல காரணம் இந்த விற்பனை வரியும், இந்த வரியிலிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டுமென்று நினைப்பவரும், மேற்படி பண்டகசாலைக்குப் போட்டியாக வியாபாரம் செய்பவர்களும் தான்.

உதாரணமாக, ஒரு மூட்டை பிண்ணாக்கை விற்கும்போது, கூட்டுறவு பண்டகசாலையில் உள்ள சிரமங்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். கொள்முதல் இடத்திலிருந்து அந்த மூட்டையைக் கூட்டுறவு பண்டசாலைக்குக் கொண்டுவரவேண்டுமானால் ரூ. 20 அடக்கம் ஆகிறது என்று வைத்துக்கொள்வோம். கூட்டுறவு பண்டகசாலையில் நேர்மையான முறையில்; தப்பிதம் இல்லாமல், ஒழுங்காக கணக்கு வைக்கவேண்டிய நிலைமையில் இருப்பதால், வரி உள்பட அதன் விலை ரூ. 20—5—0 ஆகிவிடுகிறது. ஆனால், தனிப்பட்ட வியாபாரி, ஒரு மூட்டையின் அடக்கு விலை ரூ. 20 ஆக இருந்தாலும் கொள் முதலை கணக்கில் போடாமல் வரி இல்லாமலேயே ரூ. 20—4—0-க்கே

**8th July 1957]** [Sri T. Veluchami]

பல மூட்டைகளை விற்றுவிடுகிறான். ஆனால், இந்தக் கூட்டுறவு பண்டகசாலையோ அந்த மூட்டையை வைத்துக்கொண்டு கணக்குப் பார்த்துக்கொண்டிருக்க வேண்டிய நிலைதான் ஏற்படுகிறது. ஆகவே, ஒன்று விற்பனை வரி **evasion** இல்லாத ஒரு நடவடிக்கை எடுக்கவேண்டும் ; அல்லது கூட்டுறவு பண்டக சாலைகள் அபிவிருத்தியடைவதற்கும், அவைகளுக்குப் புனர் வாழ்வு ஏற்படுத்துவதற்கும், அவைகள் இன்னும் உயிரோடு இருக்கவும், அவைகள் சோஷலிச லட்சியத்திற்கு உறுதுணையாக இருக்கவும் அவைகளுக்கு விற்பனை வரியிலிருந்து விதிவிலக்கு அளிக்கவேண்டும். ஒரேயடியாக பூராவரியையும் விலக்களிக்காவிட்டாலுங்கூட, ஒரு சலுகையாவது அவைகளுக்கு இருக்க வேண்டும். அதாவது ½ சத விகிதமாவது கூட்டுறவு பண்ட சாலைகளைப் பொறுத்தவரையில் வரிச் சலுகைகாட்டினால், அவைகள் திறம்பட இயங்கும் என்று நான் கூற விரும்புகிறேன்.

திருநெல்வேலி ஜில்லாவில் கூட்டுறவு பிரதம பண்டகசாலைகள், மத்திய கூட்டுறவு பண்டகசாலைகள் மூலமாக நடத்திவரும் நியாய விலைக் கடைகள் மிகவும் திறமையான முறையில், நேர்மையான முறையில் இயங்கி வருகின்றன. சர்க்காருக்கு வரியை நியாயமாகவும் நேர்மையாகவும் கணக்கு வைத்துக்கொண்டு செலுத்தி, அதே சமயத்தில் பொருள்களை நேர்மையான முறையில், பிளாக் மார்க்கெட் செய்யாமல், மக்களுக்கு விநியோகித்து வருவதன் மூலம் இத்தகைய பிரதம கூட்டுறவு பண்டகசாலைகள் சர்க்காருக்கும் பொதுமக்களுக்கும் உதவி புரிந்து வருவதால், அவைகளைப் பாதுகாக்க, அவைகளை உயிரற்ற நிலையிலிருந்து உயிருள்ள நிலைக்குக் கொண்டுவர, அவைகளுக்கு " இன்ஜெக்ஷன் " கொடுப்பதைப்போன்ற நடவடிக்கைகள் எடுப்பது மந்திரி அவர்களுடைய பெரும் பொறுப்பாக இருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

நம்நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கும் இந்த நிலையில், வியாபாரம் செய்யலாம் என்று ஒரு சில வாலிபர்கள் நினைக்கும் காலத்தில், ஏதோ 50 ரூபாய் போட்டு ஒரு கடை வைக்கிறார்கள். இப்படிக் கடைகள் வைத்தவுடனே விற்பனை வரி அதிகாரிகளுக்கும் தகவல் தெரிந்துவிடும். இதற்காகவே அவர்கள் ஆட்கள் வைத்திருக்கிறார்கள். புதிதாக ஒருவன் கடை வைத்தவுடனே, விற்பனை வரி அதிகாரி அவனிடம் வந்து, "ஐந்து ரூபாய் தான் நீ கொடுக்கவேண்டும் " என்று சொல்லி வசூலித்து விடுகிறார். ஐந்து ரூபாய் ஏன் வசூலிக்கப்படுகிறது என்ற விவரத்தை அந்த வியாபாரியிடம் அதிகாரி சொல்வது கிடையாது. எதுவும் சொல்லாமல், "இதிலே கையெழுத்துப் போடு ; நீ வியாபாரம் நடத்தலாம் " என்று சொல்கிறார். முதலில் இப்படி சகட்டு மேனிக்கு வாங்கிக்கொண்டு போய், அதற்கடுத்தாற்போல், மறுதடவை வரும்போது, "இதிலும் இன்னொரு கையெழுத்துப் போடு " என்று சொல்வார். அதில் என்ன எழுதியிருக்கும் ? வருஷ **turnover** 11 ஆயிரம் ரூபாய் என்று அதில் எழுதியிருக்கும். " சும்மா கையெழுத்து போடு " என்று சொல்வார். வியாபாரிக்கு சட்ட திட்டம் தெரியாது. எதற்காக கையெழுத்து போடுகிறோம் என்று கவனத்தோடு விஷயத்தைத்தெரிந்து கொள்வது கிடையாது. அந்த அளவு வியாபாரிகள், சிறு சிறு வியாபாரிகள், விஷயத்தைத் தெரிந்துகொள்ளத்தக்க பக்குவம் உள்ளவர்களாக இருப்பதில்லை. அதன் காரணத்தால் எதிலும் கையெழுத்து போட்டுக்கொடுத்து விடுகிறார்கள். இப்படிக் கையெழுத்துப் போட்டுக் கொடுத்து சில நாட்களுக்குப் பிறகு விற்பனை வரி இலாகாவிலிருந்து அந்த வியாபாரிக்கு அனுப்பப்படும் டிமாண்டு நோட்டீசில், "மொத்த உத்தேச **turnover** 11 ஆயிரம் ரூபாய் " என்று கண்டிருக்கும். மேலும் மாதா மாதம் உத்தேச வரி ரூ 13 கட்டிவரவேண்டும் என்றும் கண்டிருக்கும். இப்படியிருந்தால், புதிதாக கடை வைப்பவர்கள், அதுவும் வேலையில்லாத் திண்டாட்ட காலத்தில் தொழிற் துறையில் இறங்கக்கூடிய வாலிபர்கள் எப்படி முன்னேற முடியும் என்று நான் கேட்கின்றேன். இப்படி புதிதாக வியாபாரம் செய்ய முற்படுவோர்களுக்கு கஷ்டங்கள் ஏற்படாதவாறு இருக்க வேண்டுமென்றால், விற்பனை வரி சம்பந்தப்பட்ட விஷயங்களைக் கொண்ட ஒரு புஸ்தகம் " விற்பனை வரி சுருக்கம் " என்று தமிழில் வெளியிடப்படவேண்டும். சிறு சிறு வியாபாரிகள் சம்பந்தப்பட்ட

[Sri T. Veluchami] [8th July 1957

வவை, என்ன சட்ட திட்டங்கள் இருக்கின்றன. என்பதை எளிய நடையில் விளக்கக் கூடிய அளவிலே அந்தப் பதிப்பு வெளியிடவேண்டும். இதை கிராமங்களிலுள்ள ஒவ்வொரு வியாபாரிக்கும், குறிப்பாக புதிதாக ஒருவர் வியாபாரம் ஆரம்பித்தால், அவர்க்கும், இனாமாகக் கொடுக்கக்கூடிய ஏற்பாட்டைச் செய்தால் அவர்கள் சர்க்கார் செய்யக்கூடிய சட்ட திட்டங்களையும் விற்பனை வரி சம்பந்தமான விபரங்களும் தெரிந்து—அல்லது படித்தவர்களிடமாவது காண்பித்து, அதன் மூலம் அனாவசியமாக ஆபத்தில் மாட்டிக்கொள்ளாது, வியாபாரம் செய்து உழைத்து வெற்றிகரமாக பிழைக்க உதவியாக இருக்கும்; வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்கும் அது ஒரு உறுதுணையாக இருக்கும்.

உணவுப் பொருள்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிப்பதை நான் ஆதரிக்கிறேன். உணவுப் பொருள்களுக்கு விதிக்கக்கூடிய வரியை பெரும்பாலும் நகரங்களில் இருப்பவர்கள்தான் கொடுக்கிறார்கள் என்று கனம் நிதி மந்திரியவர்களால் சொல்லப்பட்டது. நகரங்களில் இருப்பவர்கள்தான் உணவுப் பொருள்களை விலை கொடுத்து வாங்கிறார்கள்; 25 சதவிகிதம் மக்கள்தான் வாங்குகிறார்கள் என்று கனம் நிதி அமைச்சர் அவர்கள் அன்று சொன்னார்கள். அப்படியானால், ஒன்று செய்யலாம். பெரிய நகரங்களில், அதாவது முனிசிபாலிடிகள் இருக்கக்கூடிய இடங்களில் மாத்திரம் உணவுப் பொருள்களுக்கு விற்பனை வரி போடலாம். கிராமங்களில் பெரும்பாலும் விவசாயிகளே அடங்கியிருப்பதாக கனம் மந்திரி அவர்களே ஒப்புக்கொள்வதால்,—முனிசிபல் " ஏரியா " க்கள் தவிர—மற்ற கிராமாந்திர இடங்களில் உணவுப் பொருள்களுக்கு வரியிலிருந்து விலக்கு அளிக்கலாம். இதனால், நகரங்களில் இருக்கும் பொதுமக்கள், பக்கத்து கிராமங்களிலே போய் வாங்கினால் தங்களுக்குச் சௌகரியமாக இருக்குமென்று கிராமங்களில் போய் வாங்குவதற்கு உற்சாகம் ஏற்படும். விற்பனைச் சாலைகள் கிராமங்களில் அமைவதன் மூலம் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்குப் பலன் கிடைக்கக்கூடிய நிலையிலே, அவர்களுக்கு ஊக்கம் அளிக்கக்கூடிய ஒரு காரியமாகவும் இருக்கும்.

இந்த விஷயங்களையெல்லாம் கனம் மந்திரி அவர்கள் நன்கு பரிசீலனை செய்து கவனித்து வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன், வணக்கம்.

*SRI A. S. DURAISWAMI REDDIAR: கனம் சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள மானியத்தை ஆதரித்துப் பேச விரும்புகிறேன். இப்பொழுது உணவு தானியங்கள் மீது வரி விதிக்கவேண்டுமா, வேண்டியதில்லையா என்பது பிரச்சினை. உணவு தானிய வரி விதிப்புபற்றி ஆலோசிக்கும்படி சுற்றறிக்கை விட்டிருப்பதாக சமீபத்தில் மத்திய உணவு மந்திரி ஸ்ரீ .ஜெயின் இங்கு வந்தபோது சொன்னார்கள். உணவு தானியங்களின் விலை ஏறிக்கொண்டிருப்பதால் எங்குப் பார்த்தாலும் சம்பளம் பற்றவில்லை என்று எல்லாத் தொழிலாளர்களும் கிளர்ச்சி செய்கிறார்கள். ஆனால் உணவு தானிங்யகளுக்கு வரியிலிருந்து விலக்கு அளிக்கவேண்டுமா இல்லையா என்பது ஒரு முக்கிய விஷயம். விலக்கு அவசியந்தான். ஆனால் நமது ராஜ்யத்தின் பொருளாதார நிலைமையைக் கருதியும், பொருளாதார நிபுணரான ஸ்ரீ லோகநாதன் இதைப்பற்றி, ஆராயப் போவதாலும் இந்த விஷயத்தை அவருக்கு விட்டுவிடலாம். அவர் என்ன ஆலோசனை செய்து பின் பற்றவேண்டும் என்று சொல்கிறார்களோ அதன்படி நாம் நடந்துக்கொள்ளலாம் என்று எனக்குத் தோன்றுகிறது.

பலமுனை வரி விதிப்பு பற்றிப் பேசும்போது, பலமுனை வரியால் சர்க்கார்
12.40 p.m. விரும்புவதைவிட வருவாய் மிக மிகக்குறைகிறது. அவர்கள் எண்ணுவது என்னவென்றால், நாலுவழியில் வரி போட்டால் ஒரு வழியிலாவது வரியை வாங்கிவிடலாம் என்பது. பலர் ஏமாற்றுகிறார்கள், டிமிக்கி கொடுக்கிறார்கள்,! அவர்களையெல்லாம் வரிகொடுக்கச் செய்து விடலாம் என்பதா



8th July 1957] [Sri A. S. Duraiswami Reddiar]

கும். நானும் சர்க்கார் கட்சியைச் சேர்ந்தவன்தான். நான் சொல்லுகிறேன் என அனுபவத்திலிருந்து. பலமுனை வரி விதிப்பதால், சர்க்கார்தான் ஏமாறுகிறார்கள். வியாபாரிகள் ஏமாறவில்லை. ஆனால் வியாபாரிகள் பலமுனை வரியால் கஷ்டப்படுகிறார்கள் என்பது வாஸ்தவம். ஆதலால் அதை நீக்க வேண்டுமென்கிறார்கள். பல மகாநாடுகள் போட்டும், மந்திரிகளைப் பேட்டி கண்டும், எவ்வளவோ பிரசாரம் செய்து வருகிறார்கள். இது வரியை கொடுக்காமல் இருப்பதற்காக இல்லை. ஏமாற்றுவதற்காக இல்லை. தொல்லை பொறுக்க முடியாமல், வியாபாரத்திற்கு இடைஞ்சல் அதிகமாகவிருப்பதால் வரியை கொடுக்காமல் ஏமாற்றுவதற்கில்லை, ஆனால் வசூலிக்கும் முறையை, கொள்கையை மாற்றுங்கள் என்கிறார்கள். வரியைக் குறைக்கவும் கேட்கவில்லை. ஒருமுனை வரியாகப் போட்டால் எவ்வளவு ஆனாலும் கொடுக்கத் தயார். ஆனால் கொள்கையை மாற்றியமைக்கவேண்டுமென்றுதான் கேட்கிறார்கள். இப்பொழுது புதுச்சேரியிலிருந்து பலவழிகளிலும் ஏமாற்றிப் பண்டங்களைக் கொண்டுவந்துவிடவில்லையா ? சர்க்கார் ஏமாறுகிறார்களா, அல்லது வியாபாரிகள் ஏமாறுகிறார்களா?

உணவு தானியத்தில் அரிசியை எடுத்துக்கொள்வோம். அது நாலு இடத்தில் கை மாறுகிறது. முதலில் வாங்கும் வியாபாரி, வாங்கும்போது, வரிகொடுக்காமல், பில் இல்லாமல், வாங்குகிறான். சொல்ப விலையில் வாங்கி, இலாபத்திற்கு விற்கப்பாக்கிறான். பிறகு சர்க்காருக்கோ, மற்ற வியாபாரிக்கோ விற்கும்போது, இவர்கள் வரி வாங்குகிறார்கள். தாங்கள் வாங்கும்போது வரிகொடுக்காமல், விற்கும்போது மட்டும் வரி வசூலிக்கிறார்கள். இரண்டு மூன்று கை மாறும்போது, இவர்களுக்குக் கிடைக்கும் லாபம் கொஞ்சந்தான். கால் ரூபாய் லாபம் வந்தால் கூட, வியாபாரிகள் கிரமமாக வரி செலுத்திவிடுகிறார்கள். வரிகொடுக்காமல் ஏமாற்றப்பார்க்கிறார்கள் என்று சொல்லுவது நியாயம் இல்லை. வியாபாரத்தில் தொல்லை அதிகம் இருப்பதாலும், வரி வசூல் முறையில் தொல்லையின்மைக்காகவும் இந்த ஒரு முனைவரியை வற்புறுத்துகிறார்கள். நானும் ஒரு கமிஷன் வியாபாரிதான். வியாபாரத்தில் உள்ள கஷ்டங்கள் எனக்கு நன்றாகத் தெரியும். பொருள்களை பல கைகள் மாறுகிறதனால், ஒவ்வொரு இடத்திலும் வரி கொடுத்துக்கொண்டே போனால், கடைசியில் மூட்டைக்கு இரண்டு ரூபாய் ஏறிவிடும். ஆதலால் வியாபாரி என்ன நினைக்கிறான் ? வரி, கொடுக்காமல், மூட்டையை ரூ. 50-க்கு விற்பதே மேல் என்றும், வரி கொடுத்துவிட்டு ரூ. 52-க்கு விற்பது சிரமம் என்றும் கருதுகிறான். வியாபாரமும் நல்ல முறையில் நடக்கக் காரணம் இருக்கிறது.

SRI A. VEDARATHNAM PILLAI : " எ பாயின்ட் ஆப் இன்பர்மேஷன்", அரிசிக்கு ஒரு முனையில் எந்த இடத்தில் வரி விதிப்பது என்று சொல்லவேண்டும்.

SRI A. S. DURAISWAMI REDDIAR : ஒரு முனை வரி சுலபமாக போடலாம். இப்பொழுது பஞ்சுக்கு வரி விதிக்கிறோம். ஆனால் நூலுக்கு வரி கிடையாது. ரைஸ் மில்லில் அரிசிக்கு வரி போடக்கூடும். ரேஷன் காலத்தில் கொள்முதல் சம்பந்தமாக, அரிசி எவ்வளவு அரைக்கப்பட்டிருக்கிறது என்று கணக்கிடவில்லையா ? தவிட்டைக் கூடக் கணக்கிடவில்லையா ? தவிடு அதிகமானால், பாலிஷ் அதிகம் என்றும் கூறிவந்தார்கள். இந்த மாதிரி முறையில் இப்பொழுதும் கணக்கிடமுடியாதா என்று கேட்க ஆசைப்படுகிறேன். அந்தக் காலத்தில் மொத்த டர்னோவர் மீது கணக்கு எடுக்கவில்லையா ? அது போல இப்பொழுதும் என் கணக்கு வைத்துக் கொள்ளக்கூடாது ? மேலும் இந்த ஒரு முனை வரி வசூலிக்க சிப்பந்திகளும் அதிகம் வேண்டுவதில்லை. வரியிலிருந்து கிடைக்கும் வருமானமும் அதிகரிக்கும். இவற்றைக் கருத்தில் கொண்டு, எது ரேஷன் காலத்தில் முடிந்ததோ அதை இப்பவும் நடத்தக்கூடிய முயற்சிகளைக் கைக்கொள்ளவேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த முறையில் வியாபாரமும் நல்ல முறையில் நடக்கும் ஆதலால் வியாபாரிகளும் சுலபமாக வரியைக் கட்டிவிடுவார்கள்.

[Sri A. S. Duraiswami Reddiar] [8th July 1957

ஆகையினால், ஒரு முனை வரியை போடுவதால், சர்க்காருக்கும் அதிக லாபம் இருக்கிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். வரி வசூல் செலவும் குறையும். கணக்கு வைத்துக்கொள்ளும் தொந்தரவும் வியாபாரிகளுக்குக் குறையும். இந்த முறையில் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்பொழுது வரி ஒரு பர்ஸண்டு என்று போடுகிறார்கள். இரண்டு பர்ஸண்டு போட்டாலும் ஆட்சேபணையில்லை. ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக உணவு தானியங்களில் அரிசிக்கு மாத்திரமாவது சிங்கிள் பாயிண்டு வரி வாங்குங்கள் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறேன். வியாபாரிகள் இந்த வரியைக் கொடுக்க தயாராய் இருக்கிறார்கள். ஆகையினால் நான் கவர்மெண்டுக்குச் சொல்ல விரும்புவது என்னவென்றால், இந்த நேரத்தில் வியாபாரிகள் பலமுனை வரியை எதிர்க்கிறார்கள் என்றால், அவர்கள் வரியை எதிர்க்கவோ ஆதரிக்கவோ செய்யவில்லை. ஆனால் அவர்கள் விரும்புவது எல்லாம், கோருகிறது எல்லாம், இந்த பலமுனை வரியை எடுத்து விட்டு அதை ஒரு முனை வரியாக அமைக்கவேண்டும் என்பதே. இதற்கு சர்க்கார் ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். எதிர்க் கட்சிக்காரர்கள் இந்த ஒரு முனை வரியைக் கோருகிறார்கள் என்பதற்காக நான் இதை ஆதரிப்பதாக நினைத்துவிடக்கூடாது. ஆகவே ஒரு முனை வரி விதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

**Sri V. SANKARAN** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஒரு முனை வரி விதிக்கவேண்டியதின் அவசியத்தைப் பற்றி அநேகமாக பல அங்கத்தினர்கள் பேசினார்கள். கொள்கை அளவில் அதை நானும் ஒத்துக்கொள்ளுகிறேன். சர்க்காரும் ஒத்துக்கொள்ளுவார்கள். அவ்வாறு செய்வதால், சர்க்கார் அதிகாரிகளுக்கும் தொந்தரவில்லை. ஆனால் வியாபாரிகளுக்கும் தொந்தரவில்லை. ஆனால் இதிலே ஒரு விஷயத்தை கவனிக்கவேண்டும். ஒரு முனை வரி விதித்தால், ஒரு பொருள் நான்கு கைகள் மாறும்போது ஏற்படும் வரி **evasion**-ஐ தவிர்க்கவேண்டும். சர்க்கரைக்கு ஒரு முனை வரி விதித்ததன் காரணமாக **evasion** அதிகமாய் விட்டது என்பதை வியாபாரிகளே ஒத்துக்கொள்ளுகிறார்கள். இது சம்பந்தமாக, விற்பனை வரி இலாகா தீவிரமான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும். நான் விசாரித்ததில் **Commercial Taxes Department** க்கு இது பற்றி சர்க்கரை வியாபாரிகளிடமிருந்து ஒரு விண்ணப்பம் வந்திருப்பதாகத் தெரிகிறது. ஒரு பொருள் நான்கு கைகள் மாறும்போது **Evasion** ஏற்படுகிறது என்பதில் சந்தேகமில்லை. திடீர் என்று **single point sales tax** போடுவது கஷ்டமாக இருக்கலாம். முதலில் விற்பனை வரி இலாகாவை வலுப்படுத்திக்கொண்டு, **Evasion**-ஐ தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு, பிறகு **single point tax** கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, உணவு தானியங்களின் மீது 1 சத விகிதம் விற்பனை வரி விதித்திருக்கிறார்கள். இது ஒரு நல்ல சமிக்ஞை தான். உணவு தானியங்கள் மீது விற்பனை வரி விதிக்கக்கூடாது என்பதை கொள்கை அளவில் ஒத்துக்கொள்ளுகிறேன். 1—9–16 சத விகிதத்திலிருந்து 1 சத விகிதமாக குறைத்திருப்பது ஒரு முதல் படியாகவும், ஓர் நல்ல சமிக்ஞையாகவும் எடுத்துக்கொண்டு எல்லோரும் இதை வரவேற்கவேண்டும். கனம் நிதி அமைச்சர் அவர்கள் கூறியதுபோல, நகரங்களில் உள்ள ஜனங்கள் அதாவது ஜனத்தொகையில் 20 சத விகிதம் தான்—இந்த வரி கொடுக்கிறார்கள். கிராமங்களில் வசிக்கும் (80 சத விகிதம்) ஜனங்கள் இதை கொடுப்பதில்லை. ஒரு குடும்பத்தில் மாதத்திற்கு ரூபாய் 100 மொத்தம் செலவானால், ரூபாய் 40 உணவு தானியங்கள் மீதுசெலவழிக்கப்படும். அவற்றிற்கு இந்த வரி சம்பந்தமாக ஆறு அணா கொடுக்க வேண்டியதாக இருக்கும். அந்தத் தொகையை பெரிதாக் மிகைப்படுத்த வேண்டியதில்லை. மக்களிடம், சர்க்கார் பல திட்டங்கள் மீது கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவழிப்பதை எடுத்துச் சொன்னால், அவர்கள் ஆறு அணா மாதத்திற்கு அதிக வரி கொடுக்க தயங்கமாட்டார்கள்.



8th July 1957] [Sri V. Sankaran]

மற்ற பொருள்கள் மீது இப்பொழுது விதிக்கும் வரியை 1-9/16 சத விகிதத்திலிருந்து 2 சத விகிதமாக உயர்த்தியிருக்கிறார்கள். இதை எடுத்துக்கொண்டால், 10 அணா அல்லது 12 அணாக்கள் வரியாக கொடுக்க வேண்டியிருக்கும். இந்தத்தொகை, அவர்கள் ஏற்கெனவே கொடுக்கும் 7—8 அணாக்களை விட 3—4 அணாக்கள்தான் அதிகமாகயிருக்கும். சர்க்கார் நல்ல திட்டங்களை நிறைவேற்றிவரும் இத்தருணத்தில், இந்த அதிகப்படியான சொல்ப வரியை கொடுக்க தயங்கமாட்டார்கள்.

எங்களது தொகுதியை எடுத்துக்கொண்டு உணவு தான்யங்களைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நெல் வியாபாரிகள், சாதாரணமாக, மண்டிகளில், " **Commission basis** "-ல்தான் வியாபாரம் செய்கிறார்கள். கிராமங்களிலிருந்து, மண்டிக்கு நெல் அனுப்பும்பொழுது மூட்டை ஒன்றுக்கு 0–4–0 அல்லது 0–4–6 கமிஷனை கொடுக்கிறார்கள். நெல் விற்கும்பொழுது நெல் முதலாளிகள் மூன்று ரசீதுகள் கையெழுத்திட்டுக்கொடுக்கவேண்டும். இதில், ஒரு ரசீதை **Sales Tax Department**-க்கு கொடுக்கவேண்டும். இந்த முறை காரிய பூர்வமாக சாத்தியமற்றது. கமிஷன் ஏஜெண்டுகள் சட்ட பூர்வமாக வைத்துக்கொள்ள வேண்டுமென்றால், டிபார்ட்மெண்டிடம் பதிவு செய்து கொள்ளவேண்டும். இந்த சங்கடத்தை தவிர்ப்பதற்காக **Commission agents** வைத்துக்கொள்வதில்லை. ஒரு மூட்டை 20 ரூபாய்க்கு விற்றால் 0–5–0 **sales-tax** ஆக கொடுக்க வேண்டும். ஆனால் நெல் மூட்டை ஒன்றுக்கு 0–4–0 அல்லது 0–4–6 கமிஷன் கிடைக்கிறது. கமிஷன் வரும்பொழுது **sales-tax**-ம் கொடுக்கவேண்டும். ஆதலால், 15,000 மூட்டைகள் விற்றால், 2,000 மூட்டைகள் தான் விற்றதாக கணக்கில் வருகிறது. முதலாளிகள் கையெழுத்திட வேண்டுமென்று வற்புறுத்தக்கூடாது. கொண்டு வருபவர்கள் கையெழுத்து இருந்தால் போதும் என்று இருக்கவேண்டும். இந்த விஷயத்தில் சர்க்கார் கவனம் செலுத்தவேண்டிய ஏற்பாடுகளை செய்யவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

" **Penalty** " விஷயமாக சில வார்த்தைகள் சொல்லவிரும்புகிறேன். சாதாரணமாக, " **penalties** " அதிகமாக இருக்கிறது. இந்த விஷயமாக, சலுகைகள் காட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். முக்கியமாக, மிகவும் " **Oppressive** " ஆக இருக்கக்கூடிய விதிகளை உதாரணமாக சில தப்பிதங்களுக்கு 9 பங்கு லைசென்ஸ் தொகை பெனால்டியாக கட்டவேண்டுமென்று இருக்கிறது. தளர்த்தவேண்டும். **Turnover limit**ஐ இப்பொழுது இருப்பதைவிட அதிகப்படுத்தினால் நலம் என்று சொல்லப்படுகிறது. இதை செய்வதில் கஷ்டமிருக்காது என்று நினைக்கிறேன்.

" **Palmgur** " மீது விற்பனை வரி எடுக்கப்பட்டிருக்கிறது. அதே மாதிரி " **Cane jaggery** "-க்கும் விலக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உணவு பொருள்களுக்கு அளிக்கக்கூடிய சலுகை, விறகுக்கும் அளிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனென்றால் விறகும் மிகவும் அத்தியாவசியமான பொருள்.

எங்கள் **Chamber of Commerce**-ல் மத்திய சர்க்கார் சர்க்கரை, புகையிலை, துணி முதலிய வஸ்துக்கள் மீது **Excise-tax** " போடுகிறதையும், அதே சமயத்தில், சென்னை சர்க்கார் விற்பனை வரியும் அவைகள்மீது விதிப்பதற்குப் பதிலாக, மத்திய சர்க்காரே அதிகப்படியாக **Excise** வரி போட்டு, அதிலிருந்து வரும் வருமானத்தை இரு சர்க்கார்களும் பங்கிட்டுக்கொள்வது என்ற யோசனையை வரவேற்கிறது. **Sales Tax Advisory Committees** இப்பொழுது ஜில்லா ரீதியிலும் மாகாண ரீதியிலும் அமைக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் அதன் கூட்டங்கள் எங்கள் ஜில்லாவில் வருஷத்திற்கு இரண்டொரு தடவைகள் தான் நடந்தன. மாகாண ரீதியில் ஒரு தடவை தான் கூடிற்று. மாகாண ரீதியில், மூன்று மாதத்திற்கு ஒரு தடவையும், ஜில்லா ரீதியில் இரண்டு மாதத்திற்கு ஒரு தடவையும், இந்த **Advisory Committee** கூட்டங்கள் நடக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[ 8th July 1957

DEPUTY SPEAKER : The hon. Member's time is up.

**Sri V. SANKARAN: I want only five minutes more.**

**DEPUTY SPEAKER : It is not possible. The hon. Member Sri P. Doraiswami Reddiar will now speak.**

**Sri P DORAISAMI REDDIAR :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த சபையில் கனம் அங்கத்தினர் ஸ்ரீ ராமசாமி அவர்களால் பிரேரேபிக்கபட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையைப் பற்றி சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். விற்பனை வரி மான்யத்தில் சில சில தொகைகளை சில காரணங்களுக்காக வெட்ட வேண்டுமென்று பல அங்கத்தினர்கள் பேசினார்கள். பல அங்கத்தினர்களும் ஒரு முனை விற்பனை வரி போட வேண்டும் என்றும், உணவுப் பொருள்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்றும் நல்ல மனப்பான்மை கொண்டிருந்தார்கள். சில கட்சிகளைச் சேர்ந்தவர்கள் எதிர்த்துப் பேசவேண்டும் என்பதற்காகவே பேசுகிறார்களே தவிர, தங்களுக்கு அவசியமானதைப் பற்றி பேசுவதாகத் தெரியவில்லை.

இங்கே இருக்கும் எல்லாக் கட்சிகளின் அங்கத்தினர்களும் உணவுப் பொருள்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிப்பது அவசியம் என்று கருதுகிறார்கள் என்று நான் நினைக்கிறேன். நமது ராஜ்யத்தில் முக்கியமான உணவு தானியம் அரிசி, அதற்கு அடுத்த படியாக உள்ளது கேழ்வரகு, அதற்கடுத்தபடியாக உள்ளது சோளம், அதற்கடுத்தபடியாக உள்ளது கம்பு. முக்கிய உணவு தானியமாகிய அரிசிக்கு மட்டும் ஆறு இடங்களில் வரி வசூலிக்கப்படுகிறது. முதலில் ஒரு மண்டி வியாபாரி கிராமத்திலிருந்து மண்டிக்கு நெல்லை விலைக்கு வாங்கிக்கொண்டு போகும் போது விற்பனை வரி செலுத்துகிறான் ; இது முதல் தடவை கொடுக்கப்படும் வரி. மண்டியிலிருந்து நெல்லை விலைக்கு வாங்கிக்கொண்டு போகிறவர்கள் மண்டி வியாபாரிக்கு வரி செலுத்துகிறார்கள் ; இது இரண்டாவது முறை கொடுக்கப்படும் வரி. மண்டி வியாபாரியிடமிருந்து நெல்லை வாங்கி வந்த வியாபாரிகளிடமிருந்து மூட்டைகளாக நெல்லை விலைக்கு வாங்குபவர்கள் வரி கொடுக்கிறார்கள் ; இது மூன்றாவது முறையாகக் கொடுக்கப்படும் வரி. இந்த வியாபாரிகள் நெல்லை மில்லில் அரிசியாக அரைக்கும் போது ஒரு தடவை வரி கொடுக்கிறார்கள் ; இது நான்காவது முறை தடவை கொடுக்கப்படும் வரி. நெல்லை அரைத்த வியாபாரிகளிடமிருந்து அரிசியை மொத்தமாக (ஹோல்ஸேல்) விலைக்கு வாங்குபவர்கள் வரி கொடுக்கிறார்கள். இது ஐந்தாவது முறை கொடுக்கப்படும் வரி. மொத்த வியாபாரிகளிடமிருந்து அரிசியை சில்லரையாக (ரீடெய்ல்) விலைக்கு வாங்குபவர்கள் வரி கொடுக்கிறார்கள். இது ஆறாவது முறை கொடுக்கப்படும் விற்பனை வரி. முக்கியமாக அரிசிக்கு இந்தமாதிரி ஆறு இடங்களில் விற்பனை வரி வசூலிக்கப்படுகிறது. எந்த விதத்திலும் ஐந்து முறைகளுக்குக் குறையாமல் அரிசிக்கு விற்பனை வரி வசூலிக்கப்படுகிறது.

விற்பனை வரியிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கு வியாபாரிகள் சூது செய்கிறார்கள் என்று சில அங்கத்தினர்கள் சொல்லுகிறார்கள். அதுவும் வாஸ்தவம்தான். ஆனால் யோக்கியமாக வியாபாரம் செய்கிறவர்கள் விற்பனை வரியிலிருந்து மீள முடியாது. லைசென்ஸ் இல்லாமலே வியாபாரம் செய்கிறார்கள் லைசென்ஸ் இல்லாதவர்களுக்கு விற்பனைக்குக் கணக்குக் காட்ட வேண்டிய கவலை இல்லை. விற்பனை வரி கட்டவேண்டிய கவலை அவர்களுக்குக் இல்லை. ஆகவே அவர்கள் லைசென்ஸ் உடைய வியாபாரிகள் விற்பதை விட சிறிது குறைவான விலைக்குப் பொருள்களை விற்கிறார்கள். அப்படியிருந்தும் அவர்களுக்கு லைசென்ஸ் உடைய விற்பனை வரி கொடுக்கும் வியாபாரிக்குக் கிடைக்கும் லாபத்தை விட அதிகமாகக் கிடைக்கிறது. இதைப் பார்த்துவிட்டு யோக்கியமாக வியாபாரம் செய்தவர்களும் அந்த முறையைக் கையாள ஆரம்பிக்

8th July 1957 [Sri P. Doraiswami Reddiar]

கிறார்கள். யோக்கியமாக இருந்த வியாபாரி 100 மூட்டை அரிசி விற்றால் 25 மூட்டையை விற்பனைக் கணக்கில் காட்டிவிட்டு 75 மூட்டையை கணக்கு எழுதாமல் விற்க ஆரம்பிக்கிறார்கள்.

ஒரு முனை விற்பனை வரி போட வேண்டும் என்று சொல்லப்படுகிறது. ஒரு முனை விற்பனை வரி வந்தால், ஒரு முனையும் பல முனைகளாகத் தானாக மாறிவிடும். உணவு தானியங்களைப் பொறுத்த மட்டிலும்,—ஒரு முனை விற்பனை வரியோ, பல முனை விற்பனை வரியோ—எந்த விதமான வரியும் போடக் கூடாது. வேறு எந்தப் பொருள்களுக்கு விற்பனை வரி போட்டாலும் உணவுப் பொருள்களுக்கு விற்பனை வரி போடக்கூடாது என்று நான் கருதுகிறேன். உணவுப் பொருள்களுக்கு விற்பனை வரி போட்டால் அது ஏழைகளைத்தான் பாதிக்கிறது என்றும், பணக்காரர்களைப் பாதிப்பதில்லை என்றும் சில அங்கத்தினர்கள் சொன்னார்கள். பணக்காரர்கள், ஏழைகள் எல்லோரும் சாப்பிடுகிறார்கள். ஆகவே அது எல்லோரையும்தான் பாதிக்கிறது. பணக்காரர்கள் கொஞ்சம் அதிக விலை கொடுத்துப் பொருள்களை வாங்க முடிகிறது. அவ்வளவுதான் ஏழை எளியவர்கள், வியாபாரிகள், ஏழைக் குடியானவர்கள் ஆகிய எல்லோரையும் விற்பனை வரி பாதிக்கிறது. அன்றாடம் 7—8 அணா சம்பாதிக்கும் நிலையில் உள்ளவர்களைக் கூட விற்பனை வரி பாதிக்கிறது. காலையில் சூரியன் உதயமாகும்போது மனிதன் எழுந்திருக்கும் நேரத்திலிருந்து அவன் இரவில் தூங்கப் போகும் வரையில் மனிதனை விற்பனை வரி பாதித்துக்கொண்டே இருக்கிறது. பல முனை விற்பனை வரியோ, ஒரு முனை விற்பனை வரியோ, உணவு தானியங்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களித்தால், எல்லா ஏழை மக்களும் கடவுளைப் பிரார்த்தனை செய்வது போல கனம் அமைச்சர் அவர்களையும் பிரார்த்தனை செய்வார்கள் என்று நான் நினைக்கிறேன்.

கருணைக்கிழங்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது பற்றி இங்கே பேசப்பட்டது. எந்த பதார்த்தத்தையும் விட கருணைக்கிழங்குதான் மிக மிக நல்ல பதார்த்தம் என்று சித்தர்களே பாடி இருக்கிறார்கள். ஆகவே கருணைக்கிழங்கிற்கு விதிவிலக்களித்தால் பொதுவாக ஜனங்களுக்கு நல்லது. அதன் பெயரே கருணைக்கிழங்கு என்று இருக்கிறது. கருணை என்ற பெயரே அதற்கு இருப்பதால் கருணைக்கிழங்கிற்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ளுகிறேன். அழுகிப் போகக் கூடிய பொருள்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கிறது. கருணைக்கிழங்கு சீக்கிரம் கெட்டுப் போவதில்லை. என்று சொல்கிறார்கள். உருளைக்கிழங்கு சீக்கிரம் கெட்டுப்போகும் என்று கருதுகிறார்கள். உருளைக்கிழங்கோ கருணைக்கிழங்கோ எல்லாமே சீக்கிரம் கெடக் கூடியதுதான் என்பது என்னுடைய கருத்து. ஆகையால் கருணைக்கிழங்கிற்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஒரு முனை விற்பனை வரி வசூலித்தால் பற்றுக்குறை பட்ஜெட்டை சரிப்படுத்திவிட முடியும் என்று சில அங்கத்தினர்கள் பேசினார்கள். ஒரு முனை விற்பனை வரியை எந்த இடத்தில் எப்படி வசூலிக்க வேண்டுமென்று தெரிவிக்குமாறு ஒரு அங்கத்தினர் கூறினார். ஒரு முனை விற்பனை வரியை எந்த இடத்தில் வசூலிக்கவேண்டும் என்று எனக்குத் தெரிந்த அளவில் கூற விரும்புகிறேன். தானியங்கள் எங்கே உற்பத்தியாகின்றனவோ அங்கேயே (அந்த கிராமங்களிலேயே) ஒரு முனை விற்பனை வரியை வசூலிக்கலாம். ஆனால், அப்படிச் செய்தாலும் கூட, கிராமங்களில் உள்ளவர்கள் 100 கலம் நெல் விளைந்தால் 50 கலம் விளைந்ததாகப் பொய்க் கணக்குக் காட்டி விடக்கூடும். ஆகையால், எப்படி இருந்தாலும், உணவு தானியங்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்க அரசாங்கத்தார் முற்படுவார்கள் என்ற நம்பிக்கையுடன் என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

**SRI M. P. SARATHI**: கனம் சபாநாயகர் அவர்களே,

DEPUTY SPEAKER : I hope hon. Member will take five minutes and finish his speech.

1-07 p.m. SRI M. P. SARATHI : இந்த மானியத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இங்கே கனம் தோழர் ஒருவர் ஒரு நபர் ஏழு அணா தான் விற்பனை வரி செலுத்த வேண்டியிருக்கிறது என்றும் அதைச் சர்வ சாதாரணமாகச் செலுத்திவிடலாம் என்றும் கூறினார். உணவு தானியங்களுக்கு விற்பனை வரி விதிப்பதன் மூலம் மாத்திரம் பன்னிரெண்டு கோடி ரூபாய்க்கு மேல் வருமானம் வரும் என்று சொல்லப்படுகிறது. தமிழ் நாட்டில் மூன்று கோடி மக்கள் இருக்கிறார்கள். ஆகவே சராசரியாக ஒவ்வொரு நபரும் நாலு ரூபாய்க்கு மேல் வரி செலுத்த வேண்டியிருக்கிறது என்று தெளிவாகத் தெரிகிறது. "ஒரு நபர் நாலு ரூபாய் வரி செலுத்தவேண்டியிருக்கிறது என்று சொல்லும்போது, சிறு குழந்தைகளைக் கூடச் சேர்த்து நான் சொல்கிறேன். ஒரு வீட்டில் தாய், தகப்பன், நான்கைந்து பிள்ளைகள், இன்னும் சில பேர்கள் ஆக மொத்தம் பத்து பேர்கள் இருந்தால், அந்த வீட்டில் மாதம் ஒன்றுக்கு மொத்தம் 40 ரூபாய் வரி செலுத்த வேண்டியிருக்கிறதே !" என்பதை ஏழு அணாதான் ஒரு நபர் வரி கொடுக்கவேண்டும் என்று கூறிய அங்கத்தினர் அவர்களுக்கு மிகவும் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அது மாத்திரம் இல்லாமல் அப்படி ஏழு அணா என்று குறிப்பிடும்போது எனக்கு ஒன்று ஞாபகம் வருகிறது. பல வருஷங்களுக்கு முன்பாக உத்தமர் காந்தியார் உப்பு சத்தியாக்கிரகத்தை ஆரம்பித்த காரணத்தைப் பற்றி அவர் பல பேச்சுகள் பேசியிருக்கிறார்கள். ஹரிஜன் பத்திரிகையிலும் எழுதியிருக்கிறார்கள். அவற்றை மதிப்பிற்குரிய காங்கிரஸ் அங்கத்தினர்கள் படித்து பார்க்க வேண்டுமென்பதாக கேட்டுக்கொள்ளுகிறேன். உப்புக்கு மாத்திரம் வரி விதிப்பதை அவர் அப்போது எதிர்க்கவில்லை.

SRI V. SANKARAN : On a point of information, Sir, வருஷத்திற்கு நான்கு ரூபாய் என்று நான் குறிப்பிட்டது சாதாரண நடுத்தர குடும்பங்களைத்தான். பணக்காரர்களுக்கு இன்னும் அதிகம் வரி இருக்கலாம். அவருடைய வருமானமும் அதிகம். ஆகவே நான் கூறியது தப்பாக இருக்காது என்பதை கனம் அங்கத்தினருக்குச் சொல்ல விரும்புகிறேன்.

SRI M. P. SARATHI : நான் ஒரு நபரை மாத்திரம் எடுத்துக்கொண்டால் அவர் சம்பாதிக்க அதை வீட்டிலே உட்கார்ந்து சாப்பிடுகிறவர்கள் பத்துப் பேர்கள் இருப்பார்கள். அந்தக் கணக்கில் நாற்பது ரூபாய்க்கு விற்பனை வரி செலுத்த வேண்டியதாக இருக்கிறதென்று தான் குறிப்பிட்டேன் என்பதை கனம் அங்கத்தினரும் உணர்ந்து கொள்ளவேண்டும்.

அதுபோக, சத்தியாக்கிரகத்தின்போது இந்த உப்பு வரியினால் குடிமக்கள் அதிகம் பாதகம் அடையாவிட்டாலும் கூட இப்படி வரி போடுகிற கொள்கையை எதிர்த்தே காந்தியார் பெரிய போராட்டத்தை நடத்தினார்கள். அப்போது விற்பனை வரி கிடையாது. இருந்தும் உணவு தானியங்களுக்கு வரி போடுவதையே ஆட்சேபித்து உப்பு வரியை எதிர்த்துக் காந்தியார் சத்தியாக்கிரகம் செய்தார்கள் என்பதை காங்கிரஸ் அங்கத்தினர்கள் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அது மாத்திரம் அல்லாமல் விற்பனை வரியை எடுத்துக்கொண்டால் பல கட்ட விற்பனை வரி மூலமாக இன்று கணக்கில் வரும் வருமானம் பதிமூன்று கோடி ரூபாய் என்றால் இதைப் போல் ஐந்து மடங்கு தொகை மொத்த வசூலாக இருக்கும் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். சர்க்கார் கணக்கில் பதிமூன்று கோடி ரூபாய் வருகிறதே தவிர பாக்கியுள்ள பணம் எல்லாம் பல முனை விற்பனை வரியினால் ஒளிக்கப்பட்டுவிடுகிறது. இந்த பல முனை விற்பனை வரியை மாற்றி ஒரு முனை விற்பனை வரியாகக் கொண்டு வந்துவிட்டால் ஓரேயிடத்தில் யாரும் மறைக்காமல், ஒளிக்காமல் வரியைப் போட்டுவிடலாம். இந்த வரியையும் கொஞ்சம் உயர்த்திப் போட்டாலும்

8th July 1957] [Sri M. P. Sarathi]

பரவாயில்லை. ஒரு முனை விற்பனை வரியே அரசாங்கத்திற்கு அதிக வருவாயை அளிக்கக் கூடியதாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதனால் நடுவாந்தரத்தில் இருந்து லாபம் அடிப்பவர்களைத் தடை செய்ய முடியும் என்றும் கருதுகிறேன்.

காந்தியார் நடத்திய உப்பு சத்தியாக்கிரகத்தை நினைவில் கொண்டு உணவு தானியங்களுக்கு விற்பனை வரியே விதிக்காமல் இருக்க முடியாது என்றாலும் அவற்றுக்கு விதிக்கிற 1 சத விகிதம் வரியை உணவு தானியங்களுக்கு மாத்திரம்தான் என்று சொல்லாமல் உணவுப்பொருள்கள் எல்லாவற்றுக்குமே இந்த ஒரு சத விகித வரியே விதிக்கும்படியாகச் செய்தாலும் கூட மிகவும் நலமாக இருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடிதயாக, சிறு வியாபாரிகள் எல்லாம் பத்தாயிரம் ரூபாய்க்கு மேல் விற்பனைக்கு வரி கட்ட வேண்டுமென்று இருப்பதாலும், அதிகாரிகளால் மிகவும் துன்பத்திற்கு உள்ளாகிறார்கள். காரணம் திடீரென்று அதிகாரிகள் வந்து "போன ஆண்டு பத்தாயிரத்துக்கு மேல் வியாபாரம் ஆகியுள்ளது. என் வரி கட்டவில்லை. உடனே 320 ரூபாய் வரி கட்ட வேண்டும்" என்று சொல்லிவிட்டுப் போய்விடுவார்கள். இந்த 320 ரூபாய்க்கு வியாபாரி அலைந்து திரிந்து கடைசியில் கடையையே ஏலத்தில் விட்டுப் பணத்தை கட்டிவிட்டுப் பிச்சைக்காரர்களாக மாறிவிடுகிறார்கள் என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். வியாபாரிகளுடைய கஷ்டத்தை உணராமல் அதிகாரிகளும் விடமாட்டேன் என்கிறார்கள். இந்தக் காரணத்திற்காகக் குறைந்தது 25 ஆயிரம் ரூபாய்க்குமேல் வியாபாரம் உள்ள கடைகளுக்கு மாத்திரம் விற்பனை வரி செலுத்தவேண்டுமென்பதாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER : The hon. Member's time is up.

Sri M. P. SARATHI : Sir, . . .

DEPUTY SPEAKER : The hon. Member is only repeating the points already made. He is not saying any new points. Sri A. R. Subbiah Mudaliar will now speak.

Sri A. R. SUBBIAH MUDALIAR : கனம் உப தலைவர் அவர்களே, தொழில் மந்திரி அவர்கள் பிரேரித்திருக்கும் மானியத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். வரி கொடுக்காமல் வெல்பார் ஸ்டேட் எல்லா வகையிலும் முன்னேறவேண்டுமென்று சொன்னால் அது முடியாத காரியம். ஆகவே வரி கொடுப்பதற்கு நாம் எல்லோரும் மனப்பூர்வமாக ஒத்துக்கொள்ள வேண்டுமென்பதாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த அடிப்படையில் எனக்குத் தெரிந்த சில புது வரி திட்டங்களைச் சொல்லப் பிரியப்படுகிறேன். 1-15 p.m.

கமிஷன் கடைகளுக்கு லைசென்சு பில் மாத்திரம் வருஷா வருஷம் வசூல் செய்யப்படுகிறது. கமிஷன் கடைகளைப் பற்றி கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரிந்திருக்கும். ஆயிரம் ரூபாய்க்கு விற்றுக் கொடுப்பதால் குறைந்தது 75 ரூபாய்க்கு மேல் அவர்களுக்கு கமிஷன் கிடைக்கிறது. பலவிதமான காரணங்கள் எழுதி வசூல் செய்கிறார்கள். கடைக் கட்டிடத்துக்கு வரி, மகமை வரி பிரோக்களுக்கு வரி என்று விதித்து வாங்கிவிடுகிறார்கள். கமிஷன் கடை முதலாளிகளுடைய பூர்வ சரித்திரத்தை எடுத்துப் பார்த்தால் இவர்கள் முதல் நாடோடிகளாக இருந்தவர்கள். கமிஷன் கடை வைத்த பிற்பாடு அவர்கள் நிலைமை பெருமாறுதல் ஏற்பட்டிருக்கிறது. கமிஷன் கடை முதலாளி என்பதை அவன் தன்னுடைய நான்கு விரல்களிலும் போட்டிருக்கும் வைர மோதிரங்களே சொல்லும். பெருத்த லாபம் அவர்களுக்கு வருகின்றன. ஆகவே வரி

ஷன் கடைகளில் கிடைக்கிற கமிஷனில் இத்தனை பர்செண்ட் சர்க்காருக்கு வரியாகக் கட்ட வேண்டுமென்று விதிக்கும்படி நான் சொல்ல பிரியப்படு கிறேன்.

அதற்கு அடுத்தாற்போல் இந்த ஸ்டேட்டிலிருந்து பல பொருள்கள் வெளியில் போகிறது. உணவுப் பொருள்களை எடுத்துக்கொண்டாலும் இங்கே வரியில்லாமல் வாங்கி இதர ராஜ்யங்களுக்கு எடுத்துச் சென்று வியாபாரிகள் கொள்ளை லாபம் சம்பாதிக்கிறார்கள். ஆகவே ஸ்டேட்டி லிருந்து வெளியே பல பொருள்களைக் கொண்டுபோகிறவர்கள் "பர்சேஸ் டாக்ஸ்" கட்டவேண்டுமென்று வரி விதிக்கலாம்.

அத்துடன் பலர் பலமுனை விற்பனை வரியை எடுத்துவிட்டு, ஒரு கட்ட விற்பனை வரியைக் கொண்டுவரவேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் பலமுனை விற்பனைவரியினால் இப்போது வந்துகொண்டிருக்கிற பனிரெண்டு கோடி ரூபாய் வருமானம் எப்படி ஒரு முனை விற்பனை வரியினால் வரும் என்பதற்கு திட்டமாக எதையும் சொல்லவில்லை. அத்துடன் தொழில் மந்திரி அவர்களும் ஒரு விஷயத்தைக் கவனித்துப் பார்க்கவேண்டுமென்று சொல்கிறேன். இங்கிருந்தும் அங்கிருந்தும் பேசியவர்களில் பலர் பலமுனை விற்பனை வரியை எடுத்துவிடவேண்டுமென்று பேசும்போது நாட்டின் நல னைக் கருதி யோசனை சொன்னதாகத் தெரியவில்லை. தங்களுடைய சுய நலத்தைக் கருத்தில் கொண்டே பேசியிருக்கிறார்கள் என்பது தெரிகிறது. அவர்களுடைய குறிக்கோள் தங்கள் வருவாயை அதிகப்படுத்திக் கொள்வதுதான். ஆனால், விற்பனை வரிச் சட்டம் 1939-ம் வருஷத்தில் கொண்டுவரப்பட்டது. அப்பொழுது பத்தாயிரம் ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ள கடைகளுக்கு விற்பனை வரி விதிக்கப்பட்டது. இப்போது விலைவாசிகள் அதிகமாகிவிட்டதன் காரணமாக பதினைந்து ஆயிரத்துக்கு உயர்த்தி வரி போட்டால் நல்லது என்று நினைக்கிறேன்.

கிராமத்திலுள்ள விலை பொருள்களை விவசாயிகள் பண்ட மாற்றுவதி தன் மூலம் நடத்துவதால் உணவுப் பொருள்களின் பேரில் போட்டிருக்கும் ஒரு சதவிகிதம் வரி அவர்களை பாதிக்கப்படவில்லை. நகர்ப்புறங்களில் வேலையில் இருக்கக் கூடியவர்கள் கிராமத்திலுள்ள விவசாயிகளை விட அதிக வசதிகளைப் பெறுகிறார்கள். ஆகவே விவசாயப் பொருளுக்கு விதிக்கக் கூடிய ஒரு சத விகித வரியை மனமுவந்து தாராளமாகக் கட்டலாம். இதை எதிர்க்க அவசியம் இல்லையென்று சொல்ல விரும்புகிறேன்.

அத்துடன் 1.9/16 என்பதை இரண்டு சத விகிதம் ஆக வரி சர்க்கார் விதித்ததின் காரணமாக ஒரு அணு என்று விற்ற பத்திரிகை இப்போது ஏழு நையா பைசா, $1\frac{1}{2}$ அணு விற்ற பத்திரிகை 10 நயா பைசா, இரண்டு அணு விற்ற பத்திரிகை 13 நையா பைசா வாக உயர்ந்துவிட்டது. இதனால் பத்திரிகை முதலாளிகளுக்கு அதிக லாபம் வருகின்றது. ஒரு பக்கம் விளம்பரம் செய்தால் அவர்கள் 500 ரூபாய் கட்டணம் வசூலிக்கிறார்கள். அவர்களுக்கு புது வரி கூட விதிக்கலாம் என்று சொல்லுவேன். சபை பத்தில் ஸ்ரீ வி. பி. ராமஸ்வாமி ஐயர் அவர்கள் பேசும்போது கூடச் சொன்னார்கள். பத்திரிகை முதலாளிகள் அவர்கள் பேருக்கும், விதவை சகோதரி பேருக்கும், இதுபோல் தங்கள் உறவினர்கள் பேருக்கும் சம்பளம் என்று போட்டுக்கொண்டு பெரும் பணத்தை எடுத்துக்கொள்ளுகிறார்கள். ஆனால் பத்திரிகை கரெஸ்பாண்டெண்டு போன்ற சிப்பந்திகளுக்கு சரியாகச் சம்பளம் கொடுப்பதில்லை என்றும் குறிப்பிட்டார். இப்படி பெருத்த லாபம் சம்பாதிக்கும் பத்திரிகை முதலாளிகளுக்கு விளம்பரங்களின் மீது வாங்குகின்ற தொகையில் ஒரு பங்கை சர்க்காருக்கு வரியாகச் செலுத்த வேண்டுமென்று "அட்வர்டைஸ்மெண்டு டாக்ஸை" கொண்டுவரலாம் என்று நான் சொல்ல விரும்புகிறேன். அதோடு பல பெண்களின் படங்களைப் போட்டும் சினிமா முதலாளிகள் பணம் சம்பாதிக்கிறார்கள். இந்த மாதிரி யான காதல் விளம்பரங்களைப் பார்த்து பலர் சினிமாவுக்குப் போகிறார்கள். இதற்கு வரி போட்டால் பிரயோஜனப்படும் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

8th July 1957]

(Mr. Speaker in the Chair.)

*SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, விற்பனை வரி முதலான வரிகளை இந்த அரசாங்கம் நிறைவேற்றி வருகின்ற முறைகளைக் குறித்து ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களும், எதிர்சட்சியைச் சார்ந்தவர்களும் தங்களுடைய கருத்துரையை வழங்கினார்கள். இந்த விவாதத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நண்பர்களும் வேறு சிலரும் மிக முக்கியமாகக் கூறிய கருத்துக்கள் என்னவென்றால் இந்த வரிமுறை தவறான அடிப்படையில் அமைந்து சீர்கேடான முறையில நிறைவேறி வருகிறது என்பதாகும். அதனால் ஏற்படுகிற பாதகத்தையும் வரி வாங்கப் படுவதிலுள்ள முறைகேடுகளையும் எடுத்துக் கூறினார்கள். தவறான அடிப்படை என்று சொல்லுவது, இப்பொழுது விதிக்கப்பட்டிருக்கும் விற்பனை வரி யாரை யெல்லாம் பாதிக்கும், யார் யாரிடத்திலிருந்து வசூலிக்கப் படுகிறது என்ற அடிப்படையை வைத்து இந்த வரி முறையை நாம் ஆராய்ந்து பார்த்தால்தான் விளங்கும். பதினோரு கோடி ரூபாய் அல்லவோ இதன் மூலம் கிடைக்கிறது ; ஆகவே இந்த வரியை எவ்விதம் குறைக்க இசைவது என்று எண்ணுகிறார்கள் அமைச்சர்கள். விற்பனைவரி உண்மையாகவே நல்ல அடிப்படையில் அமைந்திருக்குமானால் நாட்டிலுள்ள மக்கள் இந்த விற்பனை வரியைக் குறித்து அவ்வளவாகக் கவலைப்பட மாட்டார்கள். ஒரு நாட்டில் வாழுகிற மக்களில் யார் யார் வரி செலுத்த வேண்டியவர்கள், யார் யாருக்கு இதிலிருந்து விதி விலக்கு அளிக்க வேண்டும் என்கிற முறையில்லாமல் எல்லோரும் ஒரே விதமாக வரி கொடுக்க வேண்டும் என்பதே முறையா யிருந்தால் அதை நாட்டு மக்கள் போற்ற மாட்டார்கள். இரண்டாவதாக, வரி வாங்குகிற முறை மிகவும் லகுவானதாகவும் சுளுவானதாகவும் இருக்க வேண்டும். இப்பொழுதிருக்கின்ற முறை வியாபாரிகள் அரசாங்கத்தை ஏமாற்றுகிற வகையிலும், பலப்பல சிக்கல்களைத் தருகின்ற முறையிலும் இருக்கிறது. இதனால் வியாபாரிகள் சரியான கணக்கு வைத்துக்கொள்ளாமல், சரியான அளவிலும் விதத்திலும் வரிகளைக் கொடுக்காமல், நடந்து கொள்கின்றனர். இவ்விதமான கணக்குகளை வைத்துக் கொள்ளுவதற்கு உடந்தையாய் இருக்கிற அதிகாரிகளின் போக்கும், இதை தெரிந்தும் தெரியாதது போல் இருந்து கொண்டிருக்கும் நாடாள்பவர்களின் நடத்தையும், இந்தச் சூழ்நிலையில்—இந்தத் துறையில் தவறுதல்களை வளர்க்கிறது என்று நான் எடுத்துக்கூற விரும்புகிறேன். இவ்விதமாக அரசாங்கம் இதனால் நல்லது செய்யவில்லை, இந்த வரி விதிப்பில் நல்ல முறைகளைக் கொண்டு வரவில்லை, இதில் திறமையான நிர்வாகம் இல்லை, இதனால் அரசாங்கத்துக்கு வெற்றியும் இல்லை—ஆனால் அரசாங்கம் அடுப்பின் மீது வைக்கப்பட்டிருக்கிற ஓட்டை இட்டலிப் பானையில் சரியான விதத்தில் வேகாமல் மாவாக இருக்கின்ற இட்டலியைக் கொண்டு திருப்தி அடைகிறது போல பதினோரு கோடி அல்லவா கிடைக்கிறது என்ற அளவோடு திருப்தி அடைந்து விடுகிறார்கள். விற்பனை வரியை சரியாக வசூல் செய்தால் இன்று கிடைக்கிற வருமானத்தைவிட மூன்று மடங்கு, நிச்சயம் அதிகமாகக் கிடைக்கும். நிதி அமைச்சர் அவர்கள் இதைப்பற்றிப் பேசுகின்ற நேரத்தில் தெரிவித்தார். நகரத்திலுள்ள தொழிலாளர்கள்தான் உணவு பொருள்களுக்கு அதிக வரி கொடுக்க வேண்டி வருகிறது ; கிராமத்திலுள்ள மக்கள் இவ்வளவு வரி கொடுக்க வேண்டிய அவசிய மிருக்காது என்று தெரிவித்தார். ஆனால் நான் கூறுவது என்னவென்றால் கிராமத்திலிருக்கிற சில்லறை கடைகளில் விற்கப்படுகிற பொருள்கள் எல்லாம் நகரத்திலிருந்து வாங்கிக் கொண்டு வந்துதான் அங்கு விற்பனை செய்யப்படுகிறது. ஆகவே அவர்கள் கடைசியாக விற்பனை வரி வாங்காவிட்டாலும், அதற்கு முன் பல முறை வரி செலுத்திய பொருள்களைத்தான் வாங்கி வருகிறார்கள். கிராமங்களையே விட்டுவிட்டாலும் கூட, நகரத்தில் வாழ்கிற தொழிலாள மக்கள் அத்தனை பேரும் குறிப்பிடத் தகுந்த அளவில் வாழ்க்கையில் உயர்ந்தவர்கள் அல்ல. அதனால் இந்த வரி பொதுவாக ஏழைகளைப் பாதிக்கத்தான் செய்கிறது. மேலும், உணவுப் பொருள்களின் மீது, எல்லா மக்களும் விற்பனை வரி செலுத்த வேண்டிய நிலைமை

1-p.m.

[Sri K. Anbazhagan] [8th July 1957

ஏற்படுகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. இதை அரசாங்கம் நன்றாக உணர்ந்திருக்கிறது என்று நான் கருதுகிறேன். வியாபாரிகள் இதைக் குறித்து தனியாகவும் தனிப்பட்டவர்களிடமும் குறைகூறினாலும் கூட வெளிப்படையாகவே சில உண்மைகளை ஒப்புக் கொள்ளுகிறார்கள். அரசாங்கத்தினுடைய போக்கினால் அவர்கள் அரசாங்கத்தை ஏமாற்ற வேண்டியிருக்கிறது என்றும், இதனால் சரியான கணக்கு வைத்துக் கொள்ள முடியவில்லை என்றும், income-tax-க்கு எழுதி வைக்கிற கணக்குகளைப் போன்று இதை எழுதிவைக்கவேண்டிய அளவுக்கு அதிகாரிகள் தொல்லையாக இருக்கிறார்கள் என்றும், அதிகாரிகளினுடைய தொல்லை இல்லாமல் இருப்பதற்காக, அவர்களுடைய வாயை ஏதாவது கொடுத்து அடைக்கவேண்டி யிருக்கிறது என்றும், 5,000 ரூபாய் கட்ட வேண்டியிருந்தால் 500 ரூபாயை இவர்களுக்குத் தள்ளி விட்டால் போதும் என்றும் அவர்களே கூறுகிறார்கள். ஆகவே இந்த விற்பனை வரி அதிக தொல்லைகளையும் சிக்கல்களையும்தான் ஏற்படுத்தியிருக்கிறது. அதோடு இது அரசாங்கத்திற்கும் பெருமை தருவதாயும் இல்லை. இதனால் அரசாங்கத்தின் கண்ணியமே குறைந்து வருகிறது. அரசாங்கம் வரி வாங்க வேண்டுமென்றால் நல்ல வழிகளில் இந்த விற்பனை வரி முறைகளை ஏற்படுத்தி இருக்கலாம். அரசாங்கம் இப்பொழுது எடுத்துச் சொல்கிறது, உணவுப் பொருள்களுக்கு வரியைக் குறைத்திருக்கிறோமென்று. ஆனால் உணவுப் பொருள்களுக்கு விற்பனை வரியிலிருந்து விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று காங்கிரஸ் சார்பிலுள்ள அங்கத்தினர்கள் பலருங்கூட எடுத்துச் சொன்னார்கள். நாட்டு மக்கள் அத்தனை பேரும் இதனையே கூறுகின்றனர். பொருள்கள் இன்று அதிக தேவையாக இருந்தாலும் விற்பனைவரியை எல்லா உற்பத்திப் பொருள்கள் மீதிருந்தும் எடுத்துவிடவேண்டும் என்று நாங்கள் வலியுறுத்தவில்லை. நாங்கள் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் பொருளுக்கு வரி விதிப்பதை ஒப்புக் கொள்கிறோம். நிதி அமைச்சர் அவர்கள் உணவுப் பொருள்களின் மீதுள்ள வரியைக் குறைத்து பிற பொருள்களின் மீதுள்ள வரியை ஓரளவு உயர்த்தி வருவாயைச் சரிக் கட்டி யிருக்கிறேன் என்று வரவு செலவுத் திட்ட உரையில் வழிகாட்டி யுள்ளனர். அதே போன்று தொழில் அமைச்சர் அவர்களும் அவ்வழியில் மேலும் நடந்து காட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மிகுதியாகத் தொழில் முறையில் உற்பத்தி செய்யப்படுகிற பொருள்களின் மீதுள்ள வரியை அதிகமாக்கி ஓரே கட்டத்தில் வசூலிக்கவேண்டும். அதில் பதினொரு கோடி கிடைக்காவிட்டாலும், அதற்கடுத்த நிலைமையில் வரி கிடைக்கும். வேறு வரிகளை வசூலித்து, அதை ஈடுகட்ட விரும்பினாலும் நாட்டிலும் நகரத்திலுமுள்ள வியாபாரிகள் மிகப் பெரிய அளவில் நடத்துகிற வியாபாரத்திற்கு மொத்தமாக ஓரளவு வணிக வரி விதித்து வசூலித்துக் கொள்ளலாம். கிராமத்திலுள்ள சிறுவணிகர் மீது வரி விதிப்பது கடினம். சென்னை போன்ற நகரங்களில் ரோடுகள் வழியாகவும், ரயில்வேக்கள் மூலமாகவும், கப்பல்கள் வழியாகவும் வந்திறங்குகின்ற பொருள்களுக்குக் குறைந்த அளவாகச் சுங்க வரி விதித்து, பெரிய வியாபாரிகள் அரசாங்கத்தை ஏமாற்ற வேண்டிய அவசியத்தை அளிக்காமல், அந்த வரியை வசூலிக்கலாம். ஏற்கெனவே இங்கு நடந்த விவாதத்தில் சுங்க வரி விதிக்கலாம் என்று திருவள்ளுவரே சொல்லியிருக்கிறார் என்று அங்கத்தினர் ஒருவர் சொன்னார். அந்த நல்ல வரியை விதித்து இந்தத் தீமைகளை மாற்றினால் நாங்கள் உங்களைப் பாராட்டுவோம். அடுத்ததாக **Nominal tax** என்ற முறையில் ஏறத்தாழ 10 ஆயிரத்திற்கு மேல், 20 ஆயிரத்திற்கு மேல் வாணிகம் செலுத்தக்கூடியவர்களுக்கு குறைந்த கட்டணமாக, ஆறு ரூபாய் செலுத்தி "லைசென்ஸ்" எடுப்பதற்குப்பதிலாக 50 ரூபாய் கட்ட வேண்டிய நிலையில் சிலர், 200 ரூபாய் கட்ட வேண்டிய நிலையில் சிலர், 1,000 ரூபாய் கட்ட வேண்டிய நிலையில் சிலர் என்று பிரித்து விட்டால் இந்த ஏமாற்றம் குறையும். இவ்விதம் ஏற்படுத்தினால் நன்மை வளரும், அரசாங்கத்தின் நல்ல பெயர் நிலைக்கும். அதுமட்டுமல்ல. தேவைப்படும் பொருள்களில் சில இன்றியமையாத பொருள்களாகும், சில துணைப் பொருள்களாகும், சில தேவைக்கு மேற்பட்டிருக்கும் பொருள்கள். இதில் இன்றியமையாத உணவுப் பொருள்களுக்கு வரி விதிக்கக் கூடாது. துணைப் பொருள்களுக்கு மிகச் சிறிய

8th July 1957] [Sri K. Anbazhagan]

அளவில் வரி விதிக்கலாம். ஷாப்பில் கிடைக்கிற தேவைக்கு மேற்பட்ட பொருள்களுக்கு பௌடர், வாசனை தைலம் போன்றவை, அருமையானப் பட்டுத் துணிகள் முதலான, தேவைக்கு மேற்பட்ட சாமான்களுக்கு வரி விகிதத்தை அதிகப்படுத்தலாம். உணவுப்பொருள்கள் மீதுள்ள வரியை அடியோடு விலக்கி இந்த **Luxury** சாமான்களுக்கு வரியைக் கூட்டலாம். தனித்தனி விற்பனை பில்லாக கணக்குப் பார்க்கலாம். மொத்த வியாபாரத்தின் அடிப்படையில் குறைந்த அளவு வரியை விதிக்க வேண்டும். நாட்டில் மிகப் பெரிய அளவில் எல்லோருக்கும் தேவைப்படாத பொருள்களுக்கு அதிக வரி போடலாம். நாங்கள் அதை எதிர்க்கமாட்டோம். அடுத்ததாக அரசாங்கம் இப்போதும் நடத்திக்கொண்டிருக்கும் குதிரை பந்தயத்திற்குப் பணக்காரர்கள்தான் அதிகமாகப் போகிறார்கள் என்று காங்கிரஸ்காரர்களில் சிலர் கூறினார்கள். அது அமைச்சருக்குத் தெரியுமானால் குதிரைப் பந்தயத்திற்கு 50 சத விகிதம் அளவிற்கு அதிகமாக வரி விதிக்கலாம். குதிரைகள் சற்று இளைத்தாலும் மக்கள் வாழ்வார்கள். அடுத்ததாக சினிமாவுக்கு வரியை அதிகப்படுத்தலாம் என்று சொல்லப்பட்டது. சினிமாவுக்கு அமைச்சர்கள் போகிறார்கள் என்று பத்திரிகைகளில் செய்தி வருகிறது. அமைச்சர்கள் வேண்டுமானால் இலவசமாகப் போய்வரக்கூடும். மற்றவர்களுக்கு அவ்விதம் போக முடியாது. ஆனாலும் சினிமா முதலியவைகளுக்கு **entertainment tax**-யை அதிகப்படுத்தினாலும் அதை நாங்கள் மறுக்கவில்லை, நாங்களும் செலுத்தத் தயாராக இருக்கிறோம். இந்த நாட்டு மக்களின் தேவைக்கு மேற்பட்ட பொருள்களின் மீது அதிக வரி விதிக்கலாம். மக்களின் இன்றியமையாத தேவைக்கு மேற்பட்ட துறைகளிலும் வரியை விதிக்கலாம். உதாரணமாகச் சொல்லுவேன், ஆண்டவனுக்கு அர்ச்சனை செய்கிறார்கள் எல்லோரும் தங்களின் மன நிம்மதிக்காக வேண்டி ஒரு அர்ச்சனைக்கு 8 அல்லது 10 அணா கட்டணம் செலுத்துகின்றனர். ஒரு அர்ச்சனையின் பேரில் ஒரு அணா வரி போடலாம், விரும்பினால் ஆண்டவனுக்குச் செய்யும் அருச்சனை புண்ணியத்தில் அமைச்சர்களுக்கும் பங்கு கிடைக்கும். இவ்விதமாக மக்கள் ஏற்றக்கூடிய நல்ல வரிகளை விதித்து தீயவழிகளை மாற்றட்டும்! பல முனை விற்பனைவரியை நீக்கி ஒருமுனை விற்பனைவரியை கொண்டு வரட்டும்! உணவுப் பொருள்கள் மீதுள்ள வரிகள் நீங்கட்டும்! இதனால் நாடு நலம் பெறட்டும்! என்று எதிர்கட்சியின் சார்பாகக் கூறிக் கொண்டு எனதுரையை முடிக்கிறேன். வணக்கம்.

**THE HON. SRI R. VENKATARAMAN** : சபாநாயகர் அவர்களே, இந்த விவாதத்தில் கலந்துகொண்ட அங்கத்தினர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியையும் அவர்கள் குறிப்பிட்ட ஆழ்ந்த கருத்துக்களுக்கு நான் எனது பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விவாதத்தின் மூலமாக விற்பனை வரியில் இருக்கிற பல குற்றங்குறைகள் எல்லாம் தெள்ளத் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது. அதுமாத்திரமல்ல. அவரவர்கள் அனுபவத்தை ஒட்டி எந்தெந்த முறையில் இந்த வரி விதிப்பை மாற்றியமைத்தால் நாட்டிற்கு நல்லது, மக்களுக்கு நல்லது என்று எல்லாம் யோசனைகள் கூறப்பட்டது. மனித முன்னேற்றம், மக்களின் கருத்துக்களை பரிமாறிக் கொள்வதின் மூலமாகத்தான் நடக்குமாதலால் அந்த அளவிற்கு உதவி செய்த நண்பர்களுக்கு மீண்டும் நான் நன்றி செலுத்திக் கொள்கிறேன். விற்பனை வரி என்பது, அன்பழகன் அவர்கள் சொன்னார்கள், அது விதிகளுக்கு ஒத்ததாக, நியாயத்திற்கு ஒத்ததாக, வரி விதிக்கவேண்டிய முறைக்கு சரியானதாக இல்லை என்று சொன்னார்கள். இந்த விற்பனை வரி என்பது, பல வருஷங்களுக்கு முன்னால், ஏன் ஒரு நூற்றாண்டிற்கு முன்னால் வரிகள் எந்த முறையில் விதிக்க வேண்டுமென்று பொருளாதார நிபுணர்கள் விதித்தார்களோ, "கானன்ஸ் ஆப் டாக்ஸ்ஸேஷன்" என்ற முறையையொட்டிப் பார்த்தால் அது சரியான வரி அல்ல. 1925–26-ம் வருடத்தில் நம் நாட்டில் இருக்கிற வரிகளை எல்லாம் பரிசீலனை செய்து "டாக்ஸ்ஸேஷன் என்கொயரி கமிஷன்" யாதாஸ்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள். நிபுணர்களின் அபிப்பிராயம் எப்படி இருந்தாலும் உலகத்தில் அனுபவம் வேறாக இருக்கிறது. உலகத்தில் இன்று இருக்கிற எல்லா நாடுகளிலும் விற்பனை வரி விதிக்கப் 1–30 p.m.

[Sri R. Venkataraman] [8th July 1957

படுகிறது. அதை "பர்ச்சஸ் டாக்ஸ்" என்று சொன்னாலும் சரி, அல்லது
"சேல்ஸ் டாக்ஸ்" என்று சொன்னாலும் சரி, இந்த விற்பனை வரி
எல்லா நாடுகளிலும் அமலில் இருக்கிறது. இங்கிலாந்தில் உள்ள நிபு
ணர்கள்தான் இந்த "கானன்ஸ் ஆப் டாக்ஸேஷன்" என்பதை
வெளியிட்டார்கள். அவர்களே இதை இப்பொழுது பரிசீலனை செய்வார்
களேயானால் இது சரியல்ல என்று சொல்வார்கள். ஆனால் இன்றைய
மனித சமுதாயத்தின் போக்கு, இன்றைக்கு நடக்கிற சர்க்கார் எடுத்துக்
கொண்டிருக்கிற முக்கியமான கொள்கைகள், அவர்கள் ஏற்றுக்கொண்
டிருக்கிற பணிகள் இதையெல்லாம் ஒட்டிப் பார்க்கிறபோது இதற்கு முன்
னால் இருந்த தத்துவம், சக்தி இருக்கிறவர்கள் மாத்திரம்தான் வரிகள்
கொடுக்கவேண்டும் என்பது மாறி இன்று இந்த நாடு செவ்வையாக
அரசாளப்படவேண்டும் என்று சொன்னால் அதில் இருக்கிற மக்கள் ஒவ்
வொருவரும் அதில் ஒரு பங்கு எடுத்துக் கொள்ளவேண்டுமென்ற முறை
யில் உலகத்தில் எல்லா நாடுகளிலும் வரி விதிக்கப்படுகிறது. "கானன்ஸ்
ஆப் டாக்ஸேஷன்" சரியல்ல என்று கூறுவது ஒரு நூற்றாண்டுக்குப்
பிந்திய அபிப்பிராயத்தைச் சொல்வதாகும். அடுத்தப்படியாக, நம் நாட்
டில் சமீபத்தில் நாட்டில் இருக்கிற வரிகளைப் பரிசீலனை செய்து இரண்
டாவது "டாக்ஸேஷன் என்கொயரி கமிஷன்" அவர்களின் ரிப்
போர்ட்டை 1953–54-ல் வெளியிட்டிருக்கிறார்கள். அதில் இருக்கிற கருத்
துக்களை எடுத்துப் பார்த்தால், இங்கே மிகவும் காரசாரமாக 15,000 ரூபாய்,
20,000 ரூபாய், 30,000 ரூபாய் வியாபாரம் இருக்கிறவர்களுக்குத்தான்
வரி விதிக்க வேண்டுமென்று சொன்னதற்கு மாறாக "டாக்ஸேஷன்
என்கொயரி கமிஷன்" 5,000 ரூபாய் யார் யாருக்கு வியாபாரம் இருக்
கிறதோ அவர்களுக்கு எல்லாம் வரி விதிக்க வேண்டுமென்று அவர்கள்
ஆராய்ச்சி செய்து சொல்லியிருக்கிறார்கள். இரண்டாவது, நாம் அதிகப்
படியாக ஒரு முனை வரி விதிக்க வேண்டுமென்று சொல்லியிருப்பதற்கு
மாறாக "The low rate of multi-point tax of the type proposed by
us will secure the object of making the low-income groups
contribute to the exchequer according to their capacity"
என்று கூறப்பட்டிருக்கிறது. பல கட்ட வரியை குறைந்த அளவிற்கு
போடுவதின் மூலமாக மக்கள் அவர்களின் சக்திக்கு இயன்றளவு சர்க்கார்
நிர்வாகத்திற்குக் கொடுத்துதவ முடியும் என்று அவர்கள் சொல்லி
யிருக்கிறார்கள். ஆனால் இந்த இரண்டையும் நான் உங்களிடம் வைக்கும்
போது, இது சர்க்காரின் முடிவான அபிப்பிராயம் என்று சொல்லவில்லை.
காரணம் என்னவென்றால் இந்த மாகாணத்தில் நடக்கிறவிற்பனை வரி
யைப் பற்றி நன்றாக அலசி ஆராய்ந்துபார்த்து நம்முடைய மாகாணத்தில்
அது எவ்வாறு நடைபெறுகிறது, நம் மாகாணத்திற்கு ஒத்தவாறு அதை
எப்படி திருத்தியமைக்க முடியும், எந்தெந்த பொருள்களின் மீது ஒரு
முனை வரி விதிக்கலாம், எந்தப் பண்டங்களின் மீது பல கட்ட வரி விதிக்க
வேண்டுமென்ற அவசியம் ஏற்படுகிறது. ஆகவே, இதை எந்த முறையில்
திருத்தியமைக்க வேண்டும், எந்த அளவிற்கு விதி விலக்குகள் அளிக்க
வேண்டும் என்பதை எல்லாம் பற்றி ஆராய்ச்சி செய்ய இன்றைக்கு
இந்தியாவில் இருக்கக் கூடிய பொருளாதார நிபுணர்களிலே மிகவும்
திறமை வாய்ந்த, தென் கிழக்கு ஆசிய நாடுகளின் பொருளாதார
கமிஷனுக்கு நீண்ட நாட்களாக காரியதரிசியாய் இருந்த ஸ்ரீ லோகநாதன்
அவர்களை நியமித்து பரிசீலனை செய்ய அவர்களை கேட்டுக் கொண்டிருக்
கிறது. அன்னார் அதற்கு ஒத்துக் கொண்டதற்காக அவர்களுக்கு இன்று
இந்த சட்டசபையில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.
அவர்கள் பரிசீலனை செய்து எந்த விதத்தில் என்ன முடிவு சொல்
வார்களோ அந்த முடிவை சர்க்கார் கவனிக்கவேண்டும் என்ற காரணத்
திற்காக இன்று சட்டசபையில் பல அங்கத்தினர்கள் பலதரப்பட்ட அபிப்
பிராயங்களைக் கூறியிருந்தாலும் அதைப்பற்றி முடிவான அபிப்பிராயமாக
ஒன்றும் சொல்வதற்கு இல்லை. இது சம்பந்தமாக பல தரப்பட்ட கருத்துக்
கள் இருக்கின்றன. எல்லாவற்றையும் நன்றாக ஆலோசித்துத்தான் சர்க்
கார் முடிவு செய்யும். நண்பர் ராமச்சந்திரன் அவர்கள் பேசுகிறபோது,
கொஞ்சம் வேகத்தில் பேசுகிறபோது சொல்லி விட்டார்கள், உப்புக்குக் கூட



8th July 1957] [Sri R. Venkataraman]

வரி போடுகிறோம் என்று. உப்புக்கு வரி கிடையாது. அடுத்தப்படியாக,
அவர்கள் ஒரு முக்கியமான திட்டத்தை, ஒரு கொள்கையை வெளியிட்
டார்கள். பல கட்ட வரி வசூல் செய்வதின் மூலமாக சர்க்காருக்கு
அதிகமாக நஷ்டம் ஏற்படாமல் இருக்குமென்று இந்த அமைச்சர் கௌன்
ஸிலில் பேசுகிறபோது சொன்னார்கள் என்று இதிலிருந்து சர்க்காரின்
நிர்வாகத் திறமை குறைவாக இருக்கிறது என்பது பொருளே தவிர
அந்த முறை தவறில்லை என்று சொன்னார்கள். ஒரு கட்ட வரியை நாம்
போடுவோமானால் அதற்கு மனித இயல்புதான் காரணம். ஒரு
"டிரான்ஸாக்ஷனில்" வரி வசூலிக்க முடியாமல் போய் விட்டால்
அந்த வியாபாரத்திலுள்ள முழு வரியும் போய்விடும். ஆனால் பல கட்ட
வரி மூலம் சிறு சிறு வரிகள் விதித்தால், "டாக்ஸேஷன் என்கொயரி
கமிஷன்" சொல்வது போல் பல கட்ட வரி போட்டால் ஓரிரு வியாபாரிகள்
ஏமாற்றினாலும் மொத்தத்தில் சர்க்காருக்கு நஷ்டம் ஏற்படாது. மனிதர்
களின் ஏமாற்றும் குணத்தை மாற்றி அவர்களை நல்லவர்களாக்க
சர்க்காரால் முடியாது. எனது நண்பர்கள், அவர்களுக்குத் திறமை இருந்
தால் அதைச் செய்து காட்டலாம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.
மனிதர்களின் குணத்தை மாற்றி அவர்களை நல்லவர்களாக்க சர்க்காரால்
முடியாது, அதற்குள்ள திறமை சர்க்காருக்கு இல்லை. சமூக சேவையில்
ஈடுபட்டிருக்கிற எல்லோரும் சேர்ந்துதான் செய்ய முடியுமே தவிர சர்க்
காரால் அதைச் செய்ய முடியாது என்பதைத் தெளிவாகத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

இரண்டாவதாக, ஏராளமாக வர்த்தகர்களுக்கு கஷ்டங்கள் இருக்கின்றன
என்று சொன்னார்கள். கஷ்டங்கள் ஏன் இருக்க வேண்டும்? ஓரளவு
இந்த வரியிலிருந்து எப்படியாவது தப்பித்துக்கொள்ள வேண்டுமென்று
முயற்சி செய்யும் வியாபாரிகளுக்கும், எப்படியாவது வரியை அதிகப்படி
யாக வசூலித்துவிடவேண்டுமென்று நினைக்கின்ற உத்தியோகஸ்தர்களுக்
கும் ஒரு போட்டி ஏற்பட்டு அதன் காரணமாகத் தான் கஷ்டம் ஏற்படுமே
அல்லாது, நல்ல முறையில் கணக்கு வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கு
கஷ்டம் ஏற்பட்டதாக தெரியவில்லை. விற்பனை வரி கணக்குகளை ஒழுங்
காக வைத்திருப்பவர்கள் சங்கடத்திற்கு உள்ளாகமாட்டார்கள். கணக்கு
இல்லாதவர்களுக்குத் தான் கஷ்டங்கள் ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை.
ஆகவே, இந்த வரி விதிப்பில் கஷ்டங்கள் அடங்கியிருக்கின்றன என்று
சொல்லுவது தவறு. இந்த வரி விதிப்பிலிருந்து தப்பித்துக்கொள்ள
முயற்சி செய்வதில் கஷ்டங்கள் அடங்கியிருக்கின்றன என்பது உண்மை.

சர்க்கார் ஊழியர்களைப்பற்றி அதிகமாக குறை கூறுவதில் உண்மை
இல்லை என்று நினைக்கிறேன். அது மாத்திரமல்ல. இந்த இலாகாவை
நான் எடுத்துக்கொண்டவுடன் இந்த இலாகாவில் வேலை செய்கின்ற
சிப்பந்திகளின் பிரதிநிதிகள் என்னைப் பார்க்க வந்தார்கள். அப்பொழுது
என்னிடம் பேசும் பொழுது சொன்னார்கள்: "ஊரில் இருப்பவர்க
ளெல்லாம் மொத்தத்தில் நாங்கள் அவர்களை கொடுமைப் படுத்துகிறோம்
என்று சொல்லுகிறார்கள். நாங்கள் சாதாரண ஊழியர்கள், சர்க்கார்
சிப்பந்திகள், இட்ட வேலையை செய்கின்றவர்கள். தவறு செய்கின்றவர்கள்
பேரில் சரியான முறையில் கடுமையான நடவடிக்கை எடுத்தால்தான் எங்க
ளுடைய கடமைகளை சரியான முறையில் செய்ய முடியும். ஏதோ வெளியி
லிருப்பவர்கள் வர்த்தகர்கள் சொல்லுகிறார்கள் என்பதை ஒட்டி பொறுப்பு
வாய்ந்த அங்கத்தினர்களும் சர்க்காரும் சேர்ந்து எங்கள் பேரில் பழியை
சுமத்தினால் எங்கள் வேலையை நாங்கள் ஒழுங்காக செய்ய முடியாது"
என்று சொன்னார்கள். அதையும் நாம் நன்றாக கவனிக்க வேண்டும்.
சர்க்கார் சிப்பந்திகள் எல்லோரும் தவறு செய்பவர்கள் என்று ஒரு
அபிப்பிராயத்தை பரவச் செய்துவிட்டால், நியாயமாக ஊழியம் செய்
கின்ற சர்க்கார் ஊழியர்களுக்குகூட உற்சாகமாக வேலை செய்வதற்கு
சந்தர்ப்பம் கிடைக்காது. ஸ்ரீ ஸ்ரீனிவாசய்யர் அவர்கள் நல்ல கருத்துகளைச் சொன்
னார்கள். அதாவது 'manufactured articles' உற்பத்தி செய்கின்ற பண்டங்
களின் மீதும், இறக்குமதி செய்யப்படுகின்ற பொருள்கள் மீதும்
ஒரு முனை வரி விதிக்க வேண்டுமென்று சொன்னார்கள். வேறு எந்த

[Sri R. Venkataraman] [8th July 1957

பண்டங்களுக்கு பல கட்ட விற்பனை வரி விதிக்க வேண்டுமென்று சொன் ஞர்களோ, அந்த அடிப்படையில் தான் இன்றைக்குக்கூட வரி விதிக்கப் படுகிறது. இப்பொழுது ஒரு முனை வரி விதிக்கப்பட்டுள்ள பொருள்கள் எல்லாவற்றையும் பார்த்தால், அவைகளெல்லாம் "manufactured articles" factory-ல் செய்யப்பட்ட பொருள்களாகவோ, நமது ராஜ்யத்தில் வந்து இறங்கக்கூடிய பொருள்களாகவோ இருக்கும். சுலபமாக அவைகளை கண்டுபிடித்து வரி விதிக்கலாம். இந்த முறையில் தான் ரசாயன உரம், காபி, டீ, சிமெண்டு, மண்ணெண்ணெ இவைகள் மீது ஒரு கட்ட வரி விதிக்கப்படுகிறது. எந்தப் பண்டங்களுக்கு சுலபமாக ஒரு முனை வரி விதிக்கப்படலாமோ அந்தப் பண்டங்களுக்கு ஒரு கட்டத்தில் தான் வரி விதிக்கப்படுகிறது. சர்க்கார் ஒரு முனை வரி விதிக்கக்கூடாது என்ற கொள்கை அடிப்படையில் இருக்கிறார்கள் என்று யாரும் நினைக்கக்கூடாது. இன்று வரையில் சர்க்கார் வரி விதித்திருக்கும் கொள்கையின் அடிப்படையை பார்த்தால் எந்த பண்டங்களுக்கு ஒரு முனை வரி விதிக்க வேண்டுமோ அந்த பண்டங்களுக்கு ஒரு விதிக்கிறார்கள். எந்தப் பண்டங்களுக்கு ஒரு முனை வரி நிலைமை இருக்கிறதோ, அந்த பண்டங்களுக்கு ஒரு முனை வரி விதிக்கப்படாத கட்ட வரி விதிக்கப்பட்டிருக்கிறது. மாத்திரம் தான் பல

தென் ஆற்காடு நண்பர் அவர்கள் சொன்னார்: "மணிலா பயிருக்கு முதலில் 'பர்சேஸ்' வரி போட்டார்கள், அதன் பின் அதை வேறு பண்டமாக, எண்ணெயாக மாற்றி விற்கும் பொழுது அதற்கு ரிபேட் கொடுத் தார்கள்." அது வாஸ்தவம் தான். மணிலா பயிர் செய்கிறவர்கள் எப் பொழுது குற்றம் குறை சொன்னார்கள் என்றால், ஏப்ரல் மாதத்தில் கொடுத்த ரிபேட் இல்லை என்று சர்க்கார் ஏதோ உத்தரவு போட்டதன் காரணமாக அவர்கள் இரண்டு முறை வரி கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது, "purchase point-ல்" ஒரு முறையும், மறுபடியும் விற்கும்பொழுது ஒரு முறையும் வரி கொடுக்க வேண்டியிருக்கிறது. பழைய முறையை மீண்டும் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். சர்க்காரும் இதைப் பரிசீலனை செய்து "ஸ்டே" ஆர்டர் கொடுத்து, மறுபடியும் ரிபேட்டை தொடர்ந்து கொடுக்கும்படி உத்தரவிட் டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, பத்திரிகை விளம்பரங்கள் மீது வரி விதிக்கலாமென்று சொன்னார்கள். விளம்பரங்களின் மீது வரி விதிப்பது பற்றி "Taxation Enquiry Commission" அவ்வளவு சாதகமாகச் சொல்ல வில்லை. என்றாலும் இதைக் கூட நாம் நியமித்திருக்கும் பொருளாதார நிபுணர் பரிசீலனை செய்வார் என்று நம்புகிறேன்.

பாலுக்கும் தேங்காய்க்கும் விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கவேண்டு மென்று குறிப்பிட்டார்கள். பாலுக்கு இப்போது போடப்படுகின்ற வரி பல கட்ட வரி அல்ல. கடைசி கட்டத்தில் மக்களுக்கு விற்கின்ற பொழுது மாத்திரம் ஒரே முனையில் வரி விதிக்கப்படுகிறது. அதுவும் கூட பெரிய கூட்டுறவு சங்கங்களின்மீது தான் வரி விதிக்கப்படுகிறது. சாதாரணமாக சில மாடுகள் வைத்துக்கொண்டு கறந்து வீடுகளுக்கு கொடுக்கிறவர்கள் வரி கொடுக்கவில்லை. காரணம் அவர்களுக்கு ரூ. 10,000-க்கு "transaction" கிடையாது. ஆகவே பெரிய கூட்டுறவு சங்கங்கள் மாத்திரம், பண்ணை வைத்திருப்பவர்கள் மாத்திரம் வரி கொடுக்கிறார்கள். அதுவும் எல்லா கட்டங்களிலும் கொடுக்கவில்லை. கடைசி முனையில் மட்டும்தான் வரி கொடுக்கிறார்கள். பாலுக்கு சலுகை கொடுக்கவேண்டுமென்பதை சர்க்கார் பரிசீலனை செய்யும் என்பதை சொல்லிக்கொள்ளுகிறேன்.

அடுத்தப்படியாக, கனம் அங்கத்தினர் ஸ்ரீ கோதண்டராமன் அவர்கள் சர்க்கரை விஷயமாகச் சொன்னார்கள். அவர்கள் சொன்னதைவிட நான் ஒன்றிரண்டு விஷயங்கள் அதிகமாகச் சொல்லுகிறேன். சுமார் 18 லட்சம் ரூபாய் வரையில் இந்த ராஜ்யத்திலிருந்து பாண்டிச்சேரி போன்ற வெளி இடங்களில் வியாபாரம் செய்யப்பட்டதாகக் காட்டி நமக்கு நஷ்டம் ஏற்பட்



8th July 1957] [Sri R. Venkataraman]

டிருக்கிறது என்பதை கவலையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நம்மை ஏமாற்றுவது எப்படியென்றால் சாதாரணமாக சட்டப்படி பாண்டிச்சேரியில் விற்ற மாதிரி கணக்குகளை மாத்திரம் வைத்துக்கொண்டு, ஏதோ தஸ்தா வேஜுகளை தயார் செய்துகொண்டு மீண்டும் லாரி மூலமாக இங்கே வருவ தாகத் தெரிகிறது. இதை உடனடியாக தடுப்பதற்கு முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இன்றைக்குக் காலையில் பத்திரிகையில் பார்த் திருக்கலாம். மத்திய சர்க்கார் "Central Excise duty" கொண்டு வருவதாக இருக்கிறார்கள். மில் துணி, சர்க்கரை, புகையிலை இவைகள் மீது மத்திய சர்க்கார் வரிவிதித்து அதை மாகாணங்களுக்கு கொடுக்க ஏற்பாடு செய்கிறார்கள். அந்த முறை வந்து விட்டால், இப்படி மாகாணங் களிலிருந்து வெளியே கொண்டுபோய் விற்பது, கள்ளக்கடத்தல் செய்வது எல்லாம் ஒழிந்து விடும். அடுத்தப்படியாக சர்க்கரைக்கு "additional tax" ஒரு அணு போடப்படுகிறது. அதை கொடுக்க முடியும் என்ற காரணத்தை ஒட்டித் தான் அந்த வரி போடப்படுகிறது.

ரயில்வேக்கள் மற்ற இடங்களிலெல்லாம், சரக்குகள் வந்து இறங்கு கின்ற இடங்களிலெல்லாம் உத்தியோகஸ்தர்களைப் போட்டு பரிசீலனை செய்யவேண்டுமென்று ஸ்ரீ. கோதண்டராமன் அவர்கள் சொன்னார்கள். வங்காளத்தில் நடைபெறுகிறது என்னவென்றால் ரயில்வே ரசீதில் விற்பனை வரி செலுத்தியாகிவிட்டது என்று முத்திரை போட்டு கொடுத்தால் தான் ரயில்வே அதிகாரிகள் சரக்குகளைக் கொடுப்பார்கள். இவ்விதமாக நம் ராஜ்யத்தில் செய்தால், இருக்கிற கூக்குரல் இன்னும் அதிகமாக ஏற்படும் என்பதை மிகத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். காரணம் என்னவென்றால், சரக்குகளை விற்பதற்கு முன்னாலேயே அதற்கான வரியை கொடுத்துவிட்டுத் தான் சரக்கை எடுத்து விற்க வேண்டுமென்று சொன்னால், ஜனங்களுக்கு கஷ்டம் ஏற்படும். அதற்கு மாறாக வேறு திட்டங்களெல்லாம் யோசனையில் இருக்கின்றன. அவைகளையும் பரி சீலனை செய்து சர்க்கார் முடிவு செய்யும்.

விற்பனை வரி ஆலோசனை கமிட்டி கூட்டங்கள் தொடர்ந்து நடக்கவில்லை என்று சொன்னார்கள். தொடர்ந்து நடத்துவதற்கு முயற்சி செய்யலாம். இந்த ஆலோசனைக் கமிட்டி நாம் நியமித்திருக்கும் நிபுணர் செய்யும் வேலையைச் செய்ய முடியாது. இந்தக் கமிட்டி இப்பொழுது சட்டத்தில் உள்ளபடி என்ன செய்ய முடியும் என்பதை பரிசீலனை செய்யலாமே ஒழிய, சட்டத்தை மாற்றி அமைப்பது பற்றி அதே கமிட்டி பரிசீலனை செய்யவேண்டுமென்று ஸ்ரீ கோதண்டராமன் அவர்கள் சொன்னது அவ் வளவு உகந்தது அல்ல.

அடுத்த படியாக, ஹோட்டல்களை ஏலம் போடுவதால் அதிகமாக லாபம் வரும் என்று ஸ்ரீ ஜூசைதம்பி அவர்கள் சொன்னார்கள். கள்ளுக்கடை ஏலம் போட்டதை வைத்துக் கொண்டு இந்த அபிப்பிராயத்தை தெரிவித் திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். வேறு யாரும் ஹோட்டல் வைக்கக் கூடாது என்று சொன்னால், அந்த உரிமை முழுவதையும் சர்க்கார் எடுத் துக்கொண்டு, பிறகு அதை ஏலம் போடுவது என்று சொன்னால் கஷ்டங் கள் அதிகமாக ஏற்படும். இரண்டாவதாக ஏலம், போட்டால், ஏலத்தை எடுக்கின்ற முதலாளிகள் தனக்கு ஏதேச்சாதிகாரம் (monopoly) இருக் கிறது என்ற காரணத்தினால் இட்லி விலையை அதிகரித்தால் நாம் சட்ட சபையில் இங்கு உட்கார்ந்திருக்க முடியாது என்பதை மிக தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நண்பர் ஸ்ரீராமசாமி பிள்ளை அவர்கள் பேசும்போது, திருவாங்கூர்-கொச்சியிலே விதித்த இரண்டு வரிகளைப்பற்றி குறிப்பிட்டார்கள். அது உண்மை தான். திருவாங்கூர்-கொச்சியில் விதித்த லைசென்ஸ் வரியை நாம் எடுத்துவிடுவதற்கு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.

மற்ற அங்கத்தினர்கள் எல்லோரும் மீண்டும் மீண்டும் இதே கருத்துக் களைத் தான் வலியுறுத்தியிருக்கிறார்கள். கூடுமான அளவுக்கு எந்தெந்த முறையில் அந்தக் கருத்துக்களையெல்லாம் சர்க்கார் பரிசீலனை செய்யு

[Sri R. Venkataraman] [8th July 1957

வேண்டுமோ அப்படிப் பரிசீலனை செய்து, அதற்கேற்ற நிவாரணத்தைச் செய்ய முயற்சிக்கும். மற்ற கருத்துக்களை இதற்கென நியமிக்கப்பட்டிருக்கின்ற பொருளாதார நிபுணர் அவர்களுக்கு அனுப்பி வைக்கின்றோம், என்று கூறிக்கொண்டு, இந்த மான்ய கோரிக்கையை சட்டசபை ஏற்றுக் கொள்ளும்படியாக நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : Is the hon. Member, Sri Ramachandran, withdrawing his cut motion?

SRI K. RAMACHANDRAN : I am pressing it.

MR. SPEAKER : I shall then put the cut motion to vote. The question is—

"That the allotment of Rs. 1,36,91,700 under Demand VII—General Sales Tax and other Taxes and Duties Administration—be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

MR. SPEAKER : I shall now put the Demand to vote. The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,36,91,700 under Demand VII—General Sales Tax and Other Taxes and Duties Administration".

The Demand was put and carried and the Grant was made.

MR. SPEAKER : To-morrow is a holiday and we do not meet. We are meeting again at 9 a.m. on the 10th and we will take up on that day two Demands. For the first two hours, we will discuss the Demand relating to Excise Duty and in the next two hours in the Demand relating to the Forest Department, etc.

I now adjourn the House to meet at 9 a.m. on Wednesday, the 10th July 1957.

The House then adjourned.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Wednesday, 10th July 1957.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

### I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Beggar homes.*

* 79 *Q*.—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether all the beggars in the City are housed in beggar homes;

(*b*) the places where beggar homes are located in the City;

(*c*) whether any separate quarters have been provided for sick persons;

(*d*) whether any beggar homes have been started in mufassal stations; and

(*e*) the amount spent on them?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) There is a Home at Otteri and another at Krishnampet for the reception of infirm and diseased beggars. The Government run a Home at Melpakkam for able-bodied beggars rounded up in the City.

(*c*) There are separate quarters for sick inmates in the Otteri Home. In the Krishnampet Home, there is a separate Ward for leprosy cases. There is provision for the medical treatment of sick inmates of the Malpakkam Home though there are no separate quarters for them.

(*d*) There are beggar homes at Coimbatore and Ootacamund. The starting of workhouses and homes in eight other municipal towns has been sanctioned.

(*e*) Nil so far, as the municipalities have yet to claim the subsidy sanctioned by the Government.

SRI K. R. NALLASIVAM : இந்த விடுதிகளிலுள்ள பிச்சைக்காரர் களுக்கு ஏதாவது தொழிலில் பயிற்சியளிக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அது கவனிக்கப்பட்டுத் தான் வருகிறது.

SRI M. S. SELVARAJAN : Sir, is it not a fact that beggars feel inconvenient to settle down at the beggars' home rather than wandering?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : It may be true in several cases that beggars prefer begging to settling at some home.

[10th July 1957

SRI P. G. MANICKAM : தங்களுடைய சொந்த உணவிற்காகக் கூட உழைக்க விரும்பாத சோம்பேறிகளின் கூட்டங்கள் நகரங்களில் மட்டுமல்லாமல் கிராமங்களிலும் பிச்சைக்காரர்களாக மாறி வருகின்றன. அவர்களில் பலர் திருட்டு வழக்குகளில் கூட அகப்படுகிறார்கள். ஆகையால் அவர்களைத் தண்டிக்க சர்க்கார் சட்டமியற்றுமா என்று கேட்க விரும்பிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : குற்றம் செய்யவர்களைத் தண்டிப்பது வேறு விஷயம். பிச்சைக்காரர்களைப் பிடித்து, அவர்களில் வியாதியஸ்தர்களை சிகிச்சை செய்வதற்காக தனியாக ஒரு இடத்தில் வைப்பதும், அவர்களில் வேலை செய்யக்கூடியவர்களைத் தனியாக ஒரு இடத்தில் வைத்து அவர்களிடமிருந்து வேலைவாங்குவதும் வேறு விஷயம்; இது இப்போது கவனிக்கப்பட்டு வருகிறது. அவர்களிடமிருந்து வேலை வாங்குவதற்கான விடுதிகளை ஐந்து முனிசிபல் பிராந்தியங்களில் வைப்பதற்கும், வேலை செய்ய முடியாதவர்களுக்காக பிரத்யேக விடுதிகளை ஏழு முனிசிபல் பிராந்தியங்களில் ஏற்படுத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

SRI K. VINAYAKAM : Whereas the task of tackling the beggar problem in the City of Madras is now attended to by the Corporation of Madras, which is not its duty, and that it is now concentrating upon giving civic amenities to the people; will the Government think of the possibility of launching a scheme of their own to tackle this beggar problem and house almost all the able-bodied beggars including the diseased beggars in separate quarters and give them sufficient profession so that they may turn out some useful work?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : It is not correct to say that the entire responsibility of dealing with the beggar problem in the City of Madras devolves on the Madras Corporation. At the same time I must also point out that the Madras Corporation cannot altogether avoid this responsibility of dealing with the beggar problem to the extent possible. Now the Corporation is maintaining only a home in Otteri. There is also a home maintained by a private committee, and also a home where also able-bodied beggars are taken from the City and confined in Melapakkam near Madras, and this is administered by the Police.

SRI K. SATTANATHA KARAYALAR : நகரத்திலுள்ள குஷ்டரோகிகள் எல்லோரையுமாவது, குறிப்பாகப் பிச்சைக்காரக் குஷ்டரோகிகளையாவது, ஒரு இடத்தில் கொண்டுபோய் வைக்க அரசாங்கம் யோசனை செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஒட்டேரியில் நகரசபையால் நடத்தப்படும் பிச்சைக்காரர்கள் விடுதியில் பிச்சைக்காரக் குஷ்ட ரோகிகள் தனியாக வைக்கப்பட்டு கவனிக்கப்பட்டு வருகிறார்கள்.

SRI T. T. DANIEL : Sir, begging is becoming more or less a profession and the children of the beggars also take it up. Will the Government be pleased to state whether they are intending to give educational facilities for the children of the beggars in the beggar homes so that they may at least be saved?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, Sir. That is also being attended to.

10th July 1957]

**Sri P. S. CHINNADURAI** : கனம் சபாநாயகர் அவர்களே, அங்க ஹீனர்களையும் அனாதைகளையும் காப்பாற்றுவது சமூகத்தின் பொதுவான கடமை என்ற நியதியை அனுசரித்து, சமூகத்தின் பிரதிநிதியாக விளங்குகின்ற இந்த ராஜ்ய சர்க்கார் அவர்களைக் காப்பாற்றுவதற்கான முழுப் பொறுப்பையும் ராஜ்ய முழுமைக்கும் ஏற்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : அந்த அடிப்படையான நோக்கத்துடன்தான் ஏழு முனிஸிபாலிடிகளில் அங்க ஹீனர்களாக உள்ள பிச்சைக்காரர்களையும் வியாதியஸ்தர்களாக உள்ள பிச்சைக்காரர்களையும் பராமரிப்பதற்கு பிரத்யேக விடுதிகள் ஏற்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**Sri S. PAKKIRISAMI PILLAI** : வயதுவந்த பிச்சைக்காரர்களை இந்த மாதிரியான விடுதிகளில் அனுமதிப்பதுடன் கூட, சென்னையில் இருக்கும் சோம்பேறிகளாகப் பிச்சை எடுக்கும் குழந்தைகள் **(vagrant children)** பிடிக்கப்பட்டு பிச்சைக்காரர் விடுதிகளுக்குக் கொண்டு போகப்படுகிறார்கள். அவர்களைப் பிடித்துக்கொண்டு போவதற்கு வண்டிகள் **Beggar Van** வரும்போது ஒவ்வொரு பையனும் அதை முன்னாலேயே தெரிந்துகொண்டு, நாய் பிடிக்கும் வண்டி வரும்போது நாய்கள் எப்படித் தெரிந்துகொண்டு ஓடிப்போய் விடுமோ அதுபோல், ஓடிப்போய்விடுகிறான். அந்தப் பையன்களை எப்படியாவது பிடித்துச் சீர்திருத்துவதற்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : அவர்கள் கெட்டுப்போகக் கூடாது. அவர்கள் மற்றவர்களுக்கும் தொல்லை விளைவிக்கக்கூடாது. ஆகையால் அவர்களை எந்தெந்த வழிகளில் பிடித்து நல்வழிப்படுத்த முடியுமோ அந்தந்த வழிகளிலெல்லாம் கவனம் செலுத்தப்பட்டுத்தான் வருகிறது.

**Sri A. P. C. VEERABAHU** : பிச்சைக்கார விடுதிகளை ஏற்படுத்தி நடத்தி வரும் காரியம் ஸ்தலஸ்தாபனங்களைச் சேர்ந்ததாக இருப்பதால், இதற்காக ஸ்தலஸ்தாபனங்களுக்கு குறைந்தபட்ச அல்லது உயர்ந்த பட்ச உதவி ஏதேனும் அளிப்பது பற்றி சர்க்கார் உத்தேசித்திருக்கிறதா அப்படியானால், அந்தத் தொகை ஜனத் தொகைப்படி இருக்குமா, அல்லது ஸ்தலஸ்தாபனம் செலவழிக்கும் தொகையை அனுசரித்து இருக்குமா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : முனிசிபாலிடிகள் பிச்சைக்காரர்களைப் பராமரிப்பதை ஏற்றுக்கொண்டால், ஒவ்வொரு பிச்சைக்காரருக்கும் மாதத்திற்குப் பத்து ரூபாய் வீதம் பணம் ஒதுக்கப்பட்டு, சர்க்கார் கிராண்ட் கொடுக்கும்.

**Sri K. RAMACHANDRAN** : சென்னை நகரத்திலும் மற்ற பல பெரிய நகரங்களிலும் பஸ் ஸ்டாண்டுகளிலும், ரெயில்வே ஸ்டேஷன்களிலும் பிச்சை எடுப்பவர்களில் 12 வயதிற்குக் குறைவான வயதுடையவர்கள் அதிகமாகக் காணப்படுகிறார்கள். அவர்களை நல்வழிப்படுத்துவதற்காக, அவர்களுக்குக் கல்வி போதிக்கவோ அல்லது அவர்களை தொழிலில் ஈடுபடுத்தவோ சர்க்கார் உடனடியாக ஏதாவது திட்டம் தயாரிக்குமா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : அதற்கு என்று பிரத்யேக திட்டம் இருக்கிறது என்று சொல்ல முடியாது. ஆனால் அது சர்க்காரால் கவனிக்கப்பட்டுத்தான் வருகிறது.

**Sri A. VEDARATNAM PILLAI** : ஏழு முபஸல் முனிசிபல் நகரங்களில் பிரத்யேக விடுதிகள் ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக் கனம் மந்திரி அவர்கள் குறிப்பிட்டார்கள். அவைகள் எந்தெந்த நகரம் என்று கனம் மந்திரி அவர்கள் தெரிவிக்க முடியுமா இதற்காக மத்திய அரசாங்கத்திலிருந்து நமக்கு நிதி உதவி கிடைக்கிறதா என்பதையும் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

[10th July 1957

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** : இது விஷயத்தில் மத்திய அரசாங்கத்தின் உதவியைக் கோரவில்லை. வேலை செய்யும் விடுதி ஒவ்வொன்றிலும் நூறு பேர்களை வைத்துக்கொள்ளலாம் என்று ஏற்பாடாகியிருக்கிறது. வியாதியுள்ள பிச்சைக்காரர்களுக்கான பிரத்யேக விடுதி ஒவ்வொன்றிலும் 50 பேர்களுக்குக் குறையாமல் வைத்துக் கொள்வது என்று ஏற்பாடாகியிருக்கிறது. திருச்சிறுப்பள்ளி, சிதம்பரம், ஸ்ரீரங்கம், புதுக்கோட்டை, கும்பகோணம் ஆகிய 5 முனிசிபாலிடிகளில் வேலை செய்பவர்கள் விடுதிகளையும், செங்கற்பட்டு, வெல்லூர், திருச்சிறுப் பள்ளி, சிதம்பரம், புதுக்கோட்டை, கும்பகோணம், ஈரோடு ஆகிய 7 முனிசி பாலிடிகளில் வியாதியுள்ள பிச்சைக்காரர்களுக்கான பிரத்யேக விடுதிகளையும் அமைப்பது என்று ஏற்பாடாகியிருக்கிறது.

9–10 a.m. **SRI V. K. RAMASWAMY MUDALIYAR** : Sir, how long are these able-bodied beggars kept in the home? After release if they start begging again, what is the proposal of the Government to bring them back or to teach them something useful?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** : They will be kept in the home till they are able to establish themselves to live a decent life.

**SRI K. B. S. MANI** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தப் பிச்சைக்காரர்களைப் பொறுத்த அளவில் ஈஜிப்டில் நல்லதொரு முறையைக் கையாளுகிறார்கள். பிச்சைக்காரர்கள் அத்தனை பேரையும் நோய் உள்ள வர்களாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், விடுதிகளில் தங்க வைத்து அவர்களுக்கு இஷ்டப்பட்ட வேலைகளைக் கற்றுக் கொடுத்து, வேலையில் நல்ல திறமை ஏற்பட்டவுடன் சொந்தமாகவே விடுதியை விட்டு வெளியே வந்து தொழில் செய்யவும் அவர்களுக்கு வேண்டிய உதவிகளையும் செய் கிறார்கள். அதைப் போல நம் நாட்டில் உள்ள சகல பிச்சைக்காரர்களுக்கும் உதவி செய்வதற்காக நம் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** : இந்த அடிப்படையில்தான் அரசாங்கம் கவனம் செலுத்திவருகிறது. கனம் அங்கத்தினருக்கு ஈஜிப்த் தேசத்தில் பிச்சைக்காரர்களுக்கு அளிக்கப்படுகிற வசதிகள் என்ன, அப் பிரச்னையை தீர்க்க அவர்கள் கையாளுகின்ற திட்டம் என்ன என்பது தெரிந் தால் அதை எனக்கு அனுப்பினால் நானும் பரிசீலிக்கிறேன்.

**SRI N. MARUDACHALAM** : பிச்சைக்கார விடுதிகள் ஒவ்வொன்றிலும் எத்தனை பேர் அனுமதிக்கப்படுகிறார்கள் என்று அறிய விரும்புகின்றேன்.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** : இப்போது சென்னைக்கு அருகில் உள்ள மேலைப்பாக்கம் விடுதியில் 500 பேர்கள் அனுமதிக்கப்பட் டிருக்கிறார்கள். இன்னும் சென்னையில் இருக்கக் கூடிய இதர விடுதி களில் ஒவ்வொன்றிலும் 300 பேர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள்.

**SRI S. LAZAR** : திருச்சி நகரத்தில் நகர சபையின் சார்பாக ஆரம்பிக் கப்பட்ட விடுதில் பிச்சைக்காரர்கள் வந்து தங்க மறுக்கிறார்கள். அத னால் விடுதி சரிவர நடைபெறவில்லை. அதற்கு அங்குள்ள நிபுணர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் பிச்சை எடுக்கக் கூடாது என்று அரசாங் கம் ஒரு சட்டம் இயற்றுமானால் நகரங்களில் உள்ள பிச்சைக்காரர்களை எல்லாம் பிடித்துவந்து விடுதியில் வசிக்கச் செய்துவிடலாம் என்கிறார்கள். இது சம்பந்தமாக சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** : இப்போது இருக்கும் சட்டத்தை அது சம்பந்தமாக திருத்தி அமைப்பது பற்றிய யோசனை அரசாங்கத்துக்கு இருக்கிறது. குறிப்பாக மேற்கொண்டு என்ன செய்வது என்ற திட்டம் இன்னும் தயாராக வில்லை.



10th July 1957]

**SRI A. GOVINDASAMY** : நமது நாட்டின் பிரதம மந்திரி ஸ்ரீ நேருஜி அவர்கள் மதுரைக்கு வந்த சமயத்தில் பிச்சைக்காரர்களை எல்லாம் அவர் கண்ணில் படாமல் இருக்க பிடித்துக் கொண்டு போய் நகருக்கு வெளியே விட்டார்கள். பிச்சைக்காரர்களைப் பற்றி நேருஜிக்குத் தெரியவேண்டாம் என்பது அரசாங்கத்தின் கருத்தா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** : எப்போது பிரதம மந்திரி வந்தார்கள் ? மதுரைக்கு விஜயம் செய்தார்கள் என்பது ஒன்றும் விவரம் இல்லாமல் இந்த உப கேள்வியைக் கேட்டால் நான் பதில் சொல்வதற்கு இல்லை.

**SRI R. KRISHNASAMI NAIDU** : பிச்சை எடுக்கும் தொழில் சிரமம் இல்லாததாக இருப்பதாக எண்ணி பெரியவர்களும், சிறியவர்களும் இதில் ஈடுபடுகிறார்கள். சிறுவர்கள் வேண்டுமென்றே ஈடுபடுத்தப்படுகிறார்கள். அவர்களைப் பிடிக்கப்போகும் லாரியைக் கண்டால் தப்பி விடுகிறார்கள். ஆகவே பிச்சைக்காரர்களை ஒழிக்கும் பிரச்னை வெற்றிகரமாக வேண்டு மென்றால் பொதுமக்களும் அரசாங்கத்துடன் ஒத்துழைக்கவேண்டும், பொது மக்களின் ஒத்துழைப்பைக் கோரி அரசாங்கம் துண்டுப் பிரசுரங்கள், பிரசாரம் முதலியவற்றின் மூலம் பொது மக்களின் கவனத்தைப் திருப்ப ஏதேனும் முயற்சி எடுத்துக் கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** : பிச்சைக்காரர்களில் சிலர் அந்த வாழ்க்கையே சிறந்த வாழ்க்கை என்று கருதுவது உண்டு. பிச்சைக் காரர்களுக்கு உதவுவதே சிறந்ததர்மம் என்று கருதுவாரும் உண்டு. இதனால் எல்லாம் எந்த வகையில் இந்தப் பிரச்சனைக்கு ஒரு திட்டம் வகுத்து நிறைவேற்ற முடியும் என்பதை ஆழ்ந்து பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. திடீரென்று ஒரு உத்திரவு போட்டு, பிரசாரம் செய்து நிறைவேற்றுவது என்பது சரியல்ல என்று கருதப்படுகிறது.

**SRI K. ANBAZHAGAN** : தலைவர் அவர்களே, பிச்சைக்காரர்கள் சாதா ரணமாகப் பொதுமக்கள் கூடுகிற இடங்களில் எல்லாம் வந்து நின்றுகொண்டு அவர்கள் கொடுக்கிற காலணா, அரையணா அல்லது சில நையாபைசா இவற்றின் மூலமாகவே வாழ்க்கை நடத்துகிறார்கள். இவர்களைத் தடுப்பது என்பதும் முடியாத காரியமாக இருக்கிறது. ஆகவே இதைத் தவிர்ப்பதற்கு ...ர்வழியாக இனி பிச்சைக்காரர்களுக்கு காலணா, அரையணா தர்மம் இப்படிப் ...ட்ட இடங்களில் எவரும் செய்யக்கூடாது. மீறி தர்மம் செய்பவர்கள் தண்டிக்கப்படுவார்கள் எனச் சட்டம் இயற்றப்படுமா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** : பிச்சைக்காரர்களுக்குத் ...ர்மம் செய்வதைவிட, பிச்சை எடுக்கக் கூடாது என்று தடைசெய்வதே ...கந்தது என்று அதில் கவனம் செலுத்தப்படுகிறது.

**SRI M. C. MUTHUKUMARASWAMI** : சென்னையில் இருக்கிற பிச்சைக் ...ார விடுதியில் உள்ளவர்கள் எல்லாம் பரம்பரைப் பிச்சைக்காரர்களா ? ...ல்லது சாதாரண பிச்சைக்காரர்களா ? எந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள் ...திகமாக இருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** : பிச்சைக்கார விடுதியில் ...ள்ளவர்களின் பூர்வோத்திரங்கள் என்னிடம் இல்லை.

**SRIMATHI P. K. R. LAKSHMIKANTHAM** : பிச்சைக்காரர்கள் பலர் ...ஷ்ட ரோகிகளாக இருக்கிறார்கள். குறிப்பாக குஷ்ட ரோகத்தினால் பாதிக்கப் ...ட்டுள்ள பிச்சைக்காரர்கள் அதிகமாக மதுரையில் இருக்கிறார்கள். பிளாட் ...ாரங்களில் அவர்கள் உட்கார்ந்து கொண்டு பிச்சை கேட்பதன் காரணமாக ...ந்த நோய் அதிகமாகப் பரவுகிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? ...ஷ்டரோகம் பரவாமல் இருப்பதற்கு அவர்களைத் தனி விடுதிகளுக்கு ...ப்புறப்படுத்த அரசாங்கம் யோசனை செய்யுமா என்று கேட்கிறேன்.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** : அது உண்மை தான். ...ரசாங்கம் அதில் பிரத்தியேக கவனம் செலுத்தி வருகிறது.

[10th July 1957

**Sri V. K. KOTHANDARAMAN** : நகரங்களில் குஷ்டரோகப் பிச்சைக்காரர்கள் இருப்பதன் காரணமாக நகர மக்களுக்கு அவ்வியாதி பரவுகிறது என்பதற்காக அவர்களை இப்போது பிச்சைக்கார விடுதிகளில் தனியாகக் கொண்டு போய்ச் சேர்க்கிறார்கள். அதை வரவேற்கிறேன். ஆனால் பிச்சைக்காரர் அல்லாத மற்றவர்களுக்கு இந்தக் குஷ்டரோக நோய் பரவாமல் இருப்பதற்கு வீடுகளில் வசதியுள்ள குஷ்டரோகிகளின் விஷயத்தில் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : இப்போது கேள்வி பிச்சைக்காரர்களைப் பற்றியது. குஷ்டரோகத்தைப் பற்றி அல்ல. ஆனாலும் ஒன்று சொல்லவிரும்புகிறேன். குஷ்டரோகம் கூட எப்போதும் தொத்து வியாதி என்று கருதுவது கூடாது.

* 80. *Q.*—Sri K. RAMACHANDRAN (on behalf of Sri M. Jagannathan) : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the expenditure incurred on Government beggar homes in Madras City in 1956 ; and

(*b*) the number housed there in 1956?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : (*a*) Rs. 1,28,528.

(*b*) Approximately 500 at a time.

**Sri K. RAMACHANDRAN** : பிச்சைக்காரர்கள் சம்பந்தமாக எவ்வளவோ நடவடிக்கை எடுத்திருப்பதாக அரசாங்கம் சொல்லிக்கொண்டபோதிலும் கூட பிச்சைக்காரர்கள் அதிகமாகத்தான் இருக்கிறார்கள் என்பது இப்போது தெரிந்திருக்கிறது. அதனால் செலவும் அதிகமாகி வேலையும் அதிகமாகிறது. சிறுசிறு வீடுகளில் இவர்களை வைப்பதைவிட வைகைத் திட்டம் போன்ற பெரிய திட்டங்களில் இவர்களை ஈடுபடுத்த ஒரு ஓவர் ஆல் ரவுண்டிங் செய்து இவர்களைத் திரட்டி வேலை கொடுக்க முன் வருவார்களா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : பிச்சைக்காரர்கள் தொகை அதிகம் என்று சொல்வதற்கு இல்லை. ஆனால் தொல்லை குறைந்திருக்கிறது என்றாலும் இங்கிருந்து பிச்சைக்காரர்களை வேறு இடத்திற்கு அப்புறப்படுத்தினால் இந்தக் காலியிடங்களுக்கு வெளியூர்களில் இருந்து வந்துவிடுகிறார்கள். இப்போது ஏழாயிரம் பிச்சைக்காரர்கள் சென்னையில் இருப்பதாகத் தெரிகிறது. இன்னும் வேறு இடங்களில் இருக்கக்கூடியவர்களையும் ஒன்று சேர்த்து ஒரேயிடத்தில் தொழில் கொடுப்பது சாத்தியமாகாவிட்டாலும் அங்கங்கே அவர்களை சமுதாய நலத்திட்டம், தேசீய விஸ்தரிப்புத் திட்டம், கால்வாய் வெட்டு முதலியவைகளில் பயன்படுத்திக் கொண்டு வருகிறோம்.

**Sri M. KANDASAMI PADAYACHI** : கிராமப்புறங்களிலும் இப்போது அதிகமாக பிச்சைக்காரர்கள் இருப்பதன் காரணமாக மேஜர் பஞ்சாயத்திலும் இதுபோல பிச்சைக்காரர்களுக்கு உதவி செய்வதற்காக ஒரு திட்டத்தை அரசாங்கம் வகுக்குமா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : மேஜர் பஞ்சாயத்தார் அதுமாதிரியாக ஒரு திட்டத்தைத் தயாரித்து அனுப்பினால் அதை அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

**Sri A. V. P. ASAITHAMBI** : பிச்சைக்காரர்களின் ஒழிப்புக்காக முன்னாள் சென்னை நகர மேயர் ஸ்ரீ வி. பாசுதேவ் ஒரு திட்டத்தைத் தயாரித்திருப்பது அமைச்சருக்குத் தெரியுமா ? அதைப் பரிசீலிக்க ஏற்பாடு செய்வார்களா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : ஸ்ரீ பாசுதேவ் திட்டத்தைப் பற்றிய தகவல் ஒன்றும் என்னிடம் இல்லை. ஆனால் சென்னை நகர சபை கார்ப்பரேஷன் ஒரு பிச்சைக்கார விடுதியை நடத்தி வருகிறார்கள் என்று முன்பே குறிப்பிட்டேன்.

10th July 1957]

SRI K. VINAYAKAM: It is admitted that the beggar problem is a serious one and that the number of beggars that are brought into the homes is tantalisingly negligible when compared to the huge number wandering in the streets. How does it happen in spite of the periodical round-ups of these beggars by the Police? And then, the same type of beggars that are rounded up are seen the next day at the bus-stops, temples and other places of congregation and worship. Will the Government issue strict orders to the Police authorities to round them up all, that they should not be seen once again in the streets and other places and that they should be kept in the beggar homes till their future is settled?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: If they are rounded up, they are kept in the beggar homes. So far as these homes are concerned, they are already full to their capacity. If there are the same types of beggars seen every day at bus-stops and temples, that means there is a large number of the same type of beggars wandering about in the City.

SRI S. PAKKIRISAMI PILLAI: நம் தமிழ் நாட்டில் பிச்சைக்காரர்கள் நிறைய இருக்கிறார்கள். மற்ற மாகாணங்களுக்கும்கூட இங்கு இருந்து பிச்சைக்காரர்கள் சென்று பிச்சை எடுக்கக் கூடிய நிலைமை இருக்கிறது என்பது தெரியும். ஆகவே பிச்சைக்காரர்களை இல்லாமல் செய்வதற்கு அரசாங்கத்தார் கொண்டிருக்கும்படியான திட்டம் என்ன? அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு எவ்வளவு காலம் ஆகும் என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: திட்டங்களைப்பற்றி முன்பே சொன்னேன். சென்னை நகரசபையும், சர்க்காரும் சில விடுதிகளை நடத்தி வருகிறார்கள். மற்றபடி பதின்மூன்று முனிஸிபாலிடிகளில் கேர் ஹோம், வொர்க் ஹவுஸ் முதலியன வைக்கப்பட்டிருக்கிறது. இப்போதைக்கு இதை ஓரளவு நடத்தினாலும் இன்னும் புதிய புதிய விடுதிகள் தோன்றலாம். ஆனால் குறிப்பாக எத்தனை வருஷங்களில் பிச்சைக்காரர்களை இல்லாமல் செய்துவிட முடியும் என்று சொல்வதற்கு இல்லை. எதிர்காலத்தில் பிச்சைக்காரர்களுடைய தொகை அதிகரிக்குமா, குறைந்து போகுமா என்பதும் நமக்குத் தெரியாது. பலவிதமான அபிவிருத்தித் திட்டங்களினால் உண்டாகும் பயன் பிச்சைக்காரர்கள் இல்லாமலேயே செய்யக்கூடும் என எதிர்பார்க்க வேண்டும்.

SRI M. C. MUTHUKUMARASWAMI: ஸார், பிச்சை எடுப்பது, பிச்சை ஏற்பது என்று இரண்டைப்பற்றியும் அதாவது "ஐயமிட்டு உண்", "ஏற்பது இகழ்ச்சி" என்று ஔவையாரும் கூறியிருக்கிறார்கள். இதில் அமைச்சர் அவர்கள் எதை ஒப்புக்கொள்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இரண்டையும் ஒப்புக்கொள்ளவேண்டியதுதான்.

SRI M. P. SUBRAMANIAM: தலைவர் அவர்களே, இப்போது 13 முனிஸிபாலிட்டிகளில் பிச்சைக்கார விடுதிகள் நடத்தப்படுவதாகச் சொன்னார்கள். இந்த ஆண்டில் திறக்கப்படும் பிச்சைக்கார விடுதிகளை, புண்ணியஸ்தலங்களாக இருக்கும் இடங்களில் அதிகமாக இந்த பிச்சைக்காரர்களின் தொல்லைகள் இருக்கிறதினால் அந்த மாதிரி இடங்களில் ஸ்தாபிக்க அரசாங்கம் கவனம் செலுத்துமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கவர்ன்மென்ட் ஸாங்க்ஷன் செய்திருக்கிறதே தவிர இதுவரை 13 முனிஸிபாலிட்டிகளிலும் [illegible]

விடுதிகள் ஸ்தாபிக்கவில்லை. இருந்தாலும் கூடுதல் கூட்டம் இருக்கின்ற இடங்களில்தான் பிச்சைக்காரர்கள் அதிகம் இருப்பார்களாதலால் அங்கு அரசாங்கம் விசேஷ கவனம் செலுத்தி வருகிறது.

**Sri K. SATTANATHA KARAYALAR** : ஸார், நகரத்தில் பல இடங்களில் இறந்து போன குழந்தைகளின் சடலங்களை வைத்துக்கொண்டு மயான செலவுக்காக பிச்சைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதைத் தடை செய்து மயான செலவை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள முன்வருமா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : இம்மாதிரி அதிகமாக இருக்கிறதாக எனக்குத் தெரியாது. இதற்குத் தனிக்கேள்வி போட்டால் இந்த விபரத்தை அறிவிக்கிறேன்.

**Sri K. B. S. MANI** : ஸார், இந்தமாதிரி பிச்சை எடுப்பதில் பலவிதமான தராதரம் இருக்கிறது. அதாவது சாமியார் வேஷத்தில் இருக்கும் எல்லா பேர்களும் பிச்சைக்காரர்களாக கருதப்படுகிறது. இது தவிர நொண்டி, முடம் இவர்களும் பிச்சைக்காரர்களாக கருதப்படுகிறது. இதில் எந்தெந்த தரத்திலுள்ளவர்களுக்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : பிச்சைக்காரர்களில் பல தரங்கள் உண்டு. அதிகாரபிச்சை, பெரியபிச்சை என்றெல்லாம் இருக்கிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் எந்தெந்த தரத்தை எடுக்கவேண்டுமென்று சொன்னால் அதை அரசாங்கம் பரிசீலனை செய்யலாம்.

**Sri P. S. CHINNADURAI** : சபாநாயகர் அவர்களே, நமது அண்டை நாடான பர்மாவுக்கு சென்று விட்டு திரும்பிய ஈ. வே. ரா., ம. பொ. சி. போன்ற பெரியார்கள் பர்மாவில் பிச்சைக்காரர்கள் பிரச்னையை நல்ல முறையில் சமாளித்திருப்பதாக அறிவித்திருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அது உண்மையானால் நம்முடைய நாட்டிலும் அந்த முறையை கையாண்டு இந்தப் பிரச்னையை சமாளிப்பதற்காக அதை அறிந்துகொள்வதற்கு என்று ஒரு தனி அதிகாரியை அங்கு அனுப்புவதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : இந்தப் பெரியார்கள் என்ன கூறியிருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது. கனம் அங்கத்தினர் அவர்கள் இந்த விபரங்களைச் சேகரித்துக் கொடுத்தால் இதற்கென்று தனி அதிகாரியை அனுப்ப வேண்டிய அவசியம் இல்லாது அதைப் பற்றி பரிசீலனை செய்யலாம்.

**Sri K. R. NALLASIVAM** : கட்டுப்பாடின்றி சுயேச்சையாக திரிந்து கொண்டிருக்கின்ற பிச்சைக்காரர்களை அவர்களுக்கு என்று ஏற்படுத்தப் பட்டிருக்கும் விடுதிகளில் சேர்த்து வைப்பது என்பது, சிறைகளில் கைதிகளை வைத்திருப்பது மாதிரியா அல்லது அங்கு அவர்கள் வாழ்வதற்குள்ள முறைகளில் கவர்ச்சிகரமான ஏற்பாடுகள் ஏதாவது இருக்கிறதா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : சென்னையிலிருந்து 12, 15 மைல்களுக்குள் இருக்கும் மேல்பாக்கம் என்ற இடத்தில் இந்த விடுதி இருக்கிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் அதைப் பார்க்கவேண்டும். வேண்டுமென்றால் அங்கு போவதற்கு ஏற்பாடுகள் செய்துகொடுக்கலாம். நான் இம்மாதம் 14-ம் தேதி போகிறேன். வேண்டுமானால் கனம் அங்கத்தினர் அவர்களும் என்கூட வந்து பார்வையிடலாம். அப்போது அங்கு எவ்வளவு திருப்திகரமாக நடக்கிறது என்பதை அறிந்து கொள்ளலாம்.

**Sri S. M. ANNAMALAI** : சட்டமன்றத் தலைவர் அவர்களே, சமுதாய நல அபிவிருத்தித் திட்டங்களென்றும் தேசிய அபிவிருத்தித் திட்டங்களென்றும் நடக்கிற இக்காலத்தில் பிச்சைக்காரர்கள் பெருகிக் கொண்டிருக்கக் காரணம் என்ன ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : இரண்டிற்கும் சம்பந்தம் இல்லை.

10th July 1957]

**Sri A. V. P. ASAITHAMBI** : எல்லாருக்கும் உணவு உத்தரவாதம் அளிக்கப்படுகிற கடமை அரசாங்கத்திற்கு உண்டு. ஆகவே பிச்சைக்காரர்களுடைய நிவாரணத்திற்கும் அரசாங்கம் உத்தரவாதம் அளிக்குமா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : அதற்கு வேண்டித்தான் சர்க்கார் வேலை செய்து வருகிறது.

**Sri K. VINAYAKAM** : Sir, instead of trying to tackle this problem at the wrong end, are Government aware of the root causes why a person turns out to be a beggar? As much useful purpose will not be achieved by opening beggar homes and doling out something for them, instead of trying to solve that problem that way, will the Government think of the possibility of eradicating the beggar problem by increasing the economic status of the people?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : As I have said just now in Tamil, merely tracing the root causes will not solve the problem altogether. There is a tendency on the part of some people to prefer this ' profession ' of begging, even though they may have other facilities for earning a decent living.

**Sri K. ANBAZHAGAN** : தலைவர் அவர்களே, பிச்சைக்காரர்களுடைய பிரச்னை இன்றும் உடனடியாகத் தீர்க்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் போதிய நிதி வசதியில்லை என்பதே. ஆதலால் அதற்காக அனாதை ரட்சகனாகிய ஆண்டவனுடைய செல்வ நிதியிலிருந்தோ அல்லது வருமானத்திலிருந்தோ ஒரு குறிப்பிட்ட அளவு சதவிகிதத் தொகையை ஒதுக்குவதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிவிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : பிச்சைக்காரர்களுடைய தொல்லைகளைத் தீர்ப்பதற்குள்ள எல்லா வழிகளிலும் அரசாங்கம் முயற்சித்து வருகிறது.

**Srimathi P. K. R. LAKSHMIKANTHAM** : தலைவர் அவர்களே, இன்று அதிகமான பேர்கள் பிச்சை எடுக்க விரும்புகிறார்கள். அவர்களுக்கென்று தனியாக விடுதிகள் ஏற்படுத்தினாலும் அங்கு பிச்சைக்காரர்கள் போய் வேலை செய்யாமல் சோம்பேறித்தனத்தால் வெளியே வந்து விடுகிறார்கள். இதை நான் தவறாக சொல்லவில்லை. மதுரையில் பிச்சைக்காரர்களை எல்லாம் ஒன்று சேர்த்து வைக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு அங்கு ஒரு விடுதி ஏற்படுத்தப்பட்டது. ஆனால் அங்கு சரியான விதத்தில் ஒரு பிச்சைக்காரர்களும் இருப்பதில்லை. இரண்டொரு நாட்கள் மட்டும் வந்து இருந்து விட்டுப் போய் விடுகிறார்கள். காரணம் பிச்சை வாங்கி சாப்பிட்டுவிட்டு சும்மா இருப்பது என்ற எளிய வாழ்க்கையேதான் அவர்களுக்கு இனிக்கிறது. ஆகையால் இந்த மாதிரி விடுதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கிற இடங்களில் பிச்சைக்காரர்கள் பிச்சை எடுக்கக்கூடாது என்று சர்க்கார் தடை செய்ய வேண்டும். அவ்விதம் செய்வது சர்க்காருக்கு சாத்தியமா என்று அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : பிச்சை எடுப்பதுதான் தொழில் என்று சிலர் நினைக்கின்றனர். மதுரையில் மாத்திரமல்ல, டெல்லியில் கன்னாட் ஸர்க்கஸ் என்ற இடத்தில்கூட இம்மாதிரி பிச்சைக்காரர்களை சேர்த்து வைக்க முயற்சித்தபோது அங்கேயும் சரியானபடி தொழில் செய்வதற்கு போகத்தயாராக இல்லை என்று சொல்லிவிட்டதாக அறிந்தேன். ஆகவே அவர்களை எந்த விதத்தில் அங்கு சேர்த்து வைப்பது என்றும், அதற்காக எந்த வகையில் சட்டங்களை மாற்றலாம் என்றும் சர்க்கார் ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

[10th July 1957

**SRI M. KARUNANITHI** : தலைவர் அவர்களே, சென்னை அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடம் பிச்சை கேட்பதாக சொல்லப்படுகிறதே, அவ்விதம் பிச்சை கேட்பது நிறுத்தப்படுமா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** : நான் முன்பே சொன்ன படி பிச்சை கேட்பதில் பலதரம் உண்டு.

*Smallpox.*

* 81 Q.—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether there were large number of deaths due to small-pox in Coimbatore and Salem districts during 1957; and

(b) if so, the preventive measures taken by the Government?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) Yes, Sir. There were 163 deaths in Salem district and 153 in Coimbatore district for the period from 5th January to 20th April 1957.

(b) Mass vaccination and revaccination by appointment of additional staff, disinfection of infected houses and materials and isolation and treatment of cases, wherever possible, and educative propaganda on public health, were the preventive measures taken by the Government.

**SRI K. R. NALLASIVAM** : இந்த அம்மை வகையறா வியாதிகளைத் தீர்ப்பதற்கு ஆங்கில வைத்திய முறைப்படி ஒன்றும் செய்ய முடியவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால் சித்த வைத்திய முறைப்படி அதைத் தீர்க்கலாம் என்று சொல்லப்படுகிறது. ஆகவே அந்த முறையை கையாண்டு இந்தமாதிரி வியாதிகளைத் தடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

**THE HON SRI M. A. MANICKAVELU** : சித்த வைத்தியத்திற்கு ஊக்கம் அளித்து அதைப் பரிசீலனை செய்யவேண்டுமென்று பொதுமக்கள் கேட்கிறார்கள். அதற்கு வேண்டிய வசதிகள் ஏற்படுத்தினால் இந்த விஷயம் கவனிக்கப்படும்.

SRI K. SATTANATHA KARAYALAR : இந்த மாவட்டங்களில் பெரும் அளவு வைசூரி நோய் பாதிக்கப்படக் காரணமென்ன ?

**THE HON. SRI M. A. MANICKAVELU** : க்ஷய நோயினால் தான் அதிகம்பேர்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

**SRI M. S. SELVARAJAN** : அம்மை வியாதிக்கு அடிப்படைக் காரணமென்ன ? கிராமங்களில் இயல்பாகவே வேப்பிலை, வேப்பிலைக் கஞ்சி முதலியவற்றால் இந்த வியாதியை நீக்குவது என்று நடைமுறையில் இருந்தது. ஆராய்ச்சியின் முடிவுப்படி அதனால் பலன் உண்டா? பலன் இல்லையா ?

**THE HON. SRI M. A. MANICKAVELU** : அதைப்பற்றி யாரும் "ஸயன்ட்டிபிக்" முறையில் ஆராய்ச்சி செய்யவில்லை.

**SRI A. GOVINDASAMY** : அம்மை வரக்காரணம், மாரியம்மனின் சாபம் என்று மக்கள் சொல்கிறார்கள். இதில் அரசாங்கம் நம்பிக்கை வைக்கிறதா ?

**THE HON. SRI M. A. MANICKAVELU** : இது விஷயமாகப் பலபேர்கள் பலவிதமாக நம்பிக்கை வைக்கிறார்கள். கனம் அங்கத்தினர் புதிதாக ஒரு கொள்கையைக் கொண்டிருக்கிறார். அவர் அபிப்பிராயம் என்னவோ எனக்குத் தெரியாது.

10th July 1957]

SRI K. VINAYAKAM: Is it a fact, Sir, that these preventive measures were pushed to the area long after the disease had created havoc and taken a heavy toll of life in these districts?

THE HON. SRI M. A. MANICKAVELU: No, Sir. As soon as information was received, Government took steps but it takes time for the relief operations to take mon ontum. We were sufficiently early in those area to deal with the situation.

SRI S. PAKKIRISAMI PILLAI: புளியமரங்கள் எந்த இடங்களில் நிறைய வளர்கிறதோ அந்த இடங்களில் வைசூரி நோய் உண்டாவதில்லை என்று ஒரு நம்பிக்கை நம்மிடம் இருக்கிற காரணத்தினால், அதுவே அநேக அறிஞர்களுடைய அபிப்பிராயம். இது எதனால் என்பதை நான் தெரிந்து கொண்டிருக்கிறேன். அதை ஆராய்ச்சி செய்து அது உண்மையானால் எல்லா இடங்களிலும் நிறைய புளிய மரங்கள் நடுவதற்கு மந்திரியவர்கள் திட்டம் போடுவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: எனக்குத் தெரிந்த வரையிலே வேப்ப மரங்கள் இருக்கிற இடங்களில் இந் நோய் அணுகுகிறதில்லை என்று சொல்கிறார்கள்.. ஆனால் புளியமரங்கள் இருக்கிற இடத்தில் பிசாசு தான் வரும் என்று சொல்லப்படுகிறது.

SRI P. G. KARUTHIRUMAN: எங்கள் ஊராகிய புளியம்பட்டி என்ற ஊரில், அதைச்சுற்றி நிறைய புளிய மரங்கள் இருக்கின்றன. இருந்தும்கூட அங்கு வைசூரி வருகின்றது. ஆனால் அங்கு பிசாசு கிடையாது.

SRI K. ANBAZHAGAN: " ஸ்மால் பாக்ஸ் " என்ற பெரிய அம்மை தமிழ் நாட்டில் பல காலமாக இருந்து வந்தபோதிலும் இதை நோய் என்று கருதாமல் தெய்வத்தின் சாபம் இது என்று நினைக்கும் மடமை இருக்கிறது. இந்த மடமையை நீக்கவும் இந்த நோயை வராமல் தடுப்பதற்கும், வந்த பிறகு அதை குணப்படுத்தவும் மருந்துகள் ஹோமியோபதியில் இருப்பதாலும் அம்மருந்துகளின் விலையும் !குறைவாய் இருப்பதாலும் இந்த மருந்துகளை நாடு முற்றும் மக்களுக்குக் கிடைக்குமாறு பரவச் செய்ய அரசாங்கம் முற்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: நம் நாட்டில் இந்த விஷயத்தைப் பொறுத்தவரையில் மாத்திரம் மடமை இல்லை ; அரசியலிலும்கூட மடமை இருக்கிறது.

SRI P. G. MANICKAM: கோயம்புத்தூர் ஜில்லாவில் ப்ளூ ஜுரம் வந்த சமயத்தில் வைசூரி நோயும் பரவி அநேக கிராம மக்கள் மிகவும் கஷ்டப்பட்டார்கள். அவர்களுக்கு, அதிகாரிகள் முன் எச்சரிக்கை கொடுக்காததால் அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டார்கள். ஆகவே, இனிமேலாவது, கிராமங்களில் தொத்து நோய் பரவும்போது அதிகாரிகள் வேண்டிய முன்னெச்சரிக்கை விடுக்க அரசாங்கம் அந்த அதிகாரிகளுக்கு வேண்டிய எச்சரிக்கை விடுக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: அதைப்பற்றி புதிதாக ஒன்றும் செய்யவேண்டியதில்லை. ஏற்கனவே, இம்மாதிரி எச்சரிக்கை செய்ய எல்லா நடவடிக்கைகளும் எடுத்துக்கொண்டுதான் வரப்படுகிறது.

SRI A. GOVINDASAMY: திரு அன்பழகன் அவர்கள் கேள்விக்கு மந்திரி அவர்கள் நேரிடையாகப் பதில் சொல்லாமல் அரசியலிலும் மடமை இருக்கிறது என்று சொன்னார்கள். அது சரியா என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER: அது அவரது இஷ்டம்.

[10th July 1957

*Desilting of tanks and channels.*

* 82 *Q.*—SRI A. R. SUBBIAH MUDALIAR: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government are having any proposal to desilt the tanks and channels in Tirunelveli district; and

(*b*) if so, when they are going to commence the work and the details of the tanks, etc., covered by that scheme?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) In respect of tanks the answer is yes. The Executive Engineer, Public Works Department, Tirunelveli Division, is examining the cases of tanks which could be taken up under scheme known as Desiltating-*cum*-reclamation of irrigation tanks. In respect of channels, the answer is no.

(*b*) No specific proposal has so far been received from the Chief Engineer (Irrigation). But it has been reported that plans and estimates amounting to Rs. 4·15 lakhs have been prepared by the Executive Engineer, Public Works Department, Tirunelveli Division, and sent to the Superintending Engineer. The question of sanctioning the estimate will be taken up for consideration after the results of the pilot schemes now in progress in Chingleput district are known.

SRI A. R. SUBBIAH MUDALIAR: குளங்களில் சில்ட் ஏற்பட்டிருப்பதால் சர்க்கார் எப். டி. எல். யை உயர்த்த ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: டீஸில்ட்டிங்போது இது கவனிக்கப்படும்.

SRI K. SATTANATHA KARAYALAR: இந்தக் குளம் மராமத்து செய்யும் திட்டம் இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை என்று சொன்னார்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எந்த அளவு செய்வதாகத் திட்டம் வகுத்திருக்கிறார்கள், என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எந்த அளவு திட்டம் வகுத்திருக்கிறார்கள் என்பதைப் பற்றிய விவரங்கள் இல்லை. "பைலட் ஸ்கீம்" ஒன்று நடத்தப்பட்டு வருகிறது. அதன் முடிவைப் பார்த்து இத்திட்டம் எடுத்துக் கொள்ளப்படும் என்று சொன்னேன். கூடிய சீக்கிரத்தில் இது எடுத்துக்கொள்ளப்படும்.

SRI A. R. SUBBIAH MUDALIAR: குளங்களில் ஸில்ட் வர முக்கிய காரணம் அணைகளில் சப்ளைச் சானல்களிலும் போதிய மணல் வாரிகள் இல்லை என்பதுதான். இது சர்க்காரின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? இதைப் பரிசீலனை செய்து தேவையான இடங்களில் மணல் வாரிகளைக் கட்ட உத்தேசிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இத்தகைய எல்லா விஷயங்களும் மராமத்து இலாகாவின் பரிசீலனையில் இருக்கிறது.

SRI N. MARUDACHALAM: எந்தெந்த ஜில்லாக்களில் குளங்கள் மராமத்து செய்யப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அநேகமாக எல்லா ஜில்லாக்களிலும் நீர்ப்பாசன குளங்கள் மராமத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. கூடுதல் விவரம் வேண்டுமானால் தனிக் கேள்வி கேட்கவேண்டும்.

10th July 1957]

SRI M. S. SELVARAJAN : பெரும்பாலும் எல்லாக் குளங்களிலும் பாசி குத்தகைக்கு விடப்படுகிறது. எடுக்கும் மண்ணை எங்கே போடுவது என்ற எண்ணம்தான் குள மராமத்துக்குத் தாமதம் என்று காரணம் காட்டப்பட்டு வருகிறது. மண்ணையும் பாசியுடன் சேர்த்து வெகுதூரத்தில் வயல்களுக்கோ மற்ற இடங்களுக்கோ பட்டாதாரர்கள் கொண்டு போக வசதி இருக்கும். ஆகவே பட்டாதாரர்கள் இந்தப் பாசியை இலவசமாக எடுத்துக் கொண்டு போவது நியாயம் என்று அரசாங்கம் கருதுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவ்வாறு இலவசமாக எடுத்துக்கொண்டு போவது நியாயம் என்று நான் ஒப்புக்கொள்ளவில்லை. அதோடு அது காரிய சாத்தியமும் இல்லை.

SRI A. R. SUBBIAH MUDALIAR : அநேகமாக எல்லாக் குளங்களிலும் **old level** படி தண்ணீர் தேக்க முடியவில்லை என்பது தெரியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த டிபார்ட்மெண்ட் பிரத்தியேகமாக பரிசீலிக்கும்போது இதுவும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.

SRI M. P. SUBRAMANIAM : செங்கல்பட்டு மாவட்டத்தில் இந்த மாதிரி இவ்விதத்தில் ஒரு திட்டம் நடைபெற்று வருவதாகவும், அதன் முடிவைப் பொறுத்து மற்ற மாவட்டங்களில் அது எடுத்துக்கொள்ளப்படும் என்று சொன்னார்கள். செங்கல்பட்டு மாவட்டத்தில் இந்த மாதிரி செய்து வருகிறார்கள். அதன் முடிவு எந்த விதத்தில் மற்ற மாவட்டங்களுக்குப் பயன் படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தூர் எடுப்பது ஒரு புதிய திட்டம். இதுவரை மராமத்து இலாகா இதை எடுத்துக்கொள்ளவில்லை. இந்தத் திட்டம் எவ்வளவு வெற்றிகரமாக நடைபெறும் என்று பரிசீலனை செய்து பார்த்து அதற்கப்புறம் எடுத்துக்கொள்ளலாம். செலவு செய்தால் அது பயன்படத்தக்க வகையில் செலவு செய்யப்படவேண்டும். செங்கல்பட்டு ஜில்லாவில் இந்த தூர் எடுக்கும் திட்டம் இப்பொழுது நிறைவேற்றப்பட்டு வருகிறது. அதைப் பார்த்துக்கொண்டு மற்ற ஜில்லாக்களில் எடுத்துக் கொள்ளப்படும்.

SRI K. PERIANNAN : தலைவர் அவர்களே, ஏரி, குளம், வாய்க்கால் முதலியவைகள் எவ்வளவு காலத்திற்கு ஒரு தடவை மராமத்து செய்யப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அந்தந்த நீர்ப்பாசன வசதிகளைப் பொருத்தது எவ்வளவு காலத்திற்கு ஒரு முறை மராமத்து செய்வது என்பது. எப்போதைக்கெப்போது மராமத்து செய்யவேண்டுமோ அப்போதைக்கப்போது செய்யவேண்டும். வாய்க்கால்களைப் பொருத்தமட்டில் வருஷா வருஷம் மராமத்து செய்யவேண்டும். இதில் விவசாயிகளும் சேர்ந்து மாரமத்து செய்யவேண்டும்.

SRI T. T. DANIEL : Many of the tanks in our State are covered with silt and as such, they adversely affect the irrigation facilities available for the cultivation of fields. Small tanks were playing the role of small reservoirs when they were not silted up. The silt can be made use of in the manufacture of tiles and also as manure for our fields. Will the Government be pleased to clear the tanks and give away the silt that is cleared freely to the tile factory owners and to those who cultivate paddy fields?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : As the hon. Member is aware, special investigation units have been particularly examining these various irrigation sources in the Kanyakumari district. We expect their report very soon and as soon as it is received, all the aspects of the question will be considered.

SRI A. R. SUBBIAH MUDALIAR : சப்ளை செலவிலும் ஸில்ட் இளியரன்ஸ் செய்ய பைலட் ஸ்கீமில் அமுல் நடத்த சர்க்கார் யோசிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சப்ளை சேனல், ஏரி, குளங்கள் போல அல்ல. சிற்சில ஏரிகளில்தான் மண் சேர்கிறது. அதை அப்போதைக்கப்போது எடுத்துவிடவேண்டும். இந்தத் திட்டத்திலே சானல்களை எடுத்துக்கொள்ளவேண்டிய அவசியமில்லை என்று அரசாங்கம் கருதுகிறது.

SRI V. K. RAMASWAMY MUDALIAR : சில சில சிறு ஏரிகளை ஐந்து வருஷத்திற்கு ஒரு முறைதான் மராமத்து செய்யவேண்டுமென்று போர்ட் ஆர்டர் இருக்கிறது. ஒவ்வொரு ஜில்லாவிலும் இந்த மராமத்து வேலை ஐந்து வருஷத்திற்குப் பிற்பாடுதான் ஆரம்பிக்கப்படுகிறது. இவைகளில் சில ஏரி கரைகள் மணற் பாங்கானதாக இருப்பதால் இரண்டு வருஷத்திற்குள் பழுது பார்க்கவேண்டிய நிலைமை இருக்கிறது. அம்மாதிரியான மணற்பாங்கான ஏரிகளை ஐந்து வருஷம் முடிய வேண்டுமென்று எதிர் பார்க்காமல் கூடிய சீக்கிரம் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சர்க்கார் உத்திரவு பிறப்பிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : குறிப்பிட்ட நீர்ப்பாசனங்களைப்பற்றி ஐந்து வருஷத்திற்கு முன்பாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டால் அதை அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

SRI P. VEDAMANICKAM : தலைவர் அவர்களே, ஏரி குளங்களிலுள்ள மேல்புல், மீன்கள் பட்டாதார்களுக்குச் சொந்தமா அல்லது பட்டா இல்லாதவர்களுக்குப் பங்கு உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது வேறு விஷயம். இதைப்பற்றி கனம் அங்கத்தினர் ஒரு தனிக் கேள்வி கேட்கவேண்டும்.

SRI V. SUBBIAH : முன்பு இனும்தார்கள் ஜமீன்தார்கள் ஆட்சேபணையின்பேரில், குளங்கள் மராமத்துக்கு எஸ்டிமேட் தயாரித்திருந்தும் அவைகள் எடுத்துக்கொள்ளப்படவில்லை. அவைகளை இப்போது எடுத்துக்கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஜமீன் கிராமங்களில்கூட விசேஷ "புட் ப்ரொடக்ஷன்" இலாகா இருக்கிறது. அவர்கள் மராமத்து விஷயத்தைப்பற்றியும் கவனித்து நடவடிக்கை எடுத்துத்தான் வருகிறார்கள்.

### *Headquarters Hospital at Chingleput.*

* 83 Q.—SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state when the proposal to construct a new Headquarters Hospital at Chingleput will materialize?

THE HON. SRI M. A. MANICKAVELU : The proposal is under that active consideration of the Government.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : This has been under the active consideration of the Government for a long time, even though many have contributed large sums of money for the purpose. Will the Hon. the Minister tell us when exactly he will be in a position to complete the construction?

THE HON. SRI M. A. MANICKAVELU : The contribution so far made is about $4\frac{1}{2}$ lakhs of rupees and it is proposed to make use of about 4 lakhs of rupees from another item which is meant for improvement of hospitals. The original proposal was to spend

10th July 1957]

23·24 lakhs. Now it is proposed to reduce the estimate to 10 lakhs. Otherwise, we have to find about 15 lakhs of rupees more. Therefore, the question is being examined. There is no difficulty about providing the hospital at a cost of 10 lakhs. But there will be difficulty if it goes beyond 10 lakhs.

*Encroachments near temples.*

* 84 Q.—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami): Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to bring in a comprehensive legislation providing for the removal of encroachments near temples?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Yes, Sir.

MR. SPEAKER: Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—CALLING ATTENTION TO A MATTER OF URGENT PUBLIC IMPORTANCE UNDER RULE 40 OF THE ASSEMBLY RULES *RE* PREVALENCE OF FAMINE CONDITIONS IN TIRUNELVELI DISTRICT.

MR. SPEAKER: The hon. Member, Sri M. S. Selvarajan, has given notice of a motion under Rule 40 of the Assembly Rules. I hope the Hon. the Minister for Revenue is ready with the statement. 9-4 a.m

THE HON. SRI M. A. MANICKAVELU: Yes, Sir.

SRI M. S. SELVARAJAN: Sir, I wish to call the attention of the Hon. the Minister for Revenue to a matter of urgent public importance, viz.

"the prevalence of acute famine conditions in certain taluks of Tirunelveli district and relief measures undertaken by the Government".

கனம் சபாநாயகர் அவர்களே, இடிக்கும், மின்னலுக்கும், மழைக்கும் இடையிலே இருந்துகொண்டு, பஞ்சத்தைப்பற்றி நினைப்பது என்பது கஷ்டமாகத்தான் இருக்கும். இருந்தாலும் திருநெல்வேலி ஜில்லாவில் வறட்சிக்குட்பட்ட பல பகுதிகள் இருக்கின்றன. நல்ல செழிப்பாக இருந்த தாலூகாவில்கூட சில பகுதிகள் தொடர்ந்த வறட்சி காரணமாக பஞ்சத்திற்குட்பட்டிருக்கிறது. திருநெல்வேலி தாலூகா, அம்பா சமுத்திரத்தில் சில பகுதிகள், நாங்குநேரி, திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம் முதலிய இடங்களில் வறட்சி ஏற்பட்டிருக்கிறது. முன்பு திருநெல்வேலி ஜில்லாவில் கோவில்பட்டி தாலூகாதான் மிகவும் வறட்சியான பிரதேசம். இப்போது இது "கிரானிக் டிஸீஸ்" தொத்து நோய் போல தொடர்ந்து மற்ற பல தாலூகாக்களிலும் இந்த வறட்சி நீடிக்கிறது கடந்த பல வருஷங்களாக. இந்த மோஷன் சில மாதங்களுக்கு முன் கொடுத்தது. அதன் பின்னர் சில பகுதிகளில் நிலைமை சீர்பட்டு வருகிறது. நமது அரசாங்கம் ஓரளவுக்கு பஞ்ச நிவாரண வேலைகளைத் தொடங்கி இருக்கிறார்கள். அதிகாரிகள் பழைய கால "பேமின் கோடை" வைத்துக் கொண்டு, அதற்கு உட்பட்ட சில பகுதிகளைப் பஞ்சப் பிரதேசம் என்று பிரகடனப்படுத்த முடியாததால், அந்தப் பிரதேசங்களில் உடனடியாக பஞ்ச நிவாரண வேலைகளுக்கான நடவடிக்கை எடுக்க காலதாமதம் ஏற்படுகிறது. பழைய "பேமின் கோடை"

காலத்திற்குத் தகுந்தபடி மாறுதல் செய்யவேண்டும், அப்போதுதான் வறட்சியுள்ள பிரதேசங்களுக்கு நிவாரணம் ஏற்படும் என்று நான் சொல்ல விரும்புகிறேன். பரிசீலனை செய்து வெகு காலம் தாழ்த்தி பஞ்ச நிவாரண வேலையைத் தொடங்கும் போது இரண்டு அல்லது மூன்று மடங்கு செலவாகிறது.

**Mr. SPEAKER** : கனம் அங்கத்தினர் அவர்கள் இந்த விஷயத்தைப் பற்றி சுருக்கமாகப் பேசவேண்டும். பிரசங்கம் ஒன்றும் செய்யக்கூடாது.

**Sri M. S. SELVARAJAN** : குறிப்பாக இந்த மாதிரி பஞ்ச நிவாரண வேலைகளில் ரோடுகளுக்கு மெடல் போடுவதுதான் எடுத்துக் கொள்ளப்படுகிறது. ஆனால் மெடல் பரப்புவதிலே வாடிக்கையாக ஈடு பட்டவர்களுக்குத்தான் இந்த வேலை கிடைக்கிறது. ஆகவே ரோடுகள் போடுவது (formation) எங்கெங்கே சாத்தியமோ, அவைகளையெல்லாம் ஆரம்பித்து அங்கங்குள்ள ஏழை மக்களுக்கு வேலை கொடுத்து, இந்த மாதிரியான பஞ்ச நிவாரண வேலைகளை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். குடி தண்ணீர் சப்ளை விஷயமாய் ஏற்கனவே இருக்கும் கிணறுகள்தான் ஆழப்படுத்தப்படுகின்றன. புதிதாகக் கிணறுகள் தேவைப்படும் இடங்களும் இருக்கின்றன. அதை கவனிக்க வேண்டும். குறைந்தபட்சம் பஞ்சப் பகுதிகளிலாவது பூரணமாக எல்லா ஊர்களுக்கும் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கப்படவேண்டும்.

* **The Hon. Sri M. A. MANICKAVELU** : Sir, due to the failure of the north-east monsoon in fasli 1366 (1956–57), several parts of the Tirunelveli district were adversely affected. The conditions in the different parts were watched closely and the statistics of cultivation, outturn, etc., of crops were examined. The affected areas were also inspected by the Collector and a Member of the Board of Revenue. Though the failure of the monsoon had an adverse effect on the district as a whole, detailed examination of the position showed that only five firkas in the Nanguneri taluk, viz., Radhapuram, Tisayanvilai, Valliyoor, Palavoor and Vijayanarayanam were the worst affected, where the failure of crops had been extensive and large extends had been left waste. This area was, therefore, declared as drought-affected. Special dry remission was granted by the Government for fasli 1366 for the above five firks in addition to seasonal wet remissions.

The following areas also did not fare well :—

*Nanguneri taluk.*

Nanguneri firka.
Kalakkad firka.
Singikulam firka.
Moolakaripatti firka.

*Tiruchendur taluk.*

Sattankulam firka.
Udangudi firka.

Alwarthirunagiri firka. (Four southern villages only viz., Karungadal, Sri Venkateswarapuram, Kattarimangalam and Meerankulam.)

*Sankarankoil taluk.*

Vasudevanallur firka.
Sankarankoil firka.
Nelidanallur firka.

*Tirunelveli taluk.*

Madhavakurichi firka.
Gangaikondan firka.

The Government have sanctioned the following relief measures :—

(i) Grant of seasonal wet remissions, wherever necessary;

(ii) postponement of collection of cesses, land revenue additional surcharge and loan instalments to fasli 1367;

(iii) execution of low scale famine relief works;

(iv) grant of subsidy-*cum*-loan of Rs. 1,000 per well for deepening irrigation wells;

(v) execution of works under the Rural Water-supply (Comprehensive Scheme); and

(vi) opening of more fair price shops.

The total financial effects of the relief measures undertaken by the Government are as follows :—

| | RS. |
|---|---|
| Kist remission ... ... ... ... | 4,00,000 |
| Subsidy-*cum*-loan ... ... ... ... | 6,00,000 |
| Low scale famine relief works ... ... | 4,00,000 |
| Postponement of loan instalments ... .... | 3,92,000 |
| Total ... | 17,92,000 |

On a further report from the Collector, the Government have also extended the subsidy-*cum*-loan scheme for the deepening of wells to Pazhancottai and Tiruvengadam firkas of Sankarankoil taluk and Kadayanallur, Alangulam, and Kila-Pavoor firkas of Tenkasi taluk. There is no acute distress anywhere in the district.

Though the north-east monsoon in 1956 was a failure, the south-west monsoon has been active from the second half of May 1957. The recent rains which fell almost all over the district, though at varying intensity, have been of immense benefit to the agriculturists generally. The irrigation sources under Tambaraparni system received freshes and there was a remarkable rise in the water-level of the Upper Dam in Ambasamudram taluk from 26 feet to 74 feet on 10th June 1957. The Collector of Tirunelveli is keeping a close watch over the situation.

### III.—CLARIFICATION *RE* PRICE OF RAW COTTON MENTIONED IN THE BUDGET SPEECH OF THE HON. THE FINANCE MINISTER.

**MR. SPEAKER** : The other day the hon. Member Sri P. S. Chinnadurai wanted some clarification from the Hon. the Finance Minister in regard to certain terms which he styled as inaccuracies in the Budget speech. The Hon. the Finance Minister was not then in town. I said I would consult him and allow him to make a reply to-day. Is the Hon. the Finance Minister ready?

**THE HON. SRI C. SUBRAMANIAM** : என்னுடைய பட்ஜெட் உரையிலே " பருத்தி இப்பொழுது மணங்கு 100 ரூபாய் அளவில் விலை போகிறது " என்று குறிப்பிட்டிருந்தேன். இது சரியல்ல என்று கனம் அங்கத்தினர் ஸ்ரீ சின்னதுரை அவர்கள் சொன்னதாக அறிந்தேன். " பருத்தி " என்று குறிப்பிட்டதற்குப் பதிலாக " பஞ்சு " என்று குறிப்பிட்டிருக்கவேண்டும். இம்பீரியல் மணங்கு பிரகாரம் இந்த விலை சரியாக இருக்கும். இந்தத் தவறுக்கு வருந்துகிறேன்.

### IV.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1957-58—(*cont.*)

#### (1) DEMAND II—EXCISE DEPARTMENT.

**MR. SPEAKER** : இன்று இரண்டு மான்ய கோரிக்கைகள் விவாதிக்கப்படும். முதல் இரண்டு மணி நேரத்தில் **Excise Demand** விவாதிக்கப்படும். கனம் அமைச்சரவர்களுக்கு எவ்வளவு அவகாசம் வேண்டுமென அறிய விரும்புகிறேன்.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** : இப்பொழுது, இந்த மான்யக் கோரிக்கையை பிரேரேபிக்கும்போது ஐந்து நிமிஷங்களுக்குக் குறைவாய் இருந்தால் போதும். பின்னர் பதிலளிக்கும்போது 25 நிமிஷங்கள் வேண்டும்.

**MR. SPEAKER** : ஆதலால், கனம் மந்திரி அவர்கள் 11-30 மணிக்கு பதில் அளிப்பார்கள். இது அங்கத்தினர்களுக்கு சம்மதம் என்று நினைக்கிறேன்.

* **SRI M. SELVARAJ** : **On a point of information Sir,** 1957-ம் ஜூலை 8-ம் தேதியில் விற்பனை வரி இலாகா மான்ய கோரிக்கைமீது நடந்த விவாதத்தின்போது நான் பேசிய சில கருத்துக்களை **Indian Express** பத்திரிகையில் தவறுதலாகப் போட்டு இருக்கிறார்கள். இது அங்கத்தினர்களுடைய உரிமையை பறிப்பதாக இருக்கிறது. ஆகையால் இதை **Privilege Committee**-யின் பரிசீலனைக்கு அனுப்பவேண்டுமாய் கோருகிறேன்.

**MR. SPEAKER** : கனம் அங்கத்தினர் சபை முன்பு ஏதாவது உரிமை பிரச்னையைக் கொண்டுவர விரும்பினால் முதலில் என்னை என்னுடைய அறையில் சந்தித்து அதைக் கொண்டுவர அனுமதி கோரவேண்டும். இது சம்பந்தமான அங்கத்தினருடைய பிரேரணையை நான் இதுவரை பார்க்கவில்லை. ஆகையால் என்னுடைய அறைக்கு வந்து பிரேரணை விஷயமாக பேசும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்குப் பிறகு பதில் சொல்லுகிறேன்.

**SRI K. R. NALLASIVAM** : **On a point of order Sir,** எல்லா வெட்டுப் பிரேரணைகளையும் பிரேரேபிக்க சபாநாயகர் அனுமதி கொடுக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். பழைய சபையிலும் கூட அங்கத்தினர்கள் கொடுத்த எல்லா வெட்டுப் பிரேரணைகளும் பிரேரேபிக்கப்பட்டன ; ஆனால் ஒன்றின் மீதுதான் பேசுவார்கள். இப்பொழுது எல்லா வெட்டுப் பிரேரணைகளையும் பிரேரேபிக்க அனுமதிப்பதில்லை. இது உண்மையிலேயே அங்கத்தினர்கள் தங்களுடைய தொகுதிகளைப்பற்றிய கருத்துக்களை எடுத்துக் கூறவே இவ்விதம் வெட்டுப் பிரேரேரணைகளைக் கொடுக்கிறார்கள். இவை

10th July 1957] [Sri K. R. Nallasivam]

களைப் பிரேரேபிப்பதற்கு அனுமதிக்காவிட்டால் அது உண்மையில் அங்கத்தினர்களுடைய ஜனநாயக உரிமையைப் பறிப்பதாக இருக்கிறது என்றே நான் நம்புகிறேன். இது விஷயமாக சபாநாயகர் தீர்ப்புக் கூறவேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**Mr. SPEAKER :** இரண்டு நாட்களுக்கு முன்னமேயே சொன்னேன். சபையின் வழக்கம் என்னவென்றால் மசோதாக்கள் மீது கொண்டுவரப்படும் திருத்தங்கள் எல்லாம் தான் சபையில் பிரேரேபிக்கப்படவேண்டும். ஆனால் பட்ஜெட் விவாதத்தின்போது ஒரே ஒரு வெட்டுப் பிரேரணைதான் பிரேரேபிக்கப்படுவது வழக்கம். கனம் அங்கத்தினர் என்னுடைய அறைக்கு வந்தால் இது சம்பந்தமான அத்தாட்சியைக் காட்டுகிறேன்.

***The Hon. Sri M. BHAKTAVATSALAM :** சபாநாயகர் அவர்களே, இரண்டாவது மான்யமான கலால் இலாகா மான்யக் கோரிக்கைத் தீர்மானத்தை இச் சபைமுன் நான் சமர்ப்பிக்கிறேன். மேன்மைதங்கிய கவர்னர் அவர்கள் சிபார்சின்படி அரசாங்கத்திற்கு ரூபாய் 6,66,300-க்கு மேற்படாத மான்யம் " இரண்டாவது மான்ய கோரிக்கை—கலால் இலாகா " கோரிக்கையின் கீழ் அனுமதிக்கும்படி வேண்டுகிறேன்.

1955-ம் ஆண்டு ஜனவரி மாதம் 3-ஆம் தேதி வரை சில ஜில்லாக்களில் மட்டும் மதுவிலக்குத் திட்டத்தைக் கலால் இலாகா அமுல் நடத்தி வந்தது. மற்றும் சில ஜில்லாக்களில் போலீஸ் இலாகா அதன் மற்றைய பணிகளுடன் சேர்ந்த ஒரு பணியாக இதை அமுல் நடத்தி வந்தது. அந்த தேதிக்குப் பிறகு சென்னை ராஜ்யம் முழுவதிலும் மதுவிலக்கை அமுல் நடத்தும் பொறுப்பு போலீஸ் இலாகாவிடமே ஒப்படைக்கப்பட்டது. இதன் விளைவாக அமுல் நடத்தும் சிப்பந்திகளின் செலவு 1955 ஜனவரி மாதத்திலிருந்து " 29—போலீஸ் " என்ற தலைப்பின் கீழ் மாற்றப்பட்டது. மதுவிலக்கு சம்பந்தமாக எடுக்கப்பட்ட சீர்திருத்த வேலைகள் கூட்டுறவு சங்க ரெஜிஸ்தரார் அவர்களின் மேற்பார்வையிலேயே நடந்து வருகின்றன.

ரெவின்யூ போர்டின் கலால் இலாகா பிரிவு எல்லா ஜில்லாக்களிலும் மதுவிலக்கு சம்பந்தமான மற்ற வேலைகளைக் கவனித்து வருகிறது. மதுவிலக்குச் சட்ட நிர்வாகம் பற்றிய வேலைகள், ரெவின்யூ வருமானம் கவனிப்பு, சட்ட [சம்பந்தப்பட்ட பலதரப்பட்ட லைசென்சுகள் வழங்கப்படுவதை மேற்பார்வை பார்த்தல், முதலியன இவ்வேலைகளுக்குள் அடங்கும். ரெவின்யூ போர்டில் இந்த வேலைகளை கவனிக்க ஒரு கலால் இலாகா கமிஷனர், ஒரு கலால் இலாகா உதவி கமிஷனர், எட்டு கலால் சர்க்கிள் ஆபீசர்களும் அவர்களின் கீழ் உதவி இன்ஸ்பெக்டர்களும், கலால் இலாகா சப் இன்ஸ்பெக்டர்களும், கார்டுகளும், நிர்வாக ஊழியர்களும் வேலை பார்த்து வருகின்றனர். சாம்பிள்களைப் பரிசோதித்து அவைகளிலுள்ள மது அளவுகளை நிர்ணயிக்க ஒரு பரிசோதனைக்கூடமும் (லாபரேட்டரி) ரேவின்யூ போர்டினால் நடத்தப்பட்டு வருகிறது. இங்கு நான்கு பரிசோதனையாளர்கள் பணி செய்கின்றனர்.

இந்த மான்ய கோரிக்கையை ஏற்கும்படி சபை முன் சமர்ப்பிக்கிறேன்.

Mr. SPEAKER : Motion moved—

That the Government be granted a sum not exceeding Rs. 6,66,300 under Demand No. II—Excise Department.

I hear that all Opposition parties are agreed that Sri S. Pakkirisami Pillai should move his cut motion No. 37. So, I would request Sri Pakkirisami Pillai to move his cut motion.

**Sri S. PAKKIRISAMI PILLAI :** கனம் சபாநாயகர் அவர்களே. I move—

'That the allotment Rs. 6,66,300 under Demand II—Excise Department be reduced by Rs. 100.'

[10th July 1957

MR. SPEAKER : Cut motion moved—

That the allotment of Rs. 6,66,300 under Demand No. II—Excise Department—be reduced by Rs. 100.

The Demand and the cut motion are now before the House for discussion.

SRI S. PAKKIRISAMI PILLAI : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மான்யத்தில் மதுவிலக்குக்காக பெரும்பகுதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று நான் நினைக்கிறேன். இவ்வளவு அதிகமான தொகை அங்கே இருக்கவேண்டியது அவசியமில்லை. அது அனாவசியமான செலவு. போலீசாருடைய ஒத்துழைப்பை வைத்துக்கொண்டு மதுவிலக்கை அமுல் நடத்துகிறார்கள். இம் மதுவிலக்குச் சட்டத்தை அமுல் நடத்துவதற்கு போலீசாரின் ஒத்தாசை போதுமானதாக இருக்கிறது. ஆகவே, இந்தத் தொகை அவசியமில்லை. கலால் இலாகா அங்கு இருக்கவேண்டியது அவசியமில்லை.

அதோடுகூட நாம் பார்க்கவேண்டியது என்னவென்றால், நாம் அடிமைகளாக இருந்தபொழுது, அடிமை நாட்டிலே நம்மை மற்றவர்கள் ஆண்டு கொண்டிருந்தபொழுது கள் அல்லது சாராயம் குடித்துக்கொண்டிருந்த மக்களுக்கு சுதந்திர உணர்ச்சி இல்லாமல் வாளாயிருந்தார்கள். வேறு உணர்ச்சி அப்பொழுது ததும்பவில்லை. அதற்காக மதுவிலக்கு வேண்டும், கள் சாராயக் கடைகள் எடுக்கப்படவேண்டுமென்ற கருத்துக்களை வைத்துக் கொண்டு அந்தப் பிரசாரத்தில் ஈடுபட்டோம். அதற்குப் பிறகு நாம் சுதந்திரம் அடைந்தோம். அந்தப் பிரசாரத்தில் நானும் ஒரு பெரிய பங்கு எடுத்துக்கொண்டவன். என்னுடைய பகுதியிலே ஒரு பெரிய கூட்டத்திற்கு தலைவராக இருந்து இந்த மதுவிலக்குப் பிரசாரம் செய்வதிலும், கள், சாராயக் கடைகளை மறியல் செய்வதிலும் நான் ஈடுபட்டிருந்தது எல்லோருக்
10 a.m. கும் தெரியும். இருந்தாலும் இப்பொழுது என்ன பார்க்கிறோம் என்றால், மதுவிலக்கு வந்த பிற்பாடு, சாராயம் காய்ச்சுவது குடிசைத் தொழிலாக மாறிவிட்டது. பணம் எப்படியாவது சம்பாதித்துத் தீரவேண்டுமென்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது. ரூ. 20 கொடுத்தால் ஜெயிலுக்குப் போகத் தயாராக இருக்கிறார்கள் ஏழை மக்கள். அம்மாதிரி ஒரு ஏழ்மை நிலைமை நம் நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. போலீஸார் அடக்கு முறைக்கும் துன்புறுத்தலுக்கும் பயப்படாமல் கள்ளச் சாராயம் காய்ச்சுகிறார்கள் என்று சொன்னால், அவர்களுடைய ஏழ்மைத் தனத்தை அது காண்பிக்கிறது.

இப்பொழுது இருக்கும்படியான போலீஸ் கமிஷனர் ஸ்ரீ அருள் வந்த பிறகு நகரத்திலும், இன்னும் தமிழ் நாட்டில் வேறு சில பகுதிகளிலும் நடந்துகொண்டிருந்த "காட்டன் பெட்டிங்" ஒழிக்கப்பட்டுவிட்டது. அதே மாதிரி மதுவிலக்குச் சட்டத்தை கடுமையாக அமுலுக்குக் கொண்டுவருவதற்கும் கள்ளச் சாராயம் காய்ச்சுவதை நிறுத்துவதற்கும் முயற்சிக்கிறார்கள். அது முடியாத காரியம். தென்னை மரம், பனை மரம், இருக்கும் வரையில் அந்தக் கள் இறங்கித்தான் தீரும்; மக்களும் குடிக்கத்தான் செய்வார்கள். மறைவில் குடிப்பதை, திருட்டுத்தனமாக குடிப்பதை இதற்காக மக்கள் நிறுத்தப்போவதில்லை. குடிப்பவர்கள் மதியீனர்கள். மதியீனர்களைக் கொண்டுபோய் ஜெயிலில் அடைப்பதை நாம் என்னவென்று சொல்லுவது ? அது அக்கிரமம், கொடுங்கோன்மை என்பது என்னுடைய முடிவு. மதியீனர்களைக் கொண்டு ஜெயிலில் அடைப்பது சரியல்ல. மக்கள் எத்தனையோ மதியீனச் செய்கைகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள். யாருக்கும் எந்தவிதமான கெடுதலும் இல்லாமல் சிலர் மதியீனச் செய்கைகளில் ஈடுபடுகிறார்கள். அம்மாதிரி செய்பவர்களை நாம் ஒன்றும் செய்யவில்லை. ஏதோ குடித்துவிட்டு பேசாமல் பதுங்கிப் படுத்துக்கொண்டிருப்பவர்களைப் போலீஸார் துருவி ஆராய்ந்து தேடி கண்டுபிடித்து, அவர்களை "லாக்காப்பில்" அடைத்து கையில் விலங்குபோட்டு கோர்ட்டுக்குக் கொண்டுபோய் ஜெயிலில் அடைக்கிறார்கள். இம்மாதிரி ஆயிரக்கணக்கான ஏழைகளைத் தினந்தோறும் ஜெயிலுக்கு அனுப்புவதைப் பார்க்கிறோம். நமது நண்பர் கனம் கக்கன் அவர்கள் எந்த சமூகத்தினருக்காக வேலை

10th July 1957] [Sri S. Pakkirisami Pillai]

செய்கின்றார்களோ, அம்மாதிரி ஏழை பிற்பட்ட வகுப்பினர்தான் இவ்விதம் ஜெயிலில் வாடி வதங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கை நிலைமை என்ன ஆகும்? அது மாத்திரமல்ல.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM :** ஒரு குறிப்பிட்ட சமூகத்தைப்பற்றி அவ்வளவு குறைவாகச் சொல்லுவது சரியல்ல என்று நான் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். எனக்குத் தெரிந்த வரையில், என்னிடமுள்ள விவரங்களின்படி ஹரிஜனங்கள்தான் அதிகமாகக் குடிக்கிறார்கள் என்று சொல்லுவது சரியல்ல.

**Sri S. PAKKIRISAMI PILLAI :** ஹரிஜனங்களைப்பற்றி மாத்திரம் நான் சொல்லவில்லை. எந்தெந்த ஜாதியில் ஏழைகள் இருக்கிறார்களோ அவர்கள்தான் அம்மாதிரி நிறைய மதியீனச் செயல்களைச் செய்கிறார்கள். பிற்பட்ட வகுப்பினர்கள்தான் ஏழைகளாக இருக்கிறார்கள். ஆகவே, இந்த நிலையில் மதுவிலக்குச் சட்டத்தை எத்தனை காலத்திற்க்கு நீடித்துக் கொண்டு போவது, எத்தனை காலத்திற்கு ஏழைகளை வறுத்துவது, எத்தனை காலத்திற்கு மதுவிலக்கு சட்டத்தின் விளைவாக மக்கள் ஜெயிலில் வாடி வதங்கி துன்பப்படுவது, அவர்களுடைய வாழ்க்கை கெடவில்லையா என்பது தான் என்னுடைய கேள்வி. இப்பொழுது நமக்குத் தெரியும். இம்மாதிரி நிலைமையில்தான் இப்பொழுது சமீபம் வரையில் இருந்துகொண்டிருந்த மாஜி மந்திரி ஸ்ரீமதி அமிர்தகௌரி அவர்கள்கூட நமது நாட்டில் மதுவிலக்குச் சட்டம் வெற்றிபெறவில்லை, அதை எடுத்துவிடுவது மேல் என்று சொல்லி இருக்கிறார்கள். நேற்றைய தினம் ஒரிஸா தேசத்தில் பார்க்கிறோம். "பர்மிட்" பேரிலே தாராளமாக மது வழங்க ஏற்பாடு செய்யலாம் என்று ஒரு சட்டத்தை திருத்தம் செய்திருக்கிறார்கள். மஹாத்மாகூட மதுவிலக்குப் பிரப்சாரத்திற்காக, மதுவிலக்கை வெற்றிகரமாக நடத்துவதற்காக சட்டம் கூடாது, சட்டத்தைக் கொண்டுவந்து அதன் வழியாக மக்களைத் துன்புறுத்தக்கூடாது என்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே மதுவிலக்குச் சட்டம் இங்கே இருக்கவேண்டுமென்று சொன்னால், போலீசுக்கு அதிகமான அதிகாரத்தைக் கொடுத்து போலீஸ் ஆட்சியின்கீழ் காங்கிரஸ் ஆட்சி நடந்துகொண்டு போகும். காங்கிரஸ் ஆட்சி போலீஸ் ஆட்சியாக மாறிவிடும். ஆகவே, இம்மாதிரி மதுவிலக்குச் சட்டம் இருப்பதில் பிரயோஜனமில்லை, அப்படிச் சட்டம் இருந்தாலும்கூட, இப்பொழுது இருக்கும்படியான நிலைமையை மாற்றி, அதைத்தளர்த்திக் கொடுக்கும்படியான முறையிலே அரசாங்கம் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பிரேரணையை நான் பிரேரேபிக்கிறேன்.

**Mr. SPEAKER :** ஒவ்வொரு அங்கத்தினரும் 10 நிமிடம்தான் பேச வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**Sri S. LAZAR :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் மந்திரி அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில 10-08 a.m. வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். ஏதோ மதுவிலக்கு சம்பந்தமாக இன்னும் பூரணமாக நடைமுறையிலே அதை வெற்றிகரமாக அமுலுக்குக் கொண்டுவர முடியவில்லை. ஏராளமாக குற்றங்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன என்பதை குறிப்பிட்டுச் சொன்னார்கள். தலைவர் அவர்களே, இது போன்ற சமூக முன்னேற்றத்திற்காக சீர்திருத்தம் வரக்கூடிய நேரத்திலே இதுபோன்ற சிக்கல்கள், இது போன்ற கஷ்டங்கள் இருப்பது சர்வசாதாரணம். குறிப்பாக நாம் கவனிக்க வேண்டியது என்னவென்றால், இதுபோன்ற சட்டங்கள் அல்லது இதுபோன்ற ஒரு சமூக சீர்திருத்தம் கொண்டுவரக்கூடிய நேரத்திலே அது பெரும்பான்மையான மக்களுக்கு நல்லது கொடுக்கக்கூடிய ஒரு அம்சமாக அமைகின்றதா, அல்லது அதற்கு மாறாக கெடுதலை விளைவிக்கக்கூடிய ஒரு அம்சமாக அமைகின்றதா என்பதுதான். இதனால் அதிகப்படியான நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றனவா, அல்லது தீமைகள் விளைகின்றனவா என்றெல்லாம் ஆராய்ந்து பார்க்கும்பொழுது, உள்ளபடியே நாடு நகரமெல்லாம் சுற்றிவரக்கூடிய நாம், சுதந்திரமாக வாழ்கின்ற நாம் இது போன்ற குடியாண்மையை நிறுத்திவைக்கின்ற திட்டத்தினால் நாட்டிலே நன்மைகள் தான் ஏராளமாக ஏற்பட்டிருக்கின்றன என்பதைக் காணலாம். பொதுவாக ஏழை

[Sri S. Lazar] [10th July 1957

மக்கள் குடிப்பதில் அதிகமாக ஈடுபட்டிருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. நான் ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். இன்றைய தினம் முக்கியமாக இந்தச் சமூக சீர்திருத்தத்தினால் ஏழை மக்கள் நல்லவாழ்வு வாழ்கிறார்கள். கிராமப் புறங்களிலே ஏழை மக்கள் குடியிருக்கக்கூடிய பகுதியிலே சென்று பார்ப்போமானால், கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல, பெண்கள் ஆடை ஆபரணங்களை அணிந்திருக்கிறார்கள். அதிலும் ஆண்கள் நல்ல ஆடை அணிந்திருப்பதை கண்கூடாகப் பார்க்க முடியும்.

ஆகவே இதுபோன்ற சமூகச் சீர்திருத்தச் சட்டங்கள் வருகின்ற நேரத்திலே, அதனால் ஏற்படக்கூடிய நன்மைகள்தான் அதிகமாக இருந்து வருகின்றன. ஆகவே, இதை மேலும் மேலும் நல்ல முறையிலே நடத்துவதற்கு உதவியும் ஒத்தாசையும் செய்ய வேண்டியது கனம் அங்கத்தினர்களுடைய கடமை. பொது மக்களும் ஒத்துழைக்க வேணடும் என்பது எல்லோரும் அறிந்த ஒரு காரியம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்ல ஆசைப்படுகிறேன்—இது போன்ற சமூக சீர்திருத்தச் சட்டங்கள் வருகின்ற நேரத்திலே, நல்ல முறையிலே அவைகளை அமுலுக்குக் கொண்டுவரவேண்டுமென்று சொன்னால், அந்தச் சட்டங்களை மீறி நடக்கக்கூடியவர்களுக்குக் கடுமையான தண்டனை விதித்தால் மாத்திரம் தான் செய்ய முடியும். அனுபவ ரீதியாகப் பார்க்கும்போது, பெரும் பெரும் குற்றங்கள், குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் கொலை போன்ற குற்றங்கள் நாட்டிலே குறைந்த அளவு நடக்கின்றன என்று சொன்னால், ” அதற்குக் காரணம் அதற்காக கொடுக்கப்படும் மரண தண்டனை அல்லது வாழ்க்கை பூராவும் சிறையில் இருக்கக்கூடிய தண்டனைதான். ஆகவே, இது போன்ற குற்றங்கள் நாட்டில் குறைவாகத்தான் நடக்கின்றன. இன்னும் மேல்நாட்டு அறிஞர்களெல்லாம் சொல்லக்கூடியது என்னவென்றால், இது போன்ற சீர்திருத்தங்களை நல்ல முறையிலே கொண்டுவரவேண்டுமென்று சொன்னால், அதற்காகக் கொடுக்கவேண்டிய தண்டனை அதிகமாக இருக்க வேண்டும் என்பது. இது சம்பந்தமாக ஜில்லா தோறும் கமிட்டிகள் இயங்கி வரும் நேரத்திலே, அவர்கள் சொல்லக்கூடிய யோசனையும் இது தான். திருச்சி ஜில்லாவைப் பொறுத்தவரையில் அங்குள்ள கமிட்டியின் மூலமாக இதுபோன்ற யோசனையை நாங்கள் சொல்லியிருக்கின்றோம். சட்டத்தை நல்ல முறையிலே அமுலுக்குக் கொண்டுவரவேண்டுமென்று சொன்னால், அதை மீறி நடப்பவர்களுக்குக் கடுமையான தண்டனை கொடுக்க வேண்டுமென்று நாங்கள் சொல்லிவந்திருக்கின்றோம். ஆகவே, அந்த ரீதியில் சட்டங்களிலே சில திருத்தங்கள் செய்யவேண்டும். சட்டங்களை மீறி நடக்கின்றவர்களுக்குத் தண்டனை அதிகமாக கொடுக்கவேண்டுமென்பதைப் பற்றி யோசனை செய்து, அம்முறையில் திருத்தச் சட்டங்கள் கொண்டு வந்தால் இந்தத் திட்டத்தை இன்னும் சிறந்த முறையில் அமுலுக்குக் கொண்டுவர முடியும் என்பதை இந்த இடத்திலே சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்தச் சட்டம் இன்னும் நல்ல முறையிலே நடக்கவேண்டுமென்று சொன்னால், நான் இன்னொரு யோசனையும் சொல்ல ஆசைப்படுகிறேன். அதாவது, எப்படித் திருட்டு போன்ற குற்றங்கள் நடக்கும்போது, அந்தக் குற்றங்களைக் கண்டுபிடிக்க உதவி செய்கின்றவர்களுக்கு சர்க்கார் வெகுமதி அளிக்கின்றதோ அதுபோல், கள் போன்றவைகளைக் குடிக்கின்றவர்களைப் பிடித்துக் கொடுக்கும் முறையிலே உதவி செய்கின்றவர்களுக்கும் ஒரு வெகுமதி அளிக்க சர்க்கார் முன்வருவார்களானால், கண்டிப்பாக இன்னும் நல்ல முன்னேற்றம் காண முடியும். அதோடுகூட, இந்த வேலையில் ஈடுபடக்கூடிய சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு இதுபோன்ற குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, அந்தக் குற்றங்களை விசாரித்து, அதன்பேரில் ஏற்படும் முடிவின் காரணமாக வசூலிக்கப்படக்கூடிய அபராதத் தொகையில் ஒரு பகுதியைக் கொடுப்பது என்ற முறையைக் கையாளவேண்டும். இக்குற்றங்களைக் கண்டுபிடிக்க உதவி செய்யும் அதிகாரிகள் போலீஸ் உத்தியோகஸ்தர்களாக இருந்தாலும் சரி, எக்சைஸ் இலாகா உத்தியோகஸ்தர்களாக இருந்தாலும் சரி, அவர்களுக்கும் இம்மாதிரி அபராதத் தொகையில் ஒரு பகுதியைக் கொடுப்பது என்ற முறையைக் கையாண்டால், நிச்சயமாக அவர்கள் ஏதோ ஒரு சில இடங்களில் “ மாமூல் ” ஆக வாங்கும் முறையைக்

கைவிட்டு, இந்த இயக்கம்—இந்தச் சமூக சீர்திருத்தம் நல்ல முறையிலே இயங்குவதற்கு நல்லதொரு பக்கத் துணையாக அமைவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

ஆகவே இதுபோன்ற காரியங்களிலே இன்னும் நல்ல முறையிலே முன்னேற வேண்டுமென்று சொன்னால் மக்களுடைய ஒத்துழைபபும் வேண்டும். மற்றக் கட்சிகளுடைய ஒத்துழைப்பும் வேண்டும். அதிகாரிகளுடைய ஒத்துழைப்பும் அதிகமாக வேண்டியிருக்கிறது. ஆகவே, அவர்களுடைய ஒத்துழைப்பும் கிடைக்கக்கூடிய முறையிலே அவர்களுக்கும் இதிலே வரக்கூடிய அபராதத் தொகையில் ஒரு பங்கு கொடுப்போமேயானால் நல்ல முறையிலே மதுவிலக்குத் திட்டம் நடக்கும் என்று சொல்லிக் கொண்டு இந்த மான்ய கோரிக்கையை ஆதரித்து என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

**SRI A. GOVINDASAMY** : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, மதுவிலக்குப் பிரச்னையில் சர்க்கார் கொண்டிருக்கிற கொள்கையை எங்கள் கட்சி வரவேற்கின்றது. ஆனால், இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற முறையிலே சில கோளாறுகள் இருக்கின்றன. அவைகளை நீக்கிவிட்டால் மதுவிலக்குத் திட்டம் இன்னும் வெற்றிகரமாக நடக்க வழி இருக்கும் என்ற கருத்தை வலியுறுத்துகிற முறையிலே என் பேரில் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் வலியுறுத்திச் சொல்லுகின்றேன்.

10-14 a.m.

எங்கள் மாவட்டமாகிய தென்னாற்காடு மாவட்டத்தை அடுத்துத்தான் புதுச்சேரி என்னும் பகுதி இருக்கிறது. புதுச்சேரி பகுதி ஏற்கனவே பிரெஞ்சு ஆட்சியின்கீழ் இருந்து இப்பொழுது இந்திய யூனியனில் சேர்க்கப்பட்டிருந்தாலும், மது விலக்குத் திட்டம் எங்கள் மாவட்டத்தில் வெற்றிகரமாக அமுல் நடத்தமுடியாத நிலையில் புதுச்சேரி பகுதி இருந்து வருகிறது. ஏனென்றால், புதுவை ராஜ்ஜியத்தின் கிராமங்களும், தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த கிராமங்களும் ஒன்றோடொன்று பிணைத்திருக்கும் காரணத்தினால், தெருப்பக்கம் பிரெஞ்சுப் பகுதியாக இருந்தால், முன் பக்கம் நம் பகுதியாக இருக்கும். இப்படியிருப்பதின் காரணமாக மது விலக்குத் திட்டம் வெற்றிபெறாது தோல்வி அடையும் நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, "பார்டர்" இடங்களிலெல்லாம் எச்சரிக்கையாகவும் "ஜரூர்" ஆகவும் வேலை செய்ய வேண்டும். அதைத் தடுத்தாலல்லாது எங்கள் மாவட்டத்தில் இத் திட்டம் வெற்றி பெறுவது மிகவும் கடினமான காரியம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் வலியுறித்திச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

ஏற்கனவே, "கஸ்டம்ஸ்" இருந்த காலத்தில், உயர்ந்த ரக சாராயத்தை எடுத்துச் செல்கிறவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு கண்டிக்கப்படுகிற நிலைமை ஏற்பட்டது. ஆனால், "கஸ்டம்ஸ்" எடுக்கப்பட்ட நேரத்தில் இது சர்வ சாதாரணமாகப் போய்விட்டது. புதுவை பகுதியிலிருந்து காலூர், திண்டிவனம், விழுப்புரம் பகுதிகளுக்கு—என் சென்னை ராஜ்ஜியத்திலுள்ள எல்லா பகுதிகளுக்கும்கூட சரக்குகள் போகவேண்டிய வசதி வாய்ப்பு இருக்கிறது. அதைத் தடுக்க சர்க்கார் தீவிர நடவடிக்கை எடுத்தாகவேண்டும். குறிப்பாக, அந்த "பார்டர்" இடங்களில் இதைக் கண்டுபிடிக்கவேண்டி ஒரு தனி இலாகாவே இயங்கவேண்டும். அந்த இலாகாவுக்கென்று தனி காரும், அதில் சிப்பந்திகளும் வைக்கப்படவேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ளுகின்றேன்.

அடுத்து நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், மதுவிலக்குத் திட்டம் வெற்றி பெறாததற்கு முக்கியக் காரணம், பணக்காரர்களுக்கு ஒரு வசதியும் ஏழைகளுக்கு அந்த வசதியற்ற நிலைமையும் இருக்கிற காரணத்தால், ஏழை மக்கள் இந்தச் சட்டத்தை தவறாகப் புரிந்து கொள்ளுகிறார்கள். "குடிப்பதற்கு அனுமதி பணக்காரர்களுக்குத் தானே கொடுக்கப்படுகிறது ? அவர்கள்தானே குடித்துக் கெட்டுவிடுகிறார்கள் ?" என்று அரசாங்கம் சமாதானம் சொல்கிறது. இந்தச் சமாதானத்தை எங்களைப் பொறுத்தவரையில் ஏற்றுக்கொள்வதற்கில்லை. ஏனென்று

[Sri A. Govindasamy] [10th July 1957

கேட்டால், பணக்காரர்கள் குடிக்கிறார்கள் என்றால், அவர்கள் வீட்டில் வேலை செய்யும் ஏழையும் அதைப் பார்க்க நேரிடுகின்றது. எஜமானன் மட்டும் குடித்துக் களித்து இருக்க, நமக்கு இந்த வாய்ப்பு இல்லையே என்ற எண்ணம் அந்த ஏழை மகனுக்கு ஏற்படுகின்றது. எஜமானன் பர்மிட் வாங்கி உள்ளே குடித்து இருந்தால், அதில் எஞ்சிய ஒரு பகுதியை அங்கு வேலைசெய்பவன் குடித்து வெளி வந்தால், அவன் போலீசாரால் பிடிக்கப்பட்டு தண்டிக்கப்படுகின்றான். அப்பொழுது அவன் என்ன நினைக்கிறான்? உள்ளே குடித்திருக்கும் பணக்காரனைச் சட்டம் அனுமதிக்கும் நேரத்தில், அதே சமயத்தில் ஏழை அதே காரியத்திற்காக போலீசாரால் பிடிக்கப்பட்டு தண்டிக்கப்படுகிற நேரத்தில், ஏழைக்கு ஒரு மாதிரியும் பணக்காரருக்கு இன்னொரு மாதிரியும் சட்டம் இருக்கிறதோ என்று சந்தேகப்படக்கூடிய நிலைமை இருக்கிறது.

ஏற்கனவே மதுவிலக்கு மந்திரியாக இருந்த அம்மையார் திருமதி ஜோதி வெங்கடாஜலம் அவர்களுடைய நன்முயற்சியை இந்தச் சமயத்தில் நான் பாராட்டாமல் இருப்பதற்கில்லை. அவர்கள் காலத்திலே ஒரு பெரிய கேஸ் போட்டார்கள். பொது மக்கள் அத்தனை பேரும் மிக உன்னிப்பாக அதைக் கவனித்து வந்தார்கள். அதாவது லேனா செட்டியார் மீது கோட்ட கேஸ். அந்தக் கேஸ் இரண்டு வருஷம் நடந்தது. சுப்ரீம் கோர்ட்டு வரையில் சென்று கடைசியாக ஒரு சிறிய தொகை அபராதமாக விதிக்கப்பட்டது. அப்பேர்பட்ட பணக்காரருக்கு அது சர்வ சாதாரணம். ஆகவே, இம்மாதிரி அபராதம் விதிப்பதாலேயே இந்தத் திட்டம் வெற்றிபெற்று விடும் என்று நான் சொல்வதற்கில்லை. "பர்மிட் ஸிஸ்டத்தைக்" கண்டிப்பாக ஒழித்தால்தான் மதுவிலக்குத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேறும். குடிப்பது கெட்டது என்ற முடிவுக்கு அரசாங்கம் வருமானால், யார் குடித்தாலும் கெட்டது என்ற முடிவுக்கு வரவேண்டும். பணக்காரர்கள் மட்டும்தான் குடிக்கலாம், அரசாங்க அதிகாரிகள் மட்டும்தான் குடிக்கலாம், உயர்ந்த பதவியில் இருப்பவர்களும், அந்தஸ்து உள்ளவர்களும் தான் குடிக்கலாம் என்ற முறையை ஒழித்து, அவர்களையும் குடியிலிருந்து தடுத்து நிறுத்தினால்தான் ஏழைகளுக்கும் வழிகாட்டியாக இருக்கும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மதுவிலக்குத் திட்டம் வந்த பிறகு, கிராமங்களிலே கள்ளச் சாராயம் காய்ச்சுவது சர்வ சாதாரணமான நிலைக்கு வந்துவிட்டது, என்பது தேர்தலிலே நின்றவர்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும் என்று நான் நினைக்கிறேன். சில கிராமங்களிலே மாலை ஆறு மணிக்குமேல் சென்று வோட் கேட்பது கஷ்டமாக இருக்கும். எல்லாக் கட்சிக் காரர்களும் இந்த நிலைமையை அனுபவித்திருப்பார்கள். சில இடங்களில், தேர்தல் காலத்தில், கள்ளச் சாராயம் கொடுத்துக் கூட வோட்டு வாங்கும் நிலைமை ஏற்பட்டது. அவ்வளவு மோசமான நிலைமைக்குக்கூட தூண்டிவிடுகிறது குடிப்பழக்கம். அது கொடுத்தால்தான் வோட்டு வருமோ என்ற நிலைமைக்குப் போகிறார்கள். அதையெல்லாம் பார்க்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்கிறேன்.

மதுவிலக்கைப்பற்றி பரிசீலனை செய்வதற்காக மாதந்தோறும் கூட்டம் நடத்தப்படுகிறது—எம்.எல்.ஏக்களை வைத்து அந்தக் கூட்டத்திலே என்ன நடக்கிறது? இந்த மாதம் எவ்வளவு கேஸ் கண்டுபிடிக்கப்பட்டது, எவ்வளவு கேஸ் வெற்றி பெற்றது, எவ்வளவு அபராதம் விதிக்கப்பட்டது, எத்தனை பேர் ஜெயிலுக்கு அனுப்பப்பட்டார்கள், எத்தனை கேஸ் தோற்று விட்டது என்ற முறையிலே கூட்டம் நடக்கிறதே தவிர, இந்தத் திட்டத்தை எப்படித் தீவிரமாகவும் வெற்றிகரமாகவும் நடத்தமுடியும் என்பதற்கான யோசனை கொடுக்கப்பட்டு, பிரசாரம் செய்கின்ற முறையிலே அக் கமிட்டிகள் இயங்குமானால், நலமாக இருக்கும். அந்த விதமான நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை நாம் பார்க்கின்றோம். ஒரு மாதம் 300 கேஸ்கள் என்றால் அதற்கடுத்த மாதம் 400 கேஸ்கள் என்ற முறையில் கேஸ்கள் பெருகிக்கொண்டேயிருக்கின்றன. என்பதை நாம் பார்க்கிறோம். கள்ளச் சாராயம் காய்ச்சுவதையும் குடிப்பதையும் தடுத்து நிறுத்துவதற்கு நல்ல பிரசாரம் தேவையாக இருக்கிறது. அந்த முறையை அரசாங்கத்தார்

10th July 1957] [Sri A. Govindasamy]

கையாளுவார்கள் என்று நினைக்கிறேன். சமீபத்தில் கனம் மந்திரி அவர்களும் எங்கள் கட்சித் தலைவர் திரு. சி. என். அண்ணாதுரை அவர்களும் ஒரே கூட்டத்தில் கலந்துகொண்டு மதுவிலக்குச் சட்டத்தை வெற்றிகரமாக அமல் நடத்தவேண்டும் என்பது பற்றிப் பேசியிருக்கிறார்கள். மதுவிலக்குச் சட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு எல்லாக் கட்சிக்காரர்களையும் சேர்த்துக்கொண்டு அரசாங்கத்தார் நடவடிக்கை எடுக்கவேண்டும். கள் குடிப்பதை ஒழிப்பதற்காகப் பிரசாரகர்களைப் போடவேண்டும். பிரசாரகர்களைப் போடும்போது ஒரு குறிப்பிட்ட கட்சியிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைக்காமல் எல்லாக் கட்சிக்காரர்களின் ஆதரவையும் பெற்று பிரசாரத்தை நடத்தினால் அது வெற்றிபெறும்.

மரம் ஏறும் தொழிலை நடத்திப் பிழைப்பவர்களில் பெரும்பான்மையோர் மதுவிலக்குச் சட்டத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்த தாய்மார்கள் பதனி எடுத்துக்கொண்டுவந்து தெருக்களில் விற்கிறார்கள். போலீஸார் அவர்களைப் பிடித்துக்கொண்டு வந்துவிட்டு, "30 கேஸ்கள் பிடித்துவிட்டோம், 40 கேஸ்கள் பிடித்துவிட்டோம்" என்று சொல்கிறார்களே தவிர, அவர்களுக்குத் தொல்லையாக இருக்கிறார்களே தவிர கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களில் அதிகமான பேர்களைத் தண்டிக்கவில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அபராதம் போட்டுவிட்டால் மாத்திரம் மதுவிலக்குச் சட்டம் வெற்றி பெறாது. ஒருவனுக்கு 30 ரூபாய் அபராதம் போட்டால் அந்த 30 ரூபாயை கையில் வைத்துக்கொண்டு அவனுடைய குடும்பத்தைச் சேர்ந்த மற்றொருவன் அபராதத்தைக் கட்டுவதற்குத் தயாராக இருக்கிறான். இரண்டு வருஷ சிறை தண்டனையோ மூன்று வருஷ சிறை தண்டனையோ கொடுக்கப்படும் நிலை இருந்தால்தான் அவர்கள் மாறுவார்கள். பிரசாரம் மூலம் மக்களுடைய மனதை மாற்றித்தான் மதுவிலக்கைக் கொண்டுவருவதில் வெற்றிபெற முடியும்; "நாங்கள் மதுவிலக்குச் சட்டத்தைக் கொண்டு வந்து விட்டோம்" என்று கூறிக்கொண்டு இருந்தால் வெற்றி பெற முடியாது என்று சொல்லிக்கொண்டு, வெற்றி பெறுவதற்கு பல நல்ல நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**Sri V. VELUCHAMI** : கனம் சபாநாயகர் அவர்களே, மது 10-20 a.m.
விலக்குத்திட்டத்தால் நாம் எதிர்பார்த்த அளவிற்கு மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவில்லை என்றாலும், அநாகரீகமான குடும்பச் சண்டைகளும், குடும்பத்திலுள்ள பெண் பிள்ளைகளை அடித்துத் துன்புறுத்துவதுபோன்ற குற்றங்களும், இதர பல கிரிமினல் குற்றங்களும் கணிசமான அளவிற்குக் குறைந்து வருகின்றன. அந்த அளவிற்கு அது ஓரளவு வெற்றி பெற்றிருக்கிறது என்பதால் மதுவிலக்குச் சட்டத்தைத் தொடர்ந்து அமல் நடத்தவேண்டுமென்று நான் சிபார்சு செய்ய ஆசைப்படுகிறேன்.

மதுவிலக்குச் சட்டத்தை மீறும் குற்றங்களாகிய கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கள்ளச்சாராயம் குடித்தல், போன்ற குற்றங்களைச் செய்பவர்களுக்குக் கொடுக்கும் தண்டனைகளை அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையைப் பற்றி ஆலோசிக்கும்போது, அந்த தண்டனைகளை அதிகரிக்கக்கூடாது என்ற அபிப்பிராயத்தைத்தான் நான் தெரிவிக்க விரும்புகிறேன். வாழ்வதற்கு ஒரு நல்ல வழி இல்லாத நிலையில்தான் மக்கள் இந்தக் குற்றங்களைச் செய்து வருகிறார்கள். நாமும்கூட, தப்பிதமானது என்று தெரிந்தும்கூட சில தவறுகளை "அவை தவிர்க்கமுடியாத தவறுகள்" என்று சொல்லிக் கொண்டு செய்து வருகிறோம். சென்ற கூட்டத்தில் கவர்னரின் உரையின் மீது நடந்த விவாதத்திற்கு பதிலளிக்கையில் கனம் நிதி மந்திரி அவர்கள் ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டார்கள். அதாவது, அவர்களிடம் விநோபாஜி அவர்கள் "உங்கள் சட்டசபைக்கு 9,000 ரூபாய்க்குக் குறைவாகத் தேர்தல் செலவு செய்து அங்கத்தினர்களாக வந்திருப்பவர்கள் எத்தனை பேர் இருக்கலாம் என்று கேட்டதற்கு மிகக் குறைவான அங்கத்தினர்களே 9,000 ரூபாய்க்குக் குறைவாக தேர்தல் செலவு செய்திருப்பவர்கள்"

[Sri V. Veluchami] [10th July 1957

என்று பதில் அளித்ததாகக் கூறினார்கள். அதைத் தவிர கனம் மந்திரிமார்கள்கூட தவறான கணக்குக் காட்டித் தேர்தல் கணக்கில் கையெழுத்திட்டுவிட்டு........................

**MR. SPEAKER :** நான் அன்றைக்கே அதைப்பற்றி இங்கே பேசக்கூடாது என்று சொன்னேன். கனம் மந்திரிமார்கள் தப்புக் கணக்குக் கொடுத்தார்கள் என்றால், அதைப்பற்றி இங்கே பேசுவதில் பிரயோஜனம் இல்லை. அந்த விஷயத்தைத் தேர்தல் டிரிப்யூனலிடம் தெரிவிக்க வேண்டும் என்று கனம் அங்கத்தினரைக் கேட்டுக் கொள்கிறேன்.

**SRI V. VELUCHAMI :** நான் குற்றம் சாட்டவில்லை. அன்று கனம் மந்திரி அவர்கள் சொன்ன விஷயத்தைத்தான் இங்கே சொன்னேன். சரி, அதை நான் சொல்லவில்லை.

அந்த மாதிரி சில தவறுகள் தவிர்க்க முடியாதவையாக இருக்கின்றன என்ற காரணத்தால் நாமும் சில குற்றங்கள் செய்யவேண்டிய நிலைமை ஏற்படுவதுபோல, பிழைப்பிற்கு வேறு வழி இல்லாத நிலைமையில்தான் மக்கள் இந்தக் கள்ளச் சாராயம் காய்ச்சும் தொழிலில் ஈடுபடுகிறார்கள். ஆகவே குற்றங்களை நீக்குவதற்கு தண்டனையைக் கூட்டுவது சரியான பரிகாரம் அல்ல. அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுத்து வாழ்க்கைத் தரத்தை உயர்த்தினால், நன்றாக இருக்கும். கள்ளச்சாராயம் காய்ச்சும் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் தாங்களாகவே மாறிவிடுவார்கள் என்பதை அரசாங்கத்தாருக்கு அறிவுறுத்த விரும்புகிறேன்.

அது போக, மதுவிலக்குச் சட்டத்தினால் மரமேறும் தொழிலாளர்கள் மிகவும் கஷ்டப்பட்டு வருகிறார்கள். அவர்களுடைய கஷ்டத்தைப் போக்க அரசாங்கம் தகுந்த பரிகாரம் காணவில்லை. பொதுவாக, மரமேறும் தொழிலாளர்கள் மிகவும் எளிய நிலையில் இருக்கிறார்கள். தங்களுக்கு அன்றாடம் கிடைக்கும் கருப்பட்டி, பதனீர் போன்ற பொருள்களை அன்றாடம் விற்று தங்கள் ஜீவனோபாயத்தை நடத்தவேண்டிய நிலையில் அவர்கள் இருப்பதால், அந்தப் பொருள்களை அவர்களிடமிருந்து வியாபாரிகள் குறைந்த விலைக்குத்தான் வாங்கிக்கொள்கிறார்கள். இதன் காரணமாக அவர்களுக்குத் தங்கள் வாழ்க்கைச் செலவிற்கு வேண்டிய பணம் கிடைப்பதில்லை. ஆகையால், அவர்களுக்குக் கடன் வசதிகள் அளித்து, மார்க்கெட்டில் கருப்பட்டிக்கு நல்ல விலை வந்த பிறகு அதை அவர்கள் விற்பதற்கு உதவும் வகையில் அரசாங்கத்தார் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோக, மரமேறும் தொழிலாளிகள் தங்களுடைய சொந்த மரங்களில் தொழிலை நடத்தாமல், மரச் சொந்தக்காரர்களிடமிருந்து குத்தகைக்கோ வாரத்திற்கோ மரங்களை வாங்கி அவைகளில் தொழிலை நடத்துகிறார்கள். மரச்சொந்தக்காரர்கள் குத்தகையை அதிகப்படுத்துவதற்காக இந்தத் தொழிலாளர்களிடையே போட்டியை ஏற்படுத்தி ஒரு தொழிலாளியிடமிருந்து மற்றொரு தொழிலாளிக்குக் குத்தகையை அடிக்கடி மாற்றிவிடுகிறார்கள். ஆகவே, அந்தக் கஷ்டத்தை நிவர்த்திப்பதற்காக, விவசாயிகள் பாதுகாப்புச் சட்டத்தைப் போன்ற மரமேறிகளின் பாதுகாப்புச் சட்டம் என்ற ஒரு சட்டத்தை இயற்றி, மரங்களின் குத்தகையை அடிக்கடி மாற்றாமல் இருப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதோடு இப்போது நடைமுறையில், முக்கியமான இடங்களில் கருப்பட்டியிலும், பதனீரிலும் சம வாரமே கொடுக்கப்பட்டு வருகிறது. கடினமாக உழைக்கும் மரமேறும் தொழிலாளிக்கு இவைகளில் பாதி வாரம் போதாது. ஆகவே அவர்களுக்காக ஒரு நியாய வாரச் சட்டத்தையும் இயற்றி மரமேறி 75 சதவிகிதம் பதனீரும், கருப்பட்டியும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும், 25 சதவிகிதம் பதனீரும் கருப்பட்டியும் மரச் சொந்தக்காரர்கள் எடுத்துக்கொள்ளவேண்டும் என்றும் சட்டமியற்றினால் மிகவும் நன்றாக இருக்கும்.

அடுத்தபடியாக, விவசாயத் துறையில் நிபுணர்களின் உதவியால் ஆராய்ச்சி செய்து, அநேக புதிய சாதனங்களை அளித்து விவசாயிகளுக்கு உதவியிருக்கிறோம். ஆனால் இந்த மரமேறிகள் கர்நாடக ஆயுதங்களைத் தான் எப்போதும் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். நுகத்தடி, இடுக்கி போன்றவைகளைக்கொண்டு அவர்கள் மிகவும் பயனடையக்கூடிய வழிகளை ஆராய்ச்சி செய்து அவர்களுக்குப் பயனுள்ள நவீன கருவிகளைக் கண்டு பிடித்து அவைகளை அவர்களுக்கு நியாய விலைக்கோ இனமாகவோ கொடுத்து உதவினால், அவர்கள் தங்கள் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றத்தை அடையமுடியும் என்று நம்புகிறேன். அவர்கள் பல மரங்களை அடைவதற்கு ஒரு மரத்தில் ஏறிய பிறகு அதிலிருந்து கீழே இறங்கி மற்றொரு மரத்தின் மீது ஏறவேண்டியிருப்பதால், பல முறைகள் மரம் ஏறி இறங்கவேண்டியிருக்கிறது. இதன் காரணமாக அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுடைய மார்புகளிலும், முழங்கைகளிலும், கால்களிலும் இருக்கும் காய்ப்புகளைப் பார்த்தால் அவர்களுடைய வேலை எவ்வளவு கடினமானது என்பது நமக்குப் புரியும். அவர்கள் ஒரு மரத்திலிருந்து கீழே இறங்கி மற்றொரு மரத்தின்மீது ஏறவேண்டியிருக்கிறது. மரங்கள் தொடர்ச்சியாக இருக்கும் இடங்களில், ஒரு மரத்தில் ஏறிய பிறகு கயிற்றின் மூலமாகவோ மற்ற சாதனங்களின் மூலமாகவோ மற்ற மரங்களுக்கு எளிதில் செல்வதற்கான நல்ல உபாயங்களை நிபுணர்களின் உதவியால் கண்டுபிடித்துக் கொடுத்தால், மரமேறும் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தில் ஒரு புரட்சிகரமான மாறுதலை ஏற்படுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுடைய நலனில் சர்க்கார் நன்றாக கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**SRI G. GOMATHI SANKARA DIKSHITAR :** கௌரவம் மிக்க சபாநாயகர் அவர்களே, இந்தப் பிரேரணையை ஆதரிக்கும் முறையில் நான் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். 10-30 a.m.

மதுவிலக்கு என்பது நமது நாட்டிற்கே மகாத்மாஜியினால் அளிக்கப்பட்டுள்ள ஜீவாதாரமான ஒரு உயரிய திட்டமாகும். நாம் எல்லோரும் இந்தத் திட்டத்தை வெற்றி பெறச் செய்வதற்கு, அரசியல் அபிப்பிராய பேதங்களை எல்லாம் மறந்து மற்ற நாடுகளுக்கு எல்லாம் நம் நாட்டிலே மதுவிலக்கு வெற்றி பெற்றிருக்கிறது என்பதைக் காட்ட, நமது அரசாங்கம் இப்போது இயற்றியிருக்கக்கூடிய சட்டத்தை நல்ல முறையில் அமுலாக்க, அரசாங்கத்தோடு சேர்ந்து முழுமூச்சுடன் ஒத்துழைக்கக் கடமைப்பட்டுள்ளோம். இதை நான் உங்களுக்குச் சொல்லாமலேயே நீங்கள் எல்லோரும் அறிவீர்கள்.

இந்தச் சட்டத்தை வெற்றிபெறச் செய்வதற்கு நம்முடைய அரசாங்கமும் எவ்வளவோ பாடுபட்டுக்கொண்டு வருகிறது. ஆனால் குற்றம் புரியும் மனப்பான்மையுடையவர்கள், இந்தச் சட்டத்திற்கு எதிரிடையாகக் கள்ளச் சாராயம் காய்ச்சி வருகிறார்கள். மதுவிலக்குச் சட்டம் வெற்றிபெற்றால் தான் நம்முடைய பொருளாதார உயர்ந்த லட்சியத்தை அடைய முடியும். பொருளாதார லட்சியத்தை நாம் அடைவதற்கு மதுவிலக்குச் சட்ட வெற்றியே முக்கியமான காரணம் என்பதை நாம் எல்லோரும் உணர்ந்து கொண்டுவிட்டோமானால் கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களைக் கண்டு நாம் இரக்கம் காட்டமாட்டோம். அவர்களுடைய நடவடிக்கையை கண்காணித்து, கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களே இல்லாமல் அடிக்கவும், மதுவிலக்குச் சட்டம் எல்லாவகையிலும் வெற்றி பெறவும் பலவித உபாயங்களைக் கையாளுவோம். இது நம்முடைய உயிருக்குயிரான கடமையாகும். மதுவிலக்குக் கமிட்டிகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. அங்கே நடைபெறுகிற விமரிசனங்களை எல்லாம் நாம் பார்த்தோமானால் இந்த மதுவிலக்குச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரக்கூடிய நம்பிக்கையுள்ள போலீஸ்காரர்களிடையே இந்தப் பொறுப்பை ஒப்படைக்கவேண்டும் என்பதைத் தெரிந்துகொள்ளலாம். போலீஸ் அதிகாரிகளுக்கு எத்தனையோ கடமைகள் இருக்கின்றன. இதையும் ஒரு முக்கியமான கடமையாகக் கருதி பொறுப்போடு நடந்து கொள்ளுகின்ற அதிகாரிகளிடத்திலேதான் இந்தப் பொறுப்பு ஒப்படைக்கவேண்டும். மதுவிலக்குச் சட்டத்தை மீறும் மனப்பான்மை உடைய மக்களைத் திருத்தி அவர்கள் அவ்வாறு செய்யாதவாறு

[Sri G. Gomathi Sankara Dikshitar] [10th July 1957

செய்யக்கூடிய சக்தி அரசியல் கட்சிகளிடையே இருக்கிறது. அதைச் செய்வதும் அவர்களுடைய முக்கியமான பொறுப்பு என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நாம் எல்லாம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் வெற்றிபெற வேண்டுமென்ருல் மதுவிலக்குச் சட்டம் நிச்சயமாக வெற்றிபெறும்படியாகச் செய்தாகவேண்டும் என்று எண்ணியாகவேண்டும். மதுவிலக்குச் சட்டத்தை மீறுகிறவர்களுக்குக் கடுமையான தண்டனை கொடுக்கவேண்டும். சரியான முறையில் தண்டனை அளிக்கப்படுகிறது, மதுவிலக்குச் சட்டத்தைப் பற்றியும் பிரசாரம் செய்யப்படுகிறது என்று சொல்லப்பட்டதைக் கேட்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயம். கள்ளச் சாராயம் எந்த இடத்தில் அதிகமாகக் காய்ச்சுகிருர்கள் என்று பார்த்தால் தெரியும். காடுகளிலே தான் அதிகமாகக் காய்ச்சுகிருர்கள். மக்கள் அடிக்கடி செல்ல முடியாத ஏகாந்தமான இடங்களில்தான் கள்ளச் சாராயத்தைக் காய்ச்சி, பல இடங்களுக்கு அனுப்பி வைக்கிருர்கள். காட்டு இலாகா, மதுவிலக்கு இலாகாவோடு ஒத்துழைத்தால் இந்தமாதிரியாக காட்டில் காய்ச்சுகிறவர்களை எல்லாம் சுலபமாகப் பிடித்துவிடலாம். அப்படிக் காய்ச்சுவதைத் தடை செய்துவிடலாம். அதற்கு வேண்டிய நடவடிக்கையை கனம் அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். இந்த மானியத்தை நான் முழுமனதுடன் ஆதரித்து என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

10-35 a.m. **SRI V. K. KOTHANDARAMAN** : கனம் சபாநாயகர் அவர்களே, மதுவிலக்குத் திட்டம் எல்லோராலும் வரவேற்க்ககூடிய திட்டமாகும் என்பதை ஒருவரும் மறுக்க முடியாது. அந்த அடிப்படையில்தான் மதுவிலக்குத் திட்டத்தை நான் ஆதரித்தாலும், அதே நேரத்தில் மதுவிலக்கு எந்த நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டதோ, எந்தக் காரணத்திற்காகக் கொண்டு வரப்பட்டதோ அந்த நோக்கம், அந்தக் காரணம் தோற்றுவிட்டது என்பதையும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இந்த அடிப்படையில் மதுவிலக்குத் திட்டம் ஏன் வெற்றிகரமாக நல்ல முறையில் நடைபெறவில்லை என்பதை நாம் பரிசீலனை செய்ய வேண்டிய நிலைமையில் இருக்கிருேம்.

சென்ற காலத்தில் மகாத்மா காந்தி அவர்கள் மதுவிலக்குத் திட்டத்தைக் கொண்டுவரவேண்டும் என்று வற்புறுத்தியதற்குக் காரணம் நமக்கு எல்லாம் தெரியும். கள்ளு, சாராயம் முதலியவற்ருல் ஏழை மக்கள் பாதிக்கப்படுகிருர்கள். குடியிலே பணத்தைச் செலவழித்துவிட்டு குடும்பம் நடத்த முடியாமல் தவிக்கிருர்கள் என்கிற காரணத்திற்காகவே கள்ளுக்கடை மறியல் நடத்திேைம். கிராமம் கிராமமாகச் சென்று மதுவிலக்குப் பிரசாரம் செய்தோம். அந்த நோக்கத்தை ஈடேற்ற வேண்டுமென்பதற்காகவே மதுவிலக்குச் சட்டத்தையும் அரசாங்கத்தார் கொண்டு வந்தார்கள். ஆனுல் சட்டத்தைக் கொண்டுவந்தபிற்பாடு அந்த நோக்கம் ஈடேறி இருக்கிறதா என்பதைப் பார்க்கும்போது நாம் மிகவும் வருந்த வேண்டியிருக்கிறது. முன்பெல்லாம் ஊருக்கு ஒரு கடையாக இருந்தது. இப்போது வீட்டுக்கு ஒரு கடையாக மாறியிருக்கிறது. முன்பெல்லாம் குடிப்பது தவறுதல் என்று கருதப்பட்டது. இப்போது கள்ளச் சாராயம் காய்ச்சுவதே ஒரு குடிசைத் தொழிலாக வளர்ந்து விட்டது. இதற்குக் காரணம் என்ன ?

மதுவிலக்குச் சட்டத்தைக் கொண்டுவந்தபோதே கிராமங்களில் உள்ள மக்களுக்கு எல்லாம் வேலை வாய்ப்பை அதிகப்படுத்தியிருந்தால், தரிசு நிலங்களை எல்லாம் கொடுத்திருந்தால், நிலச்சீர்த்திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்து நிலமில்லாத ஏழைகளுக்கு எல்லாம் நிலம் அளிக்கப்பட்டிருந்தால் அவர்கள் எல்லோரும் விவசாயத்தில் கவனம் செலுத்தி இருப்பார்கள். உணவு உற்பத்தியை அதிகப்படுத்தி இருப்பார்கள். இப்படிச் செய்யாததன் காரணமாக வாழ்க்கையில் அநுபவிக்கக் கூடிய பசி, பட்டினி ஆகிய கொடுமைகளுக்கு எல்லாம் உள்ளாகி அவர்கள் எப்படியாவது பிழைக்க வேண்டுமென்ற எண்ணத்தில் கள்ளச்சாராயம் காய்ச்ச ஆரம்பித்துவிட்டார்கள். இதைக் கொண்டுபோய் விற்ருல் நல்ல

10th July 1957] [Sri V. K. Kothandaraman]

ஊதியம் கிடைக்கும் என எண்ணி வியாபாரம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். இப்படித் தவறான பாதையில் அவர்கள் போவதற்குக் காரணமாக இருப்பது இந்த மதுவிலக்குத் திட்டம்தான் என்பதை நான் தெளிவாக, தைரியமாக இந்த இடத்தில் எடுத்துச் சொல்வேன். அன்றைய தினம் மதுவிலக்குத் திட்டத்தைக் கொண்டு வரவேண்டும், யாரும் குடிக்கக்கூடாது என்பதாக எல்லாம் மிகவும் தீவிரமாகப் பிரசாரம் செய்து வந்த என்போன்றவர்கள் எல்லோரும் இன்றைய தினம் மதுவிலக்குச் சட்டத்தையே ரத்து செய்துவிடவேண்டும் என்று சொல்லத் துணிந்ததற்குக் காரணம் அதுதான். மது விலக்குக் கமிட்டிகளிலேயே உள்ளவர்கள் இந்தச் சட்டத்தை ரத்து செய்துவிடவேண்டுமென்று பேசக் கூடிய அளவில் நிலைமை வளர்ந்துவிட்டதையும் பார்க்கிறோம். பஞ்சாயத்து போர்டுகளில் தீர்மானம் போட்டு அனுப்புவதைப் பார்க்கிறோம். இதுமாதிரியாக இருக்கக் கூடிய சமயத்தில் கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களை அடக்குவோம், ஒடுக்குவோம், தீவிர நடவடிக்கை எடுத்து அவர்களுக்குக் கடுமையான தண்டனைகளை வழங்குவோம் என்று சொல்லிக் கொண்டு சர்க்கார் முன் வருவதைக் கண்டு நான் சொல்ல ஆசைப் படுவது இது தான். இன்றைக்கு இருக்கக் கூடிய சமூகத்தை முன்னேற்றகரமான பாதையில் அழைத்துச் செல்வதற்குப் பதிலாக அந்தச் சமூகத்தையே அழிப்பது போலத்தான் இது ஆகும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஏனென்றால் இன்றைக்கு இருக்கக் கூடிய கிராம மக்களைச் சாராயம் காய்ச்சுவதாகச் சொல்லி சிறையில் அடைத்துவிட்டால் சிறையில் அடைபட்டவர்களில் பெரும்பாலோர் விவசாயிகளாக இருப்பார்கள். தாழ்த்தப் பட்ட மக்களாக இருப்பார்கள். அரைப் பயிர், முக்கால் பயிர் நிற்கும் போது அவர்கள் சிறைக்குப் போய்விட்டால் பயிரைப் பராமரிப்பதற்கு ஆட்கள் இல்லாமல் போய் நாசமாகிவிடும். உணவு உற்பத்தியும் நாசம் அடைகிறது. அதுமட்டுமல்ல. பலவிதமான மண் பாண்டங்களையும், தோண்டிகளையும் செய்து குவிக்கின்ற தொழிலாளர்கள் கள்ளச் சாராயக் கேஸ் சம்பந்தமாகப் பிடிக்கப்பட்டு வேலை இழக்கிறார்கள். இதுபோல் கிராமத்திலுள்ள பலர் வேலை இழக்கக் கூடிய நிலைமை ஏற்படுகிறது. இது எல்லாம் வறுமையின் காரணமாகச் செய்கின்ற குற்றத்தின் விளைவு என்பதைப் புரிந்துகொண்டால்தான் இதை அநுதாபத்தோடு பரிசீலப்பது சாத்தியமாகும்.

ஒருபுறம் மரங்களுடைய தோல் எல்லாம் உறிக்கப்படுகிறது. கள்ளச் சாராயம் காய்ச்சுவதற்காக மரப்பட்டைகளை எல்லாம் உறித்து வருகிறார்கள். வாழைப்பழம் விலை ஏறிவிட்டது என்றால் கள்ளச்சாராயம் காய்ச்சுவதற்குப் போய்விடுகிறது. மிகவும் மோசமான வெல்லம் விலை ஏறிக் கிடக்கிறது. பழத்தை உறித்துவிட்டு தோலைக் கூட்டி வெளியில் எறியாமல் வீட்டுக்குப் பொறுக்கிக் கொண்டு போகிறார்கள் என்றால் கள்ளச் சாராயம் காய்ச்சுவதுதான் காரணம். இதற்கு எல்லாம் அடிப்படை வறுமை.

சென்ற காலத்திலும் சரி, இப்போதும் சரி பல டாக்டர்கள் கள்ளைக் குடிப்பதனால் வைடமின் ' ஏ ' முதல் ' இசட் ' வரையில் கிடைக்கிறது என்று சொல்கிறார்கள். டாக்டரிடம் வைடமின் ' டி ' குறைவு என்று போனால் இரண்டு ரூபாய் வாங்கிவிடுகிறான். ஒரு அணாவுக்கு ஒரு புட்டி அடித்தால் இந்த வைடமின் குறைவே ஏற்படாது. கள் இறக்குவதைத் தடைபடுத்துவதால் பலவித நோய்கள் உண்டாகின்றன. டாக்டர்களுடைய அபிப்பிராயத்தை இவ்விஷயத்தில் அரசாங்கத்தார் கொஞ்சம் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**THE HON. SRI C. SUBRAMANIAM: May I know from the hon. Speaker whether there is any basis for saying that medical opinion is in favour of taking toddy for some diseases?**

**MR. SPEAKER: As Speaker, I cannot give an opinion. But as a Medical Man, I cannot say that there is any justification for such an opinion.**

[10th July 1957

**SRI V. K. KOTHANDARAMAN :** இவை பத்திரிகையில் வந்ததை பார்த்திருக்கிறோம். இதையெல்லாம் திட்டவட்டமாக தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் சர்வ கட்சி அடங்கி ஒரு கமிட்டியை நியமித்து விசாரணை நடத்தினால் இதையெல்லாம் புள்ளி விவரங்களோடு எடுத்துக் கூறுவதற்குத் தயாராக இருக்கிறோம் என்று அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM:** கனம் அங்கத்தினர் அவர்கள் சர்வகட்சி அடிப்படையில் ஒரு கமிட்டி அமைக்கவேண்டும் என்று சொல்கிறார் களா அல்லது மதுவிலக்கை அமுலாக்க வேறு எந்தவிதத்தில் என்ன செய்யவேண்டுமென்று சொல்லுகிறார்கள் என்பதைத் தெரிவிக்க வேண்டு கிறேன்.

**SRI V. K. KOTHANDARAMAN :** இந்த மதுவிலக்கை சென்ற காலத் தில் மகாத்மா காந்தி அவர்கள் கொண்டு வரவேண்டும் என்று வழி காட்டினார் என்றும் ஆகவே அதை அமல் நடத்த வேண்டும் என்ற நோக்கத்தில் அமுலில் இருந்து வருகிறது. ஆனால் மகாத்மா காந்தி அவர்கள் என்ன சொன்னார்கள் ? சட்டத்தை கொண்டு அதன் மூலமாக கட்டாயப்படுத்தி இதைக்கொண்டு வரக்கூடாது என்று மாகாத்மா காந்தி அவர்களே சொன்னார்கள். சட்டத்தின் மூலம் சட்டத்தின் அடிப்படை யில் தீவிரமாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொல்லவில்லை என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆனால் இந்த மதுவிலக் கினால் மது இறக்கும் தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு வேலை கொடுத்து அவர்களைப் பராமரிக்க எந்தவிதமான சட்டமும் இன்று இல்லை. ஆனால் இன்று சர்க்கார் இந்த மதுவிலக்கை திடீரென்று கொண்டு வந்ததைப் பற்றி சிந்தித்துப் பார்க்கவில்லை. ஆனால் நிலச் சீர்திருத்தம் உடனடியாக கொண்டு வரப்படவேண்டும் என்று சொல்லுகின்ற நேரத்தில் அதை கொண்டு வருவதற்கு சிந்தித்துக் கொண்டிருக்கிறோம், அதை எப்போது எப்படிக் கொண்டுவர வேண்டும் என்பதைப்பற்றி ஆலோசித்துக்கொண் டிருக்கிறோம் என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கின்ற அதே நேரத்தில் மதுவிலக்கு மட்டிலும் அவசரம் அவசரமாக கொண்டு வரப்பட்டிருக்கிற காரணத்தினால் பல மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதனால் பலர் வேலையிழந்திருக்கிறார்கள். அவர்கள் இன்று நடைபாதையில் வாழக் கூடியவர்களாக, வேலை செய்து வாழத் தகுதியற்றவர்களாக மாறியிருக் கிறார்கள் என்பதை நாம் பார்க்கிறோம். ஆகவே கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதைக் கைவிட்டு விட்டு, இதைச் சரியான முறையில் எவ்விதம் நடத்தப்பட வேண்டும் என்பதைப்பற்றி பரிசீலனை செய்வதற் காக வேண்டி உடனடியாக ஒரு சர்வ கட்சி கமிட்டியை அமைத்து அதில் எடுக்கப்படுகிற சரியான முடிவின் அடிப்படையில் அதை அமல் செய்வதின் மூலமாகத்தான் மதுவிலக்கை வெற்றிகரமாக நடத்த முடியும் என்று தெரிவித்துகொண்டு முடித்துக்கொள்கிறேன்.

10-45 a.m. **SRIMATHI P. K. R. LAKSHIMIKANTHAM :** கனம் தலைவர் அவர்களே இந்த மதுவிலக்கு மான்ய கோரிக்கையின்பேரில் நான் இரண்டொரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இதை நான் பரிபூரணமாக ஆமோதிக் கின்றேன். மதுவிலக்கு என்பது இன்று நேற்று சொல்லப்பட்ட கருத்து அல்ல. மகாத்மாஜி இருந்த காலத்தில் மதுவிலக்கைப்பற்றி மிக முக்கியமாக ஆழமாக இதை அமுல் நடத்தவேண்டுமென்று அவர்கள் கூறினார்கள். அன்று சர்வ கட்சிகளும் ஒன்றாக சேர்ந்து அந்த காலத்தில் மதுவிலக்கு சம்பந்தப்பட்ட படங்களை வைத்துக்கொண்டு ஒவ் வொரு இடத்திற்கும் சென்று அதை மக்களுக்குக் காண்பித்து மது அருந்துவதினால் இன்னன்ன தீமைகள் வரும் என்று பிரசாரம் செய்தது. இன்று எல்லாக் கட்சிக்காரர்களுக்கும் நினைவு இருக்கலாம். இன்று பலர் பலவிதமாக மதுவிலக்கைப் பற்றி குறை கூறினார்கள். இன்று ஒவ்வொரு நாட்டுக்கும், ஒவ்வொரு ஜாதிகளுக்கும் இந்த மதுவிலக்கானது மிகவும் அத்தியாவசியமாக இருக்கிறது. இந்த மதுவிலக்கை கனம் ராஜாஜி அவர் களுடைய மந்திரி சபையில் முதல் முதலாக இதைக் கொண்டுவந்த போது மக்கள் எல்லோரும் அவரை வாழ்த்தினார்கள். இந்த மது விலக்கினால் நல்ல நிலைமையை அடையமுடியும். நல்லதொரு வாழ்க்

**10th July 1957] [Sri P. K. R. Lakshmikantham]**

கையை அடையமுடியும் என்று மக்கள் நம்பினார்கள். அதைப்போலவே இன்று மதுவிலக்கு ஏற்பட்ட பிற்பாடு, உதாரணமாக சொல்லப்போனால் பெண்கள் இன்று மிகவும் நல்ல முறையில் வாழ்க்கையில் அந்தஸ்தைப் பெற்றிருக்கிறார்கள். மதுவிலக்கு வருவதற்கு முன்பு, உதாரணமாக கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் தான் சம்பாதித்த பணத்தில் பாதிப் பணத்தை மதுவில் செலவு செய்து வந்தார்கள். அவர்களுக்கு வீடுகளில் அந்த நாட்களில் உணவு இருக்காது, உடுக்க உடை இருக்காது ; குழந்தைகள் எல்லாம் கேவலமான நிலைமையில் இருப்பார்கள். ஆனால் மதுவிலக்கு ஏற்பட்ட பிறகு இன்று அவர்கள் வீட்டுக்குச் சென்று பார்த்தால் ஒரு சுபீட்சமான நிலைமையை அடைந்திருக்கிறார்கள். அவர்களுக்கு இன்று உடுக்க உடை இருக்கின்றது, உண்ண உணவு இருக்கின்றது. அந்த பெண்களில் பலர் இன்றைக்கு கௌரவத்தை அளிக்கும் என்று நினைக்கக்கூடிய நகைகளை பெற்றிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு அந்தஸ்தை பெற்று இருப்பது இந்த மதுவிலக்கினால்தான் என்று திட்டவட்டமாக சொல்ல முடியும். ஆனால் ஒன்று மாத்திரம் நிச்சயம். அரசாங்கம் சட்டம் செய்து விடுவதினால் மாத்திரம் எந்த ஒரு காரியத்தையும் சீக்கிரமாக வெற்றியாக நிறைவேற்றிவிட முடியும் என்று நாம் நினைக்கமுடியாது. ஆனால் இந்தப் பழக்கத்தை அடியோடு ஒழிக்க வேண்டுமென்றால் மக்களுடைய மனதை மாற்றவேண்டும். அதற்காக வெறும் சட்டத்தைக் கொண்டு மாத்திரம் இதை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியாது. ஆகையினால் ஒவ்வொரு அங்கத்தினரும் இந்த மதுவிலக்குத் திட்டத்தை பரிபூரணமாக நிறைவேற்ற வேண்டும் என்று விரும்பினால் ஒவ்வொரு அங்கத்தினர்களும் அவர்களுடைய அருகில் இருக்கும் கிராமங்களுக்குச் சென்று இந்த மதுவிலக்கினால் வரும் நன்மைகளைப் பற்றி பிரசாரம் செய்து வருவோமானால் இதை நாம் வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும். அதோடு நல்ல பலனையும் நாம் காண முடியும் என்று நான் நினைக்கின்றேன். இப்போது எல்லா இடங்களிலும் ஓரளவு கள்ளச் சாராயங்கள் காய்ச்சி வருவது என்பது உண்மைதான். பல இடங்களில் போலீஸ் படை இதைக் கண்டுபிடித்து வேண்டிய நடவடிக்கை எடுக்கிறார்கள். மதுவிலக்கு சட்டம் செய்யப்பட்டதால்தான் எடுக்கிறார்கள். இன்று ஏழைகளும், தொழிலாளிகளும் குடிப்பழக்கத்தைவிட்டு பாலை அருந்தும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். இந்த சட்டத்திலும் ஓரளவு குறைகள் இருக்கத்தான் செய்கிறது. உடனடியாக எல்லாவற்றையும் ஒழித்துவிடுவது என்பது சுலபமல்ல. அதையெல்லாம் சர்க்கார் கவனித்து வேண்டியது செய்து வருகின்றது. அதற்கு வேண்டிய இன்னும் சில கட்டுப்பாடான விதிகளையெல்லாம் விதித்து அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் செய்ய வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். இந்த மதுவானது மனிதனுடைய உடலையும் கெடுத்துவிடுகிறது. அதோடு மனிதனுடைய மனதையும் புத்தியையும் கெடுத்துவிடுகிறது. அதனால் நல்ல உயர்ந்த உணவுகளையும் கருத்துக்களையும் கற்றுக்கொள்ள முடிவதில்லை. ஆகையினால் பலதரமான கீழ்த்தரப்பட்ட உணர்ச்சிகளுக்கு ஆளாகவேண்டி இருக்கிறது. ஆகவே இந்தத் மதுவிலக்கு பரிபூர்ணமாக வெற்றி பெற்றால்தான் நாட்டிலுள்ள மக்கள் உயர்ந்த மனப்பான்மையோடு வாழ வசதி கிடைக்கும். ஆகவே இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்காக இந்த மான்யத்தை முழுமனதோடு ஆதரிக்கின்றேன். மேலும் இந்தத் திட்டம் வெற்றிகரமாக நடைபெறுவதற்கு வேண்டிய கடுமையான நடவடிக்கைகளை எல்லாம் வகுத்து கள்ளச்சாராயம் காய்ச்சுவதையெல்லாம் நிறுத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

**Sri A. V. P. ASAITHAMBI** : அவைத் தலைவர் அவர்களே, மதுவிலக்குக் கொள்கைகளை பரிபூர்ணமாக திராவிட முன்னேற்றக்கழகம் ஆதரிக்கிறது என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். கனம் பக்தவத்ஸலம் அவர்களிடம், எங்களுடைய தலைவர் அண்ணா அவர்கள் பூர்வாசத்திரம் என்ற ஊரில் நடந்த ஒரு கூட்டத்தில் மதுவிலக்கை வெற்றிகரமாக நடத்துவதற்கு எங்களால் இயன்ற எல்லா பணிகளையும் செய்யத் தயார் என்று அறிவித்து இருக்கிறார் என்பது நீங்கள் அனைவரும் அறிந்ததாகும். மதுவிலக்கைப் பற்றி நாங்கள் பேசுகிறபோது, அதிலே இருக்கிற

குறைபாடுகளை நாங்கள் சுட்டிக்காட்டினால் அந்தக் குறைபாடுகளுக்கு எல்லாம் நிறை காண வேண்டியது அரசியலாரின் கடமையே தவிர எதிர்க் கட்சியினர் வேண்டுமென்று குறை கூறுவதாக கருதக் கூடாது. மதுவிலக்குத் திட்டம் ஏழைமக்களுக்கு நன்மை செய்வதற்காக கொண்டு வரப்பட்ட ஒரு திட்டம். ஆனால் நடைமுறையில் அது ஏழை மக்களுக்கு நன்மை செய்யக்கூடியதாய் இருக்கிறதா, இருக்குமா என்பதை நாம் மிகவும் உன்னிப்பாக எண்ணிப் பார்க்கவேண்டும். மதுவிலக்குத் திட்டம் அமலில் இருக்கிற காரணத்தினாலே நம்முடைய தங்கைமார்கள் கழுத்தில் தங்கத்தைக் காண்கிறோம், பெண்கள் கழுத்தில் நகையைக் காண்கிறோம் என்று நமது மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்களும், மற்ற அங்கத்தினர்களும் பேசினார்கள். ஆனால் அந்தக் கருத்து தவறான கருத்தாகும். ஏனெனில், அது உண்மையாக இருக்குமானால், அது தங்கமாக இருக்காது, போலி நகையாகவே இருக்கும் என்றுதான் நான் கருதுகிறேன். ஏனென்றால், மதுவிலக்கினால் ஏழைகளிடம் பணம் தங்கவே இல்லை. மதுவிலக்குக் கொள்கை வருவதற்கு முன்பாக இந்தச் சர்க்காருக்கு கலால் இலாகாவிலிருந்து வந்துகொண்டிருந்த வருமானம் 18 முதல் 20 கோடி ரூபாய் வரையாகும். கலால் இலாகா வருமானமே இவ்வளவு என்று சொன்னால், மதுவிற்பனை ஒரு ஐந்து பங்கு கூட என்று வைத்துக் கொண்டாலும் சுமார் 100 கோடி ரூபாய் வரை மது விற்பனை இருந்தது என்றுதான் சொல்லவேண்டும். இந்த மதுவிலக்குத் திட்டம் வருவதற்கு முன்பாக இந்த மது விலக்குக் கடைகளை வைத்து நடத்திய முதலாளிகளுக்கு இந்த 100 கோடி ரூபாய் போய்க்கொண்டிருந்தது. அதற்குள்ள வருமான வரியோ மற்ற வரிகளையோ அவர்கள் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் இந்த மதுவிலக்கு வந்ததற்கு அப்புறம் அந்த 100 கோடி ரூபாய் அம்முதலாளிகளிடம் தங்காது குடித்துக்கொண்டிருந்தவர்களிடம் தங்கி அதன் பயனாக அந்தக் குடும்பங்கள் நல்ல நிலைமைக்கு வந்திருக்கவேண்டும் அல்லவா ? என்று விவாதிக்கிறார்கள். நேற்றுவரை குடித்துக் கொண்டிருந்தவர்கள் இந்த மதுவிலக்கு வந்தவுடனே மறைமுகமாக குடிப்பதை நான் சுட்டிக் காட்ட விரும்பவில்லை. அதற்கு மாறாக, சோடா குடிக்கிறார்கள். சினிமாவிற்கு அடிக்கடி போகிறார்கள். இதிலே நான் ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். பத்துப் பதினைந்து வருடங்களுக்கு முன்பெல்லாம் புது புது சினிமா படங்கள் அதிகமாக வராது. இப்பொழுது சினிமா படங்கள் அதிகமாக வருவதற்கும், ஒரு படம் அதிக நாட்கள் நடப்பதற்கும் காரணம் இந்த மதுவிலக்குத் திட்டம் ஒன்றாகும். ஏழை மக்கள் அவர்களிடம் மீதப்படுகிற பணத்தை அதிலே கொண்டு போடுகிறார்கள். குடியினால் மீதப்படுகிற பணத்தை இம்மக்கள் சோடா குடிப்பதிலும், சினிமா பார்ப்பதிலும் கொண்டுபோய் போட்டுவிடுகிறார்கள். அதேபோல் "லக்ஷுரியஸ் குட்ஸிலும்" போடுகிறார்கள், இந்த ஏழைமக்கள். இதனால் வரக்கூடிய பாதகம் என்னவென்று கேட்டால் 100 கோடி ரூபாய் நேற்றுவரைக்கும் நம் நாட்டிலே இருந்து வந்த பணம் இன்று நமக்குத் தெரியாமல் மறைமுகமாக, வெளிநாடுகளுக்குப் போகிறது. 60,70 கோடி ரூபாய் இன்று மறைமுகமாக வெளிநாடுகளுக்குப் போகிறது. உதாரணமாக சினிமாவை எடுத்துக்கொண்டால், அதற்கு நான்கில் மூன்று பாகம் பொருள்கள் வெளிநாடுகளிலிருந்துதான் இறக்குமதியாகிறது. கச்சா பிலிம், மெஷினரிகள் போன்றவைகள் வெளிநாடுகளிலிருந்துதான் இறக்குமதியாகிறது. அடுத்ததாக, சோடாக் கலரை எடுத்துக் கொண்டால், எஸென்ஸ் முதல் பாட்டில்கள் வரை வெளி நாடுகளிலிருந்துதான் வருகிறது. அதற்கு அடுத்தாற்போல், இந்த லக்ஸுவரி குட்ஸ்-ம் வெளிநாடுகளிலிருந்துதான் வருகிறது. ஆகவே இவைகளுக்காகச் செலவு செய்யப்படும் பணம் எல்லாம் வெளி நாடுகளுக்குத்தான் போகிறது. மதுவிலக்கினால், நம் நாட்டுப் பணம் முதலாளிகளின் கையில் தங்கி அதில் இருந்து நமக்குக் கிடைத்த வருமானமும் போய், அப்பணம் தொழிலாளிகளின் கையிலும் தங்காமல் இண்டயரக்ட்டாக வெளி நாடுகளுக்குத்தான் போகிறது. ஆகவே இதைக் கட்டுப்படுத்தி, நம் பணம் நேர்முகமாகவோ அல்லது மறை முகமாகவோ வெளி நாடுகளுக்குப் போக விடாதபடி வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப் •படவேண்டும். அதோடு இன்னொரு காரியம் சொல்ல விரும்புகிறேன். போதை வேண்டுமென்று இப்பொழுது பெயிண்ட், வார்னிஷ்,

10th July 1957] [Sri A. V. P. Asaithambi]

முதலியவைகளைக் குடித்து மக்கள் சாகிறார்கள். ஆகவே பதனீரை நல்ல முறையில் பக்குவப்படுத்தி, பூனமல்லி ஹைரோட்டில் ஒரு ஷாப் ஒப்பன் செய்திருக்கிறார்கள். அதைபோல் பதனீரை நல்ல முறையில் பக்குவப்படுத்திக் கொடுக்கவேண்டும். ஆகவே ஒவ்வொரு பிரதேசத்திலும் அதற்காகச் செலவு செய்து, நம் பணம் வெளிநாடுகளுக்குப் போவதைத் தடுக்கவேண்டும். அதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளும்படிக் கேட்டுக் கொள்கிறேன். இந்த மதுவிலக்கினால் ஏற்பட்ட ஒரே ஒரு நல்ல பலன் என்னவென்று கேட்டால், மக்கள் மதியை மாய்த்துக்கொள்ளும் நிலை மாறி தன்னைத்தானே யோசிக்கக்கூடிய அளவிற்கு மதியைப் பெறுவதற்கு இந்த மதுவிலக்குத் திட்டம் பயன்படும். இன்று எந்த ஜெயிலை எடுத்துப் பார்த்தாலும், இந்தத் தொழில் நடத்துபவர்கள்தான், இவர்களின் எண்ணிக்கைத்தான் அதிகம். இவர்களுக்கு வெளியே ஜோலி இல்லை. ஆக ஒன்று பிச்சை எடுக்கவேண்டும், இல்லை களவாடவேண்டும். ஆனால் ஜெயிலுக்கும்போனால் பெல் அடித்து மூன்று வேளை சாப்பாடு போடுகிறார்கள். ஆகவே ஜெயிலுக்கு போய் வருவது ஒரு தொழிலாகி விட்டது. எனவே சர்க்கார் இந்த மதுவிலக்குத் திட்டத்தை தீவிரப்படுத்த விரும்பினால், விற்பவர்களை லேசாக தண்டித்து வாங்குபவர்களை கடுமையாகத் தண்டிக்க வேண்டும். விற்பவர்கள் சாதாரண ஆட்கள். ஆனால் சிலசமயம் அதை வாங்குபவர்கள் பெரிய பணக்காரர்களாய் இருக்கிறார்கள். ஆக, வாங்குபவர்களைக் கடுமையாகத் தண்டித்தால் வாங்குபவர்களின் எண்ணிக்கை குறையும்போது விற்பவர்கள் வாங்குவதற்கு ஆட்கள் இல்லாத காரணத்தால் அதை உற்பத்தி செய்ய மாட்டார்கள். ஆகவே இந்த முறையில் சர்க்கார் தண்டனையை மாற்றியமைக்க வேண்டும். அடுத்தபடி, இந்த மரமேறிகளின் பிரச்னை. இந்த மரமேறிகளின் காரியத்தை சர்க்கார் சரிவர கவனிக்கவில்லை. ராஜாஜியின் காலத்திலும் மரமேறிகள் கவனிக்கப்படவில்லை. மரமேறிகளுக்கு அந்தத் தொழிலைத் தவிர வேறு தொழில் தெரியாது. அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே இந்த மரமேறித் தொழிலாளர்களுக்குக் கல்வி கற்றுக் கொடுத்து அவர்களை முன்னுக்குக் கொண்டு வரவேண்டியது சர்க்காரின் கடமை. சாணார் என்று சொல்லக் கூடிய மரமேறித் தொழிலாளர்கள், சாணார் என்று போட்டால் அவர்கள் "பாக்வேர்ட் க்ளாஸ்" என்று இருந்ததாகவும், ஆனால் இப்பொழுது பத்துப் பதினைந்து நாளாயிற்று, அது ரத்து செய்யப்பட்டு விட்டதாகவும் கேள்விப்பட்டேன். அப்படி ரத்து செய்யப்பட்டிருந்தால் அது வருந்தத் தக்க விஷயமாகும். அவர்களை "பாக்வேர்ட் கிளாஸ்" இனத்தில் வைத்து அவர்கள் முன்னேற்றம் அடையும்படிச் செய்ய அரசாங்கம் முயற்சிக்க வேண்டும். ஆக, மதுவிலக்குத் திட்டத்தால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு ஒரு நிவாரணமும், நம்முடைய பணம் அனாவசியமாக வெளி நாடுகளுக்குப் போகாமல் தடுக்க சில தொழிற்சாலைகளை இங்கு ஸ்தாபிக்கும் தன்மையிலும், இந்தத் தண்டனை முறையை மாற்றியமைக்கவும், போலீஸ் இலாகா இதை நல்ல முறையில் அமல் நடத்துவதற்கும் அங்கத்தினர் ஒருவர் சொன்னது போல் ஒரு சர்வ கட்சி கமிட்டி ஒன்று போட்டு இதை அமல் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**Mr. SPEAKER** : இன்னும் அநேக நண்பர்கள் பேச வேண்டியிருப்பதால் அங்கத்தினர்கள் ஐந்து அல்லது ஏழு நிமிடங்களுக்குள் பேசி முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்..

* **Sri P. S. CHINNADURAI** : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, 11 a.m.
மது விலக்குத் திட்டத்தை தீவிரமாக ஆதரிக்கின்றவன் நான் என்ற முறையிலேயும் இந்த மது விலக்குத் திட்டத்தை மிகவும் உறுதியாக அமல் நடத்துவதிலே இந்த அரசாங்கம் தயக்கம் காட்டுகிற காரணத்தால் அந்தப் போக்கினை சற்று மாற்றிக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்துகிற முறையிலும் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். மது விலக்குத் திட்டத்தால் நம் ராஜ்ய மக்கள் பலன் அடைந்திருக்கிறார்களா, இல்லையா என்ற விஷயத்தைப் பொறுத்த மட்டில் நான் நிச்சயமாகச் சொல்லுவேன், தொழிலாளர்கள் இந்த மதுவிலக்குத் திட்டத்தினால் மிகவும் நல்ல பயனை அடைந்திருக்கிறார்கள் என்று. கிராமப்

[Sri P. S. Chinnadurai] [10th July 1957

புறங்களில் வாழ்கின்ற சாதாரண நிலையில் உள்ளவர்களும் இதனால் நல்ல பயனைப் பொருளாதாரத் துறையில் அடைந்திருக்கிறார்கள் என்று உறுதியாக நான் கூறுவதற்கு முடியும். ஆனால் இந்தப் புள்ளி விவரங்களை எடுத்துக் காட்டுகிற முறையிலே அரசாங்கச் செய்தி விளம்பர இலாகா தகுந்த ஏற்பாடுகளைச் செய்யவில்லை என்பதே எனது குறையாகும். மது விலக்குத் திட்டத்தை தீவிரமாக ஆதரித்துப் பிரசாரம் செய்கின்ற அந்தப் பணியை முன்பு மதுவிலக்குத் திட்டத்திற்கு மிகவும் நன்கு ஆதரவு காட்டி அதனை முதன்மையாகப் பிரசாரம் செய்த காங்கிரஸ் கமிட்டிகள் தற்காலம் அதை மறந்திருக்கின்றன என்று நான் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது. ஒரு பக்கத்தில் காங்கிரஸ் கமிட்டிகள் அவ்வாறு இருக்கின்ற நேரத்திலே, அரசாங்கமாவது தன்னுடைய செய்தி விளம்பர இலாகாவின் மூலமாக தகுந்த பிரசார ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று நான் விரும்புகிறேன். இந்தப் பிரசார ஏற்பாடுகள் எவ்வாறு இருக்க வேண்டுமென்றால், முன்பு மதுவிலக்கு இல்லாதிருந்த நேரத்தில் சாதாரண மக்களுடைய வாழ்க்கை நிலை எப்படியிருந்தது, மதுவிலக்கு வந்த பிறகு அவர்கள் பொருளாதாரத் துறையில் எவ்வளவு பயன் அடைந்திருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டக் கூடியதாக இருக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்த மது விலக்குத் திட்டத்தை உறுதியாக அமுல் நடத்தும் முறையிலே ஒரு பெரும் குறை இருக்கிறது. அதுதான் பெரிய மனிதர்களுக்கு குடிப்பதற்கு பெர்மிட் வழங்கும் பழக்கமாகும். கொள்ளை, கொலை இவைகளைத் தடுப்பதற்கு நாம் சட்டம் இயற்றியிருக்கிறோம். ஆனால், கொலை, கொள்ளை நடத்துவதற்கு பர்மிட் வழங்கவில்லை. விபசாரம் செய்யக் கூடாது என்று நாம் சட்டம் போட்டிருக்கிறோம். ஆனால் லைஸென்ஸ் விபசாரம் அனுமதிக்கவில்லை. அதுபோலவே, மதுவிலக்கை நாம் உறுதியாக நம்பி அமுல் நடத்துவது உண்மையானால் பர்மிட் வாங்கிக் கொண்டு குடிப்பதற்குச் சிலருக்கு அவர்களின் பொருளாதார அந்தஸ்து காரணமாக நாம் அனுமதியளிப்பது என்பது சரியானதல்ல என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். நம் ராஜ்ய அரசாங்கத்தை நான் நிச்சயம் மனதாரப் பாராட்டுவேன். ஏனென்றால், மகாத்மா காந்தியோடு வாழ்ந்தவர்கள், இணைந்திருந்தவர்கள் எனத் தம்மைக் கூறிக் கொள்ளும் சிலர் மது விலக்குத் திட்டம் தோற்று விட்டது, அதைத் தொடர்ந்து அமுல் நடத்துவதில் பலனில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கின்ற நேரத்திலே, இந்திய அரசாங்கம் நடத்துகிற பெரிய விருந்துகளில் கூட உயர்தர மதுபானங்கள் பரிமாரப்படுகிற நேரத்திலே, வெளி நாடுகளிலுள்ள இந்திய ஸ்தானீகராலயங்களில் மது பானத்தை அருந்துவதை ஒரு கலையாகக் கருதிக்கொண்டிருக்கின்ற நேரத்திலே, இந்த ராஜ்யம், பெருமைக்குரிய முறையிலே, உறுதியாக மதுவிலக்கை அமல் நடத்த முடிவு செய்து கொண்டிருப்பது வரவேற்கத் தக்கது. ஆனால் காங்கிரஸ் ஆட்சி நடத்தும் இந்தியாவின் ஒரு அங்கமாக நாம் இருக்கிறோம். அண்டை ராஜ்யங்களான புதுச்சேரி, கேரளம், இன்னும் மற்ற ராஜ்யங்களிலும், மது விலக்குத் திட்டம் சரியான அளவில் அமல் நடத்தப்படாது இருக்கிற நேரத்தில் நாம் மட்டும் அதைத் தனித்து வெற்றிகரமாக நடத்த முடியும் என்பதை என்றால் நம்பமுடியாது. காங்கிரஸ் பல ராஜ்யங்களிலும் ராஜ்ய பாரம் வகிக்கிற காரணத்தால், இந்த மது விலக்குத் திட்டத்தை அமல் நடத்த வேண்டுமென்று எல்லா ராஜ்யங்களுக்கும் உத்திரவிடவேண்டுமென்று இந்த ராஜ்ய அரசாங்கத்தினர் காங்கிரஸ் மகா சபை மூலமாக கேட்டுக்கொண்டு அதற்கு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறுகிறேன். இதனை செய்கிறதற்கு இந்த ராஜ்யத்தில் இருக்கின்ற மிகவும் செல்வாக்கு மிகுந்த காங்கிரஸ்காரர்கள் முயற்சி எடுக்கவேண்டும். அது அவர்களின் தேசியக் கடமை என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதோடு மதுவிலக்குக் கமிட்டிகள் ஆங்காங்கு அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த மதுவிலக்குக் கமிட்டிகளில் பல கட்சியினரும் இருக்கிறார்கள் என்பது உண்மை. இம்மாதிரி கமிட்டிகள் ஒவ்வொரு கிராமத்திற்கும் அமைக்கப்படவேண்டும். குறிப்பாக அந்தந்த கிராமத்தைச் சேர்ந்த பெண்மணிகள் அதில் அதிக இடம் பெற ஏற்பாடு செய்யவேண்டும். இந்தமாதிரியான ஏற்பாடுகளை அரசாங்கம்

10th July 1957] [Sri P. S. Chinnadurai]

செய்தால்தான் அந்தந்த கிராமங்களில் மதுவிலக்குக் கமிட்டிகள் சரியாக வேலை செய்வதற்கும் அரசாங்கத்தோடு நல்ல முறையில் வேலை செய்வதற்கும் ஏதுவாகும். இதை அரசாங்கம் செய்யவேண்டுமென்று சொல்லுகிற முறையில் இந்த வெட்டுப் பிரேரணையை ஆதரிக்கிறேன்.

**Sri S. R. MUNUSAMI :** கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது நம்முடைய மந்திரி அவர்கள் கொண்டு வந்திருக்கும் பிரேரணையை ஆதரித்து நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இப்போது அமுலில் இருக்கும் மது விலக்குச் சட்டம் யாரை பாதிக்கிறது என்பதை முதலில் சர்க்கார் யோசிக்கவேண்டும். மதுவிலக்கு சட்டத்தால் பாதிக்கப்படுவது யாரென்றால் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களே. இந்தத் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களைக் கண்டால் போலிஸுக்குக் கூட வேட்டையாக இருக்கிறது. எந்தெந்த இடங்களுக்குப் போனாலும் சரி, அந்த இடங்களிலே தங்களுடைய திட்டத்தை அமுல் நடத்த சரியானபடி குற்றங்கள் கிடைக்கவில்லையென்றால் சேரிகள் பக்கம் திரும்புகிறார்கள் ; அப்பொழுது இரவு இரண்டு மணியானாலும் புருஷன் மனைவியோடு படுத்திருந்தாலும், தாராளமாக வீட்டிற்குள் புகுந்து வேட்டையாடுகிறார்கள். மதுவிலக்குக் குற்றங்களுக்காக ஏற்கெனவே தண்டிக்கப்பட்டவர்களை கணக்கெடுத்துப் பார்த்தால், அதில் சேரி வாசிகள்தான் அதிகமாயிருப்பார்கள். இரண்டு ஆயிரம் அல்லது 3 ஆயிரம் காலன்கள் திருட்டுத்தனமாக உற்பத்தி செய்வது சேரிவாசிகள் அல்ல. ஆனால் அவர்கள் குடிப்பார்கள். அப்படிக் குடிப்பது ஏன் ? இந் நாட்டின் இதர சமுதாயம் அப்படி குடிக்கச் சொல்லி வற்புறுத்துகிறது. தாழ்த்தப்பட்ட மக்களை சர்க்கார் தண்டிக்கிறது. சர்க்கார் தண்டிக்க வேண்டிய சட்டத்தைக் கொண்டுவந்திருந்தும், நாட்டிலுள்ள மற்ற சமுதாயத்தினருக்கு மேளம் அடிக்கவேண்டும் என்று சொல்லி அவர்களை மறைமுகமாக குடிக்கும்படி வற்புறுத்துகிறார்கள். இந்த நாட்டிலுள்ள எல்லா வாத்தியங்களிலும் மிகவும் அநாகரீகமான வாத்தியம் மேளம் தான். மேளம் அடித்துக் கொண்டே, அநாகரீகத்தோடு கூட, இடுப்பை ஆட்டி ஆட்டி ஆடவேண்டி இருக்கிறது. மிருகத்தனமாக ஆடவேண்டியிருக்கிறது. இம்மாதிரி ஒரு மனிதன் தன்னையே மறந்து ஆட வேண்டும். இந்த மாதிரி தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை மணியக்காரர் முதல் கிராம பஞ்சாயத்து பிரஸிடெண்ட் வரை பெரிய பெரிய மேட்டு குடிகள் வற்புறுத்தி வதைக்கிறார்கள். இதை சர்க்காரும் அறியும். 1955–56-ம் வருஷத்திலிருந்து இரண்டு மூன்று வருஷங்களாக சர்க்காருக்கு பல முறை ரிப்போர்ட் அனுப்பியிருக்கிறேன். அதன் மூலமாக, வட ஆற்காடு ஜில்லாவை பற்றிச் சொல்லுகிறேன். எத்தனையோ குற்றங்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது அநியாயமாக சுமத்தப்படுகிறது. மேளம் அடிக்க வராவிட்டால் வீடுகளை பந்தத்தால் கொளுத்தி விடுவார்கள். உதாரணமாக கொணவட்டம் என்ற கிராமத்தில் மேளம் அடிக்க வரமாட்டோம் என்று சொன்னார்கள். அந்த கிராமத்தில் மூன்று வீடுகளை கொளுத்தினார்கள். அதை, சர்க்கார் கவனித்தார்களா ? குடிப்பவர்களைத் தண்டிப்பதைவிட, உற்பத்தி செய்பவர்களைத் தண்டிப்பது மிக மிக அவசியம். குடிக்கிறவர்களைப் பார்த்து, " மது விலக்கு சட்டம் இருக்கும்பொழுது, ஏன் இவ்விதம் குடிக்கிறீர்கள் " என்று கேட்டால், அவர்கள் "நாங்கள் பகல் முழுவதும் வேலை செய்து விட்டு வீடு திரும்பினால், மனைவி மக்கள் கண்ணீருடன் இருப்பதைப் பார்த்து, மிக்க கவலையுற்று, அந்த கவலையை போக்குவதற்குக் குடிக்கிறோம் " என்று சொல்கிறார்கள். இந்த நிலையைப் போக்கவேண்டும். இந்தச் சட்டத்தை சரியானபடி அமல் நடத்த வேண்டுமென்று சொல்லி என் பேச்சை முடித்துக்கொள்கிறேன். 11-05 a.m.

**Sri V. SUBBIAH :** கனம் சபாநாயகர் அவர்களே, வெட்டுப் பிரேரணையை ஆதரிக்கும் முறையில் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். வறுமையின் காரணமாகத்தான், இன்றைய நிலையில், சமுதாயத்தில், சிலர் குடிக்கிறார்கள். பெரும்பான்மையினர் மது அருந்த விரும்பவில்லை. இருப்பினும், கள்ளச் சாராயம் காய்ச்சுதல், குடிசைத் தொழிலாக இயங்கி வருவதற்குக் காரணம், ஜனங்களுடைய வறுமை நிலையும், அரசாங்கத்தார் அவர்களை வேறு தொழில்களில் ஈடுபடுத்தாமலும் இருப்பதுதான். மாஜி மரமேறிகள் பலர், தமிழ் நாட்டில் வேலையற்ற 11-10 a.m.

[Sri V. Subbiah] [10th July 1957

நிலைமையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு, கூட்டுறவு முறையில், பனை வெல்லம் காய்ச்சுவதற்கு ஏற்பாடுகள் செய்துகொடுக்கவேண்டும். இன்றையதினம், ஜில்லா, தாலூக்கா மதுவிலக்குக் கமிட்டிகள் உபயோக கரமாக வேலை செய்யவில்லை. கிராம மதுவிலக்குக் கமிட்டிகளையும் அமைத்து, எல்லா கமிட்டிகளும், மதுவிலக்குத் திட்டத்தை நல்ல முறையில் அமல் நடத்துவதற்கு வழிவகை செய்ய வேண்டும்.

இந்தச் சட்டம் போலீசாரால் இப்பொழுது அமல் நடத்தப்பட்டு வருகிறது. அப்படியிருந்தும், நகரங்களில், பாட்டில் பாட்டில்களாக கள்ளச் சாராயம் விற்பனைக்கு கொண்டுவருவதாக சொல்லப்படுகிறது. ஆனால் நாம் பார்ப்பது, பல நிரபராதிகளை தண்டிப்பதுதான். இது, நிர்வாகத்தில் உள்ள குறைகளை எடுத்துக் காட்டுகிறது. நல்ல உத்தியோகஸ்தர்கள், நாணயமுள்ளவர்கள், மதுவிலக்குக் கொள்கையில் நம்பிக்கை உள்ளவர்கள், இந்த மதுவிலக்குக் கொள்கையை அமுல் நடத்தினால்தான், எதிர்காலத்தில் இந்த வேலையில் வெற்றி காணமுடியும். பல நாடுகளில் இச்சட்டம் வெற்றி பெறுமலிருந்தும் கூட, தமிழ் நாட்டில் வெற்றிகரமாக செயல்பட முடியும் என்ற நம்பிக்கையோடு அரசாங்கத்தார் தீவிரமாக சட்டத்தை அமுல் ஆக்க வேண்டும். இதற்கு நல்ல பிரசாரம் செய்ய வேண்டும். ஜனங்களிடம் போதுமான மன மாற்றம் ஏற்பட்டால்தான் தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், இந்த இயக்கத்தை வெற்றிகரமாக நடத்த முடியும். குடி என்ற பழக்கம் தங்களுடைய முன்னோர் காலத்தில் இருந்ததா என்று எதிர் காலச் சந்ததிகள் சந்தேகிக்கும் படி நல்ல முறையில் இந்த சட்டத்தை அமல் நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த வெட்டு பிரேரணையை ஆமோதிக்கிறேன்.

11-15 a.m. **Sri, P. G. KARUTHIRUMAN** : சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் மான்யத்தை நான் வரவேற்கிறேன். நிதி நிலை அறிக்கை (Budget) விவாதத்தில், நிதி அமைச்சர் அவர்கள் தமது உரையில் அரசாங்கத்தினுடைய கொள்கையை என்ன என்பதை விளக்கவில்லை என்று சிலர் குற்றம் சாட்டினார்கள். காங்கிரஸ் அரசாங்கத்தின் அடிப்படைக் கொள்கை, அதன் பொருளாதார திட்டத்திற்கு மிகவும் முக்கியமான கொள்கை ஒன்று இருக்குமானால் அது, இந்த மதுவிலக்கு கொள்கைதான், என்று வலியுறுத்தி சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அது ஏற்பட்ட காலத்திலிருந்து, ஆராய்ந்து பார்த்தால், சாதாரண மக்கள் பலர் உயர்ந்து அபிவிருத்தி அடைந்து இருக்கிறார்கள் என்பதைப் புள்ளி விவரங்களுடன் காண்பிக்க முடியும். எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் பேசிய சந்தர்ப்பத்தில், மது விலக்கினால் ஜனங்களுடைய பொருளாதார நிலை உயர்ந்ததன் காரணமாக அவர்களிடம் உள்ள அதிகப் பணத்தை சினிமா பார்ப்பதிலும் மற்ற செயல்களிலும் செலவு செய்கிறார்கள் என்று சொன்னார்கள். இது வரவேற்கத்தக்க அம்சமே. சினிமாவுக்கும் மற்ற கேலிக் கூத்துகளுக்கும் அவர்கள் போகிறார்கள் என்றால் அவர்கள் வயிறு நிரம்பச் சாப்பிட்டு விட்டு சந்தோஷமாக பொழுது போக்கத்தான் சினிமாவுக்கு போகிறார்கள். அமைச்சருடன் திராவிட முன்னேற்ற கழகத் தலைவர் இவ் விஷயத்தில் ஆதரித்து ஒத்துழைப்பதாகச் சொல்லப்பட்டது. இப்போது பல பல லட்சக்கணக்கானவர்கள் போகிறபடியால் அவர்கள் தங்களுடைய சினிமா நாடகம் இவைகளில் மது விலக்கு சம்மந்தமான நல்ல கருத்துக்களை புகுத்தி அவை ஏழை எளியவர் மனதிலும் நன்றாய் படும்படியாகவும் செய்தால் மிக்க நலமாய் இருக்கும். அவர்களை மாற்றுத் தொழில்களில் ஈடுபடுத்துவதற்கான யோசனைகளையும் சொன்னால் நலம்.

**Sri M. KARUNANITHI** : திரு. அண்ணாதுரை அவர்கள் எழுதிய நல்ல தம்பி என்ற படத்தில் மதுவிலக்கின் நல்ல நோக்கங்களும் அம்சங்களும் எடுத்துக் காட்டப்பட்டிருப்பதை கனம் அங்கத்தினருடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

**Sri P. G. KARUTHIRUMAN**: ரொம்ப சந்தோஷம். மது விலக்குக்குச் சாதகமாக நல்ல முறையிலே பிரசாரம் செய்யவேண்டும் என்று யாவரும் சொல்கின்ற இந்த நேரத்திலே அவர்களுக்கு ஓர் நல்ல வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டவே இது பற்றி குறிப்பிட்டேன்.

அடுத்தபடியாக, கிராமத்தில் உள்ள ஹரிஜனங்கள் இப்பொழுது மிகவும் சந்தோஷமாக அவர்களுடைய வாழ்க்கை தரம் உயர்ந்ததால் நன்றாக இருக்கிறார்கள் என்பதை புள்ளி விவரங்களுடன் காட்ட முடியும். ஏதோ இப்பொழுது திருட்டுச் சாராயம் கள்ளச் சாராயம் காய்ச்சுவதாகச் சொல்லுகிறார்கள். மது விலக்கு வருவதற்கு முன் 100க்கு 30 பேர் வீதம் குடித்துக் கொண்டிருந்ததாகத் தெரிகிறது. மது விலக்கு வந்த பின்னர் குடிப்பவர்களில் 60 சதவிகிதம் குடிப்பதினின்று தடுக்கப்பட்டிருக்கிறார்கள். முன்பும் கள்ளச் சாராயம் காய்ச்சப்பட்டது. ஆனால் அவ்வளவு தெரியவில்லை. இப்பொழுது அதை வெகு விளம்பரப்படுத்துவதால் அதிகமாய் இருப்பதாகத் தோன்றுகிறது.

போன மந்திரி சபையில் இருந்த கனம் பக்தவசலம் அவர்களின் ஆதரவினால் கீழ் பவானி திட்டம் நிறைவேற்றப்பட்டது. அதன் கீழ் வேலை செய்து வந்த தொழிலாளர்கள் மதுவிலக்குச் சட்டம் அமுலில் இருந்து வந்ததினால் எவ்வளவு பணம் சேமித்து வைக்க முடிந்தது என்பதை புள்ளி விவரங்களுடன் கூற முடியும். 1949–51ல் அங்கு வேலை செய்த கூலியாட்கள் தங்கள் குடும்பச் செலவுபோக அவர்கள் உற்றார் உறவினர் வந்து போனதால் ஏற்பட்ட செலவுகளும் போக சுமார் ரூபாய் 14 லட்சம் தங்கள் சேமிப்பிலிருந்து மணியார்டர் மூலம் அனுப்பி இருக்கிறார்கள். இதைப் பார்க்கும் போது அவர்கள் வாழ்க்கைத் தரம் உயர்ந்து மிகவும் சந்தோஷமாக இருக்க இந்த மதுவிலக்கினால் ஏற்பட்ட சேமிப்பு எப்படி உதவியிருக்கிறது என்பது புலனாகும். ஏதோ ஒரு சில தவறுதல்கள் நடந்து விட்டன என்பதற்காக இந்தத் திட்டமே தோற்றுவிட்டது என்றும் காங்கிரசிலிருந்து வெளியேறியவர்களே இது தோற்று விட்டது என்று சொல்வதைச் சுட்டிக் காட்டுவதையும் எடுத்துக்கொள்ள முடியாது. அவர்கள் மனப் போக்கு வெவ்வேறு சந்தர்ப்பத்தில் வெவ்வேறு காரணங்களினால், வெவ்வேறு விதமாக இருந்திருக்கக்கூடும். இந்த சமயத்தில் ராஜாஜி அவர்கள் சொல்லும் ஒரு கதையை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். கீசகன் என்ற ஒரு அரக்கனுக்கு ஒரு ஊரில் உள்ள ஜனங்கள் தினந்தோறும் நரமாம்சம் அனுப்பி வந்தனர்.

**Sri M. KARUNANITHI** : அது கீசகன் அல்ல. அந்த அரக்கன் பெயர் பகாசுரன்.

**Sri P. G. KARUTHIRUMAN** : அது யாராய் இருந்தாலும் சரி. பகாசுரன் இறந்ததன் காரணமாக, பெண்கள் விதவைகளாவது நின்று அதனால் க்ஷவரத் தொழிலாளர்களுடைய தொழில் பாதிக்கப்பட்டு அவர்கள் மாநாடு கூட்டி கிளர்ச்சி செய்தால் எப்படி இருக்குமோ அப்படி இருக்கிறது எதிர் கட்சி அங்கத்தினர் ஒருவர் கூறிய கருத்து—அதாவது மது விலக்கினால் மரமேறிகளுடைய பிழைப்பு போய் விட்டது என்று சொல்வது. கனம் அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்ட தீவிர நடவடிக்கைகளின் காரணமாக சென்னை நகரத்தை சுற்றி பத்து மைல் தூரம் வரையிலும் லக்ஷ்மியே தாண்டவமாடுகிற ஒரு நிலை கிராமங்களிலே ஏற்பட்டிருப்பதை திட்டமாகச் சொல்ல முடியும். இந்த மது விலக்குக் கொள்கையினாலே எவ்வளவோ கோடி ரூபாய் சர்க்காருக்கு வருமானம் குறைகிறது என்று சொன்னார்கள். அப்படியிருந்த போதிலும் மக்களுக்கு வாழ்க்கைக்கு வேண்டிய அவசியமான பொருள்களுக்கு கோடிக் கணக்கான ரூபாய் செலவழிக்கிறார்கள். மது விலக்கு கொள்கையினால் குறைந்த வரும்படியை விற்பனை வரி போட்டு ஈடு செய்திருக்கிறார்கள். அது பற்றி கவலைப் படவேண்டியதில்லை. மது விலக்குத் திட்டத்தினால் சர்க்காருடைய வருவாய் குறைந்து போய் விட்டதே என்ற ஒரு நிலை இருந்த போதிலும் இந்த சமூக சீர்திருத்தத்தினால் இப்பொழுது இருக்கும் படியான குழந்தைகள் பிற்கால வாழ்க்கையில் குடியில்லாத ஒரு நிலையில் இருந்து வருவார்கள். இந்தத் திட்டத்தின் பூரண வெற்றி 10, 15, வருஷங்களுக்குப் பிறகுதான் தெரியும். மது விலக்கு கொண்டு வந்த காரணத்தினால் புது குடிகாரர்கள் தோன்ற மாட்டார்கள்; தோன்றுவதற்கு சந்தர்ப்பமும் இல்லை. இதனால்தான் இதற்காக சர்க்கார் பெரிய திட்டம் போட்டிருக்கிறார்கள். எல்லா அங்கத்தினர்களும் எந்த

இடத்திலே தவறு நடந்தாலும் அதை சர்க்காருக்குத் தெரிவித்து ஒத்துழைத்தால் மது விலக்குத் திட்டம் சிறந்த முறையிலே வெற்றிகரமாக நிறைவேறும். " எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தலாலே இல்லை இல்லாரும் உடையாரும் இல்லை மாதோ " என்ற முறையில் ராம ராஜ்யம் நடத்த வேண்டும். எல்லோரும் பூரணமாக ஒத்துழைத்தால் மதுவிலக்குத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேறும் என்று சொல்லிக் கொண்டு, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த மான்யப் பிரேரணையை பரிபூரணமாக ஆதரிக்கிறேன்.

**Sri A. V. P. ASAITHAMBI** : ராமாயணத்தில் மது குடித்தார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

**Sri P. G. KARUTHIRUMAN** : மது என்பதற்கு தேனுகிய பானம் என்று அர்த்தம்.

11-22 a.m. **Sri N. MARUDACHALAM** : கனம் சபாநாயகர் அவர்களே, நான் மது விலக்குத் திட்டத்தை பரிபூரணமாக ஆதரிப்பதுடன், இந்தத் திட்டத்தில் உள்ள சில குறைபாடுகளை நிவர்த்திப்பதற்கு அரசாங்கம் சில முன் முயற்சிகளை எடுக்கவில்லை என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். மது மரத் தொழிலாளர்களுக்கு மாற்று வேலை கொடுக்கவில்லை என்று பல நண்பர்கள் சொன்னார்கள். எங்கள் ஊரிலே மதுமரத் தொழிலாளர்கள் அதிகம் இருக்கிறார்கள். மது விலக்குச் சட்டம் வந்ததின் காரணமாக வேலையில்லா திண்டாட்டத்தினால்தான் மதுமரத் தொழிலாளர்கள் பல இடங்களுக்கு போய் விட்டார்கள். பல இடங்களிலே மதுமரத் தொழிலாளர்களுக்கு பதனி இறக்குவதற்கு பெர்மிட் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களில் பலர் மறுபடியும் சாராயம் காய்ச்சுவதற்கு ஆரம்பித்து விட்டார்கள். இதற்குக் காரணம் வேலையில்லாத் திண்டாட்டமும், வாழ்க்கைக்கு போதிய வசதி இல்லாததும்தான். இன்றைக்கு மது விலக்கு சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படுபவர்கள் 100க்கு 99 பேர் ஏழைத் தொழிலாளிகள், விவசாயிகள் இவர்கள் தான். அவர்களுடைய வேலையில்லா திண்டாட்டம் ஒழிந்தாலொழிய மது விலக்குத் திட்டத்தை அமுல் நடத்த முடியாது என்பது என் உறுதியான நம்பிக்கை. ஒவ்வொரு ஊரிலும் இன்று தாழ்த்தப்பட்ட மக்கள் 100, 200 பேர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்று கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கம் உடனடியாக அவர்களுக்கு வேலை கொடுத்து மது விலக்குத் திட்டத்தை அமுல் நடத்துவதற்கு முன்முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

11-25 a.m. **Sri V. K. RAMASWAMY MUDALIYAR** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மதுவிலக்குச் சட்டம் அமுல் செய்வது பற்றி பல அங்கத்தினர்கள் எவ்வளவு சொல்ல வேண்டுமோ அவ்வளவும் சொன்னார்கள். என்னுடைய முக்கியமான கருத்து என்னவென்றால் மது விலக்கு இலாகாவிலிருந்து போலீஸுக்கு போன பிறகு இந்தத் திட்டம் சரியாக அமுல் நடை பெறவில்லை என்பதுதான். அவர்களுக்குப் போதுமான ஆபீஸர்கள் இல்லை என்றும் கேள்வி. தவிர திடீரென்று போய் சோதனை செய்வதற்கும், குற்றங்களை கண்டு பிடிப்பதற்கும் அவர்களுக்குப் போதுமான போக்குவரத்து வசதி கிடையாது என்றும் கேள்வி. மேலும் அந்த இலாகாவிலிருக்கும் ஆபீஸர்கள் இந்த மது விலக்குச் சட்டத்தை நல்ல முறையில் அமுல் செய்வதில்லை என்றும் பெரிய புகார் இருக்கிறது. அதிலும் லஞ்சம் வாங்குகிறார்கள் என்ற புகாரும் இருக்கிறது. மேலும் அவர்களில் சில பேர்கள் குடிப்பழக்கம் உள்ளவர்களாக இருக்கிறார்கள் என்ற வதந்தியும் உலாவுகிறது. அதிலும் ஓரளவு உண்மை இருக்கிறது என்று தான் நினைக்கிறேன்.

இரண்டாவதாக, மரமேறிகளுக்குப் போதுமான வசதிகள் கொடுத்து அவர்களுக்கு மாற்றுத் தொழில் கொடுக்கவில்லை. என்னுடைய பிராந்தியத்திலிருந்து அநேக மரமேறிகள் சென்னைக்கு வேலைக்காக வந்து மறுபடியும் திரும்பி விட்டார்கள். காரணம் சென்னையிலும் தகுந்த வேலை கிடைக்

10th July 1957] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

காததுதான். பதனி இறக்குவதற்கு கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பித்து நடை பெறுகின்றன. அப்படி நடந்து வந்த போதிலும், இன்னும் அம் மாதிரி அநேகம் கூட்டுறவு சங்கங்களுக்கு பதனி இறக்குவதற்கு லைசென்ஸ் கொடுக்கப்படவில்லை. அப்படி லைசென்ஸ் கொடுக்கப்பட்டவர்களுக்கும் சில கஷ்டங்கள் இருக்கின்றன. வெல்லம் சரியாக விற்பனையாவது இல்லை. புதுச்சேரி போன்ற இடங்களுக்குப் போனாலும் போதுமான மார்க்கெட் இல்லை. நல்ல விலை கிடைப்பதில்லை.

அடுத்தபடியாக, சில குற்றங்கள் கண்டுபிடிக்கப்புட்டு மாஜிஸ்டிரேட் முன் சார்ஜ் செய்யப்பட்டாலும், குற்றவாளிகளுக்கு ஒரு ரூபாய் அபராதம் போட்டு விட்டுவிடுகிறார்கள். அதன் காரணமாக அநேகம் பேர்கள் இந்தத் தொழிலை விட்டதாகத் தெரியவில்லை. அப்படிப்பட்ட குற்றவாளிகளுக்கு கடுமையான ஜெயில் தண்டனை கொடுக்க வேண்டும். இதற்காக சட்டத்தை மாற்றி அமைக்க முடியுமா என்பதை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும்.

அநேகம் பேர்கள் டாக்டர் சர்டிபிகேட் மூலம் குடிப்பதற்கு பெர்மிட் பெறுகிறார்கள். இந்த பெர்மிட்டுகள் அநேக இடங்களில் துர்விநியோகம் செய்யப்படுவதாகத் தெரிகிறது. இந்த பெர்மிட்டுகள் கொடுப்பதில் ரொம்ப வும் கண்டிப்பாக இருக்க வேண்டும். சர்க்காருக்கு இது விஷயமாக நான் ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். அதாவது, ஒரு டாக்டர் மட்டும் இந்த பெர்மிட் கொடுப்பது என்பதை மாற்றி, நான்கு, ஐந்து தகுந்த டாக்டர்கள் கொண்ட ஒரு போர்டை அமைத்து அந்த போர்டின் சர்டிபிகேட்டின் பேரில் இந்த பெர்மிட்டுகள் வழங்கப்படவேண்டும். அப் படிச் செய்தால் பெர்மிட்டுகள் கொடுப்பது கொஞ்சம் குறையும் என்று நான் நினைக்கிறேன். எல்லா கட்சிகளையும் சேர்ந்த அங்கத்தினர்கள் கொண்ட ஒரு கமிட்டி போட்டு இது விஷயமாகப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். அது உண்மை. இருந்த போதிலும் இந்த இலாகாவில் நல்ல அதிகாரிகளைப் போட்டு அவர்களுக்கு வேண்டிய வசதி களை செய்து கொடுக்க வேண்டும். சில கேஸ் பிடிக்க வேண்டும் என்ற காரணத்திற்காக பொய் கேஸ்கள் போடுவது என்பது கூடாது. அப்படி யெல்லாம் செய்யாமல் இந்த இலாகாவை பரிபாலிக்கும் உத்தியோகஸ்தர் களை நல்லவர்களாகப் போட்டு அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். நல்ல முறையில் கேஸ்களை போட்டு இந்த மது விலக்குச் சட்டத்தை வெற்றிகரமாக அமுலாக்க வேண்டும். இவைகளெல்லா வற்றையும் அமைச்சர் அவர்கள் கவனித்துத் தகுந்த ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

* **THE HON. SRI M. BHAKTAVATSALAM**: கனம் சபா நாயகர் 11-30 a.m.
அவர்களே, இந்த மான்யத்தின் மீது நடை பெற்ற விவாதத்தில் அநேகமாக மதுவிலக்குக் கொள்கைகளைப் பற்றியும் மது விலக்குத் திட்டம் அமுலுக்குக் கொண்டு வருவதைப் பற்றியும் தான் கனம் அங்கத்தினர்கள் பேசினார்கள்.

அநேகமாக இந்த விவாதத்திலே கலந்து கொண்ட அங்கத்தினர்கள் மது விலக்குத் திட்டத்தை ஆதரித்தே பேசினார்கள் என்று நான் கூறு வேன். ஆனால் நான் " அநேகமாக " என்று தான் சொல்ல வேண்டி யிருக்கிறது.

வெட்டுப் பிரேரணையைப் பிரேரித்த கனம் அங்கத்தினர்கள் மது விலக்குத் திட்டத்தை இப்பொழுது நாம் அமுல் நடத்துவதை ஆதரித் ததாகத் தெரியவில்லை. அது எனக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. பொது விவாதத்தின் போது அவர்கள் பேசியதைக் கேட்டே நான் திடுக்குற்றேன். அவர்கள்—தொழிலாளர்களின் தலைவர். தொழிலாளர்களுக்கு—ஏழை மக்களுக்கு—நிவாரணம் அளிக்கும் வகையிலே தான் இந்தத் திட்டம் உரு வாக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றது. ஆனால், அதிலே குற்றம் செய்கின்றவர்களுக்குத் தொல்லை ஏற்படுகிறது என்ற காரணத்தால். இந்தத் திட்டத்தை அமுலுக்கு கொண்டு வராமல் இருந்தாலே நலம் என்று கூறியது ஆச்சரியத்தை விளைவித்தது.

எக்ஸைஸ் இலாகாவுக்கு வேண்டிய மான்யம் பிரேரேபிக்கப்பட்டது. அதன் மீது தான் அவர் வெட்டுப் பிரேரணை பிரேரேபித்தார்கள். ஒரு பக்கத்தில் அவர் பேசிய போது, எக்ஸைஸ் இலாகாவுக்கு அவசியம் இல்லை என்று சொன்னார். மற்றொரு பக்கத்தில், மது விலக்குத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வர வேண்டாம் என்றும் சொன்னார்கள். ஆனால், ஒன்று அவர்களுக்கு சொல்ல விரும்புகிறேன். மது விலக்குத் திட்டம் அமுலுக்கு கொண்டு வருவதற்கு முன்பு கூட எக்ஸைஸ் இலாகா இருந்தது. எக்ஸைஸ் இலாகாவுக்கு வேலை இருக்கிறது. மது விலக்குத் திட்டத்தை அமுல் நடத்துவது போலீஸ் இலாகா. அதைத் தவிர மற்ற வேலையும் இருக்கிறது. மது விலக்குத் திட்டம் கொண்டு வருவதற்கு முன்பு கள்ளுக் கடை, சாராயக் கடை இவைகளை எலம் விட்டு நடத்திய காலத்திலேகூட எக்ஸைஸ் இலாகாவுக்கு அவசியம் இருந்தது என்பதை மட்டும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

"மது விலக்குத் திட்டம் சரிவர நடைபெறவில்லை, அது தொல்லையைத் தான் அளிக்கிறது; போலீஸ்காரர்கள் பிடிக்கிறார்கள்; விலங்கு போடுகிறார்கள்—குற்றம் செய்கின்றவர்களை. இம்மாதிரி தொந்தரவு ஏற்படுவதால் மது விலக்குத் திட்டமே வேண்டாம்" என்ற அர்த்தத்திலே வெட்டுப் பிரேரணை பிரேரித்த அங்கத்தினர் அவர்கள் பேசினார்கள். அதற்கு மேற்கோளாகக் கூறும் போது, மத்ய அரசாங்கத்திலே அமைச்சராக இருந்து இப்பொழுது அமைச்சராக இல்லாமல் அந்தப் பதவியை விட்டிருக்கின்ற ஸ்ரீமதி ராஜகுமாரி அம்ருத கௌரி அவர்கள் தெரிவித்த அபிப்பிராயத்தைப் பற்றி குறிப்பிட்டார்கள். அதோடு நிற்கவில்லை. காந்தியடிகளுடைய அபிப்பிராயத்தையும் கூடக் குறிப்பிட்டார்கள். இன்னும் சில அங்கத்தினர்கள் காந்தியடிகளின் அபிப்பிராயம் என்று கூடப் குறிப்பிட்டார்கள். மது விலக்குத் திட்டத்திற்காக சட்டம் செய்யக் கூடாது, ஜனங்களாகவே மனம் மாறி மதுவை ஒழிக்க வேண்டுமென்று காந்தியடிகள் சொன்னதாகக் குறிப்பிட்டார்கள் சில அங்கத்தினர்கள். அதற்காக சட்டம் செய்யக் கூடாது என்று காந்தியடிகள் எங்கே கூறினார்கள்? அவர்கள் வாழ்ந்த காலத்தில் சட்டம் அமுலில் இருந்தது. அப்பொழுது நடைபெற்ற ராஜ்ய அரசாங்கங்களும், மத்திய அரசாங்கமும் அப்போதைக்கப்போது பல அரசாங்க நிர்வாக விஷயங்களைப் பற்றி காந்தியடிகளிடம் கலந்து கொண்டுதான் முடிவு செய்தது; அவைகளை நிறைவேற்றிக் கொண்டு வந்தார்கள். ஆகவே காந்தியடிகள் சட்டம் வேண்டாமென்று சொல்லவில்லை. சட்டம் வேண்டாம் என்ற அபிப்பிராயம் கனம் அங்கத்தினருக்கு இருந்தால் அதற்கு காந்தி அடிகளை மேற்கோளாக—தவறுதலாகக்—கூறவேண்டாம் என்று நான் சொல்வேன்.

கனம் அங்கத்தினர் திரு. கோவிந்தசாமி அவர்கள் பொதுவாக இந்த திட்டத்தை ஆதரித்துக் குறிப்பிட்டார்கள். ஆனால், தென்னாற்காடு மாவட்டத்தின் பக்கத்திலே புதுச்சேரி இருக்கிறது என்றும், அந்தப் புதுச்சேரியில் மது விலக்கு இல்லை என்றும்; அதனால் சங்கடங்கள் ஏற்படுகின்றன என்றும், அதற்குப் பரிகாரம் தேட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள். இதைப் பற்றி அரசாங்கம் கவனித்துக் கொண்டுதான் வருகிறது. முன்பு பிரெஞ்சு அரசாங்கம் இருந்த காலத்திலே கடிதப் போக்குவரத்து நடந்து வந்தது. இப்பொழுதும் அங்கு உள்ள அரசாங்கத்துக்கும் இந்த அரசாங்கத்துக்கும் விவாதம் நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த ராஜ்யத்தைப் பொறுத்த வரையில் மதுவிலக்குத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு எவ்வாறு அவர்களுடைய ஒத்துழைப்பை பெறுவது என்பதைப் பற்றி இப்பொழுது தீவிரமாக கவனிக்கப்பட்டு வருகிறது என்று நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

கனம் அங்கத்தினர் அவர்களும், அவருக்குப் பிறகு பேசிய தொழிலாளர் தலைவர் திரு. சின்னதுரை அவர்களும் மது விலக்குச் சட்டத்தை அமுல் நடத்தும்போது **liquor permit** என்ற பெயரில் சிலருக்கு குடிக்க வசதி அளிப்பதைப் பற்றி குறிப்பிட்டார்கள். அது கொஞ்சம் கூட பொறுத்தமில்லை என்று சொன்னார்கள். ஆனால், நான் கனம் அங்கத்தினருக்குத் தெரிவிக்க விரும்புகிறேன் : யார் கேட்டாலும் அவர்களுக்கு பெர்மிட் கொடுப்பது இல்லை.

10th July 1957] [Sri M. Bhaktavatsalam]

யாது. வைத்தியர்கள் பார்த்து அவர்கள் உடல் நிலை காரணமாக, அவர்களுக்கு "பெர்மிட்" கொடுக்க வேண்டும் என்று சிபார்சு செய்தால், அந்தச் சிபார்சின் மீது தான் **liquor permit** வழங்கப்படுகிறது. அப்படி வழங்குவதிலே மாதத்திற்கு ஒரு யூனிட் முதற்கொண்டு நான்கு யூனிட் வரையிலே வழங்கப்படுகிறது. இதையும் தவிர்ப்பது என்றால் அதற்கு அரசியல் அமைப்புச் சட்டமே இடம் கொடுக்கவில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன். வைத்தியம் காரணமாக மது ஓரளவு வேண்டியிருந்தால் அதை நாம் தவிர்ப்பதற்கு சட்டம் இடம் கொடுக்கவில்லை.

கனம் எதிர்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது பர்மிட் வழங்குவதில் ஒரு டாக்டர் பரிசீலனை செய்வதற்குப் பதிலாக ஒரு போர்டு வைத்து, அவர்களை சிபார்சு செய்யச் சொல்லுவது என்றால், அது இன்னும் கொஞ்சம் திருப்திகரமாக இருக்கும் என்ற வகையிலே சொன்னார்கள். ஆனால், பொதுவாக அவர்களும் கருதவில்லை என்று நினைக்கிறேன். நானும் நினைக்கவில்லை—அந்த வகையிலே சொல்லுவது சரியல்ல. டாக்டர்களை நம்ப முடியாது என்று சொல்லுவதற்கில்லை. டாக்டர்களை நம்பித்தான் நாம் நம் உடலை அவர்களிடம் ஒப்புவிக்கின்றோம். கூடிய வரை அவர்களும் அவசியத்தை உணர்ந்துதான், அவர்களுடைய பெரும் பொறுப்பை உணர்ந்துதான், இம்மாதிரி சர்டிபிகேட்டுகளை ஜாக்கிரதையாக வழங்குகிறார்கள் என்று நாம் எதிர்பார்க்கிறோம். ஆனால் குறிப்பிட்ட சில விஷயங்களிலே இந்த சர்டிபிகேட் போதவில்லை, திருப்திகரமாக இல்லையென்று ஏற்பட்டால் அப்போதைக்கப்போது ஒரு போர்டு நியமித்து, ஒன்றுக்கு மேற்பட்ட டாக்டர்களை வைத்தும் பரிசீலனை செய்யச் சொல்லுகின்றோம்.

பிரசாரம் செய்வதைப் பற்றிச் சொல்லப்பட்டது. நான் தெரிவிக்க விரும்புவது என்னவென்றால், அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில், அரசாங்கத்தின் சார்பாகப் பிரசாரம் செய்ய வேண்டிய அவசியத்தின் காலம் தீர்ந்து விட்டது என்று தான் நான் இந்த சந்தர்ப்பத்தில் சொல்ல விரும்புகிறேன். மது விலக்குத் திட்டம் 1937–ம் ஆண்டிலே முதன் முதலாகத் துவக்கப்பட்டது. அப்பொழுதெல்லாம் பிரசாரத்திற்கு மிகுந்த கவனம் அரசாங்கத்தாரால் செலுத்தப்பட்டு வந்தது. இப்பொழுது அரசாங்கமே நேரிடையாக பிரசாரம் செய்வதற்கு அவசியம் இல்லை என்பது தான் அரசாங்கத்தினுடைய கருத்து. பிரசாரம் செய்யப்பட்டுவிட்டது. குடிப்பது தவறு, குடிப்பது குற்றம் என்பதை எல்லோரும் உணருகிறார்கள். இனி சட்டத்தைச் சரிவர அமுல் நடத்துவதுதான் அரசாங்கத்தினுடைய பொறுப்பு. ஆனால், ஓரளவு பிரசாரம் வேண்டிருக்கிறது. வேறு வகையிலே வேண்டியிருக்கிறது. "இம் மாதிரி குற்றத்தில் அகப்பட்டுக் கொண்டு அவதிப்பட வேண்டாம்" என்ற பிரசாரம் வேண்டியிருக்கிறது. அந்தப் பிரசாரத்தை பொதுமக்கள் செய்ய வேண்டும். பொதுமக்களுடைய பிரதிநிதிகள் இதிலே அக்கரை கொள்ளவேண்டுமென்று இந்தச் சமயத்தில் நான் வேண்டிக் கொள்ளுகிறேன். முக்கியமாக, தொழிலாளர் தலைவர்களாகவும், தொழிலாளர் பிரதிநிதிகளாகவும் இருப்பவர்கள் இதிலே அக்கறை கொண்டு, சிறந்த முறையிலே பிரசாரம் செய்யவேண்டும். அப்பொழுதுதான் மக்கள் இதை நன்குணர்ந்து இவ்வாறு குற்றம் செய்யமாட்டார்கள். இம்மாதிரி குற்றம் செய்யாமல் அவர்களைத் தடுப்பதற்கான பொறுப்பை உத்தியோகப்பற்றில்லாத மக்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்றுதான் இந்தச் சமயத்தில் நான் சொல்ல விரும்புகின்றேன். அவ்வாறு பிரசாரத்திலே ஈடுபட்டால் இந்தத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேறுவதற்கு உதவியாக இருக்கும். இதில் கட்சி வித்தியாசம் ஒன்றும் இல்லை. கட்சி வித்தியாசத்திற்கு வேறு இடம் இருக்கிறது. ஆனால், மது விலக்குத் திட்டத்தைப் பொறுத்த வரையில், கட்சி வித்தியாசத்திற்கே இடம் இல்லை. இது போல் கட்சிகள் எல்லாம் சேர்ந்து செய்யக்கூடிய காரியங்கள் பல உண்டு. அதைச் செய்யக்கூடும், என்பதை எடுத்துக் காட்டவேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை. ஆகவே, எல்லோரும் சேர்ந்து இந்த மது விலக்குத் திட்டம் சரிவர நிறைவேற்றப்படுவதற்கு; அதிலும் வெற்றிகரமாக அமுல் நடத்தப்படுவதற்கு வேண்டிய ஆதரவை அளிக்க வேண்டும் என்றுதான் நான் இந்தச் சமயத்தில் சொல்ல விரும்புகிறேன்.

[Sri M. Bhaktavatsalam] [10th July 1957

இன்னும் சில அங்கத்தினர்கள் பேசும்போது, " இந்தச் சட்டத்திலே தண்டனை கொடுப்பது போதாது " என்று சொன்னார்கள். இன்னும் ஒன்றிரண்டு அங்கத்தினர்கள், " தண்டனை அதிகம் " என்றும் சொன்னார்கள். சில அங்கத்தினர்கள், " உற்பத்தி செய்கின்றவர்களுக்கு தண்டனையை குறைக்கலாம், குடிக்கின்றவர்களுக்குத் தண்டனையை அதிகப்படுத்த வேண்டும் " என்று சொன்னார்கள். வேறு சில அங்கத்தினர்கள், " உற்பத்தி செய்கிறவர்களுக்கு அதிகமாகத் தண்டனை கொடுக்கலாம், ஆனால், குடிக்கின்றவர்களுக்குக் தண்டனையைக் குறைக்க வேண்டும் " என்று சொன்னார்கள். இதையெல்லாம் பார்த்து எந்த வகையிலே சட்டத்தை அமுல் நடத்தினால் இந்தக் குற்றங்களை அறவே அகற்றமுடியும் என்பதற்கு சட்டசபை அங்கத்தினர்கள், அரசாங்கம் எல்லோரும் சேர்ந்து, அதற்கு வேண்டிய சட்டத்தை இயற்ற வேண்டியிருக்கிறது. இப்பொழுது அமுலில் இருக்கும் சட்டங்கள் போதாது என்பதுதான் அரசாங்கத்தினுடைய கருத்து. அதைப்பற்றி கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். அந்த சட்டத்தைத் திருத்துவதுபற்றி இன்று அரசாங்கம் யோசித்துக் கொண்டிருக்கிறது. அநேகமாக திருத்த மசோதா தயாரிக்கப்பட்டுவிட்டது. சீக்கிரத்திலே சட்டசபை முன்பு அது சமர்ப்பிக்கப்படும் என்றுதான் நான் நம்புகிறேன்.

கனம் அங்கத்தினர் ஸ்ரீ. வி. வேலுச்சாமி அவர்கள் முன்பு கள் இறக்கி வந்தவர்களுடைய இப்போதைய நிலையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். வேறு பல அங்கத்தினர்களும் அதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். " ரொம்பப் பிற்பட்ட நிலையிலிருக்கும் இந்த இனத்தவர்களுக்கு சலுகைகள் அளித்து அரசாங்கம் உத்தரவிட்டிருந்தது. அந்த உத்தரவு சமீபத்தில் 15 நாட்களுக்கு முன்பு ரத்து செய்யப்பட்டு விட்டது" என்று கனம் அங்கத்தினர் ஸ்ரீ. ஆசைத்தம்பி அவர்கள் சொன்னார்கள். அவர் அப்படி சொன்னது எனக்கு ஆச்சரியத்தை விளைவித்தது. இருந்தாலும் என்னுடைய சக மந்திரி கனம் ஸ்ரீ. கக்கன் அவர்களிடம் அது பற்றி விசாரித்தேன். அவர்களுக்கும் அந்த செய்தி ஆச்சரியத்தை விளைவித்தது. உத்தரவு ரத்து செய்யப்படவில்லை என்று அவர்கள் சொன்னார்கள். அந்த உத்தரவு ரத்து செய்யப்பட்டு விட்டதாக கனம் அங்கத்தினர் ஸ்ரீ ஆசைத்தம்பி அவர்களுக்கு செய்தி எங்கிருந்து கிடைத்ததோ, தெரியவில்லை ; அல்லது, பிரசாரத்திற்காக அவர்கள் அப்படி பேசினார்களோ, தெரியவில்லை. கனம் அங்கத்தினர் ஸ்ரீ ஏ. கோவிந்தசாமி நாயகர் அவர்கள், ஏதோ சந்தேகப்படுவதாக குறிப்பிட்டார்கள். சந்தேகப்படுகிறேன் என்று எதை வேண்டுமானாலும் பேசலாம்; எவ்வளவோ பிரசாரம் செய்யலாம். அந்த உத்தரவு ரத்து செய்யப்படவில்லை. அதை ரத்து செய்வதாகவும் சர்க்காருக்கு உத்தேசம் இல்லை.

பதனீர் தயாரிக்கும் மரமேறிகளுக்கு சிறந்த நவீன உபகரணங்களை அளிப்பதற்கு ஆராய்ச்சி செய்யவேண்டும் என்று கூறப்பட்டது. அந்த யோசனையை நான் வரவேற்கிறேன். அதைக் கருத்தில் கொண்டு மரமேறிகளுக்கு உதவியளிக்க அரசாங்கம் முயற்சி செய்யும்.

" மரங்களின் சொந்தக்காரர்கள் லாபத்தில் பெரும் பகுதியைப் பெறுகிறார்கள் என்றும் பதனி இறக்குபவர்கள் அவ்வளவு பலன் பெறுவதில்லை" என்றும் சொல்லப்பட்டது. இதற்குச் சிறந்த பரிகாரம் கூட்டுறவு முறை ஆகும். ஆங்காங்கே கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படுகின்றன. கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் சிறந்த கருவிகளையும் உதவிகளையும் மரமேறிகள் பெற முடியும். கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் தொழில்களை வெற்றிகரமாக நடத்துவதை நானும் பார்த்திருக்கிறேன். தங்களுக்கு உரிய பலனை அடைவதற்கு மரமேறிகள் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்ந்துகொள்ளுவதுதான் சிறந்த வழி என்று நான் சொல்லுவேன்.

பதனீரிலிருந்து வெல்லமும் கருப்பட்டியும் காய்ச்சுவதற்கும் சிறந்த சாதனங்களைப் பெறுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அதிலும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

10th July 1957]  [Sri M. Bhaktavatsalam]

இன்னும், பதனீரும், நீராவும் கெடாமல் பாதுகாக்கப்படுவதற்கும், புளித்துக் கள்ளாக மாறாமல் பாதுகாக்கப்படுவதற்கும் என்ன செய்ய வேண்டும் என்பதற்கு ஆராய்ச்சிகள் செய்யப்படும். மைசூர் ராஜ்யத்தில் மத்திய அரசாங்கத்தின் உணவு ஆராய்ச்சி நிலையம் ஒன்று இருக்கிறது. அந்த நிலையத்தின் மூலம் ஆராய்ச்சி செய்வது சாத்தியமா என்று யோசிக்கப்பட்டு வருகிறது. இந்த பானங்களை சோடாவிற்கு பதிலாக பாட்டிலில் வைத்துப் பாதுகாத்து பிறகு உபயோகிப்பதற்கு முயற்சி செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டது. கிராம மக்கள் அந்த மாதிரி அவைகளை சோடாவிற்கு பதிலாக உபயோகிக்கலாம் என்று கூறப்பட்டது. இந்தப் பொருள்களை துஷ்பிரயோகம் செய்ய முடியாத வகையில் எப்படி செய்வது என்று கவனிக்கப்பட்டு வருகிறது. மக்களுக்கு எல்லா வகையிலும் உதவி செய்வதற்கு கவனம் செலுத்தி வருகிறோம். ஆனால் இந்தத் தொழில்களில் பானங்களும் மற்ற பொருள்களும் துஷ்பிரயோகம் செய்யப்படாமலிருப்பதற்கான வழிகளைக் கண்டு பிடிப்பதிலும் கவனம் செலுத்தி வருகிறோம்.

பதனீர் இறக்குவதற்கு லைசென்ஸ் கொடுக்கப்படுகிறது. பதனீரிலிருந்து தயாரிக்கப்படும் வெல்லத்தை விற்பதற்குப் போதுமான வசதி இல்லை என்று கனம் எதிர் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அது கவனிக்கப்பட வேண்டிய விஷயம்தான். எனக்குத் தெரிந்த வரையில், லைசென்ஸ்கள் தாராளமாக வழங்கப்பட்டிருக்கின்றன. முன்பு கள் இறக்கி வந்தவர்களுக்கு ஒரு தொழில் வசதிசெய்து கொடுக்கவேண்டுமென்பதற்காக தாராளமாக இந்த லைசென்ஸ்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால் பெரும்பான்மையாக வெல்லமோ பதனீரோ உற்பத்தியாவதில்லை. கொடுக்கப்பட்டுள்ள லைசென்ஸ்களின்படி உற்பத்தியாகி இருக்க வேண்டிய வெல்லத்தின் அளவை மதிப்பிட்டுவிட்டு, உண்மையாக உற்பத்தியாகி இருப்பதைப் பார்த்தால் உண்மையாக உற்பத்தியாகியிருப்பது உற்பத்தியாகியிருக்க வேண்டியதில் ஒன்று அல்லது இரண்டு சதவிகிதமாகத்தான் இருக்கிறது. மீதிப் பதனீர் எல்லாம் தவறான முறையில் தான் உபயோகிக்கப்படுகிறது என்று கொள்ள வேண்டியிருக்கிறது. இன்னும் சில இடங்களில் கடைகளிலிருந்து வெல்லத்தை வாங்கிக் கணக்குக் காட்டி விடுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஸொஸைடிகளில் கூட கடையிலிருந்து வெல்லத்தை வாங்கிக் கணக்குக் காட்டி விடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். இந்த துஷ்பிரயோகத்தைத் தடுக்க வேண்டும் என்ற கவலை எங்களுக்கு உண்டு. துஷ்பிரயோகங்களை தடுத்து மது விலக்குச் சட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதில் கவனம் செலுத்த வேண்டும். இதில் மக்களின் ஒத்துழைப்பு தேவை.

கனம் அங்கத்தினர் ஸ்ரீ வி. வேலுச்சாமி தேவர் அவர்கள் மற்றொரு சிறந்த யோசனை சொன்னார்கள். பதனீர் இறக்கும் மரமேறிகள் பல மரங்கள் ஏறி இறங்குவது மிகவும் சிரமமாக இருக்கிறது என்றும், மரங்கள் தொடர்ச்சியாக உள்ள இடங்களில் மரத்திற்கு மரம் சிறந்த சாதனங்களின் மூலம் தாவுவதற்கான வழியை ஆராய்ந்தறிய வேண்டும் என்றும் யோசனை தெரிவித்தார்கள். பாக்கு மரத் தோட்டங்களில் இப்போது அந்த முறை அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. அந்த மாதிரியான சௌகரியத்தை பதனீர் இறக்கும் மரமேறிகளுக்கு அளித்தால் நலமாக இருக்கும் என்று அவர்கள் சொன்னார்கள். அது மிகச் சிறந்த யோசனை. அதை நான் வரவேற்கிறேன். ஏற்கனவே அந்த யோசனை என் கவனத்தில் இருந்து கொண்டுதான் இருக்கிறது.

போலீஸார் சிலர், மக்கள் கள் குடிப்பதற்கும், மது விலக்குச் சட்டத்தை மக்கள் மீறுவதற்கும் உடந்தையாக இருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. அதை நான் மறுக்கவில்லை. போலீஸ் அதிகாரிகளும் அதை மறுக்கமாட்டார்கள். இதையும் அடியோடு ஒழிக்கப் பார்க்கிறோம். இதற்கும் பொதுமக்களின் ஒத்துழைப்பு வேண்டும். இதை கண்டிப்பாக போலீஸாரிடமிருந்து அகற்ற வேண்டும் என்பது தான் என்னுடைய எண்ணம். மது விலக்குச் சட்டத்தை அமல் நடத்தும் அதிகாரம் போலீஸாருக்கு மாற்றப்பட்ட பிறகு இந்தச் சட்டத்தை மீறும் குற்றங்கள் அதிகரித்து விட்டன என்று கனம் அங்கத்தினர்கள் சிலர் கூறினார்கள்.

[Sri M. Bhaktavatsalam] [10th July 1957

போலீஸாரிடம் அதிகாரம் மாற்றப்பட்டு விட்டதால் குற்றங்கள் அதிகரித்து விட்டன என்று நான் சொல்ல முடியாது. யாரோ ஒருவர் சட்டத்தை அமல் நடத்த வேண்டும். போலீஸாரிடம் தவறுதல்கள் இருந்தால், அவற்றை நீக்கி சட்டத்தை வெற்றிகரமாக அமல் நடத்தவேண்டும் என்பதுதான் என்னுடைய எண்ணம்.

மது விலக்குச் சட்டத்தை நன்றாக அமல் நடத்துவதற்கு போலீஸாருக்கு போதிய வசதிகள் அளிக்க வேண்டும் என்று எதிர்க் கட்சி தலைவர் அவர்கள் சொன்னார்கள். நிர்வாகச் செலவைக் குறைக்க வேண்டும் என்றும் எதிர் கட்சியில் உள்ளவர்கள் கூறுகிறார்கள். எதிர் கட்சியினர் சொல்கிறார்கள் என்பதற்காக அரசாங்கம் அக்கரை கொள்ளாமல் இருப்பதில்லை. மது விலக்குச் சட்டத்தை கடுமையாக அமல் நடத்த வேண்டுமென்றால், அதற்கு அதிக அதிகாரிகளும், அதிக வாகனங்களும், அதிக வசதிகளும் வேண்டுமென்பதை அரசாங்கம் ஆதரிக்கவில்லை. அரசாங்கம் இதை ஆதரிக்க வில்லை என்பதை போலீஸ் இலாகாவினரும் உணர்ந்து, இருக்கிற வசதிகளை வைத்துக் கொண்டு சட்டத்தை நன்றாக அமல் நடத்தி வருகிறார்கள். இந்தச் சட்டம் சில காலமாக எல்லா ஜில்லாக்களிலும் மும்முரமாக அமல் நடத்தப்பட்டு வருகிறது. இதன் விளைவாக சில முன்னேற்றச் சின்னங்களைக் காண்கிறோம். எல்லோரும் என்னிடம் வந்து அவைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள். இதற்கு முன்பு குறை கூறியவர்களே குற்றங்கள் குறைந்திருக்கின்றன என்று என்னிடம் சொல்லியதைக் கேட்டிருக்கிறேன். குற்றங்களை அடியோடு ஒழிப்பதில்தான் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

வெட்டுப் பிரேரேபணையைப் பிரேரேபித்த கனம் அங்கத்தினர் அவர்கள் மது விலக்குச் சட்டம் வேண்டாம் என்று கொஞ்சம் வெளிப்படையாகச் சொன்னார்கள். ஆனால் குடியாத்தத்திலிருந்து வந்திருக்கும் கம்யூனிஸ்ட் கட்சி கனம் அங்கத்தினர் அவர்கள் அவ்வாறு சொல்லவில்லை ; அத்துடன், ஒரு சர்வ கட்சி கமிட்டியைப் போட வேண்டும் என்று அவர்களுடைய ஒரு வழக்கமான கோட்பாட்டையும் தெரிவித்து விட்டார்கள். அவர் பேசும் போது, நானும் குறுக்கிட்டு மது விலக்குச் சட்டம் வேண்டுமா? வேண்டாமா என்று கேட்டேன். அவர் அதற்கு சரியாக—திட்ட—வட்டமாக பதிலளிக்கவில்லை. ஏதோ குறை சொல்லவேண்டும், சர்வ கட்சி கமிட்டியைப் போட வேண்டும் என்ற கருத்தைத் தெரிவிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அவர் பேசினாரே தவிர, வேறு எதையும் அவர் சொன்னதாக எனக்குத் தெரியவில்லை. ஒன்று சொன்னார்—இப்போது வீட்டுக்கு ஒரு கள்ளச் சாராயக் கடை வந்திருக்கிறது என்று சொன்னார்.

கம்யூனிஸ்ட் கட்சியினர் கூட காந்தியடிகளின் கொள்கையை மேற்கோளாக எடுத்துக் காட்டினார்கள். மேலும், காந்தியடிகள் மதுவிலக்கை சட்ட பூர்வமானதாக ஆக்க கூடாது என்று கூறியிருக்கிறார்கள் என்று கூட சொல்லப்பட்டது. காந்தியடிகள் அப்படி எந்த காலத்தில் சொன்னார்களோ, தெரியவில்லை. காந்தியடிகள் அப்படி சொன்னார்கள் என்பதற்கு ரெக்கார்டுகளைக் காண்பித்தால் தான் அதற்குப் பிறகு நான் அது சம்பந்தமாக பதில் சொல்ல முடியும்.

**SRI S. PAKKIRISAMI PILLAI** : மகாத்மா காந்திஜி மதுவிலக்கை சட்ட பூர்வமானதாக ஆக்கக்கூடாது என்று எங்கே சொன்னார்கள், எப்போது சொன்னார்கள்; என்ற கேள்வியை கனம் அமைச்சர் அவர்கள் அடிக்கடி கேட்டிருக்கிறார்கள். காந்திஜி அவ்வாறு கூறினார்கள் என்பதற்கு ஆதாரமாக ஒரு பத்திரிகையில் எழுதப்பட்டுள்ள சில வாக்கியங்களை படிக்கிறேன்.

Sir, this is from 'Conquest of Self'. It says ' . . . But to regulate these things by law would be a remedy probably worse than the disease. What is wanted is an intelligent . . .'

**MR. SPEAKER** : Is it a book by Mahatma Gandhi? Are you quoting Mahatma Gandhi?

10th July 1957]

SRI S. PAKKIRISAMI PILLAI : It is a quotation from Mahatma Gandhi's book.

THE HON. SRI P. KAKKAN : அது எந்தப் பத்திரிகை என்று முதலில் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

MR. SPEAKER : What is that paper or what is the book from which the hon. Member is quoting?

SRI S. PAKKIRISAMI PILLAI: After reading out the extract, I will say that, Sir.

MR. SPEAKER : No. I am sorry that will not be permitted. Unless the hon. Member is prepared to get the original book and place it before the House, I am not prepared to allow any discussion on that subject. The Hon. Minister will continue his speech. (Sri S. Pakkirisami Pillai rose.)

MR. SPEAKER : The Hon. Minister is not yielding.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் சபாநாயகர் அவர்களே பத்திரிகையில் எப்படி வந்திருந்தாலும் சரி, காந்தியடிகளே சொன்னதாக வந்திருந்தாலும், 1937ல் இருந்து இந்த மது விலக்குச் சட்டம் உருவாக்க பட்டு அமுலில் இருந்து வருகிறது. அரசாங்கத்தார் அப்போதைக்கப்போது காந்தியடிகளுடைய யோசனையைக் கலந்து வந்திருக்கிறார்கள். காந்தியடிகளுடைய யோசனை கூட மது விலக்கு திட்டத்தை அமுலுக்கு கொண்டு வரவேண்டும். ஆனால் ஏதோ தீர்வை விதிக்கும் சட்டம் போல செய்து விடக் கூடாது எனச் சொல்லுவார். இது நாம் எல்லோரும் கொண்டுள்ள பொதுவான அபிப்பிராயம் தான். எல்லாவற்றுக்கும் சட்டம் என்று செய்துவிட்டு இருக்கக் கூடாது என்று நாமும் எல்லாவற்றுக்கும் சாதாரணமாகச் சொல்லுகிறோம். இந்தக் கருத்து விரும்பத் தக்கது. எல்லோராலும் வரவேற்கத்தக்கது. இதன் உண்மையான கருத்தே வெறும் சட்டம் என்று போட்டு விட்டு, இருக்கக்கூடாது மது விலக்குத் திட்டத்தை நல்ல முறையில் அமல் நடத்த வேண்டும் என்கிற உண்மையை நமக்குப் புலப்பட வைக்கிறது.

அடுத்தபடியாக கனம் அங்கத்தினர் ஆசைத்தம்பி அவர்கள் ஒன்று குறிப்பிட்டார்கள். அதை நான் வரவேற்கிறேன். மது விலக்குச் சட்டம் நிறைவேற்றப்படுவதனால் மக்களுக்கு மிச்சம் ஏற்பட்டது என்று குறிப்பிட்டார்கள். இந்த அடிப்படையில் அவர் போட்ட கணக்கும் கூட ஓரளவு சரியாகவே இருக்கும். முன்பு மதுவினால் சர்க்காருக்கு 16 கோடி ரூபாய் வந்திருந்தால் இப்போது 10 கோடி ரூபாயாவது மக்களிடத்திலே தங்கியிருக்க வேண்டும் என்பது சரியானது. ஆனால் அது மக்களுக்கு மிச்சமாகி என்ன பயன்*? அனாவசியமான வழியில் செலவு செய்து விடுகிறார்களே என்று அவர் குறிப்பிட்டதை நான் வரவேற்கிறேன். மது விலக்குத் திட்டம் வெறும் ஒழிப்பு இயக்கம் இல்லை. மக்களுடைய வாழ்க்கையை வளர்க்கும், திட்டமும் ஆகும். தங்களிடம் மிச்சப்படுகிற பணத்தை அவர்கள் நல்ல வழியில் உபயோகித்து தங்கள் வாழ்வை வளப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதையும் நான் வர வேற்கிறேன்.

அப்படிச் செய்யாமல் அவர்கள் சினிமாவுக்குப் போகிறார்களே என்று ஒருவர் குறிப்பிட்டார். சினிமாவுக்குப் போவது அவசியம் தான். வாழ்க்கை என்பது தினந் தினமும் சாப்பிட்டுக் கொண்டிருப்பது மாத்திரம் அல்ல. சாப்பிடுவது மட்டும் தான் வாழ்க்கை என்றால் அதில் அப்புறம் சுவை இருக்காது. மனித வாழ்க்கைக்கு சினிமாவும் ஒரு முக்கியமான சாதனம். ஆனால் எப்படிப்பட்ட சினிமாவுக்கு போகவேண்டும், எப்படிப் பட்ட சினிமாவுக்குப் போகக் கூடாது என்பதை கவனித்துப் போக வேண்டும். கிராம வாழ்க்கைக்கு உகந்த, நல்ல முறையில் ஒழுக்கத்தை

[Sri M. Bhaktavatsalam] [10th July 1957

சரிப்படுத்தக் கூடிய சினிமாப் படங்களுக்கு போகவேண்டும் என்று அவர்கள் ஆசைப்பட வேண்டும். இப்படி அவசியமான செலவுகளைச் செய்து கொள்ளத்தான் வேண்டும்.

மற்றொன்று நான் அடிக்கடி வற்புறுத்துவது உண்டு. தொழிலாளர், சங்கங்கள், மானேஜ்மெண்டு சங்கம் இவைகள் குறிப்பாக இந்த மதுவிலக்குத் துறையில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று சொல்வேன். மதுவிலக்கினால் ஏற்படக்கூடிய நன்மையை வற்புறுத்தி அவர்கள் இந்தக் குடிப் பழக்கத்திற்கு இரையாகாமல் கவனித்துக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது.

பல அங்கத்தினர்கள் திருட்டுத்தனமாகக் கள்ளச் சாராயம் காய்ச்சப்படுவதாகவும், எல்லோரும் குடிக்கிறார்கள் என்றும், குடிக்காதவர்களே இல்லை என்றும் பேசுகிறார்கள். பொதுவாக நமக்கு எல்லாம் ஒரு தீமையைப் பார்த்தாலேயே, உலகம் பூராவும் அந்த தீமை மலிந்து கிடப்பதாக தோன்றுவது இயற்கை. எங்கோ ஓர் இடத்தில் கொலை நடந்துவிட்டது. மறு நாள் பேப்பரில் அது கொட்டை எழுத்தில் வந்திருக்கும். அதைப் பார்க்கும்போது உலகமே கொலை மயமாக இருப்பது போன்ற தோற்றம் நமக்கு ஏற்பட்டு விடுகிறது. அப்படி எங்கோ ஒருவர் இருவர் குடிப்பதைப் பார்த்துவிட்டு இந்த ராஜ்யம் பூராவும் எல்லோரும் குடிக்கிறார்கள், கள்ளச் சாராயம் காய்ச்சுகிறார்கள் என்கிற தோற்றத்தைக் கொண்டு பேசுகிறோம். இது சரியல்ல. மொத்த ஜனத் தொகையில் இக் குற்றம் புரிபவர்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு. என்னுடைய மதிப்பின்படி நூற்றுக்கு எண்பது பேர்களுக்கு மேல் இன்றைய தினம் குடிப்பேயிலிருந்து காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்வேன். ஆகவே குற்றங்களை மிகைப்படுத்தி சொல்ல வேண்டியதில்லை என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

இன்னும் பல அங்கத்தினர்கள் இந்தச் சட்டத்தை நல்ல முறையில் அமுல் நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். இதுதான் அரசாங்கத்தின் எண்ணமும். மது விலக்குக் கமிட்டி அமைக்கப்படுவதைப் பற்றியும் சொன்னார்கள். மது விலக்குக் கமிட்டி ஒவ்வொரு ஜில்லாவிலும் அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மேல் தாலுக்காக்களிலும்,கிராமங்களிலும் அமைத்துக் கொள்ளலாம். தடை ஒன்றும் இல்லை. இந்தக் கமிட்டிகளில் எல்லாக் கட்சிகளும் இடம் பெற வேண்டுமென்பது அரசாங்கத்தின் ஆவல். குறிப்பாக ஒன்று சொல்லுகிறேன். ஒரு இடத்தில் இருந்து ஒரு நபர் என்னிடம் வந்து சொன்னார். " இந்த மதுவிலக்குக் கமிட்டியில் குடிப்பழக்கத்தை விடாத இவரையும் கூடப் போட்டிருக்கிறார்களே " என்று குறைபட்டுக் கொண்டார். இதை எதற்காக நான், யார் சொன்னார், யாரைப் பற்றிச் சொன்னார் என்பது ஒன்றையும் சொல்லாமல் சொல்கிறேன் என்றால், மதுவிலக்குக் கமிட்டியில் இவர்களைத் தான் போடவேண்டும் என்ற எண்ணம் சர்க்காருக்கு இல்லை, எல்லோருடைய ஒத்துழைப்பும் வேண்டும் என்கிற முறையில் எல்லாக் கட்சிக்காரர்களும் இடம் பெறவேண்டும் என்பது தான் சர்க்கார் எண்ணம்.

அடுத்தபடியாக ஹரிஜனப் பிரதிநிதியாக இருக்கிற கனம் அங்கத்தினர் முனிசாமி அவர்கள் ஹரிஜனங்களுக்கு இதனால் தொல்லை ஏற்படுகிறது என்று குறிப்பிட்டார். அப்பேர்ப்பட்ட ஏழை மக்களை பாதுகாக்க வேண்டும், அவர்களுடைய வாழ்க்கையை வளப்படுத்த வேண்டும் என்கிற ஒரே நோக்கத்திற்காகத்தான் சர்க்கார் இந்தத் திட்டத்தைத் தீவிரமாக நிறைவேற்ற முயற்சிக்கிறார்கள் என்பதை அவருக்குச் சொல்ல விரும்புகிறேன். எந்த இடத்தில், எந்தக் காரணத்தினால் அவர்களுக்குத் தொல்லை ஏற்படுகிறது என்பதை விவரமாக அவர் எனக்கு சொன்னால் அதை நான் பரிசீலிக்கிறேன். பொதுவாக இங்கே பேசிய அங்கத்தினர்கள் எல்லோரும் மது விலக்குத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றவேண்டுமென்றே வற்புறுத்தினார்கள். ஆகவே இந்த மானியத்தையும் ஆதரிப்பார்கள் என்று நம்புகிறேன். வெட்டுப் பிரேரணையை பிரேரித்தவர்கள் எதாவது காரணத்தை மனதில் கொண்டே பிரேரித்திருக்கலாம். இப்போது லாபஸ் பெற்றுக் கொண்டாலும் கொள்ளலாம். இல்லாவிட்டாலும்

10th July 1957] [Sri M. Bhaktavatsalam]

வெட்டுப் பிரேரணையை நாம் தோற்கடித்து அரசாங்கம், பொதுமக்கள், கனம் அங்கத்தினர்கள் இவர்களுடைய ஒத்துழைப்பின்பேரில் மது விலக்கு திட்டத்தை பரிபூர்ணமாக நிறை வேற்றுவதற்குரிய ஆதரவை சபை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

Sri S. PAKKIRISAMI PILLAI : கனம் சபாநாயகர் அவர்களே, நான் ஒரு விஷயத்தை.

Mr. SPEAKER : The hon. Member will finish his speech in a minute, because according to the interpretation of Rule 154, I have to put the Demand to vote at 12 noon.

Sri S. PAKKIRISAMI PILLAI : நான் மதுவிலக்கு சட்டமாக இருக்கக்கூடாது, மதுவிலக்கு நம் நாட்டில் இருக்க வேண்டியது தான்; இருந்தாலும் கூட, இந்த மது விலக்குச் சட்டத்தை அமுலுக்கு கொண்டு வருவதற்கு போலீஸ்காரர்களிடம் அந்த அதிகாரம் ஒப்படைக்கப்படக் கூடாது, போலீசார்களின் ஆட்சி நம் நாட்டில் ஏற்படுத்தி விடக்கூடாது என்பதாகக் குறிப்பிட்டு பேசினேன். இதனுல் மற்றவர்களும் குடித்தாக வேண்டியதுதான்; என்கிற நிலைமையில் பேசவில்லை. அநேக மக்கள் இதனுல் பாதுகாக்கப் பட்டிருக்கிறுர்கள்; பலர் பாதிக்கவும் படுகிறுர்கள். ஆகவே பாதிக்கப்படுகிறவர்களுக்கு உபகாரம் தேடுவதற்காக இந்தச் சட்டத்தை தளர்த்தும்படியான முறையிலோ, மாற்றியமைக்கும்படியான முறையிலோ நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றுதான் நான் கேட்டுக் கொண்டேன்.

Mr. SPEAKER : Is the hon. Member withdrawing his cut motion?

Sri S. PAKKIRISAMI PILLAI : No, Sir.

Mr. SPEAKER : The question is—

'That the allotment of Rs. 6,66,300 under Demand No. II—Excise Department—be reduced by Rs. 100'.

The cut motion was put and lost.

Mr. SPEAKER : I shall now put the original motion to the vote of the House. The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 6,66,300 under Demand No. II—Excise Department'.

The Demand was put and carried and the Grant was made.

## (2) DEMAND IV—FOREST DEPARTMENT.

## (3) DEMAND XXXV—CAPITAL OUTLAY ON FORESTS.

Mr. SPEAKER : The time fixed for these Demands is 2 hours. How long will the Hon. Minister take to reply to the debate?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I shall now take five minutes and at the end about 20 minutes.

Mr. SPEAKER : The Hon. Minister will speak till 12-15, and then the motion will be before the House for discussion.

[10th July 1957

* **THE HON. SRI M. BHAKTAVATSALAM:** கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்களுடைய சிபார்சின் பேரில் நான்காவது மான்யக் கோரிக்கையான காட்டிலாகாவின் கீழ் அரசாங்கத்திற்கு ரூபாய் 57,90,600-க்கு மேற்படாத தொகையும், முப்பந்தைந்தாவது மான்யக் கோரிக்கையான காட்டிலாகா முதலீடு திட்டத்தின் கீழ் ரூபாய் 19,54,500-க்கு மேல்படாத தொகையையும் அனுமதிக்கும்படி கோருகிறேன்.

இக்கோரிக்கைகளை சமர்ப்பிக்கும் இச்சமயத்தில் காடுகள் நமது தேசீய செல்வமாக விளங்குவதையும், அதனால் காடுகள் பராமரிப்பு கொள்கை நமது ராஜ்யத்திற்கு சமீப காலத்திலும், நீண்ட கால அடிப்படையிலும் எவ்வாறு தக்க முறையில் பயன்படவேண்டும் என்பதையும் நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். ராஜ்ய பிரிவினைகளுக்குப் பிறகு, சென்னை ராஜ்யத்தில் சுமார் 6,750 சதுர மைல்கள் பரப்புள்ள பாதுகாக்கப்பட்ட (ரிசர்வ்) காடுகள்தான் உள்ளன. அதாவது ராஜ்யத்தின் மொத்தப் பரப்பில் காடுகளின் அளவு 13.4 சத விகிதம் தான் இருக்கிறது. தேசீய காடுகள் கொள்கை அடிப்படையில் 33 1/3 சத வீதம் அதாவது மூன்றில் ஒரு பாகம் காட்டு வளம் உள்ளதாக இருக்கவேண்டும். ஆகவே நமது ராஜ்யத்தில் காட்டு வளம் இருக்கவேண்டிய குறைந்த பட்ச அளவுக்கு 20 சத வீதம் குறைந்தே இருக்கிறது. அதனால் ஏற்கெனவே இருக்கும் காட்டு வளத்தை பாதுகாக்கவும் மேலும் காட்டு வளத்தை அதிகரிக்கவும் தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டியிருக்கின்றன. மாஜி ஜமீன் பிரதேசங்களான சுமார் 1,416 சதுர மைல் பரப்புள்ள காடுகளை காட்டிலாகா தன் மேற்பார்வையின் கீழ் எடுத்துக்கொண்டு, அவைகளை பாதுகாக்கப்பட்ட (ரிசர்வ்) காடுகளாக அமைக்க தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இதல்லாமல் நீலகிரி ஜில்லாவில் சுமார் 12 சதுர மைல் பரப்புள்ள பாதுகாக்கப்படாத காடுகளை காட்டிலாகா தன் மேற்பார்வையில் எடுத்துக்கொள்ள ஆரம்பித்திருக்கிறது.

காட்டு வளத்தை சீர்திருத்துவதும், மேற்கொண்டு காட்டு வளத்தை அதிகப்படுத்த வேண்டியதும் மிக அவசியம் என்று அரசாங்கம் உணர்ந்து ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலமாக காட்டு வளத்தை மேம்படுத்த பல திட்டங்களை மேற்கொண்டிருக்கிறது. பல திட்டங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளை அடைந்தே தீரவேண்டும் என்னும் நோக்கத்தோடு காட்டிலாகாவும் முழு மூச்சுடன் இத்திட்டங்களை நடத்தி வருகிறது. 1956–57-ல் காட்டு வளத்தை அதிகரிக்க அரசாங்கம் மேற்கொண்ட சில திட்டங்களை இங்கு விவரிப்பது பொருத்தமெனக் கருதி இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இத்திட்டங்கள் இவ்வாண்டும் தொடர்ந்து நடத்தப்படுகின்றன:

1. மண் அரிப்பு ஏற்பட்ட பிரதேசங்களில் காடுகளை வளர்த்து பாதுகாத்தல் (பாதுகாக்கப்பட்ட காடுகளின் வெளிப்புறத்திலுள்ள மண் அரிக்கப்பட்ட பிரதேசங்களை சர்வே செய்வதும் இதில் அடங்கியிருக்கிறது).

2. அழிக்கப்பட்ட காடுகளை மீண்டும் வளப்படுத்துதல்.

3. சில பாதுகாக்கப்பட்ட காடுகளில் முந்திரி செடிகளை வளர்த்தல்.

4. நல்ல விலை போகும் மரங்களை வளர்க்கும் பிரதேசங்களை மேலும் அதிகப்படுத்துவது.

5. தீப்பெட்டி தொழிலுக்கு வேண்டிய மரங்களை மேலும் அதிகரித்தல்.

6. வாட்டில், ப்ளூகம் போன்ற தொழில் முக்கியத்துவம் வாய்ந்த மரம் வளர்ப்புப் பிரதேசங்களை உண்டாக்குதல்.

7. சவுக்குத் தோப்புகளை இன்னும் அதிகப்படுத்தல்.

8. ஆறு, கால்வாய், ஏரிப் படுகைகளில் காடுகளை வளர்த்தல்.

9. அரக்கு உற்பத்தியை மேலும் ராஜ்யத்தில் விஸ்தரிப்பது.

10. வன விலங்குகளை பாதுகாப்பது.

11. கால்நடை தீவன கிடங்குகளை ஆரம்பிப்பது, மேய்ப்பு நிலங்களை அபிவிருத்தி செய்வது.

10th July 1957] [Sri M. Bhaktavatsalam]

மாஜி பஞ்சாயத்து காடுகளை மீண்டும் வளமுள்ளதாகச் செய்ய விறகு, கால் நடைத் தீவனம் முதலியன கிடைக்கக்கூடிய மரங்களை வளர்க்க ஒரு திட்டமிடப்பட்டு சுமார் 9,000 ஏக்கர்களில் ஆரம்ப வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. சுமார் 2,759 ஏக்கர்களில் மரங்கள் நடப்பட்டு விட்டன. இதனால் காற்றினாலும், நீரரிப்பினாலும் மண் அரிப்பு ஏற்படுவதைத் தடுப்பதோடு மண் வளத்தை பாதுகாக்கவும் முடியும். மண் அரிப்பு நிலங்களை சர்வே செய்யும் திட்டத்தின் கீழ் சுமார் 7,047 ஏக்கர்களின் சர்வே முடிந்திருக்கிறது. செங்கற்பட்டு, தென்னாற்காடு, வடாற்காடு, சேலம் ஆகிய ஜில்லாக்களில் வரண்ட நிலக்காடுகளை வளர்க்கும் திட்டத்தின் கீழ் சுமார் 20,500 ஏக்கர் நில பரப்பில் காடுகளை மீண்டும் வளர்க்க திட்டமிடப்பட்டிருக்கிறது. செங்கற்பட்டு ஜில்லாவில் மேய்ப்பு நிலமாகவும், விறகு கிடைக்கும்படியாகவும் இரு தேவைகளைப் பூர்த்தி செய்ய சுமார் 3,750 ஏக்கர் நிலத்தை அபிவிருத்தி செய்யப்படும். வாசனைப்பொருள்கள் விசாரணைக் கமிட்டியார் சிபார்சு செய்த சில திட்டங்களின்படி, முந்திரி மரங்களை ஏராளமாக வளர்க்க ஒரு பெருந்திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. 1956–57-ல் சுமார் 9,160 ஏக்கர்களில் முந்திரி பயிரிடப்பட்டது. இந்த ஆண்டிலும் சுமார் 8,850 ஏக்கர்களில் முந்திரி பயிரிடப்படும். முந்திரிபருப்புக்கும், முந்திரி எண்ணெய்க்கும் நல்ல கிராக்கி இருப்பதினால் இவைகளின் மூலமாக இன்னும் சில ஆண்டுகளில் நமக்கு அயல்நாட்டு செலாவணி கிடைக்க வழிகள் ஏற்படுமென்று நம்பப்படுகிறது. விலையுயர்ந்த தேக்கு போன்ற மரங்களை பயிரிடவும் காட்டிலாகா ஒரு திட்டத்தை வகுத்து நடத்தி வருகிறது. கட்டிட வேலைக்கான உறுதியான மரங்கள் அதிகப்படியாகக் கிடைக்க வேண்டும் என்னும் நோக்கத்துடன்தான் இத்திட்டம் வகுக்கப்பட்டது. 1956–57-ஆம் ஆண்டின் போது 398 ஏக்கர் நிலப்பரப்பில் தேக்கு பயிரிடப்பட்டது. மேலும் 105 ஏக்கர்களில் மூங்கில்கள் பயிரிடப்பட்டன. மேற்கொண்டு சுமார் 580 ஏக்கர்களில் தேக்கும் மற்றும் உறுதியான மர வகைகளும், சுமார் 120 ஏக்கர்களில் மூங்கில்களும் பயிரிட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. கோயம்புத்தூர் ஜில்லாவில் சுமார் 300 ஏக்கர் நிலப்பரப்பில் பாசன வசதி செய்து தேக்கு மரங்களை பயிரிடவும் ஒரு திட்டம் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. தீப்பெட்டித் தொழிலுக்கும் பிளவுட் தொழிலுக்கும் வேண்டிய மிருதுவான வகைகளில் தேவை அதிகரித்து இருக்கிறது. தற்போது இம் மர வகைகள் அதிகப்படியாக அந்தமான் தீவுகளிலிருந்து வரவழைக்கப்படுகின்றன. ராஜ்யப் பிரிவினைக்குப் பிறகு நிலைமை இன்னும் கஷ்டமாக இருக்கிறது. ஆகையினால் தீப்பெட்டித் தொழிலுக்கு வேண்டிய மர வகைகளை பயிரிட ஒரு திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டைவிட சுமார் 1,550 ஏக்கர் நிலப் பரப்பில் மேலும் பயிரிடப்படும். மதுரை, நீலகிரி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய ஜில்லாக்களில் சுமார் 2,500 ஏக்கர் நிலப் பரப்பில் வாட்டில் மரங்களை வளர்க்கவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. நீலகிரி மாவட்டத்தில் 575 ஏக்கர்களுக்கு மேல் ப்ளூகம் மரங்களை வளர்க்கவும் திட்டமிடப்பட்டிருக்கிறது. தோல் பதனிடும் தொழிலுக்கு வேண்டிய ஒரு வித "டானின்" என்ற எண்ணெய் வாட்டில் மரப்பட்டையில் இருந்து கிடைக்கிறது. ப்ளூகம் மரத்திலிருந்து "நீலகிரி தைலம் என்று" வழங்கப்படும் தைலம் கிடைக்கிறது. வாட்டில் மரத்தினாலும் ப்ளூகம் மரத்தினாலும் நல்ல விறகு கிடைக்கிறது. இந்த மரங்களின் மரக்கழிவிலிருந்து பத்திரிகை காகிதம் செய்யவும், ரேயான் நூல் தயாரிக்கவும் முடியும். மேட்டூரில் ஆரம்பிக்க விருக்கும் பத்திரிகை காகிதம் ரேயான் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய மரங்களை சப்ளை செய்வதற்கு இந்த மரத்தோட்டங்கள் மிகவும் பயனுள்ளதாய் இருக்கும் என்று நம்பப்படுகிறது. நகர் புறங்களில் விறகு தேவை அதிகரித்து வருவதைப் பூர்த்தி செய்யவும், கடலோரங்களிலும், ஆற்றுப்படுகைகளிலும் மணல் வெளியைத் தடுப்பதற்கு ஏதுவாக இருக்கும் பொருட்டும், காட்டிலாகா சவுக்குத் தோப்புகளை வளர்த்து வருகிறது. 1956–57-ம் ஆண்டில் சுமார் 239 ஏக்கர்களில் சவுக்கு பயிரிடப்பட்டது. இந்த ஆண்டு 825 ஏக்கர்களில் சவுக்கு பயிரிடப்படும். நீரோட்டத்தினால் ஆற்றங்கரைகள் அரித்துப்போகாமல் இருக்கவும் நீரோட்டத்தைக் கட்டுப்படுத்தவும், ஏரிகளிலும் குளங்களிலும் வண்டல் படிந்து தூர் விழாமல் தடுக்கும் பொருட்டும் காவிரி, பாலாறு, பெண்ணார், தாமிரபரணி,

[Sri M. Bhaktavatsalam] [10th July 1957

வைகை ஆகிய ஆற்றுப்படுகைகளில் மரங்களை நடுவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. மேட்டூர் நீர்த்தேக்கத்தின் கீழ் முகப் பிரதேசங்களிலும் மரங்கள் நடப்படும். சுமார் 130 எக்கர்களில் ஏற்கெனவே தேக்கு பயிரிடப்பட்டிருக்கிறது. 1957–58-ம் ஆண்டில் இன்னும் 2,300 எக்கரில் தேக்கு நடப்படும்.

அரக்கு ஒரு முக்கியமான வர்த்தகப் பொருளாக இருப்பதாலும், அதன் மூலம் பலவகைப்பட்ட பொருள்களைச் செய்ய வழி இருப்பதாலும் அரக்கு உற்பத்தியை அதிகரிக்க ஒரு திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தின் கீழ் இரண்டு வளர்ப்புப் பண்ணைகள் ஆரம்பிக்கப்பட்டு 100 மரங்களுக்கு ஊசி குத்தப்பட்டிருக்கிறது. 1957–58-ம் ஆண்டில் மதுரை ஜில்லாவில் அரக்கு உற்பத்தியை கணிசமாக உயர்த்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

வன விலங்குகளை பாதுகாக்கவேண்டும் என்ற தேசீய வனக் கொள்கையின் அடிப்படையில் முதுமலை வனவிலங்கு புகலிடத்தை அபிவிருத்தி செய்ய காட்டிலாகா முயற்சித்து வருகிறது. "பென்" என்னும் இடத்தில் ஒரு ஓய்வு விடுதி கட்டவும், சாலைகளை அபிவிருத்தி செய்யவும் 1957–58-ம் ஆண்டில் நடவடிக்கைகள் எடுக்கப்படும். காடுகளில் கள்ளத்தனமாக மரங்களை வெட்டுவதைத் தடுக்கும் பொருட்டு இரண்டு விசேஷ நடமாடும் கோஷ்டிகள் வேலை பார்த்து வருகின்றன. 1956–57-ல் இவர்கள் அபராதத் தொகையாக ரூபாய் 13,000 வசூலித்திருக்கின்றனர். இந்த நடமாடும் கோஷ்டியார் திடீர் என்று காட்டுப் பிரதேசத்திற்கு விஜயம் செய்வதையொட்டி காடுகளை பாதுகாக்கும் சிப்பந்திகளும் விழிப்பாக இருக்க உதவியாக இருக்கிறது.

பொதுமக்களின் நன்மைகளை உத்தேசித்து தனிப்பட்டவர்கள் வசமுள்ள காடுகளும் தாராதரமின்றி அழிக்கப்படாமல் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதும் திட்டமிட்டபடி மரங்கள் வெட்டப்பட வேண்டும் என்பதும் அரசாங்கத்தின் கொள்கை. இந்த நோக்கத்துடனேயே சென்னை தனிப்பட்ட காடுகள் பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்டது. இது பயனுள்ள வகையில் அமுலாக்கப்பட்டு வருகிறது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ள திட்டங்கள் நிறைவேற்றப்படுமானால் இந்த ராஜ்யத்தில் காட்டுவளம் வெகுவாக அதிகரிக்கும் என்று நம்பப்படுகிறது. விவசாயத் துறைக்கும் தொழில் பொருளாதார மேம்பாட்டிற்கும் காட்டு வளம் மிகவும் அவசியம் என்பதை உத்தேசித்து அங்கத்தினர்கள் தங்கள் முழு ஒத்துழைப்பை அளிக்க வேண்டும் என்றும், அரசாங்கம் காட்டு வளத்தை பாதுகாக்கவும் அதிகரிக்கவும் மேற்கொண்டுள்ள திட்டங்களை ஆதரிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் இந்த மான்யக் கோரிக்கையை நிறைவேற்றி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : Motion moved—

'That the Government be granted a sum not exceeding Rs. 57,90,600 under Demand No. IV—Forest Department' and

'That the Government be granted a sum not exceeding Rs. 19,54,500 under Demand No. XXXV—Capital Outlay on Forests'.

I understand that all Opposition parties have agreed that the hon. Member Sri Jagannathan may move his cut motion.

SRI M. JAGANNATHAN : Sir, I move—

'That the allotment of Rs. 57,90,600 under Demand IV—Forest Department—be reduced by Rs. 100'.

10th July 1957]

MR. SPEAKER : With regard to Demand XXXV, the hon. Sri K. Sattanatha Karayalar will move his cut motion.

SRI K. SATTANATHA KARAYALAR : Sir, I move—

'That the allotment of Rs. 19,54,500 under Demand No. XXXV—Capital Outlay on Forests—be reduced by Rs. 100 '.

MR. SPEAKER : Cut Motions moved—

'That the allotment of Rs. 57,90,600 under Demand IV—Forest Department—be reduced by Rs. 100 ' and

'That the allotment of Rs. 19,54,500 under Demand No. XXXV—Capital Outlay on Forests—be reduced by Rs. 100.'

Now the main motions as well as the cut motions are before the House for discussion.

I have a list of more than 12 hon. Members wanting to speak on these Demands. Therefore, I would request the hon. Members to confine their speech to seven minutes if not for a shorter duration.

SRI M. JAGANNATHAN : மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, 12-1
என்னுடைய வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல் p.m.
வதற்கு முன்னால் பொதுவாக இந்தக் காட்டு இலாகா நிர்வாகத்தைப்பற்றி சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இதர விஷயங்களைப் போலவே இந்தக் காட்டு இலாகா நிர்வாகம் கூட அவ்வளவு திருப்திகரமாக நடைபெறவில்லை என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். ஏனென்றால், இந்த காட்டு இலாகா ஒரு முக்கியமான இலாகாவாக இருந்த போதிலும் கனம் அமைச்சரவர்கள் எடுத்துக் கூறியது போல் இந்தக் காட்டு செல்வங்கள் எல்லாம் தேசிய செல்வங்களாக மதிக்கப்பட வேண்டும். சர்க்கார் சொல்லளவில் இதை ஒத்துக்கொள்கிறார்களே தவிர காரியாம்சத்தில் அதை அவர்கள் கடைப்பிடிப்பதாக தெரியவில்லை.

காடுகளை அழிக்கிற வேலைகள் நம்முடைய மாநிலத்திலே அதிகமாக நடைபெற்று வருகின்றன. உதாரணமாக, கள்ளத்தனமாக காடுகளில் நுழைந்து மரங்களை வெட்டியும், கால் நடைகள், அதாவது ஆடு மாடுகள் காடுகளில் நுழைந்து அங்குள்ள செடி கொடிகளை அழிப்பதையும் தவிர்ப்பதற்கு சரிவர சர்க்கார் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவில்லை. ஆகவே, இந்தக் காடுகள் எல்லாம் நம் கண்ணுக்குத் தெரியாமலே கொஞ்சம் கொஞ்சமாக கிராமப் புறங்களில் அழிக்கபட்டு வருகின்றன என்பது உண்மையான விஷயமே. ஆகவே, இவைகளைத் தடுப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும். கனம் அமைச்சர் அவர்களே குறிப்பிட்டார்கள், காட்டுச் செல்வங்கள் எல்லாம் தேசிய செல்வங்களாக மதிக்கப்படவேண்டுமென்று. அது மாத்திரமல்ல. இந்தக் காடுகள் இருப்பது மிகவும் அத்தியாவசியமானது என்பதை நாம் நன்கு புரிந்துகொள்ளவேண்டும். அந்தக் காலத்தில் நம்முடைய நாட்டில் மாதம் மும்மாரி பெய்தது என்று சொல்லப்படுகிறது. மாதம் மும்மாரி அந்தக் காலத்தில் பெய்தது என்று சொன்னால், காடுகள் தான் முக்கிய காரணம். இப்பொழுது எங்கு பார்த்தாலும் தண்ணீர் பஞ்சம் ஏற்படுகிறது. ஏழு, எட்டு வருஷங்கள் மழை இல்லாமல், நாட்டு மக்கள் தண்ணீர் பஞ்சத்தால் கஷ்டப்படுகிறார்கள் என்றால், காடுகள் பெரும்பாலான இடங்களில் அழிக்கப்படுவது தான், அதன் அடிப்படைக் காரணம். ஆகவே, காடுகளை உற்பத்தி செய்வதில் கண்ணும் கருத்துமாய் இருந்து மொத்த நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பங்கு நிலம் காடுகளாக இருக்கும்படிச் செய்வது அரசாங்கத்தின் கொள்கையாக இருக்குமென்று குறிப்பிட்டார்கள். அதை அவர்கள் காரியாம்சத்தில் கொண்டுவரத் தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக,

நம்முடைய மாநிலத்திலே, வனமகோற்சவம் என்று வட மொழியில் சொல்லப் படுகின்ற மரம் நடு விழா நடந்து வருகிறது. நான் அதைப்பற்றி சந்தோஷப் படுகிறேன். ஆனால், இந்த மரம் நடு விழாவை ஒரு வேடிக்கையாகத் தான் கையாளுகிறார்களே தவிர உண்மையிலே இந்த மரம் நடு விழாவினால் மக்கள் பயன் அடைய வேண்டும் என்ற கண்ணோட்டத்திலே இந்த மரம் நடு விழா மேற்கொள்ளப்படுவதில்லை என்பது தான் எனது அபிப்பிராயம். ஒரு நகரத்திலே மரம் நடு விழா நடைபெறுகிறது என்றால் அந்த இடத்தில் தோட்டி முதல் தொண்டமான் வரை சூழ்ந்துகொண்டு நிற்பார்கள். ஆனால் அடுத்த நாள் பார்த்தால் அந்தச் செடிக்கு தண்ணீர் ஊற்றப் படாத காரணத்தினால் வாடியிருக்கும். மூன்றாவது நாள் பார்த்தால் அது அந்த இடத்திலிருந்தே மறைந்து போயிருக்கும். அப்படி ஒரு அதிருப்தியான நிலைமையில் இந்த மரம் நடு விழா, குறிப்பாக நகர்ப்புறங்களில் மேற்கொள்ளப்படுகிறது. தவிர கிராமப் புறங்களில் இப்படிப்பட்ட விழாக்கள் கூட கிடையாது. இதனால் மக்களுக்கு ஏதாவது நன்மை ஏற்பட்டதா? அல்லது அதனால் மரங்கள், செடி கொடிகள் ஏதாவது விருத்தி அடைந்ததா என்றால், இல்லை என்று சொல்ல விரும்புகிறேன். அடுத்தபடியாக, சர்க்கார் காடுகளை அழித்து பல நூற்றுக்கணக்கான ஏக்கர்களில் அவர்கள் சவுக்கு மரங்களை நடுகிறார்கள். வளர்ந்த சவுக்கு மரங்களை சர்க்கார் ஏலத்தில் விடுகிறார்கள். அந்த ஏல முறையைப் பார்க்கும்போது நம்மால் குறை கூறாமல் இருக்கமுடியாது. நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களில் இருக்கிற சவுக்கு மரங்களை, யார் முன் வந்து அந்த மரங்களை ஏலத்தில் எடுக்கமுடியும் என்று கேட்க ஆசைப்படுகிறேன்? குறிப்பாக, பணக்காரர்கள், நிலச்சுவான்தார்கள் தான் இந்த நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலத்தில் இருக்கிற சவுக்கு மரங்களை ஏலத்தில் வாங்க முடியுமே தவிர ஏழை விவசாயிகள், மத்திய தர வகுப்பைச் சேர்ந்தவர்கள், அவர்களின் பொருளாதார நிலைமை இடங்கொடுக்காத காரணத்தால், அதாவது போதிய பணம் இல்லாததால் ஏலத்தில் பிடிக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே இந்த விஷயத்தைப்பற்றியும் கவனிக்க வேண்டுமென்று கூற விரும்புகிறேன். கொடைக்கானல் போன்ற பிரதேசத்தில் கூட சுமார் 42,000 மரங்கள், மிகவும் விலை உயர்ந்த மரங்களை சர்க்கார் ஏலத்தில் விட்டு இருக்கிறார்கள். அந்த ஏலத்தை ஒரு பணக்காரரே முன் வந்து எடுத்தார்கள். தவிர மத்தியதர வகுப்பினரோ, ஏழை விவசாயிகளோ அந்த மரங்களை ஏலத்தில் வாங்க முடியவில்லை. இந்தக் காட்டு இலாகா நிர்வாகத்தை எடுத்துப் பார்த்தாலும் கூட சர்க்கார் பெரிய பெரிய பணக்காரர்களையும் நிலச்சுவான்தார்களையும் தான் ஆதரிக்கிறார்களே தவிர மத்தியதர வகுப்பை சேர்ந்தவர்களையோ, ஏழை விவசாயிகளையோ சர்க்கார் ஆதரிப்பதாகத் தெரியவில்லை. குறைந்த அளவில் மரங்களை ஏலத்தில் விட்டால் மத்தியதர வகுப்பைச் சேர்ந்தவர்களும், ஏழை விவசாயிகளும் ஏலத்தில் பங்கு எடுத்துக்கொண்டு குறைந்த அளவிற்கு கொடுக்கப்படுகிற மரங்களை வாங்கி அதனால் நன்மை அடைவார்கள். கிராமப் புறங்களில், அதன் அருகில் இருக்கும் மக்களுக்கு, குறிப்பாக ஏழை விவசாயிகளுக்கு இந்த மரங்கள் ஏலத்தில் கிடைக்கும்படிச் செய்யவேண்டும். அடுத்தபடியாக, காடுகளிலே நல்ல விலை உயர்ந்த பொருள்கள் கிடைக்கின்றன. தேக்கு மரம், சந்தன மரம், பைன் மரம், தேன், அரக்கு, காட்டு மூலிகைகள் போன்ற வெளிநாடுகளில் இறக்குமதி செய்யப்படுகிற சாமான்கள் எல்லாம் நம் காடுகளில் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த சாமான்களை நாம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால், நமக்கு வெளிநாட்டு செலாவணி கிடைக்கும். நம் நாட்டின் செல்வத்தையும் அதனால் அதிகரிக்க முடியும். ஆகவே சர்க்கார் இந்த விலை உயர்ந்த பொருட்கள் கிடைக்கும் காடுகளையெல்லாம் நன்றாகப் பாதுகாத்து, காடுகளை மேலும் மேலும் எங்கெங்கே சாத்தியமோ, எங்கெங்கு வசதி இருக்கிறதோ அங்கங்கெல்லாம் இந்த காடுகளை நல்ல முறையில் உண்டாக்கி, காட்டின் விஸ்தீரணத்தை அதிகரிக்க வேண்டுமென்று நான் சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, பண்டைக்காலத்தில், நம் நாட்டு மன்னர்கள், காடாறு மாதம், நாடாறு மாதம் என்று அரசாட்சி செய்ததாக படித்திருக்கிறோம். நம் நாட்டு பண்டைக்கால மன்னர்கள், நாட்டிற்கு எவ்வளவு முக்கியத்துவம்

10th July 1957] [Sri M. Jagannathan]

கொடுத்திருந்தார்களோ, அவ்வளவு முக்கியத்துவம் காட்டிற்கும் அளித்திருந்தார்கள். நாட்டை எப்படி மதித்திருந்தார்களோ அப்படியே காட்டையும் மதித்திருந்தார்கள். நாட்டில் எப்படி ஆறு மாத காலம் அரசாட்சி செய்தார்களோ அப்படியே காடுகளையும் நல்ல முறையில் பாதுகாத்து காட்டையும் அரசாட்சி செய்திருக்கிறார்கள். ஆகவே, நான் இந்த சந்தர்ப்பத்தில் காட்டு இலாகாவை மேற்கொண்டிருக்கும் கனம் அமைச்சரவர்களை கேட்டுக்கொள்வது என்னவென்றால், நாட்டை ஆறு மாதம் அரசாட்சி செய்யும்படி கேட்கிறேன்; அதேபோல், ஆறு மாதம் வனவாசம் செய்து காடுகளை நல்ல முறையில் காப்பாற்றும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். அடுத்தபடியாக, கிராமங்களில் எங்கெங்கெல்லாம் புறம்போக்கு நிலம் இருக்கிறதோ அங்கெல்லாம் இந்த மரம் நடு விழாவை அதிகமான முறையில் ஆரம்பித்து வைத்து, அங்கு காடுகளை உற்பத்தி செய்து காட்டுச் செல்வத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* SRI M. J. JAMAL MOIDEEN : Mr. Speaker, Sir, I support the Hon. Minister's Demand for grants under both the heads, 'Forest Department' and 'Capital Outlay on Forests'. While doing so I would like to make a few observations. 12 20 p.m.

Of course, it is a fact, that after separation of Kerala we have lost some of the forest areas. That is the very reason why we should concentrate more on forests so that we can augment our resources. I should think that the Hon. Minister can establish some show-rooms displaying some of the Forest Department products in cities like Madras, Coimbatore and Madurai. It will attract, rather it will focus the public view and this might increase the income of the Forest Department by increased sales. Sometime back I remember, the Forest Department had a Forest Utilization Officer whose duty it was to investigate what trees or what products of the forests were best used and for what purposes. In that way he was able to suggest to the public the real value of forest products. Similar work may now be entrusted to an officer at least of the rank of the Chief Conservator of Forests for establishing show-rooms in cities and towns.

In this connection I want to say a word about wattle plantations. The Hon. Minister knows that I belong to the tanning industry. Wattle is very important for the tanning industry. We consume about 30,000 tons of this material per annum, mostly imported from Africa. After our having applied 'Sanctions' against South Africa, we get that material either from East Africa or Kenya. The value of our needs the material is Rs. 160 lakhs. We import the material because we do not have proper substitutes, no indigenous substitutes. Of course we know there are lots of trees in our forests and the barks of these trees are very rich in tanning content. But I should like to say that they have not been properly tapped and no arrangements have been made to collect them. However, we know that these barks yield very good tanning material. Now we have to depend on Africa for this material. Apart from the money we spend on the import of bark, this very important industry which is one of the best foreign exchange earners is stranded if, at times, they don't get the supply

[Sri M. J. Jamal Moideen] [10th July 1957

even for a few days. The industry is at present in that plight. Sometime back I visited Palni hills where plantation of wattle had been taken up. I understood then that it was taken up more with a view to serve as a fire built than for commercial purposes. I am glad the Ministry has now taken up the work of planting these trees for commercial purposes. I hope that they will develop it in such a way that ere-long we will be self-sufficient in respect of wattle barks. These trees are generally felled after a period of ten years and as the Hon. Minister has pointed out the wattle tree can be used for many other purposes. We import good lot of extracts also. If an extract factory is established, that will yield very good revenue to Government. From the waste materials left after obtaining extracts, we can manufacture by products such as cardboards and many other things. I was under the impression—I am sorry to use that expression—that the Government have been giving hitherto a step-motherly treatment to this question of planting wattle trees. Now I hope they will take real interest in planting these trees. As was once pointed out by Mr. Seshachalam Chowdry of the Washermanpet Leather Trades Institute, it was profitable to grow these trees when the price of bark was Rs. 80 per ton. Now the price is Rs. 550 per ton and it would be more profitable now to plant these trees. But the difficulty is, it takes ten years for the trees to grow and then only the bark is available.

Another thing which I would like to point out in this connection is that in some areas the bark is not peeled off immediately after the trees are felled. If the bark is not peeled off from the trees immediately the trees are felled, they are exposed to sun and rain and a good deal of tanning contents of the bark is lost.

Mr. SPEAKER : The hon. Member's time is up.

Sri M. J. JAMAL MOIDEEN : I will finish in a minute. Sir. I think some responsible officer should be sent to Africa to study how this wattle bark is peeled off and preserved before they are sold. With these words I support the motion moved by the Hon. Minister.

12-25 p.m. Sri M. P. SUBRAMANIAM : தலைவர் அவர்களே, இந்தக் காட்டிலாகா மான்யத்தின் மீது கனம் நண்பர் கொண்டு வந்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இன்று நம் தமிழ் நாட்டிலே காட்டு வளம் மிகவும் குறைவு என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். பொதுவாக நிலப்பரப்பில் 33 சத விகிதம் காட்டு வளம் இருந்தால்தான் போதியதாக இருக்கும் ; ஆனால் இப்போது நம் நாட்டிலே 13·4 சத வீதம் தான் இருக்கிறது என்று கூறினார்கள். இயற்கையாக அமைந்த காட்டுச் செல்வம் குறைவு என்பதை நாம் உணர்ந்து கொள்கிறோம். என்றாலும் முன்பு ராஜ்யங்கள் பிரிந்தபோது காட்டுவளம் மிகுதியாகவுள்ள செங்கோட்டைப்பகுதியை இந்த அடிப்படையிலே நாம் அடைந்திருக்கவேண்டும். அதையும் விட்டு விட்டோம். அதே மாதிரி, திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத்திலுள்ள தமிழ்ப் பகுதிகள் சேர்கின்ற காலத்தில் காட்டுவளம் மிகுந்த தேவிகுளம், பீர்மேடு பகுதிகளை, வேறு அடிப்படையிலே இல்லாவிட்டாலும், காட்டு வளம் காரணமாக வேனும் நாம் அடைந்திருக்கவேண்டும். இந்த விஷயத்திலும் சர்க்கார் வெற்றி பெறாதது பாராட்டத்தக்கதாகாது. இருந்த போதிலும்

10th July 1957] [Sri M. P. Subramaniam]

இப்போது காட்டிலுள்ள வளம் நல்ல முறையிலே காக்கப்பட்டு வருகிறதா என்ருல் அது தான் இல்லை. இன்று இந்தக் காடுகள் அழிந்து வருவதாக அந்தந்த வட்டாரத்திலுள்ள ஒவ்வொரு உறுப்பினரும் குறிப்பிட்டிருக்கிருர்கள். நானும் இந்த சபையிலே இதைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறேன். "கூப்" வெட்டுகிறது என்ற அடிப்படையில் காடுகள் பத்து சதுரமைல், 4 சதுரமைல் அளவு ஏலத்தில் விட்டு வெட்டுகிறதற்கு அனுமதிக்கப்படுகிறது. அவ்வாறு வெட்டுகிற சமயத்தில் அந்த "கூப்" காண்ட்ரேக்ட் பிரகாரம் வெட்டாமல் அந்த அளவுக்கு மேல், பக்கத்திலுள்ள நல்லமரங்களைக் கூட, "கூப்" வெட்டுகிற சாக்கை வைத்துக்கொண்டு, அவைகளை வெட்டி அப்புறப்படுத்தி விடுகிருர்கள் என்று புகார் செய்திருக்கிருேம். இவைகளுக்குக் காரணம் அந்த வட்டாரத்திலுள்ள காட்டிலாகா அதிகாரிகள் நல்ல முறையிலே கண்காணிக்காததுதான். அந்த வட்டார அதிகாரிகள் பொறுப்பு ஏற்கவேண்டும் என்று சபையிலே குறிப்பிட விரும்புகிறேன். அது மட்டுமல்ல. இப்போது பஞ்சாயத்து, ஜமீனிலிருந்து அரசாங்கம் எடுத்துக்கொண்ட காடுகளில் ஏற்கெனவே இருந்து வந்த காட்டுவளம் குறைந்து விட்டது என்று அந்தந்த வட்டாரத்திலிருந்து வந்தவர்கள் கூறுகிருர்கள். அரசாங்கத்தின் நிர்வாகத் திறமை குறைவான காரணத்திஞலே இந்த மாதிரி காடுகள் குறைக்கப்பட்டு விட்டன என்று இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். அங்கு இருந்த மரங்களைத் திருட்டுத்தனமாக, பச்சை மரங்களையும் கூட, வெட்டி அப்புறப்படுத்தி விடுகிருர்கள். காட்டிலாகா சிப்பந்திகளின் மிகவும் அஜாக்கிரதை காரணத்தால், இன்னும் கூறுவதாஞல்; அவர்களுடைய அனுமதியின் பேரிலே, பச்சை மரங்கள் வெட்டப்படுவதை அமைச்சரவர்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழ் நாட்டிலுள்ள எல்லா நிர்வாகத்தையும் எடுத்துக்கொண்டால், காட்டிலாகா நிர்வாகச் சிப்பந்திகள் கவனக் குறைவு மிகுதியாக இருக்கிருர்கள். காடுகள் அழிக்கப்பட்டு வருவதற்கு காரணம் அவர்கள் பராமரிப்பு இல்லாதது தான் என்று அமைச்சருக்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அமைச்சர் அவர்கள் படித்த பட்டியலிலிருந்து, அரசாங்கம் காட்டு வளத்தைப் பெருக்க மிகவும் நன்ருக கவனம் செலுத்துவதாக கூறிஞர்கள். இருந்தாலும் கூட சென்ற ஆண்டிலும் சரி, அதற்கு முந்தின ஆண்டுகளிலும், இந்த இலாகா மான்யங்கள் முழுதும் செலவழிக்கப்படவில்லை. ஆடிட்டர்-ஜெனரல் அவர்கள் ரிப்போர்ட்டிலும், பொது கணக்கு பரிசீலனைக் கமிட்டியில் கூட கடந்த ஆண்டு இந்த மான்யத்திற்கு ஒதுக்கப்பட்ட பணம் முழுதும் செலவழிக்கப்படவில்லை என்று அந்த இலாகா தலைவர்களே ஒப்புக்கொண்டிருக்கிருர்கள். ஆகவே, அதைப் போல் இல்லாமல், இந்த வருட இறுதிக்குள்ளேயே, பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை செலவழிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கோயமுத்தூரில், ஒரு ரிசர்ச் கழகம் அமைக்கப்பட்டு, எங்கெங்கே எந்த எந்த மரங்கள் வளர்க்கவேண்டுமென்ற ஆராய்ச்சி நடத்துவதாக அறிகிருேம். அந்த ஆராய்ச்சியின் பலஞக ஒவ்வொரு வட்டாரத்திலும் தகுந்த மரங்களை பயிரிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சேலம் மாவட்டத்தில் பல்லாயிரக்கணக்கான ரூபாய்கள் செலவழிக்கப்பட்டும், மூன்று நான்கு ஆண்டுகளுக்குள்ளேயே சவுக்கு மரங்கள் அழிந்து விட்டன. அதற்குக் காரணம், தகுந்த மரங்களை அந்த மாவட்டத்தில் பயிர் செய்யாதது தான். எந்த எந்த மரங்களை, எந்த எந்த மண் வளத்தில் பயிர் செய்யவேண்டுமோ, அதை ஆராய்ச்சி செய்து, தகுந்த மரங்களை பயிர் செய்யவேண்டும். மழை வளத்தையும் அனுசரித்து அவசியமான மரங்களை வளர்ப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காட்டிலாகா சிப்பந்திகள் இவ்வளவு அஜாக்கிரதையாகவும் கவனக் குறைவாகவும் இருப்பதற்கு காரணம் அவர்களுக்கு போதிய அளவு சம்பளம் கொடுக்காதது தான். இன்று அவர்களுக்கு மாத வருமானம் ரூ. 15 -லிருந்து ரூ. 20 வரையில் கொடுக்கப்படுகிறது. இது மிகவும் குறைவு. தனிப்பட்ட நபருடைய வாழ்க்கைச் செலவுக்கு குறைந்த பட்சம் 100 ரூபாய்

அத்தியாவசியம் என்று சொல்லும் தருணத்தில், குமாஸ்தாக்களுக்கும் 4-வது தர சிப்பந்திகளுக்கும் கொடுக்கும் ஊதியமாவது காட்டிலாகா சிப்பந்திகளுக்கு கொடுக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

காட்டிலே வாழ்ந்து வரும் மக்கள் ஆங்காங்கே சில பகுதிகளில் விவசாயம் செய்து வருகிறார்கள். காட்டிலாகா அதிகாரிகளால், அவர்கள் அந்த இடங்களிலிருந்து அப்புறப்படுத்தப்படுகிறார்கள். ஆனால், பல ஆண்டுகளாக அவர்கள் நிலங்களை உழுதுகொண்டு, வாழ்ந்து வருகிறார்கள். அப்படி அவர்களை அப்புறப்படுத்தினால், அவர்களைப் பராமரிக்க அரசாங்கத்தார் தகுந்த ஏற்பாடுகள் செய்யவேண்டும். சேலம் மாவட்டத்தில் சேர்வராயன் மலை, கல்ராயன் மலை போன்ற மலைகளில் ஏராளமான "கடுக்காய்" கிடைக்கிறது. இவைகள், தோல் பதனிடுவதற்கு உபயோகமாக இருக்கிறது. இச்செடிகளை நல்ல முறையில் பராமரித்து, அப்பொருள்களை விற்பனை செய்வதற்கு அவசியமானால் கூட்டுறவு முறையிலாவது, ஏற்பாடுகள் செய்து கொடுத்தால், அங்கே வாழ்கின்ற மலை ஜாதியினருக்கு உபயோகமாக இருக்கும் என்று கூறி பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

12-35 p.m. SRI A. VEDARATHNAM PILLAI: கனம் அவைத் தலைவர் அவர்களே, மொழிவாரி ராஜ்யம் பிரிக்கப்பட்ட பிறகு நம்முடைய மாநிலத்தில் வன வளம் குறைந்து விட்டது என்று எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். அது முற்றிலும் உண்மை. கனம் மந்திரி அவர்களும் வனவளம் குன்றியிருப்பதை புள்ளி விவரங்களுடன் குறிப்பிட்டார்கள்.

(Sri M. Jagannathan in the Chair.)

இப்போது நம்முடைய மாநிலத்தில் இந்த வன வளத்தைப் பெருக்குவதற்கு பெரு முயற்சிகள் நடந்து வருகிறது. இந்த முயற்சி எவ்வளவு அவசியம் என்று காட்டுவதற்குத்தான் இந்த வன மகோத்சவம் இந்தியா பூராவிலும் நடந்து வருகிறது. அது வீண் என்று பலர் நினைக்கிறார்கள். இந்த உற்சவம் நடப்பதன் காரணத்தினால் பல லட்சக்கணக்கான மரங்கள் நடப்படுகின்றன. அதில் பாதி சேதம் ஆனாலும் கூட மறு பாதியாவது உருப்படியாக வளருகிறது என்பதில் ஐயமில்லை. வன மகோத்சவம் மிகச் சிறந்தது என்பதிலும், வரவேற்கத்தக்கது என்பதிலும் ஐயமே இடையாது. சில இடங்களில் கவனிக்கப்படாமல் விட்டு விடப்படுகிறது என்பதில் உண்மை இருக்கக்கூடும். அதை ஆங்காங்கு உள்ளவர்கள் கவனித்து அதை தடுக்க தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டுன்மேயொழிய அரசாங்கத்தை குற்றம் கூறுவது முறையன்று என்று நான் கூறுகிறேன்.

வன வளத்தைப் பெருக்குவதற்கு, முந்திரி, சவுக்குபோன்ற மரங்கள் இப்பொழுது வெகுவாக நடப்பட்டு வருகிறது. இதை விட இன்னும் முக்கியமான விஷயம் ஒன்று இருக்கிறது. சவுக்கு மரங்கள் சில இடங்களில் தண்ணீர் இல்லாததனால் தான் காய்ந்து விட்டது என்று சொன்னார்கள். தண்ணீர் இல்லாவிட்டாலும் கூட, எந்த உதவியுமில்லாமல் வளரக்கூடிய மரங்கள் சில உள்ளன. இவைகளில் பனைமரம் ஒன்று. அதன் விதையை நடுவதைத் தவிர வேறு ஒன்றும் தேவையில்லை. அதை "great wind fighter" என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள். சோழ மண்டலத்தில் காற்றின் வேகத்தை தடுப்பதற்கென்றே இந்த மரங்கள் ஏராளமாக பயிர் செய்யப்பட்டிருக்கின்றன. இம்மரங்களிலிருந்து உணவுப் பொருள்களும், மற்ற பொருள்களும் கிடைக்கின்றன. இலங்கையிலுள்ள யாழ்ப்பாணத்தில் இதன் பழம், கிழங்கு முதலியவைகளை நல்ல முறையிலே preserve செய்து தேவையானபோது உபயோகிக்கிறார்கள். யாருடைய உதவியும் இன்றி வளரக்கூடிய இம்மாதிரி மரங்களை தரிசு, புறம்போக்கு நிலங்களில் ஏராளமாக பயிர் செய்வதும், அதற்கு வசதி செய்து கொடுப்பதும் மிக அவசியம். திருநெல்வேலி ஜில்லாவில் ஏராளமான பனை மரங்கள் இருந்தாலுங் கூட.................

TEMPORARY CHAIRMAN (SRI M. JAGANNATHAN: The hon. Member's time is up. Sri K. Sattanatha Karayalar will now speak.

10th July 1957]

SRI K. SATTANATHA KARAYALAR : தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையை எதிர்த்து நான் கொண்டுவந்திருக்கக்கூடிய வெட்டுப் பிரேரணையின் மூலம் ரூ. 19½ லட்சம் இந்த இனத்தில் ஒதுக்கப்பட்டிருப்பதைக் குறைக்கவேண்டுமென்று சட்டசபையின் சம்பிரதாயப்படி கொடுத்திருப்பினும் என்னுடைய நோக்கம் ஒதுக்கப்பட்டிருக்கும் ரூ. 19½ லட்சம் மிகக் குறைவு என்று குறிப்பிடுவதற்குத்தான். மொத்தமாக இந்த இலாகாவிற்கு கோரும் தொகை ரூ. 77.45 லட்சம். இதிலே **establishment charges**-க்கு ரூ. 30.24 லட்சமும், **general direction** கீழ் ரூ. 2·08 லட்சமும், **conservancy and works** கீழ் ரூ. 17·58 லட்சமும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது மிகக் குறைவான தொகை என்று குறிப்பிடத்தான்வேண்டும். திட்டக் கமிஷன் யாதாஸ்து பிரகாரம் மூன்றில் ஒரு பங்கு வனங்களாக இருக்கவேண்டுமென்று இருக்கிறது. ஆனால் தற்சமயம் இந்தியாவில் 18 சதவிகிதத்திற்கும் குறைவாகத்தான் இருக்கிறது. மந்திரி அவர்கள் முன் உரையில் கூறிய விதம் ராஜ்ய புனரமைப்புக்குப் பிறகு சென்னை ராஜ்யத்தில் மிகக் குறைவான அளவுக்கே—சுமார் 13 சதவிகிதமே—காடுகள் இருப்பதாக குறிப்பிட்டார். ஜமீன் காடுகளும், பஞ்சாயத்துக் காடுகளும், அயன் காடுகளும் அதில் சேர்ந்தவை. பஞ்சாயத்துக் காடுகள் உண்மையிலேயே "காடுகள்" என்ற அடைமொழியின்கீழ் வருமா என்று ஐயமுறுகிறேன். வெகு அதிகமான இடங்களில் **barren forest**-கள் ஆகவும் தரிசுகளாகவும் இருக்கின்றனவே ஒழிய "காடுகள்" என்று சொல்லக்கூடிய அளவில் இல்லை. நீண்ட நாட்களாகவே, 10, 17 வருஷங்களாக, இந்த சில இடங்களில் விவசாயிகள் பயிர் செய்து வருகிறார்கள். இந்தப் பகுதிகளையும் சேர்த்து காடுகள் என்று சொல்வது தவறாக இருக்கும். இதை நல்ல முறையில் அமுலுக்குக் கொண்டு வருவதற்கு திட்டவட்டமான ஒரு "வொர்க்கிங் பிளான்" இருக்கவேண்டும். ராஜ்யப் புனரமைப்புக்கு முன்பாக ஒரு "வொர்க்கிங் பிளான்" இருக்கலாம். ஆனால் ராஜ்யப் புனரமைப்புக்குப் பிறகு எஞ்சியிருக்கக்கூடிய காடுகள் குறைவாக இருக்கிறது. காடுகள் என்ற பெயருக்குப் பொருந்தாமல் இருக்கக்கூடிய பகுதிகளைக் கூட காடுகளுடன் சேர்க்கக்கூடாது. அந்தக் காடுகளை விவசாயத்திற்குக் கொடுக்க முடியுமானால் கொடுக்கவேண்டும். எஞ்சியிருக்கக்கூடிய இடங்களில் அந்தக் காடுகளை எப்படி பயன்படுத்த வேண்டுமென்பதற்கு திட்ட வட்டமாக ஒரு "வொர்க்கிங் பிளான்" இருக்கவேண்டும்.

கடைசியாக ஒரு வார்த்தை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன் காடுகள் புனரமைப்பு விஷயமாக. செங்கோட்டை, தென்காசி, கன்யாகுமரி போன்ற பகுதிகளில் குருந்தோட்டி, நன்னாரி, லெமன் கிராஸ் போன்ற பயிர்கள் நல்ல் முறையில் வளரக்கூடும். இம்மாதிரி செடிகள் 500, 1,000 அடி உயரமுள்ள பிரதேசங்களில் நன்றாக வளரும். இதே இடங்களில் வாட்டில் மரங்களை வளர்க்க முடியுமா என்பதையும் பரிசீலனை செய்யவேண்டும். இதற்கெல்லாம் ஒரு திட்டமான "வொர்க்கிங் பிளான்" போட்டு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டும். ஐந்தாண்டுத் திட்டத்தில் எஞ்சியுள்ள பகுதியிலே இம்மாதிரி ஒரு "வொர்க்கிங் பிளானை" அமுலுக்குகொண்டுவரக்கூடிய வகையிலே ஒரு திட்டத்தை வகுக்க வேண்டும்.

SRI N. P. M. CHINNIAH KOVUNDER : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த காட்டு மானியக் கோரிக்கையை ஆதரிக்கும் வகையிலே ஒரு சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். ஒரு சில காடுகளில் புதியதாக மரங்கள் வளர்க்கப்படுவதில்லை. மருங்காபுரி ஜமீனுக்குப் பக்கத்தில் ஒரு இடத்திலே இம்மாதிரி புதிய மரங்களை வளர்ப்பதற்கு பல ஆயிரக்கணக்கான ரூபாய் செலவழித்தும், அங்கு ஒன்றுமே பலன் தரவில்லை. நீர்வளம் உள்ள இடங்களிலே பார்த்து எந்தெந்த மண்ணில் மரங்கள் நன்றாக உற்பத்தியாகும் என்பதை நல்ல முறையிலே ஆராய்ச்சி செய்த பிறகுதான் இம்மாதிரி காடுகள் வளர்ப்பதில் பணத்தை செலவழிக்கவேண்டும். அப்படிச் செய்தால்தான் நல்ல

பலன் கிடைக்கும் என்று நான் கருதுகிறேன். அங்கு பல ஆயிரம் ரூபாய் செலவு செய்து ஏராளமான கன்றுகள் வைத்தபோதிலும், ஒன்று கூட பிழைத்ததாகத் தெரியவில்லை. இதற்கு மாறாக மருங்காபுரி ஜமீன் காடுகளில் இருக்கும் ஏராளமான மரங்கள் அழிக்கப்படுகின்றன. வன உற்சவத்தின்போது ஒரு சில மரங்கள் நடுவதை ஆதரித்தாலும் கூட, ஏராளமான காடுகள் அந்த நிர்வாகத்தின் மூலமாகவே அழிக்கப்படுகின்றன. ஆகவே, காட்டு இலாகா நிர்வாகத்தை அரசாங்கம் கவனித்து நல்ல முறையிலே கண்காணிப்பதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொள்ள முன் வரவேண்டும். காட்டு இலாகா உத்தியோகஸ்தர்கள் சாதாரணமாக காடுகளுக்கு சரியாகப் போவது கிடையாது. ஏதோ ரோடுகளில் நின்று கொண்டு பட்டா காடுகளிலிருந்து வெட்டி வரும் மரங்களை பிடித்து நிறுத்துகிறார்கள். காட்டு இலாகாவில் அனுமதி வாங்காததை பயன்படுத்திக்கொண்டு திருச்சியிலிருந்து மருங்காபுரிக்குச் சென்று மரங்களை வெட்டி வரும் வண்டிக்காரர்களை தொல்லைபடுத்துகிறார்கள் காட்டு இலாகா சிப்பந்திகள். ஒரு வண்டிக்காரன் ரூ. 20-க்கு விறகு வாங்கி 35 மைல் வண்டி ஓட்டிக்கொண்டு 5 நாட்க்ளில் திரும்ப வீடு போய்ச் சேரவேண்டும். 5 நாட்கள் வண்டி ஓட்டி அவன் விறகு கொண்டு வந்து அதை ரூ. 25-க்கு விற்கவேண்டும். பட்டா காடுளில் கிராம அதிகாரி மூலமாக பெர்மிட் வாங்கி அதன் மூலம் விறகு கொண்டு வருவதற்கு அனுமதி தரப்படவேண்டும். ஒரு பர்மிட் பெறுவதற்கு 10, 20 ரூபாய் செலவழித்து " பாரஸ்டு ரேஞ்சர் " போன்ற மேலதிகாரிகளைக் கண்டு அனுமதி பெறவேண்டியிருப்பது கிராம ஏழை வண்டிக்காரர்களுக்கு மிகவும் தொல்லையாக இருக்கிறது. இவர்களுக்கு கொஞ்சம் செலவு செய்து பெர்மிட் கிடைப்பதற்கு வழி கிடையாது. ஆகவே வண்டிக்காரர்கள் தன் சொந்த பட்டா காடுகளில் விறகு கொண்டு வருவதற்கு காட்டு இலாகா உத்தியோகஸ்தரிடம் அனுமதி வாங்கக்கூடிய ஒரு விதி இருக்கக்கூடாது.

காடுகளில் வளரும் எருத் தழைகளை விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்காக ஏழை விவசாயிகள் உபயோகப்படுத்துகிற அளவுக்கு ஒரு அனுமதி இருக்கவேண்டும். இம்மாதிரியான தழைகளைக் கூட ஏழைகள் அனுபவிக்கமுடியவில்லை. சாதாரணமாக ஒரு சிலர் அதிகாரிகளிடம் பணத்தை கொடுத்து விட்டு ஏராளமான விறகை வெட்டி காட்டிலேயே சுட்டு கரி மூட்டையாக வெளியில் கொண்டு வருகிறார்கள். இம்மாதிரி நிலைமையில் காட்டு இலாகா நடைபெறுகிறது. வெள்ளாடுகள் காடுகளில் மேயக்கூடாது என்று சொல்லப்படுகிறது. ஆனால் ஒரு சில விவசாயிகள் மாமூல் கொடுத்து விட்டு வெள்ளாடுகளை நிரந்தரமாக மேய விடுகிறார்கள். மேலதிகாரிகள் வரும்போது ஒரு நாளைக்கு முன்பே விவசாயிகளுக்கு அதிகாரிகள் சொல்லி அனுப்பிவிடுகிறார்கள். இம்மாதிரி ஆடு மாடுகள் மேய்வதின் மூலம் காடுகள் அழிகின்றன. காடுகளை பாதுகாப்பதற்கு தகுந்த ஏற்பாடுகள் செய்யவேண்டும். எந்த இடத்திலே எம்மாதிரி மரங்கள் வளரும் என்று முதலில் ஆராய்ச்சி செய்து, அங்கு பயன்படக்கூடிய மரங்களை வளர்க்க முன் வரவேண்டும். சாதாரணமாக காட்டில் தழைகள் விவசாயிக்கு பயன்படக்கூடிய அளவுக்கு கிடைக்கவேண்டும். காட்டு மரங்களை ஏலத்திற்கு விடும்பொழுது பணக்காரர்கள், பெரிய மனிதர்கள்தான் ஏலம் எடுப்பதற்கு வசதிகளெல்லாம் இருக்கின்றன. அம்மாதிரி ஏலம் எடுப்பவர்கள் பக்கத்து " கூப்பில் " உள்ள மரங்களையும் வெட்டி எடுத்து கரியாக சுட்டு, ஏலம் எடுத்த மரங்களை விறகாகக் கொண்டு வந்துவிடுகிறார்கள். இம்மாதிரி செய்வதை காட்டு இலாகா அதிகாரிகள் சரியாகக் கண்காணித்து தகுந்த நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**SRI K. R. NALLASIVAM :** கனம் தலைவர் அவர்களே, காடுகள் நாட்டினுடைய வளர்ச்சிக்கு அத்யாவசியம் என்பதை யாரும் ஒப்புக்கொள்ளுவர். பல வருடங்களாக விவசாயிகள் சாகுபடி செய்துவரக்கூடிய நிலங்களை மறுபடி காட்டு இலாகாவின்கீழ் சேர்த்து மரங்களை பயிரிட்டு அதனால் லாபம் அடைவதைவிட, அந்த நிலங்களை நிலம் இல்லாத விவசாயிகளுக்கு பயிரிடுவதற்குக் கொடுப்பதுதான் நல்லது. சேலம், கோயமுத்தூர்

10th July 1957]  [Sri K. R. Nallasivam]

ஜில்லாக்களில் சுமார் 4,000, 5,000 எக்கர் சாகுபடி செய்துவருகிறார்கள். விவசாயிகள் நீண்ட காலமாக ஏராளமான பணத்தை செலவழித்து நிலத்தைச் சீர்திருத்தம் செய்திருக்கிறார்கள் என்பது மந்திரி அவர்களுக்குத் தெரியும். இதை மந்திரி அவர்கள் தயவு செய்து பரிசீலனை செய்து இந்த நிலங்களை விவசாயிகளுக்கு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதே நேரத்திலே காடுகளை நல்ல முறையிலே வளர்ப்பதற்கு அரசாங்கம் தீவிர முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். அதோடு கூட சமீபத்திலே பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. கீழ் பவானியில் 500 மைல் நீளமுள்ள கரையும் காவேரி மூலம் பாய்கின்ற கால்வாய்களில் 100 மைல் நீளமுள்ள கரையும் இருக்கின்றன. இந்தக் கரைகளில் தழை உரத்திற்கு தேவையான மரங்களை நடுவதன் மூலம் நல்ல பயன் அடையலாம். மழை பெய்வதற்கு பெரிய காடுகள் தேவை என்ற முறையிலும், அதிகப்படியான மரங்களை வளர்க்க முடியும்.

அதுபோல் ஜனங்கள் அதிகமாக நடமாடும் பிரதேசத்தில் மரங்கள் வைக்கும் போது அவைகள் மிகச் சுலபமான முறையில் அழிந்து போகின்றன. ஆகவே, கரைகளில் வைக்கப்படும் மரங்கள் நல்ல முறையில் காப்பாற்றி வளர்க்கப்படுவதற்கான சட்ட திட்டங்களை ஏற்படுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

புதிதாக நீர்ப்பாசன திட்டத்தின்கீழ் கொண்டுவரக்கூடிய நிலங்களில் சில இடங்களில் பாசனத்திற்கு நல்ல வசதியாக இருக்கும் நிலங்கள் இருக்கின்றன. நீர்ப்பாசன வசதி இருந்தாலும், பயிர்கள் நல்ல முறையில் வர முடியாத நிலங்கள் கூட இருக்கின்றன. அந்த நிலங்களில் சவுக்கு நடுவதற்கு சர்க்கார் உற்சாகம் அளிக்கவேண்டும். பயிர்க்கட்டுப்பாட்டிலிருந்து விதி விலக்கு அளித்து சவுக்கு பயிரிடுவதற்கு சர்க்கார் குறிப்பிட்ட அளவுக்கு மான்யம் கொடுத்தால் கூடத் தகும் என்று நான் நினைக்கிறேன்.

காவிரி ஆற்றங்கரையில் சில இடங்களில் மரங்கள் நடப்படுவதாக மந்திரி அவர்கள் குறிப்பிட்டார்கள். படுகையிலே ஜனங்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளிலே மரங்களை வைப்பதால், அங்கு இருக்கும் ஜனங்களுக்கு கால்நடை மேய்ச்சலுக்கு நிலம் இல்லாமல் போகிறது. ஆற்றுப்படுகையில் மரத்திற்குப் பதிலாக நாணல் சாகுபடி செய்தால்தான் நல்ல முறையில் கரைகள் பாதுகாக்கப்படும். நாணலை அழித்துவிட்டு மரங்கள் வைக்கவேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஆற்றங்கரைக்கு நாணலைத் தவிர வேறு சிறந்த பாதுகாப்பு இருக்க முடியாது. மரங்கள் வைத்தால் ஜனங்கள் உள்ளே போவதற்கும் வருவதற்கும் வசதி இருக்கிறது. ஆனால், நாணல் வைப்பதனால் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. இருந்தாலும், நாணல் வைத்தால், மாட்டுக்கு மேய்ச்சல் வசதி ஏற்படுவதோடு கூட, கரையைப் பாதுகாப்பதற்கும் பிரயோஜனமாக இருக்கும்.

காடுகளிலிருந்து தழை உரம் எடுத்துக்கொள்வதற்கு சில இடங்களில் லைசென்ஸ் கொடுக்கப்படுகிறது. சில இடங்களில் கொடுக்கப்படுவதில்லை. விவசாயிகளுக்குத் தேவையானபோது, காடுகளில் புகுந்து தழை வெட்டுகிறார்கள். எந்த க்காடுகளாக இருந்தாலும், எல்லாக் காடுகளிலும் விவசாயிகள் தழை உரம் வெட்டி எடுத்துக்கொள்வதற்கு அனுமதி கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பாசனப் பகுதிகளிலே கரைகளிலும், மற்றும் வீணைக் கிடக்கும் நிலங்களிலும் மரம் வைப்பவர்களுக்குச் சர்க்கார் ஒரு தொகை கொடுத்துக்கூட ஏராளமான மரத்தை உற்பத்தி செய்ய முடியும்.

ஏதோ இரண்டாயிரம் ரூபாய் செலவு செய்து கோட்டைக்குப் பரிசாகக் கொடுப்பதற்கு ஒரு தந்தம் கொண்டுவந்திருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். சிக்கனம், சிக்கனம் என்று பேசப்படுகிற இந்த நேரத்திலே இரண்டாயிரம் ரூபாய் செலவில் ஒரு தந்தத்தை கொண்டு வருவது அவ்வளவு அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன்.

நான் சொல்லிய விஷயங்களையெல்லாம் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு காரியங்கள் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[10th July 1957

**Sri M. ALAGIRISAMY:** கனம் உதவி சபா நாயகர் அவர்களே, கனம் காட்டிலாகா மந்திரி அவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியக்கோரிக்கையை நான் ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன்.

காட்டு வளம் ஓரளவு நிறைந்த பகுதி என்னுடைய தொகுதியில் இருக்கிறது. நான் கொடைக்கானல் தாலுகாவைச் சேர்ந்தவன். கொடைக்கானல் தாலுகாவிலே மேல் மலைப் பகுதியிலே "யூகலிப்டஸ், வாட்டில்" என்னும் இரண்டு வித மரங்கள் பரந்த அளவிலே பயிர் செய்யப்படுகின்றன. நம்முடைய சென்னை அரசாங்கம்—குறிப்பாக கனம் மந்திரி அவர்கள்—காட்டு வளத்தைப் பெருக்குவதற்கு எவ்வளவு அக்கரையுடன் திட்டமிட்டு வருகின்றார்கள், எவ்வளவு வேலை செய்து வருகின்றார்கள் என்பதை நான் நன்றாக அறிவேன். ஐந்தாறு வருஷங்களுக்கு முன்பெல்லாம் வெறும் பொதை மேடுகளாகக் காட்சியளித்த ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் இன்று சோலையாகக் காட்சியளிக்கின்றது. "வாட்டில்" மரங்கள் நிறைந்ததாகக் காட்சியளிக்கிறது. வாட்டில் மரங்களை அதிகமாக உற்பத்தி செய்வதினால் நம் நாட்டினுடைய காட்டு வளம் பெருகுவதோடு மட்டுமல்லாமல் நமக்கு ஏராளமான அன்னியச் செலாவணியும் மிச்சப்படுகிறது. முன்பெல்லாம், தோல் பதனிடுவதற்கு முக்கியப் பொருளாக அமைந்திருக்கும் வாட்டில் பட்டையை வெளிநாடுகளிலிருந்து நாம் இறக்குமதி செய்து வந்தோம். அப்படி இறக்குமதி செய்வதை நிறுத்தவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடனேயே ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களிலே இந்த வாட்டில் மரம் பயிர் செய்யப்பட்டு வருகிறது. அதில் சரியான வெற்றியும் கிடைத்து வருகிறது என்று சொல்ல முடியும்.

ஆனால், இந்த வாட்டில் மரம் பயிர் செய்யக்கூடிய முறையில் கீழிருக்கும் அதிகாரிகளின் கவனக் குறைவால் அங்கு இருக்கும் விவசாய மக்களுக்கு இடைஞ்சல் உண்டாகிறது. விவசாயிகளுக்கு இடைஞ்சல் விளைவிக்கக்கூடிய முறையில் அங்கு கீழ் அதிகாரிகள் இருக்கிறார்கள் என்பதை மந்திரி அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலப் பரப்பு இருப்பினும் கிராமங்களுக்குப் பக்கத்திலே கூட வாட்டில் மரங்கள் பயிர் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். அதனால் கிராம வாசிகளின் கால்நடைகள் மேய்வதற்கு இடைஞ்சல் ஏற்படுகிறது. கிராம வாசிகளின் கால்நடைகளுக்கு மேய்ச்சல் வசதிக் குறைவு ஏற்படாத முறையிலே இந்த வாட்டில் மரம் பயிர் செய்யப்பட வேண்டுமென்று கீழேயிருக்கும் உத்தியோகஸ்தர்களுக்கு உத்திரவு பிறப்பிக்கவேண்டுமென்று கனம் மந்திரி அவர்களை நான் மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**Wattle extract** தயார் செய்கின்ற ஒரு தொழிற்சாலையை சர்க்கார் அந்தப் பிராந்தியத்திலே நிறுவுவதற்கு ஏற்பாடு செய்தால் ஏழை மக்களுக்கு மிகவும் வசதியாக இருக்கும். கொடைக்கானல் தாலுகா மேல் மலைப் பிராந்தியத்தில் அந்த தொழிற்சாலையை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

என்னுடைய பகுதியிலே, அன்னிய செலாவணியைச் சம்பாதித்துக் கொடுக்கக்கூடிய வாசனைப்பொருளாகிய ஏலம், பெரிய அளவிலே உற்பத்தி செய்யப்படுகிறது. அங்கே ஏலம் பயிர் செய்யப்படுவதற்குத் தகுதியாக பல நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள் காட்டிலாகாவின் பராமரிப்பில் இருந்து வருகின்றன. அந்த நிலங்களை விவசாயிகளுக்கு குத்தகைக்கு விட்டால், அதன் மூலம் ஏலம் அதிகமாக உற்பத்தி செய்யப்படும். அதன் மூலமாகவும் நம் நாட்டுக்கு அன்னியச் செலாவணி ஏராளமாகக் கிடைக்கும். அதற்கும் தகுந்த முறையிலே நடவடிக்கை எடுத்துக்கொண்டு, ஏழைகளுக்கு அந்த நிலங்களை குத்தகைக்கு விட வேண்டிய சகல ஏற்பாடுகளையும் செய்யவேண்டுமென்று நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, மிளகு உற்பத்தி நம்முடைய ராஜ்யத்திலே மிகவும் குறைவாக இருக்கிறது. மிளகு கூட அன்னியச் செலாவணி சம்பாதித்துக் கொடுக்கக்கூடிய ஒரு வாசனைப் பொருளாகும். என்னுடைய தொகுதியில் மிளகு உற்பத்தி செய்வதற்குப் பொருத்தமான நிலைகள் (Ideal conditions

10th July 1957] [Sri M. Alagirisamy]

இருக்கின்றன. அங்கே மிளகுக் கன்றுகளை இந்த இலாகாவின் கீழே தயார் செய்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்தால் அவர்கள் மிகவும் சந்தோஷத்துடன் அவைகளை ஏற்று உற்பத்தி செய்வார்கள். நாட்டு வளம் பெருகும். (இத்தருணத்தில் மிஸ்டர் ஸ்பீக்கர் திரும்பவும் வந்து ஆசனத்தில் அமர்ந்தார்.)

தீக்குச்சி செய்வதற்குத் தகுந்த மரங்கள் நம் நாட்டில் அதிகமாக இல்லை. அவைகளை அதிகமாக உற்பத்தி செய்வதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் என்று மந்திரி அவர்கள் சொன்னார்கள். அந்த மரங்கள் வளர்வதற்கும் தகுந்த நிலை என்னுடைய தொகுதியிலே இருக்கிறது. இலாகாவிலேயே இக்கன்றுகளைத் தயார் செய்து விவசாயிகளுக்குக் கொடுத்தால் ஏற்கெனவே பயிர் செய்து இருக்கக்கூடிய நிலங்களின் வேலி ஓரங்களில் விவசாயிகள் அவைகளை நடுவார்கள். அதன் மூலம் ஒரு காலத்தில் ஏராளமான மரங்கள் கிடைக்கும். ஆகவே, இந்தக் காரியங்களிலே சர்க்கார் சிரத்தை கொண்டு நடவடிக்கை எடுப்பார்கள்—எடுக்கவேண்டுமென்று நான் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI T. TIRUMALAIMUTHU VEERASAKKAYA TIRUVENKADASAMI NAICKER: கனம் சபாநாயகர் அவர்களே, காட்டிலாகாவால் போடப்பட்டிருக்கக்கூடிய ரோடுகள், பராமரிப்பின்றி, மிகவும் மோசமான நிலையில், போக்குவரத்துக்கு லாயக்கற்றவையாக இருக்கின்றன. 12- P.

வட மதுரை தொகுதியிலே அய்யலூரிலிருந்து செங்குரிச்சிவரையுள்ள 9 மைல் நீளமுள்ள ரோடு சுமார் 4, 5 மைல் தூரம் வண்டிகள் போகக் கூடிய நிலையில் உள்ளது. அதற்கு அப்பாலுள்ள ரோடு எந்தக் காரணத்தைக் கொண்டும் ஜீப் கார் கூட போகமுடியாத நிலையில் இருக்கிறது.

அது போல் செங்குரிச்சியிலிருந்து கணவாய்ப்பட்டிக்கு போகக்கூடிய ரோடு பெரும்பாலும் போக்குவரத்துக்கு லாயக்கற்றதாகவும், எதற்கும் பிரயோஜனம் இல்லாத நிலையிலும் உள்ளது.

மேலூர் தாலுகா வட நத்தம் பிர்க்காவில் உள்ள குட்டிப்பட்டி என்னும் ஊரிலிருந்து கோசிகுரிச்சிவரை உள்ள காட்டு ரோடு மிகவும் சீர்கேடான நிலையில் இருந்துவருகிறது.

காட்டிலாகாவால் இந்த ரோடுகள் சரிவர பராமரிக்கப்படவில்லை. எத்தனையோ ஆண்டுகளுக்கு ஒரு முறை, இந்த ரோடுகளைச் சீர்திருத்தம் செய்ய முற்படுகிறார்கள். மிகவும் சாதாரணமான முறையிலே, மண் வெட்டிப் போடுவதோடு மராமத்து வேலை நின்றுவிடுகிறது. இதன் காரணமாக, அந்தப் பிராந்தியத்திலுள்ள மக்கள் விளைபொருள்களை பக்கத்திலுள்ள நகரங்களுக்கு கொண்டு போவதற்கு ரோடு வசதியில்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அந்த ரோடுகளை, குறிப்பாக அய்யலூரிலிருந்து செங்குரிச்சிவரை உள்ள ரோடையும், குட்டிப்பட்டியிலிருந்து கோசிகுரிச்சி வரை உள்ள காட்டு ரோடையும், ஜில்லா போர்டு நிர்வாகத்தின் கீழ் விட்டுவிட்டால், அவைகளை ஏதாவதொரு "டெவலப்மெண்ட் வொர்க்ஸ்" மூலமாக நல்ல முறையில் மாற்றியமைத்து மக்களின் போக்குவரத்துக் கஷ்டத்தைத் தீர்ப்பதற்கு உதவியாக இருக்கும் என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இரண்டாவதாக, காட்டிலாகாவைச் சேர்ந்த பல மரங்கள் திருட்டுத் தனமாக வெட்டப்பட்டு, அவைகள் கரியாக மாற்றப்பட்டு, கரி மூட்டைகள் லாரிகளின் மூலமாகவும், வண்டிகளின் மூலமாகவும், நகரங்களுக்குக் கொண்டுவரப்பட்டு அங்கே ஏராளமாக விற்பனை ஆகின்றன. இந்த வியாபாரத்தினால் தனிப்பட்ட நபர்கள்தான் லாபம் அடைகிறார்கள். இத்தகைய வியாபாரத்தினால் அரசாங்கத்தின் வருமானம் சுரண்டப்படுகிறது. கரி விற்கும் இந்த வியாபாரமானது அந்தந்தப் பிராந்தியத்திலுள்ள "கார்டு"கள், "வாட்சர்"கள், கிராம அதிகாரிகள் முதலியவர்களுக்குத் தெரியாமல் நடக்கும் காரியமல்ல. கார்டுகளின் சம்பளமும், வாட்சர்களின் சம்பளமும் மிகக் குறைவாக, அதாவது [illegible] ரூபாயாக, இருப்ப

[Sri T. Tirumalaimuthu Veerasakkaya Tiruvenkadasami Naicker]

[10th July 1957

தால், அவர்கள் பலவிதமாகப் பணம் பெற ஆசைப்பட்டு, தங்கள் கடமையில் தவறி தீய காரியங்களில் ஈடுபடுகிறார்கள். கார்டுகளுக்கும், வாட்சர்களுக்கும் சில ரூபாய்களாவது சம்பள உயர்வு கொடுப்பதோடு, அவர்கள் இப்போது மேற்பார்வையிடும் பிரதேசத்தைக் குறைத்து அவர்கள் கூடிய வரையில் தங்கள் மனச்சாட்சிப்படி காரியங்களைச் செய்வதற்கேற்ற வகையில் மிகக் குறுகிய பிரதேசங்களை அவர்களுடைய மேற்பார்வைக்கு விட்டுவிட்டு, மேலும் சில கார்டுகளையும், வாட்சர்களையும் நியமித்தால், எந்த விதமான அநீதியான காரியங்களும் நடப்பதற்கு இடம் இருக்காது. குறிப்பாக கார்டு, வாட்சர்களுக்கு அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை போதுமான அளவிற்கு உயர்த்தும் அளவிற்கு அவர்களுடைய அடிப்படை சம்பளத்தை உயர்த்த வேண்டும.

பஞ்சாயத்துக் காடு முறை எங்களது செங்குறிச்சி கிராமத்தில் இப்போது இயங்கிவருகிறது. அங்கே பஞ்சாயத்துக் காடு முறை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பு வலையர்கள் என்ற பின்தங்கிய வகுப்பினர் அந்தக் காடுகளில் மரங்களை வெட்டிவிட்டுப் பயிர் செய்து வந்தனர். அந்தப் பிரதேசம் இப்போது பஞ்சாயத்து காடுகளில் சேர்ந்திருக்கிறது. சமீபத்தில் அங்கே நடைபெற்ற ஜமாபந்தியில் திண்டுக்கல் சப்கலெக்டர் அவர்கள், பஞ்சாயத்துக் காடுகள் ஆரம்பமாவதற்கு முன்பிருந்தே பயிர் செய்து வந்த குடியானவர்களையும் அதற்குப் பிறகு பயிர் செய்துவந்த குடியானவர்களையும் அந்த நிலங்களை விட்டு வெளியேறும்படி உத்தரவிட்டிருக்கிறார்கள். பஞ்சாயத்துக் காடு முறை ஆரம்பமாவதற்கு முன்பிருந்தே பயிர் செய்து வந்த விவசாயிகளுக்காவது விதி விலக்களித்து, அந்த நிலங்களை அவர்களுக்கு ஜாரி செய்து கொடுக்க வேண்டும் என்று அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கிறேன்.

* **Sri M. SELVARAJ** : தலைவர் அவர்களே, இந்த வெட்டுப்பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். ஒரு பக்கத்தில் காடுகளை அழித்துக்கொண்டு வருகிறார்கள். அதே நேரத்தில் வனமஹோற்சவம் என்று சொல்லி லட்சக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்து மற்றொரு பக்கத்தில் மரங்களை நட்டு வருகிறார்கள். அப்படி நடும், மரங்களுக்கு அவைகளை நட்ட தினத்திற்குப் பிறகு தண்ணீரும் விடுவதில்லை, எந்த விதமான பாதுகாப்பு ஏற்பாடும் செய்வதில்லை. அவைகள் நடப்பட்ட மறுதினமோ ஒரு வாரத்திற்குள்ளோ செத்துப்போய்விடுகின்றன. அவைகளை **inspect** பண்ணுவதற்கு உயர்தர அதிகாரிகள் வரும்போது, காட்டிலாகாவிலுள்ள சில சிறிய அதிகாரிகள் பக்கத்திலுள்ள பச்சைச் செடிகளையும் கொப்புகளையும் ஒடித்து மண்ணில் வைத்துத் தண்ணீரை ஊற்றி நடப்பட்ட மரங்கள் நல்ல நிலைமையில் இருக்கின்றதாகக் காண்பித்துவிடுகிறார்கள்.

சமீபத்தில், நெய்வேலித் திட்டப் பிரதேசத்திலிருந்து வெளியேற்றப்படும் மக்களைக் குடியேற்றுவதற்காக விருத்தாசலம் தாலூகாவில் கார்மாங்குடி என்ற கிராமத்திற்கு அருகில் இருக்கும் காட்டை ஏராளமான அளவில் வெட்டி அழித்துவருகிறார்கள். ஆனால் அந்த இடம் மக்கள் வசிப்பதற்கு லாயக்கானது இல்லை என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே அந்தக் காட்டை மேலும் அழிக்காமல், அழிக்கும் வேலையை நிறுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதுவரை அழித்துள்ள இடங்களை அந்த பிர்க்காவிலுள்ள ஏழை எளியவர்களுக்குக் கொடுத்து அவைகளை கூட்டுறவு முறையில் அவர்கள் விவசாயத்திற்குப் பயன்படுத்தும்படி செய்யலாம். அப்படிச் செய்யாவிட்டால், அங்கே முந்திரிக் கன்றுகள் போன்றவைகளைப் பயிர் செய்து, அவைகளுக்காக இப்போது பட்ஜெட்டில் ஒதுக்கியிருக்கும் பணத்தை விட அதிகமாகச் செலவு செய்து, அவைகளை அபிவிருத்தி செய்யலாம் என்பது என் அபிப்பிராயம். காரணம், அந்தக் காடு இருக்கும் இடம் நல்ல இடம்.

10th July 1957] [Sri M. Selvaraj]

கனம் மந்திரி அவர்கள், **mobile party** எனப்படும் சிலர், காடுகளில் மரங்களை கள்ளத்தனமாக வெட்டுபவர்களை கண்டு பிடிப்பதாகத் தெரிவித்தார்கள். எங்கள் ஜில்லாவில் செல்வாக்குள்ளவர்கள் தங்கள் செல்வாக்கை உபயோகித்து காடுகளிலிருந்து மரங்களைக் கள்ளத்தனமாக வெட்டிக்கொண்டு போகிறார்கள். இதற்கு அதிகாரிகளும் உடந்தையாக இருக்கிறார்கள். இதைத் தடுக்க வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, எல்லாக் காரியங்களையும் சிக்கனமாகச் செய்ய வேண்டும் என்று நமது சர்க்கார் தீர்மானித்திருக்கிறார்கள். ஆனால், சேப்பாக்கத்தில் இருந்துவந்த **Forest Conservation** இலாகாவை அரசாங்கத்தார் பீடெர்ஸ் ரோடிலுள்ள ஒரு கட்டிடத்திற்கு மாற்றி, மாதம் சுமார் 2,300 ரூபாய் கட்டிடத்திற்காகக் கொடுத்து வருகிறார்கள். இலாகாவை அந்தக் கட்டிடத்திற்கு மாற்றி அவ்வளவு ரூபாய் கொடுப்பது அவசியம் தானா என்பதை கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். சிக்கனமாக இருப்பதாகச் சொல்லிக்கொண்டு இருக்கும்போது இந்த மாதிரிச் செலவு செய்யவேண்டிய அவசியமில்லை என்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

* **Sri P. G. MANICKAM:** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, 1-05
தேசீயச் செல்வத்தை வளர்ப்பதற்கு அத்தியாவசியமாக இருக்கும் காடு p.m.
களுக்கான இலாகாவிற்காகக் கோரும் மானியத்தை ஆதரித்து நான் சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். காடுகளிலுள்ள பொருள்களை அபிருவித்தி செய்து நாட்டின் செல்வத்தை அதிகப்படுத்தி அனேக காரியங்களை செய்திருப்பதற்காக இந்த சர்க்காரை நான் பாராட்டுகிறேன். இன்னும் சில காரியங்களைச் செய்யலாம். ஆகவே சில யோசனைகளை நான் சர்க்காருக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மருந்துகளுக்கான பல மூலிகைகள் காடுகளில் வளர்க்கப்படலாம். ஆங்கில மருந்துகள்தான் இப்போது நம் நாட்டில் அதிகமாக உபயோகிக்கப்பட்டுவருகின்றன. சித்த வைத்திய முறையில் அநேக மருந்துகள் நம் நாட்டிலேயே செய்யப்பட்டுவருகின்றன. அவைகளுக்கு வேண்டிய வேர்களும் மூலிகைகளும் அநேகமாக காடுகளில்தான் கிடைக்கின்றன. இப்படிப்பட்ட வேர்களையும் மூலிகைகளையும் உற்பத்தி செய்வதற்கான திட்டங்களை வகுத்து நிறைவேற்றினால் அது மிக்க நன்மையாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிப்பட்ட மூலிகைகளும் வேர்களும் எவை என்பதை அறிவதற்கு சித்த வைத்தியர்கள் அடங்கிய ஒரு ஆலோசனைக் கமிட்டியை சர்க்கார் அமைக்கலாம். அந்தக் கமிட்டியின் மூலம் எந்த எந்த மூலிகைகளையும், வேர்களையும் அபிவிருத்தி செய்யலாம் என்பது பற்றி ஆலோசனை பெறலாம். இந்த மாதிரியாக மூலிகைகளையும் வேர்களையும் அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தது தேன் வளர்ப்பு. தேன் வளர்ப்புக்கு நம் சர்க்கார் எத்தனையோ முறைகளை கையாண்டு வருகிறார்கள். சில இடங்களில் தேன் கிடைக்கின்றது. அதைக் காட்டுத் தேன் என்று அழைக்கிறார்கள். நல்ல ருசியாக இருக்கிறது. விலையும் அதிகமாக இருக்கிறது. காடுகளில்தான் தேன் அதிகமாக உற்பத்தியாகின்றது. காட்டைப் பராமரிக்கும் முறையில், தேனையும் காட்டு இலாகா அதிகம் உற்பத்தி செய்வதில் சர்க்கார் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதே பிரகாரம் இப்போது எங்கே பார்த்தாலும் வனமகோற்சவம் கொண்டாடுகிறோம். சில இடங்களில் நன்றாக நடைபெறவில்லை என்று தெரிவித்தார்கள். அதை நானும் ஒப்புக்கொள்ளுகிறேன். நாம் மரங்கள் நடும் விழாவை இன்னும் மும்முரமாகக் கொண்டாடவேண்டும். மரங்களை அதிகமாக வளர்ப்பதற்கு எத்தனையோ வாய்ப்புகள் இருக்கின்றன. ரோடுகளின் இரு மருங்கிலும் மரங்கள் அதிகம் வளர்க்கப்படலாம். பி. டபிள்யூ. டி. ஹைவேஸ் இலாகாவின் ஒத்துழைப்பு இருக்குமானால் நல்ல மரங்களை அதிகமாக சாலைகளில் பயிரிட முடியும். இதிலும் கவனம் செலுத்த

வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். சர்க்கார் காரியாலயங்களில் மரங்கள் நடும் பொறுப்பை அந்த அந்தக் காரியாலய நிர்வாக அதிகாரிகளிடமே ஒப்படைக்கலாம். மரம் அதிகமாக வளர்க்கப்படுவதனுல் ஏற்படும் நன்மை என்ன என்பதை நான் சொல்லாமலேயே சர்க்கார் நன்கு அறிந்திருப்பார்கள். ஆகவே காடுகளை வளர்ப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயத்தையும் சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். என்னுடைய தொகுதியானது மலை அடர்ந்த பிரதேசம். பவானி தாலூகா, • கோபிச்செட்டிபாளையம் முதலிய பிரதேசங்களில் மலைப்பிரதேசம் அதிகம். குறிப்பாக தாளவாடியை எடுத்துக்கொள்வோம். கொள்ளேகாலம் மைசூருடன் சேர்ந்துவிட்ட போதிலும் தாளவாடி, கோபிசெட்டிப்பாளையத்தோடு இருக்கிறது. இங்கே மலைகள் அதிகம். இங்கே வசிக்கக்கூடியவர்கள் பெரும்பாலும் ஹரிஜனங்கள்—தாழ்த்தப்பட்ட மக்கள். இங்குள்ள மலைக்காடுகளில்தான் இவர்கள் சிறு சிறு விவசாயம் செய்து பிழைத்துக் கொண்டிருக்கிறார்கள். மற்ற இடங்களில் உள்ள ஹரிஜனங்களுக்கு நிலம் வழங்கப்படுவதுபோலவே இங்குள்ள ஹரிஜனங்களுக்கு நிலம் வழங்கப்படவில்லை. காரணம் இவர்கள் விவசாயம் செய்துகொண்டிருப்பது காட்டு இலாகாவைச் சேர்ந்த நிலம் என்கிறார்கள். ஆகவே சர்க்கார் தயவு செய்து கணக்கு எடுத்து எத்தனை ஹரிஜன விவசாயிகள் அங்கே இருக்கிறார்கள் என்று பார்த்து அவர்கள் விவசாயம் செய்துகொண்டுவருகிற நிலங்களை அவர்களுக்கே பட்டா செய்து கொடுக்க, வேண்டிய நடவடிக்கையை எடுத்துக்கொள்ளவேண்டுமென்பதாகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பவானி தாலூகாவிலும் இப்படித்தான் பாரஸ்ட் நிலங்களில் ஹரிஜனங்கள் விவசாயம் செய்துகொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு அதே மாதிரி நிலங்களை ஜாரி செய்து கொடுக்கவேண்டுமென்பதாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். காடுகளில் எத்தனையோ நல்ல ரோடுகள் இருக்கின்றன. பாரஸ்ட் இலாகா சரியாக இவற்றைப் பராமரிக்காத காரணத்தினுல் காடுகளுள் போவதென்றால் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. இந்த ரோடுகளின் பராமரிப்பை யெல்லாம் ஹைவேஸ் பொறுப்பில் விட்டு அவர்கள் இந்த ரோடுகளை நன்ருகப் போடும்படியாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இத்துடன் நான் முடித்துக்கொள்ளுகிறேன்.

1-14 p.m. **Sri V. K. KOTHANDARAMAN :** கனம் தலைவர் அவர்களே, காட்டு இலாகா மிக மிக முக்கியமான இலாகா என்பது நம் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஆனால் அந்த இலாகாதான் இப்போது மிகவும் மோசமான நிலைமையில் இருக்கிறது. சீரழிந்த நிலையில் இருக்கிறது. ஆகவே அதை நல்ல முறையில் பராமரிப்பதற்கு வேண்டிய பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் இப்போது அதை எதிர்ப்பதற்கு இல்லை. ஆனால் அப்படி காடுகள் அழிந்துபோனதற்குக் காரணம் சர்க்கார் தனக்கு அதில் உள்ள முக்கியமான பொறுப்பை உணர்ந்து கொள்ளாது அஜாக்கிரதையாக இருந்ததுதான் என்று நான் சொல்வேன். எப்படி என்றால் ஜமீன், பஞ்சாயத்து காடுகள் இருக்கிறதே அதை குறிப்பிட்ட காலத்தில் சர்க்கார் தன்னுடைய பொறுப்பாக எடுத்திருந்தால் இந்த அளவுக்கு அழிவு ஏற்பட்டிருக்காது. அப்படி எடுத்துக்கொள்ளாத காரணத்தால் விரைவில் அதை எடுத்துக்கொள்வார்கள் என்பதும் தெரிந்துவிட்டதாதலால் மரங்களை எல்லாம் அவரவர்கள் வெட்டிப் பணமாக்கிக் கொண்டுவிட்டார்கள். மரம் எல்லாம் போன பிறகு மரம் இல்லாத காடு, பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு சர்க்காருக்கு வந்தது. அதை வளர்க்க இவர்கள் பாடுபடுவது பாராட்டுதலுக்கு உரியதுதான்.

ஆனால், இப்போது உள்ள நிலைமையில் ஆடுமாடுகள் மேய்வதற்கு வசதி கிடையாது. விவசாயிகளுக்கு வேண்டிய பசுந்தழை வெட்டிக்கொள்ள வசதி கிடையாது. இதையெல்லாம் சர்க்கார் நல்ல முறையில் கண்காணிக்க வேண்டும். இன்றைக்கு நடத்தப்படுகிற வனமஹோற்சவங்கள் எல்லாம் வெற்றிகரமாக நடைபெறுதவற்குக் கவனம் செலுத்தப்படவில்லை என்பதாக

10th July 1957] [Sri V. K. Kothandaraman]

இங்கு இருக்கக்கூடிய எதிர்க்கட்சி அங்கத்தினர்களும் சரி, அங்கு இருக்கக்கூடிய ஆளும் கட்சியினர்களும் சரி மாறுபாடு இல்லாமல் குறிப்பிட்டார்கள். இதை அமைச்சர் அவர்கள் நன்றாகக் கவனிக்கவேண்டும். காட்டு இலாகாவிலுள்ள ஊழல்களைப் போக்குவதற்கு எடுத்துக்கொள்ளும் முயற்சிதான் காடுகளை நல்ல முறையில் பராமரிப்பதற்கு உதவியாக இருக்கும் என்பதை கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆனால் அதற்காக வேண்டி ஸ்ரீ. ஜகந்நாதன் அவர்கள் குறிப்பிட்டதுபோல மந்திரி அவர்கள் காட்டுக்குப்போய் ஆறு மாத காலம் வசிக்கவேண்டுமென்று நான் சொல்ல மாட்டேன். அது அவருக்கு முடியாத காரியமும்கூட, ஊழல்களை அப்போதைக்கப்போது கவனித்து அவைகளைப் போக்குவதற்கு முயற்சி செய்தால் போதும்.

காட்டு இலாகாவினால் மரங்கள் காண்டிராக்ட் விடப்படுகிறது. காண்டிராக்ட் எடுக்கும் பகுதி ஒன்று. மரத்தை வெட்டும் பகுதி ஒன்று. இப்படி பல ஊழல்கள் நடப்பதாக ரிப்போர்ட்டுகள் வந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக சமீபத்தில் சேலத்தில் ஒரு கண்டிராக்டர் தனக்கு சம்பந்தப்படாத புளியமரங்கள் 1,400-ஐ வெட்டிக்கொண்டு போனதாகப் புகார் சர்க்காருக்கு வந்திருக்கும். எனக்கும் வந்திருக்கிறது. இந்த மாதிரியான ஊழலை உடனடியாக நிவர்த்திக்கவேண்டும். இதுபோன்று எல்லா ஜில்லாக்களிலும் நடைபெறுகிறது. இப்போது நம் தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய காடுகளில் சரித்திரப் பிரசித்திபெற்ற ஏலகிரி மலை, யானை மலை, ஜவ்வாது மலைக் காடுகள் இருக்கின்றன. இந்த இடங்களுக்கு எல்லாம் அமைச்சர் சென்று பார்வையிட்டாரானால் இங்கே தேயிலை வளர்க்கலாம், காப்பிக் கொட்டை வளர்க்கலாம் அல்லது உடனடியாக நமக்கு அத்தியாவசியமான பொருள் எதையாவது வளர்க்கலாம் என்பதைத் தெரிந்துகொள்ள முடியும்.

காடுகள் அழிவதற்குக் காரணம், பெரும்பாலானவர்கள் மரங்களை விறகுக்காக வெட்டிக்கொண்டு போய் விடுவதால்தான். நெய்வேலித் திட்டம் நிறைவேறுமானால்; அடுப்புக்கரி, இப்போது விறகு விற்கிற விலைகளும் பாதி விலையில் எல்லோருக்கும் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது. ஆகவே நெய்வேலி திட்டத்தை நாம் வெற்றிக்கரமாக முடிப்பதற்கு தீவிர முயற்சி செய்தால் காட்டு இலாகாவிலுள்ள வேலை வளம் பெறும், மரம் வெட்டுவதற்குரிய வாய்ப்பே இல்லாது போய்விடும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் ஞாபகத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதேசமயத்தில் இன்னொரு விஷயம். மலைப்பக்கங்களில் இருக்கக்கூடிய காடுகளின் பக்கத்தில் இருக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட மக்கள் தினமும் காடுகளில் விறகை வெட்டித் தலையில் வைத்துக்கொண்டு வந்து விற்றுத்தான் பிழைப்பை நடத்துகிறார்கள். அதற்காக சுங்கம் வசூல் செய்யப்படுகிறது. அதை ரத்து செய்ய வேண்டும், சுங்கம் இருக்கக்கூடாது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்துவதோடு கேரள ராஜ்யம் தனியாகப் பிரிந்த காரணத்தினால் நம்மைவிட்டு மலையாளிகள் போய் விட்டார்கள் என எண்ணிக்கொள்ளாமல், இந்த மலைகளின் மீது வசிக்கிற மலையாளிகளை வந்து பார்த்து, அவர்களுடைய ஏழ்மை நிலையைக் கண்டு அவர்களுடைய நலனிலும் சர்க்கார் கவனம் செலுத்த வேண்டுமென்பதாகத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

**Sri G. ANNAMALAI MUTHURAJA** : தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலிருந்து மணிகவண்டம், ஆலந்தூர், விருலிமரல், இனுப்பனார் முக்கணுமரல்பட்டி வரையிலும் சுமார் 25 மைல் வரையிலும் ஒரே காடாக இருக்கிறது. அங்கு அதிகமான புறம்போக்கு நிலங்கள் இருக்கிறது. இரண்டு பக்கங்களிலும் உள்ள, அதாவது மேல்புறம் கீழ்புறம் இவ்விதம் இரண்டு புறங்களிலுள்ள நிலங்களை விவசாயிகளுக்கு சர்க்கார் கொடுக்க வேண்டும். ரோடுக்கு மேல்புறமாக எடுத்துக்கொண்டால் ஒரே காடாக இருக்கிறது. இந்த இடங்களில் மரங்களை வைப்பதற்கு நல்ல வசதி இருக்கிறது. இதனால், வேலையில்லாமல் இருக்கிற விவசாயிகளுக்கு தொழில் கிடைப்பதற்கும், விவசாயம் கூடுதலாக

பெருகுவதற்கும் சந்தர்ப்பம் ஏற்படும். ஆகவே 25 மைல் நீளம் இருக்கிற காடுகளைப் பார்வையிட்டு அதில் நல்ல பலனுள்ள மரங்களை வைத்தால் நல்ல முறையில் இந்த காடுகள் விருத்தியாகும். மரம் நடும் உற்சவம் என்று சொல்லி வெறும் மரங்களை மாத்திரம் நட்டு வைத்துவிட்டு வந்தா போதாது. அதை நல்லவிதமாகப் பாதுகாக்க வேண்டும். அதைப் பராமரிப்பதற்கு தனி அதிகாரிகளை, அதாவது சூப்பர்வைஸர்கள் போன்றவர்களை நியமிக்க வேண்டும். ஒவ்வொரு வருஷமும் லட்சக்கணக்கில் பணத்தை செலவு செய்து இந்த மரம் நடு விழா நடக்கிறது. ஆனால் இனி மேலாவது மரங்களை மட்டும் நட்டு வைத்துவிட்டு வராமல் அவைகளைச் சரிவரப் பார்க்க வேண்டும். இப்போது இதை சரிவர பார்த்து இதை நல்ல முறையில் செய்வதற்கு சர்க்கார் நல்ல திட்டம் தயார் செய்து கொண்டு வந்தால் இந்த காடுகள் எல்லாம் விருத்தியாகும் என்று கூறிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **Sri S. M. ANNAMALAI** : மாநில சட்டமன்றத் தலைவர் அவர்களே, இம்மாநில வரவு செலவுத் திட்டம் இந்த மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதம் நடந்தபொழுது நான் மலையில் வாழும் மலை ஜாதி மக்களைக்குறித்து பேசினேன். இந்த காட்டுப்புறங்களிலும் மலைப் புறங்களிலும் வசிக்கின்ற மக்கள் ஒரு தூதுகோஷ்டியாக 1954-ம் ஆண்டில் வந்து கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்களைக் கண்டபோது இது என் இலாகாவைச் சேர்ந்தது அல்ல என்று சொல்லிவிட்டார்கள். அதன் பிறகும் அவர்களிடமிருந்து பல விண்ணப்பங்கள் வந்துகொண்டிருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். இனிமேலும் விண்ணப்பங்கள் வரும் என்றும் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். சட்டமன்ற தலைவர் அவர்களே, வெள்ளையன் ஆட்சி செய்துக்கொண்டிருந்த காலத்தில் கூட அங்குள்ள காட்டுபுற நிலங்களை உழுது பயிர் செய்வதற்காக நாட்டுப்புற மக்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருந்தது. 1954-ம் ஆண்டுக்கு பின்னால் கொண்டுவரப்பட்ட சட்டத்தின் பேரால் அங்குள்ள ஏழைமக்கள் காட்டு நிலங்களில் பயிர் செய்தார்கள் என்ற குற்றத்திற்காக நீதிமன்றத்தின் முன்னால் கொண்டு வரப்பட்டு 100, 150 என்று அபராதங்களை விதித்து வெளியேற்றி விட்டதால், அந்த இடங்களிலிருந்து வாழ்க்கை நடத்துவதற்கு லாயக்கற்றவர்கள் என்ற நிலையில் இன்று அவர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலங்களை மறுபடியும் அமைச்சர் அவர்கள் ஆலோசனை செய்து இந்த விவசாயிகளுக்கு 10, 20 ஆண்டுகளாக உழுது வந்த நிலங்களை அனுபவித்துக்கொள்வதற்குக் கொடுக்க வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்ளுகிறேன். அடுத்ததாக அவர்கள் வைத்திருக்கும் வெள்ளாடுகளுக்கு வரி போட்டு அவைகள் காட்டுப்புறங்களில் போய் மேயக்கூடாது என்று சொல்லி அவர்களை அங்குள்ள வன இலாகா அதிகாரிகள் அங்கே வாழ்க்கை நடத்த முடியாதபடி கஷ்டப்படுத்துகிறார்கள். அவர்கள் இந்த வெள்ளாடுகளை எங்கே கொண்டு போய் விடுவார்கள். ஆகவே இந்த மாதிரியான வரிகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தப்படியாக காட்டுப்புறங்களிலிருந்து ஏழைமக்கள் விறகுகளை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். இவ்விதம் எடுத்துக்கொண்டு வருகிறவர்களை அங்குள்ள அதிகாரிகள் கஷ்டப்படுத்துகிறார்கள். ஆனால் "கூப்" வெட்டுவதாகச் சொல்லி ஒரு காட்டிற்கு லைஸன்ஸ் வாங்கிக்கொண்டு, அடுத்து இருக்கிற காடுகளிலிருந்தும் கள்ளத்தனமாக இரவோடு இரவாக பெரிய பெரிய மரங்களை வெட்டிகொண்டுபோகிறார்கள். இதையெல்லாம் விட்டுவிட்டு ஏதோ ஏழைகள் ஏதாவது விறகுச் சுமைகள் கொண்டு வந்தால் அதற்கு ராதாவரி என்று சுங்கவரி போடுகிறார்கள். இதை அடியோடு நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்ததாக தீக்குச்சி மரங்களை வைப்பதற்காக எவ்வளவோ பணம் செலவு செய்யப்படுகிறது. ஆனால் அதில் நல்ல பயன் கிடைத்திருப்பதாகத் தெரியவில்லை. சாதாரணமாக "முப்பது பணம் கொடுத்து மூன்று குளங்கள் வெட்டினேன், இரண்டு குளம் பாழ், ஒரு குளத்தில் தண்ணீரில்லை" என்று சொல்லுவது மாதிரி அந்த பக்கத்தில் தீக்குச்சி மரங்களின் நிலையும்

இருக்கிறது. ஆரணியிலிருந்து போளூர் போகும் ரோடிலுள்ள காட்டில் 6,000 தீக்குச்சி மரங்கள் வைத்திருக்கிறதாக சொல்லப்படுகிறது. இதைப் பற்றி நான் பிளானிங் கமிட்டி கூட்டத்தில் கேட்டேன். இப்போது வைக்கப் பட்டிருக்கிற மரங்களில் எத்தனை மரங்கள் பிழைத்திருக்கின்றன என்று கேட்டேன். அதற்கு அன்று வட ஆற்காடு மாவாட்ட அதிகாரி வரவில்லை என்று சொன்னார்கள். நான் இந்த மரங்களை பார்ப்பதற்காகவே அங்கு பஸ் ஏறிப் போய்ப் அதை பார்த்தேன். அங்கு வைக்கப்பட்டிருக்கின்ற மரங்களில் 100-க்கு 90 மரங்கள் பிழைக்கவில்லை. மற்ற மரங்கள் எல்லாம் சரியான விதத்தில் பராமரிக்கப்படவில்லை. இதை நான். . .

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** இந்த மரங்கள் எல்லாம் தீக்குச்சி மரங்கள்தான் என்பதை கனம் அங்கத்தினர் அவர்களிடம் யார் சொன்னது?

**SRI S. M. ANNAMALAI :** நான் அங்கு போன சமயம் அங்கு காட்டிலாகா காவலாளி ஒருவர் இருந்தார். இவையெல்லாம் தீக்குச்சி மரங்கள் என்று அவர்தான் என்னிடம் சொன்னார். தீக்குச்சி மரங்களாயினும் சரி, மற்ற எந்த மரங்களாயினும் சரி, அங்கு 100-க்கு 90 மரங்கள் பிழைக்கவில்லை. இம்மாதிரியாக பொதுமக்களின் பணம் பாழாக்கப்படாமல் சரியான விதத்தில் பயன் படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

***SRI R. KANDASAMI :** சபாநாயகர் அவர்களே, காட்டிலிருந்து பட்டு 1-26 p.m.
போன சுள்ளிகளை ஏழை ஹரிஜனங்கள் எடுத்துக்கொண்டு வந்தால் அதை அங்குள்ள அதிகாரிகள் மறித்து அங்குள்ள ஏழை மக்களை துன்பப் படுத்தி வருகிறார்கள். இதை மாற்ற வேண்டும். அங்குள்ள புளிய மரங்களை குத்தகைக்குச் கொடுக்கும்போது அதிலுள்ள சிறிய விறகு களை கொண்டுபோவதற்கு அனுமதி கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது மாத்திரமல்ல, அங்குள்ள சாதாரணத் தழைகளைக் கொண்டுபோகும்போது அதைக் கொண்டுபோவதற்கு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

***SRI J. MATHA GOWDER :** சபாநாயகர் அவர்களே, கனம் மந்திரி அவர்கள் சமர்ப்பித்த மான்ய கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். எங்கள் பக்கத்தில் அதிகமாக ப்ளூகம், வாட்டில் மரங்கள் ஏராளமாகப் பயிரடப்படுகின்றன. இதற்காக சர்க்கார் அதிகமான தொகை ஒதுக்கியிருக்கிறது. இவை "பாரஸ்டு டிபார்ட்மெண்ட்" மூலமாக பயிர் செய்யப்பட்டு வருகிறது. இதனால் இங்கேயே ஒரு காகித உற்பத்தி சாலையை ஏற்படுத்தலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். நீலகிரி ஜில்லாவில்தான் இந்த ப்ளூகம் மரத்தை அதிகமாக உற்பத்தி செய்ய முடியும். இதேமாதிரி வாட்டில் மரமும் அதிகமாக பயிரிடப்படுகிறது. இந்த சரக்குகளை லோயர் பவானி என்ற இடத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்றால் சுமார் 70 மைல் கொண்டு வரவேண்டியிருக்கிறது. இந்த இடத்திலிருந்து 70 மைல் டிரான்ஸ்போர்ட் செய்வதற்கு இம்பீரியல் மணங்கு ஒன்றுக்கு 40 ரூபாய் செலவு செய்யவேண்டியிருக்கிறது. இதனால் அரசாங்கத்திற்கும் நஷ்டம்தான். ஆகவே இந்த உற்பத்திசாலையை நீலகிரி ஜில்லாவிலே ஏற்படுத்தினால் சர்க்காருக்கு லாபம் ஏற்படுவது மாத்திரமல்ல, ப்ளூகம், வாட்டில் போன்ற மரங்களை பயிர் செய்யும் தனிப்பட்டவர்களுக்கும் மேலும் கூடுதலாக பயிர் செய்வதற்கு உற்சாகம் ஏற்படும் என்பதை தெரிவிக்க ஆசைப்படுகிறேன். இதோடு அங்குள்ள வனங்களில் கால்நடைகள் போய் மேய வேண்டுமானால் லைசென்ஸ் எடுக்க வேண்டும் என்று இருக்கிறது. இதை மாற்ற வேண்டும். அதாவது காட்டுக்குள் தீனிக்காக செல்லும் கால்நடைகளுக்கு லைஸென்ஸ் பணம் கட்ட வேண்டும் என்றிருப்பதை ரத்து செய்யவேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக்கொள்ளுகிறேன். அடுத்ததாக, கூடலூர் பகுதியிலிருந்து, அதாவது கேரள ராஜ்யத்தின் பார்டரில் இருக்கிற பகுதிகளிலிருந்து, மரங்களை அதிகமாக வெட்டிக் கொண்டு போகிறார்கள். இதை நமது அரசாங்கம் தடுக்க வேண்டும்.

[Sri J. Matha Gowder] [10th July 1957

அதற்காக அந்த பார்டரில் ஒரு சவுக்கை எற்படுத்தி இவ்விதம் மரங்களை கொண்டு போகாதபடி தடை செய்யவேண்டும். அப்போது இந்தவிதமாக கொண்டு போகக்கூடிய மரங்களை தடை செய்து நிறுத்த முடியும் என்று அமைச்சர் அவர்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்கிறேன். இவ்விதமாக நீலகிரி ஜில்லாவுக்கு இன்னும் நல்ல உற்சாகம் கொடுத்தால், தனிப்பட்டவர்கள் அங்கு அதிகமான மரங்களை உற்பத்தி செய்ய எதுவாகும். ஊட்டியில் ஒரு பகுதி **National beauty** க்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதில் 30 ஆயிரம் எக்கர் இருக்கிறது. இந்த இடத்தில் எல்லாம் நமக்கு அவசியமான ப்ளுகம், வாட்டில் போன்ற மரங்களை உற்பத்தி செய்தால் இப்போது கிடைப்பதை விட இருமடங்கு பலன் கிடைக்கும் என்று கூறிக்கொண்டு இந்த மரங்களை பல இடங்களிலும் அதிகமாக உற்பத்தி செய்யவேண்டும் என்று கூறி, இந்த சர்ந்தர்ப்பத்தை தந்த தலைவர் அவர்களுக்கு நன்றி செலுத்திக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

1-30 p.m. **Sri T. KARIA GOUNDER** : தலைவர் அவர்களே, இந்த மான்யத்தை நான் ஆதரிப்பதோடு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஒவ்வொரு ஆண்டிலும் நமது சர்க்கார் மரம் நடு விழா கொண்டாடுகிற மாதிரி மரம் வெட்டிக்கொண்டு போகிறவர்களைத் தடுப்பதற்காக ஒரு வாரம் கொண்டாடவேண்டு மென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். காரணம் என்னவென்றால், என்னுடைய தொகுதியிலே நான் தேர்தல் சமயத்தில் சென்றிருந்தபோது ஜவ்வாது மலை ஓரமாக ஒரே புகையாய் இருந்தது. அந்த சமயத்தில் காடு பற்றி எரிகிறதா என்று கேட்டபோது, அங்கு சர்க்கார் அனுமதி இல்லாமல் காட்டை அழித்து கரி சுடுவதாகச் சொன்னார்கள். அதை நானே கண்ணால் கண்டேன். லாரிகளில் கரி ஏற்றிச் செல்வதையும் நான் கண்ணுறக் கண்டேன். சர்க்கார் அனுமதியின்றி காட்டை அழித்து கரி எடுத்துப் போவதைக் கண்டு போலீஸ் அந்த லாரியைப் பிடித்து சார்ஜ் செய்து; கோர்ட்டில் அது சரிவர நிரூபிக்கப்படாததால் அவ் வழக்கு தள்ளப்பட்டது. மக்களிடம் சட்டத்திற்கு அடங்கி நடக்கிற நாணயமே இல்லாமல் போயிருக்கிறது. ஆகவே அதிகாரிகள் இது விஷயமாக கவனம் செலுத்தும்படிச் செய்ய, அவர்கள் வேண்டியபடி கண்காணிக்கச் செய்யுமாறு அரசாங்கம் கவனம் செலுத்தும்படிக் கேட்டுக்கொள்கிறேன். எங்கள் தாலூகாவில் தீக்குச்சித் தொழில் செய்யப்படுகிறது. அவர்கள் தனிப்பட்டவர்களிடமிருந்து அந்த மரங்களை வாங்கிக்கொண்டு போக சர்க்கார் பெர்மிட் கிடைக்க சில இடையூறுகள் இருக்கின்றன. அடுத்தது, என் தொகுதியில் பல கோடி ரூபாய் தரக்கூடிய கர்பக விருக்ஷமான சந்தனம் உற்பத்தி செய்யப்படுகிறது. நம் நாட்டில் உள்ள சந்தனத்தின் 40 சதவீதம் எனது தொகுதியில் இருந்துதான் வருகிறது என்று விளம்பர இலாகா சினிமா காண்பித்தபோது சொன்னார்கள். நானே அதைக் கண்டு ஆச்சரியப்பட்டேன். அங்கு வாழ்கிற மக்கள் இதனால் ஒரு பலனும் அடையவில்லை. எறக்குறைய 10,000 வாக்காளர்கள் அங்கு இருக்கிறார்கள். குறைந்தது அந்த இடத்தில் 50,000 ஜனங்கள் இருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். தேர்தல் சயமத்தில் என்னிடம், அங்கு பள்ளிக்கூடம் இல்லை, எங்களுக்கு கிணறு கிடையாது, பிரசவ வசதியில்லை, ரோடு வசதியில்லை என்றெல்லாம் பல்வேறு குறைகள் சொன்னார்கள். அதை கனம் அமைச்சரவர்கள் கவனித்து அங்கு வாழ்கிற மலை மக்களுக்கு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த சந்தர்ப்பத்தை அளித்த தலைவர் அவர்களுக்கு எனது நன்றி கலந்த வணக்கத்தையும் செலுத்திக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

1-35 p.m. * **The Hon. Sri M. BHAKTAVATSALAM** : சபாநாயகர் அவர்களே, இந்த விவாதத்தில் கலந்து கொண்ட கனம் அங்கத்தினர்கள் யாவரும் வன வளத்தை அதிகப்படுத்துவதைப்பற்றிதான் பேசினார்கள். அவ்வாறு அவர்கள் அளித்த ஆதரவிற்காக அவர்களுக்கு எனது நன்றியைச் செலுத்திக் கொள்கிறேன். வெட்டுப் பிரேரணையைப் பிரேரேபித்த எதிர்கட்சியில் உள்ள அங்கத்தினவர் ஒருவர் சாமர்த்தியமான முறையில் மான்யத் தொகையைக் குறைக்க வேண்டுமென்று பிரரேபித்தாரே தவிர இன்னும் தொகையை அதிகப்படுத்த வேண்டுமென்றுதான் குறிப்பிட்டார். கனம்

அங்கத்தினர் கரையாளர் அவர்கள் இந்த மான்யத்தொகையைக் குறைக்க வேண்டுமென்று வெட்டுப் பிரேரணை பிரேரேபித்தாரே தவிர இந்தத் தொகை குறைவாக இருக்கிறது என்று தான் குறிப்பிட்டார்கள். முதலில் வெட்டுப் பிரேரணையைப் பிரேரேபித்த கனம் அங்கத்தினர் ஜெகன்னாதன் அவர்கள் பொதுவாக இந்த காட்டு கொள்கையை ஆதரித்துத்தான் பேசினார்கள். ஆனால் அவர்கள் எதிர்கட்சி ஸ்தானத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கும் காரணத்தால் உணர்ச்சி மிகுதியாய் இருந்தது. ஆகவே அவர்கள் குறை கூறத் தொடங்கியபோது கூட கொஞ்சம் தவறுதலான நினைவில் இதர விஷயங்களைப் போலவே இதிலும் அதிருப்தி இருக்கிறது என்று சொன்னார்கள். இதர விஷயங்களை என்று சொல்லாமல் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். இந்த இலாகாவைப் பொறுத்த மட்டில் குறைகள் இல்லை என்று நான் சொல்லவில்லை. சில அங்கத்தினர்கள், கீழ்த்தர சிப்பந்திகள் தவறுதலாக நடந்து கொள்வது பற்றி குறிப்பிட்டார்கள். அதற்கு அவர்கள் குறைந்த சம்பளம் வாங்குவதே காரணம் என்று சொன்னார்கள். சம்பளத்திற்கும், தவறுதலாக நடந்துகொள்வதற்கும் அதிக சம்பந்தம் இல்லை என்றுதான் நான் கூறுவேன். அப்போதைக்கப்போது கீழ்தர சிப்பந்திகளின் சம்பளம் பற்றியும், மற்ற வசதிகள் பற்றியும் கவனிக்கப்பட்டும்தான் வருகின்றன. ஆனால் கூடியவரையிலே லஞ்சம், மற்ற குறை பாடுகள் எல்லாவற்றையும் தவிர்ப்பதற்கு, இந்த இலாகா நிர்வாகத்தில் உள்ள லஞ்சம் போன்ற மற்ற குறைபாடுகளை நீக்க, கண்டிப்பான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக்கொண்டு வருகிறது. அதிகமாக மரங்கள் வெட்டப்படுகிறது என்று குறிப்பிட்டார்கள். அதைத் தவிர்ப்பதற்காகத்தான் ஒரு மொபைல் பார்ட்டி வைக்கப்பட்டிருக்கிறது. மற்ற இடங்களிலும் கண்காணிப்பு இருந்துகொண்டு தான் வருகிறது. பல அங்கத்தினர்கள் வன மகோற்சவத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். இந்த வனமகோற்சவம் என்ற பெயர் பெரியதாக இருப்பதனால் ஒரு தவறுதலான அபிப்பிராயம் இருக்கிறது என்று கருதுகிறேன். வனமகோற்சவம் என்றால், சர்க்கார் லட்சக்கணக்கான பணம் ஒதுக்கிவிட்டு செடிகளை வாங்கி மொத்தமாக கொண்டு வந்து அவைகளை ஒரு நாள் நட்டு விட்டு தண்ணீர் வார்த்து விட்டு பின் திரும்பிப் பாராமல் போய் விடுவது என்பது அல்ல. அவ்வாறு அங்கத்தினர்கள் நினைத்துக்கொண்டிருப்பதாக எனக்குப் புலப்பட்டது. வனமகோற்சவம் என்பது, வனத்தின் அருமையை, அதனால் ஏற்படும் பலனை மக்கள் அறியச் செய்வது என்பதுதான் அதன் உத்தேசம். மக்கள் தங்களால் இயன்ற அளவு செடிகளை வைத்துப் பாதுகாத்து அதற்குப் பொதுமக்களிடையே ஒரு ஊக்கத்தை அளிப்பதும், அதை பரவச் செய்வதுமே இந்த வனமகோற்சவத்தின் நோக்கமாகும். இதற்காக சர்க்கார் ஒன்றும் அதிகப் பணம் செலவு செய்யவில்லை. பெயர் பெரிய பெயராய் இருந்தாலும், சர்க்கார் ஒரு ஆயிரம் ரூபாய் கூட நேரிடையாகச் செலவு செய்வதில்லை. தனி நபர்களை செடி கொடிகளை வையுங்கள், தோட்டங்களை அதிகப்படுத்துங்கள், மரங்களை வளரச் செய்யுங்கள் என்றெல்லாம் வற்புறுத்தும் வகையில்தான் இந்த விழா நடத்தப்படுகிறதே தவிர வேறொன்றும் அல்ல. கரிய கவுண்டர் அவர்கள் சொன்னார்கள், மரம் வெட்டு விழா நடத்த வேண்டுமென்று. அது, முன் காலத்தில் நடத்தப்பட்டிருக்கலாம். அப்பொழுது காடுகள் அதிகமாக இருந்து நாட்டு மக்கள் வாழ அக்காடுகளை வெட்டியிருக்கலாம். ஆனால், இன்று அப்படி ஒரு வாரம் போட்டால் எல்லாக் காடுகளும் அந்த வாரத்திலே அழிந்து விடும். இப்பொழுது காடுகளை எவ்வாறு பாதுகாப்பது என்பதில்தான் எல்லோரும் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. இந்த வெட்டுப் பிரேரணையை பிரேரேபித்த அங்கத்தினர் அவர்கள் ஏதோ கேள்விப்பட்டதாகச் சொன்னார்கள். மரங்களை ஏலத்தில் விட்டால் பெரிய பணக்காரர்கள்தான் ஏலம் பிடிக்கிறார்கள்; ஆகவே நேரிடையாக மரங்களை எல்லாம் இலாகாவே விற்றால் என்ன என்று சொன்னார்கள். அவருக்கும், மற்ற அங்கத்தினர்களுக்கும் தெரியும் என்று நினைக்கிறேன், சாதாரணமாக சிறு சிறு விவசாயிகள், 5 அல்லது 10 ஏக்கர் சவுக்குத் தோப்பு போட்டிருந்தால் அந்த விவசாயி கூட நேரிடையாக மரத்தை வெட்டித் தானாக விலைக்குக் கொடுப்பது கிடையாது. அதை மொத்தமாகவே விற்கிறான். நேரிடையாக மரத்தை வெட்டி

[Sri M. Bhaktavatsalam] [10th July 1957

அதை நேரிடையாக விற்பது என்பது பலனளிக்காது. அதை சிறு சிறு விவசாயிகளும் அனுபவத்தில் உணர்ந்திருக்கிறார்கள். அரசாங்கமும் அதை உணர்ந்திருக்கிறது. ஆகவே " கூப் " பாக பிரித்துக் கொடுக்கிறோம். பணக்காரர்கள் மாத்திரம் அல்லாமல் சாதாரண மக்களும் வாங்கும்படி கூடிய அளவு குறைத்துத்தான் கொடுக்கிறோம். இன்னும் ஏதோ கேள்விப்பட்டோமென்று சொன்னார்கள். ஏதோ மரங்களை யாரோ பெரிய பணக்காரர், நிலச்சுவான்தார்களுக்கு கொடுத்து விடுகிறோம் என்று சொன்னார்கள். கனம் அங்கத்தினர் ஜகந்நாதன் எதையோ குறிப்பிட்டு சொன்னார்கள். ஆனால் அவர்கள் ஒன்றைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கலாம். கோடைக்கானலில் பைன் மரங்கள் என்று ஒருவகை இருக்கின்றன. அவைகள் வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டது. ஆனால் இவைகள் மேலும் மேலும் வளர்க்கப்படுவதில்லை. இந்த மரங்கள் விறகிற்குத்தான் உபயோகம் என்று தெரிந்தது. அதற்கு ஒரு ஜீவிய காலம் உண்டு. அவைகள் ஒவ்வொன்றாக மடிய ஆரம்பித்து விடும். அவைகள் பட்டுப்போனால் விலை மதிப்பில்லை. அவைகள் மடிகின்ற காலம் வந்துவிட்டது என்று தெரிந்தது. அப்போது சென்னையில் ஸைக்கிள் பாக்டரி வைத்திருக்கிறவர்களுக்கு இந்த பைன் மரங்கள் வேண்டியிருந்தது. இவைகள் ஸைக்கிளின் ஒரு பாகத்திற்குத் தேவையாயிருந்தது. அதை எடுத்துக்கொள்கிறோம் என்று சொன்னார்கள். ஒரு பகுதியை விலை பேசி மடியக்கூடிய நிலையில் உள்ள மரங்கள் விற்கப்பட்டது. இவைகளை ஏலத்தில் விட்டால் விறகிற்குத்தான் வாங்குவார்கள். அதுவும் மிகவும் குறைந்த விலையில்தான் வாங்குவார்கள். பைன் மரங்கள் பறிபோகிறது என்று கிளர்ச்சி ஏற்படுத்தப்பட்டது. பைன் மரங்களை அடியோடு எடுத்துவிடவில்லை. ஒரு பகுதிதான் கொடுக்கப்பட்டது. அப்படி அவைகள் கொடுக்கப்படாவிட்டால் பயனற்றதாகத்தான் ஆகியிருக்கும். பைன் மரங்களில் சிறந்தவகையைப் பயிரிட ஒரு திட்டத்தின் மீது அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது.

நாடாறு மாதம் காடாறு மாதம் என்று சொன்னார்கள். அதற்குள்ளே எங்கே காட்டுக்குப் போய் விடுகிறோமோ என்று பயந்து போகவேண்டாமென்று கனம் அங்கத்தினர் கோதண்டராமன் அவர்கள் சொன்னார்கள். முன்பெல்லாம் அந்தக் காலத்திலே—அரசர்கள் ஆண்ட காலத்திலே—அவர்கள் காட்டிற்கு வேட்டையாட சென்றார்கள். வன விலங்குகளை பரிபாலிப்பதை திட்டத்திலே சேர்த்திருக்கிறோம். ஆகையால் இப்போது வன விலங்குகளை வேட்டையாட அவசியமில்லை. அதோடு வேட்டையாட வேண்டிய ஆற்றலுமில்லை. காட்டுக்குப் போகவேண்டிய அவசியமில்லை. காட்டுக்குப் போகாமலேயே, தக்கமுறையிலே காட்டு நிர்வாகத்தில் ஊழல்கள் இல்லாதவாறு காட்டை எப்படி வளர்ப்பது என்பதிலே கவனம் செலுத்தி வருகிறோம்.

கட்டடம் கட்ட செலவு செய்வதைப் பற்றி கனம் அங்கத்தினர் நல்லசிவம் குறிப்பிட்டார். ஏதோ நாம் அனாவசியமாக செலவு செய்து கட்டுகிறோம் என்றும், வீணாகச் செலவாகிறது என்றும் குறிப்பிட்டார். அப்படி ஒன்றும் வீணாகச் செலவாவதில்லை. கனம் அங்கத்தினர் ஜமால் மொஹிதீன் குறிப்பிட்டார், காட்டுப்பொருள்களை மக்கள் உணருவதற்கு ஒரு எக்ஸிபிஷன் வேண்டுமென்று. இப்போது காட்டிலாகா காரியாலயத்தில் ஒரு மியூஸியம் ஏற்படுத்தி காட்டுப்பொருள்களை எல்லோரும் பார்க்கவும், உணர்ச்சி பெறவும், அக்கறை கொள்ளவும், மேலும் அக்கறை செலுத்தவும், காட்டிலாகாவின் சென்னை காரியாலயத்தில் அமைக்கப்படவேண்டுமென்பதுதான் யோசனை. அந்தவகையிலே அரசாங்க காரியாலத்திலே காட்டுப்பொருள்களை ஒன்றாக காட்டி அதன் அருமை பெருமைகளை மக்கள் உணர வேண்டுமென்றுதான் அவ்வாறு செய்யப்படுகிறது. இதிலே செலவு ஒன்றுமில்லை. ஆபீஸ் வேறு கட்டடத்திற்கு மாற்றப்பட்டு அனாவசியமாகச் செலவு செய்கிறோம் என்று சொன்னார்கள். பல இடங்களிலுள்ள ஆபீஸ்களையெல்லாம் ஒரே இடத்தில் மாற்றி அங்கேயே மியூஸியத்தையும் வைக்க உகந்த இடமாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதில் அனாவசிய செலவு ஒன்றுமில்லை. அப்படி காட்டை வளர்க்க வேண்டுமென்று

10th July 1957] [Sri M. Bhaktavatsalam]

பொதுவாகக் கூறிவிட்டு கனம் அங்கத்தினர் நல்லசிவம் அவர்கள் விவசாயம் செய்கிறவர்களை அப்புறப்படுத்தி விடுகிறார்கள் என்று சொன்னார். அவர்கள் பேசுவது ஒன்றுக்கொன்று முரண்பட்டது என்று சொல்ல விரும்புகிறேன். விவசாயத்திற்காகத் தனி நிலம் இருக்கிறது. ஆங்காங்கு நிலம் இல்லாதவர்களுக்கு அதைப் பிரித்துக்கொடுக்க அரசாங்கம் தீவிரமாக கவனம் செலுத்திக்கொண்டிருக்கிறது. காட்டை அழித்து நிலத்தை கொடுக்க வேண்டுமென்று சொன்னால், அது காட்டுச் செல்வத்தை உணராதது ஆகும். காட்டை வளர்ப்பதுதான் உண்மையான சமதர்மம். அதை விட்டு நான்கு பேருக்கு பங்கு கொடுப்பது தனி தர்மம். எங்கெங்கே காட்டை வளர்க்கக்கூடுமோ அங்கங்கே வளர்த்து சமுதாயம் அனைத்திற்கும் பயன்படுத்தும் வகையில் காட்டைப் பெருக்க வேண்டுமென்பது அரசாங்கத்தின் உறுதியான அபிப்பிராயம். காட்டை அழித்து சவுக்கு மரம் நடவேண்டுமென்று கனம் அங்கத்தினர் ஜகந்நாதன் அவர்கள் சொன்னார்கள். விறகிற்காக எங்கெங்கே சவுக்கு மரம் நலமாக வளருமோ அங்கே வைக்கிறோம். அதுவும் நன்றாக ஓரிரண்டிடத்தில்தான் வளர்கிறது. சவுக்கை வளரக்கூடிய இடத்தில் வைக்கலாமே தவிர, காட்டை அழித்து வைப்பது என்பது நல்லதல்ல. விவசாயிகள் ஏதோ காட்டு நிலம் என்றால் விவசாயம் நன்றாக வருகிறது என்று எண்ணுகிறார்கள். அதில் பொருள்கள் நன்றாகத்தான் வளரும். ஏனென்றால் அந்த நிலம் " வர்ஜின் சாயில் " அதாவது அதுவரை ஏதும் பயிரிடப்படாததால் நன்றாக வளரும். காட்டை அழித்து விவசாயம் செய்வது என்பது நாம் கவனிக்கவேண்டிய விஷயம். இப்போது நம் ராஜ்யத்திலே காட்டுச் செல்வம் குறைவாக இருக்கிறது. காட்டை அழிக்காமலேயே நிலமில்லாதவர்கள் விவசாயம் செய்யலாம். இம்மாதிரி பல இடங்களில் பயிரிடப் படுவதாக கேள்விப்பட்டிருக்கிறேன். நான் ஒரு சில இடங்களில் நேரிலும் பார்த்திருக்கிறேன். சமீபத்தில் நான் பவானிக்குச் சென்றிருந்தபோது ஒரு குடும்பத்தைப் பார்த்தேன். அங்கு முந்திரிச் செடி தோட்ட சாகுபடியாக நடத்தப்படுகிறது. இம்மாதிரி 120 ஏக்கர் இருக்கிறது. முந்திரிச் செடியும் வளர்கிறது. அதோடு 18 குடும்பங்கள், ஆளுக்கு நாலு ஏக்கர் நிலம் எடுத்துக்கொண்டு சோளம், கம்பு முதலிய தானியங்களைப் பயிரிடுகிறார்கள். இதற்காக நாலு அல்லது ஐந்து ரூபாய் டெபாஸிட் கட்டுகிறார்கள். அதேசமயத்தில் முந்திரி செடியையும் பாதுகாக்கிறார்கள். அவ்வாறு செய்வதால் காட்டு வளர்ச்சிக்கு குந்தகம் ஒன்றும் ஏற்படுவதில்லை. இம்மாதிரி செய்வதுதான் குமரி சாகுபடி என்பது. குமரி சாகுபடியை பல இடங்களிலும் விருத்தி செய்யவேண்டுமென்பதுதான் என்னுடைய ஆவல். நான் இதைப் பல இடங்களில் சொல்லியிருக்கிறேன். இதைப்பற்றி விவசாயிகளிடம் சொன்னதில் அவர்களும் இதை ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால் அரசியல் தலைவர்கள்தான் முடியாது என்கிறார்கள். அந்தவகையிலே காட்டுக்குக் குந்தகம் இல்லாமல் கோடைக்கானலிலே சில நிபந்தனைகளுக்குட்பட்டு விவசாயம் நடந்தது. இதில் அரசியலை புகுத்தி அவர்களை வேறுவழியிலே திருப்பப் பார்த்தால் இடைஞ்சல்தான் ஏற்படும். காட்டு வளத்திலே அக்கரைகொண்ட யாவரும் காட்டு வளத்தை குறைக்க இடம் தராமல் அதில் அக்கரை செலுத்தவேண்டுமென்று கனம் அங்கத்தினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மருந்துச் செடிகள், மரங்கள் இவைகளைப்பற்றி ஏற்கனவே காலேஜ் ஆப் இண்டியன் மெடிஸினைச் சேர்ந்தவர்களைக் கொண்டு பரிசீலனை செய்யச் சொல்லியிருக்கிறோம். பல இடங்களில் இவைகள் வளருவதற்கு வசதிகள் இருக்கின்றன. முக்கியமாக குற்றாலத்திலே இவைகள் தாராளமாக இப்போதே இருக்கின்றன. அவைகளையெல்லாம் கண்டறிந்து விருத்தி செய்வதற்கு எந்தெந்த வகையிலே கவனம் செலுத்த முடியுமோ அந்தந்த வகையிலே கவனம் செலுத்தப்படும். கனம் அங்கத்தினர் அளகிரிசாமி அவர்கள் கோடைக்கானலில் வாட்டில் மரங்கள் " ப்ளூகம் " மரங்கள் பயிரிடுவதைப்பற்றிப் பேசினார்கள். சில இடங்களிலும் சில கிராமங்களிலும் ஒரு சில குறைபாடுகள் இருக்கின்றன என்பதை நானும் கவனித்திருக்கிறேன். இதையெல்லாம் வன இலாகா அதிகாரிகள் கவனிப்பார்கள்.

[Sri M. Bhaktavatsalam] [10th July 1957

நீர்கசிவு அதிகமாக இருக்கக்கூடிய கிராமங்களில் அதிகமாக 50 அல்லது 100 ஏக்கர் ஒதுக்கி வைத்துப்பயிரிடலாம் என்று சொல்லுகிறேன். ஆனால் அதேசமயத்தில் Wattle போன்ற நல்ல விலை உயர்ந்த மரங்களை வளர்ப்பதில் ஏற்படும் நன்மைகளை உத்தேசித்து, அவைகளை வளர்ப்பதில் அங்கத்தினர்களுக்கும் பொறுப்பு இருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன். கனம் அங்கத்தினர் ஸ்ரீ வேதரத்னம் பிள்ளை அவர்கள், தண்ணீர் இல்லாமலேயே பனை மரங்களை வளர்க்கமுடியுமென்றும், அதை கழுதைக்கு ஒப்பிட்டும் கூறினார்கள். கழுதை நல்ல வேலை செய்கிறது. அதற்காக செலவு ஒன்றுமில்லை. இந்த உபமானம் நல்ல உபமானம்தான். அவ்வாறே, தண்ணீர் இன்றி பனை மரமும் வளருகிறது. அதேமாதிரி தான், முந்திரிமாமும் தண்ணீர் அதிகம் இல்லாமலேயே வளருகிறது. அக்டோபர் மாதத்தில் வைத்த செடிகள், 100-க்கு 95, 97 பங்கு பழுது இல்லாமல், வளர்ந்திருக்கிறது. அம்மாதிரி மரங்கள் வைப்பதற்கு தான் நாங்கள் பார்க்கிறோம்.

நீலகிரி பிரதிநிதி கனம் அங்கத்தினர் ஸ்ரீ மாதா கௌடர், அந்த பிராந்தியத்தில் வளரக்கூடிய wattle முதலியவைகளை நல்ல முறையில் பயன்படுத்த அங்கேயே ஒரு தொழிற்சாலையை ஏன் நிறுவக்கூடாது என்று கேட்டார்கள். தொழிற்சாலை ஏற்படுத்துவது வேறு விஷயம். மேலே, மலையில், தொழிற்சாலைகள் அமைத்தால், அவற்றில் உற்பத்தியாகும் பொருள்களை, கீழேதான் கொண்டுவர வேண்டும். இவைகளையெல்லாம் மலையிலேயே உபயோகித்து கொள்ளமுடியாது. இதையெல்லாம் கவனித்து, பொருளாதார துறையில் எது சௌகர்யமானது என்று பார்த்துத் தொழிற்சாலைகளை ஆங்காங்கே நிறுவ வசதி செய்து தரவேண்டியிருக்கிறது. மலைகளிலேயே வளரும் மரங்களினின்று தொழிற்சாலைகள் அமைக்க முடியுமானால் அதையும் அரசாங்கம் கவனிக்காமல் இருக்காது. இந்த மான்யத்தின்கீழ், குறைவான தொகை கோரப்பட்டதாக, வெட்டு பிரேரணையை பிரேரேபித்த அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள், வேறு சில அங்கத்தினர்கள், சென்ற சில ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட தொகைகளைப் பூராவும் செலவு செய்யவில்லை என்று சொன்னார்கள். அவர்களுக்கு நான் சொல்வது, இதுதான். எவ்வளவு தொகை இந்த ஆண்டு செலவழிக்ககூடும் என்பதைப் பார்த்துத்தான் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதுவரையில் இந்த ஆண்டில் செலவழித்ததை பார்க்கும்பொழுது, ஒதுக்கப்பட்டிருக்கும் பணம் முழுவதும் பரிபூரணமாக செலவழிக்க முடியும் என்று நம்புகிறேன். காட்டிலாக்கா இந்த விஷயத்தில், போதிய கவனம் செலுத்தி வருகிறது. மீண்டும் காட்டுவளர்ச்சி போதிய அளவு ஏற்படுவதற்கு அங்கத்தினர்கள் இப்பொழுதுகாட்டிய அக்கரையோடு, இன்னும் பரிபூர்ணமாக ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன். அங்கத்தினர்கள் யோசனை கூறும் பொழுது, காட்டிலாக்கா வளர்ச்சிக்குக் குந்தகம் விளைவிக்கும் குறைபாடுகளைமட்டும் சொல்ல வேண்டியிருக்க, அவர்கள் தங்கள் சௌகரியங்களை உத்தேசித்து, "இதைச் செய்ய வேண்டும், அதைச் செய்யவேண்டும், இதை விட்டுவிடுங்கள், அதை விட்டு விடுங்கள்" என்று சொல்கிறார்கள். ஓரிடம், காட்டிலாகாவிற்கே பிரயோசனமில்லை என்று, நான் போன இடத்தில் ஒருவர் சொன்னார். நான் அதிகாரிகளை கலந்து பதில் சொல்வதாகச் சொன்னேன். பிறகு அவர் எதிரிலேயே அதிகாரிகளை வைத்துக்கொண்டு கேட்டேன். அதிகாரிகள், அந்த இடத்தில் விலை உயர்ந்த சந்தனமரங்கள் இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால், முதலில் அதிகாரிகளை கேட்கவேண்டாம், நீங்களே கொடுத்து விடுங்கள் என்று சொன்னார்கள். பிற்பாடு அதிகாரிகள் சொல்வதைப்பற்றி கேட்டபொழுது, அது உண்மைதான் என்று சொன்னார்கள். இன்னும் சில நபர்கள், தங்களுக்கு ஆதரவு அளிப்பவர்களும் தங்களை சார்ந்தவர்களும், ஏழை கிராம மக்களும், தங்களை தொந்தரவு செய்கிறதால், அவர்களுக்கும் ஏதாவது கொடுத்தால் என்ன, என்ற ரீதியில் கேட்கிறார்கள். அவர்கள் விஷயத்தில் அரசாங்கத்திற்கு அக்கரை இல்லை என்று சொல்ல முடியாது. ஆனால், அரசாங்கத்துக்கு அதோடு காட்டை வளர்க்க வேண்டும் என்ற அக்கரையும் இருக்கிறது என்பதை உணர வேண்டும்.

10th July 1957]  [Sri M. Bhaktavatsalam]

பொதுவிவாதத்தின்போது திருச்செந்தூர் தொகுதியைச் சேர்ந்த ஸ்ரீ செல்வராஜன் அவர்கள் ரொம்பக் கண்டித்துப் பேசினார்கள். திருநெல்வேலியில் ஒரு காட்டுப் பிரதேசத்தைப்பற்றிக் குறிப்பிட்டார். நானும் அதைப் பார்த்து இருக்கிறேன். அதை ஒரு சிலருக்கு குத்தகைக்கு கொடுத்திருக்கிறது நீண்டகாலத்துக்கு,—50 வருஷத்திற்கு சில நிபந்தனைகளின்பேரில் கொடுத்திருக்கிறோம். அவர்கள் மரம், செடிகள் வைத்து வளர்க்கவேண்டியதுதான். ' கிராமத்தைச் சூழ்ந்து காடுகள் வளர்ந்து கொண்டுதான் வருகின்றன. மேலும் மேலும் அவை கிராமங்களுக்குள் **encroach** ஆகி வருகின்றன '. அப்படிச் சொல்லி, சில கடுமையான நிபந்தனைகளின் பேரில் சிலருக்கு அதை விட்டுவிட வேண்டும், இன்னும் மற்றவர்களுக்கு நிரந்தரமாக விடவேண்டும் என்றால் நீர்ப்பாசனம் பாதிக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. அம்மாதிரி நிபந்தனையின்றி கொடுத்துவிட முடியாது. எந்த அளவிலே எந்த நிபந்தனைகளின்பேரில் கொடுக்கலாமோ அதைப் பார்த்துக்கொண்டுதான் கொடுக்க முடியும். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், நிலத்தைப் பயன்படுத்தும்போது அது காடு வளர்ச்சிக்கு முரணில்லாமல் இருப்பதை உறுதி செய்துகொள்வதே அதனுடைய சிறந்த கொள்கையாக வைத்துக்கொண்டிருக்கிறது. இதை அங்கத்தினர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்றும், அதற்கு ஆதரவு அளிப்பார்கள் என்றும் நம்பி, இந்த வெட்டுப் பிரேரணையை பிரேரேபித்தவர் உண்மையிலேயே காட்டு வளர்ச்சி ஏற்படவேண்டும் என்ற நோக்கத்துடன் அதை பிரேரேபித்ததினால் அந்தப் பிரேரணையை வாபஸ் பெற்றுக்கொள்ளும்படியும் கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**Sri K. R. NALLASIVAM** : மந்திரி அவர்கள் நாங்கள் காட்டை எல்லாம் விவசாயிகளுக்கு கொடுக்கவேண்டும் என்று சொன்னதாகச் சொன்னார்கள்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : ' காட்டை எல்லாம்' என்று நான் சொல்லவில்லை.

**Sri K. R. NALLASIVAM** : நாங்கள் கேட்பதெல்லாம் நீண்டகாலமாக —20, 25 ஆண்டுகளாக—சொந்தமாக ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவழித்து பயிரிட்டுவந்த நிலங்களைத்தான் கேட்டோம். மந்திரி அவர்களுக்கு மட்டும்தான் தேசபக்தி இருக்கிறது என்று அர்த்தம் அல்ல; எனக்கும், எங்களை சேர்ந்தவர்களுக்கும் தேசபக்தி உண்டு என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**Mr. SPEAKER** : Is the hon. Member Sri M. Jagannathan withdrawing his cut motion?

**Sri M. JAGANNATHAN** : No, Sir.

**Mr. SPEAKER** : The question is—

' That the allotment of Rs. 57,90,600 under Demand No. IV —Forest Department—be reduced by Rs. 100 '.

The cut motion was put and lost.

**Mr. SPEAKER** : I now put the original motion to the vote of the House. The question is—

' That the Government be granted a sum not exceeding Rs. 57,90,600 under Demand No. IV—Forest Department '.

**The Demand was put and carried and the Grant was made.**

MR. SPEAKER: Is the hon. Member Sri K. Sattanatha Karayalar withdrawing his cut motion?

SRI K. SATTANATHA KARAYALAR: No, Sir.

MR. SPEAKER: The question is—

'That the allotment of Rs. 19,54,500 under Demand No. XXXV—Capital Outlay on Forests—be reduced by Rs. 100'.

The cut motion was put and lost.

MR. SPEAKER: I now put the original motion to the vote of the House. The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 19,54,500 under Demand No. XXXV—Capital Outlay on Forests'.

The Demand was put and carried and the Grant was made.

MR. SPEAKER: To-morrow, of the four hours that are allotted for discussion of Demands, three hours will be allotted for Demands XXVII (Electricity) and XLI (Capital Outlay on Electricity Schemes). Four hours have been allotted for discussion on the Irrigation Demand. Discussion on this Demand will proceed for one hour to-morrow afternoon between 1 and 2 p.m.

The House will now adjourn and meet again at 9 a.m. on Thursday, the 11th July 1957.

The House then adjourned.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Thursday, 11th July 1957.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Southern Zonal Council.*

* 85 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami): Will the hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have received any communication from the Centre about the convening of a meeting of the Southern Zonal Council at Madras this year;

(*b*) if so, the subjects to be discussed at the meeting, and

(*c*) the amount expected to be spent therefor?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) Yes.

(*b*) The subjects to be discussed at the meeting are settled by the Union Home Minister as Chairman of the Zonal Council and it is not possible to disclose the subjects without his permission.

(*c*) The State Government are not expected to bear any expenditure.

SRI K. VINAYAKAM: Does it curiously coincide to-day that the meeting of the Zonal Council is to be held this evening? Does the problem relating to the boundary between Madras and Andhra States figure as one of the subjects for discussion at the meeting of the Council or, if that does not, will the Home Minister be prevailed upon by the Madras Government to hasten the issue for a speedy solution?

THE HON. SRI C. SUBRAMANIAM: We have always been holding the view that this is not a matter that should be brought before the Zonal Council. It has arisen, apart from the recent States Reorganization Act, from the separation of the Andhra from the Madras State. As the hon. Member is aware, Mr. Pataskar's report is awaited. It is expected that it will be submitted any day. Therefore, I do not think there is any further need to emphasize this point either before the Home Minister or before anybody else.

SRI K. ANBAZHAGAN: கனம் தலைவர் அவர்களே, இந்த 'ஜோனல் கவுன்சில்' வட்டாரக் குழு கூடும்பொழுது முதல் முதலாக இந்த நான்கு வட்டாரங்களிலும் உள்ள நிலைமை பரிசீலிக்கப்படும் என்ற காரணத்தினால் தமிழ் நாட்டினுடைய தாழ்ந்த நிலைமையை நிதி அமைச்சர் அவர்களோ, அல்லது மற்ற அமைச்சர் அவர்களோ எடுத்துக்காட்டு

வார்களா? கோதாவரி, கிருஷ்ணா தண்ணீரைத் தமிழ் நாட்டிற்குக் கொண்டுவருவதற்கும் மேற்குப் பகுதியிலுள்ள தண்ணீரை கிழக்கே திருப்பி விடுவதற்கும் உடனடியாக முயற்சிகள் எடுக்கப்படுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : முதல் முதலாக இந்த 'ஸோனல் கவுன்சிலில்' மூன்று பகுதிகள்தான் சேர்க்கப்பட்டிருக்கிறது என்பதை கனம் அங்கத்தினருக்கு தெரிவித்துக்கொள்ளுகிறேன். மூன்று ராஜ்யங்களும் சேர்ந்து எந்தெந்த விஷயங்களில் ஒத்துழைக்க முடியும், எந்தெந்த விதத்தில் அபிவிருத்தி செய்யமுடியும் என்பதைப் பற்றி இந்தக் கூட்டத்தில் ஆலோசிக்கப்படுமா என்று சொல்ல முடியாது. இதுபற்றி உடனடியாக கவனிக்கப்படுவதற்கு எல்லாம் செய்யப்படும்.

SRI M. S. SELVARAJAN : 'ரீஜனல் கவுன்சில்' மூலமாக 'இண்டர் ஸ்டேட் ஜெனரல் போர்டு' அமைக்கும் விஷயத்தையும் மத்திய அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்லக்கூடுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதில் அங்கத்தினருடைய ஆலோசனையைச் சொன்னால் அதை அனுசரித்து ஏதாவது நடவடிக்கை எடுக்கமுடியுமா என்பதுபற்றி சர்க்கார் கவனிக்கும்.

SRI K. VINAYAKAM : If I may trust my memory, one of the objects of the Zonal Council is to promote the solution of problems like inter-State water disputes and to find out means as to how best water could be made use of by the concerned States. When that is so, will the Government of Madras take up the issue at the meeting of the Council, of sharing the waters of Godavari and Krishna between the Andhra and our parched areas?

THE HON. SRI C. SUBRAMANIAM : All matters with regard to the development of the zone have to be considered at the meetings of the Zonal Council. But this is the first meeting. I do not think any of these subjects will figure for discussion at the meeting. As I have already assured the hon. Member, all subjects which relate to the development of the zone will have to be taken up for consideration as soon as possible.

SRI P. S. SANTHANAM : சாத்தனூர் அணைக்கட்டிலிருந்து திருவண்ணாமலைக்கு கால்வாய் கொண்டுவர சர்க்காருக்கு ஆலோசனை இருக்கிறதா?

MR. SPEAKER : இந்தக் கேள்விக்கும் மூலக் கேள்விக்கும் சம்பந்தமில்லை.

SRI A. A. RASHEED : Are the recommendations of the Zonal Council mandatory or only advisory?

THE HON. SRI C. SUBRAMANIAM : There is no question of these being mandatory. All the States are represented in the Zonal Council. If the decisions are unanimous, naturally every Government is bound to implement the decisions taken at the meeting. If they are not unanimous, no decision can be said to have been taken.

SRI T. KARIA GOUNDER : முன்பு கிருஷ்ணா, பெண்ணாறு திட்டத்தின் கீழ் வட ஆற்காடு ஜில்லா ஒரு பகுதிக்குத்தான் பாயும் என்று கூறப்பட்டிருந்தது. மேற்படி ஜில்லா முழு பகுதியையும் கவனிக்க கனம் மந்திரி அவர்கள் சிபார்சு செய்வார்களா?

[11th July 1957]

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் கேட்கும் கேள்விக்கும், மூலக் கேள்விக்கும் சம்பந்தம் இருப்பதாகத் தெரியவில்லை. கனம் மந்திரி அவர்கள் பதில் சொல்லுவதாய் இருந்தால் சொல்லலாம்.

THE HON SRI C. SUBRAMANIAM : கிருஷ்ணா, பெண்ணாறு திட்டம் பிறக்காமலே இறந்துவிட்டது. அதனாலே இது வட ஆற்காடு ஜில்லாவின் மற்ற பகுதிக்கும் விஸ்தரிக்கப்படவேண்டியவை. பின்னால் கோதாவரி, கிருஷ்ணா திட்டம் வரும்பொழுது ஆலோசிக்கப்படவேண்டிய விஷயம். அதற்கும் ஸோனல் கவுன்சில் பற்றிய கேள்விக்கும் சம்பந்தமில்லை.

SRI K. ANBAZHAGAN : ஸோனல் கவுன்சில் வட்டாரக் குழுவானது மூன்று பகுதிகளை அடங்கியது என்ற இன்றைய நிலையை நிதி அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். மைசூர் சேர்ந்த நான்கு பகுதிகளையும் உள்ளடக்கினால்தான் இந்த வட்டாரக் குழு சிறந்த முறையில் பணியாற்றலாம் என்ற கருத்தை அந்தக் குழுவின் மூலமாக மத்திய அரசாங்கத்தினிடம் வற்புறுத்துவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதுபற்றியும் கவனிக்கப் படும்.

SRI S. B. ADITYAN : ஸோனல் கவுன்சில் கூட்டத்தில் சென்னை ராஜ்யப் பிரதிநிதிகளாக யார் யார் கலந்துகொள்ளப்போகிறார்கள் என்பதைத் தெரிவிக்க முடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இங்கு முன்னால் உட்கார்ந்திருக்கும் மூன்றுபேர்களும் கலந்துகொள்ளுவார்கள். அதாவது கனம் முதல் அமைச்சர், கனம் நிதி அமைச்சர், கனம் உள்நாட்டிலாகா அமைச்சர்.

*Key Village Centres.*

* 86 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of Key Village Centres opened so far under the Key Village Scheme of Cattle Improvement; and

(*b*) the expenditure incurred thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Under this scheme nineteen Key Village Centres with six Key Villages for each centre have been set up. One centre with four Key Villages was transferred to this State on 1st November 1956 with the addition of the Kanyakumari district.

(*b*) About Rs. 10·77 lakhs were spent on this scheme up to the year ending 1956–57.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : How many more centres are likely to be opened before the end of the Second Five-Year Plan?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : In order to bring all the Key Village blocks on a uniform pattern, 30 additional Key Villages were also added to the old 15 Key Village Centres started during the First Five-Year Plan period, during 1956–57. Consequent on the States Reorganization, one Key Farm Centre with four Key Villages was transferred to this State from 1st November 1956. Thus, at the end of 1956–57, there were 19 Key Village blocks with six Key Villages each and one Key Village block with four Key Villages.

[11th July 1957

SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Agriculture kindly describe, in a nut-shell, the kind of cattle improvement work that is being carried on in the Key centres?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Key Village is a compact area consisting of one or group of contiguous villages, having a total population of about 800 cows/she-buffaloes of breedable age and all the six Key Villages with an Artificial Insemination Centre forms a Key Village block. It is roughly of 5 to 10 miles radius and consists of about 5,000 cows and/or she-buffaloes of breeding age.

The programme of work as envisaged in the All-India Key Village Scheme is being followed stage by stage in all the Key Village blocks.

In each Key Village, two bulls of known parentage are distributed to selected ryots who are interested in cattle breeding. In order to create an incentive to maintain the bulls in good condition, with proper management, a subsidy of Rs. 30 per mensem per bull is paid. The bulls are used for natural services free of charge in the village. Records showing the performance of the bulls, progenies, milk yield, etc., are maintained in each Key Village. In order to supplement the natural services performed by the bulls, the technique of artificial insemination is applied, for which four bulls of known pedigree are stationed at the main Artificial Insemination Centre where semen is collected, diluted and distributed to Key Villages for insemination work. For quick transport of semen, jeeps have been sanctioned for all the 19 Key Village blocks except for the centre which was transferred from Kerala State. Each Artificial Insemination Centre is managed by a Veterinary Assistant Surgeon with two Stockmen or Veterinary and Livestock Inspectors, while there is a Veterinary and Livestock Inspector or Stockman for each Key Village (sub-centre).

SRI A. VEDARATHNAM PILLAI : இப்பொழுது ஆரம்பித்திருக்கும் " கீ வில்லேஜ் செண்டர்கள் " எந்தெந்த இடத்தில் இருக்கின்றன என்பதை கனம் மந்திரி அவர்கள் அறிவிப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது ஒரு பெரிய ஜாபிதா. தனிக் கேள்வி கேட்டால் அதை மேஜையின்மீது வைக்கலாம்.

SRI A. R. MARIMUTHU : தற்சமயம் கோவிலின் பெயரால் விடப்படக் கூடிய ரிஷபங்கள் நாட்டின் பல பகுதிகளிலும் நடமாடிக்கொண்டிருப்பதால் இழ்த்தரமான மாடுகள் உற்பத்தியாகின்றன. இதை தடுப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கோவில் காளைகள் அப்போதைக்கப்போது ஏலம் விடப்படுகின்றன என்றுதான் எனக்குத் தெரிந்த தகவல்களிலிருந்து தெரியவருகிறது. ஆகவே மற்ற மாடுகளைப் போல் அவைகளும் நடமாடிக்கொண்டிருக்கலாம்.

SRI A. R. SUBBIAH MUDALIAR : " கீ வில்லேஜ் செண்டருக்குப் " பக்கத்தில் மேய்ச்சலுக்கு இடம் ஒதுக்குவதற்கு சர்க்கார் திட்டமிட்டிருக்கிறதா ?

11th July 1957]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அது வேறு விஷயம். மேய்ச்சல் காலுக்கு இடம் ஒதுக்குவது பற்றி தனியாக கவனம் செலுத்தப் படுகிறது.

SRI M. JAGANNATHAN : May I know how these Key Village Centres are catering to the needs of our agriculturists? 9-10 a.m.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : As the hon. Member should have realized, these centres have been catering to the needs of the ryots by improving the breed of cattle in which they are vitally interested.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, உயர்ந்த ஜாதிக் கால் நடைகளை வளர்ப்பதற்காக இந்த உற்பத்தி முறைகளைக் கையாண்டு பல கிராமங்கள் மூலமாக நாட்டில் வளர்த்தபோதிலும், அந்த உயர்ந்த ஜாதிக் கால்நடைகள் சிறந்த முறையில் உடல் வலிவோடு பயன் தரக்கூடிய முறையில் வளருவதற்கு சிறந்த வகையான தீவனங்கள் கிடைப்பதற்கான ஏற்பாட்டை இந்த அரசாங்கம் செய்திருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கால்நடை வளர்ச்சிக்கு மாட்டு தீவனம் முக்கியமானது என்பதை அரசாங்கம் நன்றாக உணருகிறது. அதுபற்றியும் கவனம் செலுத்திக்கொண்டுதான் வருகிறது.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware that there are several Veterinary hospitals without Veterinary doctors?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : It may be so; that is due to the unfortunate shortage of technical personnel.

SRI K. VINAYAKAM : Do not the Government propose to improve the breed of cattle in the City of Madras? If they propose to do so, what is the programme of the Government, apart from improving the Veterinary Hospital, where no proper facilities exist now for the improvement of the breed of cattle?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government have a proposal to improve the breed of cattle in the City also. But in the City, people are interested in improving the breed of cows and the proposed milk colony scheme will help to improve the breed of cattle in the City.

SRI M. C. MUTHUKUMARASWAMY : கால்நடை அபிவிருத்தி செய்யவேண்டுமென்று சர்க்கார் நல்ல நோக்கத்தோடு பல காரியங்கள் செய்துவரும்போது நாலைந்து கிராமங்களில் உள்ள பசுக்களை ஒன்றாகச் சேர்த்துக்கொண்டு இஷ்டம் போல் காளைகளை வாங்கி அபிவிருத்தி செய்வதைத் தடுப்பதற்கு சர்க்கார் முன்வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : "கீ வில்லேஜ் திட்டம்" நடைபெறுகிற பிராந்தியங்களில் இது விஷயம் கவனிக்கப்பட்டு வருகிறது.

SRI A. VEDARATHNAM PILLAI : எந்தெந்த ஜாதி மாடுகளை இந்த "செண்டர்"களில் அபிவிருத்தி செய்ய உத்தேசம் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் அறிவிக்க முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நம் ராஜ்யத்திலே வளர்க்கக்கூடிய ஜாதிகள் பல உண்டு. எந்த எந்த ஜாதிகளை எந்த எந்த பிராந்தியத்திலே வளர்க்கக் கூடுமோ அந்த முறையிலே வளர்க்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

SRI M. JAGANNATHAN : Sir, may I know whether foreign breeds of cattle are imported for these Key Village Centres?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir; there is no import of foreign breeds for the purpose of cattle development in the State.

SRI K. G. PALNISWAMY GOUNDER : " கீ வில்லேஜ் " சென்டரிலே காங்கயம் ஜாதிக் காளைக் கன்றுகள் வளர்ப்பதற்கு " ஸப்ஸிடி " கொடுக்கப்படுகிறது. அதேமாதிரி நல்ல கிடாறிக் கன்றுகளை வளர்ப்பதற்கும் " ஸப்ஸிடி" கொடுக்க உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அது பற்றி தனி கேள்வி கேட்டால் பார்த்து பதில் சொல்கிறேன்.

SRI A. R. SUBBIAH MUDALIAR : தமிழ்நாடு சம்பந்தப்பட்ட மட்டும் கால்நடை நல்ல நிலைமையில் இல்லாததற்குக் காரணம் மேய்ச்சல் வசதி இல்லாததுதான் என்பது சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அது சர்க்காருக்கு நன்றாகத் தெரியும்.

SRI M. C. MUTHUKUMARASWAMY : உம்பளச்சேரி காளைகள் மிக அழகாகவும், நெஞ்சு உரமுள்ளதாகவும், மாட்டுக்கு இருக்கவேண்டிய அம்சங்களெல்லாம் நல்ல முறையிலே அமைந்துள்ளதாகவும் இருப்பதால், அந்த ரகக் காளைகளை அபிவிருத்தி செய்வதற்கு கனம் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முக்கியமான இந்தக் கால்நடை ரகத்தை விருத்தி செய்வதற்காகத்தான் ஒரத்தநாட்டில் தனியாக ஒரு கால்நடைப் பண்ணை அமைத்து, இந்த ரகம் விருத்தி செய்யப்பட்டு வருகிறது.

SRI A. VEDARATHNAM PILLAI : உம்பளச்சேரி காளைகளை அபிவிருத்தி செய்வதற்காக உம்பளச்சேரியிலேயே ஒரு " கீ வில்லேஜ் ஸ்கீம் " ஆரம்பிக்க " சர்வே " நடந்தது. அது என்ன ஸ்திதியில் இருக்கிறது என்பதை கனம் மந்திரி அவர்கள் அறிவிக்க முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : உம்பளச்சேரி கிராமத்திலேயே இந்த ரகம் விருத்தி செய்யப்படவேண்டிய அவசியம் இல்லை என்று அரசாங்கம் கருதுகின்றது. இப்பொழுது உம்பளச்சேரி ரகக் காளைகள் ஒரத்தநாட்டில் வளர்க்கப்படுகின்றன. அங்கு அவை நன்றாகத் தான் வளர்க்கப்பட்டு வருகின்றன என்று அரசாங்கம் கருதுகிறது.

### *Development of Courtallam*.

* 87 *Q*.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the amount to be spent and the schemes to be implemented through the Courtallam Township Committee during the next five-years; and

(*b*) the schemes to be implemented during the current year ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) A comprehensive plan for the development of Courtallam as a tourist centre at a cost of about Rs. 40 lakhs has been drawn up by the Township Committee. Some of these schemes are suitable for immediate implementation, and are under consideration.

[11th July 1957]

It is proposed to invite a Town-Planning Expert of the Government of India to visit Courtallam and study these schemes. A decision on the schemes to be implemented can be taken only after he reports to Government.

SRI K. SATTANATHA KARAYALAR : இதிலே பல திட்டங்களுக்குக் கோயில் உடைமைகளை எடுக்க வேண்டியிருப்பதால், அதற்கு ஒரு பெரிய எதிர்ப்பு வந்திருப்பது சர்க்காருடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : நியாயமான திட்டங்களுக்கு எதிர்ப்பு இருக்குமானால், அந்த எதிர்ப்பைத் தவிர்ப்பதற்கு எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

SRI V. K. RAMASWAMY MUDALIAR : What is the percentage of contribution we are receiving from the Government of India for the purpose ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இன்னும் அதைப்பற்றி ஒன்றும் முடிவு ஏற்படவில்லை.

SRI K. ANBAZHAGAN : " Tourist Centres " அல்லது சுற்றுப்பயணத்திற்கான உல்லாச நகரங்கள் என்ற முறையிலே அமைப்பதற்கு மத்திய அரசாங்கம் உதவி செய்கின்றதா ? அப்படி உதவி செய்கின்றது என்றால், அந்த முழு உதவியும் திருக்குற்றாலத்தின் வளர்ச்சிக்குக் கிடைக்கும்படி செய்யப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : பல இடங்களுக்கு உதவி அளிக்கப்படுகிறது. அதில் மூன்று ரகங்கள் இருக்கின்றன. ஒன்று—பூராச் செலவையும் மத்திய அரசாங்கமே போட்டுக்கொள்வது ; இரண்டாவது—ஒரு பாதி ராஜ்ய அரசாங்கமும் இன்னொரு பாதி மத்திய அரசாங்கமும் போட்டுக்கொள்வது ; மூன்றாவது—திட்டத்திற்கு உட்பட்டு, பூராவும் ராஜ்ய அரசாங்கமே போட்டுக்கொள்வது. இவைகளிலே, எந்தெந்த திட்டத்திற்கு எவ்வளவு எவ்வளவு ஒதுக்கப்படுவது என்று அவ்வப்போது முடிவு எடுக்கப்பட்டு, அதற்கேற்றவாறு திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

SRI M. S. SELVARAJAN : " ஐந்து அருவி " என்ற பெயர் பெற்று, ஐந்து அருவிகள் விழுந்துகொண்டிருந்த இடத்தில் இப்பொழுது நான்கு அருவிகள்தான் விழுகின்றன. ஆகவே, பெயருக்கேற்றபடி, ஐந்து அருவிகளும் விழக்கூடிய முறையிலே, பாறைகள் ஏதாவது குறுக்கே இருந்தால், அவைகளை வெட்டியாவது, தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : " ஐந்தருவி " என்ற பெயரை நிரூபிப்பதற்கு இன்னும் ஒரு அருவியை ஏற்படுத்துவதற்கு முற்பட்டால், அது எங்குபோய் முடியுமோ தெரியாது. இப்பொழுதிருக்கும் அருவியிலேயே குளிப்பதற்கு நல்ல சௌகரியமான ஏற்பாடுகளெல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன. ஒரு அருவி அங்கு குறைவாக இருக்கிறது என்பதனால் குளிப்பதற்கு எந்தவிதமான அசௌகரியமும் இல்லை.

SRI N. R. THIAGARAJAN : குற்றாலம் நன்றாக கவனிக்கப்படுகிறது; உதகமண்டலமும் நன்றாக கவனிக்கப்படுகிறது. ஆனால், இவைகளைக்காட்டிலும் மிக முக்கியமான மலை நகரமாக இருக்கக்கூடிய கொடைக்கானல் நன்றாக கவனிக்கப்படவில்லை. அதை அபிவிருத்தி செய்வதற்குரிய திட்டங்கள் ஏதேனும் இருக்கிறதா ? அங்கு அபிவிருத்தி வேலைகள் செய்ய சர்க்கார் என்ன முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று மந்திரி அவர்கள் தயவு செய்து தெரிவிப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கொடைக்கானலைப் பற்றி தனியாகக் கேள்வி கேட்டால், அங்கே என்ன என்ன செய்ய உத்தேசம் என்பதைச் சொல்ல முடியும். ஆனால், இம்மாதிரி திட்டங்கள் எடுத்துக்

கொள்ளப்படுவதிலே, வெளிநாட்டிலிருந்து வரக்கூடியவர்கள், அதிகமாக வந்து தங்கக்கூடிய இடங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அங்கே சில அபிவிருத்தி வேலைகள் செய்வது என்பது சர்க்காருடைய திட்டம்.

SRI K. SATTANATHA KARAYALAR: "டௌன்ஷிப் கமிட்டி" அமைத்த பிறகு இதுவரை என்ன வேலை அங்கே செய்யப்பட்டுள்ளது என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: தனிக் கேள்வி கேட்டால் என்னுடைய சகமந்திரி அவர்கள் பதில் சொல்வார்கள்.

SRI M. JAGANNATHAN: தலைவர் அவர்களே, திருக்குற்றாலத்திற்கு வருடந்தோறும் ஆயிரக்கணக்கான பிரயாணிகள் போகின்றார்கள். ஆனால், அவர்களுக்குப் போதிய தங்குமிட வசதி (lodging facilities) இல்லாத காரணத்தால், அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இந்தப் பிரச்னையைத் தீர்த்து வைப்பதற்கு சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: அதைப்பற்றியும் ஆலோசிக்கப் படும். "டௌன்ஷிப்" கமிட்டியார் கொடுத்திருக்கும் திட்டங்களிலே அதற்கும் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

SRI K. ANBAZHAGAN: தலைவர் அவர்களே, இந்தத் திருக்குற்றாலம், அங்கே விழுகின்ற நீர் வீழ்ச்சியால் முக்கியத்துவம் பெறுகிறது. அந்த நீரினுடைய தரம் மிக உயர்ந்தது என்று சொல்கிறார்கள். அதுகுறித்து மருத்துவத் துறையிலேயும், விஞ்ஞானத் துறையிலேயும் ஆராய்ச்சி செய்யப் பட்டிருக்கிறதா ? அந்த நீர் வருகிற வழி முழுவதும் "சர்வே" செய்யப் பட்டுள்ளதா ? அந்த நீரிலே தீமை ஏதும் கலக்காமல் இருக்க பாதுகாப்பு நடவடிக்கைகள் அரசாங்கத்தாரால் எடுக்கப்பட்டு வருகின்றனவா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: இதற்கு தனிக் கேள்வி கேட்டால் பதில் சொல்ல முடியும்.

SRI K. VINAYAKAM: Sir, there is what is known as the Tiger Falls in Courtallam. Tigers do not fall and not even cats and dogs fall, but it is only a flow of water. This is now in disuse and is not properly maintained. Will the Government instruct the Township Committee to take immediate steps to fence it properly? From personal reports received recently, I understand that it is bringing lots of mud, stones, twigs and other materials. Will the Government take sufficient care to see that it is rectified?

THE HON. SRI C. SUBRAMANIAM: 'ஐந்தருவிகள் இருக்க வேண்டும், நான்கு அருவிகள்தான் இருக்கின்றன. ஆகவே, ஐந்தாவது அருவியைக் கொண்டுவரவேண்டும்' என்று ஒரு கனம் அங்கத்தினர் கேட்டதுபோல் கனம் அங்கத்தினர் அவர்கள்—நல்லவேளை—கேட்கவில்லை. "Tiger falls" என்று பெயர் இருப்பதால் புலி விழவேண்டுமென்று சொல்லாமல் இருந்ததுபற்றி சந்தோஷம். "Tiger falls" தனிப்பட்ட ஒருவரால் நல்ல விதமாக அபிவிருத்தி செய்யப்பட்டு இப்பொழுது நல்ல உபயோகத்தில் இருக்கிறது என்று கனம் அங்கத்தினருக்குச் சொல்ல விரும்புகிறேன்.

SRI J. MATHA GOUDER: நீலகிரி ஜில்லாவிலும் இம்மாதிரி ஏற்படுத்த முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER: தனிப்பட்ட கேள்வி போடுங்கள்.

11th July 1957]

*Water-supply in the City.*

* 88 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Revenue be pleased to state with reference to the answers given to question No. 227 on 26th September 1956, the present stage of the proposal to augment the water-supply in the City of Madras?

THE HON. SRI M. A. MANICKAVELU : Proposals for augmenting the water-supply in the City are still under consideration.

SRI K. VINAYAKAM : The proposal for supplying water to the City of Madras was conceived when Madras was considerably a less smaller town in area. The pipes laid underground were suitable for the limited consumption in those days. Now that the City has expanded beyond reasonable limits, will the Government issue sufficient loans asked for by the Corporation of Madras so as to enable them to lay fresh pipes and thus cater to the needs of the people living in the extended areas like Kodambakkam, Adyar and Saidapet?

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, it is not only a question of laying fresh pipes. Three or four alternative schemes were considered for augmenting the water-supply, one costing a sum of about Rs. 220 lakhs, another a sum of Rs. 90 lakhs and yet another a sum of Rs. 3·5 lakhs. Now, the latest proposal under consideration is that of preventing water evaporation. It is said that about 500 million cubic feet of water is wasted by evaporation when the water flows from Poondi to Red Hills. The latest scheme is to see whether hume pipes could be laid and whether evaporation could be avoided by it. In that connection, the question of laying pipes will be considered.

SRIMATHI T. N. ANANDANAYAKI : கனம் சபாநாயகர் அவர்களே, ஆரணியாறு திட்டத்தில் இருந்து சென்னை நகருக்குத் தண்ணீர் சப்ளை செய்யும் ஒரு முற்போக்குத் திட்டம் தீட்டப்பட்டிருப்பது கனம் அமைச்சருக்குத் தெரியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : நன்றாகத் தெரியும். இந்தத் திட்டத்திற்கு 220 லட்சம் ரூபாய் செலவாகும்.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware that the loans taken by the Corporation have not been spent on this scheme?

THE HON. SRI M. A. MANICKAVELU : I want notice, Sir.

SRI K. ANBAZHAGAN : சென்னை நகரத்தில் தண்ணீர் பிரச்னை பல மாதங்களாக மிகவும் நெருக்கடியான பிரச்னையாக இருந்தும், இன்னும் கவனிக்கப்பட்டு வருகிறது என்கிற கட்டத்திலேயே இந்தத் திட்டம் இருப்பது என் ? அதை விரைவுபடுத்த ஏதேனும் முயற்சி செய்யப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : குறைந்த செலவில் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாகத் தண்ணீர் கொண்டுவரப்படும் என்று யோசிக்கவேண்டுமானால் நாள்தான் ஆகும். ஒரு திட்டத்திற்கு 220 லட்சம் ரூபாய் செலவு பண்ணுவது என்பது சாத்தியம் அல்ல. ஆகையால்தான் இந்தமாதிரி திட்டங்களை நிறைவேற்றாமல் மாற்றுத் திட்டங்கள் குறைந்த செலவில் கொண்டுவர யோசிக்கப்படுகிறது.

[11th July 1957

DR. SRIMATHI SATHIYAVANIMUTHU : தென் சென்னையைவிட வட சென்னையில் அதிகத் தண்ணீர் பற்றாக்குறை இருப்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? இருப்பின் அதற்குக் காரணம் என்ன என்று அமைச்சர் சொல்வாரா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : ஒரு காரணம் தண்ணீர் எப்போதும் வடக்கே போகாது. தெற்கே ஓடுவதுதான் அதன் இயல்பு. (சிரிப்பு.)

SRI K. VINAYAKAM : One of the main objects of a municipal administration is to give protected water-supply. The Corporation of Madras is not in a position to give good water-supply to the extended areas. Cholera is a water borne disease. The prevalence of cholera is mainly due to no good, potable water being supplied to the people in the City. Will the Government be kind enough to grant the loan even though it is a huge amount so that the metropolis may be devoid of trouble like smallpox, cholera, and other contagious diseases?

THE HON. SRI M. A. MANICKAVELU : The Corporation is taking all active steps in the matter of getting further loan and also improving the water-supply to the City.

*Educational concessions to certain Backward Classes.*

* 89 Q.—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) whether there was any proposal to extend the fee concession at all stages of education now being granted to Harijans, to certain Backward Classes in the State which are equally backward in education;

(b) if so, when the proposal is to be given effect to; and

(c) the names of the various classes to be benefited by the concession?

THE HON. SRI P. KAKKAN : (a) & (b) The Government have issued orders classifying certain communities as "Most Backward" among the other Backward Classes, and extending to them the educational concessions admissible to Scheduled Castes with effect from the academic year 1957–58.

(c) A list* of communities classified as "Most Backward" is placed on the table of the House.

SRI K. VINAYAKAM : பின் தங்கிய இனங்களில் ஒரு சில ஜாதியாரை அதிகம் பின் தங்கியவர்கள் என்று குறிப்பிட்டு அவர்களுக்குக் கல்விச் சலுகை அளிக்க அரசாங்கம் முன்வந்திருப்பதை அந்தச் சாதியார் பாராட்டுவார்கள் என்றாலும், இந்தச் சலுகையை அரசாங்கம் அளித்தாலும் பள்ளித் தலைமை ஆசிரியர்கள், மானேஜ்மெண்டார் " அரசாங்கம் ஜி.ஓ. போட்டுவிட்டால் போதுமா ? எங்களுக்குத் தனியாக உத்தரவு இன்னும் வரவில்லை " என்று சொல்லி ஏழை மக்களைத் திருப்பிவிடாமல் இருக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்படித் திருப்பிவிடும் பழக்கம் முன்பு இருந்திருக்கிறது. முன்பு எம். எல். ஏ.-க்கள் கையெழுத்திட்டால் போதும் என்று அரசாங்கம் உத்திரவு போட்டும் நாங்கள் அப்படிப் போட்டபோது அவர்கள் ஒத்துக்கொள்ள மறுத்தார்கள்.

* Printed as Appendix on page 294 infra.

A

11th July 1957]

MR. SPEAKER : The hon. Member is making a speech. Let him put the question briefly. We do not want statements.

SRI K. VINAYAKAM : I am coming to the principal question.

MR. SPEAKER : The hon. Member will put the principal question first instead of making a statement.

SRI K. VINAYAKAM : The Queen's English is like that. அதனால் மிகவும் பின் தங்கியவர்களுக்குக் கல்விச் சலுகை அளிக்கப்படும் என்று அரசாங்கம் உத்திரவு போட்டிருந்தால் உடனே இதை எல்லா நிர்வாக அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து அவர்களும் மாணவர்களுக்கு அளிக்கும்படியாகச் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI P. KAKKAN : கனம் தலைவர் அவர்களே, மிகவும் பின் தங்கிய வகுப்பு மக்களுக்கு உதவி செய்யும் நோக்கத்துடன்தான் அரசாங்கம் இந்த உத்திரவு போட்டிருக்கிறது. இந்த உத்திரவின் பயன் உடனே மாணவர்களுக்குக் கிடைக்கச்செய்ய எல்லாவிதமான அக்கறையையும் அரசாங்கம் எடுத்துக் கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

SRI K. R. VISWANATHAN : தலைவர் அவர்களே, மிகவும் பின் தங்கிய வகுப்பினர்கள் தாழ்த்தாப்பட்ட மக்களைப் போலவே கருதப்படுவார்கள் என்று சொல்லப்படுகிறது. இவர்களுக்கு பள்ளிக் கட்டணச் சலுகை அளிக்கப்பட்டதுமாதிரி வேறு இன்னும் ஏதாவது சலுகை அளிக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : ஹரிஜனங்களுக்குக் கொடுக்கப்படும் பள்ளிச் சலுகைமாதிரியே மிகவும் பின் தங்கிய வகுப்பினருக்கும் அளிக்க உத்திரவு போடப்பட்டிருக்கிறது. இதர சலுகைகளும் கொடுக்க இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்தோடு கலந்து கொண்டு ஒரு முடிவுக்கு வரும்.

SRIMATHI P. K. R. LAKSHMIKANTHAM : மிகவும் பின்தங்கிய வகுப்பார் என்று அரசாங்கத்தாரால் குறிக்கப்பட்டுள்ளவர்கள் யார் யார் என்று அறிவிக்க முடியுமா ?

THE HON. SRI P. KAKKAN : மேசையில் வைக்கப்பட்டுள்ள லிஸ்டில் மிகவும் பின் தங்கியவர்கள் யார் யார் என்று குறிக்கப்பட்டுள்ளது.

SRI K. ANBAZHAGAN : மிகவும் பிற்பட்ட வகுப்பினர்களுக்கு தாழ்த்தப்பட்ட மக்களை ஒத்து சலுகை அளிப்பதற்குச் சட்டம் இடையூறாக இருக்கிறது என்ற காரணத்தால் அதை உடனடியாகச் செய்ய முடியாது என்ற செய்தி வந்திருப்பது உண்மைதானா ? மருத்துவ பொறி இயல் கல்லூரிகளில் மிகவும் பிற்பட்ட மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மிகவும் குறைவான மார்க் வாங்கியிருப்பினும் உரிமையளிக்கப்பட்டுள்ளதுபோலவே இவர்களுக்கும் நேர்முகக் காட்சிக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவாரா ? அப்படிமாறாக இருக்குமானால் அதை உடனடியாகக் களைவாரா ?

THE HON. SRI P. KAKKAN : கனம் சபாநாயகர் அவர்களே, கல்விச் சலுகையைப் பொறுத்தமட்டில்தான் இதுமாதிரியாக செய்யப்பட்டிருக்கிறது. இதர சலுகைகள் கொடுப்பது பற்றி மத்திய சர்க்காருடன் கலந்து கொண்டு செய்யப்படும் என்று நான் முன்பே சொன்னேன். கல்லூரிகளுக்கும் அவ்விதம்தான் செய்யப்படும்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : அதிகமான பிற்பட்டவர்களுடைய ஜாப்தாவை நம் அரசாங்கம் தயாரித்ததா ? மத்திய அரசாங்கம் தயாரித்ததா ? நம்முடைய அரசாங்கம் அவர்கள் யோசனையின்பேரில் தயாரித்திருந்தாலும் இதில் முக்குலத்தார் என்ற மிகவும் பிற்பட்ட இனத்தவர்கள் ஏன் சேர்க்கப்படவில்லை என்று கேட்கிறேன்.

**THE HON. SRI P. KAKKAN** : கனம் தலைவர் அவர்களே, மத்திய சர்க்காரால் ஏற்படுத்தப்பட்ட பாக்வார்டு கிளாஸ் கமிஷன் சிபார்சுப்படிதான் இது தயாரிக்கப்பட்டிருக்கிறது. அக் கமிஷனில் கனம் அங்கத்தினரும் ஒரு உறுப்பினர் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**SRI D. DASARATHAN** : வாழ்க்கையிலோ, மற்ற வகையிலோ மிகவும் பின் தங்கிய வகுப்பார்களுக்குக் கல்விச் சலுகை அளிக்கப்படுவதாக கனம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இதற்காக எல்லாவகையிலும் பிற்பட்ட இனத்தவர்களின் ஜாப்தாவைத் தயாரித்திருப்பதுபோல எல்லாவகையிலும் முற்போக்காக உள்ளவரின் ஜாப்தா தயாரிக்கப்பட்டிருக்கிறதா ?

**MR. SPEAKER** : It is placed on the table of the House.

**SRI D. DASARATHAN** : I want to have the list for the most Backward Classes.

**MR. SPEAKER** : The rest are Forward Classes.

**SRI T. S. RAMASWAMY PILLAI** : மிகவும் பின் தங்கிய வகுப்பாருக்குச் சலுகை அளிக்கப்படும் என்று சொல்கிற நேரத்தில், கேரள பகுதியில் இருந்து சென்னை ராஜ்யத்துடன் சேர்ந்துள்ள பகுதி மக்களுக்கும் அதே சலுகை அளிக்கப்படுமா ?

**THE HON. SRI P. KAKKAN** : திருவாங்கூர்-கொச்சியோடு அந்தப்பகுதி சேர்ந்திருந்த காலத்தில் எந்தச் சமூகத்தினர் பிற்பட்டவர்கள் என்று கருதப்பட்டதோ அந்தச் சமூகத்தினரை எல்லாம் இங்கும் பிற்பட்டவர்களாகவே கருதி எல்லாச் சலுகையும் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

9-30 a.m. **SRI A. V. THOMAS** : இப்படிப்பட்ட சலுகைகள் குறிப்பிட்ட வகுப்பாருக்கு மதவித்தியாசம் இல்லாமல் அளிக்கப்படுமா ?

**THE HON. SRI P. KAKKAN** : கனம் சபாநாயகர் அவர்களே, மிகவும் பின் தங்கிய வகுப்பினர் என்று குறிப்பிடப்பட்டவர்களுக்கு மாத்திரம்தான் இப்போது சலுகை அளிக்கப்பட்டு வருகிறது. இதில் அதிகமும் ஹிந்து மதத்தைச் சார்ந்தவர்கள்தான். மிகவும் பின் தங்கிய லிஸ்டில் சேர்ந்த கிறிஸ்தவர்களாக இருந்தாலும் இதில் சேர்ப்பதுபற்றி கவனிக்கப்படும்.

**SRI V. SUBBIAH** : திருநெல்வேலி ஜில்லாவில் கம்மவார் முற்போக்கு வகுப்பில் சேர்க்கப்பட்டிருந்ததும், அவர்கள் வடுகர்கள் என்று சர்டிபிகேட் வாங்கியிருப்பதை கோவில்பட்டி தாசில்தார் சர்டிபிகேட்டில் வேறு விதமாக இருக்கிறது என்று தெரிவித்திருப்பதால், மெடிக்கல் காலேஜில் அதை ஆட்சேபித்து விடுவதை கனம் அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

**THE HON. SRI P. KAKKAN** : எனக்கு இதைப்பற்றி தெரியாது. இதை கவனத்திற்குக் கொண்டுவந்தால் பின்னர் கவனிக்கப்படும்.

**SRI K. PERIANNAN** : தலைவர் அவர்களே, இம்மாதிரி பிற்பட்ட சமூகத்தவர்களுக்கு அதிகமாக சலுகைகள் அளிக்கப்படுவதால் ஹரிஜனங்களுக்கு கிடைக்கவேண்டிய சலுகைகள் சரியாக கிடைப்பதில்லை என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

**THE HON. SRI P. KAKKAN** : இந்த சலுகைகள் கொடுப்பதினால் ஹரிஜன மக்களுக்கு ஒரு விதமான தீங்கும் ஏற்படாது என்று உறுதி கூறுகிறேன்.

**DR. SRIMATHI SATHIYAVANIMUTHU** : தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பிற்பட்ட வகுப்பினருக்கும் சேர்த்து ஹரிஜன நல முன்னேற்ற இலாகா மூலம் செய்யப்படுகிற சலுகைகள் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கு சரியாக கிடைப்பதில்லை ; இதற்கு ஓரளவு நிர்வாகத்தில் பல குறைகள் இருக்கிறது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

11th July 1957]

**THE HON. SRI P. KAKKAN :** கனம் அங்கத்தினர் சொல்லுவது முற்றிலும் உண்மைக்கு விரோதமாகும். இதில் எந்தெந்த முறைகளில் நடத்த வேண்டுமோ அந்த விதத்தில் பாகுபாடு இல்லாமல் கவனிக்கப் பட்டு வருகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**SRI R. KRISHNASAMI NAIDU :** பிற்பட்ட வகுப்பினருக்கு கல்வி கட்டணம் தவிர அவர்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் சர்க்கார். ஹாஸ்டல் களில் பிற்பட்ட முற்பட்ட வகுப்பினருக்கும் எத்தனை சதவிகிதம் என்று ஒதுக்கி அங்கு இருக்க வசதி அளிக்கப்படுகிறதல்லவா ?

**THE HON. SRI P. KAKKAN :** முற்பட்ட வகுப்பினருக்கும் இந்த ஹாஸ்டலில் இடம் அளிக்கப்பட்டு வருகிறது.

**SRI K. R. NALLASIVAM :** பின்தங்கிய வகுப்பினர் என்று கணக்கப்பட்டிருக்கும் ஜாபிதாவில் காணப்படும் ஒரு பிற்பட்ட ஜாதியினர் ஒரு ஜில்லாவில் பிற்பட்ட ஜாதியார் என்றும் இன்னொரு ஜில்லாவில் முற் பட்ட வகுப்பினர் என்றும் கருதப்பட்டு வருகிறது. அதே மாதிரி இந்த மிகவும் பிற்பட்ட வகுப்பினர் இனத்திலும் இவ்வாறு ஜில்லா வாரியாக ஏதாவது கருதப்படுமா ?

**THE HON. SRI P. KAKKAN :** இந்த லிஸ்டு எல்லா ஜில்லாக்களிலு முள்ள ஹரிஜன வெல்பெயர் ஆபீஸர்களை வைத்துத்தான் தயார் செய்யப் பட்டது. ஆதலால் அம்மாதிரி ஒவ்வொரு ஜில்லாவுக்கு என்று தனித் தனியாக இருக்காது.

**SRI P. G. MANICKAM :** ஸர், ஹரிஜன ஹாஸ்டல்களில் பின்தங்கிய மாணவர்களுக்கு இடம் அளிக்கப்படுகிறது. அதில் ஹரிஜனங்களுக்கு முக் கியத்துவம் அளிக்கப்படுமா ?

**THE HON. SRI P. KAKKAN :** ஹரிஜனங்களுக்கு எவ்வளவு கொடுக்க வேண்டுமென்று வீதாச்சாரப்படி இடம் ஒதுக்கப்பட்டு வருகிறது. மிகவும் பின்தங்கிய சமூகத்தினருக்கு முதலில் கவனிக்கப்படுகிறது.

**SRI M. KARUNANITHI :** தரப்பட்டுள்ள பட்டியலில் சாணன் என்றும் வண்ணன் என்றும் குறிப்பிட்டிருக்கிறது. அதில் "ன்" என்ற எழுத்தை மாற்றி "ர்" என்ற எழுத்தை போட்டு பட்டியல் தயாரிக்க அரசாங்கம் முன்வருமா ?

**THE HON. SRI P. KAKKAN :** சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னது மாதிரி மாற்றம் செய்யவேண்டியதுதான் என்றிருந்த போதிலும் மத்திய சர்க்காரில் இம்மாதிரிதான் பெயர்கள் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

**THE HON. SRI C. SUBRAMANIAM :** "ன்" என்ற எழுத்தைப் போட்டிருப்பதினால் மரியாதை குறைந்துவிடாது. சிலர் "ட்ரைவர்" என்பதை "ட்ரைவன்" என்று மரியாதைக்குறைவாக சொல்லுவதாக நினைத்து சொல்லுவதுண்டு. இது அப்படியல்ல. அவர்களின் ஜாதி பெயரின்படி போடப்பட்டிருக்கிறது. இதனால் மரியாதை குறைவு ஒன்றும் இல்லை.

**SRI M. KARUNANITHI :** இந்த பட்டியலிலே மருத்துவர், இசைவெள் ளாளர் என்றெல்லாம் மதிப்பு கொடுத்து உபயோகிக்கப்பட்டிருக்கிறது.

**THE HON. SRI C. SUBRAMANIAM :** அதில் மதிப்பு ஒன்றுமில்லை.

**SRI T. T. DANIEL :** May I know whether change of religion operates as a bar to grant these fee concessions and whether these fee concessions have already been extended to Kanyakumari district also ?

**THE HON. SRI P. KAKKAN :** Yes, Sir. I have already stated previously that the matter will be considered by the Government of Madras.

[11th July 1957

SRI A. CHIDAMBARANATHA NADAR : சாணார் என்று குறிப்பிட்டிருப்பதில் நாடார் இனத்தவர்களும் உட்படுவார்களா ?

THE HON. SRI P. KAKKAN : இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

SRI K. SATTANATHA KARAYALAR :- மருத்துவ அல்லது நாவித தொழிலை செய்யும் இனத்தவரை அம்பட்டன் என்று அழைப்பதுண்டு. அவர்களை அந்த பெயரில் இதில் உட்படுத்தப்படுமா ?

THE HON. SRI P. KAKKAN : அவர்களை குறிக்கின்ற எல்லா வார்த்தைகளையும் உபயோகப்படுத்தப்படும்.

SRI M. KANDASAMI PADAYACHI : தலைவர் அவர்களே, இந்த பிற்பட்ட மக்களுக்கு சம்பள சலுகைக்காக 1956–57-ல் சட்டசபை அங்கத்தினர்கள் கையெழுத்து போடலாம் என்று சர்க்கார் உத்தரவு போடுமா ?

THE HON. SRI P. KAKKAN : எம்.எல்.ஏ.க்கள் கையெழுத்து போடுவதற்கில்லை. இதைப்பற்றி தனி கேள்வி போட்டால் விவரமான பதில் அளிக்கப்படும்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : இந்த ஜாபிதாவில் முக்குலத்தோர் இனத்தவரையும் சேர்த்துக்கொள்ளப்படுமா ? இதுவரை சேர்க்கப்படாதது மிகவும் வருந்தத்தக்கது.

THE HON. SRI P. KAKKAN : இப்பொழுது நான் எந்தவிதமான வாக்குறுதியும் அளிக்க முடியாது. இதைப்பற்றி கவனிக்கலாம் என்று மாத்திரம் சொல்லிக்கொள்கிறேன்.

SRI M. JAGANNATHAN : In helping the most backward of the Backward Communities, will the Hon. Minister for Public Works give an assurance that the Government will not adopt a policy of robbing Peter and paying Paul ?

THE HON. SRI P. KAKKAN : ஹரிஜன மக்களின் நிதியிலிருந்து எந்தவிதமான நிதிக்கும் ஒதுக்கப்படமாட்டாது என்று கூறிக்கொள்கிறேன்.

SRI N. S. RAMALINGAM : அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டிருக்கும் லிஸ்டில் நரிக்குறவர்களைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. அதில் உப்புக் குறவர்களைப்பற்றி சொல்லப்படவில்லை. அவர்களை முற்போக்கானவர் என்று விலக்கிவிட்டார்களா ?

THE HON. SRI P. KAKKAN : நரிக்குறவர்கள் நாடோடிகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சமுதாயத்தில் மிகவும் பின் தங்கியிருப்பதால் அவர்களை இதில் சேர்த்திருக்கிறது. நரிக்குறவர்களைப்பற்றி எனக்குத் தெரியாது. அதைப்பற்றி கவனிக்கலாம்.

SRI K. R. VISWANATHAN : தலைவர் அவர்களே, மிகவும் பின் தங்கிய மாணவர்களை தொழில் கல்லூரிகளில் சேர்க்கும் விஷயம் பற்றி அமைச்சர் அவை அண்மையில் கூடி ஒரு முடிவும் எடுக்காமல் விட்டதினால் இந்த ஆண்டு அவர்களுக்கு தொழிற்கல்லூரிகளில் சேருவதற்கு வழியில்லாமல் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதனால் அந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் அதிருப்தியுற்று இருக்கிறார்கள் என்பது தெரியுமா ?

THE HON. SRI P. KAKKAN : கனம் சபாநாயகர் அவர்களே, பின் தங்கிய வகுப்பினருக்கும் மிகவும் பின்தங்கிய வகுப்பினருக்கும் காலேஜ்களில் இடம் கொடுக்கப்பட்டுதான் வருகிறது. இதனால் எந்த விதமான [illegible] ஏற்படாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

11th July 1957]

**Sri S. B. ADITYAN** : மிகவும் பின்தங்கிய வகுப்பினருக்கு கல்வி சலுகையை தவிர, ஹரிஜன மக்களுக்கு கொடுக்கப்பட்டு வரும் ஹாஸ்டல் சலுகை இவர்களுக்கும் கிடைக்குமா ?

**The Hon. Sri P. KAKKAN** : இதற்கு தனி கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.

**Dr. Srimathi SATHIYAVANIMUTHU** : தாழ்த்தப்பட்ட மக்களேயும் 9–4
பிற்பட்ட மக்களேயும் ஒன்றுகச் சேர்த்து அதன் மூலம் சர்க்கார் கொடுக்கிற a.m
சலுகை மூலம் பல அதிருப்திகள் ஏற்பட்டு வருகின்றன. தாழ்த்தப்பட்ட மக்கள் வேறு பிற்பட்ட மக்கள் வேறு என்று தனியாகப் பிரித்து சர்க்கார் சலுகை தர முன்வருமா ?

**The Hon. Sri P. KAKKAN** : சமுதாயத்தில் பின் தங்கியிருக்கும் மக்களும், ஹரிஜன மக்களும், இதர பின்தங்கிய மக்களும் ஒன்று சேர்ந்து வாழ அரசாங்கம் ஏற்பாடு செய்கிறது. ஆகவே அவர்கள் ஒன்று கூடி வாழ்வதில் ஒரு தீங்கும் வராது. சலுகைகள் விஷயமாகவும் யாருக்கும் எவ்வித தீங்கும் வராது. இருவரும் ஒன்று சேர்ந்து படிப்பதால் நன்மையேயொழிய தீங்கு எதுவும் இல்லே.

**Sri K. PERIANNAN** : தற்போது, ஹரிஜன எம்.எல்.ஏ.-க்களின் குழந்தைகளே பள்ளிக்கூடத்தில் சேர்ப்பதற்கு கட்டணம் கட்டியாக வேண்டுமென்று சொல்கிறார்கள். இது நிரந்தரமான உத்தியோகமா என்று கேட்கிறார்கள். ஆகவே இவர்களின் குழந்தைகள் சம்பளம் கட்டுவதா, கட்டாமல் இருப்பதா என்று அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri P. KAKKAN** : அங்கத்தினர் அவர்கள் கேட்கும் கேள்வி ஹரிஜன மக்களேப் பொறுத்தது. இது, பின்தங்கிய மக்களேப் பொறுத்த கேள்வி.

**Sri R. SWAMINATHA MERKONDAR** : பிற்போக்கு சமூகத்தில் கள்ளன் என்ற வார்த்தை இருக்கிறது. கள்ளர் என்று அதை உபயோகிக்கலாமா ?

**The Hon. Sri P. KAKKAN** : நிதியமைச்சர் அவர்கள் முன்பே சொல்லி விட்டார்கள். "இன்" என்று போடுவதால் ஒரு இழிவும் வந்துவிடாது.

**Sri K. VINAYAKAM** : Is it not a fact that the Government have set apart separate funds for Harijans and the Backward Communities, though the funds are administered by one and the same officer, so that the funds do not get intermixed or interchanged and what is set apart for Harijans is spent on Harijans and Harijans alone and does not go to the Backward Communities ? Will the Hon. the Minister clear the misapprehension now prevailing so that there may be some goodwill between the Harijans and the Backward Communities ?

**The Hon. Sri P. KAKKAN** : ஹரிஜன மக்களுக்கு ஒதுக்கப்படுகிற தொகை ஹரிஜன மக்களுக்கே செலவு செய்யப்படுகிறது. பின்தங்கிய வகுப்பினருக்கு ஒதுக்கப்படுகிற தொகை அவர்களுக்குத்தான் செலவு செய்யப்படுகிறது.

**Sri T. S. RAMASWAMY PILLAI** : இப்பொழுது புதிதாக சேர்க்கப்பட்ட பகுதிகளேப் பொறுத்தளவில் அரசாங்கம் ஒரு முடிவு எடுக்க கால தாமதம் ஏற்படுவதால் பள்ளிக்கூடத்தில் சேருவதற்கு பல ஆயிரக்கணக்கான பின்தங்கிய வகுப்பு மாணவர்கள் கஷ்டப்படுகிறார்கள் என்பது அரசாங்கத்தின் கவனத்தில் வந்துள்ளதா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : With regard to admission to schools or any other educational institutions, this classification does not help anybody. As a matter of fact, this helps

them only to get fee concessions. With regard to that, there is still time. They can claim concessions, as a matter of fact, till the end of the term.

**The Hon. Sri K. KAMARAJ NADAR** : கனம் அங்கத்தினர் சொல்கிற கன்னியாகுமரி ஜில்லாவைப் பொறுத்த மட்டில், அங்கு இப்பொழுது யார் யாரை எல்லாம் பிற்பட்ட வகுப்பு மக்களாக எடுத்துக் கொண்டிருக்கிறார்களோ, அவர்களை அப்படியே இங்கும் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

**Sri T. IRUSAPPAN** : தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், ஹரிஜன மக்களுக்கும் கல்லூரிகளில் சேருவதற்கு பிற்பகுதியில் கொடுக்கிற "ஸ்காலர்ஷிப்பை" அதில் ஒரு பாதித் தொகையையாவது முற்பகுதியில் கொடுக்க அரசாங்கம் முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

**The Hon. Sri P. KAKKAN** : பின்தங்கிய ஹரிஜன மாணவர்களுக்குக் கொடுக்கப்படும் தொகை காலாகாலத்தில் கொடுக்கப்படுகிறது. தாமதம் ஏற்பட்டால் அதை அங்கத்தினர் அவர்கள் சொன்னால் அது கவனிக்கப்படும்.

**Sri S. PAKKIRISAMI PILLAI** : ஜாதிபேதமற்ற அரசியலமைப்பு இருக்கும் நம் நாட்டில் ஆதி-திராவிடர்கள் என்றும், ஜாதி திராவிடர்கள் என்றும், பிற்பட்ட வகுப்பினர் என்றும், முற்பட்ட வகுப்பினர் என்றும் வெவ்வேறு ஜாதியாகப் பிரித்து ஜாதியை நிரந்தரமானதாக்கும் இந்த நிலையை மாற்றி ஏழைகள், பணக்காரர்கள் என்று திட்டம் வகுக்கப்பட்டு மக்களுக்கு இந்த மாதிரியான சம்பளச் சலுகைகள் கொடுப்பதற்கு எத்தனை காலமாகும் என்று மந்திரி அவர்கள் சொல்வார்களா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : கனம் அங்கத்தினர் அவர்கள் இந்த யோசனையை சொன்னதற்கு மிகவும் வந்தனம். இந்த அடிப்படையில் தான் சர்க்கார் இப்பொழுது நினைத்துக் கொண்டிருக்கிறது.

**Sri K. SATTANATHA KARAYALAR** : இந்த கல்வி சலுகை கிடைப்பதற்கு முன்னால், முன்னாலேயே பணம் கட்டி விட்டு பிறகு இந்த சலுகை வந்ததற்கு அப்புறம்தான் பணத்தை கொடுக்கிறார்கள். அந்த சங்கடத்தை நீக்கி முதலிலேயே அவர்கள் சர்டிபிக்கெட் கொடுத்தால் அதன் அடிப்படையில் சம்பளம் கட்டாமல் இருக்கலாமே ? அதைப்பற்றி அரசாங்கத்தின் அபிப்பிராயம் என்ன ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : இதிலுள்ள கஷ்டம் என்னவென்றால் இவர் இந்த வகுப்பைச் சேர்ந்தவர், இத்தனை ரூபாய் வருமானம் வருகிறது, என்று சர்டிபிக்கெட் கொடுக்கவேண்டியிருக்கிறது. அது கிடைப்பதற்கு தாமதமானால் முதல் மாத இந்த சம்பளத்தை வசூல் செய்துவிட்டு பின் சர்டிபிக்கெட் கொடுத்தபின் அதை வாபஸ் செய்து விடுகிறார்கள். இது, தவிர்க்க முடியாதது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**Sri K. G. PALANISWAMI GOUNDER** : சில வருஷங்களுக்கு முன்பு வேளாள கௌண்டர் சமூகத்தை பிற்பட்ட வகுப்பினர் என்று சேர்க்கப்பட்டு இருந்தது. இது இப்பொழுது எடுக்கப்பட்டிருக்கிறது. கமிஷன் கோவைக்கு வந்தபோது, எங்களை பிற்பட்ட வகுப்பினராகக் கருதவேண்டுமென்று விண்ணப்பம் செய்திருந்தோம். அப்படி இருந்தும் ஏன் அப்படி சேர்க்கப்படவில்லை ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : என்றும் பிற்பட்ட வகுப்பினராய் இருக்கவேண்டும் என்பது நமது லட்சியமாய் இருக்கக்கூடாது. நாம் முற்போக்கு அடைய வேண்டும் என்பதே நமது லட்சியமாய் இருக்க வேண்டும். முற்போக்கு அடைந்திருந்தால் அதைப்பற்றி நாம் பெருமைப்பட வேண்டும்.

**Sri K. ANBAZHAGAN** : இந்த மிகவும் பிற்பட்ட வகுப்பு மக்களுக்கு நல்ல முறையில் நன்மை செய்வதற்காகத் தயாரிக்கப்பட்ட இந்தத் திட்டம் இப்பொழுது உயர்தரக் கல்லூரிகளில் அவர்களை அனுமதிக்கும் நிலையில்

11th July 1957]

அது ஏற்றுக்கொள்ளப் படாத நிலையில் இருக்கிறது. மருத்துவக் கல்லூரிகளிலும், பொறியியல் கல்லூரிகளிலும் அனுமதிப்பதற்கு தாழ்த்தப் பட்டவர்கட்கு இத்தனை மார்க்குகள் போதும் என்று இருப்பதுபோல் இந்த மிகவும் பிற்பட்ட மக்களையும் அனுமதிப்பதனவசியத்தைக் கவனிப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: இதில் அங்கத்தினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது என்னவென்றால், " மோஸ்ட் பாக்வேர்ட் " கம்யூனிட்டி என்ற இனத்திற்கு தனியாக ஒன்றும் ரிசர்வ் செய்யமுடியாது. " பாக்வேர்ட் " கம்யூனிட்டீஸ் என்ற அடிப்படையில்தான் ரிசர்வ் செய்யமுடியும் என்பது சட்டபூர்வமாக சொல்லக் கூடிய அபிப்பிராயம். ஆகையால் இதைப் பற்றி பரிசீலனை செய்துதான் ஒரு முடிவிற்கு வரவேண்டி இருக்கிறது. இதைப் பற்றி இந்த வருஷம் ஒரு முடிவும் எடுத்துக் கொள்ளவில்லை. " மோஸ்ட் பாக்வேர்ட் கம்யூனிட்டி " யாக இருந்தாலும், " பாக்வேர்ட் " கம்யூனிட்டி யாக இருந்தாலும் அவைகள் ஒரே இனமாகக் கருதப்பட்டு "பாக்வேர்ட் " கம்யூனிட்டீஸ் பூராவாகச் சேர்ந்து தான் ரிசர்வ் செய்யப்படுகிறது. ஆகவே இதில் சட்ட அடிப்படையில் சில கஷ்டங்கள் இருக்கின்றன என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

*Maintenance of roads in the City.*

* 90 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether the Corporation of Madras had requested the Government for any grant during 1956 for maintaining the roads in the City?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : Yes, Sir. The Corporation of Madras asked for the enhancement of the *ex gratia* grant of Rs. 5 lakhs per annum now being sanctioned to it for the efficient maintenance of the roads and other essential civic amenities in the City, to Rs. 20 lakhs per annum. In the alternative, the Corporation requested that a recurring grant equal to 50 per cent of the actual expenditure incurred by it on the maintenance of roads might be sanctioned to it each year. The matter is under the consideration of the Government.

SRI K. VINAYAKAM : Since the roads are put to great and terrible use by the motorist in the metropolis, and the roads have to be maintained and repaired once in three months, will the Government come forward to grant the loan and the grants which the Corporation has requested without keeping the terms under consideration and finally shelving them into the pigeon-holes of the Secretariat?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : Certainly there is no idea of keeping it in the pigeon-holes of the Secretariat. It will be considered as quickly as possible. That is why it is under consideration.

SRI K. VINAYAKAM : Are the Government aware that to compensate for the maintenance of the roads, the Corporation has requested that at least 50 per cent of the revenue which is derived out of the motor vehicles taxation should be given to the

Corporation? Has that request been considered favourably by the Government? What is the decision which the Government have taken on this request of the Corporation?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: The Government have just now asked for the remarks of the Chief Engineer, Highways, and it will be considered as soon as it is possible.

MR. SPEAKER: Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## I.—MOTION EXPRESSING WANT OF CONFIDENCE IN THE GOVERNMENT UNDER RULE 54 OF THE ASSEMBLY RULES.

MR. SPEAKER: I have received notice of a motion under Rule 54 of the Assembly Rules from Sri T. S. Ramaswamy Pillai. The motion reads as follows:—

'This House resolves to censure the Government for its wrong, baseless, and misleading propaganda policy on the achievements of the Five-Year Plan in the State'.

Under this Rule the Speaker has first to give his consent and then certain other conditions have got to be fulfilled before this motion of censure can be taken up. Rule 152 says that the budget shall be dealt with in two stages, viz., General discussion and Voting on Demands for Grants. The Speaker, in consultation with the Leader of the House and the Business Advisory Committee shall fix and appoint sufficient number of days for each of these stages provided that not more than eight days are allotted for the General discussion and not more than 20 days for the Voting of Demands. As per Rule 153, five days were fixed for the General discussion and, at the end of the period, the Finance Minister replied. According to Rule 154, I have, in consultation with the Leader of the House and the Business Advisory Committee, fixed the time for discussion on each Demand and also determined the order in which the Demands are to be taken up.

On the days allotted under sub-rule (2) of Rule 152 for the Voting of Demands for Grants no other business shall be taken up before 5 p.m. except with the consent of the Speaker. In the present case this will have to be 2 p.m. as by agreement the time for the sitting of the Assembly is from 9 a.m. to 2 p.m.

Therefore, no free day is available for the discussion of this Censure Motion. Further, opportunities are likely to arise during the course of these 15 days when the House can express its confidence or want of confidence in the Ministry or its opinion on their action. This Censure Motion can be considered under Demand IX —Head of State, Ministers and Headquarters Staff, when it comes up before the House. If necessary, I am prepared to allow the hon. Member Sri T. S. Ramaswamy Pillai to table a cut motion on this subject.

11th July 1957] [Mr. Speaker]

Taking all these into consideration I do not give my consent to the moving of this Censure Motion.

THE HON. SRI C. SUBRAMANIAM : May I make a submission to you, Sir. We are prepared to take any Demand discussed and voted upon as a vote of confidence in the Government.

MR. SPEAKER : That is agreed. The custom is that all Opposition parties select whatever cut motion they like and move it. If Mr. Ramaswamy Pillai moves his cut motion, I daresay that the Opposition parties will allow it. The House will then discuss it on its merits.

## III.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1957-58—*cont.*

(1) DEMAND XXVII—ELECTRICITY.

(2) DEMAND XLI—CAPITAL OUTLAY ON ELECTRICITY SCHEMES.

THE HON. SRI V. RAMAIAH : Mr. Speaker, I shall move both the Demands.

Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 18,05,15,400 under Demand XXVII—Electricity."

Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 29,76,87,100 under Demand XLI—Capital Outlay on Electricity Schemes."

Sir, there are two Demands relating to Electricity: (1) Demand XXVII for a grant from the current revenues to meet the working expenses and (2) Demand XLI for capital expenditure on Electricity Schemes. As the subjects dealt with in both the Demands are allied ones, both the Demands may be taken together for purposes of discussion. The Demands may, however, be put to vote separately.

The first Demand is for meeting the working expenses of electricity schemes in operation. The working expenses include expenditure on smaller works financed from ordinary revenues, expenditure on operation and maintenance, cost of establishment and provision for depreciation. Against Rs. 18·08 crores required for these working expenses, the net expenditure on working alone will be 6·11 crores. The gross revenue expected to be earned by the department is Rs 9·50 crores.

Sir, the revised estimates under these two Demands have been prepared for the full year 1957-58. However, as the hon. Members are already aware the Government have constituted the

[Sri V. Ramaiah] [11th July 1957

Madras State Electricity Board with effect from the 1st July 1957 and the direct responsibility of running the Electricity Department has since been passed on to the Board. According to the provisions of the Electricity (Supply) Act, 1948, the State Electricity Board should in February of each year submit to the State Government an Annual Financial Statement, in the prescribed form, of the estimated capital and revenue receipts and expenditure for the ensuing year. The State Government should cause the statement to be laid on the Table of the State Legislature and the Statement will be open to discussion in the Legislature but shall not be subject to vote. The Board should take into consideration any comments made on the said statement in the State Legislature. As the Madras State Electricity Board has come into being only with effect from 1s July 1957, an Annual Financial Statement as required in the provisions of the Electricity (Supply) Act, 1948, could not be submitted earlier. The Board has, however, since resolved that the estimates under the two demands relating to Electricity now under the consideration of the House may be treated as the budget of the Board and that the discussions in the House on the two Demands may be treated as the discussions on the Board's budget. Accordingly, the discussions on these two Demands relating to electricity will also be the discussion on the Board's budget for the current year. Since only the expenditure till 1st July 1957 is on Government account, it is proposed to reduce the net provision of Rs. 11·62 crores under Demand XLI relating to Capital Outlay on Electricity Schemes by Rs. 8 crores. Demand No. XXVII relates to revenue expenditure which is met from the receipts of the Department and it is therefore not proposed to make any cut under this Demand. If on settlement of accounts, it is found that the amount voted by the Legislature is higher than that actually spent up to 30th June 1957 under items that are covered by this Demand, the additional amount will be surrendered. It is also proposed to ask for an additional grant of Rs. 8 crorers under the Demand relating to loans and advances by the State Government so that this amount may be advanced as a loan to the Madras State Electricity Board to meet the Capital Outlay on Electricity Schemes from 1st July 1957 up to 31st March 1958.

Sir, the Madras State Electricity Board has commenced functioning with four members and a fifth member, viz., Accounts Member will be appointed shortly. The Administrative Member who happens to be the Secretary for Public Works Department is also the Chairman of the Board. The present term of office of the Members of the Board has been fixed at one year from 1st July 1957. There has been some suggestion that non-officials should also be appointed as members of the Board. It is however considered that at the initial stages the officials who constitute the Board will be very helpful not only in arranging the smooth transfer of the administration of the Electricity Department from the Government to the Board but also in laying down the correct guiding principles for the Board's administration. However the

Goverment are not unmindful of the valuable opinions of competent non-officials. Even now, non-officals representing various interests will be appointed by the Government in the proposed State Electricity Consultative Council before which the Board's policies and administration will come for periodical review. Although the entire generation, transmission and distribution systems of the Government Electricity Department have been taken over by the Madras State Electricity Board, the Board will work subject to the overall policy control of the Government with reference to the provisions of the Supply Act.

Coming to the capital expenditure on Power Schemes during the current year, I may mention that a major portion of the provision, viz., Rs. 7·82 crores is proposed to be utilized on the Kundah and the Periyar Hydro Electric Schemes and the Madras Plant Extensions III Stage. As usual, a substantial amount has been earmarked for rural electrification also. The 30,000 K.W. generating set under the Madras Plant Extension III Stage is expected to be commissioned in December this year and this will relieve the power shortage of the Grid in summer months. The Periyar Hydro Electric Scheme which is in an advanced stage of construction is expected to be commissioned in the middle of 1958. Thanks to the generous assistance to the tune of 20 million dollars offered by the Government of Canada under the Colombo Plan, the Kundah Hydro Electric Scheme may also be expected to be commissioned in 1959–60 according to schedule as the foreign exchange difficulties are not likely to affect this project to any great extent. The shipments of equipment and machinery ordered for the Project in Canada have already commenced and the civil works relating to the Project are also steadily progressing. The transmission lines designed to carry the additional power that will become available from these major schemes are either completed, under construction or are being taken up. Till the additional power, anticipated from these schemes become available, the power position in the State will continue to be difficult in view of the ever increasing demand for power. With a view to distribute the available power in the most equitable manner, for all load development and to avoid undue strain on power houses, peak-load and staggering restrictions including the grouping restrictions on agriculture and other rural L.T. Power loads in the hydro-electric and the Madras Systems may have to be continued for some time. These restrictions are not peculiar to this State alone and it is not unusual even in some advanced countries to have such restrictions as a permanent measure or at least for several years at a stretch as an operational necessity.

In the field of rural electrification, the State can legitimately claim to lead the rest of the country. The Electricity Department has set up an impressive record during the last year by extending supply of power to 1,300 villages and 13,000 agricultural pumpsets and this is far in excess of the target for the year set in the Second Five-Year Plan. Although it is feared that the availability of

materials required for the rural electrification schemes will be seriously affected on account of foreign exchange difficulties, it is hoped that the tempo of intensive rural electrification programme which marked the activities of the electricity department during the last year will be maintained as far as possible during the current year also.

As the hon. Members are already aware, the policy of the Government is to give priority for supply of power for agricultural consumers. The agricultural consumers are already enjoying various concessions such as low tariff, free service connection up to Rs. 6 per H.P. of connected load, waiver of minimum or special gurantee during periods of drought, etc., which are not allowed to other classes of consumers. However, there seems to be some misunderstanding regarding the levy of unconnected minimum charges. I may mention in this connection that all schemes relating to extension of supply of electricity are sanctioned provided they are estimated to yield a gross return of 10 per cent per annum on the estimated capital outlay. This 10 per cent return is not even sufficient to meet the interest charges on operation and maintenance and the depreciation charges. It has been recently estimated that for an electricity extension scheme to be really remunerative the return should be about 15 per cent to 20 per cent. The Electricity Department being run on commercial lines cannot afford to lose this minimum return of 10 per cent per annum by the backing out of parties at the last minute after distribution lines have been laid out. The unconnected minimum charges based on the special or minimum guarantee agreed to by the consumers are levied from them if they fail to take supply within 3 months from the date of notice issued by the Electricity Department intimating availability of supply to them. Even in the matter of collection of unconnected minimum charges reasonable concessions are shown on merits of individual cases such as waiver of unconnected minimum charges during drought period subject to extension of the agreement period.

The tariffs for supply of electrical energy by the Electricity Department are maintained at the pre-war level, although the cost of generation and distribution has gone up considerably. To meet the increased expenses the Government have been levying surcharges. With a view to examine the existing tariff structure and to rationalize it in the context of present demand and supply of power by various classes of consumers, a departmental committee was appointed. The Committee has since submitted its report. The proposals of the Committee will have to be considered by the Madras State Electricity Board and given effect to in due course.

Practically the entire generation and about 85 per cent of distribution of power are already in the hands of the Madras State Electricity Board. With a view to nationalize the entire distribution of power, the Government have already acquired a number of company and local authority undertakings under the Madras

11th July 1957] [Sri V. Ramiah]

Electricity Undertakings (Acquisition) Act, 1954. During the current year, a major licensee, viz., the South Arcot Electric Distribution Company Undertaking was acquired by the Government and it vested in them on 1st June 1957. A provision of Rs. 47·75 lakhs has been made during the current year for payment of compensation in respect of the undertakings already acquired. At present eight Company Electrical Undertakings and five local authority undertakings yet remain to be acquired.

The implementation of the power schemes included in the Second Five-Year Plan will more than double the installed capacity in the State. Even then, the availability of power may not catch up with the ever growing demand particularly on account of the new industries expected to come up in this State and for rural electrification. With a view to meet this contingency and to have investigated schemes ready for inclusion in the Third Plan, the Electricity Department has already taken up the investigation of a number of schemes. The investigations of the Mettur Tunnel Scheme for seasonal power development and the Kumbar-Amaravathy Scheme have already been completed. The investigation of upper Sholaiyar Hydro-Electric Scheme, Coonoor-Karteri Hydro-Electric Scheme, Palar-Porandalar Hydro-Electric Scheme and Parambikulam Hydro-Electric Scheme are proposed to be taken up during the current year.

As regards the demand for working expenses of electricity schemes actually in operation, the net revenue after meeting the working expenses in 1957–58 is estimated at Rs. 3·39 crores. The Budget Estimate for net expenditure on the working of the Electricity Department is Rs. 6·11 crores against the Revised Estimate for 1956–57 of Rs. 5·65 crores. The slight increase in working expenses is due to the progressive expansion of the department and its activities. I may in this connection refer to the various representations from the electrical engineers, operation subordinate service staff and other workers for improvement of their service conditions. Some of their demands have been examined by Government and remitted to the Electricity Board for consideration with suitable recommendations. I am sure the State Electricity Board will give due consideration to them and would do whatever is possible, consistent with the finances of the Board.

I thank you Mr. Speaker and the hon. Members for having given me a patient hearing.

Mr. SPEAKER: Motion moved—

"That the Government be granted a sum not exceeding Rs. 18,05,15,400 under Demand XXVII—Electricity."

"That the Government be granted a sum not exceeding Rs. 29,76,87,100 under Demand XLI—Capital Outlay on Electricity Schemes."

I am told that the Opposition parties have agreed that with 10-10 a.m.
regard to the first Demand, namely, Demand XXVII—Electricity, hon. Member Sri P. S. Chinnadurai will move his cut motion and

[Mr. Speaker] [11th July 1957

that with regard to the second Demand, namely, Demand XLI—Capital Outlay on Electricity Schemes, hon. Member Sri S. B. Adityan will move his Cut Motion. Hon. Member Sri P. S. Chinnadurai will first move his Cut Motion and then resume his seat. Then, I will call hon. Member Sri S. B. Adityan to move his Cut Motion. After the cut motions are moved, hon. Member Sri P. S. Chinnadurai will speak.

SRI P. S. CHINNADURAI : Sir, I move—

"That the allotment of Rs. 18,05,15,400 under Demand XXVII—Electricity be reduced by Rs. 100."

SRI S. B. ADITYAN : Sir, I move—

"That the allotment of Rs. 37,76,87,100."

MR. SPEAKER : There is a small alteration in the figures. The figures should read : 29,76,87,100.

SRI S. B. ADITYAN : Sir, I move—

"That the allotment of Rs. 29,76,87,100 under Demand XLI—Capital Outlay on Electricity Schemes, be reduced by Rs. 100."

MR. SPEAKER : Cut motions moved—

"That the allotment of Rs. 18,05,15,400 under Demand XXVII—Electricity be reduced by Rs. 100."

"That the allotment of Rs. 29,76,87,100 under Demand XLI—Capital Outlay on Electricity Schemes be reduced by Rs. 100."

The main motion and the cut motions are now before the House for discussion.

MR. SPEAKER : May I ask the Hon. Minister for Electricity how long he will take to reply to the debate?

THE HON. SRI V. RAMAIAH : Fifteen minutes, Sir.

**MR. SPEAKER : Then, the Hon. Minister will begin his reply to the debate at 12-45 p m.**

**SRI P. S. CHINNADURAI :** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, கனம் மின்சார இலாகா அமைச்சர் அவர்கள் சபை முன்பு பிரேரேபித்திருக்கின்ற மான்யக் கோரிக்கையை குறைக்க வேண்டும் என்று நான் வெட்டுப் பிரேரணையை பிரேரேபித்து இருக்கிறேன். அதற்கு முதல் முக்கிய காரணம் விவசாயத்துக்கு பயன்படுத்தப்படும் மின்சாரத்துக்கு கட்டணம் வசூலிப்பதிலே விவசாயிகளுக்கு பாரபட்சம் காட்டப்படுகிறது என்பதை நான் முதன் முதலாக சொல்லுகின்றேன். விவசாயத்துக்கு பயன்படுத்தப்படுகின்ற மின்சாரத்துக்கு அதிகப் படியான கட்டணம் வசூலிக்கின்ற அவசியம் என் நேர்ந்தது என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. தேசத்தின் மொத்த உற்பத்திச் செல்வத்திலே பாதி உற்பத்திச் செல்வம் விவசாயத் துறையிலிருந்துதான் கிடைக்கிறது என்று பொருளாதார நிபுணர்களில் ஒருவரான சிந்தாமன் தேஷ்முக் அவர்கள் கூறியிருக்கின்றார். அவ்வாறு இருக்க விவசாயத்துக்கு அதிகப்படியான மின்சாரக் கட்டணம் எதற்காக வசூலிக்கின்றார்கள் ? பஞ்சாலைகளுக்கு மின்சாரக் கட்டணம் ஒரு

11th July 1957] [Sri P. S. Chinnadurai]

வளவு வசூலிக்கப் படுகின்றதோ அந்தக் கட்டணத்தைக் காட்டிலும் கிட்டதட்ட மூன்று மடங்கு அதிகப்படியாக விவசாயத்துக்கு பயன்படக்கூடிய மின்சாரத்துக்கு வசூலிக்கின்றனர் என்பதை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இத்தகைய பாரபட்சம் ஆலை முதலாளிகளுக்கும் விவசாயிகளுக்கும் மத்தியிலே காட்டப்படுவதன் காரணம் என்ன? என்றோ ஒரு நாள் இவ்வாறு நிர்ணயித்து விட்டார்கள். அதனை அப்படியே தொடர்ந்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதனை கவனிப்பதே இல்லை என்பது தான் எனது குற்றச்சாட்டு. அவ்வாறு வைத்துக்கொண்டு இருப்பது அநீதம் என்றுகூட சொல்ல விரும்பிகிறேன். இப்போது ராஜ்யத்தில் சுமார் 45 ஆயிரம் சொச்சம் பம்ப்செட்டுகள் எற்கெனவே மின்சாரத்திலேயே இயங்கிக் கொண்டிருக்கின்றன. வரும் ஆண்டில் 11,000 பம்ப்செட்டுகளுக்கு மின்சாரம் வழங்கப்படும் என்று அரசாங்கத்தின் சார்பாக அமைச்சர் கூறியிருக்கிறார்கள். இவ்வாறு அதிகப்படியான அளவில் விவசாயத்துக்கு மின்சாரத்தைப் பயன்படுத்தி நாட்டின் உணவு உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதில் ஆக்கம் அளிக்கும் முறை இதுதானா? அதிகப்படியான கட்டணம் வசூலிப்பதன் மூலம் அதிகப்படி உணவு உற்பத்தி வரும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறதா என்று நான் அறிய விரும்புகிறேன். சென்ற சட்டசபை கூட்டத்திலேயே கவர்னர் பெருமான் உரையின் மீது நடந்த விவாதத்தின்போது இதனைக் குறிப்பிட்டேன். அதற்குப் பிறகு மின்சார சலுகை ஏதாவது கனம் அமைச்சர் அறிவிப்பார் என்று எதிர் பார்த்தேன். ஆனால் ஏமாந்தேன். அவர் சொல்லும்போது மிகவும் குறைந்த சலுகை கட்டணம் விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்படுகிறது என்றார். பஞ்சாலைகளுக்கு உபயோகப்படும் மின்சாரத்திற்கு கட்டணம் பழைய நாலு பைசா ஸர்சார்ஜ் உள்பட. விவசாயத்துக்கு உபயோகப்படும் மின்சாரத்திற்கு கட்டணம் கிட்டத்தட்ட ஒரு அணு. இதுதான் விவசாயிகளுக்கு சலுகையா என்று கேட்கிறேன். அதிக உணவு உற்பத்தி என்ற விஷயத்திலே அரசாங்கம் போதிய அக்கறை காட்டுமானால் நிச்சயமாக விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டணத்தைக் குறைக்கவேண்டும். தொழிற்சாலைக்கு உபயோகிக்கும் மின்சாரத்தைக் காட்டிலும், விவசாயத்துக்கு பயன்படும் மினசாரத்துக்கு சலுகை கொடுப்பதன் மூலம் நிச்சயமாக விவசாயத்துறைக்கு சரியான ஒரு உதவியை செய்வார்களா என்று நான் கேட்கிறேன். மத்திய அரசாங்கத்தினிடமிருந்து மின்சார அபிவிருத்திக்கு கடன்கள் கோரப்பட்டு இருப்பதாக பட்ஜெட் மெமொராண்டத்தைப் பார்த்தபோது தெரியவந்தது. அதிலே விவசாயத்துறைக்கு என்று கடன் வாங்கப்படவில்லை. மத்திய அரசாங்கத்தினிடமிருந்து அதிகப்படியான வேலைவாய்ப்புகளை அளிப்பதற்காகவும் மின்சாரத்தை வினியோகிக்கவும்தான் என்று சொல்லி கடன் கோரப்படுகிறது. விவசாயத்துக்கு வேண்டிய மின்சாரத்தை குறைந்த கட்டணத்தில் கொடுப்பதற்காக என்று கடன் வாங்கக் காணோம். பார்க்கப் போனால் அரசாங்கம் இந்த விஷயத்திலே சரியான கவனம் செலுத்தவில்லை என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இதைப்பற்றி நான் மாத்திரம் சொல்லவில்லை. அரசாங்க கட்சியைச் சேர்ந்தவர்கள் கூட எடுத்துக் கூறி இருக்கிறார்கள். கனம் அமைச்சர் அவர்கள் சமீபத்தில் கோயம்புத்தூர் ஜில்லாவில் சுற்றுப் பிரயாணம் செய்தபோது ஜில்லா காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்களும், எம். எல்.ஏக்களும் அவர்களுக்கு விண்ணப்பம் கொடுத்தார்கள். அதற்குப்பிறகு கூட கனம் அமைச்சர் இதைப்பற்றி கூறாமல் இருப்பது, இலாகா செல்வாக்கு கனம் அமைச்சரை எந்த அளவுக்கு அதிகமாக சுமந்துகொண்டிருக்கிறது என்பதுதான் நாம் தெரிந்து கொள்ள முடிகிறது.

இன்று குறைந்தபட்ச கட்டணம் நிர்ப்பந்தமாக, கட்டாயமாக, உபயோகிக்கப்படாத மின்சாரத்திற்கு வசூலிக்கப்படுகிறது. இதைப்பற்றி குறிப்பிட்டு கனம் அமைச்சர் சொன்னார். இம்மாதிரி உபயோகிக்கப்படாத மின்சாரத்துக்கு குறைந்தபட்சக் கட்டணம் வசூலிப்பது ஏதோ ஒரு முறையாக வந்திருக்கின்றது. உபயோகிக்கப்படாத மின்சாரத்துக்கு குறைந்தபட்ச கட்டணம் வசூலிப்பது என்பது மிகவும் அநியாயமானது, கொடுமையானது. இதைப்பற்றி அமைச்சர் அவர்களுக்கும் அரசாங்கத்திற்கும் எப்படி எடுத்துக் கூறுவது என்பதை யோசித்துப் பார்த்ததில் தாசி அபரஞ்சி கதை [illegible]

வுக்கு வருகின்றது. கனவு கண்டதன் காரணமாக வேதியர் நிர்ப்பந்திக்கப்பட்டார். உடன்படிக்கையில் கையை முத்திட்டோம் என்ற ஒரு காரணத்தால் உபயோகப்படுத்தாத மின்சாரத்துக்கும் குறைந்தபட்ச கட்டணத்தை வசூலிப்பது என்ற நிலையில் விவசாயிகள் இருக்கிறார்கள். மின்சார இலாகா கொடுமையிலிருந்து காப்பாற்றுவதற்காக, அன்று வேதியருக்கு நீதி வழங்குவதற்காக விக்கிரமாதித்தன் வந்ததுபோல், இன்று இங்கு கஷ்டப்படும் விவசாயிகளுக்கு மந்திரி உருவில் கனம் ராமய்யா அவர்கள் முன் வந்து நீதி வழங்குவாரா என்று கேட்க ஆசைப்படுகிறேன். மின்சார இலாகா கொடுமையை அனுமதித்து நீடித்துக் கொண்டிருப்பது சரியாகாது என்று மீண்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மின்சார வசதிகள் நம் நாட்டில் அதிகமாக இருந்தும்கூட ஒவ்வொரு ஆண்டும் மின்சாரவெட்டு ஏற்படுகிறது. சென்ற ஆண்டில் மின்சார வெட்டு சுமார் 25 சதவிகிதம். இம்மாதிரி வெட்டு போடப்படுவதற்கு முக்கிய காரணம், மின்சாரத்தை சரியாக ஸ்டோர் செய்துகொள்ள இலாகா சரியான முறையில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்தப் புதிய இயந்திரம் என்ன என்பதை கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வார்களானால், அதைச் சர்க்கார் வாங்கி அமைப்பதற்குத் தயார்.

SRI P. S. CHINNADURAI : சப்-ஸ்டேஷனில் உள்ள மோட்டாருடைய சக்தியை அதிகரித்துக் கொள்ள வேண்டியதுதான். "Deposit of Storage" என்றுதான் சொன்னார்கள், மின்சார இலாகா அட்வைஸரி போர்டில். "Deposit of Storage position" சரி இல்லை என்றுதான் சொன்னார்கள்.

மின்சார வெட்டு வருவதன் காரணமாக தொழிற்சாலைகளில் வேலை செய்யும் எல்லாத் தொழிலாளர்களுக்கும் ஒரே நாளில் "லீவ்" கொடுக்கப்படுவது இல்லை என்ற குறை இருந்து வருகிறது. ஒரே நாளில் "லீவ்" கொடுப்பதற்கு மின்சார இலாகா குறுக்கே நிற்பதாகவும் சொல்லப்படுகிறது. அம்மாதிரி நிலைமையைக் கைவிடலாம். இதர பிராந்தியங்களில் மின்சார வெட்டு ஏற்படுவதைப்போல், இப்பொழுது சென்னை நகரத்திலும் மின்சார வெட்டு வந்துவிட்டது என்று நான் அறிகிறேன். மின்சார இலாகாவின் இந்த குறைபாட்டை அகற்றுவதற்கு முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இன்னும் ஒன்று சொல்ல விரும்புகிறேன். மின்சார இலாகாவிலே ஒரு திட்டத்திற்கு எவ்வளவு ரூபாய் மூலதனமாக ஈடுபடுத்தப்பட்டிருக்கிறதோ, அதிலே பத்து சதவிகிதம் லாபம் வரவேண்டுமென்ற அடிப்படையிலே இந்தச் செலவினங்கள் கணக்கிடப்படுவதாகவும், அதற்கு விதிக்கக்கூடிய கட்டணங்கள் கணக்கிடப்படுவதாகவும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதுகூட போதாது என்றும், 20 சதவிகிதம் வரவேண்டும் என்றும் இப்பொழுது கனம் மந்திரி அவர்கள் குறிப்பிட்டார்கள். வியாபார நோக்கத்துடனே இந்த மின்சார இலாகாவை நடத்துகிற முறை இனி தவிர்க்கப்படவேண்டும் என்றுதான் நான் சொல்வேன். வியாபார நோக்கத்துடனே மின்சார இலாகாவை நடத்தி வந்தது பழைய கம்பெனிகள். இப்பொழுது நாட்டிலே உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்காகவும், தொழில் வளத்தைப் பெருக்குவதற்காகவும் மின்சாரம் விஸ்தரிக்கப்படவேண்டுமே தவிர வியாபார நோக்கத்துடனே நடத்துவது என்பது சரியானது அல்ல. மின்சார இலாகாவுக்கு நஷ்டம் வராமல் பார்த்துக்கொண்டால் போதும். அதற்காக ரிசர்வ் நிதி, ஸ்பெஷல் ரிசர்வ் நிதி என்று வேண்டுமானால், அதையும் வைத்துக் கொள்ளலாம். அந்த அளவு சரி. செலவுகளை ஓரளவு சரிக்கட்டிக் கொள்ளலாம். அதற்குமேலே நிறைந்த லாபம் மின்சார இலாகாவிலே வரவேண்டுமென்று அரசாங்கம் எதிர்பார்க்குமேயானால், தொழில் துறையிலும் விவசாயத் துறையிலும் எந்த அளவு முன்னேற்றம் காணவேண்டுமென்று நாம் லட்சியமாக வைத்துக் கொண்டிருக்கிறோமோ அந்த லட்சியத்திற்குக் குந்தகம் ஏற்படும் என்று நான் அரசாங்கத்திற்கு நிச்சயமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

11th July 1957] [Sri P. S. Chinnadurai]

ஆகவே, வியாபார நோக்கத்தை அரசாங்கம் கைவிடவேண்டும். வியாபாரம் என்று பார்த்தாலுங்கூட, 10, 15, 20 சதவிகிதம் லாபம் வைத்து வியாபாரம் நடத்துவது ரொம்பப் பேராசை பிடித்த வியாபார முறை என்றுகூட நான் சொல்வேன். அவ்வளவு பெரிய லாபத்தை அரசாங்கம் எதிர்நோக்கக்கூடாது. லாபத்திற்கு ஒரு வரம்பு கட்ட வேண்டும். சாதாரணமாக, 6 சதவிகிதம் "டிவிடெண்டு" கிடைத்தாலே ஜாஸ்தி என்று சொன்னார்கள். 4 சதவிகிதம் லாபம் இருந்தால் போதும் என்று மத்திய அரசாங்கத்திலே நியமிக்கப்பட்ட ஒரு கமிட்டி சொல்லியிருக்கிறது. அப்படியிருக்கும்போது, 10 சதவிகிதம் லாபம் பெறுவது அதிகம். நான்கு சதவிகிதம் வந்தால் போதுமானது. மூலதனத்திலே பத்து சதவிகிதம் வருஷா வருஷம் லாபம் அடைந்து கொண்டு வந்தால், பத்து வருஷ காலத்தில் மூலதனத்தையே பெற்றுவிடக் கூடிய நிலை ஏற்படுகிறது. அப்படியென்றால், பத்து வருஷத்திலேயே "க்ளோஸ்" செய்துவிடவா போகிறோம்? பத்து வருஷத்திற்குள் அதை நாம் "க்ளோஸ்" பண்ணப் போவது இல்லையே: ஆகவே, இன்னும் குறைவான லாபத்தை வைக்கலாம். ஏனென்றால், மின்சார இலாகாவில் இம்மாதிரி திட்டங்களை நாம் நீடித்து வைத்துக்கொண்டிருக்கப் போகிறோம். மின்சாரமானது பல தொழில்களுக்கும் விவசாயத்திற்கும் உதவி புரியக் கூடியது. ஆகவே, அந்த வகையில் இதனை "சக்தியை உதவுகின்ற" ஒரு தொழிலாக நடத்த வேண்டுமே தவிர, வியாபாரத் தொழிலாக நடத்த அரசாங்கம் முற்படக் கூடாது என்று சொல்லிக்கொண்டு என்னுடைய வார்த்தையை இத்துடன் முடித்துக்கொள்கின்றேன்.

SRI S. B. ADITYAN: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த 10-24
வெட்டுப் பிரேரணையின்மீது பேசுகிறபோது, நான் ஒரு முக்கியமான விஷ a.m.
யத்தை இந்தச் சபையின் கவனத்திற்கும், எனது நண்பர் கனம் மின்சார இலாகா மந்திரி அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டுவர விரும்புகிறேன்.

புதிதாக மின்சாரம் விஸ்தரிக்கப்படுகிற இடத்திலே, புதிய கம்பி போடுகிற இடத்திலே, ஏராளமான மரங்கள் அனாவசியமாக வெட்டித்தள்ளப் படுகின்றன என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். புதிதாக கம்பி போடுகிற இடத்திலே குறுக்கே நிற்கும் மரத்தை வெட்டித்தள்ள வேண்டியது அவசியம்தான். எங்கே மரங்கள் இடையூறாக இருக்கின்றனவோ, கம்பிகளைப் போடுவதற்குத் தடையாக இருக்கின்றனவோ, அங்கே அந்த மரங்களை வெட்ட வேண்டும் என்று நான் ஒப்புக்கொள்ளுகிறேன். மேலும், அப்படி மரங்கள் வெட்டவில்லையென்றால், அதனால் அபாயம் உண்டு. ஒரு வேளை மின்சாரக் கம்பி மரத்தைத் தொடுமானால், பக்கத்தில் போகிறவர்களுக்கும் அபாயம் உண்டாகும். அதுவுமில்லாமல் மின்சாரமும் நஷ்டமாகக் கூடும். அனாவசியமாக மின்சாரம் பூமிக்குள் சென்று அதனால் அரசாங்கத்திற்கும் இலாகாவுக்கும், மின்சாரத்தை உபயோகிக்கின்றவர்களுக்கும்கூட நஷ்டம் ஏற்படமுடியும். இதையெல்லாம் நான் ஒப்புக்கொள்ளுகிறேன்.

ஆனால், புதிய கம்பி போட்டால், கம்பி எடுத்துச்செல்லும் வழியில் இல்லாத மரங்களையும், கம்பிக்குப் பக்கத்தில் இல்லாமல் வெகு தூரத்தில் உள்ள மரங்களையும், அனாவசியமாக, தேவைக்கு அதிகமாக வெட்டி வருகிறார்கள் என்று மந்திரி அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

இம்மாதிரி ஏறக்குறைய எல்லா ஜில்லாக்களிலும் மரங்கள் வெட்டப் படுகின்றன, அனாவசியமாக. கிராமப் பகுதிகளில் மட்டும் அல்லாமல், நகரப் புறங்களிலும், சென்னை நகரத்திலும்கூட இம்மாதிரி நடைபெறுகிறது. இதைப் பற்றி சென்னை கார்ப்பரேஷன் கூட ஒரு முறை தீர்மானம் போட்டிருக்கிறது. "மின்சார இலாகா தேவைக்கு அதிகமான அளவு மரங்களை வெட்டித் தள்ளுகிறது" என்று கிராமப் பகுதிகளிலுள்ள பஞ்சாயத்து போர்டுகளும், நகரசபைகளும், சென்னை கார்ப்பரேஷனும்கூட தீர்மானம் போட்டிருக்கின்றன என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

[Sri S. B. Adityan] [11th July 1957

ஏதோ அரசாங்கத்தில் விதி இருப்பதாகச் சொல்கிறார்கள். நெல்லை ஜில்லாவில் ஆயிரக்கணக்கான பனை மரங்கள் வெட்டித் தள்ளப்படுகின்றன. தேவைக்கு அதிகமாக வெட்டித் தள்ளப்படுகின்றன—என்று நான் சொல்லியபோது, இலாகா அதிகாரி என்னிடம் ஒரு அரசாங்க உத்தரவைக் காண்பித்தார். அதிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று பார்த்தால் " புதிதாக மின்சாரக் கம்பி போட்டால், கம்பியிலிருந்து 15 அடி தூரம் வரையுள்ள எல்லா மரங்களையும் களைய வேண்டும், வெட்ட வேண்டும்" என்று இருக்கிறது. இது தேவைக்கு அதிகமான உத்தரவு என்று நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மரங்கள்தான் இந்த நாட்டுக்குச் செல்வம் என்று காட்டிலாகா மந்திரி அவர்கள் பேசியதை நாம் கேட்டோம். வனமகோற்சவம் கொண்டாடப்பட்டு, புதிதாக மரம் நடுவதையும் நாம் பார்க்கின்றோம். ஒரு புறத்தில் இம்மாதிரி மரத்தை வைத்துக்கொண்டிருக்கும்போது, இன்னொரு புறத்தில் பத்தாயிரக்கணக்கான மரங்கள் வெட்டப்பட்டிருக்கின்றன என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

கம்பியிலிருந்து 15 அடிக்குள் இருக்கும் மரங்களின் கிளைகளை வெட்ட வேண்டும் என்பது தேவைக்கு அதிகமான உத்தரவு. சுமார் ஐந்தடிக்கு உட்பட்டிருக்கும் மரங்களை வெட்டினால் போதும் என்பது என்னுடைய கருத்து. அதிலும் முக்கியமாக, கிளைகளை வெட்ட வேண்டும் என்று சொல்லும்போது, கிளை இல்லாத மரங்கள் அனேகம் இருக்கின்றன. தென்னை மரங்களுக்குக் கிளை இல்லை ; பனை மரங்களுக்கும் கிளை இல்லை. கிளைகள் இல்லாவிட்டாலும்கூட இரண்டு புரமும் 15 அடி என்ற முறையில் 30 அடி அளவுக்கு வெட்டுகிறார்கள். அதிலும், எனக்குத் தெரிந்த அளவிலே, திருச்செந்தூர் தாலூகாவிலே—புதிதாக மின்சாரம் வேண்டியிருக்கிற இடத்திலே பத்தாயிரக்கணக்கான மரங்கள் வெட்டப்படுகின்றன. இது தேவைக்கு மிகவும் அதிகமானது, அனாவசியமான சீரழிவு என்றே நான் சொல்வேன். தமிழ்நாட்டில் பனைமரத்தின் கிளைகளை வெட்டுவது என்பது விபரீதமாக இருக்கிறது. பனைமரங்களுக்கும், தென்னை மரங்களுக்கும் கிளைகளை அடிப்பது இல்லை, என்று நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதிகாரிகள் சொல்கிறார்கள், " நாங்கள் என்ன செய்வது ? 15 அடிக்குள் எந்த மரங்கள் இருந்தாலும் நாங்கள் வெட்டித்தான் ஆகவேண்டும்" என்று. இப்படி, முன்பின் யோசனை இல்லாமல் உத்தரவை அமுல் நடத்துவதன் காரணமாக பல மரங்கள் வீணாகின்றன. கிளைகளை வெட்டுவதினால், சேதம் அடைந்த மரங்கள் காற்றினால் வெகுவாக பாதிக்கப்பட்டு சீக்கிரமாக முறிந்து விழுந்துவிடுகின்றன. ஆகவே, பனை, தென்னை ஆகிய மரங்களை அனாவசியமாக வெட்டக் கூடாதென்று அரசாங்கம் கண்டிப்பாக உத்தரவு போடவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நெல்லை ஜில்லாவைப் பொறுத்த வரையில், அங்கு பனை மரத்தையே நம்பி வாழ்கிறவர்கள் பெரும்பாலும் இருக்கிறார்கள். அவர்களுக்கு இப்பொழுது பாதகம் ஏற்பட்டிருக்கிறது. பனைமரத்தை நம்பித்தான் அவர்கள் வாழ்க்கை இருக்கிறது. பல தாலூகாவிலுள்ள மக்களுடைய வாழ்க்கை சீரழியாமல் இருப்பதற்காக, கம்பியிலிருந்து பதினைந்து அடிக்குள் இருக்கும் மரங்கள் எல்லாம் வெட்டப்படவேண்டுமென்ற உத்தரவைத் தளர்த்த வேண்டுமென்றும், கூடியவரை கம்பிக்கு இடையூறாக இல்லாத எந்த விதமான மரங்களையும் வெட்டக்கூடாதென்றும் உத்தரவு பிறப்பிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

எனக்கு முன்பு பேசிய கனம் அங்கத்தினர் திரு. சின்னதுரை அவர்கள் விவசாயிகளிடமிருந்து கட்டாயமாக தொகை வசூலிக்கப்படுகிற காரியத்தைப் பற்றிச் சொன்னார்கள். மற்ற எல்லா ஜில்லாக்களிலும் இந்தச் சலுகை அளிக்காவிட்டாலும், இப்பொழுது பஞ்சப் பிரதேசங்கள் என்று பிரகடனப்படுத்தப் பட்டிருக்கும் இடங்களில்—குறிப்பாக கனம் நிதி அமைச்சர் அவர்களுடைய உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிற சில தாலூகாக்களிலாவது அபராதமாக வசூல் செய்வதை நிறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

11th July 1957] [Sri S. B. Adityan]

ஒப்பந்தம் செய்த விவசாயிகள், இப்பொழுது கிணற்றிலே தண்ணீர் இல்லை என்ற காரணத்தால் பம்புசெட்டு வைக்கவோ குறைந்தபட்ச அளவு மின்சாரத்தை உபயோகிக்கவோ முடியாமல் இருக்கிறார்கள். காரணம், அவர்கள் மீது எந்தவிதமான குற்றமும் இல்லை. கிணற்றில் தண்ணீர் இல்லை. ஆகவே, பம்புசெட்டுகள் வேலை செய்வதற்கு இடம் இல்லை. ஆகையால், அப்படிப்பட்ட இடங்களிலே, "ஒப்பந்தம்" என்ற பெயரைச் சொல்லி, குறைந்தபட்ச அளவு பணம் வசூல் செய்வதை நிறுத்த வேண்டுமென்று நான் அரசாங்கத்திடம் கோருகிறேன். என்னுடைய வெட்டுப் பிரேரணையை நான் வற்புறுத்தி, இத்துடன் என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகின்றேன்.

SRI B. K. LINGA GOWDER : Sir, under the Kundah Hydro-Electric Scheme, lands of the poor people have been taken over by the Government, and in some cases their entire holdings have been taken possession of by them. The chief means of livelihood of these poor people is cultivation. Though these poor people have been deprived of their lands nearly two years ago, still they have not been given lands in other areas to enable them to pursue their old occupation. As a result of the sacrifice of these poor people, people in other parts of the State are benefited. These poor people have undergone lot of hardship and they are struggling to-day for their bread. In spite of these hardships, they are continuing to give their full co-operation to the officials working in the project area. Further, while forming roads in coffee and tea estates, bull-dozers are being used with the result that most of coffee and tea plants coming under the wheels of the bull-dozer are extricated. The authorities are not coming forward to pay compensation in respect of such losses. For a very long time, the poor people did not know as to whom they should approach for getting compensation. When they approached the Electricity Department, they were asked to approach the Revenue Department. When they went to the Revenue Department they were again redirected to the Electricity Department. Luckily for them, in May last, the Hon. Ministers for Revenue and Electricity visited the affected villages. After hearing the grievances of the poor people, they instructed the authorities to see that compensation was paid to them immediately and that they were provided with lands in other areas at once. Though the poor people felt that something would be done for them, so far nothing had been done. I would appeal to the Government to see that the people get their legitimate compensation and alternative lands in deserving cases. 10-27 a.m.

* K. R. VISWANATHAN : கனம் அவைத் தலைவர் அவர்களே, இந்த மின்சார மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த மின்சார கோரிக்கையானது நமது ராஜ்ய சர்க்காரின் செலவிலேயே முதல்தரமான செலவுகொண்ட கோரிக்கையாக இருக்கிறது. இதற்கு அடுத்தபடியாகத்தான் செலவு காட்டக் கூடிய தலைப்பு கல்வி இலாகா தலைப்பாக இருக்கிறதென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். 10-30 a.m.

அப்படி அதிகமாகச் செலவாகக் கூடிய இந்த இலாகா நம்முடைய இந்திய நாட்டிலேயே முதல் தரமான வேலைகளை சௌகரியங்களை நம் ராஜ்ய மக்களுக்கு செய்து கொண்டிருக்கிறது என்பதை நாம் எல்லோரும் அறிந்திருக்கிறோம். இந்திய நாட்டிலே இருக்கிற பிற ராஜ்யங்களில் [illegible]

விஸ்தரிப்பு வேலை நடந்திருப்பதைக் காட்டிலும் தமிழ் நாட்டில்தான் மிகவும் அதிகமான அளவிலே இந்த வேலை நடந்திருக்கிறது. பெரிய தொழில் வளப்பத்தைப் பெருக்குவதிலும், சிறிய கிராமங்களிலேயும் கூட விளக்கு வசதியையும், பம்புசெட்டுகளையும், மோட்டார் வுசதிகளையும் செய்து கொடுப்பதிலேயும் மிக அதிகமாக இந்த இலாகா கவனம் செலுத்தி நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது என்று சொன்னால் இதை யாரும் மறுக்க முடியாது.

உதாரணமாக இந்த ஆண்டில் ஒதுக்கப்பட்டிருக்கிற பணத்தில் குந்தா நீர்வழி மின்சாரத் திட்டம் பூர்த்தியாகி, அடுத்தபடியாகத் தொடங்கப்பட இருக்கிற நெய்வேலி வெப்பவழி மின்சாரத் திட்டத்தையும் நிறைவேற்றினால் தமிழ் நாட்டில் தொழில்கள் வளரவும், விவசாயம் பெருகவும், மக்களுடைய வாழ்க்கை வசதிகளை அதிகரிக்கச் செய்யவும் உதவுவதோடு மற்ற நாடுகளுக்கும் நாம் மின்சார சக்தி உதவ முடியும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மேலும் இந்த ஆண்டிலிருந்து மின்சார இலாகாவானது சர்க்காரின் நேரிடை நிர்வாகத்திலிருந்து மாற்றப்பட்டு, எலெக்டிரிசிடி போர்டு என்கிற ஒரு குழுவின் கையில் நிர்வாகம் செல்லுகிறது. இந்தக் குழு முழுநேரம் மின்சார விஸ்தரிப்பில் கவனம் செலுத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது. நாடு முழுவதும் சீக்கிரத்திலேயே மின்சாரம் விஸ்தரிக்கப்படவேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டே இந்தக் குழு அமர்த்தப்பட்டிருக்கிறது. அது 1-7-1957 முதலே வேலை செய்யத் துவங்கி எல்லாக் காரியங்களையும் செய்து வருகிறது என்று முன்பே சொன்னார்கள். இந்த மின்சாரக் குழுவானது எல்லா அலுவல்களையும் கவனிக்க ஆரம்பித்திருக்கும் என்று நினைக்கிறேன். இதுவரையில் இந்த மின்சார இலாகாவில் வேலை செய்து வந்த ஊழியர்கள், நிர்வாகம் மின்சாரக் குழுவின் கைக்கு மாற்றப்பட்டு விட்டதனால், சர்க்காரின் உத்தியோகஸ்தர்களாக இருந்தபோது தங்களுக்கு கிடைத்து வந்த சலுகைகள் எல்லாம் இனியும் தொடர்ந்து கிடைக்குமோ, கிடைக்காதோ என்று அஞ்சுகிறார்கள். அதனாலே மின்சாரக் குழுவிடத்தில் வேலை செய்யத் தயங்குகிறார்கள் என்று அறிகிறேன். அவ்விதமாகத் தயக்கப்படுவதற்கு எவ்விதக் காரணமும் இருக்காது, அவர்களுக்கு முன் போலவே எல்லாச் சலுகைகளும் அளிக்கப்படும் என்று கனம் அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்பதாகவும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக மின்சாரம் நல்ல முறையில் எல்லா இடங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டு வருகிற நேரத்தில் என்னுடைய தொகுதியைப் பற்றியும் ஒரு வார்த்தை சொல்லாமல் இருக்க முடியாது. குறிப்பாக திருச்சி மாவட்டத்தில் உள்ள உடையார்பாளையம் தாலுகாவில் இந்த மின்சாரமானது இதுவரைக்கும் விஸ்தரிக்கப்படவில்லை. முன்பெல்லாம் இதற்குக் காரணம் அந்த எல்லை ஒரு தனிப்பட்ட கம்பெனியின் எல்லைக்கு உட்பட்டதாக இருந்தது என்பதுதான். ஆனால் சமீப காலத்தில் அந்தத் தனிப்பட்ட கம்பெனி சர்க்காரின் கைக்கே வந்துவிட்டதாக நாங்கள் அறிவதைத் தவிர, அவ்வாறு வந்த பிறகும் அந்தப் பிரதேசத்திற்கு மின்சாரத்தை விஸ்தரிக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாக அறியவில்லை. கடந்த மூன்று ஆண்டுகளாக நான் அந்தப் பகுதிகளுக்கு உடனடியாக மின்சாரம் விஸ்தரிக்கப்பட வேண்டுமென்பதாக சட்டசபையில் கூறிவந்திருக்கிறேன். ஆனால் உறுப்படியான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. விரைவில் உடையார்பாளையம் தாலுக்காவிற்கு மின்சாரத்தை விஸ்தரிக்கத் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதாக இப்போதும் வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக விவசாயிகளுக்கு மின்சார விஸ்தரிப்புக் கொடுக்கிற காலத்திலும், அவர்களுக்கு பம்புசெட்டு, மோட்டார் முதலியவற்றுக்கு மின்சாரம் சப்ளை செய்வதிலும் பலவித தொல்லைகளுக்கு விவசாயிகள் உள்ளாகிறார்கள் என்பதைச் சொல்ல ஆசைப்படுகிறேன். உதாரணமாக உடையார்பாளையம் போன்ற வறண்ட தாலுக்காவிற்கு மின்சார விஸ்தரிப்பு செய்வதாக எடுத்துக் கொள்வோம், அப்படிச் செய்ய வேண்டுமென்றால்

11th July 1957] [Sri K. R. Viswanathan]

உடனேயே அங்குள்ள விவசாயிகளிடத்தில் ஒரு உடன்படிக்கை எழுதி வாங்கிக் கொள்கிறார்கள். அந்த உடன்படிக்கையின்படி மின்சாரத்தை எடுத்துக் கொள்வதற்கு ஒரு கட்டணம் கொடுக்கப்படவேண்டுமென்று சொல்லப்படுகிறது. அம்மாதிரி கட்டவேண்டிய இடங்களிலேயும் அவர்கள் மின்சார சக்தியை எடுத்துக்கொண்டாலும்,இல்லாவிட்டாலும் அன்கனெக்டெட் மினிமம் தொகை மாதாமாதம் செலுத்திவர வேண்டுமென்றும் சொல்லப்படுகிறது. மின்சாரம் கிடைத்தவுடனேயே விவசாயிகள் அதை எடுத்துக் கொள்வதற்கு பம்பு, மோட்டார் முதலிய சாமான்களை வாங்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். போனால் உடனே கிடைக்கக்கூடிய சாமான்கள் அல்ல அவை. இவர்கள் இப்போது வேண்டுமென்று ஆர்டர் செய்தால் ஆர்டர் செய்த பிறகு மூன்று மாதங்கள், நான்கு மாதங்கள் கழித்து அவர்களுக்குக் கிடைக்கும். அவை வந்து சேருகிற வரையில் இவர்களால் மின்சார சக்தியைப் பயன்படுத்திக் கொள்ள முடியாது. ஆறு மாத அளவில் அவர்களுக்குச் சாமான் கிடைக்காமல் இருப்பது அவர்கள் குற்றமல்ல. ஆகவே மின்சாரம் விஸ்தரித்தவுடனேயே அவர்கள் பம்பு செட்டு, மோட்டார் முதலியவற்றுக்கு ஆர்டர் பண்ணிவிட்டார்களானால், அவை அவர்களுக்கு கிடைக்கிற காலம் வரையிலும் அவர்களிடமிருந்து எவ்வித வரியும் வசூல் பண்ணக்கூடாது என்று செய்ய வேண்டும். மேலும் மின்சார சக்தியைக் கொடுக்கும் போது பிக் ஸ்விச் போன்ற கருவிகளை விவசாயிகளே வாங்கிக் கொடுக்க வேண்டுமென்றும் வற்புறுத்தப் படுகிறது. இவற்றை வாங்கமுடியாமல் விவசாயிகள் திண்டாடுகிறார்கள். இப்படி அக்கருவிகளை விவசாயிகளே வாங்கவேண்டுமென்று வற்புறுத்து வது சரியானது அல்ல. சர்க்காரே அந்தக் கருவிகளை எல்லாம் அவர் களுக்குக் கொடுத்து மின்சாரத்தை அவர்கள் பயன்படுத்திக் கொள்ளச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக மழை பெய்யாத காலங்களில் அன்கனெக்டெட் மினிமம் ஒருவாறு தள்ளிக் கொடுக்கப்படலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சில இடங்களில் மழை பெய்திருந்தாலும் கூட கிணறுகளில் விவசாயிகளுக்கு ஒதுக்கப்பட்ட மின்சார சக்தி முழுவதையும் பயன்படுத்திக் கொண்டு தண்ணீர் இறைக்கப் போதுமான நீர் இருப்பதில்லை. அங்கே கிணறுகளில் தண்ணீர் இல்லாத காரணத்தால் அவர்களிடமிருந்து ஸ்பெஷல் காரண்டி சார்ஜ் வாங்காமல் டாரிப் மினிமம் மட்டுமேயாவது வசூல் செய்ய வேண்டுமென்று உத்தரவு போடவேண்டுமென்பதாகக் கேட்டுக் கொண்டு நான் முடித்துக் கொள்ளுகிறேன்.

**Sri A. V. P. PERIAVALAGURUVA REDDI** : கனம் தலைவர் அவர் 10·40 a.m.
களே, இப்போது மின்சார திட்டத்தைப்பற்றி சொல்லும்போது இதிலே விவசாயிகளுக்கு அனேகவிதமான குறைபாடுகள் இருக்கின்றன. அதாவது மழை இல்லாமல் டாம்களில் தண்ணீர் இல்லையென்று கரண்ட் குறைத்து ரேஷன் முறையில் கொடுக்கிறார்கள். இதனால் அங்கு வருஷ கடைசியில் இந்த விவசாயிகள் இரண்டு மூன்று மாதங்கள் கம்பு, சோளம், இவைகளை தான் நடவேண்டியிருக்கிறது. மேலும் பூரா நிலங்களிலும் பயிர் செய்ய முடியாமல் ½ ஏக்கர் ஒரு ஏக்கர் என்று தான் விவசாயம் செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறது. ஆனால் அந்த வருஷத்தில் மினிமம் சார்ஜ் வேண்டும் என்று வசூலித்து விடுகிறார்கள். நீங்கள் கரண்ட் கொடுக்கவில்லையே, அப்படியிருக்கும்போது இந்த மினிமம் சார்ஜ் வசூலிக்கலாமா என்று கடந்த இரண்டு, மூன்று வருஷங்களாக இதைப்பற்றி அந்தந்த இலாகா அதிகாரிகளிடமும் மந்திரிகளிடமும் அங்குள்ள எக்ஸ்க்யூட்டிவ் என்ஜினியரிடமும் விண்ணப்பித்துக்கொண்டோம். அதற்கு சரியான பதில் இது வரையிலும் கிடைக்கவில்லை. அந்த மாதிரி டாமில் தண்ணீரில்லாமல் அதனால் கரண்ட் ரேஷன் முறையில் கொடுக்கப்படும் வருஷத்தில் மினிமம் சார்ஜ் வசூலிக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு நடுத்தர விவசாயிகள் பம்புசெட்டு ஏற்படுத்துவதற்காக ப்ளாக் டெவலப்மெண்ட் திட்டத்தின்மூலம் லோன் வாங்குவதற்காக மனு கொடுக்கிறார்கள். அந்த வருஷத்தில் அந்த கிணற்றுக்கு 170 ரூபாய் மினிமம் தொகை ஆகும் என்று சொல்லிவிடுகிறார்கள். ஆனால் அடுத்த வருஷம்தான் பம்பு[illegible]

[Sri A. V. P. Periavalaguruva Reddi] [11th July 1957

கிடைக்கிறது. அந்த வருஷத்திற்கும் மினிமம் சார்ஜ் கொடுக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். அத்துடன் மின்சாரம் இருக்கிற இடத்திலிருந்து பக்கத்தில் இருக்கும் கிராமத்திற்கு பம்பு செட்டு வைப்பதற்கு மின்சாரம் வேண்டுமென்று கேட்டால் அவர்கள் மின்சாரம் இருக்கிற இடத்திலிருந்து இந்த கிராமம் வரை இத்தனை மைல் இத்தனை பர்லாங் இருக்கிறது, அதற்கு பத்தாயிரம் ரூபாய் ஆகிறது, இதை பத்து வருஷத்தில் மூலதனமாக கிடைக்க வேண்டும் என்றும் சொல்லுகிறார்கள். ஆயிரம் ரூபாய் மினிமம் தொகை கிடைத்தால் தான் எலக்ட்ரிசிட்டி கிராமத்திற்கு அளிக்க முடியும் என்று சொல்லி விடுகிறார்கள். அதனால் 10 பேர்கள் சேர்ந்து ஒரு அக்ரிமெண்ட் எழுதி கொடுத்து மின்சாரம் விஸ்தரிக்கப்படுகிறது. அதற்கு பின் இரண்டு வருஷம் கழித்து அதே கிராமத்தில் ஆயிரம் ரூபாய்க்குப் பதில் இரண்டாயிரம் கிடைக்கும்படியாக விருத்தியாகிறது. அப்படியிருந்தும் இந்த 10 பேர்களும் மினிமம் தொகை கொடுக்கத்தான் வேண்டும் என்று ஹிம்சிக்கிறார்கள். இந்த நிலைமை இருக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். பைக்காரா ஸ்கீம் ஆரம்பமான பொழுது அதிகாரிகள் சொன்னார்கள், ஆறு வருஷத்தில் இந்த மூலதனம் கிடைக்க வேண்டும் என்று. அவர்கள் மேலும் விவசாயத்திற்கு ஒரு யூனிட்டுக்கு 9 பைஸாவும் லைட்டுக்கு 2½ அணாவும் என்று வந்துவிடும் என்று சொன்னார்கள். இப்போது என்னவென்றால் ஒன்றுமே குறையவில்லை. பாபநாசம், பெரியார், இன்னும் எத்தனையோ மின்சாரத் திட்டங்கள் வரப்போகின்றன என்று சொல்லுகிறார்கள். ஆனால் உலகத்தில் கொள்ளையடிப்பது எல்லாம் சம்சாரிகள் தான் என்றெல்லாம் சொல்லுகிறார்கள். இன்றைக்கு ஒரு மில்லில் ஏதாவது ஒரு ஸ்ட்ரைக் வந்துவிட்டால் அங்குள்ள மந்திரிகள் அதிகாரிகள் இவர்களெல்லாம் பறக்கிறார்கள். ஆனால் இவர்களுடைய நிலைமையைப்பற்றி கவனிப்பதற்கு யாரும் கிடையாது. ஆனால் இன்றைக்கு விவசாயி ஸ்ட்ரைக் பண்ணிவிட்டால் என்ன கதியாகும் என்று யாரும் ஆலோசித்து பார்ப்பது கிடையாது. இன்றைக்கு ஒரு விவசாயி தனக்கு மட்டும் ஒரு ஏக்கர் மாத்திரம் பயிர் வைத்துவிட்டு சொச்சத்தை அப்படியே போட்டு விட்டால் உலகம் என்ன செய்ய முடியும். இந்த விவசாயி விளைவித்தால்தான் மில்லில் வேலைசெய்யக்கூடிய தொழிலாளியும் சாப்பிட முடியும், எல்லா அதிகாரிகளும் சாப்பிட முடியும், மந்திரிகளுக்கும் விவசாயிதான் சாப்பாடு கொடுக்க வேண்டும், இங்குள்ள அங்கத்தினர்களுக்கும் அவர்கள் தான் கொடுக்க வேண்டும். ஆகவே அவர்களுக்கு அவசியமான கரண்டுக்கு சார்ஜைக் குறைத்துக்கொடுக்க வேண்டும். யூனிட்டுக்கு ½ அணா என்று கொண்டு வரவேண்டும். அப்போது தான் விவசாயம் விருத்தியாகும். உரமும் உப்பும் அரசாங்கத்திலிருந்து கொடுத்து விட்டால் போதாது. தண்ணீர் இருந்தால்தான் ஏதாவது விருத்தியாகும். இன்றுள்ள நிலையில் அங்கு விவசாயம் ரொம்பவும் மோசமடைந்து வருவதால் அங்கு 100-க்கு 80 பேர் வேறு விவசாயத்தை நம்பித்தான் வாழ்கிறார்கள். 100-க்கு 20 பேர் தான் அரிசி சாப்பிடுகிறார்கள். ஆனால் இன்று பல தோட்டங்களிலும் நெல் விவசாயம் விருத்தியாகிக்கொண்டிருக்கிறது. கம்பு, சோளம், கேப்பை, வரகு போன்ற தான்யங்களும் விருத்தியாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே நாட்டில் விவசாயம் வளர்ந்தோங்க வேண்டுமென்று சொல்லுகின்ற இந்த சமயத்தில் விவசாயத்தை பெருக்குவதற்கு அவர்களுக்கு அவசியமான மின்சார வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று மின்சார மந்திரி அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன். அதோடு ஒவ்வொரு கிராமத்திலும், அதாவது திருமங்கலம் பகுதியின் பக்கத்திலுள்ள கள்ளிக்குடி போன்ற பகுதி மற்றும் 4 மைல் தூரத்தில் இருக்கும் எல்லா இடங்களிலும் கரண்ட் விருத்தியாகியிருக்கிறது. ஆனால் அங்கு மின்சாரத்தை மேற்பார்வையிடுவதற்காக ஒரு ஆபீஸ் நடத்தப்படுகிறது. நல்ல வாடகை கட்டிடம் கிடையாது. அங்கு போன் கிடையாது. முன் எல்லாம் ஏதாவது கரண்ட் நிறுத்தப்படுமானால் 4 மணி நேரம் கரண்ட் நிறுத்தப்படும் என்று முன்னடியாகவே அறிவிக்கப்பட்டிருக்கும். இப்போது அது இல்லை. இதனால் விவசாயிகளுக்கு கஷ்டம். அதாவது இந்த கரண்ட்டை நம்பிக்கொண்டு 50 ஆட்களையும் வேலைக்கு அமர்த்திக்கொண்டு நடுவதற்காக நாற்றை [illegible]யிருப்பார்கள். இவ்வளவு ஏற்பாடும் செய்த பிறகு கரண்ட் வருவது [illegible]யாது. அங்குள்ள லைன்மென்னிடத்தில் கேட்டால் எனக்கு [illegible]

11th July 1957] [Sri A. V. P. Periavalaguruva Reddi]

தெரியாது என்று சொல்லுகிறார். இதைப்பற்றி செய்தியை உடனே அறிவிக்க வேண்டும் என்றால் போன் வசதி கிடையாது. அங்கே பிடுங்கி போட்ட நாற்று எல்லாம் கரிந்து போகும். இதனால் விவசாயிகளுக்கு அதிக நஷ்டமேற்படுகிறது. இவ்விதமாக கல்லுக்குடி ஏரியா கவனிப்பார் இல்லாமல் அநாதையாக கிடக்கிறது. அங்குள்ள அதிகாரிகளிடத்தில் சொன்னாலும் ஒரு பிரயோஜனத்தையும் காண முடியவில்லை. எதாவது முன்னால் கரண்ட் வராது என்று தெரிந்தால் நாற்றையெல்லாம் பிடுங்கிபோட வேண்டிய அவசியமிருக்காது. ஆதலால் என்றைக்கு கரண்ட் எத்தனை மணிக்கு வராது என்று முன்னதாகவே நோட்டீஸ் மூலம் அறிவிக்க வேண்டும். விவசாயத்தை பெருக்க வேண்டும், துரிதமாக காரியங்களை நிறைவேற்ற வேண்டும் என்றெல்லாம் சொல்லப்பட்டு வருகிறது. ஆகவே இந்த விஷயங்களில் மின்சார மந்திரி அவர்கள் ரொம்பவும் ஆலோசித்து நல்லபடியாக கவனித்து விவசாயத்தை முன்னேற்றத்திற்கு கொண்டு வருவதற்கு கூடுதல் விருத்தி பண்ணுவதற்கு அதற்காக அத்தியாவசியமான எல்லா சலுகைகளையும் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

Sri S. LAKSHMANA GOUNDER : கனம் சபாநாயகர் அவர்களே, 10-4
இந்த மின்சார மான்யத்தை ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் கூற a.m.
ஆசைப்படுகிறேன். பொதுவாக இன்று மின்சாரத் திட்டங்கள் நல்ல முறையில் நடந்து வருகின்றன என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்பற்றி சந்தோஷமும் அடைகிறேன். எந்த அளவுக்கு மின்சார திட்டங்களை விஸ்தரிக்க முடியுமோ அந்த அளவுக்கு மின்சார இலாகா வேலைசெய்து வருகிறது. ஆனால் சில திட்டங்களை நிறைவேற்றுவதற்கு சில கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இதனால் போட்டிருக்கிற சில திட்டங்களை நிறுத்தி விடுகிறார்கள். இதைப்பற்றி கேட்டால் இதற்கு வேண்டிய அளவு கம்பங்கள் இல்லை, வேண்டிய அளவு கம்பிகள் கிடைப்பதில்லை, இதற்கு வேண்டிய சாமான்கள் கிடைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். சில கிராமங்களில் அவர்களே பட்டறை அமைத்து சில சாமான்களை செய்து வருகிறார்கள். ஆகவே இந்த சாமான்களையெல்லாம் உடனடியாக வரவழைத்து இன்னும் கூடுதல் விருத்தியாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக சேலம் ஜில்லாவில் பல ஸ்கீம்கள் எல்லாம் போட்டு சர்விஸ் கொடுத்திருக்கிறார்கள். இப்போது கொடுத்திருக்கின்ற எலக்ட்ரிக் மோட்டார்கள் அங்குள்ள விவசாயிகளுக்குப் போதாது. நம் நாட்டில் இப்போது கிடைக்கும் எலக்ட்ரிக் மோட்டார்கள் நமக்கு சரியான விதத்தில் கிடைப்பதில்லை. நம் நாட்டில் தயாரிக்கப்படுகிற மோட்டார்கள் நமக்கு போதாது. அவசியமாக வேண்டுமென்று கேட்டால் பணத்தை டெப்பாஸிட் கட்டி வைத்துவிட்டு ஒரு வருஷம் கழித்து கொடுக்கலாம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் இந்த மோட்டார்கள் கொண்டுவைத்து தண்ணீர் இறைப்பதற்கு முன்னாலேயே மினிமம் சார்ஜ் கொடுக்க வேண்டுமென்று நோட்டீஸ் கொடுக்கப்பட்டு வருகிறது.

நம் நாட்டில் இப்பொழுது இருக்கக் கூடிய மோட்டார்கள் போதவில்லை. ஆகவே வெளிநாடுகளிலிருந்தாவது குறைந்தபட்சம் கொஞ்சம் கூடுதல் மோட்டார்கள் வரவழைத்து விவசாயிகள் எல்லோருக்கும் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும். மோட்டார்களின் விலை ஏறிக் கொண்டே போகிறது. முன்பு 530 ரூபாய்க்கு கிடைத்த மோட்டார் இன்று 700, 800, ஆயிரம் ரூபாய் வரை கூட போகிறது. அந்த அளவில் விவசாயிகள் மோட்டார் வாங்க முடியாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஸ்டார்ட்டர் ஸ்விச்சும் கிடைப்பதில்லை. ஆனால், ஒரு வருஷ காலமாக மினிமம் சார்ஜ் கட்ட வேண்டுமென்று நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். மோட்டாரும் கிடைப்பதில்லை, ஸ்டார்ட்டர் ஸ்விச்சும் கிடைப்பதில்லை. விவசாயிகளுக்கு ஆயிரம் ரூபாய் கொடுத்து மோட்டார் வாங்க முடிகிறதா? அப்படி அவர்களால் வாங்க முடியவில்லை. இதைப் பற்றி மந்திரியவர்களுக்கு பெட்டிஷன் மூலம் அறிவித்து இருக்கிறேன். ஆகவே நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், சர்க்கார் மூலம் லைசென்ஸ் வாங்கி விவசாயிகளுக்குக் கொடுக்கப்படவேண்டும். அதாவது, இந்த எலக்ட்ரிசிட்டி டிப்பார்ட்மெண்ட்

மூலம் வழி எங்கு எங்கெல்லாம் இந்த ஸ்கீம் இருக்கிறது, எங்கு எங்கெல்லாம் இதை வைத்திருக்கிருர்கள், எங்கு எங்கெல்லாம் இதை வைக்காமல் இருக்கிருர்கள் என்று சர்க்கார் ஒரு கணக்கு எடுக்க வேண்டும் என்று இந்த சமயத்தில் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். இதைப் பற்றி முதல் அமைச்சரவர்களிடமும் நான் கூறி இருக்கிறேன். அவர்கள், பார்க்கலாம் என்று சொல்லியிருக்கிருர்கள். வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதாய் இருந்தால் அதற்காக நிறைய பணம் ஆகுமே, நமது சர்க்காருக்கு அதனுல் நஷ்டம் ஏற்படுமே என்று சொல்கிருர்கள். அப்படிப் பார்த்தால், இன்று இந்த மோட்டாரைக்கொண்டு யாதொரு விதமான உபயோகமும் இல்லாமலேயே மினிமம் சர் சார்ஜ் கட்ட வேண்டியிருக்கிறது. ஆகவே இதை எல்லாம் கவனித்து தனிப்பட்டவர்களுக்கு லைசென்ஸ் கொடுப்பதை விட்டு விட்டு சர்க்கார் மூலமாகக் கொடுத்தால் பரவாயில்லை. அதனுல் ஏழை விவசாயிகள் மிகவும் பலன் அடைவார்கள் என்று நான் இந்த சந்தர்ப்பத்தில் எடுத்துக் கூற விரும்புகிறேன். மாமூல் கோட்டா கொடுக்கப்படுகிறது என்று சொல்கிருர்கள். நான் சொல்வது என்னவென்ருல் நம் ஸ்டேட்டில் இதைப் பற்றி ஒரு கணக்கு எடுத்து எல்லா இடங்களுக்கும் நியாயமாகக் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும். கண்ட்ரோலர் அவர்களைக் கேட்டபோது சர்க்கார் மூலம் 1,300 மோட்டார்கள், ஸ்டார்ட்டர் ஸ்விச்சோடு கொடுத்திருக்கிறேம் என்று சொன்ஞர்கள்.. நான் திரும்பத்திரும்ப இதைச் சொல்வதற்குக் காரணம் என்னவென்ருல் விவசாயிகள் இது கிடைக்காமல் கஷ்டப்படுகிருர்கள் மாத்திரமல்ல. மினிமம் சர்சார்ஜும் கொடுக்கவேண்டிய நிலையில் இருக்கிருர்கள். ஆகவே இதை பரிசீலனை செய்து மின்சார விஸ்தீரணத்தோடு கூட, இந்த மோட்டார்கள், ஸ்டார்ட்டர் ஸ்விச் உட்பட விவசாயிகளுக்குக் கிடைக்கும்படி செய்தால் மிகவும் நல்லதாய் இருக்கும். எவ்வளவு நல்லது இந்த சர்க்கார் அவர்களுக்காக செய்தாலும் இதுமாதிரி ஏதாவது கஷ்டம் ஏற்பட்டால் உடனே சர்க்கார் மீது அவர்களுக்கு ஒரு அதிருப்தி ஏற்படுகிறது. அடுத்தபடி, நான் சொல்ல விரும்புவது, மினிமம் சார்ஜ் கட்ட வேண்டுமென்று ரெவுன்யூ நோட்டீஸ் கொடுப்பதற்கு முன்பு அவர்களுக்கு மோட்டார், ஸ்டார்ட்டர் ஸ்விச் இவைகள் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும். விவசாயிகளுக்கு ஒரு வாரம் பகலும், ஒரு வாரம் இரவிலும் கிடைக்கிறது. நான் சொல்வது என்னவென்ருல் விவசாயிகளுக்கு கரெண்ட் பகலிலும், கைத்தொழிலுக்கு கரெண்ட் இரவிலும் கொடுக்க வேண்டும். கட்டு வரும்போது விவசாயத்திற்கு கொடுத்தது போக மீதி உள்ளவற்றிக்கு கொடுக்க வேண்டும், என்று சொல்லிக் கொண்டு எனது சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன்.

10-56 a.m. SRIMATHI KOLANTHAI AMMAL : கனம் சபாநாயகர் அவர்களே, மின்சார இலாகா சில ஆண்டுகளாக நல்லதொரு முறையிலே சேவை செய்து வருகின்றது என்பதை பொது மக்களும் அங்கத்தினர்கள் பலரும் உணர்ந்திருக்கின்ருர்கள் என்ருலும், அந்த மின்சார இலாகாவிலே சில குறைபாடுகள் இருக்கின்றன என்பதை இந்த சபையின் முன்பு நான் எடுத்துக் கூற விரும்புகின்றேன். காரணம் என்னவென்று கேட்டால், என்னுடைய தொகுதியிலே பரம்பரை பரம்பரையாக பஞ்சப் பிரதேசம் என்று குறிப்பிடப்படும் பல்லடம் தாலூகா உண்டு, மற்றொரு தொகுதி சர்க்கார் சாமங்குளம். அந்த இரண்டு தொகுதிகளும் இரண்டு விதமான தனிப்பட்ட குணங்களைக் கொண்டது. அப்படிப்பட்ட குணங்களைக்கொண்ட தொகுதிகளில் மின்சாரம் மக்களுக்கு எந்தெந்த முறையில் நன்மை செய்யவேண்டும் என்பதைப் பற்றி இந்த சபையின் முன்பு நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அந்த சர்க்கார் சாமங்குளம் தொகுதியில் பெருவாரியான விவசாயிகள் மினிமம் சார்ஜ் கட்டுவதற்குப் பதிலாக ஒவ்வொரு ஆண்டும் மாக்ஸிமம் சார்ஜ் கட்ட நேருகிறது என்பதை நான் மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்று கேட்டால், இந்த சார்ஜ் கட்டுவது பற்றி அதிகாரிகளிடம் விண்ணப்பங்கள் கொடுத்தும், அதிகார பீடத்தின் முன்பு கை கட்டி நின்றும், வாய் பொத்தி நின்றும் எந்த முறையிலும் அவர்களுக்கு நிவாரணம் கிடைக்காது. எம்.எல்.ஏ.-க்களிடம் வருவார்களேயானுல் அவர்களாலும் எந்த நிவாரணமும் செய்ய முடியாத நிலையில்

11th July 1957] [Srimathi Kolanthai Ammal]

நம்முடைய சர்க்கார் தலைமைக் காரியாலயம் அமைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் ஞாபகப்படுத்திக் கொள்கிறேன். அடுத்தப்படியாக, நம்முடைய அரசாங்கம் குடிசைத் தொழிலை நல்ல முறையில் விருத்தி செய்ய வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்து இருக்கிறது. ஆனால் இந்த வருஷம் மின்சார வெட்டு யாரைப் பாதித்திருக்கிறது என்று கேட்டால், பெரிய தொழிற்சாலைகள், தனி டிரான்ஸ்பார்மர் இருக்கிற காரணத்தால் அதை அவர்கள் முழு நேரமும் வேலை செய்ய அந்த மின்சாரத்தை உபயோகப் படுத்திக் கொள்கிறார்கள். ஆனால் குடிசைத் தொழில் விருத்தி செய்கிற சாதாரண மக்களுக்கு இரவு 6 மணிக்கு மின்சாரம் கொடுக்கப்பட்டு காலை 6 மணிக்கு அது நிறுத்தப்படுகிறது. மறுபடியும் 12 மணிக்குக் கொடுக்கிறார்கள். இரண்டு முறை வேலையாட்கள் வந்து வேலை செய்யும்போது ஒன்பது மணிக்கு வேலை செய்ய வருகிற வேலையாட்களை முதலாளிகள் எந்த முறையிலும், அவர்களை எந்த விதத்திலும் கண்டிக்காத முறையில் அவர்கள் தூரத் தங்கி விடுகிறார்கள். ஒரு முறை வேலை செய்கிறவர்கள் அந்தந்த வேலைகளை கெடுத்து விடுகிறார்கள். அத்தனையும் நாசமாகி சிறு முதலாளிகளைப் பாதிக்கிறது, என்பதை ஞாபகப்படுத்திக் கொண்டு பெரிய தொழிற்சாலைகளுக்குக் கொடுக்கப்படுகிற மின்சாரத்தை ஓரளவு சிறு குடிசைத்தொழில்கள் செய்கிறவர்களுக்கு, அவர்கள் பெட்டி வைக்காவிட்டாலும் அரசாங்க பெட்டியிலிருந்து எடுத்துக் கொள்ளும் நிலைமை வரவேண்டுமென்று ஞாபகப்படுத்திக் கொள்கிறேன். மூன்றாவது, எங்கள் தொகுதியில் ஒவ்வொரு விவசாயினுடைய பருத்திச் செடியும் குறைந்தது ஆறடி அல்லது ஏழடி உயரம் இருக்கும். அப்படிப்பட்ட ஆறடி, ஏழடி உயரமுள்ள பருத்திச் செடி ஊடே இரவில் சென்று, ஒரு விவசாயி தன் குடும்பக் கஷ்டத்தைப் பாராது தண்ணீர் கட்ட தோட்டத்தில் புகுந்தால் பாம்புகள் அவனை கடித்துவிடுகிறது. இந்தமாதிரியான கேஸ்கள் அநேகம் ஆஸ்பத்திரிகளில் வந்திருக்கிறது என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன். மேலும் மினிமம் சார்ஜ் கட்டுவதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன என்பதை நாங்கள் அனுபவத்தில் அறிகிறோம். அதை அமைச்சரவர்களுக்கு ஞாபகப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன். அது என்னவென்று கேட்டால், பருத்திச் செடிக்கு தண்ணீர் விடும்போது, பருத்திச் செடியில் இப்பொழுது எதிர்பாராத வியாதிகள் வருவது அனைவரும் அறிந்ததே. அது இருக்கும் வரையில், பருத்திச் செடி வரண்டிருந்தாலும் தண்ணீர் விடச் சாத்தியப்படுவதில்லை. செடியில் நோய் இருக்கும்போது தண்ணீர் விட்டால் நோய் அதிகம்தான் பரவும், ஆகவே வரண்டிருந்தாலும் தண்ணீர் விடமுடியாது. பாஸ் போடுகிற சமயத்தில் சோளத்திற்கு தண்ணீர் வேண்டியதில்லை. இச்செடிகள் வரண்டிருக்கிற நிலையில் அதிகாரிகள் வந்து பார்த்து கிணற்றில் தண்ணீர் இருக்கிறதே, ஏன் நீங்கள் வரட்சியாக இருக்க விரும்புகிறீர்கள்; உங்கள் தோட்டங்களில் தண்ணீர் பாய்ச்சிக் கொள்ளுங்கள் என்று விவசாயத்தில் அனுபவம் அற்றவர்கள் விவசாயிகளைக் கேட்கிற காரணத்தால் அவர்களுக்கு எந்த விதமான பதிலும் சொல்ல முடியாமல் இருக்கிறது. மினிமம் சார்ஜ் கொடுப்பதற்கு விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இந்த பரம்பரை பரம்பரைப் பஞ்சப் பிரதேசமான பல்லடத்தில் தனிப்பட்ட முறையில் சிறு தொழிற்சாலைகளை விருத்தி செய்வதற்கு அமைச்சரவரர்கள் ஓரளவிற்கு தனிப்பட்ட துறையில் மின்சாரம் சப்ளை செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். அதோடு, ஆழமான கிணறுகளை வெட்டும் விவசாயிகள் சாமங்குளத்தைச் சேர்ந்த விவசாயிகள் வருஷம் ஒவ்வொரு முறையும் அவர்கள் வெட்டி நஷ்டப்படுகிறார்கள். அதோடு மினிமம் சார்ஜும் கட்டி கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அங்குள்ள மக்களின் குறைகளை எந்த விதத்திலாவது நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, ஓரளவு அவர்களுக்கு சலுகைகள் காட்ட வேண்டும் என்றும் ஞாபகப்படுத்திக் கொண்டு—ஒரு சிறு விண்ணப்பம்கூட—எம்.எல்.ஏ. தான் கொண்டுபோக வேண்டுமென்ற கஷ்டம் ஏற்படாமல் அவர்களது குறைகள் நிவர்த்திக்கப்பட வேண்டுமென்று மறுபடியும் ஞாபகப்படுத்திக்கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

**Sri A. GOVINDASAMY**: அன்புள்ள தலைவர் அவர்களே, மின்சார மானியத்தின் மீது கொண்டு வரப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரணையை

ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். மின்சாரம் இன்றைய தினம் ஆடம்பரத்திற்கும் விளம்பரத்திற்கும் அதிகமாக வழங்கப்படுகிறது. அந்த முறையில் வழங்கப்படுவதை கொஞ்சம் நிறுத்தி விவசாயத்திற்கும் தொழில்களுக்கும் அதை வழங்குவதற்கு நமது புதிய மின்சார மந்திரி அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆடம்பரத்திற்கும், விளம்பரத்திற்கும் கொடுக்கிற மின்சாரத்திற்கு அதிகமான அளவு கட்டணத்தை வசூல் செய்யலாம். தொழில் துறையிலும், விவசாயத் துறையிலும், குறிப்பாக விவசாயத்துறையிலே எவ்வளவு தூரம் மின்சார கட்டணத்தை குறைக்க முடியுமோ, அந்த அளவு குறைத்துக் கொடுத்தால்தான் விவசாயம் முன்னேறும். அதே சமயத்தில் உற்பத்தி பெருகும் என்பதில் சந்தேகமே கிடையாது.

இன்றைய தினம் மின்சாரம் 1,300 கிராமங்களுக்கு சென்ற ஆண்டில் பரப்பப்பட்டு விட்டதாகவும், 13 ஆயிரம் பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் வழங்கியிருப்பதாகவும் நிதி அமைச்சர் அவர்களின் பிரசங்கத்தில் குறிப்பிட்டிக்கிறார். நம் ராஜ்யத்திலே மின்சாரம் வேகமாக பரவி வருவது மிகவும் மகிழ்ச்சிக்குறிய ஒரு விஷயமாகும். அதே சமயத்தில் எங்கள் மாவட்டத்தில் மின்சார விஸ்தரிப்பு மிகவும் குறைவாகயிருக்கிறது. நம் ராஜ்யத்திலுள்ள எல்லா ஜில்லாக்களையும் எடுத்துப் பார்க்கும்போது, 12 ஜில்லாக்கள் இருக்கின்றன, அதை வகுத்துப்பார்த்தால் 140 கிராமங்களுக்கு மின்சாரம் விஸ்தரிக்கப்பட்டிருக்கவேண்டும். கணக்குப் போட்டு பார்த்தால், எங்கள் ஜில்லா மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறதென்று தெரியும். இதை மீண்டும் வலியுறுத்திச் சொல்லுகிறேன். விவசாய மந்திரி அவர்களின் பகுதியில் கிராமங்களுக்கு அதிகமாக மின்சாரம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது என்பது கணக்கு பார்த்தால் தெரியும். மந்திரி அவர்கள் புள்ளி விவரங்களை நன்றாகப் பார்த்துவிட்டு இதை மறுத்தால், ஏதாவது தவறு இருந்தால் இதை திருத்திக் கொள்கிறேன். இப்போது இதை நன்றாக கவனித்து எந்தப் பகுதிகளுக்கு அதிகமாக மின்சாரம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறதோ, அந்தப் பகுதிகளுக்கு மேலும் விஸ்தரிக்கப்படுவதை தடை செய்து, பின்தங்கிய ராமநாதபுரம், தென் ஆற்காடு, வட ஆற்காடு முதலிய இடங்களில் விஸ்தரிக்க வேண்டுமென்று கூறிக் கொள்கிறேன். மேஜர் பஞ்சாயத்துகளில் மின்சாரம் விஸ்தரித்து ஸ்ட்ரீட் லைட் கொடுக்க வேண்டுமென்று சொன்னால், அந்த மேஜர் பஞ்சாயத்துகளின் மொத்த வருமானத்தில் 8-ல் ஒரு பங்கு செலுத்த வேண்டுமென்று சொல்லப்படுகிறது. அப்படி இல்லாது சில பணக்காரர்கள் ஒரு லைட்டுக்கு 22 ரூபாய் வீதம 10 வருஷம் கட்ட சம்மதித்தால் லைட் போடப்படுகிறது. அப்படி 4 அல்லது 5 ஆண்டு கழித்து பணம் கட்ட வசதி இல்லாமல் நிறுத்தி விட்டால், அந்த நேரத்திலே வெளிச்சம் இருந்த பகுதி இருட்டாகக்கூடியதாயிருக்கிறது. அரசாங்கம் தனிப்பட்டவர்களை நம்பாமல், அரசாங்கமே இந்த மாதிரி வெளிச்சத்தை போட முன் வரவேண்டும். பஞ்சாயத்து, முனிஸிபாலிடி இவைகளுக்கு ஸ்ட்ரீட் லைட் விஸ்தரிக்கிற நேரத்தில், பஞ்சாயத்து பணத்தை கொடுக்கப்போகிற நேரத்தில், சேரிகளுக்கு லைட் ஒன்றுக்கு 22½ ரூபாய் வேண்டுமென்று சொல்லப்படுகிறது. இந்த சேரிகளுக்கு 22½ ரூபாய் கொடுப்பதிலிருந்து விதி விலக்களிக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மந்திரி அவர்களுக்குத் தெரியும் எங்கள் மாவட்டம் ஜீவ நதி இல்லாத ஒரு மாவட்டம். மின்சாரத்தை நம்பித் தான் விவசாயம் செய்ய வேண்டிய நிலை ஏற்படுகிறது. குறிப்பாக, தென் ஆற்காடு ஜில்லாவிலே விழுப்புரம் தாலூகாவில் கானை-கஞ்சனூர் பிர்க்காவிலுள்ள கிராம பகுதிகளுக்கு அறவே மின்சாரம் விஸ்தரிக்கப்படவில்லை. இது முன்பு என்னுடைய தொகுதியாக இருந்தது. நான் இப்போதும் அந்தப் பகுதியின் ஜில்லா போர்ட் உறுப்பினராக இருக்கிறேன். நிதி மந்திரி அவர்கள் கானை பகுதி வந்திருந்த போது சீக்கிரம் மின்சாரம் விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கிறோம் என்று வாக்குறுதி கொடுத்தார்கள். ஆனால், இந்த விஷயத்தில் இன்னும் ஏற்பாடு செய்யவில்லை. மின்சார கம்பிகள் அந்தப் பக்கம்தான் போகிறது. விழுப்புரத்திலே ஒரு ஸப்-ஸ்டேஷன் இருக்கிறது. அதிலிருந்து மின்சாரம் சுலபமாக வழங்கலாம். அதிகச் செலவும் ஏற்படாது. வளவனூர்-கண்டமங்கலம்-விக்கிரவாண்டி

பிர்க்காக்களிலுள்ள கிராமங்களில் நல்ல முறையிலே மின்சாரம் விஸ்தரிக்கப்படவில்லை. விஸ்தரிக்கப்பட்டிருக்கிற கிராமங்களில் பணக்காரர்களுக்கு 20 அல்லது 30 பம்ப் செட்டுகள் கொடுக்கப்படுகின்றன. ஆனல் அதே நேரத்தில் நடுத்தர விவசாயிகளுக்கு 2 அல்லது 1 கூட இல்லாத நிலைமை இருக்கிறது. அதற்கு ஒரு காரணம் சொல்லக்கூடும். அதாவது தனிப்பட்ட கம்பெனிகள் நடத்தியதால் அரசாங்கம் இந்த விஷயத்தில் பொறுப்பேற்க முடியாது என்று சொல்லலாம். இப்போது அரசாங்கமே இதை ஏற்றுக் கொண்டிருப்பதால் 1940 அல்லது 1945-ல் இருந்து இன்றைய வரை, மின்சாரம் சரியான முறையில் விஸ்தரிக்கப் பட்டிருக்கிறதா என்று கவனித்து, அப்படி இல்லாவிட்டால் அதற்கு ஒரு ப்ரெயாரிடி லிஸ்ட் போட்டு, சரியானபடி விஸ்தரிக்க நடவடிக்கை உடனடியாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மின்சார கம்பெனியில் மின்சாரம் 30 ஆயிரம் கிலோவாட் அதிகமாக விஸ்தரிக்கப்படுகிற நிலைமை ஏற்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நேரத்திலே, சென்ற ஆண்டிலே 1,300 கிராமங்களுக்கு மின்சாரம் விஸ்தரிக்கப்பட்டதாகவும், இந்த ஆண்டிலேயும் அதே மாதிரி விஸ்தரிப்பதற்கு நிதி ஒதுக்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதோடு ஒரு சந்தேகத்தையும் தெரிவித்திருக்கிறார்கள். சிமெண்ட், எஃகு இவைகள் கிடைக்காத காரணத்தால் ஒரு வேளை அந்த அளவுக்கு விஸ்தரிப்பதற்கு முடியாமல் போகலாம் என்றும் கூறுகிறார்கள். குந்தா திட்டம் வெற்றி பெறும் என்ற உறுதியையும் தந்திருக்கிறார்கள். ஒவ்வொரு இடத்திலும் சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையை காட்டுகிற போதிலும், பின் தங்கிய மாவட்டங்களுக்கு மின்சாரம் விஸ்தரிக்கப்படவேண்டும்.

கனம் அங்கத்தினர் குழந்தை அம்மாள் குறிப்பிட்டபடி, இரவு நேரத்திலே இந்த மின்சாரம் விவசாயத்திற்கு கொடுக்கப்படும் காரணத்தால், தண்ணீரைக்கட்ட போகிறபோது பாம்பு கடித்து சாகிற நிலைமை எங்கள் பகுதியிலும் இருக்கிறது. அந்த நிலையிலே அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். தண்ணீர் கட்டுகிறபோது சில இடங்களில் உடைப்பு எடுத்தால் அதைப் பார்க்க வேண்டிய நேரத்திலே அவர்களிடத்தில் போதுமான டார்ச் லைட் இல்லாத காரணத்தால் அவர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். இரவில் மின்சாரம் கொடுப்பதற்கு பதில் பகல் காலத்தில் வழங்குவதற்கு வசதி செய்து தரவேண்டுமென்று இந்த நேரத்திலே சொல்ல விரும்புகிறேன். ஆகவே விவசாயத்துறையில் கவனம் செலுத்த வேண்டியது மிகவும் அவசியம். கள்ளக்குறிச்சி தாலூகாவிலும், விருத்தாசலம் தாலூகாவிலும் மின்சாரத்தை விஸ்தரிக்க வேண்டும். விருத்தாசலம் தாலூகா பெண்ணாடம் கிராமத்திலும் மின்சாரம் விஸ்தரிக்க வேண்டும். இதற்கு திட்டம் தீட்டியிருக்கிறார்கள். அந்த திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கூறி என் வார்த்தைகளை நிறுத்திக் கொள்கிறேன்.

**Sri V. K. KOTHANDARAMAN** : கனம் தலைவர் அவர்களே, எலெக்டிரிஸிடி அபிவிருத்தி அடைந்து வருவதைக் கண்டு வரவேற்பதுடன், அதில் இருக்கக்கூடிய குறைபாடுகளை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இப்போது எலெக்டிரிஸிடி குறிப்பாக விவசாயிகளிலே பெரும்பாலோரால் உபயோகப்படுத்தப்படகூடிய அளவுக்கு உதவிகரமாக இருக்கிறது. ஏற்கனவே பல கம்பெனிகள் இந்த உற்பத்தி சப்ளையில் ஈடுபட்டிருந்தன. இப்போதும் பல இடங்களில் கம்பெனியார் இதை நடத்தி வருகிறார்கள். அவர்கள் பம்பு செட்டுக்காக ஒரு ஹார்ஸ் பவர் ரூபாய் 30-ம் அதிக பக்ஷம் 2, 3 அல்லது 5 வருஷம் வரையில் ஒரு அக்ரிமெண்டும் செய்வார்கள். ஆனல் சர்க்கார் கைக்கு இது வந்த பிறகு 10 வருஷம் வரையில் அக்ரிமெண்டு செய்யப்படுகிறது. ஒரு ஹார்ஸ் பவருக்கு ரூபாய் 50 ஆக கொடுக்க வேண்டும். ஒரு விவசாயி 5 ஹார்ஸ் பவர் செட்டு வைத்திருந்தால், கரண்டை உபயோகப்படுத்தினாலும் சரி, உபயோகப்படுத்தாவிட்டாலும் சரி கண்டிப்பாக ரூ. 250 கொடுத்து விடவேண்டும் என்ற நிலைமை இப்போது இருக்கிறது. அந்த நிலைமை இருக்குமேயானல், இன்றைக்கு வசதியிருக்கக்கூடிய விவசாயிகள், பணக்

[Sri V. K. Kothandaraman] [11th July 1957

படைத்தவர்கள், நல்ல முறையிலே உபயோகப்படுத்த முடியுமே தவிர இரண்டு, மூன்று ஏக்கர் உள்ள சிறு நில விவசாயிகள் பயன்படுத்த முடியாது. அப்படிச் செய்வதால் சிறு நில சொந்தக்காரர்கள் நிலத்தை இழக்கக்கூடிய நிலையில்தான் இருக்கிறார்கள். ஆகையால் எந்த அளவுக்கு கரண்டு உபயோகப்படுத்தப்படுகிறதோ அந்த அளவுக்கு சார்ஜ் கொடுக்க வேண்டும், வசூல் செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக வட ஆற்காடு ஜில்லாவில் ஒரு மாதத்தில் முன்னால் கலெக்டர் ஆபீஸில் நடந்த சிறு நில சொந்தக்காரர்கள் மகாநாட்டில் வந்து இருந்த ஜில்லாவில் இருக்கக்கூடிய எல்லா எம். எல். ஏ-க்கள், எம்.பி-க்கள், எம்.எல்.சி-க்கள் எல்லோருமே ஏகோபித்த முறையில் எந்த அளவுக்கு மின்சாரம் உபயோகப்படுத்தப்படுகிறதோ அந்த அளவுக்கே சார்ஜ் வசூல் செய்ய வேண்டும் என்ற சட்டம் கொண்டுவர வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டது. அதே போல்தான் நான் இந்த சபையிலே இந்த சந்தர்ப்பத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த டிபார்ட்மெண்டிலே ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கை 1946-ல் சமர்ப்பிக்கப்பட்டது. 1948-ல் வீடு கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுகிறது என்ற பதில் சர்க்காரிடமிருந்து வந்து இருக்கிறது. 1949-ல் இதை அதிக விரைவிலே, துரிதமாக நடத்துவதற்கு உத்தரவு போட்டிருந்தும், பத்து வருஷங்கள் ஆகியும் கூட வீடு கட்டிக் கொடுக்கப்படவில்லை. அதன் காரணமாக அவர்கள் வேலை நிறுத்த நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். அதை உடனடியாக தீர்த்து வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும், தனிப்பட்டவர்கள் நடத்தும் டிபார்ட்மெண்டுகளையும், லோகல் போர்டுகள் சார்பில் இருக்கக்கூடிய டிபார்ட்மெண்டுகளையும் வெகு விரைவில் சர்க்கார் எடுத்துக் கொள்ளப் போவதாக தெரிகிறது. இந்த சந்தர்ப்பத்திலே இதுபற்றி என் அபிப்பிராயத்தை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தனிப்பட்டவர்களுடைய கம்பெனிகளை வேண்டுமானால் சர்க்கார் எடுத்துக் கொள்ளட்டும். நகர சபை சார்பிலே இன்றைய தினம் நடந்து வரும் டிபார்ட்மெண்டுகளை சர்க்கார் கண்டிப்பாக எடுக்காமல் இருப்பது நல்லது. ஏன் என்றால் நகர சபைகளில் பொருளாதார நெருக்கடி இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். சர்க்கார் இடத்திலே கேட்டாலும் அவர்கள் உதவக்கூடிய நிலையில் இல்லை என்பதும் எல்லோருக்கும் தெரியும். இந்த நிலையிலே எலெக்டிரிஸிடி நகர சபை சார்பிலேயே இருக்குமானால் அவர்களுக்கு அது நல்ல உதவியாக இருக்கும். இதிலிருந்து வரும் பணத்தைக் கொண்டு அவர்களுடைய நிதி நிலையை சரிகட்டிக் கொள்ளலாம். ஆகவே நகர சபைகளே இவைகளை நடத்தும்படி விட்டுவிடுவது மிகவும் நலமாக இருக்கும் என்பதை வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தொழில் சாலைகளில் உபயோகப்படுத்தக்கூடிய கரண்டு குறைந்த சார்சுக்கு கொடுக்கப்படுகிறது. விவசாயிகள் உபயோகப்படுத்தக்கூடிய கரண்டுக்கு அதிக சார்ஜ் விதிக்கப்படுகிறது. மிக மிக முக்கியமான காரியம் உணவு உற்பத்தியை பெருக்க வேண்டியது. இந்த உணவு உற்பத்தியில் ஈடுபட்டிருக்கக்கூடிய விவசாயிகளுக்கு தொழில்சாலைகளுக்கு விதிக்கப்படுவதைவிட அதிகப்படி சார்ஜ் செய்வதால் அவர்கள் பெரிய அளவுக்கு பாதிக்கப்படுகிறார்கள். தொழில்சாலைகளுக்கு சார்ஜ் செய்வதை விட குறைக்காவிட்டாலும், அவர்களிடமிருந்து எந்த அளவுக்கு வசூல் செய்யப்படுகிறதோ அந்த அளவுக்காவது விவசாயிகளிடமிருந்து வசூலிக்கும் சார்ஜைக் குறைக்கவேண்டும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இதோடு பொது மக்கள் வீடுகளில் உபயோகப்படுத்தும் கரண்டுக்கும் குறைந்த பக்ஷ சார்ஜ் விதிக்க வேண்டும் என்றும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அவர்களுக்கு விதிக்கப்படும் சார்ஜ் அதிகப்படி இல்லை என்று சொல்லலாம். அப்படி சொன்னாலும், நீண்ட நாளாக வசூலிக்கப்படும் இந்த அதிகப்படி சார்ஜை நியாயமான முறையிலே திருத்தும்படி செய்யவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்திலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

11th July 1957] [Sri V. K. Kothandaraman]

இந்த முறையிலே, விவசாயிகள் உபயோகப்படுத்தினலும் உபயோகப் படுத்தாவிட்டாலும் விதிக்கக்கூடிய சார்ஜை போக்கி எந்த அளவுக்கு உபயோகிக்கிருர்களோ அந்த அளவுக்கு மட்டும் சார்ஜ் செய்யவேண்டும். இந்த அளவுக்கு இப்போது இருக்கும் முறையை மாற்றி அமைக்க வேண்டும். அதே போல எலக்டிரிஸிடி டிபார்ட்மெண்டுகளிலே வேலே செய்யக் கூடிய சிப்பந்திகளுடைய நியாயமான கோரிக்கைகளை உடனடியாக தீர்த்து வைக்கவேண்டும். அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதாக கொடுத்த வாக்குறுதியையும் உடனடியாக நிறைவேற்றி அவர்களுக்கு வீடு வசதியை செய்து கொடுக்கவேண்டும்மென்று சொல்லிக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

SRI T. M. NALLASWAMI : அவைத் தலைவர் அவர்களே, இந்த 11.17 a.m. மான்ய கோரிக்கையின் பேரில் எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் கொண்டு வந்துள்ள பிரரேரேனகளை எதிர்த்துப் பேசும் முகத்தான் என்னுடைய சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். மின்சார இலாகா மிகவும் நல்ல முறையிலேபணியாற்றி வருகிற இலாக்காக்களில் ஒன்று. ஐந்தாண்டு திட்டத்தின் பயனுகவும், சமீபத்தில் எடுத்துக் கொண்டிருக்கும் திட்டங்களின் பயனுக நாட்டுக்கு இன்றியமையாததாக இருக்கும் மின்சாரம் அதிகப்படியாக உற்பத்தியாகி வினியோகிக்கப்பட்டு வருவதை யாரும் மறுக்க முடியாது. இதே சமயத்தில் ஹைட்ரோ எலெக்டிரிக் சிஸ்டங்களை மட்டும் நம்பாமல் நெய்வேலி போன்ற இடங்களில் தெர்மல் சிஸ்டங்களையும் அதிகப்படியாக ஆதரித்து வருவது பாராட்டத்தக்கது. ஹைட்ரோ எலெக்டிரிக் சிஸ்டங்களை நம்பினல் தண்ணீர் இல்லாத சமயங்களில் சமீபத்தில் ஏற்பட்டது போல் மின்சார வெட்டு ஏற்பட்டு, விவசாயம் பாதிக்கப்படலாம். இதை மனதில் கொண்டு தெர்மல் ஸ்டேஷன்களை நிறுவ திட்டமிட்டிருப்பது பாராட்டத்தக்கது. கிர்டு சிஸ்டம் என்று சொல்லப்படும் அதாவது எல்லா உற்பத்தி நிலையங்களையும் ஒன்ருக இணைத்து, தண்ணீர் இல்லாத காரணத்தால் மின்சார உற்பத்திக் குறைவு ஏற்படும் இடங்களுக்கும் மின்சாரம் கொடுக்க ஏற்பாடு செய்வது மிகவும் போற்றத்தக்க நிலையில் அமைந்து இருக்கிறது. நல்ல திட்டங்களின் மூலமாக அதிகப்படியான மின்சார உற்பத்திக்கு வழி வகை செய்து கொண்டு இருந்தாலும், இந்த இலாகா இன்னும் சிறந்த முறையில் இயங்க சில ஆலோசனைகளை மேற்கொண்டு அதன்படி நடக்க வேண்டியிருக்கிறது. இந்த மின்சார விஸ்தரிப்பில் இருக்கும் சிரமங்களை பொது மக்களின் வாயிலாக தெரிந்து கொண்டதை எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். மற்ற நாடுகளில் இருக்கக்கூடியதைவிட நம் நாட்டில் மின்சாரக் கட்டணம் மிகவும் அதிகமாக அமைந்திருக்கிறது என்று சில அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். அதிலும் குறிப்பாக விவசாயிகள் செலுத்தும் அதிகப் 11–20 a.m. படியான கட்டணம் சரி இல்லை என்பதை ஓர் அளவுக்கு ஒப்புக் கொள்ளத் தான் வேண்டியிருக்கிறது. கூடுமானவரையில் விவசாயிகளுக்கு குறைந்த பட்ச கட்டணத்தில் மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற யோசனையை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அடுத்தபடியாக ஒரு புதிய திட்டத்தினல் 10 சதவிகிதம் ரிடர்ன் இருக்க வேண்டும் என்று சர்க்கார் நிர்ணயித்து இருக்கிருர்கள். இந்த 10 சத விகிதம் ரிடர்ன் இருந்தால்தான் " டாரிப் காரண்டி"க்கு மாற்ற முடியும். அப்படி இல்லாவிட்டால் " ஸ்பெஷல் காரண்டி"யாக இருக்கவேண்டும் என்ற நிபந்தனை இருந்தது. இப்போது 20 சதவிகிதம் 'ரிடர்ன்' இருக்கவேண்டும் என்று மாற்றி இருப்பதாக தெரிய வருகிறது. இந்த நிலை உண்மையாகவே விவசாயிகளை பாதிக்கக்கூடியதாக இருக்கிறது என்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதோடு " அன்கனெக்டட் மினிமம்" அதாவது மின்சாரம் வேண்டும் என்று ஒரு விவசாயி எழுதிக் கொடுத்து விட்டு, குறிப்பிட்ட காலத்திற்குள் சப்ளை எடுத்துக் கொள்ள தவறி விட்டால் " அன்கனெக்டட் மினிமம் " கட்ட வேண்டிய நிலையில் அந்த விவசாயி இருக்கின்ருன். " அன்கனெக்டட் மினிமம் " கட்டக்கூடிய நிலையில் இருக்கக்கூடிய விவசாயியின் குறைகளை ஆராய்ச்சி செய்து பார்க்க வேண்டும். போதிய அளவு பண வசதி இல்லாத காரணத்தால் மோட்டார் வாங்க முடிவதில்லை. அல்லது போதிய வசதி சர்க்காரிடமிருந்து

பெற மனு போட்டு அதனால் கால தாமதம் ஏற்பட்டு " அன்கனெக்டட் மினிமம் " கட்ட வேண்டிய நிலையில் விவசாயிகள் இருக்கிறார்கள். ஏழ்மை நிலையிலிருக்கும் விவசாயிகள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் சப்ளை எடுத்துக் கொள்ளவில்லை என்ற காரணத்தால் " அன்கனெக்டட் மினிமம் " கட்ட வேண்டியிருப்பது வருந்தத்தக்கதாக இருக்கிறது. இதை தவிர்க்க வேண்டும். வேண்டுமானால் ரூ. 180 அல்லது 200 என்ற ஒரு டிபாஸிட் முறையை ஏற்படுத்தி சப்ளை செய்வதை நிர்ணயிக்க வேண்டும். டிபாஸிட் கட்டினவர்கள் சப்ளை எடுத்துக் கொள்ளா விட்டால் டிபாசிட் தொகையை இழக்க வேண்டும் என்ற முறையை ஏற்படுத்தலாம்.

(Srimathi Savithri Shanmugham in the Chair.)

மின்சார இலாகாவில் சப்ளை செய்யக்கூடிய அதிகாரம் தனியாக ஒரு இடத்தில் குவிந்து இருக்கிறது. எதாவது உத்திரவு வேண்டும் என்றால் " சீப் என்ஜினியருக்கோ " அல்லது சர்க்காருக்கோ வர வேண்டிய நிலை இப்பொழுது இருக்கிறது. இப்போது புதிய போர்டு அமைக்கும் சந்தர்ப்பத்தில் அவைகளை மாற்றி ஆங்காங்கு சீக்கிரமாக குறைகளை தீர்க்கக் கூடிய அளவுக்கு அதிகாரத்தை பிரித்து வழங்கினால் பாராட்டத்தக்கதாக இருக்கும். நடைமுறையில் அவை வசதியாக இருக்கும். ஒவ்வொரு சாங்கிஷனுக்கும் " சீப் என்ஜினியருக்கோ " சர்க்காருக்கோ அல்லது எலக்டிரிசிடி போர்டுக்கோ வர வேண்டுமானால் வீண் காலதாமதமாகி விடும். இந்த குறைகளை தடுப்பதற்கு வேண்டிய வழிகளை செய்ய வேண்டும் என்று இந்த போர்டு அமைக்கக் கூடிய சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த எலக்டிரிசிடி போர்டின் தலைவராக பி. டபிள்யூ. டி. செக்ரடிரியை போடப்பட்டு இருக்கிறது. இந்த போர்டின் தலைவராக மின்சார இலாகா மந்திரி இருக்கும்படி வழிவகை செய்தால் நன்றாக அமைந்திருக்கும் என்று நான் நினைக்கிறேன். ஏனென்றால் உண்மையில் பொது ஜனங்களின் கஷ்ட நஷ்டங்களை தெரிந்து கொள்ள பொது ஜனப் பிரதிநிதியாக இருக்கக்கூடிய அமைச்சர் அவர்களுக்கு முடியும். அதிகார வர்க்கத்திலுள்ளவர்களுக்கு தெரிந்து கொள்வது முடியாது என்ற ஒரே காரணத்தால்தான் இந்த யோசனையை நான் சொல்லுகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இது சட்டத்துக்கு விரோதமாக இருக்கும்.

SRI T. M. NALLASWAMI : நம்முடைய ஆலோசனைகளையும் முடிவுகளையும் மத்திய சர்க்காருக்கு தெரிவித்து தகுந்த மாறுதல்களை செய்யலாம். சட்ட சபை அங்கத்தினர்கள் கொண்ட ஆலோசனை குழு ஏற்படுத்தினால் மிகவும் நல்லதாக இருக்கும். ஆங்காங்கு இருக்கக்கூடிய குறைகளையெல்லாம் தெரிவிப்பதற்கு இந்த குழுவிற்கு அதிகமாக வாய்ப்பு இருக்கும். அன்றாட நிர்வாகத்தில் இருக்கும் குறைகளை குழந்தை அம்மாள் குறிப்பிட்டார்கள். அது உண்மைதான். ஆகையால் விவசாயத்துக்கு மின்சாரம் சப்ளை செய்யும் விஷயத்தில் இரவு நேரத்தில் ஒரு ஷிப்டு பகல் காலத்தில் ஒரு ஷிப்டு என்று இரண்டு ஷிப்டாக இருப்பதை மாற்றி பகல் நேரத்தை இரண்டு ஷிப்டாக வைத்து 6 மணிக்கு ஒரு ஷிப்டாக இருந்தால் நல்ல முறையில் இருக்கும் என்று எண்ணுகிறேன். முப்பது அல்லது 40 அடி ஆழம் உள்ள கிணற்றில் கிடைக்கும் ஊற்று தண்ணீரை பம்ப் செட்டு மூலம் இறைக்க இரண்டு ஷிப்டாக 12 மணி நேரத்தில் 6 மணி நேரத்திற்கு ஒருதரம் கரண்ட் விநியோகம் செய்வதற்கு ஏற்பாடு செய்யலாம். இம்மாதிரி ஆலோசனைகளை சொல்ல ஒரு குழு (சட்ட சபை அங்கத்தினர்களை கொண்ட) ஏற்படுத்தினால் மிகவும் நன்றாக இருக்கும், என்று சொல்லிக் கொண்டு எனக்கு ஒரு சந்தர்ப்பம் அளித்த சபாநாயகருக்கு நன்றி தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

11th July 1957]

**Sri P. VEDAMANICKAM:** கனம் தலைவி அவர்களே, இந்த மின்சார இலாகா மான்ய கோரிக்கையை நான் வரவேற்று ஆதரிக்கிறேன். தென்னாற்காடு மாவட்டம் வரண்ட ஆறுகள் உள்ள இடம். ஆகையால் நீர்பாசனம் பெரும்பாலும் கிணறுகளால்தான், விசேஷமாக கவலை, ஏற்றம், ஆயில் மிஷின் இவைகளினால்தான் தண்ணீர் பாய்ச்சப்படுகிறது. இதனால் அங்குள்ள விவசாயிகள் அதிக செலவு செய்து கஷ்டப்படுகிறார்கள். தென்னாற்காடு மாவட்டத்தில் சில காலமாக மின்சார விநியோகம் ஒரு கம்பெனியின் கீழ் இருந்தது. 1–6–57 முதல் அதை மின்சார போர்டு எடுத்துக் கொண்டு விட்டது. தென்னாற்காடு மாவட்டத்தில் குறிப்பாக கள்ளக் குறிச்சி, விருத்தாசலம், செஞ்சி மாவட்டங்களில் மின்சார விஸ்தரிப்பு செய்வது மிகவும் அவசியம். நல்லூர் போன்ற கிராமங்களில் இருக்கும் வாசிகளுக்கு மின்சாரம் என்ன என்று கூட தெரியாது. நடை முறை ஆண்டில் அங்கெல்லாம் மின்சாரம் விஸ்தரிக்க வேண்டும். திட்டக்குடி பெண்ணாடம் போன்ற இடங்களில் விவசாயிகள் மிகவும் கஷ்டத்துக்குள்ளாகிறார்கள். ஆகையால் நடை முறை ஆண்டில், நல்லூர் போன்ற இடங்களில் மின்சாரம் விஸ்தரிப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். 11.26 a.m.

**Sri N. R. THIAGARAJAN:** தலைவி அவர்களே, மின்சார இலாகாவின் மின்னல் வேக சாதனைகளை பாராட்டிப்பேச ஆசைப்படுகிறேன். மின்சாரத்தின் மூலம், மற்ற எந்த தொகுதியைக் காட்டிலும் என்னுடைய தொகுதி அதிக நன்மை அடைந்திருக்கிறது. கிட்டத்தட்ட 75 சதவிகிதம் கிராமங்களுக்கு மின்சார இணைப்பு கிடைத்திருக்கிறது. இன்னும் பாக்கி 25 சத விகித கிராமங்கள்தான், மின்சார இணைப்பு இல்லாமல் இருக்கிறது. இந்த 25 சதவிகித கிராமங்களில் உள்ளவர்களும் மின்சார இணைப்புக்காக மிக வேகமாக பாடுபட்டு தங்களாலான முயற்சிகளை செய்து கொண்டு வருகிறார்கள். அரசாங்கத்துக்கு மனுப் போட்டுக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கும் சீக்கிரம் இந்த வசதி கிடைக்குமாறு ஏற்பாடு செய்ய வேண்டும். சில இடங்களில் மின்சாரத்தினால் தண்ணீர் இரைப்பதை பார்த்து, பக்கத்தில் கவலையினால் தண்ணீர் இரைத்துக் கொண்டிருக்கும் மாடுகள், விவசாயியைப் பார்த்து ஏளனமாக "அதோ பார், அண்டை ஊர் வாசி இயந்திரத்தின் மூலமாக தண்ணீர் இறைத்துக் கொண்டிருக்கிறான். நீயோ என்னை தொந்தரவு செய்து கொண்டிருக்கிறாய்" என்று கேட்பதுபோல இருக்கிறது என்று விவசாயிகள் சொல்லுகிறார்கள். ஆகையால் எல்லா கிராமங்களுக்கும் சீக்கிரமாக மின்சார இணைப்பு கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். 11-30 a.m.

கோயமுத்தூர் ஜில்லாவைப் போன்று என்னுடைய தொகுதியிலும் 100, 120 அடி ஆழம் தோண்டினால்தான் கிணறுகளில் தண்ணீர் வருகின்றது. அப்படி இருக்கும் கிணறுகளிலிருந்து தண்ணீர் இறைப்பது கஷ்டம். சில சமயங்களில் கிணற்றில் தண்ணீர் இல்லாமலும் போய்விடுகிறது. அத்தகைய சமயங்களில் 'சார்ஜ்' வசூலிக்கப்படுவதை விவசாய பெருமக்கள் எதிர்க்கிறார்கள். தண்ணீர் எப்பொழுது கிணறுகளில் இருக்கிறதோ அப்பொழுதுதான் 'சார்ஜ்' வசூலிக்க வேண்டும். மற்ற நாட்களில் "மினிமம் சார்ஜ்" கட்டுவதை நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறார்கள்.

இன்னும் சில இடங்களில் மின்சாார 'கனெக்ஷன்' கிடைக்கிறது. ஆனால், பம்பு செட்டுகள் கிடைக்காமல் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, பம்பு செட்டுகள் வாங்கிக்கொள்வதற்கும் அரசாங்கம் கடன் கொடுக்கவேண்டும். இல்லையென்றால், விவசாயிகள் பணம்சேர்த்து பம்பு செட்டு வாங்கும் வரையாவது. "மினிமம் சார்ஜ்" வசூலிக்காமல் விட்டு விடுவதுதான் நல்லது என்று மற்ற அங்கத்தினர்கள் கூறிய அபிப்பிராயத்தை நானும் ஆதரிக்கிறேன்.

மின்சார இலாகா வெகு அற்புதமான காரியங்களைச் சாதித்திருக்கிறது என்று நான் கூறுவேன். இந்தியாவிலேயே வேறு எந்த மாகாணத்தைக் காட்டிலும் சென்னை மாகாணம்—மின்சார இலாகாவில்—சிறப்பான

[Sri N. R. Thiagarajan] [11th July 1957

சேவை செய்து வருகிறது என்று நாம் தைரியமாகச் சொல்லலாம். பல இடங்களில் இன்னும் குறை இருந்தாலுங்கூட, மற்ற நாடுகளைப் பார்த்தால் நம் நாட்டில் நாம் அதிகமாக வேலை செய்திருக்கிறோம்—மின்சார இலாகாவைப் பொருந்த வரையில். அமெரிக்க நாட்டில் ஜனாதிபதி பதவிக்கு ஒருவர் போட்டியிடும்போது, "எனக்கு வோட்டுப் போட்டால் நாங்கள் எல்லா ஊர்களுக்கும் மின்சாரத்தை அதிகமாகக் கொண்டுவருவோம்" என்று சொன்னாராம். ஆகவே, குபேர நாடு என்று சொல்லப்படும் அமெரிக்க நாட்டிலேயே மின்சார இணைப்பு இல்லாத கிராமங்கள் இருக்கும்போது, பின்தங்கிய நாடாக உள்ள நம் நாட்டிலே அவ்வளவு சீக்கிரமாக எல்லா ஊர்களுக்கும் மின்சாரம் கொடுக்க முடியும் என்று கூற முடியாது. என்றாலும், எவ்வளவு முடியுமோ அவ்வளவு செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டு என்னுடைய சிற்றுரையை முடித்துக் கொள்ளுகின்றேன்.

11-32 a.m. * SRI V. SUBBIAH : கனம் தலைவி அவர்களே, எனக்குமுன் பேசிய நண்பர்கள் 'மினிமம் சார்ஜ்' வசூலிக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டுமென்று எல்லோரும் ஏகோபித்த நிலையில் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அது மிக முக்கியம். எங்கள் திருநெல்வேலி ஜில்லாவில் வட பகுதியிலே சங்கரன்கோயில், கோவில்பட்டி தாலூகாக்களில், குறிப்பாக விளாத்திக்குளம் பகுதியிலே மின்சாரம் இன்னும் கிடைக்கவில்லை. அங்கே மின்சாரம் விஸ்தரிக்கப்படவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, இன்று மின்சாரத்தில் என்ன கஷ்டம் இருக்கிறதென்று சொன்னால், சிறு விவசாயிகளும் நடுத்தர விவசாயிகளும் ரொம்பவும் பாதிக்கப்படுகிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. இதிலுள்ள கஷ்டம் என்னவென்றால், என்றைக்கு விவசாயிகள் அக்ரிமெண்டில் கையெழுத்திடுகிறார்களோ அன்று முதல்—பத்து வருஷ அக்ரிமெண்ட் என்று இருந்தால்—மின்சாரத்திற்காக கட்டணம் வசூலிக்கப்படுகிறது. என்றைக்கு மின்சாரம் சப்ளை செய்யப்படுகிறதோ அன்றிலிருந்து பத்து வருஷம் என்று அக்ரிமெண்ட் இருந்தால்தான் பொருத்தமாக இருக்கமுடியும். அதுதான் தகராறு. மின்சார இலாகாவைப் பற்றி குறை விவசாயிகளுக்கு இதுதான். வேறு ஒன்றுமில்லை. அந்த விதியைத் திருத்தியிருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும்.

'மினிமம் சார்ஜ்' தான் வசூலிக்கிறோம் என்று சொன்னாலும், இடையிலே வசூலிக்கும் 'சார்ஜ்' தான் ஜாஸ்தியாக இருக்கிறது. குறைந்தப் பட்ச கட்டணத்தில் விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுக்கப்படுகிறது என்று சொல்கிறார்களே தவிர, அத்துடன் சர்சார்ஜ், மீட்டர் சார்ஜ் போன்ற பல சார்ஜுகளுக்காக கட்டணம் விதித்து, யூனிட்டுக்கு கிட்டத்தட்ட ஒன்றரை அணா என்ற அளவுக்குக் கூட வந்துவிடுகிறது. அதனால், கிராமப் பகுதிகளிலே சின்ன விவசாயிகளாயிருக்கக்கூடியவர்களுக்கு பாதகம் ஏற்படுகிறது. ஆகவே, விவசாயத்தைப் பொறுத்தவரையில், முக்கியமாக உணவு உற்பத்தியைப் பெருக்குகிறார்கள் என்ற காரணத்திற்காக, அவர்களுக்கு மிகுந்த சலுகை காட்ட வேண்டும் என்பதை அமைச்சர் அவர்கள் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

மேலும், கிராமப்பகுதிகளிலே இன்றையதினம் குடிசைத் தொழில் போன்ற கைத்தொழில்களை அங்கு ஆரம்பிப்பார்களானால், அவைகளுக்கும் விவசாயக் காரியங்களுக்கும் கூட்டாக மின்சாரம் உபயோகப்படுமானால் அவைகளுக்கும் சலுகை அளிக்கவேண்டும்.

அடுத்தபடியாக, பலவருஷங்களாக தொடர்ச்சியாக மின்சார வெட்டு ஏற்படுவதை நீக்கவேண்டுமென்றால், இன்னும் பெரிய திட்டங்களுக்கு வழி செய்ய வேண்டும். குறிப்பாக மேற்குத்தொடர்ச்சி மலையிலிருந்து உற்பத்தியாகும் ஜீவநதிகளை மின்சாரத்திற்கும் பாசனத்திற்கும் உபயோகப்படுத்த அரசாங்கம் திட்டம் வகுத்து வேலை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

11th July 1957] [Sri V. Subbiah]

மேலும், விவசாயிகள் தங்கள் தங்களுடைய கிராமங்களுக்கு மின்சாரம் விஸ்தரிக்கப்படவேண்டுமென்று கேட்டால், அது கிடைப்பதற்குப் பல வருஷங்கள் கடந்து போகின்றன. அம்மாதிரி கோரிக்கைகளை யெல்லாம் சீக்கிரமாகக்கவனித்து, எந்த எந்த கிராமத்திற்கு மின்சாரம் அவசியம் என்று கேட்கிறார்களோ, அங்கெல்லாம் உடனடியாக வேலை செய்ய வேண்டுமென்று உத்தரவிடவேண்டும்.

உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யும்போது, இரவுக் காலங்களிலே மின்சாரத்தை உபயோகிப்பது தவறு என்று பலர் பேசினார்கள். நகரங்களிலுள்ள மில்கள், சினிமாக்கள் போன்றவைகளுக்கு இரவு நேரத்தில் கொடுத்துவிட்டு, பகல் காலங்களில் விவசாயத்திற்காக மின்சாரம் உபயோகிக்கக் கூடிய நிலையை ஏற்படுத்தவேண்டும்.

மின்சார இலாகா ஊழியர்கள், தங்களுக்கு சம்பளக் குறைவு என்ற நிலையிலே தமிழ் நாடு பூராவும் அவர்கள் இருக்கக்கூடிய நிலையை மாற்றி அமைக்கவேண்டும். மேலும், மின்சார இலாகாவிலே வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு ஏதாவது அபாயம் ஏற்பட்டால் அந்தத் தொழிலாளியின் குடும்பத்தினருக்கு, குடும்பத்தின் பொருளாதார நிலையை அனுசரித்து நல்ல முறையிலே நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், சின்ன விவசாயிகளைப் பொறுத்த வரையில் மின்சாரம் வழங்கும் விஷயத்தில் பொருத்தமான ஒரு ஏற்பாடு அமையவேண்டும். மின்சார சாமான்கள், மின்சார மோட்டார்கள் போன்றவைகளை விவசாயிகள் வாங்குவதற்கு அரசாங்கம் கடன் கொடுத்து உதவவேண்டும். இந்தப் பொருள்களை விவசாயிகள் தாங்களாகவே வாங்கிக் கொள்ளச் செய்வது தான் உசிதம். அரசாங்க உத்தியோகஸ்தர்கள் மூலமாக, மின்சார இலாகா மூலமாக வாங்கச் செய்வது விவசாயிகளுக்கு பெரும் சுமையாக அமைகின்றது என்பதையும் இந்த சமயத்தில் அமைச்சர் அவர்களுக்கு ஞாபகப் படுத்த விரும்புகிறேன். மேற்கூறியவைகளை யெல்லாம் அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்சிற்றுரையை முடித்துக் கொள்ளுகின்றேன்.

**SRI K. S. SUBRAMANIA GOUNDAR :** கனம் தலைவி அவர்களே, 11-36 a.m.
நம்முடைய ராஜ்யத்திலே மற்ற எல்லா ராஜ்யங்களையும் விட மின்சாரம் நல்ல முறையிலே விருத்தி அடைந்து வருகிறது. அந்த வகையில் மின்சார இலாகா நல்ல முறையிலே ஏற்பாடு செய்து வருகின்றார்கள் என்று சொல்ல நான் பெருமைப்படுகின்றேன்.

குறிப்பாக, மின்சார இலாகா அமைச்சர் அவர்கள் இந்த இலாகாவிலுள்ள கஷ்டங்களைப் புரிந்து, அதிலே ஒவ்வொன்றுக்கும் நல்ல முறையிலே தீர்வுகாணவேண்டும் என்ற முறையிலே அவர்கள் ஏற்பாடு செய்து வருவது உண்மையிலே போற்றத்தக்க விஷயம்.

இப்பொழுது மின்சார போர்டு அமைத்திருக்கிறார்கள். அதிலே, எல்லோரும் உத்தியோகஸ்தர்களாக இருக்கக் கூடிய காரணத்தால், உடனடியாக உத்தியோகப் பற்று இல்லாதவர்களைக் கொண்டு ஒரு ஆலோசனை போர்டு (Non-Official Advisory Board) ஒன்றை ஏற்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

"மினிமம் காரண்டி" என்பதைப்பற்றி எல்லோரும் பேசினார்கள். ஒரு குதிரை வேகத்திற்கு 50 ரூபாய் என்று இருக்கிறது. மேலும், பத்து வருஷங்களுக்கு என்று "அக்ரிமெண்ட்" எழுதி வாங்குகிறார்கள். ஏழு வருஷங்களுக்கு முன்பு, பரீட்சார்த்தமாக சில காலங்களில் இரண்டு வருஷத்திற்கு மாத்திரம் "மினிமம் காரண்டி" வாங்கினார்கள் என்பதை அமைச்சர் அவர்களுக்கு நான் ஞாபகமூட்ட விரும்புகிறேன். "பத்து வருஷம்" என்று இருப்பதை இரண்டு அல்லது மூன்று வருஷத்திற்கு மாத்திரம் "மினிமம் காரண்டி" என்று செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

[Sri K. S. Subramania Goundar] [11th July 1957

அடுத்தபடியாக, காரண்டி வாங்குவதிலே, மொத்தத்திலே ஒரு " ஸ்கீம்" எடுத்த மாதத்திலே எவ்வளவு செலவாகிறது என்று குறிப்பிட்டு, அதிலே லாப நஷ்டத்தைக் கணக்குப் பார்ப்பது இல்லை. மொத்தத்திலே ஒவ்வொரு கிணற்றுக்கும் என்ன ஆகிறது என்று டிபார்ட்மெண்டார் இப்பொழுது கணக்கு எடுக்கிறார்கள். இரண்டு வருஷத்திற்கு ஒரு முறை மொத்தத்திலே அந்த ஸ்கீம் லாபமாக வேலை செய்திருக்கிறதா நஷ்டத்தில் வேலை செய்திருக்கிறதா என்று பார்த்தால், கண்டிப்பாக அந்த ஸ்கீம் நஷ்டத்திலே வேலை செய்யவில்லை என்பதை அரசாங்கம் நிச்சயமாக உணருவார்கள். அதை விட்டுவிட்டு ஒவ்வொரு கிணறாக அவர்கள் கணக்கெடுத்துப் பார்ப்பார்களேயானால், அது விவசாயிகளுக்கு நஷ்டத்தில்தான் வேலை செய்யும். மினிமம் காரண்டி காரணமாக விவசாயிகளிடமிருந்து அதிகத் தொகை வாங்குவதாக இருக்கிறது. அதை விட்டுவிட்டு, இரண்டு வருஷத்திற்கு ஒரு தடவை கணக்கெடுத்து அந்தத் திட்டம் லாபத்திலே வேலை செய்திருந்தால் மினிமம் காரண்டி வாங்குவதை விட்டுவிடலாம் என்று நான் யோசனை கூற விரும்புகிறேன்.

இன்னும் விவசாயத்திற்காக 'ஸ்டாக்கரிங்' எடுக்காமல் இருப்பது உண்மையில் வருந்தத்தக்கது. அதை சீக்கிரத்திலே எடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

முதலிலே வைக்கக்கூடிய கிணறுகளுக்கு 50 ரூபாய் மினிமம் காரண்டி என்று வைத்தாலும், பின்னால் வைக்கக் கூடிய கிணறுகளுக்கும் 50 ரூபாய் மினிமம் காரண்டி கொடுக்கவேண்டுமென்று சொல்வது அரசாங்கத்தினுடைய கணக்குக்கே அது உகந்தது அல்ல என்று நான் சொல்ல விரும்புகிறேன். மொத்தத்திலே ஸ்கீம் போடும்போது, அப்பொழுது என்ன என்ன கணக்கு ஆகின்றதோ, அதை வைத்துத்தான் அவர்கள் 50 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று நிர்ணயிக்கிறார்கள். ஆனால், பின்னால் வைக்கக் கூடிய கிணறுகளுக்கு வேறு 50 ரூபாய், 40 ரூபாய் என்று வைக்க வேண்டிய அவசியம் இல்லை. அதற்கு இம்மாதிரி காரண்டி வாங்க வேண்டியதும் அவசியம் இல்லை என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

" இண்டஸ்ட்ரியல் லோட் " என்றும், " அக்ரிகல்சரல் லோட் " என்றும் தனித்தனியாக பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒரு விவசாயி தன்னுடைய கிணற்றிலே தண்ணீர் இறைத்த நேரம் போக, மற்ற நேரங்களில் 10 குதிரை வேகமுள்ள மோட்டாரை வைத்து ஒரு தொழில்வைக்கவெண்டுமென்றால் " அக்ரிகல்சரல் டாரிப் "-இலே மின்சாரம் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். அவ்வாறு சிறு தொழிலையும் விவசாயிகள் நடத்துவதற்கும் மின்சார வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன். இப்போது சாதாரணமாக நாற்பது ரூபாய், நாற்பத்தைந்து ரூபாய்க்கு முன்பு வாங்கிய ஸ்டார்டர்கள் 200 ரூபாய், 250 ரூபாய்க்குக் குறைந்து கிடைக்கவில்லை. அதே போல பத்து ரூபாய்க்கு முன்பு வாங்கப்பட்ட ஸ்விச்சுகள் எல்லாம் இப்போது எழுபது ரூபாயாக விற்கிறது. இதற்கு எல்லாம் முக்கியமான காரணம் அரசாங்கத்தின் இறக்குமதி கொள்கைதான் என்று சொல்ல வேண்டும். நான் இறக்குமதிக் கொள்கையை மாற்ற வேண்டுமென்று சொல்லாவிட்டாலும் இப்போது பம்பு செட்டுகள், மோட்டார் முதலியவைகளை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து கொண்டிருக்கிறோம். இவற்றை எக்ஸ்போர்ட், இம்போர்டு கார்ப்பரேஷன் மூலமாக இறக்குமதி செய்து யார் யார் புதியதாக பம்பு செட்டுகள் வைக்கிறார்களோ அவர்களுக்கு ஒரு கெஜட் ஆபீசர் மூலமாக விநியோகிப்பது என்றால் இப்போது விவசாயிகளுக்கு ஏற்படுகிற செலவில் மூன்று நான்கு மடங்கு குறையும். விவசாயிகளுக்கும் அனுகூலமாக இருக்குமென்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கம்பெனி ஏரியாக்களில் இன்னும் பல இடங்களுக்கு மின்சாரம் விஸ்தரிக்கப்படவில்லை. சில இடங்களுக்குத்தான், மின்சாரம் விநியோகம் செய்திருக்கிறார்கள், புதியதான இடங்களுக்கு விஸ்தரிக்க

11th July 1957] [Sri K. S. Subramania Goundar]

அவர்கள் ஏற்பாடு செய்வதில்லை. காரணம் சர்க்காரே மின்சாரக் கம்பெனியை எடுத்துக் கொண்டுவிடப் போகிறார்கள் என்று சும்மா இருக்கிறார்கள். சர்க்கார் திட்டமாக புதிய இடங்களுக்கு அவர்கள் விஸ்தரிக்க வேண்டுமென்று சொல்லிவிடவேண்டும். அவற்றுக்கு அரசாங்கமே புதிய கனெக்ஷன் கொடுப்பது என்கிற திட்டத்தை வகுத்து இப்போதிலிருந்தே அந்தத் திட்டத்தை நிறைவேற்ற ஆரம்பித்தால் மிகவும் நன்றாக இருக்கும். ஏனென்றால் அந்த கம்பெனிகள் உள்ள ஏரியாக்களில் புதிதாக விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டால் கம்பெனிக்காரர்கள் "நாங்கள் சர்க்காரிடம் கடன் கேட்டிருக்கிறோம். அது வந்தால்தான் நாங்கள் விஸ்தரிப்போம்" என்று தட்டிக்கழித்து வருகிறார்கள். இந்த இடங்களுக்கு எல்லாம் அரசாங்கம் சலுகை காட்ட இவர்களே விரைவில் அப்பிரதேசங்களுக்கு விஸ்தரிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக எங்கெங்கே கிணறுகள் ஆழமாக வெட்ட வேண்டியிருக்கிறதோ அங்கங்கேதான் மின்சார பம்பு செட்டுகள் அதிகப்பயன்படுகிறது. தண்ணீர் எடுக்க அதிக மின்சாரம் செலவழிவதானால் அரசாங்கத்திற்கும் லாபகரமாக இருக்கும். ஆகையால் அம்மாதிரி ஆழமான கிணற்றுத் தண்ணீரை இறைத்துப் பாசனம் செய்யக்கூடிய இடங்களுக்குத்தான் அதிகமான சலுகை மின்சார விஸ்தரிப்பில் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்ளுகிறேன்.

SRI K. S. G. HAJA SHERIFF: Madam, I rise to support the Demand moved by the Hon. the Minister for Electricity. I congratulate the Government on their having pushed through the various schemes in a very rapid manner during the last year. The Hon. the Minister for Finance in his budget speech stated that about 13,000 villages got electric supply and about 13,000 pump-sets were supplied during last year. It was on a rather high scale and was not expected earlier. Madam, I only wish that greater enthusiasm and energy should be put forth by the Officers during the current year also so that the various schemes which are intended for the development of agriculture and other industries may be taken advantage of by all concerned. We must wish so now, especially at a time when the whole country is embarking on a rapid programme of industrialisation and improvement of our methods of agriculture.

Madam, I find that the expenses relating to the Hydro-Electric schemes and also thermal electric schemes are rather very much and are on the high side. I am aware that we should not depend upon the Hydro-Electric schemes only and we should depend also on alternative schemes like thermal electric schemes. I find from the details of budget estimates for 1957–58, the figure given under receipts under Hydro-Electric Schemes is about Rs. 6,54,00,000 and the Expenses under the head is about Rs. 3,83,00,000. The net revenue shown under this head is therefore about Rs. 2 crores. The expenses work out to 59 per cent. But, under Thermal Electric Schemes, the net Receipt given is about Rs. 2,96,00,000 and the Expenses shown is about Rs. 2,26,00,000 and the net receipt is about Rs. 69 lakhs. The expenses thus work out to nearly 76 per cent. I do not know why so much of heavy expenditure should be incurred on Thermal Electric schemes unless something like capital expenses are being incurred. I would request the Hon. Minister, if possible, to answer this point during his reply.

Madam, it is very essential that the various schemes should be pushed through in the villages. It is not known whether all the preliminary things have been completed in the matter of giving electric supply. I would request the Hon. Minister to see that the supply is given in a most expeditious manner.

I notice that the country is spending a lot of money on importing even ordinary things required for electrification. Now, the small-scale industries are encouraged by Government by way of subsidies and things like them. I only hope that the small-scale industries would come forward to manufacture as far as possible all the materials required for the various electricity schemes, so that we can stop importing those materials from foreign countries and thus conserve our foreign exchange. Thank you very much.

**Sri P. S. ELLAPPAN** : கனம் அம்மா அவர்களே, இந்த மின்சாரம் சம்பந்தமாக எல்லோரும் அவரவர்களுடைய அபிப்பிராயத்தை அழகாகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் முக்கியமாக அந்தப் பெரியவர் சொன்னார் "விவசாயம் என்பது என்ன? மந்திரிகளுக்குச் சாப்பாட்டுக்கு அரிசி வந்துவிட்டால் போதுமா? அரிசி வருவதற்கு விவசாயத்தில் கொஞ்சம் நன்றாகக் கவனம் செலுத்த வேண்டும். விவசாயிகளுக்கு பம்பு செட்டுகள் முதலியவற்றுக்கு மின்சாரத்தைக் கொடுக்கவேண்டும்" என்பதாகவெல்லாம். அப்படிச் செய்வதுதான் மிகவும் உதவிகரமாக இருக்கும். இப்போது எல்லாம் கிராமங்களுக்குப் போய்ப் பார்த்தால் தெரியும். "அடே வெளிச்சத்தைப் பாருடா! பட்டிகாடெல்லாம் பட்டணமாப் போச்சு" என கிராம மக்கள் வெளிச்சத்தைப் பார்த்துச் சந்தோஷப் படுகிறார்கள். ஆனால் உண்மையிலேயே அவர்களுடைய ஜீவனம் உயர்வதற்கும், வெள்ளாமை அதிகப்படுவதற்கும் விவசாயத்திற்கு மின்சாரம் கொடுக்க வேண்டும். கூடவே அதற்கு வேண்டிய சாமான்கள் எல்லாவற்றையும் சர்க்காரே கொடுத்துவிட்டால்தான் விவசாயிகளுக்குக் கஷ்டம் இல்லாமல் போகும். திருப்பித் திருப்பி அறைத்தாலும் அம்மியில்தானே அறைக்கலாம்! சர்க்கார் இதைச் செய்து கொடுக்கவில்லை என்றால் மிகவும் கஷ்டம். அதுமாத்திரம் அல்ல. "ஏண்டா இந்த மின்சாரத்தை மார்வாடி வைத்திருக்கிறானா? சர்க்காரு வச்சுருக்காங்களா? சர்க்காருக்கும் இதுக்கும் எதனாச்சும் சம்பந்தம் இருக்கா?" என்று மக்கள் பேசிக் கொள்கிறார்கள். "எங்கள் ஊரில் 50 லைட்டுப் போட்டாப் போதும் என்று சொன்னா 75 லைட்டுப் போடுவதானால்தான் எங்களுக்குக் கட்டும்" என மின்சாரக்காரர்கள் சொல்கிறார்கள். "அடே 75 லைட்டுப் போடுவதானால் முதலிலே கன ஜோரா ஊர்க்காரங்க பணம் கட்டிடுவாங்க. அப்புறம் இரண்டு மாதத்திலே கம்பியை எல்லாம் நீங்க பிரிச்சுக்கிட்டுப் போகவேண்டித்தான் வரும். ஆகவே 50 லைட்டு மாத்திரம் போட்டுக் கொடுங்க" என்றும் கேட்டுட்டோம். அவங்கள் பிடிவாதமா 75 போட்டாத்தான் கட்டும் என்கிறாங்க. இது சரியல்ல. இது வியாபாரமா? சர்க்காரே கட்டும் கட்டாது என்கிறது இல்லாமே விளக்குப் போட்டுக் கொடுக்க வேண்டும். அதுவும் சேரி விஷயம். "சொன்னால் போதுமா? செஞ்சாத் தீருமா?" "சும்மா அதைச் செய்கிறோம், இதைக் கவனிக்கிறோம், இப்படி ஆலோசிப்போம்" என்று சொல்லிக் கொண்டிருக்காமல் அந்த அந்த இடங்களுக்கு தேவைப்படுகிற விளக்கை கட்டுங்கட்டாது என்கிறது இல்லாமல் சர்க்கார் செஞ்சு கொடுக்கணும்னு கேட்டுக்கொள்ளுகிறேன். இல்லேன்னா என்னைப்போல ஒரு அப்பாவி எம். எல். ஏ. கிட்டவந்து "என்னங்க நீங்கள் எம். எல். ஏ. யாக இருந்து அங்கே என்ன பண்ணிக்கிட்டிருக்கிங்க. எதுனாச்சும் சொன்னாத்தானே" என பாக்கியுள்ள என் தலை மயிரைக்கூட எடுத்துடுவாங்க போலிருக்கிறது. உடனே இதை செய்ய வேண்டும்னு கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

11th July 1957]

* **SRI C. NATARAJAN**: கனம் தலைவர் அம்மையார் அவர்களே, நான் என்னுடைய வெட்டுப்பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்லிக் 10-50 a.m. கொள்கிறேன் : பல ஜில்லாக்களிலும் அரசியலார் பல குறைகளை நீக்கப் படவில்லை என்று எடுத்துக் காட்டினார்கள். குறிப்பாக என்னுடைய தொகுதியாகிய கள்ளக்குறிச்சியில், டௌனில் அங்கிருக்கிற 300 கிராமங்களில் இதுவரை சுமார் நான்கு கிராமத்தில் தான் மின்சாரம் விஸ்தரிக்கப் பட்டிருக்கிறது, என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் அங்கு விஸ்தரிக்கப் படவேண்டுமானால் 12 ஆயிரம் ரூபாய் கொடுத்தால் தான் சுமார் ஐந்து கிராமத்திற்கு தொடர்ச்சியாக விஸ்தரிக்க முடியும் என்றும் அதிகாரிகள் சொன்னார்கள். இல்லாவிட்டால் செய்ய முடியாது என்றும் கூறினார்கள். நாங்கள் நான்காயிரம் ரூபாய் தரலாம்' என்று சொன்ன பிறகும் ஒரு கிராமத்திற்கு மட்டும் அங்கு மின்சாரம் விஸ்தரிக்கப்படுவதற்கு மறுக்கப் படுகிறது. இம்மாதிரி இடங்களில் மின்சாரத்தை விஸ்தரிப்பதற்கு அரசியலார் முன் வந்தால்தான் காந்தியார் சொல்லியிருக்கிறபடி கிராம மக்களுக்கு வசதி செய்யப்பட்டதாக கருத முடியும். அதே போன்று தொழிற்சாலைகளுக்கு மட்டும் அதிகமாக மின்சாரம் கொடுக்கப்படுகிறது. இதைப் போல் விவசாயத்திற்கும் அதிகமாக கொடுக்கப்பட்டாக வேண்டும் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். ஏனென்றால் விவசாயத்தால் வாழ்பவர்களுக்கு மின்சாரம் இன்று மிக அவசியமாய் இருக்கிறது, அதோடு இன்றைக்கு அதிகமாக மின்சாரம் விவசாயத்திற்கு உபயோகப்படுத்தப் பட்டு வருகிறது, என்பது குறிப்பிடத் தக்கது. இதனால் அதிகமாக விஸ்தரிக்கப்பட்டு வருகிற நகரங்களில் மின்சாரம் விஸ்தரிப்பதில் வழியிலுள்ள மரங்கள் எல்லாம் வெட்டித்தள்ளப்படுகிறது. இவ்விதம் மரங்களை வெட்டாமல் வசதியிருக்கிற இடங்களில் வேறு வழியாக கொண்டு போகவேண்டும். இவ்விதம் மரங்களை வெட்டாமல் வைத்து பாதுகாத்தால்தான் அரசாங்கம் சொல்லுவது மாதிரி அதிகமாக மழை பெய்வதற்கு ஆதாரமாக இருக்கும். இதே போன்று இந்த மின்சாரத்தை அரசியலார் செயலாற்ற எடுக்கப் போவதாக தெரிகிறது. இதனால் தொழிலாளர்களுக்கு பாதகம் ஏற்படுமோ என்று தொழிலாளர்கள் இன்று அச்சப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அம்மாதிரியுள்ள தொழிலாளர்களின் அச்சத்தை தவிர்க்க வேண்டும். அவர்களுக்கு வீட்டு வசதி, உடை வசதி இவைகளை செய்து வந்தால் தான் இந்த திட்டத்தை அரசியலார் ஏற்று நடத்துவதற்கு அவர்கள் பூரணமாக ஒத்துழைப்பார்கள். இன்றைக்கு அரசியலார் இதை ஏற்றெடுத்து நடத்தப்போவது போற்றக்கூடியதாய் இருக்கிறது. அதே நேரத்தில் இன்று சென்னையில் நடத்தப்படும் பஸ் சர்வீஸின் நிலைமையைப் பார்த்தால் மிக மோசமாக இருக்கிறது என்று ஆனந்த விகடன் போன்ற பத்திரிகைகளில் பஸ் சர்வீஸ் நடத்தப்படுவதைப்பற்றி, அங்கங்கே பஸ்கள் நிறுத்தப்பட்டு விடுவதாக எல்லாம் படங்கள் போட்டு சில குறைகளை கூறி வெளியிடப்படுகிறது. அதே போன்று மின்சாரத்தை எடுத்த பிறகும் இந்த மாதிரி படம் போட்டு காண்பிக்கக்கூடிய நிலை வரக்கூடாது. பஸ் சர்வீஸைப்பற்றி குறைகூறுகிற நிலையில் படம் போட்டு கேலி செய்யப்படுகிற நிலை இதற்கும் வந்தால் அது மிகவும் ஆபத்தானது என்பதை சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகவே நல்ல முறையில் கவனித்து மின்சாரம் எங்கு தேவையாக இருக்கிறதோ அங்கு அதிகமாக கொடுத்து அவர்களுக்கு வேண்டிய மின்சார மோட்டார்கள் குறைந்த விலைக்கு கொடுத்தால் தான் விவசாயத்தை நன்றாக பெருக்க முடியும். இங்கே கூடுதலாக மோட்டார்களை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு கிடைக்கும்படி செய்ய வேண்டும். இதோடு மேட்டூரில் ஒரு அலுமினிய தொழிற்சாலை ஆரம்பிக்க போவதாக தெரிகிறது. அதை உடனடியாக ஏற்படுத்தினால் அங்கு தொழில் அபிவிருத்தியாகும், அங்குள்ள மக்களுக்கும் உதவியாக இருக்கும் என்று கூறிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**SRI R. CHIDAMBARA BHARATHI** : கனம் தலைவி அம்மையார் 11 a.m. அவர்களே, பல அங்கத்தினர்கள் பேசியதிலிருந்து விவசாயிகளுக்கு எல்லா விஷயத்திலும் முதல் சலுகை அளிக்கவேண்டும் என்று கூறப்பட்டது. மற்ற இதர சலுகைகளும் மற்ற காரியங்களும் வேண்டும் என்று கூறினார்கள்.

இந்த மின்சார மான்யப் பிரேரணையை ஆதரிக்கும் தன்மையில் இவைகள் எல்லாம் உண்மைதான் என்று கனம் அமைச்சர் அவர்களுக்கு எடுத்துக்கூற விரும்புகிறேன். அவர்களும் அதை ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்பு கிறேன். ஏனென்றால் நிர்வாக முறைகளில் சில தவறுதல்கள் இருக்கின்றன என்பதை இங்கு பேசிய எல்லோரும் சொல்லியிருக்கின்றார்கள். இந்த நிர்வாக முறையில் மாறுதல் அவசியம் என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள் கிறார்கள். கொள்கை அமைப்பில் திட்டவட்டமான ஒரு முறையை ஏற் றுக்கொண்டால்தான் இந்த குறைகள் நீங்கும், என்பதுதான் என் னுடைய அபிப்பிராயம். இதை மூன்று விதமாக நாம் சிந்தித்து பார்க்க வேண்டும். அதாவது பசியுள்ளவனுக்குத்தான் ஆகாரம் வேண்டும். பசி யில்லாதவனுக்கு ஆகாரம் வேண்டியதில்லை. அதே மாதிரி விவசாயத் திற்கு தண்ணீரை இறைப்பதற்கு எங்கு அவசியமோ அங்கு மின்சாரம் விஸ்தரிக்கப்பட வேண்டும். நாம் கொள்கை அளவில் ஒரு முறையை வைத்திருந்தால் விவசாயிகளுக்கு மின்சாரம் கிடைப்பதற்கு ஏதுவாகும். இதனால் கூடுதலாக உணவு உற்பத்தி செய்வதற்கு ஏதுவாகும். அனேகமாக ஒரு உண்மையென்னவென்றால், செங்கல்பட்டு ராமனாதபுரம் போன்ற ஜில்லாக்களில் ஊற்று அதிகமாக இருக்கிறது. சில ஊர்களில் 200 அடி ஆழத்திலேயே ஊற்று கிடைக்கிறது. அந்த இடத்தில் மின்சாரம் வைத்து இறைத்தால் ஒருமணி நேரத்திற்குதான் இறைக்க முடியும். அவ்வளவுதான் தண்ணீர் கிடைக்கும். ஆகவே எங்கே ஊற்று அதிகமாக இருக்கிறதோ அங்கு உடனடியாக மின்சார விஸ்தரிப்பு கொடுக்க வேண்டும், ஊற்றுக் குறைவாக இருக்கிற இடத்திற்கு கொஞ்சம் காலதாமதப்படுத்தலாம். ஊற்று இல்லாமல் இருக்கிற இடங்களுக்கு மின்சாரம் கொடுக்காமல் இருக் கவும் ஒரு கொள்கையை வகுத்துக் கொள்ள வேண்டும். இந்த கொள் கையை வகுத்துக்கொள்வதற்கு என் மனதில் சில யோசனைகள் தோன்று கிறது. மின்சார இலாகாவிலுள்ளவர்களெல்லாம் திறமைசாலிகளாக இருக்கலாம், திறமைசாலிகள் எல்லாம் ஒவ்வொரு துறையில் திறமைசாலி களாக இருப்பார்கள். இப்போது மத்திய சர்க்காரால் அமைக்கப்பட்டிக்கிற போர்டானது, அதில் திறமைசாலிகள் இருக்கலாம், ஆனால் எங்கெல்லாம் ஊற்று இருக்கிறது, எந்தெந்த காலங்களில் இந்த ஊற்று இருக்கிறது, எந்தெந்த காலங்களில் இங்கு மின்சாரம் அதிகத் தேவைப்படும் என்கிற விபரங்களை யெல்லாம் நன்கு தெரிந்த ஒரு அங்கத்தினர் இந்த போர்டில் இருக்கவேண்டும். அப்படி இருந்தால் மிக நல்லதாக இருக்கும். விவ சாயத்திற்கு மிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று எல்லோரும் கேட்டுக் கொண்டார்கள். ஆகவே இந்த போர்டு மத்திய சர்க்காருடைய போர்டாக இருந்த போதிலும் கூட இதில் ஒரு அங்கத்தினரை சேர்க்கும்படி இந்த அரசாங்கம் செய்தால் மிகவும் நல்லது. ஆகவே எந்த இடத்தில் தண்ணீர் வசதியற்று இருக்கிறது, எந்த இடத்தில் தண்ணீர் வசதியாக இருக்கிறது என்பதை பார்த்து அதற்கேற்றபடி மின்சாரத்தை விஸ்தரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் மானா மதுரை, திருவாடானை, பரமகுடி, சிவகங்கை முதலிய இடங்களில் ஐந்து அடிகளிலிருந்து 30 அடிக்குள் ஊற்று இருக்கிறது. ஒவ்வொன்றிலும் பத்து குதிரை வேகமுள்ள பம்பு வைத்து தண்ணீர் இறைத்தால் ஒரு நாள் முழுவதும் இறைத்தாலும் வற்றாது. அந்த விதத்தில் தண்ணீர் ஊற்று இருக்கிறது. இந்த இடங்களில் மின்சாரத்தினால் மேலும் தண்ணீர் இறைக் கப்பட்டு வருகிறது.

இம்மாதிரியான இடங்களில் ஒரு பெரிய பிரச்னை சமீபத்தில் ஏற்பட்டது. டூரிங் சினிமாக்களும், நிரந்தர சினிமாக்களும் இருக்கின்றன. அவை களுக்கு கட் செய்திருந்தார்கள். அதே மாதிரி விவசாய பம்ப் செட்களுக் கும் கட் செய்திருந்தார்கள். ஆனால் அங்கு கொடுத்திருக்கும் பம்ப் செட்டோ குறைவு. இந்த சினிமாக்களுக்குக் கொடுக்கப்படும் அளவு கரண்டைவிட பம்ப் செட்டுகளுக்கு கொடுக்கப்படுவது குறைவு. அதாவது, இந்த டூரிங் சினிமாக்களுக்கும், நிரந்தர சினிமாக்களுக்கும் கொடுக்கும் கரண் டைப் பார்க்கிலும் இந்த விவசாயத்திற்கான பம்ப் செட்களுக்குக் கொடுக்கப் படும் கரண்ட் குறைவுதான். பம்ப் செட்களுக்கு கரண்ட் [illegible] தான் கொடுக்கிறார்கள். பகலில் கொடுப்பதில்லை. இதை [illegible]

11th July 1957] [Sri R. Chidambara Bharathi]

மென்று நிர்வாகஸ்தர்கள் செய்வதாக நான் கருதவில்லை. நிர்வாகத்தில் இருப்பவர்கள், மின்சார உற்பத்தி போன்றவைகளில் டெக்னிகல் எக்ஸ்பெர்ட்ஸாக இருக்கிறார்களே தவிர இதர வகைகளில் அப்படி இல்லை. அதாவது, அங்குள்ள தாசில்தாரோ, டெபுடி கலெக்டரோ அங்குள்ள மக்களோடு ஒரு வித சம்பந்தமும் வைத்துக்கொள்வதில்லை. அதே போல் ரெவினியூ டிப்பார்ட்மெண்டோ, இரிகேஷன் டிபார்ட்மெண்டோ அவர்களுடன் ஒரு சம்பந்தமும் வைத்துக்கொள்வதில்லை. இந்த அதிகாரிகள் மூலம் அங்குள்ள மக்களை திருத்த முற்படுவோம் என்று பார்த்தால் அவர்களுக்கும் அங்குள்ள மக்களுக்கும் இடையில் ஒரு சம்பந்தமும் இருப்பதாகத் தெரியவில்லை. அப்படி இருக்கும்போது ஒரு [illegible] விவசாயிக்கு தனக்கு வேண்டிய வசதிகளை செய்துகொள்ள முடியவில்லை. மக்களோடு அதிகாரிகள் நெருங்கிப் பழகி அவர்களுடன தொடாபு வைததுக் கொள்ளவேண்டும். அப்படிப்பட்ட தொடர்பு, நிர்வாகஸ்தர்கள் மக்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்வது என்பது மின்சார இலாகாவைப் பொறுத்த வரையில் இல்லை. அப்படி ஒரு சந்தர்ப்பம், ஒரு சூழ்நிலை ஏற்பட இன்னும் வருடங்கள் பல ஆகும். ஜனங்களோடு தொடர்புள்ள இலாகாக்கள் ரெவினியூ இலாகாவும், விவசாய இலாகாவும் தான். இந்த இரண்டு இலாக்காக்களும்தான் விவசாயிகளிடம் அதிகம் தொடர்பு வைத்துக்கொண்டிருக்கிறது. ஆகவே இந்த விஷயங்களில் மின்சார இலாகாவை ரெவினியூ இலாகாவுடனாவது, அல்லது விவசாய இலாகாவுடனாவது இணைத்து அவர்களின் யோசனைக் கூற வேண்டும் என்று மின்சார இலாகாவிற்கு உத்தரவு இட்டால் உபகாரமாயிருக்கும். இந்த டூரிங் சினிமா என்றும் நிரந்தர சினிமா என்றும் கூறினேன். எலெக்ட்ரிசிட்டி கட் ஏற்படும் காலத்தில், கரண்டைக் குறைவாக உபயோகிக்கவேண்டுமென்று சர்க்காருக்குத் தோன்றும் காலத்தில் நகரங்களில் எப்படி இருந்தாலும், கிராமங்களில் ஒரு சில தினங்களோ அல்லது ஒரு சில வாரங்களோ டூரிங் சினிமா இல்லாவிட்டால், அங்குள்ள விவசாயிகள் ஒரு சில வாரங்கள் சினிமா பார்க்காவிட்டால் அதனால் எந்த விதமான பாதகமும் அவர்களுக்கு ஏற்பட்டு விடாது. அதனால் அவர்கள் நன்மை அடையவே ஏதுவாயிருக்கும். தீமை ஒன்றும் ஏற்பட்டு விடப்போவதில்லை. ஆகவே கட் ஏற்படும் காலத்தில் சினிமா மாதிரியுள்ள சமாசாரங்களுக்கு கரண்ட் சப்ளையை பூர்ணமாக குறைக்க முற்பட்டு விவசாயத்திற்கு அந்த மின்சாரத்தைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கத்தினர்கள் பேசிய போது ஒரு காரியத்தை மிகவும் அக்கரையோடு குறிப்பிட்டார்கள், அதில் எனக்கும் சில அனுபவங்கள் உண்டு. எனது தொகுதியில் உள்ள விவசாயிகளும் அந்தக் குற்றச்சாட்டுகளைச் சொன்னார்கள். அது, கலெக்டரிடம் கூறியும் இன்னும் தீர்க்கப்படவில்லை. மின்சாரம் வேண்டுமென்று ஒரு விவசாயி மனு போடும் காலத்தில் மின்சார இலாகா வெகு சீக்கிரமாக கொடுக்க முற்பட்டு விடுகிறது. அதற்கு வேண்டி விவசாயி சர்க்காருக்கும் மின்சார இலாகாவிற்கும் மனு போடுகிறான். மின்சார இலாகா சாத்தியமானால் உடன் செய்து விடுகிறது. ஆனால் கடன் கிடைப்பதில்லை. கையிலிருந்து செலவு செய்து விட்டு, மினிமம் சார்ஜும் கொடுத்து விட்டு மிகவும் கஷ்டப்படுகிறான் விவசாயி. சர்க்கார் விவசாயிகளுக்கு எவ்வளவோ நன்மை செய்தாலும் இப்படி ஏதாவது கஷ்டம் வரும்போது நமது ஜனநாயக சர்க்காரையே அவர்கள் குற்றம் கூற ஏதுவாகிறது. ஆகவே, ரெவினியூ இலாகாவிலிருந்து எப்பொழுது கடன் கிடைக்கிறதோ அப்பொழுது மின்சாரம் சப்ளை செய்யப்படவேண்டும். மின்சாரம் சப்ளை செய்வதற்கு வேண்டிய பிரயத்தனங்களை, பம்ப் செட் வைக்க, வயரிங், தூண்கள் எல்லாம் கிடைத்ததும் பின் கரண்ட் சப்ளை செய்யவேண்டும். அது விவசாயிகளுக்கு சௌகர்யமாய் இருக்குமென்று சொல்லிக்கொண்டு நான் இந்த மான்யக் கோரிக்கையை ஆதரிக்கிறேன்.

SRI A. A. RASHEED: Madam Chairman, the prosperity of a nation is judged from the per capita consumption of electricity. Though we can boast that more number of villages have been electrified compared to other States, yet when compared to Bombay

and Mysore States, the per capita consumption of electricity is still low. I request the Hon. Minister in charge of Electricity to see that all restrictive practices are removed so that more electricity may be consumed by the public.

In my constituency, Vaniambadi, there are still several villages which are not yet electrified though electric wires pass near them. During summer, there is a periodic cut in electricity. It not only affects production but also puts everything out of gear. The cut should be so imposed that there is least inconvenience to the mechanised industry.

In the panchayat areas, for street lighting, the panchayat authorities have to obtain the sanction of the Regional Inspector of Panchayats. When proposals finally go to the Electricity Department for execution, the panchayat authorities are informed by the Electricity Department that they cannot implement the proposals as they do not pay them a dividend of 10 or 15 per cent on capital outlay and that they can take up the work only if putting up of more number of street lights in included in the proposals. But the panchayats are not in a position to agree to such proposals on account of their low income. I think the Hon. Minister for Electricity must come forward to see that wherever there is demand for supply of electricity for street lighting purposes, such schemes must immediately be sanctioned without going into the question of profits and loss to Government.

There are still many restrictive practices which have been referred to in this House, namely, the surcharge on electricity, of the hardships of the agriculturists in regard to consumption of electricity for agricultural purposes and I do not wish to refer to them again. I request the Hon. Minister to see that these restrictions are removed and that consumption of electricity by the people is allowed to increase and to see that our State consumes more electricity per capita.

**SRI C. R. RAMASWAMY :** கனம் தலைவி அவர்களே, நம் அரசாங்கம் நிர்வகித்து வரும் இலாக்காக்களிலே மிகவும் முக்கியமானது மின்சார இலாகா. ஏறக்குறைய ஐந்தாறு வருஷமாக வருஷா வருஷம் 11 கோடி ரூபாய் மூலதனம் செலவாகிறது. ஏகப்பட்ட விஸ்தரிப்பு ஏற்படுத்தியிருப்ப தாகவும் கூறுகிறார்கள். ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பதைப் பற்றியும் சந்தேகமில்லை. இந்த விஸ்தரிப்பு குறைந்தபட்ச செலவிலே ஏற்பட்டிருக் கிறதா, நல்ல முறையிலே ஏற்பட்டிருக்கிறதா என்று யோசித்துப் பார்க்க வேண்டும். இப்போது இதிலே பல முறைகளை கையாளுகிறார்கள். ரெவினியூ செலவை **Capitalise** செய்து மூலதனச் செல வாக எழுதுகிறார்கள். ரெவினியூ இலாகாவை பொறுத்தவரையில் அதிக லாபம் காண்பிக்க செலவை **Capitalise** செய்து விடுகிறார்கள். அந்த அளவு சரியான முறையில் செலவு ஏற்பட்டிருக்கிறதா என்று விசா ரணைசெய்யவேண்டும். டிபார்ட்மெண்ட் கொடுக்கக்கூடிய குறிப்புகளை வைத்துக்கொண்டு, செண்ட்ரல் கவர்ன்மெண்ட் ஏதாவது லோன் கொடுத்திருந்தால், அதற்குள்ள போதுமான அளவு செலவு செய்திருக்கி றார்களா, செலவு அதிகமா என்றெல்லாம் விசாரணை செய்யவேண்டும். 11 கோடி ரூபாயில் விஸ்தரிக்கக்கூடியதற்கு 20 கோடி ரூபாய் செலவு செய்து விஸ்தரிப்பு செய்யலாம். ஒரு மைல் 8 ஆயிரம் ரூபாய் பெறக் கூடிய லைனுக்கு 20 ஆயிரம் செலவு செய்தால் பிரயோஜனமில்லை. இத

ால் மக்கள் பணம்தான் விரயமாகும். இதைப் பற்றி விசாரித்து சரியான முடிவுக்கு வரவேண்டுமென்று மந்திரி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். எனக்குத் தெரிந்த அளவிற்கு ரெவினியூ செலவை **Capitalise** செய்து லாபம் காண்பிக்க ஏற்பாடுகள் இருக்கிறதாக கேள்விப்படுகிறேன்.

நமது அரசாங்கம் இப்போது போர்டு ஒன்றை நியமனம் செய்திருக்கிறார்கள். இதில் தனிப்பட்ட நபர்கள் இல்லை. அரசாங்க அதிகாரிகள்தான் இதில் இருக்கிறார்கள். நான் பொது விவாதத்தின்போது கூட குறிப்பிட்டேன். தனிப்பட்ட நபர்கள் இருந்தால்தான் நிர்வாகத்திலுள்ள குற்றங்குறைகளை நன்கு எடுத்துச் சொல்ல முடியும். தனிப்பட்ட நபர்கள் இருந்தால் சரியான முறையில், பயன்படக்கூடிய முறையில் திட்டங்கள் வகுக்கலாம். இப்போது நம் நாட்டிலே பல தனிப்பட்ட முறையில் நிர்வகிக்கப்படும் கார்பொரேஷன்கள் இருக்கின்றன. நெய்வேலி லிக்னைட் கார்பொரேஷன் இருக்கிறது. தாமோதர் வாலி கார்பொரேஷன் இருக்கிறது. பல கார்பொரேஷன்கள் தனிப்பட்ட முறையில் வேலை செய்து வருகின்றன. சிந்திரி பெர்டிலைஸர் பாக்டரி இருக்கிறது, நல்ல முறையில் திறமையாக வேலை செய்து வருகின்றது. நன்றாக வேலை செய்யவேண்டுமென்ற எண்ணத்தில்தான் மத்திய சர்க்கார் போர்ட் ஸ்தாபனம் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். முதலில் நம் மாகாணம் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. இப்போது அதைச் செய்திருக்கிறார்கள். இந்த போர்டில் தனிப்பட்ட நபர்கள் ஒன்றிரண்டு பேர்கள் இருந்தால் இது நல்ல முறையில் வேலை செய்யும். செய்யக்கூடிய ஏற்பாடு சரியான முறையில் இருக்கவேண்டும். கன்சூமர் கட்டணத்தை அதிகப்படுத்தக் கூடாது, வருஷாவருஷம் செலவும் போதுமான அளவுக்கு வருவாயைப் பெருக்கவேண்டும்; சர்சார்ஜ் வாங்கக்கூடாது என்று தான் இந்த போர்டை நியமித்திருக்கிறார்கள். மக்களுக்கு சரியான ஏற்பாடுகளில் கொடுக்க வேண்டும். இரண்டாவது நல்ல முறையில் நடக்கவேண்டும். விஸ்தரிப்பு திட்டங்களை விரிவாக்க நடவடிக்கைகள் என்பது இந்த அமைப்பின் நோக்கமாகும். தனிப்பட்ட நபர்களில் ஒன்று இரண்டு பேரை அதாவது அரசியலில் அப்பாற்பட்டு இருக்கிறவர்களை திறமையானவர்களை இந்த போர்டில் சேர்த்தால் நல்ல முறையில் நடக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆகவே இது விஷயத்தில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்போது நல்ல திட்டத்தை அதாவது "குந்தா" திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த இலாகாவில் அதிக வேலை செய்கிறார்கள்; மற்ற இலாக்கா விட வெகு நன்றாக வேலை நடக்கிறது. கோடிக்கணக்கில் சிலவு செய்கிறார்கள். இந்த இலாகாவில் தான் அதிகமாக அரசாங்க பணம் சிலவு செய்யப்படுகிறது. ஏறக்குறைய 23 கோடி ரூபாய் **estimate** செய்து இருக்கிறார்கள். அதில் 13 கோடி ரூபாய் இந்த **department**-ல் தான் செலவு செய்யப் போகிறார்கள். செலவை ஜாக்கிரதையாகப் பார்க்கவேண்டும். சர்சார்ஜ் மூலமாக ஜெனரல் ரெவின்யூவிற்கு பணம் சேர்ப்பதை விட்டு விடவேண்டும். இந்த இலாகாவை எவ்வளவு தூரம் விவசாயிகளுக்கும் மற்ற எல்லோருக்கும் குறைந்த சிலவில் மின்சாரம் கொடுக்க முடியுமோ அந்த அளவில் நடத்தவேண்டும்.

தனிப்பட்ட நபர்கள் நடத்தக்கூடிய **company**-களைப் பற்றி பல அங்கத்தினர்கள் சொன்னார்கள். அரசாங்கம் எடுத்துக்கொள்வதை யாருமே ஆட்சேபம் சொல்லவில்லை. இந்தக் கம்பெனிகளை அரசாங்கம் எடுத்துக்கொண்டால் நன்றாக இருக்கும். இப்பொழுது போர்டு வந்து விட்டது, இதை எல்லாம் போர்டு எடுத்துக்கொண்டு விநியோகம் செய்யப்போகிறார்கள் என்று நினைக்கிறேன். போர்டுக்கு தனிப்பட்ட நபர்களையும் நியமிக்க வேண்டுமென்று அரசாங்கத்தை கேட்டுக்கொண்டு நான் இந்த வார்த்தைகளை சொல்வதற்கு அனுமதி கொடுத்ததற்காக நன்றியை செலுத்திக் கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

**SRI K. SATTANATHA KARAYALAR :** சபை தலைவி அவர்களே, இந்த மின்சார இலாகா மானியத்திலே நண்பர் கொண்டு வந்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில வார்த்தை சொல்ல அவாவுகிறேன். 12.15 p.m.

[Sri K. Sattanatha Karayalar] [11th July 1957]

இந்த இலாகா சர்வீஸ் இலாகாவா அல்லது **Commercial** இலாகாவா? என்று சாதாரணமாக தர்க்கம் எழக்கூடும். இப்பொழுது போர்டு நிர்வாகத்தின் கீழ் வந்து விடுவதால் இந்தப் பிரச்னைக்கு இடமில்லை என்று சொல்லுவார்கள். அடிப்படையாக **public utility concern** குறிப்பாக விவசாயத்திற்கு நன்மை செய்யக்கூடிய முறையிலே இருக்கவேண்டுமென்று எனக்கு முன் பேசிய பல்வேறு ஆளும் கட்சியை சேர்ந்த அங்கத்தினர்களும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த அன்பர்களும் குறிப்பிட்டார்கள். நான் ஒரே ஒரு விஷயத்தை குறிப்பிட அவாவுறுகிறேன்.

இன்று இந்த **Electricity department**-லே சாதாரணமாக ஒரு வீட்டிற்கு கரண்டு கொடுக்கவேண்டும். அதாவது **wiring** செய்ய வேண்டும் என்று இருந்தால் இன்றைக்கு "லைசென்ஸ்டு" **wiremen**-க்கு மட்டும் தான் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்று 6,000 **wiremen** வரையில் இந்தத் தொழிலே ஈடுபட்டு இருக்கிறார்கள். இப்போது சமீபத்திலே ஒரு வியாபாரிக்கு அந்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த வியாபாரி என்ன செய்கிறான் என்றால் 10 லைசென்ஸ் இல்லாத **wiremen**-ஐ வைத்துக் கொண்டு ஒன்று, இரண்டு லைசென்சுக்கு ஒயர்மென்களை வைத்துக்கொண்டிருக்கிறான். நம் வீட்டுக்கு கரண்டு வேண்டுமென்றால் அவர் மூலமாகத் தான் செய்யவேண்டியிருக்கிறது. முன்பு இந்த இலாகா இன்ஸ்பெக்டர்களே நேரடியாகப் பரிசோதனை செய்வார்கள். இன்று பரிசோதனை செய்வதை விட்டு விட்டு சர்டிபிகேட் உள்ளவர்கள் இருக்கவேண்டுமென்ற நிபந்தனையை கொண்டு வந்தால் தனிப்பட்ட ஒயர்மென்னை வைத்துக் கொள்ளவேண்டும். வீட்டுக்கு கரண்டு வேண்டுமென்கிறவர்களும் இந்த தொழிலிலே நீண்ட நாளாக ஈடுபட்டவர்களும் கூட ஒரு சில வியாபாரிகளையே எதிர்நோக்கவேண்டியிருக்கிறது. அவர்கள் சரி என்று சொன்னால் தான் அனுமதிக்கப்படுகிறது. டிபார்ட்மெண்டைச் சேர்ந்தவர்களே ஒவ்வொரு வீட்டிலும் சரியாக இருக்கின்றதா என்று பார்த்து கரண்டு வினியோகம் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இப்போதைய புதிய முறை மிகவும் பாதிக்கிறது. இந்தக்குறையை உடனடியாக சர்க்கார் கவனிப்பார்கள் என்று நம்புகிறேன். ஏனென்றால் இதனால் ஏற்படக்கூடிய விளைவு குறிப்பிட்ட தொழிலாளர்களுக்கு மட்டும் அல்லாது வீடுகளுக்கு கரண்டு வேண்டும் என்று விரும்புகிறவர்களுக்கும் சிக்கல் ஏற்படுகிறது.

விவசாயிகளுக்கு குறிப்பாக கரண்டு கொடுப்பதிலே பல இன்னல்கள் இருக்கின்றன என்று பல அங்கத்தினர்கள் கூறினார்கள். விவசாயிகளை பொருத்த வரையில் இந்த மினிமம் சார்ஜ் முறையை மாற்றி அவர்கள் எத்தனை மின்சாரம் உபயோகப்படுத்துகிறார்களோ, அத்தனைக்கு மாத்திரம் தான் சர்க்கார் அவர்களிடமிருந்து வசூல் செய்யவேண்டுமென்றும் மிகவும் பணிவோடு கூறிக்கொண்டு, அதற்கு இதுவரையில் கழித்த பல ஆண்டுகளாக பல தடவை வேண்டியும் முடிவு காணமல் இருக்கிறது. இப்போது முடிவு கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு இதை சபையின் முன்னிலையில் வைக்கிறேன்.

12-20 p.m. **SRI V. K. RAMASWAMY MUDALIYAR:** கனம் அம்மை அவர்களே, இந்த வெட்டுப் பிரேரணையை நான் ஆமோதிக்கிறேன். இந்த மின்சார இலாகா, அனேக அங்கத்தினர்கள் சொல்லியவாறு, நல்ல முறையில் வேலை செய்து வருகிறது என்பதை ஒருவரும் மறுக்கமுடியாது. மின்சாரத்தை எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு தூரம் கிராமங்கள் தோறும் விஸ்தரித்து வருகிறார்கள். அது போற்றத்தக்கது. ஆனாலும், இந்த விஷயத்தில் விவசாயிகளுக்கு ஏற்படக்கூடிய கஷ்டங்கள் பல. அதைப்பற்றி, எனக்குப் பின்னாலும், எதிரேயும் உள்ள பல அங்கத்தினர்கள் பேசினார்கள்.

முக்கியமாக பம்பு செட்டுகள் வைத்து இருப்பவர்களுக்கு ரேட்டைக் குறைக்கணும் என்பது பற்றி சென்றவருஷங்கூட முன்னாள் மந்திரியுடன் பேச்சுவார்த்தை நடத்தினோம்; **Minimum charge** விஷயத்தில் ஓராம்பவும் வற்புறுத்தக்கூடாது, வற்புறுத்தினாலும் அநேக இடங்களில் பிரயோசனம் இல்லாமல் இருக்கிறது என்பது பற்றியும் பேசப்பட்டது. முக்கிய

11th July 1957] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

மாக இந்த பம்பு செட்டுகள் வேலை துவங்காததற்கு காரணம் அதற்கு வேண்டிய **starter**-கள் சாதாரணமாக கிடைக்காததால் தான் இவை கருப்பு மார்க்கெட்டில் தான் கிடைக்கின்றன. உண்மையாக எனக்கு வேண்டிய அநேக நண்பர்கள் புதுச்சேரிபோய் வாங்கிவருகிறார்கள். அங்கே விலை அதிகம். மத்திய சர்க்கார் **Import licence** கொடுக்காததால் இங்கு விலை அதிகரித்து இருக்கிறது. ஆனால் பாண்டிச்சேரியில் பெருந்தொகை வைத்திருப்பவர்கள் **Special licence** வாங்கி ஒன்றுக்கு நாலாக இங்கு விற்கிறார்கள். மத்திய சர்க்காருக்கு இந்த நிலைமையை தெரிவித்து எழுதி **Import licence** அதிக சீக்கிரமாக கிடைக்க வேண்டியபிரயத்தினம் செய்யப்பட்டு வருவதாகச் சொன்னார்கள். ஆனால் இது வரை ஒன்றும் நடந்ததாகத் தெரியவில்லை. இத்துடன் 100-க்கு 10 விகிதம் வட்டி கட்டவேண்டுமென்று இருப்பதால் கட்டணத்தைக் குறைக்க வழியில்லாமல் இருக்கிறது. இதை நன்றாக யோசித்து, எவ்வளவு தூரம் இந்தக் கட்டணத்தைக் குறைக்க முடியுமோ அவ்வளவு குறைத்து விவசாயிகளுக்கு நன்மை செய்ய சர்க்கார் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது இருக்கும் **rate** அதிகம் என்று மீண்டும் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

இப்பொழுது **low tension** மூலமாக **rice mill**, சிறிய கைத்தொழிற்சாலை முதலியவைகளுக்கும் மின்சாரம் உபயோகப்படுத்தப்படுகிறது. விவசாயத்துக்கும் மின்சாரம் அத்தியாவசியம். ஆனால் விவசாயத்துக்கு கொடுக்கப்படும் முறையில் சலுகைகள் காட்டவேண்டும். இப்படிச் செய்வதில் ஒரு சமயம் நஷ்டம் வந்தாலும் வரும். இதற்கு ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். **High tension**-ல் போகும் **Electric supply, B and C mill** போன்ற பெரிய பெரிய மில்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் கொடுக்கப்படுகிறது. இவைகளிடமிருந்து பழையகாலத்திலிருந்த **rate**-ஐ வாங்கப்படுகிறது. இதனால் அவர்களுக்கு அதிக லாபம் வருகிறது. **Rate** என்பதை யாரும் மறுக்க முடியாது. இதை கொஞ்சம் தூக்கிப்போட்டு, விவசாயிகளுக்கு எவ்வளவு தூரம் குறைக்கமுடியும் என்பதை அமைச்சர் அவர்கள் யோசித்து இந்த பிரசினையை உடனடியாக சட்டசபை முன் வைத்துத் தீர்க்கவேண்டுமென்று கேட்டு கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக கட்டிடங்கள் **Civil Works** செய்வது எல்லாம் **Electricity Department** பார்த்து வருகிறது. ஆனால், மராமத்து இலாகா ஒன்று தனியாக இருக்கிறது. அதற்கு **Chief Engineer**-கள் இருக்கிறார்கள். ஆதலால் இந்த **Construction side** மட்டும் மராமத்து இலாகாவிடம் விட்டு விடுவது நல்லது என்பது என் அபிப்பிராயம். ஆனால் அவர்கள் செய்வதில் சில இடைஞ்சலும், இடையூறுகளும் இருப்பதாகத் தெரிகிறது. எல்லா எஞ்சினீர்களும் ஒரே காலேஜில் படித்திருந்தபோதிலும் மின்சார இலாகா ஏன் இதைச் செய்யவேண்டுமென்று புரியவில்லை. அமைச்சர் இவற்றை யோசித்து **Civil side** பூராவையும் **P.W.D.** எஞ்ஜினீயர்களிடம் ஒப்பித்து விடவேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த **Demand**-ன் பேரில் பேசிய அங்கத்தினர்கள் எல்லா விஷயங்களைப்பற்றியும் சொல்லிவிட்டார்கள். அதற்கு மேல் நான் சொல்ல வேண்டியது ஒன்றுமில்லை. இங்கு சொல்லப்பட்ட எல்லா விஷயங்களையும் அமைச்சர் நன்றாக யோசித்து விவசாயிகளுக்கு நன்மை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**(Mr. Speaker in the Chair.)**

எலெக்ட்ரிஸிடி போர்டைப் பற்றி எனக்கு முன் பேசிய அங்கத்தினர் ஸ்ரீ ராஜம் ராமசாமி சொன்னார், இந்த போர்டில் **Non-officials** இருக்கவேண்டுமென்பது தான் எல்லோருடைய கோரிக்கை. மத்திய சர்க்கார் சட்டம் செய்தவுடன் மற்ற மாகாணங்களைபோல் நாம் உடனடியாக இதை அமுலுக்கு கொண்டுவரவில்லை. இப்பொழுதுதான் கொண்டுவந்து இருக்கிறார்கள். முக்கியமாக **officials**-ஐ போர்டில் இருப்பதில் அநேக

இடையூறுகள் இருக்கின்றன. அவர்கள் நன்றாக டிபார்ட்மெண்டில் தேர்ச்சி பெற்றவர்களாக இருந்தாலும், **Non-officials**ஐ போர்டில் சேர்த்தால் நலமாக இருக்குமென்று சொல்லிக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **The Hon. Sri V. RAMAIAH:** சபா நாயகர் அவர்களே, நான் இந்த விவாதத்தை ஆரம்பிக்கும் போது, கடைசியில் விவாதத்திற்குப் பதில் சொல்ல 15 நிமிஷங்கள் இருந்தால் போதும் என்று சொன்னபோது கனம் **Speaker**-க்கு ஆச்சரியம் ஏற்பட்டதைக் கவனித்தேன், இவ்வளவு தொகையை இவ்வளவு சீக்கிரத்தில் பதில் சொல்லிவாங்கப்போகிறாரே என்று. நான் சிறிய காலம் கேட்டதற்குக் காரணம் இந்த வாதத்தில் அங்கத்தினர்கள் நிறையக் கலந்துகொள்ளவேண்டும் என்பதற்காகவே. ஏனென்றால் எனக்குத் தெரியும், இந்த இலாகாவைப் பொருத்தவரையில் இங்கு இருக்கக் கூடிய அங்கத்தினர்கள் எல்லோருக்கும் குறைகள் இருக்கின்றன. நல்ல முறையில் நடக்கவேண்டுமென்று ஆலோசனை சொல்ல வேண்டுமென்பது அவர்கள் ஆசை. மேலும் நிச்சயமாகத் தேர்தல் காலத்தில் மின்சாரம் கொண்டுவரக்கூடிய உறுதி மொழியை தங்கள் தொகுதி மக்களுக்குக் கொடுத்து இருப்பார்கள். ஆகையால்தான் இந்த விவாதத்தில் அதிகமான அங்கத்தினர்கள் கலந்து கொள்ளவேண்டுமென்று ஆசைப்பட்டார்கள். சபா நாயகரும் இந்த குறைந்த நேரத்தில் 22 அங்கத்தினர்களுக்குப் பேச அவகாசம் அளித்தார்கள். அங்கத்தினர்கள் கூறியவையெல்லாம் நிச்சயமாக நல்ல முறையில் பரிசீலனை செய்யப்படும்.

ஆனால் இந்த இலாகாவின் நிர்வாகத்தில் இன்றைக்கு ஏற்பட்டிருக்கும் மாறுதல் எல்லோருக்கும் தெரியும். **Electricity Board**-க்கு இந்த சிபாரிசுகளை அனுப்பிவைக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. நான் சுருக்கமாக பேசுவதற்கு இதொரு காரணம். பத்துதினங்களுக்கு முன்னால் அமைக்கப்பட்டுள்ள **Board** தான் எப்படி நல்ல முறையிலே மின்சாரத்தைவினியோகிக்கவேண்டும் என்ற கொள்கையை பரிசீலனை செய்து அமுலுக்குக் கொண்டுவரவேண்டும். இந்த காரணத்தினால்தான் கனம் அங்கத்தினர் சின்னதுரை அவர்களுக்கு கொஞ்சம் கோபம் ஏற்பட்டிருக்கும் என்று நினைக்கிறேன். கோயமுத்தூரில் சுற்றுப்பிரயாணம் செய்யும் போது எல்லா **M.L.A.**-க்களும் என்னை சந்தித்து இந்தக் குறைகளையெல்லாம் எப்படித்தீர்க்க வேண்டுமென்று ஆலோசனைகள் சொன்னார்கள். அங்கேயே சில குறைகளைத் தீர்க்க முடிந்தது. ஆனால், அடிப்படையான பிரச்னைகளாகிய, **minimum charge, staggering, unconnected minimum charge** இவைகள் நீண்ட நாள் பிரச்னைகள். இன்றைய நேற்றைய பிரச்னைகள் அல்ல. அல்லது நான் வந்த பிறகு ஏற்பட்ட பிரச்னை அல்ல. சின்னதுரை எடுத்துக்கொண்ட பிறகு ஏற்பட்ட பிரச்னைகள் அல்ல. நல்லவிதமாக தீர்வு காணவேண்டும். ஆனால் இந்தக் கொள்கைகளை மாற்ற போர்டுக்கே அவகாசம் கொடுத்தால் நல்லது. இந்தப் பிரச்னைகளை போர்டுக்கு அனுப்பும்போது என்னுடைய ஆலோசனையும் நிச்சயமாக சேர்ந்து போகும். ஆனால் முடிவுகாணவேண்டியது அவர்கள் பொறுப்பு. மினிமம் சார்ஜ் பொருத்தவரையில் நல்ல ஆலோசனைப்பண்ணுகிறோம். ஆனால் இதில் சிக்கல்களும் சிரமங்களும் இருக்கின்றன. மழையில்லாததாலும் கிணறு வெட்டினால் கூட களியோ பாறையோ இருப்பதால் ஏற்படக்கூடிய இம்மாதிரி விவசாயினர் சக்திக்கு அப்பேர்பட்ட காரணங்களால் ஏற்படக்கூடிய நிலைமைக்கு விதி விலக்கு கொடுக்க வேண்டியது நியாயந்தான். எனக்கு இந்த விஷயத்தில் போதிய ஆலோசனை யாரும் கூறவில்லை. **Minimum charge** பொறுத்த வரையில் நானும் அதிகாரிகளுடன் கலந்து பேசினேன். இன்னும் ஒரு சில ஆண்டுகளுக்குள் **Minimum charge** கட்டக்கூடிய அந்தஸ்து உள்ள கிராமங்களே இல்லாமற் போய்விடும். தற்பொழுது **Minimum charge** கட்ட முடியாத அந்தஸ்து உள்ள கிராமங்களுக்காக, ஓரளவு கொள்கையை மாற்றிக் கொள்ள வேண்டும். இதை உடனடியாக **Electricity** போர்டார் பரிசீலனை செய்து வேண்டியவற்றை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களும் அப்படியே செய்வார்கள்.

11th July 1957] [Sri V, Ramaiah]

**Staggering** முறை என்பது உண்மையிலேயே விவசாயிகளுக்கு கஷ்டத்தைக் கொடுக்கிறது. இரவு நேரங்களில் விவசாயிகள் தங்களுடைய நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்ச வேண்டிய நிலைமை இருக்கிறது. இரவில் பாம்பு கடிக்கலாம் என்று சிலர் சொன்னார்கள். பகலிலும் பாம்பு கடிக்கலாம். இது என் மனதைமாற்றக்கூடிய ஒரு முக்கியமான காரணம் அல்ல. விவசாயிகளுக்கு இராத்திரி காலங்களில் ஆட்கள் கிடைக்கமாட்டார்கள். இதில் உள்ள சிரமத்தைப் போக்கத்தான்வேண்டும். இது ஒரு **temporary** நிலைமை. **Cut introduce** செய்யும் காலத்தில் மட்டும்தான் இருக்கும் என்ற நிலைமை இருந்தது. இன்றைக்கு இருக்கும் நிலையில் விவசாயிகள் விரும்பக்கூடிய அளவுக்கு மின்சாரத் தேவையை உடனடியாக கொடுக்கமுடியாது. **Kundah, Periyar** போன்ற திட்டங்களைப் பூர்த்தி செய்துவிட்டால் விவசாயிகளின் தேவையை பூர்த்தி செய்யலாம் என்று நம்பிக்கொண்டு இருக்கிறோம். அவர்கள் காட்டி இருக்கக் கூடிய புள்ளி விவரங்கள் சரியாக இருக்குமா என்று சந்தேகப்படுகிறேன். விவசாயிகளிடையே ஏற்பட்டு இருக்கும் மின்சார விருப்பம் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே இருக்கிறது. இரண்டு மூன்று வீடுகள் உள்ள கிராமங்களிலும் கூட விவசாயிகள் மின்சாரம் தேவை என்று சொல்லுகிறார்கள். இவர்களுடைய மின்சார தேவையை பூர்த்தி செய்ய வேண்டும் என்றால் நமக்கு கிடைக்கக்கூடிய மின்சாரத்தை ஓரளவு பங்கிட்டுக் கொடுக்கக்கூடிய முறையை வகுக்கவேண்டும். இந்த விஷயத்தில் மின்சார போர்டுக்கு அரசாங்கம் ஆலோசனை சொல்லும். இந்த இரண்டு விஷயங்கள் தான் முக்கியமான பிரச்னைகளாக அங்கத்தினர்களால் எடுத்துக்காட்டப்பட்டன.

**Minimum guarantee**-க்கு 10 சத விகிதம் **return** காட்டவேண்டும். 10 சத விகிதம் அதிகம் என்று சில அங்கத்தினர்கள் சொன்னார்கள். கணக்கு போடக்கூடிய முறையில் ஒரு தவறு. 10 சத விகிதம் நமக்கு வருமானத்தில் லாபம் என்று நினைக்கிறார்கள். ஆனால் 10 சதவிகிதம் லாபமே இல்லை. அதிலே குறைந்த பங்குதான் லாபம். 10 ஆண்டுகளுக்கு மின்சாரம் எடுத்துக்கொண்டால் **scheme** பூர்த்தியாவதற்குள் செலவழித்த வருமானம் வந்து விடும் என்று நினைக்கிறார்கள். அப்படி ஒன்றும் இல்லை. விவரங்களை பின்னால் சொல்லுகிறேன்.

இரண்டாவது வெட்டுப் பிரேரணையை பிரேரேபித்து பேசும்போது ஸ்ரீ ஆதித்தன், அரசாங்கம் மக்களுடைய உணர்ச்சியை தெரிந்து கொள்ளாமல் **wiring** எடுத்துக்கொண்டு அவர்களுக்குத் தேவைப்படக்கூடிய மரங்களை அதிகமாக வெட்டிவிடுகிறார்கள் என்று குறிப்பிட்டார். அவர் சொல்லக்கூடிய முறையில் நிலைமை இல்லை. மரங்களை வெட்டவேண்டும் என்றால் அந்த இடத்தில் இருக்கக்கூடிய சொந்தக்காரர்களை வைத்துக் கொண்டுதான் வெட்டவேண்டும் என்று அரசாங்க உத்தரவு இருக்கிறது. அவர் சொல்லக்கூடிய அளவு நிலைமை இன்றைக்கு இருக்காது என்று நான் நம்புகிறேன். **Kundah** அணைக்கட்டு நல்ல விதமாக கட்டி முடிக்கவேண்டும் என்று அங்குள்ள சிறு தோட்ட விவசாயிகள் ஒத்துழைப்பதை நான் நேரில் பார்த்தபோது தெரிய வந்தது. அவர்களுக்கு கொடுக்க வேண்டிய **compensation** தொகையில் ஏதோ ஒரு பங்கு கொடுப்பதில் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. இதை அவர்கள் என்னிடம் நேரில் சொன்னார்கள். சிரமம் இல்லாமல் இதை தீர்க்கவேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை. இதை நீக்க **Electricity** போர்டார் தகுந்த நடவடிக்கை எடுப்பார்கள். அதை அமல் கொண்டுவருவதற்கு **Revenue** இலாகா இருக்கிறார்கள். எந்தவிதமான குறைகளும் இல்லாமல் இவர்கள் இதை செய்வார்கள்.

ஸ்ரீ கே. ஆர். விசுவநாதன் பேசும் போது, **Electricity Board** அமைந்த பிறகு இலாகா ஊழியர்கள் போர்டுக்கு போவதற்கு கொஞ்சம் மனகலக்கமாக இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். எனக்குத் தெரிந்த வரையில் போர்டுக்குப் போக ஊழியர்கள் தயாராயிருக்கிறார்கள். போய்க்கொண்டும் இருக்கிறார்கள்.

[Sri V. Ramaiah] [11th July 1957

விவசாயிகளுக்கு வேண்டிய பம்ப் செட் **starter**-கள் கிடைப்பது இல்லை. நம்முடைய தேவை அளவுக்கு நாம் இதை உற்பத்தி செய்ய வேண்டும். **Starter**-கள் அன்னியநாடுகளிலிருந்து வரவழைக்க செலாவணி அதிகமாக வேண்டும். நாம் விரும்பக்கூடிய அளவுக்கு மத்திய அரசாங்கம் அன்னிய செலாவணியை கொடுக்காததால் சிரமம் ஏற்படுகிறது. அப்படி இருந்தாலும் தனிப்பட்ட விவசாயிகளுக்கு அவர்கள் தேவைக்கு ஏற்றபடி **licence** கொடுத்து வருகிறார்கள். சரியான முறையில் இதை பயன் படுத்தப்படவில்லை என்று எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. இந்திய அரசாங்கத்தினிடமிருந்து அதிகப்படியான **starter**-களை வரவழைப்பதற்கான ஏற்பாடுகளை நாம் எடுத்துக்கொள்ளவேண்டும்.

நண்பர் கோவிந்தசாமி அவர்கள் பேசுகையில், மற்ற ஜில்லாக்களில் நிறைய மின்சாரம் கொடுக்கப்பட்டு, தன்னுடைய ஜில்லாவாகிய தென்னூற்காடு ஜில்லாவில் மட்டும் கொடுக்கப்படவில்லை என்ற குறையை வெளியிட்டார். சில தினங்களுக்கு முன்னால் வேறொரு சமயத்தில்கூட இந்தக் குறையைப்பற்றி அவர் சொல்ல ஆரம்பித்தார். ஆனால், அவரே அதற்குத் தீர்வும் சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள். இதுவரை தனிப்பட்டவர்களுடைய கையில் மின்சார விநியோகம் அந்த ஜில்லாவில் இருந்த காரணத்தால் அங்கு மின்சாரம் சரிவர கிடைக்காமல் போய்விட்டது என்பது அவர்களுக்கே நன்றாகத் தெரியும். இனிமேல் அந்தக் குறை இருக்காது என்ற நம்பிக்கை அவர்களுக்கே வந்துவிட்டது. நிச்சயமாக பின்தங்கிய ஜில்லாக்களில் மின்சாரம் விநியோகம் செய்வதற்கான நடவடிக்கையை போர்டார் எடுத்துக் கொள்வார்கள் என்று நான் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக நண்பர் கோதண்டராமன் அவர்கள் பல பிரச்னைகளைக் கிளப்பினார்கள். **Eletricity staff** களுக்கு மற்ற இலாகாவில் ஏற்பட்டு இருக்கக்கூடிய நீண்ட நாள் குறைகளைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் சொல்கிறபோது, "1948-ம் ஆண்டிலே இந்தக் குறைகளெல்லாம் ஓரளவு அரசாங்கம் ஒப்புக்கொண்டு, தீர்வு காண முடிவு செய்தும், இதுவரை அந்தக் குறைகளுக்குத் தீர்வு காணவில்லை" என்று சொன்னார்கள். அப்படித் தீர்வு காணாததால் **Electricity Staff** எல்லாம் ஒன்று சேர்ந்து வேலை நிறுத்தம் செய்யவேண்டுமென்று முடிவு செய்திருந்தார்கள். அவர்களுக்கு நன்றாகத் தெரியும்—அந்த வேலை நிறுத்தம் நடைபெறவில்லை என்று. அதன் காரணமும் கனம் அங்கத்தினருக்குத் தெரிந்திருக்கும். ஊழியர்களுடைய குறைகளை நன்றாகத் தெரிந்து, அவைகளுக்கு எப்படித் தீர்வு காணவேண்டுமென்று யோசித்து, எந்த முறையில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று ஆலோசிக்கப்பட்டது. அது சம்பந்தமாக ஒவ்வொரு பகுதியிலுள்ள ஊழியர்களையும், அவர்கள் பிரதிநிதிகளையும் வரச் செய்து, அவர்களுடைய குறைகளைத் தெரிந்துகொள்ள ஏற்பாடு செய்யப்பட்டது. அப்படி அவர்களுடைய குறைகளைத் தெரிந்து, அவைகளை அரசாங்கமே போக்கலாம் என்று அரசாங்கம் சில முடிவுக்கு வந்திருக்கிறார்கள். மேலும் கால தாமதம் ஏற்படாமல் போர்டாருக்கு சிபார்சு செய்திருப்பதும் நண்பர் கோதண்டராமன் அவர்களுக்குத் தெரியும். ஏதோ ஊழியர்களுக்கு இருக்கும் குறைகளை அப்படியே ஒதுக்கி வைத்துவிட்டு சும்மா இருந்து விடுவோம் என்று நினைக்க வேண்டாம். ஊழியர்களுக்கு நிச்சயமாக, நன்றாகத் தெரியும்—தங்களுடைய குறைகளைப் போக்க நாம் நன்றாக நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்று.

நண்பர் ஹாஜா ஷெரீப் அவர்கள் பேசுகிறபோது—சென்னையிலிருந்து வந்த அங்கத்தினராக இருப்பதாலும், வியாபாரத்தில் ஈடுபட்டவராக இருப்பதாலும்—சில புள்ளி விவரங்களோடு அவர் சொல்ல ஆரம்பித்து விட்டார். "தர்மல் ஸ்டேஷன் மூலம் மின்சார சக்தி உற்பத்தி செய்தால், ஹைட்ரோ எலெக்ட்ரிக் பவரைக் காட்டிலும் குறைந்த செலவில் உற்பத்தி செய்ய முடியும்; ஆகவே, அதற்கு அதிகமான முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்" என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், சென்னை நகரத்தைப் பொறுத்தவரை, நிச்சயமாக தர்மல் பவர் உற்பத்தி செய்ய வேண்டுமென்ப

ஆசைப்பட்டாலும், அதனுல் ஏற்படக்கூடிய செலவு மிகவும் அதிகமாக இருப்பதால்தான் அந்தப் பக்கமே நாம் திரும்ப முடியாத நிலையில் இருக்கிறோம்.

தர்மல் ஸ்டேஷனுக்கு முக்கியமாக தேவைப்படும் பொருள் நிலக்கரி. நிலக்கரியானது நம்முடைய ராஜ்யத்தில் இல்லை என்பது அவர்களுக்குத் தெரியும். அது வெகு தொலை தூரத்திலிருந்து வர வேண்டிய பொருள். அது ரயில் மூலமாக வந்து சேரவேண்டுமென்றால் ஒரு டன்னுக்கு 36 ரூபாய் ஆகிறது. கப்பல் மூலமாக வரவேண்டுமென்றால் டன் ஒன்றுக்கு 72 ரூபாய் ஆகிறது. இவ்வளவு உயர்ந்த விலையில் நிலக்கரியை வாங்கி தர்மல் ஸ்டேஷன் ஏற்படுத்தி, அதிலிருந்து மின்சார சக்தியைப் பெற வேண்டுமென்றால், நிச்சயமாக அது அவ்வளவு சாத்தியம் இல்லை என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நண்பர் ரஷித் அவர்கள் சொல்கிறபோது, பஞ்சாயத்துப் பிரதேசங்களில் நிறைய மின்சார விளக்குகள் போடவேண்டுமென்று சொன்னார்கள். அதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால், பஞ்சாயத்துக்களினுடைய நிதி நிலைமை எப்படி இருக்கிறது என்பது அது சம்பந்தப்பட்ட இலாகாவிற்குத் தான் தெரியும். அந்தந்த பஞ்சாயத்துக்களுக்கு வசதி இருக்கிறது என்றால், அதற்கான கட்டணங்களைச் செலுத்துவதற்கு ஆட்சேபனை இல்லை யென்றால், நாங்கள் போடுவதைப்பற்றி ஆட்சேபனை இல்லை.

இன்னொரு முக்கியமான கோரிக்கை இங்கு எழுப்பப்பட்டது. எதிர்க் கட்சித் தலைவரும் சேர்ந்து எழுப்பிய குறை. மின்சார போர்ட்டானது வெறுமனே அதிகாரிகளைக் கொண்ட போர்டாக அமைந்திருப்பதால், பொது மக்களுடைய குறைகளை எடுத்துச் சொல்வதற்கு அதிகாரப் பற்று இல்லாத அங்கத்தினர்கள் அதில் இருக்கவேண்டுமென்று சொன்னார்கள். இப் பொழுது அமைந்திருக்கும் போர்டுக்கு ஒரு காலவரையறையைக் கொடுத் திருக்கிறோம். ஒரு வருஷத்திற்குத்தான் அது இருக்க முடியும். வெறும் அதிகாரிகளைக் கொண்டு மட்டும் அந்த போர்டு அமைந்து இருப்பதற்கு முக்கிய காரணம்பற்றி நான் ஆரம்ப உரையிலேயே சொல்லியிருக்கிறேன். போர்டுக்கு எல்லா விஷயங்களும் சுமுகமாக, நல்ல விதமாக மாற்றப்பட்டு, அந்த இயந்திரம் நல்ல முறையில் வேலை செய்வதற்கு ஆரம்பமாக வேண்டும். அப்படி ஆரம்பித்தவுடனே, மேலும் பொது மக்களின் அபிப் பிராயங்களைத் தெரிந்துகொள்வதற்கு, உத்தியோகப்பற்று இல்லாதவர் களையும் சேர்த்துக்கொள்ளும் விஷயம் யோசிக்கலாம். பொதுமக்களுடைய கோரிக்கைகளைத் தெரிந்து கொள்வதற்காக **Consultative Committee** ஒன்று அமைக்கப் போகிறோம். அதை உடனடியாக ஆரம்பித்து விடுவோம் என்று எனது ஆரம்ப உரையில் தெரிவித்திருக்கிறேன். **Consultative Committee** நல்ல முறையில் இயங்க போர்டினுடைய ஒத்துழைப்பு கிடைக்கும் என்று நான் நம்புகிறேன்.

இந்த மான்யக் கோரிக்கைபற்றிய விவாதத்தில் கலந்துகொண்ட எல்லா அங்கத்தினர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இந்த மான்யத்தை சபை அனுமதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

* SRI K. S. G. HAJA SHERIFF : On a point of information, Sir. I can tell the Hon. Minister in-charge that railway freight per ton of coal from Calcutta to Madras is only Rs. 27–8–0 and the other charges will not go beyond Rs. 7–8–0. Thus the total cost per ton is not more than Rs. 35 per ton. 12-40 p.m.

THE HON. SRI C. SUBRAMANIAM : If the waggons are available in sufficient numbers, no doubt coal could be moved at the cost indicated by the hon. Member. But, unfortunately, there is waggon shortage, and we have to move it by sea. The hon. Member knows that strangely enough movement by sea is costlier than movement by rail.

SRI K. S. G. HAJA SHERIFF : Sir, may I tell the Hon. the Minister for Finance that the cost per ton by sea is only Rs. 27-8-0 from Calcutta to Madras?

SRI M. JAGANNATHAN : Sir, may I know on what basis the present members of the Electricity Board were selected and also, in the future, if non-officials are going to be appointed to the Board, will that Board consisting of non-officials have the same powers as the Board is having at present?

THE HON. SRI V. RAMAIAH : The Board will have the same powers throughout. There is no question of powers varying with membership. I have not said that in future I am going to nominate non-officials. This will be considered. The act specifies the members now. One is the administrative member, the second is the technical member, and the third is the Accounts member. The other two can be nominated at the discretion of the Government. We are nominating five members. Four have already been nominated. If the hon. Member wants, I can give him the names. The fifth member is still to be nominated. He will be nominated soon.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, the hon. Member wanted to know on what basis the present personnel had been selected to constitute the Board. Hon. Members are aware that we are changing over to another system altogether by appointing this Board. Till now the Government were directly responsible, and one of the departments was looking into it. Therefore in making this transfer, we wanted to see that there was the least dislocation. The persons who were dealing with the subject were put in the Board so that there might be continuity. So the P.W.D. Secretary, who was dealing with the subject at the Secretariat level, and then the Finance Secretary, who had to look into every scheme involving expenditure, and the Chief Engineer, Electricity, who was the Head of the Department, were put in this Board. These people were selected so that there might be continuity in administration. After the Board has been put on a stable basis, we can consider whether we can make a change. But if we make the change now and create dislocation, then the progress of the department and the progress of the various schemes may be retarded. We wanted to safeguard this. It is only on this basis that the present personnel has been selected.

MR. SPEAKER : Is the hon. Member Sri P. S. Chinnadurai withdrawing his cut motion?

SRI P. S. CHINNADURAI : No, Sir.

MR. SPEAKER : The question is :

" That the allotment of Rs. 18,05,15,400 under Demand XXVII—Electricity—be reduced by Rs. 100 ".

The cut motion was put and lost.

11th July 1957]

MR. SPEAKER : I now put the original motion to the vote of the House. The question is :

" That the Government be granted a sum not exceeding Rs. 18,05,15,400 under Demand XXVI—Electricity ".

The Demand was put and carried and the Grant was made.

MR. SPEAKER : The hon. Member Sri S. B. Adityan who moved the cut motion to Demand XLI—Capital Outlay on Electricity Schemes—is not in his seat. His cut motion is therefore deemed to have been withdrawn.

I now put the original motion to the vote of the House.

The question is—

" That Government be granted a sum not exceeding rupees 29,76,87,100 under Demand XLI—Capital Outlay on Electricity Schemes ".

The Demand was put and carried and the Grant was made.

## (3) DEMAND VIII—IRRIGATION.

## (4) DEMAND XXXVI—CAPITAL OUTLAY ON IRRIGATION.

**THE HON. SRI P. KAKKAN** : கனம் சபாநாயகர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் அவர்களின் சிபார்சின் பேரில் எட்டாவது மான்யக் கோரிக்கையான " நீர்ப்பாசனத்திற்கு " ரூபாய் 1,59,01,800-க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு ஒதுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். 12-50 p.m.

மேலும் மேன்மை தங்கிய கவர்னர் அவர்களின் சிபார்சின் பேரில் 36-வது மான்யக் கோரிக்கையான " நீர்ப்பாசன " முதலீட்டுத் திட்டங்களுக்காக ரூபாய் ஆறு கோடியே, எழு லட்சத்து முப்பத்தி எழாயிரத்து நூறு ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு ஒதுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கனவேயுள்ள நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு ஏற்படும் மராமத்துச் செலவுகளையும், அபிவிருத்தி அல்லது விஸ்தரிப்பு வேலைகளுக்கான செலவுகளையும் நடப்பு வருமானத்திலிருந்து எட்டாவது மான்யக் கோரிக்கை—(நீர்ப்பாசனம்)—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதியிலிருந்து, செலவிடவேண்டும். ஏற்கனவே கட்டப்பட்டு வரும் அல்லது புதிய ஆண்டில் மேற்கொள்ளவிருக்கும் புதிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்காகவும் செலவுகளில் பெரும்பகுதியை " மானியக் கோரிக்கை 36—நீர்ப்பாசன முதலீட்டுத் திட்டம் " என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் இருந்து செலவிட வேண்டும். ரெவின்யூ இலாகா மேற்பார்வையின் கீழ் நடத்தப்படும் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூபாய் முப்பத்து நாலு லட்சத்து இருபத்தோராயிரத்து எண்ணூறும் எட்டாவது மான்யக் கோரிக்கையில் ஒதுக்கப்பட்டுள்ள தொகையில் அடங்கியிருக்கிறது. சாதாரணமாக, நீர்ப்பாசனத் திட்டங்களை பழுது பார்ப்பதற்கும், கட்டுவதற்கும் உபயோகப்படுத்தப்படுகிற இயந்திர சாதனங்களின் செலவும், சிப்பந்திகளின் செலவும் " 25-ஆவது மான்யக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதியிலிருந்து சரிக்கட்டப்படும். இந்த மான்யக் கோரிக்கையில் நீர்ப்பாசனத்திற்கென்று ஒதுக்கப்பட்டுள்ளதில் ஒரு பகுதி, அதாவது ரூபாய் பத்தொன்பது லட்சத்து அறுபத்தாயிரத்து அறுநூறு நீர்ப்பாசனத் தலைப்பின் கீழ் சரிக்கட்டப்படும். ஆகவே 1957–58-ம் ஆண்டில் " வோட் " அளிக்கப்பட்டு செலவு செய்யப்படும் மொத்த மானியம் ரூபாய்

[Sri P. Kakkan] [11th July 1957

புது நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதில் அரசாங்கம் எவ்வளவு தாராளமான கொள்கையை அனுசரித்து வருகிறது என்பதை அங்கத்தினர்கள் அறிவார்கள். புதிய திட்டங்களை அனுமதிக்கும்போது முக்கியமாக அதனால் எவ்வளவு உற்பத்தி ஏற்படும் என்னும் ஒரே விஷயம் மட்டும் இப்போது அரசாங்கத்தினால் கவனிக்கப்படுவதில்லை. அந்த வட்டாரத்திலுள்ள மக்களின் பொருளாதார வாழ்க்கையை உயர்த்த வேண்டும் என்பதையும் குறிக்கோளாகக் கொண்டு திட்டங்கள் ஆராயப்பட்டு, நிறைவேற்றப்படுகின்றன. ஆனால் இயற்கையாகவே உள்ள தடைகள்தான், நமக்கு முட்டுக்கட்டையாக இருக்கின்றன. ஒரு நீர்ப்பாசனத் திட்டத்தை மேற்கொண்டு நிறைவேற்றுவதென்றால், ஒரு சாதாரண ஆண்டில் நீர்ப்பாசனத்திற்கு வேண்டிய போதுமான தண்ணீர் வசதி கிடைக்குமா என்பதை நாம் கவனிக்கவேண்டியிருக்கிறது. மேலும் இந்த வட்டாரத்தில் உள்ள நிலங்கள் நீர்ப்பாசனம் மூலம் விவசாயம் செய்வதற்கு தகுதியுடையதா என்பதையும் கவனிக்க வேண்டியிருக்கிறது. ஒரு திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமானால் அதனால் ஏற்படும் செலவின் ஓரளவு பாகத்தையாவது, அதிகப்படியாக விளையக்கூடிய உணவு தானியங்களைக் கொண்டு சரிக்கட்ட முடியும் என்று தோன்றினால் ஒழிய, அரசாங்கம் அத் திட்டத்தை அனுமதிப்பதில்லை. ஆகவே திட்டத்தினால் பலன் ஏற்படும் என்று நிரூபிக்கப்பட்ட பிறகே அரசாங்கம் அத்திட்டங்களை அனுமதிக்கிறது. பெரும் முதலீடு செய்யவேண்டிய திட்டங்களினால் வரி கொடுப்போரின் சுமை அதிகமாகிறது. வரி கொடுப்போரின் சுமையை ஓரளவுக்கேனும், குறைக்க வேண்டும் என்றும் நோக்கத்துடன் சில ஆண்டுகளாக நீர்ப்பாசனத் திட்டங்களினால் பலனடையக் கூடிய மக்கள் தாமாகவே ஓரளவுக்கு திட்ட வேலைகளினால் ஏற்படும் செலவை மேற்கொள்ள முன்வர வேண்டும் என்று அரசாங்கம் எதிர்பார்த்து வருகிறது. இதனால் எந்த நீர்ப்பாசனத திட்டத்தின் மீதும் முதலீடு தொகை ஒரு ஏக்கருக்கு ரூபாய் 300-க்கு அதிகப்படாமல் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. ஏக்கருக்கு ரூபாய் 300-க்கு அதிகமாக செலவாகக்கூடிய சில திட்டங்கள் விசேஷ காரணங்களை யொட்டிதான், மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. அதாவது மிகவும் பிற்போக்கான பிரதேசமாக இருந்து அடிக்கடி பஞ்சம் ஏற்படக்கூடிய நிலைமையில் இருந்தால் அப்பிரதேச மக்களுக்கு ஓரளவு பாதுகாப்பளிக்க வேண்டும். அல்லது ஒரு ராஜ்யத்திலிருந்து மற்றொரு ராஜ்யத்தில் பிரவேசித்துச் செல்லும் நதிகளாக இருந்தால், நமது ராஜ்யத்திற்குள்ள முழு பகுதியையும் உபயோகித்துக் கொள்ள வேண்டும் என்னும் காரணத்தினால் அதிகப்படியாக செலவழிக்கப்படலாம். மேற்கண்ட கொள்கை அடிப்படையின் கீழ் அரசாங்கம் சிறியத் திட்டங்களானாலும் பெரியத் திட்டங்களானாலும் அவைகளுக்குத் தக்க கவனத்தை அளித்து வருகிறது.

இந்த அடிப்படையின் கீழ் நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பை வகித்துவரும் இலாகா தங்களின் பல்வேறு திட்டங்களையும் இந்திய அரசாங்கத்துடன், முக்கியமாக திட்டக் கமிஷனுடன், கலந்து ஆலோசித்து நிறைவேற்றி வருகின்றது. பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் " நீர்ப்பாசனம், மின்சாரம் " என்ற தலைப்பின்கீழ் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள், ஏரி மராமத்து முதலிய திட்ட வேலைகள் ஐந்தாண்டுத் திட்டத்தில் " விவசாயம் " என்ற தலைப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளன. பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் இரண்டு பிளவுகளாக்கபட்டிருக்கின்றன. அதாவது " பல நோக்கத் திட்டங்கள் " என்றும், " நடுத்தரத் திட்டங்கள் " என்றும் இரு வகைப்படும். ராஜ்யப் பிரிவினைக்குப் பிறகு நமது ராஜ்யத்தில்கீழ் பவானித் திட்டம் ஒன்றுதான் " பல நோக்கத் திட்டமாக " நிறைவேற்றப்பட்டிருக்கிறது. மற்ற திட்டங்கள் எல்லாம் " நடுத்தரத் திட்டங்களாகும் ". இதுவரையில் நாம் இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதில் எவ்வளவு முன்னேற்றம் கண்டுள்ளோம் என்பதை இங்கு நான் சுருக்கமாகக் கூற விரும்புகிறேன்.

" இந்த ராஜ்யத்தின் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் 12 பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் சேர்க்கப்பட்டன. இவைகளில் இரண்டு நிறை

வேற்றப்பட்டிருக்கின்றன. அதாவது காவிரி டெல்டா பிரதேசத்தில் சுமார் 30 லட்ச ரூபாய் செலவில் 12 வடிகால் திட்டங்கள் நிறைவேற்றபட்டன. கீழ்பவானி நீர்த்தேக்க திட்டத்திற்காக சுமார் பத்து கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. கீழ்பவானித் திட்டத்தின் கீழ் பிரியும் பெரிய வாய்க்காலிலிருந்து முழு நீளத்திற்கும் தண்ணீர் விடப்பட்டது. இதனுல் பாசன வசதி பெறும் கோபி, ஈரோடு, பவானி, தாராபுரம் தாலுக்காக்களி லுள்ள நிலங்களுக்கும், திருச்சிராப்பள்ளி ஜில்லா, கரூர் தாலுக்காவி லுள்ள நிலங்களுக்குமாக, மொத்தம் இரண்டு லட்சத்து ஏழாயிரம் ஏக்கர்களுக்கு தண்ணீர் விடப்பட்டிருக்கிறது. இரண்டு கோடியே சொச்ச ரூபாய் அதாவது 2·67 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மேட்டூர் கால்வாய் திட்டமும் முடிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு இந்தக் கால் வாய்கள் மூலமாக பாசன வசதி பெறவிருக்கும் மொத்தம் 45,000 ஏக்கர்களுக்கு இடது, வலது கால்வாய்கள் மூலமாக தண்ணீர் விட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. திருநெல்வேலி ஜில்லாவில் ஐந்து கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டு வரும் "மணிமுத்தாறு" திட்டம் முடியும் தருவாயில் இருக்கிறது. ஆரணி ஆறு நீர்த்தேக்கத் திட்டமும், சில சிறிய வேலைகள் தவிர, மற்றபடி முடிக்கப்பட்டிருக்கிறது. ஆந்திர ராஜ் யத்தில் இத் திட்டத்திற்கு வேண்டிய நிலங்களை ஆர்ஜிதம் செய்யும் வேலை ஆரம்பமாகியிருக்கிறது. இத் திட்டத்தின் கீழ் பாசன உரிமைகள் பற்றிய பிரச்சினைகளை கூடிய சீக்கிரம் தமிழ் நாட்டிலுள்ளதை ஆந்திர அரசாங்கத் துடன் பேசித் தீர்க்கப்படும். குரட்டப்பள்ளி அணைக்கட்டுத் திட்டத்தின்கீழ் பிரிந்து செல்லும் கால்வாயின் முழு நீளத்திற்கும் சென்ற விவசாயப் பட்டத்தின்போது தண்ணீர் விடப்பட்டு சுமார் 5,700 ஏக்கர் நிலங்களில் முதற் போகம் விளைந்திருக்கிறது. மதுரை ஜில்லாவில் மூன்று கோடியே மூன்று லட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும் வைகை நீர்த்தேக்கத் திட்ட மும், பெரும் அளவிற்கு முடிந்திருக்கிறது. கோயம்புத்தூர் ஜில்லாவில் மூன்று கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் அமராவதி நீர்த் தேக்கத் திட்ட வேலையும் முழு மூச்சுடன் நடந்து கொண்டிருக்கிறது. இந்தத் திட்டம் 1957 செப்டம்பர் 15-ந் தேதி முடிவுற்று சுமார் 10,000 முதல் 15,000 ஏக்கர் நிலங்களுக்குப் பாசனத்திற்குத் தண்ணீர் விட முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சேலம் ஜில்லாவில் 2 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுவரும் கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்டம் 1957 ஆகஸ்ட் 15-ஆம் தேதி முடிந்து பாசனத்திற்குத் தண்ணீர் விடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வட ஆற்காடு ஜில்லாவில் கட்டப்படும் சாத்தனூர் திட்டம் எதிர்பார்த்த தேதிக்கு முன்னதாகவே முடிக்கப்பட்டுவிடும் என்றும் தெரிகிறது. இத் திட்டத்திலிருந்தும், 1957 அக்டோபர் 2-ஆம் தேதி பாசனத்திற்குத் தண்ணீர் விடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு முடிவு பெறாத பத்துத் திட்டங்களும், புதிதாக ஆறு நீர்ப்பாசனத் திட்டங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இத் திட்டங்களுக்கு மொத்தமாக பதினைந்து கோடியே அறுபத்துநாலு லட்சம் ரூபாய் இரண் டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் செலவாகும் என்று மதிப்பிடப் பட்டிருக்கிறது. தென் கன்னடம் ஜில்லாவிலுள்ள ஹாலாடி திட்டம் இரண் டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து பிற்பாடு நீக்கப்பட்டுவிட்டது. மேலும், திட்ட நிதி ஒதுக்கலில் சிக்கனம் செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் ஒதுக்கப்பட்ட தொகையில் 5 சத விகிதம் குறைக்கப்பட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை 1,365·20 லட்ச ரூபாயாகக் குறைக்கப்பட்டது. 1956 நவம்பர் மாதம் ராஜ்ய பிரிவினைகளுக்குப் பிறகு நமது ராஜ்யத்தில் நான்கு புதிய நீர்ப்பாசனத் திட்டங்களும், இரண்டாவது திட்டத்தில் நீடிக்கவேண்டிய ஏழு நீர்ப்பாசனத் திட்டங்களும்தான் உள்ளன. இந்த நான்கு புதிய திட்டங்களாவன :

கட்டளை மேல்வாய்க்கால் திட்டம், புள்ளம்பாடி வாய்க்கால் திட்டம், விதுர் நீர்த்தேக்கத் திட்டம், பரம்பிக்குளத் திட்டம் ஆகியன. கட்டளை மேல்வாய்க்கால் திட்டப்படி காவிரி நதியில் தென் பக்கத்தில் பிரிந்து செல்லும் தென்கரை வாய்க்காலின் அருகில், ஒரு மதகு கட்டப்பட்டு,

[Sri P. Kakkan] [11th July 1957

வாய்க்கால் புதிதாக வெட்டப்படும். புதிய வாய்க்கால் 86 மைல் நீளம் இருக்கும். இந்தத் திட்டத்திற்காக சுமார் ஒரு கோடியே ஐம்பத்தாறு லட்சத்து அறுபத்தைந்து ஆயிரம் ரூபாய் செலவாகும் என மதிப்பிடப் பட்டிருக்கிறது. இதனால் மொத்தம் 20,622 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி ஏற்படும்.

இதில் சுமார் 12,000 ஏக்கர்கள் (அதாவது 8,723 ஏக்கர் தற்போது விவசாயம் செய்யப்பட்டு வருவது, 3,277 ஏக்கர் புதிதாக விவசாயத்திற்கு கொண்டு வரப்படுவது) திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஜில்லாக்களில் இருக் கும் 119 ஏரிகளின் மூலமாக பாசன வசதி பெறுகிறது. இந்த ஏரிகளுக்கு புதிய வாய்க்கால் மூலமாகத் தண்ணீர் நிரப்பப்படும். 8,622 ஏக்கர்கள் கால்வாயிலிருந்து நேரடியாக பாசன வசதி பெறும். புள்ளம்பாடி வாய்க் கால் திட்டத்தின் கீழ் காவேரி மேல் அணைக்கட்டின் வடப்பக்கத்திலிருந்து ஒரு புதிய கால்வாய் 54 மைல் நீளத்திற்கு வெட்டப்படும். இந்தத் திட்டத்திற்காக ஒரு கோடியே நாற்பத்திரண்டு லட்சத்தி நாற்பத்து மூன்று ஆயிரம் ரூபாய் செலவாகும் என்றும், சுமார் 22,114 ஏக்கர்களுக்கு பாசனவசதி ஏற்படும் என்றும் மதிப்பிடப்படுகிறது. அதாவது, திருச்சிராப் பள்ளி ஜில்லா, லால்குடி, உடையார்பாளையம் தாலுகாக்களிலுள்ள நிலங் கள் பயனடையும். இதில் 13,283 ஏக்கர்கள் ஏரிபாசனம் கொண்டவை. 8,831 ஏக்கர்கள் கால்வாயிலிருந்து நேரடியாக பாசனவசதி பெறும். தென்னாற்காடு ஜில்லா, திண்டிவனம் தாலுகா, விதூர் சமீபத்தில் வராக நதியின் குறுக்கே தொண்டியார் சங்கமத்திற்கு அரை மைலுக்குக் கீழே ஒரு நீர்த்தேக்கத்தின் அளவு 55 கோடி சதுர அடியாகும். அணைக்கட்டி லிருந்து இ◼து பக்கமாக 11 மைல் 3 பர்லாங் நீளத்திற்கு ஒரு கால்வாய் வெட்டி நீர்பாசன வசதி செய்யப்படும். இந்தத் திட்டத்திற்கு ரூபாய் 61·37 லட்சம் செலவாகும் என்றும், சுமார் 3,200 ஏக்கர் நிலத்திற்கு பாசன வசதி ஏற்படும் என்றும் திட்டமிடப்பட்டிருக்கிறது. இதில் சுமார் ஆயிரம் ஏக்கர் புதுச்சேரி ராஜ்யத்தில் உள்ளது. பரம்பிக்குளம்-அலியார், திட் டத்தின்கீழ் எழு அணைக்கட்டுகள் கட்டப்படும். ஒன்று கேரள ராஜ்ய எல்லையில் பரம்பிக்குள ஆற்றின் குறுக்காகவும், மற்றொன்று மலபார் ஜில்லாவில் பெருவாரிப் பள்ளம் குறுக்காகவும், மற்றொன்று சிச்சிலிப் பள்ளம் குறுக்காகவும் கட்டப்படும். இரண்டு அணைகள் சோலையாற்றின் மீதும், ஒன்று தெக்காடி ஆற்றின் மீதும், மற்றும் இரண்டு கோயம் புத்தூர் ஜில்லாவில் உள்ள அலியார்-பாலாறு ஆகியவற்றின் மீதும் கட்டப்படும். இந்தத் திட்டத்தினால் பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, தாரா புரம் ஆகிய தாலுகாக்களில் சுமார் 3·2 லட்சம் ஏக்கர்களுக்கு புதிதாக பாசன வசதி ஏற்படும். மேலும் அலியார் பாசனப் பிரதேசத்தில் சுமார் 27,000 ஏக்கர்களில் இரண்டாவது சாகுபடி செய்யவும் வசதிகள் ஏற்படும். இதில் 20,000 ஏக்கர்கள் கேரள ராஜ்யத்தில் இருக்கின்றன. இந்தத் திட்டத்திற்கு மொத்தம் ரூபாய் 32 கோடி செலவாகும் என கணக்கிடப் பட்டிருக்கிறது. ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் எல்லாத் திட்டங்களுக்கும் சுமார் 1,17,943 லட்ச ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்படுகிறது. 1957–58-ம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் 240 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதற்காக திட்டக் கமிஷன் ஒதுக்கியுள்ள தொகை ரூபாய் இரண்டு கோடியே பத்து லட்சத்து முப்பத்திரண்டு ஆயிரம்.

1953-ம் ஆண்டில் ஆந்திரா பிரிந்தபோதும் சமீபத்தில் ராஜ்ய பிரிவினை ஏற்பட்டதினாலும், சென்னை ராஜ்யம் ஒரே மொழி பேசும் ராஜ்யமாக ஆகிவிட்டதென்றாலும், பெரிய நீர் வளமுள்ள நதிகள் மற்ற ராஜ்யங்களுக்குப் பிரிந்துவிட்டன. இதன் விளைவாக சென்னை ராஜ்யத்தில் நீர்வளம் வெகுவாக குறைந்துவிட்டது. சென்னை ராஜ்யத்திலுள்ள காவிரி, தாமிரபரணி, வைகை, பொன்னியாறு முதலிய நதிகள் ஏற்கனவே முழுதுமாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன அல்லது பயன்படுத்தப்படப் போகின்றன. உணவு உற்பத்தியை அதிகரிக்க நீர்ப்பாசன வசதிகளை விஸ் தரிக்கவேண்டும் என்ற நோக்கம் நிறைவேற வேண்டுமானால் பக்கத்து ராஜ்யங்களிலுள்ள நீர் வளத்தை கூட்டாகப் பயன்படுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்தமாதிரி எவ்வளவு தூரம் பயன்படுத்த முடியும் என்பது தற்போது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. கேரள ராஜ்

11th July 1957] [Sri P. Kakkan]

யத்தில் மேற்கு முகமாகச் செல்லும் நதிகளை நல்ல முறையில் பயன் படுத்த பெரும் வாய்ப்புகள் இருக்கின்றன. தென்மேற்கு பருவ மழையின் போது மேற்குதொடர்ச்சி மலைகளில் பெய்யும் கன மழைகளின் விளைவாக இந்த நதிகளில் வெள்ளப் பிரவாகம் ஏற்பட்டு ஓடுகிறது. இந்த நதிப்பிரவாகம் அரபிக்கடலில் வீணகச் சென்று கலக்கின்றது. கேரள ராஜ்யத்தில் மேற்கு நோக்கிப்பாயும், பரம்பிக்குளம் பெரியார், பம்பையாறு புனலூர் நதி போன்றவைகளை திருப்பி விடுவதற்கு வழிகள் உள்ளன. பரம்பிக்குளத் திட்டத்தை விரிவாக ஆராய்ச்சி செய்யும் வேலை முன்ன தாகவே குறிப்பிட்டபடி, மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆந்திர ராஜ்யத்தை பொறுத்த வரையில் கோதாவரி, கிருஷ்ண நதிகளில் பெரும் அளவு தண்ணீர் வீணகக் கடலில் கலக்கிறது. இதில் ஒரு பகுதியை சென்னை ராஜ்யத்தில் உள்ள வறண்ட பகுதிகளுக்கு திருப்பி விடலாம். கோதாவரி தண்ணீர் கிருஷ்ண நதியில் திருப்பிவிடப்பட்டு கிருஷ்ண நதி டெல்டா பிரதேசங்களுக்கு தேவையானதைப் பூர்த்திசெய்துகொண்டு கிருஷ்ண நதித் தண்ணீரை அதே அளவிற்கு சென்னை ராஜ்யத்தின் பக்கமாகத் திருப்பிவிட முடியாதா, என்று ஆராய' வேண்டியிருக்கிறது. இந்த ஏற்பாட்டின்படி கிருஷ்ண நதியின் தண்ணீரை பெரும் அளவுக்கு சென்னை ராஜ்யத்துக்குக் கொண்டுவந்து பாசனத்திற்கு உபயோகிக்க வழி ஏற்படலாம். கோதாவரி, கிருஷ்ண நீர் வளத்தை இந்த ராஜ்யத்தில் பயன் படுத்துவதுபற்றி நமது முதலமைச்சர் ஆந்திர முதலமைச்சருடன் பூர்வாங்க பேச்சுவார்த் தைகள் நடத்தியிருக்கிறார்கள். சமீபத்தில் ஆந்திர முதலமைச்சர் இது சம்பந்தமாக நம்பிக்கை தரக்கூடிய வகையில் பேசியிருக்கிறார். இந்தத் திட்டத்திற்கு ஆதரவு கொடுக்கிற வகையிலும் தன் ஒத்துழைப்பை அளிக்க முன் வந்துள்ளார். இந்த விஷயத்தை சென்னையில் நடக்கவிருக்கும் தென் மண்டல கவுன்ஸில் முன்பு பரிசீலனைக்கு வைப்பது என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

சிறிய நீர்பாசனத் திட்டத்தின் கீழ், ஏரி, குளங்களை அபிவிருத்தி செய்வது, மராமத்து பார்ப்பது, அணைகட்டுகள் கட்டுவது, மதகுகளை அமைப் பது, சுமார் 2, 3 ஆண்டுகளுக்குள் முடியக்கூடிய புதிய ஏரிகளை வெட்டுவது ஆகிய வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த வேலைத் திட் டங்களை நீர்பாசன பிரதம என்ஜினியர் தன் வசமுள்ள மராமத்திலாகா சிப்பந்திகளைக்கொண்டும், உணவு உற்பத்தி இலாகா என்ஜினியரிங் சிப்பந்தி களைக்கொண்டும் நிறைவேற்றி வைக்கிறார். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் போது முடிவு பெறுமல் இருக்கும் 172 வேலைத் திட்டங்களும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட 144 திட்ட வேலைகளும் இன்னும் முடிக்கவேண்டி இருக்கின்றன. இந்த ஆண்டில் 480 புதிய வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படும். ஏரிகளை தூர் எடுத்து புனரமைக்கும் ஒரு புதிய ஒரு சிக்கன திட்டமும் அனுமதிக்கப்பட்டிருக் கிறது. இந்தத திட்டத்தின்கீழ் ஏரிகளிலிருந்து வண்டல்களை தூர் எடுத்து ஏரிக்கரை ஓரமுள்ள தாழ்வான நிலங்களை நிரப்பி அவைகளை சாகுபடிக்குக் கொண்டுவர வேண்டும் என்பது நோக்கம். இந்தத் திட்டம் இன்னும் ஆராய்ச்சி நிலையிலேயே இருக்கிறது. இந்த ஆண்டில் மாத்திரம் இம்மாதிரியான 7 திட்டங்கள் முடிந்து விட்டன. 11 திட்டங்கள் மேற் கொள்ள உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு வேண்டிய மண்வெட்டும் இயந்திரங்கள் ஏற்கனவே வாங்கப்பட்டுவிட்டது. விசேஷ நீர்ப்பாசன திட்டங்களை நீடித்து நடத்துவதற்காக இந்திய அரசாங்கம் 26·80 லட்ச ரூபாய் கடனகக் கொடுத்து உதவ முன் வந்திருக்கிறது. புதியத் திட்டங் களுக்காகவும், ரூபாய் 3 லட்சம் கடனக கொடுத்து உதவவும் இந்திய அரசாங்கம் ஒப்புக்கொண்டு இருக்கிறது. திட்ட வேலைகளுக்கான விரிவான வரவு செலவுத் திட்டங்கள்பற்றிய புள்ளி விவரங்கள் கிடைத்ததும் இந்த தொகையும் நம் கைக்கு வந்துவிடும். ஏரிகளை தூர் எடுத்து புனரமைக்கும் திட்டத்தின்கீழ் ரூபாய் 2·71 லட்சம் கடனகக் கொடுக்கவும் அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். இந்த சர்க்கார் கேட்டிருக்கும் மான்யங்கள் விஷயமாக சில விவரங்களை அளிக்க வேண்டுமென்று இந்திய அரசாங் கத்தை இந்த அரசாங்கம் கேட்டிருக்கிறது. அவர்கள் பதிலுக்காகக் காத் திராமல் புதிதாக இவ்வாண்டு தொடங்கிய வேலைகளை நடத்திக்கொண

[Sri P. Kakkan] [11th July 1957

டிருக்குமாறு அவர்கள் நம்மைக் கேட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டுக்கும் நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக இந்த அரசாங்கம் போதுமான நிதி ஒதுக்கி வருகிறது. அதோடு நல்ல முன்னேற்றமும் கண்டு வந்திருக்கிறது. இது எல்லாம் இந்திய அரசாங்கம் நிதி வசதி செய்து கொடுத்ததினாலும், இன்னும் மற்ற வகைகளில் ஒத்துழைப்பு அளித்ததினாலும் சாத்தியமாயிற்று. அவர்களின் நீடித்த உதவியினால் இந்த ராஜ்யத்தில் மேற்கொண்டு நீர்பாசன வசதிகளை விஸ்தரித்து முன்னேறலாம். நீர்ப்பாசன அபிவிருத்தி வேலைகளில் நமது ராஜ்ய மக்கள் காட்டிய உற்சாகமும் ஒத்துழைப்பும் மிகவும் போற்றத்தக்கதாக இருந்தது என்பதை இந்தச் சமயத்தில் நான் சொல்லாமல் இருக்க முடியாது. இதுவரை நான் சொல்லியவற்றை அங்கத்தினர்கள் மனதிற்கொண்டு வெட்டுப் பிரேரணைகள் மீது பேசும்போது, அரசாங்கத்திற்குத் தக்க சிறந்த பயனளிக்கக்கூடிய யோசனைகளை அளித்துத் திட்டங்கள் நிறைவேறும் வகையில் ஒத்துழைப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

கனம் சபாநாயகர் அவர்களே, கடைசியாக இந்த வருடம் ஆண்டவன் அருளால் பருவ மழை பெய்ததின் காரணமாக மேட்டூர் அணையில் விவசாயிகளுக்கு அதிகத் தண்ணீர் கிடைக்கக்கூடிய நிலைமை இருக்கின்றது. அதேமாதிரிதான் லோயர் பவானி அணையிலும் கூடுதல் தண்ணீர் இருக்கிறது. பெரியாறிலும் அதிகமாக மேலும் தண்ணீர் வந்திருக்கிறது என்கிற நல்ல செய்தியையும் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : Motion moved—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,59,01,800 under Demand VIII—Irrigation."

"That the Government be granted a sum not exceeding Rs. 6,07,37,100 under Demand XXXVI—Capital Outlay on Irrigation."

I understand that the Opposition parties have agreed to hon. Member Sri K. Sattanatha Karayalar's moving his Cut Motion to Demand VIII. He may therefore formally move his Cut Motion. As for Demand XXXVI, I understand that it has been agreed that hon. Member Sri K. Anbazhagan is to move his cut motion. He may also formally move his cut motion. Then these two cut motions and the original Demands will be before the House for discussion.

SRI K. SATTANATHA KARAYALAR : Sir, I move—

"That the allotment of Rs. 1,59,01,800 under Demand VIII—Irrigation be reduced by Rs. 100."

SRI K. ANBAZHAGAN : நீர்ப்பாசன முதலீடு திட்டத்தின் பெயரால் கேட்கப்பட்டுள்ள ரூ. 6,07,37,100 தேவை என்று கேட்கப்பட்டுள்ள தீர்மானத்திலிருந்து 100 ரூபாயைக் குறைக்கவேண்டுமென்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் நீர்பாசனத் திட்டங்கள் போதுமான அளவு நிறைவேற்றப்படவில்லை என்பதைப்பற்றி பேசுவதற்காக.

MR. SPEAKER : Cut Motions moved—

"That the allotment of Rs. 1,59,01,800 under Demand VIII—Irrigation be reduced by Rs. 100."

"That the allotment of Rs. 6,07,37,100 under Demand XXXVI—Capital Outlay on Irrigation be reduced by Rs. 100."

11th July 1957] [Mr. Speaker]

Now, the original Demands and the cut motions are before the House for discussion.

**Sri K. SATTANATHA KARAYALAR:** சபாநாயகர் அவர்களே, இந்த நீர்பாசனத்திட்ட மான்யக் கோரிக்கைக்கு நான் கொண்டுவந்திருக்கும் வெட்டுப் பிரேரணையின் அடிப்படையில் சில வார்த்தைகள் சொல்ல அவா உறுகிறேன். அதிலும், குறிப்பாக நான் கூற விரும்புவது எல்லாம் கீரியாறு; பம்பையாறு, கல்லாறு போன்ற ஆறுகள் வீணாக ஒழுகி கடலிலே சென்று கலக்கின்றன என்று மந்திரியவர்கள் பேசும்போதும் குறிப்பிட்டார்கள். ஆனால், இந்த ஆறுகளை எல்லாம் எந்த முறையிலே பயன்படுத்தவேண்டுமென்று அதில் ஒரு திட்டமும் இதுவரையில் திட்டவட்டமாகக் கொண்டுவரப்படவில்லை.

**The Hon. Sri P. KAKKAN:** திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

**Sri K. SATTANATHA KARAYALAR:** இந்தத் திட்டங்கள் ஏற்கனவே வகுக்கப்பட்டிருந்தபோதிலும் துரதிருஷ்டவசமாக இதுபற்றி எந்தவிதமான நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை. ஏனெனில் இந்த நதிகள் எல்லாம் கேரள நாட்டில் ஓடி அங்கு கடலிலே கலக்கிறது. இதை நமக்குப் பயன்படக் கூடிய முறையில் கொண்டு வர வேண்டுமானால் எந்த இடத்தில் அணைகட்டவேண்டும் என்று முடிவுகட்டவேண்டும். அதாவது, மலையில் ஒரு துரப்பு எடுத்து அதன் மூலமாகக் கொண்டு வர வேண்டுமா அல்லது மலையைத் தாண்டி, அதாவது "ஸைபன்" மூலமாக மலையைத் தாண்டிக்கொண்டு வரவேண்டுமா என்பதைப்பற்றி எல்லாம் ஒரு விரிவான திட்டம் அமைக்கப்பட்டிருக்கிறதா என்று தெரியவில்லை. அப்படி ஒரு திட்டம் இருக்குமானால் அதை அமுலிற்குக் கொண்டுவருவதில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டன என்று தெரிந்துகொள்ள அவா உறுகிறேன். அதேநேரத்தில் இந்தத் திட்டத்தால் கேரள நாட்டிலுள்ள எத்தனை ஏக்கர் நிலங்களுக்குத் தண்ணீர் அடியில் போகும்? அச்சன் கோவில் ஆறு போன்ற ஆறுகள், பழைய செங்கோட்டை தாலூகாவில் இருப்பது அவைகள் கலக்கும் ஆறுகளில் இந்த அணைத் திட்டம் வர இருக்கிறது. அப்படி வரும்போது அங்குள்ள நிலங்களில் தண்ணீர் எவ்வளவு கீழே போகும். அப்படியானால் எந்த அளவிற்கு அந்நிலங்கள் பாதிக்கப்படும் என்று கணக்கு எடுக்க வேண்டும்; சமீபத்தில் இதைப்பற்றி பேச்சுவார்த்தை நடத்த கேரள அதிகாரிகளிடம் பேசப் போனபோது அவர்களுக்கு இந்த புள்ளிவிவரங்கள் மிக மிக அவசியமாய் வேண்டி இருக்கிறது. நாம் திட்டத்தை கையில் வைத்துக்கொண்டிருந்தால் போதாது. இந்தத் திட்டங்களை அமல் நடத்த உடனடியாக நடவடிக்கை எடுத்தாகவேண்டும். அதைப்பற்றி விரிவான இன்வஸ்டிகேஷன் நடத்த இதில் போதிய பணம் ஒதுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. திருநெல்வேலி, ராமனாதபுரம் போன்ற மாவட்டங்களுக்கு இத் திட்டங்கள் பெரிதும் நன்மை பயக்கக் கூடியதாய் இருக்கும். அதேநேரத்தில், கன்னியாகுமரியில் ஏற்கெனவே சில திட்டங்கள் வகுக்கப்பட்டு இருக்கின்றன. அதில் ஒன்று கோதையார் திட்டம், மற்றொன்று நெய்யார் அணைக்கட்டுத் திட்டம். இத் திட்டத்தின் வேலைகள் ஒரு பகுதி இப்பொழுது கேரள ராஜ்யத்தில் நடந்து வருகிறது. இந்தத் திட்டத்தின் இடது கரைச் சானல், அதாவது "லெப்ட்பான்க் சானல்" நம் பகுதிக்கு, அதாவது திருவிதாங்கூர்-கொச்சி ராஜ்யத்தில் இருந்து இங்கு பிரிந்து வந்திருக்கக்கூடிய பகுதிக்கு பயன்-படக்கூடியது. குறிப்பாக, விளவங்கோடு தாலூகாவிற்கு பயன்படக்கூடிய ஒரு திட்டம் இது. அந்தத் திட்டம் முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்க்கப்பட்டிருந்தது. ஆனால், அது முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நடைபெறவில்லை. பின் அது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. இப்பொழுது இந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் அந்த வேலை துவக்கப்படவில்லை. வலது கரை சானலிலே மாத்திரம் வேலை நடந்துகொண்டு வருகிறது. இந்த நிதியில் கூட அந்த இடது கரைச் சானல் வேலைக்காகப் பணம் ஒதுக்கப்படவில்லை. கோதையார் திட்டத்தில்

[Sri K. Sattanatha Karayalar] [11th July 1957

பேச்சிப்பாறை, பெருஞ்சாணி என்று இரண்டு அணைக்கட்டுகள்தான் கட்டப்பட்டுள்ளது. அடுத்ததாக, "காப்பிட்டல் அவுட்லே"யின் கீழ் கன்னியாகுமரி ஜில்லாவிற்கு மொத்தம் ஐந்து லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. "மைனர் இரிகேஷன்" இனத்தில் நாலு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அங்குள்ள பிரச்னையை நல்லமுறையில் உணர்ந்திருப்பார்களேயானால், இந்தத் தொகை, கடலில் கரைத்த காயமாகும் என்பதை உணருவார்கள். இந்தத் திட்டங்கள் கொண்டுவருவதன் மூலம் மிகப் பெரிய அளவு நிலப்பரப்பிற்குத் தண்ணீர் கொடுக்க முடியும், மற்றொன்று விளாத்துறை லிப்ட் இரிகேஷன் ஸ்கீம் நெடுநாட்களாகப் பூர்த்தி செய்யப்படாமல் இருக்கிறது. இப்பொழுதும் கூட அதைச் செயல் முறைக்குக் கொண்டுவர அதற்கு எந்தவிதமான நிதியும் ஒதுக்கப்படவில்லை. உடனடி வேலை செய்ய திட்டம் வகுத்ததாகத் தெரியவில்லை. மாம்பழத்துறை அணைத்திட்டம் என்று ஒன்று இருக்கிறது. இந்தத் திட்டங்களை எல்லாம் கோர்வையாக வைத்து முதலில் எதைச் செய்யப் போகிறோம் என்றும், இரண்டாவது ஆண்டில் எதைச் செய்யப்போகிறோம் என்றும் திட்டம் இருக்கவேண்டும். அதாவது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒன்று, இரண்டு, மூன்று என்று முதன்மை ஸ்தானம் கொடுத்து திட்டவட்டமாகத் திட்டம் வகுக்கப்பட வேண்டும். அப்படியின்றி காலம் தாழ்த்திக்கொண்டு போனால் அவை எந்தவிதமான பயனும் தருவதாய் இருக்காது. அடுத்தது, சிறு குளங்களை மராமத்து பார்க்க ஒட்டுமொத்தமாகத் திட்டம் இருக்கவேண்டும். முதலில் எந்தெந்த குளங்கள் மராமத்து பார்க்கவேண்டும், பின் எந்தெந்த குளங்கள் மராமத்து பார்க்கவேண்டும் என்று திட்டவட்டமாக ஒரு திட்டம் வகுக்கவேண்டும். நாட்டு மக்களுக்கு இது தெரியவேண்டும். எந்த வேலை எப்பொழுது நடக்கும் என்று மக்களுக்குத் தெரியவேண்டும். அப்படி வரிசைக்கிரமமாக ஒரு ஜாபிதா அமைத்துக்கொள்வது நல்லது. அப்படி ஒரு ஜாபிதா அமைத்து வேலை செய்தால் வேலைகள் செம்மையாக நடக்கும். அது மக்களுக்கு நல்லமுறையில் பயன் அளிப்பதாய் இருக்கும். அடுத்தபடி வேறொரு விஷயத்தைப் பற்றி மாத்திரம் குறிப்பிட ஆசைப்படுகிறேன். தண்ணீர் உபயோகப்படுத்துவதில், சிக்கனமாக உபயோகப்படுத்த வேண்டிய நிலைமையில் இருக்கிறோம் என்பதை நாம் உணர்வோமாக. குளங்களிலிருந்து தண்ணீரை விநியோகிக்கும்போது இந்த சிக்கன முறை தற்காலம் அனுஷ்டிக்கப்படுவதில்லை. யாருக்கு செல்வாக்கு அதிகம் இருக்கிறதோ அவர்கள் தண்ணீரைக்கொண்டு போய் விடுகிறார்கள். தண்ணீர் விநியோகிக்கக் கூடிய பொறுப்பு சர்க்கார் நிர்வாகத்தில் இல்லை. செங்கோட்டை, கன்னியாகுமரி போன்ற இடங்களில் தண்ணீர் தட்டு ஏற்படும்போது ரெவின்யூ இலாகா உத்தியோகஸ்தர்கள் தலையிட்டு தண்ணீரை யார், யார் நிலத்திற்குக் கொடுக்கவேண்டும், எந்த இடத்திற்கு முதலில் கொடுக்க வேண்டும், எந்த இடத்திற்குப் பிறகு கொடுக்க வேண்டும் என்று நிர்ணயப்படுத்திக் கொடுப்பார்கள். ஆனால் இங்கேயோ, யார் யாருக்கு செல்வாக்கு அதிகமாக இருக்கிறதோ அவர்கள் அந்தத் தண்ணீரை தட்டிக்கொண்டு போய் விடுகிறார்கள். சிலர் ஆற்றில் போகும் தண்ணீரை பம்ப் வைத்து அடித்து எடுத்துக் கொண்டு போகிறார்கள். இதை உடனடியாக நிறுத்துவதற்குள்ள நடைமுறை பழக்கத்தில் இல்லை. தவறுதலாக தண்ணீரைக் கொண்டு போனால் பின்னால் ஒரு அபராதம் விதிக்கப்படும். அந்த அபராதத்தைக் கட்டிக் கொள்ளலாம் என்ற தைரியத்தில் அவர்கள் தண்ணீரை எடுத்துக்கொண்டு போய் விடுகிறார்கள். இதனால் விவசாயிகளிடையே அடிக்கடி கலகமும், சச்சரவும் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது.

யார் யாருக்கெல்லாம் முன்னதாகத் தண்ணீர் கொடுக்க வேண்டும் என்பதை நிர்ணயப்படுத்தி தகுந்த திட்டவட்டமான ஒரு முறை இருக்க வேண்டும். இதை அமல் நடத்துவதற்கு குறிப்பாக பஞ்சாயத்தோ அல்லது என்னைக் கேட்டால் விவசாய சங்கங்களுக்கோ நேரிடையாக அதிகாரம் கொடுக்கலாம். அல்லது பி.டபிள்யூ.டி-யோ, ரெவின்யூ இலாகாவோ, இதை நிர்வகிக்கலாம். செங்கோட்டையிலும், நாகர்கோவில் பகுதியிலும் ரெவின்யூ இலாகாவே இதை அமுல் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களே இதைத் தொடர்ந்து நடத்திக்கொண்டு வருவதில் எனக்கு ஆட்சேபணையில்லை. தண்ணீர் விநியோகம் ஒழுங்காக இருக்கவேண்டும்; அவ்வளவுதான்.

சில மாஜி ஜமீன்தார்களும், ஆங்காங்கு செல்வாக்கு உள்ளவர்களும், அவர்களுக்கு வேண்டிய தண்ணீரைக் கொண்டுபோய்விடுகிறார்கள். இதை மாற்றித் தண்ணீர், நல்ல முறையில் நேர்மையாக விநியோகம் செய்ய ஒழுங்கு செய்யவேண்டும். இல்லாவிட்டால், மீன் பிடிப்பதற்கு குத்தகை எடுத்திருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக ஒரு சில இடங்களில் அவர்கள் தண்ணீரை மிதமிஞ்சி திறந்துவிட்டுப் போகிறார்கள். குதும்பை, கச்சல் வைத்து மீன் பிடிக்க தண்ணீரைப் பாழ்படுத்திவிடுகிறார்கள். எஞ்சிய தண்ணீர் ஆற்றிலே போய்விடுகிறது. அடுத்தபடியாக தண்ணீர் வேண்டுமானால் மாமூல்கள் கொடுக்கவேண்டும். இதையெல்லாம் பார்த்துக் கொள்ள லஸ்கர் என்று வைத்திருக்கிறது. அந்த லஸ்கர் 20 மைல் போய் பார்க்கவேண்டியிருக்கிறது. இதற்கு கூடுதலான ஆட்களை நியமித்து மேற்பார்வை பார்க்க ஏற்பாடு செய்யவேண்டும். கால்வாய்கள் நல்ல முறையிலே பார்க்க எத்தனை ஆட்கள் வேண்டுமோ அத்தனை ஆட்களை நியமிக்கவேண்டும். பயிர்கள் நல்ல முறையிலே வளர்வதற்கு வேண்டிய தண்ணீர் விடுவதற்கு உடனடியாக இந்த வேலையில் கவனம் செலுத்துவார்கள் என்று கருதுகிறேன்.

கடைசியாக செங்கோட்டைத் தாலூகாவில் மிகச் சிறிய திட்டங்கள் பல இருக்கின்றன. பல கோடிக் கணக்கான ரூபாய்களைச் செலவழிப்பதற்கு பதில் உடனடியாக இவைகளைச் செய்யலாம். முகட்டைகால் ஸ்ரீ மூலப்பேரி அணை அடவிநயினார் கோவில் அணை போன்ற திட்டங்கள் ஒவ்வொன்றும் 7 லட்சம், 10 லட்சம், 15 லட்சத்துக்குள்ளாக இருக்கக் கூடிய பல திட்டங்கள். அதைத் தவிர பொதிய மலைச் சாரலில் மதகு அணை என்று சொல்லுகிற ஒரு சிறு நீர்ப் பாசனத் திட்டம் சுமார் 10 லட்சத்திற்குள்ளாக முடிக்க முடியும். இது போன்ற சிறு சிறு நீர்ப் பாசனத் திட்டங்களை அமைத்துத் தண்ணீரை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளலாம். மந்திரி அவர்கள் இந்தத் தண்ணீர் பாழாகப் போகவில்லை என்று சொல்லலாம். ஆனால் இது உண்மை அல்ல. மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து கிழக்கே ஓடும் நதிகளின் தண்ணீரானது நல்ல முறையில் பயன்படுத்தப்படாமல் பெரு மழை பெய்யும் காலத்தில் கூடத் தண்ணீர் தட்டு இந்த இடங்களில் ஏற்படுகிறது. அதாவது தண்ணீர் பல இடங்களில் சிதறிவிடுவதால் நல்ல முறையிலே பயிர்களுக்கு கொண்டுவர முடியாமல் இருக்கிறது. எவ்வளவு தூரம் தண்ணீர் வீணாகாமல் சமுதாயத்துக்கு பயன்படுத்த முடியுமோ அதற்கான திட்டங்கள் உடனடியாக உருவாக வேண்டுமென்று கூறிக்கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

* SRI A. R. SUBBIAH MUDALIAR : தலைவர் அவர்களே, மராமத்து மந்திரி அவர்கள் கொண்டு வந்த டிமாண்டை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல பிரியப்படுகிறேன். அதாவது 11 திட்டங்களுக்கு 239 லட்ச ரூபாய் **Capital works**-க்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது போக **Special Irrigation, Food Production Department** சில வேலைகள் செய்ய 39 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த 39 லட்ச ரூபாய் **Food Production Department** செய்கிற காரியத்திற்குக் காணாது. **P.W.D.** ஐ விட **Food Production** தான் நல்ல முறையில் வேலை செய்கிறது. முக்கியமாக ஜமீன் பிரதேசத்தில் அவர்களுடைய வேலை மிகவும் போற்றக்கூடியதாக இருக்கிறது. ஆகவே இந்த வேலைகளுக்காக கூடுதலான தொகை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது போக முக்கியமாக இந்த மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து வரக் கூடிய தண்ணீரைக் கிழக்கே திருப்புவதைப்பற்றி நிதி மந்திரி அவர்கள் **Budget** பிரசங்கத்தில் குறிப்பாக வெளியிட்டிருக்கிறார்கள். ஆனால் அதற்கு ஒரு திட்டமும் வகுக்க வில்லை என்று தாழ்மையுடன் சொல்ல விரும்புகிறேன்.

திருநெல்வேலி ஜில்லா சங்கரன் கோவில் தாலூகாவில் இதைச் சொன்னவுடன் மந்திரி அவர்கள் சிரிக்கிறார்கள். ஏனென்றால் அவரிடம் போய் இது சம்பந்தமாக மன்றாடியிருக்கிறேன். என்னுடைய கவலை அவருக்குத் தெரியும்.

THE HON. SRI P. KAKKAN: கீரியார் திட்டத்தைப் பற்றி பார்த்து விசாரணை செய்ய முயற்சி எடுக்கவில்லையா என்ன ?

SRI A. R. SUBBIAH MUDALIAR : இதைப் பற்றி நன்றாகத் தெரியும். ஆகையால், இந்தக் கஷ்டத்தை தெரிந்து வேலை செய்யவேண்டுமென்று ஆத்திரம் இருக்கக்கூடிய மந்திரி நமக்கு வாய்ந்திருக்கிறார்கள். ஆதலால் தான் குறையை சொல்லுகிற கட்டத்தில் சொல்லுகிறேன். அதாவது அந்த சங்கரன்கோவில் தாலுகா பஞ்சத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது. கடந்த 10 வருஷ காலமாக தீர்வை வஜா செய்துகொண்டிருக்கிறார்கள். பஞ்ச நிவாரண வேலைகளுக்கும் தொகை ஒதுக்கப்படுகிறது. கிணறுகள் வெட்ட லோன் கொடுக்க வேறு தொகை கொடுக்கிறார்கள். நில வரி வஜா செய்வதோடு சர்க்காருக்கு கொடுக்கவேண்டிய கடன்களின் வாயிதாவை மாற்றி கொடுக்கப்படுகிறது. வருஷந்தோறும் மொத்தம் 10 லட்ச ரூபாய் வரை செலவழிக்கப்படுகிறது. வருஷா வருஷம் இம்மாதிரி தொகையை செலவழிப்பதற்குப் பதில் உடனடியாக முதலில் சொல்லப்பட்ட திட்டத்தை நிறைவேற்ற வழி செய்யலாம். கீரியாறு திட்டத்தை 'feasible but not remunerative' என்று ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. P.W.D.-ல் 'not feasible'-ம் 'not remunerative'-ம் சர்வ சாதாரணமாக உபயோகப்படுத்துகிறார்கள். 'Not feasible' 'not remunerative' இந்த இரண்டு வார்த்தைகள் அவர்கள் டிக்ஷனரியில் மிகவும் முக்கியமான இடங்கள் பெறுகின்றன. அவர்களுடைய தயவு இருக்கிறதென்றால் "feasible" என்று சொல்வார்கள். P.W.D. டிக்ஷனரியிலிருந்து இந்த இரண்டு வார்த்தைகளையும் எடுத்துவிட்டால் நாடு சுபிட்சம் அடையும். ஒரு திட்டத்தை எடுக்கக்கூடிய நிலையில் 'feasible' என்று சொல்லிவிட்டு அதே அறிக்கையில் 'not remunerative' என்றும் சொல்லிவிடுவார்கள். இந்தத் தொகுதிக்கு 10 லட்ச ரூபாய் வருஷந்தோறும் செலவழிக்கப்படுகிறது. அதே சமயத்தில் கீரியாறு திட்டம் 'not remunerative' என்ற காரணத்தால் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. Indian Irrigation Commission 50 வருடங்களுக்கு முன் ஒரு அறிக்கை சர்க்காரிடம் சமர்ப்பித்து இருக்கிறது. அதிலே famine area-வுக்கு முதலிடம் கொடுக்கவேண்டுமென்று அப்பொழுதே வகுத்திருக்கிறார்கள். அந்தக் காலத்திலே famine area வுக்கு முதலிடம் கொடுக்கவேண்டுமென்று சொல்லப்பட்டது. எங்கள் பகுதியில் எல்லோரும் பஞ்சத்தால் கஷ்டப்படுகிறோம். சர்க்காருக்கும் இதனால் ஏக நஷ்டம். இத் திட்டத்தை எடுத்து நடத்தாததற்குக் காரணம் not remunerative scheme என்றும் கேரளாவோடு பேசவேண்டுமென்று 1955–56 லேயே சொன்னார்கள். இன்று வரை, கேரளாவோடு பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்தார்களா, பேசினார்களா, என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. எங்களுக்கென்னவோ ஒரு விமோசனமும் ஏற்படவில்லை. நல்ல காலம் பிறக்கவில்லை என்று தான் நினைக்கிறேன். இது போக சில யோசனைகள் சொல்ல விரும்புகிறேன். அதாவது இப்போது Minor Irrigation Department-ல் P.W.D.-ம் வேறாக இருக்கின்றன. Minor Irrigation Branch, R.D.O. அல்லது தாசில்தார் மேற்பார்வையில் இருக்கிறது. R.D.O. தாசில்தார் இவர்களெல்லாம் non-technical officers. இந்த Branch ஐயும் P.W.D. யிடம் கொடுத்தால் நல்லது. வேலை சுறுசுறுப்பாகவும் நல்ல நிலைமையிலும் நடக்கும்.

சிறிய ஏரிகளின் உள்வாய்களில் சர்க்கார் பொறுப்பில் கிணறுகள் வெட்டி மின்சார விசை மூலம் தண்ணீர் கொடுக்கலாம். Sub-soil water இருக்கும் இடத்தில் மின்சார விசை மூலமாகத் தண்ணீர் எடுத்து விநியோகம் செய்யலாம். ஒன்று இரண்டு ஏக்கர் நிலமுள்ளவர்களுக்கு நான் சொன்ன திட்டங்களால் நன்மை உண்டாகும். சர்க்கார் கிணறுகள் வெட்டி மின்சாரம் மூலம் தண்ணீர் சப்ளை செய்தால் ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் பதினைந்து ஆறுலும் விவசாயிகள் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். இம்மாதிரி சின்னத் திட்டங்களை வகுக்க சர்க்கார் துணை செய்ய வேண்டும்.

11th July 1957] [Sri A. R. Subbiah Mudaliar]

கடையநல்லூர் பகுதியில் வேம்பார் என்ற ஆறு இருக்கிறது. இதற்கு ஒரு திட்டம் தேவை. பதினைந்து வருஷமாக அதற்கு முதல் இடம் கொடுத்து உதவவேண்டும் என்று கிளர்ச்சி செய்து வருகிறோம். அதையும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு வருஷமும் Half-yearly Irrigation Conference கலெக்டர் நடத்துகிறார்கள். அதில் செய்யப்படும் தீர்மானங்களின்படி காரியங்கள் அமுல் நடத்தப்படுவதில்லை. ஆறு மாதங்களுக்குப் பிறகு, அடுத்த Conference-ல் கவனிக்கப்படும் என்ற பதில் வரும். இதை quarterly Conference ஆக நடத்தவேண்டும், பொது ஜனங்கள் சொல்லக்கூடிய யோசனைகளை ஏற்று உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அடுத்தபடியாக Irrigation Committee களைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். விவசாயிகள் கமிட்டிகள் நிறுவ தயார் என்றால், ரெவின்யூ அதிகாரிகள் அதற்கு ஒருவிதமான ஊக்கமும் கொடுப்பது கிடையாது. ஏன் என்றால் அவர்களுடைய அதிகாரம் போய் விடுமோ என்ற பயம். இந்தக் கமிட்டிகள் நிறுவி நன்றாக வேலை செய்ய வேண்டுமென்றால் அதற்குச் சலுகைகளும், உற்சாகமும் கொடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, குளக்கரைகளில் ரோடு போட மராமத்து இலாக்கா ஆக்கம் கொடுப்பதில்லை. கரைமேல் ரோடு போட்டால் இடைஞ்சல் ஏற்படும் என்று சொல்லப்படுகிறது. இந்தக் கரைகள் மேல்தான் உரங்கள் கொண்டு போகவேண்டி இருக்கிறது. இந்த மாதிரி ரோடு போட ஜனங்கள் கண்டிரிபூஷன் கூட கொடுக்கத் தயார். ஆகையால் குளக்கரையில் ரோடு போட அனுமதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, வீரூர் தேக்கம், பரம்பிக்குளம் முதலான திட்டங்கள் எடுக்க சர்க்கார் யோசித்துக்கொண்டு இருக்கிறார்கள். கீரியாறு திட்டத்தைப்பற்றி நடவடிக்கை எடுக்கவில்லை. தக்க அளவில் நடவடிக்கை எடுக்க முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

**Sri T. R. RAMAMIRTHA THONDAMAN :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நீர்பாசன இலாகா அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியத்தை வரவேற்கிறேன். இந்த இலாகா சம்பந்தப்பட்ட வரையில் நல்ல திட்டங்களைப் போட்டு ஏராளமான பணத்தையும் ஒதுக்கி இருக்கிறார்கள். ஆனால், இந்த இலாகாவில் சில குறைபாடுகள் இருக்கின்றன. அவைகளை நீக்கவேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

எங்கள் பகுதியில் இந்த நிர்வாகம் ஆர். சி. டிவிஷன் என்று இலாகாவின் பிரிவால் நடந்து வருகிறது. இந்த ஆபீசர்கள் மார்ச்சு மாதத்திற்குப் பிறகு எஸ்டிமேட்டுகள் தயார் செய்கிறார்கள். எஸ்டிமேட்டுகள் அங்கீகரிக்கப்பட்டு வேலை செய்வதற்குள் தண்ணீர் வந்து விடுகிறது. அதனால் வேலை நன்றாக நடைபெறுவதில்லை. நடந்தாலும், சுமுகமாக நடப்பதில்லை. முப்பது அல்லது நாற்பது சதவிகிதந்தான் நல்ல முறையில் செலவாகிறது. இதுபோன்ற சிக்கல்களை எல்லாம் களைந்து, இப்போது இருக்கும் முறையையும் மாற்றியமைக்கவேண்டும்.

இன்னொன்று, இந்த கண்டிராக்ட் முறை அதன்படி இந்த வேலைகள் எல்லாம் கண்டிராக்டர்களிடம் விடப்படுகிறது. பழைய எஸ்டிமேட் ஷெட்யூல் ரேட்டே பின்பற்றுகிறார்கள். அது அப்போது ஆள் கூலி பன்னிரண்டணா அல்லது எட்டணாவாக இருந்தது. இதை வைத்துக்கொண்டு இப்போதும் வேலை செய்வதால் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இந்த வருஷம் கட்டப்பட்ட கட்டிடமோ வேலையோ அடுத்த வருஷம் இருப்பதில்லை. இந்த விஷயத்தில் சர்க்கார் ஒரு கண்டிப்பான உத்திரவு போடவேண்டும். அதாவது, பழைய செட்யூல் ரேட்டுகளை மாற்றி இப்பொழுது இருக்கும் நிலைமைக்குத் தகுந்தாற்போல் அதை மாற்றவேண்டும். மேலும், கண்டிராக்டர்கள் கொடுக்கும்படி டிபாஸிட் தொகையை வேலை முடிந்து ஐந்து வருஷங்களுக்குப் பிறகே செய்த வேலைகளை சரியாக இருக்கின்றனவா என்று பரிசீலனை செய்த பிறகே, திருப்பிக் கொடுக்கப்படவேண்டும்.

[Sri T. R. Ramamirtha Thondaman] [11th July 1957

அடுத்தப்படியாக எங்கள் தொகுதியில் மண்ணியார், பழவார் முதலிய ஆறுகள் பாய்கின்றன. முன்பெல்லாம் மண்ணியாற்றுக்குத் தலைப்பு கொள்ளிடத்தில் இருந்தது. காவிரியில் இருந்து வடிகால் மூலமாகவும் பாசனம் நடந்தது. ஆனால் இப்பொழுது கொள்ளிடத் தலைப்பு தூர்ந்துபோய், காவிரி வடிகாலிலிருந்து மட்டுமே பாசன வசதி கிடைக்கிறது. இதனால் மேட்டுப் பாங்கான கும்பகோணம், பாபநாசம் முதலிய தாலூக்காக்கள் பாதிக்கப்படுகின்றன. இதனால் அந்த இடங்களில் கண்டுமுதல் குறைந்து, தண்ணீர்த் தட்டு ஏற்பட்டு, விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, இதற்குப் பெட் டாம்களும், ரெகுலேட்டர்களும் கட்டவேண்டும். இது விஷயமாக மனுக்கள் போட்டும், தூது கோஷ்டிகள் அனுப்பியும் இருக்கிறோம். அப்படி bed-dam-களும் regulation-களும் அமைக்கப்பட்டால் மேட்டுப் பிரதேசங்களுக்குப் பாசனவசதி ஏற்பட்டு ஏராளமான கிராமங்களுக்கு நன்மை ஏற்படும்.

மேலும், பழவாறு, மண்ணியாறு வீரசோழன் இவைகளில் மீன் பிடிக்கும் பழக்கம் உண்டு. இதன் காரணமாக ஒரு சமயம் தண்ணீரை அதிகமாகத் திறந்து விட்டும், சில சமயங்களில் தண்ணீரைத் தேக்கியும் விடுகிறார்கள். இது விவசாயத்தைப் பாதிக்கிறது. இதனால் பல கஷ்டங்களும், சிலவகைச் சச்சரவுகளும் வீண் வம்புகளும் ஏற்படுகின்றன. இந்த விஷயத்தைக் கவனித்து சரியான கட்டளைகள் அதிகாரிகளுக்குப் போடவேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன். வாய்க்கால் தலைப்புகளில் ஒரு இடத்தில் சங்கிலி இல்லை. சங்கிலி இருந்தால் பலகை இல்லை. இதையெல்லாம் கவனித்துக்கொள்ள ஒரு லஸ்கர் இருக்கிறார். அவருக்குப் போதுமான படி கொடுத்து இந்த வாய்க்கால்களுக்கு சரியான பாதுகாப்பு அளிக்கவேண்டும். குடி மராமத்துச் சட்டம் சென்ற ஐந்து வருஷங்களாக அமுலிலிருக்கிறது. ஆனால், அது சரியாக நடப்பது இல்லை. மிராசுதார்கள் வாய்க்கால்களை சரிபார்ப்பது இல்லை. சாகுபடியாளர்களும் இதை சரிபார்ப்பது இல்லை. ஆகவே, எல்லாக் கால்வாய்களும் மேடிட்டுப் போய் இருக்கின்றன. தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்து வரும் அங்கத்தினர்கள் எல்லோருக்கும் இது நன்றாகத் தெரியும். இந்த வாய்க்கால்களை சரியாகப் பாதுகாக்கா விட்டால் உணவு உற்பத்தி மிகவும் பாதிக்கப்படும். இந்தக் கால்வாய்களை பி.டபுள்யூ. டி.-யே எடுத்துக்கொண்டு பராமரித்தால் நன்றாக இருக்கும். வெள்ளக் காலத்திலும், தண்ணீர்த் தட்டு ஏற்பட்ட காலத்திலும், மராமத்து வேலைகள் நடக்கும்பொழுதும் ஒரு செக்ஷன் ஆபீசருக்கு அதிக வேலைகள் இருக்கின்றன. ஒரு வருஷ காலத்தில் மூன்று மாதங்களுக்குள் இந்த வேலைகள் எல்லாம் நடந்தாக வேண்டும். அந்தக் காலத்தில் செக்ஷன் ஆபீசருக்கும் அவருடைய சிப்பந்திகளான ஓவர்சீர் முதலியவர்களுக்கும் போதுமான வசதி கொடுப்பது கிடையாது. நாற்பது, நாற்பத்தைந்து மைல் உள்ள சுற்றுப்புறங்களுக்குப் பிரயாணம் செய்து கண்காணிக்கவேண்டும். இவர்களுக்கு ஒரு ஜீப்கள் வசதியாவது அளித்தால் ஆங்காங்கு துரிதமாகச் சென்று மராமத்து வேலைகளைக் கவனிக்க பயன்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக வண்ணியார் மூலமாக சுற்றுப்புறங்களிலுள்ள கிராமங்களுக்குத் தண்ணீர்பாசன வசதி அளிக்க உடனடியாக பல சிறு அணைகளைக் கட்டவும் மராமத்து இலாகா தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

*Sri M. KARUNANITHI : சட்ட மன்ற துணைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட வெட்டுப் பிரேரணை நிர்ப்பாசன வசதி சென்னை மாநிலத்தில் இன்னும் எந்த எந்த வகையில் நீர்ப்பாசனம் தேவைப்படுகிறது என்பதைப் பற்றிய குறிப்புகளை இங்கே தருவதற்கு ஆசைப்படுகிறேன். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தியத் துணைக் கண்டத்தில் நீர்ப்பாசன வசதிகளால் பயன்பெறும் நிலப்பரப்பு இன்னும் எவ்வளவு அதிகமாகும் என்ற புள்ளி விவரங்களை நாம் ஒரு முறை காண்பது மிக மிக நலம் என்று கருதுகிறேன். வட நாட்டிலே இருக்கின்ற மாகாணங்களில் நீர்ப்பாசன திட்டங்களால் பயன் பெறுகின்ற நிலத்ினுடைய பரப்பும் மேலும் எவ்வளவு அதிகரிக்கிறது என்பதையும், நம்முடைய சென்னை மா நிலத்தில்

11th July 1957] [Sri M. Karunanithi]

இத் திட்டங்களால் மேலும் பயன்பெறக்கூடிய பரப்பையும் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நீர்ப்பாசன திட்டங்களால் பஞ்சாப் மாகாணத்தில் பதினேழு லக்ஷம் ஏகரா நிலப் பரப்பு மேலும் அதிகமாக பயன் பெறப்போகின்றது. ஒரிஸா மாகாணத்தில் பதினாறு லக்ஷம் ஏகரா நிலப் பரப்பு மேலும் அதிகமாக பயன் பெறப்போகின்றது.

உத்திரப் பிரதேசத்தில் 1,310,000 ஏகரா.

மேற்கு வங்காளத்தில் 1,270,000 ஏகரா.

ராஜஸ்தானில் 1,160,000 ஏகரா.

பீகாரில் 1,140,000 ஏகரா.

பம்பாயில் 1,000,000 ஏகரா.

மத்திய பிரதேசத்தில் 400,000 ஏகரா.

ஆந்திராவில் 290,000 ஏகரா.

பரிதாபத்துக்குரிய நம் சென்னை மாநிலத்தில் 140,000 ஏகராதான் அதிகப்படியாக இந்த நீர்ப்பாசன வசதிகளால் பயன்படப்போகிறது என்பது இந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட புள்ளி விவரங்களிலிருந்து நமக்குத் தெரியவருகிறது. புள்ளி விவரத்தை யொட்டி பேசவேண்டும் என்று கூறப்பட்ட காரணத்தால், வெறும் " வடக்கு வாழ்கிறது, தெற்குத் தேய்கிறது " என்பதை மாத்திரம் சொல்லாமல் புள்ளி விவரங்களையும் குறிப்புகளையும் நான் அமைச்சர் அவர்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். மத்திய சர்க்கார் சென்னை மாநிலத்தில் ஆற்று நீர் மேட்டுப் பகுதிகளிலும் பயன்படவேண்டும் என்பதற்காக ஆற்று நீர் இரைப்புத் திட்டம் என்ற ஒரு திட்டம் 1951–52-ம் ஆண்டில் அமுலாக்கப்பட்டு, அதற்காக மத்திய சர்க்கார் 50 சத விகிதம் மான்யம் தருவதாக ஒப்புக்கொண்டார்கள். அப்படித் தரப்பட்ட மான்யத்தை 1953-ம் ஆண்டு நிறுத்திவிட்ட காரணத்தால் அந்த ஆற்று நீர் இரைப்புத் திட்டத்தை சென்னை மாநில சர்க்கார் நிறைவேற்றமுடியாமல் சிறிது சிறிதாகக் குறைக்கப்பட்டு, இறுதியில் பரிபூரணமாக நிறுத்தப்பட்டுவிட்டது என்பதை மறக்க முடியாது. இந்த ஆற்று நீர் இரைப்புத் திட்டம் இல்லாததன் காரணமாக " பம்ப் செட்டுகள் " பொருத்தி, மேட்டுப்பகுதிகள் வளப்படுத்தப்படும் வசதி ஏற்படாமல் போகின்றது என்பதை இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியாது. சென்னை மாநிலத்தில் நீர்ப்பாசனத் திட்டங்கள் அதிகமாக இல்லை என்பதற்குச் சொல்லப்படும் காரணங்களில் மிகமிக முக்கியமான காரணம் " இங்கு பெரிய ஆறுகள் கிடையாது " என்பதுதான். ஒரு சில ஆறுகளினுடைய தண்ணீரை கடலில் கலக்காமல் நாங்கள் பார்த்துக்கொள்ளுகின்றோம் என்று அமைச்சர் பெருமக்கள் எடுத்துச் சொன்னார்கள். கடலில் விழுகின்ற காரணத்தால் மாத்திரம் ஆற்று நீர் வீணாகிவிடவில்லை. வேறு சில காரணங்களாலும் வீணாகப் போகின்றது என்று சட்டநாத கரையாளர் எடுத்துக் கூறினார்கள். அது மாத்திரம் அல்ல. கடலில் கலக்கின்ற தண்ணீர் தடுக்கப்பட்டால் மட்டும் போதாது ! ஆற்று நீர் கழனிகளில் பயன்படாத நிலையில் மணலிலேயே சேர்ந்து வீணாகப் போகின்றது என்பதை மறந்துவிடக்கூடாது. என்னுடைய குளித்தலைத் தொகுதியைப் பற்றி கவர்னர் பெருமான் உரையின்மீது எழுந்த விவாதத்தின்போது நான் அமைச்சர் அவர்களுக்கு எடுத்துச் சொன்னேன். குளித்தலைத் தொகுதி மிக மிக வளமான தொகுதி என்று குளித்தலைத் தொகுதியின் தலைநகரின் இறங்கும் ஒருவர் சொல்லலாம். உண்மையில் குளித்தலை தொகுதியை குளித்தலை, மாயனூர், வெள்ளியணை என்று மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். ஒருவர் வரிசையாகப் பயணம் நடத்தினால் குளித்தலை தொகுதி வளமான தொகுதி, எழிலான தொகுதி என்று எண்ணம் ஆரம்பித்து அடிக்கரும்பை சுவைப்பது போல் சுவைத்து, மாயனூர் சென்றால் நடுக்கரும்புக்கு வந்து, பிறகு வெள்ளியணைக்கு வரும்போது நுனிக்கரும்பை சுவைப்பது போல் முடியும். வெள்ளியணையில் குடிப்பதற்கு தண்ணீர் இல்லாமல், வறண்ட நிலங்களாக உள்ள பல இடங்களை அங்கே காண முடியும். குடகனாறு திட்டம் அங்கே தேவை. அத்தகைய குடகனாறு திட்டம் நிறைவேற்றப்படுமானால் 10,000 ஏகரா புஞ்சை நிலங்களை

[Sri M. Karunanithi] [11th July 1957

நஞ்சை நிலங்களாக மாற்ற முடியும் என்று 1951-ம் ஆண்டிலிருந்து பெரிய கிளர்ச்சி நடைபெற்று வருகிறது. இந்தக் கிளர்ச்சியை ஏதோ பலாத்காரப் போராட்டம் என்று நான் குறிப்பிடுகிறேன் என்று யாரும் கருதக்கூடாது. அங்கேயிருக்கும் பொது மக்கள்—அதாவது எந்த அரசியல் கட்சியிலும் சார்பற்ற பொது மக்கள்—அந்தக் குடகனாறுத் திட்டம் தேவை என்று கூறி, 1951-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 19 தேதியில் மராமத்து மந்திரியிடமும் 1952-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 2-ந்தேதியில் நிதி அமைச்சரிடமும், 1953-ம் வருஷம் ஜனவரி மாதம் 12-ந்தேதியில் ரெவின்யூ அமைச்சரிடமும், 1954-ம் வருஷம் ஜனவரி மாதம் 11-ந்தேதியில் முதல் அமைச்சரிடமும் அதற்கான மனுக்களைத் தந்து, குடகனாறுத் திட்டத்தைக் கவனிக்க வேண்டுமென்று எடுத்துச் சொல்லப்பட்டது.

பழனி மலையிலிருந்து உற்பத்தியாகிற குடகனாறு—ஏறத்தாழ 86 மைல் நீளமுள்ள ஆறு—சுமார் 30 மைல் தூரம் திண்டுக்கல் தாலுகாவில் ஓடி, ஆயிரம் எக்கரா நிலத்திற்கு மாத்திரம் பயன்படுத்தப்பட்டு, அங்கிருந்து மிச்சமுள்ள 56 மைல் நீளம், அதனுடைய தண்ணீர் எல்லாம் வீணாகப் போய், அமராவதியில் கலக்கிறது என்ற நிலைமையில், வேடசெந்தூருக்கு அருகேயுள்ள கல்வார்பட்டி என்னும் இடத்தில் ஒரு நீர்த்தேக்கம் அமைத்து, அந்தத் தண்ணீர் அங்கே பயன்படுத்தப்பட, சுமார் 23 மைல் நீளமான ஒரு வாய்க்கால் வெட்டப்பட்டால், வெள்ளியணை, வீரவல்லி, ஜெகதாபி, உப்பிடமங்கலம் என்ற பல ஏரிகள் நிரம்பி, பத்தாயிரம் எக்கரா நிலம் அங்கே சாகுபடி ஆகும் என்றும், அதற்குப் பன்னிரண்டு லட்சம் ரூபாய் செலவாகும் என்றும் கரூர் P W D. சூபர்வைசர் அதற்கு ஒரு திட்டமே தயாரித்துக் கொடுத்தார். அப்படித் தயாரிக்கப்பட்ட அந்தத் திட்டத்தைப் பெற்ற மக்கள், திருச்சி எக்ஸிக்யூடிவ் என்ஜினீர் அலுவலகத்திற்கு 19 3-ம் வருஷம் அக்டோபர் மாதம் 22-ந்தேதியில் மனு மூலம் தெரிவித்தும், இதுவரை கேட்பாரற்று அந்த மனு அங்கே தூங்கிக்கொண்டிருக்கிறது.

பன்னிரண்டு லட்சம் ரூபாய் செலவு செய்தால் பத்தாயிரம் எக்கரா நிலம் அங்கே பயன்படும், புஞ்சை, நஞ்சையாக மாறும் என்று சொல்லப்படுகிறது. இந்த நேரத்தில், மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்களுக்கு—சபாநாயகருடைய அனுமதியின்பேரில் ஒன்று தெரிவிக்க ஆசைப்படுகிறேன். ஆரணியாறுத் திட்டத்திற்கு 104·19 லட்சம் ரூபாய் செலவானாலும் பயன்படுகிற நிலங்கள் ஐந்தாயிரம் முதல் ஏழாயிரம் எக்கராதான். இதனால் ஆரணியாறு திட்டம் தேவை இல்லை என்று நான் கூறவில்லை. ஐந்தாயிரம் முதல் ஏழாயிரம் எக்கரா நிலங்களுக்குப் பயன்படுகிற ஆரணியாறு திட்டத்திற்கு 104·19 லட்சம் செலவாகும் என்று சொல்லப்படுகிறது. கிருஷ்ணகிரி நீர்த் தேக்கத் திட்டத்திற்கு 184·03 லட்சம் ரூபாய் செலவாகும் என்றும், அதனால் பயன் பெறுவது 7,500 எக்கரா நிலம் என்றும் சொல்லப்படுகிறது. இப்படி 184 லட்சமும், 104 லட்சமும் செலவிட்டு எழார்யிரம், ஐந்தாயிரம் எக்கரா நிலங்கள் பயன்பெறுகிற நேரத்தில், பன்னிரண்டு லட்ச ரூபாய் செலவில் பத்தாயிரம் எக்கர் பயன்பெறுகிற ஒரு குடகனாறு திட்டத்தை இதுவரை, இவ்வளவு கோரிக்கைகளுக்குப் பிறகும், அந்த வட்டாரத்துப் பொது மக்கள் அத்தனைபேரும் மனுச் செய்துகொண்ட பிறகும், மந்திரிகள் வந்த நேரத்திலே அவர்களைத் தூது சென்று பார்த்த பிறகும் கவனிக்கப்படவில்லை என்பது மிகமிக வருந்தத்தக்க ஒன்று.

மேற்கு நோக்கி ஓடும் ஆறுகளையெல்லாம் கிழக்கு நோக்கித் திருப்புவதற்கு முயற்சிக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. பரம்பிக்குளத்துத் தண்ணீரை தமிழகத்திற்குப் பயன்படுத்திக்கொள்வதற்கு பெரு முயற்சி எடுத்துக்கொள்ளப்படுகிறது என்று சொல்லப்படுகிறதே தவிர, ஆனால், ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் அந்தத் திட்டம் கவனிக்கப்பட்டு, பரம்பிக்குளம் தண்ணீர் பயன்பட முயற்சி எடுத்துக்கொள்ளப்படவில்லை.

இங்கே ஆறுகள் இல்லை, ஆகவே திட்டங்கள் இல்லை என்று கூறுவது, "ஆடத்தெரியாத ஒருத்தி முற்றம் கோணல்" என்று சொல்வதை ஒக்கும், என்று நான் குறிப்பிடுகிறேன். ஆறுகள் இல்லை என்றாலும், இருக்கிற ஆறுகளையாவது பயன்படுத்துகிற அத்தகைய எண்ணம் ஏன் பிறக்கவில்லை.

என்று நான் கேட்கின்றேன். புராணத்திலே படித்தது உண்டு—பகீரதனுகாகப் பரமசிவன் ஆகாயத்திலிருந்து கங்கையை வரவழைத்தான் என்று அப்படியிருக்க, பச்சைத் தமிழர் ஆட்சியில் பரம்பிகுளத் தண்ணீரைத்தானு வரவழைக்க முடியாது ?—கொஞ்சம் எடுத்துப் பேசினால், உற்சாகத்தோடு அந்த வேலையில் ஈடுபட்டால்—ஆகாத காரியமா இது என்று நான் கேட்கின்றேன்.

திட்டங்கள் பல இருக்கின்றன. அவைகள் நிறைவேற்றப்படவேண்டும். நிறைவேற்றப்படக்கூடிய திட்டங்கள் இவ்வளவு காட்டியும்கூட, அவைகளை நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லையே என்று எதிர்க்கட்சிக்காரர்கள் பார்த்துச் சொன்னால், அந்தத் திட்டங்கள் உடனடியாக நிறைவேற்றப்படவேண்டும். குடகனாறு திட்டம் அவசர அவசியமாக நிறைவேற்றப்படவேண்டும் என்றே சொல்ல விரும்புகிறேன்.

வெள்ளையணைப் பகுதியில் சென்று மந்திரி அவர்கள் சுற்றிப் பார்த்தால் அங்கு இருக்கும் அவல நிலை தென்படும் என்று நான் குறிப்பிட விரும்புகின்றேன். குளித்தலை வட்டாரத்தில் 273 குளங்கள் இருக்கின்றன. அந்த 273 குளங்களும் மழையை நம்பித்தான் நிறைய முடியும். அந்த 273 குளங்களில் வரும் மழைத் தண்ணீரைக் கொண்டு பெரும்பகுதி நிலத்தை நல்ல முறையிலே வளப்படுத்த முடியும். அதற்கான முயற்சிகளும் இந்த அரசாங்கத்தாரால் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று நான் கோருகிறேன்.

திட்டங்களைக் கூறிவிடுவதால் மாத்திரம் போதாது. அந்தத் திட்டங்களை நிறைவேற்றுகிற ஆற்றலும், அத்தகைய திறமையும் ஒரு அரசு பெற வேண்டுமென்றும், அப்படிப் பெற வேண்டிய நிலையைத்தான் வள்ளுவர் அவர்கள்—" கொடுங்கோன்மை " அதிகாரத்தில் அல்ல—" அமைச்சு " என்ற அதிகாரத்தில், மிக அழகாக எடுத்துச் சொல்லுகிறார்—

" முறைப்படச் சூழ்ந்து முடிவிலவே செய்வர்
திறப்பா டிலாஅ தவர் ".

நல்ல திட்டங்களைப் போட்டாலுங்கூட, அந்தத் திட்டங்களை முறையாக எண்ணினாலுங்கூட, அந்தத் திட்டங்களை மூளியாகச் செய்து முடிப்பார்கள் திறமை இல்லாதவர்கள் என்று கூறியிருக்கிறார். நான் இந்த அரசாங்கத்தை, அப்படிச் செய்வார்கள் என்று கூறவில்லை ; அப்படி செய்யக் கூடாதென்றுதான் கூறுகிறேன். நாம் குறளை எடுத்துக் கூறினால், வல்லினம், மெல்லினம் தெரிய தவர்கள் குறள் பற்றிப் பேசுகிறார்கள் என்று கூறிவிடலாம் அமைச்சரவர்கள். வல்லினம் மெல்லினம் தெரிகிறதோ இல்லையோ—நான் சார்ந்த இனம் தமிழ் இனம், திராவிட இனம் என்று உணர்ந்திருக்கிறேன். அதை உணராதவர்களுக்கு அதை உணர்த்தி, இந்த நீர்ப்பாசனத் திட்டங்கள் தமிழகத்திற்கு உள்ளபடியே பயன்படுவதற்கு சென்னை மாநில அரசு உடனடியாக வேலை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகின்றேன்.

* **Sri A. SENAPATHI GOUNDER** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்று நமது முன்னாள் மராமத்து மந்திரி அவர்களால் சமர்பிக்கப்பட்ட திட்டத்திலே ஒரு நல்ல திட்டத்தைக் குறிப்பிட்டிருப்பது கண்டு அதற்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன் ; மகிழ்ச்சியும் அடைகிறேன். பரம்பிக்குளத் திட்டம் மிகவும் வறண்ட பிரதேசங்களுக்குப் 1-55 p.m. பயன்படக்கூடிய ஒரு திட்டம். சுமார் லட்சம் ஏக்கர் நிலத்திற்குப் பாயக் கூடிய அந்தத் திட்டத்தையும் முழு மூச்சோடு எடுத்து நடத்துவதற்கு அவர்கள் முன் வந்ததற்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன்.

மேலும், கோதாவரி, கிருஷ்ணா நதிகளின் தண்ணீரை தமிழ் நாட்டுக்குக் கொண்டு வருவதற்கு முயற்சி செய்து வருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்களுடைய முயற்சியில் எங்களுக்குச் சந்தேகம் இல்லை. அவர்கள் அவசியமாக முயற்சித்து அத் திட்டங்களைக் கொண்டு வருவார்கள் என்ற நம்பிக்கையோடு, அவர்களுக்குப் பூரண ஆதரவு கொடுக்கத் தயாராகியிருக்கிறோம் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

[Sri A. Senapathi Gounder] [11th July 1957

இந்தச் சந்தர்ப்பத்தில் அமராவதி அணை பூர்த்தியாகி, அந்தப் பிரதேசத்தில் உள்ள பதினைந்தாயிரம் ஏக்கருக்குப் பாயும் வசதி ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். இதைத் திருத்துமாறு நான் அவர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். அப்படிச் செய்வார்கள் என்று நான் நம்புகிறேன். பதினைந்தாயிரம் ஏக்கர் நஞ்சையாக இருப்பதை மாற்றி, நஞ்சையும், புஞ்சையுமாக இருபத்தோராயிரம் ஏக்கர்—கரும்பு மூன்றாயிரம் ஏக்கர், 7,500 ஏக்கர் நஞ்சை, மீதி 10,500 ஏக்கர் புஞ்சை. ஆகவே, இந்த முறையில் இருபத்தோராயிரம் ஏக்கருக்கு நிர்ப்பாசனம் செய்வதற்கும் வசதி செய்து தருவதாக இன்ஜினீர்கள் முன்னிலையில், விவசாயிகள் மாநாடு கூட்டி, அங்குள்ள விவசாயிகள் எங்களுக்கு 7,500 ஏக்கர் நஞ்சையாக இருந்தால் போதும்; மூவாயிரம் ஏக்கர் கரும்பு சாகுபடிக்கு இருந்தால் போதும், மீதியை எங்களுக்குப் புஞ்சைக்காக மாற்றிக் கொடுக்க வேண்டும் என்றார்கள். ஏழாயிரத்து ஐந்நூறு ஏக்கர் நஞ்சை, மூவாயிரம் ஏக்கர் கரும்பும் மீதி புஞ்சை இருபத்தோராயிரம் ஏக்கருக்குப் பாசன வசதி செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அது சம்பந்தமாக சமீபத்தில் கூட அமைச்சர் அவர்களுக்கு ஞாபகமூட்டியிருக்கிறேன். அதைக் கவனித்து, இருபத்தோராயிரம் ஏக்கருக்கும் கூடிய சீக்கிரம் பாசன வசதி செய்து கொடுக்குமாறு நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நீர்ப்பாசன வசதி ஏற்பட்டிருக்கும் இடங்களிலே நீர்ப்பாசன பஞ்சாயத்துக்கள் அவசியம் ஏற்படுத்தி, அந்தப் பஞ்சாயத்துக்களினுடைய யோசனையை அமுல் நடத்துவதற்கு முன்வரவேண்டுமென்று அதிகாரிகளை எச்சரிக்கை செய்யுமாறு மிகப் பணிவோடு நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆற்றுத் தண்ணீர் பம்பு செட்டைக் கொண்டோ, மாட்டைக் கொண்டோ இறைக்கப்படுகிறது என்று சொல்கிறோம். அம்மாதிரி பார்க்கும்போது, அமராவதி நதி மிக வறண்ட பிரதேசத்தில் ஓடுகிறது. அந்த இடத்திலே . . . . .

Sri N. R. THIAGARAJAN : On a point of order Sir, ஸ்ரீமதி அனந்தநாயகி அவர்கள் வெற்றிலை, பாக்கு, போட்டுக்கொண்டிருக்கிறார்கள். சபையில் வெற்றிலை, பாக்கு போடலாமா என்று கனம் சபாநாயகரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

DEPUTY SPEAKER : The hon. Member should not chew in the House.

Sri A. GOVINDASAMY : விழுங்கியாய்விட்டது.

Sri A. SENAPATHI GOUNDER : ஆறானது ஓடுகிற நிலைமையிலே, வேறுபாசன வசதி இல்லாத காரணத்தால், ஏதோ ஒரு சிறு விவசாயி, கொஞ்சம் ஆற்று நீரை உபயோகப்படுத்தி அதிலிருந்து எடுத்துக்கொண்டால், சர்க்காருக்குப் பாதகம் என்று அவர்கள் குற்றம் சாட்டப்படுகிறார்கள். அந்த நிலையிலே அமராவதி நீர்த்தேக்கம் ஏற்படுகிற நேரத்திலே, அமராவதிக் கரையிலே உள்ள விவசாயிகள் ஓர் சிறு அளவாவது நீரை மாட்டைக் கொண்டு, ஏற்றத்தின் மூலமாகவாவது உபயோகப்படுத்தக்கூடிய நிலைமையை உண்டாக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மேலும், என்னுடைய பகுதியிலே சிறிய நீர்த்தேக்கத் திட்டங்கள் பல இருக்கின்றன. அவைகளையெல்லாம் எடுத்து நல்ல முறையில் நிறைவேற்றிக்கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

என்னுடைய தாராபுரம் தாலூகா வறண்ட பிரதேசம் என்பது அமைச்சர் அவர்களுடைய கவனத்திலே இருக்கவேண்டும். அங்குள்ள சிறிய நீர் ஓடைகளைப்பற்றி திட்டங்கள் பல இருக்கின்றன. அவைகளையும் அமைச்சர் அவர்களுக்கு ஞாபகப்படுத்தி, அவைகளை உடனடியாகச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER: I adjourn the House till 9 a.m. tomorrow. The House then adjourned.

**IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.**

116. *Notification issued with Government Order Miscellaneous No.* 1753, *Food and Agriculture, dated 5th June* 1957, *amending Rule* 59 *of the Madras Commercial Crops Market Committees Financial Rules*, 1953. [*Laid on the table of the House under section* 18 (4) (*c*) *of the Madras Commercial Crops Markets Act*, 1933.]

117. *Notification issued with Government Order Miscellaneous No.* 459, *Food and Agriculture, dated 13th February* 1957, *enforcing the provisions of the Madras Livestock Improvement Act*, 1940 (*except section* 1 *thereof which has already come into force*) *to the Kumbakonam firka in Tanjore district.*

118. *Notification issued with Government Order Miscellaneous No.* 460, *Food and Agriculture, dated 13th February* 1957, *enforcing the provisions of the Madras Livestock Improvement Act*, 1940 (*except section* 1 *thereof which has already come into force*) *to the Kumbakonam firka in Tanjore district.*

119. *Notification issued with Government Order Miscellaneous No.* 1148, *Home, dated 26th April* 1957, *reducing the rate of tax payable under Madras Motor Vehicles Taxation Act in respect of the four luxury coaches belonging to the Southern Roadways (Private), Limited, Madurai.* [*Laid on the table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act*, 1931.]

APPENDIX.

[Vide answer to starred question No. 89 asked by Sri K. R. Viswanatham at the meeting of the Legislative Assembly held on 11th July 1957, page 228 supra ]

*List of most Backward Communities.*

1 Agnikula Khsatriya, Palli, Vanniyakula Kshatriya.
2 Ambalakaran.
3 Ambika.
4 Andi Paadaram.
5 Bestha.
6 Bhandari.
7 Bhatraju.
8 Boya.
9 Chatada, Chattada, Srivaishnava.
10 Dasari.
11 Dommara.
12 Eravallar.
13 Galada Konkani.
14 Gramani, Shanan.
15 Gudigara.
16 Irulan.
17 Isaivellalar, Melakarar (Tanjore district).
18 Jambuvanodai.
19 Jandara.
20 Jogi.
21 Kongu Chettiar (Coimbatore district).
22 Koracha.
23 Kulala.
24 Kunnuvar Mannadi.
25 Kuruba, Kurumba.
26 Kuruhini Chetty.
27 Madugar, Medavar, Mahendra, Medara.
28 Mangala.
29 Maruthuvar.
30 Modi Banda.
31 Mond-Golla.
32 Mukhari.
33 Muttakkampatti.
34 Naikoravan.
35 Navudian.
36 Nokkar.
37 Oddar, Odde, Vadde, Veddai, Volde.
38 Padayachi (Villayan Kuppan) (South Arcot and Salem districts).
39 Paravatharajakulam, Pattanavan, Sambadavar.
40 Parel Mad vala.
41 Picohigunta.
42 Punnan Vettuva Goundar.
43 Siviar (Coimbatore district).
44 Sozhia Chetty.
45 Telungupatty Chetty.
46 Thottai Naickan.
47 Thurpukapu.
48 Thondaman.
49 Volaian.
50 Vathi.
51 Velakatalavan.
52 Vettaikaran.
53 Vettuva Gounder.
54 Vilkurup.
55 Yoggeeswara.
56 Vannan.
57 Ku avans.
58 Navithans.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Friday, 12th July 1957.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Corruption in Government service.*

* 91 *Q.*—SRI P. G. MANICKAM : Will the Hon. the Chief Minister be pleased to state the steps taken to eradicate corruption in Government service?

THE HON. SRI C. SUBRAMANIAM : A statement [a] detailing the steps taken by the Government to combat corruption on the part of Government servants is placed on the table of the House.

SRI P. G. MANICKAM : மத்திய கவர்ன்மெண்டார் தங்கள் இலாகாவில் உள்ள லஞ்ச முறையை ஒழிப்பதற்காக ஒரு விசேஷ பிரிவை உள்நாட்டிலாகாவிலும் விசேஷ போலீஸ் படையையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். கிரிமினல் சட்டத்தை கடுமையாகச் செய்திருக்கிறார்கள். அவ்வாறு நம் சர்க்கார் ஏற்பாடு செய்ய முன்வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இங்கு இப்பொழுது எடுத்துவருகின்ற நடவடிக்கைகளே போதுமான அளவில் இருப்பதாக சர்க்கார் அபிப்பிராயப்படுகிறது. அதற்குமேலும் அவசியம் ஏற்பட்டால் சர்க்கார் தக்க நடவடிக்கையை எடுக்கும் என்று சொல்ல விரும்புகிறேன்.

SRI T. T. DANIEL : May I know whether the Government have got the right to take action against petitioners who file very frivolous petitions against public servants?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes; there is provision in the law.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : In spite of the vigorous steps taken by the Government, the Government have not succeeded in putting down corruption completely. Will the Government consider the desirability of tightening up the anti-corruption machinery at least at the mufassal level?

THE HON. SRI C. SUBRAMANAIM : That is the intention of Government.

*Artificial Insemination.*

* 92 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of Artificial Insemination Centres existing at present in the State; and

---

[a] Printed as Appendix on pages 364–366 infra.

(b) whether there is any proposal to open new centres during the current year?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Forty-one.

(b) Yes.

SRI A. GOVINDASAMY : இந்தத் திட்டம் நல்ல முறையில் வெற்றி பெற்று வருகிறதா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நல்ல முறையில் வெற்றிபெற்று வருகிறது. பலயிடங்களிலும் இம்மாதிரி திட்டத்தை ஏற்படுத்தவேண்டுமென்று மக்கள் கோருகிறார்கள்.

SRI A. A. RASHEED : Is "artificial insemination" an expensive proposition, compared to the natural method?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir; it is not more expensive than the natural method.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : In view of the popularity that the scheme is gaining, will the Government consider the desirability of having mobile vans which could be sent to interior villages in order to make the scheme more popular?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, Sir; Government have been organizing this facility also.

SRI A. GOVINDASAMY : இந்த முறைகளைக் கையாளுகின்ற நேரத்தில் பொலிக் காளைகளுக்கு வேலை உண்டா, கிடையாதா என்று கேட்கிறேன்.

THE HON. SRI M. BHATAVATSALAM : பொலிக் காளைகளைக் கொண்டுதான் இந்த முறையே கையாளப்படுகிறது.

SRI M. JAGANNATHAN : The Hon. the Minister said that the Government have got a proposal to open new artificial insemination centres in the State. Is he in a position to mention the names of places where it is proposed to open these new centres?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I would like to have notice.

SRI R. SRINIVASA IYER : இந்தச் செயற்கை முறையினால் கருதரிக்கும் மூலமாய் பிறக்கும் கன்றுகளுக்கு சர்க்கார் ஏதாவது சப்சிடி கொடுத்து இந்த "ஆர்டிபிஷியல் இன்செமினேஷன்" முறை அதிகபபடும் படி உதவி செய்வார்களா என்று கேட்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதுவும் சர்க்காரின் யோசனையில் இருக்கிறது.

SRI K. SATTANATHA KARAYALAR : May I know the percentage of success or failure of the artificial insemination methods?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I can say the method is quite satisfactory. I do not have with me the exact figures of percentage of success.

12th July 1957]

**Sri A. GOVINDASAMY** : இந்தத் திட்டத்தை கடலூரில் உள்ள கால்நடை ஆஸ்பத்திரியில் அமுலுக்குக் கொண்டுவருவார்களா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : கடலூரில ஒரு சென்டர் வைப்பது அவசியம் என்பதும் யோசனையில் இருக்கிறது.

**Sri R. KRISHNASAMI NAIDU** : சமுதாய அபிவிருத்தித் திட்ட ஏரியாக்களில் நல்ல ஜாதிப் பொலிக் காளைகளுக்குப் பிறக்கும் கன்றுகளை வளர்ப்பதற்கு சர்க்கார் உதவித் தொகை அளித்து வருகிறதல்லவா என்று அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : இது விஷயத்திலும் சமுதாய திட்டப் பிராந்தியத்தில் பிரத்யேக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

**Sri M. JAGANNATHAN** : May I know whether the artificial insemination methods are as satisfactory as the selective breeding methods?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : The availability of superior bulls of known parentage and performance to effectively breed the existing cows and she-buffloes in the State is estimated to be only two per cent of the requirements. Therefore, the hon. Member will appreciate that this is the best scheme that could be implemented. And it is quite popular.

**Sri A. CHIDAMBARANATHA NADAR** : "ஆர்டிபிஷியல் இன்செமினேஷன்" மூலம் பிறக்கின்ற கன்றுகள் குருடாகப் பிறக்கிறதென்று சொல்கிறார்களே, இது உண்மைதானா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : இவ்விடங்களுக்கு நானே சென்று கன்றுக்குட்டிகளைப் பார்த்திருக்கிறேன். அவை நல்ல திடகாத்திரமாகத்தான் இருக்கின்றன, ஆரோக்கியமாகவும் இருக்கின்றன. குருடாகப் பிறப்பது இல்லை.

**Sri P. G. KARUTHIRUMAN** : செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்வதில் குருடான பொலிக் காளைகளைக் கொண்டு செய்தால் கன்றுகளும் குருடாகவே பிறக்கின்றன என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : செயற்கை முறையை அனுசரிக்கும் போது ஏதாவது ஒரு பொலிக்காளை குருடாக இருந்தால் அது ஒருகாலும் உபயோகப்படுத்தப்படமாட்டாது என்பதை கனம் அங்கத்தினருக்குத் தெரியப்படுத்துகிறேன்.

**Sri A. VEDARATHNAM PILLAI** : இந்தச் செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்வதில் எந்த சாதிக் காளைகளை அரசாங்கம் பொறுக்கி எடுக்கிறது ? எல்லாச் சாதிக் காளைகளையும் பொறுக்கி எடுக்கிறார்களா ? அல்லது குறிப்பிட்ட எந்த ஒரு சாதியாவது தான் பொறுக்கி எடுக்கப்படுகிறதா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : எது நல்ல சாதிக் காளையாகக் கருதப்படுகிறதோ அது பொறுக்கப்படுகிறது. மேலும் ஒரு பிராந்தியத்திற்கு எந்தக் காளை பொருத்தமானதோ அந்தக் காளைதான் பொறுக்கி எடுக்கப்படுகிறது.

**Sri P. G. KARUTHIRUMAN** : செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்ய சமுதாய நலத் திட்டப் பிரதேசத்தில் கவனம் செலுத்தப்படுவதாகச் சொன்னார்கள். குறிப்பாக சிந்தி சாதி அதிகமாகப் பாலை கொடுக்கிறது, ஆகையால் சமுதாய நலத்திட்டப் பிரதேசத்தில் பால் பண்ணைகள்

பெருக, இந்த சிந்தி பொலிக் காளைகளின் மூலம் செயற்கை கரு தரிக்கும் முறையைக் கையாளுவார்களா ? சிந்தி பொலிக்காளைகளை அரசாங்கம் அந்த சென்டர்களுக்குக் கொடுத்து உதவுவார்களா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** : அநேகமாக செயற்கை முறையில் சிந்தி ரகம் நான் அதிகமாக விருத்தி செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது.

## *Artificial insemination.*

* 93 *Q.*—SRI K. N. PALANISWAMI GOUNDER : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of villages where artificial insemination has been introduced by the Animal Husbandry Department in 1956–57; and

(*b*) the expenditure incurred during that year?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Fifty-eight.

(*b*) About Rs. 2·60. lakhs.

SRI A. GOVINDASAMY : தென்னாற்காடு ஜில்லாவில் எத்தனை இடங்களில் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கடலூரில் ஒரு சென்டர் தொடங்கப்படும் யோசனை இருக்கிறது என்று முன்பே சொன்னேன். சிதம்பரத்தில்கூட இந்தத் திட்டம் அமுல் நடத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக எத்தனை இடங்களில் நடத்தப்படுகிறது என்கிற விவரம் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் அதைப் பார்த்துச் சொல்லப்படும்.

## *Training School for Nagercoil.*

* 94 *Q.*—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the management of the Scott Christian High School, Nagercoil, applied for permission to start a training school for those who have passed the E.S.L.C. Examination;

(*b*) if so, whether the Government have granted permission; and

(*c*) if not, the reason therefor?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes.

(*b*) No, Sir.

(*c*) Taking into consideration the existing facilities and the requirements it has been decided that it is not necessary to open a new training school.

SRI T. T. DANIEL : Recently, when the Government wanted to select some 300 persons for undergoing the E.S.L.C. training, there were 3,000 applications in this district. In view of the fact that a good number of teachers in this district are not trained, will

12th July 1957]

the Government be pleased to go into the matter and offer necessary facilities to these teachers by opening new schools as the number of schools there is very few?

THE HON. SRI C. SUBRAMANIAM: Yes, Sir; all the requirements have been taken into consideration and the existing facilities also have been taken into account; it would be possible to give training to all the personnel.

SRI N. R. THIAGARAJAN : ஏற்கெனவேயுள்ள ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளில் படித்து வெளிவருகிறவர்களுக்குப் போதுமான வேலை இல்லாமல் இருக்கும்போது புதியதாக ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளைத் திறப்பது நல்லதா ? இனிமேல் திறக்காமல் இருக்க உத்தேசம் உண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இனித் திறக்காமல் இருக்க வேண்டுமென்பதுதான் சர்க்காரின் கொள்கை. நான் முன்பு சொன்ன பிரகாரம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் எவ்வளவு ஆசிரியர்கள் தேவைப்படுவார்கள் என்பதைக் கணக்கெடுத்துத்தான் போதுமான ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளை 1956-57-ல் ஆரம்பித்து விட்டோம். ஆகவே புதியதாகத் திறக்க உத்தேசம் இல்லை. சில இடங்களில் மிகவும் அவசியமும், தேவையும் ஏற்படுமானால் அது தனியாகக் கவனிக்கப் படும்.

SRI A. GOVINDASAMY : பொதுவாக இப்போது அநேக கிராமங்களில் புதுப் புதுப் பள்ளிகளைத் திறக்க வேண்டியிருக்கிறது. மேலும் இருக்கக் கூடிய பள்ளிகளிலும் அட்மிஷன் விண்ணப்பங்கள் அதிகம் வருகின்றன. இவற்றைக் கணக்கில் கொண்டு புதியதாக ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளைத் திறக்க ஆலோசிக்கப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதில் எத்தனை பேர் பள்ளிகளில் சேருவதற்கு விண்ணப்பங்கள் போடுகிறார்கள் என்பதைக் கணக்கில் எடுத்துக் கொண்டு பயிற்சிப் பள்ளிகளைத் திறப்பதானால் படித்து விட்டு வெளி வருகிறவர்களுக்கு உத்தியோகம் கிடைக்காமல் போகும். எத்தனை ஆசிரியர்கள் நமக்குத் தேவைப்படுவார்கள் என்பதைக் கணக்கில் எடுத்துக் கொண்டு போதுமான பயிற்சிப் பள்ளிகளை முன்பே ஏற்படுத்தி விட்டோம் எனச் சொல்ல விரும்புகிறேன்.

SRI A. P. C. VEERABAHU : Sir, it is the policy of the Government to discourage the training of E.S.L.C. students?

THE HON. SRI C. SUBRAMANIAM : It is not the policy of the Government to open any new schools for training E.S.L.C. students.

SRI K. R. VISWANATHAN : தலைவர் அவர்களே, இந்த பயிற்சி பெறும் ஆசிரிய மாணவர்களுக்கு கிடைக்கப்படும் உதவியைப்பற்றி நிறுத்த வேண்டும் என்று சர்க்கார் உத்தேசித்துக் கொண்டிருப்பதாக முன்பு ஒருக்கால் சொல்லியதுண்டு. இப்போது சர்க்கார் என்ன முடிவுக்கு வந்திருக்கிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதுபற்றி இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை. கனம் அங்கத்தினர் கோவிந்தசாமி சொன்னது மாதிரி 40 பேர்கள் சேரவேண்டிய ஒரு இடத்திற்கு 1,000 மனுக்கள் வருகிறது. இந்த நிலையில் இருக்கும்போது மான்யம் கொடுத்து படிப்பிக்கவேண்டியது அவசியம்தானா என்று ஆலோசித்துக்கொண்டிருக்கிறது.

[12th July 1957

**Sri A. VEDARATHNAM PILLAI** : இப்போது நாகர்கோவிலில் எத்தனை ஆசிரியர் பள்ளிகள் இருக்கின்றன. அவற்றில் எல்லாம் ஆதாரகல்வி பயிற்சி கொண்டு வரப்பட்டிருக்கிறதா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : எத்தனை பள்ளிகூடங்கள் இருக்கிறது என்று என்னிடம் இப்போது தகவல் கையில் இல்லை. கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன், இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திற்குள் எல்லா பள்ளிக்கூடங்களையும் ஒவ்வொரு வருஷமாக ஆதார பள்ளிகளாக மாற்றப்படும்.

**Sri A. GOVINDASAMY** : எங்கள் மாவட்டத்தில் 39 ஹைஸ்கூல் தான் இருக்கிறது. ஏற்கெனவே கடலூரில் இருந்த பள்ளி கூடத்தையும் மாற்றிவிட்டார்கள். அதற்கு காரணம் என்ன ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : இதற்கு தனி கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

**Sri N. MARUDACHALAM** : ஆரம்பப் பள்ளிகளில் 5-ம் கிளாஸ் தேறின பிறகு 6-ம் கிளாஸ்-க்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. ஆகவே 6-ம் கிளாஸ்-க்கு பரீட்சை இல்லாமல் எடுத்துக்கொள்வார்களா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : இதற்கு தனிக்கேள்வி வேண்டும்.

**Sri S. RAMALINGA PADAYACHI** : ஆசிரிய பயிற்சி பெற்றபின் இரண்டு மூன்று ஆண்டுகளாக வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : அதன் காரணமாகத்தான் இதை நிறுத்திவைத்திருக்கிறது.

**Sri T. T. DANIEL** ; Sir, may I know whether the Government will give preference to the teachers who are actually employed in schools to undergo this training when selection is made ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : Certainly, Sir. They will be given prefernce.

**Sri P. G. MANICKAM** : எஸ்.எஸ்.எல்.ஸி. மாணவர்கள் இப்போது நிறைய இருக்கிறார்கள். இதற்கிடையில் ஈ. எஸ். எல். ஸி. படித்தவர்கள் இந்த ஆசிரிய பயிற்சிக்கு அதிகமாக வருகிறார்கள். இதனால் இதில் வேலை கிடைப்பதுமில்லை. ஆதலால், இந்த ஈ.எஸ்.எல்.ஸி. படிப்பை எடுத்து விடுவதற்கு சர்க்கார் முயற்சிக்குமா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : அதைப்பற்றி யோசனை செய்யலாம்.

**Sri T. S. RAMASWAMI PILLAI** : ஸ்டைபண்ட் கொடுக்கப்படுவதை பற்றி ஆலோசித்து வருவதாக சொன்னார்கள். இப்போது கன்னியாகுமரி ஜில்லாவில் இருக்கும் உபாத்தியாயர்களுக்கு இந்த படிப்பின்போது ஸ்டைபண்ட் கொடுக்கப்படவில்லை என்று தெரிகிறது. அதற்கு காரணம் என்ன ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : எல்லோருக்கும் கொடுக்கப் பட்டு வருகிறது.

12th July 1957]

Sri V. K. Ramaswamy Mudaliyar: Still, there are many untrained teachers in plan schools and other schools. On the other hand there are many trained and unemployed E.S.L.C. teachers. Will the Government consider the desirability of replacing these people by these trained men?

The Hon. Sri C. Subramaniam: I presume that the hon. the Leader of the Opposition refers to the untrained S.S.L.C. persons who have been employed in these new schools. The intention of the Government is to have all these people trained properly to become teachers in the regular grades. Those who are not willing to undergo training will have to be replaced.

### *Crop control in Lower Bhavani area.*

* 95 *Q.*—Sri K. R. Nallasivam (on behalf of Sri N. K. Palanisami): Will the Hon. the Minister for Revenue be pleased to state whether there is any proposal to relax the Crop Control Order imposed in the Lower Bhavani area?

The Hon. Sri M. A. Manickavelu: The attention of the hon. Member is invited to the answer given to Legislative Assembly Question No. 744 (unstarred) on 5th April 1956.

Subsequent to this answer, the restrictions on the cultivation of crops in lands with the support of wells were further relaxed. According to the subsequent orders cultivation of only tobacco, chillies, turmeric and yams was limited to 25 per cent of the maximum area cultivated under the wells and that castor, tapioca and pulses were permitted to be grown in the remaining 75 per cent in the same manner as the other crops like cotton, millets, groundnut and gingelly, etc.

Sri K. R. Nallasivam: [illegible] பயிர் கட்டுப்பாட்டை தளர்த்துவது பற்றி குறிப்பிட்டார்கள். அங்குள்ள விவசாயிகளுக்கு இது மிகவும் சஷ்டமாயிருக்கிறது. ஆதலால் நெல்லின் [illegible] மற்ற பயிர்களின் மீதுள்ள கட்டுப்பாட்டை நீக்குவதற்கு சர்க்கார் [illegible] செய்யுமா ?

The Hon. Sri M. A. Manickavelu: நெல் கட்டுப்பாட்டையும் தளர்த்தி இருக்கிறோம். முதலில் 10 ஆயிரம் எக்கர் என்று இருந்தது. இப்போது தற்காலிகமாக 30 ஆயிரம் எக்கர் என்று மாற்றப்பட்டிருக்கிறது. மற்றபடி பொதுவாக இந்த பயிர்களை இரண்டு மூன்று தரங்களாக பிரித்து அதன்படி முடிவு செய்யவேண்டும். அது ஆலோசனையில் இருக்கிறது.

Sri P. G. Karuthiruman: அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுவதில் பல தரமாக பிரிக்கவேண்டும் என்று சொன்னார்கள். அதில் பயிர் கட்டுப்பாட்டை நீக்கும் காரியத்தில் அங்குள்ள பூமிகளில் நஞ்சை பூமிகள் என்றும் காடுகள் என்றும் பிரிவு செய்யவேண்டுமென்று அங்குள்ள விவசாயிகளால் பல மகஜர்கள் அரசாங்கத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு விவசாயிகளுடைய இஷ்டத்தின்படி முடிவு செய்யப்பட வேண்டும். இதில் சர்க்கார் என்ன முடிவு எடுத்திருக்கிறது என்பதைப்பற்றி அறியலாமா ?

The Hon. Sri M. A. Manickavelu: இந்த பிரச்னையை கவனித்து இது வரை முடிவு எடுக்கப்படவில்லை.

[12th July 1957

**Sri R. SRINIVASA IYER :** இந்த லோயர் பவானி புராஜக்கடைப் பற்றி ஆலோசித்தபோது, திருச்சி, தஞ்சை மிராசுதார்களின் நீர்ப்பாசானத்துக்கு பாதிக்காத வகையில் ஏற்படுமென்று, பிரதம என்ஜினியர், ரெவின்யூ அமைச்சர் எல்லோரும் சேர்ந்திருந்த ஒரு மகாநாட்டில் இந்த பயிர் கட்டுபாடு விஷயத்தில் கூட மிராசுதார்களுக்கு பாதகம் ஏற்படாத வகையில் முடிவு எடுக்கப்படும் என்று உறுதி கூறப்பட்டது. லோயர் பவானி புராஜக்டில் நஞ்சைபயிர் செய்யப்படும் விஸ்தீர்ணத்தை நிர்ணயிக்கும்போது இதை முடிவு செய்யப்படும் என்று கூறப்பட்டது. ஆகவே முடிவு எடுக்கப்படுவதாய் இருந்தால் அங்குள்ள மிராசுதார்களிடம் கலந்து கொண்டு முடிவு செய்வார்களா என்று கேட்கிறேன்.

**The Hon. Sri M. A. MANICKAVELU :** கனம் அங்கத்தினர் அவர்கள் " முடிவு எடுக்கப்படுவதாய் இருந்தால் " என்றெல்லாம் ஹைபொதெடிகல்-ஆய் சொல்லுகிறார்கள். அதனால் எனக்கு இப்போது உறுதியாக ஒன்றும் சொல்ல முடியாது.

**Sri P. G. KARUTHIRUMAN :** சபாநாயகர் அவர்களே, தஞ்சை ஜில்லா இதனால் பாதிக்கப்படாது என்று உறுதி கூறினதாக சொன்னார்கள். ஆனால் இப்போது கிடைக்கிற தண்ணீரை கொண்டு ஜப்பான் முறைப்படி சாகுபடி செய்து விளைச்சலை இரண்டு மடங்காக அதிகப்படுத்தப் படுகிறது. இதனால் அதிக பாதகம் ஏற்படாது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

**The Hon. Sri M. A. MANICKAVELU :** கனம் அங்கத்தினர் அவர்கள் இந்த விவசாய படிப்பில் மிக சாமர்த்தியமானவர் என்பது எனக்குத் தெரியும். அனுபவமாக பார்த்தால் இதில் பாதகம் ஒன்றும் வராது என்றுதான் சொல்ல விரும்புகிறேன்.

**Sri K. R. NALLASIVAM :** சமீபத்தில் கோவை ஜில்லா கலக்டர் அவர்கள் புதிய வரி தீர்வை பற்றிய அறிக்கையை வெளியிட்டு இருக்கிறார்கள். அதில் இந்த பயிர் கட்டுப்பாட்டை நீக்குவது பற்றி ஆலோசனை செய்யப்பட்டிருக்கிறது. அதில் கரும்பு பயிரை உட்படுத்தப்பட்டிருக்கிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

**The Hon. Sri M. A. MANICKAVELU :** கனம் அங்கதினர் அவர்கள் அந்த அறிக்கையை காட்டினால் அதற்கு பதில் சொல்ல முடியும்.

9-20 a.m. **Sri V. S. MANICKASUNDARAM :** லோயர் பவானி விஷயத்தில் பயிர் கட்டுப்பாடு கொண்டு வருவதற்கு முன்னால் சட்ட நிபுணர்களின் ஆலோசனையை சர்க்கார் கேட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri M. A. MANICKAVELU :** அதை எல்லாம் நிறையக் கேட்டு ஆலோசித்துத்தான் சர்க்கார் ஒரு முடிவிற்கு வந்திருக்கிறது.

**Sri R. SRINIVASA IYER :** லோயர் பவானி திட்டம் வகுக்கும் முன்பு தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களில் ஏற்கனவே பாசன வசதியிருக்கிறபடியால், இப்பொழுது லோயர் பவானி திட்டத்தில் ஜாஸ்தி விஸ்தீரணம் நஞ்சைக்கு ஏற்படுத்தாமல் இருக்க சர்க்கார் முன்வருமா ?

**Mr. SPEAKER :** மூலக் கேள்விக்கும், இந்த கேள்விக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. ஆகவே தனி கேள்வி கேட்கலாம்.

**Sri P. G. MANICKAM :** தோட்டக்கால் பூமியில் கால் பங்கு இடத்தில் இந்த விதமான பயிர் கட்டுப்பாடு இன்றி வெள்ளாமை செய்து கொள்ளலாம் என்று தெரிவித்தார். தோட்டக்கால் பூமியானது, விவசாயிகளுக்கு மிக அனுகூலமாக இருக்கிறது. எப்படி நஞ்சையில் வெள்ளாமை செய்கிறார்களோ அதேபோல் இங்கும் வெள்ளாமை செய்துகொண்டிருக்கிறார்கள். அதிக செலவும் ஆவதில்லை. ஆகவே 25 சத விகிதம் என்பதை 50 சத விகிதமாக தளர்த்த உத்தரவு செய்வார்களா ?

12th July 1957]

THE HON. SRI M. A. MANICKAVELU : தோட்டப்பயிரில் ஒரு வகைக்குத்தான் 25 பர்செண்டு. இன்னொன்றுக்கு 75 பர்செண்ட் என்று சொன்னேன். அது 50 பர்செண்ட்டுக்கு மேலாகிறது.

*Religious institutions in Kanyakumari district.*

* 96 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the religious institutions in Kanyakumari district and Shencottah taluk have so far been helped from the State Funds; and

(*b*) if so, the institutions that are receiving the help and the extent to which such help is given?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) A sum of Rs. 5,62,500 has been sanctioned by the Government for the maintenance of the temples in the transferred area for the period from 1st November 1956 to 31st March 1957.

All the incorporated devaswoms in the transferred area will be receiving their share from the grant.

SRI K. SATTANATHA KARAYALAR : இதிலே குறிப்பாக, சுசீந்திரம், கன்னியாகுமரி கோவில்களுக்கு எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றிய விவரம் என்னிடம் இப்போது இல்லை. ஆங்காங்கு இதுவரையிலே எப்படி ஒதுக்கப்பட்டிருக்கிறதோ அப்படியே இப்போதும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

SRI T. S. RAMASWAMY PILLAI : இந்தக் கோவில்களின் நிர்வாகம் முன்னால் ஒரு தேவஸ்வம் போர்டால், தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சபையால் நடத்தப்பட்டது. இப்பொழுது எவ்வாறு நடைபெறுகிறது. இனிமேலாவது ஒரு போர்ட் ஏற்படுத்த உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுது அவைகளை " என்டோமெண்ட் கமிஷனரே " நேரடியாக கவனித்து வருகிறார். அங்குள்ள சட்டத்தை எப்படி " அடாப்ட் " செய்வது என்பது பற்றி முடிவு செய்யப்பட வேண்டியிருக்கிறது.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : May I know whether the Madras Government are receiving any grant from the Kerala State for this purpose?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, there is no question of receiving any grant from the Kerala State. On the reorganization of the States, under Article 290-A of the Constitution, as amended by the Seventh Amendment Act, 1956, a sum of Rupees 13,50,000 is charged on and should be paid out of the Consolidated Fund of this State every year to the Devaswom Fund established in this State for the maintenance of these Hindu temples and shrines.

SRI T. T. DANIEL : May I know whether the Hon. Minister is aware of a provision in the States Reorganization Act according

to which a separate Board has to be constituted for managing these temples? If so, may I know why there is so much delay in constituting such a Board?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The constitution of a separate Board would depend upon how we adapt the existing law.

SRI M. JAGANNATHAN : Sir, the Hon. Minister stated that some temples in the transferred area are receiving financial help from the State. May I know how many of them are listed temples and how many of them are non-listed temples?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no question of listed and non-listed temples. There is no such category under the existing law, in the Kanyakumari district.

SRI A. GOVINDASAMY : கோவில்களுக்கு தனி சொத்து கிடையாதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தனி சொத்து சில கோவில்களுக்கு இருக்கலாம்.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டு தர்ம ஸ்தாபனங்களின் நிலைமைக்கு மாறாக கன்னியாகுமரியில் தர்ம ஸ்தாபனங்களின் பெயரால் உள்ள கோவில்கள் முதலியவற்றிற்கு நமது அரசாங்கம் தனது வருமானத்திலிருந்து பணத்தைத் தரவேண்டிய நிலை இருக்குமானால் அவற்றில் சிலவற்றையேனும் மூடிவிட அரசாங்கம் உத்தேசிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த ராஜ்யத்திலும், ஏற்கெனவே இருந்த ராஜ்யத்திலும் " தஸ்டிக் அலவன்ஸ் " கொடுக்கப்பட்டு வருகிறது. இதை இனாமாகக் கொடுப்பதில்லை. முன்பு அதற்கிருந்த நிலத்தை எடுத்துக்கொண்டுதான் அதற்குப் பதிலாக நஷ்ட ஈடாக இது கொடுக்கப் பட்டு வருகிறது. அதே மாதிரிதான் இந்த கன்னியாகுமரி கோவில்களைப் பொறுத்த மட்டிலும், பதிமூன்றரை லட்சம் ரூபாய் கொடுக்க சட்டம் இயற்றப் பட்டு இருக்கிறது. இதற்கு முன்னால் அவைகளுக்கு இருந்த நிலத்தை எடுத்துக்கொண்டு அதற்கு நஷ்ட ஈடாகத்தான் இந்தப் பணம் கொடுக்கப்பட்டு வருகிறது.

SRI A. CHIDAMBARANATHA NADAR : தலைவர் அவர்களே, ஸர் தாமஸ் மன்ரோ திருவிதாங்கூர் ராஜ்யத்தில் திவானாக இருந்த காலத்தில் பல லட்சக்கணக்கான ரூபாய் பெறுமான சொத்துக்களை எடுத்து அதன் வகையாகத்தான் இன்று தேவஸ்வத்திற்கு கொடுக்கிறார்கள் என்பதை மந்திரியவர்கள் அறிவார்களா என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னதைத்தான் சற்று முன்பு நான் குறிப்பிட்டேன்.

SRI T. T. DANIEL : Is it not a fact that properties worth several lakhs of rupees belonging to these temples could not be extinguished because of some order passed by the erstwhile Travancore-Cochin State and the amount of Rs. 13½ lakhs referred to by the Hon. Minister had been decided as a sort of compensation for the properties that have been taken over by the Government?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைத்தான் சற்று முன்பு தமிழில் சொன்னேன்.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—PROGRAMME OF THE HOUSE CONSEQUENT ON THE DECISION OF THE BUSINESS ADVISORY COMMITTEE.

Mr. SPEAKER : I have to announce to the House that the Business Advisory Committee met yesterday and decided that the Assembly shall sit for one more day on the 27th July also and that Government Bills which have to be urgently passed be taken up on the 25th and 27th July also.

We shall now proceed with the discussion on the Demands for Grants.

III,—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1957-58—*cont.*

(1) DEMAND VIII—IRRIGATION.

(2) DEMAND XXXVI—CAPITAL OUTLAY ON IRRIGATION—*cont.*

Sri R. SRINIVASA IYER : Mr. Speaker, Sir, while supporting this Irrigation Demand, I desire to point out certain facts that require the attention of the Hon. Minister who moved the Demand. The classification in the Budget of ' Productive ' and ' Unproductive ' works is not correct as it follows the old British method, viz., the taking up of only productive works on the ground of 6 per cent return on the capital outlay. Taking Tanjore district, there are certain parts of that district—Arantangi and Pattukkottai taluks—which are not commanded by the Cauvery-Mettur Project. The old Pudukkottai State is now a part of Tiruchirappalli district. These may be called the ' Rayalaseema ' of this State. They are very backward areas and dry areas too and depend upon the precariously low rainfall which is about 24 inches per annum. They have to depend upon a number of chains of tanks and channels. Most of these tanks have to get their supply from a number of jungle streams. The Government have taken over certain zamin and inam tanks for renovation. But, these tanks could not be filled up with water unless steps are taken for the proper harnessing of the various jungle rivers which feed these tanks. The Government are spending quite a lot of money. But, care should be taken to spend it usefully in harnessing the jungle streams. Otherwise, most of the tanks could not be filled up with water. If only they could properly harness the river Ambuliyar and the supply channel Annadhana Cauvery. I am sure, a large area of wet lands could be brought under cultivation. There is a dam constructed over 20 years ago and it is in a dilapidated condition. Plans and estimates for renovating this Dam are pending for the past five years.

In this connexion, I have got to mention that the existence of three Departments to deal with irrigation matters, so far as tank works are concerned, is a great handicap for the development of irrigation. There is the G.A.C. Section, Special M.I.P. Section and Minor Irrigation (Revenue) Section. On account of the existence of these three different departments, there has been great

[Sri R. Srinivasa Iyer] [12th July 1957

delay in the execution of works connected with tanks. I may here mention that there are two major tanks—Pugalur tank down below Avadiar and Kattalai tank. In the middle there is a minor irrigation tank. If renovation of these tanks is to be done, and if ryots make representations in that connexion, they are shunted from one department to another and the result is that the tanks are not renovated. From 1952 onwards, the renovation of tanks is pending attention. Similarly the question of harnessing Ambuliyar has been pending attention from 1952 onwards. One department estimates that a sum of Rs. 1½ lakhs is required. Another department estimates another figure for the same work. The latest estimate is Rs. 25,000. This work should be taken up immediately and executed quickly so that Annadhana Cauvery may be really Annadhana Cauvery.

Then, Sir, I wish to refer to harnessing of jungle streams in Pattukkottai taluk. This has not been done. This matter was brought before the House previously by the late Sri R. Venkatrama Ayyar representing Adhirampatnam Constituency. At that time, the Minister in charge of Public Works stated that the matter was receiving attention. This was in 1955. But still no action has been taken in the matter of harnessing these jungle streams. I am told plans and estimates have been prepared. But the scheme as such has not been implemented yet. I find a sum of Rs. 38 lakhs has been provided in the Budget for this work. This is a very small sum considering the large number of jungle streams which have to be harnessed and the large number of minor irrigation tanks that we have got to repair in this State. A large sum for developing minor irrigation works has to be provided for. The construction of dams over Agniar, Pappanganni River, Ambuliyar and Vellar have got to be given priority. This area has not been supplied water from the Cauvery Irrigation Project. But nothing has been done so far.

There are two villages—Sarabendrarajanpatnam and Palliodavayal in Pattukkottai taluk. These two villages are only connected on paper with the Cauvery Delta Project. In September the ryots do not get even a drop of water. The ryots want to cross bund the streams and take water to the tanks. This will not require a large sum of money. It was stated by the Government in 1955 that all works which would not cost more than Rs. 300 on capital outlay would be executed. The scheme for cross bunding the streams and taking the water to tanks will not cost more than Rs. 300 per acre. This work may also be taken up by the Government.

The Mettur Reservoir is full now and has also surplus water. Still, the delta of the G.A.C. Division is suffering for want of water. That is because, the Public Works Department, i.e., the Irrigation Department and the Agricultural Department do not co-operate with each other. I have got to mention here a statement made by the Hon. Minister in charge of Finance that we

12th July 1957] [Sri R. Srinivasa Iyer]

should economise in the use of water. I desire to point out to the Government that an experiment was carried on for two years in the Pattukkottai Agricultural Research Station for effecting economies in the use of water. I learn that that experiment is a failure. What was done was that water was supplied for 3½ days a week. I have to point out that that the introduction of rationing or turn system in the G.A.C. area has retarded agricultural production considerably. This turn system should go. I am also told by the delta area mirasidars that the turn-system acts as a handicap for production of food.

Coming to the tail-end supplies in the G.A.C. area, I have to point out that the supplies are very inadequate. Though the ryots receiving tail-end supplies pay the same cess as those ryots receiving supplies at the head, still the water supplied to them is very inadequate. In so far as repair works on these irrigation works are concerned, I have got to mention that the contractors require a little more inspection and scrutiny. As soon as they take up the contracts, they do not execute the works. They begin the construction of works late and complete the same just before freshes arrive, only to wash off their sins in bad construction with the water immediately flowing. I, therefore, suggest that the works should be completed at least 15 days before the freshes are allowed to come into the channels.

Then, there is the question of levying inadequate duty, in new G.A.C. areas where water is supplied in lesser quantities compared to supplies made in old deltaic areas. The same quantity of water that is supplied for irrigating 40 acres in the old delta area is supplied to irrigate 70 acres in the new G.A.C. area. Sluices in this area have to be redesigned. At present they are not working properly. They have to be remodelled. The Government should make arrangements for adequate supply of water to lands under the G.A.C. area and the Cauvery delta area. Steps should also be taken for extension of irrigation facilities south of Narasinga Cauvery.

An irrigation advisory board was working for some years. I do not find that such boards have been constituted recently. Though the board is only an advisory body, it will meet usually once in two months. These boards used to give valuable advice to the Government. These boards should be revived and made to work.

Whenever a new work is started, the Department is very careful to ask for more staff. By the time a reply is received from the Government the season for carrying out the work is over. I know an instance where estimates are ready and where the work is sanctioned but the work cannot be proceeded further because an additional overseer has not been appointed. The result is that the work is not carried out. The demand for additional staff is there always. Whenever a new work has got to be undertaken, I request

[Sri R. Srinivasa Iyer] [12th July 1957

the Government to look into the matter very carefully and see that the additional works which are urgent are carried on by the existing staff themselves.

Lastly I wish to make another suggestion, namely, that extracts of speeches made by Members and the Ministers of this House should be sent to the Collectors of all districts and the Chief Engineers and the Executive Engineers in district headquarters so that they may look into the matter and see what should be done without awaiting suggestions from higher authorities.

**Mr. SPEAKER** : கனம் மந்திரி அவர்கள் விவாதத்திற்கு பதில் அளிக்க எவ்வளவு நேரம் வேண்டியிருக்கும் ?

**The Hon. Sri P. KAKKAN** : நாற்பத்தைந்து நிமிடங்கள் இருந்தால் போதும்.

**Mr. SPEAKER** : இப்போது மணி 9–30. கனம் மந்திரி 12–15-க்கு பேச வேண்டியிருக்கும். விவாதத்திற்கு மூன்று மணி நேரமே கிடைக்கும். என்னிடத்தில் 24 மெம்பர்கள் பேச வேண்டுமென்று பெயர் கொடுத்து இருக்கிறார்கள்.

**The Hon. Sri P. KAKKAN** : பல அங்கத்தினர்கள் பேசவேண்டியிருப்பதால் எனக்கு பதில் அளிக்க 10 நிமிடங்களே போதும்.

**Mr. SPEAKER** : 10 நிமிடம் வீதம் கொடுத்தால் 18 அங்கத்தினர்களே பேச முடியும். 24 அங்கத்தினர்கள் பேச விரும்புவதால், ஒவ்வொருவரும் 7 நிமிடங்களே பேசவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

9-45 a.m. **Sri M. JAGANNATHAN** : தலைவர் அவர்களே. வெட்டுப்பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நீர்பாசன வசதிகளைச் செய்து கொடுக்கும் விஷயத்தில் மாநில சர்க்கார் கையாளும் கொள்கையைப்பற்றி குறைகூறுமல் இருக்க முடியவில்லை. ஏன் என்றால் சர்க்கார் இதுவரை பெரிய பெரிய அணைக்கட்டுகளையும் நீர்த்தேக்கங்களையும் செய்து லக்ஷக்கணக்கான, இல்லை, கோடிக்கணக்கான ரூபாய்களை செலவு செய்துகொண்டு வருகிறார்களே தவிர சிறிய நீர்ப்பாசன வசதிகளை செய்து கொடுக்க கணிசமான அளவில் திட்டமிட்டு இருக்கிறார்களா என்றால், இல்லை என்று தெரிகிறது. லக்ஷக்கணக்கான, கோடிக் கணக்கான ரூபாய்களை, மணிமுத்தார், வைகை, மேட்டூர் கால்வாய் போன்ற பெரிய பெரிய திட்டங்களுக்கு செலவு செய்கிறார்கள். அப்படிப்பட்ட திட்டங்களால் நன்மை அடையும் நிலப்பரப்பை கணக்குப் பார்த்தால் சுமார் ஒரு ஏக்கருக்கு இரண்டு அல்லது மூன்று ஆயிரம் ரூபாய் செலவு செய்கிறார்கள் என்று எண்ணுகிறேன். அதே தொகையை செலவு செய்து வரண்ட பிரதேசங்களில் கிணறு வெட்டினால் ஒரு ஏக்கர் அல்ல, இரண்டு ஏக்கர் அல்ல சுமார் 4, 5 ஏக்கர்களுக்கு நீர்பாசன வசதி அளிக்கலாம் என்று நான் கருதுகிறேன். ஆகவே இனிமேலாவது சர்க்கார், நீர்பாசன வசதியை பெருக்கும் விஷயத்தில் கண்ணும் கருத்துமாக இருந்து அதை வரண்ட பிரதேசங்களுக்கு செய்துகொடுத்து ஏழை விவசாயிகளைக் காப்பாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக எங்கள் திண்டிவனம் தாலூக்காவில் இன்னும் எவ்வளவோ கிராமங்கள் நீர்ப்பாசன வசதியில்லாமல் இருக்கின்றன. மைனர் இர்ரிகேஷன் டாங்கு என்று சொல்லக்கூடிய சிறிய ஏரி கூட இல்லாமல் எத்தனையோ கிராமங்கள் நஞ்சை சாகுபடி செய்யமுடியாமல் கஷ்டப்படுகின்றன. இந்த விஷயத்தில் சர்க்கார் கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டும். கடந்த 5 ஆண்டுகளாக நாங்கள் எத்தனையோ விண்ணப்பங்கள் அனுப்பியுள்ளோம். கோடிக்குப்பம் என்ற கிராமத்தில் பெரிய பொருள் செலவில் அப்போது இருந்த ஸ்தலஸ்தாபன மந்திரியின் [illegible]

12th July 1957] [Sri M. Jagannathan]

ஒரு மகாநாட்டை நடத்தினோம். அந்த கிராமத்திற்கு ஒரு ஏரி தேவை. மரக்காணம் பிர்க்காவில் உள்ள கந்தாடுக்கும் ஒரு ஏரி தேவை. இதைக் குறித்து கிராம மக்கள் பல விண்ணப்பங்கள் கொடுத்தும் கூட, இதுவரையில் அது கவனிக்கப்படவில்லை என்பது வருந்தத்தக்க விஷயம்.

கடலூர் பட்டணத்தில், தென்னார்காடு ஜில்லா கலெக்டர் தலைமையில் நடைபெற்ற அரை வருஷ நீர்ப்பாசன மகாநாட்டில்கூட இந்த விஷயங்களை நான் எடுத்து வற்புறுத்தி உள்ளேன். அப்படி இருந்தும் கூட இந்த பிரச்னை சர்க்காருடைய கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்பது மிகவும் கண்டிக்கத்தக்க விஷயம். இதை உடனடியாக கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திண்டிவனம் தாலூக்காவில் குறிப்பாக, கிளியனூர், வானூர், மரக்காணம் பிர்க்கா போன்ற பிரதேசங்களில் ஏராளமான சப் சாயில் வாடர் இருப்பதாக எஞ்சினியர்கள் கூறுகிறார்கள். அந்த ஜலத்தை சப் ஆர்ட்டீசியன் கிணறுகள் தோண்டி எடுத்தால் மிக அனுகூலமாக இருக்கும் என்ற காரணத்தால் சர்க்கார் உடனடியாக அதற்கு நடவடிக்கை எடுத்து ஆர்ட்டீசியன் கிணறுகள் தோண்டி ஏழை விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதி செய்துகொடுக்க முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் வீடுர் அணைக்கட்டைப்பற்றி சொன்னார்கள். இந்தத் திட்டத்தினால் மைலம், வானூர், கிளியனூர் முதலிய வரண்ட பிர்க்காக்களுக்கு தண்ணீர் வசதி கிடைக்கும் என்றும் சொன்னார்கள். அதற்கு வேண்டிய திட்டங்களை இப்போதே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**Sri G. VAGHEESAM PILLAI :** சபாநாயகர் அவர்களே, மராமத்து 9-46 a.m.
இலாகா அமைச்சர் கொண்டுவந்து இருக்கும் மான்யத்தை ஆதரித்து சிலவார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த ராஜ்யத்தில் பெரிய நதிகளுக்கெல்லாம் அணைக்கட்டு திட்டங்கள் போட்டாய்விட்டன. சிலவற்றிற்கு திட்டங்கள் போட்டுக்கொண்டு இருக்கிறார்கள். தென்னாற்காடு ஜில்லாவில், கள்ளக்குரிச்சி தாலூக்காவில் மணிமுத்தார் திட்டத்தை இன்னும் எடுத்துக் கொள்ளவில்லை. இந்த வருஷத்திலாவது எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நேற்று அமைச்சர் அவர்கள், கிருஷ்ணா கோதாவரி ஜலத்தை நம் ராஜ்யத்திற்கு கொண்டுவருவதற்கு ரீஜனல் கவுன்சில் மூலமாக முயற்சி செய்யப்படுவதாக சொன்னார்கள். கிருஷ்ணா-கோதாவரி ஜலத்தை ஆந்திர சர்க்கார் பத்து சத விகிதம்தான் உபயோகிக்கிறார்கள். பாக்கி 90 சதவிகிதம் வீணாகிறது. ஆந்திர ராஜ்யத்திலே வரண்ட பிரதேசங்களுக்கென்று அணைகள் கட்டினாலும், 40 சதவிகிதம் தான் அவர்களால் உபயோகிக்க முடியும். பாக்கி வீணாக போய்விடும். ஆகையால் சென்னையில் ஒரு டிவிஷன் ஏற்படுத்தி, செங்கல்பட்டு, தென்னார்காடு முதலிய ஜில்லாக்களுக்கு கிருஷ்ணா-கோதாவரி தண்ணீரை எப்படி கொண்டுவருவது என்பதை பரிசீலனை செய்து, சர்வே பூர்த்தியாகி இருக்கிறது. அதை இப்போது வற்புறுத்தி நம் பகுதிகளுக்கு கொண்டுவர வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

கோதாவரி-கிருஷ்ணா நதிகளில், நந்திகொண்டா, புலிசிந்தலா என்ற இரண்டு திட்டங்கள் இடப்பட்டிருந்தன. இப்போது இதில் ஒன்றைக் கை விட்டு இருக்கிறார்கள். இதற்கு வேண்டிய செலவை நாமே ஒப்புக்கொண்டு இரண்டு அணைகளையும் கட்ட முயற்சி செய்யவேண்டுமென்று வற்புறுத்துகிறேன்.

கேரள ராஜ்யத்திலிருந்து பரம்பிகுளம் முதலிய திட்டங்களை எடுத்துக் கொள்ளப் போவதாக சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன். இப்போது பிரச்னை என்னவென்றால் டெல்டா பிரதேசங்களில் இருக்கும் ஜலத்தை எப்படி உபயோகிப்பது என்பதுதான். மேட்டூர் அணைக்கட்டில் 120 அடிக்குமேல் ஜலம் இருக்கிறது. கான்சாஹப் சானல் பிரதேசத்தில் பத்தாயிரம் ஏக்கர் குறுவை பயிரிடுகிறார்கள். சரியான காலத்தில் ஜலம்

[Sri G. Vagheesam Pillai] [12th July 1957

சப்ளை செய்தால் இன்னும் அதிக எக்கர் நிலங்களை சாகுபடிக்குக் கொண்டு வரலாம். இதற்குக் காரணம் ரிபேர் முதலியவைகளுக்கு வேண்டிய எஸ்டிமேட்டுக்கள் முன்னதாகவே தயார் செய்து அங்கீகரிக்கப்படுவதில்லை. ஆகையால் இவைகளை டிசம்பரிலேயே தயார் செய்து கண்டிராக்டர்களை நியமித்து முடிவு செய்துகொள்ள வேண்டும். அப்படி இல்லாமல் இவைகளை மே மாதத்தில் எடுத்துக்கொண்டால் ஒவ்வொரு கட்டத்திலும் டிலே ஏற்படுகிறது. கண்டிப்பாக பி. டபிள்யூ. டி. என்ஜினீயர்களுக்கு சர்குலர் அனுப்பி இனியாவது டிலே ஆகாமல் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது இருக்கும் ஜலத்தை வைத்துக்கொண்டே ஐந்தாயிரம் எக்கர் குறுவை வீராணத்து ஏரிப்பாசனத்தில் நடக்கிறது. மேட்டூரில் இருக்கும் அதிக ஜலத்தை இப்போது விட்டால், இன்னும் 20 ஆயிரம் எக்கர் வரையில் சாகுபடி செய்யலாம் என்று சொல்கிறார்கள். ஆனால் என்ஜினியர்கள், சென்ற வருஷம் இதுதான் விடப்பட்டது என்று சொல்லிவிடுகிறார்கள். மேட்டூரில் தண்ணீர் அதிகமாக இருக்கும்போது கூட ஏன் அதிகமாக தண்ணீர் இந்த ஏரிக்கு விடக்கூடாது என்ற எண்ணம் அவர்களுக்கு உண்டாவது இல்லை. நாம் இப்போது உணவு உற்பத்தியில் அதிக கவனம் செலுத்தி வருகிறோம். வேண்டிய தண்ணீர் இருந்தும், நம் என்ஜினியர்களுக்கு பொதுஜன தொடர்பு இல்லாததால் கணக்குப் போட்டுச் சொல்லிவிடுகிறார்கள். அவர்களுக்கு இந்த விஷயத்தில் அக்கரை ஏற்படும்படி செய்ய வேண்டும். இந்த வருஷம் அதிக ஜலம் இருப்பதால், இன்னும் முன்பே ஜலம் விட்டால் 50 ஆயிரம் எக்கர் பயிர் செய்து இருக்கலாம். டிலே செய்துவிட்டார்கள். இப்போது கவனித்து வருகிறார்கள்.

50 டியூடிக்கு 2,600 கன அடி தண்ணீர் விடவேண்டும். ஒரே காலத்தில் ஒரு பிரதேசத்திற்கு எவ்வளவு தண்ணீர் விடவேண்டுமென்று "சீப் என்ஜினியரையும்" "சூபரின்டெண்டிங் என்ஜினியரையும்" கேட்டு வாங்கிக் கொள்ளாததனால் தாமதம் ஏற்பட்டு தண்ணீர் விடுவது குறைந்துவிடுகிறது. இதையெல்லாம் இன்னும் சௌகரியமாக இருக்கக்கூடிய முறையிலே கவனித்து அதிகாரிகளுக்கு ஒரு அறிக்கை விடவேண்டும். மைசூரில் உள்ள கூடலூரில் 5" மழை பெய்திருக்கிறது. "**Flood warning**" கூட கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இங்கு பல இடங்களில் ஜலம் இல்லாமல் இருக்கிறது. இதையெல்லாம் முன்கூட்டியே கவனித்திருந்தால் இடைஞ்சல் இல்லாமல் இருக்கும்.

முன்பெல்லாம் நீர்ப்பாசன மகாநாடுகளெல்லாம் ஆறு மாதத்திற்கு ஒரு முறை நடந்து வந்தது. இப்பொழுது அவைகளை "**Informal**"-ஆகவே நடத்தி விடுகின்றனர். ஒரு மாதத்திற்கு முன்பே தேதி குறிப்பிட்டு சர்குலர் விட்டு, அதை ஒவ்வொரு தாலூகா ஆபீசுக்கும் அனுப்பி அநேக விவசாயிகள் இதில் கலந்துகொள்ளும்படி செய்யவேண்டும். இதை கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். பொதுஜனத் தொடர்பு ஏற்படுவதற்கு ஒரு "இரிகேஷன் கமிட்டி" ஒன்று நியமித்தால் நல்லது. ஒவ்வொரு டிவிஷனுக்கும் ஒரு கமிட்டி ஏற்படுத்தி இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கூட்டம் நடத்தவேண்டும். சப்டிவிஷனல் ஆபீசர், ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர், தாசில்தார், உத்தியோகப்பற்று அற்றவர் எல்லோரையும் சேர்த்து ஒரு கமிட்டியாக போட்டால் பொது ஜனங்களுக்கும் என்ஜினியர்களுக்கும் தொடர்பு உண்டாகும். மற்ற காரியங்களும் நன்றாக நடக்கும். பெண்ணையாறு, மணிமுத்தாறு திட்டங்கள் "**Production Schemes**". அவைகள் குறைந்த செலவில் நடத்தப்பட்டிருக்கின்றன. அவைகளில் மணற்போக்கிகள் ஏற்படுத்தவேண்டும்.

வீராணத்தேரியில் 40,000 ஏகர் அயக்கட்டுகள் இருக்கின்றன. அந்த ஏரி தூர்ந்துபோய்விட்டது. அதை மராமத்து செய்யவேண்டும். இரண்டு வருஷங்களுக்கு முன்பே ஜனங்களுக்கு நோட்டீஸ் கொடுத்தால்தான் சாகுபடி நிறுத்திவைக்கப்பட்டு ரிபேர் செய்வதற்கு நன்றாக இருக்கும். தஞ்ஜாவூர் ஜில்லாவில் 2,000-க்கு மேற்பட்ட வாய்க்கால்கள் மராமத்து இலாகாவின் பராமரிப்பில் இருக்கின்றன. தென் ஆற்காடு ஜில்லா சிதம்பரம் தாலூகாவில் 20 வாய்க்கால்கள் ரெவின்யூ டிபார்ட்மெண்டு பராமரிப்பில் இருக்கின்றன. அவைகளையும் மராமத்து இலாகா எடுத்துக்கொள்ள வேண்டும்.

12th July 1957] [Sri G. Vagheesam Pillai]

வடவாறினுடைய "**Drawing Capacity**" தற்பொழுது 1,750 கன அடிதான். 40 டியூடி எடுத்துக்கொள்ள வேண்டுமென்றால் 2,500 கன அடி தண்ணீர் எடுத்துக்கொள்ள வேண்டும். வடவாறை அகலப்படுத்தி, ஆழப்படுத்தினால் சௌகரியமாக இருக்கும். இந்த விஷயத்தையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆயிரத்துக்கு மேற்பட்ட ஏகர்கள் பாயக்கூடிய வாய்க்கால்களை, 2, 3 கிராமங்களுக்கு மேல் பாயக்கூடியவைகளை சர்க்கார் செலவில் வெட்டலாம் என்று ஒரு உத்தரவு இருந்தது ஜி.எம்.எப். ஸ்கீமில். அதை இப்பொழுது நிறுத்தி வைத்திருக்கிறார்கள். இதை அமுலுக்கு கொண்டுவந்தால் நல்ல காரியமாக இருக்கும். 1,000 ஏகராவுக்கு உள்பட்ட நிலங்களுக்கு பாயக்கூடிய வாய்க்காலை ஒரு நபர் ஆட்சேபித்தாலும் குடிமராமத்து சட்டத்தின்படி வெட்டமுடியாது. அந்த சட்டத்தை சென்ற வருஷம் திருத்தியிருக்கிறார்கள். ஆயிரத்துக்குட்பட்ட ஏகராவுக்கு பாயக்கூடிய வாய்க்கால்களை வெட்டுவதற்கு குடிஜனங்களே ஏகருக்கு ஒரு ரூபாய் முதல் மூன்று ரூபாய் வரையில் கொடுக்க தயாராக இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் ஒற்றுமையாக இருந்து வாய்க்கால் வெட்ட முடியவில்லை. சிதம்பரத்தில் ஒரு கன்ஸிலியேஷன் தாசில்தார் இருக்கிறார். குடிமராமத்துச் சட்டப்படி அந்த வேலைகளையும் அவரை கவனிக்கும்படிச் சொன்னால் ரொம்பவும் சௌகரியமாக இருக்கும். சர்க்கார் செலவு இல்லாமலே ஜனங்கள் 1,000-க்கு உட்பட்ட ஏகரா பாயும் வாய்க்கால்களை வெட்டிக் கொள்ளுவார்கள். அதையும் கவனிக்கவேண்டுமென்று நான் சொல்ல விரும்புகிறேன். நண்பர் ஜகன்னாதன் அவர்கள் சொல்லியது போல், "சப்மெர்ஷன் ஸ்கீம்"களை தென் ஆற்காடு ஜில்லாவில் அதிகமாக எடுத்துக்கொள்ளவேண்டும் என்று சொல்லிக் கொண்டு, என்னுடைய உரையை நிறுத்திக்கொள்ளுகிறேன்.

(Deputy Speaker in the Chair.)

* SRI S. CHINNAKARUPPA THEVAR : கனம் உதவி சபாநாயகர் 9.55
அவர்களே, கனம் மந்திரி அவர்கள் கொண்டுவந்த நீர்ப்பாசன மான்யக் a.m.
கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நமது மாகாணத்திலே, பொதுவாக நாட்டிலே, உணவு பற்றாக்குறை இருந்து வருகிறது. அதற்கு ஒரு நிரந்தரமான பரிகாரம் தேடவேண்டுமானால், விவசாயத்தை நவீன முறையில் செய்தால் மட்டும் போதாது. பெரிய, சிறிய நீர்ப்பாசன திட்டங்களை நமது மாகாணத்தில் அமுல் நடத்தி அதன் மூலம் அதிகப்படியாக தரிசு நிலங்களை விவசாயத்திற்குக் கொண்டுவந்தால்தான் நிரந்தரமாக உணவுப் பிரச்னையை தீர்க்க முடியும். இம்மாதிரி நீர்ப்பாசன பெரிய திட்டங்கள் முடிவடைந்த பிற்பாடு அந்தத் திட்டத்தினால் கிடைக்கும் நீர் வளத்தைக்கொண்டு அதிகப்படியான நிலங்களை சாகுபடிக்குக் கொண்டு வரும் விஷயத்தில் சர்க்கார் கடைப்பிடிக்க வேண்டிய ஒரு முறையை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். மதுரை ஜில்லாவில் வைகையை எடுத்துக்கொள்ளுவோம். வைகையில் ஒரு பெரிய அணையை கட்டி அதற்கு மேற்கே உள்ள பிரதேசத்தில் விழும் மழைத் தண்ணீரையும் பெரியார் தண்ணீரையும் சேர்த்துத்தான் அந்தத் தேக்கத்திலே தேக்குவதற்கு திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது. அப்படி மழைத் தண்ணீரை தேக்கினால் அந்தத் தேக்கத்தின் கீழ் உள்ள ஏற்கெனவேயே உள்ள ஆற்றுப் பாசனக் கால்வாய் மூலம் கிடைத்து வரும் ரயத்துகளுக்கு மேற்படி தண்ணீர் பெறுவதற்கு ஹேது இல்லாமல் போகிறது. ஆனால் இந்தத் திட்டம் முடிந்த பிற்பாடு அதிகப்படியான தண்ணீரை அந்தப் பிரதேசங்களுக்குக் கொடுக்க சர்க்கார் முன் வருவார்களானால், அவர்களை அது பாதிக்காது. அப்படியில்லாமல் பாதி இடங்களுக்கு அதிகப்படியான தண்ணீரை கொடுக்கவில்லை யென்றால் தேக்கத்திற்கு கீழ் உள்ள ஏற்கெனவேயே பாத்யதைப்பட்டு அதை அனுபவித்துவரும் ரயத்துகளுக்கு கஷ்டங்கள் நேரிடும். ஆகையினால் இந்தத் திட்டம் முடிந்தபிற்பாடு அதிகப்படியான நிலங்களுக்கு அந்தத் தண்ணீரை கொடுக்கும் காலத்தில் ஏற்கெனவே பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு முதல் இடம் கொடுத்துவிட்டு, அடுத்தபடியாக புதிய பிரதேசங்களுக்கு நீரைத்திறந்துவிட ஏற்பாடு செய்யுமாறு சர்க்காரை கேட்டுக் கொள்கிறேன்.

[Sri S. Chinnakaruppa Thevar] [12th July 1957

அடுத்தபடியாக, என்னுடைய திருப்பரங்குன்றம் தொகுதியில் நிலையூர் கால்வாய் என்று ஒன்று இருந்துவருகிறது. அதன் மூலம் ஒரு பகுதி மட்டும் நன்மை பெற்று வருகிறது. ஆவணியாபுரம் இன்னும் வரண்ட பிரதேசமாக இருப்பதால் நிலையூர் கால்வாயை அந்தப் பிரதேசத்திற்கு விஸ்தரித்து, அந்த இடங்களிலும் சாகுபடிக்கு லாயக்கான முறையில் தண்ணீரை சப்ளை செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

10.00 a.m. **Sri S. M. ANNAMALAI :** மாநில சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்தைக் குறித்து, இந்த நீர்ப்பாசன மான்யக் கோரிக்கையில் ஒரு புள்ளி விவரத்தையும் காணோம். ஏறத்தாழ 11 பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் இந்த நீர்ப்பாசன மான்யத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அந்த பதினொன்று திட்டங்களுக்கு ஏறத்தாழ 2 கோடி 39 லட்ச ரூபாய் செலவிடப் போவதாக அதில் காணப்படுகிறது. ஆனால், வடாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு அணை கூட, சிறிய நீர்ப்பாசனம் கூட கட்டுவதாகக் காணோம். சாத்தனூர் அணைக் கட்டு இருக்கிறது.

**The Hon. Sri M. A. MANICKAVELU:** உதவி சபாநாயகர் அவர்களே, சாத்தனூர் அணைக்கட்டுத் திட்டம் வடாற்காடு ஜில்லாவில் இருக்கிறது என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**Sri S. M. ANNAMALAI :** சாத்தனூர் அணைக்கட்டு இருக்கிறது. ஆனால் அது தென்னாற்காடு மாவட்டத்திற்குத்தான் அதிகமாகப் பயன்படுகிறதே தவிர, வடாற்காடு மாவட்டத்திற்கு ஒரு சிறிதுதான் பயன்படுகிறது. இரண்டாவது, ஆரணியாறு திட்டம் இருக்கிறது. ஆரணியாறு என்னும் பெயரைப் பார்த்தால் ஏதோ வடாற்காடு மாவட்டத்தில் இருக்கும் ஊரைக் குறிக்கிறதே தவிர, அந்தத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் தண்ணீரில் மூன்றில் இரண்டு பாகம் செங்கற்பட்டு மாவட்டத்திற்கு உபயோகப்படுகிறது. இந்த வகையில் வடாற்காடு மாவட்டம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது இந்த நீர்ப்பாசனத் திட்டத்தின் மூலமாக. ஒரு சிறிய நீர்ப்பாசனத்திட்டம் கூட இல்லாத வரண்ட மாவட்டமாக இருக்கிறது வடாற்காடு மாவட்டம், என் பதைக் கண்டு, வடாற்காடு மாவட்டத்திலிருந்து நாங்கள்—சட்ட மன்ற உறுப்பினர்கள்—இந்த சட்டமன்றத்தில் வந்துங்கூட—வடாற்காடு மாவட்டத் திலிருந்து ஒரு அமைச்சர் கூட இருக்கிறார் என்றால்—நாங்கள் உண்மை யிலேயே வேதனைப்படுகிறோம், இதைப் பார்த்துவிட்டு. ஆகவே, மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன். வரண்ட மாவட்டத்தில்....

**Srimathi T. N. ANANDANAYAKI :** Can the hon. Member speak musically in the House? (Laughter.)

**Mr. SPEAKER :** I do not find any music. (Laughter.)

**Sri S. M. ANNAMALAI :** ஆகையால், பெரிய நீர்ப்பாசனத் திட்டங் கள் இல்லையாயினும் கூட, அங்கு இருக்கக்கூடிய சிறிய ஆறுகளைக்கொண்டு, அதாவது கமண்டல நாக நதியிலே ஒரு அணைக்கட்டு கட்டுவதாக 6, 7 ஆண்டுகளுக்கு முன்னால், "சர்வே" செய்யப்பட்டிருக்கிறது. வடாற்காடு ஜில்லாவில், படைவீடு பக்கத்தில் நல்ல அணையாக ஒன்று கட்டலாம் என்று மக்கள் நினைக்கிறார்கள். அதைப்போல சிறிய ஆறுகள் அங்கங்கே இருக்கின்றன.

செய்யாற்றிலே ஒரு அணை கட்டலாம் என்றும் மக்கள் விரும்புகிறார்கள். இப்படிப் பலப் பல சிறிய ஆறுகளை அணைக்கட்டுகளின் மூலமாகத் தடுத்து ஆங்காங்கே நீர்த்தேக்கங்களை ஏற்படுத்தினால், அங்கு பக்கத்தில் இருக்கக் கூடிய கிணறுகளுக்குத் தண்ணீர் நன்றாக இருக்கும் என்று மக்கள் விரும்புகிறார்கள். ஆகையால், அப்படிப்பட்ட திட்டங்களை வடாற்காடு மாவட் டத்தில் நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

12th July 1957] [Sri S. M. Annamalai]

சிறு சிறு ஆறுகளிலிருந்து ஊற்றுக்கால்வாய்கள் தோண்டுவதற்கு சென்னை மாநில அரசியலார் அனுமதிப்பது கிடையாது. நான்கு, ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் வந்தவாசி தாலுகா, கோணையூர் அருகே செய்யாற்றிலிருந்து ஊற்றுக்கால்வாய்கள் தோண்ட வேண்டுமென்று கேட்கும்போது, பி.டபிள்யூ.டி. காரர்கள் "புதுக் கால்வாய் தோண்டக் கூடாது என்று கட்டுப்பாடு இருக்கிறது. ஆகவே, தோண்ட முடியாது" என்று சொல்லி நிராகரித்து விட்டார்கள். அப்படிப்பட்ட கட்டுப்பாடுகளை நீக்க வேண்டும். பழைய ஆயக்கட்டுகளை இது பாதிக்கும் என்றால், நன்றாக ஆலோசித்துப் பார்த்தால் பழைய ஆயக்கட்டுகளை உண்மையிலே அது பாதிக்காது என்று கூற விரும்புகிறேன்.

அது மட்டும் அல்ல. வடாற்காடு மாவட்டத்தில் வேலூருக்குப் பக்கத்தில் சதுப்பேரி என்ற ஒரு ஏரி இருக்கிறது. அந்த ஏரி 16 கிராமங்களுக்குப் பாயக்கூடிய வசதி உள்ளது. பாலாற்றில் அதிகமாகத் தண்ணீர் ஓடும் போது, பாலாற்றிலிருந்து சதுப்பேரிக்குத் தண்ணீர் கொண்டுபோய்த் தேக்குவதற்கு ஏற்ற கால்வாய் இல்லை. ஆகவே, பாலாற்றிலிருந்து ஒரு கால்வாய் பிரித்து சதுப்பேரிக்குத் தண்ணீர் கொண்டு போய்த் தேக்குவதற்கு உண்டான ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, களம்பூர் ஏரி இருக்கிறது. 1938-ம் ஆண்டிலே கனம் வி. ஆர். அவர்கள் அமைச்சராக இருந்தபோது வடாற்காடு மாவட்டத்திலுள்ள கமண்டல நாக நதியிலிருந்து தண்ணீர் கொண்டுபோய் களம்பூர் ஏரியில் தேக்குவதற்கு ஒரு கால்வாய் ஏற்படுத்தியிருக்கிறார். அந்த ஆற்றில் அடித்து வரும் மண், களம்பூர் ஏரியில் சென்று, அந்த ஏரியை 15 அடி ஆழம் வரை தூர்த்துவிட்டது. ஒன்பது மாதத்திற்கான தண்ணீர் தேக்கி வைத்துக்கொள்ளக்கூடிய அந்த ஏரியானது இப்பொழுது மூன்று மாதத்திற்கான தண்ணீரைத்தான் தேக்கி வைத்துக்கொள்ள முடிகிறது. மூன்று மாதத்திற்குத்தான் பாசனத்திற்குத் தண்ணீர் கொடுக்கிறது அந்த ஏரி. ஆகையால், அந்த ஏரியிலே உள்ள மண்ணை எவ்வளவு சீக்கிரத்தில் அப்புறப்படுத்த முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் அப்புறப்படுத்தினால்—அதாவது தூர் வாரினால்—அந்த மண்ணைக்கொண்டு நஞ்சை நிலங்களுக்கும் புஞ்சை நிலங்களுக்கும் பயன்படும். அந்த மண் நல்ல உரமாகவும் பயன்படும். ஆகையால், அதை லாரியின் மூலம் அப்புறப்படுத்தி, விற்றால் கூட செலவுத் தொகை கிடைத்துவிடும். அப்படிப்பட்ட சிறு சிறு நீர்ப் பாசனங்களிலே, அடைந்து கிடக்கும் மண்ணை எவ்வளவு சீக்கிரத்திலே வெளியே எடுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரத்திலே எடுக்க வேண்டுமென்று இந்த மாநில அரசியலாரை நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

வடாற்காடு மாவட்டத்தில் உள்ள வடவேடு ஏரி, கமண்டல நாக நதி, செய்யாறு, மூலக்காடு வழியாகவரும் ஆறு, இன்னும் சிறிய ஆறுகளையும் நல்ல முறையில் விவசாயத்திற்குப் பயன்படுத்தக் கூடிய முறையில் திட்டங்கள் வகுக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

வரண்ட ஆற்றுக்கு அணை கட்டச் சொல்லுகிறேனே என்று சென்னை அரசியலார் நினைக்கக் கூடும். ஆனால், நான் சொல்வேன்—அதில் கூட ஊற்றுக்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன, இந்த நாளில் கூட. ஏப்ரல், மே மாதத்தைத் தவிர, மற்ற மாதங்களில் அனேகமாக தண்ணீர் ஓடிக்கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட சிறிய ஆறுகளில் ஆங்காங்கே நீர்த் தேக்கங்கள், அல்லது சிறிய அணைகள் கட்டி அதன் மூலமாக வடாற்காடு மாவட்டத்திலுள்ள மக்களுக்குப் பயன்படுமாறு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்வதோடு, எங்களுக்கு உண்டான பழியைத் தீர்த்து வைக்குமாறு சென்னை மாநில அரசியலாரை நான் மிக மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

**Srimathi HEMALATHA DEVI**: கனம் உப தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் பிரேரேபித்திருக்கும் நீர்ப்பாசன மானியக் கோரிக்கையை நான் முழு மனதுடன் வரவேற்கிறேன். அக்காலத்தில் அரசினர் 10-50 a.m.

[Srimathi Hemalatha Devi] [12th July 1957

அன்புடன் வாழ்த்திய ஔவையார் அவர்கள், நாடு நீர் வளம் நில வளம் பெற்று, விவசாயம் செழித்தோங்கி, மக்கள் சுபீட்சமாக வாழ்ந்து வர மன்னனை மனமாற வாழ்த்தவேண்டும். மன்னன் சிறப்புடன் ஆட்சி நடத்த வேண்டும் என்ற கருத்துக்களை மனத்தே கொண்டு, சுருக்கமாக "வரப்புயர" என்ற ஒரே வார்த்தையில் மன்னனை வாயார வாழ்த்தியுள்ளார். அது போல, நம்முடைய நாடு நீர் வளமும் நில வளமும் பெற்று, விவசாயம் தழைத்தோங்கி, மக்கள் மனமார நம்முடைய அரசாட்சியை வாழ்த்த வேண்டும்.

மக்கள் சுபீட்சமாக வாழவேண்டும் என்ற கருத்தைக்கொண்டு மக்களுடைய நலனைக்கருதி, நம்முடைய நீர்ப்பாசனத் திட்டத்திலே சிறு பாசனத்திற்காகவும், வடிமுனைத் திட்டத்திற்காகவும் 55 லட்சம் ரூபாய்—இந்த ஆண்டில் தொடர்ந்து நடத்துவதற்கு—ஒதுக்கப்பட்டிருக்கிறது. மேலும், பெரிய நீர்பாசனத் திட்டங்களுக்காகவும் 234 லட்ச ரூபாய் இந்த வரவு செலவுத் திட்டத்திலே ஒதுக்கியிருப்பது கண்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இதில் யாரும் குற்றங்குறைகள் கூறவும் முடியாது என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சேலம் ஜில்லாவில் பென்னாகரம் தொகுதியில் சில ஏரிகள் இருக்கின்றன. கரைகளை உயர்த்தி, சீர்திருத்தியிருக்கின்றார்கள். ஆனால், அந்த ஏரிகளுக்குத் தண்ணீர் வரும்படியான கால்வாய்கள் சீர்திருத்தப்படவில்லை. அக்கால்வாய்களைச் சீர்திருத்தம் செய்வதுடன், மேலும் பல இடங்களில் இருக்கும் ஏரிகளின் கரைகளையும் உயர்த்தி, அவைகளையும் சீர்திருத்த வேண்டியிருக்கிறது. அதோடு ஆங்காங்கே கிணறுகள் வெட்டிக் கொடுப்பதுடன், பஞ்சப்பட்டி என்ற அணைத் திட்டத்தையும் அமுலுக்கு கொண்டு வந்து பூர்த்தி செய்தால், அதனால் பல ஏக்கர் நிலங்கள் சாகுபடி செய்வதற்கு ஏதுவாக இருக்கும் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

நம் மாகாணத்திலே இம்மாதிரி வசதி எங்கெங்கே குறைவாக இருக்கிறதோ அங்கெல்லாம் திட்டங்களை எடுத்து, இம்மாதிரி வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்றும் நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

ஒரு சிலர் கருதுகிறார்கள், "உணவுப் பற்றாக்குறையாக இருக்கிறது; நாம் சுதந்திரம் பெற்றும் வயிறு நிறைய சாப்பிடக் கூடாதா, 12 அவுன்சுதான் சாப்பிட வேண்டுமா?" என்று. ஆனால், 20 வருஷங்களுக்கு முன்பு நம்முடைய ஜனத்தொகை என்ன? இப்போதைய ஜனத்தொகை என்ன? என்பதை உணர்ந்தும், கலப்பு உணவுத் தானியங்களை நாம் உட்கொள்ளுவதால் உடல் நலம் பெற்றிருக்க முடியும் என்பதை உணர்ந்தும் ஒருசில, அதிகப் பணம் படைத்தவர்கள் தினமொன்றுக்கு நான்கு வேளை சாப்பிடுகிறார்கள் என்றாலும், அந்த நான்கு வேளையும் அரிசிச் சாப்பாட்டையே சாப்பிட வேண்டுமென்றும் கருதுகிறார்கள். அதனால்தான் இம்மாதிரி உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டு வந்தது என்பதை உணராது சுதந்திரம் பெற்ற நம் நாடு முன்னேற வேண்டுமென்ற எண்ணம் இல்லாமல் "எப்படி என்னுடைய சாப்பாட்டு அளவு குறையலாம், 12 ஔன்ஸ்தான் சாப்பிடவேண்டும் என்று சொல்லலாம், அரிசி பற்றாக்குறை இன்றி சாப்பிட வேண்டாமா?" என்பதாகவெல்லாம் நினைப்பது தவறாகும். இப்படிக் கருதுவது முறையாகாது என்றும் கூற விரும்புகிறேன்.

நம்முடைய சர்க்கார் நீர்ப்பாசனத்திற்கு வேண்டிய அணைகளைக் கட்டுவதிலும், வாய்க்கால்களை வெட்டுவதிலும், ஏரிகளின் கரைகளை உயர்த்திக் கொடுப்பதிலும், கிணறுகளை வெட்டிக் கொடுப்பதிலும் உடனுக்குடன் ஆவன செய்யவேண்டும். இந்த வேலைகள் எல்லாம் காலதாமதமின்றி துரிதமாக நடைபெறத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதாக இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துக் கூறி நான் என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

12th July 1957] 10.12 a.m.

* SRI A. V. THOMAS : Deputy Speaker, Sir, it was indeed very heartening when we heard yesterday—I take it as a sort of policy statement—from the Hon. Minister that productivity test was no longer the sole criterion and deciding factor in sanctioning new works. As I said before, this is a very welcome statement. But the statement should not end with the statement. The statement should be followed up by action.

THE HON. SRI C. SUBRAMANIAM : May I correct the hon. Member? It was not stated that productivity test would not be taken into account, but that the return test would not be the sole criterion.

SRI A. V. THOMAS : That is still a welcome statement. I welcome that statement because, as my friend who just now spoke said in taking up new schemes special consideration should also be shown to places where there is practically no water. People having one meal a day should be enabled to have three meals a day. Those places, wherein people have not got the facility to work and do not have even one meal a day, should receive first consideration irrespective of the fact whether the scheme pays or not. I refer particularly to Radhapuram constituency in the southern district of Tirunelveli. It so happened that early in June I had the good fortune to be in Kanyakumari district. The Hon. the Minister for Irrigation had also come there, and he had with him the Chief Engineer for Irrigation and the Superintending Engineer from Tiruchirappalli. They went round some of the places. It was exhilarating at that time to see water everywhere in that area. However, while it was so exhilarating and we were all so very happy about it, there was the other side of the picture. It was really heart-burning to see that a large volume of water—millions of gallons—was being wasted into the sea. The Hon. Minister saw that also. I am told that in Kanyakumari district, there are various other schemes which had already been approved and investigated and approved by the previous Government before the integration. Somehow nothing had been done so far. I am glad to hear that investigations are being made again or that such of the schemes as have already been approved are being checked up. This is a welcome sign. But in doing this, I would very humbly suggest to this House and particularly to the Ministers that instead of burdening the existing officials of the Irrigation Department with the investigation, the Government, in the interest of the State and also in the interest of the starving millions, should appoint a separate Irrigation Committee. In fact I would even go to the extent of saying that this matter of irrigation should be actually put on a war-footing. It is, of course, not right to speak of war and war-footing when all are talking about peace. I would say this may be called " Operation water ", I suggest the appointment of a Special Irrigation Committee consisting of Expert Irrigation Engineers, Geologists, forest officers, and, if possible, representatives of the public. The work of the committee will be

to investigate and submit estimates for schemes which it thinks would be feasible. The cost, of course, does not matter, because it means the lives of thousands of people. To prevent starvation expenditure on schemes should be overlooked. Money must come from somewhere. So I would appeal very strongly to the Cabinet that they should constitute an Irrigation Committee and that the Committee should carry on the work as expeditiously as possible.

There is another matter I wish to refer to here. Works are generally delayed. We are satisfied in the South that there is a scheme called Mani Muthu Ar. It was started years ago and the public were asked to subscribe. The public were in great hopes that their part of the country would flow with milk and honey. They expected that in the ordinary circumstances the scheme would be completed perhaps in two or three years. Those years are past and we are no nearer getting water from Mani Muthu Ar even to-day. I was really happy when the Hon. Minister told us the other day in the House that perhaps in September the scheme would come into use and that water would flow from the dam. If that happens, I will be happier than anybody else in the House, but I do not know whether it would be feasible. Because, following that statement, the next day when a question was put, the Minister said that a certain percentage of work had been completed, say about 80 per cent or 90 per cent. It reminded me of the story of a man who wanted to build a house before the monsoon was on. He asked the contractor about the progress of the work. The contractor said that 80 per cent of the work had been finished. The contractor took him to the place and said 'Here is the house'. The man asked, 'What about the roof?' The contractor said, 'Oh, I can put it up before the rains'. But the rains came and there was no roof.

What we want is water and not to be told how much of the scheme had been completed. The cry from everybody is 'water'. We must have water, and water must be given to us at any cost. The water must come to us as quickly as possible. All possible and feasible schemes should be investigated thoroughly and works taken with the utmost speed.

Sir, this is all I have to say on this demand.

10-19 a.m. SRI N. MARUDACHALAM : கனம் உப சபாநாயகர் அவர்களே, இந்த நீர்ப்பாசன இலாகா மானியத்தை ஆதரித்துச் சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். அதாவது மந்திரி அவர்கள் தன்னுடைய முன் உரையில் சில புதுக் கால்வாய்களையும், புதுக் குளங்களையும் கட்டுவதாகச் சொன்னார். பழைய கால்வாய்களே சில இப்போதும் மராமத்து செய்யப்படாமல் இருக்கின்றன என்பதை அவருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். கோவை ஜில்லாவில் கீலாம்பட்டி ஆறு என்று ஒன்று போகிறது. அதிலிருந்து வளம்பிரி வாய்க்கால் பிரிகிறது. இந்த வாய்க்காலினால் சுமார் 200 ஏக்கரா நிலங்கள் பாசன வசதி பெறும். சென்ற ஐந்தாண்டுத் திட்டத்திலும் சரி, இப்போதும் சரி, அந்த வாய்க்கால் மராமத்து செய்யப் படாமல் கிடக்கிறது. அதை உடனடியாக மராமத்து செய்தால் 200 ஏக்கரா நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கும். உற்பத்தியும் அதிகமாகும். அதேபோல முத்தண்ணன் குளம் என்று குளம் ஒன்று இருக்கிறது.

12th July 1957] [Sri N. Marudachalam]

இம்மாதிரி குளங்களையும், அந்த வாய்க்காலையும் மராமத்து செய்யா விட்டால் நிலங்கள் தரிசாகத்தான் கிடக்கும். ஆகையால் உடனடியாக இவற்றை மராமத்து செய்யவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். இன்றைக்குப் பார்த்தால் பல இடங்களிலும் சரிவர மராமத்து செய்யப்படுவதில்லை. இதனால் இந்த இடங்கள் மேடாக கிடக்கின்றன. ஒவ்வொரு குளத்திலும் செங்கல் சூளை வைத்து பலர் வியாபாரம் செய்துகொண்டிருக்கிறார்கள். இதையும் தடுப்பதில்லை. பல குளங்களில் மேடாய் இருப்பதினால் வேளாண்மை செய்யப்படுகிறது. இதை அரசாங்கம் தடுப்பதற்கு எந்தவிதமான வகையும் செய்யாமல், தண்ணீர் தங்குவதற்கு கூட வசதியில்லாத நிலையில் இருக்கிறது. அங்கு தண்ணீர் நிற்கவேண்டுமானால் நல்ல ஆழம் இல்லை. அப்படியே தங்கி நின்றாலும் ஒரு பத்து நாள் அல்லது பதினைந்து நாள்தான் தண்ணீர் நிற்கும். இதனால் அங்குள்ள விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். அவதிப்படுகிறார்கள். கோவையில் புளியாகுளம் ஊரில் அம்மன்குளம் என்கிற குளத்தில் தண்ணீர் விடுவதில்லை. இந்த குளத்தில் தண்ணீர் விடுவதாயிருந்தால் பாப்பன் நாயக்கன்பாளையம் போன்ற பகுதிகளுக்கு தண்ணீர் வசதி ஏற்படும். எந்த பகுதி வரண்டு கிடக்கிறதோ அந்த இடத்திற்கு தண்ணீர் விடவேண்டும். அங்கு இருக்கின்ற நிலங்களில் ஒன்றும் பயிரிட முடியாமல் அங்குள்ள விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இதில் மராமத்து செய்ய வேண்டும். புதிய வாய்க்கால்களை வெட்டுவதைகாட்டிலும் பழைய வாய்க்காலை மராமத்து செய்து தண்ணீர் அதிகமாக கிடைக்கும்படி செய்தால் உணவு உற்பத்தி அதிகமாகும். ஆகையால் இதை மராமத்து இலாகா கவனத்தில் கொண்டு இதை உடனடியாக செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**Sri R. KRISHNASAMI NAIDU:** உதவி சபாநாயகர் அவர்களே, கனம் 10-2 a.m.
மந்திரி அவர்களால் பிரேரிக்கப்பட்டிருக்கும் நீர்ப்பாசன மான்ய கோரிக்கையை மனமார வரவேற்கிறேன். என்னுடைய ஜில்லாவில் முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் கவனம் எடுத்து பல வேலைகளை நிறைவேற்றி வருகிறார்கள். அதற்காக நான் பாராட்டுகிறேன். என்னுடைய தொகுதியாகிய ஸ்ரீவில்லிப்புத்தூர், ராமநாதபுரம் போன்ற இடங்களில் 10 வருட காலமாக மழையில்லை என்பதை அமைச்சர்கள் அறிவார்கள். மலையடிவாரங்களில் அதாவது திருநெல்வேலி, மதுரை ஜில்லா, கோவை ஜில்லா முதலிய இடங்களிலும் மலையடிவாரங்களில் 10 வருஷ காலமாக மழை பெய்யாத காரணத்தால் நிலங்கள் எல்லாம் தண்ணீர் இல்லாமல் வரண்டு கிடக்கிறது. ஸ்ரீ வில்லிப்புத்தூரில் மின்சார வசதி கிடைத்து வருகிறது. ஆனால் அங்குள்ள விவசாயிகள் தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். உதாரணமாக என்னுடைய கிராமத்தில் மூன்று வருடங்களுக்கு முன் ஒரு "ஸீனியர் பேஸிக் ஸ்கூல்" கட்டிட வேலை ஆரம்பமானது, அங்கு வருஷந்தோறும் 3 அடி, 4 அடி என்று கட்டி சுவரை உயர்த்தவேண்டியிருக்கிறது. அங்கு மழை பெய்யாத காரணத்தால் சுண்ணாம்பு குழைப்பதற்கு கூட தண்ணீர் இல்லாமல் இருக்கிறது. இவ்வாறு வேலை தடைப்பட்டு கிடக்கிறது. எப்படியும் சீக்கிரத்தில் முடித்து விடலாம் என்று நினைத்து டி.பி.ஐ-க்கு விண்ணப்பம் செய்து அவகாசம் கேட்டு வாங்கி இருக்கிறோம். இதற்காக அரசாங்கத்திற்கு பல விண்ணப்பங்கள் அனுப்பியிருக்கிறோம். குறிப்பாக என்னுடைய பகுதியில் காரியங்களை செய்துகொண்டிருக்கிறார்கள் என்றாலும் கூட, இன்னும் பல இடங்களில் எவ்வளவோ கஷ்டங்கள் இருக்கின்றன. நேற்று இங்கு நடந்த தென் மண்டல கூட்டத்தின் செய்திகளைப் பார்த்தேன். "கஞ்சி வரதப்பா" என்று சொன்னபோது பசியால் வாடின ஒருவன் "எங்கு வரதப்பா" என்று கேட்டானாம். அதுபோல இந்தச் செய்திகளை கண்டு உள்ளம் மகிழ்ந்தேன். இன்னும் 10 வருஷங்களில் நல்ல செழிப்பைக் காண முடியும், எல்லா இடங்களிலுமுள்ள நதிகளில் எல்லாம் தண்ணீர் வற்றாமல் பார்த்துக்கொள்ளமுடியும் என்று செய்தியைப் பார்க்கிறோம். இராஜ்யங்களிடையில் ஒரு உறுதியான நடவடிக்கை எடுத்து சீக்கிரமே இதெல்லாம் முடிவு பெறும் என நம்புகிறேன். அதிலும் முதல் அமைச்சர் காமராஜர் அவர்களே கமிட்டியின் தலைவராக இருப்பது

[Sri R. Krishnasami Naidu] [12th July 1957

மிகவும் மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். அதோடு மட்டுமல்ல, இராஜ்யங்களிடையே ஓடும் நதிகளின் தண்ணீரை பகிர்ந்துகொள்ளும் விஷயமும் பிரதானமாகக் கவனிக்கப்பட்டது தெரிகிறது என்றுள்ள வாசகங்களை மேலும் மேலும் பார்த்து நான் சந்தோஷப்பட்டேன். "ஒரு சொட்டுத் தண்ணீர் கூட வீணுகப் போகக்கூடாது என்றும், சாகுபடி நிலம் ஒரு அங்குலம் கூட தரிசாக கிடக்கக்கூடாது என்றும் மத்திய மந்திரி வலியுறுத்தினுர்" என்ற வாசகம் மேலும் சந்தோஷமூட்டுகிறது. நம்முடைய நாட்டில் ஏற்கெனவே நமது நாட்டில் இருக்கின்ற பொறியியலாளர்கள் எவ்வளவோ திட்டங்கள் தயாரித்து வேலை செய்து வருகிருர்கள். புனலூரில் ஒரு அணைக் கட்டுத் திட்டம் ஆரம்பிப்பதற்கு சாத்தியக் கூறுகள் இருப்பதாகத் தெரிகிறது. இது கேரள ராஜ்யத்தில் இருக்கிறது. இது நிறைவேற்றப்பட்டால் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள இடங்களுக்கு பயனளிக்கும் என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வர ஆசைப்படுகிறேன். பம்பையாறு என்ற ஒரு திட்டம் இருக்கிறது. இது நிறைவேற்றப்பட்டால் திருநெல்வேலி, இராமநாதபுரம் ஜில்லாக்களிலுள்ள பகுதிகளுக்குப் பயன்படும். அப்பர் பெரியாறு திட்டம், மதுரை, இராமநாதபுரம் ஜில்லாக்களுக்கும் பயன்படும். பரம்பிக்குளம் திட்டம் கோவை ஜில்லாவுக்குப் பயன் அளிக்கும். இம்மாதிரியான பல திட்டங்களை உடனடியாக அமலுக்குக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தென் மண்டல கௌன்சில் கூட்டத்தில் கூறியுள்ளது மாதிரி சாத்தியக் கூறுகள், ஒத்துழைப்பு இவைகளையெல்லாம் செய்வதற்கு வாய்ப்புகள் ஏற்பட்டு இருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் பலவருஷங்களாக தண்ணீர் இல்லாமல் வரண்டு கிடக்கும் திருநெல்வேலி, இராமநாதபுரம் ஜில்லாவின் மேல் பகுதி, மதுரை ஜில்லாவின் மேல் பகுதி இவைகளுக்கெல்லாம் இதன் மூலம் நீர்ப்பாசன வசதி செய்ய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. இவைகளை அரசாங்கம் உடனடியாக கவனிக்கும் என்று நம்புகிறேன். தென் மண்டலக் கூட்டத்தில் மத்திய அரசாங்கத்தின் உள்நாட்டு மந்திரி அவர்கள் கூறியிருப்பது மாதிரி "மேற்கு கரையில் பெரியாறு திட்டம் உள்ளது. பரம்பிக்குளம், பம்பையாறு நதிகளையும் இதில் சேர்க்கலாம். கேரளம், சென்னை இரண்டின் அபிவிருத்திக்கும் இது உபயோகமானதாக இருக்கும். இப்போதைய ஒப்பந்தங்களில் சேர்க்கப்படாமலுள்ள மேற்கே பாயும் நதிகளின் ஜலத்தை பகிர்ந்துகொள்வதில் இந்த மண்டலக் கவுன்சிலின் விவாதங்களின் மூலம் சென்னை, கேரளம் இடையே ஒரு நிரந்தர சமரஸ உடன்பாடு ஏற்படுமென நம்புகிறேன்" என்று காணப்படுகின்றன். இதில் நிரந்தர என்ற அடைமொழியை நன்ருக உபயோகித்ததற்காக நான் சந்தோஷப்படுகிறேன். ஆகவே நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள், நிதி மந்திரி அவர்கள், மதி மந்திரி அவர்கள் இம்மூன்று பேரும் சேர்ந்து கவனித்து நீண்ட காலமாக வரண்டு கிடக்கும் பிரதேசங்களிலுள்ள மக்களுக்கு நல்வாழ்வு அளிக்கக்கூடிய இந்தத் திட்டங்களை உடனடியாக செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியைப்பற்றிக் கூறினேன். வாஸ்தவத்திலேயே அந்த பகுதி நல்ல சாகுபடிக்காகவும் மிக செல்வ மிகுந்த பகுதியாகவும் இருந்த பகுதி என்பதை சொல்லவேண்டியதில்லை.

"பாதகங்கள் தீர்க்கும், பரமனடி காட்டும், வேதமனைத்துக்கும் வித்தாகும்—கோதை தமிழ் ஐயைந்தும் ஈன்ற கோதை பிறந்த ஊர், கோவிந்தன் வாழ்ந்த ஊர், சோதிமணிமாடம் தோன்றும் ஊர், . . . ."

இந்தப் பெருமைகள் எல்லாம் கொண்ட இந்த ஸ்ரீவில்லிப்புத்தூர், இன்று வரண்டபிரதேசமாக இருக்கிறது. சிறப்பாக இருந்த ஒரு பிரதேசம் முப்பது திருப்பாவைகளை பாடிய ஆண்டாள் பிறந்த பிரதேசம் ஒரு காலத்தில்,

"ஓங்கி உலகளந்த வுத்தமன் பேர்பாடி,
நாங்கள் நம்பாவைக்கு சாற்றி நீராடினுல்,
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து,
ஓங்குபெருந் செந்நெலூடு கயலுகள,

12th July 1957] [Sri R. Krishnaswami Naidu]

பூங்குவளைப் போதிற் பொறிவண்டு கண்படுப்ப,
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி,
வாங்க, குடம் நிறைக்கும் வள்ளல்,
பெரும் பசுக்கள் . . ."

இருந்த அந்த பகுதியில் இன்று கஷ்டங்கள் தோன்றியிருக்கின்றன, என்பதை நமது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அந்த பகுதிகளில் கிணறுகள், 1,600 வெட்டப்பட்டன. அங்குள்ள விவசாயிகள், நல்ல பாட்டாளிகள், நல்ல உழைப்பாளிகள் என்பது நமது முதல் அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அங்கு பல வேலைகளையும் அந்த பகுதியில் நிறைவேற்றுகிறார்கள். ஆகவே, இன்னும் அதிகமாக இந்தப் பகுதியை நல்ல நிலைக்கு கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

**SRIMATHI T. N. ANANDANAYAKI** : Sir, the hon. Member who spoke last mentioned in his speech '*நிதிமந்திரி, மதிமந்திரி.*' May I know to whom he referred as '*மதிமந்திரி*' ? (Laughter.)

**DEPUTY SPEAKER** : I think he was telling '*நிதிமந்திரி, நீதிமந்திரி*'.

* **SRI K. L. RAMASWAMI** : சட்டப் பேரவையின் பெருமை மிகு துணைத் தலைவர் அவர்களே, இன்று மராமத்து இலாகா மந்திரியவர்கள் நீர்ப்பாசன நிர்வாகத்திற்காகவும், நீர்ப்பாசன திட்டங்களுக்காகவும், கொண்டு வந்திருக்கும் மான்யக் கோரிக்கையை ஆதரித்து நான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். பொதுவாக, நாட்டின் நலம் செழிக்கவேண்டுமென்றால், நில வளம் மிக அதிகமாக இருக்கவேண்டும். நிலவளத்திற்கு இன்றியமையாதது நீர்வளம். இன்று நிலவளத்தையும் நீர்வளத்தையும் தவிர, மின்சார வளம் மிக அதி வேகத்தில் நம் நாட்டில் பரவி வருகிறது. இந்த வேகத்திற்கு எற்ப நாட்டில் இந்த நிலவளத்தையும், நீர்வளத்தையும் பெருக்கவேண்டிய வழி வகைகள் செய்யவேண்டும். இந்த வழி வகைகளை நம் அரசாங்கம் மிகச் சீரிய முறையில் செய்து வருகிறது என்று நான் அறிந்தமட்டில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பொதுவாக, இந்த மாகாணத்தின் நீர் வசதிக்காக அரசாங்கத்தார் நிறையப் பணம் செலவு செய்து வருகிறார்கள். அவைகள் எல்லாம் நல்ல முறையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. சிறிய குறைபாடுகள் இருப்பினும் அவைகளை நாம் பொருட்படுத்தவேண்டியதில்லை. அகில இந்திய முறையிலே நம் மாகாணம் நீர்ப்பாசன வசதி விஷயத்தில் மிகவும் சிறந்த முறையில் இருக்கிறது என்று தான் கூறவேண்டும். பொதுவாக, இந்த பத்து ஆண்டுகளாக மிகவும் சிறந்த முறையில் இருக்கிறது. 1947-வது ஆண்டிலே, இந்தியக் குடியரசு நாட்டின் பல்வேறு மாகாணங்களில் நீர்ப்பாசன வசதி எவ்வாறு, எந்த அளவு பரவி இருந்தது என்பதை நாம் கொஞ்சம் பார்க்கவேண்டும். அன்று 1947-லே, இந்த மாகாணத்தில் அதாவது 1947-ல் இந்த மாகாணம் என்று நான் கூறும்போது ஆந்திர ராஜ்யத்தையும் உள்படுத்தித்தான் கூறுகிறேன். மொத்தம் 310 லட்சம் ஏக்கர் நிலம் விவசாயத்திற்கு ஏற்றதாக இருந்தது. அப்பொழுது நீர்ப்பாசன வசதி பெற்ற நிலம், 99 லட்சம் ஏக்கர். இதே நாட்டில் 31·82 சத விகிதம் நீர்ப்பாசனத்தில் அடங்கி இருந்தது. நமது மாகாணம் இந்தியாவில் வைத்தே இரண்டாவதான, நீர்ப்பாசன வகையில் சிறந்ததாக இருந்தது. முதலாவதாக இருந்தது, கிழக்கு பஞ்சாப். வேறு மாகாணங்களின் சத விகிதத்தையும், மொத்தம் விவசாயம் செய்யக்கூடிய நிலத்திற்கும், நீர்ப்பாசன வசதி பெற்ற நிலத்திற்கும் உள்ள சதவிகிதத்தைக் கணக்கெடுத்துப் பார்த்தால் சென்னை மாகாணம் 31·82, கிழக்கு பஞ்சாப் 43·80 யுனைடெட் பிராவின்ஸ்ஸ் 31·30, சென்ட்ரல் ப்ராவின்ஸஸ் 6·50 பீஹார் 30·50, பாம்பே 4·90, ஆஸ்ஸாம் 22·60, ஒரிஸ்ஸா 29·90, வெஸ்ட் பெங்கால் 20·50 என்ற முறையில் நீர்ப்பாசன வசதி அமைந்திருக்கிறது. இப்பொழுது நம் மாகாணம் ஓரளவு சிறந்த முறையில் நீர்ப்பாசன வசதியை பெருக்கிக்கொண்டு 10-30 a.m.

போகிறது. மற்ற மாகாணங்களும் நம்முடன் போட்டி போட்டுக்கொண்டு சிறந்த முறையில் அவைகளின் நீர்ப்பாசன வசதிகளை பெருக்கிக்கொண்டு வருகின்றன. மற்ற மாகாணங்களில் பொதுவாக இந்த ஐந்தாண்டுத் திட்டத்திலே அதிகம் ஏக்கர் நீர்ப்பாசன வசதிக்கு வழி வகை வகுத்து வருகிறார்கள். ஆகவே நம்முடைய மாகாணத்தில் அந்த அளவு வழி வகைகள் வகுக்கவில்லை என்று சில குறைகள் சிலரால் கூறப்பட்டு வருகின்றன. மிகவும் பின் தங்கிய மாகாணங்கள் அவைகளின் நீர்ப்பாசனத் திட்டங்களை மிக வேகமாக நடத்தவேண்டுமென்று திட்டம் போட்டால், அது நம் மாகாணத்தின் முன்னேற்றத்தை எந்த விதத்திலும் தடுப்பதில்லை; அதைப்பற்றி நாம் அக்கரைப் படவேண்டியதில்லை. மத்திய அரசாங்கமும் எந்த விதமான பாரபட்சமும் காட்டுவதில்லை என்று இங்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அடுத்தபடியாக, 1947-க்குப் பின் இந்தப் பத்து ஆண்டுகளாக நமது மாகாணத்தில் நடந்த நீர்ப்பாசன வசதிகளைப் பற்றி கொஞ்சம் கூறவேண்டியிருக்கிறது. நீர்ப்பாசனம் என்று சொல்லும்போது, கிணறுகள் வெட்டுவதற்காகவும், சிறிதும் பெரிதுமான பல நீர்ப்பாசனத் திட்டங்களுக்காகவும் செலவு செய்த தொகை ஏறக்குறைய 50 கோடிக்கு மேல் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அதனால் பயன்பட்ட பூமிகள் சுமார் 10 லட்சம் ஏக்கர்களாகும். அதனால் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்ட உணவு தான்யம் 5 லட்சம் டன்னுக்கு மேல் என்று கணக்கிடலாம். எனக்குக் கிடைத்த புள்ளி விவரங்களைக் கொண்டு நான் இந்த விவரங்களைத் தயாரித்திருக்கிறேன். இம்மாதிரி மற்ற மாகாணங்களுக்கு எந்த விதத்திலும் பின்வாங்காமல் இந்தியாவிலேயே முதன்மை ஸ்தானம் வகிக்கக்கூடிய நிலையில் நம் மாகாணம் நீர்ப்பாசனத் திட்டத்தை அமைத்திருக்கிறது என்பதை நான் பெருமையோடு கூறிக்கொள்ளுகிறேன். அடுத்தபடியாக எங்கள் தொகுதியில் பாயக்கூடிய கீழ் பவானி நீர்த் திட்டத்தைப் பற்றிக் கொஞ்சம் கூற விரும்புகிறேன். இந்த கீழ் பவானி நீர்ப்பாசனத் திட்டம் சுமார் 10 கோடி ரூபாய் செலவில் தயாரிக்கப்பட்டது. இரண்டு லட்சத்திற்கு மேற்பட்ட நிலங்கள் அதனால் நீர்ப்பாசன வசதிக்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. எல்லா மக்களுக்கும் சிறந்த விவசாய முறையைச் சொல்லிக் கொடுப்பதற்காக "கம்யூனிட்டி ப்ராஜெக்ட்" மூலம் பல திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அதன் மூலம் விவசாயிகளுக்கு மிகுந்த அக்கரை ஏற்பட்டு இருக்கிறது. அதோடு மக்களின் தொழிலும் நன்றாக நடக்கிறது. ஆகவே, வேலையில்லாத் திண்டாட்டமும் ஓரளவிற்கு நீங்கியிருக்கிறது என்றும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஆனால் நிர்வாகத்திலே சில குறைபாடுகள் இருக்கின்றன. அதையும் அறிவிக்கவேண்டியது என்னுடைய கடமை என்று நான் நினைக்கிறேன். அந்தத் திட்டம் தீட்டப்பட்டு நமது உணவுப் பஞ்சத்தைத் தீர்க்கலாம் என்று தான் ஏற்பாடு. இந்த லோயர் பவானித் திட்டம் மூலம் உணவுப் பொருள் அதிகமாக உற்பத்தி செய்யப்படவேண்டும். அதுவும் நெல் தவிர புஞ்சை தான்யங்கள் தான் சிறந்த முறையில் விரிவாக உற்பத்தி செய்யவேண்டியது என்பது இந்தத் திட்டத்தின் நோக்கம். இரண்டாவதாக, இந்த லோயர் பவானி ஆயக்கட்டைச் சேர்ந்த பிரதேசங்களில் தான் அந்தத் தண்ணீரை உபயோகப்படுத்த வேண்டும். அதில் சேராத பகுதிகளில் அதை உபயோகப்படுத்தக்கூடாது என்பது தான் விதி. ஆனால் இப்பொழுது இன்று நீர் அனுமதியின்றிப் பாய்ச்சப்பட்டதற்காகத் தண்டத் தீர்வை விதிக்கப்படுகிறது. இந்தத் தண்டத் தீர்வை முறை மிகவும் கொடுமை என்று சொல்ல நான் தயங்கினாலும்கூட கடுமையாக இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**DEPUTY SPEAKER :** Hon Member's time is up.

10-40 a.m. ***Sri T. S. RAMASWAMY PILLAI :** தலைவர் அவர்களே இந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில விஷயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். கன்னியாகுமரி ஜில்லாவில் சென்ற ஆண்டிலே 40 ஆயிரம் ஏக்கர்களுக்கு மேல் கரிந்து விட்டது என்று ஏற்கெனவே அறிவித்திருக்கிறேன். மழை குறைவு என்ற காரணத்தோடு நிர்வாகத்திலே உள்ள சீர்கேடுகளும் உண்டு என்பது என் தாழ்மையான கருத்து. அது மாத்திரமல்ல. நம்முடைய இன்றைய பட்ஜெட்டிலேகூட கோடிக்கணக்கான ரூபாய்கள்

12th July 1957] [Sri T. S. Ramaswamy Pillai]

நீர்ப்பாசனத் திட்டத்திற்காக செலவழிக்கப்படுகிறது. அதிலே குறிப்பாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல் நம்முடைய ராஜ்யத்திலே நதிகளிலுள்ள பெரும்பாலான தண்ணீரை நாம் வீணாக்காமல் உபயோகிக்கிறோம். ஸர். ஸி. பி. ராமசுவாமி அய்யர் போன்றவர்களுடைய திறமையினாலே மேட்டூர் அணைக்கட்டு போன்ற திட்டங்களைத் தீட்டி உள்ள தண்ணீரை எவ்வளவு தூரம் பிரயோசனப்படுத்த முடியுமோ அவ்வளவு தூரம் பயன்படுத்துகிறோம். அதே நேரத்திலே மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளின் நீரை இங்கு திருப்பினால் பல ஆயிரக்கணக்கான எக்கர் நிலங்கள் அதனால் பயனடைய முடியும். அதை நன்கு பிரயோசனப்படுத்தும்படி செய்யவேண்டியது நம் கடமை. அத்தகைய திட்டங்களில் கவனம் செலுத்தப்படுவதற்கு மண்டலக் கவுன்சில்கள் வந்திருப்பது நமக்கு மிகவும் ஒரு நல்ல சகுனமாகக் கருதுகிறேன். ஆனால், இதற்கு முன்னாலேயே கேரள சர்க்காரோடு கலந்து பேசி செய்திருக்கவேண்டிய திட்டங்கள் செய்யவில்லை என்பது தான் என் குற்றச்சாட்டு. உதாரணமாக கேரளத்திலே நெய்யாறு அணைக்கட்டுத் திட்டம் பல ஆயிரக்கணக்கான எக்கர் பயிரிடக்கூடிய ஒரு திட்டம். அதில் இடது கரை கால்வாய், வலது கரை கால்வாய் என்று இரண்டு கால்வாய்கள் இருக்கின்றன. இப்போது வலது கரைக் கால்வாய் தான் வேலை நடக்கிறது. கன்னியாகுமரி ஜில்லாவைப் பொறுத்த வரையில் பல வகைகளில் நாங்கள் துரதிருஷ்டசாலிகள். திருவாங்கூர்—கொச்சியோடு இருந்தபோது நீங்கள்தான் சென்னைக்குப் போகப்போகிறீர்களே என்று சொன்னார்கள். இங்கு வந்து விட்ட பிறகு உங்களுக்குப் பாசம் அங்கு இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அதைப் பார்க்க தான் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. நெய்யாற்றில் இடது கரை சேனலை அவர்கள் கொடுப்பார்கள். கன்னியாகுமரி ஜில்லா சம்பந்தப்பட்டவரை பல ஸ்கீம்கள் போட்டு, இன்வெஸ்டிகேஷன் எல்லாம் முடிந்து பல திட்டங்கள் இருக்கின்றன. பொய்கையாறு, மாம்பழத்தாறு, சிற்றாறு, இடது கரைச் சேனல் திட்டம், இப்படிப் பல திட்டங்கள் இருக்கின்றன. இத்தகைய திட்டங்களை உடனடியாக எடுத்து அதைப் பரிசீலனை செய்யவேண்டுமென்ற திட்டங்கள் இந்த பட்ஜெட்டிலே வரும் என்று நினைத்தேன். ஆனால் அதற்கு மாறாக மொத்தமாக கன்னியாகுமரி ஜில்லாவுக்கு 5 லட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். சாதாரணமாக ஒவ்வொரு வருஷத்திலும் இதற்காகவே 5 லட்சம் ரூபாய் தொவாளை சேனல், கோதையாறு பிராஜெக்ட், ஒரு கால்வாய்க்கு மாத்திரம் ஒதுக்கி செலவழிப்பது வழக்கம். சென்ற வருஷம் அங்கு மழையில்லை. அதனால் பஞ்ச நிவாரண வேலைகள் செய்கிறோம் என்று சொல்லி 5 லட்ச ரூபாய் ஒதுக்கவில்லை என்று கூறி விட்டார்கள். இந்த வருஷம் இந்த வேலைகளைச் செய்யப்போகிறார்களா இல்லையா என்று சொல்லப்படவில்லை. பொதுவாக 5 லட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். நெய்யாறு அணைக்கட்டிலே இடது கரை சேனலை கேரள சர்க்கார் ஆட்சேபிக்காது கொடுத்து உதவுவார்கள் என்று நம்புகிறேன். பரம்பிகுளம் திட்டத்திற்கு எதிர்ப்பு இருந்தது. முன்னாலே இந்த எதிர்ப்பு இருந்தது. தமிழர்கள், மலையாளிகள் என்ற வித்தியாசம் இருந்தது. ஆனால் இப்போது அது மாறியிருப்பதாகத் தான் கருதுகிறேன். இப்போதுள்ள அரசாங்கத்தைப் பொருத்தவரையில் இப்போது துவேஷம் இல்லை. நிச்சயமாக நல்ல சூழ்நிலைகள் இருக்கின்றன. நன்றாக முயற்சியெடுத்து அத்திட்டத்தை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு கூட நீர்ப்பாசனத்தைப் பொருத்த அளவில் அந்த அதிகாரிகள் விவசாயத்தைப் பற்றி தெரிந்தவர்களாக இருந்தால் நன்றாக இருக்கும். சென்ற முறை பல எதிர்ப்புகள் அங்கு வந்தன. 40 ஆயிரம் எக்கரில் பல ஆயிரக்கணக்கான எக்கரை காப்பாற்றியிருக்கலாம் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. இப்போது விவசாயத்தைப் பெருக்க வேண்டுமென்று சொல்லுகிறோம். ஜப்பானிய முறைப்படி பயிரிடவேண்டுமென்று சொல்லுகிறோம். உணவு உற்பத்தி பெருகவேண்டுமென்று சொல்லுகிறோம். விவசாயத்தில் நாற்றுகளை 20 அல்லது 25 நாட்களுக்குள் நடவேண்டுமென்பது ஜப்பானிய முறை. ஆனால் மே 20, அதாவது வைகாசி 7-ந்தேதி மாமூலாகத் திறக்கவேண்டிய நாளாக இருந்தும் பேச்சிப்பாறை அணையை எவ்வளவு வெள்ளம் இருந்தும் திறக்காமல் இருக்கிறார்கள். 10 அல்லது 14

[Sri T. S. Ramaswamy Pillai] [12th July 1957

நாள் காலம் தாழ்த்தி ஜப்பானிய முறைப்படி பயிரிடுவதற்கு, 25 என்பது 40 நாளாகி விடுவதால் பயிர்கள் உதவாக்கரையாகி விடுகிறது. அது மாத்திரமல்ல. அணைக்கட்டு திறக்கவேண்டிய காலத்திலே திறக்கவேண்டும். ஆற்றிலே பெரு வெள்ளம் வரும்போது வரும் தண்ணீரை குளங்களிலே தேக்கி வைக்கவேண்டும். அந்த மாதிரி தேக்கி வைத்திருந்தால் இந்த சிக்கலான நிலைமையைத் தீர்த்திருக்க முடியும்.

(ஸ்ரீ ஏ. சிதம்பரநாத நாடார் எழுந்தார்.)

**SRI T. S. RAMASWAMY PILLAI : I do not want any disturbance, Sir :**

DEPUTY SPEAKER : The hon. Member is not yielding.

SRI T. S. RAMASWAMY PILLAI : இது மாதிரி நல்ல முறையில் விநியோகம் செய்திருந்தால் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தைக் காப்பாற்றியிருக்கமுடியும். அது போலவேதான் குளங்களையும் கண்காணிக்கவேண்டுமென்று பேசுகிறோம். திட்டங்களைத் தீட்டுகிறோம். நான் கைந்து மாதங்களுக்கு முன், அதற்கு முன்னும் கூட, குளங்களை சீர்படுத்துவதற்காக பல லட்சக்கணக்கான ரூபாய்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நிலச்சுவான்தார்கள், விவசாயிகள் போன்றவர்கள் அதற்கு ஆகக்கூடிய செலவு எவ்வளவோ அதில் மூன்றில் ஒரு பங்கு காண்ட்ரிபியூஷன் கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. பல பாகங்களிலிருந்து அந்த மூன்றில் ஒரு பங்கு செலவு செய்கிறோம் என்று எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். இப்போது மூன்று, நான்கு, ஐந்து மாதங்கள் ஆகின்றன. ஆனால் வேலை ஒன்றும் செய்யவில்லை. இனிமேல் இப்போதைக்கு செய்யமுடியாது. அடுத்த பங்குனி அல்லது சித்திரையில் தான் செய்ய முடியும். நாஞ்சில் நாடு என்று சொல்லப்படுகிற கன்னியாகுமரி ஜில்லாவில் விவசாயத்தையும் நீர்ப்பாசனத்தையும் கவனிக்கவேண்டுமென்று கூறிக்கொண்டு, அவ்வாறு செய்தால் நெல் உற்பத்தி அதிகரிக்கும் என்று குறிப்பிட்டு நான் முடித்துக் கொள்கிறேன்.

**SRI N. P. M. CHINNIAH KOVUNDER:** உயர் திரு துணைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய அமைச்சர் கொண்டுவந்த மானியக் கோரிக்கையை ஆதரிக்கும் வகையில் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். விவசாயம் பெருக நீர்ப்பாசன வசதி செய்து தரவேண்டியதுதான் மிகவும் முக்கியமானது. நீர்ப்பாசன வசதியைப் பொருத்த வரையில் எங்கள் பகுதிக்குள், பொதுவாக மணப்பாரை, பஞ்சப்பட்டி, புதுக்கோட்டை ராஜ்யத்திற்கு, காவேரி வாய்க்காலை ஊஞ்சலூரிலிருந்து பிரித்து ஒரு வாய்க்கால் கொண்டு வருகிறோம் என்று சொல்லித்தான் பல தேர்தலிலே பல அங்கத்தினர்கள் மக்களிடத்திலே ஓட்டுப் பெறுவது வழக்கம். எங்கள் பகுதி மிகவும் காடாரம்பமான பிரதேசம். ஒரு குருடனுக்கு கண் தெரிகிறது என்று சொன்னால் எவ்வளவு ஆனந்தப்படுவானோ, அந்த மாதிரி தண்ணீர் கொண்டு வருகிறோம் என்று சொல்லித்தான் ஓட்டுப் பெறுவது வழக்கம். ஆனால் நான் அப்படி ஒன்றும் சொல்லவில்லை. அது வேறு விஷயம். நான் அப்படி கூறுவிட்டாலும் கூட பஞ்சப்பட்டி, மணப்பாரை பகுதியிலே மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இது வரையில் அரசாங்கம் பல அணைக்கட்டுத் திட்டங்களை நிறைவேற்றியிருந்தாலும் கூட நிறைய தண்ணீர் இருந்தாலும் கூட, மணப்பாரை, பஞ்சப்பட்டி பகுதியிலே மின்சாரம் என்று சொன்னால், அது ஏதோ வெளிச்சம் தரக்கூடிய ஒரு பொருள்; தண்ணீர் இறைப்பதற்கு பயன்படுமா என்று கூடத் தெரியாமல் இருக்கிறார்கள். சின்னஞ்சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்படுமானால், காவேரி வாய்க்கால் திட்டத்தை நிறைவேற்றி விட்டால் கூட நிலைமை மாறும். சின்னஞ்சிறு அணைக்கட்டுகள் கட்ட ஏராளமான வசதிகள் இருக்கின்றன. அதில் முக்கியமாக இரண்டொரு இடங்களில் கட்டினால் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு தண்ணீர் பாயும் என்பதில் சந்தேகமில்லை. கண்ணூத்தி மாதிரி இரண்டொரு திட்டங்களை நிறைவேற்றினால் வருஷத்தில் 12 மாதமும் ஆயிரக்கணக்கான ஏக்கர் பாசனம் செய்யமுடியும்.

[12th July 1957] [Sri N. P. M. Chinniah Kovunder]

அடுத்தபடியாக என் பகுதியில் ஒரு பாலாறு ஓடுகிறது. அதில் கோடை காலத்தில் கூட தண்ணீர் இருக்கும். இதில் அணை போட முன்பே சர்வே செய்து இருக்கிறார்கள். அந்த அணையைக் கட்டினால் சில ஆயிரம் ஏக்கரா நிலங்களுக்கு தண்ணீர் வசதி ஏற்படும். திருச்சி பக்கத்திலே வட பகுதியில் ஒரு கால்வாய் வெட்டப்படுகிறது. அதை கொஞ்சம் தெற்கே தள்ளி வெட்டினால் புதுக்கோட்டை ராஜ்யத்தில் ஒரு பகுதி நஞ்சை நிலமாக மாறும். எங்கள் பகுதியில் சமுத்திரம் என்ற 5,000 ஏக்கரா கொண்ட ஒரு கண்மாய் இருக்கிறது. அதற்கு ஒரு அணைக்கட்டு இல்லாததால், மழையால் கிடைக்கும் ஜலம் வீணாகப் போய்விடுகிறது. இப்போது மக்களே, வைக்கோல் தட்டை மண் இவற்றைப்போட்டு தண்ணீரைத் தேக்கி தண்ணீர் பாய்ச்சும் நிர்ப்பந்தம் இருக்கிறது. இவைகள் எல்லாம் இரவில் மழை பெய்தால் அடித்துக்கொண்டே போய்விடும். இந்த கண்மாயில் ஒரு அணை கட்டி, மின்சாரம் உபயோகித்து கிணறுகளிலிருந்து தண்ணீர் பாய்ச்சினால், எங்கள் பகுதியில் 100-க்கு 75 கிராமங்களில், நீர்ப்பாசன வசதி கிடைக்கும். எங்கள் பக்கத்தில், அணைகட்டுகளோ, நீர்தேக்கமோ, அல்லது மின்சார வசதியோ கிடையாது. சென்ற பத்து ஆண்டுகளில் நம் சர்க்கார் இந்த துறையில் அதிக கவனம் செலுத்தி பல திட்டங்கள் போட்டு இருக்கிறார்கள். இருந்தாலும் நான் குறிப்பிட்ட திட்டங்களை செய்து கொடுத்தால் போற்றத் தக்க விஷயமாக இருக்கும். எங்கள் பிரதேசம் காடாரம்பமான பஞ்சப் பிரதேசமானாலும் ஊஞ்சலூரிலிருந்து ஒரு கால்வாய் வரும் என்று குறிப்பிடப்பட்டது. சிறியதான புதுக்கோட்டை ராஜ்யத்தில் . கவுன்சில் சபை எலெக்ஷனில் கூட ஊஞ்சலூரிலிருந்து தண்ணீர் கொண்டுவருவதாக சொல்லப்பட்டது, ஓட்டு கேட்கப்பட்டது. ஆனால் இதுவரை ஒன்றும் செய்யப்படவில்லை. இதையும் நான் முன்பு சொன்ன யோசனைகளையும் சர்க்கார் ஏற்றுக்கொண்டு நடத்தினால், புதுக்கோட்டைப் பகுதியில் விவசாயத்திற்கு உபயோகமாக இருக்கும், என்று சொல்லிக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **Sri A. VEDARATHNAM PILLAI** : துணைத் தலைவர் அவர்களே, 10-57 a.m.
விஷயமோ மிகப் பெரிது, கொடுத்திருக்கும் அவகாசமோ குறைவு. இதற்குள் சில முக்கியமான விஷயங்களை கூறி முடித்துக் கொள்ளுகிறேன். முதல் விஷயம் நாகை-வேதாரண்யம் கனால், இரண்டாவது காவேரியில் கிளை நதிகளாகிய மானங் கொண்டான் ஆற்றுப் பாசனம், மூன்றாவது வளவனூர் பாசனத் திட்டம், மரைகால் கோரை ஆறு பாசனத் திட்டம், ஆயுமூர் பாசனத் திட்டம் (பம்பிங் ஸ்கீம்) இவைகள்தான். இந்த பாசன விஷயத்தோடு நாவிகேஷனும் சேர்ந்து இருக்கிற காரணத்தால் இந்த வேதாரண்யம்-நாகை கனாலைப் பற்றி சொல்கிறேன். 1951-ம் வருஷம் மே மாதம் 19-ந் தேதி $7\frac{1}{2}$ லக்ஷ ரூபாய் செலவில் இதை எடுத்துக் கொள்ள அப்போது இருந்த மந்திரி சபை அனுமதித்து இருந்தது. இதை அபிவிருத்தி செய்து போக்குவரத்து சாதனம் உள்ள ஆறாக செய்வதற்கு அதிகாரிகள் முயற்சி எடுத்துக்கொள்ளாததன் காரணம் தெரியவில்லை. இந்த ஆண்டு வரவு செலவு திட்டத்திலும் இதற்கென்று 100 ரூபாய் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறதே அன்றி அதை செலவழிக்க திட்டம் இருப்பதாக தெரியவில்லை. இந்த இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திலாவது பூர்த்தி ஆகுமா என்பது தெரியவில்லை. எப்போது இந்த வேலை எடுத்துக்கொள்ளக்கூடும் என்று மந்திரி பதில் சொல்லும் போது கூறுவார்கள் என்று நம்புகிறேன். தரை போக்குவரத்து அதாவது ரயில் போக்குவரத்து மற்ற போக்குவரத்து நிலை மோசமாக இருக்கும் இந்த நிலையில் நீர்ப்போக்கு வரத்து மிகவும் சிக்கனமானது. அனுஷ்டானத்திலும் இருந்து வருகிறது என்பது எல்லோருக்கும் தெரியும். எனவே, இந்த நீர் போக்குவரத்து பாதைகளை செப்பனிட்டு கொடுப்பது, அரசாங்கத்தின் முதல் கடமை. இதற்குமுன் இந்த ராஜ்யத்தில் சீப் என்ஜினியராக இருந்த ஸ்ரீ வெங்கடகிருஷ்ண அய்யர் ஆராய்ந்து கூறிய முடிவை கனம் மந்திரியின் கவனத்திற்கு கொண்டுவருகிறேன். இந்த மாகாணத்திலே மேஜர் போர்ட் கிடையாது. ஆகையால் பாயின்ட் கலிமீரையும் தோப்பு துறையையும் இணைத்து வேதாரண்யத்தை மேஜர் போர்ட் ஆக மாற்றமுடியும் என்று

[Sri A. Vedarathnam Pillai] [12th July 1957

அவர் தன் அனுபவத்தைக் கொண்டு நமது அரசாங்கத்திற்கு ஒரு யோசனை கூறினார். அதை மந்திரி அவர்கள் கவனிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். ரயில்வே போக்குவரத்து கஷ்டமாக இருக்கும் சந்தர்ப்பத்திலே கடற்கரை போக்கு வரத்து அதாவது கோஸ்டல் டிராபிக்கை அமைத்தால் போக்கு வரத்து சாதனம் எளிதாகும்.

காவேரி ஆற்றில் ஜலம் முழுவதும் உபயோகிக்கப்படுகிறது என்றாலும் இன்னும் உபயோகப்படுத்தக்கூடிய ஜலம் சமுத்திரத்திற்கு போய்கொண்டு இருக்கிறது. இதை பயன் படுத்திக்கொள்ள பல திட்டங்கள் மேற்கொள்ள லாம். மானங்கொண்டான் ஆறு திட்டம் 1½ லக்ஷ ரூபாய் செலவு செய்து அணைக்கட்டும் வேலை பூர்த்தி ஆகி இருக்கிறது. ஆனால் ஆற்றில் ஜலம் மட்டும் விடப்படவில்லை. பல அங்கத்தினர்கள் கூறிய பிரகாரம் மேட்டூர் அணைக்கட்டில் வழிந்தோடும் ஜலம் இருந்தும்கூட இந்த திட்டத்திற்கு செலவழிக்கப்பட்ட பணம் வீணாகப் போகிறது. இந்த ஆற்றில் ஜலம் விடப் படாததற்கு காரணம் தெரியவில்லை. உடனே ஜலம் விடும்படி உத்தரவு போடவேண்டுமென்று மந்திரி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். சமீபத் தில் நடந்த சமூக அபிவிருத்தி கூட்டத்தில் 150 ஏக்கருக்காவது இந்த வருஷம் ஜலம் விடவேண்டுமென்று கலெக்டர் கூறியும் ஜலம் விடப்படாமல் இருக்கிறது. என்ஜினீயரிங் இலாகா அதிகாரிகளே 400 ஏக்கர் நிலத்திற்கு பாசன வசதி ஏற்படும் என்று சொல்கிறார்கள். மக்கள் 4,000 ஏக்கருக்கு உபயோகப்படும் என்று சொல்கிறார்கள். இந்த திட்டத்தை உடனடியாக கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக வளவனூர் திட்டம். கனம் நிதி மந்திரி அந்தப் பக்கம் வந்தபோது இதைப் பற்றி சொன்னோம். இந்த ஆற்றில் கோடை காலத்தில் கூட 8, 10 அடி ஜலம் தேங்கி நிற்கிறது. அதை பம்பிங் ஸ்கீம் மூலமாக பாய்ச்ச ஏற்பாடு செய்தால், இப்போது நஞ்சையாக இருக்கும் 1,500 ஏக்கரா நிலத்திற்கும், தருசாக இருக்கும் 2,500 ஏக்கருக்கும் பாசன வசதி கிடைக்கும். இது சிக்கனமான திட்டம். இதை உடனடியாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மரக்கால்கோரையாறு காவேரியின் கிளை நதி. இதிலிருந்து கடலுக்குப் போகும் ஜலத்தை தேக்கி இருகரையிலுமுள்ள பல ஆயிரக்கணக்கான ஏக்கர்களுக்கு நீர் பாசன வசதி அளிக்கலாம். தொண்டியக்காடு, கற்பக நாதர் குளம் போன்ற கிராமங்களில் பல ஆயிரக்கணக்கானவர் நிலங்களை பாசனத்திற்குக் கொண்டு வர முடியும். இந்தப் பாசனத்திற்கு ஆகும் செலவு அனைத்தையும் குடிகள் தாங்களே ஏற்றுக்கொள்வதாக வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். இதற்கு முன்பு ஏற்பட்ட பம்பிங் ஸ்கீம் மூலமாக பாய்ச்சல் நடந்துகொண்டு வருகிற இடத்திலே அந்த செலவை அங்குள்ள விவசாயிகளே கொடுத்து வருகிறார்கள். அதே முறையிலே இந்தத் திட்டத்தை மேற்கொண்டு அங்கே அவர்களுக்கு பாசன வசதி அளிக்குமாறு மந்திரி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**DEPUTY SPEAKER**: The hon. Member's time is up.

**Sri A. VEDARATHNAM PILLAI:** ஆயனூர் பம்பிங் ஸ்கீம் தயாராக இருக்கிறது. மெஷின் வரவேண்டியதுதான் பாக்கி, உடனே பாசனம் ஆரம் பிக்க வேண்டியது தான். இந்தத் திட்டத்தை உடனே எடுத்துக்கொண்டு, பாசன வசதி அளிக்க முன் வரவேண்டுமென்று கனம் மந்திரி அவர்களைக் கேட்டுக்கொண்டு, இந்தப் பிரேரணையை முழு மனதோடு ஆதரிக்கிறேன்.

11-02 a.m. **Sri K. R. NALLASIVAM:** மதிப்பிற்குரிய உதவி சபா நாயகர் அவர் களே, இப்பொழுது நம் முன்னுள்ள வெட்டுப் பிரேரணையின் மீது சில குறிப்புகளைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு புஞ்சைப் பிரதேசத் திலே தண்ணீர் கிடைக்கக்கூடிய இடத்திலே ஆறுகள் வேண்டும், குளங் களை சீர்திருத்தவேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அதே நேர த்தில் நமது மாகாணத்தில் அதிகமாக பாசனத்துக்குரிய இடங்களில்

கிணறுகள் மூலமாக சாகுபடி செய்வதுதான் அதிகம். கிணறுகள் வெட்டுவதில் விவசாயிகளுக்கு பல சங்கடங்கள் இருக்கின்றன. கிணறுகள் வெட்டுவதற்கு சர்க்கார் சில உதவிகளை தனது இலாகா மூலமாக கவனித்து செய்தால் விவசாயிகளுக்கு ஓரளவுக்கு பணம் மிஞ்சும் என்று நினைக்கின்றேன். சாதாரணமாக கிராமங்களில் கிணறு வெட்டும்போது, சாமியைக் குறி கேட்கிறார்கள். அல்லது மை வைத்துப் பார்க்கிறார்கள். இந்த முறைகளிலே தான் கிணறு வெட்டுவதற்கான இடங்களை கண்டு பிடிக்கும் பழக்கம் இருக்கிறது. இப்பொழுது சமுதாய அபிவிருத்தி திட்டத்தின் கீழே தண்ணீர் கண்டு பிடிக்கும் நிபுணரை சில இடங்களுக்கு சர்க்காரே அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அதுபோலவே கிணறு வெட்டும் இடத்தைக் கண்டு பிடிப்பதற்கு ஒரு கருவி இருக்கிறது. அது மேல் நாடுகளில் அதிக பழக்கத்தில் இருக்கிறது. அந்த இயந்திரத்தை நான் கூட பார்த்திருக்கிறேன். அந்த மேல் நாட்டுக் கருவியை வாங்கி, ஜில்லாவுக்கு ஒன்றாகக் கொடுத்து அதன் மூலமாக விவசாயிகள் கிணறு வெட்டுவதற்கு தண்ணீர் கண்டு பிடிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அது மாத்திரம் அல்ல. இப்பொழுது விவசாயத் துறையிலே தண்ணீர் கண்டு பிடிப்பதற்கான முறையை விஞ்ஞான அடிப்படையில் போதித்து அம்மாதிரி பயிற்சி கொடுக்கப்பட்ட தண்ணீர் கண்டு பிடிக்கும் அதிகாரிகளை ஆங்காங்கு நியமிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். புஞ்சை பிரதேச விவசாயிகளுக்கு இந்த ஏற்பாடு பயன் அளிக்கும். அவர்களுக்கு ஏராளமான தொகை மிஞ்சும் என்பதை மந்திரி அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். சமீபத்தில் கனம் நிதி அமைச்சர் அவர்கள் தண்ணீரை குறைத்துப் பாய்ச்சுவது கிடையாது, தண்ணீரை அதிகமாக பாய்ச்சுவதில் விவசாயிகள் மோகம் கொண்டு இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார். நான் அதை ஒப்புக்கொள்ளுகிறேன். உண்மையிலேயே கொஞ்ச நேரத்திற்கு முன்பு தஞ்சை ஜில்லா அங்கத்தினர் வயலிலே தண்ணீர் குளம் போல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிற காட்சியைப் பார்க்கலாம் என்று ஆத்திரத்தோடு சொன்னார்கள். இப்பொழுது பாய்ச்சுகின்ற தண்ணீரில் மூன்றில் ஒரு பகுதி தண்ணீர் இருந்தாலே போதுமானது. நல்ல முறையிலே நெல் மற்றும் உள்ள தானியங்கள் சாகுபடி செய்யலாம். கீழ் பவானி திட்டத்தில் இப்படித்தான் சாகுபடி நடக்கிறது. அதை வந்து பார்க்கும்படி நான் கேட்டுக்கொள்ளுகிறேன். களிங்கராயன் கால்வாய் சாகுபடிக்கும் கீழ் பவானி திட்டச் சாகுபடிக்கும் வித்தியாசம் உண்டு. கீழ் பவானியில் குறைந்த தண்ணீரில் நெல் பயிரிடப்படுகிறது. நல்ல கண்டு முதலும் கிடைக்கிறது. இதை கணக்கில் வைத்துக்கொண்டு மராமத்து மந்திரி அவர்கள் 4 திட்டங்கள் தவிர வேறு திட்டங்கள் இல்லை என்றார்.

**The Hon. Sri P. KAKKAN** : இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படுவதற்கு இந்த 4 திட்டங்களைத் தவிர வேறு ஒன்றும் இல்லை என்று சொன்னேன்.

**Sri K. R. NALLASIVAM**: பெரிய அளவிலே நமக்கு திட்டங்கள் இனி மேல் ஒன்றும் கிடையாது என்ற அடிப்படையில் சொன்னேன். இந்த 4 திட்டங்களையும் மற்றும் இனிமேல் எடுத்துக்கொள்ளக் கூடிய திட்டங்களையும் கூடுமான வரையில் விவசாயிக்கு பயன்படக்கூடிய வகையில் கீழ் பவானி திட்டத்தைப் போல் போட வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். கீழ் பவானி திட்டப் பிரதேசத்தில் கிளர்ச்சி அதிகமாக இருக்கிறதென்று சொல்லலாம். அங்கு இருக்கக்கூடிய பயிர் கட்டுப்பாடு வரி விதிப்பு முறையில் இருக்கும் தொந்திரவுகள், ரெவினியூ இலாகாவின் நடவடிக்கைகள் எல்லாம் தான் இதற்குக் காரணம். கீழ் பவானி திட்டத்தில் ஆரம்பத்தில் குறைந்த பட்சம் 3,000 ஏகரா தண்ணீர் கொடுக்க முடியும். இதற்கு மேல் எனக்குத் தெரிந்த வரையில் நீர்ப்பாசன வசதி ஒன்றும் கிடையாது. இங்கு இருக்கக்கூடிய எல்லா அங்கத்தினர்களும் கால்வாய்கள் வேண்டும், குளங்கள் வேண்டும் என்று சொன்னார்கள். உண்மையிலே அவர்களுடைய ஆசை பூர்த்தி செய்ய வேண்டியது தான். கீழ் பவானி திட்டத்தின்கீழ் மொத்தத்தில் 50,000 ஏகரா நஞ்சை நிலங்களுக்கு தண்ணீர் பாயும். இன்றைக்கு 207,000 ஏகராவுக்கு பாய்கிறது. அதில் சுமார் 40,000 நஞ்சையும்,

[Sri K. R. Nallasivam] [12th July 1957

சுமார் 1 லட்சம் ஏக்ரா புஞ்சையும் பாய்ந்து கொண்டு இருக்கிறது. மீதி உள்ள சுமார் 60,000 ஏகராவுக்கு உண்மையிலேயே பாயவில்லை. ஆனாலும் அங்கு உள்ள விவசாயிகள் நிர்ப்பந்தமாக தீர்வை கொடுக்கிறார்கள். அது வேறு விஷயம். இதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு சர்க்கார் போடக் கூடிய திட்டங்கள் அதிகப்படியான நிலங்களுக்கு தண்ணீர் கொடுக்க கூடிய அடிப்படையில் அமையவேண்டும். நேற்று சேனாபதி கவுண்டர் அவர்கள் அமராவதி திட்டத்தின் கீழ் 20,000 ஏக்கர் புஞ்சைக்கு பாசன வசதி கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். ஜனங்களுடைய அபிப் பிராயத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் சொன்னார்கள். இதை நல்ல முறையிலே செய்யலாம்.

அதோடுகூட சர்க்கார் இன்னொரு வேலையை செய்யவேண்டும். தண் ணீரை குறைத்துப் பாய்ச்ச வேண்டும் என்ற இயக்கத்தை ஆரம்பிக்கலாம். உணவு உற்பத்தியை பெருக்க வேண்டும் என்ற இயக்கம் இருந்ததுபோல் இந்த இயக்கத்தையும் ஆரம்பிக்கலாம். நேரிடையாக விவசாயம் செய்யும் விவசாயிகள் அநேகம்பேர் சட்டசபைக்கு வந்திருக்கிறார்கள். அரசாங்கம் ஒரு நல்ல முறையிலே இலாகாவை கலந்துகொண்டு குறைந்த பாய்ச்சலில் அதிக வெள்ளாமை எடுக்குமாறு ஒரு இயக்கம் ஆரம்பிக்க வேண்டும். குறைந்த பாய்ச்சலிலே அதிகமான வெள்ளாண்மை கிடைப்பதை நான் நேரிலேயே பார்த்திருக்கிறேன். ஒரு இடத்திலே புஞ்சையில் நெல்லை நட்டு அதன் மூலம் சாகுபடி செய்திருக்கிறேன். ஆகையால் தண்ணீரை குறைத்துப் பாய்ச்சவேண்டும் என்ற இயக்கத்தை சர்க்காரே எடுத்து ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

என்னுடைய ஜில்லாவில் பரம்பிகுளத் திட்டம் சமீபத்தில் ஆரம்பிக்கப் பட்டு இருக்கிறது. இதில் பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, தாராபுரம், பல்லடம் தாலூக்காக்கள் சேர்ந்து இருக்கவேண்டும். பல்லடம் தாலூகா இதில் சேர்க்கப்படாததற்கு காரணம் தெரியவில்லை. பல்லடம் தாலூகா கோவை ஜில்லாவிலேயே பிற்போக்கான தாலூகா. மழையே ஒழுங்காக பெய்யாத தாலூகா. இதையும் கணக்கில் எடுத்துக்கொண்டு பரம்பிக் குளத் திட்டத்தில் பல்லடம் தாலூகாவையும் சேர்த்துக்கொள்ள தகுந்த ஏற்பாடுகள் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER : The Hon. Member's time is up.

11-10 a.m. Sri V. S. MANICKASUNDARAM : கனம் உதவி சபாநாயகர் அவர் களே, கனம் மராமத்து மந்திரி அவர்கள் கொண்டுவந்த இந்த மான்யப் பிரேரணையை நான் ஆதரிக்கிறேன். என்னுடைய தொகுதியான ஈரோடு தொகுதியிலே, முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், கீழ்பவானி பாசனத் திட்டம் கொண்டுவந்து நிறைவேற்றியிருப்பதாக மந்திரி அவர்கள் அறிவித் தார்கள். அந்த திட்டத்திற்கு இந்த மான்யத்தில் மிகவும் சிறிய தொகை தான் ஒதுக்கியிருக்கிறார்கள். பாசனத்திற்கு வேண்டிய வசதிகள் அனைத் தும் ஏற்படுத்தியிருப்பதாக அதிலே குறிப்பு காணப்படுகிறது. கீழ் பவானித் திட்டம் விஷயமாக, அரசாங்கத்தாரால் நிறைவேற்றப்பட்டு இருக்கும் Bhavani Reservoir Irrigation Cess Act-ல் சில குற்றங்குறைகள் இருக்கின்றன. முன்னதாக பேசிய நண்பர் குறிப்பிட்டது போல, Bhavani Reservoir Irrigation Cess Act-ன் கீழே வரி விதிக்கப்பட்டு பாதிக்கப்படும் விவசாயிகள்மீது—தண்ணீர் பாய்ந்தாலும் பாயாவிட்டாலும் —வரி விதிப்பதற்கு அரசாங்கம் அதிகாரம் ஏற்படுத்திக்கொண்டிருக் கிறார்கள். Bhavani Reservoir Irrigation Cess Act-ன் 2-வது செக்ஷன்படி "whether such lands are actually irrigated or not, the Provincial Government shall levy the water cess" என்று இருப்பது அதிகாரிகளுக்கு பெரிய இடம் கொடுக்கிறது. "எங்கள் பூமி களுக்கு தண்ணீர் பாய்வது கிடையாது" என்று கவனத்திற்கு கொண்டு வந்தபோதிலும்கூட, "அதைப்பற்றி எங்களுக்கு அக்கரை இல்லை நாங்கள் கவனிக்கப்போவது இல்லை, எங்களுக்கு Bhavani Reservoir Irrigation Cess Act-ல் 'whether water is taken or not'

என்று இருக்கிறது, அதன்படி உங்களுக்கு வரி விதிப்பதற்கு அதிகாரம் இருக்கிறது" என்று சொல்லுகிறார்களே தவிர, அவர்கள் இந்த விஷயத்தை கொஞ்சம்கூட கவனிப்பதே இல்லை. அதற்காக கனம் மந்திரி அவர்கள் வேண்டிய ஏற்பாடுகளை செய்து, அவசியமானால் இந்த சட்டத்தைத் திருத்துமாறு மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

தண்ணீர் பாயாத நிலங்களுக்கு விதி விலக்களிக்க வேண்டுமென்று நான் கேட்கும்போது அனேகமாக அதிகாரிகள் எல்லாம் 'நீங்கள் வேண்டுமென்றே தண்ணீர் எடுப்பதில்லை; அதனால் வரி விதிப்பதற்கு அதிகாரம் எடுத்துக்கொண்டிருக்கிறோம்' என்று என்னிடம் தெரிவித்திருக்கிறார்கள். நான் மந்திரி அவர்களுக்கும் அரசாங்கத்திற்கும் மிகத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுவது என்னவென்றால், வேண்டுமென்றே சோம்பேறித்தனமாக தண்ணீர் எடுக்காமல் இருப்பவர்கள் ஒரு சிலர் இருக்கலாம். அவர்களுக்கு வரி விதிப்பதைப்பற்றி ஆட்சேபனை செய்யவில்லை. ஆனால், பல சந்தர்ப்பங்களில் வாய்க்காலிலே தண்ணீர் வராத காரணத்தால் தண்ணீர் பாயாமல் நின்றுபோய் விடுகிறது. வாய்க்காலை வெட்டிவிட்டால் தண்ணீரை எடுத்துக்கொள்ளவும் தயாராய் இருக்கும் ஊக்கமுள்ள விவசாயியாக இருந்தாலும் வாய்க்காலிலே தண்ணீர் வராததால் சில இடங்களில் பாசனம் தவறி விடுகிறது. இருந்தாலும் '**whether actually water is taken or not**' என்று சட்டத்தில் எங்களுக்கு அதிகாரம் இருக்கிறது; ஆகவே "உங்களுக்கு வரி விதிப்போம்" என்று சொல்லுகிறார்கள். அதை எப்படியாவது நீக்கவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னொரு இடைஞ்சல் ஏற்படுகிறது. ஊக்கம் காட்டும் ஒவ்வொரு விவசாயிக்கும் அரசாங்கத்தாரால் வாய்க்கால் வெட்டிக் கொடுக்கப்படுவதில்லை. ஒரு அளவுக்கு வாய்க்கால் வெட்டிக் கொடுத்துவிட்டு, பாக்கி வாய்க்காலை விவசாயிகளே வெட்டிக் கொள்ளவேண்டுமென்று விதி வகுத்திருக்கிறார்கள். அந்த விதிப்படி, மேலே இருக்கும் பூமி சொந்தக்காரர்கள் கீழே இருக்கும் பூமிகளுக்கு ஒதுக்கிவிடுவதில்லை. அதற்கான விதி விளக்கமாக இல்லாத காரணத்தால், ஜனங்கள் என்னசெய்வது என்று தெரியாமல், தயாராய் இருந்தும்கூட, தண்ணீர் எடுக்க வழி இல்லாமல் திண்டாடுகிறார்கள். அவர்களுக்கும் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே தண்ணீர் பாய்வதற்கு வேண்டிய வசதி செய்து கொடுத்து வரி விதிக்கவேண்டும்; அல்லது எந்த முறையிலே அவர்கள் வாய்க்காலுக்கு ஏற்பாடு செய்யலாமென்பதற்கு விளக்கமான விதிகளை அமைக்குமாறு மிகப் பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

கீழ் பவானி பாசன திட்டத்திலே பத்து நாளைக்கு ஒரு தடவை தண்ணீர் விடக்கூடிய ஏற்பாடு இருப்பதால் கிணறுகள் வெட்டுவதற்கு மிகத் தாராளமாக அனுமதி கொடுக்கவேண்டுமென்று நான் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அங்கே மின்சாரம் பரப்புவதற்குப் பெருவாரியான திட்டங்கள் இருந்தும்கூட, சரியான முறையில் அவைகளை அமல் நடத்தாமல் இருப்பதும், மின்சாரம் இருந்தும்கூட பல பகுதிகளிலே மின்சாரம் விஸ்தரிப்பதற்கு முடியாமல், பம்பு செட்டுகளை வைத்துக்கொள்வதற்கு தடை ஏற்பட்டு இருப்பதாலும் அதனால் பல கெடுதலும், தண்ணீர் கிடைக்காமல் தட்டும் ஏற்படுகிறது. அதை நீக்குவதற்கு, பம்பு செட்டு வைத்துக்கொண்டு போதியளவு தண்ணீர் இறைத்துக்கொள்ள தாராளமாக அனுமதி கொடுக்க வேண்டுமென்று அரசாங்கத்தைப் பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

என்னுடைய தொகுதியிலே இருக்கும் காளிங்கராயன் வாய்க்காலிலே மாமூலாக மஞ்சள் சாகுபடி செய்து வந்திருந்தும்கூட அதற்கு இத்தனை நாளாக அபராதமோ தண்டத் தீர்வையோ விதிக்காமல் இருந்திருக்கிறார்கள். ஆனால், இந்த வருஷம் அது ஒரு பெரிய குற்றமாகக் கருதப்பட்டு

[Sri V. S. Manickasundaram] [12th July 1957

நஞ்சை சாகுபடி அந்தக் காடுகளிலே கொண்டுவரக்கூடாதென்று அதற்கு தண்ட தீர்வை விதித்திருக்கிறார்கள். அந்த விஷயத்தையும் அரசாங்கம் கவனித்து, இந்த கஷ்டத்தையும் நிவர்த்திக்க வேண்டுமென்று மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

காளிங்கராயன் வாய்க்கால் சம்பந்தப்பட்ட தோட்டக்கால்களை கீழ் பவானி பாசனத்திலே எடுத்துக்கொள்ளவேண்டுமென்று நிர்ப்பந்தம் இருக்கிறது. அந்த நிர்ப்பந்தத்தை நீக்கவேண்டுமென்று அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்ளுகிறேன்.

11-15 a.m. **Sri V. ARUNACHALA THEVAR :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நமது மராமத்து இலாகா அமைச்சர் அவர்கள் இங்கே கொண்டுவந்திருக்கும் மான்யக் கோரிக்கையை ஆதரித்து நான் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

புதுக்கோட்டை சமஸ்தானம் இந்திய யூனியனில் இணைந்த பிறகு, நம் சென்னை அரசாங்கம் அனேக நன்மைகளைச் செய்திருக்கிறது. புயலால் பாதிக்கப்பட்ட அனேக ஏரிகள் இப்பொழுது நல்ல முறையிலே மராமத்து செய்யப்பட்டிருக்கின்றன. ஆலங்குடி தாலூகாவிலுள்ள பெரும்பகுதி குளங்கள் மராமத்து செய்யப்பட்டு பூர்த்தி அடைந்திருந்தாலும், இன்னும் சில குளங்கள் மராமத்து செய்யப்படாமல் இருக்கின்றன. திருமயம் தாலூகாவில் கால்வாசி குளங்கள் மராமத்து செய்யப்பட்டிருந்தாலும், பெரும் பகுதி மராமத்து செய்யப்படவில்லை. குளத்தூர் தாலூகாவில் கால் பகுதி ஏரிகள் மராமத்து செய்யப்பட்டு, மற்ற ஏரிகளெல்லாம் மராமத்து செய்யப்படாமலிருக்கின்றன என்பதை நான் கனம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

குறிப்பாக, கண்மாய்கள் அனேக வருஷங்களாக மராமத்து செய்யப் பாடமல் இருக்கின்றன. மேற்படி கண்மாய்களின் குமிழிகள்-கலிங்கல்கள் பழுது பார்க்கப்படாமல் அவைகளிலுள்ள ஓட்டைகளின் வழியாக, மழை பெய்யும் காலத்தில், தண்ணீர் ஓட்டை வழியாக வெளியே போய்க் கொண்டிருக்கிறது. அதனால் தண்ணீர் வடிந்துபோகிறது. இது உடனே கவனிக்கப்படவேண்டும்.

F.T.L. அனேக குளங்களில் ' மார்க் ' செய்யப்படாமல் எதிரிலிருக்கும் ஆயக்கட்டுகளில் தண்ணீர் போய், அதனால் தகராறு உண்டாகிறது. கணக்கு சரியான முறையில் இல்லாததால், குளத்திலிருக்கும் தண்ணீரை அவர்கள் வெட்டி விடும்படியாக நேரிடுகிறது. ஆகவே, மேற்படி குளங்களிலும், மற்றும் எந்தெந்த குளங்களில் F.T.L. மார்க் செய்யப்படவேண்டியிருக்கிறதோ, அங்கெல்லாம் மார்க் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

(Mr. Speaker in the Chair.)

அடுத்தப்படியாக, புதுக்கோட்டையின் முக்கியப் பிரச்னை ஒன்று இருக்கிறது. புதுக்கோட்டை சமஸ்தானமாக இருந்த காலத்தில், புதுக்கோட்டையின் மார்க்கமாக பட்டுகோட்டை தாலூகாவுக்கு காவிரித் தண்ணீர் போகவேண்டிய திட்டம் ஒன்று வகுத்திருந்தார்கள். ஆனால், பிரிட்டிஷ் அரசாங்கத்தோடு சமஸ்தான அரசாங்கம் ஒத்துழைக்காமலிருந்தாலும் நிர்வாக பொருப்பு தங்கள் கையில் இருக்கவேண்டுமென்றும் சொன்னதின் பேரில் பிரிட்டிஷ அரசாங்கம் ஒத்துக்கொள்ளாமல் காவிரித் தண்ணீரை, தஞ்சாவூர் மார்க்கமாகத் திருப்பி, பட்டுக்கோட்டைக்குப் பாயும்படியான நிலைமை ஏற்பட்டது. அப்பொழுதே அந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப் பட்டிருந்தால், புதுக்கோட்டை சமஸ்தானத்தின் மூன்று தாலூகாக்களுக்குப் பாசன வசதி ஏற்பட்டிருக்கும். திருமயம் தாலூகாவுக்குக்கூட பாசன வசதி கிடைத்திருக்கும். ஆனால், அந்த நிலை ஏற்படாமல் போய்விட்டது.

திருச்சிக்குப் பக்கத்தில் கட்டளை வாய்க்கால் மூலமாக தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள செங்கிப்பட்டிக்கு தென்புரம் இப்பொழுது வேலை செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். பிரிட்டிஷ் ஆட்சியின் காலத்தில் அது தடை செய்யப்பட்டு, ஸ்டேட் பவுண்டரியை ஒதுக்கி எவ்வளவு தூரம் தள்ளிக்கொண்டு போக முடியுமோ அவ்வளவுதூரம் தள்ளிக்கொண்டுபோய் புதுக்கோட்டைக்குத் தண்ணீர் கொடுக்கக் கூடாது என்றே செய்துவிட்டார்கள். அதன் காரணமாக தஞ்சாவூர் ஜில்லாவில் பாயக்கூடிய பிரதேசம்கூட ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்போது அந்தக் கால்வாயை திருச்சிக்கு அடுத்தாற்போல உள்ள பூங்குடி வழியாக தஞ்சாவூர் ஜில்லாவுக்கு கொண்டுபோகிறார்கள். இதைக் கொஞ்சம் நாலு பர்லாங்கு தூரம் பூங்குடிக்கு தெற்கில் தள்ளிப் போகும்படியாகச் செய்தால் புதுக்கோட்டையைச் சேர்ந்த தாலுகா குளத்தூர் பகுதிக்குத் தண்ணீர் பாய்வதற்குரிய நல்ல வசதி ஏற்படும் என்பதை கனம் மராமத்து இலாகா மந்திரி அவர்களிடத்திலே சொல்லிக் கொள்ளுகிறேன். இது சம்பந்தமாக நான் ஒரு யாதாஸ்தும் கொடுத்திருக்கிறேன். கனம் முதல் மந்திரி அவர்களிடத்தில் சமர்ப்பித்திருக்கிறேன். இதைக் கவனித்து உடனடியாக நடவடிக்கை எடுத்தால் வறண்ட பிரதேசமாகிய புதுக்கோட்டைக்கு நல்ல சௌகரியம் ஏற்படும். முப்பது நாற்பது ஆண்டுகளாகவே ஏற்பட்டிருக்கும் மக்கள் குறை நிவர்த்திக்கப்படும்.

அதோடு புதுக்கோட்டையில் அநேகக் காட்டாறுகள் இருக்கின்றன. அக்கினியாறு, கோறையாறு, வெள்ளாறு, குண்டாறு போன்ற ஆறுகள் ஓடுகின்றன. அக்கினியாற்றை அஞ்ஞான விமோசன நதி என்றும் சொல்வர். அஞ்ஞான விமோசனம் செய்யும் அக்கினியாற்றை கனம் பக்தவத்சலம் அவர்கள் 1950-ம் ஆண்டில் வந்து பார்வையிட்டு அதற்கு அணை கட்டவும் திட்டம் செய்தார்கள். பல பல இன்ஜினியர்கள் எல்லாம் வந்து பார்த்தார்கள். அதில் எவ்வளவு தண்ணீர் ஓடுகிறது என்கிற கணக்கை எடுக்க ஒரு ஆளையும் போட்டிருக்கிறார்கள். அவன் இப்போதும் கணக்கு எடுத்துக் கொண்டுதான் இருக்கிறான். எட்டு வருஷங்கள் ஆகப்போகின்றன. நாளது வரையில் அணை கட்டுவதற்கு எந்தவிதமான ஏற்பாடும் செய்யப்படவில்லை. ஆகையால் அரசாங்கம் உடனடியாக முயற்சி எடுத்து இந்த அஞ்ஞான விமோசன ஆற்றுக்கும், கோறையாற்றுக்கும், குண்டாற்றுக்கும் வெள்ளாற்றுக்கும் அணை கட்டிக் கொடுக்க தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்ளுகிறேன். கோறையாறு விராலி மலைக்குப் பக்கத்தில் ஓடுகிறது. மழைகாலங்களில் ஓடுகின்ற தண்ணீரை அணைகட்டிக் கொடுத்து தேக்கி வைத்துக்கொள்ள வசதி செய்தால் புதுக்கோட்டை மிகவும் வளமுள்ள பிரதேசமாக மாறும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இதர பிரதேசங்களில் கிணறுகளில் தண்ணீரைக் காண்பதற்கு முப்பது கஜம், நாற்பது கஜம் கிணறு வெட்ட வேண்டியதாக இருக்கிறது. ஆனால் அதிகமான குளங்களினால் சூழப்பட்ட புதுக்கோட்டைப் பிராந்தியத்தில் ஐந்து கஜம் அல்லது 6 கஜத்திலேயே தண்ணீர் கிடைத்துவிடும். ஆகவே நிறைய கிணறுகளையும் வெட்டி, மின்சார வசதியோடு பம்பு செட்டுகளையும் வைத்துக் கொடுத்துவிட்டால் விவசாயம் செய்வதற்கு மிகவும் வசதியாக இருக்குமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கால்வாய்களைத் தண்ணீர் கொடுப்பதற்காக வெட்டத் தொடங்குவதாய் இருந்தாலும் இந்தத் திட்டத்தையும் உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

தவிர புதுக்கோட்டையில் பெரிய ஏரியாக உள்ள கவிநாட்டுக் கண்மாய் என்று ஒன்று இருக்கிறது. சமஸ்தானமாக அது இருந்தபோது அந்தக் கண்மாய்களின் கரைகளை அப்போதைக்கப்போது பழுது பார்க்கத் தனி ஆட்கள் இருந்தார்கள். ஆனால் சமஸ்தானம் இந்திய யூனியனுடன் இணைந்ததும் தன்னிடம் வந்தவுடனேயே அவ்வேலையாட்களை எடுத்துவிட்டார்கள். மண்வெட்டிப் போட்டு மராமத்து செய்து வருபவர்கள் இப்போது யாரும் இல்லை. அதனால் அந்த ஏரிக்கரை சீரழிந்து கொண்டிருக்கிறது. உடனடியாக இதைக் கவனித்து சர்க்கார் மராமத்து செய்வதற்கு மயிலாள்போன்ற

கூலி ஆட்களை நியமித்து அந்தக் கண்மாயை எப்போதும் ஒழுங்காக இருக்கும்படி பாதுகாக்க தக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்பதாகக் கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்ளுகிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN : கனம் தலைவர் அவர்களே, விவசாய அபிவிருத்திக்கு மிக மிக முக்கியமானது நீர்ப்பாசன இலாகா. இந்த இலாகா சம்பந்தப்பட்டவரையில் சர்க்கார் ஒன்றுமே செய்யவில்லை என்று சொல்ல முடியாது. ஏதோ ஓரளவு செய்து வருகிறார்கள். அது விஷயமாக கனம் அமைச்சர் அவர்கள் நேற்று நம் முன்னிலையில் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இருந்தாலும் எந்த அளவுக்குத் தேவைப்படுகிறதோ அந்த அளவுக்கு ஒன்றும் செய்யப்படவில்லை. மேலும் பெரிய நீர்ப்பாசனம் முதற்கொண்டு சிறிய சிறிய பாசனம் வரையில் அதிகப்படியான கவனம் செலுத்தி, நாட்டில் நாம் செய்கின்ற அபிவிருத்தியைப் பொறுத்துத்தான் உற்பத்தி அதிகப்படமுடியும். மக்களுடைய பற்றுக்குறையைத் தீர்த்து வைக்க முடியும் என்பதை கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்வதற்குப் பதிலாக நாம் மூன்று வேளைச் சாப்பாட்டில் ஒரு வேளையைக் குறைத்துக் கொள்ளவேண்டும். நான்கு வேளை, ஐந்து வேளை என்றெல்லாம் சாப்பிடுவது கூடாது. அதனால்தான் உணவுப் பற்றுக்குறை இருக்கிறது. "பிள்ளைகளையும் வேறு அதிகமாகப் பெற்றுவிட்டோம்" என்று சொல்லி இதிலிருந்து தப்பித்துக் கொள்ளப் பார்ப்பது சரியாகாது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பண்டைய காலத்தில் விவசாய அபிவிருத்திக்காகவே பல பல ஏரிகள், குளங்கள், கால்வாய்கள் முதலியன வெட்டப்பட்டு அவ்வப்போது பழுது பார்க்கப்பட்டு வந்திருக்கிறது. இடைக்காலத்தில் இவை சரியான முறையில் பழுது பார்க்கப்படாத காரணத்தினால்தான் இப்போது பெரும்பாலும பழுது அடைந்து கிடக்கின்றன. இவற்றையெல்லாம் உணவு உற்பத்தியை கவனத்தில் கொண்டு காலாகாலத்தில் உடனுக்குடன் மராமத்து செய்யவேண்டுமென்பதாகப் பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். குறிப்பாக இன்றைய தினம் வட ஆற்காடு ஜில்லாவை எடுத்துக்கொண்டால் மேட்டுப் பிரதேசம். தண்ணீர் வசதி இல்லாத பிரதேசம். மழை காலத்திலும்கூட தண்ணீர் இல்லை என்ற கூக்குரல் எழுப்பப்பட்டு வருவது நமக்குத் தெரிந்த விஷயம். அதேபோன்று குடியாத்தம் தாலூகாவில் மிகப் பெரிய அளவிற்குத் தண்ணீர் கஷ்டம் இருக்கிறது. 1954-ம் ஆண்டு நடந்த உபதேர்தலில் கனம் முதல் மந்திரி அவர்கள் அந்தத் தொகுதியில் இருந்துதான் வெற்றி பெற்றார்கள். தேர்தலின்போது கிராமம் கிராமமாக அவர் சென்றார்கள். தண்ணீர் இல்லாமல் ஒவ்வொரு கிராம மக்களும் படுகிற தொல்லைகளைக் கண்டறிந்தார்கள். அப்போது அவருடன்கூட மாராமத்திலாக மந்திரி ஸ்ரீ கக்கன் அவர்கள் வந்திருந்தார்கள். ஆகவே இவர்களுக்கும் அங்குள்ள நிலைமையை நான் எடுத்துச் சொல்ல வேண்டும் என்பது இல்லாமலேயே நன்றாகத் தெரிந்திருக்கும் என நினைக்கிறேன். இருந்தாலும் கூட அதைத் தெரிந்துகொண்டும் இவர்கள் இதுவரையில் என்ன செய்திருக்கிறார்கள் என்று பார்த்தால் ஒன்றும் இல்லையென வருத்தத்துடன்தான் நான் சொல்லவேண்டியிருக்கிறது.

அதுமாத்திரம் அல்ல. நமது முதல் மந்திரி அந்தத் தாலூகாவில் உபதேர்தலுக்கு நின்ற காலத்தில் மோர்தனூர் நீர்த் தேக்கத்தைக் கட்டித் தருவதாகச் சொன்னார்கள். அதற்காக எஸ்டிமேட்டுகள் கூடப் போடப்பட்டது. 75 லட்சம் செலவும் ஆகிறது என்கிற முறையில் அந்தத் திட்டத்திற்கு முயற்சி செய்யப்பட்டது. முதன் மந்திரி முதற்கொண்டு இந்த இலாகாவைச் சேர்ந்த அத்தனை பேரும் படை எடுத்தார்கள், பார்த்தார்கள். ஆனால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டு இருக்கிறது. இது வரையிலும் எந்தக் காரணம் கொண்டு அது கைவிடப்பட்டது என்பது தெரியவில்லை. இந்த பட்ஜெட்டிலும் சேர்க்கப்படவில்லை. அடுத்த பட்ஜெட்டிலாவது சேர்க்கப்படுமா என்றும் சொல்லவில்லை. ஒரு வேளை அந்தப் பிரதேச மக்கள் காங்கிரஸ்காரர்களுக்கு வோட்டுப் போடாமல் ஒரு கம்யூனிஸ்டு நபரைத் தேர்ந்தெடுத்து விட்டார்கள் என்கிற கோபத்தினால்தான்

12th July 1957] [Sri V. K. Kothandaraman]

அப்படிச் செய்திருக்கிறார்களோ என்று மக்கள் நினைப்பதற்கு ஆதாரம் இருக்குமோ என நினைக்கவேண்டியிருக்கிறது. ஆனால் நமது முதல் மந்திரி அப்படிப்பட்ட மனப்பான்மை உடையவராக இருக்கமாட்டார். கனம் கக்கன் அவர்களும் அதுபோன்ற பார்வையில் இருக்கக்கூடியவர் அல்ல. காரணம் அந்தப் பகுதியில் பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட மக்கள், ஏழை மக்கள் தான் இருக்கிறார்கள். ஆகவே அந்த நீர்த்தேக்கத்தை உடனடியாகக் கட்டினால் அந்த வறண்ட பிரதேச மக்களின் வாழ்வு வளம் பெற ஏதுவாக இருக்கும். உடனடியாக இவ்விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டுமென்பதாக ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

இதுபோன்று பாஸ்கன் ஏரி என்று சொல்லப்படுகிற ஏரி இருக்கிறது. இதைப்பற்றியும் பல ஆண்டுகளாகவே மகஜர்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. கலெக்டருக்கும் அனுப்பியிருக்கிறோம். இதுவரையில் கவனிக்கப்படவில்லை. அந்த ஏரியில் தண்ணீர் தேக்கம் இருந்தால் அந்த தாலுகா பூராவுமே நீர் ஊற்று ஏற்படும் என்று சொல்லப்படுகிறது. அப்படி இருந்தும் கவனிக்கப்படவில்லை. இதேபோன்று அக்ராவரம் ஏரி இருக்கிறது. அங்கே உள்ள இது போன்ற ஏரிகள் எல்லாம் பல காலமாக மராமத்து செய்யப்படவில்லை. நான் கம்யூனிஸ்டாக இருந்தாலும், கொள்கை அடிப்படையில் வேற்றுமைகள் இருந்தாலும் அந்தத் தொகுதி மக்கள் முதல் மந்திரி அவர்களை உப தேர்தலில் வெற்றி பெறச் செய்திருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக உடனடியாக அப் பிராந்தியத்திலுள்ள ஏரிகள், குளங்கள் முதலியன மராமத்து செய்யப்படுவதோடு மருதனூர்நீர்த் தேக்கத்தைக் கட்டவேண்டும் என்று சொல்லிக்கொண்டு இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

**Sri M. SOMASUNDARAM** : தலைவர் அவர்களே, சில அங்கத்தினர்கள் மராமத்து மான்யம் பற்றி சொற்பொழிவாற்றினார்கள். நானும் இதை ஆதரித்து பேச முன்வந்துள்ளேன். நெல்லை மாவட்டத்தில் பல பெரிய குளங்கள் இருக்கின்றன. மந்திரி அவர்களுக்கு மானூர் குளத்தைப்பற்றி நன்றாகத் தெரியும். இதை மந்திரி வந்து பார்வையிட்டார்கள். அப்படியிருந்தும் இன்னும் அது மராமத்து செய்யப்படவில்லை. ஆகவே மந்திரி அவர்கள் அந்த மானூர் குளத்தை மராமத்து செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தால் அங்குள்ள மக்களுக்கு மிகவும் பிரயோஜனமாக இருக்கும் என்பதை தெரியப்படுத்திக்கொள்கிறேன். இதுதவிர நெல்லை மாவட்டத்தில் கடம்பாகுளம் ஒன்றிருக்கிறது. அதில் இப்போது முக்கால் பாகம் மேடாய் கிடக்கிறது. இதை இன்னும் அதிகமாக ஆழப்படுத்தினால் இன்னும் அதிகமாக தண்ணீர் பெருகி நிற்க முடியும். இதனால் இந்த குளத்திலிருந்து கீழ்உள்ள 12 குளங்களுக்கு தண்ணீர் கொண்டுபோக முடியும். ஆதலால் இந்த குளத்தை உடனடியாக மராமத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே மாதிரி நான்குநேரி குளத்திலுள்ள கால்வாய்கள் எல்லாம் சரியானபடி செப்பனிடப்படவில்லை. இதனால் தண்ணீர் சரியாக கொண்டுபோக முடியவில்லை. ஆகவே இதை உடனடியாக செப்பனிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்ததாக சங்கரன் கோவில் பக்கத்தில் இருக்கும் கீரியார் திட்டத்தை இதுவரை முடிக்கவில்லை. அதை அவசரமாக முடித்தால் அங்குள்ள மக்களுக்கு மிக நன்மை ஏற்படும். ஆதலால் இதையும் மந்திரி அவர்கள் கவனத்தில் எடுத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். இதுதவிர நெல்லை மாவட்டத்தில் இருக்கும் கங்கைகொண்டான் குளத்தையும் இதுவரை செப்பனிடப்பட்டதாக தெரியவில்லை. அங்கேயுள்ள கால்வாய்களையும் செப்பனிட்டதாக தெரியவில்லை. அதையும் உடனடியாக மராமத்து செய்யவேண்டும் என்று மந்திரி அவர்களை கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். 11-30 a.m.

***Sri S. RAMASAMI THEVAR** : தலைவர் அவர்களே, இந்த வெட்டுப் பிரேரணையை ஆதரிக்கும் வகையில் சில வார்த்தைகளை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். முக்கியமாக எமது அரந்தாங்கி தாலுகாவில் பல இடங்கள் இன்றைக்கு வரண்டுபோய் கவனிப்பாரற்று கிடக்கின்றன. அங்கு நீர்ப்பாசன வசதிக்கு எவ்வளவோ வசதிகள் இருந்தும் கவனிக்கப்படவில்லை. 11-35 a.m.

[Sri S. Ramasami Thevar] [12th July 1957

புதுக்கோட்டை ருறுக்கே நின்ற காரணமாக அங்கு பயிராக வேண்டிய நிலங்களுக்கு எல்லாம் தண்ணீர் பாயாது போயிற்று. இதைப் பற்றி 1948-ம் வருஷத்திலிருந்து எவ்வளவோ மனுக்கள் செய்திருந்தும் அது இதுவரை கவனிப்பாரற்று கிடக்கிறது. இதைவிட எத்தனையோ இடங்களுக்கு பல பாசன வசதிகள் செய்யப்பட்டிருந்தும் எங்கள் தொகுதி இதுவரை கவனிக்கப்படவில்லை. அமைச்சர் அவர்கள் சிறு நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுப்பதற்கு மூன்று நிபந்தனைகள் போட்டார்கள். ஒன்று உணவுப் பொருள் விளைவிக்கக்கூடிய பிரதேசமாய் இருக்கவேண்டும், மண் வளம் நிறைந்ததாய் இருக்கவேண்டும், குறைந்த செலவில் ஏற்படக் கூடியதாயிருந்தால் அந்த பகுதிகளுக்கு இந்த சிறு நீர்ப்பாசன வசதி ஏற்படுத்த முடியும் என்று சொன்னார்கள். எங்கள் தொகுதி அத்தனை வளமும், அத்தனை மண் வளமும் நிறைந்ததாய் இருக்கிறது. அதனால் எங்கள் பகுதியில் இருக்கும் காட்டாறுக்கு மழை காலத்தில் வரும் எல்லா தண்ணீரும் கடலில் போய் சேருகிறது. அதைக் கட்டுப்படுத்தி கால்வாய்கள் வெட்டி அதன் மூலம் தண்ணீர் கொண்டு போவதற்கு ஏற்பாடு செய்து கொடுத்தால், அதன் மூலம் பல்லாயிரக் கணக்கான ஏக்கர்கள் வளம் பெற்று மக்களுக்கு வாழ்வை அளிக்கும் என்பதை சொல்லிக்கொள்கிறேன். அங்கு பக்கத்தில் இருக்கின்ற நற்பவளக்குடியில் ஒரு அணை போட்டால் குறைந்த செலவில் அதாவது 6,000 அல்லது 7,000 ஏக்கர்களுக்கு நீர் பாசன வசதி கிடைக்கும். இதை கட்டி முடிப்பதற்கு ஏக்கர் ஒன்றுக்கு 300 ரூபாய் அதிக பட்சமாக போடவேண்டியிருக்கும். இதேமாதிரி திருநாளூர் குளத்திலிருந்து நீரை கட்டுபடுத்தி அதை தென்புறமாக கொண்டு வந்தால் சுமார் ஆயிரம் அல்லது 2,000 ஏக்கர்கள் நிலங்களை பண்படுத்த முடியும். இதனால் விளைச்சலையும் அதிகமாக பெருக்க முடியும். இது நாட்டுக்கும் நன்மையாகும், என்பதை சொல்லிக்கொள்கிறேன். இன்னும் இந்த மாதிரி சிறு அணைக்கட்டுகளை கட்டிக்கொடுத்தால் எங்கள் பகுதி மக்களின் வாழ்வு நல்ல முறையில் நடக்கும் என்பதை சொல்லிக்கொள்கிறேன். ஏற்கெனவே எங்களுக்கு கிடைக்கவேண்டிய தண்ணீரும் மற்ற ஜில்லாக்களுக்கு போய்க்கொண்டிருக்கிறது. கோயம்புத்தூர், சேலம் முதலிய ஜில்லாக்களுக்கு எங்களுக்கு கிடைக்கவேண்டிய தண்ணீர் எல்லாம் போய்க்கொண்டிருக்கிறது. அதைப் பற்றி எங்களுக்கு வருத்தம் கிடையாது. எப்படியாவது இந்த மாதிரியான சிறு நீர் தேக்கங்கள் கட்டியாவது எங்களுக்கு தண்ணீரை கொடுக்கும்படி மன்றுடி கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக இன்னும் பல குளங்களிலிருந்து ஏரிகளிலிருந்து தண்ணீர் பாய்ச்சும் விதத்தில் அங்கு செல்வாக்கு படைத்தவர்களுக்கும் பெரிய நில பிரபுக்களுக்கும் தான் முதலில் தண்ணீர் கிடைக்கிறது. ஏழை மக்களுக்கு கிடைப்பதில்லை. அங்குள்ள நில பிரபுக்கள் பெரிய செல்வாக்கு படைத்தவர்கள் இவர்களின் ஏவல்களை இந்த ஏழை மக்கள் செய்ய மறுத்துவிட்டால் அவர்களுக்கு தண்ணீர் கிடையாது. இதனால் ஒரு ஆண்டு விளைச்சலே போய்விடுகிறது. இந்தமுறையில் பல கஷ்டங்கள் அங்குள்ள விவசாயிகளுக்கு இருக்கிறது. ஆகையால் ஏழை மக்களுக்கு சரியான விதத்தில் செய்வதற்குள்ள ஏற்பாட்டை செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அனேக குளங்கள் மராமத்து செய்யப்பட்டிருந்தும்கூட தண்ணீர் வரத்து சரியான் விதத்தில் இல்லாததினால் தண்ணீர் சரியாக கிடைப்பதில்லை. வெறும் குளங்களை மாத்திரம் மராமத்து செய்வதற்காக காண்ட்ராக்ட் காரர்களிடம் கொடுக்கப்படுகிறது. நம்முடைய வரிப்பணம் இவ்விதம் பாழாக்கப்பட கூடாது. சரியான விதத்தில் உபயோகிக்கப்படவேண்டும். ஒரு குளத்தை அல்லது ஏரியை பண்படுத்துவதற்கு முன்னால் அங்கு தண்ணீர் வருவதற்கு வழி இருக்கின்றதா ? அங்கு தண்ணீர் வந்தால் நிரந்தரமாக தங்கி நின்று ஏதாவது விவசாயத்துக்கு உதவுமா என்பதை பார்க்க வேண்டும். சில இடங்களில் அவசியமில்லாத வறண்ட குளங்கள் எல்லாம் வெட்டப்படுகின்றன. இதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். எங்கள் பகுதியில் பல குளங்கள் வலைகள் போல் பின்னப்பட்டு இருக்கின்றன. இந்த குளங்களில் எல்லாம் தண்ணீர் இல்லாததினால் அங்குள்ள மக்கள் பஞ்சத்தால் கஷ்டப்

படுகிறார்கள். நான் ஏற்கனவே சொன்னது போல் இரண்டு மூன்று திட்டங்களையாவது அதாவது வெள்ளாறு, திருநாளாறு, குளுவனாறு போன்ற ஆறுகளை நல்ல முறையில் பயன்படுத்தினால் லட்சக் கனக்கான ஏக்கர்களை பயிரிட முடியும், என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**Sri D. DASARATHAN** : கனம் மன்றத் தலைவர் அவர்களே, மதிப்பிற் 11-40 a.m.
குரிய மராமத்து இலாகா அமைச்சரவர்கள் கொண்டுவந்திருக்கிற மான்ய கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இயற்கை வசதியோடு அநேக இடங்களில் பெரிய திட்டங்களையும், சிறிய திட்டங்களையும் அமைத்து, லாபம் எதையும் எதிர்பாராமல், வியாபார நோக்கம் எதுவும் இல்லாமல் மக்களுடைய முன்னேற்றத்திற்காக, நம்முடைய நாட்டில் உணவுப் பெருக்கை அதிகரிக்க வேண்டுமென்ற ஒரே ஒரு நோக்கத்தோடு பல பெரிய சிறிய திட்டங்களை அமைத்துக் கொடுத்து, இன்னும் அமைக்க வேண்டும் என்ற யோசனையோடு இருக்கிற நமது சர்க்காரை நான் பெரிதும் பாராட்டுகிறேன். அநேக இடங்களில், நதிகள் பாய்கிற இடங்களிலும், மற்ற இயற்கை வசதியுள்ள இடங்களிலும் பெரிய திட்டங்களை அமைத்து பெருவாரியான பணம் செலவிட்டிருக்கிறது நமது சர்க்கார். நமது நிதியமைச்சரவர்கள் அவர்களது பட்ஜெட் உரையில், இன்னும் இம்மாதிரியான பெரிய திட்டங்கள் செய்ய ஒரு சில இடங்கள் தான் இருக்கின்றன, மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளின் நீரை கிழக்கே திருப்ப வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். அதுவும் வெகு சீக்கிரத்தில் நிறைவேறும் ஒரு சந்தர்ப்பம் நமக்கு இருக்கிறது. எப்படியிருந்தாலும் நம் நாட்டிற்கு இன்னும் நீர்ப்பாசன வசதிகள் தேவையாய் இருக்கிறது என்பதை யாராலும் மறுக்க முடியாது. அதற்கு, அரசியல் அனுபவம் வாய்ந்தவர்களும், அனுபவம் உடையவர்களும் அநேக கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். உதாரணமாக, நம்மோடு இப்பொழுதும் இச்சபையில் இருக்கிற ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள் முன்பு ஒரு தடவை கூறியிருக்கிறார்கள். முன்னால் சூப்பரன்டிங் என்ஜினியராய் இருந்த ஐயாத்துரை ஐயர் அவர்களுடைய கருத்தை வெளியிட்டார்கள். அவரது திட்டத்தின்படி, சுமார் 30,000 சதுர மைல் விஸ்தீரணம் பாய்ச்சக் கூடிய ஒரு திட்டம். அந்தத் திட்டத்தால் செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம், திருச்சிராப்பள்ளி, கோயம்பத்தூரில் ஒரு பகுதி இவ்வளவு இடங்களிலும் பாய்ச்ச முடியும். அதற்காக சுமார் 125 கோடி ரூபாய் செலவாகும் என்றும், பத்துப் பதினைந்து வருடங்களில் அதை முடித்து விடலாம் என்றும் ஒரு கருத்தை தெரிவித்து இருக்கிறார்கள். அதை அமைச்சர் அவர்கள் மனதில் வைத்துக்கொண்டு ஆவன செய்ய வேண்டுமென்று நான் அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். பெரிய திட்டங்களில் இனி செலவிடச் சந்தர்ப்பம் இல்லாததால் சிறிய திட்டங்களில், ஏரி, குளங்களைப் பராமரிக்க நமது சர்க்காருக்கு மிகுந்த அவகாசம் இருப்பதால் அதில் வேண்டிய கவனம் செலுத்தும்படிக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, எங்கள் ஜில்லாவில் பாய்கிற, பெரிய அளவில் ஓடிக்கொண்டிருக்கிற பாலாற்றைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். வட ஆற்காடு, செங்கல்பட்டு ஆகிய இரண்டு ஜில்லாக்களிலும் அநேக வருஷங்களுக்கு முன்பு மைசூர் அரசாங்கத்திற்கும், சென்னை அரசாங்கத்திற்கும் ஏற்பட்ட உடன்படிக்கைக்கு முன்பாக பெரும் அளவில் வெள்ளம் வந்துகொண்டிருந்ததாக எங்கள் பெரியோர் சொல்லி நாங்கள் கேட்டிருக்கிறோம். அந்த உடன்படிக்கைக்குப் பிறகு மைசூர் அரசாங்கம் தண்ணீரைத் திருப்பி அவர்களின் முக்கியமான ஏரிகளான வேதிமங்கலம், ராமசாகரம் என்ற இரண்டு ஏரிகளை அவர்கள் பிரம்மாண்டமான அளவில் மூன்று படியாக ஆக்கி உயர்த்திக்கொண்டு எங்கள் ஜில்லாவிற்கு வெள்ளம் வராமல் தடுத்துக்கொண்டு இருப்பது எல்லோரும் அறிந்ததே. இதுபற்றி இரண்டு ராஜ்யங்களும் பேச்சு வார்த்தைகள் நடத்தியும் யாதொருவிதமான பயனும் ஏற்படாதது வருந்தத் தக்கதே. ஆகவே, அதை மறுபடியும் ஊடுருவிப் பார்த்து பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி இரண்டு அரசாங்கங்களும் ஒத்து வராவிட்டால், அதில் அமைச்சர்களோ, அதிகாரிகளோ

தலையிடாமல் மத்தியஸ்தர்களை விட்டு அதில் ஓரளவு நமக்குக் கிடைக்குமா, கிடைக்காதா என்ற ஒரு முடிவுக்கு வர வேண்டும். அப்படிக் கிடைத்தால் நல்லது, இல்லை, கிடைக்காவிட்டால் வேறு விதமான முறையில் அதை நாம் செய்துகொள்ளலாம். நமக்கு ஆற்றுகால் நிறைய இருக்கிறது. அதைப்பற்றி ஆலோசித்து நிபுணர்களை வைத்து ஆலோசித்து ஆவன செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். பாலாறு விஷயமாக அமைச்சர்களும், எங்கள் ஜில்லாவிலுள்ள அரசியல் வாதிகளும், செங்கல்பட்டு ஜில்லாவில் உள்ள அரசியல் வாதிகளும் அதற்காக பாடுபட்டு கொண்டு வருகிறார்கள். இதை உடனடியாக சர்க்கார் கவனிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். செய்யாறு என்ற ஆற்றில், சத்தி விஜயநகரம் என்ற ஊரின் பக்கத்தில் ஒரு சிறிய நீர் தேக்கத் திட்டத்தை அமைக்க, அதற்கு வேண்டிய எஸ்டிமேட்டும் போட்டாய்விட்டது. ஆனால் அது இன்னும் அமுலுக்கு வரவில்லை. அதையும் கவனிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். அதேபோல், தெள்ளூர் கிராமத்திற்குப் பக்கத்தில் ஒரு நீர் தேக்கத்தைக் கட்டினால், வந்தவாசி, செய்யார் கிராமங்களில் உள்ள ஏரிகளுக்கு நல்ல நீர் வசதி ஏற்படும் என்று கூறிக்கொள்கிறேன். கிணற்றுப் பாய்ச்சல் நஞ்சைகள் இருக்கிறது. எங்கள் கிராமங்களுக்கு மின்சார வசதி கண்டிப்பாக அளிக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களிடம், அது அவர்களுடைய இலாகாவாக இல்லாவிட்டாலும் அதைக் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீர்ப்பாசன ஏரிகளில் நீர் இல்லாவிட்டாலும், கிணறு வெட்டி பம்ப் வைத்து தண்ணீர் எடுக்கலாம். ஆக, எங்கள் பிரதேசங்களுக்கு மின்சார வசதி ஏற்படுத்தி அதற்குண்டான நீர்ப்பாசன வசதி செய்யுமாறு கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

11-50 a.m. **Sri A. E. CHANDRASEKARA NAYAGAR** : சபாநாயகர் அவர்களே, இந்த சபையில் வைத்துள்ள நீர்பாசன மான்யத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சாதரணமாக, மேஜர் இர்ரிகேஷன் திட்டங்களில்தான் நமது சர்க்கார் அதிக கவனம் செலுத்தி வந்திருக்கிறது. இப்பொழுது சாதாரணமாக நீர்ப்பாசனமானது, தரையின் மேலே ஓடும் நீரைப் பயன்படுத்திக்கொள்வது, பருவ கால மழையின் மூலம் கிடைக்கும் நீரைப் பயன் படுத்திக்கொள்வது, தரைக்கு அடியில் மறைந்து கிடக்கும் நீரைப் பயன் படுத்திக்கொள்வது என்ற முறைகள் இருக்கின்றன. அந்த முறையில், தரையின் மேல் ஓடும் நீர்களை நாம் அநேகமாக பயன் படுத்திக் கொண்டாகி விட்டது. பருவ கால மழையின் மூலம் கிடைக்கும் நீரை பயன் படுத்திக் கொள்ள ஓரளவு ஏற்பாடுகள் செய்துகொண்டு வரப் படுகிறது. ஆனால், தரையின் கீழ் மறைந்து கிடக்கும் நீர் நிலைகளை சரியான முறையில் பயன் படுத்திக்கொள்ள நாம் இன்னும் முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை. நமது ராஜ்யத்தில் தரையின் மேல் ஓடும் நீர்ப் பாசனத் திட்டமும், பருவகால மழை சரியாக இல்லாததாலும், ஒரு பொருளாதார அமைப்பை உண்டாக்குவதற்கு தரையின் கீழ் உள்ள நீர் நிலைகளை நல்ல முறையில், சரியானமுறையில் பெரிய அளவில் நாம் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் ; அதற்காக ஒரு ஆராய்ச்சியை நாம் சரியான முறையில் நடத்தவேண்டும். லிப்ட் இர்ரிகேஷன் முறை எந்த முறையில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும், அது மற்ற நாடுகளில் எப்படி நடக்கிறது ; நாம் எப்படிச் செய்யவேண்டும் என்றெல்லாம் ஆலோசித்து ஒரு முறையைக் கையாளவேண்டும். கடந்த ஆண்டில் மைனர் இர்ரிகேஷனுக்காக ஒதுக்கப்பட்ட ரூபாய்க்கும் குறைவாக செலவு செய்யப் பட்டிருப்பதால் இந்த ஆண்டு அதைக் குறைக்க வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டு விட்டது. நான் சொல்வது என்னவெனில் நிபுணத்துவம் வாய்ந்தவர்களைக்கொண்டு சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை அபிவிருத்தி செய்ய ஒரு " காம்ப்ரிஹென்சிவ் " ஸ்கீம் தயார் செய்யப்படவேண்டும். நமது ராஜ்யத்தில் தரையின் கீழ் மறைந்து கிடக்கும் நீர் நிலைகளை எவ்வாறு பயன் படுத்தலாம் என்பது பற்றி ஒரு ஆராய்ச்சி நடத்தி, நிபுணத்துவம் [illegible]வர்களைக்கொண்டு ஒரு ஆராய்ச்சி நடத்தி அந் நீர் நிலைகளைப் பயன் [illegible]ள்ள வேண்டும். அதற்காக, மத்திய சர்க்காரிடம் [illegible]

அல்லது வெளி நாடுகளிலிருந்தோ நல்ல நிபுணர்களைக் கொண்டுவந்து சரியான ஒரு ஆராய்ச்சி நடத்தவேண்டும். அப்படி நடத்தினால்தான் நமது ஐந்தாண்டுத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்த முடியும். பெரிய நீர்ப் பாசன திட்டங்களில் கவனம் செலுத்திவிட்டு சிறிய திட்டங்களை மறந்து விட்டோமானால், அதனால் அதிக பாதகம் ஏற்படும் என்று எச்சரிக்க விரும்புகிறேன். ஏன் என்றால் ஆயிரக் கணக்கான ஏக்கர்களை நீர்ப் பாசனத்தின்கீழ் கொண்டுவந்துவிட்டோம் என்று சும்மா இருந்துவிடுவோம். பல வருஷங்களுக்கு முன்னால் நம் முன்னோர்கள் திட்டமிட்டுச் செய்த சிறிய நீர்ப்பாசன திட்டங்களை நாம் மறக்கக்கூடாது. ஆகையால் நம் ராஜ்யத்தில் உள்ள சிறிய நீர்ப்பாசன திட்டங்களை 25 ஏக்கர்களுக்கு மேல் பாயும் திட்டங்களை கணக்கெடுத்து அவைகளை எந்த முறையில் அபிவிருத்தி செய்யலாம் என்பதை ஆராய்ச்சி செய்யவேண்டும்.

தென்னாற்காடு ஜில்லா வரண்ட பிரதேசம். "லிப்டு இறிகேஷன்" மூலம் விவசாயம் செய்யவேண்டியிருக்கிறது. அந்த ஜில்லாவில் இந்த ஆராய்ச்சியை முதலில் நடத்தவேண்டும். இப்போது பெண்ணை ஆற்றில் ஓடும் தண்ணீர் பருவ காலத்தில் வரும் வெள்ளத்தினால், 50 சத விகிதம் வீணாகிறது. அதை பல்லாண்டுகளாக இருக்கும் காவிரிப்பாக்கம் ஏரிக்கு திருப்ப திட்டம் தயாரித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒவ்வொரு ஜில்லாவிலும், தாலுகாவிலும் உள்ள சிறு நீர் பாசன திட்டங்களை மக்களின் தேவைக்கும், நாட்டின் நன்மைக்கும் உகந்தபடி அமைத்து, இயற்கை வளங்களையும் நல்ல முறையில் உபயோகிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பெரிய திட்டங்களுக்கு செலவழிக்கும் விஷயத்தில், நிதி, காலம், மற்றும் திட்டம், இம் மூன்றும் சரியான முறையில் யோசித்து அமைத்து, பணத்தை வீணாக்காமல், விரயம் செய்யாமல் பார்த்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லிக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **Sri A GOVINDASAMY**: அன்புள்ள தலைவர் அவர்களே, நம் தமிழ் நாட்டில் பெரிய நீர் தேக்க திட்டங்கள் இல்லாததற்கு காரணம் பெரிய ஜீவ நதிகள் இல்லை என்ற நிலைமையை நமது நிதி அமைச்சர் அவர்கள் அடிக்கடி எடுத்துச்சொல்கிறார்கள். ஆனால் வட நாட்டில் நீர் தேக்க திட்டங்களுக்கு நூற்றுக்கணக்கான, கோடி ரூபாய்களை செலவு செய்ய திட்டம் தீட்டிவருகிற நிலையைப் பார்க்கிறோம். இந்த நிலையில் நாம் இருக்கும்போது, அந்த அளவு தொகையைப் பெற்று "ஆர்டி பிஷியல்" முறையில் மழையை உண்டுபண்ண நமது அரசாங்கம் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று கேட்க ஆசைப்படுகிறேன். இது இல்லா விட்டால் இருக்கின்ற சிறிய திட்டங்களையாவது உடனடியாக செய்வதற்கு முயற்சி எடுக்கவேண்டும். இத்துடன் நேற்று திரு. கருணாநிதி அவர்கள் குறிப்பிட்ட குளித்தலையிலுள்ள குடிகனாறு திட்டத்தையும் உடனடியாக எடுத்துக்கொள்ளவேண்டும்.

எங்கள் மாவட்டத்தில் பல அணைக்கட்டுகள் தூர்ந்துபோய்விட்டன. மண்மேடிட்டிருக்கிறது. பெண்ணையாற்றில் 12 அணைகள் மண் மேடிட் டிருக்கிறது. இதை சீர் செய்வது அரசாங்கத்தின் பொருப்பு. கடலூர் அருகாமையிலுள்ள திருவதி, திருவேந்திபுரம் அணைகளையும் புகைப்படம் எடுத்து அரசாங்கத்துக்கு அனுப்பியுள்ளோம். இதுவரை மண்ணை அப் புரப்படுத்த அரசாங்கம் ஒருவித நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை. கடந்த ஐந்து வருஷமாக விழுப்புரம் தாலுகா பனமலை ஏரிக்கு நந்தன்கால் வாய்க்கால் வழியாக தண்ணீர் வர வசதி இருந்தது. இதை சரிப் படுத்தினால் 5 ஆயிரம் ஏக்கரா நிலம் அதிக சாகுபடிக்குக் கொண்டுவர முடியும். ஒவ்வொரு வருஷமும் இந்த மான்யம் வரும்போது இதை வற்புறுத்தி இருக்கிறேன். ஆனால் அரசாங்கம் இந்த விஷயத்தில் கவனம் செலுத்தவில்லை என்பதை சொல்லாமல் இருக்கமுடியவில்லை. வளவனூர் ஏரி தூர்ந்து மண் மேடிட்டிருக்கிறது. அதை ஆழப்படுத்தி கரையை உயர்த்தினால், பல ஆயரக் கணக்கான ஏக்கரா நிலம் சாகுபடி செய்ய

முடியும். விக்ரவாண்டி பிரென்ஞ்சு வாய்க்காலிருந்து வெட்டுக் காடு கிராமத்திற்கு சப்ளை சானல் வேண்டுமென்று கேட்டு 1953-ல் என்ஜீனியர் தீட்டிய திட்டம் அப்படியே இருக்கிறது. இதற்கு ரூ. 3,000 தான் செலவாகும். இந்த சிறிய திட்டங்களுக்குக்கூட அரசாங்கம் கவனம் செலுத்தாமல் காலம் கடத்தி வருகிறார்கள்.

மாவட்டத்தில் நடக்கும் நீர்பாசன மகாநாட்டில், ஜில்லா கலெக்டர் என்ஜினியர், எம். எல். ஏ.-க்கள்கூடி தீட்டிய பல திட்டங்கள், நடை முறைக்கு வரவில்லை. இருந்தாலும் இம்மாதிரி திட்டங்களில் என்ஜினியர் கவனம் செலுத்தாமல் காலம் கடத்துகிறார்கள். நாங்கள் சொல்லும் சிறிய திட்டங்களை நிறைவேற்றினால் கிராமங்கள் அனைத்துக்கும் நீர்பாசன வசதி ஏற்படும். அரை வருஷ நீர்பாசன மகாநாட்டை மூன்று மாதத்திற்கு ஒரு முறையாக கூட்டவேண்டும். தாலுகாக்களில் ஒரு கமிட்டி நிறுவி கிராம விவசாயிகளின் கோரிக்கைகளை, அங்கு நடக்கும் கமிட்டி கூட்டங்களில் சொல் வதற்கு வாய்ப்பு ஏற்படுத்தவேண்டும். ஒரு மகாநாட்டில் சொல்லப்படும் குறைகள் மறு மகாநாடு கூடுமுன் பரிசீலனை செய்து வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது என்பதை வெளியிடவேண்டும். இதுவரை என்ஜினியர்கள், கலெக்டர்கள், தீட்டும் திட்டங்கள் அவர்களால் ஏன் தயாரிக்கப்பட்டது, என்ன நடந்து இருக்கிறது, என்ற இரண்டொரு காரண காரியங்களைச் சொல்லி, மெம்பர்களை சமாதானப்படுத்தத்தான் இம்மாதிரி மகாநாடுகள் உபயோகிக்கப்பட்டன. அது இல்லாமல் வட்டாரத்தில் உள்ள எம். எல். ஏ.-க்கள் சொல்லும் மக்களின் குறைகளை கவனித்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று சொல்கிறேன்.

விழுப்புரம் தாலுகாவில் கண்டமங்கலம் பிர்க்காவில் சின்னபாபு சமுத்திரம் பெரியபாபுசமுத்திரம் என்ற இடங்களில் சப் சாயில் தண்ணீர் கிடைக்குமென்று சொல்கிறார்கள். அதை உடனடியாக பிரயோஜனப்படும் வகையில், அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

திரு. ஸி. பி. ராமசாமி அய்யர் ஏற்கெனவே **Trans-Continental canal** என்று சொல்லப்படும் ஒரு திட்டத்தை வெளியிட்டு இருக்கிறார்கள். அதாவது கங்கை, யமுனை தண்ணீரை, கோதாவரி, கிருஷ்ணா பெண்ணை வழியாக தமிழ் நாட்டிற்கு கொண்டுவர ஒரு திட்டம் தீட்டினார்கள். அந்தத் திட்டத்தை ஆராய்ந்து நடவடிக்கை எடுத்து தமிழர்களின் குறையை தீர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தென்மண்டல மகாநாடு முடிவு செய்த பிரகாரம் கோதாவரித் தண்ணீரையும் பரம்பிக்குளத் திட்டத்தையும் உடனடியாக நிறைவேற்றினால் தமிழ் நாட்டின் தண்ணீர் பிரச்சனை தீரும். இந்த விஷயங்களில் அரசாங்கம் கண்ணும் கருத்து மாக இருந்து பாடுபடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**Sri T. M. NALLASWAMI** : கனம் சபா நாயகர் அவர்களே, கனம் மந்திரி அவர்கள் பிரேரேபித்திருக்கும் மான்யக்கோரிக்கையின் பேரில் எதிர் கட்சிக்காரர்கள் வெட்டுப் பிரேரணையை பிரேரேபித்து தங்களுடைய குறைகளை எடுத்துக் கூறினார்கள். அப்படி பேசியவர்களில், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் ஸ்ரீ கருணாநிதி அவர்கள் குறிப்பிட்ட இரண்டு சமாசாரங்கள் என்னுடைய சிந்தனையை தூண்டுவதாக அமைந் திருக்கிறது. ஒன்று, இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் 10 லட்சம் 12 லட்சம் ஏகரா பாயும்படியாக வடக்கே உள்ள ராஜ்யங்களில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றபோது தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் சுமார் 2 லட்சம் ஏகராதான் பாசனத்துக்கு வரும் என்று குறிப்பிட்டது உண்மையாகவே இந்த சபையிலுள்ள அங்கத்தினர்களின் உள்ளத்தைத் தொடுவதாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. உண்மையாகவே அம்மாதிரி இருக்கிறதா அல்லது அவர்கள் கொடுக்கக்கூடிய புள்ளி விவரங்கள் தவறானதா என்பது பற்றி நீர்பாசன இலாகா மந்திரி அவர்கள் தெளிவாக அவருடைய முடிவுரையில் விளக்கம் கொடுப்பது பொருத்த மாக இருக்கும்.

அடுத்தபடியாக மூன்று கோடி ரூபாய் செலவிட்டு அதனால் பயன்படக் கூடிய திட்டங்களினால் 4,000, 5,000 ஏகர்தான் பாசனம் பெறுகிறது

12th July 1957] [Sri T. M. Nallaswami]

10, 12 லட்சம் செலவு செய்தால் 10,000 ஏகர் பயன்பெறக்கூடிய திட்டங்களை எல்லாம் இன்னும் பரிசீலிக்கப்படாமல் அல்லது எடுத்துக் கொள்ளப்படாமலும் இருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். உண்மையாகவே அது வருந்தத்தக்கதுதான். நமது நாட்டிலே மிகவும் குறைந்த செலவில் அதிக பயன் தரக்கூடிய திட்டங்களை மேற்கொள்ளுவது மிகவும் நல்லது. அந்த வகையிலே கரூர் தாலுகாவில் உள்ள குடகனூர் திட்டம் நீண்டகாலமாக பரிசீலனையில் இருந்து வருகிறது என்று குறிப்பிட்டார்கள். அங்குள்ள எஞ்சினியர்கள் இந்த திட்டத்திற்கான பரிசீலனையை முடித்து 10 லட்சம் ரூபாய் செலவில் அதை நடத்த முடியும் என்றும் அபிப்பிராயம் தெரிவித்திருக்கின்றார்கள். அப்படி நடத்தினால் 10,000 ஏகர் வரை பாயும் என்று குறிப்பிட்டார்கள். அம்மாதிரியான திட்டங்களுக்கு எல்லாம் அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இது வரை இந்த திட்டம் பரிசீலிக்கப்படாமல் இருந்தால் என் அந்த இலாகா இதை எடுத்துக் கொள்ள வில்லை என்பதற்கு விளக்கம் இந்த சபையில் கொடுத்தால் மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று கனம் மந்திரி அவர்களை கேட்டுக் கொள்ளுகிறேன். எனக்கு தெரிந்த வரையில் மூன்று விதமான நீர்ப்பாசன திட்டங்கள் இருக்கின்றன. அதாவது, சிறிய நீர்ப்பாசன திட்டங்கள், நடுத்தரமான திட்டங்கள், "மல்டி பர்பஸ்" திட்டங்கள். இந்தத் திட்டங்களில் நல்ல கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். சிறு நீர்ப்பாசன திட்ட தலைப்பின் கீழ், சர்க்கார் செலவில், குளங்களை வெட்டியும் பாதாளக் கிணறு மூலமாக கிடைக்கக் கூடிய தண்ணீரை 50, 100, ஏகராவுக்கு கொடுத்தால் மிகவும் நல்லதாக இருக்கும். பெரிய திட்டங்களை நிறைவேற்றும்போது ஆங்காங்கு வறண்ட பிரதேசங்களில் சர்க்கார் கவனம் செலுத்த வேண்டும். நடுத்தரத் திட்டங்கள் என்ற முறையிலே கரூர் தாலுகா ராஜாம்பாளையத்தில் ஒரு அணை கட்ட முடியும். அதன் மூலம் கிடைக்கக் கூடிய தண்ணீர் 10,000 ஏகருக்கு பாயும் என்று அங்குள்ளவர்கள் குறிப்பிடுகிறார்கள். ஒவ்வொரு முறையும் சர்க்கார் சம்பந்தப்பட்ட என்ஜினியர்கள் அல்லது மந்திரிகள் வரும் பொழுது அவர்களிடம் மனுக்கள் கொடுத்து வருகிறார்கள். இந்த அணையைப் பொறுத்த வரையில் அங்குள்ள ஒரு முக்கியஸ்தர் ராமசாமி கவுண்டர் என்பவர் இந்தத் திட்டத்தை நல்ல முறையிலே நடத்த முடியும் என்பதை பரிசீலனை செய்து பல புள்ளி விவரங்களை வைத்துக்கொண்டு தொடர்ந்து தாசில்தார், கலெக்டர், என்ஜினியர், சூபரின்டென்டிங் என்ஜினியர் வரைக்கும் பல ஆண்டுகளாக அலைந்தார்கள். இது எனக்கு நன்றாகத் தெரியும். நான்கு அல்லது 5 ஆண்டுகள் இடைவிடாத முயற்சிக்கு பிறகு பலன் கிடைக்காமல் போகவே கடைசியாக ராஜாம்பாளையத்தில் அணை கட்டப்படவேண்டிய இடத்திலே தற்கொலை செய்து கொண்டார்கள். ஏற்கனவே அந்த இடத்தில் ஒரு அணை இருந்து சுமார் 3,000 ஏகருக்கு பாசன வசதி கிடைத்து வந்தது பிறகு இது கைவிடப்பட்டது. மீண்டும் அங்கு ஒரு அணை கட்டப்பட வேண்டும் என்ற முயற்சி ஈடேறாததால் ராமசாமி கவுண்டர் அந்த இடத்திலேயே தற்கொலை செய்துகொண்டார். இந்த அணையை சர்க்கார் எடுத்து நிறைவேற்றுவதோடு இதற்கு ராமசாமி கவுண்டர் அணை என்று பெயர் வைத்தால் மிகவும் பொருத்தமாக இருக்கும். இன்னும் பல திட்டங்கள் பரிசீலனையில் இருந்து வருகின்றன. அவைகள் நிறைவேற்றப்படவேண்டும் என்று பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். இம்மாதிரியான திட்டங்கள் "Proper channel" வழியாக அதாவது என்ஜினியர், சூபிரண்டிங் என்ஜினீர், மூலமாக மந்திரி அவர்களுக்கு புள்ளி விவரங்களோடு வரும்போது அந்தத் திட்டங்களில் பல வெற்றிகரமாக அமுலாக்க முடியாத நிலை ஏற்பட்டு அவைகள் கைவிடப்பட வேண்டியதுதான் என்ற முடிவுக்கு வந்து விடுகிறார்கள். அங்கத்தினர்கள் அக்கரையாக சொல்லக்கூடிய திட்டங்கள் பற்றி பரிசீலனை செய்யும் பொழுது, உண்மையாகவே அங்கத்தினர்கள் இருக்கும் பொழுதே என்ஜினியர்களோ அல்லது சர்க்கார் சம்பந்தப்பட்டவர்களோ கூட இருந்து புள்ளி விவரங்களை சேகரிப்பது மிகவும் பொருத்தமாக இருக்கும். என்னுடைய மேல் குறித்த ஆலோசனைகளை சொல்லிக்கொண்டு

கனம் கருணாநிதி அவர்களின் வாதத்திற்கு மந்திரி அவர்கள் முடிவுரையில் கண்டிப்பாக தகுந்த பதிலைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

* SRI K. R. VISWANATHAN : கனம் தலைவர் அவர்களே, கனம் மராமத்து அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து, சில விஷயங்களை சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். உடையார்பாளையம் தாலுகா மிகவும் வரண்ட பிரதேசம் என்பதையும், நீர்ப்பாசன வசதி குறைவு என்பதையும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். உடையார்பாளையம் தாலுகாவில் சிறு பகுதி பயன்படக்கூடிய அளவில் புல்லம்பாடி திட்டத்தை சர்க்கார் நிறைவேற்ற முன் வந்திருக்கிறார்கள். இதற்காக 1½ கோடி ஒதுக்கப்பட்டிருந்தாலும், இந்த ஆண்டு மூலதனச் செலவின் கீழ் 15 லட்ச ரூபாய் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதன்படி பார்க்கப்போனால் இந்த இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்திற்குள்ளே இந்த வேலை முடியாது. அடுத்த ஐந்தாண்டு திட்ட காலத்தில்தான் இந்த வேலை முடியுமோ என்று அஞ்சவேண்டியிருக்கிறது. இந்த திட்டத்தை இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்திற்குள்ளேயே நிறைவேற்றி வைக்கும்படி துரிதமான ஏற்பாடுகளை செய்யவேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உடையார்பாளையம் தாலுகாவில் கீழ் பகுதியிலே 4, 5 ஆண்டுகளுக்கு முன்பு கல்லடிக்குட்டை கால்வாய் வெட்டப்பட்டது. வடவாருக்கு இடது பக்கத்தில் 'லோயர் அணைக்கட்டு'க்குப் பக்கத்தில் 2, 3 மைல்களுக்குள்ளே தொடங்கி, 4, 5 மைல்கள் ஓடி பல ஊர்களுக்கு பாசனம் கொடுக்கிறது. இந்தக் கால்வாயின் மதகிலே இருக்கும் ஷட்டர்கள் மூடப்பட்டாலும் திறந்திருந்தாலும் எப்பொழுதும் தண்ணீர் ஓடிக் கொண்டிருக்கிறது. கல்லடிக்குட்டை கால்வாயில் இரு கரைகளிலும் பெரு வெள்ளம் அடித்து மேற்குப் பக்கத்து கரையை நாசப்படுத்தி, கிழக்குப் பக்கத்தில் சரியானபடி வடிவாய்க்கால் இல்லாத காரணத்தினால், இந்தக் கால்வாய் சரிவர பயன்படவில்லை. இதைச் சேர்ந்த ஐந்து கிளை பாசன கால்வாய்கள் மணல் தூர்ந்து பயனடையாமல் இருக்கின்றன. அதுவும் அல்லாமல் இங்குள்ள கிராமவாசிகள் தங்களுடைய எருதழை முதலியவைகளை எடுத்துக்கொண்டுபோவதற்கு கல்லடிக்குட்டை கால்வாய்க்கு குறுக்கே பால வசதிகள் செய்யப்படவில்லை. வீரபோகம், பிள்ளையார் பாளையம் போன்ற கிராமங்களிலிருந்து பக்கத்து வயல்களுக்கு எருதழைகளை எடுத்துக்கொண்டு போவதற்கு வசதிகள் செய்யப்படவேண்டும்.

உடையார்பாளையம் தாலுகாவில் இந்த ஆண்டிலே ஒரு பெரிய வசதியை சர்க்கார் செய்துகொடுத்திருப்பதை நினைவுக்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். இந்திய சர்க்கார் அமெரிக்கா சர்க்காரோடு செய்து கொண்டுள்ள ஒப்பந்தப்படி 7, 8 இடங்களிலே ஆழக்குழாய் கிணறுகள் (tube wells) போடப்பட்டிருக்கின்றன. இந்தக் கிணறுகளிலிருந்து அநேகமாக எல்லா இடங்களிலும் வெற்றிகரமாக தண்ணீர் கிடைக்கிறது. மணிக்கு 29,000 அல்லது 30,000 காலன்வரைக்கும் சில இடங்களிலே தண்ணீர் கிடைக்கிறது. ஒரு இடத்தில் "artesian" ஊற்று கூட கண்டிருக்கிறது என்று தெரிவிக்கப்படுகிறது. குழாய் கிணறுகள் போடும் வேலையை இந்திய சர்க்கார் முடித்துக்கொண்டுவிட்டார்கள். மேற்கொண்டு இந்தக் கிணறுகளிலிருந்து பாசன வசதிகளைச் செய்ய ராஜ்ய சர்க்கார் இந்த ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ஒரு தொகையும் ஒதுக்காதது பற்றி நான் மிகவும் வருத்தப்படுகிறேன். 1957-58 நிதி ஆண்டுக்குள்ளேயே இந்த வேலையை துவக்காமல் விட்டுவிடுவார்களோ என்று நான் அஞ்சுகிறேன். ஆழக்குழாய் கிணறுகளின் மூலம் பாசன வசதி ஏற்படுவதற்கு வேண்டிய வேலைகள் இராச்சிய சர்க்காரின் பொறுப்பு ஆகையால் அவற்றை உடனடியாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆழக்குழாய்க் கிணறுகள் தோண்டவேண்டிய இடங்களைக் குறிக்கின்ற பூமி நூல் வல்லுநர்கள் (Geologist) தாலுகாவைச் "சர்வே"

12th July 1957] [Sri K. R. Viswanathan]

செய்து பார்த்ததிலே இன்னும் பல இடங்களில் இம்மாதிரி ஆழக் குழாய்க் கிணறுகள் போட வாய்ப்பு இருக்கிறது என்று கண்டிருக்கிறார்கள். அதைப்பற்றி சர்க்காருக்கு அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். இம்மாதிரி அவர்கள் எந்த எந்த இடங்களிலே மேலும் போடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்களோ, அந்த இடங்களில் எல்லாம் உடனடியாக ஆழக் குழாய்க் கிணறுகள் போடுவதற்கு வேண்டிய வசதிகளைச் சர்க்கார் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

பல பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் ஜில்லா நீர்ப்பாசன மகா நாட்டிலே சிபார்சு செய்யப்பட்டு மாகாண எஞ்சினீயர் அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அவைகள் இங்கு வந்து இரண்டு, மூன்று ஆண்டுகள் ஆகியும், இதுவரைக்கும் " சாங்ஷன் " செய்யப்படாமல் இருக்கின்றன. உடையார்பாளையம் தாலூகா, ஆண்டிமடம் பிர்க்காவுக்குப் பயன் படக்கூடிய செங்கால் ஓடை, செந்துறைப் பிர்க்காவுக்குப் பயன் படக்கூடிய செந்துறை ஓடை ஆகிய திட்டங்களும் தலைமை இன்ஜினீர் அவர்களுக்கு அனுப்பப்பட்டு இரண்டு ஆண்டுகள் ஆகியும், ஏதோ மத்திய சர்க்காரிலிருந்து உத்தரவு வரவேண்டும், வரவேண்டும் என்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அந்தத் திட்டங்கள் இடம் பெற்றிருக்கும். இந்த ஆண்டு அவைகள் எடுத்துக் கொள்ளப்படும் என்று எதிர்பார்த்தும், அந்த திட்டங்கள் இதுவரை எடுக்கப்படாமைக்கு நான் வருந்துகிறேன். மிக விரைவிலே அந்தத் திட்டங்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும். அப்படி எடுத்துக் கொண்டு நிறைவேற்றினால், வரண்ட பிரதேசமாகிய உடையார்பாளையம் தாலூகா நீர்ப்பாசன வசதி பெற்று, நஞ்சை விளைச்சல் ஏற்படுவதற்கு இடம் ஏற்படுமென்று நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, ஜமீனிடமிருந்து எடுக்கப்பட்ட உடையார்பாளையம் பிரதேசம் பல ஏரிகளை உடையதாக இருக்கிறது. உதாரணமாக, புதுக்குடி ஏரி பெரிய ஏரி. சோழ அரசர் காலத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கராக்களுக்குப் பாசனம் கொடுப்பதற்கு வசதியாக இருந்த அந்த ஏரி இன்றைக்குப் பாழாக கிடக்கிறது. அந்த ஏரியைச் சீர்திருத்தி பாசனத்திற்கு உபயோக முள்ளதாகச் செய்ய வேண்டும். நான்கு, ஐந்து ஆண்டுகளாக நான் இதைப் பற்றி எடுத்துச் சொல்லியும், சர்க்கார் பரிசீலனை செய்தும் வந்திருக்கிறார்கள்.

முதலாவது—பெரிய நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் பரிசீலனை செய்தார்கள் ; உணவு உற்பத்திப் பெருக்குத்திட்டத்தின் கீழ் பரிசீலனை செய்தார்கள். அதற்குப் பிறகு சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் பரிசீலனை செய்தார்கள். எல்லாவற்றையும் பரிசீலனை செய்து கடைசியாக கைவிட்டு விட்டார்கள். காரணம், அத்திட்டம் மேற்கொள்ளுவதால் சர்க்காருக்கு லாபம் இல்லை என்ற ஒன்றே தான் அடிப்படையாக இருக்கிறது. இம்மாதிரி வரண்ட பிரதேசங்களில் பாசன வசதி செய்யும் திட்டங்களைப் பொறுத்த வரையில் லாபத்தை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு திட்டத்தையும் எடுத்துக் கொள்ளுவது சரியல்ல. அந்தப் பிரதேசத்திற்கு அந்தத் திட்டத்தை மேற்கொள்ளுவதினால் பயன் விளைகிறதா இல்லையா என்பதைத் தான் நோக்க வேண்டுமே தவிர, லாபத்தை முக்கியமாக நோக்கக் கூடாதென்று கூறிக்கொண்டு, நான் இத்துடன் உரையை முடித்துக் கொள்ளுகின்றேன்.

* SRI S. KHADIR SHERIFF: கனம் தலைவர் அவர்களே, இப்பொழுது இந்த நீர்ப்பாசன மான்யத்தை நான் முழு மனதோடு ஆதரிக்கிறேன். என்னுடைய வாலாஜா தாலூகாவில் என்னுடைய ஆற்காடு தொகுதி இருக்கிறது. அந்த இடத்தில் அனேக ஏரிகள் மண் அடைத்துக்கொண்டு நிறைய தண்ணீரைத் தேக்கி வைத்துக் கொள்ள இயலாத நிலையில் இருக்கிறன்றன. சங்கரநல்லூர், கலவை, திமிரி இம்மாதிரி இடங்களில் உள்ள ஏரிகள் மண் அடைத்துக் கொண்டிருக்கின்றன. அந்த ஏரிகளுக்குத் 12-13 p.m.

தண்ணீர் வந்தபோதிலும், 9 மாதம் வரையில் பாசன வசதிக்குத் தண்ணீர் கொடுத்துக்கொண்டிருந்த ஏரிகள் 3 மாதங்களுக்குக் கூட தண்ணீர் கொடுக்க முடிவதில்லை. அந்த ஏரிகளில் இருக்கும் மண்ணை வாரி எடுத்தால், அவைகளில் நிறையத் தண்ணீர் தேங்கி அதிக மாதங்களுக்கு தண்ணீர் கொடுக்க வசதியாக இருக்கும். ஆகவே, சர்க்கார் தகுந்த உத்தரவு பிறப்பித்து, அந்த ஏரிகளிலிருந்து தூர் வாருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

எங்கள் வாலாஜா தாலூகாவைப் பொருத்தவரையில், நீர்ப்பாசனத் திட்டங்கள் எங்களுக்குக் குறைவாக இருக்கின்றன. எங்களுக்கு எந்த அணைக்கட்டிலிருந்தும் தண்ணீர் வருவது இல்லை. ஏரிகளுக்குத் தண்ணீர் போகவும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. என்னுடைய சின்ன அபிப்பிராயம் ஒன்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன். வேலூரிலிருந்து செய்யாறு வரையில் பாலாறு போகிறது. அந்தப் பாலாறு ஓரத்தில் பெரிய கிணறுகள் எடுத்தால், அந்த ஆற்றில் தண்ணீர் வராத காலங்களில், அந்தக் கிணறுகளிலிருந்து பம்பு செட்டுகள் மூலமாக தண்ணீர் இரைத்தால் பயிர் செய்வதற்கு வசதி ஏற்படும். அப்படி கிணறுகள் அமைத்துக்கொள்ள வசதி செய்தால், ஒவ்வொரு கிணற்றிலிருந்தும் கிடைக்கும் தண்ணீரைக் கொண்டு 50 முதல் 60 ஏக்கர் வரையில் நிலம் பயிரிடுவதற்கு சௌகரியமாக இருக்கும். அம்மாதிரி செய்தால் விவசாயிகளுக்குச் சௌகரியம் ஏற்படும். பாலாற்றுத் தண்ணீர் கிடைக்காதவர்கள் இம்மாதிரி கிணற்றுத் தண்ணீரைக் கொண்டு விவசாயம் நடத்துவதற்கு சௌகரியமாக இருக்கும். இதைக் குறிப்பாக சர்க்கார் மூலமாகச் செய்தால், விவசாயிகளுக்குத் திருப்திகரமாக இருக்கும். அப்பொழுது அவர்கள் அதிகமாகத் தீர்வை கேட்டாலும் கொடுப்பார்கள்.

ராணிப்பேட்டையிலுள்ள பாரி கம்பெனியாருடைய ஆலேயிலிருந்து வரும் அசுத்தம் கலந்த தண்ணீரில் " ஆஸிடு "-ம் கலந்திருப்பதைப்பற்றி கனம் அங்கத்தினர் திரு. சந்திரசேகர நாயகர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த அசுத்தமான தண்ணீர் கால்வாயில் போய்ச் சேருகிறது. அந்தக் கால்வாய் மூலம் வரும் தண்ணீரைக் கொண்டு சுமார் இரண்டாயிரம் ஏக்கர் நிலங்கள் பயிரிட வேண்டியிருக்கிறது. ஏதோ கால்வாயில் தண்ணீர் வருவதைக் கொண்டு ஆசைப்பட்டு விவசாயம் செய்கிறார்கள். ஆனால் அதோடு " ஆஸிட் " தண்ணீர் கலந்துகொண்டு போவதால், அந்தப் பயிர் பூராவும் நாசம் அடைந்து விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. மந்திரி அவர்கள் தயவு செய்து இதைக் கவனித்து, உடனடியாக அதிகாரிகளுக்குத் தெரியப் படுத்தி, அசுத்தத் தண்ணீர் அக்கால்வாயில் கலக்காமலிருப்பதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன். இந்தப் பிரச்னை பத்து, பதினைந்து வருஷங்களாக இருந்து வருகிறது. யாரும் இதுவரை அதைக் கவனிக்காதது வருந்தத்தக்கது.

மராமத்து இலாகா அமைச்சர் அவர்கள் இப்பொழுது இங்கு இருப்பதால் அவரிடம் நான் ஒன்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ராணிப்பேட்டைக்கும் ஆற்காட்டுக்கும் இடையில் ஓடும் பாலாற்றுக்கு ஒரு பாலம் கட்டப்பட்டு வருகிறது. ராணிப்பேட்டை பக்கத்திலும் ஆற்காடு பக்கத்திலும் ஒரு அளவுக்குச் சாதாரண ரோடு போட்டு மூடுகிறார்கள். அதனால் ஆற்காட்டுப் பகுதிக்கே பெரிய ஆபத்து ஏற்படும் என்று நான் நம்புகிறேன். பொது மக்களும் அதைப்பற்றி கஷ்டப்படுகிறார்கள்.

இன்னொரு ஆறு இந்தப் பாலத்திற்கு மூன்றாவது மைலில் கலக்கிறது. சாதாரணமாக வெள்ளம் வந்தால் ஆற்காட்டில் ஜலம் வரும். பாலத்தில் கால் பகுதி ரோடாகப் போட்டு மூடுவதால் ஊருக்குள் ஜலம் வந்துவிடும். இதைப்பற்றி அங்கிருக்கும் இன்ஜினீயரிடம் நான் சொல்லியிருக்கிறேன். இது விஷயமாக பிரதம இன்ஜினீயருக்கு சர்க்கார் உத்தரவு போட்டு, நேராகப் பார்த்து வரும்படி செய்தால் நன்றாக இருக்கும்.

12th July 1957] [Sri S. Khadir Sheriff]

இப்பொழுது அனேமகமாக சில இடங்களில் ஆற்றுப் பாசனம் கிடையாது. கிணறுகளும் கிடையாது. விவசாயிகள் அனேகமாக கஷ்டப்படுகிறார்கள். இம்மாதிரி பாசன வசதிகள் இல்லாத இடத்தில் புறம்போக்கு நிலத்தில் பெரிய பெரிய கிணறுகளை சர்க்கார் மூலமாக எடுத்துக் கொடுத்தால் விவசாயிகளுக்கு நன்மை ஏற்படும்.

வாலாஜா தாலூகாவில் மேலக்குப்பம் கிராமம் ஒன்று இருக்கிறது. அந்த ஊரில் ஒரு பெரிய ஏரி உடைந்து போய் 20 வருஷம் ஆகிறது. அது இன்னும் கட்டப்படாமல் இருக்கிறது. அனேக வருஷங்களாக அப்படியே இருக்கிறது. அதை ரெவின்யூ மந்திரி அவர்களும் நேராகப் பார்த்திருக்கிறார். இருந்தாலும் இன்னும் அதைப்பற்றி கவனிக்கவில்லை. அந்த ஏரியைக் கவனித்து, கட்டினால், மூவாயிரம் ஏக்கர் வரை விவசாயம் செய்யலாம். அதை உடனடியாக சர்க்கார் கவனிக்கும்படியாக நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நம்முடைய ஜில்லாவில் மந்திரி அவர்கள் சுற்றுப் பிரயாணம் செய்த போது, அநேக அங்கத்தினர்கள் அவர்களிடம் குறைகளை சொல்லியிருக்கிறார்கள். அதைப்போல மந்திரி அவர்கள ஒவ்வொரு தாலுகாவிலும் மூன்று நாட்கள், நான்கு நாட்கள் "காம்ப்" செய்யவேண்டும். அப்பொழுது அந்தந்தத் தொகுதி அங்கத்தினர்களையும் கூட்டிச் செல்லவேண்டும். அவ்விதமாக ஒவ்வொரு தாலூகாவிலும் மக்களுக்கு என்ன குறைகள் இருக்கின்றன என்பதை நேரிடையாகக் கேட்டு அறிந்தால் மக்களுடைய குறைகள் தீரும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். மந்திரி அவர்களும் அப்படியே செய்வார்கள் என்று நம்பிக்கை கொண்டு என்னுடைய பேச்சை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI M. SELVARAJ : கனம் மன்றத் தலைவர் அவர்களே, நீர்ப்பாசன 12-20 p.m. மானியத்திற்குப் பிரேரேபிக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்துச் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். குறிப்பாக தென்னாற்காடு ஜில்லாவில் சிதம்பரம் போன்ற சில தாலுக்காக்களைத் தவிர மற்றவைகள் மிகவும் வறண்ட பிரதேசமாகத்தான் இருக்கின்றன. அந்தத் தாலூகாக்களில் எவ்விதமான நீர்ப்பாசன வசதியும் ஏற்படவில்லை என்று குறிப்பிட விரும்புகிறேன். போன ஐந்தாண்டுத் திட்டத்தில் நெய்வேலிப் பிரதேசத்தில் 101 போர் வெல்கள் அமைக்கப்பட்டு அதனால் சௌகரியங்கள் ஏற்பட்டு வருகின்றன. அந்த கிணறுகளுக்குச் செலவான தொகை 8.80 லட்சம். ஒரு கிணறுக்கு எண்ணாயிரத்து எழுநூறு ரூபாய். அவை 101 கிணறுகளுக்குச் செலவானவை. அதனால் ஐயாயிரத்து அறுநூறு ஏக்கரா நிலம் சாகுபடி செய்யப்படுகின்றது. ஒரு போர் வெல் 52 ஏக்கராவுக்கு பயன்படுகிறது. இந்த விதமாகக் கணக்கிட்டுப் பார்த்தால் விவசாயிகளிடமிருந்து ஏக்கராவுக்கு நாற்பது ரூபாய் கிஸ்தி வசூல் செய்யப்படுகிறது. மொத்தச் செலவில் நாலில் ஒரு பாகம், கால் பங்கு ஒரு வருஷத்தில் நிலத்திலிருந்து கிடைக்கிற கிஸ்தியில் சரியாகிவிடுகிறது. இதனால் அதிகப் பயனும் மக்களுக்கு ஏற்படுவதால் இந்த முறையை தென்னாற்காடு ஜில்லா பூராவுக்கும்—குறிப்பாக விருத்தாசலம், கடலூர், சிதம்பரம் போன்ற தாலுக்காக்களில் நீர் ஊற்றுகள் அதிகமாக இருப்பதனால் இங்கும்—விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதனால் விவசாயம் அதிகம் பெருகும்.

அடுத்தபடியாக கள்ளக்குறிச்சியில் ஒரு அணைகட்டி மணிமுத்தாறு தண்ணீர் வீணாகப் போகாதவாறு தடுத்து நிறுத்தினால் அதன் மூலமாக கள்ளக்குறிச்சி, விருத்தாசலம் போன்ற தாலுக்காக்கள் முன்னேற்றம் அடைய முடியும் என்று இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். விருத்தாசலம் தாலுக்காவில் தொழுதார் பிரொஜெக்ட் படி வெல்லிங்டன் ரிசர்வாயர் மராமத்து செய்ய இவ்வாண்டு தொகை கொஞ்சமாகத்தான் ஒதுக்கியிருக்கிறார்கள். அது போதாது. அதிகமாக அதற்கு வேண்டிய நிதியை ஒதுக்கி ஏரியில் உள்ள மண்ணை அப்புறபடுத்தினால் அதிகமான தண்ணீரைத் தேக்கி வைத்துக்கொள்ள வசதி ஏற்படும் என்று சொல்லிக் கொண்டு நான் முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI A. MARIAPPAN : கனம் மன்றத் தலைவர் அவர்களே, அமைச்சிர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியத்தை ஆதரித்து நான் ஒரு சில விஷயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். எங்கள் ஜில்லா நீர்ப்பாசனத்தில் மிகவும் பிற்போக்கான ஜில்லா. தொப்பையாற்றைப்பற்றி நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகவே சொல்லப்பட்டு வருகிறது. அதில் அணை கட்டவேண்டுமென்று பலமுறை கோரிக்கை செய்து இருக்கிறோம். ஆனால் யாரும் அதைப்பற்றிக் கவனித்துப் பார்க்கவில்லை. தொப்பை ஆற்று அணைக் கட்டுக்கு ஏகருக்கு 2,500-க்கு மேல் ஆகிறது என்று சொல்லப்படுகிறது. அந்த அணைக்கட்டுவதனால் அலுமினிய தொழிற்சாலையை இங்கே ஏற்பாடு செய்வதற்கு மிகவும் வசதியாக இருக்கும். அதோடு ஏற்காட்டிலிருந்து மூலப் பொருளைக் கொண்டு வருவதற்கும் வசதியாக இருக்கும். ஆகவே அவசியமாக இந்த அணையைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ராசீபுரம் ஏரியில் சில விவசாயிகள் பயிர் செய்து வருகிறார்கள். அதை நீண்ட நாட்களாக சர்க்கார் கவனிக்கவில்லை. ஆதலால் ஏரிகளில் பயிர் செய்வதை சர்க்கார் உடனடியாக தடுக்கவேண்டும் என்பதாகவும், தொப்பையாற்றுக்கு அணை உடனே கட்டித்தர வேண்டுமென்பதாகவும் கேட்டுக் கொண்டு கனம் அமைச்சர் அவர்கள் கோரியிருக்கும் மானியத்தை ஆதரிக்கிறேன்.

12-30 p.m. SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானியத்தை ஆதரித்து எங்கள் ஜில்லாவில் இருக்கிற ஒன்றிரண்டு குறைகளையும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

மணிமுத்தாறு திட்டத்தைப் பற்றி எல்லா மக்களும் சந்தோஷம் அடைகிறார்கள். என்றாலும் அதே சமயத்தில் "அங்கு அது வந்துவிட்டதே. நமக்கு இல்லையே" எனப் பலர் உள்ளம் புழுங்குகின்ற காரணத்தினாலோ என்னவோ அங்கிருக்கிற ஆயிரக்கணக்கான ஏக்கரா நிலங்கள் இன்றைக்கு வெற்று நிலமாகப் போயிருக்கின்றன எனச் சுட்டிகாட்ட விரும்புகிறேன்.

ஒரு குழந்தை நிறையக் கனியை தின்று கொண்டே இருக்கிறது. மற்றொரு குழந்தையும் திங்கட்டும் என ஒரு கனியைப் பறித்து அதன் கையில் கொடுத்தால் கையில் கிடைத்த கனியை இந்தக் குழந்தை சுவைத்துத் தின்னமாட்டாதவாறு இதன் வாய் கட்டி வைக்கப்பட்டிருக்கிறது என்றால் எவ்வளவு பரிதாபகரமானதாக இருக்குமோ அப்படி எங்கள் ஜில்லா எல்லோராலும் பரிதாபப்படக்கூடிய நிலைமையில் இருக்கிறது. குறிப்பாக மதகனூறு, கங்கைகொண்டான் வாசிகளைப் பற்றிச் சொல்லாமல் இருக்க முடியாது. மதிப்பிற்குறிய அங்கத்தினர்கள் எல்லோரும் அவரவர்களுடைய தொகுதியில் உள்ள குறைகளை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அவரவர்களுடைய தொகுதியில் என்ன என்ன அபிவிருத்திகள் செய்யப்படவேண்டும் என்பதை நயத்தாலும், பயத்தாலும் அமைச்சர் அவர்களுக்குச் எடுத்துச் சொல்லி காரியத்தைச் சாதித்துக் கொள்வதன் மூலம் தொகுதி மக்களின் அபிமானத்தைப் பெறவேண்டும் என்கிற ஆவல் தான் எங்கள் அத்தனை பேருக்கும் இருக்கிறது.

ஆகவே குறிப்பாக எங்கள் ஜில்லாவைப் பற்றியவரை சிறிய சிறிய பாசனத் திட்டங்களில் எல்லாம் கவனம் செலுத்தப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஒரு குறிப்பிட்ட குளத்தை எடுத்துக் கொண்டு இரிகேஷன் கமிட்டிகளில் யாராவது பேச ஆரம்பித்தால் அவர் பேச ஆரம்பிப்பதற்குள்ளேயே எல்லோரும் அதிகாரிகளும் சரி, மற்றவர்களும் சரி "இது ஒரு பழங்கதை, பழைய பல்லவி" என்று ஏளனம் செய்யக்கூடிய நிலைமையில் இருக்கிறார்கள். அதைப் பலமுறையும் விடாமல் எடுத்துச் சொல்லி வந்த மக்களுடைய தொண்டையும் இன்று காய்ந்துவிட்டது. உலர்ந்துவிட்டது. முதல் முயற்சிக்கே முற்றுப் புள்ளி வைக்கக்கூடிய நிலைமையில் வறண்டு போய்விட்ட உள்ளங்களுக்கு எல்லாம் சிறு தூரல் போன்று ஸ்ரீ கக்கன் அவர்கள் அந்தப் பிராந்தியத்

12th July 1957] [Srimathi Rajathi Kunchithapatham]

திற்கு வந்தார்கள். அதிகாரிகளை எல்லாம் நேரில் வரவழைத்து அவர்களையும் அழைத்துச் சென்று அந்தக் குளக்கரையை பார்வையிட்டார்கள். அவர்கள் இவ்விஷயத்தில் எடுத்துக்கொண்ட அக்கறை காய்ந்துபோன உள்ளங்களுக்கு சிறு தூறலைப்போன்று இருந்தது என்றாலும், இது வெறும் தூரலாக நின்றுவிடாது பெரும் மழையாக பெய்ய வேண்டும் என்பதாக நான் விரும்புகிறேன். "அழுத குழந்தை பால் குடிக்கும்" என்பார்கள். அழாத குழந்தையாக இருந்தாலும், கருணையுடைய தாய் அதை நேரத்திற்கு எடுத்து பால் கொடுத்து வளர்ப்பாள். தாய் சேயைக் கவனித்துப் பரிபாலிப்பது போன்ற கருணை உள்ளமுடைய காங்கிரஸ் சர்க்கார் நாங்கள் எங்கள் தொகுதியைப்பற்றி இன்ன இன்ன செய்ய வேண்டுமென்று ஒரே அழுகையாக அழாவிட்டாலும், அழாத குழந்தை பசியில்லை போலிருக்கிறது என்று எண்ணிவிடாமல், அங்கே என்ன என்ன செய்யவேண்டுமோ அவற்றை எல்லாம் காலத்தில், நேரத்தில் செய்து கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். அதிகாரிகள் இத்துறையில் அதிக கவனத்தோடு முழு உற்சாகத்தோடு செயல்படச் செய்யவேண்டும்.

கங்கைகொண்டான் பிர்க்காவில் ராமய்யன்பட்டிக் கால்வாய் இருக்கிறது. அது சரியாக மராமத்து செய்யப்படவேண்டியது அவசியம். இங்கு வந்துவிட்டு கிராமம் போனால் உடனேயே மக்கள் கூடிக்கொண்டு "இதைப் பற்றி சட்டசபையில் சொன்னீர்களா ?" என்று எச்சரிக்கிறார்கள். இப்போது இருக்கக்கூடிய எம்.எல்.ஏ.-க்கு மாத்திரம் இந்தத் தொந்தரவு இல்லை. முன்பிருந்தே மக்கள் இதுமாதிரியாக கேட்டுக்கொண்டு வருகிறார்கள். கனம் அமைச்சர் அவர்கள் அந்தப் பக்கம் போகும் போது ஏதோ சிறு தூரல்போல அது கவனிக்கப்படும் என்று சொல்லிவிட்டு வருவதோடு நின்றுவிடாமல், அவர்களுடைய வாழ்க்கை வளம் பெறத்தக்க மழையாக அந்தக் காரியங்களை உடனடியாகச் செய்து கொடுக்க வேண்டுமென்பதாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். அதிகாரிகளும் இவ்விஷயத்தில் சிரத்தை கொள்ளும்படியாகச் செய்யவேண்டும்.

அதோடுகூட சமூக சேவை மாணவர்கள், என். வி. வி. பாரத் சேவக் சமாஜ மாணவர்களால் குளங்களை வெட்டவும், ரோடுகளை போடவும், கால்வாய்களை வெட்டவும் நிறைய வாய்ப்பு இருக்கிறது. ராமையன்பட்டி, கங்கைகொண்டான் இரண்டுக்கும் 7 மைல் நீளம். இதற்கு அந்த சமூக சேவை மாணவர்கள் வேலை செய்யத் தயாராய் இருக்கிறார்கள். எனக்கும் எழுதிக் கேட்டிருக்கிறார்கள். பாரத் சேவா சமாஜத்தினரும் சேவை செய்தவராய் இருக்கிறார்கள். இந்த நிலைமையில் பி. டபிள்யூ. டி. யின் சம்மதம் தான் வேண்டியிருக்கிறது. கலெக்டர் சம்மதமும் வேண்டியிருக்கிறது. இவர்களுடைய ஒத்துழைப்பு இருக்கும் பட்சத்தில் சமூக சேவா மாணவர்கள், பாரத் சேவா சமாஜத்தினர் ஆகியோரைக் கொண்டு சிறந்த வேலைகளைச் செய்ய முடியும். "எங்களுக்குள்ள உற்சாகம் போன்றே உங்களுக்கும் இருக்கவேண்டும்" என்று ஜில்லா அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தி இதுமாதிரியான விஷயங்களில் அவர்கள், காலதாமதம் செய்யாமல் ஒத்துழைக்க முன் வரும்படியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் முடித்துக்கொள்ளுகிறேன்.

*Sri V. K. RAMASWAMY MUDALIYAR : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நமது சர்க்கார் முக்கியமாக பல பெரிய அணைத் திட்டங்களை எல்லாம் கட்டி பெரிதாக்கும் நிலையில் இருக்கிறது. நம் மாகாணத்தை பொறுத்த வரையில் பல சிறிய நீர்பாசன திட்டங்களையும் பலர் சொன்னார்கள். இது உண்மை. பல திட்டங்களிலும் உடனடியாக கவனம் செலுத்தப்படவேண்டும் என்று வற்புறுத்திச் சொல்லிக்கொள்ளுகிறேன். அநேக இடங்களில் இன்னும் சிறிய நீர்ப்பாசனங்கள் பழுது பார்க்கப்படாமல் இருந்து வருகிறது. அதிலும் முக்கியமாக பல எஸ்டேட்டுகள் உள்ள ஏரிகளில் துரிதமாக வேலை செய்யப்படவில்லை. அங்கெல்லாம் ஏரிகள் பழுது பார்க்கப்பட்டதாக தெரியவில்லை. இதில் சர்க்கார் உடனே கவனம் செலுத்தவேண்டும். இப்போது சரியான விதத்தில், தண்ணீர் பெருகுவதற்கு வசதியில்லாத ஏரிகளை நல்ல விதத்தில் அதிக

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [12th July 1957

மாக தண்ணீர் தேங்கி நிற்கும்படியான நிலையில், நன்றாக பழுது பார்க்கப்பட்டு கரைகளை உயர்த்தி ஏரிகளை செப்பனிடப்பட்டால் இருக்கக்கூடிய நிலங்கள் ஒரு போகமாவது விளையக்கூடிய நிலங்களாக இருக்கும். இதை அமைச்சர் அவர்கள் உடனடியாக கவனிக்கவேண்டும். முக்கியமாக இப்போது எங்கள் பிராந்தியத்தில் அதாவது காஞ்சீவரத்தில் பக்கத்தில் உத்திரமேரூர் பகுதியில் அங்குள்ள பி. டபிள்யூ. டி. யின் கீழ் உள்ள ஏரியில் சுமார் 6 ஆயிரம் ஏக்கர் ஆயக்கட்டு நஞ்சையாக இருக்கிறது. அங்குள்ள 18 கிராமங்களுக்கு போகிற வரவு கால்கள் இன்னும் அனேகம் வேண்டும். இப்போது அங்கு சரியான விதத்தில் வரவு கால் இல்லாததினால் அங்குள்ள மக்கள் கஷ்டப்படுகிறார்கள். அங்குள்ள ரயத்துகள் எல்லாம் சேர்ந்து மனுக்கள் கொடுத்திருக்கிறார்கள். கம்மாளன்பூண்டி என்கிற ஊரில் உள்ள மக்கள் எல்லாம் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். ஒவ்வொரு ஏரிகளை பழுது பார்ப்பதினாலும் அங்குள்ள வரவு கால்களை செப்பனிட்டு சரிவர தண்ணீர் போக்குக்கு ஏற்பாடு செய்துகொடுத்தால் அங்குள்ள மக்கள் நல்ல நிலையில் வாழ முடியும். அடுத்தபடியாக மைனர் இர்ரிகேஷன் டிபார்ட்மெண்ட் பொறுத்தவரையில் இதை பி. டபிள்யூ. டி. யிடம் கொடுத்து வேலை செய்து வந்தார்கள். திடீரென்று இப்போது அதை நிறுத்திவிட்டார்கள். ஆதலால் மறுபடியும் அந்த மைனர் இர்ரிகேஷன் டிபார்ட்மெண்டை பி. டபிள்யூ. டி. யின்கீழ் கொண்டு வந்து வேலை நடத்த வேண்டும் என்று வற்புறுத்திச் சொல்லிக்கொள்ளுகிறேன். தவிரவும், வடக்கே, அல்லது வட இந்தியாவில் பக்ராநங்கல் போன்ற திட்டங்கள் மத்திய சர்க்கார் உதவியினால் நடக்கிறது. அதே சமயத்தில் பல பெரிய பிராஜக்டுகளை கட்டுவதற்கு இந்த சர்க்கார் மத்திய சர்க்காரிடமிருந்து உதவியைப் பெறவேண்டும். உதாரணமாக லோயர் பவானியில் உள்ள திட்டத்திற்கு 20 லட்சம் என்று திட்டமிட்டிருந்தும் 10 லட்சம் துண்டு விழும் என்று தோன்றுகிறது. இந்த மாதிரி துண்டு விழும் தொகையை மத்திய சர்க்காலிருந்து பெறவேண்டும். கடைசியாக இந்த மாதிரி சிறிய நீர்ப்பாசன திட்டங்களுக்கு நிறைவேற்றுவதற்கு கவனம் செலுத்தினால் இப்போது வரண்ட பிரதேசங்களாக கிடக்கும் லட்சக்கணக்கான ஏக்கர்கள் விருத்தியடையும். ஆகவே இதில் சர்க்கார் முக்கிய கவனம் செலுத்தவேண்டுமென்று வற்புறுத்தி சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

**Sri P. S. CHINNADURAI**: On a point of order, Sir, இந்த நீர்ப்பாசன திட்டத்தைப்பற்றி விவாதிப்பதற்கு 4 மணி நேரம் ஒதுக்கப்பட்டிருந்தும் இதில் ஒரு குறிப்பிட்ட கட்சியின் அபிப்ராயத்தை தெரிந்துகொள்வதற்கு முன்னால் அமைச்சர் அவர்கள் இதன் பேரில் பதில் சொல்ல முற்படுவது இந்த சபையின் ஒழுங்குகளுக்கு ஏற்றதாய் இருக்குமா என்பதை அறிய வேண்டுகிறேன்.

12·37 p.m. **Mr. SPEAKER**: நீங்கள் எந்த கட்சியை குறிப்பிடுகிறீர்கள் என்று தெரியவில்லை.

**Sri P. S. CHINNADURAI**: பிரஜா சோஷலிஸ்ட்டு கட்சியின் சார்பில் நேற்று கனம் எ. ஆர். மாரிமுத்து அவர்கள் பெயர் கொடுத்திருந்தும், பேசுவதற்கு சந்தர்ப்பம் கொடுக்கப்படவில்லை. இது ஒழுங்குகளுக்கு உட்பட்டதுதானா என்று கேட்கிறேன்.

**Mr. SPEAKER**: இப்போது என்னிடத்தில் அவருடைய பெயர் இல்லை. ஒவ்வொரு கட்சியிலிருந்தும் அங்கத்தினர்கள் பேசவேண்டும் என்பது அவசியம் இல்லை. ஆகையால் கனம் மந்திரி அவர்கள் பேசலாம்.

**The Hon. Sri P. KAKKAN**: கனம் தலைவர் அவர்களே, நேற்றும் இன்றும் இந்த மான்ய கோரிக்கையின் மீது பங்கெடுத்துக்கொண்டு பல யோசனைகளையும் பலர் கூறினார்கள். பெரும்பாலோர் விவசாயிகளுக்கு பயன் அளிக்கக்கூடிய நல்ல யோசனைகளையும் நல்ல கருத்துக்களையும் சொன்னதற்காக நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன். இங்கு சொன்ன பேச்சுக்களிலிருந்து அறிந்துகொண்டது என்னவென்றால், எங்கு எல்லாம் அணைகள் கட்-

வேண்டுமோ அங்கெல்லாம் அணைகள் கட்டுவது, குளங்கள் செப்பனிடுவது, மற்றுமுள்ள பல காரியங்களையும் நிறைவேற்றவேண்டுமென்று சொன்னார்கள். அவ்விதமே என்ன உதவிகள் செய்து கொடுக்கமுடியுமோ அவைகளை எல்லாம் வெகு சீக்கிரத்தில் எவைகளை எல்லாம் அளிக்க முடியுமோ அவைகளை எல்லாம் செய்துகொடுப்பதற்கு அரசாங்கம் பின் வாங்காது என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

இன்றைய தினம் மத்திய சர்க்காரின் உள்நாட்டு மந்திரி அவர்கள் இங்கு வந்து இருந்து நம்முடைய சபை நிகழ்ச்சிகளை பார்வையிட்டுக்கொண்டிருந்தது நமக்கு எல்லோருக்கும் பெரிய மகிழ்ச்சியை கொடுக்கக்கூடிய ஒரு விஷய மாகும். ஏனென்றால் மத்திய சர்க்கார் சென்னை மாகாணத்தின் மீது மிகவும் அக்கரை காட்டிக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். நேற்றைய தினம் நடந்த தென் பிராந்திய மண்டல கூட்டத்தில் முதல் முதலாக சென்னை சர்க்காரின் கோரிக்கையைத்தான், அதாவது பரம்பிக்குளம் திட்டத்தை நேற்றையத் தினம் பேசப்பட்டது. பம்பையாறு திட்டத்தைப் பற்றியும் பேசப்பட்டது என்பதை உங்களுக்கு தெரிவித்துக்கொள்ள ஆசைப் படுகிறேன். நான் இந்த பிரேரணையைப்பற்றி முதல் முதலில் சொல்லிய போது இந்த திட்டங்களை நிறைவேற்றுவதற்கு இதர மாகாணங்களுடைய ஒத்துழைப்பு நமக்கு இருந்தால் தான் இந்த திட்டத்தை நிறைவேற்றி மக்களுக்கு உணவு உற்பத்தியை உண்டாக்குவதிலே நல்ல வெற்றியை காண முடியும் என்று நான் சொன்னேன். நம்முடைய தேவைகளை மத்திய சர்க்கார் நன்கு உணர்ந்து தான் இந்த தள்ளாத வயதிலும் ஆகாய கப்பலில் பறந்து வந்து இந்த தென் மண்டல கூட்டத்தைக் கூட்டி நம்முடைய பிரச்னைப் பற்றி பேசியிருக்கிறார்கள். மத்திய சர்க்கார் இந்த விஷயத்தில் அக்கரை எடுத்திருக்கிறது என்பதை உங்களுக்கு, குறிப்பாக வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்று கூறுகிறவர்களுக்கு எடுத்துக் காட்ட விரும்பு கிறேன். அங்கேயுள்ள தலைவர்கள் நம்முடைய விஷயத்தில் எவ்வளவோ அக்கரை எடுத்து வருகிறார்கள். இதெல்லாம் கனம் அங்கத்தினர் கோதண்டராமன் சொன்னது மாதிரி கம்யூனிஸ்ட்டுகள் என்ற காரணத் திற்காக காரியங்கள் செய்யப்படாமல் இருப்பதில்லை. இன்று நேற்று அல்ல, இந்திய மக்களின் சுதந்திரத்திற்காக பாடுபட்ட கட்சி அன்று காங்கிரஸ் ஒன்றுதான். அன்று இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைத்தவுடன் காங் கிரஸ் மாத்திரம் தான் இந்த சுதந்திரத்தை பெற முடியும் என்று சொல்லவில்லை. எல்லா மக்களும் சுதந்திரம் பெற்றார்கள். அன்று இந்த சுதந்திரத்தை பெறுவதற்காக எவ்வளவோ பேர்கள் உதை பட்டார் கள், அடிபட்டார்கள். ஆனால் இன்று அவர்கள் மாத்திரம் சுதந்தி ரத்தை அனுபவிக்கவில்லை. இன்று, ஆசைத்தம்பி, அன்பழகன், கோதண்டராமன் எல்லோரும்தான் சுதந்திரத்தை அனுபவிக்கிறார்கள். ஆகவே எல்லா மக்களுக்கும் பொதுவாக எல்லா மக்களுக்கும் நீதி கிடைக்கவேண்டும் என்ற எண்ணத்தோடுதான் இந்த அரசாங்கம் நிர் வகித்து வருகிறது என்பதை சொல்லிக்கொள்ளுகிறேன்.

கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய மாகாணத்தில் நீர்பாசன திட்டத்திற்காக 32 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இ திட்டங்கள் எல்லாம் இன்று நேற்று போட்டது அல்ல, சட்டநாத கரையாளர் அவர்கள் வருவதற்கு முன்பே, ராமசாமிப் பிள்ளை அவர்கள் வருவதற்கு முன்பே இந்த திட்டங்கள் எல்லாம் போட்டிருக்கிறது. எப்பொழுதும் இந்த அரசாங்கம் அக்கரையோடு தான் இருந்துகொண்டிருக்கிறது என்பதை எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த சமயத்தில் நமது மாகாணத் திலுள்ள சீப் என்ஜினியர்கள் இதர என்ஜினியர்கள் எல்லோரும் மிகவும் கெட்டிக்காரத்தனமாக மிகவும் நல்ல முறையில் வேலை செய்து வருவதை நாம் எல்லோரும் அறிவோம். நம்முடைய என்ஜினியர்களை, நம் முடைய அதிகாரிகளை எல்லாம் மத்திய சர்க்காருக்கு கொடுத்து உதவு கிறோம். நம்முடைய மாகாணத்திலுள்ள என்ஜினியர்கள் மிகவும் திறமை யோடு வேலை செய்கிறார்கள். ஆகவே அவர்களை கொண்டு எங்கு எல்லாம் நீர்பாசனத்திற்காக வேலை செய்ய முடியுமோ அங்கு எல்லாம் வேலை செய்ய சென்னை அரசாங்கம் பின்வாங்காது என்பதை சொல்லிக் கொள்கிறேன்.

கரயாளர் அவர்கள் பேசியபோது இன்னும் சில திட்டங்கள் கவனிக்கப் படவில்லை என்றும், அதுவும் அந்தப் பகுதிகள் தமிழகத்தோடு சேர்ந்த பிறகு கவனிக்கப்படவில்லை என்றும் சொன்னார்கள். அதை நான் மறுக்கிறேன். விசேஷமாக, கன்னியாகுமரி ஜில்லாவிற்கு அதிகம் அக்கரை காட்டப்படுகிறது. நானே கொஞ்ச நாட்களுக்கு முன்பு சீப் என்ஜினியரைக் கூட்டிக் கொண்டு போய் எங்கெங்கெல்லாம் அணை கட்ட முடியும் என்று பார்த்தேன். அங்கு தண்ணீர் அதிகமாகப் போய் கொண்டிருக்கிறது. அதை மக்களுக்குப் பயன்படுத்த என்னென்ன வகைகளில் அணை கட்டுவது என்பது பற்றியும் வேறு காரியங்களைச் செய்யவும் அரசாங்கம் பின்வாங்காது. அதோடு இந்த கன்னியாகுமரி ஜில்லாவை, நான் சுற்றுப் பிரயாணம் செய்தபோது அநேக குளங்கள் மேடிட்டு இருந்ததைப் பார்த்தேன். அவைகளை ஆழப்படுத்தி விட்டால் லட்சோப லட்சம் கலம் நெல் அதிகம் விளையும் என்று நினைக்கிறேன். அதைப் பார்த்து விட்டு முதல் அமைச்சரிடம் சொன்னேன். இந்தக் குளங்களைச் செப்பனிட வேண்டும் : அப்படிச் செய்தால் அது அங்குள்ள ஜனங்களுக்கு நன்மை பயக்கும் என்றும் சொன்னேன். ஆனால் அங்கு ஒரு கஷ்டம் இருக்கிறது. இந்த மண்ணை எடுத்து எங்கே போடுவது என்பது ஒரு பிரச்னையாய் இருக்கிறது. பக்கத்தில் வயல்கள் இருக்கின்றன, கண் மாய்கள் இருக்கின்றன. கரைகளும் சிறியதாய் இருக்கிறது. ஆகவே அங்குள்ள கலெக்டர் அவர்களையும், இதர அதிகாரிகளையும், விவசாயி களையும் சேர்த்து ஒரு மகா நாடு கூட்டி இதை பரிசீலிக்க வேண்டும். அரசாங்கம் சிறிய நீர்பாசனத் திட்டங்களிலும் அதிக கவனம் செலுத்தும். எதிர்க்கட்சித் தலைவர் கனம் ராமஸ்வாமி முதலியார் அவர்கள், இந்த சிறிய நீர்பாசனத் திட்டத்தைப்பற்றி பேசும் போது மிகவும் வருத்தத் தோடு சொன்னார்கள். இந்த சிறு நீர்பாசனத் திட்டங்களையும் அரசாங் கம் அதிகமாகக் கவனித்து வருகிறது. ஒவ்வொரு தாலுகாவிலுள்ள கண்மாய், ஏரிகளை நான்கு ஐந்தாகப் பிரித்து வருஷா வருஷம் ஒவ்வொரு பிரிவும் சீர்திருத்தப் படவேண்டுமென்ற நோக்கத்தோடு ஏற்பாடு செய்வார்கள். ஒவ்வொரு தாலுகாவிற்கும் ஒவ்வொரு மைனர் இர்ரிகேஷன் ஓவர்சீயரை போட்டிருக்கிறார்கள். ஜில்லா தோறும் மைனர் இர்ரிகேஷன் சூப்பர்வைஸர்களும் போடப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் நன்றாக வேலை செய்யவில்லை, பி. டப்ளியூ.டி. யே எடுத்துச் செய்ய வேண்டு மென்று சொன்னால் பி. டப்ளியூ.டி. யைக் கொண்டு அந்த வேலைகளைச் செய்யத் தயங்கமாட்டோம் இந்த சிறு நீர்பாசனத் திட்டங்களிலும் அதிக அக்கரை செலுத்தப்படும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அடுத்தபடியாக மதிப்பிற்குரிய கருணாநிதி அவர்கள் நேற்றைய தினம் பேசும்போது, மற்ற மாகாணங்களில் அதிகமாக நிலம் விவசாயத்திற்குக் கொண்டு வரப் பட்டிருக்கிறது என்றும் நம் மாகாணத்தில் ஒரு லட்சத்து சில்லரை எக்கர் நிலம் தான் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்றும் சொன்னார்கள். **2,87,814** எக்கர் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்த **1957–58**-ல், இந்த வருஷம் மட்டும் **43,500** எக்கர் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**THE HON. SRI C. SUBRAMANIAM** : முதல் ஐந்தாண்டுத் திட்டதிலே, ஏழரை லட்சம் எக்கருக்குப் பக்கம் நீர்பாசனத்திற்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறது. மற்ற மாகாணங்களுடன் ஒத்துப் பார்த்திருக்கிறேன், நாம் ஒன்றும் குறைச்சலாய் இல்லை. அதுவும் தென் பிராந்தியத்தில் இருக்கிற மாகாணங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது நாம் இன்னும் அதிகமாகக் கொண்டு வந்திருக்கிறோம். மற்ற பிராந்தியங்களை எடுத்துக் கொண்டால், மற்ற மாகாணங்களை எடுத்துக் கொண்டு பார்த்தாலும், நாம் அதிகமாக முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏழரை லட்சம் எக்கருக்குப் பக்கத்தில் கொண்டு வந்திருக்கிறோம். இரண்டே முக்கால் லட்சம் கொண்டு வர இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் திட்டம் போட்டிருக்கிறோம்.

**THE HON. SRI P. KAKKAN** : இதர மாகாணங்களில் இத்தனை எக்கர் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். சாகுபடி

12th July 1957] [Sri P. Kakkan]

செய்ய தண்ணீர் வேண்டும். அதுவும் தண்ணீரும், ஆறுகளும் மாத்திரம் இருந்தால் போதாது. தண்ணீர் ஜாஸ்தி வேகமாக வரவேண்டும். இப்பொழுது நம் இந்தியா தேசத்தில் உள்ள நதிகள், குறிப்பாக சராசரி எவ்வளவு வேகத்தில் தண்ணீர் செல்கிறது, எத்தனை எக்கர் நிலங்களுக்குப் போகிறது என்று சொல்கிறேன். நதியின் ஆவரேஜ் வேகம், கங்கை 400, ப்ரம்மபுத்திரா 300, கோதாவரி 84, மாகாநதி 84, கிருஷ்ணா 50, நர்மதா 32, தப்தி 12, காவேரியில் 12. ஆகவே, தண்ணீர் வேகத்தைக் கொண்டுதான் செய்ய முடியுமே தவிர ஆறுகள் இருக்கிறது, எல்லாம் செய்து விடலாம் என்று சொல்ல முடியாது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். நேற்றைய தினம் கருணாநிதி அவர்கள் " வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது " என்று ஒரு முறைதான் சொன்னார்கள். போன முறை, மூன்று தடவை சொன்னார்கள். கோவிந்தசுவாமி அவர்கள் பேசும்போது, கங்கை, காவேரி ஜலத்தைக் கொண்டு வரவேண்டுமென்று சொன்னார்கள். அந்த நதிகளிலிருந்து தண்ணீர் கொண்டு. வர ஸர். சி. பி. ராமஸ்வாமி ஐயர் அவர்கள் ஏதோ திட்டமிட்டிருக்கிறார்கள் என்றும், அதைக் கொண்டுவர வேண்டுமென்றும் சொன்னார்கள். ஒவ்வொன்றாகத்தான் கவனிக்கப்படும். ஆனால் " வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது " என்று சொல்வதால் இது வராது. பின், ஏதோ, ஆடத்தெரியாதவர்கள் மேடை கோணல் என்று ஒரு உபமானம் சொன்னார்கள். இதுமாதிரி உபமானங்கள்தான் அவர்களுக்குக் கிடைக்குமே தவிர வேறு ஒன்றும் கிடைக்காது. (பலத்த கரகோஷம்) அதோடு மட்டுமல்ல. இயற்கையின் சக்தியால் ஏதாவது ஏற்பட்டால் அதற்கும் இந்த சர்க்கார் தான் பொறுப்பு என்று சொல்கிறார்கள். அதாவது, ஆசைத்தம்பி அவர்கள் நேற்றையதினம் பேசும்போது சொன்னார்கள், ஆயிரம் விளக்கிலிருந்து அரியலூர் வரை, இயற்கை காரணமாக நடக்கும் சம்பவங்களுக்கும் சர்க்கார்தான் பொறுப்பு என்று சொல்லுகிறார்கள். இந்த அரியலூர் விபத்திற்கு சென்னை அரசாங்கம்தான் காரணம் என்று சொன்னார்கள். இது எப்படி இருக்கிறது என்று சொன்னால், ஓநாய் ஆட்டுக் குட்டி கதைபோல் இருக்கிறது. " நீ இல்லாவிட்டால் உன் பாட்டன் செய்தான், ஆதலால் நீ தான் பொறுப்பு " என்று ஓநாய் சொன்னதுபோல் இருக்கிறது. இயற்கையால் ஏற்படுகிற விபத்துக்களுக்கும் சென்னை அரசாங்கம்தான் பொறுப்பு என்று சொல்வது பற்றி வருந்துகிறேன். இவைகளை எலெக்ஷன் காலத்தில் வைத்துக் கொள்ளலாம். அதற்கு, ஓ. வி. அளகேசன் அவர்கள்தான் காரணம் என்று சொன்னார்கள். ஓ. வி. அளகேசன் அவர்கள் சென்னை மாகாணத்திற்கு செய்திருக்கும் சேவையை யாரும் மறந்து இருக்கமாட்டார்கள். மறக்கவும் முடியாது. பொய் சொல்லி மக்களை ஏமாற்றி விட முடியாது. மக்களிடம் உண்மைக்கு விரோதமான காரியங்களைச் சொன்னால் அவர்கள் ஏமாற மாட்டார்கள்.

**Sri K. ANBAZHAGAN :** தலைவர் அவர்களே, இந்த அவையில் பேசுகிறபோது பொய் என்ற சொல்லை பயன்படுத்தக் கூடாதென்று விதி இருந்தும் அமைச்சரவர்கள் பொய் என்ற வார்த்தையை உபயோகித்திருக்கிறார். அந்த சொல்லை வாபஸ் வாங்கும்படிக் கேட்பார்களா.

**Mr. SPEAKER :** அன்றே தீர்ப்பு சொன்னேன். பொய் என்னும் சொல் தன்னைப் பற்றியோ வேறொருவரைப் பற்றியோ சொல்லப்படுமானால் அது சபையின் கௌரவத்திற்குக் குறைவு. அமைச்சரவர்கள் இனி அப்படிச் சொல்ல மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

**The Hon. Sri P. KAKKAN :** ஸ்ரீமான் அண்ணாமலையவர்கள் பேசும்போது வட ஆர்க்காடு ஜில்லாவில் ஒன்றுமே செய்யவில்லை, ஒரு திட்டமும் எடுத்துக் கொள்ளவில்லை என்று சொன்னார்கள். அவர் அந்த ஜில்லாவிலேயே இருந்தும்கூட அரசாங்கம் என்ன செய்கிறது என்பதை கவனியாது சட்ட சபையிலே இப்படிச் சொல்லுவதுபற்றி வருந்துகிறேன். திருவண்ணாமலைக்குப் பக்கத்தில்தான் சாத்தனூர் திட்டம் போடப்பட்டு இருக்கிறது. இது ஸ்ரீ ஷண்முகம் அவர்களுக்குத் தெரியும். அவர் சொல்லியிருக்கலாம். இந்த திட்டத்தினால் 45,000 எக்கரா வட ஆர்க்காடு ஜில்லாவிலும்,

4,200 எக்கரா தென் ஆர்க்காடு ஜில்லாவிலும் பாசன வசதி ஏற்படும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஸ்ரீமான் கருணாநிதி அவர் தொகுதியில் இருக்கிற குடவனாறைப்பற்றிச் சொன்னார்கள். . . .

**Sri K. ANBAZHAGAN : On a point of order, Sir,** தலைவர் அவர்களே, இப்பொழுது அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட பதிலில் சாத்தனூர் நீர் தேக்கம் 45,000 எக்கராவுக்கு பாய்வதாகச் சொன்னார்கள். ஆனால், அரசாங்கத்தாரால் வெளியிடப்பட்டுள்ள ஒரு ஏட்டில், இதனால் வட ஆற்காடு மாவட்டத்துக்கு 15,300 எக்கராவும், தென்னாற்காடு மாவட்டத்துக்கு 4,700 எக்கராவுக்கும் நீர்ப்பாசனம் கிடைக்கும் என்று குறிப்பிட்டு இருக்கிறது. இதில் எது உண்மை யென்று அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri P. KAKKAN :** திட்டம் வகுக்கும் சமயத்தில் இவ்வளவு எக்கராவுக்குபாயும் என்று கணக்கிடுகிறார்கள். மேலும், மேலும் திட்டம் உருவாகும் காலத்தில் அதிகம் எக்கராக்களுக்கு நீர்பாசன வசதி ஏற்படலாம். இதை வேண்டாமென்று சொல்ல முடியுமா ? வரும் தண்ணீரை எடுத்துக்கொள்ளத்தான் செய்வார்கள்.

ஸ்ரீமான் கருணாநிதி குடவனாரைப்பற்றிச் சொன்னார்கள். அதில் இப்பொழுது அணைக்கட்டுவது சாத்தியமில்லை என்று சொல்ல விரும்புகிறேன். இதை இப்பொழுது எடுத்துக் கொண்டால் ஏற்கெனவே எடுத்துக் கொண்டிருக்கும் அமராவதித் திட்டம் பாதிக்கப்படும். இந்தத் திட்டத்துக்கு தண்ணீர் கிடைத்து பூர்த்தியாகும் வரை குடவனார் திட்டம் ஒத்திவைக்கப்பட்டு இருக்கிறது. (குறுக்கீடு).

**Mr. SPEAKER :** மந்திரி அவர்களுக்கு ஐந்து நிமிஷங்கள் தான் இருக்கிறது. இடை இடையில் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தால் அங்கத்தினர்கள் எழுப்பிய பிரச்சினைகளுக்கு பதில் வராது. மந்திரி ஐந்து நிமிஷத்தில் முடித்நால்தான் சட்டப்படி ஒரு மணிக்குள் மானியத்தை ஓட்டுக்கு விடமுடியும். ஆகையால், அவர்கள் ஐந்து நிமிஷத்தில் முடிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**The Hon. Sri P. KAKKAN :** கனம் அங்கத்தினர் தியாகராஜன் திண்டுக்கல்லுக்கு குடிதண்ணீர் வேண்டுமென்று சொன்னார்கள். குடி தண்ணீர் கொடுக்காமல் இருக்கமுடியுமா ? முடியாது. கொடுக்கப்படும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

புதுக்கோட்டைத் தொகுதியில் இருந்து வந்திருக்கும் ஸ்ரீ அருணாசல தேவரும் வேறு சில அங்கத்தினர்களும் புதுகோட்டைக்கு தண்ணீர் கொடுத்து உதவி செய்யவேண்டுமென்றும், அங்கு ஏரிகள் நிறைய இருக்கின்றன, அவைகள் நிரம்ப தண்ணீர் கொடுத்தால் போதுமென்றும் சொன்னார்கள். மேலைக் கட்டளை வாய்க்கால் திட்டம் நல்ல முறையிலேயே பயன் அளிக்கும் தருவாயில் இருக்கிறது. அவர்கள் சொல்வதையும் எஞ்சினியர்களிடம் சொல்லி இது சம்பந்தமாக என்ன முடியுமோ அது செய்யப்படும். இது ரொம்பநாள் பிரச்சினை. ரொம்ப நாளாகவே, புதுக்கோட்டை மக்கள் காவேரித் தண்ணீர் கொடுக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள்.

ஸ்ரீமான் சுப்பய்யா முதலியார் கிரியாறு திட்டத்தைப்பற்றிச் சொன்னார்கள். இப்பொழுது பம்பையாறு திட்டம் கவனிக்கப்பட்டு வருகிறது. இந்த திட்டம் இதர மாகாணத்தவருடன் கலந்து ஆலோசிக்கவேண்டிய விஷயம், அப்படி ஆலோசித்து ஒரு முடிவுக்கு வந்து விட்டால் மற்ற திட்டத்திற்கு அவசியமில்லை. கனம் நிதிமந்திரி அவர்கள் இந்த திட்டங்களைப் பார்த்து பேச்சு வார்த்தை நடத்தப் போகிறார்கள்.

இன்னும் பச்சைலாறு, பரந்தலாறு போன்றத் திட்டங்களைப்பற்றிச் சொன்னார்கள். பழனிப் பகுதியில் மின்சாரவசதியே இல்லை யென்றும் சொன்னார்கள். இவையெல்லாம் கவனிக்கப்படும் என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

12th July 1957] [Sri P. Kakkan]

ஸ்ரீமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் அவர்கள் ஊரில் உள்ள ஒரு கண்மாயைப்பற்றிச் சொன்னார்கள். உண்மையிலேயே அந்தக் கண்மாயிக்கு ஜலம் விட்டால் சமுத்திரம் மாதிரி இருக்கும். ஆனால், கண்மாயிக்கு எந்த பகுதியிலிருந்து தண்ணீர் கொண்டுவருவது என்பதுதான் பிரச்னை தாம்பிரபரணி கீழேயும், கண்மாய் மேலேயும் இருக்கிறது. பயன்படுமானால் அதுவும் கவனிக்கப்படும். மான்யத்தைப் பிரேரிக்கும்போது சொன்னேன், எங்கெல்லாம் சாத்தியப்படுமோ அங்கெல்லாம் நஷ்டம் வராதிருந்தால் இம்மாதிரி திட்டங்கள் கவனிக்கப்படும் என்று சங்கரன் கோவில் போன்ற பஞ்ச பிரதேச மக்கள் மிகவும் பின் தங்கிய நிலையில் இருப்பதால் விசேஷ சலுகைகள் கொடுத்து நஷ்டம் வந்தால்கூட எடுத்துக்கொள்ள அரசாங்கம் முன்வரும் என்று சொன்னேன். இவை யெல்லாம் அரசாங்கம் கவனிக்கும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னும் சில அங்கத்தினர்கள் தங்கள் தொகுதியில் உள்ள பல வேலைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். இவைகளை யெல்லாம் பரிசீலனை செய்து என்ன என்ன சாத்தியமான ஒத்தாசை செய்ய முடியுமோ அவற்றைச் செய்ய அரசாங்கம் பின் வாங்க மாட்டார்கள். ஸ்ரீமான் சேனாபதிக் கவுண்டர் அமராவதி பாசனத்தைப்பற்றிப் பேசும் போது புஞ்சை நிலத்துக்கும் தண்ணீர் வேண்டுமென்றார்கள். இதுவும் கவனிக்கப்படும்.

மதிப்பிற்குரிய நிதிமந்திரி தனது பட்ஜெட் பிரசங்கத்தில் தண்ணீரை வீணாக்காமல் நல்ல முறையிலே பயன் படுத்தி மிச்சப்படுத்தினால் அப்படி மிச்சப்படுத்திய தண்ணீரைக் கொண்டு மேலும் ஏராளமான நிலத்தில் விவசாயம் செய்யலாம் என்றும், அதற்குத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப் படுமென்றும் சொன்னார்கள்.

இந்த விஷயங்களை நீர்பாசன இலாகா அதிகாரிகளிடம் தெரிவித்து எந்த வகையில் செய்தால் அதிகமான தண்ணீர் சேமிப்பு ஏற்படுமோ அந்த வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று சொல்லிக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

**MR. SPEAKER** : கனம் அங்கத்தினர் சட்டநாத கரையாளர் அவர்களது வெட்டுப் பிரேரணையை வாபஸ் வாங்குகிறாரா ?

**SRI K. SATTANATHA KARAYALAR** : இல்லை. சார், நான் வற்புறுத்துகிறேன்.

**MR. SPEAKER** : The question is—

That the allotment of Rs. 1,59,01,800 under Demand VIII—Irrigation be reduced by Rs. 100 வெட்டுப்பிரேரணையை ஆதரிப்பர்கள் 'Aye' என்று சொல்லுங்கள். பிரேரணையை எதிர்ப்பவர்கள் 'No' என்று சொல்லுங்கள்.

'No' என்ற ஒலியே எனக்கு அதிகமாய்க் கேட்பதால் 'No' என்றவர்கள் வெற்றி பெற்றார்கள்.

The motion was lost.

**MR. SPEAKER** : The question is—

That the Government be granted a sum not exceeding Rs. 1,59,01,800 under Demand VIII—Irrigation இதை ஆதரிப்பவர்கள் 'Aye' என்று சொல்லுங்கள். எதிர்ப்பவர்கள் 'No' என்று சொல்லுங்கள்.

'Aye' என்பவர்களுடைய ஒலியே எனக்கு அதிகமாகக் கேட்பதால் மான்யத்தை ஆதரிப்பவர்கள் வெற்றி பெற்றார்கள். The Demand is carried and the grant is made.

**SRI A. GOVINDASAMY** : 'No' என்ற ஒலியே கேட்கவில்லையா ? அல்லது 'Aye' என்பவர்கள் ஒலி அதிகமாக இருக்கிறதா ?

MR. SPEAKER : 'Aye' என்ற ஒலிதான் அதிகமாக இருக்கிறது. அதிக சத்தம் செய்கிறவர்கள் வெற்றி பெறுகிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த சமாசாரம். (சிரிப்பு).

MR. SPEAKER : The question is that—

The allotment of Rs. 6,07,37,100 under Demand XXXVI—Capital Outlay on Irrigation be reduced by Rs. 100.

**The motion was put and lost.**

MR. SPEAKER : The question is that—

The Government be granted a sum not exceeding Rs. 6,07,37,100 under Demand XXXVI—Capital Outlay on Irrigation.

**The Demand was put and carried and the grant was made.**

(3) DEMAND XI—DISTRICT ADMINISTRATION AND MISCELLANEOUS.

**THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, On the recommendation of the Governor, I move—**

**That the Government be granted a sum not exceeding Rs. 3,43,67,400 under Demand XI—District Administration and Miscellaneous.**

கனம் சபாநாயகர் அவர்களே இந்த மான்யத்தின் கீழ் பல இனங்கள் இருக்கின்றன. அதாவது கலெக்டர், மற்ற சிப்பந்திகள் கிராம உத்தியோகஸ்தர்கள், தேவஸ்தான இலாகா பரிபாலன உத்தியோகஸ்தர்கள், சர்வே செட்டில்மெண்ட் உத்தியோகஸ்தர்கள் முதலானோருக்கு இந்த மான்யத்தில் தான் பணம் கோரப்படுகிறது. ஜில்லா நிர்வாகத்தை திருத்தி அமைப்பதற்காக, Revenue Administration Committee என்ற ஒரு கமிட்டி ஏற்படுத்தி அவர்களும் report சமர்ப்பித்திருக்கிறார்கள். அதன் பிரகாரம் அவர்களுடைய சிபாரிசுகளை எந்த எந்த வகையிலே அங்கீகரிக்கக் கூடுமோ அந்த வகையிலே அங்கீகரித்துக் கொண்டு வருகிறோம்.

ஜில்லா நிர்வாக புனரமைப்பு நம்முடைய இந்திய யூனியனில் ஒரு ராஜ்யத்தில் நல்லபடியாக நடந்து வருகிறது; நல்ல சிபாரிசுகளை ஏற்று அதை நடத்துகிறார்கள் என்று கேள்விப்பட்டேன். அதாவது உத்தர பிரதேசத்தில் அமுல் நடத்தும் சிபாரிசுகளை வாங்கிப் பார்த்ததில் நாம் இங்கு ஏற்படுத்திய கமிட்டியின் சிபாரிசுகளை எல்லாம் அநேகமாக அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்த ராஜ்யம் நம்முடைய சிபாரிசுகளை ஏற்று நிர்வாகத்தை நடத்தினால் எவ்வளவு அனுகூலம் இருக்கிறது என்று உணர்ந்து அவைகளை அங்கு அமுல் செய்திருக்கிறார்கள். மற்றப்படி அங்கத்தினர்கள் சொல்லுகின்ற விஷயங்களைக் கவனித்து கடைசியில் அவர்களுக்கு விடை கொடுக்கிறேன்.

MR. SPEAKER : இப்பொழுது கனம் மந்திரி அவர்கள் பதினொன்றாவது மான்யமாக, அதாவது ஜில்லா நிர்வாக இலாகா மான்யமாக ரூபாய் 3,43,67,400 அரசாங்கத்திற்கு கொடுக்க வேண்டும் என்று பிரேரேபித்து இருக்கிறார்கள்.

எதிர்கட்சிகள் எல்லோரும் சேர்ந்து ஸ்ரீ சட்டநாத கரையாளரின் 87-வது வெட்டுப் பிரேரணையை பிரேரேபிக்கப் போவதாக சொல்லியிருக்கிறார்கள். ஸ்ரீ சட்டநாத கரையாளர் அவர்கள் தயவு செய்து தன்னுடைய பிரேரணையை பிரேரேபித்தால் பிறகு இதை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளலாம்.

12th July 1957]

* SRI K. SATTANATHA KARAYALAR : Sir, I move—

That the allotment of Rs. 3,43,67, 400 under Demand XI—District Administration and Miscellaneous, be reduced by Rs. 100.

MR. SPEAKER : Cut Motion moved—

That the allotment of Rs. 3,43,67,400 under Demand XI—District Administration and Miscellaneous, be reduced by Rs. 100.

MR. SPEAKER : முதலில் மந்திரி கொண்டுவந்த பிரேரணையையும், ஸ்ரீ சட்டநாதகரையாளரின் வெட்டுப் பிரேரணையையும் இந்த சபையின் முன்பு வைத்திருக்கிறேன். இந்த மான்ய விவாதத்திற்காக இன்றைய தினம் 1 மணி நேரமும் நாளைய தினம் 3 மணி நேரமும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீ சின்னதுரை சொன்னதுபோல் எல்லாக் கட்சியினரும் யார் யார் பேச விரும்புகிறார்கள் என்ற ஜாபிதாவை எனக்கு கிடைக்கும்படி செய்யவேண்டும். அவரவர்கள் ஆசனத்தில் உட்கார்ந்திருந்தால் யார் யார் பேச விரும்புகிறார்கள் என்பது எனக்குத் தெரியாது. பேச விரும்புகிறவர்களின் பெயரை என்னிடம் கொடுத்துவிட்டால் எல்லோருக்கும் பேசுவதற்கு சந்தர்ப்பம் கொடுக்கிறேன். இப்பொழுது ஸ்ரீ சட்டநாத கரையாளர் அவர்களை பேசும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

* SRI K. SATTANATHA KARAYALAR : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மான்யக் கோரிக்கையின் மீது என்னுடைய வெட்டுப் பிரேரணையை பிரேரேபித்து சில வார்த்தைகள் சொல்ல அவா உறுகின்றேன் அதிலே குறிப்பாக இந்த ஜில்லா நிர்வாகம் எந்த அளவு சீர் கேடான முறையிலே, ஒழுங்குக்கேடான முறையிலே நடக்கிறது என்பதை சுட்டிக் காட்ட அவா உறுகின்றேன். 1-05 p.m.

இந்த நிர்வாகம்தான் வோட்டர் மகாஜனங்களுக்கும் நமக்கும் நேரிடையான தொடர்புள்ள ஒரு நிர்வாகம். இதிலே சாதாரணமாக எழுதப் படிக்கத் தெரியாத மிகப் பெரிய தொகை மக்கள் உள்ள நமது ராஜ்யத்திலே தினம், தினம் மக்கள் சென்று கிராம உத்தியோகஸ்தராகட்டும், தாசில்தாராகட்டும், அல்லது உதவி தாசில்தாராகட்டும், டிபுடி கலெக்டராகட்டும், இவர்களிடம் சென்று அடிக்கடி, சந்திக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் இருக்கிறது. அப்பொழுது அவர்கள் படக்கூடிய அல்லல்களுக்கு, கஷ்டங்களுக்கு எல்லாம் ஒரு எல்லையே இல்லை என்று சொல்லலாம். ஆனால் அதே நேரத்திலே இந்த நிர்வாகம் எந்த அளவு அதிகமாக உத்தியோகஸ்தர்கள் அடங்கி உள்ளது என்பதையும் நாம் சிந்திக்க வேண்டியிருக்கிறது. நீதி நிர்வாகம் பிரியும் முன்பு பின்பு கூட **Estate Land Act** போன்ற சட்டங்களை பரிபாலிக்கக்கூடிய பொறுப்பு **Revenue Divisional Officer-Magistrate** கையில் இருந்தது. இன்று அது தனியாகப் பிரிக்கப்பட்டு அந்தப் பொறுப்பு எஸ்டேட் **Officer** கையில் இருக்கிறது. அப்படி இருந்தும்கூட **Revenue Divisional Officer** முன்பு இருந்ததே போல் இருந்து கொண்டு இருக்கின்றார்கள். இவர்கள் மேலும் தொடர்ந்து இருக்க வேண்டுமா என்பது பற்றி நாம் அவசியம் சிந்திக்க வேண்டும். இப்படி இன்றைக்கு இரண்டு உத்தியோகஸ்தர்களுக்கு பொறுப்பு பகிர்ந்தும் கூட இவர்களுக்கும் மக்களுக்கும் ஒரு நேரிடையான தொடர்பு இது வரை ஏற்படவில்லை. இப்போது நான் குறிப்பிடுவது இதற்கு முன்பு நான் சபையில் குறிப்பிட்டுள்ளேன். **Section 145, Cr.P.C.**- அமுல் நடத்த மாத்திரம் **Revenue Divisional Officer** பெரிய அளவுக்கு பயன்படுகிறார் என்று தோன்றுகிறது. இதர அலுவல்களுக்கு எல்லாம் அவர்கள் பயன்படுவதில்லை. இவர்கள் மக்களோடு நேரிடையாக ஒரு தொடர்பு வைத்துக் கொள்வது அவசியம். அதற்குப் பதிலாக **Post Office** வேலையை தொடர்ந்து இந்த ஆபீஸ் செய்துகொண்டிருக்கிறது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். முன்பு நாங்கள் இருந்த திரு-கொச்சியிலே, கிராம உத்தியோகஸ்தர்களிடமிருந்து மேலுள்ள கலெக்டர் வரையில் ஓரளவு மக்களிடம் நெருங்கிய தொடர்பு

[Sri K. Sattanatha Karayalar] [12th July 1957

இருந்தது. அங்குள்ள கிராம உத்தியோகஸ்தர்கள் எல்லாம் ஒரு **part-time** முறையிலே அந்த அளவு வேலை செய்யவில்லை. குறிப்பாக செங்கோட்டை, கன்னியாகுமரியில் இருக்கக்கூடிய கிராம உத்தியோகஸ்தர்கள் தவிர மற்ற இடத்தில் உள்ளவர்களுக்கு அதிக பொறுப்பு கொடுக்கப்படவில்லை. பொறுப்பு கொடுத்தால் ஓரளவு இந்த இலாகாவை நல்ல முறையிலே நிர்வாகம் செய்யலாம் என்று நினைக்கிறேன். இவர்களுக்கு அதிக அதிகாரம் கொடுத்து நேரிடையாக பல விஷயங்களையும் இவர்களே பரிசீலனை செய்து பொறுப்பு எடுக்கக்கூடிய அதிகாரம் கொடுக்கலாம்.

இந்த ஜில்லா அதிகாரிகள் விஷயத்திலே மக்களுக்கு நேரிடையாக தொடர்பு இல்லை என்று குறிப்பிட்டதற்கு ஒன்றிரண்டு உதாரணங்களை நான் இந்த சபையின் முன்னிலையிலே வைக்க அவா உறுகின்றேன். எங்கள் வட்டாரத்திலே இரண்டு மாதங்களுக்கு முன்பு ஒரு கிராமத்தில் உள்ள கிணற்றிலே விஷம் கலக்கப்பட்டு விட்டது. சாதாரணமாக மீன் முதலியவைகளை பிடிப்பதற்காக சில விஷப் பொருள்களை தண்ணீரில் கலப்பார்கள். அந்த விஷத்தை இந்தக் கிணற்றில் கலந்து விட்டார்கள். அப்படி கலந்ததன் காரணமாக ஒரே நாளிலே ஒரு கிராமத்திலிருந்த 300 வீடுகளில் உள்ள எல்லோரும் நோய்வாய்ப்பட்டு படுக்கையிலே கிடந்தார்கள். ஸ்மரணை இல்லாத முறையில் பலர் இருந்தார்கள். சிசுக்களில் பலர் நோய்வாய்ப்பட்டு உணர்வற்று கிடந்தனர். இந்த நிலைமையிலே இப்படி ஒரு எதிர்பாராத அசந்தர்ப்பத்திலே, மிகவும் ஒரு நெருக்கடியான நேரத்திலே, ஒரு இலாகா எவ்வளவு துரிதமாக வேலை செய்ய வேண்டும் என்பது அபிப்பிராய வித்தியாசமில்லாத விஷயம். அப்படியிருக்க, மூன்று நாட்கள் வரை அந்தக் கிராமத்திற்கு எந்தவிதமான உதவியும் வந்து சேரவில்லை. அவர்கள் பஞ்சாயத்தின் கீழ் இருந்தும்கூட, பயன் இல்லை. அந்தப் பஞ்சாயத்துத் தலைவர் அவர்கள் என்னைத் தேடி வந்தார். துரதிருஷ்டவசமாக அன்று நான் ஊரில் இல்லை. மறுநாள் போய்ச் சேர்ந்தேன். அதன் பிறகு தான் கலெக்டருக்கும் மற்ற உத்தியோகஸ்தர்களுக்கும் தந்தி கொடுத்து, மருத்துவ இலாகாவிலிருந்து டாக்டரை அனுப்பி உதவி செய்ய முடிந்தது.

தாசில்தார் அந்த இடத்திற்கு நேரடியாகச் சென்று பார்வையிட முடியவும் இல்லை, செய்யவும் இல்லை. "அங்கிருந்து ரிப்போர்ட் இப்பொழுது தான் வந்து சேர்ந்தது; ஒரு கார் ஏற்பாடு செய்துகொண்டு, போக முயற்சிக்கிறேன்" என்று தாசில்தார் சொல்கிறார். இப்படி சாதாரணமாக மக்களுக்கு ஏற்படும் துன்பத்தை அவ்வப்பொழுது நல்ல முறையிலே தீர்ப்பதற்கு வகை இல்லை; அந்த முறையில் இந்த இலாகா வேலை செய்வது இல்லை என்று நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வேறொரு விஷயம். பின் தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவன் சர்ட்டிபிகேட் வேண்டுமென்று போகிறான். அந்த மாணவன் அபேட்சித்த சர்ட்டிபிகேட் பத்து நாட்கள் வரை கிடைப்பது இல்லை. அந்த சர்டிபிகேட் பள்ளிக்கூடத்திற்கு குறித்த நேரத்திற்குள் வரவேண்டுமென்று ஒரு கடைசி நாள் வைத்திருக்கிறார்கள். "**Backward Community Certificate** கொடுக்கவில்லையென்றால் வகுப்பிலே சேர்க்கமாட்டோம்" என்று சொல்கிறார் அந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியர். இந்த நிலைமையிலே அவனுக்கு ஒரு புறத்திலே சர்ட்டிபிகேட் கிடைக்காத நிலையும், இன்னொரு புறத்திலே, சர்டிபிகேட் கொண்டுவந்தால்தான் சேர்த்துக்கொள்வோம், இல்லாவிட்டால் சேர்த்துக்கொள்ள மாட்டோம் என்று அவர்கள் சொல்கிற நிலையும் ஏற்படுகிறது. இந்த நிலைமையிலே நான் சென்று நேரிடையாக தலைமை ஆசிரியரைக் கண்டு சொன்னேன், "தாற்காலிகமாகவாவது நீங்கள் அந்தப் பையனைச் சேர்த்துக்கொள்ளுங்கள்" என்று. "பத்து தினங்களுக்குள்ளாக சர்ட்டிபிகேட் கொண்டுவரவில்லை யென்றால், அதனால், எங்களுக்கு சிரமம் ஏற்படும்" என்று அவர்கள் சொன்னார்கள். ஆகவே, சாதாரணமாக ஒரு சர்டிபிகேட் கொடுப்பதற்கு பத்து தினங்களுக்கு அதிகமாக காலதாமதம் ஏற்படும் என்று சொன்னால், அது மிகவும் கஷ்டமான காரியம். இரண்டு மூன்று தினத்திலே துரிதமாக கிடைக்கக்கூடிய அளவுக்கு நல்ல முறையிலே இந்த இலாகா இயங்கவேண்டியது மிக மிக அவசியம்.

12th July 1957] [Sri K. Sattanatha Karayalar]

இதற்கு முந்திய சட்டசபைக் கூட்டத்தில் நான் குறிப்பிட்டேன், மிக வேதனை தரும் ஒரு விஷயத்தைப் பற்றி.

THE HON. SRI M. A. MANICKAVELU : துரிதமாகக் கொடுக்கும் முறையை கனம் அங்கத்தினர் அவர்களே சொல்ல முடியுமா ?

SRI K. SATTANATHA KARAYALAR : இது யோசித்து முடிவு செய்யவேண்டிய ஒரு காரியம். ஒரு சாதாரண சர்டிபிகேட் வாங்குவதற்கு இவ்வளவு காலதாமதம் ஆகிறது என்று சொன்னால், அது எந்த அளவு நிர்வாகத் திறமைக் குறைவு இருக்கிறது என்பதைக் காட்டுகிறதே தவிர, நான் அதிகம் சொல்வதற்கு இல்லை.

அங்கு இருக்கும் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு அன்றே ஒரு லெட்டர் கொடுக்கலாம்—" To Report within 24 hours " என்று. 24 மணி நேரத்திற்குள்ளாக ஒரு கிராம அதிகாரி, குறிப்பிட்ட ஒரு மாணவன் பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவனா ? இல்லையா ? என்று பதில் கொடுக்கக் கூடாதா ? இதற்குப் பத்து நாள் வேண்டுமா ? அப்படி நேரடியாக சர்டிபிகேட் கொடுக்கவில்லையென்றால், வேறு யாருக்காவது அந்த அதிகாரத்தைக் கொடுக்கலாம். கிராம உத்தியோகஸ்தர்கள் முழு நேர ஊழியர்களாக இருக்க வேண்டுமென்று நான் சொல்லி வந்திருக்கிறேன். அப்படி ஒரு சாதாரண ரிப்போர்ட் வருவதற்கு மூன்று நாட்களுக்கு அதிகம் வேண்டுமென்று எனக்குத் தோன்றவில்லை.

அடுத்தபடியாக, கடன் கொடுப்பதைப்பற்றி சொல்ல விரும்புகிறேன். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவருக்கும் மறவர் குலத்தவர்களுக்கும் மாடு பிடிக்கக் சமீபத்திலே கடன் கொடுக்கப்பட்டது. ஆனால், இம்மாதிரி கடன் கொடுக்கப்படும் என்பது நல்ல முறையிலே விளம்பரம் செய்யப்படவில்லை. உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால், " ஒரு மாதத்திலே 28-ம் தேதி கடைசி நாள், அதற்குள் அபேட்சை செய்ய வேண்டும் " என்று இருக்கும்போது 26-ந்தேதி தான் அந்த விஷயம் மக்களுக்குத் தெரிகிறது. கிராமத்தில் இருக்கும் சிலருக்கு இம்மாதிரியான கடன் கொடுக்கப்படும் என்ற விஷயமே தெரிவது இல்லை. இதையெல்லாம் கிராம மக்களெல்லோருக்கும் நல்ல முறையிலே விளம்பரப் படுத்துவதற்காக " டாம் ", " டாம் " செய்ய வேண்டும். அப்படிச் செய்யாமல் இருப்பதால், என்ன ஏற்படுகிறது ? குறிப்பிட்ட சிலரைக் கூப்பிட்டு, " விஷயம் இப்படி ; அப்ளிகேஷன் எழுதிக்கொடு ; இம்மாதிரி சலுகை சர்க்காரால் அளிக்கப்படுகிறது " என்று சொல்லுகிறார்கள். இப்படி, கடைசி நேரத்தில் சில அப்ளிகேஷன்களை வாங்கி, அவர்களுக்கு விரும்பிய தனிப்பட்ட ஆட்களுக்குக் கடன் கொடுத்து விடுகிறார்கள். இப்படி ஏராளமாக நடந்திருக்கிறது.

அது மாத்திரம் அல்ல. இப்படிக் கடன் பெறுவதற்குக்கூட பெரும் அளவு லஞ்சம் கொடுக்க வேண்டியிருக்கிறது. ரூ. 200 கடனைப் பெறுவதற்கு ரூ. 120 வரை லஞ்சம் கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்த 200 ரூபாயில் ரூ. 100 முன் பணமாகவும், ரூ. 100 கடனாகவும் கொடுக்கப்படுகிறது. அப்படியிருக்க ரூ. 120 வரை லஞ்சம் கொடுப்பது போன்ற சில இனங்கள் வருகின்றன என்றால், மக்கள் என்ன செய்வது ? எழுதப்படிக்கத் தெரியாத மக்கள் பெருவாரியாக இருக்கும் நிலையில், விவசாயத்திற்காக ஏதோ ரூ. 200 கடன் கிடைக்கிறதே என்று யாரையாவது பிடித்து, எப்படியாவது வாங்க முயற்சிக்கிறார்கள். அந்த முறையிலே சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் மக்களுடைய நன்மையைக் கவனியாமல் நடந்துகொண்டிருக்கிறார்கள்.

இன்னும் ஒரு விஷயத்தைப் பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். ஜில்லா நிர்வாகத்திலே ஒரு அளவு இனி தமிழை உபயோகப்படுத்த வேண்டும். இன்று இருக்கும் அளவிலே ஜில்லா நிர்வாகம் பூராவும் நாம் தமிழிலே நடத்தக் கூடும். அப்படி தமிழை ஜில்லா நிர்வாகம் பூராவிலும் உபயோகப்படுத்தினால், இன்று நிர்வாகத்திலே இருக்கக்கூடிய

பல சிக்கல்களையும் காலதாமதத்தையும் நாம் போக்க முடியும். மக்களுக்கும் நிர்வாகத்திற்கும் அதிக அளவு தொடர்பு ஏற்படுத்துவதற்கும் வசதியாக இருக்கும்.

Sri A. GOVINDASAMY : உதவி சபா நாயகர் அவர்களே, ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். மெம்பர் அல்லாத ஒரு பெரியவர் வந்து உட்கார்ந்திருக்கிறார். அதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (இதற்குள் அப்பெரியவர் வெளியேறினார்.)

Sri K. SATTANATHA KARAYALAR : அடுத்தபடியாக, செங்கோட்டை, கன்யாகுமரிப் பகுதிகளில் இருக்கும் ஒரு தனி நிலைமையைப்பற்றி நான் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். பஞ்சாயத்தைச் சார்ந்த **Work-Charged Establishment**-க்கு, அதாவது அட்டெண்டர்கள் போன்ற லோயர் ஸபார்டினேட் சிப்பந்திகளுக்கு 1—4—1957க்குப் பிறகு இதுவரை சம்பளம் கிடைக்கவில்லை. இது ஏன் என்றே எனக்குப் புரியவில்லை. 14, 15 வருஷங்களாக, நீண்டகாலமாக, வேலை செய்த இவர்களுக்குத் திடீரென்று, கடந்த சில மாதங்களுக்கு சம்பளம் வரவில்லை. இதை உடனடியாக சர்க்கார் கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். **Palm-gur training Centre**-களில் வேலை செய்கின்றவர்களுக்கும் இதே முறையில் சம்பளம் கிடைக்கவில்லை.

இந்த வட்டாரத்தில் வகுத்த, சில திட்டங்கள் கூட, ஜில்லாக் கலெக்டருடைய உதாசீனத்தால் மேலே வராமல் தடைப்பட்டிருக்கின்றன. கடந்த மான்யத்திலே பேசப்பட்ட கோதையாறு, சித்தாறு, பட்டணங்கால் திட்டங்களைப்பற்றி மந்திரி அவர்கள் பதில் சொல்வார்கள் என்று நான் நினைத்தேன். இந்தத் திட்டங்களுக்கு "ப்ளூ பிரிண்ட்" கூட தயாராயிருக்கிறது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக ஜில்லா நிர்வாகத்திலிருந்து அது தாண்டி வரவில்லை என்று தோன்றுகிறது. இவைகளெல்லாம் அங்கே தங்கிவிட்டதாகத் தோன்றுகிறது. நிர்வாகம் நல்ல முறையிலே இருந்திருக்குமானால், இந்தத் திட்டங்களையெல்லாம் இதற்குள்ளாக சர்க்கார் முன்னிலையிலே கொண்டுவந்திருக்கக் கூடும். இந்தத் திட்டங்களைப்பற்றி இந்த மான்யத்தின் போது நான் ஏன் குறிப்பிட்டேன் என்றால், ஜில்லா நிர்வாகத்திலே இவ்வளவு ஊழல்களும், இவ்வளவு சிக்கல்களும் இருக்கின்றன என்பதைத் தெரிவிப்பதற்கும், அவைகளை ஓரளவு சீர் படுத்த வேண்டும் என்பதற்காகத்தான்.

கிட்டத்தட்ட மந்திரிகளுக்கு உள்ள அதிகார அளவு ஜில்லாவிலே இருக்கக்கூடிய கலெக்டர்களுக்கு என்று இருந்தும்கூட துரதிர்ஷ்டவசமாக "**Discretionary grant**" என்ற இனத்தின் கீழ் அவர்கள் பணம் கொடுக்க ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை 29 ஆயிரம் ரூபாய்தான். அவ்வளவுதான் இந்த மான்யத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த மாகாணம் முழுவதற்கும் இது ஒதுக்கப்பட்ட தொகை. ஏதாவது ஒரு அசந்தர்ப்பம் நிகழ்ந்துவிட்டால் அவர்கள் பார்த்துக் கொடுக்கும் தொகை மிகக் குறைவு. ஒரு கிராமத்தில் வீடுகள் தீக்கிரையாயின என்றால், அப்பொழுது ஒரு வீட்டிற்கு ரூ. 25-க்கு அதிகமாக கலெக்டர் கொடுக்க முடியாது என்ற நிலைமை இருக்கிறது. இதே நிலைமையில் திருவிதாங்கூர்-கொச்சி ராஜ்யமாக இருந்தால், அங்கு ரூ. 50 வரை கொடுக்கும் அதிகாரம் இருந்தது. ஆனால் இங்கு ரூ. 25 தான் கொடுக்க முடியும், என்று சொல்லுகிறார்கள். அதற்கு அப்பால் ரூ. 5 கொடுக்க வேண்டுமானால், "சர்க்காருக்கு எழுதி, அவர்களைக் கேட்டுத்தான் கொடுக்கலாம்" என்று சொல்லுகிறார்கள்.

**(The Deputy Speaker in the Chair.)**

பெருவாரியாக ஒரேயடியாக சேதம் ஏற்பட்டால், கிராம வாசிகள் கஞ்சி காய்ச்சிக் குடிக்க வேண்டிய நிலைமை வருகிறது. உடனடியாக அங்கு தங்குவதற்கு ஒரு வசதி செய்து கொடுக்க வேண்டியிருக்கிறது. அங்கு குடிசை போட பொருள் கொடுக்க வேண்டியிருக்கிறது. முன்பு இருந்த

12th July 1957] [Sri K. Sattanatha Karayalar]

சர்க்காரில் அப்படி உடனடியாக குடிசை போட்டுக் கொள்வதற்கு காட்டிலாகாவிலிருந்து உடனடியாக ஏற்பாடு செய்யப்படும். மூங்கில் கம்புகளும், கூரைக்கான புல்களும் கொடுக்கப்படும். அப்படிக் கொடுத்தது போக, மேல் மான்யமாக ரூபாய் கொடுப்பார்கள். ஆனால், இங்கு அவசர அவசரமாகக் கேட்டாலும் ரூ. 25 தான் கொடுக்கிறார்கள். அதுவும், இந்த உதவி வந்து சேருவதற்கு இரண்டு நாட்களோ, மூன்று நாட்களோ பிடிக்கிறது. ஆக, துரிதமான அளவு வேலை செய்வதற்கு, வேறு சில இலாகாவிலே எந்தவிதமான உபயோகமும் இல்லாமல் இருக்கும் 'ஜீப்' காரை ஒவ்வொரு தாசில்தாருக்கும் கொடுப்பது நல்லது. விபரீதம் நடந்த இடத்தில் மக்கள் எந்தவிதமாகக் கஷ்டப்படுகிறார்கள், அவர்களுக்கு எந்தவிதமான உதவி தேவை என்பதையெல்லாம் நல்ல முறையிலே பரிசீலனை செய்து, அவர்களுக்கு நல்ல முறையிலே உதவும்படியான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். குறிப்பாக, அவர்களுக்கு ஜீப் கார் கொடுக்கவேண்டும்.

அது மாத்திரம் இல்லாமல் நான் ஏற்கெனவே குறிப்பிட்டது போல கீழேயுள்ள கிராம உத்தியோகஸ்தர்களை எல்லாம் முழு நேர ஊழியர்களாக்கி, அவர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும். குறைந்த பட்சம் அவர்களுக்கு 50 ரூபாயாவது மாத ஊதியம் கிடைக்கும்படியாகச் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன். சம்பளத்தை அதிகப்படுத்தி அவர்களிடம் செம்மையாக வேலையும் வாங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல் மேலேயுள்ள உத்தியோகஸ்தர்களின் எண்ணிக்கையை எப்படி எப்படிக் குறைக்கலாம் என்றும் பார்க்க வேண்டும். ஆர்.டி.ஓ., சப்-கலெக்டர் இவர்கள் எல்லாம் தேவைதானா என்பது பரிசீலிக்கப்படவேண்டும். மேலேயுள்ள அதிகச் சம்பள உத்தியோகஸ்தர்களைக் குறைத்து கீழ் உள்ள உத்தியோகஸ்தர்களுடைய சம்பளத்தையும் உயர்த்தி இவர்கள் எல்லாம் வாழ்க்கையில் திருப்தியாக தங்கள் தொழிலைச் செவ்வையாகச் செய்யும்படி நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். இதற்காக நான் இந்த மான்யத்திற்கு என்னுடைய வெட்டுப் பிரேரணையைப் பிரேரிக்கிறேன்.

DEPUTY SPEAKER : இரிகேஷன் மந்திரி ஏதோ சொல்ல வேண்டும் என்பதாகச் சொன்னார்கள். இப்போது அதை அவர் சொல்லலாம்.

**The Hon. Minister for Public Works wanted to clarify some point. He may do it now.**

THE HON. SRI P. KAKKAN : கனம் சபாநாயகர் அவர்களே, நீர்ப்பாசன மான்யத்தின்போது நான் பேசுகையில் ஓர் இடத்தில் நாற்பதாயிரம் என்று சொன்னபோது ஸ்ரீ அன்பழகன் அவர்கள் "இல்லை பதினைந்தாயிரம் தான்" என்று சொன்னார்கள். அதைப்பற்றி அதிகாரிகளிடத்தில் விசாரித்தேன். "எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான்" என்பது போல நான் சொன்னது எழுத்துப் பிழையால் வந்த தவறு. அதற்கு வருந்துகிறேன். அது பதினைந்தாயிரத்து முந்நூறு என்பதையும் சபைக்குத் தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER : ஜில்லா நிர்வாக மானியத்தின் மேல் இப்போது ஸ்ரீ ஆதித்யன் பேசுவார்.

* SRI S. B. ADITYAN : கனம் சபாநாயகர் அவர்களே, நாங்குனேரி 1-24
தாலுக்காவை திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து பிரித்து கன்னியாகுமரி p.m.
மாவட்டத்தோடு சேர்க்க ஆலோசிக்கப்பட்டிருக்கும் விஷயத்தைப்பற்றி மட்டும் ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இந்தப் பிரிவினையால் என்னுடைய தொகுதி இரண்டாகப் பிளவுபடுகிறது. ஆகவே இதைப் பற்றி நான் என்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்ல விரும்புகிறேன். கனம் அமைச்சர் அவர்கள் நான் சொல்வதைக் கேட்டு என்னுடைய அபிப்பிராயம் ஏற்றுக்கொள்ளக் கூடியது என்று கருதினால், பிரிவினை யோசனையைக் கைவிடவேண்டுமென்பதாகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

[Sri S. B. Adityan] [12th July 1957

திருநெல்வேலி ஜில்லாவிலிருந்து நாங்குனேரி தாலூக்கா பிரிக்கப்பட்டு, கன்னியாகுமரி ஜில்லாவோடு சேர்க்கப்படும் என்கிற விஷயமே முதன் முதலில் நிதி மந்திரி அவர்களுடைய பட்ஜெட் பிரசங்கத்தில் தான் (29–6–57 அன்று) குறிப்பிடப்பட்டது. தன்னுடைய பட்ஜெட் பிரசங்கத்தில் நிதி மந்திரி அவர்கள் " திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த நாங்குனேரி தாலூகாவை இம்மாவட்டத்திலிருந்து பிரித்து கன்னியாகுமரி மாவட்டத்துடன் சேர்க்கப்படும் " என்று குறிப்பிட்டார்கள். இவ்விஷயத்தை முதன் முதலாக இவர் வாயிலாகத்தான் கேள்விப்பட்டோம். நான் கேட்கிறேன் " இது மிகவும் முக்கியமான பிரச்சனை அல்லவா ? இதைப்பற்றி அந்த தாலூகா மக்களிடம் ஏதாவது கேட்கப்பட்டதா ? அவர்களுடைய அபிப்பிராயம் என்ன என்று தெரிந்துகொள்ளப்பட்டதா ? அல்லது இதைப்பற்றித்தான் ஏதாவது முன் அறிவிப்பு உண்டா ? அந்தத் தொகுதிக்கு கனம் பக்தவத்சலம் வந்தார்கள். கனம் கக்கன் விஜயம் செய்தார்கள். பொதுக் கூட்டங்களில் பேசினார்கள். அந்தக் கூட்டங்கள் எதிலாவது ஒன்றில் இதைப்பற்றிச் சொன்னது உண்டா ? கிடையாது. அதுமாத்திரம் அல்ல. சர்க்கார் எத்தனையோ பிரசுரங்கள் வெளியிடுகிறார்கள். அவைகளிலும் இந்த பிரச்சினை வெளியிடப்படவில்லை. கெஜெட்டிலும் பிரசுரம் செய்யப்படவில்லை. பத்திரிகை எதிலாவது விளம்பரம் செய்திருக்கிறார்களா என்றால் அதுவும் கிடையாது. திடீரென்று நிதி மந்திரி அவர்கள் தன்னுடைய சொற்பொழிவில் முன்பின் அறிவிப்பு இல்லாமல் இதைச் சொல்லி இருக்கிறார்கள். இதைக் கேட்டபோதே எனக்கு ஒரு அதிர்ச்சி—அணுகுண்டு போட்டாற்போல் இருந்தது. இப்படி இதைப்பற்றி ஒரு வார்த்தைகூட முன்னால் சொல்லாமல், சம்பந்தப்பட்ட மக்களை இந்த மாற்றம் சம்பந்தமாக கலந்து ஆலோசிக்காமல் இதைச் செய்வது என்றால் இது மிகவும் ஆட்சேபணைக்குரியது என்று சொல்ல விரும்புகிறேன். இப்படி மாற்றம் செய்வதற்குக் காரணம் என்னவென்று பார்த்தால் அதையும் கனம் நிதி மந்திரி அவர்கள் தம்முடைய பிரசங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர் சொல்கிறார். " இதன் பயனாக இரு மாவட்ட அதிகாரிகளுக்கும் வேலைச் சுமை ஓரளவு சமமாக்கப்படும் " என்பதாக. அதாவது திருநெல்வேலி ஜில்லா கலெக்டெருக்கும் அந்த ஜில்லா இதர அதிகாரிகளுக்கும் வேலை குறைவாகும் என்பது. திருநெல்வேலி ஜில்லா ஒரு சிறிய ஜில்லா. கனம் மாணிக்கவேலு அவர்களுடைய ஜில்லா வட ஆற்காடு. கனம் உதவி சபாநாயகர் அவர்கள் ஜில்லாவும் வட ஆற்காடு தான். வட ஆற்காடு ஜில்லா திருநெல்வேலி ஜில்லாவைவிட பெரியது அல்லவா ? எங்கள் ஜில்லா அதிகாரியினுடைய வேலைச் சுமையைச் குறைப்பதற்காக நாங்குனேரி தாலூக்காவைப் பிரித்து கன்னியாகுமரி ஜில்லாவோடு சேர்ப்பதானால், முதன் முதலில் திருநெல்வேலி ஜில்லாவைவிட பெரிய, வட ஆற்காடு ஜில்லாக் கலெக்டரின் வேலைச்சுமையைக் குறைக்க அது பிரிக்கப்பட வேண்டாமா ? அப்படிப் பார்த்தால் சேலம் ஜில்லாவைக் குறைக்க வேண்டும். கோவை ஜில்லாவில் குறைக்கவேண்டும். அதையெல்லாம்விட்டு திருநெல்வேலி ஜில்லாவைக் குறைக்கவேண்டிய அவசியம் என்ன ? இப்படிச் செய்வது நியாயத்திற்கு ஒவ்வாதது என்றும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஏற்கனவே நெல்லை ஜில்லா மிகச் சிறியது. அதுவும் சாத்தூர், ஸ்ரீவில்லிப்புத்தூர் தாலூக்காக்களை பிரித்த பிறகு மிகவும் சிறிய ஜில்லாவாக இருந்து கொண்டிருக்கிறது. அதை மேலும் சிறியதாக்கவேண்டிய அவசியம் இல்லை. ஜில்லாக்களை இப்படி மாற்றக்கூடாது என்பதைப்பற்றி நிதி மந்திரியே சொல்கிறார், அவருடைய உரையில். " இப்பொழுதுள்ள அமைப்பு நெடுங்காலமாக இருந்து வந்திருக்கிறது. அதன் காரணத்தால் ஓரளவு ஜில்லாப் பற்று மக்களிடையே ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இப்பொழுதிருக்கும் மாவட்டங்களை மாற்றியமைப்பதில் ஆங்காங்கே மனக்கசப்பு ஏற்படக்கூடும் " என்று அவரே சொல்கிறார். பலகாலமாக நாங்குனேரி தாலூக்கா திருநெல்வேலியுடனேயே இருந்து வருகிறது. இதைப் பிரித்து இப்போது கன்னியாகுமரி ஜில்லாவோடு இணைப்பதானால் அந்தப் பகுதி மக்களுக்கு மனக்கசப்பு ஏற்படாதா ? இவ்வாறு மாற்றி அமைப்பதால்

மனக்கசப்பு உண்டாகும் என்று சொன்னது நிதி மந்திரி என்ற போதிலும் மந்திரி சபையில் கூட்டுப் பொறுப்பு இருப்பதால் ஸ்ரீ மாணிக்கவேலு அவர்களே அப்படிச் சொன்னதாகத்தான் கருதுகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : நானும் அப்படித்தான் சொன்னேன்.

SRI S. B. ADITYAN : இவரும் அப்படியே சொல்வதனுல்தான் நெல்லை ஜில்லாவிலே இப்படி மாற்றம் செய்வது கூடாது என்பதை நான் வற்புறுத்துகிறேன். இப்போது மந்திரி அவர்கள் சொன்ன கருத்துக்கு இணங்க அந்த திட்டத்தைக் கைவிடுவதாக சொல்லிவிட்டால் இதைப் பற்றி நான் மேலும் பேசிக்கொண்டிருக்க அவசியம் இல்லாமற்போகும். இந்தத் திட்டத்தை கைவிடவில்லையென்ருல் முதலில் மந்திரியுடைய ஜில்லாவைக் குறைத்துக் கொண்டு, நிதி மந்திரி அவர்களுடைய கோவை ஜில்லாவைக் குறைத்துக்கொண்டு பின்னர் திருநெல்வேலி ஜில்லாவையும் குறைக்கட்டும். இல்லாது போனுல் அந்த ஜில்லாவை மாத்திரம் குறைப்பதானுல் மனக்கசப்பு மக்களிடையே ஏற்படும்; ஏற்பட்டிருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

முதலிலேயே இந்த யோசனை அந்தப் பிராந்திய மக்களிடையே கலந்து ஆலோசித்திருக்க வேண்டிய பிரச்சினை. அவர்களுடைய சம்மதத்தைப் பெற்றிருக்க வேண்டும். மக்களுடைய கருத்தைத் தெரிந்து கொண்டு தான் நாங்குனேரி தாலூக்காவைத் திருநெல்வேலியில் இருந்து பிரித்து கன்னியாகுமரியோடு இணைக்க யோசிக்கவேண்டும் என்று சர்க்கார் நினைத்திருக்குமாயின் அதற்கு மார்க்கங்களா இல்லை ? பஞ்சாயத்து போர்டுகளுடைய யோசனையைக் கேட்டிருக்கலாம். அந்த ஜில்லா போர்டு மெம்பர்களுடைய யோசனையைக் கேட்டிருக்கலாம். அந்த ஜில்லாப் பிரதிநிதிகளாக இந்தச் சட்டசபையில் நானும், நண்பர் ஏ. வி. தாமசும், ஸ்ரீ எம்.ஜி. சங்கர ரெட்டியார் அவர்களும் இருக்கிறேம். எங்களைக் கேட்டிருக்கலாம். ஆனுல் எங்களை யாரும் கேட்கவில்லை.

இப்படி மாற்றுவதானுல் அங்கு இருக்கக் கூடிய ஜில்லா போர்டு மெம்பர்களுடைய கதி என்ன ? நாங்குனேரி தாலூக்காவில் இருந்து திருநெல்வேலி ஜில்லா போர்டு மெம்பராக இருக்கக் கூடியவர் இந்த மாற்றத்துக்குப் பின் கன்னியாகுமரி ஜில்லா மெம்பராக இருந்து கொண்டிருப்பாரா ? அல்லது அவர்கள் வேலை பாதிக்கப்படுமா ? இன்றைக்கு திருநெல்வேலி ஜில்லா போர்டு தலைவராக இருக்கக் கூடியவரே நாங்குனேரி தாலூக்காவைச் சேர்ந்தவர் தான். அவர் இனியும் திருநெல்வேலி ஜில்லா போர்டு தலைவராக இருக்க முடியுமா ? அவர் வேலை பாதிக்கப்படாதா ?

மேலும் இப்போது என்னுடைய தொகுதி இரண்டாகப் பிரிக்கப்பட இருக்கிறது. ஒரு பகுதி திருநெல்வேலியுடனும், மற்றென்று கன்னியாகுமரியுடனும் சேரும். அந்தத் தொகுதியில் ஒரு காரியம் செய்யவேண்டுமானுல் ஒரு மைல் தள்ளி இங்கு இருந்தால் திருநெல்வேலி ஜில்லாக் கலெக்டரிடமும், ஒரு மைல் தள்ளி அங்கு இருக்கக்கூடியதற்கு கன்னியாகுமரி ஜில்லாக் கலெக்டரிடமும் ஓட வேண்டியிருக்கும்.

அதுமாத்திரம் அல்ல. இப்படிப் பிரிப்பதே சட்டத்திற்கு முரணனது. ஒரு பகுதியைப் பிரித்து இன்னொரு பகுதியோடு சேர்ப்பதற்கு முன்னதாக அந்தப் பகுதி மக்களுடைய கருத்தை தெரிந்து கொள்ளவேண்டும் என்று ரெவின்யூ போர்டு ரூலில் இருக்கிறது. அப்படிச் செய்யாததே ஒரு பெருங் குறை. சட்டவிரோதமும்கூட.

இப்போது நாங்குனேரி தாலூகாவின் வட பகுதியிலிருந்து எட்டு மைல் தூரம் போனுல் போதும். ஜில்லா தலை நகரை அடைந்து விடலாம். இனிமேல் முப்பது நாற்பது மைல்கள் போகும்படி ஏற்படும். இந்த மாற்றத்தை மக்கள் விரும்பவில்லை, எதிர்க்கிறர்கள், மக்களுடைய கருத்துக்கு ஏற்ப செயல் படவேண்டியது அரசாங்கத்தின் கடமையாதலால் இதை மீண்டும்

புனராலோசனை செய்ய வேண்டுமென்பதாக நான் தாழ்மையுடன் அரசாங்கத்தையும், சம்பந்தப்பட்ட மந்திரியையும் கேட்டுக்கொள்ளுகிறேன். வணக்கம்.

**Sri M. S. SELVARAJAN :** Sir On a point of clarification. ஏற்கெனவே இதுபற்றி கெஜட்டில் பிறப்பித்து மக்களுடைய அபிப்பிராயத்தை அறிவதற்காக வெளியிடப்பட்டிருந்ததாக அறிந்தேன். அது உண்மையில்லையா என்று அறிய ஆசைப்படுகிறேன். இதைப்பற்றி மக்களுடைய அபிப்பிராயம், பஞ்சாயத்து போர்டுகளினுடைய அபிப்பிராயம் இவைகளை . .

**DEPUTY SPEAKER :** The Hon. Minister will reply to that point. The hon. Member will please resume his seat now.

**Sri M. G. SANKAR :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மான்யத்தை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். எதிர் கட்சியில் இருக்கும் ஸ்ரீ சுரையாளர் அவர்கள் ஜில்லா நிர்வாகத்தில் அதிகமாக ஊழல்கள் இருக்கிறது என்று சொன்னார்கள். அதை முழுவதும் ஒப்புக்கொள்வதற்கில்லை. கடந்த 10 வருஷத்திற்கு அல்லது 5 வருஷத்திற்கு முன்னால் இருந்த ஜில்லா நிர்வாகத்தோடு இப்போது இருக்கும் நிர்வாகத்தை ஒப்பிட்டு பார்த்தால் இப்போது நடக்கக்கூடிய நிர்வாகம் எவ்வளவோ மேலாக இருக்கிறது. அதற்கு அடுத்தபடியாக கனம் ஆதித்தன் அவர்கள் திருநெல்வேலியை சேர்ந்த நாங்குநேரி தாலுகாவை பிரித்து கன்னியாகுமரி ஜில்லாவோடு சேர்ப்பதை ஆட்சேபித்து சொன்னார்கள். எனக்கு அந்த விஷயத்தில் அவர்களோடு சேர்ந்து பேசவேண்டிய நிலைமை இருக்கிறது. நிதி அமைச்சர் அவர்கள் இங்கு வரவு செலவு திட்டத்தைப்பற்றி பேசும்போது இந்த விதமான திட்டங்களை பேசிவிட்டு கடைசியில் நாங்குநேரி தாலூகாவை கன்னியாகுமரி ஜில்லாவோடு சேர்த்துவிட்டோம் என்று சொன்னார்கள். நான் அந்த சமயத்தில் அசெம்பிளிக்கு வரவில்லை. பல அசந்தர்ப்பங்களினால் ஊரில் இருந்தேன். இதைப் பற்றி அதிகமாக தினசரிகளில் வரவில்லை. தினமணி, தந்தி பத்திரிகையில் இதைப்பற்றி குறிப்பிடப்பட்டிருந்தது. இதைப்பார்த்துவிட்டு பலரும் என்னிடம் வந்து கேட்டார்கள். எனக்கும் இதைப்பார்த்தவுடன் தூக்கி வாரி போட்டது. இவ்வாறு நடக்காது, எங்களிடம் இதைப்பற்றி கேட்கவில்லை என்று சொன்னேன். பதினைந்து நாட்களுக்கு முன்னால் கனம் மந்திரி பக்தவச்சலம் அவர்கள் குற்றாலத்திற்கு வந்திருக்கும்போது என்னிடம் கேட்டார்கள். நாங்குநேரி தாலூகாவை கன்னியாகுமரி ஜில்லாவோடு சேர்த்திருக்கிறது பற்றி உங்களுக்கு ஏதாவது ஆட்சேபம் இருக்கிறதா என்று கேட்டார்கள். இதை பொதுமக்கள் விரும்பவில்லை, மேலும் விரும்பமாட்டார்கள் என்று சொன்னேன். அப்படியிருந்தும் மந்திரி கமிட்டியார் எங்களிடம் அதாவது அந்த தொகுதி எம்.எல்.ஏ-க்களிடம் கேட்காமல் அங்குள்ள பஞ்சாயத் போர்டு பிரஸிடென்டிடம் அல்லது அங்குள்ள பொதுமக்களிடம் கேட்காமல் செய்ததைப்பற்றி நான் வருந்துகிறேன். ஆனால் எதிர்கட்சிக்காரர்களுக்கும் ஆளும் கட்சிக்காரர்களுக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. ஆகவே நான் இங்கு வந்தவுடன் முக்கிய மந்திரியிடமும், நிதி மந்திரியிடமும், ரெவின்யூ மந்திரியிடமும் இதைப்பற்றி சொன்னேன். அவர்கள் இதைப்பற்றி ஆலோசித்து முடிவு எடுப்போம் என்று சொன்னார்கள். ஆகவே இந்த நிலையில் அதைப்பற்றி கூடுதலாக ஒன்றும் நான் பேசவில்லை. ஆனாலும் கன்னியாகுமரி ஜில்லாவுக்கும் நாங்குநேரி தாலுகாவுக்கும் இருக்கின்ற வித்தியாசங்களை சொல்ல ஆசைப்படுகிறேன். திருநெல்வேலி ஜில்லாவில் நாங்குநேரி தாலூகா மிகவும் பழைமையான ஊர், பாடல்பெற்ற ஊர், தோத்தாரி சுவாமிகள் இருக்கும் ஊர், இந்த தோத்தாரி சுவாமிகள்தான் நமது ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத்தினுடைய குலதெய்வம். இது அநேகருக்குத் தெரிந்து இருக்கலாம். இந்த நிலையில் இருக்கும் நாங்குநேரி தாலூகாவை கன்னியாகுமரி ஜில்லாவோடு சேர்ப்பதுபற்றி அங்குள்ள மக்களுக்கு மனகசப்பு இருக்கிறது. அவர்களுக்கு **Sentimental objection** இருக்கிறது என்றும் சொல்ல ஆசைப்படுகிறேன். நாங்குநேரி தாலூகா வாசிகளுக்கும்

12th July 1957] [Sri M. G. Sankar]

கன்னியாகுமரி ஜில்லாவிலுள்ள மக்களுக்கும் கலாச்சார வித்தியாசம் இருக்கிறது. அவர்கள் பேசும்போதுகூட இப்பொழுதும் மலையாளம் கலந்துதான் இருக்கிறது. அவர்கள் பேசுவது நமக்கு சரியாக புரிவதில்லை. சட்டங்களிலும் நான்குநேரி தாலூகாவிற்கும் கன்னியாகுமரி ஜில்லாவுக்கும் வித்தியாசம் இருக்கிறது. அது தனி ஜில்லாவாக இருப்பதைப்பற்றி நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. நீலகிரி ஜில்லாவும் சிறிய ஜில்லாவாகத்தான் இருக்கிறது. இவ்விதம் இருப்பதைப்பற்றி நாங்கள் சந்தோஷப்படுகிறோம். அதோடு எங்கள் பகுதியில் பல வருஷங்களாக பஞ்சம் தோன்றி இன்னும் இதற்கு ஒரு முடிவு காலம் வரவில்லை. இப்போது அரசாங்கத்திலிருந்து கொஞ்சம் பஞ்ச நிவாரண வேலைகள் செய்து வருகிறார்கள். அது போதாது. இன்னும் அதிகப்படியாக உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடிக்கடி அங்குள்ள ஜில்லா அதிகாரிகளை மாற்றுவதினால் அங்குள்ள ஜில்லா நிர்வாகம் சரியாக நடத்த முடியாமல் இருக்கிறது. ஆதலால் ஒவ்வொரு ஜில்லா அதிகாரிகளையும் குறைந்தது மூன்று வருஷங்களுக்காவது ஒரு ஜில்லாவிலிருந்து மாற்றக்கூடாது என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். அதோடு கிராம உத்தியோகஸ்தர்கள் பரம்பரையாக வேலைபார்த்து வருகிறார்கள். இதனால் நிர்வாகத்திற்கு பல கஷ்டம் ஏற்படுகிறது. ஆதலால் இந்த முறையை ஒதுக்கிவிட்டு 4 அல்லது 5 கிராமங்களுக்கு ஒரு கிராம அதிகாரியை போட்டு நடத்தினால் கிராம நிர்வாகம் நன்றாக இருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம். இந்த தாலூகாவை கன்னியாகுமரியோடு சேர்க்கக் கூடாது என்று எனக்கு பல தந்திகள் வந்திருக்கின்றன. இலங்கையிலிருந்தும் தந்திகள் வந்துகொண்டிருக்கிறது. ஆகவே இதை மந்திரி அவர்கள் கவனிப்பார்கள் என்று நம்புகிறேன். இதைப்பற்றி இன்னும் கூடுதலாக ஆலோசித்து ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* **SRI P. U. SHANMUGAM** : சட்டமன்றத்தலைவர் அவர்களே, மாவட்ட நிர்வாகத்தின் மீது கொண்டுவந்திருக்கும் வெட்டுப்பிரேரணையை நான் ஆதரித்து பேசவிருக்கின்றேன். இன்றைக்கு எனக்கு முன் பேசிய நண்பர்கள் மாவட்ட நிர்வாகத்தில் ஊழல் இருக்கிறது என்பதை குறிப்பிட்டார்கள். மாவட்ட நிர்வாகத்தில் ஊழல் இருக்க காரணம் நிர்வாகத்தில் இருக்கின்ற அதிகாரிகள் ஊழல் நிறைந்தவர்களாய் இருக்கின்ற காரணத்தால்தான் ஊழல் நடைபெறுகிறது என்பதை தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆட்டம் நன்றாக இல்லையென்றால் காரணம் ஆடுகிறவரின் காலில் ஊனம் ஏற்பட்டிருக்குமே தவிர மேடையில் அல்ல—ஆகவே ஊழல் நிறைந்த அதிகாரிகள் உத்தியோகத்தில் இருந்தால் ஊழல் இருக்கத்தான் செய்யும். கருணாநிதியும் ஆட்டத்தைதானே சொன்னார், ஷண்முகமும் இதையே தான் சொல்லுகிறார் என்று அமைச்சர் அவர்கள் மெதுவாக சொல்லிக்கொண்டிருப்பது எனக்கு கேட்கின்றது. யார் யாருக்கு எதை எதை சொன்னால் பிடிக்குமோ அதைக் கொண்டுதான் உதாரணம் சொல்லவேண்டும். அமைச்சர் அவர்கள் நல்ல ரசிகத்தன்மையுடையவர். ரசிகத்தன்மையுள்ளவர்களுக்கு ரசிகத் தன்மையில்தான் சொல்லவேண்டும். ஆகவே ஊழல்கள் சர்க்கார் உத்தியோகஸ்தர்களிடம்தான் இருக்கிறது. இவர்களிடம் லஞ்ச ஊழல் இருப்பது மட்டுமல்ல, அதிகார போதையில் இருந்துக்கொண்டு ஊழல்களை செய்து வருகிறார்கள். எனது தொகுதியை எடுத்துக்கொண்டால் துரிஞ்சாபுரம், கனம் மாணிக்கவேலு அவர்களின் தொகுதி இருக்கிற இடம், அந்த இடங்களில் எல்லாம், தேர்தலுக்குப் பிறகு அநேக ஊழியர்கள் பழிவாங்கப்படுகிறார்கள் என்பதை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஜில்லா நிர்வாகத்தில் அதிகார வர்க்கம் தலையிடாமல் இருந்தால் நிச்சயம் நிர்வாகத்தில் ஊழல்கள் ஏற்பட காரணமே கிடையாது. என்து தொகுதியில், செங்கம் தாலூகாவில் தானிப்பாடி என்று ஒரு பிர்க்கா இருக்கிறது. அதைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்க முடியாது. அமைச்சரவர்களுக்கு அங்கு நெருங்கிய உறவினர்களும், நண்பர்களும் இருந்தபோதிலும் அவர் அங்கு போயிருக்க முடியாது. அங்கு அவர்கள் போய்

இருந்தால், அங்குள்ள மக்களின் நிலையை அவர் நன்கு உணர்ந்திருந்தால் அதைச் சீர்தூக்கியிருக்கவேண்டும். ஆனால் அப்படிச் செய்யவில்லை. தாணிப்பாடி பிர்க்காவில் உள்ளவர்கள், அங்கு மனிதனைப் பிறந்தவர்கள் என்றால் அரசாங்கத்திற்கு வரி கட்டுவதற்காகவே பிறந்திருக்கிறார்கள். அவர்கள், வறி கட்டுவதைத் தவிர வேறு ஒன்றும் அறியாதவர்களாக இருக்கிறார்கள். அந்தப் பகுதி மக்களுக்கு, சர்க்கார் செய்கிற வசதிகளோ, சர்க்கார் இயந்திரத்தால் ஏற்படும் நன்மையோ ஒன்றும் இல்லை. நான் முன்பு ஒரு தடவை குறிப்பிட்டது போல், அங்கு போலீஸ் இருக்கிறது. ஆனால் போலீஸ் அங்குள்ளவர்களின் பந்தோபஸ்துக்காக இருக்கவில்லை. வேறு ஒரு தொழிலுக்காகத்தான் அவர்கள் இருக்கிறார்கள் என்று நான் தைரியமாய் சொல்வேன். வேறு சில தொழில்கள் செய்வதற்காகத்தான் அவர்கள் இருக்கிறார்கள். சிற்சில சமயங்களில் அங்குள்ள போலீஸ்காரர்கள் அங்குள்ளவர்களை கள்ளச் சாராயம் காய்ச்சத் தூண்டி விட்டு அதிலிருந்து ஒரு பங்கும் பெறுகிறார்கள். அதே போல்தான் மருத்துவத் துறையில் இருப்பவர்களும். அங்குள்ள ஜில்லா நிர்வாகிகள் அந்தப் பக்கமே நுழைவது கிடையாது. ஏனெனில் அது ஒரு காட்டுப் பகுதி. ஏதாவது ஒரு அதிகாரியைப் பிடிக்கவில்லை என்றால், அந்த அதிகாரியை தண்டிக்க வேண்டுமென்றால், உடனே அவரைத் தூக்கி செங்கம் தாலூகாவில் போடு என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட ஒரு பயங்கரமான இடமாகும் அவ்விடம். அங்கு உத்தியோகஸ்தர்கள் சரிவர போகாததால், மலையில் வாழ்கிற மக்கள் படும் துன்பம் சொல்லத்தரமன்று. அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இந்த சட்டமன்றத்தில் நான் இருக்கும்போது எனக்கு "ரெஜிஸ்டேர்ட்" தபால் வந்திருக்கிறது. அது புரசப்பட்டு கிராமத்திலிருந்து வந்திருக்கிறது. அந்த ரெஜிஸ்டேர்ட் தபாலில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், அந்தப் பகுதியில் இருக்கிற காட்டில் ஆடுமாடுகளை, கால்நடைகளை மேய்க்க பாஸ் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இனி அங்கு கால்நடைகளை மேய்க்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே கால்நடைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளின் கதி என்னவாகும் என்று தெரியவில்லை. எப்படியாவது அமைச்சர் அவர்களிடம் சொல்லுங்கள் என்று தபால் வந்திருக்கிறது. இந்த காட்டு இலாகாவை எடுத்துக்கொண்டால், அங்கு ஆடுமாடுகள் வைத்துக்கொண்டிருக்கும் ஏழைகளிடமிருந்து தண்டத் தீர்வை வசூலிக்கிறார்கள். பாரஸ்ட் டிப்பார்ட்மெண்ட் உத்தரவுபடி, அதிகாரிகளின் இஷ்டம் போல் ஒரு ரூபாயிலிருந்து பத்து ரூபாய் வரை தீர்வை போடலாம் என்று சொல்கிறார்கள். அப்படிக் கொடுக்காவிட்டால் தண்டனை விதிக்கலாம் என்றும் அபராதம் விதிக்கலாம் என்றும் கூறுகிறார்கள். இந்த மாதிரி ஒரு ரூபாயிலிருந்து பத்து ரூபாய் வரை வசூல் செய்யலாம் என்று சொன்னால், அது அவர்களின் பிரியத்திற்கு ஏற்றாப்போலாகிறது. அவர்களின் இஷ்டம் போல் ஒரு ரூபாயும் விதிக்கலாம், ஐந்து ரூபாயும் விதிக்கலாம், பத்து ரூபாயும் விதிக்கலாம். இப்படி பண வசூல் செய்கிற பிர்க்காதான் தாணிப்பாடி பிர்க்கா. ஆனால் அங்கு வசதி செய்யப்பட்டிருக்கிறதா, அங்குள்ள மக்களுக்கு ஏதாவது வசதி செய்யப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் ஒருவித வசதியும் செய்து கொடுக்கப்படவில்லை. அங்கு மணியக்காரர் இருக்கிறார், கணக்குப் பிள்ளை இருக்கிறார். இவர்கள் எதற்காக அங்கு இருக்கிறார்கள் என்றால், அங்கிருந்து கிஸ்தி வாங்கி அனுப்புவதற்காகத்தான். பொதுவாக, மாவட்ட நிர்வாகத்தை எடுத்துக்கொண்டால் ஜில்லா கலெக்டரோ அல்லது அவர் கீழ் இருக்கிறவர்களோ வரி வசூல் செய்வது பற்றி குறிப்பிடாமல் இருக்கமுடியாது. இன்கம்டாக்ஸ் மாவட்ட அதிகாரிகள் மூலமாகத்தான் வசூலிக்கப்படுகிறது. அதற்கு, மாவட்ட அதிகாரிதான் பொறுப்பாளியாக இருக்கிறார். அப்படி வரி வசூலிக்கும்போது, பணக்காரர்களுக்கு எந்த அளவு சலுகைகள் கொடுக்க முடியுமோ அந்த அளவு சலுகைகள் கொடுக்கப்படுகின்றன. நான் குறிப்பிடுவேன், பெரும் பணக்காரரான ஒருவரிடமிருந்து, ஆறு, ஏழு ஆண்டுகளாக வரி வசூலிக்காமல் தள்ளிப் போட்டுக்கொண்டு வந்திருக்கிறார்கள். அதை நான் நிரூபிக்க முடியும். ஆனால் ஏழை எளிய மக்களை விட்டு வைப்பதில்லை. ஏழை, எளிய மக்களை கசக்கிப் பிழிந்து வரி வசூல் செய்து விடுகிறார்கள். இந்த விதமான ஊழல்கள் இருப்பதற்

குக் காரணம் என்ன ? அந்த அதிகாரிகளிடம் தனியாக பேசும்போது சொல்கிறார், மேலிடத்திலிருந்து கண் ஜாடை காட்டுகிறார்கள், அதன்படி தானே நடக்க வேண்டியிருக்கிறது என்று சொல்கிறார்கள். பணக்காரர்களுக்கு ஒரு முறை ஏழைகளுக்கு ஒரு முறை என்று வரி வசூலிப்பதை நிறுத்தவேண்டும். அதை மாற்றியமைக்க வேண்டும். எனது தொகுதியில் ஒரு "பர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்" கோர்ட்டு கிடையாது. நான் ஏன் அங்கு ஒரு மாஜிஸ்ட்ரேட் கோர்ட் வேண்டுமென்று கேட்கிறேன் என்றால், அங்குள்ளவர்கள் பெரும் குற்றம் செய்பவர்கள் என்பதற்காக நான் கேட்கவில்லை. ஒவ்வொரு ரெவன்யூ டிவிஷனுக்கும் ஏற்றவாறு அங்கும் ஒன்று அமைக்கவேண்டுமென்று தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறேன். அடுத்தது ஹெல்த் டிபார்ட்மெண்ட்காரர்கள் செய்யும் வேலையைப் பார்த்தால் அது இன்னும் சற்று கடினமாகத்தான் இருக்கிறது. கிணறுகளுக்கு கைப்பிடிச் சுவருகள் வைத்துக்கொள்ளுங்கள் என்கிறார்கள் கிராமங்களுக்குச் சென்று. அப்படி கைப்பிடி சுவர் இல்லை என்றால் ஏன் கைப்பிடிச் சுவர் வைக்கவில்லை என்று கேட்டு அபராதம் விதிக்கிறார்கள். ஆனால் அப்படி பக்கத்தில் இருக்கும் கிணற்றிற்கு கைப்பிடி சுவர் வைக்காமலிருந்தும் அவர்களுக்கு அபராதம் போடாதிருந்து, அங்கு கைப்பிடிச் சுவர் வைக்கவில்லையே ஏன் அவர்களுக்கு மாத்திரம் அபராதம் போடவில்லை என்று அபராதம் விதிக்கப்பட்டவர்கள் கேட்டால், அப்படிக் கேட்க உனக்கு என்ன அதிகாரமிருக்கிறது, உன் வேலையைப் பார், போய் டி. எச்.ஓ.-யிடம் சொல் என்கிறார்கள். அதேபோல் கல்வித்துறையை எடுத்துக்கொண்டால் மானேஜ்மெண்டின் கீழ் இருக்கும் பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கு போதுமான சம்பளம் போதுமான காலத்தில் வழங்கப்படுவது கிடையாது. இப்படி மாவட்ட நிர்வாகத்தில் பலவிதமான ஊழல்கள் இருக்கின்றன. இப்படிப்பட்ட ஊழல்கள் எல்லாம் எந்தக் காலத்தில் இருந்து வருகிறது என்று கேட்டால் மொகல் சாம்ராஜ்ய காலத்திலிருந்து படிப்படியாக பிரிட்டிஷ் சர்க்காருக்கு வந்து அது இப்பொழுது இந்திய சுதந்திர சர்க்காருக்கும் வந்திருக்கிறது. அது சரிதான் என்பது நிர்வாகத்தில் இருக்கும் பெயர்களைப் பார்த்தால் தெரியவரும். "டபேதார்" என்றும், "ஜமேதார்" என்றும், "தாசில்தார்" என்றும், "சோப்தார்" என்றும், "சௌக்கிதார்" என்றும் பெயர்கள் மொகல் சாம்ராஜ்ய நிர்வாகத்திலிருந்து வந்தவைகள் தான். அந்த நிர்வாக முறை சீர்திருத்தப் படாததினால்தான் இவ்வளவு சிக்கல்களும், ஊழல்களும் இருக்கின்றன. பண்டித ஜவஹர்லால் நேரு டெல்லியைப் பற்றிக் கூறும்போது, **Jungle of offices** என்று சொன்னார். அதேபோல் நம் மாகாணத்திலும் ஏராளமான ஆபீஸ்கள் இருக்கின்றன. ஏராளமான உத்தியோகஸ்தர்களும் இருக்கின்றனர். ஆனால் இந்த ஆபீஸ்களினாலோ அல்லது இந்த உத்தியோகஸ்தர்களினாலோ மக்கள் ஏதாவது பலன் அடைகிறார்களா என்றால் நிச்சயமாக இல்லை என்றுதான் நான் சொல்வேன். எங்கு பார்த்தாலும் ஊழல்கள் மலிந்திருக்கின்றன. இந்த ஊழல்களை நீக்குவதற்கு இந்த நிர்வாக முறையை மாற்றியமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* SRI B. K. LINGA GOWDER : Mr. Deputy Speaker, Sir, I rise to support the Demand before the House—District Administration and Miscellaneous. While doing so, I wish to make certain observations about certain aspects of the district administration. The House knows that the district is the unit of administration in this State. It is, therefore, very important that the Government's policies are correctly and faithfully carried out by the district authorities. I refer to this question at the very outset because, although we have tried to reform all the organs of the State Administration since Independence to suit the needs of a Welfare State, the Government have not thought of reforming the administration at the district level. The old set-up in which the Collector was the supreme authority in the district continues with 1-50 p.m.

[Sri B. K. Linga Gowder] [12th July 1957

this difference that he has more powers and responsibilities ever enjoyed by his predecessors in the pre-Independence days. The present-day Collector is in charge of not only routine administration like maintenance of law and order and collection of land revenue but also all the nation-building activities. He is in charge of Prohibition, Harijan Welfare, Community Development, Road Transport, Planning and other miscellaneous activities. I do not think the Collector, however capable, could function in all these roles, even assuming that he is able to go through all his routine activities. This question remains. How to enthuse the people to give their co-operation and to teach them that they are partners in the Administration? So, I feel that it is necessary that we should have some non-officials associated with the district administration, as we have such association of non-officials at higher levels. The Planning Commission has been considering how best reforms in the Administration at the district level could be brought about. I feel that it is the duty of the State Government to initiate such reforms. If they do not, there will be a big gulf between the Government and the people and the common man will have to understand the policy of the Government only as interpreted by the officials. My suggestion, in the last analysis, means effective decentralization of administration at all levels which is vital for building up our country from below.

Before I conclude, I wish to invite the attention of the Government to one peculiar problem facing our district. I refer to the plight of the non-gazetted officers with all their troubles. They have to work under the rigours of the climate of the Nilgiris. I wish to urge the Government to give them some special enhanced allowance either as hill allowance or as compensatory allowance.

SRI M. ANANDAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மாவட்ட மான்ய வெட்டுப் பிரேரணையை ஆதரித்து பேச விரும்புகிறேன். குறிப்பாக தென் ஆற்காடு மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி, திருக்கோவிலூர் முதலிய தாலூகாக்களில் இருக்கும் அதிகாரிகள் மக்களுடைய குறைகளை சரிவர கவனிப்பதில்லை. எங்கள் கச்சாபாளையம் மாயம்பாடி என்ற பகுதியில் ஏலக்காய், லவங்கம், இஞ்சி, சந்தனம், எலுமிச்சை போன்ற பலவிதமான பொருள்களும் விளைகின்றது. மலைமரங்களும், மூங்கில் இன்னும் அநேகவிதமான பொருள்களும் விளைகின்றன. இதை விளைவிக்கும் மலை சாதி மக்கள் இவற்றை விற்க சென்றால் அந்த ஊர் ஜமீன்தார் தான் கேட்கும் விலைக்கு பொருள்களைக் கொடுக்கும்படி வற்புறுத்துகிறார். கொடுக்காவிட்டால் இந்த ஏழை விவசாயிகளுக்கு ரூ. 100, 200 என்று அபராதம் போடுகிறார். அங்கு விளையும் கடுக்காய் ஒரு மரக்காலுக்கு ரூ. 2 மதிப்பு உண்டு என்றால், அதை நாலு அணாவுக்கு கொடு என்கிறார். அப்படி கொடுக்கத் தவறினால் அங்கிருக்கும் மலையாள மக்கள் பயிரிட முடியாது என்று அந்த துரை மறுத்து விடுகிறார். இந்த குறையை கச்சாபாளையம் அஞ்சலில் இருக்கும் போலீஸ் அதிகாரிகளிடம் சொன்னாலும் அவை கவனிக்கப்படுவது இல்லை. என் தொகுதியில் 10,000 மலையாள மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு சரியான ரோட் கூட கிடையாது. வோட்டுப்போட வருவதும் இல்லை சங்கராபுரம் பிர்க்காவும் புதுபட்டு அஞ்சல், லக்கிநாய்கன்பட்டி, கொடினூர், புளியங்கொட்டை மலையைச் சேர்ந்தது. அந்த கிராமங்களிலெல்லாம் சரியானபடி ரோடு இல்லாததால் மக்கள் வோட்டுப்போட வருவதில்லை. அவர்களுக்கு குடி தண்ணீர் கிணறு போன்ற வசதிகளை அதிகாரிகள் சரிவர கவனித்து செய்து கொடுப்பது

12th July 1957] [Sri S. B. Adityan]

இல்லை. மின்சார வசதியும் கிடையாது. நகரங்களில் மாத்திரம் இந்த வசதிகள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் அங்கு இருக்கும் கிராமங்களுக்கு பரப்பி ஏழை விவசாயிகளுக்கு உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஏழை விவசாயிகள் கடனுக்காக கொடுக்கும் **Loan** விண்ணப்பங்களை அங்கிருக்கும் அதிகாரிகள் ஆறு மாத காலம் தாழ்த்தி பிறகுதான் கொடுக்கிறார்கள். அதிலும் ரூ. 200-க்கு லோன் எழுதினால் ரூ. 175 தான் கொடுக்கிறார்கள். பாக்கி ரூ. 25 எங்கு என்று கேட்டால் லஞ்சம் சாப்பிடுகிறது என்று சொல்லுகிறார்கள். அங்கு இருக்கும் அதிகாரிகள் இந்த நிலையில் இருக்கிறார்கள். அரசாங்கம் இவற்றை நல்ல முறையில் நடத்திக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். கள்ளக்குறிச்சி வட்டாரம் உஷ்ண பிரதேசம். ஆகையால் அங்கு அடிக்கடி தீ விபத்துகள் ஏற்பட்டு மக்கள் பொருள் சேதம் அடைந்து கஷ்டப்படுகிறார்கள். மக்களுக்கு வீடு ஒன்றுக்கு ரூ. 30 கொடுப்பதாகச் சொல்லி தற்சமயம் ரூ. 10 தான் அரசாங்கம் கொடுத்து இருக்கிறது. வீடு ஒன்றுக்கு ரூ. 50 வீதம் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். ஷை கள்ளக்குறிச்சியில் தீயணைக்கும்படை ஒன்று ஏற்படுத்திக் கொடுக்கவும். அங்கிருந்து காலா காலமாக அரசாங்கத்துக்கு உழைத்துவரும் தலையாரி தோட்டிகளுக்கு அரசாங்கம் கொடுக்கும் சம்பளம் ரூ. 18-தான். தினம் ஒன்றுக்கு அணா பத்துதான். அதை வைத்துக்கொண்டு இந்த ஊழியர்கள் இறுசால் எடுத்துக்கொண்டு தாலூகா ஆபீஸ்களுக்கு சென்றால் பஸ் செலவுக்கே சரியாகிவிடுகிறது. சாப்பாட்டுக்கோ வேறு செலவுகளுக்கோ பணம் கிடையாது. தோட்டி தலையாரிகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 30 சம்பளம் கொடுத்து **N.G.O.**-க்களுக்கு கொடுப்பதுபோல் படிச் செலவும் ஆடையும் வருஷம் இரு முறை கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். அங்கு இருக்கும் எஞ்சினீயர்கள், சிறு சிறு கால்வாய் திட்டங்களைக் கவனிப்பதில்லை. அரசாங்கம் இவைகளைக் கவனிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். குறிப்பாக வட ஆற்காடு சாத்தனூர் திட்டத்திலிருந்து, வேப்பூர், நாராயணகுப்பம், போந்தை, நாகக்கொல்லை, லக்கிநாயக்கன்பட்டி, ரங்கப்பனூர், பாவளம், மல்லாபுரம், அரசம்பட்டு காடிசித்தூர், கள்ளக்குரிச்சி இந்த ஊர்கள் வழியாகச் செல்லும்படியாக ஒரு வாய்க்கால் வெட்டிக் கொடுக்கும்படி அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறேன். அங்கு இருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களையும், பின்தங்கிய வகுப்பினரையும், சர்க்கார் நல்லமுறையில் முன்னேற்றம் அடையும்படி செய்துகொடுக்குமாறு கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 9 a.m. on Saturday, the 13th July 1957. 1-59 p.m.

The House then adjourned.

## IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

120. *Notification issued with G.O. Ms. No.* 764, *Local Administration, dated* 11*th May* 1957, *amending the rule relating to the strength of Panchayats framed under the Madras Village Panchayats Act,* 1950 (*Madras Act X of* 1950).

121. *Notification issued with G.O. Ms. No.* 765, *Local Administration, dated* 11*th May* 1957, *amending the Rules for the conduct of election of Presidents of Panchayats framed under the Madras Village Panchayats Act,* 1950 (*Madras Act X of* 1950).

## APPENDIX.

[Vide answer to starred question No. 91 asked by Sri P. G. Manickam at the meeting of the Legislative Assembly held on 12th July 1957, page 295 supra.]

*Steps taken to Eradicate Corruption in Government service.*

An Act known as the Prevention of Corruption Act of 1947 has been enacted by the Government of India to secure more effective prevention of bribery and corruption than were already provided for in the Indian Penal Code. According to this Act, a public servant proved to have committed an offence of criminal misconduct in the discharge of his duty is punishable with imprisonment for a term which may extend to seven years, with or without fine.

2. In 1947, a Committee called the Corruption Enquiry Committee was constituted by Government under the Chairmanship of the Hon'ble Justice P. V. Rajamannar, Chief Justice, High Court, Madras, to consider ways and means to root out corruption in Public Services. Most of the recommendations of the committee were accepted and necessary orders issued. The Tribunal for Disciplinary Proceedings which enquires into cases of corruption relating to officers drawing a pay of Rs. 150 and above, was constituted mainly on the recommendation of that Committee. Some of the other recommendations of that Committee which were accepted and on which orders were issued were that—

(1) Supervision and inspection of the work of subordinate officers by the superior officers should be done frequently, and occasionally without previous notice. Superior officers during their visits to the offices of their subordinates should carefully scrutinise the judicial and executive orders issued by the latter and if those orders appeared to them to have been passed on improper grounds, they should go into the matter specifically and take necessary action.

(2) Interference by members of Political parties with the administration by responsible Government servants was deprecated.

(3) Government servants were strictly forbidden to obtain commodities through their subordinates in the course of their tours and the practice of obtaining free supplies wherever it existed was deprecated and severely dealt with.

3. The following further steps have also been taken to combat corruption in the State :—

(i) Prior to the formation of the 'X', Branch, C.I.D. in 1946, cases of corruption on the part of Government servants were being investigated by departmental authorities who either acted *suo motu* on their own knowledge or on receipt of complaints or under directions from the Government. As this was found to be

12th July 1957]

not quite satisfactory because the enquiring officers had not sufficient time or detachment to deal with it, a special machinery known as 'X' Branch, C.I.D. was set up. The 'X' Branch is under the administrative control of the Inspector-General of Police and the supervision of the Deputy Inspector-General of Police, Railways and C.I.D. Though the scope of the work of the 'X' Branch is confined to Provincial Government servants, the intention is that there should be no limitation in regard to the rank and appointments of officials and of the position of non-officials and local board officers about whom enquiries have to be made. On receipt of any complaint, the Government decide whether there is a *prima facie* case for investigation. Even anonymous petitions alleging corruption are taken into consideration if they contain specific allegations and if there is a *prima facie* case. If there is a *prima facie* case, the petition is forwarded to the 'X' Branch, C.I.D. for enquiry and report. On receipt of the report the Government decide whether departmental action would be sufficient or whether criminal prosecution should be undertaken. If departmental action is considered sufficient then the case is entrusted to the Tribunal for Disciplinary Proceedings if it relates to a Government servant drawing a salary of Rs. 150 per mensem and above: otherwise the connected records are passed on to the head of the department for taking necessary departmental action.

(ii) The Government have also ordered that due publicity should be given to cases of corruption which end in punishments. Monthly Press Notes are being issued for this purpose. Further quarterly lists of non-permanent Government servants who are discharged from service for suspected or proved corruption are also prepared and communicated to all Heads of Departments with a view to guard against their re-employment under the Government without knowing their antecedents.

4. The following administrative remedies have also been prescribed :—

(i) The greatest care should be taken in selecting officers entrusted with the grant of permits and the rules for granting permits should be drawn with the greatest precision.

(ii) The Government servants are also required to submit returns from time to time regarding movable as well as immovable properties acquired by them.

(iii) Departmental instructions are also issued to all concerned whenever abnormal delay in the disposal of disciplinary cases is noticed and also severe action is taken against the persons who indulge in dilatoriness in spite of these repeated instructions.

(iv) In launching a drive against corruption among public servants, the Government have been influenced by the view that no officer who has got a bad reputation and abundant suspicion against him has any right to be kept in service, even though guilt is not established against him by proof as in a criminal case. The fact that an officer's reputation is notoriously bad affords just

ground for the Government to refuse to continue to be represented or served by such an officer in any department. Though no single act of corruption may be judicially proved against such an officer, cumulative evidence that he was suspected in a number of instances to be corrupt is not only relevant but may well constitute as good a ground for his dismissal as direct evidence of any one case. The fullest protection has not only been assured, but if necessary formally given to all witnesses, whose examination is required for departmental enquiry.

(v) The Government have also impressed on the members of the public that it is their duty to report at once to superior authorities the conduct of any Government servant, who demands a bribe for any action he should take as part of his legitimate official functions. It should also be the duty of every Government servant to report to his superior officer, the conduct of any non-official approaching him for bribing him to gain some favour, for example, grant of licence, etc.

5. The measures taken to eradicate corruption enumerated above have been found to be satisfactory and to have the desired effect.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Saturday, 13th July 1957.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Price control of charcoal and firewood in the city*

* 97 Q.—SRI K. VINAYAKAM (on behalf of Sri N. K. Palanisami): Will the Hon. the Minister for Home be pleased to state the steps taken by the Government to control the prices of charcoal and firewood in the city?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Last December when the Government noted the rising trend in the price of firewood and charcoal, the Board of Revenue was asked to investigate the cause and suggest suitable measures to arrest it. The Board reported that the rise in the price of firewood was due to lack of wagon facilities and that the scarcity of charcoal was due to the non-issue of permits by the Andhra Government for adequate quantities. The General Manager, Southern Railways, was addressed to increase the allotment of railway wagons and the Government of Andhra were addressed for issuing permits for transporting charcoal on a reasonable scale. The General Manager, Southern Railways, has arranged to double the commodity quota for firewood and also to ensure that the revised quota is maintained. The reply due from the Government of Andhra is awaited.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Most of the people who want to transport firewood in bullock-carts and by headloads find it very difficult to transport it to Madras on account of the Timber Transit Rules. If those rules are revoked, the position will ease. Will the Government, therefore, consider the desirability of cancelling the permit system?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The application of the Timber Transit Rules is made in order to arrest illicit cutting of trees in the forests. If this is found to be interfering with the free transport of fuel to Madras, I shall look into the matter.

*SRI A. VEDARATHNAM PILLAI: தற்கால விறகு விலை அதிகம் இருப்பதன் காரணத்தால் இதைக் குறைப்பதற்கு 'காஸ் பிளாண்ட்' இங்கே உபயோகிக்கும்படி ஏற்பாடு செய்வதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: 'காஸ் பிளாண்ட்' உபயோகிப்பது எவ்வளவு தூரம் சாத்தியம் என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்யவில்லை. விறகுப் பஞ்சத்தை தீர்ப்பதற்கு காடுகளில் அதிக மரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. நெய்வேலி திட்டம் பூர்த்தியானால் ஓரளவு விறகு பஞ்சம் தீரும்.

SRI S. B. ADITYAN : விறகு கட்டுப்பாடு செய்வதாக இருந்தால் கூடவே கறுப்புச் சந்தை 'பிளாக் மார்க்கெட்' வந்துவிடும் என்பது அரசாங்க கவனத்தில் இருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அது எப்போதுமே உணர்ந்த உண்மைதான்.

SRI K. VINAYAKAM : A great portion of the supply of charcoal to the City of Madras was coming from Andhra State, especially from the Chittoor district. There was a ban imposed on the export of charcoal from Chittoor district due to their own regulations regarding movement. Has that ban been removed or is there any restriction still on the movement of charcoal?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Andhra Government are in order in regulating the movement of charcoal within their own area. Regarding its movement to this State, the ban has been removed.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Permits under the Timber Transit Rules are issued by the Forest Rangers and the District Forest Officers. They are always on tour and the ryots find it very difficult to find out their whereabouts and obtain permits which means lot of delay and inconvenience in the transport of firewood. Will the Government consider the desirability of issuing orders entrusting this work to the Revenue Inspectors of the firkas concerned so that they may issue permits till the Government come to a final decision in the matter?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : On the representation of the Leader of the Opposition, the orders have been revised so as to authorize the Revenue Officers to issue the permits.

SRI G. GOMATHI SANKARA DIKSHATAR : கூப்பு குத்தகை எடுத்து விறகு விலை அதிகமாக இருப்பதை அரசாங்கம் தடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : விலை கன்ட்ரோல் இருந்தால் அதைப்பற்றி அரசாங்கம் கவனிக்கும். விலை கன்ட்ரோல் இல்லாதபோது அரசாங்கம் அதில் தலையிடுவது சரியல்ல.

SRI A. VEDARATHNAM PILLAI : விறகின் தேவையைக் குறைப்பதற்கு மகன் ஜூளா அடுப்பு, ஹைதராபாத் ஜூளா அடுப்பு புகுத்தப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தேசீய விஸ்தரிப்புத் திட்டம் அமுலில் இருக்கும் இடங்களில் இம்மாதிரியான அடுப்புகளை உபயோகப்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.

SRI M. JAGANNATHAN : Will the Government take sufficient measures to ensure an unrestricted supply of firewood and charcoal to the consuming public, even after the introduction of price control?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no question of steps being taken for it. The supply is no doubt unrestricted.

13th July 1957]

SRI A. A. RASHEED : Has any step been taken to increase the acreage under casuarina?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, Sir; the hon. Member, I believe, has not listened to my speech during the discussion on the Forest Demand. I said, steps were being taken to increase the cultivation of casuarina.

### *Statues of foreigners*

* 98 *Q.*—SRI A. GOVINDASAMY (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have received any communication from the Centre during 1955–56 regarding the removal of the statues of foreigners from public places in the City;

(*b*) whether any reply has been sent in respect of it; and

(*c*) whether there is now any proposal to remove them?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*) Yes, Sir.

(*c*) The matter is under correspondence with the Government of India.

SRI P. S. CHINNADURAI : சுதந்திரப் போராட்டத்தின் நூற்றாண்டு விழா ஆகஸ்ட் 15, 16 தேதிகளில் கொண்டாட இருப்பதை முன்னிட்டு, அந்த தேதிகளுக்கு முன்பு இந்தச் சிலைகள் அகற்றப்படுவதற்கு அரசாங்கம் உத்திரவு போடுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : There is another general proposal to remove all the statues before August 1957. But the Ministry of Home Affairs, Government of India, have suggested in this connexion the removal before August 1957 of such statues as may be offensive to Indian sentiment.

SRI P. G. MANICKAM : இந்தச் சிலைகளை அகற்றி மியூசியத்தில் வைக்கவேண்டும் என்ற யோசனையை கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொள்வார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அவைகள் தகுந்த இடத்தில் வைக்கப்படும்.

SRI V. K. KOTHANDARAMAN : நமது கவர்னர் மாளிகையில் லார்ட் கிளைவின் படம் தங்கத்தினால் இருப்பதாகத் தெரிகிறது. அது உடனடியாக அகற்றப்படுமா ?

MR. SPEAKER : It is a hypothetical question. It is out of order. அங்கு இந்தமாதிரி படங்கள் இருந்தால் அவைகள் நீக்கப்படுமா என்பது கேள்வி. இக்கேள்வி, அங்கு அவை இருந்தால்தான் எழும். ஆகையினால், இருக்கிறதா என்று தெரிந்துகொண்டுதான் கேள்வி போடவேண்டும்.

SRI K. VINAYAKAM : What are the statues in the City of Madras which the Government consider offensive to Indian sentiment? Do they think that the portraits that are displayed in the

Rajaji Hall—portraits of foreigners who were ruling us tyrannically—can continue there? If not, will they consider the feasibility of removing them and housing them in the Government Estate, Guindy, where the Governor, the Head of our State, resides?

THE HON. SRI C. SUBRAMANIAM: This question was answered once before, not during this session but during the previous one. As regards the portraits in the Rajaji Hall, all of them are of ex-Governors of the State. I do not think they are in any way objectionable. But the main question relates to statues in public places.

SRI A. GOVINDASAMY: சென்னையிலுள்ள எந்த எந்த சிலைகளை அகற்றப்படுவதற்கு அரசாங்கம் சிபாரிசு செய்திருக்கிறது.

THE HON. SRI C. SUBRAMANIAM: எந்த எந்த சிலைகளை பொது மக்கள் ஆட்சேபிக்கிறார்களோ அவைகளை நீக்கவேண்டும் என்பது சர்க்காரின் கொள்கை. அங்கத்தினர்கள் இந்த விஷயத்தில் ஏதாவது அபிப்பிராயம் தெரிவித்தால் அவைகளையும் ஆலோசனை செய்து ஒரு முடிவு செய்யமுடியும்.

9-10 a.m. SRI M. JAGANNATHAN: Sir, there is an equestrian statue in Mount Road which, I believe, is the statue of a foreigner. Will the Government consider the desirability of removing this statue immediately and replacing it by the statue of Shivaji?

THE HON. SRI C. SUBRAMANIAM: Perhaps the hon. Member is referring to the status of Munro on the Mount Road. As far as I am able to judge, I do not think there can be any sentimental objection. Therefore I do not think I can immediately say that the Government would take such a decision to replace it by any other statue.

SRI K. VINAYAKAM: That is the reason why I put my question. What are the statues to which the Government of Madras take objection. If we mention particular statues like Munro statue, the Government simply say, ' We do not consider it offensive '. What are those statues that the Government intend to remove from public places?

THE HON. SRI C. SUBRAMANIAM: It is not a question of Government taking objection to statues. I already mentioned about statues which are offensive to Indian sentiment. I said, ' I am prepared to be guided by the opinion expressed by hon. Members in this House '.

SRI N. R. THIAGARAJAN: இந்த நாட்டை அடிமையாக வைத்திருந்ததற்கு ஞாபகச் சின்னமாக விளங்கும் அன்னியச் சிலைகளை எடுத்து மியூஸியத்தில் வைப்பதோடுகூட, அந்த அன்னியர்களுக்கு அடிவருடி அவர்களுக்குத் துணையாக இருந்து, இந்த நாட்டை அடிமைப்படுத்துவதற்கு உதவி புரிந்தவர்களின் சிலைகளையும் சேர்த்து அந்த மியூஸியத்தில் வைப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: கனம் அங்கத்தினர் சொல்லக்கூடிய யோசனை ரொம்பப் பொருத்தமான யோசனை. அதைப்பற்றி ஆலோசனை செய்யவேண்டியது அவசியம்.

13th July 1957]

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, அன்னியர்களிடம் இந்தியாவிற்குச் சுதந்திரம் தேவை என்று சொன்ன மிகப் பெரிய மகானுபாவர்களுடைய சிலைகளையும் வைப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : புதிதாகச் சிலை வைக்கக் கூடிய ஒரு திட்டத்தை நிறைவேற்றுவதாக சர்க்காருக்கு உத்தேசம் இல்லை.

SRI P. S. CHINNADURAI : சபாநாயகர் அவர்களே, உத்தரப் பிரதேச சர்க்கார், அந்த ராஜ்யத்திலே உள்ள பிரிட்டிஷாரின் சிலைகளை உடனே அப்புறப்படுத்த வேண்டுமென்று உத்திரவிட்டிருப்பது இந்த ராஜ்ய அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படியானால், அதே கொள்கையை அனுசரித்து இந்த ராஜ்ய அரசாங்கமும், இந்த ராஜ்யத்திலுள்ள பிரிட்டிஷாரின் சிலைகளையும் பொது இடங்களிலிருந்து அப்புறப்படுத்துவதற்கு உடனடியாக உத்தரவிடுவதற்கு முன்வருவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : உத்தரப் பிரதேசத்தில் அப்படிப் பண்ணினார்கள், ஆகவே, நாமும் அப்படிப் பண்ண வேண்டும் என்ற கொள்கையை நான் அனுசரிக்கத் தயாராய் இல்லை. இது சரியா இல்லையா என்று யோசனை செய்து முடிவு செய்வதற்குத் தயாராயிருக்கிறேன்.

SRI D. DASARATHAN : தலைவர் அவர்களே, கனம் மந்திரி அவர்கள் மன்றோ சிலையைப்பற்றி கூறிய போது, "பொது மக்களிடத்திலே வெறுப் புணர்ச்சி இருக்காது ; ஆகவே, அதை நீக்குவதற்கு எந்த விதமான சந்தர்ப்பமும் இருக்காது" என்று குறிப்பிட்டார்கள். குறைந்தபட்சம், அங்கே போக்குவரத்து சாதனத்தை நல்ல முறையிலே அமைப்பதற்காகவாவது அந்தச் சிலையை எடுக்க சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்தச் சிலை அங்கு இருப்பதால் தான் போக்குவரத்து கட்டுப்பாடு செய்வதற்கு சௌகரியமாக இருக்கிறது என்பதை கனம் அங்கத்தினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

SRI A. A. RASHEED : Have the Government received any offers from foreign countries for these statues?

THE HON. SRI C. SUBRAMANIAM : We have not advertised calling for offers.

SRI V. K. KOTHANDARAMAN : இந்த மாகாணத்தில் இருக்கக் கூடிய எல்லா ஏகாதிபத்தியவாதிகளுடைய சிலைகளையும் அப்புறப்படுத்தி, அவைகளுக்குப் பதிலாக இந்த நாட்டின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட மகாத்மா காந்தி, நேரு போன்றவர்களுடைய சிலைகளை வைக்கவேண்டும்.

அதேநேரத்தில், இந்த சட்டசபைக்கு முன்னாலே, நமக்கெல்லாம் ரொம்ப அவமானகரமாக இருக்கக்கூடிய ஒரு சிலை இருக்கிறதே அதை அப்புறப்படுத்திவிட்டு, அதற்குப் பதிலாக கட்டபொம்மன் சிலையை அங்கே உடனடியாக வைப்பதற்கு சர்க்கார் முன்வருமா—சுதந்திர தினத்திற்கு முன்பாக ?

THE HON. SRI C. SUBRAMANIAM : நம்முடைய தேசீய தலைவர்களுடைய உருவச் சிலைகளை சர்க்காரே முன்வந்து வைப்பது என்னும் கொள்கை இப்பொழுது இல்லை. தனிப்பட்டவர்களோ, ஸ்தல ஸ்தாபனங்களோ எங்காவது வைப்பதற்கு உத்தேசம் இருந்தால், அதற்கு வேண்டிய உதவியை சர்க்கார் அளிக்கிறது.

இங்கே இருக்கும் சிலையைப் பொறுத்தவரையில், அது கனம் சபாநாயகர் அவர்களே முடிவு செய்யவேண்டிய விஷயம். இந்தச் சிலை இந்த சட்ட சபையைச் சார்ந்ததாக இருக்கக்கூடியது. அதைப்பற்றி கனம் சபாநாயகர் அவர்கள் எந்த முடிவு செய்தாலும் அதை ஏற்றுக்கொள்வதற்கு நாங்கள் தயாராய் இருக்கிறோம்.

[13th July 1957

SRI K. VINAYAKAM : Sir, was it the considered opinion of this Government some time back that these statues of the foreigners should be retained in places where they are so as to constantly remind us that we were once subjected to foreign rule lest we should fall once again a prey to anybody's domination? When did this Government change that view and how is it that they should now wait for public opinion to remove these statues?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, that was not the considered policy decision of this Government. I think I mentioned once that that aspect should also be taken into consideration in coming to a decision. The present policy of the Government is to remove all the statues which are offensive to Indian sentiment.

SRI R. KRISHNASAMI NAIDU : தலைவர் அவர்களே, நம் நாட்டில் விடுதலைக்காகப் போராடிய பெரியவர்களுடைய சிலைகளை ஆங்காங்கே ஏற்படுத்துவது அவசியம் என்பதை ஒப்புக்கொள்வதோடு கூட, இந்தத் தலைமுறையில் வாழும் சிறுவர் சிறுமியர்களும், மற்ற பிரஜைகளும் சுதந்திர நாட்டின் பிரஜைகள் என்ற பொறுப்புணர்ச்சியோடு முற்கால, பிற்கால சரித்திர வரலாறுகளை ஒப்பிட்டுப் பார்த்து, நிலைமைகளைச் சரியாகப் புரிந்துகொண்டு அதன்படி தகுந்த பிரஜைகளாக வளரும்வரை, உணர்ச்சி வசப்படாமல் சரித்திர வரலாறுகளை அறிந்து கொள்ளுவதற்கும் சில சிலைகள் இருப்பது அவசியம் எனக் கருதியும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்ன ஆலோசனைக்கு நான் மிகவும் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

SRI A. GOVINDASAMY : மந்திரி அவர்கள் சற்றுமுன் சொன்ன பதில் ஏற்கெனவே சொன்ன பதிலுக்கு முரணாக இருக்கிறது. எந்தக் கருத்தை அரசாங்கம் திட்டமாக வைத்திருக்கிறது என்பதை அறிய முடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : நான் சொன்ன பதில்களை கனம் அங்கத்தினர் அவர்கள் கவனித்து வந்திருப்பார்களானால், கொள்கையைப் பொறுத்த மட்டில்—இப்பொழுது தற்காலிகமாகச்—சொல்லுகிறேன். பின்னால் என்ன முடிவு எடுக்கப்படும் என்பதை நான் சொல்வதற்குத் தயாராயில்லை ; சொல்லத் தகுதியும் இல்லை—"ஆட்சேபகரமாக இருக்கக் கூடிய சிலைகளை ஆகஸ்டு மாதம் 15-ந்தேதிக்குள்ளாக அகற்றிவிடுவது என்பது" சர்க்காருடைய கொள்கை என்பதை அவர்கள் அறிந்திருக்கலாம். ஆனால், எவை எவை ஆட்சேபகரமான சிலைகள் என்பதை இங்கு இருக்கும் கனம் அங்கத்தினர்களுடைய யோசனையையும் எடுத்துக் கொண்டு முடிவு செய்யத் தயாராயிருக்கிறோம் என்று நான் சொன்னேன். இதுதான் சர்க்கார் இப்பொழுது அனுசரித்து வரும் கொள்கை.

மற்றும் இருக்கக்கூடிய சிலைகளைப்பற்றி வெவ்வேறு அங்கத்தினர்கள் வெவ்வேறு அபிப்பிராயம் சொன்னார்கள். அதில் எந்தவிதமான முடிவும் எடுக்கப்படவில்லை. இதையெல்லாம் ஆலோசித்து ஒரு முடிவு எடுக்கப்படும்.

*Meters for private water taps*

* 99 Q.—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of
9-10 a.m. Sri M. Kalyanasundaram) : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether Municipal Council, Tiruchirappalli, has made recently any representation to the Government for dropping the proposal to fix meters for private water taps?

13th July 1957]

THE HON. SRI M. A. MANICKAVELU : The proposal of the Municipal Council, Tiruchirappalli, has been accepted subject to certain conditions.

SRI K. SATTANATHA KARAYALAR : May I know the conditions, Sir?

THE HON. SRI M. A. MANICKAVELU : The original proposal was to have meters for the taps. That means about 4,000 meters will be required. Then there will be the question of availability, repair and all that. Therefore the municipal council has now modified the proposal and has proposed to increase the tax at the tap rate system, and that has been accepted.

*Religious Endowment lands*

* 100 *Q.*—SRI K. B. S. MANI (on behalf of Sri C. Muthiah Pillai) : Will the Hon. the Minister for Home be pleased to state whether the Government have given any directions to officials concerned regarding the assignment of Endowment lands as house-sites to tenants already in occupation?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No such directions have been given.

SRI K. VINAYAKAM : Sir, the present rules under the Endowments Act are that the lands belonging to the temples should not be leased to the tenants for more than five years and that once in five years leases have got to be auctioned. In these circumstances, tenants enjoying lands in Madras City, especially near Kodambakkam, are not in a position to construct pucca houses on those lands, because they run the risk of the auction of the lands every five years. Therefore, will the Government consider the possibility of revising the rules and instructing the Endowments department to lease the lands permanently so that the tenants may construct pucca houses?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There should be no difficulty in advising the temples and other institutions to sell these sites outright to tenants, who have been in occupation of them. As regards leases, this question will be examined.

9-20 a.m.

SRI K. VINAYAKAM : Is it not a fact that no temple authorities have power to sell it permanently to anybody under the existing Act?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I may tell the hon. Member that there should be no difficulty in authorising the temple authorities to sell the land for this purpose.

[13th July 1957

### *Religious Endowment lands*

* 101 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri C. Muthiah Pillai) : Will the Hon. the Minister for Home be pleased to state the steps taken by the Government to prevent intermediaries taking Religious Endowment lands on lease and making profit by sub-leasing them to cultivating tenants?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The question of abolition of intermediaries between landlord and tenant is under the consideration of the Government. The existing leases of temple and other Religious Endowment lands are subject to the provisions of the Madras Cultivating Tenants Protection Act of 1955, Amendment Act, 1956 and the rules framed thereunder and the payment of Fair Rent Act, 1956, and its rules.

### *Higher Secondary School*

* 102 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Finance be pleased to state the number of high schools that are to be raised to higher secondary schools as per the recommendations of the *Three-Year Degree Course Estimates Committee*?

THE HON. SRI C. SUBRAMANIAM : The question of reorganization of secondary education is under consideration.

SRI K. SATTANATHA KARAYALAR : இந்தக் கமிட்டியின் சிபார்சுகளை சர்க்கார் அங்கீகரிக்கவேண்டுமென்று கருதுகிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கேள்வியைத் திருப்பிச் சொல்லுங்கள்.

SRI K. SATTANATHA KARAYALAR : I refer to the recommendations of the Estimates Committee regarding the Three-Year Degree Course.

THE HON. SRI C. SUBRAMANIAM : அதை யுனிவர்ஸிடி ஒத்துக் கொண்டு நடைமுறைக்கே கொண்டுவந்திருக்கிறார்கள். அதை ஒத்துக் கொள்வதா இல்லையா என்கிற பிரச்னையே நமக்கு இல்லை.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, இந்த மூன்றாண்டுப் பட்டப் படிப்புத திட்டமானது பல்கலைக் கழகத்தாரால், உயர் நிலைப் பள்ளித் திட்டமானது இன்ன வகையில் நடைபெறும் என்ற முடிவு எடுக்கப் படாமல் இருக்கும்போது அமுல் நடத்தப்படுவது நல்லதுதானா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதை முடிவு செய்வதற் குள் அவர்கள் அவசரப்பட்டுக்கொண்டு ப்ரி-யூனிவர்சிடி வகுப்பை ஆரம் பித்துவிட்டார்கள். இனிமேல் நாம்தான் கூடிய சீக்கிரம் உயர் நிலைப் பள்ளித் திட்டத்தை கவனித்து முடிவு செய்தாகவேண்டும்.

SRI K. VINAYAKAM : Is the question of reorganizing secondary education under consideration? If so, what is the *modus operandi* which the Government have adopted to assess the views of the public or of the non-official bodies or even the teaching

13th July 1957]

profession? May I know whether their views will be considered and what steps, the Government propose to take to implement those recommendations in a reasonable time?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I am afraid the hon. Member is quite out of date. Or, I do not know whether he has forgotten the entire procedure which was adopted in regard to this matter. The matter was discussed in the previous Legislature, a White Paper was published, a Committee of the Legislature was appointed and it went into the entire question, elicited public opinion on it, examined witnesses and have submitted their report. That report is now under the consideration of the Government. Therefore, further consultation of public opinion and all those things do not arise.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, கல்வித் துறையில் செய்யப்பட்டிருக்கிற சீர்திருத்தம் மேல் நிலையில் செய்யப்பட்ட காரணத்தால் கீழ் நிலையில் இருந்து மேல் நிலைக்கு வருகிற மாணவர்களுக்கு இடையூறு உண்டாகிறது. ஆகவே மேல் நிலையில் செய்யப்பட்டுள்ள சீர்திருத்தத்தை நிறுத்திவைத்து, கீழ் நிலையிலிருந்து அந்த சீர்திருத்தம் தொடங்குவதற்கு அரசாங்கம் முடிவு செய்யுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போது இருக்கக்கூடிய நிலைமையில் சர்வகலாசாலைகள் எவ்விதம் வேண்டுமானாலும் தாங்களே முடிவு செய்துகொள்வதற்குச் சுதந்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அந்த அதிகாரத்தை உபயோகித்து இந்த மாறுதலைச் செய்துவிட்டார்கள். அப்போது கனம் அங்கத்தினர் சபையில் இல்லாமல் இருந்தாலும்கூட பத்திரிகை மூலமாக நடந்த விஷயம் தெரிந்திருக்கலாம். இதை இப்போது அவசரமாகக் கொண்டுவராமல் கொஞ்சம் நிறுத்திவைத்து, உயர்நிலைப் பள்ளியில் என்ன சீர்திருத்தம் செய்யப்படுகிறது என்பதைப் பார்த்துக்கொண்டு அதற்கு ஏற்றாற்போல யுனிவர்சிடியில் மாறுதலைக் கொண்டுவரலாம் என்பதற்காக நான் முயற்சி செய்தேன். என்னுடைய முயற்சி கல்வி மந்திரியாக இருந்தும்கூடப் பயன் அளிக்கவில்லை. ஆகவே சர்வகலாசாலைகளைப் பொறுத்தவரையில் இந்த முடிவை ஏற்றுக்கொண்டு அமுல் நடத்துகிறார்கள். ஆகையால் இப்போது நாம் உயர்தரப் பள்ளியை எப்படி மாற்றியமைப்பது என்பதைப்பற்றி ஆலோசிக்கவேண்டிய நிலைமையில் இருக்கிறோம்.

SRI K. VINAYAKAM : Are the Government aware that the introduction of the regional language in high schools as the medium of instruction is causing considerable difficulty to the students who go to the colleges as they are not in a position to follow the lectures that are delivered in English which happens to be the medium of instruction in the Universities? Have the Government thought of any solution to remove this disability which the students feel when they go to the University classes?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir, this is one of the very serious problems facing not the Government but the students generally. They are under a great handicap when, after studying all the subjects in the mother-tongue or the regional language in the high schools, the medium of instruction is switched on to English when they go to the University classes. It causes great inconvenience and difficulty to the students. As a matter of fact, that has been under the consideration of the Government

[13th July 1957

and as far as I am concerned, the only solution I am able to think of, is to adopt the regional language as the medium of instruction in the University classes also.

SRI A. GOVINDASAMY : ப்ரி-யுனிவர்சிடி ரிசல்ட் வந்த பிறகு அதனால் பலன் இருக்குமென்று அரசாங்கம் கருதுகிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : பரீட்சை முடிவுகளைப் பார்த்து இதிலே எந்தவிதமான முடிவையும் சொல்லிவிட முடியாது. பரீட்சை நடத்துகிறவர்கள் நூற்றுக்கு பத்து பேர்தான் தேர்ச்சி பெறக்கூடிய நிலைமையில் இருந்தாலும் 50 பேர்களாவது பாஸ் செய்யவேண்டும் என்று நினைக்கிறார்கள். ஆகவே தான் இது நல்லது, கெட்டது என்று பரீட்சை ரிசல்டை வைத்துக் கொண்டு முடிவுக்கு வரமுடியாது. ஆனால் நான் கேள்விப் பட்டவரையில் "ப்ரி-யுனிவர்சிடி கோர்ஸ்" கடினமாக இருக்கிறது. அதற்காக ஏற்படுத்தியிருக்கக்கூடிய பாடங்களை முழுவதும் ஒரு வருஷத்தில் முடிப்பது கஷ்டமாக இருக்கிறது என்று தெரிய வருகிறது. இதைப் பரிசீலனை செய்து பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

SRI T. S. RAMASWAMY PILLAI : திருவாங்கூர்-கொச்சி பகுதியில் இருந்து சென்னை ராஜ்யத்தோடு சேர்ந்த பகுதிகளில் இருந்து ப்ரி-யுனிவர்சிடி வகுப்பில் தேர்ச்சி பெற்று வருகிற மாணவர்களுக்கு நம்முடைய கலாசாலையில் அனுமதி கொடுக்கிறார்களா ? அவர்களை அங்கீகரித்துக் கொள்கிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : திருவாங்கூர்-கொச்சி கலாசாலைகளில் இந்த வருஷம்முதல்தான் "ப்ரி-யுனிவர்சிடி கோர்ஸ்" எடுத்துக் கொள்வதாகக் கேள்விப்பட்டேன்.

SRI T. S. RAMASWAMY PILLAI : சென்ற வருஷமே அமுலுக்கு வந்துவிட்டது.

THE HON. SRI C. SUBRAMANIAM : அப்படியானால் இந்த யுனிவர்சிடியில் அங்கீகரித்துதான் ஆகவேண்டும்.

SRI K. VINAYAKAM : As matters stand to-day, the University is an autonomous body which is not susceptible to public opinion very easily in regard to the introduction of the regional language as the medium of instruction in colleges and other such matters. Will the Government therefore think of the possibility of amending the University Act suitably so that the University may change its views and catch up with the public opinion prevailing in the country?

THE HON. SRI C. SUBRAMANIAM : I am hoping that such a step will not be necessary and that the University also will take note of the existing circumstances and take a just decision in the matter.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, இப்போதுள்ள கல்விச் சீர்திருத்தத்தினால் பல இடையூறுகள் ஏற்பட்டிருக்கிற நிலைமையில், பல்கலைக்கழக "ப்ரி-யுனிவர்சிடி" தொடக்க நிலை வகுப்பில் ஒரு ஆண்டு படித்து மூன்று ஆண்டு பட்டப் படிப்புக்குச் செல்வதில், உயர்நிலைப் பள்ளி படிப்புக்குச் தொடர்ச்சியாக ஒரு ஆண்டு ப்ரி-யுனிவர்சிடி தொடக்க நிலைப் படிப்பு வட்டார மொழியிலேயே நடத்த வேண்டுமென்று அரசாங்கம் பல்கலைக் கழகத்தைக் கேட்டுக்கொள்ளுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது கஷ்டத்தை இன்னும் அதிகப்படுத்துமே தவிர குறைக்காது. தொடக்க நிலை வகுப்பில் வட்டார மொழியில் படித்துவிட்டு, பட்டப்படிப்புக்குப் போகும்போது ஆங்கிலத்தில்

13th July 1957]

படிப்பதனால் சிரமம் இன்னும் அதிகம். இப்போதாவது பட்டப்படிப்பு வகுப்புப் பாடங்களை ஓரளவு புரிந்துகொள்ள தொடக்க நிலை படிப்பு ஆங்கிலத்தில் இருப்பது பயன் அளிப்பதாக இருக்கலாம்.

SRI A. R. SUBBIAH MUDALIAR : இவ்வருஷம் ப்ரி-யுனிவர்சிடி வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்கள் எத்தனை சதம் இருக்கும் என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஐம்பது அல்லது ஐம்பத்தைந்து சதவிகிதம் இருக்கும்.

MR. SPEAKER : Questions are over.

**[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

**II.—CALLING ATTENTION TO A MATTER OF URGENT PUBLIC IMPORTANCE UNDER RULE 40 OF THE ASSEMBLY RULES *RE* STEPS TAKEN FOR THE PREVENTION OF THE SPREAD OF INFLUENZA.**

MR. SPEAKER : I have received a Motion under Rule 40 (1) of the Assembly Rules from hon. Member Sri V. K. Kothandaraman calling attention of the Hon. the Minister for Health to a matter of urgent public importance, viz., the steps taken by the Government to prevent the spread of Influenza.

SRI V. K. KOTHANDARAMAN : நம் ராஜ்யத்தில் இன்புளுவன்ஸா என்கிற நோய் அதிகமாக பரவி அதனால் லட்சக்கணக்கான கோடிக் கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டார்கள், என்பது நம் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இதைப்பற்றி 10 நாட்களுக்கு முன்னால் இதில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இதை உடனடியாக கவனத்தில் எடுக்க வேண்டும் என்றும் எழுதி கொடுக்கப்பட்டது. ஆனால் அது இப்போது வந்திருக்கிறது. ரொம்பவும் சந்தோஷம். ஒருவேளை ஹெல்த் டிமாண்ட் விவாதத்திற்கு வருவதற்கு முன்னால் இன்புளுவன்ஸா காரியத்தை விவாதத்திற்கு எடுக்க வேண்டும் என்று நினைத்து இதை 10 நாட்களுக்குப் பிறகு கொண்டு வரவேண்டுமென்று நினைத்தார்களோ என்னவோ தெரியவில்லை. ஆனால் இந்தவியாதி பரிபூரணமாக தீர்ந்து விட்டதா என்று பார்க்கும்பொழுது சில இடங்களில் இருக்கத்தான் செய்கிறது. ஒவ்வொரு ஜில்லாவிலும் இருக்கக்கூடிய நகரசபை அதிகாரிகள் அல்லது ஜில்லா அதிகாரிகள் இவர்கள் எல்லாம் ஓரளவு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது நம் எல்லோருக்கும் தெரியும். ஆனால் நம் சர்க்காரிலிருந்து எந்த அளவுக்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமோ அந்த அளவுக்கு எடுக்கப்படவில்லை என்பதை இந்த சந்தர்ப்பத்தில் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஆகவே இது போன்ற சந்தர்ப்பங்களில் நாம் தீவிரமான கவனம் செலுத்தி இம்மாதிரி வியாதிகளை போக்குவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவதின் மூலம் இம்மாதிரி வியாதிகளை தடுக்க முடியும். ஆகவே இதுபோன்ற தொத்து வியாதிகள் பரவாமல் இருக்கவும், இதற்கு காரணமாக இருக்கக்கூடிய முறைகளையும் தடுக்கவேண்டும். இப்போது அணுக்குண்டு ஆராய்ச்சி செய்வதின் காரணமாகத்தான் இது வந்தது என்று சொல்லப்படுகிறது. இதற்காக மத்திய சர்க்காரில்கூட இது போன்ற வியாதிகள் பரவாமல் இருக்கவும், உலக சமாதானத்திற்காகவும், அணுக்குண்டு ஆராய்ச்சி நடத்தக்கூடாது என்று ஒரு தீர்மானம் போட்டு இருக்கிறது. அந்த அடிப்படையில் பார்க்கும்பொழுது இந்த மாதிரி ஆராய்ச்சி சோதனைகளால் இன்னும் என்னென்ன வியாதிகள் வருமோ என்கிற பீதி ஏற்படக்கூடிய நிலையில் இருக்கிற காரணத்தால் இந்த மாதிரியான சந்தர்ப்பங்களில் மிக தீவிரமான கவனம் எடுத்து மக்களுக்கு ஆவன

செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு இனிமேல் இவ்விதமான காரியங்களுக்கு எழுதிக்கொடுத்தால் அதை உடனடி நடவடிக்கைக்கு எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I am afraid that any reference to influenza now will be in the nature of a reminder to Influenza God which has already made a retreat. As regards the point that this is the result of exploding atomic bombs, no definite conclusions have been come to. People talk differently about that. I shall now give a brief account of the steps taken by the Government to prevent the spreading of influenza in this State.

When it became known that cases of influenza had occurred in parts of the City, the Corporation health authorities took immediate steps to inspect every hotel and lodging house and to see that all the persons suffering from the epidemic were isolated. Severe cases requiring hospitalization were removed to the I.D. Hospital, Tondiarpet. Infection, however, continued to spread and control and preventive measures were further tightened up. Treatment of cases was done at the Government hospitals and also in Corporation dispensaries and Maternity and Child Welfare Centres. Five mobile medical relief units were put into action to render free medical aid, particularly in congested and slum areas. Additional bed accommodation was provided in the I.D. Hospital and the Government sanctioned a special grant of Rs. 10,000 to the Corporation to this end and also lent the services of Medical and other personnel, motor vehicles, etc. Adequate quantities of drugs were stocked and free distribution of medicines was made to all the persons who sought treatment. With a view to control the spread of infection all the educational institutions were closed till 30th June 1957 and restrictions were also imposed on cinema shows. The Government issued a press note on 30th May 1957, informing the public of the steps taken to combat the disease and advising them to avoid crowded places and to gargle the throat regularly with salt solution or a mild antiseptic as a precautionary measure. A press note was again issued on 11th June 1957 informing the general public of the prophylactic measure of painting of the throat with Mandel's solution twice a day as a preventive measure, especially for those in contact with influenza patients.

With the on set of infection in the Madras City, infection also spread to the mufassal areas by the movement of infected persons and contacts. The source of infection was traceable to Madras and Bombay. Even in the last week of May 1957 itself, sporadic infection was reported from Musiri taluk in Tiruchirappalli district and in Dindigul municipality. With the increase in the infection in Madras City, more and more areas began to report cases so much so the infection subsequently spread to all the districts in the

State. In the mufassal districts the Collectors, wherever necessary, issued necessary notifications under the Madras Public Health Act and vested necessary powers in the Health Officers to combat the disease. Preventive measures such as closure of schools and restriction on cinema shows, have been taken wherever necessary. Throat painting campaigns with Mandel's solution as a prophylactic against influnza have also been arranged among groups of persons who can be controlled. The general public have also been informed about its efficacy. Educative propaganda by distribution of leaflets in English and Tamil on Influenza and its control has also been done. Necessary Public Health staff were mobilized in the affected areas and wherever Government and Local Board Medical institutions functioned, treatment of cases was done therein. Additional Medical and other staff were also appointed. In the infected villages, free distribution of drugs such as Sulphadizine and A.P.C. tablets was arranged through the Health Inspectors in close collaboration with the Medical department. Domicillary insolation of cases was also done. Severe cases were removed to the nearest Government hospital or the improvised sheds put up for hospitalization and treatment. Mobile Medical Relief Units have also been moving from village to village attending to the treatment of cases. Adequate stocks of medicines, drugs and disinfectants have been built up at the mufassal hospitals and at the District Health Offices to meet any emergency.

All the Medical and Public Health staff are on the alert. Control and preventive measures are still continued in the affected areas. Stock piling of drugs is also being attended to. As a result of the measures adopted to combat the disease and in spite of its extensive nature, there have been comparatively few deaths. The situation is now well in hand. The epidemic has almost abated in Madras City and is definitely on the decline in the districts.

## III.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1957-58—*cont.*

### (1) DEMAND XI—DISTRICT ADMINISTRATION AND MISCELLANEOUS —*cont.*

MR. SPEAKER: We shall now resume the discussion on Demand No. XI. May I ask the Hon. Minister for Revenue how long he will take to reply.

THE HON. SRI M. A. MANICKAVELU: அரை மணி அல்லது 30 நிமிஷம்.

MR. SPEAKER: அரை மணி என்பதும் 30 நிமிஷம் என்பதும் ஒன்றுதானே. இதில் பேசுவதற்கு அனேகம் பேர்கள் இருக்கிறார்கள். 10 நிமிஷம் வீதம் பேசினால் 18 பேர்கள்தான் பேச முடியும். ஆதலால் எல்லா அங்கத்தினர்களும் ஏழு நிமிஷம் வீதம் பேசவேண்டும். அதற்கு மேற்படக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

**Sri A. R. MARIMUTHU:** கனம் சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் வந்திருக்கின்ற வெட்டுப்பிரேரணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இப்போது அதிகாரங்கள் எல்லாம் ஒரே இடத்தில் குவிந்து கிடக்கிறது. இந்த நிலை மாறி கீழே இருக்கக்கூடிய அதிகாரிகளுக்கு அதிகாரங்களை பிரித்து கொடுக்க வேண்டும் என்றும் இவ்விதமான ஒரு சீர்திருத்தத்தை கொண்டு வரவேண்டுமென்றும் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். இப்போது இருக்கும் வரிவசூல் முறையினால் விவசாயிகள் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். வரிவசூலின் போது விவசாயிக்கு எவ்வளவு நிலம் இருக்கின்றது, அந்த நிலத்தின் தீர்வை எவ்வளவு என்கிற விவரம் நிலச்சொந்தக்காரர்களுக்கு தெரியவில்லை. ஆகவே வரிவசூல் செய்யும்போது இவ்வளவு தொகை என்று அறிந்து கொண்டால் நல்லதாக இருக்கும். ஆகவே வரிவசூல் ஆரம்பிப்பதற்கு முன்னால் அவரவர்களுடைய நிலங்களின் சர்வே நெம்பர்கள், அவைகளுடைய தீர்வை, அதற்குள்ள தண்ணீர்தீர்வை, அவைகளுக்குள்ள ஸெஸ் எவ்வளவு என்கிற விவரங்களை எல்லாம் குறித்து வரி வசூல் செய்வதற்கு முன்பாக விவசாயிகளுக்கு டிமாண்ட் நோட்டீஸ் மூலமாகக் கொடுத்தால் அவர்கள் எவ்வளவு செலுத்தவேண்டும் என்பது தெரியும். இதன் மூலம் அவர்களுக்கு இந்த விதமான கஷ்டங்கள் இருக்க முடியாது.

இந்த முறையை சர்க்கார் கையாளுவார்களேயானால் அதனால் விவசாயிகளுக்கு இருக்கக்கூடிய தொல்லைகள் மிகவும் குறையும். அதோடு கூட அந்த சொத்துக்களை யார் யார் அனுபவித்தார், யாருடைய அனுபவத்தில் இருந்து வந்திருக்கிறது என்கிறதும், பிறகு ஏற்படக்கூடிய சர்ச்சைக்கு இடம் இல்லாமல், கோர்ட் வேலைகூட சிறிய அளவு குறையும் இந்த ஏற்பாட்டினால் என்பதுதான் எனது அபிப்பிராயம். அந்த முறையை சர்க்கார் நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். மேலும், நிர்வாக நடைமுறையில் மிகவும் மெதுவான முறை கையாளப்படுவதால் விவசாயிகள் பலவிதமான தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள், என்பதை நாம் அனுபவத்திலிருந்து அறிகிறோம். சாதாரணமாக ஒரு விவசாயி தன் நிலத்தில் விளைச்சல் பாதிக்கப்பட்டிருக்கிறது, ஆகவே தனக்கு ரெமிஷன் கொடுக்க வேண்டுமென்று மனுச் செய்தால் கதிர் அறுவடை கழிந்து மெதுவாக அதிகாரிகள் வந்து பார்வையிடுகிறார்கள். ஆகவே ரெமிஷன் கிடைக்காமல் போகிறது. ஆகவே நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், ரெமிஷனுக்கு மனுக் கொடுத்தால் எந்த சமயத்தில் போய்பார்க்க வேண்டுமோ அந்த சமயத்தில், காலம் தாழ்த்தாமல், காலத்தோடு போய் பார்த்தால்தான் விவசாயிகளுக்கு ரெமிஷன் கிடைக்கமுடியும். இம்மாதிரியான காரியங்களில் துரிதமான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள சர்க்கார் முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடுகூட விவசாயிகளுக்கு ரெமிஷன் கொடுக்கும் முறையிலே, இரண்டு அணா பயிருக்குத்தான் ரெமிஷன், அதற்கு மேல் உள்ள பயிர்களுக்கு ரெமிஷன் இல்லை என்று இருக்கிறது. ஒரு விவசாயி ஆறு அணா பயிரில் விவசாயம் செய்தால்தான் அவனுக்கு சேதா கிடைக்கும். ஆகவே, இரண்டு அணா பயிருக்குத்தான் ரெமிஷன் கொடுக்கப்படும், அதற்கு மேல் உள்ளவற்றிற்கு ரெமிஷன் கிடையாது என்று சொன்னால் விவசாயிகள் அதனால் மிகவும் கஷ்டத்திற்கு உள்ளாவார்கள். அதனால் விவசாயிகளுக்கு ஏற்படும் தொந்தரவு சொல்ல முடியாது. ஆகவே, சர்க்கார் இரண்டு அணா பயிருக்குமேல் உள்ள பயிர்களுக்கு ரெமிஷன் கிடையாது என்று சொன்னால், சர்க்கார் விவசாயிகளுக்கு மேலும் தொந்தரவு கொடுக்கும் நிலைதான் ஏற்படுகிறது. ஆகவே, ஆறணா பயிர் விளைச்சலுக்கும் ரெமிஷன் கொடுக்கப் படவேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அதோடு கூட இந்த விவசாயிகள் கடன் சுமையால் மிகவும் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள் என்பது எல்லோரும் ஒப்புக்கொள்ளக் கூடிய உண்மையாகும். இப்பொழுது சர்க்கார் மூலமும், கூட்டுறவு சங்கங்கள் மூலமும் விவசாயிகளுக்கு வேண்டிய கடன்தொகை ஆறு சதவிகிதம்தான் கிடைக்கிறது என்பது சர்க்கார் புள்ளி விவரங்களிலிருந்து தெரிகிறது. ஆகவே பாக்கி தொகைகளை எல்லாம் பக்கத்தில்

உள்ள பண லேவாதேவிக்காரர்களிடம்தான் வாங்க வேண்டியிருக்கிறது. சாதாரண விவசாயி ஒரு லேவாதேவிக்காரனிடம் சென்றால், 50 சதவிகிதம் வட்டிக்குத்தான் பணம் கடனுக்குக் கிடைக்கிறது. இது மிகவும் மோசமானதொரு நிலை என்பதை சர்க்கார் உணர்ந்து கொள்ளவேண்டும். பல லேவாதேவிக்காரர்களும் பணத்தை எப்படி, எந்த வழியில் பெருக்குவது என்ற குறிக்கோளில்தான் பணம் வட்டிக்குக் கொடுக்கிறார்கள். அவர்கள் ஆண்டு ஒன்றிற்கு 50 சதவிகித வட்டி வாங்கத் தயங்குவதே கிடையாது. ஆகவே, தனது நிலத்தை பயிரிடவேண்டும், தன் வேலையைச் செய்ய வேண்டுமென்று அந்த பெரிய வட்டியும் கொடுக்கச் சம்மதித்து பணம் வாங்கி விவசாயம் செய்யும்போது, அந்த விவசாயிக்கு வரும் வருவாய் வட்டி கொடுக்கத்தான் காண்கிறது. சில சமயங்களில் வருகிற வருவாய் வட்டிக்குப் போதாது என்ற காரணத்தால் கடனை திருப்பிக் கொடுக்க அவ்விவசாயி தன் நிலத்தையே விற்றுக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆகவே சர்க்கார் விவசாயிகளுக்கு அதிகப்படி கடன் கிடைக்கச் செய்யவேண்டும். அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். அதோடு, இந்தமாதிரி அதிகப்படி வட்டி வசூலிப்பதைத் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளும் எடுத்துக்கொள்ளும்படி சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, இப்பொழுது சொன்ன விஷயங்களை எல்லாம் சர்க்கார் கவனத்தில் கொண்டு தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

* SRI T. T. DANIEL : Mr. Speaker, Sir, while I support the Demand, I would like to bring to the notice of the Government some important factors governing the Oodukoor tenure for their consideration. Oodukoor tenure in the Kanyakumari district is a peculiar tenure in that district, the like of which is not known in any of the other districts in the State. According to this tenure, several persons have joint possession of properties and have different shares in the usufruct thereof. While some of these persons have practically no right to the trees standing on these lands, yet as a result of this peculiar tenure, there has been a multiplicity of civil suits in the district. The Government wanted to extinguish this kind of tenure and appointed settlement officers for demarcating and subdividing these properties by leaps and bounds, dividing the trees among the share-holders and compensating others either in kind or in cash. Nearly 75,000 cases have been decided by them whose posts have also been abolished. But unfortunately several genuine owners of land have been denied title in the pattas relating to these lands. On the other hand, people who have no right to these lands find their names mentioned in the pattas. This has created lot of difficuulty to the real owners. I would request the Government to appoint a judicial officer to go into the question and decide it finally.

Then, Sir, the fair price shops opened in the district are not sufficient to meet the requirements of the people. The quantity supplied by these shops to the people is not enough and the rice supplied is of an inferior quality. There have been petitions to the Collector to increase the number of these shops in the district. But in spite of these, the number has not been increased. In Vilavencode taluk, which has a population of 2·75 lakhs, there are at present only 67 fair price shops as against 300 shops it had. In Kalkulam taluk, which has a population of nearly two lakhs, there

are only 60 shops. I would request the Government to go into the matter and issue necessary instructions to the Collector to increase the number of fair price shops in the district.

The benefits of agricultural land mortgage banks should be extended to my district. The land mortgage bank in the district is in the embryonic stage and it should be developed. The Debt Relief Act which is now in force in my district must be replaced quickly by the Agricultural Debt Relief Act of 1954 of this State which contains provisions for scaling down agricultural indebtedness if certain conditions are fulfilled. In this district there are several hundreds of people who are squatting on small revenue poramboke lands and are living there in small thatched huts constructed by them of several years ago. We understand that the Collector has issued stringent orders to the Tahsildars to take eviction proceedings against these poor people and evict them from these lands. If these people are evicted from their small huts, where they have been living for long, where will they go and live with their children? I would think that if these people are evicted, we will only be committing a crime against society.

We have been suggesting that top-priority should be given to this district as far as irrigation schemes are concerned. We hear that the Collector of the district has made recommendations as to how the Second Five-Year Plan amount of Rs. 390 lakhs must be apportioned. The proposals have been sent to the Government without our consent and without the consent of the Public. After sending the proposals, I find that the Collector convened a Development Committee of the district to consider certain proposals. We never expected such a kind of treatment from the officer whom we considered as the custodian of the prosperity of the district. But I should like to tell that the people of the district cannot be hoodwinked by this action. They are not fools. They have got at least some intelligence. I would characterise the conduct of the Collector as the unkindest cut inflicted on the whole people of the district. The Development Committee which has been constituted at present is ill-constituted. There are several 'yes-men' of the Collector in the committee and persons who really represent the interest of the people do not find a place in the committee. The area committee was convened and it considered certain vital problems relating to the district when the representatives of the district were here to attend the Assembly.

I would like to refer also to some of the appointments which have been recently made. There is the waiters list of posts submitted by the Public Service Commission to the Collector. The posts in the district ought to have been filled up by men from the waiting list. But those posts have been filled up by men of the Collector's choice or by men supplied by the Employment Exchange. This has greatly prejudiced the men in the waiting list who have been in the waiting list for a long time in the hope of getting appointments. I would say that some posts which were created in that district can be filled up by persons who are actually

13th July 1957] [Sri T. T. Daniel]

in the various departments of that district. I do not say that people from outside should not be appointed. But I would like to point out to the Government that when qualified hands are available, they must be appointed either in those posts in the district or they must be given their due promotion and transferred to some other district. The appointment of the Personal Assistant to the Collector and the appointment of the Block Development Officer are instances of this type. I would say that Government are generous to the people of the district. They want to do something substantial for them, but there are certain district officers who are acting as a check preventing the stream of generosity of the Government of Madras from flowing into the district of Kanyakumari. The district officers are the persons who actually shape the things. They must have real affection for the people. They must bring to the notice of the Government what exactly the difficulties of the people are so that the Government can take proper remedies and rectify them. But what we find from the conduct of some of the officers is that they think that Kanyakumari district is a conquered territory of the Madras Government. It is with much pain that I have to tell that that attitude must be shed, and we must have officers who are having real affection and goodwill for the people, so that we can say to the people of the district that the Government are for us and that they are giving real relief to us and this Government also can extend the relief which they intend to extend to this district.

Sri A. V. THOMAS : On a point of order, Sir. Is it right to use the expression ' Conquered territory '?

Mr. SPEAKER : They seem to feel that it is like a conquered territory. I think there is nothing wrong in it. The people who must be really worried are those who think they are conquered.

Sri P. G. Manickam will now speak.

Sri M. JAGANNATHAN : On a point of information, Sir. May we know the time allotted for each speaker?

Mr. SPEAKER : Seven minutes. Sri P. G. Manickam will now speak.

Sri P. G. MANICKAM : மதிப்பிற்குறிய சபாநாயகர் அவர்களே, ஜில்லா நிர்வாக மானியத்தை ஆதரித்து சில விஷயங்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். சுதந்திரம் கிடைத்த பிற்பாடு நமது இந்திய அரசாங்கமானது, குறிப்பாக சென்னை அரசாங்கமானது, எவ்வளவோ முறையில் முன்னேறியிருக்கிறது. ஜில்லா நிர்வாகம் எவ்வளவோ திருந்தி வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக ஜில்லா நிர்வாகத்திலுள்ள கெஜடெட் அதிகாரிகள் பொது ஜனங்களுடைய நிலையை உணர்ந்து அதற்கு பரிகாரம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் அது மிகைப்படுத்தி கூறியதாக ஆகாது. ஆயினும் இன்னும் சில குறைகள் திருத்தப்பட வேண்டும். அந்தக் குறைவு இருப்பதற்கு காரணம் உண்டு. பிரிட்டிஷார் காலத்தில் இருந்த அதிகாரிகளில் இன்னும் சிலர் இருக்கிறார்கள். அந்தக் காலத்திலே அவர்களுக்கு இருந்த நோக்கம் இன்னும் இருக்கத்தான் செய்கிறது. அப்போது பிரிட்டிஷ் அரசாங்கமானது கிடைத்தவரையில் சுருட்டிக் கொண்டு போவதிலேயே குறியாக

[Sri P. G. Manickam] [13th July 1957

இருந்தது. அதே போல அந்த அதிகாரிகள் கிடைத்தது லாபம் என்று நினைத்து பிரிட்டிஷ் அரசாங்கம் ஆட்சியில் இருந்ததால் நிர்வாகம் கெட்டு வந்தது. இந்தக் காலம் அப்படியில்லை. இது ஜனங்கள் அரசாங்கம். ஜனங்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்று நினைக்கக்கூடிய காலம். என் ஜில்லாவைப் பொருத்த வரையிலே அதிகாரிகள் ஜனங்களுக்கு என்ன செய்யவேண்டுமென்று பார்த்து செய்துவருகிறார்கள் என்று நினைக்கிறேன். அவர்கள் செய்வதை நாங்கள் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். அதாவது சட்டசபை அங்கத்தினர்களைப் பற்றிச் சொல்லுகிறேன். நாம் ஒவ்வொருவரும் லட்சம் பேர்களுக்கு பிரதிநிதியாக இங்கு வந்திருக்கிறோம். அவர்களுடைய குறைபாடுகளை கவனிப்பது அவசியம். நாங்கள் தொகுதியிலே இருக்கும் குறைபாடுகளைப் பற்றி குறிப்புகள் அனுப்புகிறோம். பல விண்ணப்பங்களை அனுப்புகிறோம். ஆனால் அவைகளுக்கெல்லாம் பதில் கிடைக்கவில்லை. கவர்ன்மெண்டிலே பதில் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். M.L.A. விண்ணப்பங்கள் அனுப்பினால் உடனே பதில் தரவேண்டுமென்று உத்திரவு போட்டிருக்கிறார்கள். இந்த உத்திரவை அதிகாரிகள் கவனிப்பதில்லை. நாங்கள் எத்தனையோ விண்ணப்பங்கள் அனுப்புகிறோம். ஆனால் எந்த விதமான பதிலும் இல்லை. அதிகாரிகள் இதை நன்கு கவனிக்கவேண்டும். இதில் எங்களுக்குத்தான் கஷ்டம் அதிகமாக இருக்கிறது. என்ன வேலை செய்யவேண்டுமென்று தெரிவதில்லை. போட்ட விண்ணப்பத்திற்கு பதில் இல்லையென்றால் நாங்கள் என்ன செய்வது, ஒவ்வொரு ஜில்லாவையும் பற்றி குறிப்புகள் தெரியவேண்டியிருக்கிறது. குறிப்பாக வீடு கட்டும் திட்டத்தைப்பற்றி எடுத்துக் கொள்வோம். ஆயிரம் வீடுகள் கட்டப்படுமென்று பொதுவில் தெரிவிக்கிறார்கள். நாங்கள் விண்ணப்பம் அனுப்புகிறோம். இந்த வருஷத்தில் எவ்வளவு வீடுகள் கட்டப்படும், ஒவ்வொரு ஜில்லாவிலும் எவ்வளவு கட்டப்படும் என்று எங்களுக்குத் தெரியவேண்டும். ஆகையால் கவர்ன்மெண்ட் முக்கியமாக செய்யவேண்டியது என்னவென்றால் பட்ஜெட்டில் ஒவ்வொரு ஜில்லாவுக்கும் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது, அந்தந்த தொகுதிக்கு எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை M.L.A.-க்களுக்கு தெரிவிக்கவேண்டும். அதை அனுசரித்து அந்த தொகுதிக்கு என்னென்ன காரியங்களுக்கு கிடைக்கும் என்பதை அனுசரித்து ஒவ்வொரு கிராமத்திற்கும் எவ்வளவு கிடைக்கும் என்று தெரிந்தால் அந்த ஜில்லா அதிகாரிகளிடத்தில் அணுகி கேட்க சௌகரியமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதோடுகூட ஜில்லாவிற்கு ஒதுக்கப்படும் தொகை 3 மாதத்திற்கு ஒரு தடவை ஆடிட் செய்யப்படுகிறது. அந்த ரிப்போர்ட்டும் கூடுமான வரையில் M.L.A.-க்களுக்குத் தெரிந்தால் நன்றாக இருக்கும். வேலை எவ்வளவு நடந்திருக்கிறது, மீண்டும் என்ன செய்யவேண்டும் என்று M,L.A.-க்களுக்கு தெரிந்தால் நன்றாக இருக்கும். இன்றைக்கு அநேக ஆலோசனைக் கமிட்டிகள் போடப்பட்டிருக்கின்றன. அதன் மூலமாக செய்யப்படுவதை ஜில்லா அதிகாரிகள், பொது ஜனங்களுக்கும் M.L.A.-க்களுக்கும் தெரிவித்தால் நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்,

அடுத்தபடியாக ஹரிஜனங்களுக்கு நன்மைசெய்ய, ஹரிஜன் வெல்பேர் டிபார்ட்மெண்டு என்று ஜில்லாக்களில் இருக்கிறது. அதற்கு அதிகாரிகள் ரெவின்யூ டிபார்ட்மெண்டிலிருந்து நியமிக்கப்படுகிறார்கள். எங்கள் கோயம்புத்தூர் ஜில்லாவில் மாதத்திற்கு ஒரு அதிகாரி, ஒரு குமாஸ்தா, வருகிறார்கள். டிபார்ட்மெண்டு வேலையை தெரிந்து கொள்வதற்கு முன்னதாகவே அவர்கள் மாற்றப்படுகிறார்கள். இப்படி இருந்தால் நிர்வாகம் எப்படி செவ்வையாக நடைபெறும். கொஞ்சகாலமாவது, குறைந்தது இரண்டு மூன்று வருஷங்களுக்காவது அதிகாரிகளை மாற்றாமல் ஒரே இடத்தில் வைத்திருக்க வேண்டும்.

கிராம உத்யோகஸ்தர்களைப் பற்றி இந்த சந்தர்ப்பத்தில் சொல்லாமல் இருக்க முடியாது. அவர்களுக்கு இந்த பட்ஜெட்டில் காட்டியிருக்கும் சலுகைகளைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. முக்கியமாக தலையாரிகள் ஆதிகாலத்தில் கிராம போலீஸாக இருந்து வந்திருக்கிறார்கள். அவர்

களிடம் இருக்கும் தடிதான் அவர்களது சின்னம். அவர்களை கிராம போலீஸாக நியமித்து அவர்களுக்கு போலீஸ் உடைகள் கொடுக்குமாறு கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

SRI S. RAMASAMI THEVAR : தலைவர் அவர்களே, ஜில்லா நிர்வாக மானியத்தின் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். எவ்வளவு திட்டங்களையோ, சட்டங்களையோ நாம் ஆக்கினாலும் கூட அடித்தள கிராம மக்களின் க்ஷேமங்களை கவனிக்க வேண்டும். இந்த அடித்தளத்திலே பழுது ஏற்பட்டால், கட்டடத்திற்கே பழுது ஏற்படும். கிராமமக்கள் கவனிக்கப்படாமல், அங்குள்ள அதிகாரிகள் மக்களை மக்களாக நினைக்காமல், இன்னும் அதிகார தோரணையோடு பார்க்கிறார்கள். முக்கியமாக ஒரு விவசாயி விவசாயம் செய்யக்கூடிய நிலத்தின் அளவு, பரப்பு அதற்குள்ள வரி விகிதங்கள் இவைகளைக்கூட தெரிந்து கொள்ள முடிவது இல்லை. அரசாங்கம் அறிக்கை மூலம் விவரங்கள் விட்டாலும் கூட, அதை மக்கள் தெரிந்துகொள்ள முடியாமல் மறைக்கப்படுகிறது. இந்த அதிகாரிகளை மக்களால் அணுகக்கூட முடியவில்லை. நிர்வாகத்திலே பல ஊழல்கள் இருக்கின்றன. சுயராஜ்யம் வந்து பத்து வருஷங்கள் ஆனபிறகும் அதிகாரிகள் பழைய மனப்பான்மையிலேயே இருக்கிறார்களே ஒழிய மக்களுக்கு சேவை செய்ய வந்திருக்கிறோம், அவர்களுக்கு ஊழியம் செய்யவேண்டுமென்ற மனோபாவம் வரவில்லை. இந்த நிலைமை மாறினால்தான் சுயராஜ்யத்தின் இன்பத்தை மக்கள் அடைய முடியும். இல்லாவிட்டால் முடியாது.

முக்கியமாக சில அங்கத்தினர்கள் சொல்லியபடி சாகுபடி சாவியானது பற்றி மனு கொடுத்து, அதிகாரிகளை பயிரை வந்து பார்க்கும்படி கேட்டுக்கொண்டால் அறுவடையான பிறகு பல மாதங்கள் கழித்து அதிகாரிகள் வருகிறார்கள். பக்கத்து சாகுபடி அறுவடையாகியும் அதிகாரிகள் வராததால், விவசாயி அதை அறுத்து கன்று மாடுகள் தீவனத்திற்கு எடுத்துச் சென்றுவிட்டால், "என் அறுத்து விட்டாய்" என்று பேசுவதோடு, தீர்வையும் விதிக்கிறார்கள். மனுக்கொடுத்த ஒரு குறித்த காலத்திற்குள் அதிகாரிகள் வந்து பார்த்து பைசல் செய்யவேண்டுமென்று ஏற்படுத்தினால்தான் மக்களுக்கு சுகம் ஏற்படும். தாலுக்கா விஷயத்தை எடுத்துக்கொண்டால் மக்கள் அங்கே நெருங்க முடியாது. எடுத்ததற்கெல்லாம் பணம் கொடுத்துதான் பார்க்க வேண்டிய நிலைமை இருக்கிறது. தாலூக்கா ஆபீசு வெளியில் மனு எழுதக் கூடியவர்கள் பலர் இருக்கிறார்கள். மக்கள் அதிகாரிகளை நேரில் அணுக முடியாது. குறிப்பிட்ட நேரத்தில் போய் இருந்தாலும் கூட அதிகாரிகளைக் காண முடியாது. சம்மன் செய்து ஆபீசுக்கு வரச்சொல்லி இருந்தும், மக்கள் ஆபீசுக்கு வரும்போது, தாசில்தார், காம்பு போய்விடுவார். அவர்கள் ஊரில் இல்லை என்பது தெரியாது, நாள் முழுதும் காத்திருந்து, சாயங்காலம் வீடு திரும்புவார்கள். முன் காலத்தில் மந்திரிகள் மாறுவேடம் பூண்டு பல இடங்களைப் பார்த்ததாக தெரிகிறது. அதே போல் நமது மந்திரிகளும் விருதுகளுடன் செல்லாமல் இந்த மாதிரி குறைகளை கவனிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் தாலுக்காவிலுள்ள ஜனங்கள் படும் கஷ்டங்களைப்பற்றி சில உதாரணங்கள் கூற விரும்புகிறேன். எனது தாலுக்காவில் ஒரு கிராமத்தில் சிலருக்கு சேரவேண்டிய பணத்தை ஆள்மாராட்டமாக வேறு சிலருக்கு தாசில்தார் கொடுத்துவிட்டார். பணம் பெறவேண்டியவர்கள் மனு செய்து கொண்டும், 6, 7 மாதம் ஆகிய பிறகும் கூட பதில் கிடையாது. விவசாயி தான் செலுத்த வேண்டிய வரியை கிராம முன்சீப் இல்லாத வேறு ஒருவரிடம் தெரியாமல் கொடுத்துவிட்டால் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். வேறு ஒருவரிடத்தில் செலுத்திவிட்டதால், சர்க்காருக்கு சேரவேண்டியதை கொடுத்தாக வேண்டும் என்று வற்புறுத்துவார்கள். சர்க்கார் ஆள் மாராட்டமாக கொடுத்த பணத்தை மட்டும் மனுக்கள் எழுதியும் கொடுக்க ஒரு முயற்சியும் எடுப்பதில்லை. இந்த விஷயத்தில் நான் எழுதிக் கேட்டதற்கும், கவனிக்கப்படுகிறது, கவனத்தில் இருக்கிறது என்ற பதில் வருகிறது. மேலும் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சர்க்கார் ரூ. 30-க்கு குறைந்த

வரி செலுத்துவோருக்கு இணையாக உரம் கொடுக்க உத்தரவிட்டார்கள். அதிலே பல ஆள்மாராட்டங்கள் நடந்தது. அதிக வரி செலுத்துபவர்களுக்கே இதுபோய்ச் சேர்ந்தது. அதுவும் இரண்டு மூன்று முறை கொடுக்கப்பட்டது. கிராம மக்கள் மனு கொடுத்தார்கள். தாசில்தார் இரண்டு மூன்று நாள் விசாரித்து அப்படியே விட்டு விட்டார். இப்போது கேட்டால் பேபரே இல்லை என்று சொல்கிறார்கள். மனு வரவில்லை என்றும் சொல்கிறார்கள். தாலுக்காவிலுள்ள பேபர்கள் களவு போய் இருக்கின்றன. இனிமேலாவது இது மாதிரி நடை பெறாமல் அதிகாரிகள் சோதனை இட்டு, நிர்வாகத்தில் நேர்மையை உண்டாக்கவேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். இனியாவது மக்களை மக்கள் போல மதித்து அவர்களுக்கு பணிபுரிய வந்திருக்கிறோம் என்றும் ஒவ்வொரு அதிகாரியும் ஊழியர்களாக நினைத்து பணியாற்றி வந்தால்தான் நாட்டில் முன்னேற்றம் காணமுடியும் என்றும் சொல்லிக்கொண்டு இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

SRI N. R. THIAGARAJAN : சபாநாயகர் அவர்களே, இந்த ஜில்லா மான்ய கோரிக்கையை ஆதரித்துப் பேச ஆரம்பிக்கிறேன். நாடு சுதந்திரம் பெற்ற பின்பு சமஸ்தான எல்லைகள் மாற்றி அமைக்கப்பட்டன. மாகாண எல்லைகள் மாற்றி அமைக்கப்பட்டன. ஆனால் ஜில்லா தாலுக்கா நகர எல்லைகள் மாற்றி அமைக்கப்படவில்லை. நேற்று பேசிய நண்பர்கள் நாங்குநேரியை கன்யாகுமரி ஜில்லாவோடு சேர்ப்பதற்கு பலவிதமான எதிர்ப்பு தெரிவித்தார்கள். ஆனால், நான் அத்தகைய எதிர்ப்பு தெரிவிக்க முன்வரவில்லை. எல்லைகள் யாவற்றையும் மாற்றி அமைக்க வேண்டுமென்ற கொள்கை உள்ளவன் நான். பத்து ஆண்டுகளாக கிராம எல்லைகள் மாற்றி அமைக்கவேண்டுமென்று சர்க்காருக்கு சொல்லிவந்திருக்கிறேன். உதாரணமாக என் கிராமத்தை எடுத்துக்கொண்டால் அது, 16,000 ஜனத்தொகையை கொண்டது. கிராம அதிகாரிகள் தாலுக்காவுக்கு போக வேண்டுமானால் ஐந்து மைல் நடக்க வேண்டும். ஆனால் பக்கத்தில் உள்ள காமாச்சிபுரம் போன்ற கிராமங்களில் ஜனத்தொகை 5,000-ம் தான். இருந்தாலும் அந்த கிராமங்களுக்கு தனித் தனியாக கிராம உத்யோகஸ்தர்கள் இருக்கிறார்கள். வருமானம் ரூ. 800. இதை வைத்துக்கொண்டு அவர்களுக்கு ரூபாய் ஆயிரத்திற்கு மேல் சம்பளம் கொடுக்கப்படுகிறது. இந்த கிராமத்தை தனியாக வைத்திருக்கவேண்டியது இல்லை. அடுத்த கிராமத்துடன் சேர்த்துவிடலாம். ஐந்து மைல்களுக்கு மேற்பட்ட கிராமங்கள் இருக்கக்கூடாது என்று நான் எழுதியிருந்தேன். அவற்றை ரெவினியூ போர்டும், கலெக்டரும் கவனித்ததாக தெரியவில்லை. என்னுடைய கிராமத்தில் எனது தொகுதியைச் சேர்ந்தது ஒரு பகுதி. மற்றொரு தொகுதியைச் சேர்ந்தது இன்னொரு பகுதி. மதுரை ஜில்லாவில் வாடிப்பட்டி என்பது நான்கு ரெவினியூ கிராமங்களைக் கொண்டது. ஆண்டிப்பட்டி என்பது இரண்டு ரெவினியூ கிராமங்களைக் கொண்டது. இது போன்ற கிராமங்கள் பல பகுதிகளில் இருக்கின்றன. பிர்க்காக்களின் அமைப்பும் அவ்விதம்தான் இருக்கின்றன. எனது தொகுதியில் இரண்டே கால் லக்ஷம் ஜனங்கள் இருக்கிறார்கள். போடி தொகுதி, தேனி தொகுதி, உத்தமபாளையம் முதலியவைகள் பெரிய பிர்க்காக்கள். ஆகவே இந்த "பிர்க்காக்களை" திருத்தி அமைக்க வேண்டும். ஒரு கிராமம் 5,000 ஜனத்தொகை கொண்டதாக இருக்கவேண்டும். ஐயாயிரத்துக்குமேல் ஜனத்தொகை கொண்டதாக இருக்கக் கூடாது. அப்படி இருந்தால்தான் அதை சரிவர கவனிக்க முடியும். அப்படி அமைத்து தலையாரி, தண்டற்காரன் போன்றவர்களை நியமிக்கலாம். சென்னை ராஜ்யத்தில் 5,000 கிராமங்கள் இருக்கின்றன. அப்படி திருத்தி அமைக்கப்பட்ட கிராமங்களில் கிராம உத்தியோகஸ்தர்களை முழுநேர ஊழியர்களாக நியமிக்கலாம். S.S.L.C. படித்தவர்கள் இங்கே நிறைய பேர் இருக்கிறார்கள். அவர்களை L.D.C. grade-ல் முழு நேர உத்தியோகஸ்தர்களாக நியமித்தால் சம்பளம் போதாது என்ற கூச்சல் குறைவதோடு, கிராம முனிசீப், கர்ணம் இவர்களிடையே உள்ள சண்டையும் நீங்கும். அப்பொழுது எதிர் கட்சிக்காரர்கள் தேர்தல் சமயத்தில் அவர்களைப்பற்றி பிரசாரம் செய்ய முடியாது. என்னைப் பொறுத்த வரையில் இந்த விஷயத்தில் ஒருவிதக்

13th July 1957] [Sri N. R. Thiagarajan]

கஷ்டமும் கிடையாது. இவ்விதமாக மாறுதல் செய்யவேண்டும் என்ற பிரச்னை மூன்று ஆண்டுகளாக அரசாங்கம் ஆலோசித்து வருவதாகவும் இதில் ரொம்ப கஷ்டம் ஏற்பட்டுவிடும் என்று அரசாங்கத்தார் கருதுவதாகவும் தெரிகிறது.

ரஷ்யாவை எடுத்துக்கொண்டால் Latvia, Lithuvania போன்ற நாடுகள் இணைக்கப்பட்டுவிட்டன. பெரிய நாடுகளை இணைக்கும்பொழுது, சின்னஞ்சிறு பிரதேசங்களை எளிதில் இணைத்து விடலாம். அது போன்றே தாலுக்காவையும் மாற்றி அமைக்கவேண்டும். எனது தாலுகாவில் 6 லக்ஷம் ஜனங்கள் இருக்கிறார்கள். மதுரையிலிருந்து திருச்சிராப்பள்ளி எவ்வளவு தூரம் இருக்கிறதோ அவ்வளவு தூரம் மதுரையிலிருந்து பெரியகுளம் இருக்கிறது. இதனால் ஜில்லா அதிகாரிகள் அங்கு போய் சரியாக கவனிப்பது இல்லை. பெரிய குளம் 85 மைல் தூரத்தில் இருக்கிறது. பெரிய குளம் தாலூகாவில் ஐந்து அல்லது ஆறு டெபுடி தாசில்தார்கள் இருக்கிறார்கள். ஆகவே ஐந்து அசெம்பிளி தொகுதிகளைக் கொண்ட பகுதிகளை ஒரு ஜில்லாவாக அமைத்து விடலாம். பழனி, மதுரையிலிருந்து 80 மைல்களுக்கு அப்பால் இருக்கிறது. கோயம்புத்தூர் எல்லையிலிருக்கும் பழனியை திண்டுக்கல்லோடு சேர்த்து திண்டுக்கல் ஜில்லா என்று மாற்றி அமைக்கலாம். அசெம்பளி தொகுதியை தாலூகாவாகவும், பார்லிமெண்ட் தொகுதியை ஜில்லாவாகவும் மாற்றி அமைத்து விடலாம்.

ஆந்திரா மாகாணத்தில் 20 ஜில்லாக்கள் இருக்கின்றன. நம் ராஜ்யத்தில் 13 ஜில்லாக்கள்தான் இருக்கின்றன. ஒன்று அல்லது இரண்டு பார்லிமெண்ட் தொகுதிகளைச் சேர்த்து ஒரு ஜில்லாவாக அமைத்தால், மொத்தம் சுமார் 20 ஜில்லாக்களாக மாற்றியமைக்க முடியும். ஜனத்தொகையை அடிப்படையாகக் கொண்டு உணவைப் பங்கிட்டுக் கொடுப்பதற்கும் ஜில்லாககளை மாற்றியமைப்பது அவசியமாகிறது. அதிகம் ஜில்லாக்கள் இருந்தால் நிர்வாகத்துக்கு எளிதாக இருக்கும். மதுரை ஜில்லாவில் கலெக்டர், P. A., Additional P. A. என்று பலர் இருக்கிறார்கள். முப்பது மைல் கொண்ட ஜில்லாவாக இருந்தால் அவர்கள் சுற்றுப் பிரயாணம் செய்து காரியங்களை சாதித்துக் கொள்ளமுடியும். கிராம அதிகாரிகளும் சரியாக வேலை செய்வார்கள். ஆகவே கிராம பிர்க்கா, தாலூகா, ஜில்லா என்ற உறவை திருத்தி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, சபாநாயகருக்கு வந்தனத்தைத் தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன். ஜெய் ஹிந்த்.

SRI N. V. CHOCKALINGAM : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மான்யக் கோரிக்கையை ஆதரிக்கும் முறையில் நான் சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். நமது மாகாணத்தில் பள்ளி மாணவர்கள், பலரகமான சர்டிபிகேட்டுகளை தாசில்தார்களிடமிருந்தும், டெபுடி கலெக்டர் அவர்களிடமிருந்தும் வாங்கவேண்டியிருக்கிறது. இவைகளை வாங்குவதில் மாணவர்கள் மிகுந்த சிரமம் அடைகிறார்கள். இந்த விஷயத்தில் சிரமம் இல்லாமல் சர்டிபிகேட் கொடுக்கும்படியாக எல்லா அதிகாரிகளுக்கும் எச்சரிக்கை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பரம்பரை கிராம உத்தியோகஸ்தர்கள் வேண்டாம் என்று சில அங்கத்தினர்கள் கூறுகின்றனர். பரம்பரை முறை இருப்பதுதான் நல்லது என்று எனக்குத் தோன்றுகிறது. ஏனென்றால், அவர்களுக்கு கிராம ஜனங்களிடம் தொன்று தொட்டு தொடர்பு இருந்து கொண்டு இருக்கிறது. மக்களை சர்க்காருக்கு விரோதமான வழியிலே கவனத்தை செலுத்தவிடாமல் காரியங்களை நடத்தி வருகிறார்கள். புதிதாக வந்த சில கிராம உத்தியோகஸ்தர்களை நான் பார்த்து இருக்கிறேன். அவர்களால் கிராமங்களில் இருக்கும் நிலைமைகளுக்கு ஏற்றவாறு நடந்து கொள்ள முடியவில்லை. இவர்களுக்கு கல்வி அவசியம் என்று கருதினால் குறிப்பிட்ட ஒரு கல்வித் தகுதியை வைத்துக் கொள்ளலாம். இம்மாதிரி இருந்தால்தான் சர்க்காருக்கு நன்மையாக இருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

[13th July 1957

SRI V. K. KOTHANDARAMAN : இப்பொழுது ஒரு ஜில்லாவிலேயே பல இலாக்காக்கள் இருக்கின்றன. ரெவினியூ இலாகா, கல்வி இலாகா, **Highways**, **Engineering** இவை போன்ற பல இலாக்காக்கள் இருக்கின்றன. இந்த எல்லா இலாக்காக்களையும் விட ரெவினியூ இலாகாதான் தாயகம் போன்றது. சர்க்காருக்கு பல பிள்ளைகள் இருந்தால் சம்பாதிக்கும் பிள்ளை ரெவினியூ இலாகா. மற்ற இலாக்காக்கள் எல்லாம் செலவு செய்யக் கூடிய இலாக்காக்கள் என்று சொல்லலாம். அப்படியிருந்தும் அந்த இலாகா சம்பந்தப்பட்ட கிராம மக்களுக்கு, விவசாயிகளுக்கு அவர்களுடைய குறைபாடுகளை சரியான முறையில் தீர்த்து வைக்கப்படுவதில்லை என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஜமாபந்தி நடந்த பிறகு "பி" மெமோக்களைக் கொடுக்கிறார்கள். புறம்போக்கு நிலங்களை விவசாயிகளுக்கு கொடுக்க வேண்டும்.

விவசாயிகளுக்குத் தேவையான கடன் வசதிகளை சரியானபடி துரிதமாகக் கொடுக்கப்படுவது இல்லை. விவசாயிகள் கடன் வசதிகளுக்காக மனு எழுதிப் போட்டு 7, 8 மாதங்கள் அல்லது ஒரு வருஷம் ஆனாலும் தகுந்த நடவடிக்கைகளை துரிதமாக எடுத்து கடன் உதவிகளைக் கொடுப்பதில்லை. மழைகாலத்தில் விவசாயம் செய்ய வேண்டும் என்று இந்த உதவிகளை எதிர்பார்த்தால் அப்பொழுது கிடைப்பதில்லை. அதனால் அவர்கள் சந்தர்ப்பங்களை இழந்து விடுகிறார்கள். ஆகையால் விவசாயிகளுக்கு கொடுக்கப்படும் கடன் வசதிகளை உடனடியாகக் கொடுப்பதற்கு அந்த இலாகாவிற்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஆகவே, இதுபோன்ற வசதிகளை ஏழை கிராம மக்களுக்கு, விவசாய மக்களுக்கு உடனுக்குடனே தீர்த்து வைக்கவில்லை என்று சொன்னால், விவசாய அபிவிருத்தி எப்படிச் செய்ய முடியும், உணவு உற்பத்தி எப்படிச் செய்ய முடியும் என்பதை நாம் கணக்கில் எடுத்து, கிராம மக்கள் கடன் கேட்கிறார்கள் என்று சொன்னவுடனே, அதை ஒரு மாதத்திலோ இரண்டு மாதத்திலோ கண்டிப்பாகக் கொடுத்தாக வேண்டும் என்ற ஒரு நிபந்தனையும் சட்டமும் இருந்தால்தான் உடனடியாகக் கொடுப்பார்கள். அப்படி கவனிக்கப்படவில்லையென்றால், அதற்கு என்ன காரணம் என்பதைக் கண்டு பிடித்து தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும்.

நெல் அரைக்கும் ஆலை, போன்றவைகளுக்கு லைசன்சு கேட்டால் ஒரு சிலருக்குக் கொடுப்பார்கள், ஒரு சிலருக்குக் கொடுக்கமாட்டார்கள். இது போன்ற ஒரு நிலைமை இருக்கிறது. இதையெல்லாம் நாம் பரிசீலனை செய்தாக வேண்டும். போதுமான சிப்பந்தி இல்லாத காரணமா ? ரெவினியூ இலாகா சம்பந்தப்பட்ட கலெக்டர்களுக்கு அதிக வேலை இருக்கிறதா ? அப்படி அதிக வேலை இருப்பதன் காரணமாகத் தான் கவனிக்கப்படவில்லையா ? இதையெல்லாம் நன்றாக சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இன்றைக்கு ரெவினியூ இலாகா சிப்பந்திகள் இரவும் பகலும் வேலை செய்கிறார்கள் என்றுதான் நான் சொல்ல முடியும். மற்ற இலாகா சிப்பந்திகள் மாலை ஐந்து மணிக்கு வேலையை முடித்துக்கொண்டு போய் விடுவார்கள். இவர்கள் மட்டும் இரவு நேரத்திலும் கூட வேலை செய்கிறார்கள். வீட்டுக்குக் கூட ரிகார்டுகளைக் கொண்டு போய் வேலை பார்க்கக் கூடிய நிலைமை இருக்கிறது என்பதை எல்லாத் தாலூகா ஆபீசுகளிலும் நாம் பார்த்து வருகின்றோம். இதையெல்லாம் சற்று சிந்தித்துப் பார்த்து பரிசீலனை செய்து நாம் கவனித்தாக வேண்டும்.

இப்பொழுது பல இடங்களில் ஏழை மக்கள் இருக்கிறார்கள். கைத்தறி நெசவுத் தொழிலாளர்களைப்பற்றி பிரமாதமாகப் பேசுகிறோம். ஆனால், மதுரை, குடியாத்தம் ஆகிய இடங்களிலிருந்து கைத்தறியாளர்களிடமிருந்து எனக்குக் கடிதங்கள் வந்திருக்கின்றன. அங்கே, நியாய விலைக் கடைகளைத் திறந்து, குறைந்த விலையில் அரிசி கொடுக்கப்பட வேண்டும் என்று அவர்கள் எழுதிக் கேட்டுக் கொண்டும், அது கவனிக்கப் படவில்லை என்று எனக்கு அவர்களிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது. இது எல்லாம் ஏன் கவனிக்கப்படவில்லை ? ஒரு வேளை [illegible]

13th July 1957] [Sri V. K. Kothandaraman]

சர்க்காரிலிருந்து உத்திரவு போன பிறகுதான் அவர்கள் அம்மாதிரியான கடைகளைத் திறக்கவேண்டுமா? அவர்களுக்கு அதிகாரம் இல்லையா, என்பதையும் நாம் கவனிக்க வேண்டியிருக்கிறது. அவர்களுக்கே அதிகாரம் இருந்துங்கூட திறக்கவில்லை என்றால், இதற்கு என்ன காரணம் என்று பார்ப்பதோடு மட்டும் நின்றுவிடாமல் இதற்கான நடவடிக்கையும் எடுக்க வேண்டும்.

குறிப்பாக, மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ஜில்லா அதிகாரிகளும், எம்.எல்.ஏ.க்களும், எம்.எல்.ஸி.க்களும் சேர்ந்த ஒரு கூட்டம் கூட்டப்படுகிறது. அது போன்று சென்ற மாதத்திலே வடாற்காடு ஜில்லாவிலே ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. ஆனால், கூட்டப்படுகிறதே தவிர, சர்க்குலர் எப்படி வருகிறது என்றால், "இம்மாதிரி" "கான்பரன்ஸ்" நடக்கப் போகிறது; அதற்கு நீங்கள் வரவேண்டும்" என்ற முறையில்தான் சர்குலர் வருகிறது. அங்கு போன பிறகு என்ன பார்க்கிறோம் என்றால், அதிகாரிகள் "கட", "கட" என்று மூன்று மாத காலத்திலே என்ன செய்தார்களோ அதை ஒப்பிக்கிறார்கள். அவர்கள் ஒப்பிப்பதைக் கேட்டுவிட்டு, அந்த நேரத்தில் படுகிற யோசனையைச் சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம். இம்மாதிரி இருக்கக்கூடாது. மூன்று மாதங்களில் என்ன வேலை செய்திருக்கிறார்களோ அதையெல்லாம் ஒரு அறிக்கையாக (ரிப்போர்ட்) அச்சடித்து கூட்டத்தில் கலந்துகொள்பவர்களுக்கெல்லாம் சம்மந்தப்பட்ட நிகழ்ச்சி நிரலோடு சேர்த்து அனுப்பினால், அந்த அறிக்கையை ஒவ்வொருவரும் நன்றாகப் படித்து, அதில் கண்டுள்ள வேலைகளில் என்ன என்ன குறைபாடுகள் இருக்கின்றன என்பதை ஆராய்ந்து, தேவையானால், குறிப்பிட்ட இடங்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டு, நல்ல முறையில் கூட்டங்களில் அங்கத்தினர்கள் ஆலோசனையை கொடுக்க முடியும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இம்மாதிரியான ஒரு நிலைமை இல்லையென்றால், அப்படிப்பட்ட கூட்டங்களினால் எந்தவிதமான பிரயோஜனமும் இல்லை.

சட்டசபையிலே கொடுக்கும் ஒவ்வொரு ரிக்கார்டும் ஆங்கிலத்திலே இருக்கிறது, ஒரு சில தமிழில் வருவதைத் தவிர. அதே போல, ஆங்கிலத்திலே ஜில்லாவில் நடக்கும் கூட்டங்களுக்கான சர்குலர் வருவது என்றால், அது அவ்வளவு உதவிகரமாக இருக்காது. குறைந்த பட்சம் ஜில்லாக்களிலாவது தமிழிலேயே இருக்கக்கூடிய அளவுக்கு நாம் உத்தரவிடவேண்டுமென்பதையும் இந்த நேரத்திலே ஞாபகத்திற்கு கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

அதே போன்று, ஜில்லா அதிகாரிகள் தங்கள் பிரியம்போல் நடக்கும் நிலையும் காணப்படுகிறது. நான் ஏன் இப்படிச் சொல்லுகிறேன் என்றால், சமீபத்தில் சுதந்திர தினம் வருகிறது. அந்த தினத்தைக் கொண்டாடுவதற்காக வேண்டி, ஜில்லா அதிகாரிகளிடமிருந்து ஆளும் கட்சியினருக்கு—காங்கிரஸ் கட்சிக்கு—மாத்திரம் சர்குலர் வருகிறது. எம்.எல்.ஏ.க்கள், எம்.எல்.ஸி.க்கள், பாரிலிமெண்ட் அங்கத்தினர்கள் ஆகியவர்களுக்கு அனுப்பப்படுவதோடு கூட, காங்கிரஸ் கமிட்டிகளுக்கும் அனுப்பப்படுகிறது. இதைப்பற்றி நான் உடனே எழுதியிருந்தேன். "ஏன் காங்கிரஸ் கட்சிக்கு மாத்திரம் சர்குலர் அனுப்புகிறீர்கள்? மற்ற கட்சிகளுக்கும் அனுப்ப வேண்டும், அப்படி அனுப்பி எல்லோருமே சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் பங்கு கொள்ளக்கூடிய அளவுக்கு நிலைமையை ஏற்படுத்த வேண்டும்" என்று சொல்லும்போது, அதற்குச் சரியான பதில் கொடுக்கக் கூடிய அளவுக்கு நிலைமை இல்லை என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

ஒருவேளை இங்கே மாகாண சர்க்காரிலிருந்து ஏதாவது உத்திரவு போனதா? நான் ஏன் இதைக் குறிப்பாக சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன் என்று சொன்னால், சுதந்திரம் என்று சொன்னால் எல்லோருக்கும் தான் சுதந்திரம். அந்த சுதந்திரத்திலே யார் யார் பங்கு கொள்ள [illegible]னாலும், எல்லாக் கட்சிகளுக்கும் சர்க்குலர் அனுப்பிவைத்து, எல்லோரும் ஒன்றுபட்டு சுதந்திர தினத்தைக் கொண்டாடக்கூடிய அளவுக்குத்

[Sri V. K. Kothandaraman] [13th July 1957

தான் நாம் இருக்கவேண்டுமேயொழிய, அது இல்லாமல் ஆளும் கட்சியினர் மாத்திரம் சுதந்திரத்திலே பங்கு கொள்ள சர்க்குலர் அனுப்பி மற்றவர்களுக்கு அனுப்புவது கிடையாது என்ற முறையிலே பார்ப்போமானால் அது பாகுபாடு படுத்திப் பார்ப்பது போல் ஆகும் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு ஏழை விவசாயிகளைப் பாகுபாடு படுத்தக்கூடிய தன்மையில் என்னுடைய தொகுதியிலே காரியங்கள் நடக்கின்றன. வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் எல்லோரும் எழுதிப் போட்டார்கள். ஆனால், ஏழைகளுக்கு ஒரு மாதிரியும், பணக்காரர்களுக்கு ஒரு மாதிரியும் பாகுபாடு படுத்தக்கூடிய தன்மையிலே அங்கே உதவி அளிக்கப்பட்டது. குறிப்பாக, அங்கே தொட்டபெட்டா கிராமத்திலே ஒரு மிகப் பெரிய பணக்காரர் அவர்களுடைய நிலத்தின் பாதுகாப்புக்காக பத்தாயிரம் ரூபாய் செலவு செய்து காறு பக்கத்தில் சுவர் கட்டப்பட்டது. ஆனால், ஏழைகளின் நிலைமையை நேரிலே பார்த்துங்கூட ஏழைகள் விஷயத்திலே கவனிப்பது கிடையாது. ஆகவே ஜில்லாவிலே இருக்கும் அதிகாரிகள் பாகுபாடு படுத்தும் தன்மையிலேதான் பார்க்கிறார்கள். ஏழைகளுக்கு ஒரு மாதிரியும், வசதி படைத்தவர்களுக்கு இன்னொரு மாதிரியும் இருக்கிறது. இதையெல்லாம் சரியான முறையிலே கவனிக்க வேண்டும். இதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொண்டு இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

**Mr. SPEAKER**: அங்கத்தினர்கள் பேசும்போது, "சபாநாயகர் அவர்களே" என்று ஆரம்பித்துத்தான் பேசவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். கனம் அங்கத்தினர் ஸ்ரீ கோதண்டராமன் அவர்கள் மறந்து விட்டார்கள் போலிருக்கிறது.

**Sri V. K. KOTHANDARAMAN**: மன்னிக்கவேண்டும், மறந்துவிட்டேன்.

**Mr. SPEAKER**: மறந்துவிட்டீர்கள் என்றுதான் நான் சொல்லுகிறேன்.

**Sri A. V. THOMAS**: கனம் சபாநாயகர் அவர்களே, நாங்குனேரி
10-29 a.m. தாலுகாவை கன்யாகுமரி ஜில்லாவோடு இணைப்பது பற்றி கனம் நிதி மந்திரி அவர்கள் தம்முடைய பட்ஜெட் உரையில் சொன்னார்கள். இந்தத் திட்டம், அந்தத் தாலுகாவிலுள்ள ஜனங்களுக்கு திருப்தியும் இல்லை, இஷ்டமும் இல்லை. இதைப்பற்றி சர்க்கார் கவனிப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

கடந்த ஒரு வாரத்திற்குள்ளாக, கிட்டதட்ட 50 அல்லது 60 கடிதங்கள் என் தொகுதியாகிய ராதாபுரம் தொகுதியிலிருந்து எனக்கு வந்திருக்கின்றன. அந்தத் தொகுதியைச் சேர்ந்த சில பிர்க்காக்கள், சில ஊர்கள் கன்யாகுமரி ஜில்லாவைத் தொட்ட இடங்களாக இருக்கின்றன. அங்கேயுள்ள மக்கள் அங்கே சேருவதற்கு இஷ்டப்படுவார்கள். மற்ற ஜனங்கள் இஷ்டப்படுவதாகத் தெரிவதில்லை. அப்படியே செய்யவேண்டுமானாலும், மக்களைக் கலக்காமலும், மக்களைக் கேட்காமலும், அவர்களுடைய விருப்பத்தைத் தெரிந்துகொள்ளாமலும் செய்வது அவ்வளவு சரி அல்ல. கன்யாகுமரியைப் பற்றிச் சிலர் பேசும்போது கன்னியாகுமரி சிறை பிடிக்கப்பட்ட பிரதேசம் என்று சொன்னார்கள்.

**Sri T. T. DANIEL**; Sir, let me make my position clear.

**Mr. SPEAKER**: Let the hon. Member finish his speech. Then I will give the hon. Member a chance to speak. Sri Thomas may continue his speech.

**Sri A. V. THOMAS**: அது அவ்வளவு சரியல்ல என்று எனக்குத் தோன்றுகிறது. கன்னியாகுமரியின் ஒரு குமரிதான் இன்று நம்மைச் செலுத்துவதற்கும் மந்திரி சபையில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்

13th July 1957] [Sri A. V. Thomas]

இதனால் கன்னியாகுமரி ஜில்லாவிற்கு விசேஷம் உண்டாகிறது. அதை யாரும் ஆட்சேபணை செய்ததாகத் தெரியவில்லை. "கன்னியாகுமரி ஜில்லா நம்முடையது. அங்குள்ளவர்கள் நம்மைச் சேர்ந்தவர்கள்" என்றுதான் எல்லோரும் நினைக்கிறார்கள் யாரும் யாரையும் சிறைப்படுத்தி வைத்திருப்பதாக நினைப்பதற்கு இடமில்லை என்று நினைக்கிறேன் என்று சொல்லிக் கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

* Sri T. T. DANIEL : Sir, I want to make the point clear. I never said the people of Kanyakumari district felt that it was a conquered territory. I only said that some of the district officers there are conducting themselves in such a manner as if it is a conquered territory.

Sri G. GOMATHI SANKARA DIKSHITAR : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஜில்லா நிர்வாகத்தைப் பற்றிய மானியத்தை ஆதரிக்கும் முகமாக இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கிராம மக்களுக்கு எல்லாம் நல்ல வசதியையும், சௌகரியத்தையும் உடனுக்குடன் செய்து கொடுக்க வேண்டுமென்ற கடமை உணர்ச்சியில் ஜில்லா நிர்வாகம் நன்கு செயல்படவேண்டியது அவசியமாகும். நாம் சுதந்திரம் பெற்ற பிறகு, ஆங்கிலேயர்கள் தமக்குப் பின்னே விட்டுப்போன அதிகார வர்க்கம் பழைய மனப்பாண்மையை விட்டுவிட்டு, மக்களுக்குச் சேவை செய்வதே தம்முடைய முக்கியமான நோக்கமாகக் கருதி அரசாங்க ஊழியர்கள் வேலை செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனாலும் சில சில குறைகள் இருந்துகொண்டுதான் வருகின்றன. ஜில்லாவிலுள்ள உயர்தரக் கலெக்டர் முதலிய அதிகாரிகள் நல்ல பொறுப்புணர்ச்சியோடு நிர்வாகத்தைச் செய்து வந்த போதிலும் அதற்கு அனுசரணையாக இருக்கிற மற்ற உத்தியோகஸ்தர்கள் அவ்வளவு நல்ல முறையில் மக்களுக்குப் பணி செய்யக் கூடிய மனப்பான்மையில் இல்லை. அரசாங்கத்தார் இதை நல்லமுறையில் சீர்திருத்த எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்து வருவதைப் பாராட்டுகிறேன்.

குறிப்பாக இப்போது உணவு நெருக்கடி அதிகமாக இருக்கிறது. தானிய விலைகள் ஏறிக்கொண்டிருக்கின்றன. இந்தச் சமயத்தில் ஆயிரக் கணக்கான விவசாயிகளும், மற்ற ஏழை எளிய தொழிலாளர்களும் வசிக்கக் கூடிய பிராந்தியங்களில் உடனடியாக நியாயவிலைக் கடைகளைத் திறக்க வேண்டும் என்று அரசாங்கத்தார் உத்திரவு போட்டாலும் இந்த உத்திரவை உடனடியாக நிறைவேற்றினால்தான் மக்களுடைய உணவுக் கஷ்டம் தீரும் என்பதை அதிகாரிகள் உணர்ந்து அதற்குத் தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளும்படியாகச் செய்வார்கள் என்றும் நம்புகிறேன்.

மேலும் 'ரெட் டேபிஸம்' இன்னும் நடைபெற்று வருவதை ஒழிக்க வேண்டும். விவசாயிகளோ, கிராம வாசிகளோ அதிகாரிகளுக்கு விண்ணப்பங்கள் போட்டால், மனுக்கள் எழுதிக்கொண்டால் அதை உடனடியாகப் பைசல் செய்ய தக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அவர்கள் இப்போது அப்படி அப்படியே கட்டிவைத்துக்கொண்டிருக்கிறார்கள். நமது முதல் மந்திரி கூட அதிகாரிகளை எல்லாம் கூப்பிட்டு ஓரிடத்தில் கூட்டி இந்தமாதிரியாகக் கட்டி வைக்கக்கூடாது என்று போற்றத்தக்க முறையில் சொன்னார்கள். இதேமாதிரியான வகையில் கிராமவாசிகளுடைய மனுக்களை உடனுக்குடன் பைசல் செய்யப்படவேண்டும்.

என்னுடைய சொந்த அனுபவத்தில் கூறுவேன். ரெவின்யூ போர்டிலிருந்து வந்திருக்கிற ஒரு உத்திரவின்படி நிலம் கொடுக்கவேண்டுமென்றால் அதன்படி நிலம் அசைன் செய்வதற்கு ஐந்து வருஷ காலமாக எந்த ஆர்டரும் போடப்படாமல் தாமதமாகிறது. இம்மாதிரியாக நிலங்கள் அசைன் செய்வதற்கு காலதாமதம் ஆகாமல் ஏழை, ஹரிஜன மக்களுக்கு பிற்பட்ட மக்களுக்கு உடனுக்குடன் அசைன் செய்யப்படவேண்டுமென்பதாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்கு நிர்வாகத்தை நல்ல முறையில் கண்காணித்துக் கொள்ளவேண்டும்.

[Sri G. Gomathi Sankara Dikshitar] [13th July 1957

அதுமாத்திரமல்ல. நம்முடைய அரசாங்கத்லிதிருந்து லட்சக்கணக்கான பண உதவி ஏழை விவசாயிகளுக்கும், பிற்பட்ட வகுப்பாளர்களுக்கும் அளிக்கப்படுகிறது. ஆனால் அவற்றை அப்படியே நேரிடையாக விவசாயிகள் பெறமுடியாதபடி லஞ்சம் நடமாடுகிறது. அதிகாரிகளை அணுகி அந்தப் பண உதவி முழுவதையும் பெறுவதற்குள் விவசாயிகள் பாதிப் பணத்தை இழந்துவிடக்கூடிய நிலைமையில் இருக்கிறார்கள். இந்த விஷயத்தில் அரசாங்கம் கண்டிப்பாக நடவடிக்கை எடுத்து முழுப் பண உதவியும் விவசாயிகளுக்குப் போகும்படியாகச் செய்ய வேண்டும். லஞ்ச ஊழலை ஒழிப்பதற்கு நமது அரசாங்கம் கண்ணும் கருத்துமாக நடவடிக்கைகள் பல எடுத்து வருகிறது என்பதை நான் அறிவேன். இந்த ஊழலை நல்ல முறையில் நீக்க அவர்களது முயற்சியும் தளராது இருக்க வேண்டுமென்று கூற விரும்புகிறேன்.

அதோடு கிராம உத்தியோகஸ்தர்களுடைய பரம்பரை பாத்தியதையை ஒழித்துவிட வேண்டுமென்று நான் அபிப்பிராயப்படுகிறேன். அவர்களுக்குப் போதிய ஊதியம் கொடுக்கப்படவேண்டும். நமது சர்க்காருக்கு வேண்டிய அடிப்படைப் புள்ளி விவரங்களை, அவசியமான புள்ளிவிவரங்களை எல்லாம் அவர்கள்தான் சேகரித்துக் கொடுக்கிறார்கள். அப்படிக் கொடுக்கவும் கடமைப்பட்டிருக்கிறார்கள். அவர்களிடம்தான் மாணவர்கள் செல்ல வேண்டியிருக்கிறது. விவசாயிகள் செல்ல வேண்டியிருக்கிறது. அப்போது எல்லாம் அவர்கள் தங்கள் பொறுப்பை உணர்ந்து உடனடியாகத் தங்கள் பணியைப் புரியும்படி செய்ய வேண்டும். தங்கள் சம்பளம் மிகவும் குறைவாக இருக்கிறதென்ற உணர்ச்சியை மட்டும் வைத்துக் கொண்டு அவர்கள் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்யாமல் இருக்கும்படி விடக்கூடாது. அவ்வாறு அவர்கள் இப்போது இருந்து வருவது மிகவும் வருந்தத்தக்க விஷயமாகும். ஆகவே அவர்களுடைய நிலைமையைத் திருத்த முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமாத்திரம் அல்ல. விவசாயிகள் நிலங்களை விட்டு அப்புறப்படுத்தப்பட்டு அவர்கள் தாசில்தாருக்கோ, ரெவின்யூ டிவிஷனல் ஆபீசருக்கோ 144ப்படி உத்திரவு போட்டு அப்புறப்படுத்துவதை நிறுத்தி வைக்கவேண்டுமென்று விண்ணப்பங்களும் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மனுக்கள் எல்லாம் துரிதமாகப் பைசல் செய்யப்படாதகாரணத்தால் நூற்றுக்கணக்கான விவசாயிகள் அப்புறப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். இதை நான் என்னுடைய சொந்த அநுபவத்தின் மூலமாக அறிவேன். இதற்கு இனி இடம் இல்லாமல் அவர்களுடைய மனுக்களின்பேரில் துரிதமாக அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்படியாக அரசாங்கம் செய்யவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஜில்லா நிர்வாகத்தில் இப்போது இருக்கும்படியான ஊழல்களை நீக்குவதற்கு சர்க்கார் எல்லாவகையிலும் முயற்ச்சி செய்து வருகிறது என்பதைப் பாராட்டுகிறேன். இது அடியோடு ஒழிக்கப்பட்டால்தான் அதிகாரிகள் துரிதமாக மக்களுக்குச் செய்யவேண்டிய காரியங்களைச் செய்வார்கள். மக்களும் தங்களுடைய வேலைகளை காலதாமதமின்றி செய்வார்கள். நாடு முன்னேற்றம் அடையமுடியும். இதற்கு அடிப்படை ஜில்லா நிர்வாகம் ஒழுங்காக இருப்பதுதான். இதை அரசாங்கத்தார் சரியாக்குவார்கள் என்ற நம்பிக்கையோடு என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **Sri V.K. RAMASWAMY MUDALIYAR** : கனம் சபாநாயகர் அவர்களே, நான் முன்பு பேசியபோது ஒவ்வொரு ஜில்லாவிலும் நிர்வாகமானது எப்படி நடந்துகொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டினேன். அரசாங்க நிர்வாகமானது நன்றாகச் செயல்படவில்லை, முக்கியமாக ஜில்லாவைப் பார்க்க வேண்டும். இப்போது இருக்கிற கலெக்டர்களுக்கு அதிகமான வேலைகள் இருப்பதனால் பேப்பர்கள் ரொம்பவும் தாமசமாகிறது என்றும் சொன்னேன்.

அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் அளிக்கும்போது ஏதோ எதிர்க்கட்சி அங்கத்தினர் சொல்லுகிறார்கள். அதற்குச் செலவு எவ்வளவு ஆகும் என்று அவர் யோசனை செய்யவில்லை என்பதுபோலச் சொன்னார்கள்.

13th July 1957] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

முடிவான பதில் ஒன்றும் சொல்லவில்லை. இப்போது தாற்காலிகமாக நம்முடைய மலபார் ஜில்லாவானது கேரளா ராஜ்யத்தில் போன பிறகு எஞ்சியுள்ள மலைபார் ஜில்லாவை மட்டும் மூன்றாகப் பிரித்து, மூன்று கலெக்டெர்களைப் போட்டிருப்பதை நான் சொல்ல விரும்புகிறேன். அதை ஒரு காரணமாக நாம் எடுத்துக்கொள்ளாது போனாலும் ஜில்லாவில் எவ்வளவு வேலை அதிகரித்து இருக்கிறது என்பதைப்பற்றி யோசனை செய்ய வேண்டும். ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர்கள் இருக்க வேண்டுமா எடுத்துவிடலாமா என்பதைப் பற்றி யோசனை செய்ய வேண்டும். இரண்டு அல்லது மூன்றாகப் பிரித்துப்போட்டு கலெக்டர்களிடம் பேப்பர்கள் தாமச மாகாதவாறு நிர்வாகத்தை சுலபமாக்கினால் பயனாக இருக்காதா என்றும் யோசனை பண்ணவேண்டும். முக்கியமாக என்னுடைய ஜில்லாவாகிய செங் கல்பட்டு ஜில்லாவை எடுத்துக் கொண்டால் அங்குள்ள கலெக்டெர் அவர்க ளுக்கு அடிக்கடி மீனம்பாக்கம் வரவேண்டி யிருக்கிறது. ஏதாவது அதி காரிகள் விமானத்தில் வந்திறங்குவதாயிருந்தால் இவர் மீனம்பாக்கம் போய் அவர்களுக்கு வேண்டிய வசதிகள் எல்லாம் செய்துகொடுத்து அவர் கள் திரும்பிப் போகும் வரை அவர்கள் கூடவே இருக்கவேண்டியிருக்கிறது. இதனால்அவருடைய முகாமைக் கலைத்துவிட்டு இங்கு வரவேண்டியிருக்கிறது. இப்படி அவர் சென்னையில் இருக்கும் காலத்தில் ஆபீஸருக்கு வரும் பேப் பர்கள் எல்லாம் அங்கேயே **pending** ஆக இருக்கிறது. அவசரமான காரியங்களுக்குகாக அனுப்பப்படும் பேப்பர்களுக்கு பதில் இல்லாமல் இருக் கிறது. இம்மாதிரியான ஒரு நிலை அங்கு நீடித்து வருகிறது. எனக்கு முன்னால் பேசிய அங்கத்தினர் தியாகராஜன் அவர்கள் சொன்னது எல்லாம் உண்மைதான். ஒரு ஜில்லாவிலேயே கலெக்டர் தாசில்தார், டெப்டி தாசில்தார் இவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். கலெக்டர் என்ற ஒரு பதவியிருக்கும்போது அதோடு அடிஷனல் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் என்ற அதிகாரியும் இருக்கிறார்கள். ஜில்லாவை பிரித்தால் இந்தமாதிரி அதிகாரிகளுக்கு அதிக வேலை இருக்காது. பல இடங்களிலும் லஞ்ச ஊழல் இருப்பதாக சொன்னார்கள். இதைப்பற்றி நிதி மந்திரி அவர்கள் ஒரு ஸ்டேட்மெண்டை கொடுத்தார்கள். எவ்வளவோ நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது என்று அதில் சொன்னார்கள். ஆனால் இன்னும் லஞ்சம் ஒழிந்தபாடில்லை. எல்லோருக்கும் தெரியும் லஞ்சம் இல்லாமல் இன்று ரெவன்யூ டிப்பார்ட்மெண்டில் ஒரு பேப்பரும் வெளியே வருவதில்லை. இதை ஒழிப்பதற்கு தீவிரமான முயற்சி எடுக்க வேண்டும். என்.ஜி.ஓக்களு டைய பிரச்னைகள் இங்கு எவ்வளவோ சொல்லப்பட்டு வந்திருக்கிறது. அவர்களை திருப்தி செய்வதற்காக ஏதோ ஏழு, ஐந்து ரூபாய் என்று அலவன்ஸ்ஸில் கூட்டி இருக்கிறார்கள். அதே மாதிரிதான் கிராம உத்தி யோகஸ்தர்களுக்கு கொடுக்கும் ஊதியம் போதாது என்று சொல் லிக் கொள்கிறேன். அவர்களுக்கு பிளாக் டெவலப்மெண்ட் ஏரியாவில் வேலை கொடுத்தால் இவர்களுக்கு உதவிகரமாக இருக்கும். நான் அன் றைக்கும் இந்த யோசனையை சொன்னேன். அதை பிரஸ்காரர்கள் சரியாக ரிப்போர்ட் செய்யவில்லை. இந்த பிளாக் டெவலப்மெண்ட் ஏரியாவில் இருக் கும் பல உத்தியோகங்களில் இவர்களை போடலாம். இதல்லாமல் டிஸ்ட் ரிக்ட் பப்ளிஸிட்டி ஆபீசர் என்றும், கிராமசேவக் என்றும் பல உத்தி யோகஸ்தர்கள் இருக்கிறார்கள். இவர்கள் என்ன வேலை செய்கிறார்களோ தெரியவில்லை. காங்கிரஸ் பிரசாரம் செய்து வருகிறார்களோ என்னமோ தெரியவில்லை. இவர்கள் அந்த இடங்களில் என்ன வேலை செய்கிறார்கள் என்பதை கனம் மந்திரி அவர்கள் எடுத்துச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மாதிரி ஏரியாக்களில், முக்கியமாக பிளாக் டெவலப்மெண்டு ஏரியாவில் கிராம உத்தியோகஸ்தர்களை நியமித்து அவர் களுக்கு வேலைகளை கொடுத்து ஊதியத்தை அதிகப்படுத்தலாம். அடுத்த தாக ஒரு ரேடியோ இன்ஜினியரிங் டிப்பார்ட்மெண்ட் இருக்கிறது. இதுவும் எலக்ட்ரிஸிட்டி டிப்பார்ட்மெண்டின் கீழ் வேலை செய்து வருகிறது. இது டிஸ்ட்ரிக்ட் அட்மினிஸ்ட்ரேஷன் கீழ் வருகிறது. இவர்கள் வாங்குகிற ரேடியோ ஸெட்டுகளுக்கு 300 ரூபாய் வீதம் ரிபேர், சூபர்விஷன் சார்ஜ் போடு கிறார்கள். இன்றைக்கு புது ஸெட்டே 250 ரூபாய்தான் இருக்கிறது. ஆகவே, எத்தனை ரேடியோ வேண்டுமோ இதை பெரிய பிரைவேட் கம்பனி களிடம் கொடுத்துவிட்டால் இந்தச் செலவை மிச்சப்படுத்தலாம். இந்த

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [13th July 1957

ரேடியோ டிப்பார்ட்மெண்ட்டுக்கு அவசியமே இருக்காது. ஆகவே இதை கவனித்து அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேமாதிரிதான் சென்னையில் "அக்காமடேஷன் கண்ட்ரோலர்" என்ற ஒருவர் இருக்கிறார். இவருக்கு என்ன வேலை என்று எங்களுக்கு விளங்கவில்லை. இந்த வேலைகளை செய்யவேண்டுமென்றால் ஜில்லாக்களில் ரெவின்யூ ஆபீசர்கள் இருக்கிறார்கள். அவர்களிடம் இந்த மாதிரி வேலைகள் ஏதாவது இருக்குமானால் ஒப்படைக்கலாம். ஆகவே இந்த "அக்காமடேஷன் கண்ட்ரோலர்" என்பது அவசியமில்லை என்று நினைக்கிறேன். இதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்ததாக நிலங்கள் ஆர்ஜிதம் செய்வதில் ரெவன்யூ டிபார்ட்மெண்டில் பேப்பர்கள் அதிகமாக **pending** ஆக இருக்கிறது. பல இடங்களிலும் ஹரிஜனங்கள் வீடு கட்டுவதற்காக கடன் கேட்டு ரெவன்யூ டிப்பார்ட்மெண்டாருக்கு எழுதினால் பேப்பர்களுக்கு சரியான பதில் வருவதில்லை. ஆகவே இப்போது இருக்கும் நில ஆர்ஜிதம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எல்லாம் கவனிப்பதற்கு ஒரு "ஸ்பெஷல் எஸ்டாபிலிஷ்மெண்ட்" போட்டால் நல்லது. அவ்விதம் செய்து ஜில்லாக்களிலும் கூடியசீக்கிரம் இந்த வேலைகளை முடித்து, அங்குள்ள மக்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்று அமைச்சர் அவர்களுக்கு வற்புறுத்தி சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

SRIMATHI **KAMALAMBUJAMMAL** : கனம் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து யான் சில வார்த்தைகளை சொல்லிக்கொள்கிறேன். அதோடு இருக்கின்ற சிலகுற்றங் குறைகளை சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை. உதாரணமாக விவசாயிகள் அவர்களுடைய காரியங்களுக்காக கொடுக்கப்படும் மனுக்கள் தாலூகா ஆபீஸ்களில் போய் தங்கி ஓய்வு பெற்றுக்கொள்வதோடு நீண்ட காலமாக வெளியே வருவதில்லை. இது நம்முடைய அமைச்சர்களுடைய தவறல்ல. அந்தந்த தாலூகாகளிலுள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அஜாக்கிரதைதான் இதற்கு காரணம். ஆகவே துரிதமாக நடத்துவதற்கு தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இரண்டாவது பட்டாக்களை மாற்றம் செய்வதில் ஒருவனுடைய பட்டா அவன் இறந்துபோன பின்னும் மாறாமல் அவன் பேரில் பட்டா இருப்பது சகஜமாக இருந்துகொண்டிருக்கிறது. ஒரு நிலத்தை இறந்துபோனவருடைய பேரன் வைத்துக்கொண்டு அனுபவித்துக்கொண்டிருந்தாலும் அவனுடைய பாட்டனின் பெயரில்தான் பட்டா இருந்துகொண்டிருக்கிறது. இதனால் என்ன கஷ்டம் ஏற்படுகிறதென்றால் விவசாயி ஏதாவது கடன் கேட்டு மனு கொடுக்கும்போது, உங்கள் பேரில் பட்டா இருக்கிறதா என்று கேட்டு, அவ்விதம் பட்டா இல்லையென்றால் கடன் கொடுக்க முடியாது என்று கூறிவிடுகின்றனர். ஆகையால் யார் நிலங்களை அனுபவிக்கிறார்களோ, அவர்கள் பேரில் அவ்வப்போது பட்டா மாற்றம் செய்து கொடுக்கவேண்டும். சில இடங்களில் கூட்டுப் பட்டாக்கள் இருக்கிறன்றன. இவைகளைப் பிரிக்கவேண்டும். கிஸ்தி கொடுக்கும்போது யார் யார் எந்த சர்வே நம்பர்கள் வைத்திருக்கிறார்கள், என்பது பிரத்தேகமாக தெரிய வேண்டும். இல்லையென்றால் கிஸ்தி கொடுப்பதற்கு ரொம்பவும் கஷ்டமாக இருக்கிறது. ஆதலால் இந்த மாதிரியுள்ள கூட்டுப் பட்டாக்களைப் பிரித்து அவர்களுக்குரிய சர்வே நம்பர்களை போட்டு கொடுப்பது மிக மிக அவசியம். இந்த வேலையை யெல்லாம் கிராம உத்தியோகஸ்தர்கள் செய்யவேண்டும். இதற்கு கிராம முனிசீபுகள் கர்ணங்கள் அக்கரை எடுத்து வேலை செய்ய வேண்டும். கிராம கர்ணங்கள் அங்கு சரியானபடி வேலை செய்வதில்லை. அங்குள்ள கிராம கர்ணங்கள் தங்களை கவர்னர் என்று நினைத்துக் கொள்கிறார்கள். அவர்கள் அஜாக்கிரதையாக இருக்கிறார்கள். இவர்கள் பொதுமக்களோடு சேர்ந்து பழகுவதில்லை. இப்பொழுதெல்லாம் கவனர்கள்கூட பொதுமக்களிடத்தில் வந்து பழகுகிறார்கள். அவர்கள் தாங்கள் ஒரு பொது மகான் என்று நினைத்துக்கொள்ளுகிறார்கள். ஆனால் இந்த கணக்குப்பிள்ளைகளுக்கும் இன்னும் பழைய "ஸுப்பீரியாரிட்டி" உணர்ச்சிதான் இருந்துகொண்டிருக்கிறது. அடிக்கடி எங்கேயாவது இவர்

13th July 1957] [Srimathi Kamalambujammal]

போய்விடுவார். இம்மாதிரி அதிகமான குறைகள் இருக்கிறது. இவைகளை கிராம அடிப்படையில் கவனித்து இந்தக் குறைகளை நீக்குவதற்கு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எஸ்டேட் லாண்ட்ஸ், இனும் லாண்ட்ஸ், சிவோயஜாமா லாண்ட்ஸ் இவைகளில் குடியிருக்கும் விவசாய மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். அவர்கள், அந்த நிலங்களில் இருப்பதின் காரணமாக அவர்களுக்கு அரசாங்கத்திலிருந்து எந்தவிதமான சலுகைகளும் கிடைக்கப்படுவதில்லை. ஆகவே அந்த நிலங்களை உடனடியாக அரசாங்கமே எடுத்துக்கொண்டு அவர்களுக்கு, அந்த விவசாயிகளுக்கு வேண்டிய உதவிகளை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த நிலச்சுவாந்தார்களோ அல்லது நிலத்தைப் பயிரிடுபவர்களோகூட திரிசங்கு சொர்க்கத்தில் இருப்பதுபோல்தான் இருக்கிறார்கள். நிலச்சுவாந்தார்கள் தங்கள் நிலத்தை எப்பொழுது அரசாங்கம் எடுத்துக்கொள்ளுமோ என்ற நோக்கத்தோடு அவ் விவசாயிகளுக்கு வேண்டிய வசதிகளை செய்துக்கொடுக்க மறுத்து விடுகிறார்கள். அவர்கள் எஸ்டேட் லாண்டில் இருப்பதால் சர்க்காரிலிருந்தும் எந்தவிதமான சலுகைகளும் கிடைக்காததால் விவசாயமக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அதை உடனடியாக கவனித்து மற்ற பகுதிகளில் இருக்கிற விவசாயமக்களுக்கு என்னென்ன சலுகைகள் கிடைக்கிறதோ அதேபோன்று இவ்விவசாய மக்களுக்கும் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு அங்கத்தினர் மாறுவேடம்பூண்டு அமைச்சர்கள் போகவேண்டுமென்று சொன்னார். ஆனால் அந்தக் காலத்தில் அமைச்சர்கள் எல்லாம் அரண்மனைகளில் வாழ்ந்து வந்தனர். அவர்கள் வெளியே அதிகமாக வராததால் அவர்கள் மாறுவேடம் பூண்டு வெளியே சென்றாலும் அவர்களை மக்கள் தெரிந்துகொள்ளமுடியாது. ஆனால் நமது அமைச்சர்கள் எல்லோரும் பொதுமக்களுடன் நன்கு பழகி, பொதுமக்களோடு சகோதரர்கள்போன்று பழகுவதால் அவர்கள் மாறுவேடம் பூண்டு சென்றாலும் மக்களால் அவர்களைக் கண்டுகொள்ள முடியும். ஆகவே அமைச்சர்கள் மாறுவேடம் பூண்டு செல்லும் யோசனையை கைவிட்டு விட்டு அவர்கள் இலாகாக்களுக்கு கண்டிப்பான முறையில், வேண்டிய உத்தரவுகளை போட்டால் போதும் என்று சொல்லிக்கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

SRI K. ANBAZHAGAN: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, 10-8
மாவட்ட நிர்வாக முறைகளைப்பற்றி எனக்கு முன்னால் பலர் இங்கு எடுத்துக் உ.மு
கூறினார்கள். இத்தகைய நிர்வாகங்களில் உள்ள குறைபாடுகளைக் கவனிப்பதற்காக அமைச்சர்கள் மாறுவேடத்தில் சென்று கவனிக்கவேண்டுமென்று ஒரு கருத்தும் கூறப்பட்டது. மாறுவேடத்தில் சென்றால் அது பலிக்காது என்ற கருத்தும் எடுத்துக் காட்டப்பட்டது. அமைச்சர்கள் மாறுவேடத்தில் செல்லாவிட்டாலும் அமைச்சர்களுக்குரிய வேடத்திலே சென்று காரியங்களைக் கவனிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர்களுக்குரிய வேடம் என்று நான் சொல்லும்போது, அமைச்சர்கள் தங்கள் வருகையை முன்கூட்டியே அறிவித்து விட்டுப் போவதால், "ப்ரோக்கிராம்" அனுப்பிவிட்டுப் போவதால் அமைச்சர்களின் கண்களுக்குப் புலனாகக் கூடாத காரியங்கள் மறைக்கப்பட்டு விடுகின்றன, அதிகாரிகளால். இது அனுபவத்தில் அறிந்த உண்மையாகும். ஆகவே அமைச்சர்கள் தங்கள் வருகையை அறிவிக்காமல் சென்று மக்களுக்கு நிம்மதி தரக்கூடிய விதத்தில், மக்களுக்கு நீதி கிடைக்கும் விதத்தில், உண்மையைக்காண முயற்சிக்கவேண்டும். மாவட்ட நிர்வாகம் இன்றையதினம் குறைவாக இருப்பதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. அதற்கு, பொதுவாக காங்கிரஸ் கட்சியில் இருப்பவர்கள் எடுத்துச் சொல்லக்கூடிய கருத்து, வெள்ளைக்காரன் காலத்தில் இருந்த மாவட்ட அமைப்பானது இன்றும் இருக்கிறது, அதனாலேதான் நிர்வாகத்தில் குறைகள் ஏற்படுகின்றன என்று சொல்கிறார்கள். அதை உண்மையாகவே அவர்கள் நம்புவார்களேயானால் இவ்வளவு காலத்திற்குள்ளாக அந்த நிர்வாக முறையை திருத்தியிருக்க வேண்டும். வேறு காரியங்களில், வெள்ளைக்காரன் காலத்தில் ஒரு சில காரியங்களைக் கண்டிக்கத் தயங்காத காங்கிரஸ் ஆட்சியாளர்கள், இந்த

மாவட்டங்கள் சின்னாபின்னமாக மாறுபட்ட முறையில், ஒத்து வராத நிலையில் இருந்தபோதிலும் அதைத் திருத்தியமைக்காதது அவர்களுக்கு அது ஓரளவு அது குறித்து ஒரு தெளிவான கருத்து இல்லை என்பதை எடுத்துக் காட்டுகிறது. குறிப்பாக, ராமனாதபுரம் மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் அதன் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடிவரைச் சென்று திரும்புவது எளிதன்று. ராமனாதபுரம் மாவட்டத்தின் தலை நகரம் இருப்பது மதுரையில். மதுரை மாவட்டத்தின் தலை நகரம் இருப்பது மதுரையில்தான். இப்படி ராமனாதபுரம் மாவட்டம் பெரியதொரு மாவட்டமாக இருந்தபோதிலும் அம்மாவட்டத்தின் தலை நகரம் அம் மாவட்டத்தில் இல்லாது மதுரையில் இருப்பது ராமனாதபுரம் மாவட்டத்தில் இருக்கும் மக்களின் துர்பாக்கியந்தான். அதைப் போலவே செங்கல்பட்டு மாவட்டத்தின் தலைநகரம் சென்னை நகரின் உள்ளில் ஒரு பகுதியில் இருக்கிறது. சென்னையில் இருக்கும் சைதாப் பேட்டையில் செங்கல்பட்டு மாவட்டத்தின் தலைநகராம் இருக்குமேயானால், செங்கல்பட்டு மாவட்டத்தின் கலெக்டர் ஆபிஸ், டிஸ்டிரிக்ட் போர்ட் ஆபிஸ் இவைகள் சைதாப்பேட்டையில் இருக்குமானால் அது செங்கல்பட்டு மாவட்டத்தின் வளர்ச்சியை ஓரளவு பாதிக்கும் என்பதில் ஐயமே கிடையாது. அதோடுகூட சென்னை நகர மக்கள் நெருக்கடியையும் அது ஓரளவு வளர்க்கும். புதிய தலை நகரங்கள் வளர்வதற்குரிய வாய்ப்பையும் அது தடுக்கும். அது, அதிகாரிகள் பல இடங்களில் பரவலாக இருப்பதைக் குறைக்கும் என்பதை எண்ணிப் பார்த்து கூடுதலான தலைநகரங்கள் ஏற்பட வழி செய்யவேண்டும். ஒரேயிடத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட தலை நகரங்கள் இருக்குமானால் அதனால் மக்கள் நெருக்கடி கூடுதலாகும். அதை, நாம் சென்னை, மதுரை, திருச்சி, தஞ்சை போன்ற இடங்களில் காண்கிறோம். அதேபோல் வேறு சில நகரங்கள், மாட மாளிகைகள் கட்டப்பட்டிருந்த இடங்கள் இன்று அங்குள்ள மக்களின் வாழ்க்கைத் தரம் தேய்ந்து போய் இருப்பதால் அவைகள் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன. உதாரணமாக, புதுக்கோட்டையை நான் சொல்வேன். காரைக்குடியை நான் சொல்வேன். அப்படிப்பட்ட இடங்களில் மாவட்ட நிர்வாக இயந்திரத்தைப் பரவலாக செய்ய பல்வேறு இடங்களில் இருப்பதற்கு அல்லது தேவைக் கேற்ப புதிய மாவட்டங்களைத் தோற்றுவித்து புதிய தலை நகரங்களை அமைக்க அரசாங்கத்தார் கவனத்தோடு செயலாற்றவேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு தலை நகரம் ஏற்படுத்தி அத்தலைநகரம் அம் மாவட்டத்தின் நடுமையத்தில் அமைக்கப்படவேண்டும். அப்படியிருந்தால் தான் மக்கள் தலை நகருக்கு வந்து தங்களது குறைகளைப் போக்கிக்கொள்ள எளிதாக இருக்கும். ஆகவே அந்த முறையில் மாவட்டங்களை புனரமைப்பு செய்யவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். அப்படிப் பார்த்தால் புதுக்கோட்டை ஒரு தலை நகரமாக முடியும். திருச்சியிலிருந்து புதுக் கோட்டையைப் பிரித்து, இராமனாதபுரம் மாவட்டத்தின் வட கோடிக்கு அப்பாலுள்ள சில பகுதிகளையும், தஞ்சை மாவட்டத்திலுள்ள அரந்தாங்கி தாலுகாவையும் சேர்த்து அங்குள்ள மக்களுக்கு ஒரு புனர் வாழ்வளிக்க ஒரு புதிய மாவட்டத்தை அமைக்கவேண்டும். இப்பொழுது கன்னியாகுமரிப் பகுதியோடு நாங்குனேரிப் பகுதியைப் சேர்ப்பதுபற்றி அங்குள்ள மக்கள் தங்களது எதிர்ப்பு மனப்பான்மையை எடுத்துக் காட்டினார்கள். மக்களிடத்திலே அந்தக் கருத்து முதலிலே தெரிவிக்கப்பட்டு, அதனால் அவர்களுக்கு ஏற்படக்கூடிய நன்மையைச் சுட்டிக் காட்டி அதற்குப் பின்னர்தான் மாற்றம் செய்யப்படவேண்டும். அப்படி மாற்றம் செய்வதற்குண்டான காரணங்களை எடுத்துச் சொல்லி மக்களின் மனதை அந்தப் பக்கம் திருப்பவேண்டும். ஜில்லாவிற்கு ஒரு விளம்பர அதிகாரி இருப்பதாக எதிர்கட்சி அங்கத்தினர் ஒருவர் சொன்னார். அந்த அதிகாரிகள் மக்களிடையே அரசாங்கம் செய்யும் காரியங்களை எடுத்துச் சொல்ல பயன்படுத்தப்படுவார்களேயானால் அது நல்லதொரு பயனை அளிக்கும். அடுத்தபடி, மாவட்ட நிர்வாகத்தின் கீழ் இருக்கும் மாவட்ட நிலையங்கள் அம் மாவட்டத்தின் நடுமையத்தில் இருக்கவேண்டும். தாலுகா ஆபீஸ்கள் மூலந்தான் மக்களின் குறைகள் மாவட்ட அதிகாரிகளுக்குப் போய்ச்சேர்ந்து திரும்பவும் அவர்கள் மூலந்தான் காரியங்கள் நடைபெறுகின்றன. இந்த

தாலுகா ஆபிஸ் நிர்வாகத்தில் ஊழல் மலிந்து கிடக்கின்றன. அவர்களுக்கு அளவு கடந்த வேலை இருப்பது ஒரு காரணமாய் இருக்கலாம், வெளியே சென்று சுற்றிப் பார்த்து வேண்டியது செய்வதில் அவர்களுக்கு அக்கறை இல்லாதது ஒரு காரணமாய் இருக்கலாம், இரண்டு நாலு என்று கூலி கொடுத்தால் தவிர வருகின்ற எந்த வேண்டுகோளையும் தீர்க்காத ஒரு மனப்பான்மை சாதாரண உத்தியோகஸ்தர்களுக்கு ஏற்பட்டு இருப்பது ஒரு காரணமாய் இருக்கலாம், கிராமங்களிலிருந்து வருகிற மக்கள் ஒன்றும் தெரியாதவர்கள், விஷயம் தெரியாதவர்கள் என்றதொரு அலட்சிய மனப்பான்மை ஒரு காரணமாயிருக்கலாம். இப்படிப்பட்ட நிலையும் இம்மாதிரிப்பட்ட சில ஆபீஸ்கள் உடனடியாகத் திருத்தியமைக்கப் படாவிட்டால் இந்த நாட்டு மக்கள் நன்மை அடைய மாட்டார்கள். மாவட்ட அதிகாரிகள் சிலர் நல்லவர்களாக இருந்தால் அந்த அதிகாரிகளின் திறமையினால் ஓரளவு நிர்வாகம் சிறப்பாக நடைபெறுகிறது என்று பாராட்ட நேர்ந்தாலும் பல நிலையங்களுக்கும் குறைபாடிற்கு உள்ளாகிறது. கிராம மக்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரும்போது, அவ்விண்ணப்பம் எப்பொழுது பரிசீலிக்கப்படும், அதற்குள்ள பதில் எப்பொழுது கிடைக்கும், என்பது இப்பொழுது அவர்களுக்குத் தெரியவில்லை. பல மாதங்கள் கடத்தப்படுகிறது. அதிகாரிகளிடம் சென்று கேட்டால் அவர்களுக்கு அதைக் கவனிக்க முடியவில்லை என்று சொல்லுகிறார்கள். கிளார்க்கிடம் சென்று அந்தப் பேப்பர் எங்கிருக்கிறது என்று கேட்டால் அப்பேப்பர் இருக்கிற இடமே தெரியவில்லை. ஆகவே இந்த முறை மாற்றப்பட வேண்டும். தாசில்தாருக்கு ஒரு மனு அனுப்பப்பட்டால், அது ஒரு வாரத்திற்குள் கிளார்க்கின் மேஜையிலிருந்து தாசில்தாருக்கு அனுப்பப்பட்ட வேண்டும். ஒரு வாரத்திற்கு மேல் விண்ணப்பம் கவனிக்கப்படாமல் கிளார்க்கிடமே இருக்குமானால் அதனால் ஏற்படும் காலதாமதம் என்ன என்று பார்த்து, ஒரு பேப்பரும் கிளார்க்கிடம் ஒரு வாரத்திற்கு மேல் தங்கக் கூடாது என்று உத்தரவு இடப்பட வேண்டும். வெளியிலிருந்து வரும் மக்களுக்கும் அதிகாரிகளுக்கும் இடையே தொடர்பு உண்டாக்க பப்ளிக் ரிலேஷன்ஸ் ஆபீஸர் போன்ற யாவைரயாவது ஒரு கிளார்க் தகுதியுடையவரை நியமிக்க வேண்டும். எனக்கே கூட சென்னையிலுள்ள பல நிலையங்களில் யாரிடத்தில் முறையிடுவது என்பது தெரியாது என்று சொன்னால் கிராமங்களில் இருக்கும் மக்களுக்கு எப்படித் தெரியும். யாரிடத்தில் கொடுக்க வேண்டும், எப்பொழுது அதற்குப் பதில் கிடைக்கும், முடிவு எப்பொழுது தெரிவிக்கப்படும் என்பவைகளை எல்லாம் பப்ளிக் ரிலேஷன்ஸ் கிளார்க் மூலமாக தெரிந்துகொள்ள வாய்ப்பு இருக்கச் செய்ய வேண்டும்.

அடுத்து நான் சொல்வேன். குறைகள் இருக்கின்ற வரையில் திருப்தி ஏற்படாத முறையில் கவர்னராக நினைத்துக்கொண்டாலும் சரி, அல்லது தோட்டிகளாக நினைத்துக்கொண்டாலும் சரி இந்த நாட்டு நிர்வாகம் சீர்படாது. அவர்களுக்கு இழைக்கின்ற அநீதி குறிப்பிடத் தக்கது. பத்து ஆண்டுகளுக்கு முன்னர் 23 ரூபாய் ஊதியம் வாங்கியவருக்கு 7 ரூபாய் அதிகம் கொடுத்து இப்போது 30 ரூபாய் ஊதியம் தரப்படுகிறது. ஏறத்தாழ 30 ரூபாய் ஊதியம் உள்ளவர் யாரால்தான் தங்களுள் முழுக் கடமையை நிறைவேற்ற முடியும். அவர்கள் தங்கள் கடமையில் மனதார ஈடுபட முடியுமா என்பதை உணர வேண்டும். ஆகவே அவர்களுடைய கடமையைச் செய்வதற்கு அவர்களை விடவில்லை. ரெவின்யூ இலாகாவின் செலவைப் பற்றிக் குறிப்பிடுகிற நேரத்தில் 10 ஆண்டுகளுக்கு முன் 25 லட்சம் ரூபாயாக இருந்தது இன்றைக்கு ஏறத்தாழ ஒரு கோடி ஆகிறது. ஏன் என்று கேட்டால் மக்கள் வாழ்க்கைத் தரம் 4½ மடங்கு உயர்ந்துவிட்டது என்று புள்ளி விவரம் கொடுக்கிறார்கள். அதோடு 1½ கோடியாக ஆகக் கூடும். என்று புள்ளி விவரம் காட்ட அரசாங்கம் தயாராக இருக்கிறது. பத்து ஆண்டுகளுக்கு முன் இருந்ததை விட இன்றைக்கு வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கிறது. ஆனால் 10 ஆண்டுகளுக்குப் பிறகு சம்பளத்தில் 7 ரூபாய் உயர்ந்திருக்கிறது என்று சொன்னால் அவர்களிடமிருந்து எந்த அடிப்படையில் கடமையுணர்ச்சியை எதிர்பார்க்க முடியும். நாள் முழுவதும் எந்த அதிகாரி வந்தாலும் போய்ப் பார்க்க வேண்டியிருக்கிறது. யார் எந்த உத்தரவு அனுப்பினாலும் அந்தக்

கிராம கணக்குப்பிள்ளை பதில் அனுப்ப வேண்டியது கடமையாக இருக்கிறது. இருபத்தி நாலு மணி நேரத்தில் கேட்கப்படக் கூடிய கேள்விகளுக்குப் பதில் தர வேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறார்கள். இந்த மாதிரி நிலையில் இருப்பவர்கள் கௌரவ அதிகாரிகள். கௌரவப் பிச்சை போல சம்பளம் தரப்பட்டு கௌரவப் பட்டம் தரப்படுகிறது. அதைத் தவிர கௌரவமும் இல்லை; கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்ளக் கூடிய சம்பளமும் இல்லை. கௌரவ உத்தியோகஸ்தர்கள் என்றாலும், சாதாரண மற்ற உத்தியோகஸ்தர்களுக்குள்ள ஓய்வும் இல்லை. சாதாரண உத்தியோகஸ்தர்கள் 8 மணி நேரம் வேலை செய்தால் போதும். ஆனால் கிராம அதிகாரிகளுக்கு அந்த வாயப்பும் இல்லை. சாதாரணமாக வில்லேஜ் முனிசீப் கௌரவ அதிகாரி என்று அரசாங்கம் குறிப்பிடுமானால், அதில் கௌரவம் இருக்கிறது என்று நான் ஒப்புக்கொள்வேன். கணக்குப் பிள்ளையை கௌரவ அதிகாரி என்று குறிப்பிடும்போது அவரிடமிருந்து வாங்கும் வேலையைப் பார்த்தால் கிராமத்தில் இருக்கின்ற கோழிக் குஞ்சிலிருந்து, வயலிலே விளைகிற ஒவ்வொரு பொருளைப் பற்றியும், ஊரில் ஒருவன் இறந்துபோனாலும் அல்லது பிறந்தாலும் அதற்குக் குறிப்பு வைத்துக்கொள்ள வேண்டியிருக்கின்ற ஒரு அதிகாரியை கௌரவ அதிகாரி என்று நாம் குறிப்பிடுவோமானால், அது நம்மை நாமே ஏமாற்றிக்கொள்ளக் கூடியதாகும். மக்களின் வாழ்க்கைத் தரம் 4 மடங்கு உயர்ந்திருக்கிறது என்று குறிப்பிடும்போது, அவர்களுடைய ஊதியம் இரு மடங்காவது உயர்ந்து ஏறத்தாழ 45 அல்லது 50 ரூபாய் ஊதியம் கிடைத்தால், அவர்கள் குற்றம் செய்தால் அதைக் கேட்பதில் அரசாங்கம் பெருமை கொள்ள முடியுமே தவிர, நீங்கள் மாமூல் வாங்குகிறீர்கள், உங்களுக்குக் குடிமக்கள் படி அளக்கிறார்கள் என்று சொன்னால் அது உண்மை வாதமாகாது. மிக உயர்ந்த உத்தியோகஸ்தர்களுக்கும் சிறிய உத்தியோகஸ்தர்கள் மாமூல் கொடுத்து வருகிறார்கள். பெரிய நிர்வாக அதிகாரிகளும் தங்கள் கீழ் உள்ளவர்களை நசுக்கிப் பிழிந்து, அவர்களிடமிருந்து பணம் பறிக்கிறார்கள். இந்த நிலைமை உள்ள நாட்டிலே அடிதட்டிலுள்ள அதிகாரிகளைப் பார்த்து மாமூல் பெறுகிறீர்களே, ஆகையால் உங்களுக்குக் கூடுதல் சம்பளம் வேண்டுமா என்று சொன்னால் அது வாதம் ஆகாது. இந்த நிர்வாகத்தை நடத்த இன்றைக்கு N.G.O. க்கள் தான் முக்கியம். ஏறத்தாழ மாவட்ட நிர்வாகத்தின் உள் கூடாக அமைந்திருப்பவர்கள், இன்றைக்கு அவர்களுக்குத் தரப்படுகிற சம்பளத்தில் அவர்களுக்கு திருப்தி இல்லை. அமைச்சர்கள் பதில் சொல்லலாம்—என்ன, திருப்தி இல்லாவிட்டால் கிளர்ச்சி செய்வதுதானே என்று.

**The Hon. Sri P. KAKKAN** : அப்போது சர்க்கார் சிப்பந்திகளின் சம்பளத்தை உயர்த்தியபோதும் கூச்சலிட்டார்கள். இன்று இன்னும் சம்பளம் கூடக் கொடுக்கவில்லை என்று பேசுகிறார்கள்.

**Sri K. ANBAZHAGAN** : இந்த நிலையில் தரப்படுகிற சம்பளம் அவர்களை ஏமாற்றப் பயன்டுகிறதே தவிர, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தப் பயன்படவில்லை. இன்றைக்கு நாட்டிலே அனாவசியமாக பணம் செலவு செய்யப்படுகிற துறைகளைக் காட்டுகிறோம். ஆனால் செலவுகளை நிறுத்த முடியவில்லை. ஐந்தையும், ஏழையும் அளந்துவிட்டு திருப்தி அடைந்துவிட்டார்கள் என்று கூறுகிறார்கள், அரசாங்கப் புள்ளி விவரங்களில். ஆனால், அவர்கள் அரசாங்கத்தை எதிர்த்துப் பேசத் தெரியாத வாயில்லாப் பூச்சிகளாக இருக்கிறார்கள். அவர்களுக்குத் தரப்படுகிற சம்பளம் பொருளாதார புள்ளி விவரப்படி, வாழ்க்கைத்தர புள்ளி விவரப்படி கணக்குப் போட்டுப் பார்த்தாலும் இன்றைக்கு $4\frac{1}{2}$ மடங்கு உயர்ந்திருக்க வேண்டும்; போனால் போகிறது $2\frac{1}{2}$ மடங்கு; வேண்டாம் $1\frac{1}{2}$ உண்டா; அதுவும் இல்லை. கிடைத்தது ஏழும், ஐந்தும்தான். அமைச்சர்களுக்கு 500 ரூபாய் சம்பளத்திற்குமேல் இருக்கக் கூடாது என்று இன்று ஆளும் கட்சியினராக இருக்கும் காங்கிரஸ்காரர்கள் அன்று பேசினார்கள். இன்றைக்கு மந்திரிகளுக்கு 1,500 ரூபாய் 2,000 ரூபாய் சம்பளம் இருப்பது ஏன் என்று கேட்டால், அவர்களின் மாபெரும் தலைவர் பண்டித நேரு

13th July 1957] [Sri K. Anbazhagan]

சொல்கிறார், அன்றைக்கு இருந்ததைவிட இன்றைக்கு 4½ மடங்குக்குமேல் உயர உண்மையாகவே இடமிருக்கிறது என்று சொல்கிறார்கள். நான் அதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அதை விட அவர்களுக்கு அதிகாரம் இருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆனால் ஏழை N.G.O.-க்களுக்கு அப்படிப்பட்ட அதிகாரம் இல்லை. சொல்வதற்கான வாய்ப்பும் இல்லை. அவர்களிடத்திலே உள்ள குறைகள் என்ன என்பதை அரசாங்கம் கேட்கிறதா என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்களுக்கு திருப்தி ஏற்பட்டால்தான் அவர்களிடமிருந்து நல்ல வேலையை எதிர்பார்க்கலாம். ஆகவே அவர்களது குறைகளைப் போக்க அரசாங்கம் முயற்சிக்க வேண்டும்.

**Sri P. S. K. LAKSHMIPATHI RAJ** : சபாநாயகர் அவர்களே, ஒரு அங்கத்தினர் எவ்வளவு நேரம் பேசலாம் ?

**Mr. SPEAKER** : யார் யார் பேசுவது, எந்தெந்தக் கட்சிக்கு எவ்வளவு நேரம் கொடுப்பது, அங்கத்தினர்களுக்கு எவ்வளவு நேரம் கொடுப்பது, இதை எல்லாம் தீர்மானிப்பது சபாநாயகருடைய கடமை. கனம் அன்பழகன் ஒரு கட்சி உப தலைவர் ஆனதால் அதிக நேரம் பேசுவதற்கு சலுகை கொடுப்பது அவசியம். கனம் அங்கத்தினர் காங்கிரஸ் கட்சித் தலைவராக வந்தால் அவருக்கு ½ மணி நேரம் அவசியம் கொடுக்கிறேன்.

**Sri K. ANBAZHAGAN** : மாவட்ட நிர்வாகத்திலுள்ள குறைகளைப் போக்குவதற்கான வழி வகைகளைச் சொல்வதற்காகத்தான் இதை நான் குறிப்பிட விரும்புகிறேன். **N.G.O.** க்கள், கிராம அதிகாரிகள் இவர்களது ஊதியம் இன்னும் சிறிது அதிக அளவிற்காவது உயர்த்தப்பட வேண்டியது மிக மிக அவசியம். அப்படிச் செய்து அவர்களுக்குத் திருப்தி ஏற்பட்டு ஒழுங்கு முறை வலியுறுத்தப்படுமானால் இப்போதிருப்பதை விடச் சிறந்த முறையில் நிர்வாகம் நடத்த முடியும்.

கடைசியாக ஒரு காரியத்தை தெரிவித்துக்கொள்ளுகிறேன். பல்வேறு அதிகாரிகளைக் கொண்டு நிறைவேற்றப்படும்போது, குழப்பத்திற்கு ஆளாகிவிடுகிறோம். **Community Project Department, District Board** நிர்வாகம், ரெவின்யூ நிர்வாகம், இந்த மூன்று நிர்வாகங்களும் சில பகுதிகளில் ஒன்றுக்கொன்று குறுக்கீடாக இருக்கின்றன. ரோடு போடுதல், கிணறு தோண்டுதல், கல்விச் சாலைகள் ஏற்படுத்துதல், முதலியவைகளில் இந்த மூன்று பகுதிகளும் சேர்ந்து கவனிக்க வேண்டியிருப்பதால் ஒன்றும் நடவாமல் போய்விடுகின்றன. ஆங்கிலத்தில் ஒரு பழமொழி சொல்லுவார்கள்—**Too many cooks spoil the broth** என்று. அமைச்சர்களுக்குத் திருப்தி அளிக்கும் என்று நம்புகிறேன். பல சமையற்காரர்கள் சேர்ந்து சமையல் செய்து சமையலைக் கெடுத்துவிடுவது போல, பல அதிகாரிகள் ஒரு துறையில் குறுக்கிடுவதால், நிர்வாகக் குழப்பம் ஏற்படுகிறது. இது தடுக்கப்பட வேண்டும். மாவட்ட அதிகாரிகள் போன்ற ரெவின்யூ டிவிஷனல் ஆபீசரோ அல்லது கலெக்டரோ அல்லது அங்குள்ள **Technical Expert**-ஓ என்ன சொல்லுகிறார்களோ அதைத்தான் எடுத்துக்கொள்ள வேண்டும். அந்தந்த துறை அதிகாரிகளுக்கு அந்தந்த துறைகளில் அதிக உரிமை அளிக்க வேண்டும். **Engineer** ஒருவர் இந்தக் கால்வாயை வெட்டி இப்படித் திருப்ப வேண்டுமென்று சொன்னால் அதை அப்படியே செய்ய வேண்டும். ஆட்சிப் பொறுப்பு கலெக்டருடையதாக இருக்கலாம். ஆகவே நான் சொல்வதென்னவென்றால், **Engineers, Sanitary Engineers, Health Officers** இவர்கள் அந்தந்தத் துறையில் நிபுணத்துவம் வாய்ந்தவர்கள். அவர்கள் என்ன சொல்லுகிறார்களோ அதன்படியே நடக்க வேண்டும். மீண்டும் சொல்லுகிறேன், பல அதிகாரிகள் ஒரு துறையில் குறுக்கிடுவது கூடாது. அந்தந்தத் துறை அதிகாரிகளுக்கு அதிகம் அதிகாரம் அளித்து அவர்கள் சொல்லுகின்ற கருத்துக்களை ஏற்று அதன் மூலம் செயல்படுவார்களேயானால், மக்கள் நன்மை அடைவார்கள். அதன் மூலம் நாடு நன்மையடையும்.

நாடு முன்னேற்ற மடையும். ஆகவே மாவட்டங்களைப் புனரமைத்து மாவட்ட நிர்வாக முறையை மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

11-10 a.m. **Sri V. K. KRISHNAMURTHI:** தலைவர் அவர்களே, மாவட்ட மான்ய கோரிக்கையை ஆதரிக்கும் முறையில் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். மாவட்ட அதிகாரம் எப்படி இயங்குகிறது என்று பார்த்தால் பல உண்மைகள் புலனுகிறது. நம் நாடு கட்டுப்பாடு இல்லாத நாடு. மக்கள் அதிகமாகப் பெருகிவிட்டார்கள். வளர்ச்சி அடையாத அடிமை நாடு. திட்டங்கள் முன்பு இல்லாத காரணத்தால் அந்த அவல நிலையில் நம் நாடு இருந்தது. இப்போது நல்ல திட்டங்கள் தீட்டப்பட்டு இருந்தபோதிலும், அவைகளை நடைமுறையில் கொண்டுவர தேர்ச்சி பெற்ற அதிகாரிகள் அலுவலகங்களில் இல்லாததாலும், திறமையாக இல்லாததாலும் அதிக பளுவால் பாதிக்கப்பட்டு இருப்பதாலும், எதிர்பார்த்த காலத்தில் எதிர்பார்த்த நேரத்தில் எதிர்பார்த்த அளவு நம் திட்டங்கள் எல்லாம் நிறைவேருமல் இருக்கிறது என்பதை நாம் எல்லோரும் உணருகிறோம். இந்த நெருக்கடியான நிலையில் கல்வித் துறையில் வடஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரை, நிர்வாகத்தை இரு பிரிவாகப் பிரித்து நல்ல முறையிலே, விறைவிலே, தர்மமான முறையிலே திட்டங்களை நிறைவேற்றி பல நல்ல அனுபவங்களைப் பெற்றிருக்கிறோம். அதே முறையில் பல துறைகளில் விஸ்தரித்தால் நம் நாட்டிலே இருக்கக் கூடிய திட்டங்கள் மக்களின் குறைகளை விரைவிலே தீர்க்க ஒரு அரணுக அமையக் கூடிய முறையிலே இருக்குமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது அரசாங்கத்தின் மேற்பார்வையில் இருக்கும் மாவட்டங்களுக்கும் ஜமீந்தார் மேற்பார்வையில் இருக்கும் மாவட்டங்களுக்கும் பல வேறுபாடுகள் இருக்கின்றன. இப்பொழுது ஜமீந்தார் மேற்பார்வையில் இருக்கும் மாவட்டங்களில் பழி வாங்கும் முறையில் காரியங்கள் செய்யப்படுகின்றன. இராமங்களைப் பிணைக்கும்போது, அவர்கள் மக்களுக்குத் துன்பம் கொடுக்க முடியும். இதைத் தவிர்த்து, பழி வாங்கும் படலத்தை நீக்கி, கலெக்டர்கள் முன்னிலையில் மக்கள் பிரதிநிதிகளை வைத்து இந்த பிரித்துப் பிணைக்கும் பிரச்சினைகளைத் தீர்த்தால், மக்கள் நலம் எய்துவார்கள், முன்னேற்றம் அடைவார்கள். புறக்கணிக்கபடமாட்டார்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அரசாங்கம் விவசாயிகளுக்கும், உழவாளிகளுக்கும் பணம் கொடுத்து உதவ முன்வந்து இருக்கிறார்கள். இருந்தாலும் குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்டவர்களிடம் குறிப்பிட்ட தொகையை சேருவதற்கு இடையூறுகள் இருக்கின்றன. இவைகளைச் சரியாகப் பரிசீலித்து காரியங்கள் செய்ய வேண்டும். சமீபத்தில் திருவண்ணாமலையில் ஒரு செமினர் நடந்தது. அப்போது அதிகாரிகளும் கூடிப் பேசினார்கள். கோவாபரேடிவ் டிபார்ட்மெண்டு மூலமாக இக்கடன் தொகைகளைக் கொடுத்தால், காலம் கடத்தாமல் குறித்த நேரத்தில், குறிப்பிட்ட தொகையை குறைபடாமல் குறிப்பிட்ட மனிதருக்குப் போய்ச் சேரும் என்று சொன்னார்கள். ஆகையால் கோவாபரேடிவ் டிபார்ட்மெண்டு நல்ல முறையில் வேலை செய்வதால் அதன் மூலமாக இவற்றைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கெண்டு என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

**Srimathi T. N. ANANDANAYAKI:** Will the time-privilege shown to the deputy leaders of small parties like the Dravida Munnetra Kazhagam be extended to the Lady Members also?

**Mr. SPEAKER:** The Speaker will consider that. (laughter.)

**Sri A. GOVINDASAMY:** சட்டசபையிலே ஒரு கட்சி சின்னது மற்றது பெரிது என்று வித்தியாசம் காட்டப்படுகிறதா?

13th July 1957]

**Mr. SPEAKER :** ஸ்ரீமதி அனந்தநாயகி உதாரணமாக டி. எம். கே. என்று சொன்னார்கள். பெரிய கட்சி சின்ன கட்சியைக் குறித்து என்ற அர்த்தத்தால் சொல்லவில்லை. அந்தச் சலுகை பெண்மணிகளுக்கும் அளிக்கப்படுமா என்று கேட்டார்கள். யோசிக்கிறேன் என்று சொன்னேன்.

* **Dr. Srimathi T. S. SOUNDARAM RAMACHANDRAN :** சபா நாயகர் அவர்களே, இந்த மான்யத்தை ஆதரித்து நான் பேசும்போது பல விஷயங்களைப் பற்றிக் குறிப்பிடவிரும்புகிறேன். முதலிலே ஜில்லா சீரமைப்பை எடுத்துக்கொண்டால், கன்னியாகுமரியில் 8 லக்ஷம் ஜனத் தொகை இருக்கிறது. மற்றொரு ஜில்லாவில், உதாரணமாக சேலத்தில் 36 லக்ஷம் இருக்கிறது. இப்படி இருப்பதால் அநேக ஜில்லாக்களில் பெரிய பாகங்கள் கவனிக்கப்படாமல் இருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உதாரணமாக வட சேலம் இப்படி கவனிப்பு இல்லாமல் இருக்கிறது. அதே மாதிரி ஒரு தாலுக்கா சிறிதாக இருக்கிறது. மற்றொன்று பெரிதாக இருக்கிறது. ஆனால் நிர்வாக இயந்திரம் ஒரே மாதிரியாக இருக்கிறது. பிர்க்காக்களை எடுத்துக் கொண்டாலும் இதே நிலைமைதான். ஆத்தூர் பிர்க்காவில் ஜனத் தொகை 1,80,000 அடுத்த பிர்க்காவில் 29,000 ஜனத் தொகை. இரண்டுக்கும் ஒரே ரெவின்யூ இன்ஸ்பெக்டர். கடன் தொகை ஒதுக்குவதும் ஒன்றே. ஜனத்தொகை அடிப்படையிலே கொடுப்பது இல்லை. போன சட்டசபையிலே ஸ்ரீ ராமமூர்த்தி இதை எடுத்துக் காட்டி, சௌந்தரம் ராமச்சந்திரன் தொகுதிக்கு மாத்திரம் என் அதிகக் கடன் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று கேட்டார். ஜனத் தொகை அடிப்படையில் கொடுத்திருந்தால் ஆத்தூருக்கு வேடசெந்தூரை விட ஆறு பங்கு அதிகம் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் $1\frac{1}{4}$ பங்குதான் அதிகம் கிடைத்தது. கிராமங்களைப் பற்றியும் இதே நிலைமைதான். 40 ஹாம்லெத், அல்லது மதுரைப் பக்கத்தில் சொல்லுவது போல பட்டிகள் கொண்டது ஒரு ரெவின்யூ வில்லேஜ் என்று சொல்லப்படுகிறது. ஒரே கிராமத்திலுள்ள இரு தெருக்களில் ஒன்று ஒரு ரெவின்யூ வில்லேஜிலும் மற்றொன்று இன்னொரு ரெவின்யூ வில்லேஜிலும் இருக்கிறது. பஞ்சாயத்துகள் வர ஆரம்பித்த பிறகு பாளையம் போன்ற கிராமங்களுக்கு எப்படி நன்மை செய்ய முடியும். ஜனத் தொகை விகிதத்தில் பார்த்தால் ஒன்றுமே முடியாது. ஜில்லா சீரமைப்பிலிருந்து கிராம சீரமைப்பு வரை ஜனத் தொகை அடிப்படையில் இருக்க வேண்டுமென்றாலும், சின்னாளப்பட்டி போன்ற கிராமங்கள் காம்பாக்டாக, அதாவது திட்டவட்டமாக குறிப்பிட்ட நில விஸ்தீர்ணத்தைக் கொண்டதாக இருந்தால் ஒரு பஞ்சாயத்தே போதும். ஆகையால் தயவுசெய்து இந்த சீரமைப்பு விஷயத்தை கவலையோடு எடுத்துக் கொண்டு எல்லா ஜனங்களுக்கும் விளம்பரம் செய்து, நிர்வாகம் திறமையான முறையில் நடக்கும் வகையில் ஒரு திட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஜில்லா முதல் கிராமங்கள் வரை சீரமைக்கப் பல காரணங்கள் இருந்தாலும் இப்போது ஒன்று இரண்டை மாத்திரம் சொல்ல விரும்புகிறேன்.

சமுதாய நலத் திட்டத்தை எடுத்துக்கொள்வோம். சமீபத்தில் நமது எஸ்டிமேட் கமிட்டி கூடி இதை ஆராயவேண்டுமென்று சொல்லியிருக்கிறது. இதில் தமிழ்நாடு சரியாகச் செயல்படவில்லை என்று சொல்லப்படுகிறது. இதற்கு அடிப்படைக் காரணம் ரொம்பப் பேருக்குத் தெரியாது. இந்திய சர்க்கார் திட்டம் போடும்போது 64 ஆயிரம் ஜனத் தொகை கொண்டது ஒரு வட்டாரம் என்றும், அப்படி 3 வட்டாரம் சேர்ந்தது 2 லக்ஷம் ஜனத் தொகை கொண்டது ஒரு சமுதாய நலத் திட்டம் என்றும் வகுத்தார்கள். கோயம்புத்தூர், கீழ் பவானி பிரதேசத்தில் இருக்கும் திட்டங்களில் ஜனத் தொகை 7, 8 லக்ஷம். மலபாரில் அதற்குமேல் ஆகிவிட்டது. ஆனால் வட இந்தியாவில் பஞ்சாப் போன்ற இடங்களில் 2 லக்ஷம் ஜனத் தொகை கொண்ட திட்டங்களுக்கும், நமது மாகாணத்தில் 7, 9 லக்ஷம் ஜயனத் தொகை கொண்ட திட்டங்களுக்கும் ஒரே மான்யம்தான் தரப்படுகிறது. அவர்களுக்கும் 20 கிராம சேவகர்கள் என்றால், நாங்களு

மடங்கு அதிக ஜனத் தொகை கொண்ட நம் திட்டங்களுக்கும் அதே 20 கிராம சேவகர்கள்தான். ஆகையால் நாம் பெரும் தொகையை இழந்தது மட்டுமல்ல, புள்ளி விவரங்கள் வரும்போது 20 ஆயிரம் ரூபாய் மான்ய மாக வந்தால், நாம் 25 ஆயிரம் கொடுத்து இருக்கிறோம். ஜனத்தொகை பிரகாரம் கணக்குப் பார்த்தால், பஞ்சாயத்துக்கு குறைவாக இல்லை. அவர்களுக்கு 2 லக்ஷம் ஜனத் தொகையும், நமக்கு 8, 9 லக்ஷம் ஜனத் தொகையும் இருப்பதால் 2 லக்ஷம் ஜனத் தொகை அடிப்படையில் கொடுக்கப்படும் இந்த மான்யம் எல்லா விதத்திலும் நமக்கு குறைந்துவிடுகிறது. நியாயமாகக் கிடைக்க வேண்டிய பல தொகைகளை நாம் இழந்துவிட்டோம். இரண்டாவது திட்டத்திலே, சமுதாய நலத் திட்டம் என். இ. எஸ். (N E.S.) பிளாக்கும் ஒவ்வொரு ஜில்லாக்களிலும், வட்டாரங்களாகப் பிரிக்கப்பட வேண்டியிருக்கிறது. ஒரு பிர்க்கா, இரண்டு பிர்க்கா என்று பிரிக்காமல், $1\frac{1}{4}$ பிர்க்கா, $1\frac{1}{2}$ பிர்க்கா, $\frac{1}{4}$ பிர்க்கா என்று இந்த மாதிரி சிதாடிக்கப்படவேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. ஆரம்பத்திலே எல்லா ஜனங்களும் வேண்டுமென்று சொல்கிறார்கள் என்று சொல்லி எவ்வளவு ஜாஸ்தியாகச் சேர்க்கலாமோ அவ்வளவு பிளாக்கில் சேர்த்துக்கொண்டதால் இந்த நிலை ஏற்பட்டது. புதிதாக வரும் பிளாக் 60, 80 ஆயிரம் ஜனத் தொகை கொண்டதாக அமைக்கப்பட்டிருப்பது உண்மைதான். இந்த சீரமைப்பை இரண்டாவது திட்டத்திலேயே செய்தால்தான் மூன்றாவது திட்டத்தை நல்ல முறையிலும் திறமையாகவும் நடத்த முடியும் என்பதை சர்க்கார் உணர வேண்டும். ஒரு வட்டாரத்திற்கு 60 ஆயிரம்தான் என்று சொல்லி முற்றுப் புள்ளி வைக்கவேண்டும். விஸ்தீர்ணத்தையும், ஜனத் தொகையையும் கருத்திற் கொண்டு, ஜில்லாக்களையும், பிர்க்காக்களையும் பிளாக்குகளையும் சீரமைக்க சர்க்கார் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

திடீரென இப்போது நாங்குனேரியைக் கன்னியாகுமரியுடன் இணைக்க வேண்டியது அவசியம் இல்லை. கன்னியாகுமரி நம்முடன் சேர்ந்துவிட்டாலும் சர்வீஸ் கண்டிஷன், நில வரி போன்றவைகள் இன்னும் இன்டக்ரேஷன் ஆகவில்லை. திருவாங்கூரில் கொச்சி சேர்ந்து ஐந்து வருஷத்திற்குமேல் ஆகியும், இன்னும் இரு ராஜ்யங்களின் இணைப்பு தீர்ந்தபாடில்லை. துரிதமாக செய்யப்படும் என்று சொல்கிறார்கள்.

(Sri M. Jagannathan in the chair.)

அடுத்தபடியாக ஜில்லா சீரமைப்பு பற்றிச் சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். கிராமங்களின் அபிவிருத்திக்காகப் போடும் சர்க்கார் உத்தரவுகள் அவர்களுக்கு மார்ச் மாதம் 20-ந் தேதிக்கு வந்து சேருகிறது. ஆகையால் அவைகளை உடனடியாகச் செய்ய முடிவதில்லை. இந்த உத்தரவுகளை எம். எல். ஏ.-க்களுக்கும் ஜில்லா போர்டு மெம்பர்களுக்கும் உத்தரவு பிறப்பிக்கும்போது தெரியபடுத்தினால் மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுப்பதற்குச் சௌகரியமாக இருக்கும். இந்த முறையில் சர்க்கார் இயந்திரம் இயங்குமானால் எல்லோருடைய ஒத்துழைப்பும் கிடைக்கும் என்று நான் நிச்சயமாகச் சொல்லுவேன். அப்பொழுது அவர்கள் தொகுதியிலுள்ள அபிவிருத்தி வேலைகளை 'லைசன் ஆபீசர்களாக' இணைப்பு அதிகாரிகளாக, கௌரவ அதிகாரிகளாக இருந்து அவர்கள் நடத்திக்கொள்ள முன்வருவார்கள். கிராமத்திலுள்ள மக்கள் மனுக்கள் போட்டால் அதற்குப் பதிலே கிடைப்பதில்லை. 100-க்கு 99 சத விகிதம் இது உண்மை. இதற்காக ஒரு குமாஸ்தாவைப் போட்டு கிராம ஜனங்களுக்கு அவர்கள் மனுக்கள் என்ன ஆயின என்பதை எடுத்துச் சொல்ல ஏற்பாடு செய்யலாம். கிராமத்திலுள்ள ஜனங்கள் ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டரை சந்திக்க வேண்டுமென்றால் ஒரு வெள்ளைச் சட்டைக்காரரை அழைத்துக்கொண்டு போக வேண்டும். ஒரு டிபுடி இன்ஸ்பெக்டரைப் பார்த்து ஒரு ஸ்கூல் திறக்க ஏற்பாடு செய்வதற்கு 4 அல்லது 5 பேரை அழைத்துக்கொண்டு போக வேண்டும். இதற்காகவே சிலர் ஒவ்வோரு கிராமத்திலும் இருக்கிறார்கள். இதை ஒரு வியாபாரமாகவே நடத்தி வருகிறார்கள். கிராமத்து ஜனங்கள் மனுப்போட்ட ஒரு மாதத்திற்குள் என்ன நிலைமையில் இருக்கிறது என்பதை தெரிவிக்கும்படி சர்க்கார் மெஷினரி இருக்குமானால் நன்றாக இருக்கும். கிராமத்திலுள்ள மக்கள் ஏராள-

மான மனுக்களைப் போடுகிறார்கள். அதிலும் ஹரிஜனங்கள் ரொம்பவும் பிற்போக்கான நிலையில் இருக்கிறார்கள். ஆகையால் இந்தப் பழக்கத்தை ஒழித்தால் கிராமத்து ஜனங்களுக்கு ஒரு புது நம்பிக்கையும் புது ஆர்வமும் நிச்சயமாக வரும். இயந்திரத்திலுள்ள பழைய எண்ணையைத் துடைத்து விட்டு புது எண்ணையைப் போட்டால் நிலைமை நிச்சயமாக மாறும். 30,000 ஜனத்தொகையுள்ள கிராமத்துக்கும் ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டர், 180,000 ஜனத் தொகையுள்ள கிராமத்துக்கும் ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டர். இவ்வளவு ஜனத் தொகையுள்ள கிராமத்திலிருக்கும் ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டரிடமிருந்து எவ்வளவு எதிர்பார்க்க முடியும். சீரமைப்பு விஷயத்தில் இவைகளை எல்லாம் எடுத்துக்கொண்டு பரிசீலிப்பது அவசியம் என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். "என். இ. எஸ்." "கம்யூனிட்டி டெவலெப்மெண்டு" வேலைகள் இன்னும் 3 வருஷங்களுக்குத்தான் இருக்கப்போகிறது. ஸ்தல அபிவிருத்தி வேலைகளில் ஜனங்களுக்கும் அதிகாரிகளுக்கும் ரொம்ப நெருங்கிய தொடர்பு ஏற்பட்டால் ஒரு புது நம்பிக்கை ஏற்படும். பள்ளிக்கூடம் திறப்பது, கக்கூஸ் கட்டுவது, கிணறு வெட்டுவது போன்ற வேலைகளை "லோகல் டெவலெப்மெண்ட் ஒர்க்ஸ்" மூலமாகவும் சிக்கனமாகவும் துரிதமாகவும் செய்யலாம். சமுதாய நல அபிவிருத்தி திட்டம் இல்லாத இடங்களில் ஸ்தல அபிவிருத்தி திட்டங்களுக்கான தொகைகளைக் கொடுக்க வேண்டும். இம் மாதிரி இடங்களில், அபிவிருத்திக் கமிட்டி, "பிளாக் அட்வைசரி கமிட்டி" போன்ற முறையில் ஏற்படுத்தினால் ஒரு சிறந்த பயிற்சியாக இருக்கும். இதனால் வேலைகளை மிகவும் துரிதப்படுத்த முடியும் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை. ஆதலால் ஸ்தல அபிவிருத்தித் திட்டங்களுக்கான தொகையை நாம் கொடுக்க வேண்டும்.

தமிழ் நாட்டுக்கு சர்டிபிகேட் கொடுக்கவேண்டுமென்ற முறையில் நான் பேசவில்லை. மற்ற இடங்களைப் பார்க்கும்போது நம்முடைய ராஜ்யத்தில் நிர்வாகம் நன்றாக நடக்கிறது என்று சொல்ல வேண்டும். இன்னும் நன்றாக நடத்த திறமை உண்டு. வாய்ப்பு உண்டு. இதில் கட்சி பேதம் இருக்க முடியாது. இன்னும் துரிதமாக, சிக்கனமாக வேலைகளை நடத்த முடியும்.

அதோடு ஒரு பக்கத்தில் என். ஜி. ஓ.-வைப் பற்றிச் சொன்னார்கள். அவர்களுடைய கஷ்டங்களைத் தெரியாதவள் அல்ல நான். என். ஜி. ஓ.-க்களுக்கு ஒரு மனுவைச் செய்துகொள்ள ஆசைப்படுகிறேன். என். ஜி. ஓ.-க்களை விட கிராமங்களில் உள்ள ஜனங்கள் அதிகம் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுடைய நிலைமை சீர்பட வேண்டுமானால் சுதந்திர இயக்கம் நடந்தபோது இருந்த உணர்ச்சி இருக்க வேண்டும். என். ஜி. ஓ.-க்களுக்கு இப்பொழுது சுமார் 80 ரூபாய் கிடைக்கிறது. அதிலேயே அவர்கள் திருப்திப்பட வேண்டும் என்று நான் சொல்லவில்லை. குறைந்தது 100 ரூபாய் சம்பளம் இருக்க வேண்டும் என்றும், சம்பள விகிதத்தில் ஏற்றத் தாழ்வு, 10 பங்குக்கு மேல் இருக்கக் கூடாது என்றும் நம்புகிறவள் நான். சொல் ஒன்று, செயல் ஒன்று என்று நினைப்பவள் அல்ல. அப்படி இருந்தும் தற்பொழுது என். ஜி. ஓ.-க்களுக்கு ஒரு முக்கியமான கடமை இருக்கிறது: தங்களுடைய சொந்த நலத்தை மட்டும் கருதாது தங்களைவிட இரண்டு அல்லது மூன்று மடங்கு அதிகமாக கஷ்டப்படும் கிராம மக்களுடைய நிலையை சீர்படுத்துவதில் அவர்கள் ஒத்துழைக்க வேண்டும். அம் மாதிரி அவர்கள் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. என். ஜி. ஓ.-க்களைப் பற்றி எதிர்க் கட்சிக்காரர்கள் எடுத்துக் கூறினார்கள். அவர்களைப் போல் நமக்கும் அவர்களிடத்தில் அனுதாபம் உண்டு. நான் கேட்டுக்கொள்ளுவதெல்லாம் என்னவென்றால் நாம் எல்லோரும் என். ஜி. ஓ.-க்களை நல்ல முறையில் வேலை செய்யும்படியாக ஊக்கப்படுத்தி விட வேண்டும். இதில் நாம் பின்வாங்கக் கூடாது. நான் பேசுவதைப் பற்றி பலவிதமாக நாளைக்குப் பேப்பரில் போடுவார்கள். அது எனக்குத் தெரியும். அதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. என். ஜி. ஓ.-வினர் தங்கள் கடமைகளை நூற்றுக்கு நூறு உண்மையாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது ஒரு பெரிய சீரமைப்பு [illegible]

[Dr. Srimathi T. S. Soundaram Ramachandran] [13th July 1957

இதில் அவர்கள் தங்களுடைய உரிமைகளுக்கு மட்டும் கிளர்ச்சி செய்ய விடாமல் நாட்டின் நலத்தை உத்தேசித்து காரியங்களை செய்யும்படி நாம் பாடுபட வேண்டும்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் போட்டு கிராம அபிவிருத்தி வேலைகளில் கவனம் செலுத்தி வருகிறார்கள். நாம் இதற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது, இதில் தமிழ் நாட்டிலுள்ள, தனித்தனி ஜில்லாக்களுக்கு எவ்வளவு, தாலுக்காக்களுக்கு எவ்வளவு என்று பார்க்க வேண்டும். நெய்வேலி பழுப்பு நிலக்கரி சுரங்கத்திற்கு 67 கோடி ரூபாய் கொடுத்ததனால் எல்லா ஜில்லாக்களுக்கும் 67 கோடி ரூபாய் கொடுக்கவேண்டும் என்று சொல்வதற்காக இதை நான் பார்க்கச் சொல்லவில்லை. சாதாரணமாக சிறு அபிவிருத்தித் திட்டங்களுக்காக ஒதுக்கப்படுகிற பணம் பரவலாக எல்லா ஜில்லாக்களுக்கும் ஒதுக்கப்பட்டு எல்லா ஜில்லாக்களிலும் உள்ள கிராமங்கள் சொந்த சிரம தானத்தினாலும், சர்க்கார் உதவியினாலும் முன்னேற்றம் அடையக் கூடிய நிலைமையில் இருக்கிறதா என்பதை நாமே பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். இன்னும் மூன்றாண்டுகளுக்குள் இப்படி செயல்பட்டால்தான் கதி மோட்சம் உண்டு. நிர்வாக இயந்திரத்தையும் இந்தச் சிறு அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஒத்த முறையில் வேகமாக, துரிதமாக செயல்படுத்த வேண்டிய அவசியமும் கவனிக்கப்பட வேண்டும். திட்டங்களின் எண்ணிக்கையைப் பொறுத்து பயன் ஏற்படாது. முன்னேற்றமும் ஏற்படாது. எத்தனை திட்டங்கள் நல்லமுறையில், ஒழுங்கான முறையில் துரிதமாக நிறைவேறியிருக்கின்றன என்பதைப் பார்த்தே முன்னேற்றமும், அபிவிருத்தியும் ஏற்படும். சர்க்கார் நிர்வாகம் இதற்கு இணக்கமாக இருக்கவேண்டும். ஆகவே சர்க்கார் நிர்வாகம், நேர்மையாகவும் துரிதமாகவும், ஒழுங்காகவும் செயல் படத்தக்க கவனம் செலுத்த வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொண்டு நான் முடித்துக்கொள்ளுகிறேன்.

11-32 a.m. *SRI P. S. SANTHANAM : தலைவர் அவர்களே, இப்போது ஜில்லா மானியத் தொகையை ஒட்டி சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். உண்மையில் இந்த ஜில்லா நிர்வாகமானது நல்ல சீரான முறையில் மக்களுக்கு ஊழியம் செய்வது இல்லை. வேலைகள் நல்ல முறையில் நடைபெறுவது இல்லை. மந்த நிலைமையில் நடைபெற்று வருகிறது. எப்படியென்றால் "மழை பெய்தால் என்ன? வானம் இடிந்தால் என்ன நம் வாழ்க்கை நன்றாக இருந்தால் போதும்" என்கிற நிலைமையில் சில சர்க்கார் ஊழியர்கள் நடந்து வருகிறார்கள். இதற்கு நான் என்ன சொல்கிறேன் என்றால் ஒரு ஏழை விவசாயி கிட்டத்தட்ட பத்துப் பதினைந்து வருஷ காலமாக காட்டையும், மேட்டையும் நல்ல நிலமாக்க பாடுபட்டு உழைத்து வந்து, இன்றைக்கு அந்த நிலத்தைத் தனக்குக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கைகளை, மனுக்களை சர்க்காருக்கு அனுப்பி வைக்கிற நேரத்தில் தாசீல்தார்களோ, டெபுடி கலெக்டர்களோ அதற்குச் சரியான தகவல் கொடுப்பது இல்லை. பல காலம் அதில் வேலை செய்த விவசாயிகளுக்கு நிலம் கொடுப்பதற்குள்ளாகவே அவனுக்கு ஆறும் நம்பர் நோட்டீஸ் கொடுத்து அவனை நிலத்திலிருந்து அப்புறப்படுத்தி விடுகிறார்கள். கடைசியில் இந்த ஏழை விவசாயி இலவு காத்த கிளி போல் ஆகிறான். தனக்கு அந்த நிலம் வரும் என்று எண்ணி உட்கார்ந்திருந்தவனிடம் இருந்து அந்த நிலத்தை பிடுங்கி விடுவதனால் தான் அவன் நிலைமை இலவு காத்த கிளி போல் ஆகிறது என்று ஒப்பிட்டேன். ஆகவே சர்க்கார் இந்த நிலைமையைப் போக்குவதற்கு ஆங்காங்குள்ள கீழ்தர சிப்பந்திகள் முதல் மேல் நிலையில் உள்ளவர்கள் வரையில் விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வந்தால் அதை உடனடியாகப் பார்த்து பைசல் செய்ய வேண்டுமென்பதாக ஒரு அறிக்கை விட்டார்களானால் இன்னும் துரிதமாக வேலை நடைபெறும். ஏழை விவசாயிகளுடைய வாழ்க்கை நிலைமை சீக்கிரத்திலேயே உயர்வு பெறும்.

நிற்கவும், திருவண்ணாமலை பக்கத்தில் என்ன நடந்து வருகிறது என்று சொல்லவிரும்புகிறன். திருவண்ணாமலையை அடுத்த நல்லூர் கிராமத்திலும் கண்ணப்பந்தல் கிராமத்திலும் சில ஏழை விவசாயிகள்

13th July 1957] [Sri P. S. Santhanam]

மீன் மகசூல் பிரிவுக்கு விண்ணப்பம் செய்தார்கள். இந்த மீன் மகசூல் விஷயமாக இரண்டு கிராமங்களுக்குள் தகராறு ஏற்பட்டன. இதைப் பற்றி ஜில்லா கலெக்டருக்கும் விஷயம் அறிவிக்கப்பட்டு இருக்கிறது. அவர் உடனடியாக இதில் தலையிட்டு பிரச்னையைத் தீர்க்காததனால் கிராம மக்கள் ஒருவருக்கொருவர் அடிதடியில், இறங்கி இதனால் போலீஸ் நடவடிக்கையும் எடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த மாதிரியான கஷ்டங்கள் வந்ததற்குக் காரணமே அவர்கள் உடனடியாகப் பரிசீலனை செய்யத் தவறியதுதான். இப்படி எந்த விஷயத்திலும் அவர்கள் கால தாமதம் செய்கிறார்கள். மேலும் இப்போது சில கிராமங்களிலே உள்ளவர்களுக்கு வேலை தேடித் தரும் ஸ்தாபனங்களிலிருந்து அழைப்பு வருகின்றது. ஒரு ஏழைத் தொழிலாளி விண்ணப்பம் செய்துகொண்டு போனால், உடனே அவனை கெஜட் உத்தியோகஸ்தரிடமிருந்து சர்டிபிகேட் வாங்கி வரச் சொல்லுகிறார்கள். அவரிடம் சென்றால் போய் கிராமக் கர்ணத்திடமிருந்து சர்டிபிகேட் வாங்கி வா, நான் தருகிறேன் என்கிறார். மறுபடியும் கிராம உத்தியோகஸ்தரிடம் வந்து சர்டிபிகேட் வாங்கிக் கொண்டு கெஜட் உத்தியோகஸ்தரிடம் சென்றால் அவர் காம்புக்குப் போய்விட்டார், என்று சொல்லிவிடுகிறார்கள். இதனால் அவனுக்கு சீக்கிரத்தில் கெஜட் உத்தியோகஸ்தர் சர்டிபிகேட் வாங்க முடிவதில்லை. கடைசியாக இவன் வாங்கிக் கொண்டு போவதற்குள் அங்கு காலதாமதம் ஆகிவிடுகிறது. இந்த நிலைமையைப் போக்குவதற்கு ஒரு நல்லதொரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தி கிராம அதிகாரிகளிடமிருந்தே சர்டிபிகேட் வாங்கினால் போதும் என்று செய்து விடலாம். கிராம அதிகாரிகளுக்கு கிராமத்திலுள்ளவர்களுடைய வரலாறு எல்லாம் தெரியாதா? திருடனா, யோக்கியமானவனா என்கிற சரித்திரம் எல்லாம் அவர்களிடம் இருக்கும். ஆகவே இவர்களே சர்டிபிகேட் கொடுத்தால் போதுமானது என்று செய்தல் நலமாக இருக்குமென்பது என்னுடைய கருத்து.

அடுத்தபடியாக இப்போது வடஆற்காடு மாவட்ட திட்டத்தை ஒட்டிய வரைக்கும் 1957–58ம் வருஷத்தில் ஐந்து லட்சம் ரூபாய் செலவிட குறிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பணத்தைச் செலவிடும்போது அந்த ஜில்லாவிலுள்ள சட்டசபை அங்கத்தினர்கள், ஜில்லா போர்டு அங்கத்தினர்கள் ஆகிய எல்லோரும் ஒன்று கூடி ஐந்து லக்ஷம் ரூபாயைக் கொண்டு எந்த எந்தத் துறையில் மக்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்பதைத் தீர்மானித்தால்தான் ஊழல் அன்றி நல்ல முறையில் அவை செலவாகும். நிற்கவும் இப்போது ஏழை . விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் மாட்டு மானியமானது சில கிராம மக்களுக்கே தெரியாது போய் விடுகிறது. உண்மையில் அதிகாரிகள் எல்லா விவசாயிகளுக்கும் தெரியக் கூடிய வகையில் மாட்டு மானியம் கொடுக்கப்படும் என்று விளம்பரப்படுத்துவதில்லை. நிலம் அதிகம் உடையவர்களுக்கோ பணம் உடையவர்களுக்கோ ரகசியமாக இதைச்சொல்லி அவர்களை மாட்டு மானியத்திற்காக விண்ணப்பம் எழுதிக் கொடுக்கச் சொல்லி விநியோகித்து விடுகிறார்களே தவிர ஏழை எளிய விவசாயிகளுக்கு இது பயன் படுகிற வழியில் அறிவிப்பு செய்து கொடுப்பதில்லை. இதை சர்க்கார் உடனே கவனித்து மானியம் விவசாயிகளுக்கு வழங்குவதாக இருந்தால் கிராமம் பூராவும் ‘டாம்டாம்’ மூலமாகவாவது அறிவிப்பு செய்து எல்லா விவசாயிகளுக்கும் தெரியப்படுத்தி ஏழை எளிய விவசாயிகளுக்கு அந்தமானியப் பணம் போய்ச் சேரும்படியாக நிர்வாக இயந்திரத்திற்கு உத்தரவு போட வேண்டுமென்பதாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஜில்லா நிர்வாகத்திலுள்ள ஊழலை இப்படி பலவகையிலும் நீக்கினால்தான் நல்ல முறையில் மக்களுக்கு அதனால் உபயோகம் இருக்குமென்று சொல்லிக் கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

* SRI M. WILLIAM: Sir, in voting in favour of the Demand for Grant, I wish to say a few words in regard to the Kanyakumari district. Before mentioning anything about the district, I wish to point out that the reorganization of the districts, taluks, and 11-40 a.m.

also the villages is very essential for effective administration. If large-sized districts are formed and if administration is carreid on on that basis, the people's voice will not be heard, and not be felt in the administration. So, for effective administration, the districts must be small in size—of course equal in point of population, income, and also area. So the present over-sized districts must be reduced in size, and reorganization of the districts in that aspect is highly necessary for effective administration. In this connection I may also say a few words regarding the Kanyakumari district. Of course, the district administration is not satisfactory. In regard to the service personnel, there is discontent that their claims for promotion are not at all taken into account. All the district level officers are taken from outside, and even officers in the subordinate services are also taken mostly from outside. So much so, the personnel already working there are simply neglected. This has led to discontent among the service personnel. The dearness allowance which the Central Government have recently announced in favour of the N.G.Os. is not extended to them. Also there are some other problems which are peculiar to Kanyakumari district.

In regard to the teachers who are taken for training, I see certain teachers are being selected for undergoing training. Teachers who have put in a service of five years are members of the permanent staff, and their basic salary is Rs. 34 and dearness allowance is Rs. 27. But they are now getting a stipend of only Rs. 25. The practice in the erstwhile T.-C. State was for teachers to undergo training only for one year. Not only this. During the training period, they were given their entire salary as stipend. Now about 100 teachers are taken for training and these men have put in a service of more than 5 years. They are permanent men. They have to undergo training for two years. They are paid a stipend of only Rs. 25 per mensem. These are all men having large families and with the income that they get, they are not able to pull on their lives. The stipend of Rs. 25 per mensem must at least be raised to the amount that they have been getting in recent years, that is, the minimum salary of Rs. 34 at least should be given to them as stipend, especially in view of the fact that they have to undergo training for two years instead of one year, which was the practice in the erstwhile T.-C. State.

There are two most outstanding evils which affect the economic well being of the people of Vilavankode and Kalkulam taluks. One is the drought problem and the other is the oddukoor settlement. With regard to the drought problem, the people begin cultivation during season and they invest a huge amount. Just for want of water at the proper time the crops fail. If there had been failure of water-supply from the very beginning, people would not begin cultivation operations. In the hope that they will have sufficient rain in time, they begin cultivation. They invest huge amounts and at the time of flowering, the crops fail. So they incur every year a loss of nearly two or three hundred rupees per acre. This is the record of Vilavankode and Kalkulam taluks. We have been

emphasising the need for the execution of Chittar and Pattinangal schemes. This had been the cry of the people for the last 25 years. The Travancore Government investigated these schemes. Even a blueprint was prepared. This matter was brought to the notice of the Collector and also to the notice of higher authorities. Though this was brought to the notice of higher authorities in time, no proposal has been sent by the Collector in this behalf.

The low-paid officers in he working establishment of the Panchayat section have not been paid their salaries for four months. Even the peons have not been paid their salaries from 1—4—1957. Several representations had been made to the Government, but they have not been heeded to at all. This shows that the administration is not being properly carried on. This really causes discontent among the service personnel and also among the present population. This thing ought to be remedied as early as possible. We get very good assurances from our Ministers, and we are sure that those assurances will be fulfilled. We pin our hope on the assurances that are given here.

The system of oodukoor tenure is peculiar to the Kanyakumari district. The settlement operations went on for about 25 years from 1877 to 1907. A very long period was taken and the Government issued a circular that the proceedings should be stopped. The evil resulting from hasty operations fell upon these three taluks, namely, Neyyatinkarai, Vilavancode and Kalkulam. The settlement operations were not over in these taluks in time and they issued oddukoor pattas for the holdings. As a result of the cry and agitation of the public to put an end to the oddukoor tenure, in 1946 the Travancore Government passed the oddukoor proclamation. Accordingly subdivision of the land was begun. A lakh of acres were taken up for subdivision and the issue of individual pattas for each subdivision was ordered. Since the prescribed period was over, the Government issued a circular that the proceedings should be stopped. So, instead of effecting subdivisions, 70,000 cases were disposed of by the issue of joint pattas. In an extent of 10 acres of land, there may be ten sharers. Instead of sub-dividing their shares, a joint patta was issued to them without exactly showing what the share of each is. This created rather a very bad situation. Persons having no right, persons who were entitled to half the extent, persons entitled to one-fourth of the extent and others entitled to one-eighth extent, were all clubbed together and issued joint pattas. This created a complicated situation, which we were not having before. So, these 70,000 cases must now be re-opened. The settlement operations must be again started as early as possible.

Then there is the question of the land records of the area. For the last two hundred years the land records are not revised. They are decaying. These land records must be translated and must be brought up-to-date.

[Sri M. William] [13th July 1957

Then there is the question of the Community Projects. We are all aware that the taluks of Neyyattinkara and Vilavancode formed the Community Project area. Out of the sixty-five lakhs of rupees for the scheme, about five lakhs of rupees alone were spent on Vilavancode and the remaining amount was spent on Neyyattinkara. This Vilavancode was left in the lurch. After the period of the scheme expired, the Travancore-Cochin Government passed proceedings in the year 1956 that the Vilavancode taluk should be split up into three blocks, namely, Munchira, Melpuram and Killiyoor. As per this, two blocks, Melpuram and Killiyoor, should have been started immediately (because they formed part of the Community Project area) to carry on the unfinished work. Instead of doing this, new blocks are being started in other places. I have no objection to other areas being helped. Every area must get benefit. But work in the project area, which already had the benefit and where some benefits had already been given to the people, must be finished, so that the work that had already been taken up may not become a waste. The starting of two blocks in Melpuram and Killiyur should be taken up at once, because they form part of the Community Project area.

These are the proposals which are peculiar to Kalkulam and Vilavancode. I fervently hope that the Hon. Minister will take note of them and take effective measures soon.

*SRIMATHI KOLANTHAI AMMAL : கனம் சபாநாயகர் அவர்களே, நமது ரெவன்யூ அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த மானிய கோரிக்கையை ஆதரித்து, என்னுடைய ஜில்லாவில் குறிப்பிட வேண்டிய கருத்துக்களைப்பற்றி இதனுடன் சேர்த்து என் மனதில் தோன்றிய சில கருத்துக்களைப்பற்றி சொல்ல விரும்புகிறேன். ஆளும் கட்சியை சேர்ந்த அங்கத்தினர்களும், எதிர்க்கட்சியை சேர்ந்த அங்கத்தினர்களும் கிராம மணியக்காரர், கிராம கணக்குப்பிள்ளை இவர்களின் சம்பள உயர்வைப் பற்றி மிக துரிதமாக எடுத்து பேசினார்கள். அதை நான் முழு மனதுடன் ஆதரிப்பதோடு கிராம மணியக்காரர், கிராம கணக்குப்பிள்ளை என்கிற பரம்பரை உரிமையாக கொடுக்கப்பட்டு வருகின்ற முறையை மாற்றி, அவர்களுக்கு குறைந்த பட்சம் 50 ரூபாய் சம்பளம் கொடுத்து அந்த சம்பளத்திற்கு தக்கபடி நல்ல வேலை வாங்க வேண்டும். அதற்காக இரண்டு அல்லது மூன்று கிராமங்களை சேர்த்து நல்ல முறையில் வேலை செய்வதற்குத் தகுந்த முறையில் வேலை செய்ய வேண்டும் என்று என் கருத்தில் தோன்றியதைச் சொல்லிக் கொள்கிறேன். அடுத்தபடியாக கலெக்டர் ஆபீஸ்களில் கலெக்டர்களை மாற்றுகிற விஷயத்தில் ஒரு விண்ணப்பம் என்னவென்றால், குறிப்பாக கோயம்பத்தூர் ஜில்லாவை எடுத்துக்கொண்டால் சமீபத்தில் நடந்த தேர்தலுக்குப் பிறகு மூன்று கலெக்டர்களை மாற்றியாய்விட்டது. இவ்விதம் செய்யக் கூடாது. அதாவது கொடுக்கப்பட்டிருக்கும் ஒரு காரியத்திற்கு ஒரு கலெக்டர் ஓரளவு முடிவு செய்திருக்கும் சமயத்தில் அவரை மாற்றிவிட்டால் அடுத்த கலக்டர் வந்து இந்த காரியத்தை பார்ப்பதற்கு ஒரு மாதமாய் விடுகிறது. இம்மாதிரி பெரிய அதிகாரிகளை குறைந்த பட்சம் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு மாற்றம் செய்யக்கூடாது என்று என்னுடைய கருத்தில் பட்டதை சொல்லுகின்றேன். மூன்றாவது கெஜட் பதிவில்லாத கிளார்க்குகளுடைய நிலையைப் பற்றி நம்முடைய அன்பழகன் அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். அவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய சலுகைகள் கொடுக்கப்படவில்லை என்பதை நான் என் கருத்தில் பட்டதை சொல்லுகின்றேன். கெஜட் பதிவில்லாத உத்தியோகஸ்தர்களுக்கு மருத்துவ சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சில ஆஸ்பத்திரிகளில் அதாவது

13th July 1957] [Srimathi Kolanthai Ammal]

அவர்களுடைய குடும்பத்திற்கு மருத்துவ வசதி கிடைப்பதில்லை. ஆகையால் அரசாங்கத்தினால் கிராண்ட் கொடுக்கப்படுகின்ற எல்லா ஆஸ்பத்திரிகளிலும் இந்த மருத்துவ வசதி, அவர்களுக்கு, அவர்களுடைய குழந்தைகளுக்கு, அவர்களுடைய மனைவிமார்களுக்கு எல்லாம் உதவி செய்யும் விதத்தில் இந்த சலுகை இருக்கவேண்டும் என்று அமைச்சர் அவர்களின் ஞாபகத்திற்குக் கொண்டு வருகிறேன். அதாவது முன்னால் பாகல்மேடு என்ற இடத்தில் காமராஜ் அவர்கள் ஒரு மகாநாடு கூட்டினார்கள். இப்போது இரண்டாவது குண்ணடம் என்ற பிளாக் டெவலெப்மெண்ட் ஏரியாவில் நடக்கப் போவதாக தெரிகிறது. அதேமாதிரி எங்கள் தொகுதியாகிய பல்லடம் தாலுகாவில் இம்மாதிரி ஒரு பரிசீலனை வைப்பார்களானால் அது 10, 12 ஆண்டுகளாக வறுமைப்பட்டு கஷ்டப்பட்டு கிடக்கும் விவசாயிகளுக்கும் அங்குள்ள விவசாய தொழிலாளர்களுக்கும் இது போன்ற பரிசீலனை உதவிகரமாக அமையும் என்பதை சொல்லி, அவர்களுக்கு இருக்கக்கூடிய கஷ்டங்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்ததாக கோயம்பத்தூர் ஜில்லாவில் இளம் விதவைகளுக்கு என்று ஒரு விடுதி அவர்களுடைய சொந்த பணத்தில் அவர்களுடைய முன்னேற்றத்திற்கான முறையில் நடந்து வருகிறது.

இதற்கு சர்க்காருடைய உதவியும் கண்காணிப்பும் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அவ்விதம் செய்தால் மறு விவாகம் செய்ய விரும்பாத பரம்பரையான பெருங் குடும்பத்தில் பிறந்த விதவைகள் நன்னடத்தைக்கும், கல்வியிலும் மேம்பாடு அடைந்து அவர்கள் உத்தியோகங்களில் அமருவதற்கும் உதவியாய் இருக்கும் என்பதை சொல்லிக் கொள்கிறேன். அதோடு முதல் முதலாக நடந்து வரும் இந்த விதவை விடுதியை சீர்திருத்தி அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கடைசியாக நம்முடைய தாலூகா ஆபீஸ்களிலும் கலெக்டர் ஆபீஸ்களிலும் காலை 11 மணி முதல் மாலை 5 மணி வரையிலும் வேலை செய்து வருகிறார்கள். இது அங்கு வேலை செய்யக்கூடியவர்களுக்கு கஷ்டமாய் இருக்கிறது. இதை மாற்றி முன்னால் அதிகாலையில் 8 அல்லது 9 மணியிலிருந்து ஆரம்பித்து பின்னால் ஓய்வு கொடுத்து பின்னால் 5 அல்லது 6 மணி வரையிலும் இருக்கவேண்டும். இது அவர்களுக்கு நல்லதாக இருக்கும். கோயம்பத்தூர் ஜில்லாவில் ஆபீஸ்களில் எந்த அளவில் நடக்கிறது என்று பார்த்தால் இரவு 2 மணி வரைக்கும் விளக்கு போட்டு அதிகாரிகளுடைய உத்தரவு பெற்றும், உத்தரவு பெறாமலும் அங்குள்ள அதிகாரிகளும் கிளார்க்குகளும் வேலை செய்து வருகிறார்கள். இந்த கொடுமையான முறை மாற வேண்டும். அதோடு அவர்களுடைய வேலைகளை நிர்ணயிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, அவர்களின் முன்னால் இன்று எவ்வளவோ கட்டுகட்டாக பேப்பர்கள் இருக்கின்றது.

என்னைப் போன்று நெட்டையாக இருக்கின்றவர்களின் முன்னால் பேப்பர் இருந்தால் ஏதோ ஆள் இருப்பது தெரியும். குள்ளமாக இருந்தால் ஆளே தெரியாது. அந்த விதத்தில் பேப்பர்கள் குவிந்து கிடக்கிற சில சமயங்களில் அங்கு பல காரியங்களுக்காகவும் சிபாரிசுகளுக்காவும் போகும் போது சில ஆள்கள் அந்த பேப்பர்களிடையிலிருந்து எழுந்து வருவார்கள். அவர்கள் பக்கத்தில் வரும்போது பழைய பேப்பர்களின் வாசனை வரும். இவ்விதமாக பேப்பர்கள் குவிந்து கிடக்கிறது. ஆகவே இந்த வேலையை குறைக்கவேண்டும். அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களுக்கு நல்ல சலுகைகளை கொடுத்துவிட்டு அவர்களிடம் நல்ல வேலை வாங்கவேண்டும். இதற்கு அடிப்படையாக இப்போது இருக்கிற முறையை மாற்றி கிராம வாரியாக, தாலூகா வாரியாக ஜில்லா வாரியாக மாற்றி அமைக்கப்படவேண்டும். இந்த முறையை ஆங்கிலேயன் ஆண்டு கொண்டிருந்த காலத்தில் வகுக்கப்பட்டது.

இதையெல்லாம் மாற்றி அமைக்கப்படவேண்டும் என்று "பிளாக் டெவலப்மெண்ட் ஸ்கீமில்" இருக்கிறது. அதையெல்லாம் ஆலோசித்து இவைகளை புனரமைப்பு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த கோரிக்கையை ஆதரிப்பதோடு இந்தக் குறைகளையெல்லாம் நீக்குவதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

[13th July 1957

11-48 a.m. **Sri V. SUBBIAH:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஜில்லா நிர்வாக முறையில் இன்றைய தினம் ஜில்லா கலெக்டர், அதற்குப்பின் ஆர்.டி.ஓ. அதன் பின்னுல் தாசில்தார்கள், அதற்கு பின்னுல் ரெவன்யூ இன்ஸ்பெக்டர்கள், அவர்களின் கீழ் கிராம உத்தியோகஸ்தர்கள் என்று இவ்வாறு அமைக்கப்பட்டிருக்கிறது. இது மிகவும் பழைமையான முறை. இந்த முறையைத்தான் அரசாங்கம் இன்று பின்பற்றி வருகிறது. பல இடங்களில் டெப்டி தாசில்தார்கள் என்றும் பல அதிகாரிகள் பிரத்யேகமாக நியமனம் செய்து இருக்கிறது. கிராமங்களில் பழைய நிலையில்தான் கிராம உத்தியோகஸ்தர்கள் இருக்கிறுர்கள். இந்த நிலையில் நிர்வாகம் இருக்கிறது. குறிப்பாக கலெக்டர் ஆபீஸில் கலக்டர்களுக்கு நிறைய வேலை இருக்கிறது. ஒரு மாதத்தில் 29 தினங்கள் அவர்கள் ஏதாவது பொது கூட்டங்களுக்கு போக வேண்டியிருக்கிறது. சமுதாய நல திட்டம், சமுதாய அபிவிருத்தி திட்டம் இவைகளின் கீழ் நடக்கும் கூட்டங்களுக்குப் போக வேண்டும். இது தவிர பிளானிங் கமிட்டி, இர்ரிகேஷன் கமிட்டி, மதுவிலக்கு இன்னும் எத்தனையோ கமிட்டிகள் இதற்கெல்லாம் போக வேண்டும். இதனுல் அங்குள்ள நிர்வாகத்தில் பல கஷ்டங்கள் இருக்கிறது. இதற்கென்று ஒரு தனி கலெக்டரே போட்டு விடலாம். அப்படி தனி அபீசர் போட்டுவிட்டால் நன்ருக இருக்கும். ஜில்லா நிர்வாகமும் நன்ருக இருக்கும். கிராம பகுதிகளுக்கு அதிகமாக பணம் ஒதுக்கப்பட வேண்டும். கிராமத்திலுள்ள விவசாயிகள் கடனுக்கு வேண்டி மனு போட்டால் சரியானபடி பதில் கிடைப்பதில்லை. ஏதாவது மனுக்கள் போட்டால் அது போய் சேர்ந்ததா என்று கூட தெரிந்து கொள்ளக்கூடிய நிலையில் இல்லை.

இந்த 1957-58-ல் யாராவது ஒரு விவசாயி அல்லது ஒரு குடியானவன் தாலூகா ஆபீஸிற்கு ஒரு மனுச் செய்தால் அதற்கு இவ்வளவு காலத்திற்குள் கண்டிப்பாக ஒரு பதில் கிடைக்கவேண்டுமென்று ஒரு நிர்ணயம் செய்ய வேண்டும். அது ஒன்று செய்தாலாவது போதும். அடுத்தபடியாக, தாலூகா ஆபீஸ்களிலிருந்து தமிழில்தான் பதில்கள் கொடுக்கப்பட வேண்டும் என்ற நிலையில், கிராமப் பகுதியிலிருந்து வரும் மனுக்களுக்கு பதில் எழுதும்போது அது தமிழில்தான் இருக்க வேண்டும் என்று ஒரு நிலை முதலில் செய்தாகப் படவேண்டும். இன்றைக்கு நம் தமிழ் நாட்டில் ஒரு புதிய திட்டத்தை நமது அரசாங்கம் செயலில் செய்து காட்ட வேண்டும். துணிச்சலாக, தைரியமாக செய்து காட்டவேண்டும். வருகிற பட்ஜெட்டில் 2 கோடி 22 லட்சம் ரூபாய் விவசாயிகளுக்கு கடன் கொடுப்பதற்கு வாக்களித்திருக்கிறுர்கள். அது எந்த முறையிலே எப்படி விவசாயிகளுக்கு நேரடியாகப் போய் சேருகிறது என்பதைப் பார்க்கும்போது இதுவரைக்கும் பணம் நேரடியாகப் போய் சேர்ந்ததை நினைத்துப் பார்க்கக்கூட பயங்கரமான முறையில் விவசாயிகள் கடன் வாங்கிக் கொண்டிருக்கிறுர்கள். 300 ரூபாய் கடன் வாங்க அவன் மூன்று மாத காலம் தாலூகா ஆபீஸிற்கு அலைய வேண்டியிருக்கிறது. அது மாத்திரமல்ல. தாசில்தாரைப் பார்த்து, லோன் தாசில்தாரைப் பார்த்து, சர்வேயர்களைப் பார்த்து அவர்களிடம் தினம் சென்று கடைசியாக அவன் லோன் வாங்கும்போது, அவன் அவனது வேலையை எல்லாம் விட்டு விட்டு கடைசியில் 150 ரூபாய் தான் கைக்கு வருகிறது. பட்ட சிரமங்களுக்குமேல் 150 ரூபாயும் செலவு செய்து விட்டுத்தான் அவன் 300 ரூபாய் கடன் வாங்குகிறுன் என்பதை நாம் காண்கிறேம். இன்று நம் நாட்டில் தாலூகா ஆபீஸில்தான் லஞ்சம் அதிகமாக இருக்கிறது என்று சொன்னுல் இந்த ஜில்லா நிர்வாக முறையை புதிய வகையில் மாற்றியமைத்தால் தான் அதற்கு விமோசனம் உண்டு என்று நான் சொல்ல ஆசைப்படுகிறேன். அடுத்தபடியாக, தேசிய விஸ்தரிப்புத்திட்டத்தின் கீழ் வேலை செய்யும் அதிகாரிகளுக்கு ஜீப் முதலியவைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்று ரோடு வசதி இல்லாத கிராமங்களுக்குப் போக அவர்களுக்கு ஜீப் கொடுக்கப்பட்டிருக்கிறது. தாசில்தார்கள் போன்ற உத்தியோகஸ்தர்கள் கிராமம் கிராமமாகச் சென்று இந்த தேதி இந்த கிராமத்திற்கு வருகிறேன் என்று ப்ரோக்கிரும் கொடுத்துவிட்டு அந்த கிராமத்திற்குச் சென்று அங்குள்ள பெரிய தனக்காரர், அங்குள்ள விவசாயக் கூலிகள் இவர்களை எல்லாம் ஒரு இடத்தில் கூட்டிவந்து மனுக்கள் பூராவும் பரிசீலனை செய்து அவர்களுக்கு நேரிடையாக

13th July 1957] [Sri V. Subbiah]

அந்த இடத்தில் வைத்தே பணம் கொடுப்பது என்ற முறையை கையாண்டால் இன்றைக்கு ஏற்படக்கூடிய காலதாமதமும் லஞ்சமும் அரசாங்கத்தின் பேரில் குறைபடக்கூடிய நிலையை மாற்றி அமைத்து ஒரு புது திட்டம் உருவாக்கப்பட்டால் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கக்கூடிய கிராம வாசிகள் என்ன நினைப்பார்கள் என்றால், அரசாங்கமே நம் கிராமத்திற்கு வந்துவிட்டது என்று நினைத்து சந்தோஷப்படுவார்கள். அப்படிச் செய்வதற்குள்ள வசதியும் இன்று இருக்கிறது. பணத்தை பத்திரமாகக் கொண்டு செல்ல, 30, 40 மைல் தூரம் கொண்டு செல்ல ஜீப் இருக்கிறது. அப்படிச்சென்று, விவசாயிகள் நிலைமையை நன்கு புரிந்துகொண்டு அவர்களுக்கு வேண்டிய கடனை அவர்களிடம் நேரிடையாகக் கொடுத்தால் நாம் அவர்களுக்கு மிகுந்த நன்மை செய்தவர்களாவோம். அப்படியானால் அவர்கள் நன்மை அடைவார்கள். இதை யோசித்து எதிர்காலத்தில் இந்த முறையை பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, கிராம உத்தியோகஸ்தர்களின் நிலையைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், பரம்பரையே இருக்கக்கூடிய நிலை ஓரளவு நல்லது என்று நினைக்கக்கூடியவன் நான். பரம்பரை கிராம உத்தியோகஸ்தர்களாய் இருப்பதால் கிராம பண்பாடு, சமுதாயத்தில் இன்று இருக்கக்கூடிய நல்ல காரியங்கள் வளர்ந்து கொண்டிருக்கிறது. அவர்களுக்கு சில பயிற்சிகள் கொடுக்கலாம். ரிக்கார்ட்களை எப்படி எப்படி வைப்பது என்பதைப்பற்றி பயிற்சி கொடுக்கவோ, கர்ணம் டெஸ்ட் போன்றவைகளுக்கு பயிற்சி கொடுக்கலாமே தவிர பரம்பரை முறையை மாற்றுவது அவ்வளவு பொருத்தமாயிராது. அது நல்லதல்ல என்று கிராமவாசிகள் சார்பில் சொல்லிக் கொள்கிறேன். மற்றும், இந்த கிராமங்களில் உள்ள விவசாயிகளுக்கு லோன் கொடுக்கும் முறையில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. பல இலாகாக்களிலிருந்தும் கடன் கொடுக்கிறார்கள். ரெவன்யூ டிப்பார்ட்மென்டிலிருந்து கொடுக்கிறார்கள். சமுதாய நல அபிவிருத்தி டிப்பார்ட்மென்டிலிருந்து கொடுக்கிறார்கள். அதுமட்டுமல்ல. விவசாய இலாகாவிலிருந்தும் கொடுக்கிறார்கள். எலெக்ட்ரிக் மோட்டார்கள் கொடுக்கிறார்கள். விதை, உரம், வித்து விதைகள் எல்லாம் லோனாகக் கொடுக்கிறார்கள். அதற்குப் பதில் பணத்தைக் கொடுத்துவிட்டு அவர்களே அவர்களுக்கு வேண்டியதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளச் செய்யவேண்டும். இந்த முறையைப் பின்பற்றினால் கிராம மக்கள் சுபிட்சமாக இருப்பார்கள் என்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

**SRI P. S. K. LAKSHMIPATHI RAJ**: சபாநாயகர் அவர்களே, 12.05 p.m.
இங்கு கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த மான்யத்தை ஆதரித்துக் கூறும் இந்நேரத்தில் சில யோசனைகளை நான் அமைச்சர் அவர்களிடம் சமர்ப்பிக்க விரும்புகிறேன். இந்த சபையிலே எனக்கு முன் பேசிய பல அங்கத்தினர்கள் இதிலுள்ள பல முரண்பாடுகளையும், இதிலே செய்யப்படவேண்டிய சீர்திருத்தங்கள் அனைத்தையும் பற்றி கூறியிருக்கிறார்கள். நிர்வாகத்தில் உள்ள பல தவறுகளுக்கும் காரணம், அதிலே குறிப்பாக உத்தியோகஸ்தர்களை மட்டும் கூறுவதில் பயன் இல்லை. அப்படி அவர்களை அந்த நிலைக்கு ஆளாக்குகிற அரசியல் வாதிகளையும் எங்களுக்குத் தெரியும். கள்ளம் கபடு இல்லாமல் செயல் படுகிறவர்களை இவர்கள் தவறான பாதை வழி அழைத்துச் சென்று அவர்களை நேர்மையாக நடக்க முடியாதவர்களாக ஆக்குகிறார்கள். நேர்மையாக நடக்க விரும்புகிற ஒரு அதிகாரியை இரவு கண்டு பேசி அவர்களுக்கு வேறு நோக்கங்களைக் கற்பித்துக்கொடுத்துவிட்டு தங்கள் காரியங்களை சாதித்துக் கொள்வதற்கு இந்த சபையில் நேர்மையாக பேசுகிறார்கள். தாங்கள் உயர்ந்த கருத்துக்களைக் கொண்டவர்கள் என்றும் தாங்களே மறுமலர்ச்சிக்கு அத்தாட்சியாக விளங்குபவர்கள் என்றும் சொல்லிக்கொள்கிறார்கள். அதைப்பற்றி பிற்பாடு சொல்கிறேன். கிராம மக்கள், இன்று நாம் ஒரு மத்தியமான கட்டத்தில் இருக்கிறோம். அதாவது ஆங்கிலத்தில் "டர்னிங் பாயிண்ட்" என்று சொல்வார்கள். பழைய காலத்திற்கும், இன்று விரிவடைகிற சுபிட்ச காலத்திற்கும் மத்தியிலே இருக்கிற நாம் அவர்களுக்கு ஆறுதலான வார்த்தைகள் சொல்லி அவர்களை நல்ல நிலைக்குக்கொண்டு வரவேண்டியது தமது கடமையாகும். அரசாங்கத்தை குறைகூறி பேசிப் பேசி மக்களிடம்

[Sri P. S. K. Lakshmipathi Raj] [13th July 1957

ஒரு சோர்வு உணர்ச்சி உண்டாகி இருக்கிறது என்று தெரியும். ஏதோ தங்களுக்குத்தான் வாக்கு வன்மை இருப்பதாக நினைத்துக்கொண்டு சிலர் பேசுகிறார்கள். சென்ற 60 ஆண்டு காலமாக மக்களின் மீத்தியில், சோர்ந்திருந்த மக்களிடையே, தத்தளித்துக்கொண்டிருந்த மக்களிடையே மனித உணர்ச்சியையூட்டி, அவர்கள் இந்நாட்டு நிர்வாகத்தில் பங்கு பெறச் செய்தது இன்று இந்த நாட்டை ஆளும் காங்கிரஸ் கட்சியாகும் என்பதை நான் தைரியமாகச் சொல்லமுடியும், மார்பு தட்டிக் கூற முடியும். இன்று நிர்வாகத்தில் பல சிக்கல்கள் உள்ளன. பழைய காலத்தில் ஒரு தாசில்தாரிடம் சென்று ஒரு காரியத்தைச் சொல்ல வேண்டுமென்றால் அது ஒரு பெரிய அபாரமான காரியமாக இருக்கும். ஆனால் இப்பொழுதோ, நினைத்ததற்கெல்லாம், அது நல்லதானாலும் சரி, கெட்டதானாலும் சரி, ஒரு உத்தியோகஸ்தரின் மேல் ரிப்போர்ட் எழுதி அதை முதல் அமைச்சர் அவர்கள் வரையிலும் காட்டிக்கொடுக்க மக்கள் கற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஒரு கிராம முனிசிப் பார்க்க வேண்டிய வேலையை கலெக்டரிடம் கொடுக்கிறோம். ஒரு கலெக்டர் பார்க்கிற வேலையை மந்திரியிடம் கொடுக்கிறோம். அதற்கு அரசியல் வாதிகளாகிய நாம்தான் காரணம். கிராமங்களின் நிலைமை மிகப் பழமையானதொரு நிலைமையாக இருக்கிறது. கிராம உத்தியோகஸ்தர்கள் ஒரு முடிவுக்கு வரவேண்டும். பரம்பரையாக இருந்துவரும் கௌரவத்தை எண்ணி, கொடுக்கப்படும் கௌரவச் சம்பளத்தை ஏற்று சமுதாயத்தில் ஒரு உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றுக்கொள்வதா, அல்லது மற்ற உத்தியோகஸ்தர்களைப்போல முழு நேர உத்தியோகஸ்தர்களாக மாறி விடலாமா என்று முடிவு செய்ய வேண்டியது கிராம உத்தியோகஸ்தர்களேயொழிய நாம் இல்லை என்று நினைவுபடுத்த விரும்புகிறேன். ஏன் என்று சொன்னால், கிராமத்தில் உள்ளவர்கள் கிராமத்தில் (கிராம தேவதை) சாமி கும்பிட்டாலும் அல்லது ஒரு நல்ல காரியம் நடத்தினாலும் ஆரம்பத்தில் நாட்டாண்மைக்காரரைக் கூப்பிடு என்று சொல்லுவார்கள். அவர்களுக்கு ஒரு தனியான மரியாதை உண்டு. அவர்கள் முழுநேர உத்தியோகஸ்தர்களாக மாறி மற்ற உத்தியோகஸ்தர்கள்போல இந்த மணிக் கணக்கு பிரகாரம் வேலை செய்ய சம்மதித்தால் நாமும் சர்க்காருக்கு சிபார்சு செய்யலாம். ஆனால் இந்த விஷயத்தில் அவர்களுக்கு குழப்பமாக இருக்கிறது. முழுநேர உத்தியோகஸ்தர்களாக மாறிவிட்டால் ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்திற்கு அடிக்கடி குடும்பத்தோடு செல்ல நேரிடுமே என்ற அச்சம் இருக்கிறது. அதை எல்லாம் விட்டுவிட்டு நாமும் அவர்களுக்கு பரிந்து பேசுவதுபோல் பேசினால் துன்பம் ஏற்படுத்துவதுபோல் ஆகும். கிராம உத்தியோகஸ்தர்களின் நிலைமையை ஏதோ ஒரு சிலர் ஒரு விதமாக குறிப்பிட்டு சொன்னார்கள். அதிலே மிக நல்லவர்கள் இருக்கிறார்கள். தவறான பாதையை உபயோகிப்பதைப்பற்றி கூறுகிறபோது, நமக்கே கஷ்டமாக இருக்கிறது. எங்கள் பழனி தாலூகாவில் ஐயம் பாளையம் கிராமத்தி‍ல் ஒரு நெசவாளி நூல் மூட்டையோடு சென்று கொண்டிருந்தார். அந்த பக்கம் வருகிற ஒருவன் அறிவாளால் தாக்கிய போது நூல்கட்டைகொண்டு மறித்து தப்பித்துக்கொண்டார். அந்த ஊர் அதிகாரியிடம் சென்று ரிப்போர்ட் கொடுக்கிறேன், எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னான். அதற்கு வாங்க முடியாது என்று சொல்லி விட்டார். அதன் பின்னர் 7 மைல் ஓடிவந்து பழனி போலீஸ் ஸ்டேஷனில் ரிப்போர்ட் கொடுத்தார். ஆதரவு கொடுக்கமுடியாத இந்த மாதிரி நிலைமை சில இடங்களில் இருக்கிறது. இன்னும் சில கிராம பகுதிகளில் அரசியல் கட்சிகள் காரணமாக சுமுகமான நிலையில் செயல்பட முடியாது இருக்கிறது. ஒரு கணக்கு பிள்ளையிடம் ஒரு மிராஸுதார் வருவார். ஒருவரைப் பற்றி ஒரு பெடிஷன் எழுதச் சொல்லுவார், முடியாது என்று சொன்னால் அவருக்கு கோபம் வரும், தயக்கம் காட்டினால் ஒரு கட்சி பிரதி கட்சியாக ஆகிவிடும், பல ரிப்போர்ட்கள் அனுப்பிக்கொண்டே இருப்பார்கள். குறிப்பாக அரசாங்கம் செய்கிற எதையும் நன்மையாக இருக்கிறதை எல்லாம் கூட விஷ தன்மையாக மாற்றிக்கொள்ளும் நிலைமை இப்பொழுது நாட்டிலே இருக்கிறது. விவசாயிகள் கஷ்டத்தை உணர்ந்து அரசாங்கம் ஏராளமான பணம் கொடுக்க முன்வந்திருக்கிறது. கடன் வாங்குவதற்கு

13th July 1957] [Sri P. S. K. Lakshmipathi Raj]

விவசாயி போகும்போது பெரும் தொகையை கொடுத்து வாங்கவேண்டிய நிலைமை இருக்கிறது. விவசாயி ஏன் அப்படி பெற்றுக்கொள்கிறான் என்று சொன்னால் கடன் சட்டம் வந்தபிறகு வட்டி கடையிலும்கூட பணம் கிடைப்பது இல்லை. பணம் வேண்டும் என்ற கஷ்டததிலே அந்த தொகையை கொடுத்து வாங்குகிறார்கள். இப்போது கிராம உத்தியோகஸ்தர்கள் சம்மதித்துதான் வேலை செய்கிறார்கள். நாம் நல்ல விதமாக பிரசாரம் செய்வதன் மூலமாக குறைகளை திருத்த முடியும். குற்றம் சொல்வதால் ஒன்றும் முடியாது என்று சொல்ல விரும்புகிறேன்.

ஜில்லாவின் எல்லைகளை நிச்சியமாக திருத்தி ஆகவேண்டும். வேறு என்ன காரணம் கொண்டிருந்தபோதும் தற்போது இந்த எல்லைகளை மாற்றவேண்டும். கோயம்புத்தூர், மதுரை, திருச்சி இவைகள் மிக பெரிய ஜில்லாக்கள். ஜில்லாக்கள் பரந்த அளவில் இருக்கிறதால் ஒரு ஊரிலிருந்து மற்ற ஊருக்கு மாறி மாறி பிரயாணம் செய்யும் கலெக்டர்களுக்கு டி.எ. கிடைக்கலாம், மற்ற அதிகாரிகளுக்கும் டி.எ. கிடைக்கலாம். ஆனால் போக்கு வரத்து வசதியின் திண்டாட்டத்தை யோசித்து பார்க்க வேண்டும். மதுரை கோடியிலிருந்து பழனிவரை 100 கணக்கான மைல் வரவேண்டும். மதுரையை இரண்டாக பிரித்து ஒரு பகுதிக்கு திண்டுகல்லை தலைநகராகவும் மற்றொன்றுக்கு மதுரையை தலைநகராக செய்யலாம் என்று ஆலோசனை கூறுகிறேன். பழனி பகுதியிலே அங்கிருக்கிற நிலைமையை கனம் மந்திரி அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அங்குள்ள சில நிலங்களை புறம்போக்கு லிஸ்டில் வைத்துக்கொண்டு தண்ட தீர்வை போடுகிறார்கள். முன்பு ஜமீன்தார்கள் செய்த ஏற்பாட்டை இப்போது சர்க்கார் அனுஷ்டிப்பதின் பயனாக தண்ணீர் இறைக்காமல் தண்ட தீர்வை போட்டு கஷ்டப்படுகிறார்கள். அதைப்பற்றி அநேக மனுக்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இன்னும் விமோசனம் கிடைக்கவில்லை. இதைப்பற்றி சர்க்கார் கவனித்து ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு எங்கள் பகுதி மிகவும் பிற்போக்கான பகுதி, பஞ்சம் நிறைந்த பகுதி. பிளாக் டெவலப்மெண்டு கீழ்கொண்டுவந்து பழனி தாலுக்காவுக்கு விமோசனம் கிடைக்க வழி செய்ய வேண்டுகிறேன். இந்த திட்டத்திலே சீர்திருத்த வேண்டிய பல அம்சங்கள் இருக்கின்றன. நல்ல முறையிலே மந்திரி அவர்கள் சீர்தூக்கி பார்த்து அவைகளை சீர்திருத்தம் செய்யவேண்டும். இதில் அரசியல் வாதிகளை கலந்தால் கட்சிக்கு கட்சி வித்தியாசம் வரும். நல்ல நிபுணர்களை வைத்து நல்லதோர் முடிவுக்கு வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

*Sri G. G. GURUMURTHI : கனம் சபாநாயகர் அவர்களே, இங்கே இந்த சபையின் முன்பு வைத்திருக்கும் இந்த மானிய கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். மதிப்புக்குரிய பல அங்கத்தினர்கள் ஜில்லாக்களை, தாலுக்காகளை, கிராமங்களை, புனர் அமைப்பு செய்து பிரித்தாக வேண்டும் என்று அபிப்பிராயம் சொன்னார்கள். ஆனால் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம் என்னவென்றால் இன்றைக்கு மொழிவாரி மாகாணப் பிரிவினை ஏற்பட்ட வகையிலிருந்து இந்த ஜில்லா தாலூக்கா, இவைகளை பிரிவினை செய்வது எவ்வளவு நல்லது என்று யோசனை செய்யவேண்டும். இம்மாதிரி பிரிவினையால் ஒரு சில நபர்கள் பாதிக்கப்படலாம். அப்படி பாதிக்கப்படுவோர்களால் கிளப்பக்கூடிய பிரச்சனை பெரும் குழப்பமாக முடியலாம். இப்பொழுதே திருநெல்வேலியிலிருந்து நான்குநேரியை கன்னியாகுமரியுடன் சேர்ப்பதைப்பற்றி சில அபிப்பிராய பேதங்கள் இருக்கின்றன. இதை யோசனை செய்து தீவிரமாக ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வரவேண்டும். நிர்வாகத்திலே நடக்கக்கூடிய ஊழல்களுக்கும் ஏற்படக்கூடிய தாமதத்திற்கும் காரணங்கள் பல. பெரிய யூனிட்டாக இருப்பது என்பதினால் மாத்திரம் அல்ல, அரசாங்க ஊழியர்களுடைய தற்போதிய தரக்குறைவும், அரசியல் வாதிகள் மற்றும் கிராம பொது மக்கள் இவர்களுடைய அதிக தலையீடும் என்றுகூட நான் எண்ணுகிறேன். இதை தீவிரமாக பரிசீலனை செய்யவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். மற்றும் இந்த

ஜில்லா தலைமை நிர்வாகத்திலே அரசாங்கம் செய்ய வேண்டிய அபிவிர்த்தி திட்டங்களுக்கும் மற்ற சீர்திருத்தங்களுக்கும் வேண்டிய விவரங்கள், தகவல்கள் எல்லாம் ஜில்லா நிர்வாகத்திலிருந்துதான் கிடைக்கின்றன. இந்த தகவல்கள் எல்லாம் சரியான முறையில் கிடைக்கிறதா என்பதை உன்னிப்பாக கவனிக்கவேண்டும். சாகுபடி கணக்குகள் வைக்கப்பட்டு நீர்பாசன பகுதிகள் மற்ற பிரதேசங்கள் இவைகளைப்பற்றி அப்போதைக்கு அப்போது சர்க்காருக்கு ரிப்போர்ட் அனுப்புகிறார்கள். அவைகளில் நீர் பாசன பகுதிகளைப்பற்றி சரியான கணக்கு வைக்காததால் குடியானவர்களுக்கு கஷ்டமும் அரசாங்கத்திற்கு சரியான மதிப்பீடுகள் கிடைக்காத நிலையும் ஏற்படுகிறது. உணவு பெருக்கம் என்று சொல்லுகிற நேரத்திலே அரசாங்கத்திற்கு சரியான தகவல்கள் கிடைக்கவேண்டியது அவசியம். அதிகமான ரிவின்யூ இன்ஸ்பெக்டர்களையும், மற்ற அதிகாரிகளையும் நியமித்து ஒழுங்கான முறையில் கணக்கு வைககவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கிராமமக்கள் ஜமாபந்தியின்போது செலவில்லாமல் நியாயமான முறையில் அவர்கள் குறைகளுக்கு நிவாரணம் கிடைக்குமென்று எதிர் பார்த்தார்கள். பட்டா மாறுதல் செய்தல், ஆட்சேபணையில்லாத நிலங்களுக்கு பட்டா கொடுத்தல் முதலியன செய்து கொடுக்காமல் இருக்கிறது. அரசாங்கத்தினுடையவோ அல்லது மற்ற நிலங்களைப்பற்றியோ நான் சொல்லவில்லை. சர்க்கார் பட்டா செய்து கொடுக்கும்படி உத்தரவு போட்ட நிலங்களுக்குகூட பட்டா செய்து கொடுக்கப்படவில்லை. கஷ்டங்களின்றி பைசல் செய்யக்கூடிய பட்டாக்கள்கூட செய்து கொடுக்கப்படவில்லை. இதில் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. இதற்காக ஒரு தனி தாசில்தாரை நியமித்து ஆட்சேபனையில்லாத நிலங்களுக்கு பட்டா செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும் நிர்வாகத்தில் இருக்கும் குறைகளால் குடியானவர்களுக்கு பல கஷ்டங்களும், இடையூறுகளும் ஏற்பட்டு இருக்கின்றன. உதாரணமாக என் பகுதியில் இருக்கும் பாகூர் (?) மலைப்பிரதேசம். இப்பொழுது இருக்கும் சட்டப்பிரகாரம் கீழே இருக்கும் குடியானவர்கள் 5 ஏக்கர் சாகுபடி செய்யலாம். இதே விதத்தை மலைமேல் இருக்கும் பிரதேசத்துக்கும் கொண்டுவந்திருக்கிறார்கள். மலைமேல் இருக்கும் நிலத்தின் தரம் வேறு. மேடும் பள்ளமுமாக இருக்கும். இது அந்த இடத்திற்கு மலைமேல் சென்றவர்களுக்கு தெரியும். அங்கு 5 ஏக்கர் சாகுபடி செய்ய முடியுமா? 5 ஏக்கருக்கு மேல் வைத்திருப்பவர்களுக்கு அபராதம் விதித்து இருக்கிறார்கள். இதனால் 100, 150 குடியானவர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இதற்கு Revenue அமைச்சர் அவர்கள் நிவாரணம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும், மேட்டூர் வாய்கால் திட்டத்தில் விவசாயம் செய்யும் குடியானவர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். முதல் ஆண்டில் பாயும் ஜலத்திற்கு பாதி தீர்வை என்று விதிக்கப்பட்டு இருக்கிறது. அதே பிரகாரம் முதல் ஆண்டு தண்ணீர் விட்டு பாதி தீர்வை வாங்கி இருக்கிறார்கள். அந்த பசலியில் மற்ற பிரதேசங்களுக்கு தண்ணீர் வரவில்லை. சர்க்காரால் வேலை முடிவு செய்யப்படவில்லை. வாய்காலில் தண்ணீர் பூரா பிரதேசங்களுக்கு விடப்படவில்லை. ஆனால் அடுத்த பசலிகளில் முதல் தடவையாக தண்ணீர்விட்ட பிரதேசங்களுக்கு பூரா தீர்வை வசூலித்து இருக்கிறார்கள். இது நியாயமா ? வரி வசூலிக்கும் அதிகாரிகளுக்கு அரசாங்கத்தோடு தொடர்பு வைத்திருந்தால் இந்த தவறு ஏற்பட்டு இருக்காது என்று எண்ணுகிறேன். இதை உடனடியாகக் கவனித்து பாதி தீர்வையாக வசூலித்து, பாக்கியை ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு மானியத்தை ஆதரிக்கிறேன்.

***Sri A. V. P. PERIAVALAGURUVA REDDI :** தலைவர் அவர்களே, ஜில்லா நிர்வாகத்தைப்பற்றி எனக்குத் தெரிந்தவரை இரண்டொரு வார்த்தைகள் சொல்லவிரும்புகிறேன், ஜில்லாக் கலெக்டரையோ தாசில்தாரையோ வெள்ளையன் காலத்தில் பார்க்க[illegible]

13th July 1957] [Sri A. V. P. Periyalaguruva Reddi]

மானால் முதலில் துவாரபாலகர் போன்ற டபதாருக்கு "ஸம்திங்" கொடுத்து துரையை பார்க்க வேண்டுமென்று இருந்தது. அந்த நிலைமை இப்பொழுது மாறிவிட்டது. சந்தேகம் இல்லை. ஜில்லா கலெக்டருக்கோ, தாசில்தாருக்கோ, மற்ற கிராமங்களுக்குப் போவது என்றால் முடிய வில்லை. தாசில்தார் எதாவது புத்தகத்திலிருந்து கேள்விகேட்டு தபால் வந்து இருந்தால் பஸ்ஸிலே புடு, புடு என்று போய் செய்ய வேண்டியதைச் செய்கிறார்கள். விவசாயிகள் தங்கள் குறைகளைச் சொல்ல வேண்டுமானால் தாலூக்கா தலைநகர் வரணும். ரூபாய் நாலு ஐந்து செலவு செய்து போய் வரவேண்டும். வெள்ளையன் காலத்தில் அப்படியில்லை.

கள்ளிக்குடியை எடுத்துக்கொண்டால் அது ஒரு ரிவின்யூ பிர்கா. 10, 50 கிராமங்களுக்கு அது ஒரு ஸெண்டர். அங்கே ரயில்வே ஸ்டேஷன் இருக் கிறது; போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது. இந்த இடத்திலே ஒரு சத்திரம் இருக்கிறது. வெள்ளையன் காலத்தில் அங்கு டெண்டு அடித்து கேம்பு செய்வார்கள். ஆனால் இப்பொழுதோ சத்திரத்தில் எலெக்டிரிக் லைட் இருக்கிறது. எல்லா வசதிகளும் இருக்கின்றன. அப்படி யிருந்தும் தாசில் தார் அங்கு கேம்பு செய்வது இல்லை. ஆதலால் விவசாயிகளின் குறைகளை நேரிடையாகச் சொல்ல முடியவில்லை. கேம்பு போட்டால் நேரிடையாகச் சொல்ல தோதாக இருக்கும்.

தாசில்தாருக்குக் கீழே ஒரு டெபுடி தாசில்தார் இருக்கிறார். அவர் தாசில்தார் ஆபீஸில் வேலை செய்கிறார். அவர் என்ன வேலை செய்கி றாரோ. மனுக்கள் எல்லாவற்றையும், பெரிய தாசில்தார் கேம்பு போனால் டெபுடி தாசில்தார் கவனிக்கலாம். உரம் கொடுப்பதானால், ஒரு தாசில் தார் அதற்கு; பிண்ணாக்கு என்றால் அதற்கு ஒரு தாசில்தார்; லோன் என்றால் அதற்கு ஒரு தாசில்தார் அப்படி அப்படி இருப்பதால், தாலூகா தாசில்தார் கேம்பு செய்தால், கலெக்டர் அவர்கள் கிராமங்களில் கேம்பு செய்தால் மக்களின் குறைகளைக் கேட்கலாம். வண்டிப்பாதைகள் ரோட்டுகள் இவற்றில் என் போன்ற வாயாடிகள் எங்கு ரோச்மெண்டு செய்து வெட்டி விடுகிறார்கள் முரட்டு விவசாயிகள் வீடுகட்டிவிடுகிறார்கள். இவற்றை நேரில் பார்க்கலாம். மனுப்போட்டால் கீழே, கீழே, கீழே ரிவின்யூ இன்ஸ் பெக்டருக்கும், அதற்கு கீழே, கீழே போகிறது. இந்த நிலை இல்லாமல் பழைய ஜில்லா அதிகாரிகள்போல் தாசில்தார் கலெக்டர் கள் அங்கங்கே கேம்பு செய்தால் நல்லது. அவர்கள் எப்படி டயரி எழுதுகிறார்களோ, எப்படி படி வாங்குகிறார்களோ தெரியாது, ஸாமி, வரு வதே இல்லை,. போவதேயில்லை. ஒரு மணி, அரைமணி நேர விஸிட்டில் எவன் யோக்யன், எவன் இல்லை என்று எப்படி அறியமுடியும்.

இப்பொழுது கிராம ஸேவகர்கள் போட்டு இருக்கிறார்கள். இவர்கள் எலிமெண்டரி ஸ்கூலில் நாலாவதுகூட படிக்காதவர்கள். இவர்களுக்கு பர்ஸ்டு கிரேடுக்கு ரூ. 125. ஸெகண்டு கிரேடுக்கு ரூ. 85 சம்பளம் கொடுக் கிறார்கள். பிளாக்கு டெவலப்மெண்டு வேலைக்கு கிராமத்திலிருந்து பாதி தொகையும், அவர்கள் பாதித்தொகையும் கொடுக்கிறார்கள். இந்த வேலையை கிராமாதிகாரிகளிடம் விட்டால் அவர்களுக்கும் சம்பளம் போதவில்லை என்ற குறையும் தீரும், மக்கள் தொடர்பும் ஏற்பட தோதாக இருக்கும்.

மற்றொன்று லஞ்சம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதைப்பற்றி இந்த சபையில் எல்லோரும் லஞ்ச ஊழல் என்று பேசுகிறார்கள். மந்திரி களுக்கு ஜோசியமா தெரியும். எங்கு லஞ்சம் இருக்கிறது என்று எப்படித் தெரியும். நான் இங்கு மெம்பர் ஆவதற்கு முன் எஸ்மெண்டு பர்மிட்டுக்கு கொடுத்தார்கள். ஒரே ஆளுக்கு 10, 15 டன் கொடுக்கப்பட்டது. ரூ. 5 1/8 உள்ள மூட்டையை சம்சாரி ஏழை ரூ. 9, 10 கொடுத்து வாங்கவேண்டும். அவனுக்கு, இவனுக்கு ஸம்திங் கொடுத்து, ஆர்டர் போடுபவனுக்கு ஸம்திங் கொடுத்து வாங்கவேண்டும். நான் மெம்பர் ஆனவுடன் ஐந்து மூட்டைக்குமேல் ஒருவனுக்குக் கொடுக்கக்கூடாது என்றேன். கொடு த்தால் மந்திரிக்கு தந்தி அடிப்பேன்; அவர் கவனிக்காவிட்டால் பப்ளிக் மீட்டிங் போட்டாவது கத்துவேன் என்றேன். அது நின்றது. இங்கு வந்து லஞ்சம் என்று பேசுவது பெருமையாக இருக்கும். ஆனால், அது பிரயோ

ணம் இல்லை. அந்த அந்த ஏரியா எம். எல். ஏ.க்கள்லஞ்சம் இருக்கிறது தெரிந்தால், சம்பந்தப்பட்டவர்களிடம், கேள்விபோடுவேன், மந்திரிக்கு தெரிவிப்பேன், அவர்கள் கேட்காவிட்டால் பப்ளிக் மீட்டிங் போட்டு கத்துவேன் என்று சொல்ல வேண்டும். அம்மாதிரி செய்யவேண்டியது நம் ஒவ்வொருவருடைய கடமை என்று சொல்லிக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI P. G. KARUTHIRUMAN : தலைவர் அவர்களே, இப்பொழுது சபை முன் இருக்கும் மானியத்தை ஆதரிக்கிறேன். ஜில்லா நிர்வாகத்தின் கீழ் நமது சென்னை மாகாணம் மிகவும் திறம்பட நடக்கிறது என்று இந்தியாவிலேயே பேரும், புகழும் பெற்று இருக்கிறது. ஜில்லா நிர்வாகம் நேர்மையாக, நியாயமாக நடந்தால்தான் நம்முன் இருக்கும் திட்டங்கள் சரியாக நடைபெறும். அதிகாரிகள் நேர்மையாகவும், நியாயமாகவும் நடந்துகொண்டு படிப்படியாக உயர்ந்து ஸெக்ரடரியட் வரை உயர்ந்து வந்தவர்கள். அவர்களுக்கு மக்கள் குறைகள் தெரியாமல் இல்லை. இப்பொழுது இருக்கும் சூழ்நிலையைக் கவனிக்கவேண்டும், இரண்டாவது யுத்தத்திற்கு முன்னால் இருந்த நிலைமையையும், இப்பொழுது இருப்பதையும் பார்க்க வேண்டும். அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல், இப்பொழுது பெட்டிஷன்கள், விண்ணப்பங்கள் ஒரு கிராம ஜனத்தொகை எவ்வளவோ, அவ்வளவு வருகின்றன. முதல் அமைச்சர், எதிர்கட்சித் தலைவரிலிருந்து **Prime Minister of India** வரைக்கும் விண்ணப்பங்கள் போகின்றன. மேலே உள்ள அதிக சம்பளம் வாங்கும் உத்யோகஸ்தர்கள் விண்ணப்பங்களைக் கவனித்து, கீழே அனுப்புகிறார்கள். குறைகளைத் தெரிந்துகொள்ள சிரமப்பட்டுவேலை செய்துவருகிறார்கள்.

எதிர்கட்சிக்காரர்கள் பேசும்போது இவர்களுக்கு சம்பளம் உயர்த்தப்படவில்லை பற்றாக்குறையாக இருக்கிறது என்று சொன்னார்கள். அதற்குத் தகுந்த மாதிரி நல்ல ஆலோசனை கூறி, எவ்வளவு தூரம் வரி விதிக்கலாம் என்பதற்கும், சர்க்காருடைய நிதியிலிருந்து எவ்வளவு கொடுக்கவேண்டுமென்பதற்கும் ஆலோசனை சொல்வார்களானால், நிச்சயமாக சர்க்கார் கவனிக்கும் என்று நான் நினைக்கிறேன்.

அதோடு, இப்பொழுதிருக்கும்படியான கெஜட் பதிவில்லாத ஊழியர்களுடைய நிலைமை அவல நிலையில் இருக்கிறது என்று சொல்லப்பட்டது. பட்ஜெட் பொது விவாதத்தில் உரை நிகழ்த்துகையில் " ஏதோ தேர்தல் சமயத்தில் ஐந்து ரூபாய், ஏழு ரூபாய் என்று உயர்த்திவிட்டார்கள் " என்ற முறையில்—அந்த உத்தியோகஸ்தர்களுக்கு மாசு கற்பிக்கும் அளவிலே அவர்கள் பேசினதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

தென்னாடு தனியாகப் பிரியவேண்டுமென்று சொல்பவர்களுக்குச் சொல்லுகின்றேன்—கெஜட் பதிவில்லாத உத்தியோகஸ்தர்களுடைய சம்பள உயர்வுக்காக மத்திய சர்க்கார் இப்பொழுது சுமார் ஒன்றரை கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். அவர்களோடு நாம் எவ்வளவு ஒத்துழைத்தால் இவ்வளவு பணம் கொடுக்கவேண்டும் என்பதை இந்தச் சமயத்தில் நான் ஞாபகப்படுத்திக் கொள்ளுகின்றேன்.

அதோடு, இப்பொழுது இருக்கும் நிர்வாகத்தில் எவ்வளவோ வேலைகள் அதிகமாய் விட்டன. யுத்தத்திற்குப் பிற்பாடு " ப்ரொக்யூர்மெண்ட் "க்காக தனியாக ஆபீசுகள் வைத்துக்கொண்டிருந்தோம். அதன் பிறகு, இப்பொழுது மக்களுடைய பணியில், ஈடுபட்டு இருக்கிறார்கள். கம்யூனிடி பிராஜெக்ட், தேசீய அபிவிருத்தித் திட்டம், ஸ்தல அபிவிருத்தித் திட்டம் ஆகியவைகள் ஜில்லா நிர்வாகத்திலுள்ள அதிகாரிகளுடைய கையில் இருக்கின்றன. இப்பொழுது எவ்வளவு வேலை அதிகமாயிருக்கிறதோ, அந்த அளவுக்குத் தேவையான உத்தியோகஸ்தர்களைப் போடுவதற்கு ஜில்லாவைப் பிரித்து அமைக்கவேண்டும் என்று ஆலோசனை செய்த போதிலும் கூட, சர்க்கார் ஏன் தயங்குகிறது ? நிதி நிலைமை சரியாக இல்லாததுதான் காரணம்.

13th July 1957] [Sri P. G. Karuthiruman]

எதிர்க்கட்சி அன்பர் ஒருவர் பேசும்போது, இப்பொழுது இருக்கும்படியான கிராம உத்தியோகஸ்தர்களுடைய நிலைமையைப் பார்த்து மிகவும் பரிதாபப்பட்டார்கள். அது எப்படி இருக்கின்றதென்று பார்த்தால், "காக்கையும் நரியும்" என்ற கதை ஞாபகத்திற்கு வருகிறது. காக்கை வடையை வைத்துக்கொண்டு மரத்தின் மேல் போய் உட்கார்ந்திருந்தது. அப்பொழுது கீழே இருந்த நரி பார்த்து, அந்த வடையைப் பெற்றுக்கொள்வதற்காக, "உன்னுடைய அழகே அழகு! நீ எவ்வளவு அழகாய் இருக்கிறாய்! நீ வாயைத் திறந்து பாடினால் இன்னும் எவ்வளவு அழகாக இருக்கும்!" என்று சொல்லியவுடனே மரத்தின் மேலிருந்த காக்கை வாயைத் திறந்தவுடனே வடை கீழே விழ, அதை நரி தூக்கிக்கொண்டு ஓடியது. அதைப்போல, கிராம உத்தியோகஸ்தர்களையும், கெஜட் பதிவில்லாத உத்தியோகஸ்தர்களையும் பார்த்து, "உங்களுக்காக நாங்கள் எவ்வளவு வாதாடுகிறோம் பார்த்தீர்களா? உங்களுடைய கட்சியை நாங்கள் எவ்வளவு தூரம் எடுத்துப் பேசிக்கொண்டிருக்கிறோம்" என்று—தேர்தலுக்காக—சொன்னால், அவர்கள் ஒருபொழுதும் ஏமாந்துவிடமாட்டார்கள், என்பதை நான் கனம் அங்கத்தினருக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய தரம் உயரவேண்டும். மக்களுடைய தரம் உயர்த்தப்படவேண்டும். மக்களிடையே தேசீயப்பண்பாடு இருக்கவேண்டும். அத்தகைய தேசீயப்பண்பாடு நம்முடைய அரசாங்கத்தில் வேலை செய்யக்கூடிய உத்தியோகஸ்தர்களுக்கு மிக மிக அவசியம். தேசீய ஒழுக்கம் இருந்தாலொழிய, நம்முடைய நிர்வாகம் சிறந்த முறையில் இயங்க முடியாது. தேசீயப் பண்பாடுடன் அவர்கள் இயங்குவார்களானால், அவர்களுடைய குறைகளெல்லாம் தீர்ந்து விட்டது என்றே நான் சொல்வதற்குத் தயாராயிருக்கிறேன். பத்து பங்கு வேண்டுமானாலும் சம்பளம் கொடுக்கத் தயாராயிருக்கிறோம். அதற்கேற்ற வழிவகைகளை வகுத்து, எவ்வளவு வரி போட்டால் மக்கள் தாங்குவார்கள் என்பதையும், ஆராய்ந்து அதனால் எந்த முறையில் மக்களுக்கு நன்மை உண்டாகுமோ அதற்கான திட்டங்களை நிறைவேற்ற அதற்கான நடவடிக்கை எடுக்க, இந்த சர்க்கார் என்றைக்குமே பின்தங்காது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். தன் முகத்திலே கரியைப் பூசிக்கொண்டு கண்ணாடியில் பார்த்தால் கறுப்பாகத் தான் முகம் தெரியும். "இனி ஒரு விதி செய்வோம்" என்று பாரதியார் சொன்ன மாதிரி, சட்டசபை அங்கத்தினர்கள் ஒரு திட சங்கற்பம் எடுத்துக் கொள்ள வேண்டும். எதிர்க்கட்சியிலுள்ள ஒரு உறுப்பினர் மிகவும் ஆணித்தரமாகவும்—எதிர்க்கட்சியில் இருந்தாலும்—நாணயமாகவும், திறமையாகவும் பேசியதை நான் பாராட்டுகிறேன். பொதுக் கூட்டத்திலும் போய் இவ்வளவு தைரியமாகச் சென்று பேசுவதாக இருந்தால், அவருடைய திறமையையெல்லாம் உபயோகித்துப் பேசுவதாக இருந்தால், மக்களின்பால் இருக்கும்படியான அபிமானத்தை நிச்சயமாக அது வளர்ப்பதற்கு உதவும். அப்படி ஒவ்வொருவரும், சட்டசபையிலுள்ள அங்கத்தினர்களாகிய நாம் ஒவ்வொருவரும்—இப்பொழுதிருந்தே அந்த முறையில் சங்கற்பம் செய்துகொள்வோமானால், இப்பொழுது சொல்லப்படும் குறைகளெல்லாம் நீங்கி, நாம் மிகவும் நல்ல முறையிலே திறம்பட ஒரு நிர்வாகத்தை அமைத்து, சீரும் சிறப்புமாக நாம் இருப்போம் என்பதில் எனக்கு எந்தவிதமான சந்தேகமும் இல்லை. ஆகவே, ரெவினியூ மந்திரி அவர்கள் கொண்டுவந்த மான்யப் பிரேரபனையை நான் ஆதரிப்பதுடன், இப்பொழுது இருக்கும் வேலைகள் எவ்வளவு தூரம் ஜில்லா அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன என்பதை உணர்ந்து ஒத்துழைப்பார்களானால், அதற்குத் தகுந்த முறையில் அவர்களுக்கு ஊதியம் கொடுப்பதிலே சர்க்காருக்கு எந்தவிதமான ஆட்சேபமும் இருக்காது, சந்தோஷமாகக் கொடுப்பார்கள் என்று தெரிவித்துக்கொண்டு, சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், பொதுஜனப் பிரதிநிதிகள் ஆகிய எல்லோரும் தேசீய ஒழுக்கத்துடனும், தேசீய பண்பாடுடனும் நடந்து கொண்டால், க்ஷேம நல ராஜ்யத்தை ஏற்படுத்தவேண்டுமென்ற நோக்கத்தோடு நடந்து வரும் க்ஷேம நல சர்க்காருடன் ஒத்துழைத்தவர்களாவோம், கிராம உத்தியோகஸ்தர்களும், கெஜட் பதிவில்லாத உத்தியோகஸ்தர்களும் விதி விலக்கு அல்ல என்பதை ஞாபகப் படுத்திக்கொண்டு நான் இந்த மான்யப் பிரேரபனையை

**The Hon. Sri M. A. MANICKAVELU** : கனம் சபாநாயகர் அவர்களே, சுமார் 27 கனம் அங்கத்தினர்கள் இந்த மான்யத்தின் மீது பேசினார்கள். ஒவ்வொருவரும் சுமார் 7 நிமிஷத்திலிருந்து 10 நிமிஷம் வரை பேசினார்கள். இப்பொழுது எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அவகாசம் 30 நிமிஷங்கள்.

**Mr. SPEAKER** : அதுவும் 25 நிமிஷமாகக் குறைந்து விட்டது, இப்போது.

**The Hon. Sri M. A. MANICKAVELU** : ஒவ்வொரு கனம் அங்கத்தினருக்கும் இரண்டு நிமிஷங்கள் வீதம் பதில் கொடுத்தால்கூட 54 நிமிஷம் ஆய்விடுகிறது. ஆகையால், சுருக்கமாகப் பேசவேண்டிய நிலைமையில் இருக்கிறேன். சுருக்கமாகப் பேசுவதற்கும், சுருக்கமாக எழுதுவதற்கும் **preeis writing** என்ற ஒரு பரீட்சை அப்பொழுது இருந்தது. மறந்து போனது போக, மிச்சத் திறன் எவ்வளவு இருக்கிறதோ அதைக்கொண்டு கூடுமான அளவு சுருக்கமாகப் பேச ஆரம்பிக்கிறேன்.

பொதுவான விஷயங்களை முதலில் எடுத்துக்கொள்ளுகிறேன். "நிர்வாகத்திலே சிகப்பு நாடா அதிகமாக இருக்கிறது; அதைக் கத்தரிக்க வேண்டும்; பொது உத்தியோகஸ்தர்களுடைய மனப்பான்மை பிரிட்டிஷார் இருந்த காலத்திலே எப்படி இருந்ததோ, அதேமாதிரி இன்னும் இருக்கிறது. அது மாற வேண்டும்" என்று பொதுவாக குறிப்பிடப்பட்டது. லஞ்ச ஊழல் அதிகமாக இருக்கிறது என்று எல்லாம் சொல்லப்பட்டது. ஆகையால், முதலிலே இதைப்பற்றி பதில் சொல்லிவிடுகிறேன். பிற்பாடு சின்னச் சின்ன விஷயங்கள் அநேகம் இருக்கின்றன. அவைகளைப் பற்றியும் கூடுமானவரையில் பதில் சொல்கிறேன்.

சிகப்பு நாடாவைப்பற்றி கனம் அங்கத்தினர் மாத்திரம் குறிப்பிடவில்லை. ஒரு ராஜ்யத்தினுடைய பெரிய அதிகாரி கூட, "ஏதோ நிர்வாகத்தில்—அதுவும் சென்னையிலே சிகப்பு நாடா அதிகமாக இருக்கிறது" என்று சொன்னார். ஆகையால், அதைக்கொண்டு இதைப் பரிசீலனை செய்து பார்த்ததிலே, அம்மாதிரியாக ஒன்றும் இல்லை என்று நன்றாகத் தெரிய வருகிறது. இந்த நிர்வாகத்திலே பல ஆண்டுகளாக ஈடுபட்டு, இதைக் கவனித்து வருகிறவர்களுடைய அபிப்பிராயம் ஓரளவு தெரிந்திருக்கிறது. இரண்டொன்று சொல்கிறேன்.

"The conduct of business in the Secretariat may look cumbrous, but has been scientifically built up by generations of trial and error and is on the whole excellant. There is ample provision for discussions and for short cuts on really urgent matters."

இது ஒருவருடைய அபிப்பிராயம். நிர்வாகத்துறையில் ஈடுபட்டு அனுபவம் உள்ள இன்னொருவர் . . . .

**Sri K. VINAYAKAM** : May I know the name of the officer.

**The Hon. Sri M. A. MANICKAVELU** : ஒரு பெரிய அதிகாரி—ஒரு நிபுணர்.

**Sri K. VINAYAKAM** : I want the name or the designation of the officer.

**Mr. SPEAKER** : He says that he is an officer.

**The Hon. Sri M. A. MANICKAVELU** : அந்த நிபுணர் யார் என்றுபார்க்கப்போனால், இன்னும் இரண்டுநிமிஷம் போய்விடும். இரண்டாவது நிபுணர் என்ன சொல்லியிருக்கிறார் :

"The system is rather slow no doubt, but is safe and sure and has stood the test of time. However, I am constantly on the lookout to cut unnecessary red tape in Secretariat and

13th July 1957] [Sri M. A. Manickavelu]

outside, especially in the developmental set up. There s no need for a drastic and dramatic change but whereever possible unnecessary red-tapism will be eliminated "

ஆகையால், இம்மாதிரி ஒரு முறையை அனுசரிப்பது ரொம்ப நல்லது. ஏனென்றால், எனக்குத் தெரியும்—இந்த ராஜ்யத்தைவிட்டு வேறு ராஜ்யங்களுக்கு நான் போயிருந்தபோது, அங்கு என்ன சொல்லப்படுகிறது என்றால், ஒரு **file paper file** அகப்படுவது கிடையாது என்று. ஆனால், இங்கு, ஏதோ பழைய **file** வேண்டுமென்று கேட்டால் உடனடியாக எடுத்துக்கொண்டு வருகிறார்கள். எனக்குத் தெரிந்த வரையில், நம் ராஜ்யத்திலே நிர்வாக முறை கொஞ்சம் தாமதமாக இருந்தாலும், நன்றாக, நல்லபடியாக நடந்து வருகிறது. ஆனால், அதே சமயத்தில் சிகப்பு நாடாவைக் குறைக்கவேண்டும் என்பதை நான் ஒத்துக்கொள்ளுகிறேன். குறைக்க வசதி இருக்கிறது. குறைக்கலாம் என்று நிபுணர்கள் சொல்லியிருக்கிறார்கள். கூடுமானவரை குறைத்துக்கொண்டு வருகிறோம். எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவு அதைக் குறைக்க நாம் பிரயத்னம் செய்யலாம். ஆனால், சிகப்பு நாடா முறையை எடுத்து விட்டால் அது குழப்பத்தில் கொண்டு போய்விடும். பல கமிட்டியினர் இதைப் பற்றி விசாரணை செய்து, இந்த முறை ஓரளவு வேண்டியது தான் என்றும், இது **necessary evil** என்றும் இந்த முறையை நாம் திருத்தித்தான் ஏதோ செய்யவேண்டுமே அல்லாது, இந்த முறையையே அடியோடு எடுத்துவிட முடியாது என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

உத்தியோகஸ்தர்களுடைய மனப்பான்மையைப்பற்றி கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டுப் பேசும்போது, உத்தியோகஸ்தர்கள் 200 வருஷங்களாக பொதுமக்களோடு அதிகத் தொடர்பு இல்லாமல்—நவாப் தர்பார் மாதிரி—அதாவது, மக்களோடு மக்களாக கலந்து வேலை செய்யாமல், தனிப்பட்டு இருந்து வந்திருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அது வாஸ்தவம் தான். ஆனால் சுதந்திரம் அடைந்த பிற்பாடு நல்ல மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. பழைய மனப்பான்மை உடையவர் ஒன்றிரண்டு பேர்கள் இருக்கலாம். அடிக்கடி மந்திரிகள் சுற்றுப்பிரயாணம் செய்யும் போது இவர்கள் எப்படி மக்களோடு நெருங்கிப் பழகுகிறார்கள் என்பதைப் பார்த்து அதிகாரிகளும் மக்களுடன் நெருங்கிப் பழகி செயலாற்ற முன் வருகிறார்கள். இருந்தாலும் அவர்களுக்கு சர்வீஸ் காண்டெக்ட் ரூல்ஸ் இருப்பதனால் அதிகமாக நெருங்கிப் பழக முடியாது போனாலும் மக்களுக்குச் செய்யவேண்டிய காரியங்களில் அதிகமாக நெருங்கி நல்ல முறையில் பணியாற்றுகிறார்கள். இன்னும் அந்தப் பழக்கத்தை மாற்றிக்கொள்ளாதவர்கள் இருக்கிறார்களே என்றால் அவர்களும் போகப்போக மாறிவிடுவார்கள். தானே அடிபட்டுத்தான் மாற்றம் ஏற்படும்.

அடுத்தபடியாக லஞ்சம். இதைப்பற்றி நான் முன்பே சொன்னேன். பார்க்கிறபோது பிடிபட்டுவிடும் போலே இருக்கும். அப்புறம் பிடிபடாது நழுவிவிடக்கூடிய " இல்யூசிவ் " தன்மை உடையது. கொள்ளிப் பிசாசு போலத்தான், இதுவும். அதைக் கண்டு எங்கே பார்த்தாலும் லஞ்சம் என்று சொல்கிறார்கள். யாரோ ஒருவர் இந்த அதிகாரி லஞ்சம் வாங்கினார் என்று சொன்னால் உடனே அவரை வேலையைவிட்டு நீக்கவும் முடியாது. அதைத் தீர ஆலோசனை செய்து பார்த்து குற்றம் உண்மைதானா எனக் கண்டறியவேண்டும். சும்மா லஞ்சம் லஞ்சம் என்று சொல்வதிலே பயன் என்ன ? நல்ல குடும்பப் பெண்ணைக் கூட அவிசாரி என்று சொல்கிறார்கள்.

**Sri A. GOVINDASAMY** : கனம் அமைச்சர் அவர்கள் " அவிசாரி " என்று சொல்வது பார்லிமெண்டரி கட்டுப்பாட்டுக்கு உகந்ததா ? ஆட்சேபணைக்குரிய சொல் இல்லையா என்று கேட்கிறேன்.

**Mr. SPEAKER** : அவர் முன்னாலே அதைச் சொல்லிவிட்டார் இனிமேல் யாரும் அந்த வார்த்தையைச் சொல்ல வேண்டாமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**The Hon. Sri M. A. MANICKAVELU :** இப்போது இருக்கிற முறையில் அந்த மாதிரி புகார் வந்தால் உடனே விசாரணை செய்யப்படுகிறது. இப்போதெல்லாம் மொட்டைப் பெட்டிஷன் வந்தாலும் கூட அதில் ஏதாவது உண்மை அகப்படுமோ என விசாரணை செய்யப்படுகிறது. அப்படிப் பண்ணுவதில் இரண்டொரு பலனும் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே முதலில் விசாரணை செய்கிறார்கள். ஏதாவது ஓரளவு குற்றம் இருக்கலாம் என்று தோன்றினால் அதை விசாரிப்பதற்காக உள்ள தனிப் பிரிவு இலாகாவுக்கு அனுப்புகிறார்கள். அவர்கள் அதைப்பற்றி விசாரித்து உடனே ட்ரிப்யூனலுக்கு ரெபர் பண்ணுகிறார்கள். ட்ரிப்யூனலும் குற்றம் நடந்திருப்பதாக தீர்மானித்தால் உடனே தண்டனை கொடுக்கப்படுகிறது. அதைவிட்டு புகார் வந்தவுடனேயே நடவடிக்கை எடுப்பது சரியல்ல.

மேலும் சட்டத்தில் சொல்வார்கள்: உண்மைக் கொலையாளி 99 பேர் தப்பித்துக்கொண்டாலும் பரவாயில்லை. ஒரு குற்றமும் பண்ணாத ஒரு நிரபராதியைக் அதற்காக கொலை செய்துவிடக்கூடாது என்பதாக. இதை அனுசரித்துப் பார்த்தால் அரசாங்கம் இப்போது லஞ்ச ஒழிப்பிற்காக எடுத்து வருகின்ற நடவடிக்கைகளே போதுமானதாக இருக்கும் என்று சொல்ல விரும்புகிறேன்.

அப்புறம் கிராம அதிகாரிகளைப்பற்றிச் சொன்னார்கள். அதைப்பற்றி ஸ்ரீலட்சுமிபதி அவர்களுடைய உரையை வரவேற்கிறேன். உண்மையான நிலைமையை நன்றாக எடுத்துக் காட்டினார்கள். கிராம அதிகாரிகளை முழு நேர அதிகாரிகளாக்குவதா ? அல்லது இப்பொது இருக்கக்கூடிய நிலைமையிலேயே அவர்களுடைய ஊதியத்தைக் கொஞ்சம் அதிகப்படுத்துவதா என்பது தான் பரிசீலனை செய்யப்படுகிறது. கிராம அதிகாரிகளிலேயே பலர் முழுநேர அதிகாரிகளாக இருக்க விரும்பவில்லை. இதே மாதிரியே இருந்து கொண்டு இன்னும் ஜாஸ்தி சம்பளம் வேண்டுமென்று தான் சொல்கிறார்கள். இந்த விஷயம் தான் ஒரு கமிட்டியின் பரிசீலனையில் இப்போது இருக்கிறது. ஏறக்குறைய முடிவு அடையும் தருவாயில் இருக்கிறது. அது தெரிந்த பிறகு எப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று யோசிக்கப்படும். அவர்களை முழுநேர ஊழியர்களாகவே ஒரு லோயர் டிவிஷன் கிளார்க்கைப் போல, அப்பர் டிவிஷன் கிளார்க்கைப் போலச் சம்பளம் கொடுத்து வைக்கலாமா எனவும் யோசிக்கலாம். (கனம் ஸ்ரீ வி. சுப்பிரமணியம் : படிப்பு, தகுதி, இதர சர்க்கார் ஊழியர்களுக்கு உள்ள விதிகள் எல்லாம் பொருந்தும்) அப்படிச் செய்வதானால் மற்ற தகுதிகளும் நிர்ப்பந்திக்கப்படும்.

ஆனால், இதை அவர்கள் விரும்பவில்லை. இப்பொது பரம்பரை பாத்தியதை முறையில் இந்த உத்தியோகம் இருந்து வருகிறது. அதோடு பெருவாரியான கிராம உத்தியோகஸ்தர்கள் இந்தச் சம்பளத்தை எதிர்பார்த்து இருக்கவில்லை. நல்ல பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். நான் ஒரு சமயத்தில்கூடச் சொல்லியிருக்கிறேன். இங்கு முன்பு சபாநாயகராக இருந்த ஒருவரும் ஒரு கிராம அதிகாரிதான். இங்கு சபாநாயகராக இருக்கும்போதுகூட அந்தப் பதவியை வேறு ஒருவர் பெயரில் வைத்துப் பார்க்கச் சொல்லிவிட்டு வந்தாரே தவிர அதை வேண்டாம் என்று தள்ளிவிடவில்லை. பின்னொரு காலத்திலாவது கிராம அதிகாரியாக இருந்து கிராம மக்களுக்குச் சேவை செய்யவேண்டுமென்ற எண்ணம் அவருக்கு இருந்தது. ஆர்வம் இருந்தது. இப்படித்தான் பல இடங்களில் இருக்கிறார்கள்.

இந்தப் பிரச்னை இப்பொது பரிசீலனையில் இருந்து வருகிறது. இடையில் அவர்களை முழுநேர ஊழியராக வைத்துக்கொள்ளலாமா, வேண்டாமா என்பது முடிவு செய்யப்படாமல் இருக்கும்போதே சிறிது சம்பள உயர்வு அளிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சம்பள உயர்வினாலே அரசாங்கத்திற்கு 30 லட்சம் ரூபாய் செலவாகுமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஜில்லா நிர்வாகத்தில் உள்ள பல குறைகளை அநேகம் அங்கத்தினர்கள் சுட்டிக் காட்டினார்கள். இவற்றை எல்லாம் எப்படி நிவர்த்திப்பது என்பதைப்பற்றிப் பரிசீலனை செய்வதற்காகவே ஒரு அட்வைசரி [illegible]

13th July 1957] [Sri M. A. Manickavelu]

1951-ல் அமைத்தோம். அவர்கள் சில சிபார்சுகளைச் செய்தார்கள். அந்தச் சிபார்சுகளில் பலவற்றை ஒத்துக்கொண்டிருக்கிறோம். அது எல்லாம் அமுலுக்கு வரும்போது கட்டாயம் நல்ல பலன் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

இப்போது இங்கே சர்க்கார் ஒத்துக்கொண்டுள்ள இரண்டொரு சிபார்சுகளை மட்டும் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக மூன்று லோயர் டிவிஷன் கிளார்க்குகளுக்கு ஒரு அப்பர் டிவிஷனல் கிளார்க் இருந்தால் நல்லது என்று சொல்லப்பட்டது. அது ஒத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இப்போது ரெவினியூ இலாகாவில் குமாஸ்தாக்கள் வருகிறார்களே அவர்களுக்கு முன்னேற்பாடாக ஒரு பயிற்சி கொடுக்கவேண்டும் என்றும் சொல்லப்பட்டது. அதுவும் ஒப்புக்கொள்ளப்பட்டது. மேலும் ஜில்லா அபிஷியல் மான்யுவல் கொண்ட ப்ரோஷரில் ஒரு காப்பி கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. அதுவும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ரெவின்யூ இன்ஸ்பெக்டர் ஆக நியமித்து பிற்பாடு அவர்களுக்கு தாலுக்காவில் போய் நேரிடையாக வேலை செய்வதற்கு முன்பாக பயிற்சி கொடுக்கவேண்டும் என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. மேலும் கலெக்டருக்கு இப்போது வேலை அதிகமாக இருக்கிறது. அந்தக் கலெக்டர் செய்யவேண்டிய வேலையை எல்லாம் பி.ஏ.க்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படி பல சிபார்சுகள் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இவை எல்லாம் சரியான முறையில் அமுலுக்கு வந்தால் நிர்வாகம் நல்ல முறையில் நடக்குமென்று எதிர்பார்க்கிறேன். உத்திரப் பிரதேச மாகாணத்தில் ஜில்லா நிர்வாகம் நன்றாக நடைபெறுகிறது என்று தெரிந்ததில், அதை வரவழைத்துப் பார்த்தோம். நம் ராஜ்யத்தில் நிறுவிய கமிட்டியின் சிபாரிசுகளை அவர்கள் உபயோகித்து அவர்களுடைய சட்டங்களை திருத்தியிருக்கிறார்கள் என்பது தெரிய வந்தது. ஸ்ரீ கருத்திருமான் சொல்லியபடி நம் ராஜ்யத்தில் ஜில்லா நிர்வாகம் நல்ல முறையில் நடந்து வருகிறது. கமிட்டியின் சிபாரிசுகளை பரிசீலித்து சீர்திருத்தினால் ஜில்லா நிர்வாகம் இன்னும் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன். பிற்பாடு ஜில்லாக்களை திருத்தி அமைப்பது என்ற பிரச்னையே இருக்காது. குறிப்பாக நாங்குனேரி தாலூகாவை கன்னியாகுமரியில் சேர்ப்பதைப் பற்றி கனம் அங்கத்தினர் ஸ்ரீ ஆதித்யன் அவர்கள் சொன்னார்கள். இதை பிரமாதப்படுத்தி விட்டார்கள். முன்னெச்சரிக்கை இல்லை என்று சொன்னார்கள். கனம் நிதி மந்திரி அவர்கள் பட்ஜட் பிரசங்கத்தில்தான் சொல்லியிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார். கனம் நிதி மந்திரி அவர்கள் சொல்லியது இதுதான் :

**"With the increasing tempo of rural development work, the question whether our revenue districts are far too unwieldy in size for efficient administration, has come up for consideration. But there is considerable volume of tradition and history attached to the present configurations and there may be a good deal of local sentiment against the dismemberment of the present districts. A committee of the Cabinet is now considering this question and would welcome the suggestions of hon. members. In the meanwhile, it has been decided to keep the Kanyakumari area as a separate district and to detach the Nanguneri taluk from the Tirunelveli district and add it on to the Kanyakumari district forthwith, so as to even out the work-load of the District Officers of the two districts."**

இப்போது திருநெல்வேலி ஜில்லாவில் ஏற்கனவே இருந்த தாலூக்காக்களோடு செங்கோட்டை தாலூகா சேர்க்கப்பட்டு இருக்கிறது. கன்னியாகுமரி ஒரு சிறிய ஜில்லா. 8½ லக்ஷம் ஜனத்தொகை கொண்டது. இந்த மாகாணத்திலேயே சிறிய ஜில்லா.

SRI K. SATTANATHA KARAYALAR : நீலகிரி ஜில்லாவும் சிறியதுதான்.

THE HON. SRI M. A. MANICKAVELU : நீலகிரியைப் போல் இருக்கலாம். அதோடு அதற்கு சுற்றுப்பக்கத்திலுள்ள பகுதிகளைச் சேர்த்தால் நன்றாக இருக்கும். கோவில்பட்டி தாலுகாவை கன்னியாகுமாரி ஜில்லாவோடு சேர்க்க முடியாது. அது தூரத்தில் இருக்கிறது. ஐந்து அல்லது பத்து மைல்களுக்கு அருகாமையில் இருக்கின்ற தாலுகாவைத்தான் சேர்க்கமுடியும். நாங்குனேரி போன்ற தாலுகாவைத்தான் சேர்க்க முடியும். அப்படிச் சேர்ப்பதற்கு சிலர் பிரியப்பட்டிருக்கிறார்கள். சிலர் பிரியப்படாமல் இருக்கலாம். கன்னியாகுமாரியோடு சேர்த்தால் சௌகரியமாக இருக்கும் என்று அப்பொழுது தோன்றியது. இம்மாதிரி ஜில்லா பகுதிகளை மாற்றி அமைப்பதற்கு சில சடங்குகள் இருக்கின்றன. எல்லா கெஜட்டுகளிலும் பிரசுரித்து ஏதாவது ஆட்சேபனை இருக்கிறதா என்று பார்த்து பிறகு அமுலுக்கு கொண்டுவரவேண்டும். மாற்றவேண்டும் என்ற உத்தேசம் தான் இப்பொழுது தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எல்லா சடங்குகள் முடிந்த பிற்பாடுதான் இது அமுலுக்கு வரும். எதிர் கட்சித் தலைவர் "மலபாரை இப்பொழுது மூன்று ஜில்லாக்களாக பிரித்துவிட்டிருக்கிறார்கள்" என்றும் இங்கே பெரிய பெரிய ஜில்லாக்கள் இருக்கின்றன என்றும் குறிப்பிட்டார். மலபாரில் சுமார் 10 லக்ஷத்துக்கு குறைவு இல்லாமல் ஜனத்தொகை இருக்கிறது. இப்பொழுது நம் ராஜ்யத்தில் இருக்கும் கன்னியாகுமாரி ஜில்லா சிறியது என்பதை அவர் மறந்து விட்டார். நீலகிரி, செங்கல்பட்டு ஜில்லாக்களும் சிறியவைதான். எதிர்கட்சித் தலைவர் அவர்கள் ஜில்லாவான செங்கற்பட்டிலும் இன்னும் கொஞ்சம் தாலுகாக்களை சேர்க்கலாம். இந்த விஷயத்தை அமைச்சர் கமிட்டி பரிசீலித்து வருகிறது. இந்த விஷயத்தில் அங்கத்தினர்களின் யோசனைகளையும் பொது மக்களின் யோசனைகளையும் ஆலோசித்துத்தான் ஒரு நல்ல முடிவுக்கு வரவேண்டும். அந்த முடிவு எவ்வளவு நியாயமாகவும் நல்லதாகவும் இருந்தாலும் ஒரு சிலருக்கு திருப்திகரமாக இருக்காது. கூடுமான வரை நியாயமான வகையிலேயே, மக்களுக்கு சௌகரியம் ஏற்படும் வகையிலேயே ஒரு முடிவுக்கு வர அரசாங்கம் பிரயத்னம் எடுத்துக்கொள்ளும்.

கன்னியாகுமாரியைப் பற்றி இன்னும் இரண்டு விஷயங்கள் சொன்னார்கள். அதைப்பற்றியும் சொல்லி விடுகிறேன். கன்னியாகுமாரியில் இருக்கும் நில "டென்யூர்" விஷயமாகச் சொன்னார்கள். இதை அங்கு "ஊடுர்" என்று சொல்கிறார்கள். இதைப் போல தனிப்பட்ட விஷயங்கள் பல இருக்கின்றன. அந்த இடத்தில் உள்ள முறை புது மாதிரியாக இருக்கிறது. கன்னியாகுமரி பகுதி ஒரு புதிய பகுதி. இதையெல்லாம் கொஞ்சம் கவனித்துப் பார்த்து ஒரு முடிக்கு வந்தால் நன்றாக இருக்கும். இப்பொழுது நான் அந்த இடங்களையெல்லாம் சரிவர சுற்றிப் பார்க்கவில்லை. அவர்கள் என்னை வரும்படி அழைத்திருக்கிறார்கள். இவைகளையெல்லாம் நன்றாக பார்த்து ஒரு நல்ல முடிவுக்கு வரத்தயார். அரசாங்கம் கன்னியாகுமாரி ஜில்லாவை நன்றாகத்தான் கவனித்து வருகிறது. எந்தக் காரணத்தாலும் கன்னியாகுமரி ஜில்லா புறக்கணிக்கப்படவில்லை. புதிதாக சேர்ந்த பகுதியாயிற்றே என்று அவர்களுக்கு ஒரு மாதிரி அச்சம் இருந்து கொண்டு இருக்கிறது. நல்ல வகையிலேயே அந்த ஜில்லாவை நடத்த வேண்டும் என்றுதான் அரசாங்கத்தின் உத்தேசம். அதற்காகத்தான் அந்த ஜில்லாவைச் சேர்ந்த நல்ல பெண்மணியை மந்திரியாக்கியிருக்கின்றனர்.

சின்ன சின்ன விஷயங்களைப் பற்றி சுருக்கமாகச் சொல்லி விடுகிறேன். ஒரு உறுப்பினர் "எஸ்டேட் மானேஜர் இருக்கும்போது ஆர்.டி.ஓ. எதற்கு" என்று குறிப்பிட்டார். எஸ்டேட் மானேஜர் விஷயம் தற்காலிகமானது. ஸர்வே செட்டில்மெண்டு முடியும்போது அது போய்விடும். அப்போது "ஆர்.டி.ஓ." வேண்டி இருக்கும். இப்பொழுது "ஆர்.டி.ஓ."வுக்கு கிரிமினல் புரோசீஜர் கோடு முதலிய வேலைகள் பல இருக்கின்றன. ஆகையினால் அவர் இருப்பது அவசியம்.

13th July 1957]  [Sri M. A. Manickavelu]

சர்டிபிகேட் விஷயமாக சிலர் சொன்னார்கள். சர்டிபிகேட் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது என்று சிலரும், சுலபமாக கிடைக்கிறது என்று சிலரும் ஒரு பகுதியிலிருந்து கொண்டு வேறொரு பகுதியிலிருப்பதாக சர்டிபிகேட் வாங்கிக் கொண்டு வருவதாகவும் சொன்னார்கள். துரிதமாக சர்டிபிகேட் நல்ல முறையில் கிடைப்பதற்கு விதிகள் அவ்வப்போது மாற்றப்பட்டுக்கொண்டுதான் வருகின்றன.

நல்ல நோக்கத்தோடு விவசாயிகளுக்கு கடன் கொடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்துள்ளனர். சில இடங்களில் இவை சரியாக அமுல் நடத்தப்படாமல் இருக்கலாம். "சாமிவரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுப்பதில்லை" என்று ஒரு பழமொழி. சாமியாலேயே முடியாததை சர்க்கார் சாதித்து விட முடியுமா ? அரசாங்கம் நல்ல உத்தேசத்தோடு உத்திரவுகள் போட்டாலும் அது சில இடங்களில் சரிவர அமுல் நடத்தப்படுவது இல்லை. இந்த விஷயத்தில் எங்களால் முடிந்ததைச் செய்கிறோம்.

மீன் பிடிப்பு உரிமையை முதன் முதலாக கோவாபரேடிவ் சொஸைடிக்கு கொடுக்க வேண்டும் என்றும், இல்லையென்றால் அந்த பகுதியிலுள்ள பஞ்சாயத்துக்கு கொடுக்கப்படும் என்றும் திருத்தி அமைக்கப்படும்.

ரேடியோவைப் பற்றி சில அங்கத்தினர்கள் சொன்னார்கள். ரேடியோ அவசியம்தான். படிப்புக் குறைவாக இருக்கும் நம் மாகாணத்தில் ரேடியோ மூலமாகத்தான் விஷயங்களை எடுத்துச் சொல்ல முடியும். அரசாங்கம் தனி மார்க்கட்டில், "ஓபன் மார்க்கட்டில்" வாங்குவதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இந்தியா கவர்ன்மெண்டார் மூலமாக "ஓபன்" மார்க்கட்டில் வாங்கி, அதை ரிபேர் செய்வதற்கு அரசாங்கம் ஒரு பகுதியையும் ரேடியோ வைத்திருக்கிறவர்கள் ஒரு பகுதியையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் இருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் சுமார் 10,000 ரேடியோ செட் வழங்குவதற்கு ஒரு திட்டம் இருக்கிறது.

"பிளாக் டெவலப்மெண்ட் இன்டகிரேஷன்" வேண்டும் என்றும், "ஓவர்லாப்பிங்" இருக்கிறது என்றும் சொன்னார்கள். ஒன்றுக்கொன்று முரண் இல்லாமல் ஒரு "ஸிஸ்டம்" ஏற்படுத்துவதற்கும் பிரயத்தனம் செய்யப்பட்டு வருகிறது.

ஜீப் விஷயமாக சிலர் சொன்னார்கள். "ஆர்.டி.ஓ"-க்கு ஜீப் இருக்கிறது. அவருக்கு தேவை இல்லாத சமயத்தில் தாசில்தார் அதை உபயோகிக்கிறார். ஆகையால் ஜீப் வசதி அவர்களுக்கு இருக்கிறது. உத்தியோகஸ்தர்கள் திடீரென்று வந்து திடுதிடுவென்று போய் விடுகிறார்கள் என்று சொன்னார்கள். முன் காலத்தில் ஜீப் வசதி இல்லை. கிராமங்களுக்கு குதிரையில் வந்து, ஒன்றிரண்டு நாள் முகாம் போட்டு, குறைகளை விசாரித்து விட்டு போவார்கள். ஆனால் தற்பொழுது யாரும் குதிரை சவாரி செய்ய விரும்புவது இல்லை. பஸ், ஜீப்தான் வேண்டும் என்று சொல்லுகிறார்கள். இந்தக் காலத்தில் பழைய குதிரை சவாரி முறையை கொண்டு வர முடியாது.

"பி" மெமோக்கள் கொடுக்கவில்லை என்று சிலர் சொன்னார்கள். போன தடவை "பி" மெமோக்கள் அதிகம் கொடுத்து விடுகிறார்கள் என்று சொல்லப்பட்டது. ஆகையால் "பி" மெமோக்களை கொடுக்கவில்லை என்று சொல்லுவதை நான் ஒத்துக்கொள்ள முடியாது.

நியாய விலை கடைகளை அதிகமாக்க வேண்டும் என்று சிலர் சொன்னார்கள். இதில் ஜில்லா கலெக்டர்கள் ஒன்றும் செய்ய முடியாது. கடைகளை மட்டும் திறந்தால் பிரயோசனம் இல்லை. போதுமான சரக்கு வைத்துக்கொண்டுதான் அதிகப்படியான கடைகளை திறக்க சர்க்கார் உத்தரவு கொடுக்க முடியும். விளம்பர அதிகாரிகளைப் பற்றி சொல்லப்பட்டது. விளம்பர அதிகாரிகள் அவசியம்தான். ஏனென்றால் அரசாங்கம் செய்திருக்கும் காரியங்களைப்பற்றியும் சாதனைகளைப் பற்றியும் மக்களிடையே எடுத்துச் சொல்லி அவர்களுடைய உரிமைகளையும், கடமைகளையும் மக்களுக்கு நன்றாக புரியும்படி சொல்லவேண்டும். ஆகவே விளம்பர அதிகாரிகள் அவசியம்தான் என்பதை சொல்லிக் கொள்கிறேன். அவர்களை

[Sri M. A. Manickavelu] [13th July 1957

இப்போது நன்ருக வேலை செய்து வருகிருர்கள். பலர் குமஸ்தாக்கள் சரியாக வேலை செய்யவில்லை என்று சொன்ஞர்கள். ஆனல் இந்த பக்கத்திலிருந்து இரவு இரண்டு மணி வரையிலும் விளக்கு வைத்து வேலை செய்கிருர்கள் என்றும் சொல்லப்பட்டது, ஆகவே வேலை செய்யவில்லை என்பதும் அதிகமாக வேலைகள் செய்கிருர்கள் என்பதும் இரண்டும் ஒன்றுக்கொன்று சரியாய் போய்விட்டது. இரண்டும் "கான்ஸெல்" ஆய்விட்டது. அடுத்ததாக சொல்லப்போனல் இப்போது ஓரளவு அதிகமாகத்தான் வேலை இருக்கிறது. கூடுதலாக கிளார்க்குகள் போட வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. நான் இன்னும் எதாவது சொல்ல வேண்டியிருந்தால், அவைகளை சொல்லவில்லை என்பதற்கு நான் ஜவாப்தாரி அல்ல, சபாநாயகர்தான் என்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் தன்னுடைய வெட்டுப்பிரேரணையை வாபஸ் வாங்கிகொள்ளுகிருர்களா என்று அறிய விரும்புகிறேன்.

SRI K. SATTANATA KARAYALAR : நான் வாபஸ் வாங்கவில்லை.

MR. SPEAKER : The question is—

"That the allotment of Rs. 3,43,67,400 under Demand XI—District Administration and Miscellaneous—be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 3,43,67,400 under Demand XI—District Administration and Miscellaneous."

The Demand was put and carried and the Grant was made.

MR. SPEAKER : The hon. Member, Sri V. K. Kothandaraman wanted to raise a point of order. If he would do so now, I shall consider it.

SRI V. K. KOTHANDARAMAN : பட்ஜெட் பிரசங்கத்தில் நியாய விலை கடைகள் போதுமான அளவுக்கு திறக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது மந்திரி அவர்கள் சொல்லுகிருர்கள் எந்த அளவுக்கு திறக்கமுடியுமோ அந்த அளவுக்குத்தான் திறக்க முடியும் என்று. இது இவ்விதம் கூறுவது சரிதான என்பதை அறிய வேண்டுகிறேன்.

MR. SPEAKER : இந்தப் புள்ளி விவரங்களுக்கு Short notice question போட்டால் பதில் சொல்லும்படி ஏற்பாடு செய்கிறேன்.

## (2) DEMAND IX—HEAD OF STATE, MINISTERS AND HEADQUARTERS STAFF.

MR. SPEAKER : This Demand will be discussed for two hours, one hour to-day and one hour on Monday.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,10,80,000 under Demand IX—Head of State, Ministers and Headquarters Staff."

13th July 1957]

MR. SPEAKER : Motion moved—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,10,80,000 under Demand IX—Head of State, Ministers and Headquarters Staff."

THE HON. SRI C. SUBRAMANIAM : சபாநாயகர் அவர்களே, இப்போது இந்த மான்யக் கோரிக்கையை சபை முன் வைத்து ஆரம்பத்தில் எந்தவிதமான பிரசங்கமும் செய்ய உத்தேசமில்லை. கடைசியில், கனம் அங்கத்தினர்கள் சொல்லக்கூடிய குறைகளில் ஏதாவது பதில் சொல்ல வேண்டுமென்றால், அல்லது ஏதாவது விபரங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் அவைகளையும் நான் என்னுடைய பதிலில் சொல்லுகிறேன்.

MR. SPEAKER : I understand that the Opposition parties have agreed that Sri V. K. Ramaswamy Mudaliyar's cut motion, will be moved. He will move it.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR :—Sir, I move—

"That the allotment of Rs. 1,10,80,000 under Demand IX—Head of State, Ministers and Headquarters Staff be reduced by Rs. 100."

MR. SPEAKER : Motion moved—

"that the allotment of Rs. 1,10,80,000 under Demand IX—Head of State, Ministers and Headquarters staff be reduced by Rs. 100."

The main motion and the cut motion are before the House for discussion.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த வெட்டுப்பிரேரணையை சபை முன் சமர்ப்பித்து சில வார்த்தைகள் சொல்லிக்கொள்கிறேன். இப்போது மத்திய சர்க்காரிலும் நம்முடைய ராஜ்ய சர்க்காரிலும் சிக்கன முறைகளை கையாள வேண்டுமென்று ஒரு பிரச்னையாகவே இருந்துகொண்டிருக்கிறது. அதே மாதிரிதான் எல்லா மாகாணங்களிலும் இந்த சிக்கன முறையை கையாளப்பட்டு வருவதாக தெரிகிறது. நமக்கு இப்போது இருக்கும் பட்ஜெட்டைப் பார்த்தால் வரவை மிஞ்சி செலவு இருக்கிறது. ஆகவே எவ்வளவு தூரம் செலவை குறைக்க முடியுமோ அவ்வளவு தூரம் செலவை குறைக்கவேண்டும், அதோடு சிக்கன முறைகளையும் கையாளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். முக்கியமாக இதற்கு எவ்வளவு தூரம் சிக்கனப்படுத்த முடியும் என்பதை பார்ப்பதற்கு ஒரு கமிட்டி ஆபீஸரை போட்டிருப்பதாக சமீபத்தில் நிதி மந்திரி அவர்கள் சொன்னார்கள். அது ஒரு புறமிருக்க இன்னும் அனேக இலாகாக்களில் சிக்கன முறைகளை கையாளவேண்டும் என்பதுதான் என் அபிப்பிராயம். முக்கியமாக இப்போது அமைச்சர்கள் எல்லோரும் அடிக்கடி எல்லா ஜில்லாக்களிலும் முகாம் செய்கிறார்கள். ஒவ்வொரு அமைச்சரும் மாதம் இரண்டு மூன்று தடவையாவது ஒவ்வொரு ஜில்லாக்களுக்கும் போய்க் கொண்டிருக்கிறார்கள். இப்படியாக ஒவ்வொரு மாசத்திலும் போக வேண்டியிருக்கிறது. இதனால் அங்கு வரப்பட்ட சிப்பந்திகளுக்கு எல்லாம் பிரயாணப்படி, தினப்படி எல்லாம் கொடுக்கப்பட வேண்டும். இதனால் அதிகமாக செலவு ஏற்படுகிறது. அமைச்சர்கள் எல்லோரும் இவ்விதம் அடிக்கடி போகவேண்டியது அவசியமா என்பதுதான் கேள்வி. மக்களிடம் தொடர்பு கொள்ள வேண்டியது அவசியம் தான். இதற்காக அதிகமாக செலவு ஆகின்றது. இதன் காரணமாக எவ்வளவோ பிரச்னைகள் எல்லாம் ஏற்படுகிறது. எங்கேயாவது ஒரு திறப்பு விழா என்றால் ஒரு அமைச்சர்

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [13th July 1957

இங்கிருந்து போகிறார்கள். ஆனால் முக்கியமாக சமீபத்தில் ஆனைக்கால் சந்திர வாராவதி ஒன்று முப்பது, முப்பத்திஐந்து லட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டது. அதனுடைய திறப்பு விழாவுக்கு முதல் அமைச்சர் அவர்கள் போயிருந்தார்கள். நான் அதைப்பற்றி குறிப்பிடவில்லை. இன்னும் சிறிய சிறிய காரியங்களுக்கு எல்லாம் அமைச்சர்கள் இங்கிருந்து போகிறார்கள். அதிக தூரமுள்ள சில ஜில்லாக்களுக்குப் போவதால் அதிகமாக செலவாகிறது. அப்படி அடிக்கடி போய் விடுவதினால் இங்கு வந்து பார்க்கக்கூடியவர்களுக்கு சரியான சமயங்களில் மந்திரிகளை பார்க்க முடியவில்லை. தவிர இவைகளுக்கு நான் சொல்லுவது என்னவென்றால் சம்பளத்தை இன்னும் கொஞ்சம் கூட்டி வாங்கிகொள்ளலாம். ஆனால் சுற்றுப்பிரயாணத்தில் உள்ள செலவுகளை கூடுதலாக குறைக்கவேண்டும். கார்கள் உபயோகிப்பது சொந்த கார்களை உபயோகிக்க வேண்டும். சர்க்கார் கார்களை உபயோகிக்கக்கூடாது. சர்க்கார் கார்களை உபயோகிப்பதில் அதிகமான செலவு ஆகிறது.

(Deputy Speaker in the Chair.)

மற்ற விதத்தில் அவர்களுக்காக அதிகம் செலவாகிறது. அந்த செலவுகள் எல்லாவற்றையும் குறைக்கவேண்டும். அப்படிக் குறைப்பதில் காரணமாக சம்பளம் கொஞ்சம் அதிகமானாலும் பரவாயில்லை என்பது என் எண்ணம்.

I would request hon. Ministers to take more pay without any perquisites. This is my contention.

இதைப்பற்றி அவர்கள் யோசிக்க வேண்டுமென்றுதான் நான் சொல்கிறேன்.

So many things are attached to their office. I am unable to enumerate them all here.

தவிர அதே மாதிரிதான் நான் ரெவின்யூ போர்டை பற்றி முன்பு சொன்னேன். அதைப்பற்றித்தான் இப்பொழுதும் சொல்ல விரும்புகிறேன். அதுவும் குறைக்கப்பட வேண்டும். "ஹெட்ஸ் ஆப் டிப்பார்ட்மெண்ட்"-லும், ஒவ்வொரு இலாகாக்களிலும் அதிகம் செலவாகிறது. அதையும் பார்த்து அதுவும் குறைக்கப்பட வேண்டும். முக்கியமாக, டிப்பார்ட்மெண்டல் ஆபீஸர்களை, ஒரே இடத்தில் மூன்று வருடங்கள் இருந்தால் அவர்களை அங்கிருந்து மாற்ற வேண்டும் என்று இருந்தபோதிலும் சில இலாகாக்களில் அநேக வருஷமாக ஒவ்வொரு ஆபீஸர்களும் அங்கேயே இருந்து கொண்டு வருகிறார்கள். அதன் காரணமாக அந்த இலாகாக்கள் சரியாக நடப்பதில்லை. அதன் பேரில் பல புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. அதையும் அமைச்சர் அவர்கள் நன்றாக கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்னும் பல முறையிலே ஒவ்வொரு அமைச்சர்களும் தங்கள் இலாகாக்களைச் சேர்ந்த ஹெட்ஸ் ஆப் டிப்பார்மெண்ட்ஸையும், செக்ரட்டரிகளையும் வைத்துக் கொண்டு எவ்வளவு தூரம் தங்கள் இலாகாக்களை சிறந்த முறையில் குறைந்த செலவில் கையாள முடியுமோ அவ்வாறு கையாளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த சபையின் முன்பு நான் இந்த வெட்டுப் பிரேரணையை பிரேரேபிக்கிறேன்.

**Sri P. S. CHINNADURAI** : மதிப்பிற்குறிய உதவி சபாநாயகர் அவர்களே, இந்த சபையின் முன்பு பிரேரணை செய்யப்பட்டிருக்கிற இந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் நான் பேச விரும்புகிறேன். நம்முடைய ராஜ்யத்திலே அமைச்சர்கள் குறைவானத் தொகையினராக இருந்தபோதிலும், அவர்கள் வாங்குகிற சம்பளத்தைப் பொறுத்த வரையில் நாம் குறைபட்டுக் கொள்வதற்கு எதும் இல்லை என்ற நிலைமை இருந்த போதிலும், அவர்கள் அவசியம் இல்லாமல் சுற்றுப் பிரயாணம் செய்வதை நான் ஏற்றுக் கொள்வதற்கு முடியாது. ஒரே ஜில்லாவில் பல அமைச்சர்கள் ஒரு சில தினங்களுக்கு. உள்ளாகவே சுற்றுப் பிரயாணம் செய்வதை நான் கண்டிருக்கிறேன். அவ்வாறு பல அமைச்சர்களும் ஒரே வாரத்திற்குள்ளாக ஒரு ஜில்லாவிலே, அதிலும் குறிப்பிட்ட ஒரு சில பகுதிகளிலே வர வேண்டிய அவசியம் என்ன இருக்கக் கூடும் என்று

என்னால் யோசிக்க முடியவில்லை. ஆங்காங்கு சுற்றுப்பிரயாணம் செய்யும் போது அமைச்சர்கள் தங்கள் கட்சிப் பணியைச் செய்கிறார்கள் என்பதை நான் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது. ஆளுகின்ற கட்சியினர் அவர்களது நலன்களைக் காப்பாற்றிக் கொள்வதற்கு முயற்சி செய்வது இயற்கையே ஆயினும், அதற்காக அரசாங்கத்தின் பணத்தை உபயோகப் படுத்திக் கொள்வது என்பது சரியானதாகாது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அது மாத்திரமல்ல. அமைச்சர்கள் ஆங்காங்கு வருகிற இடங்களிலே பொதுவான ஸ்தலங்களில் தங்குவது மிகவும் நன்மையானது.

அப்படி என்றால் தான் பொது மக்கள் அவர்களைப் பார்த்து தங்களது குறைகளை எடுத்துக் கூற முடியும். அப்படி, பொது ஸ்தலங்களில் தங்கும் அமைச்சர்களை நான் சொல்லவில்லை. ஆனால் பொது மக்கள் அவர்களை பார்க்க முடியாதபடி, தங்கள் சொந்தக்காரர்கள் வீடுகளிலும், நண்பர்கள் என்ற முறையில் தங்கள் கட்சிக்காரர்கள் வீடுகளிலும் தங்கும் அமைச்சர்களைப் பற்றித்தான் குறிப்பிட விரும்புகிறேன். அப்படி அவர்கள் அங்கு செல்வதின் மூலம் பொது ஜனங்கள் அவர்களைப் பார்ப்பதினின்று தடுக்கப் படுகிறார்கள். அரசியல் கருத்து உள்ளவர்கள் சுலபமாக அவர்களை அணுகி எதையும் சொல்ல முடியாத நிலை ஏற்படுகிறது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இவைகளை எல்லாம் தவிர்ப்பதற்கு நம்மால் சுலபமாக முடியும். இது ஒரு பெரிய காரியமல்ல. நிதானமாக சிந்தனை செய்து பார்ப்பார்களானால் அவர்கள் இதனை திருத்திக் கொள்ள ஏதுவாயிருக்கும் என்று நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். அதோடு இந்த மாதிரி சுற்றுப்பிரயாணம் செய்யும்போது போலீஸார் அதிகமாக நம் அமைச்சர்கள் முன்னும் பின்னும் செல்லும் வழக்கம் நிறைய இருந்தது. ஆனால் இப்பொழுது ஓரளவிற்கு அது குறைந்திருக்கிறது. இவ்வளவு போலீஸ் காரர்கள் நம் அமைச்சர்களுக்கு தேவையா என்றால் அத்தனை போலீஸ் பந்தோபஸ்து தேவையே இல்லை என்பது தான் என்னுடைய தாழ்மை யான அபிப்பிராயம். காங்கேயத்திலிருந்து கோவை வரையில் 40 மைல் தூரத்தில் ஒவ்வொரு பகுதியிலும் இடைவிட்டு போலீஸ்காரர்கள் நிறுத்தப் படுகிறார்கள் என்றால் அதற்கு எவ்வளவு செலவாகும் என்று நினைத்துப் பாருங்கள். அமைச்சர்கள் வருகிறார்களோ போகிறார்களோ என்று தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமே இல்லாத கிராமங்களில் போலீஸ் காரர்கள் இருக்கிறார்கள். அமைச்சர்கள் வந்தாலும் போனாலும் அந்த கிராம மக்களுக்கு ஒரு பயனும் இல்லை. இந்த நிலைமையிலே போலீஸ் எதற்காக நிற்க வேண்டும். பகலிலே, இரவிலே கூட நின்றிருக்கிறார்கள்.

ஆக இம்மாதிரி போலீஸ் பந்தோபஸ்து போடும் பழக்கத்தை விட்டு விட வேண்டும். நம் நாடு காந்திய பண்பாட்டில் வளர்ந்த நாடு. ஒரு குடியரசு நாடாக திகழ்கிறது நம் நாடு. நம் நாட்டு அமைச்சர்களுக்கு இவ்வளவு போலீஸ் பந்தோபஸ்து தேவையில்லை என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சர்வாதிகார நாடுகளின் மத்தியில் இருக்கிற சீனா நாட்டு அமைச்சர்களுக்குக் கூட இவ்வளவு போலீஸ் பந்தோபஸ்து இருப்பதை நான் காண முடியவில்லை. ஆகவே இதை அறவே நீக்கி விட்டு அமைச்சர்கள் மக்களின் மத்தியில் சாதாரணமாக உலாவுவார்களேயானால் கொஞ்சம் சௌகரியமாக ஜனங்கள் வந்து தங்கள் குறைகளை சொல்லிக் கொள்ள ஏதுவாய் இருக்கும் என்று குறிப்பிட விரும்புகிறேன். அதோடு இந்த மான்யக் கோரிக்கையில் கவர்னர் அவர்களுடைய வீட்டுச் செலவுகளைப் பொறுத்த வரையில் ரொம்ப அதிகமாகக் காணப்படுகிறது. அதில் எலெக்ட்ரிசிட்டி சார்ஜ்க்காக 55,000 ரூபாய் என்று போடப்பட்டிருக்கிறது. இம்மாதிரி 55,000 ரூபாய் எலெக்ட்ரிக் சார்ஜ்க்கு ஆகிறது என்ற நிலைமையில் ஒரு பெரிய மாளிகையை ஒருவர் அனுபவித்து வர வேண்டுமா என்று இந்த சபை யோசிக்க வேண்டும். எலெக்ட்ரிசிட்டிக்காக 50,000 ரூபாய் வரை ஒரு வீட்டில் செலவாகிற நிலை, நம் மக்களின் வாழ்க்கை தரத்தை வைத்துப் பார்க்கும்போது அது பொருத்தமாய் இருக்குமா என்று பார்க்க வேண்டும். அதே போல் இங்கிருந்து கோவைக்கு செல்லும்போது கவர்னர் பெருமானின் சுற்றுப்பிரயாணத்தின் போது ரெயில்வே கோச்சுகள் இணைக்கப்படுகின்றன. இதனால் சாதாரண ஜனங்கள் அடையும் துன்பம் கொஞ்சநஞ்சமல்ல. கவர்னர் பெருமான் ஒரு சலூனில் போவதைப்

பற்றி நான் குறிப்பிடவில்லை. ஆனால் அவரது பரிவாரங்கள் அத்தனை பேரும் தனித்தனியாக இடம் பிடித்துக் கொள்கிறார்கள். ஆகவே எத்தனையோ பேர்கள் இடம் கிடைக்காமல் அவதிப்பட வேண்டியிருக்கிறது. நெல் மூட்டை அடுக்குவதில் கூட ஒரு ஒழுங்கு முறையுண்டு. அந்த முறை கூட இல்லாத நிலையில் மக்கள் அடைக்கப்பட்டு செல்ல வேண்டியிருக்கிறது. மூன்றாவது கம்பார்ட்மெண்டில் பிரயாணம் செய்பவர்கள் இதைப் பற்றி எத்தனை விதத்தில் பேசுகிறார்கள் தெரியுமா ? அவர் அவர்கள் சொல்வதைக் கேட்டால் கவர்னர் பதவியே வேண்டாமென்று விட்டு விட்டு போக வேண்டியிருக்கும். அந்த அளவிற்குப் பேசுகிறார்கள். இதையெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அரசாங்கமும் சிந்திக்க வேண்டும், இந்த சபையும் சிந்திக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன். இம்மாதிரிப் பட்ட நிலை ஏற்படாமல் தவிர்ப்பது நல்லது என்பது என்னுடைய அபிப்பிராயமாகும். இந்த வெட்டுப் பிரேரணையின் பேரில் நான் இதற்கு அதிகமாக பேச விரும்ப வில்லை. நான் இதுவரையிலும் குறிப்பிட்ட விஷயங்களைக் கவனித்து அவைகளுக்கு பரிகாரம் தேடினால் கூட இந்த ஆண்டிற்கு இது போதும் என்று நினைக்கிறேன்.

1-20 p.m. SRI A. GOVINDASAMY : உதவி சபாநாயகர் அவர்களே, இந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்து நானும் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஆங்கிலேயர் காலத்தில் அந்நிய ஏகாதிபத்தியம் இங்கு நிலைத்து நிற்பதற்கு உதவுவதற்காக கவர்னர் பதவி தேவையாக இருந்தது. ஆனால் இன்றைய தினம் இங்கு நடப்பது ஜனநாயக ஆட்சி, ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களால் நடத்தப்படும் ஆட்சி: இந்த நேரத்திலே அப்படிப்பட்ட ஆடம்பர பதவி, அதற்கான செலவினங்கள் இருக்கக் கூடாது என்ற காரணத்திற்காகத் தான் இந்த கவர்னர் பதவி இந்த சந்தர்ப்பத்திலே தேவையில்லையென்று குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன். அது மாத்திரமல்லாமல், இதற்கு முன் இருந்த கவர்னர் ஸ்ரீ பிரகாசா அவர்கள் சம்பளத்தில் ஒரு பகுதியை துண்டித்துக் கொண்டார், இப்போது இருக்கின்ற கவர்னர் தன் சம்பளத்தில் ஒன்றும் துண்டித்துக்கொள்ள முடியாது என்று முழுச்சம்பளம் வாங்க முடிவு செய்திருக்கின்றார்.

THE HON. SRI C. SUBRAMANIAM : விஷயம் தெரியாமல் பேசக்கூடாது, விஷயங்களை சரியாக தெரிந்துக்கொண்டு பேச வேண்டும்.

SRI A. GOVINDASAMY : துண்டித்துக்கொண்டிருந்தால் சந்தோஷம். அப்படி துண்டித்துக் கொண்டிருந்ததாக இதுவரை பத்திரிகையில் ஒரு செய்தியும் வரவில்லை. நமது நிதி அமைச்சர் அவர்கள் அரசாங்க தரப்பிலிருந்து அப்படி துண்டித்துக்கொண்டிருப்பதாக வெளியிடுவார் ஆனால் அதனை ஏற்றுக்கொண்டு அப்படி இருந்தால் பாராட்டுகிறேன். கவர்னர் இஷ்ட செலவுக்கு என்று பட்ஜெட்டில் அதிக தொகை ஒதுக்கியிருக்கிறார்கள். அந்த மாதிரி தாறுமாறான சிலவுக்கு நிதி ஒதுக்கக் கூடாது என்று இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

எனக்கு முன் பேசிய இரண்டு அங்கத்தினர்கள் குறிப்பட்டது போல மந்திரிகள் அடிக்கடி சுற்று பிரயாணம் செய்கிறார்கள், ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சிக்கு மூன்று மந்திரிகள் வருகிறார்கள். அதற்கு சான்றாக கடலூரிலே ஒரு ஆஸ்பத்திரிக்கு அஸ்திவார கல் நாட்டு விழாவுக்கு முதல் மந்திரி, சுகாதார மந்திரி, ஸ்தல ஸ்தாபன மந்திரி ஆக மூன்று மந்திரிகள் வந்திருந்தார்கள். அஸ்திவார கல் நாட்டு விழாவுக்கு மூன்று மந்திரிகள் வர வேண்டுமா ? என்று சிந்தித்து பார்க்கவேண்டும். ஒரு சுகாதார மந்திரி மட்டும் வந்தால் போதாதா அல்லது முதல் மந்திரி மட்டும் வந்தால் போதாதா ? ஒரே சமயத்தில் மூன்று மந்திரிகள் வருவது என்றால் கட்சி பிரசாரத்திற்கு வருகிறார்கள் என்றுதானே அர்த்தம். சென்ற ஆண்டு அந்த ஆஸ்பத்திரிக்கு கல் நடப்பட்டது. இதுவரையில் கட்டிடம் கட்டப்படவில்லை. இதைப்பற்றி என்றால் சொல்லாமலும் இருக்க முடியு

வில்லை. இதில் அரசாங்கம் பொறுப்பு ஏற்கவேண்டும். இதுபோல் நமது முதல் மந்திரி அவர்களும், மற்ற மந்திரிகளும் எத்தனை இடங்களில் கல் நட்டு ஒன்றும் ஏற்படாத நிலையில் இருக்கின்றவோ, நமது முதல் மந்திரி அவர்கள் சமீபத்திலே, மகாநாடுகள் கூட்டி எல்லாவற்றையும் கவனிக்க போவதாக அறிக்கை விட்டார்கள், அதுபோல கூடவும் கூடினார்கள், அமைச்சர்கள் எங்கெல்லாம் கல் நட்டார்கள், கட்டிடம் கட்டி முடித்தாகிவிட்டதா ? என்று குறிப்பு எடுத்து கவனிக்க வேண்டும் என்று இந்த சந்தர்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அது மாத்திரம் அல்ல. மந்திரிகளுக்கு பெரிய கார் தேவையா ? சிக்கனத்தைப்பற்றி பேசுகிறவர்கள் படகு மாதிரி கார் வைத்திருக்கிறார்கள். சென்ற அரசாங்கத்திலே, இருந்த ராஜாஜி அவர்கள் வழிகாட்டி இருக்கிறார். ராஜாஜி அவர்கள் ஒரு சின்ன "Consuel" கார் வைத்திருந்தார் சின்ன கார் வைத்துக் கொண்டால் கார் வாங்குவதற்கு சிலவு அதிகமாகாது, அதோடு பெட்ரோல் சிலவும் குறையும். கட்சிகாரர்கள் ஏறுவதும் குறையும். மந்திரிகள் வரும் நேரத்திலே அவர்களுடைய சுற்றுப் பிரயாண சுற்றறிக்கை காங்கிரஸ் கமிட்டிகளுக்கு அனுப்பப்படுகிறது. காங்கிரஸ் கமிட்டிகளுக்கு அனுப்புவது போல மற்ற கட்சிகளுக்கும் அனுப்பினால் அந்த அந்த வட்டாரத்திலுள்ள குறைகளை மந்திரிகளை கண்டு அவர்களிடம் சொல்ல வாய்ப்பு ஏற்படும். மந்திரிகளின் சுற்று பிரயாணத்தின் போது இன்னும் சில இடையூறுகள் ஏற்படுகின்றன. சில மாதங்களுக்கு முன் முதன் மந்திரி அவர்கள் சிதம்பரம் வந்தார். கலைக்டர் அவர்கள் மந்திரியினுடைய பிரயாண நிகழ்ச்சிகளைப் பற்றி எல்லோருக்கும் சுற்று அறிக்கைகள் அனுப்பி இருந்தார். ஆனால் அங்குள்ள காங்கிரஸ் கட்சி முதன் மந்திரிக்கு வேறு புரோகிராம் தயாரித்து கொடுத்தார்கள். இதனால் பல இடங்களில் முதல் மந்திரி வருவதற்கு கால தாமதம் ஏற்படவும் ஜனங்கள் காத்துக் கிடக்கவும், அங்கு அங்கு போலீஸ் வேறு காத்துக் கிடக்கவும், இப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படுகிறது. இதை எல்லாம் நிவர்த்திக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கட்சி பிரசாரம் தவறு என்று சொல்லவில்லை. அவர்களே ஆட்சியில் இருக்க, என்ன செய்திருக்கிறார்கள், என்ன செய்ய போகிறார்கள், என்றெல்லாம் பொது மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டியது கடமை தான். ஆனால் தங்களுடைய கட்சி மகாநாட்டிற்கு வருகிறபோது குறிப்பாக டி. எ. வாங்கக்கூடாது, வாங்கியிருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். அப்படி வாங்கியிருந்தால் அதை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று கூறுகிறேன். அனாவஸ்யமாக மந்திரிகள் சுற்று பிரயாணம் செய்கிறார்கள் என்று நாங்கள் சொல்லுகிறோம் என்று நினைக்க வேண்டாம் உயர் நீதிமன்றத்திலே ஒரு நீதிபதியே மந்திரிகள் அனாவஸ்யமாக சுற்று பிரயாணம் செய்வதை சொல்லியிருக்கிறார்கள். அதே மாதிரியாக குறிப்பிட்டிருக்கிறார்கள். தேர்தல் நேரத்தில் குறிப்பிட்ட தேர்தல் அல்லது உப தேர்தல் நடக்கின்ற பகுதிகளிலே மூன்று அல்லது நான்கு மந்திரிகள் போகும் சந்தர்ப்பம் வருகிறது. மந்திரி என்ற ஹோதாவில் போகக்கூடாது, கட்சி தலைவர் என்று போகலாம். அசோக சக்கிரம் போட்ட காரிலே போகும்போது அங்குள்ள அதிகாரிகள் அணிவகுத்து நிற்கவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஜில்லா அதிகாரிகள் தங்களுடைய டூர் புரோகிராம் அனுப்புகிறார்கள். அதை வைத்துக்கொண்டு, பொது மக்கள் சார்பிலே ஒரு கலைக்டரை கண்டு பேச வேண்டும் என்று போனால் கலைக்டர் இப்போது தான் போனார்கள் யாரோ மந்திரி வருகிறாரும் என்று சொல்லுகிறார்கள். இதையெல்லாம் தவிர்க்க வேண்டும் என்று கூறிக்கொள்கிறேன்.

கவர்னர் பெரிய பங்களாவில் இருக்கிறார். மந்திரிகளும் பெரிய பெரிய பங்களாவில் இருக்கிறார்கள். மந்திரிகளுடைய குடும்பம் அப்படி ஒன்றும் பெரியது அல்ல, சின்ன இடத்தில் இருந்துக்கொண்டு சிக்கனத்தை கடைபிடிக்கலாம். பெரிய பங்களாவில் இருக்கும் நேரத்தில் மந்திரி தனியாக இருந்தால் பயமாககூட இருக்கும். அந்த மாதிரி இல்லாமல் மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டாக வாழவேண்டும். இதனால் வீட்டு அலவன்ஸ் 250 ரூபாயை குறைத்துக் கொள்ளலாம். சம்பளத்தை குறைத்துக்கொள்ளலாம் என்று சொன்னால் நிதி அமைச்சருக்கு கோபம் வரும்.

இதுவே போதவில்லை என்று சொன்னார்கள். அதே சமயத்தில் N.G.O.-க்களுக்கு சம்பளத்தை அதிகபடுத்த வேண்டும் என்றால் அது சாத்தியமில்லை என்று காட்டுகிறார்கள். மற்ற மாகாண மந்திரிகள் தங்கள் சம்பளத்தை குறைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த மாதிரி யில்லாவிட்டாலும், இந்த கார் அலவன்ஸ், வீட்டு அலவன்ஸ் இவைகளை குறைத்துக் கொள்ளலாம் என்று சொல்லி என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**Sri V. K. KOTHANDARAMAN:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் எதிர்கட்சுத் தலைவர் ஸ்ரீ வி. கே. ராமசாமி முதலியார் அவர்கள் பிரேரித்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில விஷயங்களை சொல்ல ஆசைப்படுகிறேன். இப்போது எனக்கு முன்னால் பேசிய கனம் அங்கத்தினர்கள் சொன்னது போல மந்திரிகள் அவர்களுடைய சிலவுகளையும் சம்பளத்தையும் ஓரளவு குறைத்துக்கொள்ள வேண்டும் என்பதைப் பற்றித் தான் தெளிவாக எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஏன் அதை குறிப்பிட ஆசைப்படுகிறேன் என்று சொன்னால் 1931-ம் ஆண்டிலே கராச்சியிலே நடந்த காங்கிரஸ் மகா நாட்டிலே காந்தியார் தலைமையின் கீழ் ஒரு தீர்மானம் போடப்பட்டது. நம் நாட்டிலே ஒருவருடைய சம்பளம் குறைந்த பட்சம் 30 ரூபாயாகவும், அதிக பட்சம் ரூ. 500-க்கு மேல் இருக்கக்கூடாது என்கிற ஒரு தீர்மானம் அன்றைக்கே போடப்பட்டது. குறைந்த பட்ச சம்பளம் வாங்கக்கூடியவர்கள் கூட சம்பளம் கேட்கிறார்கள் என்று சொன்னால் கொடுக்க பணமில்லை என்று சொல்லுகிற அளவுக்கு இன்றைக்கு நிலைமை இருக்கிறது. ஒருவருடைய சம்பளம் 500 ரூபாய்க்கு மேல் இருக்கக்கூடாது என்று இருக்கிற நிலைமையை உண்டாக்கக்கூடாதா என்று கேட்டால் இன்று விலைவாசிகள் உயர்ந்து விட்டது, ஆகையால் ரூ. 500-ல் வாழ்க்கை நடத்த முடியாத நிலையில் இருக்கிறது என்று சொல்லக்கூடிய நேரத்திலே தான் டில்லியில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் கூட ஜவஹர்லால் நேரு என்ன சொன்னாரென்றால் 1931-ல் ரூ. 500 என்றால் இன்றைக்கு ரூபாய் 2,000-க்கு சரி சமானம் என்று எடுத்துக் கூறியிருக்கிறார். 1931-ல் ரூ 30-க்கு குறைந்து இருந்தவர்கட்கு இன்றைக்கு அதாவது 4 மடங்கு, ரூபாய் 120 கொடுத்தாகவேண்டும். இன்றைக்கு சர்க்கார் சிப்பந்திகள், கிராம உத்தியோகஸ்தர்கள் கூட சம்பளம் கேட்கிறார்கள் என்று சொன்னால் இன்றைக்கு நிலைமை இடம் கொடுக்கவில்லை, முடியாது என்று சொல்லக் கூடிய நிலைமை இருக்கிறது என்று சொன்னால் அது நேர்மையா? ஜனநாயகமா? நியாயமா? என்று சொல்ல ஆசைப்படுகிறேன். சுதந்திரம் அடைந்து பத்து வருஷ காலத்திலும் ரூ. 1,000 சம்பளம் வாங்கி வந்து கொண்டிருக்கிறார்கள். இந்த ஆண்டில் கேரள ராஜ்யத்தில் கம்யூனிஸ்டு மந்திரி சபை அமைக்கப்பட்ட பிறகு, அவர்கள் ரூ. 350 முதல் 500 வரை சம்பளமே எடுத்துக்கொள்வது என்று முடிவு செய்யப்பட்டு இருக்கிறது. அப்படி அவர்களால் முடிவு செய்யப்பட்ட பிறகு தான் நமது மதிப்பிற்குரிய ஜனாதிபதி மாதம் ரூ. 1,000 குறைத்துக்கொள்கிறேன் என்று சொன்னதாகவும் தெரிகிறது. மேலும் பல ராஜ்யங்களில் மந்திரிகள் தங்கள் சம்பளத்தில் குறைத்துக்கொள்ளக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதே போல நமது மந்திரிமார்களும் தங்கள் சம்பளங்களைக் குறைத்துக் கொள்ளவேண்டும். ஆரம்பத்தில் இருந்த விலைவாசியை விட இப்பொழுது விலைவாசிகள் உயர்ந்திருந்தும்கூட, கம்யூனிஸ்ட் ராஜ்யத்திலே சம்பளத்தைக் குறைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற காரணத்தினாலும் மக்கள் தங்களை வேறு விதமாக எண்ணிவிடக் கூடாது என்கிற காரணத்தினாலும் இப்பொழுது இவர்கள் குறைத்துக்கொள்ள வேண்டுமென்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சிக்கனத்தைப் பேசக்கூடிய நமது மந்திரிமார்கள் முதலில் தங்கள் சம்பளத்தைக் குறைத்துக்கொண்டால் தான், ராஜ்யத்தில் ஆயிரக்கணக்கில் சம்பளம் வாங்கும் பெரிய பெரிய அதிகாரிகளை அணுகிக் கேட்கும்போது ஓரளவு குறைத்துக்கொள்ள முன் வருவார்களே ஒழிய, மந்திரிமார்கள் குறைத்துக்கொள்ளாவிட்டால் அதிகாரிகள் குறைத்துக்கொள்ள ஒருக்காலும் முன் வர மாட்டார்கள் என்பது தெரிந்த விஷயம். இப்படிச் சொன்னால் மகாத்மா காந்திஜியை தவறான முறையிலே வியாக்கியானம் செய்யாதீர்கள் என்று சொல்லுவீர்கள். 1931-வது ஆண்டிலே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

13th July 1957] [Sri V. K. Kothandaraman]

இல்லையா? நிறைவேற்றியது உண்மையென்றால் குறைந்த சம்பளம் வாங்குபவர்களுக்கு அதிகம் கொடுக்கவேண்டும் அல்லது பெரிய சம்பளம் வாங்குபவர்கள் ரூ. 500 ஆகக் குறைத்துக்கொள்ள வேண்டும். அது தான் நேர்மை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதே போல மந்திரிமார்கள் கார் வைத்துக்கொள்ளவேண்டும், சுற்றுப்பிரயாணம் செய்யவேண்டும். இவையெல்லாம் வேண்டாமென்று சொல்லவில்லை. வேண்டுமானால் ஏரோப்ளேனில் கூட பறக்கட்டும் (கனம் ஸ்ரீ சி. சுப்பிரமணியம்:—கேரள மந்திரிகள் போகிறார்கள்! நாங்களும் போகலாம்!) அவர்கள் மந்திரிகளாக வருமுன்னாலேயே அங்கத்தினர்களாக இருந்த போதே ஏரோப்ளேனில் போய்க்கொண்டு இருந்தார்கள். இல்லையென்று சொல்ல முடியாது. அதற்காக இப்பொழுது ஏரோப்ளேனில் போங்கள் என்பது தவறு. ஆகவே கூடுமான வரை சுற்றுப் பிரயாணம் செய்வதில் ஏற்படும் அளவு கடந்த செலவை ஓரளவு கட்டுப்படுத்த வேண்டும். மக்களுடைய பிரச்னைகளில் ஆழமாக கவனம் செலுத்தி அவைகளுக்குத் தீர்வு காணவேண்டும். மக்கள் குறைகளை இங்கே கிடைக்கும் 5, 7, 10 நிமிஷங்களில் அரைகுறையாகப் பேசினால் மட்டும் அவைகளைத் தீர்த்தவர்கள் ஆக மாட்டோம். இன்றைக்கு வரவேற்புகளிலும், ஆடம்பரக் காரியங்களிலும் ஓரளவு செலவிட்டாலும், மக்களுடைய குறைகளை, பிரச்சினைகளைத் தீர்க்க எவ்வளவு செலவானாலும் அதைச் செய்தே ஆகவேண்டும். வரவேற்பு விஷயங்களில் அதிகப்படி செலவழிக்கப்படுவது மந்திரிகளுக்குத் தெரிந்த விஷயம்.

பல பேர் தலைமறைவாக, மாறுவேடம் பூண்டு, இவைகளையெல்லாம் கவனிக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். அப்படிப் போகவேண்டிய அவசியம் இல்லை. ஆனால் இப்பொழுது இருக்கும் முறையை மாற்றவேண்டும். மந்திரிகள் முன் கூட்டியே இன்ன இடத்திற்கு வருகிறேன் என்று அறிவிப்பதால் சம்பந்தப்பட்ட இடத்தை சீர்பண்ணி ஜபர்தஸ்தாக க்ளீன் ஆக வைக்கிறார்கள். இதைப் பார்த்து எல்லாம் சரியாக இருக்கிறது என்று நினைக்கிறார்கள். குறிப்பாக குடியாத்தத்திற்கு மந்திரி வந்தபோது மோசமாகவிருந்த கோட்டை செப்பனிட்டு, கருத்த சுவர்களுக்கு வெள்ளையடித்து, பார்வையாக வைத்தார்கள். இது ஒரு விதத்தில் நல்லதாய் இருக்கிறது. மாதத்திற்கு ஒன்றிரண்டு முறை மந்திரிகள் வந்தால், ரோடுகளும் மற்றவைகளும் நல்ல முறையில் செப்பனிடப்படும். இப்படி முன் எச்சரிக்கை இல்லாமல் திடீரென்று, சடன் விஸிட்டு செய்தால் தான் மோசங்களையும் ஊழல்களையும் கண்டு பிடிக்கமுடியும். இந்த சடன் விஸிட்டு முறையைக் கையாண்டு நிர்வாகத்திலேயிருக்கும் குறைபாடுகளைக் கண்டு பிடித்து, அவைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். தலைமறைவாக மாறுவேடத்தில் போகவில்லையென்றாலும், திடீர் விஜயம் செய்வதன் மூலமாக இந்த விஷயங்களைக் கண்டுபிடித்து திருத்த முடியும்.

நமது பட்ஜெட்டிலே மூன்று கோடி ரூபாய் துண்டு விழுந்து இருப்பதால், அதைச் சரி செய்வதற்கு ஒரு சிக்கன இலாகா தனியாக இருந்தாலும், மந்திரிகள் சம்பளத்தை ஓரளவு கண்டிப்பாக குறைத்துக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

*Sri T. S. RAMASWAMY PILLAI : உதவி சபாநாயகர் அவர்களே, முதலிலே ஒரு **point of order** சாதாரணமாக இந்தத் தலைப்பின் கீழ் நடக்கும் விவாதத்திலே, பொதுவான கொள்கைகளைப்பற்றி விவாதிப்பதை மற்ற சட்டசபைகளிலே அனுமதிப்பது வழக்கம். இங்கும் அனுமதிக்கப்படுமா?

DEPUTY SPEAKER : ஆட்சேபனையில்லை. பொது விஷயங்களைப் பேசலாம்.

Sri T. S. RAMASWAMY PILLAI : இந்தத் தலைப்பின் கீழ் வரும் செலவினங்களிலே மந்திரிமார்கள் சுற்றுப்பிரயாண செலவுபற்றி குறிப்பிட்டார்கள். சுற்றுப் பிரயாணத் தகவல் கொடுப்பது பற்றியும் சொன்னார்கள்.

கன்யாகுமரி ஜில்லாவிற்கு இங்கே உள்ள மூன்று மந்திரிமார்கள் வந்தார்கள். நான் பேசும்போதெல்லாம் கேரளத்தைப்பற்றி குறிப்பிடுவது இங்கு இருக்கும் மந்திரி சபைக்கு பிடிக்கவில்லை என்றாலும், நான் அதைக் குறிப்பிடாமல் இருக்கமுடியவில்லை. இது வரை அங்கு மந்திரி மார்கள் ஸ்டேட் கார்ல்தான் உத்யோக சம்பந்தமாக வருவார்கள். வந்தால் பொது இடங்களில் இருப்பார்கள். பொது விஷயமாகப் பேசு வார்கள். இதற்காகத்தான் அவர்களுக்கு கார் வசதி, T.A. முதலியவை கொடுக்கப்படுகிறது.

கன்யாகுமரி சென்னை ராஜ்யத்தில் சேர்ந்த பிறகு, சென்ற மே மாதம் விநோபாஜி வந்திருந்தபோது நம் ராஜ்யத்தின் மூன்று மந்திரிகள் வந்த விதத்தைக் கண்டு ஜனங்கள் அதிர்ச்சி அடைந்தார்கள். அவர்கள் சென்னை அரசாங்கக் காரில் வரவில்லை. தனியாள் காரில் வந்தார்கள். இப்படி பெரிய செல்வந்தர் காரில் வந்தது அங்குள்ளவர்கள் வேறு விதமாகப் பழக்கப்பட்டு விட்டதால் இதைத் தவறுதலாக நினைத்தார்கள்; மந்திரி களுக்கென்று பொது மக்கள் செலவில் ஒதுக்கி இருக்கும் காரில் ஏன் வரக் கூடாது; ஏன் தனி முதலாளிகள், பீடிச் சக்கரவர்த்திகள், தனிச் சக்கர வர்த்திகள் காரில் வரவேண்டும். இதனாலே மதிப்பிற்குறிய மந்திரிமார்கள் கவுரவம் பாதிக்கப்படக்கூடியதாய் இருக்கிறது என்பதைக் கூற விரும்புகிறேன். மந்திரிகள் வருவதற்கு முன்னால் தகவல் கொடுக்கப் படுகிறது. ஸ்ரீமான் கக்கன் வரும்போது தகவல் வந்தது. 4 மணிக்கு வந்ததாகவும், 7 மணிக்கு விவசாயிகள் கூட்டத்தில் பேசப்போவதாகவும் தகவல் கிடைத்தது. பின்பு கூட்டத்திற்கு 4, 5 பேர்களே வந்தார்கள் என்ற தகவலும் கிடைத்தது.

இந்தத் தகவலை முன்னாடியே அறிவித்திருந்தால் விவசாயிகள் தங் களுடைய குறைகளை நேரிடையாக மந்திரியிடத்தில் கூறுவதற்கு சௌகர்ய மாக இருந்திருக்கும்.

**The Hon. Sri P. KAKKAN :** மற்றவர்கள் வந்திருந்தார்கள்; ஆனால் கனம் அங்கத்தினர் வரவில்லை.

**Sri T. S. RAMASWAMY PILLAI :** அதனால்தான் வரவில்லை. மந்திரி மார்களுடைய பிரயாணத் திட்டத்தை யாருக்கு அனுப்புகிறார்கள்?. மந்திரி யாக வருகிறாரேயொழிய காங்கிரஸ் தலைவராக வரவில்லை என்பதை நன் றாக ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும். அங்கு வரும்போது பொது மக்களுடைய தலைவராக—மந்திரியாக—வருகிறார்களே தவிர, காங்கிரஸ் தலைவராக வரவில்லை என்பதை ஞாபக மூட்டிக்கொள்ளவேண்டும். அங்கு வரும்போது யாருக்குத் தகவல் அனுப்புகிறார்கள் ?—உதவி சபாநாயகர் அவர்களே,—எம். எல். ஏ-க்களுக்கு அனுப்புகிறார்கள். அதோடு கூட, அங்கிருக்கும் காங்கிரஸ் ப்ரஸிடெண்டுக்கும் அனுப்புகிறார்கள். அப்படி யானால், வேறு கட்சியை அவர்கள் அங்கீகரிக்கவில்லையா என்று நான் கேட்கின்றேன்.

உதாரணமாக, கேரளத்தில் என்ன நடந்தது என்று நான் சொல் கிறேன். கேரள மந்திரிகள் சுற்றுப் பிரயாணம் போவது என்றால், பிர யாணத் திட்டங்கள் காங்கிரஸ் கட்சித் தலைவர்களுக்கு அனுப்புவதோடு மட்டுமல்ல, கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர், இன்னும் எல்லாக் கட்சித் தலை வர்களுக்கும்,—ஜனங்களால் மதிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட எல்லாக் கட்சி களுக்கும் அனுப்புவது உண்டு. ஆனால் இங்கே என்ன நடக்கிறது. எம். எல் ஏ-க்களுக்கு மாத்திரம் அனுப்பப்படுகிறது. அப்படி அனுப்புவது கூட எப் பொழுது வந்து சேருகிறது என்றால், மந்திரி வருவதற்கு கொஞ்ச நேரம் முன்னால், ஒரு மணிக்கு முன்னால்கூட வந்து சேருகிறது. சில சமயங் களில் மந்திரிமார்கள் வந்து போனபிறகுகூட பிரயாணத் திட்டம் வரு வது உண்டு. நாங்களும் பொது ஜன வேலைக்காரர்கள்தான். நாங்கள் மந்திரிகளாக இல்லாமல் இருக்கலாம். நாங்களும் இரண்டு மூன்று நாட் களுக்கு முன்பாகவே பொது ஜன வேலைக்கான திட்டங்களை வகுத்துக் கொள்ள வேண்டியது அவசியம். அப்படித்தான் செய்து வருகிறோம். ஆகவே, எங்களுக்கும் முன்னதாகவே அறிவிக்கப்படவேண்டும்.

13th July 1957] [Sri T. S. Ramaswamy Pillai]

உதாரணமாக விவசாயிகள் கூட்டத்தை யார் கூட்டினார்கள், எங்கே கூடுகிறது என்பதும் ஒன்றுமே தெரியாது. "கூட்டம் இருக்கிறது" என்று கூட்டத்திற்கு இரண்டு மணிக்கு முன்னால் தகவல் சொல்கிறார்கள். இந்த நிலைமை மாறவேண்டும்.

சிக்கனத்தைப்பற்றி பொதுவாகப் பேசப்படுகிறது. நான் இப்பொழுது கேரளத்தைப்பற்றிச் சொல்லும்போது கோபம் வரக்கூடாது—மத்திய அரசாங்கத்திலேகூட, அரும்பெரும் பல தலைவர்கள் தங்களுடைய சம்பளத்தைக் குறைத்துக்கொண்டிருக்கிறார்கள். சிக்கனத்திற்கு எடுத்துக்காட்டாக நாமும் நடப்பது நிச்சயமாக அவசியம். கூடுமானால், இந்த சட்டசபையிலுள்ள அங்கத்தினர்கள்கூட, இதை ஒரு சந்தர்ப்பமாக நினைத்துக்கொண்டு, எல்லோருமே கொஞ்சம் சிக்கனத்திற்காக விட்டுக்கொடுத்தால்கூட நன்றாக இருக்கும். பொது ஜனங்களின் மத்தியில் அதற்கு ஒரு **Moral effect** இருக்கும். பொதுவாக, சிக்கனம் அவசியம் என்ற கருத்தை மக்கள் மத்தியில் உண்டாக்க இம்மாதிரி **asterity measures** தேவைப்படுகிறது. நாட்டின் பொருளாதார நெருக்கடியை மனதில் கொண்டால், மக்கள் சிக்கனத்தின் அவசியத்தை உணர்ந்து கொள்ளவேண்டுமானால், இம்மாதிரி சிக்கனத்தை எடுத்துக்காட்டும் நடவடிக்கைகள் மிக மிக அவசியம். அதனால் நல்ல பலன் இருக்குமென்று நான் கருதுகிறேன்.

துரதிருஷ்டவசமாக, நான் கன்யாகுமரி ஜில்லாவில் பிறந்துவிட்டேன். முன்னால் இருந்த மந்திரிமார்கள் அங்கு வரும்போதெல்லாம் அங்குள்ள ஜனங்களிடம் பழகிய முறைக்கும், எங்களுடைய தாயகத்திலே மந்திரிகளாக உள்ள மந்திரிமார்கள் அங்கு மக்களோடு பழகுவதற்கும் நிச்சயமாக வித்தியாசம் இருக்கிறது என்று நான் வினய பூர்வமாக கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அங்கிருந்த மந்திரிகள், அங்கு வந்தால், எல்லா இடங்களிலும் சென்று பார்ப்பார்கள். என்.ஜி.ஓ-க்களோ இதரசிப்பந்திகளோ, பொதுஜனங்களுடைய பிரதிநிதிகளோ அவர்களிடம் சென்று குறைகளை எடுத்துச் சொன்னால், அவைகளைப் பொறுமையாகக் கேட்பார்கள். அவர்களிடத்திலே ரொம்ப நல்ல முறையிலே அவர்கள பரிமாறிக்கொள்வது வழக்கம். ஆனால், இங்குள்ள மந்திரிகள் வந்தபோது என்ன நடந்தது? என்னுடன் என்.ஜி.ஓ. நண்பர்கள் வந்திருந்தார்கள். அதுபோலவே உபாத்தியாயர்கள் வந்திருந்தார்கள். அவர்களுடைய சம்பளக் குறைவு பற்றி மந்திரியிடம் முறையிடவேண்டுமென்று அவர்கள் கருதிச் சென்றபோது "என் இங்கு வந்தீர்கள்?" என்று இங்குள்ள மந்திரிகள் கேட்டதாக அவர்கள் என்னிடம் சொன்னபோது நான் உண்மையாகவே வருத்தப்பட்டேன். என்.ஜி.ஓ.ப்பிரச்னையைப் பற்றி பெரிய அதிகாரிகளிடம் கூறும்போது அவர்கள் சரிவர இதைப்பற்றி கவனிப்பது இல்லை. அங்கெல்லாம் சாதாரணமாக பெரிய அதிகாரிகளிடம் சாதாரணசிப்பந்திகளும் தங்களுடைய குறைகளை எடுத்துச்சொல்லி முறையிடுவது வழக்கம். அப்படிச் சொல்வதை "தவறு" என்றோ, "**Insubordination**" என்றோ கருதுவது கூடாது. எவ்வளவுக்கெவ்வளவு ஜனங்களோடு தொடர்பு வைத்துக்கொள்ளுகிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு ஜனங்களுடைய குறைகளைக் கண்ணும் கருத்துமாக கவனித்துப் போக்குவதற்கு முடியும். அதனால், எந்தக் கட்சியாக இருந்தாலும் அந்தக் கட்சிக்கு நன்மை இருக்கும் என்று கூறிக்கொண்டு நான் முடித்துக்கொள்ளுகின்றேன்.

**Sri S. B. ADITYAN** : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, எனக்கு 1-45 p.m.
முன் பேசிய கனம் அங்கத்தினரும், இன்னும் பலரும், மந்திரிமார்கள் மாறு வேடத்தில் போகவேண்டும் என்றும், முன் அறிவிப்பு இல்லாமல் போகவேண்டுமென்றும் பேசினார்கள். ஆனால், அதிலே ஒரு சங்கடம் இருக்கிறது. பொதுவாக, கிராமத்திலுள்ள மக்களும், ஜில்லாக்களிலே வேறு இடங்களில் உள்ளவர்களும் மந்திரிகளிடம் தங்கள் குறைகளைத் தெரிவிக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். அப்படியிருக்க, மந்திரிகள் முன் அறிவிப்பு இல்லாமல் வந்தால், மக்களுடைய குறைகளை எப்படி

மந்திரிகளிடம் தெரிவித்துக்கொள்ள முடியும்? முதல் அமைச்சர் அவர்களோ, திரு. பக்தவத்சலம் அவர்களோ மாறு வேடத்தில் வந்தால், யார் வருகிறார்கள் என்றே மக்களுக்குத் தெரியாது. மந்திரிமார்களிடம் சொல்லவேண்டிய குறைகளை எப்படி மக்கள் சொல்ல முடியும் என்பதற்கு என்னோடு இருக்கும் கனம் அங்கத்தினர் அவர்கள் விளக்கம் தெரிவிக்குமாறு நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN: உதவி சபாநாயகர் அவர்களே, எப்போதுமே முன் அறிவிப்பு இல்லாமல் போகவேண்டுமென்று நான் சொல்லவில்லை. சில சந்தர்ப்பங்களில், மக்களுக்கு இருக்கும் குறைகளைக் கண்டு பிடிக்க, முன் அறிவிப்பு இல்லாமல் போனால் தான் கண்டு பிடிக்க முடியும் என்று நான் சொன்னேன்.

DEPUTY SPEAKER: ஒரு கனம் அங்கத்தினர் பேசிக்கொண்டிருக்கும்போது மத்தியில் எழுந்து interrupt செய்வது தவறு. அம்மாதிரி செய்யக்கூடாது என்பது என்னுடைய அபிப்பிராயம். தாங்கள் சொன்னது Point of order அல்ல.

SRI S. B. ADITYAN: மேலும், மந்திரிகளின் சம்பளத்தைப்பற்றியும், சுற்றுப் பிரயாணத்தைபபற்றியும் பேசப்பட்டது. சுற்றுப் பிரயாணம் சம்பந்தப்பட்ட வரை நான் சொல்வேன்—வெளிநாடுகளில் கூட மந்திரிகள் சுற்றுப் பிரயாணம் செய்ய வேண்டியது அவசியம். வெளிநாடுகளில் நான் பல ஆண்டுகள் தங்கியிருக்கிறேன். உலகத்தையும் சுற்றியிருக்கிறேன். பல நாடுகளுக்குப் போயிருக்கிறேன். அங்கே அரசாங்கம் எப்படி இருக்கிறது, மக்களுடைய நிலை எப்படி இருக்கிறது என்பதைப் பார்த்து தெரிந்துகொள்வதற்காக மந்திரிகளும் வெளிநாடுகளிலே சுற்றுப் பிரயாணம் செய்வது மிக நல்லது. வெளிநாடுகளுக்கு நம் ராஜ்ய மந்திரிகள் அவசியம் போகவேண்டும். அதற்குள்ள செலவைப் பொருட்படுத்தக் கூடாது என்பது என் திடமான நம்பிக்கை. அங்கு போய்ப் பார்க்க வேண்டும். அங்கெல்லாம் மக்களுடைய வாழ்க்கைத் தரம் எப்படி இருக்கிறது, சம்பளம் எவ்வளவு கொடுக்கப்படுகிறது, அரசாங்கம் எவ்வளவு திறம்பட நடக்கிறது என்பதையெல்லாம் நம் ராஜ்ய மந்திரிகள் பார்த்தால் அதனால் நமக்கு நன்மை உண்டாகுமேயொழிய தீமை உண்டாகாது என்பது என்னுடைய கருத்து.

சிக்கனம் என்று பேசும்போது நானே பல முறை வற்புறுத்திப் பேசியிருக்கிறேன். சிக்கனம் எங்கே செய்யவேண்டும்? எங்கே அதிகச் செலவு இருக்கிறதோ, அங்கே சிக்கனம் செய்யவேண்டும், என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

கவர்னருக்காக நம் ராஜ்யத்திலே பெரும் தொகை செலவு பண்ணப்படுகிறது. அதிலும் சிக்கனத்திற்கு வழி உண்டு என்று நான் தாழ்மையாகவும் பணிவுடனும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த விஷயத்திலே, கனம் ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் முதல் மந்திரியாக இருக்கும்போதே நான் இதைச் சொல்லிக்கொண்டு வருகிறேன். முதன் முதலாக, கவர்னருடைய செலவிலே சிக்கனம் செய்யவேண்டும் என்று நான் ஆரம்பித்தபோது, முதல் மந்திரியாக இருந்த ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் அதற்கு ஒரு ஆட்சேபனை எழுப்பினார். "நமது விதிகளுக்கு உட்பட்டு" கவர்னரைப் பற்றிபேசக்கூடாது என்று சொன்னார்கள்.

ஆகையால், முதலிலே நான் சொல்லிக்கொள்வேன்—நம்முடைய சட்ட சபையின் 66-வது விதியில் என்ன கூறியிருக்கிறதென்றால்—எதைப் பற்றிப் பேசக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது என்றால்—"A member, while speaking, must not reflect upon the conduct of the . . . Governor. . . .

என்று இருக்கிறது. கவர்னருடைய "நடத்தையைப்பற்றிப் பேசக்கூடாதேயொழிய, கவர்னருக்காக—கவர்னர் என்ற பதவிக்காக—செலவிடப்படுகிறதைப்பற்றி பேச உரிமை இருக்கிறது. கவர்னர் நல்லவராக இருக்க

13th July 1957] [Sri S. B. Adityan]

லாம். ஆனால், கவர்னர் என்ற பதவிக்காக அவருடைய சம்பளத்திற்காக, அவருடைய "அலவன்சு"க்காக, அவருடைய அரண்மனைக்காக, அனாவசியமாக செலவு ஆகிறது என்பதைச் சுட்டிக்காட்ட எனக்கு உரிமை இருக்கிறது.

மேலும், முன்னால், பிரிட்டிஷார் இந்த நாட்டை ஆண்ட காலத்தில், கவர்னருக்கு உண்மையான அதிகாரம் இருந்தது. ஆனால், இப்பொழுது அவர் ஏதோ ஒரு நாற்காலியில் உட்காருவதற்கு அதிகாரம் இருக்கிறதே தவிர, அவருக்கு வேறு எந்த விதமான அதிகாரமும் இல்லாமல், மந்திரிகளின் கையில் அதிகாரம் இருந்து வருவதால், கவர்னருக்காகவும், அவருடைய அரண்மனைக்காகவும் அதிகப்படியான செலவு செய்வது நியாயம் ஆகாது என்பது என் கருத்து.

கவர்னருக்காக எவ்வளவு செலவு ஆகிறது என்பதைப் பார்க்கவேண்டுமானால், நமது பட்ஜெட்டிலே ஒரே இடத்தில் இந்தச் செலவையெல்லாம் ஒன்றுபோல் கணக்கெடுத்திருந்தால் ரொம்ப நன்றாக இருக்கும். இது எங்கே கணக்கெடுத்து இருக்கிறதென்றால், "General Administration—Head of State"-ல் ஒரு பகுதியையும் "Civil Works"-ல் வேறு ஒரு பகுதியையும் கணக்கெடுத்து இருப்பதால், இரண்டையும் சேர்த்துக் படிக்க வேண்டியிருக்கிறது.

பட்ஜெட் விளக்கத்தின் (Budget Memorandum) 69-வது பக்கத்தில், கவர்னருக்காக எவ்வளவு செலவு ஆகிறது என்பதைப்பற்றி குறிப்பிடப் பட்டிருக்கிறது.

| | (ஆண்டொன்றுக்கு) ரூ. |
|---|---|
| கவர்னரின் அடிப்படை சம்பளம் (Salary of the Governor). | 66,000 |
| விருந்து அலவன்ஸ் (Sumptuary allowance) .. .. | 20,000 |
| Secretarial Staff of the Governor.. .. .. .. | 59,000 |
| கவர்னரின் அரண்மனை சிப்பந்தி செலவு (Staff and household of the Governor) .. .. .. .. .. .. | 2,43,000 |
| ஒப்பந்தச் செலவு (Expenditure from contract allowance) .. .. .. .. .. .. | 1,16,000 |
| சுற்றுப் பிரயாணச் செலவு (Tour expenses) .. .. | 65,000 |
| கவர்னரின் இஷ்டச் செலவு (Discretionary grants by the Governor) .. .. .. .. .. .. | 25,000 |

இவையெல்லாம் இந்த 1957–58-க்கு செலவு பண்ண இருக்கக்கூடியவை இப்பொழுது இதிலே சில பகுதிகள் மீது நமது சட்டசபைக்கு ஓட்டளிக்க அதிகாரம் கிடையாது. சில பகுதிகள் மீது வோட்டு அளிக்க அதிகாரம் இருக்கிறது. ஆக மொத்தம் கவர்னருக்காக ஏற்படும் செலவு ரூ. 5,94,000.

அது போக பட்ஜெட் விளக்கத்தின் (Budget Memorandum) 70-வது பக்கத்தில் கவர்னரின் அரண்மனைக்கு ஆகும் செலவுபற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. "Civil Works" என்ற தலைப்பின் கீழ் அது வருகிறது.

அதிலே,

| | ரூ. |
|---|---|
| அரண்மனை பராமரிப்புச் செலவுக்கு (Improvements to official residences) .. .. .. .. .. | 50,000 |
| மின்சாரச் செலவு .. .. .. .. .. | 55,000 |
| தண்ணீர் செலவு .. .. .. .. .. | 17,000 |
| வரிகள் .. .. .. .. .. .. | 46,000 |
| மராமத்து .. .. .. .. .. .. | 1,03,000 |
| ஆக மொத்தம் .. .. .. .. | 2,71,000 |

[Sri S. B. Adityan] [13th July 1957

இரண்டையும் சேர்த்துப் பார்த்தால், கவர்னருக்காகவும், அவருடைய அரண்மனை பராமரிப்புக்காகவும் மொத்தம் செலவாகிற தொகை ரூ. 8,65,000 ஆகும்.

இந்தச் செலவு மிகவும் அதிகம் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். இதைப்பற்றி நான் பல முறைகள் சொல்லியிருக்கிறேன். இதில் நிச்சயமாக சிக்கனத்திற்கு வழி இருக்கிறது. எந்த எந்த வகையில் சிக்கனம் செய்யலாம் என்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்ய நாம் அதிகாரிகளை நியமித்திருக்கிறோம். மந்திரிகளுடைய சம்பளத்தைக் குறைக்கலாமா? சுற்றுப்பிரயாணத்தை குறைக்கலாமா என்பதைப்பற்றியெல்லாம் யோசனை செய்யப்படுகிறது. அதே சமயம் இந்தத் துறையில் எவ்வளவு சிக்கனம் செய்யலாம் என்பதும் யோசனை செய்யப்பட்டால் மிகவும் நன்றாக இருக்கும். பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் கவர்னர் பெருமானுக்கு இவ்வளவு பெரிய தொகை செலவு ஏற்பட்டிருக்கலாம். ஆனால் காங்கிரஸ் சர்க்கார் ஏற்பட்ட பிறகு கவர்னர் பெருமான் சம்பந்தப்பட்ட வரையில் எட்டு லட்சத்து அறுபத்தையாயிரம் ரூபாய் ஆண்டுக்குச் செலவாகிறது என்றால் இது கொஞ்சம் கவனிக்கப்படவேண்டிய விஷயம் தான். இது மிக அதிகமாக இருக்கிறது.

மேலும் இந்த பட்ஜெட் மெமோராண்டத்தில் **1956-57**-ல் கவர்னர் பெருமான் "வாலண்டரி கட்" என்கிற இனத்தில் ஒன்பதாயிரம் ரூபாயை தானே குறைத்துக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அதாவது மாதம் **850** ரூபாய் குறைவு வருகிறது. **1957–58** சம்பந்தப்பட்ட வரையில் அந்தமாதிரி எதுவும் இதில் இல்லை. இதற்கு விளக்கமும் கொடுக்கப்படவில்லை. ஒரு கால் கணக்கில் முன்பாகத் தயாரிக்கப்பட்டு விட்டதால், வராமல் இருக்கலாம் என்று நினைக்கிறேன். பொதுவாக அமைச்சர்களுடைய கையில் முழு நிர்வாகமும் இருந்துகொண்டிருக்கும் இந்தக் காலத்தில் கவர்னர் பெருமானுக்காக இத்தனை தொகை செலவழிப்பது என்றால் நம்முடைய ராஜீய சக்திக்கு மீறியதாக இருக்கும். ஆகவே இவ்விஷயத்தில் கொஞ்சம் கவனம் செலுத்தி எவ்வாறு சிக்கனம் செய்யலாம் என்பதைச் சர்க்கார் ஆலோசிக்கவேண்டுமென்பதாகக் கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்ளுகிறேன்.

1-54 p.m. **Sri A. VEDARATHNAM PILLAI** : கனம் சபா நாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கோரியிருக்கும் இந்த மானியத்தை ஆதரிக்கும் முறையில் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் பலர் இதில் பல குறைபாடுகளைக் கூறியுள்ளார்கள். அவற்றுக்கு எல்லாம் பதில் அளிப்பதாயின் அவகாசம் அதிகம் ஆகும். ஆயினும் இப்போது பதவி ஏற்று நடத்தி வரும் இந்த அமைச்சர்கள் இந்த ராஜ்யத்தினுடைய ஆட்சிப் பொறுப்பை ஆரம்பம் முதலே ஏற்று இன்று வரை நடத்திக் கொண்டு வரும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆதலாலே இத்தனை குறைபாடுகளுக்கும் அவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொள்வதற்கு முன்னதாக இந்த நாடு முன்பு எப்படி இருந்தது, இப்போது எப்படி இருக்கிறது என்பதை ஆராய்ந்தால் தான் அவர்கள் தங்கள் கடமைகளை எவ்வாறு ஆற்றி வருகிறார்கள் என்பதை நாம் எல்லாம் புரிந்துகொள்ள முடியும். எதிர்க்கட்சிக்காரர்கள் எடுத்துக்காட்டியிருக்கும் குற்றச்சாட்டுகளுக்கு அவர்கள் எவ்வளவு பொறுப்புள்ளவர்கள் என்பதை உணர்ந்துகொள்ள முடியும்.

நூற்று ஐம்பது வருஷங்களுக்கு மேலாகவே வெள்ளைக்காரர்கள் இந்த நாட்டை ஆண்டதோடு அன்றி, இந்த நாட்டுச் செல்வத்தை எல்லாம் சுரண்டிச் சென்றிருக்கிறார்கள். அவர்களுக்கு முன்னதாக முகலாய ஆட்சியிலும் கூட இந்த நாடு சூறையாடப்பட்டிருக்கிறது என்பதை நாம் எல்லோரும் மறந்துவிட முடியாது. வெள்ளைக்காரன் ஆட்சியில் நாட்டில் இருந்த கொஞ்ச நஞ்ச செல்வ வளமும் எல்லாத்துறையிலும் சுரண்டப்பட்டு நாட்டிலே பசி, வறுமை, ஏழ்மை, எங்கு பார்த்தாலும் பட்டினிச் சாவு என்கிற கோரக் காட்சிகள் தாண்டவமாடும் தறுவாயில் பிரிட்டிஷ் காரர்களிடமிருந்து காங்கிரஸ் கட்சிக்கு ஆட்சிப் பொறுப்பு மாற்றப்பட்டு

13th July 1957]　[Sri A. Vedarathnam Pillai]

என்பதை யாரும் மறுக்கவும்முடியாது. ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட போது நம்முடைய நிலைமை எவ்வாறு இருந்தது என்பதை நினைவில் வைத்துக்கொண்டால் நாம் இப்போது எந்த இடத்திற்கு வந்து நிற்கிறோம் என்பதை உணர்ந்து பாராட்ட முடியும். வெள்ளைக்காரர்கள் நாட்டை ஒரு கூறு அல்ல மூன்று கூறுகளாக ஆக்கிப்போனார்கள். அதுவும் கங்கை நதி பாயும் பூமி வளமுடைய பகுதி. சிந்து நதி பாயும் பூமி வளம் உடைய பகுதி. இது இரண்டையும் பாகிஸ்தானுக்கு ஒதுக்கினார்கள். அதுவும் அன்றி இந்தியாவின் மொத்த ஜனத்தொகையில் 18 சத விகிதம் ஜனத்தொகையின் பொறுப்பை மாத்திரம் அவர்களை ஏற்றுக்கொள்ளும் படி செய்தார்கள். கங்கை நதி சிந்து பாய்கின்ற வளமான பிரதேசத்தி லும் கூட, குறிப்பாக வங்காளத்திலும் இதர பகுதிகளிலும் வெள்ளைக்கார ஆட்சி காலத்திலேயே உணவுப் பஞ்சம் காரணமாக முப்பத்தைந்து லட்சம் பேர் கங்கை நதி பாய்கின்ற வங்காளத்தில் மட்டும் மாய்ந்து போய் இருக் கிறார்கள் என்று சொன்னால் நாட்டில் எத்தனை கொடிய அளவில் உணவுப் பஞ்சம் தாண்டவமாடியிருக்கிறது என்பதற்கு வேறு சான்றுகள் காட்ட வேண்டுமா? இப்படி ஒரு பக்கம் உணவுப் பஞ்சம் தாண்ட வமாடுகிற காலத்தில், வளமிக்க சிந்து கங்கைப் பிரதேசம் நம் கையை விட்டு பாகிஸ்தானுக்குப் போய்விட்ட காலத்தில், அதுவும் 18 சத விகித மக்களைத் தவிர பாக்கியுள்ள மக்களை பாதுகாக்கும் முழுப் பொறுப்பும் நமக்கு ஏற்பட்டு விட்ட காலத்தில் இந்த நாட்டின் நிர்வாகப் பொறுப்பை எங்கள் கட்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. இருந்தும் கடந்த ஐந்தாண்டு காலத்தில் எத்தனையோ அபிவிருத்தித் திட்டங்களை எல்லாம் போட்டு, “நாற்பது லட்சம் டன் உணவு தானியம் வெளிநாடுகளிலிருந்து இறக்கு மதி செய்து கொண்டிருந்த காலத்தில் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொண் டோம், இன்று ஒரு டன் தானியம் கூட வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யவில்லை. அதோடு இரண்டு லட்சம் டன் நாம் இப்போது வெளிநாடு களுக்கு ஏற்றுமதி செய்கிறோம்” என்று பெருமையோடு சொல்லிக்கொள் ளும் அளவிலே செயலாற்றி வந்திருக்கிறார்கள் என்று சொன்னால் நிர் வாகம் ஊழலாக நடந்து வருகிறது என்று யாராவது சொல்ல முடியுமா? எங்கள் கட்சி சர்க்காருடைய திறமையை எடுத்து விளக்க இதையும் தவிர எத்தனையோ சான்றுகள் சொல்லலாம் என்றாலும் என்னுடைய பொன் னான நேரத்தை, ஆதாரமில்லாத குறைபாடுகளுக்குப் பதில் அளிப்பதாகச் செலவிட விரும்பவில்லை. இத்தகைய பெருந்திறமையோடு ஆட்சி நடந்து வருகிற காலத்தில் எங்களுக்கும் தெரியாமல் சில குறைபாடுகள் நிகழ்ந்து விடலாம்; குறையே இல்லை என்று நான் கூறவில்லை. நூற்றைம்பது வருஷ காலமாக நாட்டிலே ஊன்றிவிட்ட வறுமையை பத்தாண்டு காலத் திலே போக்கிவிட முடியும் என்று சொல்வது ஒருவருக்கும் சாத்தியமில்லை. எல்லாவகையிலும் அன்னிய ஆட்சியினால் சீர்குலைந்து போன நாட்டைச் செப்பனிட எங்கள் சர்க்கார் படிப்படியாக திட்டங்களைப் போட்டு, திட்டவட்ட மாக முன்னேறிக்கொண்டிருக்கிறார்கள் ; பலவகையிலே முன்னேற்றம் கண்டிருக்கிறார்கள்; இன்னும் சில காலத்திலேயே எதிர்க்கட்சி அங்கத் தினர்கள் இன்றைக்குச் சொல்லப்படுகிற எல்லாக் குறைபாடுகளையும் நிச்சய மாக நீக்கிவிடுவார்கள் என்று மட்டும் நான் சொன்னால் இதை யாரும் எதிர்க்கமாட்டார்கள் என்றே நினைக்கிறேன்.

அதோடு மட்டுமல்ல. எனக்கு முன்னே பேசிய அங்கத்தினர் ஒருவர் 1931-ம் வருஷத்திலே காங்கிரஸ் மகாசபையினால் நிறைவேற்றப்பட்ட தீர் மானத்தை எடுத்துக் குறிப்பிட்டார்கள். ஆமாம், நாங்கள் எல்லோரு மாகச் சேர்ந்து தான் 1931-ம் வருஷ காங்கிரஸ் மகா சபையிலே, இந்த நாட்டு மந்திரிகளுக்கும் கவர்னர்களுக்கும் 500 ரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்கக்கூடாது என்பதான தீர்மானத்தை நிறைவேற்றினோம். அதை அப்படியே ஒத்துக்கொள்ளுகிறேன். ஆனால் ஒன்றை எடுத்து அவர்களு க்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அகில இந்தியாவில் காங்கிரஸ் ஒன்று தான் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியது என்றபோதிலும் முதன் முதலில் நம்முடைய சென்னை ராஜ்யத்தில் தான் மூவாயிரத்து ஐநூற்று முப்பத்து மூன்று ரூபாய், ஐந்தணா, நாலு பைசா வாங்கிக்கொண்டிருந்த சம்பளத்தை மாதம் வெறும் ஐநூறு ரூபாயாக மட்டும் குறைத்துக்கொள்ள

[Sri A. Vedarathnam Pillai] [13th July 1957

காங்கிரஸ் மந்திரிகள் முன் வந்தார்கள் என்பதை கனம் அங்கத்தினர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். அவருக்குத் தெரியாமல் இருக்காது. 1931-ல் இருந்த விலைவாசிகள் என்ன? 1957-ல் இருக்கிற விலைவாசிகள் என்ன என்பதைப் பற்றி அவரே குறிப்பிட்டிருக்கிறார். அன்றைக்கு இருந்த விலைவாசிகளை விட இன்றைக்கு நான்கு மடங்கு, 5 மடங்கு எல்லாப் பொருள்களுக்கும் விலை உயர்ந்திருக்கிறது. முன்பு 500 ரூபாய் தான் சம்பளம் என்றால் அதை இன்றைய நிலைமைக்கு ஏற்றாற்போல நான்கு மடங்கோ, ஐந்து மடங்கோ அதிகப்படுத்தி இரண்டாயிரம், இரண்டாயிரத்து ஐநூறு அமைச்சர்களுடைய சம்பளமாக வைத்துக்கொள்ளாது ஆயிரம் ரூபாயாகத்தான் குறைவாக வாங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அவருக்குக் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக ஒருவர் கவர்னர் பெருமானுக்கு ஆகின்ற செலவு மிகவும் அதிகம், அதில் சிக்கனம் செய்யவேண்டும் என்பதாகக் கூறினார். கவர்னர் என்று ஒருவர் இந்த ராஜ்யத்திற்கே தேவை இல்லை, எல்லா அதிகாரங்களையும் அமைச்சர்கள் தான் கவனித்து வருகிறார்கள், என்று பலரும் கூறினார்கள். நல்லதொரு ஜனநாயகப் பணியை உலகுக்கே எடுத்துக் காட்டும் வகையில் ஆசிய நாடுகளில் இந்தியா ஒன்றில் தான் சிறந்ததொரு அரசியல் அமைப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை அவர்கள் கவனத்தில் வைத்துக் கொள்ளாமலேயே பேசினார்கள் என்றுதான் நான் நினைக்கிறேன். நாமே நம்முடைய நாட்டில் ஜனநாயக முறையில் ஆட்சி எவ்வாறு நடத்தப்படவேண்டும் என்பதை தீர்மானித்துக்கொள்ள சிறந்த தலைவர்களை விருப்பு வெறுப்பு இன்றி ஆராய்ந்து பார்த்து, சீர்தூக்கி முடிவுகளை வழங்கும் நிபுணர்களை எல்லாம் தேர்ந்தெடுத்து இந்தத் திட்டத்தை வகுத்துக் கொண்டோம், என்பதை அவர்கள் உணர்ந்தால் இந்த மாதிரியாக கவர்னர் ஒருவர் இருப்பது தவறு என்று சொல்லியிருக்க மாட்டார்கள். இன்றைக்கு எதிர்கட்சிகள் இந்த இடத்தில் இருந்து இவ்வளவு சுதந்திரமாக, தைரியமாக தங்கள் கருத்துகளை எடுத்துச் சொல்வதற்குக் காரணமே இந்த ராஜ்யத்திற்குத் தலைவராக கவர்னர் பெருமான் வீற்றிருப்பது ஒன்று தான் என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஜனநாயக நாட்டில் இப்பொழுது மந்திரி சபைக்கு இருக்கக்கூடிய அதிகாரத்தில் நாட்டை என்ன வேண்டுமானாலும் செய்யலாம். அவ்வளவு அதிகாரம் மந்திரிகள் பெற்றிருக்கின்றனர். கட்சி பாகுபாடுகளுக்கு அப்பாற்பட்ட ஒருவர் இதற்கு தலைமையாக அந்த பீடத்தில் இருக்க வேண்டும் என்று தீர்க்காலோசனை செய்து ஒவ்வொரு மாகாணத்திற்கும் கவர்னர் இருக்கவேண்டும் என்று முடிவு செய்திருக்கிறார்கள். இன்று மந்திரி சபைக்கு இருக்கும் மெஜாரிட்டி பலத்தால் இப்பொழுது இங்கே மைனாரிட்டிகளையே இல்லாமல் செய்துவிட முடியும். அரசியல் கட்சிகளை மட்டும் நான் சொல்லவில்லை. மைனாரிட்டி சமூகத்தினருக்கு ஏதேனும் அநீதி வழங்கப்பட்டால் அதைக் கண்காணித்து நீதி வழங்கத் தான் இன்று கவர்னர் பெருமான் வீற்றிருக்கிறார் என்ற விஷயத்தை நான் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். அரசியல் கட்சிகளின் நிலை மாறுபடுமென்ற காரணத்தால் நெருக்கடிகள் ஏற்பட்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு நடத்துவதற்கு யாரும் முன் வராத நிலைமை ஏற்படும். கேரளாவில் ஏற்பட்ட இம்மாதிரியான நிலைமை எந்த சந்தர்ப்பத்திலும் வரக் கூடும். அப்படி ஏற்பட்டால் ஆட்சி ஸ்தம்பித்துப் போகாமல் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்துவதற்கு கவர்னர் அத்தியாவசியம் என்ற விஷயத்தை எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் சிந்தித்துப் பார்த்தால் அவர்கள் குறைகூற முன் வரமாட்டார்கள்.

கவர்னரின் சம்பளம் அதிகம், செலவு அதிகம், அவருக்கு பெரிய மாளிகை தேவையில்லை என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். கிட்டத்தட்ட 57 கோடி—60 கோடி ரூபாய் செலவில் நிர்வாகம் நடக்கின்ற இந்த ராஜ்யத்தில், State-ல் 8 லட்சம் சொச்சம் ரூபாய் தான் கவர்னருக்காக செலவாகிறது என்பதை அவர்கள் மனதில் வைத்துக்கொண்டால் அது பெரிய செலவு என்று கருதமாட்டார்கள்.

13th July 1957] [Sri A. Vedarathnam Pillai]

சமீபத்தில் புல்கானின், குருஷேவ் போன்ற தலைவர்கள் வந்திருந்தார்கள். அவர்களை எந்தக் குடிசையில் கொண்டு போய் இருக்கச் செய்வது. அவர்களை எங்கே சந்தித்துப் பேசுவது. வெளிநாடுகளிலிருந்து வருகின்ற அரசியல் தலைவர்களை அவர்களுக்கு உரிய முறையில் சரியானபடி வரவேற்று மரியாதை வழங்க ஒரு State-ல் இதைப் போன்ற ஸ்தாபனம் கட்டடங்கள் அவசியம். இதையெல்லாம் அவர்கள் சிந்தித்துப் பார்த்தால் இம்மாதிரி சிறுமையான குறைகளை கூற முன் வரமாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். 60 கோடி ரூபாய் செலவு செய்யும் மாகாணத்தில் 8 லக்ஷம் ரூபாய் கடுகு மாதிரி என்று கூறுவேன். இந்த 8 லட்ச ரூபாயில் சிக்கனம் செய்வதில் ஒரு பிரமாதமான சாதனையை சாதித்து விட முடியாது.

DEPUTY SPEAKER : Yes, the hon. Member may continue his speech on Monday. The House will now adjourn and meet again at 9 a.m. on Monday, the 15th July 1957.

The House then adjourned. 2.00 p.m.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Monday, 15th July 1957.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Community Development Schemes*

* 103 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the amount allotted for the Community Development Schemes in the Lower Bhavani Project area of Coimbatore district for the past four years;

(*b*) the establishment charges and other expenses involved during that period; and

(*c*) whether any of the roads constructed under the above scheme have been washed away by rains in that area?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Rs. 71·20 lakhs.

(*b*) An expenditure of Rs. 7,74,927 was incurred on the staff during the period.

(*c*) None, so far as the Government are aware.

*Single-teacher schools*

* 104 *Q.*—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of single-teacher schools opened under the First Five-Year Plan; and

(*b*) the number of single-teacher schools proposed to be opened under the Second Five-Year Plan?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Four thousand four hundred and seven, Sir.

(*b*) The Government do not propose to sanction the opening of any single-teacher school during the Second Five-Year Plan period, as Central assistance is not forthcoming for the scheme.

SRI A. R. MARIMUTHU : ஒரு சமயம் மேல் சபையில் ஸ்ரீ ஓ. பி. ராமசாமி ரெட்டியார் அவர்கள் பேசும்போது, ஓராசிரியர் பள்ளிக் கூடங்கள் சரியாக நடத்தப்படுவதில்லை என்று புகார் கூறினார்கள். அது சம்பந்தமாக சர்க்கார் விசாரித்தார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்த சபையில் சொன்னதைப் பற்றி அங்கே விசாரிக்கவேண்டும். இந்த சபையின் மூலம் கனம் அங்கத்தினர் அவர்களுக்கு ஏதாவது தெரிந்திருந்தால், அதைப்பற்றி இங்கே கேள்வி கேட்கலாம்.

[15th July 1957

SRI K. VINAYAKAM : Have the single-teacher schools proved a success? What is the experience of this Government and what are the proposals of the Government for getting the teachers in these schools trained, as most of them are untrained?

THE HON. SRI C. SUBRAMANIAM : The general experience is that single-teacher schools are not as efficient as multi-teacher schools. But as the hon. Member is aware, this scheme was taken on hand not only to provide more schools but to provide employment to the educated unemployed. Now the training programme has been taken up and all of them will be trained.

SRI A. A. RASHEED : How many boys are expected to be under one teacher? What is the limit in respect of the number of boys to be handled by one teacher?

THE HON. SRI C. SUBRAMANIAM : As the hon. Member is aware, it varies according to the nature of the school—whether it is an aided, private-managed school or a local body school. In an aided school, the strength is fixed at 25, if I remember aright, and in a local body school, it is 35. Whether we cannot have a uniform basis is one of the matters which are under the consideration of the Government.

SRI N. MARUDACHALAM : கோவை ஜில்லாவில் எவ்வளவு ஓராசிரியர் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கோவை ஜில்லாவில், மூன்று வருஷங்களிலுமாகச் சேர்ந்து மொத்தம் சுமார் 600 ஓராசிரியர் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக எனக்கு ஞாபகம் இருக்கிறது.

SRI K. VINAYAKAM : As far as the training of teachers for single-teacher schools is concerned, there is paucity of seats in training schools. Outsiders other than untrained teachers apply for admission to the training schools, besides teachers who are already in service. Will the Government, therefore, think of increasing the strength in the training schools? If they cannot open fresh training schools, at least one more section could be added on to the existing school at Egmore.

THE HON. SRI C. SUBRAMANIAM : That also has been taken into consideration and a programme has been drawn up for the training of all these teachers. I do not think there will be any difficulty.

SRI A. R. MARIMUTHU : இப்போது, 300-க்கு மேற்பட்ட ஜனத்தொகை உள்ள கிராமங்களில்தான் ஓராசிரியர் பள்ளிக்கூடம் ஆரம்பிக்கப்படும் என்று அதிகாரிகள் கூறுகிறார்கள். இந்த முறையை மாற்றி, ஒரு கிராமத்தில் வயது வந்த பிள்ளைகள் 50 பேர்களுக்குக் குறையாமல் இருந்தால் அந்த கிராமத்தில் ஓராசிரியர் பள்ளியை ஏற்படுத்தும் முறையை அனுசரிப்பதற்கு அரசாங்கம் உத்தரவு போடுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் ஓராசிரியர் பள்ளிக்கூடங்களை ஆரம்பிப்பதாக உத்தேசம் இல்லை என்று நான் முன்பே சொன்னேன். இன்று இங்கே கல்வித் தலைப்பின்கீழ் விவாதம் நடக்கும்போது, எந்த முறையிலும், எந்த அளவிலும் பள்ளிக்கூடங்கள் ஆரம்பிக்கப்படவேண்டும் என்பதைப்பற்றி விவாதிக்கலாம்.



15th July 1957]

SRI S. M. ANNAMALAI : வடாற்காடு மாவட்டத்தில் சுமார் இரண்டாண்டு காலம் ஸெர்வீஸிலிருந்து ஓராசிரியர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது சென்னை அரசியலாருக்குத் தெரியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : A separate question may be put.

SRI V. K. KOTHANDARAMAN : படித்தவர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்காக ஓராசிரியர்கள் பள்ளிக்கூடங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அந்தப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டு இப்போது 2¾ வருஷங்கள் ஆகிவிட்டபோதிலும், ஓராசிரியர்களுக்கு மற்ற உபாத்தியாயர்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகள் கொடுக்கப்படவில்லை. இந்த சந்தர்ப்பத்தில், அவர்களுக்கு குறுகிய காலத்தில் ஏற்கெனவே கொடுக்கப்பட்ட பயிற்சியையே போதிய யோக்கியதாம்சமாக அங்கீகரித்து, அவர்களை ஆசிரியர்களாகத் தொடர்ந்து உத்தியோகத்தில் வைத்துக்கொள்வதற்கு அனுமதிக்க முடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இல்லை. அவர்கள் மேலும் பயிற்சி பெற்றுத்தான் ஆகவேண்டும்.

SRI P. G. MANICKAM : நமது நாட்டில் பெண்களின் கல்வித் தரம் மிக மிக மோசமான நிலைமையில் இருக்கிறது. ஆகையால், பெண்களின் கல்வி வளர்ச்சிக்காக, இந்த ஆண்டில் ஏதாவது ஓராசிரியர் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டால் பெண்களை அந்தப் பள்ளிகளில் உபாத்தியாயர்களாக நியமித்து அவைகளை கிராமங்களில் ஆரம்பிப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : மூலக் கேள்விக்கும் கனம் அங்கத்தினர் கேட்ட உப கேள்விக்கும் சம்பந்தமில்லை. ஆனால், சர்க்காரைப் பொறுத்தவரையில், கீழ் வகுப்புகளில், கூடியவரையில், பெண் ஆசிரியர்களை நியமிப்பதே கொள்கையாக இருக்கிறது.

SRI N. MARUDACHALAM : கோவை ஜில்லாவில் ஒவ்வொரு தாலூகாவிலும் எத்தனை ஓராசிரியர் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது சம்பந்தமாக, தாலூகாவாரியாக என்னிடத்தில் புள்ளி விவரங்கள் இல்லை.

SRI V. K. KOTHANDARAMAN : ஏற்கெனவே கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தவர்களுக்கு குறுகிய காலப் பயிற்சி கொடுத்து ஓராசிரியர் வேலை கொடுத்த பிறகு, இப்போது மறுபடியும் அவர்களுக்கு பயிற்சி கொடுப்பதாக இருந்தால் அவர்கள் குடும்பத்தோடு பாதிக்கப்படக்கூடிய நிலைமையில் இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு மறு பயிற்சிக்கு ஏற்பாடு செய்யும்போது, பயிற்சிக் காலத்தில் அவர்களுடைய குடும்பத்தாருக்கு ஏதாவது ' அலவன்ஸ் ' அரசாங்கம் கொடுப்பதற்கு முன்வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொது நாம் கவனிக்க வேண்டிய விஷயம் கல்வியை எப்படி சிறந்த முறையில் கொடுப்பது என்பதைப்பற்றியது ஆகும். தற்காலிகமாக ஏற்படும் சிறு கஷ்டங்களைத் தடுப்பதற்காக கல்வியின் தரத்தைக் குறைத்துக்கொள்ளலாமா, அல்லது தரமுள்ள நல்ல கல்வியை அளிப்பதற்காக போதிய பயிற்சி பெற்ற ஆசிரியர்களையே நியமிக்கலாமா என்பதைப் பற்றி யோசிக்கவேண்டும். அப்படி யோசிக்கும்போது, முதலில், கல்வித் தரத்தை உயர்த்துவதற்காக எல்லா ஆசிரியர்களையும் போதிய பயிற்சி பெற்றவர்களாக ஆக்க வேண்டும் என்பதை கனம் அங்கத்தினர்கள் உணர்வார்கள். அதற்காக முயற்சிக்கும் போது சிலருக்குக் கஷ்டங்கள் ஏற்படுகின்றன என்று பிரசாரம் செய்ய ஆரம்பித்தால் நமது லட்சியம் நிறைவேறாது.

SRI P. G. MANICKAM: கோயம்புத்தூர் ஜில்லாவில் உள்ள பவானி தாலூகாவில் 300-க்கு மேற்பட்ட ஜனத்தொகையுள்ள அனேக கிராமங்களில் பள்ளிக்கூடங்களே இல்லை. அங்கெல்லாம் ஓராசிரியர் பள்ளிகளை ஏற்படுத்தவேண்டும் என்று அரசாங்கத்தாருக்கு விண்ணப்பங்கள் அனுப்பியிருக்கிறோம். அந்த இடங்களிலாவது ஓராசிரியர் பள்ளிக்கூடங்களை ஆரம்பிக்க அரசாங்கம் உத்தரவு போடுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: இந்தத் திட்டத்தின்கீழ் இனிமேல் பள்ளிக்கூடங்கள் ஆரம்பிக்கப்படாது என்று நான் முன்பே சொன்னேன். ஆனால் பொதுவாக கல்வி அபிவிருத்திக்காக, கல்வித் திட்டத்தின்கீழ் இன்னும் பள்ளிக்கூடங்கள் ஆரம்பிக்கப்படும்.

SRI K. VINAYAKAM: On the other hand, is it not a fact that most of the teachers in single-teacher schools do not stick to their jobs? They just get in to solve their unemployment problem, wait for some better prospects and resign as soon as they get a better footing elsewhere.

THE HON. SRI C. SUBRAMANIAM: I won't say most of them, but some of them have resigned. Such of them as are not willing to stick to this profession may leave it. But those who want to stick to it will be given training and made regular teachers.

### *Bus tickets for children*

MR. SPEAKER: கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் சபைக்கு வருவதற்கு கொஞ்சம் நேரம் ஆகும். ஆகவே 105-ம் கேள்வியையும், 111-ம் கேள்வியையும் கடைசியில் எடுத்துக்கொள்வோம். 106-வது கேள்வியை இப்போது எடுத்துக்கொள்ளலாம். அந்தக் கேள்வியை ஸ்ரீ என். கே. பழனிஸ்வாமிக்கு பதிலாக ஸ்ரீ கே. சட்டநாத கரையாளர் போடுகிறார்.

* 106 *Q*.—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the age-limit fixed for children to get tickets in the buses run by the Government City Transport, Madras; and

(*b*) whether there is any proposal to raise the age-limit?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) Children above three years of age are required to get tickets in the buses of the State Transport in Madras City after paying full fare.

(*b*) No, Sir.

SRI K. VINAYAKAM: Most of the passengers in the buses do not know exactly the age of their children—especially illiterate women—and thinking those children would be exempted from paying any fare, give wrong ages, e.g., five or six years and place themselves under obligation to purchase tickets. Will the Government consider the possibility of introducing half-fares for children below 12 years as are in vogue in the Railways?

THE HON. SRI R. VENKATARAMAN: In a city bus transport, it is largely the clerical, mercantile and other communities that use buses more frequently than children. It is found on

15th July 1957]

examination that it is not necessary to give the concession of half-fare to children between 3 and 12 years of age. Besides, the loss of revenue to the Transport will be 2,000 rupees a day if this is given. The hon. Member will appreciate the difference between our Transport and the Railways.

*Conversion of minor ports into harbour*

* 107 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf 9-10 a.m.
of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether any of the minor ports in this State has been converted into a pucca harbour?

THE HON. SRI P. KAKKAN : No, Sir.

SRI S. B. ADITYAN : தூத்துக்குடி துறைமுகத்தை விஸ்தரித்து பக்கா ஹார்பராக ஆக்கக்கூடிய திட்டம் என்ன நிலைமையில் இருக்கிறது என்பதை மந்திரி அவர்கள் அறிவிப்பார்களா?

THE HON. SRI P. KAKKAN : மத்திய அரசாங்கத்தினுடைய பார்வையில் அது சம்பந்தமாக கவனிக்கப்படுகிறது.

SRI R. SRINIVASA IYER : May I know, Sir, whether there is any proposal to improve the harbour at Point Calimere and Adirampattinam and, if so, at what stage is the proposal?

THE HON. SRI P. KAKKAN : A separate question may be put, Sir.

SRI K. SATTANATHA KARAYALAR : மைனர் ரோடுகளை, சீர்படுத்தும் திட்டத்திலே கன்யாகுமாரி ஜில்லாவில் எதாவது ரோடுகளை சீர்படுத்துவதற்கு திட்டம் எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : இது இந்தக் கேள்வியிலிருந்து எழவில்லை. அது பற்றி தனியாக கேள்வி கேட்டால் பதில் சொல்லுகிறேன்.

SRI A. VEDARATHNAM PILLAI : நம்முடைய மாகாணத்திலே இதற்குமுன் சீப் என்ஜினியராக இருந்த ஸ்ரீ வெங்கடகிருஷ்ணய்யர் அவர்கள் தோப்புத்துறை துறைமுகத்தை மேஜர் போர்ட்டாக மாற்ற முடியும் என்று ஆலோசனை கூறியிருப்பது கனம் மந்திரி அவர்களுக்கு தெரியுமா? அந்த ஆலோசனையை அரசாங்கம் கவனிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : இது சம்பந்தமாக எனக்கு ஒன்றும் தெரியாது. இருந்தாலும் அதுபற்றி விசாரிக்கிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN : நீண்ட நாட்களாக இருக்கக் கூடிய நாகப்பட்டிணம் துறைமுகத்தைப் பழுது பார்ப்பதற்கு வேண்டிய முன் முயற்சிகளை சர்க்கார் எடுக்குமா?

THE HON. SRI P. KAKKAN : மூலக் கேள்வியிலிருந்து இந்தக் கேள்வி எழவில்லை என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

SRI K. VINAYAKAM : Sir, is the port of Tuticorin a natural one or has it got any possibility of improvement? If so, will the Government put up a proposal to the Central Government on the immediate necessity of converting it into a pucca harbour?

[15th July 1957

THE HON. SRI P. KAKKAN : The proposal about Tuticorin port stands first among the minor ports in our State. It is under active consideration.

SRI V. SUBBIAH: திருநெல்வேலியில் சமுத்திரக்கரை ஓரமாக வேம்பார் என்ற ஒரு இடம் இருக்கிறது. அது வெல்லம் உற்பத்தியாகும் இடம். தமிழ் நாட்டிலே அது வெல்லத்திற்கு பெயர்போன இடம். அங்கே மீன் பிடிக்கிறவர்கள் ஜாஸ்தியாக இருக்கிறார்கள். அந்த இடத்திற்கும் பல துறைமுகங்களுக்கும் தொடர்பு இருக்கிறது. ஆகவே, இந்த துறைமுகத்தை சீர்திருத்தம் செய்வதற்கு அரசாங்கத்தினிடம் திட்டம் இருக்கிறதா என்பதை அறியவிரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : இதுவும் மூலக்கேள்வியிலிருந்து எழவில்லை. தனியாக இது பற்றி கேள்வி கேட்டால் பதில் சொல்லுகிறேன்.

SRI M. S. SELVARAJAN : Sir, in view of the congestion at the Tuticorin port, will the Government come forward to consider the possibility of developing the minor port at Kayalpattinam?

THE HON. SRI P. KAKKAN : A separate question may be put.

SRI A. VEDARATHNAM PILLAI : மத்திய அரசாங்கம் கோடிக்கரையை ஒரு சிறந்த துறைமுகமாக ஆக்கவேண்டுமென்று செய்திருக்கும் தீர்மானம் கனம் மந்திரி அவர்களுக்கு தெரியுமா? அப்படியானால், அதை அமுலில் கொண்டுவருவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வார்களா என்று அறியவிரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : இது பற்றியும் எனக்கு ஒன்றும் தெரியாது. இருந்தாலும் அதையும் விசாரிக்கிறேன்.

SRI T. T. DANIEL : Sir, Colachel is one of the ancient ports in our State. Long before Cochin came into existence, it was serving as the natural harbour through which trade was carried on with several foreign countries. Now this port is abandoned. Will the Government now go into the question of developing this port now?

THE HON. SRI P. KAKKAN : A separate question may be put.

MR. SPEAKER : கனம் கே. பி. எஸ். மணி அவர்கள்.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I may assure hon. Members that the Government are aware that all these minor ports require improvements and further developments. We are raving a planned programme for them. Therefore, no purpose will be served in putting questions in respect of each minor port in which hon. Members may be interested.

MR. SPEAKER : கனம் மந்திரி அவர்கள் விளக்கம் கொடுத்தபிறகும் கூட கனம் அங்கத்தினர் மணி அவர்கள் கேள்வி கேட்கப்போகிறார்களா?

SRI K. B. S. MANI : இல்லை.



15th July 1957]

*Amenities provided to fishermen*

* 108 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. Minister for Local Administration be pleased to state the various amenities provided for fishermen?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : A statement [a] is placed on the table of the House.

SRI K. SATTANATHA KARAYALAR : Sir, may I know whether table type mechanised fish boats have been introduced in Kanyakumari district?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : Two boats have been introduced in the Kanyakumari district.

SRI M. S. SELVARAJAN : மீன் இலாகாவின் மேல் கரையில் சில பாடசாலைகளை ஏற்று நடத்திவருகிறார்கள். அதுபோல கீழ் கரையிலே சில பாடசாலைகளை (fisheries schools) ஏற்று நடத்துவதற்கு அரசாங்கம் முன் வருமா?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : அது அவசியமானால் கவர்ன்மெண்டு அதற்காக முன்வரும்.

SRI A. VEDARATHNAM PILLAI : ஒவ்வொரு ஜில்லாவாரியாக மீன் பிடிக்கும் தொழிலாளர்களுக்கு கூட்டுறவு சங்கங்கள் அமைப்பதன் மூலமாக ஆங்காங்கு உள்ள கிராமவாசிகளுக்கு இடையூறாக இருக்கிறது. அவர்களுக்கு தனி சங்கம் அமைக்கவேண்டுமென்று கோருவது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படியானால் இந்த விஷயத்தில் அரசாங்கம் என்ன முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : மீனவர்களுக்கு கூட்டுறவு சங்கங்கள் இருப்பது அவர்களுக்கு நன்மை பயக்கும் என்றே அவைகள் ஸ்தாபிக்கப்படுகின்றன. அதனால் மற்றவர்களுக்கு இடையூறு இருப்பதாகத் தெரியவில்லை. அப்படித் தெரியுமானால் அதற்கும் ஏதாவது பரிகாரம் செய்யவேண்டுமானால் செய்யப்படும்.

SRI T. T. DANIEL : Sir, since the fisherfolk are living near the coast, at certain places on account of the sea erosion, the houses of these poor people are being washed away. The Hon. Minister may know that two years before there was sea erosion at Colachel and nearly 45 houses were washed away. The Government intended to put up a cement wall there. May I know whether this question will be looked into?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : If there was sea erosion two years ago in Colachel, I think that must have been considered by the Travancore-Cochin Government at that time. If there is anything now, that can be considered.

SRI P. G. MANICKAM : சில ஜில்லாக்களில் மீன் பிடிப்பவர்கள் மீனவர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். மற்றும் சில ஜில்லாக்களில் அவர்கள் செம்படவர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். ஆகையால் மீன்

[a] Printed as Appendix on pages 520–522 infra.

பிடிக்கும் தொழிலாளர்களுக்கு அளிக்கப்படும் எல்லா சலுகைகளும் இந்த எல்லா தொழிலாளர்களுக்கும் கிடைப்பதற்கு கவர்ன்மெண்டார் ஒரு சட்டம் இயற்றுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : மீனவர்கள் என்று சொல்லும்பொழுது அவர்களுடைய தொழிலை குறிப்பிடுகிறது. அவர்கள் எல்லோருக்கும் சலுகைகள் கொடுக்கப்படுவதாகத்தான் தெரிகிறது.

SRI M. S. SELVARAJAN : கடலில் மீன் பிடிக்க எத்தனிப்பவர்களுக்கு வழியில் குறுக்கே இருக்கும் "கோரல் ராக்குகள்" காரணமாக உயிர் சேதம் போன்றவைகள் ஏற்படுகின்றன. ஆகவே, அவசியமாக உள்ள இடங்களில் அவைகளை அப்புறப்படுத்தி மீனவர்களுக்குக் கொடுக்கும் சலுகைகளோடு இதையும் அரசாங்கம் கவனிக்குமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : கனம் அங்கத்தினர் குறிப்பிடும் "கோரல் ராக்குகளை" நான் நேரடியாக பார்த்திருக்கிறேன். அங்கு கனம் அங்கத்தினர் இருக்கும்பொழுது அவர்களே கேட்டிருப்பார்கள். அந்த "கோரல் ராக்குகளை" அங்கு இருந்து அப்புறப்படுத்துவது சாத்தியமான காரியம் அல்ல. மேலும் அதற்கு பெரிய தொகை வேண்டியிருக்குமாதலால், அதை உடனடியாக கவனிப்பது மிகவும் கஷ்டமாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

SRI K. VINAYAKAM : Sir, from the paper that has been placed on the table, it is evident that much good has been done to the fishermen who fish in the ocean but nothing has been done for inland fishermen. For instance, fishermen living in the interior will have to depend upon the tanks for fishing. Most of these tanks are auctioned for fishing in them, and people other than fishermen bid in the auction and get very good profit out of the bid. Will the Government take steps to see that this auctioning is open only for inland fishermen to bid and that the benefit is reaped by them alone ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : Wherever there are fishermen societies, in those places they conduct auction. In other places, the auction is open to all.

THE HON. SRI C. SUBRAMANIAM : May I take it that the hon. Member intends that fishermen alone should carry on this profession and nobody else should? Then would this not mean that we are perpetuating the 'caste' system by not allowing others to take to this profession? Therefore, I am afraid the hon. Member's suggestion may not be feasible.

SRI K. VINAYAKAM : I rise on a point of personal explanation. It is not as if I want to perpetuate caste. As things stand to-day, it is only the fishermen who are used to fishing in inland tanks that take to this profession. As long as things continue as they are, these people have got to be given preference to reap the benefit from this profession.

SRI M. S. SELVARAJAN : Arising from the answer of the Hon. Minister, I think the Minister is meaning Periatalai in Tiruchendur taluk. There is a coral rock there. There is a heavy chemical industry near Punnaikayal. They want this coral rock for their work. Will the Government think of having contact or agreement with the company for the removal of the coral rock, which will lessen the burden of the Government?



THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : It will be considered.

SRI T. S. RAMASWAMY PILLAI : ஸார், கன்னியாகுமரி ஜில்லாவில் கோவளம், புத்தன்துறை போன்ற மீனவர் வசிக்கும் இடங்களில் மணல் தேரிகளை வளர்ந்து அங்குள்ள கிராமத்தை அழித்துவிடும் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? தெரியும் என்றால் அதை அப்புறப்படுத்துவதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : அது அரசாங்கத்திற்குத் தெரியும். அந்த மணல் தேரிகளை அப்புறப்படுத்துவது அவசியமானால் அப்புறப்படுத்தவேண்டியதாகும்.

SRI A. A. RASHEED : Sir, is the Hon. Minister aware that many fashionable gentlemen have taken to angling?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : If fashionable men think, they can have it as a hobby, they can have it. There is no harm in doing any work.

*Selection of lower division clerks*

* 109 *Q.*—SRI M. WILLIAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of candidates selected for appointment as lower division clerks by the Madras Public Service Commission in 1956; and

(*b*) the number so far absorbed in Government service?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) 2,428.

(*b*) 1,473.

SRI M. WILLIAM : Sir, are there not clerical posts which are held by employees recruited otherwise than by the Public Service Commission?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir. Under the emergency provisions, some persons are employed. But as soon as the candidates selected by the Public Service Commission become available, these people are replaced by them (Commission candidates).

SRI M. WILLIAM : Are the Government aware that there are some temporary clerks who have put in a total service of five to seven years? 9-20 a.m.

THE HON. SRI C. SUBRAMANIAM : I am sorry, Sir, I am not in a position to answer such general questions.

SRI K. VINAYAKAM : Sir, the lowest educational qualification necessary for lower division clerks is only VI Form and as such the calibre of the clerks we get is poor in most cases . . .

[15th July 1957

Mr. SPEAKER: The hon. Member, as I have said very often, is not entitled to give his opinion while putting a question. I would suggest to him to commence the question in some such form as 'Will the Hon. Minister for such and such portfolio be pleased . . .'

Sri K. VINAYAKAM: I cannot make the question clear in that case . . .

Mr. SPEAKER: Then the hon. Member's question must be made clear by the very question itself.

Sri K. VINAYAKAM: Will the Hon. Minister think of the possibility of abolishing recruitment to lower division cadre and retain recruitment only for upper division clerks as this will increase efficiency in the departments?

The Hon. Sri C. SUBRAMANIAM: We will have also to take into account the cost which would be involved in the suggestion made by the hon. Member. If all the lower division clerks are to be replaced by upper division clerks, the cost will be prohibitive. Perhaps the hon. Member wants to fix the minimum educational qualifications at a higher level, for lower division clerks. That is a matter which is under consideration, whether we should have any minimum qualifications at all for these purposes, and if they pass the test prescribed by the Public Service Commission why they should not be recruited to Government posts. However, I may inform the hon. Member that even though the minimum general educational qualification is S.S.L.C. many graduates do come into the Government service, in the lower division cadre.

Sri T. T. DANIEL: Sir, under Rule 10 (*a*) (1) of the Madras Provincial and Subordinate Service Rules, Heads of Departments are empowered to fill temporary vacancies. May I know whether the Heads of Departments are bound to report about the vacancies within a particular time to the Public Service Commission and if not, will the Government go into the question and impose a time-limit within which the Heads of Departments should inform the Public Service Commission about the vacancies? Is for the Heads of Departments to regularise such vacancies also there any procedure prescribed in respect of this matter?

The Hon. Sri C. SUBRAMANIAM: Yes, Sir, we have taken steps to see that in all these cases the persons appointed under emergency provisions are replaced by persons properly qualified and selected by the Public Service Commission. As a matter of fact we call for a periodical report from Heads of Departments to find out how many men have been appointed under emergency provisions and whether they have been replaced by qualified men and if they have not been replaced, why they have not been replaced.



15th July 1957]

Sri V. K. KOTHANDARAMAN: பப்ளிக் சர்வீஸ் கமிஷனால் செலக்ஷன் செய்யப்பட்டவர்களின் பெயர் கஸட்டில் வெளியிடப்பட்டு வருகிறதா? அப்படியில்லையென்றால் அதன் காரணம் என்ன?

The Hon. Sri C. SUBRAMANIAM: வெளியிடப்பட்டு வருகிறதா என்பதற்கு இப்போது என்னிடம் விவரங்கள் இல்லை. வெளியிடப்பட்டு வருகிறது என்றே நினைக்கிறேன்.

*Rest-house for Sankarankoil*

* 110 *Q.*—Sri A. R. SUBBIAH MUDALIAR: Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to construct a rest-house in Sankarankoil under the scheme of development of tourism?

The Hon. Sri C. SUBRAMANIAM: No proposal for the construction of a rest house at Sankarankoil is under the consideration of this Government.

Sri A. R. SUBBIAH MUDALIAR: அதாவது சமீபத்தில் இதற்கு ஒரு திட்டம் இருப்பதாக பேப்பர் மூலம் பார்த்தேன். அவ்விதம் ஏதாவது ஒரு திட்டம் இருக்கிறதா?

The Hon Sri C. SUBRAMANIAM: சங்கரன் கோவிலில் ஒரு ரெஸ்ட் ஹவுஸ் ஏற்படுத்த வேண்டும் என்ற திட்டமே இப்போது இல்லை.

Sri K. VINAYAKAM: May I know what are all the matters of importance from the point of view of tourism so far as Sankarankoil is concerned?

Mr. SPEAKER: The Hon. Minister says there is no proposal. How does he know matters of importance from the point of view of tourism with reference to that place? The hon. Member may ask the other hon. Member who has asked the main question for information.

Sri A. R. SUBBIAH MUDALIAR: Pilgrim Centre ஆக இருப்பதால் சங்கரன் கோவிலில் ரெஸ்ட் ஹவுஸ் ஏற்படுத்த திட்டம் ஏதாவது உருவாக்கப்படுமா?

Mr. SPEAKER: I suppose hon. Member Sri K. Vinayakam should now be satisfied. If the Hon. Minister wants to answer the supplementary question I have no objection.

The Hon. Sri C. SUBRAMANIAM: We listed out places which should be considered as places of importance with reference to tourism. I am afraid I do not find the name of Sankarankoil at all in that list even though I realise the hon. Member attaches great importance to that place as a pilgrim centre.

Sri A. R. SUBBIAH MUDALIAR: சங்கரன் கோவிலில் ரெஸ்ட் ஹவுஸ் ஏற்படுத்த அடுத்த வருஷ திட்டத்திலாவது சேர்க்கப்படுமா?

The Hon. Sri C. SUBRAMANIAM: இப்போதுள்ள இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் இனி வரப்போகும் மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் இதை சேர்த்துக் கொள்ளுவதற்கு முயற்சி செய்வார்களானால் அப்போது [illegible] அதுபற்றி கவனிக்கப்படும்.

[15th July 1957

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Do we get any Central aid for all these tourist centres from the Government of India and if so what is the percentage of grant we get for all these centres?

THE HON. SRI C. SUBRAMANIAM: I think I answered this very same question once on the floor of the Assembly. As I have already said there are three categories. In the first category the entire expenditure is borne by the Government of India. In the second category, 50 per cent is borne by the Central Government and 50 per cent by the State Government. In the third category the entire expenditure is borne by the State Government.

SRI N. MAHALINGAM: கொடைக்கானலில் இம்மாதிரி விடுதிகள் கட்டுவதற்கு அரசாங்கம் யோசித்து வருகிறதா?

THE HON. SRI C. SUBRAMANIAM: கொடைக்கானலில் கட்டுவது பற்றி யோசிக்கப்பட்டு வருகிறது.

* 111 *Q.*—Taken up as the last question.

*Employment Exchanges*

9-30 a.m. * 112 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of persons registered in Employment Exchanges in the State during 1956–57; and

(*b*) the number of those so far employed?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) The number of persons registered in the Employment offices in the State during the period 1st April 1956 to 31st March 1957 is 144,564.

(*b*) The number of persons placed in employment by the Employment offices in the State during the period 1st April 1956 to 31st March 1957 is 20,966.

SRI K. SATTANATHA KARAYALAR: Sir, may I know the number of educated persons who have registered in these Employment Exchanges and the number of graduates and under-graduates?

THE HON. SRI R. VENKATARAMAN: The total number of Matriculates on the Register is 19,917; the number of under-graduates in the Register is 1,098 and the number of graduates on the Register is 1,572.

SRI K. VINAYAKAM: Sir, there was a proposal to take over the entire Employment Exchange organization under the governance of Madras State. Has it been implemented or is it still under the Government of India?

THE HON. SRI R. VENKATARAMAN: It has been taken over by the State Government.



15th July 1957]

SRI A. A. RASHEED: What is the number of technical persons who have applied for jobs?

THE HON. SRI R. VENKATARAMAN: We have no separate list of technical persons.

*Service conditions of nurses*

MR. SPEAKER: The Hon. Revenue Minister has come. We will take up starred question No. 105 now.

SRI K. SATTANATHA KARAYALAR: I put the question on behalf of Sri N. K. Palanisami, Sir.

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, should not the hon. Minister explain why he was late?

MR. SPEAKER: He has asked for the permission of the Speaker and it has been given to him.

* 105 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami): Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Central Council of Health has forwarded its recommendations to the Government on the reports submitted by the Nursing Committee which reviewed the conditions of service, emoluments, etc., of the nursing profession; and

(*b*) if so, what they are?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) & (*b*) Yes, Sir. A resolution of the Central Council of Health generally commending the report of the Nursing Committee for acceptance by the various States was received.

SRI K. VINAYAKAM: What are the recommendations of the Nursing Committee that have been approved and forwarded to the Government by the Central Council of Health?

THE HON. SRI M. A. MANICKAVELU: The recommendations are in the nature of enhanced scales of pay, better amenities, some reduction in working hours, creation of certain additional posts to strengthen the existing leave reserve and such things. Government have now included employment of additional nurses, employment of lower division clerks in the Government Hospital and Mental Hospital at the rate of one per 200 beds to give relief to nurses, provision of recreational facilities, etc., enhancement of allowance to nurses and head nurses in the T.B. Sanatorium as Part II Scheme in 1957–58.

SRI K. VINAYAKAM: Do the lady nurses get better wages than male nurses other things being equal?

THE HON. SRI M. A. MANICKAVELU: As the former Member Sri Balakrishnan who used to take particular interest in ladies is not here, I have not done that comparison.

SRI A. A. RASHEED : What is the number of male nurses in the State and is the Minister aware that male nurses are not liked by the patients in the hospitals?

THE HON. SRI M. A. MANICKAVELU : All patients are naturally fastidious. I do not know the exact number, Sir.

SRI K. VINAYAKAM : Sir, I put a serious question; there is no joke about it and I do not want to have any fun at the expense of lady nurses. I am not aware what Mr. Balakrishnan was doing. It is all past history. I was told, Sir, that lady nurses draw higher salaries when compared to that of male nurses, other things being equal, that is, their qualifications, their training, conditions of employment, etc. Is that a fact, Sir?

THE HON. SRI M. A. MANICKAVELU : I should like to have a separate question to answer that, Sir.

SRI V. K. KOTHANDARAMAN : சென்னையில் இருக்கக் கூடிய ஜெனரல் ஆஸ்பத்திரியில் ஆண் நர்ஸ்களும், பெண் நர்ஸ்களும் பயிற்சி எடுக்கிறார்கள். ஆனால் பெண் நர்ஸ்களுக்கு சர்க்கார் சாப்பாடு வசதி செய்து கொடுக்கிறது. ஆனால் ஆண் நர்ஸ்களுக்கு அப்படி இல்லை. அவர்களே சாப்பாடு வசதி செய்து கொண்டு சாப்பிடக் கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே அதற்குக் காரணம் என்ன ? இனிமேலாவது பெண் நர்ஸ்களுக்கு எப்படி சர்க்கார் சாப்பாடு வசதி இருக்கிறதோ அதேபோல் ஆண் நர்ஸ்களுக்கும் வசதி செய்ய ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HOH. SRI M. A. MANICKAVELU : இந்த விவரம் கனம் அங்கத்தினர் மூலமாகத் தான் தெரிகிறது. அதைப்பற்றி விசாரிக்கிறேன்.

SRI A. GOVINDASAMY : ஸ்டான்லி ஆஸ்பத்திரியில் வேலை செய்யும் ஆண் நர்ஸ்களுக்குக் கொடுக்கப்படுகிற க்வார்ட்டர்ஸ், ஸானிட்டரி கண்டிஷன் பிரகாரம் நல்ல வசதியுள்ளதாய் இல்லை. அதைச் சீர்திருத்தம் செய்ய அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : சானிட்டரி அரெயின்ஜ்மெண்ட் சரியாக இல்லை என்பதை ஸ்டாண்டேர்ட் பிரகாரம் கேட்கிறாரா ? இல்லை அங்கத்தினரின் ஸ்டாண்டேர்ட் பிரகாரம் கேட்கிறாரா என்று தெரிந்தால் நல்லது.

SRI A. GOVINDASAMY : என்னுடைய கேள்விக்குப் பதில் சொல்லாமல், மந்திரியவர்கள் எப்போதும்போல் நேரிடையாகப் பதில் சொல்லாமல் சுற்றி வளைத்துப் பதில் சொல்கிறார். ஆண் நர்ஸ்களில் க்வார்ட்டர்ஸ், சுகாதாரவசதிப்படி அமைக்கப்பட்டிருக்கிறதா? இல்லை என்றால் அதற்குத் தகுந்த நடவடிக்கைகள் எடுத்து வசதி செய்து கொடுப்பார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்த ஆஸ்பத்திரியை நான் போய் பார்வையிடப்போகிறேன். அப்பொழுது இதையும் கவனத்தில் வைத்துக்கொண்டு பார்க்கிறேன்.

SRI K. VINAYAKAM : Has this Government got any bias for fair sex or else why is there this kind of invidious distinction between male and female nurses?

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, not particularly this Government. All over the world, there is a bias for the fair sex. (Laughter.)

15th July 1957]

*Congress Thiyagis*

* 111 *Q.*—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have received a copy of the resolutions passed at the meeting of the Rasipuram Taluk Congress Thiyagis on 27th April 1957 at Rasipuram regarding their employment in Government service, free education to their children, etc.; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) & (*b*) The Government received unsigned printed copies of the resolutions of Rasipuram Taluk Congress Thiyagis Sangham held on 27th April 1957 at Rasipuram. Under the instructions regarding the submission and receipt of petitions and other papers addressed to the Government, resolutions submitted by associations and similar bodies will receive no attention. No action was accordingly taken on the printed copies of resolutions referred to above. Any such body wishing action to be taken on its representations should submit them in the form of a petition stating the grounds and circumstances of the case and submit the petition in respect of each matter to the department concerned.

SRI N. R. THIAGARAJAN : தியாகிகள் அவர்கள் குழந்தைகள் சம்பந்தமாக சர்க்காரின் திட்ட வட்டமான முடிவு என்ன ? அவர்களுக்கு என்ன உதவி செய்யப் போகிறார்கள் என்பதை சீக்கிரம் அறிவிப்பார்களா ?.

THE HON. SRI M. A. MANICKAVELU : ஏற்கனெவே ஏதோ உதவி செய்து இருக்கிறார்கள். இப்பொழுது முன் செய்த உதவித் திட்டத்தை மாற்றி வேறு விதமாக மாற்றியிருக்கிறது.

SRI V. SUBBIAH : அரசியல் தியாகிகள் விஷயத்தில் இது வரைக்கும் ஒன்றுமே, ஒருவித நடவடிக்கைகள் எடுக்காமல் இருப்பதால் சமுதாய நலத் திட்டத்திலோ அல்லது தேசீய விஸ்தரிப்புத் திட்டத்திலோ இன்றைய தினம் கஷ்டப்படக்கூடிய அவர்களுக்கு ஏதாவது செயலில் செய்ய முடியுமா ? அல்லது சட்டபூர்வமாக வேறு வழியை நீங்கள் கடைப்பிடித்திருக்கிறீர்களா என்பதைத் தெளிவுபடுத்தும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இது, குறிப்பாக மகஜர் ஏதாவது வந்ததா என்பது பற்றிய கேள்வி. ஆனால் அங்கத்தினர் அவர்கள் பொதுவாகக் கேட்கிறார். அது Policy ஒட்டியதாக இருக்கிறது. தனி கேள்வி கேட்டால் நன்றாக இருக்கும்.

SRI K. VINAYAKAM : Sir, what exactly are the grievances of these Thiyagis? Why should not the Government satisfy them? After all, they have worked for the liberation of this country and it is on account of them that we are now free. Even if it means the expense of a certain amount of money, will Government come forward to dole out something to them and take steps in this regard wherever they find suitable?

THE HON. SRI M. A. MANICKAVELU : Certain privileges and concessions, especially assignment of land were given effect

to. The Thiyagis are demanding certain other privileges like the right to alienate the lands which were given to them, grant of loan facilities and such other things.

SRI K. VINAYAKAM : Have Government got any statistics as to how many Thiyagis are unemployed and what are the types of jobs they seek and can the Government tell us what are the difficulties which the Government have in coming to their succour?

THE HON. SRI M. A. MANICKAVELU : I would like to have a separate question so that I might gather the information.

9-40 a.m. SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDRAN : சுதந்திர இயக்கத்தில் 45, 50 வயதுக்கு மேற்பட்டவர்கள்தான் தீவிரமாகப் பங்கு கொண்டார்கள். அதனாலே, அவர்களுக்கு நாட்டின் சீரமைப்புத் திட்டத்திலே வேலை கொடுக்கவேண்டுமானால், அவர்கள் அப்போது பள்ளிகள், காலேஜுகள் இவைகளை விட்டு வந்ததால், இன்று ஸர்விஸ் கண்டிஷன், அதாவது இத்தனை படிப்பு, இத்தனை வயது என்கிற கோட்பாடுகளைத் தளர்த்தி கிராம சீரமைப்புத் திட்டத்தில் வேலை கொடுக்கவேண்டும். அவர்களுடைய குழந்தைகளெல்லாம் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆகையால் அவர்களுடைய குழந்தைகளுக்கு முதல் சலுகை கொடுத்து வசதிகள் செய்துகொடுக்க அரசாங்கத்திடம் திட்டங்கள் இருக்கின்றனவா ? அதைப் பற்றி இந்த சமயத்தில் விவரம் சொல்ல முடியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்போது அமுலில் இருக்கும் திட்டத்தைப் பற்றி முன்பே சொன்னேன். இப்போது அங்கத்தினர் சொல்வது போல இன்னும் வேறு ஏதாவது செய்யவேண்டுமானால் தனியாக என்னென்ன கூறுகிறார் என்று குறித்துக் கேட்டால் அதற்கு பதில் சொல்லுகிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN : தியாகிகள் என்றால் நாட்டின் சுதந்திரத்திற்கு 1942 ஆகஸ்ட் போராட்டத்தில் பங்கு கொண்ட அவ்வளவு பேருமா ? காங்கிரஸ் தலைவர்களால் சர்டிபை செய்யப்பட்டவர்கள் மட்டும்தான் தியாகிகள் என்று சர்க்கார் எந்த மாதிரி நிர்ணயம் செய்கிறார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM: இந்த சுதந்திரப் போராட்டத்திலே பங்குகொண்டவர்கள் எல்லோரும், அவர்கள் இப்போது எந்தக் கட்சியில் இருந்த போதிலும், தியாகிகள்தான். ஆனால் போராட்டத்தில் கலந்து கொண்டார்களா இல்லையா என்று அத்தாட்சிக்குத்தான் இந்த ஸர்டிபிகேட். ஆனால் ஸர்டிபிகேட் கிடைத்தால் தியாகியாக ஆகிவிடுவதில்லை. ஆகையால் 1942-ல் போராட்டத்தில் பங்கெடுத்துக்கொண்டு சுதந்திரத்திற்காகப் பாடுபட்டவர்கள் எல்லோரும் தியாகிகள் என்று கருதப் படுவார்கள்.

SRI G. GOMATHI SANKARA DIKSHITAR : தியாகிகள் பிரச்னை விஷயமாக அரசாங்கம் போதிய நடவடிக்கை எடுத்துக்கொண்டபோதிலும், குடும்பக்கஷ்டம் காரணமாக அவர்களுடைய குழந்தைகளைக்கூட படிக்கவைக்க முடியவில்லை. அவர்களுடைய கஷ்டத்தைத் தீர்க்க அதிகமான முறையில் அரசாங்கம் உதவி செய்ய நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: அவர்களுடைய குறைகளைத் தீர்க்க அரசாங்கம் கவனத்துடன் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. அவர்களுடைய யோக்கியதாம்சங்களை அனுசரித்து, வேண்டிய இடங்களில் யோக்கியதாம்சங்களைத் தளர்த்தி, வேலை கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு மேல் குழந்தைகளுக்கு கல்விச் சலுகை அளிப்பதைப் பற்றி பிரஸ்தாபித்தார்கள். இதைப் பற்றி ஆலோசித்து கூடிய சீக்கிரம் அரசாங்கம் செய்யக்கூடியதைச் செய்யும்.

15th July 1957]

SRI A. GOVINDASAMY : சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்டவர்கள் எந்தக் கட்சியில் இருந்தாலும் அவர்களுக்குச் சலுகை காட்டப்படும் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வைக்கம் வீரர் என்று பெயரெடுத்த பெரியாருக்கு இந்தச் சலுகை காட்ட முடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதிலே பெரியாராயிருந்தாலும் சிறியாராயிருந்தாலும் யாருக்கும் சலுகை காட்டப்படும்.

ஆனால் இந்தச் சலுகை ஏழைகளுக்கு மட்டும்தான் கொடுக்கப்படுகிறது. பெரியாரை ஏழையா அல்லது பணக்காரரா என்று பார்த்து கனம் அங்கத்தினர் பணக்காரரில்லை என்று சொன்னால் அவருக்கு இந்தச் சலுகையை வழங்கலாம்.

SRI M. R. KANDASWAMY MUDALIAR : தியாகிகளின் குழந்தைகள் எதுவரை படிக்கிறார்களோ, அதாவது பி.ஏ., எம்.ஏ., முதலியவைகள் வரை, படித்தாலும் அவர்களுக்கு சம்பளமில்லாமல் இலவச உணவு வசதி முதலியவைகள் செய்து கொடுக்க வேண்டியது நம் கடமை. இந்த நாடு விடுதலை அடைந்து, இத்தனை அங்கத்தினர்கள் இங்கு கூடி நாட்டின் நன்மைக்காக திட்டங்கள் போட்டுக் கொண்டிருக்கிறோம் என்றால் அதற்கு காரணஸ்தர்கள் அந்த தியாகிகளே. இதற்கு இந்த நாட்டிலே முதலிடம் கொடுத்து அவர்களுடைய குழந்தைகளுக்கு இலவச உணவு வசதி, இலவச உடை, இலவச பள்ளிக் கூட வசதி இவைகளைச் செய்து தந்து காப்பாற்றவேண்டியது சர்க்காருடைய கடமை. அந்தக் காரியத்தை அரசாங்கம் செய்யும் என்று எதிர்பார்க்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் அவர்களின் உணர்ச்சியை நான் பெரிதும் பாராட்டுகிறேன்.

SRI A. GOVINDASAMY : பெரியார் எந்தப் பட்டியலில் வருகிறார் என்று கனம் அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். உண்மையில் பெரியார் பணக்காரர் தான். ஆனால் இந்த அரசாங்கம். . . .

SRI A. A. RASHEED : Can we ask questions about individuals, Sir?

MR. SPEAKER : Questions have been asked and answered also.

SRI A. GOVINDASAMY : பணக்காரர்களுக்கும் அரசாங்கம் உதவி செய்கிறது என்பது தெரிந்ததுதான். இன்றைக்கு காங்கிரஸ் தலைவராக இருக்கும் ஸ்ரீ ராஜாராம் நாயுடு, ஸ்ரீ வி. வி. பழனிசாமி கவுண்டர் போன்றவர்களுக்கும் தியாகி நிலம் வழங்கப்பட்டிருக்கிறது. அவர்கள் ஏழைப் பட்டியலில் வருகிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : முன்னர் நிலம் கொடுத்தபோது அது வீர மானியமாகக் கொடுக்கப்படவேண்டும் என்று இருந்தது. இப்போது ஏழைகள் என்ற அடிப்படையில்தான் இந்தச் சலுகை கொடுக்கப்படுமே தவிர பணக்காரர்களுக்கு அவர்கள் தியாகிகளாக இருந்தாலும் சலுகைகள் வழங்கப் படமாட்டாது.

SRI K. VINAYAKAM : Since the number of thyagis that are still to be helped by the Government will be very small, will the Government think of giving them some pension or some such dole and telling them that the Government's obligation to them is over and that they should rest content with that and eke out their livelihood themselves? Will the Government settle this problem once and for all so that our liberators may remain satisfied?

[15th July 1957

THE HON. SRI C. SUBRAMANIAM: The Government will take into account all aspects of the question and try to do whatever is possible.

MR. SPEAKER: Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—POINT OF ORDER *RE* PUBLICATION OF POLICY STATEMENT IN NEWSPAPERS *RE* ABOLITION OF DISTRICT BOARDS WHEN THE HOUSE IS SITTING.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: I rise on a point of order. Mr. Speaker, a couple of days back, I saw published in the newspapers the proposals of the Government to abolish District Boards.

(Sri K. Vinayakam rose.)

MR. SPEAKER: Why is the hon. Member so impatient, when I am here to give the ruling? (Laughter.)

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: I consider the proposals a statement of policy by the Government. According to the healthy parliamentary conventions observed in all parliamentary democracies, no policy statement can be made available to the Press, especially when the Legislature is in session. The Press, in this case, has been shown preferential treatment in that the statement has not been made on the floor of this House. Will the Government kindly clarify the position?

MR. SPEAKER: The hon. Member wanted to raise a point of order but in fact wants the Government to clarify the position. If he is raising a question of privilege, it is all right. If it is a point of order, I am afraid, the Government cannot do anything.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: It may be treated as a privilege issue.

MR. SPEAKER: A question of privilege can be raised only after giving the Chair previous notice of it. I am not aware of any notice given by the Leader of the Opposition. It would be better if the Chair was told in advance what the privilege issue was about and what the urgency of the Motion was. After all, it is the Speaker that has to decide whether a *prima facie* case has been made out for a Privilege Motion. So, I would suggest, if it is to be treated as a Privilege Motion the Leader of the Opposition may give notice of it and we shall take it up tomorrow. If it is a point of order, I shall give my ruling now.

THE HON. SRI C. SUBRAMANIAM: Since the question has been raised on the floor of the House, I would like to say . . .

MR. SPEAKER: The Leader of the Opposition has agreed to treat it as a privilege issue. I regret, I cannot allow a discussion.

15th July 1957]

SRI K. VINAYAKAM : What is the decision on the point of order?

MR. SPEAKER : He has now changed it into a question of privilege. He must give me notice and he will do it tomorrow.

### III.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1957–58—*cont.*

### (1) DEMAND IX—HEAD OF STATE, MINISTERS AND HEADQUARTERS STAFF—*cont.*

MR. SPEAKER : We shall now resume discussion on Demand IX. The hon. Member, Sri Vedarathnam Pillai will continue his speech.

SRI A. VEDARATHNAM PILLAI : கனம் சபாநாயகர் அவர்களே, என்னுடைய உரையைத் துவக்குமுன், இங்குள்ள அங்கத்தினர்கள் எல்லாருடைய சார்பாகவும் எங்களுடைய மனமார்ந்த நல்வாழ்த்துக்களை நமது மதிப்பிற்கும் அன்பிற்கும் உரிய முதன் மந்திரி அவர்களுக்கு அவர்களுடைய பிறந்த நாள் வாழ்த்தாகச் செலுத்துகிறேன்.

அன்று இந்த மான்யத்தின் மீது பேசியவர்கள் கவர்னர் பெருமானுக்கும் மந்திரிமார்களுக்கும் அளிக்கப்பட்டிருக்கிற வீடுகள் பெரியன என்று சொன்னார்கள். சுருக்கமாகக் கூற விரும்புகிறேன். **Chinese Delegation**-ன் தலைவராக சூ-என்-லாய் அவர்கள் நம்முடைய சென்னை மாநகரத்திற்கு வந்த போது, கிண்டியிலுள்ள கவர்னர் மாளிகையில் விருந்தினராகத் தங்கினார்கள். அப்படி விருந்தினராக வந்தவர்கள் தங்குவதற்கு இடம் கூட போதாமல், அந்தத் தூது கோஷ்டியைச் சேர்ந்த பலர் வராந்தாவில் கூட படுத்திருக்கும் நிலை ஏற்பட்டது என்று நான் அறிகிறேன். அந்தப் பெரிய மாளிகைகள் அங்கே தங்குகிற கவர்னரை மாத்திரம் பொருத்தது அல்ல ; மந்திரிகளை மாத்திரம் பொருத்தது அல்ல. அவர்கள் வகிக்கின்ற ஸ்தானம், அவர்கள் வரவேற்க வேண்டியிருக்கிற பெரிய வெளிநாட்டு விருந்தினர்கள் போன்றவர்களை யெல்லாம் பொருத்து இருக்கிறதே அல்லாமல், அந்தத் தனி நபரை மாத்திரம் மனதில் வைத்துக்கொண்டு பேசுவது முறை அல்ல என்று நான் கருதுகிறேன். அதே மாதிரி, அவர்களுக்குக் கொடுத்திருக்கும் மற்ற எல்லா வசதிகளும் ஒரு பெரிய **State** இன் தலைவர் என்ற முறையிலே, அதற்கென அந்தத் திட்டங்களில் அமைந்திருக்கிறது. இவையெல்லாம் நாம் இப்பொழுது புதிதாகக் கட்டிக் கொடுத்த கட்டிடங்கள் அல்ல, ஏற்கெனவே இருந்தவை அவர்கள் இப்பொழுது பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத்தான் இங்கே நான் கூற விரும்புகிறேன்.

அதோடு, கவர்னரே வேண்டாம் என்று சொல்வதற்கோ, அவர்களுடைய சம்பளம், செலவு முதலிய விஷயங்களைப்பற்றி விவாதிப்பதற்கோ இது உரிய சரியான இடம் தானா என்பதையும், அதே சமயத்தில், இந்தக் **Constitution**-ஐ வகுத்த காலத்தில் சொல்லி இருக்க வேண்டிய விஷயத்தை இப்பொழுது கூறுவது முறை ஆகுமா என்பதையும் அறிய விரும்புவதோடு, நாம் எந்த ஒரு **Constitution**-க்கு **Loyal** ஆக, அதாவது விசுவாசமாக நடப்போம் என்று பிரமாணம் எடுத்துக்கொண்டிருக்கிறோமோ, அதையே கூட இங்கே எதிர்த்துப் பேசுவது முறை ஆகுமா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

அத்துடன், **Constitituion** சம்பந்தமாக என்னுடைய ஆலோசனை ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய மாகாணம் பாஷாவாரி மாகாணமாகப் பிரிக்கப்படுவதற்கு முன்னதாக இருந்தது ஒரு கவர்னர் தான். இப்பொழுது நம் மாகாணம் மூன்று, நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொன்றுக்கும் ஒரு தனி கவர்னர் இப்பொழுது இருப்பதைப்

[Sri A. Vedarathnam Pillai] [15th July 1957

பார்க்கிலும், முன் இருந்தது போலவே, இவர்களுக்கு வேலை அதிகம் இல்லை என்று கூறப்படுவதால், தட்சிணப் பிரதேசத்திலே உள்ள மூன்று நான்கு மாகாணங்களுக்கும் சேர்த்து ஒரு கவர்னர் இருப்பது பொருந்தும். அப்படிச் செய்தால், இப்பொழுது கூறப்படுகிற குறை—செலவு அதிகம் ஆகிறது என்ற குற்றச் சாட்டுக்களுக்கெல்லாம் இடம் இருக்காது என்ற தாழ்மையான யோசனையை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடி, மந்திரிகளுக்கு அரசாங்கத்தின் செலவில் கார் கொடுக்கக் கூடாது என்றும், சொந்தத்திலேயே கார் வைத்துக்கொள்ளவேண்டும் என்றும் கூறினார்கள். அப்படி கார் அவர்களுக்கு நாம் கொடுக்கவில்லையானால், நம்முடைய எதிர்க்கட்சியின் மதிப்பிற்குரிய தலைவர் கனம் திரு. வி. கே. ராமசாமி முதலியார் அவர்களைப் போன்ற ஜமீந்தார்கள், பணக்காரர்கள் தான் மந்திரிகள் ஸ்தானத்தில் அமர முடியுமே அல்லாமல், ஏழை எளிய தொண்டர்கள் எல்லாம் அந்த ஸ்தானத்திற்கு வரவேண்டும் என்ற ஜனநாயக காலத்தில், அவர்களால் சொந்தத்தில் கார் வாங்கிக் கொண்டு ஓட்ட முடியுமா என்று நான் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

மற்றொரு அங்கத்தினர் பேசும்போது, இவ்வளவு பெரிய கார் அவர்களுக்கு வேண்டியது இல்லை சிறிய காராக இருந்தால் போதுமானது என்று சொன்னார்கள். நல்ல யோசனைதான். அதே சமயத்தில் இன்னொரு அங்கத்தினர் பேசும்போது, கன்யாகுமரிக்கு மந்திரி வந்த போது, வேறு ஒரு நண்பா காரில் வந்தார் அம்மாதிரி வரக் கூடாது State car இருக்கும் போது, ஏன் மற்ற " நண்பர்களுடைய காரில் வரவேண்டும் ?" என்று கூட கேட்டார்கள். இந்த நண்பர் குறிப்பிட்ட மாதிரி, ஒரு சிறிய காராக இருந்தால், 500 மையில் அந்தக் காரில் அவர்கள் பிரயாணம் செய்ய முடியுமா ? அங்கே சென்றால், மந்திரிகள் மாத்திரமா ஒரு காரில் செல்கிறார்கள் ? ஜில்லா கலெக்டர், அந்தத் தொகுதிலிருக்கும் எம்.எல்.ஏ., மந்திரியின் பர்ஸனல் கிளார்க், பியூன் போன்ற இத்தனை பேரும் மந்திரிகளோடு யாத்திரை செய்யவேண்டியிருக்கிறது. அந்தச் சின்ன காரில் அத்தனை பேரும் பிரயாணம் செய்யமுடியுமா என்பதை அவர்கள் சிந்திக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். எனவே, சாதாரண தொண்டர்களெல்லாம் மந்திரி ஸ்தானத்திற்கு வரவேண்டுமானால், அரசாங்கம்தான் அவர்களுக்குக் கார் அமைத்துக் கொடுக்கவேண்டும். மற்ற இடங்களுக்குப் போகின்ற இடத்திலே நண்பர்களுடைய கார் ஏதாவது வந்திருக்கிறதா என்றெல்லாம் மந்திரிகள் கேட்டுக்கொண்டு ஏறுவதெல்லாம் அனுஷ்டான சாத்தியமா என்பதையும் அவர்கள் சிந்திக்க விரும்புகிறேன்.

எங்கெங்கே Rest houses இருக்கின்றனவோ அங்கெல்லாம் மந்திரிகள் அவைகளில்தான் தங்குகிறார்கள். அதுகூட இல்லாத பல கிராமங்களுக்குச் செல்லும் போது, நண்பர்கள், உறவினர்கள், வீட்டில் தங்காமல் வேறு எங்கு தங்குவார்கள் என்று நான் கேட்கிறேன். அதைக்கூட கனம் மெம்பர்கள் ஆட்சேபித்தார்கள். அது முறை என்று நான் கருதவில்லை.

இதற்கு முன் இருந்த மந்திரிகளுக்கும் கவர்னர்களுக்கும் என்னென்ன சலுகைகள் அளிக்கப்பட்டன, இப்பொழுது எந்த அளவுக்கு அவர்கள் குறைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்த்தால்தான், அதில் சிக்கனம் அனுஷ்டிக்கப்பட்டிருக்கிறதா இல்லையா என்று உணர முடியும். முன்பெல்லாம் கவர்னர்கள் " ஸ்பெஷல் " ரயிலிலும், மந்திரிகள் தனி " சலூனி " லும் பிராயாணம் செய்துகொண்டிருந்தார்கள். ஆனால், இப்பொழுது கவர்னர் மாத்திரம் சலூன் வைத்திருக்கின்றார்கள். மந்திரிகள் மற்ற பிரயாணிகளைப்போல்தான் சிக்கனமாக யாத்திரை செய்து வருகின்றார்கள்.

நம்முடைய நாட்டிலே, விரும்பத் தகாத முறையிலே பல அரசியல் கட்சிகள் கொலை, கொள்ளை போன்ற காரியங்களில் இறங்கி, பல பெருந் தலைவர்களை கொலைக்கு ஆளாக்குகின்ற ... காரணத்தால்தான் இப்பொழுது

15th July 1957]   [Sri A. Vedarathnam Pillai]

மந்திரிகள் வெளியே செல்கிற காலங்களில் அவர்களுக்குப் போலீஸ் பந்தோபஸ்து அதிகமாகத் தேவை இருக்கிறதே அல்லாமல், இம்மாதிரி நடவடிக்கைகளில் நம்முடைய நாட்டில் இருக்கின்ற அரசியல் கட்சிகள் இறங்காமல் இருப்பார்களேயானால், இறங்குவது இல்லை என்று வாக்குறுதியை அளிப்பார்களேயானால், மந்திரிகள் செல்லும்போது எந்தவிதமான போலீஸ் பந்தோபஸ்தையும் அவர்கள் தேடிக் கொள்ள வேண்டியது அவசியம் இல்லை. பல சான்றுகள் நான் கூற முடியும். ஆனால், இதற்கு அவகாசம் இன்மையால் நான் சான்றுகள் கூருமல் விட்டு விடுகிறேன்.

கேரளத்தில் உள்ளவர்கள் சம்பளத்தைக் குறைத்துக் கொண்ட விஷயத்தைப் பற்றி குறிப்பிடப்பட்டது. அதைப் பார்த்துத் தான் நம்முடைய ஜனாதிபதி ஸ்ரீ ராஜேந்திர பிரசாத் அவர்கள் கூட தங்களுடைய சம்பளத்தைக் குறைத்துக் கொண்டார் என்று கூறப்பட்டது. சர்தார் வல்லபாய் படேல் அவர்கள் சொல்லிய ஒரு குஜராத்திய பழமொழியின் கருத்தை மட்டும் நான் கூறுகிறேன்: ஒரு வண்டி சென்று கொண்டிருந்ததாம். அதன் கீழே ஒரு நாய் போய்க்கொண்டிருந்ததாம். அந்த வண்டியைத் தானே இழுத்துக் கொண்டு போகிறதாக அந்த நாய் நினைத்ததாம். இந்தக் குஜராத்திப் பழமொழியை இங்கே நான் நினைவூட்டுகிறேன். கேரள மந்திரிகள் சம்பளத்தைக் குறைத்துக் கொண்டதைப் பார்த்து, ஜனாதிபதி அவர்கள் தங்களுடைய சம்பளத்தைக் குறைத்துக் கொண்டார் என்று சொன்னால், அவர்களுக்கு நான் ஒன்று சொல்கிறேன். கேரளத்தில் இன்றைக்கு முதல் மந்திரியாக இருக்கின்ற கனம் சங்கரன் நம்பூதிரிபாத் அவர்கள், இங்கே 1937-ம் வருஷம் நடந்த அந்த சட்டசபையில் நம்முடைய மந்திரிசபையிலுள்ளவர்கள் மூவாயிரம் சொச்சம் ரூபாயாக இருந்த சம்பளத்தை 500 ரூபாயாகக் குறைத்துக் கொண்டதை—அன்றைக்கு இந்தக் காங்கிரஸ் கட்சியிலே இருந்து கற்றுக் கொண்டு போனதைத் தான்—இன்றைக்கு அங்கே போய்ப் படிக்கிருரே அல்லாமல். அவர்கள் ஒன்றும் நூதனமாகச் செய்யவில்லை என்ற விஷயத்தை அவர்களுக்குக் குறிப்பிடுகிறேன், எது சொன்னாலும் அதற்கு ஒரு மாற்று அர்த்தம் கற்பித்துக்கொண்டு சொல்வது முறை அல்ல.

அன்று, மந்திரிகளைப் பற்றி பேசியபோது, அதற்குச் சான்ருக குறள் இங்கே கையாளப்படுவது விந்தையாக இருக்கிறது.

“ முறைப்படச் சூழ்ந்து முடிவிலவே செய்வர்
திறப்பா டிலாஅ தவர் ”

என்ற குறளைச் சொல்லி மந்திரிகள் மீது குற்றம் சாட்டப்பட்டது. அந்தக் குறளைக் கூறிய அன்பர், அதற்கு இரண்டு குறள் மேலே படித்திருப்பார்களேயானால், அமைச்சு எப்படி இருக்க வேண்டுமென்பதற்கு, கனம் அங்கத்தினர் குறிப்பிட்டதைக் காட்டிலும், சிறப்பாக ஒரு குறள் அமைந்திருக்கிறது. அதை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

“ செயற்கை அறிந்தக் கடைத்து முலகத்
தியற்கை அறிந்து செயல் ”

என்பதும் அதே திருவள்ளுவர் வாக்குதான். நம்முடைய மந்திரிமார்கள் உலக இயற்கையை நன்ருக அறிந்தவர்கள். உலக மக்களுடைய மனப் போக்கு எப்படி இருக்கிறது, இந்த நாட்டு மக்கள் எதை விரும்புகிருர்கள் என்பதை நன்ருக அறிந்தவர்களாகையால் தான், இன்றைக்கு மிகப் பெரும்பான்மையான மக்களால் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, இன்றைக்கு ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருக்கின்ருர்கள். அப்படி இல்லையானல் அவர்கள் இந்த இடத்தில் இருக்கத் தகுதி அற்றவர்கள் ஆவார்கள். இந்தக் குறள் எல்லாம் சொன்னது மற்றவர்களுக்குச் சொல்லிக்காட்டத்தான் என்று சிலர் நினைக்கிருர்கள் போலிருக்கிறது.

“ பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளுந்
திறன்தெரிந்து கூறப் படும் ”

[Sri A. Vedarathnam Pillai] [15th July 1957

என்று நாயனார் அவர்களே சுட்டிக் காட்டிருப்பதை இவர்கள் கூர்ந்து கவனிப்பார்களேயானால் இந்த மாதிரி நியாயமற்ற குற்றச்சாட்டுகளை அவர்கள்பால் சுமத்த முன்வரமாட்டார்கள் என்று சொல்ல விரும்புகிறேன்.

உதாரணமாக கரும்பைச் சுட்டிக் காட்டினார்கள். இடைக்கரும்பு, நுனிக் கரும்பு, அடிக்கரும்பு என கரும்பின் இந்த பகுதிகளிலேயே சுவை வேறுபடும். வேரைக் கடித்தாலும், நுனியைக் கடித்தாலும் ஒரு மாதிரியாகத்தான் இருக்கும். சாறாகப் பிழிந்து குடித்தால் கரும்பின் சுவை ஒரேமாதிரியாகத் தெரியும். கரும்பைச் சுவைக்க விரும்பி, நுனிக் கரும்பைச் சுவைத்தால் குரங்கு இஞ்சியைச் சுவைத்துப் பார்த்த கதையாகத் தான் ஆகும் என்பதைச் சொல்லாமல் இருக்க முடியாது. அப்படி இந்த ராஜ்யத்திலேயும் சில பகுதிகள் மிக்க வளமாக இருக்கும். சில நடுத்தரமாக இருக்கும். சில வறண்ட பகுதிகளாக இருப்பதும் உண்டு. கரும்பின் சுவையை நுனிக்கரும்பைச் சுவைத்துச் சொன்னால் எப்படி இருக்குமோ, அப்படி வறண்ட பிரதேசத்தைச் சுட்டிக்காட்டி ராஜ்ய நிர்வாகத்தைப்பற்றிப் பேசுவது முறையாகாது என்பதைச் உணர்த்த விரும்புகிறேன்.

குறிப்பாக இந்தச் சபையில் கூறப்பட்டுள்ள குறைபாடுகளை எல்லாம் தொகுத்தால், "கவர்னர் வேண்டாம். மந்திரிகள் அரசாங்கக் கார் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது கூடாது. அவர்கள் வெளியூர்களுக்குப் போகும்போது தனிப்பட்டவர் காரிலும் பிரயாணம் செய்யக்கூடாது. தனிப்பட்டவர்களுடைய வீட்டிலும் தங்கக்கூடாது" என்பதைத் தவிர வேறு ஒன்றுமே இல்லை. தனிப்பட்டவர்களுடைய வீடுகளில் தங்கக் கூடாது என்றால் அந்தத் தனிப்பட்டவர் பிளாக்மார்க்கெட்டுக்காரராகவோ, தகாத காரியங்களில் ஈடுபட்டுக் கிருமினல் குற்றங்களைப் புரிபவராகவோ இருந்தால் அது பொருத்தமாக இருக்கும். நல்ல யோக்கியமானவர்களுடைய வீட்டிலே, ரெஸ்டு ஹவுஸ் போன்ற வசதி இல்லாத இடங்களிலே தங்குவதில் என்ன ஆட்சேபனை இருக்கிறது என்றுதான் எனக்குப் புரியவில்லை. சிலர் அமைச்சர்கள் மாறுவேடம் தாங்கிப் போகவேண்டும் என்று சொன்னார்கள். மற்றொருவர் மாறுவேடம் தாங்கி மந்திரிகள் சென்றால் அடையாளம் தெரியாதா என்றார்கள். பொதுவாக மந்திரிகள் தாங்களாகவே ஒரு இடத்திற்குப் போவதில்லை. இங்குள்ள அங்கத்தினர்களாகிய நாம் தான் அவர்களைத் தொந்தரவு செய்து நம்முடைய பிரதேசங்களுக்கு அழைக்கிறோம். பொதுமக்கள், வாக்காளர்கள் ஆகிய நாம் எல்லாம் அழைக்கின்ற அழைப்பை ஏற்றுக்கொண்டு அவர்கள் வருகிறார்கள். அப்படிச் செல்பவர்கள் ஒரே ஒரு இலாகாவைச் சேர்ந்தவர் மாத்திரம் அல்ல. பல இலாகாவைச் சேர்ந்தவர்கள் போகிறார்கள். பொதுவாக ஒவ்வொரு வட்டாரத்திலும் உள்ளவர்கள் சில குறிப்பிட்ட விஷயங்களை அமைச்சருக்கு நேரில் காட்டவேண்டுமென்கிற கருத்தை வைத்துக் கொண்டே இந்த மாதிரியாக கூட்டங்களை அமைத்து அமைச்சர்களை வரவேற்கிறார்கள். இதனாலே பல நன்மைகள் தான் விளைகின்றன. ஆகவே ஏதோ அமைச்சர்களாக அடிக்கடி சுற்றுப்பிரயாணத்தை அமைத்துக் கொண்டு சென்று சர்க்கார் பணத்தை விரயமாக்குவது போலப் பேசுவதில் பயன் இல்லை என்று சொல்லிக் கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

**Mr. SPEAKER :** கனம் அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பதற்கு எத்தனை நேரம் எடுத்துக்கொள்ள விரும்புகிறார்கள் என அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM :** இருபது நிமிஷங்கள் தேவைப்படும்.

**Mr. SPEAKER :** இப்போது மணி பத்து ஐந்தாகிறது. கனம் அமைச்சருக்கு இருபது நிமிஷங்கள் வேண்டும். இன்னும் நான்கு அங்கத்தினர்கள் பேசலாம். ஒவ்வொருவரும் பத்து நிமிஷங்களுக்கு மேற்படாதவாறு பேசும்படி அழைக்கிறேன். இப்போது ஸ்ரீ எஸ். பக்கிரிசாமி பிள்ளை அவர்

15th July 1957]

* **Sri S. PAKKIRISAMI PILLAI** : கனம் தலைவர் அவர்களே, இந்த வெட்டுப் பிரேரணையின் மீது பேசும்போது சில வார்த்தைகளைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. நான் இதற்கு முன்னாலேயே ஒரு வெட்டுப் பிரேரணையைக் கொடுத்தேன். குறிப்பாக கவர்னர் பதவி ஒன்று இருக்க வேண்டியது அவசியமா ? அதற்காக எவ்வளவு பணம் செலவாகிறது என்பதைப்பற்றி எல்லாம் பேசவேண்டும் என்பதற்காகவே அதைக் கொடுத்தேன். சாதாரணமாக கவர்னர் பதவி என்பது ஒரு வண்டியில் உள்ள நாங்கு சக்கரங்களைத் தவிர வேறாக இருக்கும் ஐந்தாவது சக்கரம். நான்கு சக்கரங்களே போதுமானது. ஐந்தாவது சக்கரம் அனாவசிமாக இருப்பது போலவே கவர்னர் பதவி இருக்கிறது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதனால் பிரயோசனம் கிடையாது. பணச் செலவு. இதைப்பற்றிப் பேச நினைத்தே வெட்டுப் பிரேரணை கொடுத்தேன்.

**Mr. SPEAKER** : I am sorry that the hon. Member is raising the question as to why his cut motion on the Governor's salary was not allowed. Article 202 of the Constitution makes the position clear. It says—

'202 (3) The following expenditure shall be expenditure charged on the Consolidated Fund of each State—

(*a*) the emoluments and allowances of the Governor and other expenditure relating to his office;

(*b*) the salaries and allowances of the Speaker and the Deputy Speaker of the Legislative Assembly and, in the case of a State having a Legislative Council, also of the Chairman and the Deputy Chairman of the Legislative Council;

(*c*) expenditure in respect of the salaries and allowances of Judges of any High Court.'

Article 203 says—

'(1) So much of the estimates as relates to expenditure charged upon the Consolidated Fund of a State shall not be submitted to the vote of the Legislative Assembly, but nothing in this clause shall be construed as preventing the discussion in the Legislature of any of those estimates'.

Therefore, while I am prepared to allow Sri Pakkirisami Pillai to talk on this Demand, I am not prepared to allow his cut motion on the Governor's salary.

**Sri S. PAKKIRISAMI PILLAI** : பத்து வருஷ காலமாகவோ, ஐந்து வருஷ காலமாகவோ அப்படி இருந்தாலும் கூட நாம் இப்போது அதை எப்படி மாற்றி அமைக்கலாம் என்பதை யோசிக்கலாம்.

**Mr. SPEAKER** : உங்கள் பிரதிநிதிகளைக் கொண்டு பாராளும் மன்றத்தில் அந்தச் சட்டத்தை மாற்றவேண்டும். இல்லாத வரைக்கும் இங்கே அதைப்பற்றி வெட்டுப் பிரேரணை கொடுக்க முடியாது.

**Sri S. PAKKIRISAMI PILLAI** : நம்முடைய அரசியல் அமைப்பில் அப்படி இருந்தாலும் இப்போது அதை . . .

**Sri A. VEDARATHNAM PILLAI** : On a point of order நம்முடைய அரசியல் அமைப்புக்கு நாம் விசுவாசமாக நடப்போம் என்று பிரமாணம் எடுத்துக்கொண்டிருக்கிற அங்கத்தினர்கள் அதற்கு விரோதமாக பேசுவது முறையா என்று கேட்கிறேன் ?

[15th July 1957

**Mr. SPEAKER :** அவர்கள் விரோதமாக பேசவில்லை அந்தச் சட்டத்தை எப்படி மாற்றுவது என்று பேசினார்கள். அதற்குப் பாராளும் மன்றத்தில் அவர்களுடைய அங்கத்தினர்களைக் கொண்டு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் சொன்னேன்.

**Sri S. PAKKIRISAMI PILLAI :** சட்ட வரம்புக்கு உட்பட்டு எனக்கு இங்கே பேச உரிமை இருக்கிறது. அதைத் தடுக்க முடியாது. நம் நாட்டில் ஒரு சோஷலிஸ சமுதாயத்தைச் சிருஷ்டிக்க வேண்டுமென்று முயற்சி செய்வதாகக் கூறிக்கொள்கிறார்கள். அந்த முறையை நம் நாட்டில் அமைத்தாக வேண்டுமென்ற கொள்கையை லட்சியத்தை மனத்தில் கொண்டவர்களைப் போலப் பேசினாலும் கூட செயல் முறையில் சோஷலிஸ சமுதாயத்தை அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை அவர்கள் மேற்கொள்வதாகத் தெரியவில்லை, என்பதை நாம் கொஞ்சம் நிதானமாக ஆராய்ந்து பார்த்தால் தெரியும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மூன்று வருஷங்களாகப் பேசப்பட்டு வருகிற அந்தக் கொள்கை இன்றைக்கும் வெறும் பேச்சளவில்தான் இருக்கிறது. நடைமுறையில் கொண்டு வருவதற்கு எவ்விதமான முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை. அதற்கு ஒரு உதாரணம். ஒரு ராஜ்யத்தின் பணத்திலிருந்து நிறையப் பணத்தை எடுத்து ஒரு தனி நபருடைய ஸ்தானத்திற்குச் செலவிட்டு வருவதுதான். சுமார் எட்டு லட்சத்திற்கு மேல் அந்தத் தனி நபருக்குச் செலவிடப்படுகிறது. அதே சமயத்தில் அடித்தளத்தில் இருக்கக் கூடிய ஒருவன் ஒரு கவளச் சோற்றுக்குத் திண்டாடிக்கொண்டிருக்கிறதையும் நாம் பார்க்கிறோம். ஒரு நபருக்கு இத்தனை பணம் செலவிடலாமா ?

**Sri P. S. K. LAKSHMIPATHI RAJ :** கனம் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களைச் சுட்டும்போது ஒரு தனி நபர் என்று குறிப்பிட்டுப் பேசலாமா ?

**Mr. SPEAKER :** தனி நபர் என்றால் என்ன பொருள் என்று உங்களுக்குத் தோன்றுகிறது ?

**Sri P. S. K. LAKSHMIPATHI RAJ :** ஒரு தனி நபர், தனி நபர் என்று குறிப்பிடும் போது யாரோ ஒரு அனாமதேயப் பேர்வழியைச் சொல்வதுபோல புலப்படவில்லையா ?

**Mr. SPEAKER :** அப்படி ஒன்றும் அதில் கெடுதலாகப் பொருள் இல்லை. கனம் அங்கத்தினர் தொடர்ந்து பேசலாம்.

*** Sri S. PAKKIRISAMI PILLAI :** இப்படி மேலுள்ளவருக்கு லட்சக் கணக்கிலும், கீழ் உள்ளவர்களுக்குச் சோற்றுக்கு வழி இல்லாத நிலையிலும் பணம் செலவிடப்படுவது மலைக்கும் மடுவுக்கும் போல இருக்கிறது. இது ஒரு சோஷலிஸ சமுதாயத்தைக் கொண்டு வருவதற்கான அறிகுறி இல்லை. என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதே சமயத்தில் சாதாரணமாக சோஷலிஸ பண்பு ஏற்பட வேண்டுமென்றால் சம்பள வித்தியாசத்தை விகித ஒன்றுக்குப் பத்தாக விகிதம் ஆக்கிக் கொள்ளலாம். உயர்ந்தப் பட்ச சம்பளம் ஆயிரம் ரூபாய் என்று வைத்துக்கொண்டால் குறைந்த பட்ச சம்பளம் நூறு ரூபாயாக இருக்க வேண்டும். இப்படிச் செய்தால் தான் குறைந்த சம்பளம் வாங்குகிற கீழ்தர சிப்பந்திகளுக்கும் தங்கள் சம்பள உயர்வு ஏற்பட்டுத்தான் சுகவாழ்வு வசதி யிருக்கும் என்று நம்பிக்கை ஏற்படும். அம்மாதிரி இல்லாமல் பழைய முறையிலேயே ஆட்சியை நடத்திக் கொண்டிருந்தால் நம் நாட்டில் கொண்டு வந்த கொள்கை லட்சியம் வெறும் பேச்சளவோடு நின்று விடும். இது வெறும் பேச்சு, ஏமாற்றும் பேச்சு, மக்களை ஏமாற்றும் பேச்சு உலக மக்களை ஏமாற்றும் கொள்கை, லக்ஷியம் என்றும் சொல்லிக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

10-12 a.m. **Sri M. P. SUBRAMANIAM :** அவைத் தலைவர் அவர்களே, இந்த மான்யத்தின் மீது கொண்டு வந்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளை நான் கூற விரும்புகிறேன். இந்த மான்யத்தில்

15th July 1957] [Sri M. P. Subramaniam]

கவர்னர் பதவியைப்பற்றி பல அங்கத்தினர்கள் வேண்டும், வேண்டாம் என்றெல்லாம் பேசினார்கள். ஆனால் இந்த ஜனநாயக காலத்தில் நம்முடைய ஒரு மாகாணத்திற்கு கவர்னர் பதவி அவசியமா என்பதை கட்சி பேதம் இன்றி யோசித்துக் கூற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். அதைப்பற்றி சபையில் பேசி ஒரு முடிவு கூற அதிகாரம் இல்லை யென்றாலும், நம்முடைய கருத்தைத் தெரிவித்தால் பலருக்கு அது உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

வெள்ளைக்கார ஏகாதிபத்தியக் காலத்தில் அவர்களுடைய காரியங்களை கண்காணித்துக் கொள்ளவும், அவர்களுக்கு தூதுவர்களாக இருக்கவும், மாநிலங்களில் பலருக்கு பதவிகளை அளிக்கவும் இந்த கவர்னர் பதவி பொருத்தமாக இருந்திருக்கலாம். ஆனால் ஜனநாயக பண்பை வளர்க்கும் இந்தக் காலத்தில் இந்தக் கவர்னர் பதவி, அதிகாரம் இல்லாத கவர்னர் பதவி, லட்சக்கணக்கான ரூபாய் செலவில் இருப்பது அவசியம் இல்லை என்ற என் உளக் கருத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி கவர்னர் பதவி இருக்கவேண்டும் என்றால், அமெரிக்காவைப் போன்று மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் அந்தப் பதவியில் இருந்தால் மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர் என்றாவது சொல்லலாம். தேர்தலில் தோற்றுப் போனவர்கள், மக்களின் நன்மதிப்பை இழந்தவர்கள், வேறு ராஜ்யங்களிலிருந்து துரத்தி அடிக்கப்பட்டவர்கள், இவர்களே கவர்னர் பதவிக்கு நியமிக்கப்படுகிறார்கள். இம்மாதிரியானவர்களுக்கு பதவி அளிப்பதைத் தவிர, மக்களின் வரிப்பணத்தை செலவு செய்வதைத் தவிர வேறு எந்த விதமான பயனும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. இந்த பத்து லட்சம் ரூபாய், மக்களுக்கு பல நல்ல காரியங்களைச் செய்வதற்கு உதவும். நாம் போடுகின்ற சட்டங்கள் கவர்னர் பெயரில் வருகின்றதைத் தவிர வேறு எந்தவிதமான அதிகாரமும் அவருக்கு இல்லை என்பதை தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். இதைக் கட்சி சார்பாக நினைக்காமல், இந்தக் கவர்னர் பதவி அவசியம்தானா என்பதை பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அடுத்தபடியாக அமைச்சர்கள் சிக்கனத்தை முன்னிட்டு தங்கள் சம்பளத்தைக் குறைத்துக்கொள்ளவேண்டும் என்றும், ...ார்களை சிறிதாக வைத்துக்கொள்ள வேண்டும் என்றும் சில அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். என் தனிப்பட்ட அபிப்பிராயம் இம்முறைகளினால் சிக்கனம் ஏற்படாது என்பதுதான். தனிப்பட்ட அமைச்சர்கள் தங்களுடைய சம்பளத்தில் ரூபாய் 200 அல்லது 300 குறைத்துக்கொள்வதினால் சிக்கனம் ஏற்பட்டு விடாது. ஆனால் மற்ற பல இனங்களில் சிக்கனம் செய்வதற்கு நம் ராஜ்யத்தில் பல வாய்ப்புகளும் வசதிகளும் இருக்கின்றன. அமைச்சர்கள் சாதாரண காலங்களில் அடிக்கடி சுற்றுப்பிரயாணம் செய்கிறார்கள். சுற்றுப் பிரயாணம் செய்வது மக்களின் கஷ்ட நஷ்டங்களைத் தெரிந்து கொள்வதற்கு அவசியம் என்றாலும், நாம் சாதாரணமாக நடைமுறையில் பார்ப்பது என்ன வென்றால், ஒரே நாளில் பத்து அல்லது இருபது இடங்களில் விழாக்களை வைத்துக்கொண்டு காலை ஆறு மணி முதல் இரவு பத்து அல்லது பதினொன்று மணி வரையில், ஒவ்வொரு ஊரிலும் ஐந்து அல்லது பத்து நிமிஷங்கள் தங்கி இரண்டு வார்த்தைகளை பேசிவிட்டு திரும்பி விடுகிறார்கள். இந்தக் குறுகிய காலத்தில் அந்த வட்டாரத்திலுள்ள மக்களையோ, அல்லது அவர்களுடைய பிரதிநிதிகளையோ அல்லது அதிகாரிகளையோ சந்தித்துப் பேசி, அங்கு உள்ள பிரச்னைகளை புரிந்துகொள்ள முடியவே முடியாது. தனிப்பட்டவர்களோ சட்டசபை அங்கத்தினர்களோ ஒரு குறிப்பிட்ட அமைச்சரை தங்களுடைய ஊரிலோ அல்லது தொகுதியிலோ கூட்டிச் சென்று தன் செல்வாக்கை காண்பித்துக் கொள்ளத்தான் பயன்படுகிறது. நடைமுறையில் இந்த சுற்றுப் பிரயாணத்தினால் மக்களுக்கு யாதொரு பயனும் ஏற்படுவதில்லை என்று உறுதியாகக் கூறுவேன். அமைச்சருடைய சுற்று பிரயாணத்தினால் அதிகாரிகளுடைய வேலைகள் எல்லாம் பாதிக்கப்படுகின்றன. அமைச்சர்களுடைய சுற்றுப்பிரயாணத்திற்கு நான்கு அல்லது ஐந்து நாட்களுக்கு முன்பாகவே அதற்கான நடவடிக்கைகளை ஆயத்தம் செய்து, அவர்களுடைய சுற்றுப் பிரயாணம் முடிந்து அவர்களை அனுப்பும் வரையில் இதிலேயே முழு கவனத்தையும் செலுத்தி வருகிறார்கள். இந்தக் காரணத்தால், பார்க்க

வேண்டிய "பைல்கள்" பதில் எழுத வேண்டிய கடிதங்கள் எல்லாம் தாமதம் அடைகின்றன. இவர்களுடைய சுற்றுப்பிரயாணத்தினுல் ஏற்படும் நன்மையைவிட சுற்றுப்பிரயாணம் செய்யாமல், இங்கேயே இருந்து காரியங்களை கவனித்தால் அதிக நன்மை ஏற்படும். அதிகாரிகள் தங்கள் வேலைகளை சரிவர கவனிப்பதில் இந்தக் காலம் நிச்சயமாகப் பயன்படும். ஆறு மாதத்திற்கு ஒரு முறையோ அல்லது மூன்று மாதத்திற்கு ஒரு முறையோ ராஜ்யத்தில் பரவலாக சுற்றுப்பிரயாணம் செய்யலாம். அப்படி பிரயாணம் செய்யும்போது அந்த வட்டாரத்திலுள்ள அதிகாரிகளுடன் பிரயாணம் செய்யலாம். அப்படி இல்லாமல் ஒரு தனிப்பட்ட நபருடன் அவருடைய காரில் சென்றுல் பொது மக்களுக்கு ஒரு தவரான கருத்து உண்டாக இடம் இருக்கிறது. அந்தக் குறிப்பிட்ட நபரைக் கண்டு அதிகாரிகளே பயப்பட வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகையால் அவர்கள் அந்த வட்டாரத்திலுள்ள அதிகாரிகளுடன் சேர்ந்து அரசாங்கம் கொடுத்திருக்கும் காரில் செல்வது மிகமிகச் சிறந்ததாக இருக்கும். ஒரு நாளில் இருபது அல்லது முப்பது நிகழ்ச்சிகளை வைத்துக்கொள்ளாமல், ஒன்றிரண்டு நிகழ்ச்சிகளை மட்டும் வைத்துக்கொண்டு அந்த வட்டாரத்திலுள்ள, எம்.எல்.ஏ.-க்களையோ, எம்.பி.-க்களையோ அல்லது பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்டு போன்றவர்களையோ சந்தித்து, அங்குள்ள பிரச்னைகளைக் கேட்டு, அதிகாரிகளுடன் கலந்து பேசி, பரிகாரம் செய்தால் மிகவும் நன்றாக இருக்கும்.

அண்மையில் முதல் அமைச்சர் அவர்கள் பாகல்மேட்டில் எல்லா அதிகாரிகளையும் வரவழைத்து, கிராம மக்களோடு சந்தித்துப் பேசி, அவர்களுடைய குறைகளைத் தீர்ப்பதற்கு முயற்சித்தார்கள். உண்மையாக நடைமுறையில், அம்மாதிரி ஒன்றும் செய்ய முடியாது. உதாரணமாக ஒரு ஏரியையோ அல்லது ஒரு வாய்க்காலையோ வெட்ட வேண்டும் என்று ஒருவர் மனுக்கொடுத்தால், அப்பொழுதே உத்தரவு கொடுப்பது என்பது சாத்தியமில்லை. அதற்குரிய இஞ்சினியரைக் கலந்து ஆலோசித்துத்தான் மற்ற நடவடிக்கைகள் எடுக்கமுடியும். ஒரு குறுகிய காலத்தில் அதாவது ஒரு மனு போட்டு பதினைந்து நாட்களுக்குள்ளாக தக்க பதிலை கொடுத்தார்களானுல் மிகவும் நன்றாக இருக்கும். அதிகாரிகள் தகுந்த பதில் கொடுப்பதில் கால தாமதம் ஏற்படுகிறது என்பதை சுட்டிக்காட்ட ஒரு சம்பவத்தைக் குறிப்பிட விரும்புகிறேன்.

ஆத்தூர் தாலூகாவில், தம்பம்பட்டி கிராமத்தில், 1953-ஆம் ஆண்டில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. அதைப்பற்றி, நிதி மந்திரி அவர்களுக்கும், "சீப் செக்ரடரி" அவர்களுக்கும் இரண்டு கடிதங்கள் எழுதினேன். மூன்று மாதங்கள் கழித்து அந்த விஷயம் சட்ட இலாகாவில் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது என்று ஒரு பதில் வந்தது. பிறகு ஏறக்குறைய ஒரு வருஷம் ஆகியும் வேறு எந்த பதிலும் வரவே இல்லை. ஆகவே, அரசாங்கம் உண்மையாகவே சிக்கனமாக நல்லமுறையில் ஜனநாயகம் இந்த நாட்டில் நடைபெற வேண்டுமானுல் நான் மேற்சொன்ன விஷயங்களை நன்கு பரிசீலனை செய்யவேணுமாய் அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சில நாட்களுக்கு முன்பு பாராளு மன்றத் தலைவர் சென்னைக்கு வந்திருந்தபோது உதவி மந்திரிகள் நியமனத்தைப்பறறி சொல்லிய கருத்துக்கள் மிகவும் வரவேற்கத் தக்கவை. இவ்விதம் உதவி மந்திரிகள் நியமிப்பது—ஒரு லட்சம், இரண்டு லட்ச ரூபாய் செலவானுலும்—ஒருவிதத்தில் நல்லதே. ஏனென்றுல் பெரிய தலைவர்கள் மந்திரிகளாயிருக்கும் போது, அவர்களோடு உதவி மந்திரியாக இருக்க வாய்ப்பு அளித்தால், அவர்கள் தக்க அனுபவமும், பயிற்சியும் பெற சௌகர்யமாயிருக்கும். பிற்காலத்தில் ராஜ்ய நிர்வாகம் திறம்பட நடைபெற உதவியாயிருக்கும் என்று கூறி என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**DR. SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDRAN:** கனம் சபா நாயகர் அவர்களே, இந்த "Head of State Ministers and Headquarters Staff" என்கிற தலைப்பின்கீழ் 'ஸ்திரீகள் க்ஷேமநல' இலாகா வருகிறது. மற்ற

15th July 1957] [Dr. Srimathi T. S. Soundaram Ramachandran]

அங்கத்தினர்கள் இதர விஷயங்களைப்பற்றிப் பேசினார்கள் நான் ஸ்திரீகள் க்ஷேமநல இலாகாவைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சில வருஷங்களுக்கு முன்பு இந்த இலாகா ஏற்பட்டிருந்தும், பெண்களுடைய பிரச்னை இன்றும் தீர்ந்தபாடில்லை. இந்த இலாகா இன்னும் **permanent** ஆகவில்லை, **temporary** ஆகவே இருக்கிறது. பல வருஷங்களாக இதைப்பற்றி எடுத்துச் சொல்லி வந்திருக்கிறேன். **Welfare State** ஆக நமது ராஜ்யம் இயங்கவேண்டுமென்று நாம் சொல்லுகின்ற இந்நேரத்திலே ஸ்திரீகள் நலத்தைப்பற்றி கவனிக்கும் இந்த இலாகாவை **permanent** செய்யவேண்டுமென்று மீண்டும் வற்புறுத்தி சொல்ல விரும்புகிறேன். இந்த இலாகாவிற்கு ஒரு **Advisory Board** இருக்கிறது. பல வருஷங்களாக அதற்குத் தலைவியாக இருந்திருக்கிறேன் என்று சொல்வதைத் தவிர எங்களுடைய பல கோரிக்கைகள் கவனிக்கப்படவில்லை என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திலே பெண்களுடைய பிரச்னையை ஏதோ ஒரு சாதாரணமான பிரச்னையாக எடுத்துக்கொள்ளக்கூடாது. இன்றைய சமுதாயத்தில், கல்வித் துறையிலும், மற்றதுறைகளிலும் **rehabilitation** அதாவது புனரமைப்பு செய்யும்போது, மொத்த ஜனத்தொகையில் மூன்றில் இரண்டு பங்காக இருக்கும் குழந்தைகள் பெண்கள் பிரச்னைகளை நல்ல முறையிலே கவனித்து அவர்களுக்கு வேண்டியதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த இலாகாவிற்கு இப்போது ரூபாய் ஐந்து லட்சத்துக்கும் குறைவாகத்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த மானியத்தின் கீழ் ஒரு சிறிய தொகையை இந்த இலாகாவுக்கு ஒதுக்கி ஒரு **officer**-ஐயும் போட்டதனாலே மட்டும் ஜனத்தொகையில் பெரும்பான்மையாயுள்ள பெண்களுடைய பிரச்னை தீர்ந்து விடுமா? ஆண்களும் பெண்களும் வேலை செய்து குடும்பங்களை காப்பாற்ற வேண்டிய நிலைமை பெருவாரியான மக்களிடையே ஏற்பட்டிருப்பதால் நமது **Welfare** திட்டத்தில் பெண்கள் சம்மந்தமாக அதிக கவனம் செலுத்த வேண்டும். ஒவ்வொரு மந்திரி சபையினிடமும் இது பற்றி பலதடவை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இரண்டாவது ஐந்து வருஷத் திட்டத்தில் பெண்களுக்காக சுமார் ரூபாய் 73·87 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிலே போன வருஷம் ரூபாய் 37,000 செலவழிக்கப்பட்டது. இந்த வருஷம் ஒன்றேமுக்கால் லட்சம் ரூபாய் செலவு செய்ய ஒதுக்கப்படடிருக்கிறது. அடுத்த மூன்று வருஷங்களில் பாக்கி ரூபாய் 70 லட்சத்தை சிலவு செய்ய ஏதாவது திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றனவா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

**Male Nurse**-கள் **Female Nurse**-கள் பற்றி இங்கு கேட்கப்பட்ட சில ருசிகரமான கேள்விகளை நானும் கவனித்துக்கொண்டுதான் வந்தேன். புருஷர்களுக்கு பாதுகாப்பு வேண்டாம் என்று சொல்கிற கட்சியை நான் சேர்ந்தவள் அல்ல. ஆனால் நமது சமுதாய சம்பிரதாயத்தைப் பார்க்கும்போது பெண்களுக்கு அதிகமான பாதுகாப்பு அவசியம் என்கிறதை நீங்களும் ஒப்புக்கொள்வீர்கள் என்று எதிர்பார்க்கிறேன். பெண்கள் 'நர்ஸ்' படிப்புக்குப் போனாலும் சரி, ஆசிரியை படிப்புக்குப் போனாலும் சரி, மருத்துவ படிப்புக்குப் போனாலும் சரி, முதலிலே அவர்களுக்கு ஒரு **hostel** ஏற்படுத்தி கொடுப்பது அவசியமாகயிருக்கிறது.

பெண்கள் விதவைகளாகிய போதிலும் அல்லது புருஷர்களால் காப்பாற்றப்படாமல் விட்டுவிடப்படுகிற நிலைமையிலும், அவர்களை கவனிக்க பல ஸ்தாபனங்கள் வேண்டும். நகரத்திலே அம்மாதிரியான ஸ்தாபனங்கள் இருக்கின்றன. ஆனால், ஜில்லாக்களில் அம்மாதிரியான ஸ்தாபனங்கள் இல்லை. அதனால் நான்கு, ஐந்து, ஆறு குழந்தைகளுடனும், வயிற்றில் ஒரு குழந்தையுடனும் புருஷனால் விரட்டி அடிக்கப்பட்ட பெண்களுக்கு தங்குவதற்கு ஒரு இடம் ஒவ்வொரு ஜில்லாவிலும் இல்லாவிட்டால் அவர்கள் எங்கு செல்வார்கள்? புருஷர்கள் வேண்டுமானால் எங்கேயாவது கூலி வேலை செய்தோ பிச்சை எடுத்தோ பிழைத்து கொள்வார்கள். ஆனால் பாவம், திக்கற்ற பெண்கள் அவ்விதம் செய்ய முடியாத நிலைமையில் இருப்பதால், ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு **shelter** அமைத்து

[Dr. Srimathi T. S. Soundaram Ramachandran] [15th July 1957

அதில் அங்கு தங்கி பிழைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும். பத்து வருஷங்களாக நான் இதைப்பற்றி சொல்லி வந்திருக்கிறேன். இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திலே கூட அந்த **shelter**-க்காக நம்முடைய சர்க்கார் ஒரு வழியும் செய்யவில்லை. இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் இந்திய சர்க்கார் பணம் கொடுத்தால் அதை வைத்துக் கொண்டு இம்மாதிரியான காரியங்களை செய்யலாம் என்கிற மனப்பான்மையில் இல்லாமல், நமது ராஜ்ய சர்க்கார் தங்களுடைய நிதியிலிருந்து கட்டாயமாக போதிய பணம் ஒதுக்கி ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒரு **shelter** ஏற்படுத்துவதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு ஏற்படுத்தினால் அங்கு தங்கும் பெண்கள் உண்மையிலே பிழைக்க வசதி ஏற்படும். அவர்களுக்கு தையல், நூல் நூற்பது போன்ற பல தொழில்களில் பயிற்சி கொடுத்தால், அவர்களும் கிராமங்களுக்கு சென்று கிராம சேவிகளாக தொண்டாற்றுவதற்கு சௌகர்யமாயிருக்கும். இன்னும் சில கிராமங்களுக்குச் சென்று பார்த்தால், நூற்றுக் கணக்கான பெண்கள் இவ்வித வேலைகளில், பல **limitation**-க்கு இடையில், ஈடுபட்டிருப்பதைக் காணலாம். இது கிராம பெண்களும் வேலைசெய்யும் ஆற்றல் படைத்தவர்கள் என்பதைக் காட்டுகிறது. ஆதலால் ஒரு ஜில்லாவுக்கு ஒரு இடம் வேண்டும். நாம் சேவிகாஸ்ரமம் என்று அழைக்கிறோம். சர்க்கார் இதை **Service Home** என்று சொல்லுகிறார்கள்.

சென்னை நகரத்தில் இவர்களை பராமரிக்க பல ஸ்தாபனங்கள் இருப்பதும், கன்னியாகுமரி, திருநெல்வேலி, சேலம் முதலிய ஜில்லாக்களிலிருந்து பெண்கள் சென்னைக்கு வருவது கஷ்டம். ஆனால், ராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி முதலிய ஜில்லாக்களைச் சேர்ந்த பதினைங்கு பெண்கள்தான் சென்னை ஸ்தாபனத்தில் இடம் பெற்றிருந்தார்கள். இவர்களை என்னுடைய யோசனையின்பேரில் மேற்படி ஜில்லாக்களின் பக்கத்திலுள்ள ஒரு ஸ்தாபனத்திற்கு மாற்றிவிட்டார்கள். இம்மாதிரி **300, 400** மைல் தூரம் பெண்கள் போக வேண்டிய நிலைமை ஏற்படுவதால், ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு **shelter** இருந்தால் சௌகர்யமாகயிருக்கும்.

இப்போது சமூகநல போர்டு ஒன்று இருக்கிறது. இதில் அதிகப்படியான பெண்களை அமைத்தும் ஒவ்வொரு ஜில்லாவிலும், நூல் நூற்றல், குடும்பக் கலை, சமூகக் கல்வி முதலிய விஷயங்களில் பயிற்சி பெற்ற சேவிகளும் வேலை செய்வதோடு, **Supervisor**-களையும் நியமித்தால், இன்னும் தீவிரமாக இந்தத் துறையில் வேலை செய்ய முடியும் என்று குறிப்பிட விரும்புகிறேன். இந்த விஷயத்தில் என்னுடைய சக பெண் அங்கத்தினர்களுடைய ஒத்துழைப்பையும் முயற்சியையும் கோருகிறேன். இம்மாதிரியான **Supervisor**-களின் வேலைகளை மேற்பார்வையிட ஒரு ஜில்லாவிற்கு **Woman Chief Social Organizer**-ஐ நியமிக்கவேண்டும். அவர் திறமையும், தகுதியும் அனுபவமும் மிக்கவராய் இருக்கவேண்டும். இவ்வாறு பெண்கள் செய்ய வேண்டிய வேலையை பெண்களுக்கே விட வேண்டும் என்று காந்திஜி சொல்லிய உண்மை இப்பொழுது நம்முடைய அனுபவத்திலிருந்து எவ்வளவு அவசியம் என்று தெரியவருகிறது.

பெண்களுக்காகச் செய்யப்படும் காரியங்கள் பெண்களின் பொருளாதார நிலைமையை அபிவிருத்தி செய்யக்கூடியதாக இருக்கவேண்டும். அப்படி இல்லாவிட்டால், அந்த வேலைகள் கிராமங்களில் கவர்ச்சி கொண்டவையாக இருக்காது.

“ வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும்—இங்கு
வாழும் மனிதருக்கெல்லாம் ” என்று பாரதியார் கூறினார்.

ஆகவே வயிற்றுக்குச் சோறிட்ட பிறகுதான் கல்வியைப் பற்றி பேச முடியும்.

பெண்கள் முன்னேற்றத்திற்காகவும், அவர்களுடைய நலன்களை பாதுகாப்பதற்காகவும் பணம் ஒதுக்கும் இனங்களில் அதிகமாகப் பணம் ஒதுக்க வேண்டும். அவர்களுக்கு வருமானம் கொடுக்கக்கூடிய கைத்தொழில்களையும் சிறு தொழில்களையும் அபிவிருத்தி செய்வதற்கு நிறைய ஊக்கம் கொடுக்கவேண்டும். பெண்களுக்காக பணம் ஒதுக்கும்போது

கொஞ்சம்கூடக் கருமித்தனம் பண்ணவேண்டாம். அவர்களுக்கு இன்று ஒரு மடங்கு பணம் ஒதுக்கினால் அரசாங்கத்தாரின் பணம் பத்து மடங்காகப் பெருகும் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

SRI K. SATTANATHA KARAYALAR: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானிய கோரிக்கையின் மீது பிரேரேபித்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல அவாவுறுகிறேன். இன்று எனக்கு முன்பு பேசிய பல கனம் நண்பர்கள் கவர்னர் பதவியைப்பற்றி காரசாரமாகப் பேசினார்கள். ஒன்றிரண்டு காங்கிரஸ் நண்பர்கள் கவர்னர் பதவி இருக்கவேண்டும் என்பதை ஆதரித்தும் பேசினார்கள். கவர்னர் பதவி தொடர்ந்து இருக்கவேண்டுமா அல்லது அந்தப் பதவிக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்துவிட வேண்டுமா என்பது பற்றிய விவாதம் இந்த சபைக்கு அப்பாற்பட்ட ஒரு விஷயம் என்பது எனக்குத் தெரியும். ஆனால், இந்தப் பிரச்னையை பரிசீலனை செய்யும்போது, இன்று நாட்டில் துரதிர்ஷ்டவசமாக இருக்கும் ஒரு அசாதாரணமான நிலைமையை—அசாதாரணமான பொருளாதார நெருக்கடியை—மனதில் கொண்டு பரிசீலனை செய்யவேண்டும் என்பதை இந்த சபையின் முன் மிகப் பணிவுடன் தெருவிக்க விரும்புகிறேன்.

நமது நாட்டில் வருடாவருடம் சுமார் ஒரு லட்சம் குழந்தைகள் பள்ளிக்கூடங்களுக்கு புதிதாக வந்து சேருகிறார்கள்; அதே சமயத்தில், சுமார் 10 லட்சத்திற்கு மேற்பட்ட குழந்தைகள் பள்ளிக்கூடம் செல்வதற்கு வாய்ப்பும் வசதியும் இல்லாமல் அல்லலுறுகிறார்கள் என்று இந்த சபையில் இதற்கு முன்பு குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது மாத்திரமல்லாமல், வசிக்க வசதியில்லாமல் 6,000—7,000 மக்கள் சென்னையில் வீதிகளில் வாழ்கிறார்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. நாட்டிலுள்ள மக்கள் பஞ்சத்தாலும், வேலையில்லாத் திண்டாட்டத்தாலும், வாழ்க்கை வசதிகள் இல்லாததாலும் பெருவாரியாக அல்லலுறும் நிலையில் கவர்னர் பதவிக்கு நாம் இத்தனை லட்சம் ரூபாய்—சுமார் 9 லட்சம் ரூபாய்—செலவு செய்யவேண்டுமா என்பதுபற்றி சிந்திக்கவேண்டும். நமது நாட்டில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியுமா முடியாதா என்பது பற்றி சிந்தித்துக்கொண்டிருக்கிறோம். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை இப்பொழுது வகுத்திருக்கும் அளவிற்கு நிறைவேற்றுவது சாத்தியமில்லை என்றால் அதில் ஏதாவது பகுதிகளை விட்டுவிடலாமா என்று யோசிக்கின்ற நிலையில் நாம் இருக்கிறோம். இப்படிப்பட்ட நிலைமையில் கவர்னர் பதவியை தொடர்ந்து நீடிக்கவேண்டுமா என்பது பற்றி நாம் நன்றாக யோசிக்கவேண்டும்.

ஒரு நண்பர் "முன்பு வெள்ளையர்கள் காலத்தில் அவர்கள் குதிரைப் பட்டாளத்திற்குச் செலவு செய்த அளவுகூட நாம் கவர்னருக்கு செலவு செய்யவில்லை" என்று கூறினார்கள். அவர் கூறியது உண்மையாக இருக்கலாம். குதிரைகளுக்காக மட்டுமல்ல; நாய்களுக்காகக்கூட வெள்ளையர்கள் நிறையச் செலவு செய்தார்கள். வெள்ளையர்கள் வீட்டில் நாயை வளர்த்தார்கள், நாட்டில் பேயை வளர்த்தார்கள். ஆகவே வெள்ளையர்கள் செய்த காரியங்களுடனும் அவர்கள் கையாண்ட முறைகளுடனும் நமது காரியங்களையும் முறைகளையும் ஒப்பிட்டு நாம் செயலாற்றினால் நமது நாட்டை புனருத்தாரணம் செய்யமுடியாது. தாங்கள் காந்திஜி அவர்களது வழியைப் பின்பற்றியவர் ஆகமாட்டீர்கள். கவர்னர் பதவியை நீடிக்க வேண்டுமா என்பதைப்பற்றிப் புனராலோசனை செய்யும்போது இதை மனதில் கொள்ளவேண்டும் என்று நான் காங்கிரஸ் கட்சி நண்பர்களுக்குத் மிகப் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். காந்திஜி 1936-ம் வருட ஜூலை மாத "ஹரிஜன்" பத்திரிகையில் நான் மந்திரி ஆனால் "If I were to become a Minister" என்ற தலைப்பின் கீழ் பல காரியங்களை பதவி ஏற்கும் காங்கிரசுக்கு உபதேசம் செய்திருக்கிறார்கள். "நாட்டிலுள்ள ஏழை எளியவர்களின் குடிசைகளைப் போலவே உங்கள் மாளிகைகளை ஆக்கிக்கொள்ளுங்கள். வெள்ளையர்கள் செய்த காரியங்களைப் பின்

பற்றுதீர்கள். மந்திரி என்றவுடன் புதிதாகப் பதவி வந்துவிட்டது என்று இறுமாப்பு அடைந்து விடாதீர்கள். இந்த நாட்டில் வெள்ளையன் செய்துகொண்டிருப்பதற்கு மாறாக, நாம் நமது நாணயத்தாலும், கண்ணியத்தாலும், ஒழுக்கத்தாலும் மக்களின் நன்மதிப்பைப் பெறவேண்டும். உள்ளத்தில் தெய்வபக்தி இருந்தால் தான் ஆலயத்திலுள்ள கல்லை ஒருவன் வணங்குவான். மக்கள் உள்ளங்களில் நமக்கு நன்மதிப்பு ஏற்படவேண்டுமானால், அதற்கேற்ற முறையில் நாம் மிகவும் நல்ல முறையில் நடந்துகொள்ள வேண்டும். படாடோபங்களாலும், பட்டாளங்களாலும், இரத-கஜ-துரக-பதாதிகளாலும் நாம் மக்களின் நன்மதிப்பைப் பெற்றுவிட முடியாது" என்று அன்று காந்திஜீ கூறினார்கள். அதற்கிணங்க நாம் படாடோபமில்லாமல் சிக்கனமாக ஆட்சியை நடத்தவேண்டும். சிக்கனத்தை எப்படிக் கையாளுவது என்று பார்த்து அதற்கேற்றபடி ஆட்சி நடத்த வேண்டும். அப்படிச் செய்யும்போது அரசியல் சட்டம் குறுக்கே நிற்கும் என்று வாதிக்ககூடும். சிக்கனத்திற்கு அரசியல் சட்டத்திலும் வகை செய்யப்பட்டிருக்கிறது.

அரசியல் சட்டத்தின் 133-வது ஷரத்தில் பல மாநிலங்களுக்கு ஒரு கவர்னரை நியமிப்பதற்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. அதை அமல் நடத்த தென்பிராயந்த்திற்கு ஒரு கவர்னரை நியமிக்க முயற்சி செய்யலாம் என்று எனக்கு முன் பேசிய ஸ்ரீ வேதரத்னம் பிள்ளை அவர்கள் சொன்னார்கள். அரசாங்கத்தார் இதில் கவனம் செலுத்தி சிக்கனமான ஏற்பாட்டிற்கு வழி வகுப்பார்கள் என்ற நன்னம்பிக்கையுடன் என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**Sri V. K. KOTHANDARAMAN :** **On a point of order Sir,** நான் 13-ம் தேதியன்று இந்த மானிய கோரிக்கையின் மீது பேசியபோது கேரள அரசாங்கத்தார் 300—400 ஆகச் சம்பளத்தைக் குறைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகுதான் இங்கே சம்பளத்தைக் குறைப்பதற்கு முன்வந்திருக்கிறார்கள் என்று சொன்னேன். அதைக் குறிப்பிட்டுப் பேசும்போது இந்த சபையிலுள்ள வயதில் முதிர்ந்து நமக்கெல்லாம் வழிகாட்டியாக இருக்கக்கூடிய ஒரு கனம் அங்கத்தினர் அவர்கள் "கேரளாவில் சம்பளம் குறைக்கப்பட்டால்தான் இங்கே சம்பளம் குறைக்கப்பட முடியுமா?" என்று கூறி, அதற்கு உபமானமாக "வைக்கோற்புல் நிறைந்த வண்டியின் கீழே போய்க்கொண்டிருக்கும் நாய்தான் செல்வதால்தான் வண்டி செல்கிறது என்று நினைத்துக்கொள்வது போல்" இருப்பதாகவும் குறிப்பிட்டார்கள். இங்கே இப்போது பல புதிய அங்கத்தினர்கள் வந்திருக்கிறார்கள். பல வாலிபர்கள் அங்கத்தினர்களாக வந்திருக்கிறார்கள். அவர்களுக்கும் நாய், பேய் என்றெல்லாம் பேசத் தெரியும். ஆனால் இந்த சபையில் அப்படிப் பேசினால் இந்த சபை வழிகாட்டியாக இருக்குமா என்று சிந்திக்கவேண்டும். ஆகவே இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் தாங்கள் கனம் அங்கத்தினர்களுக்கு எச்சரிக்கை செய்ய வேண்டும் என்று நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**Mr. SPEAKER :** இந்த சபையில் எல்லா அங்கத்தினர்களுக்கும் பேசுவதற்கும் உரிமை இருக்கிறது. கனம் அங்கத்தினர் ஸ்ரீ கோதண்டராமன் அவர்களுக்கும், கனம் அங்கத்தினர் ஸ்ரீ வேதரத்தினம் பிள்ளை அவர்களுக்கும் பேசுவதற்கு உரிமை இருக்கிறது. ஆனால் சபையின் கௌரவத்தைக் குறைக்கும் முறையில் மட்டும் பேசக்கூடாது. கனம் அங்கத்தினர் சொல்வதை எல்லா கனம் அங்கத்தினர்களும் கவனிக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம்.

**The Hon. Sri C. SUBRAMANIAM :** கனம் சபாநாயகர் அவர்களே, நாம் பல விஷயங்களைப்பற்றிப் பேசும்போது, கருத்துக்களை வலியுறுத்திக் கூறுவதற்காக உபமானங்களை சொல்லிப் பேசுவது வழக்கமாக ஆகிவருகிறது. விளக்கத்திற்காகத்தான் உபமானங்கள் சொல்லப்படுகின்றனவே தவிர அவைகளை அதே வாசகத்தில் அப்படியே அர்த்தம் செய்துகொள்ளக் கூடாது என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். தங்களைத்தான் குறிப்பிட்டு உபமானம் சொல்லப்படுவதாக கனம் அங்கத்தினர்கள் விவாத

15th July 1957] [Sri C. Subramaniam]

முறைக்கு ஆட்சேபணை கிளப்புவது சரியல்ல என்று கருதுகிறேன். அப்படி ஆட்சேபிப்பது என்றால், பல விஷயங்களை நான் ஆட்சேபிக்க முடியும். ஆகையால், உபமானங்கள் மற்றவர்களின் மனதைப் புண்படுத்துவதற்காகச் சொல்லப்படுவதாக கனம் அங்கத்தினர்கள் கொள்ளக்கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன். ஆதலால் இந்த விஷயத்தில் எந்த விதமான மனக்கசப்பும் ஏற்படுவதற்கு இடமில்லை. யாரையும் அவமதிப்பதற்காக இங்கே உபமானங்கள் சொல்லப்படுவதில்லை. ஒரு அங்கத்தினரைப் பற்றி குறிப்பிட்டு மற்றொரு அங்கத்தினர் அவமதிக்கும் முறையில் பேசினால் அப்போது ஆட்சேபணையைக் கிளப்பலாம்.

இந்தத் தலைப்பின்கீழ் நடந்த விவாதத்திலே முக்கியமாக மூன்று விஷயங்கள் குறிப்பிடப்பட்டன. ஒன்று கவர்னரைப்பற்றியது, இரண்டாவது மந்திரிகளைப் பற்றியது, மூன்றாவது பொதுவாக சிக்கனத்தைப்பற்றியது. மற்றும் சில விஷயங்கள் விவாதிக்கப்பட்ட போதிலும் அவைகள் மற்ற இலாகாக்கள் மான்ய விவாதத்தின் பொழுது சொல்லப்படவேண்டிய விஷயங்கள். ஆகையால் அவைகளுக்கு இப்பொழுது நான் பதில் சொல்லப் போவதில்லை. உதாரணமாக ஸ்ரீமதி சௌந்தரம் ராமச்சந்திரன் அவர்கள் **Community Development**-ஐப்பற்றி பேசினார்கள். அவைகளைப்பற்றி இப்பொழுது பேசுவது பொருத்தமில்லை என்று சொல்லுவதற்கு நான் தயாராக இல்லை. ஏனெனில் இந்தத் தலைப்பின்கீழ் எதை வேண்டுமானாலும் பேசலாம். இது மந்திரிகளைப்பற்றியது ஆதலால் நிர்வாகத்தைப்பற்றி பொதுவாக எந்த விஷயத்தையும் இதில் பேசலாம். **Community Development** போன்ற விஷயங்களை இந்தச் சபையில் நடத்தப்பட்ட மான்ய விவாதத்தின்போது எடுத்துச் சொல்லலாம். ஆகையால் அந்த விஷயங்களுக்கு நான் இப்பொழுது பதில் சொல்லப்போவதில்லை என்பதை முதல் முதலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கவர்னரைப் பொறுத்தவரையில், முதலிலே குறிப்பிட்ட விஷயம் கவர்னர் பதவிக்கே அவசியமில்லை என்பதுதான். அதிலும் சில நண்பர்கள் ஜனநாயக முறைக்கே இது விரோதம் என்பதைப்பற்றி சொன்னார்கள். கவர்னர் பதவி வேண்டுமா, வேண்டாமா என்பது இப்பொழுது எழுந்துள்ள பிரச்னை அல்ல. அரசியல் அமைப்பு சட்டம் உருவாகின்ற காலத்திலே இதுபற்றி நீண்ட விவாதம் நடந்தது. கவர்னர் பதவி அவசியமானால் அவர் எந்த முறையில் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்பது பற்றியும் நீண்ட விவாதம் நடந்தது என்பதை கனம் அங்கத்தினர்கள் கட்டாயம் தெரிந்து கொண்டிருப்பார்கள் என்றே நம்புகிறேன். ஆனால் அதனுடைய நுணுக்கங்களை எடுத்துச் சொல்லவேண்டுமானால் இப்பொழுது காலம் போதாது. ஆகையினால் இதிலே அக்கரை உள்ள அங்கத்தினர்கள் கவர்னர் பதவி வேண்டுமா, வேண்டாமா என்பதுபற்றி அரசியல் நிர்ணய சபையில் நடந்த விவாதத்தை படிப்பார்களேயானால், அவர்கள் இப்பொழுது சொன்னதற்கு மேல் அங்கும் அதிக விவாதம் நடந்திருப்பது தெரியவரும். இருந்தாலும் கடைசியில் கவர்னர் பதவி அவசியம் என்று அநேகமாக ஏகமனதாக ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

புதிதாக எதையோ கண்டுபிடித்து இப்பொழுது எதிர்ப்பு சொல்லுகிறோம் என்று யாரும் மனதில் வைத்துக்கொள்ளவேண்டாம். அரசியல் அமைப்பு சரிவர நடப்பதற்கு கவர்னர் பதவி அவசியம் என்கின்ற அடிப்படையில் அரசியல் அமைப்பு நிர்ணய சபை முடிவு செய்த விஷயம் இது. அதற்காக வேறுபட்ட அபிப்பிராயம் வைக்கக்கூடாது என்று நான் சொல்லவில்லை. வேறுபட்ட அபிப்பிராயம் இதிலே இருக்கமுடியும். அதற்காக இது ஜனநாயகத்திற்கே விரோதம் என்று சொல்லும்பொழுது அப்படிச் சொல்லுகிறவர்களுக்கு ஜனநாயகம் என்பது என்ன என்று தெரியுமா, தெரியாதா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. சிலபேர் பாட்டுக்கச்சேரிக்குப் போகும்பொழுது, தோடி ராகம் பாடினால் மோகன ராகம் நன்றாக இருக்கிறது என்று சொன்னால், அவருக்கு தோடியும் தெரியாது, மோகனமும் தெரியாது என்று சொல்லிவிடலாம். அதுபோல் தான் இது ஜனநாயகத்திற்கே விரோதம் என்று சொல்லுபவர்களுக்கு ஜனநாயகம் என்றால் என்ன என்பது தெரியுமா, தெரியாதா என்று சந்தேகம் ஏற்படுகிறது.

[Sri C. Subramaniam] [15th July 1957

ஜனநாயக அடிப்படையில் இயங்கக்கூடிய எல்லா நாடுகளையும் எடுத்துக் கொண்டு பார்த்தால், மந்திரிகள், சட்டசபை இவைகள் இருக்கும் இடங்களிலும் அரசியலுக்கு தலைமை வகிக்கக்கூடிய ஒருவர், அரசராக இருந்தாலும் சரி, ஜனாதிபதியாக இருந்தாலும் சரி, கவர்னராக இருந்தாலும் சரி, இருக்கிறார். அரசியல் அமைப்புக்கு தலைமை வகிக்கக்கூடிய ஒரு ஸ்தானம் (Head of the State) இருக்கிறது என்பதை எல்லா அரசியல் அமைப்பிலும் நாம் பார்க்கலாம். இன்றைக்கு பிரான்ஸை எடுத்துக்கொண்டாலும் சரி, இங்கிலாந்தை எடுத்துக்கொண்டாலும் சரி, யு.எஸ்.ஏ.-ஐ எடுத்துக் கொண்டாலும் சரி—அதிலே கொஞ்சம் மாறுபாடு இருக்கிறது. அது எனக்குத் தெரியும்—அதேமாதிரி எந்த நாட்டினுடைய அரசியல் அமைப்பை எடுத்துக்கொண்டாலும் சரி, மந்திரிசபை, சட்ட சபை இவைகள் இருந்தாலும்கூட, அரசியல் அமைப்பு நல்ல முறையில் நடப்பதற்காக இவைகளுக்கெல்லாம் புறம்பான ஸ்தானம் ஒன்று இருக்கிறது என்பதை நன்றாகத் தெரிந்துகொள்ளலாம். இன்றைக்கு ஸ்ரீ கோதண்டராமன் அவர்களுக்குச் சொல்லுகிறேன்: ரஷ்யாவை எடுத்துக்கொண்டாலும் சரி, புல்கானின் அவர்களின் மந்திரி சபை குழு தனியாக இருக்கிறது. வாரோஷிலாவ் அவர்கள் தலைவராக இருக்கிறார். அது ஜனநாயகமா, இல்லையா என்பது பற்றி இன்றைக்கு விவாதம் ஒரு பக்கத்தில் இருக்கட்டும். கம்யூனிஸ்டு நண்பர்கள் ஜனநாயகத்தினுடைய சிகரம் (queen) என்று சொல்லக்கூடிய ரஷ்யாவில் தலைவரும், அமைச்சர் குழுவும் தனியாக ஏற்பட்டிருக்கிறது என்பதை அவர்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். ஆகையினால் இது ஜனநாயகத்திற்கே விரோதம் என்று சொல்லுவது தவறு என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பல பேர்கள். . . (குறுக்கீடு). ஜனநாயகத்தைப்பற்றி வேறு அபிப்பிராயம் கொண்டுள்ளவர்களுடைய வாதத்திற்காக நான் சொல்ல விரும்புகிறேன். ஆகையினாலே இன்றைக்கு நம் ஜனநாயகத்தைப்பற்றி வேறு அபிப்பிராயம் கொண்டுள்ளவர்களுடைய வாதத்தை யோசித்துப் பார்க்கவேண்டியது என்னவென்றால், அரசியல் சட்ட அமைப்பிலே ஏற்பட்டிருக்கக்கூடிய இந்த கவர்னர் பதவி அனாவசியமா, இதை எடுத்துவிடவேண்டுமா என்பதுதான். இரண்டு விதங்களிலே இதை யோசித்துப்பார்க்கவேண்டியிருக்கிறது. கவர்னர் பதவி இரண்டு விதத்திலே முக்கியமாக உபயோகப்படுகிறது. ஒன்று—அன்றாடம் நடக்கக்கூடிய நிர்வாக அமைப்பில் எவ்வளவு தூரம் கவர்னர் பதவிக்கு அவசியம் இருக்கிறது என்பது. இரண்டாவது—அரசியல் நெருக்கடி ஏற்படும் காலத்திலே எவ்வளவு தூரம் கவர்னர் பதவி அவசியம் என்பது. இவைகளை நன்றாக யோசித்துப் பார்க்கவேண்டும். அரசியல் நெருக்கடி காலத்தில் கவர்னர் பதவி எவ்வளவு அவசியம் என்பதை பக்கத்திலிருக்கும் கேரள ராஜ்யம் நிரூபித்துக் காண்பித்துவிட்டது. " நம் ராஜ்யத்தில் இதேமாதிரி நிலைமை எப்பொழுதும் நீடித்து இருந்துகொண்டே இருக்கும், காங்கிரஸ் ராஜ்யம் நீடித்து இருக்கும் " என்று எதிரிலே இருக்கும் அங்கத்தினர்கள் நினைத்துக்கொண்டு அதனால் இங்கு அரசியல் நெருக்கடி ஏற்படபோவதில்லை என்ற அபிப்பிராயம் அவர்கள் மனதில் வேரூன்றி விட்டதுபோலும்! (கரகோஷம்.) அவர்கள் தெரியாமல் பேசுகிறார்கள். அரசியல் நெருக்கடி ஏற்பட்டால் அந்த சமயத்திலே கவனிப்பதற்கு கவர்னர் ஸ்தானம் ஒன்று அவசியமா, இல்லையா என்று யோசித்துப் பார்க்கவேண்டும். அவசியம் என்று எல்லோரும் ஒன்றுபட்டு உடன்படுவார்கள் என்று நான் நினைக்கிறேன். இதே மாதிரி ரொம்பவும் நெருக்கடி ஏற்படக்கூடிய காலத்திலே, அசாதாரணமான சம்பவங்கள் நிகழக்கூடிய ஒரு காலத்திலே இந்தப் பதவி அவசியம். ஆனால் இது அவசியமில்லை என்று தோன்றும் தோரணையில் பல பேர்கள் பேசினார்கள். உதாரணமாக இப்பொழுது நாம் பெரிய தீ அணைக்கும் இயந்திரங்களையும், அதற்காக வேண்டிய ஸ்தாபனங்களையும் வைத்துக்கொண்டிருக்கிறோம். எப்பொழுதோ வருஷத்திற்கு ஒன்று, இரண்டு முறைகள் தான் இவைகள் பயன்படுத்தப்படுகின்றன. அதற்காக " இது வீண் செலவு, இதை எடுத்துவிடவேண்டும் " என்று சொல்லமுடியுமா? தீ அணைக்கும் படை அவசியம் என்றுதான் எல்லா அங்கத்தினர்களும் உணர்வார்கள். (குறுக்கீடு.)

MR. SPEAKER : மந்திரி அவர்கள் பேசும்போது குறுக்கிடக்கூடாது.

15th July 1957]

THE HON. SRI C. SUBRAMANIAM : வருஷத்திற்கு எப்பொழுதாவது ஒரு தடவைதான் தீ அணைக்கும் படை உதவுகிறது, அதற்காக அதை எடுத்து விடவேண்டும் என்று சொல்லுவதுபோல்தான் கவர்னர் பதவி அவசியமில்லை என்று சொல்லுவதும். இவைகளையெல்லாம் தீர ஆலோசித்துத்தான் கவர்னர் பதவி அவசியம் என்று அரசியல் நிர்ணய சபை ஒரு முடிவுக்கு வந்தது. அதை விட்டுவிட்டு புதிதாக ஏதோ கண்டுபிடித்துவிட்டோம், இது ரொம்பவும் ஜனநாயகத்திற்கு விரோதம், அதற்காக செலவு ரொம்ப ஆகிறது என்ற முறையில் சொல்லுகிறவர்கள் அரசியல் தத்துவத்தை பூரணமாக உணர்ந்துகொண்டு பேசுகிறவர்கள் அல்ல என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, கவர்னருக்காக ஆகும் செலவைப்பற்றி சொன்னார்கள். ஸ்ரீ ஆதித்யன் அவர்கள் ரூ. 8,65,000 செலவு செய்யப்படுகிறது. என்றெல்லாம் புள்ளி விவரங்களோடு எடுத்துசொன்னார்கள். முன்பு ரூ. 10 லட்சம் செலவு செய்யப்பட்டது, இப்பொழுது ரூ. 8 லட்சம் தான், அதாவது கொஞ்சம் குறைவாக செலவழிக்கப்படுகிறது என்பது பற்றியும் விவாதம் நடந்தது. இந்தத் தலைப்பின்கீழ் இருக்கக்கூடிய செலவு ரூ. 8,65,000 தான். உதாரணமாக நாங்கள் 8 பேர் மந்திரிகள் இருக்கிறோமென்றால், நாங்கள் 8 பேர் மட்டுமே நிர்வாகத்தை நடத்துவது இல்லை. எங்களுக்கு துணையாக ஒரு பெரிய செகரடேரியட் வேலை செய்கிறது. ஆகையால் இந்த செகரடேரியட்டுக்கான செலவும் இதோடு சேருகிறது. இதை நன்றாக யோசித்துப்பார்க்கவேண்டும். அதே போல் கவர்னர் எடுத்துக்கொண்டால் அவருக்கு தனியாக இருக்கக்கூடிய சம்பளம் ஒரு புறம் இருக்கட்டும். அதைப்பற்றி பின்னால் சொல்லுகிறேன். கவர்னர் பதவி அவசியம் என்று சொல்லும்பொழுது அந்தப் பதவிக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்துகொடுக்கவேண்டியது அவசியம். அவர் சில முக்கியமான 'பைல்களை' பார்க்கவேண்டியிருக்கிறது. அன்றாட நடவடிக்கைகளில் அவர்கள் செய்யக்கூடிய வேலை மிகுதியாக இருக்கிறது என்பதை இந்த ஐந்து வருஷத்து அனுபவத்தை வைத்துக்கொண்டு நான் சொல்ல விரும்புகிறேன். கவர்னர் வெறும் பொம்மை அவரை அலங்காரமாக உட்கார்த்தி வைத்துக்கொண்டு 8 லட்ச ரூபாய் செலவு செய்யப்படுகிறது என்று நினைத்துக்கொள்ளவேண்டாம். அன்றாட நடவடிக்கைகளில்கூட அவர்கள் யோசனை சொல்லக்கூடிய விஷயங்கள் பல இருக்கின்றன. அதிலும் இங்கு இருக்கக்கூடியவர்கள் வெவ்வெறு கட்சியைச் சேர்ந்தவர்கள். விருப்பு வெறுப்பு பல இருக்கலாம். அதன் காரணமாக எவ்வளவு திறமையாகவும் எவ்வளவு நியாயமாகவும் நடந்துகொள்ளவேண்டுமென்று நினைத்தாலும்கூட, நம்மையும் மீறி பல விஷயங்களில் ஒரு தவறான முறையில் நாம் ஒரு முடிவுக்கு வரக்கூடும். அப்பேர்பட்ட சமயங்களில் தனிப்பட்ட ஒரு நபர் இங்கு இருக்கக்கூடிய சூழ்நிலையில் சிக்காதவர், தனியாக பார்த்து ஆலோசனை சொல்லக்கூடிய ஒருவர், ஒரு விஷயத்திலே வேறு விதமாக அபிப்பிராயம் கொள்ளமுடியும் என்று யோசனை சொல்லும்போது, மறுபடியும் அந்த விஷயத்தை புனராலோசனை செய்வதற்கு சந்தர்ப்பம் நமக்கு கிடைக்கிறது. இது மிகவும் அவசியம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுபோன்று அன்றாட நடவடிக்கைகளில் எங்கேயாவது தவறு நடப்பதை எடுத்துச்சொல்லுவதற்கு கவர்னர் போன்ற ஒரு பொறுப்பு வாய்ந்த ஸ்தானம் மிகவும் அவசியம் என்பதை அனுபவம் உள்ளவர்கள் எல்லோரும் ஒப்புக்கொள்ளவேண்டும். கவர்னர் அவர்கள் இந்த முறையில் பல காரியங்கள் செய்யவேண்டியிருக்கிறது. " பல பைல்கள் " பார்க்கவேண்டியிருக்கிறது. அவர்களுக்கு உதவி செய்ய பிரைவேட் செகரடரி; அவருக்கு கீழ் 2, 3 சிப்பந்திகள் கொண்ட ஒரு சிறிய செகரடேரியட் இருக்கிறது. அவருக்கு, " பைல் " களிலிருக்கும் விஷயங்களை எடுத்துச் சொல்லுவதற்கு அந்த சிறிய செகரடேரியட் தேவையாக இருக்கிறது.

அதற்குமேல் கவர்னர் அவர்களுக்கு ஒரு பெரிய மாளிகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. என்றெல்லாம் சொல்லப்பட்டது. இப்பொழுது இருக்கக்கூடிய கவர்னரும் சரி, முன்பு இருந்த கவர்னரும் சரி, மாளிகை முழுவதும் அவர்களே வைத்துக்கொள்ளுவதில்லை. அவர் ஒரு மூலையில் தான்

வசிக்கிறார். ஆனால் அவருக்காக ஒரு பெரிய மாளிகை ஒதுக்கப்பட்டிருக்கிற காரணத்தை ஸ்ரீ வேதரத்னம் பிள்ளை அவர்கள் எடுத்துச்சொன்னார்கள். அரசாங்க விருந்தினர்கள் வரக்கூடிய காலத்தில் அவர்கள் தங்குவதற்கு அந்த மாளிகை உபயோகப்படுத்தப்படுகிறது. சோஷலிஸ அடிப்படையில் இயங்குகிறோம் என்று சொல்லிக்கொண்டு, கூலியாட்கள் மாதிரிதான் உலகத்திலே உள்ள அரசியல் தலைவர்களையும் நடத்துவோம் என்று சொன்னால் வெளிநாட்டு அரசியல் தலைவர்கள் இந்தப் பக்கம்கூட திரும்பிப் பார்க்கமாட்டார்கள். ரஷ்யாவிலிருந்தும் கூட தலைவர்கள் இங்கே வரமாட்டார்கள் சோஷலிஸ அடிப்படையில் இருந்தாலும்கூட. ஆகையினால் அவர்களுக்கு ஏற்றவாறு வரவேற்பு அளிக்கவேண்டியது அவசியமாகிறது. இம்மாதிரி வரவேற்பு அளிப்பதற்கும் சேர்த்துத்தான் இதை கவர்னர் மாளிகையில் சேர்த்துவைத்திருக்கிறது. இவைகளிலும் பல செலவுகள் குறைக்கப்பட்டுதான் வருகின்றன. இம்மாதிரி பெரிய மாளிகையைவிட்டு விட்டு சிறிய வீட்டுக்கு போய் விடலாம். இதற்கு முன்னிருந்த கவர்னர் அவர்கள் இதைப்பற்றி சொல்லிக்கொண்டுதான் இருந்தார்கள். இப்போதுள்ள கவர்னர் அவர்களும் சிறிய வீட்டுக்குப் போவதற்கு தயாராகத்தான் இருக்கிறார்கள். அப்படி சிறிய வீட்டுக்குபோக வேண்டுமானால் போய்விடலாம். ஆனால் அரசாங்க விருந்தினர்களுக்கு இன்னொரு பக்கம் ஏற்பாடு செய்யவேண்டும். அவ்விதம் அதற்கு கணக்கிட்டு பார்த்தால் இதைவிட இரண்டு மடங்கு கூடுதல்தான் செலவாகும். அத்துடன் இன்றைக்கு அதோடு சேர்ந்திருக்கிற செலவுகள் என்னவென்றால், இந்த தொகை முழுவதும் கவர்னருக்கு மாத்திரமல்ல, அங்கிருக்கின்ற "பாரஸ்டு", அதில் வேலை பார்த்துவருகின்ற ரேஞ்சர்கள் இவர்களுடைய செலவு எல்லாம் இதில் சேர்ந்திருக்கிறது. அதோடு சேர்ந்திருக்கிற எஸ்டேட், அதில் வேலை செய்யும் உத்யோகஸ்தர்கள் சம்பளங்கள் எல்லாம் இதில் சேருகிறது. இதில் ஏதாவது சிக்கனப்படுத்தலாமா என்பதைபற்றி நாங்கள் நன்றாக ஆலோசித்து வருகிறோம். வேண்டுமென்றால் அங்கிருக்கின்ற 10 பியூன்களை வீட்டுக்கு அனுப்பலாம். அவர்கள் பெற்றுவருகிற 30 ரூபாய் சம்பளத்தை மாத்திரம் குறைத்துவிட்டால் மாத்திரம் சிக்கனம் வந்துவிடாது. இதனால் வேலையில்லாத் திண்டாட்டம் தான் அதிகமாகும். இதனால் எல்லாம் பெரிய சிக்கனம் வந்துவிடாது என்பதைத்தான் நாங்கள் கண்டு பிடித்தோம். ஆகையினால் ஏதோ அதிகமாக செலவழிக்கப்பட்டு வருகிறது. கவர்னருக்காக அதிகம் செலவு செய்யப்பட்டு வருகிறது என்ற தப்பபிப்ராயத்தை நீக்கிகொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால் கவர்னர் அவர்களுக்கு தகுந்த முறையில் தங்கியிருக்கவும், அரசாங்க விருந்தினர்களை தகுந்த முறையில் உபசரிக்கவும் இந்த மாதிரியுள்ள செலவு அவசியமாக வேண்டியிருக்கிறது. வேறு நாடுகளில் இருந்து வரும் விருந்தினர்களை உபசரிக்கும் விஷயத்தில், மற்றநாடுகளை எடுத்து கணக்கிட்டுப் பார்த்தால், நாம் இதற்காக செலவு செய்வது ரொம்பவும் சிக்கனமான முறையில் செலவு செய்துகொண்டிருக்கிறோம் என்பதில் நாம் பெருமை படலாம். ஆகவே கவர்னருக்கு பத்து லட்சம் ரூபாய் செலவு எதற்கு, அதை குறைக்கவேண்டும் என்று யாராவது இயக்கம் நடத்துவதாயிருந்தால், இவ்விதம் ஒரு இயக்கம் நடத்தினால் என்ன என்று சிலருக்கு தோன்றலாம், அதனால் சொல்லுகிறேன். இவ்விதம் யாராவது சொல்லுவார்களேயானால் அது விஷயம் தெரியாமல் சொல்லுவதுதான் என்பதை தாழ்மையோடு வற்புறுத்தி சொல்லிக் கொள்கிறேன். அடுத்தபடியாக சம்பளத்தைப்பற்றி சொன்னார்கள். இப்போது 6,000 ரூபாய் இருக்கிறது, இதைக்குறைத்துக்கொள்ளவேண்டும் என்று சொன்னார்கள். போன கவர்னர் தன்னுடைய சம்பளத்தை குறைத்துக்கொண்டார்கள். இப்போதுள்ள கவர்னரும் பத்து பர்சண்ட் குறைத்திருக்கிறார்கள். இந்த சம்பளத்தில் இப்போது இருக்கக்கூடிய வருமான வரி, மற்றும்பல செலவுகள் போக கைக்குப் போய் சேருவது 3,000 ரூபாய்தான். இதையும் குறைக்க முடியுமா என்பதைப்பார்த்தால் 1,000 ரூபாய் என்று வைத்துக்கொள்ளலாம். அல்லது 500 ரூபாய் என்று வைத்துகொள்ளலாம், அல்லது சும்மா இருந்துகொண்டு போகட்டும் என்றும் செய்துவிடலாம். ஆனால் இன்றைக்கு இருக்கிற அரசியல் அமைப்பை எல்லாம் மாற்றிவிடுவது சாத்தியமல்ல. முன்னால் இந்த

அரசியலமைப்பை ஏற்படுத்தியவர்கள் ஜனாதிபதிக்கு எவ்வளவு சம்பளம், உப ஜனாதிபதிக்கு சம்பளம் எவ்வளவு, சீப் ஜஸ்டிஸ்க்கு சம்பளம் எவ்வளவு கவர்னருக்கு சம்பளம் எவ்வளவு, என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இதையும் குறைத்து இதில் சிக்கனப்படுத்தி இதிலிருந்து பள்ளிக்கூடங்கள் நடத்தலாம் என்றெல்லாம் சட்டநாத கரையாளர் அவர்கள் போன்றவர்கள் சொல்லுவது எல்லாம் வெறும் பிரச்சாரத்திற்குதான் உதவியாய் இருக்குமே தவிர உண்மையான சிக்கனத்திற்கு சொல்லக்கூடிய வழியல்ல. கவர்னருடைய பதவியை பொறுத்தவரையிலும் புதிய சபைகூடி விவாதித்துவிட்டது. இதைப்பற்றி பலரும் பலவிதமாக சொல்லி தீர்த்தாய்விட்டது. ஆகவே இனிமேல் நிர்வாகப்பொறுப்பில் இருக்கும் காரியங்களுக்கு கவர்னரை குற்றம் சொல்லாமல், அதைவிட்டுவிட்டு நிர்வாகத்தில் இருக்கும் எங்களை பிடித்துக்கொள்ளுங்கள், அதை நான் வரவேற்கிறேன். உண்மையாகவே மந்திரிகளுடைய விஷயங்களைப்பற்றி பலர் பல குறைகளை சொன்னார்கள். அவைகளையெல்லாம் நான் வரவேற்கிறேன். நாங்கள் எல்லாம் மந்திரிகளாகவே பிறந்து, மந்திரிகளாகவே வளர்ந்து, அதற்காகவே பயிற்சி பெற்று இங்கு வந்திருக்கவில்லை. ஏதோ **by accident** என்று சொல்லுவார்களே, அதுமாதிரி இங்கு மந்திரிகளாக வந்து சேர்ந்திருக்கிறோம். ஏதோ ஜனங்கள் எங்களை தேர்ந்தெடுத்தார்கள். அதிகமாக மெம்பர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். அந்தக்கட்சி இவரை முக்கிய மந்திரியாக தேர்ந்தெடுத்தது. அவர்கள் எங்களை மந்திரிகளாக போட்டு இருக்கிறார்கள். நாங்கள் ஏதோ ஒருவிதமான குற்றமும் எங்களிடத்தில் இல்லை என்று நாங்கள் சொல்லவில்லை. ஒருவிதமான குற்றங்குறைகளும் எங்களிடம் இருக்காது என்று யாராவது எதிர்பார்ப்பார்களேயானால் அது இயற்கைக்கு விரோதமானது என்றுதான் நான் சொல்லுவேன். கூடிய மட்டும் பதவியில் இருக்கும்போது நிர்வாகத்தில் குற்றங்குறைகள் இருக்கக்கூடாது என்று நாங்கள் எங்களால் இயன்ற அளவு முயற்சி செய்து வருகிறோம். அவ்விதமிருந்தும் பல குற்றங்குறைகள் இருக்கும் என்பதில் சந்தேகமே கிடையாது. அதிலும் மந்திரிகளாக இருக்கக்கூடிய நாங்கள் உங்களுக்கும் இந்த நாட்டு மக்களுக்கும் பிரதிநிதிகளாக இருந்துகொண்டு அரசாங்கத்தை நடத்தக்கூடியவர்கள். கூடிய அளவு நியாயமாக நடக்க வேண்டியது மிகவும் அவசியம் என்பதை நாங்கள் உணர்ந்திருக்கிறோம். அதையும் மீறி ஏதாவது குற்றங்குறைகள் நடக்குமானால் அதை எடுத்துசொன்னால் நாங்கள் எப்போதும் அவைகளை வரவேற்கிறோம். நான் ஏதோ கோபப்படுகிறேன், என்று கனம் அங்கத்தினர் கோவிந்தசாமி அவர்கள் கூறினார்கள். நான் நியாயமான காரியங்களை எடுத்துச் சொன்னால் கோபப்படுவதே கிடையாது. இது கோவிந்தசாமி அவர்களுக்கு தெரியாமல் சொல்லியிருக்கலாம் என்று நான் நினைக்கிறேன். ஆனால் நியாயமற்ற முறையில், விஷயம் தெரியாமல் உண்மையை மறைத்து, பொய்யும் புளுகும் சொல்லி . . . . .

Sri A. GOVINDASAMY : On a point of order, Sir.

**The Hon. Sri C. SUBRAMANIAM : I withdraw the word.** தப்பும் தவறுமாக சொல்லும்பொழுதுதான் கோபித்துக்கொள்கிறேன். அடுத்ததாக சுற்றுப்பிரயாணம் செய்வதைப்பற்றி பலர் சொன்னார்கள். இந்த விஷயத்தில் பல அங்கத்தினர்கள் பலவிதமாக சொன்னார்கள், சிலர் சுற்றுப்பிரயாணம் செய்யவேண்டும் என்றும் சிலர் வேண்டாம் என்றும் கூறினார்கள். என்னுடைய அபிப்பிராயத்தில் இங்கு இருந்துகொண்டு வெறும் **file**யை மாத்திரம் வைத்துக்கொண்டு காரியங்களை பார்ப்பதை விட நேரிட்டு போய் பார்ப்பதின் மூலம் அதிக விஷயங்களை அறிந்து கொள்ளலாம் என்பது தான் என்னுடைய அபிப்பிராயம். ஆகவே இந்த மாதிரியுள்ள சுற்றுப்பிரயாணங்களை நல்லவிதமாக உபயோகித்துகொள்ள வேண்டும் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். எங்கு போனால் நல்ல பயன் ஏற்படும் என்பதை பார்த்துதான் அந்தந்த இடங்களுக்கு சுற்றுப்பிரயாணம் செய்கிறோம். இவ்விதமாக நல்ல பலன் இருக்கவேண்டும் என்பது தான் எங்களுடைய எண்ணமும்கூட. எங்களையும் மீறி அவ்விதம் ஏதாவது போனால் அது எங்களுடைய எண்ணத்தின் மீதுள்ள தவறல்ல. ஆகவே கூடியவரை உபயோகப்படும்படியான விதத்தில் தான் [illegible]

பிரயாணம் செய்கிறோம் என்பதை சொல்லிக்கொள்கிறேன். அடுத்ததாக நாங்கள் ஏதோ ஆடம்பரமாக இருக்கிறோம், அதைக்குறைத்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். இங்கேயுள்ள மந்திரிகளைப்பார்த்தால் அவ்விதம் ஆடம்பரம் இருப்பதாக சொல்ல முடியாது. ஆனால் இப்போது இருக்கிற ஆடம்பரம் போதாது, கால்சட்டை, இன்னும் பல உடைகள் எல்லாம் போடவேண்டும் என்றும் யோசனை சொல்லுகிறார்கள். வேறு ஒரு காரியத்தை நாம் சிந்திக்கவேண்டும். அதாவது மந்திரிகளாக வருகிறவர்கள், வாழ்க்கையில் நல்ல செலவு செய்த ஆட்களும் வந்து சேருகிறார்கள். ஏழையாக இருந்தவர்களும் வந்து சேருகிறார்கள். ஆகவே பணக்காரர்கள் என்பதற்காக இங்கு வந்து ஆடம்பரமாக செலவு செய்யப்படவில்லை. அதேமாதிரிதான் ஏழைகளாக இருந்து வந்தவர்களும் ஆடம்பரமாக இருக்கவில்லை. ஆகவே இதையெல்லாம் ஆலோசித்து ஒரு முடிவுக்கு வரவேண்டும். இப்பொது சராசரி, கஷ்டம் இல்லாமல் மந்திரிகள் வாழ்க்கை நடத்த முடியுமோ. அந்த அளவுக்கு நிர்ணயித்திருக்கிறோம். இதில் பணக்காரர்கள் என்றோ ஏழைகள் என்றோ வித்தியாசம் இல்லாமல் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இதல்லாமல் ஏதோ சம்பளங்களை கம்மியாக்க நினைக்கலாம் என்றால் அது அவரவர்களுடைய வாழ்க்கையின் தரத்தை பொறுத்திருக்கிறது.

ஆகையினால் இன்றைக்கு நாம் சம்பளத்தை நிர்ணயம் செய்யும் போது பணக்காரர்கள்தான் இங்கு வந்து மந்திரி பதவியில் இருக்க முடியும் என்ற முறையில் ஒரு முடிவு செய்தால் அது ஒரு பெரிய குறையாகி விடும். கார் ஏன் சர்க்காரிலிருந்து வாங்கவேண்டுமென்று கூறப்பட்டது. மந்திரிகள்தான் கார் வாங்கவேண்டுமென்று ஒரு நிலை ஏற்படுத்தினால் பல பேர்கள் இங்கு மந்திரிகளாக வரமுடியாது. அவர்கள் இந்த வேலையை வேண்டாமென்று சொல்லிவிடுவார்கள். அப்பொழுது பணக்காரர்கள்தான் மந்திரிகளாக வரமுடியுமென்ற ஒரு நிலை ஏற்பட்டுவிடும். கப்பல் போன்ற பெரிய கார்களை வாங்கி வைத்திருக்கிறார்களே ஏன் சிறிய கார்கள் வாங்கக் கூடாது என்று சிலர் கேட்டார்கள். கார்களைப் பொறுத்தவரையில் கார்களை சர்க்கார்தான் வாங்குகிறார்கள். ஆனால் பெட்ரோல் செலவை சர்க்கார் போட்டுக்கொள்ள வேண்டாம். சின்ன கார் வாங்கினால் இரண்டு வருஷத்திற்கு ஒரு தடவை காரை மாற்றவேண்டியிருக்கும். ரிப்பேர் செலவும் மிகவும் கூடுதலாகும். பெரிய கார் வாங்கினால் 6, 7, 8 வருஷங்களுக்கு அதை உபயோகப்படுத்த முடிகிறது. ஆனால் பெட்ரோல் செலவு அதிகமாகும். அதை நாங்களே போட்டுக்கொள்கிறோம். சர்க்கார் கொடுப்பதில்லை. சர்க்காரைப் பொறுத்த வரையில் எது சிக்கனமானது என்று பார்த்தால், பெரிய கார் வாங்குவதுதான் சிக்கனமானது. இன்றைக்கு சவர்லே வாங்கியிருக்கிறோம். ஆறு கார்கள் வாங்கியிருப்பதாகச் சொன்னார்கள். நான்கு கார்கள்தான் வந்திருக்கின்றன. சின்ன காருக்கு எவ்வளவு செலவாகுமோ அதே விலைக்குத்தான் பாண்டிச்சேரியிலிருந்து இந்தப் பெரிய கார்களை வாங்கியிருக்கிறோம். கோவிந்தஸ்வாமி அவர்கள் சொன்னார்கள், அவைகள் போட் போல் இருக்கின்றன என்று. இதனால் சர்க்காருக்கு அதிகம் செலவு கிடையாது. செலவு குறைவுதான். ஆகவே நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், மந்திரிகள் எல்லா விஷயங்களிலும் எந்த விதமான குறைகள் இல்லாமல் தவறில்லாமல் நடந்து கொள்கிறார்கள் என்று நான் சொல்லத் தயாராயில்லை. என்னைப் பொறுத்தளவிலே, அது மனிதனுக்கு இயல்பாகவே உள்ள குறைகளாகும். ஆனால் பதவியை நிர்வகிக்கும் முறையில் நியாயமாகவும், நாணயமாகவும் நடக்க எல்லோரும் முயற்சி செய்கிறோம். அதில் ஏதாவது குறைகள் ஏற்பட்டால் நீங்கள் அதை எடுத்துச் சொல்வதன் மூலம் அதைத் திருத்திக்கொள்வதற்கு நாங்கள் முயற்சி செய்கிறோம். ஆகையால் நாங்கள் என்றென்றைக்கும் குறைகள் சொல்வதை வரவேற்கிறோம். குறைகளை கேட்பதற்குத்தான் மந்திரிசபை இருக்கிறது. இல்லாவிட்டால் எதிர்க்கட்சியின் அவசியமே கிடையாது. எதிர்க்கட்சி இருப்பது மந்திரிகளின் குறைகளை எடுத்துச் சொல்வதற்குத்தான். அந்தக் குறைகள் நியாயமான குறைகளாக இருந்தால், எங்களுக்கு அது குறைகள் என்று தோன்றினால், அதை நிவர்த்தி செய்துகொள்கிறோம். ஆனால் சில சமயங்

15th July 1957] [Sri C. Subramaniam]

களில் கட்சிப் பிரசாரத்திற்காக குற்றங்குறைகள் கூறும்போது தான் ஆட்சேபிக்கவேண்டியிருக்கிறது. அப்போதுதான் கோபம் வரவேண்டியிருக்கிறது. நமது பிரதிநிதிகள் நல்ல முறையில் நிர்வாகத்தை நடத்த வேண்டுமென்ற அடிப்படையில் அந்தக் குற்றங்களைக் கூறினால் அவைகளை என்றென்றைக்கும் வரவேற்போம். அதைத் திருத்திக்கொள்தவற்கு எங்களாலான முயற்சியைச் செய்வோம் என்று சொல்லிக்கொண்டு, இனிமேல் இந்த 100 ரூபாய் குறைக்க முயற்சிசெய்ய வேண்டாம். ஆகவே, இப்பொழுது எல்லோரும் ஒன்றாகயிருந்து நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்ற உணர்ச்சியின் அடிப்படையை விளக்க இந்த வெட்டுப் பிரேரணையை வாபஸ் வாங்கிக்கொண்டு இந்த மான்யக் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் வெட்டுப் பிரேரணையை வாபஸ் வாங்கிக்கொள்ளுகிறாரா.

SRI V. K. RAMASWAMY MUDALIAR : இல்லை, வற்புறுத்துகிறேன்.

MR. SPEAKER : The question is—

'That the allotment of Rs. 1,10,80,000 under Demand IX—Head of State, Ministers and Headquarters staff be reduced by Rs. 100.'

The cut motion was put and lost.

MR. SPEAKER : I shall now put the original motion to the vote of the House.

The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 1,10,80,000 under Demand IX—Head of State, Ministers and Headquarters staff.'

The Demand was put and carried and the Grant was made.

(2) DEMAND X—STATE LEGISLATURE.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 40,58,300 under Demand X—State Legislature."

MR. SPEAKER : Motion moved—

"That the Government be granted a sum not exceeding Rs. 40,58,300 under Demand X—State Legislature."

The Opposition parties, I understand, have agreed to Sri Karayalar moving his cut motion. Mr. Karayalar will now move his cut motion.

SRI K. SATTANATHA KARAYALAR : Sir, I move—

"That the allotment of Rs. 40,58,300 under Demand X—State Legislature—be reduced by Rs. 100."

MR. SPEAKER : The Motion and the cut motion are before the House for discussion.

[15th July 1957

11 a.m. * **SRI K. SATTANATHA KARAYALAR**: சபாநாயகர் அவர்களே, இந்த வெட்டுப் பிரேரணையைப் பிரேரேபித்துப் பேசும்போது, சம்பிரதாய முறைப்படி ஒரு வெட்டுப் பிரேரேணையைப் பிரேரேபித்து பேசுவது என்றாலும், நான் தங்களைக் குறிப்பாக பாராட்ட விரும்புகிறேன். இந்த சபையின் தலைவர் என்ற முறையிலே தாங்கள் அந்தப் பதவியை நிர்வகிக்கும் காலந்தொட்டு நடந்துகொண்டிருக்கிற முறையிலே தங்களையும், உதவி சபாநாயகர் அவர்களையும் நான் இந்த சந்தர்ப்பத்தில் பாராட்டாமல் இருக்கமுடியாது. பாரபட்சமற்ற முறையிலே தாங்கள் எதிர்க்கட்சி அங்கத்தினருக்கு தகுந்த சந்தர்ப்பம் அளிக்கிறீர்கள். தாங்கள் ஒரு கட்சியின் சார்பிலே தேர்தலிலே போட்டி போட்டு வெற்றி பெற்றபோதிலும் இங்கு நல்ல முறையில் தாங்கள் செயல்படுவதை நான் பெரிதும் பாராட்டுகிறேன். ஆனால் தாங்கள் இந்த சட்டமன்றத்தின் தலைவராக வருவதற்கு முன்பு இந்த சபையை முன்பிருந்த இடத்திலிருந்து எதேச்சாதிகார முறையிலே மாற்றிய ஒரு தன்மையை நான் இந்த சந்தர்ப்பத்தில் கண்டிக்காமல் இருக்கமுடியாது. இந்த ஒரு சபை, அல்லது அச்சபையின் தலைவர் யாரும் இல்லாத ஒரு சந்தர்ப்பத்தில் இந்த சபையை அங்கிருந்து இங்கு மாற்றிய ஒரு போக்கு, இந்த நாட்டில் ஜனநாயகத்திற்கு ஒரு முரண்பட்டதொரு போக்காகும் என்பது எனக்கு முன் இந்த சட்டசபையில் பல சந்தர்ப்பங்களில் பேசப்பட்டுள்ளது. ஆனால், சபாநாயகர் அவர்களே, நான் இந்த சந்தர்ப்பத்தில் ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த சபையை இங்கு மாற்றியது, ஓரளவு தங்களுடைய இலாகா, சட்டசபை இலாகா, "லெஜிஸ்லேசர் செக்ரடேரியேட்" சுதந்திரமாக செயல்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. இது மிகவும் வருந்தத்தக்கதொரு நிலைமை. அரசியல் சட்டத்திலே, சட்டசபை இலாகா சுதந்திரமாக இயங்க வேண்டுமென்று ஆர்டிகிள் 187-ல் கூறப்பட்டுள்ளது. எந்த அளவு இந்த இலாகா சுதந்திரமாக செயல்பட வேண்டுமோ, அந்த அளவு இந்த இலாகா சுதந்திரமாகச் செயல்படவில்லை. இது சுதந்திரமாகச் செயல்பட வேண்டுமானால், நான் நினைப்பது இந்த ஒரு குறிப்பான மான்யத் தொகையை தங்களுக்கு நேரடியாக வழங்குவதற்குள்ள அதிகாரம் இந்த சபைக்கு இருக்கவேண்டும். அந்தப் பணத்தை எந்த முறையில் உபயோகப்படுத்துவது என்பதை பற்றி தீர்ப்புக் கூறுவது இந்த சபைக்குத்தான் இருக்க வேண்டும். தாங்கள் செய்யக்கூடிய ஒவ்வொரு செலவினத்தையும் வேறு யாரும் கேள்வி கேட்பதற்கோ அல்லது தாங்கள் ஒரு ஆளை நியமிப்பதில் வேறு யாரும் குறிக்கிடுவதற்குள்ள ஒரு சம்பிரதாயம் அல்லது பாரம்பரியம் இருக்கக் கூடாது. தங்கள் கீழ் இருக்கும் இலாகாவில் தாங்கள் இன்று ஒரு ஆளை நியமிப்பீரேயானால் அதைப்பற்றி யாரும் கேள்வி கேட்பதாய் இருக்கக்கூடாது. சம்பிரதாயப்படி அது ஒரு வேளை ஒரு முறையாக இருக்கலாம். ஆனால், இப்பொழுது அது பைனான்ஸ் டிபார்ட்மென்டிற்கு போகவேண்டியிருக்கிறது, சீப் ஸெகரடேரியேட்டிற்குப் போக வேண்டியிருக்கிறது. இந்த முறை கண்டிப்பாக மாறவேண்டும். இந்த சபை கூடும் இடம், இந்த சபையை நடத்திக்கொண்டு போகும் இலாகா இவைகள் பரிபூர்ணமாக தங்களுடைய கை நிர்வாகத்தின் கீழ் இருக்க வேண்டும். நாம் அந்த முறையைக் கொண்டுவருவோமானால் ஒரு சீரிய பாரம்பரியத்தைக் கொண்டு வந்தவர்களாவோம். ஒரு வேளை அப்படி ஒரு சம்பிரதாயத்தைக்கொண்டுவருவதற்கு இன்று அரசியல் சட்டத்திலே இடம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் ஏதோ இந்த இலாகா சம்பந்தப்பட்ட உத்தியோகஸ்தர்களை நியமிப்பதில் அதிலே சில திட்டங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த சபையிலே இயற்றக் கூடிய ஒரு சட்ட திட்டத்திற்கு உள்பட்டு அந்த இலாகாவிலே உத்தியோகஸ்தர்களை நியமிக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அப்படி நடைமுறையில் இல்லை. சபாநாயகர் அவர்களே, திருவாங்கூர்-கொச்சி சட்டசபை கலைக்கப்பட்ட பிறகு ஒரு நிகழ்ச்சி நேர்ந்தது. அதை அங்குள்ள ஒரு சுதந்திரமான பாரம்பரியத்திற்கு எடுத்துக் காட்டாக அதைக் குறிப்பிட விரும்புகிறேன். கழிந்த ஐந்து ஆண்டுகளிலே திருவாங்கூர்-கொச்சி சட்டசபை இரண்டு தடவை கலைக்கப்பட்டது. முதல் தடவை கலைக்கப்பட்டபோது சபாநாயகர் அவர்கள் பதவியில் இருந்து அந்த இலாகாவின் நிர்வாகத்தை நடத்திக் கொண்டிருந்தார். இரண்டாவது தடவை கலைக்கப்பட்டபோது, சபாநாயகர் பதவியிழந்து அங்கு நேரடியாக ஆலோசகர் ஆட்சி நிலவியது.

15th July 1957] [Sri K. Sattanatha Karayalar]

அப்படி நிலவிய நேரத்திலே லெஜிஸ்லேச்சர் ஸெகரிடேர்யட்பற்றி ஒரு சிக்கலான பிரசனை எழுந்தது. சீப் ஸெகரட்ரியும் ஆலோசகரும் நேரடியாக அந்த இலாகாவிலுள்ள உத்தியோகஸ்தர்களை வேறு இலாகாக்களுக்கு மாற்றினார்கள். நான் பணிவோடு கூறுகிறேன். நம்முடைய மாகாணத்தில இந்த மாதிரி நிலைமை வராமல் இருக்கலாம். அப்படி ஏற்படுமானால் இந்த லெஜிஸ்லேச்சர் ஸெகரிடேரியேட் அவ்வளவு துணிகரமாக நாங்கள் உங்கள் செகரிடரேயட்டுக்குக் கீழ்ப்பட்டவர்கள் அல்ல, நாங்கள் சுயேச்சையுள்ளவர்கள் என்று **assert** செய்யக்கூடிய சக்தி இந்த இலாகாவுக்கு இருக்குமா என்று பணிவோடு சமர்ப்பித்துக்கொள்கிறேன். திருவாங்கூர்-கொச்சியில், சீப் செக்ரடேரியேட்டுக்கு திட்டவட்டமாக இவர்கள் பதில் எழுதினார்கள். இந்த ராஜ்யத்தினுடைய லெஜிஸ்லேடிவ் பவர், அதாவது சட்டம் இயற்றக்கூடிய அதிகாரம் பார்லிமெண்ட் நேரடியாக ஏற்றிருக்கிறது. பாராளுமன்ற சபாநாயகரின் கீழ்தான் இந்த இலாகா இருக்கும், ஒரு செகரடேரியேட் இலாகாவுக்கு கீழ் வரமுடியாது என்று சொன்னார்கள். வாதப் பிரதிவாதங்கள் வந்து முடிவு எடுப்பதற்குமுன் மறு தேர்தல் குறுக்கிட்டுவிட்டது. அந்த மாதிரி ஒரு சுதந்திர பாரம்பரியத்தை நிலைநாட்ட நாம் முன்வர வேண்டும். இந்த மாதிரி ஒரு பாரம்பரியத்தை நிலைநாட்ட வழி வகுக்க வேண்டும். அப்படிச் செய்தால் இதைப் போன்று சட்டசபையை நினைத்த நேரத்திலே நினைத்த இடத்திற்கு மாற்றம் செய்கிறது போலல்லாமல் இருக்கும். ஒரு இலாகாவின் நிர்வாகத்தில் பல மாற்றங்கள் செய்கிறோம். ஆனால் அப்படிச் செய்த முறை ஜனநாயக முறைப்படி செய்கிறோமா என்று தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்றைக்கு இப்படி மாற்றிய காலத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் சட்டசபை நடவடிக்கைகளைக் காண வசதி இல்லை. இப்படி இன்னும் எத்தனையோ கஷ்டங்கள் இருக்கின்றன. நான் குறிப்பிட்டுச் சொல்வது இப்போது இது ஒரு நேர்மையான, நியாயமான பாரம்பரியமாயிருக்குமா என்று சிந்திக்க வேண்டும். இனி இந்த நிலையை நீடிக்க விடாமல் இருக்க வேண்டுமானால் சம்பிரதாயமான பாரம்பரியமாக உடனடியாகச் செய்ய வேண்டும். லெஜிஸ்லேச்சர் இலாகாவை பரிபூர்ணமாக இதர சர்க்கார் இலாகாக்களிலிருந்து தொடர்பற்றதாகச் செய்ய வேண்டும். இதில் செலவு செய்யக்கூடிய மான்யக் கோரிக்கையை **Charged item** ஆக கொடுக்க முடியாமல் அரசியல் சட்டத்தில் இருப்பினும் நாம் அப்படி ஒரு சம்பிரதாயத்தைக் கொண்டுவர வேண்டுமென்று பணிவன்போடு சமர்ப்பித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**Sri J. MATHA GOWDER :** சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த மான்ய கோரிக்கையை ஆதரித்துச் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். கோடை காலத்தில் இந்த சட்டசபையை உதகமண்டலத்தில் நடத்த வேண்டுமென்று மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். உதகமண்டலத்தில் நடத்துவதற்கு அங்கத்தினர்களை உல்லாச நகரம் என்று உல்லாசத்திற்கு கூப்பிடவில்லை ; ஆனால், அங்கு இருக்கும் நிலைமையைப் புரிந்துகொள்ள வேண்டுமென்று அங்கத்தினர்கள் யாவரையும் அழைக்கிறேன். நீலகிரி ஜில்லா மிகவும் பிற்போக்குள்ளவர்கள் நிறைந்த ஜில்லா, ஆனால் அந்த ஜில்லாவை **Queen of Hills,** மலைப் பிரதேசங்களிலே ராணி போல் விளங்கக் கூடிய பிரதேசம் என்று வெள்ளைக்காரர்கள் இருந்த நாள் முதல்பெயர் வழங்கப்பட்டிருக்கிறது ஆனால், தற்போது அப்போதிருந்த நிலைபோய், இப்போது அவ்வாறு இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. நல்ல பிரச்சாரம் வேண்டும். நீலகிரி ஜில்லா என்று இப்படி ஒரு மலைப் பிரதேசம் இருக்கிறது, அதில் எவ்வளவு சௌகரியம் இருக்கிறது என்ற எல்லா விவரங்களையும் அடங்கிய ஒரு பிரசாரம் தேவையாக இருக்கிறது. நீலகிரி ஜில்லாவைப் பொறுத்த வரையில் இதர மாகாணங்களிலும் அந்நிய நாடுகளிலும் கூட நல்ல முறையில் விளம்பரம் தேவை. இப்போது விளம்பரம் கம்மியாக இருக்கிறது. நீலகிரியைப் பற்றி அன்னிய நாட்டில் இருப்பவர்களுக்கு அதிகம் தெரிந்திருக்க சந்தர்ப்பம் கிடையாது. அதனால் முக்கியமாக ஒரு டூரிஸ்ட் சென்டராக ஏற்படுத்த வேண்டிய சகல வசதிகளையும் செய்வதற்கு சட்டசபையை அங்கு நடத்தினால், நீலகிரி மலைப் பிரதேசத்தில் சட்டசபை நடக்கிறது என்று வைத்துக் கொண்டு, அந்நிய நாட்டிலுள்ளவர்களும் வேறு ராஜ்யமக்களும்

[Sri J. Matha Gowder] [15th July 1957

கோடை காலத்தில் அங்கு வர ஏதுவாகும். அங்கு வெள்ளைக்காரர்கள் இருந்த நாளிலிருந்து மலைத் தொழிலாளர்கள் என்று கொஞ்சம்பேர் இருக்கிறார்கள். இவர்கள் அதிகம் படித்தவர்கள் அல்ல. ஆனால் படிக்காதவர்களும் அல்ல. அவர்கள் சர்வ கட்சியிலும் சேர்ந்தவர்கள்தான். வெள்ளைக்காரர்கள் போன பிறகு அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். சாதாரணமாக அவர்கள் சிறு சிறு வியாபாரம் செய்து வருகிறார்கள். ஆகவே இந்த நீலகிரி ஜில்லாவுக்கு முக்கியத்துவம் கொடுக்க சட்டசபையை கோடை காலத்தில் அங்கே நடத்தினால் இதர ராஜ்ய மக்களும் அந்நிய நாட்டு மக்களும் அங்கே போய்வர ஏதுவாகும். அங்குள்ள ஏழை பாட்டாளிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு ஏதுவாகும். அதற்குத்தான் நான் அங்கத்தினர்களைக் கூப்பிட விரும்புகிறேன். இதை சர்வ கட்சிகளும் ஏக மனதோடு ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். சட்டசபை அங்கத்தினர்களுக்கு நீலகிரியைப் பற்றித் தெரிந்துகொண்டு சட்ட சபையில் பேசுவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும். குந்தா, மோயார், பைகாரா, முதுமலை காடு போன்ற முக்கியமான பல இடங்களைப் பார்த்து அனுபவ ரீதியாக இப்படிப் பேசுவதற்கு அறியக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படும். நீலகிரி பிரதேசம் நம் தமிழ் நாட்டின் ஒரு மாபெரும் செல்வம். அதை நன்றாக வளர்க்க வேண்டும். அதை நன்கு முன்னுக்குக் கொண்டுவர வேண்டும். எனக்கு மாத்திரமல்லாமல் அங்கத்தினர்களுக்கும் முக்கியத்துவம் ஏற்படும். அதற்கு தாராளமாக வழி செய்யவேண்டுமென்ற நம்பிக்கையில் தான் கூப்பிட விரும்புகிறேன். கனம் அங்கத்தினர்களெல்லாம் நினைக்கலாம், உதகமண்டலம் ஒரு உல்லாச நகரம், அதனால் செலவு ஏற்படும் என்று. கிடையவே கிடையாது. பட்டணத்திற்கு வரும்போது நீலகிரியை விட செலவு அதிகம் ஏற்படுகிறது. எனக்கு வருகிற படி போதாமல் அவ்வளவு செலவு ஏற்படுகிறது. நீலகிரியில் செலவு அதிகம் ஏற்படாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். சென்ற ஆண்டு நீலகிரியில் சட்டசபை கூட்டம் நடப்பதாக இருந்தது. துரதிருஷ்டவசமாக அந்த ஆண்டிலே அப்போது எங்கள் பிரதிநிதியாக இருந்தவர் அங்கு போனால் மலைபேதி வரும் என்று பேசி, கடைசியில் சட்டசபைக் கூட்டம் நீலகிரியில் நடக்கவில்லை. மலைபேதி ஒன்றும் கிடையாது. ஆனால் சுகம் கிடைக்கும். நீலகிரியில் சென்ற கோடை விடுமுறையின்போது மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். கோடை விடுமுறை நாளில், அந்நிய நாட்டு மக்களும், இதர மாகாணங்களைச் சேர்ந்தவர்களும் வருவார்கள் என்று அங்குள்ள மக்கள் கரிகாய், கனி வர்க்கங்கள், இவைகளை அதிகமாகப் பயிரிட்டு, அங்கத்தினர் பேசியதைக் காரணமாக வைத்துக்கொண்டு மலைப் பிரதேசத்திற்கு ஜனங்கள் சரியாக வராததால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மலை பேதி வருமென்ற எந்த விதமான பயமும் கிடையாது. நாங்களெல்லாம் சுகமாக இருக்கிறோம். நீங்கள் எல்லோரும் வரவேண்டும். ஒரு சந்தர்ப்பத்தில் கோடை விடுமுறை நாட்களில் நடத்தினால், நீங்களே தொடர்ச்சியாக நடத்த வேண்டுமென்று கேட்பீர்கள். சர்க்கார் யோசனை செய்து, சர்வ கட்சிகளும் ஒன்றுபட்டு, மக்களுடைய தரத்தை உயர்த்தும் நல்லெண்ணத்தை வைத்துக்கொண்டு எல்லோரும் உதவி செய்ய வேண்டுமென்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

11-20 a.m. **Sri K. ANBAZHAGAN**: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தினுடைய நிர்வாகத்தைக் குறித்தும், அது தொடர்பனவை பற்றியும் இப்பொழுது பல நண்பர்கள் பேசுவதற்கான வாய்ப்பு இந்த மான்யத்தில் கிடைத்திருக்கிறது. இன்று நான் முதன் முதலாக இந்தச் சட்ட மன்றத் தலைவரைப் பாராட்ட விரும்புகிறேன்.

இந்த மன்றத்தில் தமிழிலேயே நடவடிக்கைகளை நடத்துவதில் அவர்கள் எடுத்துக்கொள்கிற ஆர்வத்துக்காகவும், வோட்டு அல்லது வாக்குகள் எண்ணப்படுகிற நேரத்திலே கூட தமிழையே அவர்கள் கையாளுவதற்காகவும், அதேபோல் சட்டமன்றத்தினுடைய செயலகம் **Secretariat for the Legislature** என்பதாக அமைந்திருக்கிற குழுவினர் இந்த சட்ட மன்றத்தினுடைய நடவடிக்கை முறைகளை உறுப்பினர்கள் நன்கு புரிந்துகொள்ளும் முறையில் நல்ல தமிழிலே ஒரு வெளியீட்டைத் தந்திருக்கிறார்கள். அவர்களுடைய முயற்சியை நான் வரவேற்கிறேன்.

15th July 1957] [Sri K. Anbazhagan]

அதேபோல், நாள்தோறும் நடைபெறுகிற நடவடிக்கைகளை அன்றாடம் உறுப்பினர்கள் தெரிந்துகொள்ளக்கூடிய விதத்தில், சுற்றறிக்கை அனுப்புகிற முறையையும் நான் பாராட்டுகிறேன்.

பொதுவாகவே, இந்தச் சட்டமன்றம் மிக செம்மையான முறையில் நடப்பதற்குக் காரணமாக இருக்கும் தலைவர் அவர்களையும், அவருக்குத் துணையாக இருப்பவர்களையும் நான் வாழ்த்துகிறேன்.

முதல் அமைச்சருக்கும் இதிலே பங்கு இருக்கிறது என்ற நினைப்போடு, அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் ஆண்டு நிறைவுக்காகவும், அவர்களையும் இந்த நோத்தில் நான் வாழ்த்துகிறேன். அரசியலிலே ஏற்படுகிற மாறுபாடுகள் எவ்வளவு இருந்தாலும், தனிப்பட்ட முறையில் அமைச்சர்களுக்கு எங்கள் வாழ்த்து உண்டு. கருத்துக்களிலே மாறுபாடு ஏற்படுகிறபோது, நாங்கள் தெரிவிப்பதை அரசியல் அடிப்படை தெரியாமல், அரசியல் கருத்துக்கள் முழுவதும் அறியாமல் பேசிவிடுகிற கருத்துக்கள் என்று, சகல கலாவல்லவர்கள் யாரோ சிலர் இருப்பதைப் போலவும், மற்றவர்கள் சாதாரண மலைகளைகூட பெரும்பாலான கலைகளையும் அடியோடு அறியாதவர்கள் போலவும் பேசுகின்ற முறை, மற்றக் கட்சிகளை மதிப்பதாகாது என்று மந்திரிகளுக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

உண்மையாகவே அரசியல் கருத்துக்களில் சில கருத்துக்கள் தவறான கருத்துக்களாகத் தான் தோன்றக்கூடும். நாங்கள் சில கருத்துக்கள் தெரியாதவர்களாகக் காணப்படலாம். நம்முடைய வீட்டில், நம்முடைய மனைவி நமக்கு ஊற்றுவது சாதாரண நெய்யாக இருந்தாலும் அது வாசனை உடையதாகத் தெரியும். அடுத்த வீட்டிலிருந்து வந்த நெய்யாக இருந்தால் அது சிலருக்கு வாசனைக் குறைவுடைதாக தெரியும். அதுபோல், மற்றக் கட்சிகள் சொல்லுகிற கருத்துக்கள் தங்களுக்கு உடன்பாடு இல்லாத காரணத்தாலே, அரசியல் முழுவதும் அறியாமல் இப்படிப் பேசிவிடுகிறார்கள் என்ற கருத்தில் பேசுவது, ஜனநாயகப் பண்பாடு வளருவதற்கு உதவாது என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து, ஜனநாயகத்தை வளர்ப்பதற்கு உறுப்பினர்கள் எண்ணிக்கை அல்ல, முக்கியமான காரணம். உறுப்பினர்களுடைய தரம்தான் முக்கியமான காரணம். சட்ட மன்ற உறுப்பினர்களின் தரம் ஒரு நாட்டிலே வளர வேண்டுமெனில், இரண்டு மாற்றுக் கட்சிகள் ஒன்றோடொன்று மோத வேண்டும். மோத மோதத்தான்—ஆளுகிறவர்களை மோதுவது அல்ல. அதற்கு நாங்கள் கருதவும் மாட்டோம்—கருத்து அலைகள் ஒன்றோடொன்று மோதி, அதிலிருந்து ஜனநாயக விழிப்பு வளர்ந்து, உறுப்பினர்களுடைய தரம் உயர்ந்து, ஜனநாயகத்தினுடைய தரம் ஓங்க முடியும். அந்த முறையிலே எதிர்க்கட்சியிலிருந்து மோதுகிற கருத்துக்கள் ஆளும் கட்சியினரின் கருத்துகளுக்கு மாறுபட்டிருக்குமானால், அதை மட்டுமே அவர்கள் எண்ணிப் பார்த்து பதில் தெரிவிக்கவேண்டும்.

அடுத்து நான் தெரிவிக்க விரும்புவேன்—எதிர்க்கட்சி உறுப்பினர்களுடைய எண்ணிக்கை குறைவாக இருந்தாலும், அது தகுதிக் குறைவு அல்ல. அவர்கள் சார்ந்திருக்கிற லட்சியங்கள் நாட்டு மக்களுக்குத் தேவைப்படுமானால், அந்தச் சிறிய எண்ணிக்கை பெரிய எண்ணிக்கை ஆக நாள் ஆகாது. ஆகவே, அந்தச் சிறிய எண்ணிக்கையாக அவர்கள் இருக்கும்போதே, கவனிக்கவேண்டிய கருத்துக்களை கவனிப்பது ஆளும் கட்சியினுடைய பொறுப்பு என்பதை அவர்கள் உணரவேண்டும்.

இந்த நாட்டிலே சட்ட மன்றம் இருப்பது பொதுமக்களுடைய கருத்தைப் பிரதிபலிக்க, பொதுமக்களுடைய கருத்து உருவானது—தெருக்களிலும் சாதாரணப் பொது இடங்களிலும் நடைபெறும் பொதுக்கூட்டங்களினாலே தான். இப்படிப்பட்ட கூட்டங்கள் நடத்துவதற்காக, சென்னை போன்ற நகரங்களில், பல இடங்களில் அனுமதி மறுக்கப்படுகிறது. ஜனநாயகத்தை வளர்ப்பதற்குப் பொதுக்கூட்டங்கள் இன்றியமையாதவை. அமைச்சர்கள் வரும்போது பள்ளிக்கூடங்களும் திறந்துவிடப்படுகின்றன—அவர்கள் அரசியல் கருத்துக்களைப் பேசுவதாக இருந்தாலும்கூட. ஆனால் எதிர்-

[Sri K. Anbazhagan] [15th July 1957

கட்சியினர் தெருவோரங்களில் கூட்டங்கள் கூட்டிப் பேசுவதாக இருந்தாலும், நடைபாதையில் போக்கு வரத்துக்கு வசதிக் குறைவு ஏற்படுகிறது, என்று சொல்லி, எங்கே கூட்டம் போடுவதாக இருந்தாலும் மறுத்துவிடுகிறார்கள். போலிஸ் அதிகாரிகள் தங்கள் கடமையை நிறைவேற்றுவதற்காகத்தான் அவர்கள் மறுக்கிறார்கள். ஆனால், ஜனநாயகம் இதனால் பாதிக்கப்படுகிறது என்பதை எண்ணிப் பார்த்து அந்த அளவுக்கு பொதுமக்களுக்காகக் கூட்டம் போடும் உரிமையையேனும், ஆளும் கட்சியினர் நாட்டினருக்கு உண்டாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், ஜனநாயகம் வெற்றிபெற வேண்டுமானால், ஒவ்வொரு பகுதியிலும் உள்ள மக்கள், எந்த எந்தக் கருத்துக்களை எண்ணுகிறார்களோ, அவைகளை உடனடியாகத் தெரிவிப்பதற்கான வாய்ப்பும், அவைகளைத் தெறிவித்தவுடனே உடனடியாகக் கவனிப்பதற்கான முறைகளும் அரசியலிலே வளரவேண்டும். சட்ட மன்றத்திலே பேசப்படுகிற கருத்துக்கள் எதிர்க்கட்சிக்காரர்கள் பேசினார்கள். நாம் ஏதோ பதில் சொன்னோம் என்று முடிந்துவிடாமல் என்ன என்ன கருத்துக்களைச் சொல்லி, அமைச்சர் எப்படிப்பட்ட பதிலைச் சொல்லி இருந்தாலும், அந்தப் பதில் எல்லாம் நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்பதைக் கவனிக்கவேண்டும். அதைக்கூட உறுப்பினர்களைக்கொண்டு நியமிக்கப்பட்டிருக்கிற. "அஷ்யூரன்ஸ் கமிட்டி மட்டும்" கவனித்தால் போதாது, அமைச்சர்களும் கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாகச் சொல்வேன்—அஷ்யூரன்ஸ் கமிட்டிக் கூட்டத்திற்கு அதன் உறுப்பினரான அமைச்சரே பெரும்பாலும் வர முடிவதில்லை. அவர்களுக்கு உள்ள வேறு வேலைகள் காரணமாக. அதற்கு வராவிட்டாலும் கூட (அஷ்யூரன்ஸ்) உறுதிமொழியாகத் தெரிவித்தவைகளை அரசாங்கத் துறையிலே உள்ளவர்கள் நிறைவேற்றினார்களா என்பதை, அவர்களுக்கு உள்ள பொறுப்பு காரணமாகக் கவனித்தால்தான் ஜனநாயகம் வெற்றி பெறுமே அல்லாது, அமைச்சர் தரும் கருத்துக்களை அரசாங்கத்திலே உள்ளவர்கள் நிறைவேற்றாமல் இருக்கின்றவரை ஜனநாயகம் வெற்றிபெறாது. மூன்று, நான்கு ஆண்டுகளாகவே, சில கருத்துக்கள்—சாதாரண குறைப்பாடுகள் பற்றிய உறுதிமொழிகள் நிறைவேறாமல் இருக்கின்றன.

அடுத்து, சட்டங்கள் நன்றாக உருவாவதற்கு மேல் சபை இன்றியமையாதது என்ற கருத்து எல்லோருக்கும் உடன்பாடு அல்ல. மேல் சபை என்று, தனியாக, இருப்பது கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதற்குத் தேவை ; மிகப் பெரிய விற்பன்னர்கள் இருக்கிறார்கள் ; மேதாவிகள் இருக்கிறார்கள் ; அவர்களுடைய கருத்துக்களை அறிவிப்பதற்கு மேல் சபை தேவையே என்று சொல்வதனால், ஒரு குறிப்பிட்ட அளவுக்கு—இன்ன இன்ன துறையைச் சார்ந்தவர், இன்ன இன்னாரால் தேர்ந்தெடுக்கப்பட்டவர், இன்ன இன்ன தனிப்பட்ட பிரதிநிதித்துவம் உடையவர் என்று குறிப்பிட்டு, அவர்களுக்கு இந்தச் சட்டமன்றத்திலேயே இடம் கொடுத்து விடலாம், நூற்றுக்குப் பத்துப் பேர் என்ற அளவிலேனும். ஆனால், அதை விட்டு அவர்களுக்காக ஒரு தனி மன்றம், அவர்களுக்கென தனி அலுவலகம் என்று இருக்கத்தான் வேண்டும் என்பது உண்மையிலேயே சற்று வியப்பாக இருக்கிறது. கவர்னர் பதவியைக் குறித்துப் பேசிய இந்த நேரத்திலே பொருத்தம் ஆகாது என்று அதைக் குறித்து மறுத்துப் பேசிய முறையிலேயே, மேல் சபையைப் பற்றிக் குறிப்பிடுகிற கருத்துக்கும் மறுப்பு எழலாம். ஆனால், மேல் சபையின் பயனைப் பெறுவதற்கு இந்தச் சட்ட மன்றத்தாலே முடியும். இந்தச் சட்ட மன்றத்திலேயே அவர்களில் எத்தனை பேருக்கு இடம் தரவேண்டுமோ, அத்தனை பேருக்கு இடம் தரலாம்.

அது மாத்திரம் அல்ல. இன்றையதினம் உள்ள சட்ட மன்றம் செம்மையாக இயங்குவதற்கு—ஆட்சி நடத்துவதற்கு—தனித் தனிக் குழுக்கள் அமைப்பதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளலாம். எந்தக் கட்சியினராக இருந்தாலும், சட்ட மன்ற உறுப்பினர்களில் யார் யாருக்கு எந்தெந்தத் துறையிலே அதிக ஆர்வம் இருக்கிறதோ, அவர்கள் அந்தத் துறையிலே

15th July 1957] [Sri K. Anbazhagan]

ஆலோசனைகள் சொல்லக்கூடிய விதத்தில், அவர்களுடைய கருத்துக்களுக்கு அதிக வாய்ப்புக் கொடுக்கக்கூடிய முறையில், கலந்து பேசி, நல்ல முடிவு எடுக்கும் விதத்தில், அப்போதைக்கப்போது தனித் தனிக் குழுக்கள் அமைத்துக்கொள்வோமானால் மேல் சபையும் தேவைப்படாது. ஆனால், மேல் சபை உறுப்பினர்கள் சட்டமன்றத்தில் இருக்கக்கூடாது என்பதற்காக நான் இதைச் சொல்லவில்லை. ஆசிரியர்களுடைய பிரதிநிதிகள் வரட்டும்; ஜில்லா போர்டுகள் அல்லது லோகல் போர்டுகள் சார்பாக பிரதிநிதிகள் வரட்டும்; மிகப் பெரிய அறிஞர்கள், நுண்ணறிவாளர்கள் இந்த மன்றத்திற்கு வரட்டும். அது எண்ணிக்கையை ஓரளவுக்கு அதிகரிக்கக்கூடும். ஆனால், சட்ட மன்றம் ஒன்று போதும். இரண்டு தேவை இல்லை என்ற கருத்தை நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

இதைத் தெரிவித்துக்கொள்ளும்போது—அமைச்சர்கள் எண்ணக்கூடும்—இங்கு 205 பேர்களுக்குத்தானே இடம் இருக்கிறது; 205-க்கும் அதிகமான எண்ணிக்கைக்கு இடமளிக்கச் சொல்வது மவுண்ட் ரோடு மண்டபத்துக்குக் கூப்பிடுவதற்கோ என்று. நாங்கள் கூப்பிட்டாலும் கூப்பிடாவிட்டாலும், நாட்டுமக்கள் கூப்பிடத்தான் போகிறார்கள். இந்த இடம் எப்படிப் போதும். அடுத்த தேர்தலுக்குப் பிறகு? இந்த நாட்டுமக்களுக்கெல்லாம் பிரதிநிதித்துவம் உடையதாக இந்த மன்றம் இருக்கவேண்டுமானால் ஏறத்தாழ 75 ஆயிரத்திலிருந்து ஒரு லட்சம் பேர் அளவிற்கு ஓர் உறுப்பினர் வீதம் இந்த மன்றத்திலே இருக்கவேண்டும். ஏறத்தாழ, தமிழ் நாட்டினுடைய மக்கள் தொகை மூன்று கோடி. இந்த மூன்று கோடி மக்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டுமானால், ஏறத்தாழ 300 பேர்கள்—உறுப்பினர்கள்—இந்தச் சட்டமன்றத்திலே இடம் பெறவேண்டும். எல்லா மக்களுடைய கருத்தையும் எடுத்துச் சொல்லும் வாய்ப்பு—அது எந்த அளவுக்கு பிரதிநிதித்துவம் அதிகம் ஆகிறதோ, அந்த அளவுக்குத்தான் அதிகமாகும். அந்த முறையிலே எண்ணிப் பார்த்தால், அடுத்த தடவை பொதுத் தேர்தல் நடைபெறுகிறபோதே, நாட்டு மக்களுக்கு நீதி செய்வதாக இருந்தால், நாட்டுமக்களின் தேவைகளைத் திறம்பட மன்றத்தில் எடுத்துரைப்பதற்கு 300 பேர்கள் இருப்பதற்கு இடம் தேவை. அந்த வகையில் பார்த்தால், மவுண்ட் ரோடிலுள்ள சட்ட மன்றக் கட்டிடம்தான் நமக்குத் தேவைப்படும்.

அதற்குள்ளாகவே மத்திய சர்க்காருக்கு அந்தக் கட்டிடத்தை வாடகைக்கு விட்டு, பத்து இருபது ஆண்டுகளுக்கு அது அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டு, அதைத் திரும்ப கேட்கும் நேரத்தில், மத்திய சர்க்கார் எத்தனையோ காரியத்திலே சொன்னதைப் போல் "இல்லை" என்று சொல்லக்கூடிய நிலை ஏற்படுமோ என்ற அச்சம் எனக்கு இருக்கிறது. அதனாலேயே நான் தெரிவித்துக்கொள்வேன்; அந்தக் கட்டிடத்தை நாமே வைத்துக்கொள்ள—நம்முடைய சட்ட மன்றம் ஜனநாயகத்தை வளர்க்க ஒரு வாய்ப்பாகப் பயன்படுகிற முறையிலே—இந்த மன்றத் தலைவர் அவர்கள்—அதற்குத் துணையாக இருக்கவேண்டும்; பொறுப்புள்ள ஆளும் கட்சியினரும் இந்தக் கருத்தை ஏற்றுச் செயலாற்ற வேண்டும்.

கடைசியாக நான் குறிப்பிடுகிறேன்—இனி வருகிற தேர்தலிலே, "குறியிட்டு வோட்டுப் போடுகிற முறை," இருக்கிறது என்று நான் கேள்விப்பட்டேன். அதை இந்த நாட்டின் ஜனநாயக வளர்ச்சிக்குப் பயன்படக் கூடிய முறை என்ற காரணத்தால் நான் வரவேற்கின்றேன்; இந்த சட்ட மன்றத்தினுடைய நடவடிக்கைகள் மிகச் செம்மையான முறையில் நடைபெறுகின்றன என்றாலும் கூட சில முறைகளில் திருத்தங்கள் தேவைப்படுகின்றன, இடமாற்றம் அவசியமாகிறது என்பதை வலியுறுத்த—இந்த மானியக் கோரிக்கையில் ரூபாய் 100 குறைக்க வேண்டிய அவசியம் நேருகிறது என்று கூறி, என்னுடைய உரையை நான் முடித்துக்கொள்ளுகின்றேன்.

*SRI S. B. ADITYAN: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மேல் பேசும்போது ஒரு விஷயத்தை வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். இந்தச் சபையில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்து பணியாற்றுபவருக்கு எப்படி மந்திரிகளுக்குச் சம்பளம் கொடுக்கப்படுகிறதோ அதைப்போலவே, ஆனால் அதைவிட கொஞ்சம் குறைவாக, சம்பளம் கொடுக்க வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

[Sri S. B. Adityan] [15th July 1957

ஜனநாயக முறையில் ஆட்சி செவ்வையாக நடப்பதற்கு ஆளும் கட்சியைப் போல எதிர்கட்சியும் முக்கியமான பங்கை வகிக்கிறது. இரண்டு கட்சிகளும், ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் சரியான முறையில் தங்கள் தங்கள் பங்கை கடமையை நிறைவேற்றினால்தான் ஜனநாயக ஆட்சி நன்றாக அமையும் என்பதை நம் நாட்டிலுள்ளவர்கள் மட்டுமல்ல, உலகிலுள்ள எல்லா தேசங்களும் ஒப்புக்கொண்டிருக்கின்றன. இரண்டு தரப்பு வாதங்களையும் நன்றாகக் கேட்டுத்தெரிந்துகொண்டு தீர்ப்பு வழங்குவது என்கிற முறையில்தான் இந்த நாட்டு நிர்வாகம் பலகாலமாக நடந்து வந்திருக்கிறது.

ஒரு யதேச்சாதிகார நாடாக இருந்தால் எதிர்க்கட்சி என்பதே இருக்க முடியாது. யதேச்சாதிகார நாடுகளில் எதிர்க்கட்சி என்பது இல்லவே இல்லை என்பதையும் கண்கூடாகப் பார்க்கிறோம். எதிர்க்கட்சிக்காரர்கள் என்று சொல்லிக்கொண்டு அந்த நாடுகளில் யாருமே வாழ முடியாது.

ஆனால் ஜனநாயகம் என்பது நம்முடைய பண்பாடு. யதேச்சாதிகாரத்தை நாம் விரும்பவில்லை. சட்டசபையில் ஆளும் கட்சிக்கு உறுதுணையாக எதிர்க்கட்சியும் நல்ல முறையில் தங்கள் பணியையாற்ற வேண்டுமென்றே கருதுகிறோம். பழங்காலத்தில் அரசர்கள் இந்த நாட்டை ஆண்டு வந்தபோதும் அரசனுக்கு நன்மதி மந்திரி, துன்மதி மந்திரி என இரண்டு மந்திரிகள் இருந்தார்கள் என்றும், அரசன் தன்னுடைய மன்றத்திலே எந்தப் பிரச்சனை வந்தாலும் முதலில் துன்மந்திரியை அழைத்து அவனுடைய அபிப்பிராயத்தையும், பின்னர் நன்மந்திரியை அழைத்து அவனுடைய அபிப்பிராயத்தையும், ஆக இரண்டு தரப்பு வாதப்பிரதிவாதங்களையும் நன்றாகக் கேட்டறிந்து பின்பு தன்னுடைய நியாயமான, நேர்மையான தீர்ப்பை வழங்கி வந்திருக்கிறான் என்பதை நாம் எல்லோரும் அறிந்துள்ளோம். அதுதான் உயர்ந்த ஜனநாயக முறை. அதன்படித்தான் நாமும் இப்போது செயல்படுகிறோம். ஜனநாயக முறையில் ஆட்சி பொறுப்பு நடந்து வருகிற வெளிநாடுகளிலும் கூட இப்படித்தான் ஆளும் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் எதிர்கட்சித் தலைவருக்கும், எதிர்கட்சி அங்கத்தினருக்கும் நல்ல மதிப்புக் கொடுத்து அவர்களுடைய அபிப்பிராயத்தை நன்கு அறிந்துகொண்டு செயல்பட்டு வருகிறார்கள். குறிப்பாக யுத்தம் வேண்டுமா / வேண்டாமா என்கிற முக்கிய பிரச்சனையைப் பற்றி முடிவு செய்வதாக இருந்தாலும் கூட எதிர்க்கட்சித் தலைவரை ஆளும் கட்சிப் பிரதமர் கேட்டு அறிந்தே செயல்படுகிறார். சென்ற யுத்த காலத்தின்போது பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சில் அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அட்டிலியை வரவழைத்துத் தன்னுடன் வைத்துக்கொண்டே பேச்சுவார்த்தைகள் நடத்தினார் என்பதை சரித்திரத்தின் வாயிலாகக் கேட்டு அறிந்திருக்கிறோம். இப்படி எதிர்க்கட்சித் தலைவருக்கு முக்கியத்துவம் கொடுக்கிற எல்லா ஜனநாயக நாடுகளிலும் இன்றைக்கு மந்திரிகளுக்குச் சம்பளம் கொடுப்பதுபோலவே எதிர்க்கட்சித் தலைவருக்கும், கொஞ்சம் மந்திரிகளைவிடக் குறைவாக, சம்பளம் கொடுத்து வருகிறார்கள். குறிப்பாக இங்கிலாந்தில் எதிர்கட்சித் தலைவரை "**Her Majesty's Leader of the Opposition**" என்று கௌரவமாக அழைத்து மரியாதை கொடுக்கிறார்கள். 1937-ம் வருஷத்தில் ஒரு சட்டம் கொண்டுவந்து வருடத்திற்கு இரண்டாயிரம் பவுன் எதிர்க்கட்சித் தலைவருக்கும் சம்பளமாகக் கொடுப்பது என்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதாவது மாதம் ஒன்றுக்கு இரண்டாயிரம் ரூபாய்க்கு மேல் கொடுத்து வருகிறார்கள். இதை யாரும் எதிர்க்கவில்லை. குறைக்கவேண்டுமென்று சொல்லவில்லை. குறிப்பாக அந்தச் சம்பளத்தை இன்னும் கொஞ்சம் கூட்டிக்கொடுக்க வேண்டும் என்றே இந்த ஆண்டில் ஒரு சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த ஆண்டிலிருந்து அவருக்கு மாதம் 2,500 ரூபாய் சம்பளம் கிடைக்கும். ஆஸ்டிரேலியா தேசத்திலும் ஆண்டு ஒன்றுக்கு எதிர்க்கட்சித் தலைவருக்கு 2,570 பவுன் சம்பளம் கொடுக்கிறார்கள். அதாவது 2,500 ரூபாய் கொடுத்தும் வருகிறார்கள். கனடா நாட்டிலே பதினாங்கு ஆயிரம் டாலர் கொடுக்கிறார்கள். அதாவது 70 ஆயிரம் ரூபாயாகிறது. மாதத்திற்கு ஐயாயிரம் சொச்சம் வருகிறது. இப்படி அவர்கள் எல்லாம் சம்பளம் கொடுப்பதற்குக் காரணம் எதிர்க்கட்சித் தலைவருக்கும் நிர்வாகத்தில் பொறுப்பு உண்டு,

15th July 1957] [Sri S. B. Adityan]

அவர்களுடைய உழைப்பும் நிர்வாகம் செவ்வையாக நடப்பதற்கு இன்றியமையாதது என்கிற காரணம்தான். அதேபோன்று இங்கும் ஜனநாயக பண்பாட்டை நிறுவி ஆட்சி செலுத்தி வருகின்ற நாம் எதிர்க்கட்சித் தலைவருக்கு மந்திரிகளுக்குச் சம்பளம் கொடுப்பது போலவே கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்துகிறேன்; இன்று எதிர்க்கட்சித் தலைவராக இருக்கக்கூடிய ஸ்ரீ வி. கே. ராமசாமி முதலியார் அந்தச் சம்பளத்தை எண்ணி வாழவில்லை யென்றாலும் நாளைக்கும் ஒரு ஏழை, விவசாயி, தொழிலாளி எதிர்க்கட்சித் தலைவராக வரலாம். அப்போது அவனுக்குச் சம்பளம் தேவைப்படும் என்கிற காரணத்தால் எதிர்கட்சித் தலைவருக்குச் சம்பளம் கொடுக்கவேண்டும் என்று வற்புறுத்தி முடித்துக்கொள்ளுகிறேன்.

* SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Mr. Speaker, some of us take very strong objection to the shifting of the Legislative Assembly from Mount Road to Fort St. George. Many people have been agitating both in the Press and on the platform against the action of the Government in shifting the Assembly, when there was no Legislature in session and when there was no Speaker. The Executive took the initiative and has shifted the Assembly here without the knowledge of anybody. Everybody in this State is well aware of the fact that about ten lakhs of rupees were spent over the construction of the new Assembly Building in the Government Estate at Mount Road. The whole Legislative Assembly was housed there for more than five years and nobody, so far as I know, felt any inconvenience all these years. And it is not known why, all of a sudden, without the knowledge of anybody, the Executive took it into its head to move the whole Assembly to the Fort St. George. There is not sufficient accommodation here. It is a well-known fact that there is no lounge for the Members here and that the amenities they are entitled to are denied to them in this building. If the Government had any idea of removing the entire office to this building, they should have taken the prior consent of the Legislature. That was not done. Again, it is reported in the newspapers that the old Assembly building in the Government Estate is to be placed at the disposal of the Government of India. If this is a fact, the decision has to be strongly protested against. When our Government offices are housed in rented buildings, like Khaleeli Mansions and other places, it is not known why our old Assembly building should be placed at the disposal of the Government of India. (The Hon. Sri C. Subramaniam: We will get rent.) Even if it is a question of rent, I do not think it will be very remunerative. I am sure the Government will consider this question very seriously.

Then, Sir, as soon as this session is over, the whole Assembly office will be shifted to the building in the Government Estate. What an amount of inconvenience is caused thereby, I need not say. My impression Mr. Speaker, is that the status of the Assembly is not adequately recognised by the Executive. It is not in consonance with our dignity that we should place ourselves at the mercy of the Executive. That is why, in all civilised countries where there is a democratic form of Government, the control over the Legislature and its buildings vests in the Speaker.

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [15th July 1957

Looking back upon what has transpired during the last three months, I am of opinion that the shifting of the Assembly from Mount Road to Fort St. George was motivated by a desire on the part of the Executive to reduce the status of the Legislature, to undermine the dignity of its Members, so that the House may be wholly dependant on the sufferance of the Executive. Therefore it is, I say, that if the Government were very serious about the shifting of the office to Fort St. George, they should have made other arrangements to house the office here without its being shifted temporarily during meeting days. So, the justification for getting back permanently to the old Assembly building cannot be gainsaid. Mr. Speaker would have then real control over the Legislature and its offices and could function without his work being hampered by the Executive. What happened some years ago in the Imperial Legislative Council, as it was then called, comes to my mind now. It was presided over by no less a person than Sri Vithalbhai Patel. He maintained the dignity and independence of the House when the Public Safety Bill was piloted and he did not even for one moment tolerate the interference of the Executive. He thus vindicated his rights and those of the Assembly. Sir, even though you have been elected by the party in power, you have seized to be a partyman and I hope, you will vindicate your rights and the dignity of the House by seeing to it that the Assembly is shifted back to Mount Road. My humble submission is that the Executive should be subordinate to the Legislature. If this state of affairs is brought about, then your name, Sir, will go down in history as one who maintained his independence and integrity. This is a very serious matter and I request you, Mr. Speaker, to pay attention to this in all seriousness. My highest regard for the Legislature and Speaker inspires me to give a bit of my mind on this occasion and I hope my speech will not be misunderstood.

Sir, the Member who spoke before me, Mr. Adityan, said much about me and the importance that should be given to the office of the Leader of the Opposition. Though I do not expect any remuneration, I have been requesting the Speaker to allot rooms to the leaders of parties in the Opposition. Till now nothing has been done. At least if a room is given to me immediately, that will be very much appreciated.

So, Mr. Speaker, Sir, you will bear in mind all I said just now and see that immediate and proper action is taken in shifting the Legislature back to the Government Estate, Mount Road. As a protest against the action of the executive in not taking the popular opinion into account in moving the Legislature to Fort St. George and in having this done without our knowledge, myself and the members of my party do not propose to take part in the voting of this Demand. Therefore, Sir, we walk out of the House.

After concluding the speech, Sri V. K. Ramaswamy Mudaliar and the members of his party walked out of the House.

15th July 1957]

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் சபாநாயகர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சபையை விட்டு வெளியேறியதைப் பற்றி நான் மிகவும் வருந்துகிறேன். இனிமேல் அவர்கள் உண்மையாகவே எதிர்த்துப் வலியுறுத்திப் பேசுகின்றார்களா இல்லையா என்பதை அவர்கள் சபையை விட்டு வெளியே போகிறார்களா இல்லையா என்பதைப் பார்த்தே நான் முடிவு செய்யவேண்டும்போலிருக்கிறது. வெளியே போகாமல் இங்கிருந்து சொல்லக்கூடிய வார்த்தைகளுக்கு எல்லாம் நான் அதிக மதிப்புக் கொடுக்க வேண்டியது இல்லை என நினைக்கிறார்களோ என்னவோ தெரியாது. ஆகவே அவர்களை உங்கள் மூலமாக நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால், " எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் சொல்லக்கூடிய எந்த வாதங்களையும் நாங்கள் நன்கு கவனித்து அதில் ஏதாவது உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமானால் அதை எடுப்பதற்கு என்றைக்குமே தயாராக இருக்கிறோம். அதற்காக சபையை விட்டு வெளியேறி எந்த விஷயத்தையும் வலியுறுத்த வேண்டிய அவசியம் இல்லை " என்று நான் மிகவும் தாழ்மையுடன் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய விருப்பம் இந்தச் சபையானது மக்கள் அதற்குக் கொடுத்திருக்கக் கூடிய பணியை, மக்கள் அதன் பேரில் வைத்து இருக்கக்கூடிய நம்பிக்கையை அனுசரித்து நல்ல முறையில் மற்ற சபைகளுக்கு எல்லாம் வழிகாட்டக்கூடிய முறையில் நடக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை. இதில் நட்சி பேதம் இருக்கவேண்டிய அவசியம் கிடையாது. எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் இந்தச் சபை அங்கத்தினர் என்று சொல்லும்போது அவர்களுக்கு தனிப்பட்ட ஒரு கௌரவம், ஒரு மதிப்பு, ஒரு தனித் தகுதி ஏற்படுகிறது. இவை எல்லாம் மக்கள் பிரதிநிதி என்கிற முறையில் தான் ஏற்படுகின்றன. ஆகவே எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் இங்கு இருக்கக்கூடிய சட்டசபை நல்ல முறையில் பணியாற்ற வேண்டுமானால் அவர்களும் நல்ல முறையில் பணியாற்றக் கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்பதே என்னுடைய அவா. ஆகையால்தான் சட்டசபைக் காரியாலயம், அதிலே பணியாற்றக் கூடியவர்கள் எல்லோரும் நேரிடையாக எந்த இலாகாவிற்கும் கீழ் இல்லாமல் தனித்து இயங்க வேண்டும் என்ற கருத்தை ஸ்ரீ சட்டநாத கரையாளர் வலியுறுத்தினார். அதை நாங்கள் முழுதும் ஒப்புக்கொண்டிருக்கிறோம். வெறுமனே வாய் அளவில் ஒப்புக்கொண்டிருக்கிறோம் என்று சொல்வதோடு மட்டும் அல்ல. கனம் சபாநாயகர் அவர்கள் அதை அறிவார்கள். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எல்லாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

இதைப்பற்றி சபாநாயகர்கள் எல்லோரும் கூடிப் பேசும் பல மகாநாடுகளில் குறிப்பிட்டு, நாம் எடுத்துக்கொண்டிருக்கும் நடவடிக்கைகளைப்பற்றி பாராட்டிப் பேசியிருக்கிறார்கள் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆகையால்தான் இந்தச் சட்டசபைக் காரியாலயமானது தனித்து வேறு எந்தவிதமான நிபந்தனைகளுக்கும், மற்றவர்கள் யாருடைய கட்டுப்பாடுகளுக்கும் உட்படாமல், தனித்து சுதந்திரமாக இயங்க வேண்டுமென்பதில் கருத்து வேறுபாடு கிடையாது. இதற்கான நடவடிக்கைகளை எல்லாம் எடுத்துக்கொண்டிருக்கிறோம். இனியும் இதற்குமேலும் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்பதைப் பற்றி ஆராய்ந்து கொண்டும் வருகிறோம். அதைப்பற்றிக்கூடப் பேசிக்கொண்டிருக்கிறோம். இப்படி சட்டசபை இலாகா தனியாக இயங்குவதன் மூலமாக நல்லமுறையில் சட்டசபை தன்னுடைய பணியை ஆற்றமுடியும். அதற்கான சூழ்நிலை அப்போதுதான் ஏற்பட முடியும், என்ற காரணத்தை ஏற்றுக்கொண்டு அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எல்லாம் அரசாங்கம் எடுத்து வருகின்ற காரணத்தால் இப்போது ஒரு வெட்டுப் பிரேரணையைப் பிரேரேபித்து அந்தக் கருத்தை வலியுறுத்த வேண்டிய அவசியம் இல்லை என்பதை ஸ்ரீ சட்டநாதக் கரையாளருக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் இங்கு இப்போது சட்டசபைக் காரியாலய நிர்வாகம் எப்படி நடந்து வருகிறதென்ற முறையைப் பார்த்தால் அதில் ஏற்பட்டிருக்கக்கூடிய பெரிய மாறுதல்களை எல்லாம் உணர்வார்கள் என்று நம்புகிறேன். இன்னும் சில காரியங்கள் முக்கியமாக கவனிக்க வேண்டியிருக்கிறதென்று எனக்கு

[Sri C. Subramaniam] [15th July 1957

நன்ருகத் தெரியும். அவ்வப்போது சபாநாயகர் அவர்களைக் கலந்துக் கொண்டு அந்தக் காரியங்களை எல்லாம் செய்வதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அதோடு இன்னொரு விஷயத்தையும் நான் அங்கத்தினர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்தச் சபையில் நடக்கும் விவாதங்கள் எல்லாம் உயர்ந்த முறையில் இருக்கவேண்டும். அப்படி உயர்ந்த முறையில் இருக்கவேண்டுமானுல் அங்கத்தினர்கள் எல்லோரும் இங்கு நடக்கும் விஷயங்களை அவ்வப்போது நன்ருகத் தெரிந்துகொள்ளக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டியது அவசியம். மந்திரிகளைப் பொறுத்தவரையில் சர்க்கார் காரியாலயம் முழுவதும் அவர்களுக்குப் பின்னுல் இருந்து உதவி புரிகிறது. மந்திரிகளுக்கு எந்த ஒரு விஷயத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டியிருந்தாலும், சட்ட நுணுக்கமான பிரச்னையாக இருந்தாலும் சரி, உடனே அவர்கள் சர்க்கார் காரியாலயத்திலுள்ள அதிகாரிகளுக்குச் சொல்லி அனுப்பி, அவர்கள் மூலமாக உடனடியாகத் தெரிந்துகொள்வதற்கு வசதி இருக்கிறது. ஆகையால் எந்த ஒரு சட்டம் வரும்போதும் அதைப்பற்றி விவாதம் நடக்கும் போதும் சபையில் விவாதத்திற்கு வரக்கூடிய விஷயங்களைப்பற்றி சர்க்கார் காரியாலய அதிகாரிகளிடமிருந்து நன்ருகத் தெரிந்துகொண்டு அந்த விவாதத்தில் கலந்துகொள்வது சாத்தியமாகிறது. ஆனுல் தனிப்பட்ட அங்கத்தினர்களுக்கு அம்மாதிரி வசதி என்பதே இல்லாமல் இருக்கிறது. சட்ட சபை காரியாலயத்தை சுதந்திரமாக மட்டும் இயங்கும்படி செய்வதோடு மட்டும் அல்லாமல், தனிப்பட்ட அங்கத்தினர்களுக்கு உதவி செய்வதற்காக இந்த இலாகாவில் ஒரு பகுதி தனியாக ஏற்படவேண்டும் என்பது என் அபிப்பிராயம். சட்ட நுணுக்கமாயிருந்தாலும் சரி அல்லது வேறு விஷயமாக இருந்தாலும் சரி, அங்கத்தினர்களுக்கு அவைகளைத் தேடிக் கொடுத்து, வசதி செய்து கொடுப்பதற்கான ஏற்பாட்டை செய்து கொடுக்கவேண்டும் என்ற கருத்தை சென்ற வருஷம் ஒரு நிகழ்ச்சியில் குறிப்பிட்டேன். கட்சித் தலைவர்கள் கூடி அதை நிறைவேற்றி வைக்க வேண்டும் என்று அபிப்பிராயம் தெரிவித்தால், அந்த விஷயத்தில் சர்க்கார் தகுந்த நடவடிக்கை எடுப்பார்கள் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நல்ல முறையில் அங்கத்தினர்கள் விவாதத்தில் பங்கு எடுத்துக்கொள்ள வேண்டியதையெல்லாம் செய்து கொடுக்கவேண்டும் என்பதுதான் சர்க்காரின் நோக்கம். அங்கத்தினர்களுக்கு ஒன்றும் புரியாமல் வைத்துவிட்டு விவாதத்தை நடத்திக்கொண்டு போகவேண்டும் என்பது நோக்கம் அல்ல. அதற்கு நேரிடையாக, விஷயங்களை அவர்களுக்கு தெளிவாக புரியவைத்து, விவாதத்தை நல்ல முறையில் நடத்துவதற்கு வேண்டிய எல்லா சௌகரியங்களையும் செய்து கொடுப்பதற்கு சர்க்கார் தயார் என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த விஷயத்தில் அங்கத்தினர்கள் முக்கியமாக கட்சித் தலைவர்கள் சிறந்த பணி ஆற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். தகுந்த யோசனைகளைச் சொல்ல வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சட்டசபை இட மாறுதலைப்பற்றி ' பலமாகக் கண்டித்து எதிர்க்கட்சி தலைவர் அதற்காக சபையை விட்டு வெளியேறினுர்கள். இந்த விஷயத்தில் நன்ருக யோசித்துப் பார்த்துத்தான் ஒரு முடிவுக்கு வரப்பட்டது. அங்கத்தினர்களுக்கு வேண்டிய விஷயங்களை உடனடியாக தெரிந்துக் கொள்ளவும், "பின்னுல் விசாரித்துச் சொல்லுகிருேம்" என்று சொல்லாமல், உடனடியாக இருக்கக்கூடிய காரியங்களை அப்போதைக்கப்போது விசாரித்துத் தெரிந்து கொள்ள இங்கு வசதிகள் அமைந்திருக்கின்றன. அதற்கு மேலாக, அந்தத் கட்டிடம் 375 அங்கத்தினர்களைக் கொண்ட சபையை நடத்துவதற்கு சௌகரியமாய் இருந்தது. தற்பொழுது இந்த சபையில் 200 அங்கத்தினர்கள்தான் இருக்கிருர்கள். ஸ்ரீ அன்பழகன் குறிப்பிட்டது போல், நாம் செய்யக்கூடிய தீர்மானங்களின்படி இந்த சட்டசபையின் எண்ணிக்கை 300 அல்லது 350 என்று பெருகுமானுல், அந்தக் கட்டிடம் எங்கும் போய்விடவில்லை. அதை நாம் என்றைக்கும் உபயோகப்படுத்திக்கொள்ளலாம். அந்தக் கட்டிடத்திலும் பல வசதிகள் குறைவாக இருக்கின்றன என்பதை அங்கு சட்டசபைக் கூட்டம் நடந்த

15th July 1957]  [Sri C. Subramaniam]

போது நன்றாக தெரிந்து கொண்டிருப்பார்கள். அதற்கு அருகாமையில் பல சிறிய கட்டிடங்களை அமைத்து கொடுத்தால்தான் சட்டசபை நன்றாக இயங்க முடியும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அங்கத்தினர்களுக்கு அசௌகரியங்களை விளைவிப்பதற்காகவோ அல்லது சட்டசபை நடப்பதிலே தடைகளை ஏற்படுத்த வேண்டும் என்ற காரணத்தினாலோ இதைச் செய்யவில்லை என்பதை நான் இந்த சபை முன்பு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, இந்த சட்டசபைக் கூட்டத்தை நீலகிரியில் கூட்டவேண்டுமென்று கனம் அங்கத்தினர் ஸ்ரீ மாதாகௌடர் சொன்னார். இதைப்பற்றி முந்திய சட்டசபையில் கூட விவாதம் வந்தது. சர்க்கார் இதை ஒரு தனிப்பட்ட விஷயமாக கருதவில்லை. இதைப்பற்றி ஆலோசிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். எல்லா கட்சி அங்கத்தினர்களும் பேசி, ஆலோசித்து முடிவுக்கு வரவேண்டிய விஷயம் இது. ஒரு முகமாக முடிவுக்கு வரவேண்டிய இந்த விஷயத்தை கட்சி-பிரதி கட்சி வாதங்களுக்கு உபயோகித்துக் கொள்ளக்கூடாது. ஏதோ நாம், சிக்கனம் இல்லாமல் மலைமேலே குளு, குளு என்று இருப்பதற்கு செல்ல விரும்புவதாகச் சொல்லி இதை தங்கள் தங்கள் பிரசாரத்திற்காக உபயோகிக்கும் விஷயம் அல்ல இது. எல்லா கட்சி அங்கத்தினர்களும் ஆலோசனை செய்து பார்த்து ஒரு முடிவுக்கு வரவேண்டிய காரியம் இது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கு இயங்கக்கூடிய கட்சிகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு தனி அறை இல்லை என்று அடிக்கடி சொல்லப்படுகிறது. இதை நாங்கள் உணராமல் இல்லை. கூடிய சீக்கிரத்தில் கட்சிகளுக்கு எங்கு அறைகள் கட்டலாம் என்பது பற்றி ஆலோசித்து என்னாலான முயற்சிகளை செய்கிறேன். சட்டசபை நடக்கும்போது, அனேகமாக எல்லா அங்கத்தினர்களும் இங்கேயே உட்கார்ந்து கொள்ள வசதியிருப்பதால் இரண்டொரு ரூம்கள் மட்டும் இவ்விடத்தில் அமைத்து விட்டால் போதும். ஆனால் அங்கத்தினர்கள் இருக்கக்கூடிய **Hostel**-க்கு பக்கத்திலேயே தனித்தனி ரூம்கள் இருந்தால், சட்டசபை கூடாத காலத்தில் கட்சி கூட்டங்கள் கூடுவதற்கும், தனித்தனி கட்சி அங்கத்தினர்கள் கூடிப் பேசுவதற்கும், கட்சி காரியாலயங்களை அமைத்துக்கொள்வதற்கும் வசதியாய் இருக்கும் என்றும் யோசனைக் கூறப்பட்டது. மௌண்ட் ரோடிலுள்ள கவர்ன்மெண்ட் எஸ்டேட்டில். இவ்விதம் எல்லாக் கட்சி அங்கத்தினர்களுக்கும் தனி இடம் ஒதுக்க உடனடியாக முயற்சி செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அங்கு இப்போது இருக்கக்கூடிய இடவசதியைப்பற்றி நிச்சயமாக தெரியாது. ஆகையால் இதுபற்றி இப்பொழுதே ஒன்றும் உறுதியாகச் சொல்லமுடியாது.

இங்கு நாம் எல்லோரும் ஒன்றாக இருந்து, இந்த சட்டசபையினுடைய மதிப்பு மேன்மேலும் உயர்ந்து, எல்லா கட்சிகளும் ஒத்துழைத்து, பொதுவாக சபையின் மதிப்பை கவனித்துக்கொண்டு நடந்தால் அதன் மூலமாக, நல்ல முடிவுகளும், நல்ல விவாதமும் ஏற்படும். விவாதத்திலே ஏற்படக்கூடிய தர்க்கங்களினால், ஒரு சில மனத்தாங்கல்கள், சில சமயம் நம்மையும் மீறி ஏற்பட்டுவிடும். விவாதத்தின்போதோ, மற்ற சமயங்களிலோ, நான் பதில் சொல்லும்போது, மற்றவர்களுக்கு ஒன்றும் தெரியாது என்கிற மனப்பான்மையில் அதை எடுத்துக்கொள்ளவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏதாவது ஒரு விஷயத்திற்கு பதில் சொல்லும்போது எனக்குத் தெரிந்த அளவில் பதில் சொல்லுகிறேன். மற்றவர்கள் நான் தெரியாமல் சொல்வதாக எடுத்துக்காட்டினால் ஏற்றுக்கொள்ளத் தயார். ஆகவே ஒரு விஷயத்தைப்பற்றி பதில் சொல்லும்போது, மற்றவர்களுக்கு ஒன்றும் தெரியாது என்ற மனப்பான்மையில்லாமல், எனக்கு எது சரி என்று தோன்றுகிறதோ அதை வெளிப்படையாகச் சொல்வதுதான் என் கடமை. அதை மறைத்துவிட்டு, மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ என்று கருதி அதை விட்டுவிட்டால், இங்கு விவாதமே நல்லமுறையில் நடைபெற முடியாது. நாம் ஒவ்வொருவரும், வீண் குற்றச்சாட்டுகளை சொல்லிக்கொண்டிராமல், நியாயமான முறையில் சபையின் மதிப்பு மேன்

மேலும் உயரக்கூடிய விதத்தில் விவாதங்களை நடத்தினால் சட்டசபையின் மதிப்பு மேன்மேலும் உயரும் என்பதில் சந்தேகம் இல்லை. சபாநாயக ராகிய தாங்கள் நல்ல முறையிலே இச்சபையின் நடவடிக்கைகளை நடத்தி வருவது குறித்து, நானும் மற்ற எல்லா அங்கத்தினர்களும் எங்கள் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறோம். உங்களுடைய தலைமையின் கீழ் இந்தச் சட்டசபை நல்ல முறையில் இயங்கி நல்ல முறையில், விவாதங்களும், முடிவுகளும் ஏற்பட்டு நம்முடைய மக்கள் நம் பேரில் வைத்து இருக்கக்கூடிய பெரும் நம்பிக்கையை நாம் நிறை வேற்றக்கூடிய நிலைமையில் நாம் பணியாற்றுவோம் என்று உறுதி யுடன் இந்த மானியத்தை ஒரு முகமாக நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : Is the hon. Member K. Sattanatha Karayalar withdrawing his cut motion?

SRI K. SATTANATHA KARAYALAR : Yes, Sir.

The cut motion was, by leave, withdrawn.

MR. SPEAKER : I now put the original motion to the vote of the House. The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 40,58,300 under Demand X—State Legislature."

The Demand was put and carried and the Grant was made.

## (3) DEMAND XIII—JAILS.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் சபாநாயகர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் அவர்களின் சிபார்சின் பேரில் 13-வது மான்யக் கோரிக்கை—சிறைச்சாலைகள்—என்ற தலைப்பின் கீழ் 91,15,800 ரூபாய்க்கு மேற்படாத தொகை அரசாங்கத்திற்கு அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். 1956–57-ஆம் ஆண்டில் கேட்டுக்கொள்ளப்பட்ட மான் யத்தை விட 1957–58-ஆம் ஆண்டில் கேட்கப்படும் மான்யம் குறைவு என்று நான் சொல்ல விரும்புகிறேன். அதாவது 1956–57-ஆம் ஆண்டில் கேட்கப் பட்ட மான்யம் ரூபாய் 95·11 லட்சம். கைதிகளை திருத்தி அவர்கள் விடுதலை யானதும், நல்லவர்களாக நடந்துகொண்டு, சட்டத்தை மீறாமல் அமைதி யான வாழ்வில், நல்ல முறையில் ஈடுபடவேண்டும் என்பதே சிறை நிர்வாகம் பொறுத்தவரை, அரசாங்கத்தின் கொள்கையாக இருந்து வந்திருக்கிறது என்பதை நான் ஆரம்பத்திலேயே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கைதிகளின் சமூக அந்தஸ்து, வாழ்க்கை நிலை, செய்த குற்றம் ஆகியவைகளை உத்தேசித்து அவர்களை 3 பிரிவுகளாக பிரிக்கப்படுகிறது. அப்படி பிரிக்கப்பட்ட அந்தந்த வகுப்புக்கு ஏற்றபடி உணவு, உடை முதலிய விஷயங்களில் எல்லா சலுகைகளும் காட்டப்படுகின்றன. அரசாங் கத்தின் அனுமதி பெற்ற பத்திரிகைகள், புத்தகங்கள் ஆகியவற்றை எல்லா வகுப்புக் கைதிகளும், அவர்கள் சொந்த செலவிலேயே வாங்கிக் கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

கைதிகளை சீர்திருத்தவேண்டும் என்னும் நோக்கத்துடனும் அதே சமயத்தில் அரசாங்க இலாக்காக்களுக்கு வேண்டிய பொருள்களை உற்பத்தி செய்துகொள்ளலாம் என்ற கருத்துடனும் கைதிகளுக்கு வேலை தரப் படுகிறது. அவர்கள் விடுதலையடைந்து வெளியில் வந்ததும் கௌரவமாக வாழ்க்கை நடத்த வாய்ப்புகள் அளிக்க வேண்டும் என்னும் நோக்கத் துடன், தச்சு வேலை, தையல் வேலை, நெசவு வேலை, சாயம் ஏற்றுதல் முதலிய தொழில்களில் பயிற்சி தரப்படுகிறது. கைதிகளுக்கு அவரவர்





உடல் நிலைக்குத் தக்க விதத்திலும், தண்டனை அடைவதற்கு முன்பாக அவர்கள் என்ன வேலையில் பழக்கப்பட்டிருந்தனரோ, அதையும் உத் தேசித்து தக்க வேலைகள் தரப்படுகின்றன. கைதிகளின் திறமை, மனப் பான்மை முதலியவைகளை உத்தேசித்து அவர்களுக்கு என்ன வேலை தரப்படவேண்டும், எந்தவிதத்தில் கல்விப் பயிற்சி முதலியன அளிக்க லாம் என்பவைகளை நிர்ணயிப்பதற்காக கோயமுத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம், சென்னை ஆகிய இடங்களிலுள்ள மத்திய சிறைகளில் போர்டுகள் நியமிக்கப்பட்டிருக்கின்றன. இந்த போர்டுகளில் சிறைத் தலைமை அதிகாரி, சீனியர் உதவி சர்ஜன், ஜெயிலர் முதலியோர் அங்கத்தினர்களாக இருக் கின்றனர். அரசாங்க வேலைகளை செய்வதற்கும் கைதிகள் அனுப்பப்படு கின்றனர். உற்பத்தியை அதிகரிக்க அவர்களுக்கு உற்சாகம் அளிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் கைதிகளுக்கு "கிராச்சுவிட்டி" கொடுக் கப்படுகிறது. சிறைகளில் ஒழுங்காக நடந்துக்கொள்ளவேண்டும் என்பதை அவர்களுக்கு உணர்த்தவும், ஒழுங்காக நடப்பவர்களுக்கு சுமார் இரண்டு மாதம் வரை தண்டனைக் குறைப்பு அளிக்கப்படுகிறது. இரண்டு ஆண்டு களுக்கு மேல் சிறை தண்டனை பெற்று வரும் கைதிகள் விஷயத்திலும் அவர்கள் ஓரளவு காலத்திற்கு சிறையில் இருந்த பிறகு அவர்களை முன்ன தாகவே விடுதலை செய்யலாமா என்பதைப்பற்றி ஆலோசனை கூறுவதற் காக ஒரு போர்டும் இருக்கிறது.

சிறைகளில் தக்க வைத்திய, சுகாதார ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக் கின்றன. ஒவ்வொரு மத்திய சிறையிலும் ஒரு ஆஸ்பத்திரியும் இருக்கிறது.

கல்வி வசதி பெற ஆவலாய் உள்ள கைதிகளுக்கும் கல்வி அளிப் பதற்கு வழிகள் செய்யப்படுகின்றன. சில சிறைச்சாலைகளில் முதியோர் கல்வி அளிப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதற்காக விசேஷப் பயிற்சி பெற்ற உபாத்தியாயர்கள நியமிக்கப்பட்டிருக்கின்றனர். திருச்சியிலுள்ள மத்திய சிறையில் படித்த கைதிகளைக் கொண்டே மற்ற கைதிகளுக்கு உயர்தரக் கல்வி அளிப்பதற்கு, முதியோர் கல்வித்திட்டத் தின் கீழ், ஒரு திட்டத்தை சமீபத்தில் அரசாங்கம் ஆராய்ச்சி முறையில் வகுத்துள்ளது. இத்திட்டத்தின்படி முன்பு இரண்டு அல்லது மூன்று வருஷங்களுக்கு குறையாத தண்டனை அடைந்த கைதிகளுக்கு மட்டும் உயர்தரக் கல்வி அளிக்கப்பட வேண்டும் என்று இருந்ததை மாற்றி, இப்போது 6 மாதத்திற்குக் குறையாத தண்டனை பெற்ற கைதிகளுக்கும் இது மாதிரி கல்வி வசதி அளிக்கலாம் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக் கிறது. சிறைகளில் ஆரம்பத்தில் அனுமதிக்கப்படும்போது சுமார் 21·60 சத விகிதத்தினர்தான் கல்வி யறிவு உடையவர்களாய் இருக்கின்றனர்; ஆனால் விடுதலை அடைந்து செல்லும்போது சுமார் 67.86 சத விகிதத்தினர் கல்வி யறிவு பெற்றுத் திரும்புகின்றனர் என்பதை கனம் அங்கத்தினர் களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். மேலும் பட்டப்படிப்பு தேர்வுப் பரீட்சை எழுத விரும்பும் எல்லா வகுப்பு கைதிகளும் அவரவர்கள் தகுதிகளைக் குறித்து தேர்வு எழுத, அவர்களை, உறுதிமொழியின் பேரில் (பரோலில்) அவசியமான நாட்களுக்கு மட்டும் வெளியில் விடலாம் என்று அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. 1955 நவம்பரில், சென்னை, வேலூர், மதுரை, கோயமுத்தூர் ஆகிய மத்திய சிறைகளிலிருந்து சில கைதிகள் 1956, மார்ச் ஈ. எஸ். எல். சி. தேர்வுப் பரீட்சை எழுதலாம் என்று அரசாங்கம் அனுமதித்தது. இவர்கள் தங்கள் சொந்த உடையிலேயே வெளியில் வந்து போலீஸ் பாதுகாப்புடன் தேர்வுப் பரீட்சை எழுதினார்கள். சமீபத்தில் சேலம் மத்திய சிறையிலிருந்து சில கைதிகளை 1957, ஆகஸ்ட் மாதம் நடக்கவிருக்கும் இந்தி பிராத்மிக் தேர்வு பரீட்சை எழுதுவதற்கு அரசாங்கம் அனுமதித்திருக்கிறது. இவர்களும் சொந்த உடையிலேயே போலீஸ் பாதுகாப்புடன் விடப்படுவர்.

எல்லா வகுப்புக் கைதிகளுக்கும் மத சம்பந்தமாகவும் ஒழுக்க சம்பந்த மாகவும் பிரசங்கங்கள் செய்யப்படுகின்றன. அவரவர் மத சம்பந்தப்பட்ட பிரசங்கங்களையே செய்ய பிரச்சாரகர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். சிறை ஓய்வு நாட்களின்போது சிறைச்சாலைகளின் நிர்வாக சம்பந்தமான சில வேலைகள் தவிர மற்ற வேலைகளை அவர்கள் செய்யவேண்டிய அவசியம் இல்லை.

[Sri M. Bhaktavatsalam] [15th July 1957

சிறைகளைப் பார்வையிடும், "ஜில்லா மாஜிஸ்ட்ரேட்", "பொது சுகாதார டைரக்டர்", "ஜில்லா கல்வி அதிகாரி" ஆகியோர் தவிர பொது மக்களிலிருந்தும் சிலர் பார்வையாளர்களாக நியமிக்கப்படுகின்றனர். இப் பார்வையாளர்களுக்கு சிறைச்சாலையின் எந்தப் பகுதிக்கும் சென்று பார்வையிடவும், எல்லா கைதிகளையும் பார்த்து அவர்களுக்குக் குறைகள் ஏதாவது உண்டா என்று கேட்டுத் தெரிந்துகொள்ளவும், சிறைச்சாலை விதிகள், சட்டங்கள்படி நிர்வாகம் சரிவர நடைபெறுகின்றனவா என்று அறியவும், உரிமைகள் இருக்கின்றன.

1956-ஆம் ஆண்டில் சிறைகளில் தினம் சராசரி 15,014·60 பேர் இருந்தனர். அதற்கு முந்திய ஆண்டு 15,628.68 பேர் இருந்தனர்.

விடுதலையடையும் கைதிகளுக்கு உதவி செய்யும் சங்கத்தின் மூலமாக விடுதலையடையும் கைதிகளுக்கு அரசாங்கம் பல வழிகளில் உதவி வருகிறது. இச்சங்கத்திற்கு அரசாங்கம் ஆண்டுதோறும் 6,000 ரூபாய் மான்யமாக அளித்து வருகிறது. இச்சங்கம் நடத்தும் தொழிற்சாலையை விரிவுபடுத்துவதற்கு அரசாங்கம் மொத்த மான்யமாக இந்த ஆண்டு ரூபாய் 5,000 அளிக்க உத்தேசித்திருக்கிறது. இளங் குற்றவாளிகளைச் சீர்திருத்தி அவர்களை நல்வழிப்படுத்த வேண்டும் என்ற திட்டம் 1952 ஜூலை மாதம் தொடங்கப்பட்டது. இது ஆராய்ச்சி ரீதியில் சென்னை மத்திய சிறை, பாளையங்கோட்டை போர்ஸ்டால் பள்ளி, செகண்டரி ஸீனியர் சர்டிபைட் பள்ளி ஆகிய இடங்களில் நடத்தப்பட்டு வருகிறது. வேலூர் பெண்கள் சிறைச்சாலையிலும் விடுதலையாகும் கைதிகளுக்கு உதவி செய்யும் சங்கத்திலும் இத்திட்டம் நடத்தப்பட்டு வருகிறது. அதற்காக ஆண்டுதோறும் ரூபாய் 1,500 மான்யமாக அளிக்கப்படுகிறது.

பாளையங்கோட்டையில் உள்ள போர்ஸ்டால் பள்ளியில் 647 இளங் குற்றவாளிகள் தங்க இடமிருக்கிறது. இங்கேயே எட்டாவது வகுப்பு வரை ஆரம்பக். கல்வி அளிக்கப்படுகிறது. மேலும் நெசவு, தையல் வேலை, தச்சு வேலை, கொல்லு வேலை, கட்டிட வேலை, புத்தகம் கட்டுதல், விவசாயம், கையால் காகிதம் செய்தல் முதலிய தொழில்கள் கற்றுத் தரப்படுகின்றன.

இளங்குற்றவாளிகள் திருத்தச் சட்டம் இப்போது திருவாங்கூர்-கொச்சியிலிருந்து மாற்றப்பட்ட பகுதிகள் தவிர மற்ற எல்லா இடங்களிலும் அமலில் இருந்து வருகிறது. ஒவ்வொரு ஜில்லாவிலும், ஒரு ஜில்லா இளங்குற்றவாளிகள் சீர்திருத்த அதிகாரி இருக்கிறார். குற்றவாளிகள் அதிகமாக உள்ள சில ஜில்லாக்களில் அதிகப்படியான ஜில்லா அதிகாரிகளும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். தற்போது 39 அதிகாரிகள் இருக்கின்றனர். குழந்தைகளும், இளங் குற்றவாளிகளும், சர்டிபைட் அல்லது பார்ஸ்டல் பள்ளிகளிலிருந்து விடுதலையானதும் அவர்களை சீர்திருத்தும் வேலையில் இவர்கள் ஈடுபட்டிருக்கின்றனர். அதோடு ஆலோசனை போர்டின் சிபார்சின் பேரில் விடுதலையான கைதிகளையும் இவர்கள் கவனித்துக்கொள்கின்றனர். அவசியமானவர்களுக்கு மட்டும் தண்டனை அனுபவிக்கும் காலத்திலேயே இவர்கள் சில பரிசீலனைகளும் நடத்துகின்றனர்.

தற்போது நமது ராஜ்யத்தில் நான்கு அரசாங்க சர்டிபைட் பள்ளிகளும், ஒன்பது தனிப்பட்டவர்கள் வசமுள்ள பள்ளிகளும் இருக்கின்றன. அரசாங்கத்தின் வசமுள்ள பள்ளிகளிலுள்ள இளங்குற்றவாளிகளுக்கு எட்டாவது வகுப்பு வரை கல்வி அளிப்பதோடு தொழில் கல்வியும் சொல்லித் தரப்படுகின்றது. அவர்கள் விடுதலையானதும் கௌரவமான வாழ்க்கை நடத்துவதற்கு உதவியாக இருக்கும் பொருட்டு இவ்விதம் செய்யப்படுகிறது. அவர்கள் விடுதலை அடைந்து ஒரு வேலையில் அமரும் வரையிலும் சர்டிபைட் பள்ளியுடன் இணைக்கப்பட்டிருக்கும் கைதிகள் கிளப்பில் தங்கியிருக்க அனுமதிக்கப்படுகின்றனர். சீர்திருத்த நிலையங்களிலிருந்து விடுதலையாகும் கைதிகளை கவனிப்பதற்கும், அவர்களுக்கு தங்க வசதிகள் அளிப்பதற்குமாக சமீபத்தில் அரசாங்கத்தார் பெண்களுக்கென்றும், ஆண்களுக்கென்றும் இரண்டு நிலையங்களை ஏற்படுத்தி யிருக்கின்றனர். இளங்குற்றவாளிகள் சீர்திருத்த பள்ளிகளும், பெண்கள் மீட்பு இலாகாவும் ஒரு தனி அதிகாரியின் கீழ் வைக்கப்பட்டிருக்கின்றன.



15th July 1957] [Sri M. Bhaktavatsalam]

சென்னை, வேலூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம் ஆகிய இடங்களில் இளங்குற்றவாளிகள் நீதி மன்றமும், அவர்களை பராமரிக்கும் விடுதிகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. சமீபத்தில் கோயமுத்தூர், தஞ்சாவூர், செங்கற்பட்டு ஆகிய ஜில்லாக்களிலும் இதேமாதிரி நீதி மன்றங்கள் ஏற்படுத்த அரசாங்கம் அனுமதித்திருக்கிறது. நமது ராஜ்யத்தில் சிறை நிர்வாகம் பற்றி யோசனைகள் கூறவும், கைதிகளை எந்தவிதத்தில் சீர்திருத்தலாம் என்பதைப்பற்றி ஆராயவும் 1950-ம் ஆண்டில் அதிகாரிகளும், பொதுவாழ்வில் ஈடுபட்டுள்ளவர்களும் கொண்ட ஒரு கமிட்டி அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டது. இந்தக் கமிட்டியின் அறிக்கை 1951-ம் ஆண்டில் சமர்பிக்கப்பட்டது. கைதிகளின் நிலைமையை அபிவிருத்தி செய்யவும், சிறைகளில் சீர்திருத்த வேலைகளை மேற்கொண்டு கைதிகளுக்கு புனர்வாழ்வு அளிக்கவேண்டும் என்னும் நோக்கத்துடனும், பல முக்கியமான யோசனைகளை இக்கமிட்டி தெரிவித்திருக்கிறது. இச்சிபார்சுகளில் 93 சத வீதம் இதுவரை ஆராயப்பட்டு, அவைகளின் மீது அரசாங்கம் உத்திரவு பிறப்பித்திருக்கிறது.

கனம் சபா நாயகர் அவர்களே, இத்துடன் இந்த மான்யக் கோரிக்கையை நிறைவேற்றி வைக்கும்படி இச்சபையை நான் கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : Motion moved—

"That the Government be granted a sum not exceeding Rs. 91,15,800 under Demand XIII—Jails."

I understand that all the Opposition parties are agreed that Sri V. K. Kothandaraman should move the cut motion standing in his name. Sri V. K. Kothandaraman will now move the cut motion.

SRI V. K. KOTHANDARAMAN : ஜெயில்கள் மானியத்திற்காகக் கோரப்படும் ரூ. 91,15,800-ல் ரூ. 100-ஐக் குறைக்க வேண்டும் என்ற என்னுடைய வெட்டுப் பிரேரணையைப் பிரேரேபிக்கிறேன்.

MR. SPEAKER : கனம் அங்கத்தினர்கள் எவ்வளவு நேரம் பேச வேண்டும் என்று கனம் மந்திரி அவர்கள் விரும்புகிறார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஒவ்வொரு கனம் அங்கத்தினரும் 10 நிமிஷங்கள் பேசலாம். 40 நிமிஷங்கள் இருக்கின்றன. நான்கு அல்லது ஐந்து அங்கத்தினர்கள் பேசலாம்.

MR. SPEAKER : Cut motion moved—

"That the allotment of Rs. 91,15,800 under Demand XIII—Jails—be reduced by Rs. 100".

The original Demand and the cut motion are before the House for discussion. Sri V. K. Kothandaraman will now speak.

SRI V. K. KOTHANDARAMAN : கனம் தலைவர் அவர்களே, ஜெயில் மானியத்தின் மீது வெட்டுப் பிரேரணையைப் பிரேரேபித்ததுடன், சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

பெரிய பெரிய அறிஞர்களெல்லாம் குற்றங்கள் ஏற்படாத நிலைமையை உண்டாக்கி மக்கள் குற்றவாளிகளாக ஆவதைத் தடுப்பதுபற்றி ஒரு கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். "இன்றுள்ள சமூக அமைப்பின் காரணமாகத்தான் பலர் குற்றம் செய்கிறார்கள். சமூகத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகளையும் பாகுபாடுகளையும் நீக்குதல், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குதல், ஆகிய காரியங்களைச் செய்து நாட்டில் பசியோ, பட்டினியோ இல்லாத நிலைமையை உண்டாக்கினால், மக்கள் குற்றம் செய்யக் கூடிய நிலைமை இருக்காது. அப்படிச் செய்தால்தான், குற்றங்களைக் குறைக்க முடியும், குற்றம் புரியாதவர்களை நாம் காண முடியும்;

[Sri V. K. Kothandaraman] [15th July 1957

ஜெயில்களின் எண்ணிக்கையை குறைக்க முடியும்" என்பதை பல பெரிய
பெரிய அறிஞர்கள் எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் என்று
இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்று ஜெயில் நிர்வாகம் எப்படி நடக்கிறது என்று நாம் பார்க்க
வேண்டும். இன்று ஜெயில்களில் மத்திய ஜெயிலாக இருந்தாலும் சரி,
சப்-ஜெயிலாக இருந்தாலும் சரி, போலீஸ் ஸ்டேஷனிலுள்ள லாக் அப்பாக
இருந்தாலும் சரி, அங்கெல்லாம் குற்றவாளிகள் நல்ல முறையில் நடத்தப்
படுகிறார்களா என்றால், அதுதான் இல்லை என்று சொல்ல வேண்டியிருக்
கிறது. மேலும், ஜெயிலுக்குப் போய் திரும்பியுள்ளவர்களும், மற்ற மக்
களும் நன்றாகப் பழகும் நிலைமை இன்று இல்லை. ஜெயிலுக்குப் போய்த்
திரும்பியவர்களிடம் மற்றவர்களுக்கு நல்லெண்ணம் ஏற்படக்கூடிய
வாறு அவர்கள் மாறியிருக்கவேண்டும். அப்படிப்பட்ட நிலைமை இன்று
இல்லை. அதற்குப் பதிலாக வெள்ளையன் காலத்தில் இருந்த நிலைமையே
தான் இன்றும் இருந்து வருகிறது. இந்த சந்தர்ப்பத்தில் நான் குறிப்
பாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். சுதந்திரத்திற்காகப் போராடி ஜெயி
லுக்குப்போன கனம் அங்கத்தினர்களும், காங்கிரஸ் ஆட்சியிலேயே ஜெயி
லுக்குப்போன கனம் அங்கத்தினர்களும் இங்கே இருப்பார்கள். ஆகவே,
ஜெயில்கள் எப்படி இருக்கின்றன என்பது அவர்களுக்கு அனுபவத்தி
லேயே தெரிந்த விஷயம். இன்று, ஜெயில்களில் சரியான சாப்பாடு வசதி
கிடையாது, சரியான உடை வசதி கிடையாது ; ஏன், "ஒன்றுக்கு" இரண்
டுக்குப்" போவதற்குக்கூட சுகாதார முறையில் வசதி இல்லை. ஜெயில்களில்
இப்படிப்பட்ட மோசமான நிலைமை இருக்கிறது. முதலிலே குற்ற
வாளிகள் ஜெயிலுக்குள் போகும்போது அவர்களுக்கு 2 கோவணங்கள்
கொடுக்கப்பட்டு 10, 15 நாட்களுக்கு அவர்கள் கோவணத்தோடு இருக்க
வேண்டுமென்ற ஒரு நிலை இருக்கிறது. அவர்கள் இம்மாதிரி மோசமான
நிலைமையில் நடத்தப்படுகிறார்கள்.

THE HON. SRI C. SUBRAMANIAM : சமீபத்திலே கனம் அங்கத்தினர்
அவர்களுக்கு இந்த அனுபவம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. கோவணம்
கொடுப்பது முன்பு இருந்ததோ என்னவோ, இப்பொழுது கிடையாது.

SRI V. K. KOTHANDARAMAN : சமீபத்திலே ஜெயிலிலிருந்து வெளி
வந்தவர்களை கேட்டுத் தெரிந்து கொண்டது தான் இது. அங்கு இப்படிப்
பட்ட நிலைமை இருப்பதாக அவர்கள் சொன்னார்கள். சட்டசபை உறுப்
பினர்கள் சப்-ஜெயில், மத்திய ஜெயில் இவைகளுக்குள் நேராகப்போய்
விஷயங்களை நேரிலே பார்த்து தெரிந்துகொள்ளக் கூடிய வாய்ப்பு இல்லா
மல் இருக்கிறது. அதனால் கேட்டுத் தெரிந்து கொண்டதில் இதுபோன்ற
நிலைமை அங்கு இருப்பதாகத் தெரிய வருகிறது. அது மட்டுமல்ல.

ஒன்றுக்கு, இரண்டுக்குப் போவதற்கு சப்-ஜெயில் லாகப்பில் ஒரு சட்டி
தான் கொடுக்கிறார்கள். அந்த ஒரு சட்டியிலேயே இரண்டு காரியங்களையும்
முடிக்கவேண்டுமென்பது எவ்வளவு கேவலமாக இருக்கிறது? எவ்வளவு
இழிவாக இருக்கிறது ? இரண்டு சட்டிகளாவது கொடுக்கக்கூடாதா ? அதுவும்
கிடையாது. மகாளித் தட்டி, கம்பளி கூளம்போல் கொடுக்கப்படு
கிறது. வருஷக்கணக்கில் புதியது கொடுக்கப்படுவதில்லை. இதனால் குற்ற
வாளிகள் ஜெயிலிலிருந்து வெளிவரும்பொழுது பல வியாதிகளுக்குள்
ளாகுகிறார்கள். அவர்கள் சுகாதாரம் மிகவும் பாதிக்கப்படுகிறது. குறைந்த
பட்சம் வருஷத்திற்கு ஒரு முறையாவது இதை மாற்றவேண்டும். நல்ல
சட்டங்கள் இருக்கின்றன என்று மட்டும் சொன்னால் போதாது. சட்டங்கள்
இருப்பதுபோல் இன்றைக்கு நடக்கிறதா என்று பார்த்தால், அது தான்
கிடையாது. அந்த அளவுக்கு குற்றவாளிகள் மோசமாக நடத்தப்படுகிறார்
கள். அதுவுமல்லாமல் சாப்பாடு மிகவும் மோசமாக சப்ளை செய்யப்படு
கிறது. கீரைத்தண்டைதான் அதிகமாக உபயோகப்படுத்துகிறார்கள். உணவு
உடை முதலிய எல்லா விஷயங்களிலும் மோசமான நிலைமை இருந்து
வருகிறது. ஜெயில்களில் இருக்கும் அறைகள் மூட்டைப் பூச்சி, கொசு
முதலியவைகள் நிறைந்த காற்றோட்டமில்லாத அறைகள். அதனால் குற்ற
வாளிகளின் சுகாதாரம் வெகுவாக பாதிக்கப்படுகிறது. இவைகளையெல்
லாம் உடனடியாக மந்திரி அவர்கள் கவனித்து நல்ல சௌகரியமான



15th July 1957] [Sri V. K. Kothandaraman]

முறைகளிலே இந்த வசதிகளை மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இதற்கு உதாரணம் நான் காட்ட வேண்டுமென்றால் சோவியத் ரஷ்யாவுக்குப் போக வேண்டியதில்லை, சைனாவுக்கு போக வேண்டியதில்லை. சோவியத் ரஷ்யாவின் ஜனநாயகத்தையும் பார்க்க வேண்டியதில்லை. இந்தியாவில் இருக்கக்கூடிய மத்திய அரசாங்கத்தினு டைய சட்டத்திற்குட்பட்டு ஆட்சி நடத்தக்கூடிய கேரள ராஜ்யத்திலே ஒவ்வொரு ஜெயிலிலும் "டீ காண்டீன்" வைக்கக்கூடிய வசதி செய்திருக் கிறார்கள். ஒவ்வொரு வார்டிலும் ஒரு கமிட்டியை அமைத்து கண்டிராக்ட ரிடம் உணவுப்பொருள்கள், காய், கறி முதலியவைகளை வாங்கிக்கொண்டு அவர்களே சமைத்து சாப்பிடக்கூடிய ஒரு வசதி செய்திருக்கிறார்கள்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கேரள ராஜ்யத்தின் ஜெயில் இலாகா மந்திரி அவர்கள் சமீபத்தில் சென்னைக்கு வந்திருந்தபொழுது இநத ராஜ்யத்திலுள்ள ஜெயில்களைப் பார்த்து அநேகம் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் இருக்கின்றன என்று என்னிடம் சொன்னார்கள்.

SRI V. K. KOTHANDARAMAN : அதேபோன்று நான் நேற்று முந்தா நாள் பத்திரிகையில் பார்த்தேன். தெள்ளத்தெளிவாக அதிலே குறிப் பிடப்பட்டிருக்கிறது. இம்மாதிரி அங்கே ஒரு கமிட்டி அமைக்கப்பட்டிருப்ப தாகவும், டீ காண்டீன் ஏற்படுத்தப் பட்டிருப்பதாகவும் அதிலே கூறப் பட்டிருந்தது. 10 வருஷ காலமாக இல்லாத வசதிகள் இப்பொழுது துரிதமாக செய்யப்படுகின்றன. எல்லோரும் தவறு 'செய்யக் கூடியவர்கள் தான். தவறு செய்துவிட்டு மாதா கோவிலில் இல்லையென்று கூட சொல்லிவிடலாம். மந்திரிகளும் தவறு செய்யலாம். தவறு செய்யாதவர்கள் அல்ல. வருஷக் கணக்கில் தவறுகளை செய்து கொண்டிருந்தும் அவைகளை உடனடியாக உணர்ந்து தங்களை சீர்திருத்திக் கொள்ளுவது இப்பொழுது கிடையாது. அம்மாதிரியான பெருவாரியான மக்களிடம்தான் வோட்டுகள் கேட்டு வெற்றி பெற்றிருக்கிறோம். வயிற்றுக்கு இல்லாத காரணத்தினாலே சாரா யத் தவறுகள் பல செய்கிறார்கள். தவறுகள் செய்த பிற்பாடும் கூட தங்களை சீர்திருத்திக்கொள்ள வேண்டுமென்ற மனப்பான்மை ஏற்பட வில்லை. கூடுமான வரையில் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக அவர்களுக்கு உணவு தானியங்களை வாங்க ஏற்பாடு செய்யவேண்டும்.

அடுத்தபடியாக 20, 30 கம்யூனிஸ்டு கைதிகள் அரசியல் கைதிகளாக இருக்கிறார்கள். அவர்களையும் விடுதலை செய்ய வேண்டுமென்பதை இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அவர்கள் கிரிமினல் குற்றவாளிகள், கொலை குற்றவாளிகள் என்றும் கூட சர்க்கார் சொல்ல லாம். காசிராஜகோபாலன் போன்றவர்களெல்லாம் வெள்ளையர் ஆட்சி காலத்திலே பல கிரிமினல் குற்றம் செய்தார்கள் என்று சொல்லப்பட்ட பொழுது, அவர்கள் தவறு செய்தவர்களா இல்லையா என்பதையெல்லாம் எடுத்துக்காட்டி நாங்கள் வாதாடியிருக்கிறோம். அவர்களை விடுதலைசெய்ய வேண்டுமென்று வாதாடியிருக்கிறோம். சுதந்திரப் போராட்டம் ஆரம் பித்து 100 வருஷங்கள் முடியப்போவதை ஒரு பெரிய விழாவாக கொண் டாடப்போகும் இந்த சந்தர்ப்பத்திலே, அதற்கு முன்னால் அரசியல் கைதி கள் அவ்வளவு பேர்களையும் விடுதலை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதே போன்று சாராயம் காய்ச்சுவது, திருட்டுக் குற்றம் போன்ற கிரிமினல் குற்றம் செய்தவர்களை, 6 மாதம் ஒரு வருஷத்திற்குட் பட்ட தண்டனை அடைந்தவர்களை இந்த சந்தர்ப்பத்தில் விடுதலை செய்ய வேண்டுமென்று சர்க்காரை தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI A. R. MARIMUTHU : கனம் சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் ஜெயில் மான்யத்தின்மீது பிரேரேபிக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரே ரணையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். நம் தேசத்திலே குற்றங்கள் இழைப்பது பெருகிக்கொண்டே இருக்கிறது. குற்ற வாளிகளை திருத்துவதற்குத் தான் இந்த தண்டனைகளெல்லாம் கொடுக் கப்படுகின்றன. ஆகவே ஜெயிலுக்குச் செல்கிறவர்கள் நல்ல எண்ணத் தோடு அவர்கள் செய்யும் குற்றங்களை உணர்ந்து பிற்கால வாழ்விலே திருந்தி நடப்பதற்கான சூழ்நிலையில் ஜெயிலிலிருந்து வெளிவரவேண்டு

[A. R. Marimuthu] [15th July 1957

மென்பதற்காக சர்க்காரிலே சில நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருப்பதாக கனம் மந்திரி அவர்கள் கூறியதை நான் வரவேற்கிறேன். இருந்தாலும், இப்படிப்பட்ட நடவடிக்கைகள் போதாது, இது விஷயத்தில் அரசாங்கம் இன்னும் துரிதமாக கவனத்தை செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பொதுவாக இன்றைக்கு குற்றவாளிகள் ஜெயிலிலிருந்து திரும்பி வரும்பொழுது எல்லோரும் நல்ல முறையிலே திருந்தி வருகிறார்கள் என்பது சந்தேகம்தான். குறிப்பாக மதுவிலக்கு சட்டத்தை மீறி ஜெயிலுக்குச் செல்லுகிறவர்கள் 3, 4 மாதங்கள் கழித்து வெளியே வரும்பொழுது அவர் முன்பு பார்த்து வந்த தொழிலை இன்னும் தீவிரமாகசெய்வதற்கு முற்படுகிறார்கள். அந்தத் தொழில் செய்வது தவறு, அது சமூகத்திற்கு தீங்கு இழைக்கிறது என்று அவர்கள் உண்மையிலேயே உணர்ந்து நல்ல முறையிலே திருந்துவதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதுவும் மத்திய ஜெயிலில் மிகவும் மோசமான நிலைமை இருக்கிறது என்பதை சொல்லத் தேவையில்லை. ஜெயிலில் இருப்பவர்களும் சமுதாயத்தில் இருக்கக்கூடிய மனிதர்கள்தான் என்பதை மனதில் கொள்ளவேண்டும். குற்றம் இழைத்தவன் என்பதற்காக அவனை மிருகத்திற்கும் மிகவும் கேவலமாக நடத்தக்கூடாது. சப்-ஜெயிலில் ஒரு மனிதன் வாழ்வதற்கு அத்தியாவசியமான காற்றோட்ட வசதி கூட கிடையாது. இந்த நிலையில் சப்-ஜெயில்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளெல்லாம் நான் சொல்லத் தேவையில்லை. இது எல்லோரும் நன்கு அறிந்த விஷயம். சப்-ஜெயில்களில் நல்ல காற்றோட்ட வசதிக்காக பெரிய ஜன்னல்கள்கூட கிடையாது. குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றவாளியா, இல்லையா என்று தீர்மானிக்கப்படுவதற்கு முன்னாலேயே சப்-ஜெயிலில் வைக்கப்படுகிறார்கள். சப்-ஜெயிலில் வைக்கப்பட்டிருக்கும் குற்றவாளியா, இல்லையா என்று தீர்மானிக்கப்படாதவர்கள், மத்திய ஜெயிலில் வைக்கப்பட்டிருக்கும் தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகளைவிட கேவலமான நிலையில் நடத்தப்படுகிறார்கள். இந்த நிலை நீடித்து இருக்கக் கூடாது. குற்றவாளிகள் இன்னும் கொஞ்சம் சௌகரியமான முறையில் நடத்தப்பட்ட வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன். குற்றம் இழைப்பவர்கள் திருந்தி அவர்களுக்கு ஜெயிலில் நல்ல பழக்க வழக்கங்கள் ஏற்படும் முறையிலே தீவிரமான நடவடிக்கைகளை சர்க்கார் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இத்துடன் என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* SRI G. GOMATHI SANKARA DIKSHITAR : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஜெயில் மான்யத்தை ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். பெற்றவர்களுக்குத் தான் பிள்ளை வருத்தம் தெரியும் என்று சொல்லுவதுண்டு. சுதந்திரத்திற்காக எவ்வளவோ பேர்கள் பாடுபட்டார்கள்.

“ இதந்தரு மனையின் நீங்கி இடர்மிகு சிறைப்பட்டாலும்,
பதந்திரு இரண்டும் மாறிப் பழிமிகுத் திழிவுற்றாலும்,
விதந்தரு கோடி இன்னல் விளைந்தெனை அழித்திட்டாலும்,
சுதந்தர தேவி! நின்னைத் தொழுதிடல் மறக்கிலேனே.”

என்று பாரதியார் அவர்கள் பாடினது மாதிரி எவ்வளவோ கஷ்டப்பட்டு இந்த சுதந்திரத்தை பெற்றோம். சுதந்திரத்திற்காக செக்கிழுத்தும் பல இன்னல்கள் அனுபவித்தும், பல துன்பங்கள் அனுபவித்து வந்துள்ள வாழ்க்கையினரின் பரம்பரையை சேர்ந்தவன் நான். ஜெயில் அனுபவத்தால் பெற்ற விஷயங்களை கொண்டு இந்த ஜெயில் நிர்வாகம் சமூகத்திற்கு தீங்கில்லாத முறையில் மாற்றி அமைத்துக்கொண்டு வந்திருக்கும் இந்த மான்யத்தை நான் ஆதரிக்கிறேன். மற்ற நாடுகளில் ஜெயில் சீர்திருத்தம் நடைபெறுவதைவிட, இங்கு அதிகமாக சீர்திருத்தம் நடைபெற்று வருகிறது என்பதை இங்கு வைக்கப்பட்டிருக்கும் அறிக்கையைப் பார்த்தால் நாம் அறிந்து கொள்ளலாம். சாதாரணமாக ஜெயிலுக்கு ஏன் வருகிறார்கள்? பொருளாதார துறையில் பலர் பிற்போக்காக இருக்கிறார்கள். அவர்கள் ஏழ்மையால் வாடுகிறார்கள். இந்த மூலகாரணங்களை

15th July 1957] [Sri G. Gomathi Sankara Dikshithar]

யெல்லாம் உணர்ந்து நமது சர்க்கார் அதற்கு ஆவன செய்ய் திட்டம் போட்டு வேலை செய்து வருவதும் நாம் அறிவோம். ஆனால் ஜெயிலில் வாழுகின்றவர்களை அனுதாபத்தோடு கவனித்து, அவர்களில் வாலிப கைதிகளாகட்டும், குற்றம் செய்துவிட்டு வந்த கைதிகளாகட்டும் அனுதாபத்தோடு அவர்கள் வெளியில் வரும்போது நம்முடைய சமுதாயத்தில் அவர்கள் தொழில் தெரிந்தவர்களாய், குற்றம் புரியும், மனப்பான்மையில்லாதவர்களாய், அவர்கள் இருப்பதற்கு அரசாங்கம் வழிவகை செய்திருப்பதை நாம் இந்த அறிக்கை மூலம் அறிகிறோம். அதோடு இன்னும் ஜெயில்களில் இன்னின்ன குறைகள் இருக்கின்றன என்பதை அரசாங்கம் அறிந்திருப்பதாய் தெரிகிறது. இப்போது ஜெயில்களை நடத்துவதற்கு பல சட்டங்கள் இருக்கின்றன. இதை மேற்பார்வை செய்ய ஜெயில் விஸிட்டர்கள் இருக்கின்றனர். இவர்களுக்கு போதிய ஜெயில் அனுபவம் இருக்காது. ஆகவே ஜெயில் அனுபவம் பெற்ற முக்கியமாக, காங்கிரஸ் தியாகிகளை ஜெயில் விஸிட்டர்களாக நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஜெயில் குற்றம் புரிந்தவர்களை சீர்திருத்தம் செய்வதற்கும், அவர்களுடைய குணங்களை நல்வழியில் ஈடுபடுத்துவதற்கும், நல்ல எண்ணமுடையவர்களாக ஆக்குவதற்கும் நல்ல பழக்க வழக்கமுள்ளவர்களாக ஆக்குவதற்கும், அவர்களை திறமையான முறையில் இழுத்துச் செல்வதற்கும், அந்தந்த மத சார்பானவர்களுக்கு நல்ல உபதேசங்களை அளிப்பதற்கும் வேண்டிய வசதிகள் செய்யப்பட்டிருப்பது போற்றத்தக்கதாகும். இருந்தாலும் இன்னும் அதிகமாக அவர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்காக, அவர்களுக்கு உபதேசங்கள் கொடுப்பதற்கும் மக்களிடையே சேவை செய்யும் மனப்பான்மையுடையவர்கள் ஏராளம் இந்த வழிகளில் வேலை செய்ய முன் வர வேண்டும். அதற்கு வேண்டிய வசதிகளை அரசாங்கம் செய்து கொடுக்கும் என்று நம்புகிறேன். அது மாத்திரமல்ல. நல்ல நல்ல இளம், வாலிப குற்றவாளிகளுக்கு இப்போது குடிசை கைத் தொழில் பயிற்சி யெல்லாம் கொடுக்கப்பட்டு வருகிறது. இவர்கள் சிறையில் வாடி வதங்காமல் அவர்களுடைய உடல் நலத்திற்கும், மன நலத்திற்கும், குறைவு வராதபடி அவர்களுக்கு போதிய உணவு கொடுப்பதற்கும் வழிவகை செய்வதற்கு கவனம் எடுக்கப்பட்டு வருகின்றன. இது தவிர மற்ற மாகாணங்களில், அதாவது பம்பாய் போன்ற மாகாணங்களில் குற்றம் புரிந்து தண்டனை அனுபவித்துவிட்டு வெளியே வந்த பிறகும் சமூகத்தில் தண்டனை அடைந்தவன் என்று மக்கள் கருதக்கூடாது, அதோடு சமூகத்தில் சாதாரண மக்களுக்குள்ள அருகதை அவர்களுக்கும் கிடைக்கும், அவர்களுக்கு அந்த உணர்ச்சியை உண்டாக்குவதற்குள்ள நிலையில் ஜெயில் நிர்வாகம் நடை பெற்று வருகிறது. இவ்விதம் பம்பாயில் செய்யப்பட்டு வருவது போல் நமது அரசாங்கத்திலும் ஜெயில் தண்டனை பெற்றவர்களும் இம்மாதிரி உணரும்படி செய்வதற்கு தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்கு அரசாங்கம் முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மான்யத்தை ஆதரித்துகொண்டு முடித்துக் கொள்கிறேன்.

SRI A. V. P. ASAITHAMBI : அவைத் தலைவர் அவர்களே, சிறை 12-25 p.m.
நிர்வாகத்தைப்பற்றி கொண்டு வந்திருக்கிற இந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். சிறைச்சாலையைப்பற்றி காங்கிரஸ் அங்கத்தினர்களில் பெரும்பாலோருக்கு நன்றாகத் தெரியும். புதிதாக காங்கிரஸில் சேர்ந்த அங்கத்தினர்களுக்கு வேண்டுமானால் சிறைச்சாலையைப்பற்றி தெரியாமல் இருக்கலாம். பழைய அங்கத்தினர்களுக்குத் தெரியும். சிறைச்சாலை இன்று எந்த நிலைமையில் இருக்கிறது, அந்த காலத்தில் எப்படி இருந்தது என்று ஒப்பிட்டு பார்த்தால் சுயராஜ்யம் வந்ததற்கப்புறம், 10 ஆண்டுகள் கழித்தும் நல்ல விதமான சீர்திருத்தம் செய்யப்படவில்லை என்பதை கட்சி வேறுபாடின்றி சொன்னால் எல்லோரும் அதை ஒப்புக்கொள்வார்கள். காங்கிரஸ்காரர்கள் அன்று சிறையில் இருந்தபொழுது உள்ளே இருந்தவர்களுக்கு என்ன சொல்லிக்கொண்டிருந்தார்கள், நாங்கள் பதவிக்கு வந்த பிறகு உங்களுடைய நிலைமைகளை எல்லாம் சீர்திருத்துகிறோம் என்று சொன்னவர்கள் இன்று அவர்களுடைய காரியங்களைப் பற்றி ஒன்றுமே கவனிக்கவில்லை. "ராஜாஜி சிறையில் இருந்தார், காமராஜர் இருந்தார், அவர்கள் இங்கிருந்த போது வார்டர்களுடைய நிலைமையை

[Sri A. V. P. Asaithambi] [15th July 1957

மேம்படுத்துவோம், ஆயுள் தண்டனை பெற்றவர்களை விடுதலை செய்வோம் என்றெல்லாம் சொன்னார்கள். இன்று சுயராஜ்யம் வந்த பிறகு ஒன்றும் செய்யவில்லை " என்று எங்களிடத்தில் அவர்கள், சிறையில் இருக்கிறவர்கள் சொல்லி குறைபட்டார்கள். இந்த மாதிரி சிறைச்சாலைக்குள் இருப்பதை நாம் பார்க்கிறோம். பொதுவாக சிறைச்சாலை என்பது குற்றம் புரிந்தவர்களை· திருத்துவதற்கு ஒரு கல்விச்சாலையாக இருக்க வேண்டும். அதல்லாமல் மேலும் மேலும் குற்றம் புரிவதற்கு தூண்டுகிற அளவுக்கு சிறைச்சாலை இருக்கக்கூடாது. இன்றைக்கு சிறைச்சாலைகளில் செய்யப்படுகிற ஒவ்வொரு நடவடிக்கைகளையும் பார்த்தால் மிகவும் மோசமாக இருக்கிறது. சிறைச்சாலைகளில் சென்றவர்களுக்கு மரியாதை கிடையாது. அவ்வளவு மோசமான முறைகளில் நடத்தப்படுகிறார்கள். ஸர்க்கஸ்களில் கூட மிருகங்களுக்கு மரியாதை, மதிப்பு இவைகள் கொடுப்பதுண்டு. இவைகளுக்கு காயம் பட்டுவிடக்கூடாதே என்று துன்பப்படுத்தப்படுவது இல்லை. அந்த மரியாதை கூட இந்த சிறைச்சாலைகளில் இருக்கும் கைதிகளுக்கு கிடையாது. அவ்வளவு மோசமான முறைகளில் நடத்துகிறார்கள் இந்த சிறை அதிகாரிகள். இதை நான் என்னுடைய அனுபவத்தை வைத்துக்கொண்டு சொல்லுகிறேன். நிதி அமைச்சர் அவர்கள் கூறினார்கள், கோவணத்தை கட்டி விடுகிற பழக்கம் இப்போது இல்லை என்று. திருச்சியிலே நான் சிறையில் இருந்த சமயத்தில் சோதிப்பதற்காக நிர்வாணமாக நிறுத்திவைத்து சோதித்தார்கள். கோவணத்தை தந்தார்கள். இந்த அளவுக்கு நான் செய்த குற்றம் என்ன? கொலை செய்யவில்லை, களவு செய்யவில்லை, ஒரு புத்தகம் எழுதினேன். மகாத்மா காந்தியை கொன்ற மதவெறியைப்பற்றி தான் எழுதினேன். அதற்கு தண்டனை தரப்பட்டது. அப்பொழுது தான் திருச்சி சிறைக்கு அனுப்பப்பட்டேன். அப்பொழுது எனக்கு கோவணத்தை கொடுத்துவிட்டு என்னுடைய ஆடைகளையெல்லாம் எடுத்துவிட்டார்கள்.

அது மாத்திரமல்ல. எனது தலை திருச்சி சிறை அதிகாரிகளால் மொட்டையடிக்கப்பட்டது. அதை நாட்டு மக்களிடம் கூறி கண்டனக் குரல் எழுப்பியும் கூட, விசாரணை நடத்தி அதன் முடிவு என்னவாயிற்று என்று எனக்கும் அறிவிக்கப்படவில்லை. நாட்டு மக்களுக்கும் அறிவிக்கப்படவில்லை. இந்த அளவு, சிறைச்சாலைக்குப் போகிற கைதிகள் என்று சொன்னால், அவர்கள் வெறுக்கப்பட வேண்டியவர்கள் போல் மனிதத் தன்மையை மறந்து அங்குள்ள அதிகாரிகள் கைதிகளை நடத்துகிறார்கள். இது சரிவர கண்காணிக்கப்படவில்லை. ஆகவே நான் சொல்வது என்னவென்றால், கைதிகளை திருத்த முற்படுவதற்குப் பதிலாக அங்குள்ள அதிகாரிகளைத் திருத்துவது ரொம்பவும் நல்லது என்று நான் கருதுகிறேன். அவ்வளவு மோசமான நிலையில் சிறைச்சாலைகள் இருக்கிறது. அது மாத்திரமல்ல. சிறைச்சாலைகளைப் பொறுத்த வரையில் அங்கு போதிய இடமில்லை. நம் நாட்டில் எப்படி கல்விச்சாலைகளில் இடமில்லையோ அப்படியே சிறைச்சாலைகளைப் பொறுத்தவரையிலும் இடமில்லை. நம் நாட்டில் அவர்கள் அவ்வளவு கூடுதலாக இருக்கிறார்கள். எங்கள் ஜூலை 15-ம் தேதி போராட்டத்திலே சென்னையில் நாங்கள் அடைபட்டபோது நியாயமாக 2,000 பேர்களுக்குள்ளாக இருக்க வேண்டிய சிறைச்சாலையில் 2,000-க்கு மேற்பட்டவர்கள் இடமில்லாமல் அங்கு அடைக்கப்பட்டார்கள். எங்கள் கட்சித் தோழர்கள் தினசரி கைதியாகிக் கொண்டிருந்ததால், சிறைச்சாலைகளில் இடமில்லாத காரணத்தால் தண்டனை அடைந்தவர்கள் தண்டனை முடிவடைவதற்குள்ளாகவே விடுதலை செய்யப்பட்டனர். அடுத்தபடியாக ஸப்-ஜெயில்கள் இருக்கின்றன. அவை, ரொம்ப மோசம். இன்று ஒரு கூட்டத்தை கைது செய்தார்கள் என்று சொன்னால், அல்லது குறுகிய கால தண்டனை என்று சொன்னால், அவர்களை ஸப்-ஜெயிலில் வைத்துவிட்டு விடுகின்றனர். நான் விருதுநகரில் கைது செய்யப்பட்டபோது, அங்குள்ள சிறைச்சாலையில் நாங்கள் 11 பேர்கள் ஒரே அறையில் அடைக்கப்பட்டிருநதோம். அந்தப் பழக்கம் இன்றும் இருக்கிறது. அடுத்தப்படியாக, சிறைச்சாலைகளில் குளிப்பதற்கு வசதியில்லை. அவர்களுக்கு குளிப்பதற்கு அவகாசம் கொடுக்க வேண்டும். அதற்கு வேண்டிய தண்ணீர் கொடுக்க வேண்டும். தண்ணீரை கைதிகளைக் கொண்டே ஊற்றச் சொல்லலாம். ஒவ்வொரு பெரிய ஜெயிலிலும் காலைக் கடன்களை முடிக்க அவர்

களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டும். அடுத்தபடியாக, கைதிகளைப் பார்க்க நண்பர்களோ உறவினர்களோ வந்தால் அவர்களை கூட்டம் கூட்டமாக நிறுத்தி என்ன பேசுகிறோம், ஏது பேசுகிறோம் என்று கேட்கமுடியாதபடி மூன்று, நான்கு நிமிஷங்கள் கழிந்த பிறகு சமயம் தீர்ந்தாகி விட்டது, புறப்படுங்கள் என்று சொல்லி அனுப்பி விடுகிறார்கள். ஆகவே கைதிகள் தங்கள் நண்பர்களோடோ அல்லது உறவினர்களோடோ 10 நிமிஷங்களாவது பேச அவகாசம் கொடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்ய வேண்டும். அதைத் தவிர சிறையில் இருக்கிறபோது பத்திரிகைகள் கொடுக்கும் பழக்கம் இல்லை. கொடுத்தாலும் ஒரு சில பத்திரிகைகள் தான் கொடுக்கப்படுகிறது. கொடுக்கிற பத்திரிகைகளிலும் கருப்பு மையால் சில செய்திகளை அடித்து விட்டுக் கொடுக்கிறார்கள். அப்பத்திரிகைகளை அப்படியே கொடுத்து விட்டால் மோசம் ஒன்றும் வந்து விடாது. பத்திரிகைகளில் எதையும் அடிக்காமல் கொடுக்க வேண்டும். அது மாத்திரமல்ல. எல்லாக் கட்சிப் பத்திரிகைகளும் எல்லோருக்கும் கிடைக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டும். இன்னொரு பழக்கம் ஜெயிலில் இருக்கிறது. எந்தக் கைதி போனவுடனும் அவனது அறைஞாண் கயிற்றை அறுக்கிறார்கள். ஏனென்று கேட்டால் உள்ளே போய் தூக்கு போட்டுக் கொண்டு செத்து விடுவானாம். இப்படி இருந்தால் அதை விட பயித்தியக்காரத்தனமான காரியம் வேறு ஒன்றும் இருக்க முடியாது. இந்தப் பழக்கம் முன் காலத்தில் இருந்தாலும் இப்பொழுது இருப்பது அனாவசியம். ஆகவே அந்தப் பழக்கத்தை நிறுத்த வேண்டும். அடுத்தபடியாக, வாரத்திற்கு ஒரு முறை கைதிகள் முக க்ஷவரம் செய்து கொள்வதற்குள்ள வசதியும், தபால் கார்ட், கவர் கொடுக்க வசதி செய்து, நண்பர்கள் அல்லது உறவினர்கள் வந்து பார்த்து 10 நிமிஷம் வரை பேசுவதற்குள்ள ஏற்பாடும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதோடு, சுதந்திர போராட்ட நூற்றாண்டு விழா வருகிறது என்று சொல்கிறார்கள். அந்த விழாவின் போது, அரசியல் நோக்கத்தோடு தண்டிக்கப்பட்டிருக்கும் எல்லா கைதிகளையும் விடுதலை செய்து இந்த நாட்டில் சட்டத்தையும் அமைதியையும் பாதுகாக்க, சிறைச்சாலையை நல்ல சீர்திருத்தம் பண்ணக்கூடிய நல்ல பள்ளியாக மாற்ற அரசாங்கம் முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தது வார்டர்களைப் பற்றி ஒரு வார்த்தை. காங்கிரஸ்காரர்கள் ஜெயிலுக்கு சென்றிருந்தபோது இவர்களது காரியங்களைக் குறித்து கவனித்து வேண்டியது செய்யலாம் என்று சொல்லியிருந்தார்கள். நீங்களும் இன்றைக்கு இப்படி சொல்கிறீர்கள் நாளைக்கு மறந்து விடுவீர்கள் என்று சொன்னார்கள். அவர்களுடைய சம்பளம் மோசமாயிருக்கிறது. அவர்களது சம்பளத்தை அதிகமாக உயர்த்த வேண்டும். ஏனென்றால், அவர்களும் கைதிகள் போன்று மாறி மாறி ட்யூட்டி பார்க்கிறார்கள். அவர்களுக்கு ஒரு வித வசதியும் இல்லை. ஆகவே அவர்களுக்கு சம்பளம், அலவன்ஸ் இவைகளை உயர்த்தி, கல்வி வசதி கொடுத்து சர்க்கார் சிறைச்சாலையை நல்ல சிந்தனைக் கூடமாக அறிவு புகட்டக்கூடிய பள்ளியாக மாற்றி அமைக்க வேண்டும். மத போதனை என்பதை விட்டு விட்டு உலகத்தில் இருக்கக்கூடிய போதனைகளைச் செய்வதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமானால் மதசார்பற்ற இந்த சர்க்கார் நல்லதொரு காரியம் செய்வதாயிருக்கும் என்று சொல்லிக்கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

* Sri N. R. THIAGARAJAN : தலைவர் அவர்களே, மாஜி கைதி ஒருவர் மந்திரியாக இருந்து, கொண்டு வந்திருக்கும் இந்த மான்யக் கோரிக்கையை நானும் இந்த மாகாணச் சிறையில் வாழ்ந்தவன் என்ற முறையில் ஆதரித்து பேசத் துணிகிறேன். சிறைகளைப் பற்றிக் கூறும்போது நான் சின்னஞ் சிறு குழந்தையாக இருந்தபோது நரக லோகந்தான் எனது ஞாபகத்திற்கு வரும். எனக்கு 17 வயதாக இருந்த போது நான் முதல் தடவையாக சிறை சென்றேன். என் பாட்டி எனக்கு ஐந்தாறு வயது இருக்கும்போது நரகலோகத்தைப் பற்றி வர்ணித்திருக்கிறார்கள். நான் முதல் தடவை சிறை சென்றபோது அதைத்தான் அங்கு கண்டேன். அந்த நரகலோகந்தான் என் கண் முன் காட்சி அளித்தது. 1937-ல் காங்கிரஸ் மந்திரி சபை பதவி ஏற்ற பின்புதான் அந்த கண்ணறாவிக் காட்சியை மாற்றி அமைத்து சிறைச்சாலைகள் நல்ல முறையில் இருக்கிறது. 12-50 p.m.

[Sri N. R. Thiagarajan] [15th July 1957

அதற்குப் பின்னும் நான் சிறை சென்றிருக்கிறேன். இப்பொழுதும் சிறை கூடங்களைப் பற்றி சிறை அதிகாரிகள் மூலம் கேள்விப்படுகிறேன். சிறைச்சாலை அமைச்சர் அவர்கள் பேசுவதையும் கேட்டேன். பாரதியார் அவர்கள் சொல்லியிருக்கிறார், " இதந்தரு மனையின் நீங்கி - இடர்மிகு சிறை பட்டாலும் பதந்திரு இரண்டும் மாறிப் பழிமிகுத் திழிவுற்றாலும்;" என்று கூறியிருக்கிறார். இந்த சிறைச்சாலைக்காக, அதற்காக நம் மாகாணத்தில் 90 லட்சம் ரூபாய்க்கு மேல் செலவு செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறபோது அந்தப் பழமொழியை ஒரு புது மொழியாக்கிக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். இப்பொழுதுள்ள கால நிலையில், ஐந்தாறு குழந்தைகள், மனைவி, உற்றார், சுற்றத்தார் இத்தனை பேர்களும் உள்ள வீட்டை வைத்துப் பார்க்கும்போது, " இடர்தரு மனை " என்று மாற்றிக் கொள்ளலாம் என்று அவா உறுகிறேன். சிறைச்சாலைகளில் சுகமாக, சௌகரியமாக சாப்பாடு போடப்படுகிறது. எனது ஊராகிய தேனியில் 20,000-க்கு மேல் ஜனத்தொகை இருக்கிறது. அங்கு ஆஸ்பத்திரியே கிடையாது. ஆனால் மதுரை சிறையில் 500 பேர்களுக்கு ஐந்து டாக்டர்கள் இருக்கின்றார்கள். அங்கு நல்லவசதியிருக்கிறது என்று சிறை அதிகாரிகள் சொல்கிறார்கள். முன்பு இருந்ததைக் காட்டிலும் இப்பொழுது சிறைச்சாலை நிர்வாகம் நன்கு நடைபெறுகிறது. கைதிகளுக்கு முன்பு இருந்ததை விட மிகவும் கூடுதல் சௌகரியங்கள் செய்து கொடுக்கப்படுகின்றன. இது சந்தோஷப்படத்தக்க விஷயமே. இருந்தாலும் 90 லட்சம் ரூபாய் சிறைக் கைதிகளுக்கு செலவிடப்படுகிறது என்று சொன்னால் அது அதிகமே. எனினும் அப்பணம் நன்கு செலவிடப்படுகிறது. நான் சிறையில் இருந்தபோது ஒரு கைதிக்கு மாதம் ஐந்து ரூபாய்க்கு மேல் செலவு செய்தது கிடையாது. அதற்காக எத்தனையோ உண்ணாவிரதங்களும் மற்றும் நடவடிக்கைகளும் எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் இன்றோ கைதிகள் மிகவும் சந்தோஷமாய் இருக்கிறார்கள். கோதண்டராமன் அவர்களும், ஆசைத்தம்பி அவர்களும் சிறைச்சாலையைப் பற்றி குறை கூறினார்கள். கோதண்டராமன் அவர்கள் நீண்ட நாட்களுக்கு முன்பு இருந்த சிறைச்சாலையைப் பார்த்து, பிரிட்டிஷ் காலத்தில் இருந்த சிறைச்சாலையின் நிலையை வைத்துக்கொண்டு சொல்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஆசைத்தம்பி அவர்கள் 1950-ம் ஆண்டு சிறை சென்றதை வைத்துக்கொண்டு சொல்கிறார். அது கழிந்து இப்பொழுது ஏழு வருடங்கள் ஆகின்றன. இந்த ஏழு வருடங்களில் உலகத்திலே பல பெரிய மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன.

ஆகவே சிறை நிர்வாகம் இப்போதைய நிலையிலே மிக நன்றாக நடக்கிறதற்காக சிறை இலாகா அமைச்சரை பாராட்டுகிறேன். இன்னும் முன்னுக்கு வரவேண்டுமென்று கூறுகிறேன். முன்பு சென்னை பெனிடென்ஷியரியில் இருக்கும்போது டிராம் வண்டிகளின் இரைச்சல், மின்சார ரயில் வண்டிகளின் இரைச்சல் தாங்க முடியாதவாறு இருந்தது. நகர மத்தியில் வெள்ளைக்காரர்கள் ஏற்படுத்தியதை இப்போது அங்கே வைத்திருப்பானேன். ஆகவே இதை நகருக்கு வெளியே மாற்றி அமைக்க வேண்டும்.

தற்போது சிறை இலாகாவிற்கு அதிகப்பணம் ஒதுக்கப்படுகிறது. ஒரு மில்லை எடுத்துக் கொண்டால் அதில் ஓராயிரம் பேர் வேலை செய்தால் 5 லட்சம், 10 லட்சம் மீதம் இருக்கிறது. ஆகவே சிறைச்சாலைகளை தொழிற்சாலைகளாக மாற்றி அமைக்கவேண்டும். கைதிகள் அவ்வளவு பேரும் வசதியுடன் உருப்படியான ஒரு தொழில் செய்கின்ற ஒரு நிலைமை ஏற்பட வேண்டும். அடுத்து வரும் ஆண்டுகளிலே இவ்வளவு தொகை ஒதுக்கப்படக்கூடாது. உழைப்பு மூலமாக கிடைக்கும் வருமானம் அதிகமாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சிறையில் புஸ்தகம் படிக்க வசதி வேண்டும். பாளையங்கோட்டை சிறையிலே இருந்து இருக்கிறேன். சிறையிலே இருந்த புஸ்தகங்களெல்லாம் ஓட்டப்பட்டு, கிழிக்கப்படாமல் இருந்தது. நான் போயிருந்தபோது எனக்கு கிழிக்கத்தக்க பாக்கியம் கிடைத்தது. காரணம் என்னவென்றால் புஸ்தகங்கள், நியூஸ் பேப்பர்கள் எல்லாம் படிக்க நேரம் ஒதுக்கப்படவில்லை

15th July 1957] [Sri N. R. Thiagarajan]

என்று கூறினார்கள். தினந்தோறும் மாலை 4 மணிக்கு ஒரு மணி நேரம் பத்திரிகை, நியூஸ் பேப்பர் படிக்கச் செய்யத்தக்க நிலைமையை ஏற்படுத்தவேண்டும்.

அந்தக் காலத்திலே செக்கு இழுத்தார் சிதம்பரனார். மனிதன் செக்கு இழுக்கும் நிலைமை இன்று இருக்காது என்று நினைக்கிறேன். அப்படி இருந்தாலும் அதை அகற்றவேண்டுமென்று கூறி, சிறைச்சாலை மானியத்தை, சிறை நிர்வாகம் நன்கு நடைபெறுவது குறித்து மகிழ்ச்சி தெரிவித்துக்கொண்டு சிறைக் கைதி என்ற முறையில் வரவேற்று ஆதரித்து என் உரையை முடிக்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் சபா நாயகர் அவர்களே, இந்த சிறைச்சாலைபற்றிய மான்யக் கோரிக்கையின் மீது நடந்த விவாதத்தில் கலந்து கொண்ட அங்கத்தினர்கள் எல்லோரும் அநேகமாக சிறை அனுபவம் பெற்றவர்கள். ஆதலால் இந்த விவாதம் பலனளிக்கக்கூடியது என்பதை நான் உணருகிறேன். மற்ற கட்சியினருக்கும் ஓரளவு சிறை வாசம் ஏற்படக்கூடிய போதிய அனுபவத்தை, ஏற்பட வேண்டிய அனுபவத்தை இந்த விவாதம் ஏற்படுத்தியிருக்கிறது என்று கொள்வார்கள் என்று நினைக்கிறேன். சிறைவாச நிலை வேகமாக மாறிக் கொண்டுதான் வருகிறது என்று உறுதியாகச் சொல்லக்கூடும். சிறையிலே வாழ்ந்த காலத்திலே மட்டுமல்லாமல் பின்னும் [illegible] சிறைக்குப் போய் சுற்றிபார்க்க வேண்டிய சந்தர்ப்பங்கள் எனக்கு ஏற்பட்டன. சமீபத்திலேகூட சில சிறைகளை சுற்றிப் பார்த்தேன். பல மாறுதல்கள் ஏற்படுத்திக் கொண்டு வரப்படுகின்றன. இங்கே குறிப்பிட்ட குறைகளும் அகற்றப்பட்டு வருகின்றன. எல்லாக் குறைகளும் தீர்ந்துவிட்டன. இன்னும் அகற்றுவதற்கு இடமில்லை என்று சொல்லவில்லை. நானே சமீபத்தில் ஒரு மாதத்திற்கு முன்பு கூட சில சிறைகளைப் பார்க்க நேர்ந்தபோது அங்கே சிறைக் கைதிகளிடம் அவர்களுடைய கோரிக்கைகளைத் தெரிந்து கொள்வதிலும், விவரங்கள் தெரிந்து கொள்வதிலும், இன்னும் சில மாறுதல்கள் ஏற்படுத்தவேண்டுமென்று தோன்றி, எவ்வாறு ஏற்படுத்துவது என்பதைப் பற்றிக் கவனம் செலுத்திவருகிறேன்.

உணவு விஷயத்தைப்பற்றி குறிப்பிடப்பட்டது. உணவு விஷயம் கூட அப்படி கேவலமாக இல்லையென்று சொல்வேன். ஆனால், ரொம்ப சௌகரியமாக, அறுசுவையோடு கிடைக்கிறதா என்று [illegible] கிடைக்கிறது என்று சொல்ல முடியாது. ஆனால் வீட்டிலே இருக்கிறவர்களுக்குக் கூட அறுசுவையோடு எப்போதும் கிடைப்பதில்லை. சுத்தமான உணவு, நன்றாக உண்ணக்கூடிய உணவுதான் தயாரிக்கப்பட்டு வினியோகிக்கப்படுகிறது என்று சமீபத்திலே பல சிறைகளில் பார்த்திருக்கிறேன். அப்படிப் பார்க்கும்போது உணவு விஷயத்திலே கூட இன்னும் சில குறைகளை நீக்க முடியும். இதை மனதில் வைத்துக்கொண்டு, மாற்றுவதற்கு கவனம் செலுத்திக்கொண்டு வருகிறேன்.

சிறைகளிலே கூட்டம் பெருத்து விட்டது என்று சொன்னார்கள். இன்று நான் மகிழ்ச்சியுடன் சொல்லுகிறேன் கூட்டம் குறைந்திருக்கிறது, அதிகமாகவில்லை. நான் சென்ற மூன்று அல்லது நான்கு சிறைகளிலே விசாரித்துப் பார்த்ததிலே காலியாகத்தான் இருக்கிறது பல ரூம்கள்.

சிறையிலே வாழ்கிறவர்கள் வசதியைப்பற்றி குறிப்பிட்டார்கள். சுகாதார வசதியைப்பற்றி சொன்னார்கள். எல்லா வசதிகளையும் விட சுகாதார வசதியை முக்கியமாக கவனிக்க வேண்டுமென்பதை ஒப்புக்கொள்கிறேன். அது கவனிக்கப்பட்டு வருகிறது என்றும் சொல்ல விரும்புகிறேன்.

இன்னும் Interview விஷயம் பத்திரிகை படிக்கும் விஷயம் எல்லாம் குறிப்பிடப்பட்டது. Interview விஷயமாக மேலும் நான் விசாரிக்கிறேன். Interview-வுக்கு 10 நிமிஷங்கள் கூட கொடுக்கப்படவில்லையென்றால் நான் கவனிக்கிறேன். உற்றார், உறவினர், மற்றவர்கள், துஷ்பிரயோகம் ஏற்படாத முறையில் Interview கிடைக்க கவனம் செலுத்துகிறேன்.

[Sri M. Bhaktavatsalam] [15th July 1957

அரசியல் கைதிகளைப்பற்றி சொன்னார்கள். தற்காலம் வெகு சிலரே அரசியல் கைதிகளாக இந்த ராஜ்யத்தில் இருக்கிறார்கள் என்று மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன். ஆனால் யாரை அரசியல் கைதிகள் என்று கூறுவது என்பது ஒரு பிரச்னை என்றே கூறவேண்டும். அரசியல் நோக்கத்தோடு சட்டத்தை மீறி அல்லது சட்டத்தின்கீழ் ஒரு குற்றம் செய்தால், அரசியல் திட்டத்தை வைத்துக்கொண்டு குற்றம் செய்தால் அதற்காக தண்டிக்கப்பட்டவர்கள் அரசியல் கைதிகள். ஆனால் அரசியல் வாதிகளாக இருக்கலாம், குரூரமான குற்றம்—கொலைக்குற்றம்—இதுவும் எங்கள் அரசியல் லட்சியம் என்று சொல்லலாம்—குரூரமான குற்றங்கள்—மக்களுக்கு பல விதத்திலே ஹிம்சை மட்டுமல்லாமல், அவர்களை மிகவும் அதிகமாக துன்புறுத்தக் கூடிய வகையிலே, உடலையே சின்னாபின்னமாக செய்திருக்கக் கூடிய குற்றங்கள் செய்துவிட்டு, நாங்கள் அரசியல் வாதிகளாக இருக்கிறோம், ஆகவே நாங்கள் அரசியல் கைதிகள், எங்கள் தண்டனையை குறைத்துவிட வேண்டுமென்றால் அதை முற்றும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளத்தயாராயில்லை. அதை ஏற்றுக் கொள்ளவும்முடியாது என்று தான் சொல்ல விரும்புகிறேன்.

நீண்டகால தண்டனை அடைந்த கைதிகளின் நிலைமை அப்போதைக்கப்போது பரிசீலனை செய்யப்படுகிறது. எவ்வளவு தூரம் **remission** கொடுக்க முடியுமோ, அல்லது விடுதலை செய்யக்கூடுமோ, அது அப்போதைக்கப்போது பரிசீலனை செய்யப்பட்டு, விடுதலை அளிப்பதோ அல்லது **remission** கொடுப்பதோ கவனிக்கப்பட்டு வருகின்றன.

சிறைச்சாலைகளைத் தொழிற்சாலைகளாக ஆக்க வேண்டும் என்பதைப் பற்றி கனம் அங்கத்தினர் ஸ்ரீ தியாகராஜன் குறிப்பிட்டார்கள். மற்ற கனம் அங்கத்தினர்களும் குறிப்பிட்டார்கள். நானே முன்பு தெரிவித்தேன். சிறைக்குச் சென்றவர்களுக்குத் தகுதியான ஒரு வேலை கற்றுக் கொடுத்து, அவர்களுக்கு நல்ல பயிற்சி ஏற்பட வேண்டும் என்ற அடிப்படையான நோக்கத்துடன் அவர்களிடம் வேலை வாங்கி, அவர்கள் மூலம் உற்பத்தியையும் ஓரளவு பெருக்குவது என்பதுதான் சிறை நிர்வாகத்தின் நோக்கமாகும். அந்த வகையிலே பல தொழில்கள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன.

இதையெல்லாம் நான் நேரில் சென்று பார்க்கும்போது எனக்கு ஒரு கவலை ஏற்படுவது உண்டு. சிறந்த வகையிலே வேலை செய்கிறார்கள், திருப்தியோடு வேலை செய்கிறார்கள் என்பதைக் கூட நான் காண்கிறேன். நல்ல சாதனைகளைச் சாதித்துக் காட்டுகிறார்கள். ஆனால் இவர்கள் சிறைச்சாலையிலிருந்து வெளியே போகும்போது, இவ்வளவு ஆற்றல் உள்ளவர்கள், பயிற்சி பெற்றிருக்கிறவர்கள் இவைகளை நன்கு பயன்படுத்த வேண்டுமே என்பதுதான் எனக்கு அவ்வப்போது கவலையைக் கொடுக்கிறது.

**Discharged Prisoner's Aid Society** அங்கத்தினர்களிடம் நான் அடிக்கடி சொல்லியிருக்கிறேன், இனி இந்தச்சங்கம் ஒரு ஆராய்ச்சி நிலையமாக இருக்க வேண்டும் என்று. சிறையிலிருந்து வெளியே வந்தவர்களின் மனதுக்கேற்றபடி, ஆற்றலுக்கு ஏற்றவாறு, அவர்களுக்குத் தகுதியான தொழில் கிடைக்கக்கூடிய வகையிலே கவனம் செலுத்தப்பட வேண்டும். அவ்வாறு இந்தச் சங்கம் மாறுபடுமானால், அரசாங்கம் அதற்கு வேண்டிய ஆதரவையும் ஒத்துழைப்பையும் அளிக்கும் என்று நான் அவர்களுக்கும் சொல்லிக் கொண்டு வருகிறேன்.

ஆனால் ஒரு முறை சிறை தண்டனை அடைந்தவர்கள் அடியோடு முற்றிலும் திருத்தப்பட்டு, எல்லோரும் சிறந்த வாழ்க்கையில் ஈடுபடுகிறார்கள் என்று நான் சொல்வதற்கு இல்லை. மீண்டும் மீண்டும் குற்றம் செய்கிறவர்கள் இருக்கிறார்கள். அதற்கு சிறை நிர்வாகம் மட்டும் பொறுப்பு அல்ல. வேறு காரணங்களும் உண்டு என்பதையும் கனம் அங்கத்தினர்கள் உணருவார்கள் .

குற்றம் செய்கிறவர்கள் மீது வழக்குத் தொடுத்து, தண்டனைக்கு உள்ளாக்கி சிறையிலே அவர்கள் வைக்கப்படுகிறார்கள் என்றால் அவர்களை

15th July 1957] [Sri M. Bhaktavatsalam]

முற்றிலும் திருத்துவது என்பது அல்ல. திருத்தம் தான் அடிப்படையான நோக்கம். இருந்தாலும் குற்றம் செய்கின்றவர்களை அதைத் தொடர்ந்து செய்யவொட்டாமல் தடுப்பது தான் முக்கியமான எண்ணம், முக்கியமான லட்சியம். ஆனால், அதோடு சேர்ந்து, அவர்களைத் திருத்த வேண்டுமென்பது ஒரு அடிப்படையாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது.

"ஏதோ சுதந்திரம் வந்து விட்டது, சிறைக்கே அவசியம் இல்லை" என்ற வகையிலே வெட்டுப் பிரேரணையை பிரேரேபித்து கம்யூனிஸ்டுக் கட்சி கனம் அங்கத்தினர் அவர்கள் பேசினார்கள். அவர்கள் போற்றுகின்ற ரஷ்ய நாட்டிலே சிறையே இல்லையோ என்று தோன்றியது அவருடைய பேச்சிலிருந்து. நான் ரஷ்யாவைப் போய்ப் பார்த்ததில்லை. ரஷ்யாவைப் பற்றி நான் அதிகமாகத் தெரிந்து கொண்டது இல்லை. அவர் பேசியது, ரஷ்ய நாட்டிலே சிறை என்பதே கிடையாது என்ற முறையில் இருந்தது. ஒருக்கால் வேறு வகையிலே தீர்த்து விடுவதாயிருந்தால் சிறைக்கு அவசியமே இருக்காது. ஆனால், அங்கேயுங்கூட சிறை இல்லை என்பதை நான் நம்பவில்லை. கனம் அங்கத்தினர் பேசினார் சிறை என்பது ரஷ்ய நாட்டில் இல்லை என்ற தோரணையில். அவர் அப்படிப் பேசினாலும், அந்த நாட்டிலும் சிறை இருக்கத் தான் செய்கிறது.

சிறை என்பது ஒரு தடுப்புச் சாதனம். அங்கு கோரமாக நடத்தப்பட வேண்டும் என்பது அல்ல. அங்கே மனிதாபிமானத்தோடும் மரியாதையுடனும் அவர்கள் நடத்தப்படவேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அவர்கள் சொன்னதை நான் வரவேற்கிறேன். மரியாதை வேண்டும். அந்த மரியாதை அளிக்கப்படுகிறது. அங்கே ரொம்ப முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று நான் கூறக்கூடும். ஆனால், முற்றிலும் முன்னேற்றம் வந்து விட்டதா என்றால் நான் சொல்ல முடியாது. முற்றிலும் முன்னேற்றம் வரவேண்டும் என்ற வகையிலே தான் இன்று அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது என்று மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன்.

தொழிற்சாலைகள் பல அமைத்து, நல்ல வேலை கற்றுக் கொடுத்து அவர்களுக்கே வாழ்க்கையிலே ஒரு நம்பிக்கை ஏற்படக்கூடிய வகையிலே இன்று சிறை நிர்வாகம் நடத்தப்பட்டு வருகிறது. சமீபத்திலே சிறை வாசிகளே சேர்ந்து ஒரு சமூக நாடகம் நடித்தார்கள். நான் பார்த்தேன். மற்றவர்கள் எல்லாம் சிறைக்குள்ளே அடைக்கப்பட்டு நடிக்கப்பட்ட நாடகம் அல்ல. அதிலே பலர் ஆயுள் தண்டனை அடைந்தவர்கள். பலர் பள்ளிக்கூடத்தையே பார்க்காதவர்கள். ஆனால், அவர்களுடைய நடிப்பு, அவர்களுடைய பேச்சு எல்லாம் நாடகத்தையே தொழிலாகக் கொண்டவர்கள், நல்ல தமிழ் இலக்கியம் தெரிந்தவர்கள் எவ்வாறு நடிப்பார்களோ அத்தகைய சிறந்த வகையிலே இருந்தது. அத்தகைய பயிற்சி அவர்களுக்கு ஏற்பட்டிருந்தது. பயிற்சி ஏற்பட்டிருந்தது மாத்திரமல்ல. அத்தகைய ஆற்றல் அவர்களிடம் அடங்கியிருக்கிறது என்பதை அன்று நான் அவர்களிடம் கண்டேன். உள்ளே அடங்கியிருக்கும் ஆற்றலை,—அவர்கள் சிறையிலிருக்கும்போதே கூட—நல்ல வகையிலே பயன்படுத்தவேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டு இன்று கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

புத்தகங்கள் வாசிக்கவும், பத்திரிகைகள் வாசிப்பதற்கும் வசதி வேண்டும் என்பதைப்பற்றி கனம் அங்கத்தினர் குறிப்பிட்டார்கள். பத்திரிகைகள் வாசிப்பதிலே கட்சிப்பாகுபாடு இல்லாமல் பத்திரிகைகள் அளிக்கப்பட்டு வருகின்றன என்ற வகையிலே நான் உறுதியாகக் கூற முடியும். சில பத்திரிகைகளை வாங்கி, 200 பேர்களை ஒரு "யூனிட்" ஆக்கிக் கொண்டு இலவசமாக தரப்படுகின்றன. மேலும், சொந்தச் செலவில் வாங்குகிறவர்களுக்கும் வசதி அளிக்கப்படுகிறது. கனம் அங்கத்தினர் குறிப்பிட்ட மாதிரி "Black-out" இல்லை என்று தான், நான் தெரிந்துகொண்ட வகையிலே, சொல்லக்கூடும். அம்மாதிரி "Black-out" இருப்பது அவசியம் இல்லை என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். இன்னும் பத்திரிகைகள் படிப்பதற்கு வசதிகள் அதிகம் வேண்டும் என்றால், அதையும் அரசாங்கம் கவனிக்கும். சொந்தச் செலவில் புத்தகங்கள்

[Sri M. Bhaktavatsalam] [15th July 1957

வாங்கிப் படிப்பதற்குத் தடையில்லை. ஆனால், பொதுவாக, புத்தகங்களை வாங்கி வைத்து, இலவசமாக அவைகளைப் படிப்பதற்கு வசதியளிப்பதிலே அரசாங்கம் மேலும் கவனம் செலுத்தும்.

பொதுவாக சிறை நிர்வாகத்திலே உள்ள குற்றங்களைப் போக்கி, சிறையில் வாழ்கின்றவர்களைச் சிறந்த வகையிலே திருத்துகின்ற வகையிலே தான் இன்று கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இது பற்றி கனம் அங்கத்தினர்கள் மேலும் கூறுகிற உருப்படியான யோசனைகளை சர்க்கார் ஏற்று பரிசீலனை செய்யத் தயாராய் இருக்கிறது.

மேலும், சட்ட சபை அங்கத்தினர்கள் சிறைக்குச் சென்று பார்த்து யோசனை சொல்வதற்கு வசதி இருந்தால் நலம் என்று குறிப்பிடப்பட்டது. அதைப் பற்றியும் அரசாங்கம் யோசிக்கலாம். நான் முன்பு குறிப்பிட்டது போல், ஹைகோர்ட் நீதிபதி ஒருவரையும் சேர்த்து நியமிக்கப்பட்ட கமிட்டியினர், சிறையைப் பார்வையிட்டு, பல யோசனைகள் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொன்ன பல யோசனைகளை ஏற்கெனவே அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது.

சிறையில் வேலை செய்கிற வார்டர்களைப்பற்றியும் குறிப்பிட்டார்கள் கனம் அங்கத்தினர்கள். அவர்களுடைய நிலையைத் திருத்துவது பற்றியும் யோசிக்கப்பட்டு தான் வந்திருக்கிறது. கொஞ்ச காலத்திற்கு முன்பு அவர்களுடைய சம்பளம், அலவன்ஸ் வகையிலே ஒரு அபிவிருத்தி செய்யப்பட்டது. ஆகவே, அதைப்பற்றி கவனிக்கவேண்டிய அவசியம் இல்லை என்று அரசாங்கம் கருதவில்லை. இருந்தாலும், அரசாங்கத்தின் நிதி நிலையை ஒட்டி எந்த அளவுக்கு கவனம் செலுத்த முடியுமோ அந்த அளவுக்கு மேல் கவனம் செலுத்திக்கொண்டு தான் வருகிறது என்று சொல்லி, என்னுடைய வார்த்தைகளை நான் முடித்துக்கொள்ளுகிறேன்.

**Mr. SPEAKER :** கனம் அங்கத்தினர் ஸ்ரீ கோதண்டராமன் அவர்கள் வெட்டுப் பிரேரணையை வாபஸ் வாங்கிக்கொள்ளுகிறார்களா ?

**Sri V. K. KOTHANDARAMAN :** இல்லை; வற்புறுத்துகிறேன்.

**Mr. SPEAKER :** சபையின் ஓட்டுக்காக விடப்படவேண்டிய பிரேரணை என்னவென்றால் ஜெயில் மானியத்திற்காக கோரப்படும் ரூ. 91,15,800-ல் ரூ. 100-ஐ குறைக்கவேண்டும் என்பது.

பிரேரணை ஓட்டுக்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

**Mr. SPEAKER :** ஓட்டுக்கு விடப்படவேண்டிய பிரேரணை என்னவென்றால் ஜெயில் மானியத்தின் கீழ் அரசாங்கத்துக்கு ரூ. 91,15,800-க்கு மேற்படாத தொகை அளிக்கவேண்டும் என்பது.

இந்தப் பிரேரணை வோட்டுக்கு விடப்பட்டு நிறைவேறி மானியம் அளிக்கப்பட்டது.

## (4) DEMAND XIV—POLICE.

**Mr. SPEAKER :** அடுத்தபடியாக, 14-வது மான்யக் கோரிக்கை (போலீஸ்) எடுத்துக்கொள்ளப்படும். இந்த மானியத்தின் மீது விவாதிப்பதற்கு மூன்று மணி நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒரு மணி நேரம் இன்றும், இரண்டு மணி நேரம் நாளையும் விவாதத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது கனம் மந்திரி அவர்கள் மான்யக் கோரிக்கையைப் பிரேரிப்பார்.

1-00 p.m. **The Hon. Sri M. BHAKTAVATSALAM :** கனம் சபாநாயகர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் அவர்களின் சிபார்சின் பேரில் பதினைந்தாவது மான்யக் கோரிக்கையின் கீழ்போலீஸ் இலாகாவுக்கு ரூபாய் 5,28,90,600-க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்துக்கு ஒதுக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

15th July 1957] [Sri M. Bhaktavatsalam]

போலீஸ் இலாகாவுக்கு சாதாரணமாக ஆகும் செலவைச் சரிக்கட்டவே இம்மானியக் கோரிக்கை கேட்கப்படுகிறது. மலபார் விசேஷப் போலீஸ் படை சென்ற வருஷம் இருந்ததில் பாதியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. விசேஷ ஆயுதப் படையில் மாறுதல் ஒன்றுமில்லை. ஜில்லா போலீஸ் உத்தியோகஸ்தர்களிலும் எல்லா உத்தியோகங்களைப் பொறுத்தவரையிலும் 1955-ல் இருந்ததை விட ஓரளவுக்கு குறைந்திருக்கிறது.

1956-ம் ஆண்டில் போலீஸ் டெபுடி சூபரிண்டெண்டெண்டு, சப்-இன்ஸ்பெக்டர்கள், சார்ஜெண்டுகள் உத்தியோகங்களுக்கு நேரடியாக யாரும் அமர்த்தப்படவில்லை. சம்பளத் திட்டத்தில் யாதொரு மாறுதலும் ஏற்படுத்தப்படவில்லை. பஞ்சப்படி மட்டும் எல்லா போலீஸ் கீழ் உத்தியோகஸ்தர்களுக்கும் ஓரளவுக்கு உயர்த்தப்பட்டது.

போலீஸ் உத்தியோகஸ்தர்களுக்கு வீட்டு வசதி பிரச்னை இன்னும் கடுமையாகவே இருந்து வருகிறது. சென்னை நகரிலும், ஜில்லாக்களிலும் போலீஸ் கீழ் உத்தியோகஸ்தர்களுக்கு குறைந்த வாடகையில் வசதியான வீடுகள் கிடைப்பது இன்னும் கஷ்டமாக இருப்பதால், போலீஸ் இலாகாவில் மனத் திருப்தியும், கட்டுப்பாடும், ஒழுங்கும் நிலவுவது மிக அவசியமென்று அரசாங்கம் கருதி, சென்னை நகரிலும், இதர ஜில்லாக்களிலும் வீடு கட்டுவதற்காக ஒரு ஐந்து வருஷத் திட்டம் வகுத்திருக்கிறது. 1957–58-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் இதற்காக ரூபாய் 84·98 லட்சம் ஒதுக்க தீர்மானிக்கப்பட்டு இருக்கிறது.

போலீஸ் கான்ஸ்டேபிள்கள் வசிக்கும் இடங்களில் வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்னும் நோக்கத்தோடு 1956–57-ம் ஆண்டில் ரூபாய் இரண்டு லட்சம் அனுமதிக்கப்பட்டது. இதைக்கொண்டு போலீஸ் லைன்களில் தெரு விளக்கு போடவும், "பம்பாய்" கக்கூஸ் கட்டவும் ஏற்பாடு செய்யப்பட்டது. ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒன்று வீதம் 12 ஜில்லாக்களில் 12 போலீஸ் லைன்களில் வாசகசாலைகள் கட்ட ரூபாய் 56,880 ஒதுக்கப்பட்டது. சென்னை நகரில் ஒரு ஸ்டேடியம் கட்டவும் ரூபாய் 41,400 அரசாங்கம் அனுமதித்தது. போலீஸ்காரர்கள் குடும்பங்கள் க்ஷேம நல வேலைகள் செய்யப்பட வேண்டுமென்ற எண்ணம் சென்ற ஆண்டு சமூக சேவா சங்கத்தின் முயற்சிகளினால் தோன்ற ஆரம்பித்தது. அவர்களின் உதவிகளினால் ஜில்லாக்களிலுள்ள போலீஸ் உத்தியோகஸ்தர்களும், அவர்களின் குடும்பத்தார்களும் க்ஷேம நல வேலைகளைத் தொடங்கி, தையல், பூ வேலைகள், நூல் நூற்றல், துணிகளை வெட்டுதல் முதலிய உபயோகமான வேலைகளைத் தொடங்கியிருக்கின்றனர். இலாகாவிலேயே ஒரு க்ஷேம நிதி ஆரம்பிக்க வேண்டுமென்ற வெகு நாளைய விருப்பம் இப்போது தான் நிறைவேறி சென்னை போலீஸ் க்ஷேம நல நிதி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. கிராம அபிவிருத்தி வேலைகளிலும், சமூக வேலைகளிலும், போலீசார் பங்கெடுத்து வருகின்றனர்.

சென்னை தீயணைப்பு படை இலாகா போலீஸ் இலாகாவில் ஒரு பிரிவாக இன்ஸ்பெக்டர்-ஜெனரலின் மேற்பார்வையின் கீழ் இருந்துவருகிறது. 1956-டூ அக்டோபர்மீ 31-ம் தேதியில் 45 முனிசிபாலிடிகளில் 50 தீயணைப்பு படைகள் இருந்தன. ராஜ்ய பிரிவினையின்போது கேரள ராஜ்யத்திற்கு ஐந்து படைகளும் மைசூருக்கு இரண்டும் மாற்றப்பட்டன. கேரளாவிலிருந்து பிரிந்த கன்னிய குமரியில் ஒரு தீயணைப்பு படை நமக்கு கிடைத்தது. பாளையங்கோட்டையில் ஒரு புதிய தீயணைப்பு படை ஆரம்பிக்கப்பட்டது. தற்போது நம் ராஜ்யத்தில் 45 தீயணைப்பு படைகள் இருக்கின்றன. புதிய தீயணைப்பு படைகள் ஆரம்பிக்க போடப்பட்டிருக்கும் திட்டப்படி இன்னும் பத்து நகரங்களில் ஐந்து படைகள் நிருவப்படும்.

கிராமப் பகுதிகளில் உள்ள மக்கள் தீயணைப்பு படையின் வேலைகளையும் உபயோகங்களையும் நன்றாக அறிந்துக் கொள்ளும் பொருட்டும், தீ விபத்துக்களைத் தடுத்து, உயிர்ச்சேதம், சொத்து நாசம் ஏற்படாமல் தடுக்கும் பொருட்டும் 1951–ஆம் ஆண்டில் எல்லா பெரிய கிராமங்களிலும் ஸ்தல போலீஸ் உத்தியோகஸ்தர்கள் உதவியுடன் தீயணைப்புக் கோஷ்டிகள் நிருவப்பட்டன. நமது ராஜ்யம் பூராவிலும் 1956-ஆம் ஆண்டு டிசம்பர் 31-ஆம் தேதி வாக்கில் 9,555 கிராமத் தீயணைப்பு கோஷ்டிகள் இருந்தன.

அந்த ஆண்டில் 528 தீ விபத்துகளை அணைப்பதற்கு இக்கோஷ்டியார் உதவி செய்தனர். நமது தேசத்திலேயே முதன் முதலாக நமது ராஜ்யம் முழுதும் 1956-ஆம் வருஷம் அக்டோபர் மாதம் 26-ம் தேதி முதல் 1956-ஆம் வருஷம் நவம்பர் மாதம் 1-ஆம் தேதி வரை "தீ விபத்து தடுப்பு வாரம்" கொண்டாடப்பட்டது.

ஸ்தல சட்டங்களின் கீழும், இந்திய பீனல் சட்டம் "நியூசன்ஸ்" பிரிவின் கீழும் தொடரப்படும் வழக்குகள் தவிர மற்றபடி தண்டனை அளிக்கக் கூடிய வழக்குகள் 1956-ல மொத்தம் 49,011 ; 1955-ல் இருந்தது 45,816. அதாவது 3,195 வழக்குகள், 7 சத வீதம் அதிகரித்திருக்கின்றன. குற்றங்கள் அதிகமானதற்கு அந்த ஆண்டு வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்தது தான் காரணம். குற்றங்களில் ஈடுபடும் கும்பல்களை போலீசார் முன்னெச்சரிக்கையாகக் கண்டுபிடித்து, ஒழித்துக் கட்டியிரா விட்டாலும் ரௌடிகளையும், திருடுவதையேத் தொழிலாகக் கொண்டிருப் பவர்களையும் கட்டுப்படுத்தி வைப்பதில் தவறியிருந்தாலும், அந்த ஆண்டு இன்னும் அதிகப்படியான குற்றங்கள் நடந்திருக்கும். தஞ்சாவூர் ஜில்லாவில் நான்கு திருட்டு கோஷ்டிகள் மீது வழக்குத் தொடரப் பட்டு, ஒரு கோஷ்டிக்குத் தண்டனை அளிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் மூன்று வழக்குகள் நடந்து வருகின்றன. 1956-ஆம் ஆண்டில் குற்றங் களைக் கண்டு பிடிப்பதிலும் நல்ல முன்னேற்றம் கண்டிருக்கிறது. 1955-ல் 41.3 சத வீதக் குற்றங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. 1956-ல் இது 44·4 சத வீதம் அதிகமாயிருக்கிறது. சமூகத் தடைகள் நீக்கச் சட்டத்தின் கீழ் 1956-ல் 159 வழக்குகள் தொடரப்பட்டன. 1955-ல் 179 வழக்குகள் தொடரப்பட்டன. சென்ற ஆண்டு பெரிய வகுப்பு கலவரங்கள் ஒன்றும் ஏற்படவில்லை. போலீஸ் உத்தியோகஸ்தர்கள் மனக் குறைவின்றி நல்ல முறையில பணியாற்றி வருகின்றனர். இத்துடன் போலீஸ் இலாகா மான்யக் கோரிக்கையை நிறைவேற்றி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

Mr. SPEAKER : Motion moved—

"That the Government be granted a sum not exceeding Rs. 5,28,90,600 under Demand XIV—Police."

I am told that the Opposition parties have agreed that Sri M. D. Ramasami may move his cut motion. Sri Ramasami may now move his cut motion.

Sri M. D. RAMASAMI : I move—

"That the allotment of Rs. 5,28,90,600 under Demand XIV—Police, be reduced by Rs. 100."

Mr. SPEAKER : Motion moved—

"That the allotment of Rs. 5,28,90,600 under Demand XIV—Police, be reduced by Rs. 100."

The original motion and the cut motion are before the House for discussion.

Sri M. D. RAMASAMI : கனம் சபா நாயகர் அவர்களே, இந்த மானியத்திற்கு நான் பிரேரித்துள்ள வெட்டுப் பிரேரணையை வலியுறுத்தி சில வார்த் தைகள் கூற விரும்புகிறேன். போலீஸ் நிர்வாகத்திலே இப்போது ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. வரி சீர்திருத்தம் ஏற்பட்டிருக்கிறது, என் பதை ஒப்புக்கொள்பவர்களில் நானும் ஒருவன் தான். ஆயினும் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் போலீஸ் படையை தங்களுடைய கட்சிப் பிரசாரத் திற்காக, கட்சியின் நலத்திற்காக உபயோகித்து வருகிறார்கள் என்பதாக நான் பொது விவாதத்தின்போது குற்றம் சாட்டிப் பேசினேன். முது குளத்தூர் தாலூக்காவில் சமீபத்தில் தான் தேர்தல் நடந்தது. அப்போது

போலீஸ்காரர்கள் அந்தத் தொகுதிக்குச் சென்று "காங்கிரஸ் கட்சிக்காரர்களுக்குத் தைரியமாக வோட்டுப் போடுங்கள், அதற்குத் தடை ஏற்பட்டால் நாங்கள் இருக்கிறோம் பாதுகாப்புக்கு" என்றெல்லாம் சொல்லும்படியாக ஆளும் கட்சியினரால் தங்கள் கட்சிப் பிரசாரத்திற்கு உபயோகப்படுத்தப்பட்டார்கள் என்று நான் சொன்னபோது கனம் மந்திரி ஸ்ரீ கக்கன் அவர்கள் "நீங்கள் வெட்டுவோம், குத்துவோம்" என்று சொன்னால் என இடைமறித்துச் சொன்னார்கள். வெட்டுவோம், குத்துவோம் என்று யார் சொன்னார்கள் என்பது தான் இப்போது பிரச்னை. அந்தத் தொகுதியில் நாங்கள் யாரும் வெட்டுவோம், குத்துவோம் என்று மக்களைப் பயமுறுத்தவில்லை. அந்தத் தொகுதி அங்கத்தினராக ஸ்ரீ முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் பார்லிமெண்டுக்கும் சட்டசபைக்கும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டது உங்களுக்கு எல்லாம் தெரிந்திருக்கும். இந்த நாட்டில் நேரிடையாக வாக்காளரிடத்தில் சென்று "எனக்கு வோட்டுப் போடுங்கள்" என்று கேட்காத செல்வாக்கு உடைய தலைவர் ஒருவர் இருக்கிறார் என்றால் நான் தைரியமாக எங்களுடைய தலைவர் ஸ்ரீ முத்துராமலிங்க தேவர் ஒருவர்தான் அப்படி இருக்கிறார் என்று சொல்ல முடியும். தன்னுடைய தொகுதிக்கு ஒரு முறை கூடப் போகாமல் அந்தத் தொகுதி தேர்தலிலே நின்று வெற்றிபெற்ற பெருமை அவருக்குத்தான் உண்டு. குறிப்பாக சில முக்கியஸ்தர்கள், அந்தத் தொகுதியைச் சேர்ந்தவர்கள் அவரிடம் வந்து "நீங்கள் ஒரு முறையாவது நம்முடைய தொகுதியில் சுற்றுப்பிரயாணம் செய்யவேண்டாமா?" என்று கேட்டபோது "உங்கள் தொகுதிக்கு நான் நேரில் வந்து உங்களைப் பார்த்து வோட்டுப் போடுங்கள் என்று கேட்டு நீங்கள் வோட்டுப் போட்டு நான் ஜயிப்பதாக இருந்தால் அந்த ஜயம் எனக்கு வேண்டாம்" என்று அவர் சொன்னதைக் கேட்டுக்கொண்டு நானும் அந்த இடத்தில் தான் இருந்தேன் என்பதால் இதைச் சொல்கிறேன். அவர் அந்தத் தொகுதிக்கு ஒரு முறை கூடச் சென்று எனக்கு வோட்டுப் போடுங்கள் என்று வாக்காளரை நேரில் பார்த்துக் கூறுதிருக்கும்போது அவரா "எனக்கு வோட்டுப் போடவில்லை என்றால் வெட்டுவேன், குத்துவேன்" என்று பிரசாரம் செய்தார் என்று யாராவது சொல்ல முடியுமா? அதற்குமாறாக ஆளும் கட்சியார் தான், தங்களுக்கு வோட்டுப் போடவில்லை என்றால் அம்மாதிரியாகவெல்லாம் செய்வோம் என்று சொல்லி மக்களை பயமுறுத்தியதோடு கூட போலீஸ் படையையும் அந்தத் தொகுதியில் தங்களுக்குச் சாதகமாகப் பிரசாரம் செய்து கொள்வதற்குப் பயன்படுத்திக் கொண்டார்கள். அது மட்டுமல்ல, நாடு சுதந்திரம் பெற்ற பிறகு தங்களுடைய கடமையை, தாங்கள் மக்களுக்குச் செய்ய வேண்டிய பொறுப்புக்களை எல்லாம் உணர்ந்து நேர்மையாக, நியாயமாகப் பணி புரிய முன் வருகின்ற போலீஸ் அதிகாரிகளுக்கு ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களால் வருகின்ற தொந்தரவு, நிர்ப்பந்தம் அதிகமாக இருக்கிறது என்பதை இங்குள்ள அங்கத்தினர்கள் ஓரளவாவது அறிந்திருப்பார்கள் என்று நம்புகிறேன்.

(Sri K. Anbazhagan in the Chair.)

செல்வாக்குள்ள ஒரு குடும்பத்தில் இரண்டு கட்சிகள் இருந்தால் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஜில்லா அதிகாரிகள் முதற்கொண்டு மற்றவர்களை தங்களுக்குச் சாதகமாக வைத்துக் கொண்டு அந்தக் குடும்ப நிர்வாகத்திலும் தலையிட்டு பல அநீதிகளைச் செய்திருக்கிறார்கள் என்பதற்குப் பல உதாரணங்களைச் சொல்ல முடியும். இந்த முறைகளில் எல்லாம் ஆளும் கட்சியினர் தலையிட்டு போலீஸ் நிர்வாகத்தில் தங்களுக்கு வேண்டியவர்களாக, தங்கள் கட்சிக் சாதகம் செய்கின்றவர்களாக யார் இருக்கிறார்களோ அவர்களுக்கு சௌகரியமான பல உதவிகளை, காரியங்களைச் செய்து வருவதை எல்லாம் கண்டிக்கும் முறையில் தான் என்னுடைய வெட்டுப் பிரேரணையை வலியுறுத்திப் பேசி என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* **SRIMATHI A. S. PONNAMMAL** : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் மந்திரி அவர்கள் கோரியிருக்கும் போலீஸ் மானியத்தை நான் முழு மனதுடன் ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன்.

நம்முடைய சென்னைமாநகரத்தில் கடந்த இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பிருந்தே கள்ளச் சாராயம் காய்ச்சுவதைத் தடுப்பதற்கு வேண்டிய தக்க நடவடிக்கைகளை எல்லாம் பாராட்டக்கூடிய வகையில் போலீஸ்காரர்கள் எடுத்து வருகிறார்கள் என்பது நமக்குத் தெரியும். மதுவிலக்குச் சட்டத்தை வெற்றிகரமாக அமுல்நடத்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு அந்தப் பொறுப்பை சரியான முறையில் நிறைவேற்றுவதிலிருந்தே போலீஸ் இலாகாவின் நிர்வாகத் திறமையும், அந்த இலாகாவுக்குப் பொறுப்பேற்றுள்ள அமைச்சர் அவர்களுடைய திறமையும் நன்றாகத் தெரிகிறது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக சமீபத்தில் ஆவடி காங்கிரஸ் மகாசபையின் போதுதான் நான் போலீஸ்காரர்கள் தங்களுடைய கடமையை நன்கு உணர்ந்து எவ்வாறு மக்களுக்குத் தொண்டு செய்து வருகிறார்கள் என்பதை அறிந்து கொண்டேன். போலீஸ்காரர்களின் கடமை, இன்று ஓரிடத்தில் கொலை நடக்கப் போகிறது என்றால், திருட்டு நடக்கப் போகிறது என்றால் அதைமுன்கூட்டியே அறிந்து அந்தக் கொலையையும், திருட்டையும் நடக்காதபடி பார்த்துக் கொள்வதோடு, அவர்களுடைய அறிவுக்கும் எட்டாது நடந்துவிட்டதானால் அந்தக் குற்றத்தைப் புரிந்தவர்கள் யார் என்பதை மிக திறமையாக ஆராய்ந்து கண்டு பிடிப்பதும் தான் என்பதை நன்றாக உணர்ந்து நமது போலீஸ் இலாகா செயல்படுகிறது என்பதை "ஒரு ஆணி கீழே விழுந்திருந்தாலும் அதை எடுத்துக் கொண்டு போய் உரியவரிடம் சேர்ப்பித்த காட்சியை" ஆவடி காங்கிரஸில் நேரிடையாகக் கண்டு தான் இன்றைக்கு நான் பாராட்ட முன் வந்திருக்கிறேன்.

அடுத்தபடியாக இப்போது சமீபத்தில் புயலால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு அவர்கள் சென்று தங்களுடைய சொந்தக் குடும்பத்திற்கு எப்படிக் கஷ்டம் வந்தால் அதைப் போக்கிக் கொள்ள முழுமுயற்சியுடன் உழைப்பார்களோ, அவ்வளவு மும்முரமாக வேலை செய்தார்கள். புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அநேகவிதமான நன்மைகளைச் செய்திருக்கிறார்கள் என்கிற காரணத்திற்காகவும் நான் மிகமிகப் பாராட்டுகிறேன்.

இப்படி போலீஸ் நிர்வாகம் பொதுப்படையாக நம் எல்லோருக்கும் பாராட்டுவதற்குரிய வகையில் செயல்பட்டு வந்தாலும் கூட ஆங்காங்கே சில போலீஸ்காரர்கள் சில கிராமங்களில் தவறாக நடந்து கொள்வது அந்த இலாகாவின் திறமைக்கே இழுக்கை விளைவிப்பதாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டவும் நான் விரும்புகிறேன். என்னுடைய தொகுதியை எடுத்துக் கொண்டால் ஒரு சில போலீஸ்காரர்களே இந்தக் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களுக்கு உடந்தையாக இருக்கிறார்கள். காரணம், இன்னும் இவர்கள் குடிப்பழக்கத்திலிருந்து விடுபடாதது தான். இதில் அரசாங்கம் அதிகப்படியான கவனம் செலுத்த வேண்டும். 1937-ம் ஆண்டில் மதிப்பிற்குரிய ஸ்ரீ ராஜாஜி அவர்கள் மந்திரி சபையை ஏற்றபோது சேலம் ஜில்லாவில் ஒரு கணக்கு எடுத்துப் பார்த்தார்கள். அதன்படி நூற்றுக்கு 85 போலீஸ்காரர்களே குடிக்கிறார்கள் என்பது தெரிய வந்தது. அதைப் பார்த்தவுடனேயே அந்தப் போலீஸ்காரர்களை எல்லாம் சேலம் ஜில்லாவில் இருந்து வேறு ஜில்லாவிற்கு மாற்றிவிட்டார்கள். இப்போது அந்தமாதிரியாக ஜில்லாவைவிட்டு வேறு ஜில்லாவிற்கு மாற்றவேண்டும் என்று நான் சொல்லவில்லை. போலீஸ் இலாகாவில் உள்ளவர்கள் யாராவது குடிக்கிறார்கள் என்று தெரிந்தால் உடனே அந்தப் போலீஸ்காரர்களை அந்த இலாகாவைவிட்டே மாற்றி எங்காவது "வாச்மென்னாகவோ" வேறு கீழான பதவியில் உள்ளவர்களாகவோ போட்டுவிட்டால் தான் அவர்கள் திருந்துவதற்கும், சமுதாயத்திற்கு தீங்கு விளைக்காமல் இருப்பதற்கும் வசதியாக இருக்குமென்று நான் சொல்லவிரும்புகிறேன். மதுவிலக்குத் திட்டம் வெற்றிபெற வேண்டுமென்றால் அது போலீஸ் இலாகாவினால் தான் முடியுமே தவிர தனிப்பட்ட எம்.எல்.ஏ.க்கள் கூட்டம் போட்டு, மேடையில் ஏறிப் பிரசங்கங்கள் செய்வதனால் வெற்றிபெறாது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

15th July 1957] [Srimathi A. S. Ponnammal]

அடுத்தபடியாக மிகப் பெரிய குற்றச்சாட்டுகளை எல்லாம் கூட சில போலீஸ்காரர்கள் ஒன்றிரண்டு வாங்கிக்கொண்டு விட்டுவிடுகிறார்கள். என்னுடைய தொகுதியில் ஒரு சாதாரண விவசாயியினுடைய முந்திரிக் காட்டை வெட்டிவிட்டார்கள். முந்திரி காட்டை வெட்டினதற்குக் கேஸ் கொடுக்கப்பட்டும் கூட சம்பந்தப்பட்டவர்களின் மேல் நடவடிக்கை எடுக்கவில்லை. காரணம் விசாரித்ததில் போலீஸ்காரர்கள் ஒன்றிரண்டு வாங்கிக் கொண்டு அந்தக் கேஸை அமுக்கி விட்டார்கள் என்று அறிந்து நான் வருந்தினேன். இந்த மாதிரியான லஞ்சப் பழக்கத்தை ஒடுக்கவேண்டுமென்றால் முதலில் இந்த மாதிரியாக யார் லஞ்சம் கொடுத்தார்கள் என்று கண்டு அவர்களுக்குத் தக்க தண்டனை விதிக்கவேண்டும். அவர்கள் கொடுத்தது ஒரு மடங்கு என்றால் அவர்களுக்கு இரண்டு மடங்கு அபராதம் விதிக்கவேண்டும். இவர்கள் கொடுப்பதனால்தான் கஷ்டப்பட்டு ஜீவனம் நடத்தக்கூடிய அவர்களுக்கு வாங்கினால் என்ன என்கிற எண்ணம் உண்டாகி விடுகிறது. அதோடு அந்த மாதிரியாக லஞ்சம் வாங்கியவர்களை அந்த இலாகாவில் வைத்திருக்காமல் வேறு இலாகாவிற்கோ, வேறு ஜில்லாவிற்கோ உடனடியாக மாற்றி விடவேண்டும். அவர்களை வேலையை விட்டு நீக்காவிட்டாலும் கூட இப்படி மாற்றினால்தான் லஞ்சத்தை ஒழிக்க முடியும். மதுவிலக்குத் திட்டத்தை வெற்றிகரமாக்க முடியும் என்று சொல்லிக்கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பு அளித்த தலைவருக்கு என்னுடைய வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

**Sri M. P. SARATHI** : கனம் தலைவர் அவர்களே, வெட்டுப் பிரேரணையை ஆதரித்து நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். முக்கியமாக வேலூரைப் பொறுத்த வரையில் போலீஸ் நடமாடும் இடம் வேலூர் என்பதை அனைவரும் அறிவார்கள். மற்ற ஜில்லாக்களுக்கு எல்லாம் போலீஸ்காரர்களை அனுப்புவதற்கு தக்க பயிற்சி கொடுக்கப்படும் இடம் வேலூர் என்பது நமக்குத் தெரிந்த விஷயம். அப்படி இருந்தும் வேலூரிலேயே இருக்கக்கூடிய ரிசர்வ் போலீஸ்காரர்களுக்கு போதுமான வசதிகள் அங்கே செய்து கொடுக்கப்படவில்லை. உயர்ந்த பதவியில் உள்ள சில முக்கியஸ்தர்கள் வசதியான நிலைமையில் இருக்கிறார்களேயொழிய சாதாரணமான ரிசர்வ் படையில் இருக்கக் கூடியவர்கள் ஓலைக் குடிசைகளில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். குடும்பம் நடத்துவதற்குக் கொஞ்சம் கூட வசதி இல்லாத ஓலை வீடுகளில் வசிக்கின்ற அவர்களுடைய கஷ்டங்களை உணர்ந்து அவர்களுக்கு நல்ல வீடுகளைக் கட்டித் தரவேண்டும் என்பதாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும் போலீஸ் உத்தியோகஸ்தர்களுக்கு வேண்டிய ஆட்களை, சப்-இன்ஸ்பெக்டர் போன்றவர்களை சர்விஸ் கமிஷன் மூலமாகத் தெரிந்தெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். குறிப்பாக ஸி. ஐ.டி. இலாகாவில் வேலை தேடிக் கொடுக்கும் ஆபீஸ் மூலமாகவே தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்பட்டவர்களுக்கு வேலை கொடுக்காமல் போலீஸ் அதிகாரிகள் தங்கள் இஷ்டம் போல, ஒருவரின் சிபார்சுப்படி ஆட்களை நியமித்துக் கொண்டார்கள் என்று எனக்குத் தெரியுமாதலால் தான் சர்விஸ் கமிஷன் மூலமாகவே இந்த ஆட்சிகளைப் பொறுக்குவது, நலமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

அடுத்தபடியாக பொதுக் கூட்டங்கள் நடத்துவதானால், முன்பு வேலூர் கோட்டை மைதானம் என்ற ஒரு இடம் தான் இருந்தது. அதை இப்போது ஆர்க்கியலாஜிகல் இலாகாவினர் எடுத்துக் கொண்டு பொதுக்கூட்டங்களை அவ்விடத்தில் நடத்தக் கூடாது என்று தடை செய்து விட்டார்கள். அதுவும் நமது பிரதம மந்திரி நேரு அவர்கள் ஒரு கூட்டத்தில் அங்கே பேசிப் போன பிற்பாடு அதற்கு மேல் அங்கே கூட்டங்கள் நடக்கக்கூடாது என்று சொல்லிவிட்டார்கள். இதனால் அவருக்கும் ஒரு கெட்ட பெயர் அமைந்துவிட்டது. நம்முடைய அரசாங்கத்தார் அதில் கவனம் செலுத்தி மறுபடியும் அந்தக் கோட்டை மைதானத்தில் பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்கு வேண்டிய வசதிகளைத் தேடிக் கொடுக்கும்படியாக நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

[Sri M. P. Sarathi] [15th July 1957

சாதாரணமாக, ஒலிபெருக்கியை கூட்டங்களில் உபயோகப்படுத்துவதற்கு லைசென்ஸ் வாங்குவதில் சிரமம் ஏற்படுகிறது. இதற்கு ரூ. 5-க்கு மேல் செலவாகிறது. இதில் போலீஸ் இலாகாவுக்கு ரூ. 3 லைசென்ஸ் கட்டணமாக கொடுக்க வேண்டியதாக யிருக்கிறது. இந்த மாதிரி கட்டணம் வாங்குவதை உடனடியாக நிறுத்திவிட்டால் ரொம்ப நலமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தவிர வேலூரில் பலர் **Head Constable**-கள் **Sub-Inspector**-களாக ஐந்து வருஷமாக வேலை செய்து இருந்தும், அவர்களை மறுபடியும் **Head Constable**-களாக மாற்றி விட்டு இருக்கிறார்கள். இதனால் அவர்கள் தங்களுடைய டிரஸ்களை போட்டு கொண்டு வெளியிலேயே வருவதற்கு கூட வெட்கப்படுகிறார்கள். முதலிலேயே அவர்களை சப்-இன்ஸ்பெக்டர்களாக, பிரமோஷன் செய்யாமல் இருந்து இருந்தாலேயே மிகவும் நலமாய் இருக்கும் என்று தெரிவித்து கொள்கிறேன்.

மற்றப்படி வேலூரில் சி.ஆர்.எஸ். பி.ஆர்.எஸ் என்ற சப்-இன்ஸ்பெக்டர்களை **train** செய்யும் ஸ்தாபனம் இருக்கிறது. இதற்கு ஒரு **Principal** மற்ற அதிகாரிகளும் நியமிக்கப்பட்டு வேலை செய்து வருகிறார்கள். முன்பு இந்த ஸ்தாபனத்திலிருந்து அதிகமான அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. ஆனால் கடந்த 4, 5 வருடங்களாக அங்கு அதிகப் பேர்களுக்கு பயிற்சி அளிப்பது இடையாது. ஆகையால் அவ்வளவு பெரிய ஸ்தாபனங்கள் இன்னும் இயங்கி வருவது அவசியமா என்று ஆராய வேண்டுகிறேன். நான் முன் ஒரு சமயம் குறிப்பிட்டது போல், இந்த போலீஸ் இலாகாவுக்கு ரூ. 5 கோடிக்கு மேல் செலவிடுவது அதிகம் என்று குறிப்பிட்டிருந்தேன். போலீஸ் இலாகாவுக்கு எவ்வளவுக்கெவ்வளவு குறைவாக பணம் செலவழிக்கப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு ஒரு நாடு நாகரிகமுடையது என்று பல பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இந்த இலாகாவின் செலவை அதிகரிக்காமல் குறைத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மதுவிலக்கு விஷயமாக சர்க்கார் தீவிரமான நடவடிக்கை எடுத்துக் கொள்கிறோம் என்று சொல்லிக்கொண்டு ஏழை மக்களை ஜெயிலுக்கு அனுப்புவதை விட்டு பிரசாரம் வாயிலாக அவர்களை திருத்துவதே நலம் என்று சொல்கிறேன். இப்போது கூட சாராயக் கடை, கள்ளுக்கடை இவைகளை ஏலத்திற்கு விட்டால், முன்பு ரூபாய் 5 கோடி. கலால் வருமானமாக கிடைத்துக்கொண்டிருந்தது இப்போது ரூ. 10 கோடியாக கிடைக்கும். இதனால் என்ன தெரிகின்றது என்றால் குடிப்பவர்களுடைய எண்ணிக்கை முன்பு இருந்ததைவிட இரட்டிப்பாகி இருக்கிறது. முன்பு இது விஷயமாக பிரசாரம் செய்யும் வகையில் சத்யாகிரகம்கூட செய்து அதனால் குடிப் பழக்கத்தை விட்டவர்கள் இன்று வரை மது பானம் செய்வதில்லை. ஆனால் மதுவிலக்கு சட்டம் வந்த பிறகு குடிப்பதை விட்டவர்கள் சாராயம் அகப்பட்டபோதெல்லாம் குடித்துவருகிறார்கள். ஆதலால் பிரசாரம் செய்வதன் மூலம்தான் கள் குடிப்பதை அறவே ஒழிக்க முடியும் என்று சொல்லிக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**Sri A. MARIAPPAN** : தலைவர் அவர்களே, கனம் மந்திரி அவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியத்தை ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். போலீஸ் இலாகாவானது நாடு சுதந்தரம் அடைந்த பிறகு நல்ல முறையில் நாட்டுக்கு சேவை செய்து வருகிறது. நாட்டிலே அமைதியையும் பாதுகாப்பையும் நிலை நாட்டி வருகிறது. ஆனால் சில இடங்களில் போலீஸ்காரர்கள் தவறு செய்திருக்கிறார்கள் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். சென்ற மார்ச்சு மாதம் 12-ந்தேதி எங்கள் ஊரில், அதாவது அம்மாபேட்டையில் ஒரு பாராட்டு விழாவில், திராவிட முன்னேற்ற கழகத்தை சேர்ந்தவர்கள் ஒழுங்கீனமாக நடந்து, கல்கள் காங்கிரஸ்காரர்கள் மண்டை உடைக்கப்படும் அளவிற்கு வீசப்பட்டதாக போலீஸுக்கு புகார் கொடுத்திருந்தும், இன்றுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. அம்மாதிரியாக போலீஸ்காரர்கள் சிற்சில இடங்களில் பாரபட்சமாக நடந்து கொள்கிறார்கள். சென்ற தேர்தலில் அவர்கள் பாரபட்சமாக பல இடங்களில் நடந்துகொண்

15th July 1957] [Sri A. Mariappan]

டிருக்கிறார்கள். இவ்விதம் பாரபட்சமாக நடந்துகொள்ளும் அதிகாரிகளின் மீது தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

போலீஸ்காரர்கள் குடியிருக்க அவர்களுக்கு வீடுகள் line ஆக கட்டிக் கொடுப்பது மிகவும் முக்கியமானது. இப்படிக் கட்டிக்கொடுக்காவிட்டால், அவர்கள் வெகுதூரத்திலிருந்து போலீஸ் ஸ்டேஷனுக்கு வரவேண்டியிருப்பதால் தங்கள் வேலைகளை சரிவர கவனிக்க முடிவதில்லை. தவிர, போலீஸ் ஸ்டேஷன்களும் பல இடங்களில் நகரங்களுக்கு ஒதுங்குப் புறமாகயிருப்பதால் அவர்கள் தவறாக நடந்துகொளவதற்கு ஏதுவாயிருக்கிறது. ஆகையால் போலீஸ் ஸ்டேஷன்களை நகரின் மத்தியில் அமைத்தால் போலீஸ்காரர்கள் தவறான வழியில் நடப்பதற்கு சந்தர்ப்பம் இருக்காது என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

பெரிய உத்யோகஸ்தர்களை பொறுத்தவரையில் நாட்டுக்கும் அவர்கள் நல்ல முறையில் ஜனங்களுக்கும், சேவை செய்து வருகிறார்கள். ஆனால் சில சிறிய உத்யோகஸ்தர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் சுதந்திரம் அடைந்த பின்பும் பழைய வழியிலேயே இருந்துகொண்டிருக்கிறார்கள். இவர்களை திருத்த தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இம்மாதிரி தவறான போக்கிலேயே போகும் உத்யோகஸ்தர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும். குறிப்பாக, சில பகுதிகளில், கொலை முதலிய கேஸ்களைக்கூட சரியான முறையில் நடத்துவதில்லை. காங்கிரஸ்காரர் மீது சில இடங்களில் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இவ்விதம் அதிகாரிகள் பட்சபாதம் காட்டுகிறார்கள். குறிப்பாக சேலம் ஜங்ஷனிலும் இம்மாதிரி நடந்து இருக்கிறது. ஒரு சிலர் தவறு செய்தாலும் பெரும்பாலான போலீஸ் உத்யோகஸ்தர்கள் நல்ல முறையில் ஜனங்களுக்கு சேவை செய்து வருகிறார்கள்.. குறிப்பாக, மதுவிலக்கைப் பொறுத்தவரையில் சென்னை நகரத்தில் நல்லமுறையிலே மதுவிலக்கு சட்டம் அமுலாக்கப்பட்டு வருகிறது, ஆனால் கிராமப்புறங்களிலும் மற்ற நகரங்களிலும் இது நல்ல முறையிலே நடைபெறவில்லை. இதற்குக் காரணம் சில போலீஸ்காரர்கள் தங்கள் வேலையை சரிவரச் செய்வதில்லை. இவர்களை நல்ல முறையிலே கண்காணிப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். சென்னையில் எவ்விதம் இச்சட்டம் அமுலாக்கப்படுகிறதோ, அதேமாதிரி நல்ல முறையிலே மற்ற இடங்களிலும் அமுலாக்குவதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

பொதுக் கூட்டங்கள் நடத்த அனுமதி தருவதில் ஏதோ காங்கிரஸ்காரருக்குத் தான் சலுகை காட்டப்படுவதாகச் சொன்னார்கள். ஆனால் உண்மையிலேயே மாற்றுக் கட்சிகளுக்குத் தான் இது விஷயத்தில் சலுகைகள் அதிகமாகக் காட்டப்படுகின்றன. உதாரணமாக ஒரு இடத்தில் கூட்டம் கூட்டுவதற்கு காங்கிரஸ்காரர் அனுமதி வாங்கியிருந்து அதே இடத்தில் கூட்டம் கூட்ட மாற்றுக் கட்சிக்காரர்களும் அனுமதி கோரினால், மாற்றுக் கட்சிக்காரர்களுக்கு இறுதியாக அனுமதி கொடுக்கப்படுகிறது. இம்மாதிரி இல்லாமல், எந்தக் கட்சி முதலில் அனுமதி கோரிற்றோ, அதற்கே அனுமதி கொடுக்க வேண்டும், இவ்விஷயத்தில் தாட்சிணயம் இல்லாமல் நிர்தாட்சிண்யமாக அதிகாரிகள் நடந்து கொள்ள வேண்டும் என்று சொல்லிக் கொண்டு இந்த மானியத்தை ஆதரிக்கிறேன்.

**Sri V. SUBBIAH** : தலைவர் அவர்களே, இந்த மான்யத்தின் மீது பிரேரேபிக்கப்பட்ட வெட்டுப் பிரேரேணையை ஆதரித்து இன்றைய தினம் போலீஸ் இலாகா எவ்வாறு நடந்து வருகிறது என்பதைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். சில இடங்களில் போலீஸ்காரர்கள் நல்ல முறையிலே நடந்து வருகிறார்கள். நான் அதைப் பற்றி குறிப்பிட விரும்பவில்லை. ஆனால் சில இடங்களில் போலீஸ் ஆட்சி தரின் தாண்டவமாடுகிறது என்று நான் சொல்லாமல் இருக்க முடியாது. உதாரணமாக எனது தொகுதியில் உள்ள ஒரு கிராமத்தில் ஏற்பட்ட சச்சரவின் காரணமாக ஒரு நல்ல நாணயமுள்ள கண்ணியமான 40 அல்லது 50 ஏக்கர் நிலம் வைத்திருக்கக்கூடிய ஒரு விவசாயியை—இது

[Sri V. Subbiah] [15th July 1957

வரை எவ்வித குற்றமும் செய்யாதவரை—போலீஸ்காரர்கள் வேண்டுமென்றே இழுத்துக் கொண்டு போய், திட்டி, அடித்து அவர் கையில் வைத்திருந்த ரூ. 25-ஐயும் பறிமுதல் செய்தார்கள். அப்பேர்பட்ட பல நிகழ்ச்சிகள் இந்த ஜனநாயக ஆட்சியில் இன்னும் நடந்து வருகின்றன. கிராமங்களில் பல ரிஸெர்வ் போலீஸ்காரர்களும் பல மற்ற போலீஸ்காரர்களும் சேரிகளில் சென்று அங்குள்ள பல பொருள்களைப் பறிமுதல் செய்து வருகிறார்கள். அங்கே போலீஸார் சென்று அங்குள்ள மக்களைக் கேட்காமலேயே அங்கிருந்து கோழிமுட்டை, வாத்து முதலியவைகளை மிகவும் சுதந்திரமாக எடுத்துக் கொண்டு செல்கிறார்கள் என்றால், இது போலீஸ் ஆட்சியா அல்லது ஜனநாயக ஆட்சியா என்று கேட்க விரும்புகிறேன். போலீஸ்காரர்களுக்குப் போதிய சம்பளம் கொடுக்கப்படாததால் தான் அவர்கள் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்கிறார்கள் என்று சொல்லிக் கொள்கிறேன். ஆகவே கீழ்த் தரப் போலீஸ் உத்தியோகஸ்தர்கள் எல்லோருக்கும் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்திற்குப் போதுமான அளவு சம்பளம் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்தால் தான் போலீஸ்காரர்கள் மக்களுக்குத் துன்பம் கொடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட மாட்டார்கள் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலும், இன்றைக்கு கிராமங்களில் விவசாயிகளுக்கும், அவர்களுடைய விவசாய உற்பத்திப் பொருள்களுக்கும், கால் நடைகளுக்கும் போதிய பாதுகாப்பு இல்லை. அந்தப் பாதுகாப்பை அளிக்க வேண்டும் என்றால் " அவுட் போஸ்ட் " போலிஸ் ஸ்டேஷன்களில் திறமையுள்ள நல்ல போலீஸ் உத்தியோகஸ்தர்களைப் போட வேண்டும். " அவுட் போஸ்ட் " போலீஸ் ஸ்டேஷன்களுக்கு ஹெட் கான்ஸ்டேபில்களையோ மற்ற உத்தியோகஸ்தர்களையோ நியமிக்கும்போது நல்ல திறமை உள்ளவர்களை நியமிக்க வேண்டும்; கிராமங்களில் வழக்கமாகக் குற்றம் செய்பவர்களை தண்டிக்கக் கூடிய உத்தியோகஸ்தர்களை நியமிக்க வேண்டும்; விவசாயிகளுக்கு வேண்டிய பாதுகாப்பை அளித்து அவர்களுக்கு நன்மை செய்யக் கூடிய உத்தியோகஸ்தர்களை நியமிக்க வேண்டும். அப்படிப்பட்டவர்களைத் தெரிந்தெடுத்து அங்கே நியமிக்க வேண்டும். மேலும், உத்தியோகஸ்தர்களை நேரடியாகத் தெரிந்தெடுப்பது நல்ல முறை என்று நான் நினைக்கிறேன். மேலும் போலீஸ் ஸெர்விஸில் நல்ல உத்தியோகஸ்தர்களைத் தெரிந்தெடுந்தால்தான் நிர்வாகம் நன்றாக நடக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

மேலும், தீயணைக்கும் இயந்திர நிலையங்களால் கிராமங்களும் பயனடையும்படி செய்ய வேண்டும். கிராமப் புறங்களில் 10 மைல் சுற்று வட்டாரத்திற்கு ஒரு நிலையம் வீதம் தீயணைக்கும் இயந்திர நிலையங்களை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப் புறங்களுக்காகப் போலீஸ் ஸ்டேஷன்களை ஏற்படுத்தும் போது, அவைகளால் கிராம மக்கள் நன்றாகப் பயனடையக்கூடிய முறையில் அவைகளை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 20–30 மைல் சுற்றளவுக்கு ஒன்று வீதம் கிராம போலீஸ் ஸ்டேஷன்களை ஏற்படுத்துகிறார்கள். இப்படிச் செய்வதால் பயனில்லை. கிராமங்களில் சில்லரைக்களவுகளைத் தடுப்பதற்கும் விவசாய உற்பத்திப் பொருள்கள் களவு போகாமல் பாதுபாப்புக் கொடுப்பதற்கும் ஏற்ற முறையில் அங்கே இன்னும் குறுகிய இடங்களில் போலீஸ் ஸ்டேஷன்களை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1-30 p.m. **Sri A. GOVINDASAMY:** கனம் தலைவர் அவர்களே போலீஸ் இலாகா மானிய கோரிக்கைக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதற்காகப் பணியாற்றுகின்ற போலீஸ்காரர்களுக்குப் போதிய அளவு சம்பள உயர்வு தர வேண்டும். குறிப்பாக கீழ்தர உத்தியோகத்திலுள்ள கான்ஸ்டபில்களுக்குக் குறைந்தது 100 ரூபாயாவது சம்பளம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்குத் தகுந்தாற்போல் பஞ்சப்படியும், வீட்டு வாடகை அலவன்ஸும், உடுப்பு அலவன்ஸும்

15th July 1957] [Sri A. Govindasamy]

மற்ற அலவன்ஸுகளும் கொடுக்கவேண்டும். அவர்களுக்குப் போதுமான எண்ணிக்கையில் உடுப்புகள் கொடுக்கபடவில்லை என்பது அவர்களுடைய கோரிக்கைகளிலிருந்து தெரிகிறது. இப்போது கொடுக்கப்படும் உடுப்புகளைப் போல் இரண்டு மடங்குஉடுப்புகள் கொடுத்தால் தான் அவர்களுடைய ஆடைகள் எப்போதும் சுத்தமாக இருக்கும். அப்போது தான் அவர்களுடைய ஆடைகளை பரிசோதிக்கும் நேரத்தில் அவைகள் சுத்தமாக இருக்கும். குறைவாக ஆடைகளைக் கொடுப்பதால், அவர்கள் ஆடைகளை அடிக்கடி சலவைக்கும் போட வேண்டியிருக்கிறது. அதன் காரணமாக அவர்களுக்கு அதிகச் செலவும் ஏற்படுகிறது. ஆகவே அவர்களுக்குக் கொடுக்கப்படும் ஆடைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பல்லாண்டு காலம் பணி புரிந்த ஹெட் கான்ஸ்டபில்களுக்கு, அவர்களுடைய திறமையின் அடிப்படையில், சப்-இன்ஸ்பெக்டர் உத்தியோகம் கொடுக்கப்பட்டது. ஆனால் அப்படி சப் இன்ஸ்பெக்டர் உத்தியோக உயர்வு கொடுக்கப்பட்டவர்களில் சிலர் 'ரிவெர்ட்' செய்யப்பட்டார்கள். அப்படி 'ரிவெர்ட்' செய்யப்பட்டவர்களுக்கு மீண்டும் சப்-இன்ஸ்பெக்டர் உத்தியோகம் கொடுக்கப்பட்டிருந்தாலும் அவர்கள் பல ஆண்டுகளாக அந்த உத்தியோகத்தில் 'பெர்மணன்ட்' ஆக்கப்படாமல் இருக்கிறார்கள். எங்கள் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அம்மாதிரி 7 சப்-இன்ஸ்பெக்டர்கள் பத்தாண்டு காலம் பணி புரிந்திருந்தும் கூட அந்த உத்தியோகத்தில் 'பெர்மனென்ட்' ஆக்கப்படாமல் இருக்கிறார்கள். இதுபற்றி இந்த சபையில் ஒரு சமயம் நான் கேள்வி கேட்டபோது, குறிப்பிட்ட தகவல் கொடுத்தால் கவனிப்பதாக கனம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆகையால் இந்த சந்தர்ப்பத்தில் அந்தத் தனிப்பட்ட நபர்களைக் குறிப்பிட விரும்புகிறேன். எங்கள் மாவட்டத்தில், காடாம்புலியூரில் ஸ்ரீ மஹபல்லி என்பவரும், வளவநூரில் ஸ்ரீ பஞ்சாட்சரம் என்பவரும், பாண்டிச்சேரியில் ஸ்ரீ முனிசாமி, ஸ்ரீ விஸ்வநாதன் என்பவர்களும், அனந்தபுரத்தில் ஸ்ரீ தீனதயாளு என்பவரும், கஞ்சநூரில் ஸ்ரீ நாராயணஸ்வாமி ஐயர் என்பவரும், சங்கராபுரத்தில் ஸ்ரீ தர்மலிங்கம் என்பவரும் பெர்மனென்ட் ஆக்கப்படாத சப்-இன்ஸ்பெக்டர்கள். அவர்கள் பத்து ஆண்டுகளுக்கு மேல் சப்-இன்ஸ்பெக்டர்களாகப் பணி புரிந்திருந்தும் கூட இன்னும் அந்த உத்தியோகத்தில் பெர்மனென்ட் ஆக்கப்படவில்லை. 'ரிவெர்ட்' செய்யப்பட்டு விடுவோமோ என்ற பயம் அவர்களுக்கு இன்றைக்கும் இருக்கிறது. இந்த பயத்தை நீக்குவதற்கு எந்த விதமான நடவடிக்கையும் அரசாங்கம் எடுக்கவில்லை. இந்த 7 பேர்களையும்—அவர்களுக்கு எந்த விதமான 'பிளாக் மார்க்'கும் இல்லாமல் இருந்தால்—கண்டிப்பாக சப்-இன்ஸ்பெக்டர் உத்தியோகத்தில் பெர்மனென்ட் ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, போலீஸ்காரர்களுக்கு இப்போதும் பழைய முறையிலேயே வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. அவர்களுக்குப் பெரிய வீடுகளாகக் கட்டித் தரவேண்டும். பல இடங்களில் போலீஸ்காரர்கள் வீடு வசதியில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். இப்போது கொடுக்கப்படும் வீட்டு வாடகை அலவன்ஸ் அவர்களுக்குப் போதாமல் இருக்கிறது. அந்தப் பணத்திற்கு அவர்களுக்கு வாடகை வீடுகள் கிடைப்பதில்லை. சாதாரணப் போலீஸ்காரர்களுக்குக் கொடுக்கும் சலுகைகளை எஸ்.ஏ.பி.-க்காரர்களுக்கும் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு வீட்டு வாடகைப்படியை 7 ரூபாய் 5 வரை உயர்த்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நகரங்களில் வேலைக்குப் போகும்போது அவர்களுக்கு ரூபாய் 1–8–0 'பேடா' கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எஸ்.ஏ.பி.-க்காரர்களுக்கும் வீடு கட்டித் தர அரசாங்கம் முன்வர வேண்டும். பல எஸ்.ஏ.பி-க்காரர்கள் எம்.எஸ்.பி.-ல் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களைத் திரும்பவும் எஸ்.ஏ.பி-ல் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மலபார் போலீஸில் தமிழ் நாட்டிலுள்ளவர்களுக்கு வேலை கொடுத்தால் தமிழ் நாட்டிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டம் ஓரளவு நீங்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

[Sri A. Govindasamy] [15th July 1957

இப்போது, சில அரசாங்க உத்தியோகஸ்தர்கள் அரசாங்கத்திடமிருந்து சலுகைகளைப் பெற வேண்டுமென்ற நோக்கத்துடன், அரசியல் கிளர்ச்சிகள் நடக்கும்போது ஆளும் கட்சியினருக்குச் சாதகமாக நடந்துகொண்டு ஆளும் கட்சியினரைத் திருப்தி செய்ய முயற்சிக்கிறார்கள். அப்படி முயற்சித்து அவர்கள் சில அசம்பாவிதமான காரியங்களைச் செய்கிறார்கள். இதுசம்பந்தமாக, என்னுடைய சொந்த அனுபவத்தையே கூறுகிறேன். சென்ற வருடம் பிப்ரவரி மாதம் 20-ம் தேதியன்று, தேவிகுளமும் பீர்மேடும் தமிழ் நாட்டிலிருந்து பறி போனதற்காகவும், இந்த மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்று பெயர் வைக்காமல் இருந்ததற்காகவும், திரு. பி. டி. ராசன், எம்.எல்.ஏ. அவர்கள் தலைமையில் சர்வ கட்சி ஹர்த்தால் நடந்தது. அப்போது கடலூரில் பொது வேலை நிறுத்தமும், கடையடைப்பும் அமைதியாகவே நடந்தது. அப்போது எல்லாக்கடைகளும் அங்கே மூடியிருந்தன. ஒரு பூக்கடை மட்டும் திறந்திருந்தது. எனக்கு மிகவும் நண்பராக இருந்த ஒரு காங்கிரஸ்காரரின் கடை அந்தப் பூக்கடை. அந்தப் பூக்கடையின் எதிரில் பொதுமக்கள் நின்றுகொண்டு ஹர்த்தால் செய்துகொண்டிருந்தார்கள். அங்கே ஒரு பெரிய கும்பல் இருந்தது. நான் அங்கே சென்று கூடியிருந்தவர்களை விலகி விடும்படி கேட்டுக் கொண்டிருந்தேன். அப்படியிருக்கும்போது, இந்தப் பூக்கடைக்காரரின் கையைப் பிடித்துக்கொண்டு கடையில் கல்லாவில் இருந்த பணத்தைக் கொள்ளையடித்ததாகக் குற்றம் சாட்டி என் மீதும் இன்னும் ஏழு பேர்கள் மீது ஸ்ரீ. நாராயணஸ்வாமி ஐயர் என்ற டி.எஸ்.பி. கொள்ளை வழக்குப் போட்டார். ஆனால் உண்மையில் நான் அந்தக் குற்றத்தைச் செய்யவில்லை. சென்ற பிப்ரவரி மாதம் போடப்பட்ட வழக்கு, தேர்தல்கள் முடிந்த பிறகு இந்த ஏப்ரலில் தான் முடிந்தது. நான் கொள்ளையடிக்கவில்லை என்றும் நான் எந்தக் குற்றமும் செய்யவில்லை என்றும் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. டி.எஸ்.பி., நாராயணசுவாமி ஐயர் என்பதற்காக நான் இதைச் சொல்லுகிறேன் என்று அரசாங்கம் தயவு செய்து நினைத்துக்கொள்ளக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். அவர் எந்த நிலையிலே தூண்டப்பட்டிருக்கிறார் என்பதை கவனிக்கவேண்டும். என் மீது தவறு ஒன்றுமில்லை. நான் இதுவரையில் போலீஸுக்கோ அல்லது கோர்ட்டுக்கோ சாட்சி சொல்லக்கூட சென்றது கிடையாது. நான் எந்த விதமான தவறும் செய்தது கிடையாது. அப்படியிருக்கும்பொழுது சட்டப்படி என்மீது கொள்ளை வழக்கு தொடரப்பட்டது. நான் பூக்கடையிலுள்ளவன் கையை பிடித்துக் கொண்டு கல்லாப் பெட்டியை இழுத்ததாகவும் அப்பொழுது யாரோ ஒருவர் கல்லாவிலிருக்கும் ரூபாய் 186-10-6-ஐ திருடிக்கொண்டு போனதாகவும் சொல்லப்படுகிறது. காலை 8 மணிக்கு போலீஸ் பந்தோபஸ்து இருந்தபொழுது இப்படி திருட்டு நடந்ததாக சொல்லப்படுகிறது. நான் இதுபற்றி எந்த மந்திரிகளிடமும் சொல்லாத காரணம் நியாயம் நிலைக்கிறதா, சத்தியம் நிலைக்கிறதா என்று பார்க்க வேண்டுமென்பது தான். ஆதலால்தான் எந்த மந்திரியிடத்திலும் அல்லது காங்கிரஸ் உறுப்பினரிடத்திலும் நான் இதைப்பற்றி சொல்லவில்லை. மந்திரிகள் கூட என் பகுதிக்கு வந்திருந்தார்கள். அவர்களுக்கு நிலைமை நன்றாகத் தெரியும். இருந்தாலும் இந்த விஷயத்தைப்பற்றி நான் ஒன்றும் அவர்களுக்குத் தெளிவுபடுத்தவில்லை. மீண்டும் விசாரிக்கவேண்டும் என்றாலும் நான் குற்றவாளி என்று அரசாங்கம் நிரூபித்தால் நான் தண்டனையை ஏற்றுக் கொள்ளத் தயார். ஆனால் வீண்பழியான குற்றச்சாட்டு என்மீது சாட்டப்பட்டிருந்தால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். நண்பர் ஸ்ரீ மாரியப்பன் அவர்கள் தி.மு.கவினருக்கு ஆதரவாக போலீஸார் நடந்துகொள்வதாக குற்றம் சாட்டினார்கள். ஆளும் கட்சியினருக்கு சலுகை காட்டாமல் என்போன்ற எதிர்கட்சிக்காரர்களுக்கு ஆதரவாக அரசாங்க உத்தியோகஸ்தர்கள் நடந்துகொள்ளுவார்கள் என்ற நிலைமை இப்பொழுது இல்லை என்பதை இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கூட்டங்கள் நடத்துவதற்காக லைசென்ஸ்கள் பெறுவதென்றால், டி.எஸ்.பி.யிடம் அனுமதி பெறவேண்டியிருக்கிறது. டி.எஸ்.பி. ஒரு குறிப்பிட்ட கிராமத்திலோ, தாலுகாவிலோ இல்லாவிட்டால், 70—80 மைல்கள் போய்

15th July 1957] [Sri A. Govindasamy]

உத்தரவு வாங்கவேண்டியிருக்கிறது. டி.எஸ்.பி. ஊரில் இல்லாவிட்டால் கூட்டம் நடத்துவதாக விளம்பரம் செய்துவிட்டு ஆயிரம் மக்கள் கூடிய போதிலும் போலீஸ் உத்தரவு இல்லாத காரணத்தினால் கூட்டம் நடத்தமுடியாத நிலைமை ஏற்படுகிறது. ஆகவே இந்த அதிகாரத்தை அந்தந்த சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு வழங்கி அவர்களே கூட்டம் நடத்துவதற்கு லைசென்ஸ் கொடுக்கும்படி செய்யவேண்டும். அதற்காக ரூபாய் 2, 3 கட்டி லைசென்ஸ் வாங்கவேண்டியிருக்கிறது. பேச்சு சுதந்திரம் வாங்கிக்கொடுத்தோம் என்று சொல்லுகிறவர்கள் கூட்டத்திற்கு கட்டணம் வசூலிப்பது அவசியமில்லை. சுதந்திர நாட்டில் பேச்சு உரிமை இருக்கக்கூடிய நாட்டில் கூட்டம் நடத்துவதற்கு கட்டணம் வசூலிப்பது கூடாது. எந்தெந்தப் பகுதியில் மக்கள் கூட்டம் போட விரும்புகின்றார்களோ, அங்கே போக்குவரத்துக்கு இடையூறு இல்லாத வரையில் கூட்டம் நடத்துவதற்கு நிச்சயமாக உரிமை இருக்க வேண்டும்.

அதுமட்டுமல்ல. தெருவில் விளம்பரம் செய்ய ஒலி பெருக்கி லைசென்ஸ் குறிப்பிட்ட கட்சியினருக்குத் தான், அதாவது காங்கிரஸ் கட்சியினருக்குத் தான், வழங்கப்படுகிறது. ஆளும் கட்சியினரைச் சேர்ந்தவர்கள் என்று சொன்னால் அவர்கள் நிச்சயமாக லாரியில் ஒலிபெருக்கி வைத்துக் கொண்டு பிரசாரம் செய்வதற்கு அனுமதி கொடுக்கிறார்கள். எங்கள் ஊரிலே, கடலூரிலே, லாரி வைத்துக்கொண்டு அவர்கள் ஒலி பெருக்கியில் பிரசாரம் செய்தார்கள். நாங்கள் குதிரை வண்டியில் ஒலிபரப்பி வைத்துக் கொள்ளுவதற்குக் கூட லைசென்ஸ் மறுக்கப்படுகிறது. ஒவ்வொரு மூலையில் பிரசாரம் செய்தால், ஒவ்வொரு மூலைக்கும், ஒவ்வொரு Street Corner-க்கும் ரூபாய் 2 லைசென்ஸ் கட்ட வேண்டியிருக்கிறது. 16—17 இடங்களில் பிரசாரம் செய்தால், எவ்வளவு இடத்தில் பிரசாரம் செய்யப்படுகிறதோ அவ்வளவு இரண்டு ரூபாய் கட்டவேண்டி வற்புறுத்தப்படுகிறது. ஒரு தனிப்பட்ட கட்சிக்கு சலுகை காட்டக்கூடாது என்பது தான் என்னுடைய கருத்து. சில சந்தர்ப்பங்களில் டி.எஸ்.பியிடம் போய் அவர்களுக்கு மட்டும் லைசென்ஸ் கொடுத்திருக்கிறார்களே என்று கேட்டால், " அவர்கள் ஆளும் கட்சி துணிவுடன் செய்கிறார்கள். உங்களுக்கும் தைரியம் இருந்தால் நீங்களும் செய்யுங்கள் " என்று சொல்லும் நிலைமை இருந்து வருகிறது. இந்த நிலைமை நீடிக்காமல் எல்லோருக்கும் சம உரிமை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேர்தல் சமயத்தில் அமைதியை பாதுகாப்பதில் போலீஸ்காரர்கள் திறம்பட நடந்துகொண்டது பாராட்டத்தக்கது தான். அதே நேரத்திலே அவர்களை ஒரு கஷ்டமான நிலையில் அரசாங்கம் வைத்துவிட்டது என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வோட்டர்களை வாகனங்களில் ஏற்றிவரக்கூடாது என்று சட்டம் இருக்கிறது. ஆனாலும் எங்கள் தொகுதியில் என்னை எதிர்த்து நின்ற பெரிய பஸ் முதலாளி வோட்டர்களை காரில் ஏற்றிக்கொண்டு வந்தார். சப் இன்ஸ்பெக்டர், சர்க்கிள் இன்ஸ்பெக்டரிடம் போய் சொன்னால், அவர்கள் ' நியாயமாக வாகனத்தில் வோட்டர்களை ஏற்றி வரக்கூடாது என்று சட்டம் இருக்கிறது. ஆனாலும் அதை தடுத்து நிறுத்த எங்களுக்கு ஒன்றும் தாக்கீது வரவில்லை, நீங்களும் வேண்டுமானால் வண்டியில் ஏற்றிச் செல்லுங்கள் ' என்று சொல்லும் நிலைமை இருந்து வருகிறது. பல இடங்களில் காசு வாங்கும் நிலைமை இருந்தது. பேரம் செய்யக்கூடிய நிலைமை இருந்தது. கையும் மெய்யுமாய் லஞ்சம் வாங்கக்கூடியவர்களை கண்டு பிடித்து கொடுத்தால் கூட அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு முன்வருவதில்லை. கடுமையான உத்தரவு இருந்தால் இம்மாதிரி தவறுகள் நிச்சயமாக நடக்காது.

தீயணைக்கும் படைகள் விஷயமாக பல நடவடிக்கைகள் எடுத்திருப்பதாக கனம் மந்திரி அவர்கள் கூறியது வரவேற்கத்தக்கது தான். எங்கள் பகுதியான கள்ளக்குறிச்சி, திண்டிவனம் முதலிய இடங்களில் அடிக்கடி தீ விபத்து ஏற்படுகிறது. அந்தப் பகுதியில் உஷ்ணம் அதிகம். சமீபத்தில் கூட நெல்லிக்குப்பம் பகுதியில் ஒரு தீ விபத்து ஏற்பட்டு அங்கு இருக்கும் சேரி மிகவும் பாதிக்கப்பட்டது. கல்லிடைக்குறிச்சி முதலிய பகுதிகளிலும் தீ விபத்து ஏற்படும்பொழுது சேரிகள் தான் அதிகமாக பாதிக்

கப்படுகின்றன. கடலூரிலிருந்து தீயணைக்கும் படை வருவதற்குள் எல்லாம் எறிந்து சாம்பலாகப் போய்விடுகிறது. தீயணைக்கும் படையினர் வந்து சாம்பலில் தண்ணீரை தெளித்துவிட்டுப் போகிறார்கள். ஆகையால் ஒவ்வொரு **Taluk Headquarters**-லும் தீயணைக்கும் படை அவசியமாக இருக்கவேண்டும். குறிப்பாக உஷ்ணப் பிரதேசம் எங்கு இருக்கிறதோ அங்கெல்லாம் தீயணைக்கும் படைகள் வைக்கப்படவேண்டும். தீயணைக்கும் படையினருக்கு நல்ல சம்பளமும் கொடுக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**Sri M. MAYANDI NADAR** : கனம் தலைவர் அவர்களே, இப்பொழுது போலீஸ் இலாகா மான்யத்தை வரவேற்றுப் பேசும் தருவாயில், பொது 1.48 p.m. வாக நம்முடைய நாட்டு நிர்வாகத்தில் போலீஸ் இலாகா முக்கியமாக உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அவர்களுக்கு திருப்திகரமான நிலைமையில் சம்பளம் கொடுக்கப்பட்டு அவர்கள் வாழ்க்கைத் தரம் கஷ்டமில்லாத நிலையில் இருக்க வேண்டும். அவர்களுக்கு அநேக வசதிகளும் இருக்கின்றன என்று எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய வகையில் நடக்கிறதா என்றால், அவர்கள் வாழ்க்கைத் தரத்தை அவர்கள் கட்டுப்படுத்த முடியவில்லை என்பது பற்றி நாம் எல்லோரும் சிந்திக்கிறோம். தற்காலம் அவர்களுக்கு கொடுக்கும் சம்பள வகை போதவில்லை என்ற நிலையில் கனம் எதிர்க்கட்சி நண்பர்கள் எல்லோரும் நல்ல வகைக்காக வரி போட்டால் அதற்கு நாங்கள் ஆதரவு கொடுக்கிறோம் என்று சொன்ன பிரகாரம் பட்ஜெட்டில் பற்றாக்குறை இருந்தாலும், துண்டு விழுந்தாலும், எல்லோரும் ஆலோசித்து ஏதாவது ஒரு முறை கண்டு பிடித்து அதன் மூலமாக நகரப் பகுதியில் உள்ள போலீஸ்காரர்களுக்கும், மற்ற பகுதியில் உள்ள போலீஸ்காரர்களுக்கும் சிறிது அளவு சம்பளத்தை உயர்த்திக்கொடுக்க வேண்டும். அப்படிச் செய்தால் அவர்கள் தவறுதலான வழியில் போகாமல் அவர்களை கட்டுப்படுத்த முடியும் என்பது என்னுடைய நம்பிக்கை. ஏனென்றால் அவர்கள் வாழ்க்கைத் தரத்துக்கு அவர்கள் சம்பளம் காணவில்லை என்ற காரணத்தினால் தான் அவர்கள் சில தவறுகள் செய்யவேண்டி வருகிறது என்பது பற்றி எல்லோரும் சிந்திக்கவேண்டி இருக்கிறது. அவர்கள் சம்பளத்தை சிறிது அளவு உயர்த்தி கொடுத்துவிட்டு அவர்கள் குற்றம் செய்தால் முதலாவதாக அவர்களுக்கு மன்னிப்பு கொடுத்து, இரண்டாவதாக கடுமையான நடவடிக்கை எடுத்தால் அவர்கள் குற்றங்கள் செய்வது குறையும் என்பதை நான் சொல்லிக்கொள்ளுகிறேன். பொதுவாக இப்போது அனேக பகுதிகளில் மருந்து கடைகளில் பலவிதமான மருந்துகளை வைத்து விற்பனைசெய்து தவறுதல் நடந்து வருகிறது. இதற்கும் போலீஸ்காரர்கள் உடந்தையாக இருப்பதாக சொல்லப்படுகிறது. ஆகவே இதற்கு லைஸன்ஸ் கொடுப்பதை கட்டுப்படுத்தினால், அல்லது குறைத்தால் இது அனேகமாக குறைந்துவிடும் என்பதை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மேலும் கனம் ராமசாமி அவர்கள் முதுகுளத்தூர் தொகுதியில் போலீஸ் அடக்குமுறை இருப்பதைப்பற்றி சொன்னார்கள். அங்கு ஜனங்கள் பகலில் நடமாடுவதற்கு பயப்படுகிறார்கள். அவர்கள் வேலை செய்யும்பொழுதுகூட பயந்து கொண்டு தான் செய்கிறார்கள் என்று தெரிகிறது. ஆனால் அந்த இடத்தில் அவர்கள் சொல்லுகிற பிரகாரம் ஜனங்களுக்கு வேண்டிய முறையில், அரசாங்கமானது போலீஸுக்கு சரியானபடி அதிகாரம் கொடுத்து ஜனங்கள் பயமில்லாமல் வெளியே போவதற்கும் சௌஜன்யமான முறையில் பேசக்கூடிய வாய்ப்பை அளிப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் என்னவென்றால் அங்குள்ள ஜனங்கள் தப்பித்தவறி காங்கிரஸுக்கு வோட்டு போட்டேன் என்று சொன்னால் அங்கு குடியிருக்க முடியாது. அவர்களுடைய நிலங்கள் எல்லாம் அழிக்கப்பட்டு .விடும். ஆகவே இதையெல்லாம் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இவ்விதம் அப்பகுதிகளில் ஒரு சௌஜன்யமான நிலைமையை ஏற்படுத்துவதற்கு போலீஸ்காரர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் இப்போது நடைபெற்று வரும் மதுவிலக்கை போலீஸ் இலாகாவிடம் ஒப்படைத்ததைப்பற்றி நாம் சந்தோஷமடைகிறோம். அதிலும் சில

தவறுதல்கள் நடக்கின்றன. அதாவது போலீஸ்காரர்கள் தங்கள் கடமைக்காக ஏதாவது சாதாரண கேஸ்கள் பிடித்துக்கொண்டு போனால், அவர்களுக்கு கோர்டில் ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் என்று அபராதம் போட்டு விடுகிறார்கள். இதனால் போலீஸ்காரர்கள் அவ்வளவு சிரத்தை இல்லாமல், கேஸ்களை பிடிப்பதற்கு பிரியம் இல்லாமல் இருக்கிறார்கள். ஆகையால் இப்பேர்ப்பட்ட குற்றங்களுக்கு கடுமையான தண்டனை கொடுத்தால் தான் போலீஸ் இலாகா உற்சாகமாக வேலை செய்யும் என்பதை தெரிவித்துக் கொண்டு எனது சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.

**Sri V. K. KOTHANDARAMAN:** கனம் இடைக்கால சபாநாயகர் அவர்களே, இப்போது போலீஸ் மான்யத்தின் பேரில் நடத்திற விவாதம் ஒரு முக்கியமான விவாதம். போலீஸ் இலாகா இன்று மக்களுடைய நன்மைக்காக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால் உண்மையில் இன்றைக்கு பல இடங்களில் வீடுகளில் திருடுகள் நடக்கின்றன. இன்னும் பலவும் ஏற்படுகின்றன. இவைகளுக்கெல்லாம் பெயரளவில் கவனம் செலுத்தப்படுகிறதே தவிர உண்மையாக கண்டுபிடிப்பதற்காக ஒன்றும் செய்வதாக காணவில்லை. இன்றைக்கு இதற்கெல்லாம் அவகாசம் கிடையாது என்று சொல்லலாம். இன்றைக்கு சாராயக் கேஸ் அதாவது மதுவிலக்கு வந்த பிறகு, சாராயம் எங்கே காய்ச்சுகிறார்கள், எங்கே சாராயம் குடிக்கிறார்கள் ஆகியவற்றையே தான் கண்டு பிடிக்கிற வேலை நடக்கிறதே தவிர வேறு வேலை ஒன்றும் நடப்பதில்லை. இது தவிர "காட்டன் மார்க்கெட்" எங்கே நடக்கிறது என்று பார்க்கவேண்டும். சென்னையை பொறுத்தளவில் ஓரளவு குறைந்திருக்கிறது என்று சொல்லலாம். ஆனால் வட ஆற்காடு போன்ற ஜில்லாக்களில் அதிகமாக "காட்டன் மார்க்கட்" நடந்துகொண்டிருப்பதை நாம் பார்த்தாக வேண்டியிருக்கிறது. அதே நேரத்தில் இன்றைக்கு போலீஸ்காரர்கள் பொது மக்களிடத்தில் எப்படி பழகுகிறார்கள் என்றால், வெள்ளைக்காரன் காலத்தில் இருந்த முறையிலிருந்து திடீரென்று மாறுதல் ஏற்படாது என்று தெரிந்த விஷயம் தான், இருந்தாலும் நடைமுறையில் மக்களிடத்தில் நல்லெண்ணத்தை உண்டாக்கவில்லை. மேலும் போலீஸ்காரர்களுக்கு எத்தனை மணி நேரம் வேலை செய்யவேண்டும் என்று நிர்ணயிக்கவில்லை. இதனால் இவர்கள் இரவு பகலாக வேலை செய்யவேண்டியிருக்கிறது. இதனால் இவர்கள் பொதுமக்களுடைய பிரச்னைகளை எடுத்து வேலை செய்வதற்கு முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். அவர்கள் மிகுதியாக வேலை செய்வதால் அவர்கள் அதிருப்தி படவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இதற்கெல்லாம் காரணம் நடைமுறையில் அவர்களுடைய வேலையை நிர்ணயம் செய்யாதது தான். இதை நாம் கண்டிப்பாகக் கவனித்தாக வேண்டும். சட்டத்தில் 8 மணி நேரம் வேலை செய்ய வேண்டும், அதற்கு மேல் வேலை செய்தால் "ஓவர் டைம்" அலவன்ஸ் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. போலீஸ்காரர்களின் சட்டத்தில் இருக்கிறதோ இல்லையோ எனக்குத் தெரியாது. எப்படியிருந்தாலும் இவ்விதம் இரவும் பகலும் வேலை செய்துவருவதை நாம் நீக்க வேண்டும். ஆனால் யுத்த காலங்களில் இவ்விதம் இரவும் பகலும் வேலை செய்ய வேண்டியது தான். இந்த மாதிரி வேலை செய்தும் அவர்களுக்கு போதுமான சம்பளம் கிடையாது. அவர்கள் நிலைமை ஒரே மாதிரி இருந்து கொண்டு வருகிறது. அதே நேரத்தில் அவர்களுடைய குறைகளை எடுத்துச் சொல்வதற்கு நல்ல விதத்தில் அஸோஸியேஷன் கிடையாது. முன்னால் ஒரு அஸோஸியேஷன் இருந்தது. அதன் மூலம் முன்னால் அஹிம்சை ரீதியாக அவர்களுடைய குறைகளை எடுத்துக்காட்டி, அதை போக்குவதற்காக ஒரு போராட்டம் நடத்தினார்கள். அப்போதும் அவர்கள் ட்யூட்டியை எல்லாம் சரியாகத்தான் செய்து வந்தார்கள். அப்படியிருந்தும் அந்த சமயத்தில் பலர் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர். பின்னால் சிலர் மாத்திரம் தான் வேலைக்கு எடுக்கப்பட்டனர். அதன் பின் இவர்களுடைய அஸோஸியேஷன் பதிவு செய்யப்படவில்லை. இந்த நிலையில் இருக்கின்றது. ஆகவே இதையெல்லாம் ஏன் எடுத்து சொல்லுகிறேன் என்றால், ஒரு கட்சியினுடைய பிரச்சாரத்திற்காக, போலீஸ்காரர்களுடைய குறைகளை எடுத்துச்சொல்லி எங்களுக்கு சாதகமாக அவர்களை ஆக்கிக்கொள்கிறோம் என்று மந்திரி அவர்கள் சொல்லலாம். அதே நேரத்தில் இன்றைக்கு

[Sri V. K. Kothandaraman] [15th July 1957

போலீஸ் ஆளும் கட்சிக்கு சாதகமாக இருக்கக்கூடிய நிலைமையை நாம் காண்கிறோம். இன்றைக்கு தொழிலாளர்களுக்கு என்னவெல்லாமோ செய்கிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் இன்றைக்கு கோர்ட்டா ரால் கொடுக்கப்படும் தீர்ப்பை அமுல் செய்வதற்கு கமிஷனுக்கு அதிகாரம் கிடையாது. நில பிரபுக்கள் எல்லாம் போலீஸின் பலத்தை வைத்துக் கொண்டு கோர்ட் தீர்ப்பை மீறி நடக்கிறார்கள். இன்றைக்கிருக்கிற (லேபர்) தொழில் இலாகா அதிகாரிகள் சொன்னால் கூட கேட்க முடியாத நிலைமை யில் இருந்துகொண்டிருக்கிறார்கள். சட்ட ரீதியாக அவர்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் உரிமைகளைக் கேட்கும்போது, அந்த சந்தர்ப்பங்களில் போலீஸ் சட்டத்தை மீறுகின்றவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கிறது. இதனால் அவர் கள் சட்டத்தை மீறி கோர்ட்டு தீர்ப்பு அமுல் நடத்தப்படாமல் இருப்பதை நாம் காண்கிறோம். குறிப்பாகப் பார்த்தால் சமீபத்தில் அகில இந்திய தோட்ட தொழிலாளர் சங்கத்தின் கோரிக்கையின்படி தொழிலாளர் களுக்கு 25 சதவிகித் போனஸ் கொடுக்கவேண்டுமென்று கேரளா ராஜ்யத்தில் சட்டத்தைத் திருத்தி வைத்திருக்கிறார்கள். அங்கே கோர்டு தீர்ப்புகளெல் லாம் உடனே அமுல் செய்யப்பட்டுவருகிறது. நமது மந்திரி கனம் ஸ்ரீ பக்தவத்சலம் கூட கோர்டு தீர்ப்புகளை உடனடியாக அமுல் செய்ய நடவடிக் கைகள் கொண்டுவர வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் முதலா ளிகள் கோர்டு தீர்ப்புகளை ஒப்புக்கொள்வதில்லை. காரணம் இங்குள்ள முதலாளிகளுக்கு போலீஸின் உதவி கிடைக்கிறது. அங்கு கேரளாவில் போலீஸின் உதவியை முதலாளிகளுக்கு கொடுப்பதில்லை. ஆகவே பாமர மக்களின் நியாயமான கோரிக்கைகள் நிறைவேறுகின்றன. ஆனால் இங்கு இன்றைக்கு பாமர மக்கள், தொழிலாளர்கள் எடுத்துச் சொல்லுகிற கோரிக்கைகளுக்கு சரியான நியாயம் கிடைப்பதில்லை என்பதை நாம் பார்க்கிறோம்.

இது இப்படியிருக்க, எஸ். ஏ. பி. போலீஸை எடுத்துக்கொண்டால், அவர்களுக்கு ஒரு ஹெட் க்வார்ட்டர்ஸ் இருக்கிறது. அங்கே அவர்களை நிரந்தரமாக வைப்பதில்லை. அடிக்கடி, இரண்டு மூன்று வருஷங்களுக்கு ஒரு முறை அவர்களை பல இடங்களுக்கு மாற்றி விடுகிறார்கள். அப்படி மாற்றக் கூடிய நிலையிலே 1945 ஏப்ரல் மாதம் வரையிலே அவர்களுக்கு சாப்பாடிற்காக வேண்டி 18 ரூபாய்தான் கொடுக்கப்பட்டு வந்தது. அப்படிக் கொடுத்து வந்ததை, அதற்குப் பிறகு இதுவரையில் 18 ரூபாய் வெளியில் போனால் கொடுத்துவிட்டு 31 பஞ்சப்படியில் பாதியை பிடித்துக்கொடுக்கப் படுகிறது. இதுபோன்ற நிலைமையை மாற்ற வேண்டுமென்று அவர்கள் நீண்ட நாட்களாக கேட்டுக்கொண்டு வருவதாக சமீபகாலத்தில் அவர்கள் கோரிக்கைகளை பத்திரிகை வாயிலாகப் பார்த்தேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எந்தப் பத்திரிகையில் வந்தது என்று சொல்ல முடியுமா ?

SRI V. K. KOTHANDARAMAN : எந்தப் பத்திரிகை என்பதை நாளை சொல்கிறேன். ஆவடியில் இருக்கக் கூடிய "டி" கம்பெனி, எஸ்.ஏ.பி. போலீஸ்காரர்கள் இருக்கிற "டி" கம்பனி என்ற கம்பனி இருக்கிறது. அதை பார்வையிட கனம் அமைச்சரவர்கள் அங்கு போயிருந்தார்கள். அந்த சந்தர்ப்பத்தில் அவர்களது குறைகளை நேரில் கண்டு பேச சந்தர்ப்பம் கொடுக்காத முறையிலே அவர்களை எல்லாம் ஒரு அறையில் அடைத்து வைத்துவிட்டார்கள். அதையெல்லாம் பார்த்துவிட்டு மந்திரி வரக்கூடிய சந்தர்ப்பத்தில் அங்கு சாப்பாடு செய்யக்கூடிய ஒரு "குக்" அதை மீறி அமைச்சர் அவர்களிடம் தங்களது குறைகளைச் சொன்னபோது அமைச்சரவர் கள், அதைப் பற்றிக் கவனிக்கிறேன், என்று சொன்னார்கள். அது வரவேற் கத் தக்க விஷயமே. அமைச்சர் அவர்கள் அங்கிருந்து திரும்பிய பிறகு அந்த அதிகாரி அவரைக் கூப்பிட்டு 24 மணி நேரம், தனி ஒரு ரூமில் வைத்தார்கள், அதாவது "கன்பைன்மென்"டில் வைத்தார்கள். இப்படி மந்திரி அவர்களிடம் அவர்களது குறைகளை பற்றிச் சொல்ல முயன் றால் அதற்கு தண்டனை என்றால் மந்திரிகளிடம் தங்கள் குறைகளைச் சொல்ல வோ அல்லது எழுத்து மூலம் தங்கள் குறைகளை சர்க்காருக்கு தெரியப் படுத்தவோ முடியாத ஒரு நிலை ஏற்படுகிறது. அப்படிச் செய்தால்

15th July 1957] [Sri V. K. Kothandaraman]

உடனே அவர்கள் மேல் பழிவாங்கும் போக்கு இருக்கிறது. ஆகவே அந்தப் போக்கினை மாற்ற வேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டுமென்று இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். கடைசியாக ஒரு வார்த்தை. எஸ். ஏ.பி. போலீஸ்காரர்களுக்கு எல்லோருக்கும் கொடுப்பது போல் வருஷம் ஒரு மாதம் லீவ் கொடுக்கப் படுகிறது. ஆனால் ரெயில்வே வாரண்ட் மூன்று வருஷத்திற்கு ஒரு முறை தான் கொடுக்கப்படுகிறது. அவர்களது சம்பளமோ மிகவும் குறைவு. இந்த நிலைமையில் மூன்று வருஷங்களுக்கு ஒரு முறைதான் அவர்களுக்கு ரெயில்வே வாரண்ட் கொடுக்கப்படுகிறது. வருஷத்திற்கு ஒரு முறை அவர்கள் எங்கேயாவது செல்ல வேண்டுமென்றால் அவர்கள் சொந்தச் செலவில்தான் போகவேண்டும். ஆகவே, வருஷத்திற்கு ஒரு முறை அவர்களுக்கு ரெயில்வே வாரண்ட் கொடுக்கவேண்டும். அதோடு, ரெயில்வே போலீஸுக்காக நம் ராஜ்ய நிதியிலிருந்து ஓரளவு ஒரு பகுதி சம்பளம் கொடுக்கப்படு கிறது என்பதைப் பார்க்கிறோம். இன்றைக்கு ரெயில்வேக்கு போதுமான பெரிய லாபம் வருகிறது. ஆகவே அதை மத்திய சர்க்காரே அந்த லாபத் திலிருந்து இவர்களுக்கு கொடுப்பது ரொம்ப நியாயமாகத்தான் இருக்க முடியும். ஆகவே நமக்கு இன்று பட்ஜெட்டில் துண்டு விழுகிறது என்று சொன்னால், அந்தப் பணத்தை மத்திய சர்க்காரிலிருந்து, லாபகரமாக இருக்கக்கூடிய ரெயில்வே நிர்வாகத்திலிருந்து கொடுக்கம்படிக் கேட்பது ல்லது என்று தெரிவித்துக்கொண்டு இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

**TEMPORARY CHAIRMAN** (Sri K. ANBAZHAGAN) : போலீஸ் ானியத்தின் மேலும், அதற்கான வெட்டுப் பிரேரணைகள் மேலும் உள்ள விவாதம் தொடர்ந்து நடைபெறும். இந்த மன்றம் நாளை காலை ஒன்பது ணிவரை ஒத்திவைக்கப்படுகிறது.

**The House then adjourned.**

## IV.—PAPER LAID ON THE TABLE THE HOUSE.

**122.** ***Balance sheet of the Ramaraju Surgical Cotton Mills imited, Rajapalayam, for the year ended 30th September 1956.***

APPENDIX.

[Vide answer to starred question No. 108 asked by Sri K. Sattanatha Karayalar (on behalf of Sri N. K. Palanisami at the meeting of the Legislative Assembly held on 15th July 1957, page 447 supra.]

The activities of the Fisheries Department are directed mainly towards the improvement of the lot of fishermen by socio-economic measures and the development of fisheries wealth of the State. The Government have taken the following measures to provide amenities to fishermen :—

(1) *Fishermen co-operative societies.*—(*a*) Fishermen co-operative societies have been organized all over the State. There are 150 such societies in the State including those in Kanyakumari district. The department has helped the formation of these societies and rendered to them all assistance, particularly in the matter of getting financial help from the District Central Co-operative Bank and increasing their share capital. Under the Second Five-Year Plan the Government sanctioned a scheme for the grant of long-term loans to fishermen with a view to relieving their indebtedness and providing them with crafts and tackles. During 1956–57 a loan of Rs. 2·70 lakhs was disbursed to 25 fishermen co-operative societies in five centres and nearly 900 fishermen were benefited by the loans. District Fishermen Co-operative Federations have also been started in Madras, Tanjore, Ramanathapuram, Tuticorin and Kanyakumari. The free services of a Senior Inspector of Co-operative Societies has been sanctioned to each of these federations. The federations have been granted a share capital of Rs. 2,000 each to enhance their working capital. The Government have also sanctioned a Co-operative Sub-Registrar, 8 Senior Inspectors and 15 Junior Inspectors for the supervision of the fishermen co-operative societies.

(*b*) *Hiring of power boats and motor vans.*—The department has supplied mechanised boats and nylon nets, which are becoming increasingly popular with fishermen for deep-sea fishing, to various fishermen co-operative societies on 75 per cent loan and 25 per cent subsidy under hire-purchase system. Government transport vans for transport of fish are also hired to the societies at cheap rates for transporting fish to Madras markets.

(*c*) *Fish markets.*—Some of the fish markets are run by fishermen co-operative societies with Government's assistance. There is a scheme to grant subsidies to local bodies and fishermen co-operative societies for improvements or remodelling of fish markets.

(2) *Supply of Pablo type mechanised fishing boats to fishermen.*—The Government have so far constructed 27 Pablo type mechanised fishing boats designed by a F.A.O. Naval Architect.

15th July 1957]

These boats are being sold to groups of fishermen through fishermen co-operative societies, allowing a subsidy of 25 per cent on cost of hulls and 50 per cent on cost of engines. Progressive efforts are being made by the department to develop mechanised fishing and thereby assist the fisherfolk to cover a wider field of operation and obtain better catches.

(3) *Housing for fishermen.*—The Fisheries Department is not directly concerned with housing as such but it has an interest as the welfare of fishermen depends on it. Under the Harijan Welfare Schemes a provision of Rs. 2·45 lakhs has been sanctioned for construction of houses. For the first year of the Plan period the Government have sanctioned the construction of 102 houses at a cost of Rs. 500 each in South Madras and in Kasikoil Kuppam in Chingleput district.

In the Madras City there is sea erosion near Rayapuram. With a view to permanently rehabilitate the fishermen who were rendered homeless by sea erosion, north of Madras Harbour the Government sanctioned a scheme by acquisition of land and provision of amenities to them at a total cost of Rs. 4,14,500 with adequate provision for sites and other amenities for about 282 fishermen families. The Government have also sanctioned recently a sum of Rs. 1,61,250 for acquisition of private sites near Tondiarpet to provide alternative accommodation to about 258 fishermen families evicted from the lands belonging to the Defence Department on which the fishermen had encroached.

(4) *Schools.*—Since the inception of the Fisheries Department considerable attention has been paid to the education of the children of the fisherfolk. There are three Fishery schools in the State run by the Department and the remaining schools are run by District Boards and others. In addition to the usual curriculum attention is paid to subjects like elementary navigation, boat building, net-making and the study of the life-history of important fishes. Two training schools have also been started one at Tuticorin and the other at Madras for the training of fishermen in navigation, driving of motor boats.

(5) *Roads.*—The Fisheries Department has conducted a survey of all the Kuppams in the State. A new road laid from Lattice Bridge to Mahabalipuram is found useful for the quick transport of fish from Sadras to Madras. A coastal road has also been laid from Tuticorin to Cape Comorin.

(6) *Distress relief.*—The department has always been helping the fishermen in times of distress. Emergency relief works have been undertaken during cyclones, floods and fire havoc in villages. A scheme for granting relief to fishermen or their families in case of accidents or deaths while carrying on their profession has been initiated. Large quantities of milk powder, ghee, cotton seed oil, etc., received through 'Care' gift, the Guild of Services, etc., have been distributed to fishermen through

fisheries co-operative societies.. Various schemes for the betterment of fishermen, like community halls with radio sets, reading rooms, wells, parks, playgrounds for children, etc., have been provided by the Collectors of districts under the National Extension and Community Development Projects.

(7) *Fisheries Advisory Council.*—A State Council called the Madras State Fisheries Advisory Council has been recently constituted for advising the Government on matters of fishery and on the effective implementation of the schemes included in the Second Five-Year Plan. Both inland and marine fishermen are represented in the Council.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Tuesday, 16th July 1957.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

### I.—POINT OF ORDER *RE* SICK CLOCKS IN THE ASSEMBLY HALL.

SRI K. VINAYAKAM : On a point of order, Sir. There are three clocks in this hall. Two of them are just an apology for clocks. They are not visible. One in front of you is big enough to be easily visible. But it seems to have gone sick because I see bandages are put across it. What is the remedy for such of those who suffer from lesser visibility. I am not one such but . .

THE HON. SRI R. VENKATARAMAN : Just turn back and see.

SRI K. VINAYAKAM : I am coming to that. But what about those who suffer from lesser visibility. What is the aid proposed to be given to them to know exactly the time when they should begin, when they should stop and things like that.

THE HON. SRI R. VENKATARAMAN : Use spectacles.

MR. SPEAKER : So far as the time-limit for speeches is concerned, the Speaker will look after it. The bell will be rung when the time is up. For other purposes, hon. Members may consult their watches.

### II.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Appointment of Mechanical Engineer in the State Transport Department*

SRI K. VINAYAKAM : On another point of order, Sir, regarding Short Notice Question No. 2. According to rules regulating the admisibility of questions to be asked, under Rule 31 (8) no question should be of a private or parochial character. Therefore is it in order to admit a question of the type now to be put by the hon. Member, Sri Ramaswamy?

MR. SPEAKER : This is not a private grievance. It is a matter of public importance. Appointment to such a post is a matter of public importance. I have admitted it according to rules. The hon. Member is questioning the Speaker's decision on the matter.

SRI K. VINAYAKAM : I am only bringing to the notice of the House this fact. The House should know under what category it has been admitted because it relates to a private person.

[16th July 1957

MR. SPEAKER : The gentleman is not a private person. He is an officer in the Transport Department, a public officer and every hon. Member is entitled to ask for information about his appointment. It is open to the Hon. Minister to say he will not answer the question. So far as the question itself is concerned, it is admissible under the rules and therefore I have put it on the agenda. It is a matter, as I said, for the Hon. Minister not to answer the question. That is for him to decide.

Now we will take up short notice question No. 2.

2 *S.N. Q.*—SRI T. S. RAMASWAMY PILLAI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether Sri Sundaresa Ayyar appointed as Mechanical Engineer in the State Transport Department with effect from 10th June 1957 is a qualified Mechanical Engineer;

(*b*) if not, the reasons for appointing him;

(*c*) whether this appointment was referred to the Public Service Commission;

(*d*) whether it is a fact that one Sri Ananthakrishna Ayyar has been appointed recently as Personal Assistant to the Mechanical Engineer-*cum*-Stores Officer of the State Transport.

(*e*) his previous experience; and

(*f*) whether the post was referred to the Public Service Commission?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Sri Sundaresan holds a diploma in Automobile and High Speed Diesel Engineering issued by the British Institute of Engineering and Technology, Bombay. He possesses the prescribed experience of over 10 years in workshop organization and transport services. He has good practical experience in all branches of the Madras State Transport Department, as he has been working in that Department from its inception. He has acted twice as Mechanical Engineer previously. Prior to his joining the department he was working as Motor Vehicles Inspector and was subsequently in charge of a fleet of Government lorries under the control of the Civil Supplies Department and the Government Automobile Workshops where repairs to all Government vehicles were undertaken. He is the seniormost officer in the Madras State Transport Department in the Engineering side.

(*b*) The Government selected an officer with B.E., Degree for the post of Mechanical Engineer in the Madras State Transport Department. This officer soon after his joining the department expressed his inability to continue in the post due to domestic reasons and he was accordingly reverted to his parent department. Thereupon Government advertised the post on the scale of Rs. 750—1,200. Eleven applications were received in response to this advertisement but none of them possessed the qualifications prescribed. An attempt

was again made to secure the services of a Public Works Department Officer who was considered to possess the qualification to hold the post but that officer was also not willing to take up this appointment. Therefore, Sri Sundaresan was appointed in view of his qualification stated, on the recommendation of the Committee consisting of the Home Secretary, Chief Engineer, Public Works Department, the Director of Government Transport and Mechanical Engineer.

(*c*) No, Sir. The appointment is temporary. The question will arise only after the rules regarding the post are issued.

(*d*) Yes, Sir.

(*e*) He underwent training in the accounts department of the Automobile Products of India Limited, and has about 5 years experience in cost accounts.

(*f*) No, Sir. The appointment is temporary for the present. It was made on the recommendation of an official committee. The question of reference to the Public Service Commission will arise when rules are issued in respect of this post.

SRI K. VINAYAKAM : Then is it a fact that this officer does not suffer for want of qualifications and that he richly deserves the office in view of his varied experiences in the department?

MR. SPEAKER : It is what the Hon. Minister has stated.

SRI S. B. ADITYAN : Are these gazetted appointments, Sir?

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir.

*Government servants transferred to Kanyakumari district*

* 113 *Q.*—SRI M. WILLIAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of Gazetted and Non-Gazetted Officers transferred to Kanyakumari district from other districts of the Madras State; and

(*b*) how many of them belong to the district cadre?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Ninty-nine.

(*b*) By the term 'District Cadre' the Member presumably refers to the number of officers who have jurisdiction over the district. The number of such officers is 18.

SRI M. WILLIAM : Are the Government aware of the fact that by the transfer and promotion of non-gazetted officers from other districts, the claims of the officers in the subordinate services in the Kanyakumari district are overlooked and this has led to discontent among the service personnel there?

[16th July 1957

THE HON. SRI C. SUBRAMANIAM: As far as possible for the district requirements, the recruitment is made within the district. But hon. Members are aware there are certain problems relating to Kanyakumari district where the administration has got to be brought on the same level as in the other districts in Madras State. For that purpose, temporarily, persons who know the laws and regulations and rules of the Madras State are being drafted into that district. That is only a temporary phase.

SRI M. WILLIAM: Will the Government be pleased to look into the matter and redress the grievances of those service personnel?

THE HON. SRI C. SUBRAMANIAM: I do not see the point about grievances. Certain results have got to be achieved there with reference to the modification of the laws and regulations and we have to see there is proper merger as far as administration is concerned, of the Kanyakuamri district with the Madras State. It is only for that purpose some have been taken there and as soon as that purpose is achieved, I am sure all these will be reviewed again and there won't be any question of grievances at all.

SRI T. T. DANIEL: It is not our point that officers from other districts should not be posted in Kanyakumari district. But when officers are available with sufficient qualifications to be appointed in particular posts will the Government be pleased to give them their promotions at least and transfer them to other districts?

THE HON. SRI C. SUBRAMANIAM: Yes, Sir, when persons are drafted from other districts to fill certain vacancies here and persons here suffer because of that transfer, the suggestion made by the hon. Member will be taken into consideration.

*Sea erosion at Tiruchendur*

* 114 Q.—SRI M. S. SELVARAJAN: Will the Hon. the Minister for Home be pleased to state the measures taken by the Government for the protection of Sri Subramaniaswamy temple at Tiruchendur and the area surrounding it from sea erosion?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The Government had already examined the matter in detail in 1952–53 and considered the question of constructing a sea screen wall to check erosion. Such a wall was however considered unnecessary. Again in 1956, the question was examined and the Commissioner, Hindu Religious and Charitable Endowments, reported, in consultation with the Public Works Department that there was no risk to the temple. The Government are alive to the need for meeting any such risk if it should arise in future.

9-10 a.m. SRI M. S. SELVARAJAN: இயற்கை அழகு தெய்வ மணத்துடன் கலந்து விளங்கும் திருச்செந்தூர் தேவாலயத்தை அந்த இயற்கையாகவே கடல் பயங்கரமான நிலையில் மோதிக் கொண்டிருக்கிறது. ஆகவே, தேவஸ்தான நிதியோடு சேர்த்து, அரசாங்கமும் ஏதாவது உதவி செய்து, நிரந்தரமான பாதுகாப்பு வேலைகளுக்கு இந்த நேரத்திலே வழி செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த ஆலயத்திற்கு இப்பொழுது ஒன்றும் பாதகம் ஏற்படாது, ஆபத்து ஒன்றும் இல்லை என்று அரசாங்கம் உணர்ந்து இருக்கிறது. ஆகவே, இதில் எவ்வளவு செலவு செய்யவேண்டுமோ என்பது இப்பொழுது எழவில்லை. இருந்தாலும் மணப்பாடு பக்கத்திலே பரிசீலனை செய்வதற்கு ஒரு நிபுணர் வருகிறார். அந்த நிபுணர் வரும்போது இதையும் அவர்களுக்குக் காட்டலாம் என்று அரசாங்கம் யோசிக்கிறது.

*Training institutions for integrating Public Health with Nursing*

* 115 *Q*.—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisamy) : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether this Government have received any amount from the Central Government towards the starting of training institutions for the scheme to integrate Public Health with basic course in Nursing?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir. A sum of Rs. 89,366 has been sanctioned by the Government of India as grant during 1957–58 towards their share of expenditure for the scheme for the institution of an integrated course of Public Health training with the basic course in Nursing in the Government Stanley Hospital, Madras.

SRI A. A. RASHEED : Is there any proposal to start more institutions for nurses?

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir. This is a different thing. This is in addition to the basic training in nursing. An integrated course in Public Health training is sought to be given to make a few nurses fit in Primary Centres.

*Sudarsan Oil Mills, Gudiyatham*

* 116 *Q*.—SRI V. K. KOTHANDARAMAN (on behalf of Sri N. K. Palanisamy) : Will the Hon. Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have given any aid by way of loans to Sudarsan Oil Mills, Gudiyatham; and

(*b*) whether the Government have recovered the amount paid?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Presumably the member refers to the Sudarsan Oil Mills, Katpadi. If so, the answer is " yes ".

(*b*) Not yet. The loan has been foreclosed and the assets of the company have been brought to sale. The matter is now pending in Court.

MR. SPEAKER : Is it sub judice? If that is so, I cannot allow any queestions.

THE HON. SRI R. VENKATARAMAN : It is not sub judice, Sir. Recovery of money is pending.

SRI S. B. ADITYAN : எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டது என்பதை மந்திரி அவர்கள் அறிவிப்பாரா ?

THE HON. SRI R. VENKATARAMAN : பத்து லட்ச ரூபாய்.

SRI K. VINAYAKAM : Sir, are these shareholders who signed the indemnity bond to the Government for this sum of rupees ten lakhs, now residents of Madras State or does any of them belong to the Andhra State?

THE HON. SRI R. VENKATARAMAN : **That would be sub judice, Sir. Any matter c nnected with recovery of money should be considered s b judice, either with regard to the persons or with** regard to the amounts.

SRI V. K. KOTHANDARAMAN : இந்த மில் குடியாத்தத்தில் இருக்கக் கூடியது அல்ல. காட்பாடியில் இருக்கக்கூடியது. இந்த மில்லுக்குச் சொந்தக்காரர்களாக இருக்கும் டைரக்டர்கள் அத்தனை பேரும் இந்த ராஜ்யத்தில் முன்னால் நிதி மந்திரியாக இருந்த ஸ்ரீ கோபால் ரெட்டியார் அவர்களுக்குச் சொந்தக்காரர்கள். மாமனார், ஒருவர் மாமியார். , .

MR. SPEAKER : கனம் மந்திரி அவர்கள் இப்பொழுது தான் சொன்னார் : " இந்த விஷயம் கோர்ட்டில் இருக்கிறது, ஆலைக் குறித்துப் பேசக் கூடாது. பொதுவாக ஏதாவது கேள்விகள் கேட்கவேண்டுமென்றால் கேட்கலாம். " அதன்படி தான் அங்கத்தினர் கேள்விகள் கேட்க வேண்டும்.

SRI V. K. KOTHANDARAMAN : இது போன்று கொடுத்து, அதை சுமார் பத்து வருஷ காலம் ஆகியும் கூட, வாங்காத காரணத்தினால், அந்த மில்லை நடத்த முடியாமல், அதில் உள்ள பல பொருள்கள் திருட்டுப் போனதற்குப் பிறகு, சமீபத்தில் 5 லட்சம் 40 ஆயிரம் ரூபாய்க்கு ஏலம் விடப்பட்டது. அப்படியிருக்க மீண்டும் கேஸ் நடத்துவது எதற்காக ?

THE HON. SRI R. VENKATARAMAN : பணம் வசூல் செய்ய முடியாததினால் நம்முடைய " மார்ட்கேஜ் " ஐ வசூல் செய்வதற்காக அந்த மில்லை ஏலம் போட்டோம். முதல் ஏலம் 5 லட்சத்து 35 ஆயிரம் ரூபாய்க்கு எடுக்கப்பட்டது. அது போதாது, இன்னும் அதிக விலைக்குப்போகும், துண்டு துண்டாக ஏலம் போட்டால் சர்க்காருக்கு வேண்டிய பணம் கிடைத்துவிடும் என்று சொன்னதன்பேரில் மீண்டும் துண்டு துண்டாக ஏலம் போடப்பட்டது. துண்டு துண்டாக ஏலம் போட்டும், ரூ. 5,47,509 க்குத் தான் ஏலம் எடுக்கப்பட்டது. முதலில் ஏலம் எடுத்தவர், " இரண்டாவது ஏலம் செல்லாது " என்று கோர்ட்டில் தாவா போட்டிருக்கிறார். அது முடியும் வரையில் பணம் வருவது கஷ்டம்.

SRI K. VINAYAKAM : **Sir, are the Government aware of the fact that this Mill did not work even for one single day and did not produce one pint of oil nor did they purchase the necessary machinery so as to make it a complete Mill ?**

THE HON. SRI R. VENKAT RAMAN : **Mr. Speaker, there is no use crying over spilt milk ?**

SRI M. P. SARATHI : " சுதர்சன் ஆயில் மில் " லை சர்க்காரே ஏற்று நடத்த வேண்டுமென்று நகராட்சியும், மாவட்டக் கழகமும், பொது ஜனங்களும் மகஜர் அனுப்பியிருக்கிறார்கள். இதை சர்க்கார் எதாவது கவனிக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இது நன்ருக பரிசீலனை செய்யப்பட்டு, அதை நடத்துவது நஷ்டகரமாக இருக்கும் என்று முடிவு செய்யப்பட்டது.

SRI V. K. KOTHANDARAMAN : தொழில் அபிவிருத்தி என்ற பெயரால் இப்படி லட்சக்கணக்கான ரூபாய் கொடுத்து, நஷ்டம் அடையக் கூடிய இந்தச் சந்தர்ப்பத்திலே, சர்க்கார் ஒன்று செய்யலாம், அங்கே நல்ல அருமையான கட்டிடங்கள் கட்டி வைத்து, அதிலே, வேண்டிய "மெஷினரி" யும் கொண்டு வந்து வைத்திருக்கும்போது, ஏன் சர்க்காரகவே அந்தத் தொழிற்சாலையை எடுத்து நடத்தக்கூடாது ?

THE HON. SRI R. VENKATARAMAN : முதலில் பத்து லட்சம் நஷ்டம். அதை சர்க்கார் நடத்துவதில் மேற்கொண்டு நஷ்டம் வரும் என்ற காரணத்தால் தான் அதை எடுத்து நடத்த முடியாமலிருக்கிறது.

SRI K. ANBAZHAGAN : இப்பொழுது இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவது அரசாங்கத்திற்குப் பெரிய நஷ்டம் என்று உணருகிற இந்த சர்க்கார், இதற்கு முன்னே, இப்படிப்பட்ட திட்டத்திற்கு பணம் கொடுத்தது தவறு என்பதை உணரவேண்டும். இனி இப்படிப்பட்ட தொழில்கட்குப் பணம் கொடுப்பதற்கு முன்னல், அதைக் குறித்து மிக நன்ருக ஆராய்ச்சி செய்து, அதற்குப் பின கடன் தருவார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் போன்றவர்கள், இப்பொழுது புதிதாக சட்டசபையில் வந்திருக்கிருர்கள், முன்பு சட்டசபையில் கண்காணிப்பாக இருந்தவர்களைவிட நன்ருக் கண்காணிப்பாக இருப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

### *Investigation regarding new water sources in the State*

* 117 *Q.*—SRI A. R. SUBBIAH MUDALIAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Government are aware of the fact that the Central Government have directed Shri Kanwar Jain, Chairman, Central Water and Power Commission, to investigate new water sources in the Madras State?

THE HON. SRI P. KAKKAN : No, Sir.

SRI A. R. SUBBIAH MUDALIAR : Inter-State Water Sources-ஐப் பரிசீலனை செய்யும்படி மத்திய சர்க்காரால் நியமிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ கன்வார் ஜெயின் அவர்களுடைய உதவியை நமது சர்க்கார் நாடுவார்களா ?

THE HON. SRI P. KAKKAN : எப்பொழுது எல்லாம் மத்திய சர்க்காரின் உதவியும், கமிஷனின் சேர்மனுடைய உதவியும் தேவையோ அப்பொழுது எல்லாம் நாடுவோம்.

### *Electric supply in Madras City*

* 118 *Q.*—SRI S. PAKKIRISAMY PILLAI : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether the staggering of electric supply between 18.00 and 20.00 hours in Madras City has been made as a permanent measure?

THE HON. SRI V. RAMIAH : The answer is in the negative.

SRI S. PAKKIRISAMY PILLAI : இம்மாதிரியான மின்சார வெட்டின் காரணமாக தொழிலாளர்கள்—முக்கியமாக பக்கிங்காம் கர்நாடிக் மில் தொழிலாளிகள்—இவர்களுடைய சாப்பாட்டு நேரத்தை அரை மணி நேரமாகவும், முக்கால் மணி நேரமாகவும் குறைத்திருக்கிறார்கள். இம் மாதிரியான வெட்டு எப்பொழுது நீக்கி வைக்க முடியும ?

அதே சமயத்தில், இப்பொழுது புதிதாக இன்னொரு கட்டுப்பாட்டைக் கொண்டுவந்திருக்கிறார்கள், ஞாயிற்றுக்கிழமைகளில் தொழிலாளர்கள் வேலை செய்ய வேண்டும் என்று. அந்தக் கட்டுப்பாட்டை எதற்காகக் கொண்டு வந்தார்கள் ? சரியான காரணம் என்ன வென்பதை மந்திரி அவர்கள் தெரிந்து சொல்ல முடியுமா ?

THE HON. SRI V. RAMIAH : இந்தக் கட்டுப்பாட்டை நீக்க வேண்டு மென்றால் சென்னையைப் பொறுத்தவரை, மூன்றாவது 'எக்ஸ்டென்ஷன் ப்ளாண்ட்' வேலை செய்ய ஆரம்பிக்கவேண்டும். அது இந்த ஆண்டின் இறுதியில் வேலை செய்ய ஆரம்பிக்கும் என்று எதிர்பார்க்கிறோம். கனம் அங்கத்தினர் கேட்ட இன்னொரு கேள்விக்கு என்ன பதில் என்றால், இப்பொழுது சமீபத்தில் "holiday staggering" என்ற முறையிலே சென்னையில் மின்சார சக்திக்கு இருக்கக்கூடிய 'டிமாண்ட்' டைப் கவனித்துப் பார்க்கிறபோது, இதுவரை தொழிற்சாலைகள் எல்லாம்—ஞாயிற்றுக்கிழமை களில் விடுமுறை விட்டு வந்தன. இதனால் ஞாயிற்றுக்கிழமைகளில் மின்சார சக்தியை உபயோகிக்கவில்லை. அதனால் தேவை அதிகமாக இருக்கிற காரணத்தால், சில தொழிற்சாலைகளை ஞாயிற்றுக்கிழமைகளில் வேலை பார்க்கச் சொல்லி, அந்த மின்சார சக்தியை மற்ற தினங்களில் மற்ற தொழிற்சாலைகளும் உபயோகித்துக் கொள்ளக்கூடிய முறையிலே இந்தப் புதிய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த முறையும் மூன்றாவது எக்ஸ்டென்ஷன் ப்ளாண்ட் வந்தவுடனே கைவிடப்படலாம் என்று எதிர் பார்க்கிறோம்.

SRI A. A. RASHEED : When will the Madras Thermal Station go into commission?

THE HON. SRI V. RAMIAH : By the end of this year.

SRI S. PAKKIRISAMY PILLAI : சென்னையிலுள்ள எந்த எந்த தொழிற்சாலைகளில் ஞாயிற்றுக் கிழமை வேலை செய்வதாக இப்பொழுது ஒத்துக்கொண்டிருக்கிறார்கள் ? அதற்குப் பதிலாக எந்த எந்த தினங்களில் விடுமுறை விடுவதாக ஒத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தயவு செய்து மந்திரி அவர்கள் சொல்ல முடியுமா ?

9-20 a.m. THE HON. SRI V. RAMIAH : I do not have the details here Sir.

SRI K. VINAYAKAM : Whereas there is staggering of electrical energy due to paucity of power which can be justified in industrial areas like Perambur and Washermanpet, what is the necessity for staggering in places like Kodambakkam and Saidapet where there are not many industries?

THE HON. SRI V. RAMIAH : Staggering is for the whole State, not for the Madras City alone or for any industrial area. Even agriculturists are affected, as I said during the discussion on Demand for Electricity.

16th July 1957]

*Boat-building industry.*

* 119 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf Sri N. K. Palanisamy) : Will the Hon. the Minister for Local Administration be pleased to state with reference to the answers given to Starred Question No. 427-C on 26th December 1956—

(*a*) whether any boat-building industry has been started at Tuticorin or any other place in the State; and

(*b*) if so, whether any subsidy or grant is given to private persons engaged in the industry?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) There is no proposal to start a boat-building industry. The construction of a boat-building yard in Madras for fishing boats is under examination.

(*b*) There is no proposal to give any subsidy or grant to private persons for the purpose.

* 120 *Q.*—SRI T. T. DANIEL : I am not putting my question, Sir.

*Lands under the control of the Hindu Religious and Charitable Endowments Department.*

* 121 *Q.*—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Home be pleased to state the extent of wet lands, garden lands and dry lands under the control of the Hindu Religious and Charitable Endowment Department?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The particulars are not available with the Government. The Government consider that the time and labour involved in gathering the information will not be commensurate with the result to be achieved.

*Failure of monsoon in Palladam taluk*

* 122 *Q.*—SRI P. S. CHINNADURAI : Will the Hon. the Minister for Revenue be pleased to state the action taken by the Government to alleviate the hardship caused to the agriculturists of Palladam taluk, Coimbatore district, due to the failure of monsoon?

THE HON. SRI M. A. MANICKAVELU : It is not clear which monsoon the hon. Member means. If he refers to the North East Monsoon of 1956, the seasonal conditions were normal in Palladam taluk. There was considerable amount of rainfall during the month of September 1956 when the crops needed rains. There was flow of water in the river Noyyal and some of the tanks and garden wells received water-supply. As the condition of the taluk was not such as to require relief measures, no special relief measures were taken in the taluk in 1956.

SRI P. S. CHINNADURAI : நொய்யல் நதியின் இருபுறங்களிலும் உள்ள நிலங்களில் இருபோக பயிருக்குரிய தீர்வை வசூல் செய்யப்படுகிறது. ஆனால் உண்மையில் அங்கு ஒரு போக நஞ்சை வெள்ளாமைகூட

விளைவது இல்லையென்பது அரசாங்கத்தாருக்குத் தெரியுமா? சென்ற ஆண்டில் மழையில்லாத காரணத்தால் குடிப்பதற்குக் கூடத் தண்ணீர் இல்லாத நிலைமையில் பல்லடம் தாலுகாவில் பல கிராமங்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் போது அவர்களிடம் இரு போக நஞ்சைக்குரிய தீர்வை வசூல் செய்வது நியாயமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : **Against the normal rainfall of 15·17 inches, in the year in question there was a rainfall of 16·33 inches. So, there was more rain than usual. As for the other question, I want notice.**

**SRI P. S. CHINNADURAI :** மழை பெய்யாத காரணத்தினால் கிணறுகளில் தண்ணீர் இல்லாது போய்விட்டது. ஆகவே மின்சாரத்தை உபயோகிக்காது போய்விட்டது. இருந்தாலும் மின்சாரத்திற்குக் குறைந்தபட்ச கட்டணத் தொகையை அவர்கள் செலுத்தவில்லை என்று கூறி விவசாயிகளுடைய சொத்துக்களை சென்ற மாதத்தில் ஜப்தி செய்தார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? இதைப் பற்றி சட்டசபைப் பிரதிநிதிகளும், விவசாயிகளும் அரசாங்கத்திற்கு நேர்முகமாகப் பல விண்ணப்பங்கள் போட்டும் இதுவரையில் அதன் பேரில் எவ்விதமான நடவடிக்கையும் எடுக்காததற்குக் காரணம் ஏதாவது சொல்வார்களா?

**THE HON. SRI M. A. MANICKAVELU :** வரி செலுத்தாமல் போனால் ஜப்தி தான் செய்வார்கள். மந்திரி கூட வரி செலுத்தத் தவறினால் ஜப்தி செய்வார்கள். நியாயமாக எதைச் செய்யவேண்டுமோ அதைச் செய்யாது போனால் தண்டனைதான்.

**SRI A. A. RASHEED : What are the monsoon prospects for** current year?

THE HON. SRI M. A. MANICKAVELU : **I have not acquired any such occult powers.**

SRI A. A. RASHEED : The Meteorological Department must be able to give such prospects.

THE HON. SRI M. A. MANICKAVELU : **If a question is specifically put, I shall get the information.**

**MR. SPEAKER : Questions are over.**

## III.—PRIVILEGE MOTION *RE* POLICY STATEMENT PUBLISHED IN THE PRESS *RE* ABOLITION OF DISTRICT BOARDS WHEN THE HOUSE IS IN SESSION.

MR. SPEAKER : Yesterday, I received notice from the hon. the Leader of the Opposition of a Privilege Motion which runs as follows :

"I give notice of moving a Privilege Motion tomorrow the 16th instant for the purpose of discussing the policy statement made by Government in the Press regarding the abolition of District Boards. ...

[Mr. Speaker]

Has the Hon. the Leader of the House anything to say on this before I give my ruling?

THE HON. SRI C. SUBRAMANIAM : I may state, Sir, that, as far as the Government are concerned, it is the intention of the Government to make any policy statement, when the Legislature is in session, only on the floor of the House. The report in the Press regarding the alleged decisions of the Government is not completely correct. No policy decision has yet been reached. Points for decision have been formulated and those points have been taken as decisions by the Press. As soon as decisions are taken and if the Assembly is in session, I may assure the House, the statement will be made only on the floor of this House. Hon. Members would have also noticed that it is not as if the Government have issued a communique on the subject. Some Press speculations, which are made in the ordinary course, have appeared in the newspapers and I do not think the Government are responsible for those things.

MR. SPEAKER: I am glad that the Hon. the Leader of the House has made a statement that when the House is in session, all policy statements would be made in the House before they are released to the Press. This is a very wholesome convention and I am very glad that the Government have agreed to observe this. In this case, however, from what the Hon. the Leader of the House says, I am satisfied that what appeared in the Press is not a statement of policy of the Government. Even in that statement, it is stated that the Minister for Local Administration will make a statement when the Local Administration Demand is moved. In the circumstances, I feel that no *prima facie* case has been made out for a Privilege Motion in this case.

### IV.—POINT OF ORDER *RE* STATEMENT MADE BY THE LEADER OF THE HOUSE APPEALING FOR A TEN-YEAR TRUCE IN THE DEMAND FOR DRAVIDASTAN.

SRI T. S. RAMASWAMY PILLAI: Mr. Speaker, Sir, with your permission, I would like to raise a point of order. The other day, when the Hon. Leader of the House was replying to the general discussion on the Budget he referred to the demand for Dravidastan by the Members of the Dravida Munnetra Kazhagam and said that it was not a feasible proposition in the near future and that he would appeal to the Members of the Dravida Munnetra Kazhagam to wait for ten years. This statement has created a lot of sensation among the public. I would like to ask whether the Hon. Leader of the House has not sworn in the name of the Constitution and whether his statement about the feasibility of a separate State, Dravidastan, is in conformity with the provisions of the Constitution.

MR. SPEAKER: Before I give my ruling, I would like to tell the hon. Member that the statement he refers to was made many

days ago. He should have raised the point of order then, immediately after the statement was made. He cannot raise it now, a week after the statement was made. I personally feel that no purpose will be served by raising it at this stage.

THE HON. SRI C. SUBRAMANIAM : On a point of personal explanation, Sir. My statement seems to have been completely misunderstood. As far as I am concerned, I cannot tolerate any movement for the separation of any part of India from the Union. But I appealed to a particular section which is propagating this idea and creating confusion, " let there be undisturbed conditions for at least ten years so that we may carry out our developmental programme peacefully ". It is not as if I subscribe to that subversive policy of separation. Far from it. I never subscribed to it and I will never subscribe to it in future. This is propaganda carried on by interested parties, as if the Government were in favour of this subversive movement. It is absolutely wrong and if there are comments on these lines, I would like to make it clear that as far as the Government are concerned, as far as the Congress Party is concerned, they can never tolerate any idea of vivisection of the country any further. But this appeal of mine was made to a certain section of the community which was creating confusion in the country in order that that confusion might stop and we could carry on our developmental activities. To call this as Government lending support to the movement is misunderstanding of my speech either purposely or without knowing its implications.

SRI M. P. SUBRAMANIAM : On a point of order . . . .

MR. SPEAKER : Where does Mr. Subramaniam come in? (Laughter). Is it on the same subject. I cannot allow. If it is anything different, it is all right.

SRI M. P. SUBRAMANIAM : It arises out of the reply given by the Minister to the point of order raised by Mr. Ramaswamy Pillai.

MR. SPEAKER : While I am prepared to allow the Member to make a statement, I must make it clear that this sort of thing should not take place. I would request all Members to raise points of order, if any, immediately after the speech is made, not one week after. Any way, I have allowed the hon. Member to raise it and I shall not allow such things in future. The hon. Member will have opportunity to refer to this when the remaining Demands for Grants are taken up or when the Appropriation Bill is introduced.

SRI M. P. SUBRAMANIAM : This is not on that subject but a different point of order. அவைத் தலைவர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்கள் பேசும்போது திராவிட முன்னேற்றக் கழகத்தை 'subversive force' என்று குறிப்பிட்டதை நான் வன்மையாக கண்டிக்கிறேன். இந்த சபையில் அம்மாதிரியான சொற்களை பயன்படுத்தக் கூடாது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

MR. SPEAKER : I am afraid I cannot allow any discussion. The hon. Member can refer to this question when the opportunity arises in the House.

We shall now resume discussion on Demands for Grants.

### V.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1957-58—*cont.*

### (1) DEMAND XIV—POLICE—*cont.*

SRI V. K. KOTHANDARAMAN : நேற்று ஸ்டேட் லெஜிஸ்லேசர் டிமாண்ட் விவாதத்தின்போது எதிர்க்கட்சித் தலைவர் " வாக் அவுட் " செய்த போது கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர்களாகிய நாங்களும் வாக் அவுட் பண்ணி இருக்கிறோம் . . .

MR. SPEAKER : இந்த விவாத சம்பந்தமாக அதைப்பற்றி எப்படிச் சொல்ல முடியும் ? வேண்டுமானால் நீங்கள் பத்திரிகைக்கு சொல்லலாம். (சிரிப்பு.) இங்கே அதை நான் அனுமதிக்க முடியாது. இப்போது போலீஸ் மானியத்தின் மீது ஸ்ரீ சின்னதுரை பேசுவார்கள். We cannot do that. I am sorry I cannot allow that. We shall now proceed with the Police Demand.

* SRI P. S. CHINNADURAI : மதிப்பிற்குரிய சபா நாயகர் அவர்களே, 9-33 a.m.
அந்நிய அரசாங்கம் விட்டுச் சென்ற ஒரு சில நல்ல நிர்வாக அமைப்புகளுக்குள்ளே போலீஸ் நிர்வாகமும் ஒன்று. ஆனால் அவர்கள் ஏற்படுத்திவிட்டுப்போன அதிகார மனோபாவம் இன்னும் போலீஸ்காரர்களிடத்தில் இருந்துகொண்டே இருக்கிறது என்பதை மறுக்க முடியாது. நம் நாட்டுக்கு சுதந்திரம் ஏற்பட்டு பத்து ஆண்டுகள் ஆன பிற்பாடும் கூட தாங்கள் மக்களுடைய ஊழியர்கள், பணியாளர்கள் என்கிற நினைப்பில் போலீஸார் நடந்து கொள்ளக்கூடிய நிலைமை ஏற்பட வில்லை என்பதைச் சொல்ல மிகவும் வருத்தப்படுகிறேன். போலீஸ் என்ற உடனேயே அதிகாரம் பண்ணுவதுதான் நம் கடமை, அதுதான் நம் உரிமை, என்று நம்பி அதேபோல் செயல்படுகின்ற நிலைமைதான் நம் ராஜ்யத்தில் நிலவுகிறது.

காலஞ் சென்ற ஸ்ரீ சத்தியமூர்த்தி அவர்கள் போலீசாருடைய மனோபாவத்தை வன்மையாகக் கண்டித்து பல பல கூட்டங்களிலே பேசியிருப்பதோடு அவர் அந்தக் காலத்தில் அடிக்கடி சொல்லிப்போன விஷயம் எனக்கு நினைவுக்கு வருகிறது. " சுதந்திர அரசாங்கம் வரும்போது இந்த போலீஸ்காரர்களெல்லாம் மக்களின் ஊழியர்களாக மாற்றப்படுவார்கள். ஊழியர்கள் என்ற மனோபாவத்தோடு நடந்துக்கொள்வதற்கு வேண்டிய தகுதி அவர்களுக்கு உண்டாக்கப்படும். அது மாத்திரம் அல்ல, இன்றைக்கு அவர்களைக் கண்டாலேயே மக்களுடைய உள்ளத்தில் அச்சத்தைத் தோன்ற வைக்கும் சிகப்புத் தொப்பி இருக்கிறது. அதை மாற்றி அவர்களுக்கு கதர் குல்லாயைக் கொடுப்போம் " என்று அவர்கள் கூறியது எனக்கு நினைவுக்கு வருகிறது.

போலீசாருடைய அதிகார மனோபாவத்திற்குப் பெரிதும் காரணமாக இருப்பது அவர்கள் கையில் இருக்கிற தடியும், அவர்கள் தலையில் இருக்கிற தொப்பியும், பழைய பாணியிலேயே அவர்கள் அணிந்து இருக்கக் கூடிய உடையும்தான் என்று நினைக்கவேண்டியிருக்கிறது. ஆகையால் அந்த உடையை மாற்றுவதற்கு இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

[Sri P. S. Chinnadurai] [16th July 1957

கதர் ஆடைகளை அவர்களுக்குக் கொடுப்பதற்கு இந்த ராஜ்ய அரசாங்கம் முன் வரவேண்டும். கதர் உடை போலீஸ்காரர்கள் அணிவதற்குத் தகுதி இல்லாதது என்று தள்ளிவிட முடியாது. உயர்தர உத்தியோகஸ்தர்களும், அமைச்சர்களும், உயர்தர அந்தஸ்தை படைத்தவர்களும் இன்றைக்குக் கதர் உடையை அணிந்து கொள்ளும்போது போலீஸ்காரர்களுக்கு மட்டும் கதர் உடை கொடுக்காமல் இருப்பது எதனால் என்று நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

அது மாத்திரம் அல்ல. போலீசாரின் அதிகார மனோபாவத்திற்கு எடுத்துக்காட்டாக இன்னொன்று குறிப்பிட விரும்புகிறேன். சுதந்திரம் வருவதற்கு முன்பாக பிரிட்டிஷாரின் ஆட்சி நடந்து கொண்டிருந்த காலத்தில் வேலை நிறுத்தம், கதவு அடைப்பு என்று ஏற்பட்டால் உடனடியாக போலீசார் முதலாளிகளுக்கும், அவர்களுடைய சொத்துக்கும் பாதுகாப்பு கொடுக்கவே முன் வருவார்கள். அன்றைக்கு இருந்த அந்த நிலைமைக்கும், இன்றுள்ள நிலைமைக்கும் எவ்வித மாறுபாட்டையும் நான் காண முடியவில்லை. இன்றைக்கும் வேலை நிறுத்தம், கதவு அடைப்பு என்று ஏற்பட்டவுடனேயே உடனடியாக அவர்கள் முதலாளிகளுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதற்கும், அவர்களுடைய பங்களாக்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதற்கும், தொழிற்சாலைகளுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதற்கும் தான் முன் வருகிறார்களே தவிர தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதற்கு முன் வருவது இல்லை. இந்த மனப்பான்மையைத் தான் நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். இந்த முதலாளித்துவ மனோபாவத்தை மாற்றுவதற்கு இந்த அரசாங்கம் உடனடியாக முன் வருவதுதான் கடமையாகும் என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். நான் சுட்டிக் கட்டாமலேயே இந்த ராஜ்ய அரசாங்கம் அதைச் செய்திருப்பார்களானால் மிகவும் நன்றாக இருந்திருக்கும்.

கதவு அடைப்பு, வேலை நிறுத்தம் என்று ஏற்பட்டவுடனேயே எதற்காக அதிகப்படியான சலுகைகளும், பாதுகாப்பும் முதலாளிகளுக்குக் கொடுக்கப்படுகின்றன என்று நான் கேட்க விரும்புகிறேன். சுதந்திரம் பெற்ற பிறகு சோஷலிஸப் பாணியில் சமுதாயத்தை உருவாக்கும் லட்சியத்தை மேற்கொண்டிருக்கிற ஒரு அரசாங்கத்தில் தொழிலாளருக்கும், முதலாளிகளுக்கும் போலீசார் சமமாகவே பயன்படவேண்டியது மிகவும் அவசியமாகும். முதலாளிகளுக்கு அதிகப்படியான சலுகை காட்டுவது கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அது மாத்திரல் அல்ல. இன்னும் போலீஸ்காரர்களை, இந்த ராஜ்யத்தில் உள்ள அரசாங்கம், இதற்கு முன்பு இருந்த அரசாங்கங்களைப் போலவே தங்களுடைய ஆட்சியைப் பலப்படுத்திக்கொள்வதற்கு, தங்கள் ஆட்சி பலத்தை ஏற்படுத்திக்கொள்வதற்கு உரு பகடையாக உபயோகித்துக் கொள்கிறார்கள் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

தேர்தல் காலத்தில் எதிர்கட்சியினராக இருந்த பிரஜா சோஷலிஸ்டு கட்சி போன்ற கட்சிகளுடைய காரியாலயங்களுக்கு வருகிற கடிதங்கள் கடுமையாகத் தணிக்கை செய்யப்பட்டன. சில கடிதங்கள் வந்தே சேரவில்லை என்பது நேரிடையாக போஸ்ட் மாஸ்டர் ஜெனரலுக்குப் புகார் செய்யப்பட்டது. ஆனால் இவ்விஷயங்களைப்பற்றி எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை. இன்றைக்கும்கூட பிரஜா சோஷலிஸ்டுக் கட்சிக் காரியாலயத்தில்தான் நான் தங்கியிருக்கிறேன். அங்கு உள்ள டெலிபோன் தடை செய்யப்படுகிறது. யார் தடை செய்கிறார்கள் ? நான் பேசிக்கொண்டிருந்தபோது யார் தடை செய்தார்கள் என்று விசாரித்தால்—நான் சூசமாகச் சொல்லமுடியும். குறிப்பாக யார் எனக்கு உண்மை விஷயத்தைச் சொன்னார்கள் என்று இங்கே சொல்ல முடியாவிட்டாலும்—அதிகாரபூர்வமாகத் தெரிந்துகொண்டதில் இந்தமாதிரியாகத் தடை செய்வது போலீஸ்காரர்கள்தான். துப்பு ஆராய்வதற்காக அவர்கள் இப்படித் தடை செய்கிறார்கள் என்று அறிந்துகொண்டேன்.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM:** எந்த இடத்தில் தடை செய்யப்பட்டது, போலீஸ்காரர்கள் தடை செய்தார்கள் என்று யார் சொன்னார்கள் என்பதையும் குறிப்பிட்டால் நலமாக இருக்கும்.

[6th July 1957]

* **Sri P.S. CHINNADURAI :** திருவல்லிக்கேணி ஹைரோடில் இருக்கும் பிரஜா சோஷலிஸ்டுக் கட்சிக் காரியாலயத்தில்தான் தடை செய்யப்பட்டது. குறிப்பாக ரிப்பேர் செய்யவந்தார்கள்—அதைப்பற்றி யார் சொன்னால் என்ன ? இந்தமாதிரியாகப் போலீசார் எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும் அவர்களுடைய கடிதங்களையோ டெலிபோன் பேச்சுகளையோ தடை செய்வதாக இருந்தால் அது உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அதோடு போலீஸ்காரர்களைக்கொண்டு தொழிலாளர்களுடைய தலைவர்களை அரசியல் கட்சிகளுடைய தலைவர்களை முன்பு இருந்த அரசாங்கம் 107-வது செக்ஷன்படி கேஸ்போட்டுத் தொந்தரவு செய்தார்கள். அதே மாதிரியே இந்த அரசாங்கமும் இன்றைக்கு செய்து கொண்டு வருகிறது. ஆனால் ஒரு முதலாளி பேரில்கூட 107 செக்ஷன்படி கேஸ் போடப்படுவது இல்லை. அரசியல் கட்சித் தலைவர்கள், தொழிற்சங்கத்தலைவர்கள் பேரில் இந்த 107 செக்ஷன்படி தாராளமாகக் கேஸ் போடுவதற்குத் தான் ஆட்சியாளர் தங்கள் அதிகாரத்தை பயன்படுத்துகிறார்கள் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

முன்பு எல்லாம் 107 செக்ஷன்படி பரம்பரையான குற்றவாளிகளின் பேரில், ரௌடிகளாகத் திரிகின்றவர்களின் பேரில் கேஸ் போடுவார்கள். ஆனால் இன்றைய தினம் தொழிற்சங்கத் தலைவர்கள், அரசியல் கட்சிகளில் முக்கியத்துவம் வகிப்பவர்களின் பேரில் இந்தமாதிரியாகக் கேஸ் போடப்பட்டு வருகிறதென்று வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன். இவைகள் எல்லாம் நிறுத்தப்படவேண்டுமென்பது என் வேண்டுகோள். போலீஸ் படை சம்பந்தமான அடிப்படைக் கொள்கை மாறினால்தான் இந்தக் கஷ்டங்கள் மாறும். போலீஸாரின் தற்போதைய உடை மாதிரிகள் மாற்றப் பட்டாலேயே அவர்கள் தொண்டர்களாக மாறிவிடுவார்கள். அப்போது அவர்களைக்கண்டு மக்கள் அஞ்சமாட்டார்கள். அப்போது போலீஸ் படையை மக்களின் ஊழியர் படையாக எல்லோரும் கருதுவார்கள்.

இன்றும் சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். இப்போது பல போலீஸ் ஸப்-இன்ஸ்பெக்டர்களுக்கு குடியிருப்பதற்கு வீட்டு வசதி இல்லை. சாதாரண போலீஸ்காரர்களுக்கும் முன்பு செருப்புகள் வழங்கப்பட்டன என்றும், ஆனால் இப்போது அவர்களுக்கு செருப்புகள் வழங்கப்படுவதில்லை என்றும் தெரிகிறது. அவர்களுக்கும் செருப்புகள் வழங்க வேண்டும். மற்ற பல சௌகரியங்களையும் அவர்களுக்கு அளிக்கவேண்டும். குறிப்பாக, ஆங்காங்கே இருக்கும் ஸப்-இன்ஸ்பெக்டர்களுக்கு வீட்டு வசதிக்கு ஏற்பாடு செய்யவேண்டும். "நாங்கள் அதற்கு ஏற்பாடு செய்து வருகிறோம். அதற்காக நிதி ஒதுக்கியிருக்கிறோம்" என்று அரசாங்கத்தார் சொல்லலாம். ஆனால் அந்த வீடுகள் அவர்களுக்கு என்றைக்கோ கட்டித் தரப்படுவதாக இருந்தால், அவர்கள் இன்று என்ன செய்வார்கள் என்று சிந்திக்க வேண்டும். வீடுகளும் இல்லாமல், வீட்டு அலவன்ஸும் கொடுக்கப்படாமல் இருக்கும்போது, அவர்கள் நிறைய வீடுகள் உடையவர்களின் வீடுகளில் இலவசமாகக் குடியிருப்பதற்கு முயற்சி செய்கிறார்கள். அப்படி முயற்சி செய்து, அந்த வீடுகளில் வாடகைப் பணம் கொடுக்காமல் இலவசமாகக் குடியிருந்து வருகிறார்கள். இப்படிப்பட்ட நிலையில், வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு அவர்கள் அடிபணிந்து நடக்க வேண்டியிருக்கிறது ; தாங்கள் குடியிருக்கும் வீட்டின் சொந்தக்காரரின் தயவு தாட்சண்யத்தை எதிர்பார்த்து நடக்க வேண்டியிருக்கிறது. ஆகவே ஸப்-இன்ஸ்பெக்டர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கவேண்டும் என்று இந்த அரசாங்கத்தாரை நான் மிகவும் வற்புறுத்திக்கேட்டுகொள்கிறேன். இந்த மாதிரியான காரியங்களை செய்வதுடன், போலீஸ் படையை மக்களின் ஊழியர் படையாக மாற்றுவதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**Sri K. B. S. MANI :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் மந்திரி அவர்கள் கோரியிருக்கும் போலீஸ் மான்யத்தை ஆதரித்து ஒரு சில விஷ 9–4.2 a.m
யங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். இப்போது போலீஸ் படையைப் பற்றி அனேகமாக எல்லோருக்கும் நல்ல அபிப்பிராயம் இல்லை. அவரவர்கள் தாங்கள் போலீஸாரால் நேரடியாக பாதிக்கப்படுவதை மனதில்

கொண்டோ, தங்கள் கட்சி பாதிக்கப்படுவதை மனதில் கொண்டோ, குறிப்பிட்ட ஒரு குழுவினர் பாதிக்கப்படுவதை மனதில் கொண்டோ, போலீஸ் படையைப் பற்றி குறைவான அபிப்பிராயங்களைத் தெரிவிக்கிறார்கள். பொதுவாக, போலீஸ் படை இல்லாத நாடே உலகத்தில் கிடையாது. நாட்டில் நிர்வாகம் நல்ல முறையில் நடப்பதற்கும், ஆட்சியாளர்கள் இயற்றும் சட்டங்கள் நியாயமாகவும் நேர்மையாகவும் அமல் நடத்தப்படுவதற்கும் போலீஸ் படை மிக மிக அத்தியாவசியமானது. அப்பேர்ப்பட்ட போலீஸ் படை நல்ல முறையிலும் நேர்மையான முறையிலும் நடப்பதற்கான வழிவகைகளை அரசாங்கத்தார் செய்யவேண்டும். இதற்கு போலீஸாருக்கு அவசியமான எல்லா வசதிகளையும் அளிக்க வேண்டும். அவர்களுடைய வாழ்க்கைத்தரத்திற்கு ஏற்றவாறு எல்லா விதமான வசதிகளையும் அளிக்கவேண்டும். அப்படிச் செய்தபிறகு போலீஸாரிடம் குற்றங்கள் இருந்தால் அவற்றைச் குறிப்பிடலாம்.

போலீஸார் இன்று பலதவறுகள் செய்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அது உண்மை தான். குறிப்பாக. தஞ்சாவூர் ஜில்லாவில் பாபநாசம் தாலூகாவில் உள்ள பூண்டி என்ற கிராமத்தில் மிராசுதார்கள் எஸ். ஏ. பி. காரர்களின் மூலம் விவசாயிகளுக்குப் பலதொல்லைகளைக் கொடுத்து வருகிறார்கள். ஒரு விவசாயி வாரக் குத்தகை விஷயமாக கோர்ட்டில் வழக்குப் போட்டு ஜெயித்து விட்டான் என்பதற்காக, அங்கேயுள்ள ஒரு பெரிய மிராசுதார் எஸ். ஏ. பி.காரர்களைக் கொண்டு அந்த கிராமத்தையே அழித்து விட முயற்சிக்கிறார். அப்படிப்பட்ட அக்கிரமங்களை மிராசுதாரர்கள் போலீஸ்காரர்களின்மூலம் செய்கிறார்கள். மேலும், உணவுப் பொருள் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கும் போது, கும்பகோணத்தில் 80 வேலி நிலங்களை உடைய ஒரு மிராசுதார் குத்தகைக்காரர்களுக்குப் பல தொல்லைகள் கொடுத்துவருகிறார். கனம் அமைச்சர் அவர்கள் வேண்டுமானால் அங்கே வந்து இதை நேரில் பார்க்கலாம். இப்படிப்பட்ட காரியங்களைத் தடுப்பது அரசாங்கத்தின் கடமை என்று வலியுறுத்திக் கூறுகிறேன்.

அதோடு, போலீஸாருக்கு இருக்கும் குறைகளில் ஒரு சதவீதத்தைத் தான் அரசாங்கம் குறைத்திருக்கிறது என்று நான் சொல்வேன். அவர்களுடைய பல குறைகள் தீர்க்கப்படாமலேயே இருக்கின்றன. தாலூக்காக்களிலுள்ள சிறு சிறு போலீஸ் ஸ்டேஷன்களுக்குப் போலீஸாரை அரசாங்கத்தார் நியமித்திருக்கிறார்கள். அந்தப் போலீஸாருக்குக் குடியிருப்பு வசதியும் அவர்களுடைய பிள்ளைகள் படிப்பதற்கான வசதியும் இல்லை. குறிப்பாக, தஞ்சாவூர் ஜில்லாவில், சீர்காழி, திருவெங்காடு, மாயவரத்திலுள்ள மணல்மேடு முதலிய இடங்களில் அந்தப்போலீஸாருக்குக் குடியிருப்பு வசதி இல்லை. அவர்களுக்கு குடியிருப்பதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் முதல் கடமையாக இருக்க வேண்டும். சீர்காழியைப் பொறுத்த வரையில், தஞ்சாவூர் ஜில்லாவிலே முதல் முறையாக சீர்காழி தாலூக்காவில் பல வருஷங்களாக வீட்டு வசதியில்லாமல் கஷ்டப்பட்டுகொண்டிருந்த போலீஸாருக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அதே ஜில்லாவில் சர்க்கிள் இன்ஸ்பெக்டர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவில்லை. அவர்கள் குடியிருக்கும் வீட்டில் சொந்தக்காரர் தனக்கு அந்த வீடு வேண்டும் என்று கடந்த பத்து வருஷங்களாக கேட்டிக்கொண்டிருக்கிறார். ஆனால் அவருக்கு வீடு கொடுக்கப்படாததால் அவர் திருமுல்லைவாயிலில் குடியிருக்கிறார். ஆகவே தஞ்சாவூர் ஜில்லாவில் சர்க்கிள் இன்ஸ்பெக்டர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நிர்வாகம் நன்றாக நடக்க வேண்டுமென்றால், நிர்வாகத்தை நன்றாக நடத்துவதற்கு உதவும் போலீஸ்காரர்களுக்கு அவசியமான வசதிகளையெல்லாம் அளிக்கவேண்டும். போலீஸ்காரர்கள், சங்கத்தின் மூலமாகவோ, கூட்டங்கள் மூலமாகவோ அரசாங்கத்திடம் கோரிக்கைகள் தெரிவிக்கக் கூடாது என்று ஒரு விதி இருக்கிறது. அதன் காரணமாகத் தான் அவர்கள் தங்கள் குறைகளை சர்க்காருக்குத் தெரிவிக்காமல் இருக்கிறார்கள். ஆகவே அவர்களுடைய குறைகள் கவனிக்கப்படாமலும் இருக்கின்றன. அவர்களுக்குப் பல குறைகள் இருக்கின்றன. குறிப்பாக, சென்னையை எடுத்துக்

16th July 1957]                [Sri K. B. S. Mani]

கொண்டால், புழலேரியில் (ரெட் ஹில்ஸ்) இருக்கும் ஆர்ம்ட் போலீஸ்காரர்கள் தஞ்சாவூரிலிருந்து மாற்றப்பட்ட " பி " கம்பெனிக்காரர்கள். அவர்கள் தஞ்சாவூரிலிருந்து சென்னைக்கு மாற்றப்பட்டவுடன் சென்னைக்கு வந்து இங்கே குடியிருக்க வீடில்லாமல் பெண்டு பிள்ளைகளுடன் தெருவில் நின்றார்கள். அந்த சிப்பாய்கள் ஒரு வீட்டை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு வீட்டில் பெண்டு பிள்ளைகளை இருக்கச் செய்துவிட்டு தாங்கள் எல்லோரும் வீட்டுக்குள் நுழையாமல் வெளியிலேயே இருக்கவேண்டியிருந்தது. வீட்டில் ஒவ்வோரு ரூமிலும் 8–9 பெண்டு பிள்ளைகள் இருந்தனர். ஆண்கள் எல்லோரும் வெளியிலேயே இருந்தார்கள். இது போல போலீஸ்காரர்களுக்கு நிறையத் தொல்லைகள் இருக்கின்றன. அவர்களுக்குத் தொல்லைகள் ஏற்படாதபடி அவர்களைக் காப்பாற்றவேண்டும்.

போலீஸ் இலாக்காவில் ரேடியோ ஆபரேட்டிங் பிரிவு இருக்கிறது. அந்தப்பிரிவிலுள்ள ரேடியோ ஆபரேட்டர்களுக்கு " பீஸ் " கிடையாது. அவர்களுக்கு டி..ஏ.யும் கிடையாது. சிவில் டிபார்டுமெண்டிலிருந்து நியமிக்கப்படும் ரேடியோ ஆபரேட்டர்களுக்கு சுமார் 200 ரூபாய்க்கு மேல் சம்பளம் கொடுக்கப்படுகிறது. ஆனால் ரேடியோ ஆபரேட்டர்களாக வேலை செய்யும் சப்-இன்ஸ்பெக்டர்களுக்கும் ஹெட் கான்ஸ்டபிள்களுக்கும் குறைந்தபட்ச சம்பளம் 90 ரூபாய் தான் கொடுக்கப்படுகிறது. சிவில் ரேடியோ ஆபரேட்டர்கள் போலீஸ் அதிகாரிகள் அல்ல. இதனால் பல தொல்லைகள் இருக்கின்றன. இதன் காரணமாக " சீனியாரிடிபடி " அவர்களுக்கு உத்தியோக உயர்வு கொடுக்கமுடியவில்லை. சிவில் ரேடியோ ஆபரேட்டர்களுக்கும் பூட்ஸ் கொடுக்கப்படுகிறது. அவர்கள் பூட்ஸைக் கனவில்கூட உபயோகிப்பது கிடையாது. அதோடுகூட, 5–6 ஜில்லாக்களுக்கு ஒரு ரேடியோ ஆபரேட்டிங் சப்-இன்ஸ்பெக்டரை நியமிக்கிறார்கள். கன்னியாகுமரி முதல் கடலூர் வரை உள்ள பிரதேசத்திற்கு ஒரு ரேடியோ ஆபரேட்டிங் சப்-இன்ஸ்பெக்டர்தான் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஒவ்வொரு ஜில்லாவிலும் 2–3 டிவிஷன்கள் இருக்கின்றன. மதுரை போன்ற ஜில்லாக்களில் 4–5 டிவிஷன்கள் இருக்கின்றன. கன்னியாகுமாரி முதல் கடலூர் வரையிலுள்ள இடங்களை ஒரு ரேடியோ சப்-இன்ஸ்பெக்டர் கவனிக்க முடியுமா ? இது முடியாது என்றுதான் தெரிகிறது. இந்த மாதிரி போலீஸாருக்குப் பல கஷ்டங்கள் இருக்கின்றன. கடந்த புயலின்போது ரேடியோ ஆபரேட்டர்கள் மிகவும் திறமையாக வேலை செய்தார்கள். கருவிகளைச் சுமந்துகொண்டு பல இடங்களுக்கும் சென்று மக்களுக்கு மிகவும் உதவி செய்தார்கள். அப்படிப்பட்ட ரேடியோ ஆபரேட்டர்களுக்கு போதுமான வசதி அளிக்கப்படவில்லை. அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் செய்து கொடுக்கவேண்டும் என்று அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கிறேன்.

முக்கியமாக இன்னொரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். குடிக்கும் போலீஸ்காரர்கள் ஒரு சிலர் இருக்கிறார்கள். குடிக்கும் போலிஸ்காரர்களை வேலையிலிருந்து நீக்கவேண்டு மென்று அரசாங்கத்தாரைக் கேட்டுக் கொள்கிறேன். அப்படி கடுமையான நடவடிக்கை எடுத்தால்தான் மது விலக்குச் சட்டமும் மற்றைய சட்டங்களும் நேர்மையாக அமல் நடத்தப்படும்.

மேலும் போலீஸ்காரர்களுக்கு வாழ்க்கைக்குப் போதுமான அளவு சம்பளம் கொடுக்கவேண்டும். போலிஸ்காரர்கள் துவக்கச் சம்பளம் ரூபாய் 60 ஆகவாவது இருக்கவேண்டும். அப்படி இருந்தால்தான் அவர்கள் நன்றாகச் செயலாற்ற முடியும். மற்றவர்களைவிட போலீஸ்காரர்கள் தான் அதிகமாக லஞ்சம் வாங்குகிறார்கள் என்று சுலபமாகப் புகார் சொல்லப்படுகிறது. போலீஸ்காரர்களை எடுத்துக் கொண்டால், வாத்தியார்களைப் போல் 5, 6 பிள்ளைகள் பிறந்து விடுகின்றன. அவர்களுக்கு குழந்தைகளுக்கு கணக்கே கிடையாது. சுலபமாக அதிக குழந்தைகளை பெற்றுவிடுகிறார்கள். அவர்களுடைய குழந்தைகளை, குடும்பத்தை சுலபமாக பராமரிக்க போதுமான வசதி இல்லாத காரணத்தினால் முதலாளிகளிடத்திலும், மிராசுதாரர்களிடத்திலும் தங்களுடைய வயிற்றுப் பிழைப்புக்காக பல்லைக் காட்ட வேண்டியிருக்கிறது. அதனால் சட்டத்தை சரியான முறையில் அமுல் செய்யமுடியாத நிலையில் இருக்கிறார்கள். குழந்தைகள் துடிக்கும் பொழுது, நல்ல முறையில் வாழ வசதியில்லாமல் நெஞ்சும்,

புரையோடும் லஞ்சப் பாம்பியாவது குழந்தைகளைக் காப்பாற்றவேண்டு மென்ற நிலைமைக்கு வந்து விடுகிறார்கள். இந்த நிலைமையினால்தான் லஞ்ச ஊழல் தாண்டவமாடுகிறது. மதுவிலக்கு சம்பந்தமாக நல்ல ஒரு முறையை கையாள வேண்டுமானால், போலிஸ்காரர்களுக்கு அதிக சம்பளம் கொடுப்பதோடு அல்லாமல், குடிக்கிற போலிஸ்காரர்களை உடனடியாகவேலையிலிருந்து நீக்க வேண்டுமென்ற ஒரு கட்டு திட்டமான விதியை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த மானியத்தை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : கனம் மந்திரி அவர்கள் பதில் அளிப்பதற்கு 40 நிமிஷங்கள் தேவை என்று சொல்லுகிறார். இந்த மானியத்தை 12 மணிக்கு வோட்டுக்குவிட வேண்டும். ஆதலால் கனம் மந்திரி அவர்கள் 11-20 மணிக்கு பேச ஆரம்பிக்கவேண்டும். என்னிடம் 17 அங்கத்தினர்கள் பேசவேண்டுமென்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். கட்சி விப்புகள் என்னிடம் பேசவிரும்பும் அங்கத்தினர்களின் ஜாபிதாவை கொடுப்பதற்கு முன்னால் எத்தனை பேர்கள் பேசவேண்டுமென்பதை யோசிக்க வேண்டும். நான் ஒரு அங்கத்தினருக்கு பேசுவதற்கு 5 நிமிஷம் அவகாசம் கொடுத்தால், கனம் மணி போன்ற அங்கத்தினர்கள் 12 நிமிஷம் பேசுகிறார்கள். இப்படி ஒவ்வொரு அங்கத்தினரும் அதிக அவகாசம் எடுத்துக்கொண்டால், எல்லா அங்கத்தினர்களும் எப்படி பேசமுடியும். நான் கேட்டுக்கொள்ளுவது என்னவென்றால், ஒன்று கட்சி விப்புகள் என்னிடம் குறைந்தபட்சம் பெயர்களை கொடுக்கவேண்டும். அப்பொழுது ஒவ்வொரு அங்கத்தினருக்கும் 10 நிமிஷம நேரம் கிடைக்கும். அல்லது தயவு செய்து அங்கத்தினர்கள் நான் மணி அடித்தவுடன் பேச்சை முடித்துக் கொள்ளவேண்டும். பதினேழு அங்கத்தினர்களுக்கும் நான் பேசுவதற்கு சந்தர்ப்பம் கொடுக்க வேண்டுமானால், ஒரு அங்கத்தினர் 5 நிமிஷம்தான் பேசமுடியும். ஐந்து நிமிஷத்திற்கு பதிலாக 12 நிமிஷங்கள் பேசக்கூடாது. ஆகவே, ஒவ்வொரு அங்கத்தினரும் 5 நிமிஷத்துக்கு மேலாக பேசவேண்டாமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இல்லையென்றால் கட்சி விப்புகள் பேச விரும்பும் அங்கத்தினர்களின் பெயர்களை குறைந்த எண்ணிக்கையில் கொடுக்கவேண்டும். அப்படியிருந்தால்தான் சமாளிக்க முடியும். இல்லாவிட்டால் சமாளிக்க முடியாது.

SRI P. G. KARUTHIRUMAN : One request, Sir. Regarding the list, Sir . . .

MR. SPEAKER : It is not possible. There are about 17 names in the list. The Whips must realise my difficulty in the matter. Either they must give me a smaller list of names. Or, the Members must sit down as soon as I sound the gong at the close of five minutes. I suggest that either of these two courses be adopted. Otherwise, we cannot stick up to the schedule.

SRI P. G. KARUTHIRUMAN : One point, Sir. Regarding the number . . .

MR. SPEAKER : No, it is not possible. You have given me seventeen names.

Sri P. G. Karuthiruman rose.

MR. SPEAKER : The hon. Member will please sit down. I am sorry there cannot be any discussion. The Whips must realize what I can do and what I cannot do. Sri Ellappan may now speak.

[16th July 1957]

**Sri P. S. ELLAPPAN:** கனம் சபா நாயகர் அவர்களே, அன்று கனம் மந்திரி அவர்களிடம் மதுராந்தகம் போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் மீது புகார் தரப்பட்டது உண்மைதானா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அடுத்த படியாக நான் சொல்ல வேண்டியவைகளையெல்லாம் "பட், பட், என்று இரண்டு நிமிடங்களில் சொல்லிவிடுகிறேன். அடிக்கடி மந்திரி அவர்களிடம் வற்புறுத்தி கஷ்டப்படுத்த மாட்டேன். 9-53 a.m.

**Mr. SPEAKER:** அங்கத்தினர் அவசரப்பட வேண்டியதில்லை. ஐந்து நிமிஷங்கள் பேசலாம்.

**Sri P. S. ELLAPPAN:** புகார் விண்ணப்பத்தில் கண்டபடி மேற்படி இன்ஸ்பெக்டர் ஏற்கனவே செஷன்ஸ் கோர்ட்டாரால் இ. பி. கோ. 330 பிரிவின் கீழ் குற்றம் சாட்டப்பட்டவர்தானா? மேற்படி இன்ஸ்பெக்டர் எப்பொழுதும் எங்கும் இம்மாதிரியாக முரட்டுத்தனமாக அப்பாவி மக்களை அடித்து நசுக்கி ஹிம்சைப் படுத்திக் கொண்டு வருவதாக பொதுமக்கள் எல்லோரும் கூப்பாடு போடுகிறார்கள். இம்மாதிரி சட்டத்தை மீறியதும் அக்கிரமமானதுமான நடத்தையைக் குறித்து சர்க்கார் கவனத்திற்கு, கொண்டுவந்தும் சர்க்கார் இது விஷயமாக என்ன ஏற்பாடு செய்தார்கள் என்பதை தெரிந்து கொள்ளவிரும்புகிறேன். இவ்வளவு தான் நான் சொல்ல வேண்டிய விஷயங்கள்.

**Sri M. R. KANDASWAMI MUDALIYAR:** கனம் தலைவர் அவர்களே, 9-55 a.m. இப்பொழுது சர்க்கார் கொண்டுவந்திருக்கும் போலீஸ் மானியத்தை நான் முழு மனதுடன் வரவேற்கிறேன். போலீஸ் நம்முடைய நாட்டிற்கு மிகவும் அவசியம். அது எவ்வளவு தூரம் பொதுமக்களுக்கு தேவைப்படுகிறது என்பது நாம் அனைவரும் அறிந்த விஷயம். போலீஸ் நல்ல முறையில் நடந்து கொண்டால்தான், நாட்டு மக்களும் நல் வாழ்வு வாழமுடியும். நம்முடைய மக்களின் நலன் போலீஸ் கையில் இருக்கிறது. அவர்களுடைய பந்தோபஸ்து போலீஸ் கையில் இருப்பதனால், போலீஸ் நம் நாட்டுக்கு முக்கியமாக தேவைப்படுகிறது. போலீஸ் ஆங்கிலேயர் காலத்தில் இருந்ததைப் போல் அல்லாமல் இப்பொழுது வெகு மாற்றங்கள் அடைந்திருக்கிறது என்பதை மறுக்க முடியாது. முன்பு இருந்த ஒரு தர்பாருக்கும் இப்பொழுது அவர்கள் நடந்துகொள்ளும் முறைக்கும் வித்தியாசம் இருக்கிறது. இப்பொழுது அவர்கள் பொது ஜனங்களுடன் தொடர்பு கொண்டு அவர்கள் விஷயத்தில் கவனம் செலுத்தி நல்லமுறையில் செயல்படுவதைக் கண்டு நாம் பெருமைப்படுகிறோம். சமீபத்தில் ஜனநாயக முறையில் நடந்த தேர்தலில் கூட போலீஸ்காரர்கள் நேர்மையாகவும் திறமையாகவும் நடந்து கொண்டார்கள். உலகம் போற்றக் கூடிய வகையில் கண்ணியமாகவும் கௌரமாகவும் நம் நாட்டில் தேர்தல் நடைபெறுவதற்கு அவர்கள் உதவி புரிந்ததற்காக நான் அவர்களை பாராட்டுகிறேன். இருந்தாலும் அவர்களில் ஒரு சிலர் நம்முடைய நாட்டு மக்களை கஷ்டப்படுத்தக் கூடிய முறையிலே நடந்து கொண்டுதான் இருக்கிறார்கள். இதை நம்முடைய அரசாங்கம் கவனித்து அவர்களுக்கு ஒரு எச்சரிக்கை கொடுத்து, அவர்கள் நல்ல முறையிலே பொது ஜனங்களுடன் தொடர்பு கொண்டு அவர்களுக்கு வேண்டிய சேவைகளைச் செய்ய முன்வரும்படி ஏற்பாடுசெய்ய வேண்டும். அவர்களுக்கு இம்மாதிரி ஒரு எச்சரிக்கை கொடுத்தால் நன்மையாக இருக்கும்என்று நான் கருதுகிறேன்.

அதோடு கூட போலீஸ் ஸ்டேஷன்களில் சில நகரங்களில்தான் தந்தி டெலிபோன் வசதிகள் இருக்கின்றன. முக்கியமாக உள்ள எல்லா இடங்களிலும் இம்மாதிரி வசதிகள் இருந்தால்தான் அவர்களுக்கு ஏற்படக்கூடிய இன்னல்களைக் கவனிப்பதற்கு சற்று சுலபமாக இருக்கும். குறிப்பாக, சேலம் தாலூகாக்களில் ஆட்டையாம்பட்டி என்று ஒரு கிராமம் இருக்கிறது; 24,000, 25,000 ஜனத்தொகை கொண்ட அங்கு ஒரு போலிஸ் ஸ்டேஷன் இருக்கிறது. அங்கே தந்தி, டெலிபோன் வசதி கிடையாது. அங்கே சமீபத்தில் 6, 7 மாதங்களுக்கு முன்னால் ஒரு நிகழ்ச்சி நடந்தது. மதுவிலக்குச் சட்ட பிரகாரம் போலிஸ் இன்ஸ்பெக்டர் குடித்த நபர் ஒருவரை போலிஸுக்கு அழைத்துக்கொண்டு சென்றார். அந்தக் குற்றவாளியை விடுதலை செய்ய வேண்டுமென்று கிராம ஜனங்கள் கேட்டார்கள். இன்ஸ்பெக்டர் முடியாது என்று சொல்லவே குறைந்தது 500, 600 பேர்கள்

[Sri M. R. Kandaswami Mudaliyar] [16th July 1957

கல்லும் கம்புமாகப் போலிஸ் அதிகாரியைத் தாக்கினார்கள். அந்த சமயத்தில்கூட அவர்களுக்கு தந்தி டெலிபோன் வசதி இல்லாததனால் போலிஸ் உதவி கிடைக்கவில்லை. சமீபத்தில் 13 மைல்களில் உள்ள சேலம் டவுன் போலிஸுக்கு சொல்லியனுப்பி, பிறகுதான் அங்கிருந்து போலிஸ் உதவி வரவேண்டிய நிலைமை ஏற்பட்டது. உடனடியாக ஜனங்களுடைய சௌகரியத்தைக் கவனித்து அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கும் தந்தி, டெலிபோன் வசதிகள் வேண்டும். சற்று பெரிய கிராமங்களாக இருக்கும் போலிஸ் ஸ்டேஷன்களுக்கு அவசியம் தந்தி. டெலிபோன் வசதிகள் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஒரு சில எதிர்க்கட்சி நண்பர்கள் போலீஸ் அதிகாரிகள் காங்கிரஸ் வளர்ச்சிக்காகவும், காங்கிரஸ் பாதுகாப்பிற்காகவும் பயன்படுத்துகிறார்கள் என்று சொன்னார்கள். ஒரு சில இடத்திலே காங்கிரஸ் கட்சி ஆளும் கட்சியாக இருந்தாலும் கூட அரசாங்கத்திற்கு விரோதமாக நடத்தக்கூடிய முறையிலே கூட ஒரு சில போலீஸ்காரர்கள் இருக்கிறார்கள் என்பது மறுக்கவும் முடியாது, மறைக்கவும் முடியாது. அம்மாதிரி நிலைமையில் ஆளும் கட்சிக்கு போலீஸார் உடந்தையாக இருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. எந்தக் கட்சி ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி, ஆட்சி முறை நல்ல விதத்தில் நடக்கவேண்டுமென்றால், நாட்டைப் பாதுகாக்க வேண்டிய போலீஸ்காரர்கள் ஆட்சியிலுள்ள மக்களுக்கும் நாட்டுக்கும் நல்ல பெயர் தேடிக் கொடுக்கவேண்டும். ஆட்சியில் இருக்கும் மக்கள் தங்கள் வாழ்வை நிம்மதியாக நடத்துவதற்கு போலீஸார் உதவ வேண்டும். ஏழை, எளிய மக்கள், விவசாயிகள், நெசவாளர்கள், படிப்பு இல்லாதவர்கள் தங்களுடைய கஷ்டங்களைப் போலீஸாரிடம் தெரிவித்தால், அவைகளை அலட்சியம் செய்யாமல் அவர்களுடைய தேவையை உடனடியாகக் கவனிக்கவேண்டும். பாரபட்சமில்லாமல் நாட்டில் என்ன நடக்கிறது என்பதை நேரில் பார்த்து ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்றெல்லாம் வித்தியாசம் காட்டாமல் நேர்மையான முறையிலே விசாரணை செய்து குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தண்டனை கொடுக்கவேண்டும். அப்படிச் செய்தால் போலீஸ் நிர்வாகம் நன்றாக நடக்கும். மக்கள் நிர்ப்பயமாக வாழ்வதற்கு ஒரு நல்ல நிலைமையை உண்டுபண்ணலாம். அமைச்சரவர்கள் இதற்குத் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

குறிப்பாக சில இடங்களில் நல்ல நிலைமையில் நடந்தாலும் கூட, சில இடங்களில் ஸர்க்கிள் இன்ஸ்பெக்டர், டெப்டி சூப்பிரண்டண்டு இவர்கள் ஒரு கட்சியின் அபிமானம் வைத்துக்கொண்டு நம்முடைய காங்கிரஸ்காரர்களைத் துன்புறுத்துகிறார்கள். சமீபத்தில் 500 கம்யூனிஸ்டுகள் காங்கிரஸில் சேர்ந்தார்கள். சூரமங்கலம் ஏரியாவில் 6, 7 மாதங்களுக்கு முன்னால் இது நடந்தது. இவர்கள் சேர்ந்த உடனே இந்தக் கட்சியின் விரோதத்தின் பெயரால் இந்த 500 பேர்களின் தலைவராக இருந்த ஒருவனை கொலை செய்துவிட்டார்கள். போலீஸில் இந்த விபரம் தெரிவிக்கப்பட்டிருந்தும் கொலைசெய்த நபரை போலீஸ் அதிகாரிகள் சரியான முறையில் கேஸ் நடத்தாமல் விட்டுவிட்டார்கள். சாட்சியங்கள் இல்லாமல் இல்லை. இவ்விதமாக நீதி வழங்கும் நிலை அங்கு இல்லை. இம்மாதிரி குற்றம் செய்தவனை சும்மா விட்டுவிடுவதைப் பார்த்து அங்குள்ள மக்களுக்கு பயமும் பீதியும், ஏற்படுகிறது. இம்மாதிரி ரௌடிகள் உள்ள பிரதேசங்களில் அங்குள்ள மக்கள் உண்மையை சொல்லுவதற்குக் கூட பயந்து கொண்டு இருக்கிறார்கள். ஆகவே மக்கள் சொல்லக் கூடிய குறைகளை எடுத்து அரசாங்கம் அதன் மீது நடவடிக்கை எடுத்து நீதியை நிலை நாட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் போலீஸ்காரர்களுக்கு அதிக வசதிகள் செய்துகொடுக்க வேண்டுமென்று பலர் கூறினார்கள். அவர்களுக்கு வசதிகள் செய்துகொடுக்க வேண்டிய அவசியம் தான். ஆனால் அதே சமயத்தில் இந்த நாட்டுக்கு வருமானத்தை தந்துகொண்டு இருக்கின்ற நெசவாளியினுடைய நிலைமை என்ன? நமது நாட்டில் வருமானம் என்ன இருக்கிறது என்பதை எல்லாம் நாம் கவனித்துப் பார்த்துவிட்டு அதைச் சொல்லவேண்டும். அதில்லாமல் அவர்களுக்கு எல்லா வசதியும் செய்துகொடுக்க வேண்டும் என்று அவர்கள்

16th July 1957] [Sri M. R. Kandaswami Mudaliyar]

தூண்டுதல் செய்யக்கூடிய முறையில் சொல்லி, தங்களுடைய கட்சியின் செல்வாக்கைப் பெருக்கிக் கொண்டு அவர்களைத் தூண்டிவிட்டால் அது நாட்டுக்கு குழப்பத்தைத்தான் உண்டாக்கும். ஆகவே நமது நாட்டின் பொருளாதாரத்தையும் சற்று மனதில் வைத்துக்கொண்டு இந்த விஷயங்களை எல்லாம் யோசிக்கக்கூடிய முறையில் வார்த்தைகளை சட்டசபையில் பேசினால் அது நாட்டுக்கும் மக்களுக்கும் நல்லதாக இருக்கும். இந்த நிலைமையில் போலீஸ் அதிகாரிகள் நல்ல நிலைமையில் நடந்துகொள்ள ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு நாட்டுக்கு பந்தோபஸ்து அளிப்பதற்காக கொண்டு வந்திருக்கும் இந்த மான்யத்தை முழு மனதுடன் வரவேற்கிறேன்.

Sri S. M. ANNAMALAI : மாநில சட்ட மன்றத் தலைவர் அவர்களே, நாங்கள் இந்த சட்ட மன்றத்திற்கு வந்திருப்பது பாட்டு பாடுவதற்காகவோ, (10–04 a.m.) அல்லது பாட்டு பாடினால் நாட்டியம் ஆடுவார்கள் என்றோ எதிர்பார்த்து இந்த சட்ட மன்றத்திற்கு வரவில்லை. எங்களுக்கு மக்கள் ஆதரவு தந்தார்கள் என்றால் அவர்களுடைய குறைகளை இங்கு எடுத்துரைப்பதற்குத்தான் எங்களை இந்த சட்டமன்றத்திற்கு அனுப்பியிருக்கிறார்களே தவிர பாட்டு பாடுவதற்கு அல்ல என்று கூறி இந்த வெட்டுப் பிரேரணையை நான் ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல முன்வந்திருக்கிறேன். வெள்ளையன் ஆட்சி காலத்தில் என்னென்ன சட்டங்கள் இருந்தனவோ அதே சட்டங்களைப் பயன்படுத்திக்கொண்டு அதே பழக்க வழக்கங்களை வைத்துக் கொண்டு வெள்ளையன் ஆட்சியை எப்படி நிலை நிறுத்திக்கொள்ள என்னென்ன சட்டங்களை வைத்துக்கொண்டிருந்தார்களோ, அதே போன்று இந்த காங்கிரஸ் ஆட்சியை நிலைநிறுத்துவதற்காக போலீஸை ஒரு கைஆயுதமாக வைத்துக்கொண்டிருக்கிறது. இந்தக் காங்கிரஸ் அரசாங்கம். 1954-ம் ஆண்டில் களம்பூரில் விவசாயசங்க ஆதரவில் போராட்டம் நடந்துகொண்டிருந்த பொழுது அங்கு ஏதோ ஒரு பஞ்சாயத் போர்ட் கட்டிடத்தை கொள்ளி வைத்துவிட்டார்கள் என்ற காரணத்திற்காக கொள்ளி வைத்தவர்களை விட்டு 436 செக்ஷன்படி ஏதுமறியாத மூவர் மீது வழக்குப் போட்டு, அவர்களை அடக்க வேண்டுமென்று ஹிம்சித்தார்கள். எவ்வளவோ நாட்கள் வழக்கை நடத்தினார்கள். கடைசியில் சென்னை அரசியலார் படுதோல்வி அடைந்தார்கள். இந்த காங்கிரஸ் கட்சித் தோழர்கள் ஏதோ சுதந்திரம் வாங்கிவிட்டோம் என்று கூறுகிறார்கள். அன்று நடந்த புரட்சி காலத்தில் கூட சாட்டப்படாத ஒரு குற்றத்தை, அதாவது ஒரு போட்டி சர்க்காரை அண்ணாமலை நடத்துகிறான் என்று போட்ட சதிவழக்கு இன்று என்னவாயிற்று ? இவ்விதமாகப் போலீஸை தங்களுடைய கைஆயுதமாக வைத்துக்கொண்டு அந்த ஊரையே அழித்துவிடலாம் என்று எண்ணினார்கள். போலீஸ் என்பது என்ன ? போலீஸ் இருப்பது to preserve law, சட்டத்தைக் காப்பாற்றுவதற்காக இருக்கிறதே தவிர சட்டத்தைத் துஷ்பிரயோகம் செய்வதற்காக அல்ல. ஆகவேதான் இம்மாதிரி பல சம்பவங்களை நிரூபிக்க முடியும். பாமர மக்களை இம்சிப்பது, சதி வழக்குகளைத் தொடருவது, அதோடு மாத்திரமல்ல, பெண்களை ஹிம்சிப்பது, கற்பழிப்பது போன்ற நடவடிக்கைகள் நடந்துகொண்டிருக்கின்றன. இவைகளை நான் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. ரெவின்யூ அமைச்சரவர்களுக்குத் தெரியும். கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் 1954-ம் ஆண்டில் ராணிப்பேட்டைக்கு வந்திருந்தபொழுது அங்கு அவதியுற்ற 20 பெண்கள் தங்கள் ஊரிலிருந்து கால் நடையாகவே வந்து தங்களுடைய குறைகளைக் கூறி அமைச்சர் அவர்களின் காலில் விழுந்து கதறினார்கள். அதன் பின் 1952-ம் ஆண்டில் நடந்த தேர்தலில் அந்த தொகுதியில் அமைச்சரவர்கள் வெற்றி பெற்றிருந்தும்கூட இம்மாதிரி பெண்கள் கதறி அழுகிறார்களே அவர்களின் குறையை தீர்க்க வேண்டாமா என்று கூட அவர்களின் பேரில் கருணை காட்டாமல் இருக்கிறார்கள். இப்போதும் பல ஏழைகள் இவ்விதம் துன்பப்படுத்தப் பட்டு வருகிறார்கள். இதைவிட வெட்கக்கேடு என்ன இருக்கமுடியும் ?

Sri K. VINAYAKAM : On a point of order, கனம் அக்கிராசனர் அவர்களே, பெண்களைக் கற்பழிப்பது பற்றி ரெவின்யூ அமைச்சரவர்களுக்குத் தெரியும் என்று சொல்லுகிறார்கள். அது எந்த அளவுக்கு பொருத்தமானது என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : ஸார், கனம் அங்கத்தினர் அவர்கள் கற்பழிப்பதிலும் துன்புறுத்துவதிலும் உள்ள வித்தியாசம் தெரியாமல் சொல்லுகிறார்கள் என்று நினைக்கிறேன். அவர்கள் துன்புறுத்துகிறார்கள் என்றுதான் சொன்னார்கள்.

SRI S. M. ANNAMALAI : உண்மையில் அங்கு 22 பெண்கள் கால்நடையாக வந்து அமைச்சரவர்கள் காலடியில் விழுந்து, கற்பழிக்கப்பட்டதாகக் கூறினார்கள். அருகில் நின்றுகொண்டிருந்த ஒரு போலீஸ்காரரைக் காட்டி, இவர்தான் என்று கூட காண்பித்துச் சொன்னார்கள். அதோடு இந்த 107, 110 (ஈ) அண்ட் (எப்) செக்ஷன் பிரகாரம் வழக்குகள் எடுக்கப்படுகிறது. நான் சொல்லுவதற்கு வெட்கப்படுகிறேன். சட்டசபைக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற என்னுடைய பெயர் கேடி லிஸ்டில் 1957 எப்ரல் மாதம் வரையில் இருந்தது என்றால் இதைவிடக் காங்கிரஸ் ஆட்சியின் கொடுமையைப் பற்றி என்ன சொல்ல முடியும் ? காங்கிரஸ் கட்சி போலீஸ்காரர்களைக் கை ஆயுதமாக வைத்துக்கொண்டு தொழிலாளர்கள்மேல் போட்ட சதிவழக்குகள் எல்லாம் என்னவாயிற்று என்று உங்களைக் கேட்கிறேன். இப்படிப்பட்ட சதிவழக்குகளைப் போட்டு பாமர மக்களைத் துன்பப்படுத்தும் சட்ட திட்டங்களை மாற்ற வேண்டும். எந்தெந்த சட்டங்களை உபயோகப்படுத்தினால் எந்த அளவுக்கு பாமர மக்களுக்கு அது தேவைப்படும் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு சட்டங்கள் தேவையானால் இம்மாதிரி சட்டங்களைக் கொண்டு துஷ்பிரயோகம் செய்யக்கூடாது என்று கேட்டுக்கொண்டு, சட்டங்களைத் துஷ்பிரயோகம் செய்பவர்களின் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். சில போலீஸ் அதிகாரிகள் லஞ்சம் வாங்குகிறார்கள் என்று எவ்வளவோ கண்டுபிடிக்கப்பட்டும் எவ்வளவோ மகஜர்கள் வந்தும்கூட அதைப் பற்றிக் கவனிக்கப்படுவதில்லை. ஒரு சப் இன்ஸ்பெக்டர் ஒரு ஊருக்கு மாற்றமாகி வந்தால் வந்தவுடன் அவருக்கு என்ன சொத்து இருந்தது, போகும்போது என்ன சொத்து இருந்தது என்பதைக் கணக்கிட்டுப் பார்த்தால் அவர் லஞ்சம் வாங்கினாரா என்பது தெரிந்துவிடும். இவ்விதம் ஏதாவது தெரியுமானால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

10-10 a.m. SRIMATHI T. N. ANANDANAYAKI : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த போலீஸ் இலாகா மான்யத்தை தீவிரமாக ஆதரித்துப் பேசுகின்ற நான் ஒருசிலவற்றை கனம் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் இந்த சட்டசபையின் கவனத்திற்கும் கொண்டுவர விரும்புகிறேன். சுதந்திரத்திற்குப் பின்னர் போலீஸ் இலாகாவின் மனமாற்றம் மிகச் சிறந்த முறையில் நடந்திருக்கிறது என்பதை மகாமக உற்சவமும், ஆவடிக் காங்கிரஸும் சுட்டிக்காட்டும் என்று சொல்வது மிகையாகாது என்று நினைக்கிறேன். அவர்கள் மக்களிடம் எவ்வளவு அன்போடு பழக முடியுமோ அவ்வளவு அன்போடு பழகவேண்டுமென்று ஆசைப்படுவதோடு மாத்திரமல்லாமல் அதை அமலிலும் நடத்துகிறார்கள் என்பதுமேற்கூறிய சம்பவங்களிலிருந்து நமக்குப் புலனாகிறது. ஆனால் கேடிகளுக்கும், கொள்ளைக்காரனுக்கும், திருடனுக்கும் போலீஸ்காரன் சிநேகிதனாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்த்தால் நாட்டில் சட்டத்தை அமுல் நடத்த முடியாது. (பலத்த கரகோஷம்.) யார் சட்டத்தை உடைக்கிறார்களோ, கேடிகள், கொள்ளைக்காரர்கள், திருடர்கள் இவர்கள் விஷயத்தில் போலீஸ் கண்டிப்பாக தீவிர நடவடிக்கை எடுத்துத்தான் தீரவேண்டும். அதைக்கண்டு கேடிகளும் திருடர்களும், கொள்ளைக்காரர்களும் பயப்படுகிறார்கள் என்று சொன்னால் அதற்காக வக்காலத்து வாங்கிக்கொண்டு வருவது நியாயமல்ல. காரணம் என்னவென்றால், போலீஸ் என்பது, மிக ஒழுங்கோடு, பராபட்சம் இல்லாமல் எல்லோருடைய உயிருக்கும், சொத்துக்கும் பாதுகாப்பு அளிக்கவும் சட்டத்தையும், அமைதியையும் பாதுகாக்கவேண்டுமென்ற எண்ணத்தோடு அமைக்கப்பட்டிருக்கிற ஒரு படையே ஒழிய வேறு எந்தக் காரியத்திற்காகவும் அல்ல. அப்படி போலீஸ் இலாகா மிகச் சிறந்த முறையில் நம் நாட்டில் வேலை செய்துவருகிறது என்பதை சென்னை நகர நிர்வாகமே நமக்கு

16th July 1957] [Srimathi T. N. Anandanayaki]

பருத்திச் சூதாட்டம், கள்ளச் சாராயம் காய்ச்சுதல் போன்றவைகள் மிகத் தீவிரமான அளவில் குறைக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பார்க்கும் போது போலீஸ் இலாகாவானது ஜனநாயகத்தோடு மிகவும் தீவிரமாக ஒத்துழைக்கிறது என்பதை நாம் மறந்து விடக்கூடாது. ஆகவே, இந்த போலீஸ் மான்யத்தின் தொகையை அதிகப்படுத்தினாலும் பரவாயில்லை. ஏனெனில், போலீஸ்காரர்களுக்கு கொடுக்கவேண்டிய வசதிகள் எத்தனையோ இருக்கின்றன. அதை நாம் இப்பொழுதும் கொடுக்காமல் இருக்கிறோம். நிர்வாகத்தில் குறைகள் ஆங்காங்கு காணப்படுகின்றன என்று சொன்னால், அது, இப்போலீஸ்காரர்களுக்கு கொடுக்கக்கூடிய வசதிகள் குறைவாக இருப்பதே காரணமாகும், என்று சொன்னால் அது தவறாகாது. போலீஸ்காரர்களை எடுத்துக்கொண்டால் அவர்களுக்குள்ள வீடு வசதி மிகவும் குறைவு. போலீஸ்காரர்களுக்கு வீடு இல்லை என்றால் அவர்கள் வேறு இடத்தை அண்டி வீடுவாங்க வேண்டியிருக்கிறது. அதனால் ஒரு சில குற்றங்குறைகள் சாட்டப்படக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே அதற்காக எங்குஎங்கு எல்லாம் இடம் இருக்கிறதோ அங்கங்கெல்லாம விரு விரு என்று வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டால் அவர்களின் மேல் குற்றங்கள் குறைகள் ஏற்படாமல் இருப்பதற்குரிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த முடியும், என்று நான் கூற விரும்புகிறேன். இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் வீடுகள் கட்டிக்கொடுக்க ஒரு சில லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தெரு விளக்குகள், பாம்பே கக்கூஸ் இவைகள் கட்டிக்கொடுக்க திட்டமிட்டிருக்கிறோம். தெருக்களில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் கண்டிப்பாக வீடுகளில் விளக்குகள் தரப்படவேண்டும். வீடுகளில் எல்லோரும் மின்சார விளக்குகளின் அடியில் உட்கார்ந்துகொண்டு இருக்கும்போது போலீஸ்காரர்களின் வீடுகளில், பல நூற்றாண்டிற்கு முன்னர் எப்படி இருந்ததோ அதேமாதிரி, இந்த போலீஸ்காலனிகளும் அமைந்திருக்கின்றன. ஆகவே, இந்த போலீஸ்காரர்கள் வீடுகளில் மின்சார வசதி ஏற்படுத்திக் கொடுக்க அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டால் அது அவர்களின் உள்ளத்தில் ஊக்கத்தை அளிக்கும் என்று கூறுவதோடு அமைச்சர் அவர்கள் அதற்கு வேண்டிய தீவிர நடவடிக்கைகளை உடனடி எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, போலீஸ்காரர்களின் மனைவிகளுக்கு இல்லத்தில் ஷேம நல வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு அவர்களின் பொருளாதாரத் துறையிலும், மற்ற முன்னேற்றத்திற்கு வழி வகுக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது வரவேற்கத்தக்கது, அதை இன்னும் தீவிரமாகச் சிந்திக்கவேண்டும். தீப்பெட்டித் தொழிற்சாலை, சிறு கைத் தொழிலாக நடைபெற்று வருகிறது. அதேபோல் அப்பளத் தொழிலையும் திருவல்லிக்கேணியில் ஆரம்பித்திருக்கிறார்கள். இதைப்பார்க்கும்போது ஒரு சிறுசட்டத்தைப் போட்டு, போலீஸ் காலனிக்கு தீப்பெட்டியில் லேபல் ஒட்டுவது, குச்சியை எண்ணிப்போடுவது போன்ற வேலைகளை அக்காலனிகளில் உள்ள பெண்களுக்கு அங்கு கொண்டு கொடுத்தால் அந்தப் பெண்கள் சும்மா இருக்கும் நேரத்தில் இந்த வேலையைச் செய்வதால் அவர்களுக்கு ஊதியமும் கிடைக்கும், நேரத்தையும் நல்ல முறையில் பயன்படுத்த முடியும். பொம்பூரில் உற்பத்தி செய்யப்படும் தீப்பெட்டியையும், செருப்புகளையும் இங்கு கண்காட்சியாக வைத்திருக்கிறார்கள். ஆகவே அம்மாதிரி வான்களில் சாமன்களைக் கொண்டுபோய் போலீஸ் காலனிகளில் கொடுத்து அவர்கள் லேபல் ஒட்டுவது, தீக்குச்சிகளை எண்ணி வைப்பது போன்ற வேலைகள் கொடுத்து, அவர்கள் அந்த வேலைகளை செய்த பின்னர் அங்கு சென்று அவைகளை அந்த வானிலே எடுத்துக்கொண்டு வரலாம். அப்படி செய்தால் அவர்களுக்கு ஊதியமும் கிடைக்கும், அவர்கள் தங்கள் ஓய்வு நேரத்தைப்பாழடிக்காமல் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ளவும் முடியும். அது அவர்களின் குடும்பத்திற்கு மிக உதவியாய் இருக்கும். ஆகவே இதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதே போல்தான் இந்த அப்பளத் தொழிலும். இன்ஸ்பெக்டர்களை அனுப்பி சுகாதார முறையை சொல்லிக் கொடுத்தால் அதே போல் அவர்கள் வேலை செய்ய உதவியாய் இருக்கும். அப்படி அவர்களுக்கு மேற்படி வேலைகள் கொடுப்பதினால் அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர உதவியாய் இருக்கும். இதை அமைச்சர் அவர்கள் கவனிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, நிர்வாகத்தில் இருக்கும்

குறைகள் சிலவற்றை இங்கு எடுத்துக் கூறவிரும்புகிறேன். ஒரு போலீஸ்காரன் மேல் குற்றம் சாட்டுவது என்றால் இன்ஸ்பெக்டர் சார்ஜ் செய்து அது அஸிஸ் டென்ட் கமிஷனருக்கு அனுப்பப்படுகிறது. அசிஸ்டென்ட் கமிஷனர் விசாரணை நடத்துகிறார். அந்த விசாரணைக்கு மேல் கமிஷனருக்கு அப்பீல் போகிறது. அதற்கு மேல் ஐ.ஜி-க்கு போகிறது. அரசாங்கத்திற்கும் அப்பீல் போகிறது. இறுதியாக கவர்னருக்கு கருணை பெடிஷன் போடுகிறார். இன்ஸ்பெக்டர் போடுகிற சார்ஜ்-ஐ அஸிஸ்டென்ட் கமிஷனர் விசாரணை செய்வது என்றால் அது நேர்மையாக இருக்காது. ஏனெனில் ஒரே இலாகாவிலிருந்து வரும்போது அவர்கள் ஒருவருக்கொருவர் சிநேகிதர்களாக இருக்கலாம். ஒரு இன்ஸ்பெக்டருக்கு ஒரு போலீஸ்காரன் மேல் கோபம் இருந்து, அவன் அஸிஸ்டென்ட் கமிஷனுருக்கு வேண்டியவராய் இருந்தால் அந்த போலீஸ்காரன் கதி அதோகதியாகிவிடும். சில குற்றச்சாட்டுகளை எடுத்துக் கொண்டால் அவன் எடுத்திருக்கிற லீவிற்கு கூடுதல் இரண்டுநாள் லிவ் எடுத்து விட்டால் அவனை வேலையை விட்டே நீக்கி விடுகிறார்கள். ஒரு வாரத்திற்கு முன்னால் ஜஸ்டிஸ் ராமஸ்வாமி கௌண்டர் அவர்கள் "கார்டன் ட்ராப்" கேஸில், ஒரு மனிதனுக்கு கொடுத்த லீவிற்கு கூடுதல் லீவ் எடுத்து விட்டார் என்பதற்காக அவரை வேலையிலிருந்து நீக்கி விட்டார்கள். அவரைத் திருப்பி எடுக்கவேண்டுமென்று தீர்ப்பு சொல்லப்பட்டது. அவரது சம்பளமே குறைவு. அதோடு கூட தீவிர நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டால் அது மிகவும் கஷ்டமாகும். ஒருவரை வேலையிலிருந்து நீக்கி விட்டோம் என்று எழுதினால், கமிஷனருக்கு அப்பீல் வந்தால் அதிலும் கையெழுத்திடுகிறார். அமைச்சர் அவர்களிடம் ஆட்களை அழைத்துசென்று சொல்லும்போது, இத்தனை ஆபீஸர்களும் கையெழுத்திட்டு வந்த பிறகு அமைச்சருக்கு நியாயம் செய்யவேண்டிய அவசியம் என்ன என்று கேட்டால் அதற்குப் பதில் சொல்லமுடியாது. ஒரு குடும்பமே அவனது ஊதியத்தில் பிழைக்கிறது. அவனது ஊதியம் போய்விட்டால், அதாவது அவன வேலை போய்விட்டால் அவனது ஊதியம் போகிறது. அவனது ஊதியம் போய் விட்டால் அவனது குடும்பமே கெட்டுப்போகிறது. அப்படி ஒரு குடும்பம் கெட்டுப்போனால் அது நாட்டையே பாதிக்கும். ஆகவே நான் சொல்வது என்னவெனில், இதற்கு என்று ஒரு தனி "ட்ரிப்யூனல்" போடவேண்டும். தொழிலாளர்களின் குற்றங்களை விசாரிக்க ஒரு "டரிப்யூனல்" இருப்பது போல போலீஸ்காரர்கள் ஏதாவது குற்றங்குறைகள் செய்தால் அதை "என்கொயர்" செய்ய ஒரு தனி "ட்ரிப்யூனல்" ஏற்படுத்தவேண்டும். போலீஸ்காரர்களின் மேல் உள்ள குற்றச்சாட்டுகளை போலீஸ் இலாகாவினரே விசாரிப்பது என்றால் நீதி எப்பொழுதும் கிடைக்க முடியாது.

(The Hon. Speaker sounded the gong.)

SRIMATHI T. N. ANANDANAYAKI : Two minutes more Mr. Speaker. A lady Member can take that privilege, I think.

MR. SPEAKER : I have promised that concession to ladies.

SRIMATHI T. N. ANANDANAYAKI : Thank you, Sir. ஆகவே அந்த விசாரணையை தனியாக விசாரிக்காமல், ஒரு டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜையோ அல்லது டிஸ்ட்ரிக்ட் முன்சீப்பையோ நியமித்து அந்த "ட்ரிப்யூனல்" மூலம் விசாரிக்கவேண்டும். அதன் மேல்தான் நடவடிக்கை எடுக்கவேண்டும். அந்த நிலை ஏற்படுத்தப்படவேண்டும். அதேமாதிரி லைசென்ஸைப் பற்றி ஒரு சில அங்கத்தினர்கள் சொன்னார்கள். இரண்டு தினங்களுக்கு முன்னால் உள்ள செய்தித் தாளில் பார்த்திருப்பீர்கள், ஒரு மணமகன் மணக்கோலத்தோடு கார்ப்பொரேஷன் ஆபீஸுக்கு ஓடவேண்டி வந்தது என்று. நல்ல காரியங்களில் மேளம் கொட்டாதே, சப்தம் போடாதே என்று சொன்னால் அது அவர்களது வாழ்க்கையை பாதிக்கும் ஒரு சூழ்நிலையை ஏற்படுத்திவிடும்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கல்யாணத்தில் கலந்து கொள்கிறவர்கள் மேளத்தை அனுபவிக்கலாம். ஆனால், அதனால வெளியே இருக்கிறவர்களுக்கு ரிக்கார்ட் பிளேட்போட்டு தொல்லை கொடுக்கக்கூடாது. ஆகவே அதற்கு கட்டுப்பாடு வேண்டும்.

16th July 1957]

**SRIMATHI T. N. ANANDANAYAKI**: ஒரு ஆள் வாழ்க்கையில் ஒரு தரம்தான் கல்யாணம் பண்ணிக்கொள்கிறான். ஆகவே அடுத்த வீட்டுக்காரன் ரிக்கார்ட், மேளம் வாசிப்பது இவைகளினால் சிறிது கஷ்டப்பட்டால் பரவாயில்லை. ஆகவே இந்த கல்யாண விஷயத்தில் லைசென்ஸ் தொல்லையை நீக்க அமைச்சர் அவர்கள் சற்று கருணையோடு சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கப்புறம் ஐ. பி. எஸ். ஆபீஸர்களை டில்லி அரசாங்கம் நேரடியாக "ரெக்ரூட்" செய்து அவர்களை இங்கு அனுப்புகிறது. அப்படிப்பட்ட ஐ. பி. எஸ். ஆபீஸர்கள் இங்கு வந்தால் உடனடியாக ஜில்லா சூபரின்டெண்டாகப் போடுகிறார்கள். அவர்கள் படித்துவிட்டு பரீக்ஷையும் எழுதிய பிறகு, ஓரல் எக்ஸாமினேஷன் வைத்த பிறகு அவர்களை ஜில்லா சூபரின்டெண்டாக்கிவிடுகிறார்கள். அடித்தளத்திலிருந்து போகின்ற டி.எஸ்.பி.க்களுக்கு இருக்கின்ற அனுபவம் ஐ.பி.எஸ். ஆபீஸர்களுக்கு இருப்பதில்லை. காரணம் அவர்கள் எவ்வளவு படித்திருந்தாலும், அனுபவத்தில்தான் விஷயங்களைக் கற்றுக்கொள்ளமுடியுமே தவிர, சும்மா வந்து விடாது. இவ்வாறு அனுபவம் குறைந்த ஐ. பி. எஸ். ஆபீஸர்களை ஜில்லா சூபரின்டெண்டாகப் போடும் முறை இருந்துவருகிறது.

அது மாத்திரம் அல்லாமல், நம்முடைய ராஜ்யத்திலுள்ள டி. எஸ். பி.க்கள் அவர்கள் ஆயுள் பூராவும் ஜில்லா சூப்ரின்டெண்டாக முடியாதுபோலிருக்கிறது. டில்லியிலிருந்து ஆட்கள் வந்துவிடுகிறார்கள் என்பதனால் இவர்களுக்கு ஊக்கம் குறைந்து விடுகிறது. நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்தவரையில், ஐ.பி.எஸ். ஆபீஸர்கள் தேவையில்லை; இங்கு இருக்கிறவர்களை உயர்த்தமுடியும். நம்முடைய ராஜ்யத்திலிருந்து "ரெக்ரூட்" செய்தவர்களின் கதி என்ன என்று கனம் அமைச்சர் அவர்கள் கேட்கலாம். அவர்களைச் சாமர்த்தியமாக வெளி ராஜ்யங்களுக்கு அனுப்பினால், அவர்கள் பிழைக்கவழி இருக்கும். ஐ.பி. எஸ். ஆபீஸர்கள் குறைவாக இருக்கவேண்டும். அப்படி முடியாவிட்டால், ஏதோ ஓரளவுக்கு அவர்களை மற்ற ராஜ்யங்களுக்கு அனுப்புவதற்கான சூழ்நிலை ஏற்படவேண்டும். இல்லாவிட்டால் இங்கிருக்கும் டெபுடி சூபரின்டெண்டுகளுக்கு வேலை செய்யவேண்டுமென்ற சூழ்நிலை இருக்காது. ஆகையால், கனம் அமைச்சர் அவர்கள் குற்றங்குறைகளை நீக்கிவிடுவார்கள் என்று நினைக்கிறேன். நம்முடைய போலீஸ் இலாகா மாதிரி திறமை படைத்த இலாகாவைக் காணமுடியாது. அது மேலும் மேலும் திறமை படைத்ததாக வேண்டிய அவசியம் இருக்கிறது என்று சொல்லிவிட்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

***SRI S. PAKKIRISAMY PILLAI**: கனம் தலைவர் அவர்களே, இந்த 10-22 a.m.
வெட்டுப் பிரேரபணையின் மீது பேசும்பொழுது, சில வார்த்தைகள் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். சென்னை நகர போலீஸ் நிர்வாகத்தைப் பொறுத்தவரையில், நாம் அதிருஷ்டவசமாக நல்ல ஆபீஸர்களை அடைந்திருக்கிறோம். வெகு அழகான முறையிலே, சிறந்த முறையிலே, நமது ஆபீஸர்கள் நிர்வாகத்தை நடத்திக்கொண்டு வருகிறார்கள். நம்மைத் தொல்லைப் படுத்திக்கொண்டிருந்த பருத்தி விலை சூதாட்டம் எப்படி ஒழிக்கப்பட்டதென்பதைச் சமீபத்தில் பார்த்தோம். பெரிய பெரிய பேர்வழிகள் எல்லாம் சில நாட்களுக்குள் அடக்கப்பட்டார்கள். ஆனால் அந்தமாதிரியாக மதுவிலக்கை அமுலாக்க முடியாத நிலைமையில்தான் அவர்கள் இருக்கிறார்கள். ஏதோ தற்சமயம் ஒருவிதமாக மது குடிக்கும் தவறுகள் அடக்கப்பட்டாலும் கூட, இவைகள் வெளியே கிளம்பிக்கொண்டுதான் இருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம். இந்த ஆபீஸர்கள் இவ்வளவு சீரிய முறையில் நடப்பதைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்தாலும், சப்-இன்ஸ்பெக்டர்கள், இன்ஸ்பெக்டர்கள் ஆகியோர் இன்னும் நல்ல நிலைக்கு வரவில்லை என்று சொல்லிக்கொள்ளுகிறேன். அவர்கள் நாட்டிற்கு சேவை செய்ய வேண்டுமென்ற தங்களுடைய பொறுப்பை நன்றாக உணர்ந்து, நேர்மையாக நடந்துகொள்ளவில்லை என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். இன்னும், சப்-இன்ஸ்பெக்டர்கள் கேஸ் இல்லாத காலங்களில், தங்களுடைய டயரி நிரம்புவதற்காக, சாதாரண மனிதர்களைப் பிடித்து, [illegible] செய்து

கேஸ்கள் போடுவதைப் பார்க்கின்றோம். சமீபத்தில்தான் ஜில்லாக்களிலிருந்து சில சப்-இன்ஸ்பெக்டர்களைக் கொண்டுவந்து இங்கே நிரப்பியிருக்கிறார்கள். ஏழைகள் வசிக்கும்படியான இடங்களில் அவர்களைப் போட்டிருக்கிறார்கள். சூதாட்ட ஒழிப்பில் அவர்கள் ஈடுபட்டிருந்தாலும், மதுவிலக்குச் சட்டத்தை இன்னும் நன்றாக அமுலாக்குவதற்கு அவர்கள் திறமையுடன் வேலை செய்தாலும் கூட, இது சம்பந்தமான குற்றங்கள் போன பிறபாடும், அதே எண்ணிக்கையுள்ள கேஸ்கள் டயரியில் எழுதியாகவேண்டுமென்ற ஒரு காரணத்திற்காக, பலவித ஜோடனைகள் செய்து பொய்க் கேஸ்கள் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களைப்பற்றி அநேகப் புகார்கள் போலீஸ் அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தாலும்கூட, அவர்கள் அந்த இடங்களிலிருந்து நீக்கப்படுவதில்லை.

இன்னொரு விஷயம். சாதாரணப் பொதுக் கூட்டம் போடவேண்டுமென்றால், ஒலிபெருக்கிக்காக மூன்று ரூபாய் லைசென்ஸ் வாங்கித் தீரவேண்டும். எல்லோருடைய நன்மைக்காகவும் போலீஸ் அனுமதி வாங்கித் தீரவேண்டும். வேறு ஒருவர் அதே இடத்தில் கூட்டம் போட்டால், அதை "ரெகுலேட்" செய்வதற்காக அந்தமாதிரி அனுமதி அவசியம்தான். ஆனால், முக்கியமாக அப்போதைக்கப்போது கூட்டங்கள் போடக்கூடிய தொழிலாளர்களுக்கும் அடிக்கடி கூட்டங்கள் போடும்படியான நிலைமையில் இருக்கிறவர்களுக்கும் இந்தமாதிரி போலீஸ் அனுமதியுடன் மூன்று ரூபாய் கொடுத்து லைசென்ஸ் வாங்கவேண்டிய கட்டுதிட்டமும் இருக்கக்கூடாது. அந்தமாதிரியான கட்டுப்பாட்டைத் தளர்த்தவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதோடு கூட, நம்முடைய நாட்டில் இன்னும் அநேகர் சட்டங்களைச் சரிவரத் தெரிந்துகொள்ளாமல் இருக்கிறார்கள். முக்கியமாக, பாமர மக்கள் அந்தமாதிரியான நிலைமையில் இருக்கிற காரணத்தால், போலீஸ் நிர்வாகம் ஏன் ஸ்தல ஸ்தாபன அதிகாரிகளின் கீழ் இருக்கக்கூடாதென்பது என்னுடைய கேள்வி. ஸ்தல ஸ்தாபன அதிகாரிகளின் கீழ் போலீஸ் நிர்வாகம் இருக்குமேயானால், இன்னும் நல்ல முறையில் மக்களுக்குப் பயன்படும்படியாகச் சிறந்த முறையில் சேவை செய்ய முடியும். எல்லோரும் மகிழ்ச்சி அடையும்படியான நிலையில் சட்டத்தை அமுல் செய்வதற்கு அனுகூலமாக இருக்கும். ஆகவே, இந்தப் போலீஸ் நிர்வாகம் கார்ப்பொரேஷன் அதிகாரிகளின் கீழோ அல்லது முனிசிபல் அல்லது பஞ்சாயத்து போர்டு நிர்வாகத்தின் கீழோ இருந்தால், ஸ்தலத்திற்கேற்றபடி நல்ல முறையில் நம்முடைய நாட்டிற்குப் பணி செய்தவர்களாவோம்; நம்முடைய சட்டங்களைச் சரிவர அனுசரித்து நடக்கும்படியான வழியில் வேலை செய்வோம். அவ்வாறு இருந்தால், நல்ல சட்டங்களை யாரும் மீறமாட்டார்கள். அவ்வாறு மீறும்படியானவர்கள் நாட்டின் துரோகிகள்.

சில கடுமையான சட்டங்கள் நம்முடைய நாட்டில் இருந்துகொண்டிருக்கின்றன. அவைகளை ஒழிப்பதற்குக் கிளர்ச்சி செய்தால், அதைச் சட்ட விரோ
10-27 a.m. தமாக்கக்கூடாதென்று கேட்டுக்கொண்டு என்னுடைய சிற்றுரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

*SRI S. C. SADAYAPPA MUDALIAR : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தச் சபையிலே போலீஸ் மானியத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். மதுவிலக்குச் சட்டத்தை நன்றாக அமுல் நடத்துவதற்காகச் சமீபத்திலே என்னுடைய ஜில்லாவிலே போலீஸார் எடுத்துக்கொண்டுவரும் நடவடிக்கை மிகவும் போற்றுதற்குரியது. பல வருஷங்களாகப் பரம்பரையாகக் கள்ளச் சாராயம் காய்ச்சிக்கொண்டிருந்த இடங்களையெல்லாம் போலீஸார் கண்டுபிடித்து அப்பழக்கத்தை ஒழிக்கக்கூடிய தன்மையிலே வேலை செய்து வருகிறார்கள். இவ்வாறு மதுவிலக்கு வெற்றியடையக் கூடியவாறு போலீஸார் வேலை செய்துகொண்டு வருவதைப் பார்த்து, இந்தப் போலீஸ் மானியத்தை ஆதரிக்க நான் முன்வந்திருக்கிறேன். இதே முறையிலே இன்னும் சில மாதங்கள் போலீஸ்காரர்கள் வேலை செய்து திட்டத்தைத் திறம்பட நடத்தினால், மதுவிலக்கு வெற்றி பெறமுடியும். இந்த மானியத்தின்மீது பேசும்பொழுது, போலீஸ் நிர்வாகத்தில் எந்த ஊழல்கள் இருக்கின்றன என்று இந்த சபையிலே கனம் [illegible]த்தினர்கள் பேசினார்கள். பரம ஏழைகளாக இருப்பவர்கள்தான்

போலீஸ்படையில் இருக்கிறார்கள். மதுவிலக்குச் சட்டம் வந்த பிறகு, அவர்களுக்கு வேலை கடுமையாக இருக்கிறது. அவர்கள் கிராமம் கிராமமாகச் சென்று மதுவிலக்கு வெற்றி பெறுவதற்காகக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும்போது, அந்தக் கிராமங்களிலே சிலர் மதுவிலக்கு வெற்றி பெறாதபடி செய்வதற்கு அவர்களிடம் குற்றங்குறைகள் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். போலீஸ்காரர்கள் லஞ்சம் வாங்குகிறார்கள் என்று அபாண்டமான குற்றத்தை அவர்கள்மீது சாட்டுகிறார்கள். மதுவிலக்கு வெற்றி பெறுவதற்கு அவர்களுடைய உதவி தேவைதான். போலீஸ்காரர்கள் மாத்திரம் இந்த நாட்டிற்குச் சேவை செய்துகொண்டிருந்தால், மதுவிலக்கு வெற்றி பெற முடியாது. ஆதலால், மது விலக்கு வெற்றி பெறுவதில் அக்கறை கொண்ட நண்பர்கள் எல்லோரும் சேர்ந்து ஒத்துழைத்தால்தான் வெற்றிகாண முடியும். இவ்வேலையில் ஊக்கம் காட்டினால், அது போலீஸ்காரர்களுக்கு உதவியாகயிருக்கும். பாமரமக்களுக்கும் சட்ட விவரங்கள் நன்றாக தெரிந்து கொண்டு சட்டத்திற்குட்பட்டு நடக்க பழக்கப்பட்டுவிடுவார்கள். அவர்கள் செய்யக்கூடிய காரியங்களில் அவர்களுக்கு ஆதரவு கொடுத்தால், அந்த ஏழை போலீஸ்காரர்களிடம் லஞ்ச ஊழல் இருக்கிறதென்ற அபாண்டமான குற்றம் சாட்டப்படாதென்று நினைக்கிறேன்.

நடந்த தேர்தலிலே அவர்கள் நடந்துகொண்ட விதத்தில் ஜனநாயக முறையை நிரூபித்துக் காட்டினார்கள். அந்த தேர்தலில் அவர்கள் நடந்து கொண்ட விதம் எனக்கே சில சமயங்களில் போலீஸ்காரர்கள் மீது வருத்தம் ஏற்பட்டது. அவர்கள் அப்படி நடந்து கொண்டதைப் பார்த்தால், ஜனநாயக முறையிலே எந்தக் கட்சிக்கும் பாதகமில்லாத முறையில் நடத்திக் காட்டிய போது, போலீஸ்காரர்கள் இந்த நாட்டிலே நல்ல முறையில் வேலை செய்யக்கூடிய ஒரு ஸ்தாபனம் என்று தெரிந்தது. நான் அமைச்சர் அவர்களுக்கு ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். போலீஸ் உடையில் மாறுதல் செய்யும் எண்ணம் எனக்கு ஒன்றும் கிடையாது. இன்றைக்கு, நெசவாளர்கள் கஷ்டத்தைப் போக்கவேண்டுமென்ற நினைப்பு சர்க்காருக்கு அதிகம் இருப்பதால், போலீஸ் உடைகளுக்கு கைத்தறித் துணியை சப்ளை செய்து ஏழை நெசவாளர் குறைகளைப் போக்க இது உதவியாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

**Sri T. S. AUTHIMOOLAM:** கனம் சபாநாயகர் அவர்களே, நமது மாகாணத்திலே போலீஸ் நிர்வாகம் நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் அதிலுள்ள லஞ்சம் என்ற ஒரு காரியம் முன்னைவிட ஜாஸ்தியாக ஆகிவிட்டது என்பதை வருத்தத்துடன் சொல்லிக் கொள்கிறேன். அதிலும் முக்கியமாக, கெஜட் ஆபீஸர்கள் அவர்களது குறைந்த வருவாயைக்கொண்டு தங்களுடைய காரியங்களை நடத்த வேண்டியிருக்கிறது. ஸப் இன்ஸ்பெக்டர்கள், இன்ஸ்பெக்டர்கள் இவர்களுக்கெல்லாம் வருவாய் இன்றைக்கு அதிகரித்து விட்டது. அவர்கள் மாதம் ஒன்றுக்கு 700, 800 ரூபாய் சம்பாதிக்கிறார்கள். தைரியமாகவும் காரியங்களைச் செய்கிறார்கள். சில கிராமங்களில் புரொஹிபிஷன் விஷயமாக நாங்கள் வரவில்லை, கிராமத்திற்கு ஒரு கணக்கு வைத்து எங்களுக்கு கொடுத்துவிடுங்கள் என்று கேட்டு சில இடங்களில் ஸப்-இன்ஸ்பெக்டர்கள் பணம் வாங்குகிறார்கள். ஆனால் இப்போது நமது போலீஸ் மந்திரி அவர்கள் புரொஹிபிஷனை எபெக்டிவாக வேலைசெய்ய சில புதுத் திட்டங்களை வகுத்திருக்கிறார்கள். ஆகவே அந்த முறை ஏற்பட்டுவிடுமென்று நம்பிக் கொண்டு அந்தப் புதுத் திட்டத்தை சந்தோஷமாக வரவேற்கிறேன்.

இப்போது இந்த ரெகுலர் போலீஸோடு புரொஹிபிஷன் போலீஸையும் கிளப் செய்து இந்த நிர்வாகம் நடத்தப்படுகிறதால் பொதுவாகத் திறமைக் குறைவும் ஓரளவு ஆங்காங்கே இருக்கிறது. ஒரு இடத்தில் புரொஹிபிஷன் டிபார்ட்மெண்டிலிருந்து வந்த டெபுடி ஸூபரின்டெண்ட் அவர்களும், புரொஹிபிஷன் டிபார்ட்மெண்டிலிருந்து வந்த இன்ஸ்பெக்டர் அவர்களும் அதே மாதிரி ஸப்-இன்ஸ்பெக்டரும் சேர்த்துப் போட்டிருப்பதால், இன்றைக்கு வேலை திறமையாக நடப்பதற்கு பாதகம் ஏற்படுகிறது. இந்த விஷயத்தை ஜில்லாவாரியாக பரிசீலனை செய்து கூடுமானவரையில் எல்லா ஆபீஸர்களையும் கவனித்து அந்த புரொஹிபிஷன் டிபார்ட்மெண்டிலிருந்து வந்தவர்களெல்லாம் சேர்ந்திருந்தால், அவர்களை எல்லாம்

மாற்றவேண்டும். மூன்று பேரும் புரோஹிபிஷன் டிபார்ட்மெண்டிலிருந்து வந்தவர்களாக இருந்தால் வேலைத் திறமை அவ்வளவாக இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் ஸப்-இன்ஸ்பெக்டர்கள் விஷயத்திலும், மற்றும் இன்ஸ்பெக்டர்கள் விஷயத்திலும் இந்த நாட்டில் அதிக கவனம் செலுத்தவேண்டும். அவர்களில் 80 சதவீதம் பயமின்மையால், இந்த நாட்டில் கிராம மக்களுக்கு இருக்கக்கூடிய குறைகளைப் போக்குவதற்கான உதவிகளை உடனுக்குடன் செய்வதில்லை. தைரியமாகவும் மற்ற ப்ரைபரியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று வருத்தத்துடன் சொல்லவிரும்புகிறேன். இதற்கு ஒரு முக்கிய காரணம் இன்றைக்கு ரூலிங் பார்ட்டி ஆட்கள் சலுகை செய்துவிடுவார்கள் என்கிற தைரியம். அவர்களை சிநேகம் பிடித்தும் கொள்கிறார்கள். ரூலிங் பார்ட்டியான காங்கிரஸ்காரர்கள் இதை கவனிக்கவேண்டுமென்றும், போலீஸ் மந்திரி அவர்களும் இந்த விஷயமாக நல்ல கவனம் செலுத்தவேண்டுமென்றும் முக்கியமாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். போலீஸ் ஆபீஸர் மீது எக்ஸ் பிராஞ்ச் நடவடிக்கைகள் எடுத்து, ஒரு டிரிப்யூனல் ஏற்படுத்தி அதற்கு ஒரு ஜட்ஜைப் போட்டு இந்தமாதிரி கேஸ்களை பைசல் செய்து, கவர்ன்மெண்ட் இதில் ஒன்றும் ஆதிக்கம் செலுத்தாமல், ஹைக்கோர்ட்டுக்கு அப்பீல் செய்வதற்கு வழி செய்து இம்மாதிரி ஒரு அதிகாரம் இருக்கவேண்டும். அப்படி இருந்தால்தான் ஆட்களை வைத்துக்கொண்டு காரியத்தை சாதிக்கலாம். என்ன வந்து விடும் என்ற மனோபாவம் போலீஸ் டிபார்ட்மெண்டில் இருக்காது. நான் சொல்வது அவ்வளவு தெளிவாக இல்லையென்றால், மந்திரி அவர்களே பரிசீலனை செய்துகொள்வதில் ஆட்சேபனையில்லை.

மேற்கொண்டு இன்றைக்கு அரசாங்கம் விளம்பரம் கொடுக்கிறார்கள். சமீபத்திலே இந்திய சர்க்கார், டாக்ஸ் ரொம்பப் போட்டுவிட்டோம் என்று நினைக்காதீர்கள், இப்போது இவ்வளவுதான் அதிகப்படுத்திருக்கிறோம், தீப்பெட்டிக்கு ஜாஸ்தி விலை கொடுக்காதீர்கள் என்று சொன்னமாதிரி கிராம மக்களுடைய நன்மைக்குத்தான் போலீஸ் இருக்கிறது, தாராளமாக, தைரியமாகக் குறைகளைச் சொல்லுங்கள் என்று கிராம மக்களுக்கு பேக்வேர்டாக இருக்கும் ஜனங்களுக்கு போலீஸ் டிபார்ட்மெண்டைப்பற்றி விளம்பரம் கொடுப்பதைப்பற்றி கனம் மந்திரி அவர்கள் யோசனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தைரியமாக போலீஸ் ஆபீஸர் தவறு செய்தால் பிராது கொடுங்கள், கவனிப்போம் என்று விளம்பரம் செய்யவேண்டும். பொய்யைச் சொல்லி நீங்கள் மாட்டிக்கொள்ளாதீர்கள் என்று அதையும் தெளிவுபடுத்தி நல்லவிதமாக சென்ற பிரிட்டிஷார் காலத்திலிருந்ததுபோலல்லாமல், கிராமத்தார்களுக்கு நல்ல பிரயோசனமாக நடக்கிறது என்று கிராம மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

10-38 a.m. **Sri M. P. PERIYASAMI** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த போலீஸ் மான்யத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல வந்துள்ளேன். இன்றைக்கு இந்த அரசாங்கமில்லாவிட்டாலும் எந்த அரசாங்கமாயிருந்த போதிலும் போலீஸ் வைத்துத்தான் ஊரைப் பாதுகாக்க முடியும். இதற்கு முன்பு போன சட்ட சபையில் இருந்த கம்யூனிஸ்ட் மெம்பர்கள் போலீஸைப் பற்றி ரொம்பக் குறை கூறி வந்தார்கள். நம் மகாகாணத்தில் கம்யூனிஸ்ட் ஆட்சி ஏற்படாத போதிலும், பக்கத்தில் இருக்கிற கேரளத்தில் இன்றைக்கு கம்யூனிஸ்ட் ஆட்சி ஏற்பட்டிருக்கிறது. நான் பேப்பரிலே பார்த்தேன், அங்கு ஒரு ஊர்வலம் வந்ததிலே போலீஸ் வைத்து கண்காணித்ததாகவும், மீறினால் அதிக நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும்தான் சொல்லுகிறார்கள். இங்கு பேசும்போது போலீஸ் ஹிம்சை செய்கிறது, தடியடிப் பிரயோகம் செய்கிறது, கண்ணீர் புகைப் பிரயோகம் செய்கிறது என்றெல்லாம் பேசினார்கள். அவர்கள் மாகாண ஆட்சிக்கு வந்த பிறகு போலீஸ் வைத்துத்தான் ஆட்சி நடக்கிறது என்று கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர்களுக்கும், மற்ற அங்கத்தினர்களுக்கும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அதேமாதிரி இந்தப் போலீஸ் மான்யத்திலே குறிப்பாக எல்லா விஷயங்களையும் எடுத்துக் கூறிவிட்டார்கள். ஹரிஜனங்கள் விஷயத்தில் தனியாக எடுத்துச் சொல்லவேண்டிய சந்தர்ப்பம் எனக்கு இருக்கிறது.

16th July 1957] [Sri M. P. Periasami]

நமது காங்கிரஸ் அரசாங்கம் பதவிக்கு வந்தவுடனே ஹரிஜனங்களுக்கு போலீஸ் இலாகாவில் தகுந்த உத்தியோகங்களெல்லாம் கொடுத்திருக்கிருர்கள். டிபுடி சூபரிண்டெண்டு, டிஸ்ட்ரிக்ட் சூபரின்டெண்டு முதலிய உயர்ந்த உத்தியோகங்கள் உட்பட ஹரிஜனங்களுக்குக் கொடுத்திருக்கிருர்கள் நமது அரசாங்கம். ஆனுல், அதில் இருக்கும் சில கஷ்டங்கள் எங்களேப்போன்ற ஹரிஜன வகுப்பினருக்குத்தான் தெரிகின்றன. அந்த அருமை எங்களுக்குத்தான் தெரிகிறது.

ஹரிஜன உத்தியோகஸ்தர், சப்-இன்ஸ்பெக்டராக இருந்தாலும் சரி, அவர்கள் ஒருவிதமாகத்தான் கருதப்படுகிருர்கள். ஹரிஜனங்கள் போலீஸ் இலாகாவில் இருப்பவர்களுடைய அந்தரங்க ரிகார்டுகளிலே எப்படி எழுதப்படுகின்றன என்று சொல்வதற்கில்லே.

முன்பெல்லாய் போலீஸ்காரர்கள், எந்த ஆபீசராக இருந்தாலும் சரி, ஒரு முறையோடு கிராமத்திற்குச் சென்ருர்கள். வெள்ளேக்கார அரசாங்கத்திலே ஒரு மாதிரி இருந்தார்கள். அந்தரங்க ரிகார்டுகளில் ரௌடிகளேப் பற்றி விவரம் வைத்துக்கொண்டு, அப்போதைக்கபோது கவனித்து வந்தார்கள். இப்பொழுது ரௌடிகள் அதிகமாய்விட்டது. எனென்ருல், போலீஸே அவர்களே கூப்பிட்டு, “வாங்க, சார், உட்காருங்கள், சார்” என்று மரியாதையாக நடத்துகிருர்கள். சட்டம் என்பது நல்லவர்களுக்குத்தான் பாதுகாப்பாக இருக்கிறது. முன்பெல்லாம் போலீஸ்காரர்களேக் கண்டாலே ரௌடிகள் முதலியவர்கள் நடு நடுங்குவார்கள். சப்-இன்ஸ்பெக்டர் வருகிருர் என்ருலே அப்படி பயம் இருந்து வந்தது. இப்பொழுது அந்தப் பயம் ரொம்பக் குறைந்துவிட்டது. ஆகவே, ரௌடிகள் விஷயத்தில் போலீசார் பழைய மாதிரி மிரட்டுவதற்கு இடம் கொடுக்க வேண்டும்.

ஹரிஜன போலீஸ் உத்தியோகஸ்தர்கள் “வாடா போடா” என்ற அளவிலே அழைக்கப்படுகிருர்கள் ஆனுல், ஜாதி இந்துக்கள் விஷயத்திலே அப்படி இல்லே. சப்-இன்ஸ்பெக்டராக இருந்தாலும், டெபுடி சூபரிண்டெண்டாக இருந்தாலும், அவர்கள் குற்றம் செய்யும் ஜாதி ஹிந்துக்களேயும் மற்றவர்களேயும் வாடா போடா என்று பேசிவிட்டால்—ஹரிஜன் பேசிவிட்டான் என்று எண்ணி அதே உத்தியோகஸ்தர் உள்பட மற்றவர்களும் சேர்ந்து அவர்களுக்கு என்ன தகராறு உண்டாக்கவேண்டுமோ அந்த முறையில் உண்டாக்கிவிடுகிருர்கள்.

அநேக ஹரிஜன சப்-இன்ஸ்பெக்டர்கள் பத்து, பதினேந்து வருஷங்களாக அப்படியே இருக்கிருர்கள். உத்தியோக உயர்வு என்பது கிடையாது. அவர்களுக்கு அந்தரங்க ரிபோர்ட் மூலமாகவும் இம்சை ஏற்படுகிறது. ஜாதி இந்துக்களுக்கே எவ்வளவோ இம்சை இருக்கும்போது, ஹரிஜனங்களேப் பற்றி கேட்கவேண்டாம். பத்து பதினேந்து வருஷங்களாக உத்தியோக உயர்வு இல்லாமல் இருக்கும் ஹரிஜன போலீஸ் சிப்பந்திகளுக்கு என்றைக்குத்தான் கதிமோட்சம் ஏற்படுமோ என்று தெரியாமல் இருக்கிறது. நமது அரசாங்கம் இது விஷயத்தில் யோசனே செய்து, 10 வருஷம் சர்வீஸ் கீழ் உத்தியோகத்தில் இருப்பவர் போட்டு விட்டால், அவர்களுக்கு கண்டிப்பாக உத்தியோக உயர்வு கொடுக்க வழி செய்யவேண்டும். திறமை இல்லாவிட்டால் டிஸ்மிஸ் செய்துவிடுங்கள். திறமை இருக்கிறவர்களுக்கு கட்டாயம் கொடுத்தாகவேண்டும். கீழே இருப்பவர்கள் என்றைக்குத்தான் முன்னேறுவது ? அவர்களுக்கு யாதொரு “ஸப்போர்ட்”டும் இல்லாமல் இருப்பதால் அவர்களுக்கு ஏதாவது விமோசனம் ஏற்பட வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். பத்து வருஷம் சர்வீஸ் ஆனவுடனே “ஆடொமாடிக்” ஆக உத்தியோக உயர்வு கிடைக்க வழி செய்யவேண்டும். நாங்கள் இத்தனே ஹரிஜன எம்.எல்.ஏ.-க்கள் இருக்கிரேம். போலீஸ் இலாகாவில் ஹரிஜன ஊழியர்கள் படுகிற கஷ்டங்களேப் பார்த்து ரொம்ப பரிதாபட்படுகிரேம். அவர்கள் ரொம்ப இம்சையில் இருக்கிருர்கள் என்று தெரிவித்துக்கொண்டு, நமது அரசாங்கம் ஹரிஜனங்கள் விஷயத்தில் கருணே காட்டவேண்டும். பொய்யான காரணங்களுக்காகவும் அவர்களே வேலேயிலிருந்து “டிஸ்மிஸ்” செய்துவிடக் கூடிய நிலேமை காணப்படுகிறது. பொய்க் காரணங்களுக்காக பல ஹரிஜன சப்-இன்ஸ்பெக்டர்களும், டெபுடிகளும் கூட கஷ்டப்படுகிருர்கள். ஆகவே, அவர்கள் விஷயத்தில்

[Sri M. P. Periassami] [16th July 1957

அரசாங்கம் ரொம்ப ஜாக்கிரதையாக கவனித்து, "ப்ரமோஷன்" விஷயத்தில் அவர்களுக்கு அதிகச் சலுகை கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.

Sri B. DORAISAMI REDDIAR : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தப்போலீஸ் மான்யத்தின் மீது பல அங்கத்தினர்கள் பற்பல விஷயமாகப் பேசினார்கள். ஆனால், நான் எனக்குத் தெரிந்தவரை, அவர்களுடைய கஷ்ட நஷ்டங்களைப்பற்றி கொஞ்சம் விரிவாகப் பேசலாம் என்று விரும்புகிறேன்.

போலீஸ்காரர்களுடைய உத்தியோகத்தைவிட தொந்தரவான உத்தியோகம் வேறு ஒன்றுமே கிடையாது. ஆடு மாடுகளை இடையன் மேய்க்கும் போதும், அடைத்துக் காப்பாற்றும்போதும் என்ன கதியை அடைகிறானோ அதே கதியைதான் அடைகிறவர்களாக போலீஸ்காரர்கள் இருக்கிறார்கள். இரவும் பகலும் ஆட்டிடையன் ஆடுகளை கவனித்து வருகிறான். பகலில் மேய்க்கும்போதும் இரவில் பந்தோபஸ்தாகவும் அவைகளைக் காப்பாற்றி வருகிறான். போலீஸ்காரர்களும் இரவும் பகலும் கண்காணிப்பாக இருந்து, நம்முடைய ஜனங்களைப் பாதுகாக்கும் கடமை அவர்களுக்கு இருக்கத்தான் செய்கிறது.

ஆனால், சுமார் 20, 30 ஆண்டுகளுக்கு முன் சில வகுப்பினர்களுக்கு கல்யாணம் செய்வதற்குப் பெண் கிடைப்பது இல்லை. இப்பொழுதெல்லாம், கொஞ்சம் நிலைமை மாறியிருக்கிறது. எல்லா வகுப்பினர்களுக்கும் பெண்கள் அதிக உற்பத்தியாகி யிருப்பதால் போதுமான அளவு பெண்கள் கிடைக்கிறார்கள். முன்பெல்லாம் போலீஸ்காரர்களுக்கென்றால் பெண்கள் கொடுப்பது சற்று கடினம். நல்ல தெரிந்தவர்களாக இருந்தாலும், பெண் கொடுக்கமாட்டார்கள். ஏன்? அவர்களை வைத்துப் பராமரிப்பதற்குக் கூட அவர்களுக்கு அவகாசம் கிடையாது. போலீஸ்காரர்களுக்கு அவ்வளவு வேலை அதிகமாக இருக்கிறது.

போலீஸ்காரர்கள் குடிக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். பனைமரத்தின் கீழ் நின்று பாலைக் குடித்தாலும் "கள்" என்றுதான் சொல்வார்கள். அதுபோல், ஏதோ போலீஸில் இருப்பவர்களெல்லாம் குடிக்கிறார்கள் என்று பொதுவாக பேசப்படுகிறது. ஆனால், அது எல்லாம் உலகத்தில் சகஜம்தான். "அங்கத்தினர்கள் குடிக்கிறார்கள்" என்று தெருவில் போகின்றவர்கள் சொன்னால், அதற்கு நமது தலைவர் ஜவாப் சொல்ல முடியுமா? போலீஸ்காரர்கள் குடிக்கிறார்கள் என்றால் அதற்குப் போலீஸ் "மினிஸ்டர்" ஜவாப் சொல்ல முடியுமா?

Mr. SPEAKER : "அங்கத்தினர் குடிக்கிறார்" என்று இங்கு சொல்வது ஒழுங்கு அல்ல. அங்கத்தினர் குடிப்பதாக இங்கு யாராவது சொன்னால், அப்படிச் சொல்வது ஒழுங்கு அல்ல என்று நான் சொல்ல முன்வருவேன்.

Sri B. DORAISAMI REDDIAR : வழியில் போகிறவர்கள் சொன்னால் நாம் என்ன செய்வது?

Mr. SPEAKER : "அங்கத்தினர்கள் குடிக்கிறார்கள்" என்று சொன்னீர்கள். அதற்கு நான் சொன்னேன்.

Sri B. DORAISAMI REDDIAR : வழியில் போகிறவன் சொல்லி விட்டுப் போகிறான்.

Mr. SPEAKER : சபையில் சொல்லக்கூடாது.

Sri B. DORAISAMI REDDIAR : சொல்லக்கூடாதென்றால் விட்டு விடுகிறேன். (சிரிப்பு). கூடுமானவரை போலீஸ்காரர்களுக்கு, நம் நாட்டுக்கு சுயராஜ்யம் வந்த பிறகு, தொல்லைதான் அதிகம் விளைவித்துவிட்டோம். "ஸ்ட்ரைக்" என்பதே தெரியாமலிருந்த இந்த நாட்டில், இப்பொழுது

16th July 1957] [Sri B. Doraisami Reddiar]

எதையெடுத்தாலும் "ஸ்ட்ரைக்" என்ற நிலைமையைக் காண்கிறோம். அப்பொழுதெல்லாம் போலீஸ்காரர்கள் பந்தோபஸ்து செய்ய வேண்டிய அவசியம் வந்துவிடுகிறது. இது தவிர, நமது அமைச்சர்கள் எங்கு சென்றாலும் அவர்களுக்கும் போதுமான அளவில் போலீஸ்காரர்கள் உதவி செய்ய வேண்டியிருக்கிறது. இதோடுகூட, பலப் பல கிராமங்களிலிருந்து ரிபோர்ட் வருகிறது. இப்பொழுது கிராமாந்திரங்களில் கூட எதற்கெடுத்தாலும் ரிப்போர்ட் எழுதக் கூடிய மனப்பான்மை காணப்படுகிறது. முன்பெல்லாம் கிராமாந்திரங்களில் ரிப்போர்ட் எழுதுவது என்றாலே தெரியாமல் இருந்தது. ஆனால், சுயராஜ்யம் வந்த பிறகு எதற்கெடுத்தாலும் சுயராஜ்யம் என்ற எண்ணத்தில், "திருடுவதற்குக் கூட சுயராஜ்யம்" என்று சில பேர் நினைத்துக்கொண்டு தான் திருடுகிறார்கள். அம்மாதிரி திருட்டுகள் ஏற்படும்போதும், போலீஸ்காரர்கள் ஜனங்களுக்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

பொதுவாக, போலீஸ்காரர்கள் லஞ்சம் வாங்குவதகாச் சிலர் சொல்கிறார்கள். எந்த ஆபீசில் லஞ்சம் வாங்குவதில்லை என்று நான் கேட்கிறேன். ஒரு ஆபீசிலும் லஞ்சமே வாங்குவது இல்லை என்று குறிப்பிட்டு நமது மெம்பர்கள் சொல்ல முடியுமா ? எல்லா ஆபீசுகளிலும் தான் லஞ்சம் வாங்குகிறார்கள். இந்தச் சபையில் எந்த மான்யத்தை எடுத்துக் கொண்டாலும், அதில் எல்லாம் லஞ்சம் வாங்குவதாக மெம்பர்கள் சொல்வதை நாம் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறோம். போலீஸ் இலாகாவில் மட்டும்தான் லஞ்சம் வாங்குவதாகச் சொல்பவர்களுக்கு நான் சொல்கிறேன். ஜில்லா போர்டில் இருக்கும் மெம்பர்கள் கூட லஞ்சம் வாங்குவதாகவும் சொல்லப்படுகிறது. ஆகவே, லஞ்சம் வாங்குகிறார்கள் என்று பொதுவாகச் சொல்லிவிடலாம். லஞ்சம் வாங்குவதைக் கட்டுப்படுத்த வேண்டுமானால், லஞ்சம் கொடுப்பதையும் நிறுத்த வழி செய்ய வேண்டும். லஞ்சம் கொடுத்தால் தானே லஞ்சம் வாங்கப் போகிறார்கள் ? கொடுக்காவிட்டால் எப்படி வாங்க முடியும் ? எந்த இலாகாவாக இருந்தாலும், கூடுமானவரை அவர்கள் தப்பு வழியில் போகாமல் அவர்களைக் கண்காணித்துக்கொள்வது நம் கடமை என்பது தான் நம் கருத்து. அப்படியில்லாமல் "லஞ்சம் வாங்குகிறார்கள், அதைச் செய்கிறார்கள், இதைச் செய்கிறார்கள்" என்று சபையில் அங்கத்தினர்கள் மீண்டும் மீண்டும் பேசினால் அதனால் ஒன்றும் பயன் ஏற்படாது என்பது என்னுடைய கருத்து. நமது தலைவர் அவர்கள் ஐந்து நிமிஷத்திற்குமேல் பேசக்கூடாது என்று இட்ட கட்டளைக்கிணங்க என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்கின்றேன்.

Sri N. MARUDACHALAM : கனம் சபா நாயகர் அவர்களே, இந்தப் போலீஸ் மான்யத்தின் பேரில் சில விஷயங்களை நான் சபைமுன் தெரிவிக்க விரும்புகிறேன். போலீஸ்காரர்கள் சில இடங்களில் நிலச்சுவாந்தார்களுக்கும், முதலாளிகளுக்கும் உதவியாக இருந்து வேலை செய்கிறார்கள் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். அதாவது நில வாரச் சட்டம் அமுலுக்கு வந்த பிறகு, அந்தச் சட்டத்தின் மூலமாக விவசாயிகளை அப்புறப்படுத்த முயற்சி எடுக்கப்படுகிறது. அப்பொழுது விவசாயிகள் வெளியேறாவிட்டால் போலீசாரைக் கொண்டு அவர்களை வெளியேற்றுவதற்கு முதலாளிகள் முற்படுகிறார்கள். அம்மாதிரி போலீசார்கள் விவசாயிகளை வெளியேற்றுவதற்கு முதலாளிகளுக்கு உதவி செய்கிறார்கள். ஆகையால், முன்சீப் கோர்ட்டுகள் நில வாரச் சட்டத்தை அமுல் நடத்துவதற்கு இருக்கும்போது, கோர்ட்டின் வேலையைப் போலீஸ்காரரே செய்ய முன் வருகிறார்கள். போலீஸ்காரர்கள் அந்த வேலையைச் செய்யாமல் அவர்களைத் தடுப்பதற்கு அரசாங்கம் முன்வரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். 10-49 a.m.

இரண்டாவது, கோவையிலுள்ள முனிசிபல் தொழிலாளிகள் காலையிலிருந்து மாலை வரை வேலை செய்துவிட்டு, மாலையில் வீடு போய்ச் சேருவார்கள். பெண்டு பிள்ளைகளோடு இரவில் தூங்கும்போது, போலீஸ்காரர்கள் 11 மணிக்குச் சென்று, அவர்களைக் கூப்பிட்டு கலாட்டா செய்கிறார்கள். "இப்படி ஏன் செய்கிறீர்கள் என்று போலீஸ்காரர்களைக் கேட்டால்" அவர்கள் சாராயம் குடித்து இருக்கிறார்கள். அவர்களைப் பிடித்துக் கொண்டு

போகிறோம் " என்று சொல்லுகிறார்கள். ஆனால் போலீஸ்காரர்கள் சாரா யம் காய்ச்சுபவர்களுக்குப் பாதுகாப்பாக, யார் சாராயம் காய்ச்சுகிறவர்களைக் கண்டிக்கிறார்களோ அவர்களைச் சாராயம் குடித்தவர்கள் என்று பிடித்துப் போய் தண்டிக்கிறார்கள். இது மிகவும் வருந்தத்தக்க விஷயம். இந்த மாதிரியான போலீஸ்காரர்களை அரசாங்கம் கடுமையாகத் தண்டிக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதோடு கூட இன்று வால்பாடி தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் கவர்ன்மெண்டார் போட்ட உத்திரவுப்படி முதலாளி ட்ரைபார்டி கமிட்டி அமைக்கவேண்டுமென்று கேட்டார்கள். அதற்காக போலீஸ்காரர்கள் அவர் கள் பேரில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். அதனால் மூன்று நான்கு தொழிலாளர்கள் இறந்திருக்கிறார்கள். அந்த தொழிலாளர்கள் இறந்தது குறித்து பாரபட்மற்ற விசாரணை நடத்தப்படவேண்டும், ஒரு விசாரணைக் கோர்ட்டு அமைக்கவேண்டுமென்று தொழிற்சங்கங்களும், தொழிற்சங்க உப தலைவர் பார்வதி கிருஷ்ணனும் நிர்ப்பந்தப்படுத்தியதின் விளைவாக ஒரு விசாரணைக் கோர்ட்டை ஏற்படுத்தினார்கள். ஆனால் அதனுடைய தீர்ப்பு என்ன ஆயிற்று என்பது இன்னமும் அறிவிக்கப்படவில்லை. அது யாருக்குச் சாதகமாக இருக்கும் ? அரசாங்கத்திற்குதான் சாதகமாக இருக்கும். அந்த விசாரணைக் கோர்ட்டில் பொது ஜனப் பிரதிநிதிகள் இருந்திருந்தால் இவ்வளவு நேரம் அந்தக் கோர்டினுடைய அறிக்கை வெளிவந்திருக்கும். ஆனால் இன்னமும் அது வெளி வரவில்லை. பொதுவாக போலீஸ்காரர் கள் மேல் தொழிலாளர்கள் கல்லை விட்டெறிந்தார்கள். அதனால் துப் பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது என்று சொல்லப்படுகிறது. அப்படி யானால் எந்தப் போலீஸ்காரர்களுக்காவது காயம் ஏற்பட்டதா ? ஆஸ்பத் திரியில் சேர்க்கப்பட்டார்களா ? என்றால் அப்படிப்பட்ட நிகழ்ச்சி ஒன்றும் இல்லை. தொழிலாளர்களைச் சுட்டுக் கொன்றதும் இல்லாமல் அவர்கள் மேல் இப்படி நியாயமற்ற குற்றச்சாட்டை சுமத்துவது முறையாகாது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். அதோடு கூட கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த வர்கள் 600, 700 பேர்கள் காங்கிரஸில் சேர்ந்துவிட்டார்கள் என்றும், அதனா லேயே ஆத்திரப்பட்ட பெரிய அரசியல் தலைவர்கள் எல்லாம் கொலை செய்யப்படுகிறார்கள் என்றும் பொய்யான பிரசாரத்தையும் பரப்புவது முறையாகாது. இவைகள் எல்லாம் அபத்தமானது. சுத்தப் பொய்.

Sri A. A. RASHEED : கனம் அங்கத்தினர் " பொய் " என்ற வார்த்தையை சட்டசபையில் உபயோகிப்பது பொருந்துமா ?

Mr. SPEAKER : கனம் அங்கத்தினர் பொய் என்ற வார்த்தையை உபயோகப்படுத்தக்கூடாது.

Sri N. MARUDACHALAM : அப்படியானால் அதை வாபஸ் பெறுகிறேன். அது தவறான பிரசாரம் ஆகும். இந்த மாதிரியாகப் பிரசாரம் செய்வது கூடாது என்று கேட்டுக் கொள்வதோடு, அந்த விசாரணைக் கோர்ட்டினுடைய அறிக்கையை, தீர்ப்பை சர்க்கார் உடனடியாக வெளியிட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

10-54 a.m. Sri S. R. MUNUSAMI : கனம் சபாநாயகர் அவர்களே, நமது போலீஸ் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியக் கோரிக் கையை நான் முழு மனதுடன் ஆதரிக்கிறேன். போலீஸ் இலாகாவிலே எங்களுடைய தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் நிறைய பேர் சேவை செய் கிறார்கள். ஆனால் அவர்களுடைய நிலைமை எவ்வாறு இருக்கிறதென்பதை நாம் யோசிக்கவேண்டும்.

நாட்டுப்புறங்களிலே கால் நடைகளைக் கட்டுவதற்கு ஒரு தாழ்வாரமும், வைக்கோல் போட்டுக் கொள்வதற்கு ஒரு அறையும் உள்ளதாகக் கொட்டகை கட்டுவார்கள். அப்படி இன்றையதினம் தாழ்த்தப்பட்ட போலீஸ்காரர்கள் வசிக்கின்ற இடங்களில் ஒரு அறையும் ஒரு தாழ்வாரமும்தான் கொடுக்கி றார்கள். இவ்வளவு சுகாதாரக் கேடான ஒரு இடத்தில்தான் அவர்கள் வசிக்கிறார்கள். அதுவும் இரண்டு மூன்று குழந்தைகளைப் பெற்றுவிட்டால்

அந்தச் சிறிய இடத்தில் எப்படிக் குடும்பம் நடத்தமுடியும் என்பதைச் சர்க்கார் யோசிக்கவேண்டும். வாழ்க்கை வசதிகள் அவர்களுக்கு இல்லவே இல்லை. அவர்களுக்கு நல்ல ஆரோக்கியமான வீடுகள் கட்டித் தரப்பட வேண்டும்.

மேலும் அவர்களுடைய குழந்தைகள் படிக்கவேண்டுமென்றால் ஏதோ ஓரளவு ஏழாவது வரையில் படிக்க முடியும். அதற்குமேல் படிக்க வைக்க அந்தப் போலீஸ்காரர்களுக்கு எவ்வித வசதியும் கிடையாது. அதோடு அடிக்கடி அவர்களை வெளியூர்களுக்கு மாற்றிவிடுகிறபடியால் குழந்தைகளை ஓரிடத்தில் இருந்து படிக்கவைக்க முடியுமா ? குடும்பத்தைப் பராமரிக்க முடியுமா ? தன் உத்தியோகத்தை எண்ணி அவன் ஓட முடியுமா என்பதை யோசிக்கவேண்டும். குறிப்பாக இன்றையதினம் கீழ்த்தரத்திலுள்ள உத்தியோகஸ்தர்கள், போலீஸ்காரர்கள் எது செய்தாலும் அது மேலதிகாரிகளுக்கு குற்றமாகவே படுகிறது. இவர்கள் நின்றாலும் குற்றம், உட்கார்ந்தாலும் குற்றம், " நான் கஷ்டப்படுகிறேனே, என்னை மாற்றுதீர்கள் " என்று சொன்னாலும் குற்றம் என்றால் அவர்கள் எப்படி அமைதியாக, நிம்மதியாக தங்கள் குடும்பத்தையும் பாதுகாத்துக்கொண்டு வேலை செய்ய முடியும் என்று கேட்கிறேன். இந்த நிலைமையில் அவர்கள் சித்திரவதை செய்யப்படுகிறார்கள். குறிப்பாக வட ஆற்காடு ஜில்லாவிலே நான் இரண்டு மூன்று கேஸ்கள் சம்பந்தமாக மேலதிகாரிகளை நானே சந்தித்துப் பேசினேன். ஒரு தாழ்த்தப்பட்ட மகன், ஐந்தாறு குழந்தைகளைப் பெற்றவன், ஏதோ சப்-இன்ஸ்பெக்டர் பேசும்போது குறுக்கே பேசினான் என்பதற்காக அந்த ஊரைவிட்டு மாற்றப்பட்டான். " இப்படிச் செய்வது நியாயமா ? அவன் குழந்தைகள் உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு பிள்ளை ஹாஸ்டலில் இருக்கிறது. அங்கும் அதற்கு போதுமான வசதி இல்லை. இப்படி மாற்றுவது சரியில்லை " என்று சொன்னபோது " ரூல் என்றால் ரூல் தான். நான் ஒன்றும் செய்ய முடியாது. மாற்றினால் மாற்றியதுதான் " என்று கடுமையாகச் சொல்லி விட்டார்.

இப்படி கீழே உள்ள உத்தியோகஸ்தர்கள் நின்றாலும் குற்றம், உட்கார்ந்தாலும் குற்றம், பேசினாலும் குற்றம் என எண்ணி அவர்களுக்குத் தொந்தரவு மேல் அதிகாரிகளினாலே விளையுமானால் மிகவும் அநியாயமாகும். இதில் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தாற்போல போலீஸ்காரர்கள் வெளியே போனால் யாரையாவது எந்தக் குற்றத்தையாவது சாட்டி பிடித்துக் கொண்டுவர வேண்டும் என்ற நிபந்தனையும் ஒன்று உண்டு என்கிறார்கள். யாரையும் பிடித்துக்கொண்டு வராவிட்டால் " போடா, எங்காவது தூங்கி வந்திருப்பே " எனக் கோபித்துக் கொள்கிறார்கள். மேல் அதிகாரிகள் யாரையாவது பிடித்து வரவேண்டும் என்பதற்காக ஏதோ ஒரு திட்டம் போட்டுக்கொண்டு வேலை செய்கிறார்கள். அப்படியானால் யாரைப் பிடிப்பது ? பணக்காரர்களைப் பிடிக்க முடியாது. கொஞ்சம் ரௌடியாக இருக்கிறவர்களிடத்திலும் இவர்கள் ஜம்பம் சாயுமா. எங்களைப் போன்ற அப்பாவிகளை, தாழ்த்தப்பட்ட மக்களைப் பிடித்துக் கொண்டுபோய்விடுகிறார்கள். கேட்டால் சந்தேகக் கேஸ் என்கிறார்கள். அல்லது முக்காடு கேஸ் போட்டேன் என்று சொல்கிறார்கள். இப்படி தாழ்த்தப்பட்ட மக்கள் குற்றவாளியாக்கப்படுகிறார்கள். குற்ற பரம்பரையினர், கள்ளர்கள் என்ற சாதியினரையே, போலீசார் ஏற்படுத்தி விட்டார்கள். இதைச் சர்க்கார் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மதுவிலக்கு கேஸ் என்றால் அடிக்கடி தாழ்த்தப்பட்ட மக்களைத் தான் பிடித்துப் போய்விடுகிறார்கள். மற்றவர்களிடம் போவது கிடையாது. இதைப்பற்றியும் அமைச்சர் அவர்கள் விசாரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். கீழ்த்தர உத்தியோகஸ்தர்களுடைய வாழ்க்கை நிலை உயரவேண்டும் என்றால் அவர்களுடைய சம்பளத்தை உயர்த்தவேண்டும். அவர்களுக்கு தற்பொழுது கிடைக்கும் குறைந்த சம்பளத்தைக் கொண்டு அவர்களுடைய குழந்தைகளை வளர்க்க முடியவில்லை. இருபத்தைந்து வருஷங்கள் கழித்து 'ரிடயர்' ஆனாலும் போலீஸ்காரராகவே தான்

[Sri S. R. Munusami] [16th July 1957

வெளியே வர வேண்டியிருக்கிறது. அவர்களுடைய அனுபவத்திற்குத் தகுந்த மாதிரி அவர்களுடைய உத்தியோகத்தை உயர்த்த வேண்டும். போலீஸ் உத்தியோகத்தில் சேரவேண்டுமானால் 8-வது படிப்பு வேண்டும் என்று சொல்கிறார்கள். வெள்ளைக்காரர் ஆட்சி காலத்தின் சர்க்கார் கோருவதுபோல் இவர்கள் படித்திருக்கிறார்களா? 8-வது வரை படித்தால்தான் உத்தியோகம் என்று சொல்வது சரியல்ல. இன்றைக்கு நம்முடைய நாடு சுதந்திரமடைந்து விட்டது. ஆகையால் போலீஸ் உத்தியோகத்திற்கு 6-வது வரை படித்தால் போதும் என்று சட்டத்தை திருத்தி அமைக்க வேண்டும். இந்த உத்தியோகத்தில் 11—12 வருஷங்கள் சர்வீஸ் செய்த பிறகும் இவர்கள் 'கன்பர்ம்' ஆகாமல் 'ஆக்டிங்' ஆகவே வேலை பார்த்து வருகிறார்கள். இவர்களை அடிக்கடி உத்தியோகத்திலிருந்து எடுத்துவிடுகிறார்கள். அதனால் அவர்களுடைய குடும்பம் எவ்வளவு கஷ்டப்படுகிறது என்பதை சர்க்கார் யோசித்துப் பார்த்து தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

11-02 a.m. **SRI A. V. P. PERIYAVALAGURUVA REDDI** : கனம் தலைவர் அவர்களே, போலீஸ் மான்யத்தைக் குறித்து சில வார்த்தைகளை பேச விரும்புகிறேன்.

**MR. SPEAKER** : இன்னும் இரண்டு, மூன்று பேர் பேச வேண்டி யிருப்பதால், ஐந்து நிமிஷங்கள் பேசினால் நன்றாக இருக்கும்.

**SRI A. V. P. PERIYAVALAGURUVA REDDI** : வெள்ளையர் காலத்தில் போலீஸ் டிபார்ட்மெண்ட் என்றால் சர்க்கில்-இன்ஸ்பெக்டரோடு சரி என்ற நிலைமை கிராம மக்களிடையே இருந்தது. இப்போது ஒரு போலீஸ் டி.எஸ்.பி தப்பு செய்தால் மந்திரி வரை வருவதற்கு அவர்களுக்கு பாதை தெரிந்துவிட்டது. போலீஸ் டிபார்ட்மெண்டில் இருக்கும் அதிகாரிகள் அவர்களுடைய கடமைகளை நன்றாகத்தான் செய்கிறார்கள், பயந்துதான் நடக்கிறார்கள். ஆனால் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் அவர்களுடைய அன்றாட அலுவல்களிலே ஈடுபடுவதினால் அவர்களுடைய கடமைகளை சரிவர செய்ய முடியாமல் போகிறது. ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் சொல்வது போல் செய்யாவிட்டால் அந்த சப்-இன்ஸ்பெக்டரை மாற்றுவதற்கு மேலதிகாரிகளிடம் சென்று புகார் செய்கிறார்கள். ஏ.டி.எஸ்.பி., டி.எஸ்.பி. போன்ற மேலதிகாரிகளும் பயந்து அந்த சப்-இன்ஸ்பெக்டரை வேறு இடத்திற்கு மாற்றிவிடுகிறார்கள். எனக்கு சட்டம் அவ்வளவு நன்றாகத் தெரியாது. எனக்குத் தெரிந்த வரையில் ஒரு அதிகாரியை ஓர் இடத்தில் மூன்று வருஷங்களுக்கு வேலை பார்ப்பதற்கு அனுமதிப்பார்கள். ஒரு மாதத்தில் இரண்டு அல்லது மூன்று பேர்களை மாற்றி இருக்கிறார்கள். என்னுடைய கிராமமாகிய கள்ளக்குடியில் ஒரு சப்-இன்ஸ்பெக்டர் இருக்கிறார். ஓர் இடத்தில் 50 அல்லது 100 பேர்கள் சீட்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள். அந்த சப்-இன்ஸ்பெக்டர் அவர்களை மடக்கி பிடித்துக்கொண்டு வந்துவிட்டார். ஊரில் உள்ள சிலர் என்னைப் பார்த்து "ஊரில் பெரிய மனிதராக இருக்கிறீர்களே, எம்.எல்.ஏ. ஆக இருக்கிறீர்களே, சப்-இன்ஸ்பெக்டரிடம் போய் இவர்களை ஜாமீனில் விடுதலை செய்வதற்கு முயற்சிக்கவேண்டும்" என்று என்னிடம் சொன்னார்கள். நானும் சப்-இன்ஸ்பெக்டரிடம் சென்று இந்த விஷயத்தைப்பற்றி சொன்னேன. இவர்களை நல்ல முறையில் திருத்த வேண்டுமானால் இவர்களை விடுதலை செய்வது கூடாது என்றும் இந்த விஷயத்தில் தலையிடுவது சரியில்லை என்றும் சொன்னார். நானும் சரி என்று சொல்லி வந்துவிட்டேன். ஆகையால் நாம் அவர்கள் அன்றாட அலுவல்களில் தலையிடாமலிருந்தால் அவர்கள் சரியானபடி வேலைசெய்ய சௌகரியமாய் இருக்கும். போலீஸ் என்பது நெருப்பைப் போன்றது. நெருப்பை வைத்துக்கொண்டு சமையல் செய்து சாப்பிடலாம். ஆனால் அதை தலைமேல் வைத்துக்கொண்டால் நாம் செத்து சாம்பலாகிவிட வேண்டியதுதான் (சிரிப்பு). மக்கள் நேர்மையாக நடந்துகொள்ள வேண்டும். போலீஸ்காரர்களை அடிக்கடி மாற்றக்கூடாது. ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்ற வேண்டுமானால் அவர்கள் என்ன செய்தார்கள் என்பதை பரிசீலித்துதான் மாற்றவேண்டும்.

அடுத்தபடியாக இப்போது இங்கு தமிழ் நாட்டிலே ஏதாவது ஒரு தொழில் தகராறு வந்தால் கண்ணீர் புகை பிரயோகிப்பதற்கு மேல் நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் இல்லை. அப்படி இருந்தும் கூட மலபார் ஸ்பெஷல் போலீஸாரை உபயோகித்து, வெள்ளையர் காலத்தில் செய்தது போல், கொடுமைப்படுத்துகிறார்கள். அந்த மாதிரி நிலைமையும் இப்பொழுது இல்லை. அவர்கள் அடித்தால் அடி வாங்குவதற்கு சக்தி உள்ளவர்களும் இப்போது இல்லை. மலபார் போலீஸும் தேவை இல்லை. ரிஸர்வ் போலீஸே போதும். அவர்களிடத்தில் கண்ணீர் புகை இருக்கிறது. 'மெஷின் கன்,' 'ரைபில்' போன்றவைகள் இருக்கின்றன. ஒரு தடவை துப்பாக்கியை காட்டினாலே எல்லோரும் ஓடி விடுவார்கள். அப்புறம் அந்த இடத்திலே அதிகாரிகள்தான் இருப்பார்கள். ஆகையால் இவர்களுக்கு செலவு செய்யும் பணத்தை எடுத்து குறைந்த சம்பளம் வாங்கும் போலீஸ்காரர்களுக்கு கொடுத்தால் நன்றாக இருக்கும். எங்கள் கிராமத்தில் குடியிருப்பதற்கு வீடு வேண்டும் என்றால் குறைந்தது 15 ரூபாய் கொடுக்க வேண்டும். போலீஸ்காரர்களுக்கு சர்க்கார் வீடு கட்டிக் கொடுக்க வேண்டும். இவர்களுக்கு 12 அணா படி கொடுக்கப்படுகிறது. இந்தப் படி எதற்குப் போதும். இவர்களுக்கு செலவுக்கு தகுந்தபடி படி கொடுக்க வேண்டும். சார்ஜன்ட், சார்ஜன்ட் மேஜர் இவர்கள் வீடுகளில் எலக்டிரிக் விளக்குகள் இருப்பதைப் பார்த்திருக்கிறேன். ஆனால் போலீஸ்காரர்கள் வீட்டிலோ இந்த லைட் இல்லாமல் ரொம்பவும் இருட்டாக இருக்கிறது. யுத்த காலத்தில் இப்படித்தான் இருக்கும். ஆனால் இப்போது யுத்தம் ஒன்றும் இல்லை. வீடுகளுக்கு லைட் போடுவதற்கு முடியாவிட்டாலும், தெருக்களுக்காவது, லைன்களுக்காவது லைட் போடும்படியாக கேட்டுக்கொள்கிறேன்.

நாம் எல்லோரும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு சட்ட சபைக்கு வந்திருக்கிறோம். எல்லா கட்சிகளைச் சேர்ந்தவர்களும் நல்ல முறையில் விவாதத்தை நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதைப் பற்றி தலைவர் அவர்களும் அடிக்கடி கூறி வருகிறார்கள்.

நேற்று பலர் வெள்ளையர்களின் சிலையை அகற்ற வேண்டும் என்று பேசினார்கள். ஆனால் ஆங்கில மொழியில் பேசினார்கள். தமிழில் பேசவில்லை. எனக்கு ஆங்கிலம் பேசத் தெரியாது. ஆனால் ஓரளவு புரிந்து கொள்ள முடியும். ஆகையால் எல்லோரும் தமிழிலேயே பேசுவார்களானால் என்னைப் போன்றவர்களுக்கு மிகவும் உபயோகமாயிருக்கும். அதன் மூலம் இங்கு நடக்கும் விவாதங்களையும் விவரங்களையும் நன்கு புரிந்துகொள்ள முடியும். ஆகவே எல்லோரும் தமிழிலேயே பேச வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

**Sri P. VEDAMANICKAM:** தலைவர் அவர்களே, இன்று நமது அமைச்சர் கொண்டு வந்த போலீஸ் இலாகா மான்யக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஒரு நாட்டில் அமைதியும் பாதுகாப்பும் இருப்பதற்கு போலீஸ் இலாகா மிகவும் அவசியம். போலீஸ் இலாகா இல்லாவிட்டால் உண்மையாக அமைதி இருக்க முடியாது. சாதாரணமாக நாம் சினிமாவுக்கோ அல்லது கண்காட்சிக்கோ சென்றால் அங்கு ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு போலீஸ் உதவி தேவையாயிருப்பதைப் பார்க்கிறோம். இந்த "ஸிடி" யில் ஒவ்வொரு காரியத்திற்கும் போலீஸ் இருக்கவேண்டியது அவசியமாக இருக்கிறது. நாட்டில் அமைதியைப் பாதுகாக்க போலீஸ் இலாகா தேவையாக இருக்கிறது. சாதாரணமாக "வேலியே பயிரை மேய்வது போல்" என்று ஒரு பழமொழி இருக்கிறது. அதுபோல் கீழ்த்தர உத்தியோகத்திலிருக்கும் சிலர் லஞ்சம் வாங்குகிறார்கள். இதை யாரும் மறுக்க முடியாது. அதற்கு காரணம் அவர்களுடைய வறுமைதான். அவர்களுக்கு மாதச் சம்பளம் 30 ரூபாய்தான். அவர்கள் பெரிய குடும்பஸ்தர்கள். நாகரீகத்தில் இருக்கிறவர்கள், நன்றாக உடை உடுத்து "டிப் டாப்" ஆக இருக்கவேண்டும். மற்ற உத்தியோகஸ்தர்களைப் போல் அவர்களுக்கும் சம்பளத்தை உயர்த்தவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். 11-08 a.m.

[Sri P. Vedamanickam] [16th July 1957

அதோடு ஒலி பெருக்கி வைப்பதற்கு லைசென்ஸ் தேவையாக இருக்கிறது. இதற்காக "கெஜட்ட் ஆபீசரிடம்" கையெழுத்து பெறவேண்டும். அதற்குரிய தொகையை தாலூகா கஜானாவில் கட்டவேண்டும். சிறிய கிராமங்கள் வெகு தூரத்தில் இருப்பதால் இதில் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. குறிப்பிட்ட காலத்தில் லைசென்ஸ் பெற முடிவதில்லை. ஸப்-இன்ஸ்பெக்டர் போன்ற போலீஸ் அதிகாரிகள் லைசென்ஸ் வழங்க சர்க்கார் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

போலீஸில் சப்-இன்ஸ்பெக்டர்களை நியமிப்பதில் "பிரமோஷன்" செய்வதைவிட நேரிடையாக எடுப்பதே சிறந்தது. ஏனென்றால் கீழ்த்தர உத்தியோகஸ்தர்கள் லஞ்சம் வாங்கும் பழக்கத்தை உடையவர்களாக இருப்பதால் இதை சர்க்காரே நேரிடையாக எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

1-10 a.m. * **Sri K. ANBAZHAGAN** : கனம் அவை தலைவர் அவர்களே, போலீஸ் துறையினருக்கு அளிக்க வேண்டிய மானியத்தில் சிறிது வெட்டவேண்டும் என்ற பிரேரேபணையின் மீது நான் இப்போது பேச விரும்புகிறேன்.

'போலீஸ் துறையினர் நாட்டின் பாதுகாப்பிற்கும் பொதுமக்களுடைய நன்மைக்கும் மிக மிக இன்றியமையாதவர்கள்' என்ற கருத்தை இன்று அல்ல, இன்றைய தினம் ஆட்சி பீடத்தில் ஏறியுள்ளவர்கள் 'போலீஸ் துறையினர் கொடுமையாக நடந்துகொள்கிறார்கள்' என்று குற்றம் சாட்டிய காலத்திலிருந்தே நாங்கள் தெரிவித்து வந்திருக்கிறோம். அந்த அளவிற்கு போலீஸ் துறையை மதிக்கின்ற நாங்கள் அந்தத் துறையைக் குறித்துக் குறைகளை எடுத்துச்சொல்ல முன்வருவோமேயானால், அப்போது எங்கள் நோக்கைத் தவறாகக் கருதாமல், நாங்கள் கூறுவதைக் கேட்டு, அந்த் துறையிலுள்ள குற்றங்களை நீக்குவதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

பொதுவாகவே, போலீஸ்காரர்கள் 'நாம் ஆளும் கட்சியின் சார்பில் இருந்தால் நன்மை அடையலாம்' என்று எதிர்பார்க்கக்கூடுமே தவிர 'ஆளும் கட்சியின் எதிர் கட்சியின் சார்பில் நாம் இருந்தால் நன்மை அடையலாம்' என்று எதிர்பார்க்கிறார்கள் என்று சொல்வதோ அல்லது அப்படி எதிர்பார்த்து நன்மை அடைகிறார்கள் என்று கருதுவதோ உண்மைக்குப் புறம்பானது என்று கூற விரும்புகிறேன்.

சென்ற தேர்தலின்போது போலீஸார் ஆளும் கட்சிக்கு சாதகமாக நடந்துகொண்டார்கள் என்பதற்கு உதாரணமாக ஒரு சம்பவத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். தேர்தல் காலத்தில் காஞ்சீபுரத்திற்குப் பக்கத்திலுள்ள பிள்ளைசத்திரத்தில் ஒரு சம்பவம் நடந்தது. ஸ்ரீபெரும்புதூர் தேர்தலில் அமைச்சர் அவர்களை எதிர்த்து நின்ற ஒரு சாதாரணத் தோழர் பிள்ளைசத்திரத்தில் காரில் சென்று கொண்டிருந்தபோது, அவரது கார் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களால் மறிக்கப்பட்டது. அந்த அபேட்சகர் இதைக் குறித்து போலீஸாருக்கு மனுச் செய்துகொண்டார். ஆனால் ஆளும் கட்சியினருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்குத் துணிவு வராததாலோ என்னமோ, அந்த மனுவின் மீது போலீஸார் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. மனு அனுப்பியதற்குப் பிறகும் அந்த இடத்திற்கு அந்த அபேட்சகர் மறுபடியும் சென்றபோதும் அவரை ஆளும் கட்சியினர் வழி மறித்தனர். அதன் விளைவாக அப்போது ஆளும் கட்சியினரும் எதிர் கட்சியினரும் அங்கே ஒருவரை யொருவர் தாக்கும் நிலைமை ஏற்பட்டது என்பதை வருத்தத்தோடு இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இங்குள்ள கனம் போலீஸ் அமைச்சர் அவர்களே அந்தத் தொகுதியில் தேர்தலுக்கு நின்றார்கள் என்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

முக்கியமாக போலீஸாரிடம் குற்றம் குறை இருக்கக்கூடாது என்று நாங்கள் சொல்வதற்குக் காரணம், குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் பொறுப்பு அவர்களுடையதாக இருக்கிறது என்பதுதான். குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பது லஞ்ச லாவண்யத்தை ஒழிப்பது, சாராயம் காய்ச்சுவதை

தடுப்பது, சூதாடுபவர்களைப் பிடிப்பது ஆகிய காரியங்களைச் செய்யும் பொறுப்பு போலீஸாருக்கு இருக்கும்போது, போலீஸார் கொஞ்சம்கூடத் தவறு செய்யக்கூடாது, போலீஸாரில் சிலர் தவறு செய்தாலும், அது எல்லாப் போலீஸாருக்கும் இழுக்காகவும், ஆட்சியாளர்கள் மதிப்பைக் குறைப்பதாகவும் இருக்கும் என்று கூற விரும்புகிறேன். போலீஸார் தவறு செய்தால் மற்றவர்களிடத்திலும் தவறுகள் பெருகுவதற்கு அது காரணமாக ஆகிறது. சில நாட்களுக்கு முன்பு கனம் அமைச்சர் அவர்கள் பேசும்போது, " குற்றவாளிகளில் 100க்கு 99 பேர் விடுவிக்கப்பட்டாலும் விடுவிக்கப்படலாமே தவிர, குற்றம் செய்யாத யாரும் தண்டிக்கப்படக் கூடாது. அதுதான் நீதி " என்று கூறினார்கள். அந்த நியதி பொது மக்கள் விஷயத்திலே இருக்கலாமே தவிர, அதிகாரத்தில் உள்ளவர்கள் விஷயத்தில் அந்த நியதி கூடாது. கனம் அமைச்சர் அவர்கள், தமது சட்டையில் ஒரு சிறு அழுக்குப் படிந்தாலும் அதைக் களைந்துவிடுவது போல, ஆட்சி பீடத்திற்குத் துணையாக இருக்கும் போலீஸ் அதிகாரிகள் சிறு தவறு செய்தாலும் அவர்களை வேலையிலிருந்து நீக்கிவிட வேண்டும். அப்படிச் செய்வதுதான் நல்ல அமைச்சு; நல்ல ஆட்சி. அந்த மாதிரி இந்த ஆட்சி நடந்துகொண்டிருக்கிறதா என்று கேட்டால், 'இல்லை, இல்லை, இல்லை' என்ற பதிலைத்தான் வலியுறுத்திச் சொல்வேன். 'அதிகாரிகள் தவறு செய்திருக்கிறார்கள் என்று நிரூபிக்க முடியுமா?' என்று கேட்டால், 'அப்படி நிரூபிக்கத் தேவை இல்லை' என்று கூட நான் சொல்வேன். அதிகாரிகள் தவறு செய்திருக்கிறார்கள் என்று தொடர்ந்து பல குற்றச்சாட்டுகள் வரும்போது—அலை மோதுகின்ற மாதிரி ஒன்றன்பின் ஒன்றாகக் குற்றச்சாட்டுகள் வரும்போது— அவர்களை வேலையிலிருந்து நீக்கியே, 'அரசாங்கம் தவறு செய்யவில்லை' என்பதை இந்த அரசாங்கம் மக்களுக்கு நிரூபித்துக் காட்ட வேண்டும். அதிகாரிகளில் குற்றம் சாட்டப்பட்டுக்கு ஆளானவர்கள் அத்தனைபேரும் நீக்கப்படவேண்டும். 100-க்கு ஒருவர் நல்லவரே. அதிகாரிகள் தண்டிக்கப்பட நேர்ந்தாலும் ஒரு குற்றவாளிகூட விட்டுவைக்கப்படக்கூடாது. அப்பொழுதுதான் நிர்வாகத்தை நன்றாக நடத்தலாம். குற்றமற்ற அதிகாரிகளை மட்டும் வைத்துக்கொண்டாலும், அவர்கள் எல்லோரும் நேர்மையானவர்களாக இருந்தால் நிர்வாகத்தை நன்றாக நடத்தலாம்.

எதிர்கட்சியைச் சார்ந்த ஒரு கனம் அங்கத்தினர் குறிப்பிட்டது போல, சென்னை நகரில் பருத்தி சூதாட்டத் தடுப்பும், மதுவிலக்குச் சட்டமும் மிகச் செம்மையாக அமல் நடத்தப்பட்டு வருகின்றன என்று கனம்மந்திரி அவர்கள் கனம் அமைச்சரவர்களை பாராட்டும் இந்நேரத்தில் அவைகளைக் கடுமையாக அமல் நடத்தும் அதிகாரிகள் சென்னையை விட்டு மாற்றப்படுகிறார்கள் என்ற செய்தியை நான் அறிகிறேன். இம்மாதிரி, பொறுப்புணர்ச்சியுடன் உண்மையாகப் பணியாற்றிவரும் அதிகாரிகளை மேலதிகாரிகள் உடனே வேறு இடங்களுக்கு மாற்றிவிடுகிறார்கள். ஆட்சி பீடத்திற்குத் துணையாக இருக்க வேண்டிய ஆட்சிபீடத்திற்கு அடுத்த ஸ்தானத்தில் இருக்கும் அதிகாரிகள் இப்படிப்பட்ட தவறுகளைச் செய்தால், இவைகளின் விளைவாக எவ்வளவு பெரிய தீமைகள் ஏற்படும் என்று நாம் சிந்திக்கவேண்டும்.

அது மட்டுமல்ல. போலீஸ் இலாகாவில் திறமையும் தகுதியும் உடையவர்களுக்கு உத்தியோக உயர்வு கிடைப்பதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. மேலதிகாரிகளுக்கு தனிவகையில் உதவிகள் செய்து அவர்களைத் திருப்தி செய்யும் அதிகாரிகளுக்குத்தான், அவர்கள் திறமையும் தகுதியும் இல்லாதவர்களாக இருந்தாலும், உத்தியோக உயர்வு கொடுக்கப்படுகிறது என்று தெரிகிறது. உண்மையில் திறமையும் தகுதியும் உள்ளவர்களுக்கும் நேர்மையானவர்களுக்கும் உத்தியோக உயர்வு எளிதில் கொடுக்கப்படுவதில்லை என்று தெரிகிறது. இதை நான் குற்றமாகவே சொல்கிறேன்; அஞ்சியோ அடங்கியோ சொல்லவில்லை. ஆகவே, ஒரு குழுவை நியமித்து, போலீஸ் இலாகா அதிகாரிகளின் 'ரெகார்ட் ஆப் ஸர்விஸ்'-ஐ பரிசீலனை செய்து, திறமையும் தகுதியும் உள்ளவர்களுக்கும் உத்தியோக உயர்வு கொடுக்க வேண்டும். அப்படி ஒரு குழுவை நியமிக்கும்போது போலீஸ் இலாகா அதிகாரிகளைத் தவிர தனிப்பட்ட அதிகாரிகளையும் அதில் அங்கத்தினர்களாக நியமிக்கவேண்டும். இந்தக் குழுவின் மூலம் எல்லா

அதிகாரிகளுடைய உத்தியோக வரலாற்றையும் கவனித்து, தகுதியும் திறமையும் இருந்து புறக்கணிக்கப்பட்டவர்களுக்கு முதலில் உத்தியோக உயர்வு கொடுக்கவேண்டும்.

மேலும், போலீஸ் இலாகாவில் மிக உயர்ந்த அதிகாரியாகஉள்ளவரே கீழ் அதிகாரிகளுக்கு உத்தியோக உயர்வு கொடுக்கப்படவேண்டுமானால் அவர்களிட மிருந்து தம்க்கு லாபம் எதிர்பார்க்கிறார் என்றும் அறிகிறேன். போலீஸ் துறையில் இத்தகைய நிலைமை இருப்பது மிக மிக வருந்தத்தக்க விஷயம். இந்தக் குற்றச்சாட்டு நாட்டில் நடமாடி வருகிறது. இந்த நிலைமை இருந் தால் நாடு-காவல் ஒழுங்காக நடக்காது. போலீஸ் துறையில் உள்ள மிக உயர்ந்த அதிகாரிகளே தவறு செய்தால், பொதுமக்களுக்கு 'நாமும் தவறு செய்யலாமே' என்ற மனப்பான்மை ஏற்படுகிறது. சாதாரணமாக, மதுவிலக்குச் சட்டத்தை மீறும் குற்றங்களையும், பருத்தி சூதாட்டக் குற்றத் தையும் செய்பவர்கள் "போலீஸாரை "சரிக்கட்டி விடலாம்' " என்ற நம்பிக்கையுடன் அந்தக் குற்றங்களைச் செய்கிறார்கள். அவர்கள் 'சரிக் கட்ட' முடியாத முறையில் இன்று போலீஸ் நிர்வாகம் நடக்கவில்லை. போலீஸ் அதிகாரிகளில் பலர் நேர்மையானவர்களாக இருந்தாலும், சிலர் நேர்மையற்றவர்களாக இருக்கிறார்கள். அந்த இலாகாவிலுள்ள சில நேர்மையற்றவர்களும், கடமை உணர்ச்சியற்றவர்களும் தங்கள் இலாகா வின் மதிப்பைத் தாழ்த்துகிறார்கள்.

மேலும், சினிமாப் படம் பிடிக்கும் முதலாளிகள் நடத்தும் விருந்து களுக்கு சினிமா என்றாலே படமெடுத்தாடும் ஆளும் கட்சியைச் சேர்ந்த உயர்தரப் போலீஸ் அதிகாரிகள் செல்கிறார்கள். விருந்துக்குச் செல்லும் அதிகாரிகள் அங்கே எப்படிப்பட்ட விருந்தைப் பெறுகிறார்கள் என்பது இங்கே சொல்வதற்கில்லை. சினிமாப் பட முதலாளிகள் நடத்தும் விருந்துகள் எப்படி இருக்கும் என்று எங்களுக்குத் தெரியும், போலீஸ் அதிகாரிகளின் கடமைகளைப் பற்றியும் எங்களுக்குத் தெரியும். எனவே அப்படிப்பட்ட விருந்துகட்கு போலீஸ் அதிகாரிகள் செல்கிறார்கள் என்றால் வேறென்ன குற்றச்சாட்டு வேண்டும் ?

ஒரு போலீஸ் அதிகாரி ரெயிலில் பிரயாணம் செய்யச் சென்றபோது, தான் வண்டியில் ஏறிய பிறகு மற்றவர்கள் தன் பெட்டிக்குள் நுழைய முடியாதபடி பெட்டியின் கதவை ஸ்டேஷனில் மூடிக்கொண்ட குற்றத் திற்காக ரெயில்வே இலாகா ஜெனரல் மானேஜரால் விசாரிக்கப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இது மிகவும் வருந்தத்தக்க விஷயம். இந்த மாநில முன்னாள் கவர்னர் திரு. ஸ்ரீ பிரகாஸா அவர்கள், போலீஸ் அதிகாரி ஒருவரைப்பற்றிய குற்றச்சாட்டுகளை இந்த அரசாங்கத்திற்குத் தந்திருக்கிறார்கள். அதுபற்றி அரசாங்கம் ஏதாவது விசாரணை செய்து நடவடிக்கை எடுத்ததா என்று எங்களுக்குத் தெரியவில்லை. அதை அறிந்துகொள்வதற்குப் பொது மக்களுக்கு உரிமை இருக்கிறது என்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

மேலும், போலீஸ் இலாகாவினரைக் குறித்து சில குற்றச்சாட்டுகள் மத்திய சர்க்கார் உள் நாட்டிலாகாவிலிருந்தும் வந்துள்ளது என்று அறிகிறேன். உண்மையல்லாத எதையும் நான் இங்கே சொல்ல விரும்பவில்லை. நான் கூறு வது ஒரு வேளை உண்மையாக இல்லாமல் இருக்கலாம். அதற்கும் கனம் அமைச்சர் அவர்கள் பதில்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட போலீஸ் அதிகாரி மீது சாட்டப்பட்டுள்ள குற்றங்கள் குறித்து அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று நான் அறிய விரும்புகிறேன்.

சில போலீஸ் அதிகாரிகள் ஏராளமாகக் கடன் வாங்குகிறார்கள் ; ஆனால் அதை அரசாங்கத்திற்கு அறிவிப்பதில்லை. ஒரு அதிகாரி 10ஆயிரம் 11ஆயிரம் ரூபாய் கடன்வாங்கிய பிறகு, திருப்பிக் கட்டாத நிலையில் கோர்டில் வழக்கு நடந்து தீர்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது அரசாங்கத்திற்கு அறிவிக்கப் பட்டிருக்கவேண்டும். இப்படி ஏராளமான அளவில் கடன் வாங்கும் அதிகாரி கள் நிர்வாகத்தில் இருந்தால், நிர்வாகம் நன்றாக நடக்குமா என்று நான் ஐயுறுகிறேன். பெரிய தொகைகளைக் கடனாக வாங்கும் போலீஸ் அதி காரி ஒருவர் கடந்த நான்கு ஆண்டுகளில் சுமார் நான்கு வீடுகளைக் கட்டி

யிருக்கிறார். நான்கு வீடுகளின் மதிப்பும் ரூ. 4 லட்சம் அல்லது ஐந்து லட்சம இருக்கும். அவருடைய (மாத) வருமானமோ ரூ. 2,000—3,000 இந்நிலையில் பல லட்சக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள வீடுகளைக் கட்டுவதற்கு இவர் எப்படிப் பணம் சம்பாதித்தார் ? எல்லாமே அவருடைய மாமனார் வீட்டு சொத்துதானா, அல்லது அவரே சம்பாதித்ததா என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அந்த வீடுகளைத் திறந்து வைத்தத் திறப்பு விழாவை நடத்திவைப்பதற்கு வேண்டுமானால் கனம் அமைச்சர் அவர்கள் போயிருக்கக்கூடும், அழைப்பு வந்தால். இப்படிப்பட்ட போலீஸ் அதிகாரிகள் பிளாக் மார்க்கெட் வியாபாரிகளைத் தண்டிப்பதற்காகப் பிடிப்பார்களா ? தவறுகள் செய்யும் பணக்காரர்களைப் பிடிப்பார்களா ?

போலீஸ் இலாகாவிலுள்ள குற்றம் குறைகளை நீக்கி, அங்கே எல்லா அதிகாரிகளும் நேர்மையாக இருக்கும்படி கனம் அமைச்சர் அவர்கள் செய்ய வேண்டும். போலீஸ் இலாகா அமைச்சர் அவர்கள் அதிக அனுபவம்பெற்றவர்கள். அவர்கள் முன்பு பொது மராமத்து இலாகா அமைச்சராக இருந்தவர்கள் ; பொது மராமத்து இலாகாவிலுள்ள குற்றம் குறைகளை ஆராய்ந்து அவைகளை நீக்கும் திறமையையும் அனுபவத்தையும் பெற்றிருக்கக்கூடியவர்கள். அதன் காரணமாகத்தான் போலீஸ் இலாகா அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதோ என்று நினைக்கிறேன். போலீஸ் இலாகாவிற்கு முன்பு இருந்த அமைச்சர் அவர்கள் அவ்வளவு அனுபவம் இல்லாதவர்கள். போலீஸ் இலாகாவின் இப்போதைய அமைச்சர் அவர்கள் தமது மிகுந்த அனுபவத்தினால் அந்த இலாகாவை நன்றாக சீர்திருத்துவார்கள் என்று நம்புகிறேன். முக்கியமாகப் போலீஸ் இலாகாவிலுள்ள குற்றங்களும் குறைகளும் நீக்கப்பட்டாலொழிய, எதிர் கட்சியினருக்கும் பொதுமக்களுக்கும் இந்த ஆட்சியிடம் நம்பிக்கை ஏற்படாது.

கீழ்த்தரப் போலீஸ் உத்தியோகஸ்தர்கள் சிறு தவறுகள் செய்தாலும் அவர்களுக்குக் கடும் தண்டனைகள் கொடுக்கப்படுகின்றன. ஏதோ இரக்கத்தினால் ஒரு போலீஸ்காரருக்கு யாராவது எட்டணாவோ ஒரு ரூபாயோ கொடுத்ததாக அறிந்தாலும், அந்த ஊழியருக்கு மேலதிகாரிகள் கடும் தண்டனை கொடுக்கிறார்கள். முதலில், சிறு உத்தியோகஸ்தர்களைக் கடுமையாக தண்டிக்கும் உயர்ந்த போலீஸ் அதிகாரிகள் நேர்மையாகவும், நல்லொழுக்கமுள்ளவர்களாகவும், தங்கள் உத்தியோகத்திற்குத் தகுதியுள்ளவர்களாவும் இருக்கிறார்களா ? அவர்கள் அப்படி இருக்கவில்லை. அப்படிப்பட்ட பெரிய அதிகாரிகள் தவறுகள் செய்யாதபடி அவர்களை இந்த அரசாங்கம் அடக்கியாள முடிகிறதா ? சாதாரண ஏழைப் போலீஸாரிடம் மிகவும் கடுமையாக நடந்துகொண்டு அவர்களுக்கு நிறையத் தொல்லைகள் தரும் உயர்ந்த அதிகாரிகளை இந்த அரசாங்கம் அடக்கியாள முடிகிறதா ? யார் யாரை எந்த எந்த இடத்தில் வைக்க வேண்டுமோ அந்த அந்த இடத்தில் அவர்களை இந்த அரசாங்கம் வைத்திருக்கிறதா ? எனவே தக்கானைக் கொண்டு போலீஸ் நிர்வாகத்தை நடத்த அரசாங்கம் முன் வர வேண்டும்.

அடுத்து எஸ்.ஏ.பி. போலீஸார், அந்தத் துறையிலே சேர்க்கப்பட்டவர்கள், வறுமையிலே வாடுகிறார்கள். இருப்பதற்கு வீடு இல்லை. மனைவி, மக்களை சந்திக்க வாய்ப்பில்லை. மனைவி மக்களைப் பார்ப்பதற்கு ஊருக்குச் சென்று வருவதற்கு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை ரயில்வே வாரண்டு கிடைக்கிறது. சம்பளம் ரூ. 32 அளிக்கப்படுகிறது, ரூ. 31 படி, ரூ. 63 வாங்குகிறார்கள். வெளியே சென்றால் மாதத்திற்கு ரூ. 18 அளிக்கப்படுகிறது. வெளியே சென்றால் தங்குவதற்காக ஊதியம் தரப்படுகிறது நாள் ஒன்றுக்கு ரூ. 2-8-0. ரூ. 18 கூட கிடைப்பதில்லை. ஏறத்தாழ ரூ. 15½ பழைய படி பிடித்துக்கொண்டு மிச்சம் ரூ. 2-8-0 ஒரு மாதத்திற்கு எஸ்.ஏ.பி. போலீஸாருக்கு படி தருகிறார்கள் என்றால், எவ்வளவு வருந்ததக்கது என்பதைப் பாருங்கள். அவர்கள் மனிதர்கள் அல்லவா ? நம்மைப்போல் பிள்ளை குட்டியோடு வாழ்வதற்குப் பிறந்தவர்கள் அல்லவா ? தமிழ் நாட்டில் வாழவேண்டியவர்கள் அல்லவா அவர்கள் ? அவர்களை நிர்க்கதியாக அரசாங்கம் விட்டுவிட்டு துன்புறுத்தும் நிலைமையிலே வாழச் செய்திருக்கிறது.

ஏறத்தாழ 70 பேர், வாழ்கின்ற இடம் 24'×30' அளவில் சுற்றுச் சுவர் உள்ள ஒரு இடம். அந்த இடத்தில் 70 பேர்கள் சிறைச் சாலையில் கிடப்பது போல் தங்கியிருக்கிறார்கள். அவர்கள் தான் இந்த நாட்டை பாதுகாக்க வேண்டும். அமைச்சர்களை பாதுகாக்கவேண்டும், ஆளும் ஆட்சியை பாதுகாக்க வேண்டும். எவ்வளவு விசித்திரமான நிலைமை! அவர்களுடைய குறைகளைக் கூற பட்டியல் தரமுடியும். காலம் இடம் தரவில்லை. அந்தக் குறைகளை அமைச்சர் அவர்கள் கேட்பார்களானால், பட்டியலை நீட்ட தயாராக இருக்கிறேன். விசாரணைக் குழு அமைத்தால் குறைகளைத் தெரிவிக்க முன் வருவேன். அவர்கள் குறைகளைக் களைவது முதல் கடமை. இறுதியாக முதலில் கூறிய குறைகளுக்குக் காரணமாயிருந்த அதிகாரிகளை விசாரணை செய்து நீதியைக் கலப்பது இரண்டாவது கடமை. இதைக் களையாமல் இருப்பது அரசாங்கம் மூன்றாந்தரமானது என்ற நிலைமையைக்காட்டும் இதைச் செய்யாவிட்டால் அரசாங்க நிர்வாகம் உயர் நிலை எய்த முடியாது என்று கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

11-22 a.m. **The Hon. Sri M. BHAKTAVATSALAM:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மான்ய விவாதத்தில் பல அங்கத்தினர்கள் கலந்துகொண்டார்கள். போலீஸார் செய்துவருகின்ற கடுமையான பொறுப்பு உள்ள வேலைகளிலுள்ள பல கஷ்டங்களைப் பற்றி எடுத்து உரைத்தார்கள். போலீஸ் உத்தியோகஸ்தர்களிடம் சிலர் அனுதாபம் காட்டி அவர்களுடைய குறைகளை அகற்ற வேண்டுமென்று வற்புறுத்தி பேசினார்கள். போலீஸாரிடம் ஏற்படுகின்ற தவறுகளையும், போலீஸாரிடம் தங்களுக்கு ஏற்படுகின்ற கஷ்டங்களையும் சிலர் குறிப்பிட்டார்கள். இன்னும் சிலர் உருப்படியான யோசனைகளையும், குறைகளை அகற்றும் வழிகளையும் குறிப்பிட்டார்கள். இந்த விவாதத்தில் கலந்து கொண்டவர்களில் சிலர் இந்த அரசாங்கம் மேலும் யோசிக்கவேண்டிய பல விஷயங்களைப்பற்றி குறிப்பிட்டார்கள். நான் அவர்களுக்கு என்னுடைய நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

போலீஸாரின் வேலை, கனம் அங்கத்தினர்கள் சிலர் குறிப்பிட்டதுபோல், கஷ்டமான வேலை. ஆனால் இவ்வளவு அங்கத்தினர்கள் விவாதத்தில் கலந்துகொண்டதிலிருந்து, போலீஸாருடைய தேவை எவ்வளவு அவசியம், அவர்களுடைய சேவை எவ்வளவு அத்தியாவசியமாக வேண்டியிருக்கிறது மக்களுக்கு என்பது நன்கு புலப்படும். மக்களுடைய நல்வாழ்க்கை தான நம்முடைய லட்சியம் என்றால், அந்த நல்வாழ்க்கைக்கு பந்தோபஸ்து வேண்டும், பாதுகாப்புவேண்டும். தொல்லை இல்லாமல் மக்கள் வாழ்வதற்குரிய வகை செய்யவேண்டும். அதை அளிப்பவர்கள்தான் போலீஸார். அதை இங்கு சபையிலுள்ள கனம் அங்கத்தினர்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். ஆனால் அவ்வாறு மக்களுக்கு பாதுகாப்பு அளிக்கும்போது ஒரு சிலருக்கு அசௌகரியங்கள் ஏற்படுகின்றன, தொல்லைகள் ஏற்படுகின்றன, கஷ்டங்கள்கூட ஏற்படுகின்றன. நாமே சில தவறுகளை செய்தோமானால், அவைகளை தவிர்க்க போலீஸ் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவது நமக்கு ஆத்திரத்தை உண்டுபண்ணுகிறது. சில சமயங்களில் நிரபராதிகளின்மீது கூட நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படலாம். அப்போது அந்த நிரபராதிகள் அல்லது அவர்களை கவனிப்பவர்கள் போலீஸ் மீது குறை சொல்லுவது நியாயம். கூடியவரையில் நிரபராதிகள் யாரும் பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்படவேண்மென்பதுதான் அரசாங்கத்தின் கவலை. அது தான் போலீஸாருடைய கவலையாகக்கூட இருக்கவேண்டும்.

போலீஸாரிடத்தில் பயமே கூடாது என்ற வகையிலே ஒரு கனம் அங்கத்தினர் பேசினார்கள். அதற்காக போலீஸார் போட்டுக்கொண்டிருக்கும் உடையைக்கூட மாற்றிவிடவேண்டுமென்று சொன்னார்கள். Uniform சில துறைகளிலே தொண்டு புரிகிறவர்களுக்கு அவசியம் வேண்டும். சாரணத் தொண்டர்கள் கூட Uniform அணிந்துகொள்ளுகிறார்கள். வயது வந்தவர்கள் Uniform அணிந்துகொண்டால் அவர்கள் சற்று வாலிபர்களாக காணப்படுகிறார்கள். அவ்வாறு Uniform அணிந்து கொண்டவர்கள் சொல்லுவதை எல்லோரும் கேட்பார்கள், ஒப்புக்கொள்ளுவார்கள். ஆகையால் போலீஸாருக்கு அவசியம் Uniform வேண்டும்.

16th July 1957] [Sri M. Bhaktavatsalam]

ஏதோ உடைகள் இன்னும் கொஞ்சம் அழகாக இருக்கலாம். இன்னும் சிறந்த வகையிலே உடை அளிக்கலாம் என்று சொன்னால், அந்த யோசனையை கவனிக்கலாம். இப்பொழுது போலீஸ்காரர்களுக்கு கொடுக்கப்படும் உடை கைத்தறி துணிதான். வேறு எங்கிருந்தோ சீமை துணியை கொடுக்கவில்லை, அல்லது மில் துணியை கொடுக்கவில்லை. ஆனால் போலீஸாரிடம் அடியோடு பயம் கூடாது என்று சொலலுவது சரியல்ல என்றுதான் இந்த சமயத்தில் நான் சொல்ல விரும்புகிறேன். பயமும் ஓரளவுக்கு வேண்டும். பயம் இல்லை என்றால் எவ்வாறு போலீஸார் மக்களுக்கு பாதுகாப்பு அளிக்கமுடியும்? குற்றம் செய்பவர்களை, தவறு செய்பவர்களை, துன்புறுத்துபவர்களை தவிர்க்கவேண்டுமென்றால், ஓரளவுக்கு பயம் வேண்டும். யாருக்கு பயம் வேண்டும்? குற்றம் செய்பவர்கள், குற்றம் செய்ய தூண்டுகிறவர்கள், குற்றம் செய்பவர்களை ஆதரிப்பவர்கள் இவர்களுக்கு பயம் அவசியம் இருக்கவேண்டும்.

பொதுவாக மக்களுக்கு போலீஸாரிடம் பயம் வேண்டியதில்லை. பயம் வேண்டியதில்லை என்பதை எடுத்துக்காட்டும் வகையிலே பழைய முறையிலே அல்லாது சில சந்தர்ப்பங்களில் உதாரணமாக சமீபத்தில் புயலால் பாதிக்கப்பட்டபொழுது, மலபார் ஸ்பெஷல் போலீஸ் உட்பட போலீஸ்காரர்கள் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு சென்று மண்ணை வெட்டி தலையிலே சுமந்து ரோடுகள் போட்டு வெகு சீக்கிரத்தில் நிவாரணம் அளித்தார்கள். ஒவ்வொரு ஜில்லாவிலும் தேசிய வளர்ச்சி திட்டம் நடைபெறுகின்ற பிராந்தியங்களிலே ஒவ்வொரு கிராமத்தை எடுத்துக்கொண்டாலும் அங்கே போலீஸ்காரர்கள் மண் வெட்டிக் கொடுத்து ரோடுகள் போடுவதற்கும் வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கும் வசதி செய்துகொடுக்கிறார்கள். அம்மாதிரி கூலி வேலைபோல் ஈன வேலையாக கருதப்படக்கூடிய வேலைகளையும் போலீஸார் தங்கள் வேலை வேறு என்று வைத்துக்கொள்ளாமல், செய்கிறார்கள். போலீஸார் இம்மாதிரி பொதுமக்களுக்கு பயன்படவேண்டுமென்பதை வற்புறுத்தும் வகையிலே அவர்கள் இந்த தொண்டில் ஈடுபடுகிறார்கள். ஆனால் போலீஸாரிடம் ஓரளவுக்கு பயம் வேண்டுமென்று சொன்னேன். அந்த பயம் இல்லையென்றால் போலீஸார் தங்களுடைய கடமையை சரிவர செய்யமுடியாது, மக்களுக்கு வேண்டிய பாதுகாப்பு அளிக்க முடியாது என்று சொன்னேன். ஒரு குழந்தைக்கு தன் தாயிடத்தில் எத்தகைய பயம் இருக்கவேண்டுமோ அத்தகைய பயம் போலீஸாரிடம் மக்களுக்கு இருக்கவேண்டும். அந்த பயம் இல்லையென்றால், தாய் குழந்தையை வளர்க்கும் அருமை தெரியாமல் வளர்த்தால் அந்தக் குழந்தை நிச்சயமாக செல்லக் குழந்தையாக கெட்டுத்தான் போகிறது. குழந்தைகளுக்கு தாயிடத்தில் ஓரளவுக்கு பயம் இருக்கவேண்டும். அதே போல் போலீஸாரிடத்தில் மக்களுக்கு ஓரளவு பயம் இருக்கவேண்டும். யாருக்கு பயம் வேண்டும்? குற்றம் செய்பவர்களுக்கும், குற்றம் செய்ய தூண்டுகிறவர்களுக்கும், குற்றம் செய்வதை ஆதரிப்பவர்களுக்கும் அந்த பயம் இருக்கத்தான்வேண்டும்.

கனம் போளூர் அங்கத்தினர் அவர்கள் கொஞ்சம் அளவுக்கு மீறியே, ஆனால் பொதுவாக குற்றம் சாட்டினார்கள். பொதுவாக குற்றம் சாட்டியதால், எவ்வளவு சொன்னாலும் அதை மறுத்து பேசமுடியாது. அவர்கள் அளவுக்கு மீறியே குற்றம் சாட்டினார்கள் தங்கள் ஊரில் உள்ள போலீஸாரைப்பற்றி. ஆனால் நல்ல வேளையாக அவர்கள் என்னுடைய சகாவான கனம் ரெவினியூ மந்திரி அவர்களை சாட்சியம் வைத்தார்கள். கனம் ரெவின்யூ மந்திரி அவர்களும் உடனே எழுந்து "அம்மாதிரி இவர்கள் முன் வந்து அந்தப் பெண்மணிகள் சொல்லவில்லை" என்று சொன்னார்கள்.

**Sri S. M. ANNAMALAI**: Point of order, Sir. கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் சொல்லும்பொழுது "சொல்லவில்லை" என்று சொல்லவில்லை. ஆனால், கற்பழிக்கப்படுவது வேறு என்று ரெவின்யூ மந்திரி அவர்கள் சொன்னார்கள். "சொல்லவில்லை" என்று அவர்கள் சொல்லவில்லை.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM**: எனக்கு காதுகள் இருக்கின்றன. நான் பக்கத்தில் இருந்தேன். "கற்பழிக்கப்பட்டதாகச் சொல்லவில்லை, துன்புறுத்தப்பட்டதாகத்தான் சொன்னார்கள்" என்று கனம் ரெவினியூ மந்திரி அவர்கள் சொன்னார்கள். ஒரு சில

[Sri M. Bhaktavatsalam] [16th July 1957

பெண்மணிகள் கற்பழிக்கப் படுவதற்கும், துன்புறுத்தப்படுவதற்கும் ரொம்ப வித்தியாசம் உண்டு என்பதை பொறுப்பு உள்ள கனம் அங்கத்தினர் அவாகள உணாவார்கள் என்று நம்புகிறேன்.

அப்படி குற்றம் சாட்டுவது சுலபம். கனம் அங்கத்தினர் அவர்கள் போலீஸ்காரர்கள் பொய்கேஸ்கள் போடுகின்றார்கள் என்று சொன்னார்கள். அவர்களுக்கு குற்றம் கண்டுபிடிக்கவேண்டியிருக்கிறது. இவற்காக கேஸ் போடும் பொழுது சில நிரபராதிகளையும் தவறுதலாக சேர்க்கப்படுகிறது. நான் இதைப்பற்றி பல பராதிகளும் கேட்டு இருக்கிறேன். ஆனால் என்ன கேஸ் போட்டாலும் இதை எல்லாம் பார்த்துக்கொள்ளுவதற்கு கோர்ட்டு இருக்கிறது. இன்னும் இதில் நாம் கவனிக்கவேண்டிய விஷயம் என்ன வென்றால் சில சந்தர்ப்பங்களில் கேஸ் போட்டுவிட்டார்கள் என்று சிலர் போலீஸ்காரர்களை மிரட்டுவதற்காக போலீஸ்காரர் மீது அபாண்டமாக கேஸ் போட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இதைப்பற்றியுள்ள புகாரையும் நேரில் நான் கேட்டிருக்கிறேன். அடுத்ததாக பேரணாயில் நடந்த சம்பவத்தைப்பற்றி அங்குள்ள கனம் அங்கத்தினர் அவர்கள் தெரிவித்தார்கள். நான் இதைப்பற்றி அதிகமாக என்னிடம் விவரம் இல்லை. நான் இதைப் பற்றி கூடுதல் தெரிந்துகொண்டிருந்தால் இதைவிட கூடுதல் உண்மை நிலைமைகளை எனக்கு எடுத்துச்சொல்லமுடியும். அங்கு நடந்த சம்பவத்தைப்பற்றி எனக்கு தெரிந்த அளவில், என்ன நடந்தது என்றால் அங்கு பஞ்சாயத் போர்ட் தேர்தல் ஒன்று நடந்தது. அந்த தேர்தலில் கனம் அங்கத்தினர் அவர்கள் வெற்றிபெறவில்லை. பின்னால் அங்கு பல சம்பவங்களும் நடந்தன. அங்குள்ள பஞ்சாயத் போர்ட் ஆபீஸ் தீவைத்துகொளுத்தப்பட்டது என்பதை கனம் அங்கத்தினர் அவர்களும் மறுக்க முடியாது. இதனால் அங்கு போலீஸ் காவல் போட வேண்டியது அவசியமென கருதி அங்கு 6 மாதங்களுக்கு ரிசர்வ் போலீஸ் காவல் இருக்கவேண்டும் என்று நினைத்து காவல் போடப்பட்டது. உண்மையில் அவர்களுடைய் வேலைகளை நாம் சரியானபடி உணர்ந்துகொள்வோமானால், நாம் அவர்களை குறைகூறமாட்டோம். அதாவது அவர்களுடைய வேலைகளில் நமக்கு இடைஞ்சலாக இருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக அவர்கள் மீது குறை சொல்லுவது நியாயமான காரியம் அல்ல. போலீஸ்காரர்களும் அவர்கள் தங்கள் கடமையை சரியாகவும் பொறுப்பாகவும் செய்யவேண்டும். ஆனால் அளவுக்கு மீறி அவர்கள் நடந்தார்களானால், அதை அரசாங்கத்தின கவனத்திற்கு கொண்டுவந்தால் அரசாங்கம் அவர்கள்பேரில் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன். கனம் அங்கத்தினர் மருதாசலம் அவர்கள் கோயம்புத்தூரில் அதாவது வால்பாறையில் நடந்த சம்பவத்தைப்பற்றி கூறினார்கள். இந்த சமபவத்தைப்பற்றி அரசாங்கம் விசாரணை நடத்தி வருகிறது. மேலும் கோர்ட்டில் இந்த விஷயம் இருந்து வருவதினால் இதைப்பற்றியுள்ள கூடுதல் விவரங்களை சொல்வதற்கில்லை. ஆனால் ஏதோ நம்மீது கேஸை எடுத்தார்கள், நம்மை அவர்களுடைய லிஸ்டில் சேர்த்துக் கொண்டார்கள் என்ற காரணங்களுக்காக எல்லாம் தங்களிடம் ஆதாரம் இல்லாமலோ, ஆதாரத்தோடோ வேண்டுமென்றே போலீஸ்காரர்கள் மீது குற்றம் சொல்லுவது அவ்வளவு நல்லதல்ல என்று நான் சொல்லிக்கொள்கிறேன். இப்போது எனக்கு ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது. அதாவது சுமார் 25 வருடங்களுக்கு முன்பு ஒரு ஜனவரி 26-ம் தேதியன்று ஊர்வலம் நடந்தது. அன்றைக்கு அந்த ஊர்வலத்தில் போலீஸாரால் பலர் அடிக்கப்பட்டனர். அன்று அவர்கள் வெறியுணர்ச்சியோடு அடித்தார்கள். அதில் எனக்கும் நாலைந்து அடிப்பட்டது. அன்று அவர்களுடைய முறை அவ்விதமிருந்தது. அவர்கள் வெறியுணர்ச்சியோடு செய்தது தவறு தான். அன்றெல்லாம் இதற்கு விசாரணை ஒன்றும் செய்யவில்லை. ஆனால் அன்று நடந்ததை வைத்துவிட்டு இன்று பழி வாங்க முற்படுவது தவறு. அது அப்போதிருந்த முறை என்று விட்டுவிடவேண்டும். 25 ஆண்டுகளுக்கு பின் இப்போதுதான் நான் அதை நினைத்திருக்கிறேன். அடுத்ததாக, வெட்டுபிரேரணையை பிரேரேபித்த கனம் அங்கத்தினர் ராமசாமி அவர்கள் போலீஸ் பந்தோபஸ்து ஆளும் கட்சிக்குத்தான் இருக்கிறது. மற்றவர்களுக்கு போலீஸ் பந்தோபஸ்து கிடைப்பதில்லை என்று சொன்னார்கள். இதைக்குறித்து பேசும்போது முதுகுளத்தூரில் நடந்த உப தேர்தலைப்

16th July 1957] [Sri M. Bhaktavatsalam]

பற்றியும் குறிப்பிட்டார்கள். எனக்கு இந்த நிலைமைகளை எல்லாம் அறிந்து கொள்ளும் ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது. அங்கு ஆளும் கட்சிக்கு மாத்திரம் தான் போலீஸ் பாதுகாப்பு, மற்றவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கவில்லை என்றால் அது கவனிக்கவேண்டிய விஷயம் தான். அப்படி உண்மையாக ஏதாவது குற்றச்சாட்டுகள் இருந்தால் அதை ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். ஆனால் அங்கு ஒரு சிலருக்கு மாத்திரம் ஏன் பாதுகாப்பு அளித்தார்கள் என்பதுதான் கனம் அங்கத்தினரின் குற்றச்சாட்டு. அதிலும் ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒரு சிலருக்கு மட்டும் ஏன் பாதுகாப்பு அளித்தார்கள் என்பதுதான் குற்றச்சாட்டு.

SRI M. D. RAMASAMI : On a point of information, Sir.

MR. SPEAKER : Only point of order can be raised now. The hon. Member can raise point of information at the end.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஆனால் இந்த உபதேர்தல் வருவதற்கு முன்னால் எனக்கு சில புகார்கள் வந்தன. அதோடு பல பரிதாபகரமான தந்திகளும் வந்தன. அதற்கு முன்பு நடந்த தேர்தல் காலத்தில் ஹரிஜனங்களிட மிருந்து பல தந்திகள் வந்தன. அதில் அங்கு நடந்த தேர்தலில் ஒரு சிலர் சொன்னபடி நாங்கள் கேட்கவில்லை. அதனால் எங்கள் கிணற்றில் "கரொஸின் ஆயிலை" போட்டிருக்கிறார்கள், என்று பரிதாபகரமாக அதில் குறிப்பிட்டு இருந்தது. நான் இதைப்பற்றி நேரில் போய் பார்க்கவேண்டிவந்தது. அங்குள்ள கிராமத்திற்குச் சென்றேன். அங்குள்ள ஹரிஜனங்களின் சார்பாக அவர்களின் குறைகளை எல்லாம் எழுதி ஒருவர் வாசித்துக்கொடுத்தார். அது ஒரு சோக கதையாக இருந்தது. அங்கு ஒரு கிணறுதான் இருக்கிறது. அதில் உள்ள தண்ணீர் நல்ல தண்ணீர் என்றும், அதில் "க்ரோஸின் ஆயிலை" போட்டுவிட்டார்கள் என்றும் சொன்னார்கள். நான் இதைப்பற்றி விசாரிக்கச் சொல்லியிருந்தேன். பின்னால் அந்த கிணற்றை சுத்தப்படுத்திக்கொடுத்தார்கள். மறுபடியும் அதில் "கரோஸின் ஆயில்" போட்டுவிட்டார்கள் என்று சொன்னார்கள். ஏழை ஹரிஜனங்களை மற்றவர்கள் அவர்களை துன்பப்படுத்தினால் அதை போலீஸ் பார்த்துக்கொண்டிருக்கவேண்டும் என்பது முடியாத காரியம். அங்கிருக்கின்ற ஹரிஜனங்கள் எல்லோரும் காங்கிரசுக்கு ஆதரவாளர்கள் என்று நினைப்பது தவறு. ஆகவே இம்மாதிரி துன்பப்படுத்துவதையெல்லாம் போலீஸ் பார்த்துக்கொண்டிருக்கவேண்டும் என்பதுதான் கனம் அங்கத்தினர்களுடைய அபிப்பிராயமா என்பதை தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அங்கு நடக்கும் கூட்டங்களில் சில நூதன பழக்கம் இருந்து வருகிறது. கூட்டங்களுக்கு வரும்போது வேல் கம்பு, வேல் பதித்த கம்பு இதோடுதான் கூட்டங்களுக்கு வருவது; இவர்களெல்லாம் சுப்பிரமணிய தாஸர்களாக இருக்கலாம். இவ்விதம் 100, 200, 300 என்று கூட்டத்திற்கு ஏராளமான பேர்கள் வருகிறார்கள். சில தினங்களுக்கு முன்பு ஒரு தந்தி வந்தது. அதில் இம்மாதிரி கூட்டங்களை பார்த்து பயமாக இருக்கிறது என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதனால் சில இடங்களில் அந்த வேல் கம்புகளை எல்லாம் எடுத்துக்கொள்ளப்பட்டன. இன்னும் ஆடு திருடுபோவது, போன்ற காரியங்கள் நடந்து வருகிறது. இன்னும் அங்குள்ள ஹரிஜனங்கள் பயத்தோடு வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். என்னிடம் இவைகளைப்பற்றி பலர் வந்து சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் தேர்தலுக்கு போகக்கூடாது என்றோ, அல்லது இன்ன கட்சிக்கு வோட்டு போட்டாகவேண்டும் என்று சொல்லுவதோ அரசாங்கத்தின் எண்ணமல்ல. யாருக்கு வேண்டுமானாலும் வோட்டு போடட்டும். இதற்குரிய உரிமை அவர்களுக்கு இருக்கிறது. இந்த உரிமையையும் அவர்கள் அனுபவிக்கக்கூடாது என்று அவர்களை பயமுறுத்தப்படுகிறார்கள் என்றால் அதை போலீஸ் பார்த்துகொண்டிருக்க முடியாது. அப்படியிருந்தால் அவர்கள் தங்கள் கடமையை செய்ய தவறியவர்களாவார்கள். அவ்விதம் பொறுப்பு தவறி நடந்தால் அரசாங்கத்தின் மீது பொதுமக்கள் குற்றஞ்சாட்டுவார்கள். ஆகவே இந்த வகையில் போலீஸார் பாதுகாப்பு அளித்து வருகிறார்களே தவிர வேறு ஒன்றுமில்லை. இன்னும் இந்த நிலை அடியோடு அகற்றப்படவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் எண்ணமும். ஆனால்

இம்மாதிரியாக துன்புறுத்தப்படுகிறவர்கள் ஈனமான நிலையில் இருக்கிறார்கள் என்பதையும் நாம் ஆலோசித்துப்பார்க்கவேண்டும். ஆகவே அரசாங்கத்தின் சார்பாக அவர்களுக்கு ஒரு உறுதியை சொல்லுகிறேன். எப்பொழுதும் அரசாங்கம் இம்மாதிரி மற்றவர்களால் துன்பப்படுத்துகிற நிலையை பார்த்துக்கொண்டிராது என்றும் அமைதியையும் சமாதானத்தையும் நிலைநாட்டுவதற்கு அத்தியாவசியமான எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கும் என்று மாத்திரம் சொல்ல விரும்புகிறேன்.

கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர் கனம் கோதண்டராமன் அவர்கள் பேசினார்கள். அவர்கள் பேசியதிலிருந்து நான் தெரிந்துகொண்டது, இந்த மது விலக்கு குற்றங்கள், சூதாட்ட குற்றங்கள் இவைகளை ஏன் இந்தப் போலீஸ்காரர்கள் தவிர்க்கப் பார்க்கிறார்கள், இந்த மதுவிலக்கு குற்றங்கள் அல்லது இந்த சூதாட்டக் குற்றங்கள் இவைகள் நடைபெறுவதை தவிர்க்க, அதிலே போலீஸார் தலையிடுவது கனம் அங்கத்தினர் அவர்களுக்கு பிடிக்கவில்லை என்றுதான் எனக்குப்பட்டது. அது, அவர்களுக்கு பிடிக்கவில்லையாய் இருக்கலாம். ஆனால் ஒன்று மட்டும் அங்கத்தினர் அவர்களுக்குக் கூறிக் கொள்கிறேன். அது அவர்களின் அபிப்பிராயமாயிருக்கலாம். அவர்களுக்கு அதில் அக்கரை இருக்கலாம். ஆனால் ஒன்று கூற விரும்புகிறேன். அதை கனம் அங்கத்தினர்கள் அனைவரும் ஒப்புக்கொள்வார்கள். இந்தக் குற்றங்களை தவிர்க்கவேண்டும். அவைகளைத் தவிர்க்க கடுமையான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதை கனம் அங்கத்தினர் கோதண்டராமன் அவர்களைத் தவிர மற்ற அங்கத்தினர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்று நான் நினைக்கிறேன். ஆனால் அவர்களுக்கு ஒன்று கூற விரும்புகிறேன். இந்த மதுவிலக்கு குற்றங்கள் பருத்தி சூதாட்ட குற்றங்கள் இவைகளால்தான் மற்ற குற்றங்கள் ஏற்படுகின்றன. ஆனால் மற்ற குற்றங்களை கவனிக்கமாட்டார்களோ என்று யாரும் அச்சப்படவேண்டியதில்லை. கனம் அங்கத்தினர்களுக்கு சொல்கிறேன், மற்ற குற்றங்கள் பேரிலும் விசேஷமான கவனம் செலுத்தப்பட்டுதான் வருகிறது. இந்த மதுவிலக்கு குற்றங்கள், சூதாட்ட குற்றங்கள், இவைகள் குறைந்தால் மற்ற குற்றங்களும் குறையும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பொதுவாக போலீஸ்காரர்கள் குறைகளைப்பற்றி பல அங்கத்தினர்கள் பேசினார்கள். போலீஸாருடைய இந்த நிலையை உணர்ந்து அவர்களைப் பற்றிப் பேசியதில் நான் அவர்களை பொதுவாக பாராட்டுகிறேன். ஆனால் தனிப்பட்ட நபர்களுடைய பேரில் [illegible] அக்கரை எடுத்துக் கொள்ளலாம். ஆனால், தனிப்பட்ட நபர்களின்மேல் அக்கரை எடுத்துக் கொண்டால், அது போலீஸின் திறமையான நிர்வாகத்திற்கு உகந்ததல்ல, என்று நான் இந்த சமயத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அரசாங்கம் அதை அப்போதைக்கப்போது கவனித்துக்கொண்டு வருகிறது. அவர்களது குறைகளையும் நீக்கிக்கொண்டுதான் வருகிறது. சில அங்கத்தினர்கள் அவர்களின் வீடு வசதிபற்றி சொன்னார்கள். மற்ற குறைகளைப் பற்றியும் சொன்னார்கள். அப்படி குறைகளினால் பாதிக்கப்படுகிறவர்கள் அரசாங்கத்தினிடம் தங்களது குறைகளைத் தெரிவிப்பதில் எந்த விதமான தங்கு தடையுமில்லை.

**Sri K. ANBAZHAGAN**: "On a point of order, தலைவர் அவர்களே, நான் பேசுகிறபோது குறிப்பிட்டது, இந்தக் குறைகளால் அரசாங்கம் எப்படி பாதிக்கப்படுகிறது என்றே குறிப்பிட்டேன். அதற்கு அமைச்சரவர்கள் விடை அளிக்க வேண்டுமே தவிர தனிப்பட்டவர்களின் குறைகளைப்பற்றிச் சொல்வது நான் சொன்னதற்குப் பொருந்தாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM**: கனம் அன்பழகன் அவர்கள் சொன்ன பாயின்ட்டிற்கு நான் இன்னும் வரவில்லை. கனம் அங்கத்தினர் கோதண்ட ராமன் அவர்கள் சொன்னதைப்பற்றி சொல்கிறேன். ஆவடிக்கு நான்சென்றபோது போலீஸ்காரர்கள் வந்து புகார் சொன்னார்கள். அதற்காக அவர்களுக்குத் தண்டனை கொடுக்கப்பட்டது என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் ஒரு நாள் போயிருந்தேன் போலீஸ் காம்பை சுற்றிப் பார்க்க, எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்தேன், எல்லா இடங்களுக்கும் போனேன், அவர்களின் காரியாலயத்திற்கும் வந்து சற்றுநேரம் இருந்தேன், [illegible]

 [Sri M. Bhaktavatsalam]

போக காறில் ஏறிக்கொண்டேன். டிரைவரும் காரை ஓட்ட ஆரம்பித்தான். அப்போழுது ஒருவன் ஓடி வந்தான். என்ன சொல் என்று சொன்னேன். அவனும் சொன்னான். அதை கவனிக்கிறேன் என்று சொல்லிவிட்டு வந்தேன். நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், எந்த ஸ்தாபனத்திற்கும் ஒரு கட்டுப்பாடு வேண்டும். அதுவும் போலீஸிற்கு முக்கியமாக வேண்டும். எந்த தனி நபருக்கும் புகார் சொல்ல வேண்டுமென்றால், மந்திரிகளிடம் சொல்ல வேண்டுமென்றாலும் சொல்லலாம். ஆனால் சொல்வதற்கு வழி இருக்கிறது. அதை விட்டு விட்டு இப்படி கட்டுப்பாட்டிற்கு மீறி நடப்பது சரியல்ல. நேற்று கனம் அங்கத்தினர் கோதண்டராமன் அவர்களிடம், எந்தப் பத்திரிகையில் அந்தச் செய்தி வந்தது என்று கேட்டேன். அதற்கு அவர் நாளை சொல்கிறேன் என்று சொன்னார்கள். நான் சொல்கிறேன், ஜனசக்தி என்ற பத்திரிகையில் தான் அந்தச் செய்தி வந்தது. எல்லாவற்றிற்கும் கேரள சர்க்காரை சுட்டிக் காட்டுகிறார்கள். அவர்களே கேரள ராஜ்யத்தின் முதன் மந்திரியைக் கேட்டுத் தெரிந்துகொள்ளட்டும். வெளியே உள்ள அரசியல் கட்சிகள் சர்க்கார் சிப்பந்திகளோடு நெருங்கிய தொடர்பு கொள்வதை கேரள சர்க்கார் ஆதரிக்கிறார்களா என்று முதலில் தெரிந்துகொள்ளட்டும். அவர்கள் ஆதரிப்பதை எல்லாம் இந்த சர்க்கார் ஆதரிக்க முடியாது, ஆனால் அதை யோசித்துப் பார்க்கலாம். கட்டுப்பாடு என்பது மிகவும் முக்கியமானது. இம்மாதிரி தொடர்பு ஏற்படுத்திக்கொள்வது, அவர்களுக்கு நலன் அளிப்பதாக இருக்காது. ஆகவே இதில் அரசியலைப் புகுத்த வேண்டாமென்று நான் இந்த சமயத்தில் சொல்லிக்கொள்ளவிரும்புகிறேன். இன்னும் அவர்களுக்கு வேலைத் திட்டம் வேண்டுமென்று சொல்லப்பட்டது. அதாவது "ரெகுலேஷன் ஆப் வொர்க்ஸ்" வேண்டுமென்று சொன்னார்கள். போலீஸ் வேலை எத்தகையது என்பதை அங்கத்தினர்கள் உணர்வார்கள். ஒரு சிலருக்கு, அவர்களை ஆதரிப்பதாக ஒரு உணர்ச்சியை ஏற்படுத்தவேண்டுமென்ற விதத்தில் பேசலாம். எப்பொழுது குற்றங்கள் ஏற்படுகிறதோ அப்பொழுது போகவேண்டும். எனக்கு விடுமுறை என்று சொல்வதில் பயன் இல்லை. இன்னும் பல புகார்கள் சொல்லப்பட்டன. போலீஸ் பாரபட்சமாய் நடக்கிறார்கள் என்று. தொழிலாளர்கள் சார்பாக பேசிய கனம் அங்கத்தினர் ஸ்ரீ சின்னதுரை அவர்கள் குறிப்பிட்டார்கள். இன்னும் சில கனம் அங்கத்தினர்கள், நிலச் சொந்தக்காரர்கள் நிலத்தில் பயிரிடக்கூடிய குடியானவர்கள் இந்த சந்தர்ப்பத்தில்கூட போலீஸ் பாரபட்சமாக இருக்கிறார்கள்' என்று குறிப்பிட்டார்கள். சின்னதுரை அவர்களுக்கு நான் ஞாபகப்படுத்த வேண்டியதில்லை முதலாளிகளுக்கு அனுசரணையாக நடக்க வேண்டுமென்ற எண்ணம் போலீஸிற்கில்லை, என்று நான் சொல்வேன். ஏனென்றால், முதலாளிகளிடமிருந்து புகார்கள் என்னிடம் வருவதுண்டு. ஆனால் தொழிலாளர்களுக்குள்ளேயே எத்தனையோ கலகங்களும் சண்டைகளும் இருக்கின்றன. கோயம்புத்தூரில் இருப்பவர்கள் அறியாததல்ல. சின்னதுரை அவர்களும் அறியாததல்ல. எத்தனையோ கொலைகள் நடந்திருக்கின்றன. "டிரெட் யூனியன்" சண்டைகளும் இருக்கின்றன. அகவே அமைதியை நிலை நாட்டுவது எல்லோருக்கும் பாதுகாப்பு அளிப்பது போலீஸ்காரனின் பொறுப்பும் கடமையும் அல்லவா? தொழிலாளிக்கும் தொழிலாளிக்கும் சண்டை ஏற்படுகிறது. ஆகவே, முதலாளிக்கும் தொழிலாளிக்கும் உள்ள சண்டையாயிருந்தாலும் சரி, விவசாயிகளுக்கும் நிலச் சொந்தக்காரர்களுக்கும் உள்ள சண்டையாயிருந்தாலும் சரி, நிலச் சொந்தக்காரர்களுக்கிடையேயுள்ள சண்டையாயிருந்தாலும் சரி, எல்லோரும் பாதுகாப்பு அளிப்பதும், அமைதியை நிலைநாட்டுவதும், எல்லோருடைய உயிர்களையும் உடமைகளையும் பாதுகாப்பதும் போலீஸின் பொறுப்பாகும். அதற்காகத்தான் போலீஸ்காரர்கள் தலையிடுகிறார்களே தவிர வேறு ஒன்றிற்கும் அல்ல. எங்கேயாவது, யாராவது பாரபட்சமாய் நடந்திருக்கிறார்கள் என்று அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அதன் பேரில் தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும். கட்சி பாரபட்சத்தைப் பற்றி பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். காங்கிரஸ் கட்சிக்காரர்கள், அவர்கள் காங்கிரஸ் கட்சிக்கு பாரபட்சமாய் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். எதிர்கட்சிக்காரர்கள் அவர்களுக்கு பாரபட்சமாய் நடந்து

[Sri M. Bhaktavatsalam] [16th July 1957

கொண்டார்கள் என்று சொன்னார்கள். போலீஸ் உத்தியோகம் வகிக்கிற தனி நபர்களைப் பொறுத்த மட்டில் அவர் அவர்களுக்குக்குள்ள கோட்பாடுகளும், லட்சியங்களும் இருக்கின்றன. அதை நாம் மாற்றமுடியாது. ஆனால் அவர்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகத்தின் மேல் அனுதாபம் இருந்தால் தன்னை அறியாமலே பாரபட்சமாக நடந்திருக்கலாம். அப்படிக் கிடையாது என்று அவர்களால் சொல்லமுடியாது. அரசியல் விவகாரங்களில் அவரவர்களுக்குள்ள சொந்த அபிப்பிராயத்தை வைத்துக்கொள்ளலாம். ஆனால் பொதுக் கடமையைச் செய்யும்போது, தங்களுடைய பொறுப்பை நிர்வகிக்கும்போது, அதையெல்லாம் மூட்டைகட்டி வைத்துவிட்டு நியாயமாகப் பாரபட்சமின்றி நடந்து கொள்ளவேண்டும். ஒருவர் இருவர் தவறுதலாக நடக்கலாம். கனம் அங்கத்தினர் திரு. அன்பழகன் அவர்கள் முக்கியமாக என்னுடைய தொகுதியில் நடந்த என்னுடைய தேர்தலைப்பற்றிச் சொன்னார்கள். அந்தத் தொகுதியிலே பலாத்கார முறைகள், அக்கிரமங்கள், அநீதிகள் எதிர்க் கட்சியினர் புரிகிறார்கள் ; அவற்றுக்குப் பரிகாரமில்லை, விமோசனமில்லை என்று என்னிடம் வந்து பலர் தேர்தலின்போது குறை கூறியிருக்கிறார்கள். இன்னும் நான் சொல்லப்போனால், பெரிய குற்றங்கள் செய்கின்றவர்கள் எல்லாம் அவைகளைத்தான் செய்கிறார்கள். சட்டத்திற்கு விரோதமான குற்றங்களைச் செய்தவர்களைப்பற்றி போலீஸார் கவனத்திற்கு யார் வேண்டுமானாலும் கொண்டுவரலாம். அவ்வாறு கொண்டுவந்தால், போலீஸார் நடவடிக்கை எடுக்கத்தான்வேண்டும். ஆனால் தேர்தல்களில் அனாவசியமான தலையீடு இருக்கிறது என்ற எண்ணம் ஏற்படக்கூடாதென்ற காரணத்தால், அவைகளை நான் காதில் போட்டுக்கொள்ளவில்லை. இதில் பாரபட்சம் ஒன்றுமில்லையென்று நான் நிச்சயமாகச் சொல்லலாம். தவறுதல் நடக்கலாம். தவறுதல் செய்கின்றவர்கள் மீது சில சமயங்களில் போலீஸார் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கலாம். புகார் வந்தால் புகார் நிரூபிக்கப்படவேண்டும். புகார்கள் மீது போலீஸார் நடவடிக்கை எடுத்துக்கொள்வதுண்டு. ஆனால் அவர்கள் தாங்களாகவே நடவடிக்கை எடுத்துக்கொள்வது என்பது வேறு எல்லாவற்றுக்கும் போலீஸாரையே பயன்படுத்திக்கொள்ளவது என்பது கூடாதென்று நான் சொல்ல விரும்புகிறேன்.

இன்னும் கனம் அங்கத்தினர் திரு. அன்பழகன் அவர்கள் லஞ்சத்தைப்பற்றிச் சொன்னார்கள். தவறுதலாகப் போலீஸ் உத்தியோகஸ்தர், சில பெரிய போலீஸ் உத்யோகஸ்தர்கள், நடந்துகொண்டிருப்பதைப்பற்றிச் சொன்னார்கள். நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். முன்பிருந்த கவர்னர் அவர்கள் போலீஸ் அதிகாரிகளைப்பற்றி அரசாங்கத்தினிடம் ஏதோ புகார் சொல்லிக்கொண்டிருந்ததாகச் சொன்னார்கள். மத்திய அரசாங்கத்திலிருந்தும் ஏதோ புகார் இங்கு வந்திருப்பதாகக் குறிப்பிட்டார்கள். எனக்குத் தெரிந்தவரையில், இந்த இரண்டு வருஷங்களிலே அவ்வாறு ஒன்றுமில்லை. என்று நான் சொல்லுவேன். லஞ்சம் இருப்பதை நான் மறுக்கவில்லை. அதை அடியோடு அகற்றுவதுதான் அரசாங்கத்தின் முடிவு. அந்த வகையில்தான் இன்று அரசாங்கம் கண்டிப்பான நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது. லஞ்சம் சம்பந்தப்பட்டமட்டில் யாராய் இருந்தாலும் சரி, கீழ்த்தர உத்தியோகஸ்தராயிருந்தாலும் சரி உயர்ந்த உத்தியோகஸ்தராயிருந்தாலும் சரி, அதைப்பற்றி தாக்ஷண்ணியம் ஒன்றும் கிடையாது. ஆனால், இந்த லஞ்சத்தைப்பற்றி மிகைப்படுத்திச் சொல்வது அந்த லஞ்சத்தை ஒழிப்பதற்கு வகையல்ல என்று இந்த சமயத்தில் நான் சொல்ல விரும்புகிறேன். புகார்கள் அப்போதைக்கப்போது விசாரிக்கப்படுகின்றன. போலீஸிலுள்ள பெரிய உத்தியோகஸ்தர்களாயிருந்தாலும், அவர்கள் மீது சந்தேகங்கள் ஏற்பட்டால், அவைகள் விசாரிக்கப்படுகின்றன. கனம் அங்கத்தினர் திரு. அன்பழகன் சொன்ன ஒன்றை நான் ஒப்புக்கொள்கிறேன். சாதாரணமாகக் குற்றங்கள் விசாரிக்கப்படுவதில் கோர்ட்டில் கையாளப்படும் தரத்தைப்போல், உத்தியோகஸ்தர்களைப்பற்றியவரையில், ஸ்பெஷல் ட்ரிப்யூனல் போட்டுக் குற்றங்களை விசாரித்து அதற்கு மேல் நடவடிக்கை எடுக்கும்போது, அவ்வளவு நிச்சயமாகக் குற்றம் நிரூபிக்கப்படவேண்டுமென்று வற்புறுத்தப்படுவதில்லை,



16th July 1957] [Sri M. Bhaktavatsalam]

ஓரளவு சந்தேகம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டால், நாங்கள் நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு வருகிறோம் ; இன்னும் எடுத்துக்கொள்ளத் தயங்கமாட்டோம்.

கனம் அங்கத்தினர் திரு. சின்னதுரை அவர்கள், 'ஏதோ தங்களுடைய கட்சிக் காரியாலயத்திலே போன் இன்டரப்ட் செய்யப்படுகிறது' என்று சொன்னார்கள். அவர்களுடைய கட்சி அவ்வளவு அபாயகரமான கட்சியென்று அரசாங்கம் கருதவில்லை. எந்த அரசியல் கட்சியானாலும் போனை இண்டரப்ட் செய்வது என்பதில்லையென்று முதலில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏதோ இண்டியன் பீனல் கோடின் கீழ் பெரிய குற்றங்கள் செய்துகொண்டிருந்தால், அவற்றைக் கண்டுபிடிப்பதற்கு அவசியம் இருந்தால், அப்போது ஒரு தடவை போன் இண்டரப்ட் செய்யப்படலாம். இப்போது அவ்வாறு செய்யப்படுகிறது என்று நான் சொல்லவில்லை. இந்த மெம்பர்களுக்கு வெறும் மிரட்சி. ஏதோ தங்களைப்பற்றிய பெரிதாக நினைத்துக்கொள்ளுகிறார்கள். (சிரிப்பு.) ஏதோ இரண்டு மெம்பர்களுள்ள பி.எஸ்.பி. கட்சி பெரிய கட்சி, ஆதலால் போனை இண்டரப்ட் செய்யவேண்டிய அவசியம் இருக்கிறதென்று நினைத்துக்கொள்கிறார்கள். அட்மாஸ்பியரிக் இண்டரப்ஷன் கூட இருக்கிறது. ஆகையால், இந்த மிரட்சி வேண்டாம் ; தைரியமாக இருக்கலாம். அவர்களுடைய கட்சிக் காரியாலயத்தில் செய்கின்ற வேலைகளுக்கு ஒரு தடையும் இருக்காதென்று அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

கனம் அங்கத்தினர் ஸ்ரீமதி அனந்தநாயகி அவர்கள் போலீஸார் செய்கின்ற வேலைகளையெல்லாம் பாராட்டினார்கள். வேலைகளைப் பாராட்டுவதோடு அவர்களுடைய குறைகளைப்பற்றியும் சொன்னார்கள். குறைகள் அப்போதைக்கப்போது கவனிக்கப்படுகின்றன. ஐ.பி.எஸ். ஆபீசர்களை உடனே டி.எஸ்.பி. யாகப் போடுவதாகக் கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள். ஆறு வருஷங்கள் தொண்டாற்றிய பிறகுதான் அவர்கள் டி.எஸ்.பி. யாகப் போடப்படுகிறார்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்

சிறிய உத்தியோகஸ்தர்கள் மீதுள்ள புகார்களைப்பற்றி விசாரணை செய்வதற்கு ஒரு ட்ரிப்யூனல் வேண்டுமென்று கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள். அதை அரசாங்கம் ஒப்புக்கொள்ள முடியாது. கனம் அங்கத்தினர் ஒன்றை ஒப்புக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். அதாவது, முக்கியமாகப் போலீஸ் தொண்டாற்றவேண்டுமென்றால், அவர்களுக்குக் கட்டுப்பாடு அவசியம். மேலே இருக்கின்ற அதிகாரிகளைப்பற்றி வறத்தாழப் பேசுவது என்பதெல்லாம் கூடாது. இக்குற்றங்களையெல்லாம் வேறு ஒருவர் வந்து விசாரிப்பது என்பது கூடாது. சைன்யத்திலேயும், போலீஸிலேயும் கட்டுப்பாடு கண்டிப்பாக இருக்கவேண்டும். கட்டுப்பாடு இல்லாவிட்டால், அவர்களைத் திறம்பட வேலை செய்யவைக்க முடியாது.

சில கான்ஸ்டபிள்கள் குடிக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. அதையும் நான் மறுக்கவில்லை. அது ரொம்பத் தவறு என்று நான் சொல்லிக்கொள்கிறேன். அதை அகற்றுவதற்குப் பார்க்கின்றோம். இதற்கெல்லாம் பொது மக்களுடைய ஒத்துழைப்பு வேண்டும். அது இல்லையென்று நான் சொல்லவில்லை. அது இன்னும் அதிகம் வேண்டும். இன்னும் கனம் அங்கத்தினர்களும் அதில் கவனம் செலுத்தவேண்டுமென்று இந்த சமயத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஹெட் கான்ஸ்டபிள்கள் சப்-இன்ஸ்பெக்டர்களாகப் போடப்பட்டு, அதற்கப்புறம் அவர்கள் மீண்டும் ஹெட் கான்ஸ்டபிள்களாக "ரிவெர்ட்" செய்யப்பட்டு அப்படியே இருக்கிறார்களென்று சொல்லப்பட்டது. இப்பொழுது இருக்கின்ற விதிப்படி, ஹெட் கான்ஸ்டபிள்களில் மூன்றில் ஒரு பங்குதான் சப்-இன்ஸ்பெக்டர்களாக ப்ரமோட் செய்யப்படலாம். முன்பு டைரக்ட் ரெக்ரூட்மெண்டு இல்லை. ஹெட் கான்ஸ்டபிள்களில் பாதிப் பேர்கள் சப்-இன்ஸ்பெக்டர்களாக இருந்தார்கள். அது திறமையைப் பாதிக்கிறது. சில அங்கத்தினர்கள் அதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். ஆகையால், 1950-ல் டைரக்ட் ரெக்ரூட்மெண்ட் ஓரளவு செய்யப்பட்டது. அதன்

[Sri M. Bhaktavatsalam] [16th July 1957

விளைவாக சிலர் " ரிவெர்ட் " செய்யப்பட்டார்கள். அதைத் தவிர்ப்பதற்கில்லை. இருந்தாலும், எப்போதைக்கப்போது காலி ஸ்தானங்கள் ஏற்படுகின்றனவோ அப்போதெல்லம் முன்பு வேலை பார்த்த ஹெட் கான்ஸ்டபிள்களுக்கு வேலை கொடுக்கப்படுகிறது.

ஒரு கனம் அங்கத்தினர் விசித்திரமான அபிப்பிராயம் சொன்னார்கள். மதுவிலக்குக் குற்றத்தைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்கு, வெறும் பிரசாரம் செய்தால் போதும் என்று யோசனை தெரிவித்தார்கள். அது பழைய கால முறை. அதை " டெம்பெரன்ஸ் ப்ராபகண்டா " என்று சொல்வது. குற்றத்தைக் கண்டுபிடிக்கக் கூடாதென்று ஆசைப்படுபவர்கள் அவ்வாறு சொல்லலாம். இந்த அபிப்பிராயத்தை முன்பே தெரிவித்தார்கள். இதையும் ஒரு பிரசாரமாக அவர்கள் உபயோகித்துக்கொள்ளலாம். இப்போது பிரசாரம் செய்வதை அரசாங்கம் தங்களுடைய கட்சிப் பொறுப்பாகக் கருதவில்லை. மற்றவர்கள் அவ்வாறு பிரசாரம் செய்யவேண்டும். இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று அரசாங்கம் கருதுகிறது.

மற்றொரு நூதனமான அபிப்பிராயத்தை கனம் அங்கத்தினர் ஸ்ரீ பககிரிசாமி பிள்ளை அவர்கள் சொன்னார்கள். அவர் ஒரு நகர சபை அங்கத்தினர் என்று நான் நினைக்கிறேன். அவர்கள் ஸ்தல ஸ்தாபனத்தினிடம் போலீஸ் நிர்வாகத்தை விட்டுவிடலாமென்று சொன்னார்கள். அதை அரசாங்கம் ஒருக்காலும் ஒப்புக்கொள்ள முடியாது. மற்ற கனம் அங்கத்தினர்களும் அதை ஒப்புக்கொள்ளமாட்டார்கள் என்றுதான் நான் நம்புகிறேன்.

" லௌட் ஸ்பீக்கர் " விஷயமாகவும் கனம் அங்கத்தினர் ஸ்ரீ பக்கிரிசாமி பிள்ளை அவர்கள் சொன்னார்கள். அதற்காக லைசென்ஸ் வாங்கவேண்டியிருக்கிறதென்று அவர்கள் சொன்னார்கள். " லௌட் ஸ்பீக்கர் " அதை உபயோகிப்பவர்களுக்கு சௌகரியத்தை அளிக்கிறதே தவிர அதில் சம்பந்தம் இல்லாதவர்களுக்குப் பெருத்த " ந்யூசன்ஸ் " ஆக இருக்கிறது. கனம் அங்கத்தினர் ஸ்ரீமதி அநந்தநாயகி அவர்கள் கல்யாணத்தைப்பற்றிச் சொன்னார்கள். அவர்கள் சமீபத்தில் கல்யாணம் செய்து கொண்டவர்கள். (சிரிப்பு.) கல்யாணத்தில் அனுபவிக்கின்றவர்கள் அனுபவிக்கட்டும். (மீண்டும் சிரிப்பு.) கல்யாணம் என்றால், சுற்றுப்புறத்தில் இருக்கிறவர்களுக்குக் காலையில் 4 மணிக்கெல்லாமே தூக்கம் கெட்டுப்போய்விடுகிறது. இசைத்தட்டை வேறு போட ஆரம்பித்துவிடுகிறார்கள். இசைத் தட்டைக் கேட்கிறவர்கள் கேட்கலாம். ஆனால் இதிலெல்லாம் கட்டுப்பாடு வேண்டும். தொழிலாளர் கூட்டம் என்றால் கூட லைசென்ஸ் வாங்கவேண்டியிருக்கிறதென்று சொல்லப்பட்டது. இல்லாவிட்டால், தகராறுகள் வருகின்றன. ஒரே இடத்தில் இருவர் கூட்டத்தை நடத்த முற்படுகிறார்கள். இதில் ஓரளவு கட்டுப்பாடு வேண்டும். அந்த அளவில் கட்டுப்பாடு விதிக்கிறோமே தவிர, எதிர்க்கட்சி அங்கத்தினர் நடத்தும் கூட்டத்திற்குத் தடை அல்லது கட்டுப்பாடு விதிக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் அல்ல. நேரம் ஆகிவிட்டது. இதிலே இன்னும் ஒன்றிரண்டு விஷயங்கள் அவகாசமில்லாத காரணத்தால் பதில் சொல்லப்படாமல் விட்டுப்போயிருக்கலாம். இதையெல்லாம் அரசாங்கம் கவனம் செலுத்தப் போவதில்லையோ என்று எடுத்துக் கொள்ள வேண்டாம். இந்த விவாதம் முழுவதிலும் பல உபயோககரமான விஷயங்கள் குறிப்பிடப்பட்டன. இவைகளையெல்லாம் மீண்டும் கவனம் செலுத்தி அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

Sri M. D. Ramasami: On a point of personal explanation. கனம் மந்திரி அவர்கள் பேசும்போது என் சில பேர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். போலீஸ் படைகளை உபயோகித்து காங்கிரஸ் வோட்டு சேகரித்தார்கள். அந்தப் பிராந்தியத்திலே போலீசார் கடுமையான ஹிம்சைகளைச் செய்தார்கள். குறிப்பாக கிணற்றிலே நல்ல தண்ணீரிலே கெரோஸினைப்போட்டார்கள். இந்தக் குற்றச்சாட்டு எலெக்ஷன் சமயத்திலே வந்திருக்கிறது. இந்தப் [illegible]திலே மக்கள் பல காலமாக வாழ்ந்து வருகிறார்கள். என் [illegible]

குற்றச் சாட்டுகள் இதுவரை வரவில்லே. இப்போது எலெக்‌ஷன் சமயத்திலே இந்தக் குற்றச் சாட்டு வருவதற்குக் காரணம் என்ன என்பதை யோசிக்கவேண்டும்.

Mr. SPEAKER : கனம் அங்கத்தினர் இரண்டாவது பிரசங்கம் பண்ணக் கூடாது.

Sri M. D. RAMASAMI : பிரசங்கம் இல்லே. பிராந்தியத்திலே மக்கள் காங்கிரஸுக்கு அனுகூலமாக இல்லேயென்றபோது கேஸ்கள் போடப்பட்டு வந்ததனை மந்திரி அவர்கள் அறிந்திருப்பார்கள். இந்த மாதிரி கேஸ்களை அவர்களே உற்பத்தி செய்து வேண்டுமென்று இணைக்கிலே . . . .

Mr. SPEAKER : How is this a personal explanation? The hon. Member is making more charges. Personal explanation should be made only to clear doubts arising out of the hon. Member speech. He cannot make one more allegation.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் இப்போது பேசியதிலே ஒன்று உறுதியாக கூறுகிறேன். போலீஸார் உதவியைக் கொண்டு காங்கிரஸுக்கு ஓட்டு ஒன்றும் சேகரிக்கப்படவில்லே, இதற்குப் போலீஸாரைப் பயன்படுத்தப்படவில்லே. போலீஸார் செய்ததெல்லாம் பாதுகாப்பு ஒன்றுதான். பொய் கேஸ் என்று சொன்னார்கள். நான் குறிப்பிடுகிறேன், போலீஸார் மீது கூட சில பொய் கேஸ்கள் போடப்பட்டிருக்கின்றன. அதுவும் முதுகுளத்தூர் தேர்தல் பற்றித்தான்.

Mr. SPEAKER : Is the hon. Member M. D. Ramasami withdrawing his cut motion?

Sri M. D. RAMASAMI : No, Sir.

Mr. SPEAKER : I now put the cut motion to the vote of the House. The question is :—

" That the allotment of Rs. 5,28,90,600 under Demand No. XIV—Police—be reduced by Rs. 100." 12.05 p.m.

The cut motion was put and lost.

Mr. SPEAKER : I now put the man motion to the vote of the House. The question is :—

" That the Government be granted a sum not exceeding Rs. 5,28,90,600 under Demand No. XIV—Police."

The Demand was put and carried and the Grant was made.

## (2) DEMAND XV—EDUCATION.

The Hon. Sri C. SUBRAMANIAM : சபாநாயகர் அவர்களே, இந்தக் கல்வித்துறைக்கு கவர்னர் சிபார்சின் பேரில் கவர்மெண்டுக்கு ரூபாய் 11,73,63,100 மேல்படாத தொகை மானியமாக அளிக்கப்படவேண்டுமென்று இச்சபை முன்பு பிரேரேபிக்கிறேன்

இந்தக் கல்வியைப்பற்றிய விவாதம் போலீஸ் விவாதம் முடிந்தவுடன் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. போலீஸ் மானியத்தைப்பற்றி எவ்வளவு அபிப்பிராய பேதங்கள் இருந்தாலும்—இருப்பதற்கு இடம் இருக்கிறது—அந்த மானியத்தைப் பொறுத்த வரையில் காரசாரமாகப் பேசுவதற்கும் அதிலே இடம் இருக்கிறது—ஆனால், இப்போது எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கக்கூடிய மானியத்தைப் பொறுத்த வரையில் எல்லோரும்—குறைக்கவேண்டுமென்று யாரும் சொல்லமாட்டார்கள்—இன்னும் அதிகப்படுத்தவேண்டுமென்றுதான் சொல்லுவார்கள். கட் மோஷனுக்கு பதிலாக, இன்கிரீஸ் மோஷன் என்று ஏதாவது இருந்தால்தான்

பொருத்தமாக இருக்குமே தவிர, இதற்கு கட் மோஷன் யாரும் கொடுக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். போலீஸ் மான்யத்தைப் பொறுத்த வரையில் நாம் அதை வோட் செய்தாகிவிட்டது. இதிலே சர்க்கார் லட்சியமும் கூட வருஷத்திற்கு வருஷம் இந்த போலீஸ் மான்யத்திற்கு ஒதுக்கப்படும் தொகை குறைந்துக்கொண்டே வரவேண்டுமென்பது தான். அங்கத்தினர்களும் அப்படியே அபிப்பிராயப்படுவார்கள் என்று நினைக்கிறேன். ஆனால் கல்வியைப் பொறுத்தவரையில் அதற்காக ஒதுக்கப்படும் தொகை மேலும் மேலும் வளரவேண்டுமென்பதுதான் சர்க்காருடைய கொள்கை. இதை அங்கத்தினர்களெல்லோரும் ஒப்புக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். அந்த முறையிலே இருக்கிற ஒரு மான்யத்தை சபையின் முன் வைக்கிறேன். மான்யத் தொகை அளவை எடுத்துக்கொள்வோமானால், அதிக மான்யம் கோரக் கூடிய ஒரு இலாகா கல்வி இலாகாதான். அதைப்பற்றியும் நான் பெருமை கொள்ளவேண்டும். எவ்வளவு கல்விக்காக செலவழிக்கவேண்டுமென்று கணக்கிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அதாவது வரக்கூடிய வருமானத்தில் ஐந்தில் ஒரு பங்கை செலவழிக்கவேண்டிய லட்சியத்தை வைத்துக்கொண்டு திட்டம் வகுக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். அந்த முறையிலே பார்த்தாலும் இன்றைக்கு நம் வருமானத்தில் ஐந்தில் ஒரு பங்கை கல்விக்காக செலவழிக்கிறோம். அந்தக் கல்வித் துறையிலே ஏற்பட்டிருக்கக்கூடிய வளர்ச்சியைப்பற்றி நான் இங்கு அதிகமாக எடுத்துச் சொல்லவேண்டிய அவசியமில்லை. அதைப்பற்றி பல்வேறு அறிக்கைகளில் வெளியிட்டு வந்திருக்கிறோம். அங்கத்தினர்களுக்கு இப்போது நடக்கக்கூடிய விவாதத்தில் நல்ல உதவியாக இருக்க பல புள்ளி விவரங்கள் அடங்கிய ஒரு அறிக்கையும் அங்கத்தினர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் புள்ளிவிவரங்கள் மூலமாக நமக்கு இருக்கக்கூடிய பிரச்னைகள், அதை எந்த முறையில் தீர்க்க அரசாங்கம் நினைத்துக்கொண்டிருக்கிறது என்பதையெல்லாம் தெரிந்துக்கொள்ளலாம். நம்முடைய நாட்டிலே இன்றைக்கு ஒரு புதிய சமுதாயத்தை அமைக்க வேண்டும் என்று நாம் விரும்பும்போது அதில் அடிப்படையாக இருக்கக் கூடியது கல்வி. அந்தக் கல்வி எவ்வளவுக்கெவ்வளவு பரவலாக இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு மக்கள் அறிவுள்ளவர்களாக முன்னேறக்கூடிய சக்தி பெறுவார்கள். ஆகையால் தான் கல்விக்கு எல்லா இடங்களிலும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. அந்த முறையில் இந்தத் துறையை நல்ல முறையிலே, எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய முறையிலே நடத்திச் செல்லவேண்டியது நம் கடமையாக இன்றைக்கு அமைந்திருக்கிறது. எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய முறையில் நடக்கவேண்டுமென்று தான் ஒரு வெள்ளை அறிக்கையை சமர்ப்பித்து இந்தச் சபையிலிருந்த எல்லாக் கட்சியிலிருந்தும் ஒரு கமிட்டி ஏற்படுத்தி அவர்கள் பரிசீலனை செய்து, அந்தப் பரிசீலனை அடிப்படையில் கல்விப் பிரச்னையெல்லாம் தீர்க்கப்படவேண்டுமென்று சர்க்கார் கொள்கையாக ஏற்றுக்கொண்டிருக்கிறது. இந்தப் பிரச்னையை நல்ல முறையில் தீர்க்க வேண்டும். இன்றைக்கு கல்வி எல்லா மக்களுக்கும் கிடைத்தாக வேண்டும். எல்லா மக்களுக்கும் ஆரம்பக்கல்வி வரையில் கொடுக்கப்படவேண்டுமென்று அரசியலமைப்பு சட்டத்திலே விதித்திருக்கிறோம். அதை எவ்வளவு தூரம் நிறைவேற்ற முடியும். அதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்றும் ஆலோசனை செய்து முடிவு எடுக்க வேண்டியது அவசியம். நான் ஒரு உதாரணம் சொல்லி அதை விளக்கவேண்டுமென்று சொன்னால், கல்வி ஒரு கோபுரம் போல அமையவேண்டியிருக்கிறது. கீழே பரந்ததாக இருக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. மேலே போகப் போக சிறுத்துக் கொண்டே போகிறது. அதேமாதிரி ஆரம்பப் படிப்பு பரவலாக எல்லோருக்கும் அளிக்கப்படக்கூடியதாக இருக்க வேண்டியிருக்கிறது.

அதற்குமேல், உயர்தரப் பள்ளிக்கூடப் படிப்பு. அது கொஞ்சம் குறுகித்தான் ஆகும். அதற்கு மேல், சர்வகலாசாலைப் படிப்புக்குப் போகும்போது, அது இன்னும் கொஞ்சம் குறுகும். அதற்கு மேலே ஆராய்ச்சிப் படிப்புக்குப் போகும்போது நுனியாகப் போகும். இப்படி, கீழே பரவலாக இருந்து, மேலே போகப் போகக் குறைந்துகொண்டே போகக்கூடிய முறையில் கல்வி அமைய முடியும் என்பதை நாம் எல்லோரும் அறிவோம்.



சாதாரண கோபுரத்துக்கும் இதற்கும் வித்தியாசம் என்னவென்றால், சாதாரண கோபுரத்திலே மேல் பாகம் இல்லாமலேயே கீழ் பாகம் இருக்க முடியும். ஆனால், கல்வித் துறையில் அதுமாதிரி இருக்க முடியாது. மேல் பாகம் இருந்தால்தான் கீழ் பாகமும் இருக்கமுடியும்.

கீழ் பாகம் இருப்பதற்கு, அதற்குமேல் படித்தவர்கள் இருந்தால்தான், அந்தப் படிப்பைச் சொல்லிக் கொடுக்க முடியும். எட்டாவது வரை எல்லோருக்கும் படிப்புச் சொல்லிக்கொடுக்க வேண்டுமானால், 8-வது வரையில் மட்டுமல்ல ; அதற்கு மேல் படித்தவர்கள் இருக்க வேண்டும். அவர்கள்தான் அந்தப் படிப்பைச் சொல்லிக் கொடுக்க முடியும்.

அதே மாதிரி, உயர்தரப் பள்ளிப் படிப்பு இவ்வளவு மாணவர்களுக்குச் சொல்லிக்கொடுக்கவேண்டுமானால், அந்தப் படிப்புக்கு மேல் படித்தவர்கள் இருந்தால்தான், அந்தப் படிப்புச் சொல்லிக்கொடுக்க முடியும்.

அதே மாதிரி, சர்வ கலாசாலைப் படிப்புச் சொல்லிக்கொடுக்க வேண்டுமென்றால், அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கக் கூடிய தகுதி படைத்தவர்கள், அதற்குமேல் அறிவு படைத்தவர்கள் இருந்தால்தான் அதைச் சொல்லிக்கொடுக்கமுடியும்.

ஆகையால், இங்கே அடியிலிருந்து போகக்கூடியது கூட, மேலே இருக்கும் தரத்தைப் பொறுத்து இருக்கிறது. அதை ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. சாதாரண கோபுரத்திலே மேலே இருக்கக்கூடியது கீழே இருக்கக்கூடியதை ஆதாரமாகக் கொண்டிருக்கக்கூடியது. ஆனால், கல்வியில்—கீழே இருக்கக்கூடியது மேலே இருக்கக்கூடியதை ஆதாரமாகக் கொண்டிருக்கிறது.

மேல் படிப்பு எவ்வளவுக்கு எவ்வளவு பரவலாக இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு திறமையுள்ளவர்கள் இன்னும் அதிகமாக மேல் தளத்திற்குப் போக முடியும். ஒன்றுக்கொன்று பிணைக்கப்பட்டிருக்கும் காரியமாக இருக்கிறது. இதை நாம் எல்லோரும் நன்றாக மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

ஆகவே, அரசியலமைப்புச் சட்டத்தின் 45-வது ஷரத்துப்பிரகாரம், 14 வயது வரையுள்ள எல்லா மக்களுக்கும் ஆரம்பப் படிப்பு சொல்லிக் கொடுக்கவேண்டும் என்ற அடிப்படையில் நாம் திட்டம் வகுக்கும்போது, ஒன்றுக்கொன்று பிணைத்துக்கொண்டே போய், கடைசி—உயர்நிலைப்படிப்பு வரை, அதற்குத் திட்டம் போட்டு வேலை செய்ய வேண்டியதாக இருக்கிறது. எல்லோருக்கும் படிப்புச் சொல்லிக்கொடுக்கக் கூடிய அளவுக்கு எப்படி நாம் உபாத்தியாயர்களையும் மற்ற உபகரணங்களையும் ஏற்படுத்திக் கொள்ள முடியும் என்று திட்டம் வகுக்க வேண்டியதாய் இருக்கிறது.

இன்னொன்று நாம் மனதில் வைத்துக்கொள்ள வேண்டியது மிக அவசியம். இந்தப் படிப்பு பரவலாக போகப் போக, அதனாலே ஏற்படக் கூடிய பிரச்னைகள் தீருகிற முறையிலே கல்வித் திட்டம் அமைக்க வேண்டியது மிக அவசியம். பலர் நினைக்கிறார்கள்—எல்லோருக்கும் எழுதப் படிக்கத் தெரிந்து, எல்லோரும் பத்தாவது படித்துவிட்டால் பிரச்னைகள் எல்லாம் தானாகவே தீர்ந்துவிடும் என்று. இன்னும் பலர் நினைக்கிறார்கள்—எழுதப் படிக்கச் சொல்லிக்கொடுத்து விட்டால் போதுமானது என்று. அது உண்மையாக இருக்குமானால், இன்றைக்குக் கேரளத்தில் பிரச்னையே இருக்கமுடியாது. நம்மைவிட பிரச்னைகள் அங்கே கம்மியாக இருக்க வேண்டும். அங்கு அதிகமாகப் படித்திருக்கிறார்கள் என்ற காரணத்தால் ஒரு பெரிய பிரச்னை அங்கே கிளம்பியிருக்கிறது. கல்வித் திட்டம் உபயோககரமாக, மக்களுடைய வாழ்க்கையைப் பலப்படுத்தக் கூடிய திட்டமாக இல்லாமல், வெறும் புத்தகப் படிப்புடன் மட்டும் நின்றுவிடுமானால், பரவலாக ஆக, இன்னும் அதற்குமேல் படிக்கப் படிக்க, பிரச்னைகள் தீருவதற்குப் பதிலாக இனனும் பிரச்னைகள் அதிகமாகிக் கொண்டே போகும். ஆகையால்தான் இன்றைக்கு கல்வித் துறையிலே அதிகமாக விரிவுபடுத்தவேண்டுமென்று நாம் நினைத்துக்கொண்டு, எவ்வளவு நல்ல கல்வித்திட்டமாக அமையவேண்டும் என்பதிலே நாம் ஆழ்ந்த கருத்து

[Sri C. Subramaniam] [16th July 1957

கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. இதையும் யோசித்து ஒரு முடிவு செய்து, அந்த முறையிலே ஒரு நல்ல கல்வித் திட்டமாக அமைத்து, முன்னேற்றம் அடைந்தால்தான், அதன் மூலமாக உண்மையான முன்னேற்றம் ஏற்பட்டு, பிரச்னைகள் தீர்ந்து, அதன் மூலமாக நாட்டில் இருக்கும் கஷ்டங்கள் எல்லாம் தீரமுடியும் என்பதை நாம் நன்றாக உணரவேண்டும். ஆகையால், இவைகளையெல்லாம் அனுசரித்து நம்முடைய கல்வித் திட்டத்தை அமைத்துக்கொள்ள வேண்டியது மிக அவசியம். இதை அமைப்பதிலே இங்கு இருக்கக்கூடிய எல்லோருடைய ஒத்துழைப்பையும் நான் நாடுகின்றேன். அது மிக அவசியம் என்பதையும் நான் உணருகிறேன். ஆகையால், இதிலே இருக்கக்கூடிய முக்கியமான பிரச்னைகளை அங்கத்தினர்கள் முன் வைத்து, அவர்கள் அந்தப் பிரச்னைகள் முழுவதும் நன்றாக உணர்ந்து அவரவர்கள் கருத்தைத் தெரிவிக்க வேண்டும் என்பது என்னுடைய அவா. ஆகவேதான், இப்பொழுது ஓரளவுக்கு புள்ளி விவரங்கள் அடங்கிய அறிக்கை கனம் அங்கத்தினர்களிடையே கொடுக்கப்பட்டிருக்கிறது.

வெள்ளை அறிக்கையைப்பற்றியும், இந்தச் சபையின் கல்விக் கமிட்டி செய்திருக்கும் சிபார்சுகள் பற்றியும் தனியாக விவாதிப்பது என்று வைத்துக்கொள்ளலாமா, அல்லது இந்த நான்கு மணி நேரமே போதுமா என்று எதிர்க் கட்சித் தலைவரிடத்திலும், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரிடத்திலும் கலந்தாலோசித்தோம். அதைப்பற்றி தனியாக விவாதம் செய்ய வேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள். அதை நான் ஒப்புக்கொண்டிருக்கிறேன். ஆகையால், பின்னால் அவகாசம் ஏற்படும் போது, அதைத் தனியாகவும், விரிவாகவும் விவாதிப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும் என்பதையும் சபை முன் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு முக்கியமாக கவனிக்க வேண்டியது, இந்த ஐந்து வருஷத் திட்டத்திலே இவ்வருஷத்திற்கு ஏற்பட்டிருக்கக்கூடிய பட்ஜெட்டிலே என்ன என்ன குறைகள் இருக்கின்றன, என்ன என்ன முறையில் இதை மாற்றியமைக்க வேண்டும், இதிலே என்ன என்ன முன்னேற்றங்கள் செய்ய முடியும் என்பதைப்பற்றி, முக்கியமாக அதைப்பற்றிய கருத்துக்களை இந்த விவாதத்தில் கனம் அங்கத்தினர்கள் தெரிவிப்பார்கள் என்று நான் நம்புகிறேன். அதற்காக, மற்றவைகளைச் சொல்லக் கூடாது என்று தடை விதிப்பதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. முக்கியமாக, இப்பொழுது இதிலே நாம் கருத்து செலுத்துவோமானால், பின்னால் விரிவாக இதைப் பற்றி விவாதிக்கும்போது அந்தக் கொள்கைகளைப் பற்றியும் திட்டங்களைப் பற்றியும் விரிவாக விவாதிப்பதற்கும் அதைப்பற்றி முடிவுக்கு வருவதற்கும் அவகாசம் இருக்கிறது என்பதைத்தான் சபை முன் நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

பொதுக் கல்வியை மூன்று பாகமாகப் பிரிக்கலாம் ஒன்று ஆரம்பக் கல்வி. இது 8-வது வகுப்பு வரையில் ஆரம்பப் பள்ளிக்கூடங்களிலே படிக்கும் படிப்பு ஆகும். இந்த ஆரம்பப் படிப்பு 'எலிமென்டரி எடுகேஷன்' 'ஹையர் எலிமென்டரி எடுகேஷன்' எனப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

அதற்குமேல் இருக்கக்கூடியது உயர்நிலைப் பள்ளி. நான்காவது 'பாரத்'திலிருந்து 6-வது 'பாரம்' வரை படிப்புச் சொல்லிக் கொடுக்கக் கூடியது. இப்பொழுது இருக்கக் கூடியது.

இதற்கு மத்தியில் 1-வது 'பாரத்'திலிருந்து 3-வது 'பாரம்' வரையில் படிப்புச் சொல்லிக் கொடுக்கக் கூடிய இடை நிலைப் பள்ளிகள். அவைகள் வேறொரு விதத்தில், 4-வது 'பாரத்'திற்குத் தயார் செய்யக் கூடிய முறையில் அமைந்திருக்கின்றன. இப்பொழுது இருக்கக் கூடியவை. அதைப்பற்றி என்ன செய்ய வேண்டும் என்பதையும் கொள்கை முறையில் முடிவு காண வேண்டியிருக்கிறது. அது பற்றியும் இப்போழுது ஆலோசனையில் இருக்கிறது.

ஆரம்பப் படிப்பு, உயர்நிலைப் படிப்பு, கல்லூரிப் படிப்பு, இவைகளுக்கு மேலாக தொழில் படிப்பு இருக்கிறது. இதில் இரண்டு விதம் இருக்கிறது. ஒன்று—சாதாரணமாக உபாத்தியாயர்கள், வக்கீல்கள் ஆகிய வேலை



16th July 1957] [Sri C. Subramaniam]

களுக்குத் தயாரிப்பதற்கு இருக்கக்கூடிய கல்வி முறை. இன்னொரு முறை தொழில் நுட்பக் கல்வி. (Technical Education) இந்தக் கல்வித் துறையின் கீழ் தொழில் நுட்பக் கல்வி இருக்கிறது. ஆனால், மருத்துவக் கல்வி (Medical Education), விவசாயக் கல்வி, கால் நடைக்கான கல்வி, இவைகளெல்லாம் அந்தந்த இலாக்காக்களின் கீழ் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் இங்கு விவாதத்திற்கு வராது. தொழில் நுட்பக் கல்விமட்டும் இப்பொழுது இந்த இனத்தின் கீழ் விவாதத்திற்கு வரும்.

ஆகவே, இன்றைக்குக் கல்வித் துறைக்காக 11 கோடி 73·63 லட்சம் ரூபாய் மான்யமாகக் கோரப்பட்டிருக்கிறது. அதில் 6 கோடி 45.15 லட்சம் ரூபாய் (அதாவது 55 சத விகிதம்) ஆரம்பப் படிப்புக்காகக் கோரப்பட்டிருக்கிறது. 2 கோடி 11.66 லட்சம் ரூபாய் (அதாவது 19 சத விகிதம்) உயர்நிலைப் பள்ளி, நடுத்தரப் பள்ளி இவ்விரண்டு படிப்புக்கும் சேர்ந்து கோரப்பட்டிருக்கிறது. 66.03 லட்சம் ரூபாய் (6 சத விகிதம்) "Polytechnics—Teaching and Training School" என்ற வகையில் கோரப்பட்டிருக்கிறது. 1 கோடி 34.20 லட்சம் ரூபாய் (12 சத விகிதம்) கல்லூரி, சர்வகலாசாலைப் படிப்புக்காகக் கோரப்பட்டிருக்கிறது. மேற்கண்ட வகையில் மட்டும் 11 கோடி 42.43 லட்சம் ரூபாய் மான்யமாகக் கோரப்பட்டிருக்கிறது.

இந்த 11 கோடி 42.43 லட்சம் ரூபாய் கோரியிருப்பதில், முன்பு நாம் எவ்வளவு செலவழித்திருந்தோம் என்பதைப் பற்றி புள்ளி விவரங்கள் நான் கொடுத்த அறிக்கையில் காட்டப்பட்டிருக்கின்றன. 1938–39-லே 2·62 கோடி ரூபாய் கல்விக்காகச் செலவழித்துக்கொண்டிருந்தோம். இப்பொழுது Re-organized Madras State இலே, இப்பொழுது இருக்கக்கூடிய அளவிலே இருக்கும் ராஜ்யத்திலே, 11 கோடி 42·43 லச்டம் ரூபாய் செலவழிக்க இருக்கின்றோம் என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

அத்துடன் இந்த மாணவர்கள் எவ்வளவுதூரம் அதிகப்பட்டு இருக்கிறார்கள் என்பதைப்பற்றிய புள்ளி விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆரம்பப் பள்ளியில் 27·1 லட்சம் மாணவர்கள் 1933–34-ம் வருஷத்தில் இருந்தார்கள். பத்து வருஷ காலத்தில் அது 29·8 லட்சமாக உயர்ந்திருக்கிறது. அதாவது 1943–44-ம் வருஷத்திற்குள் இரண்டு லட்சத்து ஏழாயிரம் மாணவர்கள் ஆரம்பப் பாடசாலையில் அதிகம் சேர்ந்து படித்திருக்கிறார்கள். அதற்குப் பிற்பாடு ஆரம்பக் கல்வியில் கொஞ்சம் துரிதமான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதைத்தான் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.

அதாவது, 1947–48-க்குள்ளாக 36·5 லட்சமாக உயர்ந்திருக்கிறது. குறிப்பாக நான்கு வருஷத்திலே 6·70 ஆயிரம் மாணவர்கள் அதிகமாகச் சேர்ந்திருக்கிறார்கள். இதிலிருந்து 1952–53-ல் ஆந்திரா பிரிந்த பிறகு 44 லட்சமாக உயர்ந்தது. இந்தக் கணக்குப்படி பார்த்தால் வருஷம் ஒன்றுக்கு 1½ லட்சமாக உயர்ந்து வந்திருக்கிறது. இந்த உயர்வு அடுத்த அடுத்த வருஷங்களிலும் இருந்திருக்கிறது என்பதைப் புள்ளி விவரங்களில் காணலாம். 1953–54-ல் ஆந்திரா பிரிந்த பிற்பாடு நம்முடைய ராஜ்யத்தில் மட்டும் 24 லட்சம் மாணவர்கள் இருந்தார்கள். 1954–55-ல் 25·2 லட்சமாக அது உயர்ந்தது. 26.4 லட்சமாக இருக்கிறது 1955–56-ல் வருஷம் ஒன்றுக்கு சுமார் 1·20 ஆயிரம் மாணவர்கள் அதிகமாகிக் கொண்டு வருகிறார்கள் என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்த முன்னேற்றம் ஏற்பட்டதற்குக் காரணம் நாம் ஏதோ ஒரு திட்டம் போட்டுக்கொண்டு வேலை செய்தோம் என்பதால் அல்ல. அப்படிச் சொல்லவே முடியாது. மக்களிடத்தில் படிக்க வேண்டுமென்ற உணர்ச்சி ஏற்பட்டு, ஆங்காங்கே புதிய புதிய பள்ளிக்கூடங்களையும் திறக்க வேண்டுமென்று முன்வந்தார்கள். ஜில்லா போர்டு, பஞ்சாயத்து ஆகிய இவைகள் எல்லாம் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்த வேண்டுமென்று முன்னுக்கு வந்தன. இப்படி மக்களிடத்தில் ஏற்பட்ட புத்துணர்ச்சியின்

[Sri C. Subramaniam] [16th July 1957

காரணமாக, பேரெழுச்சியின் காரணமாகத்தான் படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை அதிகப்பட்டதே தவிர, நாம் திட்டம் போட்டு, இந்த லட்சியத்தை அடையவேண்டுமென்று முயற்சி செய்ததின் காரணமாக ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லமாட்டேன்.

இதே அளவிக்கு இன்னும் வளர்ந்துகொண்டு போகும் என்பது என்னுடைய கருத்து. நாம் எவ்விதமான முயற்சியும் செய்யாவிட்டாலும்கூட வருஷா வருஷம் ஒரு லட்சமாவது அதிகப்பட்டுக்கொண்டு போகும் என்றே நான் நினைக்கிறேன். ஆனால் இப்படி ஓரளவு உயர்ந்துகொண்டே போன பிற்பாடு கொஞ்சம் குறைவதற்கும் காரணங்கள் ஏற்படும். படிக்கவேண்டுமென்ற ஆசை இல்லாத காரணத்தால் இந்தக் குறைவு ஏற்படாது. படிக்க வேண்டுமென்று அவர்கள் விரும்பினாலும்கூட படிப்பதற்கு அவர்களுக்கு வேண்டிய வசதி இல்லாத காரணத்தால் படிக்க வேண்டுமென்ற ஆசை இருந்தாலும் பள்ளிக் கூடத்திற்குப் போகக் கூடிய வசதி இல்லாத நிலைமை சீக்கிரம் ஏற்பட்டுவிடும் என்பதை நாம் மனத்தில் கொள்ள வேண்டும்.

ஆகையால் இன்றைக்கே ஒரு திட்டம் வகுக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. எல்லோருக்கும் பள்ளிக்கூடம் போகவேண்டும் என்ற ஆசை எழுகிறபோது எல்லோருக்கும் படிப்பதற்கு வசதி செய்து கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்படுகிறது.

இதே மாதிரி உயர்தரப் பள்ளிகளை எடுத்துக்கொண்டாலும் மாணவர்களுடைய எண்ணிக்கை அதிகப்பட்டுக்கொண்டே வருவதைப் பார்க்கிறோம். கடந்த நான்கு வருஷங்களில் பெருத்த முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதைப் புள்ளி விவரங்களிலிருந்து காணமுடியும்.

ஆந்திராவும் சென்னையும் சேர்ந்து இருந்தபோது 1933–34–ம் வருஷத்திலே உயர்தரப்பள்ளி, மிடில் ஸ்கூல் ஆகிய இரண்டிலும் படித்துக்கொண்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கை 1 லட்சத்து எண்பதாயிரம் பேர்கள். 1943–44-ல் அதாவது பத்து வருஷங்கள் கழித்து அந்த எண்ணிக்கை 2 லட்சத்து 80 ஆயிரமாக உயர்ந்திருக்கிறது. நான்கு லட்சம் ஆகிறது 1947–48–ல். குறிப்பாக 1952–53–ல் ஆந்திரா பிரிந்து போவதற்கு முன்னால் 7 லட்சத்து 70 ஆயிரம் ஆயிற்று. இப்போது நம்முடைய ராஜ்யத்தை மட்டும் கணக்கில் எடுத்துக்கொண்டால் 1953–54–ல் 4 லட்சத்து 20 ஆயிரம். 1954–55–ல் 4 லட்சத்து 40 ஆயிரம். 1955–56-ல் மிகப் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. அதாவது 5 லட்சத்து 30 ஆயிரம் மாணவர்கள் இருந்திருக்கிறார்கள். இந்த ஒரு வருஷத்தில் மட்டும் 90 ஆயிரம் புதிய மாணவர்கள் சேர்ந்திருக்கிறார்கள் என்பதைக் காணலாம். ஆனால் 1956–57–ல் மறுபடியும் பழைய 20 ஆயிரம் அளவிற்குத்தான் உயர்ந்திருக்கிறது. பொதுவாக உயர்தரப் பள்ளி, மிடில் ஸ்கூல் ஆகியவற்றில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையும் கணிசமாக முன்னேறிக்கொண்டு வருகிறது என்பதைப் பார்க்கிறோம்.

இதே மாதிரிக் கல்லூரிகளை எடுத்துக்கொண்டாலும் அதிக முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது என்பதைப் பார்க்கிறோம். இன்றைக்கு இருக்கக் கூடிய அளவில் 37 ஆயிரம் மாணவர்கள் நம்முடைய கல்லூரிகளில் படித்துவருகிறார்கள். சென்ற வருஷத்திய விவரம்தான் சொல்கிறேன். இந்த வருஷம் எவ்வளவு இருக்கும் என்று சொல்ல முடியாது. சென்ற ஆண்டில் 34 ஆயிரம் மாணவர்கள் படித்திருக்கிறார்கள். வருஷம் ஒன்றுக்கு 2,500 மாணவர்களிலிருந்து 3,000 மாணவர்கள் அதிகமாகச் சேர்ந்து படித்துக்கொண்டு வருகிறார்கள். இன்னும் இதே அளவில் போகுமா போகாதா என்று நம்மால் சொல்ல முடியாது. இந்த வருஷத்திலேயே கல்லூரிகளுக்கு வந்துள்ள விண்ணப்பங்களைப் பார்க்கும்போது ஓரளவு குறைந்திருப்பதாகத் தோன்றுகிறது. இதற்கு என்ன காரணம் என நாம் யோசித்துப் பார்க்க வேண்டும்.

இந்த முறையில் நம்முடைய கல்வி விரிந்துகொண்டு போகிறது. ஆனால் செலவை நாம் கணக்கில் எடுக்கும்போது பையன்களின் எண்ணிக்கை எவ்வளவு அதிகமாகிக் கொண்டிருக்கிறதோ அந்த அளவு செலவு உயர்ந்திருக்கிறது என்று சொல்ல முடியாது. ஆசிரியர்களுக்கு

16th July 1957] [Sri C. Subramaniam]

சம்பள உயர்வு, டியர்னஸ் அலவன்ஸ் அதிகமாக்கப்பட்டிருக்கிற காரணத்தால் செலவு அதிகமாயிருக்கிறதே தவிர மாணவர்களுக்கு அதிகமான செலவு ஏற்படவில்லை. ஒரு மடங்கு, இரு மடங்குதான் அதிகமாகியிருக்கிறதென்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இஃதக் கணக்குப்போட்டுப் பார்த்து ஆரம்பப் பாடசாலையில் படிக்கும் ஒரு மாணவனுக்கு ஒரு வருஷத்திற்கு சராசரி என்ன செலவாகிறது என்கிற புள்ளி விவரத்தை இங்கே கொடுத்திருக்கிறோம். அதேமாதிரி உயர்தரப் பள்ளியில் இருக்கக் கூடிய மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆரம்பப்பள்ளி மாணவர்களுக்கு ஏற்படும் செலவில் பெரிய அளவு மாறுதல் ஏற்பட்டிருப்பது போல உயர்நிலைப்பள்ளி மாணவர்களின் செலவு அதிகமாகவில்லை. இதை நாம் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

குறிப்பாக 1933–34-ல் ஒரு மாணவனுக்கு சராசரி ஒன்பது ரூபாய் ஆரம்பப்பள்ளியில் செலவாகியிருக்கிறது. பத்து வருஷங்கள் கழித்து 1943-44-ல் இது 11 ரூபாயாக உயர்ந்தது. 1947-48-ல் 18 ரூபாயாக ஆயிற்று. அதற்குப் பின் ஐந்து வருஷங்கள் கழித்து 1952–53-ல் 24 ரூபாயாக ஆயிற்று. இப்படி உயர்ந்துகொண்டே போய் இன்றைக்கு ஆரம்ப ஆசிரியர்களுக்கு எல்லாம் பென்ஷன் கொடுக்க வேண்டும் என்பதாகச் செய்திருப்பதாலும், அந்தச் செலவு 30 ரூபாயாகச் உயர்ந்திருக்கிறது. அதாவது 1933–34-ல் ஒரு மாணவனுக்குச் சராசரி 9 ரூபாயாக செலவு இருந்தது இன்றைக்கு 30 ரூபாயாக உயர்ந்திருக்கிறது.

உயர்தரப் பள்ளிகளை எடுத்துக்கொண்டால் 1933–34-ல் 51 ரூபாய்தான் ஒரு மாணவனுக்கு, ஒரு வருடத்திற்குச் செலவாயிற்று. இப்போது 77 ரூபாயாக இருக்கிறது. ஆரம்பப் பள்ளிகளைப் போல் அதிக வித்தியாசம் ஏற்படவில்லை. இதை எதற்காகச் சொல்கிறேனென்றால் இப்போது நாம் விரிவாக எல்லா மாணவர்களுக்கும் 14 வயது வரையில் படிப்பு கொடுத்து ஆகவேண்டுமென்று சொல்லும்பொது எவ்வளவு இன்னும் அதிக மாணவர்களை பள்ளிக்கூடத்தில் சேர்க்க வேண்டிய நிலைமை ஏற்படும், அதற்கு ஏற்படக்கூடிய செலவு என்ன என்பதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டுமென்பதற்காகத்தான் சொல்கிறேன்.

இன்னும் முப்பது லட்சம் குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்குப் போகாமல் இருக்கிறார்கள். இந்த முப்பது லட்சம் குழந்தைகளும் பள்ளிக்கூடத்திற்குப் போகவேண்டுமென்றால் சராசரி முப்பது ரூபாய் கணக்கில் போட்டால் ஒன்பது கோடி ரூபாய் வருஷம் ஒன்றுக்கு அதிகமாகச் செலவழித்தால்தான் எல்லாக் குழந்தைகளுக்கும் ஆரம்பப் படிப்பு 14 வயது வரையில் கொடுக்க முடியும் என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். ஒன்பது கோடிக்கு மேலே கூட செலவாகும் என நான் நினைக்கிறேன்.

ஏனென்றால் இன்றைக்குப் பதினான்கு வயது வரையில் படிப்பவர்கள் மிக கம்மி. ஐந்தாவது வகுப்புவரை படிப்பவர்களே மிகக் கம்மி. ஆகையால் எல்லாக் குழந்தைகளுக்கும் 14 வயது படிக்க வசதி வேண்டும் என்கிற அடிப்படையில் என்ன செலவாகும் என்பதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். இந்த செலவுக்கு வழி செய்வது எப்படி என்கிற புள்ளி விவரங்கள் அடங்கிய அறிக்கை ஒன்றை இந்த சபை முன்பு சமர்ப்பித்திருக்கிறேன். அந்த அடிப்படையில் சட்டசபைக் கமிட்டி ஆலோசனை செய்து பல சிபார்சுகளைச் செய்திருக்கின்றன. அந்த அடிப்படையில் நாம் சீக்கிரம் ஒரு முடிவு செய்வது அவசியமாகிறது. அது ஒரு புறம் இருக்க, முக்கியமாக நிதியைப் பொறுத்து நமக்கு இருக்கக்கூடிய பிரச்சனையை இப்போது எடுத்துச் சொன்னேன். அதற்கு அடுத்தபடியாக இந்தக் கல்வித் திட்டத்தை எப்படி மாற்றுவது ? இப்போது இருக்கக் கூடிய நிலைமைக்கு உபயோககரமாகத் திருத்தி அமைப்பது எப்படி என்பதைப் பற்றியும் நாம் யோசித்தாக வேண்டும்.

அதில் அபிப்பிராய பேதம் இருக்கிறது. முதல் 8-வது வகுப்பு பொறுத்தவரை காந்திஜீயின் ஆதாரக் கல்வியே சர்க்காரின் கொள்கையாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆதாரக் கல்வி சரியான படிப்பு அல்ல என்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். அதைப் பற்றி

இங்கேயும் அபிப்பிராய பேதம் இருக்கும் என்று நான் நினைக்கிறேன். அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் ஆதாரக் கல்வியைப் பரப்ப வேண்டிய அடிப்படையில்தான் இப்போது காரியங்கள் நடந்துகொண்டு போகின்றன. அதற்கு வேண்டிய நடவடிக்கைகளும் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதைப் பற்றியும் என்னுடைய அறிக்கையில் குறிப்பிட்டு இருக்கின்றேன்.

இதற்கு அடுத்தபடியாக உயர்தரப் பள்ளிப் படிப்பு எப்படி இருக்க வேண்டும், எவ்வளவு வருஷம் இருக்க வேண்டும் என்று ஒரு சர்ச்சை கிளம்பியிருக்கிறது. உயர்தரக் கல்விப் படிப்பு முடிவதற்கு 11 வருஷங்கள் படிக்க வேண்டியிருக்கிறது. இன்னும் ஒரு வருஷம் அதிகமாகப் படிக்க வேண்டும் என்ற சிபார்சை 'செகண்டரி எஜுகேஷன் கமிஷன்' செய்திருக்கிறது. இப்பொழுது சர்வகலாசாலையில் 4 வருஷம் படிக்க வேண்டும். மத்திய வகுப்புக்கு 2 வருஷமும் அதற்கு மேல் 2 வருஷமும் படித்து பி.எ. பட்டம் பெற வேண்டும். இந்தத் திட்டத்தை மாற்றிவிட்டு சர்வகலாசாலையில் மூன்று வருஷ படிப்பு இருந்தால் போதும், ஒரு வருஷப் படிப்பை உயர்தரப் பள்ளிக்கூடத் திட்டத்தோடு சேர்க்கப்பட்டு அங்கேயே அது முடிந்துவிட வேண்டும் என்று யோசனை கூறியிருக்கிறார்கள். அதற்காக ஒரு வருஷம் அதிகமாகப் படிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்களுடைய சிபார்சை ஏற்றுக்கொண்டால் நம்முடைய உயர்தரக் கல்விப் படிப்பை 11 வருஷத்திலிருந்து 12 வருஷமாக நீடிக்க வேண்டியது அவசியமாகிறது. மற்ற ராஜ்யங்களில் உயர்தர பள்ளி படிப்பு 11 வருஷங்கள் கிடையாது. அங்கேயெல்லாம் 10 வருஷப் படிப்புத்தான். இந்தக் கமிஷன் சிபார்சுகளின் பேரில் இந்தப் படிப்பை 11 வருஷமாக ஆக்கப் போகிறார்கள். நாம் யோசிக்க வேண்டியது என்னவென்றால், நம்முடைய குழந்தைகள் அறிவு குறைவு உள்ளவர்களா, 11 வருஷப் படிப்பை 12 வருஷத்தில் படிப்பதற்கு என்பதுதான். இதை யோசனை செய்து பார்த்து நம் ராஜ்யத்திற்கு 11 வருஷப் படிப்பு இருந்தாலே போதும் என்று முடிவு செய்திருக்கிறார்கள். இதற்கு 'எல். டி.' படித்த உபாத்தியாயர்கள், பயிற்சி பெற்ற உபாத்தியாயர்கள், நல்ல 'லைப்ரரி' நல்ல 'லாபரேட்டரி' போன்றவை தேவை. சர்வகலாசாலைப் படிப்பு 4 வருஷப் படிப்பாக இருந்தால் சரியான முறையில் அமைய முடியும். சர்வகலாசாலைப் படிப்பு 4 வருஷமாக இருக்க வேண்டுமென்று ஆலோசனை செய்து சட்டசபை கமிட்டி சிபார்சு செய்திருக்கிறது. இதைப் பற்றி ஆலோசனை செய்து, விவாதித்து ஒரு முடிவு செய்ய வேண்டியதாகற்காக அவகாசம் கொடுக்கப்படும் என்று சொன்னேன். இடைக்கால ஏற்பாடாக சர்வகலாசாலைப் படிப்பிலேயே ஒரு வருஷம் இடைக்காலப் படிப்புக்காக வைத்திருக்கிறார்கள். இதனால் ஏற்படும் பிரச்னைகள் அங்கத்தினர்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். இந்தப் பிரச்னைகளைத் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டுவருகின்றன.

இந்தக் கல்வித் திட்டத்தை அமைப்பதுடன் மொழிப் பிரச்னையும் கலந்து இருக்கிறது என்பதை அங்கத்தினர்கள் அறிவார்கள். இப்போது நாம் உயர்நிலைப்பள்ளிகளில் தாய் மொழியை, பிரதேச மொழியை போதனா மொழியாக வைத்துக்கொண்டிருக்கிறோம். கல்லூரிகளில் சென்ற உடனேயே எல்லா பாடங்களையும் ஆங்கிலத்தில் படிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்று பலபேர் சொல்லியிருக்கிறார்கள். கல்லூரிப் படிப்பு ஆங்கிலத்தில் இருந்தாக வேண்டும். இல்லாவிட்டால் நாம் நுண்ணிய அறிவைப் பெற முடியாது என்று சிலர் வாதாடுகிறார்கள். பள்ளிக்கூடப் படிப்பை தமிழிலேயே படித்துவிட்டு, கல்லூரியில் மட்டும் போதனா மொழி ஆங்கிலத்தில் இருக்கிறது என்ற காரணத்தால் மாணவர்கள் எவ்வளவு கஷ்டம் அடைகின்றனர் என்பதைப் பற்றி மாணவர்களிடையே பழகுகின்றவர்கள் உணருகின்றனர். கல்லூரி ஆசிரியர்கள் அதிகமாக உணர்ந்து இருப்பார்கள். இதனால் பெருத்த கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. கல்லூரிகளிலே பாடங்களைப் போதிப்பது ஆங்கில மொழியாகவே இருக்க வேண்டும் என்றால், நியாயமாக திரும்பவும் உயர்தரப் பள்ளியிலும் ஆங்கிலத்தைப் போதனா மொழியாக 3 அல்லது 4 வருஷங்கள் ஏற்படுத்த வேண்டும். இப்படிச் செய்தால்தான் கல்லூரிப் படிப்பு ஆங்கிலத்தில் இருக்க முடியும்.





மாணவர்களுக்கு ஒரு பெரிய சுமையை அவர்கள் தலையில் ஏற்றி வைத்துவிட்டு அந்த நிலையிலேயே அவர்கள் வாழ்க்கையை நடத்தவேண்டும் என்கிற முறையில் அமைந்திருக்கிறது. இதைப்பற்றியுங்கூட சீக்கிரத்தில் ஒரு முடிவு ஏற்பட வேண்டும். என்னைப் பொறுத்தவரை உயர் நிலைப் பள்ளியில் போதனா மொழியை மாற்றுவதற்கு யாரும் ஒப்புக் கொள்வதாகத் தெரியவில்லை. ஆகையினாலே கல்லூரியிலேதான் மாற்றம் ஏற்படுவதற்கு இடமிருக்கிறது என்ற நிலைமையை நன்றாக உணர்கின்றோம். அப்படி உணர்ந்தால்கூட அந்த மாறுதலைச் செய்ய வேண்டுமென்றால் பலர் பயப்படுகிறார்கள். இதில் பயப்படுதவற்கு இடமே இல்லையென்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். பிற மொழிகளைக் கற்க வேண்டும். ஆங்கிலத்தைக் கற்க வேண்டும். இந்தியைக் கட்டாயமாகப் படித்துத்தான் ஆகவேண்டும். அண்டை ராஜ்ய மொழிகளான தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளையும் கற்றுக்கொள்ள வேண்டும். உலக மொழியாகிய ஆங்கிலமானாலும சரி, பிரஞ்சாக இருந்தாலும் சரி ஏதாவது ஒரு மொழியைக கற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும். இந்த மொழிகளைக் கற்க வேண்டிய திட்டத்தை போதனா மொழியோடு இணைக்க வேண்டியது அவசியமில்லை என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். இது சர்வகலாசாலை விஷயம், சர்வகலாசாலை விஷயத்தில் அரசாங்கம் குறுக்கிடலாகாது என்று சிலர் சொல்லுகிறார்கள். இது ஒரு அடிப்படையான கொள்கை விஷயம். இந்த விஷயத்தில் ஒரு கொள்கையை அமைத்துக் கொடுத்த பிறகு நிர்வகிக்க வேண்டிய சுதந்திரம் அவர்களுக்கு இருக்க முடியும். கொள்கையை நிர்ணயிப்பது சர்வகலாசாலையின் பொறுப்பு என்றால் சட்ட சபை அதிகாரத்தை நாம் கொடுத்துவிட்டவர்கள் ஆவோம், என்பதை நான் திரும்பவும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த சட்ட சபை, மொழி பிரச்னையையும், போதனா மொழிப் பிரச்னையையும் முக்கியமாக எடுத்துக்கொண்டு அதற்கு ஒரு முடிவு காணும் என்று நம்புகிறேன். அது நல்ல முடிவாக இருக்க வேண்டும் என்பது பற்றியும் நான் சொல்ல வேண்டிய அவசியம் கிடையாது.

எல்லா விஷயங்களிலேயும் தமிழ் மொழி முன்னேற்றம் அடைய வேண்டும் என்று சொல்லும் சமயத்தில் கல்லூரிகளில் தமிழை போதனா மொழியாக வைத்தால் பாடங்களைச் சொல்லிக் கொடுப்பது முடியாது என்று சொல்லுவது தமிழ் மொழி வளர்ச்சிக்குத் தடையாக இருக்கிறது, என்பதே என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். நீந்தக் கற்றுக் கொள்ள வேண்டுமென்றால் தண்ணீரில் இறங்க வேண்டும். இரண்டு மூன்று தடவை மூழ்கி தண்ணீரைக் குடித்துக் கஷ்டப்பட்டு வெளியே வர வேண்டும். பிரதேச மொழியைப் போதனா மொழியாகச் செய்வதனால் முதலில் சில தவறுகள் ஏற்படலாம். அதற்கு உட்பட்டுத்தான் ஆக வேண்டும். அந்தத் தவறுகளிலிருந்தே சரியான வழியை வகுத்துக் கொள்ளலாம். அப்பொழுதுதான் தமிழ் மொழி அதற்கு ஏற்ற நிலைமையை அடைய முடியும் என்பது என்னுடைய கருத்து. இதைப்பற்றி அதிகமாக நான் கூற வேண்டிய அவசியம் இல்லை. சபையில் இதைப் பற்றி மற்றவர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்ற காரணத்தினால் என்னுடைய கருத்தையும் தெரிவித்துக்கொண்டேன். எந்த விதமான மாறுதல் செய்யும்போதும் கல்வியின் தரம் குறைந்துவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். இவைகளை ஆலோசனை செய்து நாம் சீக்கிரம் ஒரு முடிவு செய்ய வேண்டும்.

அடுத்தபடியாகத் தொழில் நுட்பக் கல்வியைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். அதற்கு என்று ஒரு தனி 'டைரக்டரேட்' இலாகா ஏற்படுத்தி அதன் மூலமாக தொழில் படிப்பு பல பகுதிகளில் சேர்க்கப்பட்டு, இணைக்கப்பட்டு நல்ல முறையில் நடக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இன்னும் அதிகமாக தொழில் நுட்ப பிரிவுகளை விரிவாக்குவது மிகவும் அவசியம். அதிகமாக பல தொழில்களை நாம் இங்கு ஏற்படுத்த வேண்டுமென்றால் அதற்கு வேண்டிய தொழில் நிபுணர்களை உற்பத்தி செய்வதில் நாம் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்காக, இங்கே பல

எஞ்சினீரிங் கல்லூரிகளை ஆரம்பிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த வருஷம் கூட புதிதாக ஒரு எஞ்சினீரிங் கல்லூரியை மதுரையில் ஏற்படுத்துவதற்கு ஒரு தனிப்பட்ட நபருக்கு இன்றைக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இவைகளுக்கெல்லாம் மேலாக, உயர்தர எஞ்சினீரிங் படிப்புப் படிப்பதற்கேற்ற 'higher Technological Institute' தான் தென் பிராந்தியத்திற்கு வேண்டும். தென் பிராந்தியத்தில் அத்தகைய ஒரு இன்ஸ்டிட்யூட்டை ஏற்படுத்துவதற்காக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் தென் பிராந்தியத்தில் நிச்சயம் ஹையர் டெக்னலாஜிகல் இன்ஸ்டிட்யூட் ஏற்படுத்தப்படும். இந்த இன்ஸ்டிட்யூட்டை நமது பிராந்தியத்தில் ஏற்படுத்திக்கொள்வதற்கு நாம் யாருடனும் போட்டி போடவேண்டிய அவசியம் இல்லை. வடக்குடனோ, மேற்குடனோ, கிழக்குடனோ நாம் போட்டி போட வேண்டியதில்லை. தென் பிராந்தியத்தில் அத்தகைய ஒரு இன்ஸ்டிட்யூட் இருந்தாக வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த இன்ஸ்டிட்யூட்டை தென் பிராந்தியத்தில் ஏற்படுத்தும் விஷயத்தில் நமக்கும் கான்பூருக்கும் போட்டி கிடையாது. சென்னை, ஆந்திரா, கேரளம் மைசூர் ஆகிய நான்கு ராஜ்யங்களுக்குமாக தென் பிராந்தியத்தில் ஒரு இன்ஸ்டிட்யூட்டை ஏற்படுத்த வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அந்த இன்ஸ்டிட்யூட்டை தென் பிராந்தியத்தில் எந்த ராஜ்யத்தில் ஆரம்பிப்பது என்பது பற்றி ஆலோசிக்கப்பட்டது. நான்கு ராஜ்ய மந்திரிகளும் சேர்ந்து—அந்தக் காலத்தில் ஹைதராபாத்தில் இருந்த மந்திரிகளும் சேர்ந்து—அது பற்றி யோசித்தோம். அப்படி யோசிக்கும்போது, சிலர் மைசூரில் அந்த இன்ஸ்டிட்யூட்டை ஏற்படுத்தலாம் என்றும், சிலர் ஹைதராபாத்தில் ஏற்படுத்தலாம் என்றும் யோசனை கூறியபோதிலும், கடைசியில் சென்னையில் ஏற்படுத்தலாம் என்று முடிவு செய்யப்பட்டது. அந்த இன்ஸ்டிட்யூட்டை சென்னையில் ஏற்படுத்தலாம் என்று முடிவு செய்யப்பட்டது என்ற செய்தியை எல்லோரும் பத்திரிகைகளில் பார்த்திருக்கலாம். அந்த முடிவை நாம் வரவேற்க வேண்டும். கூடிய சீக்கிரத்தில் அந்த இன்ஸ்டிட்யூட்டை இங்கே ஏற்படுத்தி, அதன் மூலமாக நமது ராஜ்யத்தில் தொழில் நுட்பக் கல்வியை அபிவிருத்தி செய்ய வேண்டும். இன்ஸ்டிட்யூட்டை அமைப்பதற்கு வேண்டிய நிலங்களை ஆர்ஜிதம் செய்வதற்கு நாங்கள் தீவிர முயற்சி செய்துகொண்டிருக்கிறோம். ஆகையால், உயர்தரத் தொழில் நுட்பக் கல்வி ஸ்தாபனமும் இங்கே ஏற்படும் என்று "எதிர்பார்க்கலாம்" என்று சொல்லும்போது எந்த விதமான சந்தேகத்துடனும் நாங்கள் அப்படிச்சொல்லவில்லை. அது இங்கே ஏற்படும் என்ற முறையில் தான்—'ஆம்' ஐ எடுத்துவிட்டு 'டும்' ஐ போட்டு ஏற்படும் என்று சொல்லக் கூடிய அளவிற்கு—இந்த ஒரு வாரத்திற்குள் நிலைமை மாறியிருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.

**Sri K. ANBAZHAGAN** : மைசூர் ராஜ்யம் தென் பிராந்தியத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறதா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : உயர்தர தொழில் நுட்பக் கல்வி ஸ்தாபனத்தை ஏற்படுத்தும் விஷயத்தில் மைசூர் ராஜ்யம் தென் பிராந்தியத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆனால் மண்டலக் (ஸோனல்) கவுன்சில் விஷயத்தில்தான் தெற்குப் பகுதியில் மைசூர் சேர்க்கப்படவில்லை.

கல்வித்துறை, தொழில் துறை ஆகிய எல்லாத் துறைகளிலும் நாம் தொடர்ந்து முன்னேற வேண்டும். மக்களிடமிருந்து வரியாகப் பெறும் கோடிக்கணக்கான ரூபாய்களை மக்கள் பயனடையும்படி செலவு செய்ய வேண்டியது மிகவும் முக்கியம்.

கடைசியில் ஒன்று சொல்ல விரும்புகிறேன். சபையிலுள்ள எல்லா கனம் அங்கத்தினர்களும் கட்சிப் பிரதிகட்சியாக இல்லாமல், ராஜ்யத்தில் கல்வியை அபிவிருத்தி செய்வதற்கும், கல்வித் தரத்தை உயர்த்துவதற்கும் பாடுபட வேண்டும். கல்வி நிலையங்கள் நல்ல முறையில் இயங்க வேண்டும். மாணவர்கள் தங்கள் கவனத்தை கல்வியல்லாத விஷயங்களில் செலுத்தாமல் நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். அப்படி மாணவர்கள் கல்வியில் நன்றாக கவனம் செலுத்தவேண்டுமானால், கல்வி நிலையங்களுக்குள் அரசியல் புகாமல் இருக்க வேண்டியது மிகவும் அவசியம். மாணவர்கள்

16th July 1957] [Sri C. Subramaniam]

அரசியலில்—அது காங்கிரஸ் அரசியலாக இருந்தாலும் சரி, கழக அரசியலாக இருந்தாலும் சரி, ஸோஷலிஸ்டு அரசியலாக இருந்தாலும் சரி, கம்யூனிஸ்டு அரசியலாக இருந்தாலும் சரி—கவனம் செலுத்தித் தங்கள் சக்தியை வீணாக்கிக்கொள்ளாமல் இருக்க வேண்டுமானால், அரசியல் துறைகளில் இருப்பவர்கள் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். மாணவர்கள் போதிய கல்வியறிவைப் பெற்ற பிறகு எந்தக் கட்சியில் வேண்டுமானாலும் சேர்ந்துக்கொள்ளட்டும். ஆகையால், இதை உணர்ந்து, இப்போது எல்லாக் கட்சியினரும் தங்கள் கட்சியில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளக் கூடாது என்று முடிவு செய்துகொள்ள வேண்டும். எல்லாக் கட்சியினரும் மனப்பூர்வமாக—இங்கே எதையாவது சொல்லிவிட்டு வெளியில் நாம் நமது இஷ்டம்போல் நடந்துகொள்ளலாம் என்ற எண்ணத்துடன் இல்லாமல்—அப்படி முடிவு செய்துகொள்ளவேண்டும். அப்படித் தீர்மானித்துக் கொண்டு, கல்வியை அபிவிருத்தி செய்யும் விஷயத்தில் எல்லாக் கட்சியினரும் அரசாங்கத்தாருடன் பூரணமாக ஒத்துழைக்க வேண்டும். அப்படிச் செய்துதான், நாம் எல்லோருக்கும் கல்வியளிக்கவும், கல்வியின் தரத்தை உயர்த்தவும் வேண்டும். எல்லோருக்கும் கல்வியை அளிப்பதையும், கல்வியின் தரத்தை உயர்த்துவதையும் செய்தால் தான் ராஜ்யத்தையும் சுபிட்சமாக ஆக்கமுடியும் என்று சொல்லிக்கொள்வதுடன், இந்த சபையில் நான் பிரேரேபித்திருக்கும் கல்வி மான்யக் கோரிக்கையை எல்லோரும் ஆதரிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**Mr. SPEAKER** : 15 வது கோரிக்கையை கனம் கல்வி மந்திரி அவர்கள் பிரேரேபித்திருக்கிறார்கள். கல்விக்காக ரூ. 11,73,63,100 மேல்படாத தொகையை மானியம் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை கனம் கல்வி மந்திரி அவர்கள் பிரேரேபித்திருக்கிறார்கள்.

கனம் அங்கத்தினர் ஸ்ரீ எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் நோட்டீஸ் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணையை எதிர் கட்சியினர் எல்லோரும் ஆதரிக்கிறார்கள் என்று நம்புகிறேன். இப்போது அந்த வெட்டுப் பிரேரணையைப் பிரேரேபிக்கும்படி கனம் அங்கத்தினர் ஸ்ரீ எம். பி. சுப்பிரமணியம் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**Sri M. P. SUBRAMANIAM** : கனம் தலைவர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்கள் பிரேரேபித்திருக்கும் கல்வி மானிய கோரிக்கையான 11,73,63,100 ரூபாயிலிருந்து ரூபாய் 100 குறைக்கும்படி பிரேரேபிக்கிறேன்.

**Mr. SPEAKER** : கனம் கல்வி அமைச்சர் அவர்கள் பிரேரேபித்த கல்வி மானிய கோரிக்கை பிரேரேபணையும், கனம் அங்கத்தினர் ஸ்ரீ எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் பிரேரேபித்துள்ள வெட்டுப் பிரேரேபணையும் சபையின் முன்பு விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன.

***Sri M. P. SUBRAMANIAM** : இந்த வெட்டுப் பிரேரேபணையைப் பிரேரேபித்ததுடன், சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கனம் அமைச்சர் அவர்கள் சட்டசபை உறுப்பினர்களுக்குக் கொடுத்திருக்கும் இந்தத் துண்டு அறிக்கையின் மூலமாகவும் கனம் அமைச்சர் அவர்கள் இப்போது பேசிய பேச்சின் மூலமாகவும் கல்வித் துறையில் நமது மாநில அரசாங்கம் மிகவும் அக்கறை செலுத்தி வந்திருக்கிறது என்பதும், 1934-ம் ஆண்டிலிருந்து இன்றுவரை அரசாங்கம் கல்விக்காக ஒதுக்கிய பணம் எல்லாக் கல்வியும்—ஒவ்வொரு மாணவர் அடிப்படையிலும் சரி, மத்திய, நடுத்தர, உயர்தர கல்விகளிலும் சரி—மிகவும் அபிவிருத்தியடைவதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதும் தெரிகிறது. இது குறித்து நான் உண்மையிலேயே மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

(Deputy Speaker in the Chair.)

எல்லோரும் கல்வியறிவு பெற்றுவிட்டால் மாத்திரம் நமது சமுதாயத்திலும் நாட்டிலும் உள்ள பல பிரச்னைகளும் தீர்ந்துவிடாது என்பதை நானும் அறிவேன். இதற்கு உதாரணமாக பக்கத்திலுள்ள கேரள ராஜ்யம் குறிப்பிடப்பட்டது. ஆனால் எல்லோருக்கும் கல்வி கொடுப்பதால் மட்டும் பிரச்னைகள் அதிகமாகி விடாது என்பதை நாம் நன்கு உணரவேண்டும்.

[Sri M. P. Subramaniam] [16th July 1957

மேலும், கனம் கல்வி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளபடி 14 வயது வரையில் எல்லா பள்ளி வயது வந்த குழந்தைகளுக்கும் கட்டாய இலவசக் கல்வி அளிப்பதற்கு 1960-ம் ஆண்டுக்குள்ளாக வகை செய்யவேண்டும். ஒவ்வொரு ஆண்டிலும் கல்வி மானிய கோரிக்கையைப் பிரேரேபிக்கும் போது கனம் கல்வி அமைச்சர் அவர்கள் அந்தத் திட்டத்தை ஞாபகப்படுத்தி வலியுறுத்தி வருகிறார்கள். சில வருஷங்களுக்கு முன்பு, பள்ளி வயது வந்த எல்லாக் குழந்தைகளுக்கும் 14 வயது வரை கட்டாய இலவசக் கல்வியைக் கொடுப்பதற்கு 1960-ம் வருஷத்திற்குள் வகை செய்வதுபற்றி ஆலோசனைகள் கூறுவதற்காக இரண்டு மூன்று நாட்களுக்குமுன் ஒரு குழு மத்திய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தியைப் பத்திரிகைகளில் பார்த்தோம். நம் ராஜ்யத்தில் இன்னும் 30 லட்சம் பிள்ளைகள் ஆரம்பகல்வி அளிக்கப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்று கனம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படியிருக்கும்போது, அரசியல் சட்டத்தில் போடப்பட்ட திட்டத்தை 1960-ம் ஆண்டுக்குள் நாம் நிறைவேற்ற முடியாது என்றுதான் தோன்றுகிறது. கனம் அமைச்சர் அவர்கள் கூறியதுபோல் வருமானத்தில் 1/5 பங்கைக் கல்விக்காகச் செலவு செய்தாலும், அந்த இலக்கை அடைய முடியாது என்றுதான் தோன்றுகிறது. அந்த இலக்கை அடைவதற்கு இன்னும் அதிகமாகச் செலவு செய்ய வேண்டும். கனம் அமைச்சர் அவர்கள் கூறியதுபோல் நாம் கல்விக்காக 9 கோடி ரூபாய் செலவு செய்ய வெண்டுமென்றால், நமக்கு அவ்வளவு பண வசதி இல்லை. இன்றைய நிலையில் மாநில அரசாங்கங்களுக்கு போதுமான வருவாய் இல்லை. ஆகவே இந்தக் கல்வித் திட்டத்தை எப்படி நிறைவேற்றுவது என்று சிந்திக்கும் நிலைமையில் நாம் இருக்கிறோம். இது ஒரு அத்தியாவசியமான திட்டம். இது அரசியல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் திட்டம். ஆகவே, இந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்காக, எல்லா மாநில அரசாங்கங்களுக்கும் பொருளாதார உதவி அளிக்க வேண்டியது மத்திய அரசாங்கத்தின் தலையாய கடமை என்று கூற விரும்புகிறேன். வேறு பல திட்டங்களுக்காகவும், நாட்டின் பாதுகாப்பிற்காகவும் எவ்வளவோ கோடி ரூபாய் செலவு செய்யப்படுகின்றது. ஜனநாயகம் என்ற அடிப்படையில் ஆட்சி நடத்த ஆரம்பித்தபிறகு ஒவ்வொரு குடிமகனும் நல்ல குடிமகனாகவும், ஒழுங்கான குடிமகனாகவும் இருக்கவேண்டுமென்பதற்காக, எல்லாக் குடிமக்களையும் படித்தவர்களாக ஆக்கவேண்டியது நம்முடைய முக்கியமான கடமை ஆகும். ஆனால், அரசாங்கத்தால் இப்போது நடத்தப்பட்டு வரும் முதியோர் கல்வி வகுப்புகளால் மக்கள் பயனடைகிறார்களா, என்றால், பயனடைகிறார்கள் என்று கனம் அமைச்சர் அவர்கள் கூட ஒப்புக்கொள்ளமாட்டார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே பயனில்லாத முதியோர் கல்விக்காகச் செலவு செய்யும் பணத்தை மற்றக் கல்விக்குப் பயன்படுத்தலாம். 30 ஆண்டுகளுக்குள்ளாகவாவது எல்லோரையும் படித்தவர்களாக ஆக்குவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் அடுத்த தலைமுறையிலாவது சமுதாயம் முழுவதிலும் கல்வியறிவு ஏற்பட்டிருக்கும். அதற்கு வேண்டிய பணத்தை மத்திய அரசாங்கத்திடமிருந்து பெறுவதற்கு நமது அரசாங்கம் முயற்சி செய்யவேண்டும். பள்ளி வயது வந்த எல்லோருக்கும் 14 வயது வரை கட்டாய இலவசக் கல்வியை அளிப்பதற்கு, 1960-ம் ஆண்டுக்குள் இல்லாவிட்டாலும் இன்னும் சில ஆண்டுகளுக்குள்ளாகவாவது, வகை செய்வதற்கு அரசாங்கம் முயற்சிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது நம்முடைய சென்னை ராஜ்யத்தைப் பொறுத்தவரையில், சமீப காலத்தில் துவக்கப் பள்ளிகள் ஏராளமாக துவக்கப்பட்டிருக்கின்றன. பல இடங்களிலே இரட்டிப்பாக மாணவர்கள் தொகை பெருகியிருக்கிறது. நம் நாட்டில் கல்வித்தரம் மிகவும் குறைந்துவிட்டது என்று சொல்லுகிறார்கள். கல்வியைப் பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் கல்வித்தரம் குறைந்துவிட்டது என்று சொல்லுவது தவறு, தரம் குறையவில்லை என்கின்றனர் மற்றவர்கள். இம்மாதிரி சொல்லும் இரு தரப்பினரும் இருக்கிறார்கள். எந்தத் துறையில் கல்வித்தரம் குறைந்தாலும், குறையாவிட்டாலும், ஆரம்பக்கல்வித் துறையில் அதாவது ஐந்தாவது வகுப்பு வரையில் நிச்சயமாக கல்வித்தரம் குறைந்துதான் இருக்கிறது. இதை நடைமுறையிலே கிராமங்களில் பார்க்கலாம். ஐந்தாவது படிக்கும்



16th July 1957] [Sri M. P. Subramaniam]

பிள்ளைகளுக்கு நூல் நூற்பது போன்ற கஷ்டமான வேலைகள் கொடுப்பது உண்மையாகவே அவசியமில்லை என்று கருதுகிறேன். ஆதாரக் கல்வி திட்டத்தை அரசாங்கம் ஒரு கொள்கையாக ஒப்புக்கொண்டு நடைமுறையிலே செயலாற்றி வருவதாகச் சொல்லுகிறார்கள். அது எப்படியிருந்தாலும் துவக்கப்பள்ளிகளில் குழந்தைகளுக்கு இம்மாதிரி கடினமான வேலைகள் கொடுப்பது சரியல்ல என்று தான் குறிப்பிட விரும்புகிறேன். ஐந்தாவது வகுப்பில் படிக்கும் ஒரு பிள்ளையை வெளியிலே அழைத்து பெரிய எழுத்தில் எழுதப்பட்ட ஒரு தமிழ் புத்தகத்தை கொடுத்தால்கூட அதை அவனால் சரியாக படிக்கமுடியவில்லை. அதற்குக் காரணம் படிக்கக்கூடிய பிள்ளைகளுக்கு அந்த அளவுக்கு பாட திட்டங்கள் நல்ல முறையில் அமையவில்லை. ஆதாரக்கல்வி அடிப்படையிலே மாணவர்களுடைய வருவாயை எதிர்பார்க்கும் குறிகோள் கொண்ட உயரிய திட்டம் அது என்று கூறுகிறார்கள். எனக்குத் தெரிந்த வரையில் ஒரு பள்ளிக்கூடத்தில் மாணவர்கள் எவ்வளவு நூல் நூற்கவேண்டுமென்று சொல்லப்படுகிறதோ, அந்த நூலை கடையில் போய் சிட்டமாக வாங்கிகோண்டுவந்து கணக்கு ஒப்பித்துவிடுகிறார்கள் ஆசிரியர்கள். உண்மையாக இந்த பிள்ளைகளால் நூல் நூற்கமுடியாது. அவர்களை அம்மாதிரி வற்புறுத்துவது இயலாத காரியம் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆரம்பக் கல்வித் தரம் குறைந்ததற்கு மற்றொரு காரணம் உண்டு. சில வருஷங்களுக்கு முன்பு ஒரு தாலூக்காவிலே, ஒரு பகுதியிலே 20, 30 பள்ளிகள் இருந்தால் இப்போது அதே பகுதியிலே 100 பள்ளிகள் இருக்கின்றன. இந்தப் பள்ளிகளை மேற்பார்வை பார்ப்பதற்கு முன்பு இருந்த டிப்டி இன்ஸ்பெக்டரே போதுமானதாக ஆகாது. ஒருவர் 100 பள்ளிகளை மேற்பார்வையிடவேண்டுமென்றால், ஒரு வருஷத்தில் நிச்சயமாக அவர்கள் எல்லா பள்ளிகளையும் ஒரு தடவை கூட கண்காணிக்கமுடியாது என்பதை இந்த சபையிலே அமைச்சர் அவர்களுக்கு எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். டெப்யூடி இன்ஸ்பெக்டர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தவேண்டும் என்று கடந்த சட்ட சபையில் கல்வி மான்ய விவாதத்தின் போது கூறியிருக்கிறேன். அதனால் அரசாங்கத்திற்கு மிகப் பெரிய செலவு ஏற்படப்போவதில்லை. ஏனென்றால் செக்கண்டரி ஆசிரியர்களின் தரத்தில் இருப்பவர்களைத் தான் டெப்யூட்டி இன்ஸ்பெக்டர்களாக நியமனம் செய்கிறார்கள். ஒரு டெப்யூட்டி இன்ஸ்பெக்டருக்கு அதிகப்படியாக 40 பள்ளிகளுக்கு மேல் உறுதியாக இருக்கக்கூடாது. அப்படியிருந்தால் தான் திறம்பட எல்லா பள்ளிகளையும் கண்காணிக்க முடியும். அதுவும் அனுபவம் இல்லாத இளைஞர்கள் பள்ளி ஆசிரியர்களாக நியமிக்கப்படுவதால் அவர்களை கண்காணிப்பதற்கும், அவர்கள் நல்ல முறையில் வேலை செய்வதற்கும் இது உதவியாக இருக்கும் என்பதை அரசாங்கம் மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். அதோடு மாத்திரமல்ல, ஒரு ஜில்லாவில் இருக்கும் எல்லா பள்ளிக்கூடங்களையும் ஒரு டி. ஈ. ஓ. கண்காணிப்பது இயலாத காரியம். அது மாத்திரமல்ல. சில மாவட்டங்களிலே இரண்டு டி. ஈ.ஓ. போடவேண்டுமென்று சிபார்சு செய்யப்பட்டு அரசாங்கம் அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொண்டிருப்பதாக கேள்விப்படுகிறேன். அதுமட்டும் போதாது. டி.ஈ.ஓ. எல்லாப் பள்ளிகளோடும் தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டுமானால், மற்ற ஜில்லா அதிகாரிகளுக்கு கொடுத்திருப்பதுபோல், அவர்களுக்கும் ஜீப் வாகன வசதிகள் செய்து கொடுக்கவேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் ஒரு வருஷத்தில் எல்லா பள்ளிகளோடும் தொடர்பு வைத்திக்கொள்ளமுடியும். அதோடு மாத்திரமல்ல, ஆரம்பப் பள்ளிக்கூடங்களுக்கு பாட திட்டங்களை தீட்டுவதிலே ஆரம்ப ஆசிரியர்களுக்கு பங்கு இருக்கவேண்டும். அவர்களுக்கு நேரிடையாக பள்ளிக்கூட பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக்கொடுக்கும் பொறுப்பும் வாய்ப்பும் இருக்கிற காரணத்திலே, பாடதிட்ட கமிட்டியிலே நிச்சயம் அவர்களுக்கு இடம் கொடுக்க வேண்டுமென்று அறிவுறுத்த விரும்புகிறேன்.

கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளிலே திட்டக் கமிஷன் கீழும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழும், ஆயிரக்கணக்கான ஓராசிரியர் பள்ளிகள் திறக்கப்பட்டிருக்கின்றன. வேலையில்லா திண்டாட்டத்தை போக்குவது ஓராசிரியர் பள்ளிகள் திறக்கப்படுவதன் முதலாவது குறிகோள். வயது வந்த

[Sri M. P. Subramaniam] [16th July 1957

பிள்ளைகளுக்கு கல்வி கொடுப்பது இரண்டாவது காரணம். இந்த ஓராசிரியர் பள்ளிகளிலே பயிற்சி பெற்ற ஆசிரியர்களும், பயிற்சி பெறாத ஆசிரியர்களும் தொண்டு புரிகிறார்கள். இரண்டு மூன்று ஆண்டுகளாகவேலை செய்து வந்த போதிலும் அவர்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்கப்படுவதில்லை. மற்ற பள்ளிக்கூடங்களில் கொடுப்பதுபோல், ஒவ்வொரு ஆண்டும் அவர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கப்படுவதில்லை. பயிற்சி பெறாதவர்கள் ஏறக்குறைய 4,000, 5,000 ஆசிரியர்கள் ஓராசிரியர் பள்ளிகளுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இரண்டு, மூன்று ஆண்டுகள் பள்ளிக்கூட ஆசிரியராக இவர்கள் வேலை செய்துவிட்ட பிறகு, மே, ஜூன் மாதத்தில் ஒரு ஜில்லா போர்டு உத்தரவு இவர்களுக்கு கிடைத்திருக்கிறது. ஆசிரியராக நியமிக்கப்பட்ட பொழுது 62 ரூபாய் ஆரம்பத்திலே சம்பளம் கொடுத்தார்கள் இப்பொழுது அவ்வளவு கொடுக்க முடியாது, பயிற்சி பெறாத ஆசிரியர்களுக்கு ரூ. 20-ம், ரூ. 18-ம் தான் கொடுக்கமுடியும் என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். முதலில் நியமிக்கப்படும்பொழுது பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்குக் கொடுப்பதுபோல் ரூ. 40-ம், ரூ. 22-ம் கொடுக்கப்படும் என்று உறுதி அளித்துவிட்டு, திடீரென்று நாங்கள் முதலில் தெரியாமல் உத்தரவு போட்டுவிட்டோம், பயிற்சி பெறாதவர்களுக்கு ரூ. 20-ம் ரூ. 18-ம் தான் கொடுக்கப்படும் என்று சொல்லுவது சரியல்ல என்பதை அரசாங்கத்திற்கு தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய அரசாங்க உதவி இல்லையென்றாலும்கூட, மாகாண அரசாங்கமாவது இந்த பற்றாக்குறையை ஈடு செய்ய முன்வரவேண்டும். அல்லது, ஜில்லா போர்டுக்காவது இந்த அதிகாரத்தை வழங்க வேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இரண்டு, மூன்று ஆண்டு காலம் பள்ளிகளில் ஆசிரியராக வேலை செய்துவிட்டு பின் இரண்டு ஆண்டு கால பயிற்சி பெற வேண்டுமென்று சொல்லுவது, உண்மை நிலைமையை கல்வி இலாகா சரியாக கவனிக்கவில்லை என்று தான் நினைக்கிறேன். 1946-ல் Emergency Course என்று ஓராண்டு பயிற்சி திட்டம் ஒன்று இருந்தது. ஓராண்டு பயிற்சி பெற்றவர்கள் மற்ற ஆசிரியர்களைவிட தரத்தில் குறைவாக இருக்கிறார்கள் என்று கல்வி இலாகாவிலுள்ள பொறுப்புள்ள அதிகாரிகள் நிச்சயமாக கூறமுடியாது என்று கருதுகிறேன். பயிற்சி பெற்ற ஆசிரியர்களைக் கேட்டால், இரண்டு ஆண்டு காலம் அனாவசியமானது, 3 மாதத்திற்குள் பாட திட்டங்களை முடித்துவிடலாம். ஒரு ஆசிரியர் இத்தனை வகுப்புகள் நடத்தவேண்டுமென்று விதித்திருக்கிறார்கள். அதற்குத்தான் காலம் வேண்டும். அது மிகவும் சுலபம். ஆகையால் இரண்டு ஆண்டு காலம் அவசியமில்லை. என்று சொல்கிறார்கள். தொடர்ந்து 2 3 ஆண்டு காலம் ஆசிரியராக வேலை செய்துவிட்டு, அனுபவம் அடைந்தபிறகு மேலும் இரண்டு ஆண்டு பயிற்சி பெறவேண்டியது உண்மையிலேயே அவசியமில்லை, அனாவசியம், என்பதை அமைச்சர் அவர்களுக்கு எடுத்துக்கூற விரும்புகிறேன். அது மட்டுமல்ல. ஏதோ வேலை செய்து கொண்டிருக்கிறோம் என்று நிம்மதியாக இருக்கும் ஆசிரியர்களை மறுபடியும் மேலும் இரண்டு ஆண்டு பயிற்சி பெற வேண்டுமென்று சொன்னால் மிகவும் கஷ்டமாக இருக்கும். மேலும், ரூ. 50, 60 சம்பளம் வாங்கிவிட்டு, பயிற்சி காலத்தில் அவர்கள் ரூ. 18 Stipend பெறுவது அவர்களுக்கு கஷ்டமாக இருக்கும். ஆகையால் ஓராண்டு காலத்திற்கு பயிற்சி வைத்து அவர்கள் சம்பளத்தில் பாதியாவது Stipend ஒடு சேர்த்துக்கொடுப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, உயர்நிலை பள்ளிகளைப பார்க்கப்போனால், சில பள்ளிக்கூடங்களில் 1,000, 1,500 பிள்ளைகள் இருக்கிறார்கள். உதாரணமாக சேலத்தில் ஒரு பள்ளிக்கூடத்தில் முதலாவது பாரம், இரண்டாவது பாரத்தில் எ. பி. யிலிருந்து ஜி. எச் வரையிலும் செக்ஷன்கள் இருக்கின்றன. இவ்வளவு பேர்களுக்கும் ஒரு தலைமை ஆசிரியர் தான் இருக்கிறார். 1,000-க்கு மேற்பட்ட பையன்கள் ஒரு உயர்நில பள்ளியில் இருந்தார்களேயானால், அவர்களை ஒரு தலைமை ஆசிரியர் சமாளிப்பது நிச்சயமாக கஷ்டம். ஆகவே ஒரு உயர்நிலை பள்ளியில் 200, 250 பிள்ளைகளுக்கு மேல் உறுதியாக இருக்கக்கூடாது என்று ஒரு விதி ஏற்படுத்தவேண்டும். அப்படி அதிக பிள்ளைகள் இருப்பார்களேயானால், பக்கத்திலுள்ள ஊரிலோ, நகரிலோ

ஒரு வகுப்பில் 10, 12 செக்ஷன்கள் இருப்பதை தவிர்க்க வேண்டும். அப்படியிருந்தால்தான் தலைமை ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் தொடர்பு அதிகமாக இருக்கும். அதேபோல் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் தொடர்ப்பு அதிகமாக இருக்கும். மாணவர்களின் தரமும் உயரும், கல்வியின் தரமும் உயரும் என்பதை அமைச்சர் அவர்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

செகண்டரி கல்வியிலிருந்து கல்லூரி படிப்புக்கு செல்லும் மாணவர்கள், உயர்நிலைப் பள்ளியில் எல்லா பாடங்களையும் தமிழிலேயே படித்துவிட்டு கல்லூரியில் ஆங்கிலத்தில் கற்கவேண்டியிருப்பதால், மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் போதிக்கப்படுவதை புரிந்துகொள்ளுவதற்கு கொஞ்சகாலம் பிடிக்கிறது. இரண்டாவது ஆண்டில்தான் மாணவர்கள் கல்லூரி படிப்பில் சொல்லிக்கொடுப்பதை புரிந்துகொள்ளுவதற்கு தயாராகிறார்கள். இதன் காரணமாக எஸ். எஸ். எல். ஸி. முடித்துவிட்டு Pre-University வகுப்பில் படித்த மாணவர்கள் பெரும் பகுதி பரிக்ஷையில் தேறமுடியவில்லை. அவர்கள் ஆசிரியர்கள் ஆங்கிலத்தில் போதிப்பதை புரிந்துகொள்ளுவதற்கு தங்களை தயார் செய்துகொள்ள 5,6, மாதங்கள் ஆகின்றன. இதை தவிர்ப்பதற்கு கல்லூரிலே தமிழ் போதனு மொழியாக நிச்சயமாக வரவேண்டும். தமிழை கல்லூரியில் போதனு மொழியாக கொண்டுவருவதில் பல சங்கடங்கள் இருந்தாலும், அமைச்சர் அவர்கள் கூறியதுபோல நாளடைவிலே அந்த சங்கடங்களை போக்கிக்கொள்ளமுடியும். நிச்சயமாக ஆங்கிலத்தின் இடத்தை பூர்த்தி செய்ய தமிழ் தகுதி வாய்ந்தது என்பதை இந்த சபையிலே தெரிவித்துக்கொள்கிறேன். ஆகையால் கல்லூரியில் தமிழை போதனு மொழியாக ஆக்குவதற்கு வேண்டிய முயற்சிகளை விரைவிலே எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

Pre-University வகுப்புக்கு ஏற்கனவே Intermediate வகுப்புக்கு உள்ள syllabus-ஐ அநேகமாக அப்படியே வைத்திருக்கிறார்கள். ஒரு வருஷத்தில் இத்தனை பாடங்களையும் பிள்ளைகள் படித்து எப்படி பாஸ் செய்யமுடியும் ? உறுதியாக முடியாது. ஆகவே Pre-University வகுப்புக்குள்ள பாட திட்டத்தை குறைக்கவேண்டும். ஓராண்டு காலத்திற்குள் படிக்கும் வகையிலே பாட திட்டத்தை குறைக்கவேண்டும். இதில் அரசாங்கம் கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். இறுதியாக கல்லூரி மாணவர்களைப் பொறுத்தவரை அவர்கள் மீது யாரும் அரசியலைப் பற்றி புகுத்தக்கூடாது என்பதைப்பற்றி நிதி அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இவ்விதமாக நிதி அமைச்சர் அவர்கள் போதனை சொல்லும் நேரத்தில், சில மாதங்களுக்கு முன் அகில இந்திய காங்கிரஸ் செயலாளர் ஸ்ரீமன் நாராயன் அவர்கள் கூறியிருப்பதாக பத்திரிகையில் ஒரு செய்தி வெளி வந்தது. அவர் பரிசிலனை விடுத்துள்ள அறிக்கையில் காங்கிரஸ் கட்சியும், காங்கிரஸ் கமிட்டிகளும், ஆசிரியர் மாணவர்களிடையே அதிக கவனம் செலுத்தி ஆதரவை பெறவேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்கள். இதை பல பத்திரிகைகளும் கண்டித்து எழுதியிருந்தது சில அரசியல் கட்சிகளுக்கு மாணவர்களிடையே ஆதரவு இருக்கும் காரணத்தால் மாணவர்களிடையே அரசியலை புகுத்துவது சரியல்ல என்று வேதாந்தம் பேசப்படுகிறது. கடைசியில் சில வார்த்தைகள் அதாவது சேலத்தில் இருக்கிற நிலைமையைப்பற்றி. இன்றைக்கு கல்விக்காக எவ்வளவோ செலவு செய்யும் இந்த நேரத்தில் ஒரே அடிப்படையில் கல்வி விஸ்தரிப்பு விஷயத்தை கவனிப்பது சரியல்ல. சேலம் மாவட்டத்தில் படித்தவர்கள் 12 பர்சண்ட் என்றும் அதற்கடுத்ததாக கோயம்புத்தூர் 18 பர்சண்ட் என்றும் மற்ற மாவட்டங்களில் 20 பர்சண்ட் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. சேலத்தில் இப்போது முனிசிபாலிட்டியால் நடத்தப்படும் ஒரே ஒரு கல்லூரி மாத்திரம் தான் நடந்து வருகிறது. சேலம் மாவட்டம் அதிக ஜனத்தொகை கொண்டதாகும். சட்டசபை உறுப்பினர்கள் மட்டும் 23 பேர். அண்மையில் தனிப்பட்டவர்களாலும் அரசாங்கத்தாலும் இதர மாவட்டங்களில் பல கல்லூரிகள் திறக்கப்பட்டன. ஆனால் சேலத்தில் ஒன்றுகூட திறக்கவழி செய்யப்படவில்லை. ஆனால் சேலம் மாவட்டத்தில் அதிகமான செல்வந்தர்கள் இல்லாத காரணத்தால், பிற்போக்காக இருக்கின்ற அந்த மாவட்டத்தில் மாணவர்களுக்கு கூடுதல் கல்லூரிகளை அரசாங்கம் திறக்க முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சென்ற ஆண்டு பல '' [illegible]

பள்ளிகள் திறக்கப்பட்டன. ஆனால் உயர் நிலை பள்ளிகள் ரொம்பவும் குறைவாயிருக்கிறது. 30 உயர் நிலை பள்ளிகள் திறக்கப்படவேண்டும் என்று பல முயற்சிகள் செய்யப்பட்டிருந்தும் 4 பள்ளிகள் மட்டும் திறப்பதற்குதான் அனுமதி தந்திருக்கிறார்கள். ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் மூன்று ஆண்டுகளுக்கு 10 ஆயிரம் ரூபாய் செலவு ஆகும் என்று கணக்கு செய்து ஜில்லா போர்டில் 5 ஆயிரம் செலுத்தி 10 ஏக்கர் நிலமும் கொடுத்து ரூபாய் இருபதினாயிரம் செலவு செய்து கட்டிடமும் கட்டிய பிறகும் அனுமதி கொடுக்காமல் இருப்பது நியாயமல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது தவிர சேலத்தில் ஒரு "பாலிடெக்னிக்" திறக்கப் போவதாக பத்திரிகையில் வந்தது உண்மையாக இருக்குமானால் அதை வரவேற்கிறேன். அது தனிப்பட்ட நபரால், அதாவது திரு. கருமுத்து தியாகராஜ செட்டியார் அவர்களால் 3¼ லட்சம் ரூபாய் செலவில் நிறுவப் போவதாகவும், ஆண்டு ஒன்றுக்கு 90 ஆயிரம் ரூபாய் செலவு செய்யப் போவதாகவும் உள்ள செய்திகளை பத்திரிகையில் பார்த்தேன். இந்த செய்தி உண்மையாய் இருக்குமானால் அவருக்கும் எங்களுடைய பாராட்டு உரித்தாகுக என்று கூறி, இந்த ஆண்டே "பாலிடெக்னிக்" திறப்பதற்கு வேண்டிய கவனம் செலுத்தப்படவேண்டும் என்று கூறிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* SRI W. P. A. R. CHANDRASEKHARAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் கல்வி மான்யத்தை ஆதரித்து பேசும் நிமித்தம் சில அபிப்பிராயங்களை கூற ஆசைப்படுகிறேன். சுயராஜ்யம் அடைந்ததற்கு பின் கல்வி நிலை எவ்வளவோ பெரிய அளவில் உயர்ந்திருக்கிறது, வளர்ந்திருக்கிறது, விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாது. ஒரு விவசாயி தன்னுடைய நாற்றங்காலை எவ்வளவு சிறப்பாக வைத்துக்கொள்ளுகிறானோ, அதே மாதிரி ஒரு சமுதாயம் கல்வி ஸ்தாபனத்தை சிறப்பாக வைத்துக்கொள்ளவேண்டும். அப்படிப்பட்ட நிலையில் இப்போது சற்று முன் மதுரை ஜில்லாவில் ஒரு இன்ஜினியரிங் காலேஜ் ஆரம்பிக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறியதற்காக மதுரை ஜில்லா வாசிகள் சார்பாக நான் பாராட்டுதலை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இப்போது ஆதார கல்வி ஆரம்பப் பள்ளிகள் அதிகமாக ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு சில கணக்குகள் சரிக்கட்டப்படுகிறது என்று கூறப்பட்டது. ஒருவர் அல்லது இருவர் அம்மாதிரி செய்திருக்கலாம். ஆனால் இவை எல்லாவற்றிற்கும் முக்கியமானது மனோதர்மம் (inclination) என்று கூறப்படும் தன்மை ஆங்காங்கு அமையப்பெற்றுவிட்டால் அந்தந்த ஆதார பள்ளிக்கூடங்களின் நோக்கம் அடிப்படையாக நிறைவேற்றப்படும் என்பது எனது தாழ்ந்த அபிப்பிராயம். அது மட்டுமல்ல, நமது கல்வித் திட்டம் வெறும் புத்தக ரீதியில் தான் இருக்கிறது. வெறும் எழுத்து அறிவோடு நிறுத்திக் கொள்ளப்படுகிறது என்று சொல்லப்படும் நிலையில் ஆதாரக் கல்வி ஆரம்பிக்கும் போது பருத்தி நூலும் பஞ்சும் தான் ஆரம்பத்திற்கு உதவுகிறது. அதோடு நிறுத்திக்கொள்ளாமல் உயர் நிலை கல்வியில் ஆரம்பிக்கும் பொழுது, அந்தந்த இடங்களில் என்னென்ன தொழில் இருந்தால் முன்னேற முடியும் என்று கருதப்படுகிறதோ அந்த தொழிலை மாணவர்களுக்கு கற்றுக்கொடுக்கவேண்டும். அது மாத்திரமல்ல. இன்னும் சில மாவட்டங்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன. சில மாவட்டங்கள் ஆதரிக்கப்படுகின்றன என்பதை பலர் சொன்னார்கள். ஆங்காங்கு தனிப்பட்டவர்கள் முன்னெறி தான் கல்வி ஸ்தாபனங்களை ஆரம்பிக்கக்கூடிய நிலைமையில்தான் அம்மாதிரி தெரிகிறது. ஆனால் சர்க்கார் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒவ்வொரு யூனிவர்ஸிட்டி ஏற்படுத்தவேண்டும் என்று கூறிக்கொண்டு, உலக ரீதியில் பார்த்தால் நாம் கல்வியில் பிற்போக்கான நிலையில் இருக்கிறோம். எப்படி தனிப்பட்ட வகுப்பார், எவ்விதம் ஆதி வாசிகள் என்று எல்லாம் கூறப்படுகிறதோ அது மாதிரி கல்வியில் பின் தங்கியிருக்கும் இடங்களில் எல்லாம் கல்வியை முன்னேற்றுவதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதாவது சில இடங்களில் ரோடுகளில் ஜீப் போக முடியாத நிலைமையில் இருக்கிறது. கற்களை அகற்றினால் தான் போக முடியும். இந்த இடங்களில் எல்லாம் சர்க்கார் தாராள மனப்பான்மையுடன் கவனம் செலுத்தவேண்டும் என்று கூறிக்கொள்கிறேன்.

16th July 1957] [Sri W. P. A. R. Chandrasekharan]

மேலும் சம்பள சலுகை விஷயத்தில் இப்போது என். ஜி. ஒ-க்களுக்கு சலுகை ஒன்று, ஷெட்யூல்ட் ஜாதியனருக்கு சலுகை, மற்றுள்ள பிற்பட்ட வகுப்பாருக்கு சலுகை, அதற்கு அப்புறம் வருஷம் ஒன்றுக்கு 1,200 ரூபாய் குறைவாக வருமானம் இருந்தால் சலுகை, இவ்விதமாக நாலைந்து பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறன்றன.

அந்த நிலையில் நான் சொல்லப் பிரியப்படுவது என்னவென்றால், ஏதோ கொஞ்சம் செலவழித்து ரெவின்யு அதிகாரிகளிடமிருந்து அடையக்கூடியவர்க ளால்தான் அதை அடைய முடிகிறது. மற்றப்படி ஒன்றுமே செலவு செய்ய முடியாதவர்களால் அதை அடைய முடிவதில்லை. அந்த ஆதாரம் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. ஆகவே எந்த அடிப்படையில் இந்த சலுகை கொடுக்கப்படுகிறதோ அந்த நோக்கம் அங்கே நிறைவேறவில்லை என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகவே இதற்குச் செய்ய வேண்டியது என்ன என்று பார்த்தால் இந்த மூன்ருவது பாரம் வரை யில் அரசாங்கம் இன்னும் சம்பளச்சலுகையை மேல்வகுப்புகளுக்கு விஸ்தரிப்பதற்கு முன்னால் 1, 2, 3 பாரம்களில் எல்லா மாணவர்களுக்கும் தராதரம் பார்க்காமல் சலுகை அளித்துவிட்டால் நன்ருக இருக்கும். மேலும், ஆசிரியர்களை டிரான்ஸ்பர் செய்யும் முறையை எல்லா உத்தியோ கத்திலும் கையாளும் ரீதியில் கையாளாமல் அவர்களுக்கு இருக்கும் கஷ்ட நஷ்டங்களை அனுசரித்து டிரான்ஸ்பர் செய்து கொடுக்க வேண்டுமென்றும், ஏனென்ருல், ஆசிரியர்களின் நிலை பழகப் பழ கத்தான் அவர்களுக்கு தேர்ச்சி அதிகமாகும் அங்கு என்பது என்னுடைய கருத்து. அதை கூறிக்கொண்டு இன்னும் எல்லாவற்றிற்கும் முக்கியமாக, அரசியல் மாணவர்களிடையே இருக்கக்கூடாதென்று நிதியமைச்சர் அவர் கள் சொன்னார்கள். அதை மற்ற அங்கத்தினர்களும் வரவேற்ருர்கள். நானும் அதை ஒப்புக்கொள்கிறேன். அதோடு ஒழுக்கத்திற்கு கல்வி ஸ்தா பனங்களில் முதலிடம் கொடுக்கப்படவேண்டும். ஏனென்ருல், சற்று முன் பாக போலீஸ் இலாகா நிதி மான்யக் கோரிக்கை வந்தது, இந்த கல்வி ஸ்தாபனங்கள் மூலமாக, ஒழுக்கத்தை நன்கு சீரமைப்பதன் மூலம், குற்றங்கள் குறைக்கப்படலாம். கல்வி மாத்திரம் தெரிந்த ஆளை "வாக் கிங் என்ஸைக்கிளோப்பீடியா" என்று கூறலாம். அவர்கள், நடந்து கொண்டி ருக்கும் புஸ்தகத்திற்கு சமானந்தான். ஆனல், அவருடைய நடைமுறை யை, ஒழுக்கத்தைச் சரியாக பயன்படுத்திக்கொள்வது என்ற அடிப்படையின் மூலம்தான் நாம் வருங்காலத்தில் சரியான பிரஜைகளை உற்பத்தி செய்ய முடியும். ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பதனுல் நாம் வருங்காலத்தில் நல்ல வாலிபர்களையும், யுவதிகளையும் உண்டாக்க முடியும். அடுத்தபடியாக, இந்த பாஷை விஷயமாக ஒன்று சொல்ல நான் ஆசைப்படுகிறேன். ஆங் கிலம் எங்கு எங்கு முக்கியத்துவம் அடையவேண்டும் அல்லது எங்கெங்கே முக்கியத்துவமாக இருக்கக்கூடாது என்று கூறப்பட்டது. ஆனல் நான் சொல்ல விரும்புவது என்னவென்ருல், ஆங்கிலத்திற்கு இருக்கவேண்டிய இடம், அதற்கு கிடைக்கவேண்டிய இடம் கொடுக்கப்படவேண்டும். ஏனென் ருல், ஆங்கில பாஷை உலக பாஷையாக இருக்கிறது. அதுமாத்திரமல்ல, நாட்டிலும் உலகிலும், இப்போழுது விஞ்ஞானம் முன்னேறியிருக்கும் அளவில் நாட்டின் பாஷை மிகவும் முக்கியத்துவம் உள்ள இடத்தில் அமைக் கப்படவேண்டும். ஏனென்ருல், சம்ஸ்கிரதத்தில் பாண்டியத்துவம் அடை யாமல் இருந்திருந்தால் கவி அரசனுகிய கம்பன் எப்படி கம்ப ராமாயணம் என்ற மாபெரும் காவியத்தை நமக்கு தந்திருக்க முடியும்? ஆகவே, எந்த பாஷையை நாம் கற்பதின் மூலமும் நம் அறிவை விருத்தி செய்து கொள்கிறேமே தவிர அதனுல் யாதோரு விதமான கெடுதலும் இல்லை. சாதாரணமாக சொல்வதுண்டு, கண்மாயில் புது தண்ணீர் வருவதைப்போல் என்று எற்கெனவே இருக்கும் தண்ணீர் வடிகட்டின தண்ணீராகிவிடும். வேறுபாஷைகள் மூலமாக ஒரு புத்துணர்ச்சி அடைய எதுவாயிருக்கும். மற்ற பாஷைகளிலுள்ள கலைக்களஞ்சியங்களை நம் கல்வி ஸ்தாபனம் அடைந்து அதன் அனுபவங்களை நடைமுறையில் கொண்டு வர ஏது இருந்தால்தான் நாம் உலக சமுதாயத்தோடு ஒரு சமுதாயமாக விளங்கமுடியும். இந்த நிலையில் ஆங்கிலத்திற்கு முதல் இடம் கொடுக்கவேண்டுமென்று நான் கூறவில்லை. ஆனல் அதற்குரிய இடம் கொடுக்கப்படவேண்டும். கல்லூரி இருந்தாலும் சரி, உயர்நிலைப் பள்ளிகளாக இருந்தாலும்சரி, ஆங்கிலத்திற்கு

[Sri W. P. A. R. Chandrasekharan] [16th July 1957

அதற்குரிய ஸ்தானம் கொடுக்கப்படவேண்டும் என்பதுதான் என்னுடைய தாழ்மையான கருத்து. மேலும், டிரெயினிங் காலேஜில் சேர்ந்து ஆசிரியனாக நான் படிக்கிறேன் என்று அப்பிளிகேஷன் கொடுத்ததற்குப்பின் தான், அவர் ஆசிரியருக்கு அருகதை உள்ளவர் என்பது இருக்கக்கூடாது. உயர்நிலை பள்ளிகளில் அவர்களின் குறிக்கோளை வினவி அதன்படி அங்கிருந்தே அவர்களை ஆசிரியர்களாக்கிக்கொள்வதில் அங்கேயே குழந்தையின் மனோதர்மம் பற்றி பயிற்சி அளிக்கப்படவேண்டும். அப்படி இருந்தால் இந்த ஆசிரியர்களின் நிலையை உயர்த்தலாம். அப்படிச் செய்வதின் மூலம் ஆசிரியர்கள் நல்ல முறையில் கற்பித்துக்கொடுக்கமுடியும். அடுத்தபடியாக, இந்த ''ப்ரீ பிரபஷனல் கோர்ஸ்'' இருக்கிறது. அதன் தாரதரத்தைப்பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் இந்த ''ப்ரீ ப்ரபஷனல் கோர்ஸ்''லில் மெடிகல், எனஜினியரிங் இவைகள் இருப்பது போல் டீச்சிங்கும் இருக்க வேண்டும். அதேமாதிரி, பள்ளிகளில் குழந்தைகள் மனோதர்மத்தை அறிந்து அதற்குத் தக்கபடி பயிற்சி அளிக்கப்படவேண்டும். இந்நிலையில் நேரத்தை அதிகமாக்காமல் ஒரு விஷயத்தை மாத்திரம் சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். ''பாலிடெக்னிக்'' என்ற தலைப்பின் கீழ் 66 லட்சம் கொடுக்கப்படுகிறது. அது மிகவும் குறைவு என்றுதான் எனக்குப்படுகிறது. அதைக் கொஞ்சம் அதிகமாக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டு இந்த கல்வி மானயக் கோரிக்கையை ஏகமனதாக நிறைவேற்றிவைத்து அதன் மூலம் சம்பிரதாயத்தைவிட்டு விட்டு ஒரு சரியாயான வழியில் நம் சட்டசபை செய்து கொடுக்கும்படி எல்லோரையும் கேட்டுக்கொண்டு எனது சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.

1-58 p.m. * SRI N MAHALINGAM : உதவி சபாநாயகர் அவர்களே, இந்த கல்வி மானயத்தை ஆதரிக்கும் முறையில் நான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நாம் சுதந்திரம் அடைந்தது முதல் நம்முடைய நாட்டிலே கல்வி அபிவிருத்தியில் நம்முடைய அரசாங்கம் மிகவும் சிறந்த முறையிலே, திறமையான முறையிலே வேலை செய்து கொண்டிருப்பதை பாராட்டுகிறேன். ஆனால் அந்த வேகத்தில் பல குறைகளும் இருக்கின்றன. அந்தக் குறைகளை நிவர்த்தி செய்யவேண்டியது மிக அவசியம். இப்பொழுது நமது உயர்தரப் பள்ளிகளில் தாய் மொழியை போதனு மொழியாகக்கொண்டு வரவேண்டுமென்று வேகத்தில், வெகு சீக்கிரத்தில், புத்தகங்கள் எல்லாம் தயாராக இல்லாத நேரத்தில்கூட நீண்ட நாட்களுக்கு முன்னாலேயே அந்தச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்தோம். அதன் காரணமாக, மாணவர்கள் கல்லூரிகளுக்குச் செல்லும்போது பெரிய கஷ்டங்கள் இருக்கின்றன. இப்பொழுது ஆங்கிலம் போதனுமொழியாக இருக்கக்கூடிய உயர்தரப் பள்ளிகளில் பயிற்சி பெற திரும்பும் மாணவர்களின் தொகை அதிகமாக இருக்கின்றன. ஆங்கிலம் போதனு மொழியாக இருக்கக் கூடிய பள்ளிக்கூடங்களில் சேருவது என்று சொன்னால் அங்கு வெகு நாட்களுக்கு முன்பே ரிசர்வ் செய்து இருக்கக் கூடியவர்கள் இருக்கின்றனர். அதற்கு சிபார்சு நடக்கிறது. அதற்குக் காரணம் என்னவென்று கேட்டால், கல்லூரிகளுக்குக் செல்லும்போது போதனுமொழி ஆங்கிலத்தில் இருப்பதால் உயர்நிலைப் பள்ளிகளில் ஆங்கிலத்தில் படித்தவர்களுக்கு அங்கு செல்லும்போது மிக வசதியாய் இருக்கிறது. அவர்கள் மிக சௌகரியமாக கல்லூரிகளில் வாழ்க்கை நடத்த முடிகிறது என்பதை பெற்றோர்கள் உணர்கிறார்கள்.

இப்பொழுது நம்முடைய நாட்டிலே பல்வேறு பிரதேச பாஷைகள் இருந்து வருகின்றன. அந்தந்தப் பிரதேசத்தில், சயன்ஸ், என்ஜினீயரிங், மருத்துவம் போன்ற பல துறைகளிலும் ஒவ்வொரு பாஷையிலும் தனித்தனியாக மொழி பெயர்த்துக்கொண்டிருந்தோமென்றால், ஒரு ராஜ்யத்தில் படிக்கக்கூடிய மாணவர்கள் இன்னொரு ராஜ்யத்தில் உயர்தரப் படிப்புப் படிக்க முடியாது. அதற்கு நான் ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். இந்தியா முழுவதிலும் எல்லா மொழிகளிலும் சயன்டிபிக் டெர்ம்ஸ், மெடிகல் டெர்ம்ஸ் போன்ற டெக்னிகல் டெர்ம்ஸ் சம்பந்தப்பட்ட வரையில், ஆங்கிலத்திலுள்ள வார்த்தைகளை அப்படியே உபயோகித்துக்கொள்ளலாம். இப்பொழுது சாதாரணமாகப் பள்ளிப் புத்தகங்களை எடுத்துப் படித்தால், முன்பு ஆங்கிலத்தில் படித்தவர்களுக்கு அநேக விஷயங்கள் புரிவதில்லை. உதாரணமாக, தராதர த்ருடத்வம் என்று ஒரு வார்த்தை இருக்கிறது.



16th July 1957] [Sri N. Mahalingam]

அது ஒருவருக்கும் புரியாது. அதை ஆங்கிலத்தில் ''ரிலேடிவ் டென்ஸிடி'' என்று சொல்வார்கள். இவ்வாறு ஒவ்வொரு வார்த்தையும் மொழி பெயர்த்து உபயோகித்து 10-வது வகுப்பில் தேர்ச்சி பெற்றுக் கல்லூரிகளுக்குச் சென்றால், அங்கு இவ்வார்த்தைகள் ஆங்கிலத்தில் வரும்பொழுது அவர்களுக்கு ஒன்றும் புரிவதில்லை. ஆகையால், ஆங்கிலத்தில் சொல்லுகின்ற வார்த்தைகளைப் புரிந்துகொள்வதற்கே மாதக்கணக்காக ஆகிவிடுகிறது. ஆகையால், மாணவன் பரீட்சையில் மிகவும் கஷ்டப்படுகிறான். முக்கியமாக, அரசாங்கம் ஒரு உத்தரவு போடவேண்டும். அதாவது, ஆங்கிலத்திலேயுள்ள டெக்னிகல் டெர்ம்ஸை ஆங்கிலத்திலேயே எழுதித் தமிழில் படித்துகொள்ளலாமென்று உத்தரவு போடவேண்டும். இந்த முக்கியமான மாறுதலைச் செய்தால், கல்லூரிகளிலே கூட பாடங்களைச் சொல்லிக்கொடுப்பதில் கஷ்டம் இருக்காது.

உயர்தரப் பள்ளிகளில் ஆங்கில போதனைத் தரம் குறைந்துவிட்டது என்று கனம் அங்கத்தினர் சந்திரசேகரன் சொன்னதை நான் ஒத்துக்கொள்ளுகிறேன். ஆதலால், ஆங்கில போதனையில் தரத்தை உயர்தரப் பள்ளிகளில் உயர்த்தவேண்டியது மிகவும் அவசியம். முன்பு உயர்தரப் பள்ளிகளில் ஆங்கில போதனையின் தரம் எவ்வளவு இருந்ததோ, அவ்வளவு இப்பொழுதில்லை என்பதை நாம் எல்லோரும் ஒத்துக்கொள்ள வேண்டும். அதை உயர்த்தினால்தான், தமிழிலே மற்ற விஷயங்களைப் படித்தாலும், கல்லூரிகளில் படித்தாலும், தற்காலத்தில் ரிசர்ச்சுகள் மூலம் உலகத்தில் பல நாடுகளில் கண்டுபிடிக்கக்கூடிய பல மிக முக்கியமான விஷயங்கள் ஆங்கிலத்திலே இருப்பதால், அவைகளைப் படிக்க முடியும். அவைகள் எல்லாம் உடனடியாக தமிழிலும் வேறு மொழிகளிலும் வந்துவிடுமென்று எதிர்பார்ப்பது துர்லபம். ஆகையால், ஆங்கிலத்தில் பயிற்சியளிப்பதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

மேலும், உயர்தரப் பள்ளிகளில் ஹிந்தி படிக்கவேண்டுமென்பது மாணவர்களுடைய இஷ்டத்திற்கு விடப்பட்டு வருகின்றது. 10-வது வகுப்பில் தேர்ச்சி பெறுகின்ற மாணவர்களை எடுத்துக்கொண்டால், அநேகர் ஹிந்தியில் ''சைபர்'' வாங்குகிறார்கள். சிலர் பரீக்ஷைகூட எழுதாமல் இருந்துவிடுகிறார்கள். அம்மாதிரித் திட்டத்தை வைத்துக்கொள்வதில் பிரயோஜனம் இல்லை. ஹிந்தி பாஷை நம்முடைய தேசிய பாஷை என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறோம். உயர்தரப் பள்ளிகளில் ஹிந்தியைக் கட்டாயப் பாடமாக்கவேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள். வேண்டுமானால், எடுக்கவேண்டிய மார்க்குகளைக் குறைவாக வைத்துக்கொள்ளட்டும். 20, அல்லது 25 மார்க்குகள் எடுத்தால் போதுமென்று வைத்துக்கொள்ளட்டும். ஆங்கிலத்தில் தமிழில் போன்று 40 மார்க்குகள் எடுக்க வேண்டுமென்று வைக்கவேண்டிய அவசியமில்லை. குறைந்தது 20 மார்க்காவது எடுக்கவெண்டுமென்று வைத்து மாணவர்கள் கட்டாயம் பரீக்ஷை எழுதவேண்டுமென்று இருக்கவேண்டும். அந்தப் பரீக்ஷையைப் பாஸ் பண்ணவேண்டுமென்று வைத்தால்தான், புதிதாக ஒரு மொழி கற்கமுடியும். ஹிந்தி படிக்காத மாணவர்கள் தெலுங்கு, மலையாளம், கன்னடம் போன்ற பக்கத்துப் பிரதேச பாஷைகளைப் படிக்கவேண்டுமென்று வைத்துவிட்டால், ஹிந்தி படிக்கப் பிரியம் இல்லாதவர்கள் மற்ற பாஷை ஒன்றைப் படிக்கலாம். எந்த பாஷை படித்தாலும், ஒரு குறைந்த பட்ச மார்க்கு வாங்கவேண்டுமென்று நிர்பந்தனை போட்டால்தான், மாணவர்கள் அந்த பாஷையைப் படிப்பதில் உற்சாகம் காட்டுவார்கள் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். வேறு நாடுகளில் சர்வகாலாசாலைகளில் படிக்கிறவர்களுக்கு அவசியம் இந்தமாதிரி ஒரு பாஷை தெரியவேண்டுமென்று வைத்திருக்கிறார்கள். ஆங்கில நாட்டில் அவரவர்கள் படிக்கின்ற விஷயங்களுக்குத் தக்கவாறு அவர்கள் சில மொழிகளைக் கற்கவேண்டுமென்று வைத்திருக்கிறார்கள். கெமிஸ்ட்ரி படிக்கின்ற மாணவர்கள் ஜெர்மன் பாஷை படிக்கவேண்டுமென்று வைத்திருக்கிறார்கள். ஆங்கிலத்தில் புலவர்களாகவேண்டுமென்றால், கிரீக், லாடின் ஆகியவை படிக்கவேண்டுமென்று வைத்திருக்கிறார்கள். அதேபோல, நம்முடைய சர்வகலாசாலைகளிலும் எந்தெந்தப் பாடங்களை மாணவர்கள் எடுத்துப் படிக்கின்றார்களோ, அவை

[Sri N. Mahalingam] [16th July 1957

களுக்குத் தக்கவாறு சில மொழிகளைக் கற்கவேண்டுமென்ற கட்டாயத்தை நாம் ஏற்படுத்தினால்தான், நம்முடைய மாணவர்கள் விவரம் தெரிந்தவர்களாகவும், பல மொழிகளைக் கற்றவர்களாகவும், அவைகளிலுள்ள சிறந்த விஷயங்களைக் கற்றுணர்ந்தவர்களாகவும் ஆவார்கள் என்று இந்த சந்தர்ப்பத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும், இப்பொழுது சென்ற ஆண்டிலே சர்வகலாசாலைகளில் படிப்பு விஷயத்தில் செய்யப்பட்ட மாறுதல் எல்லோருக்கும் மிகவும் கஷ்டமாகத்தானிருக்கிறது. ப்ரீ-யுனிவர்ஸிடி கோர்ஸ் என்று புதிதாக ஏற்படுத்தியிருப்பது எல்லோருக்கும் மிகவும் சிரமத்தைக் கொடுக்கிறது. முன்பெல்லாம், இண்டர்மீடியட் கோர்ஸ் இரண்டு ஆண்டுகளுக்கிருந்தது. முதல் ஆண்டில் புதிதாக இருக்கும் ஆங்கில வார்த்தைகளைத் தெரிந்துகொண்டு ஆங்கிலத்தில் செய்யும் பிரசங்கங்களைப் புரிந்துகொள்ளக்கூடிய அளவுக்கு வந்து, பிறகு இரண்டாவது வருஷம் இண்டர்மீடியட் பரீக்ஷையில் தேர்ச்சி பெற முடிந்தது. இந்தப் ப்ரி-யுனிவர்ஸிடிப் பரீக்ஷையில் ஒரு ஆண்டிலேயே விஷயங்களைப் புரிந்துகொள்ளமுடியாமல், மிகவும் குறைந்தபேர்கள்தான் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். அது கூட மாடரேஷன் போர்டிங் உதவியால்தான் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள் என்று தெரியவருகிறது. அந்தமாதிரியான சூழ்நிலையை மாணவர்களிடையே புகுத்தியிருப்பது மிகவும் கஷ்டமாயிருக்கிறது. ஆதலால், உடனடியாக அரசாங்கம் அதில் மாறுதல் செய்ய முயற்சி செய்யவேண்டியது மிகவும் முக்கியமான விஷயம் என்று சொல்ல விரும்புகிறேன். அதற்கு வைத்திருக்கக்கூடிய பாடங்களை எடுத்துப் பார்த்தால், முன்பு இண்டர்மீடியட்டில் இரண்டு வருஷங்களுக்கு வைத்திருந்த பாடங்களையெல்லாம் பொதுவாக வைத்திருக்கிறார்கள். கணக்கு, சயன்ஸ், கெமிஸ்ட்ரி ஆகியவை வாசிக்கவேண்டியிருக்கிறது. சரித்திரம் கூட கட்டாயப்பாடமாகயிருக்கிறது. இன்னும் சில பாடங்கள் கட்டாயமாக இருக்கின்றன. இப்பாடங்கள் அநேக மாணவர்களுக்குப் பிரியம் இல்லாதவைகளாக இருக்கும். கணக்குப் பிரியம் இல்லாதவர்கள் சரித்திரம் படிக்கலாம்; சரித்திரம் பிரியம் இல்லாதவர்கள் கணக்குப் படிக்கலாம் என்று இருந்தது. இப்பொழுது ப்ரி-யுனிவர்ஸிடியில் எல்லாவற்றையும் படித்தாகவேண்டுமென்றிருப்பதால், அநேக மாணவர்கள் தேர்ச்சி பெறுவது தடைப்படுகிறதென்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இப்பொழுது புதிதாக நம்முடைய அமைச்சர் அவர்கள் டிரக்டர் ஆப் டெக்னிகல் எஜுகேஷன் என்று நம்முடைய ராஜ்ய பிரதம என்ஜினீயரை நியமித்து, அவர் மூலமாக ராஜ்யத்தில் இருக்கக்கூடிய என்ஜினீயரிங் கல்லூரிகள், பாலிடெக்னிக்கள் ஆகியவை சரியாக நிர்வகிக்கப்படுவதற்காக எடுத்துக்கொண்டுள்ள முயற்சியைப் பாராட்டுகிறேன். நம்முடைய ராஜ்யத்திலுள்ள பாலிடெக்னிக்குகள் சரியாக நிர்வகிக்கப்படவில்லையென்று நான் முன்பே இந்தச் சட்டசபையில் சொல்லியிருக்கிறேன். அநேக இடங்களில் பிரின்சிபால் இல்லாமலே ஒரு வருஷம் இந்தப் பாலிடெக்னிக்குகள் நடத்திருக்கின்றன. சர்க்காருடைய பாலிடெக்னிக்குகள் லெக்சரர்கள் இல்லாமல் வருஷம் பூராவும் நடந்திருக்கின்றனவென்ற குறைபாட்டை முன்பே அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறேன். இப்போதாவது பிரதம என்ஜினீயரை இவற்றை நிர்வகிப்பதற்காகப் போட்டது மிகவும் நல்லது. இனி இருக்கக்கூடிய பாலிடெக்னிக்குகள், என்ஜினீயரிங் கல்லூரிகள் எல்லாவற்றிலும் தகுந்த ஆசாமிகளை உடனடியாக நியமித்து, வருஷத்திலே பல மாதங்கள் உபாத்தியாயர் இல்லாமல் இருக்கக்கூடிய நிலைமையை மாற்றியமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். வருஷ மத்தியிலேயெல்லாம் உபாத்தியாயர்களை மாற்றுவது கூடாது. அந்தமாதிரி மாற்றுதல் செய்வது மாணவர்களுக்கு மிகவும் கஷ்டத்தையளிக்கிறது. வருஷ ஆரம்பத்தில் இருக்கும் ஆசிரியர்கள் வருஷ இறுதி வரையிலும் அதே என்ஜினீயரிங் கல்லூரி அல்லது பாலிடெக்னிக்குகளில் இருக்கவேண்டுமென்று கட்டுப்பாடு விதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். என்ஜினீயரிங் கல்லூரிகளில் வேறு நாடுகளிலிருந்தும் மற்ற ராஜ்யங்களிலிருந்தும் சில என்ஜினீயர்களை "விஸிடிங்" புரொபஸர்களாக நியமிப்பது கூட மிக அவசியம் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

16th July 1957] [Sri N. Mahalingam]

நம்முடைய ராஜ்யத்தில் முன்பு ஒரே எஞ்ஜினியரிங் கல்லூரி இருந்தது. இப்பொழுது ஆறு, ஏழு கல்லூரிகள் இருக்கின்றன. வெளிநாட்டிலிருந்து பிரொபஸர்களை வரவழைத்து நம் மாணவர்களுக்குச் சொல்லிக்கொடுக்க வைத்தால், அது மிகவும் பிரயோஜனமாக இருக்குமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய ராஜ்யம் தொழில் துறையில் முன்னேறவேண்டுமென்று பிரியப்படுகிறோம். எந்த அளவுக்கு நாம் சிறந்த என்ஜினீயர்களைத் தயாரிக்கிறோமோ அந்த அளவுக்கு தொழில் நுட்பம் இருக்கும். ஏழு என்ஜினீயரிங் கல்லூரிகள் இருந்தாலும், 5 பாலிடெக்னிக்குகள் இருந்தாலும அவை சிறந்த முறையிலே வேலை செய்ய முடியும். ஏழு என்ஜினீயரிங் கல்லூரிகள் இருந்தும் பாலிடெக்னிக்குகள் குறைவாக இருக்கின்றன. கல்லூரிகள் இருக்கும் அளவுக்குத் தக்கவாறு பாலிடெக்னிக்குகளின் எண்ணிக்கையையும் அதிகரிக்க அரசாங்கம் வேண்டிய முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ஆதாரப்பயிற்சிப் பள்ளிகளுக்குக் கிராண்ட்-இன்—எய்ட் கொடுப்பதில், கல்வி இலாகா மிகவும் சோம்பலாக, சுறுசுறுப்பற்று இருக்கிறதென்று நான் இந்த சந்தர்ப்பத்தில் சொல்ல விரும்புகிறேன். ஆதாரக் கல்வியை ஆரம்பிக்கவேண்டுமென்று தனிப்பட்டவர்களைத் தூண்டி, சர்க்காரிலே எவ்வளவோ வசதிகள் செய்துகொடுக்கவேண்டுமென்று அதிகாரிகளிடம் சொல்லி, பள்ளிகளை ஆரம்பிக்க வைக்கிறார்கள். இப்பொழுது ஓரிடத்தில் மூன்றாவது ஆண்டு ஆதாரப் பயிற்சிப் பள்ளி நடக்கிறது. அதற்கு முதல் ஆண்டுக் கிராண்டு-இன்-எய்ட் கூட இன்னும் கொடுக்கப்படவில்லை. இவ்வாறு அரசாங்க அதிகாரிகள் தங்களுடைய கடமைகளைக் கவனிக்காமல் மிகவும் அசிரத்தையாக இருக்கிறார்களென்று சொல்ல விரும்புகிறேன். கட்டிடங்கள் கட்டுவதற்குப் பிளான் தயாரிக்கவில்லையென்று "சீப் என்ஜினியர்" ஆபீஸில் சொல்லுகிறார்கள். ஒரு இடத்தில் ஆதாரப் பயிற்சிப் பள்ளி ஆரம்பிக்க வேண்டுமென்று சொல்லி, பிளான் இல்லாததால், இரண்டு ஆண்டுகளாகக் கட்டிடம் கட்டமுடியவில்லை. இம்மாதிரியாக ஆதாரப் பயிற்சி சம்பந்தமாக நிர்வாகக் குறைபாடு அதிகமாக இருக்கிறதென்பதைக் கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். மேலும் என்னுடைய தொகுதியைப் பொருத்தவரையில், வால்பாறைப் பகுதியில் அதிகத் தொழிலாளர்கள் உள்ளனர். 60 ஆயிரத்துக்கும் அதிகமான தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஆகையால் படிக்க விருக்கும் மாணவர்களும் அதிகம். அங்கு ஒரே ஒரு உயர் நிலைப் பள்ளிதான் இருக்கிறது. முடீஸ், வாட்டர்பால் என்ற இரண்டு இடங்களிலும் உயர் நிலைப்பள்ளிகள் ஆரம்பிக்கவேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன். இதைப் பற்றி நமது அமைச்சருக்கு முன்னரே எழுதியிருக்கிறேன். உடனடியாக இந்த இரண்டு பள்ளிகளையும் சர்க்கார் ஆரம்பிக்கவேண்டும். அப்படி ஆரம்பிப்பதால் அங்குள்ள படிக்க விரும்பும் மாணவர்களுக்கு படிக்க வாய்ப்பு ஏற்படும் என்று சொல்லிக்கொண்டு இந்த கல்வி மானியத்தை ஆதரித்து முடித்துக்கொள்கிறேன்.

**Sri V. SUBBIAH** : உதவி சபாநாயகர் அவர்களே, இந்த கல்வி 1-31 p.m.
மானியத்தின் மீது உள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்லவிரும்புகிறேன். இன்றைய கல்வி அமைப்பிலே பெரும்பாலான மாறுதல்கள் இருந்தாலும், இன்றையதினம் கிராம சமூதாய அமைப்பிலே மாறுதல் ஏற்படவில்லை. காந்தியடிகள் குறிப்பிட்ட ஆதாரக் கல்வியை கிராமப்புறங்களில் பரப்ப முடியாத நிலைமை இருக்கிற காரணத்தால் பெரும்பாலான கிராமங்களில் ஆதாரக் கல்வியாக ஆக்கப்படாமல் எலிமெண்டரி ஸ்கூல்கள் இருக்கின்றன. இன்றைக்கு 10 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது ஒரு பெரிய தொகைதான் என்று நினைக்கிறேன். கிராமப் பகுதிகளில் இன்றைய தினம் 500க்கு மேற்பட்ட ஜனத் தொகையுள்ள கிராமங்களில் பள்ளிகள் அமைக்கவேண்டுமென்று சொன்னாலும், 400 அல்லது 500 ஆக உள்ள பல கிராமங்களில் பாடசாலைகள் இல்லை என்று குறிப்பிட விரும்புகிறேன். கல்வி முறையிலே இன்றைய தினம் கிராமங்களில் குழப்ப நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆதாரக் கல்வியை செயல்படுத்துவதற்கு ஆதாரக்கல்வியில் நம்பிக்கையில்லாத

[Sri V. Subbiah] [16th July 1957

ஆசிரியர்கள் இருப்பதால் இந்த ஆதாரக் கல்வி கிராமங்களில் புரியாத நிலை இருக்கிறது. கல்வி முறையிலே குழப்பமானது இன்றைய தினம் படித்தவர்களிடத்திலும் இருக்கிறது. கல்வியை நல்ல முறையிலே சீர்திருத்த வேண்டுமென்றால், கிராமங்களில் எல்லோரும் ஆதாரக்கல்வி பயில வேண்டும். நடுத்தர, உயர்தர, கல்வியெல்லாம் ஆதாரக் கல்வியாக அமைத்தல் வேண்டும். ஒரு எஸ்.எஸ்.எல்.சி. படித்த பையன் உத்தியோகத்தை தேடுகிறானே தவிர, அவன் தனியாக ஒரு தொழில் செய்ய தகுதி உள்ளவனாக இருக்கிறானா, ஆற்றல் உள்ளவனாக இருக்கிறானா என்று சொன்னால், இல்லை. கல்லூரி படிப்பை நாடவேண்டியிருக்கிறது. சீக்கிரத்திலே கல்வித் துறையிலே நல்ல நிலை ஏற்படவேண்டுமென்றால், காந்திய முறையில் ஹைஸ்கூல்களையும், மற்ற கல்லூரிகளையும் மாற்றி அமைத்தால்தான் அவைகள் பயனுள்ளதாக ஆகும். இதற்கு தைரியமாக அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும். கிராமங்களிலுள்ள படித்த வாலிபர்கள், கலாசாலைகளுக்கு, அந்த கிராமங்களை விட்டு 20 மைல்களுக்கு அப்பால் உள்ள காரணத்தால், போகமுடியாமல் இருக்கிறது. குறிப்பாக திருநெல்வேலி ஜில்லாவில் கோவில்பட்டி, சங்கரன்கோவில் பகுதியில் 16 அல்லது 18 ஹைஸ்கூல்கள் இருந்தும் அங்கு ஒரு கல்லூரி இல்லாத நிலையில், மாணவர்கள் மதுரை, திருநெல்வேலி போன்ற நகரங்களைத் தேடிச்செல்ல வேண்டிய நிலையிருக்கிறது. கிராமப் பகுதிகளில் கிராம கலாசாலைகளை ஏற்படுத்தி அரசாங்கம் போதிய அளவு உண்டாக்கினால்தான் நடுத்தர விவசாயிகள் பயன் படக்கூடிய நிலை ஏற்படுத்த முடியும். இன்றைய தினம் சமுதாயத்திலே முதுகெலும்பு போன்ற இந்தக் குடும்பங்கள் படித்தால்தான் இந்த எதிர்கால அமைப்பிலே நன்றாக இருக்குமென்று சொல்ல ஆசைப்படுகிறேன். சங்கரன்கோவில், கோவில்பட்டி பகுதியிலே பெண்கள் பயிற்சி, அதாவது **Girls Training Centres** இல்லை. இங்கேயுள்ள பெண் குழந்தைகள் பல நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பால், மதுரை, ராமநாதபுரம் முதலிய இடங்களுக்குச் செல்லவேண்டியிருக்கிறது. அல்லது திருநெல்வேலி தென் பகுதிக்கு செல்லவேண்டியதாயிருக்கிறது. இதைச் செய்வதற்கு அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொண்டு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கல்வி முறையிலே இன்றையதினம் ஒரு புதிய மாறுதலை ஏற்படுத்தியதைப் பாராட்டவேண்டும். இன்றையதினம் 10 லட்சம் ரூபாய் செலவில் ஏழை மாணவர்களுக்கு உணவு கொடுக்கப்படுகிறது. இது போன்ற மாறுதல்கள் இன்னும் அநேகம் ஏற்படவேண்டும். இதற்கு அரசாங்கம் இன்னும் ஜாஸ்தி பணம் ஒதுக்கவேண்டும். எல்லா இடங்களிலும் தமிழிலே போதனா முறையை கண்டிப்பாக ஏற்படுத்த அரசாங்கம் வற்புறுத்தவேண்டும். எதற்கெல்லாம் அரசாங்க பணம் மான்யமாக கொடுக்கப்படுகிறதோ அங்கெல்லாம் கல்வி போதனை தமிழிலே நடக்க வற்புறுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன்.

* **SRIMATHI SAVITHRI SHANMUGAM**: கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இன்று நமது கல்வி அமைச்சர் அவர்கள் இந்த கல்விக்காக கொண்டுவந்திருக்கும் மான்ய கோரிக்கையை நான் முழு மனதோடு ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். ஆரம்பத்திலேயே நமது கல்வி அமைச்சரவர்கள் மிகவும் தெளிவாகவும், நாம் ஒவ்வொருவரும் நல்ல முறையில் புரிந்துகொள்ளும் வகையில், கல்வியை பற்றி அரசாங்கம் ஆரம்பத்திலிருந்து என்னென்ன செய்திருக்கிறது, என்னென்ன செய்ய வேண்டியிருக்கிறது என்பதைப்பற்றி மிகவும் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். கல்வி மந்திரி அவர்களுக்கு எனது நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது கல்விக்காக நமது அரசாங்கம் எவ்வளவு செலவு செய்கிறது என்பதைப்பற்றி அவர் எடுத்துச் சொன்னார். அவர் சொன்னதிலிருந்து 10 வருஷம் 15 வருஷத்திற்கு முன்பு இருந்ததை விட ஒவ்வொரு மாணவருக்கும் 3 அல்லது $3\frac{1}{2}$ மடங்கு செலவாகிறது என்று எடுத்துச் சொன்னார்கள். இதற்கு காரணம் முன்பு இருந்ததை விட நம் மக்கள், ஒவ்வொரு குழந்தையும் கல்வி கற்றாகவேண்டுமென்று அரசாங்கம்



16th July 1957] [Srimathi Savithri Shanmugam]

செய்துகொடுத்திருக்கும் வசதிகளைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. எவ்வளவு அதிகமான பள்ளிகளைக் கட்டினாலும் கூட அப்போதிருந்த கஷ்டந்தான் இருக்கிறது என்று எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அமைச்சர் அவர்கள் உரையில் சொன்னதுபோல லட்சக் கணக்கான குழந்தைகளுக்கு படிக்க வசதி செய்யவேண்டியது இப்போது நம் முன்னிலையிலிருக்கிறது.

கோவையை பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அங்கு பல லட்சக் கணக்கான குழந்தைகள் இருக்கிறது என்று சொன்னார்கள். கோவை நகரத்தில் பல பள்ளிகள் இருந்தாலும் கூட இப்போது 5 ஆயிரம், 6 ஆயிரம் குழந்தைகளுக்கு பள்ளிக்குப் போக வசதியில்லாமல் இருக்கிறது. கோவை நகரசபையால் நடத்தப்பட்டு வரும் பல பள்ளிகள் இருந்தும், பள்ளிகளை ஷிப்ட் முறையில் நடத்தி வந்தும் கூட, இன்றைக்கு பள்ளிகளில் இட வசதி இல்லாததால் டெம்பெரரி ஷெட் அமைத்தும் கூட, பல குழந்தைகளுக்கு இடமில்லை என்று சொல்லவேண்டியிருக்கிறது.

இந்த நேரத்தில் நம் நிதி அமைச்சர் அவர்களை நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்வது-இப்பொழுது நமது கோவை நகரசபைக்கு ஆரம்பக் கல்விக்காக கொடுக்கக் கூடிய "கிராண்ட்" 87 ஆயிரம் ரூபாய்தான். பல வருஷங்களாக அந்த ஒரே தொகையைத்தான் கொடுத்து வருவதாகத் தெரிகிறது. ஆனால், இப்பொழுது அந்த ஆரம்பக் கல்விக்காக நமது கோவை நகரசபை செய்து வரும் செலவு கிட்டத்தட்ட 5 லட்ச ரூபாய் என்று இந்த இடத்தில் நான் சொல்லிக்கொள்ளுகிறேன். நகரசபைக்கு நிதி வசதி மிகவும் குறைவு என்றாலும், எவ்வளவு கஷ்டப்பட்டாலும் கண்டிப்பாக குழந்தைகள் கல்வி கற்க வேண்டுமென்று நாங்கள் இவ்வளவு தொகை ஆரம்பக் கல்விக்காக செலவு செய்துகொண்டு வருகிறோம். நிதி அமைச்சர் அவர்கள் நல்ல முறையிலே அதை ஆலோசனை செய்து குறைந்தபட்சம் செலவில் பாதிப் பங்காவது "கிராண்ட்" ஆகக் கொடுக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அதுபோலவே, செகண்டரி கல்விக்காக கோவை நகரசபை 5 லட்சம் ரூபாய் செலவு செய்துகொண்டுவருகிறது. அந்தத் துறையில் வருமானம் என்னவென்றால், பள்ளிச் சம்பளம் மூலமாக ரூ. 1,30,000-மும், "கிராண்ட்" ஆக ரூ. 1,45,000-மும் வருகிறது. ஆக, பற்றுக்குறை ரூ. 2,25,000-ஐ அங்கு நகரசபையிலிருந்து நாங்கள் செலவு செய்துவருகிறோம். ஆகவே, மற்ற பள்ளிகளுக்கு தனிப்பட்டோர் நடத்தும் பள்ளிகளுக்கு எப்படி "கிராண்ட்" அளித்து வருகிறார்களோ அதைப்போலவே நகர சபை நடத்தி வரும் பள்ளிகளுக்கும் "கிராண்ட்" அளிக்கும்படி நான் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கடந்த இரண்டு மாதகாலமாக நன்றாகத் தெரிந்துகொண்டிருக்கிறோம், எங்கு பார்த்தாலும் காலேஜ்களில் சேரவேண்டுமென்று மாணவ மாணவிகள், முக்கியமாக இப்பொழுது நம்முடைய அங்கத்தினர்களிடத்தில் "சர்டிபிகேட்" வாங்கி வருகிறார்கள். சிபார்சு செய்யவேண்டுமென்று கும்பல், கும்பலாக வந்துகொண்டிருப்பது நாம் எல்லோரும் அறிந்த விஷயம். காரணம் பல மாணவர்கள் முக்கியமாக ஒரு காலேஜில் இடம் இருந்தாலும் கூட, அதை விட்டுவிட்டு, குறிப்பாக ஒரு காலேஜில்தான் இடம் வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் இருந்துகொண்டு வருகிறார்கள். இந்த இடத்தில் ஒரு சிறிய விஷயத்தை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். காலேஜில் எங்கு இடம் கிடைக்காமல் போய்விடுமோ என்று, எவ்வளவு காலேஜ்களில் அவர்கள் எடுத்துக் கொள்ளக்கூடிய "குரூப்புகள்" இருக்கின்றனவோ, அவ்வளவு காலேஜ்களுக்கும் மாணவ, மாணவிகள் மனுப் போட்டு விடுகிறார்கள். அதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. சௌகரியம் இருக்கிறவர்கள் தான் அந்தக் குறிப்பிட்ட கட்டணத்தை ஒவ்வொரு காலேஜுக்கும் கட்டுகிறார்கள். ஆனால், மிகவும் சௌகரியம் இல்லாதவர்கள், ஏழைகள், அந்த விதத்திலே மிகவும் பாதிக்கப்படுகிறார்கள்.

[Sri C. Natarajan] [16th July 1957

பல வசதிகள் இருக்கின்றன. இட வசதி இருக்கிறது. தண்ணீர் வசதி இருக்கின்றன. ஆகையால், கிராமங்களில் பலவித பள்ளிகளை அமைப்பதற்கும், பலவித கல்லூரிகளை அமைப்பதற்கும் தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் வற்புறுத்திக் கூறுகிறேன்.

டெபுடி இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள். ஒரு டெபுடி இன்ஸ்பெக்டருக்கு இரண்டு தாலூக்காக்களிலுள்ள பள்ளிகள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை அவர் கண்காணித்து வரவேண்டும் என்பது திட்டம். ஒரு பள்ளியை இத்தனை தரம் பார்த்திருக்க வேண்டும் என்ற ஏற்பாடும் இருக்கிறது. இருந்தாலும், அவர் எந்த இடத்திற்குப் போக வசதி இருக்கிறதோ, அந்தப் பள்ளிகளை அடிக்கடி பார்ப்பதும், வசதி இல்லாத பார்க்க முடியாத ஒரு ஊரிலுள்ள பள்ளியை ஒரு தடவை கூட பார்க்க முடியாத நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியாகிய கள்ளக்குறிச்சி தாலூகாவில் சித்தாத்தூர் என்னும் ஊரிலே உள்ள பள்ளி நான்கு மாதமாக மூடிக்கிடக்கின்றது. அதுவும் ஜில்லா போர்டைச் சேர்ந்ததுதான். அந்த ஆசிரியர் சம்பளம் வாங்கிக்கொண்டிருக்கிறார். டெபுடி இன்ஸ்பெக்டரை நான் நேரிலே பார்த்துச் சொன்னேன். அப்பொழுது அவர், “நானே மேலுக்குத் தெரிவித்திருக்கிறேன்; என்ன செய்யவேண்டும் என்று தெரியவில்லை” என்று சொன்னார். “மேலுக்கு என்றால், யாருக்கு?” என்று நான் அவரைக் கேட்டேன். நான் என்ன செய்யமுடியும்? நான்கு மாதங்களாக நானும் பார்த்து வருகிறேன். ஆசிரியர் கிடைப்பது இல்லை. அவர் பெயர் கூட தெரியாத அளவுக்கு மறந்திருக்கிறார். இந்தச் சூழ்நிலை இருப்பதற்குக் காரணம் அவர்களுக்கு அதிகத் தொந்தரவு, அதிக வேலை. தகுந்த அளவு கொடுத்து பள்ளிகளைக் கண்காணிக்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். பள்ளிக்கூடங்களில் கணவனும், மனைவியும் ஆசிரியராக இருந்தால், அவர்களை ஒரே பள்ளியில் இருந்து வேலை செய்யும்படியாகச் செய்ய வேண்டும் என்பதாக உத்திரவு இருப்பதாகத் தெரிகிறது. அம்மாதிரி இருந்தும் சில இடங்களில் வேண்டுமென்றே ஒரு கணவனும், மனைவியும் ஒரு பள்ளியில் ஆசிரியர்களாகப் பணியாற்றிக் கொண்டிருந்தால் அவர்களைப் பிரித்து வெவ்வேறு ஊர்களில் உள்ள பள்ளிக்கு மாற்றிவிடுகிறார்கள். இதைப் பற்றி பலர் என்னிடம் குறைகூறியிருக்கிறார்கள். அவர்களுடைய நிலைமையைப் பார்க்கும்போது மிகவும் பரிதாபகரமாக இருக்கிறது. நான்கைந்து ஆண்டுகள் அவர்கள் அப்படிப் பிரிந்தே தனித்தனி ஊர்களில் இருக்க வேண்டுமானால் எத்தனை கஷ்டம்? அவர்கள் குடும்பம் என்ன ஆவது? குழந்தைகளை எப்படிப் படிக்க வைப்பது? அதே நேரத்தில் ஆசிரியர்களுடைய வருவாயும் குறைந்து இருப்பதால் இரண்டு ஊர்களில் இரண்டு குடும்பங்கள் என்றால் கட்டுபடியாகுமா? இதைப்பற்றி அரசாங்கம் கவனம் செலுத்தி கணவன் மனைவியாக இருக்கக்கூடிய ஆசிரியர்களை ஒரே பள்ளியில் ஒரே ஊரில் இருக்கும்படியாக வைக்கவேண்டும் எனக் கண்டிப்பாக உத்திரவு போட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக பள்ளிக்கூடங்களில் செய்தித்தாள்கள் வரவழைக்கப்படுகிறது. ஆனால் கல்வி அதிகாரிகளால் நிர்ணயிக்கப்பட்டுள்ள செய்தித்தாள்களைத்தான் வரவழைக்கலாம் என்கிற விதியும் இருக்கிறது. அரசியல் சார்பற்றப் பத்திரிகைகளைத்தான் வரவழைக்க அனுமதிக்கப்படுகிறது. இதனால் மாணவர்களுக்குப் பொதுவான எல்லாக் கட்சியினுடைய கருத்துக்களையும் தெரிந்துகொள்ள முடியாமல் போகிறது. எல்லாப் பத்திரிகைகளையும் வரவழைக்க அனுமதி தந்தால்தான் மாணவர்கள் அவை எல்லாவற்றையும் படித்து, அலசிப் பார்த்து நல்ல கருத்துக்களைப் பெறுவதற்கு வாய்ப்பு உண்டாகும். ஆகவே எந்தக் கட்சிப் பத்திரிகையாக இருந்தாலும் வாங்கிக் கொள்ளலாம் என உத்திரவு போடவேண்டும்.

ஆசிரியர்களாக இருந்தவர்களுக்கு இப்போது இரண்டாண்டுக் காலம் பயிற்சி ஓர் ஆசிரியர் பள்ளியில் அளிக்கப்படுகிறது. பள்ளிக்கூடத்தை விட்டு வெளிவந்தவுடன் எத்தனையோ பேர் பல பள்ளிகளில் தேர்ச்சி பெறாத ஆசிரியர்களாக வெகுநாள் பணியாற்றிவிட்டுப் பின்னர் ஆசிரியப் பயிற்சிப் பள்ளியில் சேருகிறார்கள். இவர்களுக்கு இரண்டாண்டுப் பயிற்சி வேண்டும் என்பது அவசியம் இல்லை. காரணம் நடைமுறையில் இவர்கள்



16th July 1957] [Sri C. Natarajan]

பல வருஷங்கள் ஆசிரியர்களாகவே பணியாற்றியிருப்பதால் இவர்களுக்குக் குறைந்த கால பயிற்சி கொடுத்தால் போதும் என்பதாகவும் கேட்டுக் கொள்ளுகிறேன். இதனால் அவர்களுக்கு ஏற்படுகிற கஷ்டங்கள் இல்லாமல் இருக்கும் என்பதையும் கவனிக்கவேண்டும்.

ஆசிரியர்களுக்கு ஜில்லா போர்டுகளில் மாதாமாதம் சம்பளம் கொடுப்பது இல்லை. பல மாதங்கள் சம்பளம் கொடுக்காமலேயே தாமதம் செய்துவிடுகிறார்கள். உடனடியாக மாதாமாதம் அவர்களுக்குச் சம்பளம் கொடுக்க ஆவன செய்யவேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கடைசியாக நான் குறிப்பிட்டுள்ளவற்றில் மிகவும் முக்கியமாக வற்புறுத்துவது கணவன் மனைவி விஷயம்தான். நாம் எத்தனையோ சினிமாக்கள் பார்க்கிறோம். நாடகங்கள் பார்க்கிறோம். குழந்தையை பிரிந்த தாய் நிலையைபோல் கணவனும், மனைவியும் பிரிக்கப்படுவதானால் அவர்களுக்கு உண்டாகிற துன்பங்கள் எத்தனை என்பதை நாம் அறியாதவர்கள் அல்ல. ஆகவே அவர்களைப் பிரித்து வெவ்வேறு பள்ளிகளில் வெவ்வேறு ஊர்களில் போடாமல் ஒரே ஊரில் அவர்கள் சேர்ந்து இருந்து பணியாற்றும்படி உடனடியாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

**Sri S. SADASIVAM** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்று நமது கல்வி அமைச்சர் கோரியிருக்கும் மான்யத்தை ஆதரித்துச் சில 1-55 p.m.
வார்த்தைகள் பேச விரும்புகிறேன். தாழ்ந்த நிலைமையில் உள்ள மக்கள் நல்ல முறையில் பல தொழில்களைப் புரிந்து பொருளாதார வளமும், வாழ்க்கை வளமும் பெற்று வாழவேண்டுமென்றால் கல்வி அவசியம். தொழில் கல்வி மிகுதியாகப் பரப்பப்பட வேண்டியதும் அவசியம். நமது மக்களின் கல்வித் தரம் உயர உயரத்தான் அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயரும். இதற்கு வேண்டிய நல்ல பணியை நமது அரசாங்கம் செய்துகொண்டு வருகிறது. அதை நமது கல்வி அமைச்சர் அவர்களே தன்னுடைய முன்உரையில் குறிப்பிட்டார்கள்.

முதல் ஐந்தாண்டு காலத்திலே அதற்குப் பெரும் தொகையை ஒதுக்கி, மத்திய அரசாங்கத்தின் உதவி மூலமாகவும் ஓராசிரியர் பள்ளிக்கூடங்களை நிறையத் திறந்தோம். அந்தப் பள்ளிக்கூடங்கள் சில நல்ல முறையில் நடைபெறவில்லை என்பதாக நான் ஒருபக்கத்தில் குற்றம் சாட்டினாலும் பல பள்ளிக்கூடங்கள் நல்லமுறையில் பணியாற்றி வருகின்றன. குறிப்பாக பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லாத காரணத்தால் படிக்காதவர்கள் இன்றைக்கு அங்கே திண்டாடிக்கொண்டிக்கிறார்கள். குறிப்பாக எஸ்.எஸ்.எல்.சி. படித்த மாணவர்களிடையே உள்ள வேலை இல்லாத் திண்டாட்டத்தைப் போக்கவே ஓராசிரியர் பள்ளிகளில் தேர்ச்சி பெறாதவர்களை நியமிக்கலாம் என்பதாக சர்க்கார் செய்தது எனச் சொல்லலாம். அவர்கள் இப்போது பயிற்சிக்குச் செல்லவேண்டுமென்ற முறையை வைத்திருக்கிறார்கள். ஒரு சில பள்ளிகளில் சில குறைபாடுகள் நிலவி வருகின்றன. சராசரி 500 ஜனத்தொகை உள்ள கிராமங்களில் இந்தப் பள்ளிகள் அமைக்கப்படுகிறது. அங்கெல்லாம் மிக ஏழை எளிய மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களாகவே பள்ளிக்கட்டிடச் செலவை ஒத்துக்கொள்ள முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். அந்த மக்களுக்கு உதவி செய்வதற்காக சமுதாய நலத்திட்டம், தேசீய விஸ்தரிப்புத் திட்டங்கள் உள்ள இடங்களில் பாதித்தொகை கொடுத்து வருகிறார்கள். மேலும் ஜனத்தொகை அதிகம் இல்லாத காரணத்தால் தங்கள் உழைப்பைப் பெரிதும் உபயோகப்படுத்தி கட்டிடத்தைக் கட்டுவதானாலும் முடியாமல் இருக்கிறது. ஆனால் ஜில்லா போர்டுகள் கொடுத்துவந்த கால்பங்கு மான்யத் தொகையைக் கொடுக்கச் சொன்னால் அவர்களுக்கே போதுமான நிதி இல்லை. அதனால் இது போன்ற மான்யத் தொகைகளை இனிமேல் கொடுக்கக்கூடாது என்று அரசாங்கத்தாரால் சொல்லப்படுகிறது. இதனால் பல பள்ளிக்கூடங்கள் கட்ட முடியாத நிலைமையில் இருக்கின்றன. அரசாங்கம் இதைக் கவனித்து பள்ளிக்கூடக் கட்டிடங்கள் தேவைப்படுகிற இடங்களில் உடனடியாகக் கட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

[Sri S. Sadasivam] [16th July 1957

கிராமங்களில் படிக்கவும் வசதி இல்லை. நகரங்களுக்குச் சென்று படித்து வருவதானாலும் அங்குள்ள பள்ளிக்கூடங்களில் இடம் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. பொருளாதார வசதியும் இவர்களுக்கு இடம் கொடுப்பது இல்லை. அதனால் அந்த அந்த பிர்க்காக்களிலேயே, ஒவ்வொரு இடத்திலும் உயர்தரக் கல்வி நிலயங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்பதாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். அதனால் கிராமப்புறங்களில் உள்ள மக்கள் தங்கள் தங்கள் வீடுகளில் இருந்தே உயர்தரக் கல்வியைக் கற்பதற்கு வசதியாக இருக்கும். இப்போது அரசாங்கததாா பல நல்ல முறைகளைக் கையாண்டு வருகிறார்கள் என்பதைப் பாராட்டுகிறேன். இன்று நான்காவது, ஐந்தாவது, ஆறுவது பாரங்களில் குறிப்பாக அறவக்குறுச்சி உயர்தரப் பள்ளியில் எஞ்ஜினியரிங் (Agriculture) செக்ஷன் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அநேகமாக இந்த மாதிரியாக எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் தொழில் கல்வியைக் கொடுத்தால் பள்ளியைவிட்டு வெளி வருகிற மாணவர்களுக்கு வேலை உடனே கிடைப்பதற்கு உதவியாக இருக்கும். அவர்கள் வேலை இல்லாமல் திண்டாடமாட்டார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே கிராமங்களில் உள்ள பள்ளிக்கூடங்களிலும் சிறுசிறு தொழிலைக் கற்றுக்கொடுப்பதற்கு வேண்டிய வசதிகளைச் செய்யவேண்டும் என்பதாகவும் கேட்டுக்கொள்ளுகிறேன். இதனால் கல்வி வளர்ச்சியும் பெருகுவதோடு தொழில் வளர்ச்சியும் அதிகரிக்க கூடும் என்பதைச் சொல்லிக்கொண்டு நான் முடித்துக்கொள்ளுகிறேன்.

2 p.m. **DEPUTY SPEAKER** : The House will now adjourn and meet again at 9 a.m. on Wednesday, the 17th July 1957.

The House then adjourned.

## VI.—PAPER LAID ON THE TABLE OF THE HOUSE.

123. *Notification issued with G.O. Ms. No.* 822, *Home, dated 29th March* 1957, *amending the rate of taxes leviable under the Madras Motor Vehicles Taxation Act*, 1931, *consequent on the introdeduction of Decimal system of coinage.* [Laid on the table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931.]

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Wednesday, 17th July 1957.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Hotel name-boards*

* 123 Q.—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the number of persons arrested and prosecuted in connexion with the movements for erasing the word "Brahman" from the name-boards of hotels and restaurants, districtwise; and

(b) the number convicted?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) the following is the number of persons arrested and prosecuted in connexion with the present campaign of the Dravida Kazhagam, districtwise:—

| | | | |
|---|---|---|---|
| (i) Tiruchirappalli district | .. | 1 | |
| (ii) Madras City | .. | 290 | up to 14th July 1957. |
| (iii) Rest of the districts | .. | Nil. | |

(b) The Government have no information whether the person arrested in the Tiruchirappalli district was convicted or not. In Madras City, 289 persons have been convicted up to 14th July 1957.

SRI K. SATTANATHA KARAYALAR: மதராஸ் ஸிடியில் இந்த இயக்கம் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: நடந்து கொண்டுதான் இருக்கிறது.

SRI K. VINAYAKAM: May I know, Sir, whether these Dravida Kazhagam volunteers have ever succeeded in erasing the word 'Brahman' from the name-boards of hotels apart from the name-board of Murali Cafe, where they have not succeeded?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, it was reported with reference to some of the hotels that the word was erased. I do not have any up-to-date information.

SRI S. B. ADITYAN: ஒரு வருஷத்திற்கு இந்தப் போராட்டத்தை தொடர்ந்து நடத்தப்போவதாக இயக்கத்தின் தலைவர் பெரியார் அறிவித் திருக்கிறார். இரண்டு வருஷங்களானாலும் இணங்கப் போவது இல்லை யென்று ஓட்டல்காரர்கள் அறிவித்திருக்கின்றனர். இந்த நிலையிலே ஓட்டல்காரர்களையும் இயக்கத்தின் தலைவரையும் அழைத்துப் பேசி சமரசம் காண அரசாங்கம் முற்படுமா?

[17th July 1957

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இயக்கத்தை தொடர்ந்து நடத்துவதைப் பறறியோ, இயக்கத்திற்கு இணங்குவதைப் பற்றியோ சர்க்கார் அவ்வளவு விசேஷமாகத் கருதவில்லை. ஆகையால் இரு சாராரையும் அழைத்துப்பேச அவசியம் இல்லை.

SRI A. A. RASHEED : Sir, may I know out of those convicted, how many were jailed and how many were fined?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not have that information now. Those who were only fined, when they did not pay the fine, were made to go to jail.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, are the Government aware that the bus stop near 'Murali Cafe' has been shifted to a far-off place with the result that passengers are put to great inconvenience? Will the Government consider the desirability of shifting the bus stop back to its original place?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : This question may be put to my Hon. colleague, the Minister in charge of Trasport.

SRI P. S. CHINNADURAI : பிராமணர்கள் என்ற பெயரை அழிக்கும் இயக்கத்தில் கலந்துகொண்டு தண்டனைப்படுகின்றவர்களை அரசியல் கைதிகளாக நடத்தப்படுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கின்றதா? இல்லையென்றால் இனிமேல் ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : யார் யார் அரசியல் கைதிகள் என்று நிர்ணயிப்பதற்கு விதிகள் இருக்கின்றன. அதன்படி அவரவர்கள் வகுக்கப்படுவார்கள்.

SRI K. VINAYAKAM : Sir, in this matter, what is the policy of this Government? Do the Government insist upon having the name 'Brahman' attached to the name-boards or, as ours is a secular State, do they not insist upon caste names not being inscribed on the name-boards?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no question of Government insisting upon any name being put on the name-boards of the hotels. Then, Sir, 'Brahmin' is not a religious name. The removal of caste is one thing and functioning as a secular State is quite a different thing.

SRI M. JAGANNATHAN : Sir, in view of the fact that quite a lot of ill-feeling and agitation have come up amongst the members of the public against the use of communal words on the name-boards of hotels, will the Government consider the desirability of withholding the issue of licences to such of those hotels as are using communal names in their name-boards?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government do not yet consider the desirability to take any such action.



17th July 1957]

*Buildings at Padmanabhapuram*

*124 Q.—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Madras Government have handed over the Palace and the other connected buildings at Padmanabhapuram in Kanyakumari district to the Kerala Government?

THE HON. SRI C. SUBRAMANIAM : The Government have agreed that the management and control of the Padmanabhapuram Palace and Museum, Kanyakumari district, together with the staff attached to them, may be retained by the Kerala Government subject to the conditions that the cost of maintenance of the Palace and Museum is shared equally between the two Governments and that no article therein is removed without the prior approval of the Government of Madras.

SRI T. T. DANIEL : Sir, in view of the fact that this palace is an ancient palace and it contains relics about ancient rulers of the Chera, Chola and Pandya Kingdoms, is it not advisable that this Government make a recommendation to the Central Government to bring this palace under the management of the Archaelogical Department?

THE HON. SRI C SUBRAMANIAM : I will consider the suggestion, but we ourselves may maintain it as a historic relic and, if things would improve by handing it over to the Government of India, certainly we will consider the suggestion.

MR. SPEAKER : Sri T. S. Ramaswamy Pillai will put his question.

SRI T. T. DANIEL : On a point of order, Sir.

MR. SPEAKER : I have called Sri T. S. Ramaswamy Pillai to put his question.

SRI T. T. DANIEL : I rise on a point of order, Sir. The Member who has put the main question should be given the first chance to ask his supplementary question. To use a parliamentary phrase, his question is his hare, and he must be allowed to hunt it out. Afterwards other members may be allowed to ask their supplementary questions. I believe that this is the procedure that is being followed in the House of Commons, the Mother of Parliaments.

MR. SPEAKER : The hon. Member had taken the first chance in putting the supplementary question. In this case, there is no hard and fast rule. It is open to the Speaker to decide whom he should call and when and how many times.

SRI T. S. RAMASWAMY PILLAI : Sir, may I know the reasons which prompted this Government to hand over this Padmanabhapuram Palace to the Kerala Government?

THE HON. SRI C. SUBRAMANIAM : Historical reasons.

[17th July 1957

SRI K. VINAYAKAM : If the motives in handing over the palace to the Kerala Government are historical, and if the Government are convinced that they should have the complete management of the palace, how do the Government reconcile the idea of sharing the cost of management and other expenses?

THE HON. SRI C. SUBRAMANIAM : Hon. Members are aware that Padmanabhapuram was the capital of the ancient Travancore State, and the Padmanabhapuram Palace has historical association with the dynasty of the Travancore Princes. So it was represented that they will have greater interest in maintaining it properly. We did not want to give up our right to the palace. That is why it still belongs to us. But the management is with the Travancore Government. In view of the fact that they also have associations with that palace, they wanted to have a share in the management. The expenses also are shared now.

SRI T. T. DANIEL : Sir, may I know whether the Government will consider the desirability of appointing an officer also from the Madras Government to share the management?

THE HON. SRI C. SUBRAMANIAM : I do not think that is necessary. Whoever be the officer there, he is considered to be an officer of the Government of Madras.

SRI K. VINAYAKAM : Sir, stretching the point still further
9-10 a.m. and applying the same principles, does not the Government think that Tirupati is historically connected with the Tamil culture? Will they claim that also and have some kind of sharing in the management, even at the expense half the costs incurred?

MR. SPEAKER : I think the hon. Member may put a separate question.

SRI T. S. RAMASWAMY PILLAI : May I know whether the Government are aware that historically this Padmanabhapuram Palace is more connected with the Kanyakumari district rather than Kerala?

THE HON. SRI C. SUBRAMANIAM : That is what I said when I said ' ancient Travancore State '. But the point for consideration is how and what arrangement should be made that this palace might be maintained properly without any deterioration. We came to the conclusion after consultation with the Kerala Government and the Rajpramukh that it would be in the best interests of the palace and the various relics there to have the management as we have decided now.

SRI A. A. RASHEED : Sir, is there any other palace maintained by the other State in our State?

THE HON. SRI C. SUBRAMANIAM : Unfortunately, we do not have palaces here.



17th July 1957]

*District Board Hospital at Tiruchendur*

*125 Q.—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether the Government have sanctioned the proposal to take over the District Board Hospital at Tiruchendur; and

(b) if so when it is likely to be taken over?

**THE HON. SRI M. A. MANICKAVELU : (a) No, Sir.**

**(b) Does not arise.**

SRI M. S. SELVARAJAN : அகில இந்தியாவிலிருந்தும் யாத்ரீகர்கள் தெய்வ வழிபாட்டிற்காக வரும் முக்கியமான இடங்களில் திருச்செந்தூரும் ஒன்ருக இருப்பதால், அங்குள்ள அந்த ஆஸ்பத்திரியை இந்த வருஷத்திலேயே எடுத்துக்கொள்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : சென்ற வருஷம் ஒன்பது ஆஸ்பத்திரிகள் " ப்ரொவின்ஷியலைஸ் " செய்யப்பட்டன. இந்த வருஷம் இன்னும் ஐந்து ஆஸ்பத்திரிகள் சர்க்காரால் எடுத்துக்கொள்ளப்படும். அவைகளுள் திருச்செந்தூர் ஆஸ்பத்திரி இல்லை. திட்ட காலத்திற்குள் இன்னும் இருக்கும் 15 ஆஸ்பத்திரிகளும் எடுத்துக்கொள்ளப்படும் ; திருச்செந்தூரும் அவைகளுள் இருக்கும்.

SRI M. S. SELVARAJAN : இவ்வருஷம் எடுத்துக்கொள்ளவிருக்கும் ஆஸ்பத்திரிகளுள் திருநெல்வேலி ஜில்லாவிலிருந்து ஒன்றுகூட இல்லை என்ற காரணத்தினுலாவது, இந்த ஆஸ்பத்திரியை இந்த வருஷம் உடனடியாக எடுத்துக்கொள்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

MR. SPEAKER : அதுதான் இல்லை என்று கனம் மந்திரி அவர்கள் சொல்லிவிட்டார்களே.

THE HON. SRI M. A. MANICKAVELU : திருநெல்வேலி ஜில்லாவில் ஏற்கெனவே ஒன்று எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அது கோயில்பட்டியில் உள்ள ஆஸ்பத்திரி. இந்த வருஷம் எந்த ஆஸ்பத்திரிகளை எடுத்துக் கொள்வது என்பது ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னதையும் அனுசரித்து என்ன செய்ய முடியுமோ அதைச் செய்யலாம் என்று நினைக்கிறேன்.

SRI T. S. AUTHIMOOLAM : தாலூகாக்களிலுள்ள ஹெட்குவார்டர்ஸ் ஆஸ்பத்திரிகளை சர்க்கார் எடுத்துக்கொள்ளும் விஷயத்தில் என்ன என்ன விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் அறியலாமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: ஹெட்குவார்டர்ஸில் இருக்கும் ஆஸ்பத்திரிகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் விதி. ஆகவே ஹெட்குவார்டர்ஸ் ஆஸ்பத்திரிகளை முதலில் எடுத்துக்கொள்கிறோம்.

SRI A. R. SUBBIAH MUDALIAR : தாலூகா ஹெட்குவார்டர்ஸ் ஆஸ்பத்திரிகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் அடிப்படையான விதியா ? அல்லது ஜனத்தொகை அடிப்படையிலும் ஆஸ்பத்திரிகள் சர்க்காரால் எடுத்துக்கொள்ளப்படுகின்றனவா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : தாலூகா ஹெட்குவார்டர்ஸ் ஆஸ்பத்திரிகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் விதி.

SRI S. NAGARAJA MONIGAR : சர்க்கார் இம்மாதிரியாக ஆஸ்பத்திரிகளை எடுத்துக்கொள்ளும்போது, பிற்போக்கான இடங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளுக்கும், மிகவும் அவசியமாக எடுத்துக்கொள்ளப்படவேண்டிய ஆஸ்பத்திரிகளுக்கும் முதலிடம் (ப்ரையாரிடி) [illegible] என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : எந்த ஆஸ்பத்திரிகளை அவசியம் எடுத்துக்கொள்ளவேண்டும் என்பது, கனம் அங்கத்தினர்கள் சில ஆஸ்பத்திரிகளை அவசியம் சர்க்கார் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கிளர்ச்சி செய்வது—இவைகள் எல்லாம் கருத்தில் எடுத்துக்கொள்ளப் படுகின்றன.

SRI N. R. THIAGARAJAN : மதுரை ஜில்லாவில் நிலக்கோட்டை தாலூகாவிலுள்ள ஹெட்குவார்டர்ஸ் ஆஸ்பத்திரியை சர்க்கார் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று சென்ற ஒன்பது ஆண்டுகளாக சர்க்காருக்கு விண்ணப்பங்கள் எழுதி வந்திருக்கிறோம். இந்த ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படவிருக்கும் ஆஸ்பத்திரிகள் பட்டியலிலாவது அது சேர்க்கப் பட்டிருக்கிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்த ஆஸ்பத்திரி இந்த ஆண்டு கட்டாயம் சர்க்காரால் எடுத்துக்கொள்ளப்படும்.

*By-products from lignite in Neyveli*

* 126 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisamy) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the industries that could be started with the by-products available from lignite in Neyveli; and

(*b*) the steps taken to start them?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) It is possible to establish a number of industries based on the by-products available in the mining and processing of lignite, such as synthetic petrol, char dust, tar, phenol, cement, plastics, porcelain and sanitary-ware, electrical insulators, etc.

(*b*) Steps can be taken to set up these industries only after conducting pilot plant trials to find out the most efficient and economic processes with reference to the climatic and other conditions obtaining at Neyveli in briquetting and carbonising lignite.

SRI K. SATTANATHA KARAYALAR : Sir, as it is, is there any planned programme to utilize these by-products?

THE HON. SRI R. VENKATARAMAN : One company has been granted licence by the Government of India for setting up High Tension Insulatory factory and that will utilize the clay.

SRI A. A. RASHEED : Cannot we have coal tar dyestuffs from lignite?

THE HON. SRI R. VENKATARAMAN : All by-products arising out of tar can be manufactured there.

SRI K. ANBAZHAGAN : நெய்வேலியில் வெட்டியெடுக்கப்படும் பழுப்பு நிலக்கரியிலிருந்து உப பொருள்கள் தயாரிப்பதற்கான ஏற்பாடுகளேயும் நிர்வாகத்தையும் நமது மாநில சர்க்காரே நடத்துவதற்கு ஏதேனும் வழி இருக்கிறதா, அல்லது அந்த வேலேகள் தனிப்பட்டவர்களிடம் ஒப்படைக்கப் படுமா, அல்லது மத்திய சர்க்காரால் நிர்வகிக்கப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : 'ஸப்ஸிடியரி இன்டஸ்ட்ரீஸ்-ஐப் பொருத்த அளவில் தனிப்பட்டவர்களுக்கு அந்தத் தொழில்கள் ஒப்படைக்கப்பட வேண்டும் என்பது தான் சர்க்காரின் கொள்கை.





*Coastal cargo service between Calcutta and Bombay via Madras*

*127 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisamy) : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal to introduce the Coastal Cargo Service between Calcutta and Bombay via Madras touching all the intermediate ports on the East and West Coasts?

MR. SPEAKER : இந்தக் கேள்விக்கும் கனம் தொழில் அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள்.

THE HON. SRI R. VENKATARAMAN : There is no such proposal under the consideration of the State Government.

*Amendments to the City Municipal Act, 1919*

* 128 *Q.*—SRI S. PAKKIRISAMY PILLAI : Will the Hon. the Minister for Local Administration be pleased to state with reference to the answer given to Question No. 2025 on 9th August 1955 whether the amendments proposed by the Madras Corporation to the Madras City Municipal Act, 1919, have since been taken up for consideration and if so, when the amending Bill will be introduced in the Legislature?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : Yes, Sir. The amending Bill will be introduced as soon as the amendments to the Madras City Municipal Act are finalised by the Government.

SRI S. PAKKIRISAMY PILLAI : திருத்தங்கள் பற்றிய யோசனைகள் கார்ப்பொரேஷனிலிருந்து 1955-ம் வருஷத்தில் அரசாங்கத்திற்கு அனுப்பப் பட்டன. இப்போது இரண்டு வருஷங்கள் ஆகியிருக்கின்றன. அந்த யோசனைகளைப் பரிசீலனை செய்வதில் என் இவ்வளவு காலதாமதம் ஏற் படுகிறது? காலதாமதத்திற்கு தகுந்த காரணங்களை கனம் அமைச்சர் அவர்கள் சொல்ல முடியுமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: பஞ்சாயத்து போர்டு, ஜில்லா போர்டு முதலிய ஸ்தாபனங்களின் விஷயங்களைப் பற்றி ஆலோசித்த பிறகு கடைசியில் கார்ப்பொரேஷன் சம்பந்தப்பட்ட விஷயங்களை ஆலோசிப் பதாக இருந்த காரணத்தாலும் இப்போதுதான் உபகமிட்டி நியமிக்கப் பட்டிருக்கிறது என்ற காரணத்தாலும் காலதாமதம் ஏற்பட்டது.

SRI M. JAGANNATHAN : May I know, Sir, the probable date by which the amending Bill would be finalised by the Government?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : As soon as the Committee completes its work.

SRI K. VINAYAKAM : Sir, are Government aware of the fact that this kind of request from the Corporation Council came even before the elections to the Corporation Council last time and then the answer given by the Minister in charge of the portfolio was ' let the elections be over; afterwards the amendments could be brought '. Does the Government realise the immediate necessity that the Act should be amended as early as possible, at least before the ensuing elections to the Corporation Council?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : The Government have realised the necessity and that is why they are trying to do that.

SRI K. ANBAZHAGAN : இந்தக் கார்ப்பொரேஷன் நிர்வாகத்தில் ஊழல்கள் அதிகமாக இருக்கின்றன என்றும், பொதுமக்களுக்குக் குறைகள் மிகுதியாக இருக்கின்றன என்றும் புகார்கள் அதிகமாக இருப்பதால், அந்தக் குறைகளையும் ஊழல்களையும் நிவர்த்திப்பதற்கான வழிவகைகள் பற்றி ஆலோசிக்கப்படுமா ?

THE HON. SRIMATHAI LOURDHAMMAL SIMON : குறைகள் இருந்தால் அவைகளை நிவர்த்திப்பது பற்றி ஆலோசிக்கப்படும்.

SRI K. VINAYAKAM : May I know the nature of the amendments which the Corporation has requested from the Government?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : They have asked for some 150 amendments. It will be difficult to read them out now.

MR. SPEAKER : The hon. Member may put a separate question.

SRI V. K. KOTHANDARAMAN : கார்ப்பொரேஷன் பல யோசனைகள் கொடுத்திருக்கின்றன. அதிக லாபம் சம்பாதிக்கும் பெரிய தொழிற்சாலைகளுக்கு கார்ப்பொரேஷன் ஒரு குறிப்பிட்ட தொகையைத்தான் தொழில் வரியாகவோ மற்றவரிகளாகவோ விதிக்கவேண்டும் என்ற விதியை மாற்றி, கார்ப்பொரேஷன் தன் இஷ்டம்போல் வேண்டிய வரியை விதிப்பதற்கு அரசாங்கம் அனுமதிக்குமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : அது பற்றியும் ஆலோசிக்கப்படும் என்று நான் தெளிவாகச் சொல்லுகிறேன்.

*Import of rice*

* 129 Q.—SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the quantity of rice imported into this State from the adjoining States during the years 1954, 1955, 1956; and

(b) the steps taken to make this State self-sufficient?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) A statement [a] is placed on the table of the House.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : In paragraph 5, page 3 of the statement, it is stated that the Collectors have been empowered to take steps to sell in auction, the right to cultivate arable lands, etc. I want to know whether the ryots who cultivate the lands have got any occupancy right? If not, if the Collectors bring it in auction every year, will ryots have any incentive for intensive cultivation?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I would like to have notice.

[a] Printed as Appendix I on pages 680-683 infra.



SRI P. G. MANICKAM : உணவு உற்பத்தியை பெருக்கும் திட்டத்தின் கீழ் கோவை ஜில்லாவிலே அநேக விவசாய நிலங்கள் உழுது பயிரிடப்பட்டன. அந்தத் திட்டம் இப்பொழுது கைவிடப்பட்டதனால், அநேக விவசாயிகள் அந்த நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். இன்னும் அநேகர் வெளியேற்றப்படப்போவதாகத் தெரியவருகிறது. இதில் 100-க்கு 75 பேர்கள் ஹரிஜனங்கள். ஆகையினால் விவசாய நிலங்களை அவைகளை பயிரிட்ட விவசாயிகளுக்கே பட்டா செய்துகொடுக்க கவர்மெண்டார் முன் வருமா என்பதை அறியவிரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் அவர்கள் இது பற்றிய விவரங்களை எனக்கு அளித்தால், அவைகளைப் பரிசீலனை செய்து என்ன செய்யக்கூடும் என்பதை யோசிக்கலாம்.

*Minister's tour*

* 130 Q.—SRI M. JAGANNATHAN (on behalf of Sri M. Jangal Reddiyar) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) the number of days toured by each Minister on State business from November 1956 to 1st week of March 1957 and the Travelling Allowances drawn by each Minister; and

(b) the public functions attended by the Ministers during February 1957?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) A statement [a] is placed on the table of the House.

(b) Except for the Minister for Revenue who participated in the District Cattle Show at Vellore on 10th February 1957 no other Ministers attended to any public official function.

*Creches*

* 131 Q.—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisamy) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether any grants are given to the Corporation of Madras in respect of creches constituted in the City; and

(b) whether there any proposal to constitute creches in district centres?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) Yes, Sir.

(b) The Government have no such proposal.

SRI K. VINAYAKAM : How do the creches work in the City of Madras?

THE HON. SRI M. A. MANICKAVELU : They work as creches normally work. (Laughter.)

SRI K. VINAYAKAM : That is not the type of answer which I expected. Are the Government convinced about the desirability of establishing more such creches which have proved to be a success beyond reasonable doubt in the City of Madras?

[a] Printed as Appendix II on page [illegible] infra.

The Hon. Sri M. A. MANICKAVELU : I think very useful work is being done in the City, and in the mufassal, private agencies and local bodies are starting these creches. The Government give some subsidy to the local bodies and in this case, a grant of Rs. 10,000 has been given.

Sri V. K. KOTHANDARAMAN : சென்னை கார்பரேஷனுக்கு கொடுக்கப்பட்டதுபோல் இது போன்று கிராண்டுகள் மற்ற நகரசபைகளுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறதா? இல்லையென்று சொன்னால், எல்லா நகரசபைகளுக்கும் கொடுக்கப்படுமா?

The Hon. Sri M. A. MANICKAVELU : நகரசபை இதை ஆரம்பித்து செய்வதற்கு முன்வந்தால்தான், கிராண்டு கொடுக்கப்படுமே தவிர, அவர்கள் சும்மா உட்கார்ந்திருந்தால் அரசாங்கமே கொடுக்க வழியில்லை.

Sri K. VINAYAKAM : Are the Government aware that the creche established in Ashok Vihar is one of the model ones in the entire Far East, which has even been praised by no less a person than the Prime Minister of India?

The Hon. Sri M. A. MANICKAVELU : I thought from the previous question of the hon. Member, he was not satisfied with the working of the creches. From what he says now, he seems very much satisfied.

*Labour Courts*

* 132 *Q.*—Sri K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisamy): Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to constitute additional Labour Courts and if so, when and where?

The Hon. Sri R. VENKATARAMAN : Yes, Sir. The matter is under consideration.

Sri S. PAKKIRISAMI PILLAI : லேபர் கோர்ட்டுகள் எந்தெந்த இடத்திலே அமைப்பதாக உத்தேசம் இருக்கிறது? இப்பொழுது இருக்கும் படியான லேபர் கோர்ட்டுகளுக்கு சிறிய சிறிய தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களின் குறைகளை அனுப்பாத ஒரு நிலைமையிலே லேபர் டிபார்ட்மெண்ட் அதிகாரிகள் நடந்துகொண்டிருக்கிறார்கள் என்பது உண்மையா?

The Hon. Sri R. VENKATARAMAN : முதல் கேள்விக்கு பதில், இப்பொழுது கோயம்புத்தூரிலும், சென்னையிலும் ஒரு லேபர் கோர்ட்டு இருக்கிறது. மூன்றாவதாக மதுரையிலே ஒரு லேபர் கோர்ட்டு அமைப்பதாக உத்தேசம். இரண்டாவது கேள்விக்கு, லேபர் மான்ய விவாதத்தின் போது கனம் அங்கத்தினர் அவர்கள் இதுபற்றி கடுமையாக கண்டிப்பார் என்று எதிர்பார்க்கிறேன்.

Sri P. S. CHINNADURAI : லேபர் கோர்ட்டுகளுக்கு நீதிபதிகளை நியமிக்கும்பொழுது சோஷலிஸ்டு கண்ணோட்டம் உள்ளவர்களையும், சோஷலிஸ்டு தத்துவத்தில் நம்பிக்கை உள்ளவர்களையும் நியமிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

The Hon. Sri R. VENKATARAMAN: "இண்டஸ்டிரியல் டிஸ்பியூட்ஸ் ஆக்ட்" பிரகாரம் இந்த கோர்ட்டுகளுக்கு நீதிபதிகளை நியமிக்க வேண்டுமென்று சட்டம் இருக்கிறது. நீதிபதிகளை உயர்நீதி மன்றம் சிபார்சு செய்கிறது.

Mr. SPEAKER : Questions are over.



[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

## II.—POINT OF ORDER *RE* STATEMENT OF THE HON. LEADER OF THE HOUSE *RE PER CAPITA* INCOME IN THE STATE.

*Sri K. ANBAZHAGAN : On a point of order, Sir. தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் சில நாட்களுக்கு முன்னால் கனம் நிதி அமைச்சர் அவர்கள் அளித்த பதிலில் ஒரு குறிப்பு தெரிவித்தார். அந்தக் குறிப்பு உண்மை அல்ல என்று காணப்படுகிறது. அதுபற்றிய விளக்கம் நான் ஒழுங்கின்மீது கேட்டறிய விரும்புகிறேன்.

சென்னை மாகாணத்தினுடைய சராசரி வருஷ வருமானம் (*per capita* income) கேரள சர்க்காரின் சராசரி வருஷ வருமானத்தைவிட குறைவு என்றும், நம்முடைய ராஜ்ய மக்களுக்கு இன்றைக்கு கிடைக்கும் சராசரி வருஷத்திய வருமானம் (*per capita* income) ரூ. 257 என்றும், கேரள ராஜ்யத்தில் (*per eapita* income) ரூ. 311 என்றும் கனம் நிதி அமைச்சர் அவர்கள் வரவு செலவு திட்ட விவாதத்திற்குப் பதில் அளிக்கும்பொழுது தெரிவித்தார்கள் இந்த மன்றத்திலே. ஆனால் கேரள நாட்டு மக்களுடைய சராசரி வருமானம் (*per capita* income) ரூ. 219 தான் என்றும், அவர்களுடைய மொத்த வருஷ வருமானம் (National Income) ரூ. 319 கோடி என்றும் புள்ளி விவரங்கள் அந்த அரசாங்கத்தினுடைய Statistic Department அல்லது புள்ளி விவரக் குறிப்பு இலாகாவினாலே தரப்படுகிறது என்பதை நான் தெரிவித்து, இதுபற்றி உண்மை என்ன, அவர்கள் தெரிவித்ததுதான் உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

Mr. SPEAKER : If the Hon. the Finance Minister wants to say anything, he may do so.

The Hon. Sri C. SUBRAMANIAM : It is not a point of order. He may raise the issue when the Appropriation Bill is discussed and certainly I will give an answer.

Mr. SPEAKER : The hon. Member does not expect the Minister to give an answer on a point of order, I suppose.

Th- Hon. Sri C. SUBRAMANIAM : I can answer it, but . . .

Mr. SPEAKER : I will not allow it. We shall take this up during the discussion on the Appropriation Bill.

## III.—ANNOUNCEMENT BY THE HON. SPEAKER *RE* ELECTION OF THREE MEMBERS TO THE SENATE OF THE ANNAMALAI UNIVERSITY.

Mr. SPEAKER : I have to announce to the House that the Vice-Chancellor of the Annamalai University has requested me to arrange for the election of three Members to the Senate of the Annamalai University by the Members of the Madras Legislative Assembly from among themselves.

Under section 15 clause III, sub-section (3) of the Annamalai University Act, 1928, the election is to be held according to the principle of proportional representation by means of the single transferable vote.

[Mr. Speaker] [17th July 1957

In accordance with the regulations framed by me for the holding of such elections, I fix 11 a.m. on Saturday, the 20th July 1957, as the time within which nomination papers of candidates for election should reach the Secretary. Nomination forms can be had on application to the Secretary.

The nomination papers will be taken up for scrutiny at 2-30 p.m. on Saturday, the 20th July 1957. I also fix 2 p.m. on Tuesday, the 23rd July 1957, as the last hour and date for the withdrawal of candidature. If the number of candidates nominated exceeds the number of seats to be filled, namely, three, a poll will be taken in the Lounge Room between 11 a.m. and 1 p.m. on Wednesday, the 24th July 1957. The Lounge Room is next to Speaker's Room.

## IV.—ADJOURNMENT MOTION *RE* EVICTION OF TENANTS AND DESTRUCTION OF CROPS BY THE AUTHORITIES IN THE NEIVELI PROJECT AREA.

MR. SPEAKER: The hon. Member, Sri M. Selvaraj, has given notice of a motion to adjourn the business of the House to discuss a definite matter of urgent public importance, viz.—

"the serious situation and panic created among the ryots of Elavarasampatta and Velliamkuppam villages in the Neiveli Project area by the high-handed action of the Government in evicting ryots without previous notice and destruction of standing crops."

It is alleged that the incident took place two days ago. Before I give my ruling, I would like the hon. Member to explain his case in as short a speech as possible.

SRI M. SELVARAJ: தலைவர் அவர்களே, நெய்வேலி பிராந்தியத்தில் இருக்கும் வேலுடையான்பட்டு, வெள்ளையன்குப்பம் என்ற கிராமங்களில் மகசூல் இருக்கும்பொழுது ஒருவிதமான முன் எச்சரிக்கையும் இல்லாமல் அந்த இடத்திலுள்ள அதிகாரிகள் டி.—7 கருவி கொண்டு அழித்து பக்கத்தில் மண்ணைப் போட்டு, வெள்ளையன்குப்பம் கிராமம் பக்கத்தில் உள்ள பாதையிலும் அதன் பக்கத்திலுள்ள ஓடையிலும் மண்ணை போட்டிருப்பதால், அந்த ஓடையில் மழை பெய்தால் தண்ணீர் வராத நிலையில் இருக்கிறது. அங்குள்ள மக்கள் அந்த அதிகாரிகளிடத்தில் இதைப்பற்றி தங்களுடைய குறைகளை சொன்ன நேரத்தில் அவர்கள் இதற்கு செவி சாய்க்காமல் இருக்கிறார்கள். இதனால் அங்குள்ள மக்கள் கொந்தளிப்பான நிலைமையில் இருந்துகொண்டிருக்கிறார்கள். மேலும் இதனால் அங்கு இரண்டு மூன்று நாட்களாக ஏகப்பட்ட ரகளை இருந்து வருகிறது. ஆகையால் இதைப்பற்றி தகுந்தபடி இந்த சபையில் விவாதிக்காவிட்டால் அங்கு அமைதிக்கு குந்தகம் ஏற்படும் என்று தெரிகிறது. ஆதலால் இந்த ஒத்திவைப்புப் பிரேரணையை சபை ஏற்றுக்கொண்டு இதைப்புற்றி விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**MR. SPEAKER: Has the Hon. Minister for Revenue anything to say on this? I think it relates to the Revenue portfolio.**



17th July 1957]

THE HON. SRI M. A. MANICKAVELU: சபாநாயகர் அவர்களே, இந்த மாதிரியுள்ள சம்பவம் நிர்வாகத்துறையில் சாதாரணமாக நடக்கக்கூடிய சம்பவமாகும். மேலும் இதற்கு வேண்டிய நிபந்தனைகள் ஒன்றும் இதில் அடங்கியிருப்பதாக தெரியவில்லை. இதைப்பற்றி ஏதாவது சொல்லவேண்டுமானால் **Appropriation Bill** வரும்போது சொல்லலாம். ஆகையால் இதை விவாதத்திற்கு எடுக்கவேண்டிய அவசியமில்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

**MR. SPEAKER: I am satisfied that the matter which has now been raised by the hon. Member is a matter within the ordinary day-to-day administration of Government for, the acquisition of villages wholesale for the Neiveli Project has been pending for over a long time. No case for an adjournment motion has been made out and I rule the motion out of order.**

## V.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1957-58—*cont.*

### (1) DEMAND XV—EDUCATION—*cont.*

MR. SPEAKER: We shall now proceed with the discussion on the Education Demand
கனம் மந்திரி அவர்களுக்கு எவ்வளவு நேரம் பதில்சொல்வதற்கு வேண்டும்.

THE HON. SRI C. SUBRAMANIAM: 20 நிமிஷம் இருந்தால் போதும்.

SRI P. S. CHINNADURAI: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இந்த கல்வி மான்ய கோரிக்கையின்மீது வந்திருக்கும் வெட்டுப்பிரேரணையை ஆதரித்துக்கொண்டு சில வார்த்தைகளை சொல்ல விரும்புகிறேன். இந்த கல்வி விஷயம் கடல் போன்ற ஒரு பெரிய விஷயம். பெரிய அறிவாளிகள் மணிக்கணக்காக, நாள் கணக்காக பேசி முடிவு காண வேண்டிய ஒரு விஷயத்தை, ஒரு சில நிமிஷங்களில் இதுகுறித்து விவரமாக பேசுவது என்பது சற்று சிரமமான காரியம்தான். இருந்தபோதிலும் நமது நாட்டிலுள்ள கல்வி விஷயத்தில் நாம் அனுஷ்டிக்க வேண்டிய கொள்கைகளைப் பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். நாம் சோஷியலிஸ சமுதாயத்தை அமைப்பது என்று தீர்மானித்திருக்கிறோம். நம்முடைய வாழ்வு காலத்திலேயே அதை ஏற்படுத்தி தீருவது என்றும் வைராக்கியம் கொண்டிருக்கிறோம். அந்த நிலைமையில் சோஷியலிஸ சமுதாயத்தில் வாழ்வதற்கு தகுதி வாய்ந்த பிரஜைகளை வளர்ப்பதற்கு இப்போதுள்ள கல்வி முறை ஏற்றதா என்பதை நாம் கவனிக்கவேண்டும். கல்விக்காக நாம் அதிகமாக செலவு செய்கிறோம். இப்போது 11 கோடி ரூபாய், நம் ராஜ்ய வருமானத்தின் ஐந்தில் ஒரு பங்கு செலவு நாம் கல்விக்காக செலவு செய்கிறோம் என்று நாம் பெருமைப்பட்டுக்கொள்ளலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பணம் செலவழிக்கின்றோமே தவிர நம்முடைய லட்சியத்திற்கேற்ப நம்முடைய ராஜ்யத்தில் கல்வி முறை உபயோகிக்கப்பட்டு வருகிறதா அல்லது நாம் வெறுக்கக்கூடிய ஒரு முதலாளித்துவ சமுதாய அமைப்பை ஏற்படுத்துவதற்குள்ள கல்வி முறைதான் மாணவ மாணவியர்களுக்கு உபயோகப்படுத்தபட்டு வருகிறதா என்பதைப்பற்றி நாம் கவனிக்கவேண்டியது அவசியமாகும். இன்று கல்வி சீர்திருத்தத்திற்காக பல கமிட்டிகள் நியமிக்கப்படுகிறது. இப்படி நியமிக்கப்படுகிற கமிட்டிகள் எல்லாம் அனேகமாக முதலாளித்துவ சமுதாய அமைப்பு தத்துவத்தில் நம்பிக்கை கொண்டவர்களை கொண்டதாகவே இருக்கின்றன என்று நாம் சொன்னால் அதில் தவறு இல்லை என்று நான் நினைக்கிறேன். இவ்விதமாக பழைய போக்கிலே சிந்தித்து ஆலோசனை சொல்லிக்கொண்டிருக்கின்ற இத்தகைய கமிட்டிகளை அறவே விட்டுதள்ளவேண்டும் என்பது 9-3[illegible] a.m.

தான் என்னுடைய கோரிக்கையாகும். இன்று இருக்கக்கூடிய கல்வி முறை வெறும் குமஸ்தாக்களை தயாரிப்பதற்காகவும், தனக்கென்று வாழும் நோக்கத்தை, எண்ணத்தை தயாரிப்பதற்காகவும் இருக்கின்ற முறைதான் என்பது எனது கருத்தாகும். ஆகவே அதற்கு பதிலாக நாட்டுக்கு பயன்படக் கூடிய முறையில், நாம் வாழ்வதற்கு மாத்திரமல்ல, நம்முடைய சமுதாயம் வாழவேண்டும் என்கிற உணர்ச்சியை, கடமை உணர்ச்சியை ஏற்படுத்துவதற்கும், அதற்கேற்ப திறமையான மாணவ மாணவியர்களை உண்டாக்குவதற்கும் உதவியாய் இருக்கக்கூடிய கல்வி முறையை நாம் ஏற்படுத்தவேண்டும். ஆகவே இப்போதிருக்கின்ற கல்வி முறையை மாற்றி சோஷியலிஸ சமுதாய அமைப்பை ஏற்படுத்துவதற்கான அடிப்படை தத்துவத்தைக்கொண்டு அதற்கேற்ற முறையில் கல்வி முறையை மாற்றி அமைக்கவேண்டுமென்றும் அதற்காக இந்த அரசாங்கம் சிந்திக்க வேண்டும் என்பதுதான் எனது வேண்டுகோளாகும். அந்த முறையில் சிந்திக்க வேண்டுமானால் அதற்குரிய நடவடிக்கைகள் எடுத்துகொள்வதற்கு இந்த அரசாங்கம் முன் வரவேண்டும். அவ்விதம் வேண்டிய முயற்சிகள் இதுவரை எடுத்துக்கொள்ளாதது வருந்ததக்க விஷயமாகும், என்று சொல்லுவேன். இந்த கல்வித் துறையைப் பற்றி கூறுகின்ற அதே நேரத்தில், கல்வியின் தரத்தை அடிப்படையாக மாற்றியாகவேண்டும் என்று சொல்லுகின்ற நேரத்தில், இந்த கல்வியை போதிக்கின்றவர்கள் முக்கியமானவர்கள் என்பதை நாம் கவனிக்கவேண்டும். சோஷியலிஸ கல்வி வேண்டும் என்று சொல்லும்போது, சோஷியலிஸ சமுதாயத்திற்கு தகுந்த பிரஜைகளை தயாரிக்கவேண்டும் என்று சொல்லும்போது, இதை போதிக்கின்றவர்கள் சோஷியலிஸ நம்பிக்கை கொண்டவர்களாக இருக்கவேண்டும். ஆரம்ப கல்வி போதிக்கின்றவர்கள் முதல் சர்வகலாசாலை கல்வி போதிக்கின்றவர்கள்வரையிலும் சோஷியலிஸ கண்ணோட்டம் உள்ள பயிற்சி பெற்றவர்களாக இருக்கவேண்டும். தாங்கள் சோஷியலிஸ தத்துவத்தில் நம்பிக்கைகொண்டிருந்தால்தான் தங்களுக்கு மட்டுமின்றி மற்றவர்களையும் தயாராக்குவதற்கு இயலும். நான் அடிக்கடி சோஷியலிஸம் என்ற வார்த்தையை குறிப்பிடும்பொழுது அமைச்சர்களும் காங்கிரஸ் அங்கத்தினர்களும் சோஷியலிஸத்தை தாங்கிப் பிடிப்பதற்கு ஒரு ஆள்தானா உண்டு என்று சந்தேகப்படலாம். அவ்விதமொன்றுமில்லை. சோஷியலிஸத்தை கொண்டு வரவேண்டுமென்று மற்ற அங்கத்தினர்கள் எவ்விதம் நினைக்கின்றனரோ, அதைப்போலவே நானும் நினைக்கின்றேனே தவிர வேறு ஒன்றுமில்லை. அதை நான் இவ்வளவு எடுத்துச் சொல்வதற்குக் காரணம் சோஷியலிஸ முறை ஒவ்வொரு செயலிலும் கொண்டுவரவேண்டும் என்று குறிப்பிடுகிறேன். தனி மனிதன் வாழ்க்கையை மாத்திரம் முக்கியமாக கருதாமல் சமுதாயத்தின் வாழ்க்கையை முக்கியமாக கருதி அதற்காக பாடுபடுகிற பிரஜைகளை தயாரிக்கக் கூடிய சோஷியலிஸ் சமுதாய அடிப்படையிலுள்ள கல்வி அவசியம் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் நான் அடிக்கடி அந்த வார்த்தையை உச்சரிப்பதற்கு காரணம் என்பதை சொல்லிக் கொள்கிறேன். சோஷியலிஸ கல்வி முறையை போதிக்க வேண்டும் என்று சொல்லுகின்ற அதே நேரத்தில் அவர்களுடைய வாழ்க்கை வசதிகளையும் நாம் அதிகமாக செய்து கொடுக்கவேண்டும். அதற்கு நம் சமுதாயம், நமது சமுதாயத்தின் பிரதிநிதிகளாக இருக்கக்கூடிய அரசாங்கமும் தயங்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களின் வாழ்க்கை வசதிகளை கவனிக்கப்படா விட்டால் அவர்கள் திறமையாக வேலை செய்யமுடியாது. ஆகவே அவர்களுக்குரிய சௌகரியங்களை செய்துகொடுக்கவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். சென்ற ஆண்டை காட்டிலும் இந்த ஆண்டில் ஐம்பது லட்சம் ரூபாய் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது முக்கியமான அம்சம் தான். அதை நாங்கள் வரவேற்கிறோம். இன்னும் தொழில் கல்விக்காக அதிகமாக ஒதுக்கப்படவேண்டும் என்று சொன்னால்கூட அதில் தவறில்லை என்றுதான் நான் சொல்லுவேன்.

**Mr. SPEAKER :** The hon. Member should try and finish as early as possible. There are a number of other speakers who wish to have an opportunity to speak.





**Sri P. S. CHINNADURAI :** தொழில் கல்வி விஷயத்திலே, கலாசாலைகளில் மாத்திரமின்றி உயர்நிலை பள்ளிகளிலும்கூட, தொழில் கல்வியைப் புகுத்துவதற்கு தொழிலை அடிப்படையாகக் கொண்டு பள்ளிக்கூடங்களில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு அவர்கள் அக்கல்வியைப் பெற வழிவகை செய்யப்பட வேண்டும். அதற்குப் போதிய கவனம் செலுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. இந்த வருட மான்யக் கோரிக்கையிலும் அதற்குரிய ஆலோசனை காணப்படவில்லை, என்பதைத்தான் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆரம்பக் கல்வியைப் பொறுத்தளவிலே 1960-க்குள்ளாக வயது வந்த எல்லா மாணவ மாணவிகளுக்கும் கட்டாய இலவசக் கல்வி கொடுக்க வேண்டும் என்று நமது அரசியல் சட்டத்தில் ஏற்படுத்திக் கொண்டிருக்கிற வரம்பானது இதுவரையில் அடையவில்லை. அடையும் ஒரு நம்பிக்கையும் இல்லை என்றுதான் அமைச்சர் அவர்களின் பேச்சில் இருந்து காண முடிகிறது. சுமார் முப்பது லட்சம் மாணவ மாணவிகள், வயது வந்த மாணவ மாணவிகள் பள்ளிக்கூடங்களுக்குச் செல்ல வசதி இல்லாமல் இருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதற்காக வருத்தமும் தெரிவித்து இருக்கிறார்கள். அதற்கு என்ன செலவாகும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அதற்குரிய முடிவைச் சொல்ல வில்லை. அதிலிருக்கிற கஷ்டத்தைக் குறிப்பிட்டு அதன் பேரில் அனுதாபத்தை காட்டியிருக்கிறார்களே தவிர அதற்கு ஒரு முடிவைச் சொல்ல வில்லை என்று மிகவும் வருத்தத்துடன் குறிப்பிட விரும்புகிறேன். இதற்கு ஏதாவது ஒரு நல்ல வழிவகை காண்பது அரசாங்கத்தின் கடமை அல்லவா ? சுமார் முப்பது லட்சம் பேர்கள் பள்ளிக்கூடங்களுக்குச் செல்லாமல் இருக்கிறார்கள் என்றால், செல்ல முடியாமல் இருக்கிறார்கள் என்றால், அவர்கள் எல்லாம் கிராமப் புறங்களிலிருந்து வரவேண்டிய பிள்ளைகளாகத்தான் இருப்பார்கள். கிராமப் புறங்களிலிருந்து வருகின்ற பிள்ளைகள் கவனிக்கப்படாமல் ஒதுக்கித் தள்ளப்படுகிறார்கள். கிராமவாசிகள் கவனிக்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டு வருகிறார்கள் இன்றைய சமுதாய அமைப்பிலே ; அதற்கு இது ஒரு எடுத்துக் காட்டாக இருக்கிறது. முப்பது லட்சம் பிள்ளைகள் என்று உத்தேசமாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அதற்கு கூடுதலாக இருந்தாலும் அதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. அவ்வாறு ஒரு பெரும் பகுதி, கிராமப் புறங்களில் வாழ்கிற பிரஜைகளின் குழந்தைகள், அவர்களுக்குப் படிப்பதற்கு வசதி செய்யப்படாமல் இருக்கிற நிலையில் நல்ல தொரு ஜனநாயக சம்பிரதாயத்தையும் நம் நாட்டில் உண்டாக்குவதற்கு எப்படி நாம் பெரும்பாலான மக்களை தயார் படுத்த முடியும் ? அதற்கு ஏதாவது வழி இந்த அரசாங்கம் செய்ய வேண்டாமா ? அதற்கு இவ்வளவு தொகை வேண்டுமென்று கேட்டால் யார்தான் அதற்கு எதிராக நிற்பார்கள். 1960-க்குள் அதை செய்து முடிக்க வேண்டும். ஆனால் கோஷ் அவர்கள் 64-வது ஆண்டிற்குள்ளாகவாவது செய்து முடிக்க வேண்டும். இதைச் செய்யாத வரையில் நாம் நம்முடைய ராஜ்யத்திலே ராஜ்யத்தை இரண்டு பகுதியாகப் பிரித்து நகரத்தில் வாழ்கிறவர்களுக்கு ஒரு மாதிரியாகவும் கிராமங்களில் வாழ்கிறவர்களுக்கு இன்னொரு மாதிரியாகவும் நடத்த விரும்புகிறோம். நம்மை அறியாமலே அது நேர்ந்து விடுகிறது. இதைத் தவிர்க்க வேண்டுவது இந்த அரசாங்கத்தின் கடமையாகும் என்று மீண்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இன்னும் பல பேர்கள் பேச இருப்பதால் நான் எனது பேச்சைத் தொடராமல் நிறுத்திக் கொள்கிறேன்.

**Mr. SPEAKER :** இன்றைய தினம் இந்த மான்யத்தின் பேரில் எதிர்க்கட்சித் தலைவர்கள் இருவரும், ஸ்ரீ வி. கே. ராமஸ்வாமி முதலியார் அவர்களும் ஸ்ரீ அண்ணாத்துரை அவர்களும் பேச விரும்பி இருப்பதால் அவர்கள் இருவருக்கும் 15 நிமிஷ நேரம் கொடுக்க வேண்டுமென்பது எனது தீர்மானம். ஆகவே மற்ற எல்லோரும் ஏழு நிமிஷத்திற்குமேல் பேசாமல் இருந்தால் நன்றாக இருக்கும்.

***Sri R. KRISHNASAMI REDDIAR :** கனம் சபாநாயகர் அவர் 9-44
களே, கனம் கல்வி அமைச்சர் அவர்கள் பிரேரேபித்திருக்கும் மான்யக் a.m.
கோரிக்கையை அப்படியே முழுமனதுடன் ஆதரித்து ஒரு சில வார்த்தைகளை

[Sri R. Krishnasami Reddiar] [17th July 1957

கூற விரும்புகிறேன். கிராமப் புறங்களில் சர்க்கார் உத்தரவுப் பிரகாரம் கட்டிடங்கள் கட்டி ஒரு உயர்நிலைப் பள்ளி ஆரம்பிக்க வேண்டுமென்றால் இவ்வளவு தொகை அட்வான்ஸாக கட்ட வேண்டுமென்று சொல்லியிருக்கும் உத்தரவு பிரகாரம் தொகையும் கட்டி அங்கே ஒரு வகுப்பிற்குப் போதிய அளவு எண்ணிக்கை உள்ள மாணவர்கள் இருந்தும் சில சமயங்களில் அந்த உயர்நிலைப் பள்ளிகளைத் துவக்குவதற்கு வேண்டிய அங்கீகாரம் கிடைக்காமல் அநேக கிராமங்களில் இப்பொழுது சிரமம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. பொதுமக்கள் அந்த ஊரிலே மிகவும் சிரமப்பட்டு கமிட்டிகளை அமைத்து தங்கள் சக்திக்கு மீறி பணம் செலவு செய்து கட்டிடங்கள் கட்டி இந்த அரசாங்கத்தின் மேல் நம்பிக்கை வைத்து இந்த மாதிரி காரியங்களைச் செய்து தங்கள் குழந்தைகளை உள்ளூரிலேயே படிக்க வைக்க வேண்டுமென்ற ஆர்வத்தால் செய்திருக்கிறார்கள். அதே மாதிரி பல ஊர்களிலிருந்து அவர்கள் எல்லோரும் கனம் நிதி அமைச்சர் அவர்களின் கருணையையும் ஆசியையும் எதிர்பார்த்து இந்த சென்னைமா நகரத்திற்கு வந்திருக்கிறார்கள். நிதி காரணமாக சில சங்கடங்கள் இருக்கலாம். ஆனால் நிதியையும் கல்வியையும் ஒருங்கே வைத்திருக்கும் மதிப்பிற்குரிய கனம் கல்வி அமைச்சர் அவர்கள் இது விஷயத்தில் தனது கவனத்தை செலுத்தும்படிக் கேட்டுக் கொள்கிறேன். எவ்வளவு உயர்நிலைப் பள்ளிகள் திறக்க அனுமதி கொடுக்க முடியுமோ அவ்வளவு கொடுத்து மக்களுக்கு உதவி செய்யும்படி தாழ்மையாகக் கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, இந்த கிராண்ட் மான்யத் தொகையில் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு குறைந்த தொகையும் தனியார் நடத்தும் பள்ளிகளுக்கு அதிகம் மான்யமும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்படிப் பார்க்கும்போது, செகன்டரிக் கல்வியை எடுத்துக்கொண்டால் சர்க்கார் பள்ளிக்கூடத்திற்கு 11 சத விகிதம், தனியார் நடத்தும் பள்ளிக்கூடங்களுக்கு 51-ம் ஸ்தல ஸ்தாபனங்கள் நடத்தும் பள்ளிக்கூடங்களுக்கு 30 சத விகிதம் ஆக 211 லட்சம் ரூபாய் அமைகிறது. ப்ரைமரி பள்ளிக்கூடங்கள் விஷயத்தில் சர்க்கார் நடத்தும் பள்ளிக்கூடங்களுக்கு 23 லட்சமும், தனியார் நடத்தும் பள்ளிக்கூடங்களுக்கு 408 லட்சமும், ஸ்தல ஸ்தாபனங்கள் நடத்தும் பள்ளிக்கூடங்களுக்கு 250 லட்சமும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, ஸ்தல ஸ்தாபனங்கள் நடத்தும் பள்ளிகளைவிட தனியார் நடத்தும் பள்ளிகளுக்குத்தான் அதிகமாக இருக்கிறது என்பது புலனாகிறது. இந்த ஸ்தல ஸ்தாபனங்களால் நடத்தப்படும் பள்ளிகளுக்கு, அந்தந்த தொகையில் டீச்சர் கிராண்ட் என்று பாதிக் கொடுக்கப்பட்டு வருவதாக தெரிகிறது. ஆனால் தனிப்பட்டவர்கள் நடத்தும் பள்ளிகளுக்கு "கிராண்ட் இன் எய்ட் கோட்" படி அவர்களுக்கு அளிக்கப்படுகிறதே தவிர அது எவ்வளவு என்பது என்போன்றவர்களுக்குத் தெரியவில்லை. இந்த கிராண்ட் கொடுக்கக் கூடிய விஷயம் வெகு காலத்திற்கு முன்பு வகுக்கப்பட்டதாய் இருக்கலாம். இப்பொழுது தனியார் நடத்தும் பள்ளிகளானாலும் சரி, ஸ்தல ஸ்தாபனங்கள் நடத்தும் பள்ளிகளானாலும் சரி, லோக்கல் டெவலப்மென்ட் ஸ்கீமின் கீழ் ஏராளமான பணத்தை பெற்றுக்கொண்டு கட்டிடங்கள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். தனியார் நடத்தும் பள்ளிக்கும் இந்த லோகல் டெவலப்மென்ட் ஸ்கீமின் கீழ் பணம் பெற்றிருப்பதால், இந்தமான்யத்தின் கீழ் கொடுக்கப்படும் "பில்டிங் கிராண்ட்" எந்த முறையில் வகுக்கிறார்கள், எப்படிக் கொடுக்கிறார்கள் என்பது இந்த பட்ஜெட்டிலிருந்து தெரியவில்லை. கல்வித் துறையில் செலவழிக்கப்படும் பணம் கூடுதலாக தனியார் துறையினருக்கு அதிகமாகக் கொடுப்பதால் அதை கண்காணிக்க வேண்டியது மிக மிக அவசியம். சாரதணமாக நிர்வாகத்தில் சில தவறுகளைப் பார்க்கலாம். ஆடிட் ரிப்போர்டை எடுத்துப்பார்த்தால் தெரியும். ஒரு பள்ளிக்கூடத்தில் கரெஸ்பாண்டண்ட்டும் மானேஜருமாக இருக்கக்கூடிய ஒருவர் பத்து வருடகாலம் கிராண்ட் வாங்கி இருக்கிறார்கள். ஆனால் அதை அவர் வாங்க தகுதி பெற்றிருக்கவில்லை. பத்து வருடங்கள் கழிந்த பிற்பாடு அதைக் கண்டு பிடித்து அந்தத் தொகையை அவரிடமிருந்து வசூல் செய்ய முடியாமல் டோக்கன் ரிக்கவரி என்று ஐந்து டெப்யூட்டி இன்ஸ்பெக்டர்களிடம் அல்லது 93 அல்லது 94 ரூபாய் வசூல் செய்து 2,000 ரூபாய் சொச்சம் சர்க்கார் செலவு எழுதியிருக்கிறார்கள். கிரிமினல் ட்ரைப்ஸ்க்கு கல்விச் சலுகைகள் அளிக்க ஜீ.ஓ. போட்டிருக்கிறார்கள். அதை 1952-ல் நான்கு ஜில்லாக்களுக்கு விஸ்தரித்திருக்கிறார்கள். அதில் யார் அந்தக் கல்விச்



17th July 1957] [Sri R. Krishnasami Reddiar]

சலுகை பெறக் கூடாதோ அவர்கள் அந்த சலுகையை அடைந்து பின் 1955-ல் கண்டு பிடிக்கப்பட்டு அதைத் திரும்ப பெற முடியாமல் கிட்டத்தட்ட மூன்று லட்சம் ரூபாய் சர்க்காருக்கு தள்ளுபடி செய்ய வேண்டி வந்தது. இந்த மாதிரி தவறுகள் ஏற்பட்டு விடலாம். இதைக் கண்டு பிடித்தவர்களுக்கு பாராட்டுதல் தெரிவிக்கலாம். தவிர பணம் போனது போனதுதான். ஆகவே, சர்க்கார், தனியார் துரையினர் நடத்தும் பள்ளிகளை நன்கு கண்காணிக்க வேண்டும். உண்மையாகவே இன்றைய தினம் தனியார் நடத்தும் பள்ளிக்கூடங்கள் எல்லாம் ஒரு வியாபாரமாக நடத்தப்படுகிறதே தவிர நல்ல சிந்தனையும் தங்கள் கை பொறுப்பும் கொண்டு பூர்ணமாக அமைக்கப்படுவதில்லை. ஓரளவு இருக்கலாம். ஆகவே அமைச்சர் அவர்கள் தனியார் பள்ளிகளுக்கு கொடுக்கும் கிராண்ட்களை தனித்தனியாக, நன்றாக, நேரடியாக, நன்கு ஆராய்ச்சி செய்து அவர்கள் இந்த கட்டிடத்திற்காக போட்டிருக்கும் தொகை எவ்வளவு, அவர்களுக்கு இது வரை கொடுக்கப்பட்டிருக்கிற தொகை சரியாக இருக்கிறதா என்று கவனித்து ஆவன செய்யவேண்டும், அப்படிச் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக, உயர்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தமிழைப் போதனு மொழியாக்க வேண்டுமென்று சொல்லியது மிகவும் போற்றக் கூடிய விஷயம். ஆனால், உயர்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தமிழைப் போதனு மொழியாக்கிவிட்டால், ஆங்கிலம் இந்த நாட்டிலிருந்து அறவே போய்விட வேண்டுமென்ற சித்தாந்தத்தை ஒருவரும் ஒப்புக் கொள்ளமாட்டார்களென்று நான் நினைக்கிறேன். சர்க்கார் இல்லாவிட்டாலும், தனியார் யாராவது ஜில்லாவிற்கு ஒரு உயர்நிலைப் பள்ளியை வைத்து, ஆங்கிலத்தை போதனு மொழியாக வைத்துக்கொண்டு, சர்க்கார் உதவியை எதிர்பாராமல் நடத்த முன்வந்தால், அதற்கு வசதி இருக்குமா வென்று கனம் கல்வி அமைச்சர் அவர்கள் காலக் கிரமத்தில் யோசித்து ஏதேனும் செய்ய முடியுமா வென்று பார்க்கவேண்டுமென்று நான் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

எனக்குக் குறைந்த காலமே கொடுக்கப்பட்டிருக்கிறபடியால், நான் சீக்கிரம் என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன். கனம் கல்வி அமைச்சர் அவர்கள், 'கல்வி ஒரு கோபுரம் போன்றது' என்று சொன்னார்கள். அவருடைய காலத்தில் அது சாதாரண கோபுரமாக இல்லாமல், தஞ்சாவூர் பெரிய கோபுரமாக அமைந்து, நமது நாட்டிற்குச் சிறந்த சேவை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, கல்வி மான்யத்தை ஆதரித்து என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

*Sri M. S. SELVARAJAN : கனம் சபாநாயகர் அவர்களே, கல்வி மான்யத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். சில காலத்திற்கு முன்பு நாம் எல்லோரும் அடிமைகளாக இருந்த காலத்தை ஒப்பிட்டு கனம் நிதி அமைச்சர் அவர்கள் புள்ளி விவரங்களோடு பேசினார்கள். அடிப்படையிலே கூட கள்ளு சாராயம் விற்று வந்த பணத்திற்குத் தகுந்தபடி, பிரிட்டிஷார் காலத்தில் கல்விக்காகப் பணம் செலவழித்து வந்தார்கள். அந்த வருமானத்தையும் இழந்து, அன்று செலவழித்ததை விட ஐந்து மடங்கு அதிகமாகச் செலவு செய்யக்கூடியது மிகவும் வரவேற்கத் தகுந்தது. 9-51 a.m.

கல்வி போதிப்பவர்களுடைய நல்வாழ்வைப் பொறுத்துத்தான் கிராமாந்திரத்தில் குழந்தைகளுடைய நல்வாழ்வும் இந்த தேசத்தின் நல்வாழ்வும் இருக்கிறது என்பதைக் கருதித்தான் ஆசிரியர் பணியைக் கவர்ச்சிகரமான பணியாக ஆக்குவதற்கு இந்த அரசாங்கம் முயற்சி செய்து வருகிறது. அந்தக் கவர்ச்சி சிறிதும் நீங்காமல் அல்லது குறையாமல் இவ்வருஷமும் வருஷா வருஷமும் ஒதுக்கப்படுவதுபோல் பணம் ஒதுக்கப்பட்டு வருகிறது. ஆசிரியர் பணியைத் தவிர மற்ற எந்த வேலையும் கவர்ச்சியுள்ளது என்றிருந்த காலம் போய், ஆசிரியர் பணி மிகுந்த கவர்ச்சியுள்ள பணியாக ஆகிக்கொண்டு வருகிறது என்பதை எல்லோரும் உணருகிறோம். சர்க்கார் உத்தியோகம் வேண்டாம்; ஆசிரியராக இருந்தால் போதும் என்ற அளவுக்கு நாளாவட்டத்தில் இந்தப் பணி கவர்ச்சிகரமாக ஆகிக்கொண்டு வருகிறது.

[Sri M. S. Selvarajan] [17th July 1957

ஆசிரியர்களுக்கு 'டீச்சர்ஸ் பிராவிடெண்ட் பண்டு' இருப்பதால்தான், சம்பளத்தில் கால் பாகத்தை அவர்களுக்குப் பென்ஷனாக வைத்திருக்கிறார்கள். மற்றத் துறைகளில் இருப்பவர்களுக்கு பாதி பாகம் பென்ஷனாகக் கொடுப்பது என்று இருக்கும்போது, ஆசிரியர்களுக்கு மாத்திரம் கால் பாகந்தான் பென்ஷனாகக் கொடுப்பது பிராவிடெண்ட் பண்டைக் கருதித்தான் என்று நான் நினைக்கிறேன். இருந்தாலும்கூட, அந்தப் பென்ஷனை இன்னும் எந்த அளவுக்கு கவர்ச்சிகரமாக ஆக்க முடியும், சம்பளத்தில் மூன்றில் ஒரு பங்காவது பென்ஷனை ஆக்க முடியுமா என்று அரசாங்கம் கவனிக்கலாம் என்று பணிவாக நான் சொல்ல விரும்புகிறேன்.

ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்குக் கொடுக்கக்கூடிய கல்விச் சலுகைகள் இன்னும் சில தரப்பினருக்கும் எட்ட வேண்டுமென்று எல்லோருக்கும் ஆசை. அரசியல் தியாகிகளுடைய குழந்தைகளுக்கு ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்குக் கொடுப்பதுபோல் அல்லாமல், இன்னும் கவர்ச்சிகரமான அளவுக்கு, எந்த அளவுக்குப் படிப்பின் உச்ச தரம் இருக்கிறதோ அந்த அளவுக்குக் கல்விச் சலுகைகள் கொடுக்க அரசாங்கம் முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இதிலேகூட, குழந்தைகளுக்கு என்றல்லாமல், நடுத்தர வாலிபர் தியாகியாக இருந்தால், அவர்களை ஒட்டியுள்ளவர்கள் அல்லது அவர்களுடைய பராமரிப்பில் இருக்கக்கூடியவர்களுக்குக்கூட கல்விச் சலுகை அளிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். சாதாரணமாக, யுத்தத்திற்குச் சென்று வந்தவர் ஒருவருடைய குடும்பத்தில் அவரைச் சார்ந்தவர்கள் எல்லோருக்கும் கல்விச் சலுகை கிடைத்துக்கொண்டிருக்கிறது. அதுபோல, தியாகிகளுடைய குழந்தைகளுக்கு மட்டுமல்லாமல், அவர்களுடைய பராமரிப்பில் இருக்கக்கூடியவர்களுக்கும்கூட சாதாரணக் கல்விச் சலுகையிலிருந்து கல்வியின் உச்ச தரம் வரையிலும் சலுகை அளிக்க, அதாவது, இலவசக் கல்விச் சலுகையளிக்க, அரசாங்கம் முன் வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ட்ரெயினிங் ஸ்கூல்களை இப்போது சர்க்காரே ஏற்று நடத்துவதைப் பார்க்கிறோம். இது மாத்திரம் போதாது. தனியார் கையில் இருக்கும் ட்ரெயினிங் ஸ்கூல்களை சீக்கிரமாக அரசாங்கம் தன் கையில் எடுத்துக்கொண்டால்தான் இந்த தேசத்திற்கு விமோசனம் என்று நான் நினைக்கிறேன். அந்தத் திசையிலும் அரசாங்கம் விரைவாகக் கவனம் செலுத்துமென்று நான் நினைக்கிறேன்.

சாதாரணமாக நாம் கல்லூரிகளில் ஒரு விஷயத்தைப் பார்க்கின்றோம். எப். ஏ. வரையில் படித்தவர்களுக்கு, பி. காம்., பி. எஸ்ஸி. அல்லது பி. ஏ. (ஆனர்ஸ்) படிக்க, அதே கல்லூரியில் படித்திருந்தாலும் கூட, அங்கு இடமில்லை யென்று சொல்லக்கூடிய துர்ப்பாக்கிய நிலையில் அந்தக் குழந்தைகள் திண்டாடுகிறார்கள். அதே கல்லூரியில் படித்தவர்கள் பாஸ் மார்க்கு வாங்கியிருக்கலாம்; ஆனால் அதிகமாக மார்க்கு வாங்கவில்லை என்ற காரணத்திற்காக அடுத்த கல்லூரியைத்தேடி அலையவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அடுத்த கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தவர்கள் இதே மாதிரி இன்னொரு கல்லூரியைத் தேடி அலைவதைப் பார்க்கிறோம். நிச்சயமாக அதே கல்லூரியில் படித்தவர்களுக்கு பாஸாகி யிருந்தால், இடம் கொடுத்துவிட்டு பிறகுதான் மற்றவர்களுக்கு சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று விதி ஏற்படுத்தலாம் என்று நான் பணிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

முதியோர் கல்வியைப் பொறுத்தமட்டில், எந்த அளவுக்கு நாம் ஆசை பட்டோமோ அந்த அளவுக்கு நாம் சித்தி பெறவில்லை என்று அரசாங்கம் சூசகமாகத் தெரிவிக்கிறது. என்னுடைய யோசனை ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஆரம்ப ஆசிரியர்களுக்கும் நடுத்தர ஆசிரியர்களுக்கும் மேல் வகுப்பு ஆசிரியர்களுக்கும் போதனா முறைப் பள்ளிகளில் 'ரெப்ரஷர் கோர்ஸ்' நடத்துவதுபோல், முதியோர் கல்விக்கான முறையையும் அதே போதனா முறைப் பள்ளிகளில் போதிக்கலாம். அவ்வாறு செய்தால், ஆசிரியர்கள் முதியோர் கல்வி முறையையும் கற்றுக்கொண்ட பிறகுதான் அப்பள்ளியை விட்டு வெளியேற முடியும். நாட்டிலுள்ள ஆண், பெண் ஆசிரியர்கள் இதற்கு எந்த அளவு உற்சாகமாக இருக்கிறார்களோ, அந்த அளவுக்கு அவர்களைப் பயன்படுத்திக் கொண்டு முதியோர் கல்வியைப் பரப்பலாம். அவர்களுக்கு சாவகாசம் இல்லை யென்றால், வேலையைவிட்டு நீங்கியவர்களையும் பென்ஷன் குறைவாக வாங்கக் கூடியவர்களையும் பயன்படுத்திக் கொண்டு முதியோர் கல்வியைப் பரப்ப முயற்சிக்கலாம்.



17th July 1957] [Sri M. S. Selvarajan]

மத்திய சர்க்காரிலிருந்து பல துறைகளுக்கு மான்யம் வழங்கப்படுகிறது. குறிப்பாக, தொழில் கல்விக்கு மான்யம் வழங்கப்படுகிறது. சென்ற வருஷத்தில் இதற்காக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டதோ, அதைப் பயன்படுத்த முடியவில்லை. கோழி வளர்ப்புக்காக 'பௌல்ட்ரி கிராண்டு' மத்திய சர்க்காரும் நமது அரசாங்கமும் கொடுத்து வருகின்றன. அது சம்பந்தமாக, 'கோழிகளை வாங்கியிருக்கிறோம்' என்று 'சர்டிபை' செய்த பிறகு தான் மானியம் கொடுக்கப்படுகிறதென்று சொல்லப்படுகிறது. அது வாஸ்தவமானால், நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். கோழி வளர்ப்பு என்பது சாதாரண விஷயமல்ல. நல்ல பழக்கமுள்ளவர்கள்தான் இத்தொழிலில் ஈடுபடமுடியும். சிறிது அஜாக்கிரதையாக இருந்தாலும், அரை நொடியில் அவ்வளவும் மாய்ந்துவிடும்; நசித்துவிடும். ஆதலால், இந்த மான்யம் கொடுக்கும் முறையில் சிறிது மாறுதல் செய்யலாம். மற்றத் துறைகளில் கருவிகள் வாங்கிய பிறகு, வேண்டிய ஆட்களுக்குப் பயிற்சியளித்த பிறகு மான்யம் கொடுப்பது போல, பயிற்சி பெற்ற பிறகு கோழிகளையும் உபகரணங்களையும் வாங்கக்கூடிய அளவுக்கு மான்யம் வழங்கும்போது ஜாக்கிரதையாக பார்த்துக்கொள்ளலாம். இன்னும் எத்தனையோ துறைகளுக்கு, தொழில் துறைக்கும்கூட, மத்திய சர்க்கார் மானியம் வழங்கி வருகிறது. எந்தெந்தத் துறைகளுக்கு மானியம் வருகிறது என்று தெரியாத நிலைமையில் மக்கள் திண்டாடுகிறார்கள். ஆங்காங்குள்ள கல்வி ஸ்தாபனங்களுக்குச் சுற்றறிக்கை விடுத்து, இன்னின்ன இனங்களுக்கு மானியம் உண்டு என்று தெரிவித்து, அதைப் பயன் படுத்திக் கொள்ளப் பார்க்கலாம்.

ஏழைக் குழந்தைகளுக்கு மத்தியான உணவு அளிப்பதற்காக பத்து லக்ஷம் ரூபாய் ஒதுக்கியிருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. இருந்தாலும் ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். ஏழைக் குழந்தைகளுக்கு இலவச மத்தியான உணவு அளிப்பதற்காக ஒரு தினத்தை ஒதுக்கிக் கொண்டாடலாம். அந்த தினத்தில் அமைச்சர்கள் ஒன்று அல்லது இரண்டு ஜில்லாக்களைப் பொறுக்கியெடுத்து சிறப்பாக எல்லா கிராமங்களிலும் அந்த தினத்தைக் கொண்டாடலாம். அப்பொழுது இந்த வசதிக்காக நிலம் மானியமாக வாங்க ஏற்பாடு செய்யலாம். அவ்வாறு ஒரு நிரந்தர ஏற்பாடு செய்தால், இந்த உணவு அளிப்பதிலுள்ள சிரமத்தைக் குறைக்கலாம். இல்லாவிட்டால் பத்து லக்ஷம் ரூபாய்க்குப் பதில் நூறு பத்து லக்ஷம் ரூபாய் ஒதுக்கினாலும் கூட, முற்றிலும் திருப்திகரமாக நாம் இந்தத் திட்டத்தை நடத்த முடியுமென்று நான் நினைக்கவில்லை.

மற்றொரு சிறு ஆலோசனையும் சொல்ல விரும்புகிறேன். அது ஆலய நிதியிலிருந்து பாடசாலைகள் அமைப்பதைப் பற்றியது. பாடசாலைகளை நிர்வகிப்பது ஆலயத்தின் பொறுப்பு என்று சொல்வதை விட ஸ்தல ஸ்தாபனங்களோ அரசாங்கமோ அவைகளை ஏற்று நடத்தலாம். ஆனால், அங்கு இருக்கக்கூடிய குழந்தைகளின் பராமரிப்புக்காக இலவச உணவு அளிக்க போர்டிங் லாட்ஜ் வைப்பதற்கு ஆலய நிதியை உபயோகித்துக் கொள்ளலாம். ஆலய நிதியைக் கொடுத்து ஆலயங்களும் அவற்றின் நிர்வாகிகளும் நற்பெயர் சம்பாதித்துக்கொள்ளலாம். பாடசாலைகளை நேரடியாக ஆலய நிர்வாகத்தினர் நடத்தி வளர்ப்பதற்கு குழந்தைகள் சங்கியைக்கு தகுந்தபடி கோவிலின் நிதியும் வளர்ந்துகொண்டிருக்குமென்று சொல்ல முடியாது. இத்துடன் என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

***Sri P. VEERAPPA GOUNDER:** கனம் தலைவர் அவர்களே, இந்தக் 10 a.m.
கல்வி மானியத்தை எதிர்த்து கொண்டுவரப் பட்ட வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கனம் நிதி அமைச்சர் பேசும் போது புதிய வகுப்புகள் திறக்க 20 லட்சம் ரூபாயும், துடக்க பள்ளிகளை ஆதாரப் பள்ளிகளாக மாற்ற 10 லட்சம் ரூபாயும், 23 சாதாரண

பயிற்சிப் பள்ளிகளை ஆதாரக் கல்வி பயிற்சிப் பள்ளிகளாக மாற்ற 23 லட்சம் ரூபாயும் ஒதுக்கப் பட்டிருக்கிறது என்று அவர் குறிப்பிட்டார். அது மட்டுமல்லாமல் ஏழை மாணவர்களுக்கு பகல் உணவு அளிக்க மானியம் கேட்டிருப்பதையும் அவர் குறிப்பிட்டார். இவ்வளவு கல்வித் துறையில் தாராளமாக செலவு செய்ய நிதி ஒதுக்கியும், ஏழை மக்கள், பின் தங்கிய மக்கள், ஹரிஜன மக்கள் கல்வியில் முன்னேற வழி வகை காட்டப்படவில்லை. பொருள் வசதியற்ற பின் தங்கிய மக்கள், படிக்கப் போதுமான வசதி இல்லாமலே, பள்ளிகளில் சேராமலேயே இருந்துவிடுகிறார்கள். அதனால் அவர்கள் பின் தங்கிய நிலையிலேயே இருக்கிறார்கள். ஆகையால், தாழ்த்தப்பட்ட மக்கள், ஹரிஜன மக்கள், வன்னிய மக்கள், இன்னும் பிற்பட்ட மக்களுக்கும் 10-வது வகுப்பு வரையில் இலவசமாக கல்வி கற்பிக்க சர்க்கார் சட்டம் கொண்டு வரவேண்டும். இதற்கு கனம் கல்வி அமைச்சர் அவர்கள் வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்கள் பொருளாதாரத் துறையில் மிகவும் மெலிந்தவர்கள் ஆகையால்தான் அவர்கள் கல்வித் துறையிலும் மிகவும் எண்ணிக்கை குறைவாக இருக்கிறார்கள். பின்தங்கிய சமூகத்தில் இன்றைக்கு எடுத்துக் கொண்டோமானால் நூற்றுக்கு பத்துப் பதினைந்து பேர்கள் கூடப் படித்தவர்கள் தேற மாட்டார்கள் என்று நினைக்கிறேன். அதற்காகவே 5 வயதுக்கு மேற்பட்ட பிள்ளை கட்டாயமாக பள்ளிக்குச் சென்று படிக்க வேண்டுமென்று ஒரு கட்டாயக் கல்விச் சட்டம் கொண்டுவர வேண்டுமென்று சர்க்காருக்கு நினைவூட்டுகிறேன்.

அடுத்தபடியாக கல்வி அவிருத்தி மிகவும் பிற்போக்கான நிலையில் இருக்கிற காரணத்தால் ஒவ்வொரு பிருக்காவிலும் ஒரு உயர்நிலை, தொடக்கப் பள்ளிகளை ஏற்படுத்தவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் அதிகமான மாணவ மாணவிகள் நல்ல முறையில் கல்வி கற்றுக்கொள்ள நேரிடும். கல்வி அபிவிருத்தி அடைந்தால்தான், அதிலும் தொழில் கல்வி அபிவிருத்தியடைந்தால்தான் எல்லா லாத் துறைகளிலும் அபிவிருத்தி அடைந்து நாட்டில் முன்னேற்றம் ஏற்படும், பஞ்சம் முதலியவைகள் ஏற்படாது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் மற்ற பிற்பட்ட மக்களுக்கும் ஒரு வழி காட்டியாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **Sri R. SUBRAMANIAM**: கனம் சபா நாயகர் அவர்களே, கனம்
10-03 a.m. மந்திரி அவர்கள் கொண்டு வந்த கல்வி மானியத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக சர்க்கார் அவர்கள் ஆரம்ப ஆசிரியர்களின் அடிப்படைச் சம்பளத்தை உயர்த்தியிருப்பதை மிகவும் வரவேற்கிறேன். அதனால் அவர்களுடைய நிலையானது பாதுகாக்கப்பட்டது மட்டுமின்றி அவர்களுடைய உற்சாகத்தால் ஏற்படக் கூடிய பலன் சமுதாயத்துக்கு கிடைக்கப் போகிறது. பள்ளிகளைப் புதியதாக திறக்க 20 லட்சம் ரூபாயும், மத்தியான உணவு கொடுக்க 10 லட்சம் ரூபாயும் ஒதுக்கப் பட்டிருக்கிறது. இப்போது பள்ளிகளைத் திறக்கும் விஷயத்தில் சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். தற்போது 500 ஜனத் தொகையை அடிப்படையாகக் கொண்டு கிராமங்களில் ஆரம்பப் பள்ளிகளைத் திறக்கிறார்கள். அப்படி 500 ஜனத் தொகையுள்ள கிராமங்களில் பள்ளிக் கூடங்கள் திறப்பது அநேகமாக முடிந்து விட்டதாகவும், இப்போது 400 ஜனத் தொகையுள்ள கிராமங்களில் பள்ளிகளைத் திறப்பதாகவும் தெரிகிறது. இந்த விதியை இன்னும் சற்றுத் தளர்த்தி, 300 ஜனத் தொகையுள்ள கிராமங்களிலெல்லாம் பள்ளிகளைத் திறக்க சர்க்கார் யோசிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, மத்தியான உணவு கொடுப்பதற்காக 10 லட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டிருக்கிறது. இப்போது இந்த மத்தியான உணவு
11 a.m. ஹரிஜன வெல்பேர் டிபார்ட்மெண்ட் நடத்தும் ஹரிஜனச் சேரிகளில் உள்ள பள்ளிகளில் தான் கொடுக்கப்பட்டுவருகிறது. இதை அதிகப்படுத்தி சாதாரணமாக சர்க்காராலும், ஜில்லாபோர்டாராலும் திறக்கப்பட்டிருக்கும் ஹரிஜனச் சேரிகளில் உள்ள எல்லாப் பள்ளிகளிலும் இந்த மத்தியான உணவு அளிக்க சர்க்கார் உத்திரவு போடவேண்டும்.



இப்போது திறக்கப்பட்டிருக்கும் ஆரம்பப் பள்ளிகளெல்லாம், பாட்டை ஓரங்களிலும், நல்ல போக்குவரத்து உள்ள இடத்திலும், அங்கங்கே திறக்கப் பட்டிருப்பதாகத் தெரிகிறது. இண்டீரியர் வில்லேஜஸ்களில் பள்ளிகள் திறக்கப்படாமல் இருக்கிறது. உள்ளிட்ட கிராமங்கள் பேரிலும் கவனம் செலுத்தி அங்கும் பள்ளிகளை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்போது ஒரு பள்ளியிருந்தால் அதன் சுற்றுப் புறத்திற்கு ஒரு மைல் தூரத்தில் வேறு பள்ளிகளைத் திறப்பதில்லையென்று சர்க்கார் கொள்கையாகக் கொண்டு பள்ளிகளைத் திறக்காமல் இருந்து வருகிறது. ஏதோ ஒரு இடத்தில் பள்ளி இருந்தாலும்கூட ஒரு மைலுக்கு ஒன்றுவது, இரண்டாவது கிளாஸில் படிக்க குழந்தைகள் நடந்து போய்ப் படித்துவிட்டு வருவது மிக மிக சிரமமாகவிருக்கிறது. அரை மைல், முக்கால் மைல் 30 அல்லது 40 பையன்கள் படிக்க இருந்தாலும்கூட அந்த விதியை அனுசரித்து இன்றைக்கு பள்ளிகள் திறக்காமல் இருக்கிறார்கள். பீடர் ஸ்கூல், அதாவது மூன்றும் கிளாஸ் வரை உள்ள பள்ளிகளை இந்தமாதிரி இடங்களில் திறக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்போது ஹரிஜன் வெல்பேர் டிபார்ட்மெண்டில் ஹரிஜனங்களுக்கு பள்ளிகள் திறப்பதை நிறுத்திவிட்டார்கள். இந்தப் பள்ளிகளை சர்க்கார் எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற முறையில் ஹரிஜன் வெல்பேர் டிபார்ட்மெண்டில் திறப்பதில்லை. இப்போது இது சர்க்கார் பொறுப்பிலும், லோகல் போர்ட்ஸ் பொறுப்பிலும் விடப்பட்டிருக்கிறது. இப்போது திறக்கக் கூடிய பள்ளிகளெல்லாம் பொதுவாக ஜாதி ஹிந்துக்களுக்கும் மற்ற ஹரிஜன மக்களுக்கும் பொதுவாகத் தான் திறக்கப்படுகிறது. ஆனால் அநேகமாக ஜாதி ஹிந்துக்கள் எங்கு இருக்கிறார்களோ அங்குதான் பள்ளிகளைத் திறப்பதாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கொள்கை மாறவேண்டும். சாதாரணமாக இரண்டு சாராரும் ஒன்றாக ஒரே பள்ளியில் படிப்பது நல்லது. மாணவர்களுடைய இளமை காலத்திலேயே இந்த ஜாதி மனப்பான்மையை போக்கினால் நல்லது என்றுதான் சர்க்கார் இம்மாதிரி ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது. நான் அதை மிக மிக வரவேற்கிறேன். ஆனால் ஹரிஜன மாணவர்கள் ஜாதி ஹிந்துக்கள் உள்ள இடத்திலுள்ள பள்ளிகளில் படிப்பது மிகவும் கஷ்டமாயிருக்கிறது. ஹரிஜனங்கள் ஒவ்வொன்றுக்கும் ஜாதி ஹிந்துக்களை எதிர்பார்த்திருக்கிறார்கள். ஹரிஜனச் சிறுவர்கள் தங்களுக்கு மாடு மேய்க்கவேண்டுமென்று ஜாதி ஹிந்துக்கள் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். இந்த ஜாதி மனப்பான்மை இம்மாதிரி ஸிடிகளில் மாறியிருந்தாலும்கூட கிராமங்களில் போய்ப் பார்த்தால் நாம் எதிர்பார்த்த அளவுக்கு, அந்த ஜாதி மனப்பான்மை இன்னும் போகவில்லை. இனிமேல் திறக்கக் கூடிய பள்ளிகளை, எங்கெல்லாம் வசதி இருக்கிறதோ, அங்கெல்லாம் ஹரிஜனச் சேரிகளில் திறக்க உத்திரவிட்டால், அங்கு ஜாதி ஹிந்துக்கள் போய்ப் படிக்க வசதியாக இருக்கும். இதை ஹரிஜன மக்களும் அன்புடன் வரவேற்பார்கள்.

அதற்கு அடுத்தபடியாக, ஹரிஜனங்களுக்கு பள்ளிகளில் சம்பளம் கிடையாது. காலேஜுகளிலும்கூட கிடையாது. ஆனால் அவர்கள் பள்ளிகளில் சேரும்போது முதலில் சம்பளத்தைக் கட்டச்சொல்கிறார்கள். காரணம் என்னவென்றால் அவர்கள் ஹரிஜனங்கள் தானா என்று நிர்ணயிக்க முடியாமல்தான் முதலில் சம்பளத்தை வாங்குகிறார்கள். முதலிலேயே ஹரிஜனங்கள் என்று நிரூபிக்கவேண்டுமென்று சொல்லி சேரக்கூடிய காலத்திலேயே ஸர்டிபிகேட் கொடுக்கவேண்டுமென்ற முறையை அனுசரித்தால் மிகவும் நல்லதாக இருக்கும். ஏதோ மிகவும் குறைந்த வருவாய் உள்ளவர்கள், பையன் அறிவும் ஆற்றலும் உள்ளவனாக இருந்தாலும்கூட பள்ளிக் கூடத்தில் முதலில் சம்பளம் கட்டவேண்டுமென்ற கஷ்டத்தால் சேரமுடியாத நிலையில் இருக்கிறார்கள். இது மிகவும் கஷ்டமாக இருக்கிறது.

இப்பொழுது சர்க்காரால் நடத்தப்படும் காலேஜ்களில் ஸ்தானங்கள் ஒதுக்கும் போது, ஹரிஜனங்களுக்கு 16 சத விகிதம், பிற்பட்ட வகுப்பினர்களுக்கு 25 சத விகிதமும் ஒதுக்கியிருக்கின்றார்கள். இப்பொழுது சர்க்காரால்

நடத்தப்படும் காலேஜ்களில், எந்தக் காலேஜைப் பார்த்தாலுங்கூட, அங்கு பையன்களைச் சேர்க்க வேண்டிய அளவு இடம் இருக்கிறது. ஆனால், தனியார் அல்லது கமிட்டியார் நடத்தும் காலேஜ்களில் "இடம் இல்லை, இடம் இல்லை" என்ற பேச்சே எங்கு போனாலும் வருகிறது. இதற்குக் காரணம், எஸ்.எஸ்.எல்.ஸி.-யில் குறைந்த மார்க் வாங்கியவர்களை அந்தக் காலேஜ்களில் சேர்த்துக்கொள்வது இல்லை. 300 மார்க்குகளுக்குக் குறைவாக மார்க் வாங்கியிருந்த பிள்ளைகளை தங்கள் காலேஜ்களில் அனுமதித்தால், அடுத்ததுவரக்கூடிய "ரிசல்ட்" நல்ல முறையில் இருக்காது என்று கருதி 'இடம் இல்லை' என்று சொல்லிவிடுகிறார்கள்.

மற்றவர்கள் போய் "ஏன், இங்கு ஹரிஜனங்களுக்கும் பிற்பட்ட வகுப்பினர்களுக்கும் ஸ்தானங்கள் ஒதுக்கவில்லையா?" என்று கேட்டாலுங்கூட, "அம்மாதிரியான கவர்ன்மெண்ட் உத்தரவு ஒன்றும் இல்லை" என்று அவர்கள் சொல்லி விடுகிறார்கள். இதைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கே மிகவும் சிரமமாக இருந்தது. இங்கு வந்தவுடன் பார்த்து, இம்மாதிரி ஒரு கவர்ன்மெண்ட் உத்தரவு இருக்கிறது என்று தெரிந்துகொண்டேன். இது அவர்களுக்குத் தெரிவிக்கப்படவில்லையோ அல்லது வேண்டுமென்றேதான் செய்கிறார்களோ எனக்குத் தெரியாது. இந்த விகிதாசாரத்தை அவர்கள் கண்டிப்பாக அனுசரிக்கும்படியாக அரசாங்கம் அவர்களுக்கு உத்திரவிடும்படியாக நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்தக் கஷ்டத்தைப் போக்க இன்னொன்றும் நான் சொல்ல விரும்புகிறேன்.

காலேஜ்களில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்காக "செலக்ஷன் கமிட்டி" என்று வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த செலக்ஷன் கமிட்டியில் "சர்க்கார் நாமினி" யாக ஒருவரை நாமே நியமித்தால், இந்தச் சலுகை அந்தந்த இனத்தவர்களுக்குக் கிடைக்கிறதா என்பதைக் கவனிப்பதற்கு அவகாசம் இருக்கும். ஆகவே, செலக்ஷன் கமிட்டியில் "சர்க்கார் நாமினி" ஒருவரை நியமிப்பது நல்லது என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

எங்கள் தஞ்சை ஜில்லாவைப் பொறுத்தவரையில் தொழில் கல்வி மிகவும் புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கிறது. ஏதோ ஒரு காலத்தில் இருந்த "மெடிகல் ஸ்கூல்" கூட இப்பொழுது இல்லை. தஞ்சை ஜில்லா நமது தமிழ் நாட்டிலேயே "நெற் களஞ்சியம்" எனப் பெயர் பெற்றும், அங்கே அதிகமான நெல் சாகுபடி இருந்தும்கூட, அங்கு ஒரு விவசாயக் கல்லூரிகூட இல்லாமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்கது. ஆடுதுறையில் "பேசிக் அக்ரிகல்சுரல் ஸ்கூல்" என்ற ஒரு ஸ்கூல் இருக்கிறது. அது மட்டும் போதாது. சர்க்கார் மூலமாகவே அங்கு ஒரு விவசாயக் கல்லூரி ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்கும்படியாக நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

எங்கள் ஜில்லாவில் "பாலிடெக்னிக் ஸ்கூல்" ஒன்றை ஆரம்பிக்க எங்கள் ஜில்லாவிலிருக்கும் ஸ்ரீ மனைத்துனைநாத தேசிகர் அவர்கள் முன் வந்திருப்பதாகத் தெரிகிறது. அவருடைய முயற்சிக்கு சர்க்கார் எல்லா ஊக்கமும் அளித்து, சீக்கிரத்திலேயே "பாலிடெக்னிக் ஸ்கூல்" ஒன்றை எங்கள் தஞ்சை ஜில்லாவில் திறக்க ஏற்பாடு செய்யும் படியாக நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்பொழுது ஓரத்தநாடில் ஒரு பி. டி. காலேஜ் ஆரம்பிக்கப்போவதாகத் தெரிகிறது. இதைப்பற்றி நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, ஆதாரக் கல்வி விஷயத்தில் நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆதாரக் கல்வி மிகவும் முக்கியம் வாய்ந்தது. இக் கல்வி முறையை நாட்டில் பரப்பவேண்டுமென்று காந்திஜி அவர்கள் சொன்ன காலத்திலிருந்து நாம் அதற்காக பிரயாசை எடுத்துக்கொண்டு வருகிறோம். ஆதாரக் கல்வியைப் பரப்பும் விஷயம் நமது சென்னை ராஜ்ய சர்க்காரின் அடிப்படைக் கொள்கையாகவும் இருந்து வருகிறது. ஆனால், 21,000 ஆரம்பப்பள்ளிகள் நமது மாகாணத்தில்





இருப்பதாகத் தெரிகிறது. இதில் ஆதாரக் கல்விப் பள்ளிகள் 2,000 மட்டுமே இருப்பதாகவும் தெரிகிறது. சென்ற பத்து வருஷ காலத்தில் பத்து சத விகிதம் பள்ளிகள்தான் ஆதாரக் கல்விப் பள்ளிகளாக ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. எனவே, ஆதாரக் கல்விப் பள்ளிகள் அமைக்கும் விஷயத்தில் சர்க்கார் மிகவும் துரிதப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கட்டாயக் கல்வியை எடுத்துக்கொண்டால், ஏதோ சில இடங்களில் தான் கட்டாயக் கல்வி அளிக்கப்பட்டு வருகிறது. ஆனால், அது நல்ல முறையிலே நடைபெற வில்லை. எவ்வளவு வற்புறுத்தியபோதிலும் 76 சத விகிதம் பிள்ளைகள்தான் பள்ளிக்கு வருகிறார்கள். இந்தக் கட்டாயக் கல்வி அளிப்பதை இப்பொழுது சிறிது தளர்த்தி வைத்திருப்பதாகத் தெரிகிறது. மக்களுக்கு இருக்கும் கஷ்டங்கள் பல. அதோடு கூட, பிள்ளைகளுக்கு சிலேட்டு, புத்தகம்கூட வாங்கிக்கொடுப்பதற்கு பெரும்பாலான மக்களுக்கு வசதி இல்லாமல் கஷ்டமாக இருக்கிறது. ஆனால், சர்க்காருடைய திட்டத்தின்படி பிள்ளைகளுக்கு பள்ளிக்கூடங்களில் மத்தியான உணவு அளிக்கப்படுகிறது. கட்டாயக் கல்வி கற்றுக்கொடுக்க வேண்டும் என்று எங்கெங்கு வற்புறுத்தியிருக்கிறதோ, அந்த இடங்களுக்கு முதல் இடம் அளித்து, அங்கு கட்டாயமாக மத்தியான உணவு அளிக்க வேண்டும் என்ற முறையை ஏற்படுத்தி, கட்டாயக் கல்வி முறையை நல்ல முறையில் அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை இத்துடன் நான் முடித்துக்கொள்ளுகின்றேன்.

* **SRI M. RAMACHANDRA REDDI** : கனம் சபா நாயகர் அவர்களே, கனம் கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த மானியக் கோரிக்கையை நான் ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். 10-15 a.m.

தற்போது, நமது கல்வித் துறைதான் சமூகத்துக்கு ரொம்பப் பயன் படக் கூடிய முக்கியமான துறையாக விளங்குகிறது என்பதில் சந்தேகமே இல்லை. இந்த முக்கியமான கல்வி விஷயத்திலே ஆரம்பக் கல்வி மிகவும் முக்கியமானது. அதற்காக கனம் அமைச்சர் அவர்கள் 6 கோடி ரூபாய்க்குமேல் ஒதுக்கி வைத்திருப்பதற்காக நாம் அவரை மிக மிக பாராட்ட வேண்டும். இவ்வளவு தொகை ஒதுக்கியிருக்கும் இவ்வளவு பெரிய துறைக்கு, தனியாகவே ஒரு டைரக்டர் நியமித்து, இந்த இலாகாவைப் பரிபாலிக்கச் செய்தால் நன்றாக இருக்கும். இப்பொழுது ஆரம்பக் கல்வி, உயர்தரக் கல்வி, கல்லூரிக் கல்வி ஆகிய எல்லாவற்றிற்குமாகச் சேர்த்து ஒரு டைரக்டர் கவனித்து வருகிறார். ஆரம்பக் கல்விக்கு என்று டெபுடி டைரக்டர்தான் இருக்கிறார். அந்த டெபுடி டைரக்டரையே ஆரம்பக் கல்வி டைரக்டர் என்று நியமித்து விட்டால் ஆரம்பக் கல்வி விஷயத்தை நன்றாக கவனிப்பதற்கும் மேற்பார்வை இடுவதற்கும், விஸ்தரிப்பதற்கும் சௌகரியமாக இருக்கும் என்பது என்னுடைய எண்ணம்.

இன்றைக்கு ஆரம்பப் பள்ளிகளானது பல்வேறு நிர்வாகத்தின் கீழ் நடந்து வருகின்றன. அவைகளையெல்லாம் ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டுவந்து சர்க்காரே நேரடியாகக் கவனித்துப் பரிபாலித்தால் அவைகளின் தரமும், ஆசிரியர்களுடைய பண்பும், ஆசிரியர்களுக்கு வேண்டிய உயர்வும் கிடைக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம். இப்பொழுது பலதரப்பட்ட மானேஜ்மெண்டுகள் ஆரம்பப் பள்ளிக்கூடங்களை நிர்வகித்து வருவது அவ்வளவு பொருத்தமாக இல்லை. இப்பொழுது சர்க்கார் ஆரம்பப் பள்ளிப் படிப்பை இலவசமாக அளிக்க முன் வந்திருப்பதால், இவைகளின் நிர்வாகத்தை சர்க்காரே ஏற்றுக்கொண்டு நேரடியாகக் கவனிப்பது நல்லது. லேபர் பள்ளிக்கூடங்கள், பஞ்சாயத்துப் பள்ளிக்கூடங்கள், ஜில்லா போர்டு பள்ளிக்கூடங்கள், மிஷனரி பள்ளிக்கூடங்கள் என்று இப்படிப் பல்வேறு மானேஜ்மெண்ட் இருப்பதையெல்லாம் மாற்றி, எல்லாப் பள்ளிகளையும் சர்க்காரே நேரடி நிர்வாகத்தில் மாற்றிக்கொண்டால் நன்றாக இருக்கும் என்று நான் மீண்டும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

[Sri M. Ramachandra Reddi [17th July 1957

ஆரம்ப, உயர்தரப் பாடசாலை என்று ஒன்று இப்பொழுது இருக்கிறது.
அது அவசியம் இல்லை என்பது என்னுடைய அபிப்பிராயம். கனம் அங்கத்
தினர்கள் இதைச் சிந்திக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளு
கின்றேன். ஹையர் எலிமென்டரி ஸ்கூலில் 8-வது ஸ்டாண்டர்டு வரை
படிக்கும் மாணவர்கள் உயர் நிலைப் பள்ளிக்குப் போகும் முதல் பாரத்
திற்குக் கூட லாயக்கற்றவர்களாக இருக்கிறபடியால் 11 ஆண்டுப் படிப்பை,
17 வயதில் முடிப்பதற்குப் பதிலாக, 20 வயதில் முடிக்க வேண்டியதாக
இருக்கிறது. இப்படி அனுவசியமாக மூன்று ஆண்டுகள் வீணாகப்
போகிறது.

அதுவும் தவிர, ஹையர் எலிமென்டரி ஸ்கூலில் தேர்ச்சி பெற்றவர்கள்
ஹையர் கிரேடு ட்ரெயினிங்குக்குப் போகலாம் என்ற விதி இருந்தாலுங்கூட,
அவர்களுக்கு ஓரளவு ஜீவனோபாயத்திற்கு உகந்த கல்வியாக இது
இருந்தாலுங்கூட, செகண்டரி கிரேடு பயிற்சி பெற்ற ஆசிரியர்களை "ஹையர்
கிரேடு வேகன்ஸி"க்குப் போட்டால் பொருத்தமாக இருக்கும். அவர்
களையே ஆரம்ப ஆசிரியர்களாக நியமித்துவிடலாம். இம்மாதிரி 8-வது
ஸ்டாண்டர்டு வரையில் படித்த ஆசிரியர்கள் அவசியம் இல்லை என்று நான்
கருதுகின்றேன். ஆகவே, கனம் அங்கத்தினர்கள் இதைப்பற்றி யோசிக்க
வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன். ஏனென்றால், இதனால்
மூன்று வருஷ காலம் வீணாகிறது.

பத்தாவது வரையில் எல்லோருக்கும் இலவசப் படிப்பு கொடுப்பது
நல்லது. இப்பொழுது உத்தியோகஸ்தர்களுடைய பிள்ளைகளுக்கும்,
ஏழைகளுக்கும் இலவசக் கல்வி சர்க்கார் கொடுத்து வருகின்றார்
கள். ஒரு சிலருக்கு மட்டும் இலவசமாகக் கல்வி முறை என்று இருக்கா
மல், எல்லோருக்குமே 10-வது வரை இலவசக் கல்வி கொடுப்பதைப்பற்றி
முதல் மந்திரி அவர்கள் கூறியிருக்கிறார்கள். அந்தக் காரியத்தை அவர்
செய்து விட்டால் எல்லோருக்குமே அனுவசியமாக வேலைகள் குறைந்து
விடும், "பாவெர்டி சர்டிபிகேட்" கொடுக்க வேண்டிய அவசியமும்
இல்லாமல் போய் விடும் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.
அதனால் தொல்லைகளும் குறையும் என்று நான் தெரிவித்துக்கொள்ளு
கின்றேன்.

இப்பொழுது போதுமான தணிக்கை அதிகாரிகள் இல்லாமல் குறைவு
பட்டிருக்கிறது. நம் ராஜ்யத்தில் 132 ஸ்தானங்களுக்குத் தணிக்கை அதி
காரிகள் இல்லாமல் இருக்கிறது. எங்கள் ஜில்லாவாகிய வடஆற்காடு ஜில்
லாவை "**Bifurcate**" செய்திருக்கிறார்கள். ஜில்லாவை இரண்
டாகப் பிரித்து, இரண்டு கல்வி அதிகாரிகள் நியமிக்கப்படுவதைப்பற்றி
நான் சந்தோஷப்படுகிறேன். ஆனால், இன்னும் கல்வி அதிகாரி நியமிக்கப்
படவில்லை. அவர்கள் மேற்பார்வை இல்லாமல் பல உயர்தரப் பாடசாலைகள்
இரண்டு ஆண்டுகளாக "சூபர்வைஸ்" செய்யப்படாமல் இருக்கின்றன.
அதனால் தரம் குறைந்திருக்கிறது. என்பதையும் நாம் ஒத்துக்கொள்ள
வேண்டும்.

அதோடு ஆரம்ப ஆசிரியர்களுக்கு வீடு கட்டும் திட்டத்திற்கு மத்திய
சர்க்காரினாலே உதவி செய்யப்படுகிறது. அதற்கு ஜில்லா போர்டிலிருந்து
அவர்களுக்கு ஒரு சலுகை கொடுப்பதற்குக் கேட்டிருக்கிறார்கள். அதைத்
தனியார் பில்டிங் கமிட்டி ஒன்றை ஸ்தாபனம் செய்து அவர்கள் மூலமாக
அதைக் கட்டவேண்டுமென்று கூறி இருப்பதனால் அதைச் சீக்கிரம் செய்ய
முடியவில்லை. சர்க்கார் இலாகா மூலமாகவே அந்தக் கட்டிடங்கள் ஒவ்
வொரு கிராமத்திலும் கட்டிக் கொடுப்பது அத்தியாவசியம். பல கிராமங்
களில் ஆசிரியர்கள் வீடு இல்லாது கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதனாலே
அவ்வூரை விட்டுத் தங்களை மாற்றி விடவேண்டுமென்று கேட்டுக் கொண்டி
ருக்கிறார்கள்.

அதோடு உயர்தரப் பாடசாலைகளுக்கும் கட்டிடம் ஏற்படுத்திக் கொடுப்
பது சர்க்காருடைய கொள்கை. அதை அவசியம் கட்டிக் கொடுக்கவேண்டு
மென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதோடு எங்கள் ஜில்லாவில் உள்ள
மாண்புமிக்க ஒருவர் எஜுகேஷனல் டிரஸ்டு பேரிலே ஏராளமான திர
வியத்தை வைத்திருக்கிறார். பாலிடெக்னிக் பள்ளி அங்கு ஏற்படுத்து



17th July 1957] [Sri M. Ramachandra Reddiar]

வதாய் இருந்தால் ஐந்து லட்சம் தொகை கொடுப்பதற்கும் தயாராய் இருக்
கிறார். ஸ்ரீ ராஜகோபால நாயுடு என்ற அந்த தர்மவானின் உதவியைக்
கொண்டு அந்த ஜில்லாவில் ஒரு பாலிடெக்னிக் பள்ளியை ஏற்படுத்து
வதற்கு சர்க்கார் உதவி செய்ய வேண்டும் என்பதாக நான் தாழ்மையுடன்
கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்போது உயர்தரப் பள்ளியில் பைபர்கேஷன் முறையை ஏற்படுத்த
வேண்டுமென்று வந்த யோசனையின்பேரில் மூன்று விதமாக பைபர்கேஷன்
செய்தால் நலமாக இருக்குமென்று நினைக்கிறேன். அதனால் பயிற்சிக்
கூடங்களைக் குறைக்க ஏதுவாக இருக்கும். நிர்வாகத்துறை, தொழில்,
துறை, கல்விபோதனாமுறைத் துறை என்பதாக மூன்றாகப் பிரித்து உயர்
தரப் பள்ளியிலே நான்காம்பாரம், ஐந்தாம்பாரம், ஆராம்பாரம் வகுப்பு
களில் போதித்துவிட்டால் அதற்கென்று தனியாகப் போதனாப் பயிற்சிகளை
ஏற்படுத்த வேண்டியதாக இருக்காது. எஸ்.எஸ்.எல்.ஸி.யும் போதுமான
காமன் பரிட்சையாகப் போய்விடும். அதற்கு ஆவன செய்யவேண்டுமென்று
கேட்டுக்கொள்ளுகிறேன். அடுத்தபடியாக ஹரிஜன மாணவர்களுக்கு
இலவச விடுதிக்கு கட்டிடம் கிடைக்காமல் கஷ்டமாக இருக்கிறது. ஆகையால்
சர்க்கார் இலவச விடுதி ஏற்படுத்துவதற்கு இடவசதி தேடித் தர வேண்டு
மென்பதாக கேட்டுக்கொண்டு எனக்கு பேச அனுமதி அளித்ததற்கு நன்றி
தெரிவித்துக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையை நான் ஆதரிக்கி
றேன்.

**Sri P. U. SHANMUGAM** : கனம் சபாநாயகர் அவர்களே, கல்வி 10-23 a.m.
இலாகா மானியத்தின் மீது பிரேரேபிக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை
ஆதரித்துச் சிலவார்த்தைகள் பேச விரும்புகிறேன். வெட்டுப் பிரேரணையை
ஆதரிப்பது மானியக் கோரிக்கைத் தொகையைக் குறைப்பதற்காக இல்லை.
தனது உரையில் நிதி அமைச்சர் குறிப்பிட்டதுபோல அதை அதிகமாக்க
வேண்டுமென்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

போலீஸ் மானியத்திற்கு அடுத்தாற்போல கல்வி மானியம் விவாதத்
திற்கு வந்திருப்பதில் இருந்தே போலீஸ் மானியம் போல கல்வி மானிய
மும் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பது புலனாகிறது. போலீ
சாருக்கு அதிகப் பொறுப்பு இருப்பது போலவே ஆசிரியர்களுக்கும் அதிக
மான பொறுப்பு, கடமை இருக்கிறது. சமூகத்தில் ஒழுங்கை நிலைநிறுத்து
வதற்கு போலீசார் சிறந்த பணி புரிகிறார்கள் என்றால், வளருகின்ற சமூ
கத்தை திருத்தி நல்ல ஒழுக்கத்தையும், பண்பாட்டையும் வளர்ப்பதற்கு
ஆசிரியர்களுடைய பணி மிகவும் முக்கியமாக இருக்கிறது. அவர்களுடைய
கடமை, அவர்களுடைய சேவை இவற்றை மனதில் வைத்துக்கொண்டு
நாம் அவர்களுக்குச் சம்பளம் கொடுத்து வருகிறோமா என்றால் இல்லை என
நிச்சயமாகச் சொல்லிவிட முடியும். ஆனால் நிதி அமைச்சர் அவர்கள்
அதற்குப் போதுமான நிதி இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள். மேலும்
நம்முடைய மாகாணத்தைப் பொறுத்த வரையில் ஏறக்குறைய நாலாயிரம்
ஓராசிரியர்கள் பள்ளி தேவையாக இருக்கிறது என்று சொல்லி, முன்பு
ஓராசிரியர்களை நியமிக்கும்போது ஒரு மாத பயிற்சி அவர்களுக்கு இருந்தால்
போதும் என்று சொல்லி பயிற்சியைக் கொடுத்து ஆசிரியராக நியமித்தார்
கள். ஆனால் இப்போது அவர்களும் கட்டாயமாக இரண்டாண்டு பயிற்சி
பெற்று வரவேண்டும் என்பதாகச் சொல்லப்படுகிறார்கள். இவ்வளவு
காலம் வேலை செய்து வந்த பிறகு இன்றைக்கு அவர்களை இரண்டாண்டு
ஆசிரியப் பயிற்சி பெற்று வரத்தான் வேண்டும் என்று நிர்ப்பந்தப்படுத்து
வது எப்படிப் பொருந்தும் என்று எனக்குப் புரியவில்லை. சென்ற நான்
கைந்து ஆண்டுகளுக்கு முன்பு ஆசிரியர்கள் அதிகமாகத் தேவைப்படு
கிறார்கள் என்பதற்காக எமர்ஜென்ஸி பயிற்சி என்று கொடுக்கப்பட்டது
போலவே, பல ஆண்டுகளாக ஓராசிரியப் பள்ளியில் பணி செய்தவர்களுக்கு
ஆறு மாதப் பயிற்சி கொடுத்தால் போதும் என்றாவது செய்ய வேண்டு
மென்பதாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக கல்வி அமைச்சர் அவர்கள் இன்றைக்குக் கல்வித்
துறையில் 11 கோடி ரூபாய்க்கு மேல் செலவழிக்கப்பட்டு வருவதாகச்
சொன்னார்கள். பணம் அதிகமாகக் கல்வித் துறையிலே செலவிடப்பட்டு

வருவதாகச் சொன்னாலும் கூட இன்னும் கல்லாதவர்கள் நம் நாட்டில் அதிகப் பேர்கள் இருப்பதாக அவரே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். சுதந்திரம் ஏற்பட்ட பிறகு பத்து ஆண்டு காலத்திற்குள்ளாகக் கட்டாயக் கல்வி அமுலுக்குக் கொண்டுவரப்படும் என்று சொல்லியிருந்தாலும் இன்னும் அமுலுக்கு வரவில்லை. 1960-ம் ஆண்டிற்குள்ளாக அந்த நிலைமை ஏற்பட்டுவிடும் என்று உறுதி கூறியிருக்கிறார்கள். அதற்காக நான் அவரைப் பாராட்டுகிறேன்.

அடுத்தபடியாக கல்வி இலாகா மானியத்தில்மேல் அரசாங்கம் கையாண்டு வருகிற சில கொள்கைகளில் என்ன என்ன திருத்தம் செய்யப்பட வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

பொதுவாக உயர்தரப் பாடசாலை தலைமை ஆசிரியர்கள் இருக்கிறார்கள். இதுகாறும் நகரசபை, ஜில்லாபோர்டு இவற்றின் கீழ் உள்ள உயர்தரப் பாடசாலை தலைமை ஆசிரியர்களுக்கு இருந்துவரும் அதிகாரம் மிகவும் குறைவு, அவர்களுக்கு இன்னும் அதிக அதிகாரத்தைக் கொடுக்கிறோம் என்று சொல்லிக்கொண்டே அவர்களுடைய அதிகாரத்தைக் குறைத்து இருக்கிறார்கள்.

இன்று நான்கு பேரைப் பானலில் போட்டுவிட்டு முதலில் ஒன்றாவது பெயரை நியமிக்கவேண்டும். அவர் வரவில்லை என்றால் அடுத்தவரை நியமிக்க வேண்டும் என்று சொல்வதைக்காட்டிலும் பானல் லிஸ்டை அனுப்பிவித்துவிட்டு, அதில் யாரை வேண்டுமானாலும் நியமித்துக்கொள்ளலாம் என்று முன்பு இருந்த அதிகாரத்தை எடுத்துவிட்டார்கள். மீண்டும் முன்போலவே செய்யவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து ஆரம்பப்பாடசாலையில் இருந்து தேர்ச்சிபெற்று ஒரு மாணவன் உயர்தரப் பாடசாலைக்கு வருவதாக இருந்தால் பல கஷ்டங்கள் இருக்கின்றன. ஆரம்பப்பாடசாலையில் இருந்து தேர்ச்சி சர்டிபிகேட்டையும், ரெகார்டு ஷீட்டையும் எடுத்துக்கொண்டு ஒரு மாணவன் உயர்தரப் பாடசாலைக்குச் சென்றால் அங்கே மறுபடியும் ஒரு தேர்வு பரீட்சை நடத்துகிறார்கள். அதில் தேறவில்லை என்றால் உடனே மேல் வகுப்பில் எடுத்துக் கொள்ள மறுக்கிறார்கள். ஆரம்பப்பாடசாலையில் வந்து கேட்டால் நீ அந்த வகுப்பில் தேர்ச்சிபெற்றுவிட்டாய் என்று சொல்லுகிறார்கள். இப்படி ஒரு வகுப்புக்கு இரண்டு இடத்தில் பரீட்சை இருப்பதனால் மாணவர்களுக்கு கஷ்டம், படித்த வகுப்பிலேயே இன்னொரு ஆண்டு பணம் இல்லாத காலத்தில் படிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. ஆரம்பப் பாடசாலையிலோ, உயர்தரப் பாடசாலையிலோ எந்த இடத்திலாவது ஒரே இடத்தில் பரீட்சை நடத்தி மேல் வகுப்பில் அவர்களை உயர்தரப் பாடசாலையில் சேர்த்துக் கொள்ள வசதி செய்யவேண்டும். இதைப்பற்றி நகரசபையில் தீர்மானம் போட்டு முன்பு கல்வி அமைச்சருக்கும் அனுப்பிவைத்தோம். அந்த மாதிரியாகச் செய்ய முடியாது. இரண்டு இடத்தில் பரீட்சை அவசியம்தான் என்பதுபோலச் சொல்லிவிட்டார்கள். இதை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும் என்பதாகத் தான் நான் அவர்களை மிக்க பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன். ஆரம்பப் பாடசாலையில் பரீட்சை நடத்தினால் அதில் தேர்ச்சி பெற்றவர்களை எல்லாம் உயர்தரப் பாடசாலையில் அந்த வகுப்புக்கு மேல் வகுப்பில் சேர்த்துக்கொள்ள ஏற்பாடு செய்யவேண்டும். இல்லையானால் ஆரம்பப்பாடசாலையில் எந்த வகுப்பில் படிக்கிறானோ அந்த வகுப்புக்கு உரிய பரீட்சையை உயர்தரப் பாடசாலை நடத்தவேண்டும் என்று செய்ய வேண்டும். இரண்டு இடத்தில் பரீட்சை வைப்பது மாணவர்களுக்கு மிகுந்த கஷ்டத்தை விளைவிக்கிறது.

அடுத்தபடியாக தமிழ் ஆசிரியர்களைப்பற்றி ஒரு வார்த்தை. முன்னாள் கல்வி அமைச்சராக இருந்த அவிநாசிலிங்கம் செட்டியார் தமிழ் ஆசிரியர்களுக்குச் செய்த நன்றியை யாரும் மறக்கமாட்டார்கள். அவர் காலத்தில் தான் தமிழாசிரியர்களுக்கு ஒரு மதிப்பு ஏற்பட்டது. அவர்களுடைய சம்பளத்தை அதிகப்படுத்தினார். அதனால் ஊக்கம் அதிகம் ஏற்பட்டது. இருந்தாலும் இன்றைக்கு அவர்களுக்கிடையே உள்ள சம்பள வித்தியாசத்தைக் குறைக்க முன் வரவேண்டும். குறிப்பாக வித்துவான் பாஸ் செய்து,



எஸ்.எஸ்.எல். சி-யாகவும் இருந்து டிரெயினிங் படித்தவர்களுக்கு எல்.டி. சம்பளம் கொடுக்கப்படுகிறது. மற்றவர்களுக்கு இல்லை என்று இருக்கும் விதியைத் தளர்த்தி அதிக வித்தியாசம் இல்லாதபடி செய்யவேண்டும் என்பதாக நான் கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஆரம்பப் பாடசாலையில் படிக்கிற மாணவன், உயர்தரப் பாடசாலையில் மேல் வகுப்பில் படிப்பதற்குறிய தகுதி உடையவனாகக் கருதவேண்டும். தலைமை ஆசிரியர்களுடைய உரிமை பறிபோகாதவாறு இருக்கவேண்டும் என்றெல்லாம் நான் சொல்லும்போது இதை கட்சி நோக்கத்தோடு சொல்லவில்லை. கட்சி நோக்கத்தோடு சொல்வதாகக் கருதாமல் பொதுவான கொள்கை திருத்தமாகக் கொண்டு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கல்வி அமைச்சர் அவர்கள் பேசும்போது இதில் காரசாரமான விவாதம் அவசியம் இல்லை என்று குறிப்பிட்டார்கள். காரசாரமான விவாதமாகக் கருதாவிட்டாலும் கொள்கையில் திருத்தம் அவசியம் என்பதை ஒப்புக்கொண்டு இவற்றைச் செய்யவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக நமது நாட்டில் கல்வித் துறையில் ஏற்பட்டிருக்கும் குறைபாடுகளுக்கு—ஆசிரியர்களுடைய சம்பளக் குறைவும், மாணவர்கள் பள்ளிகளில் சேருவதற்கு இடமில்லாமல் தவிப்பதும் தகுந்த பரிகாரம் செய்வார்கள் என்று நினைக்கிறேன். ஆசிரியர்கள் பயிற்சி பாடசாலைகள் அதிகமாக்க வேண்டுமென்று கேள்வி நேரத்தில் சொன்னபொழுது "Stipend"ஐ நிறுத்தினால்தான் அது சாத்தியம் என்கிற ரீதியில் பதில் அளிக்கப்பட்டது. அப்படிச் செய்யாமல் எந்தக் காரணத்தைக் கொண்டும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் மாணவர்களுக்குக் கொடுக்கும்படியான "Stipend"-ஐ நிறுத்திவிடக் கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பயிற்சிப் பள்ளிகளில் தமிழ் ஆசிரிய மாணவர்களுக்கு இந்தி ஆசிரிய மாணவர்களைவிட குறைந்த அளவில் "Stipend" கொடுக்கப்படுகிறது. இதற்குக் காரணம், மத்திய சர்க்கார் இந்தி ஆசிரிய மாணவர்களுக்கு மான்யம் கொடுப்பதாகவும். அதை அப்படியே கொடுத்துவிடுகிறோம் என்று சொல்லித் தப்பித்துக்கொள்ளலாம். நிதி அமைச்சர் அவர்களுக்கு தமிழ் மீது இருக்கும் பற்றுதல் காரணமாக, நான் அவரை வேண்டிக் கொள்வது என்னவென்றால், தமிழ் ஆசிரியர்களுடைய பரிதாப நிலையை உணர்ந்து அவர்களுக்கும் அதிக Stipend கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

**Sri K. PONNIAN** : கனம் சபாநாயகர் அவர்களே, நிதி மந்திரி 10-32 அவர்கள் கொண்டுவந்திருக்கும் கல்வி மான்யத்தின் மீது ஒரு சில a.m. வார்த்தைகள் பேச விரும்புகிறேன். நமது நாடு விடுதலை அடைந்து சொற்ப வருஷங்கள்தான் ஆகியும், நமது ராஜ்யம் கல்வித் துறையில் முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்பது பாராட்டுதற்குரியது. மற்ற பாரம்பரிய முறையில் அரசு செலுத்திவரும் நாடுகளைவிட, நமது ராஜ்யத்தில், நிபுணர்கள், அறிஞர்கள் கூறிய விதம், கல்விக்காக அதிகம் செலவழிக்கப்படுகிறது. அதாவது, மொத்த வருமானத்தில் ஐந்தில் ஒரு பங்கு செலவழிக்கப்படுகிறது. ஆரம்பப் பள்ளிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும், மற்றும் கல்லூரிகளிலும் இன்றைக்கு அதிக விஸ்தரிப்பு ஏற்பட்டு, ஏராளமான பையன்களும், பெண்களும் படிக்க வசதி ஏற்பட்டிருப்பதைக் குறித்து பாராட்ட வேண்டியதுதான்.

ஆனால், ஆங்காங்கு இருக்கும் சில குறைபாடுகளை சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது. இத்துறையில் எவ்வளவு விஸ்தரிப்பு ஏற்பட்டபோதிலும் நாடு விடுதலை அடைவதற்கு முன்பு எவ்வளவு கண்காணிப்பு உத்தியோகஸ்தர்கள் இருந்தார்களோ, அந்த அளவிலேயே இன்றும் இருந்துவருகிறார்கள். எவ்வளவுக்கெவ்வளவு பள்ளிகள் விஸ்தரிக்கப்படுகின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு கண்காணிப்பு உத்தியோகஸ்தர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவில்லை.

என்னுடைய தொகுதியாகிய வால்பாறையை எடுத்துக்கொள்வோம். வால்பாறை பிரதேசத்தில் 40-50 பள்ளிகள் இருக்கின்றன. இவைகளை கண்காணிப்பதற்கு பொள்ளாச்சியிலிருந்து உத்தியோகஸ்தர்கள் வருகிறார்கள். அவர்களுக்கு இங்கு வந்து போக, ஜீப், கார், முதலிய போக்கு வரத்து சாதனங்கள் இல்லை. பஸ்களில்தான் வரவேண்டியிருக்கிறது.

[Sri K. Ponnian] [17th July 1957

ஒந்தாலும் 1–2 தினங்கள்தான் தங்க முடிகிறது. அந்த குறுகிய காலத்திற்குள் கண்காணிப்பை அவசரமாக முடித்துக்கொண்டு திரும்பி விடுகிறார்கள். இதனால், பள்ளிகள் சீர்கெட்டு இருக்கின்றன.

வால்பாறை பிரதேசமானது ஒரு தேயிலைத் தோட்ட பிரதேசம். அங்கே Plantations Labour Act-யின் கீழ் முதலாளிகள் பள்ளிகள் அமைத்து நடத்த வேண்டுமென்று விதிகள் இருக்கிறது. இப்படி பள்ளிகள் வைத்தா லும் Madras Educational Rules க்கு உட்பட்டு வேலை செய்ய சம்ம திப்பதில்லை. பிள்ளைகளுக்கு வேண்டிய விளையாட்டு மைதானங்கள், ஆசிரியர்களுக்கு வீடுகள், மற்றும் பள்ளிகளுக்கு வேண்டிய உபகரணங்கள் எல்லாம் Madras Educational Rules பிரகாரம் அமைத்துக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். வால்பாறை பஞ்சாயத்து போர்டு பள்ளிகளை நடத்த முன்வந்தபோதிலும் மானேஜ்மெண்டார் இதற்கு உடன்பட சம்மதிப்பதில்லை. பஞ்சாயத்து போர்டே தனியாக பள்ளிக் கூடம் நடத்த விரும்பினாலும் அந்த தோட்ட பிரதேசத்தில் இடம் கிடைப்பதில்லை. எங்கெங்கு பள்ளி நடத்த பஞ்சாயத்து போர்டார் முன்வருகிறார்களோ, அங்கெல்லாம் அவர்களுக்கு அதற்கு வேண்டிய நிலத்தை ஆர்ஜிதம் செய்து கொடுக்கவேண்டும்.

1952–ம் வருஷத்திலிருந்து மலைப் பிரதேசங்களில் வேலை செய்யும் உபாத்தியாயர்களுக்கு சர்க்காரே அடிப்படைச் சம்பளத்தில் 50 சத விகி தம் உயர்த்திக் கொடுத்தார்கள். லேபர் டிபார்ட்மெண்டு பள்ளி ஆசிரியர் களுக்கும் மற்ற பஞ்சாயத்து போர்டு பள்ளி ஆசிரியர்களுக்கும் அந்த உயர்ந்த சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது. மற்ற ஆசிரியர்களுக்கும் இந்த உயர்ந்த சம்பளம் கிடைக்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொ ள்ளுகிறேன்.

நேற்று பேசும்போது கனம் கல்வி அமைச்சரவர்கள், இந்த ராஜ் யத்தில் 30 லட்சம் பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்ப வேண்டியிருக்கிற தென்றும், அப்படிச் செய்தவற்கு இன்னும் ரூபாய் –9 அல்லது 10 கோடி தேவைப்படும் என்றும் சொன்னார்கள். அப்படி 30 லட்சம் பிள்ளை களுக்குப் படிப்புச் சொல்லிக்கொடுக்க வசதியேற்படும் அந்த நல்ல நாளை எதிர்பார்ப்போமாக என்று கூறி அந்த நாள் வரும் என்று கூறி— என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

10-37 a.m. SRIMATHI KOLANTHAI AMMAL : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் கொண்டுவந்திருக்கும் கல்வி மானியக் கோரிக்கையை நான் முழுமனதுடன் ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச விழைகின்றேன். சென்ற பல ஆண்டுகளாக நம்முடைய ஆசிரிய பெருமக்களுக்கும் மாணவர் களுக்கும் கல்வி அமைச்சரவர்களுடைய நிர்வாகத்தின் கீழ் செய்யப்பட்டிருக் கும் சில நன்மைகளுக்காக நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக் கிறேன். ஆசிரியை என்ற முறையிலும், மாணவர்களுக்காகவும், அந்த நன்மையானது மேலும் பல முறைகளில் நீடிக்க வேண்டும் என்ப தற்காகவும் ஒரு சில கருத்துக்களை எடுத்துக் கூற விழைகின்றேன். உயர் நிலைப் பள்ளிகளிலே வேலை செய்யும் தமிழாசிரியர்கள் ஓராண்டு Entrance Test-க்கு படித்துவிட்டு பிறகு நான்கு ஆண்டுகள் கல்லூரிகளில் படித்து விட்டு 'புலவர்' பட்டம் பெறுகிறார்கள். அம்மாதிரிப் பட்டம் பெற்றவர் களுக்கு குறைந்தது S.S.L.C. வகுப்புடன் Pandit Training என்று சொல்லக்கூடிய இன்னொரு ஆண்டு பயிற்சியும் இருந்தால்தான் ஒரு L.T. ஆசிரியருக்குக் கொடுக்கப்படும் சம்பளம் தரப்படும் என்று நிர் வாகத்தில் ஓர் விதியிருக்கிறது. தமிழ் மொழியே ஆட்சி மொழியாகக் கொண்ட இந்த அரசாங்கத்தில், தமிழாசிரியர்களுடைய நிலைமையானது ஆங்கிலேயரின் ஆட்சியில் இருந்ததுபோலவே இருக்கிறது என்கின்ற குறைபாட்டை கனம் அமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதோடு அதனை உடனடியாக நிவர்த்தி செய்யவேண்டுமென கேட்டுக் கொள்ளுகிறேன்.

தமிழாசிரியர்களுக்கு ரூபாய் 45 என்ற சம்பள Scale-ஐ மாற்றி ஒரு B.A. பட்டதாரிக்கு ஆரம்பத்திலேயே ரூபாய் 65 கொடுப்பதுபோல் அவர் களுக்கும் கொடுக்கவேண்டுமென்றும், உயர்நிலைப் பள்ளிகளில் வேலை



17th July 1957] [Srimathi Kolanthai Ammal]

செய்கின்ற தமிழாசிரியர்களை இந்த S.S.L.C. Assistant ஆசிரியர் களுடன் ஒப்பிட்டுப் பார்க்கக்கூடாது என்று மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கல்லூரிகளில் வேலை செய்கின்ற ஆசிரியர்களிலே B.O.L. பட்டம் பெற்றவர்களும், வித்வான் பட்டம் பெற்றவர்களும் வேலை செய் கிறார்கள். இரண்டு பேரும் வாரத்தில் 11 வகுப்புகள் எடுத்துக்கொள்ளு கிறார்கள். 1948–க்கு முன் B.O.L. பட்டம் பெற்றவர்கள் ஆங்கிலம், தமிழ் இரு துறைகளிலும் ஆழ்ந்த படிப்பு பெற்றவர்கள் என்றும் அவர்களுக்கு அதற்குத்தக்க Syllabus வகுக்கப்பட்டிருந்தது என்றும், கூறப்படுகிறது. அதற்குப் பிறகு பட்டம் பெற்றவர்களுக்கு, தமிழில் தக்க புலமை பெற்றும் ஓரளவு ஆங்கிலத்துறையில் அறிவு பெற்றும், அவர் களுக்கு குறைந்த பட்ச சம்பளமாக —வித்வான்களுக்குக் கொடுக்கப்படு வதை விட ஆரம்பத்திலேயே ரூபாய் 50 அதிகமாகக் கொடுக்கப்படுகின்றது என்று சொன்னால், தமிழிலேயே நல்ல நிர்வாகம் நடத்துகின்றோம் என்று சொல்வதிலே ஓர் குறைபாடு இருக்கின்றது என்பதை ஞாபகப் படுத்த விரும்புகிறேன்.

அடுத்தபடியாக கவர்ன்மெண்ட் கல்லூரிகளில், மற்ற பகுதிகளில் இல் லாத குறைபாடு தமிழ்ப் பகுதியில் இருக்கிறதென்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

மேலும் பல கல்லூரிகளில், பொருளாதாரம், வரலாறு, ஆங்கிலம், ஆகிய பாடங்களைச் சொல்லிக்கொடுக்கும் புரொபஸரின் கீழ் வேலை பார்க்கும் அஸிஸ்டெண்ட் புரபஸர்களுக்குக் கொடுக்கப்படும் அளவு சம்பளம், தமிழ் பாடம் சொல்லிக்கொடுக்கும் பி. ஒ. எல். படித்த அஸிஸ்டெண்ட் ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. மற்ற பாடங்கள் சொல்லிக் கொடுக்கும் அஸிஸ்டெண்ட் புரபஸர்களுக்குக் கொடுக்கப்படும் அளவு சம்பளம், தமிழ்ப் பாடம் சொல்லிக் கொடுக்கும் பி. ஒ. எல். பட்டதாரி களுக்கும் எம். ஏ. பட்டதாரிகளுக்கும் கொடுக்கப்படுவதில்லை. கவர்ன் மெண்ட் கல்லூரிகளிலும் இந்த நிலை இருக்கிறது என்பதை கனம் அமைச்சர் அவர்களுக்கு நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். பி. ஒ. எல். பட் டம் பெற்ற தமிழ் ஆசிரியர்களிடமிருந்தும் எம். ஏ. பட்டம் பெற்ற தமிழ் ஆசிரியர்களிடமிருந்தும் அதிகமான வேலையை வாங்கிக்கொண்டு அவர் களுக்குத் தகுந்த சம்பளம் கொடுக்காதது மிகவும் வருந்தத்தக்க விஷ யம். இந்தக் குறையை நிவர்த்திக்க வேண்டுமென்று அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கிறேன்.

கல்லூரிகளில் தமிழ் ஆசிரியர்களை நியமிப்பதில் பல குறைபாடுகள் இருக்கின்றன. பி. ஏ. யில் ஐந்தாவது பிரிவில் தமிழைப் படித்திருப்பவர் களை கல்லூரிகளில் லெக்சரர்களாக நியமிக்கிறார்கள். இந்த ஆசிரியர்களுக்கு தமிழில் நல்ல ஆர்வமும் தேர்ச்சியும் இல்லை. ஆகவே இப்படிப்பட்ட வர்களை தமிழ் லெக்சரர்களாக நியமிக்கக் கூடாது. அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக எல்லாக் கல்லூரி ஆசிரியர்களுக்கும் வீட்டு வசதி செய்து கொடுக்கவேண்டும். வெகு தூரத்திலிருந்து வரும் ஆசிரியர் களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்க வேண்டும். அவர்களுக்கு எல்லாக் கல்லூரிகளும் வீட்டு வசதி அளிக்கவேண்டும். என்ற ஒரு ஏற்பாட்டை கனம் அமைச்சர் அவர்கள் சட்டபூர்வமானதாக ஆக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இப்போது ஏராளமான பேர்கள் பூர்வாங்கக் கல்லூரி வகுப் பில் படிக்கிறார்கள். இது சம்பந்தமாக என் அனுபவத்தில் நான் நேரிடையாகக் கண்ட சில குறைபாடுகளைச் சொல்ல விரும்புகிறேன். உதா ரணமாக, தமிழ் வகுப்பு முடிந்த பிறகு ஆங்கில வகுப்பில், பரீட்சை இருந்தால், 60 சத விகித மாணவர்கள் தான் தமிழ் வகுப்புக்கு வரு வார்கள். 40 சத விகித மாணவர்கள் ஆங்கிலப் பரீட்சைக்குப் படிப்பதற் காகப் போய்விடுவார்கள். இப்படிப் படித்து, ஆங்கில பாடத்தில் அதிக மார்க்குகள் வாங்குகிறார்களா என்றால், அதுவும் இல்லை ; 25 சத விகித

[Srimathi Kolanthai Ammal] [17th July 1957

மார்க்குகள்தான் ஆங்கிலத்தில் வாங்குகிறார்கள். தமிழ் பாடம் படிப்பதற்கு ஒரு மாணவனுக்கு ஒரு மணி நேரம் வேண்டியிருக்கிறது என்றால், அவனுக்கு ஆங்கில பாடம் படிப்பதற்கு ஆறு மணி நேரம் வேண்டியிருக்கிறது. காரணம், அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கும் பாடத் திட்டம் அதிகமாக இருக்கிறது. இண்டர்மீடியட்டுக்கு வைத்திருந்த பாடத் திட்டத்தை பூர்வாங்கக் கல்லூரி வகுப்பிற்கு வைத்திருக்கிறார்கள். இந்த வகுப்பிற்கு வைக்கப்பட்டிருக்கும் பாடத்திட்டத்தைக் குறைக்க வேண்டும். இதற்காக கல்லூரியில் அனுபவம் பெற்றவர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத்து, அதன் மூலம் பாடத்திட்டத்தை எவ்வளவு குறைக்கலாம் என்று ஆராய்ந்து, இந்த வகுப்பிற்கான இப்போதைய பாடத் திட்டத்தைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இன்று ஆரம்பப் பாடசாலைகளில் படித்துவிட்டு உயர்நிலைப் பள்ளிகளுக்கு வரும் மாணவர்களின் கல்வித் தரம் மிகவும் மட்டமாக இருக்கிறது. அவர்கள் உயர்நிலைப் பள்ளிகளில் நடத்தப்படும் பரீட்சைகளில் தேறுவதில்லை. ஆரம்பப் பாடசாலைகளில் 5-வது வகுப்பு வரை படித்த மாணவனுக்கு நன்றாக எழுதவும் படிக்கவும் தெரிந்திருக்கும் அளவிற்காவது ஆரம்பப் பாடசாலைகளில் கல்வியின் தரம் இருக்க வேண்டும். ஆகவே ஆரம்பப் பாடசாலைகளில் கல்வியின் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்பதையும் அரசாங்கத்தாருக்கு ஞாபகப்படுத்துகின்றேன்.

இப்போது உயர்நிலைப் பள்ளி வகுப்புக்களில் ஹிந்தி மூன்றாவது பாடமாகவும் கட்டாயமல்லாத பாடமாகவும் வைக்கப்பட்டிருக்கிறது. கட்டாயமில்லாத இந்த ஹிந்தி பாடத்தை நீக்கிவிட்டு, அரசியலில் ஈடுபட விரும்புபவர்களும் ஹிந்தியைப் படிக்கவேண்டும் என்று ஆர்வம் உள்ளவர்களும் தாங்களாக அதைக் கற்றுக்கொள்ளுதவற்கு ஏற்பாடு செய்யலாம். பள்ளிக்கூடப் பாடங்களுள் ஹிந்தியையும் வைத்தால் ஆங்கிலம், தமிழ், ஹிந்தி ஆகிய மூன்று மொழிகளைப் படிப்பதற்கு மாணவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இதனால் பல மாணவர்களின் உடல் நிலை கெடுகிறது. ஆகவே உயர்நிலை வகுப்புக்களில் வைக்கப்பட்டுள்ள ஹிந்திப் பாடத்தை நீக்கிவிடவேண்டுமென்று அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கிறேன்.

முதியோர் கல்வித் திட்டம் வெற்றி பெறாமல் இருக்கிறது. பணமும் படிப்பும் இல்லாத பல விதவைகள் நாட்டில் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு எல்லாம் முதியோர் கல்வி அளித்து அவர்களுக்குத் தற்காப்புக் கொடுத்தால் நல்லது என்று சொல்லிக் கொள்கிறேன்.

பள்ளிகளில் ஏழை மாணவர்களுக்கு மத்தியான உணவு கொடுக்கப்படுவதை நேரில் பார்வையிடுவதற்காக கனம் அமைச்சரவர்கள் அதிக சிரமம் எடுத்துக்கொண்டு சுற்றுப் பிரயாணம் செய்வதாகத் தெரிகிறது. மத்தியான உணவு கொடுப்பது சம்பந்தமாகவும் யோசனை சொல்ல நான் விழைகின்றேன். மத்தியான உணவு கொடுப்பதற்கு அரசாங்கமும் உதவுகிறது. பழந் தமிழ் நாட்டில் நன்மக்களுக்கு விருதுகளும் சிறந்த பட்டங்களும் கொடுக்கப்பட்டு வந்ததுபோல், மத்தியான உணவிற்கு நிதி உதவி அளிக்கும் செல்வந்தர்களுக்கு விருதுகளும் பட்டங்களும் கொடுத்தால் பல செல்வந்தர்கள் அந்த உதவியை அளிக்க முன்வருவார்கள். கிராமத்தில் வாழ்கிற நான் பல செல்வந்தர்கள் ஏழைகளுக்கு உதவுவதை அனுபவ ரீதியாகப் பார்த்திருப்பதால் இந்த யோசனையைச் சொல்கிறேன். இதை கனம் அமைச்சரவர்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு விஷயத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படித்துச் தேர்ச்சிபெற்ற புலவர்களுக்கும் சென்னைப் பல்கலைக் கழகத்தில் படித்துத் தேர்ச்சிபெற்ற புலவர்களுக்கும் சட்ட ரீதியாக ஒரே மாதிரியான மதிப்புக் கொடுக்கப்பட்டிருந்தாலும், நடைமுறையில் பல கல்லூரிகளில் அப்படி ஒரே மதிப்புக் கொடுக்கப்படுவதில்லை; சலுகைகளில் இவர்களிடையே பாரபட்சம் காட்டப்படுகிறது. இதை நான் ஆதார பூர்வமாகக் காட்ட முடியும். ஆகவே சென்னைப் பல்கலைக் கழகப் புலவர்களுக்கும் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் புலவர்களுக்கும் சமத்துவம் அளிக்கும் வகையில் சட்டத்தைத் திருத்தி அமைக்க வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.



17th July 1957] [Srimathi Kolanthai Ammal]

கல்வி மானியக் கோரிக்கையை முழு மனதுடன் ஆதரிப்பதுடன், கல்வித் துறையில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் எவ்வத் துறைகளில் சலுகைகள் அளிக்க முடியுமோ அவ்வத் துறைகளில் சலுகைகள் அளிக்க முயற்சிக்க வேண்டுமென்று அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **SRI T. S. RAMASWAMY PILLAI** : கனம் சபாநாயகர் அவர்களே, 10–47 a.m.
இந்த வெட்டு பிரேரேபணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். முதன் முதலில், ஏழை மாணவர்களுக்கு மத்தியான உணவு அளிப்பதற்காக அரசாங்கத்தாரை நான் பாராட்டுகிறேன். மேலும், மூன்றாவது பாரம் வரையில் ஏழை மாணவர்களுக்கு இலவசக் கல்விச் சலுகை அளிப்பதற்கு முன்வந்திருப்பது குறித்தும் அரசாங்கத்தாரைப் பாராட்டுகிறேன்.

இதே நேரத்தில் கன்னியாகுமரி ஜில்லாவைப் பொறுத்த அளவில், அங்குள்ள எங்களுடைய நிலைமையைப்பற்றிக் கூற விரும்புகிறேன். பத்து வருஷங்களுக்கு முன்பே 8–வது வகுப்பு வரையில் எல்லா மாணவர்களுக்கும் அவர்களுடைய பெற்றோர்களின் எந்த வருமானத்தையும் கவனிக்காமல் கட்டாய இலவசக் கல்வி அளிக்கும் முறையும், 8–வது வகுப்பு வரையில் ஏழை மாணவர்களுக்கு இலவச உணவு அளிக்கும் முறையும் இருந்து வந்த ராஜ்யத்திலிருந்து இந்த ராஜ்யத்திற்கு நாங்கள் வந்திருக்கிறோம் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் குறிப்பிட ஆசைபடுகிறேன். அங்கே கட்டாயக் கல்வி ஆரம்பித்து 16 வருஷங்கள் ஆகியிருக்கின்றன என்று நினைக்கிறேன். இப்போது கன்னியாகுமரி ஜில்லாவில் 14 வயது முதல் 21 வயது வரை உள்ள யாரும் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாக இருக்க மாட்டார்கள் என்று சொல்லலாம். அங்கே பள்ளி வயது வந்த பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்பாவிட்டால் அதற்காகப் பெற்றோர்கள் தண்டிக்கப்படுகிறார்கள்.

கனம் நிதி அமைச்சர் அவர்கள் இதற்கு முன்பு பேசும்போது, இங்கே இருப்பதை விட கேரளாவில் வரிச் சுமை அதிகம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், உண்மையில் "இங்கே வருவதற்கு முன்பு நமக்கு வரிச் சுமை குறைவாக இருந்தது. சென்னைக்கு வந்த பிறகு—தாய் நாட்டிற்கு வந்த பிறகு—வரிச் சுமை அதிகமாக இருக்கிறது. இங்கே 'வெக்கில்ஸ்' வரி, ரெஜிஸ்ட்ரேஷன் வரி, உணவு தானியங்கள் மீது வரி, நிலங்களுக்கு வரி என்று ஏராளமாக வரிகள் இருக்கின்றன. ஆகவே இங்கே வந்ததும் நமது வரிச் சுமை அதிகமாகி இருக்கிறது," என்று தான் கன்னியாகுமரி மக்கள் நினைக்கிறார்கள். அப்படி இருந்தும், கேரளாவில் இலவசக் கல்வி அளிக்கப்படும் வகுப்புக்களின் எண்ணிக்கையை வருஷாவருஷம் ஒவ்வொரு வகுப்பாக உயர்த்தி 8–வது வகுப்பு வரையில் இலவசக் கல்வி அளிக்கும் நிலையை அடைந்திருக்கிறார்கள். இப்போது அங்கே 9–வது வரை இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. அதே மாதிரி, இந்த ராஜ்யத்திலும் சீக்கிரம் 8–வது வகுப்பு வரை இலவசக் கல்வி அளிப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்யவேண்டும் என்ற என்னுடைய வேண்டுகோளை இந்த சபையின்முன் சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

ஏழை பணக்காரர் என்ற வித்தியாசமில்லாமல் எல்லோருக்கும் 14 வயது வரையில் கட்டாய இலவசக் கல்வி அளிக்கும் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்பது அரசியல் சட்டத்தில் 'டிரெக்டிவ் பிரின்ஸிபல்ஸ் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானம் ஆகும்.

அரசியல் சட்டத்தில் 45–வது விதி கூறுவது பின்வருமாறு :—

**"The State shall endeavour to provide, within a period of 10 years of the commencement of this Constitution, for free and compulsory education for all children until they complete the age of fourteen years."**

14 வயது வரை இலவசக் கல்வி கொடுக்க வேண்டும். இன்னும் 10 வருஷங்களில் அதாவது 1960 ஆம் வருஷத்திற்குள் இந்த ராஜ்ய முழுவதிலும் இலவசக் கல்வி கொடுத்தாக வேண்டும். நான் ‘ கட்டாயமாக ’ என்ற வார்த்தையை வற்புறுத்திச் சொல்ல விரும்புகின்றேன். ஆனால் அமைச்சர் ‘ முயற்சி ’ என்ற வார்த்தையை வற்புறுத்திச் சொல்லுகிறார்கள். உண்மையாக முயற்சித்தால் நிச்சயமாக முடியும் என்று நம்புகிறேன். திருவாங்கூர் ராஜ்யத்தில், கேரளத்தில் இது முடிகிறது என்றால் இங்கு ஏன் அது முடியக் கூடாது. இன்று அங்கே 9–வது பாரம் வரை இந்தச் சலுகையை கொடுத்திருக்கிறார்கள். அடுத்த வருஷம் எஸ்.எஸ்.எல்.சி அல்லது ‘ ஸ்கூல் பைனல் ’ வரை நிச்சயமாக கொடுப்பார்கள். எந்த ராஜ்யத்தையும் விட கேரளத்தில் தான் சீக்கிரமாக இவைகள் செய்யப்பட்டு வருகின்றன. கேரளத்தில் இதைச் செய்யும்போது இங்கே ஏன் செய்யக்கூடாது. கல்வி இலாகாவுக்கு பட்ஜெட்டில் எவ்வளவு தொகை இங்கு ஒதுக்கப்படுகிறதோ, ஏகதேசமாக அதே விகிதத்தில்தான் கேரளத்திலும் ஒதுக்கப்படுகிறது. அங்கு இதைச் செய்யும்போது இங்கே ஏன் செய்ய முடியவில்லை என்று நான் அறிய ஆசைப்படுகிறேன். மேலும் அங்கு வரிகள் குறைவு. இந்த வரிகளைப் பற்றிச் சொல்லிக் கொண்டு போனால் அதிக நேரமாகும். அங்கு உத்தியோகஸ்தர்களுக்கு சம்பள விகிதமும் அதிகம். அப்படி இருந்தும் அங்கே இதைச் செய்ய முடிகிறது. ஆகவே இதைப் பற்றி சர்க்கார் தரப்பிலுள்ள நண்பர்கள் ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். கன்னியாகுமரி ஜில்லாவில் 516 பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. இந்தப் பள்ளிக்கூடங்கள் இங்கு சேர்ந்த பின்னும், கேரள ராஜ்யத்தில் இருந்த பொழுது அவை எப்படி நடத்தப்பட்டனவோ அதே மாதிரி நடத்தப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். உபாத்தியாயர்கள் உற்சாகத்தோடு வேலை செய்தால்தான் கல்வியின் தரம் உயர்ந்து இருக்கும்.

கொல்லங்கோடு, செங்கோட்டை, ஆறல்வாய்மொழி, பூதப்பாண்டி போன்ற இடங்களில் தலைமை ஆசிரியர் இடம் காலியாக இருக்கிறது. கேரளாவில் இருக்கும்பொழுது அவர்களுக்கு 300 முதல் 400 ரூபாய் சம்பளம் கொடுக்கப்பட்டது. அதே மாதிரி இப்போது சம்பளம் கொடுக்கப்பட வில்லை. பஞ்சப்படி உயர்வும், இங்கிரிமெண்டும் ஆசிரியர்களுக்கு கொடுக்கப்பட வில்லை. இவைகளினால் மனக்குறை ஏற்பட்டிருக்கிறது என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

“ ஹையர் டெக்னலாஜிகல் இன்ஸ்டிடியூட் ” ஒன்றை தென் பிராந்தியத்தில் ஏற்படுத்தப்போவதைப் பற்றி நான் மிகவும் மகிழ்ச்சியுறுகிறேன். “ ஸ்கூல் பைனல், ” வரை பள்ளிகளில் பாடங்களை தமிழ் மொழியில் படித்து விட்டு கல்லூரியில் ஆங்கிலத்தில் பாடங்களைப் படிப்பதில் மாணவர்கள் மிகவும் சங்கடப்படுகிறார்கள். அல்லற் படுகிறார்கள். தமிழில் இலக்கியம் வளர்ந்தாலும், கலைச் சொற்கள் இன்னும் பழக்கத்தில் வரவில்லை. அந்தக் கலைச் சொற்கள் நம்முடைய பழக்கத்தில் வந்தால் அவை நம்முடைய ரத்தத்தில் ஊறிவிடும். அந்த முறையில் வரவேண்டும் என்றால் நாடு செழிக்க வேண்டும். நம்முடைய வாழ்க்கை செழித்தாலன்றி அத்தனை கலைச் சொற்களும் “டெக்னிகல் வோர்ட்ஸ்” அம்மாதிரி வர முடியாது என்பது தான் என்னுடைய தாழ்மையான கருத்து.

ஆங்கில மொழியிலிருந்து தாய் மொழியை போதனு மொழியாக மாற்றுவதைக் குறித்து நான் பாராட்டுகிறேன். இதில் பல கஷ்டங்கள் இருக்கலாம். ஆனால் அதே நேரத்தில் உயர்தரக் கல்வி, “ஹையர் எஜுகேஷன்” “ பி எச்.டி. ” போன்ற கல்வித் துறைகளில் ஆங்கிலம் உபயோகிப்பது அத்தியாவசியமாக இருக்கிறது. இதை மாற்றும்போது ஆங்கிலத்திலும், தமிழிலும், இந்த இரண்டிலும், இந்தச் சொற்களை உபயோகித்தால் உயர் நிலை ஆராய்ச்சி படிப்புக்கு வசதியாக இருக்கும் என்று சொல்லிக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

10-55 a.m. **Sri V. K. KOTHANDARAMAN :** கனம் சபா நாயகர் அவர்களே, கல்வி மான்யத்தின்பேரில் நமது கல்வி அமைச்சர் அவர்கள் மிகவும் தெளிவாகவும் புள்ளி விவரங்களுடனும் எடுத்துச் சொன்னார்கள். அதற்கு





உதாரணமாக ஒரு கோபுரத்தையும் எடுத்துக்காட்டினார்கள். ஆரம்பக் கல்வியிலிருந்து காலேஜ் கல்வி வரை இருக்கும் நிலையை ஒரு கோபுரத்திற்கு ஒப்பிட்டார்கள். இது வரையிலும் அடி கோபுரத்திலும் மத்திய கோபுரத்திலும் கவனம் செலுத்தி வந்தோம். உச்சிக் கோபுரத்தை அண்ணாந்துப் பார்த்தால் கழுத்து வலிக்குமோ என்ற நிலைமை மாறி, உச்சிக் கோபுரத்தை எட்டிப் பார்த்து விடுவதற்கு தைரியமாக முன் வந்திருக்கும் கல்வி அமைச்சரை பாராட்ட வேண்டியது அவசியமாகும். இன்றைக்கு காலேஜில் ஒரு மாணவன் சேர வேண்டும் என்றால் பல விதமான கஷ்டங்கள் இருக்கின்றன. எஸ்.எஸ்.எல்.ஸி. தேறிய மாணவனிடத்தில் “ **Eligible for College Course** ” என்று ஒரு சர்டிபிகேட் இருக்கும். ஆனால் அவன் காலேஜுக்குப் போகக் கூடிய காலத்தில் அங்கே ‘ இன்டர்வியூ ’ இருக்கும். மார்க்குகள் யார் அதிகமாக வாங்கியிருக்கிறார்களோ அவர்களுக்குத்தான் இடம் கிடைக்கும். சில சமயம் 50 மார்க்குகள் வாங்கியிருக்கும் மாணவன் கூட இன்றைக்கு இருக்கும் நிலையில் காலேஜில் சேர்ந்து படிக்க முடியாது. அதற்கு காலேஜ் அமைப்பு முன்பும் இப்பொழுதும் எப்படி இருக்கிறதென்பதைப் பார்த்தால் தெரியும். வெள்ளையர் காலத்தில் அவர்கள் ஆதிக்கத்தை வைத்துக் கொண்டிருப்பதற்காக அமைக்கப்பட்டது. இன்னும் பிரைவேட் காலேஜ்களில் மெஜாரிட்டி கிறிஸ்துவ காலேஜ்களாக இருக்கின்றன. இந்தக் காலேஜ்களில் கிறிஸ்தவர்களுக்கு சம்பளம் அதிகம். ஹிந்துக்களுக்கு சம்பளம் குறைவு. கிறிஸ்தவர்கள் நடத்தக்கூடிய காலேஜ்களில், கிறிஸ்தவரல்லாதவர்களுக்கு இடம் பெற முடிவதில்லை. எந்த அளவுக்கு இவையெல்லாம் இருந்துக்கொண்டிருக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டும். ஆகவே, இது போன்ற ஒரு நிலைமையைப் பார்க்கும்போது காலேஜ்களில் இடம் கிடைக்க வேண்டும் என்றால், வசதி படைத்தவர்களுக்குத்தான் இடம் கிடைக்கிறதே ஒழிய மற்றபடி சாதாரண மக்களுக்கு இடம் கிடைக்கக் கூடிய ஒரு நிலைமை கிடையாது.

இந்த ஆண்டில் சர்வகலாசாலைப் படிப்பில் பி.ஏ. பரிட்சையில் தேறியவர்களின் லிஸ்டைப் பார்த்தால் அண்ணாமலை சர்வ கலாசாலையில் 46 சத விகிதம் பாஸ் செய்ததாக தெரிகிறது. ஆனால் சென்னை சர்வ கலாசாலையில் இம்மாதிரி லிஸ்டு வெளியிடுவது இல்லை. இருந்தபோதிலும், எனக்குத் தெரிந்த வரையில் 43 சத விகிதம் தான் பாஸ் செய்ததாக தெரிகிறது. இதற்கு காரணம் என்ன என்பதை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இன்றைக்கு சர்வ கலாசாலையில் செனட் என்கிற ஒரு சபையும், ஸிண்டிகேட் என்கிற ஒரு சபையும், இருக்கிறது. இந்த செனட் சபை ஸிண்டிகேட் சபை அங்கத்தினர்களை தேர்ந்தெடுக்க வேண்டும். இந்த ஸிண்டிகேட் சபை “எக்ஸாமினர்களை” தேர்ந்தெடுக்கிறார்கள். இந்த “ எக்ஸாமினர்களுக்கு” 600 விடைத் தாள்களைத் கொடுத்து 21 நாட்களில் திருத்திக் கொடுக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். இந்த குறுகிய காலமான 21 நாட்களில் அவர்களால் இந்த விடைத் தாள்களைத் திருத்த முடிவது இல்லை. அந்தக் காரணத்தினால் இவைகளை சரிவர திருத்தக் கூடிய நிலைமையில்லை. இவர்களுக்கு 100 விடைத்தாள்களைக் கொடுத்தால் சரியானபடி திருத்தக் கூடிய நிலைமை இருக்க முடியும். அதிலும் நமது சென்னை சர்வகலாசாலை பரீட்சைகளில் “ மெஜாரிட்டி ” பேர்கள் பெயில் ஆகிறாகள் என்பது நமக்கு தெரிந்த விஷயம். எவ்வளவோ கஷ்டப்பட்டு காலேஜில் சேர்ந்து படிப்பவர்கள் ஏன் பெயில் ஆகிறார்கள் என்ற காரணத்தைப் பார்க்கும்போது இப்பொழுது விடைத் தாள்களைத் திருத்தக்கூடிய முறையின் ஒரு அமைப்புதான் என்று தோன்றுகிறது. அதே போன்று விடைத்தாள்களை சரி வர திருத்தப்பட வில்லை, “ ரி எக்ஸாமின் ” செய்து பார்க்க வேண்டும் என்று கேட்டால் அதை அனுமதிக்க முடியாத ஒரு நிலைமை தற்பொழுது இருக்கிறது.

இன்றைக்கு சாதாரணமாக உபாத்தியாயர்களைத் தவிர மற்ற உத்தியோகங்களில் இருக்கக்கூடியவர்கள் இது போன்று காலேஜில் சேர்ந்து பரீக்ஷயில் ஈடு படுவதை அனுமதிப்பதில்லை என்றும் தெரியவருகிறது. இதற்கெல்லாம் காரணம் இந்த “ சிண்டிகேட் ” சபையில் எடுக்கக்கூடிய முடிவுதான். அதில் சர்க்கார் தலையிட முடியாது, சர்க்கார் அந்த

[Sri V. K. Kothandaraman] [17th July 1957

முடிவுகளைப் பற்றி கேட்க முடியாது என்ற ஒரு நிலைமை இருப்பதாகத் தெரியவருகிறது. நாம் கேள்விப்படுகிறோம், ஆந்திராவிலே இம்மாதிரி உத்தியோகத்தில் இருக்கக்கூடியவர்கள் இது போன்று பரீக்ஷையிலே ஈடுபட்டு எழுதலாம் என்று. அதே போன்று அவர்கள் நல்ல முறையிலே பரீக்ஷ தாள்களை திருத்துவதற்கு வாய்ப்புகளெல்லாம் அங்கே இருக்கின்றன என்பதையும் நாம் பார்க்கிறோம். ஆந்திராவிலே இது போன்று முறை இருக்கும்பொழுது, இங்கே ஏன் இருக்கக்கூடாது? இப்பொழுது கையாளப்படும் முறைகளை நல்ல முறையிலே திருத்திக்கொள்வதற்கு முயற்சி செய்யவேண்டும். ஆயிரக்கணக்கான பெருவாரியான மாணவர்கள் "பைல்" ஆகிறார்கள். அதனால் அவர்கள் மனச்சோர்வு அடைந்து, இன்றைய தினம் அவர்கள் பணம் செலவழித்தாலும் படிக்கக்கூடிய கஷ்டம் மிக மிக அதிகம். உடனே அரசாங்கம் இது போன்ற விஷயங்களில் பரிபூரணமாக கவனம் செலுத்த வேண்டும். சர்க்கார் இதற்காக ரூபாய் ஒரு கோடி 34 லட்சம் பணம் கொடுத்தும்கூட, இதிலே சர்க்கார் தலையிட்டு ஆலோசனை சொல்லுவதற்கோ, அல்லது கையாளப்படும் முறைகளை திருத்துவதற்கோ, அந்த அளவுக்கு நிலைமை இல்லை. அப்படியென்றால் சர்க்கார் பணம் எதற்காக கொடுக்க வேண்டுமென்று எனக்குப் புரியவில்லை. இது போன்ற நிலைமை ஆந்திராவிலே இல்லை. ஆந்திராவிலே உதாரணமாக எடுத்துக் காட்டியிருக்கிறேன். ஏனென்றால் கேரளாவை உதாரணமாக காட்டினால், கல்வி அமைச்சர் பயப்படுகிறார், சீரி விழுகிறார். அதனால் தான் ஆந்திராவை உதாரணமாகக் காட்ட முன் வந்திருக்கிறேன்.

"Tutorial College-ல் படிக்கக்கூடியவர்களுக்கு இந்த "செனட்டிலே" இடம் கிடையாது. அதே போன்று மற்றும் தனியாக படிக்கக்கூடியவர்களைப்பற்றி சொல்ல வேண்டியது அவசியமே கிடையாது. இந்த "செனட்டில்" யார் அங்கத்தினர்களாக இருக்கிறார்களோ, அவர்களுடைய காலேஜில் படிக்கக்கூடிய மாணவர்கள் அதிகப்படியாக படித்ததாக "லிஸ்டில்" வரவேண்டும், நல்ல பெயர் வரவேண்டுமென்கிற நிலைமையிலே இருந்து வருகிறது என்பதையும் நாம் கேள்விப்படுகிறோம். இது விஷயத்திலே அரசாங்கம் பரிபூரணமாக கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். சமீபத்திலே 100 ஆண்டு விழா வரப்போகிறது. இந்த சந்தர்ப்பத்தை ஒட்டியாவது "பைல்" ஆகியிருக்கக்கூடிய ஆயிரம் மாணவர்களுக்கு சலுகை கொடுக்கக்கூடிய தன்மையிலே ஒரு இரண்டாவது ஜாபிதா **(second pass list)** பிரசுரிக்கப்பட வேண்டும். கட்சியை பலப்படுத்துவதற்காக வேண்டி இம்மாதிரி சொல்லுவதாக நினைக்கக்கூடாது. அமைச்சர் அவர்கள் உண்மையிலேயே மாணவர்கள் எவ்வளவு கஷ்டத்துக்கு உள்ளாகிறார்கள் என்பதை உணர்ந்து இதுபோன்று செய்ய வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அது மாத்திர மல்ல. இப்பொழுது இருக்கும் பரீக்ஷ முறையையும் மாற்றி அமைக்க வேண்டும். இதை நான் மட்டும் சொல்லவில்லை. மதுரையில் சர்வகலாசாலை மான்யம் கமிஷன் வந்தபொழுது ஸ்ரீ. வி. டி. தேஷ்முக் போன்றவர்கள் சொல்லியிருக்கிறார்கள். சென்ற வாரம் எல்லா பத்திரிகைகளிலும் வந்திருந்தது. அதையும் பார்த்தோம். நம் சர்க்கார் இப்பொழுது புஸ்தகங்களை கையில் கொடுத்து பரீக்ஷ எழுதும் முறையில் சில "டெஸ்டுகள்" நடத்துகிறார்கள். "ரெவின்யூ அக்கவுண்டு டெஸ்டுகள்" போன்றவை அம்மாதிரி முறையில்தான் நடத்தப்படுகின்றன. பல பெரியோர்களும் இம்மாதிரி சொல்லியிருக்கிறார்கள். இதே போன்று காலேஜ் மாணவர்களிடம் எல்லா புஸ்தகங்களையும் கொடுத்து பரீக்ஷ எழுதச் சொன்னால் நலமாக இருக்கும். காலேஜ் மாணவர்கள் எல்லா புஸ்தகங்களையும் படித்து விட்டு பரீக்ஷ எழுத வேண்டுமென்று சொன்னால், திறமையாக படிப்பவர்கள்கூட, "பைல்" ஆகி விடுகிறார்கள். என்ன கேள்வி வருமோ என்று பயந்து "**confusion**" ஆகி திறமையாகப் படித்திருந்தாலும்கூட அந்த நேரத்தில் பல மாணவர்கள் "பைல்" ஆகிவிடும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே ஸ்ரீ வி. டி. தேஷ்முக் அவர்கள் சொன்ன மாதிரி இந்த பரீக்ஷ முறையை மாற்றி அமைக்க வேண்டும். 3, 4 வருஷங்களுக்கு முன்பே கனம் லக்ஷ்மணசுவாமி



17th July 1957] [Sri V. K. Kothandaraman]

முதலியார் கூட இம்மாதிரி சொல்லியிருந்தாலும் கூட, "செனட்" சபையில் பெருவாரியான முடிவை மீறக்கூடிய நிலைமை இல்லாததால் அவர்களுடைய எண்ணத்தை அங்கே அமுலில் கொண்டு வர முடியாத ஒரு நிலைமை இருக்கிறது. ஆரம்பக் கல்வியில் எந்த அளவுக்கு கவனம் செலுத்துகிறோமோ அந்த அளவுக்கு காலேஜ் படிப்பிலும் கவனம் செலுத்த வேண்டும் என்று நமது கல்வி அமைச்சர் அவர்கள் இப்பொழுது நமது முன்னிலையில் சொல்லியாதாகத் தெரிகிறது. அது போன்று பரிபூரணமாக கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய் வருமானம் இருப்பவர்களின் குழந்தைகளுக்கு இப்பொழுது இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. இதை குறைந்தபட்சம் 200 ரூபாயாக உயர்த்த வேண்டும். சர்க்கார் சிப்பந்திகளும் மத்தியதர வர்க்கத்தை சேர்ந்தவர்களும் 200 ரூபாயில் கூட சென்னை நகரத்திலும் சரி, மற்ற நகரங்களிலும் சரி, வாழ்க்கையை நடத்த முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு 3, 4 பிள்ளைகள் இருக்கின்றன. அவர்கள் எப்படி எல்லா பிள்ளைகளையும் படிக்க வைக்க முடியும்? அவர்கள் படிக்க வைக்க முடியாத நிலைமையில்தான் இருக்கிறார்கள். ஆகவே குறைந்தபட்சமாக மாதம் 200 ரூபாய் வரை வருமானம் பெறுபவர்களின் பிள்ளைகளுக்கும் கூட இலவசக் கல்வி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதோடுகூட ஓராசிரியர் பள்ளிகளில் வேலை பார்க்கும் ஆசிரியர்களுக்கு குறைந்தபட்சம் 6 மாதம் பயிற்சி கொடுத்து அவர்களுடைய குடும்பத்துக்கு வேண்டிய பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இத்துடன் என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

*** Sri C. N. ANNADURAI:** சட்ட மன்ற தலைவர் அவர்களே, கல்வி மான்யத்திற்காக வெட்டுப் பிரேரணையில் நான் கலந்து கொள்வதில் நிதி அமைச்சர் அவர்கள், கல்வி அமைச்சர் அவர்கள், ஏற்கனவே எடுத்துக் காட்டியதுபோல், இது பெயருக்குத் தான் வெட்டே தவிர, அதிகமான அளவில் கல்வித் தலைப்புக்கு பணம் ஒதுக்கப்பட வேண்டும் என்பதை வெளிப்படுத்துதவற்கு இந்த முறையிலே நடக்க எதிர்க்கட்சியிலுள்ள நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். இதிலே நாங்கள் காட்டக் கூடிய குறைபாடுகளை எடுத்து விளக்குவதற்கு முன்னால் நான் ஒன்றை தெளிவாக தங்கள் மூலமாக இந்தச் சபைக்கு தெரியப்படுத்திக் கொள்ளுகிறேன். 11-06 a.m. வேறு எந்த அமைச்சர் அவையை விட இந்த அமைச்சர் அவையிடத்தில் நாங்களும் நாடும் மிக அதிகமாக எதிர்பார்க்கிறோம் என்பதை அமைச்சர் அவையும் அமைச்சர்அவை நடத்துவதற்குரிய கட்சியும் பெருமைக்குரியதாக எடுத்துக்கொள்ள வேண்டும், எதற்கு எடுத்தாலும், "நம்மால் வெறுத்து ஒதுக்கப்பட்ட, நல்லாட்சிக்கு உகந்தது அல்ல என்று ஒரு காலத்திலே கருதப்பட்ட, வெள்ளையர் ஆட்சி காலத்தை விட நாம் இப்பொழுது எவ்வளவோ முன்னேறியிருக்கிறோம்" என்ற வாதத்தை இந்தச் சபையிலே அடிக்கடி எடுத்துச் சொல்லி, வெள்ளையர் ஆட்சி காலத்திலே நடை பெற்றது அத்தனையும் சரி என்று இந்தப் பகுதியில் உள்ளவர்கள் சொல்லியதாக நீண்ட நாட்களாக குற்றம் சாட்டுவது உடனடியாக பிரச்னையை நழுவி விடுவதற்கு பயன்படுமே தவிர, பிரச்னையை உண்மையாக அறிந்து கொள்ளுவதற்கு நிச்சயமாக பயன்படாது. ஆகையினால் தான் நாட்டை ஆளுகிற இன்றைய அமைச்சர் அவை உண்மையிலேயே நாட்டு மக்களுக்கு மிக அதிகமாகச் செய்ய கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பது மாத்திர மல்ல, அதற்கேற்ற திறமை அவர்களிடத்திலே இருக்கிறது என்று நாட்டு மக்கள் நிச்சயமாக நம்புகிறோம் என்ற காரணத்தினால்தான், செய்யப்படுகின்ற பல காரியங்களில் குறைபாடுகளை எடுத்துக் காட்டி, இன்னும் கொஞ்சம் நன்றாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம். உண்மையிலேயே இன்றைய தினம் இருக்கிற அரசியல் சூழ்நிலையில் இந்த அமைச்சர் அவையை விட, வேறு ஒரு அமைச்சர் அவை இதே வ சியாலே நிறுவப்பட்டாலும் கூட, அந்த அவையினால் அதிகமான அளவுக்கு நன்மை கிடைக்கும் என்று நாங்கள் யாரும் எண்ணி ஏமாந்து கொள்ளவில்லை. ஆனை

[Sri C. N. Annadurai] [17th July 1957

யினுல் நான் சொல்லுகின்ற சிலபல குறைபாடுகள் மேலும் அதிகமான
அளவுக்கு நன்மை கிடைக்க வேண்டும் என்பதற்காகவே தவிர, அதிக
மாக குற்றங் குறைகளை எடுத்துக் காட்டுவதற்காக அல்ல.

நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் இந்த மான்யக் கோரிக்கையை
இந்தச் சபை முன்னிலையில் வைத்த நேரத்திலே 1933-34-லிருந்து 1957-
58 வரையில் எப்படி படிப்படியாக கல்விக்கு ஒதுக்கப்பட்ட மான்யம் வளர்
ந்து கொண்டே வந்திருக்கிறது என்பதை மிக ஆர்வத்தோடு, மற்ற
வர்களும் ஆர்வம் பெற வேண்டுமென்ற கருத்தோடு, மிக அழகாக
எடுத்துச் சொன்னுர்கள். அதே நேரத்திலே அதைக் கேட்டுக்கொண்டிருந்த
வர்கள் எப்படி கல்வி மான்யத்திற்கு தொகை நாளுக்கு நாள் வளர்ந்து
கொண்டே போகிறதோ, அதுபோல 1933-34-ல் கொடுக்கப்பட்ட வரித்
தொகையை விட 1957-58-ல் மக்கள் கொடுக்கும் வரித் தொகையும்
அதிகமான அளவுக்கு வளர்ந்து கொண்டே போவதை நினைவுக்குக்
கொண்டு வருகிருர்கள். அதுமாத்திரமல்ல. அன்றைய தினம் ஆரம்பப்
பள்ளியிலே படிக்கின்ற ஒரு பிள்ளைக்கு செலவிடப்படும் பணம் முதல்
முதலிலே ரூபாய் 9-ல் துவங்கி, இன்றையதினம் " together with the
contingent cost of pension, the cost per pupil per annum
must now be somewhere near thirty rupees, " அதாவது ஆரம்பப்
பள்ளியில் படிக்கும் ஒரு மாணவனுக்கு ரூபாய் 30 செலவழிக்கிறோம் என்று
பெருமைக்குரியதாக அவர்கள் சொன்னுர்கள். இந்த ஆற்றல் பெருமைக்
குரியதுதான் என்றாலும், 1933-34-ல் 9 ரூபாயாக இருந்தது, இன்றைய
தினம் அந்த ரூபாயின் மதிப்பு 4 மடங்கு அதிகமாகி யிருக்கிறது,
பொருளாதார தத்துவப்படி 4 மடங்கு அதிகமாயிருக்கிறது. ஆகையினால்
இப்பொழுது ரூபாய் 30 செலவிடப் படுவது அதிகமான அளவுக்கு
பெருமை படக்கூடியதல்ல. கராச்சி தீர்மானத்தில் கூட அமைச்சர்களுக்கு
ரூபாய் 500 சம்பளம் தரப்பட வேண்டும் என்று இருப்பினும் இப்போது
வளர்ந்துள்ள பொருளாதார சூழ்நிலை மாற்றத்துக்கு ஏற்ப அதிகச்
சம்பளம் அளிக்கப்படுவது நியாயம் தான் என்று இங்குள்ளவர்கள்
மட்டுமல்ல, பாரத நாட்டு பிரதமருங்கூட வாதாடியிருக்கிருர்கள்.
ஆகையினால் 1933-34-ம் ஆண்டில் 9 ரூபாய் செலவழித்தார்கள், இப்போது
30 ரூபாய் செலவழிக்கிருர்கள் என்று சொல்லுவது உண்மையிலேயே அது
பாராட்டுவதற்குரிய விஷயமல்ல, ஏதோ முயற்சிக்கின்றோம் என்ற வகையில்
அதை எடுத்துக்கொள்ளலாமே தவிர அதிகமான அளவுக்கு பெருமைப்
பட்டு கொள்வதற்கு முடியாது. 1933-34-ல் இருந்த நிலைமை, 1957-58-ல்
இருக்கின்ற நிலைமை வேறு. நாட்டு மக்கள் ஆண்டுக்கு ஆண்டு வரிகள்
அதிகப்படியாகவே கொடுத்துக்கொண்டிருக்கின்றனர். எவ்வளவு இருந்
தாலும் கல்விக்காக இந்த வரிகளைப் போடுகிறோம் என்றால் அந்த வகையில்
நாங்கள் உண்மையில் மகிழ்ச்சியுறுகின்றோம், பாராட்டுகின்றோம். இன்னும்
இந்த அமைச்சரவையில் நாம் எதிர்ப்பார்ப்பதுபோல வெள்ளைக்கார அமைச்சர
வையில் நாம் எதிர்ப்பார்க்கமுடியாது, எதிர்ப்பார்க்கவும் கூடாது. வெள்
ளைக்கார ஆட்சி காலத்தில் நாம் எல்லாம் படித்தால் வெள்ளைக்கார ஆட்சி
க்கு நஷ்டம், ஆனால் இப்பொழுது நாம் எல்லாம் படித்தால் இந்த ஆட்சிக்கு
லாபம். ஆகவே அதிகமான அளவில் கல்வித்துறைக்காக ஒதுக்குவதைப்
பற்றி உண்மையிலேயே நான் பாராட்டுகிறேன், அதோடு இன்னும் இப்போ
திருக்கின்ற நிலைமைக்கு அதிகப்படியாக ஒதுக்கவேண்டுமென்று வலியு
றுத்தி சொல்லிக்கொள்கிறேன். கல்வித்துறையைப்பற்றி குறிப்பிட்டு அமை
ச்சர் அவர்கள் கூறுகின்ற காலத்தில் கட்டாய இலவச கல்விக்காக, 30
லட்சம் பிள்ளைகளுக்கு 9 கோடி ரூபாய் செலவாகும் என்று சொன்னுர்கள்.
இன்னும் அதிகம் தொகை ஒதுக்கப்படவேண்டுமானால் வரி போட்டால்
தான் கிடைக்கும் என்றும், வரி போடுவதாயிருந்தால் " வரி போட்டிருக்கி
றீர்களே " என்று நாங்கள் சொல்வோம் என்றும் உள்ள கருத்து அவரு
டைய பேச்சில் தொக்கி நிற்கிறது. என்னுடைய கட்சியின் சார்பில்
சொல்லுகிறேன், நாங்கள் யாரும் இம்மாதிரியான காரியங்களுக்காக வரி
கள் போடுவதை எதிர்க்கவில்லை. அதோடு போடுகின்ற வரிகள் யாரை
தாக்குகின்றன, வரி போடுவதால் யாருக்கு பலன் ஏற்படுகிறது என்பதை
கணக்கிட்டு பார்க்கவேண்டுமென்று தான் நாங்கள் கூறுகிறோம். இங்கு



17th July 1957] [Sri C. N. Annadurai]

ஒரு நாள் காங்கிரஸ் சட்டசபை கொறடா அவர்கள் சற்றுக் கோபத்தோடு
தான் பேசினுர்கள் என்றே நினைக்கிறேன். நாங்கள் ஏதோ கொடி பிடித்
துக்கொண்டு வரிகளை எதிர்க்கிறோம் என்று. நாங்கள் இந்த சென்னை
சர்க்காரால் விதிக்கப்பட்டிருக்கிற வரிகளை எதிர்த்ததாக எனக்கு நினைவு
இல்லை. வேண்டுமானால் மத்திய சர்க்காரால் விதிக்கப்பட்ட வரிகளை எதிர்த்
திருக்கலாம். ஆனால் எந்த வரிகளை போட்டாலும் எதிர்க்காமல் இருப்பது
உண்மையில் ஜனநாயகத்திற்கு புறம்பானது என்பதை வலியுறுத்திக்
கொள்ள ஆசைப்படுகிறேன். அதோடு கல்விக்கு அதிகமாக ஒதுக்கப்பட்டி
ருக்கிற முறையை நான் பாராட்டுகின்றேன். அதே நேரத்தில் ஒன்று
குறிப்பிட விரும்புகிறேன். ஆரம்ப கல்விக்கு அதிகமாய் செலவு
செய்யப்படுகின்ற பணம், அதன் மூலம் பெறுகின்ற கல்வி பிற்காலத்தில்
அவர்களுக்கும் நாட்டுமக்களுக்கும் பயன்படுகிறதா என்பதை பார்த்து
அதற்கு அதிமாக பணம் செலவு செய்யப்படவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். நாம் செலவு செய்வதில் மாத்திரமல்ல அதன் மூலம்
கிடைக்கிற பலன் என்ன என்பதையும் நாம் பார்க்கவேண்டும். உண்ட சோறு
ஜீரணமானால்தான் வலுவு பெற முடியும். ஆகவே ஏதோ 6 கோடி
ரூபாய் செலவு செய்கிறோம் என்று மாத்திரம் பெருமைப்பட்டு கொள்ள
லாமே தவிர இதனால் எந்தவிதமான பலன் ஏற்படுகிறது, இதிலிருந்து
எத்தனை சதவிகிதம் மேல்படிப்புக்கு பயன்படுகின்றது என்பதையும் நாம்
பார்க்கவேண்டியது அவசியமாகிறது. இன்றைக்கு அதிகமாக ஏற்பட்டிருக்
கிற பொருளாதார கஷ்டத்தினாலும் வாழ்க்கைத்தரத்தினாலும் மேல்படிப்
புக்கு அதிக சதவிகிதம் பேர்கள் போக முடியாமல் இருக்கின்ற நிலைமை
யில் இந்த ஆரம்ப கல்வி எந்த அளவு சமுதாயத்திற்கும் நாட்டுக்கும் பயன்
படும் என்பதை சொல்லவேண்டுமென்றால் நாம் அறிந்தவரையில், அடக்க
மாகவே சொல்லிக்கொள்கிறேன், இதுபற்றிய புள்ளிவிவர இலாகா எதிர்
கட்சியில் இல்லாத காரணத்தால், சரியாகக் கூறமுடியாவிட்டாலும் ஓரளவு
கூற முடியும், தங்களது பொருளாதார நிலையின் காரணமாக மேல்படிப்
புக்கு போக முடியாமல் ஏதோ கொஞ்சம் படித்ததையும் மறந்து விட்டு,
ஏதோ இரண்டு மூன்று ஆண்டுகள் படித்து விட்டு கார்டு, கவர் வந்தால்
எழுத்துக்கூட்டி படிக்கிற அளவுக்குத்தான் அதிகம் பேர் இருக்கின்றனர்
என்பதை எனக்கு சொல்லமுடியும். அடுத்ததாக சொல்வேன், கல்வித்
துறையில் இன்று நாளுக்குநாள் பற்பல பரீட்சைகள் அனாவசியமாக என்று
கூட சொல்வேன், பல்வேறு பரீட்சைகள் வைக்கப்பட்டிருக்கிறது. இவ்வித
மான பரீட்சைகள் நாம் வரவேற்கத்தகுந்த நிலையில் இல்லை. மனிதனு
டைய வாழ் நாள் பூராவுக்கும் அவர்கள் ஒரே அடிப்படையில் இருக்க
வேண்டும் என்று விரும்பினாலும் அவ்விதம் இருக்க முடியாது என்பதை
நாம் கண்டு வருகிறோம். இப்போதுள்ள முறையில் மாற்றம் காணவேண்
டும் என்றுள்ள கருத்து சர்க்காருக்கு இருப்பதாக காணவில்லை. நம்மு
டைய நிதி அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி குறிப்பிடுகிற நேரத்தில் கண்டி
ப்பாக சொன்னுர்கள். இந்த சர்க்காருடைய கொள்கை ஆதாரக் கல்வி
தான் என்று சொன்னுர்கள். அதைப்பற்றி அவர்கள் கண்டிப்பாக சொல்
வதற்கு காரணம், ஆதார கல்வியைப்பற்றி நீங்கள் ஆயிரம் குற்றங்கள்
சொல்லலாம். அதற்காக எல்லாம் நாங்கள் இந்த கொள்கையை மாற்ற
தயாராயில்லை, என்று தான் அவர்கள் கூறினதை நமக்கு எடுத்துக்கொள்ள
முடியும். நாங்கள் அமைச்சர் அவர்களிடம் சொல்லி அதை மாற்றாவிட்டா
லும்கூட பிளானிங் கமிஷன் மெம்பர் டாக்டர் கோஷ் அவர்கள் இரண்
டொரு நாட்களுக்கு முன்னால் எடுத்துச்சொல்லியிருக்கிருர்கள், நாங்கள்
சாமான்யமானவர்கள் என்பதற்காக நீங்கள் நாங்கள் சொல்வதை கேட்கா
விட்டாலும் பிளானிங் கமிஷன் மெம்பர் சொல்லியிருப்பதை நீங்கள்
கவனிப்பீர்கள் என்ற காரணத்தால் அதை நான் நினைவூட்ட விரும்புகி
றேன்.

**" Perhaps the time has come when we may forget the artificial difference between the basic and non-basic type of schools. What we want are, better type of schools and better type of teachers. This is because in some States, there is a feeling that basic schools are creating a caste of pupils who are meant to live for ever in rural areas, "**

இதைவிட தெளிவாக உண்மை நிலைமை யாரும் எடுத்துக்காட்ட முடியாது. மேலும் இந்த ஆதார கல்வியைப்பற்றி பொறுப்புள்ள தலைவர்களில் ஒருவர் சொல்லியிருப்பது என் நினைவுக்கு வருகிறது. இந்த ஆதாரக் கல்வியின் திட்டவட்டமான கொள்கை என்ன என்பது அவை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இன்னும் உணர்ந்து கொள்ளவில்லை என்று எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். ஆகையினால் ஆதார கல்வியை நாம் கையாள்வதற்கு முன்னால் இன்று இந்த சர்க்கார் மத்திய சர்க்காருடைய கொள்கையின் கீழ் இருந்தாலும்கூட ஆதார கல்வி சம்பந்தமாக இந்த சர்க்காருடைய கொள்கை என்ன, கல்வித்துறையில் அடிப்படையான கொள்கை என்ன என்பதை வகுத்தால் நல்லது என்று கருதுகிறேன். கல்வித்துறையில் மாற்றம் காணவேண்டும் என்று சின்னதுரை அவர்கள் சோஷலிஸபாணியில் கல்வி இருக்கவேண்டும் என்று எடுத்துச்சொன்னதை கட்சிக்குரியதாக எடுத்துக்கொண்டாலும் கவலையில்லை. உண்மையில் சமுதாயத்தின் நன்மைக்காக அப்படி இருக்கவேண்டும் என்றும் அதற்குரிய விதத்தில் கல்வி திட்டம் அமையவேண்டும் என்பதையும் நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். உண்மையில் ஆதார கல்வி கொள்கையை எடுத்துப்பார்த்தால் கிராம சுயராஜ்யம் தான் புகுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் இதை குறிப்பிடுகிற நேரத்தில் இன்றைக்கு புதிய நவீன முறைகளுக்கும், விஞ்ஞான முறைகளுக்கும் செலவு செய்யப்படுகிற கோடிக்கணக்கான பணங்கள் எல்லாம் விரயம் என்று தான் கருத வேண்டியிருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் மட்டும் கன ரகத்தொழில்களுக்காகவும், நவீன விஞ்ஞான தொழில்களுக்காகவும் ஏராளமான பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பாரத நாட்டு பிரதமர் கூட அணுசக்தி குறித்து, அதை எவ்விதத்தில் பயன்படுத்தலாம் என்பதில் அக்கரை காட்டிக்கொண்டு இருக்கிறார். தனது வெளிநாட்டு பிரயாணத்தின் போது எல்லாம் நவீன விஞ்ஞான முறைகளையும் எவ்விதம் கொண்டுவர வேண்டும் என்பதைப்பற்றி எல்லாம் அடிக்கடி அறிக்கை மூலமாகவும், சொற்பொழிவு மூலமாகவும் தன்னுடைய கருத்துக்களை சொல்லிக்கொண்டிருக்கிறார். ஒருபுறத்தில் நவீன விஞ்ஞான முறைகள்கொண்டு வரவேண்டும் என்று வற்புறுத்தப்படுகிற அதே நேரத்தில் மற்றொரு புறம் கிராம சுயராஜ்யத்திற்கு மட்டும் வழிவகுக்கக்கூடிய ஆதார கல்வியை கொண்டு வருகிறோம் என்று சொன்னால் நம்மை இவர்கள் எங்கே அழைத்து செல்கிறார்கள் என்பதை கண்டு நானும் திகைக்கின்றேன், நாடும் திகைக்கிறது. எவ்விதமிருந்தாலும் இதை கொண்டு வந்தவர்களுக்கு இதைப் பற்றி தெளிவான காரணம் இருக்கவேண்டும். அதை நிதி அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக ஓராசிரியர் பள்ளிகளைப்பற்றி நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் சொன்ன கருத்துக்களைப்பற்றி நான் கொண்டிருக்கின்ற எண்ணம் தவறாக இருக்குமானால், அதிலுள்ள உண்மைகளை எடுத்துச்சொல்லி என்னை திருத்தவேண்டிய கடமை அவர்களுக்குஇருக்கிறது. மேற்படி பயிற்சி பெறாத ஆசிரியர்களைக் குறித்து முன்பு சட்டசபையில் சொன்னதிலிருந்து முதலில் அவர்களுக்கு 4 வார பயிற்சி கொடுத்து அவர்கள் ஆசிரியர் தொழிலில் 3 வருஷம் அனுபவம் பெற்றவுடன் குறுகிய கால பயிற்சி அளித்து நிர்ணயிக்கப்படுவர் என்று கல்வி அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் மேற்படி கொள்கையை அறிவித்தார் என்று ஓராசிரியர் கழகம் ஒன்று எனக்கு எழுதியிருக்கிறது. சுப்ரமணியம் அவர்கள் இந்தக் கொள்கை விளக்கத்தை அளித்தபோது அதிர்ஷ்டவசமாகவோ அல்லது துரதிர்ஷ்டவசமாகவோ நான் இங்கு இல்லாத காரணத்தால் இதற்கு ஒரு விளக்கத்தை அவர்கள் அளிக்க வேண்டுமென்று தான் இதை குறிப்பிட்டேன். அடுத்தபடியாக, " ப்ரீவொக்கேஷனல் டீச்சர்ஸ் "க்கு முதலில் 39 ரூபாய் சம்பளமும் படியும் என்று அறிவிக்கப்பட்டு கடைசியாக அவர்களுக்கு

**" The pay of part-time pre-vocational teachers in Board Higher Elementary Schools is fixed at rupees ten only with effect from 12th June 1957 "**

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. தொழில் கல்வி வளரவேண்டும் என்பதை பற்றி யாருக்கும் கருத்து வேற்றுமை இல்லாதிருக்கிற இந்த நாளில் தொழில் கல்வியை சாதாரணமாக பள்ளிக்கூடங்களில் கற்றுத் தருகிற





ஆசிரியர்களுக்கு 10 ரூபாய் மாதச் சம்பளம் என்று கூறப்பட்டிருப்பது உண்மையிலே சர்க்காரின் கண்ணியத்திற்கும் நாட்டின் நிலைமைக்கும், கல்விக்கு நாம் அளிக்கும் அக்கரைக்கும் உகந்ததல்ல. அடுத்தபடியாக, கல்லூரிகளிலும் தமிழை போதனா மொழியாக ஆக்க வேண்டுமென்று கனம் கல்வி அமைச்சரவர்கள் சொன்னதை நான் வரவேற்கிறேன். உண்மையிலே, இந்தத் தலைமுறையில் ஆங்கிலம் படித்தவர்கள்தான் அறிவாளிகள் என்ற மூடப்பழக்கத்தையும் ஆங்கிலத்திலேதான் அறிவைப் பெற்றுக் கொள்ளமுடியுமென்றிருக்கிற வைதீகத்தையும் போக்கிட, தமிழ் மொழி மூலம் எல்லாத் துறைகளிலும் பயிற்சி பெற முடியும், எல்லாத் துறைகளிலும் நன்கு நிர்வாகம் நடத்தமுடியுமென்று எடுத்துக்காட்டும் பொறுப்பு நம் சர்க்காருக்கு ஏற்பட்டு இருக்கிறது. அந்தக்காரியத்தை சாதிக்கும் வாய்ப்பு நமது கனம் கல்வி அமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது. அந்தத் துறையில் கனம் கல்வி அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்கிற எல்லா முயற்சிகளுக்கும் நானும் என் கட்சியும் அவருக்கு துணையாக நிற்போம் என்று இங்கு எடுத்துக்கூற விரும்புகிறேன். அதோடு, கல்வித் துறையின் அடிப்படைக் கொள்கையை சரியான முறையில் வகுத்துக் கொண்டு அதற்கேற்றபடி அதற்கு நிதி அதிகம் தேவை என்று இருக்குமானால் அதற்காக கனம் நிதி மந்திரியவர்கள் கூடுதல் வரி போட நிச்சயமாக தயங்கவேண்டாம். ஆனால் போடுகிற வரி யார் பேரில் இருக்க வேண்டும் என்பதும் அது எப்படி எப்படி வசூலிக்கப்பட வேண்டும் என்பதும் அதன் பலன் யார் யாருக்குக் கிடைக்க வேண்டும் என்பவைகளைத்தான் நாங்கள் முக்கியமாக கருதுகிறோமே தவிர அதிகமாக செலவு செய்ய வேண்டாம் என்றோ அல்லது வரி போடாமலேயே ஆட்சி நடத்தலாம் என்றோ நாங்கள் சொல்லவில்லை. அதற்கு, இந்த சர்க்காரிடம் ஒரு அலாவுதீன் தீபம் இல்லை என்பதை நாங்கள் உணர்கிறோம். ஆகவே பெற வேண்டிய இடங்களில் பெறுங்கள் தர வேண்டிய இடங்களில் தாருங்கள் என்றுதான் நாங்கள் சொல்கிறோம், என்று சொல்லிக்கொண்டு இந்தக் கோரிக்கையின் மேலுள்ள வெட்டுப்பிரேரணையில் நான் கலந்து கொண்டதின் முக்கியமான நோக்கம் இதிலுள்ள குறைபாடுகளை நீக்கவேண்டும் என்பதே. ஆனால் இதுவரையில் எதிர்கட்சியிலிருந்து வந்த எந்த யோசனையையும், எந்த பணிவான வேண்டுகோளையும் கவனித்து சர்க்கார் தரப்பிலிருந்து அவைகளை நீக்கவோ அல்லது திருத்திக்கொள்ளவோ செய்யவில்லை என்றிருந்தாலும் நாங்கள் பொறுமை இழந்துவிடப் போவதில்லை. ஒவ்வொரு நேரத்திலும் சொல்கிறோம், சொல்லிக்கொண்டுதான் இருப்போம், நாங்கள் சொல்கிற சிலபல நல்ல கருத்துக்களை சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கிறது என்று எங்களுக்குத் தெரிந்தால் எங்களுக்கு இத்துறையில் கூடுதல் ஊக்கம் பிறக்கும் என்று தெரிவித்துக் கொண்டு இந்த வெட்டுபிரேரணையை ஆதரிக்கிறேன்.

**SRI V. K. RAMASWAMY MUDALIYAR :** கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது மன்றத்தின் முன்பாக இருக்கும் வெட்டுபிரேரணையை ரித்து சில வார்த்தைகள் சொல்ல நான் விரும்புகிறேன். எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர்கள் சிலர் ஆதரித்தும் சிலர் எதிர்த்தும் பேசியிருக்கிறார்கள். இந்தப் பிரச்னையைப்பற்றி நான் முக்கியமாக இரண்டொரு வார்த்தைகள் மட்டும் சொல்லிவிட்டு எனது பேச்சை முடித்துக்கொள்ள விரும்புகிறேன். கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு ஸ்டேட்மெண்ட் கொடுத்திருக்கிறார்கள். 11-26 a.m.

இச்சமயத்தில் சில அங்கத்தினர்கள் இடத்தைவிட்டு எழுந்து சென்றார்கள்.

**MR. SPEAKER :** தயவு செய்து ஒரு அங்கத்தினர் பேசும்போது மற்ற அங்கத்தினர்கள் நடுவில் எழுந்து போகக்கூடாது. அவர் பேசி முடிந்த பிறகு போகட்டும். ஏனென்றால் சப்தம் அதிகமாகி விடுகிறது, சப்தம் ஏற்படுமானால் அவர் பேசுவது எனக்கும் உங்களுக்கும் கேட்காத நிலைமை ஏற்படும்.

**SRI V. K. RAMASWAMY MUDALIYAR :** இந்த கல்வி இலாகாவில் வருஷா வாரி தொகை அதிகரித்துக் கொண்டு வந்து கடைசியாக சுமார் [illegible] கோடி 68 லட்சம் ரூபாய் வரையில் செலவாகி இருக்கிறது. அவர் சொன்ன படியே நம்முடைய ராஜ்ய வருமானத்தில் ஐந்தில் ஒரு பங்கு கிட்டத்தட்ட கல்விக்காக கொடுக்கப்பட்டு செலவழிக்கப்பட்டு வருகிறது. வருஷா வாரி

[Sri V. K. Ramaswami Mudaliyar] [17th July 1957]

அதிகம் பிள்ளைகளும் பள்ளிகளில் சேர்ந்து படித்து வருகிறார்கள். வருஷாவாரி கிட்டத்தட்ட ஒரு லட்சம் குழந்தைகளுக்குக் குறையாமல் பள்ளிக்கூடங்களில் சேர்ந்து வருகிறார்கள். அதைப்பற்றி நான் மகிழ்ச்சி அடைகிறேன். பொதுவாக ஆரம்பப் பாடசாலைகளில், அதாவது ஸ்தலஸ்தாபனம் மூலம் நடக்கிற ஆரம்பப் பள்ளிக்கூடங்களும், மானேஜ்மென்டு மூலம் நடத்தப்படுகிற பள்ளிக்கூடங்களும் சரியாக சரிவர நடக்கிறதா என்பதைப் பற்றி யோசிக்கவேண்டும். அவைகளில் கண்காணிப்பு சரியாக இல்லை என்பது என்னுடைய முக்கியமான எண்ணம். இப்பொழுது டெப்யூடி இன்ஸ்பெக்டர்களை போட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு டெப்யூட்டி இன்ஸ்பெக்டருக்கும் சுமார் 80, 90 பள்ளிக்கூடங்கள் அவர்களுக்குக் கீழ் இருக்கின்றன. அநேகமாக வருஷத்திற்கு ஒருமுறைதான் பள்ளிக்கூடங்களை பார்த்து வருகிறார்கள். அதோடு ரோடு வசதி, போக்குவரத்து வசதி இல்லாத இடங்களுக்கு அவர்களால் போகமுடியவில்லை என்பதை இங்கு நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். இந்த டெப்டி இன்ஸ்பெக்டர்களுக்கு வேறு வேலைகளும் இருக்கின்றன. ஈ. எஸ். எல். சி., ட்ரையினிங் ஸ்கூல் சார்ஜ் இவைகளையும் கவனித்து வரவேண்டியிருக்கிறது. ஆகவே இந்தப் பள்ளிக்கூடங்கள் சரிவர கவனிக்கப்படுவதில்லை. நான் ஜில்லா போர்டு தலைவராக இருந்த காலத்தில் ஒவ்வொரு தாலுக்காவிற்கு ஒவ்வொரு சூப்பர்வைசர் போட்டால் கண்காணிப்பு நன்றாக இருக்கும் என்று கேட்டுக்கொண்டிருந்தோம். அதற்காக இதுவரையில் சர்க்கார் உத்தரவு போடவில்லை. இதில் ட்யூப்பிளிக்கேஷன் ஆப் வொர்க் இருக்கும் என்று சொன்னார்கள். இதனால் ஒரு ஜில்லா போர்டுக்கு 10,000 ரூபாய்க்கு மேல் செலவாகாது. ஒவ்வொரு பள்ளிக்கூடங்களுக்கும் போய் அங்குள்ள கருவிகள் சரியாக இருக்கிறதா, பள்ளிக்கூடம் நடக்கிறதா என்று பார்த்து வந்தால் போதும். அவர்கள் இன்ஸ்பெக்ஷன் செய்ய வேண்டியதில்லை. அப்படிச் செய்தால் அநேக பள்ளிக்கூடங்கள் நல்ல முறையில் நடக்கும் என்பதில் சந்தேகமில்லை. அதை உடனடியாக அமைச்சரவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் இன்ஸ்பெக்ஷன் செய்யவேண்டியதில்லை. இம்மாதிரியான காரியங்களை அவர்கள் செய்தால்போதும்.

தவிர ஜில்லா போர்டுப் பள்ளிக்கூட ஆசிரியர்களுக்குச் சம்பளம் சரிவரப் போய்ச் சேருவது கிடையாது. அதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றில் முக்கியமான காரணம் சட்ட சபையில் பணம் ஒதுக்கப்பட வேண்டும், வோடட், நான் வோடட் என்று இனங்கள் இருக்கின்றன. ஆதலால் சட்ட சபையில் பணம் ஒதுக்கிய பிற்பாடுதான் பணம் கொடுக்கப்படவேண்டும் என்பது. அப்படியெல்லாம் இல்லாமல், துண்டு விழும் பட்ஜெட்டுள்ள ஜில்லா போர்டுகளுக்கு "எக்ஸ்க்ரேஷியா கிராண்டு" என்று ஒதுக்கி வைத்து உடனுக்குடன் சம்பளம் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் தான் ஸ்தல ஸ்தாபனத்தில் கீழ் வேலை செய்யும் ஆரம்பப் பாடசாலை ஆசியர்களுக்கு உடனுக்குடன் மாதாமாதம் சம்பளம் போய்ச் சேரும்; அதனால் ஒரு பெரிய கூக்குரல் ஏற்படாமல் இருக்குமென்று சொல்ல விரும்புகிறேன்.

தவிர, இந்த ஆசியர்களுக்கு மணியாடர் மூலமாகத் தொகை அனுப்பப்படவேண்டுமென்று சர்க்கார் உத்தரவு போட்டிருப்பதாகத் தெரிகிறது. அது மிகவும் வருந்தத்தக்கது. அநேக இடங்களில் சப்-போஸ்டாபீஸ் இல்லாத காரணத்தாலும், போக்கு வரத்து சாதனங்கள் இல்லாத காரணத்தாலும், வேண்டிய தொகையில்லாத காரணத்தாலும் தொலை தூரத்தில் இருக்கிற பள்ளிக்கூடங்களிலுள்ள ஆசிரியர்களுக்கு ஒரு வாரம் அல்லது பத்து நாட்களுக்கு மேல் சம்பளம் போகாமல் இருக்கிறது. 5 மைல்களுக்கு உட்பட்ட பிரதேசத்திற்கு ஒரு செண்டர் அமைத்து அதன் மூலமாகச் சம்பளத்தைப் பட்டுவாடா செய்யும் வழக்கம் இப்பொழுதும் சில இடங்களில் இருந்து வருகிறது. தாலூகா கஜானாவில் பணம் மாதாமாதம் வாங்கிக் கொடுக்கும் படியான ஏற்பாட்டைச் செய்ய சர்க்கார் உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும், கவர்ன்மெண்டு ஸ்கேல் ஆப் பே-க்கும் ஜில்லா போர்டு கொடுக்கும் சம்பளத்துக்கும் வித்தியாசம் இருக்கிறதென்று சொன்னோம். "அந்த வித்தியாசம் இருக்க வேண்டியதில்லை. சர்க்கார் கொடுக்கும்



17th July 1957] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

ஊதியப்படியே நீங்களும் கொடுக்கலாம்" என்று சர்க்கார் உத்தரவு போட்டிருக்கிறார்கள். அப்படியிருந்தும், ஜில்லா போர்டிடம் நிதி இல்லாத காரணத்தால், சில ஜில்லா போர்டுகளில் சர்க்கார் சம்பள விகிதம் அமுலுக்குக் கொண்டு வரப்படவில்லையென்று நான் நினைக்கிறேன். அதைப் பற்றியும் கனம் அமைச்சர் அவர்கள் கொஞ்சம் யோசனை செய்ய வேண்டும்.

ஈ.எஸ்.எல்.ஸி. பரீக்ஷை இருக்க வேண்டுமா என்பதைப்பற்றி எனக்கு வெகுநாளாக யோசனை. தபால் இலாகாவிற்கும் இன்னும் மற்ற கீழ்த்தர உத்தியோகஸ்தர் வேலைகளுக்கும் போவதற்கு அது ஆதாரமாக இருக்கலாம். இருந்தபோதிலும், ஆசிரியர்களாக வருவதற்கு அவர்களுக்குத் தகுதி இருக்கிறதா என்று எனக்குச் சந்தேகம். ஆசிரியர்களைப் பொறுத்த மட்டில், எஸ்.எஸ்.எல்.ஸி. படித்த ஆசிரியர்களையே எல்லாப் பள்ளிக்கூடங்களுக்கும் போட வேண்டுமென்பது என்னுடைய கருத்து. இதைப்பற்றி நான் அநேக இடங்களில் சொல்லியிருக்கிறேன். முக்கியமாக, ஈ.எஸ்.எல்.ஸி. படித்த ஆசிரியர்கள் ரிடயர் ஆன பிற்பாடு எஸ்.எஸ்.எல்.ஸி. படித்தவர்களையே உபாத்தியாயர்களாகப் போடவேண்மென்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆரம்பப் பாடசாலைகள் சம்பந்தப்பட்ட வரையில், ஒரு உபாத்தியாயர் இருக்கும் பள்ளிக்கூடங்கள் சரிவர நடக்கவில்லை என்று சர்க்கார் அநேக தடவைகள் ரிப்போர்ட்டுகள் அனுப்பியிருக்கிறார்கள். ஜில்லா போர்டைப் பொறுத்தமட்டில், ஒரு உபாத்தியாயர் இருக்கும் ஆரம்பப் பாடசாலைகள் அநேக இடங்களில் சரிவர நடக்கவில்லையென்று என்னுடைய அனுபவத்திலிருந்து சொல்வேன். இப்பொழுது கனம் அமைச்சர் அவர்கள் அதைப் பற்றி என்ன நினைக்கிறார்களோ தெரியவில்லை. கூடிய வரையில், குறைந்தது இரண்டு உபாத்தியாயர்களுக்குக் குறையாமல் இப்பள்ளிக்கூடங்கள் நிறுவப்படவேண்டும். அதைப் பற்றியும் கனம் அமைச்சர் அவர்கள் நன்றாக யோசிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்பொழுது யுனிவர்ஸிடி கமிஷன் சில சிபார்சுகள் செய்திருக்கிறார்கள். அவர்களுடைய சிபாரிசுப் பிரகாரம் அண்ணாமலை யுனிவர்ஸிடியில் ஆசிரியர்களுக்கு ஊதியங்களைக் கொடுத்து விட்டார்கள். நம்முடைய சென்னை சர்வகலாசாலையைச் சேர்ந்த கல்லூரிகளில் அவ்வாறு கொடுக்கப்படவில்லையென்று நான் கேள்விப்பட்டேன். அதைப் பற்றியும் சர்க்கார் சீக்கிரம் கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மத்தியான உணவு அளிப்பதைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல நான் ஆசைப்படுகிறேன். அநேக இடங்களில் மத்தியான உணவு சரிவர விநியோகம் செய்யப்படுவதில்லை. அதைப்பற்றி அநேகம் புகார்கள் இருக்கின்றன. முக்கியமாக, கிராமத்தில் சில பேர் சேர்ந்து கொண்டு காண்டிராக்ட் எடுத்துக் கொண்டு லாபம் சம்பாதிப்பதற்காக இதை நடத்துகிறார்களே தவிர, கண்காணிப்பு சரியாக இருப்பதில்லை. பிள்ளைகளுக்கு நல்ல சாப்பாடும் போடுவதில்லை. இதைப்பற்றியும் சர்க்கார் ஆலோசனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் சில விஷயங்கள் சொல்ல வேண்டியிருந்தபோதிலும், எனக்குக் கொடுக்கப்பட்ட காலம் குறைவாக இருப்பதால், அவைகளை நான் இப்போது சொல்ல விரும்பவில்லை. கல்வி இலாகாவைப்பற்றி விவாதிப்பதற்காக இன்னும் ஒரு நாள் ஒதுக்கி வைப்பதாகக் கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த சமயத்தில் இன்னும் சொல்ல வேண்டியதைச் சொல்லிக்கொள்ளுகிறேன். இத்துடன் என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்ளுகிறேன். வெட்டுப் பிரேரணையை நானும் ஆதரிக்கிறேன் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் சபாநாயகர் அவர்களே இந்த 11-
விவாதத்திலே கலந்துகொண்ட எல்லா அங்கத்தினர்களுக்கும் என்னுடைய a.
மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். எல்லோரும் கல்வித் துறை இன்னும் மேலும் மேலும் சிறப்புற்று நல்ல சேவை செய்ய வேண்டுமென்கின்ற எண்ணத்துடனே, அதிலே இன்னும் என்னென்ன

மாற்றங்கள் ஏற்படவேண்டும், என்னென்ன குறைகள் இருக்கின்றன, அவைகள் எப்படி தவிர்க்கப்பட வேண்டும் என்பதைப்பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். இந்த மனப்பான்மையுடன் இந்த விவாதம் நடந்ததை நான் முழு மனதுடன் வரவேற்கிறேன்.

கனம் அங்கத்தினர் சின்னதுரை அவர்கள் பேசும்பொழுது, நாம் எந்த சமுதாயத்தை அமைக்கவேண்டுமென்று நிர்ணயித்துக் கொண்டிருக்கின்றோமோ அதற்குத் தகுந்தபடி கல்வி முறையும் திருத்தி அமைக்கப்பட வேண்டுமென்ற கருத்தை வெளியிட்டார்கள். அது அடிப்படையான கொள்கை. ஜெர்மானிய தேசத்திலே ஹிட்லர் தனக்கு உதவியாக இருக்கக்கூடிய ஒரு சமுதாயத்தை அமைக்க வேண்டுமென்று விரும்பியபோது, ஆரம்பம் பள்ளிக்கூடங்களிலே செய்யப்பட்டது. அந்த முறையில் தான் வாலிபர்கள் எல்லாம் பாசிஸக் கொள்கையை ஆதரிக்கக் கூடியவர்களாக அமைந்தார்கள். ஆகையால், நாம் ஒரு சமுதாயத்தை அமைக்கவேண்டுமென்று விரும்பும்போது, அந்த சமுதாயத்திற்கு ஏற்ற கல்வித் திட்டத்தையும் அமைத்துக் கொள்வது மிகவும் முக்கியம். அந்த முறையில் தான், இன்றைக்கு கல்வித் துறையில் மாற்றங்கள் ஏற்பட வேண்டுமென்று சொல்லும்போது, ஆரம்பக் கல்வித் திட்டமும் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பதைத் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும் மற்றக் கட்சித் தலைவர்களும் யோசிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இதற்கு முன்பு இருந்த படிப்பிலே இருக்கக்கூடிய முக்கியமான குறை என்ன என்று நாம் யோசித்துப் பார்போமேயானால், வெறும் படிப்புப் படித்துவிட்டு உழைக்காமல் மேஜை நாற்காலி போட்டு உட்கார்ந்துகொண்டு சம்பாத்தியம் செய்ய வேண்டுமென்ற அடிப்படையிலே படிப்புச் சொல்லிக் கொடுக்கப்பட்டு வந்தது. அந்தப் படிப்பு நீடித்துக்கொண்டு போகின்ற வரையில், அந்த மனப்பான்மை நீங்காத வரையில், சோஷலிஸ சமுதாயம் அமையவே முடியாது. சோஷலிஸ் சமுதாயத்திற்கு அடிப்படையே உழைப்பில் நம்பிக்கை வேண்டும். உழைப்பில் நம்பிக்கை இல்லாமல், சோஷலிஸ சமுதாயத்தை அமைக்க முடியாது. உழைப்பின் மூலமாகத்தான் ஒருவன் வாழ்க்கை நடத்த வேண்டுமென்று அடிப்படையான எண்ணம் ஏற்படாத வரையில், சோஷலிஸ சமுதாயத்தை அமைக்க முடியாது. ஆகையால், ஆதாரக் கல்வியை ஒரு கொள்கையாக ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்றால், சோஷலிஸ சமுதாயத்தை ஏற்றுக்கொண்டதன் காரணமாக அதற்கேற்ப ஒரு கல்வித் திட்டமும் அமையவேண்டுமென்ற காரணத்தினால் தான். வேறு யாராவது நிபுணர்கள் இந்த சோஷலிஸ சமுதாயத்தை அமைக்க வேறு கல்வித் திட்டத்தை அமைக்கலாமென்று யோசனை சொல்வார்களேயானால், அதைப்பற்றியும் யோசிக்கத் தயாராயிருக்கிறோம். இது எதையும் யோசனை செய்யாமல் ஏற்றுக்கொண்ட திட்டமல்லவென்று நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். அந்த மனோபாவம் குழந்தைகள் மனதில் ஏற்படவேண்டுமென்றால், ஆரம்ப காலத்திலிருந்தே உழைப்புக்கு மதிப்புக் கொடுத்து உழைப்பின் அடிப்படையிலே வாழ்க்கை நடத்த வேண்டுமென்ற உணர்ச்சி அவர்கள் மனதிலே ஏற்படவேண்டும். அது இந்தத் திட்டங்களால்தான் ஏற்படுமென்று நாங்கள் நினைக்கிறோம். அதற்கு மேலாக, இன்றைக்கு இருக்கக்கூடிய கல்வி நிபுணர்கள் எல்லாம் என்ன சொல்லுகிறார்கள் என்று பார்ப்போமேயானால், வெறும் புத்தகத்தின் மூலமாகப் படிப்பதைவிட அனுபவத்தின் மூலமாக, காரியங்கள் செய்வதன் மூலமாக அறிவைப் பெறுவது ரொம்பவும் சிறப்பானது, அதன் மூலமாகத்தான் நல்ல அறிவு ஏற்படுமென்று எல்லோரும் அபிப்பிராயப்படுகிறார்கள். இந்த முறையிலே அமைந்திருக்கக் கூடியதுதான் ஆதாரக் கல்வி. அதிலுள்ள தொழில் பகுதியை விட்டு விடுங்கள். அந்தக் கொள்கையை நிறைவேற்றுவதற்காக அந்தத் திட்டங்களைப் போடுகிறோம், வேறு ஏதாவது மாற்றங்கள் செய்ய வேண்டுமென்றால், அவைகளைச் செய்யலாம் என்பது என்னுடைய கொள்கை. சில பேர், "ஆதாரக் கல்வி என்றால், ஒரு மதத்தை எழுதி வைத்த பிறகு அதை ஒன்றும் மாற்ற முடியாது என்பதுபோல், இதையும் மாற்ற முடியாது" என்று நினைக்கிறார்கள். நான் அப்படி எண்ணவில்லை. அடிப்படையான கொள்கையை வைத்துக்கொண்டு பலவிதமான மாற்றங்கள் செய்யலாம் என்பது என்னுடைய அபிப்பிராயம். நான் அதை அடிக்கடி சொல்லி வந்திருக்கிறேன்.





மற்றவர்களும் சொல்வதைப் பார்த்து, நான் சொல்வதாக இருந்தாலும், இன்றைக்கு இன்னும் பல பேர் இந்த மாதிரி நினைக்க ஆரம்பித்திருக்கிறார்கள். இன்னும் சில பேர் ஆதாரக் கல்வி என்றால், நூற்பு தான் இருக்க வேண்டும் அல்லது விவசாயம் தான் இருக்கவேண்டும் என்று கருதுகிறார்கள். அதற்கு அவசியமே கிடையாது. எந்தத் தொழிலை வேண்டுமானாலும் அடிப்படையை வைத்துக்கொண்டு நடத்தலாம். ஆனால் குழந்தைகள் வயதுக்கேற்ற தொழிலாக இருக்கவேண்டும். அந்த முறையில் சிறிய மோட்டார்கள் செய்யக்கூடிய தொழிலைக் கூட புகுத்த முடியுமானால், புகுத்தலாம் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். ஆகையால் இதில் ஏதோ பிடிவாதமாக, இந்தத் திட்டம்தான், இதில் ஒன்றும் மாறுதல் கூடாது என்று ஏற்படுத்தவில்லை. நல்ல முறையிலே, நல்லபடியாக எல்லாக் குழந்தைகளுக்கும் கல்வி கொடுக்கவேண்டுமென்ற கொள்கையடிப்படையில் இம்மாதிரி ஏற்படுத்தியிருக்கிறோம். இன்றைக்கு இதில் முன்னேற்றம் ஏற்படவும் மாறுதல் ஏற்படவும் நிறைய வழியிருக்கிறது. மாறுதல்கள் ஏற்படுமென்றும் நினைக்கிறேன். மாறுதல் ஏற்படாத முறையில் வளர்ச்சி ஒன்றும் இருக்க முடியாது. நாங்கள் இந்தக் கொள்கையை இன்றைக்கு ஏற்றுக்கொண்டிருக்கும் காரணம், நல்ல கல்வி இருந்தால் தான் எல்லோருக்கும் நல்ல மனப்பான்மை ஏற்படும். ஆசிரியர்களுக்கும் இந்த மனப்பான்மை இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். போதனா பள்ளிகளும் ஆதாரக் கல்வி முறையில் அமைய வேண்டுமென்று அதற்காக எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறோம். எல்லா பயிற்சிப் பள்ளிகளையும் ஆதாரக் கல்வி அடிப்படையில் மாற்ற வேண்டுமென்பது தான் சர்க்காருடைய கொள்கை. எப்போதும் புதிய கருத்துக்களை ஏற்றுக்கொள்ளவும் புதிய மாறுதல்களைச் செய்யவும் இந்தக் கல்வித் துறையாளர்கள் தயாராயிருப்பார்கள் என்று உறுதியாக இந்தச் சபையின் முன் சொல்லிக் கொள்ள முடியும். ஆதாரக் கல்வி முறையை அமைப்பது ஆரம்பப் பள்ளிகளில் மட்டுமல்ல. உயர்தரப் பள்ளிகளிலும் புத்தகப் படிப்பு மட்டுமல்லாமல், ஏதாவது ஒரு தொழில் படிப்பும் இருக்கவேண்டுமென்று வைத்து தொழில் படிப்பும் வேண்டுகிறவர்களுக்கு படிக்க வேண்டிய வசதி கொடுக்கப்பட்டிருக்கிறது இந்த மாதிரி, ஒரு சோஷலிஸ சமுதாயத்தை அமைப்பதில் எங்களால் இயன்ற அளவு வெற்றிகரமாக நடத்தி வருகிறோம்.

யாரோ ஒரு நண்பர் பேசும்போது இன்றைக்கு உள்ள 21 ஆயிரம் பள்ளிகளில் இரண்டு ஆயிரம் பள்ளிகள்தான் ஆதாரப்பள்ளிகளாக மாற்றப்பட்டிருக்கிறது என்று சொன்னார். அவசரப்பட்டு போதுமான அவகாசம் இல்லாமல், போதுமான ஆசிரியர்கள் இல்லாமல் செய்வதால் கெடுதல்கள் ஏற்படக்கூடாது என்று, வேண்டிய பிரயத்தினங்கள் செய்து நல்ல சூழ்நிலை ஏற்பட்ட பிற்பாடு, போதிய ஆசிரியர்கள் கிடைத்த பிற்பாடு இப்பொழுது இருக்கும் பள்ளிகளை ஆதாரப் பள்ளிகளாக மாற்றவேண்டுமென்று எண்ணிக் கொண்டிருக்கிறோம். சென்ற வருஷத்தில் இந்தப் பள்ளிகளை ரொம்ப மாற்றமுடியாமல் போய்விட்டது. இந்த வருஷம் ஓராயிரம் பள்ளிகளை மாற்றுவதாக இருக்கிறோம். மற்றபடி ஸ்ரீ கோஷ் சொன்ன கருத்தை வெளியிட்டார்கள். அந்தக் கருத்தை நானும் படித்திருக்கிறேன். அதாவது அவர் **Basic, Non-Basic** என்று பிரித்து வைக்கக்கூடாது என்றுதான் சொல்லுகிறார்கள். ஒரு சில பகுதி மட்டும் ஒரு தனி வகுப்பு என்று வைத்து இருப்பது பாக்கியிருப்பவர்களுக்கு கஷ்டமாக இருக்கும். எது நல்ல கல்வி முறையென்றால், சரி பாதி மட்டும் **Basic**, பாக்கி **Non-Basic** என்று வைத்துக்கொண்டிருப்பது சரியல்ல, ஆனால் பூராவும் ஒன்றாக இருக்கவேண்டுமென்றுதான் நான் படித்த அளவுக்கு புரிந்து கொண்டேன். கனம் அண்ணாதுரை படித்த வாசகத்திலும் எனக்கு அதுதான் பட்டது. **Basic Education** ஐப்பற்றி நன்றாக ஆலோசனை செய்துதான் இன்றைக்கு முடிக்கும் கட்டத்தில் இருக்கிறோம். இதை ஏற்றுக்கொண்டிருப்பது கூட நம்பிக்கையால் அல்ல; காந்திஜி சொன்னார்கள், அதனால் ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்றல்ல. நம் நாட்டிலுள்ள நிபுணர்களையும், அதோடுமட்டுமல்லாமல் வெளிநாட்டு நிபுணர்களையும் கலந்து ஆலோசித்து சரியான முடிவுக்கு வந்ததற்குப் பிறகு இந்த முடிவுக்கு வந்திருக்கிறோம்.

இன்னொரு முக்கியமான விஷயம் சொல்லப்பட்டது. இன்றைய முறையில் ஆரம்பப் பள்ளிகள் இருக்கின்றன. மிடில் ஸ்கூல்கள், அதாவது முதலாவது பாரத்திலிருந்து மூன்றாவது பாரம் வரை இருக்கின்றன. ஆரம்பப் பள்ளிகளில் படித்தவர்கள் இப்போது உயர்நிலைப்பள்ளிகளில் சேர்வது, அதாவது முதலாவது பாரத்திலும், நான்காவது பாரத்திலும சேர்வது கஷ்டமாக இருக்கிறது என்று சொன்னார்கள். இந்தக் கஷ்டத்தை உணர்ந்துதான் 8-வது பிரிவு வரை இரண்டு பிரிவாக இருக்க வேண்டியதில்லை, இதனால் மிகவும் கஷ்டப்படுபவர்கள் கிராம மக்கள்தான், ஆகவே இந்த தரத்தை உயர்த்தி 8-வது வகுப்பு வரையில் ஒரே முறையாக, ஒரே படியாக, இருக்க வேண்டுமென்று White paper-ல் இருக்கிறது. அதையேதான் சென்னை சட்ட சபை கமிட்டியும் சிபார்சு செய்திருக்கிறது. இது அமுலுக்கு வந்த பிறகு இந்த கஷ்டங்கள் நீங்கும். சீக்கிரம் அமுல் நடத்தினால் இந்த கஷ்டமெல்லாம் நீங்கும்.

இன்னொன்று பள்ளிகளில் சம்பளம் வாங்குவதைப்பற்றியும் சொன்னார்கள். முதலாவது பாரத்திலிருந்து மூன்றாவது பாரம் வரையில் 100 ரூபாய்க்கு மேலாக சம்பாதிக்கக்கூடிய பெற்றோர்கள், குழந்தைகளுக்கு சம்பளம் கொடுக்கவேண்டிய நிர்பந்தம் இருக்கிறது. அதை எடுத்துவிட வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு அரசியலமைப்பிலிருந்து விதிகளையும் ஆதாரம் காட்டினார்கள். நான் அதை ஒப்புக்கொள்ளுகிறேன். இன்றைக்கு மிடில் ஸ்கூலில் படிக்கிறவர்களுக்கு சம்பளம் வாங்கப்படுகிறது. ஆரம்பப் பள்ளிகளில், அதாவது, ஒன்றாவது வகுப்பிலிருந்து எட்டாவது வகுப்பு வரையில், பணக்காரர்களாக இருந்தாலும் சரி, ஏழைகளாக இருந்தாலும் சரி, சம்பளம் கிடையாது. இலவசக்கல்வியளிக்கப்படுகிறது. ஸ்பெஷல் ஸ்கூல்களைத் தவிர கூடிய சீக்கிரத்திலேயே ஒன்றாவது வகுப்பிலிருந்து எட்டாவது வகுப்பு மட்டும் எல்லோருக்கும், பணக்காரர்களுக்கும் கூட, சம்பளம் இல்லாமல்போய் விடும். அரசியலமைப்பின் 45-வது விதி அமுலுக்குவந்து விடும். அடுத்தபடி 10 வருஷ காலத்திற்குள் வந்துவிடுமென்று கனம் அங்கத்தினர்களுக்கு தெரிவித்துக்கொள்ளுகிறேன். அது ஒன்று.

இன்னொன்று, இன்றைக்கு நம் ராஜ்யத்தில் பல்வேறு இலாக்காக்கள் பள்ளிகளை நடத்துகின்றன. ஹரிஜன் வெல்பேர் இலாகா ஹரிஜனங்களுக்காக பள்ளிகளை நடத்துகிறது. பரதவர்களுக்கு, அதாவது மீன் பிடிப்பவர்களுக்கு தனியாக பள்ளிகள் நடக்கிறது. கள்ளர் Reclamation scheme பிரகாரம் அந்த டிபார்ட்மெண்ட் வேறு பள்ளிகள் நடத்துகிறது. இப்போது இருக்கக்கூடிய முறையில் தனித்தனியாக ஒதுக்கிவைத்து கல்வி போதிப்பதால் பல பிரச்னைகள் வருகின்றன. ஒரு உயர்ந்த பண்பாடு ஏற்பட இன்றைக்கு இருக்கிற முறை வசதியாக இல்லை. ஆகவே எல்லாப் பள்ளிகளையும் கல்வி இலாகாவின் கீழ் கொண்டுவந்து, அவரவர்களுக்கு வேண்டுமானால் சம்பளச் சலுகை, இலவசமாக புத்தகங்கள் கொடுப்பது, இலவசமாக சாப்பாடு போடுவது முதலிய இனங்களுக்கு தனியாக சலுகை கொடுக்கச் செய்யவேண்டுமே தவிர, எல்லாம் பொதுப் பள்ளியாக இருந்து, எல்லோரும் ஒன்றாக இருந்து ஒன்றாகப் படித்து, ஒன்றாக வளரவேண்டும் என்ற அடிப்படையில் தீர்மானித்திருக்கிறோம். அது இந்த வருஷமே அமலுக்கு வருமென்று எதிர்பார்க்கிறேன்.

இதே சமயத்திலே இந்தப் பள்ளிகளை விரிவாக்க 30 லட்சம் பிள்ளைகளை பள்ளிக்கு கொண்டுவர 9 கோடி ரூபாய் செலவாகும் என்கிற புள்ளி விவரத்தைக் கொடுத்தேன். பெருமைப்படவோ அல்லது வருத்தப்படவோ அந்த புள்ளி விவரங்களை யெல்லாம் சொல்லவில்லை. உள்ள நிலைமையை அங்கத்தினர்கள் உணர வேண்டுமென்றுதான் புள்ளி விவரங்களைக் கொடுத்திருக்கிறேன். இப்போது நம் முன் இருக்கக்கூடிய பிரச்னைகளையும் அதில் உள்ள கஷ்டங்களையும் அங்கத்தினர்கள் உணர எடுத்துச்சொல்லுகிறேன். அதைத் தவிர வேறு இல்லை. 9 கோடி ரூபாய் செலவழித்து 14 வயது வரை எல்லோருக்கும், அரசியல் சட்டப்பிரகாரம், அதுவும் இன்னும் இரண்டு மூன்று வருஷத்திற்குள், கல்வியளிக்க முடியுமா, எல்லோரையும், 14 வயது வரை, பள்ளிகளுக்கு அனுப்பமுடியுமா என்





பதை ஆலோசிக்கவேண்டுமென்று சொல்லுகிறேன். பூரா புள்ளி விவரங்களும் இல்லையென்று சொன்னார்கள். White paper ஐயும், சட்டசபை கமிட்டியின் ரிபோர்ட்டையும் பார்த்தால் இன்று புள்ளி விவரம் வேண்டியமட்டில் இருக்கிறது. நான் சொல்லுவதானால் கூட அதில் பார்த்துத்தான் சொல்லவேண்டியிருக்கிறது.

"எத்தனை பேர் மேல் படிப்புக்குப் போகிறார்கள் ?" என்று அவர்கள் கேட்டார்கள். ஐந்தாவது வகுப்பு, ஆறாவது வகுப்பு போகிறவர்கள் இருக்கட்டும். அறிக்கையைப் படித்துப் பார்த்தால், ஒன்றாவது வகுப்பிலேயே நின்றுவிடுகிறவர்கள் எத்தனை பேர், இரண்டாவது வகுப்பிலேயே நின்றுவிடுகிறவர்கள் எத்தனை பேர், மூன்றாவது வகுப்பிலேயே நின்றுவிடுகிறவர்கள் எத்தனை பேர், நான்காவது வகுப்பிலேயே நின்று விடுகிறவர்கள் எத்தனை பேர் என்று எல்லாப் புள்ளி விவரங்களும் கொடுக்கப்பட்டிருப்பது தெரியும். மொத்தமாகப் பார்த்தால், இத்தனை குழந்தைகளாவது பள்ளிக்கூடத்திற்கு போய்க்கொண்டிருக்கிறார்களே என்று மனத் திருப்தி ஏற்பட்டுவிடலாம். 40 சத விகிதம் குழந்தைகள் ஐந்தாவதுகூட எட்டிப் பார்ப்பது இல்லை. இதையெல்லாம் எப்படி மாற்றியமைக்கவேண்டும் என்பதைப்பற்றித்தான் அதிலே சிபார்சுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

அரசியலமைப்புச் சட்டப் பிரகாரம், 1960-க்குள் நாடு முழுவதும் 14 வயதுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் இலவசக் கட்டாயக் கல்வி கொடுக்க முடியுமா என்பதை அகில இந்திய ரீதியில் பூனா மகாநாட்டில் ஆலோசனை செய்து பார்த்ததில், "அது முடியாது" என்ற முடிவுக்கு வந்து, இன்றைக்கு நம்முடைய சட்டசபைக் கமிட்டியினுடைய சிபார்சை அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள், அதாவது 1965–66-க்குள்ளாக, ஐந்தாவது வகுப்பு வரையிலாவது 11 வயது உள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் இலவசக் கட்டாயப் படிப்பு கொடுக்கவேண்டும் என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். அவ்வாறுதான் செய்ய முடியும் என்ற நம்முடைய சட்டசபைக் கமிட்டி செய்திருந்த சிபார்சை அகில இந்தியக் குழு ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதைக் கண்டு நாம் ஓரளவு பெருமைப்படலாம். அந்த அளவு விஷயங்களை அறிந்து நம் சட்ட சபைக் கமிட்டி நல்ல முடிவுக்கு வந்திருக்கிறார்கள் என்பதைப்பற்றி நாம் ஓரளவு பெருமைப்படலாம் என்று நான் சொல்லிக் கொள்ளுகிறேன். (கனம் அங்கத்தினர் ஸ்ரீ டி. எஸ். ராமசாமி பிள்ளை குறுக்கிடுதல்) அவ்வளவு தூரம் யோசித்து நல்ல முடிவுக்கு வரக்கூடிய திறமை நம் சட்ட சபைக் கமிட்டிக்கு இருந்தது கட்டாயம் பெருமைப் படக்கூடியதே. அப்படியில்லாமல் ஏதோ ஒரு சட்டத்தைப் போட்டுவிட்டு, வெறும் கனவு கண்டுகொண்டிருப்பதால் என்ன பயன் ? ஆகவே, அவசியம் பெருமைப்படலாம். பெருமைப்படவேண்டாம் என்று கனம் அங்கத்தினர் நினைத்தால், அவர் இதில் கலந்துகொள்ளவேண்டாம்.

இதே முறையில் இன்றைக்கு ஒரு திட்டம் போட்டுத்தான் மற்ற பள்ளிக்கூடங்களை ஏற்படுத்த வேண்டியதாக இருக்கிறது. ஹைஸ்கூல் திறப்பது பற்றி கனம் அங்கத்தினர் ஸ்ரீ ராமச்சந்திர ரெட்டியாரும் இன்னும் பல கனம் அங்கத்தினர்களும் சொன்னார்கள். "ரூ. 4,500 நாங்கள் ஜில்லா போர்டினிடம் கொடுத்துவிட்டோம் ; ஒரு ஹைஸ்கூல் ஆரம்பித்துவிடவேண்டும்" என்று நினைத்து விடுகிறார்கள். வெகு சுலபமாக உத்திரவு போட்டுவிடலாம். இன்றைக்கு இருக்கும் நிலைமையில் பள்ளிக்கூடம் ஆரம்பிப்பது என்றால், அதற்குக் கட்டிடங்கள் கட்டிவிட்டால் மாத்திரம் போதாது. பணம் இருந்தால் மாத்திரம் போதாது. உபாத்தியாயர்கள் வேண்டும். உபாத்தியாயர்கள் நெருக்கடி எந்த அளவுக்கு இருக்கிறது என்பதைத் தெரிவிப்பதற்கு ஒரு சின்ன புள்ளி விவரத்தை நான் காட்டுகிறேன். இன்றைக்கு பி.டி. படித்தவர்கள்தான் உயர்தரப் பள்ளிக்கூடங்களில் பாடம் சொல்லிக்கொடுக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. நிறைய கல்லூரிகளைத் திறந்துவிட்டோம். இரண்டு வருஷங்களுக்கு முன்பு ஐந்து புதிய கல்லூரிகளைத் திறந்தோம். சென்ற வருஷம் இன்னும் ஒரு புதிய பயிற்சிக் கல்லூரியை திறந்திருக்கிறோம். அதிலே, தனிப்பட்டோர் நடத்தக்கூடிய கல்லூரி ஒருபுறமிருக்க, சர்க்கார் நடத்தக்

[Sri C. Subramaniam] [17th July 1957

கூடிய கல்லூரியிலே 375 ஸ்தானங்கள் ஆண்களுக்காக இருக்கின்றன. அதிலே இதுவரைக்கும் வந்து சேர்ந்திருக்கக்கூடியவர்கள் 230 பேர்கள் தான். இன்னும் 145 பேர்கள் (ஆண்கள்) வந்து சேரவில்லை. அந்த இடங்கள் காலியாக இருக்கின்றன. பெண்கள் கல்லூரியில் 185 ஸ்தானங் களில் 181 பேர்கள் (பெண்கள்) வந்து சேர்ந்திருக்கிறார்கள். அதிலேகூட "அப்ளை" பண்ணிக்கொண்டவர்கள் இடம் இல்லை என்று போகவில்லை. இன்னும் நான்கு ஸ்தானங்கள் காலி இருக்கின்றன.

பள்ளிக்கூடங்களை ஆரம்பித்துவிடலாம். ஆரம்பித்தால் கட்டாயமாக, நமக்கு நஷ்டம்தான் ஏற்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இன்றைக்கு ஒரு பள்ளிக்கூடத்தை ஆரம்பித் தோம் என்றால், அதைத் தொடர்ந்து நடத்தக்கூடிய முறையில் இருக்க வேண்டும். அதைத் தொடர்ந்து நடத்துவது மாத்திரம் அல்ல. வேறு எங்கெங்கோயோ படித்துக்கொண்டிருக்கும் பிள்ளைகள் இந்தப் பள்ளிக் கூடத்திலே சேரும்போது, இப்பொழுது ஏற்படக்கூடிய செலவுக்கு மேல் அதிகச் செலவாகிறது என்பதையும் நாம் மனதிலே வைத்துக்கொள்ள வேண்டும்.

ஆகையால் தான், இன்றைக்கு உயர்தரப் பள்ளிக்கூடங்களை ஆரம்பிக்க உத்திரவு போடுவதற்குத் தயக்கம் ஏற்படுகிறதென்றால், உயர்தரப் பள்ளிக் கூடங்களை ஏற்படக்கூடாது என்பது என்னுடைய எண்ணம் அல்ல. கல்வித் துறை டைரக்டர் அவர்களுக்கும், "இன்னும் ஏன் அதிகப் பள்ளிக்கூடம்" என்ற கவலை ஏற்பட்டு அல்ல. அதிலே இருக்கும் கஷ்டங்களை உணர்ந்து மற்ற பள்ளிக்கூட வசதிகளை அனுசரித்து, பக்கத்தில் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றனவா என்று தெரிந்து, ஒரு பள்ளிக்கூடம் இருக்கும் இடத்தில் இன்னொரு பள்ளிக்கூடம் வைப்பதிலே வீண் செலவும் நஷ்டமும் ஏற்படுமா என்பதைக் கவனித்து உத்திரவு இட வேண்டியிருக்கிறது. அதுதான் திட்டத்தில் இருக்கும் முக்கியமான விஷயம்.

திருவாங்கூர் ராஜ்யத்தின் கல்வி நிலைமையோடு நம் ராஜ்யத்தை ஒப்பிட்டுப் பார்க்கவேண்டுமானால் அதைப்பற்றியும் புள்ளி விவரங்கள் "வெள்ளை அறிக்கையில்" கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதைப் படித் திருந்தால், கனம் அங்கத்தினர் அந்த **argument** ஐச் சொல்லி யிருக்கமாட்டார்கள். இன்றைக்கு கனம் அங்கத்தினர் அவர்கள் ஏதோ கணக்குச் சொன்னார்கள். ஒரு குழந்தைக்கு ஆரம்பப் படிப்பு சொல்லிக் கொடுப்பதற்கு சுமார் 30 ரூபாய் ஆகிறது. முன்பு ரூ. 24-ஆக இருந்து, இப்பொழுது ரூ. 30 ஆகியிருக்கிறது. குறைந்தது ரூ. 24வது நாம் சராசரி செலவு செய்ய வேண்டி ஏற்படுகிறது. மற்ற ராஜ்யங்களைவிட நம் ராஜ்யத்தில் தான் அதிகமாகச் செலவாகிறது என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். அதற்குக் காரணம் என்ன என்பதைப் பற்றியும் விளக்குகிறேன்.

ஒரு குழந்தைக்கு நாம் ஆரம்பப் படிப்பு சொல்லிக் கொடுக்க சராசரி ரூ. 24 செலவு ஆகிறது என்று சொன்னால், திருவாங்கூர்-கொச்சியில் ரூ. 10-3-0-க்கு சொல்லிக் கொடுக்க முடிவதற்குக் காரணம் என்ன வென்றால். . . (கனம் அங்கத்தினர் ஸ்ரீ டி.எஸ். ராமசாமி பிள்ளை குறுக்கீடு) அறிக்கையைப் படித்துப் பார்த்திருந்தால் அவர்கள் இதைச் சொல்லியே இருக்கமாட்டார்கள்.

இந்தப் புள்ளி விவரங்கள் எடுத்த நேரத்தில் 91,638 ஆசிரியர்கள் நம் ஆரம்பப் பள்ளிக்கூடங்களிலே வேலை செய்து வந்தார்கள். அதிலே ஆண்கள் 62,700 பேர்கள். அவர்களிலே பயிற்சி பெறாதவர்கள் 3,275 பேர்கள். அதாவது 6 சத விகிதம் ஆகிறது. பெண்களில் 29,139 பேர்கள் இருக்கிறார்கள். அதிலே பயிற்சி பெறாதவர்கள் 593 பேர்கள். ஆகவே, மொத்தம் 91,638 ஆசிரியர்களில் 3,868 பேர்கள்தான் பயிற்சி பெறாத ஆசிரியர்கள். மற்றவர்கள் எல்லாம் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள். இது நம்முடைய ராஜ்யத்தின் நிலைமை. கனம் அங்கத்தினர் சொன்ன மாதிரி, திருவாங்கூர் ராஜ்த்தில் ஆசிரியர்களுக்கு ஒரு வருஷப் பயிற்சி கொடுக் கிறார்கள். நாம் இரண்டு வருஷப் பயிற்சி கொடுக்கிறோம். இரண்டு



17th July 1957] [Sri C. Subramaniam]

வருஷப் பயிற்சி ஆசிரியர்களுக்கு அவசியமா இல்லையா என்பதையும் அகில இந்திய ரீதியில் பரிசீலனை செய்து பார்த்து, இரண்டு வருஷப் பயிற்சி அவசியம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

திருவாங்கூர்-கொச்சியில் எப்படி இருக்கிறது என்று பார்க்கும்போது, அங்கு 40 சத விகிதம்தான் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இருக்கிறார்கள். 60 சத விகிதம் பயிற்சி பெறாதவர்கள். பயிற்சி பெற்றவர்களுக்கு சம்பள விகிதம் ரூ. 45லிருந்து ரூ. 50 வரையில் போகலாம். ஆனால், பயிற்சி பெறாதவர்களுக்கு ரூ. 30லிருந்து ரூ. 35 தான் கொடுக்கிறார்கள். இப்படி 60 சத விகிதம் ஆசிரியர்கள் பயிற்சி பெறாதவர்களாக இருக்கும்போது, அவர்களுடைய சம்பளமும் குறைவாக இருக்கும்போது, சராசரி ஒரு குழந்தைக்குப் படிப்புச் சொல்லிக்கொடுப்பதற்கு ஆகும் செலவும் ரொம்பக் குறைந்துவிடுகிறது—நம்மைவிட.

இன்னொரு விஷயத்தையும் நாம் மனதிலே கொள்ள வேண்டியதாக இருக்கிறது. அங்கு 1 முதல் 4 வகுப்பு வரையில் "ஷிப்ட்" முறையைக் கையாளுகிறார்கள். அதாவது ஒரு உபாத்தியாயரைக்கொண்டு இரண்டு பங்கு பிள்ளைகளுக்குப் பாடம் கற்றுக்கொடுக்கும் முறை அங்கு கையாளப் படுகிறது. நாம் அதை வேண்டாம் என்று இங்கு முடிவு செய்து விட்டோம். இப்படி இருக்கும்போது நமக்கு ஒரு குழந்தைக்கு ஆரம்பப் படிப்புச் சொல்லிக் கொடுக்க ரூ. 30 செலவு ஏற்பட்டுத்தான் தீரும் என்பதை நாம் மனதிலே வைத்துக்கொண்டு, இதற்குத் தகுந்தபடி நாம் திட்டம் போடவேண்டியிருக்கிறது. இதைப் புள்ளி விவரத்திலிருந்து தெரிந்துகொண்டிருந்தால், "திருவாங்கூரில் நடக்கிறதே, இங்கே ஏன் நடக்க முடியாது?" என்று அவர்கள் குறை கூறியிருக்கமாட்டார் என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆகவே, அறிக்கையை அவர்கள் படித்துப் பார்க்கும்படி நான் கேட்டுக்கொள்ளுகிறேன். அதைப் படித்துப் பார்த்த பிறகு இன்னும் சந்தேகம் இருந்தால் அதைப்பற்றி விவாதத்தில், கிளப்பினால், அப்பொழுது நான் பதில் சொல்வதற்குச் சௌகரியமாக இருக்கும்.

"மானேஜ்மெண்ட்" பள்ளிகளை நடத்துவதிலே சில பேர் வியாபாரமாக நடத்துகிறார்கள் என்று சொல்லப்பட்டது. சில இடங்களில் வியாபாரமாக நடத்தலாம். ஆனால், இன்றைக்கு இருக்கும் முறையிலே பல மானேஜ் மெண்ட் பள்ளிகளை திறமையாக நல்ல முறையிலே நடத்தி வருகிறார்கள். சர்க்கார் இந்தத் துறையிலே வந்து இறங்குவதற்கு முன்னால் ஒரு விஷயத்தை மறந்துவிடக்கூடாது. பல மானேஜ்மெண்டார்கள் இதிலே நல்ல சேவை செய்து இருக்கிறார்கள். அவர்களுக்கு நாம் ஓரளவு பாராட்டு தலையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். கிருஸ்துவ மிஷனரிகளைப் பற்றிச் சில அங்கத்தினர்கள் சொன்னார்கள். கிருஸ்தவ மிஷனரிகளுடைய நோக்கம் எப்படியாக இருந்தாலும் இப்பொழுது அந்த நோக்கம் எல்லாம் மாறிவிட்டது. இன்றைக்கு நாட்டுக்காக உழைக்க வேண்டும் என்ற அடிப் படையிலே அவர்கள் கல்வித் துறையிலே சேவை செய்து வந்திருக் கிறார்கள். கல்வித்துறையிலே ஓரளவு நாம் முன்னேற்றம் அடைவதற்கு இங்கு அன்னிய அரசாங்கம் இருந்த காலத்திலுங்கூட கிருஸ்தவ மிஷ னரிகள் பெருத்த உதவியும் பெருத்த சேவையும் நமக்குச் செய்திருக் கிறார்கள், சேவை செய்து வருகிறார்கள் என்பதை நாம் என்றும் மறந்து விடக்கூடாது என்று மட்டும் நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, குழந்தைகளுக்குப் பகல் உணவு பள்ளிக் கூடத்தில் அளிப்பது பற்றி பேசப்பட்டது. இதற்கென பத்து லட்ச ரூபாய் ஒதுக்கியிருப்பது போதாது என்று சில அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். இந்தத் தொகை போதாது என்று தெரியும். இருந்தாலும், படிப் படியாக நல்ல முறையிலே இந்த சிறுவர்களுக்கு உணவு அளிக்கும் திட்டத்தை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக சிறிது சிறிதாக ஆரம்பித்து விஸ்தரித்துக்கொண்டு வருகிறோம். பள்ளிகளில் குழந்தைகளுக்கு உணவு அளிப்பதைக் "கண்டிராக்ட்" முறையில் வைத்துக்கொண்டு சிலர் வியா பாரமாக நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்று சில அங்கத்தினர்கள் சொன்னார்கள். பல இடங்களில் ஹரிஜன் நலப் பள்ளிகளில் இதுமாதிரி

தான் நடந்து வருகின்றன. "காண்டிராக்ட்"டில் விட்டால் இப்படித் தான் வரும். ஆகையால், இன்றைக்கு சர்க்காருடைய கொள்கை என்னவென்றால் அந்தந்த ஊரில் இருக்கக்கூடியவர்களே ஒன்றுசேர்ந்து இந்தத் திட்டத்தை நடத்தவேண்டும் என்பது. உண்மையாகவே சொல்லுகிறேன். பெருமையாகக்கூடச் சொல்லிக்கொள்ளுகிறேன். பல ஊர்களில் இன்றைக்கு நம்முடைய தாய்மார்கள் தாங்களே உணவைப் சமைத்து, பள்ளிகளில் படிக்கும் ஏழை எளிய மாணவ மாணவிகளுக்கு சுவை மிக்க உணவு அளித்து வருகிறார்கள். தாய்மார்களில் வீட்டுக்கு ஒருவராகப் போட்டி போட்டுக்கொண்டு, ஒவ்வொரு நாளும் சமைத்துப் போடுவதையும் பார்த்திருக்கிறேன். அப்போது உண்மையில் அந்தச் சாப்பாடு சுவைக்கும். கண்டிராக்டர்கள் எப்படிச் சமைத்துப் போட்டாலும் அது ஜெயில் சாப்பாடாகத்தான் இருக்கும். தாய்மார்களுடைய புனித கரம்பட்ட சாப்பாடு என்றால் அதற்கு நிச்சயமாகத் தனிச் சுவை உண்டு. ஆகையால் இந்த மாதிரி ஏழை மாணவர்களுக்கு பிற்பகல் உணவைத் தாங்களே சமைத்துப் போடும் பெரும் தொண்டைச் செய்ய தாய்மார்கள் மேலும் மேலும் முன் வரவேண்டும், அதற்கு வேண்டிய ஊக்கத்தை இங்குள்ள பெண் அங்கத்தினர்கள் எல்லாம் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**Sri M. JAGANNATHAN** : லேடி காண்டிராக்டர்களிடம் விடலாம்.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : கண்டிராக்டர்கள் என்றால் ஆண்களாக இருந்தாலும், பெண்களாக இருந்தாலும் எப்படிச் சுருக்கி லாபம் அடையலாம் என்பதிலேயே கவனம் உடையவர்களாக இருப்பார்கள். அன்பு உள்ளத்தோடு தாய்மார்கள் தாங்களாகவே சேவா மனப்பான்மையுடன் இந்த உணவைச் சமைத்துப் படைக்க வந்தால் தான் அது சுவைமிக்க உணவாக இருக்குமென்று சொன்னேன். இந்தத் திட்டம் நல்ல முறையில் நடக்கும். ஆகவே இந்த முறையை அமைக்க வேண்டுமென்பதற்காக ஊரில் இருக்கக்கூடியவர்கள் எல்லோரும் அக்கறை எடுத்துக்கொண்டு பணிபுரிய முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். பொதுவாக ஒரு ஊரில் உள்ள பள்ளிக்கூடம் நன்றாக நடக்க வேண்டுமென்றால், அந்தப் பள்ளிக்கூடத்தின் தரம் உயரவேண்டுமென்றால் ஊரில் உள்ளவர்கள் அதிக அக்கறை எடுத்துக்கொண்டால் தான் முடியும். அக்கறை எடுத்துக் கொள்வது என்றால் அன்றாடம் பள்ளி நிர்வாகத்தில் சென்று தாங்களும் தலையிட்டு கலந்துகொள்ளவேண்டும் என்று சொல்லவில்லை. அடிக்கடி அந்தப் பள்ளிக்கூடத்திற்குச் சென்று அவர்களுக்கு வேண்டிய உதவியை எல்லாம் இவர்கள் அளிக்க முன்வந்தால், அந்தப் பள்ளிக்கூடம் நன்றாக நடப்பதற்கு எவ்வளவு உதவி வேண்டுமோ அவ்வளவையும் செய்வார்களேயானால் அந்த ஊரில் உள்ள பள்ளிக்கூடம் நிச்சயமாக முன்னேற்றம் அடையும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஓராசியர்களுக்கு பயிற்சி வேண்டும், அவர்களும் இரண்டாண்டு பயிற்சி பெற்று வரவேண்டும் என்பதைப் பற்றிக்குறை கூறப்பட்டது. அவர்களுக்கு பயிற்சியே தேவை இல்லை, இருந்தாலும் குறைந்தகால பயிற்சி அளித்தால் போதும் என்பதாகவும் சொல்லப்பட்டது. இன்று நாம் இந்த பிரச்சனைக்கு முடிவு காண வேண்டும் என்று முயற்சிக்கும் போது ஒரு விஷயத்தை கவனத்தில் கண்டிப்பாக வைத்துக் கொள்ள வேண்டும். நல்ல ஆசிரியர்களாக அவர்கள் பணியாற்ற வேண்டுமென்றால் அதற்குச் சிறந்த வழி என்ன என்பதை ஆலோசிக்க வேண்டும். இன்றைக்கு ஏதோ ஓராசிரியப் பள்ளியில் வேலை செய்பவர்களுக்கு பயிற்சியே வேண்டாம் என்பதாக நாம் முடிவு செய்துவிடலாம். ஆனால் அவர்கள் வருங்காலத்தில் ஆயிரக்கணக்கான மாணவர்களுக்குக் கல்வி போதிக்க வேண்டியவர்கள். அவர்களிடம் படிக்கக்கூடிய பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் நலனை பொறுத்தும் எது நல்லது என்று முடிவு செய்ய வேண்டிய பொறுப்புடையவர்கள் நாம். ஏதோ ஒரு சில பேர்களுடைய சொந்தக் கஷ்டத்தை மனதில் வைத்துக் கொண்டு நாம் இவ்விஷயத்தில் முடிவு செய்துவிட முடியாது. நம்முடைய குழந்தைகளுக்கு நல்ல கல்வியை போதிக்கக் கூடிய திறமை உடையவர்களாக அவர்கள் ஆகவேண்டுமானால் அவர்களுக்கு இரண்டு வருஷப் பயிற்சி வேண்டும் என்று நாம் முடிவு செய்து இதர ஆசிரியர்

களுக்கு எல்லாம் அப்படித்தான் பயிற்சி கொடுக்கப்பட்டும் வருகிறது. அதேமாதிரியாக இந்த ஓராசிரியர்களும் கூட இரண்டாண்டு பயிற்சி பெறத்-தான் வேண்டும் என்பதில் சில கஷ்டங்கள் இந்த ஆசிரியர்களுக்கு வருகிறது என்றாலும், அதை வருங்கால மாணவ சமுதாயத்தின் நன்மையை உத்தேசித்து அவர்கள் பொறுத்துக்கொள்ளக் கூடாதா? அதை ஏற்றுக் கொள்ளக் கூடாதா என்பதையும் நாம் யோசிக்கவேண்டும். அதுவும் ஆசிரியர்கள் தியாக உணர்ச்சி, சேவா உணர்ச்சி உள்ளவரையில்தான் நல்லாசிரியர்களாக இருக்க முடியும் என்பதை நாம் ஒப்புக் கொள்ளுகிறோம். ஆகவே இந்தச் சிறு கஷ்டத்தை அவர்கள், வருங்காலச் சந்ததிகளின் நன்மையை உத்தேசித்து, தங்கள் மூலமாக ஆயிரக்கணக்கான மாணவர்கள் படித்து வெளியேறுவார்கள், அவர்களுக்கு உயர்ந்த கல்வியை, ஒழுக்கத்தை பண்பாட்டை வளர்க்கும் கல்வியைத் தருவதற்குத் தகுதி உடையவர்களாக நாம் இருக்கவேண்டும் என்கிற தியாக மனப்பான்மையில் ஏற்றுக்கொள்ள வேண்டாமா?

மற்ற ஆசிரியர்களுக்கு எல்லாம் இரண்டாண்டு பயிற்சியை முடித்து-விட்டு வந்த பிறகே அந்த உத்தியோகத்திற்கு அரசாங்கத்தாரால் நிர்ண-யிக்கப்பட்டுள்ள சம்பளம் கொடுக்கப்படுகிறது. ஆனால், இவர்களுடைய கஷ்டத்தை உணர்ந்து, எஸ். எஸ். எல். சி. படித்தவுடனேயே, அவர்களை பயிற்சி இல்லாமலேயே ஆசிரிய உத்யோகத்துக்கு எடுத்துக்கொண்டு, அதிகச் சம்பளம் கொடுத்து உதவி செய்து வருகிறோம். இவர்கள் தொடர்ந்து ஆசிரியர்களாகவே பணியாற்ற விரும்பினால், மாணவர்களுடைய நன்மைக்காக, நாட்டினுடைய நன்மைக்காக, இவர்களும் இரண்டாண்டு சென்று ஆசிரியர் பயிற்சியைப் பெற்று வரவேண்டும் என்று சர்க்கார் முடிவு செய்திருப்பதை சந்தோஷமாக ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

**Mr. SPEAKER** : இப்போது மணி பன்னிரண்டு ஆகிவிட்டது. விதிப்படி இந்த மானியத்தை நான் வோட்டுக்கு விடவேண்டும். கனம் மந்திரி அவர்களை முடித்துக் கொள்ளும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : இன்னும் எனக்குப் பத்து நிமிஷங்கள் தேவை. விதிப்படி நான் முடித்துக்கொள்ள வேண்டும் என்றாலும், அந்த விதியை மாற்றுவதற்கு சபைக்கு அதிகாரம் இருக்கிறது.

**Mr. SPEAKER** : விதியை மாற்ற சபைக்கு அதிகாரம் உண்டு என்றாலும் விதியை சபை மாற்றாதவரையில் நான் விதிப்படி-தான் நடக்கவேண்டும்.

## VI.—MOTION FOR THE SUSPENSION OF RULE 154 (3) OF THE ASSEMBLY RULES.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : Sir, I move—

"That Rule 154 (3) of the Assembly Rules be suspended till the reply to the debate on the Educational Demand is finished."

**Mr. SPEAKER** : According to the rules, the Demand must be put to vote at 12 noon. But if the House desires to extend the time limit, I have no objection.

I now put the motion to the vote of the House. The question is—

"That Rule 154 (3) of the Assembly Rules be suspended till the reply to the debate on the Education Demand is finished."

The motion was put and carried.

## (1) DEMAND XV—EDUCATION—*cont.*

**The Hon. Sri C. SUBRAMANIAM** : தமிழாசிரியர்களைப்பற்றி சிலர் குறிப்பிட்டார்கள். அவர்களுடைய கஷ்டங்களையும் சம்பளத்தில் இருக்கக்கூடிய குறைபாட்டையும் சொன்னார்கள். அதை நீக்கவேண்டும் என்பது தான்

சர்க்காரின் கொள்கை. அதுவும் முக்கியமாக இந்தி ஆசிரியர்களுக்கு பயிற்சி பெறும் காலத்தில் உதவித்தொகை 30 ரூபாய் கொடுக்கப்படுகிறது, தமிழாசிரியர்களுக்கு மிகவும் குறைவாகக் கொடுக்கிருர்கள் என்று சொன்ஞர்கள். இதற்கு நான் என்ன சமாதானம் சொல்வேனே என்று யோசிக்கவேண்டாம். இந்தி பண்டிட்டுக்களுக்கு கொடுப்பது போலவே தமிழ் பண்டிட்டுகளுக்கும் கொடுக்கவேண்டுமென்பதாக இதற்கு முன்பே உத்திரவு போட்டாய் விட்டது என்கிற சமாதானத்தைத்தான் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (கரகோஷம்).

இன்னும் எதாவது குறைபாடுகள் இருந்தாலும், அவற்றை நீக்கி, மற்றவர்களை விட அதிக அந்தஸ்து உடையவர்களாகச் செய்யாவிட்டாலும், சம அந்தஸ்துடன் சேவை செய்வதற்கு வேண்டிய வாய்ப்பை உண்டு பண்ணிக் கொடுக்கவேண்டும் என்பதுதான் சர்க்காரின் கொள்கை. பல அங்கத்தினர்களையும் கலந்துகொண்டு அவர்கள் எடுத்துச் சொல்கின்ற யோசனைகளின்படி எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

அதற்கு அடுத்தபடியாக இந்தியைப் பற்றிச் சொன்ஞர்கள். இந்தியை எடுத்துவிடவேண்டும் என்று சொன்ஞர்கள். என்னுடைய சொந்தக் கருத்தைச் சொல்லுகிறேன். தமிழ்நாடு பிரிந்து தனி நாடாகத்தான் இருக்கவேண்டுமென்று நாம் முடிவு செய்தால் இந்தி படிக்க வேண்டிய அவசியமே இல்லை. இன்றைக்கு இருக்கக்கூடிய அளவில் சர்க்காரின் கொள்கை என்ன என்பதை நேற்றும் கூட சபையில் விளக்கினேன். ஒரு ஐக்கிய இந்தியா, ஒன்றுபட்ட இந்தியாதான் இருக்கவேண்டுமென்று நாம் விரும்பிஞல் ஐக்கிய இந்தியாவுக்கு ஒரு பொதுமொழி இருக்கத்தான் வேண்டும். அந்தப் பொதுமொழி இந்தியாக முடிவு செய்யப்பட்டதஞல் இந்தி மொழியை நாம் கற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும். கற்காவிட்டால் பின்ஞல் குறை சொல்லிப் பிரயோசனம் இல்லை. மத்திய அரசாங்க உத்தியோகங்கள் எல்லாம் இந்தி தெரிந்தவர்களுக்குத்தான் கொடுக்கப்படும் என்ருல் அப்போது நம்முடைய வாலிபர்கள் இந்தியைக் கற்காத காரணத்தால் அந்த உத்தியோகங்களுக்குப் போகக்கூடிய தகுதியையே இழந்துவிடுகிருர்கள். ஆங்கிலம் படித்தால்தான் உத்தியோகம் என்னும் போது ஆங்கிலம் படிக்காதவர்கள் உத்தியோகத்திற்குப் போக முடியாது திண்டாடியதைப்போன்ற நிலைமை உண்டாகிவிடும். இதே நிலைமையை உண்டாக்க யாராவது விரும்பிஞல் இந்தியைக் கற்கவேண்டாம் என்பதாகக் கிளர்ச்சி செய்யலாம். நாம் ஐக்கிய இந்தியாவின் ஒரு உறுப் பாகத்தான் இருக்கவேண்டுமென்று முடிவு செய்துவிட்டால் நிச்சயமாக இந்தியைக் கற்கத்தான் வேண்டும். ஐக்கிய இந்தியாவில் ஒரு உருப்பாக இருக்கும் வரையில் இந்தியைக் கற்க வேண்டாம், படிக்கவேண்டாம் என்று சொல்கிறவர்கள் வருங்காலச் சந்ததிகள் மத்திய சர்கார் உத்தியோகத்திற்கு போகமுடியாத ஒரு சூழ்நிலையை உண்டாக்கிவிடுகிருர்கள் என்பதை மறுக்கமுடியாது. சபை எப்படி முடிவு செய்தாலும் அதை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். பொதுவாக இந்தியை எதிர்கிறவர்கள் தமிழ் மொழிக்கு உதவி செய்கிறவர்களாக நினைக்கிருர்கள். என்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்ல விரும்புகிறேன். கூடிய சீக்கிரம் அவர்களே உணர்வார்கள். "தமிழர்களுக்கு, தமிழ் மொழிக்கு அவர்கள் பெரிய அநீதியை இழைத்தவர்களாகத்தான் ஆவார்கள்" என்பதை என்ஞல் நிச்சயமாகச் சொல்ல முடியும்.

Sri A. Govindasamy rose.

MR. SPEAKER: The Hon. Minister is not yielding.

THE HON. SRI C. SUBRAMANIAM: மொழியின் மூலமாக உணர்ச்சியை வெகு சுலபமாக தட்டிவிடமுடியும். "இந்தி மொழி நமக்கு வேண்டாம், வடநாட்டு ஆதிக்க மொழி அது" என்றெல்லாம் நம்முடைய வாலிபர்களிடத்திலே சொல்லி, இந்தியைக் கற்பதன் மூலம் தமிழ் அழிந்துவிடும் என்பதாகச் சொன்ஞல் அவர்கள் நிச்சயமாக உணர்ச்சி வசப்பட்டு இந்தி வேண்டாம் என்று கற்காமல் விட்டுவிடக்கூடும். அது நன்மையா?



அப்படி அவர்களுடைய உணர்ச்சியை கிளப்பி விடலாமா? என்பதை பொறுப்புள்ள நாம்தான் யோசித்துப் பார்க்கவேண்டும். நல்லது எது, தீயது எது என்பதை உணர்ந்து நல்லதை எடுத்துச் சொல்வதஞல் சில பேர்களுடைய விரோதம் மனக்கசப்பு ஏற்பட்டாலும் கூட அதைப் பொருட்படுத்தாமல் நல்லதையே எடுத்து வலியுறுத்த வேண்டிய கடமை யுள்ளவர்களாகிய நாம் அந்த வகையில் செய்யாவிட்டால் மக்களிடத்தில் எதைச் சொன்ஞல் கைத்தட்டுகளைப் பெறலாம், அவர்களுடைய ஆதரவைப் பெறலாம், என்பதாக சுயநலத்தோடு எண்ணிக்கொண்டு சொன்னவர்களாகவே நாம் ஆவோம். இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையில் இந்தியை நாம் கற்றுக்கொள்ளவேண்டாம் என்று சொன்ஞல் நல்லதைச் சொல்லாமல் சுயநலத்தோடு சொன்னவர்களாக வருங் காலச் சந்ததிகளுக்குத் தீமை விளைவிக்கும் கருத்தை சுயநலத்தோடு சொன்னவர்களாகத்தான் ஆவோம் என்பது என்னுடைய அபிப்பிராயம். இதை யோசித்துப் பார்க்கவேண்டும் என்று சொல்லி விட்டு விடுகிறேன்.

அடுத்தபடியாக கல்லூரிகளைப்பற்றி பல அங்கத்தினர்கள் பேசிஞர்கள். இன்றைக்குக் கல்லூரிகள் அதிகம் இருக்கின்றன. முன்பு தஞ்சாவூரிலே ஒரே ஒரு கல்லூரிதான் கும்பகோணத்தில் இருந்தது. இப்போது ஐந்து கல்லூரிகள் தஞ்சை ஜில்லாவில் இருக்கின்றன. இன்றைக்குக் கேள்விப்பட்டேன் ஒரு கல்லூரியை இந்த மாதம் ஆரம்பிக்கலாமா, செப்டம்பரில் ஆரம்பிக்கலாமா, என்பதாகவெல்லாம் யோசித்துக்கொண்டு இருக்கிருர்கள். என்ன காரணம்? மாணவர்கள் இன்னும் வந்துசேரவில்லை. பொதுவாக இன்றைக்கு மாணவர்களுடைய மனேபாவம் எப்படி இருக்கிறது என்ருல் எல்லோரும் லயோலா காலேஜில் சேரவேண்டும் என்று விரும்புகிருர்கள். கிரிஸ்டியன் காலேஜில் விண்ணப்பம் போடுகிருர்கள். காரணம் சில காலேஜ்களுக்கு ஒரு சிறப்பும் பெருமையும் ஏற்பட்டிருக்கின்றன. அதை மறுக்கவில்லை. எல்லோரும் ஒரு காலேஜுக்கே விண்ணப்பம் போட்டுக்கொண்டு இடம் கிடைக்கவில்லை என்று திண்டாடுகிருர்கள் என்பதற்குச் சொல்கிறேனே ஒழிய பல இடங்களில் பல கல்லூரிகள் திறக்கப்பட்டிருக்கின்றன. கல்லூரிகள் போதாது என்று சொல்ல முடியாது.

இன்றைக்கு அவர்களுக்கு வேண்டிய கல்லூரிகளில் இடம் கிடைக்கவில்லை என்பதுதான் பிரச்னை. திருநெல்வேலியிலிருப்பவர்கள்கூட சென்னையில் உள்ள லயோலா கல்லூரியில் சேரவேண்டும் என்று சொல்லுகிருர்கள். தஞ்சையில் உள்ளவர்கள், அங்கே எத்தனையோ கல்லூரிகள் இருந்தும், சென்னையில் உள்ள கல்லூரிகளில் இடம் இல்லாமல் இருந்தால்தான் அங்கே போய் சேருகிருர்கள். போதுமான கல்லூரிகள் ஆரம்பித்து வைத்து இருக்கிறேம். அந்த கல்லூரிகளில் அவைகளுடைய தரத்தை எப்படி உயர்த்தவேண்டும் என்பதைத்தான் இன்று நாம் யோசிக்கவேண்டிய கட்டத்தில் இருக்கிறேம். எவ்வளவுக்கெவ்வளவு கல்லூரி படிப்பில் தரத்தை உயர்த்துகிறேமோ அவ்வளவுக்கவ்வளவு கீழ் படியிலுள்ள மற்ற படிப்புகளில் தரம் உயரும். ஆகையால்தான் கல்லூரி படிப்புக்கு இன்றைக்கு முக்கியத்துவம் காட்டி வருகிறேம். கீழே இருப்பவர்களுக்கு படிப்பு சொல்லி கொடுப்பதற்கும் மற்ற விவகாரங்களை நடத்துகிறவர்களுக்கும் அது அவசியமாகிறது. இன்றைக்கு கல்லூரிகளில் தரத்தை உயர்த்துவது எப்படி என்பதுதான் முக்கியமான பிரச்னை. நல்ல ஆசிரியர்கள் கிடைப்பதில்லை. அதற்கு முக்கிய காரணம், ஊதிய குறைவு தான். நன்ருக படித்துப் பட்டம் பெற்றவர்கள் முதலிலேயே ஆசிரியர்களாக வேலை புரிய வருவதில்லை. அதற்கு காரணம் ஊதிய குறைவும் மதிப்பு இல்லாமையும். ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ் முதலியவைகளுக்கு மனு செய்து பார்த்து விட்டு அவை ஒன்றும் கிடைக்காமல் போஞல்தான் ஆசிரியர் தொழிலுக்கு வருகிருர்கள். இந்த நிலைமையை மாற்றி அமைக்க வேண்டும். கல்லூரிகளிலேயே அதிகமாக செலவழிப்பதற்கு பதிலாக ஆரம்ப பள்ளியிலே அதிகம் செலவழிக்க வேண்டும் என்று சிலர் நினைத்தாலும் கூட, கல்வி தரத்தை உயர்த்துவதற்கு அந்த ஆசிரியர்கள் சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்ற கருத்தை டாக்டர் தேஷ்முக் அவர்கள் கூட சமீபத்தில் பேசும்போது உணர்த்தி இருக்கிருர்கள்.

[Sri C. Subramaniam] [17th July 1957

Pre-University சம்பந்தமான recordகளை பார்த்தபொழுது சில முக்கியமான கஷ்டங்கள் ஏற்பட்டு இருப்பதை நான் பார்த்தேன். இப்பொழுது தொழில் கல்லூரிகளில் சேருவதற்கு Pre-professional course என்று வைத்திருக்கிறோம். அதற்கு விண்ணப்பங்கள் போடவேண்டும் என்ற விஷயம் பலருக்கு தெரியவில்லைபோல் இருக்கிறது. ஆகையால் அதற்கு போதுமான அளவு விண்ணப்பங்கள் வரவில்லை. சென்ற வருஷம் இன்டர்மிடியட் பாஸ் செய்தவர்கள் ஒரு ஸ்தானத்திற்கு இரண்டு மூன்று பங்காக விண்ணப்பங்கள் போட்டிருந்தார்கள். அந்த நிலைமை இப்போது இல்லை. Pre-professional course என்பது ஒன்று இருக்கிறது பலருக்கு தெரியவில்லை. இன்ஜினீயரிங் கல்லூரிக்கும், Veterinary college-க்கும் பல ஜில்லாக்களிலிருந்து போதுமான அளவு விண்ணப்பங்கள் வரவில்லை. அக்ரிகல்ச்சர் கல்லூரிக்கும் போதுமான விண்ணப்பங்கள் வரவில்லை. இந்த நிலைமையை யோசித்துப் பார்க்கவேண்டிய அவசியம் இருக்கிறது. என்ன நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று யோசித்துக்கொண்டுதான் இருக்கிறோம். Pre-professional course ஆல் அல்ல சில கஷ்டங்கள் ஏற்பட்டு இருக்கிறது. இதை ஆராய்ந்து கொண்டுதான் இருக்கிறோம். ஆராய்ச்சி செய்து பார்க்கும்போது எவ்வளவு கஷ்டங்கள் இருக்கின்றன என்பது மேலும்மேலும் வலியுறுத்தப்படுகிறது. ஆனால் முடிவு செய்தாகிவிட்டது. அந்த முடிவு ஏற்பட்டுவிட்ட பிறகு, கஷ்டங்களை எப்படி நீக்குவது என்பதைப் பற்றி சர்க்கார் ஆலோசனை செய்துகொண்டு வருகிறார்கள். அப்படி நீக்கும் முறையில் தரத்தை உயர்த்துவதற்கும் படிப்பை நல்ல முறையில் சொல்லி கொடுப்பதற்கும் வேறு வழி ஏற்படுத்தலாமா என்று ஒரு திட்டத்தை ஆலோசனை செய்துகொண்டு இருக்கிறோம். இந்த திட்டத்தை முடிவுசெய்து சபைமுன் உங்கள் விவாதத்திற்கு வைக்கப்படும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அநேகமாக இங்கு சொன்ன எல்லாவற்றிற்கும் ஓரளவு பதில் சொல்லி இருக்கிறேன் என்று நினைக்கிறேன். சில நுணுக்மான விஷயங்களுக்கு பதில் சொல்லாமல் இருக்கலாம். அவைகளை ஆராய்ந்து பார்த்து இன்னும் கல்வி தரத்தை உயர்த்த தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

கல்வி தரத்தை உயர்த்தவேண்டு மென்றும் சிறந்த முறையில் சேவை செய்ய வேண்டுமென்றும் கல்வி துறையில் வேலை செய்து வருகிறவர்கள் எல்லோரும் உணர்ந்து இருக்கிறார்கள். நல்ல முறையில் அவர்கள் வேலைசெய்து கொண்டு வருகிறார்கள். அதனால்தான் இத் துறையில் இவ்வளவு பெருக்கம் ஏற்பட்டுள்ளது. கல்வி துறையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்றால் மந்திரிகள் அதற்கு முக்கிய காரணமல்ல. அவர்கள் கொள்கைகளை வகுக்கிறார்கள் ; ஆனால் இன்று ஏற்பட்டு இருக்கிற முன்னேற்றத்திற்கு முக்கிய காரணம் கல்வித்துறையில் இருக்கிற அதிகாரிகள் எல்லோரும் நல்ல மனப்பான்மையுடன் சேவை செய்து கொண்டு வருகிறார்கள். இதுவரையில் ஆதாரக் கல்வியை தனிப்பட்ட நபர்கள் கவனிக்க வேண்டியது என்று ஒதுக்கி வைத்து இருந்தோம். இன்றைக்கு நிலைமை அப்படி அல்ல. டைரக்டர் அவர்களே பொறுப்பாளியாக பங்கு எடுத்துக்கொண்டு வேலைசெய்து வருகிறார்கள். முன்பெல்லாம் நமது ராஜ்யத்தை இரண்டாகப் பிரித்து இரண்டு அதிகாரிகளை நியமித்து அவர்களை இந்த முறையை மேற்பார்க்கும்படி செய்திருந்தோம். இன்றைக்கு அப்படி இல்லாமல் District Educational Officers எல்லோருக்கும் ஆதாரக்கல்வி பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது. அந்த பயிற்சி நடந்துக்கொண்டிருந்தபோது அதை பார்த்துவிட்டு என்னிடம் வந்து அந்த அதிகாரிகளுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய மன மாற்றத்தை பற்றி சொன்னபொழுது நான் மிகவும் பெருமைப்பட்டேன். வயது முதிர்ந்தவர்களும் கூட இந்த பயிற்சிக்கு சென்று, காலையில் நான்கு, ஐந்து மணிக்கு எழுந்து வெயிலையும் பாராமல் வேலை செய்யவேண்டும் என்ற அடிப்படையில் நல்ல பயிற்சி பெற்று நல்ல மனப்பான்மையை வெளிப்படுத்தினார்கள் என்பதை கேள்விப்பட்டபொழுது நான் மிகவும் சந்தோஷப்பட்டேன். இந்த சபையும் அதைப்பற்றி பெருமைப்படும் என்று நினைக்கிறேன். இந்த நல்ல சேவையை செய்யக்கூடிய அதிகாரிகளும் ஆசிரியர்களும் எவ்வளவுக்கெவ்வளவு சிறந்தவர்களாக இருக்கிறார்களோ



17th July 1957] [Sri C. Subramaniam]

அவ்வளவுக்கவ்வளவு கல்வி தரம் உயரும். அதற்கு மேலாக ஆசிரியர்களுக்கு புதிய வாழ்வும் புதிய மதிப்பும் கொடுப்பதற்கு சபையிலுள்ளவர்கள் முன்வரவேண்டும். மேன்மேலும் புதிய மதிப்பும் புதிய உற்சாகமும் அவர்களுக்கு ஏற்படுத்தி அதன் மூலம் நல்ல உயர்ந்த கல்வி, ஒழுக்கம்தரும் கல்வி, ஆக்கம் தரக்கூடிய கல்வி நம் நாட்டில் வளரவேண்டும் என்று பிரார்த்தித்து இந்த மான்யத்தின் கீழ் இன்னும் அதிகமான தொகை ஒதுக்கப்பட வேண்டுமென்று எல்லோரும் சொல்லியிருப்பதால் சம்பிரதாயப்படி இந்த மான்யத்தின் கீழ் கோரப்பட்ட தொகையை குறைக்கவேண்டும் என்று பிரேரேரிக்கப்பட்ட வெட்டுப் பிரேரணையை வாபஸ் வாங்கிக்கொண்டு இந்த மான்யத்தை ஏக மனதாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**Sri K. ANBAZHAGAN :** Sir, on a point of information. கல்வி நிதி அமைச்சர் அவர்கள் இந்தியை பயின்று கொண்டால்தான் எதிர்காலத்தில் வேலை கிடைக்கும் என்றும் ஆங்கிலத்தை பயிலாதவர்களுக்கு வேலை கிடைக்காமல் போனதுபோல இந்தியை பயிலாதவர்களுக்கும் வேலை கிடைக்காமல் போகலாம், என்றும் தெரிவித்தார்கள். அப்படியானால் ஆங்கிலம் போல் இந்தியும் ஒர் ஆதிக்க மொழி என்று அமைச்சர் ஒப்புக் கொள்ளுவார்களா ?

ஓராசிரியர் பள்ளிகளில் ஆசிரியர்களாக இருப்பவர்கள் பயிற்சிபெற்றிருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்கள். பயிற்சிபெறும் காலத்தில் பல இடையூறுகள் ஏற்படுவதினாலும் அதனால் அவர்களுடைய வாழ்க்கை நடத்தமுடியாமல் அவதிக்கு ஆளாகி இருக்கிறார்கள் என்ற காரணத்தினாலும் அவர்களுக்கு தக்க ஊதியம் தரப்படுமா என்கின்ற எதிர் கட்சி உறுப்பினர்களின் கேள்விக்கு விடையும், அதேபோல் செங்கல்பட்டு மாவட்டத்தில் தொழில் துறை ஆசிரியர்களுக்கு ரூபாய் பத்து வழங்கப்படுகிற இந்த முறையை மாற்றுவதற்கு கல்வி அமைச்சர் அவர்கள் ஏதாவது விளக்கம் தருவாரா என்றும் அறிய விரும்புகிறேன்.

**Sri T. P. ELUMALAI :** On a point of order. கனம் நிதி அமைச்சர் பதில் அளித்த பிறகு ஒரு அங்கத்தினர் ஒழுங்கு பிரச்னையை எழுப்பலாமா ?

**Mr. SPEAKER :** கனம் அங்கத்தினர் அன்பழகன் கேட்டது point of order அல்ல point of information தான்.

**The Hon. Sri C. SUBRAMANIAM :** முதலிலே இந்தியைப் பற்றி என் அபிப்பிராயத்தை சொன்னேன். நம் நாட்டின் அரசியலமைப்பை வட நாட்டு ஆதிக்கம் என்று நினைக்கிறவர்கள் இதை ஆதிக்க மொழி என்று எடுத்துக்கொள்ளலாம். அதனால் நாம் எல்லோரும் பாரத தேசம் ஒன்று என்று நினைக்கின்றவர்கள் இதை நம் நாட்டு மொழியாக எடுத்துக் கொள்ளலாம். (கரகோஷம்.)

இன்று எஸ்.எஸ்.எல்.ஸி. படித்துவிட்டு, பயிற்சிக்குப் போகிறவர்களுக்கும், இவர்களுக்கும் ஒரேமாதிரியாக 18 ரூபாய் தான் ஸ்டைபண்டு கொடுக்கப்படுகிறது. இவர்கள் நான்கு ஐந்து வருஷங்கள் ஆசிரியராகப் பணியாற்றிவிட்டுப் பயிற்சிக்குப் போவதால் இவர்கள் விஷயத்தில் ஏதாவது கஷ்டம் இருக்குமானால் அதைப் பரிசீலனை செய்து பார்த்தபிறகே என்ன செய்யலாம் என்று சொல்லமுடியும். முடிவாக எதையும் எடுத்துக் கொள்ளக்கூடாது.

இன்றைக்கு Craft instructors களுக்கு பத்து ரூபாய் தரப்படுவதாக சொன்னார்கள். இவர்கள் வேலை எப்படி, எவ்வளவு நேரம் வேலை செய்ய வேண்டுமென்று உடனடியாகச் சொல்ல என்னிடம் புள்ளி விவரம் இல்லை. ஆனால் part-time craft instructors களுக்குத்தான் பத்து ரூபாய் கொடுக்கப்படுகிறது. Full-time craft instructors களுக்கு குறிப்பிட்ட

[Sri C. Subramaniam] [17th July 1957

அளவு கொடுக்கப்படுகிறது. நான் கல்வி மந்திரியாக இருந்தாலும் இந்தச் சம்பள விகிதம், வேலை நேரம் போன்ற எல்லாவற்றையும் மனதில் வைத்திருக்கமுடியாது. விவாதத்தில் நான் பல விஷயங்களுக்குப் பதில் சொல்லாவிட்டாலும் அவை எல்லாவற்றையும் பின்னர் கவனிக்கிறேன். அங்கத்தினர்கள் தனித்தனியாக எந்த விஷயத்தைப்பற்றி எழுதினாலும் நான் அதை கவனித்து உறுதியாகப் பதில் அளிப்பேன்.

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் ஸ்ரீ எம். பி. சுப்ரமணியம் அவரது வெட்டுப் பிரேரணையை வாபஸ் வாங்கிக்கொள்ளுகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

SRI M. P. SUBRAMANIAM : இல்லை, வற்புறுத்துகிறேன்.

MR. SPEAKER : The question is—

"That the allotment of Rs. 11,73,63,100 under Demand No. XV—Education be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

MR. SPEAKER : I now put the main motion to the vote of the House. The question is :

"That the Government be granted a sum not exceeding Rs. 11,73,63,100 under Demand No. XV—Education."

The Demand was put and carried and the Grant was made.

(2) DEMAND XVI—MEDICAL—RS. 4,03,74,300.

(3) DEMAND XVII—PUBLIC HEALTH—RS. 95,98,200.

(4) DEMAND XXXVII—CAPITAL OUTLAY ON PUBLIC HEALTH—RS. 1,44,79,400.

MR. SPEAKER : The Demands to be taken up now are Medical, Public Health, and Capital Outlay on Public Health. The time allowed for the discussion of these Demands is three hours. There will be discussion for two hours to-day and one hour to-morrow. We have already spent twenty minutes more. Is it the desire of the House that we should sit twenty minutes more after 2 o'clock or is it the desire of the House to reduce the time by 20 minutes.

SRI M. P. SUBRAMANIAM : We can have these 20 minutes to-morrow.

MR. SPEAKER : That will have repercussions on other Demands. The House must decide whether the time-limit must be cut by 20 minutes or it should sit for twenty minutes more after 2 p.m. I should like to have the decision of the House. If I am unable to provide twenty minutes more, the House must be satisfied with one hour to-morrow.

THE HON. SRI C. SUBRAMANIAM : In the Question-hour to-morrow, there may be some time available. We will take the chance.



17th July 1957]

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 4,03,74,300 under Demand No. XVI—Medical."

On the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 95,98,200 under Demand No. XVII—Public Health."

On the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,44,79,400 under Demand XXXVII—Capital Outlay on Public Health."

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் சபாநாயகர் அவர்களே, சில விவரங்களை நான் முன்னுலேயே எடுத்துச் சொன்னல், கனம் அங்கத்தினர்கள் இந்த மானியத்தைக் குறித்துப் பேசும்போது அவை அவர்களுக்கு மிகவும் உபயோகமாக இருக்கும் என்று எண்ணி நான் இப்போது அந்த விவரங்களை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

1956–57-ம் வருஷத்திற்கு முன்பு கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரிகளின் மொத்தப் படுக்கை அளவு (பெட் ஸ்ட்ரெங்த்) 11,888 ஆக இருந்தது. அது 1956–57-ல் 12,238 ஆக அதிகரிக்கப்பட்டது. இந்த வருஷம் அது 12,357-ஆக ஆகும்.

ஜில்லாத் தலைநகர் ஆஸ்பத்திரிகளில் "ப்ளட் டிரான்ஸ்ப்யூஷன்"-க்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எல்லா சர்க்கார் ஆஸ்பத்திரிகளிலும் அதற்கு வசதி இருக்கிறது. இந்த வருஷம் இந்த ஏற்பாட்டைத் தாலுகா தலை நகர் ஆஸ்பத்திரிகளுக்கும் விஸ்தரிக்கும் உத்தேசத்தோடு நடவடிக்கை எடுக்கப்படும். கும்பகோணம், கூனூர் ஆஸ்பத்திரிகளுக்கும் இந்த வசதி செய்து கொடுக்கப்படும். இது வரையில் இரத்த தானம் கொடுப்பவர்களுக்கு 5 ரூபாய் கொடுக்கப்பட்டு வந்தது. அந்தத் தொகை குறைவாக இருப்பதால் அது 7 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் குறைந்தது 50 நோயாளிகளுக்காவது இடம் இருக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு வேண்டிய வைத்திய வசதிகளுக்கும், ரண சிகிச்சை வசதிகளுக்கும் ஏற்பாடு செய்யப்படும்.

இப்போது ஆங்காங்கு "ப்ரைமரி ஸெண்டர்ஸ்" என்ற ஆஸ்பத்திரிகள் திறக்கப்பட்டு வருகின்றன. இந்த வருஷம் சுமார் 34 இடங்களில் ப்ரைமரி ஸெண்டர்ஸ் ஏற்படுத்தப்படும். ஒவ்வொரு ப்ரைமரி ஸெண்டரிலும் ஒரு வைத்தியரும், ஒரு சுகாதார இன்ஸ்பெக்டரும், நான்கு மருத்துவ உதவியாளர்களும், ஒரு பார்மஸிஸ்டும், இதர சிப்பந்திகளும் இருப்பார்கள். ஒவ்வொரு ப்ரைமரி ஸெண்டருக்கும் ஒரு ஜீப் காரும் உண்டு. அந்த ஜீப் காரின் மூலம் பக்கத்திலுள்ள கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள மக்களுக்கு வைத்திய உதவி அளிக்கிறார்கள்.

வைத்தியத்தில் "போஸ்ட் கிராஜுவேட்" படிப்புக்கு இப்போது சென்னையில் இருக்கும் வைத்தியக் கல்லூரிகளில், ஏற்கனவே மூன்று டிபார்டுமெண்டுகளில் "அப்கிரேட்" செய்து வசதி செய்யப்பட்டிருக்கிறது. அவை Department of Obstetrics and Gynaecology-யும், Department of Anantomy-யும் Department of Venereology-யும் ஆகும். ரேடியோலஜி டிபார்ட்மெண்டையும் "அப்கிரேட்" செய்து அதில் உயர்தரப் படிப்பிற்கு வசதிசெய்து கொடுக்கப்படும். Social and Preventive Medicines படிப்பிற்கும் வசதி செய்து கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

[Sri M. A. Manickavelu] [17th July 1957

மதுரை வைத்தியக் கல்லூரி சமீபகாலத்தில்தான் திறக்கப்பட்டது. அங்கே இப்போது எல்லா வசதிகளும் இல்லை. அங்கே இனிமேல் காது, மூக்கு, தொண்டை ஆகிய அவையவங்கள் சம்பந்தமான நோய்களுக்கு சிகிச்சை செய்வது சம்பந்தமான டிபார்டுமெண்டுகளும், க்ஷயரோகம் போன்ற வியாதிகளின் சிகிச்சை டிபார்டுமெண்டுகளும் திறக்கப்படும் ; பல் நோய்கள் சிகிச்சை டிபார்டுமெண்டும் திறக்கப்படும்.

வைத்தியக் கல்வியை நன்முக அளிப்பதற்காக வைத்தியர்களுக்கு நல்ல பயிற்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மேல்நாடுகளில் வைத்தியம் சிறந்த முறையில் இருக்கிறது. ஆகவே அந்த நாடுகளுக்கு வைத்தியர்களை அனுப்பி தேர்ச்சிபெறச் செய்வதற்காக வருஷா வருஷம் 5 திறமையுள்ள வைத்தியர்கள் மேல்நாடுகளுக்கு அனுப்பப்படுகிறார்கள்.

வைத்தியக் கல்லூரி மாணவர்களுக்கு விடுதி வசதிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அறுநூறு மாணவர்களுக்கு விடுதி வசதி அளிப்பதற்கு இப்போது கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. இதற்கு 24 லட்ச ரூபாய் செலவாகும். மேலும், 80 ஹவுஸ் ஸர்ஜன்களுக்கு இருப்பிட வசதி அளிப்பதற்காக கட்டிடம் கட்டப்படுகிறது.

மேலும், சென்னையில் ஸைகாலஜி டிபார்டுமெண்டுக்கும், பார்மகாலஜி டிபார்ட்மெண்டுக்கும், கெமிஸ்டிரி ப்ளாக்கிற்கும் கட்டிடம் கட்டுவதற்காக, பத்தொன்பதே லட்சத்திச் சொச்சம் ரூபாய் செலவிடப்படும்.

பல் நோய் சிகிச்சைக்கு, எல்லா ஜில்லா தலைநகர் ஆஸ்பத்திரிகளிலும் இந்த ஐந்தாண்டு கால முடிவிற்குள் வசதி செய்து கொடுக்கப்படும். இந்த வருஷம், தெற்கு தஞ்சாவூர், மதுரை, பாளையங்கோட்டை, கடலூர், திருச்சி ஆகிய ஐந்து ஜில்லாக்களில் ஏற்பாடு செய்யப்படும்.

கெட்ட வியாதிகளைத் தீர்ப்பதற்கான கிளினிக்குகளுக்கு, இந்த வருஷத்தில், கடலூர், வேலூர், கோயம்பத்தூர், மதுரை, ராமனாதபுரம் ஆகிய இடங்களில் ஏற்பாடு செய்யப்படும்.

க்ஷய ரோகத்தைத் தீர்ப்பதற்காக 30 படுக்கைகளுடன் உள்ள க்ளினிக்குகளுக்கு, ஒவ்வொரு ஜில்லா தலைநகர் ஆஸ்பத்திரியிலும், இந்த ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் ஏற்பாடு செய்யப்படும்.

தண்ணீர் பரிசோதனை, உணவுப் பொருள்கள் பரிசோதனை, இரத்தப் பரிசோதனை ஆகியவைகளைச் செய்வதற்கான லாபரெடரி எல்லா ஜில்லாத் தலைநகர் ஆஸ்பத்திரிகளிலும் இருக்கவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்த லாபொரெடரிகள் திருநெல்வேலியிலும், வேலூரிலும் ஏற்கெனவே திறக்கப்பட்டிருக்கின்றன ; சேலத்திலும், தஞ்சாவூரிலும் கூடிய சீக்கிரம் திறக்கப்படும்.

குடும்பக் கட்டுப்பாடு ஒரு பெரிய பிரச்சனையாக இருக்கிறது. இந்த விஷயத்தில் நமது ராஜ்யம்தான் ரொம்ப முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்று மத்திய அரசாங்கத்தார் சொல்கிறார்கள். இந்த வருஷத்தில், நகரங்களில் 9 இடங்களிலும், கிராமாந்தரங்களில் 74 இடங்களிலும் குடும்பக் கட்டுப்பாடு க்ளினிக்குகளுக்கு ஏற்பாடு செய்யப்படும்.

நம் மாகாணத்தில் " Family Planning Board " என்ற ஒரு குழு இருக்கிறது. அது எப்படி எந்த விதமாக காரியங்களைச் செய்யவேண்டும் என்று ஆராய்கிறது. ஜனங்களுக்கு பிரசாரம் செய்வதற்காக ஆங்கிலத்திலேயும் தமிழிலேயும் ஒரு புத்தகம் வெளியிடப்பட்டிருக்கிறது. அங்கத்தினர்களுக்கு அது கிடைத்ததோ, இல்லையோ என்பது தெரியாது. அங்கத்தினர்களுக்கு அது வேண்டுமென்றால் அதை அவர்களுக்கு கொடுக்க ஏற்பாடு செய்கிறேன். இந்த விஷயத்திலே பயிற்சி கொடுப்பதற்கு சென்னையிலேயே ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன.

மத்திய அரசாங்கம் பம்பாயில், குடும்ப கட்டுப்பாடு விஷயமாக நல்ல முறையில் பயிற்சி கொடுப்பதற்காக ஒரு பள்ளிக்கூடம் ஆரம்பிக்க போகிறார்கள். அதில் டாக்டர்களுக்கு சிறந்த முறையில் பயிற்சி கொடுக்கப்படும்.



17th July 1957] [Sri M. A. Manickavelu]

" நர்சிங் " இதை நல்ல வகையிலேயே இன்னும் நல்ல மாதிரியாக அவர்கள் வேலை பார்ப்பதற்கு அவர்களை மேற்பார்வை பார்ப்பதற்கு எட் நர்ஸ் வார்டனாக நியமித்து அவர்களுடைய பணியை இன்னும் நல்ல வகையிலேயே செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

ஒவ்வொரு வருஷத்திலும் அதிகப்படியாக 29 நர்ஸ்கள் எடுத்து அவர்களுக்கு புதிய முறையில் " டிரெயின்ங் " கொடுப்பதற்கு ஏற்பாடாகிக் கொண்டிருக்கிறது. இதுவும் அல்லாமல் " ஆக்ஸிலியரி நர்ஸ் " என்று பிரசவம், மற்ற விஷயங்களில் சிறந்த பயிற்சி கொடுக்க வருஷத்துக்கு 30 பேராக எடுக்க ஒரு திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மற்றும் " Public Health with Basic Nursing " என்பதில் வருஷத்திற்கு 12 நர்ஸ்களுக்கு பயிற்சி அளிக்க ஏற்பாடு ஆகிக்கொண்டிருக்கிறது. " Refresher Course " என்ற வகையில் நர்ஸ்களுக்கு புதுப்புது முறையில் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது.

நம் நாட்டு வைத்திய முறை இருக்கக்கூடிய கல்லூரிகளில் சில முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அங்கு தற்கால முறையில் ஒரு " லாபரெட்டரி " ஏற்பாடாகியிருக்கிறது. " எக்ஸ்ரே டையக்னாஸ்டிக்ஸெட் " ஒன்று கொடுக்கப்பட்டிருக்கிறது. " பேதாலஜி, பிஸியாலஜி " டிபார்டுமெண்டுகள் ஏற்படுத்த ரூ. 1,25,000 யில் கட்டடம் கட்ட ஏற்பாடாகியிருக்கிறது. அதோடு " Medico-Legal " என்ற விஷயத்தைப் பற்றியும் " Preventive Social Medicine " என்ற விஷயத்தைபற்றியும் அங்கு சொல்லிக்கொடுக்கப்படும். " House Surgeons " அந்தக் கல்லூரியில் இது வரையில் இல்லை. அதற்கும் இப்பொழுது ஏற்பாடாகியிருக்கிறது. " Post-Mortem செய்து Certificate " கொடுக்கவும் அவர்களுக்கு இப்போது உரிமை ஏற்பட்டிருக்கிறது. " Employees State Insurance Scheme " என்று ஒன்று ஏற்படுத்தி நம் ராஜ்யத்தில் 8 இடங்களில் அந்த மாதிரியான " டிஸ்பென்ஸரிகள் " இருக்கின்றன. மதுரையில் 6, விக்கிரமசிங்கபுரத்தில் 1, தூத்துக்குடியில் 1 அம்பாசமுத்திரத்திலும், ' பாபநாசத்திலும் ', " பார்ட் டைம் " டாக்டர்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்கள். ஆஸ்பத்திரி வசதி பெறுவதற்காக, ஆஸ்பத்திரிகளில் அவர்களுக்கு இடம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. குறிப்பாக மதுரை மிஷின் ஆஸ்பத்திரியிலும், தூத்துக்குடி, அம்பாசமுத்திரம், பாளையங்கோட்டை முதலிய சர்க்கார் ஆஸ்பத்திரிகளிலும் இம்மாதிரியான இன்ஷூரன்ஸ் தொழிலாளர்களுக்கு வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சென்னையில் " Mobile Van Dispensary " ஏற்படுத்தி தொழிலாளர்கள் வசிக்கும் இடத்திலேயே போய் வைத்திய வசதி செய்து கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இது வரை வைத்தியத் துறையைப் பொறுத்தது.

சுகாதாரத் துறையில் பிற்போக்கான பிராந்தியங்கள் என்று சொல்லப்படும் 19 இடங்களில் 1956-ஆம் வருஷத்தில் " Maternity and Child Welfare Centres " திறக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஐந்து ஆண்டு திட்டத்தில் 480 இடங்களில் இம்மாதிரியான " Maternity and Child Welfare Centres " ஏற்படுத்தப்படவேண்டும். 1956-57ல் 96 இடங்களில் ஏற்கனவே திறக்கப்பட்டிருக்கின்றன். 1957-58-ல் மற்றும் 96 இடங்களில் " Maternity and Child Welfare Centres " திறக்கப்படும். அதோடு " Health Visitors "க்கும் " தாய் " அல்லது " தாதிகளுக்கும் " சிறந்த பயிற்சி கொடுப்பதற்கும் ஏற்பாடு ஆகியிருக்கிறது. மாணவர்களின் தேக நிலையை பரிசோதனை செய்வதற்கு " Medical Inspection " ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. " Medical Inspection "க்குப் பிற்பாடு அவர்களை கண்காணிப்பதற்கு வசதிகள் ஏற்பாடாகியிருக்கின்றன. இதற்காக இந்த திட்ட காலத்தில் 7½ லட்சம் ரூபாய் செலவு செய்வதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1957-58-ல் இதற்காக 10 இடங்களில் சென்டர்கள் ஏற்பாடாகும்.

" மலேரியா " வை தடுப்பதற்கு இப்பொழுது 10,705 சதுர மைல் விஸ்தீரணத்தில், 27 லட்சம் ஜனங்களுக்கும் பிரயோசனப்படும்படியாக வேலை செய்யப்பட்டு வருகிறது. அதோடு " Filaria " வை தடுப்பதற்கு 6 இடங்களில்

[Sri M. A. Manickavelu] [17th July 1957

நிர்ணயித்து சுமார் 16 லட்சம் ஜனங்களுக்கு வசதி செய்து கொடுப்பதற்கு ஏற்பாடாகியிருக்கிறது. "Anti-Filarial Scheme"ல் 71 திட்டங்கள் இருக்கின்றன. இவைகளை எல்லாம் நிறைவேற்றினால் "Filaria" வையே நம் நாட்டிலிருந்து நிவர்த்திக்கலாம் என்று நினைக்கிறேன்.

"Orientation Training Centre" என்ற பிரிவு பூனமல்லியில் இருக்கிறது. "Environmental Sanitation" என்ற முறையில், கிராமங்களை சுகாதாரமாகவும் சுத்தமாகவும் வைத்துக்கொள்ளுவதற்கு பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது.

மூன்றாவது டிமாண்ட் "Capital Outlay" என்று சொன்னேன். பைப்புகள் வாங்கி Stock "ரிசர்வ்" செய்வதற்கும், கிராமங்களில் குடி தண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்கும் இந்தப் பணம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. 10,000 ஜனத்தொகை உள்ள கிராமங்களில் "Rural Water-Supply" வசதி செய்ய திட்டம் இருக்கிறது. கிராமங்களில் பல வகைகளில் குடி தண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்கு ஏற்பாடாகிக்கொண்டிருக்கிறது. இவை பின் வருமாறு :—

(1) "Bore Wells".

(2) கிணறு வெட்டி தண்ணீரை மேலே "ஓவர்ஹெட் டாங்குகளுக்கு" பம்ப் செய்வது.

(3) ஏற்கனவே தண்ணீர் இருந்தால், அந்த இடத்திலிருந்து தண்ணீர் கொண்டு வருவது.

(4) கிணறு வெட்டி அதை அசுத்தமில்லாமல் பாதுகாப்பது.

இதில் ஜனங்கள் கொடுக்கவேண்டிய பகுதி 100-க்கு 25 தான். இந்த முறையில் முதல் "Plan Period"ல் 467 கிணறுகள் வெட்டப்பட்டன. 1956–57-ல் 1,721 கிணறுகள் வெட்டப்பட்டன. இரண்டாவது "Plan Period" ஒவ்வொரு வருஷத்திலும் 1,700 கிணறுகள் வெட்டுவதற்கு ஏற்பாடாகியிருக்கிறது. 68 "Composite Schemes" வேறு இருக்கின்றன. இந்த ஐந்து ஆண்டு முடிவுக்குள் பல இடங்களில் தண்ணீர் வசதி ஏற்படுத்தப்படும். "National Water Supply and Sanitation Scheme" பிரகாரம் 5,000 சில்லரை ஜனத்தொகை உள்ள கிராமங்களில், காலரா போன்ற "water-borne disease" பரவக்கூடிய பிராந்தியங்களிலே தண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்காக ரூ. 120 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அம்மாதிரி தென் ஆற்காடு, தஞ்சாவூர், திருச்சி, ராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய இடங்களில் திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. மதுரையையும் இந்தத் திட்டத்தில் சேர்க்கவேண்டுமென்றும் அதற்காக ரூ. 24 லட்சம் ஒதுக்கவேண்டுமென்றும் கேட்கப்பட்டிருக்கிறது. இம்மாதிரியான திட்டத்தின் மூலம் தண்ணீர் வசதி பெறும் மக்கள் 100-க்கு 5 விகிதம்தான் பணம் கொடுக்கவேண்டும். மீதி 95 பாகம் செலவை அரசாங்கம் அல்லது ஸ்தல ஸ்தாபனங்கள் ஏற்றுக்கொள்ளுகின்றன. 1957–58-வது வருஷத்திய பட்ஜெட்டில் இதற்காக ரூ. 20,58,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1957–58-ல் 124 கிராமங்களில் இந்த வகையிலே தண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய திட்டங்கள் இருக்கின்றன. அதோடுகூட, கார்பொரேஷனுக்கு தண்ணீர் வசதியை அதிகப்படுத்துவதற்காக மத்திய அரசாங்கம் ரூ. 125 லட்சம் கொடுக்கும். கார்ப்பொரேஷன் இன்னும் அதிகமாக, அதாவது ரூ. 160 லட்சம் வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறது. அந்த விஷயம் கடிதப் போக்குவரத்து நிலையிலே இருக்கிறது. ஆகையால் நான் சொல்லுவது என்னவென்றால், இம்மாதிரி திட்டங்களை நல்ல முறையிலே நிறைவேற்றினால் நம்முடைய நாட்டிலே சுகாதார வசதியும், வைத்திய வசதியும் நன்றாக அளிக்கப்படும் என்று நினைக்கிறேன். அதோடு கனம் அங்கத்தினர்கள் பேசுவதை உன்னிப்பாகக் கேட்டு அவைகளுக்கு பிறகு பதில் சொல்லுகிறேன்.



17th July 1957]

SRI S. B. ADITYAN : On a point of information, Sir, மந்திரி அவர்கள் பேசும்போது கெட்ட வியாதிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக சில ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்தப்போவதாகச் சொன்னார்கள். எல்லா வியாதிகளும் கெட்ட வியாதிகள்தான். குறிப்பாக எதை கெட்ட வியாதி என்று மந்திரி அவர்கள் சொன்னார்கள் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : நான் குறிப்பிட்டது என்ன வியாதி என்பதை கனம் அங்கத்தினர் தெரிந்துகொண்டிருக்கிறார். ஆனால் மற்றவர்கள் தெரிந்துகொள்ளவேண்டுமென்பதற்காக கேட்கிறார். என் மனதிலே இருந்தது venereal disease.

MR. SPEAKER : Motion moved—

"That on the recommendation of the Governor, Government be granted a sum not exceeding Rs. 4,03,74,300 under Demand No. XVI—Medical Department, Rs. 95,98,200 under Demand No. XVII—Public Health and Rs. 1,44,79,400 under Demand XXXVII—Capital Outlay on Public Health."

I understand that the Opposition Parties are united and have told me that with regard to Demand No. XVI. Medical, Srimathi Sathiyavanimuthu will move her cut motion; with regard to Demand No. XVII. Public Health, Sri Adityan will move his cut motion and with regard to Demand No. XXXVII. Capital Outlay on Public Health, Sri Karayalar will move his cut motion. I would request them to move the cut motions formally and then they may speak.

DR. (SRIMATHI) SATHIYAVANIMUTHU : Sir, I move—

"That the allotment of Rs. 4,03,74,300 under Demand No. XVI. Medical Department be reduced by Rs. 100."

SRI S. B. ADITYAN : இந்த பப்ளிக் ஹெல்த் மான்யம் ஆகிய allotment 95,98,200-ல் ரூ. 100 குறைக்க வேண்டுமென்ற தீர்மானத்தை நான் பிரேரேபிக்கிறேன்.

* SRI K. SATTANATHA KARAYALAR : I move—

"That the allotment of Rs. 1,44,79,400 under Demand No. XXXVII. Capital Outlay on Public Health, be reduced by Rs. 100."

MR. SPEAKER : The three demands and the cut motions are before the House for discussion.

DR. (SRIMATHI) SATHIYAVANIMUTHU : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, மருத்துவத் துறைக்கு கொடுக்கப்படும் மான்யத்தில் ரூ. 100 குறைப்பதற்கான இந்த வெட்டுப் பிரேரணையை பிரேரேபித்து சில வார்த்தைகள் சொல்ல முன்வந்துள்ளேன்.

(Deputy Speaker in the Chair.)

ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்ற காரணத்தினாலே நாங்கள் கொண்டுவரும் வெட்டு திருத்தங்கள் வெற்றி பெறாவிட்டாலும், நாங்கள் கருதுகின்ற நல்ல கருத்துக்களை எடுத்து அதனை செயல்முறையில் செய்து காட்டவேண்டுமென்று அமைச்சர் அவர்களை நான் மிகவும் கேட்டுக்கொள்ளுகிறேன். கேள்வி நேரத்திலே வழக்கம்போல

குறும்புத்தனமாக பதில் சொல்லுகின்ற நமது அமைச்சர் அவர்கள் நான் கொண்டுவந்திருக்கும் இந்த வெட்டுப் பிரேரணைக்கும் கேலியாக பதில் சொல்லி தட்டிக் கழிக்கக்கூடாது என்று நான் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மான்யத்தின்மீது ஏதோ பல குறைகள் இருப்பதற்காக இதைக் குறைக்கவேண்டுமென்பது அல்ல எனது நோக்கம். மருத்துவத்தை பொறுத்தவரையிலே அதிகமாக பணம் வேண்டுமென்று எண்ணம் இருந்தாலும், செய்யப்படுகின்ற செலவு இனங்கள் தேவையான செலவினங்களாக இருக்கவேண்டும் என்பது என்னுடைய விருப்பம். இன்று நாட்டிலே சாதாரணமாக கையாளப்படுகிற மருத்துவ முறைகள் மேலானதாக இருக்கிறதா, அல்லது தேவையற்ற முறையில் இருக்கிறதா

**SRIMATHI T. N. ANANDANAYAKI**: Sir, on a point of order. கனம் மெம்பர் used the word "குறும்புத்தனம்". Is it parliamentary?

**DEPUTY SPEAKER**: It is not unparliamentary. It is parliamentary.

**DR. SRIMATHI SATHIYAVANIMUTHU**: கிராமத்திலே கொடுக்கப்படுகிற சிகிச்சைமுறை ஏழை மக்களுக்கு பயன்படுகிற முறையில் அல்லாமல் இருக்கிறது என்பதை நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக்கொண்டுவர விரும்புகிறேன். கவர்னர் அவரது பேருரையை ஆதரித்து பேசிய ஆளும் கட்சியைச் சேர்ந்த அம்மையார் அவர்கள்கூட ஒரு ஆஸ்பத்திரியிலே பிறந்த குழந்தையை நாய் கவ்விச் சென்றதாக ஆதாரபூர்வமாக எடுத்துச் சொன்னார்கள். அவரே இன்றைக்கு அதற்கு அத்தாட்சி. பிறக்கின்ற குழந்தையை நாய் கவ்விச் சென்றதற்கு ஆஸ்பத்திரியில் இருக்கின்ற அதிகாரிகளின் மூலமாக வருகின்ற கவனக் குறைவும் ஒரு காரணமாக இருக்கலாம். பிறக்கின்ற குழந்தை நாய் கவ்வுகின்ற அளவுக்கு சிறியதாக இருப்பதைக்கூட அது காட்டுகிறது. அப்பேற்பட்ட சிறிய உருவத்தையும் குறைந்த எடையையும் கொண்ட குழந்தை பிறப்பதற்குக் காரணம் இன்றுள்ள தாய்மார்கள் அவ்வளவு பலஹீனர்களாக இருக்கிறார்கள் என்பதற்கு அது ஒரு அத்தாட்சியாகக்கூட இருக்கிறது. அப்பேர்பட்ட பலஹீனம் வருவதற்குக் காரணம் என்னவென்றால், நான் வேடிக்கையாகச் சொல்லுவதாக நீங்கள் நினைக்கக்கூடாது, நமது மாநிலத்திலே அதிகமாக குழந்தைகள் பிறந்துகொண்டிருக்கிறது என்று எனக்கு முன்பு பேசிய அமைச்சர் அவர்களே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். நாட்டிலே எந்தச் செல்வம் இல்லாவிட்டாலும்கூட, குழந்தைச் செல்வத்தை நமக்கு ஆண்டவன் ஏராளமாக அளித்திருக்கிறார் என்றும், அதற்கு ஆண்டவனுக்கு அஞ்சலி செய்யவேண்டும் என்றும் கூறுகிறார்கள். பெற்று எடுக்கின்றவர்கள் ஆணும் பெண்ணும்தானே தவிர, ஆண்டவன் அல்ல. தவிர, " நான் என்ன செய்வது, ஆண்டவன் அளித்த பிச்சை அல்லவா " என்று கூறுகிறார்கள். குடும்பக்கட்டுப்பாடு நடக்கவேண்டுமென்ற அந்த நல்ல நீதி அவர்களுக்குத் தெரியவில்லை. அந்த நீதியை புகட்டுவதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும். அப்படி புகட்டுகின்ற அந்த முறை நல்ல முறையாக, உண்மையிலேயே பயன்தரக்கூடிய முறையாக இருக்கவேண்டும். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் அதிகப்படியாய் இருந்தாலும், நாங்கள் சென்று நடத்துகின்ற சீர்திருத்த திருமணங்களில் மணமக்களை வாழ்த்தும் பொழுது "அதிகமான குழந்தைகளை பெற்றுக்கொள்ளாதீர்கள். சற்று தடை போடுங்கள், 2, 3, குழந்தைகளுக்கு மேல் பெற்றுக்கொள்ளாதீர்கள்" என்று மனமுவந்து வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம். காரணம், ஏழைகளுக்கு அதிகமாக குழந்தைகள் இருக்கின்றன. பணக்காரர்களுக்கு அதிகமாக குழந்தைகள் கிடையாது. காசி, இராமேசுவரம் சென்றாலும்கூட, குழந்தை இல்லாத குறைபாடு அங்கே இருப்பதைக் காண்கிறோம். வேண்டாத அளவுக்கு அதிகமாக டஜன் கணக்கில் குழந்தைகள் இங்கே இருப்பதைக் காண்கிறோம். சர்க்கார் செய்கின்ற நல்ல காரியங்களில் எதிர் கட்சியாக



இருந்தாலும் நாங்கள் ஒத்துழைப்போம். அப்பேற்பட்ட நல்ல காரியங்களுக்கு என்றும் நாங்கள் ஆதரவு தருகிறோம் என்பதை நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

சமீபத்திலே என் நினைவு சரியாக இருக்குமானால், 1955-ம் ஆண்டு ஜனவரி மாதம் 17-ம் தேதி நமது இந்தியாவின் பிரதமர் முடிசூடா மன்னர் நேரு அவர்கள் சென்னைக்கு வந்திருந்தபோது செய்த அந்த நல்லுரையில், " நாட்டிலே பல டாக்டர் தேவைப்படுகிறார்கள், ஆனால் இன்றுள்ள நிலைமையில் டாக்டர்கள் பெருகவில்லை. இன்னும் நூறு ஆண்டு காலம் ஆனாலும்கூட நாம் விரும்புகின்ற அளவுக்கு பூர்த்தி செய்ய முடியாது. எனவே, short-time course குறுகிய காலத்திலே பயிற்சி அளிக்கப்பட்ட டாக்டர்கள் தேவை. அதன் மூலம் ஓரளவுக்கு கிராமப் பகுதியில் இருக்கிற மக்களுக்கு சிகிச்சை தரமுடியும். Auxlliary Medical Service மூலமாக நம் தேவையை பூர்த்தி செய்துகொள்ள முடியும் " என்று பேசியிருப்பதாக எனக்கு நினைவுக்கு வருகிறது. இன்று இருக்கின்ற இரண்டாவது ஐந்து ஆண்டு திட்ட முறைப்படி நாம் எதிர்பார்ப்பது 90,000 டாக்டர்கள் தேவை என்று. ஆனால் 1961-ம் ஆண்டிலே கூட நாம் அந்த எண்ணிக்கையை எட்டிப் பிடிக்க முடியாது என்றும், எவ்வளவு தான் முயற்சி செய்தாலும் 82,000-க்கு மேலாக முடியாது என்றும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட புள்ளி விவரங்களில் காணப்படுகிறது. அதேபோல தாதிமார்கள் (நர்சுகள்) நாம் எண்ணுகின்ற அளவுக்கு 80,000 தேவையாக இருந்தாலும், 32,000 தான் கிடைக்குமே தவிர, அதற்கு மேல் நம்மால் ஆகாது என்று புள்ளி விவரங்களில் அவர்களே சொல்லுகிறார்கள்.

ஆகவே இப்பேர்பட்ட டாக்டர்கள், நர்ஸ்கள் இல்லாத குறையை போக்க வேண்டுமானால், இன்றைக்கு கிராமங்களில் பலவித முறைகளில் மருத்துவ பயிற்சி பெற்றவர்கள் ஏழைகளுக்கு நல்ல முறையில் உதவி புரிந்து வருகிறார்கள். அவர்களை நல்ல விதத்தில் உபயோகித்துக்கொள்ளலாம் என்று சர்க்காருக்கு சொல்லிக்கொள்ளுகிறேன். இதில் பலர் இந்திய முறைப் படியும், பலர் தமிழ்நாட்டு முறைப்படியும் மருத்துவத் துறையில் பயிற்சி பெற்று ஏழை மக்களுக்கு உதவி செய்து வருகிறார்கள். அவர்கள் பல இடங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். சமீபத்தில் பயங்கரமாக வந்த இன்புளுயென்ஸா நோய்க்கு அதிகமான முறையில் இவர்கள்தான் சிகிச்சை அளித்தார்கள் என்பதை நாம் குறிப்பாக கவனிக்கவேண்டும். சமுதாய நல திட்டத்தின்கீழும் பல ஆஸ்பத்திரிகள் நடந்து வருகின்றன. இது தவிர சில இடங்களில் சரியான விதத்தில் டாக்டர்கள் வேலை செய்வதில்லை என்று தெரிகிறது. அதாவது பெரம்பலூர் தாலூகாவில் பூலாம்பாடி கிராமத்தில் இருக்கிற குஷ்டரோக ஆஸ்பத்திரியில் இருந்த டாக்டர் சரியாக வேலை செய்யாது நான்கு மாதங்கள் கணக்கு எழுதி சம்பளம் வாங்கினார் என்ற காரணத்திற்காக அவரை வேலையிலிருந்து நீக்கப்பட்டார் என்றும், இப்போது அந்த நிலையம் மூடப்பட்டு இருப்பதாகவும், அந்த இடங்களிலுள்ள வைத்தியர்கள், அங்குள்ள மக்கள் சேர்ந்து 1957-ம் ஆண்டு மேமீ 7-ம் தேதியில் இதைப்பற்றி அமைச்சர் அவர்களுக்கு மகஜர் தந்திருந்தும் அதைப்பற்றி நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் அதை இந்த வைத்தியர்களை கொண்டு சரிவர நடத்துவதற்கு அனுமதிக்கப்படவில்லை என்றும் அவர்கள் கோரிக்கை விட்டிருக்கிறார்கள். அதற்கு அமைச்சர் அவர்கள் இதுவரை பதில் தரவில்லை என்றும் நினைக்கிறேன். இன்று " இண்டிஜினஸ் " என்ற முறையை மாற்றி " இண்டிகிரேடட் மெடிஸன்ஸ் " என்றுள்ள பயிற்சியை படித்து தேர்ச்சி பெறுகிற மாணவர்களுக்கு சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் வேலை கொடுக்கப்படுவதில்லை என்று சொல்லப்படுகிறது. அதேமாதிரி அலோபதியும் சித்தவைத்திய முறையும் ஒன்றாகச் சேர்த்து நடத்தப்படுகிற பயிற்சியில் எப்படி எம்.பி.பி.எஸ். மாணவர்களுக்கு கொடுக்கப்படுகிறதோ அதே முறையில் நடத்தப்படுகிற பயிற்சியில் தேற்சி பெற்ற மாணவர்களுக்கு அரசாங்கத்தாரால் நடத்தப்படுகின்ற ஆஸ்பத்திரிகளில் வேலை இல்லை என்று கூறிவிடுகிறார்கள். ஆகவே இந்த முறை மாற்றப்படவேண்டும் என்றும், இதற்கு அரசாங்கம் பதில்

தர வேண்டும் என்றும் அவர்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். அதே போன்று இன்று எம். பி. பி. எஸ். மாணவர்களுக்கு கொடுக்கப்படும் பயிற்சிகள் போன்று ஜி.ஸி.எம். படிக்கும் மாணவர்களுக்கு கொடுக்கப்படுவதில்லை என்ற முறை இருப்பது வருந்தத்தக்கதாகும். எம்.பி.பி.எஸ். மாணவர்கள் வருடம் ஒன்றுக்கு 240 ரூபாய் கட்டுகிறார்கள் என்றாலும், இப்போது 200 ரூபாய் வரை கட்டிக்கொண்டிருக்கிற இந்த ஜி.ஸி.எம். படிக்கும் மாணவர்களும் 240 ரூபாய் பீஸ் கட்டுவதற்கு தயாராக இருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு எம்.பி.பி.எஸ். மாணவர்களுக்கு அளித்துள்ளதைப்போல் மாணவர்கள் எண்ணிக்கைக்கேற்ற ஆசிரியர்கள் வேண்டும் என்று அந்த மாணவர்கள் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். அந்த கோரிக்கையை அரசாங்கம் கவனிக்கவேண்டுமென்று மீண்டும் மீண்டும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்ததாக ஹோமியோபதியைப்பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். அதாவது இன்று நாட்டில் ஹோமியோபதி என்றால் கடுகு போன்று மாத்திரையை மாத்திரம் கொடுக்கும் வைத்தியம்தானே என்று சிலர் எள்ளி நகையாடக்கூடிய நிலையில் இருக்கிறது. இந்த ஹோமியோபதி என்பது ஜெர்மனியில் " ஹனிமன் " என்பவர்களால் கண்டுபிடிக்கப்பட்டு இன்று உலகம் எங்கும் புகழ் பெற்று விளங்கி வருகிறது. இதையறியாமலோ அல்லது இதைப்பற்றி நன்றாக தெரிந்துகொள்ளாமலோ, தெரியாத்தனமாக இதைப்பற்றி தவறாக கூறுகிறார்கள். ரஷ்யாவைப்பார்த்து பாடம் படிக்க வேண்டும் என்று சொல்வதாக கருதக்கூடாது, அங்கு இந்த மருத்துவ முறையை குறிப்பாக ஹோமியோபதி முறையை மிகவும் சிறந்த முறையில் கையாண்டு பலவித நோய்களுக்கும் சிகிச்சை செய்து வருகிறார்கள் என்று நாம் அறிந்து கொண்டிருக்கிறோம். அலோபதியின் மூலம் கூட குணப்படாத பெரும் நோய்கள் கூட இதனால் தவிர்க்கப்படுகின்றன என்று அங்கிருந்து வருகின்ற குறிப்புகள் கூறுகிறது. எனக்கு முன்னால் பேசிய அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், பல நாடுகளுக்கும் மருத்துவ முறைகளை கண்டுபிடிப்பதற்காக பல தூதுகோஷ்டிகள் அனுப்பப்படுவதாக கூறினார்கள். நான் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன், இந்த ஹோமியோபதி முறையைப்பற்றி ரஷ்யாவிலிருந்து தெரிந்து கொள்வதற்கு இங்கிருந்து ஒருவரை அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதன் பின் இதனுடைய பெருமையை உணர்ந்தாவது இதற்கு அங்கீகாரம் அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்று மத்திய சர்க்காரிலிருந்து எல்லாவற்றையும் எதிர்பார்க்கின்ற நாம் இதற்கு அங்கீகாரம் கொடுக்கப்படாவிட்டாலும்கூட, இன்றைக்கு டெல்லி அரசாங்கத்தின் கீழ் இருக்கும் ஒரிஸா, மத்திய பிரதேசம், உத்திர பிரதேசம், வங்காளம், பீகார், டெல்லி, ஆந்திரா போன்ற மாகாணங்களில் ஹோமியோபதி முறையை சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அப்பேர்பட்ட அங்கீகாரம் இங்கும் ஆக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் இதைப்பற்றி குறிப்பாக சொல்லப்போனால் இந்த முறையை கேலி செய்பவர்கள் இதை சுலபமாக படித்துக் கொள்ளலாம் என்று எளிதாக நினைத்துவிடுகிறார்கள். இதை எல்லோரும் படித்துவிடலாம் என்று நினைப்புக்கு பதிலாக இது ஒரு உயர்தரமான படிப்பு என்ற நினைவு, இதைக்கண்டு கேவலமாக எண்ணுகிறவர்களின் நினைவு மாறவேண்டுமானால் இதற்கு போதுமான கல்லூரிகள் இருக்க வேண்டும். இதற்கு நல்ல முறையில் பயிற்சி பெற்றவர்களைக்கொண்டு மாணவர்களை தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். இவ்விதம் பயிற்சி பெற்ற குழுவால் மாணவர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு பயிற்சி கொடுத்தால் இந்த நாட்டில் இருக்கின்ற ஆயிரமாயிரம் ஏழைகளுக்கு நல்ல முறையில் மருத்துவம் அளிக்க முடியும் என்று சொல்லிக்கொள்கிறேன். அடுத்ததாக ஹோமியோபதி மருத்துவத்திற்கு ஸ்பிரிட் தேவையாக இருக்கிறது. இந்த " ரெக்டிபைட்ஸ்பிரிட் " இன்று யார் யாருக்கோ கொடுக்கப்படுகிறது. இதற்காக லாகிரி வஸ்துக்களும் அதிகமாக விற்கப்படுகின்றன. இதனால் தேவைப்படுகிற ஸ்பிரிட் டாக்டர்களுக்கு கிடைப்பதில்லை. ஆகவே இவர்களுக்கு இந்த ஸ்பிரிட் ஏராளமாக கிடைப்பதற்கு அனுமதிக்கவேண்டும், அல்லது அவர்களுக்கு கட்டுப்பாட்டிலிருந்து விலக்கு





அளிக்கவேண்டும், அல்லது அவர்களுக்கு **Excise Duty** யிலிருந்தாவது " கன்ஸஷன் " கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்பேர்பட்ட முறையில் ஏழை மக்களுக்கு நல்ல முறையில் மருத்துவம் செய்வதற்கு ஏற்ற முறையில் ஒரு நிவாரணம் அளிக்கப்படுமானால் அது பெரிய உதவியாய் இருக்கும் என்று கூறி, ஹோமியோபதி முறை ஒரு சிறந்த மருத்துவ முறை அதை சர்க்கார் உடனேயே அங்கீகரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்துக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

SRI S. B. ADITYAN: இந்த வெட்டுத் தீர்மானத்தை ஆதரிக்கின்ற 12-55 p.m.
வகையில் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கனம் அமைச்சர் அவர்கள் இந்த மானியத்தைப்பற்றி பேசுகின்ற நேரத்தில் மிக உன்னிப்பாக கவனித்துக்கொண்டிருந்தேன். கவனமாக கேட்டுக்கொண்டிருந்தவர்களில் நானும் ஒருவன். அதில் ஆஸ்பத்திரிகளில் வேலை செய்யும் சிப்பந்திகளைப்பற்றி ஏதாவது சொல்லுவார் என்று எதிர்பார்த்துகொண்டிருந்தேன். ஆனால் அவர் அதைப்பற்றி ஒன்றுமே சொல்லவில்லை.

ஆஸ்பத்திரிகளில் பல குறைகள் இருப்பதாக பலர் சொன்னார்கள். ஆனால் ஆஸ்பத்திரிகளில் வேலை செய்கின்ற சிப்பந்திகளின் குறைகள் என்ன என்பதையும் நாம் பார்க்கவேண்டும். இன்றைக்கு ஆஸ்பத்திரிகளில் எவ்வளவோ குறைகள் இருக்கின்றன என்று நாம் கேள்விப்படுகிறோம். ஆஸ்பத்திரிக்கு போனால் சேர்க்கப்படுவதில்லை. அப்படியே சேர்க்கப்பட்டாலும் படுக்கை கிடைப்பதில்லை. அப்படியே படுக்கை கிடைத்தாலும் நோயாளிகள் சரியாக கவனிக்கப்படுவதில்லை என்று புகார்கள் சொல்லப்படுவதை நாம் கேள்விப்படுகிறோம்.

இதற்கெல்லாம் முக்கிய காரணம் என்ன என்பதை நாம் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். நோயாளிகளின் எண்ணிக்கை பன்மடங்கு அதிகரித்திருக்கிறது. ஆஸ்பத்திரிகளுக்கு முன்னைவிட எத்தனையோ மடங்கு அதிகம் நோயாளிகள் போகிறார்கள். இதற்கு காரணம் எதுவாயும் இருக்கலாம். முன் காலத்தில் இருந்தவர்களைவிட இப்பொழுது இருக்கிறவர்களின் உடல் வலு குறைவாக இருப்பது ஒரு கர்ரணமாய் இருக்கலாம். அல்லது ஆஸ்பத்திரிகளில் போகிற பழக்கம் மக்களிடையே முன்னைவிட அதிகமாக பரவி இருப்பது ஒரு காரணமாய் இருக்கலாம். அல்லது ஆஸ்பத்திரிகளில் நோயாளிகளை உடனுக்குடன் குணப்படுத்தி அனுப்பாமல் இருப்பது ஒரு காரணமாயிருக்கலாம். ஆனால், நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

உதாரணமாக ராயப்பேட்டை ஆஸ்பத்திரியை எடுத்துக் கொள்ளுங்கள். அந்த ஆஸ்பத்திரிக்கு ஒரு ஆலோசனை கமிட்டி இருக்கிறது. அதில் பல ஆண்டுகளாக மெம்பராக இருந்து நான் பணியாற்றி இருக்கிறேன். அங்குள்ள விவகாரம் எனக்குத் தெரியும். ஒரு வார்டில் ஐம்பது பேர்களை சேர்க்க இடம் இருக்கிறது என்றால் 90 நோயாளிகளை அங்கு சேர்க்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

அவர்களை சேர்க்கவேண்டாமென்று நான் சொல்லவில்லை. ஆஸ்பத்திரிகளில் வருகிறவர்களை " உங்களுக்கு சிகிச்சை செய்ய முடியாது " என்று சொல்லி யாரையும் வீட்டிற்கு அனுப்பவேண்டும் என்று நான் சொல்லவில்லை. ஆனால் ஆஸ்பத்திரியிலேயே சிகிச்சைக்கு என்று ஏற்படுத்தியிருக்கிறவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். டாக்டர்கள் எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டும். நர்ஸ்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக சிப்பந்திகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டும்.

நோயாளிகளைக் கவனிக்க லச்சீஸ் ' வார்ட் பாய்ஸ் ' நர்ஸிங் ஆர்டர்லிகள் (M.N.O., F.N.O.) போன்றவர்கள் இருக்கிறார்கள். ஒரு நோயாளிக்கு பசி எடுக்கிறது என்று சொன்னால் அவருக்கு சோறு கொடுக்க வேண்டிய பொறுப்பு இந்த சிப்பந்திகளுடையது. ஒரு நோயாளிக்கு வாந்தி எடுக்கிறது

என்ருல் தட்டை எடுத்துப் போகும் பொறுப்பும் இந்த சிப்பந்திகளுடையது தான். ஒரு நோயாளியை குளிப்பாட்ட வேண்டுமென்று சொன்ஞல் அதற்கு வேண்டிய காரியங்களை செய்வதும் இந்த சிப்பந்திகளின் பொறுப்பு தான். ஆஸ்பத்திரியில் 24 மணி நேரமும் இந்த நோயாளிகளை கவனிக்க வேண்டிய பொறுப்பு இந்த "நர்சிங் ஆர்டர்லீஸ்" உடையதுதான். ஆகவே அவர்களது எண்ணிக்கையை அதிகமாக்கவேண்டும்.

அப்படிச் செய்யாமல், ஏற்கனவே இருக்கிற சிப்பந்திகளை வைத்துக் கொண்டு நோயாளிகளை ஒன்றிற்கு இரண்டாக அனுமதித்தால் என் கவனிப்பு குறைவு ஏற்படாது. ? அரசாங்கத்தில் விதி இருப்பதாகச் சொல்கிருர்கள். ஒரு சிப்பந்தி எழு நோயாளிக்கு மேல் பார்க்கவேண்டியதில்லை என்று விதி இருப்பதாகச் சொல்கிருர்கள். ஆனல், ஒரே சிப்பந்தி ஒரே நேரத்தில் எழுபது நோயாளிகளை கவனிக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது இப்பொழு துள்ள நிலையில். குறைந்த சிப்பந்திகளை வைத்துக்கொண்டு வேலை வாங்கு வதில் என்ன ஏற்படுகிறது ? ஒரு சிப்பந்தி 12 மணி நேரம் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. 14 மணி நேரம் வேலை செய்யவேண்டியிருக்கிறது. என் 18 மணி நேரம் வேலை கூட வேலை செய்யவேண்டிய நிலை ஏற்படு கிறது. 8 மணி நோத்திற்கு மேல் ஒருவனிடமிருந்து வேலை வாங்கக் கூடாது என்று சட்டம் இருக்கும்போது,' ஒரு முதலாளி ஒரு தொழிலாளி யிடமிருந்து 8 மணி நேரத்திற்கு கூடுதல் வேலை வாங்கிஞல் அவன் மீது வழக்கு தொடரவேண்டுமென்று சட்டம் இருக்கும்போது 8 மணி நேரத் திற்குமேல் வேலை வாங்கிஞல் முதலாளியை தண்டிக்க வேண்டும் என்று சட்டம் இருக்கும்போது நான் கேட்கிறேன், என் அரசாங்க ஊழியர்களிட மிருந்து 8 மணி நேரத்திற்கு மேல் வேலை வாங்குகிருர்கள் என்று. அப்தால்மிக் ஹாஸ்பிட்டலில் சில தொழிலாளர்கள் 12 மணி நேரத்திற்கு மேல் வேலை செய்கிருர்கள். ஆகவே நான் சொல்ல விரும்புவது என்ன வென்ருல், அவர்களுடைய வேலை நேரத்தைக் குறைக்க வேண்டும்.

அடுத்தபடி, வாரத்திற்கு ஒரு நாள் ஓய்வு என்பது நம் நாட்டிலுள்ள எல்லாத் தொழிலாளர்களுக்கும் எல்லா இடங்களிலும் இருக்கக்கூடிய சட்டமாகும். அந்த விடுமுறை நாள் ஞாயிற்றுக்கிழமையாக இருக்கவேண்டும் என்பது அவசியம் இல்லை. திங்கட்கிழமையாஞலும் சரி, செவ்வாய்க் கிழமையாஞலும் சரி, புதன்கிழமையாஞலும் சரி, வியாழக்கிழமையா ஞலும் சரி, எந்தக் கிழமையாஞலும் சரி வாரத்திற்கு ஒரு நாள் ஓய்வு கொடுக்கவேண்டும் என்பது பொதுவாக அனுஷ்டிக்கப்படுகிற வழக்கம் மாத்திரமல்ல, அது நாட்டின் சட்டமாய் இருக்கிறது. யாராவது ஒரு முத லாளி அவர் கடையில் வேலை செய்யும் சிப்பந்திக்கு வாரத்திற்கு ஒரு நாள் லீவ் கொடுக்கவில்லை என்ருல், நான் அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன், நீங்கள் என்ன செய்வீர்கள் என்று. உடனே அம்முதலாளி மீது வழக்கு தொடர மாட்டீர்களா, அவரை கோர்ட்டில் கூண்டில் நிறுத்தமாட்டீர்களா என்று கேட்கிறேன். ஆனல் சர்க்கார் ஆஸ்பத்திரி களில் வேலை செய்யும் தொழிலாளர்களை ஒரு ஞாயிற்றுக்கிழமை முதல் இன்னொரு ஞாயிற்றுக்கிழமை வரை வாரத்திற்கு ஒரு நாள் விடுமுறையே இல்லாமல் வேலை வாங்குகிறீர்களே, இது நியாயமா என்று கேட்கிறேன்.

சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் வேலை செய்யும் தொழிலாளி 12 மணி நேரத்திற்கு குறைவு இல்லாமல் வேலை செய்யவேண்டுமென்ருல், அவ னுக்கு குடும்பத்தில் இன்பம் இருக்கமுடியுமா? எத்தனையோ தொழிலா ளர்கள் அவர்களின் குழந்தைகளோடு பேசி அறிய மாட்டார்கள். குழந் தைகள் எழுந்திருக்கும் முன்பு அவன் ஆஸ்பத்திரிக்கு போகவேண்டும். அவர் ஆஸ்பத்திரிக்கு காலையில் செல்லும்போது குழந்தைகள் விழித்து இருக்கமாட்டார்கள். இரவு 9 மணிக்கு வீடு திரும்பும்பொழுது அதற் குள்ளே குழந்தைகள் தூங்கிவிடுகிருர்கள். ஆகவே அவர்கள் தங்கள் குழந்தைகளிடம் பேசி அறியாமல், அக்குழந்தைகளின் மழலைச் சொற்களை கேட்க முடியாதவர்களாக இருக்கிருர்கள். இதுதான் ஆஸ்பத்திரி சிப்பந்தி களின் நிலைமை. இவர்களுக்கு ஒரு நிவாரணம் கொடுக்கக்கூடாதா என்று கேட்கிறேன். இதுமட்டும் அல்ல. இவர்களின் சம்பளம் என்ன என்று



பார்ப்போம். கனம் மந்திரியவர்கள் என் அருமை நண்பர்தான். ஆனல் அவருக்கே இது தெரியுமா என்பது சந்தேகமாய் இருக்கிறது. ஆனல் இந்த "டிமாண்ட்ஸ் பார் கிராண்ட்ஸ்" என்ற புத்தகத்தில் 824-வது பக்கத் தில் இதைப்பற்றி கூறப்பட்டு இருக்கிறது. முதல் கிரேடு நர்சிங் ஆர்டர்லிஸ் என்பவர்களுக்கு அடிப்படை சம்பளம் 24 ரூபாய். வருஷாந்தர உயர்வு 8 அணு. இவர்களில் ஒரு சிலர்தான் முதல் கிரேடில் உள்ளவர்கள். பெரு வாரியானவர்கள் இரண்டாவது கிரேடில் உள்ளவர்கள்தான். அவர்களுக்கு உள்ள சம்பளம் 19 ரூபாய். சம்பள உயர்வு வருஷத்திற்கு 8 அணு என்று இருக்கிறது. எனக்கு ஞாபகம் இந்த 8 அணுவை ஒரு ரூபாயாக ஆக்கி சர்க்கார் உத்தரவு இட்டிருக்கிருர்கள் என்று நினைக்கிறேன். அப்படி என்ருல் அது என் இந்த பட்ஜெட்டில் வரவில்லை என்று கேட்க விரும்புகிறேன். அதோடு 31 ரூபாய் அலவன்ஸ் கொடுக்கிருர்கள். ஆனல் அடிப்படை சம்பளம் 19 ரூபாய்.

இந்த சம்பளமானது நம் நாட்டிலே மிக மிக குறைவான சம்பளம். செக்ரட்டேரியட்டில் உள்ள ஒரு பியூனிற்கு 24 ரூபாய் சம்பளமும், வாரத் திற்கு ஒரு நாள் லீவும் உண்டு. ஆனல் ஆஸ்பத்திரிகளில் வேலை செய்கிற வர்களுக்கு சம்பளம் 19 ரூபாய். என் இவ்வளவு குறைவாக இருக்கிறது என்பதை சர்க்கார் கவனித்து பார்க்கவேண்டும். ஆஸ்பத்திரிகளில் வேலை செய்கிறவர்கள் பொது மக்களுக்கு அத்தியாவசியமான சேவை செய்பவர்கள்; ஆகவே அவர்கள் சும்மா வேலை செய்யட்டுமே என்ற எண்ணமா அல்லது சிக்கனம் என்பது காரணமா ? அரசாங்கத்திற்கு சிக்கனம் செய்யவேண்டுமென்ற அவசியம் இருக்கலாம். ஆனல் மற்ற இலாகாக்களில் எப்படி சம்பளம் இருக்கிறதோ அந்த அளவுக்காவது இவர் களுக்கும் இருக்கவேண்டும் அல்லவா ? ஆகவே இவர்களது சம்பளத்தை சற்று அதிகப்படுத்தவேண்டும்.

அடுத்தபடியாக இவர்களுக்கு "யூனிபார்ம்" சட்டை கொடுக்கப்படுகிறது. மந்திரியவர்கள் இதைச் சற்று உன்னிப்பாக கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இவர்களுக்கு, வருஷம் ஒன்றிற்கு 3 சட்டைகள் கொடுக்கவேண்டுமென்று அரசாங்கத்தில் விதி இருக்கிறது. அரசாங்கத் தினிடமும் பணமும் இருக்கிறது. கொடுக்கவேண்டும் என்ற எண்ணம் அமைச்சர்களுக்கும் இலாகா தலைவர்களுக்கும் இருக்கிறது. இருந்தாலும் கொடுப்பதில்லை. அதற்கு காரணம் என்ன ? ஒரு வருடத்திற்கு 500 அல்லது 700 சட்டைகள் வேண்டுமென்று குறிப்பிட்டு ஆஸ்பத்திரி தலைமை அதிகாரி "இண்டண்ட்" அனுப்பவேண்டியிருக்கிறது. அதை அனுப்பவேண் டியது, ஒரு வருஷம் முடிந்த பிறகுதான் அனுப்பவேண்டுமென்று இப் போது சர்க்கார் விதி இருக்கிறது. ஆகவே வருஷம் முடிந்த பிறகு அனுப் பப்படுகிற "இன்டெண்ட்"டை இருபது அதிகாரிகள் பார்க்கவேண்டியிருக் கிறது. குமஸ்தாக்கள், சூப்பரிண்டெண்டெண்ட், அசிஸ்டெண்ட் செக்ரெட்டரி, செக்ரட்டெரி, பிறகு மந்திரி என்று போய் பிறகு கீழே வந்து அதை முடிவு செய்ய மாதங்கள் மூன்ருகி விடுகின்றன. ஆகவே, யூனிபாரத்துக்கு வேண்டிய இன்டென்டை வருஷம் முடிந்த பிறகு அனுப்பவேண்டும் என்பதை விட்டு விட்டு வருஷம் முடிய மூன்று மாதங்களுக்கு முன் அனுப்ப வேண்டுமென்று இப்பொழுதிருக்கிற விதியை மாற்றியமைத்தால் எலலோ ருக்கும் யூனிபாரம் கிடைக்க வழி ஏற்படும்.

கடைசியாக, ஆஸ்பத்திரிகளில் தாண்டவமாடும் லஞ்சத்தைப்பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். இப்போது ஜெனரல் ஆஸ்பத்திரியில் தாண்டவமாடும் லஞ்சத்தைப்பற்றி விசாரிப்பதற்காக ஒரு கமிட்டி நியமிக்கப் போவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சட்ட சபையில் வைக்கப்பட்ட பேபர்களில் ஒன்றைப் பார்த்தேன். எஸ்டிமேட்ஸ் கமிட்டியின் சிபாரிசு மீது அரசாங்கம் செய்திருக்கக்கூடிய தீர்ப்பு அதில் சொல்லப்பட்டிருக்கிறது. எஸ்டிமேட்ஸ் கமிட்டி ஆஸ்பத்திரி நிர்வாகத்தைப் பற்றிப் பரிசீலித்தார்கள். அதன் பேரில் அவர்கள் ஒரு சிபாரிசு செய்திருந்தார்கள். ஆஸ்பத்திரி களில் லஞ்சம் தாண்டவமாடுகிறதைப்பற்றி விசாரிக்க ஒரு கமிட்டி நியமிக் கவேண்டுமென்று அவர்கள் ஒரு சிபாரிசு செய்திருந்தார்கள். அதையொ ட்டி அரசாங்கம் ஒரு முடிவு செய்திருக்கிறது. அதாவது, சென்னையிலே

இருக்கக்கூடிய பெரிய ஆஸ்பத்திரியாகிய ஜெனரல் ஆஸ்பத்திரியில் நிலவும் லஞ்சத்தைப்பற்றி விசாரணை செய்ய ஒரு கமிட்டி நியமிக்கப்போகிறது என்பது. என்னுடைய கோரிக்கை இந்தக் கமிட்டியில், ஆஸ்பத்திரியில் வேலை செய்கின்ற சிப்பந்திகளுக்கும் அல்லது அவர்களுடைய பிரதிநிதிகளுக்கும் அதாவது அவர்களுடைய நன்மையைக் கருதுகிறவர்களுக்கும், ஒரு இடமளிக்கவேண்டுமென்பது.

மேலும் இந்தக் கமிட்டி பெரிய உத்தியோகஸ்தர்கள் லஞ்சம் வாங்குவதைப்பற்றி விசாரிக்காது. ட்ரிப்யூனலுக்குப் போகக்கூடிய ரூ. 150-க்கு மேல் சம்பளம் வாங்கும் உத்தியோகஸ்தர்கள் லஞ்சம் வாங்குவதாகப் புகார் செய்தால், அதை விசாரிக்க இந்தக் கமிட்டிக்கு அதிகாரமில்லை. அதற்குக் கீழே சம்பளம் வாங்குபவர்கள் லஞ்சம் வாங்குவதாகச் சொல்லும் புகார்களை விசாரிப்பதற்காக இந்தக் கமிட்டி நியமிக்கப்படப்போகிறது. இது யாரைப் பாதிக்கும் ? மிகவும் கொஞ்சம் சம்பளம் வாங்கும் சிப்பந்திகளைத்தான் இது பாதிக்கும். ஏதோ ஒருவன் சீக்கு என்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, குணமடைந்து வீட்டுக்கு போகும்போது, நாலு அணா கொடுத்தால், அது லஞ்சம் ஆகுமா ? இப்படிப்பட்ட விஷயங்களைத் தான் இந்தக்கமிட்டி விசாரிக்கும். ஆகையால், இந்தக் கமிட்டியில் சிப்பந்திகள் சங்கத்திற்கு ஒரு இடம் அளிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கடைசியாக, கனம் மந்திரி அவர்களைக் ஒன்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆஸ்பத்திரியில் வேலை செய்கின்ற சிப்பந்திகள் சர்க்கார் ஊழியர்கள். அவர்கள் சர்க்கார் ஊழியர்கள் என்ற தங்கள் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்கும், அவர்கள் மற்ற மனிதர்களைப்போல் வாழ்வதற்கும் அவர்களுடைய சம்பளத்தை உயர்த்த வேண்டும் ; அவர்களுடைய வேலைப் பளுவைக் குறைக்கவேண்டும் ; வாரந்தோறும் ஒரு நாள் லீவு கொடுக்க வேண்டும் ; மற்ற வசதிகளும் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

1-13 p.m. **SRI K. SATTANATHA KARAYALAR** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மான்ய கோரிக்கையின் மீது நான் கொண்டுவந்திருக்கும் வெட்டுப் பிரேரணையின் மீது சில வார்த்தைகள் சொல்ல அவாவுறுகிறேன். இந்த மான்யத்தின் கீழ் சுமார் ரூ. 12½ லக்ஷம் சென்னையிலே குடி தண்ணீர் விஸ்தரிப்புக்காக ஒதுக்கப்படுள்ளது. ராஜ்யம் முழுதுக்கும் சுமார் ரூ. 82 லக்ஷம் குடி தண்ணீர் வசதிக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இன்று நாட்டில் இருக்கக்கூடிய சுகாதார நிலைமையைச் சீர் படுத்துவதற்கு இது எவ்வளவு தூரம் ஊக்கம் தரும் என்பதை நாம் ஓரளவு சிந்திக்கவேண்டும். அதைக் கவனிக்கும்பொழுது, இந்தத் தொகை மிக மிகக் குறைவு என்று நான் சொல்லும்போது, இந்தச் சபையின் எந்தப் பகுதியிலிருந்தும் அதற்கு எதிர்ப்பு வரமுடியாது. வெகு காலத்திற்கு முன்பே வகுக்கப்பட்டு ஆனால் அமுலுக்குக் கொண்டுவரப்படாத குடி தண்ணீர் திட்டங்கள் எத்தனையோ இருக்கின்றன. வடிகால் திட்டமும், குடி தண்ணீர் திட்டமும் ஒரு நகரத்திற்கும் கிராமத்திற்கும் மிக மிக அவசியம். அப்படியிருக்க, பல முக்கியமான நகரங்களுக்காக வகுக்கப்பட்ட திட்டங்கள் வெறும் " ப்ரிலிமினரி இன்வெஸ்டிகேஷன் " ஐத் தாண்டியிருக்கின்றனவே யொழிய அவை இன்னும் அமுலுக்குக் கொண்டுவரப்படவில்லை. உதாரணமாக, தென்காசிக்கு ஒரு குடி தண்ணீர் திட்டம் நீண்ட நாட்களுக்கு முன்பு வகுக்கப்பட்டது. 1936-க்கு முன்பு அது வகுக்கப்பட்டதென்று நான் நினைக்கிறேன். ஆனால், இத்தனை காலமாக அது வெறும் திட்டமாக யிருந்து, சமீபத்தில் சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அதற்கு அடிகோலப்பட்டது. ஆனால், சில நாட்களுக்கு முன்பு கனம் மந்திரி அவர்கள் கேள்விகளுக்குப் பதில் சொல்லும்போது, அது இன்னும் ஒரு பரீட்சார்த்தத் திட்டமாக இருக்கிறதென்றும், அது இன்னும் முடிவான திட்டமாகவில்லையென்றும் சொன்னார்கள். திட்டம் வகுப்பதற்கு சுமார் 20 வருடம், அதன் பிறகு அடிகோலிய பிறகு இரண்டு ஆண்டுகள் ஆகியும் திட்டம் உருவாகவில்லையென்றால், இன்னும் அந்தத்





திட்டத்தை அமுலாக்குவதற்கு எத்தனை ஆண்டுகள் வேண்டும், எத்தனை ஐந்தாண்டுத் திட்டங்கள் வேண்டும் என்று கேட்க நான் அவாவுறுகிறேன். தென்காசி குடி தண்ணீர் திட்டம் என்பது தென்காசி, குற்றாலம், எலாஞ்சி, நன்னகரம், குடியிருப்பு என்ற பஞ்சாயத்துகளுக்குச் சேர்த்துத் தீட்டப்பட்ட திட்டம், அதற்கு சுமார் ரூ. 37 லக்ஷம் வேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறார்கள். குற்றாலத்தில் ஒழுகக்கூடிய அருவிகளிலிருந்து தண்ணீரைக் கொண்டுவந்து தென்காசிக்கும், பக்கத்திலிருக்கும் எலாஞ்சி கிராமத்திற்கும் தண்ணீர் கொடுப்பதாகத் திட்டம். அந்தத் தண்ணீரை எடுத்துக்கொள்ளும்பொழுது, விவசாயிகளுக்கு அதில் என்ன பாத்தியதை இருக்குமென்று நல்ல முறையில் பரிசீலிக்கப்படவில்லை. இன்று சில செல்வாக்குள்ள நிலவுடமைக்காரர்கள் அந்தத் திட்டத்தை அமுலாக்கக் கூடாதென்று அதற்கு எதிராக வேண்டிய சிக்கல்களையெல்லாம் கிளப்பிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய முட்டுக்கட்டையின் காரணமாக அந்தத் திட்டம் எந்த விதமான உருவும் பெறவில்லையென்று நான் நினைக்கிறேன். இத்திட்டத்திற்காக 12 வருஷங்களாக அந்தப் பஞ்சாயத்து பொது மக்களிடமிருந்து தண்ணீர் வரி வசூலித்து வருகுகிறது. அவ்விதத்தில் சுமார் ரூ. 5 லக்ஷம் சேர்க்கப்பட்டு அது அவர்கள் கையிலிருக்கிறது. அப்படியிருந்தும், அந்தத் திட்டம் இன்னும் உருப் பெறவில்லையென்றால், அது எவ்வளவு மோசமான வகையில் இந்த இலாகா இயங்கிக்கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. முதல் அமைச்சரையும் வரவழைத்து அதற்கு அடிகோல் நாட்டிய அது ஆரம்பிக்கப்படப்போவதாக நாடகமும் நடிக்கப்பட்டது. ஆனால், அதற்கு மேல் இன்னும் ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

கிராமாந்திரங்களில் இருக்கக்கூடிய மருத்துவ வசதியைப் பற்றியும், அங்குள்ள ஆஸ்பத்திரிகளிலுள்ள குறைகளைப் பற்றியும் சில வார்த்தைகள் சொல்ல அவாவுறுகிறேன். குறிப்பாக, தென்காசி மிகப் பெரிய நகரம். ஆனால், அந்த ஊருக்கு நல்ல முறையில் சேவை செய்யக்கூடிய ஆஸ்பத்திரி இல்லையென்றே சொல்லலாம். ஏதோ பெயரளவுக்கு ஒரு ஆஸ்பத்திரி இருக்கிறதென்று நான் நினைக்கிறேன்.

**SRI V. K KOTHANDARAMAN** : சட்ட சபை நடக்கவேண்டுமென்றால், மூன்றில் ஒரு பங்கு அங்கத்தினர்களாவது இருக்கவேண்டும். . .

**DEPUTY SPEAKER** : இப்பொழுது இருக்கிற அங்கத்தினர்கள் போதும். " கோரம் " இருக்கிறது. பத்தில் ஒரு பங்கு இருந்தால் போதும்.

**SRI K. SATTANATHA KARAYALAR** : துரதிருஷ்டவசமாக இந்த மான்யக் கோரிக்கை எப்படி மெலிந்திருக்கிறதோ, அதே போல இந்த சட்ட சபையும் மெலிந்திருக்கிறது என்பதை உணர்ந்துகொண்டே நான் பேசுகிறேன். (குறுக்கீடு) ஒருவேளை கனம் மந்திரி அவர்கள் சொல்வதைப் போல இதற்கு காரணம், பசியாக இருக்கலாம். தாகத்தை காட்டிலும் பசிக்கு முதலிடம் கொடுத்து நண்பர்கள் வெளியே போய் இருக்ககூடும்.

ஆஸ்பத்திரிகளில் நல்ல வசதியில்லை யென்று சொன்னேன். குறிப்பாக, தென்காசியில் எந்த அளவுக்கு அந்த வட்டாரத்திற்கு வசதி தேவையோ அந்த அளவுக்கு ஆஸ்பத்திரியில்லையென்று நான் அவாவுறுகிறேன். பக்கத்தில் இருக்ககூடிய செங்கோட்டையில் ஒரு நல்ல ஆஸ்பத்திரி நடந்து கொண்டு வருகிறது. அதற்கு பக்கத்தில் இருக்கக்கூடிய ஆயகுடியில் ஒரு நல்ல ஆஸ்பத்திரி இருக்கிறது. அந்த ஆஸ்பத்திரியில் மூன்று டாக்டர்கள்தான் இருந்தார்கள். இது என்னுடைய தொகுதி என்பதற்காக இதை பற்றி குறிப்பாக சொல்லவில்லை. அந்த ஆஸ்பத்திரிகளின் நிர்வாகம் சென்னை ராஜ்யத்தின் கீழ் வந்த பிறகு, அது எப்படி நடக்கிறது என்பதை காட்டுவதற்காகவே இதை சொல்லுகிறேன். அங்கு ஆயக்குடி, சாம்பவர் வடகரை ஆகிய இரண்டுக்கும் சேர்ந்து ஒரு லேடி டாக்டர் இருந்தார். சமீபத்தில் ஆயக்குடி டாக்டர் லீவு எடுத்து கொண்டிருக்கிறார். அவருக்கு பதில் வேறு ஒரு டாக்டர்

போடப்படவில்லை. செங்கோட்டையில் இருக்கக்கூடிய டாக்டர் ஆயக்குடி, சாம்பவர்வடகரை இரண்டு இடத்திற்கும் போகவேண்டும். இப்படி ஒரே டாக்டரை, அதிலும் குறிப்பாக லேடி டாக்டரை, 3 ஆஸ்பத்திரிகளுக்குப் எப்படி நல்ல முறையில் போட்டால் நிர்வாகம் நடக்கும், எப்படி மக்களுக்கு சேவை செய்ய முடியுமென்று நான் கேட்கிறேன்.

மேலும் எப்ரல் 1-ம் தேதி முதற்கொண்டு இந்த ஆஸ்பத்திரி ளுக்கு மருந்துகளே வாங்கப்படவில்லையென்று தெரிகிறது. ஏதாவது "டெக்னிகல் டிபிகல்டீஸ்" இருந்திருக்கக்கூடும். இதுவரை திருவாங்கூர்-கொச்சி சர்க்காரால் மருந்துகள் கொடுக்கப்பட்டு வந்தன. இப்போது, சில மாதங்களாக சென்னை சர்க்காரிலிருந்து அவர்களுக்கு மருந்து கொடுக்கப்படவில்லை. அங்கு ஒரு ஆயுர்வேதிக் ஆஸ்பத்திரியும் இருக்கிறது. அதற்கும் வேண்டிய மருந்துகள் கிடைக்க மார்க்கமில்லை யென்று தெரியவருகிறது.

அடுத்தபடியாக, இந்த மாகாணத்திலே, எனக்கு முன்பு பேசிய கனம் சத்தியவாணி முத்து அம்மையார் சொன்னதுபோல, ஆயுர்வேதம், யுனானி, சித்த வைத்தியம் போன்ற வைத்தியங்களுக்கு முன்னேறுவதற்கு வசதி கொடுக்கபடவில்லை என்பதை வருத்தத்தோடு குறிப்பிடவிரும்புகிறேன். அலோபதி முறைக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறதோ அவ் வளவு முக்கியத்துவம் இந்த முறைகளுக்கு கொடுக்கவில்லை. என் கொடுக்க வில்லை என்று நினைக்கலாம். இந்த வைத்திய முறைகளெல்லம் சிறிய முறையில் இல்லை. Scientific basisல் இல்லை என்று தவறான கருத்து நம் மத்தியிலே இருந்து வருகிறது. குறிப்பாக சொல்லப்போனால், இன் றைக்கு சாதாரணமாக இருக்கக்கூடிய ஆஸ்த்மா சிக்கை எடுத்துக் கொள் வோம். ஆஸ்த்மாவில் பல ரகம் இருக்கிறது. ட்ராபிகல் இஸ்னோபேலிஸ் என்று ஒரு வகை ஆஸ்த்மா உண்டு. இதற்கு அலோபதிக் டாக்டர்கள் சொல்லுகிறார்கள் உடம்பிலே இருக்கக்கூடிய உதிரத்திலே உள்ள வெள்ளை அணுக்களின் பர்ஸெண்டேஜ் 40 அல்லது 50 கூடிய அளவில் போகும் போது அந்த ஆஸ்த்மா போன்ற மூச்சு முட்டல் ஏற்படுகிறது என்று குறிப்பிடுகிறார்கள். அலோபதிக் முறையில் ஓரளவு அஸிடோ ஆர்ஸெனிக் சேர்ந்த பொருளை உடம்பிலே ஏற்றுவது சாதாரணமாக செய்யப்பட்டு வருகிற முறை. இது இருதயத்திற்கு ஹானிகரமான முறை இதற்கு நாட்டு வைத்தியத்திலே ஒரு மருந்து கொடுக்கிறார்கள். ஒரு கஷாயம் கொடுக்கிறார்கள். கண்டங் கத்திரி, துளசி போன்ற இலைகளை சேர்த்து அத்தனையும் ஒரு பாடம் செய்து, சாரை பிழிந்து எடுத்து தேனோடு கலந்து தினந்தோறும் இரு முறை காலை மாலை மூன்று நாட்கள் கொடுக்கிறார்கள். இது இந்த வியாதியை ஓரளவு மிதப்படுத்துகிறது. எப்படி இது செயல் படுகிறது என்று திட்ட வட்டமாக தெரியவில்லை. ஆனால் ஒன்று தெரி கிறது. இந்த மருந்தை சாப்பிடுவதற்கு முன் உதிரத்தை பரிசோதனை செய்து சாப்பிட்ட பிறகும் பரிசோதனை செய்தால் இஸ்னோபேலிஸ் பர் ஸெண்ட்டேஜ் கணிசமான அளவு குறைந்திருக்கிறது. எந்த அளவு அது உடம்பிலே பாதிக்கிறது என்று தெரியவில்லை. ட்ராபிக்கல் இஸ்னோபேலிஸ் ஓரளவு கட்டுபடுத்த இது பயன் படுகிறது.

நீண்ட நாட்களாக Blood plessure-க்கு நம் நாட்டிலே நாட்டு வைத்தி யம் வீட்டுவைத்தியம் என்ற முறையில் சர்ப்பகந்தவேரை கஷாயம் கொடுக்கும் பழக்கம் இருந்து வருகிறது. Serpentina tab!ets என்று சமீபத்திலே இருந்து அலோபதிக் வைததியர்கள் கொடுக்கிறார்கள். எத்தனையோ இது மாதிரி கொடுக்க முடியும். சாதாரணமாக ஜலதோஷம் வந்து விட்டால் கஷ்டப்படக் கூடிய சமயத்திலே அலோபதி வைத்திய முறை Vitamin 'C' deficiency என்று சொல்லுவார்கள். அதே நேரத்தில் நமது பாட்டிமார்கள் ஜலதோஷமென்றால் முருங்கைஇலை ரசம் வைப்பார்கள். முருங்கை இலையிலே 'C' Vitamin இருக்கிறது என்பது தெரிந்த விஷயம். இந்த மாதிரி பல வைத்திய முறைகளை நல்ல முறையில் பரீட்சிக்க செய்ய வேண்டும்.





ஜாண்டிஸ் என்று இருக்குமானால் நல்ல அலோபதி வைத்திய முறை இருக்கவில்லை. ப்ரோடீன் தேவை என்று ஓய்வு கொடுக்கிறார்கள். அதே நேரத்திலே நமது நாட்டிலே சின்னங்கன்னி போன்ற இலைகளை கொடுத் தால் நல்ல முறையில் குணப்படுத்துவதை பார்க்கிறோம். ஏன் இதை குறிப்பிடுகிறேன் என்று கேட்டால் பல்வேறு கர்ண பரம்பரையாக, தலை முறையாக பழகி வரும் சீறிய பழக்கம் நமது நாட்டிலே இருக்கிறது. இவைகளை நல்ல முறையில் பரீட்சிக்க வேண்டும். இன்றைக்கு கேரளத்திலே இதற்கு நல்ல முறையில் ஆதரவு இருக்கிறது. ரூமேடிஸத்திற்கு தன்வன்திரி ஆயுர்வேத முறை பலன் தரக்கூடிய நிலையில் இருக்கிறது. ஆயுர்வேத ஆஸ்பத்திரியை எங்கெல்லாம் தேவைப்படுகிறதோ அங்கெல்லாம் விஸ் தரிக்கவேண்டும். சித்தவைத்தியம், ஆயுர்வேதம், யுனானி, ஹோமியோபதி போன்ற முறைகளை பெருமளவுக்கு கையாள வேண்டும். நாட்டில் இப்போதிருக்கக்கூடிய நிலையில் எந்த அளவுக்கு பயன்படுத்தமுடியுமோ அந்த அளவு பயன்படுத்த வேண்டும். அதற்கு ஒரு சீறிய திட்டம் வகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக நான் மீண்டும் வேண்டிக் கொள்வது இன்று இந்த மானி யத்தில் கோரியிருக்கக்கூடிய குடி தண்ணீர் திட்டத்திற்கும் இதர மானியத் தில் கோரியிருக்கிற குறைந்த தொகை போதாது இருக்கிறது என்று கூறிக்கொண்டு அதிக தொகை ஒதுக்கி பல புதிய திட்டங்கள் வகுக்க வேண்டுமென்று கூறிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**Sri C. MUTHIAH PILLAI** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நமது ரெவன்யூ அமைச்சரவர்கள் கொண்டு வந்த மானியத்தை வரவேற்று ஒரு சில வார்த்தைகளை கூற விரும்புகிறேன். இந்த வருஷம் எல்லா வருஷத்தையும் காட்டிலும் இந்த மானியத்தை கேட்கும்போது அதில் அடங்கியுள்ள ஒவ்வொரு எதிர்கால திட்டத்தையும் பார்க்கும்போது மனதுக்கு குளிர்ச்சியாக இருக்கிறது. எதிர்கால திட்டங்களை அவ்வளவு தெள்ளத் தெளிவாக எடுத்து காட்டி இருப்பது எந்தெந்த தொகுதியில் என்னன்ன செய்யப்படும் என்று தெரிகிறது. இப்படியெல்லாம் சொல்லி யிருக்குபோது இதுவரையில் நடந்த காரியங்களெல்லாம் சரிவர நடந்து கொண்டிருக்கிறதா என்று முக்கியமாக கவனிக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். புதிதாக ஒரு காரியத்தை ஆரம்பிக்கும் முன் ஆரம்பித்த காரியங்கள் சரிவர நடக்கிறதா என்று ரெவின்யூ அமைச்சர் தீவிரமாக கவனிக்க வேண்டும். வருவாய் அமைச்சராக இருப்பவர் வைத்திய அமைச்சராக இருப்பதால், வரிபோட்டு ஜனங்களை கஷ்டப்படுத்துகிற அதே சமயத்தில் வைத்திய முறையில் இருப்பது புண்ணியமாக இருக்கும் என்ற காரணத்தால் அமைச்சரவர்கள் தீவிரமாக முயற்சி எடுத்து இவைகளை நல்ல முறையில் நிறைவேற்றுவார் என்று நம்புகிறேன். இன்று கிராம ஆஸ்பத்திரிகள், தாலூக்கா ஆஸ்பத்திரிகள் மற்ற நகர ஆஸ்பத்திரிகளை கண்ணோட்டமாக பார்க்கவேண்டும். நகர ஆஸ்பத்திரிகளில் எங்கு போவது எங்கு வருவது என்று தெரியவில்லை. எங்கு பார்த்தாலும் ஒரே வழவழப் பாக இருக்கிறது. அங்கு வேலை செய்பவர்கள் உற்சாகமாக இறுக்கிறார்கள். ஜில்லா தலைநகரிலோ அல்லது தாலூகா தலைநகரிலோ உள்ள ஆஸ்பத்திரியை போய்ப் பார்த்தால், மிக கேவலமாக சொன்னால், பிச்சைக்கார விடுதிபோல இருக்கிறது. நல்ல ஆஸ்பத்திரியாக மாறும் நல்ல காலம் வரும் என்று நினைக்கிறேன். முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

குறிப்பாக தஞ்சையில் எடுத்துக்கொண்டு பார்த்தோமானால் இன்றைக்கு 175 பேஷண்டுகள் வெளியிலே இருக்கிறார்கள். சராசரி 650 பேஷண்டுகள் இருக்கவேண்டியது போக 175 பேர் வெளியிலே படுக்கும் நிலைமை இருக் கிறது. மேற்கொண்டு விஸ்தரித்து படுக்கை கட்டிட வசதியை அதிகப்படுத் துவது இன்றியமையாத அவசியம். தாலூகா தலைநகர ஆஸ்பத்திரியை, தேசிய விஸ்தரிப்பு திட்டத்திலும், சமுதாய நல திட்டத்திலும் பணம் இருக்கிற காரணத்தால், விஸ்தரிக்கும் நிலைமை இருக்கிறது. ஜில்லா ஆஸ்பத்திரிகளில் டாக்டர்கள் கிடைக்க முடியாத நிலையில் இருக்கின்றன.

[Sri C. Muthiah Pillai] [17th July 1957

இவைகளையெல்லாம் நிவர்த்திக்க ஆஸ்பத்திரிகளிலெல்லாம் ஒழுங்காக டாக்
டர்கள் இருக்கிறார்களா ? மருந்துகள் எல்லாம் சரியாக " சப்ளை " செய்
யப்பட்டிருக்கின்றனவா என்பதை முதலில் பார்க்கவேண்டும். ஒன்று
டாக்டர் இருப்பதில்லை, அல்லது மருந்து இருப்பதில்லை. இப்படி ஒன்று
இருந்தால் இன்னொன்று இல்லை என்ற நிலைமை அனேக ஆஸ்பத்திரி
களில் காணப்படுகிறது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்
கொள்ளுகின்றேன். டாக்டர் தான் இல்லையென்றால், மருந்து கொடுப்பதற்கு
தேவையான கம்பவுண்டரோ, மருந்தோ இருக்கிறதா என்று பார்த்தால்
போதுமான மருந்து இருப்பதில்லை. ரெகுலர் டிஸ்பென்சரியில் சுமார்
300 நோயாளிகள் வந்து கொண்டிருந்தாலும் ஒரு குறித்த அளவுக்குத்
தான் மருந்து சப்ளை செய்யப்படுகிறது. கம்பவுண்டரும் ஒருவரே தான்
இருக்கக்கூடிய நிலைமை காணப்படுகிறது. வருடா வருடம் தலை எழுத்தே
என்று ஒரு குறிப்பிட்ட தொகை தான் மருந்துக்காக ஒரு ஆஸ்பத்திரிக்
கென ஒதுக்கப்பட்டு மருந்து சப்ளை செய்யப்படுகிறது. எத்தனையோ வருடங்
களுக்கு முன் நிர்ணயம் செய்தபடி மருந்துக்காக வருடமொன்றுக்கு 1,200
ரூபாய் என்றால், அதே புள்ளி விவரத்தை வைத்துக்கொண்டு, அதே
தொகை தான் வருடா வருடம் ஒதுக்கப்படுகிறதுதே தவிர, வருடா வருடம்
வியாதியஸ்தர்களின் எண்ணிக்கை எப்படி இருக்கிறது, உயர்ந்திருக்கிறதா
குறைந்திருக்கிறதா என்று பார்த்து, மருந்து சப்ளை செய்வதை கூட்ட
வேண்டுமா குறைக்க வேண்டுமா என்று எண்ணிப்பார்ப்பதே இல்லை.

தாலூகாவிலே இருக்கும் ஒவ்வொரு ஆஸ்பத்திரிக்கும் மருந்து
எங்கிருந்து வர வேண்டியிருக்கிறதென்றால், சென்னையிலுள்ள மெடிகல்
டிபோவிலிருந்து வரவேண்டியிருக்கிறது. அங்கிருந்து மருந்து தருவிக்க
வேண்டுமென்றால், " இன்டென்ட் " ஆனது பலப்பல இலாகா மூலமாக
சுற்றி, கடைசியில் மெடிகல் டிபோவிலிருந்து மருந்துகள் தாலூகா ஆஸ்
பத்திரிக்கு வந்து சேருவதற்கு மிக மிகக் கஷ்டம் இருக்கிறது.
டிபோவிலிருந்து மருந்து வருகிற வரைக்கும் எத்தனை வியாதியஸ்தர்கள்
காத்திருக்க முடியும் ? வசதியுள்ளவர்கள் ஏதோ சென்னையிலிருந்து
மருந்து வரவழைத்து சிகிச்சை செய்து கொள்ளுகிறார்கள். பெரும்பாலா
னவர்கள் மருந்து கிடைக்காமல் பல கஷ்டங்களுக்குள்ளாக வேண்டியிருக்
கிறது. ஆகவே, இம்மாதிரி காரியங்களில் உடனடியாக கவனம் செலுத்த
வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்றைக்கு முக்கியமாக அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, தஞ்
சையில் மருத்துவக் கல்லூரியை ஆரம்பிக்க வேண்டும் என்று சொல்வார்கள்
என்று நான் எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தேன். இரண்டாவது ஐந்தாண்
டுத் திட்டத்தில் ஒரு தொழிற் கல்லூரியும் ஒரு மருத்துவக் கல்லூரியும்
கோவையிலோ, தஞ்சையிலோ, காரைக்குடியிலோ ஆரம்பிக்கப்படும்
என்பது நீண்ட நாள் பிரச்னையாக இருந்து கொண்டிருக்கிறது. ஆனால்,
எங்கு அதிகமாகப் பணம் கொடுக்கப்படுகிறதோ அந்த இடத்தில் ஆரம்
பிக்கப்படும் என்று முதலிலே தெரிவித்திருந்தார்கள். நான் முதலிலே
நினைத்திருந்தேன் தர்ம ஸ்தாபனங்களின் உதவியைக் கொண்டு, அதற்
குள்ள பணங்களெல்லாம் தஞ்சை ஜில்லாவில் எழுப்பிவிடலாம் என்று
நினைத்திருந்தேன். ஆனால், இப்பொழுது புதிய யோசனை ஒன்று எனக்
குத் தோன்றுகிறது. சென்ற சில வாரத்திற்கு முன், நமது அமைச்சர்
களுடைய பெரு முயற்சியால் ஒரு கோடியே 75 லட்சம் ரூபாய் எங்கள்
ஜில்லா போர்டுக்கு வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை நான்
அறிவேன். மாயவரத்திலிருந்து அரந்தாங்கி வரையிலுள்ள ரயில் பாதை
யானது தஞ்சை ஜில்லா போர்டுக்குச் சொந்தம் என்றும், அதற்காக நஷ்ட
ஈடாக மத்திய சர்க்காரிலிருந்து ஒரு கோடியே 75 லட்சம் ரூபாய் சமரச
முயற்சியிலே நமது அரசாங்க மந்திரிகள் வாங்கிக் கொடுத்திருப்பது உண்
மையிலேயே பெருமைப் படத்தக்கது. தஞ்சை ஜில்லா போர்டுக்காக வாங்
கிக்கொடுத்திருக்கும் பணத்தை ஜில்லா போர்டுக்கே கொடுத்து விடுவார்கள்
என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால், அரசாங்கத்திலேயே அந்தத்
தொகையை வைத்துக்கொண்டு, அந்தத் தொகைக்கான வட்டிப் பணத்தை
மட்டும் ஜில்லா போர்டின் பராமரிப்புக்காக கொடுக்கப் போவதாக



17th July 1957] [Sri C. Muthiah Pillai]

நான் கேள்விப்படுகிறேன். ஜில்லா போர்டுக்குச் சொந்தமான இந்த ஒரு
கோடி 75 லட்ச ரூபாயோ, இன்னும் அதிகமாக வேண்டுமென்றாலும்
வைத்தியக் கல்லூரியை தஞ்சையில் ஆரம்பிப்பதற்கு நாங்கள் ஜில்லா
போர்டு தலைவரிடமோ மற்றுமுள்ள மெம்பர்களிடமோ சொல்லி, அதற்காக
ஏகமனதாகத் தீர்மானங்கள் போட்டு அனுப்பத் தயாராய் இருக்கிறோம்.
அந்தப் பணத்தை வைத்துக்கொண்டு, இன்னும் சர்க்கார் அதிகமாகப்
பணம் போட்டு, தஞ்சையிலுள்ள தலைமை ஆஸ்பத்திரியை வைத்தியக் கல்
லூரி ஆரம்பிப்பதற்கு ஏற்றபடி விஸ்தரிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்
கொள்ளுகிறேன்.

தஞ்சை ஜில்லாவில் இதற்கு முன்பு எல்.எம்.பி. வைத்தியப் படிப்பு
சொல்லிக் கொடுக்கப்பட்டிருந்தது. எல்.எம்.பி. வைத்தியப் படிப்பே தஞ்
சையில்தான் இருந்தது என்று சொல்கிறார்கள். தஞ்சையில் இன்றைய
தினம் 300 பேர் தங்கக் கூடிய வசதி இருக்கிறது. தஞ்சை ஜில்லாவின்
தலைநகரத்தை அடுத்து போதுமான இடம் வைத்தியக் கல்லூரி ஆரம்பிப்
பதற்கு இருக்கிறது. வல்லம் ரோட்டில் இடம் இருக்கிறது. நிபுணர்கள்
வந்து பார்த்தபோதும் கூட தஞ்சையில் சரியான இடம் இருந்தது. அதற்
குள்ள பேச்சு ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், நிபுணர்கள் குழு அங்கு
வந்தபோது " தஞ்சையில் வைத்தியக் கல்லூரி ஆரம்பிப்பது எப்படி சாத்
தியம் " என்ற முறையில் சந்தேகத்தோடு வந்தார்களே தவிர வேறொன்
றுமில்லை. அரசாங்கத்திற்கு அனுசரணையாக இருந்திருந்தால் கண்டிப்
பாக வைத்தியக் கல்லூரியை அங்கு ஆரம்பிப்பதற்கு முடிந்திருக்கும்.
அந்த வகையில் அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று
நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ப்ரைமரி ஹெல்த் சென்டர்கள் ஆரம்பிப்பது பற்றி ரெவினியூ மந்திரி
அவர்கள் கூறினார்கள். ப்ரைமரி ஹெல்த் சென்டர்கள் சாதாரண ஆஸ்
பத்திரிகளை விட மிக மிக விசேஷமாக இருக்கின்றன. மிக மிகப் பயன்
படக்கூடியதாகவும் இருக்கின்றன. ஒரு தாலூகாவிலே, ஒரு ரேஞ்சில் ஒரு
இடத்தில் ப்ரைமரி ஹெல்த் சென்டர் இருந்து விட்டால், அதைச் சுற்றியுள்ள
இடங்களுக்கெல்லாம் வைத்திய வசதி கிடைத்து விடுகிறது என்று தான்
சொல்ல வேண்டும். ஏனென்றால், ப்ரைமரி ஹெல்த் சென்டரில் எம்.பி.
பி.எஸ். படித்த டாக்டரும், நர்சும், கம்பவுண்டரும், " மொபைல் வான் "
இல் கிராமம் கிராமமாகச் சுற்றிப் பார்த்து, எந்தெந்த இடத்தில் என்
னென்ன வைத்திய வசதி தேவை என்பதை அறிந்து, அங்கெல்லாம்
வைத்திய வசதி செய்வதற்கு மிக சௌகரியமாக இருக்கிறது. இம்மாதிரி
சென்டர்கள் தேசிய விஸ்தரிப்புத் திட்டப் பகுதிகளிலும், சமுதாய நலத்
திட்டப் பகுதிகளிலும் அமைக்க வேண்டும். டாக்டர்கள் இல்லாமலும்
மருந்துகள் இல்லாமலும் ஆஸ்பத்திரிகளை நடத்துவது சரியல்ல. இந்தத்
திட்டத்தை எடுத்துக் கொண்டு, எங்கு பார்த்தாலும் ப்ரைமரி ஹெல்த்
சென்டர்கள் ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வதோடு, அவைகளில்
டாக்டர் வசதியும், மருந்து வசதியும் தாராளமாக ஏற்படுத்திக் கொடுத்
தால், கிராமப் புரங்களில் நோய்களிலிருந்து மக்களைக் காப்பாற்ற முடியும்
என்று தெரிவித்துக்கொண்டு, இது விஷயத்தில் அமைச்சர் அவர்கள்
விசேஷ கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்
றேன்.

ப்ரைமரி ஹெல்த் சென்டர்கள் ஆரம்பிப்பதில் அனாவசியமாக தாமதம்
ஏற்படுகிறது. என்ன காரணம் என்று தெரியவில்லை. முக்கியமாக, தேசிய
விஸ்தரிப்புப் பகுதியில் இப்படிப்பட்ட சென்டர்கள் ஆரம்பிப்பதற்கு
உடனடியாக உத்தரவு வருகிறது. ஆனால், சமுதாய நலத் திட்டப் பகுதி
களில் ஆரம்பிப்பது என்றால் உடனடியாக உத்தரவு அரசாங்கத்திடமிருந்து
வருவது இல்லை. காரணம் விளங்கவில்லை. தஞ்சை ஜில்லாவை எடுத்துக்
கொண்டு பார்த்தால், தேசிய விஸ்தரிப்புத் திட்டம் இருக்கும் பகுதியில்
எல்லாவற்றிலும் ப்ரைமரி ஹெல்த் சென்டர்கள் ஆரம்பித்தாய் விட்டது.
அதே மாதிரி சமுதாய நலத்திட்டப் பகுதிகளிலும் ஆரம்பித்தால் நலமாக
இருக்கும். இப்பொழுது தான் முதல் மந்திரி அவர்கள் தஞ்சை ஜில்லா
வுக்கு வந்தபோது வேதாரண்யம் என்னும் இடத்தில் ஒரு ப்ரைமரி

ஹெல்த் சென்டர் ஆரம்பிக்கப்பட்டதே தவிர, இதர இடங்களில் ஆரம்பிக்கப்படவில்லை—எவ்வளவு முயற்சி எடுத்தாலும்—என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தஞ்சை ஜில்லாவிலே விசேஷமாக தனவந்தர்களுடைய உதவியைக் கொண்டு செங்கிப்பட்டி சானடோரியத்தை விசேஷ முயற்சியால் கட்டி அமைத்திருக்கிறார்கள். அதற்கு தனவந்தர்கள் கொடுத்த நிலத்திலிருந்து வருவாயும், பணத்திலிருந்து வட்டியும் வருவதைக் கொண்டு அந்த சானடோரியம் நடத்தப் படுகிறதேயொழிய, அரசாங்கத்திலிருந்து சென்ற வருஷம் கொஞ்சம் தான் பணம் ஒதுக்கப்பட்டது. **Non-paying wards**-ல் அதிகமாக "பேஷண்டு" களைச் சேர்க்கும்படியான நிலையில் இருப்பதால் **Non-paying wards** அதிகமாகத் தேவைப்படுகின்றன. இன்னும் ஒரு கட்டிடம் **Non-paying wards**-க்காக கட்டிக் கொடுக்க அரசாங்கம் சலுகை காட்டினால் நலமாக இருக்கும். அப்படிச் செய்தால், பேஷண்டுகள் சாவதற்குள்ளாகவாவது அவர்களைக் கவனிக்கும்படியாக இருக்கும். பேஷண்டுகள் அட்மிஷனுக்காக மனுச்செய்து கொண்டால், அவர்கள் செத்த பிறகுதான் "இடம் கிடைக்கும்" என்ற உத்தரவு கிடைக்கும் நிலை இப்பொழுது இருக்கிறது. தக்க உத்தரவு அளிக்க முடியாவிட்டால், நோயாளிகள் வெளியில் தங்கி செங்கிபட்டி சானடோரியத்திற்கு தினமும் வந்து வைத்திய வசதி பெற்றுக்கொள்வதற்காவது தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.

சென்ற வருஷம் தாலூகா ஆஸ்பத்திரியை தலைநகர ஆஸ்பத்திரியாக சர்க்காரில் சேர்த்தார்கள். சென்ற வருஷம் சீர்காழியிலுள்ள ஆஸ்பத்திரியை சர்க்கார் ஆஸ்பத்திரியாக சேர்த்துக் கொண்டார்கள். ஏதோ சர்க்கார் நிர்வாகத்தில் எடுத்துக்கொண்டுவிட்டால், ஜில்லா போர்டு நிர்வாகத்திலிருந்து சர்க்கார் மேர்பார்வையில் வந்துவிட்டால், உடனே எல்லா வசதியும் ஏற்பட்டுவிடும், கட்டிடங்கள் பெரிதாகக் கட்டப்பட்டு விடும், மருந்துகள் அதிகமாக ஒதுக்கப்பட்டு எல்லா வசதிகளும் உடனடியாக ஏற்பட்டு விடும் என்று நான் எதிர்பார்த்தேன். நான் எதிர்பார்த்த அளவுக்கு பெரும் ஏமாற்றமாகத்தான் இருக்கிறது. சர்க்கார் நிர்வாகத்திற்கு வந்து 6, 7 மாதங்கள் ஆகியும் ஓரளவுகூட அசையவில்லை. வாட்ச்மென் கூட ஏற்படுத்தப்பட்டு, வியாதியஸ்தர்கள் நல்ல முறையில் கவனித்துக்கொள்வதற்கான ஏற்பாடு நடக்கவில்லையென்பதைப் பார்க்கும்போது, முன்பு இருந்த நிலையே போதும் என்று நினைக்கவேண்டியிருக்கிறது. அங்கத்தினர்கள் கேள்வி நேரத்தில், ஒவ்வொருவரும், அங்கங்கே இருக்கும் ஆஸ்பத்திரியை சர்க்கார் ஏற்று நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டதைப் பார்க்கும்போது, அவர்கள் அப்படி நினைப்பதை இன்னும் கொஞ்சம் நாள் பொருத்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். ஏனென்றால், சர்க்காருடைய நிர்வாகத்திற்கு ஆஸ்பத்திரி மாறிய பிறகும் நிலைமை வெகுவாக சீர்திருந்திவிடவில்லை. அமைச்சர் அவர்கள் பேசும்போது சொன்னார்கள் குறைந்தது 50 படுக்கை வசதியாக தாலூகா ஆஸ்பத்திரியில் செய்துகொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அது எந்த அளவுக்கு நிறைவேறும் என்று சொல்வதற்கில்லை என்றாலும், அடிப்படையாக ஆஸ்பத்திரியில் நோயாளிகளுக்கு வசதியாக குடிதண்ணீர் வசதி, வாட்ச்மென் வசதி, கிளார்க் வசதி இவைகளாவது உடனடியாக அரசாங்கத்திலிருந்து ஏற்பாடுத்திக் கொடுத்தால்தான் நலமாக இருக்கும். இந்தச் சிறிய விஷயத்தில் கூட ஜில்லா மெடிகல் ஆபீசருக்கு அதிகாரம் இல்லாமல், அரசாங்கமே சாங்ஷன் செய்ய வேண்டியிருக்கிறதென்றால், எப்பொழுது இந்த ஆஸ்பத்திரிகள் எல்லாம் நல்ல முறையில் நடக்கப் போகின்றன ? அரசாங்க நிர்வாகத்திற்கு மாறியதற்கு அடையாளமாக ஏதாவது நல்ல காரியம் உடனடியாக அவர்கள் செய்து கொடுக்க வேண்டும். அங்கு இருக்கும் சிப்பந்திகள் ஏற்கெனவே ஜில்லா போர்டின் கீழ் வேலை செய்ததன் காரணமாக, 10, 15 வருஷங்கள் சர்வீஸ் போட்டும், அவர்களுடைய சர்வீஸ் எல்லாம் ரெகுலரைஸ் செய்யப்படாமல் இருக்கிறது. அவர்களுடைய சர்வீசை ரெகுலரைஸ் செய்வதற்கும் தக்க உத்தரவு அரசாங்கத்திலிருந்து போடப்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நான் கேள்விப்படுகிறேன். ஜில்லா போர்டுக்குச் சொந்தமான இந்த ஒரு கோடி 75 லட்ச ரூபாயோ, இன்னும் அதிகமாக வேண்டுமென்றாலும் வைத்தியக் கல்லூரியை தஞ்சையில் ஆரம்பிப்பதற்கு நாங்கள் ஜில்லா போர்டு தலைவரிடமோ மற்றுமுள்ள மெம்பர்களிடமோ சொல்லி, அதற்காக ஏகமனதாகத் தீர்மானங்கள் போட்டு அனுப்பத் தயாராய் இருக்கிறோம். அந்தப் பணத்தை வைத்துக்கொண்டு, இன்னும் சர்க்கார் அதிகமாகப் பணம் போட்டு, தஞ்சையிலுள்ள தலைமை ஆஸ்பத்திரியை வைத்தியக் கல் லூரி ஆரம்பிப்பதற்கு ஏற்றபடி விஸ்தரிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தஞ்சை ஜில்லாவில் இதற்கு முன்பு எல்.எம்.பி. வைத்தியப் படிப்பு சொல்லிக் கொடுக்கப்பட்டிருந்தது. எல்.எம்.பி. வைத்தியப் படிப்பே தஞ் சையில்தான் இருந்தது என்று சொல்கிறார்கள். தஞ்சையில் இன்றைய தினம் 300 பேர் தங்கக் கூடிய வசதி இருக்கிறது. தஞ்சை ஜில்லாவின் தலைநகரத்தை அடுத்து போதுமான இடம் வைத்தியக் கல்லூரி ஆரம்பிப் பதற்கு இருக்கிறது. வல்லம் ரோட்டில் இடம் இருக்கிறது. நிபுணர்கள் வந்து பார்த்தபோதும் கூட தஞ்சையில் சரியான இடம் இருந்தது. அதற் குள்ள பேச்சு ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், நிபுணர்கள் குழு அங்கு வந்தபோது " தஞ்சையில் வைத்தியக் கல்லூரி ஆரம்பிப்பது எப்படி சாத் தியம் " என்ற முறையில் சந்தேகத்தோடு வந்தார்களே தவிர வேறொன் றுமில்லை. அரசாங்கத்திற்கு அனுசரணையாக இருந்திருந்தால் கண்டிப் பாக வைத்தியக் கல்லூரியை அங்கு ஆரம்பிப்பதற்கு முடிந்திருக்கும். அந்த வகையில் அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ப்ரைமரி ஹெல்த் சென்டர்கள் ஆரம்பிப்பது பற்றி ரெவினியூ மந்திரி அவர்கள் கூறினார்கள். ப்ரைமரி ஹெல்த் சென்டர்கள் சாதாரண ஆஸ் பத்திரிகளை விட மிக மிக விசேஷமாக இருக்கின்றன. மிக மிகப் பயன் படக்கூடியதாகவும் இருக்கின்றன. ஒரு தாலூகாவிலே, ஒரு ரேஞ்சில் ஒரு இடத்தில் ப்ரைமரி ஹெல்த் சென்டர் இருந்து விட்டால், அதைச் சுற்றியுள்ள இடங்களுக்கெல்லாம் வைத்திய வசதி கிடைத்து விடுகிறது என்று தான் சொல்ல வேண்டும். ஏனென்றால், ப்ரைமரி ஹெல்த் சென்டரில் எம்.பி. பி.எஸ். படித்த டாக்டரும், நர்சும், கம்பவுண்டரும், " மொபைல் வான் " இல் கிராமம் கிராமமாகச் சுற்றிப் பார்த்து, எந்தெந்த இடத்தில் என் னென்ன வைத்திய வசதி தேவை என்பதை அறிந்து, அங்கெல்லாம் வைத்திய வசதி செய்வதற்கு மிக சௌகரியமாக இருக்கிறது. இம்மாதிரி சென்டர்கள் தேசீய விஸ்தரிப்புத் திட்டப் பகுதிகளிலும், சமூதாய நலத் திட்டப் பகுதிகளிலும் அமைக்க வேண்டும். டாக்டர்கள் இல்லாமலும் மருந்துகள் இல்லாமலும் ஆஸ்பத்திரிகளை நடத்துவது சரியல்ல. இந்தத் திட்டத்தை எடுத்துக் கொண்டு, எங்கு பார்த்தாலும் ப்ரைமரி ஹெல்த் சென்டர்கள் ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வதோடு, அவைகளில் டாக்டர் வசதியும், மருந்து வசதியும் தாராளமாக ஏற்படுத்திக் கொடுத் தால், கிராமப் புரங்களில் நோய்களிலிருந்து மக்களைக் காப்பாற்ற முடியும் என்று தெரிவித்துக்கொண்டு, இது விஷயத்தில் அமைச்சர் அவர்கள் விசேஷ கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின் றேன்.

ப்ரைமரி ஹெல்த் சென்டர்கள் ஆரம்பிப்பதில் அனாவசியமாக தாமதம் ஏற்படுகிறது. என்ன காரணம் என்று தெரியவில்லை. முக்கியமாக, தேசீய விஸ்தரிப்புப் பகுதியில் இப்படிப்பட்ட சென்டர்கள் ஆரம்பிப்பதற்கு உடனடியாக உத்தரவு வருகிறது. ஆனால், சமுதாய நலத் திட்டப் பகுதி களில் ஆரம்பிப்பது என்றால் உடனடியாக உத்தரவு அரசாங்கத்திடமிருந்து வருவது இல்லை. காரணம் விளங்கவில்லை. தஞ்சை ஜில்லாவை எடுத்துக் கொண்டு பார்த்தால், தேசீய விஸ்தரிப்புத் திட்டம் இருக்கும் பகுதியில் எல்லாவற்றிலும் ப்ரைமரி ஹெல்த் சென்டர்கள் ஆரம்பித்தாய் விட்டது. அதே மாதிரி சமூதாய நலத்திட்டப் பகுதிகளிலும் ஆரம்பித்தால் நலமாக இருக்கும். இப்பொழுது தான் முதல் மந்திரி அவர்கள் தஞ்சை ஜில்லா வுக்கு வந்தபோது வேதாரண்யம் என்னும் இடத்தில் ஒரு ப்ரைமரி

[Sri M. Jagannathan] [17th July 1957

கிராமத்திலும் பிரசவ விடுதி வைப்பது சாத்தியம் இல்லை என்று சொன்ன போதிலும் கூட ஒவ்வொரு பிர்க்காவிற்குமாவது ஒரு பிரசவ விடுதியை ஏற்படுத்த சர்க்கார் முன் வரவேண்டுமென்று நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே குறிப்பாக தொத்து நோய் வியாதிகளை எல்லாம் தடை செய்வதற்கு அவர்கள் நல்ல திட்டம் போட்டிருக்கிறார்கள். அதற்குப் பல லட்சக்கணக்கான ரூபாய்களைச் செலவிட்டு அவர்கள் நல்ல திட்டம் வகுத்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். அதே சமயத்தில் மலேரியா, யானைக்கால், அம்மை, காலரா முதலிய தொத்து நோய்கள் வராமல் தடுப்பதற்கு இப்போது எடுக்கப்பட்டு வருகிற நடவடிக்கை திருப்திகரமாக போதுமான அளவில் இல்லை என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அந்தத் தொத்து நோய்கள் வந்த பிறகு நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்குப் பதிலாக வருவதற்கு முன்பே ப்ரிவென்டிவ் மெடிசின் கொடுக்க சர்க்கார் நல்ல நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

தொத்து நோய்களைப் பற்றிப் பேசும்போது க்ஷயரோக வியாதியைப் பற்றிக் குறிப்பிட வேண்டியது அவசியம் ஆகிறது. லட்சக்கணக்கான பேர்கள் க்ஷயரோகத்தினாலே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த வியாதியைத் தடுப்பது கிடையாது. நம்முடைய நாட்டில் குறைந்த பட்ச அளவில்தான் க்ஷயரோக ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. ஆஸ்பத்திரிகளில் சேர்ந்து மருந்து சாப்பிட்டு வருகிறவர்களைக் காட்டிலும் வெளியில் இருப்பவர்களும், ஆஸ்பத்திரியில் இனிமேல் சேருவதற்காக வெயிட்டிங் லிஸ்டில் இருப்பவர்களும் தான் அதிகமாக இருக்கிறார்கள். இந்த வியாதிக்காரர்களுக்கு இன்ஸ்டிடூஷனல் ட்ரீட்மெண்டு தேவைப்படுகிறது. இவர்கள் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்படவேண்டும், நீண்ட காலம் நல்ல கவனிப்பில் மருந்து, சாப்பிடவேண்டும், அப்போது தான் நோய் குணம் காணலாம் என்கிற நிலைமை அவசியமாவதால் அவர்களுக்குப் போதிய அளவு ஆஸ்பத்திரிகளையும், இட வசதியையும் செய்து கொடுக்க வேண்டுமென்பதாக நான் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன். இவர்கள் இன்றைய தினம் ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட வசதி இல்லாததனால் இவர்களால் வெளியில் அதிகமாக நோய் பரவுகிறது. இது மிகவும் வருந்தக்கூடிய நிலைமையாக இருக்கிறது. ஆகவே போதுமான க்ஷயரோக ஆஸ்பத்திரிகளை ஏற்படுத்தி இவர்களை எல்லாம் அங்கே சேர்த்துவிட வேண்டும் என்றும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே மாதிரியாக தென்னாற்காடு ஜில்லாவில் குஷ்டரோக வியாதி மிக மிக மோசமாகக், கடுமையாக இருக்கிறதென்பதை இந்தச் சமயத்தில் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். தென்னாற்காடு ஜில்லாவில் உலகத்திலேயே இல்லாத அளவு "இன்ஸிடென்ட்ஸ் ஆப் லெப்பர்ஸி" அதிகமாக இருக்கிறது என்பதை எல்லோரும் உணர்வார்கள். அந்த ஜில்லாவில் மிகப் பெரும்பாலான மக்களை வருத்திக் கொண்டிருக்கும் குஷ்டரோக வியாதியை உடனடியாகக் கவனித்து குணப்படுத்துவதற்கு, மேலும் பரவாமல் தடுப்பதற்குப் போதுமான அதிக எண்ணிக்கையில் அந்த ஜில்லாவில் குஷ்டரோக ஆஸ்பத்திரிகளை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்பதாகவும் வேண்டிக் கொள்ளுகிறேன். மேலும் தென்னாற்காடு ஜில்லாவில் தனியார் ஸ்தாபனம் ஒன்று "ஹிண்ட் குஷ்ட நிவாரண்" என்கிற ஸ்தாபனம் நல்ல முறையில் பணியாற்றி வருகிறது. கண்ணும் கருத்துமாக குஷ்டரோகிகளைக் கவனித்து நல்ல முறையில் சிகிச்சை அளித்து வருகிறார்கள். அவர்களுக்குப் போதுமான அளவில் மானியம் கொடுக்க வேண்டும் என்றும் சொல்லிக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்ளுகிறேன்.

**SRIMATHI P. K. R LAKSHMIKANTHAM** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன் நமது சர்க்கார் சுகாதார விஷயத்தில் அதிக கவனம்

17th July 1957] [Srimathi P. K. R. Lakshmikantham]

செலுத்தி வருவதோடு கூட ஆங்காங்கே பல ஆஸ்பத்திரிகளை ஏற்படுத்தி மக்களுக்கு நன்மை செய்வதிலே அதிகமாக முனைந்திருப்பதைப் பார்த்து நான் சந்தோஷப்படுகிறேன்.

பல வருஷங்களுக்கு முன்பு எந்த விதமான சுகாதார வசதிகளோ, ஆஸ்பத்திரி வசதிகளோ இந்த நாட்டில் இருந்தது இல்லை. குறிப்பாக பிரசவ விடுதிகள் இவ்வளவு அதிக எண்ணிக்கையில் அந்தக் காலத்தில் இருந்ததே இல்லை. ஆனால் சில ஆண்டுகளுக்குள்ளாகவே ஆங்காங்கே பிரசவ விடுதிகளை அதிகமாக ஏற்படுத்தி தாய்மார்களுக்கு அதிக வசதி செய்து கொடுத்திருப்பதோடு அவர்களுக்கு முன்பு ஏற்பட்டுக்கொண்டிருந்த கஷ்ட நஷ்டங்களை எல்லாம் நமது அரசாங்கம் நிவர்த்தி செய்திருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

முன்பெல்லாம் நகரப் பகுதிகளிலும் சரி, கிராமப் பகுதிகளிலும் சரி, பெண்கள் பிரசவ காலத்தில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்படுவது என்பதே கிடையாது. ஆஸ்பத்திரி என்றாலே அவர்கள் மிகவும் அஞ்சுவார்கள். இன்று சகஜமாகப் பிரசவம் என்றால் ஆஸ்பத்திரியில் சேருவது என்பது நடைமுறைக்கு வந்து விட்டது. இதற்குக் காரணமே நமது அரசாங்கமும், ஆங்காங்குள்ள முனிசிபாலிடிகளும் அதிகமான எண்ணிக்கையில் ஆங்காங்கே பிரசவ விடுதிகளை அமைத்து மக்களுக்கு நல்ல சேவை செய்து வருவது தான் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

என்றாலும் நான் சில விஷயங்களை—அதாவது ஆஸ்பத்திரிகளில் உள்ள குறைபாடுகளை நான் எடுத்துச் சொல்லி குறை கூறுவதாக அல்ல—இன்னும் என்ன என்ன முறையில் ஆஸ்பத்திரிகளில் அதிக வசதி மக்களுக்கு தேவைப் படுகிறது என்பதைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக மதுரையில் அரசாங்க ஆஸ்பத்திரியில் பிரசவ பகுதிகளில் பெண்கள் சேர்க்கப்பட்டால் அவர்களுடன் கூட யாரும் இருப்பதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. இருக்கவேண்டுமென்று விண்ணப்பித்துக் கொண்டாலும் “நர்சுகள் இருக்கிறார்கள். உங்களுக்கு அதைப்பற்றி என்ன தெரியும்? நீங்கள் இங்கே இருக்கக்கூடாது” என்று சொல்லி விடுகிறார்கள். எவ்வளவு தான் நல்ல முறையில் சிகிச்சை அளிக்க நர்சுகள் இருந்தாலும் தங்களுடைய உறவினர்களில் யாராவது கூட இருக்கவேண்டுமென்றே பெரும்பாலும் தாய்மார்கள் விரும்புவார்கள். ஆகையால் கண்டிப்பாக அவர்களைச் சேர்ந்தவர்களில் யாராவது தாயோ, சகோதரியோ இருப்பதற்கு அனுமதிக்க வேண்டும் என்று உத்திரவு போட்டால் நலமாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து. இதனால் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்படுகிற தாய்மார்களுக்கு மனதைரியம் அதிகம் இருக்கும். சிகிச்சையும் நன்றாக அமையும் என்பதும் என் கருத்து.

இதைப் போல, இன்னும் பல கொடிய நோய்கள் இருப்பவர்களுக்கும் ஆஸ்பத்திரிகளில் கூட ஆட்களை வைத்துக்கொள்ள அனுமதி கொடுப்பதில்லை. சாதாரணமான நோயாக இருந்தால் அதைப்பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை; தனியாக இருந்தாலும் அதுபற்றி பீதியடைவதில்லை. ஆனால் நோய் அதிகமாய் இருந்தாலும் அல்லது “டைபாய்டு,” “நிமோனியா” போன்ற ஜுரங்கள் அவர்களுக்கு இருந்தால் தம்மோடு தம் வீட்டு ஆட்கள் இருந்தால் நலம் என்று அவர்கள் குறிப்பாக பெண்கள் நினைக்கின்றார்கள். அந்த நேரங்களிலே அவர்கள் தங்களோடு தங்கள் வீட்டு ஆட்களை வைத்துக்கொள்வதற்கு சர்க்கார் ஆஸ்பத்திரிகளிலே அனுமதிக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். சாதாரணமாக சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் பொதுப்படுக்கைகளும் விசேஷ படுக்கைகளும் உண்டு. விசேஷ படுக்கைகளுக்கு (Special Wards) வருபவர்களுக்கு ஒரு சலுகை உண்டு அதாவது தங்களுடன் ஒருவரை வைத்துக்கொள்ளலாம் என்பது. ஆனால் பொதுப்படுக்கைக்கு வருபவர்கள் தங்கள் கூட இவ்விதம் யாரையும் வைத்துக் கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை. சாதாரணமாகப் பொதுப் படுக்கைகளுக்கு வருபவர்கள் அதிக ஏழை மக்களாக இருக்கின்றார்கள் ஆகையால், அவர்களும் கடுமையான நோய்[illegible]

பாதிக்கப்பட்ட நேரத்திலும், பிரசவகாலங்களிலும், தங்கள் கூட ஒரு ஆளை வைத்துக்கொள்ள வசதி செய்து கொடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இரண்டாவதாக சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் பல அரிய மருந்துகள் நோயாளிகளின் சிகிச்சைக்காக வாங்கி வைக்கப்பட்டு இருந்தாலும், சில சமயங்களில் ஏழைகளுக்கு நல்ல உயர்ந்த மருந்துகள் கிடைப்பதில்லை. ஆஸ்பத்திரி அதிகாரிகள் இந்த ஏழை நோயாளிகளைப் பார்த்து 'இந்த விலை உயர்ந்த ஊசி மருந்துகள் இங்கு இல்லை. நீங்கள் உங்கள் பணத்தைக் கொண்டு வெளியில் வாங்கி வந்தால் நாங்கள் ஊசி போடுகிறோம்' என்று சொல்கிறார்கள். சர்க்கார் நல்லெண்ணத்துடன் தான் இந்த உயரிய மருந்துகள் ஏழை மக்களுக்கு பயன்படவேண்டும் என்றுதான் அவைகளை சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் வாங்கி வைக்கச் சொல்கிறார்கள். ஆனால், பாவம் ஏழை மக்கள் அங்கு சென்றால் அவர்களுக்கு இம்மருந்துகள் அதிகம் கிடைப்பதில்லை வேறு யாருக்குத்தான் இம்மருந்துகள் உபயோகப்படுகின்றனவோ தெரியவில்லை. இதனால் ஏழை மக்கள் மிக்க அவதிக்குள்ளாகிறார்கள். ஆகையால் அவர்களுக்காக கொடுக்கப்படும் இம்மருந்துகளை அந்த ஏழை மக்களுக்கே கிடைக்கும்படி செய்யவேண்டும் என்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தப்படியாக சுகாதாரத்தைப்பற்றி சொல்வதற்கு முன், மதுரை மாநகர் நமது ராஜ்யத்திலே ஒரு பெரிய முதல் தரமான நகரமாக இருந்தும், சுகாதார வசதிக்கு முதல் படியான பாதாள சாக்கடை போடும் திட்டத்தை தொடர்ந்து அதாவது 8-ல் இருந்து 12 வரை உள்ள திட்டத்தை, நகர சபை தனது பங்கை செலுத்த தாயராக இருந்தும் இந்த வேலையைத் தொடர்ந்து நடத்த தயாராக இருந்தும் சர்க்கார் தனது பங்கை திடீர் என்று நிறுத்திவைத்து விட்டதானது மதுரைமா நகருடைய பிரதான திட்டமாகிய சுகாதார வசதி பாதிக்கின்றது. ஆகவே, இந்தத் திட்டத்தை தொடர்ந்து நடத்த சர்க்கார் பங்கை கொடுத்து உதவவேண்டும் என்றும் இது சம்மந்தமாக உடனடியாக ஆவன செய்ய வேண்டுமென்று மந்திரி அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு ஜில்லாவிலும் குடி தண்ணீர் கஷ்டம் இருக்கிறது என்பது ஒவ்வொரு அங்கத்தினர் பேசுவதிலிருந்து நமக்கு தெரிகிறது. அவ்விதமே மதுரையிலும் குடி தண்ணீர் கஷ்டம் இருக்கிறது, குறிப்பாக வெயில் காலத்தில் சுமார் 4 மாதங்கள் மக்கள் குடி தண்ணீருக்குகாக மிகவும் கஷ்டப்படுகிறார்கள். குழாய்களில் தண்ணீர் வருவதில்லை. கிணறுகளில் உள்ள தண்ணீர் போதுமானதாக இல்லாமலும் குடிக்க முடியாதபடியும் இருக்கிறது. முனிஸிபாலிடியார் லாரியில் தண்ணீர் கொண்டு வந்து கொடுக்கிறார்கள், அந்தத் தண்ணீரை வைத்து சமாளிக்க முடியாமல் இருக்கிறது. ஆகையால் வைகை ரிஸர்வாயர் திட்டத்தில் மதுரைக்கு குடி தண்ணீர் வழங்கப்படவேண்டும். அதை உடனடியாக கவனிக்க வே[illegible]மென கேட்டுக் கொள்கிறேன்.

மதுரையிலே யுத்த காலத்தில் ப்ளாட்பாரத்தின் மேல் கட்டப்பட்ட தண்ணீர் தொட்டிகள் இருக்கின்றன. அந்த தொட்டிகளில் தீ அணைக்கும் படையினர் தண்ணீர் நிறப்பி வைக்கிறார்கள். இந்த தண்ணீரை 2 மாதத்திற்கு ஒரு தடவை கூட மாற்றுவதில்லை. ஆதலால் அத்தண்ணீரிலே பல புழுக்களும் கொசுக்களும் உற்பத்தியாகி அக்கம் பக்கத்தில் உள்ளவர்களது சுகாதாரத்தை பாதிக்கிறது. ஆகையால் அத்தொட்டிகளை உடனடியாக எடுப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் மதுரைமாநகர் போன்ற நகரங்களில் உள்ள சர்க்கார் ஆஸ்பத்திரிகளுக்சென்று உள்ள Advisory Committee களில் அந்நகரங்களில் உள்ள எம்.எல்.ஏ. க்களை சமிட்டி மெம்பர்களாக நியமனம் செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் அங்குள்ள ஏழை மக்கள் நம்மிடம் வந்து த[illegible]க்கு இந்த நோய் இருக்கி





றது அந்த நோய் இருக்கிறது ஆஸ்பத்திரியில் சேர்த்து விடுங்கள் என்று கெஞ்சுகிறார்கள். அந்நிலையில் நாம் ஒன்றும் செய்யமுடியாதவர்களாக இருக்கிறோம். ஆகையால் அவர்களுக்கு உபகாரம் செய்வதற்காக அந்த கமிட்டிகளில் எம்.எல்.எ.க்களை சேர்த்தால் நலமாக இருக்கும் என்று நினைக்கிறேன். இவைகளை எல்லாம் கவனித்து மந்திரி அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**SRI K. ANBAZHAGAN** : அவைத்தலைவர்கள் அவர்களே, இந்த அரசாங்கம் சுகாதாரம் வைத்தியத் துறைகளில் முயற்சி எடுத்துக்கொண்டு பல திட்டங்களை அவர்கள் நிறைவேற்றி வந்த போதிலும், இன்றைய நாட்டிலுள்ள நிலைமையைச் சீர்தூக்கி பார்த்தால், ஏழ்மை நிலைமை காரணமாக பெரும்பாலான மக்கள் காற்றில்லாத வீடுகளில் குடி இருப்பதும் குடிக்கத் தகாத நீரைப் பருகுவதும், தூங்கத்தகாத இடங்களில் தூங்குவதும், அளவுக்கு மீறிய கூட்டங்களாகச் சேர்ந்து வாழ்வதும் அதன் காரணமாக அவர்கள் பல நோய்களுக்கு ஆளாகுவதும் ஆன துர்பாக்கிய நிலைமை இந்தப் பாரத புண்ணிய பூமியில் உருவாகி இருப்பதை காண்கிறோம். உண்மையாகவே, நாட்டுமக்களில் கிராமங்களில் வாழ்பவர்களினுள் தங்களுக்குத் தேவையான வைத்திய வசதியை பெறமுடியவில்லை. நகரங்களில் வாழும் மக்கள் வைத்திய வசதி இல்லாமல் ஒரு நாள் பொழுதுகூட ஒட்ட முடியவில்லை. கிராமங்களில் ஆஸ்பத்திரிகளையே காணமுடியாத நிலைமையில் மக்கள் இருக்கிறார்கள். நகரங்களில் மக்கள் ஆஸ்பத்திரிகளுக்குப் போய் இடம் கிடைக்காத நிலமையில் திரும்பி வந்து கொண்டிருக்கிறார்கள். இந்தக் குறைகள் எவ்வாறு ஏற்பட்டன என்பது பற்றி சிந்தித்து அவைகளை நீக்குவதற்கான திட்டத்தை உருவாக்க வேண்டும்.

டாக்டர் இல்லாத ஆஸ்பத்திரிகள், தாதிமார் போதுமான அளவுக்கு இல்லாது கஷ்டப்படும் டாக்டர்கள், மருந்து இல்லாத சீசாக்கள், டாக்டர்கள் எழுதிக் கொடுக்கும் மருந்தை வாங்க முடியாது வாடும் நோயாளிகள், தண்ணீர் கலந்த மருந்தைப் பெற்றுத் தவிக்கும் நோயாளிகள், சில பெரிய மருத்துவ மனைகளில் ஏழை எளியவர்கள் வைத்தியத்திற்குச் சென்றால் அவர்கள் பக்கம் திரும்பிக் கூட பார்க்காத டாக்டர்கள், செல்வந்தர்கள், அதே டாக்டர்களிடம் சென்று மடி கனத்தை காட்டிய உடனே அவர்கள் மட்டும் அனுமதிக்கப்படும் அநீதி ஆகிய நிலைமைகளை தான் இந்த மாநிலத்திலுள்ள பல மருத்துவ நிலயங்களிலும் காணமுடிகிறது. இதைச் சொன்னால் கனம் அமைச்சர் அவர்கள் மறுத்து விடுவார்கள் என்று நான் கருதவில்லை. ஏனென்றால், உள்ளம் உள்ளவர்கள் எல்லாம் இந்த நாட்டு மக்களுக்குள்ள வேதனைகளை உணர்வார்கள். ஏழைகளுக்கு உதவ வேண்டியது அரசாங்கத்தின் முதல் கடமை. பணக்காரர்கள் பண வசதியைக் கொண்டு எப்படியும் வைத்தியம் செய்து கொள்ள முடியும். அயல் நாடுகளுக்குப் போய்க்கூட அவர்கள் வைத்தியம் செய்து கொள்ள முடியும். ஏழைகளாக இருப்பவர்கள் அரசாங்கத்தாரால்தான் கவனிக்கப்படவேண்டும்.

இந்த அரசாங்கம் தமிழ் நாடு என்ற பெயரை இந்த மாநிலத்திற்கு வைக்கவே தயங்கினாலும், அதை வைப்பதற்கு அஞ்சினாலும், தமிழ் நாட்டிற்குச் செய்ய வேண்டிய சில சிறப்பான தனிக் கடமைகள் இருக்கின்றன. அதையும் கனம் அமைச்சர் அவர்கள் மறந்துவிடுவார்களோ என்று ஐயுறுகிறேன். அதாவது தமிழ் நாட்டில் சிறந்த வைத்திய முறையான சித்த வைத்தியம் முறையை வளர்க்க வேண்டும். தமிழ் நாட்டிற்குறிய வைத்திய சித்த வைத்தியந்தான். யூனானி வைத்தியம் இஸ்லாமிய கலாசாரத்தோடு சேர்ந்தது. ஆயுர்வேதம் ஆரியர்களது வைத்தியத் திறமையால் ஏற்பட்டது. ஹோமியோபதி ஜெர்மனிய நிபுணரின் அறிவுத் திறமையால் உண்டானது. அலோபதிக் வைத்திய முறை ஆங்கில நாட்டுடன் தொடர்பு உள்ளது. சித்த வைத்தியந்தான் தமிழ் நாட்டு வைத்தியம். தமிழர்கட்குப் பெருமையளிக்கும் மருத்துவம். நமது தமிழ் நாட்டிலே 5,000 ஆண்டுகளுக்கு முன்பு சித்தர்களால் கண்டு பிடிக்கப்பட்டு,

திருவள்ளுவரால் போற்றப்பட்டு, திருமூலரால் வரையறுக்கப்பட்டது சித்த வைத்தியம். சுதந்திரம் வருவதற்கு முன்பே சித்த வைத்தியத்தைப் பேணி வளப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதிலும், இன்று அதை வளர்ப்பதற்கு முயற்சி அடியோடு கைவிடப் பட்டிருப்பதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

சென்னையில் இந்திய வைத்தியக் கல்லூரி என்ற கல்லூரியானது 1927-ம் வருஷத்தில் பனகல் அரசர் இந்த மாநில முதல் மந்திரியாக இருந்த காலத்தில், அவருடைய ஆர்வத்தினால், ஏற்படுத்தப்பட்டது. அவர் "வெள்ளையர்களின் வைத்தியமான அலோபதி வைத்தியத்திற்கு நம் நாட்டு மக்கள் இரையாக வேண்டாம். நமது நாட்டுக்கு உரிய தனி வைத்தியம் இருக்கிறது. அதுவும் வளர்ந்தே தீர வேண்டும்". என்ற ஆர்வத்தினால் பேரறிஞர் ஸ்ரீ உஸ்மான் தலைமையில் ஒரு குழுவை நியமித்து, அதன் மூலம் சித்த வைத்தியம் ஓர் சிறப்பான வைத்தியமுறை என்பதை எடுத்துக் காட்டி, அதற்குப் பின்னர் இந்திய மருத்துவக் கல்லூரியையும் ஏற்படுத்தினார்கள். ஆனால் இன்றைய அரசாங்கத்தார் இந்திய வைத்தியக் கல்லூரியை மேல் நாட்டு வைத்தியம் கலந்த ஓர் கல்லூரியாக மாற்றியுள்ளார்கள். அப்படி மாற்ற வேண்டிய காரணங்கள் பல இருக்கலாம். அப்படி மாற்றியதன் விளைவாக, அங்கே சேர்ந்து படிக்க விரும்புவோர் "இண்டர்மிடியட்" பரீட்சை தேறியவர்களாக இருக்க வேண்டியிருக்கிறது, அவர்கள் அந்த வைத்தியக் கல்லூரியில் ஐந்தாண்டு காலம் படிக்க வேண்டியிருக்கிறது. அப்படி ஐந்தாண்டுகள் படித்தாலும் உயர்ந்த டாக்டர் பதவி கிடையாது. இப்படிப்பட்ட நிலைமையில் அக் கல்லூரி மாணவர்கள் "மருத்துவத்தில் நாங்கள் உயர்ந்த அறிவு பெற வேண்டும். கல்லூரிப் பரீட்சையில் தேறிய பிறகு எங்களுக்கு உயர்ந்த டாக்டர் பதவி கொடுக்க வேண்டும்." என்று கேட்டு வருகின்றனர். படிப்பு மாற்றத்திற் கேற்ப அந்தக் கல்லூரியின் பெயர் "காலேஜ் ஆப் இன்டெக்ரேடட் மெடிஸின்ஸ்" என்று மாற்றப்பட்டது. ஒரு குறிப்பிட்ட நிலைமை காரணமாக அந்தக் கல்லூரி மாற்றியமைக்கப் பட்டதை நான் வரவேற்கிறேன். அந்தக் கல்லூரி எந்த அடிப்படை நோக்கத்துடன் மாற்றியமைக்கப்பட்டதோ அந்த நோக்கம் நல்ல முறையில் நிறைவேற்றப்படுமானால், இப்படி மாற்றியமைந்திருப்பது நல்லது தான். ஆனால், எந்த அடிப்படை நோக்கத்துடன் 1927–ம் ஆண்டு அந்தக் கல்லூரி உருவாக்கப்பட்டதோ அந்த அடிப்படை நோக்கமும் இப்போது சிதைந்து அதை மாற்றி எற்படுத்திய புதிய திட்டமும் சரியாக நிறை வேற்றப்படவில்லை என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். சித்த வைத்தியம் இப்போது பிறந்த நாட்டிலேயே செத்துக் கொண்டிருக்கிறது. அதற்கு உயிரூட்ட வேண்டும். அதைப் பேணி வளப்பதற்கான வழிகள் காணுவதற்கு ஆராய்ச்சிகள் நடத்த வேண்டும். அதற்காக ஒரு தனிப் பட்ட சித்த மருத்துவர் குழு (போர்டு) அமைக்கப்பட்டு, நம் நாட்டுக்குரிய சித்த வைத்தியத்திலுள்ள சிறப்புக்களும் நுணுக்கங்களும் நிலை நாட்டப்பட வெண்டும்.

தமிழ் நாட்டிலுள்ள ஆட்சியாளர்கள் சித்த வைத்தியத்தின் தனிச் சிறப்பை நிலை நாட்டத் தவறி விட்டதின் விளைவாக, எத்தனையோ சித்த வைத்திய நுணுக்கங்களும் இப்போது ஆயுர்வேத வைத்திய நுணுக்கங் கள் என்று நாட்டு மக்கள் பலரால் பேசப்பட்டும் கருதப்பட்டும் வருகின்றன. தமிழர்களுடைய பல தனிப் பண்புகளும் அருஞ் செயல்களும் கவியின் கலைகளும் பிறருடையன என்று கருதப்பட்டு விடுகின்றன. அத்தகைய துர்ப் பாக்கிய நிலைமை தமிழ் வைத்திய முறைக்கும் ஏற்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டுச் சித்தர்களால் கண்டு பிடிக்கப்பட்ட வைத்திய நுணுக்கங்கள் ஆயுர்வேதத்தில் சேர்க்கப்பட்டு, அம்மருந்துகளுக்கு உரிய தனி சித்த வைத்திய முறையும், தனிப் பெயரும் மறைக்கப்பட்டிருக்கின்றன.

இறந்துகொண்டிருக்கும் சித்த வைத்தியத்திற்கு உயிரூட்டி, அதை நன்றாக வளப்பதற்கான ஆலோசனைகள் கூறக்கூடிய ஒரு தனிக் குழுவை அரசாங்கத்தார் அமைக்க வேண்டும், நான் இந்தக் காரியத்தைத்



தமிழ்நாட்டு அரசாங்கத்தார் செய்யவேண்டும் என்று சொல்வதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. தமிழ் நாட்டின் பெருமையை உயர்த்தக் கடமைப்பட்டிருக்கும் இந்த அரசாங்கத்தார் தமிழர்களின் பெருமைக்குரிய சித்த வைத்திய முறையை நிலை நாட்டுவது அவர்கள் கடமை என்பது முதல் காரணம். கிராமங்களிலுள்ள மக்கள் சித்த வைத்திய முறைகளை எளிதில் கையாண்டு அவ்வப்போது சிறந்த மருந்துகளைத் தயாரித்துக் கொண்டு நல்ல பலன் அடைய முடியும் என்பது இரண்டாவது காரணம். அரசாங்கம் இந்த நல்ல காரியத்தைச் உடனடியாக செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சித்தர்கள் தயாரித்துள்ள வைத்திய சம்பந்தமான எடுகளைத் தேடி யெடுத்து அவைகளில் எழுதப்பட்டுள்ள வைத்திய நுணுக்கங்களை ஆராய்ந் தறியும் வேலையில் மருத்துவப். புலவர் திரு. குமாரகுரு செட்டியார் அவர்கள் ஈடுபட்டிருந்தார்கள். அவர் வேலையிலிருந்து நீக்கப்பட்ட பிறகு அந்த வேலையும் கைவிடப்பட்டது. அவர் இப்போது இருக்கிறாரா, இல்லையா என்பதும் எனக்குத் தெரியாது.

அதே போல, டாக்டர் திரு. குருசாமி முதலியார் அவர்களுடைய ஆர்வத்தின் விளைவாக கிராம வைத்தியர் தகுதிப் பயிற்சி **(Village Vaidyas)** என்ற ஒரு பயிற்சி சித்த வைத்திய முறையில் பலபேருக்கு கொடுக்கப்பட்டு வந்தது. அதுவும் இப்போது கைவிடப்பட்டிருக்கிறது.

**College of Integrated Medicines**–ல் இன்றுள்ள நிலைமையில் சித்த வைத்தியத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க முடியாவிட்டாலும் தமிழர்களுடைய வைத்தியக் கலை என்ற அடிப்படையில் சித்த வைத்தி யத்தை வேறு ஆராய்ச்சி நிலையம் அமைத்து பாதுகாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தப்படியாக, இந்திய மருத்துவக் கல்லூரியைச் சட்டபூர்வமாக **College of Integrated Medicines**–ஆக மாற்றி யிருக்கும் அரசாங்கத்தார் சட்டத்தை நிறைவேற்றுவதில் தவறியிருக்கிறார்கள். காரணம், அப்படிச் சட்டமியற்றப்பட்ட பிறகு அதற்கேற்றபடி கல்லூரியில் பேராசிரியர்கள் நியமிக்கப்படவில்லை, மற்ற அவசியமான ஏற்பாடுகளும் நிறைவேற்றப்பட வில்லை. அங்கே சொல்லிக்கொடுக்க வேண்டியவற்றை நன்றாகப் பயிற்று விக்கக் கூடிய, வைத்தியத்தில் நிறைந்த அநுபவ அறிவு பெற்ற ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்ற வேண்டுகோள் அம் மாணவர்களால் பல முறை விடப்பட்டிருந்த போதிலும், தகுந்த தலைவர்களை அணுகி கோரிக்கையைத் தெரிவித்திருந்த போதிலும், இதுவரை அந்த வேண்டுகோள் நிறைவேற்றப்படவில்லை. **College of Integrated Medicines**–என்ற பெயருக்கு ஏற்றபடி அங்கே சொல்லிக் கொடுக்கவேண்டிய வைத்தியப் பாடங்களை நன்றாகச் சொல்லிக் கொடுக்கக் கூடிய கற்றறிந்த பேராசிரியர்கள் **Professors** அங்கே நியமிக்கப்பட வில்லை. அங்கே படிக்கும் மாணவர்கள் இப்போது 200 ரூபாயை **Tuition fees** ஆண்டுக்கட்ட ணம் ஆகக் கட்டி வருகின்றனர். நல்ல பேராசிரியர்களை நியமித்தால்; அந்த மாணவர்கள் 240 ரூபாய் **Tuition fees** ஆண்டுக் கட்டணம் செலுத்தவும் தயாராக இருக்கிறார்கள். அவர்கள் சொல்வதெல்லாம் "நாங் கள் 240 ரூபாய் வேண்டுமானாலும் **Tuition fees** கட்டத் தயாராயிருக்கிறோம். எங்களுக்கு நல்ல பேராசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும். வைத்தியத்தில் நுண்ணறிவு படைத்த அநுபவமிக்க பேராசிரியர் ஒருவர் கல்லூரிக்குத் தலைவராக **(Dean)** வர வேண்டும். இப்போது எங்கள் கல்லூரிக்கு மதிப் பில்லாததற்கு காரணம் இக்கல்லூரியின் ஆசிரியப் பதவிகளின் மதிப்பும் தகுதியும் குறைவாக இருப்பதுவே ஆகும்" என்பதுதான்.

மேலும், இப்போது அந்தக் கல்லூரியில் படித்துத் தேர்ச்சி பெற்று வெளி வருபவர்கள் உடனடியாக அரசாங்க உத்தியோகங்களுக்குப் போக முடியவில்லை. காரணம், அவர்கள் (ரெஜிஸ்டர்) பதிவு செய்து கொள்ள முடிவதில்லை. ஆகவே அவர்கள் கல்லூரியில் படித்துத் தேர்ச்சி பெற்ற பிறகு உடனடியாக ரெஜிஸ்டர் (பதிவு) செய்து கொள்வதற்கு வகை செய்வதற்கான மருத்துவக் குழுவை நியமிக்க வேண்டும் என்று விரும்புகிறேன். சென்ற ஆண்டிலேயே அதற்கான சட்டம் இயற்றப்பட்டும் அப்படிப் பட்ட ஒரு குழு இன்னும் நியமிக்கப்படவில்லை. அது எப்போது நியமிக்கப்படும் என்றும் தெரியவில்லை. அந்தக் குழுவை உடனடியாக நியமிக்கவேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன்.

இறுதியாக நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த நாட்டு மக்களின் ஏழ்மை நிலையையும், எளிய வாழ்க்கைத்தரத்தையும் மனதில் கொண்டு பார்க்கும்போது, ஹோமியாபதி மருத்துவம் அவர்களுக்குக் குறைந்த செலவில் சிறந்த பலனளிக்கக்கூடிய வைத்தியமாக இருக்கிறது என்பது தெரிகிறது. வேறு வைத்தியங்களால் தீராத பல நோய்கள் சித்த வைத்தியத்தால் தீருவது போல, ஹோமியோபதியாலும் தீருகின்றன. ஆகவே தக்கவாறு ஆராய்ந்து பார்த்து ஹோமியோபதியை அபிவிருத்தி செய்து கிராமம் கிராமமாகப் பரப்ப வேண்டும் என்று அரசாங்கத்தாரைக் கேட்டுக் கொள்கிறேன்.

நான் கூறிய இந்தக் காரியங்களை யெல்லாம் நிறைவேற்றி வைத்திய துறையிலுள்ள குறைகளை நிக்கினால்தான் அரசாங்கத்தின் சுகாதார வைத்திய இலாக்காவிற்கு வந்திருக்கும் நோயும் நீங்கும் என்பதையும் தெரிவித்து உரையை முடித்துக் கொள்கிறேன்.

**DEPUTY SPEAKER**: The House will now adjourn and meet again at 9 a.m. on Thursday, the 18th July 1957.

2-07 p.m. The House then adjourned.





## VII.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

124. *Notification issued with G.O. Ms. No.* 1736, *Food and Agriculture, dated 4th June* 1957, *amending rule* 13 *of the Madras Commercial Crops Markets Rules*, 1948. [Laid on the table of the House under section 18 (4) (*c*) of the Madras Commercial Crops Markets Act, 1933.]

125. *Notification issued with G.O. Ms. No.* 1574, *Industries, Labour and Co-operation, dated* 30*th April* 1957 *amending the Madras Partnership* (*Registration of Firms*) *Rules*, 1932, *and the Madras Partnership* (*Fees*) *Rules*, 1932, *consequent on the Reorganization of States.*

126. *Notification issued with G.O. No.* 202, *L.A., dated* 6*th February* 1957, *adding new rules* 25-*A*, 25-*B and* 25-*C regarding appeals to the rules relating to general establishment, appointment and punishment of officers and servants of panchayats framed under the Madras Village Panchayats Act*, 1950 (*Madras Act* X *of* 1950).

[17th July 1957

APPENDIX I.

[Vide answer to starred question No. 129 asked by Sri V. K. Ramaswamy Mudaliyar at the meeting of the Legislative Assembly held on 17th July 1957, page 606 supra.]

*Quantity of rice imported into Madras State during 1954, 1955 and 1956.*

(*a*) The quantity of rice imported into this State from the adjoining States during the years 1954, 1955 and 1956.

*A.*—The only surplus State adjoining Madras is Andhra and the quantities of rice imported from Andhra into Madras during years beginning from 1953–54 are as follows :—

| Year. | Quantity imported (in tons). |
|---|---|
| 1953–54 * .. .. .. .. .. | 215,794 |
| 1954–55 .. .. .. .. .. | 135,537 |
| 1955–56 .. .. .. .. .. | 94,303 |
| 1956–57 .. .. .. .. .. | 54,063 |

* NOTE.—The figures cover the Madras State before reorganization.

The above figures do not include movements by sea or road.

(*b*) The steps taken to make this State self-sufficient.

*A.*—The steps taken by the Government to make the Madras State self-sufficient in foodgrains including rice are briefly indicated below :—

The Madras State is implementing several food production schemes under the Grow More Food Campaign to make this State self-sufficient in foodgrains. The drive for increased food production has been in two directions, *firstly* extensive cultivation, by bringing new area under food-crops, increasing the area of double-crop cultivation and cultivation during the off-season; and *secondly* intensive cultivation by improved cultural practices, use of improved seeds and better manuring.

The drive for increased food production consists mainly of permanent schemes called " Works Schemes " which are intended to improve existing irrigation facilities or to provide fresh irrigation facilities and recurring schemes called " Supply Schemes " which are primarily designed to increase the yield of foodgrains per acre by distribution of agricultural aids like fertilizers, manures and improved seeds to ryots either at controlled rates or subsidized rates.

The following are the schemes included in the food production drive :—

*Works schemes.*—(1) Irrigation and Tank Improvement Scheme under the control of the Public Works Department.

(2) Tank Improvement Scheme and Special Minor Irrigation Programme under the control of the Superintending Engineer (Food Production).



17th July 1957]

(3) Lift irrigation supply of oil engines and electric motor pumpsets to ryots on hiring and on hire-purchase systems.

(4) River Pumping Scheme.

(5) Filter Point Wells Scheme.

(6) Land reclamation by tractors and bull-dozers by hiring and hire-purchase systems.

*Supply schemes.*—(1) Distribution of chemical fertilizers like ammonium sulphate, superphosphate and other nitrogenous fertilizers;

(2) Urban Compost Scheme,

(3) Rural Compost Scheme;

(4) Distribution of green manure seeds;

(5) Multiplication and distribution of improved paddy and millet seeds; and

(6) Control of pests and diseases of crops.

*Miscellaneous schemes.*—(1) Village co-operatives;

(2) Madras Land Utilization Order, 1950; and

(3) Crop Competition Scheme.

The Food Production Programme for each year is drawn up by the Government in consultation with the heads of departments concerned and finally approved by Government of India. The order of expenditure on Grow More Food is about Rs. 500 lakhs per annum. For instance in 1957–58 the programme envisages the following expenditure :—

| | RUPEES IN LAKHS. |
|---|---|
| Works schemes .. .. .. .. | 149 |
| Supply schemes .. .. .. .. | 384 |
| Total .. | 533 |

In preparing the annual programme, the targets fixed under the Five-Year Plan are taken note of. For ensuring the proper implementation of the schemes and the assessment of results, definite targets of additional production are fixed for each year. Assistance is given by the Government of India for some of the schemes in the shape of loans and grants. The achievements against the targets are watched in the districts by the Collectors and other officers and the Collectors report the achievements under each scheme periodically to the Commissioner for Food Production for review.

A short description of the schemes is given below :—

(i) Under the Special Minor Irrigation Programme, construction of new irrigation works and repairs to existing sources such as anicuts, dams, regulator tanks, supply channels, etc., both in proprietary and ryotwari areas are taken up for execution after

due investigation. A special Engineering Circle in charge of a Superintending Engineer consisting of executive divisions, attends to the execution of works in addition to the regular staff of the Public Works Department.

(ii) Lift irrigation is a useful means of providing water-supply both to supplement the available local irrigation and as an insurance against its failure and it is therefore encouraged by the Government; oil engine pumpsets acquired by the Agriculture department are hired out to the ryots for raising crops, preferably food-crops. Apart from this, the Government distribute oil engine and electric motor pumpsets to ryots under the hire-purchase system. The Agriculture department also arrange for installation of units of oil engines or electric motor pumping sets at Government cost in the first instance for the supply of water to ryots by pumping from rivers, ponds, etc., in the area selected for such irrigation so as to bring as much area as possible under crop production on a permanent basis.

Recognizing the limitations of surface water irrigation, the Government have been paying considerable attention to the exploitation of underground water sources in the State. Filter point tube-wells are sunk in ryot's land by the Government under the scheme known as the " Filter Point Wells Schemes ".

(iii) With a view to help ryots to adopt increasingly mechanical cultivation practices for certain processes, the Agriculture department supply them with tractors and bulldozers on hire. Tractors are also sold to ryots under the hire-purchase system.

(iv) Under the scheme of survey of cultivable waste lands, large extents of land in Ramanathapuram have been localized by a Special Agricultural Engineering staff in addition to the work done by the normal staff. The Government waste lands are assigned to individual landless poor persons at the rate of 5 acres (dry) each.

(v) Under the Madras Land Utilization Order, the Collectors have been empowered to take steps to sell in auction the right to cultivate arable lands, which are left uncultivated to others for cultivation with food-crops.

(vi) Manuring is an assured method of raising the yield and the scheme for the distribution of ammonium sulphate is therefore being continued. The use of nitrogenous fertilizers like urea and A/SN is also encouraged. Takkavi loans are granted to ryots on a liberal scale for the purchase of chemical fertilizers for application to paddy and other food-crops and the loans are recovered after the harvest of the long-term crop.

(vii) Under Rural Compost Scheme, the ryots are encouraged to compost waste vegetable matter like dried leaves, grasses, weeds, stubbles of grass, etc., with a view to supplement cattle manure. The compost week is celebrated along with the National Tree Planting Week (Vanmahotsava) and wide publicity



is given regarding the award of certificates of merit to those who prepare the maximum compost. Under the Urban Compost Scheme, organic manures are made available to ryots at reasonable rates. At present, the municipalities and panchayats are selling compost at a subsidized price not exceeding Rs. 2 per ton. All municipalities and panchayats are encouraged to manufacture compost out of the town refuse and nightsoil by giving financial assistance by way of loans. Technical advice to the local bodies for the manufacture of compost is given by the Agriculture department and by the State Compost Development Officer.

(viii) Improved seeds of paddy, millets and green manure are procured from seed-farm ryots by the payment of a premium and sold to agriculturists at concessional rates. During the period of the Second Five-Year Plan it is proposed to set up 400 State seed farms in all parts of the State.

(ix) Plant protection is an essential auxiliary scheme as it saves valuable food from destruction of pests. Insecticides and pesticides are acquired on Government account and sold to ryots at concessional rates through agricultural depots. Sprayers and dusters are also purchased by the department and loaned to ryots wherever necessary and free technical advice is given by the Special Plant Protection staff employed under the scheme. Reports relating to forecast of pests and diseases and their likely incidence are sent to the Director of Information and Publicity and the Station Directors of the All-India Radio every week for giving wide publicity.

(x) In order to associate the cultivating ryots closely with the Food Production Schemes, the Government have also continued several Extension Service Schemes, like Village Co-operative, etc. The Government have undertaken crop competitions in the State in order to create an urge in the farmers to adopt improved techniques for stepping up the yield. Under this scheme prizes in cash and medals are awarded from the village level upwards to the competitors, who are adjudged to have secured the highest yield in the plots enlisted for the competition.

## APPENDIX II.

[Vide answer to starred question No. 130 asked by Sri M. Jagannathan (on behalf of Sri M. Jangal Reddiyar) at the meeting of the Legislative Assembly held on 17th July 1957, page 607 supra.]

[SUBJECT.—*Tours of Ministers and travelling allowance drawn.*]

Statement showing the particulars of the number of days toured by Ministers on State Business from November 1956 to fist week of March 1957, Travelling Allowance drawn and the public functions attended to in February 1957.

| *Name of Minister.* | *Month.* | *Number of days toured on State business.* | *Travelling Allowance drawn.* | *Public functions attended to in February 1957.* |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | RS. A. | |
| Sri K. Kamaraj, Chief Minister .. | November 1956 .. | 12 | 449 1 | Nil. |
| | December „ .. | 9 | 468 0 | |
| | January 1957 .. | 2 | 155 2 | |
| | February „ .. | Nil. | Nil. | |
| | March „ .. | Nil. | Nil. | |
| Sri M. Bhaktavatsalam, Minister for Home. | November 1956 .. | 6 | 344 12 | Nil. |
| | December „ .. | 11 | 986 0 | |
| | January 1957 .. | 2 | 171 6 | |
| | February „ .. | Nil. | Nil. | |
| | March „ .. | Nil. | Nil. | |
| Sri C. Subramaniam, Minister for Finance. | November 1956 .. | 18 | 794 11 | Nil. |
| | December „ .. | 6 | 858 0 | |
| | January 1957 .. | 11 | 153 7 | |
| | February „ .. | Nil. | Nil. | |
| | March „ .. | Nil. | Nil. | |
| Sri M. A. Manickavelu, Minister for Revenue. | November 1956 .. | 11 | 505 6 | Participated in the District Cattle Show, Vellore, on 10th February 1957. |
| | December „ .. | 14 | 1,104 10 | |
| | January 1957 .. | 8 | 480 3 | |
| | February „ .. | 1 | 36 6 | |
| | March „ .. | Nil. | Nil. | |
| Sri B. Parameswaran, Ex-Minister for Religious Endowments and Transport. | November 1956 .. | 1 | 115 0 | Nil. |
| | December „ .. | 7 | 447 8 | |
| | January 1957 .. | ½ | 112 0 | |
| | February „ .. | Nil. | Nil. | |
| | March „ .. | Nil. | Nil. | |
| Sri S. S. Ramaswamy Padayachi, Ex-Minister for Local Administration. | November 1956 .. | 12 | 509 8 | Nil. |
| | December „ .. | 4 | 386 0 | |
| | January 1957 .. | ½ | 52 0 | |
| | February „ .. | Nil. | Nil. | |
| | March „ .. | Nil. | Nil. | |
| Sri R. Shanmuga Rajeswara Sethupathi, Ex-Minister for Public Works. | November 1956 .. | 1 | 200 0 | Nil. |
| | December „ .. | Nil. | Nil. | |
| | January 1957 .. | Nil. | Nil. | |
| | February „ .. | Nil. | Nil. | |
| | March „ .. | Nil. | Nil. | |

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

**Thursday, 18th July 1957.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

### I.—QUESTIONS AND ANSWERS.

### STARRED QUESTIONS.

*Radio sets for villages*

* 133 Q.—SRI C. MUTHIAH PILLAI: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the steps taken to expedite the supply of radios to villages under Community Development Schemes; and

(*b*) why villagers are not permitted to purchase radio sets from outside?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) The Radio Engineer has been asked to accord highest priority to the supply of Radio Sets to the centres in Community Development Areas. The estimated requirements of the centres in Community Development Areas for 1957–58 have been furnished in advance to the Radio Engineer, so that he may make necessary arrangements.

(*b*) Purchase in open market of the requirements of radio sets of the local bodies and other private bodies in Community Development Areas has been stopped for the following reasons:—

The radio sets supplied by private dealers and companies were not working satisfactorily. It was found that radio sets were tuned to unauthorized and prohibited stations (Community sets supplied by the State Broadcasting Department cannot be tuned to stations other than those of All-India Radio) and that no care was taken by the private companies to properly maintain the sets supplied by them. Supply and maintenance of radio sets by the State Broadcasting Department, it is expected, will ensure better quality and longer service.

SRI C. MUTHIAH PILLAI: இரண்டு வருஷ காலமாக கிராமப் புறத்துக்கு ஒரு ரேடியோ செட் கூட வாங்க முடியவில்லை, டெவலப் மெண்ட் போர்டு மீட்டிங்கிலும், அட்வைசரி போர்டு மீட்டிங்கிலும் தீர்மானம் போட்டு அனுப்பியும் அரசாங்கம் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. கிராமப்புறத்துக்கு தேவையான ரேடியோ செட்களை வெளியார் மார்க்கட்டிலிருந்து அரசாங்கம் வாங்கிக் கொடுக்க உடனடியாக உத்திரவிடுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: வெளியாரிடமிருந்து வாங்கு வதற்கு இப்போது சர்க்கார் ஆலோசனை செய்து வருகிறது.

Sri K. VINAYAKAM : Sir, what would be the probable cost of a radio set that has been recommended by our Radio Engineer to be installed in the Community centres? Have the Government any idea of the cost of the radio set that is assembled by Sri G. D. Naidu of Coimbatore, which is somewhere about Rs. 100, and which would be feasible and better fitted for a community centre in a village?

The Hon. Sri C. SUBRAMANIAM : Sir, I do not think it is available in sufficient numbers for being supplied to all the villages, and I do not think it is in the market available now in sufficient numbers. As far as the cost factor is concerned, I would like to have notice in regard to the sets assembled by the Broadcasting Department.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, even in regard to the maintenance of these sets, will the Government consider the desirability of entrusting the maintenance work to private parties instead of maintaining by a huge establishment which makes it exceed the cost of the set?

The Hon. Sri C. SUBRAMANIAM : My own impression is that the service maintained by the Government is more efficient and less costly.

Sri C. MUTHIAH PILLAI : கிராமப்புறங்களுக்குத் தேவையான ரேடியோ செட்களை எப்போது அரசாங்கம் தயாரிக்கும் என்றும், இந்தத் தேவையை அரசாங்கம் பூர்த்தி செய்யுமா என்றும் சொல்ல வேண்டு கிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM : கட்டாயம் பூர்த்தி செய்வதற்கு முயற்சி செய்யும்.

Sri S. NAGARAJA MANIAGAR : சர்க்கார் அளித்துள்ள ரேடியோ உறுதியானவை என்பதும் அதை கண்காணித்துக் கொள்ள ஒரு சர்க்கார் இலாகா இருப்பதும் வாஸ்தவம். ஆனாலும் வருஷத்திற்கு சுமார் 120 ரூபாய் என்று, 2, 3, 4, வருஷங்களுக்கு செலவழிப்பதை விட ஒரு புது ரேடியோவை வாங்கி விடலாம். தனிப்பட்ட முறையில் வாங்கிக் கொள்ள அனுமதி அளித்தால் நன்றாக இருக்கும் என்பது சர்க்காருக்கு தெரியுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : என்னுடைய பதிலிலேயே எந்த எந்த காரணங்களுக்காக 'டிபார்ட்மெண்ட்' மூலமாக வாங்க வேண்டும் என்று குறிப்பிட்டேன். அதே காரணங்கள் கனம் அங்கத்தினரின் கேள்விக்கும் பொருந்தும்.

Sri V. SUBBIAH : சமுதாய நல திட்டப் பிரதேசங்களிலே பல இடங் களிலே ரேடியோ இருந்தும் சரியாக வேலை செய்வது இல்லை. இவைகளை கண்காணிக்க நிறைய செலவாகின்றது. இவைகள் நல்ல முறை யில் அமைக்கப்படவில்லை என்று புகார் செய்திருந்தும் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. புகார் செய்யப்பட்ட இடங்களிலாவது இவைகளை மாற்றி யமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இம்மாதிரி ரேடியோ சில சமயங் களில் கெட்டுப்போவது இயற்கை. இது இயந்திரத்தின் குணம். ரேடி யோவை நல்ல முறையில் உபயோகிக்காவிட்டால் சீக்கிரத்தில் கெட்டு போய்விடும். எந்த எந்த இடங்களில் இவை 'ரிப்பேர்' ஆகியிருக்கின் றதோ அவைகளை சரி செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.



Sri A. A. RASHEED : Is it the view of the Government Sir, that the radio sets manufactured and sold in the market are defective ?

The Hon. Sri C. SUBRAMANIAM : The radio assembled by the department is of better quality and I would not say that the other thing is defective.

Sri C. MUTHIAH PILLAI : பஞ்சாயத்து போர்டு கூட அவர்கள் பணத்திலிருந்து வாங்க முடியாது என்று சொல்வதற்கு விதி விலக்கு அளிக்க முடியுமா என்று கேட்கிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM : நான் முன்பு சொன்னது போல் வெளியாரிடமிருந்து வாங்கி தேவையைப் பூர்த்தி செய்யலாமா என்பது சர்க்கார் ஆலோசனையில் இருந்து வருகிறது.

Sri M. JAGANNATHAN: சமுதாய நல திட்டத்தின் கீழ் ரேடியோக்கள் வாங்கி வைக்கப்படுகின்றன. அந்த ரேடியோக்களின் விலையில் நாலில் ஒரு பகுதியை கிராம ஜனங்கள் கட்ட வேண்டும் என்று விதி இருக் கிறது. இனிமேலாவது அந்த ரேடியோக்களின் விலையை சர்க்காரே சரி செய்து, கிராமங்களில் வைக்க முன் வருமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : எல்லா கிராமங்களிலும் வைப் பதாக இருந்தால் ஒரே முறையாக எல்லோருடைய விலையையும் எடுத்துக் கொண்டு சர்க்கார் கட்டும்படியாக ஏற்படலாம். ஒரு சில கிராமங்களுக்கு கொடுக்கும் போது குறை இருக்கலாம். எல்லா கிராமங்களுக்கும் சர்க்கார் கட்ட வேண்டும் என்று சொல்வது சரியல்ல என்பது என் அபிப்பிராயம்.

Sri M. P. SUBRAMANIAM : இம்மாதிரி இலாகாவால் கொடுக் கப்படும் ரேடியோ செட்களில் ஒரு ஸ்டேஷன் மட்டும் தான் இயங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. எல்லா ஸ்டேஷன்களும் இயங்கும்படி செய்வதற்கு என்ன தடை ? இப்பொழுது திருச்சி நிலையம் மட்டும்தான் இயங்குகிறது.

The Hon. Sri C. SUBRAMANIAM : மூன்று ஸ்டேஷன்கள் 'ட்யூன்' பண்ணலாம். மூன்று ஸ்டேஷன்களும் 'ஆல் இண்டியா ரேடியோவைச்' சேர்ந்தவையாக இருந்தால் 'ட்யூன்' பண்ண முடியும்.

Sri M. S. SELVARAJAN : "கம்யூனிட்டி டெவலப்மெண்ட் ஏரியா" வைத் தவிர இதர கிராமங்களுக்கு ரேடியோ செட்கள் வழங்கப்படுகின்ற னவா ? எத்தகைய கிராமங்களுக்கு எந்த அடிப்படையில் வழங்கப்படு கின்றன ?

The Hon. Sri C. SUBRAMANIAM : மற்ற கிராமங்களுக்கும் வழங்கப்படுகின்றன. புள்ளி விவரங்கள் வேண்டுமென்றால், ஒரு தனி கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

Sri K. VINAYAKAM : Sir, is the Hon. Minister aware of the fact that the community radios cannot be tuned to three stations and that it is possible to tune them only to one station, because the technical personnel who install . . .

Mr. SPEAKER : During question-hour, the hon. Member cannot question the Minister's statement. The hon. Member can put a supplementary question. But he cannot say that the Minister is wrong and that the sets cannot be tuned. That is what the hon. Member is now saying.

[18th July 1957

SRI K. VINAYAKAM : Sir, is the Hon. Minister aware of the fact that the technical personnel seal the sets after tuning them to only one station?

THE HON. SRI C. SUBRAMANIAM : The point for consideration is this. The hon. Member wants to know whether the set could be tuned at will to Tiruchirappalli station for five minutes and to Madras station for the next five minutes. That cannot be done I do agree. If the people want Tiruchirappalli station for a month, they can tune the set to Tiruchirappalli station. After a month if the people want that the set should be tuned to Madras station, that also can be done, and the set will be sealed after tuning it to the particular station. We cannot be changing the station as is done in private houses. That will not serve the progress of the programme with reference to each station. If we go on changing the station where light music is broadcast, then the community cannot get the advantage of the various talks given with reference to agricultural development or the various other broadcasting services intended to educate the villagers. That is why, only one station is tuned to and then the set sealed so that the people may have the advantage of the entire talks from a particular station.

*Prevention of Cruelty to Animals Act*, 1890

9-10 a.m. * 134 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the total number of convictions under the Prevention of Cruelty to Animals Act, 1890 (XI of 1890) during the period 1955–56 in Madras City; and

(*b*) the steps taken to extend the Act to the mufassal areas?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) 1,613.

(*b*) The provisions of the Prevention of Cruelty to Animals Act have already been extended to a number of important places in the State. The policy of Government is to extend the provisions of the Act as and when the Collectors of the Districts recommend the extension of the provisions of the Act to any particular place or area.

SRI K. VINAYAKAM : Will the Hon. Minister be pleased to let us know the types of cruelties that are inflicted upon animals apart from cruelties to which bullocks are subjected to in the City of Madras and have any such types of cruelties to animals been brought to the notice of the Government?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, it is a large question and if the hon. Member would put a separate question, I shall try to answer it.



18th July 1957]

SRI V. K. KOTHANDARAMAN : மிருகங்களை கொடுமைப்படுத்துபவர்களுக்கு தண்டனை கொடுக்கும் அளவுக்கு நடவடிக்கைகள் எடுத்திருக்கும் நமது சர்க்கார், பகுத்தறிவு படைத்த மனிதர்களை கொடுமைப்படுத்தும் முதலாளிகளின் பேரிலும், நிலப்பிரபுக்களின் பேரிலும் நடவடிக்கை எடுப்பது உண்டா ? அப்படியானால் எவ்வளவு பேர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முதலாளிகள், நிலப்பிரபுக்கள்மீது மாத்திரமல்ல, ஏழைத் தோழன் என்று இன்றைக்கு சொல்லிக் கொண்டு யார் யார் மனிதர்களை துன்புறுத்துகிறார்களோ அவர்கள் பேரிலும் சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். (சிரிப்பு).

SRI S. NAGARAJA MANIAGAR : எஸ்.பி.ஸி.ஏ. சங்கத்தார் தாங்களாகவே முன் வந்து வேலை செய்கிறார்களா ? அல்லது அவர்கள் எந்தெந்த ஜில்லாவில் திருப்திகரமாக வேலை செய்கிறார்களோ, அந்த இடங்களிலெல்லாம் அவர்களுக்கு உதவி செய்வதற்கு சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எஸ்.பி.ஸி.ஏ. சங்கம் வேலை செய்கிறது. 27 கிளை ஆபீசுக்ள் இருக்கின்றன. கலெக்டர் சிபார்சு பேரில் வேறு புதிதாக கிளை ஆபீசுகள் 'ஓபன்' செய்வதற்கு அனுமதி அளிக்கப்படுகிறது. அவர்களுக்கு மான்யமும் ஓரளவு அளிக்கப்படுகிறது.

SRI A. GOVINDASAMI : குதிரை வண்டிகளுக்கு லைசென்ஸ் வழங்கும் நேரத்தில் எஸ்.பி.ஸி.ஏ. சங்கத்தைச் சேர்ந்தவர்கள் பக்கத்தில் இருந்து வண்டியை நன்றாக பார்வையிட்டு லைசென்ஸ் வழங்குகிறார்களா ? அல்லது வர்ணத்தை பார்த்துவிட்டு லைசென்ஸ் வழங்குகிறார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : லைசென்ஸ் கொடுக்கும் விஷயத்தில் இவர்கள் தலையிடுவதில்லை.

SRI M. JAGANNATHAN : கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் பொழுது இந்த மிருகங்களுக்கு இழைக்கப்படும் ஹிம்சைகளை தடுப்பதற்கு அந்தந்த மாவட்டத்திலுள்ள கலெக்டர்கள் வேண்டினாலொழிய இந்த சட்டத்தை அந்த ஜில்லாவில் அமுல் நடத்த முடியாது என்று சொன்னார்கள். அப்படியல்லாமல் சர்க்காரே முன் வந்து எல்லா ஜில்லாக்களிலும் இந்த சட்டத்தை அமுல் நடத்த ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த சட்டம் ராஜ்யம் பூராவும் அமுலில் இருக்கிறது. ஆனால் இதை ஏற்று நடத்துபவர்கள் எஸ்.பி.ஸி.ஏ. (Society for the Prevention of Cruelty to Animals) சங்கத்தார். அவர்கள் மூலம் இந்தச் சட்டம் நிறைவேற்றப்படுகிறது, அனுஷ்டிக்கப்படுகிறது. அதற்காக அவர்கள் எங்கெங்கு புதிய கிளை ஸ்தாபனங்கள் வைக்கின்றார்களோ, அங்கெல்லாம் அவர்களுக்கு வேண்டிய உதவியும், மான்யமும் அளிக்கப்பட்டு வருகின்றன என்று சொன்னேன்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : I understand that Government are giving grants to this Institution on the basis of fines collected. Inasmuch as this society is doing very good work but yet is suffering for want of funds, will the Government consider the desirability of enhancing the grant without reference to the fines collected?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, if any representation had been received or would be received from the S.P.C.A. in this respect, that would be examined.

**Mr. SPEAKER** : இன்றைய தினம் 10 கேள்விகள் இருக்கின்றன. சுகாதார மான்ய விவாதத்திற்கு நான் இன்றையதினம் 20 நிமிஷம் கொடுக்கவேண்டும். ஆகையால் முக்கிய பிரச்னைகளைப்பற்றி மட்டுமே உபகேள்விகள் கேட்கவேண்டுமென்றும், சிறிய பிரச்னைகளைப்பற்றி உபகேள்விகள் கேட்க வேண்டாமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

*Rates of dearness allowance to teachers*

* 135 *Q.*—**Sri K. VINAYAKAM** (on behalf of Sri S. Pakkiriswamy Pillai) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is any difference in the rates of dearness allowance sanctioned recently to the non-gazetted officers and to the teachers of the high schools and higher elementary schools; and

(*b*) if so, the reasons therefor?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : (*a*) Yes, Sir. The total increase sanctioned to non-gazetted officers is Rs. 12. In respect of elementary and secondary grade teachers, this increase has been sanctioned as special additional pay of Rs. 7 to 5 depending upon the qualifications and pay of the teachers and the balance has been sanctioned as increase in dearness allowance. For the other categories of teachers, the entire increase has been sanctioned as increase in dearness allowance. All teachers, however, get a total increase of Rs. 12 per mensem.

(*b*) The intention is to revise the scales of pay of teachers in elementary schools. The increase sanctioned as special additional pay is intended to form part of a scheme for the revision of scales of pay of teachers in elementary schools. The question of revision is under consideration.

**Sri K. VINAYAKAM** : Will the Hon. Minister be pleased to say when exactly a final decision would be taken as far as revision of salaries to teachers are concerned?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : As far as the total emoluments are concerned, it does not make any difference. With reference to revision of scales of pay, it has to be done in consultation with the Government of India, because it is under aid from the Government of India that we are taking this. It will be finalized in consultation with the Government of India, as early as possible, but the payments are made to them even now.

**Sri K. ANBAZHAGAN** : தலைவர் அவர்களே, பஞ்சப்படியானது பல்வேறு துறைகளிலுள்ளவர்களுக்கும் ஒரேவிதமாக அளிக்கப்படவேண்டாமா? பஞ்சப்படி அளவை வெவ்வேறு காரணத்திற்காகக் குறைப்பது முறையாகுமா? அதுதான் அரசாங்கத்தினுடைய கொள்கையா?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : 'டியர்னஸ் அலவன்ஸை' குறைக்க வில்லை. இப்பொழுது அதிகப்படுத்தி இருக்கிறோம். உபாத்தியாயர்களைப் பொறுத்தவரையில் இந்த அலவன்சை அடிப்படை சம்பளத்





தோடு சேர்ப்பது ஆலோசனையில் இருக்கிறது. ஏனென்றால் அவர்கள் சம்பள விகிதத்தை மாற்ற வேண்டுமென்ற அடிப்படையில் யோசனை நடந்துக்கொண்டிருக்கிறது. யாருக்கும் குறைக்கவில்லை.

**Sri S. LAZAR** : Sir, in the matter of granting dearness allowance to teachers, non-gazetted officers, etc., is there any proposal before the Government to adopt the system obtaining in Western countries, namely, to give family allowance when an employee gets married, and subsequently to give children allowance, when the married couple beget children?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : **Sir, I am afraid here we will have to discourage people begetting more and more children. Once we begin to give allowance for children, I do not know where it will end. I do not think the present is not the time to consider the suggestion even if it is desirable.**

**Sri M. P. SARATHY** : நமது மாகாணத்தில் திருப்பதி தேவஸ்தானத்தினால் நடத்தப்படும் உயர்நிலைப் பள்ளியில் வேலை செய்பவர்களுக்கு இந்த 'அலவன்ஸ்' கொடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அது ஏன் என்பதை தெரியப்படுத்தக் கோருகிறேன்?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : தனிப்பட்டவர்கள் நடத்தும் பள்ளிக்கூடங்களில் இதைக் கொடுத்துத்தான் ஆகவேண்டுமென்று கட்டாயப்படுத்தி சொல்லுவதற்கு இல்லை. ஆனால் இதுபற்றி என்ன செய்வது என்பதையும் சர்க்கார் ஆலோசித்துக்கொண்டிருக்கிறது.

**Sri V. K. KOTHANDARAMAN** : குடியாத்தம் எலிமெண்டரி பாடசாலையில் வேலை செய்யும் செகண்டரி கிரேடு உபாத்தியாயர்களுக்கு இந்த 'டியர்னஸ் அலவன்ஸ்' கொடுக்கப்படுகிறது. ஆனால் அதே முனிசிபல் உயர்நிலைப் பள்ளியில் வேலை செய்யும் செகண்டரி கிரேடு உபாத்தியாயர்களுக்கு இந்த 'அலவன்ஸ்' கொடுக்கப்படவில்லை. இதற்குக் காரணம் என்ன? இதை உடனடியாகக் கொடுக்க ஏற்பாடு செய்ய முடியுமா?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : முனிசிபாலிடியில் இம்மாதிரி ஒரு கேள்வி போட்டால் அதற்கு அவர்கள் காரணம் சொல்லக்கூடும். அப்படி ஏதேனும் காரணம் சர்க்கார் கவனத்துக்கு வருமேயானால், அந்தக் காரணத்தை ஆராய்கிறேன்.

**Sri A. GOVINDASAMI** : சம்பளம் ரூபாய் 7, பஞ்சப்படி ரூபாய் 5, ஆக மொத்தம் ரூபாய் 12 கொடுக்கப்படுவதாக கனம் மந்திரி அவர்கள் சொல்லுகிறார்கள். பஞ்சப்படி எந்த நேரத்தில் வேண்டுமானாலும் நிறுத்தப்படுமாதலால், இந்த 'அலவன்ஸை' அடிப்படை சம்பளத்தோடு சேர்த்துக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : அடிப்படை சம்பளத்தை எவ்வளவு உயர்த்த முடியும் என்பது பரிசீலனையில் இருக்கிறது. இந்த விஷயத்தில் ஒரு முடிவுக்கு வந்தவுடன் சம்பள விகிதத்தை நிர்ணயித்துவிட்டு, பாக்கி யிருப்பதை 'டியர்னஸ் அலவன்ஸாக' கொடுக்கலாம்.

(Sri K. Vinayakam எழுந்தார்.)

**Sri S. B. ADITYAN** : **On a point of order, Sir.** கேள்வியைக் கேட்கும் அங்கத்தினர் சபைக்கு வராமல் இருக்கும்பொழுது, அவருக்கு பதிலாக மற்றொரு அங்கத்தினர் அந்தக் கேள்வியைக் கேட்பதாக இருந்தால், கேள்வி போட்ட அங்கத்தினர் அதற்கு சம்மதம் கொடுக்க வேண்டுமல்லவா?

MR. SPEAKER : வேண்டியதில்லை. ஸ்ரீ எம். கலியாணசுந்திரம் ஊரிலே இல்லை; வெளிநாட்டில் இருக்கிறார். ஸ்ரீ கலியாணசுந்திரம் பெயரிலோ அல்லது வேறு அங்கத்தினரின் பெயரிலோ இருக்கும் கேள்வியை மற்றொரு நண்பர் கேட்கலாம் என்று நான் உத்தரவு கொடுக்கிறேன். Yes, Mr. Vinayakam.

SRI K. VINAYAKAM : My point of order is on the same old point, Sir. The hon. Member Sri Kalyanasundaram has authorized me to put all the questions standing in his name and coming on the agenda.

THE HON. SRI C. SUBRAMANIAM : Even that is not necessary, Rule 34 (2) of the Assembly Rules reads "If on a question being called, a member in whose name it stands is absent, the Speaker at the request of any member may direct that the answer to it be given." Therefore, an authorization is not necessary. We have since changed the old rules.

*Rajaji Sanatorium, Tiruchirappalli*

* 136 *Q.*—SRI K. VINAYAKAM (on behalf of Sri M. Kalyanasundaram) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether a deputation on behalf of the Rajaji Sanatorium, Tiruchirappalli, met the Hon. Minister on 14th August 1956 and made representations to him for enhancing the amount of grant; and

(*b*) the action taken thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) The Government sanctioned in January 1957 a maintenance grant of Rs. 17,400 for 1955-56 to the Rajaji Tuberculosis Sanatorium, Tiruchirappalli, in addition to the grant of Rs. 15,000 sanctioned earlier for that year.

SRI P. G. KARUTHIRUMAN : சபாநாயகர் அவர்களே, இந்த ஸானடோரியத்திற்கு கொடுக்கப்படுவது போன்று எல்லா ஸானடோரியங்களுக்கும் சலுகை கொடுக்கப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த பிரச்சினை இப்போது பரிசீலனையில் இருக்கிறது.

SRI M. JAGANNATHAN : இந்த ராஜாஜி ஸானட்டோரியத்தை சர்க்கார் ஏற்று நடத்துவதற்கு முன்வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அது எதற்காக என்று தெரியவில்லை. மற்றவர்கள் நடத்திக்கொண்டு வருகிறார்கள், அதற்காக சர்க்கார் உதவி செய்துகொண்டிருக்கிறார்கள்.

18th July 1957]

## *Wage Board for Press Workers*

* 137 *Q*.—SRI M. P. SUBRAMANIAM (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to constitute a Wage Board for the Press Workers ?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir.

SRI S. B. ADITYAN : அச்சுத் தொழிலாளர்களுக்கு "வேஜ்
போர்டு" நியமிக்கப் போவதில்லை என்று சொன்னார்கள். அவ்விதம்
இல்லை யென்றால் "வேஜ் போர்டு" ஆக்டின்படி குறைந்தபட்ச கூலியாவது
நிர்ணயிக்கப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அச்சுத் தொழிலாளர்களுக்கு
சில "அட்ஜூடிகேஷன்" தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அந்த தீர்ப்பை
எல்லா இடங்களிலும் அமல் செய்வார்கள் என்று சர்க்கார் எதிர்பார்க்
கிறது. அவ்விதம் இல்லையென்றால் குறைந்த பட்சக் கூலி நிர்ணயிக்க
வேண்டுமென்று அதிகமான புகார்கள் வந்தால் சர்க்கார் அதைப்பற்றி
யோசிக்கும்.

SRI V. K. KOTHANDARAMAN : அட்ஜூடிகேஷன் தீர்ப்பை சரியாக
அமல் செய்யாமல் இருப்பதினால் இவர்களுக்கு விரைவில் ஒரு வேஜ்
போர்டு ஏற்படுத்த சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இல்லை.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, ஓரளவு கல்வித்திறன்
பெற்று திறமையோடு பணியாற்றவேண்டியிருக்கிற காரணத்தினாலும் அவர்
கள் ஒரே இடத்தில் நிரந்தரமாக பணியாற்ற முடியாத நிலைக்கு அவர்
களுக்கு கொடுக்கப்படும் ஊதியம் இருப்பதினாலும் அடிக்கடி வேறு இடங்
களுக்கு மாறி செல்ல வேண்டிய நெருக்கடியான நிலை இருப்பதினாலும்
இரவு நேரங்களில் கடுமையாக உழைக்க வேண்டியிருப்பதினாலும் இவ்வித
மான துன்பமான நிலையில் இருக்கும் அவர்களுக்கு குறைந்த பட்ச
சம்பளம் நிரந்தரமாக கிடைக்க சர்க்கார் ஏதாவது ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : நான் ஆதித்தன் அவர்களின்
கேள்விக்குப்பதில் சொன்னேன். கூடிய மட்டும் எல்லா முதலாளிகளும்
அட்ஜூடிகேஷன் தீர்ப்புப்படி ஊதியம் கொடுப்பார்கள் என்று சர்க்கார்
எதிர்பார்க்கிறது. இவ்விதம் கொடுக்கப்படவில்லை என்று தொழிலாளர்க
ளிடமிருந்து அதிகப்படியான குறைகள் வரும்போது அந்த சமயத்தில்
அதுப்பற்றி கவனிக்கப்படும்.

SRI P. S. CHINNADURAI : சபாநாயகர் அவர்களே, கோவை அச்சகத்
தொழிலாளர்கள் சங்கத்திலிருந்து உடனடியாக இப்போது தொழிலாளர்
கள் பெறுகிற சம்பளத்தோடு 25 சத விகிதம் அதிகரித்து கொடுக்கவேண்டு
மென்றுள்ள கோரிக்கையை எல்லா அச்சக முதலாளிகளுக்கும், அதன்
நகல் அரசாங்கத்திற்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவ்விதம் கொடுக்கப்
பட்ட கோரிக்கையின் மீது பரிசீலனை செய்து உடனடியாக அமைக்க வேண்
டிய அவசியத்தை உணர்ந்து அதை அமல் செய்ய அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI R. VENKATARAMAN : சாதாரணமாக தனித்தனி
இடங்களிலிருந்து பலவிதமான குறைகள் வந்துகொண்டிருக்கின்றன. அவை
அட்ஜூடிகேஷனுக்கு விடப்படுகின்றன. மாகாண ரீதியாக குறைகள்
இருக்குமானால் அதற்கு ஒரு முடிவு ஏற்படுத்த வேஜ் போர்டுக்கு அனுப்பப்படு
கிறது. வேஜ் போர்டு செய்யும் முடிவு யாரையும் பாதிக்காது. இதனால்
இதை உபயோகப்படுத்துவதற்கு சர்க்கார் இஷ்டப்படவில்லை.

[18th July 1957

SRI M. P. SUBRAMANIAM : தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய ராஜ்யத்தில் அச்சுத் தொழிலாளர்களுக்கும் மானேஜ்மெண்டாருக்கும் அதிகமான தகராறுகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறதினால் பல தகராறுகள் இப்பொழுது அட்ஜுடிகேஷனுக்கோ அல்லது கன்ஸிலியேஷனுக்கோ விடப்பட்டிருக்கின்றன. அப்படி விடப்பட்டவைகள் சுமார் எவ்வளவு என்று கூறமுடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதற்கு நோட்டீஸ் வேண்டும்.

*Wage Board for Cigar Workers*

* 138 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to constitute a Wage Board for Cigar Workers ?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir.

SRI V. K. KOTHANDARAMAN : மாகாண ரீதியில் எங்கும் " ஸிகார் " தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் தகராறு ஏற்பட்டுக் கொண்டிருப்பதால் ஸிகார் பாக்டரி தொழிலாளர்களுக்கு அவர்களுடைய கூலியை நிர்ணயம் செய்ய ஒரு போர்டு ஏற்படுத்த சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : வேஜ் போர்ட் ஏற்படுத்துவதற்கும் குறைந்த பட்சக் கூலி நிர்ணய போர்டு ஏற்படுத்துவதற்கும் வித்தியாசம் இருக்கிறது. வேஜ் போர்டு தீர்மானிக்கிற முடிவுகளை யாரும் அமல் செய்யவேண்டுமென்ற கட்டாயம் இல்லை. ஆகவே இம்மாதிரி வேஜ் போர்டு அமைப்பது நல்லதல்ல என்று சர்க்கார் கருதுகிறது. வேஜ் போர்டின் முடிவு வந்த பிறகுதான் தகராறு ஆரம்பிக்கிறது. ஆகவே வேஜ் போர்டு ஏற்படுத்த இப்போது முடிவு செய்யப்படவில்லை என்று என்னுடைய பதிலில் சொல்லியிருக்கிறேன்.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, சுருட்டுத் தொழிலாளர்களாகப் பணியாற்றுகின்றவர்களின் உழைப்பின் பலனை முதலாளிகள் சுருட்டுகிறார்கள் என்கின்ற குறை நாட்டில் எங்கு பார்த்தாலும் இருக்கின்ற காரணத்தால் அவர்களுக்கு குறைந்த பட்சக் கூலியை நிர்ணயிக்க conciliati n மூலமாகவோ அல்லது அட்ஜுடிகேஷன் (adjudication) மூலமாகவோ தீர்மானித்து அமுல் செய்ய அரசாங்கம் முயற்சிக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : பீடித் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சக் கூலி கொடுக்கப்பட வேண்டும் என்று ஒரு போர்டு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இந்த சுருட்டு தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச கூலி நிர்ணயிக்க ஒரு போர்டு அவசியமா என்பதைப் பற்றி சர்க்கார் ஆலோசிக்கும்.

SRI T. KARIA GOUNDER : தலைவர் அவர்களே, பீடித்தொழிலாளர்களுக்கு இதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக மந்திரி அவர்கள் சொன்னார்கள். இது மாகாண ரீதியில் எல்லா தொழிலாளர்களுக்கும் அந்த கூலி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறியவேண்டுகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இப்போதுதான் பீடித் தொழிலாளர்களுக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. அது மாகாண ரீதியில் சரியாக நடைபெறும் என்றே நம்புகிறேன்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : பீடித் தொழிலாளர்களுக்கு என்று அமைத்திருக்கிற போர்டைக் கொண்டே சுருட்டுத் தொழிலாளர்களுக்கும் குறைந்தபட்ச கூலி நிர்ணயிக்க சர்க்கார் முன் வருமா ?



18th July 1957]

THE HON. SRI R. VENKATARAMAN: இல்லை, இந்த பிரச்சனை வேறாக இருக்கிறது.

SRI D. S. AUTHIMOOLAM : பீடித்தொழிலாளர்கள் விஷயமாக இந்த போர்டு எவ்வளவு காலத்திற்குள் தன்னுடைய தீர்மானங்களை சமர்பிக்க வேண்டும் என்று காலவரையறை ஏதாவது உண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : சாதாரணமாக இதற்கு காலவரையறை நிர்ணயிப்பது இல்லை.

SRI K. PONNIAN : சபாநாயகர் அவர்களே, இந்த போர்டினர் குறைந்தபட்ச கூலியை நிர்ணயித்திருக்கிறார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த போர்டின் அலுவல்கள் வேறாக இருக்கிறது.

SRI M. JAGANNATHAN : தலைவர் அவர்களே, சுருட்டு தொழில் நடத்துகின்ற முதலாளிகள் அடைகின்ற லாபத்திலிருந்து இந்த சுருட்டுத் தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுப்பதற்கு இந்த வேஜ் போர்டு சிபாரிசு செய்ய முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : போனஸ் கொடுப்பதற்கு சிபாரிசு செய்ய இந்த போர்டுக்கு அதிகாரம் இல்லை.

SRI S. NAGARAJA MANIAGAR : சுருட்டுத் தொழிலாளர்களின் உழைப்பை முதலாளிகள் சுருட்டிக்கொள்வதாகக் கூறப்பட்டது. இது தவிர சில இடங்களில் வேறு சிலரும் இவர்களை சுருட்டிக் கொள்கிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

THE HON SRI R. VENKATARAMAN : சுருட்டுத் தொழிலாளர்கள் இலையை சுருட்டுகிறார்கள் என்றுதான் சர்க்காருக்குத் தெரியும். இடையில் யாரெல்லாம் இவர்களை சுருட்டுகிறார்கள் என்பது அவரவர்களுடைய அபிப்பிராயத்தை பொறுத்திருக்கிறது.

*Dam across Palar near Vaniambadi*

* 139 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal to construct a dam or anicut across the river Palar near Vaniyambadi; and

(*b*) if so, when it will be taken up?

THE HON. SRI P. KAKKAN : (*a*) There was a proposal to construct a dam across the Palar near Avarikuppam, west of Vaniyambadi in North Arcot district.

(*b*) On examination, it was found that the prospects of that scheme were not encouraging. However, the Chief Engineer was informed that the question of taking up that scheme might be considered after the boundary between Andhra and Madras was finally fixed. A scheme for the construction of a barrage a little upstream of the existing anicut at Ranipet as an alternative to the reservoir scheme near Vaniyambadi is at present under the active consideration of the Government.

[18th July 1957

SRI A. A. RASHEED : Are the Government aware that portions of Vaniyambadi are washed away every year by the monsoon floods in Palar River?

THE HON. SRI R. VENKATARAMAN : The question relates to construction of a dam. I do not have figures about flood damages.

SRI K. VINAYAKAM : A dam or an anicut across Palar would be of some utility only when there are floods or water flowing in the river. Is the Hon. Minister aware of the fact that there were no floods or water in that river so far as human memory goes or at least during the past few decades?

MR. SPEAKER : I suppose the hon. Member Rasheed knows more about Vaniyambadi than the hon. Member Sri Vinayakam.

SRI K. VINAYAKAM : That is an insult to me, Sir. I am a Member of this Legislature and though elected by the electorate in the Madras City, it does not mean that I do not know anything about other places in the State. I know about Vaniyambadi as much as my hon. Friend Sri Rasheed does.

MR. SPEAKER : I am glad to be enlightened on that point.

THE HON. SRI R. VENKATARAMAN : The idea is to dam up whatever water resources are available and it is expected that it would be able to dam sufficient quantity of water to irrigate about 3,500 acres of land.

SRI A. A. RASHEED : Every year during the monsoon we get floods in the river Palar. That is what happened during the past three years. Cannot the floods be dammed and the water utilized for irrigation?

THE HON. SRI R. VENKATARAMAN : It would be an exaggeration, Mr. Speaker, Sir, to say that we get floods. We do get some water in Palar during monsoon.

SRI A. GOVINDASAMI : இந்த அணைக்கட்டு விஷயம், ஆந்திரா தமிழ்நாடு எல்லைப் பிரச்னை தீர்ந்த பிறகு கவனிக்கலாம் என்று சொன்னார்களே ; அதன் கருத்து என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : முதலில் போட்ட திட்டப்படி அந்த அணைக்கட்டு சித்தூர் ஜில்லாவில் கக்குந்தி ஜமீன் ஏரியாவில் வருவதாக இருந்தது. அந்த பிரதேசம் இப்பொழுது ஆந்திராவில் இருப்பதால் அதை வேறு எந்த இடத்தில் போடுவது, எந்த இடத்தில் போட்டால் சௌகரியமாக இருக்கும், புதிய இடத்தில் அணை கட்டினால், கங்குந்தியில் அவர்கள் அணை கட்டி விட்டால் இங்கு தண்ணீர் வருமா வராதா என்பதைப் பற்றியெல்லாம் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

SRIMATHI T. N. ANANDANAYAKI : The Hon. Minister said that the proposed dam would irrigate 3,500 acres. May I know what would be the cost of construction of such a dam across Palar?



18th July 1957]

THE HON. SRI R. VENKATARAMAN : There are two or three proposals. I would like to know in respect of which proposal the hon. Member wants to know the cost.

SRIMATHI T. N. ANANDANAYAKI : I would like to know the cost of the cheapest proposal.

THE HON. SRI R. VENKATARAMAN : The cheapest proposal namely to construct a barrage a little above Ranipet would cost Rs. 56 lakhs.

SRI K. VINAYAKAM : Is the Hon. Minister aware of the fact that North Arcot is famous for the seven wonders of the world. The first is, a river without water—Palar is known for that, then a fort without forces, temple without God, ladies without beauty and the rest of it.

(Sri A. A. Rasheed rose.)

MR. SPEAKER : Let us not have charges and counter charges now.

SRI M. P. SARATHI : வேலூருக்கும் காட்பாடிக்கும் நடுவில் உள்ள பாலம் பழுதடைந்திருப்பதால் காட்பாடியிலிருந்து வரும் சரக்குகள் ராணிப்பேட்டைவழியாக வர வேண்டியிருக்கிறது. பஸ் போக்குவரத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. இதற்காக அரசாங்கம் ஏதாவது செய்து கொண்டு வருகிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இது அணைக்கட்டைக் குறித்த கேள்வி. வேறு கேள்வி போட்டால் சொல்கிறேன்.

*Supply of Catamarans to fishermen*

* 140 Q.—SRI C. MUTHIAH PILLAI : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether there is adequate supply of catamarans to all fishermen;

(b) whether the Government have received any complaints recently from the fishermen about the non-availability of catamarans and sale of catamarans supplied by Government at a very high price;

(c) if so, the steps taken by the Government to reduce the price and ensure regular and adequate supply of catamarans; and

(d) whether the Government have any proposal to form Co-operative Societies and entrust the work of distributing catamarans to them?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (a) The availability of catamaran logs for fishermen is not adequate.

(b) There have been no recent complaints from fishermen about the scarcity of catamarans. As regards the high cost of logs supplied by Government, the fishermen affected by cyclone in Tanjore and Tirunelveli districts were supplied Luunimidella logs of

half cost and half subsidy basis. These logs which are of the best quality are obtainable only from Ceylon and are, therefore, more costly.

(*c*) The Government of India have been addressed for the grant of a subsidy for the sale of catamaran logs imported from Ceylon to fishermen under the Grow More Food rules and, if this materialises, it will help to reduce the price of catamaran logs to a certain extent. In order to ensure regular and adequate supply of catamaran logs to fishermen, the Government are examining the possibility of starting in the Cumbum valley a plantation of the type of Ceylon logs, as the local types of wood have not been found suitable for catamaran logs; and

(*d*) There is no proposal to form co-operative societies solely for the purpose of purchasing and distributing catamarans to fishermen. But, fishermen federations have been formed with jurisdiction over one or more districts, and these federations will purchase and distribute catamarans, yarn, nets, etc., to fishermen through their feeder societies.

SRI C. MUTHIAH PILLAI: மரம் வளர்த்து அரசாங்கம் கட்டு மரத்தைக் கொடுக்கிற திட்டத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் அதுவரையில் கொடுப்பதற்கு மத்திய அரசாங்கத்திலிருந்து மாகாண அரசாங்கமே வாங்கி அந்த டிபார்ட்மெண்ட் மூலம் கொடுத்தால் 400 சத விகிதம் அதிகமாக விற்கிறதை விட்டு ஏழைகளுக்கு குறைந்த விலையில் கிடைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: அது சௌகரியப்படுமானால் அரசாங்கம் அதை ஏற்றுச் செய்யத் தயாராய் இருக்கிறது.

SRI K. R. NALLASIVAM: கட்டு மரங்களை சர்க்கார் குறைந்த விலையில் சப்ளை செய்வதாகத் தெரிகிறது. அதேபோல் மீன் பிடிப்பவர்களுக்கு பரிசில் பாதி விலைக்கு கிடைக்க ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: கட்டு மரங்கள் கொடுப்பதுபோல் படகுகளுக்கும் வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

SRI T. P. ELUMALAI: கட்டுமரம், வலை போன்ற சாமான்களை சர்க்காரே வாங்கி ஏழை மீன் பிடிக்கிற தொழிலாளிகளுக்குக் கொடுக்க முன் வருமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: ஏழைகளுக்கும், கஷ்டப்படுகிறவர்களுக்கும் சில இடங்களில், பிரத்தியேகமாக சொல்ல வேண்டுமானால் சிலோனிலிருந்து கட்டு மரங்களை விலைக்கு வாங்கி பாதி விலைக்கு கொடுத்திருக்கிறார்கள். தொண்ணூற்றேழு கட்டு மரங்களை தூத்துக்குடி வழியாக வரவழைத்து 78 கட்டுமரங்களை தூத்துக்குடிக்கும் 19 கட்டு மரங்களை தஞ்சாவூர் டிவிஷனுக்கும் கொடுத்திருக்கிறார்கள்.

SRI A. GOVINDASAMI: கட்டுமரங்களை தூத்துக்குடிக்கும், தஞ்சாவூருக்குமட்டும் கொடுத்திருப்பதாக பதிலிலிருந்து தெரிகிறது. ஏன் அவைகளை தென் ஆற்காடு ஜில்லாவிற்கு வழங்கவில்லை ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: அந்த இடங்களில் தேவை அதிகம் இருந்தது.





MR. SPEAKER: ஒவ்வொரு ஜில்லாவையும் பற்றிக் கேட்டால் சொல்ல முடியுமா ?

SRI R. SRINIVASA IYER: Will the Government please explore the possibilities of getting these catamarans at cheap prices from Andamans and other islands under the control of Government ot India ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: That will be considered.

SRI P. M. MUNUSWAMI GOUNDER: சர்க்காரிலிருந்து கட்டுமரங்கள் போன்ற வசதிகள் கொடுப்பதற்கு முன்பு இந்த மீன் பிடிப்பவர்கள் நல்ல முறையில் மீன் பிடித்தும் அவர்கள் ஒழுங்கான முறையில் கடலுக்கு அருகாமையில் பக்கத்தில் இருந்துகொண்டு மீன் பிடித்து தங்கள் வாழ்க்கை தரத்தை வளர்த்து வந்தார்கள். ஆனால் தற்போது நமது அரசாங்கத்திலிருந்து அதிகமான சலுகைகள் கொடுப்பதால் அவர்கள், பொழுது போக்கிற்காக உட்காரும் மெரினா போன்ற இடங்களில் சுகாதாரத்திற்கு விரோதமான முறையில் நடப்பது சர்க்காருக்கு தெரியுமா? அப்படி தெரிந்திருந்தால் அதன் மேல் என்ன நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கிறது ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: அரசாங்கம் உதவி செய்வதால் அவர்கள் ஒழுங்கீனமாக நடந்து கொள்ளவில்லை. அவர்கள் தொழில் அபிவிருத்திகாகவே உதவி செய்யப்படுகிறது.

SRI M. JAGANNATHAN: கட்டுமரங்கள் உபயோகப்படுத்தி மீனவர்கள் அதிகமாக மீன் பிடித்து தங்களுடைய வாழ்க்கையை நடத்த முடியாமல் இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு பாப்லோ என்ற விசை படகுகளை வாங்கிக் கொடுத்து உதவி செய்வார்களா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: விசை படகு இப்பொழுது கொடுத்திருக்கிறார்கள். இன்னும் கொடுக்க உத்தேசம் இருக்கிறது.

SRI K. B. S. MANI: இந்தக் கட்டுமரங்கள் சிலோனிலிருந்து 9
பிளாக் மார்க்கெட்டில் தஞ்சை, நாகப்பட்டிணம், திருநெல்வேலி ஜில்லாக் அ.
களுக்கு வருவது அரசாங்கத்தாருக்குத் தெரியுமா ? கவர்ன்மெண்டிலே கொடுக்கப்படுகிற கட்டுமரங்களை வாங்கி தனிப்பட்ட ஒரு சிலருக்கு அதிக விலைக்கு விற்றது சர்க்காருக்குத் தெரியுமா ? அப்படித் தெரிந்திருந்தால், அதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: பிளாக் மார்க்கெட் செய்வது சர்க்காருக்குத் தெரிந்து செய்கிற விஷயமல்ல. அப்படித் தெரிந்தால், அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

SRI T. S. RAMASWAMY PILLAI: கன்னியாகுமரி ஜில்லாவில் கட்டு மரங்களுக்கு வேண்டிய கட்டைகள் கோளாவிலிருந்து இது வரையில் வந்து கொண்டிருந்தன. இப்போது அவைகளை சப்ளை செய்து வரும் வியாபாரிகள் இவ்வாறு செய்வதிலிருந்து தடைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா? அப்படித் தெரிந்திருந்தால், கேரளாவிலிருநது கட்டைகள் வரச் செய்ய சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: இது வரையிலும் கன்னியாகுமரி ஜில்லா திருவாங்கூர் சர்க்கார் ஆட்சியில் இருந்ததால், அங்கிருந்து கட்டைகள் வந்துகொண்டிருந்தன. இனிமேல், அப்பொறுப்பை சென்னை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு வேண்டியதைச் செய்யும்.

SRIMATHI T. N. ANANDANAYAKI: கட்டுமரங்கள் விநியோகிப்பதில் அந்த இனத்தைச் சேர்ந்த அரசியல் தியாகிகளுக்கு அவைகளை இலவசமாகக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

[18th July 1957

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : அப்படி இலவசமாகக் கொடுப்பது கொஞ்சம் கடினமான காரியமாகையால், இப்போது அரசாங்கத்தின் மூலமாக கொடுப்பதில் கொஞ்சம் சப்சிடி கொடுத்து வருகிறார்கள்.

SRI A. GOVINDASAMI : கட்டுமரம் வரவழைப்பதற்கான ‘இம்போர்ட் லைசென்ஸ்’ சென்னையில் இருப்பவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. ஜில்லாக்களில் இருப்பவர்களுக்கும் அந்த லைசென்ஸைக் கொடுக்க அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : சென்னையில் இருப்பவர்களுக்குத்தான் ‘இம்போர்ட் லைசென்ஸ்’ கொடுக்கவேண்டும் என்ற தனி அபிப்பிராயம் இல்லை. எங்கெங்கெல்லாம் தேவையோ அந்த இடங்களிலெல்லாம் கொடுக்க வேண்டும் என்றுதான் அபிப்பிராயம்.

### *Machine to extract palmyrah juice*

* 141 *Q.*—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Home be pleased to state whether any machine has been invented in this State to extract palmyrah juice?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

### *Scale of pay of N.G.Os. of Kanyakumari district*

* 142 *Q.*—SRI D. S. AUTHIMOOLAM (on behalf of Sri K. Sattanatha Karayalar) : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to revise the scale of pay of the non-Gazetted Officers of Kanyakumari district?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir, but, the question of integration of the pay scales and rates of dearness allowance of the personnel transferred from the Travancore-Cochin State is under consideration.

SRI T. S. RAMASWAMY PILLAI : Sir, how long has it been under the consideration of the Government? May we know up to what date it will be under consideration?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I have already said in answer to the question that it is under consideration, and I have assured the House that an early decision will be taken.

MR. SPEAKER : Questions are over.

**[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

## II.—POINT OF ORDER *RE* THE TERM 'LADIES WITHOUT BEAUTY' WITH REFERENCE TO NORTH ARCOT DISTRICT.

MR. SPEAKER : கனம் மந்திரி அவர்கள் பதிலளிக்கும்போது எவ்வளவு நேரம் பேசுவார் என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : 20 நிமிஷங்கள் தயவு செய்து கொடுத்தால் நன்றாக இருக்கும்.

18th July 1957]

SRI S. M. ANNAMALAI: **On a point of order, Sir.** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, **'ladies without beauty'** என்று சட்ட மன்ற உறுப்பினர் விநயகம் அவர்கள் சொல்லி வட ஆற்காடு மாவட்டப் பெண்களின் மரியாதையை குறைக்கும் அளவுக்குப் பேசியிருக்கிறார். அந்த வார்த்தையை கனம் விநாயகம் அவர்கள் வாபஸ் வாங்கவேண்டுமென்று சட்ட மன்றத் தலைவர் அவர்களை நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI K. VINAYAKAM: Sir, I am myself a resident of North Arcot district. I was a student of Voorhese College, Vellore. I know out of experience the veracity of my statement. There is no insult to anybody. It is a bare statement of fact. (Laughter.)

MR. SPEAKER: I would have taken no objection to the statement of Sri K. Vinayakam except to that portion where he stated 'ladies without beauty'. If he withdraws that portion, the other things can remain.

SRI K. VINAYAKAM: I would like once again to submit to you that no insult to the ladies of that district was meant. It is a statement of fact. It is my experience. (Laughter.) But in view of the strong opposition from the members of that district and in view of your request, I humbly withdraw that portion.

MR. SPEAKER: We now pass on to the next item on the agenda.

## III.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1957-58—*cont.*

### (1) DEMAND XVI—MEDICAL.

### (2) DEMAND XVII—PUBLIC HEALTH.

### (3) DEMAND XXXVII—CAPITAL OUTLAY ON PUBLIC HEALTH—*cont.*

MR. SPEAKER: I should like every hon. Member to take only seven minutes, because I have got a large number of speakers. Srimathi A. Suares will now speak.

* SRIMATHI A. SUARES: Mr. Speaker, Sir, I desire to place before the House the necessity for greater facilities for post-graduate education in the medical field. On the maternity side, as you know, the Government Maternity Hospital, Egmore, has been up-graded and provides training for the D.G.O. and the M.D. midwifery course for candidates from all over India. For the D.G.O. course, six seats are reserved for Madras State, out of a sanctioned strength of 12 seats. But for the M.D. course, only two seats are given to Madras. Out of six seats, one seat is given to Andhra Pradesh and the remaining three seats are for other States in India. There are three Government Medical Colleges in Madras State and every year a large number of candidates pass the M.B.B.S., degree examination. Many of them desire to qualify themselves for higher degrees, but when there are only two seats for the M.D. midwifery course, it is only natural that many doctors 9-14 a.m.

[Srimathi A. Suares] [18th July 1957

are disappointed year after year when they do not secure seats for the course. This year, two doctors with five to seven years service, were deputed to this course, which means that doctors with less than a service of five years did not have the chance of being selected, if length of service is the basis on which the selections are made.

The hospitals in the Madras State are expanding from year to year in the five year plans of the country. We want highly qualified doctors for every hospital. Unless greater facilities are provided for post-graduate education, doctors will be forced to go abroad to improve their qualifications. This should not be necessary as the M.D. course is provided in India and, as we know, the standard of medical education in the Madras State is considered to be almost the highest in India. I request the Madras Government to provide from next year at least three more seats in the Government Maternity Hospital and transfer the Andhra seat to Madras, as the M.D. course is conducted at Visakhapatnam. (This year the Andhra Government did not depute a candidate. So that seat is given to a Madrasi.) If this is done, there will be six seats for the M.D. course for the Madras State.

Candidates in the up-graded institution in Egmore are given scholarships by the Central Government. If the Madras Government will give the same rate of scholarship to the three additional seats now proposed, the cost will come to Rs. 9,000 per annum. There is provision for two seats in the Stanley Medical College, of which one is reserved for the Vellore Medical College. As this is not an up-graded institution, no scholarships are given to these candidates. If two more seats are given to Stanley Medical College, if possible even from this year, there will be no additional cost to the Government.

I support the Demand for Grant for Rs. 4,03,74,300 under the head 'Medical.' Extra provision has been made under various heads in the Budget. There is substantial increase of provision under the heads medical colleges, hospitals and dispensaries, mobile medical units, and health centres in the N.E.S. blocks. When these additional amounts have been fully utilized, the Madras Medical Department will have taken many steps forward on the road to development.

48 SRI A. RAJA GOUNDAR : கனம் சபாநாயகர் அவர்களே, கனம்
1. மந்திரி அவர்கள் கொண்டுவந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் பேச விரும்புகிறேன். ராசிபுரத்தில் குடி தண்ணீர் வசதியைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ராசிபுரம் ஒரு வரண்ட பிரதேசம். அங்கு பல கிணறுகள் இருக்கின்றன. ஆனால் ஆறுகள் ஓடவில்லை. கிணற்றில் தண்ணீர் ஊறுவதற்குக் காரணம் அங்குள்ள ஏரிதான். ராசிபுரத்தில் மழை காலத்தில் தண்ணீர் வந்து நிரம்பினால், இரண்டு மூன்று மாதங்களுக்குத் தண்ணீர் நிற்கும். அதற்குப் பிறகு அந்தக் கிணற்றில் தண்ணீர் ஊறும். அவ்வாறு தண்ணீர் சுலபமாகக் கிடைத்துக்கொண்டிருந்தது. சுமார் பத்து வருஷ காலமாக அந்த ஏரியில் சாகுபடி செய்துகொண்டிருக்கிறார்கள். மழை



18th July 1957] [Sri A. Raja Goundar]

காலத்தில் தண்ணீர் வரும்போது, அத்தண்ணீர் ஏரிக்குள் வாமுடியாதபடி செய்து தண்ணீரைச் சேதப் படுத்திவிடுகிறார்கள். அதனால் அந்த ஏரியில் தண்ணீர் வந்து தங்குவதில்லை. அவ்வாறு தங்காத காரணத்தினால் கிணறுகள் வரண்டு போயிருக்கின்றன. குடிக்கத் தண்ணீர் கிடைக்கவில்லை. ஆகையால், கனம் மந்திரி அவர்கள் அந்த ஏரியில் சாகுபடி செய்கிறவர்களை அப்புறப்படுத்திவிட்டால்தான் மழை காலத்தில் தண்ணீர் வந்து நிரம்பும்; கிணறுகளில் தண்ணீர் ஊறும். ஆதலால், ஏரியில் சாகுபடி செய்கிறவர்களை சர்க்கார் உடனடியாக அப்புறப்படுத்தவேண்டும்.

அடுத்தபடியாக ராசிபுரத்தைச் சுற்றி பல கிராமங்கள் இருக்கின்றன. அவைகளுக்கு சுகாதார வசதியும், ஆஸ்பத்திரி வசதியும் கிடையாது. அவைகளுக்கு ஆஸ்பத்திரி ஏற்படுத்தி வைத்திய வசதி கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். ராசிபுரத்தை சுற்றி பல கிராமங்கள் இருப்பதால் ராசிபுரம் ஆஸ்பத்திரியை விஸ்தரித்து, அதற்கு படுக்கை வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சேலம் ஜில்லா தலைமை ஆஸ்பத்திரியைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சேலம் ஜில்லாவில் ஜனத் தொகை ஜாஸ்தி. மேலும் அங்கிருக்கும் ஆஸ்பத்திரி நெருக்கமான இடத்தில் இருக்கிறது. அந்த ஆஸ்பத்திரியை விஸ்தரித்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

*SRI P. S. CHINNADURAI : மதிப்புக்குரிய சபாநாயகர் அவர்களே, 9-52
இந்த வைத்திய வசதி, பொது சுகாதாரம் பற்றிய மானியப்பிரேரணை a.m.
களின் மீது கொண்டு வந்திருக்கிற வெட்டுப்பிரேரணைகளை ஆதரிக்கிற முறையில் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

சர்க்கார் இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தின் கீழே வைத்திய வசதி பெறுகிற தொழிலாளர்கள், அவர்கள் எந்த அளவிற்கு அந்த வைத்திய வசதிகளைப் பெற வேண்டுமோ அந்த அளவிற்கு அவர்களுக்கு இந்த ராஜ்ய அரசாங்கம் வசதி செய்து கொடுக்க வில்லையென்று நான் இன்று குறிப்பிடவிரும்புகிறேன். இந்த ராஜாங்க இன்ஷ்யூரன்ஸ் திட்டமானது கோவையிலே முதலிலே அமுலுக்கு வந்தது. அதற்கு அடுத்தபடியாக சென்னையிலும் மதுரையிலும் அமுலுக்கு வந்திருக்கிறது. இந்த இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தை அமுலுக்கு கொண்டு வந்ததன் நோக்கமே தொழிற்சாலைகளில் வேலை செய்கிற தொழிலாளர்களுக்குத்தான் அதிக வியாதி வருமாதலால் தொழிலாளர் தங்கள் வருமானத்திலிருந்து ஒரு பகுதியைக் கொடுத்து அதன் மூலமாக விசேஷமான வைத்திய சலுகை பெறுவதற்காக ஏற்பட்டது. பொது ஜனங்களைப்போல அவர்களும் வரி செலுத்துகிறார்கள். அதைத்தவிர வைத்தியத்திற்காக ஒரு தனிப்பட்ட கட்டணம் செலுத்துகிறார்கள். அப்படி இருந்தும் கூட அவர்களுக்கு சரியான, தேவைக்குப் போதுமான வைத்திய வசதி கொடுக்கப்படவில்லை யென்றால் அது வருந்தக் கூடிய ஒரு விஷயம்தான். உதாரணமாக, கோவையிலே சுமார் 45 ஆயிரம் பேர்களுக்குமேல், 50 ஆயிரம் வரையில் தொழிலாளர்கள் இந்தத்திட்டத்தின் கீழ் வந்திருக்கிறார்கள். கோவையிலுள்ள தலைமை ஆஸ்பத்திரியில்தான் இந்தத் திட்டத்தின் கீழ் உள்ள தொழிலாளர்களுக்கும் படுக்கை வசதி செய்யப்படுகிறது. அவர்களுக்கு தனியான ஆஸ்பத்திரி நிர்மாணிக்க வேண்டுமென்று ஆரம்ப முதலே வற்புறுத்தி வருகிறார்கள். இதற்கென்று புதிதாக ஒரு ஆஸ்பத்திரி கட்டவேண்டியதில்லை. ஏற்கெனவே, இந்திய அரசாங்கத்தினர் உபயோகத்திலே இருந்த இராணுவ ஆஸ்பத்திரி ரெட் பீல்ட்ஸ் என்ற இடத்தில் இருக்கிறது. இந்த ராஜ்ய அரசாங்கம் அந்த ஆஸ்பத்திரியை இந்த திட்டத்தின் கீழ் எடுத்து உபயோகித்தால் தொழிலாளர்களுக்கு உபயோகமாகவிருக்கும் என்று சுட்டிக்காட்டவிரும்புகிறேன்.

பஞ்சு மில்களிலும் மற்ற என்ஜினீயரிங் தொழிற்சாலைகளிலும் வேலை செய்யக்கூடியவர்கள் Occupation disease என்று சொல்லக் கூடிய T. B. வியாதிக்கு கடுமையாக ஆளாகிறார்கள். க்ஷயரோகம்

எல்லோருக்கும் வருகிறது. ஆனால் தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களுக்கு அதிகமாக வருகிறது. தொழிலாளர்களுக்கு ராஜ்ய இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தின் கீழே தனியான க்ஷயரோக ஆஸ்பத்திரி ஒன்றை ராஜ்ய முழுமைக்கும், அதாவது சென்னை, கோவை, மதுரை மூன்றுக்கும் சேர்த்து வசதியான இடத்தில் நிர்மாணித்தால் மிகவும் உபயோகமாக இருக்கும்; தொழிலாளர்களுக்கு சௌகரியமாக இருக்கும். இப்போது கோயம்புத்தூரிலுள்ள பெருந்துறை ஸானடோரியத்திலும், தாம்பரம் டி. பி. ஸானடோரியத்திலும் தொழிலாளர்களுக்காக படுக்கைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே பொது ஜனங்களுக்கு எவ்வளவு தேவைப்படுகிறதோ அவ்வளவு படுக்கைகள் இல்லாத நிலையில் தொழிலாளர்களுக்கு அந்த க்ஷயரோக ஆஸ்பத்திரியில் வேண்டிய வசதி செய்ய முடிவதில்லை. இந்த ராஜ்ய முழுமைக்கும் ஒரு தனியான ஆஸ்பத்திரிக்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று ராஜ்ய அரசாங்கத்தை கேட்டுக் கொள்கிறேன். இதோடு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

9–57 a.m. * DR. SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDRAN: சபைத் தலைவர் அவர்களே இந்த பொது சுகாதாரம், வைத்தியம், அத்தோடு Capital expenditure இவற்றின் தலைப்பில் கொண்டுவந்திருக்கிற மானியக் கோரிக்கையை ஆதரிப்பதோடு முக்கியமாக கொள்கைகளைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நாகரீகம் பெற்றது என்று சொல்லுகிற நாடுகளிலெல்லாம் Health Services என்ற பெயரில்தான் வைத்தியம் பொது சுகாதாரம், அதாவது வியாதி வராமல் தடுப்பது, இரண்டும் ஒரே தலைமையின் கீழ் நடைபெற்று வருகிறது. ஆனால் இங்கு Director of Medical Services என்று ஒருவர் Director of Public Health என்று ஒருவர் ஆக இரட்டை ஆட்சிமுறை நடக்கிறது. நாகரீக நாடுகளில் இதுமாதிரி நடைபெற வில்லை என்று திருப்பிச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த சர்ச்சை மதராஸ் ராஜ்யத்தில் பல காலமாக நடந்து கொண்டிருந்தும் இது தீர்க்கப்படாததற்குக் காரணம் இருக்கிறது. நான் அதைப்பற்றி சொல்ல வரவில்லை. ஆனால் இந்த மந்திரி சபை Director of Health Services என்று ஒரு அதிகாரியை நியமிக்கவேண்டும். அந்த டைரக்டர் ஒரு ஸர்ஜனாக இருக்கலாம், அல்லது ஒரு (வைத்தியனாக) பிஸிஷனாக இருக்கலாம். Health Services என்ற முறையிலே ஒரு Director இருக்க வேண்டும். இரண்டு டிபார்ட்மெண்ட்களும் இணைய வேண்டும். வேண்டுமானால், உபதலைவர்கள் போட்டு, மெடிகல் பிரான்ச், ஹெல்த் பிரான்ச் என்று பிரித்துக் கொள்ளலாம். இந்த மாதிரி அமைய வேண்டுமென்று மாறுதல் கொண்டுவர இந்திய சர்கார் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். இதை இந்த ராஜ்யத்தில் அமுலுக்குக் கொண்டுவர ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பல ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன; கீழே டிஸ்பென்சரிகள் இருக்கின்றன. அதைத்தவிர ஆரம்ப ஆரோக்கிய திட்ட விடுதிகள் இருக்கின்றன. இவைகளைப் படிப்படியாக இணைப்பதை ஐந்து வருட திட்டப்படி செய்யலாம். கிராமங்களில் வைத்திய வசதி செய்ய வேண்டுமென்று ஒப்புக் கொள்ளப்படுகிறது. ஆனால் டிஸ்பென்ஸரி தொடங்க வில்லை. ஆரோக்கிய விடுதி தொடங்குகிறார்கள். Health Visitor, Health Inspector என்று Staff கொடுக்கப்படுகிறது. ஆனால் அங்கு ஆரோக்கிய சூழ்நிலை இல்லை என்று எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். சமுதாய நல திட்டத்தில் வேலை செய்த போதும் எடுத்துச் சொல்லுகிறோம். இன்றைக்கு Medical Officer-க்கு Medical வேலை செய்ய நேரம் இருக்கிறது. ஆனால் ஆரோக்கிய வேலை செய்ய நேரம் இல்லை. Primary Health Unit முறையில் அந்த மாதிரி வாய்ப்புகள் கொடுக்கலாம். தாய்-சேய்-நல விடுதிகள் போன்றவைகளுக்கு பெண் டாக்டர்களை ஏற்படுத்தலாம். District Medical Officer-ம், District Health Officer-ம் Glorified Sanitary Inspector ஆக இல்லாமல் effective ஆக செயல் படுகிற முறையில் இருக்க வேண்டும். இதை எல்லாம் ஐந்து நிமிஷ, ஏழு நிமிஷ speech-ல் சொல்லி முடிக்க முடியாது. திட்டங்களை சரிவர வகுக்க வேண்டும்.



நம்முடைய மெடிகல் காலேஜ்களில் சொல்லிக் கொடுக்க ஒரு சிலர் இருக்கிறார்கள். காலேஜ்களில் சொல்லிக்கொடுக்கும் புரொபசர்கள் முழு நேர புரொபசர்களாக இருக்கவேண்டுமா அல்லது தனிப்பட்ட முறையில் வருவாய் இருக்கிற—Private Practice வைத்துக்கொண்டிருக்கிற—புரொபசர்கள் இருக்கவேண்டுமா என்பது பலநாள் பிரச்னை. ஆசிரியர்கள் நல்ல விதமாக வைத்தியக் கல்வியை சொல்லிக்கொடுக்கவேண்டுமானால் நிச்சயமாக இரண்டும் செய்ய முடியாது. பணக்கவர்ச்சிதான் இருக்கும். ஒரு டாக்டராகிய நானே சொல்லிக்கொள்கிறேன். டாக்டர்களும் மனிதர்கள்தான். தெய்வமாக ஆக முடியாது. அவர்களுக்கு நல்ல சம்பளம் கொடுத்து முழு நேர ஆசிரியர்களாக ஆக்கி, Chemical, Surgical போன்ற பல துறைப் படிப்புகளை கற்றுக்கொடுக்க வாய்ப்பு கொடுக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மேல்படிப்புக் கற்றுக்கொடுக்கவேண்டும் என்கிறோம். நம்முடைய மதராஸில் கஸ்தூரிபாய் மெடர்னிட்டி ஆஸ்பத்திரி இருக்கிறது. அங்கு கற்றுக்கொடுக்க வசதி இருக்கிறது. அதனால் ஜனங்களுக்கு ரொம்பவும் வசதியாக இருக்கிறது. போஸ்ட் கிராஜுவேட்டுகள் நம்முடைய நகரத்தில் அதிகமாக தேவைப்படுகின்றனர். அப்படி அதிகமாக வேண்டும் என்று சொல்லும்போது அங்குள்ள ஸ்டாப்களை கொஞ்சம் அதிகப்படுத்தினால் சௌகர்யமாக இருக்கும். அதன் பிறகு எம். டி. பட்டம் பெற்றவர்களை நியமிக்கவேண்டும். இதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நேற்று விவாதம் நடந்தபோது இரண்டொரு வார்த்தைகளைப்பற்றி தட்ங்கல் ஏற்பட்டதால் அவைகளைப்பற்றி கொஞ்சம் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. அதைப்பற்றி முதலில் சொல்லி மற்றதைப்பற்றி பிறகு சொல்லலாம் என்று நினைக்கிறேன். வைத்தியத் துறையில் "லெப்பர்" என்ற ஒரு சொல் இருக்கிறது. "லெப்பர்" என்றால் குஷ்டரோகி என்று அர்த்தம். இந்த வார்த்தையை உபயோகப்படுத்தினால் அது ஒரு வசை மொழியாகக் கருதுகிறார்கள். இழிவான சொல்லாகவும் ஜனங்கள் அதைக் கருதுகிறார்கள். அது இழிவான சொல்லாக இருப்பதால் அந்த வார்த்தையை எடுத்துவிட்டு அதற்குத்தக்க தமிழ்ச் சொல்லை அமைக்க வேண்டும் என்று வைத்திய உலகம் கேட்டுக்கொண்டார்கள். யாரும் இப்பொழுது அம்மைக்காரன் என்றும் டி. பி. என்றும் சொல்வது இல்லை. அதைப்போலவே லெப்பர் என்றும் சொல்லாமல் இருக்கும்படியான ஏற்பாடு செய்யவேண்டும். அதற்குத் தகுந்த நாகரீக வார்த்தையை உபயோகப்படுத்தவேண்டும். அதைப்போலவே வெனிரியல் வியாதி இருக்கிறது. அது எப்படி உண்டாகிறது என்று நான் சொல்ல முன்வரவில்லை. அதை அப்படி ஒருவரும் சொல்வது இல்லை. ஆனால் பொம்பளை வியாதி என்று சொல்லுகிறார்கள். அதைப்போலவேதான் லெப்பர் என்று சொல்லாமல் இருக்கவேண்டும். வெனிரியல் சீக்கு என்று சொல்லும்போது நம்முடைய மனதிற்கு எவ்வளவோ அருவருப்பாக இருக்கிறது. அதைப்போலவே லெப்பர் என்பதும் இருக்கிறது. இப்பொழுது தமிழ் மொழி போதனை மொழியாக இருக்கவேண்டும் என்று சொல்லும் போது இப்படிப்பட்ட வார்த்தைகளுக்கு தக்க தமிழ் மொழியைக் கண்டுபிடித்துச் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதை பல வருஷங்களுக்கு முன்னிருந்தே மாற்ற வேண்டும் என்று நினைத்து வந்து இப்பொழுது அதற்குத் தக்க காலம் வந்திருக்கிறது. அதை பயன்படுத்திக்கொண்டு தக்க தமிழ் வார்த்தையை உபயோகிக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, ஒரே மாதிரியாக படித்தவர்களுக்கும் பட்டம் பெற்றவர்களுக்கும் ஒரே மாதிரியான ஊதியம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதைப்பற்றி பெரிய கிளர்ச்சி இருந்துகொண்டிருக்கிறது. பப்ளிக் ஹெல்தாக இருந்தாலும் சரி, மெடிகலாக இருந்தாலும் சரி ஒரே மாதிரியாக படித்துவிட்டு பட்டம் பெற்று வந்தால் அவர்களுக்கு ஒரே மாதிரியான ஊதியம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இப்பொழுது பார்த்தால் அதிகப்படியான டாக்டர்கள் நகரங்களில்தான் இருக்கிறார்கள். கிராமப்புறங்களில் அதிகப்படியான

டாக்டர்கள் இல்லாமல் இருப்பதால் சிராமப் பக்கங்களில் போய் வேலை பார்க்கும் டாக்டர்களுக்கு அதிகப்படியான அலவன்ஸ் கொடுத்தால் நலமாக இருக்கும். கிராமப் புறங்களுக்குப்போய் வேலை செய்யும் டாக்டர்களுக்கு வீட்டு அலவன்ஸ் போன்ற அலவன்ஸ் கொடுப்பதோடு அவர்களுக்கு "நான் ப்ராக்டிஸிங்" அலவன்ஸ் என்று அதிகம் கொடுத்தால் அதிகப் படியாக டாக்டர்கள் கிராமப்புறங்களுக்குச் சென்று வேலை செய்ய முன் வருவார்கள். அப்படி டாக்டர்கள் கிராமங்களுக்குச் சென்று வேலை செய்தால் கிராமப்புறங்களில் இருப்பவர்களுக்கு அதிகப்படியான வசதி ஏற்படுவதற்கு இடம் ஏற்படும். இப்படிப்பட்ட அலவன்ஸ் கொடுக்கக்கூடியதான வசதிகளை டாக்டர்களுக்குச் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தாலூகா தலைமை ஆஸ்பத்திரிகளை **Provincialisation** பண்ணுவதில் நாம் ஏகதேசமாக முன்னேற்றமடைந்துவிட்டோம். அதை பூராவும் ப்ரொ வின்ஷலைஸ் பண்ணவேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, சப்-தாலூகா ஆஸ்பத்திரிகளையும் ப்ரொவின்ஷலைஸ் பண்ணவேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன். இதற்கு வேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக எடுத்து கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இருபதாயிரம், பத்தாயிரம் ஜனத்தொகை கொண்ட இடங்களில் ஹெட் குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. அதைப்போலவே திண்டுக் கல்லைப்போன்ற லட்சம் ஜனத்தொகைக்கொண்ட இடங்களிலுள்ள ஆஸ்பத்திரி களையும் தாலூகா ஹெட் குவார்ட்டர் ஆஸ்பத்திரிகளாகக் கருதுகிறார்கள். அதனால் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. திண்டுக்கல்லுக்கு அருகில் பல தாய்-சேய்-நல விடுதிகள் இருக்கின்றன. அங்கிருந்து திண்டுக்கல் ஆஸ்பத்தி ரிக்குத்தான் பல கேஸ்கள் வருகின்றன. திண்டுக்கல்லுக்கு பிரசவ கேஸ்கள் அதிகம் வருகின்றன. அவைகளில் சில கர்ப்பப்பை வெடிச்சுப்போகக்கூடிய கேஸ்களும் வருகின்றன. இப்படி பல கேஸ்கள் திண்டுக்கல்லுக்கு பக்கங் களிலுள்ள கிராமங்களிலிருந்து வருகின்றன. திண்டுக்கல்லில் உள்ள ஆஸ்பத்திரி தாலூகா ஆஸ்பத்திரி அந்தஸ்த்தில் இருப்பதால் அங்கு அவைகளுக்கு வேண்டிய சிகிச்சை செய்ய முடியவில்லை. அதனால் திண்டுக்கல்லில் உள்ள ஆஸ்பத்திரியில் ஒரு நல்ல லெபரட்டரியையும் ப்ளட் பாங்கையும் அமைத்துக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

எல்லா ப்ரைமரி ஹெல்த் செண்டர்களுக்கும் இப்பொழுது ஜீப் கார்கள் வழங்கப்பட்டிருப்பதாக கனம் மந்திரி அவர்கள் தெவிரித்தார். அப்படி வழங்கப்பட்டிருப்பதாக இதுவரையிலும் தெரியாது. அப்படி இருந்தால் அவை ரொம்பவும் வரவேற்கப்படவேண்டியதுதான். சின்னளைப்பட்டியில் அப்படிப்பட்ட ஒரு செண்டர் இருக்கிறது. அங்கு இதுவரையில் ஜீப் கார்கள் கொடுக்கப்படவில்லை. அதனால் ஜீப் கார்கள் கொடுப்பதாக இருந்தால் அவைகளை உடனடியாக வழங்கி உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அவைகளை சீக்கிரம் கொடுத்தால் ரொம்பவும் நல்லது. கிராமங்களிலுள்ள மருத்துவச்சிகளுக்கு அதிகப்படியான பயிற்சி கொடுக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. உதவி மருத்துவ ட்ரெயினிங் நிலையம் அவசியம். அப்படிப்பட்ட நிலையங்களை அமைத்துக் கொடுத்து அதிகப்படியான மருத்துவச்சிகளை தயாரிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இதை நான் டாக்டர் என்ற முறையில் சொல்லுகிறேன். இப்பொழுது நடைபெறுவது என்னவென்றால் அப்படி அவர்களுக்கு பயிற்சி கொடுக்கும்போது அங்குள்ள டாக்டர் என்ன சொல்லுகிறார்கள் என்றால் எப்படி எப்படி இருந்தால் டாக்டர்களுக்கு அந்த கேஸ்களை அனுப்பி வைக்கவேண்டும் என்றுதான் சொல்லிக்கொடுக்கிறார்கள். அப்படி இல்லாமல் இன்னும் அதிகப்படியான பயிற்சி மருத்துவர்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்பொழுது நம்முடைய கிராமங்களுக்கு அதிகப்படியான மருத்துவ விடுதிகள் அமைத்து வருகிறார்கள். அது ரொம்பவும் வரவேற்கத் தக்க விஷயம்தான். மற்றும் சோஷியல் வெல்பேர் இலாகா மூலமாக வும், கம்யூனிட்டி செண்டர்கள் மூலமாகவும் பல விடுதிகளை அமைத்துக் கொண்டு வருகிறார்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் இதற்கு





என்று அதிகப்படியான பணம் ஒதுக்கி அதிகப்படியான விடுதிகளையும் அமைத்துக்கொண்டு வருகிறார்கள். அவைகள் வரவேற்கத்தக்கவை. இப்படி அமைக்கப்படும் விடுதிகளில் மேற்பார்வை ரொம்பவும் குறைவாக இருக்கிறது. அப்படி இல்லாமல் அங்கெல்லாம் நல்லபடிக்கு பெண் வைத்தியர்கள் மேற்பார்வை இருக்கும்படியாக ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பல இடங்களில் இப்பொழுது சரியான மேற்பார்வை இல்லாமலேயே இருக்கிறது. பல ஜில்லா போர்டு களில் பெண் டாக்டர்களே இல்லை. அப்படி இல்லாமல் அங்கங்கே பெண் டாக்டர்களை அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஜில்லா போர்டுகளில் ஸ்திரீ மெடிகல் ஆபீசர்களை நியமிக்கிறார்கள் அவர்கள் தாய்-சேய்-நல விடுதிகளையும் மேற்பார்வை செய்யவேண்டும். கர்பிணி களுக்கு வேண்டிய சௌகர்யங்களைச் செய்வது முதலிய வேலைகளை அவர்கள் செய்து வருகிறார்கள். மதுரையிலுள்ள 25 அல்லது 30 இடங்களில் ஒன்றுக்கு இரண்டு பெண் டாக்டர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் கர்பிணி களையும் குழந்தைகளை பெற்ற தாய்மார்களையும் பார்வையிடவேண்டிய தாக இருக்கிறது. அப்படி இரண்டு பேர்கள் இருந்தாலும் அது போத வில்லை. ஒரு டாக்டர் எட்டுப் பேர்களைத்தான் பார்க்கலாம். இப்பொழுது ஹெல்த் யூனிட்டுகளைச் சேர்ந்தவர்களும் சோஷியல் வெல்பேரைச் சேர்ந்த வர்களும் இருக்கிறார்கள். அவர்கள் தாய்மார்களுக்கும் கர்பிணிகளுக்கும் வேண்டிய க்ளினிக்கை வைத்து நடத்துகிறார்கள். அவைகளை அவர்களால் பூராவும் பாக்கமுடியவில்லை. அவர்களால் எல்லா இடங்களையும் பார்க்க முடியவில்லை. ஆகவே அங்கெல்லாம் அதிகப்படியான டாக்டர்களை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஹெல்த் விசிட்டர்கள் உள்ள இடங்களிலும் டாக்டர்கள் உள்ள இடங்களிலும் ஒரு வாரத்திற்கு ஒரு முறை அல்லது பத்து நாட்களுக்கு ஒரு முறையாவது அவர்கள் வரவேண்டும் என்ற ஏற்பாட்டைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளு கிறேன். அதனால் ரூரல் வெல்பேர் மெடிகல் ஆபீசர்களை அதிகப்படியாக அமைக்கவேண்டியது அவசியமாக இருக்கிறது.

எதிர்காலத்தில் நாம் எவ்வளவோ விஞ்ஞான முறையில் முன்னேற்ற மடைந்து வருகிறோம். அதேசமயத்தில் நம்முடைய நாட்டில் இருக்கக் கூடிய ஆயுர்வேத யுனானி ஹோமியோபதி வைத்தியத்தையும் முன்னேற்ற மடையச் செய்யவேண்டும். இப்பொழுது ஹோமியோபதி முறை அதிக பிராபல்யமில்லாமல் இருக்கிறது. வெளிநாட்டிலிருந்தும் நாம் மருந்து வகைகளை அதிகமாகக் கொண்டுவரவும் முடியவில்லை. அதனால் அதிகப் படியான செலவும் ஏற்படுகிறது என்றும் சொல்லி வருகிறோம். இந்த நிலைமையில் நாம் செலவைக் குறைக்கவேண்டும் என்று சொல்லிக் கொண்டு வரும்போது ஆயுர்வேத, ஹோமியோபதி முறை வைத்தியத் திற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்குவேண்டிய முறையை நாம் பரிசீலனை செய்தால் நாட்டிற்கு நல்ல பயன் ஏற்படும். லோகல் **fund** இலாகாவின் கீழ் நடைபெற்று வரும் ஆஸ்பத்திரிகளில் ஜனங்களுக்கு வசதி அளிக்கும் முறையில் ஆயுர்வேத முறையில் வைத்தியத்தைச் செய்து வந்தால் ஜனங்களுக்கும் சௌகர்யமாக இருக்கும், மருந்துச் செலவும் சர்க்காருக்குக் குறையும். லோகல் டெவலப்மெண்ட் வேலையையும் பப்ளிக் ஹெல்த்தின் கீழ் கட்டிடம் கட்ட உதவிசெய்யும் முறையில்கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அத்துடன் ஹரிஜனங்களுக்கு கிணறுகள் கட்டும் விஷய மாக சொல்லும்போது—

**Mr. SPEAKER:** I have already given the hon. Member two minutes more.

**Dr. Srimathi T. S. SOUNDARAM RAMACHANDRAN:** குடி தண்ணீர் சம்பந்தமாக ரொம்பவும் சீக்கிரமாக பல திட்டங்களைப் போட்டு நடத்திவருகிறார்கள். அது ரொம்பவும் வரவேற்கத்தக்கது. இதனால் குடிதண்ணீர் பிரச்னை ஓரளவு தீர்ந்திருக்கிறது. இந்நிலையத்தில் சர்க்கார் முழு கவனத்தையும் செலுத்தி வருகிறார்கள்.

இன்னும் திட்டங்கள் போட்டு அவைகளையும் சீக்கிரத்திலேயே முடித்துவிட வேண்டும் என்றும் எண்ணம் கொண்டிருக்கிறார்கள். பப்ளிக் ஹெல்த் டிபார்ட்மெண்டுக்கு 95 லட்சம் ரூபாயும் மெடிகலின் கீழ் நாலைந்து கோடி ரூபாயும் ஒதுக்கியிருக்கிறார்கள். அப்படி இருந்தும் குஷ்டரோகம் என்பது மெடிகல் சம்பந்தப்பட்டதா அல்லது ஆரோக்யம் சம்பந்தப்பட்டதா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. இந்த அம்சம் எந்த இனத்தின் கீழ் வருகிறது என்ற சந்தேகம் ஏற்படுவதால் இந்த இரண்டு இலாகாவையும் ஒன்றாக அமைக்கவேண்டியது அவசியமாக இருக்கிறது. அப்படி ஒன்று சேர்த்துவிட்டால் இந்த பிரச்னை எழ வேண்டிய அவசியம் இல்லை. இந்த இரண்டு இலாகாக்களும் ஒன்றோடொன்று சேர்ந்து இயங்கவேண்டிய இலாகாக்கள். அப்படி இரண்டையும் ஒன்று சேர்த்து நடத்தினால்தான் நன்மை ஏற்படும். ஆகவே இந்த இரண்டு இலாகாக்களையும் ஒன்றாக இணைத்து நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு எனக்கு அதிகப்படியாக நேரம் கொடுத்து பேச அவகாசம் அளித்ததற்கு நன்றியை தெரிவித்துக்கொண்டு இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

10-10 a.m. **Sri K. R. NALLASIVAM**: கனம் சபாநாயகர் அவர்களே, ஜில்லா போர்டுகள் மூலமாக நடத்தப்படுகிற ஆஸ்பத்திரிகள் எல்லாம் அனேகமாக ஒழுங்காக நடப்பதில்லை. பல ஜில்லா போர்டு தலைவர்கள் இங்கே இருக்கிறார்கள். அவர்களுக்குக்கூட தெரியுமென்று நினைக்கிறேன். முழுக்க முழுக்க அவர்களே பொறுப்பாகச் சொல்லி விட முடியாது. அரசாங்கம் அவைகளுக்குத் தேவையான மருந்து வழங்குவதும், தேவையான பண உதவி செய்வதும் ஓரளவு குறைவாகத்தான் இருக்கிறது. வருஷா வருஷம் லோகல் பண்டு ஆஸ்பத்திரிகளுக்கு மருந்துகள் வேண்டுமென்று சர்க்கார் ஆஸ்பத்திரிகளுக்கு அவைகள் இண்டெண்டு போட்டால், குறிப்பிட்ட நேரத்தில் மருந்துகள் அந்த ஆஸ்பத்திரிகளுக்கு வந்து சேருவது கிடையாது. பொதுவாகவே, ஜில்லா போர்டு ஆஸ்பத்திரிகள் கிராமப் புறங்களில் இருக்கின்றன. அங்கு இருக்கும் ஆஸ்பத்திரிகளுக்கு மருந்துகள் வராவிட்டால் அவைகள் எப்படி ஒழுங்காக நடைபெற முடியும்? ஆகவே, குறிப்பாக கிராமப் புறங்களில் இருக்கும் ஆஸ்பத்திரிகளுக்காக ஜில்லா போர்டு மருந்துக்கான இண்டெண்டுகள் அனுப்பிய மூன்று மாத காலத்திற்குள்ளாக அவைகளுக்கு மருந்து கொடுக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். இல்லாவிட்டால், அந்த ஆஸ்பத்திரிகள் இருப்பதும் ஒன்றுதான் இல்லாததும் ஒன்றுதான். ஆகவே, இதைக் கருத்திற்கொண்டு, ஒன்று ஜில்லா போர்டு ஆஸ்பத்திரிகளையெல்லாம் சர்க்காரே எடுத்து நடத்த வேண்டும். அல்லது நல்ல முறையில் ஜில்லா போர்டுகளே நடத்துவதற்கு தக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைப்பற்றி நம்முடைய மந்திரி அவர்கள் குறிப்பிட்டார்கள். கடந்த 6 ஆண்டு காலத்திலே இந்தத் திட்டத்தைக் குறித்து பிரசாரம் செய்கின்ற முறையும், அதை நடத்துகிற முறையும் வேகமாக இல்லை. இதைப் பொறுத்த வரை, கல்யாணம் ஆகாதவர்களுக்கோ வறட்டு வேதாந்திகளுக்கோ கவலை இல்லை. குடும்பத்தோடு வாழ்கின்றவர்கள் இதைப்பற்றி நிச்சயமாகக் கவலைப்பட்டுத்தான் தீர வேண்டும். இந்திய சர்க்கார் இதைப்பற்றி அதிகமாகக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறது. இதைப் பொறுத்த வரை நான் ஒரு சிறிய யோசனை தெரிவிக்க விரும்புகிறேன். ஒவ்வொரு ஜில்லாவிலிருக்கும் ஆஸ்பத்திரி மூலமாகவும், மோட்டார் வாகனங்கள் மூலமாகவும் ஒரு பிரசார சாதனத்தை ஏற்படுத்த வேண்டும். கிராமங்களில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை மக்கள் மனதார வரவேற்கின்றார்கள். ஆனால், பகிரங்கமான இடத்தில் பேசுவதற்கு வெட்கப்படுகிறார்களே தவிர, இம்மாதிரி திட்டம் தேவை என்பதை நம்புகிறார்கள், வரவேற்கின்றார்கள். ஆனால், அவர்களுடைய உள்ளத்திலே பதியக் கூடிய முறையில் அதற்குரிய சாதனங்கள் பற்றி தெளிவாக விளக்கமாகத் தெரியச் செய்யவேண்டும். அந்தச் சாதனங்களும் கிராமாந்திரங்களில் இருக்கின்ற மாதிரி செய்யவேண்டும். அப்படியில்லாத முறையில் கிராமங்களில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் வேறு விதமான முறையில் நடந்து வருகின்றன. இதை சர்க்கார் கவனத்தில்

18th July 1957]  [Sri K. R. Nallasivam]

வைத்துக்கொண்டு, அதற்கான காரியங்களைக் கொஞ்சம் வேகமாகச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். இந்த வகையில் காரியங்களைச் செய்யாவிட்டால், எவ்வளவு பெரிய திட்டங்களை நாம் போட்டாலுங்கூட, எத்தனை ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டாலுங்கூட, அவைகளினால் பலன் ஏற்பட முடியாது. சில அரசியல் வாதிகள் கூடச் சொல்வார்கள், இது என்ன தத்துவார்த்த அடிப்படை என்று—குடும்பக் கட்டுப்பாட்டைப் பற்றி. அதைப்பற்றி நமக்குக் கவலை இல்லை. பிரத்தியட்சமான உண்மையை நாம் பார்க்க மறுக்கக்கூடாது. அந்த அடிப்படையில் பார்க்கும்போது, இந்தத் திட்டங்களெல்லாம் நல்ல முறையில் நிறைவேறி, அதன் மூலம் ஜனங்கள் எல்லாம் பயன்பெற வேண்டுமானால், போடப்படுகிற திட்டம் சரியான முறையில் அமுலாக்கப்படவேண்டும். அதற்குச் சரியான முறையில் சர்க்கார் வேகமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

குஷ்டரோகத்தைப்பற்றி சற்று முன் மதிப்பிற்குரிய அங்கத்தினர் பேசினார். அதைப் பொறுத்த வரை சர்க்கார் மிகவும் அசிரத்தையாக இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். சில இடங்களில் குஷ்டரோகிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது. ஒரு ஊரிலே நான் பார்த்தேன். சுமார் 3, 4 வருஷங்களுக்கு முன்னால், 50, 100 பேர் குஷ்டரோகிகள் இருந்தார்கள். ஆனால், இப்பொழுது சுமார் 300, 400 பேர்கள் வரை அதிகரித்திருக்கிறார்கள். பெரிய பெரிய கோவில்கள் முன்பும், மற்ற மதஸ்தர்கள் தரிசிக்கக்கூடிய இடங்களின் முன்பும் குஷ்டரோகிகள் ஏராளமாகக் காணப்படுகிறார்கள். எத்தனையோ பிச்சைக்காரர்கள் குஷ்டரோகிகளாக அங்கெல்லாம் காட்சியளித்து தங்கள் நோயை மற்றவர்களுக்கும் தாராளமாகப் பரப்பிக்கொண்டிருக்கிறார்கள். சர்க்கார் என்ன செய்யவேண்டுமென்றால், எப்படி இன்ப்ளூயன்ஸா வியாதியைத் தடுக்க புதிய மருந்துகள் கண்டுபிடிக்க ஏற்பாடு செய்கிறார்களோ, அதேபோல் குஷ்டரோகம் என்னும் கொடிய வியாதியைப் போக்குவதற்கும் சரியான மருந்துகளைக் கண்டுபிடிக்க வகை செய்வதோடு கூட, இந்த நோயைத் தடுப்பதற்கு வேகமாக முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் இந்த வியாதி மக்களை எங்கு கொண்டுபோய்ச் சேர்க்குமோ, சொல்ல வேண்டியதில்லை.

செங்கற்பட்டு ஜில்லாவைப் பார்த்தால், எந்த இடங்களில் பார்த்தாலும்—ரயில்வே ஸ்டேஷனாக இருந்தாலும் சரி, பஸ் ஸ்டாண்டுகளாக இருந்தாலும் சரி, இப்படிப்பட்ட நோயாளிகள் இருப்பதைப் பார்க்கவே சகிக்காது. அவர்கள் வருவதை நேரிலே பார்த்தால் எவ்வளவு அவஸ்தையாக இருக்குமென்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். இந்த நோயைத் தடுப்பதற்காக சர்க்கார் ஒதுக்கியிருக்கும் தொகை மிகவும் குறைவு. இந்து குஷ்ட நிவாரண சங்கத்திற்கு 13 ஆயிரம் ரூபாய் வருஷமொன்றுக்குக் கொடுப்பதாகத் தெரிகிறது. சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் இந்த வியாதிக்காக லட்சக் கணக்கில்தான் ரூபாய் செலவிடப்பட ஒதுக்கப்பட்டிருக்கிறது. நான் சொல்லுகின்றேன். இந்த வியாதியைப் பொறுத்தவரை, இதைத் தடுப்பதற்கு நாம் அதிகமாகப் பணம் ஒதுக்கி, இந்த வியாதியை இந்த நாட்டிலே இல்லாமல் விரட்டியடிக்கவேண்டும். நான் இன்னொரு யோசனையும் சொல்ல விரும்புகிறேன். இந்த வியாதியுடையவர்களைச் சக்தியற்றவர்களாகச் செய்யவேண்டும். ஆண்களாக இருந்தால் அவர்களுக்கு ஆபரேஷன் மூலமாகவும், பெண்களாக இருந்தால் ஸ்டரிலைசேஷன் மூலமாகவும் அவர்களைச் சக்தியற்றவர்களாக்கி, மேற்கொண்டு குஷ்டரோகிகளை உற்பத்தி செய்வதிலிருந்தும் தடுக்க சர்க்கார் தைரியமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஒரு தாலூகாவில் 500-க்கு மேற்பட்ட குஷ்ட ரோகிகள் இருப்பார்களானால், அந்தத் தலைமை ஆஸ்பத்திரியில் அதற்கு என்று தனியாக ஒரு பகுதி இருக்கவேண்டும். இப்போதுகூட அம்மாதிரி பகுதிகள் இருந்தாலும், பெயரளவுக்கு இருக்கிறதே தவிர, உருப்படியான வகையில் இந்நோயைத் தடுப்பதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. ஒரு தாலூகாவில் 500-க்கு மேற்பட்ட இந்நோயாளிகள் இருப்பார்களானால்,

[Sri K. R. Nallasivam] [18th July 1957

அவர்களுக்கென்று ஒரு தனி விடுதி ஏற்படுத்தி குஷ்டரோகிகளையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து அவ்விடுதியில் வைத்து, நல்ல முறையிலே அவர்களுக்கு வைத்திய வசதி செய்து கொடுக்கவேண்டும். இந்நோய் வேகமாகப் பரவாமல் தடுப்பதற்கு சர்க்கார் அவசர நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

10-15 a.m. *SRI A. S. DURAISWAMI REDDIAR : கனம் சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் சுகாதார, மருத்துவ இலாக்காக்களுக்காக மான்யம் கேட்டிருப்பதை நான் பூரணமாக ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சுகாதார இலாகா நல்ல வேலை செய்வது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். சமீபத்தில் இன்புளுயன்ஸா நோய் நம் ராஜ்யத்தில் சுமார் ஐந்து லட்சம் பேர்களை பாதித்தது. அப்பொழுது வைத்திய உதவி மிகத் திறமையாகச் செய்தார்கள். இப்பொழுது லோக் சபையில் நமது மந்திரி அவர்கள் நேற்று கேள்வி ஒன்றுக்குப் பதில் சொல்லியிருக்கிறார். சுகாதார இலாகா இம்மாதிரியான அவசர காலங்களில் மிகவும் சிரத்தையாக வேலை செய்வதோடு கூட, சாதாரண காலங்களிலும் நல்ல சிரத்தை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லியிருப்பதை நான் இப்பொழுது தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற பழமொழி உண்டு. சுகாதாரம் நன்றாக இருந்தால்தான் கல்வி கற்றுக் கொடுப்பதாக இருந்தாலும் சரி, வியாபாரம் செய்வதாக இருந்தாலும் சரி, சர்க்கார் ஊழியம் செய்வதாக இருந்தாலும் சரி, தொழில் செய்பவர்களாக இருந்தாலும் சரி, எல்லோரும் திறமையாக வேலை செய்ய முடியும். நாட்டு மக்கள் சுகாதாரத்தோடு இருந்தால் அந்த நாடு வேகமாக முன்னேற்றம் அடையும். இந்தவகையில் பார்த்தால், சுகாதாரத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை மிக மிகக் குறைவு என்றுதான் சொல்ல விரும்புகிறேன்.

எனக்கு முன் பேசிய டாக்டர் அம்மையார் அவர்கள் கூட குறிப்பிட்டார்கள், சுகாதார இலாகாவை வேறாகவும், மருத்துவ இலாகாவை வேறாகவும் பிரித்து வைத்திருப்பதைச் சுட்டிக்காட்டி, அதனால் சுகாதாரத்திற்கு வேண்டிய செலவுக்கு தொகை கொஞ்சமாக இருக்கிறதென்பதையும் சொல்லி, இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து வைக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். நோய் ஏற்பட்டு, அதனால், ஆஸ்பத்திரிகளுக்குச் சென்று வைத்தியம் செய்துகொள்வதற்காக, ஆஸ்பத்திரிகளைக் கட்டுவதில் அநேக லட்சக் கணக்கில் செலவு செய்வதைவிட நோய் வராமல், முன் ஜாக்கிரதையாக சுகாதாரத்தை கவனித்துச் செய்தால் இவ்வளவு ஆஸ்பத்திரிகளுக்குத் தேவை இருக்காது.

இப்பொழுது சென்னை நகரத்தில் ஜன நெருக்கடி நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது. இப்பொழுது தாம்பரம் வரையில் மின்சார ரயில் ஓடிக்கொண்டிருப்பதால், ஜனங்கள் நகரத்தை விட்டு தாம்பரம் வரையுள்ள இடங்களில் நல்ல காற்றை முன்னிட்டும், நல்ல வெளிச்சத்தை முன்னிட்டும் குடியேறி வருகிறார்கள். அப்படிக் குடியேறினவர்களுக்கு வெளிச்சமும், காற்றும், தண்ணீரும் ஆகிய இந்த சௌகரியங்கள் இருக்கின்றனவே தவிர, சுகாதார வசதியோ வைத்திய வசதியோ அவர்களுக்கு மிக மிகக் குறைவாக இருக்கிறது. ஆலந்தூரிலிருந்து தாம்பரம் வரையில் இத்தகைய வசதிகள் மிகக் குறைவாக இருக்கின்றன. ஆலந்தூர் சென்னை கார்ப்பரேஷன் எல்லைக்கு அடுத்தாற் போல் இருக்கிறது. தாம்பரத்திற்கும் சென்னைக்கும் தினசரி 100 மின்சார வண்டிகள் மேலும் கீழுமாகப் போய் வருகின்றன. இத்தனை வண்டிகளில் செல்பவர்கள் எல்லாம் அனேகமாக சென்னையிலேயே வேலை செய்கிறவர்களாக இருக்கிறார்கள். தொழிலாளர்களாக இருந்தாலும் சரி, உத்தியோகஸ்தர்களாக இருந்தாலும் சரி, வியாபாரிகளாக இருந்தாலும் சரி, எல்லோருமே தாம்பரத்திலிருந்து மின்சார ரயிலில்தான் பிரயாணம் செய்கிறார்கள். ஆனால், தாம்பரத்தை



18th July 1957] [Sri A. S. Duraiswami Reddiar]

சுற்றிய இடங்களில் சுகாதார வசதி மிக மிகக் குறைவாக இருக்கிறது. ஆலந்தூர் பஞ்சாயத்து எல்லைக்குட்பட்டது. கார்ப்பரேஷன் எல்லைக்கு அடுத்து பக்கத்தில் இருக்கிறது. இப்பொழுது சமீபத்தில் சிறு ரக, கன ரக தொழில்களை கிண்டியில் ஆரம்பிக்கப் போகிறார்கள். 30 தொழிற்சாலைகளை இந்த வருஷத்தில் ஆரம்பிக்கப் போகிறார்கள். ஆலந்தூரில் இருக்கும் சுகாதாரக் கேடு இனிமேல் இருக்காது என்று நான் நினைக்கிறேன். ஆலந்தூரில் உள்ள சுகாதார நிலைமையை விளக்குவதற்கு ஒரு உதாரணம் நான் சொல்கிறேன். நிதி அமைச்சர் அவர்கள் அங்கு ஒரு லைப்ரரியைத் திறப்பதற்காக வரும்போது, ஊருக்குள் நுழைவதற்குள்ளேயே, "என்ன இந்த ஊரில் சுகாதாரம் இவ்வளவு கேடாக இருக்கிறதே" என்று சொல்லி சுகாதாரத்தைக் கண்டித்தார். பல்லாவரத்தை அடுத்து, அனேக கிராமங்கள் இருக்கின்றன. ஜமீன் பல்லாவரம், இசா பல்லாவரம், ராதாநகரம், காந்தி நகரம், நேரு நகரம் ஆகிய பல நகரங்கள் சேர்ந்து முனிசிபாலிடி வைப்பதற்குக் கூட லாயக்கான டவுனாக இருந்தும் கூட, இதுவரை பஞ்சாயத்து போர்டு அமைக்கப்படவில்லை. ஜமீன் பல்லாவரத்தில் அனேக கிராமங்கள் இருந்தும் கூட இன்றுவரை ஒரு சுகாதாரமும் இல்லை. தெருக் குப்பையைப் பெருக்கக்கூட மனிதர்கள் இல்லை. ஊருக்குள் தண்ணீர் வசதி கிடையாது. ரோடுகள் அமைக்கப்படாமல் எத்தனையோ வருஷங்களாகின்றன. பஞ்சாயத்து சட்டம் வந்து, அதன்படி ஒவ்வொரு கிராமத்திலும் பஞ்சாயத்து ஏற்படுத்த வேண்டும் என்று நம் சர்க்கார் செய்தும்கூட, லோகல் போர்டு இன்ஸ்பெக்டர் அந்தப் பகுதியில் ஒன்றையும் கவனிப்பதில்லை. 1942-ம் வருஷத்தில், இந்த கேவலமான நிலைமையை நீக்க, ஜில்லா போர்டு நான்கு Scavenger-களை நியமித்தார்கள், அதற்கு பிறகு 15 வருடங்கள் ஆகியும், அதே நிலைமைதான் நீடிக்கிறது, ஆலந்தூரில் பஞ்சாயத்து போர்டு இருந்தும், அந்த ஊரில் சுகாதார நிலைமை மிக மிக கேவலமான நிலைமையில் இருக்கிறது. அவ்வூரில் வசிப்பவர்கள் சிலர் சொந்தமாகவே Scavenger-களை, வைத்துக்கொண்டிருக்கிறார்கள். பஞ்சாயத்து போர்டு Scavenger-களும் வைத்திருக்கிறார்கள். Night soil-ஐ சேகரிக்கும்படியான இடம் வெகு தூரத்தில் இருப்பதினால், மலங்களை ஜலம் விட்டு தெரு வாய்க்கால்களில் தள்ளி விடுகிறார்கள். அதனால் ஊரில் ஒரே நாற்றமாக இருக்கிறது. இதைப்பற்றி Health officer அவர்களுக்கு குடியிருப்பவர்கள் Complaint செய்தால், அவர் அதை நேரே விசாரிக்காமல், அந்த Complaint-ஐ பஞ்சாயத்து போர்டுக்கே, ஆவன செய்யும்படி அனுப்பி விடுகிறார்கள். பஞ்சாயத்து போர்டு அதிகாரிகள், Scavenger-களை கூப்பிட்டு, "உங்கள் மீது மேலதிகாரிகளுக்கு புகார் செய்திருக்கிறார்கள். ஆதலால் அவர்கள் வீடுகளுக்கு மூன்று நாட்கள் கக்கூஸ்கள் சுத்தம் செய்வதற்கு செல்லவேண்டாம்" என்று சொல்லிவிட்டு, Complaint செய்தவர்களை பார்த்து "எங்களிடம் புகார்களை கூறாமல் மேலதிகாரிகளிடம் ஏன் புகார் செய்தீர்கள்" என்று கூறுகிறார்கள். பிறகு Complaint செய்தவர்கள் பஞ்சாயத்து அதிகாரிகளிடம் மன்னிப்பு கேட்ட பிறகுதான் அவர்கள் வீட்டில் கக்கூஸ்கள் சுத்தம் செய்யப்படுகிறது. District Health Officer பக்கத்தில் தான் இருக்கிறார். அவர் நேரே வந்து விசாரிக்கலாம், அப்படி செய்யா விட்டாலும், Assistant Health Officer அல்லது Health Inspector-ஐயாவது அனுப்பி புகார்களை விசாரிக்க செய்யலாம். குற்றம் செய்தவர்களுக்கே அனுப்பினால் என்ன பிரயோசனம்?

பல்லாவரத்தை அடுத்தாற்போல் உள்ள இடங்களில், சென்னையிலிருந்து பலர் போய் வீடுகள், பங்களாக்கள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதைத் தவிர, அங்கே Jain College Christian College, Aerodrome முதலியவைகளும் இருக்கின்றன. மேலும், அங்கு 20 தோல் தொழிற்சாலைகளும் இருக்கின்றன. Chrome Leather Co., Gordon Woodroffe Co. போன்ற பெரிய தோல் கம்பெனிகளும் இருக்கின்றன. இந்த தோல் தொழிற்சாலைகளிலிருந்து, அசுத்தமான நீர் வெளியே விடப்படுகிறது. பல்லாவரம் சேமத்திற்கு பஞ்சாயத்து போர்டு இல்லை.

[Sri A. S. Doraiswami Reddiar] [18th July 1957

ஆனால் சர்க்காரை ஒரு விஷயத்திற்கு பாராட்ட வேண்டியிருக்கிறது. அங்கு மின்சார விளக்குகள் ஜகஜ்ஜோதியாக எரிய, ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள்.

தாம்பரம், ஒரு பெரிய ஊர், அந்த பஞ்சாயத்து போர்டுக்கு லட்ச ரூபாய் வருவாய் இருக்கிறது. 30,000 பேர்கள் வசிக்கிறார்கள். ஆனால் சர்க்கார் ஆஸ்பத்திரி கிடையாது. ஒரு Rural Dispensary தான் இருக்கிறது. அதுவும் தினம் 2, 3 மணி நேரம்தான் வேலை செய்கிறது. ஆகையினால் அங்குள்ள மக்கள் சென்னைக்கு வைத்திய வசதி பெறுவதற்கு சென்னைக்கு வரவேண்டியிருக்கிறது.

சைதாப்பேட்டை தாலூக்காவிற்கு தலைநகரம் கிடையாது. இப்பொழுது சைதாப்பேட்டை நகரமும் Corporation-ல் சேர்ந்து விட்டது. ஒவ்வொரு தாலூக்காவிற்கும் ஒரு Headquarters Hospital ஏற்படுத்துவதற்கு மும்முரமாக யோசனைகள் செய்துகொண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். சைதாப்பேட்டை தாலூக்காவில் எந்த இடத்தில் இந்த ஆஸ்பத்ரியை வைக்கப் போகிறார்களோ, தெரியவில்லை. இந்த ஆஸ்பத்திரியை ஆலந்தூரிலாவது அல்லது தாம்பரத்திலாவது வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆலந்தூர், பல்லாவரம், தாம்பரம்—இம்மூன்றையும் சேர்த்து ஒரு பெரிய முனிஸிபாலிட்டி ஆக அமைக்கலாம். ஆலந்தூரில் 30,000 ஜனங்களும், தாம்பரத்தில் 30,000 ஜனங்களும், பல்லாவரத்தில் 40,000 ஜனங்களும் இருக்கிறார்கள். எப்படி கல்கத்தா கார்ப்பரேஷனும் பக்கத்திலே ஹௌரா முனிஸிபாலிட்டியும் இருக்கின்றனவோ, அப்படியே இங்கும் சென்னை கார்ப்பரேஷனும் இந்த முனிஸிபாலிடியும் இருக்கலாம். அந்தப் பிரசேதத்தில் உள்ள பெரிய பெரிய பங்களா வீடுகள் இவைகளின் சொந்தக்காரர்கள், குடியிருப்பவர்களிடமிருந்து நிறைய வாடகை வாங்குகிறார்களே தவிர, வரி ஒன்றும் கொடுப்பதில்லை. முதலில் பல்லாவரத்திற்கு ஒரு பஞ்சாயத்து போர்டு ஏற்படுத்த வேண்டுமென்றும், பிறகு இம்மூன்றையும் சேர்த்து ஒரு முனிஸிபாலிட்டியாக்கினால் மிக நலமாய் இருக்கும் என்றும் ஸ்தலஸ்தாபன அமைச்சர் இதுபற்றி கவனிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு என் சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.

10–24 a.m. SRI G. ANNAMALAI MUTHURAJA : தலைவர் அவர்களே, மந்திரி அவர்கள் கொண்டுவந்து இருக்கும் மான்யத்தை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். திருச்சிக்குப் பக்கத்தில் புண்யமான காவேரிநதி ஓடுகிறது. திருச்சி டவுனிலிருந்து சுகாதாரக் கேடான நீரெல்லாம் அந்நதியில் போய்விழுகிறது. பல யாத்ரீகர்கள் இந்நதியில் ஸ்நானம் செய்து வருகிறார்கள். அவர்கள் இதனால் பாதிக்கப்படுகிறார்கள். ஆகையால் இந்த அசுத்தத் தண்ணீரை, இந்நதியில் சேரவிடாமல் பக்கத்தில் சுமார் நாலு பர்லாங் தூரத்தில் உள்ள விவசாயம் செய்யுமிடங்களுக்கு எடுத்துச் செல்வதற்கு ஏற்பாடு செய்யவேணுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். இதைச் செய்வதற்கு முனிஸிபல் நிர்வாகத்திலேயும் பணம் இருக்கிறது. கனம் மந்திரி அவர்களும் நேரில் அங்கு சென்று பார்த்திருப்பார்கள். கூடியசீக்கிரம் இதை நல்ல முறையில் சீர்திருத்தம் செய்தால் நல்லது. இந்த அசுத்தமான நீரை விவசாயிகளுக்கு பயனுள்ளவகையில் உபயோகப்படுத்த வசதி செய்து கொடுத்தால் சர்க்காரின் வருமானமும் அதிகரிக்கும்.

திருச்சி டவுன் மத்தியில் ஒரு பெரிய சர்க்கார் ஆஸ்பத்திரி இருக்கிறது. அதிலிருந்து வெளிவரும் எல்லாவிதமான அசுத்த நீரும் பக்கத்தில் ஓடுகின்ற உய்யக்கொண்டான் வாய்க்காலில் வந்து சேருகிறது. அந்த வாய்க்கால் தண்ணீரை கிராம மக்கள் சாப்பிடுகிறார்கள். இந்தத் தண்ணீரை விவசாயத்திற்கு உபயோகப்படுத்தினால் நலம். ஆனால் சாப்பிடுவதற்கு உபயோகப்படுத்துவதனால் பல சுகாதாரக் கேடுகள் உண்டாகின்றன. ஏழைமக்களைக் காப்பாற்றுகிறோம், கிராம மக்களை காப்பாற்றுகிறோம் என்று நாமெல்லோரும் இங்கும், மேடைகளிலும் பேசும் நேரத்தில்



18th July 1957] [Sri G. Annamalai Muthuraja]

சுகாதார மந்திரி அவர்கள் இதை கவனித்து ஏழை மக்கள் சுகாதாரத்துடன் வாழவேண்டிய வசதிகள் செய்துதரவேண்டுமாய் கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Mr. Speaker, Sir, in supporting the cut motion, I would like to make a few observations. Many hon. Members have spoken about the delay in the supply of medicines to the various hospitals and rural dispensaries. This question has been agitating the public mind for a long time and it is a well-known fact that the Central Medical Stores, run by the Government of India, are not very quick and prompt in supplying medicines. It is high time that our Government moved the Central Government and took over the Stores themselves. Otherwise, there will be no salvation. Further, even though provision is made by the Government and the local bodies for the purchase of medicines, most of these are not supplied by the Medical Stores. The indents are returned with the remark 'hereafter.' 'Hhereafter' means they are never to be supplied. That is the position. Then, Sir, some of the old, antiquated drugs are still being supplied to the hospitals and dispensaries. Now that medical science has advanced to a considerable extent, the Stores must be induced to store more of modern drugs. 10.2 a.m

With regard to hospitals, several of these are understaffed. Even in big headquarters hospitals, there is dearth of men. My submission is that the Government should think of posting only doctors with post-graduate degrees as District Medical Officers when the present incumbents retire. We must also send most of the doctors with just the M.B.B.S. degree—(I include in this category honorary medical officers also)—for training abroad. In most of the hospitals, we have not got specialists say, for Orthopædics, Plastic Surgery, Pathology, Anæsthesia and such other departments. When the present incumbents retire, we will find it very difficult to replace them with highly qualified and experienced men. So, the Government must look ahead and see that these people are trained as early as possible so that they may take the place of those who are likely to retire soon.

A Surgeon of the Stanley Medical College has been transferred as Dean—and a surgeon has not been posted in his place. In the General hospital one of the prominent surgeons has retired from service. These places have not yet been filled up with suitable persons. The Government should realise the seriousness of it and see that qualified people, preferably post-graduate people with experience are posted to these places as early as possible.

As far as possible the idea of giving special wards to the Dean or the Heads of Medical Institutions should be discouraged. Even when the Britishers were here, they were not encouraging the idea. Therefore it is not known why we should alone encourage this.

system. That would mean the administration side will suffer. Therefore I am sure the Hon. Minister will pay attention to this side of the question also.

I have recently received some complaints regarding the Maternity hospital and that it is not well managed, in the sense that there are many married Lady Assistant Surgeons and most of them are, I am told in the family way and on account of some inconvenience or other they do not stay on duty for more than an hour or an hour and a half at a time. That is the complaint I have received. Government must see that maternity leave is granted to such lady doctors as early as possible so that the work in the premier hospital may go on smoothly and may not suffer. That is a serious point that should be taken into consideration by the Government.

With regard to primary health centres established all over the State, Doctors are posted but medicines are not supplied. They don't have adequate housing facilities. All these things should be provided first before medical officers are posted to these centres. Most of the doctors posted to these centres are sitting quiet without doing any work.

With regard to the College of Integrated Medicine, though an Act was passed some time in October 1956, the Government, I find, have not implemented this Act nor have they framed any rules under the Act so far. Either the Government should seriously think of implementing this Act and frame necessary rules or they should repeal the Act. My suggestion in this connection is, that the College should be upgraded and post-graduate training should be given in Ayurvedha and other systems of medicine. As it is, it is neither Allopathic non-Ayurveda and the students suffer very much. I also understand that so many posts are vacant and professors have not been appointed to various departments. This also should be taken into serious consideration by the Hon. Minister.

With regard to water-supply schemes, so far as urban areas are concerned, it is moving at snail's pace. Even though some new appointments have been made in the Sanitary Engineering branch on the execution and designing side, still the work is not progressing satisfactorily. So many municipalities are suffering for want of good drinking water-supply schemes. In rural areas also the same is the case. The water-supply position is very bad and Government must come to the aid of the rural people by sinking more wells and giving more grants for sinking of these wells. This is a very important thing which the Government should take into consideration. I understand that recently a project known as the 'Nanjalnad' water-supply scheme sponsored by the Government of India and about to be executed has been transferred to the Kerala State. A similar project in the same area in the Kanyakumari district, if taken up under the Government of India

18th July 1957]. [Sri V. K. Ramaswamy Mudaliyar]

scheme, will go a long way to solve the rural water-supply problem in that district. To that also I am sure the Hon. Minister will pay immediate attention.

With regard to the flu epidemic, the Director-General of Medical Services of the Government of India has recently issued a communique stating that the second phase of the attack will start very soon and so on. About this, many articles have been published in the papers. I understand that all the medicines that are to be administered for this disease have gone underground. That is the rumour spreading in the City. Whatever it is, Government must think of putting up two or three vans for each district and give adequate medical aid to people in interior rural parts. Instead of thinking about mobile blacksmithy and carpentry vans, our Government should think of providing mobile medical vans so that they may go to the aid of rural population.

These are my few suggestions and I hope Government will immediately pay attention to all these things.

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் சபாநாயகர் அவர் 10-38 a.m.
களே, இந்த மானிய கோரிக்கையின் பேரில் பேசும்போது பல கனம் அங்கத்தினர்கள் அதிக அக்கறை எடுத்துக்கொண்டு, எந்த எந்த சீர்திருத்தங்களை செய்தால் வைத்திய-சுகாதார இலாகாவின் நிர்வாகம் இன்னும் நன்றாக நடக்கும் என்று சொன்னார்கள். இதற்கு எனது நன்றி. அவர்கள் கூறிய விஷயங்களுக்கு நான் கூடியவரையில் பதிலளிக்கிறேன்.

SRI V. SUBBIAH : கனம் சபாநாயகர் அவர்களே, 16, 17, 18-வது மானிய கோரிக்கைகள் மூன்று துறைகள் சம்பந்தப்பட்டவையாக இருப்பதால், அவைகள் மீது கனம் அங்கத்தினர்கள் பேசுவதற்கு அதிக நேரம் கொடுக்கப்படும் என்று ஏற்பாடாகியிருக்கிறது. ஏன் அப்படி அவகாசம் கொடுக்கவில்லை என்று கேட்க விரும்புகிறேன்.

MR. SPEAKER : நேரம் இல்லை. ஆகவே அவகாசம் கொடுக்க முடியவில்லை. நேரம் இருந்திருந்தால் அவகாசம் கொடுத்திருப்பேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : நம் நாட்டில் போதுமான வைத்திய வசதிகள் இல்லை என்றும், கிராமாந்தரங்களில் மக்கள் வைத்திய வசதியில்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்றும் சொல்லப்பட்டது. அது வாஸ்தவம்தான். நான் அதை ஒத்துக்கொள்கிறேன். எந்த அளவிற்கு வைத்திய வசதிகளை செய்துகொடுக்க வேண்டுமோ அந்த அளவிற்கு நாம் வைத்திய வசதிகளை செய்துகொடுக்கவில்லை. அது நம் நாட்டின் துர்பாக்கியமாகும். வைத்தியர்கள் நம் நாட்டில் போதுமான பேர்கள் இல்லை. மேல்நாடுகளில் ஜனத்தொகைக்கு ஏற்றவாறு போதுமான அளவில் வைத்தியர்கள் இருக்கிறார்கள். நம் நாட்டில் அவ்வளவு வைத்தியர்கள் இல்லை. ராஜ்யத்தில் சுமார் 4,000 வைத்தியர்கள் இருக்கிறார்கள் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அதாவது, வைத்தியர்கள் என்று குறிப்பிடப்படும்போது, ஆங்கில வைத்திய முறையில் பயிற்சி பெற்ற வைத்தியர்களைப் பற்றிக் குறிப்பிடப்படுகிறது. நாட்டு வைத்தியத்தில் பயிற்சி பெற்றவர்களை இந்த விஷயத்தில் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. அவர்களையும் கணக்கில் எடுத்துக்கொள்ளும்போது, 10,000 அல்லது 20,000 அல்லது 30,000 வைத்தியர்கள் இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆகையால், 7,500 ஜனங்களுக்கு ஒரு வைத்தியர்தான் இருக்கிறார். ஆகையால் அரசாங்கத்தார் தேர்ச்சிபெற்ற வைத்தியர்களை அதிகப்படுத்துவதற்குத் தீவிர முயற்சி எடுத்துக்கொண்டு ராஜ்யத்தில் அதிகமான வைத்தியக் கல்லூரிகளை நிறுவியிருக்கிறார்கள். பல வருஷங்களுக்கு முன் நமது ராஜ்யத்தில்

ஒரு வைத்தியக் கல்லூரிதான் இருந்தது. இப்போது நமது ராஜ்யத்தில் நான்கு வைத்தியக் கல்லூரிகள் இருக்கின்றன. சென்னையிலேயே இரண்டு வைத்தியக் கல்லூரிகள் இருக்கின்றன. மதுரையில் ஒரு வைத்தியக் கல்லூரி இருக்கிறது. வேலூரில் ஒரு தனியார் வைத்தியக் கல்லூரி இருக்கிறது. இத்தனை வைத்தியக் கல்லூரிகள் இருந்தபோதிலும் போதுமான பேர்களுக்கு வைத்தியக் கல்வி கொடுக்க முடியவில்லை. இப்போது வைத்தியக் கல்லூரிகளில் சேர்ந்து படிப்பதற்கு அனேகம் பேர்கள் விண்ணப்பித்து வருகிறார்கள். சுமார், 1,400 அல்லது 1,800 பேர்கள் வைத்தியக் கல்லூரியில் சேர்வதற்கு மனுச்செய்துகொண்டார்கள். ஆனால் 300 அல்லது 400 பேர்களுக்குத்தான் வைத்தியக் கல்லூரிகளில் இடம் கொடுக்க முடிந்தது. இந்தக் குறையை நீக்குவதற்காக ஏன் தஞ்சாவூரில் ஒரு வைத்தியக் கல்லூரியை ஏற்படுத்தக் கூடாது என்று ஒரு கனம் அங்கத்தினர் கேட்டார். இது விஷயமாக யோசனை செய்யப்பட்டபோது, காலஞ்சென்ற ஸ்ரீ. அழகப்ப செட்டியார் அவர்கள் வைத்தியக் கல்லூரியை ஏற்படுத்துவதற்குப் போதுமான உதவி செய்வதாகக் கூறியதுடன், காரைக்குடியில் ஒரு வைத்தியக் கல்லூரியை நிறுவ வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள். ஆகவே, இது சம்பந்தமாக, அப்போது ஒரு கமிட்டியார் காரைக்குடியையும் தஞ்சாவூரையும் பார்வையிட்டார்கள். அது மட்டுமல்லாமல், கோயம்புத்தூரில் ஒரு வைத்தியக் கல்லூரியை நிறுவலாம் என்ற யோசனை சம்பந்தமாகவும், கோயம்புத்தூருக்குச் சென்று ஒரு கமிட்டி அங்கே பார்வையிட்டது. ஆனால் தனியார் மூலம் போதுமான பண உதவி வராததால் கோயம்புத்தூரில் உடனடியாக வைத்தியக் கல்லூரியை ஏற்படுத்த முடியவில்லை. இப்போது தஞ்சாவூர் ஜில்லாவிலே வைத்தியக் கல்லூரி ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று தீவிர முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. நல்ல வேளையாக $1\frac{3}{4}$ கோடி ரூபாய் ரயில்வே செஸ் பணம் நம் ராஜ்யத்திற்கு வரும் என்று சொல்கிறார்கள். இன்னும் தேவஸ்தானப் பணத்தையும் சேர்த்து அங்கே வைத்தியக் கல்லூரியை ஏற்படுத்தலாம் என்ற யோசனை இருக்கிறது. முதல் மந்திரியிடம் ஒரு தூது கோஷ்டியும் வந்து பார்த்திருக்கிறது. அதை ஓரளவு கவனித்து கூடுமான பணம் வருவாய் இருந்தால் நம் ராஜ்யத்தில் இன்னொரு காலேஜ் ஏற்படும். தனியார் துறையில் வைத்தியர்கள் பயிற்சி பெறுவதற்கும் வழி ஏற்படும். இப்போது இருக்கிற நிலைமையில் என்ன என்ன செய்யலாமோ அவற்றையெல்லாம் செய்துகொண்டு வருகிறோம்.

அநேக இடங்களில் இப்போது மெடர்னிடி விடுதிகளும், குழந்தை பராமரிப்பு நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. பிரைமரி சென்டர் வைத்திய ஸ்தலங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. ப்ரைமரி சென்டர் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு ஜீப் இருக்க வேண்டுமென்று நியமித்திருக்கிறோம். அதனால் எல்லா இடங்களுக்கும் ஜீப் வந்துவிட்டது என்று அர்த்தம் இல்லை. ஆகஸ்டு மாதத்திற்குள் யுனஸ்கோ மூலமாக தேவைப்படும் ஜீப்கள் கிடைத்துவிடலாம். அப்போது எல்லா இடங்களுக்கும் ஜீப் கிடைக்கும் என்று நினைக்கிறேன்.

அதோடு நம் நாட்டிற்கும், மற்ற நாடுகளுக்கும் வைத்தியத் துறையில் ஒரு பெரிய வேறுபாடு இருக்கிறது. மற்ற நாடுகளிலெல்லாம் வைத்தியர்கள் சேவா மனப்பான்மையுடன் வேலை செய்கிறார்கள். ஆனால் நம் நாட்டில் சேவா மனப்பான்மை அதிகமாக வேரூன்றவில்லை. அது இன்னும் கொஞ்சம் அதிகமானால் நம் நாட்டிலும் மக்களுக்கு இன்னும் அதிகப்படி சேவை செய்யலாம்.

குஷ்ட ரோகத்தைப் பற்றி அந்த அம்மையார் (ஸ்ரீமதி சௌந்தரம் ராமச்சந்திரன்) "ஹான்ட்ஸ் ஈனியா" என்றோ என்னமோ மறைமுகமாகச் சொன்னார்கள். அப்படிச் சொன்னால் யாருக்கும் புரியாது. ஆகையால் நான் குஷ்டநோய் என்றே சொல்லிவிடுகிறேன்.





* THE HON. SRI M. A. MANICKAVELU : பெரு வியாதி சம்பந்தமாகவும் அரசாங்கம் எத்தனையோ நடவடிக்கை எடுத்திருக்கிறது. ஆங்காங்கு தனிப்பட்ட ஹோதாவில் சில ஸ்தாபனங்கள் நல்ல பணியாற்றி வருவதும் போற்றத் தகுந்தது. நான் நான்கைந்து தினங்களுக்கு முன்புதான் மதுராந்தகத்திற்குப் பக்கத்தில் பெல்ஜியம் சர்க்காரின் உதவி பேரில் நடந்து வருகிற ஒரு ஸ்தாபனத்தைப் பார்த்தேன். அங்கே பெருவியாதிக்காரர்களுக்கு நல்ல சிகிச்சை அளிக்கப்படுகிறது. காட்பாடிக்கு அருகிலும் ஒரு தனியார் ஸ்தாபனம் நல்லமுறையில் வேலை செய்து வருகிறது. அங்கே உள்ள வைத்தியர்கள் மிகவும் தேர்ச்சி பெற்றவர்கள். ஆனால் அவர்கள் மிகக் குறைந்த சம்பளம், அதாவது வாழ்க்கையை நடத்துவதற்கு எவ்வளவு தேவையோ அவ்வளவு சம்பளம் மாத்திரம் வாங்கிக் கொண்டு உயர்ந்த சேவா மனப்பான்மையில் வேலை செய்கிறார்கள். பெல்ஜியத்தில் இருந்து வந்துள்ள டாக்டர்கள் எல்லாம் இங்கே ஏதோ வசதியான கட்டிடங்களில் இருப்பதாக நினைத்துக் கொள்ளக்கூடாது. சீனாவில் இருந்து வந்துள்ள பெண்மணி இருக்கிறார். அவர்கள் எல்லாம் சாதாரணக் குடிசை வீட்டில் தான் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். அதில் வாழ்ந்து கொண்டு சாதாரண வாழ்க்கையை நடத்திக் கொண்டு அவர்கள் உயர்ந்த சேவை புரிந்து வருகிறார்கள். "அவர்களுடைய மனப்பான்மை எப்படி இருக்கிறது ? நம் நாட்டில் உள்ளவர்களின் மனப்பான்மை எப்படி இருக்கிறது ?" என்று பார்க்க வேண்டும். நம் நாட்டவர்களுடைய மனப்பான்மை இப்போதுதான் கொஞ்சம் மாறிவருகிறது. மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணம் பரவி வருகிறது. இந்த மனப்பான்மை வெகுவாகப் பரவினால்தான், சர்க்கார் செய்கின்ற முயற்சியோடு இவர்களால் மக்களுடைய துயரத்தை அதிகமாக நிவர்த்தி செய்ய முடியும். அது வரையில் அரசாங்கம் என்ன என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்து கொண்டுதான் வரும் ; செய்து கொண்டும் வருகிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில் வைத்திய முறையைப் பற்றியும் சொல்ல விரும்புகிறேன். அதாவது மேல் நாட்டு வைத்திய முறையே போதும் என்று பார்த்தால் நமக்குப் போதுமான வைத்தியர்கள் அந்த முறையில் கிடைப்பது இல்லை. ஆனால் சொல்லப்படுகிறது : நம் நாட்டு வைத்திய முறையிலேயே நல்ல தேர்ச்சி பெறுவதற்கு ஏன் பயிற்சி கொடுக்கக் கூடாது என்பதாக. அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கலாம். ஆனால் நம் நாட்டு முறையிலேயே நன்றாகத் தேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். சும்மா போலியாகவும் வைத்தியம் செய்வதாகச் சொல்லிக் கொள்பவர்களும் இருக்கிறார்கள். இப்படி ஏமாற்று வித்தை நடக்கிறது. இதனாலே மக்களுக்கு அதில் நம்பிக்கை குறைகிறது. ஆகையால் நாட்டு வைத்திய முறையை வளர்க்க வேண்டுமென்றால் எப்படி ஆங்கில வைத்திய முறையில் திட்டம் இருக்கிறதோ அப்படி இதிலும் ஏற்படுத்தினால் தான் இது மேலோங்கும் ; வளரும். நாட்டு வைத்தியத்தில் நல்ல மருந்துகள் இருக்கின்றன. அதிலே ஒன்றும் சந்தேகமில்லை. அதை நல்லமுறையாகப் பயன்படுத்துவது இல்லை. தெரிந்தவர்களும் அதைப் பிறருக்குச் சொல்லாமல் மறைத்து மறைத்து வைத்துக் கொள்கிறார்கள்.

எனக்கு சமீபத்தில் ஒரு கடிதம் வந்தது. அதோடு ஒரு பொட்டலம் இருந்தது. "இது அற்புதமான மருந்து. இதை யாருக்கும் சொல்லக் கூடாது. சொன்னால் பாதகம் ஏற்படும்" என்பதாக எல்லாம் கடிதத்தில் கண்டிருந்தது.

SRI A. GOVINDASAMI : இப்போது சொல்லிவிட்டீர்களே. பாதகம் ஏற்படாதா ?

* THE HON. SRI M. A. MANICKAVELU : இன்னது என்று இப்போது நான் எங்கே சொன்னேன். அதை மறைவாகத்தான் வைத்திருக்கிறேன். (சிரிப்பு). இப்படி பல மருந்துகள் மறைத்து வைக்கப்படுகின்றன. அந்தக்காலத்தில் "இஜிப்டியன் மம்மீஸ்" என்று பலவகையான மூலிகைகள் ரசத்தில் வைத்துப் பாதுகாக்கப்பட்டிருந்தன. இப்போது ஆங்கில முறையில் என்ன

என்னவோ வகையில், திராவகத்தில் வைத்துக் கூடப் பாதுகாக்கப்படுகிறது என்றாலும் அது விகாரமாகிவிடுகிறது. அப்போது செய்த முறை நன்றாக இருந்தது. ஆனால் அது என்ன முறை என்று இப்போது சரியாக யாருக்கும் தெரியவில்லை. இங்கே பேசிய கனம் அங்கத்தினர் ஸ்ரீ கரையாளர் அதைப்பற்றி சொன்னார்கள். சர்பன்டினா என்பது இரத்த அழுத்தம் போன்ற பல நோய்களுக்கு மருந்தாக இருப்பதாகச் சொன்னார்கள். அது உண்மை தான். ஆனால் அது சிறந்த மருந்து என்று மேல்நாட்டார்கள் சொன்னபிறகுதான் அதன் சிறப்பு நமக்குப் புலப்படுகிறது. இந்த மருந்துகளை அமெரிக்காவிலோ, ஜெர்மனியிலோ ஆராய்ந்து பார்த்து முடிவு சொல்ல வேண்டும். நமக்கு ஆராய்ச்சி செய்து பார்க்கப் பொறுமையும் ஆர்வமும் இல்லை. இவர்களே நல்ல முறையில் ஆராய்ச்சி செய்து மூலிகைகளுடைய தன்மையை எல்லாம் கண்டார்களானால் அநேக நோய்களைப் போக்கலாம். இது அதிகச் செலவு இல்லாத முறை ஆகும்.

டெல்லியில் சுகாதார மந்திரிகள் கூடிப் பேசியபோதுகூட மத்திய அரசாங்கத்தின் சார்பாகக் கூறினார்கள். நம் நாடு போன்ற அதிக ஜனத் தொகை உள்ள நாட்டில் எல்லோருக்கும் சிகிச்சை கொடுக்க வேண்டுமென்றால் தமிழ் நாட்டு முறை "இண்டிஜினஸ் மெடிசின்" சிகிச்சை முறையை அனுசரித்தால்தான் நல்ல சாத்தியமாகும் என்று சொன்னார்கள். நல்ல மருந்துகளை அதில் கண்டு பிடிப்பதற்கு பார்மகோபியா ஏற்படுத்தினால் கிராமங்களுக்கு எல்லாம் சரியான சிகிச்சை கொடுக்க முடியும் என்று சொன்னார்கள்.

இந்த நாட்டு வைத்திய முறைகள் அநேகம் இருக்கின்றன. ஆயுர்வேதம், யுனானி, சித்தம், நேச்சர்க்யூர், ஹோமியோபதி என்று பல முறைகள் இருக்கின்றன. சித்த முறை சிறந்த முறை. அதை ஒத்துக் கொள்ளுகிறேன். தென்னாட்டில் உள்ள அந்த முறைக்கு நல்ல பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். அதைப்பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்று ஒத்துக்கொண்டு கவனம் செலுத்தி வருகிறார்கள். ஆயுர்வேதம், யுனானி, சித்தம் முதலிய முறைகளில் சிகிச்சை அங்கங்கே நடைபெற்று வருகின்றன. குறிப்பாக நம் ராஜ்யத்தில் சித்தத்துக்கு ஒரு ஆராய்ச்சி நிலையம் அவசியம் என்பதை ஒத்துக்கொள்ளுகிறேன். அதற்கு பொதுமக்கள் அதிக ஊக்கமும், உற்சாகமும் காட்டினால் அரசாங்கமும் வேண்டிய உதவியை அளிப்பதற்குத் தயாராய் இருக்குமென்று சொல்ல விரும்புகிறேன். ஹோமியோபதி முறையைப்பற்றி அங்கத்தினர்கள் சொன்னார்கள். அங்கத்தினர் ஸ்ரீ அன்பழகன் அவர்கள் அந்த முறையில் உள்ள நல்ல மருந்துகளைப் பற்றிச் சொன்னார்கள். மருந்துகளில் தண்ணீர் கலந்து கொடுக்கிறார்கள் என்றும் சொன்னார்கள். ஆங்கில வைத்திய முறைப்படி தண்ணீர் கலந்து மருந்து கொடுக்காவிட்டால் மிகவும் ஆபத்தாக முடியும். சித்த முறையில் மருந்தை தேனிலோ வெண்ணெயிலோ கலந்து கொடுக்கலாம். ஹோமியோபதியிலும் தண்ணீர் கலந்து கொடுத்து சிகிச்சைசெய்யும் முறை இருக்கிறது. மருந்து கொடுப்பதிலே தண்ணீர் அவசியமானதுதான்.

சுகாதார முறையையும் வைத்திய முறையையும் "இன்டகிரேஷன்" செய்யவேண்டும் என்று அங்கத்தினர்கள் சொன்னார்கள். இது ஒரு நல்ல ஏற்பாடுதான். வரவேற்கத் தகுந்ததுதான். இதைப்பற்றி மந்திரிகள் கூட்டத்திலும் விவாதிக்கப்பட்டது. அவர்களும் இது நல்லது என்று ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். சில ராஜ்யங்களில் இது அமுலிலிருக்கிறது. இதை பரிசீலனை செய்து நடைமுறைக்கு கொண்டு வருவதுப்பற்றி கவனிக்கப் படும்.

ஆஸ்பத்திரிகளில் நர்ஸ்கள், ஆர்டர்லிகள் போன்ற சிப்பந்திகள் போதுமான அளவுக்கு இல்லை என்று சொன்னார்கள். இது வாஸ்தவம்தான். குறைவாகத்தான் இருக்கிறது.

ஆஸ்பத்திரிகளில் இருக்கக்கூடிய "Bed strength" ஐவிட அதிகமாகத்தான் நோயாளிகள் இருக்கிறார்கள். நோயாளிகள் வருகின்றபோது இடம் இல்லை என்று சொல்லி அனுப்புவது பரிதாபகரமாயிருக்கிறது. அவர்களை

[18th July 1957 [Sri M. A. Manickavelu]

சேர்த்துக்கொண்டால் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாகிறது; சமாளிக்க முடிவதில்லை. டாக்டர்களும் அனுதாபத்துடன்தான் இவர்களைச் சேர்த்துக்கொள்ளுகிறார்கள். அதிக சிப்பந்திகளைக் கொடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் அது போதவில்லை. "**over crowding**" அதிகமாக இருக்கிறது. இதை உடனேயே நிவர்த்திக்க முடியாது. கொஞ்சம் கொஞ்சமாகத்தான் நிவர்த்திக்க முடியும். இந்த "**over crowding**"ஐ குறைப்பதற்கு ஒரு திட்டம் இருக்கிறது. "**chronic diseases**" தீராத வியாதி உள்ளவர்களை அப்புறப்படுத்தி அவர்களை ஒரு தனி ஆஸ்பத்திரியில் வைத்துவிட்டால் இடமும் மற்ற வசதிகளும் ஏற்படும். இவர்களைக் கவனிக்க அதிக சிப்பந்திகள் வேண்டியதில்லை. இந்த மாதிரியான திட்டம் 500 "**Bed strength**" இருக்கக்கூடிய ஆஸ்பத்திரிகளுக்கு என்று போடப்பட்டது. துரதிர்ஷ்டவசமாக "பிளான்" பணம் குறைக்கப்பட்டதால் அது எடுத்துக்கொள்ளப்படவில்லை.

கீழ்ப்பாக்கம் கல்லூரியைப்பற்றிச் சொன்னார்கள். அந்தக் கல்லூரி ஒரு நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்டது. அந்த நோக்கம் இப்போது சரியாக அங்கு இல்லை. "இண்டகிரெட்ட் மெடிஸின்" என்ற முறையில் அங்கு தற்கால வைத்திய படிப்பு அதிகமாக சொல்லிகொடுக்கப்படுகிறது. மூன்று பாகம் தற்கால வைத்திய முறையும் ஒரு பாகம் நாட்டு வைத்திய முறையும் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. இப்படி அதிகப்படுத்துதவற்குக் காரணம் அங்கு உள்ள மாணவர்களின் கிளர்ச்சியும் ஒன்று. இப்படி செய்தால்தான் மற்ற மேல் நாடுகளிலுள்ள வைத்திய முறைகளை எல்லாம் தெரிந்துகொள்ள சாத்தியமாக இருக்கும் என்று மாணவர்கள் கிளர்ச்சி செய்தார்கள். அதற்காக இன்னும் சிறந்த முறையில், நல்ல வகையில், படிப்பு சொல்லிக் கொடுக்க **Pathology, Chemistry departments and laboratory**க்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. நல்ல திறமையான பயிற்சி ஆசிரியர்களை ஏற்படுத்த ஏற்பாடு செய்யப்படும். சித்த முறை வைத்தியத்தில் சிரத்தை எடுத்துகொண்டு, அதை வளர்ச்சி செய்ய வேண்டும் என்று ஒரு அங்கத்தினர் சொன்னதை கண்டு நான் சந்தோஷப்படுகிறேன். எனக்கும் இதில் ஆர்வம் இருக்கிறது. இவருடன் சேர்ந்து, கலந்து இன்னும் எந்த முறையில் சிறப்பாக செய்யவேண்டும் என்பதற்கு பிரயத்தனம் செய்வோம்.

குடும்பக் கட்டுப்பாடு முறை அவசியம் தான். ஆங்காங்கு குடும்பக் கட்டுப்பாடு ஸ்தலங்களை ஏற்படுத்தி, ஜனங்களுக்கு வேண்டிய போதனைகள் செய்யப்பட்டு வருகின்றன. ஒரு காலத்தில் கிராமத்தில் இதைப்பற்றி சொல்லி அவர்களைத் திருத்துவது கஷ்டமாக இருக்கும் என்று நினைத்தேன். கிராமத்து ஜனங்கள் இதில் ஆர்வம் காட்டுகிறார்கள் என்று தெரிய வருகிறது. "கிராமங்களில் இதைப்பற்றி பிரசாரம் செய்யும்போது ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்" என்று நான் டாக்டர்களிடம் சொன்னேன். கிராமத்து ஜனங்களே உற்சாகத்தோடு வந்து யோசனை கேட்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அவர்கள் எல்லாம் கஷ்டப்படுகிறவர்கள். இந்த வசதி இருந்தால் நல்லது என்று அவர்களுக்குத் தோன்றுகிறது. "ஸிடியில்" குடும்ப கட்டுப்பாடு வேண்டும் என்று சொல்கிறவர்களுக்கு ரண சிகிச்சை செய்தால் பிரைவேட் டாக்டருக்கு ரூபாய் 25 பீஸ் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. "டி.வி.எஸ்." போன்ற மோட்டார் ஸ்தாபனத்தார் இலவசமாக இந்த வசதியை செய்து கொடுக்கிறார்கள். அதற்கும் ஏற்பாடாகி வருகிறது. ஓரளவு குடும்பக் கட்டுப்பாடு ஏற்பட்டால்தான் **standard of life**-ஐ கொஞ்சம் அதிகப்படுத்த முடியும். மக்களின் தொந்தரவு ஓரளவு குறையும். இதை எல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். "கத்தோலிக்" பிரிவைச் சேர்ந்தவர்கள் கூட முன்பு இதை அதிக தீவிரமாக எதிர்த்தார்கள், வேறு விதமாக இதை அனுஷ்டித்தால் ஆட்சேபனை இல்லை என்று போப் உட்பட பலர் சொல்லி இருப்பதாக தெரிகிறது. "**Family Planning Manual**"ல் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

குடி தண்ணீர் வசதியை பற்றிச் சொல்லப்பட்டது. "**Urban Water-Supply and Drainage Schemes**" என்பதில் 863 லட்சம் செலவு செய்ய "ப்ளானில்" திட்டமிடப்பட்டிருந்தது. 170 லட்சம் ரூபாய்தான் அனுமதிக்கப்

பட்டது. "**Still Over Schemes**" அதாவது ஆரம்பிக்கப்பட்டு முடிவு அடையும் தறுவாயில் இருக்கும் திட்டங்களுக்கு 463 லட்சம் ரூபாய் ஆகிறது. 860 லட்சம் என்று ஒதுக்கப்பட்ட இடத்தில் 170 லட்சம் தற்போது ஒதுக்கப் பட்டிருக்கிறது. இந்த தொகையில் எல்லா வேலைகளையும் செய்து முடிக்க முடியாது. இதை அதிகப்படுத்த வேண்டும் என்று மத்திய அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறோம். அவர்களுடைய பதில் எதிர்பார்க்கப்படுகிறது. கிராமங் களுக்கு குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்க 40 லட்சம் ரூபாயில் திட்டம் போடப்பட்டிருக்கிறது. தென்காசியில் குடி தண்ணீர் வசதி செய்யப்படவில்லை என்று வெட்டுப் பிரேரணையை பிரேரேபித்துப் பேசினவர் சொன்னார். இந்த திட்டம் பரிசீலனை செய்யப்பட்டு "எஸ்டிமேட்ஸ்" தருவாயில் இருக்கிறது. அதை இன்னும் துரிதப்படுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படும்.

MR. SPEAKER : If the Hon. Minister wants more time, he will have to move a motion for it.

THE HON. SRI M. A. MANICKAVELU : I will finish my speech in a minute, Sir.

(Dr. Srimathi T. S. Soundaram Ramachandran rose.)

MR. SPEAKER : The Hon. Minister has only a minute more. The hon. Member had enough time already. She cannot raise any point in the middle of the Hon. Minister's speech.

THE HON. SRI M. A. MANICKAVELU : ஹோமியோபதி முறையில் வைத்தியம் செய்பவர்களை "**Registered Practitioners**" என்ற அடிப் படையில் சேர்த்துக்கொள்வதில்லை. ஹோமியோபதி இன்னும் நம் ராஜ்யத்தில் அங்கீகரிக்கப்படவில்லை.

சில அங்கத்தினர்கள் இன்னும் கொஞ்சம் அதிக காலம் இந்த விவாதத்தின் மேல் பேச வேண்டும் என்று கேட்கின்றனர். அப்படி உத் தேசம் இருந்தால் நான் தொடர்ந்து பேசுகிறேன்.

அப்படிவேண்டுமானால், ஒரு மோஷன் கொண்டு வரவேண்டும்.

### IV.—GOVERNMENT MOTION—MOTION FOR THE SUSPENSION OF RULE 153 (3) OF THE ASSEMBLY RULES.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I move—

"That rule 153 (3) be suspended till the reply to the debate on Demands 'Medical', 'Public Health' and 'Capital Outlay on Public Health' is over."

MR. SPEAKER : The question is—

"That rule 153 (3) be suspended till the reply to the debate on Demands 'Medical', 'Public Health' and 'Capital Outlay on Public Health' is over".

The motion was put and carried.

### III.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1957-58—*cont.*

### (1) DEMAND XVI—MEDICAL.

### (2) DEMAND XVII—PUBLIC HEALTH.

### (3) DEMAND XXXVII.—CAPITAL OUTLAY ON PUBLIC HEALTH—*cont.*

DR. SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDRAN : On a point of order Sir, Director of Medical Services, Director of Public Health என்று இல்லாதபடி Director of Health Services என்கின்ற முறையிலே இந்த இலாகா திருத்தி அமைக்கப்படவேண்டுமென்று நான் கேட்டதை சர்க்கார் கவனிக்குமா ?

**18th July 1957]**

**MR. SPEAKER** : அது எப்படி **Point of order** ஆக முடியும் ?

**DR. SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDRAN** : நான் **information** கேட்டேன். **Clarification** கேட்டேன்.

**THE HON. SRI M. A. MANICKAVELU** : நான் இதுபற்றி ஆரம் பத்திலே சொன்னேன். அப்பொழுது கனம் அங்கத்தினர் பக்கத்து அங்கத் தினரோடு பேசிக் கொண்டிருந்தார் போலும் ! (சிரிப்பு.) இந்த இரண் டையும் ஒன்றாகச் சேர்ப்பதற்கு யோசனை இருக்கிறது. சில ராஜ்யங்களில் இந்த முறையில் இந்த இலாகா ஒன்றாகத்தான் அமைந்திருக்கிறது. அதை இங்கும் அமுலுக்கு கொண்டுவர வேண்டுமென்பதுதான் நோக்கம். இது பற்றி பரிசீலனைசெய்து யோசிக்கலாம். இது இப்பொழுது அரசாங்கத்தின் ஆலோசனையில் இருக்கிறது என்றுதான் முதலில் சொன்னேன்.

**SRI A. VEDARATHNAM PILLAI** : On a point of information, Sir.

**MR. SPEAKER** : After the Hon. Minister finishes his speech.

**THE HON. SRI M. A. MANICKAVELU** : போதனாசிரியர்கள் முழுநேர ஊழியர்களாக இருக்கவேண்டுமென்று சொல்லப்பட்டது. அப்படி யிருந்தால்தான் அவர்கள் நல்ல முறையிலே படிப்பு சொல்லிக் கொடுக்க முடியும். அவர்கள் வேறு **practice** செய்யக்கூடாது என்று நிபந்தனை போட்டால் அவர்களுக்கு அதிக சம்பளம் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு ரூ. 1,400 ஸ்கேலில் சம்பளம் கொடுத்து அவர்களை முழுநேர ஊழியர்களாக மாற்றவேண்டுமென்று ஒரு திட்டம் இருக்கிறது. மத்திய அரசாங்கமும் அதற்கு ஓரளவு உதவி செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த வகையிலே ஒரு ஏற்பாடு செய்யவேண்டுமென்பதுதான் உத்தேசம்.

**Post-graduate Study**-க்கு இப்பொழுது ஓரிரண்டு பேர்களுக்குத்தான் சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது என்றும், அது போதாது என்றும் கனம் அங்கத்தினர் சொன்னார். அதை அதிகப்படுத்துவதற்கு யோசனை இருக் கிறது. அப்படி அதிகப்படுத்த வேண்டுமென்றால் சர்வகலாசாலை அதற்கு ஒத்துக்கொள்ளவேண்டும். அவர்களுக்கு எழுதி அவர்கள் சம்மதத்தைப் பெற்று இதை அதிகப்படுத்தவேண்டும். இதை ஆலோசனைசெய்து வேண் டிய ஏற்பாடு செய்யலாம்.

அடுத்தபடியாக **Insurance**-ஐப் பற்றிச் சொன்னார்கள். இந்தத் திட்டம் இப்பொழுது மதுரை, அம்பாசமுத்திரம், தூத்துக்குடி ஆகிய இடங்களில் ஏற் படுத்தப்பட்டிருக்கிறது. **Hospital station**-க்கு **Headquarters Hospital**-ல் ஏற்பாடு செய்திருப்பது போதாது என்றும், தனியாக ஒரு ஆஸ்பத்திரி வேண்டு மென்றும் கனம் அங்கத்தினர் ஸ்ரீ சின்னதுரை அவர்கள் சொன்னார்கள். அதற்காக இப்பொழுது பெருந்துறை டி.பி. ஆஸ்பத்திரியில் தொழில் சங்கத் திடம் கொஞ்சம் பணம் கொடுத்து தனியாக ஒரு வார்டு அமைக்கப்பட இருக் கிறது. தொழிலாளர்களுக்கு தனியாக ஒரு நுறை ஈரல் ஆஸ்பத்திரி இருந் தால் நல்லதுதான். இப்பொழுது அநேகம் தனியார் நடத்தும் டி.பி. ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. ஒன்றை அரசாங்கம் எடுத்துக் கொண்டு, அங்கே தொழிலாளர்களுக்கு வேண்டிய வசதி செய்வது பற்றி பரிசீலனை செய்வதற்கு ஏற்பாடு செய்ய யோசிக்கப்படும்.

கடைசியாக "யூனிபாரம்" சரியாக கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். அம்மாதிரி புகார் இருக்கலாம். ஆனால் அது பழைய புகார். அந்த முறையை இப்பொழுது திருத்தி அமைத்திருப்பதால், இப்பொழுது அம்மாதிரி தயக்கம் ஏற்படாது, "யூனிபாரம்" காலாகாலத்தில் கிடைக்குமென்று நான் நினைக்கிறேன்.

**Sri K. ANBAZHAGAN** : On a point of information . . .

**Mr. SPEAKER** : I have just told Sri Vedarathnam Pillai that points of information can be asked after the Minister has finished his reply.

**The Hon. Sri M. A. MANICKAVELU** : I have finished, Sir.

**Sri A. VEDARATHNAM PILLAI** : கனம் மந்திரி அவர்கள் குடும்பக் கட்டுப்பாடு விஷயமாகப் பதில் சொல்லும்பொழுது கதோலிக் போப் அவர்கள் இந்த முறையை மாற்றி அமைத்தால் அதை ஏற்றுக்கொள்வதாக சொல்லியிருப்பதாகச் சொன்னார்கள். அதுதான முறை என்பதை தயவுசெய்து கூற முடியுமா ?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : அதையெல்லாம் இந்தச் சபையிலே விவரித்துச்சொல்ல முடியாது. அரசாங்கம் இது சம்பந்தமாக ஒரு பிரசுரம் வெளியிட்டிருக்கிறார்கள். அதைப் படித்தால் தெரியவரும். அதையெல்லாம் நானே இன்னும் நன்றாகத் தெரிந்துகொள்ளவில்லை. ஆகையால் அதை விவரித்துச் சொல்லுவதற்கு முடியாது.

**Sri K. ANBAZHAGAN** : தலைவர் அவர்களே, . . .

**Mr. SPEAKER**: கனம் அங்கத்தினர் பேசலாம், ஆனால் அங்கத்தினர்கள் இந்த நேரத்தை கேள்வி நேரம் போல் கருதக்கூடாது என்பது என்னுடைய அபிப்பிராயம். ஒவ்வொரு அங்கத்தினரும் **Point of information** என்று சொல்லி மந்திரி அவர்களை கேள்வி கேட்டால், அது மானிய விவாத நேரமாகாது, கேள்வி நேரமாகிவிடும் என்பதை சொல்லிக் கொள்ளுகிறேன்.

**Sri K. ANBAZHAGAN** : அமைச்சர் அவர்கள் பதில் அளித்தபொழுது கவர்ன்மெண்டு காலேஜ் ஆப் இன்டெக்ரேட் மெடிஸின்லின் தகுதி நிலையை உயர்த்துவதற்கு ஏற்கெனவே செய்த முயற்சிகள் பற்றி தெரிவித்தார்கள். இதன் தகுதியை எம்.பி.பி.எஸ். படிப்புக்குச் சமமாக உயர்த்துவதற்குச் சென்ற ஆண்டு ஒரு சட்டம் இயற்றப்பட்டது. நான் பேசும்பொழுது அதற்காக ஏற்படுத்துவதாகத் தீர்மானிக்கப்பட்ட **Board** ஒரு குழு அமைக்கப்படவேண்டுமென்று சொன்னேன். அங்கே தகுதி மிக்க பேராசிரியர்கள் இல்லாத காரணத்தினாலும், கல்லூரியில் போதுமான ஆசிரியர்கள் இல்லாத காரணத்தினாலும், மாணவர்கள் பல பல கஷ்டங்களுக்கு உள்ளாகிறார்கள். படித்துப் பட்டம் பெற்றவர்கள் ரெஜிஸ்ட்ரேஷன் ஆகாத காரணத்தினால் வேலைக்கு மனுச்செய்து கொள்ள முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். ஆகவே, இதை எம்.பி.பி.எஸ். நிலைக்கு உயர்த்துவதற்கு உடனடியாக முயற்சி எடுத்துக்கொள்வதனைப் பற்றியும், "**G.C.I.M.**" போர்டு அமைப்பது பற்றியும் அமைச்சரிடமிருந்து விளக்கம் அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri M. A. MANICKAVELU** : இந்த "போர்டு" அமைப்பு விஷயமும் விதிகள் ஏற்படுத்தும் விஷயமும் ஆராயப்பட்டு வருகின்றன. கூடிய சீக்கிரத்தில் அது பற்றி ஏற்பாடு செய்யப்படும். ஆனால் "எம்.பி.பி.எஸ்." நிலைக்கு உயர்த்துவதை "ஆல் இந்தியா மெடிகல் கவுன்சில்" ஆட்சேபிக்கிறார்கள். "பிரைமரி சென்டர்களில்" கூட ஜி.ஸி.ஐ.எம். பயிற்சி பெற்றவர்களை நியமிப்பதற்கு அவர்கள் ஆட்சேபிக்கிறார்கள். சென்ற சுகாதார மந்திரிகள் மாநாட்டில் இந்தப் பிரச்னையைப் பற்றி நாங்கள் ஒரு மணி நேரம் எவ்வளவோ வாதாடியுங்கூட, அவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை. இந்த மெடிகல் கவுன்சில் மாத்திரமல்ல, **UNCIF** அதாவது இதற்கு உதவி செய்கிறார்களே அவர்களும் ஒத்துக்கொள்ளவில்லை. அங்கே இது அந்த நிலைமையில் இருக்கிறது.

இந்த சமயத்தில் நம் மாகாணத்தைப் பொறுத்த வரையிலும் இந்த "போர்டு" அமைப்பது, மற்றும் என்னென்ன செய்யவேண்டுமோ அவைகளெல்லாம் பரிசீலனை செய்யப்பட்டு ஆவன செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

**Sri M. KARUNANITHI** : சென்னை கீழ்ப்பாக்கத்திலுள்ள ஜி. ஸி. ஐ. எம். கல்லூரி, அதாவது அரசினர் இணைப்பு மருத்துவக் கல்லூரியைப் பற்றி அரசினர் சுகாதார இலாகா 1956-ல் வெளியிட்டுள்ள அறிக்கையில் இணைப்பு மருத்துவ முறை என்பது உள்நாட்டு மருத்துவ முறையிலும் நவீன மருத்துவ முறையிலும் சமமான படிப்பு, பழக்கம், பயிற்சி அளிக்கப்படும் முறையாகும், அதாவது, " conjoint study என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், அதற்கு மாருக இந்த ஆண்டிலே இந்தக் கலலூரியின் தலைவர் தந்துள்ள அறிக்கை ஒன்றில் இந்தக் கல்லூரியானது முக்கியமாக ஆயுர்வேதம், சித்த, யூனானி வைத்திய முறையில் பயிற்சியும், நவீன வைத்திய முறையில் நடைமுறையில் வருவதற்கான அளவு "வொர்கிங் நாலட்ஜ்" பயிற்சியும் அளிக்கும் என்று கூறும் அளவுக்கு வார்த்தை பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. இதை எதிர்த்து கல்லூரி மாணவர்கள் கிளர்ச்சி நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அது பற்றி நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri M. A. MANICKAVELU** : என்ன கிளர்ச்சி செய்கிறார்கள் என்று தெரியாது. ஆனால் இப்பொழுது இருக்கிற முறைப்படி மூன்று பாகம் மேல் நாட்டு முறையும், ஒரு பாகம் நம் நாட்டு முறையும் போதிக்கப்படுகிறது.

**Srimathi T. N. ANANDANAYAKI** : மிஸ்டர் ஸ்பீக்கர் ஸார், நேற்று கனம் சத்தியவாணிமுத்து அவர்கள் பேசும்பொழுது எள்ளி நகையாடும் முறையில் ஹோமியோபதி முறை ஜெர்மன் முறை என்றும், அது நாட்டு முறையைக் காட்டிலும் உயர்வானது என்றும் சொன்னார்கள். நாட்டு முறை வைத்தியத்தை இப்படி குறைவாகப் பேசியது தவறு என்பதை கனம் மந்திரி அவர்கள் எடுத்துக் கூறி, கனம் அங்கத்தினரை அதை வாபஸ் செய்யும்படி சொல்வாரா ? அதை கனம் அங்கத்தினர் வாபஸ் பெறும்படிச் செய்வதற்கு வழி உண்டா ?

**Mr. SPEAKER** : அவரைப் பற்றி நீங்கள் ஏன் கேட்கிறீர்கள் ? அவரே கேட்பார். இப்பொழுது ஸ்ரீமதி சத்தியவாணிமுத்து அவர்கள் பேசுவார். அவருக்கு மட்டும்தான் இந்தச் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. இனி மேல் எந்த அங்கத்தினரையும் இது விஷயமாக பேச நான் அனுமதிக்கப் போவதில்லை.

* **Dr. Srimathi SATHIYAVANIMUTHU** : அம்மையார் அவர்களும் படித்த பட்டதாரிதான். ஆதலால் நான் சொன்னதை புரிந்துகொள்ளாமல் இருக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். நான் நாட்டு வைத்தியத்தைப் பற்றி ஒன்றும் தாழ்வாகச் சொல்லவில்லை. ஒருக்கால் அம்மையார் அவர்களுக்கு காது கோளாராகக்கூட இருக்கலாம்.

**Mr. SPEAKER** : பதில் சொல்லவேண்டிய நேரம் இது அல்ல. ஏதாவது சந்தேகம் இருந்தால் மந்திரி அவர்களை கேட்கலாம். ஒரு அங்கத்தினரை மற்றொரு அங்கத்தினர் தாக்கிப் பேசுவதற்கு இது நேரமல்ல என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**Dr. Srimathi SATHIYAVANIMUTHU** : நான் நேற்று என்னுடைய வெட்டுப் பிரேரணையை பிரேரேபித்துப் பேசும்பொழுது, நான் சொல்லுக் கூடிய கருத்துகளை அமைச்சர் அவர்கள் கேலியாக தட்டிக் கழித்து விடக் கூடாது என்றும், நல்லமுறையால் அவைகளை கவனித்து பதில் சொல்ல வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டேன். நான் எதிர்பார்த்தபடி அமைச்சர்

அவர்கள் சரியாக பதில் சொல்லவில்லை. என்னுடைய நோக்கம் சர்க்கார் ஹோமியோபதி முறையை அங்கீகரிக்கவேண்டுமென்பதுதான். சமீபத்தில் மத்திய சர்க்கார் நியமித்த தாவே கமிட்டியினர்கூட சித்த வைத்தியம் போன்ற முறைகளையெல்லாம் கைவிட்டாலும், ஹோமியோபதி தேவையான முறை என்று தங்கள் ரிப்போர்ட்டில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படியிருக்கும்பொழுது அகில இந்தியாவிலும் பல இடங்களிலே ஹோமியோபதியை சர்க்கார் அங்கீகாரம் செய்திருக்கிறார்கள். சென்னை சர்க்காரும் அதை ஏன் அங்கீகரிக்கக்கூடாது என்று கேட்டேன். அதற்கு அமைச்சர் அவர்கள் எந்த விதமான பதிலும் சொல்லவில்லை. எனவே அதற்குத் தகுந்த பதில் அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : : நான் முதலில் சொன்னேன். "இன்டிஜீனஸ் மெடிஸின்ஸ்" என்பது நம் நாட்டு முறை. இதனால் ஏழை மக்களுக்கு நாம் ஓரளவு சிகிச்சை அளிக்க முடியும். இன்னும் அதை விரிவாக்கவேண்டும் என்பதுபற்றிதான் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

MR. SPEAKER : Is the hon Member Dr. Srimathi Sathiyavanimuthu withdrawing her cut motion?

DR. SRIMATHI SATHIYAVANIMUTHU : No, Sir.

MR. SPEAKER : The question is—

"That the allotment of Rs. 4,03,74,300 under Demand No. XVI—Medical—be reduced by Rs. 100".

The cut motion was put and lost.

MR. SPEAKER : I now put the original motion to the vote of the House. The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 4,03,74,300 under Demand XVI—Medical".

The demand was put and carried and the grant was made.

MR. SPEAKER : Is the hon. Member Sri S. B. Adityan withdrawing his cut motion?

SRI S. B. ADITYAN : No, Sir.

MR. SPEAKER : The question is—

"That the allotment of Rs. 95,98,200 under Demand XVII—Public Health—be reduced by Rs. 100".

The cut motion was put and lost.

MR. SPEAKER : I now put the original motion to the vote of the House. The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 95,98,200 under Demand XVII—Public Health".

The Demand was put and carried and the grant was made.

18th July 1957]

Mr. SPEAKER : டிமாண்ட் நம்பர் XXXVII (Capital Outlay on Public Health) வெட்டு பிரேரணை கொண்டுவந்த கனம் அங்கத்தினர் கே. சட்டநாத கரையாளர் அவர்கள் இங்கு காணப்படாததால் வெட்டுப் பிரேரணை வாபஸ் வாங்கப்பட்டதாய் கருதப்படுகிறது.

I now put the original motion to the vote of the House. The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,44,79,400 under Demand XXXVII—Capital Outlay on Public Health".

The Demand was put and carried and the grant was made.

(4) DEMAND XVIII—AGRICULTURE AND FISHERIES.

(5) DEMAND XIX—VETERINARY.

(6) DEMAND XXXII—COMMUNITY DEVELOPMENT PROJECTS, NATIONAL EXTENSION SERVICES AND LOCAL DEVELOPMENT WORKS.

(7) DEMAND XXXVIII—CAPITAL OUTLAY ON AGRICULTURE.

Mr. SPEAKER : The demands to be taken up now for discussion are Demand XVIII—Agriculture and Fisheries, Demand XIX—Veterinary, and Demand XXII—Community Development Projects, National Extension Services and Local Development Works.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : There is one more demand, viz., Demand No. XXXVIII—Capital Outlay on Agriculture.

Mr. SPEAKER : I shall allow the Hon. Minister to move this demand also, but I do not find this demand on my table. I will look into this.

The time allowed for these demands is five hours. But as many hon. Members want to speak, it is suggested that the time-limit be extended to seven hours. That is, this House will discuss these demands till 2 o'clock to-morrow. This means that the House must be prepared to sit for two more hours in the evening between 3 and 5 to discuss the demand on Harijan Uplift. Is the House willing to do this? I understand that the Government and the Opposition leaders have come to an understanding that seven hours will be devoted for Agriculture and Fisheries, Veterinary, Community Development Projects, National Extension Services and Local Development Works, and Capital Outlay on Agriculture. Seven hours agreed?

Hon. MEMBERS : Yes, Sir.

Mr. SPEAKER : The Hon. Minister will move all the four demands. He wants fifteen minutes for moving the demands and

forty-five minutes for giving his reply to the debate. Thus, we will have six hours for discussion. The Hon. Minister will now move the demands.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 2,61,32,700 under Demand XVIII—Agriculture and Fisheries."

On the recommendation of the Governor I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 74,92,400 under Demand XIX—Veterinary."

On the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 2,76,88,700 under Demand XXXII—Community Development Projects, National Extension Service and Local Development Works."

On the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 25,33,100 under Demand XXXVIII—Capital Outlay on Agriculture."

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் சென்னை ராஜ்யத்தில் விவசாய உற்பத்தி 18 சத விகிதம் அதிகரிக்கப்படவேண்டும் என்னும் அடிப்படையில் திட்டத்தின் ஆரம்ப நகல் வரையப்பட்டது. இதன் பிறகு 1955–56 ஜூன் மாதம் முசோரியில் நடைபெற்ற விவசாய மந்திரிகள் மகா நாட்டில், உற்பத்தி லட்சிய அளவை அதிகரிக்கவேண்டும் என்று ஆலோசிக்கப்பட்டது. பிற்பாடு திட்ட கமிஷன் ஒவ்வொரு ராஜ்ய அரசாங்கத்துடன் நடத்திய விவாதத்தின்போதும் இந்த விஷயம் பரிசீலிக்கப்பட்டது. இந்த விவாதங்களின் பலனாக உணவுத் தான்யங்களின் உற்பத்தியை பெரும் அளவுக்குக், கூடுதலாக அதிகரிக்க வேண்டும் என்றும் மற்ற விவசாயப் பொருள்களின் உற்பத்தியும் ஓரளவு அதிகரிக்கவேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. உணவு தான்யங்கள் பொறுத்தவரையில் 7.12 லட்சம் டன் உற்பத்தி செய்யவேண்டும் என்ற லட்சிய அளவு 13.7 லட்சம் டனாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இப்படி மாற்றியமைக்கப்பட்ட லட்சிய அளவு 1954–55-ம் ஆண்டில் உற்பத்தியான அளவுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது 31 சதவீதம் அதிகமாகிறது. நல்ல விதைகளை வினியோகித்தும், ஸ்தல எரு போடும் முறைகளை அபிவிருத்தி செய்தும் புது விவசாய முறைகளை பிரசாரம் செய்தும், அதிகப்படியான உணவு உற்பத்தியை அடைய வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

1958–59-ஆம் ஆண்டு முடிவிற்குள் நெல் பயிராகும் பிரதேசங்களில், 85 சதவீதம் இடங்களுக்கு பொறுக்கு விதைகள் வழங்கப்படும். தற்போது 40 சதவீத நிலங்களுக்கு இம்மாதிரி வழங்கப்படுகிறது. இதற்காக ஒவ்வொரு ஆண்டும் 2,600 டன் நெல்லும், 500 டன் புஞ்சை தான்யங்களும் வாங்கப்பட்டு கிராம விதைப்பண்ணைகளுக்கு வழங்கப்படும். புஞ்சை தான்யங்களைப் பொறுத்த வரையில், சுமார் 5 சத வீத நிலங்களுக்கு பொறுக்கு விதைகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. புஞ்சை நில சாகுபடியிலிருக்கும் மொத்த நிலத்தில் சுமார் 55 சத வீதத்திற்கு





பொறுக்கு விதைகள் வினியோகிக்கப்படவேண்டுமென்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. நல்ல நெல் வகைகளையும், புஞ்சை தானிய வகைகளையும் அபிவிருத்தி செய்து நமது ராஜ்யம் பூராவிலும் வழங்க வேண்டும் என்னும் நோக்கத்தோடு, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் போது சுமார் 360 அரசாங்க விதைப் பண்ணைகளை ஏற்படுத்த அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. ஒவ்வொரு சமுதாய அபிவிருத்தி வட்டாரத்திலும் தேசீய நல விஸ்தரிப்பு வட்டாரத்திலும் 25 ஏக்கர் பரப்பில் விதைப் பண்ணைகள் ஏற்படுத்தப்படும். சென்ற ஆண்டு இம்மாதிரி 38 பண்ணைகள் ஆரம்பிக்கப்பட்டன. இவ்வாண்டு மேலும் 136 பண்ணைகள் நடத்தப்படும். இந்த ஆண்டு முடிவுக்குள்ளேயே ராஜ்யம் பூராவிலும் 174 விதைப்பண்ணைகள் ஏற்பட்டுவிடும். இது ஐந்தாண்டு திட்டத்தில் குறிப்பிட்டுள்ள லட்சிய அளவில் பாதியாக இருக்கிறது. மீதமுள்ள 186 அரசாங்க விதைப் பண்ணைகளும் அடுத்த ஆண்டு ஆரம்பிக்கப்படும். ஸ்தல எரு வகைகளை அபிவிருத்தி செய்யவேண்டும் என்னும் நோக்கத்தோடு அரசாங்கம் ஒரு பெரிய திட்டத்தை ஆரம்பித்து நடத்தி வருகிறது. உடனடியாக பொறுக்கி எடுக்கப்பட்ட 60 சமுதாய அபிவிருத்தி வட்டாரங்களிலுள்ள ஸ்தல எரு வகைகளை அபிவிருத்தி செய்ய ஒரு திட்டத்தை அரசாங்கம் அனுமதித்திருக்கிறது. இன்னும் 21 சமுதாய அபிவிருத்தி வட்டாரங்களில் அக்டோபர் மாதத்திற்குள் இத்திட்டம் அமுலாக்கப்படும். இத்திட்டத்தை அமுலாக்குவதற்காக 3 கெஜெட் பதிவான ஒரு எரு தயாரிப்பு அதிகாரிகளும் 60 குப்பை உரம் தயாரிக்கும் இன்ஸ்பெக்டர்களும் நியமனம் செய்ய அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் ராஜ்ய குப்பை உரம் தயாரிக்கும் அதிகாரியின் கீழ் பணியாற்றுவார்கள். அந்தந்த அபிவிருத்தி வட்டாரங்களிலுள்ள பொறுக்கி எடுக்கப்பட்டுள்ள சில விவசாயிகளுக்கு ஸ்தல உர வகைகள் பசுந்தழை உரம் போடும் முறைகள் முதலியன பற்றி குப்பை உரம் இன்ஸ்பெக்டர்கள் பயிற்சி அளிப்பார்கள். இப்படி பயிற்சிபெற்ற விவசாயிகளும் இன்ஸ்பெக்டர்களும் பசுந்தாள் உரத்தை பெரும் அளவிற்கு விவசாயிகள் உபயோகிப்பதற்காக அந்த வட்டாரத்தில் தீவிர பிரசாரம் செய்வார்கள். பசுந்தாள் உர உற்பத்தியை அதிகரித்து அதிகப்படியாக விவசாயிகள் உபயோகிக்கவேண்டுமென்னும் கருத்தோடு பசுந்தாள் உர விதைகளை மொத்த விலையில் குறைத்து 80 சத வீத விலையில் விற்கலாம் என்று அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. பெரிய பஞ்சாயத்துகளில் குப்பை உரங்களுடன் மலமும் கலந்த உரங்களை தயாரிப்பதற்காக அரசாங்கம் ஒரு திட்டத்தை அனுமதித்திருக்கிறது. இத்திட்டத்தின் கீழ் பொறுக்கி யெடுக்கப்பட்ட 50 பஞ்சாயத்துகளுக்கு 2,000 ரூபாய்க்கு அதிகப்படாத கடன் வசதிகள் கொடுக்கப்படும். விவசாய டைரக்டர் 50 கிராமங்களில் பரீட்சார்த்த ரீதியில் மல உரம் தயாரிக்க அனுப்பிய திட்டத்தை அரசாங்கம் அனுமதித்திருக்கிறது. இத்திட்டத்திற்காகும் முழுச் செலவையும் இந்திய அரசாங்கமே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்பதற்காக, திட்டத்தின் முழு விபரங்களையும் சமர்ப்பிக்குமாறு விவசாய டைரக்டரை கேட்டிருக்கிறோம். ரசாயன உரங்களையும் அதிகப்படியாக உபயோகிக்க வேண்டும் என்பதற்காக அரசாங்கம் ஊக்கம் அளித்து வருகிறது. இந்த ஆண்டு 1,40,000 டன் அமோனியம் சல்பேட்டு வழங்கப்படவேண்டும் என்பது நம்முடைய லட்சியம். சென்ற ஆண்டு வழங்கப்பட்டது 1,20,000 டன்.

விவசாயிகளுக்கு விவசாய சம்பந்தமான செய்திகளை விரைவில் பரப்ப வேண்டும் என்னும் நோக்கத்தோடு அரசாங்கம் ஆரம்பித்த ஒரு திட்டம் ஜனவரி மாதத்திலிருந்து நடந்து வருகிறது. விவசாய சம்பந்தப்பட்ட துண்டுப் பிரசுரங்களை தயாரிக்கவும், அவைகளை தக்க முறையில் அச்சடித்து பரவலாக வினியோகிக்கவும், விவசாய செய்தி அதிகாரி என்று ஒருவர் தனியாக நியமிக்கப்பட்டு இருக்கிறார். இவர் சமுதாய அபிவிருத்தி வட்டாரங்களிலும், தேசிய விஸ்தரிப்பு வட்டாரங்களிலும் சுற்றுப்

[Sri M. Bhaktavatsalam] [18th July 1957

பிரயாணம் செய்து, விவசாய ஆராய்ச்சிகள் சம்பந்தப்பட்ட விஷயங்களையும், விவசாய அபிவிருத்தி விஷயங்கள் பற்றியும் கிராம மக்களிடையே பரப்புவது எப்படி என்று கிராம ஊழியர்களுக்குப் பயிற்சி அளிப்பார்.

தேசீய விஸ்தரிப்பு வட்டாரங்களிலும், சமுதாய அபிவிருத்தி வட்டாரங்களிலும் இந்த ஆண்டிலேயே, 1956–57ல் இருந்ததைவிட விவசாய உற்பத்தியை 20 சதவீதமாவது அதிகரிக்கவேண்டும் என்ற ஒரு விசேஷ உணவு உற்பத்தி இயக்கம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த 20 சதவீத உற்பத்தியை அடைந்தே தீரவேண்டும் என்னும் நோக்கத்தோடு சமுதாய அபிவிருத்தி வட்டாரங்களிலும், தேசீய விஸ்தரிப்பு வட்டாரங்களிலும் விவசாயத் திட்டங்களை நிறைவேற்றும் முழுப்பொறுப்பு ஜில்லா விவசாய அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வட்டாரத்திலும் உற்பத்தி எவ்வளவு இருக்க வேண்டும் என்ற லட்சிய அளவை உதவி விவசாய உற்பத்தி டைரக்டர்கள் நிர்ணயிக்க வேண்டும் என்றும், இதை இன்னும் சிறு சிறு பகுதிகளுக்கும், ஒவ்வொரு கிராம சேவக் பொறுப்பின்கீழ் ஒப்படைக்கும் வேலையை, அந்த வட்டார அபிவிருத்தி அதிகாரி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் உத்தரவிடப் பட்டிருக்கிறது.

மற்ற விவசாயப் பொருள்களின் உற்பத்தியை அதிகரிக்கவும் தக்க கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. எண்ணெய் வித்துக்களில் உற்பத்தியை அதிகப்படியாக 70 000 டன் ஆக உயர்த்த வேண்டும் என்ற ஒரு திட்டம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. மேலும் 96,000 டன் அதிகப்படியாக எண்ணெய் வித்துக்களை உற்பத்தி செய்ய வேண்டும் என்ற மற்றொரு திட்டம் இப்போது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. தஞ்சாவூர் ஜில்லாவில் ஒரு பிராந்திய தென்னை ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்த அனுமதிக்கப்பட்டிருக்கிறது. 126,000 தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்ய ஆங்காங்கே தென்னந்தோட்டங்களை ஆரம்பிக்கவும் அரசாங்கம் அனுமதித்திருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவிற்குள் பருத்தி உற்பத்தியை 4·5 லட்சம் கட்டுகளாக அதிகரிக்கவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது கரும்பு உற்பத்தியை பொறுத்தவரையில், கடலூரில் ஒரு மத்திய கரும்பு ஆராய்ச்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் ஒரு கிளை கரும்பு ஆராய்ச்சி நிலையத்தை ஏற்படுத்தவும் தஞ்சாவூர் வடபாதிமங்கலத்தில் சர்க்கரை ஆலைக்கு கரும்புகள் சப்ளை செய்ய ஒரு பிராந்திய கரும்பு பண்ணையும், இதேமாதிரி மதுரை ஜில்லாவில் பாண்டிராஜபுரத்தில் மற்றொரு கரும்புப் பண்ணையும் ஏற்படுத்த அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின்போது ஒவ்வொரு ஆண்டும் கூடுதலாக 2 லட்சம் டன் கரும்பு உற்பத்தி செய்ய வேண்டும் என்று லட்சிய அளவு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஆண்டு மண் அரிப்பு தடுப்புத் திட்டங்களை தீவிரமாக அமுல் நடத்துவது என்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு முடியாமல் இருந்த திட்டங்கள் இந்த ஆண்டு மேற்கொண்டு தொடர்ந்து நடத்தப்படும். மேலும் 20,950 ஏக்கர் நிலப்பரப்பில், 13·28 லட்ச ரூபாய் செலவில் புதிய திட்டங்கள் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ளன அல்லது அனுமதிக்கும் நிலையில் இருக்கின்றன. சென்ற பத்து ஆண்டுகளில் அதிகப்படியாக நியமனம் செய்யப்பட்ட விவசாய "டெமான்ஸ்ட்ரேட்டர்" களுக்கு ஏற்ற விகிதாச்சாரத்தில் ஜில்லா விவசாய அதிகாரிகள் அதிகரிக்கப்படவில்லை என்று தெரியவந்திருக்கிறது. கீழ்உத்தியோகஸ்தர்களின் வேலையை, ஜில்லா விவசாய அதிகாரிகள் சரிவர மேற்பார்வை செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடு மூன்று ஜில்லாக்கள், அதாவது வட ஆற்காடு, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகியவை இரண்டாக பிரிக்கப்பட்டு இருக்கின்றன. இவ்வாண்டு வரவு செலவுத் திட்டத்திலும் சேலம், கோயம்புத்தூர், ராமநாதபுரம் ஜில்லாக்களை இரண்டாகப் பிரிக்க திட்டமிடப்பட்டிருக்கிறது.



18th July 1957] [Sri M. Bhaktavatsalam]

சென்னை வர்த்தக விவசாய பொருள்கள் விற்பனைச் சட்டம் (1933)ல் அமுலாக்கப்படுவதை ஆராய்ந்து விவசாயிகளுக்கு மேற்கொண்டு நன்மைகள் ஏற்படும்படியும், வியாபாரிகளுக்கு தொல்லைகள் ஏற்படாதபடியும், வர்த்தக விவசாயப் பொருள்கள் தவிர மற்ற உணவுதான்யங்களுக்கும் இந்தச் சட்டத்தை அமுலாக்க முடியுமா என்று ஆராயவும் அரசாங்கம் ஒரு கமிட்டியை நியமித்து இருக்கிறது. உத்தியோகஸ்தர்களும், உத்தியோகப் பற்றில்லாதவர்களும் கொண்ட இக்கமிட்டிக்கு சென்னை ஹைகோர்ட் ஓய்வு பெற்ற நீதிபதி திரு. டபுள்யூ. எஸ். கிருஷ்ணசாமி நாயுடு தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

மீன் இலாகாவுக்கு ரூபாய் 29·77 லட்சம் ஒதுக்கும்படி கேட்கக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் 36·93 லட்சம். ராஜ்ய பிரிவினைக்குப் பிறகு ஒரு பகுதி கேரளத்திற்கும், மற்றொரு பகுதி மைசூர் ராஜ்யத்திற்கும் மாற்றப்பட்டு விட்டதால் இந்த இலாகாவுக்கு ஒதுக்கப்பட்ட தொகை இவ்வாண்டு குறைந்து போயிருக்கிறது. மொத்தம் கேட்கப்பட்டிருக்கும் ரூபாய் 29·77 லட்சத்தில் 40-வது மான்யக் கோரிக்கை, "மீன் இலாகா" என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 23·47 லட்சம் கோரப்பட்டிருக்கிறது. மீதமுள்ள ரூபாய் 6·10 லட்சம் கட்டிட வேலைகளுக்காக, முதலீடுத் திட்டங்களின்கீழ் கேட்கப்பட்டிருக்கிறது. மீன்பிடித் தொழிலில் ஏராளமான மக்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதையும், இத் தொழிலின் மூலம் மக்களுக்கு அவசியமானதும் முக்கியமானதுமான உணவுப்பொருள்கள் கிடைக்கின்றனவென்பதையும் நான் ஆரம்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மேலும், இலாகா மூலமாக மீன் பிடிப்பதினாலும், உள்நாட்டு மீன் பிடிப்பு தொழிலுக்கு லைசென்ஸ் வழங்குவதினாலும், முத்துக்குளித்தல், சங்கு எடுத்தல், முதலிய தொழில்கள் மூலமாகவும் அரசாங்கத்திற்கு கணிசமான வருமானம் கிடைக்கிறது. ஆழ்கடல் மீன்பிடிப்பிற்காக பெரிய மீன்பிடிப படகுகள், அதற்கு ஏற்ற சாதனங்கள் முதலியவைகளை வாங்கவேண்டியிருக்கிறது. ஆழ்கடல் மீன் பிடிப்பினால் நமக்கு நல்ல வருமானம் கிடைக்கும் என்றாலும் ஆரம்ப முதலீட்டுத் தொகை அதிகமாக வேண்டியிருப்பதினால் தற்போதைக்கு இத்திட்டத்திற்காக நாம் அதிக நிதி ஒதுக்க முடியாமல் இருக்கிறது.

உள்நாட்டு நீர்நிலைகளில் அதிகப்படியாக மீன்களை வளர்ப்பதினாலும், கடலோரங்களிலும், ஆழ்கடல்களிலும் மீன் பிடிப்பிற்கு படகுகளை வாங்குவதினாலும் மட்டும் மீன் பிடிப்புத் தொழிலை நாம் அபிவிருத்தி செய்துவிட முடியாது. மீன்பிடித் தொழிலுக்கு வேண்டிய சாதனங்கள், பலதரப்பட்ட மீன் வகைகளின் வளர்ச்சி, ஓர் இடத்தில் வளரும் மீன் வகைகளை மற்ற இடங்களில் வளர்க்க முடியுமா என்ற ஆராய்ச்சி, மீன் பிடித் தொழிலை கட்டுப்படுத்துவதற்கு, தற்போதுள்ள மீன் வளங்களை பாதுகாத்து விசைப் படகுகள் முதலியன கொண்டு மீன் பிடித்தல், முதலிய எல்லா பிரச்னைகளும் மீன்பிடித் தொழில் அபிவிருத்தியில் அடங்கியிருக்கின்றன.

துரதிர்ஷ்டவசமாக, நமது ராஜ்யத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் மக்கள் பொருளாதார நிலையில் மிகவும் பிற்போக்கான நிலையில் இருக்கிறார்கள். இம்மக்களின் வாழ்க்கை நிலைமையை எல்லா வகையிலும் உயர்த்த வேண்டியது மிகவும் அவசியமாக இருக்கிறது. ஆகவே, இவ்விஷயங்களையும் அரசாங்கம் மனதில் கொண்டு தங்கள் கொள்கையை வகுக்க வேண்டியிருக்கிறது. மீன் உற்பத்தியை அதிகரிக்கவும், இது சம்பந்தமான தொழில்களை வளர்க்கவும் புது முறைகளை கையாளவும் அபிவிருத்தி செய்யப்பட்ட சாதனங்களை உபயோகிக்கும்படி வற்புறுத்தவும், விஞ்ஞான ரீதியாய் ஆராய்ச்சி நடத்தப்பட்டவைகளை நடைமுறையில் கொண்டுவரவும் வர்த்தக முறையில் மீன்பிடித் தொழிலை சீர்திருத்தி

அமைக்கவும், மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள மக்கள் வாழ்க்கைத் தரத்திலும், சமூகத் துறையிலும் மேம்பாடு அடையும்படி செய்வதையும் மீன் இலாகா தங்கள் கடமையாகக் கொண்டு பணியாற்றி வருகிறது.

இந்த லட்சியங்களைக் நடைமுறைக்கு கொண்டுவருவதில் கீழ்க்கண்ட விதங்களில், இலாகா பணியாற்றி வருகிறது.

அ. உள் நாட்டு மீன் வளத்தை அபிவிருத்தி செய்வது ;

ஆ. கடல் மீன் பிடிப்பை அபிவிருத்தி செய்வது ;

இ. ஆராய்ச்சி ;

ஈ. சமுதாய, பொருளாதார நடவடிக்கைகள்.

உள்நாட்டு மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்யவேண்டும் என்னும் நோக்கத்தோடு, உள்நாட்டு நீர் நிலைகளில் விரைவாக வளரக் கூடிய மீன் வகைகளை சேகரித்து வளர்த்து வினியோகிக்கப்பட்டு இருக்கிறது. 1956 செப்டம்பர் மாதம் முடிய சுமார் 26·38 லட்சம் மீன் குஞ்சுகளை மீன் இலாகா சேகரித்து வழங்கியிருக்கிறது. மீன் வளங்கள் எங்கெங்கே உள்ளன என்று கண்டுபிடிக்கவும், தனிப்பட்டவர்களுக்கு ஆலோசனைகள் கூறவும் அவர்களுக்கு மீன் குஞ்சுகளை வழங்கவும், புது இடங்களில் மீன் வளர்ப்புப் பற்றிய விவரங்களை சேகரிக்கவும், கடைசியாக மீன் விற்பனை சம்பந்தமாகவும், பலதரப்பட்ட பணிகளை செய்வதற்காக, பல இடங்களில் உத்தியோகஸ்தர்கள் அமர்த்தப்பட்டிருக்கின்றனர். நீடித்து உழைக்கக் கூடியதும், மீன் பிடிப்பை அதிகரிக்கக் கூடியதுமான "நைலான்" வலைகளும், தூண்டில்களும் மொத்த விலையில் மூன்றில் ஒரு பங்கு விலைக்கு பரதவர்களுக்கு கொடுக்கப்படுகிறது. இதுவரையில் 20,000 பவுண்டு "நைலான்" நூல் வினியோகிக்கப்பட்டிருக்கிறது. மேட்டூர் பவானிசாகர் போன்ற பெரிய நீர்தேக்கங்களில் மீன் வகைகளை சேகரித்து வளர்க்கவும், லைசென்ஸ் கொடுத்து மீன் பிடிக்கக் கட்டுபாடுகள் விதிக்கவும், ஒரு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. மீன் உணவு, மீன் உரம், இறால் மீன் வற்றல் முதலியன மீன் இலாகாவின் மாதிரி தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படுகின்றன. தஞ்சாவூர் ஜில்லாவில் நாகப்பட்டினத்தில் 1956–57-ஆம் ஆண்டில் இறால் மீன் வற்றல் தயாரிக்கும் ஒரு திட்டம் ஆரம்பிக்கப்பட்டு தூத்துக்குடி, நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் தினமும் 20 அந்தர் நிறைவுள்ள மீன் உணவும், மீன் எண்ணெய்யும் தயாரிக்க 1957–58-ம் ஆண்டின் போது இரண்டு நிலையங்கள் ஏற்படுத்தப்படும். நாகப்பட்டினத்திலிருந்து சென்னை வரையிலும் கடற்கரை ஓரமாக மீன் வளம் பற்றி ஒரு சர்வே எடுக்கப்பட்டது. இதன் விளைவாய் கடலூருக்கு அருகாமையில் இறால் மீன்கள் மிகுதியாக வளர்ச்சியுறும் ஒரு இடமும், பழவேற்காடு அருகில் ஜெல்லி மீன் நிறைய கிடைப்பதாகவும் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றது. நமது ராஜ்யத்தில் மீன் பிடிப்பிற்கு உபயோகப்படுத்தப்படும் நாட்டு படகுகளை விசைப் படகுகளாக மாற்ற வேண்டும் என்ற திட்டம் 1955–56-ம் ஆண்டில் கொண்டு வரப்பட்டது. அதன்படி 20 "பாப்லோடைப்" விசைப் படகுகள் குறைந்த விலையில் பாதவர்களுக்குக் கட்டப்பட்டு விற்கப்பட்டன. 1956–57-ம் ஆண்டில் 11 படகுகள் கட்டப்பட்டன. 1957–58-ஆம் ஆண்டிலும் இதேமாதிரி 11 படகுகள் கட்ட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இந்த முயற்சியில் எல்லாம் போதுமானதாயில்லை என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆழ்கடல் மீன் பிடிப்பிற்காக நமது ராஜ்யத்தில் ஒரு நிலையம் ஏற்படுத்தவேண்டுமென்று இந்திய அரசாங்கத்திடம் நாம் வற்புறுத்தி வந்தது பலனளிக்கவில்லை. ஏனெனில் இந்திய அரசாங்கமே கொச்சியில் ஒரு நிலையம் ஏற்படுத்தப் போவதாகக் கூறிவிட்டனர். ராஜ்ய சீரமைப்பிற்குப் பிறகு நமது ராஜ்யத்திற்கு ஒரே ஒரு ஆழ்கடல் மீன்பிடிப்புப் படகுதான் கிடைத்தது. அதற்கு முன்பு இருந்த சிறிய படகுகள் உதவாது என்று மீன் இலாகா அவைகளை நிராகரித்த

விட்டது. நமது ராஜ்யத்திற்கு அமெரிக்க உதவித் திட்டத்தின் கீழாவது இன்னும் சில ஆழ்கடல் மீன்பிடிப்புப் படகுகளை ஒதுக்க வேண்டும் என்று மத்திய அரசாங்கத்தை அடிக்கடி கேட்டு வருகிறோம். இதன் விளைவாக இம்மாதிரிப் படகுகளை எல்லாம் கலைக்கிட்டு, நமது ராஜ்யத்திற்கும் அதிகப்படியாக ஒதுக்குவது பற்றி ஆலோசித்து வருவதாக இந்திய அரசாங்கம் சமீபத்தில் நமக்கு பதிலளித்திருக்கிறது.

நமது ராஜ்யத்தில் கிழக்கு கடற்கரை யோரத்தில்மட்டும் முத்துச் சிப்பிகள் கிடைக்கின்றன. முதல் முதலாக 1926–28-ஆம் ஆண்டில் முத்துக் குளிக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. பிறகு மீண்டும் 25 ஆண்டுகள் கழித்து 1955–ஆம் ஆண்டில் மார்ச், மே மாதங்களில் முத்துக்குளித்தல் நடைபெற்றது. அப்போதிருந்து ஒவ்வொரு ஆண்டும் நடைபெற்று வருகிறது. இவ்வாண்டு மார்ச், மே மாதங்களில் நடத்திய முத்துக் குளித்தலின் விளைவாக நமது அரசாங்கத்திற்கு நல்ல வருவாய் கிடைத்திருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் முத்துக் குளித்தல் வேலையை நடத்தவும் இதை ஒரு லாபகரமான தொழிலாகச் செய்யவும் எல்லா முயற்சிகளும் எடுக்கப்படும்.

இதேமாதிரியாக, சங்கு எடுத்தல் வேலையும் வெற்றிகரமாக நடந்து வருகிறது. திருநெல்வேலி ஜில்லாவிலும், தஞ்சாவூர் ஜில்லாவில் ஒரு பகுதியிலும் சங்கு எடுக்கும் வேலை, இலாகா மூலமாக நடத்தப்பட்டு வருகிறது. இப்படி எடுக்கப்பட்ட சங்குகள் மேற்கு வங்காள அரசாங்கத்திற்கு நல்ல விலைக்கு உடனுக்குடன் விற்கப்படுகிறது. இராமநாதபுரம், செங்கற்பட்டு ,தென்னார்காடு, மற்றும் தஞ்சாவூரில் ஒரு பகுதியிலும் சங்கு எடுக்கும் வேலை தனிப்பட்டவர்களுக்குக் குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது. மீன் இலாகாவிற்கு சங்கு மூலம் கிடைக்கும் வருமானமே ஒரு முக்கியமான வருவாயாக இருந்து வருகிறது. 1956–57-ஆம் ஆண்டில் சங்கு எடுத்தல் மூலமாகவும், முத்துக் குளித்தல் மூலயாகவும் சுமார் 17.4 லட்ச ரூபாய் கிடைத் திருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

அயல் நாட்டு உதவித் திட்டங்களை கொண்டு மீன் பிடித் தொழில் நிபுணர்களைச் சிக்கன செலவில் வேலைக்கு அமர்த்தவும், தொழிலுக்கு வேண்டிய சாதனங்களையும், பொருள்களையும், வாங்கிக்கொள்ளவும், அரசாங்கம் மிகவும் பயன்படுத்தியிருக்கிறது. கடல் மீன் பிடிப்புத் தொழிலை அபிவிருத்தி செய்யவும், நவீன முறையில் மாற்றி அமைக்கவும், இந்திய அரசாங்கம் அமெரிக்க அரசாங்கத்திடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறது. இந்த ஒப்பந்தத்தின் விளைவாக நமது அரசாங்கத்திற்கு மீன் பிடித் தொழிலுக்கு வேண்டிய சாதனங்களும், பொருள்களும் நிறையக் கிடைக்கப் பெற்று, பரதவர்களுக்குக் குறைந்த விலையில் வழங்கப்பட்டிருக்கின்றன. இந்த உதவித் திட்டத்தின் கீழ், பரதவர்களுக்கு விசைப் படகில் சென்று மீன் பிடிக்க பயிற்சி அளிப்பதற்காக தூத்துக்குடியில் ஒரு பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. நாகப்பட்டிணம், சென்னை ஆகிய இடங்களில் நமது அரசாங்கமே பயிற்சி நிலையங்களை ஆரம்பித்திருக்கின்றது. மீன் பிடித் தொழிலுக்கு விசைப் படகுகளின் உபயோகம் அதிகரித்து வரும் இதே சமயத்தில் மீன் பிடித்தொழிலை ஆதாரமாகக் கொண்டுள்ள பரதவர்களுக்கு இத்துறையில் தக்க பயிற்சிகள் அளிப்பது மிகவும் அவசியம் இப்படி அளிக்கப்படும் பயிற்சித் திட்டங்களுக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். ஐ. நா சபையில் உணவு வ்வசாய சங்கத்துடன் இந்திய அரசாங்கம் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தின்படி, நமது ராஜ்யத்திற்கு இரண்டு படகு கட்டும் நிபுணர்களின் உதவியும், ஒரு மீன் பிடிப்பு என்ஜினியுரும், இரு துறைமுக நிபுணர்கள், ஒரு மீன் பிடிப்புப் பயிற்சி நிபுணர், ஒரு விற்பனை நிபுணர் ஆகியோர்களின் உதவியும் கிடைத்திருக்கிறது. விசைப் படகை அபிவிருத்தி செய்ய எடுத்துக்கொண்ட முயற்சிகள் நல்ல பலனளித்து

தற்கு இந்த நிபுணர்களும், மீன் பிடிப்பு என்ஜினியரும் நான் காரணமாவார்கள். துறைமுக நிபுணர்களும், பூர்வாங்க சர்வே வேலையை முடித்திருக்கின்றனர். அவர்கள் சமர்ப்பித்த அறிக்கை இப்போது அரசாங்கத்தால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

குருசடைத் தீவு, எண்ணூர், தூத்துக்குடி, பவானிசாகர் ஆகிய இடங்களிலுள்ள அரசாங்க மீன் ஆராய்ச்சி நிலையங்கள் பயனுள்ள வகையில் நடந்து வருகின்றன. மீன் வளத்தை அபிவிருத்தி செய்வதற்கு நடத்தப்படும் ஆராய்ச்சிகள் பெரிதும் பயன்படுகின்றன. கேரளத்திற்குப் பிரிந்து சென்றுவிட்ட கோழிக்கோட்டிற்குப் பதிலாக, தூத்துக்குடியில் மீன் தொழில் நுட்பநிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது.

சமுதாய, பொருளாதார அபிவிருத்தி திட்டங்களின் கீழ் மீன் இலாகா பரதவர்களின் குழந்தைகளுக்கு ஆரம்பப் பள்ளிகளை நடத்தி வருகிறது. ராஜ்யப் பிரிவினைக்கு முன்பு 66 பள்ளிகள் இருந்தன. இப்போது நமது ராஜ்யத்தில் மூன்று ஆரம்பப் பள்ளிகளே இருக்கின்றன. பரதவர்களுக்குக் கடன் வசதிகள் செய்யவும், அவர்களுக்கு வேண்டிய சாதனங்கள், நூல், பாய்மரம் முதலியவைகளை வழங்கவும் 134 பரதவர் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. பரதவர்கள் ஏற்கனவே லேவாதேவிக்காரர்களிடம் வாங்கிய கடன் தொகையைத் திரும்பக் கொடுப்பதற்காகவும், படகுகள் சாதனங்கள் வாங்கவும் நீண்ட காலத் தவணைக் கடன்கள் கொடுக்கப்படுகின்றன. இத்திட்டங்களினால் பரதவர்களுக்கு மிகுந்த பலன் ஏற்பட்டிருக்கிறது. 1956–57-ஆம் ஆண்டின்போது 832 பரதவர்களுக்கு ரூபாய் 2·70 லட்சம் வழங்கப்பட்டிருக்கிறது. 1957–58-ம் ஆண்டின்போது ரூபாய் நான்கு லட்சம் வழங்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. பதினெழு இடங்களில் மீன்களை உலர்த்த விடுதிகள் கட்டப்பட்டிருக்கின்றன. இவ்விடங்களில் உலர்ந்த மீன்கள் தயாரிப்பதற்காகக் குறைந்த விலையில் உப்பு விற்கப்படுகிறது. மீன்களை உடனுக்குடன் விற்பனை இடங்களுக்குக் கொண்டு போவதற்காக 1951-ம் ஆண்டில் ஒன்பது மோட்டார் வண்டிகள் வாங்கப்பட்டன. 1956-57-ஆம் ஆண்டின்போது மூன்று வண்டிகள் வாங்கப்பட்டு கிழக்குக் கடற்கரையிலுள்ள மூன்று கூட்டுறவு சங்கங்களுக்குக் கொடுக்கப்பட்டன. 1957–58-ம் ஆண்டின்போது இரண்டு பெரிய அல்லது நான்கு சிறிய மோட்டார் வண்டிகளை வாங்கித் தவணைதிட்டத்தின் கீழ் பரதவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. மீன்களைச் சேகரித்துவைக்க மேட்டூர் நீர்த் தேகத்திலும், தூத்துக்குடியிலும் இரண்டு குளிர்பதன நிலையங்களைக் கட்ட அரசாங்கம் அனுமதித்திருக்கிறது.

வெள்ளம், பஞ்சம், புயல் முதலிய இயற்கைக் கோளாறுகளினால் ஏற்படும் துன்பங்களைப் போக்க பரதவர்களுக்கு அரசாங்கம் இலவசமாக நூல், பாய்மரம், முதலியவைகளைக் கொடுத்து உதவியும், படகுகளைப் பழுது பார்க்க மான்ய மளித்தும் கட்டு மரங்களைக் குறைந்த விலையில் விற்பனை செய்தும் உதவி வந்திருக்கிறது. கடல் அரிப்பினால் வீடிழந்து தவிக்கும் பரதவர்களுக்கு வேறு இடங்களில் மனைக் கட்டுகள் வழங்கவும் அரசாங்கம் உதவி வருகிறது.

இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் சில அபிவிருத்தித் திட்டங்களை அரசாங்கம் சேர்த்திருக்கிறது. அதாவது விசைப் படகுகள் கட்டுவது, சங்கம் ஸ்தலங்களில் மாதிரி மீன் பண்ணைகளை ஏற்படுத்துவது, ஆற்று முகத்துவாரங்களில் மீன் பிடித் துறைமுகங்களை ஏற்படுத்துவது, விசைப் படகுகளை இயக்கப் பரதவர்களுக்குப் பயிற்சி அளிப்பது, மீன் குஞ்சுகளை ஏராளமாகச் சேகரித்து உள்நாட்டு நீர் நிலைகளில் வளர்ப்பது, பெரிய நீர்த்தேக்கங்களில் மீன் வளத்தை மேலும் அபிவிருத்தி செய்வது, மீன் உணவு, மீன் உர உற்பத்தி செய்வது, குளிர் பதன நிலையங்கள், ஏற்படுத்துவது, மீன் மார்க்கெட்டுகளை அபிவிருத்தி செய்வது போன்ற பல திட்டங்கள் இடம் பெற்றிருக்கின்றன. இவைகளுக்காக 1957–58-ம்

ஆண்டு ரூபாய் 18 லட்சம் செலவிடப்படும். இத்திட்டங்கள் எவ்வளவு விரைவாக நிறைவேற்றப்பட முடியுமோ அவ்வளவு விரைவாக நிறைவேற்றப் பட்டு வருகின்றன. இத்திட்டங்கள் நிறைவேற்றப்படுவதினுல் பல பிரச்னை களுக்குப் பரிகாரம் தேடப்படுவதுடன், மீன் வளத்தை நல்ல முறையில் அபிவிருத்தி செய்ய வழி தேடியவர்களாகவும் ஆவோம். சுமார் 600 மைல் நீலமுள்ள கடற்கரையும், உள்நாட்டில் ஆறு, வாய்க்கால். நீர்த் தேக்கங்கள் மற்றும் ஏராளமான ஏரிகள் முதலிய வாய்ப்புகள் இருக்கும் நமது ராஜ்யத்தில் மீன் வளத்தை நல்ல முறையில் அபிவிருத்தி செய்து, இந்தியாவிலேயே முதலிடம் வகிக்க வழிகள் இருக்கின்றன. இத்துறைக்கு அங்கத்தினர்கள் முழு ஆதரவையும், ஒத்துழைப்பையும் அளித்து மான் யக் கோரிக்கையை நிறைவேற்றி வைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

**Sri D. S. AUTHIMULAM** : கனம் மந்திரி அவர்கள் தனக்குச் சம்பந்த மில்லா இலாகாவைப்பற்றி மான்யம் கோரியிருக்கிறார்கள்.

**Mr. SPEAKER** : சம்பந்தமில்லையென்று எப்படிச் சொல்லுவது? காபினெட் என்பது கலெக்டிவ் ரெஸ்பான்ஸிபிலிடியுள்ளது என்ற வழக்கம் இருக்கிறது. எல்லா மந்திரிகளும் எந்த விஷயத்தைப்பற்றியும் பேசலாம். அதில் தவறு ஒன்றுமில்லை என்பதுதான் என்னுடைய தீர்ப்பு.

**Sri D. S. AUTHIMULAM** : அந்த இலாகா சம்பந்தப்பட்ட மந்திரி சபையில் இல்லையென்றால்.

**Mr. SPEAKER** : எந்த மந்திரி வேண்டுமானாலும் பேசலாம். காலை யில் மராமத்து மந்திரி அவர்கள் இல்லாதபோது அவருக்குப் பதில் தொழில் மந்திரி அவர்கள் பதில் அளிக்கவில்லையா அதில் ஒன்றும் தவறு இல்லை.

**Sri V. K. RAMASWAMY MUDALIYAR** : Sir, the Hon. Minister has not moved the other demands.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : I have moved all demand but have not spoken about them. I shall speak on them at the end.

**Mr. SPEAKER** : Motion moved—

"That Government be granted a sum not exceeding Rs. 2,61,32,700 under Demand No. XVIII—Agriculture and Fisheries, Rs. 74,92,400 under Demand No. XIX—Veterinary, Rs. 2,76,88,700 under Demand XXXII—Community Development Projects, National Extension Services and Local Development Works."

With regard to Demand No. XXXVIII—Capital Outlay on Agriculture, according to the decision of the Business Advisory Committee, it is not included for to-day. However, if the Hon. Minister wants to move that demand also, I have no objection, but I should point out that it was the decision of the Business Advisory Committee.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : I did not notice that, Sir. As I have already moved that item also, it may be taken up for discussion.

MR. SPEAKER: Motion moved—

"That Government be granted a sum not exceeding Rs. 25,33,100 under Demand No. XXXVIII—Capital Outlay on Agriculture."

I understand that the Opposition parties have agreed that with regard to Demand XVIII, Sri A. Govindasami should move his cut motion, that with regard to Demand XIX, Sri A. R. Marimuthu should move his cut motion and with regard to Demand XXXII, Community Development Projects, etc., Sri P. U. Shanmugam should move his cut motion. I will now ask the hon. Members to move their cut motions formally.

SRI A. GOVINDASAMI: Sir, I move—

"That the allotment of Rs. 2,61,32,700 under Demand XVIII—Agriculture and Fisheries—be reduced by Rs. 100."

"That the allotment of Rs. 74,92,400 under Demand XIX—Veterinary be reduced by Rs. 100."

SRI P. U. SHUNMUGAM: Sir, I move—

"That the allotment of Rs. 2,76,88,700 under Demand XXXII, Community Development Projects, National Extension Services and Local Development Works be reduced by Rs. 100."

MR. SPEAKER: Cut motion moved—

"That the allotment of Rs. 2,61,32,700 under Demand XVIII—Agriculture and Fisheries—be reduced by Rs. 100."

"That the allotment of Rs. 74,92,400 under Demand XIX—Veterinary—be reduced by Rs. 100."

"That the allotment of Rs. 2,76,88,700 under Demand XXXII—Community Development Projects, National Extension Services and Local Development Works—be reduced by Rs. 100."

The original motions and the cut motions are before the House for discussion.

I want to make one observation. This morning when the Hon. Minister for Health had finished his reply, a number of hon. Members rose up and asked him about the points raised by them in the course of the debate. Having allowed one hon. Member, I did not want to prevent others from asking their questions. According to the rules this is incorrect, because members may mise many points and the Hon. Minister will try to answer all of them. But in spite of that, he may not be able to do so. He may not like to answer some of them or he may not be in a position to answer some of them immediately or he may not have the time to answer some of them. Therefore, it is not proper for hon. Members to raise up at the end of the Hon. Minister's speech and ask him "What about my point?". "What about my point?" I will not allow from this to-morrow. Unfortunately, the Hon. Minister for Health was subjected to a number of interruptions and he managed them successfully. But I do not want the Hon. Ministers to be put to such an embarrasing situation. I am sure the Hon. Ministers will reply to all points raised in the discussion but if they do not, it does not mean that they do not care for such of those points as have been left out. They will take action on them otherwise. Therefore, I want hon. Members not to put questions to the Hon. Ministers at the end of their replies to the discussion.



SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Sir, I would like the Hon. Minister to cover or touch upon all the important points raised on the floor of the House by the hon. Members. Otherwise, the whole object of the discussion is frustrated.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Consistent with the availability of time, we are trying our very best to cover all the points that are raised in the House.

MR. SPEAKER: Yes, there is the question of availability of time. For example—I am going to make another observation—in the next demand, that is, Agriculture, etc., I have with me a list of twelve hon. Members wanting to speak, to-day and to-morrow put together. This is from the Congress Party. There are seven hon. Members from the C.R.C. Party, seven hon. Members from the D.M.K. and one hon. Member from the Socialist Party. Further, three Independents want to speak.

To-morrow, the Hon. the Minister will require 45 minutes for his reply. Two Leaders of Opposition parties want to speak to-morrow—Sri V. K. Ramaswamy Mudaliyar and Sri C. N. Annadurai. I must give them 15 minutes each which means half an hour. Together with the time the Hon. the Minister will take, it comes to an hour and a quarter. How can I make provision for 24 members to speak on these demands unless the party leaders agree to reduce the number of speakers correspondingly? The Congress Party has given 12 names. The Congress Reforms Committee and the Dravida Munnetra Kazhagam have given each seven names. I would like them to reduce this to four each. Otherwise, the Leader of the Opposition cannot blame the Minister. In the 45 minutes he wants, he has not got time to cover all points that may be made by the respective speakers. Therefore, the availability of time will condition his ability to answer all points. Whatever it is, there is nothing in the rules which are compel the Hon. Minister to answer all points, if he does not find time to cover them all. So, I would request hon. Members not to put questions to the Minister at the end of his reply. I will not allow then.

* **SRI K. ANBAZHAGAN : On a point of information,** தலைவர் அவர்களே, அங்கத்தினர் பேசிய பேச்சுகளின் சில பகுதிகளைத் தவருகப்புரிந்துகொண்டு கனம் அமைச்சர்கள் பதில்கள் அளிக்கிற நேரத்தில், அங்கத்தினர் தாம் பேசிய பேச்சின் நோக்கத்தையும் கருத்து மாற்றம் இருக்குமானல் அதற்கும் விளக்கம் கொடுக்கலாமல்லவா ?

**MR. SPEAKER :** மந்திரி அவர்கள் பேசிய பிறகு ஓட்டுக்கு விடப்படுமே தவிர அப்போது விளக்கத்திற்கு அவசியமில்லை.

**SRI P. G. KARUTHIRUMAN :** சபாநாயகர் அவர்களே, அங்கத்தினர்கள் பேசும்போது எல்லா பேச்சுளும் குறிப்பு எடுக்கப்பட்டு **Official Report** ஆக அச்சிடப்பட்டு ஒவ்வொரு டிபார்ட்மெண்டுக்கும் அனுப்பப்படுகிறது. அங்கத்தினர்கள் பேசிய எல்லாவற்றிற்கும் அமைச்சரவர்கள் பதில் அளிக்காவிட்டாலும் கூட, ஒவ்வொரு விஷயத்தையும் அந்தந்த இலாகா பரிசீலனை செய்கிறது. ஒவ்வொரு **Point**-க்கும் அமைச்சர் பதில் கொடுப்பது என்பது முடியாதகாரியம். அடுத்தபடியாக பேசுவதற்கு அங்கத்தினர்களை அனுமதிக்கும் விஷயத்தில், காங்கிரஸ் பார்ட்டியைப் பொறுத்தவரையில் 150 அங்கத்தினர்கள் இருக்கிருர்கள்; எதிர் கட்சியில் 50 பேர்கள் இருக்கிருர்கள். ஆகவே ஒரு எதிர் கட்சி அங்கத்தினரும் 2 காங்கிரஸ் அங்கத்தினர்களும் என்ற முறையை அனுசரிக்குமாறு நான் தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

* **SRI K. ANBAZHAGAN :** நான் தெரிவித்த கருத்தானது, நாங்கள் பேசுகிற கருத்துக்களை தவருக மாற்றிப் புரிந்து கொண்டு அமைச்சரவர்கள் பதில் சொன்னல்.

**If the reply given by the Hon. Minister is in the nature of interpreting a Member's speech in a different sense from the one meant by him, is it possible to ask for an explanation on that account ?**

**MR. SPEAKER : I shall decide that when the occasion arises. I thank Mr. Karuthiruman for coming not only to my aid but to the Minister's aid.**

* **SRI T. P. ELUMALAI :** இந்த சபையில் காங்கிரஸ் அங்கத்தினர்கள் அதிகமாக இருந்தபோதிலும் நிறைய பேர் பேசுவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. எதிர் கட்சியில் இருப்பவர்கள் ஒவ்வொரு மாணியத்திலும் பேசுகிருர்கள். குறிப்பாக எதிர் கட்சியிலிருக்கும் ஸ்ரீ அன்பழகன் அவர்கள் ஒவ்வொரு மாணியத்தின் பேரிலும் பேசுகிருர்கள். பொதுவாக எல்லோருக்கும் பேசுவதற்கு வாய்ப்பு கிடைக்கவேண்டும். ஒரு மாணியத்தின் மீது ஒருவர் பேசினல், மற்ற மாணியத்தின் மீது பேசாதமற்றவர்களுக்கு வாய்ப்பு கொடுக்கவேண்டும். காங்கிரஸ் கட்சியிலிருக்கும் எங்களுக்கும் பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று சபாநாயகரை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**MR. SPEAKER :** கனம் அங்கத்தினர் கேட்டது நல்லது தான். எல்லோரும் பேசவேண்டுமானல் இந்த விவாதத்தை ஒரு மாதம் நடத்தவேண்டும். இடம் இருக்கும் வரை அங்கத்தினர்கள் பேசவேண்டும். அதற்கு அரசாங்கத்தின் சார்பிலே பதில் அளிக்கப்படும். கனம் அங்கத்தினர் டி. எம். கே.-ல் சேர்ந்தால் அவருக்கு பேச அதிக சந்தர்ப்பம் கொடுக்கப்படும்.



* **SRI A. GOVINDASAMI :** அவைத்தலைவர் அவர்களே, விவசாய மாணியத்தின் பேரில் என் பெயரால் கொடுத்திருக்கிற வெட்டுப் பிரேரணையை பிரேரேபித்து சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாய துறையிலே நல்ல முன்னேற்றம் காணவும், உற்பத்தியை ஒரு கணிசமான அளவு பெருக்கவும் அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாக கனம் அமைச்சரின் அறிக்கையிலிருந்து தெரிகிறது. உள்ளபடியே விவசாயம் செழிக்க வேண்டுமானல், உற்பத்தி பெருக வேண்டுமானல், நில சீர்திருத்த சட்டத்தை, நிலவுடமைக்கு வரம்பு கட்டுகிற நிலையை உடனடியாகக் கொண்டுவந்தால் தான் இந்த பிரச்னையைத் தீர்க்க முடியும். அதற்கு காஷ்மீரும், சைனவும் வழி காட்டுகின்றன. பெரிய நிலச்சுவாந்தார்களெல்லாம் நிலத்தை துண்டுபோடுவதால் உற்பத்தி குறையும் என்ற வாதத்தைச் சொல்லுகிருர்கள். நிலத்தை பிரித்துக் கொடுத்தாலே விவசாய மக்களுக்கு அக்கறை அதிகம் ஏற்படுகிறது. உழைப்பும் அதிகம் செலுத்தப்படுகிற காரணத்தால் உற்பத்தி பெருக வழியாக இருக்கிறது. விவசாயத்தைப் பற்றி பேசுகிற நேரத்தில் நீர்ப்பாசன இலாகாவோடு நமது விவசாய இலாகா அதிக தொடர்பு வைத்துக்கொண்டு அவர்களுடைய வேலையை துரிதப்படுத்துகிற அளவுக்கு விவசாய இலாகா தூண்டவேண்டும். நம் நாட்டில் பெரிய ஜீவ நதிகள் இல்லாவிட்டாலும், இப்போது கட்டப்பட்டிருக்கிற நீர்த்தேக்கங்கள், அணைக்கட்டுகளெல்லாம் பல இடங்களில் தூர்ந்திருக்கின்றன. அவைகளை யெல்லாம் சுத்தப்படுத்தி நீர்ப்பாசனம் கிடைக்க வழி செய்யவேண்டும். அது மாத்திரமல்லாமல், சிரிய நீர்த்தேக்கத் திட்டங்கள் அங்கங்கு பழுதுபட்டு இருப்பதாலும் போதுமான வசதியில்லாத காரணத்தாலும் தான் விவசாயம் தடைப்பட்டிருக்கிறது. அதிக உற்பத்தி செய்ய முடியாமல் இருக்கிறது. **Grow More Food Campaigns** நடந்த காலத்தில் எங்கு பார்த்தாலும் ஏழை மக்கள் புறம்போக்கு நிலங்களை பண்படுத்தி பயிர்செய்து வந்தார்கள். இன்றைய தினம் அவாகள் அப்படி பயிர் செய்யப்பட்டு வந்த நிலங்களைவிட்டு வெளியேற்றப்படுகிருர்கள். அதோடு அபராதமும் விதிக்கப்படுகிருர்கள். அந்நிலைக்கு ஒரு முடிவுகட்டி யார் யார் புறம்போக்கு நிலங்களை பண்பாடு செய்து உற்பத்தி செய்ய வழி செய்தார்களோ அவர்களுக்கு அந்த நிலங்களை வழங்க முன் வரவேண்டும்.

நீர்ப்பாசனத்தோடு **Electricity Department**-ஐயும் சரிக்கட்டிக் கொண்டால்தான் விவசாயம் நல்ல முறையில் உற்பத்தி பெருக வழி செய்ய முடியும். குறிப்பாக தென் ஆற்காடு மாவட்டத்திலே பெரிய நதி ஒன்றும் இல்லாததால் விவசாயத்திற்கு கிணறுகளை நம்பவேண்டியிருக்கிறது. **Oil Engine** களையும் **Electricity**-ஐயும் கொண்டு விவசாயத்தை முன்னுக்குக் கொண்டுவர வேண்டியிருக்கிறது. எங்கள் மாவட்டத்தில் மின்சார விஸ்தரிப்பு ஆமை வேகத்தில் நடந்து வருகிறது. நான் இதைப்பற்றி பல தடவை சொல்லி யிருக்கிறேன். மற்ற மாவட்டங்களை விட எங்கள் மாவட்டத்திற்கு மின்சார விஸ்தரிப்பு குறைந்திருப்பதால் விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு 1,300 கிராமங்களுக்கு மின்சாரம் விஸ்தரிக்கப்பட்டும், எங்கள் மாவட்டத்திலே குறுகிய அளவுக்குத்தான் விஸ்தரித்திருக்கிருர்கள். மாவட்டவாரியாக கணக்கிட்டுப் பார்த்தால் தெரியும். அரசாங்கம் இதை ஒத்துக்கொண்டு எந்தெந்த மாவட்டங்கள் மின்சார விஸ்தரிப்பில் பின்தங்கி யிருக்கின்றன என்றுபார்த்து கவனம் செலுத்தினல் விவசாய முன்னேற்றம் ஏற்படும். அப்படி மின்சாரம் வழங்குகிற நேரத்தில் கூட ஏழை எளியவர்கள், நடுத்தர விவசாயிகள் எல்லோருக்கும் பலன் தர அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும். இப்போது 20, 30 பம்ப் செட்டுகள் இருப்பவர்களுக்கே மேலும் கொடுக்கப்படுகிறது. இரண்டு அல்லது ஒன்று வைத்துக்கொள்ள வசதி உள்ளவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. விவசாயம் நல்ல முறையில் முன்னேறுவதற்காக **Hire Purchase System**-ல் கொடுக்கப்படுகிற ஆயில் இன்ஜினும் பம்பு

செட்டுகள் இரண்டு ஆண்டு மூன்று ஆண்டு காலம் தாழ்த்தி கொடுக்கப் படுகிறது. மனுக்கள் தாசில்தாருக்கு அனுப்பப்படுகின்றன. தாசில்தார் ஆபீசில் மூன்று அல்லது ஆறு மாதம் கிடக்கும் நிலைமை இருக்கிறது. Solvency Certificate கொடுக்கும் நிலையில் கூட்டுப்பட்டா இருந்தால் அவர்களுக்குக் கொடுக்க மறுக்கிறார்கள். பாகம் பிரிக்காத நிலையில் இருந் தால் கூட கொடுக்க மறுக்கிறார்கள். விவசாயிகளுக்கு ஆயில் என்ஜின், மோட்டார் பம்பு செட்டுகள் கிடைக்க வழி செய்தால்தான் உள்ளபடியே நன்மை செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டார்கள் என்று சொல்ல முடியும்.

இன்னும் தக்காவிக் கடன் கொடுக்கிற விஷயத்தில் காலதாமதம் ஏற்படுகிறது. விவசாயி வந்து கேட்டால் ஒரு வாரம் அல்லது பத்து நாட் களுக்குள் அவனுக்குக் கிடைக்கும்படியான வசதியைச் செய்து கொடுக்க வேண்டும். இப்படி கடன் வாங்கும் விஷயத்தில் விவசாயி அதிகப்படியான கஷ்டத்தை அனுபவிக்கவேண்டியிருப்பதால் பல தொல்லைகளுக்கு ஆளாகி நஷ்டம் அடையக் கூடிய நிலையும் ஏற்படுகிறது. எங்கேபோய், யாரைக் கேட்கவேண்டும் என்பது ஏழை விவசாயிக்கு தெரிவதில்லை. மற்றும் விவசாயிகள் உபயோகிக்கக்கூடிய பொருள்களின் விலை அதிகப்படியாக உயருவதாலும் அவன் வாங்கும் பொருள்களின் விலை அதிகமாவதாலும் அவன் விற்கக் கூடிய விவசாயப் பொருள்களின் விலை குறைவதாலும் அவன் அதிகப்படியான கஷ்டத்தையும் நஷ்டத்தையும் அடைகிறான். இதைப்பற்றி சில நாட்களுக்கு முன்னதாக இந்தப்பக்கத்திலுள்ள ஒரு அங்கத்தினர் கூட குறிப்பிட்டார். விவசாயிகளுடைய உற்பத்திப் பொரு ளின் விலை இறங்குகிறது என்ற கூக்குரல் வருகிறது. இதைப் பற்றி அர சாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். இது வரையிலும் எந்த நடவடிக்கையும் எடுத்துக் கொண்டதாகத் தெரிய வில்லை. மற்றும் விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் ரசாயன உரம் தவறான முறையில் உபயோகப் படுத்தப்படுவதாகக் கூட புகார்கள் வருகின்றன. இதுபற்றி மதுவிலக்கு மானியத்தின் கீழ் பேசும்போது குறிப்பிடப்பட்டது. இதை உண்மை என அரசாங்கம் உணர்ந்து இதைக் கண்காணிக்க வேண்டும். கொடுக்கப்படும் உரம் உண்மையாக விவசாயத்திற்கு உபயோகப் படுத்தப் படுகிறதா என்பதை அறிய வேண்டும். கொடுக்கப்படும் அளவிற்கு உற் பத்தி பெருகி இருக்கிறதா என்பதையும் ஆராய வேண்டும். எந்த எந்த முறையில் கொடுக்கப்படும் உரம் தவறான முறையில் கண்காணிக்கப் படுகிறது என்பதை அரசாங்கம் கண்டு பிடித்து அதற்குத் தக்க நடவடிக்கையும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இருபது ஆயிரம் டன் அம்மோனியம் விநியோகிக்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டது. அதில் எவ்வளவு டன்கள் தவறான முறையில் உபயோகப்படுத்தப்பட்டன என்ற புள்ளி விவரத்தைக் கொடுத்தால் அதைப் பற்றி விசாரணை நடத்தி நட வடிக்கை எடுக்கலாம். அதனால் கனம் அங்கத்தினர் எவ்வளவு டன் தவறான முறையில் உபயோகப்படுத்தப்பட்டது என்பதைக் குறிப்பிட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதைத் தெரிந்துகொண்டு அதன் மேல் பதில் சொல்ல வேண்டும்.

SRI A. GOVINDASAMI : என்னிடம் எவ்வளவு டன் தவறான முறையில் உபயோகிக்கப்பட்டது என்ற கணக்கு இல்லை. ஆனால் புகார் வருவது நிச்சயம். இதைக் கண்டு பிடிக்க சர்க்காரிடம் வேண்டிய மெஷினரி இருக்கிறது. கொடுக்கப்பட்ட புள்ளி விவரம் இருக்கிறது, அதை வைத்துக்கொண்டு தவறான முறையில் எவ்வளவு உபயோகப்படுத்தப் பட்டது என்பதைக் கண்டுபிடிக்கலாம். ஆனால் எங்களால் அப்படிக் கண்டுபிடிக்க முடியாது, அதற்கு வேண்டிய மெஷினரி எங்களிடத்தில் இல்லை. தவறான முறையில் உபயோகப்படுத்தப்படுகிறது என்பதுதான்



எங்களுக்குத் தெரியும். எங்களிடத்தில் அதற்கு வேண்டிய இலாகா இல்லை. இதை விட்டு விட்டு, தவறான முறையில் உபயோகப்படுத்தப்பட்ட கணக்கு என்ன என்பதைக் கேட்டால் எனக்குத் தெரியாது.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எனக்கு கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்களை நான் கொடுக்கிறேன். தவறான முறையில் உபயோகப் படுத்தப்பட்ட புள்ளி விவரத்தை அதிலிருந்து கொடுக்கலாம். தவறான கணக்கு எப்படி வந்தது என்பதைச் சொல்லலாம். தவறாக உபயோகப் படுத்தப்படுகிறது என்று சொல்வதால்தான் அதன் புள்ளி விவரத்தைக் கேட்டேன்.

SRI A. GOVINDASAMI : விவசாயிகளுக்கு எவ்வளவு கொடுக்கப் பட்டது என்பதையும் அதில் எவ்வளவு டன்கள் தவறாக உபயோகப்படுத்தப் பட்டது என்பதையும் என்னால் சொல்ல முடியாது. உணவு உற்பத்திக்காகக் கொடுக்கப்பட்ட உரம் அந்த அளவில் உற்பத்தியாகவில்லை என்பதுதான் தெரியும். மற்றும் அது தவறான முறையில் உபயோகப்படுத்தப்பட்டிருக் கிறது என்பது மட்டும்தான் தெரியும். மற்றவை தெரியாது என்பதை மட்டும் சொல்லிக்கொள்ளுகிறேன்.

எங்கள் மாவட்டத்தில் கரும்பு உற்பத்தியாகிறது. கரும்பு மணிலா சாகுபடியானது எங்கள் மாவட்டத்தில் கொஞ்சம் அதிகமாக இருக்கிறது. ஆனால் கரும்பு விவசாயிகளுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்பட வில்லை. ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்று ஏக்கர்கள் ரிஜிஸ்ட் ரேஷன் மூலமாக கரும்புக்கு விட்டால் இரண்டொரு ஏக்கரில் "நான் ரிஜிஸ்ட்ரேஷன்" மூலமாக கரும்பு சாகுபடி செய்ய வேண்டியிருக் கிறது. இதற்கு கம்பெனியாரைக் கேட்டால் 'கூடாது' என்று சொல்லி விடுகிறார்கள். அதனால்தான் எங்கள் மாவட்டத்தில் மற்றொரு ஆலையை வளவனூரில் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டோம். தனியார் மூலமாக புது ஆலையை ஏற்படுத்தாமல் கூட்டுறவு முறையில் ஒன்றை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு கலெக்டர் தலைமையில் ஒரு கூட்டம் கூட்டி பெண்ணாடத்தில் சர்க்கரை ஆலை ஏற்படுத்த வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அப்படி கூட்டுறவு முறையில் சீக்கிரத்தில் ஒரு ஆலையை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்பொழுதுதான் கரும்பு உற்பத்தியாளர்களுடைய பொருளாதார நிலைமை முன்னேற்றமடையும். அதற்குவேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அதன்மேல்தான் விவசாயிகளுடைய பொருளாதார நிலைமை வளருவதற்கு வசதியாக இருக்கும். இந்த முறையி லும் கரும்பு உற்பத்திக்கு வசதி செய்து தரவேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன். பாரி கம்பெனியாரைக் கேட்டால் பல சங்கடங்கள் இருக் கின்றன. பல தொல்லைகள் ஏற்படுகின்றன. அதனால் அவர்களிடம் அதை விடக்கூடாது. கூட்டுறவு முறையில் அமைத்துக்கொடுத்தால்தான் விவசாயிகள் வசதி அடைவதற்கு வழி ஏற்படும்.

தென் ஆற்காடு ஜில்லாவை மணிலா ஜில்லா என்று கூட சொல்வது வழக்கம். அங்குதான் அதிகப்படியான மணிலா சாகுபடியாகிறது. மற்ற மாவட்டங்களைக் காட்டிலும் அங்குதான் அதிகப்படியாக சாகுபடி செய்யப் படுகிறது. நல்ல விதைகளை அங்கு கொண்டு வந்து நல்ல சாகுபடி செய்வது வழக்கம். நாலைந்து வருஷங்களாக மணிலா மார்க்கெட்டிங் கமிட்டி மூலமாக நல்ல விதைகளை வாங்கி வந்து அங்கு விநியோகம் செய்து நல்ல முறையில் சாகுபடி செய்வது வழக்கம். ஆனால் அது இப்பொழுது நின்று விட்டது. அதைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளு கிறேன்.

அங்குள்ள மீன் பிடிப்பவர்கள் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். எங்கள் மாவட்டத்தில் மீன் பிடிப்பவர்கள் அதிகமாக இருப்பதால் அவர்களுக்கு அதிகப்படியான வசதிகள் செய்துகொடுக்க வேண்டும். இது சம்பந்தப்பட்ட மந்திரி அம்மையார் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவார்கள் என்று நினைக்கிறேன். கடலூர் பகுதியில் தேனும்பட்டிணம், பரங்கிபேட்டை முதலிய இடங்களில் மீனவர்கள் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு வீடு வசதி கிடையாது. துறைமுகங்களுக்கு அருகிலுள்ள புறம்போக்கு நிலங்களை அவர்களுக்குக் கொடுத்து அவர்கள் வீடுகள் கட்டிக்கொள்வதற்கு வசதி செய்துகொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். மற்றும் கடலூர், பறங்கிப் பேட்டை முதலிய துறைமுகப் பகுதிகளை சீர்திருத்தம் செய்து கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். கடலூரில் இப்பொழுது ஒரு வித மீனிலிருந்து—அதாவது மத்தி என்ற மீனிலிருந்து—ஒரு வித எண்ணெயை எடுக்கிறார்கள். அது ரொம்பவும் நன்மையான எண்ணெ என்று கருதப்படுகிறது. அதனால் கடலூரில் ஒரு தொழிற்சாலையை அமைத்து அந்த எண்ணெயை அதிகப்படியான அளவில் உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கடைசியாகக் கால்நடை ஆஸ்பத்திரியை தாலுக்கா தோறும் விஸ்தரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அத்துடன் பிர்க்கா தோறும் விஸ்தரித்துக் கொடுத்தாலும் நலம். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு கடைசியாக கோயம்புத்தூர் மாவட்டத்தில் விவசாயக் கல்லூரியை ஏற்படுத்துவது போன்று அண்ணாமலை யுனிவர்ஸிடியிலும் ஒரு விவசாயக் கல்லூரியை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.

***Sri M. R. KANDASAMI MUDALIAR** : ஸார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் : ஜனநாயக முறையில் எங்களுக்குப் பேச உரிமை இருக்கிறது. அப்படிப் பேசுவதற்கு சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும் என்று கேட்டதற்கு கனம் சபாநாயகர் அவர்கள் எதிர்க்கட்சியில் சேர வேண்டுமென்று சொன்னார். ஜனநாயக முறையில் நடக்கும் சட்டசபையில் ஜனநாயகப் முறைப்படி எங்களுக்கும் பேசுவதற்கு உரிமை இருக்கிறது. அந்த உரிமையைக் கேட்பதற்கும் பேசுவதற்கும் எதிர்க்கட்சியில் சேர வேண்டிய அவசியம் இல்லை. இந்தக் கட்சியில் இருந்துகொண்டே பேசுவதற்கு ஜனநாயக முறைப்படி உரிமை இருக்கிறது. அப்படிப்பட்ட உரிமையும் எங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. மற்றவர்களுக்குக் கொடுக்கப்படும் உரிமை எங்களுக்கும் இருக்கிறது. அதன்படி எங்களுக்கும் பேசுவதற்கு சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும். ஒரு கட்சியில் நாலு பேர்கள் இருந்தால் அவர்களுக்கு மணிக்கணக்கில் பேசுவதற்கு சந்தர்ப்பம் கொடுக்கப்படுகிறது. எதிர்க்கட்சியில் இருந்தாலும் சரி, ஆளும் கட்சியில் இருந்தாலும் சரி அப்படிப்பட்ட உரிமை எங்களுக்கும் இருக்கிறது என்பதைத் தாழ்மையுடன் கனம் சபாநாயகருக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதற்காக எதிர்க் கட்சியில் சேர வேண்டும் என்பது இல்லை.

**Mr. SPEAKER** : ஆங்கிலத்தில் சொல்வார்கள் "**sense of humour**" என்று. அதற்குத் தமிழ் அர்த்தம் கனம் அங்கத்தினருக்குத் தெரியுமோ, தெரியாதோ அதற்கு தமிழ் அர்த்தம் எனக்குத் தெரியாது. அதன்படி அவர் அதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. (ஒரு குரல் : சென்ஸ் ஆப் ஹ்யூமர் என்றால் வேடிக்கை வார்த்தை) வேடிக்கை வார்த்தை என்று சொல்வார்கள், அதை கனம் அங்கத்தினர் அவர்கள் சரியானபடி புரிந்துகொள்ளவில்லை என்று நினைக்கிறேன். ஆளும் கட்சியில் இருந்தாலும் பேசுவதற்கு உரிமை உண்டு என்பது வாஸ்தவம். தான்



மணிக்கணக்கில் வேண்டுமானாலும் பேசலாம். ஆனால் அவருடைய கட்சித் தலைவர் மற்றவர்களுடன் கலந்துகொண்டு இதற்கு ஐந்து மணி நேரம் தான் பேசுவதற்கு ஒதுக்கியிருக்கிறார்கள். அதன்படி எல்லோருக்கும் பேசுவதற்கு அவகாசம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினருக்கு அவகாசம் வேண்டும் என்றால் அவருடைய கட்சித் தலைவரைக் கேட்க வேண்டும். அவருடைய கட்சித் தலைவருடன்தான் சண்டை போடவேண்டுமே தவிர சபாநாயகருடன் சண்டை போடுவதில் பிரயோசனம் இல்லை என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளப் பிரியப்படுகிறேன்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : கனம் சபாநாயகர் அவர்களே, எதிர்க்கட்சிக்கு பிரத்யேக உரிமை இருக்கிறது என்பதையும் அப்படிப்பட்ட சங்கடத்தையும் நிலைமையையும் தாங்கள் பாதுகாக்க வேண்டியிருக்கிறது என்பதை கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் உணர வேண்டும் என்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் சொல்ல வேண்டும்.

**Mr. SPEAKER** : கனம் மந்திரி அவர்கள் என் உதவிக்கு வந்ததற்கு நன்றி. இதைப் பற்றித்தான் அடிக்கடி சொல்லிக்கொண்டு வருகிறேன். எதிர்க்கட்சிக்குத்தான் அதிகப்படியாக பேசுவதற்கு சந்தர்ப்பம் கொடுக்கப்படுகிறது என்றும், 150 பேர்கள் கொண்ட கட்சிக்கு அதிகப்படியாக பேசுவதற்கு சந்தர்ப்பம் கொடுக்கப்படவில்லை என்பதினால் கோபம் வருவது சகஜம்தான். அது தவறு அல்ல. அவர்கள் சொல்லுவதற்கு பதில் சொல்ல வேண்டியது என் கடமைதான்.

**Sri A. R. MARIMUTHU** : கனம் சபாநாயகர் அவர்களே, இன்றைக்கு 12 noon. தேசத்திலே இதர தொழில்களை எவ்வளவு அத்தியாவசியமாகப் பெருக்க வேண்டுமென்று நாம் கருதுகிறோமோ, அதே போல விவசாயத்துக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்து நாட்டிலே உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டியது நம்முடைய கடமை. இந்தக் கடமையிலே விவசாய விளைச்சலை அதிகப்படுத்துவதற்கு சர்க்கார் பல திட்டங்களைப் போட்டிருக்கிறார்கள். நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குவதற்குத் திட்டம் போட்டிருக்கிறார்கள். ஆனால், இம்மாதிரியான திட்டங்களினால் உடனடியாக உற்பத்திப் பெருக்கை நாம் எதிர்பார்க்க முடியாது. ஆகவே, ஏற்கனவே சாகுபடியிலிருக்கும் நிலங்களில் இப்பொழுது விளையும் விளைச்சலைப் பெருக்குவதில் அதிக அக்கறையை சர்க்கார் எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

புதிய சாகுபடி முறையினால் தேசத்திலே கணிசமான அளவு உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும். சர்க்கார் இதற்காகப் பல நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்காக இப்பொழுது கேட்கப்பட்டிருக்கும் மான்யத்திலே பெரும் பகுதியான தொகை மக்களிடத்திலே புது முறை விவசாயத்தைப் பிரச்சாரம் செய்து எல்லோரும் அதை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்குப் பயன்படுத்தப்படுகிறது. அம்மாதிரி புது முறை விவசாயத்தை நடைமுறையில் கொண்டுவரவேண்டுமானால் விவசாயிகளுக்கு வேண்டிய பண வசதி ரொம்ப அவசியம். அந்தப் பண வசதியைச் சர்க்கார் செய்து கொடுக்கத் தவறினால், இம்மாதிரியான பிரசாரங்களுக்கு சாதாரண நடுத்தர விவசாயிகள் காது கொடுத்துக் கேட்டு அம்முறைகளை கையாளவேண்டுமென்று நினைத்தாலும், நடைமுறையிலே கொண்டுவர முடியாத நிலைமை ஏற்படுகிறது. குறிப்பாக, நமது மாகாணத்திலே 60 சத விகித நிலம் மத்தியதர வர்க்கத்திடம்தான் இருக்கிறது. பெருமளவு பிரசாரம் செய்வதன் மூலம் 40 சதவிகிதம் நிலத்தைத் தங்களுடையதாக வைத்திருக்கும் பெரு நிலச்சுவாந்தார்கள் தான் அம்மாதிரி முறையை நடைமுறைக்குக் கொண்டுவருகிறார்கள். ஏனென்றால், அவர்களுக்குத்தான் பண வசதி இருக்கிறது. பண வசதி இல்லாத பெருமளவுள்ள ஏழை, நடுத்தர விவசாயிகள் புது முறையை நடைமுறைக்குக் கொண்டுவர முடியுமா என்பது சந்தேகம்.

ஆகவே, அந்த பிரசாரத்தை சர்க்கார் செய்வதோடு கூட விவசாயிகள் சாகுபடி செய்வதற்கு வேண்டிய அவ்வளவு வசதியையும் சர்க்கார் செய்துகொடுக்க முன்வருவார்களானால், இப்பொழுது எதிர்பார்க்கும் உற்பத்தி அதிகரிப்பைவிட நாம் நிச்சயமாக அதிக உற்பத்தியை எதிர்பார்க்க முடியும்.

நிலச் சீர்திருத்தத்தைக் கொண்டுவருவதற்கு நாம் முயற்சித்து வருகிறோம். நிச்சயமாக அதற்கான சட்டம் வரப்போகிறது என்பதில் சந்தேகம் கிடையாது. நிலச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டுவரும்போது, சாதாரண நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் கொடுக்கப்படும்போது அவர்களுக்குப் போதிய பண வசதி இல்லையென்றால், அதனால் உற்பத்தி கணிசமான அளவு பாதிக்கக் கூடிய நிலைமை ஏற்படும். அதற்கான திட்டங்களை சர்க்கார் இப்போழுதே சிந்தித்து, அவர்களுக்கு வேண்டிய உதவி அளிப்பதற்கு முயற்சிக்க வேண்டும். கூட்டுறவு சங்கம் ஆரம்பிப்பது போன்ற பல திட்டங்கள் இருக்கின்றன. எந்தக் கிராமத்தில் ரூபாய் 500 பங்குத் தொகை கட்டுகிறார்களோ அங்குதான் கூட்டுறவு கடன் சங்கம் ஆரம்பிக்க முடியும் என்ற விதியைத் தளர்த்தி, ரூபாய் 200 பங்குத் தொகை வசூலித்தாலும் அங்கே யெல்லாம் கூட்டுறவு சங்கம் ஆரம்பிப்பதற்கான முயற்சியை சர்க்கார் எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நிலச் சீர்திருத்தச் சட்டத்தினால் சாதாரண மக்களிடத்திலே நிலங்கள் போய்ச் சேரும்போது, உற்பத்தி கணிசமாக அதிகரிக்கும் என்றாலும்கூட தானியம் அத்தனையும் மார்க்கெட்டுக்கு வருமா என்பது யோசிக்க வேண்டிய விஷயம். அதிகமான தானியம் மார்க்கெட்டுக்கு வராவிட்டால் தானியங்களின் விலை அதிகரிக்க அது ஏதுவாகும். ஆகையால், இதையெல்லாம் கருத்திற் கொண்டு, விவசாயிகளுக்குப் புதிய முறையை போதிப்பதோடு கூட அதற்கான கடன் வசதிகளை நிச்சயமாக ஏற்படுத்திக் கொடுக்காவிட்டால், பிரசாரத்தின் மூலமே நாம் ஒரு கணிசமான முன்னேற்றத்தை எதிர்பார்க்க முடியாது என்று நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

அதோடு விவசாயிகளுக்குப் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. கால்நடையை பொறுத்தவரையில அவர்களுக்கு பெரும் கஷ்டங்கள் சில சந்தர்ப்பங்களில் ஏற்படுகின்றன. காலநடைகளுக்கு நோய் கண்டால், விவசாயிகளுக்கு அதனால் பெரும் நஷ்டம். சில சமயங்களில் நாம் பார்த்திருக்கிறோம் : விவசாயிகளுடைய வீட்டில் கால்நடை ஒன்று இறந்து விட்டால், ஒரு வாரத்திற்குக் கூட அந்த வீட்டில் யாரும் சாப்பிடாமல் கவலையில் ஆழ்ந்திருப்பார்கள். ஏனென்றால், அவர்களுக்கு அவ்வளவு பெரிய நஷ்டம் ஏற்படுகிறது. இம்மாதிரி நஷ்டத்தைப் போக்குவதற்கு வழி வகை காண வேண்டும். பயிர்களுக்கு ஏதாவது பூச்சித் தொல்லை ஏற்பட்டு விட்டால், அந்த வருஷம் அவன் குடும்பம் வாழ்வதற்கே முடியாமல் கஷ்டங்கள் ஏற்படும். ஒரு வருஷம் சாகுபடி செய்வதில் கஷ்டம் ஏற்பட்டுவிட்டால், அடுத்த வருஷம் சாகுபடி செய்யவதற்குக் கடன் வாங்க வேண்டிய நிலை வந்துவிடுகிறது. ஒரு தடவை தண்டப்பட்டுவிட்டால் பத்து வருஷ காலத்திற்குக் கூட ஒரு விவசாயி முன்னேறி வர முடியாத ஒரு பயங்கரமான நிலைமை ஏற்படுகிறது. இந்த நிலைமையிலிருந்து விவசாயிகளைக் காப்பாற்றுவதற்குக் கால்நடை இன்ஷ்யூரன்ஸ், பயிர் இன்ஷ்யூரன்ஸ் போன்ற திட்டங்களைக் கொண்டுவருவதற்கு சர்க்கார் தகுந்த முயற்சி எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

பட்டுக்கோட்டை தாலூக்காவிலுள்ள தென்னை மரங்களெல்லாம் புயலால் பாதிக்கப்பட்டுவிட்டன. தோட்டங்களில் விழுந்துபோன மரங்களைக் கூட அப்புறப்படுத்த முடியாமல் பல இடங்களில் விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய கடன் வசதி கொடுத்து தென்னங் கன்றுகளை உற்பத்தி செய்வதற்கு சர்க்கார் உதவி அளிப்பதாகக்





கூறினார்கள். பல கடன் மனுக்கள் விவசாயிகளிடமிருந்து போய்க்கூட அது சம்பந்தமாக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. தென்னங் கன்றுகளை நட்டால், அவை 15 வருஷ காலத்திற்குப் பிறகு தான் பலன் கொடுக்கும். எவ்வளவு காலத்திற்கு முன்னதாக அந்தக் கன்றுகளை வளர்ப்பதற்கு முயற்சிக்கிறோமோ அவ்வளவு சீக்கிரமாக நமக்குப் பலன் கிடைக்கும். ஆகவே, காலம் தாழ்த்தாமல், விவசாயிகளுக்கு தென்னங் கன்றுகளை வைக்கக் கடன் உதவி அளிக்க ஏற்பாடு செய்யுமாறு நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அமோனியம் சல்பேட் போன்றவைகளை வாங்க விவசாயிகளுக்கு சர்க்கார் கடன் கொடுக்கிறார்கள். ஆனால், அந்தக் கடன் வசதிகள் காலத்தில் கிடைப்பதில்லை. காலத்தில் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். தக்காவிக் கடன், மாடுகள் வாங்குவதற்குக் கடன் கேட்டால், விவசாயம் முடிந்த பிறகுதான் அந்தக் கடன் கிடைப்பதற்கு முடியுமே தவிர, விவசாயத்தைக் காலாகாலத்தில் ஆரம்பிக்க வழிவகை காணவில்லை. ஆகவே, ஜூன் மாத இறுதிக்குள் விவசாயிகளுக்குக் கடன் கிடைக்க வேண்டிய முயற்சியை சர்க்கார் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

பசுந்தாள் உரம் சம்பந்தமாக விவசாயிகளுக்கு அதிகச் சலுகை அளிக்க வேண்டும். ஒவ்வொரு பகுதியிலிருக்கும் விவசாயியும் பசுந்தாள் உரத்தை உற்பத்தி செய்வதற்கு ஊக்கம் அளிக்க வேண்டும். இவைகளை வளர்ப்பதற்குத் தடையாக ஆடு மாடுகளின் தொல்லை ஏற்படுகிறது. அவைகளை—பயிர்களுக்கு நாசம் செய்த கால்நடைகளை— ஓட்டிச்சென்று புகார் செய்ய வேண்டியிருக்கிறது. ஒரு விவசாயி இன்னொரு விவசாயியினுடைய கால்நடையை ஓட்டிக்கொண்டு போய் பவுண்டில் அடைக்க மனம் இடம் தருவது இல்லை. ஆகவே, அங்கு இருக்கும் தலையாரி போன்ற சிப்பந்திகளின் மூலம் இம்மாதிரி கால்நடைகளைத் தடுப்பதற்கு கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு அதிகாரத்தைத் தந்துவிட்டால் அது மிகவும் நன்றாக இருக்கும் என்று நான் நினைக்கின்றேன்.

அடுத்தபடியாக, கால்நடை வைத்தியத்திற்கு வேண்டிய வசதிகள் கிராமங்களில் கிடையாது. இன்றைக்கு சர்க்கார் கால்நடை வைத்திய சாலைகளைப் பல இடங்களில் ஏற்படுத்தியிருந்தாலும், இன்றைக்கு கிராமங்களில் இருக்கும் மக்கள் கால்நடை வைத்தியத்திற்கு அந்தக் கிராமங்களிலேயே இருக்கும் அனுபவக் குறைவான வைத்தியரிடம்தான் காட்ட வேண்டியிருக்கிறது. கால்நடை வைத்தியத்தை அதிக அளவில் எங்கும் விஸ்தரிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இன்றைக்கு எஸ்.பி.ஸி.ஏ. என்று ஒரு சங்கம் இருக்கிறது. மிருகத்திற்கு ஏற்படும் கஷ்டத்தைத் தடுப்பதற்கு இந்தச் சங்கம் இயங்குவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், இந்தச் சங்கம் விவசாயிகளுக்குத்தான் மிகுந்த கஷ்டங்கள் கொடுக்கிறது. இந்தச் சங்கம் மிருகங்களுடைய கஷ்டங்களைப் போக்குதவற்காக இருக்க வேண்டுமே தவிர விவசாயிகளுக்குத் தொல்லை கொடுக்கக் கூடியதாக இல்லாமல் இருக்க வேண்டியதற்கு அரசாங்கம் போதிய கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பல காரியங்களை எடுத்துக் கொண்டு செய்யப் போவதாகச் சொல்கிறார்கள்; செய்யப்பட்டும் வருகிறது. ஆனால், சமுதாய அபிவிருத்தித் திட்டங்களிலே பெருவாரியான ரூபாய் செலவழிக்கப்படுகிறது. ஏன் இவ்வளவு தொகை செலவழிக்கப்பட வேண்டுமென்று பார்த்தால், சர்க்காருடைய எண்ணம் நியாயமாக இருக்கிறது. அதில் சந்தேகம் இல்லை. ஆனால், அந்தப் பலன் மக்களுக்குக் கிடைக்கிறதா என்று பார்த்தால் கிடையாது. சமுதாய நலத் திட்டங்களை

கீழ் பல ரோடுகள் போடப்படுகின்றன. பள்ளிக்கூடங்கள் கட்டப்படுகின்றன. ஆஸ்பத்திரிகள் கட்டப்படுகின்றன. இதுதான் சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் வேலையாக இருக்குமானால், அது சமுதாய அபிவிருத்தித் திட்டமாக இருக்க முடியாது. இந்தக் காரியங்களுக்காக மட்டும் எதற்காக இவ்வளவு 'எஸ்டாபிளிஷ்மெண்ட்' வைத்துக்கொண்டிருக்க வேண்டும் என்பது சந்தேகமாக இருக்கிறது. இம்மாதிரியான காரியங்கள் ஸ்தல அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் அனேக இடங்களில் நடைபெற்று வருகின்றன. சமுதாய அபிவிருத்தித்திட்டங்கள் இருக்கும் இடங்களில் இதைச் செய்தால் மட்டும் போதாது. மக்களே தங்களுடைய பொருளாதார நிலையை உணர்ந்து, சிறு கைத் தொழில்கள் முதலியவைகளை தாங்களாகவே முன்வந்து செய்து கொள்ளக்கூடிய வகையில் அதிகாரிகள் அவர்களைத் தயார் செய்கிறார்களா என்பதைப் பொறுத்துத்தான் சமுதாய அபிவிருத்தித் திட்டம் இருக்கிறதே தவிர, பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி, முதலியவைகளைக் கட்டுவதால் மட்டும் இல்லை. இவைகளையெல்லாம் ரெவின்யூ இலாகா மூலமாகவே ஸ்தல அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் செய்துகொள்ள முடியும். சமுதாய அபிவிருத்தித் திட்டம் இருக்கக் கூடிய இடங்களில் எவ்வளவு தூரம் மக்கள் தங்களை பொருளாதாரத்தில் முன்னேற்றிக்கொள்ளக் கூடிய உணர்வு பெற்றிருக்கிறார்கள், எவ்வளவு தூரம் விவசாய அபிவிருத்தி செய்திருக்கிறார்கள், எவ்வளவு தூரம் திட்டங்களை அவர்கள் புரிந்துகொண்டிருக்கிறார்கள் என்பதைக் கொண்டுதான் சமுதாய அபிவிருத்தித் திட்ட வெற்றி தோல்வியை நாம் நிர்ணயிக்க முடியும்.

பட்டுக்கோட்டைத் தாலுக்காவானது புயலால் பாதிக்கப்பட்ட பிரதேசம் என்பது எல்லோருக்கும் தெரியும். அது தஞ்சை ஜில்லாவிலேயே மிக வும் பிற்போக்கான பிரதேசம். புயலால் பாதிக்கப்பட்ட அந்த இடங்களில் அனேக கட்டடங்கள் பிரிந்துபோனது எல்லாம் இன்னும் செப்பனிடப்படாமல் இருக்கிறது. அடித்துக்கொண்டு போன ரோடுகளும், இடிந்து போன கல்வர்ட்டுகளும் கட்டப்பட்டிருக்கின்றன. ஆகவே, அந்தப் பகுதிகளுக்கு முதல் சலுகை கொடுக்க வேண்டும். அந்தப் பகுதிகளில் தேசீய விஸ்தரிப்புத் திட்டம் ஆரம்பிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். மாகாணத்திலேயே முதல் சலுகை அந்தப் பகுதிக்குக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு, இத்துடன் என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்ளுகின்றேன்.

12-10 p.m. **Sri P. U. SHANMUGAM** : சட்டமன்றத் தலைவர் அவர்களே, ஸ்தல அபிவிருத்தித் திட்டத்திற்கென்றும். சமுதாய நலத் திட்டத்திற்கென்றும், தேசீய அபிவிருத்தித் திட்டத்திற்கென்றும் அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கும் மான்யத்தின் மீது நான் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து விளக்கம் சொல்ல விரும்புகிறேன். வெட்டுப் பிரேரணை கொடுத்திருக்கிறோமென்றால் சம்பிரதாய முறைப்படி கொடுத்திருக்கிறோமே தவிர, இத்திட்டங்கள் சம்பந்தமான குறைகளை எடுத்துச் சொல்லி நிவர்த்தி காண வேண்டுமென்பதற்காகக் கொடுத்திருக்கிறோமே தவிர, ஏதோ இந்த மான்யத்தின் கீழ் ஏராளமாக தொகை ஒதுக்கப்பட்டுவிட்டதாகவும் அதைக் குறைக்கவேண்டுமென்பதற்காகவும் அல்ல என்று தாழ்மையுடன் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வெட்டுப் பிரேரணை கொடுத்தவர்கள் வெட்டிப் பேச்சு பேசுகிறவர்கள் என்று நினைக்காமல் அமைச்சர் அவர்கள் உண்மையிலேயே எங்கள் கருத்தினை சரியான முறையில் எடுத்துக்கொண்டு நல்ல பதில் தரவேண்டுமாய்த் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தேசிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் **Block Development Office**-கள் அங்காங்கு அமைக்கப்படுவதை நாம் பார்க்கின்றோம். நமது மாநிலத்தில் 133 இடங்களில் இத்திட்டங்களைப் புகுத்துவது என்று ஏற்பாடாகி இருப்பதாக சர்க்காருடைய கணக்குப்படி தெரிய வருகிறது. நான் கேள்



விப்பட்ட வரையில், இரண்டு இடங்களில்தான் இந்த **Office**-கள் சொந்த கட்டிடங்களில் இருக்கின்றன. பாக்கி இடங்களில் வாடகை கட்டிடங்களில் இருக்கின்றன. இந்த நிலைமையைப் போக்க, அரசியலார் ஆவன செய்ய வேண்டும்.

இப்பொழுது இந்த **Block Development Office**-கள் பெரும்பாலும் டவுன்களிலேயே வைக்கப்படுகின்றன. இதை மாற்றி இவைகளை கிராமப் புறங்களிலேயே வைக்கும்படிக் கேட்டுக்கொள்ளுகின்றேன். சில இடங்களில் இவை கிராமங்களில் இருந்தாலும், அங்கு வேலை செய்யும் **Officers** அங்கே தங்குவதே இல்லை என்றும், **Headquarters Towns**-லேயே தங்குகிறார்கள் என்றும் வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்தந்த வட்டாரங்களில் உள்ள மக்கள் மேற்கண்ட உத்தியோகஸ்தர்கள் அந்தந்த **Block area**-விலேயே தங்கும்படி செய்ய வேண்டுமென்று அடிக்கடி சொல்லிக்கொண்டு வந்திருப்பதினால், அரசியலாரும் அவர்களுக்குக் கட்டாய உத்திரவினை அனுப்பி நிலைமையை சீர்திருத்த வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன். இந்த நல்ல திட்டங்கள் சமுதாயத்திற்குத் தேவையென்றாலும், இதற்காகச் செலவிடப்படும் பெரும் தொகை எப்படிச் செலவழிக்கப்படுகிறது என்பதைப்பற்றி நான் சொல்லப்போகின்றேன். அதாவது, செலவழிக்கின்ற வகையிலுள்ள குறைகளையும், செலவழிக்கப்படும் தன்மையிலுள்ள குறைகளையும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேனே யொழிய, சர்க்காருடைய கொள்கைகளுக்கோ அல்லது அவர்களது எண்ணத்திற்கோ மாசு கற்பிக்க நான் எண்ணவில்லை.

நிலசுவான்களுக்கு, மாடு, உரங்கள் வாங்குவதற்கு சர்க்கார் கடன் கொடுக்கிறார்கள். கூட்டுப் பட்டா நிலம் வைத்திருப்பவர்களுக்குக் கடன் கிடைப்பதில் சிக்கல்கள் ஏற்படுகின்றன. தனிப் பட்டாவாக ஆக்கிக்கொள்ள தாலுக்கா கச்சேரிகளுக்கு மனுச் செய்து கொண்டாலும் கூட, அவர்களுடைய விண்ணப்பங்கள் தாலுக்கா கச்சேரியில் உள்ள புறா கூண்டுகளுக்குள் தங்கிவிடுகிறது. கூட்டு பட்டா இருப்பதன் காரணமாக, நிலத்தை அடமானம் வைத்து, கடன் வாங்குவதற்கு, சட்டம் குறுக்கே நிற்கிறது. தனிப் பட்டா உடனடியாக கொடுப்பதற்கு தாலூகா கச்சேரிகளுக்கு உத்தரவு அனுப்பவேண்டும்; அல்லது கூட்டுப் பட்டா இருந்தாலும், அதனால் கடன் கொடுப்பதற்கு பாதகமில்லை என்று அதிகாரிகளுக்கு உத்திரவிடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இத்திட்டங்களின் கீழ் போடப்படுகின்ற பாதைகளைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் நான் சொல்வேனானால், அதனைக் குறித்து யாரும் வருத்தப்படமாட்டார்கள் என்று நம்புகிறேன். கடந்த தேர்தல் சமயத்தில் இப்பாதைகள் வழியாக போகும் சந்தர்ப்பங்கள் பல எனக்கு ஏற்பட்ட போது, ஒரு ஆபத்தில் சிக்கிக்கொள்ள ஏற்பட்டது. கிராமப் பகுதிகளில் சுற்றுப்பிரயாணம் செய்த மற்ற அங்கத்தினர்களும் இம்மாதிரி ஆபத்தில் சிக்கியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். இந்த பாதைகளில் போகும் மோட்டார்கார்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு குறிப்பிட்ட இடங்களுக்கு போய் சேருவதில்லை. வழியிலே திடீர் என்று நின்று விடுகிறது. சமீப தேர்தல் காலத்தில், நான் சமுதாய நல திட்டத்தின் கீழ் போடப்பட்ட பாதையொன்றில் போக நேர்ந்தது. எங்களுடைய கார் திடீர் என்று நின்று விட்டது. காருடைய டயர் சக்கரங்கள் கீழே புதைந்து போய்க் கொண்டே இருந்தது. அந்த சக்கரங்களை மேலே தூக்குவதற்கு 6 மணி நேரம் முயற்சி செய்து பெரும்பாடுபட்டோம். நாங்கள் ஆயாசத்துடன் நின்று பார்த்துக்கொண்டிருந்தோம். அப்பொழுது அங்கு வந்த சில கிராம மக்கள் எங்களைப் பார்த்து "ஏன் வருத்தப்பட்டுக்கொண்டு இப்படி நிற்கிறீர்கள்?" என்று கேட்டார்கள். நான் போய்ச்சேரவேண்டிய இடத்திற்கு குறிப்பிட்ட நேரத்தில் போய் சேரமுடியவில்லையே என்று வருத்தப்படுவதாகக் கூறியதுடன், அங்கு ஏன் நல்ல பாதைகள் போடக்கூடாது என்றும்

கேட்டேன். அதற்கு அந்த கிராம மக்கள் வேடிக்கையாகச் சொன்னார்கள்; "நீங்கள் பாதையைப் பற்றி குறை கூறுகிறீர்களே! பாதை ஆரம்பத்திலே இருக்கும் கல்லை நீங்கள் சரியாகப் பார்க்காமல் வந்து விட்டீர்களே!" என்று சொன்னார்கள். அதற்கு நான் சொன்னேன்: "நான் பாதை ஆரம்பத்திலே உள்ள கல்லில் இந்தப் பாதை இந்தத் திட்டத்தின் கீழ் போடப்பட்டது என்று எழுதியிருப்பதை பார்த்து விட்டுத்தான் வந்தேன்." அதற்குமேல் அவர்கள், "நீங்கள் ஏதோ கல்லில் எழுதியிருப்பதைப் பார்த்துவிட்டு வந்து விட்டீர்கள். அதில் சிகப்பு வர்ணம் பூசப்பட்டிருப்பதையும், அது **Danger road** என்பதை குறிப்பிடுகிறது என்பதையும் கவனிக்காமல் வந்து விட்டீர்கள்!" என்று கிண்டலாகச் சொன்னார்கள். நல்ல பாதைகள் போட்டு கிராம மக்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

ஹரிஜனங்களுக்கு வீடு கட்டிக்கொடுப்பதற்கு இந்தத் திட்டத்தின் கீழ் மான்யமாக ரூ. 500-ம் உழைப்பாக ரூ. 250-ம் கொடுக்கப்படுகிறது. இந்த வீடுகள் கட்டும் வேலை கண்டிராக்டர்களுக்கு விடப்படுகிறது. சுமார் ரூ. 400 செலவழித்து இந்த வீடுகளைக்கட்டி விட்டு பாக்கிப் பணத்தை இந்த கண்டிராக்டர்கள் எடுத்துக்கொள்ளும் பரிதாப நிலையைப் பார்க்கிறோம். வீடுகளை சரியாக கட்டியிருக்கின்றார்களா என்று பார்த்தால், அதுவும் இல்லை. பச்சை மூங்கிலை வைத்து கட்டி விடுகிறார்கள். சுவர்கள் எல்லாம் மண்ணைக்கொண்டு எழுப்பப்படுவதால் நல்ல மழை பெய்யும் சமயத்தில் மண் சுவர் கரைந்து, வீடும் உட்கார்ந்துவிடுகிறது. இப்படிப்பட்ட அபாயகரமான வீடுகளைக் கட்ட வேண்டாம் என்றும், நல்ல வீடுகளை கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்றும் அரசியலாரைக் கேட்டுக் கொள்கிறேன்.

இத்திட்டத்தின் கீழ் கடன் வாங்குபவர்கள் படும் கஷ்டத்தைப் பற்றி ஒரு வார்த்தை தாழ்மையுடன் சொல்லிகொள்ள விரும்புகிறேன். **Block Development Office**-கள் சிலவற்றில் சில நேரங்களில் சிலர் —பலவற்றில் அல்ல ; சிலவற்றில் ; சில நேரங்களில் ; பல நேரங்களில் என்று என்னால் கூற முடியாது ; சிலர் ; பலர் அல்ல ; யாரும் கோபித்துக்கொள்ளவேண்டாம்—கதரைக் கட்டாயமாக வாங்கவேண்டுமென்று, நிர்ப்பந்திக்கிறார்கள். இவ்விதம் நிர்ப்பந்திக்க வேண்டாமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியிலுள்ள செங்கம் தாலூகா மிக மிக பிற்போக்கான தாலூகா. மக்கள் அங்கு மிக பரிதாபகரமான நிலையில் வாழ்கின்றார்கள். அந்த தாலூகாவில் ஏதாவது ஒரு பகுதியிலாவது ஸ்தல அபிவிருத்தித் திட்டம், சமுதாய நல திட்டம் முதலியவைகளைப் புகுத்தி அம்மக்களுக்கு நல்லாதரவு கொடுக்க வேணுமாய்க் கேட்டுக்கொண்டு வெட்டுப் பிரேரணை மீது ஆற்றும் என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

(Deputy Speaker in the Chair.)

**Sri P. JAYARAJ :** மதிப்பிற்குறிய உதவி சபாநாயகர் அவர்களே, விவசாய சம்மந்தமான மானியத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இன்று விவசாயமானது சர்க்காருடைய பெருமுயற்சியால் பிரமாதமான அளவுக்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறது. சாகுபடியால், நல்ல உரங்கள், பசுந்தாள் உரங்கள், ஜப்பானிய சாகுபடிபோன்ற புது முறைகள் அனுஷ்டிக்கப்படுவதன் காரணமாக உணவு உற்பத்தி பெருகியிருக்கிறது.

தஞ்சை ஜில்லாவில் பிரமாதமான அளவுக்கு சாகுபடி உயர்ந்திருக்கிறது. சாதாரண முறைப்படி சாகுபடி செய்தால் ஒரு ஏக்கருக்கு 1,600 ராத்தல் நெல் கிடைக்கிறது. ஜப்பானிய முறையை அனுசரித்து 3,000—3,600 ராத்தல் நெல் கிடைக்கும்படி சாகுபடி செய்திருக்கிறார்கள். 1952-ல

ஏற்பட்ட குழப்பங்கள் காரணமாக, சர்க்காரால் கொண்டுவரப்பட்ட பண்ணையாள் சட்டத்தின் காரணமாக, தஞ்சை ஜில்லாவில், மிராஸ்தார்களுக்கும் பண்ணையாட்களுக்கும் நல்லதொரு பலன் கிடைத்திருப்பதால், அங்கே சாந்தி நிலவுகிறது. புதுமுறையில் சாகுபடி செய்வதற்கு, ஏழை மக்களுக்கு உரம் கொடுத்து உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது விவசாயிகளுக்கு சர்க்கார் உரம் கொடுத்து உதவுகிறார்கள். பல ஏழை விவசாயிகள் அந்த உதவியை அடைய முடிவதில்லை. காரணம், பல ஏழை விவசாயிகள் சொந்த நிலத்தில் சாகுபடி செய்வதில்லை. அவர்களுக்குச் சொந்த நிலம் இல்லை. பட்டாதார்களுக்குத்தான் உரம் கொடுக்க முடியும் என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். மிராசுதார்களிடமிருந்து நிலங்களைப் பெற்று சாகுபடி செய்யும் விவசாயிகள் பட்டாதார்களாக இல்லாததால், அவர்களுக்கு உரம் கொடுக்கப்படுவதில்லை. இந்தக் கஷ்டத்தை நீக்கவேண்டும். இதற்காக, அரசாங்கத்தார் அவர்களுக்கு உரத்தை வழங்கிவிட்டு, நிலத்திலிருந்து அறுவடை செய்த பிறகு அவர்களிடமிருந்து உரத்திற்கான பணத்தை வசூலிக்கலாம். இப்படிச் செய்தால் விவசாய உற்பத்தி மிகவும் அதிகரிக்கும் என்று நம்புகிறேன்.

அத்துடன், தஞ்சாவூர் மாவட்டத்தில் ஆடுதுறை பண்ணை போன்ற விவசாய ஆராய்ச்சிப் பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் விதைகள் நல்ல பலனை அளிக்கின்றன. விவசாய டெமான்ஸ்டிரேட்டர் ஆபீஸ்களிலும் விதைகள் வழங்கப்படுகின்றன. ஆடுதுறைப் பண்ணை போன்ற பண்ணைகளிலும் விதைகள் வழங்கப்படுகின்றன. விவசாய டெமான்ஸ்டிரேட்டர் ஆபீஸ்களில் கொடுக்கப்படும் விதைகள் நல்லவையாக இல்லை. அவை அனேகமாக முளைப்பதே இல்லை. காரணம், மிராசுதார்களிடமிருந்தோ, சாகுபடியாளர்களிடமிருந்தோ நல்ல விதைகள் வாங்கப்படாததுதான். ஆடுதுறை பண்ணையில் வழங்கப்படும் விதைகள் நல்ல பலனை அளிக்கின்றன. ஆகவே, தஞ்சாவூர் ஜில்லாவில் எல்லா பிர்க்காக்களுக்கும் ஆடுதுறை பண்ணையிலிருந்து விதைகள் வழங்கப்பட்டால் ரொம்ப நல்லது என்று சொல்லிக்கொள்கிறேன்.

விவசாய உற்பத்தியை பெருக்கும் நிலச்சொந்தக்காரர்களில் ஒரு சிலருக்கு அரசாங்கத்தால் பரிசுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. "உண்டி கொடுத்தார் உயிர் கொடுத்தார்" என்று சொல்லப்படுகிறது. நேரடியாக நிலத்தில் இறங்கி பாடுபடும் விவசாயிகளுக்கு இந்தப் பரிசுகளைக் கொடுத்தால், விவசாய உற்பத்திக்கு ஆக்கமளிப்பதாக இருக்கும் என்று நம்புகிறேன். நிலத்தில் இறங்கி விவசாயம் செய்யாத நிலச்சொந்தக்காரர்களுக்கு பரிசு அளிப்பதானது விவசாயிகளுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிப்பதாகவோ, விவசாய உற்பத்திப் பெருக்கத்திற்கு ஆக்கமளிப்பதாகவோ இல்லை என்று கருதுகிறேன். ஆகவே, இந்தப் பரிசுகளைக் கொடுக்கும் விஷயத்தில் நிலத்தில் இறங்கி வேலைசெய்யும் விவசாயிகளுக்கும் ஓரளவு இடம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாயவரம் தொகுதியில் கால்நடை ஆஸ்பத்திரி ஜனங்களுக்கு சௌகரியமான இடத்தில் இல்லை. கால்நடைகளை வைத்தியத்திற்கு மாயவரத்திற்கு அழைத்துக்கொண்டுபோக வேண்டியிருக்கிறது. காரைக்கால் செல்லும் மார்க்கமாக ஆஸ்பத்திரிக்குப் போகவேண்டியிருக்கிறது. ஆகவே, மாயவரம் ஸப்-ரெஜிஸ்டிரார் ஆபீசுக்குப் பக்கத்தில் கால்நடை ஆஸ்பத்திரியை அமைத்தால் பல கிராம மக்களுக்கு மிகவும் சௌகரியமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

மேலும், கோயில் நிலங்களில் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு விதைகளும், தக்காவிகளும் கொடுக்கப்படுவதில்லை. காரணம், கோயில் தர்மகர்த்தாக்கள் இவைகளைக் கொடுப்பதில்லை. சட்டத்தில் இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள். கோயில் நிலங்களில் சாகுபடி செய்யும் [illegible]

களுக்கும் தசுக்கூலிகளும், விதைகளும் கொடுக்கப்படுவதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்தால் ரொம்பவும் நன்றாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

**Sri T. KARIYA GOUNDER :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, விவசாய இலாகா, மீன் பிடிப்பு இலாகா, தேசீய அபிவிருத்தி திட்ட இலாகா போன்ற ஐந்து, ஆறு இலாகாக்களின் மானியகோரிக்கைகளின் மீது பேசுவதற்கு எங்களுக்கு ஏழு நிமிஷங்கள்தான் கொடுத்திருக்கிறீர்கள். இந்த மானிய கோரிக்கைகளை நான் ஆதரிப்பதுடன் சில முக்கியமான விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன்

எல்லோரும் இந்த நாட்டைப் புதுப்பிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டு மிகுந்த ஆர்வத்துடன் பேசுகிறார்கள். விவசாயத்தைப் பொறுத்த வரையில், குறைகூறுபவர்கள் வெகு சிலராகவே இருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

விவசாய இலாகாவிற்கு கடனாகவும் மானியமாகவும் நிறையப் பணம் வழங்கப்படுகிறது. ஆனால் தகுந்த காலத்தில் விவசாயிகளுக்குப் பண உதவி கிடைப்பதில்லை. தகுந்த காலத்தில் விவசாயிகளுக்குப் பண உதவி அளிப்பதற்குத் தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஜில்லா அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு விவசாய முறையைப் பற்றி சில கனம் நண்பர்கள் பேசினார்கள். எங்கள் ஜில்லா ரொம்ப வறண்ட பிரதேசம். பாலாற்றைப் பற்றிப் பல ஆண்டுகளாகப் பேசி வருகிறோம். கனம் நிதி அமைச்சர் அவர்கள் பட்ஜெட் விவாதத்திற்கு பதில் சொல்லும்போது, பாலாற்றுப் பிரதேசத்தில் பூமிக்குள் இருக்கும் தண்ணீரை (sub-soil water) வெளியே கொண்டு வருவது பற்றி கவனிப்பதாகச் சொன்னார்கள். பாலாற்றில் தண்ணீரே கிடையாது. அங்கே 1903-ம் வருஷத்தில் வந்ததைப் போல் சென்ற ஆண்டிலும் ஒரு பெரிய வெள்ளம் வந்தது. ரெயில்வேக்காரர்கள் அங்கே ஸப்-ஸாயில் வாடரை வெளியே கொண்டுவருவதற்காக ஒரு பெரிய கிணற்றை வெட்டினார்கள். ஆனால் 35 அடி ஆழம் வெட்டப்பட்டதும் பாறை வந்துவிட்டது. ஆகவே பாலாற்றில் அந்த இடத்தில் ஸப்-ஸாயில் வாடர் இல்லை என்பதை நான் மிகவும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். கனம் விவசாய அமைச்சர் அவர்கள் கிருஷ்ணா—பெண்ணாறு திட்ட யோசனையை ரொம்ப நாட்களுக்கு முன் கொண்டுவந்தார்கள். ஆனால், இப்போது சமீபத்தில் மத்திய சர்க்கார் அமைச்சர் அவர்கள் இங்கே வந்து மண்டலக் கவுன்சிலை ஆரம்பித்து வைத்தபோது, கோதாவரித் திட்ட யோசனையை நிறைவேற்றப் போவதாகக்கூறினார்கள். அந்தத் திட்டம் வட ஆற்காட்டிலுள்ள எல்லாப் பகுதிகளுக்கும் பிரயோஜனப்படுமா என்று கேட்டபோது, அதுபற்றி பின்னர் யோசிக்கப்படும் என்று சொன்னார்கள். பல கனம் நண்பர்கள் சொன்னது போல், சட்டசபையின் இந்தக் கூட்டம் முடிவதற்குள்ளாவது அந்தத் திட்ட யோசனை அங்கீகரிக்கப்படுவதற்கு அரசாங்கம் முயற்சி செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஸர் சி. பி. ராமசாமி ஐயர் அவர்கள் கூறிய திட்டமாகிய கங்கையை கன்னியாகுமரியுடன் இணைப்பதற்கான கால்வாய் வெட்டும் திட்டத்தை நிறைவேற்றாவிட்டாலும், கோதாவரித் தண்ணீரை வட ஆற்காட்டிற்குக் கொண்டுவருவதற்கான கால்வாய் வெட்டும் திட்டத்தையாவது அமலுக்குக் கொண்டுவர வேண்டும் என்று அரசாங்கத்தாரை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவு விவசாய முறை வட ஆற்காடு ஜில்லாவிற்கு ஏற்றது என்று நான் நினைக்கவில்லை.

எங்கள் ஜில்லாவில் நாங்கள் மிகவும் கஷ்டப்படுகிறோம். [illegible] தண்ணீரைப் பயன்படுத்துவதற்கான திட்டங்கள் போன்ற [illegible] [illegible] நீர்ப்பாசனத் திட்டங்களைப்பற்றி இங்கே பல கனம் [illegible]

பேசுகிறார்கள். எங்கள் ஜில்லாவிற்கு எந்தவிதமான நீர்ப்பாசனத் திட்டமும் இல்லை. நாங்கள் கஷ்டப்படுவதைப்பற்றி கனம் அங்கத்தினர் ஸ்ரீ எ. கோவிந்தசாமி நாயகரும் பேசினார். விவசாயப் பொருள்களை உற்பத்தி செய்வதில் எவ்வளவோ சிரமம் இருக்கிறது. இதன் காரணமாக படி 12 அணுவாக இருந்த அரிசியின் விலை படி 14 அணுவாக உயருகிறது. விவசாயிகளின் கஷ்டங்களை இங்கே நாங்கள் எடுத்துக் கூறுவிட்டால், இன்னும் பத்து வருஷங்களில் இங்கே விவசாயிகள் இருக்கும் இடம் தெரியாதபடி போய்விடுவார்கள் என்று ஒரு கனம் அங்கத்தினர் கூறினார். பத்து வருஷங்கள் ஆகாது, அதற்குள்ளாகவே போய்விடுவார்கள் என்று நான் கூறுவேன். விவசாயிகள் விவசாயப் பொருள்களை உற்பத்தி செய்வதில் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.

இப்போது விவசாயிகளுக்கு கூட்டுறவு முறையில் கடன்கள் சரிவர வழங்கப்படுவதில்லை என்று புகார் சொல்லப்படுகிறது. கூட்டுறவு விவசாய பாங்குகளை கிராமாந்தரங்களில் ஏற்படுத்துவதற்கு இப்போது சர்க்கார் ஒரு திட்டத்தை வகுத்துக்கொண்டிருக்கிறார்கள். எங்கள் ஜில்லாவில் ஒரு பிளானிங் போர்டு கூட்டத்தில், இந்தத் திட்டம் அரக்கோணத்தில் ஆரம்பிக்கப்பட்டு அதன் பிறகு ஒவ்வொரு தொகுதியாக வரும் என்று தெரிவிக்கப்பட்டது. திட்டம் ஜில்லா பூராவிலும் நிறைவேறுவதற்கு பல வருஷங்கள் ஆகும். எங்கள் பகுதி ஜில்லாவின் கோடியில் உள்ளது. எங்கள் பகுதிக்கு இந்தத் திட்டம் வருவதற்கு 15 வருஷங்களாவது ஆகும். எந்தப் பகுதிகளிலுள்ள மக்கள் கிராம பாங்குகள் வேண்டுமென்று பெரிதும் விரும்புகிறார்களோ அந்தப் பகுதிகளில் முதலில் கிராம பாங்குகள் ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

விவசாயப் பொருள்களின் உற்பத்தி பெருக வேண்டும் என்று பேசுகிறோம். பல விவசாயிகள் பொருள்களை கட்டுபடியாகும் விலைக்கு விற்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே விவசாயப் பொருள்கள் நியாயமான விலைக்கு விற்கப்படுவதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யவேண்டும். உதாரணமாக, கரும்பின் விலை திடீரென்று மிகவும் குறைந்துவிடுகிறது. பத்து மணங்கு வெல்லம் உற்பத்தி செய்வதற்கு 20 ரூபாய் செலவாகிறது. விவசாய நிலத்தின் வருமானத்தைச் சேர்க்காமலே இதை நான் சொல்கிறேன். இப்படி உற்பத்தி செய்யப்படும் வெல்லம் 15 ரூபாய்க்குக் கூட விற்கப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடுகிறது. சர்க்கார் இந்தப் பொருள்களை விற்பதற்கு ஏற்பாடு செய்வார்களேயானால், இவைகளின் விலை அளவுக்கு மீறிக் குறைந்து போகாது என்பதை கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் இதைப்பற்றி சென்ற பிளானிங் போர்டு கூட்டத்தில் எங்கள் ஜில்லாவில் கேட்டேன். கேட்டபோது 'எருவுக்காக ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பிண்ணாக்கு வாங்கி உதவவும் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது' என்று சொன்னார்கள். ஆனால் பிண்ணாக்கை வாங்கிகாலக் கிரமத்தில் வினியோகிக்கின்ற அதிகாரிகளின் கவனக்குறைவினால் அது சரிவர நடைபெறுவதில்லை. பிண்ணாக்கு விலையை எடுத்துக்கொள்ளுங்கள். எங்கள் ஜில்லாவில் பாரம் என்று சொல்வார்கள். நாலரை பாரம் ஒரு டன் என்று நினைக்கிறேன். ஒரு பாரம் 60 ரூபாய் சொல்கிறார்கள். இதை வாங்குவது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அதற்குக் கட்டுப்பாடு வேண்டும். கட்டுப்பாடு என்று போட்டுவிட்டால் கருப்பு மார்க்கெட் கூடவே வந்துவிடும். கட்டுப்பாடு இருந்தாலும் சர்க்காரே அதை வாங்கி விவசாயிகளுக்குக் கொடுத்து உதவினால் அது விவசாயிகளுக்குப் பெரிதும் உதவும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். விவசாயப் பொருள்களைப் பாதுகாக்க வேண்டி ஆங்காங்கே பெரிய பெரிய கோடவுன்கள், கட்டிடங்கள் அமைத்துக் கொடுக்க அந்த அந்தப் பிரதேசத்திலுள்ள விவசாயிகள் முன் வந்தால் அவர்களுக்கு அரசாங்கம் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பிளாக் டெவெலெப்மெண்டு போன்ற திட்டங்களைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே பல கிராமங்களுக்கு நல்ல வசதி செய்யப்பட்டிருக்கிறது. மக்கள் ஆர்வத்தோடு 50 சதவிகிதம் செலவை ஒத்துக்கொள்ள முன்வரும் சமயத்தில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வருஷத்திற்குச் சற்றேறக்குறைய 80 லட்சம் ரூபாய் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நாங்கள் மக்களிடத்தில் வாக்குகளைப் பெறப் போனபோது அவர்களுக்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுப்பதாகச் சொல்லித்தான் வோட்டுகளைப் பெற்று வந்தோம். எங்கள் தொகுதியில் ஒவ்வொரு தாலூக்காவிற்கும் திட்டங்கள் வகுத்து 20 கோடி ரூபாய் திட்டத்தை சர்க்காரிடத்தில் கொடுத்திருக்கிறோம். மத்திய அரசாங்க உதவி நிறையக் கிடைக்கும், நமது சர்க்காரும் அதிக மானியம் ஒதுக்கும் என்றெல்லாம் ஜனங்களிடத்தில் சொல்லியிருக்கிறோம். நாங்கள் கொடுத்திருக்கும் வாக்குறுதிகளை நிறைவேற்ற சர்க்கார் மத்திய அரசாங்கத்திடம் இருந்து அதிகத் தொகையைப் பெற்று உதவி செய்ய முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

என்னுடைய செங்கம் தாலுக்காவைப்பற்றி ஸ்ரீ சண்முகம் சொன்னார். அவர் அந்தத் தாலுக்காவின் ஒரு பகுதியைச் சேர்ந்தவர். என்னைத்தான் செங்கம் எம்.எல்.ஏ. என்றே சொல்வார்கள். அங்கு மோட்டார் போகும் போது பள்ளத்தில் போய்ச் சிக்கிக் கொண்டதாகச் சொல்லப்பட்டது. அங்கு ரோடுகளே இல்லை. தேர்தலின் போது காலினாலேயே நடந்து மலை மலையாகத்தான் சென்றோம். அங்கு வாழ்கின்ற மக்களுக்கு இந்த உலகத்தில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதே ஒன்றும் தெரியாது. அவர்கள் எல்லாம் முன்னேற்றம் அடைய வேண்டுமென்றால் தேசிய விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழானாலும்சரி, பிளாக் டெவெலெப்மெண்டாக இருந்தாலும் சரி அந்த ஏரியாவுக்குத்தான் முதல் சலுகை கொடுக்கப்பட வேண்டும். மின்சாரத்தைப் பற்றியும் இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். தலைவர் அவர்களும் நேரமாகிவிட்டது என மணி அடிக்கிறார்கள். முடித்து விடுகிறேன். காவேரியில் வெள்ளம் போகிறது. ஆனால் எங்கள் பிராந்தியத்தில் இப்போது மின்சார வெட்டு இருக்கிறது. நாங்கள் மின்சாரத்தைக் கொண்டுதான் விவசாயம் செய்துகொண்டிருக்கிறோம். மேட்டூரில் வெள்ளம் இருந்தாலும் இங்குள்ள மின்சாரம் கொடுக்கக் கூடிய என்ஜின் சப்ளை கொடுக்கக் கூடிய அளவு தாங்க வில்லை என்று சொல்லப்படுகிறது. தினமும் பகல் ஆறு மணியும், இரவு நான்கு மணியும்தான் இப்போது மின்சாரம் கொடுக்கப்படுகிறது. இப்படி மின்சாரக் குறைவு வருகிற காலத்தில் சென்னை தர்மல் ஸ்டேஷனில் இருந்து முன்பு சப்ளை செய்யப்பட்டிருக்கிறது. அந்த மாதிரியாகவாவது இப்போது தர்மல் ஸ்டேஷனில் இருந்து மின்சாரத்தைக் கொடுத்து முழுநேரமும் இங்குள்ள விவசாயிகள் மின்சாரத்தை சப்ளை செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மானியத்தை நான் முழு மனதுடன் ஆதரிக்கிறேன்.

**DEPUTY SPEAKER: The hon. Member's time is up. He has already exceeded his time.**

***SRI T. KARIYA GOUNDER**: தலைவர் என்னை உட்காரும்படி சொன்னதற்கும் என்னுடைய நன்றி.

***SRI T. VELUCHAMI**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, விவசாயத் துறையில் நல்ல முன்னேற்றம் காணவேண்டுமென்ற நோக்கத்தோடு நாம் விவசாய காலேஜுகளை அமைத்து, அநேக விவசாய அதிகாரிகளை உற்பத்தி செய்து நம் ராஜ்யத்தில் பல இடங்களில் விவசாய ஆபீஸ்களைத் திறந்திருக்கிறோம். அந்த விவசாய அதிகாரிகளுடைய படிப்பு கிராமங்களில் உள்ள விவசாய மக்களுக்குப் பயன்படுகிறதா என்றால் இல்லை என்றுதான்



சொல்ல வேண்டும். பெரும்பாலும் இன்றைக்கு சர்க்காருடைய விதை, உரம் போன்றவைகளை விநியோகம் செய்வதற்கே அதிகாரிகளுக்கு நேரம் அதிகமாகத் தேவைப்படுகிறது. அவற்றை விற்கவும், விலை நிர்ணயிக்கவுமே பொழுது சரியாகப் போய்விடுகிறது. இதனால் ஒரு விவசாயி குறிப்பிட்ட ஒரு விஷயத்தில் அறிவு விளக்கம் பெறவேண்டுமானால் பத்துப் பதினைந்து மைல் தள்ளி கிராமத்திற்கு அப்பால் உள்ள இடத்தில் இருக்கும் விவசாய அதிகாரியைத் தேடிக்கொண்டு போக வேண்டிய நிலைமை இருக்கிறது. விவசாய அதிகாரியை விவசாயிகளே அணுகினால்தான் அறிவு விளக்கம் பெற முடிகிறது. அப்படியானால் கிராமங்களில் இருக்கும் பெரும்பாலான விவசாயிகளுக்கு இந்த அதிகாரியினால் பயன் ஏற்படுமா என்று கேட்க விரும்புகிறேன். சுமார் ஒரு லக்ஷம் விவசாயிகளுக்கு ஒரு டிமான்ஸ்ட்ரேட்டர் இருக்கும் நிலைமையில் ஒவ்வொருவரும் அந்த விவசாய அதிகாரியைத தேடிக்கொண்டு போக முடியுமா? ஆகவே விவசாய அதிகாரியினுடைய படிப்பு உண்மையிலேயே விவசாய மக்களுக்கும் பயன்பட வேண்டுமானால் இப்பொழுதிருக்கும் முறையிலே ஓர் மாற்றம் செய்ய வேண்டும். இப்பொழுது விவசாயி ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக அதிகாரியைப் பார்க்க வேண்டிய முறையை மாற்றி அதிகாரி விவசாயியை அணுகக்கூடிய நிலைமையிலே ஓர் மாற்றம் செய்ய வேண்டும். விவசாய அதிகாரிகளே கிராமங்கள் தோறும் சென்று விவசாய மக்களுக்குத் தேவைப்படுகிற அறிவு விளக்கத்தைக் கொடுக்கும்படியாகச் செய்ய வேண்டும். விவசாய அதிகாரிகள் தவணைதோறும் ஒவ்வொரு கிராமத்திற்கும் செல்ல வேண்டும். கிராமங்களுக்கு மாத்திரம் போனால் போதாது. விளைபொருட்கள் விளையும் விவசாய நிலங்களுக்கே சென்று நிலங்களைப் பார்க்க வேண்டும். அங்கே பயிர்களைப் பார்க்கலாம். விவசாயிகள் வேலை செய்துகொண்டிருப்பதைப் பார்க்கலாம். நோய்களினால் பாதிக்கப்பட்டிருந்தால் இன்ன நோயினால், இன்ன காரணத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்றும் இன்ன மருந்தை இதற்கு உபயோகிக்க வேண்டும் என்றும் விவசாயிகளுக்கு நேரில் சொல்லலாம். அப்போதுதான் இந்த அதிகாரிகளுடைய படிப்பு மக்களுக்குப் பயன்படும். அப்படியானால்தான் விவசாயத்தில் உற்பத்தியும் பெருகும். இப்படிச் செய்ய வேண்டுமானால் இன்றைக்கு விவசாய அதிகாரிகளுக்கு இருக்கும் வேறு வேலைகளைக் குறைக்க வேண்டும். அதற்காக விதை உரம் முதலியவற்றை விற்பனை செய்யும் விஷயத்தில், கூட்டுறவு ஸ்தாபனங்களின் மூலமாக, அவற்றை விநியோகம் செய்வதற்கும், விலை நிர்ணயித்து வியாபாரம் செய்வதற்கும், ஏற்பாடு செய்யலாம் என யோசனை சொல்ல விரும்புகிறேன்.

நிற்க, விவசாயத்தில் தண்ணீர் மிகவும் அத்தியாவசியம். ஜீவ நதிகள் பாயும் சில பிராந்தியங்களில் தவிர ஏனைய பிராந்தியங்களில் ஒரு போக நஞ்சைதான் மிக அதிகம். ஐப்பசி, கார்த்திகை மாதத்தில் பருவ மழை காரணமாக குளங்களில்லெல்லாம் நீர் பெருகும். பின்னால் மழை வந்தாலும் வரும்; வராவிட்டாலும் இல்லை. ஆகவே ஒரு தடவை பெருகிய தண்ணீரை அனாவசியமாக செலவழிக்காமல் கட்டுப்படுத்தி சிக்கனமாக உபயோகித்து பயிர்கள் பூரணமாக விளையும் வரை பாதுகாக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. இவ்விதம் சிக்கனப்படுத்துவதற்கு, ஒரு நல்ல நிர்வாக அமைப்பு (ப்ராபர் மெஷினரி) தேவையாக இருக்கிறது. ஆற்றிலே இருந்து பிரியும் ஒரு வாய்க்கால் பல குளங்களைப் நிரப்பிக் கொண்டு வருகிறது. மேல் குளங்களிலுள்ள தண்ணீரை சில விஷமிகள் கீழ்க் குளங்களுக்கு தண்ணீர் விடாமல், அங்கேயுள்ள '**Surplus outlet, sand vent**' மூலமாக அதை வேறுவிதமாகத் திருப்பிவிட்டு கீழ்க் குளத்துக்காரர்கள் ஏதாவது தொகை கொண்டுவர வேண்டுமென்று எதிர்பார்த்து தண்ணீரை வீணாக்குகிறார்கள். பெருகிய குளங்களிலும் சில அதிகப் பிரசங்கிகளாகிய விவசாயிகள் மறு கால் வழியாக தண்ணீரை திறந்து விட்டு மீன் பிடிப்பதற்காக மீன் பிடிக்கும் சாதனங்களாகிய "கூதம்பை, கச்சால"

முதலியவைகளை வைத்து அனுவசியமாக தண்ணீரை சேதப்படுத்துகிறார்கள். சில பொறுப்பற்ற விவசாயிகள், மடையைத் திறந்து தன்னுடைய நிலத்திற்கு தண்ணீர் அடைக்கிறார்கள். தன் நிலம் பாய்ந்த பிறகு மறுபடி குளத்திற்குப்போய், மடையை அடைக்காமல் தண்ணீரை அனுவசியமாக வெளியே விட்டு விடுகிறார்கள். இம்மாதிரியான அசம்பாவிதங்கள் நடந்து விடுவதால் விவசாயத்திற்கு அவசியமான தண்ணீர் பிரயோசனப் படாமல் வீண் விரயமாய் போய்விடுகிறது. ஆதலால் தண்ணீரை சிக்கனப் படுத்தி விடுவதற்கு ஒரு நல்ல நிர்வாக அமைப்பு "**proper machinery**" தேவையாக இருக்கிறது. அப்படியிருந்தால்தான், இருக்கும் தண்ணீரை வைத்து பயிர்களை பூர்ண விளைவுக்குக் கொண்டுவர முடியும்; உணவு உற்பத்தியும் பெருகும்; விவசாயிகளுக்கும் நஷ்டம் எற்படாது; நாட்டில் உள்ள உணவுப் பஞ்சத்தையும் போக்க முடியும்.

DEPUTY SPEAKER : The hon. Member has got one minute **more.**

**Sri T. VELUCHAMI** : விவசாய "டிமான்ஸ்டிரேடர்" களிடம் தண்ணீரை ரெகுலேட் பண்ணக்கூடிய பொறுப்பைக்கொடுக்க வேண்டும். நீராணிகள் (**water regulators**) ஐ நியமித்து தண்ணீர் வீணுகப் போகாமல் பார்த்து ஷை கால்வாய்த் தண்ணீர் பாத்தியப்பட்ட குளங்களை எல்லாம் பெருக்கி பெருகியவுடன் தண்ணீரை சிக்கனப்படுத்தி பயிர்களுக்கும் தண்ணீரை சிக்கனமான முறையில் பாய்ச்சுவதற்கு தக்க எற்பாடு செய்ய வேண்டும். கிராம முனிசீபுகளின் உதவியோடு டிமான்ஸ்டிரேடர்கள் இந்த நீராணிகளை நிர்வகித்து தண்ணீரை சிக்கனப்படுத்தி நடத்தினுல் விவசாயிகளுக்கு உதவியாகவும் சௌகரியமாயிருக்கும். கிராம முனிசீப்களிடம் ஒரு புகார் புஸ்தகம் இருக்கவேண்டும். விவசாயிகள் இந்த நீராணிகள் பேரில் எதாவது குறைகள் சொல்ல வேண்டி இருந்தாலும் விவசாய சம்பந்தமான தாக்கல் தெரிவிக்க வேண்டுமானுலும் அவைகளை இந்த புகார் புத்தகத்தில் எழுதினுல், டிமான்ஸ்டிரேடர்கள் தவணைதோறும் வரும்போது இந்த புகார் புஸ்தகத்தில் காணப்பட்டிருப்பவைகளைப் பார்த்து அதற்கு தகுந்த "**remedy**" கள் எடுக்க முடியும்.

**DEPUTY SPEAKER** : The hon. Member has got one minute more.

**Sri T. VELUCHAMI** : விவசாய அதிகாரிகள் ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று, கூட்டம் போட்டு, அந்த அந்தக் காலத்தில் செய்யப்படுகின்ற பயிர்களைப்பற்றியும், அவைகளை வளர்க்க வேண்டிய விதங்களைப் பற்றியும், அப்பயிர்களுக்கு வரக்கூடிய நோய் நொடிகளைப்பற்றியும் அதற்கு பரிகாரம் பற்றியும் எடுத்துச் சொன்னுல் மிகவும் நன்றாக இருக்கும். வெள்ளாமை காலங்களில் அவர்கள் நேரில் வந்து பயிர்களைப் பார்க்க வேண்டும். இந்த விஷயங்களில் அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

12-45 p.m. * **Sri N. S. RAMALINGAM** : உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மான்யக் கோரிக்கையை ஆதரிக்கும் முறையில் சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். முதல் ஐந்தாண்டு திட்டத்திலே விவசாய உற்பத்தி அதிகமாகியிருந்தாலும் நமது நாட்டுக்குத் தேவையான அளவு உற்பத்தி பெருகவில்லை. அதற்கு தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன். விவசாயத்துக்கு மண் தான் முக்கியம். விவசாய உற்பத்தி மண் வளத்தைப் பொறுத்துத்தானிருக்கிறது. விவசாயிகளுக்கு மண்ணைத் தவிர வேறு கதியில்லை. ஆகையினுல் மண் வளத்தைப் அதிகப்





படுத்துவதற்கு நாம் முயற்சிக்க வேண்டும். வருஷா வருஷம் 3½ கோடி ரூபாய் ரசாயன உரத்தை நாம் வாரி இறைக்கிறோம். இது சரியான முறையில் பயன்படுத்தப்படுகிறதா என்பதை நாம் யோசிக்க வேண்டும். ஒரு நோயாளி வியாதியால் அவஸ்தைப்படுகிறான் என்றால், அந்த நோய் என்ன என்பதை அறிந்து அந்த நோய்க்கு தகுந்த மருந்தைக் கொடுக்க வேண்டும். நாம் மண்ணினுடைய தரத்தை அறியாமல் இப்போது ரசாயன உரத்தை வாரி இறைத்துக் கொண்டிருக்கின்றோம்.

சமீபத்தில் "**American Technical Mission**" மூலமாக ஒரு "**Soil Testing Laboratory**" கோயம்புத்தூரில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ரசாயன உரத்தை உபயோகப்படுத்தி விவசாயம் செய்த ஒரு நாகப்பட்டிணம் விவசாயியின் நிலத்திலிருந்து "சாம்பிள்" எடுத்து பரிசீலனை செய்து பார்த்ததில் "**Phosphate Ammonium Sulphate**" தேவையில்லை "**calcium**" தேவை என்று சொல்லப்பட்டது. "**Soil Testing Laboratory**" எல்லா ஜில்லாக்களிலும் எற்படுத்த முடியாவிட்டால் குறிப்பிட்ட சில ஜில்லாக்களிலாவது எற்படுத்த வேண்டும். தஞ்சை ஜில்லாவில் 14 லட்சம் எக்கர்கள் நீர்ப்பாசன வசதியால் சாகுபடி செய்யப் படுகின்றன. பத்து ஆயிரம் எக்கர்களுக்கு ஒரு சாம்பிள் என்று எடுத்தாலும் 140,000 சாம்பிள்கள் எடுத்து 'டெஸ்ட்' செய்ய வேண்டியிருக்கும். அப்படி டெஸ்ட் செய்வதற்கு கோயம்புத்தூருக்கு எடுத்துப் போக வேண்டும் என்றால் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகையினுல் தஞ்சாவூரிலேயே ஒரு "**Soil Testing Laboratory**" எற்படுத்தினுல் நன்றாக இருக்கும். இது தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, தென் ஆற்காடு முதலிய ஜில்லாக்களிலிருந்து "சாம்பில்கள்" எடுத்து டெஸ்ட் செய்வதற்கு அனுகூலமாயிருக்கும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். "**American Technical Mission**" 24 "**Laboratory**" களை எற்படுத்துவதற்கு தயாராக இருக்கிறது. இதுவரை 13 "**Laboratory**"-கள் ஒதுக்கப்பட்டன, இன்னும் 11 "**Laboratory**" கள் மீதம் இருக்கின்றன. நமது அரசாங்கம் இதைப்பற்றிக் கேட்பார்களானுல், அவர்கள் கொடுக்கத் தயாராக இருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். ஆகையால் நம் அரசாங்கம் இந்த விஷயத்தில் முயற்சி செய்து தஞ்சாவூரில் ஒரு "**Laboratory**" எற்படுத்துவதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்பொழுது நம் ராஜ்யத்தை இரண்டாகப் பிரித்து, கோயம்புத்தூரில் ஒன்றும், தஞ்சாவூரில் ஒன்றும் என்று வைத்து "**Soil Test**" செய்து மண் வளத்தைப் பெருக்கி உற்பத்தியை அதிகரிக்க முடியும்.

தற்பொழுது விவசாயிகளுக்குக் கொடுக்கும் "**Oil Engine**" "**Tractor**", "**Filter Point Set**" மிகவும் குறைவு. இவைகளை அதிகமாக வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

"விதைப் பண்ணைகளை" எற்படுத்தும் இந்த சமயத்தில் நான் அரசாங்கத்திற்கு ஒரு எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். இதிலுள்ள குறைகள் உடனடியாக தீர்க்கப்படாவிட்டால் ஒரு கெட்ட பெயர் வந்து சேரும். இதைப் பார்த்துக் கொள்ளுவதற்கென்று போடுகின்ற மானேஜர்களும் "**Demonstrator**"-களும் சேர்ந்த 15 நாட்களில் லீவு எடுத்துக் கொண்டு போய்விடுகிறார்கள். அவர்களுக்கு ஊதியம் போதவில்லை என்று சொல்லுகிறார்கள். மற்ற "**Demonstrator**"-களுக்கு "**F.T.A.**" கிடைக்கிறது. இதற்கென்று போடப்படும் "**Demonstrator**"-கள் ஒரே இடத்திலேயே இருக்கின்றபடியால் அவர்களுக்கு இது கொடுக்கப்படுவதில்லை. ஆகையால் அவர்கள் வரும்படி போதவில்லை என்று சொல்லுகிறார்கள். அவர்கள் செய்யக்கூடிய வேலை மிகவும் கஷ்டம். காலை முதல் இரவு வரை அவர்கள் சுற்றி கஷ்டப்பட்டு வேலை செய்ய வேண்டியிருக்கிறது. அதற்குத் தகுந்தாற்போல் அவர்களுக்கு ஊதியம் கொடுக்க வேண்டும்.

இதற்குத் தகுந்தபடி "**Demonstrator**" இருக்க வேண்டும். அப்படிச் செய்தால் விதைப் பண்ணைகள் நன்ருக நடந்து, வெற்றிபெறும். இப்பொழுது இருக்கும் ரீதியிலேயே வேலைகள் நடந்துகொண்டு போனுல் கெட்ட பெயர் வந்துவிடுமே என்று பயப்படுகின்றேன். ஆகையால் இந்த விஷயத்தில் ஆவன செய்ய வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகின்றேன். பயிர்களுக்கு இயற்கைக் கோளாறுகள் ஏற்படுகின்றன என்பதைப் பார்த்து, டாக்டர் நடராஜன், "**Economic Adviser**" ஆக இருந்தபொழுது பயிர் இன்ஷூரன்ஸ், "**Cattle Insurance**" போன்ற திட்டங்களை செய்திருக்கிருர்கள். அந்த திட்டங்களை ஒரு குறித்த இடத்தில் பரீட்சார்த்தமாக செய்து பார்த்து அதிலுள்ள நன்மைகளை அறிய வேண்டும். மேல்நாடுகளில் பல இடங்களில் இம்முறைகள் இருக்கின்றதை நான் கேள்விபட்டிருக்கிறேன். "**Crop Insurance**" "**Cattle Insurance**" முதலியவைகளை பரீட்சார்த்தமாக ஒரு குறிப்பிட்ட இடத்தில் செய்து பார்த்தால் அதனுல் விவசாயிகளுக்கு நன்மைகள் ஏற்படும் என்று நம்புகிறேன்.

சமீபத்தில் நஞ்சாவூர் ஜில்லாவில், ஐந்து அல்லது ஆறு வருஷங்களுக்குள் இரண்டு புயல்கள் அடித்துவிட்டன. அங்குள்ள தென்னந் தோப்புகளெல்லாம் பாழடைந்துவிட்டன. மற்ற ஜில்லாக்களைவிட தஞ்சாவூரில்தான் தென்னை சாகுபடி அதிகம். அதை விருத்தி செய்வதற்காக அங்கு ஒரு ஆராய்ச்சிப் பண்ணை ஏற்படுத்த திட்டம் போடப்பட்டு ஆறு மாத காலம் ஆகியும் அது இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. அதை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். தஞ்சையில் சில இடங்களில் தென்னைகள் மலபாரைவிட இரண்டு மடங்கு மகசூல் அளிக்கிறது என்று ஆராய்ச்சி செய்து பார்த்ததில் தெரியவந்திருக்கிறது. மற்றும் தென்னங் கயிறுத் தொழில் ஏற்படுத்தலாம். அங்கே உப்பளங்கள் இருக்கின்றன. அந்த இடத்தில் கயிறுத் தொழிலை ஏற்படுத்த வேண்டும். கயிறு ஆராய்ச்சிப் பண்ணையும் ஒன்று அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். புயலால் பாதிக்கப்பட்ட இடங்களில் வருஷம் ஒன்றுக்கு $1\frac{1}{2}$ லட்சம் தென்னம்பிள்ளைகளை பாதி விலைக்குக் கொடுப்பதற்கு ஒரு திட்டம் போட்டு அரசாங்கம் ஒரு வருஷத்திற்கு அம்மாதிரி கொடுத்திருக்கிருர்கள். அதை நிறுத்தப்போவதாகத் தெரிகிறது. அதை நிறுத்தாமல் நீடித்து தொடர்ந்து கொடுக்க வேண்டுமென்று மறுபடியும் சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

**DEPUTY SPEAKER**: The hon. Member has got one minute more.

**SRI N. S. RAMALINGAM**: புகையிலை ஆராய்ச்சிப் பண்ணை ஒன்றை வேதாரண்யத்தில் ஏற்படுத்த வேண்டும். குண்டூர் பகுதியில் இருப்பதை விட இங்கு அதிக உற்பத்தி செய்ய முடியும் என்று சொல்லுகிருர்கள்.

கடலோரங்களில் முந்திரி செடிகளை வளர்க்க வேண்டும். அதற்கு ஆராய்ச்சி தேவையில்லை. இதைப் பயிர் செய்து, அந்தக் பயிர்களைக் காப்பாற்றுவதற்கு டி.எ.ஓ. போன்ற ஸ்பெஷல் சிப்பந்திகளை நியமிக்க வேண்டும். இவ்விதம் முந்திரியை அதிகமாக பயிர் செய்தால் அன்னிய நாட்டு செலாவணியும் ஓரளவுக்குக் கிடைக்கும்.

சென்ற வாரம் ஒரத்தநாடு கால்நடைப் பண்ணைக்குச் சென்றிருந்தேன். அங்கு 60 பொலி காளைகள் இருக்கின்றன. இதனுல் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படுகிறது. அவைகளை கோவில்களுக்கும், கூட்டுறவு சங்கங்களுக்கும் விட்டுவிட்டால் நல்ல இனமான மாடுகளும் கிடைக்கும். அரசாங்கத்திற்கு "ரெகரிங்" செலவும் மிச்சமாகும். அரசாங்கமும் இது விஷயமாக திட்டம் போட்டு நல்ல கன்றுகளை அதிகப்படியாக வழங்க வேண்டும். உப்பளச்சேரி மாட்டுப்பண்ணையை விருத்தி செய்ய வேண்டும். கொறுக்கையில் ஒரு நபர் 60 ஏக்கர் நிலம் கொடுப்பதற்கு தயாராக இருக்கிருர்.



அதை அரசாங்கம் ஆர்ஜிதம் செய்யவேண்டும். ஒரத்தநாட்டுப் பண்ணைக்கு கட்டிடம் கட்ட வேண்டும். மழை பெய்தால் மாடுகள் தங்குவதற்கு வசதியாக கட்டிடம் வேண்டும்.

சற்று நேரத்திற்கு முன்பு சில மந்திரிமார்களைக் கண்டு ஒரு தூது கோஷ்டி பேசிவிட்டு வந்தோம். மீன் பிடிக்கும் கூட்டுறவு சங்கங்களுக்கு மீன் பிடிக்கும் உரிமை ஐந்து வருஷத்து சராசரி தொகைக்கு குத்தகைக்கு விடப்பட்டு வந்தது. இப்பொழுது அதை ஏலம்போட ஏற்பாடு செய்திருக்கிருர்கள். அப்படி ஏலம்போட்டால் இந்த கூட்டுறவு சங்கங்களுக்கு மிகவும் கஷ்டம் ஏற்படும். குளம் சம்பந்தப்பட்ட வரையில் எப்படியிருந்தாலும், ஆற்றில் மீன் பிடிக்கும் உரிமை சம்பந்தப்பட்ட வரையில் ஐந்து வருஷத்திய சராசரி தொகைக்கு விடவேண்டும். குத்தகைக்கு ஏலத்துக்கு விடக்கூடாது என்று கேட்டுக்கொண்டு, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த இந்த மான்யக் கோரிக்கையை நான் ஆதரிக்கிறேன்.

**SRI GOMATHISANKARA DIKSHITAR**: கௌரவமிக்க உதவி சபாநாயகர் அவர்களே! நமது அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்த மூன்று டிமாண்டுகளையும் ஆதரிக்கும் முறையில் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். மக்களுக்கு மிகவும் ஜீவாதாரமாக உள்ள திட்டங்கள் அவர்கள் போட்டிருக்கும் திட்டங்கள். இந்த மான்யத்திற்கு இன்னும் அதிகமாகக்கூட நாம் அனுமதிக்கக் கடமைப்பட்டிருக்கிருேம். ஏனென்று கேட்டால், மக்களை க்ஷேமநல ராஜ்ய பிரஜைகளாக ஆக்க வேண்டுமானுல் இன்னும் நமக்கு வேண்டிய உணவு உற்பத்தி, குடிசைத் தொழில் உற்பத்தி முதலிய ஜீவாதார அபிவிருத்தி திட்டங்கள் நல்ல முறையில் நிறைவேற்றப்பட வேண்டும். அதற்கு நாம் எல்லோரும் அரசாங்கத்தோடு ஒத்துழைக்கவேண்டும். அதிலே ஆங்காங்கு சில குறைகள் இருக்கலாம். இருந்தாலும், பொதுவாக சமுதாயதிற்காக வேண்டிய திட்டங்களை நல்ல முறையில் நிறைவேற்றுவதில் அவர்கள் தக்க கவனம் செலுத்தி வருகிருர்கள். ஆங்காங்கு உள்ள குறைகளை யெல்லாம் பொறுப்புள்ள மக்கள் பிரதிநிதிகளாகிய நாம் தெரிவித்து அவைகளை நீக்குவதற்கு முயற்சி செய்வோமானுல், இன்றைய இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குள்ள கடமைகளை செய்தவர்களாவோம். 12-54 p.m.

முக்கியமாக, உணவு உற்பத்தி விஷயத்திலே நீர்ப்பாசன இலாகாவும், விவசாய இலாகாவும் ஒத்துழைத்தால்தான் உணவு உற்பத்தி அதிகமாக ஏற்படுவதற்கு லாயக்காக இருக்கும். நல்ல முறையிலே விவசாய மக்கள் தங்கள் பயிர்களை உயிர்போல் காத்துக்கொண்டு வரக்கூடிய காலத்திலே, நீர்ப்பாசன இலாகா உத்தியோகஸ்தர்கள் சிறிது கவனம் செலுத்தாமல் அவர்களுக்கு இடைஞ்சல் செய்து விடுகிருர்கள். அதன் மூலமாக உணவு உற்பத்தி குறைந்துபோகிறது என்பதை நல்ல செழிப்பான கனடியன் வாய்க்கால் பிரதேசத்திலும், தாமிரபரணி பிரதேசத்திலும் காணலாம். எங்கள் தொகுதியில் நாங்கள் கண்டுள்ள அனுபவமும் இதுதான். உயிர்போன்ற பயிர்களை நட்டுவிட்டு ஜலம் வேண்டும் என்று தவிக்கின்றுர்கள். இம்மாதிரி நிலைமை ஏற்படாமல் நீர்ப்பாசன இலாகாவும், விவசாய இலாகாவும் ஒத்துழைக்க வேண்டும். இந்தக் குறைகளை நமது மந்திரி அவர்கள் கவனிக்க வேண்டுமென்பதற்காக இவைகளை அவருடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

நல்ல விதைகளும், உரங்களும் சப்ளை செய்யப்படுகின்றன. அம்பாசமுத்திரத்தில் நெல் ஆராய்ச்சிப் பண்ணை இருக்கிறது. தமிழ் நாட்டில் கோயம்புத்தூரில் நல்ல முறையிலே ஆராய்ச்சி செய்து வருகிருர்கள். அப்படி செய்கின்ற ஆராய்ச்சிகளை விவசாய மக்களிடையே பிரசாரம் செய்வது போதாது என்பதை நான் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நல்ல தமிழ் திருநாள் கொண்டாடுவதுபோல, விவசாயத் திரு

நாள் ஊர் ஊராக, தொகுதி தொதியாக, பிர்கா பிர்காவாக கொண்டாட வேண்டும். அப்பொழுது நல்ல ரக விதைகள் தயார் செய்யப்படுவதையும், அவைகள் எவ்வாறு உபயோகிக்கப்பட வேண்டும் என்பது போன்ற விஷயங்களையும் ஆராய்ச்சியாளர்கள் பொதுமக்களுக்கு நல்ல முறையிலே எடுத்துரைக்க வேண்டும். அம்மாதிரியான பிரசாரம் மூலமாக நல்ல பயன் உண்டாகும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

உரத்தை பொறுத்தவரையில், கூடியவரையில் விவசாயிகளுக்கு கிடைக்கும்படியாக உள்ள ரீதியிலே ஜாக்கிரதையாக விநியோகத்தில் மந்திரி அவர்கள் கவனம் செலுத்திவருகிறார்கள். அதிலே சில சில விபரீதமான காரியங்கள் நடைபெற்ற போதிலும், முக்கியமாக உர விநியோகம் தனிப்பட்ட வியாபாரிகளிடம் அல்லாமல், கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் நடக்க வேண்டும் என்பதை நான் இந்த இடத்தில் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஜப்பானிய சாகுபடி முறை நல்ல உற்பத்தியை அளிக்கிறது. அந்தச் சாகுபடி முறையைப்பற்றி விவசாய இலாகாவில் முக்கியமான டெமான்ஸ்டிரேடர்கள் அதிக கவனம் செலுத்தி மக்களிடையே பிரசாரம் செய்ய வேண்டும். அது மாத்திரமல்ல. கால்நடை வளர்ப்பு சம்பந்தமாக, தற்போது தாலூகாதோறும் கால்நடை ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. ஆனால் அவைகளில் பயன்படும்படியான மருந்துகள் வைக்கப்படவில்லை என்று குறைகள் சொல்லப்படுகின்றன. அவைகள் நிவர்த்திக்கப்பட வேண்டும். நல்ல ரக காளைகளையும் மாட்டு இனங்களையும் உற்பத்தி செய்தால், அதன் மூலம் விவசாயம் அபிவிருத்தி அடையும். இந்த விஷயத்தில் இந்த இலாகா தக்க கவனம் செலுத்தவேணடும்.

சமுதாயநல திட்டங்கள், கிராம முன்னேற்ற திட்டங்கள் மிகவும் உயிருக்கு உயிரான திட்டங்களாகும். அந்தத் திட்டங்களுக்காக நமது அரசாங்கம் கோடிக்கணக்கான பணத்தை செலவழித்து வருகிறார்கள். அது நல்ல வெற்றி பெறவேண்டும் என்பதற்காக அதில் கண்ணும் கருத்துமாக கவனம் செலுத்தி அதுபற்றி அதிக கவலை எடுத்துக்கொள்ளுகிறார்கள் சர்க்கார். பொதுமக்களுடைய ஊழியர்களும், முக்கியமாக ஆளும் கட்சியைச் சேர்ந்த ஊழியர்களும், இன்னும் சமுதாயத்திற்காக கடமைப்பட்டிருக்கிற ஊழியர்களும் பொறுப்போடு இவைகளை கவனித்து வருகிறார்கள். ஆனால் இம்மாதிரி திட்டங்களை அமுலாக்குவதின் மூலமாக ஓரளவு வேலையில்லாத் திண்டாட்டம் நீங்கினாலும், இவைகளுக்காக ஒதுக்கப்பட்ட பணமானது கிராம மக்களுக்கு நல்ல முறையிலே பயன்படக்கூடிய ரீதியிலே கண்ணும் கருத்துமாக செலவழிக்கப்பட வேண்டும். இதில் அதிகாரிகள் தக்க கவனம் செலுத்த வேண்டும். முக்கியமாக பிளாக் டெவலப்மெண்டு ஆபீசர்கள் அநேக இடங்களில் அனுபவம் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். ரெவின்யூ டிபார்டுமெண்டில் அல்லாதபடி அதற்கென பயிற்சி அளிக்கப்பட்டு பொறுக்கப்பட்ட பிளாக் டெவலப்மெண்டு ஆபீசர்களாக இருந்தால்தான், இந்த சமுதாயநல அபிவிருத்தி திட்டம், தேசீய விஸ்தரிப்பு திட்டம் ஆகிய திட்டங்களை நல்ல பயன்தரக்கூடிய முறையில் அமுலாக்க முடியும் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். 'Village Guide . . .'

DEPUTY SPEAKER: The hon. Member's time is up. He will resume his seat.

p.m. SRI V. K. KOTHANDARAMAN: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, விவசாய இலாகாவின் மூலமாக விவசாயிகளுக்கு என்னென்ன உதவிகள் கிடைக்கவேண்டுமோ அவைகள் சாதாரண விவசாயிகளுக்கு இப்போது கிடைக்க வில்லை என்பதுதான் நான் நேரிடையாக கிராமங்களில் இருக்கக்கூடிய விவசாயிகள் மூலமாக தெரிந்துகொண்டது ஆகும். நல்ல விதைகளை கொடுப்பது நல்ல உரம் கொடுப்பது முதலிய பலவித உதவிகள். [illegible]

கின்றன. இவைகள் உடனுக்குடன் விவசாயிக்கு கிடைப்பதில்லை. இதற்கு
காரணம் அதிகமான விவசாய ஆபீஸ்கள் இல்லாததுதான். இதனுல் பல
ஏழை விவசாயிகள் சுற்றி அலைய வேண்டி யிருக்கிறது. இதனுல் அதிக
மாக பணம் செலவு செய்யவேண்டிய நிலையில் இருக்கிருர்கள். ஆகவே
எந்த அளவுக்கு விவசாயிகளுக்கு எளிதாக விவசாய இலாகா மூலம்
உதவிகள் கிடைக்க முடியுமோ அந்த அளவுக்கு விவசாய இலாகாவை
பெருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 1955-க்கு முன்
வரையில் விவசாயிகளுக்கு விவசாய இலாகா மூலமாக வட்டி
யில்லாத கடன் கொடுக்கப்பட்டு வந்ததாக தெரிகிறது. 1955-க்கு பிறகு
4½ சத விகிதம் வட்டிக்கு கடன் கொடுக்கப்பட்டு வருகிறது. இதனுல் ஏழை
விவசாயி கடன் வாங்கியும் முன்னேற முடியாத நிலையில் இருக்கிருன்.
ஆகவே இந்த மாதிரி கொடுக்கப்படும் கடன் வட்டியில்லாத கடனுக
கொடுக்கப்பட வேண்டும், அப்படி கொடுத்தால் விவசாயிகளுக்கு நல்லதாக
இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். அதே போன்று ரசாயன
கடனுக்கு ஏக்கர் ஒன்றுக்கு குறைந்த பட்சம் 50 ரூபாய் முதல் அதிக
பட்சம் 500 ரூபாய் கொடுக்கப்பட்டு வருகிறது. இன்றைய தினம் சாதாரண
விவசாயிகள் இந்த 500 ரூபாயை வாங்கியும் எந்த விதமான உதவியும்
பெற முடியாமல் இருக்கிருர்கள். ஆகவே ஏக்கர் ஒன்றுக்கு குறைந்தபட்சம்
500 ரூபாய் முதல் அதிகபட்சம் 2,000 ரூபாய் வரை கொடுக்க வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கனவே விவசாய இலாகா மூலமாக
இம்மாதிரி கடன்கள் கொடுக்கப்பட்டு வந்தது; இப்போது ரெவின்யூ இலாகா
மூலமாக கொடுக்கப்பட்டு வருகிறது. இவ்விதமாக விவசாய இலாகாவி
லிருந்து ரெவின்யூ இலாகாவுக்கு மாற்றப்பட்டிருக்கிற காரணத்தால் விவ
சாயிகளுடைய நிலைமை ரொம்பவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே
இந்த முறையை மாற்றி மீண்டும் விவசாய இலாகா மூலம் உதவிகள்
செய்து கொடுத்தால் நல்லதாக இருக்கும். அதே போன்று "டிராக்டர்
கள்" "புல்டோஸர்கள்" ஒவ்வொரு ஜில்லாவிலும் எத்தனை இருக்கிறது
என்று பார்த்தால் தஞ்சாவூர் ஜில்லாவுக்கு 14-ம் கோயம்புத்தூர், திரு
நெல்வேலி ஜில்லாக்களுக்கு 11, 12 என்றும் கொடுக்கப்பட்டிருக்கிறது.
அதே சமயத்தில் மற்ற ஜில்லாக்களுக்கு, குறிப்பாக வட ஆற்காடு ஜில்லா
வுக்கு, "புல்டோஸர்" 3, "ட்ராக்டர்" 3, என்ற நிலையில்தான்
இருந்து கொண்டிருக்கிறது. இது தவிர தஞ்சை ஜில்லாவுக்கு புயல்
நிவாரணத்திற்கு கொண்டுபோகப்பட்ட ட்ராக்டர்கள் இதுவரையிலும் வர
வில்லை என்று தெரிகிறது. இத்தகைய மேட்டுப் பிரதேசமான ஜில்லா
வாகவும் மோசமான நிலையில் இருக்கக்கூடிய ஜில்லாவாகவும் இருக்கிற
வட ஆற்காடு ஜில்லாவிலுள்ள, விவசாயிகளுக்கு இருக்கின்ற
குறைகளை தீர்க்க வேண்டும். அதோடு அவர்களுக்கு வேண்டிய ட்ராக்டர்
களும் புல்டோஸர்களும் அதிமாக கொடுத்துதவ வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். தஞ்சாவூர், கோயம்புத்தூர், திருநெல்வேலி முதலிய
ஜில்லாக்களுக்கு மாத்திரம் அதிகமாக இவ்வுதவிகள் கொடுக்கப்
பட்டிருப்பதைப் பார்த்தால் அங்கெல்லாம் அதிகமான நிலபிரபுக்கள்
இருக்கின்ற காரணத்தால் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று பார்க்கவேண்டிய
நிலை இருக்கிறது. ஆகவே எந்த ஜில்லாவுக்கு அதிகமாக இவ்வுதவி
கள் செய்து கொடுக்க வேண்டுமோ அந்த ஜில்லாக்களுக்கு அதிகமாக
உதவிகள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
அடுத்தபடியாக பூச்சி மருந்துகள் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டு வரு
கின்றன. இம்மருந்து அசல் விலைக்கு நஷ்டமில்லாத நிலைமையில் விவ
சாயிகளுக்கு விற்கப்பட்டுவருவதாக சொல்லப்படுகிறது. இதனுல் விவசாயி
கள் அதிகமான பலனை அடைய முடியாது. ஆகவே இம்மருந்து
விவசாயிகளுக்கு குறைந்த விலையில் கொடுக்கப்பட வேண்டும் . . .

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுது குறைந்த
விலைக்குத்தான் கொடுக்கப்பட்டு வருகிறது.

Sri V. K. KOTHANDARAMAN : எனக்கு குடியாத்தம் விவசாய ஆபீஸிலிருந்து கிடைத்த தகவலின்படி குறைந்த விலைக்கு கொடுக்கப்பட வில்லை என்றுதான் தெரிகிறது. இப்போது மந்திரி அவர்கள் குறைந்த விலைக்கு கொடுக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். அப்படியென்றால் சந் தோஷம்தான். இது தவிர இப்போது விவசாய இலாகாவில் மேஸ்திரிகள் பிர்க்காவுக்கு ஒருவர்தான் இருக்கிறார், இதை மாற்றி பிர்க்காவுக்கு இரண்டு பேராக ஆக்க வேண்டும். இதே போன்று தாலூகாக்களில் இருக்கும் "மாடல் பாரங்களை" அதிகமாக்க வேண்டும். இது தவிர விவசாய படிப்புக்காக அதிகமான மாணவர்கள் படிப்பதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டும். இப்போது விவசாய படிப்புக்கு அதிகமாக மனுக்கள் வருவ தில்லை என்று மந்திரி அவர்கள் சொன்னார்கள். அது ஏனென்றால் விவசாயப் படிப்பு படித்த மாணவர்களுக்கு வேலையாகும் பொழுது நல்ல சம்பளம் கொடுக்கப்படுவதில்லை என்று தெரிகிறது. ஆதலால் அவர் களுக்கு சம்பளத்தை கூட்ட வேண்டும். இவ்விதம் சம்பளத்தை கூட்டி னால்தான் நல்லது. உணவு உற்பத்தி விஷயத்தில் மணிலா போன்ற தான்யங்களுக்கு மார்க்கெட்டிங் சொஸைட்டி இருப்பது போன்று நெல் போன்ற தான்யங்களுக்கும் மார்க்கெட்டிங் சொஸைட்டி ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே போன்று தான் விவசாய இலாகாக் களில் பழைய இன்ஜினை வாங்கிவிட்டு புதிய இன்ஜின் வாங்கப்பட்டதாக கையெழுத்து வாங்கி வைத்துக்கொண்டிருக்கிற நிலைமை பல இடங்களில் இருந்துகொண்டிருக்கிறது. இதை யெல்லாம் சரியாக கண்காணிக்க வேண்டும். இது தவிர கம்யூனிட்டி டெவலப்மெண்ட் இலாகா சம்பந் தப்பட்ட வரையில் விவசாயத்திற்காக தனித்தனி அதிகாரிகளை நியமிக்க வேண்டும், ஏனென்றால் ஜில்லா கலெக்டர்களுக்கு கூடுதல் வேலைகள் இருந்து கொண்டிருப்பதால் இவை நன்றாக கவனிக்கப்படுவதில்லை என்று தெரிய வருகிறது. அதே போன்று கூட்டுறவு விவசாயம் என்பது மிக மிக முக்கியம் என்பதை சர்க்காரும் உணர்ந்திருக்கிறது. மேலும் சமீபத்தில் சீனாவுக்கு போய்விட்டு வந்த காங்கிரஸ் தூதுகோஷ்டி, அங்கு 10 லட்சம் சிறு விவசாயப் பண்ணைகள் இருக்கிறது என்று சொன்னார்கள். அது போன்று வட ஆற்காடு ஜில்லாவைப் பொறுத்த வரையில், இப்போது விவசாய இலாகா டைரக்டராக இருக்கும்—இதற்கு முன்னால் கலக்டராக இருந்த—திரு. ஏ. வெங்கடேசுவரன் அவர்கள் அங்கு இருக்கிற 11 ஆயிரம் ஏக்கர் புறம்போக்கு நிலங்களை விவசாயம் செய்துகொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். காட்டிலாகாவும் இதை பரிசீலித்து பார்த்துவிட்டு காட்டிலாகாவுக்கு அவை உதாவதாகையால் அவற்றை விவசாயத்திற்கு கொடுத்துவிடலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். இதை பார்க்கும்போது இது வரையிலும் அவை விவசாயிகளுக்கு கொடுக்கப்படவில்லை என்று தெரிகிறது. ஆகவே இம்மாதிரியான நிலங்கள் விவசாயிகளுக்கு கொடுக்கப் படாததால் அவர்கள் பெரிய அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை தெரியப்படுத்திக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : The hon. Member's time is up.

1-10 p.m. *Sri M. KANDASAMI KANDAR : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த விவசாய அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த விவசாய மான்ய கோரிக்கையை ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். விவசாயம் ஒரு லாபகரமான தொழிலே அல்ல. நீண்ட நாட்களாக எங்கள் முன்னோர்கள் காலத்தி லிருந்து இதை செய்து வருகிறார்களே தவிர வேறு ஒரு தொழிலும் கிடையாது. நூறு வருடங்களாக விவசாயம் செய்து வந்த குடும்பம் வருஷம் ஒன்றிற்கு 10 ரூபாயாவது மீதம் வைத்திருந்தால் இப்பொழுது ஆயிரக்கணக்கில் மீதம் இருக்க வேண்டுமே தவிர கடன் வாங்க வேண்டிய நிலைமை இருந்திருக்காது. ஆகவே, சர்க்கார் கூடுமான வரையிலே விவ சாயிகளுக்கு எந்தெந்த விதத்தில் உதவி செய்ய வேண்டுமோ அந்தந்த

18th July 1957]    [Sri M. Kandasami Kandar]

விதத்தில் உதவி செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். எந்த விதத்தில் உதவி செய்யவேண்டுமென்பதைப் பற்றியும் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த ட்ராக்டர்கள் விஷயத்தில், எக்கர் ஒன்றிற்கு 5 ரூபாய்தான் வசூல் செய்து கொண்டு இருந்தார்கள். ஆனால் இப்பொழுது 12 ரூபாய் வசூல் செய்து வருகிறார்கள். ஆகையால் ஒவ்வொரு இனத்திலும் விவசாயிக்கு அதிகமான செலவு ஏற்படுகிறதே தவிர எந்த விதமான மீதமும் அவர்களுக்கு இல்லை. விளைகிற பொருள்களையெல்லாம் விலைக்கு விற்றுவிட்டு ஏதோ அரை நெல்லாக இருக்கும் நெல்லை, அரிசியாக்கி மாடுகள் தாளி குடிப்பது மாதிரி குடித்து வருகிறார்கள். அவர்களுக்கு, அவர்களின் வாழ்க்கையை வளம் பொருந்திய வாழ்க்கையாக ஆக்கிக்கொள்ள முடிவதில்லை. கால மழை சரியாக பெய்யாததுதான் அதற்குக் காரணம். இதைத் தவிர, விவசாயிகளின் கால்நடைகளுக்கு திடீரென்று வியாதி வந்து செத்துவிட்டால் அதை எந்தக் கணக்கில் சேர்ப்பது என்று தெரியாமல் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். எத்தனையோ விதமான எதிர்பாராத நஷ்டங்கள் விவசாயிகளுக்கு ஏற்பட்டு விடுகின்றன. அவர்கள் வருஷ ஆரம்பத்தில், இந்த வருஷத்தில் இவ்வளவு ரூபாய் மீதம் செய்யலாம் என்று அல்ப சந்தோஷத்தோடு இருக்கிறார்கள். ஆனால் அந்த சந்தோஷத்தை நிறைவேற்றிக் கொள்ள முடியவில்லை. காரணம் என்னவென்று கேட்பீர்களேயானால், திடீரென்று ஒரு கிணறு இடிந்து விழுந்து விட்டாலும் கூட அதற்கு ஆயிரம், இரண்டாயிரம் என்று செலவு செய்யவேண்டியதாயிருக்கிறது. அப்படி செலவு செய்வது என்றால் அந்தக் கடனை திருப்பிச் செலுத்துவதற்கும், பிறகு அந்த விவசாயத்தை ஈடு செய்வதற்கும் குறைந்தது இரண்டு மூன்று வருடங்கள் ஆகிவிடுகின்றன. இந்த மாதிரி பல கோளாறுகள் விவசாயிகளுக்கு வருவதால் அவர்களுக்கு சர்க்கார் அதிகப்படியாக உதவி செய்ய வேண்டுமென்று நான் சர்க்காரை கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாக, இந்த அம்மோனியம் சல்பேட்டை இலவசமாக கொடுக்க வேண்டும் அல்லது எக்கர் ஒன்றிற்கு இவ்வளவு ரூபாய் என்று குறைந்த விலைக்குக் கொடுத்தால்தான் விவசாயிகள் நல்ல முறையில் அதிகப்படியாக உற்பத்தி செய்ய முடியும். இல்லாவிடில் இப்போதுள்ள முறையில் 'ஏதோ செய்கிறோம்' என்று விவசாயிகள் செய்கிறார்களே தவிர உற்பத்தியை அதிகரிக்கக் கூடிய அளவிற்கு அவர்கள் விவசாயம் செய்ய அவர்களுக்கு போதிய வாய்ப்பு இல்லை. காரணம் என்னவென்றால், அம்மோனியம் சல்பேட்டை மூட்டை ஒன்றிற்கு 30 ரூபாய்க்கு வாங்கி அதை சாகுபடிக்குக் கொண்டு போய் வயலில் போட்டு விருத்தி செய்யவேண்டுமென்றால் அதிகமான செலவுதான் ஏற்படுகிறதே தவிர குறைச்சலான செலவில் முடிவதில்லை. ஆகவே, இதில் சர்க்காருக்கு கொஞ்சம் நஷ்டம் ஏற்பட்டாலும் கூடுமான வரையில் அதை பாதி விலைக்கு குறைத்துக் கொடுக்க வேண்டுமே தவிர இப்போதைய விலை ரொம்பவும் அதிகம். இதைத் தவிர இந்த கால்நடைகளுக்காக கொடுக்கப்படும் கடன், வட்டி இல்லாமல் கடன் கொடுத்து அதை வசூலிக்க வேண்டுமே தவிர கடனுக்கு வட்டி கொடுக்க வேண்டுமென்று ஏற்பட்டால் அவர்களின் விவசாயம் சரிவர நடக்க கஷ்டமாயிருக்கும். உடல் உழைப்பைக் கொண்டு விவசாயம் செய்யும் விவசாயிகள் சில தாலுக்காக்களில், சில ஜில்லாக்களில் நிறைய இருக்கிறார்கள். நீர்த்தேக்கங்கள் இல்லாமல் மழையையே நம்பி வாழ வேண்டிய இடங்கள் பல இருக்கின்றன. அந்த மாதிரி இருப்பதில் சேலம், தர்மபுரி, ஹொசூர் தாலூகா, ஆரூர் தாலூகா போன்ற இடங்களில் விவசாயிகள் மழையை நம்பியே விவசாயம் செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே கூடிய வரையில் அவர்களுக்கு விஞ்ஞான முறையில் உதவி செய்து கூடிய சீக்கிரத்தில் அவர்களுக்கு மின்சாரம் கொடுத்து அவர்களுக்கு எவ்வளவு தூரம் உதவி செய்ய முடியுமோ அவ்வளவுதூரம் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் அவர்களுக்கு விவசாயம் செய்வதற்கு உற்சாகம் இருக்கும். இப்பொழுது இருக்கக்கூடிய முறையில் ஒரு விவசாயி விவ

சாயம் செய்யவேண்டுமானுல் ஒரு ஜதை மாடு வாங்க 100, 200 ரூபாய் கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. ஆகவே, இப்பொழுதுள்ள முறையை கான்சல் செய்துவிட்டு விஞ்ஞான முறையில் விவசாயம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். அதில் சர்க்காருக்கு நஷ்டம் வந்தால் அதை பொருட்படுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, கால்நடை அபிவிருத்திக்கு எத்தனையோ இடங்களில் நல்ல வசதி இருக்கிறது. தர்மபுரி தாலூக்காவில், ஒகனக்கல் காவேரி என்று ஒரு இடம் இருக்கிறது. அங்கு ஒரு கால்நடைப் பண்ணைவைத்து பால் பண்ணையை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு நல்ல ஜாதி காளைகளை ஒவ்வொரு விவசாயிகளுக்கும், கோவாப்பரேடிவ் சொஸைட்டி மூலம் கொடுத்தால் நல்ல விதமான பசுக்களை, காளைகளை உற்பத்தி செய்ய வசதி இருப்பதோடு விவசாயிகளுக்கும் மிகவும் உபகாரமாகவும் விவசாயம் நல்ல மாதிரி நடக்க உதவிகரமாகவும் இருக்கும். அடுத்தபடியாக எஸ்.பி.ஸி.ஏ. என்ற ஒரு டிப்பார்டுமெண்ட் இருக்கிறது. இந்த டிப்பார்ட்மெண்ட் கால்நடைகளுக்காக வேலை செய்து, கால்நடைகளுக்கு ஏதாவது வியாதி இருந்தால் அதற்கு தகுந்த சிகிச்சை செய்தால் பரவாயில்லை. வியாதியுள்ள கால்நடைகளை வைத்திருந்தால் அந்தக் குடியானவனுக்கு கேஸ் போட்டு 4, 5 ரூபாய் அபராதம் போடுகிறுர்கள். அப்படி ஏதாவது அருவருப்பான வியாதி வந்த கால்நடைகளை ஒரு விவசாயி வைத்திருந்தால், அதை கால்நடை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய் அந்த வியாதியைக் குணப்படுத்த வேண்டும். அதை விட்டு விட்டு சார்ஜ் பண்ணி 4, 5 என்று அபராதம் போட்டு விட்டால் அருவருப்பாக இருக்கக்கூடிய கால்நடைகளின் வியாதி தீரப் போவதில்லை. ஆகவே, இந்த எஸ்.பி.ஸி.ஏ. டிப்பார்ட்மெண்ட் இருப்பதைவிட இல்லாமல் இருப்பதே நல்லது என்பதே எனது அபிப்பிராயம். அடுத்தபடியாக, எங்கள் தாலுகாவில் சிறிது மாதங்களுக்கு முன்பு ஆலங்கட்டி மழை பெய்ததின் காரணமாக நாலைந்து மைல் விஸ்தீர்ணத்தில் உள்ள கடகத்தூர், நடு அள்ளி கிராமத்தில் நெல் சாகுபடி பூராவும் அழிந்து விட்டது. வெற்றிலை, வாழை, நெல் எல்லாம் அழிந்து விட்டன. அது குறித்து விவசாயிகள் சர்க்காரிடம் முறையிட்டுக் கொண்டிருக்கிறுர்கள். இது ஒரு சீசன் டைமாயிருக்கிறது. ஆகவே, விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிற நஷ்டத்தை ஈடு செய்ய விதைகளை இலவசமாகக் கொடுக்க வேண்டும். அதோடு ஏக்கர் ஒன்றிற்கு 50 ரூபாய் ஸப்ஸிடியாகக் கொடுக்க வேண்டுமென்றும் இந்த வருட கிஸ்தியை வஜா செய்து கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு எனது சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன்.

SRI S. KHADIR SHERIFF : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நமது விவசாய அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த மான்ய கோரிக்கையை நான் மனமார ஆதரிக்கிறேன். என்னுடைய தாலுகா வாலாஜா தாலுகா. அங்கு விவசாயந்தான் அதிகமாக நடக்கிறது. ஆற்காட்டில் வாலாஜாவில் விவசாய டிபார்ட்மெண்டின் ஒரு ஆபீஸ் இருந்தபோதிலும் அவர்களுக்கு பொது மக்களிடம் தொடர்பு குறைவாகத்தான் இருக்கிறது என்பதுதான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். விவசாயிகளுக்காக கவர்ன்மெண்ட் லட்சக்கணக்கில் ரூபாய் செலவு செய்கிறுர்கள். நான் சொல்ல விரும்புவது என்னவென்றுல், அந்த ரூபாய் நல்ல விதத்தில் செலவு செய்யப்படவேண்டும். விவசாய டிப்பார்ட்மெண்ட் அதிகாரிகள் அடிக்கடி விவசாயிகளை அணுகி அவர்களது குறைகளைக் கேட்டு அறியவேண்டும். விவசாய அதிகாரிகள் வில்லேஜ்களுக்கு சென்று அங்குள்ள விவசாயிகளின் குறைகள் என்ன என்ன என்று கேட்டு அறிந்து மாதா மாதம் ஜில்லா அதிகாரிகளுக்கு அவைகளை தெரியப்படுத்த வேண்டுமென்று ஒரு சட்டம் செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, அவர்களுக்கு விதைகள், உரங்கள் முதலியன அநேக ...ாகக் கொடுக்கப்படுகின்றன. ஆனுல், அவை டிபார்ட்மெண்ட் மூலமாகக்



கொடுக்கப்படுகின்றன. ஆனுல் அவைகள் பயிர் செய்யும் காலத்தில் கொடுக்கப்பட வேண்டும். விதைகள் இருந்தாலும், விலை இன்னும் நிர்ணயிக்கப்படவில்லையென்று டிபார்ட்மெண்டார் சொல்லிவிடுகிறுர்கள். அதே போல் உரம் இருந்தாலும், விலை நிர்ணயிக்கப்படவில்லை யென்று சொல்லிவிடுகிறுர்கள். அங்கிருக்கும் அதிகாரிகள் உடனடியாக மேலதிகாரிகளைக் கண்டு விலைகளைத் தெரிந்துக்கொண்டு விவசாயிகளுக்குத் தேவைப்படும் காலத்தில் விதை, உரம் முதலானவைகளைக் கொடுத்தால், விவசாயிகளுக்கு உதவியாயிருப்பதுடன் அரசாங்கத்தாருக்கும் நற்பெயர் கிடைக்கும். கவர்ன்மெண்டார் செலவு செய்யும் பணத்தைச் சரிவர விவசாயிகளுக்காக உபயோகித்தால், விவசாயம் மேலும் மேலும் விருத்தியடையும்.

வாலாஜா தாலுகாவில் மோரணம் என்று ஒரு பெரிய காடு இருந்தது. சுமார் பத்து வருஷங்களுக்கு முன்பாக அதை அழித்து, அதைச் சில விவசாயிகளுக்குக் கொடுத்து, வாரத்திற்கு சாகுபடி செய்யும்படியாக அதிகாரிகள் உத்தரவிட்டார்கள். ஆனுல், தண்ணீர் சரிவர வராததாலும், அவர்களுக்கு கட்டுப்படியாகாததாலும், அதை விட்டு விட்டார்கள். நிலம் இல்லாத ஏழை விவசாயிகளுக்கு ஒரு ஆளுக்கு இரண்டு ஏக்கர் வீதம் அதைத் தானம் செய்தால், 2,000 ஏக்கர் சாகுபடியாகும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். முதல் வருஷத்தில் சுமார் 10 விவசாயிகளுக்கு உபயோகப்படும்படியாக ஒரு பெரிய கிணறு எடுத்துத் தண்ணீர் வசதி செய்து கொடுத்தால், வீணுகப் போகின்ற 2,000 ஏக்கர் நிலம் நன்ருகச் சாகுபடியாகுமென்று நான் நினைக்கிறேன்.

மீன் வளர்க்கும் ஸ்தாபனம் வேலூரில்தான் இருக்கிறது. வாலாஜா தாலூகாவில் அம்மாதிரி ஒரு இடமும் கிடையாது. ஆதலால், அத்தாலுகாவிலும் மீன் வளர்ப்பதற்கு டிபார்ட்மெண்டார் வசதி செய்து கொடுத்தால், சுற்றுப்புறத்தில் இருக்கும் ஜனங்களுக்குச் சௌகரியமாக இருக்குமென்று நான் சொல்ல விரும்புகிறேன்.

ராணிப்பேட்டையில் கால்நடை ஆஸ்பத்திரி ஒன்று இருக்கிறது. அதற்குத் தகுந்த கட்டிடமும் இருக்கிறது. ஆனுல் அந்தப் பெரிய கட்டிடத்திற்கு எலெக்ட்ரிக் லைட் இல்லை. அநேக வருஷங்களாக எலெக்ட்ரிக் லைட் இல்லை. அதனுல், இரவில் கால்நடைகளைக் கொண்டுபோனுல், டாக்டர்கள் கஷ்டப்படுகிறுர்கள். ஆகையால், அந்தக் கட்டிடத்திற்கு லைட் போடும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

வாலாஜா தாலுகா பெரிய தாலுகா. அவ்வளவு பெரிய தாலுகாவிற்குத் தகுந்தபடி அங்கு காளைகள் இல்லை. அங்கு இரண்டு காளைகள் தான் இருப்பதாகத் தெரிகிறது. இன்னும் அதிகமாகக் காளைகள் இருக்க ஏற்பாடு செய்தால், அது விவசாயத்திற்குச் சௌகரியமாக இருக்கும். தயவுசெய்து கனம் அமைச்சர் அவர்கள் அதை உடனடியாகக் கவனித்து, வேண்டியதைச் செய்யும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இத்துடன் என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

* SRI K. GOPALA GOUNDER : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, எங்கள் செஞ்சி தாலூகாவில் சங்கராபரணி நதி ஓடுகிறது. அதில் கூடப்பட்டு அணைக்கட்டு கட்டப்பட்டிருக்கிறது. அதன் உதவியால் ஆறு ஏழு கிராமங்களில் 1,600 ஏக்கர் நஞ்சை நிலங்கள் சாகுபடியாகின்றன. 1949–50-ல் சர்க்கார் அந்த அணைக்கட்டு சம்பந்தமாக ஒரு திட்டம் போட்டு ஜலத்தைத் திண்டிவனம் தாலூகாவிற்குக் கொண்டுபோவதற்கு ஏற்பாடு செய்தார்கள். அந்தத் திட்டம் என்னவாயிற்றென்று கனம் மந்திரி அவர்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அந்தத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்து முடித்தால், செஞ்சி தாலூகாவில்

இன்னும் சுமார் 2,000 எக்கர் நஞ்சை நிலம் சாகுபடி செய்ய முடியும். திண்டிவனம் தாலூகாவிற்கு அந்த ஜலம் பாயக்கூடிய வசதியும் ஏற்படும். அந்த அணைக்கட்டு திட்டத்தை அரசாங்கம் உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுஇறேன்.

வல்லம் பிர்க்காவில் நல்ல நீர்வளமுள்ள இடங்கள் இருக்கின்றன. அங்கு ஏராளமான புஞ்சை நிலங்கள் இருக்கின்றன. அவற்றில் சவுக்கு மரங்களை வளர்க்கிறார்கள் ; அவுரியையும் பயிரிடுகிறார்கள். அந்த இடத்தில் போரிங் செட் வைத்துக் கொடுத்தால், நஞ்சைச் சாகுபடிக்கு வசதியாக இருக்குமென்று சர்க்காருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மழைகாலங்களில் ஏரிகளுக்குத் தண்ணீர் வரும்பொழுது, மணலும் வந்து சேர்ந்து ஏரிகள் மணலால் நிரப்பப்படுகின்றன. அந்த மணலைச் சீக்கிரத்தில் அப்புறப்படுத்திக் கொடுக்கவேண்டும் அல்லது அந்த ஏரிகளின் கோடிகளைத் தூக்கிக் கொடுத்தால், அந்தத் தண்ணீர் பாய்வதற்கு வசதியாக இருக்கும். அப்படியில்லையென்றால், அந்த ஏரிகளின் கீழ் இருக்கும் நிலங்களுக்கு 3 எக்கருக்கு ஒரு கிணறு வீதம் வெட்டிக் கொடுத்தால், ஜலக் கஷ்ட காலத்தில் அந்தப் பக்கத்தில் இருக்கும் ஜனங்கள் கிணற்றிலிருந்து ஜலம் இரைத்து சாகுபடி செய்ய வசதியாக இருக்கும். இதை கனம் மந்திரி அவர்கள் கவனிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இத்துடன் நான் என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* SRI N. V. CHOKKALINGAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்பொழுது பிரேரேபிக்கப்பட்டிருக்கும் மானியங்கள் அனைத்தையும் ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். விவசாயம் மிகவும் முக்கியமானது. அதில் சர்க்கார் மிகவும் நல்ல முறையில் கவனம் செலுத்தினாலும் கூட, அது சம்பந்தமான சில சிறிய விஷயங்களில் போதிய கவனம் செலுத்தாமல் இருக்கின்றார்கள் என்பது என்னுடைய அபிப்பிராயம். முதலாவதாக, காட்டிலுள்ள பசுந்தழைகளை சர்க்கார் அதிகாரிகள் ஏலம் போட்டுவிடுகிறார்கள். அவை சாதாரண விவசாயிகளுக்கு மிகவும் அவசியமானவை. அவர்களுக்கு காலி இடங்கள் ஜாஸ்தியாக இருக்காது. காட்டிலுள்ள பசுந்தழைகளை அவர்கள் சர்க்காருடைய குறுக்கீடு இல்லாமல் கொண்டுபோய் உபயோகப்படுத்த அனுமதித்தால், அவர்கள் விவசாயத்தை முன்னுக்குக் கொண்டுவர முடியும். ஆதலால், பசுந்தழைகளை ஏலம் போடாமல், எந்தெந்த விவசாயிகளுக்கு அவை தேவையோ அவர்களுக்கு அவற்றை எடுத்துச் செல்ல அதிகாரம் அளிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்பொழுது விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் உரங்கள், கடன்கள் முதலானவை அவர்களுக்கு அவசியமாயிருக்கும் காலத்தில் கொடுக்கப்படுவதில்லை. ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு காலத்தில் சாகுபடி நடக்கும். அதற்குத் தக்கபடி அந்தந்தப் பகுதியில் ஒவ்வொரு காலத்தில் இவை தேவையாக இருக்கும். உதாரணமாக, தஞ்சாவூர் ஜில்லாவில் ஆவணி மாதம் சாகுபடி ; இராமநர்தபுரத்தில் ஐப்பசி மாதம்தான் சாகுபடி நடக்கும். அம்மாதிரி பல்வேறு ஜில்லாக்களில் வெவ்வேறு காலத்தில் விவசாயம் செய்யப்படும். அந்தந்த ஜில்லாவிற்கு அந்தந்தக் காலத்தில் உரம் முதலானவை அங்குள்ள டெமான்ஸ்ட்ரேட்டர் மூலம் விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யவேண்டும். எவ்விதச் சுணக்கமுமின்றி அவர்களுக்கு உரம் முதலியவைகளை விநியோகம் செய்து உதவினால்தான், விவசாயம் முன்னேற முடியும். அந்தந்தக் காலத்தில் சாகுபடி செய்யத்தவறினால், கண்டு முதல் குறைந்துவிடும். ஆதலால், ஆங்காங்குள்ள அதிகாரிகளுக்குத் தகவல் கொடுத்து, விவசாயிகளுக்குத் தேவைப்





படும் கடன், மின்சாரம் முதலியவைகளை உரிய காலத்தில் கொடுத்து உதவும்படி ஏற்பாடு செய்யுமாறு நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, திருப்பத்தூர் தாலூகா புயலால் மிகவும் பாதிக்கப்பட்ட பிரதேசம். அங்கு சிங்கமனேரி பிளாக்கு அமைக்கப்பட்டு இப்பொழுது இரண்டு வருஷங்கள் ஆகின்றன. ஒரு வருஷத்திலேயே அந்த பிளாக்கிற்கு ஒதுக்கப்பட்ட "அல்லாட்மெண்டு" உபயோகப்படுத்தப்பட்டுவிட்டது. அதற்குப் பிறகு, அதை சமுதாய நலத் திட்டத்தின்கீழ் கொண்டுவரவேண்டுமென்று கேட்டும், ஒன்றும் செய்யப்படவில்லை. திருப்பத்தூரிலே பிளாக் ஏற்படுத்தினால்தான், அத்தாலூகாவில் தேசீய விஸ்தரிப்புத் திட்டத்தின்கீழ் செய்யப்போகும் ரோடு வசதிகள், மின்சார விஸ்தரிப்பு முதலியவைகளுக்கு சௌகரியமாயிருக்கும். அது புயலால் மிகவும் பாதிக்கப்பட்ட பிரதேசமாகையால், அங்கு ஒரு பிளாக்கு ஏற்படுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக நீர்ப்பாசன விஷயத்தில் வைகை அணைக்கட்டு ஏற்படுத்த நினைக்கும் காலத்தில் ராமநாதபுரம் ஜில்லா விவசாயிகள், திருப்பத்தூர் விவசாயிகள், சிவகங்கை விவசாயிகள் எல்லோரும் அதை ஆட்சேபித்தோம். வைகைத் தண்ணீர் இப்போது வேலூர் பகுதிக்குப் பாயும் தண்ணீர் போக மீதப்படும் தண்ணீர் எங்கள் தாலுக்காவுக்கு வருவது மாமூல் என்று ஆட்சேபித்தோம். அப்போது மராமத்து மந்திரி அவர்கள் மதுரையில் முகாம் செய்து இதைப்பற்றி விசாரித்தார்கள். அவர்கள் எங்கள் வாதம் உண்மை என்றறிந்து சிவகங்கையில் 7 ஆயிரத்து சொச்சம் எக்கரும் திருப்பத்தூரில் 300 அல்லது 400 எக்கருக்கும் தண்ணீர் விடச் சொன்ன தன் பின்னர்தான் வைகை திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின்னர் தான் அணைக்கட்டுத் திட்டம் தொடர்ந்து நடந்து வருகிறது. திருமங்கலம், சிவகங்கை, திருப்பத்தூர் தாலூக்காக்களிலெல்லாம் நஞ்சை நிலங்களை சர்க்கார் சர்வே செய்து பிளான்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. திருமங்கலம், தாலூகாவில் சர்வே செய்த பிறகு வாய்க்கால் வெட்டு வேலை நடக்கிறதாகக் கேள்விப்படுகிறோம். சிவகங்கை, திருப்பத்தூர் தாலூகாவில் வேலை எடுத்துக்கொள்ளப்படவில்லை. இந்த வேலையை கவனிப்பதற்காக மேலூரில் என்ஜினீரிங் ஸப் டிவிஷன் இருந்தது. அது இப்போது எடுக்கப்பட்டிருக்கிறது. இதனால் இங்குள்ள ஜனங்களுக்கு பீதி ஏற்பட்டிருக்கிறது. என்ன காரணத்தினாலோ சர்வே செய்யப்பட்டு மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பது தாமதமாகிறது. இதனால் ஜனங்களுக்கு பீதி ஏற்பட்டிருக்கிறது. இங்கும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இப்போது இருக்கும் கால்நடை விஷயத்தில் இப்போது கால்நடை ஆஸ்பத்திரியானது ஒரு தாலூக்காவுக்கு ஒன்று என்று இருக்கிறது. சில தாலூக்காக்களில் அதுவும் இல்லை. அந்த மாதிரி நிலைமை இருக்கக்கூடாது. மனிதனுக்கு வரக் கூடிய நோய் மாடுகளுக்கும்தான் வருகிறது. ஆகவே ஒவ்வொரு தாலூக்காவுக்கும் ஒரு ஆஸ்பத்திரி ஏற்படுமானால் அது கால்நடைகளை அபிவிருத்தி செய்ய நல்லதாக இருக்கும்.

திருப்பத்தூர் தாலூகாவில் விவசாயிகள் பொதுவாக நெல் போன்ற உணவு தானியத்தைத் தவிர அதிக விவசாயம் செய்வதில்லை. விவசாயிகள் எப்போதுமே கடனாளிகளாக இருக்கிறார்களேயொழிய மிச்சம் அடையக்கூடியவர்களாக இல்லை. நாம் எவ்வளவு உதவி செய்தாலும் அவர்கள் கடனாளிகளாகத் தான் இருப்பார்கள். நான் வேறொன்றும் கேட்கவில்லை. திருப்பத்தூர் ஹெட்குவார்ட்டர்ஸில் ஒரு நில அடமானம் ஏற்படுத்தி நீண்டகாலத் தவணையில் குறைந்த வட்டியில் கடன் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.

[18th July 1957

SRI A. R. SUBBIAH MUDALIAR : உப சபாநாயகர் அவர்களே, விவசாய மானியத்தை ஆதரித்துச் சில யோசனைகள் சொல்ல பிரியப்படு கிறேன். அதிக உணவு உற்பத்தித் திட்டத்தில் அதிக உற்சாகம் காட்டக் கூடியவர்களும் அந்த வேலையை உடனடியாகச் செய்யக்கூடியவர்கள், டெமான்ஸ்ட்ரேட்டர்கள். அவர்கள் மூன்று வருஷப் படிப்புக்குப் பின் வேலைக்கு வருகிறார்கள். அவர்களுக்கு சம்பள திட்டம் சரியில்லாத தால் 8 வருஷம், 7 வருஷம் வேலை செய்த பிற்பாடு அடுத்த வேலைகளுக்கு அதாவது கம்பெனிகளுக்குப் போகக் கூடிய நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் உற்சாகத்தோடு வேலை செய்தால்தான் அதிக உணவு உற்பத்தித் திட்டங்களை நிறைவேற்ற முடியும். இன்றைக்கு இருக் கும் சில சம்பள வித்தியாசத்தை குறிப்பிடப் பிரியப்படுகின்றேன். இண்டர்மீடியட் படித்து மூன்று வருஷ படிப்புக்குப் பின் நமது சர்க்கார் 100 ரூபாய் சம்பளம் கொடுக்கிறார்கள். ஆனால் Khadi இன்ஸ்பெக்டர் கள் என்பவர்கள் S S.L.C. படித்து 20 மாதம் டிரெயினிங்குக்குப் பிற்பாடு நமது சர்க்கார் 120 ரூபாய் சம்பளம் கொடுக்கிறார்கள். அத்துடன் இந்தியா கவர்ன்மெண்டு B.Sc. (Agriculture)-க்கு 160 ரூபாய் சம்பளமும் வங்காள சர்க்கார் 150 ரூபாய் சம்பளமும் கொடுக்கிறார்கள். கேரளத்திலே 125 ரூபாய் கொடுக்கிறார்கள். நம் சென்னை சர்க்கார் 100 ரூபாய் கொடுப்பது ரொம்பக் குறைவு. சம்பளம் குறைவாக இருப்பதால்தான் அவர்கள் சந்தர்ப்பம் ஏற்படும்பொழுது வேலையைவிட்டுப் போய்விடுவதால் இன் றைக்கு பல திட்டங்களை சரியாக நடத்த முடியாத நிலை இருக்கிறது. 8 வருஷம் வேலை பார்த்து அனுபவம் உள்ளவர்கள் போய்விட்டால் பிறகு வரும் மற்றவர்களுக்கு அந்த அனுபவம் இருக்காது. ஆகவே இந்த டெமான்ஸ்ட்ரேட்டர்களின் சம்பளத்தைக் கூட்ட வேண்டும்.

அடுத்தபடியாக, ஜில்லாவை இரண்டாகப் பிரித்து இரண்டு ஜில்லா விவசாய அதிகாரிகளிடம் நிர்வாகத்தை ஒப்புவித்தால் விவசாய வேலைகள் நன்றாய் நடைபெறும். அடிக்கடி கிராம தொடர்பும் ஏற்படுத்திக்கொள்ளலாம். Deputy Directors என்ற பதவிகள் இருக்கின்றன. அவர்கள் ஒரு ஜில்லாவுக்கு வருஷத்திற்கு ஒரு தடவைகூட கிராமப் பகுதிகளுக்கு வருவது கிடையாது. அவர்கள் என்ன ஆக்க வேலை செய்கிறார்கள் என்று தெரியவில்லை. போஸ்ட் ஆபீஸ் வேலை தான் பார்க்கிறார்கள். ஒவ்வொரு ஜில்லாவிலும் இரண்டு விவசாய ஜில்லா ஆபீஸர்களை வைத்துக்கொண்டு அவர்கள் மூலமாக நன்றாக நிர்வாகத்தை நடத்தலாம். டைரக்டர் அவர்களுக்கு வேண்டுமானால், ஒரு டெக்னிகல் P.A. வைத்துக்கொள்ளலாம். Fieldman என்று சொல்லக் கூடிய வர்களையும் அதிகப்படுத்தலாம். அதன் மூலமாக Grow More Food Scheme வளர வாய்ப்பு ஏற்படும். டெமான்ஸ்ட்ரேட்டர்களுக்கு வாரத்திற்கு இரண்டு நாள் டைரி எழுதுவதற்கே வேண்டியிருக்கிறது. அவர்களுக்குக் கிளார்க் கொடுத்து மாதத்திற்கு 20 நாள் கிராமத்திற்குப் போக வேண்டுமென்று திட்டம் வகுக்க வேண்டும். மந்திரி அவர்கள் முன் உள்ள சபையில் 9-5-1955-ல் பேசும்போது 'மாதத்தில் 20 நாள் கிராமத்திற்குப் போகச் செய்கிறேன்' என்று தெரியப்படுத்தியிருக்கிறார் கள். இன்று வரையில் அது அமுல் நடத்தப்படவில்லை.

Plant Protection Officers என்று ஜில்லாதோறும் வைத்திருக் கிறார்கள். இரண்டு பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் முக்கியமான கிராமங் களுக்கு மாதத்திற்கு ஒரு முறையோ, அல்லது வாரத்திற்கு ஒரு முறையோ வந்து கவனிக்கவேண்டும். ஆனால் அப்படிச் செய்யாமல் டெமான்ஸ்ட்ரேட்டர்கள் ரிப்போர்ட்டைக் கவனித்து நடவடிக்கை எடுத்துக் கொள்கிறார்கள்.

Sprayers, Dusters-ஐ Subsidiary Scheme மூலம் இவ்வரு ஷத்தில் விவசாயிகளுக்கு வினியோகப்படுத்தப் போவதாக தெரிந்து சந் தோஷப்படுகிறேன். இதில் Dusters பிரயோசனமில்லை. Sprayers



18th July 1957] [Sri A. R. Subbiah Mudaliar]

பல விதத்தில் பிரயோசனமாயிருக்கிறது. அதிக உணவு உற்பத்தித் திட்டத் திற்கு இந்த Plant Protection Officers வேலை அதிக முக்கியத்தைத் தருகிறது. Sprayers-களை வினியோகிப்பது நல்லது.

விதைகள் உற்பத்தி செய்து வினியோகம் செய்கிற திட்டம் ரொம்பவும் வரவேற்கக் கூடியது. 171 விதைப் பண்ணைகள் வைப்பதாக சொல்லப் படுகிறது. அத்துடன் ஆங்காங்கு உள்ள நல்ல விவசாயம் செய்யக்கூடிய வர்களை எடுத்து ஒரு Approved Ryots list ஒன்று தயார் செய்து அவர்களிட மிருந்தும் விதைகள் வாங்கக்கூடிய நிலையில் ஒரு திட்டம் ஏற்படுத்தலாம். சர்க்கார் விதைகளை வினியோகிக்கும்போது அது மார்க்கட் ரேட்டை விட 50, 60 சத வீதம் கூடுதலாக விற்கப்படுகிறது. சர்க்கார் வினியோகிக்கும் விதைகளை அதிக ஆவலுடன் வாங்க சமுசாரிகளுக்கு உத்தேசமிருந்தாலும் விலை அதிகம் காரணமாக வெளியே போகிறார்கள். மார்க்கட் விலைக்கு 10 சதவீதம் கூட்டி விதைகள் வினியோகித்தால் நல்ல ஆதரவும் இருக்கும். அதன் மூலமாக அதிக உணவு உற்பத்தி ஏற்படும். இதற்கு ஒரு Subsidiary Scheme ஒன்று வகுத்தால் நல்லது.

Agricultural Engineering சம்பந்தமாக சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அதில் அதிக நஷ்டம் ஏற்படுகிறது என்று Audit அறிக்கை மூலமாகத் தெரிகிறது. நஷ்டத்தை நிவர்த்திக்க முடியாது. ஒரு யோசனை எனக்குத் தோன்றுகிறது. அதை வகுக்கலாம். எலெக்ட்ரிக் மோட்டார்கள் Oil engines முதலியன வாங்கக்கூடிய சமுசாரிகளுக்கு ஒரு பங்கு தொகையை subsidy ஆகக் கொடுக்கலாம். சர்க்காருக்கு Engineering பகுதி மூலம் கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. அதனால் அதிக உணவு உற்பத்தி எதிர்பார்க்கும் அளவு ஏற்படவில்லை.

நவீன யந்திரங்களை வாங்கி அதிக உணவு உற்பத்தி செய்ய உற்சாகம் கொடுப்பதற்கு கிரைய துகையில் ஒரு பகுதியை சர்க்கார் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

ஆதலால் விவசாயிகளுக்கு சப்சிடி கொடுத்து அவர்கள் மோட்டார் ஆயில் இன்ஜின் முதலியவைகள் வாங்கக் கூடிய நிலைமையில் ஒரு திட்டம் வகுக்கலாம்.

உணவு உற்பத்தி குறைந்துவிடக் கூடாது என்று நினைத்து பஞ்சப் பிரதேசங்களில் நிறைய கிணறுகள் வெட்ட பணம் கொடுக்கிறார்கள். Loan-cum-Subsidiary முறை சென்ற மார்ச்சு மாதம் முதற்கொண்டு சங்கரன்கோவில் தாலுகாவில் அமுல் நடத்தப்படுகிறது. 1,294 மனுக்கள் வந்திருக்கின்றன. அவைகளில் இன்றுவரை சுமார் 80 மனுக்கள் தான் பைசல் செய்யப்பட்டிருக்கின்றன. பைசல் வேலை வெகு மந்தமாக நடக்கிறது. அதிக உணவு உற்பத்தி செய்ய வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கும் காலத்தில் Loan-cum- Subsidiary Scheme-படி பணம் கொடுப்பதற்கு இவ்வளவு கால தாமதம் ஆகக்கூடாது. அவைகளை உடன் கொடுக்கதக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம். அதற்கு வேண்டிய அதிக ஆபீஸர்களையும் உடனடியாக நியமிக்க வேண் டும். அப்படி நியமித்து திட்டத்தை அமுல் நடத்தும்படி செய்தால்தான் பஞ்சப்பிரதேசத்திலுள்ள விவசாயிகள் நன்மை அடைய முடியும்.

தென்னங் கன்றுகள் உற்பத்தி தஞ்சையில் மட்டும் ஆரம்பிக்கப் போவ தாகத் தெரியவருகிறது. செங்கோட்டை, தென்காசி முதலான இடங்களில் அதை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அங்கு தென்னந்தோப்புக்கள் அதிகமாக இருக்கின்றன. அதனால் Nursery நிலை யம் அவசியம். தென்னங் கன்றுகள் உற்பத்தி செய்யக்கூடிய பருவ நிலையும் ஒத்து இருக்கிறது. அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக பழம் உற்பத்தி ஸ்டேஷனையும் (Fruit Stations)பல இடங் களில் அமைக்கவேண்டும். இப்பொழுது சில இடங்களில் ஏற்படுத்தப் போவதாகத் தெரிகிறது. ஆனால் எந்த எந்த இடங்களில் என்று தெரிய வில்லை. தென்காசிப் பக்கம் மேற்குத் தொடர்ச்சி மலைப்பிரதேசத்தை யொட்டி ஆரம்பித்தால் நலமாக இருக்கும். பழம் ரிசர்ச் ஸ்டேஷன் ஆரம்பிப்பதும் நல்லது.

பஞ்சாயத்துக்களில் கம்போஸ்ட் உரத்தை சரியாக பக்குவப்படுத்துவதில்லை. காரணம் பஞ்சாயத்தின் நிர்வாகிகள் சரிவரக் கவனிப்பதில்லை. அவர்கள் கொடுக்கும் உரத்தை ஒருவரும் வாங்குவதற்கு முன்வருவதில்லை. காரணம் உரம் நல்லதாக இல்லை. பஞ்சாயத்து நிர்வாகத்தின் கீழ் உள்ள சானிடரி டிபார்ட்மெண்டிலும் ஹெல்த் டிபார்ட்மெண்டிலும் இருப் பவர்களுக்கு பிரமோஷனைக் 'கட்' பண்ணவோ அல்லது வேறு விதத்தில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று ஒரு விதி இருந்தால்தான் அவர்கள் நல்ல முறையில் கம்போஸ்ட் வேலை செய்வார்கள். அப்படிப்பட்ட அதிகாரத்தை மேல் பார்க்கும் நிர்வாகஸ்தர்களுக்குக் கொடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். அப்பொழுதுதான் அங்குள்ளவர்கள் நல்ல முறையில் கம்போஸ்ட் உரத்தை தயார் செய்வார்கள். தண்டனை கொடுக்கக் கூடிய அதிகாரத்தை கம்போஸ்ட் ஆபீஸருக்குக் கொடுக்க வேண்டும்.

கால்நடை விஷயமாக இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்பு கிறேன். கால்நடைகளை விருத்தி பண்ணுவதற்கும் பல Key Village Schemes ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. கனம் மந்திரி அவர்களுக்கு நன்கு தெரியும். கேள்வி நேரத்தில் இதைப் பற்றிக் கேட்கப்பட்டது. கால்நடையை அபிவிருத்தி செய்ய வேண்டுமானால், அதற்கு உணவு அவசியம் வேண்டும். மேய்ச்சல் நிலம் ஒதுக்கப்படவேண்டும். கால்நடைப் பண்ணைகளை அமைத்து மேய்ச்சல் நிலத்தைப் பக்கத்தில் அமைத்தால்தான் கால்நடைகள் நல்ல முறையில் அபிவிருத்தி அடையும். அதற்கு வேண்டிய திட்டத்தை வகுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அத்துடன் கிராமங்களில் உள்ள கீழ்த்தரமான பொலிக்காளைகளை சர்க்கார் மூலம் விதை அடிக்க ஒரு திட்டம் உருவாகவேண்டும்.

கம்யூனிட்டி ஸ்கீமைப்பற்றி ஒரு வார்த்தை. தற்போது சப்-ரிஜிஸ்ட்ரார் களை பிளாக் டெவலப்மெண்ட் ஆபீசர்களாக நியமிக்கிறார்கள். அவர் களுக்குப் பத்திரங்களைப் பதிவு செய்வது முதலிய வேலைகள்தான் நன்றாகத் தெரியும். விவசாய சம்பந்தமாக அவர்களுக்கு ஒன்றும் தெரி யாது. ஆகவே பிளாக் டெவலப்மெண்ட் ஆபீசர்களை நியமிக்கும்போது Community Development Area-ல் முக்கிய வேலை விவசாய அபிவிருத்திதான். விவசாய கிராஜ்வேட்டுகளுக்கு இச்சலுகைகளைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

(The Deputy Speaker sounded the gong and the hon. Member resumed his seat.)

1-44 p.m. **SRI K. S. ARDHANAREESWARA GOUNDER**: கனம் உதவி சபாநாயகர்அவர்களே, இன்று சபையின் முன் கனம் விவசாய அமைச்சர் வைத்திருக்கக் கூடிய விவசாய மானியத்தையும் மற்ற மானியத்தையும்நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். குறிப்பாக மேட்டூரில் மீன் கெடாமல் இருப் பதற்கு அங்கே ஒரு ரெபிரிஜிரேட்டரை அமைக்கும்படியான ஒரு திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதை ஆரம்பிக்க வேண்டும் என்று இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன்னால் தங்க சர்க்கார் அனுமதி கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அந்தத் திட் டமானது இதுவரையிலும் நிறைவேறாமல் இருக்கிறது. சர்க்கார் அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்து இந்த ஆண்டிலாவது அதைப் பூர்த்தி செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.



மேட்டூர் கால்வாய் திட்டம் ஆரம்பித்து இரண்டு மூன்று ஆண்டுகள் ஆகின்றன. இது வரையிலும் அங்கே பொறுக்கு விதைகள் குறித்த காலத்தில் கிடைப்பதில்லை. அதனால் அங்கேயே பொறுக்கு விதைப் பண்ணை ஒன்றை ஆரம்பித்துக் கொடுத்தால் மிகவும் நன்றாக இருக்கும். அங்கே இருக்கும் நிலங்களெல்லாம் சர்க்காருடைய பி. டபிள்யூ. டி. நிலங்களாக இருப்பதனால் அந்த நிலங்களைப் பயன்படுத்தி விதைப் பண் ணையை ஆரம்பித்தால் நலமாக இருக்கும். அதையும் இந்த வருஷத்தி லேயே ஆரம்பித்தால் நலமாக இருக்கும்.

விவசாய இலாகாவை எடுத்துக்கொண்டால் விவசாயிகளுக்கு நல்ல பொறுக்கு விதைகளைக் கொடுக்க வேண்டும் என்று திட்டம் இருந்தாலும் அவற்றை குறித்த காலத்தில் விவசாயிகளுக்குக் கொடுப்பதில்லை. அதற்குக் காரணம் விவசாய இலாகாவில் ''சிகப்பு நாடா'' கொள்கை அனுஷ்டிக்கப் படுவது ஆகும். அங்கே இருக்கும் உத்தியோகஸ்தர்களுக்கு எந்தத் தருணத்தில் எந்த விதையைக் கொடுக்க வேண்டும் என்று தெரிய வில்லை. மற்றும் அங்கே இருக்கும் டிமான்ஸ்ட்ரேட்டர்களை அடிக்கடி மாற்றுவதாலும் அந்த சரகம் பொறுத்த வரையில் எந்த தருணத்தில் எந்த விதையைக் கொடுக்க வேண்டும் என்று தெரியாததாலும் எந்த எந்த காலத்தில் எந்த மாதிரியான விதைகளைப்போட வேண்டும் என்று தெரியாத காரணத்தாலும் இந்த நிலைமை ஏற்படுகிறது. மற்றும் பொறுக்கு விதைகள் வந்து சேருவதற்கும் கால தாமதம் ஏற்படுகிறது. இந்த சமயத்தில் இப்பொழுதுள்ள விவசாய மந்திரி இந்த இலாகாவை எடுத்துக்கொண்டிருப்பதாலும் எதை எடுத்துக் கொண்டாலும் அதை நேரடியாகப் பார்க்கக் கூடிய அனுபவம் மிகுந்தவர் களாயிருப்பதாலும் இந்த விஷயத்திலும் அவர்கள் உடனடியாக இதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். அதிகாரிகள் துரிதமாக வேலை செய்வதற்கும் காலாகாலத்தில் விவசாயி களுக்குச் சேர வேண்டிய விதைகள் போய்ச் சேருவதற்கும் தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

எங்கள் சரகத்தில் என். ஈ. எஸ். ப்ளாக் ஆரம்பித்து அநேகமாக ஒரு வருஷமாகிறது. ஆனால் அங்கே இது வரையிலும் பொறுக்கு விதைகள் சரியானபடி சேராததால் அங்கே இருக்கும் விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இதைப்பற்றி நான் சென்ற தடவையில் கூட என் னுடைய பேச்சில் சொல்லி யிருக்கிறேன். உணவை அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டுமென்றால் பாஸ்பேட் உரம் அதிகமாக வேண்டும். அது முக்கியமாக இருந்தால் தான் உணவை பெருக்க முடியும். இப்பொழுது அம்மோனியம் சல்பேட் தான் சர்க்காரால் அதிகமாக சப்ளை செய்யப்படுகிறது. பாஸ்பேட் குறைவாக இருப்பதால் அதையே சப்ளை செய்கிறார்கள். ஆகவே பாஸ்பேட் உரத்தை அதிகமாக சப்ளை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்பொழுது தான் அதிகப்படியாக உணவை உற்பத்தி செய்யலாம்.

பாஸ்பேட் அதிகமாக இல்லாவிட்டாலும் கூட எலும்புத் தூளை அதிகமாக சப்ளை செய்தால் உணவு உற்பத்தியைப் பெருக்கலாம். எலும்புத் தூள் உற்பத்தி செய்வதை ஒரு கைத்தொழிலாகக் கூட செய்யலாம். ஆகவே கிராமங்களில் எலும்புத்தூள் உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். எலும்புத்தூள் மூலமாக நன்றாக உற்பத்தி செய்யலாம் என்பது என்னுடைய சொந்த அனுபவம். எவ்வள வுக்கு எவ்வளவு எலும்புத் தூளை அதிகமாக உபயோகப்படுத்துகிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு உணவை அதிகமாக உற்பத்தி செய்யலாம். அதற்கு வேண்டிய நடவடிக்கையை சர்க்கார் உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேட்டூரில் அதிகப்படியான மீன் பிடிப்பவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வீட்டு வசதி அங்கே கொஞ்சம்கூட கிடையாது. அணைக்கட்டில் அடிக்கடி தண்ணீர் குறைந்து கொண்டும் அதிகரித்துக்கொண்டும் இருப்பதால் அவர்களுக்கு வேறு நல்ல இடங்களில் வீடுகள் கட்டிக்கொடுத்து வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். மேட்டூரில் நல்ல மீன்கள் கிடைக்கின்றன. அதனால் அங்குள்ள மீன் பிடிப்பவர்களுக்கு நல்ல வீடுகள் கட்டிக்கொடுத்து உதவி செய்தால் நல்ல மீன்களை அவர்கள் மலிவான விலைக்குக் கொடுக்க அது வசதியாக இருக்கும். இப்பொழுது அவர்கள் வீடுகள் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். கனம் அமைச்சர் அவர்கள் கூட்டுறவு இலாகாவை இப்பொழுது எடுத்துக்கொண்டிருக்கிறார். அதன் மூலம் அவர் அநேகம் கூட்டுறவு சென்டர்களை அமைத்திருக்கிறார். வேண்டிய சௌகர்யங்களையும் செய்துகொண்டு வருகிறார். அதனால் அங்குள்ள மீனவர்களுக்கு வேண்டிய வீடுகளைக் கட்டிக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இன்னும் அவர்களுக்கு வீடு கட்டிக்கொள்வதற்கு வேண்டிய பண வசதியைக் குறைந்த வட்டியில் கடனாகக் கொடுத்தால் மிகவும் நன்றாக இருக்கும்.

விவசாயத்திற்கு தழை உரம் மிகவும் அவசியமானது. நமக்குக் காடுகள் மிகவும் குறைவாக இருக்கின்றன. ஆனால், இருக்கிற காடுகளும் அழிக்கப்பட்டு வருகின்றன. காடுகள் அழிக்கப்படாமல், நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு, அவைகளை தழை உரங்கள் எடுப்பதற்கு விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ள வேண்டிய ஏற்பாடுகளைச் சர்க்கார் செய்வார்கள் என்று நான் நினைக்கிறேன்.

சேலம் ஜில்லாவைப் பொறுத்தவரையிலும், செயற்கை முறையில் கருத்தரிக்கும் நிலையம் ஒன்றை இப்பொழுதுதான் சேலத்தில் கால்நடை இலாகாவினர் ஆரம்பித்திருக்கிறார்கள். இம்மாதிரி நிலையங்கள் எங்கள் ஜில்லாவுக்கு அடுத்த கோயமுத்தூர் ஜில்லாவில் அதிகமாக இருப்பதால் விவசாயிகள் மிகவும் நன்மை அடைகிறார்கள். இன்னும் அதிக சென்டர்களைத் திறக்கவேண்டும் என்று நாங்களும் பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அதையும் உடனடியாக செய்து கொடுக்குமாறு அமைச்சர் அவர்களை நான் மறு முறையும் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மேச்சேரி ரக ஆடுகள் தோலுக்கும் "**Mutton**"க்கும் மிகவும் உபயோகமாக இருக்கக் கூடியவை என்று நிபுணர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இதுவரை அந்த ஆட்டு ரகத்தை விருத்தி செய்வதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுத்துக்கொண்டிருந்தாலும் கூட, அது எந்த விதமான பலனும் இல்லாமல் இருக்கிறது. ஆகையால், மேச்சேரி ரக ஆட்டை விருத்தி செய்வதற்கு உடனடியாக சர்க்கார் வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகின்றேன்.

***Sri T. P. ELUMALAI**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, விவசாயிகளுக்காகவும், மீனவர்களுக்காகவும் ஒதுக்கப்பட்ட இந்த மான்யத்தை நான் ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்லப் பிரியப்படுகிறேன். உண்மையிலேயே இந்தச் சர்க்கார் விவசாயிகளுக்கும் மீனவர்களுக்கும் நிறைய சலுகை செய்ய வேண்டுமென்ற பெரிய நோக்கத்தோடு நல்ல திட்டங்களையெல்லாம் கொண்டுவந்து நிறைவேற்றி வருகிறார்கள். நிறைய திட்டத்தினாலோ நிறைய பணத்தினாலோ அதிக நன்மை ஏற்படும் என்று நினைக்காவிட்டாலும் ஓரளவு இன்றைக்கு நாட்டிலே அவர்களிடத்திலே ஒரு விழிப்பு ஏற்பட்டிருப்பதை நாம் பார்க்கின்றோம். மேலும், நம்முடைய சர்க்கார் நல்ல எண்ணத்தோடு நிறைவேற்றுகிற திட்டங்கள், கொடுக்கின்ற மான்யத் தொகை அத்தனையும் அந்தப் பகுதி மக்களுக்குப் போய்ச் சேருகிறதா என்பதைக் கண்ணுங் கருத்துமாகப் பார்ப்பதிலே அங்கத்தினர்கள்



ஒத்துழைத்தால் அந்தப் பகுதியிலே இருக்கும் ஏராளமான மக்களுக்குப் பயன்படும் என்று நான் சொல்லாமல் இருக்க முடியாது. இன்றைக்கு விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகிற கடன் தொகைகள், மான்யங்கள் அத்தனையும் அவர்கள் வாங்கிக்கொண்டு, அனுபவித்துக் கொண்டு வருகிறார்கள். ஒருவன் அதிகமாகச் சாப்பிட்டுவிட்டு அதை ஜீரணிக்க முடியாமல் எப்படி கஷ்டப்படுகிறானோ, அதுபோல விவசாயிகள் சர்க்கார் கொடுக்கும் மான்யங்களையும் கடன்களையும் வாங்கிக்கொண்டு, அவைகளை ஓரளவு விவசாயத்திற்குப் பயன்படுத்திக்கொண்டு, பின்னால் அவைகளைத் திருப்பிக்கொடுக்கின்றபோது படும் கஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல.

என்னுடைய ஜில்லாவாகிய செங்கற்பட்டு ஜில்லாவைப் பொறுத்த வரையில், அங்குள்ள ஏழை விவசாயிகளும் மற்றவர்களும் சர்க்காரிடமிருந்து வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுப்பதற்கு முடியாமல் இருக்கும் நிலையில், அவைகளை உடனடியாகத் திருப்பிக்கொடுக்க வேண்டுமென்று சர்க்கார் சொல்லும்போது, மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதற்காக அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், கனம் மந்திரியிடம், "கடன் திருப்பிக் கொடுப்பதைத் தள்ளிக் கொடுக்க வேண்டும்; மறு வருஷத்திலே கடனைத் திருப்பிக் கொடுக்கிறோம்" என்று கும்பல் கும்பலாக வந்து கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு தாற்காலிக உதவி செய்வதோடு, முதலில் மனுப்போட்டு வாங்குகிறபோது, அந்த வேலையை ஒழுங்காகச் செய்தார்களா, கொடுத்த உதவியைச் சரியாக உபயோகப்படுத்திக் கொண்டார்களா என்று கண்காணிப்பு இல்லாமல் இருக்கிறது. அமைச்சர் அவர்களும் மற்றவர்களும் கண்காணிப்பில் இருக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

ஒரு சில விவசாய அபிவிருத்திக்காக வாங்குகிற பணம், பம்பு செட்டுக்கோ, மற்ற கருவிகளுக்கோ வாங்குகிற பணம், அந்தந்தக் குறிப்பிட்ட காரியங்களுக்குப் பயன்படுத்தப்படாமல், சொந்த உபயோகத்திற்கும் பயன்படுத்தப்படுவதை நான் பார்த்திருக்கிறேன். வசதி உள்ளவர்கள் சம்பந்தப்பட்ட இலாகாவிலேயும் செல்வாக்கு உள்ளவர்களாக இருப்பதால், அவர்கள் வேறு விதமாக உபயோகித்து விடுகிறார்கள். இது விஷயத்தில் சர்க்காரைக் குறை சொல்லிப் பிரயோஜனம் இல்லை. அங்கு இருக்கின்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் சிப்பந்திகளும் இதைக் கண்காணித்து சரியாக உபயோகப்படுத்தச் செய்யவேண்டும் என்று நான் மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

சர்க்கார் கொடுக்கின்ற அத்தனை சலுகைகளும் ஏழை விவசாய மக்களுக்கும், குறைந்த அளவு நிலம் படைத்தவர்களுக்கும் கிடைக்கும்படியான ஒரு சட்டத்தை நம் சர்க்கார் கொண்டுவர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

நம்முடைய சர்க்கார் ஏழை மீனவர்களுக்கு நிறைய சலுகைகள் செய்து வருகின்றார்கள். குறிப்பாக, இதற்கு முன்னால் மீன் இலாகாவை நிர்வகித்து வந்த நமது அமைச்சர் அவர்கள் நிறைய வேலை செய்திருக்கின்றார்கள். மீனவர்களிடையே ஓரளவு விழிப்பு ஏற்பட்டிருக்கிறது. "எங்கு பார்த்தாலும் பள்ளிக்கூடம் வேண்டும், கட்டு மரம் வேண்டும், சர்க்காரிலிருந்து பணம் வாங்கிக் கொடுங்கள்" என்று கேட்கின்ற அளவுக்கு மீனவர்களிடையே இன்றைக்கு விழிப்பு உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல. கூட்டுறவு முறையிலே நல்ல லாரி வசதிகளைப் பெற்று, போக்குவரத்து மூலமாக நல்ல வியாபாரம் செய்து, அதிலே சம்பாதிக்க வேண்டுமென்ற நோக்கமும் அவர்களிடத்திலே ஏற்பட்டிருக்கிறது என்பதையும் நான் சொல்ல முன்வருகிறேன்.

குறிப்பாக, என்னுடைய தாலூகாவில் உள்ள எண்ணூரில் உள்ள மீனவர்கள் கூட்டுறவு சங்கம் அமைத்துக் கொண்டு, லாரி வைத்து, மீன் வியாபாரம் செய்து, நல்ல லாபத்தை அடைந்திருக்கிறார்கள். ஆயிரக் கணக்கில் சம்பாத்தியம் பெற்றிருக்கிறார்கள். ஆகவே, மீனவர்கள் இப்பேர்ப்பட்ட கூட்டுறவு சங்கங்கள் அமைத்துக்கொண்டு, சர்க்கார் திட்டத்திற்கு உட்பட்டு, தங்கள் தொழிலை நல்ல முறையில் அபிவிருத்தி செய்து கொள்ள முன்வந்திருக்கும்போது அங்கத்தினர்களும், மற்றவர்களும், பொதுவாக அரசியல் கட்சிகள் அத்தனையும் அவர்களுக்கு உதவியாக இருக்கவேண்டு மென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

செங்கற்பட்டு ஜில்லா ரொம்பப் பின்தங்கிய மக்கள் வசிக்கின்ற இடம். பொதுவாக தொழிலாளர் நிறைந்த ஒரு பகுதி. இங்கு இருக்கும் விவசாயி கள் அத்தனை பேரும் வானம் பார்த்துப் பயிர் செய்பவர்கள். பெரிய ஏரிகளோ, அணைக்கட்டுகளோ கிடையாது. மேலும், பம்பு செட்டுகள் முதலியவை வைத்துக்கொள்ளக்கூடிய பண வசதியும் அவர்களுக்குக் கிடையாது. எங்கு பார்த்தாலும் அதிகமாக கிணறுவெட்டித்தான் சொந்த உழைப்பின் மூலம் பயிர் செய்ய முடியும். ஆகவே, செங்கற்பட்டு ஜில்லா விற்கு மட்டும் அதிகமாகக் கடன், கிணறு வெட்டுவதற்குக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

சில சமயங்களில் சர்க்கார் வழங்கும் கடன் தொகையையும் கூட திருப்பிக் கொடுக்க முடியாமல் அவதிப்படுகிறார்கள். ஏன் இப்படி அவர் கள் கஷ்டப்படுகிறார்கள் என்றால், பொதுவாக செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள விவசாயிகள் அத்தனை பேரும் மழையை எதிர்பார்த்துப் பயிர் செய்வார்கள். மழை வரவில்லையென்றால் பயிர் எல்லாம் நாசமாய்விடும். விதைத் தானியம்கூட கிடைக்காத அளவில் கஷ்டப்படுவதைப் பார்த்திருக்கிறோம். அமைச்சர் அவர்களுக்கும் இது நன்றாகத் தெரியும். ஆகவே, இப் பகுதிக்கு கிணறுகள் வெட்டுவதற்கான மான்யத் தொகையையும் மற்ற கடன் தொகையையும் அதிகமாகக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டு மென்று மிகவும் பணிவுடன் நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

ஒரு சிலர் சொல்கிறார்கள், செங்கற்பட்டு ஜில்லாவில் மின்சாரம் அதிக மான இடங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது என்று. அப்படி ஒன்றும் இல்லை. நண்பர் திரு. கோவிந்தசாமி நாயகர் அவர்களே இம்மாதிரி சொன்னதாக ஒப்புக்கொள்ளுகிறார்கள். நான் அவர்களுக்கு சொல்வது என்னவென்றால், அவர் பெரும்பாலும் சென்னையிலேயே இருப்பவர். பட்டிக்காட்டைப் பற்றி அவருக்கு அதிகமாகத் தெரியாது. ஏனென்றால், அவர் பட்டிக்காடு பக்கம் அதிகமாகப் போவது கிடையாது. சென்னையிலும், அதன் பக்கத்திலும் அவர் அதிகமாக இருந்துகொண்டிருப்பதால் போகும் போதும் வரும்போதும் மின்சார விளக்குகளைப் பார்த்துப்பார்த்து, ஏதோ செங்கற்பட்டு ஜில்லா முழுவதும் மின்சாரம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது என்று அவர் நினைக்கலாம். அது சரியல்ல. அப்படிப் பார்த்தால் இந்த ராஜ்யத்தில் எல்லாப் பகுதிகளிலும்தான் மின்சாரம் இருக்கிறது. மேலும் செங்கற்பட்டு ஜில்லாவைப் பொறுத்தவரையில் அது வறுமை நிறைந்த இடம் என்று நான் சொல்லாமல் இருக்க முடியாது. ஆகவே தான், அங்கே இப்பேர்ப்பட்ட சலுகைகளையெல்லாம் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்கின்றேன். மீனவர்களுக்கு, சர்க்கார், மீன்பிடிக்க, லாஞ்ச் போன்றவைகள் கொடுத்து உதவுகிறார்கள். செங்கல்பட்டு ஜில்லாவில், "லாஞ்சை" நிறுத்துவதற்கு தகுந்த இடமில்லை. சென்னை துறைமுகத்தில் நிறுத்தவேண்டுமானால் வாடகையாக அதிக தொகை கொடுக்கவேண்டி யிருக்கும், இதனால் எண்ணூரில், லாஞ்சை நிறுத்துவதற்கு நல்ல வசதி கள் செய்து கொடுப்பதற்கு, ஏற்பாடுகள் செய்துகொடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். அங்கே ஒரு சிறிய துறைமுகமே கட்டி, லாஞ்ச் கள் நிறுத்துவதற்கு வசதிகள் செய்துகொடுக்க வேண்டும் என்று சபையின்



சார்பாக சொல்லிக் கொள்கிறேன். மேலும், இப்போது, விசைபடகு மூலம், பரீட்சார்த்தமாக, சர்க்கார் நிறைய மீன்களை பிடித்து விற்கிறார்கள். இம் மாதிரி விற்கும்பொழுது, சர்க்காருக்கு சேரவேண்டிய லாப முழுவதும் கிடைப்பதில்லை என்றும், கணக்கு சரியாக வைப்பதில்லை என்றும், மீனவர்கள் சொல்லி கேட்டிருக்கிறேன். அமைச்சர் அவர்கள் அந்த புகாரை கவனிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சர்க்கர், மீனவர்களுக்கு கொடுக்கும் சலுகைகள் எல்லாம் அச்சமுதாயத் திலுள்ள பணக்காரர்களுக்குத்தான் அதிகமாக கிடைக்கிற நிலை ஏற் பட்டிருக்கிறது. உதாரணமாக, கட்டுமரம் வாங்கவேண்டுமென்றால், இதற்கு ஓரளவு பணவசதி வேண்டியிருப்பதால், அந்த சமூகத்தில் உள்ள பண வசதி உள்ளவர்கள், இந்த சலுகைகளை உபயோகப்படுத்திக்கொள்கிறார்கள். அந்த நிலைமை இல்லாமல், அந்த சமூகத்தில் உள்ள தொழிலாளர் களுக்கும் இந்த சலுகைகள் கிடைக்கும்படி செய்யவேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். நான் அந்த சமூகத்தை சேர்ந்தவன் அல்லாவிட்டாலும் அவர்களிடமிருந்து இக்குறைகளை ஓரளவு தெரிந்து கொண்டிருக்கிறேன்.

உதவி சபாநாயகர் அவர்கள் என்னையே பார்த்துக் கொண்டிருக்கிறார். நேரமாய்விட்டது என்று நினைக்கிறேன். இந்த மான்யத்தின்மீது பேச எனக்கு வாய்ப்பு கிடைக்குமோ கிடைக்காதோ, என் பெயர் லிஸ்டில் இருக்கிறதா, இல்லையா என்று, தெரியாத நிலையில் இருந்த என்னை பேச அனுமதித்ததற்காக உதவி சபாநாயகர் அவர்களுக்கு என் மனமார்ந்த வணக்கத்தை தெரிவித்துக்கொண்டு என் சிற்றுரையை முடித்துக் கொள் கிறேன்.

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again on Friday, the 19th July 1957.

The House then adjourned.

### APPENDIX.

The following Member took the prescribed oath before the Hon. Speaker in his Chamber before the commencement of the sittings of the House to-day :—

Sri T. L. Sasivarna Thevar.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

---

**Friday, 19th July 1957.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

MR. SPEAKER : முதலில் எடுத்துக்கொள்ளவேண்டிய கேள்வி யானது கனம் அங்கத்தினர் ஸ்ரீ ஆர். கிருஷ்ணஸ்வாமி நாயுடு அவர்கள் நோட்டீஸ் கொடுத்துள்ள "ஷார்ட் நோடிஸ்" கேள்வி நெ. 3 ஆகும். கனம் அங்கத்தினர் ஸ்ரீ ஆர். கிருஷ்ணஸ்வாமி நாயுடு அவர்கள் இன்னும் இங்கே வரவில்லை. ஆகவே அந்தக் கேள்வியை பிறகு எடுத்துக்கொள்ளலாம். இப்போது அடுத்த கேள்வியாகிய கேள்வி 143-ஐ எடுத்துக்கொள்ளலாம்.

*Gramdan villages.*

* 143 *Q.*—SRI A. VEDARATHNAM PILLAI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have taken any steps to take over the Gramdan villages obtained by Acharya Vinobhaji in this State; and

(*b*) if so, what they are?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) The Government have appointed a Committee consisting of officials and non-officials including two representatives of the Sarvodaya Mandal, Tamil Nad under the Chairmanship of the Collector of Madurai for undertaking the survey of Gramdan villages and making suitable recommendations to the Government for the development of Gramdan villages in Madurai district. Based on the preliminary report of the Committee, they have sanctioned the disbursement of an amount up to rupees twenty lakhs as Takkavi loans to the agriculturists in Gramdan villages in Madurai district for the current cultivation season. They are also now examining the steps to be taken for taking over the Gramdan villages.

SRI A. VEDARATHNAM PILLAI : தக்காவிக் கடன்கள் அவர் களுக்கு எந்த் அடிப்படையில் கொடுக்கப்படுகின்றன ? விநோபாஜிக்கு பட்டாதார்களால் கொடுக்கப்பட்டுள்ள தானப் பத்திரங்களின் அடிப்படையில் அவை கொடுக்கப்படுகின்றனவா, அல்லது வேறு ஏதேனும் 'ரெஜிஸ்டர் டாகுமெண்ட்' இன் பேரில் கொடுக்கப்படுகின்றனவா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இன்னும் அந்த தானப் பத்திரங்கள் அமலுக்கு வரவில்லை. சட்டப்பிரகாரம் அந்த பூமி முந்தைய சொந்தக்காரர்களுக்கே சொந்தம். ஆகையால் இப்போதுள்ள விதிகளின் அடிப்படையிலேயே. அந்தக் கடன்கள் கொடுக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

[19th July 1957

SRI A. A. RASHEED : Will the Hon. the Minister supply us information about the number of Gramdan villages so far obtained in our State?

THE HON. SRI C. SUBRAMANIAM : About 200 and odd, I think it is 212 or so.

SRI T. SAMPATH : தஞ்சாவூர் ஜில்லாவில் எவ்வளவு நிலங்கள் இடைத்தன என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்லமுடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போது குறிப்பிடப்படும் நிலங்கள் கிராம தானங்களாகக் கொடுக்கப்பட்டவை, பூமி தானமாகக் கொடுக்கப்பட்டவை அல்ல. மூலக் கேள்வி கிராம தான நிலங்கள் பற்றியது. ஆகவே கனம் அங்கத்தினர் அவர்கள், தஞ்சாவூர் ஜில்லாவில் எவ்வளவு நிலங்கள் தானமாகக் கிடைத்தன என்ற தகவலுக்கு தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

SRI K. VINAYAKAM : May I know the philosophy behind this Gramdan movement and what happens to the ownership of the lands. Does it pass on to Acharya Vinobhaji as the proprietor of the lands or does it revert back to the villagers and when it reverts back, who pays the stamp duty for conveyance deeds, etc.?

THE HON. SRI C. SUBRAMANIAM : All the owners of the lands belonging to a particular village have agreed to surrender their ownership of the lands. The question, how to utilize the lands is under the consideration of Government. If I can give an indication, the idea of the Government is that this should be taken advantage of for communal ownership and communal tilling of the lands by the entire village.

SRI P. S. CHINNADURAI : கிராம தானமாகக் கொடுக்கப்பட்டுள்ள கிராமங்களில் கூட்டுறவுச் சங்கங்களை உடனடியாக ஏற்படுத்தி, அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இந்த அரசாங்கம் கொடுக்கவிருக்கிற பணத்தைக் கொடுக்க முன்வந்தால் நன்றாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். அதற்கு அரசாங்கத்தார் ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போது அந்த கிராமங்களில் அந்த அந்த கிராமங்களிலுள்ள சமுதாயம் முழுவதுமே அங்கே உள்ள பூமிகளை விவசாயம் செய்யவேண்டுமென்று ஏற்பாடு செய்யும் நிலையில், கூட்டுறவு முறையில்தான் அப்படிச் செய்யவேண்டும். ஆகவே கூட்டுறவுச் சங்கங்களை ரெஜிஸ்டர்செய்து, அவைகள் மூலம் எல்லாக் காரியங்களையும் செய்யவேண்டும் என்பதுபற்றித்தான் பரிசீலனை நடந்துவருகிறது.

SRI P. G. MANICKAM : முக்கியமாக நிலமில்லாத ஹரிஜனங்களுக்கு நிலம் கொடுப்பதன் பொருட்டு, நிறைய நிலமுள்ளவர்களிடம் நிலத்தைக் கேட்டு வாங்குவதற்காக, பூமிதான இயக்கத்தை வினோபாஜி ஆரம்பித்தார். அந்த நிலங்களின் மொத்தத்தில் 1/3 பங்கை ஹரிஜனங்களுக்குக் கொடுக்கவேண்டும் என்றும் அவர் சொல்லியிருக்கிறார். ஆகையால் கிராம தானமாகக் கிடைத்த நிலங்களில் 1/3 பங்கு ஹரிஜனங்களுக்குக் கொடுக்கப்படுகின்றதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கிராமங்கள் பூராவும் தான மாகக் கொடுக்கப்பட்டுள்ள இடங்களில், அந்த கிராம நிலங்கள் எல்லா வற்றிலும் கிராம மக்கள் எல்லோருக்குமே அக்கறை இருக்கக்கூடியபடி ஏற்பாடு செய்யப்படும். ஆகையால், ஹரிஜனங்களுக்கு என்று அங்குள்ள நிலங்களைப் பிரித்துக்கொடுக்கவேண்டிய அவசியமில்லை.



19th July 1957]

SRI M. JAGANNATHAN : Sir, is it the intention of the Government to solve the problem of land reforms in our State through the instrumentality of Vinobhaji?

THE HON. SRI C. SUBRAMANIAM : Now what form the land reforms should take is itself a debatable point. If we however divide the lands into small bits, it may lead to difficulties. Therefore the considered opinion of all experts is that the land reform should take the form of joint co-operative farming. As a matter of fact, the Gramdan movement should afford an opportunity to experiment on these lines.

SRI A. VEDARATHNAM PILLAI : நில தானம் கொடுத்தவர்களுடைய அந்த நிலங்களின் 'டைடில் டீட்' கிராமத்திற்குப் பொதுவானதாக மாற்றப்படுவதற்கு முன், அவர்களுக்கும் கடன் கொடுத்து உதவுவது முறை ஆகுமா ? எனவே அந்த 'டைடில் டீட்' களை மாற்றுவதற்கு முயற்சி எடுத்துக்கொண்டு அதைச் செய்த பிறகு, அவர்களுக்குக் கடன் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போது முதல் பிரச்னை அங்கெல்லாம் விவசாயம் நடப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டியது ஆகும். விவசாயத்திற்குக் கடன் வசதி தேவை. அந்த நிலச் சொந்தக்காரர்கள் அந்த நிலங்களை கிராமத்தின் பேருக்கு மாற்றிவிடுவதாக ஒப்புக்கொண்டு விட்டதால், யாரும் அவர்களுக்குக் கடன் கொடுக்க முன்வருவதில்லை. ஆகையால் வேறு எந்த ஏற்பாடும் செய்வதற்கு முன்பு விவசாயத்திற்கு ஏற்பாடு செய்யவேண்டியது முக்கியமானது என்று கருதப்பட்டு, அதற்கு ஏற்பாடுசெய்யப்படுகிறது. வேறு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. விவசாயம் செய்யப்பட்டு மகசூல் வந்த பிறகு கடன் கொடுப்பது என்று முடிவுசெய்யப்பட்டிருக்கிறது.

SRI K. VINAYAKAM : If according to the Hon. Minister, the entire village is to be owned by the villagers as a community, what happens to the proprietory aspect of the individuals concerned. For instance, out of the produce which they produce from out of these lands under co-operative system of farming, will the individuals be allowed to share the profits according to the amount of lands which they owned originally or according to the labour which they have put in under a socialistic pattern of society?

THE HON. SRI C. SUBRAMANIAM : They have surrendered the rights to the ownership of the lands. There is no question of dividing the produce from the lands on the basis of ownership, the present ownership of the lands. It will have to be on the basis of the labour contributed by them or some other basis which might be evolved.

SRI S. LAZAR : இப்போது நியமிக்கப்பட்டுள்ள குழுவின் சிபாரிசுகள் கிராம தானமாகக் கொடுக்கப்பட்டுள்ள நிலங்களைப்பற்றி மட்டும்தான் இருக்குமா, அல்லது பூமி தானமாகக் கொடுக்கப்பட்டுள்ள நிலங்களைப் பற்றியும் இருக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கிராம தானமாகக் கிடைத்துள்ள நிலங்கள் சம்பந்தமாகப் போடவேண்டிய திட்டங்கள் வேறு, பூமி தானமாகக் கிடைத்துள்ள நிலங்கள் சம்பந்தமாகப் போடவேண்டிய திட்டங்கள் வேறு. கிராமம் முழுவதும் அதை தானம் கொடுத்த சொந்தக்காரரிடமிருந்து விடுவிக்கப்பட்டு கிராமம் முழுவதிற்கும் சொந்த

[19th July 1957

மாக்கப்பட வேண்டிய பிரச்னை வேறு. தானம் கொடுக்கப்பட்ட நிலங்களை நிலமில்லாதவர்களுக்குப் பிரித்துக்கொடுக்கப்பட வேண்டிய பிரச்னை வேறு. இந்தக் குழுவின் சிபாரிசுகள் கிராம தான நிலங்களைப் பற்றியவை.

SRI A. VEDARATHNAM PILLAI : மதுரை ஜில்லாவிற்கு மட்டுமின்றி இதர ஜில்லாக்களுக்கும் இம்மாதிரியான திட்டம் வகுக்கப்படுமா ? நிலச் சொந்தக்காரர்களுக்குத்தான் கடன் வழங்கப்படுமா அல்லது அந்த நிலங்களில் சாகுபடி செய்பவர்களுக்கும் கடன் வழங்கப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : சாகுபடியாளர்களுக்கும் கடன் கொடுக்கப்படும். மற்ற ஜில்லாக்களுக்கும் திட்டம் உண்டு.

SRI G. GOMATHISANKARA DIKSHITAR : கிராம தானமாகக் கிடைக்கும் கிராமங்களில் கூட்டுறவு விவசாயத்திற்கு ஏற்பாடு செய்வதற்கு சர்க்கார் திட்டமிட்டிருக்கிறார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதைச் செய்யத்தான் இப்போது முயற்சி செய்துகொண்டிருக்கிறோம்.

SRI P. G. MANICKAM : கிராம தானமாகக் கொடுக்கப்பட்ட சில கிராமங்களில் மிக அதிகமான நிலங்கள் இருக்கலாம். அங்கெல்லாம், மற்றவர்களுக்குக் கொடுத்ததுபோக மீதியுள்ள நிலங்களை ஹரிஜனங்களுக்கு வழங்குவதற்கு சர்க்கார் திட்டமிடுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : கிராம தான கிராமங்களிலுள்ள நிலங்கள் எல்லாவற்றையும் கூட்டுறவுப் பண்ணையாக அமைத்து, அந்த நிலங்களில் கிராமத்திலுள்ள எல்லோரும் சேர்ந்து விவசாயம்செய்து, பிறகு அவரவர்கள்செய்யும் வேலைக்குத் தகுந்த பிரகாரம் வருமானத்தில் பங்கு பெறச் செய்வதற்கான திட்டம்தான் வகுக்கப்படுகிறது.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Will the Hon. the Minister tell us whether the donors will have any land in the distribution?

THE HON. SRI C. SUBRAMANIAM : As I have already stated there is no question of distribution of land. As far as Gramdan villages are concerned, the entire lands in the villages will belong to the community as such and the idea is that these lands should be cultivated on a joint co-operative basis. How the produce should be distributed is a matter of detail which will have to be worked out.

SRI K. B. S. MANI : கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது கிராமதானமாகக் கொடுக்கப்பட்டுள்ள கிராமங்களில் தற்சமயம் வேலை இல்லாமல் கஷ்டப்படுகிற விவசாயிகளுக்கு மட்டும் அந்த கிராமத்திலுள்ள நிலங்களைப் பகிர்ந்து விவசாயம் செய்வதற்குக் கொடுக்க சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போது அந்த கிராமங்களில் இருக்கக்கூடியவர்கள் எல்லோரும் தங்கள் நிலங்களைக் கொடுத்துவிட்டதனால் எல்லோரும் நிலம் இல்லாதவர்களாகிவிட்டார்கள். நிலம் இருக்கிறவர்கள், இல்லாதவர்கள் என்ற பிரச்னை கிராம தானத்தில் ஏற்படுவது இல்லை. கிராம தானத்திலே கிடைத்த கிராமத்தில் இருக்கக்கூடிய நிலம் பூராவையும் இப்போது சாகுபடி செய்வது எப்படி? சாகுபடி செய்த பிற்பாடு மகசூலைப் பிரித்துக் கொள்வது எப்படி என்கிற பிரச்னைதான் எழுகிறது.



19th July 1957]

SRI T. S. RAMASWAMY PILLAI : இப்போது தானமாகக் கொடுக்கப் பட்டிருக்கிற எல்லா கிராமங்களிலும் சுயதேவையைப் பூர்த்தி செய்து கொள்வதற்குப் போதுமான விஸ்தீர்ணம் உள்ள நிலங்கள் இருக்கின்ற னவா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : சில இருக்கலாம், சில இல்லாமல் இருக்கலாம். அதைப்பற்றிப் பரிசீலனை செய்து அதற்கு ஒரு திட்டம் ஏற்பாடு செய்வோம்.

SRI A. VEDARATHNAM PILLAI : கிராம தானமாகக் கொடுக்கப்பட்டுள்ள கிராமங்களிலேயே இப்போது ஒரு சிலர் கொடுப்பதற்கு மறுத்தாலும், முன்பு கொடுத்துவிட்டு இப்போது பின் வாங்கிவிட்டாலும் அவர்களுடைய விஷயம் எப்படி கவனிக்கப்படும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அவர்களை விட்டுவிட்டு பாக்கி இருக்கக்கூடியவர்களை வைத்துக் கொண்டு இந்தத் திட்டம் நிறைவேற்றப் படும்.

SRI A. GOVINDASAMY : இதுவரைக்கும் கூட்டுறவு இயக்க முறையில் சாகுபடி அமுல் நடத்தப்படுகிற கிராமங்கள் எவை ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இன்னும் ஆரம்பிக்கவில்லை. அதற்காகத்தான் இப்போது ஒரு கமிட்டியை ஏற்பாடு செய்தோம். அந்தக் கமிட்டியின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டவுடன், பிற்பாடு அதன்பேரில் எல்லா விஷயங்களும் யோசிக்கப்படும்.

SRI M. RAMACHANDRA REDDIYAR : கிராம தானங்களாக வழங்கப்பட்டிருக்கும் நிலங்களுக்கு அரசாங்கம் தீர்வை வஜாசெய்து கொடுக்குமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதில் தீர்வை விஷயம் எழுவது கிடையாது. தீர்வை எப்போதும் இருந்து கொண்டுதான் இருக்கும். இருக்கக்கூடிய எல்லா நிலங்களையும் சேர்த்து விவசாயம் செய்வது என்பது தான் பிரச்னை.

SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister describe the process and methods of taking gramdhan? May I know whether the necessary title deeds are taken from the donors at present?

THE HON. SRI C. SUBRAMANIAM : The owners of all the lands give it in writing to Vinobhaji saying that they are willing to surrender all their lands in that village. Now the matter is under consideration how it could be legalized. The idea is that co-operative societies should be formed consisting of all the villagers and their title deeds.

*Licence for a Cement Factory in Ramanathapuram district.*

*S.N. Q.*—SRI R. KRISHNASAMI NAIDU : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether a licence has been granted to "Madras Cements, Limited," to set up a cement factory in Ramanathapuram district;

(*b*) whether the Madras Cements, Limited, applied to the Government in January 1957, for the mining lease for mining the limestone, the chief raw material required for the industry in Ramanathapuram district; and

[19th July 1957

(*c*) if so, the action taken by the Government on the above application?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) Yes, Sir.

(*c*) The matter is under consideration of the Government in consultation with the Government of India.

SRI R. KRISHNASWAMI NAIDU : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தக் கம்பெனிக்கு பிப்ரவரி மாதத்திலேயே பாக்டரி அமைக்க லைசென்சு வழங்கப்பட்டிருக்கிறது. மைனிங் லைசென்சு வழங்கப்படுவதில் ஏற்பட்ட கஷ்டம் என்ன ? ஆறுமாதத்திற்குள் பூர்வாங்க வேலைகள் தொடங்கவேண்டும் என்றும் 18 மாதங்களுக்குள் கன ரக இயந்திரங்களுக்கு ஆர்டர் கொடுக்க வேண்டுமென்றும் லைசென்ஸ் கொடுக்கும்பொழுது சில வரையறைகள் குறிக்கப்பட்டது. முக்கியமாக இப்போது மைனிங் லைசென்சு வழங்குவதில் தாமதம் ஏற்பட்டிருப்பதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இந்தச் சுரங்கக் குத்தகை விஷயமாக மெட்ராஸ் சிமெண்டு கம்பெனிக்கும், இந்தியா சிமெண்டு கம்பெனிக்கும் ஓரளவு மனத்தாங்கல் இருக்கிறது. இந்தியா சிமெண்டுக் கம்பெனியார் அந்தக் குத்தகையை தங்களுக்கே கொடுக்க வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். மெட்ராஸ் கம்பெனியாரும் தங்களுக்கே கொடுக்க வேண்டுமென்று கேட்பதால் யாருக்குக் கொடுப்பது என்பது பிரச்னையில் இருக்கிறது. அதுதான் தாமதம்.

SRI S. B. ADITYAN : இந்த மெட்ராஸ் கம்பெனியார் சிமெண்டு தொழில் சாலையை ஆரம்பிப்பதற்கு சர்க்காரே 10 லட்சம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்று கோரியிருப்பதாகக் தெரிகிறது. அப்படிக் கொடுக்கும் போது இதனால் ஏற்படும் விளைவு என்ன என்பதை யோசித்துப் பார்த்து ஏற்கனவே சுதர்சனம் ஆயில் மில்லுக்குக் கொடுத்தபோது ஏற்பட்ட நிலைமை ஏற்படாது இருக்கவேண்டும் என்பதை மனதில் கொண்டு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN: சிமிண்டு தொழிற்சாலையை ராமநாதபுரம் ஜில்லாவில் ஆரம்பிக்கவேண்டுமென்ற காரணத்திற்காக மெட்ராஸ் சிமெண்டுக் கம்பெனியார் சென்னை சர்க்கார் பத்து லட்சத்திற்கு அதிகமாக இல்லாமல் அதில் ஓரளவு பங்கு எடுத்துக் கொள்ளவேண்டும் என்பதாகக் கேட்டிருக்கிறார்கள். சர்க்கார் தொழில் துறையில் ஈடுபடவேண்டும் என்ற கொள்கையை ஒப்புக்கொண்டுவிட்டால் அதில் லாப நஷ்டம் வந்தாலும் ஒத்துக் கொள்ளத்தான் வேண்டி நேரிடும்.

SRI R. KRISHNASWAMI NAIDU : அந்த மைனிங் லீஸ் கொடுக்கும் அதிகாரம் பூர்ணமாக மத்திய அரசாங்கத்திடம் இருக்கிறதா ? அல்லது மாகாண சர்க்காரிடமே இருக்கிறதா ? ஆனால் இந்த மைனிங் லீஸ் வேண்டுமென்று கேட்பதற்கு முதலில் அந்தத் தொழிற்சாலையைத் தொடங்குவதற்கு மத்திய சர்க்காரின் லைசென்சு பெற்றவர்களாக இருக்கவேண்டுமென்பதாக முதல் தகுதி குறிக்கப்பட்டு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : மைன்ஸ் லீஸ் விதிகள் பிரகாரம் இரண்டு பேர்கள் ஒரு இடத்திலே குத்தகை வேண்டுமென்று கேட்டால் முதலில் யார் கேட்டார்களோ அவர்களுக்குத்தான் கொடுக்க வேண்டும். ஆனால் தகுந்த காரணத்திற்காக மாகாண சர்க்கார் வேறு யாருக்காவது கொடுக்கலாம் என்று அதிகாரம் இருக்கிறது. அந்த முறையில் மெட்ராஸ் சிமெண்டு கம்பெனியாருக்குக் கொடுக்கவேண்டுமென்று சிபார்சு செய்திருக்கிறது.



19th July 1957]

SRI K. ANBAZHAGAN : அமைச்சர் அவர்கள் தொழில் துறையில் அரசாங்கம் பங்குகொள்வது என்று தீர்மானித்துவிட்டால் அதில் வரும் லாப நஷ்டத்திற்கும் உள்ளாகத்தான் நேரும் என்று சொன்னார்கள். பிறருடைய தனியார் தொழிலில் பங்கு எடுத்துக்கொண்டு இந்த நிலைமைக்கு உள்ளாவதைவிட தனிப்பட்ட முறையிலேயே அரசாங்கம் அத்தொழில்களை நடத்துவது நல்லதல்லவா ? லாப நஷ்டம் ஏற்படுமானாலும் கூட முதலுக்கே மோசம் வராமல் இருக்கவாவது அரசாங்கம் கவனித்துக் கொள்ள முடியாதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : எந்தத் தொழிலிலாவது நஷ்டம்வரும் என்று தெரிந்தால் அரசாங்கம் அதில் பங்கு எடுத்துக் கொள்ளாது. நல்ல முறையில் தொழில் நடக்கும் என்று தெரிந்தால்தான் பணம் இல்லாதவர்களுக்கு ஊக்கம் அளிக்க சர்க்கார் உதவி செய்ய வேண்டும் என்பதாக இந்த சட்டசபையே வகுத்த கொள்கையில் ஒன்று இருக்கிறது என்று நம்புகிறேன். அதைப் பொறுத்து நியாயமான முறையில் நடத்தப்படும். அமைக்கப்படும் தொழில்களுக்கு சர்க்கார் உதவி அளிப்பது சரியாகும் என்று நம்புகிறேன்.

SRI N. R. THIAGARAJAN : இரண்டு கம்பெனிகள் ராமநாதபுரம் ஜில்லாவில் சிமெண்டு தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்குப் போட்டி போடுவதாகவும் ஏதாவது ஒன்றுக்கு லைசென்சு வழங்க அரசாங்கம் யோசித்து வருவதாகவும் மந்திரி அவர்கள் சொன்னார்கள். மதுரை ஜில்லாவில் பெரியகுளம் தாலுக்காவில் வைகை அணைப்பகுதியில் 50 சதுர மைல் விஸ்தீர்ணத்திற்கு சிமிண்டு உற்பத்திக்கான மூலப் பொருள்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே ராமநாதபுரம் ஜில்லாவில் ஒரு சிமெண்டு தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு ஒரு கம்பெனிக்கு லைசென்சும், மதுரை ஜில்லாவில் ஒரு கம்பெனியை ஆரம்பிப்பதற்கு மற்றொரு கம்பெனிக்கு லைசென்சும் வழங்க அசரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : யாராவது முயற்சி எடுத்துக்கொண்டால் மதுரையில் ஒரு சிமிண்டு பாக்டரியை ஆரம்பிப்பது பற்றியும் அரசாங்கம் முயற்சிசெய்யும். சர்க்கார் எல்லாவிதமான உதவியும் செய்வதற்கு தயாராய் இருக்கிறார்கள்.

SRI A. A. RASHEED : May I know how many new licences have been issued for opening cement factories in our State?

THE HON. SRI R. VENKATARAMAN : A separate question may be put.

### *Rice stock in the State.*

* 144 *Q*.—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is sufficient stock of rice available in this State for distribution in 1957–58; and

(*b*) whether the Government have taken steps to check the rise in price of rice?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir. With the stock now available and the stock that will become available in the future, the Government hope to cover the distribution in 1957–58.

(*b*) Yes, Sir.

[19th July 1957

SRI S. PAKKIRISAMI PILLAI : பர்மாவிலிருந்து எவ்வளவு அரிசி இப்பொழுது நம் சென்னை ராஜ்யத்திற்கு வந்திருக்கிறது. அது எப்போது விநியோகிக்கப்படும்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பர்மா அரிசி என்று னியாக சென்னை அரசாங்கம் ஸ்டாக் வைத்துக்கொள்வதில்லை. மத்திய அரசாங்கம்தான் ஸ்டாக் வைத்திருக்கிறது. பர்மாவில் இருந்து வரவழைக் கப்பட்ட அரிசியோ, மற்ற நாடுகளிலிருந்து வரவழைக்கப்பட்ட அரிசியோ அவர்கள் ஸ்டாக் வைத்திருக்கும் அரிசியிலிருந்து அவ்வப்போது நமக்குத் தேவைப்படுகிற அரிசியை எடுத்துக்கொண்டு வருகிறோம்.

SRI K. VINAYAKAM : Sir, in view of the soaring price of rice and the non-availability of sufficient quantity of rice in the City of Madras and also in view of the fact that considerable difficulty has been felt in opening fair price shops, will the Government think of the possibility of entrusting the entire work of licensing these retailers to the Collector of Madras direct instead of through the channel of the Board of Revenue?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I do not admit that there is any scarcity of rice felt in the City of Madras or anywhere in the State. Prices are no doubt high. But still the rise in price has also been checked to some extent recently. Of course the Collector of Madras has been authorized to fix fair price shop dealers. The number of fair price shops that should be opened is fixed by the Board of Revenue.

9–20 a.m. SRI A. GOVINDASAMY : அரிசி விலை ஏற்றத்தைத் தடுப்பதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்திருப்பதாக கனம் மந்திரி அவர்கள் சொன்னார்கள். எந்த விதமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சென்ற ஆண்டில் அரிசி விலை குறைந்தபோது இந்தச் சபையில் உள்ள கனம் அங்கத்தினர்கள் கூட அரிசியை அப்போது வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு அரசாங்கம் அனுமதிக்க வேண்டுமென்று சொன்னார் அப்படி ஏற்றுமதி செய்யப்பட்டு வந்த அரிசி இப்போது வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி ஆகக்கூடாது எனத் தடை செய்யப்பட்டிருக்கிறது.

அதோடு நியாய விலைக் கடைகள் ஆங்காங்கு திறக்கப்பட்டு, அரசாங்கம் நஷ்டத்தை ஏற்றுக்கொண்டு குறைந்த விலையில் மக்களுக்கு அரிசி கொடுத்து வருகிறார்கள். இதனால் ஓரளவு அரிசி விலை அதிகப்படுவது குறைந்திருக்கிறது.

அதோடு சமீபத்தில் பார்லிமெண்டு சபையில் நிறைவேற்றப்பட்ட எசென்ஷியல் கமாடிடி ஆக்ட் திருத்தச் சட்டப் பிரகாரம் அரிசி விலையைக் கட்டுப்படுத்த, கழிந்த ஜூன் மாதம் 6-ந் தேதிக்கு முன்பிருந்த மூன்று மாதங்கள் வரையில் இருந்த சராசரி விலைக்கே, தனிப்பட்ட முதலாளிகள் ஸ்டாக் தேக்கி வைத்திருந்தாலும் அரசாங்கமே தலையிட்டு எடுத்துக்கொண்டு விற்கதக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது ஒரு ரூபாய்க்கு மேல் விலை அதிகமாகப் போனால் அரசாங்கம் எங்கு எங்கு ஸ்டாக் இருக்கிறதோ அதை அந்த ஒரு ரூபாய் விலைக்கே வாங்கிக் கொள்கிற திட்டம் இப்போது உருவாக்கப்பட்டு தயாராய் இருக்கிறது. ஆனால் அந்த அளவிற்கு அரிசி விலை ஏறவில்லை.

SRI K. VINAYAKAM : Sir, the present system of distribution of retail shops based upon the population of Divisions concerned, for instance one shop for 8,000 people in the City of Madras. Under these circumstances, only very few Fair Price Shops are



19th July 1957]

allowed to be opened in Thyagarayanagar; it has a population of 21,000 and in that event only two shops would be opened for 16,000. What happens to the balance of 5,000. Are they to go without rice? Will the Government therefore rationalize the system and give licence for fair price shops even for fractions of 8,000 population?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I once stated that it was not practicable to open fair price shops according to the population of the City or particular areas. Fair price shops are opened in order that poor people might be enabled to purchase rice at lower prices. After the formation of the Southern Zone for the matter of food distribution, the price of Andhra foodgrains has fallen a little and it is expected that Andhra rice would flow down to Madras. Therefore, Government do expect before long that there may not be any need for more shops. But a restricted number of fair price shops has been opened in the City and other stations in the State.

SRI K. ANBAZHAGAN : நியாய விலைக் கடைகளைத் திறப்பதில் பொது மக்களுடைய நன்மையே மிகவும் முக்கியமாகக் கருதப்படவேண்டு மாதலால், பொது மக்கள் எங்கெங்கே அத்தகைய திண்டாட்டத்திற்கு, துன்பத்திற்கு ஆளாகிறார்களோ அங்கங்கே மக்களுடைய எண்ணிக்கையைப் பொறுத்து நியாய விலைக் கடைகளைத் திறப்பதே, நியாய விலைக் கடைகளைத் திறப்பதன் நோக்கத்தை நிறைவேற்றும் என்பதை அரசாங்கம் உணருகிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதை நன்றாக அரசாங்கம் உணர்ந்திருக்கிறது. ஆனால் ஓரளவுக்குதான் நியாய விலைக் கடைகளை திறந்து நடத்தமுடியும். அதை மனதில் வைத்துக்கொண்டு அந்த அளவுக்கு ஆங்காங்கு அனுமதிக்கப்பட்டு வருகிறது.

SRIMATHI P. K. R. LAKSHMIKANTAM : கனம் சபாநாயகர் அவர்களே, மதுரையில் 14 நியாய விலைக் கடைகளைத் திறப்பதற்கு லைசென்சு வழங்கப்பட்டுள்ளன. மத்திய பாகத்தில் 12 கடைகளும், கிழக்கு பாகத்தில் 2 கடைகளும் இருக்கின்றன. கிழக்குப் பாகத்தில் ஏழை மக்கள் அதிகமாக இருப்பதால், அந்த இரண்டு கடைகளில் சென்று அரிசி வாங்க மிகவும் அவதிக்கு உள்ளாகின்றனர். ஆகையால் அந்தப் பாகத்திலும் இன்னும் சில கடைகளைத் திறப்பதற்கு லைசென்சு கொடுத்து ஏழை மக்களுடைய அவதியைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மதுரை கலெக்டர் அவர்களையும் கலந்து யோசித்துக்கொண்டு இன்னும் மதுரை நகரத்தில் அதிகக் கடைகள் வேண்டுமானாலும் அவைகளைத் திறக்க ஏற்பாடு செய்யப் படும்.

SRI M. JAGANATHAN : Sir, when fair price shops are opened, will Government take stringent measure in order to check fair price shop dealers from selling rice in black-market?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, whenever any case of abuse on the part of fair price shop dealers is brought to the notice of the Government, Government will take necessary action in the matter.

SRI S. LAZAR : Sir, may I know whether the steps taken by Government to control rise in price of rice are steps meant to prevent the middleman from making huge profits or do the steps affect the interest of the producers.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, the object of opening fair price shops, as I once before explained, is not merely with the idea of checking the rise in prices, it is more to enable the poor people to purchase rice at lower prices. If the hon. Member would bring to my notice any cases of middlemen making money without benefiting the poor men, I shall certainly take necessary action in the matter.

SRI P. S. CHINNADURAI : கனம் சபாநாயகர் அவர்களே, நியாய விலைக் கடைகளில் விற்கப்படுகிற அரிசி பெரும்பாலும் நாற்றம் பிடிக்க எதுவாக இருக்கிற முறையில் இப்போது ஸ்டாக் வைக்கும் முறை இருப்பதாக அறிகிறேன். ஏனென்றால் நான் சென்னை நகரில் அரிசி வாங்கிய போது அது மிகவும் நாற்றம் அடித்தது. இதைப்பற்றி விசாரித்தபோது தான் ஸ்டாக் வைக்கும் முறையினால் இந்த நாற்றமும் ஏற்பட்டுவிடுகிறது எனத் தெரிவதனால் அவ்வப்போது மக்களுக்கு நல்ல அரிசியைக் கொடுப்பதற்கு வசதியாக, ஸ்டாக் வைக்கும் முறையை திருத்தி அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கூடிய வரையில் நாற்றம் இல்லாத அரிசியைக் கொடுக்க ஏற்பாடுசெய்யப்பட்டிருக்கிறது. அதோடு மேலும் மேலும் நியாய விலைக் கடைகளைத் திறக்கவேண்டுமென்ற கோரிக்கை மக்களிடத்தில் இருந்து வந்துகொண்டிருப்பதனாலே நியாய விலைக் கடைகளில் கொடுக்கும் அரிசி நாற்றம் அடிக்கக்கூடியதாக இருக்கும் என்று நான் கருதவில்லை.

SRI T. KARIA GOUNDER : விலை கட்டுப்பாடு வேண்டுமென்று எல்லா மெம்பர்களும் கேட்கிறார்கள். நூற்றுக்கு 80 சதவிகிதம் உள்ள விவசாயிகளின் நலனைக் கருதி உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு விலை நிர்ணயிப்பதோடு உற்பத்திச் செலவையும் கட்டுப்படுத்த எதாவது கவனம் செலுத்துவார்களா ? செலவைக் குறைக்க ஏற்பாடு எதாவது எடுக்கும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன். ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : உற்பத்திச் செலவு அதிகமாக இருக்கிறதென்பது உண்மைதான். தற்போது விலையைக் குறைக்க வசதி இல்லை என்று அரசாங்கம் நினைக்கிறது.

*Old manuscripts in the Maharaja's Palace in Tanjore.*

* 145 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether any research has been conducted into the old manuscripts kept in the Maharaja's Palace in Tanjore; and

(*b*) whether any valuable scripts have been found?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) It is presumed that the manuscripts referred to by the hon. Member are the records of the Tanjore Raj which became extinct in 1855 and which were housed in the Tanjore Palace. If the presumption is correct no one has conducted any historical research among them chiefly because they are written mostly in Modi, a language with which very few persons in this State are acquainted. They have, however, been examined with the help of competent Modi knowing persons specially obtained from Bombay and lists of them have been prepared. With the help of these lists, the papers which are of historical or administrative value have been separated and transferred for safe custody and proper preservation to the Madras Record Office where they are now at the disposal of persons who might wish to do bona fide historical research among them. The remaining papers which are not worthy of permanent retention have been transferred to the Tanjore Maharaja Serafoji's Sarasvathi Mahal Library, Tanjore. These can also be consulted by research students or scholars.



SRI N. S. RAMALINGAM : கனம் சபாநாயகர் அவர்களே, தஞ்சாவூர் அரண்மனையில் மோடி மொழியில் இருந்த சுவடிகளை மொழி பெயர்க்க அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது என்று சொன்னார்கள். அவ்வாறு மோடி மொழியில் இருந்து மொழிபெயர்க்கப்பட்ட சுவடிகள் சரியாக மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறதா என்பதைப் பார்க்க அரசாங்கம் எதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : மொழிபெயர்ப்பதற்கு ஏற்பாடு செய்திருப்பதாக நான் என் பதிலில் சொல்லவில்லை.

SRIMATHI T. N. ANANDANAYAKI : இப்படிப்பட்ட சுவடிகள் அன்னிய நாட்டினரால் வாங்கப்பட்டு, அன்னிய லைப்ரெரிகளில் இருக்கிறதென்ற புகார் வந்துகொண்டிருக்கிறதே, அதற்கு எதாவது ஆதாரம் உண்டா என்று கேட்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : அதைப் புகாராக எடுத்துக் கொள்ளவில்லை. அதை மிகவும் பெருமையாக எடுத்துக்கொண்டு அவைகளினால் நமக்கு அதில் உள்ள விஷயம் எதாவது கிடைக்குமானால் அதைக் கேட்டு அறிந்துகொள்வதற்கும் முயற்சி செய்வோம்.

*Government Headquarters Hospital, Ootacamund.*

*** 146 *Q.*—SRI A. A. RASHEED** : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether any new-born baby was carried away recently by a dog from the Government Headquarters Hospital, Ootacamund; and

(*b*) if so, whether the matter has been enquired into and responsibility fixed?

**THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) A still-born baby which was kept for burial near the mortuary in the Government Headquarters Hospital, Ootacamund, was carried away by a dog for a short distance within the hospital premises.**

**(*b*) Yes. Suitable action has been taken against the sweeper of the hospital who had carelessly allowed the dog to carry the dead child.**

[19th July 1957

Sri K. VINAYAKAM : Sir, could not the missing of the child be construed that having happened during the discharge of its sovereign duty and why should strict action be taken against the individual concerned?

The Hon. Sri M. A. MANICKAVELU : I do not exactly understand the meaning of the question.

Sri A. A. RASHEED : Is it not against human sanctity that human body should be carried away and eaten by the animal?

9-30 a.m. Sri K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, மருத்துவசாலைகளில் நாய்கள், பூனைகள் முதலிய விலங்குகள் நுழைவதன் காரணமாக பல் வேறு தொல்லைகள் உண்டாகின்றன. நோயாளிகளின் உணவை நோக்கிப் பூனைகளும், நோயாளிகளை நோக்கி நாய்களும் வருகின்ற நிலைமை ஏற் பட்டிருப்பதால், இம்மாதிரி விலங்குகள் நுழையாதபடி மருத்துவ நிலையங்களில் பாதுகாப்பு அளிப்பதற்கு அரசாங்க ஊழியர்களுக்கு அரசாங்கம் அறிவிப்பு விடுக்குமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : இந்த ஆஸ்பத்திரியில் திறந்த வெளி இருந்தது. இப்பொழுது காம்பவுண்டு சுவர் போடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

Sri A. GOVINDASAMY : குழந்தையை நாய் தூக்கிக் கொண்டுபோன தற்காக ஸ்வீப்பர் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக மந்திரி அவர்கள் சொன்னார்கள். குழந்தையைப் பாதுகாக்கும் பொறுப்பு நர்சுக்கா அல்லது ஸ்வீப்பருக்கா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : உயிரோடு இருக்கும் பொழுது நர்ஸின் பொறுப்பு. இறந்துபோன பிற்பாடு ஸ்வீப்பரின் பொறுப்பு.

*Lock-out in K.C.P., Limited, Central Workshop, Tiruvottiyur, Madras.*

* 147 *Q.*—Sri S. PAKKIRISAMY PILLAI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there was a lock-out on 16th April 1957 in the K.C.P., Limited, Central Workshop, Tiruvottiyur, Madras:

(*b*) whether the management of the workshop refused to pay the workers the agreed wage rates and dearness allowance as recommended by the Minor Engineering Tripartite Committee; and

(*c*) whether the Government have taken any action to induce the management to accept the wage rates and dearness allowances recommended by the Committee?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) As a result of the stay-in strike resorted to by the workers, the management declared a lock-out on 17th April 1957.

(*b*) The management has offered to pay the workers, wages and dearness allowance at the rates recommended by the Tripartite Enquiry Committee on Minor Engineering Industry, with effect from 1st October 1956 in the case of those who were in service prior to 1st March 1956 and from 1st June 1957 in the case of those appointed on or after 1st March 1956.



19th July 1957]

(*c*) Does not arise.

Mr. SPEAKER : I may add that the lock-out has since been lifted. Thanks to the co-operation of the hon. Member representing labour and the management of the factory, and that it is now working smoothly.

Sri S. PAKKIRISAMI PILLAI : இம்மாதிரியான நிலைமையில் வேறு ஒரு தொழிற்சாலையில் தொழிலாளர்கள் நடந்துகொண்டபொழுது, அங்கே இருந்த தொழிலாளர்கள் அத்தனை பேர்களும் பழிவாங்கப்பட்டு பல பேர்கள் வேலையில்லாத நிலைமையில் இன்னும் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இம்மாதிரியான நிலையை தவிர்க்க எல்லா தொழிலாளர்களும், முதலாளியும் மெச்சும்படியாக வெகு சாதுர்யமாக மந்திரி அவர்கள் நடந்துக்கொண்டதற்காக என்னுடைய பாராட்டுதலையும் வணக்கத்தையும் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். அதை அவர்கள் ஏற்றுக்கொள்ளுவாரா எனக்கேட்டுக்கொள்ளுகிறேன்.

The Hon. Sri R. VENKATARAMAN : Thanks.

*Irrigation Scheme in Kottayamedu village.*

* 148 *Q.*—Sri C. MUTHIAH PILLAI : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the additional acreage that will be brought under cultivation as a result of the proposed irrigation scheme in Kottavamedu village in Sirkali taluk;

(*b*) whether it is a fact that the scheme has been deferred; and

(*c*) if so, the reasons therefor?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) 215 acres.

(*b*) No. The Government have not yet received the Chief Engineer's (Irrigation) final report on the scheme. The question of sanctioning or deferring the scheme can be decided only after the receipt of the Chief Engineer's (Irrigation) report.

(*c*) Does not arise.

Sri C. MUTHIAH PILLAI : சென்ற 3 ஆண்டு காலமாக மக்களுடைய அவதியைவிட என் அவதி இதில் அதிகமாக இருப்பதன் காரணமாக, இதை உடனடியாக அரசாங்கம் இந்த ஆண்டிலியே எடுத்து வேலைசெய்ய தொடங்குவார்களா ? என்ன செலவாகும் என்ற திட்டம் அரசாங் கத்தினிடம் இருக்கிறதா ?

The Hon. Sri R. VENKATARAMAN : சுமார் ரூ. 2,75,000 செலவாகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தில் சில பாகங்களை தஞ்சை ஜில்லாவிலும், சில பாகங்களை தென் ஆற்காடு ஜில்லா விலும் அமுல் நடத்தமுடியும் என்று என்ஜினியர்கள் அவர்கள் நினைக்கிறார்கள். ஆகவே, தென் ஆற்காட்டில் இருக்கும் நிலங்களுக்கு நீர்ப்பாசனம் கொடுப்பதற்கு என்னென்ன வழிகள் இருக்கின்றன என்று ஆராய்ந்துகொண்டிருப்பதனால் சற்று தவக்கம் ஆகிறது.

Sri G. VAGHEESAM PILLAI : தென் ஆற்காடு, சிதம்பரம் தாலு காவில் எத்தனை ஏகர் இந்தத் திட்டத்தினால் சாகுபடிக்குக் கொண்டு வரமுடியும் என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri R. VENKATARAMAN : 213 ஏகர்.

[19th July 1957

**Sri K. ANBAZHAGAN** : ஏறத்தாழ இரண்டு லட்ச ரூபாய் அளவிலே திட்டப்படவேண்டிய இந்தத் திட்டத்தைப்பற்றி " சீப் என்ஜினியர் " அவர்களிடமிருந்து கிடைக்கவேண்டிய பதில்கள் ஏறத்தாழ 2, 3 ஆண்டுகள் காலம் ஆகியும் கிடைக்கவில்லை என்ற குறிப்பு பதிலில் காணப்படுகிறது. இது உண்மையானால் சிறு திட்டங்களுக்கெல்லாம் இவ்வளவு கால தாமதம் ஏன் என்பதை அரசாங்கம் அறிவிக்குமா ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : இந்தத் திட்டம்பற்றி கனம் முத்தையா அவர்கள் 1954-ம் வருஷத்தில் எழுதினார்கள். 1955 பிப்ரவரி மாதத்தில் இதற்கு வேண்டிய உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டுவிட்டார்கள். சாதாரணமாக நீர்ப்பாசன திட்டங்கள் தீட்டுவது என்று சொன்னால், பல இடங்களில் 'லெவல்' எடுக்கவேண்டி இருக்கிறது. இந்த திட்டங்களின் மூலமாக பக்கத்து ஜில்லாவுக்கு வசதி செய்யமுடியுமா என்றெல்லாம் ஆலோசனை செய்கிறார்கள். ஆதலால் அதிக காலதாமதம் ஆகிவிடவில்லை என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**Sri C. MUTHIAH PILLAI** : இந்தத் திட்டமானது கொள்ளிடத்தின் நடுத் திட்டிலே இருப்பதன் காரணமாக கொஞ்சம் காலதாமதம் நிச்சயமாக ஏற்படும் என்பதை உணர்ந்தாலும், காலதாமதம் ஏற்படுவதால் அங்குள்ள 3,000 மக்கள் குடிக்கத் தண்ணீர் இல்லாமலும், சாகுபடிக்கு தண்ணீர் வசதி இல்லாமலும் அவதிப்படுகிறார்கள். கனம் விவசாய மந்திரி நேரில் பார்த்து உத்திரவிட்டு " இன்வெஸ்டிகேஷனுக்கு " சென்ற ஆண்டு எடுத்துக்கொள்ளப்பட்டதன் காரணமாக, இந்தத் திட்டம் அமுலில் வருகிற நிலைமையில் இருக்கிறது. இதைக் கைவிடாமல் எப்படியாவது இந்த ஆண்டிலேயே ஆரம்பிப்பதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சர் வரும்பொழுது சொல்லி ஆவன செய்யும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**The Hon. Sri R. VENKATARAMAN** : இந்தத் திட்டத்தை கைவிடுவதாக உத்தேசம் இல்லை.

**Sri M. P. SUBRAMANIAM** : அமைச்சர் அவர்கள் கூறிய பதிலிலிருந்து இந்த திட்டத்திற்கு சுமார் ஒரு ஏகருக்கு 1,000 ரூபாய்க்கு அதிகமாக செலவு என்று தெரியவருகிறது. அப்படியென்றால் மற்ற பகுதிகளிலும் ஏகர் ஒன்றுக்கு ரூ. 1,000-க்கு அதிகமாக செலவில்லாமல் இருந்தால், அந்தத் திட்டங்களையெல்லாம் அதிக செலவாகிற திட்டம் என்று கருதாமல் சாத்தியமான திட்டங்கள் என்று கருதி அந்தந்த வட்டார என்ஜினியர்களுக்கும், கலெக்டர்களுக்கும் உத்தரவு போடுவார்களா ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : ஒவ்வொரு திட்டத்தைப்பற்றி அதனுடைய புள்ளி விவரங்களை எடுத்து அதனால் செலவு என்ன, வருமானம் என்ன என்பதை•யெல்லாம் பார்த்துதான் திட்டத்தை எடுத்துக் கொள்ளுவதா, இல்லையா என்று முடிவு செய்ய முடியும். பொதுவாக ஏகர் ஒன்றுக்கு 1,000 ரூபாய் செலவாகும் திட்டங்கள் எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளவேண்டும்மென்பது சரியல்ல.

**Sri K. B. S. MANI** : இந்த கொட்டாமேடு கிராமம் ஒரு தீவாக இருக்கிறது. சர்க்கார் அங்கு இருக்கும் மக்களுக்கு இந்தச் சலுகையைச் செய்யாவிட்டால், அவர்கள் வேறு எந்தத் துறையிலும் வாழ்க்கையை நடத்துவதற்கு வசதியற்றவர்களாக இருக்கிறார்கள். ஒரு ஏகருக்கு ரூ. 1,000 செலவழிந்தாலும், அல்லது ரூ. 5,000 செலவழிந்தாலும் மக்களுக்கு இதைக் கட்டாயம் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**Mr. SPEAKER** : அங்கத்தினர் கேட்கும்பொழுது " அரசாங்கம் செய்யுமா " என்று கடைசியில் சொல்லுங்கள். இல்லாவிட்டால் அது கேள்வியாகாது.

19th July 1957]

*Hydro-Electric Schemes.*

* 149 *Q*.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) the Hydro-Electric Schemes affected in the State by import restrictions; and

(*b*) the extent to which they are affected?

THE HON. SRI V. RAMIAH : (*a*) The Hydro-Electric Schemes in the State which have been affected by import restrictions are—

(i) Periyar Hydro-Electric Scheme.

(ii) Construction of Villivakkam to Villupuram and Neiveli to Salem 110 K.V. lines.

(iii) Kundah Hydro-Electric Scheme.

(iv) Rural Electrification Schemes.

(v) Works relating to communication between various power stations and sub-stations and essential improvements.

(*b*) Consequent on the delay on the part of the Government of India to sanction the foreign exchange required for the import of essential materials required for the execution of the above schemes, the programme of execution of the schemes has been upset, and there is likely to be delay in completion of the schemes and bringing them into beneficial use. The extent to which the completion of the schemes will be postponed can be computed only after the Government of India accord sanction to the foreign exchange requirements.

SRI K. SATTANATHA KARAYALAR : Under the present circumstances, will the Hon. Minister be in a position to say whether at least fifty per cent of the target fixed in the Second Five-Year Plan will be fulfilled?

THE HON. SRI V. RAMIAH : The completion of the whole scheme is not going to be delayed or upset. But our requirements are very small, as far as foreign exchange is concerned. It is only a question of some little delay in the fulfilment of the proframe.

SRI K. VINAYAKAM : Do the Government realize that due to this delay in procuring materials for the execution of the plan, the entire Second Five-Year Plan will be upset?

THE HON. SRI V. RAMIAH : I said that the entire plan would not be upset. It is only a question of delay. We are pressing the Government of India for the release of more foreign exchange and we expect to get it.

SRI K. ANBAZHAGAN : 'ஹைட்ரோ எலக்டிரிக் ஸ்கீம்' போன்ற மிகமிக இன்றியமையாத திட்டங்களில் தாமதம் ஏற்படுகிறது பல்வேறு காரணங்களினால் என்பதை ஒப்புக்கொள்ளுகிற அமைச்சர் அவர்கள், இந்தத் தாமதம் பொதுவாக எல்லா 'எலக்டிரிக்' ஸ்கீம்களிலும்

[19th July 1957

ஏற்படாமல், சிலவற்றில் மட்டும் ஏற்படுவதை பிரித்து, ' பிரையாரிடி ஸ்கீம் ' முறையிலே மிகமிக உடனடியாக கவனிக்கவேண்டியவைகள் இவையெனக் குறிப்பிட்டு மத்திய அரசாங்கத்தினிடம் வற்புறுத்தி உதவி கோருவார்களா ?'

THE HON. SRI C. SUBRAMANIAM : Priorities have already been assigned and I may inform the hon. Member that steel electricity and coal get the highest priority. Any delay in the execution of the schemes will be very negligible. As a matter of fact, we had hoped that we would be able to finish execution of the schemes before the target date. But now, perhaps, we will be able to finish it by the target date.

9-50 a.m. SRIMATHI T. N. ANANDANAYAKI : It was stated that the Canada Government has come forward to help us in the construction of the Kundah scheme. When that Government has come forward to help us, why should there be any delay at all so far as this Kundah scheme is concerned?

THE HON. SRI V. RAMIAH : The Canada Government has come forward to help us with a certain amount, namely, 20 million dollars. The other supplies that we require, we should get at our own cost. But in getting foreign exchange for very small amounts there are some difficulties. We expect that these difficulties will be overcome.

*Panchayat Boards Elections.*

* 150 *Q.*—SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal to conduct elections to panchayat boards; and

(*b*) if so, when?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) & (*b*) The matter is engaging the attention of Government.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : This has been engaging the attention of Government for so many years. The elections should have been held some three years back but they have been postponed since. May I know when exactly the Government would come to a decision in the matter and hold these elections.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : The elections ought to have been held three years back but they were postponed for various reasons and it is receiving the attention of Government.

SRI A. A. RASHEED : How many new panchayats have been constituted during the last year, Sir?

MR. SPEAKER : I think a separate question may be put regarding this. I have no objection if the Hon. Minister will answer that question.



19th July 1957]

SRI P. S. CHINNADURAI : ஸார், மதுக்கரை போன்ற இடங்களில் 15 அயிரம் ஜனத்தொகை இருந்தும் இன்னும் அங்கு பஞ்சாயத் போர்டு அமைக்காமல் இருப்பதின் சரியான காரணம் என்ன என்பதை தெரிவிக்க முடியுமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : இப்போது ஏகதேசம் 7000 பஞ்சாயத்துகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதனால்தான் கூடுதல் தாமதம் ஏற்பட்டது. கூடிய சீக்கிரமே அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

THE HON. SRI C. SUBRAMANIAM : மதுக்கரையைப் பொறுத்தளவில் அங்கு இருக்கக்கூடிய பிரச்னை என்னவென்றால் அங்கு பல கட்டிடங்களும் கட்டப்பட்டு வருகிறது. இதனால் பல தகராறுகளும் இருக்கிறது. இதனால்தான் கால தாமதம் ஏற்படுகிறது. கூடியசீக்கிரத்தில் அங்கும் ஏற்படுத்தப்படும் என்று நம்புகிறேன்.

SRI K. VINAYAKAM : Does the Government know that the elections to these Panchayats were held some 10 years back and the present Members of the Panchayat Boards are there for the past ten years? Therefore will the Government realise the desirability of holding the elections as early as possible and if insurmountable difficulties are felt in holding these elections, will they think of scrapping the Panchayat system and allow them to be district villages to be administered by the District Boards.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : The Government are not aware that it is ten years since the elections were held.

SRI S. M. ANNAMALAI : தலைவர் அவர்களே, பஞ்சாயத் போர்டு தலைவர் தேர்தல் பஞ்சாயத் போர்டு உறுப்பினர்களால் நடத்தப்படுமா ? அல்லது மக்களால் தேர்ந்தெடுக்கப்படுமா ?

THE HON. SRIMATHI LOURDHAMML SIMON : அதைப்பற்றி யோசிக்கப்பட்டு வருகிறது.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : In spite of the answer given by the Hon. Minister the house is not in a position to know when exactly the Government will come forward to hold the elections.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : I have clearly stated, it is under consideration.

THE HON. SRI C. SUBRAMANIAM : The elections are due for most of the panchayats from January to about September of next year. We propose to take steps to see that the elections are held during this period.

SRI V. SUBBIAH : சபாநாயகர் அவர்களே, கிராமங்களில் 500-க்கு மேலுள்ள ஜனத்தொகையுள்ள இடங்களில் பஞ்சாயத்து போர்டு அமைக்க வேண்டுமென்று இருப்பதால் அந்த இடங்களில் எல்லாம் பாலட் முறையில் தேர்தல் நடத்தப்படுமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : எல்லா கிராமங்களிலும் பஞ்சாயத் போர்டு ஏற்படுத்துவதற்கு திட்டங்கள் இருக்கின்றன. அது எவ்வாறு அமைக்கவேண்டும் என்பதை பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

[19th July 1957

SRI M. P. SUBRAMANIAM : தலைவர் அவர்களே, பஞ்சாயத் போர்டு அமைப்பதற்கு ஆலோசித்துக்கொண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இதில் ஆலோசிக்க என்ன இருக்கிறது என்று தெரியவில்லை. ஆகவே உடனடியாக இதை ஏற்படுத்தி தேர்தலை நடத்துவதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : அமைக்கும் முறையிலும், தேர்தல் நடத்துகின்ற முறையிலும் மாற்றம் செய்ய வேண்டியிருக்கிறது. அதற்காகத்தான் ஆலோசிக்கப்பட்டு வருகிறது என்று சொன்னேன்.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, இந்த அரசாங்கத்தினுடைய நோக்கமே கிராம பஞ்சாயத்துக்கள் மூலமாக கிராம சுயராஜ்யத்தை ஏற்படுத்துவது என்று பல முறை அறிவிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால் இவ்விதமான கிராம பஞ்சாயத்துக்கள் அமைப்பதற்கு காலம் கடத்துவது ஜனநாயக முறைக்கு விரோதமானதல்லவா ? அப்படி காலம் கடத்துகிறார்கள் என்றால் அவர்கள் கடமையிலிருந்து தவறியிருக்கிறார்கள் என்பதை உணர்ந்திருக்கிறார்களா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : இதற்காகத்தான் சீக்கிரமாக இதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

SRI G. GOMATHISANKARA DIKSHITAR : மைனர் பஞ்சாயத்துகளிலும் இந்த தேர்தல் முறை புகுத்தப்படுமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : அங்கும் தேர்தல் முறையை கொண்டு வருவதற்கு அரசாங்கம் முன் வரும்.

SRI A. GOVINDASAMY : ஜில்லா போர்டு தேர்தலில் கையாண்ட குறியிடுகிற தேர்தல் முறை, மேஜர் பஞ்சாயத் தேர்தல்களிலும் அந்த முறை கையாளப்படுமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : அந்த முறையைப் பற்றி ஆலோசித்து வருகிறது.

SRI K. B. S. MANI : சபா நாயகர் அவர்களே, இப்போது கிராம பஞ்சாயத் அமைப்பதற்கு இந்த டெப்யூட்டி பஞ்சாயத் ஆபீஸர்கள் குறைவாக இருப்பதால் ஒவ்வொரு ஆபீஸருக்கும் அதிகமான ஏரியாக்கள் இருப்பதினால் சீக்கரமாக பஞ்சாயத்துகள் அமைக்கப்பட முடியவில்லை என்று தெரிகிறது. ஆதலால் கூடுதலாக டெப்யூடி பஞ்சாத் ஆபீஸர்களை நியமிக்க அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : அது அவசிய வேண்டுமானால் அதைப்பற்றி ஆலோசிக்கப்படும்.

SRI M. P. SUBRAMANIAN : தலைவர் அவர்களே, இந்த தேர்தல் முறையைக் கொண்டு வருவதற்கும், இதை மாற்றி அமைப்பதற்கும், வோட்டு முறைகளை மாற்றி யமைப்பதற்கும் கால தாமதம் ஆகிறது என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். உண்மையில் என்ன காரணம் என்பதை இச் சபையிலுள்ள அங்கத்தினர்கள் அறிவதற்கு உரிமை யில்லையா ? ஆகவே காலதாமதத்திற்கு என்ன காரணம் என்பதை திட்டவட்டமாக அறிவிக்க முடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதில் காலதாமதம் ஒன்றுமில்லை. ஜனவரி மாதத்தில் தேர்தல் ஆரம்பிக்க வேண்டுமென்றுதான் நிச்சயிக்கப் பட்டிருக்கிறது. அதற்கான எல்லா ஏற்பாடுகளும் நடந்துகொண்டிருக்கிறது.



19th July 1957]

SRI K. VINAYAKAM : In the matter of voting, in the minor Panchayats, counting of heads is the system adopted. Not hands, only heads are counted. I was an eye witness to all these things. All the voters are huddled in one room and their heads are counted. But for the elections to the major panchayats, the system of marking the ballot paper is adopted . . .

MR. SPEAKER : Is the hon. Member giving information or asking a question.

SRI K. VINAYAKAM : I am trying to elicit an answer.

MR. SPEAKER : The hon. Member should put it in the form of a question.

SRI K. VINAYAKAM : Will the Government think of avoiding these complications and misunderstandings after the elections and instead of having the system of counting of heads and hands, adopt the system of marking the ballot paper for both the major and minor panchayats?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : The Government of course take the information, and if it is necessary, necessary action will be taken to see that it is done well.

*Jain Religious and Charitable Institutions.*

* 151 Q.—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether there is any proposal to extend the provisions of the Madras Hindu Religious and Charitable Endowments Act, 1951, to the Jain Religious and Charitable institutions in the State;

(b) whether the Government have received any mass-petitions, dated 17th December 1956 and 29th January 1957 from the Jain Public of the South and North Arcot districts in respect of the mismanagement of the Melsithamur Jina Kanji Mutt; and

(c) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No.

(b) Yes.

(c) The matter is under the consideration of the Government.

SRI M. JAGANNATHAN : தலைவர் அவர்களே, மேல்சித்தமூர் சமண மடத்தில் பல நிர்வாக ஊழல்கள் நடந்துகொண்டிருக்கிற காரணத்தால் உடனடியாக அந்த மடத்தினுடைய நிர்வாகத்தை சர்க்கார் எடுத்து நடத்துவதற்கோ, அல்லது இப்போது இருக்கின்ற மடத் தலைவர்களை மாற்றி புதிய தலைவர்களை தேர்ந்தெடுக்கவோ அரசாங்கம் முயற்சிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த ஸ்தாபனத்தை ஹிந்து பரிபாலன போர்டு நிர்வாகத்தின்கீழ் கொண்டுவரவேண்டுமென்று 1957-ம் வருஷம் ஜூன் மீ 12-ம் தேதியில் நோட்டிபிக்கேஷன் போடப்பட்டிருக்கிறது. அதற்கு சட்டபடி ஆட்சேபனை ஏதாவது இருக்குமானால் அதை தெரிவிப்பதற்கு 1957-ம் வருஷம் ஆகஸ்டு மீ 11உ என்று கடைசி நாளாக வைத்திருக்கிறது. அதற்கப்புறம் முடிவு செய்யப்படும்.

*Grants to orphanages.*

* 152 *Q.*—SRI K. VINAYAKAM (on behalf of Sri K. R. Viswanathan): Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether a deputation consisting of Mrs. Mandha Krishnamurthi representing the Avvai Home and a few others waited on the Chief Minister at Madras on 13th May 1957 and urged on him the need for the enhancement of the present rate of grants to orphanages from Rs. 8 to Rs. 15 per head per month; and

(*b*) if so, the action taken in the matter?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) Yes.

(*b*) The request for the enhancement of the present rate of grants to orphanages is under consideration.

SRI K. VINAYAKAM: Is it not a fact, Sir, that a grant of Rs. 15 is allowed for all Harijan students staying there and if so may I know whether the same concession would be allowed to all children staying in the Avvai Home considering the financial stringency under which the institution is compelled to work?

THE HON. SRI C. SUBRAMANIAM: The scheme is under the Orphanages Scheme and not under the Harijan Welfare Scheme for which we are paying a grant of Rs. 8 per destitute child. The question whether it should be increased or not is under consideration. The financial stringency is not only for the institution but for the State also.

9-50 a.m. SRIMATHI T. N. ANANDANAYAKI: Sir, are the Government aware of the fact that the grants given to the orphanages are mostly abused by the persons running the institutions and will the Government see that the grant of Rs. 8 per mensem per child reaches the child all right?

THE HON. SRI C. SUBRAMANIAM: I do not think the hon. Member is justified in making a sweeping remark that the grants are mostly abused. My own view is that most of these institutions are running very well. Perhaps in some institutions, there may be some mistakes committed. But certainly we would look into them, and it is always the intention of the Government to see that these institutions are run properly.

SRI A. VEDARATHNAM PILLAI: ஹரிஜனங்களுக்கும், பிற்போக்கு வகுப்னர்களுக்கும், இவர்களுக்காவது தாய் தந்தையர்கள் இருக்கிறார்கள். தாயும் தந்தையும் அற்ற அனாதைக் குழந்தைகளுக்கு மாதம் எட்டு ரூபாய் கொடுத்து அதில் ஜீவிக்க வேண்டுமென்றால் அது கஷ்டம் அல்லவா? ரொம்ப நாட்களுக்கு முன்பு ஏற்படுத்திய திட்டத்தை இன்னும் அப்படியே வைத்திருப்பது முறையா? எனவே இப்போது இருக்கிற காலநிலையை அனுசரித்து அவர்களுக்குக் கொடுக்கிற கிராண்டை அதிகப்படுத்த அரசாங்கம் முன் வருமா?

19th July 1957]

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த எட்டு ரூபாயில் அவர்கள் சாப்பிட வேண்டுமென்று சொல்லவில்லை. சர்க்காரின் உதவி என்று மாதம் எட்டு ரூபாய் கொடுக்கப்படுகிறது. மற்றப் பகுதியை அந்த ஸ்தாபனங்களை நடத்துகிறவர்கள் போட்டு நடத்தி வருகிறார்கள். இப்பொழுது செலவு அதிகமாகி இருப்பதால் இந்தத் தொகை போதாது என்று அவர்கள், சர்க்காரிடம் சொல்லி இருக்கிறார்கள். இதைபற்றி சர்க்கார் பரிசீலனை செய்துகொண்டு வருகிறது.

SRI A. GOVINDASAMY : இம்மாதிரி அனாதை ஆசிரமங்களுக்கு பண உதவி செய்ய போதுமான பணம் இல்லையென்று சொல்கிறார்கள். ஏன் மத்திய சர்க்காரை வற்புறுத்தி இந்தமாதிரி காரியங்களுக்காக பணம் அதிகம் பெற முயற்சிக்கக் கூடாது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : பெரிய மீன் பிடிக்க எனக்கு அக்கறை இருக்கிறதேயொழிய சிறிய மீன் பிடிக்க அக்கரை இல்லை.

SRI P. G. MANICKAM : ஒவ்வொரு ஜில்லாவிலும் உள்ள அனாதைகளை பராமரிக்க ஒவ்வொரு ஜில்லாவிலும் அனாதை பராமரிப்புசாலைகளை ஜில்லா கலெக்டரின் மேற்பார்வையில் நடத்த சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதுமாதிரி ஸ்தாபனங்களை எல்லாம் தனிப்பட்டவர்கள் எடுத்து நடத்தினால்தான் நல்ல முறையில் அவைகளை நடத்தமுடியும் என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆகவே தனிப்பட்டவர்கள் இதுபோல் ஆசிரமங்களை நடத்த முன் வந்தால் அதற்கு சர்க்கார் உதவி செய்யும்.

SRI S. PAKKIRISAMI PILLAI : சென்னை நகரத்தில் உள்ள அனாதைக் குழந்தைகள் விடுதிகள் நிரம்பப்பட்டிருக்கின்றன. இந்த விடுதிகள் சொற்பமான எண்ணிக்கையில் இருக்கிறகாரணத்தால் வெளியிலிருந்து சென்னைக்கு குழந்தைகள் ஓடி வந்து விட்டால் போலீஸார் அவர்களை பிடித்துக் கொண்டு போய் இம்மாதிரியான அனாதை விடுதிகளில் அடைப்பதால் அவர்களுக்கு இடம் கொடுக்க இன்னும் சில விடுதிகளை ஏற்படுத்த அரசாங்கம் யோசிக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதை விரிவுபடுதுவதற்கு அவசியம் இருக்கிறது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் விரிவு படுத்துவதற்கு எவ்வளவுதூரம் முடியும் என்பதை ஆலோசித்து எவ்வளவு முடியுமோ அவ்வளவும் செய்யலாம்.

SRI K. B. S. MANI : இப்படிப்பட்ட அனாதை விடுதிகளை நடத்த தர்மபுரம் மடாலயம் போன்ற மடாலயங்கள் முன் வந்திருக்கிறது. ஆனால் அந்த மடாலயங்களில், அவர்களுக்கு வேண்டியவர்களின் குழந்தைகளும், அவர்களது சொந்தக்காரர்களின் குழந்தைகளும், தாய் தந்தையர்கள் உள்ள பிள்ளைகள் தான் இருக்கிறார்கள். இப்பிரகாரம் அனாதை விடுதி என்ற பெயரால் சர்க்காருக்கு கணக்கு காண்பிக்க வேண்டுமென்ற ஒரே ஒரு காரணத்திற்காக வேண்டி, இம்மாதிரி ஒரு சில குறிப்பிட்ட சமூகத்தினருக்காக வேண்டி விடுதிகள் நடக்கிறது சர்க்காருக்குத் தெரியுமா ? அப்பேர்ப்பட்ட விடுதிகளை தடை செய்ய, அல்லது மற்றைய பிள்ளைகளையும் அதில் சேர்த்து படிக்கவைக்கும்படி அவர்களைக் கட்டாயப்படுத்த சர்க்கார் வழி வகுக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதைப் பற்றி தகவல் ஒன்றும் சர்க்காருக்கு இல்லை. கனம் அங்கத்தினர் தகவல் தெரிந்து இது சம்பந்தப் பட்ட அமைச்சர் அவர்களுக்கு எழுதி அனுப்பினால் அவர் அதை கவனிப்பார்.

[19th July 1957

SRI P. S. CHINNADURAI : ஔவை இல்லத்திற்கு சர்க்கார் பண உதவி கொடுக்க வேண்டுமென்ற அனுகூலமான முடிவு எடுக்கும்போது அதை முந்திய தேதியிலிருந்து கொடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : பணம் அதிகப்படுத்தும்போது முந்திய தேதியிலிருந்து கொடுப்பதில்லை என்ற கொள்கையை சர்க்கார் அனுசரித்து வருகிறது.

SRI K. VINAYAKAM : அமைச்சர் அவர்கள் பெரிய மீன்களையே பிடிக்க வேண்டுமென்று அக்கரைகொண்டு இருந்தால் இந்த சிறிய மீன்கள் எல்லாம் பட்டினியாலும் பசியாலும் வாடி வதங்கி செத்து விடும் என்று அவர்களுக்குத் தெரியுமா ? (சிரிப்பு)

THE HON. SRI C. SUBRAMANIAM : நான் சிறிய மீன் என்று சொன்னது சிறிய தொகையையும், பெரிய மீன் என்று சொன்னது பெரிய தொகையையும் ஆகும். நாம் பெரிய தொகையையே கேட்க வேண்டும். சிறிய தொகையை எப்படியாவது சரிக்கட்டி விட முடியும். அதைத்தான் சொன்னேனே தவிர மீனைப் பிடித்து சாப்பிடுவதற்கல்ல.

SRI K. ANBAZHAGAN: அனாதை விடுதிகள் ஒரு சிறந்த அறநிலையம் என்ற காரணத்தினால் "ஹிந்து ரிலிஜியஸ் என்டோமெண்ட் போர்ட்" மூலமாக மிகுதியான வருமானம் வருகிற ஒவ்வொரு கோவில்களின் பக்கதில் ஒவ்வொரு அனாதை விடுதி நடத்த கேட்டுக்கொள்ளப்படுமா ? ஒவ்வொரு மடாலயங்களும் இத்தனை அனாதை விடுதிகள் நடத்த வேண்டுமென்று வற்புறுத்தப்படுவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுதும் அவைகள் நடத்திவருகின்றன. கனம் மணி அவர்களும் சொன்னார்கள், அங்கே நடக்கிறது; ஆனால் சரியாக நடக்கவில்லை என்று அதைப்பற்றிகவனிக்கப்படும்.

SRI A. VEDARATHNAM PILLAI : பிச்சைக்கார விடுதிகளில் இருக்கிற குழந்தைகளுக்கு மாதம் 10 ரூபாய் சர்க்கார் கொடுத்து வருகிறது. அப்படி இருக்கும்போது இந்த அனாதைக் குழந்தைகளுக்கு மட்டும் 8 ரூபாய் கொடுப்பது முறையா ? என்பதைப் பற்றி அரசாங்கம் பரிசீலிக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதை தர்ம ஸ்தாபனமாக நடத்துகிறார்கள். சர்க்காரிலிருந்து இதை நடத்துவது என்றால் தர்ம ஸ்தாபனங்கள் நடத்துவதில் அர்த்தம் இல்லாமல் போய் விடும். தர்ம ஸ்தாபனங்கள் அவைகளை, நடத்துகிறது, அவைகளுக்கு சர்க்காரின் உதவி இருக்கிறது என்பதைக் காண்பிக்கத்தான் இந்த 8 ரூபாய் கொடுக்கப் படுகிறது. ஆனால் அதை கூடுதலாக உயர்த்த வேண்டும் என்பதைப் பற்றி பரிசிலனை நடத்தப்பட்டுவருகிறது.

SRI P. S. K. LAKSHMIPATHI RAJ : அனாதை விடுதிகளுக்கு மடாலயங்கள் பணம் தர வேண்டுமென்ற யோசனையுடன் இந்த சினிமாக் களுக்கு கதை எழுதி லட்சம் லட்சமாக சம்பாதிக்கிறார்களே, அவர்களிடமிருந்து ஒரு தொகையை இதற்கு வரவழைத்துக் கொடுக்க அமைச்சரவர்கள் முயற்சிப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அவர்கள் இதுபற்றி உணர்ச்சி மேலிட்டு முன் வந்தால் அவர்களுடைய சேவையை பயன் படுத்திக்கொண்டு அந்த ஆசிரமங்களை நடத்த உதவியாயிருக்கும்.

SRI C. MUTHIAH PILLAI : அனாதை விடுதிகள் ஏற்படுத்தும்போது ஒரு ஆண்டு காலத்திற்கு இந்த தர்மகர்த்தாக்கள் அவைகளை ஏற்படுத்தி நடத்துகிறேன் என்று தெரிவித்துவிட்டு ஒரு ஆண்டு காலம் அதை சரியாக நடத்தினால் அதற்கு மேல் அவர்களுக்கு சலுகை கொடுக்கப் படுகிறது. அப்படி அதை சரியான முறையில் நடத்த முடிகிறது என்றால் பின் ஏன் அவர்களுக்கு இந்த சலுகை தர வேண்டுமென்று கேட்க விரும்புகிறேன் ?



19th July 1957]

THE HON. SRI C. SUBRAMANIAM : மடாலயங்கள், தேவாலயங்கள் இவைகள் நடத்தக்கூடிய ஸ்தாபனங்களுக்கு இந்தப் பிரச்னையே இல்லை. அவ்வை ஆச்ரமம் போன்றவைகளை நடத்துகிறவர்களுக்கு மடாலயங்கள், தேவாலயங்கள் போன்றவைகளில் கிடைப்பது போலுள்ள வருமானம் இவர்களுக்குக் கிடையாது. ஆகவே இவர்கள் நடத்தும் ஸ்தாபனங்களுக்கு எந்த விதத்தில் உதவி செய்ய வேண்டும் என்பதே பிரச்னை.

SRI M. RAMACHANDRA REDDIYAR : வாலாஜாபேட்டையில் தீனபந்து ஆசிரமம் ஒன்று நடந்து வருகிறது சர்க்காருக்குத் தெரியுமா ? அதற்காக ஏதாவது உதவி செய்யப் பட்டு வருகிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : தனிப்பட்ட ஸ்தாபனங்களைப் பற்றி உடனடியாக நான் பதில் சொல்லக் கூடிய நிலையிலில்லை.

SRI A. A. RASHEED : மடாதிபதிகளுக்கும் அனாதை குழந்தைகள் . .

MR. SPEAKER : I must disallow this question. This is not a fair question to ask in this House. Now questions are over. We will proceed with the discussion on the budget.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1957-58—*cont.*

### (1) DEMAND XVIII—AGRICULTURE AND FISHERIES.

### (2) DEMAND XIX—VETERINARY.

### (3) DEMAND XXXII—COMMUNITY DEVELOPMENT PROJECTS, NATIONAL EXTENSION SERVICE AND LOCAL DEVELOPMENT WORKS.

### (4) DEMAND XXXVIII—CAPITAL OUTLAY ON AGRICULTURE—*cont.*

MR. SPEAKER : The discussion on Agriculture Demand will go on till 2 o'clock. As I said, the Hon. Minister will require forty-five minutes to one hour.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Forty-five minutes will do.

MR. SPEAKER : How much time does the Leader of the Opposition want?

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Twenty minutes, Sir.

MR. SPEAKER : I am sure the hon. Member Sri Annadurai will require twenty minutes. Thus eighty-five minutes will be required for all the three. The rest of the time will be utilised by hon. Members.

I suppose it is the desire of the House that we should sit only till 2 o'clock?

Srimathi Hemalatha Devi will speak now. The hon. Member is not here. Next speaker, Sri Arumughasamy will speak.

அங்கத்தினர் பேசவேண்டுமென்று கடிதம் கொடுத்து விட்டு அவர் பெயரைக் கூப்பிடும்போது அவர் இல்லாவிட்டால், மிகக் கஷ்டமாக இருக்கும். அம்மாதிரி நிலைமை ஏற்பட்டால், அவருக்கு அந்த "சான்ஸ்" போய்விட்டதென்றே நான் சொல்ல விரும்புகிறேன். அங்கத்தினர் பேசவேண்டுமென்று பெயர் கொடுத்த பிறகு, தயவு செய்து உட்கார்ந்திருந்து அவருக்குப் பேச சந்தர்ப்பம் கொடுத்தபிற்பாடு போவது நல்லது என்று நான் இந்த சமயத்தில் சொல்ல விரும்புகிறேன்.

10-02 a.m. * SRI M. A. B. ARUMUGHASWAMI : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும், விவசாயம், மீன் வளர்ச்சி, தேசீய விஸ்தரிப்புத் திட்டங்கள் ஆகியவைகளுக்கான மான்யக் கோரிக்கைகளை ஆதரிக்கும் முறையில் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். விவசாயம் முன்னேறவேண்டுமானால் விவசாயிகளுக்கு சாகுபடிக்குத் தேவையான வசதிகளை அரசாங்கம் செய்துகொடுக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பது சகஜமாயிருக்கிறது. குறிப்பாக, விவசாயிகள் சாகுபடிச் செலவுக்காகத் தக்காவி கடன்கள் மூலமாக உதவி பெறுகிறார்கள். ஆயில் என்ஜின் அல்லது எலெக்ட்ரிக் மோட்டார் முதலியவைகளைத் தவணைகளில் பெற்று உபயோகிக்கிறார்கள். கிணறுகளைப் புதிதாக வெட்டுவதற்கோ அல்லது பழைய கிணறுகளை மராமத்து செய்வதற்கோ சர்க்காரிடமிருந்து உதவி பெறுகிறார்கள். கிணறுகளிலிருந்து தண்ணீரை இறைப்பதற்கு வேண்டிய மின்சார வசதியையும் பெறுகிறார்கள். சர்க்காரிடமிருந்து பொறுக்கு விதைகளையும் பெறுகிறார்கள். இவ்வாறு விவசாயத்திற்கு வேண்டிய உதவிகளையெல்லாம் பெற்று, விவசாயத்தை அபிவிருத்தி செய்து நாட்டிற்கு வேண்டிய உணவுப் பொருள்களை விளைவிக்கிறார்கள். இவ்வாறு பல வகைகளிலும் விவசாயிகளுக்கு மேன்மேலும் ஊக்கமளிக்கவேண்டுமென்று நான் சர்க்காரை மிகவும் மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கொடைக்கானல் தாலூகாவிலும் திண்டுக்கல் தாலூகாவைச் சேர்ந்த ஒரு சில மலைக் கிராமங்களிலும் வசிக்கும் மலைவாசிகளுக்கு ஏற்கெனவே சர்க்கார் விதித்திருக்கும் வரிகளில் சில சலுகைகள் அளித்தால் அவர்களுக்கு உதவியாகயிருக்கும் என்று கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியப்படுத்த விரும்புகிறேன். மேலும், அவர்கள் அந்த மலைகளில் விளையும் விளைபொருள்களை நாட்டுப்புறங்களுக்குக் கொண்டுவந்து விற்பதற்குத் தகுந்த சாலை வசதிகளும் போக்குவரத்து வசதிகளும் செய்து கொடுக்க சர்க்கார் முன்வந்தால், அதனால் விவசாயிகள் பெரிதும் பயனடைவார்கள். மலைகளிலுள்ள மலைத் தோட்டக்காரர்கள் கல் கோட்டைகள் கட்டி மண் அரிப்பைத் தடுப்பதற்காக மண் அரிப்புத் திட்ட நிதியிலிருந்து அவர்களுக்கு உதவி செய்ய வழிவகைகள் செய்ய வேண்டுமென்றும் சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும், மலைகளில் பொருள்களை நல்ல முறையில் விளைவிப்பதற்கு வேண்டிய வசதிகளையும் அரசாங்கத்தார் செய்துகொடுக்க வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கால்நடை பராமரிப்புக்காக ஒவ்வொரு பிர்க்காவிலும் ஒரு கல்நடை ஆஸ்பத்திரியை திறந்து வைத்து, அந்தந்தப் பகுதியிலுள்ள கால்நடைகளுக்கு வேண்டிய வைத்திய வசதிகளைச் செய்துகொடுப்பதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும்.

அடுத்தபடியாக, தேசீய விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ், சர்க்கார் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளபடி ஆத்தூர் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அத்திட்டத்தின் கீழ் அநேக கிராமங்கள் பயனடைந்த போதிலும், இன்னும் ஒரு சில கிராமங்கள் பயன் அடைய முடியாத நிலைமையில் இருக்கின்றன. அத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு கிராமத்திற்கும் அதிகபட்சம் ரூ. 1,000

தான் கொடுக்கமுடியுமென்று நிபந்தனை இருப்பதால், அந்தக் கிராமங்கள் அத்திட்டத்தினால் பயனடைய முடியாமல் பிற்போக்கான நிலைமையிலிருக்கின்றன. அவ்வாறு பயனடையாத கிராமங்களுக்கு ஹரிஜன க்ஷேம நல நிதியிலிருந்தோ அல்லது ஸ்தல ஸ்தாபன நிதியிலிருந்தோ உதவியளித்து அவைகள் பயனடையும்படி செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்த மான்யக் கோரிக்கைகளை ஆதரிக்கிறேன் என்று சொல்லிக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

**Sri M. KANDASAMI PADAYACHI** : கனம் சபாநாயகர் அவர்களே, 10-06 a.m.
இப்போது நமது விவசாய மந்திரி கொண்டுவந்திருக்கும் மான்யத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். உணவு உற்பத்தியை அதிகரிக்கவேண்டுமென்று அரசாங்கத்தார் விரும்புவதால், அதற்கு வேண்டிய வசதிகளையெல்லாம் விவசாயிகளுக்குச் செய்து கொடுக்கவேண்டியது அரசாங்கத்தின் கடமை. முக்கியமாக, கிராமங்களில் உணவு உற்பத்திக்கு வேண்டிய கருவிகள் இல்லாமல் மக்கள் ரொம்பவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு பிர்க்காவிலும் ஒரு டெமான்ஸ்ட்ரேட்டர் ஆபீசைத் திறந்து வைத்து அங்கு மேஸ்திரிகளைத் தருவித்து உழவர்களுக்கு வேண்டிய கருவிகளை நமது அரசாங்கத்தார் கடனுகக் கொடுத்துத் திருப்பி வாங்குவதற்கான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். டெமான்ஸ்ட்ரேட்டர் மூலம் உரங்கள் வழங்கும் முறை சரியாக நடக்காததால், மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். விவசாயிகள் மணியக்காரரிடம் சக்குபந்தி வாங்கிக்கொண்டு போய் கேட்டால், அவர்களுக்கு வேண்டிய உரங்களைக் கொடுப்பதற்கு பெர்மிட் கொடுக்கிறார்கள். அதைக் கொண்டுபோய்க் கடைகளில் கேட்டால், உரங்கள் சரியான விலையில் கொடுக்கப்படுவதில்லை. அவர்கள் மிகுந்த லாபத்திற்கு விற்கிறார்கள். ஆதலால், அந்த உரங்களை டெமான்ஸ்ட்ரேட்டர் ஆபிஸிலேயே கொடுக்கும்படியான வசதிகள் செய்துகொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

விதைகளும் டெமான்ஸ்ட்ரேட்டர் ஆபீஸ் மூலமாக சரியான முறையில் வினியோகிக்கப்படுவதில்லையென்று நான் கேள்விப்படுகிறேன். உளுந்தூர் பேட்டையில் ஒரு டெமான்ஸ்ட்ரேட்டர் ஆபீஸ் இருக்கிறது. அங்கு காலா காலத்தில் விதைகள் வருவதில்லை. அப்படிக் காலாகாலத்தில் வந்தாலும், அவை காலாகாலத்தில் வினியோகிக்கப்படுவதில்லையென்று குறை கூற விரும்புகிறேன். பருவ மழை சரியான காலத்தில் பெய்யாமல் இருந்தாலும் கூட, எவ்விதத்திலும் பயனடையாத விவசாயிகளைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு விதைகள் முதலானவற்றை தக்க காலத்தில் கொடுத்து அவர்கள் பயனடையும்படியான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாடு, கன்றுகள் ஆகியவைகளைக் கவனித்துக்கொள்ள ஒவ்வொரு பிர்க்காவிலும் வெடரினரி டாக்டர்கள் இருக்கவேண்டும். ஆனால், இப்பொழுது கூட பிர்க்கா டெவலப்மெண்டு ஆபீஸர் எங்கேயோ சில கிராமங்களில் இருக்கிறார்கள். வெடரினரி டாக்டர்கள் இருக்கவேண்டுமென்றால், இந்த மாதிரி எங்கேயோ ஒரு இடத்தில் இருக்கக்கூடாது என்று சொல்லுகிறேன். 20 அல்லது 30 கிராமங்கள் கொண்ட பிர்க்கா இருந்தால், ஐந்து மைல் ரேடியசுக்குள்ளாக ஒரு வெடரினரி ஆஸ்பத்திரி இருந்தால், வியாதியால் பீடிக்கப்பட்ட மாடு, கன்றுகள் சிகிச்சை பெறமுடியும். இல்லாவிட்டால், மாடு, கன்றுகளின் மரணத்தால், உழவர்களுக்கு மிகுந்த நஷ்டம் உண்டாகிறது. இவ்வாறு அதிக நஷ்டம் ஏற்படுவதால், மாடு, கன்றுகள் வாங்குவதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கும் கடன்களை விவசாய மக்கள் திருப்பிக் கொடுக்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள் என்பதை அரசாங்கத்தார் அறியவேண்டும். தக்க முறையில் விவசாயம் செய்து வருவதற்கு மாடு, கன்றுகள் நல்ல நிலைமையில் இருக்கவேண்டும். வியாதியால் பீடிக்கப்படும்

மாடு கன்றுகள் வெடரினரி டாக்டர்களால் சரியான முறையில் பாதுகாக்கப் படாவிட்டால், உழவர்களுக்கு அதனுல் ரொம்பவும் நஷ்டம் ஏற்படுகிறது என்பதை அரசாங்கத்தாருக்குத் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

டிராக்டர்கள் வாங்கி அவைகளை டெமான்ஸ்ட்ரேட்டர் ஆபீஸ் மூலமாக வாடகைக்குக் கொடுத்தால், மிகவும் உபயோகமாக இருக்குமென்று நான் நினைக்கிறேன். மேட்டுப்பாங்கான நஞ்சை பூமியாகயிருந்தால், ஒரு நாளைக்கு சுமார் 20 ஏக்கர் நிலம் உழுவதற்கு டிராக்டர் பயன்படுகிறது. அதனுல் ஆழ உழ முடிகிறது. அதனுல் உற்பத்தியும் பெருகுமென்று நான் கருதுகிறேன். சுமார் ரூ. 20,000 முதல் போட்டு டிராக்டர் வாங்குவது என்பது ஏழை விவசாயிகளுக்கு முடியாத காரியம். ஆதலால், அரசாங்கத்தார் டிராக்டர்களை வாங்கி, தக்க நிபுணர்களின் உதவியைக் கொண்டு, வேண்டுமாளுல் விவசாயிகளிடம் வாடகைப் பணம் வாங்கிக் கொண்டு, நிலங்களை ஆழ உழுவதற்கு வசதி செய்து தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். அதோடுகூட டெவலப்மெண்ட் ஸ்கீமிலே ஒரு சமுதாய நலத் திட்டம் வகுத்திருக்கிருர்கள். அந்த திட்டத்தின் கீழ் Block Development Officers இருக்கிருர்கள். இந்த திட்டத்தின் கீழ் நான்கில் ஒரு பங்கு அங்குள்ள மக்கள் கொடுத்தால்தான் அவர் களுக்கு வேண்டிய வசதி செய்து கொடுக்கப்படுகிறது. சரியான கிராமங்களா யிருந்தால் வசதி செய்துகொடுத்துக்கொண்டு வருகிருர்கள். ஏழைக் குடிகள் நான்கில் ஒரு பங்கு கொடுக்க வசதியில்லாதவர்களுக்கும் இந்த வசதி செய்துகொடுக்க அரசாங்கம் முன்வர வேண்டுமென்று ஞாபகப் படுத்துகிறேன்.

அதோடுகூட ரோடு வசதிகள். கிராமங்களில் உள்ள விவசாயிகள் சரியான ரோடுகள் இல்லாததால் கஷ்டப்படுகிருர்கள். ரோடு வசதி இருந்தால்தான் விவசாயக் கருவிகள் வாங்கிக்கொண்டு வரவும், விவசாயத்தில் விளையக்கூடிய பொருள்களை நகரங்களில் கொண்டுபோய் விற்கவும் வசதி ஏற்படும். பிர்க்கா டெவலப்மெண்ட் ஆபீஸர்கள் முக்கிய மாக ரோடு வசதியிருக்கிறதா என்று கவனிக்கவேண்டும். அதோடுகூட அந்த ஊரிலே கிணறு வசதிகள் பலன் அளிக்கிறதா என்று கவனிக்க வேண்டும். எலெக்ட்ரிஸிடி இல்லாமல் இருந்தால் Demonstratorகள் மூலமாக தக்க காலத்தில் 4 வருஷ கெடு வைத்து கொஞ்சம் கொஞ்சமாக வசூலிக்கும்படி பம்ப் ஸெட்டுகளைக் கொடுத்து, கிணறு வசதிகள் செய்து கொடுத்தால் உற்பத்தி நல்ல முறையில் ஏற்படும். அவர்களுக்கு அந்த முறையில் பயிரிடுவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு கூட நமது மீன் பிடிக்கும் இலாகாவில் பரதவர்களுக்கு பட் டணங்களில் விசைப்படகுகள் சர்க்கார் வாங்கிக் கொடுக்கிருர்கள், அதோடு கடன் வசதியும் செய்து கொடுக்கிருர்கள். கிராமப் பகுதிகளிலுள்ள பரத வர்கள், அதாவது மீன் பிடிக்கும் செம்படவர்கள் ரொம்ப கஷ்டப் படுகிருர்கள். இந்தத் தொழிலைக் கொண்டு தான் அவர்கள் பிழைக் வேண்டியிருக்கிறது. ஏரி, குளங்களை சர்க்கார் குத்தகைக்கு விடுவதை விட்டு, compensation மாதிரி கொஞ்ச தொகை இவர்களிடமிருந்து வாங்கிக் கொண்டு அவர்களுக்கு அந்தக் குளம் ஏரிகளைக் கொடுத்தால் அவர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்திற்கும் சௌகரியமாக இருக்கும். ஆகவே, இம் மாதிரியான வசதிகளைச் செய்து கொடுத்தால் ஆதாரமாயிருக்கும் என்று சொல்லிக்கொண்டு, இவ்வளவு நேரம் பேச அனுமதி கொடுத்ததற்கு என் வந்தனத்தை தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

***Sri D. SUBRAMANIA RAJAKUMAR:** கனம் சபாநாயகர் அவர்களே, ராமநாதபுரம் ஜில்லாவில் பல பகுதிகளில் விவசாயப் பெருமக்கள் தொன்று தொட்டு கண்மாய் ஓரங்களில் நஞ்சை, புஞ்சை விவசாயம் செய்...



டிருக்கிருர்கள். கண்மாய் வண்டல் மண் காரணத்தால் அங்கு விவ சாயம் நன்கு விளைகிறது. இதனுல்தான் முன்ஞேர்கள் இந்த விவசாய முறையை அனுசரித்து வந்திருக்கிருர்கள். ஆனுல் இப்போது சர்க்கார் இந்த விவசாய முறைக்கு தடை செய்தும் eviction order கொடுத் திருப்பதனுல் அங்குள்ள விவசாயப் பெருமக்கள் மிகவும் பாதிக்கப் பட்டிருக்கிருர்கள். உணவு உற்பத்தி வேலையில் முனைந்திருக்கும் இந்த சர்க்கார் இப்படிப்பட்ட நடவடிக்கைகள் எடுப்பதனுல் உணவு உற்பத்தியை பெருக்கும் வேலை பங்கம் அடையும். இதனுல் பரம்பரையாக இந்த விவ சாய முறையை நம்பி வாழும் விவசாய பெரு மக்கள் மிகவும் கஷ்டப் படுவார்கள். இதை சர்க்கார் உணர்ந்து உடனடியாக ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிவகெங்கை தொகுதியில் ஜமீன் ஒழிப்புக்குப் பிறகு கண்மாய் மண் மராமத்தோ அல்லது கலிங்கல் மராமத்தோ சர்க்கார் செய்யவில்லை. இப்போது புயலினுல் பாதிக்கப்பட்ட கண்மாய்களுக்கும், கலிங்கு, மடை களுக்கும் மராமத்து செய்தார்கள். ஆனுல் புயலுக்குப் முன்பாதக மடைந்த கண்மாய்களை சர்க்கார் மராமத்து செய்யவில்லை. இது சம்பந்தமாகவும் ஆவன செய்ய வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது விவசாய பெருமக்களுக்கு விதை, கால் நடை முதலிய வைகளுக்கு தக்காவி லோன் கொடுப்பது குறைவாக இருக்கிறது. அதற்கு சரியான வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். சிவகெங்கை தொகுதி விவசாயத் துறையிலே பிற்போக்கான ஒரு தொகுதி. இப்போது வைகை கெனல் ஸ்கீம்படி 7 ஆயிரம் ஏக்கர் பலன் அடைய சர்க்கார் ஒரு திட்டம் வகுத்திருக்கிருர்கள். இப்படிப்பட்ட தொகுதிக்கு இன்னும் ஒரு 7 ஆயிரம் ஏக்கர் பலன் அடையும்படி சர்க்கார் செய்யுமென்று நம்புகிறேன்.

கடைசியாக இந்த சிவகெங்கை தாலூகாவானது மிகவும் பிற்போக்கான நிலையில் இருப்பதனுல் இதையும் Block development-ன் கீழ் சேர்ப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் வார்த் தையை முடித்துக்கொள்கிறேன்.

**Mr. SPEAKER : I fiind that Sri Ramalinga Padayachi is not in his seat. Sri A. S. Subbaraj will now speak now.**

**Sri A. S. SUBBARAJ :** சபாநாயகர் அவர்களே,......

**Mr. SPEAKER :** இன்று மாலை 3 மணி முதல் 5 மணி வரையில் ஹரிஜன் டிமாண்ட் விவாதத்திற்கு வருகிறது என்று அங்கத்தினர்களுக்கு நேற்றே சொன்னேன். சில அங்கத்தினர்கள் அப்போது இங்கு இல்லை ஆகையால் பேச வாய்ப்புக்கு என்னிடம் வந்து கேட்கிருர்கள். ஆனுல் இப்போது விவாதம் நடக்கும் டிமாண்ட் 2 மணிக்கு வோட் செய்யப்படும். மறுபடியும் இந்த சபை 3 மணிக்கு கூடி 5 மணி வரையில் ஹரிஜன மானியத்தைப் பற்றி விவாதிக்கும் என்பதை எல்லோருக்கும் நினைவு படுத்துகிறேன்.

***Sri A. S. SUBBARAJ :** சபாநாயகர் அவர்களே, இந்த மானியத்தை 1
ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். எனது பிராந் தியத்திலுள்ள நிலங்களிலெல்லாம் மழையை எதிர் பார்த்துத்தான் விவசாயம் செய்ய வேண்டியிருக்கிறது. முன்பு ஜமீனில் இருந்த பல அணைகளும் வாய்க்கால்களும் இன்னும் செப்பனிடப்படவில்லை. இப்போது அங்கே ஏரிகளையும் குளங்களையும் மட்டும்தான் சர்க்கார் எடுத்து வேலை செய்து கொடுத்தார்கள். ஆனுல் அதற்கு தண்ணீர் வரக்கூடிய வாய்க்

கால்கள் வேலை செய்யப்படாததால் மழை காலத்தில் தண்ணீரை கொண்டு
வந்து தேக்க முடியாமல் இருக்கிறது. இவைகளையும் சீர்படுத்த வேண்டி
யது அவசியமாகும். அங்குள்ள கிணறுகளுக்கு மின்சார வசதிகள்
கொடுக்கப்பட்டிருக்கிறது. கிணறுகளில் தண்ணீரில்லாத காரணத்தால்
மின்சார வசதி கொடுத்தும் பூர்ணமாக அனுபவிக்க முடியாமல் மினிமம்
காரண்டி கொடுக்க வேண்டியிருக்கிறது. மினிமம் காரண்டி அளவுக்குக்
கூட தண்ணீர் இறைப்பது கஷ்டமாயிருக்கிறது. இந்த மினிமம் காரண்
டியை சர்க்கார் நிறுத்தும்படி கேட்டுக்கொள்கிறேன். இம்மாதிரியான
பிரச்னைகளைத் தீர்க்க ஒரு வழி இருக்கிறது. அதாவது அந்த பிராந்தியத்
திலே மேற்கு தொடர்ச்சி மலையில் ஓடுகிற கல்லாறை கேரள சர்க்காரும்
நம் சர்க்காரும் ஒன்றுகப் பேசி ஒரு மாதிரியாக திட்டத்தை நிறைவேற்றினுல்
இந்தப் பிரச்னை வராது என்று நினைக்கிறேன். கல்லாறு திட்டத்தை
சீக்கிரத்திலேயே கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்வதுடன் விவ
சாயிகளுக்கு டிராக்டர்கள் மாதிரியுள்ள இயந்திரங்களையும் கொடுக்கப்பட
வில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அம்மாதிரி கொடுத்தால்
தான் அந்தப் பிரதேசத்தில் விவசாயத்தைப் பெருக்க முடியும். விவ
சாயத்தை ஊக்குவிக்க முடியும். நல்ல முறையில் விவசாயத்தைச் செய்ய
முடியும்.

இரண்டாவதாக எனது பிராந்தியத்திற்குப் பக்கத்தில் தேவாரத்தி
லிருந்து போடிநாயகனூர் வரையில் காட்டுப் பிரதேசமாக இருக்கிறது.
பக்கத்திலுள்ள மலைகளிலிருந்து மணலை காற்று அடித்துக்கொண்டு வந்து
அந்தப் பிரதேசங்களில் குவிகின்றன. அதனுல் அந்தப் பிரதேசம் பூரா
வும் மணல் அடித்து பாலைவனம் ஆகி விடும்போல் இருக்கிறது. இதை
கனம் அமைச்சர் அவர்களே நேரில் வந்து பார்த்திருக்கிறுர். இதை நாம்
இப்பொழுதே கவனிக்காமல் விட்டு விட்டால் கூடிய சீக்கிரத்தில் அங்கு
பெரிய பாலை வனம் ஏற்பட்டு விடும். அதனுல் இப்பொழுதே உடனடியாக
பாரஸ்ட் டிபார்ட்மெண்டு மூலமாய் காடுகளை வளர்க்க ஏற்பாடு செய்ய
வேண்டும். எங்கு எங்கு பிளாக் டிவலப்மெண்டு வருகிறதோ அங்கு
எல்லாம் பிளாக் டிவலப்மண்டு மூலம் காடுகளை வளர்க்க ஏற்பாடு செய்ய
வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ள வேண்
டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். இப்படி மணல் அடிப்
பதால் அங்குள்ள கிராம வாசிகள் மிகவும் பாதிக்கப்படுகிறுர்கள். இதை
உடனடியாக கவனித்து அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்தபடியாக எங்கள் பிராந்தியமாகிய போடி நாயகனூரில் ப்ளாக்
டெவலப்மெண்ட் வேலைகள் சுமார் 9 மாதங்களுக்கு முன்னதாக ஆரம்பித்து
இப்பொழுது அது நடைபெற்று வருகின்றன. இம்மாதம் அது சம்பந்த
மாக 13-ம் தேதிதான் ஒரு கூட்டம் கூட்டினுர்கள். இதற்கு முன்பு அது
சம்பந்தமாக என்ன நடந்தது என்ன செலவு செய்தார்கள் என்ற விவ
ரமே தெரியாமல் இருந்தது. என்ன காரியங்களைச் செய்தார்கள் என்ற
விவரமே தெரியாமல் இருந்தது. இப்பொழுது தான் போடிநாயகனூரில்
அதற்கு என்று ஒரு கட்டிடம் கட்ட வேண்டும் என்று இடத்தை தேடிக்
கொண்டு வருவதாகத் தெரிய வருகிறது. இதற்கு முன்பு வாடகைக்
கட்டிடத்தில் இருந்தார்கள். அந்தக் கட்டிடத்திற்கு இது வரையிலும்
வாடகை கொடுத்தாகத் தெரியவில்லை. அவ்விதம் வாடகை கொடுக்காமல்
இருப்பது சரியல்ல. அந்தக் கட்டிடத்திற்கு வாடகையைக் கொடுப்பதற்கு
அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

என்னுடைய பிரதேசம் இது வரையிலும் ஜமீன் பிரதேசமாக இருந்து
வந்தபடியால் அங்கே நிலங்கள் சர்வே செய்யப்படாமல் இருந்து வந்திருக்
கிறது. சர்வே செய்து நிலச்சொந்தக்காரர்களுக்கு இது வரையி
லும் பட்டாக்கள் வழங்கப்படாமல் இருக்கிறது. பட்டாக்கள் வழங்கப்படாமல்
இருப்பதால் அங்குள்ள விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டு அவர்களால்

கடன்கள் வாங்க முடியாமல் இருக்கிறார்கள். ஆனால் இந்த விஷயங்கள் பரிசீலனையில் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். இம்மாதிரியான வசதிகளை விவசாயிகளுக்குச் செய்து கொடுத்தால்தான் ப்ளாக் டெவலப்மெண்ட் மூலமாக வசதிகள் செய்து கொடுப்பதை அவர்கள் பயன்படுத்திக்கொள்ள முடியும். ஆகவே உடனடியாக அங்குள்ள விவசாயிகளுக்கு வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக அங்கே ப்ளாக் டெவலப்மெண்ட் வருவதற்கு முன்னதாகவே கூட்டுறவு டிப்டி ரிஜிஸ்தரார் மூலமாகவும் ஆட்டுப்பண்ணைகள் அமைத்து ஆடுகளை வளர்ப்பது என்று திட்டமிட்டார்கள். அதற்கு வேண்டிய சப்சிடியும் கொடுப்பதாக சொல்லி ஏழை ஆடு வளர்ப்பவர்களிடம் ஷேர் மூலமாக பணமும் வசூலித்து வந்தார்கள். அப்படிப்பட்ட தொகைகள் வசூல் செய்து ஒரு வருஷமாகியும் இது வரையிலும் எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக் கொண்டதாகக் தெரியவில்லை. அதனால் அங்குள்ள ஏழை ஆடு வளர்ப்பவர்கள் ரொம்பவும் அவதிப்படுகிறார்கள். அங்கு ப்ளாக் டெவலப்மெண்ட் வந்த பிறகும் எந்த விதமான முயற்சியும் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. அவர்களிடத்தில் எந்த விதமான அனுதாபமும் காண்பிக்கப்படவில்லை என்பதை சொல்லிக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* **Sri M. KARUNANITHI** : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, குறிப்பிட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். விவசாயத்தை நம்பியும் விவசாயத்தால் பெருமை பெற்றும் திகழ்கின்ற நமது நாட்டில் விவசாயத்திற்கு மிக மிக முக்கியமானது நல்ல விதைகள். அத்தகைய நல்ல விதைகளை வளர்த்துத் தருகிற பொறுப்பை மாநில அரசு ஏற்றிருக்கிறது என்று கனம் நிதி அமைச்சர் தந்த அறிக்கையிலும் நேற்றைய தினம் விரிவுரை ஆற்றிய விவசாய அமைச்சருடைய பேச்சிலும் காணப்படுகின்றது. நல்ல விதைகளைத் தருவதற்காக 400 விதைப் பண்ணைகளை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறுவப்படும் என சென்னை அரசாங்கத்தினுடைய செய்தித்துறை வெளியிடான " உழவனுக்கு " என்ற நூலில் காணப்படுகிறது. அதே நேரத்தில் 400 விதைப் பண்ணைகளை நிச்சயமாக நிறுவுவார்கள் என்ற மகிழ்ச்சி பெற்றாலும் நிதி அமைச்சருடைய நிதி நிலை அறிக்கையிலும் விவசாய அமைச்சருடைய பேச்சிலும் பார்த்தால் 360 பண்ணைகள் தான் நிறுவப்படும் என்ற செய்தி தெரிய வருகிறது. 400 பண்ணைகள் நிறுவப்படும் என்ற செய்தியையும் 360 பண்ணைகள் நிறுவப்படும் என்ற செய்தியையும் ஒப்பிட்டுப் பார்த்தால் 40 பண்ணைகள் குறைந்து போனதாகத் தெரிய வருகிறது.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : தென் கன்னடம், மலையாளம் முதலிய பிரதேசங்கள் சேர்ந்து இருந்த காலத்தில் ப்ளானிங் கமிஷனால் 400 பண்ணைகள் நிறுவப்படுவதாக உத்தேசிக்கப்பட்டிருந்தது. அவைகள் இப்பொழுது பிரிந்து போய் விட்டபடியால் அவை 360-க்குக் குறைந்து போய் விட்டது என்பதை மட்டும் கனம் அங்கத்தினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**Sri M. KARUNANITHI** : " உழவனுக்கு " என்கின்ற அரசினர் நூலில் வந்த செய்தியும் புள்ளி விவரங்களையும் வைத்துக்கொண்டுதான் நான் சொன்னேன். பரவாயில்லை : இந்த 360 விதைப் பண்ணைகளை வைத்துக் கொண்டு நல்ல விதைகளைக் கொடுக்க முடியும் என்று கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் அது எந்த அளவில் விவசாயிகளுக்குச் சேரப் போகிறது எந்த அளவில் அவர்கள் அனுகூலம் அடையப்போகிறார்கள் என்பது தெரியவில்லை. விவசாயிகளும், மற்றும் தொழிலாளர்களும் இந்த மானியத்தில் உள்ளடங்கி இருக்கும் மீனவர்களும் எந்த அளவில் பயனடையப் போகிறார்கள் என்பதும் தெரியவில்லை.

பனிக்கட்டியானது ஒருவருடைய கையிலிருந்து பத்துப் பேருடைய கைக்கு மாறும்போது கடைசில் போய்ச் சேருபவர் கையில் ஒன்றும் இல்லாமல் போய் விடும். அந்த அளவில் நான் இந்த விதைகளையும், கடனையும், விவசாயக் கருவிகளையும் விநியோகம் செய்யும் முறை ஆகிவிடுகிறது. இடையே உள்ளவர்கள் அந்த அளவுக்கு அவைகளைப் பகிர்ந்து கொள்கிறார்கள்.

விவசாயக் கல்லூரி ஒன்று கோவையில் இருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 1956–57-ல் மட்டும் இந்தக் கல்லூரிக்கு என்று 7 லட்சம் ரூபாய் செலவிடப்படும் என்று அரசாங்கச் செய்தித்துறை வெளியிட்டுள்ள "உழவனுக்கு" என்ற நூலில் 24-ம் பக்கத்தில் பார்த்தேன். ஏழு லட்சம் ரூபாய் அதற்கு என்று செலவிடப்பட்டதாக இருந்தால் உள்ளபடியே அதைக் கண்டு எல்லோரும் மகிழ்ச்சி அடைய வேண்டியது தான். இந்த ஆண்டு கனம் நிதி அமைச்சர் அவர்கள் விவசாயக் கல்லூரித் துறைக்கு 5·96 லட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டிருப்பதாக தெரிவித்துள்ளார். 1956–57-ல் ஏழு லட்சம் ரூபாய் விவசாயக் கல்லூரிக்கு ஒதுக்கி விட்டு இப்பொழுது ஐந்து லட்சத்து சொச்சம் ரூபாய் ஒதுக்குவதாக இருந்தால் அதைக் கண்டு நாம் பூரிப்பு அடையக் கூடிய நிலையில் இல்லை என்பதை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

முந்திரித் தொழிலைப்பற்றி நான் சிறிது கூற விரும்புகிறேன். அடிக்கடி நான் முந்திரித் தொழிலைப்பற்றி குறிப்பிடுகிறேன் என்று நினைக்க வேண்டாம்—முந்திரித் தொழில் சம்பந்தமாக இங்கே ஒன்றைக் எடுத்துக் காட்டாமல் இருக்க முடியாது. நல்ல காரியத்திற்காகவே நெய்வேலிப் பகுதியில் பல முந்திரிக் காடுகள் அழிக்கப்படக் கூடிய நிலையில் இருக்கிறது. அரசினர் முந்திரிக் காடுகளை உற்பத்தி செய்வதற்கும் முந்திரி பயிரிடுவதற்கும் புதிய புதிய இடங்களைத் தேடி அலையாமல் நெய்வேலியில் முந்திரிக்காடு அழிக்கப்படுவதால் பாதிக்கப் படுகிறவர்களிடம் நஷ்டஈடு கொடுத்தால் அதை வைத்துக்கொண்டு அவர்களே இடத்தை வாங்கி பயிரிடுவதற்கு தயாராக இருக்கிறார்கள் என்பதை கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த மாதத்தில் நான் விழுப்புரம் சென்றிருந்தேன். அப்பொழுது புகைவண்டி நிலையத்திற்குப் பக்கத்தில் ஒரு புதிய ஆலை இருப்பதைப் பார்த்தேன். அது என்ன என்று கேட்டதற்கு மணிலாவிலிருந்து வனஸ்பதியைத் தயாரிக்கக் கூடிய ஆலை என்று கூறினார்கள். ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு அரசாங்கத்தினிடமிருந்து பத்து லட்சம் ரூபாய் கடன் வாங்கி வனஸ்பதி உற்பத்தி செய்வதற்கு என்று ஆலையை அமைத்தார்கள் என்றும் அப்படி கடனைப் பெற்று ஆலையைக் கட்டினார்கள் என்றும், கட்டிடங்களை கட்டிவிட்டு இயந்திரங்களை வரவழைத்து அவைகளையும் அங்கு அமைத்தார்கள் என்றும் அதன் பிறகு அந்த ஆலை வேலை செய்யவில்லை என்றும் சொன்னார்கள். கட்டிடங்கள் கட்டி இயந்திரங்களை அமைத்தும் ஆலை வேலை செய்யவில்லை என்பதோடு "வேதாளம் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே, பாதாள மூலி படருமே" என்ற பழைய பாடல் ஒன்றை, ஞாபக மூட்டுவதாகவும் இருக்கிறது அந்த இடம்! கட்டிடம் சீரழிந்து சிறப்பு அழிந்து இயந்திரங்கள் துருப்பிடித்துப்போன நிலையில் காணப்படுகின்றன. இதை உடனடியாகக் கவனித்து அந்த வனஸ்பதி ஆலைக்கு மீண்டும் புத்துயிர் அளித்து அதனால் அங்கு விளையும் மணிலா அங்குள்ளவர்களுக்கு உள்ளபடியே பயனளிக்கக் கூடிய நிலையை உண்டாக்கி அதன் மூலம் தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள தொழிலாளர்களை பயனடையச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் அங்குள்ள தொழிலாளப் பெருமக்கள் அரசாங்கத்தை வாழ்த்துவார்கள் என்பதையும் கூறிக்கொள்கிறேன்.



நேற்றய தினம் அமைச்சர் அவர்களுடைய உரையில் வேறு ஒரு உரையிலும் காணப்படாத ஒரு நல்ல செய்தியை வெளியிட்டிருக்கிறார்கள். தூத்துக்குடியில் ஆண்டு தோறும் முத்துக் குளித்தல் நடைபெறும் என்றும், அதனால் அரசாங்கம் கணிசமான வருமானத்தைப் பெறலாம் என்றும் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இந்த நேரத்தில் அமைச்சர் அவர்களுக்கு, கனம் சபாநாயகர் வாயிலாக, ஒன்று கூறிக்கொள்ள விரும்புகின்றேன். 1524-ம் ஆண்டில் போர்த்துகீசியர் இந்த நாட்டிலே வந்த காலத்திலே கன்யாகுமரியில் முத்து எடுக்கும் தொழில் மிக மிகச் சிறப்பாக நடைபெற்றது என்றும், அதற்குப் பிறகு பிரிட்டிஷார் ஆதிக்கத்தின் கீழ் இந்த நாடு வந்த பிறகு மதுரை நாயக்கர்களும், இராமநாதபுரம் ராஜாக்களும், எட்டையபுரம் ராஜாக்களும் அந்தத் தொழிலை அங்குள்ள மீனவர்களைக் கொண்டு திறம்பட நடத்தினார்கள் என்றும் சரித்திரத்தில் பார்க்கிறோம். இன்றைய தினம் கூட, கன்யாகுமாரி முனையிலிருந்து இராமேசுவரம் வரையுள்ள கடற்பரப்பில் நல்ல முத்துச் சிப்பிகள் விளையும் பாறைகள் ஏராளமாக இருக்கின்றன என்றும், பரிசிலனை நடத்தினால் நல்ல முத்துக்களைப் பெறலாம் என்றும் அந்த மாவட்டத்தில் உள்ள பெரும்பாலோர் கூறுகிறார்கள். அதையும் கவனித்தால், கிரேக்கம் யவனம் போன்ற வெளிநாடுகளுக்குச் சென்று தமிழகத்தின் பெருமையை எப்படி முத்துக்கள் அன்றொரு நாள் உயர்த்தினவோ, அதே போல இன்னும் தமிழகத்தின் பெருமையை வெளிநாடுகளில் உயர்த்துவதற்கு அவைகள் பயன்பெறும் என்று நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

**(Deputy Speaker in the Chair.)**

விவசாயத்திற்கு மிக முக்கியமானவை விதை, ரசாயன எரு என்பதோடு மாத்திரம் அல்ல; நீர்ப்பாசனம் என்பதோடு மாத்திரம் அல்ல; விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிற விவசாயிகளும் முக்கியமானவர்கள் என்பதையும் நான் இங்கே எடுத்துக்காட்ட வேண்டியது அவசியம் இல்லை என்றே கருதுகிறேன். விவசாயிகள் வளத்தோடு வாழ்ந்தால் தான், அவர்களுடைய வியர்வை துடைக்கப்பட்டு, அவர்களுடைய கண்ணீர் துடைக்கப்பட்டு களிப்பு ஏற்பட்டால் தான் விவசாயம் நல்ல முறையிலே நாட்டில் பெருக முடியும் என்பதையும் விவசாய அமைச்சர் அவர்கள் உணராதவர் அல்ல.

ஆனால், குறிப்பாக, என்னுடைய குளித்தலைத் தொகுதியைப் பற்றி ஒன்று கூற விரும்புகிறேன். அங்கே இருக்கும் நங்கவரம் பகுதியில் விவசாயத் தொழிலாளர்கள் "முச்சலிகா" என்ற அடிமை முறிச் சீட்டுக்கு ஆட்பட்டு, அந்த அடிமை முறிச் சீட்டை 10, 15 ஆண்டுகளுக்கு முன் அம்மாதிரி எழுதிக்கொடுத்திருந்த காரணத்தால், இன்றைய தினம் அவர்கள் கூலிகளாகக் கருதப்பட்டு, "சாகுபடியாளர், விவசாயி" என்ற பட்டியலிலிருந்து தள்ளப்பட்டிருக்கிறார்கள். இன்றைக்கு நியாய வாரச் சட்டத்தின் விளைவைத் துர்விநியோகப் படுத்துகிற வாக்குவன்மை படைத்த வழக்கறிஞர்களும், மற்றவர்களும், மிராசுதார்களும் அந்த விவசாயிகளுடைய நிலைமையை மிக மிகத் தாழ்த்தி விட்ட காரணத்தால் "ரெண்ட் கோர்ட்"-டிலும் வேறு கோர்ட்களிலும் நடக்கும் வழக்குகள் 300-க்கு மேல் ஏற்பட்டு விட்டன. அங்கு இருக்கும் மிராசுதார்கள் விவசாயிகளுக்குச் சொல்லி விட்டார்கள்—"நடைபெறும் 300 வழக்குகளும் விசாரிக்கப்பட்டு முடிவு கூறிய பிறகு தான் நீங்கள் எல்லாம் எங்களுடைய நிலத்தில் இறங்கவேண்டும்; அது வரை கூலி அடிமை முறையில் சீட்டு எழுதி கொடுத்து விட்டுத் தான் இறங்கவேண்டும்" என்று. அதன் காரணமாக இன்றைய தினம் விவசாயிகள் நிலத்திலே இறங்குவதற்கு அஞ்சி இருக்கிறார்கள்—நிலத்திலே இறங்கினால் கைது செய்யப்படுவோம் என்ற பீதியுடன்.

மூன்று நாட்களுக்கு முன்பு, அதாவது சென்ற ஞாயிற்றுக்கிழமை,
நடந்த நிகழ்ச்சியொன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். குளித்தலையில்
நிகழ்ந்த விவசாயிகள் கோரிக்கை தினத்தன்று காலையில் 8 விவசாயிகள்
போலீசாரால் கைது செய்யப்பட்டு, பிறகு ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டார்
கள். அந்த அளவு நிலத்திலே இறங்கின விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்
கிறார்கள். இதே நிலைமை நீடிக்குமானால் 8 ஆயிரம், 9 ஆயிரம் ஏக்கரா
நிலத்தில் சாகுபடி நின்றுவிடக் கூடிய நிலைமையும், விவசாயம் ஒழுங்காக
நடைபெற முடியாத நிலைமையும் குளித்தலைத் தொகுதியில் நங்கவரம்
பகுதியில் ஏற்படும் என்றும் கழனிகள் களங்களாகும் என்றும் கூறி,
இத்தகைய விவசாயிகளுடைய நிலைமை பரிசீலிக்கப்பட்டு, அவர்களுக்கு
உடனடியாக உதவி செய்தோமானால், விவசாயம் செழிப்படையச் செய்தவர்
களாகவும், விவசாயிகளுடைய தேவையை நாம் உணர்ந்தவர்களாகவும்
ஆவோம் என்று குறிப்பிட்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்
ளுகின்றேன்.

DEPUTY SPEAKER : The hon. Member's time is up . . .

11-34 a. m. **The hon. Member Sri Chinniah is not in his seat. Sri Somasundaram will speak now.**

* Sri M. K. SOMASUNDARAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே
நம் நாட்டிலே விவசாயத் தொழில் மிக முக்கியமானதாக இருப்பதால்
நான் விவசாயிகளுடைய சில குறைகளை எடுத்துச் சொல்ல முன்
வந்துள்ளேன்.

விவசாய மக்கள் அநேகமாக ஹரிஜனங்களாகத்தான் இருக்கிறார்கள்.
ஆகையால், ஹரிஜனங்களுக்கு நாம் செய்ய வேண்டிய கடமைகளை ஒழுங்காகச்
செய்தோமானால் அவர்களுக்கு விவசாயத்தை முன்னேறச் செய்வதற்கு வசதி
ஏற்படும். ஆகையால், விவசாய மக்களுக்கு, குறிப்பாக ஹரிஜனங்களுக்கு
நாம் செய்யவேண்டிய உதவிகளைச் செய்து கொடுத்து உதவும்படி நான்
அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

விவசாய முன்னேற்றத்திற்காக விவசாயிகளுக்கு வேண்டிய கருவிகள்,
இயந்திரங்கள் முதலியவைகளைக் கடனுகவோ, குறைந்த பட்ச வாடகை
யிலோ கிடைக்கச் செய்யவேண்டும் என்றும், பம்பு செட்டுகள் கொடுப்ப
திலும் காலதாமதமும் ஏற்படாமல் இருக்கவேண்டும். ரூ. 50 நிலவரி
செலுத்துகிற சிறு விவசாயிகளுக்குக் கடன் கொடுத்து உதவ வேண்டும்
என்றும், விவசாயத்திற்காக கிராமங்களில் மின்சாரத்தை விஸ்தரித்து
உணவு உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய வேண்டும் என்றும், எலி,
பூச்சிகள் முதலியவைகளால் பயிர்கள் பாதிக்கப்படுவதால், அவைகளைத்
தடுப்பதற்கு தேவயான மருந்துகள் விவசாய இலாகாவினுல்
விவசாயிகளுக்குக் கிடைக்கச் செய்தால் விவசாய உற்பத்தி அதிகமாகச்
செய்வதற்கு ஏதுவாக இருக்கும் என்றும் நான் தெரிவித்துக்கொள்ளு
கின்றேன்.

விவசாய முன்னேற்றத்திற்குப் பிரசாரங்கள் மூலமாகவும் விளம்பரம்
மூலமாகவும் விவசாயிகளுக்கு எடுத்துச் சொல்லவேண்டும் என்று நான்
கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கிராமப் பள்ளிக்கூட ஆசிரியர்களை கிராமத்திலேயுள்ள விவசாய
மக்களுக்கு விவசாயத்தைப் பற்றி எடுத்துச் சொல்ல உபயோகப்படுத்திக்
கொள்ளலாம் என்றும் நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

விவசாயம் சம்பந்தமாக விவசாயிகளுக்கு எடுத்துச் சொல்லுவதற்காக
டெமன்ஸ்ட்ரேடர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் கிராமங்
களில் போய், விவசாய மக்களிடையே பழகி, அவர்களிடம் பழக்கத்தில்
இருக்கும் விஷயங்களைத் தெரிந்துகொண்டும், விஞ்ஞான முறைப்படி

அவர்களுக்கு விவசாயத்தைப் பற்றி சொல்லியும் பணியாற்றலாம். அந்த முறையில் அவர்கள் ஓரளவு கிராம மக்களுடன் ஒன்றாக் கலந்து, விவசாயத்தை முன்னேற்றத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மேலும், விவசாய டெமன்ஸ்ட்ரேட்டர்கள் தாலூகா தலைமையிடத்திலேயே இருப்பதால், அவர்கள் உள்ளே இருக்கும் கிராமங்களுக்குப் போய் பார்க்க முடியாமல் இருக்கிறார்கள். விவசாய மக்கள் குடியேறியிருக்கும் இடங்களுக்கு மாதம் ஒரு தடவையோ இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவையோ சென்று, அவர்களுக்கு வேண்டியவைகள் என்ன என்று கேட்டுக்கொண்டால் அதன் மூலமாக விவசாய மக்களுக்குப் பிரயோஜனம் ஏற்படும் என்று நான் நம்புகிறேன்.

விவசாய மக்கள் கால்நடைகளை நல்ல முறையிலே பயன்படுத்திக்கொள்வதற்கு கால்நடை ஆஸ்பத்திரிகளை ஆங்காங்கு ஏற்படுத்த வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

விவசாய மக்களுக்கு இதர வகுப்பினர்களால் பல இடைஞ்சல் ஏற்படுவதால் அரசாங்கம் அவர்களுக்குத் தக்க பாதுகாப்பு கொடுக்கவேண்டும். திருநெல்வேலி ஜில்லாவிலே கருங்காட்டு கிராமத்திலே ஒரு மாதத்திற்கு முன்பு சில தகராறுகள் ஏற்பட்டன. அது விஷயம் அரசாங்கத்திற்குத் தெரிந்திருக்கும் என்று நான் நினைக்கிறேன். விவசாய மக்கள் விவசாயம் செய்துகொண்டிருக்கும்போதும் உழுது கொண்டிருக்கும் போதும், நட்டுக் கொண்டிருக்கும்போதும் நிலச்சுவான்தார்கள் முக்குலத்தவர்கள் என்னும் மறவர்களை உபயோகப்படுத்தி விவசாயிகளை நிலத்திலிருந்து வெளியேற்றி துன்புறுத்துகிறார்கள். கனம் மந்திரி ஸ்ரீமதி லூர்தம்மாள் அவர்களுக்கும் அந்த விஷயம் தெரியும் என்று நான் நினைக்கிறேன். ஆண்களும் பெண்களும் அவர்களிடத்திலே வந்து முறையிட்டிருக்கிறார்கள், அப்படி இருப்பதால் விவசாய மக்களுக்கு இந்த அரசாங்கம் நல்ல பாதுகாப்பு கொடுத்தால் தான் அவர்கள் விவசாயத்தை நல்ல முன்னேற்றத்திற்குக் கொண்டு வரமுடியும் என்பதை நான் அரசாங்கத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகையால், விவசாய மக்களுக்கு வேண்டிய நல்ல விதைகளை ஆங்காங்கு அந்தந்த கிராமங்களிலே விதைப் பண்ணைகளை ஏற்படுத்தி அவர்களுக்கு நல்ல விதை கிடைக்கச் செய்வதோடு விதையினுடைய பிரயோஜனத்தை எடுத்துச்சொல்லவேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

விவசாயத் துறைக்கு போக்குவரத்துச் சாதனங்கள் சரிவர இல்லை. பட்டணத்திற்கு வெளியே பத்து மைல், ஏழு மைல் தூரத்தில் கிராமங்கள் அமைந்திருக்கின்றன். ஒரு கிராமத்திற்கு வரவேண்டுமென்றால, பத்து, பன்னிரண்டு மைல்கள் சுற்றி வரவேண்டியிருப்பதால், கிராமங்களுக்கிடையே ரோடு போடுவதற்கு அரசாங்கம் முன் வரவேண்டும். ரோடு போடுவதற்கு இடையூறாக நிலச்சுவான்தார்கள் இருந்தால், அவர்களுடைய நிலங்களை அரசாங்கம் ஆர்ஜிதம் செய்து ரோடு போட்டுக் கொடுத்தால், போக்குவரத்துக்குச் சாதகமாக இருக்கும்.

நிலச்சட்டத்தின் மூலமாக ஹரிஜனங்களுக்கு சில சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பலனை ஹரிஜனங்கள் அடையமுடியாதபடி சில நிலச்சுவான்தார்கள் அதிக தகராறுகள் செய்து வருகிறார்கள். ஆகவே, அந்தச் சட்டத்தை நல்ல முறையில் அமுல் நடத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவு போடும்படி அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டு என்னுடைய சிற்றுரையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* DR. SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDRAN: கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இந்த விவசாயம் முதலிய பல தலைப்புக் 10-30 a.m.

[Dr. Srimathi T. S. Soundaram Ramachandran] [19th July 1957

களின் கீழ் வந்திருக்கும் சர்க்கார் மான்யக் கோரிக்கையை அங்கீகரிக்கும் முறையிலே, கொள்கையைப் பற்றியும், நடைமுறைகளைப் பற்றியும் நான் சில வார்த்தைகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

சில கோடி ரூபாய்களை நாம் ஒதுக்கி வைக்கின்றோம், செலவழிக்கின்றோம். ஆனால், அதிலிருந்து எவ்வளவு நன்றாக நலம் பெறமுடியும் என்ற நோக்குடன் நாம் அணுகினால், நம்முடைய கையிலே இருக்கும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நல்ல முறையிலே நிறைவேற்றி பலன் காண முடியும். கிராமச் சீரமைப்பு முறையிலே சமுதாய நலத் திட்டத்தைப் போன்ற நல்ல ஆயுதம் வேறு எதுவும் இருக்க முடியாது.

எண்பது சத விகித மக்கள் கிராமங்களில் வசிக்கின்றார்கள். எழுபது சத விகித மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கின்றார்கள். அந்த விவசாயத்தில் அவர்களுக்கு வருஷத்தில் 12 மாதங்களிலும் வேலை கிடைப்பதில்லை. ஆணும் பெண்ணும் வேலை செய்ய வேண்டுமென்று நினைத்தாலும், வருஷத்தில் நான்கு மாதங்களுக்கு மேல் விவாசயத்தின் மூலமாக அவர்களுக்கு வேலை கிடைப்பது இல்லை. ஆகவே, விவசாயிகளை விவாசயத் துறையில் முன்னேற்றகரமான காரியங்களைச் செய்யும்படி செய்வதோடுகூட, விவசாயத்தின் பலதரப்பட்ட அம்சங்களான கால் நடை அபிவிருத்தி, ஆட்டுப் பண்ணை, கோழிப்பண்ணை முதலியவைகளை வைத்து, உதவி செய்வதோடுகூட, குறைந்த நேரத்தில் பெருவாரியான ஜனங்கள், அதிகப் பயிற்சி இல்லாமல், சிறு மூலதனம் என்கிற அடிப்படையிலே-வாழ்க்கைத் தரத்தை பெரியதாக உயர்த்திக் கொள்வதை நான் சொல்லவில்லை—வாழ்வதற்கு கொஞ்சம் சம்பாதிக்கக் கூடிய விதத்திலே சிறு கைத் தொழில்களை இணைத்துக் கொண்டு வரக்கூடிய ஒரு பெரு முயற்சி தான் இந்த சமுதாய நலத் திட்டம் என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்வார்கள்.

அதில், நாம் இதுவரை வேண்டிய பயன் அடைந்து வருகிறோம். அகில இந்திய ரீதியில் தமிழ் நாட்டுக்கு கொடுத்திருக்கும் ஸ்தானங்கள் என்ன என்பதைப் பற்றி எண்ணும் பொழுது, மனதுக்குக் கஷ்டமாக இருக்கிறது என்பதை சபையில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். முதலிலே சமுதாய நல திட்டம் ஆரம்பித்த பொழுது, தனியாக ஒரு சர்க்கிளுக்குள் சர்க்கிள் இருப்பது போல், பொது நிர்வாக இயந்திரத்தோடு தொடர்பு கொள்ளாமல் இருந்தது. புதிதாக ஆரம்பிக்கும் பொழுது சில கஷ்டங்கள் இருக்கும், அதைப் பற்றி குறை கூறவில்லை. அந்த மாதிரி இருந்ததினால், அகில இந்திய ரீதியில், புள்ளி விவரங்கள் தயாரிக்கும் பொழுது, நாம் சமுதாய நல திட்டங்களின் கீழ், வேலை செய்ததைப்பற்றி, போதிய விளக்கம் இல்லை. நாம் விளம்பரத்தில் முன்னணியில் இல்லை என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். நாம் நல்ல வேலை செய்கிறோம், என்பது எல்லோருக்கும் தெரிகிறது, ஆனால் அதை வெளியிலே விளம்பரம் படுத்துவதில்லை. இப்பொழுது இந்த நிலை கொஞ்சங் கொஞ்சமாக மாறிக்கொண்டு வருகிறது. பஞ்சாப் போன்ற மாகாணங்களில், மற்ற சர்க்கார் டிபார்ட்மெண்டுகளும் சமுதாய நல டிபார்ட்டுமெண்டும் செய்கிற வேலைகளைச் சேர்த்து ஏகமாக சொல்லி யிருப்பதினால், அதே மாதிரி தமிழ் நாட்டில் சமுதாய நல திட்டத்தின் கீழ் அதிக வேலை நடக்கவில்லை போல் தோன்றும்படியான ரீதியில் நாம் கொடுக்கும் புள்ளி விவரங்கள் அமைந்திருக்கின்றன. நமது சர்க்கார் இதை உணர்ந்து, மற்ற மாகாணங்கள் சமுதாய நல திட்டங்களை சர்க்காரின் ஒரு பாகமாக இணைத்து, புள்ளி விவரங்களை தயாரிக்கிறார்களே அம்மாதிரி, இந்த ராஜ்யத்திலும் புள்ளி விவரங்கள் தயாரிக்கவேண்டும். உதாரணமாக, பள்ளிக்கூடத்திற்கு போகும் மாணவர்கள் சத விகிதத்தை எடுத்து கொள்வோம். மற்ற ராஜ்யங்களில் இந்த விகிதம் 100-க்கு 10 ஆக, சமுதாய நல திட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னால் இருந்தால், இந்த திட்டம் வந்த பிறகு 30 சத விகிதமாக காட்ட முடியும். ஆனால் ஏற்கனவே இந்த தலைப்பின் கீழ் நம்முடைய



19th July 1957] [Dr. Srimathi T. S. Soundaram Ramachandran]

புள்ளி விவரம் 100-க்கு 40 ஆக இருக்கிறது. அதை இன்னும் 10 சத விகிதம் உயர்த்த வேண்டுமென்றால் கஷ்டமாக இருக்கிறது. இதே மாதிரி திருவிதாங்கூர் பற்றி, ஒரு குறைசொல்வதுண்டு. அஸ்ஸாம் மாகாணத்தைப் போல் அங்கு சாலைகள் அமைக்கவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால் ஏற்கனவே திருவாங்கூர் முழுவதும் நல்ல சாலைகள் இருப்பதனால், இன்னும் சாலைகள் போடுவதற்கு இடமில்லை. ஆதலால், **percentage of benefits given** என்பது பற்றி குறிப்பிடும் பொழுது, சமுதாய நல திட்டம் ஆரம்பிக்கும் பொழுது, என்ன வசதிகள் செய்யப்பட்டு இருந்தன என்பதும், இத்திட்டம் ஆரம்பித்த பிறகு என்னென்ன வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன என்பதும், புள்ளி விவரங்களுடன் இந்திய சர்க்காருக்கு எடுத்துக்காட்டப்படவேண்டும். விவசாயத்துறையில், நாம் செய்துள்ள வேலைகளை சரியாக எடுத்துக் காட்டாமல் விட்டு விட்டோம். என்னுடைய அனுபவத்தில் நிலக்கோட்டைத் தாலூகா வடுகப்பட்டி வட்டாரத்தில், விவசாயத்தில் கடந்த மூன்று நான்கு வருஷங்களாக உற்பத்தி—30 சத விகிதம் உயர்ந்திருக்கிறது. இதை எடுத்துக்காட்டக் கூடிய **machinery** இல்லாததன் காரணமாக சராசரி உற்பத்தி **per acre**-க்கு மூன்றில் ஒரு பங்கு அதிகரித்தும், சரியான புள்ளி விவரங்கள் இதுபற்றி கொடுக்காமல் போய்விட்டது. இனியும் இம்மாதிரி இல்லாமல், சரியான கணக்குகளை இந்திய சர்க்காருக்கு கொடுத்து, அவர்களுடைய மதிப்பையும் **appreciation**-ஐயும் பெறுவதில் கவனம் செலுத்த வேண்டும். **Community Development Projects**-ஐ எடுத்துக் கொண்டால், **Block Development Officers**-களை பொறுத்துத் தான் இத்திட்டத்தின் கீழ் சகல வேலைகளும் நடக்கின்றன. இவர்களைப் பொறுக்கும் விஷயத்தில், டிபார்ட்மெண்ட்களிலிருந்து பொறுக்குவது தவறு என்று சொல்லவில்லை. இருந்தாலும் பொது மக்களிடமிருந்து "**Open Competition**" மூலமாக தகுதி உள்ளவர்களை தேர்ந்தெடுக்க முடியும். இவர்கள் ஒரு பங்கும், டிபார்ட்மெண்ட்களிலிருந்து **promotion** மூலமாக தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் ஒரு பங்கும், இருக்கும்படி செய்தால், இந்த புரட்சிகரமான வேலை திட்டங்களில் புது ரத்தம் சேர்ந்து வேலைகள் நல்ல முறையில்நடக்கும் என்பது என் அபிப்பிராயம். இந்த முறையை சீக்கிரம் சர்க்கார் அமலுக்குக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏராளமாக **Block Development Officers** தேவையாக இருப்பதால் தகுதியுள்ளவர்கள் எந்தப்பக்கத்தில் இருந்தாலும் எடுத்துக் கொள்ளவேண்டும். **Grama Sevaks S.S.L.C. eligible** ஆகவும் 25, 30 வயதுக்குள் இருக்க வேண்டும் என்ற விதிகள் இருக்கின்றன. இந்நிலை நீடித்தால் நிச்சயமாக கிராம சேவகர்களின் தரம் குறைந்துதான் போகும். கிராமங்களில் நல்ல அனுபவம் வாய்ந்த, விவசாயம் தெரிந்த, ஜனங்களோடு தொடர்பு கொண்ட பொது ஜன ஊழியர்கள் நம்மிடம் இல்லாமல் இல்லை. இப்படிப்பட்டவர்களுக்கு மேலே நான் குறிப்பிட்ட விதிகளிலிருந்து விலக்கு அளித்தால்தான் நல்ல கிராம சேவக்களை தேர்ந்து எடுக்க முடியும். அவர்கள்தான் இத்திட்டத்தின் அஸ்திவாரம். ஆகையால் அவர்கள் நல்ல மனப்பான்மையுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

அடுத்தபடியாக **Social Education Organizers**-ஐப்பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். அவர்கள் வேண்டுமா வேண்டாமா என்கிற காலம் மாறிவிட்டது. அவர்கள்தான் சமுதாய நல திட்ட வட்டாரங்களிலே முக்கியமான பாகம் வகிக்கிறவர்கள். ஜனங்களுக்கும் சர்க்காருக்கும் நடுவிலே இணைப்பாக இருந்து சர்க்காருடைய பல திட்டங்களைப் பற்றி ஜனங்களுக்கு விளக்கமாகச் சொல்லி ஜனங்களின் ஒத்துழைப்பைத் தேடித் தரக்கூடிய ஒரு கூட்டம் இந்த **Social Education Orgainsers**, அவர்களுக்கு பயிற்சி கொடுப்பதில் நானும் கொஞ்சம் பங்கு எடுத்துக் கொண்டிருக்கிறேன். ஆகையால் அவர்களைப்பற்றி என்னால் திட்ட வட்டமாகக் கூற முடியும். அவர்களுடைய பயிற்சி நல்ல முறையில்தான் நடந்து

வருகிறது. ஆயினும் அவர்களை உபயோகப் படுத்தும் முறையிலே பல மாறு தல்கள் செய்துதான் ஆகவேண்டும். **Social Education Organizers** நல்லவிதமாக பயன்படுத்த . மக்களும், சர்க்கார் அதிகாரிகளும் அவர்கள் மீது அதிக சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று சமுதாய நல திட்ட அமைப்பில் பலவிதமான கிராம சேவகிகள் நூல்நூற்பு, குடும்பக்கலைப் பயின்றவர்கள்—ஜில்லாக்களில் தொண்டாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைய சமுதாயத்தில்—ஆண்களைவிட 1 சத விகிதம் பெண்களும் குழந்தைகளும் அதிகமாயிருக்கக்கூடிய சமுதாயத் தில், பாலர் சங்கங்கள், மாதர் சங்கங்கள், பல இருக்கின்றன. இன்றைய **democratic set up**-ல் அவர்கள் சம்மந்தப்பட்ட திட்டங்கள் சரிவர நடக்க வேண்டுமானால் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு பெண் அதிகாரியை நியமிக்கவேண்டும் என்ற கோரிக்கையை வற்புறுத்திச்சொல்ல விரும்பு கிறேன்.

DEPUTY SPEAKER : The hon. Member's time is up.

DR. SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDRAN : Just two more minutes, please.

DEPUTY SPEAKER : The hon. Member has already taken two more minutes.

DR. SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDRAN : I will finish in a minute. Reverted National Extension Service Blocks-ஐப்பற்றி ஓரிரண்டு வார்த்தைகள் சொல்லி என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன். முதலிலே ரூ. 65 லட்சம் செலவழித்து 3 வருஷம் தீவிரமாக வேலை நடத்துகிறோம். அந்த பிளாக்கில் உள்ள சுமார் 1,600 கிராமங்களில், 1,000 கிராமங்களில் வேலை செய்து இருக்கலாம், 400, 500 கிராமங்கள் விடப்பட்டிருக்கலாம். திடீரென்று பண மில்லை என்று நிறு த்திவிட்டால் அதனால் ஜனங்களுக்கு நிராசை ஏற்பட்டு விடுகிறது. இந்த "ரிவர்ஷன்" படிப்படியாக இருக்கவேண்டும். சாதாரணமாக National Extension Service Block-கள் எந்த நிலையில் இருக்கின்றனவோ அந்த நிலைக்கு அவர்களும் வரவேண்டும். இந்த நிலை திருந்த சர்க்கார் சில முயற்சிகள் எடுத்து வருவது ஓரளவு உண்மைதான். இத்திட் டத்தை எல்லா இடங்களுக்கும் விஸ்தரிக்க 3, 4 வருஷங்கள் ஆகலாம். அதற்குள்ளேயே மற்ற இடங்களிலும், முக்கியமாக பொருளாதாரத் துறை யிலே எவ்வளவு உதவியும் ஊக்கமும் அளிக்க முடியுமோ அவ்வளவு அளிக்கவேண்டுமென்றும் அப்படிச் செய்யாவிட்டால், ஜனங்களுக்கு பல சங்கடங்கள் வரும் என்றும் சொல்லி என் பேச்சை முடித்துக் கொள்கி றேன்.

10-50 a.m. SRI K. R. NALLASIVAM : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, விவசாயத்திற்கு முதல்ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஒதுக்கப்பட்ட பணத்தை விடக் குறைவாகத்தான் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது உண்மையிலேயே மிகவும் வருந்தத்தக்க விஷ யம். முதல் ஐந்தாண்டு திட்ட காலத்தில் ஓரளவு அதிகமாக விவசாயத் திற்குப் பணம் ஒதுக்கப்பட்டதால், ஜனங்களுக்கு உற்சாகம் ஏற்பட்டது. ஆகவே அவர்கள் ஊக்கத்துடன் நன்றாகப் பாடுபட ஆரம்பித்தார்கள். இந்த சமயத்தில் பணம் குறைவாக ஒதுக்கப்பட்டிருப்பதானது, அவர் களுடைய உற்சாகத்தைக் குறைப்பதாக இருக்கிறது.

அடுத்தபடியாக, இப்போது சர்க்கார் விவசாயிகளுக்கு அளிக்கும் உதவி [illegible] உண்மையான விவசாயிகளுக்குப் பயன்படுவதில்லை. "சமூகத்தில் [illegible] [illegible] என்று சொல்லிக்கொண்டு உத்தியோகம் பார்க்கும் [illegible]

இருந்துகொண்டு, விவசாயம் செய்யாத ஜனங்களுக்குத்தான் அந்த உதவிகள் பயன்படுகின்றன. சர்க்காருடைய உதவிகள் உண்மையாக விவசாயிகளுக்குப் பயன்படும்படி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது பல புதிய விவசாய முறைகள் வந்திருக்கின்றன. அவைகள் மிகவும் நல்ல முறைகளாக இருக்கின்றன. தவிரவும், பழைய முறைகளிலும் சில சிறந்தவை. அவைகளுக்குப் புத்துயிரூட்டவேண்டும். இதற்காக, விவசாய மக்களுக்கும் விவசாய இலாகாவிற்கும் தொடர்புள்ள முறையில் சர்க்கார் திட்டங்களைக் கொண்டுவரவேண்டும். விவசாய இலாகாவினர் ஆங்காங்கே கிராமங்களுக்குச் சென்று புதிய விவசாயக் கருவிகளையும் விவசாயிகளுக்கு உபயோகமான மற்றப்பொருள்களையும் விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்வதுபோல், கிராமங்களில் ஆங்காங்கே விவசாய அபிவிருத்திச் சங்கங்களை ஏற்படுத்தி, விவசாய இலாகாவினருக்கும் விவசாயம் செய்யும் வாலிபர்களுக்கும் தொடர்பு ஏற்படுத்தி, புதிய விவசாய முறைகளைப் பரப்பவேண்டும். இப்படிச் செய்தால், விவசாயம் செய்யும் மக்களின் மனதில், புதிய விவசாய முறைகளை உபயோகிக்க விரும்பும் மாற்றத்தை உண்டுபண்ணலாம். புதிய விவசாய முறைகளைக் கையாள்வதற்கு கிராமங்களிலுள்ள வாலிபர்கள் தயாராக இருந்தாலும்கூட, அங்குள்ள பெரியவர்கள் அதை விரும்புவதில்லை. காரணம், அவர்கள் இந்த முறைகளை நேரிடையாகப் பார்த்ததில்லை. இந்த நிலைமையை நான் பல கிராமங்களில் பார்த்திருக்கிறேன். ஆகவே புதிய விவசாய முறைகளைப் பரப்புவதற்கு நல்ல பிரசாரம் தேவை. பிரசாரம் மட்டும் போதாது. இப்போது கிராமங்களில் எந்த மாறுதலும் இல்லாமல் பழைய கலப்பையையே உபயோகித்து வருகிறார்கள். இப்போது புதிய கலப்பைகள் வந்திருக்கின்றன. ஆனால் அந்த புதிய கலப்பைகள் கிராமங்களில் பெருவாரியாக வரவில்லை. ஆகவே, புதிய விவசாயக் கருவிகளையும் புதிய விவசாய முறைகளையும் கிராமங்களில் அதிகம் புகுத்துவதற்காக, விவசாய அபிவிருத்திச் சங்கங்களை ஏற்படுத்தி, விவசாயம் செய்யும் வாலிபர்களுக்கும் விவசாய இலாகாவினருக்கும் தொடர்பை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நமது நாட்டு விவசாய முறைகளைத் தெரிந்துகொள்வதற்காக அமெரிக்காவிலிருந்து அந்நாட்டு வாலிபர்கள் நமது நாட்டுக்கு அனுப்பப்படுகிறார்கள். அதே மாதிரி அமெரிக்காவிலுள்ள விவசாய முறைகளைத் தெரிந்துகொள்வதற்காக நமது நாட்டு வாலிபர்கள் அமெரிக்காவிற்கு அனுப்பப்படுகிறார்கள். முக்கியமாக, ஜப்பானிலுள்ள விவசாய முறைகளை அறிந்துகொள்வதற்காக நமது நாட்டு வாலிபர்களை அந்நாட்டிற்கு அனுப்பலாம். காரணம், ஜப்பானிலுள்ள விவசாய முறைகள் நமது நாட்டிற்கு ஏற்றவையாக இருக்கின்றன என்று நான் நினைக்கிறேன். வேண்டுமானால், அனுப்பப்படும் வாலிபர்கள் பாதிச்செலவையும் அரசாங்கம் பாதிச் செலவையும் ஏற்றுக்கொள்வதற்கு ஏற்பாடு செய்து, அவர்களை ஜப்பானுக்கு அனுப்பி அந்நாட்டு விவசாய முறைகளை அறிந்துவரச்செய்யலாம். அங்கே விவசாய முறைகளும் மற்றத் தொழில்களும் நமது நாட்டிற்கு ஏற்றவையாக இருக்கின்றன. ஆகவே, நான் கூறிய யோசனையை நிறைவேற்றவேண்டும் என்று அரசாங்கத்தாரைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாய டிராக்டர்களைப் பொறுத்தவரையில், அமெரிக்கா, ரஷியா போன்ற நாடுகளிலிருந்து பெரிய டிராக்டர்களும்தான் இங்கே இறக்குமதியாகின்றன. அவைகளை பெரிய விவசாயிகள்தான் வாங்கி உபயோகப்படுத்த முடிகிறது. சாதாரண ஏழை விவசாயிகள் அவைகளை உபயோகப்படுத்த முடிவதில்லை. ஆகவே டிராக்டர்களை எல்லா விவசாயிகளும் உபயோகப்படுத்துவதற்கு வழி செய்வதற்காக, சிறிய டிராக்டர்களுக்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று அரசாங்கத்தாரை கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எஸ்.பி.சி.ஏ. (ஜீவகாருண்ய சங்கம்)-ஆல் விவசாயிகளுக்கு மிகவும் தொந்திரவுகள் இருக்கின்றன. கடந்த பத்தாண்டு காலமாக, ஓமந்தூர் ஸ்ரீ ராமசாமி ரெட்டியார் அவர்கள் முதன் மந்திரியாக இருந்த காலத்திலிருந்து, எஸ்.பி.ஸி.ஏ-ஐத் தொலைத்துக்கட்டவேண்டும் என்று சொல்லிவருகிறோம். ஆனால் இன்றுவரையில் ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அது ஏதோ ஜீவரட்சக சங்கமாம். உண்மையில், அது ஜீவரட்சக சங்கமாக இல்லை. அது விவசாயிகளுக்குத் தொல்லை கொடுக்கும் சபையாகத்தான் இருக்கிறது. கிராமங்களிலிருந்து நகரங்களுக்கு வண்டி ஓட்டிக்கொண்டு போகும் விவசாயிகளுக்குத்தான் அந்த சபையால் ஏற்படும் தொல்லைகள் தெரியும். விவசாயி வண்டியை ஓட்டிக்கொண்டு போகும்போது, திடீரென்று வண்டியை நிறுத்தி, மாட்டிற்கு ஏன் குளம்பில் லாடம் இல்லை என்று கேட்டு தொந்தரவு கொடுக்கிறார்கள். நகரங்களிலுள்ள பெரிய பணக்காரர்கள் இதை ஒரு வேடிக்கையாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த சங்கத்தால், உண்மையாகவே விவசாயிகளுக்குப் பல காரியங்களுக்கு இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன. இந்த சங்கத்தை நீக்கி, இந்த சங்கத்தின் தொந்தரவுகளிலிருந்து விவசாயிகளைக் காப்பாற்றினால் அவர்கள் அந்த நல்ல காரியத்தை என்றென்றைக்கும் மறக்க மாட்டார்கள். இதைச் செய்யவேண்டும் என்று அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கிறேன்.

(Mr. Speaker in the Chair.)

அடுத்தபடியாக, சமுதாய அபிவிருத்தித் திட்டத்தைப்பற்றிக் கூற விரும்புகிறேன். குறிப்பாக எங்கள் பகுதியாகிய கீழ்பவானிப் பிரதேசம் மிகவும் அபிவிருத்தி செய்யப்படவேண்டும். ஜனங்கள் கிணறு வெட்டவோ, பள்ளிக்கூடங்கள் கட்டவோ இப்போது உற்சாகமாக முன்வந்துகொண்டிருக்கும்போது, சமுதாய அபிவிருத்தித் திட்டத்தை தேசீய அபிவிருத்தித் திட்டமாக மாற்றி அமைக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். முன்பு 100 ரூபாய் கொடுத்த காரியங்களுக்கு இப்போது அரசாங்கத்தார் 25 ரூபாய்தான் கொடுக்கிறார்கள். அடுத்த வருஷத்தில் ஒன்றும் கொடுக்கப்படாது என்றும் சொல்லப்படுகிறது. இப்படிச் செய்தால், திட்டங்களைப்பற்றி சர்க்கார் வாயளவில் பேசிக்கொண்டிருக்கலாமே தவிர, அவைகளால் மக்களுக்குப் பயன் ஏற்படாது.

எங்கள் பகுதியில் (சென்னிமலையில்) கால்நடை ஆஸ்பத்திரிக்கு ஏற்பாடு செய்யப்படவில்லை. ஆஸ்பத்திரிக்குத் தேவையான நிலத்தை ஆர்ஜிதம் செய்வதுபற்றிய தகராறு காரணமாக, ஐந்து வருஷ காலமாக முயற்சி செய்யப்பட்டும் ஆஸ்பத்திரி கட்டப்படவில்லை. அந்தப் பகுதியிலுள்ள மக்கள் ஆஸ்பத்திரி கட்டுவதற்கு நிறையத் தங்கள் பங்கு பணத்தைத் தர தயாராக இருக்கிறார்கள். இப்போதைய நிலத்தை விட்டுவிட்டு வேறு நல்ல நிலத்தைத் தெரிந்தெடுத்து அங்கே ஆஸ்பத்திரி கட்டுவதற்கு ஏற்பாடு செய்தால், 15,000 ரூபாயையும் விட எவ்வளவோ அதிகமாகக் கொடுப்பதற்கு அங்குள்ள மக்கள் தயாராக இருக்கிறார்கள். அங்கே ஆஸ்பத்திரி கட்டும் விஷயத்தில் சர்க்காருடன் ஒத்துழைப்பதற்கு அங்குள்ள மக்கள் தயாராக இருக்கிறார்கள். ஆகவே அங்கே சீக்கிரம் ஆஸ்பத்திரியைக் கட்டிக்கொடுக்க முயற்சிக்கவேண்டும் என்று அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கிறேன்.

10-56 a.m. **Sri K. K. MUTHIAH** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானிய கோரிக்கையை ஆதரித்து சில விஷயங்கள் சொல்ல விரும்புகிறேன்.

விவசாயத்தைப் பொறுத்தவரையில், பொதுவாக, எங்கள் தொகுதி 50,000 ஜனங்களைக் கொண்டது ஆகும். விவசாய டெமான்ஸ்டிரேட்டர் ஆபீஸ் அங்கே 30 மைல் தூரத்திலுள்ள, மணப்பாறையில் இருக்கிறது; பஞ்சப்பட்டித் தொகுதியிலுள்ள மக்கள் 30 மைல் தூரம் செல்லவேண்டியிருக்கிறது. எங்கள் பிர்க்காவில் போக்குவரத்து வசதி கிடையாது. ஆகவே



அங்கே 30 மைல் தூரம் சென்று திரும்புவது என்பது இயலாத காரியமாக இருக்கிறது. எனவே எங்கள் தொகுதியில் ஒரு விவசாய டெப்போவை வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் தொகுதியில், கால்நடை வைத்தியத்தைப் பொறுத்தவரையில், கால்நடை வைத்தியத்திற்கு 50 மைல் தூரத்திலுள்ள குளித்தலைக்குச் செல்லவேண்டியிருக்கிறது. மேலும் அங்குள்ள டாக்டர் "டூரிங் வெடெரினரி ஸர்ஜன்". ஆகவே அவர் அனேக சமயங்களில் ஹெட்குவார்டர்ஸில் இருப்பது கிடையாது. சென்ற ஆண்டு அங்கே கால்நடைகள் வியாதியால் பீடிக்கப்பட்டபோது, அனேக முறைகள் அவருக்குத் தந்தியடித்ததுடன், நேரில் சென்று சொல்லியபோதிலும், அவரை அழைத்துவர முடியவில்லை. அதன் காரணமாக கால்நடைகள் சேதம் மிக அதிகமாக ஏற்பட்டுவிட்டது. பிறகு டி.வி.ஓ. அவர்களுக்குத் தந்தி அடித்ததன் பேரில், அவர்கள் ஸ்பெஷலாக ஒரு ஸர்ஜனை அனுப்பி, கால்நடைகளை கவனிக்கவேண்டியிருந்தது. ஆகவே, எங்கள் பஞ்சப்பட்டி தொகுதிக்கு ஒரு கால்நடை ஆஸ்பத்திரி வேண்டும். அங்கே அதை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

* **Sri S. T. SUBBAYYA GOUNDER** : கனம் சபாநாயகர் அவர்களே, விவசாய மானிய கோரிக்கையின் மீது சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். விவசாயத்திற்கு இப்போது கொடுக்கப்படும் சலுகைகள் இன்னும் இரண்டு மடங்கு அதிகரிக்கப்பட்டாலும் பரவாயில்லை என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தமிழ் நாட்டில் 70 சதவிகித மக்கள் விவசாயிகளாக இருக்கிறார்கள் என்று அனேக அங்கத்தினர்கள் சொன்னார்கள். அது வாஸ்தவம்தான். ஒவ்வொரு ஜில்லாவிலும் விவசாயம் ஒவ்வொரு விதமாக இருக்கும். தஞ்சாவூர் ஜில்லாவில் அனேகமாக முழுவதும் நஞ்சை விவசாயமாக இருக்கும். கோயம்புத்தூர் ஜில்லாவாகிய எங்கள் ஜில்லாவில்—குறிப்பாக, என்னுடைய தொகுதியான உடுமலைப் பேட்டையிலும், மற்ற தொகுதிகளான பொள்ளாச்சி, தாராபுரம், பல்லடம் ஆகிய மூன்று தாலுக்காக்களிலும்—விவசாயம் அனேகமாக கிணறுகளின் மூலம்தான் நடக்கிறது. கிணறுகளும் தஞ்சாவூர் ஜில்லாவில், திருச்சி ஜில்லாவில் உள்ளதைப்போல இல்லை. சாதாரணமாக ஒரு கிணறு வெட்டுவதானால் ஐம்பதடி முதல் நூறு அடி வரைக்கும் வெட்டியாக வேண்டும். அப்போதுதான் தண்ணீரைப் பார்க்கலாம். அதுவும் எங்கள் ஜில்லாவில் நூற்றுக்கு 90 சதவிகிதம் விவசாயிகள் கிணற்றையே நம்பி இருக்கவேண்டி இருப்பதனால் அந்தத் தாலுக்காவில் மின்சாரத்தை இப்போது இருப்பதைவிட இன்னும் நான்கு பங்கு அதிகமாக விஸ்தரிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமாய் இந்தச் சர்க்காரை நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேலும் விவசாயிகளுக்கு அதிகமாக மின்சாரம் கொடுக்கப்பட்டு வருவது போற்றத்தக்கதுதான் என்றாலும் அதில் இன்றைக்கு விவசாயிகளுக்கு ஏற்பட்டுக்கொண்டிருக்கும் தொந்தரவுகளை உடனடியாக நிவர்த்திக்க வேண்டும். குறிப்பாக நஞ்சை பகுதிகளுக்கு இரவு நேரங்களில் மின்சாரம் சப்ளை செய்வதாக இருந்தாலும் நஞ்சை பூமிக்கு மடையை வெட்டி விட்டால் தண்ணீர் பாய்ந்துவிடும். அவர்களுக்கு சிரமம் ஒன்றும் இல்லை. ஆனால் எங்கள் தாலுக்கா போன்ற பகுதிகளில் இரவு நேரங்களில் "நைட் சப்ளை" கொடுப்பதினால் விவசாயிகளுக்கு மிகுந்த அசௌகரியம் ஏற்படுகிறது. குறிப்பாக, மிளகாய், சோளம், புகையிலை நாத்து நடவு போன்ற பயிருக்கு இரவு நேரங்களில் எப்படித் தண்ணீர் பாய்ச்சுவது? பகலில் சப்ளை செய்வதற்குப் போதுமான மின்சாரம் இல்லை என்றால் ஷிப்ட் முறையையாவது வைத்து ஒருநாள்விட்டு ஒரு நாள் ஒவ்வொரு கிராமமும் மின்சாரத்தை முழுநேரமும் பகலில் எடுத்துக்கொள்ள வசதி செய்துதர வேண்டும். இது மிகவும் பிரயோசனமாக இருக்கும்.

அதோடு எனக்கு முன்பாகப் பேசிய ஸ்ரீ நல்லசிவம் அவர்கள் சொன்னபடி டிராக்டர்கள் விவசாயிகளுக்குக் கடனாகக் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் ஐம்பது எக்கரா, நூறு எக்கரா வைத்துக்கொண்டுள்ள பெரிய நிலக்காரர்களால்தான் அவற்றை கடனில் வாங்கி உபயோகப்படுத்த முடியும். காரணம் அதற்காக வாங்கப்படுகிற வரி மிக அதிகமாக இருக்கிறது. பத்து எக்கரா, பதினைந்து எக்கரா உடைய சிறிய சிறிய விவசாயிகளுக்கும் கூட டிராக்டர்கள் பயன்பட வேண்டுமானால் அதற்காக விதிக்கப்பட்டுள்ள கட்டணத் தொகையை குறைக்க வேண்டும். குறைந்த செலவில் கொடுக்கக் கூடிய சிறு டிராக்டர்களை அரசாங்கத்தார் போதுமான அளவில் வெளி நாடுகளிலிருந்து விவசாயிகளுக்குக் கொடுத்து உதவ வேண்டும். அப்போதுதான் விவசாயம் இன்னும் அதிகம் முன்னேற்றம் அடையும் என்பதாகத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அதோடு உடுமலைப்பேட்டை தொகுதியில் சாதாரணமாக பதினையாயிரம் முதல் இருபதினாயிரம் கிணறுகள் இருக்கும். சுமார் ஆயிரம் கிணறுகளுக்குத்தான் மின்சாரம் கொடுக்கப்பட்டிருக்கும். எல்லாக் கிணறுகளுக்கும் மின்சார சப்ளை செய்ய அந்த பிராந்தியத்திற்கு முதல் சலுகை கொடுக்க வேண்டுமென்பதாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அத்துடன் மின்சாரம் சப்ளை செய்வதாக இருந்தால் எட்டு வருஷம் பத்து வருஷம் அக்ரிமெண்டு எழுதி வாங்கிக் கொள்கிறார்கள். சப்ளை செய்யும் போது கையில் பணம் இல்லாத காரணத்தால் விவசாயி அதை வாங்கிக்கொள்ளாவிட்டால், இரண்டு மூன்று வருஷங்கள் கழித்து அவன் திரும்ப சப்ளை கேட்கும்போது இந்தக் காலத்திற்கும் ஒரு ஹார்ஸ்பவருக்கு 50 ரூபாய் வீதம் 250 ரூபாயோ, 500 ரூபாயோ மினிமம் சார்ஜ் கட்ட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே அவர்கள் எந்தத் தேதியிலிருந்து சர்விஸ் எடுத்துக் கொள்கிறார்களோ அந்தத் தேதியிலிருந்து மட்டும் மினிமம் சார்ஜ் வசூல் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு அனேக வருஷங்களாக எங்கள் தாலுக்கா பஞ்சத்தால் பீடிக்கப்பட்டிருந்தது. பேப்பர்களிலும், சட்டசபையிலும் இதைப்பற்றி அப்போது ஒரே கூக்குரலாகத்தான் இருந்தது. இப்போதும் நூறு அடி ஆழத்தில் தான் கிணறுகளில் தண்ணீர் கிடைக்கிறது. அங்குள்ள குடியானவர்கள் கஷ்டத்தை உணர்ந்து சர்க்காரும், கிணறு வெட்ட மானியம், தக்காவிக் கடன் முதலியன கொடுத்து உதவினார்கள். இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் கூட்டுப் பட்டாதாரர்களுக்குக் கடன் வாங்குவது கஷ்டமாக இருக்கிறது. நிலத்தை அடமானம் வைத்து பணம் வாங்குவதாய் இருந்தால் சப்-ரெஜிஸ்டாரிடமிருந்து வில்லங்க சர்டிபிகேட் வாங்கிக் கொடுத்தால் பணம் வாங்கிவிடலாம். அப்படி சர்க்காரும் பணம் கொடுப்பதாய் இருந்தால் வில்லங்க சர்டிபிகேட் வாங்கிக் கொடுத்தாலே போதும், பணம் கொடுத்துவிடலாம் என்பதாக ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும். இப்படிச் செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேலும் இப்போது தாராபுரம், பல்லடம், உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி தாலூகாக்களில் அதிக கிணறுகளில் தண்ணீர் இருக்கலாம் மழை பெய்தால். இல்லாவிட்டால் வறண்டு போகும். மழை பெய்தாலும், பெய்யாவிட்டாலும் அப்பகுதி வளம்பெறவேண்டுமானால் இப்போது இருக்கும் பரம்பிக்குளத் திட்டத்தை உடனடியாகப் பூர்த்தி செய்து கொடுத்தால் தான் நல்லது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த திட்டத்தை முடிக்க ராஜ்ய சர்க்கார் உடனடியாக ஏற்பாடு செய்தால் இந்த நான்கு தாலூக்காக்களிலும் தண்ணீர் தர சௌகரியமாக இருக்கும். உணவு உற்பத்தியும் அதிகரிக்கும்.

19th July 1957] [Sri S. T. Subbayya Gounder]

இப்போது அமராவதி திட்டத்தில் மெயின் வாய்க்கால் வெட்டி ஓரிரெண்டு மாதங்களில் தண்ணீர் விடுவது பற்றி சபையில் அன்றைக்குச் சொன்னார்கள். ஆனால் மெயின் வாய்க்கால் மூலமாக சில கிளை வாய்க்கால்களைப் பிரித்து தண்ணீரைக் கொண்டுபோக அங்கங்கே மார்க் செய்யப்பட்டது. மார்க் செய்யப்பட்டதோடு நிற்கிறதே தவிர இன்னும் ஜோர்தம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த வேடவட்டி போன்ற இடங்களில் கிளை வாய்க்கால் வெட்டப்படவில்லை. அதனால் அந்தப் பகுதியில் வாய்க்கால் வருமோ வராதோ என்று மக்கள சந்தேகப்படுகிறார்கள். இதையும் சர்க்கார் கவனித்து உடனடியாக அந்தக் கிளை வாய்க்கால்களை வெட்டினால்தான் மெயின் வாய்க்காலில் தண்ணீர் விடும்போது இவை உபயோகமாக இருக்கும்.

அதோடு உணவு உற்பத்தியின் கீழ் நாம் பல திட்டங்களைப் போட்டு வருகிறோம். வாளவாடி பிர்க்காவில் திருமூர்த்தி மலையில் வலையாவெட்டியம்மன் அணை என்று ஒன்று இருந்தது. பத்து இருபது வருஷங்களுக்கு முன்பே அது உடைந்து போய்விட்டது. அந்த அணை இருந்தபோது அந்தப் பகுதியில் நஞ்சை பயிர் செய்தார்கள். உடைந்துபோன பின்பு யாரும் செய்வதில்லை. இருந்தாலும் நஞ்சை கிஸ்தி வசூல் செய்யப்படுகிறது. இதைப் பற்றி அதிகாரிகளுக்கு எல்லாம் விண்ணப்பம் செய்து கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த அணையைத் திரும்பக் கட்டிவிடுவதாக எஸ்டிமேட் போட்டார்கள். அப்படி இருந்தும் பத்து வருஷ காலமாக இன்னும் அது கட்டப்படாமலேயே இருக்கிறது. கட்டப்படாவிட்டாலும் நஞ்சை கிஸ்தி வசூல் செய்யக்கூடாது என்று உத்தரவு போடவேண்டும். இல்லையானால் உடனே ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழேயாவது அதைக் கட்டத் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.

மேலும் ஒவ்வொரு பிர்க்காவிலும் ஒரு கால்நடை வைத்திய சாலையை ஏற்படுத்த வேண்டும். ஊரில் உள்ளவர்கள் கட்டிடம் கட்டிக் கொடுக்க வந்தால் அங்கே ஆஸ்பத்திரியையும், ஒரு டாக்டரையும் நியமித்தால்தான் வசதியாக இருக்கும். இப்போது டாக்டர்கள் இல்லாததால் கால்நடைகளுக்கு நோய் வந்தால் அதிக நஷ்டம் ஏற்படுகிறது. கால் நடை ஆஸ்பத்திரியையும் டாக்டரையும் ஒவ்வொரு பிர்க்காவிலும் போட்டுவிட்டால் கால் நடைகள் நல்ல வகையில் அபிவிருத்தி அடையும். அதேபோல ஒவ்வொரு பிர்க்காவுக்கும் டெமான்ஸ்ரேட்டர்களின் கீழ் பீல்ட்மென் நியமிக்க வேண்டும் என்பதாகவும் சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

**Sri T. SAMPATH** : கனம் சபாநாயகர் அவர்களே, விவசாய மான்யக்
கோரிக்கையை ஆதரித்து நான் சில விஷயங்களைக் கூற ஆசைப்படுகிறேன். 1
முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாயத்துக்கும், சமுதாய அபிவிருத்திக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. 1952–53 முதல் விவசாய அபிவிருத்தி கணிசமாக அதிகரித்திருக்கிறது. இதை யாரும் மறுக்க முடியாது. இதைப்பற்றி நான் மகிழ்ச்சி அடைகிறேன். கனம் அமைச்சர் அவர்கள் இப்போதுள்ள உற்பத்தியை 710,000–லிருந்து 13 லட்சம் டன்னாக அதிகரிக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். இதை நான் மிகவும் வரவேற்கிறேன். விவசாய அபிவிருத்தியும் தொழிலபிவிருத்தியும் பரஸ்பரம் தொடர்புள்ளவை. இரு துறைகளிலும் சிறந்த அபிவிருத்தி ஏற்படுவதற்கு நிறைய திட்டங்களை சர்க்கார் வகுத்துக் கொடுக்க வேண்டும். நம் நாட்டிலிருந்தும் ஏற்றுமதிக்கான உணவு தானியத்தை அதிகரிக்கும் வழியில் சர்க்கார் கவனம் செலுத்த வேண்டும். ஒவ்வொரு ஜில்லாவுக்கும் தேசிய விஸ்திரிப்பு வட்டாரத்துக்கும் தனித்தனியாக விவசாய திட்டங்களை வகுப்பது நல்லது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். அந்த அந்த வட்டாரங்களுக்குத் தகுந்தபடி பயிர்களை சாகுபடி செய்யவும், பயிர்களுக்கு ஏற்றபடி நீர்ப்பாசன வசதிகள், கடன் வசதிகள், முதலியன செய்து கொடுக்கவும், உற்பத்தியான பொருள்களை விற்பனை செய்வதற்கும் வேண்டிய வசதிகளைச் சர்க்கார் செய்து கொடுக்கவேண்டும்.

விவசாய உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கு இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று, ரசாயன உரத்தை அதிகமாக வயலில் போட்டு அதிகப்படுத்துவது, மற்றொன்று, நல்ல நீர்ப்பாசன திட்டங்களை ஏற்படுத்தி அதன் மூலமாக உணவு உற்பத்தியை அதிகப்படுத்துவது. அரசாங்கம் பெரிய ஆறுகளில் நீர்ப்பாசன வசதிகளை ஓரளவுக்கு அமைத்துக் கொடுத்திருக்கின்றது. பூமியில் உள்ள தண்ணீரை அதிகப்படியாக பயன்படுத்திக்கொள்ளலாம். "சப் சாயில் வாட்டரை" இன்னும் அதிகமாக பயன்படுத்திக்கொள்ளலாம் இதற்கான திட்டங்களை சர்க்கார் வகுக்க வேண்டும். என்னுடைய ஜில்லாவில் காவேரி ஆறு பாசனம் இருக்கிறது. இருந்தாலும் "சப்-சாயில் வாட்டரை" அதிகமாக உபயோகிக்க திட்டம் வகுத்துக் கொடுத்தால் எங்களுக்கு மிகவும் நன்மையாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ரசாயன உரங்களைப்பற்றி இரண்டொரு வார்த்தை சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த உரங்களின் விலை அதிகமாக இருக்கிறது. ஏழை விவசாயிகளுக்கு குறைந்த விலையில் கிடைப்பதற்கு மார்க்கம் வகுத்துத்தர வேண்டும். "அம்மோனியம் சல்பேட்" தற்போது ஜாஸ்தியாகக் கொடுக்கிறார்கள். "பாஸ்பேட்"டைக் கொடுத்தால் நிலத்துக்கு மிகவும் நன்மையாக இருக்கும். "போன் மீல்" கொடுப்பதற்கு வேண்டிய வசதிகளையும் சர்க்கார் வகுத்துக் கொடுக்கவேண்டும். இன்னொரு விஷயத்தையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். தேசிய விஸ்தரிப்பு பிரதேசத்திலும், சமுதாய திட்ட பிரதேசத்திலும், நிலங்களைச் சுற்றி கரை கட்டி விவசாயம் செய்பவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து சர்க்கார் உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பயிர்களுக்கு பூச்சி, நோய் முதலியவைகள் வராமல் தடுப்பதற்குச் சர்க்கார் வழி, வகை செய்து தரவேண்டும்.

கனம் ஸ்ரீ ராமலிங்கம் அவர்கள் நேற்று "கிராப் இன்ஷூரன்ஸ்"-ஐப் பற்றி குறிப்பிட்டார்கள். அந்த ஸ்கீமை உடனடியாக தஞ்சாவூர் ஜில்லாவில் அமுலுக்குக் கொண்டுவந்தால் நன்றாக இருக்கும். பூச்சிகள், நோய்கள் முதலியவைகளால் பயிர் சேதம் அடைவதால் நாங்கள் மிகவும் கஷ்டப்படுகின்றோம். உடனடியாக தஞ்சாவூர் ஜில்லாவில் ஸ்கீமை அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, தேசிய விஸ்தரிப்புப் பிரதேசத்திலும், சமுதாய அபிவிருத்தி பிரதேசத்திலும் இருக்கும் விவசாயிகள் நவீன விவசாய முறைகளை உபயோகப்படுத்த மிகவும் ஆசைப்படுகின்றனர். ஆனால் ஆராய்ச்சிகள் செய்த பின்பு, அந்த ஆராய்ச்சி முடிவுகளை அனுஷ்டானத்தில் கொண்டுவருவதில் கால தாமதம் ஏற்படுகிறது. கால தாமதம் இல்லாமல் உடனடியாக இந்த ஆராய்ச்சிகளை அமுலுக்குக் கொண்டுவந்தால் சௌகரியமாக இருக்கும், என்று தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

எங்கள் ஜில்லாவில் "ஜப்பானிய" முறை சாகுபடியால் நல்ல பயன் கிடைத்திருக்கிறது. அப்படியிருந்தும், இந்த முறையானது இன்னும் பல கிராமங்களில் விஸ்தரிக்கவில்லை. அதை விஸ்தரிப்பதற்கான ஏற்பாட்டை சர்க்கார் வகுத்துக் கொடுக்கவேண்டும்.

அடுத்தபடியாக பயிர் செய்வதற்கு விவசாயக் கருவிகள் மிகவும் முக்கியம். அவைகளின் விலைவாசிகள் ஏறிக்கொண்டே போகின்றன. விவசாயிகளுக்கு வேண்டிய கருவிகளை குறைந்த விலையிலேயே கிடைக்கும்படி செய்து கொடுத்தால் அவர்களுக்கு அனுகூலமாக இருக்கும். உணவு பொருள்களின் விலைவாசிகளைக் குறைப்பதற்கும் இது உதவியாக இருக்கும். பொது விவாதத்தின்போது கூட்டுறவு பயிற்சி முறை பற்றி சொன்னார்கள். கூட்டுறவு பண்ணைதான் அதிக முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த கூட்டுறவுப் பண்ணையைப்பற்றி ஒரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். எங்கள்



ஜில்லாவில் பெரும்பாலும் மடங்கள், கோயில்கள், தர்ம ஸ்தாபனங்கள் இவைகளுக்குத்தான் நிலங்கள் அதிகமாகயிருக்கின்றன. ஆனால் அந்நிலங்கள் ஐந்து வருஷத்துக்கு ஒருமுறையோ அல்லது மூன்று வருஷத்துக்கு ஒரு முறையோ குத்தகைக்கு விடப்படுவதால் தனிப்பட்ட நடுத்தர குத்தகைக்காரர்கள் அதிக லாபத்தை அடைகிறார்கள். அது சம்மந்தமாக எங்கள் ஜில்லாவில் ஒரு கூக்குரல் கிளம்பி இருக்கிறது. உழுது பாடுபடுகிறவர் களுக்கு அதனால் நன்மை இல்லை என்ற குறை ஏற்பட்டிருக்கிறது. அதற் காக ஒரு கூட்டுறவு குத்தகை ஸ்தாபனம் ஏற்படுத்தினால் நல்லது. பின்ட அது கூட்டுறவுப் பண்ணைகள் ஏற்படுத்துவதற்கு அனுகூலமாக இருக்கும் இம்மாதிரி கூட்டுறவு குத்தகை ஸ்தாபனங்களை அதிகம் ஏற்படுத்த வேண்டும் என்றும் நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன் கனம் ராமலிங்கம் நேற்று பேசும்போது தென்னம் பிள்ளைகள் குறைந்த விலையில் கொடுக்கப்பட்டதைப் பற்றிச் சொன்னார்கள். அதை ரத்துசெய்ய சர்க்கார் உத்தேசித்திருக்கிறார்கள் என்று அறிகிறேன். இவைகளை குறைந்த விலையில் கொடுக்கும் முறையை நீடிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். புயலினால், தஞ்சாவூர் ஜில்லாவில் குறிப்பாக பட்டுக் கோட்டை, தம்பிக்கோட்டை இடங்களில் தென்னை மரங்களுக்கு அதிக சேதம் விளைந்தது. விவசாயிகளுக்கும், மிராசுதாரர்களுக்கும் அதனால் அதிக கஷ்டங்கள் ஏற்பட்டன. குறைந்த விலையில் தென்னம் பிள்ளைகளை கொடுக்கும் சலுகையை நீடித்தால் நஷ்டம் ஏற்பட்டதை ஓரளவு ஈ செய்வதற்கு சௌகரியமாக இருக்கும். ஆகையால் இந்தச் சலுகையை நீடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கிராமங்களில் பொருளாதாரம் சீர்பட வேண்டுமானால். சிறு குடிசைத் தொழில்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதற்கு வேண்டிய சலுகைகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களை அந்தந்த கிராமங்களில் உற்பத்தி செய்வதற்கு சர்க்கார் வசதி செய்து கொடுக்கவேண்டும். பி.டி.ஓ. அவர்களிடம் சிறு கடன் தொகையை சாங்ஷன் செய்வது போன்ற அதிகாரங்களை ஒப்படைக்கப்பட வேண்டும். அந்த வட்டாரங்களில் உற்பத்தியாகும் பொருள்களை விற்பனை செய்வதற்கு வேண்டிய விற்பனை சங்கங்கள் அமைத்து கொடுக்கப்பட வேண்டும். அப்படிச் செய்து கொடுத்தால், உற்பத்தியாகும் பொருளை விற்பனை செய்வதற்கு விவசாயிகளுக்கு மிகவும் சௌகரியமாக இருக்கும். இந்த மாதிரியான விற்பனை சங்கங்களை அதிகப்படியாக ஏற்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**Mr. SPEAKER :** (மணி அடித்து விட்டு) மணி அடித்து ஒ நிமிஷம்வரை தான் அங்கத்தினர் பேசலாம்.

**Sri T. SAMPATH :** இந்த சமுதாய அபிவிருத்தி வட்டாரங்களிலே ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தையும் **(Primary Health Centre)**, 3 பிரச விடுதிகளையும் ஏற்படுத்துவது மிகவும் அத்தியாவசியமாக இருக்கிறது மருத்துவ வேலைகளை சீக்கிரமாக கவனிப்பதற்காக போக்கு வரத்து வச செய்து கொடுக்க வேண்டும். அதற்காக அவர்களுக்கு ஒரு ஜீப் கொடுத் உதவி புரிந்தால் நன்றாக இருக்கும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

எங்கள் ஜில்லாவில் மீனவர்களுக்கு தனிப்பட்ட கூட்டுறவு, ஸ்தாபன இருக்கிறது. அவர்களுக்கு உள் நாட்டிலேயே, அதாவது ஆற்றிலே மீ பிடிப்பதற்கு ஏலம் எடுக்கும் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. அ ரத்து செய்துவிட்டு 30-ம் தேதிக்குள் பொதுவில் ஏலம் போடுவதற் வேண்டிய ஏற்பாடுகள் செய்யுமாறு கலெக்டருக்கு அறிக்கை மூலம் ச கார் தெரிவித்திருப்பதாகத் தெரிகிறது. கூட்டுறவு முறையை ஓர அபிவிருத்தி செய்ய வேண்டுமென்பது சர்க்காரின் கருத்து என்று நி கிறேன், இந்த மீனவர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் 5,000 அல்

6,000 பேர்கள் இதை நம்பிப் பிழைக்கிறார்கள். ஆறுகளில் மீன் பிடிக்கும் சலுகையை பொதுவில் ஏலம் விட்டால், இந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் இருக்கும் மீனவர்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். ஆகையால் பொது ஏலத்தில் விடும் யோசனையை கைவிட்டு பழைய முறையையே நீடித்திருக்கும்படியாகக் கலெக்டருக்கு உத்திரவிடும்படி நான் கேட்டுக்கொண்டு, கனம் சபாநாயகர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

11-20 a.m. * SRI R. SRINIVASA IYER : Mr. Speaker, Sir, I support the three Demands moved by the Hon. Minister for Home. I will be failing in my duty if I do not thank the Government for the several beneficial measures that they have taken during the past several years for increasing food production. The Hon. the Finance Minister has indicated in his Budget speech that there has been an increase of 18 per cent in food production over the 1947–50 figures. Now after the Government of India have fixed 20 per cent increase over last year's production for this State as the target figure, the Hon. Minister for Agriculture held a conference at Ootacamund and in his opening speech he gave details of the schemes that he has proposed for the purpose of increasing the production by 20 per cent. This is a very ambitious programme and I hope the target will be reached with the energetic efforts and the quickness with me Hon. Minister and the staff of the Department of Agriculture are moving.

It is good that the Department of Fisheries and the Veterinary Department have been combined in this State and are under the same Minister because they are intertwined with each other so far as food production and the amelirorative measures for the masses are concerned. Regarding the steps taken for increasing food production, I should like to mention the distribution of improved seeds, filter-point tuble wells, oil engine pump sets distributed on a large scale, and also pump sets driven by electicity, propagation of Japanese method of cultivation, distribution of green manure seeds at subsidised basis and the distribution of pesticides on subsidised prices, though recently the subsidy for distribution on pesticides have been withdrawn temporarily. I hope it will be reintroduced soon. As for the prices of agricutural produce, steps have been taken then and there to reduce the prices when they sored high. The Hon. Minister has promised to take steps if i goes beyond one rupee more than the average prices for the pas three months.

In consonance with the procedure adopted by hon. Member in this House, I will be failing in my duty if I do not here mak certain suggestions so far as my district is concerned and generall about my constituency. Sir, the Agricultural Demonstrator i hard worked. His work is needed in the villages. But I fin that he is given too much of clerical work. He has to do propa ganda, and propaganda on the latest methods of agriculture is mor

important than doing mere clerical work for which an Upper Division Clerk, a Lower Division Clerk or a Fieldman will do. Of course in sending the fortnightly reports and in preparing and maintaining the accounts, instructions can be taken from the Agricultural Demonstrator by these subordinates. The services of the Demonstrator in the field is more useful than in the office. I hope the position of the Agricultural Demonstrator will also be improved to avoid such Demonstrators going away from the department seeking employment elsewhere on better remuneration after a few years of gaining experience in the department for want of proper remuneration in the department itself. They are as much technical experts as the engineers who work in other departments such as irrigation and public works. It is therefore proper that the remuneration of the Demonstrators should be equated with others in other technical departments.

The districts have got to be bifurcated still further. I know three districts have been bifurcated. But all the districts should be bifurcated and a District Agricultural Officer posted to each such bifurcated portion. That will help greatly doing propaganda on improved methods of agriculture and improved methods of production.

As for agricultural education I should say that we are very backward in agricultural education in the sense that we have got only one agricultural college at Coimbatore. There is the Indian Council of Agricultural Research in Delhi. Like that we must also have special research facilities made available in our own State. Ours is an agricultural State. Tanjore is the, I would like to emphasise the words 'the', surplus district in our State and has got to cater to the needs of the dificit districts. The proper place for starting another agricultural college will be somewhere in Tanjore district. In this connection Aduthurai has been suggested; I would suggest Pattukkottai where there is a Research Station, or Orthanad where we have got the nucleus for starting a college, i.e., a livestock farm cum agricultural farm. Large areas of Government poramboke lands are available in Eachankottai area in that district. Aduthurai, Pattukkottai or Orthanad may be taken as the place where the agricultural college may be started. The up-grading of the Agricultural College at Coimbatore is good. But at the same time I would suggest that we should copy the I.C.A.R. at Delhi and give facilities for doing research here itself instead of sending one or two from Madras State to Delhi to get higher technical education there.

Cotton cultivation has been introduced in Tanjore district. It is successful. But it has got to be introduced in larger areas on a larger scale. Cotton seeds are not supplied in time. If the seeds are received in the depots, the prices are not fixed. There is delay in the supply of seeds at the proper time and at proper prices. As

for oilseeds, there is the ambitious programme of the Hon. Minister outlined in his speech and in the Budget memorandum. There is also the programme to start a coconut research station. The coastal areas from Muthupet to Thondi are the coconut growing areas. We can compete with any coconut grower in the West Coast. So far as yield is concerned, our trees yield twice as much as the trees in West Coast. I would even suggest we may start a competition in coconut growing between Tanjore district and any other district in this State or outside, so far as the quantity of the kernel, the size of the nut and the number of nuts in a bunch are concerned. Therefore I suggest that the proposal to start a coconut research station which has been pending for more than a year in the vicinity of Pattukkottai where there is an Agricultural Research Station functioning should be taken up at once. A research station on fruits was promised and we see in a picture in the booklet on Tanjore district published by the Director of Information and Publicity, the Hon. the Chief Minister holding a big lemon grown in Pattukkottai Research Station. We find fruit trees are coming up very well in Pattukkottai area. The soil there is red loam combined with sand which is necessary for fruit growing. A fruit Research Station should be started there. As for animal husbandry I would request the Hon. Minister to pay special attention for the improvement of the Umblacheri breed. In the neighbourhood of Orthanad, in Echankottai area there are large extents of poramboke lands and it has already been suggested that it should be used by the Orthanad Livestock Farm for salvage of dry cows and calves. We have the best animals in India here. The Sindhi cows are coming up very well there. The very effective steps taken by our Hon. Minister for Agriculture in improving the cattle wealth of our State would have been witnessed by many at the recent State-wide animal show held at Madras. We want a dairy institute. There is only one now in Bangalore. Along with the improvement of the Cattle Farm at Orthanad, where we can improve the Umblacheri breed, we should open a dairy farm on a large scale there itself.

One other thing about which I want to make mention before I close is the loans granted to agriculturists for construction of cattle-sheds. This is given under "Takkavi" loans. We are not able to get the loans in time from the Revenue Department. It is Veterinary department that will be properly fitted to decide to whom the loan is to be given, when and for what kind of construction the loan is to be sanctioned. If the cattle-sheds are to be properly constructed on a sanitary basis, I would suggest that the Veterinary department is given the power to grant loans for building cattle-sheds.

For every taluk headquarters there must be a veterinary hospital. At present there is only a dispensary, at Pattukkottai. It has got to be upgraded and converted into a hospital. The question of

19th July 1957] [Sri R. Srinivasa Iyer]

acquiring lands for improving the veterinary dispensary which is in a backward condition into a hospital **at Pattukkottai has to be** taken on hand at a very early date.

* SRI B. DORAISAMI REDDIAR : கனம் சபாநாயகர் அவர்களே, 11-30 a.m.
இந்த விவசாய மான்ய கோரிக்கையின்மீது சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். விவசாயம் முற்போக்கு அடையவேண்டுமென்று கவர்ன்மென்டார் பற்பல விதமான உதவிகள் செய்துவருகிறார்கள். முதலாவதாக விவசாய நற்காப்புக் கடன், இரண்டாவது மாடுகள் வாங்குவதற்குக் கடன். மூன்றாவதாக உரம் முதலியவை வாங்குவதற்குக் கடன், இவ்விதமாகவும், விவசாயம் நல்ல முறையில் நடக்க வேண்டுமென்று அவர்களுக்கு நல்ல விதமான விதைகள் அளிக்கப்பட்டு வருகிறது. இவ்விதம் இருந்தும் சில காரணங்களால் இந்த விவசாயம் முற்போக்கு அடைய முடியாத நிலையில் இருக்கிறது. ஏனென்றால் சென்ற 20 வருட காலமாக சரியானபடி மழை கிடையாது. அதோடு பெய்கிற மழையும் பருவ காலத்தில் பெய்வது இல்லை. இந்தக் காரணங்களை முன்னிட்டு சரியான காலத்தில் சாகுபடி செய்ய முடியாமல் போய்விடுகிறது. அன்று ஒரு அங்கத்தினர் அவர்கள் கூறியது மாதிரி தண்ணீர் இல்லாத ஆறுகள்தான் இருக்கின்றன. அங்குள்ள ஏரிகளிலும் இதேமாதிரி தண்ணீர் இல்லை. இதனால் அங்குள்ள மக்கள் 100-க்கு 75 பாகம் நஞ்சை நிலங்களில் புஞ்சை சாகுபடி செய்யவேண்டிய நிலைதான் ஏற்படுகிறது. எந்த இடத்தை எடுத்துக்கொண்டாலும் விவசாயத்திற்கு ஜல வசதிதான் முக்கியம் என்பது எல்லோரும் அறிந்ததுதான். தண்ணீர் ஏதாவது கிடைக்கக் கூடிய இடங்களிலிருந்து இறைக்க வேண்டுமானாலும் அதற்கு வருவாயிலிருந்து கூடுதலாகச் செலவு செய்யவேண்டியிருக்கிறது. இறைக்க வேண்டியகருவிகள் எதை எடுத்தாலும் ஒன்றுக்கு நான்கு மடங்கு விலை கூடுதலாக இருக்கிறது. இது தவிர வேண்டிய அளவுக்குக் கருவிகள் விவசாயம் பண்ணுவதற்குக் கிடைப்பதில்லை. சொஸைடிகள் மூலம் எங்கு பார்த்தாலும் வீடுகள், பெரிய கட்டிடங்கள், இவைகள் கட்டப்படுகிற இடங்களுக்கு கூலிகள் போய்விடுகிறார்கள். இதனால் கூலிகள் கிடைப்பது கஷ்டமாய் இருக்கிறது. விவசாயிகளுக்கு உதவி புரிவதற்கு யாரும் இல்லை. ஏதோ இரண்டு அணா மூன்று அணா என்று கொடுத்தால்தான் விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகும். இவர்களுக்கு பிர்க்கா டெவலப்மென்ட் மூலமாக நடைபெறுகிற வேலைகளுக்கு போனால் குறைந்தபட்சம் ஒரு ரூபாய் சம்பளம் கிடைக்கிறது. இதனால் யாரும் விவசாயத் தொழிலுக்குப் போக முற்படுவதில்லை. இதனால் விவசாயம் குன்றிப் போய்விடுகிறது. ஆகவே இவதற்காக என்ன உதவிகள் செய்தாலும் பலன் இல்லாமல் போகுகிறது. இந்த நிலையில் விவசாயம் முன்னுக்கு வர வேண்டுமானால் விவசாயிகளுக்கு அதிகமான எலக்ட்ரிக் பம்பு செட்டுகள் கிடைப்பதற்குள்ள வசதி செய்து கொடுக்க வேண்டும். கரண்ட் அதிகமாகக் கிடைத்தால் அதன் மூலமாக அதிகமாக தண்ணீர் கிடைக்க வசதி செய்துகொண்டு விவசாயத்தை முன்னுக்கு கொண்டுவருவார்கள். இன்றைக்குப் பொதுவாக விவசாயத்தை எல்லோரும் பிற்போக்கான தொழில் என்று கருதுகிறார்கள். விவசாயம் செய்கிறான் என்றால் அவன் முகத்தைத் திரும்பிப் பார்ப்பது கிடையாது. "ஓதுகின்றவன் உழுகின்றவன் பிழக்கடையின் பின்" என்றிருந்த நிலை மாறி இப்போது "உழுகின்றவன் ஓதுகின்றவன் பிழக்கடையின் பின்" இருக்கக் கூடிய நிலையில் இன்று மாறிவிட்டது. எல்லொரும் படித்துவிட்டு உத்தியோகத்திற்குப் போகவேண்டுமென்றுதான் பார்க்கிறார்கள். விவசாயம் செய்வதற்கு வேண்டிய பல சலுகைகள் செய்து கொடுத்தாலும் விவசாயம் செய்வதற்கு முன்வருவதில்லை என்கிற நிலை வந்து சேர்ந்திருக்கிறது. விவசாயம் செய்கிறான் பையன் என்று சொன்னால் ஆயிரம் காணி நிலம் விவசாயம் செய்கிறான் என்று சொன்னாலும் பெண் வீட்டுக்காரர்கள் பேராசைதான் படுகிறார்கள். ஏதோ

00 ரூபாய் சம்பளத்தில் இருக்கிறான் என்று சொன்னால் ஏதோ ரொம்பப் டித்துவிட்டதாக எண்ணி பெண் கொடுக்க முன்வருகிறார்கள். 00 ரூபாயைக் கொண்டு வீட்டு வாடகை கொடுத்து காலம் கழிக்கக் கூட ந்தக் காலத்தில் முடியாத நிலை இருப்பதை யாரும் எண்ணிப் ார்ப்பது கிடையாது. இதனால் படித்தால்தான் வாழ்க்கை நடத்த முடி யும் என்று எண்ணி அவர்கள் விவசாயத்தை விட்டு ஏதோ எஸ்.எஸ். எல்.ஸி. வரையாவது படிக்க வேண்டுமென்று எண்ணி அதில் கவனம் செலுத்த ஆரம்பித்துவிடுகிறான். இதனால் விவசாயம் குன்றிவிடுகிறது. இன்னும் இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்திற்குள் விவசாயம்தான் மேல் என்று எண்ணக்கூடிய நிலைக்கு விவசாயம் முன்வரும் என்பது நிச்சயம். எந்தவிதமான உதவி செய்தாலும் சரி, விவசாயம்தான் எல்லாவற்றையும் விட மேல் என்கிற எண்ணம் வருகிற வரையிலும் விவசாயம் முன்னேறாது. ஆகையால் எல்லோரும் விவசாயத்தை முக்கியமாக எண்ணி அதில் சிரத்தை காண்பித்தால் இன்னும் கொஞ்ச காலத்திற்குள் அவ்வையார் கூறியிருப்பது போன்று "ஓதுகிறவன் உழுகிற வன் பின்னாலே" என்கிற நிலை வரும். என்று கூறிக்கொண்டு இன்னும் சீக்கிரமாக விவசாயம் முற்போக்கு அடைய வேண்டும் என்று கூறிக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI M. C. MUTHUKUMARASWAMY : கனம் சபைத் தலைவர் அவர்களே, விவசாய அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் மான்யத்தின் பேரில் இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். விவசாயம் என்று சொன்னால் சிறப்பாக தஞ்சை ஜில்லாதான் சிறப்பான நிலை அடைந்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. அங்கு விவசாயம் மூன்று மாதங்கள்தான் நடக்கிறது. ஜூன் மாதம் 15, 20-ம் தேதிகளில் தண்ணீர் விடுவதினால் விவசாயிகள் அவசரமாக பயிர் செய்வதின் காரணமாக அவர்களுக்கு சர்க்காரிலிருந்து எவ்வளவு உதவி செய்தாலும் அவையெல்லாம் வீணாகிவிடுகிறது. நான் இதை அனுபவத்தில் கண்டு சொல்லுகிறேன். ஆகவே தஞ்சை ஜில்லாவுக்கு மேட்டூர் தண்ணீர் சீக்கிரமாக முன்கூட்டி கிடைக்குமானால் இரண்டு போகம் அல்ல, மூன்று போகம் வரை பயிர் செய்ய முடியும் என்று கருதுகிறேன். தஞ்சை ஜில்லா வண்டல் கொண்ட பிரதேசம், முன்கூட்டி தண்ணீர் விடுவதாயிருந்தால் பயிர் செய்வதற்கு உதவியாயிருக்கும். ஆகையால் மேட்டூரிலிருந்து 15, 20 நாட்களுக்கு முன்கூட்டி தண்ணீர் விட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அது மாத்திரமல்ல, மாகாணங்களில் இருக்கக்கூடிய புறம்போக்கு நிலங்களைச் சீர்திருத்துவதற்கு பல லட்சக் கணக்கான ரூபாய்களைச் செலவு செய்கிறது என்றாலும் கூட இன்னும் கூடுதலான அளவில் தஞ்சை ஜில்லா விவசாயிகளுக்கு கொடுத்து உதவி அளித்தால் இன்னும் விவசாயம் அதிகமாகப் பெருக முடியும் என்பது என்னுடைய கருத்து. இன்னும் தஞ்சை ஜில்லாவில் மதிப்பிற்குரிய அங்கத்தினர் சம்பத் அவர்கள் சொன்னது மாதிரி வாய்க்காலில் உள்ள தண்ணீர் சரியாகக் கிடைக்க வேண்டும். அதோடு பூமிக்குக் கீழே இருக்கும் தண்ணீரையும் சாகுபடிக்குக்கொண்டுவர பம்புகளை உபயோகப்படுத்துவதற்கு வேண்டிய நல்ல வாய்ப்புக்களைச் சர்க்கார் செய்து கொடுக்கவேண்டும். அவ்விதம் செய்து கொடுத்தால் நிச்சயமாக மூன்று போகம் பயிர் செய்வதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று நம்புகிறேன். விவசாயத்தை எடுத்துக்கொண்டால் இன்று எத்தனையோ திட்டங்கள் போடப்பட்டிருக்கிறது என்பதை ஒத்துக்கொள்கிறேன். சில பகுதிகளில் மின்சாரத்தின் உதவியோடு விவசாயம் செய்யப்படுகிறது. தஞ்சை ஜில்லாவை எடுத்துக்கொண்டால் 52-ஆம் ஆண்டுக்குப் பிறகு பலர் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். அதன் பின் விவசாயம் செய்யக்கூடியவர்களை கணக்கெடுப்பதற்கு ஜில்லா கலெக்டர் அவர்கள் சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். இதில் விவசாயிகள் யாரெல்லாம் என்ற கணக்கை எடுப்பதற்கு அங்கங்கு இருக்கின்றன

19th July 1957] [Sri M. C. Muthukumaraswamy]

கணக்குப்பிள்ளை, மிராசுதார்கள் சார்பில் இருந்துகொண்டு அங்கு 11.42 a.m.
யாரெல்லாம் பரம்பரையாக விவசாயம் செய்தாலும்கூட அவர்களை அங்கு விவசாயம் செய்பவர்களாக சேர்க்கப்படவில்லை. இதற்கு கோர்ட்டில் தாவா நடத்தினாலும் மிராசுதார்களுக்கு சாதகமாக விவசாயிகளை வெளியேற்றி விடுகிறார்கள். இன்னும் இதைத் தவிர தஞ்சை ஜில்லாவில் விசித்திர மான நிலைமை இருந்து வருவதை நாம் பார்க்கிறோம். விவசாயம் செய்ய வேண்டிய சமயங்களில் கூலிகளை ராமனாதபுரம், திருநெல்வேலி போன்ற ஜில்லாக்களிலிருந்து கொண்டுவந்து விவசாயம் செய்வதின் காரணமாக இங்கு ஏற்கனவே இருக்கின்ற விவசாயிகளுக்கு பாதகம் ஏற்படுகிறது. இவ்விதம் அடுத்த ஜில்லாக்களிலிருந்து விவசாய கூலிகளைக் கொண்டு வருவதை தடை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக; சர்க்காரிலிருந்து கொடுக்கப்படுகிற உரத்தை சேகரித்து வைக்க ஒவ்வொரு தாலூகாவிலும் வாடகை வீட்டைப் பிடித்து 500, 600 என்று கொடுத்து பணத்தை வீணாகச் செலவு செய்ய வேண்டியிருக் கிறது. ஆகவே ஒவ்வொரு தாலூகாவிற்கும் ஒவ்வொரு கோடவுன் கட்ட வேண்டும். அப்படிச் செய்தால் செலவு ஒரே அளவில் முடிந்துவிடும். முதலில் சிறிது ரூபாய் செலவழித்தாலும் பரவாயில்லை. ஆகவே அனுவசிய மாக மற்றவர்கள் அந்த வாடகையைக் கொண்டு போகாமல் கவனித்துக் கொள்வது உசிதமென்று கருதுகிறேன். தஞ்சை ஜில்லாவில் ஒரு பரம் பரை வழக்கம் இருக்கிறது. விவசாயிகள்தான் வாய்க்காலை வெட்டவேண்டு மென்ற வழக்கம் இருக்கிறது. மிராசுதாரர்களுக்கும், விவசாயிகளுக்கும் இப்பொழுது நல்ல தொடர்பு இல்லாதது யாவருக்கும் தெரியும். ஆகவே, அந்த வாய்க்கால் வெட்டுவதற்கு சர்க்கார் செலவு செய்து உண்டான செலவை மிராசுதாரர்களிடமிருந்து வசூலித்துக்கொள்ள வேண்டிய நட வடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஜப்பான் முறையிலே நல்ல பலன் இருக்கிறது என்று இருந்தபோதிலும் கூட அநேக இடங்களில் அது அனுசரிக்கப்படவில்லை. ஒவ்வொரு இடத்தி லும் தண்ணீர் வருவதற்கு சுமார் 15, 20 நாட்களுக்கு முன் ஐந்தாறு ஏக்கர் நிலத்தில் பம்ப் வைத்து இறைத்து அது எப்படிக் கையாளப் படுகிறது என்று மக்களுக்கு பார்வையாக வைத்தால் அதைப் பார்த்து மக்கள் அதன்படி செய்ய உதவியாயிருக்கும். இதை சர்க்கார் செய்வார் கள் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இத்துடன் எனது உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

**Sri S. RAMASAMI NAIDU :** கனம் சபாநாயகர் அவர்களே, பழு 11.42 a.m
துள்ள பல பணிகளுக்கிடையே உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லை என்று நம் முன்னோர்கள் சொல்லிவிட்டுச் சென்றார்கள். நம்முடைய விவசாயம் அப்படிப்பட்ட ஏற்றம் படைத்தது. ஆனால், இன்றைய விவசாயி தன்னு டைய நிலைமை இன்னதென்று தெரியாமல் தவிக்கிறான். யார் விவசாயி என்ற நிலவரம் இன்னும் நிஷ்கர்ஷணம் செய்யப்படவில்லை. நிலத்தை கூலிக்கு உழுதுகொண்டிருப்பவர்கள், நிலத்தைக் குத்த கைக்கு எடுத்து உழைத்துக்கொண்டிருப்பவர்கள் ஓரளவு விவசாயி என்று கருதப்படுகிறார்கள். ஆகவே நிலம் வைத்திருப்பவர்களிட மிருந்து கொஞ்சம் நிலத்தைப் பறித்து நிலம் இல்லாதவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்ற ஒரு பிரச்னை இப்பொழுது சாதாரணமாக பேசப்பட்டு வருகிறது. இந்தச் சூழ்நிலைக்கிடையே இன்றிருக்கும் விவ சாயி ஏதோ தன்னுடைய விவசாயத்தை செய்துவருகிறான். விவ சாயம் செய்து வருகிறவர்களின் தொல்லைகள் பற்றி ஒவ்வொரு ஜில்லா வாரியாகப் பலதரமாகச் சொல்லப்படுகிறது. விவசாயிகளுக்குள்ள தொல்லைகள் ஒன்றிரண்டல்ல. அவர்களுக்குள்ள தேவையும் ஒன்றி ரண்டல்ல. சொல்லி முடியாத கவலைகள் அவர்களுக்கு இருக்கிறது. அவர் களுக்கு விவசாயம் செய்ய போதுமான வசதி இல்லை. அவர்களுடைய கால்நடைகளுக்கு ஒரு இன்ஷ்யூரன்ஸ் திட்டம் கிடையாது. அவர்களின்

கால்நடைகளுக்கு வைத்தியம் செய்ய வசதி இல்லை. அவர்களின் வீடு
களிலுள்ள குழந்தைகளுக்கு வைத்தியம் செய்ய வசதி இல்லை. அவர்
கள் தங்கள் குழந்தைகளை மற்றக் குழந்தைகள் மாதிரி படிக்க வைக்க
வேண்டுமென்று எண்ணினால் அதற்கு வேண்டிய பள்ளிக்கூடங்கள்
இல்லை. அவர்களின் வீட்டிலிருக்கும் வயோதிகர்களை தங்கள் விவசாயத்
திலிருந்து கிடைக்கும் வருமானத்தைக்கொண்டு பாதுகாப்பதற்கு முடிய
வில்லை. வேறு எந்தத் தொழிலையும் செய்கிறவர்களுக்கு எல்லாம் வேண்
டிய வசதிகள் இருக்கின்றன. விவசாயிகள் தன்னுடைய வாழ்க்கை
நிலையை செப்பனிட்டுக்கொள்ள முடியாமல், அதற்குரிய வசதியில்லாமல்
பரம்பரையாக செய்துவருகிறோமே என்ற காரணத்தால் விவசாயம் செய்து
வருகிறார்கள். விவசாயி விவசாயம் செய்து தன்னுடையவும், தன் குடும்
பத்தினுடையவும் வயிற்றைக் கழுவிக்கொள்ள முடிகிறதே அன்றி மற்ற
வர்கள் போல் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ள வேண்டும், நல்ல
முறையில் வாழ வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு இருக்குமே
யானால் அது ஈடேறாத நிலைமையில் இருக்கிறது. அவர்களுக்கு எந்த வித
மான வசதியும் இல்லை என்று நான் சொன்னேன். நல்லபடி விவசாயம்
செய்வதற்கு போதுமான சாதனங்கள் கிடைப்பதில்லை. உரம் போன்ற
வைகள் காலாகாலத்தில் கொடுக்கப்படுவதில்லை. விவசாயம் செய்வதற்கு
முன் பணம் கிடைப்பதில்லை. விவசாயப் பொருள்களை நல்ல விலைக்கு
விற்றுக் கொடுக்க ஏதுவும் இல்லை. சர்க்காரிலிருந்து விவசாயிகளுக்கு
உதவி செய்யும் பொருட்டு திட்டங்கள் பல இருந்த போதிலும் இன்று
அவர்களுக்கு வேகமாக உதவி ஒன்றும் கிடைப்பதில்லை. தான் தண்ணீர்
இறைக்க, தன் மனைவி தண்ணீர் காட்ட, தன் மூத்த குழந்தை வீட்டி
லிருந்து கஞ்சி காய்ச்சிக் கொண்டு வர, அதற்கு அடுத்த குழந்தை
காட்டிற்குச் சென்று ஆடு மாடுகளை மேய்த்து வர, அவன், விவசாயி
இரண்டு ஓவியங்களைப் பார்க்கிறான். ஒன்று ஒரு பெரிய வியாபாரியின்
ஓவியம். நல்ல பிரகாசமான வர்ணங்களால் தீட்டப்பட்ட ஒரு பெரிய
மாளிகை அவன் கண்முன்னே தோன்றுகிறது. அந்த மாளிகைக்கு
முன்னால் ஒரு நல்ல பெரிய மோட்டார் கார் நிற்கிறது. அங்கு அதற்கு
முன் தன் மனைவி நல்ல பட்டாடை உடுத்தி பகட்டாக நிற்கிறாள். அவன்
குழந்தை பொய்க் குதிரையின் மேல் இருந்துகொண்டு பாலாடையைச்
சப்பிக்கொண்டிருக்கிறது. அதைப் பார்த்துவிட்டு தன் ஓவியத்தையும்
பார்க்கிறான். ஒரு சிறிய கூரை வீட்டைக் காண்கிறான். அதில் வயிறு
ஒட்டிப் போய் சப்ப வேறு ஒன்றும் இல்லாமல் பெரு விரலைச் சப்பிக்
கொண்டிருக்கும் தன் குழந்தையைப் பார்க்கிறான். ஏழெட்டு நாட்களாக
மாற்ற வேறு உடை இல்லாமல் தன் மனைவி கிழிந்த உடையில் காட்சி
அளிப்பதைப் பார்க்கிறான். பக்கத்தில் உள்ள ஓவியத்தில் இருப்பவர்
களைப் போல் தான் இருக்க முடியவில்லையே என்று ஏக்கப்படுகிறான்.
அப்படி இருப்பதற்குப் பிரயத்தனப்படுகிறான். எவ்வளவு தூரம்
பிரயத்தனப் பட்டாலும் அவனால் அம்மாதிரி ஆக முடியவில்லை. பிரயத்
தனப் படுகிறான். சர்க்காரிடம் முறையிடுகிறான். சிநேகிதர்களிடம் சொல்
கிறான். ஆனால் ஒன்றும் பலன் தருவதாக இல்லை. இந்நிலையில் அவனது
மனம் எப்படியிருக்கும் என்று யோசித்துப் பாருங்கள். அவன் உலகத்
திலுள்ள மக்களுக்கு உணவு அளிக்கிறான். ஆனால் அவனுக்கோ உண்ண
உணவு இல்லாத நிலையில் இருக்கிறான். கட்டிப் போட்ட சிங்கத்தின் குழந்
தைகளை நரி கவ்வி தின்று கொண்டிருந்தால் அச்சிங்கத்தின் மனம்
எப்படி குமுறிக் கொண்டிருக்குமோ இதே மாதிரி இன்றையதினம் விவ
சாயிகளின் மனமும் குமுறிக் கொண்டிருக்கிறது. ஆகவே, அவன்
தன் பக்கத்திலுள்ள ஓவியத்தைக் கிழித்துப் போட முற்படுகிறான் என்றால்
அது தப்பு என்று நான் சொல்லமாட்டேன், நீங்களும் சொல்ல
மாட்டீர்கள் என்று நினைக்கிறேன். ஆகவே, விவசாயிகளின் நிலைமை
சீக்கிரம் முன்னேறி, அவனுடைய வாழ்க்கை சரியாக செப்பனிடப்படா
விட்டால், விவசாயி தன்னுடைய வாழ்க்கை மற்றவர்களின் வாழ்க்கைக்கு





சமமானது என்று எண்ணம் தோன்றிவிட்டால் சமுதாயத்தில் ஒரு
புரட்சி ஏற்படும். விவசாயத் துறையில் நன்மைகள் பல செய்து வரு
கிறோம் என்று சொல்கிறார்கள். வாஸ்தவந்தான். இந்த மான்யத்தை
நான், அனுமதிக்க வேண்டுமென்றுதான் சொல்கிறேன். இருந்த
போதிலும், விவசாயிகளுக்கு போதுமான அளவு நாம் இன்னும் சேவை
செய்யவில்லை. விவசாயி எல்லோருக்கும் உழைக்கும் ஒரு பொம்மை
போன்று இருக்கிறான். சிறு குழந்தையிடம் ஒரு பொம்மை கொடுக்கப்பட்
டால் அக்குழந்தை பல முத்தங்கள் கொடுக்கிறது. ஆனால் சில சமயத்தில்
அதை கீழே எறிந்து அதை மிதித்து விடுகிறது. அதே போல்
இன்று விவசாயி கவனிக்கப்படாமல் மிதிக்கப் படுகிறான். ஆகவே,
அவர்களின் இந்நிலை மாற அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். இந்த ஐந்தாண்டுத் திட்டத்திலும் சரி,
அல்லது வேறு எவ்வழியிலானாலும் சரி விவசாயிகளுக்கு வாழ வழி செய்யப்
பட வேண்டும் விவசாயி ஒருவனுக்கு ஐந்து ஏக்கர் நிலம் மட்டும்
கொடுத்து விட்டால் போதாது. அதை வைத்துக்கொண்டு அவன் தன்
வயிற்றைக் கழுவிக்கொள்ள முடியுமே தவிர வாழ்க்கையை இனிது நடத்த
முடியாது என்பது விவசாயிகளுக்குத் தெரியும். ஆகவே ஐந்து ஏக்கர்
நிலத்தைக் கொடுத்து விட்டு விவசாயியை ஏமாற்றி விடலாம் என்று
யாரும் கருத வேண்டாம். ஆலை ஒன்றில் வேலை செய்யும் தொழிலாளி
ஒருவனுக்கு எப்படி மாதம் ஒன்றிக்கு 100 ரூபாய்க்கு குறையாமல் கிடைக்
கிறதோ அப்படி இவர்களுக்கும் கிடைக்கும்படிச் செய்ய வழிவகையும்
வகுக்கப்பட வேண்டும். தங்கள் வீட்டில் உள்ள வயோதிகர்களை வைத்துக்
காப்பாற்றவும், தன் குழந்தைகளுக்கு நல்ல படிப்பு கொடுப்பதற்கும்,
அவர்களை நல்ல அறிவாளிகளாக ஆக்குவதற்கு வேண்டிய வாய்ப்புகள்
பெறவும், தனது வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளவும், நம்
நாட்டில் 80 சதவிகிதம் விவசாயிகளாக இருக்கும் அவர்களின் வாழ்க்கைத்
தரத்தை உயர்த்துவதற்கு வேண்டிய வழிவகைகளை நாம் செய்து கொடுக்க
வில்லை என்றால், நாம் நம் கடமையிலிருந்து தவறி விழுபவர்களா
வோம்.

**Sri P. S. SANTHANAM :** கனம் சட்ட சபைத் தலைவர் அவர்களே, 11-5 a.m.
இப்பொழுது விவசாயத் திட்டத்தை யொட்டி சில விஷயங்களைச் சொல்ல
முன் வந்திருக்கிறேன். இந்த நாட்டிலே அந்நியர் ஆட்சி காலத்திலே
ஆதரவற்ற நிலையிலிருந்துவிட்டு நம் ஜனநாயக ஆட்சியில் நல்லதோர்
வாழ்வை வாழவேண்டும்மென்று விரும்புபவர்கள் முக்கியமாக ஏழை
விவசாய மக்கள் தான். அதிலும் ஏழை வன்னிய குலக்ஷத்தியர்களை
யும் ஏழை ஹரிஜனங்களையும் தவிர வேறு யாரும் பெரும்பாலோராக
இருக்கமாட்டார்கள் என்பது என்னுடைய அபிப்பிராயம். இந்த நாட்டிலே
உழவர்களாய் காலை முதல் மாலை 6 மணி வரை நிலத்தில் உழைத்துவிட்டு
வீட்டிற்கு வந்தவுடன் குடிக்கக் கஞ்சியும், கட்ட ஆடையும் குந்த நிழலும்
இல்லாமல் அவல நிலையில் மக்கள் இருக்கிறார்களென்றால், ஏழை ஹரி
ஜனங்களையும் ஏழை வன்னிய குல க்ஷத்திரியர்களையும் தவிர வேறு யாரும்
இருக்கமாட்டார்கள் என்பது என்னுடைய கருத்து. விவசாயிகளுக்கு
நல்லதோர் திட்டத்தைத் சர்க்கார் இப்பொழுது கொண்டு வந்திருப்பதைக்
கவனிக்கும்போது, " சிறு துளி பெரு வெள்ளம் " என்பதற்கு ஒப்பாக,
படிக்கிற மாணவனை தன்னை நம்பி உழைக்கின்ற பாட்டாளி மக்களை பிறகு
உதறித் தள்ளிவிடுவதைப் போல, நமது சர்க்காரும் ஏதோ பெரிய, பெரிய
அணைத் திட்டங்களைத் தான் எண்ணிக்கொண்டிருக்கிறது என்பதை
நினைத்தால், மிகவும் வருத்தப்படவேண்டியிருக்கிறது. ஏனெனில்,
ஏழை விவசாயிகள், ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர், அரை ஏக்கர், கால்
ஏக்கர் வைத்துக்கொண்டு ஏரித் தண்ணீரை அல்லது கிணற்றுத் தண்ணீரை
நம்பி விவசாயம் செய்யக்கூடிய நிலையில் தான் இருக்கிறார்கள். 5 ஏக்கர்,
10 ஏக்கர், 100 ஏக்கர், ஒரு வேலி என்று வைத்துக்கொண்டிருப்பவர்கள்
உண்மையிலேயே விவசாயிகள் அல்ல. அவர்கள் நிலம் படைத்தோர்,

நிலச் செல்வந்தர்கள், என்று தான் நமது நாட்டிலே சொல்லப்படுகிறார்கள். ஒரு எக்கர், இரண்டு எக்கர் வைத்துக்கொண்டிருப்பவர்கள் மின்சார வசதியைக் கொண்டு பயிர் செய்ய முடியாத நிலைமையில் தான் இருக்கிறார்கள். அப்பேற்பட்டவர்களுக்கு சர்க்கார் உடனடியாக கிணறு வெட்டுவதற்கான மானியத்தையும் மாட்டு வாரப் பணத்தையும் கொடுத்தால், அந்த ஏழை விவசாயிகள் பயிரிட்டு தங்கள் வாழ்க்கையை நன்றாக நடத்துவார்கள் என்பது என்னுடைய அபிப்பிராயம். சர்க்கார் கொடுக்கும் நில மான்யங்கள் ஏழை பாட்டாளி மக்களுக்கு, ஏழை விவசாயிகளுக்குக் கிடைப்பதில்லை. நிலம் படைத்தவர்களுக்குத் தான் அவை கிடைக்கின்றன. இதற்கு முன்னதாகச் சில அங்கத்தினர்கள் விவசாயிகளுக்குச் சர்க்கார் செய்து வரும் உதவியைப் பற்றிச் சொன்னார்கள். அதாவது, ஒரு பொம்மையைக் கண்டு குழந்தை மகிழ்ச்சி அடைவது போலவும், அந்தக் குழந்தை பொம்மையைக் கீழே போட்டவுடனே அதற்கு என்ன கதி ஏற்படுகிறதோ, அதே போலத்தான் சர்க்கார் விவசாயிகளுக்குச் செய்யும் உதவியும் இருக்கிறது என்று சொன்னார்கள். சர்க்கார் ஏழை விவசாயிகளுக்கு, ஏழை பாட்டாளி மக்களுக்கு நல்லதோர் ஏற்பாட்டைச் செய்து வருகிறோம் ; அணைகளைக் கட்டுகிறோம் : உரங்களைக் கொடுக்கிறோம், விதைகளைக் கொடுக்கிறோம், என்றெல்லாம் சொல்லுகிறார்கள். ஆனால், அவையெல்லாம் நிலம் படைத்தோர் கைக்குத்தான் போய்ச் சேருகின்றனவே தவிர, ஏழைப் பாட்டாளி மக்களுக்குப் போவதில்லை யென்றும் கீழே போடப்பட்ட பொம்மைக்கு அங்க ஈனம் ஆவதைப் போல்தான் பாட்டாளி மக்களின் நிலையையும் இருக்கிறதென்று தெரிகிறது. உதாரணமாக, திருவண்ணாமலை என்னுடைய தொகுதி. அது ஏறத்தாழ 180 ஆயிரம் வாக்காளர் கொண்ட தொகுதி, ஏறத்தாழ, 3 அல்லது 4 லக்ஷம் ஜன சங்கியை கொண்ட தொகுதி. அந்தத் தொகுதி மக்கள் நன்றாக வாழக்கூடிய நிலைமையில் இருப்பதற்கு ஆற்று வசதியோ கிணறு வசதியோ கிடையாது ; அங்கு சில ஏரிகள் தான் இருக்கின்றன. திருவண்ணாமலை டவுனில் 50,000 மக்கள் வாழ்கின்றார்கள். அவர்களில் சுமார் 30,000 மக்கள் விவசாயிகள். அந்த 30,000 மக்கள் சமுத்திரம், நொச்சுமலை, கும்பநேரி, சேரியந்தல், கீழ்நாத்தூர் ஆகிய ஐந்து ஏரிகளை நம்பித் தான் வாழ்கிறார்கள். இந்த ஐந்து ஏரிகளும் திருவண்ணாமலை பகுதியில் பாயும் வெள்ள தண்ணீரால்தான் நிரம்புகிறது. அவ்வாறு ஏரிகள் நிரம்பினால், ஏறத்தாழ 9 மாதங்கள் அந்தத் தண்ணீர் நிலங்களுக்குப் பாயும். அதைக் கொண்டு அரை எக்கர் ஒரு எக்கர் நிலம் வைத்துக்கொண்டிருப்பவர்கள் நன்றாகப் பாடுபட்டு தங்கள் வாழ்க்கையை நடத்திக்கொண்டுவந்தார்கள். இப்பொழுது இரண்டு ஆண்டு காலமாக, மழை பெய்து ஏரியில் வந்து நிரம்பும் தண்ணீர்—முன்பு 9 மாதங்கள் தங்கியது—5 மாதங்களுக்குள்ளாகக் காலியாகி விடுகிறது. அதற்குக் காரணம் வெள்ளத்துடன் வரும் மணலால் அந்த ஏரிகள் தூர்ந்துவிட்டன. அவ்வாறு ஏரிகளில் மணல் நிரம்பிவிடுவதால், தண்ணீர் வெளியே போய்விடுகிறது. ஏழை விவசாயி நிலத்தில் பயிரிடுகிறான். நான்கு மாதங்களில் சம்பா அறுவடை செய்த பின், மீண்டும் இரண்டாம் போகம் பயிர் செய்ய விரும்பினால், நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. அவ்வாறு அவன் பயிர் செய்தால், முதலில் சம்பா நெல்லில் கிடைத்த வருமானம் சொர்ணா நெல்லில் போய்விடுகிறது. அவன் இரண்டு மாதத்துக்குக் கிடைக்கும் தண்ணீரை நம்பிப் பயிரிடுகிறான். ஆனால், அவன் பயிரிட்டுக் கொண்டிருக்கும் தருவாயில், தண்ணீர் காலியாகிவிடுகிறது. ஒன்பது மாதம் தண்ணீர் பாய்ச்சக்கூடிய ஏரியாயிற்றே என்று நம்பி அவன் பயிர் செய்கிறான். ஏரியின் அகலத்தைக் கண்டு ஏழை விவசாயி பயிரிடுகிறான். அவன் ஏரியின் ஆழத்தையும் தண்ணீர் வசதியையும் பற்றி யோசிப்பதில்லை. பாவம், அவன் என்ன செய்வான் ? இவ்வாறு ஏழை ஹரிஜனங்கள், ஏழை வன்னிய குல க்ஷத்திரியர்கள் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுடைய அவல நிலையைப் போக்குவதற்கு சர்க்கார் சிறு சிறு ஏரிகளைப் பராமரித்து அவைகளில் தண்ணீர் நிரம்பக்கூடிய வசதி





யைச் செய்து கொடுக்க வேண்டும். அப்பொழுது தான் ஏழை விவசாயிகளுடைய நிலைமையைச் சீர்படுத்த முடியும். பெரிய அணைத் திட்டங்கள் இருந்தும், இந்தச் சிறிய வசதிகளை சர்க்கார் உடனடியாகச் செய்து கொடுத்தால் தான், ஏழை விவசாயிகள் வாழ்வதற்கு வழியிருக்குமென்பது என்னுடைய அபிப்பிராயம்.

நிற்க, தேசீய விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் சர்க்கார் சில முக்கியமான காரியங்களைச் செய்திருக்கிறார்கள். முன்பு வரப்பில் நடந்தவர்கள் இப்பொழுது நல்லதொரு பாதையில் நடக்கும்படியான நிலைமையை சர்க்கார் உண்டாக்கியிருக்கிறார்கள். அதை நாங்கள் மிகவும் வரவேற்கிறோம், பாராட்டுகிறோம். ஆனால், அதை யொட்டி சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். நல்ல மெயின் பாதையிலிருந்து ஜாதி இந்துக்கள் வாழக்கூடிய இடம் வரைக்கும் தான் ஸ்தல அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் பாதைகள் போடுகிறார்கள். அந்த ஜாதி இந்துக்கள் வாழக்கூடிய இடத்திலிருந்து பாட்டாளி, பாமர மக்கள் வாழும் இடத்திற்கு ஏறத்தாழ 3 பர்லாங் அல்லது ஒரு மைல் இருக்கிறது. சென்ற காலத்தில் மற்றவர்களால் துவேஷிக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட பறையன், நீச்சன், சாம்பவன், வெட்டியான், தங்களன் போன்று 18 விதமாகப் பிரிக்கப்பட்ட பாமர மக்கள், ஜாதி ஹிந்துக்கள் வாழக்கூடிய இடத்தை விட்டு, ஏறத்தாழ டெல்டா போன்றிருக்கும் பிரதேசங்களில் வாழ்கிறார்கள். வரப்பு ஓரங்களில் வாழ்கிறார்கள். அவர்களுக்குப் போய்வர நல்லதோர் பாதையை சர்க்கார் அமைக்கவில்லை. ஸ்தல அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் மெயின் பாதையிலிருந்து ஜாதி ஹிந்துக்கள் வாழும் இடங்களுக்குத்தான் பாதைகள் போடப்படுகிறதே யொழிய, பாமர மக்கள் வாழும் இடங்களுக்குப் போடப்படுவதில்லை. எந்த ஜில்லாவாக இருந்தாலும் சரி, இம்மாதிரித் தான் நிலைமை இருக்கிறது. உதாரணமாக, வட ஆற்காடு ஜில்லாவில் அந்த மாதிரி கிராமங்கள் ஆயிரக் கணக்கில் இருக்கின்றன. இதுவரையிலும் வடஆற்காடு ஜில்லாவில் பல இடங்களில் பிளாக் டெவலப்மெண்டு ஸ்கீம் நல்லதோர் பணி செய்திருக்கிறது. ஆனால், என்ன காரணமோ தெரியவில்லை, சேரிகள் இருக்கக்கூடிய இடத்தில் நல்ல பாதைகள் போடப்படவில்லை. ஜாதி ஹிந்துக்கள் வாழும் இடத்திற்குப் போகும் வரையில் நல்ல நிலைமையில் பாதை இருக்கிறது. சேரிகள் இருக்குமிடத்திற்குப் போகவேண்டுமென்றால், முள், கல் முதலானவைகளைத் தாண்டிக்கொண்டுதான் போகவேண்டியிருக்கிறது. அந்த நிலைமையைப் போக்கி ஏழை பாட்டாளி மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் சர்க்கார் வசதிசெய்து கொடுத்தால், அஹிம்சா மூர்த்தியாகிய உத்தமர் காந்தியின் திட்டத்தை ஆதரித்ததாக ஆகுமென்பது என்னுடைய அபிப்பிராயம்.

12 noon.

மீனவர்களுக்கு சர்க்கார் சில சலுகைகள் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். உண்மையிலேயே கடலோரங்களில் இருப்பவர்களுக்கு அந்தச் சலுகைகள் கொடுத்து வருவோமேயானால், பிற இடங்களில் இருப்பவர்கள் அங்கே படையெடுக்கக்கூடும். திருவண்ணாமலை புராதனமான இடம், வலஞ்சேரிகள், செம்படவத்தெருக்கள் இருக்கின்றன. அங்கு ஏராளமான செம்படவர்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்குச் சிறிய ஏரியிலும் குட்டையிலும் மீன் பிடிப்பதற்கு கச்சா வலையும் விசிறி வலையும் கொடுத்து உதவி செய்தால், கடலோரப் பிரதேசத்தின் மீது அவர்கள் படையெடுக்க மாட்டார்கள். கடலோரத்திலுள்ள மீனவர்களுக்கு சர்க்கார் உதவிசெய்யுமென்று விளம்பரம் செய்தால், அக்கம்பக்கத்திலுள்ள மீனவர்கள் அப்பிரதேசத்தின் மீது படையெடுக்கக்கூடிய நெருக்கடி ஏற்படும். ஆதலால், எங்கெங்கெல்லாம் மீனவர்கள் இருக்கிறார்களோ, அங்கெல்லாம் அவர்களுக்கு உதவிசெய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

**SRI R. KRISHNASAMI NAIDU** : சபாநாயகர் அவர்களே, இப்போது சபைக்கு முன்னால் வந்திருக்கும் விவசாயத்துறை, சமுதாய நலத்துறை,

மானியங்களை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். சில வருஷங்களுக்கு முன்னால் விவசாய அபிவிருத்திக்காகவும், உணவுப் பொருள்களில் அதிக விளைச்சல் காணவும், கிணறு தோண்டவும் மானியங்களை சர்க்கார் இலவசமாக கொடுத்து வந்தார்கள். இதனால் அநேக விவசாயிகள் நன்மை அடைந்தார்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நம் மாகாணம் சம்பந்தப்பட்ட மட்டில் அணைகள் முதலியவைகள் கட்டு வதை பின்னால் எடுத்துக்கொள்ள எது இருந்தாலும்கூட உணவு தான்ய உற்பத்திப் பெருக்கத்தை அபிவிருத்தி செய்யவேண்டிய முறையில் காரியங்களை செய்யவேண்டுமானால் இனியும் கிணறுகள் வெட்ட இனாமாக மானியங்கள் தருவது பயனை அளிக்கும். எங்கள் பகுதியில் உதாரணமாக ஸ்ரீவில்லிபுத்தூரில் 1,627 கிணறுகளுக்கு பணம் வாங்கியதில் எல்லாக் கிணறுகளும் வெட்டப்பட்டு சுமார் 27 கிணறுகள் மட்டும் வெட்டாமல் வாங்கிய பணத்தை திருப்பிக் கொடுக்கப்பட்டது. தங்கள் கடமையை இந்த தாலூகாவாசிகள் செய்து முடித்திருக்கிறார்கள். இன்றும் கிணறுகள் வெட்ட வேண்டிய ஏழை விவசாயிகள் உள்ள பல பகுதிகள் இருக்கின்றன. இவைகளில் ஹரிஜனங்கள் அதிகம். 2, 5, 7, 10 ஏக்கர் நிலம் வைத்திருக் கிறார்கள். அதன் பக்கத்திலே அரசாங்கத்தார் கொடுத்த உதவியிலும், மானியப் பணத்திலும் வெட்டப்பட்ட கிணறுகள் பலன் அளித்து வருகின்ற காரணத்தால் அங்கு ஏக்கர் ஒன்றுக்கு 1,200 படி நெல் விளைகிறது. பக்கத்திலே அடுத்த விவசாயி அங்கு கிணறு இல்லாமல் கஷ்டப்படுகிறான். மற்ற இடங்களிலும் இதை விஸ்தரிக்க இடம் இருக்கிறது. இந்த மான்யம் வழங்குவதில் அணைகள் கட்டும் திட்டத்தில் ஒரு ஏக்கருக்கு ஓராயிரம் செலவாகும் நிலையில் கிணறு வெட்டுவதற்கு உதவியளிப்பது அதிக செலவாகாது. ஒரு கிணறு வெட்ட மானியம் 750 ரூபாய் ஆகிறது. இதனால் 2 முதல் 5 ஏக்கருக்கு பாசன வசதி கிடைக்கிறது. இந்த திட்டத்தை விஸ்தரிப் பதின் மூலம் உணவுப் பொருள் உற்பத்தியை அதிகரிக்க செய்யவேண்டும் என்று கூறிக்கொள்கிறேன். இந்த மானிய உதவியால் கிணறு வெட்டப்பட்ட இடங்களில் கிணறுகள் குறித்த காலத்தில் வெட்டி முடிக்கவில்லை என்ற காரணத்தால், காலம் கடந்து இந்த கிணறுகள் வேலை பூர்த்தி செய்யப் பட்டதன் காரணத்தால், மானியமாக கொடுத்த தொகையை கடனாகபாவித்து வெட்டி முடித்திருக்கும் விவசாயிகளிடமிருந்தும்கூட அத்தொகையைத் திரும்பவும் வசூலிப்பதாக பல விவசாயிகள் ரெவினியூ இலாகாவுக்கும் விவசாய இலாகாவுக்கும் தெரிவித்திருக்கிறார்கள். ஒப்பந்தப் பிரகாரம் குறித்த காலத்தில் கிணறுகள் வெட்டப்படவில்லை என்பது உண்மை. இந்த மாதிரி குறித்த காலத்தில் கிணறுகள் வெட்டாததற்கு காரணம் அவர்களுக்குள்ள கஷ்டம்தான். ஒரு கிணறு வெட்ட சில இடங்களில் 500 ரூபாய் செலவாகும், சில இடங்களில் 250 ரூபாய் செலவாகும், சில இடங்களில் 1,500 ரூபாய், 2,000 ரூபாய், 3,000 ரூபாய் வரையில் ஜில்லாவின் நிலத் தரத்திற்கேற்ப செலவாகும். சர்க்கார் மானியமாக கொடுக்கும் பணம்போக பாக்கிப்பணத்தை சமாளிக்க வேண்டியிருப்பதால், சக்தியற்ற நிலையில் விவசாயிகள் இந்தக் கிணறுகளை குறித்த நேரத்தில் வெட்ட முடிவதில்லை. இந்த மானியம் கொடுப்பதன் நோக்கம் எதுவோ அதை இந்த விவசாயிகள் நாணயமாக நிறைவேற்றியிருக்கிறார்கள். இந்த தொகையை கடனாக மாற்றாமல், மானியமாக பாவித்து வஜா செய்யவேண்டு மென்று வற்புறுத்திக் கூறுகின்றேன். குறித்த காலத்தில் வெட்டப்பட வில்லை என்ற காரணத்தால் இந்தத் தொகையை ரெவின்யூ டிபார்ட் மெண்ட் வசூலிப்பதை உடனடியாக நிறுத்த அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். இது சம்பந்தமாக பல விண்ணப்பங்கள் அரசாங்கத்திற்கு வந்திருக்கின்றன என்றும் தெரிவித்துக் றேன்.

சமுதாய நலத்திட்டம் சம்மந்தப்பட்டவரையில் பல அங்கத்தினர்கள் சொன்னார்கள், ஒவ்வொரு பிளாக்கும் 60 ஆயிரம், 66 ஆயிரம் ஜனத் தொகை கொண்டதாக இருக்க வேண்டுமென்பது குறிக்கோள் என்று. ஆனால்





இப்போது பலவிதமாக இருக்கின்றன. ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு மாதிரியாக இருக்கிறது. சாத்தூர் தாலூகாவை எடுத்துக் கொண்டால் அதன் ஜனத் தொகை 314,000. ஸ்ரீவில்லிபுத்தூரின் ஜனத்தொகை 308,000. ஸ்ரீவில்லிபுத்தூருக்கு இரண்டு பிளாக்குகள். அதே சமயத்தில் சாத்தூருக்கு 3 பிளாக்குகள். நகரப் பகுதிகளின் ஜனத் தொகை ஸ்ரீவில்லி புத்தூரும், சாத்தூரும் ஒரே அளவில்தான் இருக்கிறது. அந்தப் பகுதி யில் 3 பிளாக்குகளுக்கு பெறக்கூடிய பணம் அதிகம். ஸ்ரீவில்லிபுத்தூர் அதே ஜனத்தொகை அளவில் இருந்தும் குறைவாக உதவி பெறுகிறார்கள். இந்த வித்தியாசத்தை போக்க ஆரம்பத்திலேயே, இதை அமைக்கப்படும் நேரத்திலேயே புள்ளி விவரங்களோடு தெரிவித்திருக்கிறேன். அரசாங்க காரியாலயத்தில் இந்த இலாகா சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுகளில் என்னுடைய கோரிக்கைகளைக் காணலாம். மத்திய அரசாங்கத்தார் ஒரு பிர்க் காவை பிரிக்கக்கூடாது என்ற நிபந்தனை விதித்திருப்பதாக சொல்லுகிறார் கள். நாங்கள் ஒன்றும் செய்யமுடியவில்லை என்று சொல்லுகிறார்கள். பின்னால் அதுவும் நிலைக்கவில்லை. ஆகவே, அமைக்கப்படும் பிளாக்குகள் ஏறக்குறைய ஒரே ஜனத்தொகை அளவு உள்ளதாக இருக்க வகை செய்ய வேண்டும்.

இன்றைக்கு ஒரு ரோடு போடவேண்டுமென்று சொன்னால் கிராமத்தி லுள்ளவர்கள் ரோடுக்கான நிலத்தை வாங்கி மண்வேலை செய்து ரோடை அமைத்துக்கொடுக்கவேண்டும். மண்வேலை செய்த பிறகுதான் அவர்கள் ரோடைப் பலப்படுத்த முன்வந்து செலவழிப்போம் என்கிறார்கள். இது ஒரு கொடிய நிபந்தனையாக இருக்கிறது. இதை மத்திய அரசாங்கம் வற்புறுத்துவதாக தெரிகிறது. பல இடங்களில் கோடிக் கணக்கான ரூபாய் செலவு செய்து ஸிமெண்ட் ரோடுகள், தார் ரோடுகள் எல்லாம் போடுகிறோம். பல காலமாக, நூற்றுக்கணக்கான வருஷங்களாக ரோடுகள் இல்லாத கிராமங்களுக்கு புதிதாக ஒரு திட்டத்தை கொண்டுவரும் சந்தர்ப்பத்திலே, நீங்களாக மண்வேலை செய்து ரோடு போடுங்கள், அதை பலப்படுத்த நாங்கள் வருகிறோம் என்று சொல்வது எவ்வளவு நீதியானதா என்று யோசித்துப் பார்க்கவேண்டும். இதில் அரசாங்கத்தினுடைய நோக்கத்தை நான் போற்றுகிறேன். மண்வேலை செய்து ரோடுகளை பலப்படுத்தாவிட்டால் எங்கே செய்த வேலை பாழாகுமோ என்று பார்க்கிறார்கள். ஆனால் இந்த மாதிரி பெரிய பணியை செய்வதற்கு அந்தந்த பகுதி மக்களுக்கு தைரியம் இருக்கிறதா, செல்வாக்கு இருக்கிறதா, பண வசதி இருக்கிறதா என்று யோசித்துப் பார்க்கவேண்டும். இந்த நிபந்தனையை தளர்த்தவேண்டிய இடங்களில் தளர்த்த கிராமரோடு வேலைகள் சரிவர நடக்க வேண்டுவன செய்யவேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக ஒரு திட்டப் பகுதியிலே வேலைகள் பரவலாக நடை பெறுவதில்லை என்று சொல்ல விரும்புகிறேன். ஒரு வேலைக்கு allot செய்யப்பட்ட பணம், அந்த வேலைகளை நிறைவேற்றுவதற்கு தகுதி உள்ள வர்கள் மட்டும் அனுபவிக்கிறார்கள். எந்தெந்த பகுதியில் மக்கள் நிறை வேற்ற முன்வருகிறார்களோ அங்கு அந்தப் பணம் செலவழிக்கப்படுகிறது. ஆகவே, இம்மாதிரியில்லாமல் வேலைகளெல்லாம் பரவலாக எல்லா பகுதிகளிலும் நடைபெறவேண்டும். ஒரு திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட பணத்தை அந்த திட்டத்திற்கு செலவழிப்பதில்லை. உதாரணமாக, ஸ்ரீவில்லி புத்தூரிலே சுகாதாரத்திற்கு ஒதுக்கப்பட்டது 63 ஆயிரம் ரூபாய். ஆனால் ஒரு லட்சத்து 44 ஆயிரம் ரூபாயை சாக்கடைக்கும் பிற வேலைகளுக்கும் செலவழித்திருக்கிறார்கள். பெரிய பஞ்சாயத்து இந்த வேலைகளை செய்ய விரும்பினால் உடனே அங்கு வேலையை ஆரம்பித்து முடித்து விடுகிறார்கள். அந்த அதிகாரிகள் தங்கள் கடமையை ஒழுங்காக செய்யவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். ஒரு இனத்திற்கு ஒதுக்கப்பட்ட பணம் குறித்த காலத்திற்குள் செலவழிக்கப்படவேண்டியிருப்பதால், போதுமான அவ காசம் இல்லாத காரணத்தால் தடை ஏற்படுகிறது என்று தெரி வித்துக்கொள்கிறேன். ஒவ்வொரு இனத்திற்கும் ஒதுக்கப்பட்ட பணம்

வேலைகளை நடத்த தகுதி இல்லாத செல்வாக்கு இல்லாத மக்கள் இருக்கும் கிராமங்களிலும் சிறு சிறு வேலைகள் செய்ய பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆகவே இம்மாதிரி காரியங்கள் பரவலாக நடைபெற முன் வரவேண்டி அரசாங்கத்தார் நல்ல திட்டங்களை வகுத்தும், அதை நிறை வேற்றக்கூடிய அதிகாரிகள் ஸ்தலத்தில் இந்த அரசாங்கத்தினுடைய திட்டங்களை, அரசாங்கத்தின் கொள்கைகளை நிறைவேற்றும்படி செய்ய வேண்டும். ஆகவே, இதில் சரிவர கவனம் செலுத்தவேண்டும்.

பெண் சமூக கல்வி அமைப்பாளர்கள்பற்றி கனம் அங்கத்தினர் சௌந்திரம் அம்மாள் சொன்னார்கள். இதில் அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும். ஒரே ஒரு சமூக கல்வி அமைப்பாளர் இருந்தால் போதும் என்று நினைக்கிறேன். ஆண் அமைப்பாளர் இருக்கவேண்டுமா, அல்லது பெண் அமைப்பாளர் இருக்கவேண்டுமா, யாராயிருந்தால் நல்லது என்று பார்க்கிறபோது, நான் ஒரு ஆணாக இருப்பதால், ஒரு ஆண் அமைப் பாளரே போதும் என்பதுதான் என் கருத்து. அதனால் பெண் அமைப்பா ளர்களையெல்லாம் வீட்டுக்கு அனுப்பிவிட வேண்டுமென்று சொல்லவில்லை. அவர்களுக்கு வேறு வேலை கொடுக்கலாம்.

அடுத்தபடியாக, எங்கே புறம்போக்கு நிலம் இருக்கிறதோ அங்குதான் **Block Development Office** கட்ட வேண்டுமென்று அரசாங்க உத்தரவு இருப்பதாக சொல்லப்படுகிறது. ஊரிலிருந்து இரண்டு அல்லது மூன்று மைல் தூரம் இருந்தாலும்கூட அரசாங்க உத்திரவின்படி புறம் போக்குள்ள அந்த இடத்தில்தான் கட்டிடம் கட்ட வேண்டுமென்று ஜில்லா கலெக்டர் முதல் ஸ்தல ரெவின்யூ அதிகாரி வரையில் பாடம் படிக்கிறார்கள். இரண்டு மைல் தூரத்திற்கப்பால் இருப்பதால், கார், பஸ் வசதி இல்லாமல் அந்த ஆபீஸில் வேலை செய்யக்கூடிய கிளார்க்குகளும் ஆபீசுக்கு வந்து போகும் பொதுமக்களும் என்ன செய்வார்கள். அந்த மேல் அதிகாரிகள் இரண்டு வருஷம் இருந்துவிட்டு போய்விடுவார்கள். பொது மக்களுடைய விருப்பத்தை அனுசரித்து அந்த இடங்கள் தெரிந்தெடுக்கப்படவேண்டு மென்று அரசாங்கம் உத்திரவிடுவது நல்லது. **Superintending Engineer** குறுகிய கால வரையில் இதைக் கட்ட மிக அவசரப்படுகிற நேரத்திலே, அப்படியே ரெவினியூ அதிகாரிகள் தேர்ந்தெடுக்கும் புறம்போக்கு இடத்தை **approve** செய்துவிடக்கூடாது. இது நீடித்து வேலை செய்யக்கூடிய ஸ்தா பனமாதலால் மக்களுக்கு கஷ்டமில்லாமல் வசதியான இடத்தில் கட்டிடம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

நீண்ட இழைப் பஞ்சு கண்டி 1-க்கு 981 ரூபாய் என்று சர்க்கார் நிர்ணயித்திருக்கிறார்கள். மில்களில் பருத்தியாக வாங்கி அதே பருத்தியை அவர்கள் கண்டி 1-க்கு 1,100 ரூபாய் அடக்க விலைக்கு பஞ்சாக்குகிறார்கள். அதனால் விவசாயிகள் லாபமடையவில்லை. ஆகவே 981 ரூபாய் விலையைக் கூட்டி நீண்ட இழை பஞ்சுக்கு நிர்ணயிக்கவேண்டும். இப்பொழுது மில் காரர் கள் பருத்தியாக வாங்கி அதே பருத்தியை பஞ்சாக்கி கண்டி ஒன்று 1,100 ரூபாய் அடக்க விலையாகிறது என்று கணக்கிட்டால் அந்த அதிகப்படியான விலையை அரசாங்கம் அங்கீகரிக்கிறது. இதனால் நியாயமான விலை கிடைக் காமல் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். அப்படி இல்லாமல் அதில் வரக்கூடிய லாபத்தை விவசாயிகளே அடையும்படியாக ஒரு நிலையை ஏற்படுத்த வேண்டும். நடுவாந்தரத்தில் இருக்கக் கூடிய மில்காரர்கள் அதில் கிடைக்கும் லாபத்தை அடைவதைத் தடுக்க இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கோ அல்லது மத்திய பருத்திக் கமிட்டிக்கோ யோசனை சொல்லி நியாயமான விலையை நிர்ணயிக்கும்படி கேட்டுக்கொள்ள வேண்டும். அப்படி விலையை உயர்த்தி நீண்ட இழைப்பருத்தி உற்பத்தியை பெருக்க விவசாயிகளுக்கு வசதி செய்து கொடுக்கவேண்டும். நடுவில் இருக்கக்கூடியவர்கள் அந்த லாபத்தை அடையாமல் அந்த விலையை உற்பத்தி செய்யும் விவசாயிகளே அடையும்படியான ஒரு நிலைமையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இத்துடன் என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.



* SRIMATHI A. S. PONNAMMAL: மதிப்பிற்குரிய கனம் சபாநாயகர் அவர்களே, நமது மந்திரி அவர்கள் கொண்டு வந்த மானிய கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளை சொல்ல ஆசைப்படுகிறேன். விவசாயி களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு நமது அரசாங்கம் எந்த எந்த வகையிலும் உதவிசெய்து வருகிறார்கள். எவ்வப்போது கடன் கொடுத்து உதவ முடியுமோ அவ்வப்போது அவர்களுக்குக் கடன் கொடுத்து அதையும் குறைந்த வட்டியில் அவர்களுக்கு கொடுத்து ஏழை விவசாய மக்களை ஆதரித்து வருகிறார்கள். அதற்கு ஏழை விவசாய மக்கள் இந்த அரசாங்கத்திற்கு நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறார்கள். பூச்சிக்காலம் வரும்போது பயிர்களுக்கு பூச்சி பிடிக்கும்போது மருந்துகளை வாங்கி அர சாங்கம் விவசாயிகளுக்கு கொடுக்கிறார்கள். அப்படிக் கொடுக்கும்போது பாதி விலைக்குக் கொடுத்து உதவுகிறார்கள். அதே சமயத்தில் அதை பாதி விலைக்கு வாங்கி உபயோகிக்கும்போது விவசாயிகளிடத்தில் பணம் இல்லா மல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே எப்படி பாதி மான்யமாக கொடுக்கப்படு கிறதோ மருந்துகளைக் கொடுக்கும்போது அம்மாதிரியே பாதி விலையை அரசாங்கம் அவர்களுக்கு மானியமாகவோ அல்லது கடனாகவோ கொடுத்து உதவவேண்டும். அப்படிக் கொடுத்தால்தான் விவசாயிகள் அதை வாங்கி உபயோகிக்க முடியும். அதனால் நல்ல பலனையும் அடைவார்கள். இந்த முறையை அரசாங்கம் கையாளவேண்டும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். 12-12 p.m.

அடுத்தபடியாக ட்ராக்டர்கள் வேண்டும் என்று கேட்பவர்களுக்கு ஒரு ஏக்கருக்கு இவ்வளவு கூலி என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதோ அம் மாதிரியே மருந்துகளுக்கும் ஒரு ஏக்கருக்கு இவ்வளவு கொடுக்க வேண்டும் என்று நிர்ணயம் செய்திருந்தால் நோய் வந்தவுடன் அதை உடனடியாகக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். காலதாமதம் செய்யாமல் கேட்ட வுடன் கொடுக்கும்படியான ஏற்பாட்டை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி உடனடியாகக் கொடுத்து உதவினால் தான் உணவு பற்றாக்குறை இருக்கும் காலத்தில் உணவு அதிகப்படியாக உற்பத்தி செய்து உணவைப் பெருக்குவதற்கு மிகவும் வசதியாக இருக்கும் என்பதையும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக நமது முதல் மந்திரி அவர்கள் விவசாயிகளுக்கு சாகுபடியில் 60 கொடுக்கவேண்டும் என்றும் நிலச் சொந்தக்காரர்கள் 40 எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் சட்டம் செய்திருக்கிறார். அந்த சட்டம் ரொம்பவும் வரவேற்கக்கூடிய சட்டம் தான். அது ஒரு பொன்னான சட்டம் என்று கூட சொல்லலாம். ஆனால் நாம் மதுவிலக்குச் சட்டத்தை ஏற்றுக்கொண்டு அதை அமுல் நடத்திக்கொண்டு வந்தாலும் அநேகம் கிராமங்களில் சாராயம் காய்ச்சிக்கொண்டுதான் வருகிறார்கள். அதைப் போலவே தான் நாம் 60–40 என்ற சட்டத்தை இயற்றியும் பல கிராமங் களில் அந்தச் சட்டம் அமுல் செய்யப்படாமல் இருக்கிறது. குறிப்பாக எனது தொகுதியில் நடந்து வருவது எனக்கு நன்றாகத் தெரியும். நாம் 60–40 என்று கொடுக்கவேண்டும் என்று நிர்ணயம் செய்தும் அந்தத் தொகுதியில் அப்படிக் கொடுக்கப்படுவது இல்லை. பல ஊர்களில் பல நில சொந்தக்காரர்கள் இந்த சட்டத்தின்படி கொடுக்கவில்லை. எனது தொகுதியாகிய சோழவந்தானில் நிலத்தை குத்தகை எடுத்துக்கொண் டிருக்கிறவர்களுக்கு 60 மூட்டை கிடைக்கவேண்டும் என்றால் அப்படி நிலச் சொந்தக்காரர்கள் கொடுக்காமல் முன்பு இருந்தபடியேதான் நெல்லைக் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். அங்கு பலர் 100 மூட்டை நெல்லில் 67 மூட்டையை முதலாளிகளுக்குக் கொடுத்துவிட்டு பாக்கி 33 மூட்டையைத் தான் எடுத்துக்கொள்ளுகிறார்கள். அப்படி எடுத்துக்கொள்ளவில்லையானால் அவர்களிடமிருந்து நிலத்தை திருப்பி வாங்கிக்கொண்டு விடுகிறார்கள். நிலத்தை பிடுங்கிக்கொள்ளக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவேதான் அங்கு இந்தச் சட்டம் சரியானபடி அமுல் செய்யப்படவில்லை என்பதை

எடுத்துக்காட்ட ஆசைப்படுகிறேன். அதனால் இந்தச் சட்டம் எல்லா இடத்திலும் நல்ல முறையில் அமுல் நடத்தும்படியான முறையைக் கையாள வேண்டும்என்று மிகமிக பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஆற்றுப் பாசனம், ஏரிப் பாசனம் இல்லாத வரண்ட பிரதேசங்களில் அங்கங்கே இருக்கும் குளங்களை நன்றாக ஆழப்படுத்தி விவசாயத்திற்கு தண்ணீரை தேக்கி வைப்பதற்கு அரசாங்கம் முன் வந்தால் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை சாகுபடிக்குக் கொண்டு வரலாம் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இப்படிப்பட்ட வசதிகள் இல்லாத இடங்களில் குழாய்க் கிணறுகளை அமைத்து அதன் மூலம் விவசாயத்தைப் பெருக்குவதற்கு நமது அரசாங்கம் முன் வந்தால் பல ஆயிரக் கணக்கான வறண்ட பிரதேச நிலங்களை சாகுபடிக்குக் கொண்டு வரலாம். அதன் மூலம் ஏழை விவசாயிகளை பாதுகாக்க முடியும்.

அதற்கு அடுத்தபடியாக எனது தொகுதியிலுள்ள குடவனூர் திட்டத்தை கொண்டுவரவேண்டும் என்று எனது தொகுதி மக்கள் அரும் பாடுபட்டார்கள். அப்படியிருந்தும் இன்னும் அது நிறைவேற்றப்படாமல் இருப்பது கண்டு மிகவும் வருத்தத்தை தெரிவித்துக்கொள்ளுகிறேன். குடவனூரிலிருந்து தாம்பரக்குளம் வரையில் ஒரு கால்வாயை வெட்டி அதன் மூலம் தண்ணீரைக் கொண்டு வருவதற்கு தங்களுடைய சொந்த முயற்சியை பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். தங்களுடைய சொந்த முயற்சியினாலாவது அந்தக் கால்வாயை வெட்டி முடித்து தண்ணீரைக் கொண்டு வரவேண்டும் என்று அந்த வேலையைச் செய்து வருகிறார்கள். அதற்கு அரசாங்கத்தின் இஞ்சினீயர் உதவி அளித்தால் பல லட்சக்கணக்கான ஏக்கர் நிலம் பயன் அடையும். அதனால் அங்கு சாகுபடியை அதிகரிக்கலாம் என்பதை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். சென்ற வருடத்திலேயே இந்த திட்டத்தைப்பற்றி சொல்லப்பட்டது. ஆனால் இதுவரையிலும் அதை எடுத்து நிறைவேற்றவில்லை. இந்த வருஷத்திலாவது அதை எடுத்து நிறைவேற்றிக்கொடுத்தால் அங்குள்ள ஏழை விவசாயிகள் பயனடைவார்கள். அப்படி அங்குள்ள ஏழை விவசாய மக்களுக்கு உதவி அளிக்கவேண்டும் என்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். செங்காட்டாங்கோட்டையிலிருந்து சேவுகம்பட்டி வரையில் சுமார் ஒரு மைல் தூரம் ஒரு கால்வாயை வெட்டிக் கொடுத்தால் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தை சாகுபடிக்குக் கொண்டுவரலாம். அப்படிக் கொண்டு வந்தால் பல ஏழை விவசாய மக்கள் பயனடைவார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக ஜம்புதுக்கோட்டை என்பது ஒரு வரண்ட பிரதேசம். கன்னிவாடியில் மழை பெய்தால் அந்த தண்ணீர் இங்கு வருகிறது. அப்படி தண்ணீர் வரும் காலங்களில் ஓடைகாலின் வழியாக வருகின்றது. அப்படி வரும்போது கரைகளை அரித்துக்கொண்டு மண்ணை எல்லாம் நிலத்தில் சேர்த்துவிடுகிறது. அதனால் அங்கு விவசாயம் பாதிக்கப்படுகிறது. மழை பெய்யுங் காலங்களில் அப்படி அடிக்கப்பட்டிருக்கும் மண்ணை வெட்டி எடுக்க வேண்டியதாக இருக்கிறது. அந்த மண்ணை எடுப்பதற்கு ஆயிரம், ஐந்நூறு என்று விவசாயிகள் செலவு செய்யவேண்டியிருக்கிறது. அதனால் தண்ணீர் வரும் காலங்களில் அந்தத் தண்ணீரை நல்ல ஊற்றுக்கள் இருக்கும் இடத்தில் தேக்கி வைத்துக் கொள்வதற்கு இஞ்சினீயர்களை நியமித்து அதற்கு வேண்டியதைச் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிச் செய்தால் மண்ணை அடித்துக்கொண்டு வந்து நிலத்தை மேடிடச் செய்யும் நிலை இருக்காது. ஆகவே தக்க இடத்தில் அந்த தண்ணீரை தேக்கி வைக்க இஞ்சினீயர்களை நியமிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தை சாகுபடிக்குக் கொண்டுவருவதற்கு உபயோகமாக இருக்கும். அதன் மூலம் ஏழை விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிக்க முடியும்



அடுத்தபடியாக சமுதாய நல திட்டத்தின் மூலமும் தேசீய அபிவிருத்தி திட்டத்தின் கீழும் கிராம சேவகர்களையும் எஸ். ஈ. ஓ.க்களையும் நியமிக்கிறார்கள். அப்படி ஆள்களைப் பொருக்கி அவர்களை ட்ரெயினிங்குக்கு அனுப்புகிறார்கள். அப்படி எடுக்கும்போது அந்த வேலைகளுக்கு தகுதியுள்ளவர்களை நியமிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். கிராமங்களுக்குச் சென்று நல்ல வேலை செய்யக்கூடியவர்களையும் அந்த வேலையில் ஊக்கம் உள்ளவர்களையும் தான் நியமிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிப்பட்டவர்களை நியமித்து அவர்களுக்கு பயிற்சி கொடுத்தால் தான் அவர்கள் நன்றாக வேலை செய்வார்கள். ஆனால் நியமிக்கப்பட்டிருப்பவர்கள் ஒரு சிலர் அப்படி வேலை செய்யவில்லை. இனிமேல் நியமிக்கும் போதாவது நல்ல தகுதியுள்ளவர்களை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது நியமிக்கக்கூடியவர்கள் நாற்காலி மேஜை போட்டுக்கொண்டு வேலை செய்யக்கூடியவர்களாகத்தான் இருக்கிறார்கள். அப்படி இல்லாமல் கிராமவாசிகளுடன் பழகக்கூடியவர்களாக இருக்கவேண்டும். மற்றும் கிராமங்களிலுள்ள ஹரிஜனங்களை இப்பொழுது நியமிப்பதாகவே தெரியவில்லை. அங்கங்கே கிராமங்களில் இருக்கக்கூடிய ஹரிஜனங்களில் யார் படித்திருக்கிறார்கள் என்பதை அறிந்து அவர்களையும் நியமிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஹரிஜனங்களுடைய பகுதிக்குப் போகாமல் இருப்பது மிகவும் வருந்தக்கூடிய விஷயமாக இருக்கிறது. ஆகவே இனிமேலாவது எஸ்.ஈ.ஓ.க்களை எடுக்கும்போது அதற்கு தகுதியுள்ளவர்களைக் கண்டுபிடித்து நியமிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டும் ஹரிஜனங்களுக்கும் வசதிக்கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படிப்பட்டவர்களை ட்ரெயினிங்குக்கு அனுப்பினால்தான் மக்களுக்குக் பயன் அளிக்கக்கூடியதாக இருக்கும். அப்படி ட்ரெயினிங்குக்கு அனுப்பும்போது கிராமங்களில் யார் படித்தவர்கள் இருக்கிறார்கள், ஹரிஜனங்களில் யாராகிலும் படித்தவர்கள் இருக்கிறார்களா என்பதையும் தெரிந்துகொண்டு அவர்களையும் அனுப்பி வைக்கவேண்டும். இதைப்பற்றி கிராமங்களிலுள்ள ஹரிஜனங்களுக்கு ஒன்றுமே தெரிவதில்லை. அவர்களால் பத்திரிகைகளைக்கூட படிக்க முடிவதில்லை. ஆகவே இப்படி எஸ்.ஈ.ஓ.க்களை பொறுக்கி எடுக்கும்போது கிராமங்களில் ஒரு சுற்று அறிக்கையை விடவேண்டும். அந்த அந்தத் தொகுதி எம்.எல்.ஏ.-க்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பவேண்டும். அப்படி எம்.எல்.ஏ.க்களுக்கு தெரியப்படுத்தினால் அவர்கள் தகுதியுள்ளவர்களை பொறுக்கி எடுத்து அனுப்புவார்கள் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி அனுப்பினால்தான் தகுதியுள்ள மக்களுக்கு வாய்ப்பு கிடைக்கும் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

கடைசியாக ஒன்றைமட்டும் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன். பாலயம், வேடசந்தூர், என் தொகுதியாகிய வத்தலகுண்டு முதலிய பிரதேசங்கள் மிகவும் வரண்ட பிரதேசங்கள். அங்கு விவசாயிகளுக்கு அதிகப்படியான நிலம் இருந்தும் அவைகள் விவசாயத்திற்கு ஏற்ற முறையில் இல்லாமல் இருக்கின்றன. அங்கு கால்நடைகளின் அபிவிருத்திக்கு ஏற்ற வசதிகள் இருக்கின்றன. கால்நடை அபிவிருத்திக்குத் தக்க இடங்களை எடுத்து கால்நடைகளை அபிவிருத்தி செய்து மக்களுக்கு வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எந்த விதத்திலும் மக்கள் பயனடைய அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மிக மிக பணிவுடன் கேட்டுக்கொண்டு என்னுடைய சிற்றுரையை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

*SRI D. S. AUTHIMOOLAM : இந்த மான்யத்தின் மீது வெட்டுப் பிரே 12-2
ரணையைப் பிரேரித்து நான் சில வார்த்தைகள் சொல்லப் பிரியப்படுகிறேன். p.m.
விவசாய விஷயமாக ரொம்பவும் சிரத்தையுடன் கனம் மந்திரி அவர்கள்
அறிக்கை வாசித்தார்கள். அது ஒரு Advisers regime இல் உள்ள அறிக்கை

மாதிரி இருக்கிறதேயொழிய, உற்சாகமான விஷயம் அதில் இருக்கிறது என்று சொல்ல முடியாது. ஆனால் **Seed Farms, Manure Supply** இவைகளைப்பற்றித்தான் அதில் முக்கியமாகக் கூறப்பட்டிருக்கிறது.

விவசாயத்தைப்பற்றி சென்ற பத்து வருஷ காலமாக "உணவு உற்பத்தி, உணவு உற்பத்தி" என்று அதிகமாகப் பேசப்படுகிறது. உணவு உற்பத்தியைப்பற்றி பேசும்போது, முக்கியமாக அணைக்கட்டுத் திட்டங்கள், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் (**Minor Irrigation Schemes**) நிறைய செய்து முடித்திருக்கவேண்டும். இப்பொழுது சென்னை சர்க்கார் "முதல் ஐந்தாண்டுத் திட்டச் சாதனைகள்" என்பதில் குறிப்பிடும்போது, "இந்த ராஜ்யத்தில் பெரிய ஜீவநதிகள் இல்லை, ஆகவே தான் நாங்கள் ஜாஸ்தி பண்ண முடியவில்லை" என்ற முறையில் சமீபத்தில் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். பெரிய ஜீவநதிகள் இல்லை என்றால், சிறிய நதிகளின் குறுக்கே சிறிய அணைக்கட்டுகள் கட்டி, விவசாயத்திற்கு பாசன வசதி செய்வதற்கு வழி இருக்கிறதென்றால், அதை ஏன் செய்ய முன் வரக்கூடாது ? என்று நான் கேட்கின்றேன்.

இப்பொழுது நான் சொல்வதை முக்கியமாக மந்திரி அவர்கள் குறித்துக் கொள்ளும்படியாக நான் கேட்டுக்கொள்ளுகின்றேன். திருநெல்வேலி ஜில்லாவில் வடவனூர் பாசனம் இருக்கிறது. கருணையாற்றுப் பாசனமும் இருக்கிறது. கிட்டத்தட்ட 30 ஆயிரம் ஏக்கர் நஞ்சை நிலங்கள் அந்தப் பாசனத்தில் இருக்கிறது. சிவசைலம் என்னும் இடத்தில் ஒரு **dam** கட்டுவதாக **proposal** இருக்கிறதே தவிர, அந்த திட்டத்தை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்திருக்கிறார்களா என்றால் இல்லை. பணமாவது கொடுக்கப்பட்டிருக்கிறதா என்றால், அதுவும் கொடுப்பது இல்லை. இப்படியிருக்கும் நிலைமையில் விவசாய முன்னேற்றம், விவசாய முன்னேற்றம் என்று பேசுவது எல்லாம் என்னவென்றே எனக்கு விளங்கவில்லை. ஒரு கோடி ரூபாய்ச் செலவில் இந்த அணையைக் கட்ட முடியவில்லை என்றால், சர்க்கார் ஏன் இவ்வளவு பரிதாப நிலைமையில் இருக்கிறது என்பது எனக்குப் புரியவில்லை. ராமநதி அணைக்கட்டுத் திட்டம் ஒன்று இருக்கிறது. 95 லட்சம் முதல் ஒரு கோடி ரூபாய் செலவில் அந்த அணைக்கட்டுத் திட்டத்தை நிறைவேற்றலாம். இதைப்பற்றி திருநெல்வேலி ஜில்லாவில் ரொம்ப நாளாக பேசப்பட்டு வருகிறது. நாட்டுக்குச் சுதந்திரம் வருவதற்கு முன்பாகவே இந்தத் திட்டங்களெல்லாம் சென்ற பிரிட்டிஷாருடைய காலத்திலிருந்தே வகுக்கப்பட்டு, வேலை செய்யலாம் என்ற முறையில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. சென்ற 25 வருஷங்களாக திருநெல்வேலி ஜில்லாவில் இந்த வேலைகள் **pending** ஆக இருக்கின்றன. நமது சர்க்கார் இந்தச் சின்ன வேலைகளைக்கூட செய்ய முன் வரவில்லை. ஆகவே, இனியாவது இந்தத் திட்டங்களையெல்லாம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்து அதற்கு வேண்டிய காரியங்களை நிறைவேற்றவேண்டுமென்று நான்

முக்கியமாக, பணம் இல் ... படுகிறது. எல்லா
அதிகாரமும் டில்லியில் குவி ... ம் இல்லை என்ற
நிலை ஏற்படுகிறது. இப்படிச் ... ). மு. கா.
என்று நினைத்துவிடாதீர்கள். ... தச் சேர்ந்தவன்
அல்ல. அவர்கள் சொல்கிற ... ா நான் ஓரளவு
ஒத்துக்கொள்கிறேன்.

**Sri K. ANBAZHAGAN** ... யின்ட் ஆப் ஆர்டர்,
எழுப்ப விரும்புகிறேன். "ந ... வைச் சேர்ந்தவன்
அல்ல" என்று குறிப்பிடுகிறா ... அந்த "ரக"த்தைச்
சேர்ந்தவன் அல்ல என்று கு ... 'ரகம்" இருக்கிறதா
என்று தலைவர் அவர்கள் ... று நான் கேட்டுக்
கொள்ளுகின்றேன்.

**Sri D. S. AUTHIMOOLAM**: தவறாக நான் சொல்லவில்லை. வார்த்தையை அழகான வார்த்தையாகச் சொல்ல முடியாத நிலைமையில் சொல்லியிருக்கிறேன். நான் அந்தக் கட்சியின் சில கொள்கைகளை ஆதரித்துத்தான் பேசுகிறேன்.

காந்திஜி "சுயராஜ்ஜியம்" என்று சொன்னார், "அதிகாரம் கிராமங்களுக்குப் பரவலாக இருக்கவேண்டும்" என்று சொன்னார். அதே நேரத்தில் அதிகாரம் பூராவும் ஆறாயிரம் மைலுக்கு அப்பால் இருந்தது பிரிட்டிஷார் காலத்தில். ஆனால், இப்பொழுது 1,500 மைலுக்கு அப்பால் அதிகாரம் இருக்கிறது. அதிகாரமும் பணமும் அங்கே இருந்துகொண்டிருக்கிறது. இந்த அவல நிலை ஒழியவேண்டும் என்றும், அதை முக்கியமாக காங்கிரஸ் அங்கத்தினர்களும் மந்திரி சபையாரும் ரொம்பவும் தைரியமாக முன்னுக்கு வந்து அப்படிக் காரியம் சாதிக்க வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

எனக்கு ரொம்பக் குறைந்த நிமிஷமே பாக்கியிருப்பதால், நீட்டிக் கொண்டு போனால் திடீர் என்று மணியோசை கேட்டுவிடும். முக்கியமாக, பிர்க்கா டெவெலெப்மெண்ட், கம்யூனிடி ப்ராஜெக்ட். ஆகிய இந்த **item**களிலும் அனேகமாக **Criminal Waste** நிறைய இருக்கிறது. அதையும் சர்க்கார் கவனிக்கவேண்டும். எங்கு பார்த்தாலும் **Blocks open** செய்யப்படுகின்றன. ஒவ்வொரு "ப்ளாக்" ஆபீசருக்கும் ஒவ்வொரு ஜீப் கார் கொடுக்கப்பட்டு, அதற்குண்டான **establishment**-ம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஜில்லாவுக்கு—இப்பொழுது போகிற போக்கில் 10 ப்ளாக்குகள் வந்துவிடும் என்று சொன்னால், மேற்படி ஆபீசர், ஜீப் கார், எஸ்டாபிளிஷ்மெண்ட் போன்ற வகையில் எவ்வளவு பணம் **waste** ஆய்விடும் என்று பார்க்க வேண்டும். கவர்னரே, 10%, 5%, குறைத்துக்கொண்டிருக்கும் **perind** ஆக ஆய்விட்டது. ஆகவே அது விஷயத்தில் கவனித்து இந்த டிபார்ட்மெண்டை பொதுவாக **abolish** செய்யவேண்டும் என்று நான் ஒரு யோசனை சொல்லுகிறேன்.

ஜில்லா போர்டுகள் நல்ல வேலை செய்யக்கூடிய ஸ்தாபனங்களாக இருப்பதோடு **Village agency** ஆகவும் இருக்கின்றன. முக்கியமாக சென்னை மாகாணத்தில் ஜில்லா போர்டுகள் ரொம்பத் திறம்பட வேலை செய்கின்றன. ஆகவே, அந்த ஜில்லா போர்டுகளின் கையில் இந்த அதிகாரத்தை ஒப்படைத்தால், "ஏதோ **contribution** வாங்கிக்கொண்டு செய்யுங்கள்" என்று சொல்லிவிட்டால் அவர்களிடம் உள்ள நல்ல **machinery**-ஐ வைத்துக்கொண்டு நிறைவேற்றிவிடுவார்கள். கனம் விவசாய மந்திரி அவர்களுக்கும் தெரியும். அதைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் **administrations**-க்குப் பணம் **waste** ஆவதைத் தடுக்கலாம். ஆகவே அதையும் கவனிக்கவேண்டும்.

சேர்மாதேவி சமுதாய நலத் திட்டத்தைப்பற்றி ஒரு வார்த்தை குறிப்பிட விரும்புகிறேன். இப்பொழுது விவசாய அமைச்சராக இருக்கும் அமைச்சர் அவர்கள் அங்கு ஒரு **road** ஆரம்பித்து வைத்தார்கள். 1953-ம் வருஷத்தில் என்று நினைக்கிறேன். சேர்மாதேவி சமுதாய நலத் திட்டப் பகுதியில் கள்ளக்குரிச்சி என்னும் கிராமத்து மக்கள் உதவியுடன், நாலாயிரம் ரூபாய் உதவியில் ஒரு ரோடு வேலை, கனம் விவசாய அமைச்சர் அவர்கள் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. சமுதாய நலத் திட்டத்தின் கீழ் ரொம்ப வெற்றிகரமான வேலை நடந்திருக்கிறதென்று புத்தகங்களில் எழுதப்பட்டிருக்கிறது. ரோடு வேலை ஆரம்பித்து வைத்த விழா சம்பந்தமான படங்கள் போடப்பட்டிருக்கின்றன. அதையெல்லாம் பார்த்து ரொம்ப சந்தோஷம்தான். ஆனால், போட்ட ரோடானது **earthwork** செய்த ரோடாக இருக்கிறது. ரோடில் 50 **deteriorating condition** இல் இருக்கிறது. **Dust** ஆய்ப் போகிறது. பழையபடி அந்த ரோடுக்கு **metal** போடப்படவேண்டும். **Culverts** கட்டுவது வேண்டுமானால் பிறகு கட்டிக்

கொள்ளலாம். **Atleast** முதலில் **metal** ஆவது போடப்பட்டால் தான் ரோடு நல்ல முறையில் இருக்கும். அதற்கான காரியங்களைச் செய்ய வேண்டும். இப்படியெல்லாம் ரோடு போட்டு அரைகுறையாக விட்டுப் போனால் சமுதாய நலத் திட்ட வேலைகளையெல்லாம் நாம் மொத்தமாகச் செய்வதிலே 50% வேலைதான் நடக்கும். வேண்டுமானால் ரிப்போர்ட்டில் செய்ததாக இருக்குமே தவிர, கண்ணுக்குத் தெரியாது. அதனால் பிரயோஜனமும் இருக்காது. அதையும் கவனிக்கவேண்டும்.

முக்கியமாக, விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பதற்கு $3\frac{1}{2}$ கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அது காணாது. பத்து கோடி ரூபாயாவது கடன் உதவி கொடுக்க வேண்டும். பத்து வருஷமாக அவர்கள் நைந்துபோய் இருக்கிறார்கள். நில அடமான பாங்கு, கூட்டுறவு பாங்கு மூலம் இப்பொழுது 5% தான் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று புள்ளி விவரங்களிலிருந்து தெரிய வருகிறது. ஆகையால், விவசாயிகளைக் கைதூக்கி விடுவதற்கு அமைச்சர் அவர்கள் அத்தனையும் செய்யவேண்டும். ஏராளமான கடன் வசதி செய்து கொடுத்து உதவவேண்டும். குறைந்தது பத்து கோடி ரூபாயாவது கடன் கொடுக்க வழி காணவேண்டும். அப்பொழுதுதான் விவசாயிகளுடைய முதுகு எலும்பு நிமிர்ந்து நிற்கும், வாழ்க்கைத்தரம் நன்றாக அமையும் என்று தெரிவித்துக்கொண்டு இத்துடன் என் உரையை முடித்துக்கொள்கின்றேன்.

12-28 p.m. ***Sri P. S. K. LAKSHMIPATHIRAJ**: கனம் சபாநாயகர் அவர்களே, இன்று விவசாய மந்திரி அவர்கள் கொண்டுவந்திருக்கும் மான்யத்தை ஆதரித்துப் பேசுகின்ற முறையிலே நான் சில விஷயங்களை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

இன்று எந்த அரசியல்வாதியைப் பார்த்தாலும், அல்லது பெரிய நிலச்சுவாந்தார் அல்லது படித்த வகுப்பிலிருந்து வந்தவர்களைப் பார்த்தாலும், ஏதோ விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டும், உணவு உற்பத்திப் பெருக்கத் திட்டத்தை நாம் நல்ல வகையிலே நிறைவேற்ற வேண்டும் என்று பேசுவது "மோஸ்தர்" ஆகப் போய்விட்ட நேரத்தில், வாஸ்தவத்தில் விவசாயிகளுக்கு ஏதாவது செய்ய வேண்டுமென்று நான் கோருகிறபோது, என்னையும் அதே ரகத்தைச் சேர்ந்தவன் என்று கூறி விடுவார்களோ என்று நான் அஞ்சுகிறேன்.

விவசாயிகளின் கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலைமையையும் இன்றுள்ள நிலைமையையும் நன்றாக யோசித்துப் பார்த்து நிதானமாகச் சொல்கிற ஒரு அரசியல்வாதி. வாஸ்தவத்திலேயே விவசாயிகளின் நிலைமை இப்பொழுது உயர்ந்திருக்கிறது என்ற கருத்தைக் அப்பட்டமாகக் கூறமுடியும் இந்தச் சபையில். தாங்கள் வெளியிலே தோற்றுவிட்ட ஏக்கத்தின் காரணமாகவும், தாங்கள் இந்தச் சபையிலே பேசுகின்றபோது பல உயரிய கருத்துக்களைக் கூறுகிறோம் என்ற அடிப்படையில் பேசுகின்றதாக பிறர் கருதவேண்டும் என்ற நிலைமையிலே அவர்கள் பல உண்மைகளைத் திரித்துப் பேசுவதை நான் காண்கின்றேன். விவசாயிகளுக்கு நீண்ட நெடுங்காலம், ஏறக்குறைய இந்தப் பூமி தோன்றிய நாளிலிருந்து பல குறைகள் இருந்துகொண்டு வருகின்றன. யார் என்ன சொன்னபோதிலுங்கூட, உழவன் நிலைமையை ஒப்பிட்டுப் பார்க்கும்போது அவனுக்கு யாரும் பெரும் உதவி செய்ததாகச் சரித்திரம் சொன்னது கிடையாது. யார் எதைச் சொன்னபோதிலுங்கூட, அவர்களைச் சுட்டிக் காட்டி, எதிர்க்கக்ஷியினர் முந்திக்கொள்வது தவிர, இவர்கள் விவசாயிகளுக்கு இதுவரை ஏதும் செய்தது கிடையாது.

வாசனை தைலத்தை தயாரிக்க **white oil**-ஐ வியாபாரிகள் உபயோகிப்பதுபோல அரசியல் வியாபாரிகள் விவசாயிகளை உபயோகிக்கிறார்கள். விவசாயிகளுக்கு எந்த நன்மையும் செய்யாமல், பரிதபிக்கவிட்டு வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலிருந்து



அவர்களுக்கு விடுதலை கொடுத்திருக்கிறோம். அவர்கள் கண்ணீரும் கம்மலுமாக திரிந்துகொண்டிருந்தனர். அவர்கள் ஆடு மாடுகள் போல் நடத்தப்பட்டு வந்த காலம் மாறி, அவர்களும் மனிதர்கள்போல வாழக்கூடிய உரிமையைக் கொடுத்திருக்கிறது காங்கிரஸ். வேலை செய்வதைத்தவிர வேறு ஒன்றுமறியாத அப்பாமரமக்களுக்கு இன்றையதினம், உழவு மாடுகள் வாங்க கடன், மாடுகளுக்கு தீவனம் வாங்க கடன், கிணறுகள் வெட்டுவதற்கு கடன், பம்ப் செட்டுகள் வைத்து விஞ்ஞானமுறைப்படி விவசாயம் செய்வதற்கு கடன் முதலியவை கிடைக்கின்றன. அரசாங்கம் இவைகளை செய்திருந்தும்கூட, இதை சரியான முறையில் எடுத்துக் காட்டாமல் மேலும் அவர்களுக்கு ஏக்கம் கொடுக்கும் ரீதியில், பிரசங்கங்கள் எதிர்க்கக்ஷியினர் செய்து வருகிறார்கள். இந்த விவாதத்தின் போதுகூட அதைதான் காண்கிறேன்.

நில அடமான பாங்குகளில், விவசாயிகள் கடன் வாங்க மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுடைய நிலம் உயர்ந்த மண்வாகாக இருந்தாலும், அது சரியில்லை என்று சொல்லி குறைந்த தொகையையே கொடுக்க சிபார்சு செய்கிறார்கள். இந்த மாதிரி விருப்பு வெறுப்புகளுக்கு உள்ளாகி அவர்களுக்கு காலகாலத்தில் கடன் கொடுப்பதில்லை. அதனால். அவர்களுக்கு கடன் கொடுத்தவர்கள், அவர்களிடம் எமன் போல் வந்து, அவர்களிடம் மீதமுள்ள நிலத்தையும் எடுத்துக்கொண்டுவிடுகிறார்கள். இந்த பரிதாப நிலையைதான் இன்று காண்கிறோம். இந்த ராஜ்யத்தில் மிகவும் பிற்போக்கான பகுதியான பழனி தொகுதியின் பிரதிநிதியாக நான் பேசுகிறேன். $1\frac{1}{2}$ நூற்றாண்டுகளாகவே, இப்பிராந்தியத்தில் சீர்திருத்தம் என்ன, என்பதே தெரியாது. அங்கு போக, சரியான பாதைகளே கிடையாது. யாராவது ஒரு உத்தியோகஸ்தர் செல்லவேண்டுமென்றால், **helicopter** மூலம்தான் அடையமுடியும். வண்டிகள் மூலம் அடைய முடியாது. இப்பிரதேசத்திற்கு சமூக நல திட்டத்தை விஸ்தரிக்கவேண்டுமென்று மந்திரி அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். பழனி பகுதி மிகவும் பிற்போக்கான பகுதி. திருமங்கலத்திற்கு பதிலாக, இப் பிராந்தியத்திற்கு முதல் இடம் கொடுத்து ஏற்கெனவே இத் திட்டத்தை விஸ்தரித்திருக்கவேண்டும். ஆனால் அப்படி செய்யாததனால் இப்பொழுதாவது செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வெகு நாளாக, பாலாறு பொருந்தலாறு திட்டம் அமலாக்கப்படாமல் **Pending** ஆக இருக்கிறது. இதை நிறைவேற்றி வைத்தால் **15,000 16,000** ஏக்கர் நிலத்தை நஞ்சை நிலமாக்கலாம்.

மீனவர்களைப்பற்றி சிலர் பேசினார்கள். மீன் பிடிக்கும் தொழிலாளர்கள் என்றால், சமுத்திரத்தில் போய் பிடிக்கும் தொழிலாளர்கள் என்றுதான் நினைக்கிறார்கள். முன்பு, ஆறு, குளங்களில் மீன் பிடிப்பவர்களுக்கு வசதிகள் இருந்தது. அவர்கள், நீர் நிலைகளில் மீன் பிடிக்க, **Society**கள் அமைத்து, அதன் மூலமாக நல்ல விதமாக வாழ்ந்து வந்தார்கள். யாரோ, எங்கேயோ தவறு செய்தார்கள் என்பதற்காக இந்த முறையை ரத்து செய்துவிட்டு இந்த நீர் நிலையங்களில் மீன் பிடிக்கும் உரிமையை சர்க்கார் ஏலத்துக்கு விடும்முறையை அனுஷ்டித்து வருகிறார்கள். இதனால் மீனவர்கள் சீரழிந்து விடுவார்களாதலால், இந்த உத்திரவை ரத்து செய்து, இந்த உரிமையை மறுபடியும் மீனவர்களுக்குக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

எங்கள் பகுதியில் அமராவதி அணைத்திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அடுத்தமாதத்தில் ஒரு கால்வாய் வழியாக அங்குள்ள ஒரு பகுதிக்கு தண்ணீர் விடப்போவதாகத் தெரிகிறது. கீழ்ப் பகுதியில் உள்ள மக்களுக்கு பயன் ஏற்படும் வகையில் ஒரு மதகு அமைத்துத் தரவேண்டுமென்று மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். ருத்ரபாளையம், அய்யம்பாளையம், ஆண்டிபட்டி, பாப்பம்பட்டி நல்லண்ண கவுண்டன்புத்தூர், குப்பம் பாளையம்

போன்ற பகுதிகளுக்கும் அந்தத் தண்ணீரை பயன்படுத்திக்கொள்ள வசதி செய்து தரவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். அதோடு எங்கள் ஊரில் உள்ள விவசாயிகளும் இந்த சமுதாய நல திட்டத்தின்மூலம் பயனடையக் கூடிய வசதிகளைச் செய்து தரவேணுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

12-35 p.m. SRIMATHI HEMALATHA DEVI : கனம் தலைவர் அவர்களே, கனம் அமைச்சரவர்கள் சமர்ப்பித்துள்ள விவசாய மானிய கோரிக்கை இன்னும் மற்ற கோரிக்கைகளையும் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். ஒரு மனிதனுக்கு, முதுகெலும்பு எப்படி முக்கியமாக விளங்குகின்றதோ அம்மாதிரி நாட்டினுடைய முதுகெலும்பாக விவசாயம் விளங்குகிறது என்பது யாவரும் அறிந்த விஷயம். விவசாயத்தை விருத்தி செய்வதற்கு பல துறைகளிலும் அரசாங்கத்தார் ஈடுபட்டிருப்பது போற்றப்படவேண்டிய விஷயமாகும். கல்வித்துறையிலும், மற்ற இதர துறைகளிலும் சீர்திருத்தங்கள் பலவற்றை செய்துவருகின்ற இந்த காலத்தில் விவசாயத்தில் நாம் சீர்த்திருத்தங்கள் செய்யாவிட்டால் கண்டிப்பாக நாடு நசித்துப்போகின்ற அளவுக்கு ஏதுவாகும். ஏனென்றால், நம்முடைய நாட்டிலே ஜனத்தொகை அதிகரித்துக்கொண்டே வருகிறது. இதைப்பற்றி, நீர்ப்பாசன மான்யத்தின்மீது பேசும்போதே குறிப்பிட்டேன். அதாவது 20 வருடத்திற்கு முன்பு இருந்த ஜனத்தொகை என்ன, தற்போது இருக்கிற ஜனத்தொகை என்ன என்பதை குறிப்பிட்டிருந்தேன். அதுபற்றி ஒரு அங்கத்தினர் சந்ததி அபிவிருத்தியினால்தான் ஜனப்பெருக்கம் அதிகரித்திருக்கிறது என்று சொன்னார். ஆனால் அதே சமயத்தில் வட இந்தியாவிலிருந்து வந்திருக்கக் கூடிய அகதிகளை எந்த ஜனத்தொகையில் சேர்ப்பது, அதேமாதிரி யுத்தகாலத்தில் பர்மா, ரங்கூன் முதலிய வெளியிடங்களில் இருந்து வந்தவர்களை எந்த ஜனத்தொகையில் சேர்ப்பது, மற்றும் சமீப காலத்தில் இலங்கையிலிருந்து வந்துகொண்டிருக்கும் மக்களை எந்த ஜனத்தொகையில் சேர்ப்பது என்பது அவர் அறியாதது புரியாதது ஏதோ அறியேன். இன்று நாட்டின் ஜனத்தொகை பெருகிக்கொண்டுதான் வருகிறது. அதனால் உணவுப் பற்றாக்குறையும் ஓரளவுக்கு இன்று இருக்கத்தான் செய்கிறது. ஆனால் அரசாங்கத்தார் விவசாயப் பண்ணைகளையும், விவசாய இலாகா நிலையங்களையும் ஏற்படுத்தி, நல்ல உரங்களையும் இன்னும் மற்ற வசதிகளையும் கிராம மக்களுக்கு அளித்து உதவி வருகிறார்கள். ஆனால் விவசாயத்தை விருத்தி செய்வதற்காக சர்க்காரால் எடுக்கப்பட்டுவரும் இந்த நல்ல காரியங்கள்பற்றி கிராமத்தில் இருக்கக்கூடிய பெரும்பாலான மக்கள் இன்னும் தெரிந்துகொள்ளவே இல்லை. ஆகையால் நாம் **Grama Sevaks** போன்றவர்களை ஒவ்வொரு கிராமத்திற்கும் அனுப்பி வைக்க வேண்டும். அவர்களும் கிராம மக்களுடன் அதிக தொடர்பு வைத்துக்கொண்டு, சர்க்கார் விவசாயத்தை விருத்தி அடைய செய்ய எடுத்துக் கொண்டிருக்கும் நடவடிக்கைகள்பற்றியும், அளிக்கும்வசதிகள் பற்றியும் அம்மக்களுக்கு விவரமாக எடுத்துக்கூறி, உணவு உற்பத்தியை பெருக்குவதற்கான புது புது முறைகளை அவர்களுக்குச் சொல்லி அதை அவர்களும் அனுஷ்டிக்கும்படி செய்ய பாடுபடுவார்களேயானால், கண்டிப்பாக உணவு பற்றாக்குறையை நாம் தவிர்க்க முடியும் என்று இந்த சந்தர்ப்பத்தில் எடுத்துக் கூற விரும்புகிறேன். அதோடுகூட சுதந்திரம் பெற்றுள்ள நாம் தற்போது சுதந்திரமடைவதற்கு முன்பிருந்ததைவிட எவ்வளவோ முன்னேறியிருக்கிறோம். "அடிமை என்றும், ஏழை என்றும் அரசன் என்றும், ஆண்டி என்றும், படித்தவன் என்றும், படிக்காதவன் என்றும் பாகுபாடு இல்லாமல் எல்லோரும் வாழ வேண்டும்" என்று முன்பு சொல்லிக்கொண்டிருந்த காலம் போய், இப்போது "எல்லோரும் ஒன்று என்றெண்ணும்படி வாழவேண்டும்" என்று இப்போது எல்லா கிராமங்களிலும் ஏராளமாகப் படிப்பு வசதிகளும், பொருளாதார வசதிகளும் செய்துகொடுக்கப்பட்டிருக்கின்றன.

எல்லா கிராமங்களையும் நகரங்களைப்போல ஆக்குவதற்காகச் சீர்திருத்தும் நோக்கத்துடன் சமுதாயநலத் திட்டங்கள் தேசிய நலப் பரப்புத் திட்டங்கள்

நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அந்தத் திட்டம் சென்ற ஆண்டின் முடிவு வரை 91 வட்டாரங்களில் அமலில் இருந்தது. இவ்வாண்டில் 19 வட்டாரங்கள் புதியதாக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. மேலும் 21 வட்டாரங்கள் புதிதாக எடுத்துக்கொள்ளப்படவிருக்கின்றன. அரசாங்கத்தின் இந்தக் காரியத்தை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

இந்த சந்தர்ப்பத்தில் நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். சேலம் ஜில்லாவிலுள்ள பெண்ணாகரம் தொகுதியானது அதிகப் பிற்பட்ட பகுதி. அந்தப் பகுதியில் எந்த வசதியும் இல்லை. அங்கே, ரோடு வசதியோ, மின்சார வசதியோ, பள்ளிக்கூட வசதியோ, நீர்ப்பாசன வசதியோ, எந்த வசதியும் இடையாது. அந்தப் பகுதியிலுள்ள கிராமங்களெல்லாம் நரகங்களாகத் தான் காட்சியளிக்கின்றன என்று சொன்னால் கூட மிகையாகாது என்று கருதுகிறேன். பள்ளிக்கூடங்களைப் பொறுத்தவரையில், அந்தத் தொகுதியில் இரண்டே இரண்டு உயர் நிலைப் பள்ளிக்கூடங்கள் தான் இருக்கின்றன. அங்கே சுமார் ஒரு லட்சம் வாக்காளர்கள் இருக்கிறார்கள். அங்குள்ள ஜனத்தொகை சுமார் 3 லட்சத்திற்கு மேல் இருக்கும் என்று நினைக்கிறேன். இவ்வளவு ஜனத்தொகை உள்ள அந்தப் பகுதியில், இரண்டே இரண்டு உயர்நிலைப் பள்ளிகள் தான் இருக்கின்றன. இரு பள்ளிக்கூடத்திற்கும் இடையில் உள்ள தூரம் 20 மைல்கள் இருக்கும். அந்த இடங்களிலுள்ளவர்கள் படிக்கக்கூடாது என்று அர்த்தமா ?. இந்த 20 மைல்களுக்கு மத்தியில் ஒரு பள்ளியும், 20 மைல்களுக்கு அப்பால் ஒரு பள்ளியுமாக மேலும் இரண்டு உயர்நிலைப் பள்ளிகள் வேண்டும் என்று அந்தப் பகுதியில் உள்ளவர்கள் எல்லோரும் விரும்பினார்கள். அரசாங்கத்திற்கு இதற்காக அவர்கள் செலுத்தவேண்டிய பணத்தையும் செலுத்தினார்கள். சேலம் ஜில்லாவில் மொத்தம் 13 இடங்களில் உயர்நிலை பள்ளிகள் வேண்டும் என்று கேட்டிருந்தார்கள் ஆனால் இரண்டு இடங்களில்தான் உயர்நிலைப் பள்ளிகள் ஏற்படுத்தப்படும் என்றும் மற்ற இடங்களில் ஏற்படுத்தப்படாது என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மற்றப் பள்ளிகளெல்லாம் "மிடில்" ஸ்கூல்களாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், அங்குள்ள ஜனத்தொகைக்கு இரண்டு உயர்நிலைப் பள்ளிகள் போதுமா என்பதுபற்றி சிந்திக்க வேண்டும். சேலம் ஜில்லாவில் அந்த அந்த இடங்களில் படிக்கக்கூடிய மாணவர்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டால் என் தொகுதியைச் சேர்ந்த பாப்பாரப்பட்டி என்ற இடத்திற்கு அவசியம் ஒரு உயர்நிலைப்பள்ளி ஏற்படுத்தியிருக்கவேண்டும். அப்படி இருக்கும் போது அந்த இடத்தில் உயர்நிலைப்பள்ளி ஏற்படுத்தாமலிருப்பது குறித்து நான் வருந்துகிறேன். இருந்தபோதிலும், புனராலோசனை செய்து, அந்த ஒரு இடத்திலாவது ஒரு உயர்நிலைப் பள்ளியை ஆரம்பிப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செயவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதி மிகவும் பிற்பட்ட பிரதேசம். அங்கே ரோடு வசதியே இல்லை. அங்கே பல கிராமங்கள் காடுகளில் இருக்கின்றன. தேர்தல் காலத்தில்கூட அங்கெல்லாம் போவது மிகவும் கஷ்டம். அங்கெல்லாம் ஜீப் கார் கூடப் போக முடியாது. அங்கெல்லாம் ரோடு வசதி, மின்சார வசதி முதலிய எல்லா வசதிகளையும் செய்துகொடுக்க வேண்டும். தேசிய நலப் பரப்பு திட்டத்தில் புதுதாகச் சேர்த்துக்கொள்ளப்போகும் 23 வட்டாரங்களில் என்னுடைய தொகுதி வட்டாரங்களையும் சேர்த்துக்கொண்டு எல்லா வசதிகளையும் செய்துகொடுக்க வேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**SRI M. P. SUBRAMANIAM**: கனம் சபா நாயகர் அவர்களே, விவசாய மாணிய கோரிக்கைக்குக் கொண்டுவந்திருக்கும் வெட்டுப் பிரேரேபணையை ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். முதல் ஐந்தாண்டு திட்டத்தில் விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தது போலவே இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திலும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் 12-45 p.m.

என்று வற்புறுத்தப்பட்டு வருவதன் முக்கியமான நோக்கம் உணவு உற்பத்தியை நாம் இன்னும் அதிகம் பெருக்க வேண்டும் என்பதுதான். இப்போது, நமது ராஜ்யத்தைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே இருக்கும் விவசாய நிலங்களில் பயிரிட்டு சாகுபடி செய்வதற்காக, நல்ல விதைகளைக் கொடுத்து, நிறைய உரத்தை கொடுத்து, முற்போக்கான திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம்தான் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும் என்று கனம் அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். விவசாயத்திற்கு லாயக்கான நிலங்களைப் விவசாயத்திற்குப் புதிதாகக் கொண்டுவருவது என்றால், நிலங்கள் மழையில் மண் அரிக்கப்பட்டு நிலவளமற்றதாகப் போயிருப்பதைத்தான் பல இடங்களில் நாம் பார்க்கிறோம். ஆகவே, மண் அரிப்பிலிருந்து நிலங்களைப் பாதுகாக்கும் திட்டத்திற்காக 1957–58ம் ஆண்டிற்கு ரூ. 32 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொகை போதாது என்று நான் கூற விரும்புகிறேன். இந்த திட்டத்தின் கீழ் பெரும்பாலான நிலங்கள் கோவை, நீலகிரி பகுதிகளில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. ஆகவே அந்தப் பகுதிகளில்தான் இந்தப் பணத்தில் அதிகமான பங்கு செலவிடப்படும். கோவையில் 10,000 ஏக்கர் நிலங்களும், சேலத்தில் 2,000 ஏக்கர் நிலங்களும், திருச்சிராப்பள்ளியில் 2,500 ஏக்கர் நிலங்களும், செங்கற்பட்டில் 2,200 ஏக்கர் நிலங்களும், மதுரையில் 250 ஏக்கர் நிலங்களும் இந்தத் திட்டத்தின்கீழ் வருவதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே கோவையில் தான் பெரும்பான்மையான நிலங்கள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. கோவை மாவட்டத்தில் அரூர், ஆத்தூர் போன்ற பகுதிகளில் பல லட்சக் கணக்கான நிலங்கள் விவசாய நிலங்களாக இருப்பதுடன் விவசாயிகளுக்குச் சொந்தமாக்கப்பட்டும் இருந்தபோதிலும், அந்த நிலங்களில் மண் அரிப்பைத் தடுத்து நிறுத்த முடியாத காரணத்தால், அவை விவசாயத்திற்கு லாயக்கற்றவையாக இருக்கின்றன. அவைகளில் மண் அரிப்பைத் தடுத்து நிறுத்துவதற்கு ஏற்பாடு செய்வதற்கான பண வசதி விவசாயிகளிடம் இல்லை. அரசாங்கத்திடமிருந்தும் அவர்கள் கடன் பெற முடிவதில்லை. காரணம், கடனுக்கு அடமானம் வைப்பதற்கான நிலங்களும் அவர்களிடம் இல்லை. ஆகவே அரசாங்கம் தன் சொந்தப் பணத்தைச் செலவு செய்தோ, அல்லது விவசாயிகளுக்கு எப்படியாவது கடன் உதவியளித்தோ, அங்கே மண் அரிப்பைத் தடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதே நிலைமை நீடிக்கும்படி இன்னும் பல ஆண்டுகள் விட்டுவிட்டால் அந்த நிலங்களிலுள்ள கொஞ்ச நஞ்ச மண் வளமும் போய்விடும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

விவசாய இலாகாவிலுள்ள டிராக்டர்கள் ஆண்டில் பெரும்பாலான நாட்கள் வேலை செய்யாமல் இருக்கின்றன. காரணம், அரசாங்கத்தின் திட்டம் "லாபமும் கூடாது, நட்டமும் கூடாது" என்ற அடிப்படையில் இயங்கி வருகிறது. இந்த டிராக்டரை ஒரு ஏக்கருக்கு உபயோகப்படுத்துவதற்கு, முன்பு 7 ரூபாய் கொடுக்கவேண்டும். இப்போது இது 15 அல்லது 17 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இதன் விளைவாக அனேக விவசாயிகள் டிராக்டரை அதிகமாக உபயோகிக்க முன் வருவதில்லை. மேலும், இந்த உழுகிற டிராக்டர்கள் விவசாய Season களில்தான் உபயோகிப்பதற்குக் கொடுக்கிறார்கள். மற்ற காலங்களில் அது சும்மாயிருக்கிறது என்று சொல்லலாம். விவசாய காலமல்லாத காலங்களில் குறைந்த பணத்தைக் கொடுத்துவிட்டு, டிராக்டரை உபயோகித்துக்கொள்ளலாம் என்று ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்கும். அப்படிச் செய்தால் அதுவரை விவசாயம் செய்யப்படாதிருந்த, ஆனால் விவசாயத்திற்கு லாயக்கான நிலங்களில் டிராக்டரைப் பயன் படுத்தலாம். இதைச் செய்தால் விவசாய நிலங்கள் அதிகரிப்பதுடன் விவசாயப் பொருள் உற்பத்தியும் பெருகும்.

இதற்கு முன்பெல்லாம் அரசாங்கத்தார் கிணறு வெட்டுவதற்காகத் தனியாகப் பணம் ஒதுக்கி மானியமாக கொடுக்கப்பட்டது. இப்போது கிணறு வெட்டுவதற்கு விவசாயிகள் தக்காவிக் கடன் வாங்கிக்கொள்ள

19th July 1957] [Sri M. P. Subramaniam]

வேண்டும். இந்த விஷயமாக பல நண்பர்கள் சில விஷயங்களைச் சொன்னார்கள். விவசாயிகள் நில அடமான பாங்குகளிலிருந்தோ, அரசாங்கத்தினிடமிருந்தோ கடன் வாங்கும்போது பாங்கும் சரி, அரசாங்கமும் சரி, நிலத்தை அடமானமாக எடுத்துக்கொள்வதற்கு முன் அதன் மதிப்பை தவறாகக் கணக்கிடுகிறார்கள். அதாவது, நிலம் இப்போது என்ன விலை பெறுமோ அந்த விலைக்கு நிலத்தை மதிப்பிடுவதில்லை. 1937க்கு முன்பு யுத்தத்திற்கு முன்பு அந்த நிலங்கள் என்ன விலையில் இருந்திருக்கக்கூடும் என்று பக்கத்திலுள்ள காடுகள் சம்பந்தப்பட்ட பத்திரங்களின்மூலம் அறிந்து, அந்த விலைக்கு நிலங்களை மதிப்பிடுகிறார்கள். இப்போது ரூ. 10,000க்கு விற்பனையாகக் கூடிய நிலம் 1937-ல் ரூ. 1,000க்குக் கூட விற்பனையாவதாக இருந்திருக்காது. இதன் காரணமாக இப்போது 10,000 ரூபாய் விலை மதிப்புள்ள நிலங்களை இவர்கள் ரூ. 1,000 க்குக்கூட மதிப்பிடுவதில்லை. இப்படிபட்ட நிலையில், 200 ரூபாய் சொத்துள்ள ஒரு விவசாயி நில அடமான பாங்கியிலிருந்து ரூ. 1,000 கடன் வாங்க வேண்டுமென்றால், அது எப்படி முடியும் ? ஆகவே அவனுக்குக் கடன் கிடைப்பதில்லை. அல்லது ஒரு விவசாயிக்குக் கடன் கொடுக்கப்பட்டாலும் அது அப்படிக் கொடுக்கப்படுவதற்கு குறைந்தது நான்கு, ஐந்து மாதங்கள் ஆகின்றன. ஆகவே, கடன் கொடுக்கும் விஷயத்தில் அடிப்படை கொள்கையில் மாறுதல் வேண்டும். நிலங்களை 1937-ம் வருஷத்திய விலைக்கு இன்றும் மதிப்பிடுவதானது உண்மை நிலைமைக்குப் புறம்பானதாகும். நிலங்கள் தற்காலத்தில் அந்த அந்த ஆண்டில் என்ன விலை பெறுமானவையாக இருக்கின்றன என்பதை சராசரி கணக்குப்படியாவது நிர்ணயித்து, அந்த மதிப்பீட்டில் 75 சத விகிதம் வரை விவசாயிக்குக் கடனைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இவ்வாண்டு புதியதாக 136 பொறுக்கு விதைப் பண்ணைகளைத் திறப்பதற்காக 49 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அதை அமைச்சர் அவர்களே அறிவித்தார். "ஒவ்வொரு சமுதாய அபிவிருத்தி வட்டாரத்திலும் தேசிய நல விஸ்தரிப்பு வட்டாரத்திலும் 25 ஏக்கரா நிலப்பரப்பில் விதைப் பண்ணைகளை ஏற்படுத்த நிலத்தைச் சொந்தமாக வாங்குவதைக் காட்டிலும் குத்தகைக்கு எடுத்துக் கொள்வதற்காக 6 லட்சத்து 85 ஆயிரம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். எனக்குத் தெரிந்தவரையில் எந்த நிலத்தில் நல்ல விதைகள் கிடைக்கும் என்பதைப்பற்றி விவசாய இலாகா ஆராய்ந்து பார்க்காமல் தங்களுக்கு வேண்டியவர்களுடைய நிலங்களை ஆயிரம் ஆயிரம் குத்தகைக்கு எடுத்துக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அந்தப் பெரிய நிலச்சுவாந்தார்களுக்கு அந்த நிலங்களினால் பத்து வருடங்களில் வரும் வரும்படி ஒரே ஆண்டில் குத்தகைப்பணமாக இப்போது கிடைத்துவிடும் என்பதைத் தவிர நல்ல விதைகள் அந்த நிலத்தில் உற்பத்தியாகுமா என்று சொல்ல முடியாது. இதனால் அரசாங்கப் பணம் வீணாவதைத் தவிர பயன் ஒன்றும் ஏற்படப்போவதில்லை. ஆகையால் சர்க்கார் இவ்விஷயத்தில் அதிக கவனம் செலுத்தி நல்ல விதைகள் உண்டாகக்கூடிய நிலங்களை எடுத்துக்கொள்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

மேலும் பொறுக்கு விதை கொடுக்கிற காலத்தில் இந்த விதைகளும், அந்த வட்டாரத்தில் உள்ள சாதாரண விதைகளும் கலந்துவிடாமல் பார்த்துகொள்ளவேண்டும். ஒரு முறை ஒரு விவசாயிக்கு பொறுக்கு விதை கொடுத்தால் அந்த விவசாயி மூலமாகவே அந்த கிராமத்திலுள்ள இதர விவசாயிகளுக்கு நல்ல பொறுக்கு விதை கிடைக்க வாய்ப்பு உண்டு. ஆனால் இவ்விதைகள் அவ்வட்டார விதைகளோடு அதிகாரிகளின் அஜாக்கிரதையினால் கலந்துவிடுவதால் கலப்புப் பயிர் உண்டாகிவிடுகிறது. இதில் விவசாய இலாகாவினர் அதிக கவனம் செலுத்தவேண்டும்.

மேலும் இந்தப் பொறுக்கு விதைகள் பெரிய பெரிய நிலச்சுவாந்தார்களுக்குத்தான் கிடைக்கிறது. ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் வைத்துக் கொண்டிருக்கிற சாதாரண விவசாயிகளுக்குக் கிடைப்பது இல்லை.

அவர்களையும் அதிகாரிகள் அணுகி பொறுக்கு விதைகளின் நன்மைகளை எடுத்துச் சொல்லி அவர்களும் அதை உபயோகிக்கும்படியாகச் செய்வதில்லை பொறுக்கு விதைகளினால் நல்ல பயன் உண்டாகவேண்டுமென்றால் அதிகாரிகள் தீவிரமாக பிரசாரம் செய்து சிறு சிறு விவசாயிகளும் கூட இந்தப் பொறுக்கு விதையை உபயோகப்படுத்தும் அளவில் உதவி செய்ய வேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

பொறுக்கு விதைகளை சரியான இடத்தில் சேமித்து வைக்காத காரணத்தால் அவை கெட்டுப்போய் விடுகின்றன என தஞ்சாவூர் பகுதியிலிருந்து வந்த உருப்பினர் ஒருவர் குறிப்பிட்டார். ஆகவே இனி அந்தப் பண்ணைகளின் பக்கத்தில் கிராமங்களில் நல்ல பண்டக சாலையை அமைத்து ஒரு ஆண்டு காலம் ஆனாலும் கூட விதைகள் கெட்டுப்போகாமல் இருக்கத் தக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக இன்னும் நம் நாட்டு விவசாயிகள் விவசாயத்தைப் பொறுத்தவரையிலும் உழுவதாக இருந்தாலும்—வேறு என்னவாக இருந்தாலும்—பழங்காலத்து முறைகளையே கையாண்டு வருகிறார்கள். உடனடியாக அவர்களை நவீன கருவிகளை உபயோகப்படுத்தும்படி செய்யாவிட்டாலும், அவர்களுடைய சக்திக்கு ஏற்ற அளவில், சிறிது சிறிதாவது புதிய சாதனங்களைக் கையாள்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். முற்போக்கான கருவிகள் ஒன்றிரண்டைக் கொண்டே போய்க் காட்டலாம். கண்காட்சிகளை ஏற்படுத்தலாம். இதன் மூலம் அவர்களுக்கு உற்சாகம் கொடுத்துப் புதிய நவீன சாதனங்களை உபயோகப்படுத்தும்படி செய்யவேண்டும்.

கால் நடைகளைப் பற்றி ஒரு வார்த்தை. சேலத்தில் ஹோசூர் மாட்டுப் பண்ணையிலுள்ள மாடுகள் நல்ல முறையில் வேலை செய்வதில்லை என்று அங்குள்ளவர்கள் சொல்லுகிறார்கள். காங்கேயம் ஹோசூர் கலப்புகன்று நல்ல முறையில் வேலை செய்வது இல்லை என்பதனால் இதைப் பற்றி ஆராய்ச்சி செய்யவேண்டும்.

இறுதியாக தேசிய வளர்ச்சி திட்டங்களைப் பற்றி ஒரு வார்த்தை. இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் இறுதிக்குள் ராஜ்யம் பூராவும் பரப்ப வேண்டும் என்று சொல்லுகிறார்கள். நாற்பது வட்டாரத்திலும் இந்த ஆண்டுக்குள் ஏற்படுத்தமுடியுமா? தேசிய விஸ்தரிப்புத் திட்டங்களை சமுதாய நலத் திட்டமாகவே மாற்றி வருகிறார்கள். மறுபடியும் முன்போல மாற்றலாம். இப்பொழுதே பல இடங்களில் உத்தியோகஸ்தர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். குறிப்பாக சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் பிர்க்காவில் முதல் மூன்று ஆண்டுகள் தேசிய விஸ்தரிப்புத் திட்டம், அடுத்த மூன்றாண்டுகள் சமுதாய நலத் திட்டம் என்று போடப்பட்டு நான்கு ஆண்டுகளுக்குள் தேசிய விஸ்தரிப்புத் திட்டம், சமுதாய நலத் திட்டம் இவற்றுக்காக ஒதுக்கப்பட்டிருந்த பணத்தை செலவிட்டுவிட்டார்கள். இன்னும் இரண்டாண்டுகள் இருக்கின்றன. ஆனால் புதிய திட்டங்கள் எடுத்துக் கொள்வதற்கு வழியில்லை. அதிகாரிகளுக்கு சம்பளம் வாங்கிக் கொண்டிருப்பதைத் தவிர வேறு வேலை இருக்கப்போவதில்லை. இதை அரசாங்கம் கவனித்து அந்த மாதிரியான பிராந்தியங்களில் புதிய திட்டங்களை எடுத்துக்கொள்ள வழி வகுக்க வேண்டுமென்பதாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்தத் திட்டங்களின் கீழ் கிராமப் புறங்களில் புதுப் புது ரோடுகளைப் போடும்போது சில தகராறுகள் ஏற்படுகின்றன. சில தனிப்பட்ட நிலக்காரர்கள் நிலத்தைக் கொடுக்க மறுக்கிறார்கள். கலெக்டரோ, சமுதாய நல அதிகாரிகளோ கிராம மக்கள் எல்லோரும் விருப்போடு நிலம் கொடுக்க முன்வந்தால் நாங்கள் ரோடு போடுகிறோம் எனச் சொல்லி விடுகிறார்கள். இதனால் ரோடு போடும் வேலை தடைப்பட்டுவிடுகிறது. ஆகவே யாராவது நிலம் கொடுக்க மறுத்தால் ஜில்லாக் கலெக்டரே தன்னுடைய அதிகாரத்தை உபயோகப்படுத்தி நிலத்தை ஆர்ஜிதம் செய்து கொள்ளலாம் என்ற அதிகாரம் ஜில்லாக் கலெக்டருக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



மேலும் புதிதாக அமைக்கப்பட்ட ரோடுகளை ஜில்லா போர்டுகளே பராமரிக்கவேண்டுமென்றால் பல ஜில்லா போர்டுகளுக்கு பண வசதி இருக்காது. அவர்களுக்கு அதிகப் பணம் ஒதுக்கவேண்டும். ஏற்கெனவேயே ஜில்லா போர்டுகளிடம் இருக்கும் ரோடுகள் மோசமாக இருப்பதற்குக் காரணம் பண வசதி இல்லாததுதான். அவர்களுக்கு நிதி வசதி போதாது. ஆகையால் புதுரோடுகளை அமைத்து ஜில்லா போர்டுகளின் நிர்வாகத்தில் சேர்க்கும்போது, அவற்றைப் பராமரிப்பதற்கு போதுமான அளவு மானியத்தையும் ஜில்லா போர்டுகளுக்கு ஒதுக்க வேண்டுமென்பதாக கேட்டுக்கொண்டு நான் முடித்துக்கொள்ளுகிறேன்.

* SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Mr. Speaker, Sir 12-5
many hon. Members have been speaking on these Demands since p.m.
yesterday and have touched upon various subjects. So far as I am concerned, I should like to confine myself to the general policy pursued by the Government in matters pertaining to these Demands and touch upon points relevant to them. First of all, I should like to know from the Government what their agricultural plan is.

(The Deputy Speaker took the Chair).

I should like to know what their view is with regard to the agricultural plan. Have they posted proper person in proper places? Take for instance the head of the Agricultural Department. In the course of the last eighteen months, there have been three or four changes and while I have not got anything to say about the present incumbent in the post. I have my own misgivings whether he at least will be continued for three or four years. Take next the post of Deputy Director of Agriculture. One gentleman retired some time last year from this post. Another gentleman is going to retire very shortly and now I understand a gentleman who is on the verge of retirement—one who is to retire in four or five months—has been posted. What is the incentive these people will have, if you go on changing them frequently? My submission is, the Government should post proper officers and once they are posted they should be kept on for at least three years in the respective posts. I hope the Government will kindly consider this aspect of the matter.

Secondly, I want to know whether the increase in Food production is commensurate with the expenditure on it. What is the policy of the Government with regard to reducing the cost of production? What is the policy of the Government of India? Can you guarantee a minimum, equitable price both to the consumer and to the producer? That is what I want to know. Then, have you taken into consideration the special needs of each and every district? These vary from district to district. That point should be taken into consideration by the Minister. The Government of India have recently appointed a Price Enquiry Committee. It was an awful revelation to me when I went through the newspapers that so many North Indians with Mr. Ashok Mehta as Chairman have been appointed to constitute the Commitee, while none from this State has been taken. Mr. Thirumal Rao, I take it, represents Andhra, Mr. T. R. Jain, Bombay, Mr. Jogendra

Singh, the Punjab, Mr. P. K. Madan, the Reserve Bank, Mr. Tiwari and so on. So far as our State is concerned, there is no representation. For Kerala and for Mysore I think two of the Deputy Ministers at the Government of India level will look after the interests of those States. Ours is one of the most important rice growing States in the Indian Union and it is most regrettable to know that we have not got any representation in the Price Enquiry Committee. It is most reprehensible, Sir. Will the Hon. Minister at least now, move the Government of India and see that somebody from our State is co-opted. I hope it is not very late to do it. This is a very serious thing which the Hon. Minister should consider and take action immediately.

With regard to irrigation and agriculture I find there is no co-ordination between the two departments. Take for instance the case of Tanjore. The ryot there wants water to be let in early to raise the nursery in time. The irrigation department is not helpful, with the result there is so much of delay in the raising of the nursery. The Government should see that such delays are avoided. This is the case in other districts also.

So much has been said about Grow More Food campaign. But when one examines the question whether proper check is made about the working of the department, I should say there is no proper check. Again so much is talked about river pumping schemes. How much these schemes have contributed to the increase in food production, the Hon. Minister must enlighten the hon. Members of this House. In answer to a question put by me on the floor of this House some two days back a statement was placed on the table of the House regarding lift irrigation. It is said there :

'Lift irrigation is a useful means of providing water-supply both to supplement the available local irrigation and as an insurance against its failure and it is therefore encouraged by the Government. Oil engine pumpsets acquired by the Agricultural Department are hired out to the ryots for raising crops, preferably food crops. Apart from this the Government distributed oil engine and electric motor pumpsets to ryots under the hire-purchase system.'

This no doubt gives a rosy picture but I wonder whether anything practical has been done under this scheme. People have to wait in queue. Oil engines are always in a bad state of repair and ryots do not get them. That is the real position. This has been agitated on many previous occasions with no result so far.

Now coming to manure distribution I would like to know the policy of the present Government so far as manure distribution is concerned. The Government of India has been giving about 50 per cent contribution for the purchase of super-phosphate and all these things. I was surprised to find that it has been stopped all of a sudden. Why? I understand from a reliable source that



other States are getting some concession and distribute to genuine ryots at 30 per cent subsidised rates. I want to know why our Government are keeping quiet in this matter. Why not take some steps immediately to do something? The same is the case with regard to compost. They were giving some aid for compost making on the average of the pits that were formed and so on. The Government must seriously think of reviving the compost subsidy scheme. The manure supply is very short in our State. We do not also get farm yard manure in adequate quantities. Some ryots who are still conservative do not take to this artificial manuring. They will be glad to have the compost pits revived. I think the Government of Madras must move the India Government in this matter and see that liberal grants and subsidies are paid for this compost making. With regard to green manure whenever the ryots want the seeds, they are not given in time. All sorts of red-tapism is still there. If a ryot goes to the Demonstrator, he asks the ryot to apply to the District Agricultural Officer and then to the Deputy Director of Agriculture who is somewhere in some other district and by the time all the formalities are gone through the ryot gets vexed. He does not approach the department. Even if he undertakes all this trouble he does not get the seeds, and even if he gets the seeds, he does not get them in time. I do not know whether Government are still going to insist on the growing of *sesbania*. I would like to know the Government's policy in the matter. Then, Sir, the collection of dry leaves from the forests must be encouraged. I understand the Forest Department is putting all sorts of spokes in the wheel. They do not allow the poor ryots to go to the forests to collect dry leaves during dry seasons for compost making. This is also a serious problem and something must be done by Government in this respect. I would request the Forest Department to be very liberal in permitting ryots to collect dry leaves. With regard to the collection of green leaf manure from the reserve forests easy and quick methods should be adopted instead of making the ryots go to the Rangers and the District Forest Officers who are always on tour. In following the present methods, the ryots get vexed and most of the ryots in my area do not at all go to this department.

With regard to agricultural engineering, I find that the Government of India are still continuing the Central Tractor Organization. But our Government think that this should be discouraged. Evidently as my hon. Friend Sri M. P. Subramaniam said, the Government seem to think that this scheme should be worked on a 'no-loss-no-profit' basis. I agree that it should be worked to some extent on that basis but still Government must take it into their head to see that some sort of help is given to the ryots. There are large tracts of unreclaimed lands. For that the ryots require bulldozers and other machinery. So also is the case with tractors. I find, for Avadi Congress and Survodhayas, bulldozers and tractors

have been given at concessional rates. Why should they not allow the same concessions to the ryots. Government should consider seriously this thing also.

Then there is this hire purchase system of pumpsets. I understand that the Government of Madras have not availed themselves of the loan given by the Government of India. It is a very sorry spectacle indeed. When the other State Governments are availing themselves of the opportunity, it is not known why the Government of Madras have not so far availed themselves of the opportunity given by the Government of India. If they had accepted this offer and given freely these pumpsets on loan or hire purchase system, it would have gone a long way in augmenting the food supply.

With regard to plant protection, much has been said in the statement of the Hon. Minister that sprayers are distributed. But whenever you go to the Demonstrator's officer, you will either find there are no sprayers, or granting there are sprayers they will always be in bad repair. That is the state of affairs with regard to these sprayers. We do not get these sprayers and if these are not supplied in adequate numbers and in time how do the Government expect people to combat these diseases. Another thing I have been reiterating on the floor of this house, even during the previous Assembly, is this. I have been saying that mobile vans should be engaged in large numbers equipped with pesticides and with some maistries should be made to go to interior villages to combat plant diseases in time. It has become common that crops are attacked by different kinds of pests and insects in every district and unless something is done in the manner I have suggested, we cannot save the crops. The so-called concession which is given only to a few is no concession at all. It should be extended throughout the area. That is my submission. Then, Sir, in regard to the marketing side, I want to know from the Government definitely how do they help the producers. What is the help that the Government give for the quick movement of foodgrains? That is a serious problem. How do the Government determine the exportable surplus and also how do they plan for the distribution? Have they created any agency? It is high time that the Government created some agency and did something in regard to the movement of foodgrains.

Though the Government of India have, through the Rural Enquiry Committee of the Reserve Bank of India, promised loans, still we have not availed ourselves of the loans for warehousing purposes. I do not find there has been any construction of warehouses. This has not been pushed through. This should receive the urgent attention of the Government. Especially, when we have formed ourselves into a region, we should closely watch the movement of foodgrains either by rail or by road. This is very important and I am sure that the Hon. Minister will pay attention to this.

19th July 1957] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

I want to know what powers the Government have got under the Essential Commodities Control Act, and what is their policy in regard to them. How are those powers going to benefit the ryots? I require a clarification from the Hon. Minister. My humble submission is that the Government should immediately constitute a committee of the present legislature to review periodically the progress made under the development plans and also the expenditure incurred under the five-year plan. This is very important. I am sure the Hon. Minister will do something in regard to this.

I now come to animal husbandry. There are many reserved forests which can be dereserved very soon for providing grazing facilities and for the starting of cattle farms. Recently a survey of the waste lands has revealed that large extents of lands are available. These lands should immediately be brought under cultivation of cashew or reserved for grazing purposes. I find that the Chief Conservator of Forests has put up very fantastic proposals about the growing of cashewnut especially near Singaperumalkoil and Kattupakkam of Chingleput district. I do not know when the scheme is going to come up. I have got a small cashew plantation myself. Cashew plantation requires porous soil or red loam. Whether those areas will be suitable for cashew plantation, still remains to be watched. I do not know whether the Chief Conservator of Forests has taken the views of the experts of the Agriculture Department.

Much has been said in the press that the Union Minister for Food and our local Minister (Sri M. Bhaktavatsalam) visited those areas, and that the Chief Conservator of Forests has promised to bring 40,000 acres under cashew cultivation in the five-year plan period. How far is this going to materialise, is a thing to be wached. I am afraid it will end like the East African Groundnut fiasco, about which much was discussed in the Mother of Parlia ments.

In Ootacamund bluegum and wattle plantations are raised. I recently had occasion to see those plantations. So far as the Wenlock Downs are concerned, I understand that that is reserved for the Military. I do not know whether, under the able guidance of our Prime Minister, we will have any war. Granting that we have any war, I do not think we can have the whole thing cut down. Anyhow the Government should see that some portion of the Wenlock Downs is brought under bluegum and wattle cultivation.

Animal Husbandry, Agriculture, and the Forest Departments should have a co-ordinated policy regarding cultivations of lands and provision of grazing facilities. This is very important, because cattle are suffering very much for want of fodder.

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [19th July 1957

Sir, agricultural prices are controlled by Government. Cost of production is going up side by side. What is the Government of India committee that has been recently constituted going to do, is a thing to be watched. Unless fair prices are given both to the producer and the consumer, there will be no salvation for them.

Regarding the New Extension Service blocks, much has been talked about by hon. Members. So far as I am concerned, I would confine myself to a few remarks. Mr. Dey of the Government of India recently visited our State and passed some adverse remarks on the working of the department. I consider that as a stigma. But the recent statistics furnished by the Government of Madras about the Community Project area are directly contrary to the Government of India's findings on the progress. How is the Minister going to explain the position? How do the Government reconcile the inaccurate statistics? The statistics are not at all accurate.

In regard to the selection of the Community Project areas and National Extension Service blocks, I am sorry to note that the Government are not concentrating their attention on the selection of places in undeveloped and under-developed areas. Politics evidently play a very important part. I am sure the Hon. Minister will deeply consider the question and concentrate his attention in selecting places in undeveloped and under-developed areas in each district. This point should be borne in mind.

We are spending crores and crores of rupees, as I see from the figures available to the Public Accounts Committee, both on food production and on other activities. But it is a sorry spectacle to see that the departments have not produced any administration reports. Why? Administration reports should be prepared and placed on the table of the House. I would request the Minister to bestow his personal attention on this subject.

Sri Subbiah Mudaliar was saying yesterday that the department was not attracting competent men. We say that under the five-year plan we are going to train more people and so on. What happens? It is a sorry spectacle to see that for 1,062 seats allotted to the agricultural college only 120 applications had been received. This is a very miserable state of affairs. How are the Government going to solve this problem? The college is not attracting as many men as it should. The Government should examine this question very seriously. If out of the 120 men selected for the pre-professional course, about 50 per cent fail next year in their examination, what will be the position? So the Government should seriously think about these things. The same is the case with regard to Animal Husbandry. The Government must seriously take all these things into consideration and try to enhance emoluments of these men as early as possible? Otherwise the position will become very difficult.



19th July 1957] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

Lastly, Sir, I come to soil conservation. Much has been said about this even in the budget speech. But I find much has not been done. I do not know whether this is due to lack of co-operation among the departments. I find that nearly a sum of Rs. 24 lakhs has been surrendered to the Government of India. What a sorry spectacle? Who is responsible for this? Will the Government institute an enquiry? In regard to the filter point scheme; there has been a surrender of 50 per cent of the grant, nearly Rs. 8 lakhs. On the whole we have lost the aid of nearly Rs. 32 lakhs from the Government of India. There is no point in accusing the Indian Union that the South has been neglected by them. If we ourselves in certain departments do not avail of the concessions given by the Government of India, what is it that the Government of India can do? This also I am sure the Hon. Minister will explain. Sir, the time allotted to me is very short and therefore, I do not propose to dilate at length on these things. These are some of my suggestion which I put before the Hon. Minister and I hope he would go into all those things and take early steps to do something in these matters.

Sir, with these few words, I support the cut motions. Thank you, Sir.

* **THE HON. SRI M. BHAKTAVATSALAM:** கனம் உதவி சபாநாயகர்
அவர்களே, இந்த விவாதத்தில் பல விஷயங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன.
இதில் பல மான்யங்கள் சேர்த்து விவாதிக்கப்பட்டன. விவசாயத்தோடு மீன்
இலாகாவும் சேர்த்து விவாதிக்கப்பட்டது. விவசாயத்திற்கும் மீனுக்கும்
பொருத்தம் உண்டு என்பதை கனம் அங்கத்தினர்கள் ஒத்துக் கொள்வார்கள்
என்று நினைக்கிறேன். மலையாள நாட்டில் மீன் விவசாயம் என்று
தான் சொல்லுவது. அதே போன்று கால் நடை இலாகாவையும் சேர்த்து
விவாதிக்கப்பட்டது. விவசாயத்திற்கும் கால் நடைக்கும் நெருங்கிய தொடர்பு
இருக்கின்றது என்பதை எல்லோரும் உணர்ந்திருக்கிறார்கள். அதோடு சமு
தாய நல திட்டம் போன்ற திட்டங்களையும் விவாதிக்க நேர்ந்தது என்றால்
சமுதாய நல திட்டத்தில் விவசாய வளர்ச்சிக்கு பெரும் பங்கு உண்டு என்
பதையும் அங்கத்தினர்கள் உணர்ந்திருக்கிறார்கள். விவசாயத் துறையின்
கீழ் பேசும்போது பல விஷயங்களை பேசினார்கள். விவசாயத்தைப்பற்றி
நேரடியாகவும், நீர்ப்பாசன விஷயமாக பெரிய நீர்ப்பாசனத்தைப் பற்றி
பேசினார்கள், சிறிய நீர்ப்பாசனத்தைப் பற்றி பேசினார்கள், மின்சார விஸ்
தரிப்புப்பற்றி பேசினார்கள். இந்த பக்கத்திலிருந்து பேசிய ஒரு அம்மையார்
அவர்கள் பள்ளிக்கூடத்தை ஏற்படுத்துவதுபற்றியும் இதில் சேர்த்து பேசினா
கள். இதில் குற்றம் ஒன்றும் இல்லை. விவசாயத்திற்கு எல்லாம் வேண்டும்.
அரசாங்கம் முழுவதுமே விவசாயத்திற்கு வேண்டும். இவைகள் இல்லாது
விவசாயம் வளர்ச்சி அடைய முடியாது, இதல்லாமல் விவசாயிகள் விவசாயத்
தை நடத்த முடியாது. ஆகவே வேறு விஷயங்களை குறிப்பிட்டார்கள் என்று
குறைகூறும் வகையில் சொல்லவில்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.
கனம் சபாநாயகர் அவர்களும் இதற்கென்று குறிப்பிடப்பட்ட நேரத்தை விட
இரண்டு மணி நேரம் இந்த விவாதத்திற்கு அதிகப்படுத்தி தந்தார்கள்.
இந்த விஷயம் முக்கியமானது, இதில் பலர் அக்கறை கொண்டிருக்கிறார்கள்
என்ற வகையில் இதற்கு அதிக நேரம் ஒதுக்கி வைத்து இந்த விவாதத்தை
நடத்தி வைத்ததற்காக என் பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக்
கொள்கிறேன். இரண்டு பக்கங்களிலிருந்தும் கனம் அங்கத்தினர்கள் பல
பேசினார்கள். நல்ல யோசனைகளைக் கூறினார்கள். தங்கள் குறைகளை

சொல்லி குறைப்பட்டார்கள். உருப்படியான ஆலோசனைகளை சொல்லி அதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்றும் பல அங்கத்தினர்கள் சொன்னார்கள். அவர்களுக்கெல்லாம் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். முக்கியமாக எதிர்பக்கத்திலுள்ள கனம் அங்கத்தினர் துரைசாமி செட்டியார் அவர்கள் விவசாயம் செய்து கொள்ளுவதினால் நல்ல பெண்களைகூட கல்யாணம் செய்து கொள்ள இடைப்பதில்லை என்று உருக்கமாக, ரொம்பவும் கற்பனையோடு பேசினார்கள். அதே மாதிரி இந்த பக்கத்திலுள்ள கனம் அங்கத்தினர் ராமசாமி நாயுடு அவர்கள் மிகவும் விரிவாக உருக்கமாகச் சொன்னார்கள், அவர்கள் உண்மையிலேயே இதை சொல்லும்போது ஒரு புலவராகவே விளங்கினார். உருக்கமான வகையில் விவசாயிகளுடைய நிலைமையைப்பற்றி பேசினார்கள். இவ்வாறு கனம் அங்கத்தினர்கள் உருக்கமாக பேசினார்கள் என்றால் அவைகளை எல்லாம் அரசாங்கம் உணர்ந்து விவசாய அபிவிருத்திக்கு இன்னும் எந்த வகையில் உருவான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வதற்கும் என்னென்ன காரியங்களில் சாதிக்க வேண்டுமோ அவைகளை அரசாங்கம் சாதிப்பதற்கும் இவைகளில் அரசாங்கம் கவனம் செலுத்துவதற்கும் இது மிகவும் பேருதவியாய் இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒன்று, கனம் அங்கத்தினர்கள் பலர் விவசாயத்திற்கு அமைக்கப்படுகிற திட்டங்கள் பெரிய விவசாயிகளுக்குத்தான் பயன்படுகிறது, சிறிய விவசாயிகளுக்கு பயன்படவில்லை என்று கூறினார்கள். இதற்கு நான் ஒரு கணக்கு சொல்லுகிறேன். நம்முடைய ராஜ்யத்தில் 100 ரூபாய்க்குமேல் நிலவரி செலுத்துபவர்கள் 39 ஆயிரம் பேர்கள்தான் இருக்கிறார்கள். ஆனால் அதே சமயத்தில் நமது நாட்டில் நிலச் சொந்தக்காரர்களாக, அதாவது பட்டாதாரர்களாக இருப்பவர்கள் ஐந்து லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். இந்த 100 ரூபாய்க்கு மேல் வரி செலுத்துபவர்களிலும் பெரிய விவசாயிகளாக இருப்பவர்கள் ஒரு சிலர் தான். ஆகவே அவர்களுக்கு என்று எந்த திட்டமும் வகுக்கவும் இல்லை. அவ்விதம் ஒரு எண்ணமும் அரசாங்கத்திற்கு இல்லை என்பதையும் சொல்லிக்கொள்கிறேன். எல்லா விவசாயிகளும் பலன் அடைய வேண்டும், எல்லோரும் பொதுவாக முன்னேற்றம் அடைந்தால் தான் நம் நாடு பொருளாதார துறையில் நல்ல நிலையை அடைய முடியும் என்பதை அரசாங்கம் உணர்ந்துதான், அதற்கான திட்டங்களை அரசாங்கம் நிறைவேற்றிக்கொண்டிருக்கிறது. கனம் எதிர் கட்சி தலைவர் அவர்கள் பேசினார்கள், அரசாங்கம் வகுத்திருக்கிற திட்டங்கள் ஒன்றும் புரியவில்லையே என்று. இதைப்பற்றி நான் என்னுடைய பேச்சில் விவசாய திட்டங்களையெல்லாம் கூடியவரையில் சுருக்கமாகவும் விளக்கமாகவும் கொஞ்ச நேரம் அதிகமாக எடுத்துக் கொண்டும் இதைப்பற்றி விளக்கினேன். ஆனால் இதில் எவ்வளவு பணம் ஒதுக்கி திட்டங்களை நிறைவேற்றினாலும் இன்னும் ஏராளமான திட்டங்கள் நிறைவேற்ற வேண்டியதாகத்தான் இருக்கிறது. இதை பலரும் ஒப்புக்கொண்டதாகவே தெரிகிறது. இப்போது ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் போதாது என்றுதான் பலரும் பேசினார்கள். இன்னும் கால் நடை ஆஸ்பத்திரிகள் அதிகமாக வேண்டும் என்றும், "ட்ராக்டர்கள்", "புல்டோஸர்கள்" அதிகமாக வேண்டும் என்றும், மற்றும் எல்லா வசதிகளும் கூடுதலாக வேண்டும் என்றுதான் பேசினார்கள். அதே மாதிரி மீனவர்கள் விஷயத்தில், மீன் விவசாயத்தில் அதிகமான வசதிகள் வேண்டும், அவர்களுக்கு "பாப்லோ" படகுகள் அதிகமாக வேண்டும் என்றும் அவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்வதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் பேசினார்கள். இவைகளுக்கு எல்லாம் எந்தெந்த வகையில் எவ்வளவு தூரம் கவனம் செலுத்தமுடியுமோ அவ்வளவு தூரம் கவனம் செலுத்தி எவ்வளவு தூரம் நிறைவேற்ற முடியுமோ அவ்வளவு தூரம் நிறைவேற்றப் பார்க்கிறேன் என்று இப்போது சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கனம் எதிர்கட்சி தலைவர்கள் அவர்கள் மத்திய அரசாங்கம் ஒதுக்கி வைத்திருந்த பணத்தை நாம் இழந்துவிட்டோம் என்று சொன்னார்கள். இதில் அவ்விதம் நினைப்பதற்கு ஒன்றும் இல்லை என்று நான் இந்த சமயத்தில் சொல்ல விரும்புகிறேன். மத்திய அரசாங்கத்தின

பணத்தைக் கொண்டு **Filter Point Scheme, Hire Purchase Scheme** முதலிய திட்டங்களில் நாம் செலவு செய்திருக்கிறோம். மண் அரிப்பு திட்டத்தில் மத்திய அரசாங்கம் ஒதுக்கியிருந்த பணத்தை நாம் சரியான விதத்தில் செலவு செய்யப்படவில்லை என்று சொன்னார்கள். பணம் செலவு செய்யப்படவில்லை என்றுதான் கூறினார்கள், அந்த வகையில் நல்லதுதான், ஏனென்றால் பணத்தை விரயமாக்கப்பட்டிருக்கிறது என்ற புகார் இருக்கக்கூடாது என்பதுதான் நம் விருப்பம். இந்த மண் அரிப்பு திட்ட விஷயத்தில் அதற்கு பல இயந்திரங்கள் வேண்டியிருக்கிறது. அதோடு மக்களுடைய ஒத்துழைப்பும் வேண்டியிருக்கிறது. அதில் மக்கள் தங்களுடைய பங்கை எடுத்துக்கொள்ள முன்வர வேண்டும். இம்மாதிரியான தவிர்க்க முடியாத காரணங்களால்தான் கால தாமதம் ஏற்படுகிறது. அதனால் தான் இதை பரிபூரணமாக நிறைவேற்ற முடியவில்லை, அதனால் பணத்தையும் இழந்துவிட்டோம் என்று சொல்லுவது சரியல்ல என்றுதான் நான் சொல்ல ஆசைப்படுகிறேன். இப்போதும் அந்த திட்டங்களை எல்லாம் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்த்து அதற்கான வேலைகள் செய்யப்பட்டு வருகிறது. ஆகவே இந்த பணம் நமக்குத்தான் கிடைக்கப் போகிறது. இதனால் நாம் இழந்துவிடப் போவதும் இல்லை. அடுத்ததாக விலை நிர்ணயத்தைப்பற்றி பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். எதிர்கட்சித் தலைவர் அவர்களும் குறிப்பிட்டார்கள், இந்த விஷயத்தில் அரசாங்கத்திற்கு ஒரு கொள்கையும் இல்லை என்று. இதில் அரசாங்கத்திற்கு கொள்கை இல்லாமல் இல்லை. இப்போதுள்ள நிலைமையை கனம் அங்கத்தினர் அவர்கள் நன்றாக உணருவார்கள். இப்போது விலை கொஞ்சம் அதிகமாகத்தான் இருக்கிறது. அதேசமயத்தில் விவசாயிகளுடைய நிலைமைகளைப் பற்றி பல அங்கத்தினர்கள் விவரித்தார்கள். விவசாயிகளுக்கு அதிக லாபம் கிடைப்பதை அரசாங்கம் தடை செய்யவில்லை, ஆனால் நெல்விலை அதிகமானால் வாங்குபவர்கள் அதிகமிருக்கவேண்டும். வாங்குபவர்களின் சக்தி குறைந்துவிட்டால், அவர்களுடைய சக்தியை மீறியதாக இருந்தால் அவர்கள் அரைவயிறுதான் சாப்பிட்டுக்கொண்டிருப்பார்கள். இந்த நிலையில் பார்த்தால் விவசாயிகளுக்கு வாங்குபவர்கள் தான் எஜமானர்கள் என்பதை நாம் மறக்கமுடியாது. ஆகவே அவர்களுடைய நிலைமையையும் நாம் கவனிக்க வேண்டும். ஆனால் ஒரேயடியாக விலையை குறைக்கவேண்டும் என்று அரசாங்கம் கருதவில்லை. அதேசமயத்தில் விலை உயர்வை தவிர்ப்பதற்கும் வேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் எடுத்துக்கொண்டிருக்கிறது.

அதைப்பற்றி என்ன கொள்கை இருக்கிறது என்று கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் முன்பு தெரிவித்திருக்கிறேன். இந்த சட்டசபையிலேயே, "எஸென்ஷியல் கம்மாடிட்டீஸ் ஆக்ட்" என்ற சட்டம் பார்லிமெண்ட் சபையிலே திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது. அதை பிரயோகிக்கும் அதிகாரம் இந்த அரசாங்கத்திற்கு இப்பொழுது இருக்கிறது. அப்படி ஒரளவிற்குமேல் விலை ஏறினால் அதைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளும். எடுத்துக்கொள்வது அவசியமாகும். இந்த விலை சரிவர இல்லாமல் உயர்ந்துகொண்டே போகும் என்றால் உயர்ந்த பட்சம் இவ்வளவு என்று விலை நிர்ணயிக்க வேண்டிய நிலை ஏற்பட்டாலும் ஏற்படலாம். அப்படி ஏற்பட்டால் அதை பரிசீலித்து வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ளும். ஆனால் உயர்ந்த விலையை தவிர்ப்பது மட்டும் அல்ல. விவசாயிகளுக்கு விலை குறைந்தால் கவலையாய் இருக்கிறது. குறைந்த விலையை நிர்ணயிக்க வேண்டாமா என்று சிலர் கூறுவர். அதுவும் அரசாங்கத்தின் கவனத்தில் இல்லாமல் இல்லை. ஆனால், இப்பொழுது விலை ஏறிக்கொண்டிருக்கும்போது குறைந்த விலையை நிர்ணயிக்க வேண்டிய சமயம் இது அல்ல. அவசியம் ஏற்பட்டால் குறைந்த விலையை நிர்ணயிக்கவும் ஏற்பாடு செய்யப்படும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் என்று இந்த சமயத்தில் நான் அங்கத்தினர்களுக்கு

எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இந்த விலையைப் பற்றி ஒரு கமிட்டி
நியமிக்கப்பட்டதை கனம் எதிர்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.
அந்தக் கமிட்டியில் சென்னை ராஜ்யத்தை சேர்ந்தவர் ஒருவரும் இல்லை
என்றும் சொன்னார்கள். விலை நிர்ணய கமிட்டியை நியமித்தது, மத்திய
சர்க்கார். ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் அதில் பிரதிநிதித்துவம் இருக்க
வேண்டும் என்ற முறையில் அக்கமிட்டி நியமிக்கப்படவில்லை. ஆனால்
நம் ராஜ்யத்திலிருந்து ஒரு பிரதிநிதி இருந்தால் நல்லதுதான். வேண்டா
மென்று நான் சொல்லவில்லை. ஆனால் இதற்காக மத்திய அரசாங்கத்
தினிடம் சென்று எப்படியாவது எங்கள் ராஜ்யத்திலிருந்து ஒருவரைச்
சேர்த்துக்கொள்ளுங்கள் என்று கேட்க வேண்டிய அவசியமில்லை என்று
நான் கருதினேன், அரசாங்கமும் கருதியது. அவர்கள் விசாரணைக்கு
வருகிறார்கள், நம் ராஜ்யத்திற்கும் வருவார்கள். அப்பொழுது நாம் நம்
கருத்துக்களை எடுத்துச் சொல்லலாம். எதிர்க்கட்சித் தலைவர்களையும், விவ
சாயப் பிரதிநிதிகளையும் அழைக்கிறோம். அவர்கள் வந்து தங்களது அபிப்
பிராயங்களை எடுத்துச்சொல்ல ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே
அவர்கள் இந்தக் கமிட்டியிடம் சொல்லட்டும். அந்தக் கமிட்டியின் சிபார்சு
வந்து அதற்கப்புரம் மத்திய அரசாங்கம் முடிவு செய்வதற்கு முன்பு
அவசியமானால் இந்த சட்டசபையிலும் விவாதிக்க போதிய அவகாசம்
இருக்கும். மற்றொன்று, நிலச்சொந்தக்காரர்களுக்கும் குடியானவர்
களுக்கும் இடையே தகராறு இருக்கிறது என்றும், குடியானவர்களுக்கு
போதிய நிவாரணம் அளிக்கும் சட்டம் அமுலில் இருந்தபோதிலும்
அதை சரிவர நிறைவேற்ற சிலர் குறுக்கே நிற்கிறார்கள் என்றும் கூறப்
பட்டது. அதனால் உற்பத்திப் பெருக்கு பாதிக்கப்பட்டிருக்கிறது என்றும்
சொன்னார்கள். அதை நான் முற்றிலும் ஒத்துக்கொள்கிறேன். விவசாயி
களும், நிலச்சொந்தக்காரர்களும், இரு சாராரும் சேர்ந்து சுமுக
மாக நடந்துகொண்டால்தான் உற்பத்தியைப் பெருக்கமுடியும். அதன்
மூலம் இரு சாராருக்கும் பலன் கிடைக்கும். நிலச்சொந்தக்காரர்கள்
குறுக்கே நிற்காமல் விவசாயிகளுக்கு போதிய ஆதரவு அளித்தால் அது
இரு சாராருக்கும் நல்ல பயனை அளிக்கும். ஏதோ 60 வந்து விட்டது
போதும் என்று எண்ணமல் இருசாராரும் சேர்ந்து சுமுகமாக வேலை
செய்தால் 60, 70-ஆகக் கூடும். முக்கியமாக எதிர்க்கட்சியில் வீற்றிருக்கக்
கூடிய கனம் கருணாநிதி அவர்கள் குறிப்பிட்டார்கள், நான் அதைக் கேட்டு
கொஞ்சம் ஏமாற்றம் அடைந்தேன். குளித்தலையில் உள்ள மிராசுதார்கள்
அவருடைய பேச்சைக்கேட்டு சுமுகமாக நடந்துகொள்வார்கள் என்று
எதிர்பார்த்தேன், குளித்தலையில் உள்ள மிராசுதார்கள் இவர்களிடம்
மதிப்பு வைத்து தங்கள் நன்மையைக் கருதி இவர்களின் உதவியை நாடி
ஒரு சமரசமாக, சுமுகமாக, நியாயமாக நடந்துகொள்வார்கள் என்று
எதிர்பார்த்தேன். இப்பொழுது கூட அடியோடு நம்பிக்கை போய்விட
வில்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் கொஞ்சம் மேலும் அக்கரை
எடுத்துக்கொள்ள வேண்டும். எப்படியும் அவர்கள் உட்படுவார்கள் என்று
நம்புகிறேன். அதேமாதிரி இந்த சபையில் உள்ள கனம் அங்கத்தினர்
கள் கொஞ்சம் அக்கரை எடுத்துக்கொள்ள வேண்டும். யாரும் பாரபட்சத்
துடன் நடந்துகொள்ள மாட்டார்கள் என்றுதான் நான் நினைக்கிறேன்.
இரு சாராரும் சுமுகமாகப் போவதினால் உள்ள நன்மைகளை அவர்களுக்கு
எடுத்துரைத்து, குடியானவர்கள் மிராசுதார்கள் இவர்களிடையே உள்ள
தகராறுகளை தீர்க்கப் பார்க்க வேண்டும். அரசாங்கத்தைப் பொறுத்த
மட்டில் பாரபட்சம் ஒன்றும் இல்லை. விவசாயிகள் மிராசுதார்கள் இடையே
உள்ள தகராறுகளைத் தீர்க்க அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்துத்தான்
வருகின்றன. அப்படிச் செய்யும்போது, இரு சாராரும் தங்களுக்கு
சௌகரியமாக நேரவில்லை என்றால் இரண்டு பேர்களும் அரசாங்கத்தின்
மீது குற்றம் சாட்டுகிறார்கள். அடுத்தபடியாக, தேவஸ்தானம் வசத்தில்
இருக்கும் நிலத்தைப் பற்றிக் கூறப்பட்டது. அதைப்பற்றியும் அரசாங்கம்
கவனம் செலுத்தி வருகிறது. தங்களுக்குள்ள அதிகாரம், சட்டத்தின்





நிலை இவைகளை ஒட்டி இந்தத் தகராறுகளுக்கு இடம் இல்லாமல் நடுவில்
தரகர் மாதிரி ஒருவர் வந்து குத்தகைக்கு எடுத்துக்கொண்டு பலன்
அடைவது மாற்றப்பட வேண்டும். பலன் தேவஸ்தானத்திற்கும் போவ
தில்லை, உழைக்கிறவனுக்கும் போவதில்லை. நாலைந்து வருடங்கள் குத்த
கைக்கு எடுத்திருப்பார்கள், குத்தகை காலம் தீரும் வரை அதில்
தலையிடுவதற்கில்லை. விவசாயிகளுக்கும் நிலச்சொந்தக்காரர்களுக்கும்
இடையே தகராறு இல்லாமல் இரு சாராரும் பலன் அடையத் தக்க
விதத்தில் வழி செய்ய ஆலோசிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. நிலங்களை
கூட்டுறவு முறையிலே சாகுபடி செய்ய எவ்வாறு ஏற்பாடு செய்வது என்பதில்
கவனம் செலுத்திக் கொண்டுவருகிறோம். முக்கியமாக, சமுதாய
நலத் திட்டம், தேசீய விஸ்தரிப்புத் திட்டம் உள்ள இடங்களில் அதிகம்
கூட்டுறவுப் பண்ணைகளை அமைத்து எவ்வாறு நாம் இதை சிறந்த வகையில்
விவசாய உற்பத்தியைப் பெருக்குவது என்பதைப் பற்றிய ஆலோசனையில்
அரசாங்கம் தீவிரமாக முனைந்திருக்கிறது. அதற்கு அங்கத்தினர்களின்
ஒத்துழைப்பு கிடைக்கும் என்று நம்புகிறேன். கனம் அங்கத்தினர் ராம
ஸ்வாமி நாயுடு அவர்கள் பேசும்போது உருக்கமாகச் சொன்னார்கள்:
வெறும் ஒரு ஐந்து ஏக்கர் நிலம் ஒருவனுக்குக் கிடைத்துவிட்டால் போதுமா
என்று ; நான் கேட்கிறேன், ஐந்து ஏக்கர் கொடுக்க எங்கே நிலம் இருக்
கிறது என்று. அப்படிக் கொடுக்க நிலம் இல்லை. எந்த நிலத்தை எடுத்
தாலும் ஒன்றரை ஏக்கர் கூட கொடுக்க போதிய நிலம் இல்லை. நிலம்
மிக குறைவாய் இருக்கிறது. இது, இயற்கை ஏற்படுத்தியதே தவிர மனித
னால் செய்யப்பட்டதல்ல. மேலும் ஜனத்தொகை வேகமாக வளர்ந்து
கொண்டு வருகிறது. மக்களின் உணவுத் தேவையை பூர்த்தி செய்யக்
கூடியது நிலம். ஆகவே, உற்பத்தியை பெருக்கி நம் நாட்டின் தேவையைப்
பூர்த்தி செய்வது நம் நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதோடு
மட்டும் அல்லாமல் விவசாயியின் வாழ்க்கத்தரத்தையும் உயர்த்த உதவும்.
ஆகவே, விவசாயத் துறையில் விசேஷ கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.
இன்று சமுதாய நலத் திட்ட வேலை விவரங்களைப் பற்றியும் அங்கத்தினர்
கள் குறிப்பிட்டார்கள். இந்தப் பக்கத்திலிருந்து பேசிய டாக்டர் சௌந்தரம்
ராமச்சந்திரன் அவர்கள் இதில் மிகுந்த அனுபவம் உடையவர்.
அதில் உற்சாகம் கொண்டவர். அவர்கள் சில யோசனைகளைச் சொன்னார்
கள். இன்னும் வேறு பல அங்கத்தினர்களும் குறிப்பிட்டார்கள். இந்த
சமுதாய நலத் திட்டம் மாற்றப்பட்டு தேசீய விஸ்தரிப்புத் திட்டமாக மாறு
கிறது ; அதற்கப்புறம் பொருள் வசதி குறைகிறது என்று சொன்னார்கள்.
எதிர் கட்சியிலுள்ள கனம் அங்கத்தினர் ஷண்முகம் அவர்கள் குறிப்பிட்டார்
கள், ஏதோ ரோடுகள் போட்டார்கள், அங்கு போகமுடிய வில்லை என்று.
நான் சொல்கிறேன், அப்படிப்பட்ட ரோடுகள் கூட இல்லாமல் நடந்து செல்ல
வேண்டிய கிராமங்கள் எவ்வளவோ இருக்கின்றன. சில வருஷங்களுக்கு
முன்பு நான் ஆந்திரா நாட்டிலே, அதுவும் போப்பிலி ராஜாவின் சமஸ்
தானத்தைச் சேர்ந்த பிராந்தியத்தில் நான் ஒரு காரியமாக செல்ல வேண்டி
யிருந்தது. ஒரு பல்லக்கை கொண்டு வந்து வைத்து என்னை
ஏறவேண்டுமென்று சொன்னார்கள். இல்லை குதிரையில் வரலாமென்று
சொன்னார்கள். கடைசிக்காலத்தில்தான் நாங்கள் பல்லக்கில் செல்வது
வழக்கம் என்று நான் கூறினேன். (சிரிப்பு). எனக்கு கால் இருக்கிறது,
நடந்தே செல்கிறேன் என்று நான் சொன்னேன். கனம் அங்கத்தினர்
திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்தவர் ; ஜில்லா போர்டுத் தலைவராக
இருந்தவர் ; நல்ல அனுபவம் வாய்ந்தவர். ஜில்லா போர்டை விட்டுப்
போகின்ற காலத்திலும் அந்த ஜில்லாவைப்பற்றி ரொம்ப மதிப்பு வைத்துக்
கொண்டிருக்கிறார் என்பதைக் காண்கிறேன். "அப்பொழுது ஏதோ
ரோடு போடத் திட்டம் போட்டு பிறகு விட்டுவிட்டார்கள்" என்று கனம்
அங்கத்தினர் ஸ்ரீ ஆதிமூலம் அவர்கள் சொன்னார்கள். ஜில்லா போர்டும்
சமுதாய நலத் திட்டத்தில் போதிய அக்கரை எடுத்துக்கொள்ள வேண்டும்.
கனம் அங்கத்தினர் அப்போது ஜில்லா போர்டுத் தலைவராக இருந்

தாரோ என்னவோ தெரியாது. அப்படி ஜில்லா போர்டு அக்கரை எடுத்துக் கொண்டால், ஒன்றும் கெட்டுப்போகாது. சமுதாய நலத் திட்டம் என்றால் பணத்தை விநியோகித்து விடுவது என்று அர்த்த மல்ல. சிலர் சிப்பந்திகளுக்காக ஏன் செலவு செய்ய வேண்டுமென்று நினைக்கிறார்கள். பணத்தை அப்படியே பகிர்ந்து கொடுத்துவிடுவது போலப் பேசுகிறார்கள். அந்த இலாகாவையே கலைத்து விடலாமே என்று சிலர் சொன்னார்கள். இலாகா ஒன்றும் இல்லையென்று நான் சொல்லுகிறேன். சமுதாய நலத் திட்டத்தின் நோக்கம் மக்களிடத்தில் ஒரு புதிய மனோபாவத்தை ஏற்படுத்துவது. சமுதாய நல இலாகா என்றால் எல்லா இலாகாக்களையும் சேர்த்துப் பல துறைகளிலும் மக்கள் முன்னேற வழியைக் காட்டும் இலாகாவாகும். மக்களைக்கொண்டு அதற்கான வேலைகளைச் செய்து வைப்பது தான் சமுதாய நலத் திட்டமென்று நான் அங்கத்தினர்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

சமுதாய நலத் திட்டத்தின் கீழ் செலவு அதிகமாக்க செய்யப்படுகிற தென்று அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். வீண் செலவு அதிகமாக இருக்கிறதென்றும், சிப்பந்திகளுக்காக வீண் செலவு செய்யப் படுகிறதென்றும் சொல்லப்பட்டது. இதற்கு முன்பு நடந்த விவாதத்திலே கூட, பெரும் பகுதி சிப்பந்திகள் சம்பளத்திற்காகச் செலவழிக்கப்படுகிற தென்று அங்கத்தினர்கள் சொன்னார்கள். நான் ஒரு கணக்குப் போட்டுப் பார்த்தேன். சமுதாய நலத் திட்டம், தேசீய விஸ்தரிப்புத் திட்டம் அமுலாக்கப்பட்ட இடங்களிலே இதுவரையில் செலவு செய்யப்பட்டது ரூபாய் 6,77 லக்ஷம். அதில் சிப்பந்திகள் சம்பளத்திற்காகச் செலவு செய்யப் பட்டது ரூபாய் 1,26 லக்ஷம். அது சாதாரண பிளாக் டெவலப்மெண்டு ஆபீஸர், வில்லேஜ் லெவல் ஆபீஸர்களுக்காக மாத்திரமல்ல. என்ஜினியர்கள், கோவாபரேடிவ் எக்ஸ்டென்ஷன் ஆபீஸர், அனிமல் ஹஸ்பெண்டரி, எக்ஸ்டென்ஷன் ஆபீஸர் போன்ற எல்லோருக்கும் சேர்ந்து செலவு செய்யப்பட்ட தொகை. இவ்வாறு டெக்னிகல் உத்தியோகஸ்தர்கள் எல்லோருக்கும் சேர்ந்து இவ்வளவு செலவாகிறது. சமுதாய நலத் திட்டத்தின் நோக்கம் சில ரோடுகளைப் போடுவதும், ஆஸ்பத்திரிகளையோ, பள்ளிக் கூடங்களையோ கட்டுவதும் மாத்திரமல்ல. மக்களிடையே ஒரு புதிய மனோபாவத்தை ஏற்படுத்துவதுதான் அதன் அடிப்படையான நோக்கம். அதற்குத் தகுந்த உத்தியோகஸ்தர்கள் இல்லாமல், அந்த நோக்கத்தை நிறைவேற்ற முடியாது. அந்த உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பளம் கொடுத்துத் தான் ஆகவேண்டும். ஆனால், தகுதியான உத்தியோகஸ்தர்களை நியமிக்க வேண்டும் என்று குறை கூறினார்கள். "ஒரு சப்-ரிஜிஸ்டிராரைப் போட்டுவிட்டால் போதுமா? அவருக்கு அனுபவம் இருக்கவேண்டும்" என்று அங்கத்தினர்கள் சொன்னார்கள். ஒரு அனுபவம் உள்ள அங்கத்தினர், "ஏன் விளம்பரம் செய்து இவர்களை ரெக்ரூட் செய்யக்கூடாது?" என்று கேட்டார். இன்னும் ஒரு அங்கத்தினர் "கிராம சேவகர்கள் சரிவர வேலை செய்வதில்லை. அவர்கள் கிராமத்திலே போய் வேலை செய்வதற்குத் தகுதியுள்ளவர்களாயில்லை" என்று சொன்னார். கிராம சேவகர்கள் நியமன விஷயத்தில் மனுக்கள் கோரப்படுகின்றன. மனுக்கள் வந்த பிறகு ஜில்லா கலெக்டரும், இன்னும் சிலருமாகச் சேர்ந்த ஒரு கமிட்டி கூடி, மனுதார்களை நேரில் பார்வையிட்டுக் கேள்விகள் கேட்கிறார்கள். அப்பொழுது திருப்தி ஏற்பட்டால்தான், கிராம சேவகர்களாக நியமனம் பெறுகிறார்கள். பிறகு அவர்களுக்கு ஒரு பள்ளிக்கூடத்தில் 18 மாதங்களுக்குக் கடுமையான பயிற்சியளிக்கப்படுகிறது. பயிற்சி கடுமையாக இருப்பதால், சில பேர், "எங்களால் முடியாது" என்று ஓடி வந்துவிடுகிறார்கள். அந்த 18 மாதப் பயிற்சிக்குப் பிறகுதான் அவர்கள் கிராம சேவகர்களாக நியமிக்கப் படுகிறார்கள். இருந்தாலும், அவர்கள் சரிவர வேலை செய்வதில்லையென்றால், அப்போதைக்கப்போது அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பிளாக் டெவலப்மெண்டு ஆபீஸர்களைப் பொறுத்தமட்டில், இப்பொழுது அவர்கள் பல இலாகாக்களிலிருந்தும் பொறுக்கப் படுகிறார்கள்.

இது ஒரு புதிய வேலை, அதைச் செய்வதற்குத் தகுதி வேண்டும்
என்பது அரசாங்கத்தின் கருத்து. அந்தத் தகுதியை "இண்டர்வ்யூ"
செய்து நிர்ணயிக்க முடியாது. நம்முடைய இலாகாக்களில் அவர்களுடைய
முந்திய ரிகார்டுகள் இருக்கின்றன. அவைகளை எடுத்துப் பார்த்துவிட்டுத்
தான் நியமிக்கிறோம். தகுதியில்லையென்றால், அவர்களை வெளியேற்றி
விடலாம். அதற்கு யாதொரு விசாரணையும் செய்ய வேண்டியதில்லை.
இந்த இயக்கத்தில் தயக்கம் இருக்கக்கூடாது; அதற்குத் தகுதியான
அதிகாரிகள் வேண்டும். ஆட்களைப் பொறுக்கியெடுத்து, பின்னால் அவர்
களுக்குத் தகுதியில்லை யென்றால், அவர்களை மாற்றிவிடலாம் என்பது
தான் என்னுடைய அபிப்பிராயம். சமுதாய நலத் திட்டத்தின் கீழ்
25,503,000 பேர்கள் வந்திருக்கிறார்கள். இதில் 110 பிளாக்குகளும், 7,390
கிராமங்களும் சேர்ந்திருக்கின்றன.

மற்றொரு விஷயம். அரசாங்கம் செலவு செய்வது வேலைகளுக்காக
மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக சுமார் 2 கோடியே
68 லட்சம் ரூபாய் என்றால், ஜனங்கள் தாங்களாகவே கொடுத்தது 1 கோடியே
24 லட்சம் ரூபாய் ஆகிறது. முன்பு மனுப்போட்டும் ஒருவரும் முன்வந்து
செய்யாதது போய், இப்பொழுது மக்கள் தாங்களாகவே வந்து வேலை செய்யும்
மனோபாவத்தை உண்டாக்கியிருப்பது சமுதாய நலத் திட்டத்தின் சாதனை.
செலவில் நூற்றுக்கு 46 பங்கு மக்களால் கொடுக்கப்பட்டதென்றால்,
அதுவே ஒரு சிறந்த சாதனையாகும். இந்தத் திட்டத்திலே முக்கியமாக
வற்புறுத்தப்படுவது விவசாய அபிவிருத்தி. இந்த ஆண்டிலே 20 சத
விகிதத்திற்குக் குறையாமல் உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்று திட்டம்
போட்டு, அதை நிறைவேற்றுவதற்கு இப்பொழுது ஏற்பாடு செய்யப்பட்டு
வருகிறது. அதுமாதிரி கிராமங்களில் விவசாயிகளால் உற்பத்தி எவ்வளவு
பெருகினாலும், எல்லோருக்கும் வேலை கொடுத்து வேலை செய்பவர்
களுக்குத் தகுந்த ஊதியம் கொடுக்கவேண்டுமென்றால், சிறு தொழில்
வளர்ச்சி ஏற்படவேண்டும். ஆதலால், தொழில் வளர்ச்சியிலும் விசேஷ
கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

விவசாய டெமான்ஸ்ட்ரேட்டரைப்பற்றிச் சில அங்கத்தினர்கள் பேசினார்
கள். டெமான்ஸ்ட்ரேட்டர்கள் கிராமங்களுக்கே போவதில்லை யென்றும்,
ஹெட்க்வார்ட்டர்ஸிலேயே இருக்கிறார்கள் என்றும் சொன்னார்கள். ஆனால்
கனம் அங்கத்தினர் திரு. சுப்பையா முதலியாருக்கு நான் ஒன்று சொல்ல
விரும்புகிறேன். மாதத்திற்கு 20 நாட்கள் ஒரு டெமான்ஸ்ட்ரேட்டர் சுற்றுப்
பிரயாணம் செய்ய வேண்டுமென்று நிபந்தனையிருக்கிறது. அதற்குக்
குறைந்தால், அவர்கள் பெறக்கூடிய பிரயாணப்படி குறையும். அவர்
களுக்குக் கொடுக்கப்படுவது நிர்ணயிக்கப்பட்ட பிரயாணப்படி (எப்.டி.ஏ.)
அவ்வாறு 20 நாட்களுக்குச் சுற்றுப் பிரயாணம் செய்யாவிட்டால், லீவு
எடுத்துக் கொண்டிருக்கலாம். அதுமாதிரி மற்ற அதிகாரிகளும் விவசாயி
களோடு நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டும். "குடியான
வர்கள் தினம்" (Farmers' Day) கொண்டாடப்படவேண்டுமென்றால்,
அது ஒரு பெரிய திருவிழாவாகக் கொண்டாடப்படவேண்டுமென்று
நாங்கள் வற்புறுத்தி வருகிறோம். அவ்வாறு இப்பொழுது பல இடங்களில்
நடந்துகொண்டிருக்கிறது.

டெபுடி டைரக்டர் எதற்காக அதிகமாக பீல்ட்மென்களை வைத்துக்
கொள்ளவேண்டும் என்றும் சொல்லப்பட்டது. பெரிய திட்டத்தை வகுத்து
அதை நிறைவேற்றும் போது, டெபுடி டைரக்டர்களுடைய சேவை அவசிய
மாக இருக்கிறது என்று என்னுடைய அனுபவத்தைக் கொண்டு நான்
சொல்ல விரும்புகிறேன். டெபுடி டைரக்டர்களும் அதிகமாக இல்லை;
மூன்று டெபுடி டைரக்டர்கள்தான் இருக்கிறார்கள். அவர்களுடைய சேவை
வேண்டும். கல்வி அதிகாரிகளுக்குத் தெரியாத விஷயங்களில் அவர்
களுக்கு ஏற்படும் சங்கடங்களைத் தீர்த்து வைப்பதற்கு இவர்களுடைய சேவை

அவசியம். சமுதாய நலத் திட்டத்தின் கீழ் டெமான்ஸ்ட்ரேட்டர்களை அதிகப்படுத்துகிறோம். ஒரு பிர்க்காவுக்கு ஒரு டெமான்ஸ்ட்ரேட்டர் இருக்க வேண்டுமென்று கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். அவ்வாறு ஏற்படுத்த வேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம். கூடிய வரையில், டெமான்ஸ்ட்ரேட்டர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்திக்கொண்டு வருகிறோம். அவர்களுடைய சம்பளம் குறைவாக இருக்கிறது என்று சொல்லப்பட்டது. கனம் நிதி அமைச்சர் அவர்கள் கூட இங்கு இருக்கிறார் கள். சம்பளத்தை உயர்த்துவது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஒரு பக்கத்தில் செலவைக் குறைக்கப் பார்க்கிறோம். சில சமயங்களில் பெரிய திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஒரே ஜில்லாவிற்கு இரண்டு அதிகாரிகளை நியமிக்கவேண்டியிருக்கிறது. இருக்கிற சம்பளத்தை உயர்த்துவது என்றால், அது கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கிறது. செலவை அதிகப் படுத்தாமல், எவ்வளவு தூரம் பெரிய திட்டங்களை நிறைவேற்ற முடியு மென்று பார்க்கிறோம்.

ஒன்று இப்போது குறிப்பிடப்பட்டது. அதை நானும் கனம் நிதி அமைச்சர் அவர்களும் சேர்ந்து கவனிக்க வேண்டியிருக்கிறது. விவசாயக் கல்லூரிக்கான ப்ரீ-ப்ரொபெஷனல் கோர்ஸுக்கு மாணவர்கள் பொறுக்கும் விஷயத்தில், கல்லூரியில் எத்தனை ஸ்தானங்கள் இருக்கின்றனவோ அத்தனை மனுக்கள் வரவில்லையென்றால், அது கவனிக்க வேண்டிய விஷயம். நமக்கு விவசாயத்தில் பயிற்சி பெற்றவர்கள் வேண்டும். ஆத லால், வேண்டிய மனுக்கள் ஏன் வரவில்லையென்று பரிசீலனை செய்ய வேண்டும். இந்தக் குறையை நீக்கும் விஷயத்தில் நாம் கவனம் செலுத் தலாம்.

இன்னும் ஒரு கனம் அங்கத்தினர், "விவசாயக் கல்லூரிப் படிப்பு விவசாயிகளுக்கு பயன்படுவதில்லை" என்று சொன்னார். விவசாயிகளுக் குப் பயன்படவேண்டும் என்பதுதான் எங்களுடைய நோக்கம். விவசாயி களே அதை நன்கு பாராட்டுகிறார்கள். நல்ல ஆராய்ச்சிகளின் முடிவுகளை ஏற்றுக்கொள்ள நம்முடைய நாட்டிலுள்ள விவசாயிகள் தயாராயிருக் கிறார்கள்; அவர்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் நம்முடைய அதிகாரிகள் தொண்டுபுரிய வேண்டும் என்பது இந்த அரசாங்கத்தின் எண்ணம். அந்த வகையில் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறோம். சமுதாய நலத் திட்டத்தைப் பற்றி பேசும்போது பல அங்கத்தினர்கள் தங்கள் தங்கள் பிராந்தியத்திற்கு இந்தத் திட்டம் வேண்டுமென்று சொன்னதிலிருந்து, இந்த சமுதாய நலத் திட்டம் எப்படி போற்றப்பட்டு வருகிறது என்று மற்ற அங்கத்தினர்களுக்கு விளங்கும்.

விவசாயக் கல்லூரிக்கு ஒதுக்கப்பட்ட பணத்தைப்பற்றி கனம் அங்கத்தினர் கருணாநிதி கூறியபோது, விவசாய கல்லூரிக்கு ஒதுக்கப்பட்டது குறைவாக இருக்கிறது என்று ஏதோ புள்ளி விவரத்தை எடுத்துச் சொன்னார்கள். இப்போது ஒதுக்கப்பட்டிருக்கிற பணம், குறிப்பிடப்பட்ட தொகை விவசாயக் கல்லூரியின் தரத்தை மேலும் உயர்த்துவதற்குத்தானே தவிர, முன்பு செலவு செய்ததைவிட குறைவாக செலவு செய்ய வேண்டுமென்று எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை.

விவசாயிகளுக்கு செய்யப்படுகிற இத் திட்டங்களெல்லாம் கண்ணீர் துடைப்பு என்று ஒரு அங்கத்தினர் சொன்னார். (சிரிப்பு.) கண் ணீர் என்பது இப்போது சாதாரணமாக வழங்கப்படுகிற ஒரு வார்த்தை. ஒரு அங்கத்தினர் கண்ணீர் துடைப்பு என்று சொன்னார். அதை ஒட்டி அவர்கள் சொல்லியிருக்கலாம். உண்மையிலேயே இவைகளெல்லாம் கண்ணீர் துடைப்பு திட்டமில்லை. விவசாயம் சீக்கிரத்திலே கணிசமான முறையில் பெருக, கணிசமான முறையில் உற்பத்தி பெருக, இந்த திட்டத்தை யெல்லாம் நிறைவேற்றுகிறோம்.



கனம் அங்கத்தினர் திரு. நல்லசிவம் சொன்னார்கள் டிராக்டர்களைப் பற்றி, சிறு சிறு டிராக்டர்கள் வேண்டுமென்று. பெரிய டிராக்டர்களாக இருப்பதால் பெரிய விவசாயிகளுக்குத்தான் பலன் என்று சொன்னார்கள். பல அங்கத்தினர்கள் டிராக்டர்கள் போதாது என்று சொன்னார்கள். கூடிய வரையில் சிறு டிராக்டர்கள் வாங்குகிறோம். ஐந்து எக்கர், நான்கு ஏக்கர் நிலங்களுக்கு டிராக்டர் வாங்குவது கஷ்டம். முப்பது அல்லது நாற்பது ஏக்கராக இருந்தால் வாங்கலாம். இதில் விவசாயிகள் கூட வாங்குவதற்கு முன் வரவேண்டும் என்ற உயர்ந்த பண்பாடு வேண்டும். அப்படி வாங்கி சிறு சிறு விவசாயிகளுக்கும் பயன்படுத்த வேண்டும். அரசாங்க திட்டம் பற்றி குறிப்பிடப்பட்டது. அரசாங்கமே டிராக்டர்களை வாங்குவது லாப நஷ்டமில்லாமல் விநியோகிக்க வேண்டுமென்பதற்காகத் தான். இப்போது இருக்கும் கூட்டுறவு சங்கங்கள், புதிய கூட்டுறவு சங்கங் கள் எல்லாம் டிராக்டர்கள் முதலியவைகளை வாங்கி விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் எண்ணம். இதை சில கூட்டுறவு சங்கங்கள் நிறைவேற்றியும் வருகின்றன. மேலும் பல கூட்டுறவு சங்கங்கள் முன்வந்து இதை நிறைவேற்ற வேண்டுமென்பது தான் என் எண்ணம்.

கடன் கொடுப்பதைப் பற்றி குறிப்பிட்டார்கள். கடன் பெறுவதிலேயே யுள்ள கஷ்டத்தைப்பற்றியும் குறிப்பிட்டார்கள். கடன் கொடுப்பதைக்கூட விவசாய இலாகா ஏற்றுக் கொள்ளலாம் என்று ஒரு அங்கத்தினர் சொன்னார். அபிவிருத்தி வேலையில் ஈடுபட்டிருக்கும் விவசாய அதிகாரிகளுக்கு அனாவசிய தொல்லைகளை கொடுக்கக்கூடாது. இவைகளை பார்த்துக் கொடுப் பது ஒரு பெரிய பொறுப்பாக இருக்கிறது. முன்பு உரம் முதலியவைகளை கூட்டுறவு சங்கங்கள் மூலமாக பெற்றுக் கொண்டிருந்தார்கள். இராம கூட்டுறவு சங்கங்கள் முன் வந்து இந்த மாதிரி பொறுப்புகளை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பது தான் அரசாங்கத்தின் எண்ணம்.

**Seed Farm** பற்றி குறிப்பிட்டார்கள். **Seed Farm** வைப்பதிலே கூட ஏற்கெனவே குத்தகை எடுத்துக்கொண்டு விவசாயிகளிடமிருந்து நிலம் வாங்க முடியவில்லை. விதைப் பண்ணைகள் ஏற்படுத்துவதற்கு நிலம் கிடைப்பதில்லை. நல்ல நிலமாகப் பார்த்து வாங்குகிறோம். விலை அதிகமாயிருந்தால் குத்தகைக்கு எடுத்துக் கொள்கிறோம். குத்தகை அதிக மாயிருந்தால் விட்டுவிடுகிறோம். ஐம்பது ஏக்கரில் விதைப் பண்ணைகள் இருந்தால்தான் **economical** ஆக இருக்கும். விளை நிலங்களை குத்தகைக்கு விடாமல் சொந்தமாக வைத்துக்கொண்டிருக்கிற சிறு சிறு விவசாயி களிடமிருந்து விதைகள் வாங்கலாம் என்று சொன்னார்கள். இவ்வாறு வாங்குவது நல்லதுதான். அதிகாரிகளுக்கு வேண்டியவர்களாக இருந்தால் தான் அதிகம் கொடுக்கிறார்கள் என்ற குறைப்பாட்டுக்கு இடமில்லாமல் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. குறிப்பிட்ட பேர்களைப்பற்றி என்னிடம் கொடுத்தால் நடவடிக்கை எடுத்துக்கொள்ள அரசாங்கம் எப்போதும் தயாராக இருக்கிறது.

கடன் கொடுக்கும் விஷயத்தில் ஒன்று சொல்ல வேண்டும். இதில் குறுகிய காலக் கடன், நீண்ட காலக் கடன் என்று இருக்கிறது. குறுகிய காலக் கடன் என்பது, அறுவடைக்குப்பின் திருப்பிக் கொடுக்கவேண்டும். கடன் கொடுக்கப்படுகிறது என்று வாங்குகிறார்கள். ஆனால் அதை திருப்பிக் கொடுப்பதற்கு மனம் இருப்பதில்லை. கடன் வாங்குகிறவர்களில் பெரும் பாலானவர்கள் திருப்பிக் கொடுப்பதில்லை. ஒரு சிலர் உடனே கொடுக்க வேண்டும் என்று கொடுத்து விடுகிறார்கள். சிலர், இது அரசாங்கத்திடம் வாங்கிய கடன்தானே, இது கொடுக்கப்படாத கடன் என்றுகூட கிராமங் களில் பேசிக் கொள்கிறார்கள். இப்படி அவர்கள் கொடுக்காவிட்டால் மேற் கொண்டு எப்படி கடன் வாங்குவது. அறுவடை தவறியபோது தராவிட்டால் அப்போது பாதகமில்லை. எங்கு பார்த்தாலும், கடன் வாங்குவது; ஆனால்

தவணைப்படி கொடுப்பதில்லை. இம்மாதிரி நான்கு, ஐந்து தவணை கொடுக்காமல் இருந்துவிட்டு, பிறகு அதிகாரிகள் எல்லாவற்றையும் கேட்கிறார்கள், முன்பே என் வாங்கவில்லை என்று சொல்லுகிறார்கள். கனம் அங்கத்தினர்களுக்கு சொல்லுகிறேன்; ஏனென்று கேட்டால் கனம் அங்கத்தினர்கள் அரசாங்கம் துன்புறுத்துகிறார்களோ என்று நினைக்கலாம். அவர்களுக்கு சொல்லுகிறபோது, அவர்கள் மூலம் விவசாய மக்களுக்குச் சொல்லுகிறேன். நம் திட்டங்கள் நன்கு நிறைவேற்றப்படவேண்டுமானால், விவசாயிகள் ஒத்துழைப்பு அவசியம், அவர்கள் வாங்கிய கடனை திருப்பிக் கொடுக்க தயங்காமல் முன் வரவேண்டும்.

கடைசியாகப் பேசிய கனம் எதிர்கட்சித் தலைவர் அவர்கள் சில உறுப்படியான விஷயங்களைப்பற்றி குறிப்பிட்டார்.

(Deputy Speaker sounded the gong.)

I will continue till 2–5 p.m.

DEPUTY SPEAKER : We have to assemble again at 3 p.m.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Leader of the Opposition stopped only at 1–20 p.m.** அடிக்கடி இலாகாவின் தலைமை அதிகாரிகளை மாற்றிக் கொண்டு வருகிறார்கள் என்று குறிப்பிட்டார். அரசாங்கத்திற்கும், முக்கியமாக எனக்கும், கூடிய வரையில் தலைமை அதிகாரிகள் மட்டுமல்ல, ஜில்லா அதிகாரிகளைக் கூட மாற்றக் கூடாது என்பதைத்தான் கண்டிப்பாக அனுசரித்து வருகிறோம். இருந்தாலும் இப்படி மாற்றவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. சமீபத்திலே ஒரு தலைமை அதிகாரியை மாற்ற வேண்டியிருந்தது. திடீரென்று முன்பு இருந்த தலைமை அதிகாரி வியாதியாய் போய்விட்டார், அதனால் லீவு எடுத்துக் கொண்டார். தாற்காலிகமாக ஒருவரைப் போட்டோம். இப்போது இது நிரந்தரம் என்று சொல்லுகிறேன். டெபுடி டைரக்டராக, மூன்று மாதம், நான்கு மாதம் **Service** உள்ளவர்களை போட்டிருப்பதாக குறிப்பிட்டார். இப்போது டெபுடி டைரக்டராகப் போடப்பட்டிருப்பவர்கள் **Headquarters Joint Director**-ஆக தொண்டு புரிந்தவர்கள். அவர்கள் நான்கு மாதமே இருந்தாலும் என் அவர்களுக்கு சந்தர்ப்பம் கொடுக்கக்கூடாது என்பது என் எண்ணம். **Regional Deputy Director**-ஆக இருந்தவர்கள் தகுதியான முறையில் வேலை பார்க்கும்போது, தண்டனை போல கீழே உள்ளவர்களை போடுவது நல்லதல்ல என்றுதான் போடப்பட்டிருக்கிறது என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

உணவு உற்பத்தி பெருக்கத்தைப்பற்றி குறிப்பிட்டார்கள். ஆயில் இஞ்சின்கள் அமைப்பதில் காலதாமதம் ஏற்படுவதைப்பற்றியும் குறிப்பிட்டார்கள். ஆனால் கால தாமதம் ஒன்றும் ஏற்படவில்லை. சில சமயங்களில் இஞ்சின்கள்தான் கிடைப்பதில்லை. இதை வழங்குவதில் அரசாங்கம் ஒரு திட்டத்தை வகுத்திருக்கிறார்கள். எங்கெங்கே கூட்டுறவு சங்கங்கள் இருக்கின்றவோ அங்கே எல்லாம் கூட்டுறவு சங்கங்கள் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று திட்டம் வகுத்திருக்கிறார்கள். அப்படி ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கூட்டுறவு சங்கங்களை வற்புறுத்திக் கொண்டும் வருகிறார்கள். இது விஷயத்தில் என்ன கொள்கை இருக்கிறது என்று ஒரு அங்கத்தினர் கேட்டார். இது விஷயமாக என்ன கொள்கை இருக்கிறது என்பது எல்லா அங்கத்தினர்களுக்கும் நன்கு தெரியும்.

பசுந்தாள், விதை கொடுப்பதை பற்றி குறிப்பிட்டார்கள். இன்னின்ன உரம் கொடுப்பது என்ற நிர்பந்தம் கிடையாது. விவசாயிகள் எந்த விதை வேண்டும் என்று கேட்கிறார்களோ அதைக் கொடுக்கத்தான் ஏற்பாடுகள்



செய்யப்பட்டிருக்கிறது. என்ன விதத்தில் அவர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்க முடியுமோ அந்த விதத்தில் விவசாயிகளுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுதான் வருகிறது. எந்த எந்த இடங்களிலிருந்து பசுந்தாள் வேண்டும் என்று கேட்கிறார்களோ அந்த அந்த இடங்களிலிருந்து அதை எடுத்துக் கொள்ள வசதி செய்யப்பட்டிருக்கிறது. சூப்பர்பாஸ்பேட்டைப் பற்றி குறிப்பிட்டார்கள். சூப்பர்பாஸ்பேட்டுக்கோ அல்லது மற்றவைக்கோ ஓரளவு தான் சப்சிடி கொடுக்கப்பட்டிருக்கிறது. எல்லாவற்றிற்கும் விவசாயிகள் அரசாங்கத்தை எதிர் பார்க்கமாட்டார்கள், அவர்கள் எதிர் பார்க்கவும் கூடாது. எந்த எந்த வகைகளில் அவர்களுக்கு சப்சிடி கொடுக்க முடியுமோ அந்த வகைகளில் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறோம். அத்துடன் மத்திய அரசாங்கத்தின் உதவி எந்த எந்த வழிகளில் கிடைக்கின்றனவோ அவைகளை யெல்லாம் நாங்கள் பயன் படுத்திக்கொண்டுதான் வருகிறோம். பயன் படுத்திக் கொள்ளாமல் இல்லை. காடுகளிலிருந்து பசுந்தாளையும் உலர்ந்த இலைகளையும் எடுத்துக் கொள்வதற்கு அங்கங்கே அனுமதிக்கிறோம். ஆனால் அப்படியே இலவசமாக விட்டு விடுவது என்பது கூடாது. அப்படி இலவசமாக விட்டு விட்டால் காடுகள் அழிந்து போய் விடும். அதிலிருந்து பல தகராறுகள் வரலாம். அப்படி அனுமதித்தால் பலம் உள்ளவர்கள் அதன் பயனை பூராவும் பயன்படுத்திக் கொண்டு பலம் இல்லாதவர்களை பயன் அடைய முடியாமல் செய்துவிடுவார்கள் என்பதற்காகத்தான் இலவசமாக கொடுப்பதில்லை என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம். சில இடங்களில் பசுந்தாளை வெட்டி எடுத்துக் கொள்வதற்கு ஏலம் போடப்படுகிறது. அதை விவசாயிகள் பயன் படுத்திக்கொண்டு வருகிறார்கள். இம்மாதிரி புதுக்கோட்டையில் நடைபெற்று வருகிறது. வேறு பிராந்தியங்களில் இப்படி இல்லை யென்றால் அதைப் பற்றி கவனிக்கவும் தயாராக இருக்கிறோம். உலர்ந்த இலைகளை யார் வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்ல வேண்டும் என்று சொன்னார்கள். அப்படிச் செய்து விட்டால் காட்டிலுள்ள மரங்களையெல்லாம் வெட்டி விடுவார்கள். அதனால் சில தடைகள் விதிக்க வேண்டியதாக இருக்கிறது.

கால்நடை வளர்ச்சியைப்பற்றி குறிப்பிடப்பட்டது. கால்நடை வளர்ப்புக்கு கால் நடை தீவனம் ரொம்பவும் முக்கியம். இதை அரசாங்கம் உணராமல் இல்லை. எங்கெல்லாம் வேஸ்ட் நிலங்கள் இருக்கின்றனவோ அங்கேயெல்லாம் கால்நடைகளுக்கு வேண்டிய தீவனத்தை வளர்க்க வேண்டும் என்றும் அதை நல்ல முறையில் பயன் படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் தான் அரசாங்கத்தின் எண்ணம். விவசாயம் செய்யக் கூடியவர்களுக்கும் நிலம் இல்லாத விவசாயிகளுக்கும் அந்த நிலங்கள் கொடுக்கப்பட்டு வருகிறது. அதன் மூலமாக கால்நடை தீவனத்தை வளர்க்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

முந்திரிச் செடியைப்பற்றி கனம் அங்கத்தினர் கருணாநிதி குறிப்பிட்டார். முந்திரி செடி இருப்பதையெல்லாம் அழிக்கப்படுகிறது என்று சொன்னார். பழுப்பு நிலக்கரியின் அவசியத்தைப்பற்றி அங்கு சில இடங்களில் அந்த செடிகள் அழிக்கப்பட்டு வருகிறது. அதனால் தான் அழிக்கப்படுகிறதே ஒழிய வேறு ஒரு காரணமும் இல்லை. அம்மாதிரி எல்லா இடங்களிலும் அழிக்கப் படுவது இல்லை. சுரங்க வேலைக்கு என்று இடங்களை எடுத்துக் கொண்டவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொள்வதற்கு நஷ்ட ஈடு கொடுத்துக் கொண்டு வருகிறோம். அங்கு அவசியமாக அழிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதனால் அதிகப்படியான நஷ்டம் ஏற்படப்போவதில்லை என்று கணக்கிட்டிருக்கிறார்கள். ஏக்கருக்கு 30 ரூபாய்க்கு மேல் இருக்காது. அவசியம் இருந்தால் நஷ்ட ஈடும் கொடுக்கப்படும். எதிர் கட்சி தலைவர் அவர்கள் பேசும்போது இது சம்பந்தமாக கிழக்கு ஆப்ரிகாவில் ஏற்பட்ட பியாஸ்கோபோல் ஏற்பட்டு விடும் என்று குறிப்பிட்டார். அப்படி ஒன்றும் ஏற்பட்டு விடாது என்பதை நான் உறுதியாகக் கூறுவேன். இப்பொழுது அங்கு மழை இல்லாமல் நன்றாக வளர்ந்து வருகிறது. மழை இல்லாமல் இருந்தால் அது நன்றாக வளரும். அதனால் அதிகப்படியான அளவில் நஷ்டம் ஏற்பட்டு விடாது என்பதை நான் உறுதியாகக் கூறுவேன்.

[Sri M. Bhaktavatsalam] [19th July 1957

ஸ்ப்ரேயர்களின் அவசியத்தைப் பற்றி குறிப்பிட்டார்கள். அதை விநியோகிக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதில்கூட கூட்டுறவு சங்கங்கள் உதவ முன் வரவேண்டும். எல்லாவற்றையும் அரசாங்கம் ஏற்று நடத்துவது என்பது முடியாத காரியம். சிலவற்றை கூட்டுறவு சங்கங்கள் எடுத்து நடத்தவேண்டும். அதற்காகத்தான் ஒவ்வொரு கிராமங்களிலும் கூட்டுறவு சங்கங்களை அமைக்கவேண்டும் என்று அடிக்கடி சொல்லிக்கொண்டு வருகிறோம். அப்படி அமைத்துக் கொண்டால் அங்கங்கே சுலபமான முறையில் இவைகளை எல்லாம் செய்து கொள்ளலாம்.

விற்பனை வரி சம்பந்தமாக ஒரு கமிட்டியை அமைத்து அது பற்றி பரிசீலனை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எந்த எந்த வகையில் இப்பொழுதுள்ள விதியை மாற்றியமைக்கலாம் என்பதற்காக பரிசீலனை செய்யபட்டு வருகிறது. அதற்காக கமர்சியல் மார்க்கெட் ஆக்டை திருத்துவதற்கு ஏற்பாடுகள் செய்து கொண்டு வருகிறோம். இதில் அரசாங்கம் தீவிர கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது. அந்தக் கமிட்டியின் சிபாரிசு கிடைத்த பிறகு அதை எந்த அளவில் நிறை வேற்றி வைக்க முடியும் என்பதை பற்றி முடிவு செய்யப்படும்.

எதிர் கட்சி தலைவர் அவர்கள் க்விக் மூவ்மெண்ட் ஆப் புட் க்ரெயின்ஸை பற்றி குறிப்பிட்டார். இந்தக் கஷ்டத்தை தீர்ப்பதற்கும் வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது. இது சம்மந்தமாக ரயில்வே இலாகாவுடன் கலந்து கொண்டு வருகிறோம். எந்த விதமான கஷ்டங்களும் இல்லாமல் இருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறோம்.

கடைசியாக மீனவர்களைப் பற்றி குறிப்பிடப்பட்டது. அவர்களுக்கும் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக வேண்டிய வசதிகளைக் செய்து கொடுக்க ஏற்பாடு செய்து கொண்டு வருகிறோம். மீனவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறோம். ஆனால் இந்த கூட்டுறவு இயக்கத்தை வைத்துக் கொண்டு ஒரு சிலர் சொந்த முறையில் பயன்படுத்திக்கொண்டு வருகிறார்கள். அது சரியல்ல என்று அரசாங்கம் கருதுகிறது. கூட்டுறவு சங்கங்கள் மூலமாக கிராமத்திலுள்ள எல்லா மீனவர்களும் பயனடைய வேண்டும். அப்படி இல்லாமல் ஒரு சிலர் மட்டும் பயன் அடைவது என்று நினைத்தால் அது சரியல்ல. இரண்டாவதாக ஏலம் போட்டால் அந்த ஏலத்தில் கூட்டுறவு சங்கத்துடன் மற்றவர்களும் போட்டி போட வேண்டும். ஏலம் போட்டால் கிராமங்களில் கூட்டுறவு சங்கங்களுடன் போட்டி போடக் கூடிய நிலைமை ஏற்பட வேண்டும். ஒரு காரியத்தை பற்றி நான் விவரம் கவனித்தேன். கூட்டுறவு சங்கம் கொடுக்கக்கூடியதற்கும் ஏலத்தில் கிடைக்கக்கூடியதற்கும் ரூபாய் 1,000 வித்தியாசம் இருந்தது. எனவே கிராமத்தில் கூட்டுறவு காரியத்திற்கே விடுவதினால் கிராமத்தில் அதிருப்தி ஏற்படுவதோடு சர்க்காருக்கும் நஷ்டம் ஏற்படுகிறது. அதற்கு இடம் கொடுக்கக்கூடாது. இந்த விதத்தில் அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. அதனால் உண்மையில் நல்ல முறையில் கூட்டுறவு சங்கங்கள் தொண்டாற்ற வேண்டும் என்ற முடிவிற்கு அரசாங்கம் வந்திருக்கிறது. இதில் ஏதாவது குறைகள் இருந்தால் அதை அவ்வப்போது அரசாங்கத்தினருடைய கவனத்திற்கு கொண்டு வந்தால் அதை பரிசீலித்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ளப்படும் என்பதை சொல்லிக் கொண்டு என்னுடைய வார்த்தைகளை இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER : Is the hon. Member, Sri Govindasamy withdrawing his cut motion to Demand XVIII?

SRI A. GOVINDASAMY : No. Sir.



19th July 1957]

DEPUTY SPEAKER : The question is—

" That the allotment of Rs. 2,61,32,700 under Demand XVIII—Agriculture and Fisheries—be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

DEPUTY SPEAKER : I shall now put the Demand to vote. The question is—

" That Government be granted a sum not exceeding rupees 2,61,32,700 under Demand XVIII—Agriculture and Fisheries."

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER : Is the hon. Member, Sri Marimuthu, withdrawing his cut motion to Demand XIX—Veterinary?

SRI A. R. MARIMUTHU : No, Sir.

DEPUTY SPEAKER : The question is—

" That the allotment of Rs. 74,92,400 under Demand XIX—Veterinary—be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

DEPUTY SPEAKER : I shall now put the Demand to vote. The question is—

" That the Government be granted a sum not exceeding rupees 74,92,400 under Demand XIX—Veterinary."

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER : Is the hon. Member, Sri P. V. Shanmugam withdrawing his cut motion to Demand XXXII?

SRI P. U. SHANMUGAM : No, Sir.

DEPUTY SPEAKER : The question is—

" That the allotment of Rs. 2,76,88,700 under Demand XXXII—Community Development Projects, National Extension Service and Local Development Works—be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

DEPUTY SPEAKER : I shall now put the Demand to vote. The question is—

" That the Government be granted a sum not exceeding rupees 2,76,88,700 under Demand XXXII—Community Development Projects, National Extension Service and Local Development Works."

The Demand was put and carried and the Grant was made.

[19th July 1957

DEPUTY SPEAKER : There is no cut motion to Demand XXXVIII. I shall now put the Demand to vote. The question is—

"That Government be granted a sum not exceeding rupees 25,33,100 under Demand XXXVIII—Capital Outlay on Agriculture."

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER : I now adjourn the House to meet again at 3-10 p.m.

The House then adjourned for lunch.

## After lunch—3-10 p.m.

### (5) DEMAND XXII—HARIJAN UPLIFT.

MR. SPEAKER : We will now take up the next Demand, namely, Demand XXII—Harijan Uplift.

இப்பொழுது 22-வது மான்யக் கோரிக்கை எடுத்துக் கொள்ளப்படும். ஹரிஜன "முன்னேற்றம்" என்ற தலைப்பின் கீழ் அரசாங்கத்திற்கு ரூ. 1,94,17,100 ஒதுக்கப்படவேண்டும் என்று மான்யம் கோரப்படும். இதற்காக நான்கு மணி நேரம் விவாதிப்பதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இன்றைய தினம் இரண்டு மணி நேரமும், நாளை காலை இரண்டு மணி நேரமும் இதுபற்றி விவாதம் நடக்கும்.

SRI A. GOVINDASAMY : சபாநாயகர் அவர்களே, இந்த மான்யக் கோரிக்கை மிக முக்கியமானதாக இருப்பதால், இதை விவாதிப்பதற்கு இன்னும் இரண்டு மணி நேரம் அதிகப்படுத்தும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். மந்திரி அவர்களும் ஒத்துக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

MR. SPEAKER : இம்மான்யத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் நான்கு மணி நேரமும் விவாதம் நடக்கட்டும். ஆரம்பத்திலேயே "நான்கு மணி நேரம் போதாது" என்று சொன்னால், என்ன செய்வது? நான்கு மணி நேரமும் விவாதம் நடக்கட்டும். அதற்குள் கனம் அங்கத்தினர்களுக்குப் பேச அவகாசம் கிடைக்காவிட்டால் அப்பொழுது யோசித்துக் கொள்ளலாம். இப்பொழுது விவாதம் நடக்கட்டும். **Extension of time**-யை நாளைக்குப் பார்க்கலாம்.

* THE HON. SRI P. KAKKAN : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,94,17,1000 under Demand XXII—Harijan Uplift."

மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, சென்னை அரசாங்கம் ஹரிஜன, மக்களுக்காகவும், பின் தங்கிய மக்களுக்காகவும் எடுத்துக் கொண்டுள்ள முக்கியமான முயற்சிகளையும் திட்டங்களையும் பற்றிய முழு விவரத்தை உங்கள் முன்னால் சொல்வதற்கு முன்பு, இந்த சென்னை அரசாங்கம் இந்தியா தேசத்திற்கே "ஹரிஜன மக்களின் முன்னேற்றம்" என்னும் விஷயத்தில் வழிகாட்டியாகஇருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. அரசியல் அமைப்புயின் கீழ் சென்னையில் இருக்கிறது. இவருக்கு உதவியாக ஒரு உதவி அதிகாரி இருக்கிறார். ஜில்லா தலைமை காரியாலயங்களில் ஜில்லா க்ஷேம நல அதிகாரிகள் இவ்வேலையை கவனித்து வருகின்றனர். ஜில்லா கலெக்டர்



19th July 1957] [Sri P. Kakkan]

இந்த இலாகா சம்மந்தமான முழு நிர்வாக பொறுப்பையும் ஏற்று நடத்தி வருகிறார். ஏழு ஜில்லாக்களில் டெபுடி கலெக்டர் அந்தஸ்தில் ஜில்லா க்ஷேம நல அதிகாரிகள் இருக்கின்றனர். மற்ற 5 ஜில்லாக்களில் இவர்கள் தாசில்தார் அந்தஸ்தில் இருக்கின்றனர். இந்த 5 அதிகாரிகளையும் டெபுடி கலெக்டர்கள் அந்தஸ்திற்கு உயர்த்த உத்திதேசிக்கப்பட்டிருக்கிறது.

தீண்டாமையை ஒழிக்கவும், தீண்டாமையைப் பொது விடங்களில் கடைப்பிடிப்பவர்களை தண்டிக்கவும், தீண்டாமைக் குற்றச் சட்டம் 1955-ல் இயற்றப்பட்டது. அந்தச் சட்டம் இந்திய யூனியன் பூராவிலும் அமுலாகிறது. 1947-ம் ஆண்டில் சென்னை அரசாங்கம் இயற்றிய சமூகத் தடைகள் நீக்கல் சட்டத்தில் இந்திய அரசாங்க சட்டத்திற்கு ஏற்ற வகையில் சில பிரிவுகள் மட்டும் நீக்கப்பட்டன தீண்டாமை ஒழிப்பு சட்டத்தின் கீழ் எந்த குற்றம் செய்த போதிலும், அதற்கு சட்டப்படி தண்டனை அளிக்க வாய்ப்பு அளிக்கபட்டிருக்கிறது. அதாவது மற்ற கொடிய குற்றங்கள் செய்தால் எப்படி இந்தியன் பினல் சட்டத்தின்படி தண்டனை அளிக்கப்படுகிறதோ அதே வகையில் தீண்டாமையை கடைப்பிடிக்கும் விஷயத்திலும் கடுந் தண்டனைகள் அளிக்க சட்டம் செய்யப்பட்டிருக்கிறது.

சென்னை ராஜ்யத்தில் உள்ள இந்து ஆலயங்களில் எல்லா வகுப்பைச் சேர்ந்த இந்துக்களும் தாராளமாகச் செல்வதற்கு சென்னை ஆலயப் பிரவேச சட்டம் வழி செய்திருக்கிறது. இந்தச் சட்டப் பிரகாரம் இந்து ஆலயத்திற்குள் பிரவேசிக்கும் எந்த இந்து வகுப்பார்மீதும் யாதொரு விதமான வழக்கும் தொடர முடியாதபடி செய்யப்பட்டிருக்கிறது. ஆலயத்திலுள்ள எந்த புண்ணிய தீர்த்தத்திலும், குட்டை அல்லது ஊற்று அல்லது நீரோடைகளில், ஆலயத்தின் உள்ளே இருந்தபோதிலும் அல்லது சுற்று பிரகாரத்தில் இருந்தபோதிலும், அவற்றில் குளிக்கவோ அல்லது அந்தத் தீர்த்தத்தை உபயோகிக்கவோ, எல்லா இந்துக்களுக்கும் உரிமை உண்டு என்று இந்த சட்டம் அனுமதித்து இருக்கிறது. இதே மாதிரி மலைகள் மீதுள்ள கோவில்களை அணுகவும் அந்த மலைகள் அல்லது குன்றுகள் மீது ஏறிச் செல்லவும் எந்த இந்துவுக்கும் உரிமை உண்டு என்றும் வழி செய்யப்பட்டிருக்கிறது. ஆலயத்தில் தீண்டாமையை அனுசரித்து எந்த ஒரு இந்துவையும் யாராவது தடை செய்தால் அவர்களுக்கு முதல் குற்றமாக இருந்தால் நூறு ரூபாய் வரை அபராதம் விதிக்கலாம். இரண்டாவது அல்லது அதற்குமேற்பட்ட குற்றங்களாக இருந்தால் ஆறு மாத சிறை தண்டனையோ அல்லது ரூபாய் 500 வரை அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்க அதிகாரம் தரப்பட்டிருக்கிறது.

பிற்பட்ட வகுப்பினர்களை முன்னேற்றுவதற்காக அரசாங்கம் எடுத்துள்ள சில முக்கியமான நடவடிக்கைகள் பின் வருமாறு :

ஹரிஜன மக்களுக்கு கல்வி வசதி செய்ய வேண்டுமென்பது அரசாங்கத்திற்கு ஆரம்பத்திலிருந்தே ஒரு முக்கியமான கடமையாக இருந்து வந்திருக்கிறது. தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கும், பழங்குடி மக்களுக்கும் ஆரம்பக் கல்வி முதல் கல்லூரி படிப்பு வரை யாதொரு விதமான பாகுபாடும் இல்லாமல் இலவசமாக கல்வி கற்க வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஹரிஜன மாணவர்களுக்கு, மாணவர் விடுதிகளில் தங்கி படித்தாலும் அல்லது வெளியிலிருந்துகொண்டு படித்தாலும் உபகாரச் சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது. கிராமப் பகுதிகளிலிருந்து வரும் ஹரிஜன மாணவர்களுக்கு அரசாங்கமே மாணவர் விடுதிகளை நடத்தி வருகிறது. தனிப்பட்டவர்கள் நடத்தும் விடுதிகளுக்கும் மான்யங்கள் அளித்து வருகிறது. 1956–57-ம் ஆண்டில் 950க்கு மேற்பட்ட ஹரிஜன நலப் பள்ளிகளை அரசாங்கம் நடத்தி வந்திருக்கிறது. இந்தப் பள்ளிகளில் சுமார் 82,000 மாணவ, மாணவிகள் கல்வி கற்றனர். இப் பள்ளிகளில் படிக்கும் ஹரிஜன மாணவர்களுக்கு இலவசமாக நடுப்பகல் உணவு அளிக்கப்படுகிறது. ஹரிஜன மாணவர்களுக்கும் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்குமாக 230 மான்யம் பெறும் விடுதிகளும் அரசாங்கமே நடத்தும் 24 விடுதிகளும் இருக்கின்றன. 1956–57-ம் ஆண்டிலிருந்து மெட்ரிகுலேஷன் வகுப்பிற்கு மேல் படிக்கும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்கள், பழங்குடி வகுப்பு மாணவர்கள் ஆகியவர்களுக்கு இந்திய அரசாங்கமே உபகாரச் சம்பளங்களை வழங்கி வருகிறது. மேலும் (மேல் வகுப்பிற்குத் தேர்ச்சியடைந்த) பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் 1955–56-ல் அரசாங்கம் வழங்கி வந்த உபகாரச் சம்பளத்தை, 1956–57-ம் ஆண்டிலும்

[Sri P. Kakkan] [19th July 1957

தொடர்ந்து அளிப்பதென்று இந்திய அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. சில விதிகளை அனுசரித்து மற்ற பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் இந்த உபகாரச் சம்பளங்கள் இப்போது வழங்கப்பட்டு வருகின்றன. அதாவது வருமானம் ஓரளவிற்கு குறைந்துள்ள குடும்பத்திய மாணவர்கள், டிப்ளோமா அல்லது சர்டிபிக்கட் தேர்வுகளில் 60 மார்க்குகளுக்குக் குறையாமல் வாங்கியிருந்து, மேற் படிப்பு படிக்க விரும்பினால் அவர்களுக்கு இச் சலுகை கிடைக்கும். அல்லது பட்டப் படிப்பில் 50 மார்க்குகளுக்கு குறையாமல் வாங்கியிருந்து பட்டப் படிப்பிற்கு மேல் படிக்க விரும்பினால் அவர்களுக்கும் இந்த உபகாரச் சம்பளம் வழங்கப்படும். இந்த இரு பிரிவுகளிலும் 5 சதவிகித மார்க்கு குறைவாக வாங்கி இருந்தபோதிலும் மாணவிகளுக்கு இதேமாதிரி சலுகை அளிக்கப்படுகிறது.

சில மாணவர்களுக்கு இந்திய அரசாங்கம் அளிக்கும் உபகாரச் சம்பளம் போதாமல் இருக்கிறது என்று தெரிய வந்திருக்கிறது. இவர்களுக்கு சென்னை அரசாங்கமே மேற்கொண்டு ஆகும் செலவை ஏற்றுக் கொள்ள சம்மதித்து இருக்கிறது. உபகாரச் சம்பளம் வழங்குவதில் சிறிது கால தாமதம் ஏற்படுவதால் மாணவர்களுக்கு ஏற்படும் கஷ்டத்தைப் போக்குவதற்காக, ஒவ்வொரு மாணவனுக்கும் முன் பணமாக ரூ. 200-க்கு அதிகப் படாமல் ஹரிஜன நல இலாகா டைரக்டர் கொடுத்து உதவி, பிறகு உபகாரச் சம்பளம் கொடுக்கும்பொழுது திரும்ப பெற்றுக் கொள்ளும்படி உத்தரவிடப்பட்டிருக்கிறது.

தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் பழங்குடி மாணவர்களுககும் அரசாங்கக் கல்வி நிலையங்களில் 16 சத வீதம் இடம் ஒதுக்க வேண்டும் என்று உத்திரவிடப்பட்டிருக்கிறது. அதே மாதிரி சென்னை கல்வித் துறை விதிகளின்கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் மற்ற பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் 25 சத வீதம் இடம் ஒதுக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டிருக்கிறது. இம்மாதிரி இடம் ஒதுக்குவது அரசாங்கம் மான்யம் பெறும் எல்லா கல்வி நிலையங்களுக்கும் செல்லுபடியாகும். அதாவது, கலை, தொழில்—நுட்பக் கல்லூரிகள், செகண்டிரி, மற்றும் இதர ஆசிரியர்கள் பயிற்சிப் பள்ளிகள் ஆகியவைகளுக்கு இவைகள் செல்லுபடியாகும். இந்த மாதிரி இடம் ஒதுக்கப்பட்டால்தான் அரசாங்க மான்யம் மேற்படி கல்வி நிலையங்களுக்குக் கிடைக்கும் என்று ஒரு கட்டு திட்டம் செய்யப்பட்டிருக்கிறது. 1956–57-ம் ஆண்டு முதற்கொண்டு தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்கள், சென்னை விமான இளப்பில் விமானம் ஓட்டும் பயிற்சி பெற்றாலும், டேராடூனில் உள்ள " சைனிக் " திட்டத்தில் பயிற்சி பெற்றாலும் அவர்களுக்கு விசேஷ உபகாரச் சம்பளங்கள் வழங்கவும் வழி செய்யப்பட்டிருக்கிறது. சென்னை வைத்திய கல்லூரி நடத்தும் பி.டி.எஸ். (பல் வைத்திய பயிற்சிக்கும்) அண்ணாமலை பல்கலைக் கழகம் நடத்தும் எம்.ஒ.எல். பட்டத்திற்கும் இந்த மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்கலாம் என்று அரசாங்கம் அனுமதித்திருக்கிறது.

1956–57-ம் ஆண்டில் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு கல்வி வசதிக்காக ஒதுக்கப்பட்ட தொகையும், 1957–58-ம் ஆண்டில் வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகையும் கீழ் வருமாறு :—

| | 1956–57-ல் செலவினம். | 1957–58-ல் ஒதுக்கப்பட்ட தொகை. |
|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்) | |
| உபகாரச் சம்பள மான்யம் .. .. .. | 11·80 | 25·65 |
| நடுப்பகல் உணவு வழங்குவதற்காக .. .. | 1·93 | 6·41 |
| மாணவர் விடுதி மான்யம் .. .. .. | 14·59 | 14·54 |
| பள்ளிகள், மாணவர் விடுதிகள், ஆகியவற்றின் பராமறிப்பிற்கும் பழுது பார்ப்பதற்குமான பல வகைப்பட்ட செலவுகள் .. .. .. .. .. | 38·76 | 58·32 |
| ஆக மொத்தம் .. | 67·08 | 104·92 |



19th July 1957] [Sri P. Kakkan]

கல்வி வசதிக்கு அடுத்தபடியாக ஹரிஜனங்களுக்கு மனைக்கட்டுகள் வழங்கவும், வீடு கட்டித் தருவதிலும் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது. ஹரிஜனங்களுக்கு மனைக் கட்டுகள் வழங்கவும், ஹரிஜனக் காலனிகளுக்கு புதிய சாலைகள் அமைக்கவும் சுடுகாட்டிற்கு பாதைகள் அமைக்கவும் வேண்டிய நிலங்களை அரசாங்கமே ஆர்ஜிதம் செய்து கொடுத்திருக்கிறது. சொந்த மனைக்கட்டு இல்லாமலும், வாங்க முடியாத நிலையிலும் இருக்கக் கூடிய ஹரிஜனங்களுக்கு மனைக்கட்டுகள் இலவசமாக கொடுக்கப்படுகிறது. மனைக்கட்டுகளுக்கு கிரயம் கொடுக்கக்கூடிய வசதியுள்ளவர்களிடமிருந்து மட்டும் இத்தொகை வசூலிக்கப்படுகிறது. 1956–57-ம் ஆண்டில் ஹரிஜனங்களுக்கு மனைக்கட்டுகள் வழங்கவும் பாதைகள் அமைக்கவும் 6·34 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ரூபாய் 5·48 லட்சம் செலவிடப்பட்டிருக்கிறது. 1957–58-ம் ஆண்டிலும் இதற்காக ரூபாய் 4 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

முதல் தர பஞ்சாயத்துக்களில் வசிக்கும் ஹரிஜனங்களுக்கும் கிராமப் பகுதிகளிலுள்ள ஹரிஜனங்களை போலவே மனைக்கட்டுகள் வழங்கலாம் என்று அரசாங்கம் உத்திரவு பிறப்பித்திருக்கிறது. கிராமங்களிலுள்ள எல்லா தரிசு நிலங்களையும் மதம் மாறிய ஹரிஜனங்கள் உள்பட எல்லா ஹரிஜனங்களுக்கும் சாகுபடி செய்ய வழங்குவதற்காக அரசாங்கம் ஒதுக்கி வைத்திருக்கிறது.

1956–57-ம் ஆண்டில் சுமார் 2,690 மனைக்கட்டுகள் வழங்கப்பட்டன. சுமார் 506·69 எக்கர் நிலங்கள் இதற்காக ஆர்ஜிதம் செய்யப்பட்டன. புறம்போக்கு நிலங்களிலிருந்து சுமார் 1,584 மனைக் கட்டுகள் ஜாரி செய்யப்பட்டன. மேலும் 1956–57-ம் ஆண்டில் சுமார் 4,901·01 எக்கர் புஞ்சை நிலங்கள் சாகுப்படிக்காக ஹரிஜனங்களுக்கு ஜாரி செய்யப்பட்டது. நில ஆர்ஜிதம் செய்யும் வேலை எல்லா நிலைகளிலும் விசேஷமாக கவனிக்கப்படுவதோடு, இந்த விஷயத்தில் எந்த விதமான தாமதமும் ஏற்படக் கூடாது என்று ஜில்லா கலெக்டர்களுக்கு உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஹரிஜனங்களுக்காக நிலம் ஆர்ஜிதம் செய்வதில் எவ்வளவு முன்னேற்றம் கண்டிருக்கிறது என்பதைப் பற்றி கலெக்டர்கள் அவ்வப்போது ரெவினியு போர்ட்டுக்கும், அரசாங்கத்திற்கும் அறிக்கை சமர்ப்பித்து வருகிறார்கள். அவ்வப்பொழுது இந்த விஷயமாக தக்க உத்திரவுகளும் போடப்பட்டு வருகின்றன.

ஹரிஜனங்களுக்கும் பிற்பட்ட வகுப்பினர்களுக்கும் வீட்டு வசதிகள் செய்து தரவேண்டும் என்பது அரசாங்கத்தின் கவலையாய் இருந்துவருகிறது. முதன் முதலாக ஹரிஜனங்களுக்கு காலனிகள் கட்டித் தர வேண்டும் என்ற நோக்கத்தோடு அரசாங்கம் சில திட்டங்களை வகுத்தது. இதற்காக இரண்டாம் ஐந்தாண்டு திட்டத்தின்போது ஒவ்வொரு ஆண்டும் ரூபாய் 15·09 லட்சம் செலவிட வேண்டும் என்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. ஹரிஜனங்களுக்கு 1956–57-ம் ஆண்டில் 2,513 வீடுகள் கட்டித் தருவதற்கு ரூபாய் 13·93 லட்சம் செலவிடப்பட்டிருக்கிறது. மேலும் பழங்குடி மக்கள் பழைய குற்றப் பரம்பரையினர், மற்றும் இதர பிற்பட்ட வகுப்பினர்களுக்கும் வீட்டு வசதி செய்து கொடுப்பதற்காக ரூபாய் 2 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

ஹரிஜனங்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வீட்டிற்கும் ரூபாய் 750 செலவிடுவது என்றும் இதில் கட்டிட சாமான்கள் வாங்குவதற்கு ரூபாய் 550 அரசாங்கமே இலவசமாக கொடுப்பதென்றும், வீட்டின் சொந்தக்காரர் உழைப்பு மூலமாக ரூபாய் 200 அளிக்க வேண்டுமென்றும் வகுக்கப்பட்டுள்ளது. ஹரிஜன மக்களில் பெரும்பாலோர் ஏழைகளாக இருப்பதினாலும், உழைப்பிற்கு வேண்டிய ரூபாய் 200-ஐ உடனடியாகக்கொடுத்து உதவ முடியாது என்ற காரணத்தினாலும் அவர்களுக்கு ரூபாய் 200 வட்டி இல்லாத கடனாக சொந்த பொறுப்பின் மீது கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை அவர்கள் சுலபமான தவணைகளில் திருப்பிக் கொடுக்கலாம். சொந்தப் பொறுப்பு கொடுப்பதிலும் சில ஹரிஜனங்களுக்கு கஷ்டங்கள் இருப்பதாக தெரியவருகிறது. ஆதலால் இந்த கட்டுப்பாட்டையும் எடுத்துவிட்டு அந்த வீட்டின் பேரிலேயே, கடன் கொடுக்கலாம் என்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

ஹரிஜன காலனிகளுக்கு நல்ல சுகாதார வசதிகள் செய்து தரவேண்டும் என்று அரசாங்கம் 1956–57-ம் ஆண்டு முதற் கொண்டே கவனம் செலுத்தி வருகிறது. ஹரிஜன காலனிகளிலிருந்து சுடுகாடுகளுக்கும் மற்ற சாலைகளுக்கும் பாதைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. எங்கெங்கே 20 குடும்பங்கள்

சேர்ந்து ஹரிஜன காலனிகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் ஒரு குடிநீர் கிணறு அமைக்கப்பட வேண்டும் என்றும், இந்த மாதிரி இரண்டாவது ஐந்தாண்டு திட்ட முடிவு காலத்திற்குள் எல்லா இடங்களிலும் அமைக்கப்பட வேண்டும் என்றும், கிராம குடிநீர்த் திட்டத்தின் கீழும் கிராம அபிவிருத்தி திட்டத்தின் கீழும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஹரிஜன காலனிகளுக்கு பொது சுகாதார வசதிகள் செய்வதற்காக 1956–57-ம் ஆண்டில் சுமார் 5 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கின்றது. இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திலும் இதற்காக ஒவ்வொரு ஆண்டும் ரூபாய் 6 லட்சம் செலவிடுவது என்று திட்டமிடப்பட்டிருக்கிறது.

விவசாயத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு அவர்கள் சொந்த நிலம் வைத்திருந்தாலும் அல்லது குத்தகைக்கு எடுத்து பயிரிட்டாலும், உழவு மாடுகள், விவசாயக் கருவிகள், விதைகள் முதலியன வாங்குவதற்கு அரசாங்கம் உதவிகள் அளித்து வருகிறது. உழவு மாடுகள், விவசாயக் கருவிகள், விதைகள், ஆகியவை வாங்குவதற்கு ஒவ்வொரு விவசாயிக்கும் ரூபாய் 250 மான்யமாக கொடுக்கப்படுகிறது. இறைப்புக் கிணறுகள் வெட்டவும் மான்யங்கள் அளிக்கப்படுகின்றன. 1956–57-ம் ஆண்டில் மான்யமாக ரூபாய் 5·88 லட்சமும் மத்திய அரசாங்கம் திட்டங்களின் கீழ் ரூபாய் 6·23 லட்சம் மான்யமாகவும் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதே மாதிரி 1957–58-ம் ஆண்டிலும் மான்யமாக கொடுப்பதற்கு ரூபாய் 9·20 லட்ச ரூபாயும், மத்திய அரசாங்கத் திட்டங்களின் கீழ் மான்யமாக அளிக்க ரூபாய் 8·12 லட்சமும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பணமாகக் கொடுப்பதிலும் பல ஒழுங்கீனங்கள் ஏற்படலாம் என்று கருதப்படுவதால், மான்யங்கள் பலனடையப் போகும் மக்களைச் சேர வேண்டும் என்ற கருத்தோடு, சீட்டு குலுக்குப் போடும் முறையை மேற்கொள்ளலாம் என்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இதன்படி மனு செய்து கொண்டிருப்பவர்களின் பெயர்களை குலுக்கிப் போட்டு யாருக்கு விழுகிறதோ அவருக்கு உழவு மாடுகளை வாங்கி ஹரிஜன நலன் என்ற குறியீடுகள் செய்து அவைகளை வழங்குவது என்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் இப்போது கிராமங்களில் பல தரப்பட்ட குடிசைத் தொழில்களை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் நிதி உதவி செய்வது என்று தீர்மானித்து இருக்கிறது. இதனாலும் ஓய்வு நேரங்களில் பிற்பட்ட வகுப்பினர்களுக்கு வேலைகொடுக்க வழி ஏற்படும். 1956–57-ம் ஆண்டில் கீழ் கண்ட குடிசைத் தொழில்களை எல்லா ஜில்லாக்களிலும் கூட்டுறவு அடிப்படையில் நடத்தும்படி அரசாங்கம் அனுமதித்திருக்கிறது:—

(1) கண்ணாடி வளையல்கள், மணிகள் செய்தல்,

(2) தோல் சாமான்கள் செய்தல்,

(3) நூல் நூற்றல், நெய்தல்,

(4) கைக்குத்தல் அரிசி தயாரித்தல்,

(5) கோழி வளர்ப்பு,

(6) தையல் வேலை,

(7) கொல்லு வேலை,

(8) பாய் முடைதல்.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர்கள், பழங் குற்றப் பாரம்பரையினர் ஆகிய இவர்களிடையே மேற்கண்ட குடிசைத் தொழில்களை பரப்பி அபிவிருத்தி செய்வதற்காக கைத்தொழில் இலாகா டைரக்டர் ஒவ்வொரு ஆண்டும் ரூபாய் 3·77 லட்சம் செலவிடலாம் என்று அரசாங்கம் அனுமதித்திருக்கிறது. இதல்லாமல் சென்னை நகரில் பெரம்பூரிலும், திருவல்லிக்கேணியிலும், வெளியூர்களில் மற்றும் 7 இடங்களிலும் மிதியடி செய்யும் தொழிற் பட்டரைகள் ஆரம்பிப்பதற்காக ரூபாய் 91,000 அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இதனால் மிதியடி தொழிலில் மிகவும் வல்லவர்களான தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தொழில் கருவிகளும் வேலை செய்யும் இடங்களும் கிடைக்க வசதிகள் ஏற்பட்டு, அவர்களுக்கு நல்ல ஊக்கம் அளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



பழங்குடி மக்களுக்கு கொல்லு வேலை, தச்சு வேலை, நூற்றல், நெசவு முதலிய தொழில்களில் தக்கப் பயிற்சியளித்து அவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்னும் கருத்தோடு அரசாங்கம் தனி கவனம் செலுத்தி வருகிறது. இந்த நோக்கத்தோடு இந்த வகுப்பு மாணவர்களுக்கு பயிற்சிகள் அளிப்பதற்காக நீலகிரி ஜில்லா கோத்தகிரியில் ரூபாய் 40,000 செலவில் ஒரு பயிற்சி உற்பத்தி இணைப்பு தொழில் பட்டரை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. மேலும் நீலகிரி ஜில்லாவில் பொறுக்கி எடுக்கப்பட்ட 7 இடங்களில் நூல் நூற்றல், நெசவு, தச்சு வேலை, கொல்லு வேலை, கூடை முடைதல், முதலிய தொழில்களில் பயிற்சியளிக்க ரூபாய் 13,000 செலவில் தொழில் பட்டரைகள் ஆரம்பிக்கப்படும். மதுரை, கோயம்புத்தூர், வட ஆற்காடு, செங்கற்பட்டு, நீலகிரி ஜில்லாகளிலுள்ள பழங்குடிப் பெண்களுக்கு தையல் வேலை, பூ வேலை முதலியவைகளில் பயிற்சி அளிப்பதற்காக 8 பயிற்சி நிலையங்களை 1957–58-ம் ஆண்டில் ரூபாய் 44,000 செலவில் ஏற்படுத்த திட்டமிடப்பட்டிருக்கிறது.

மாஜி குற்ற பரம்பரையினர் குற்றச் செயல்களில் ஈடுபடாமல் இருக்கும் பொருட்டு அவர்களுக்குத் தக்க வேலை வாய்ப்புகள் அளிக்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் கொள்கையாக இருந்து வருகிறது. ஆகவே இக்குடி மக்கள் இளைஞர்களுக்கு குடிசைத் தொழில்களில் பயிற்சியளிக்கத் தக்க இடங்களில் பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்க வேண்டும் என்று அரசாங்கம் திட்டங்கள் போட்டிருக்கின்றது.

1956–57-ம் ஆண்டில் எல்லா ஜில்லாக்களிலும் உள்ள மாஜி குற்ற பரம்பரை மக்களுக்கு தச்சு வேலை, கொல்லு வேலை முதலிய குடிசைத் தொழில்களில் பயிற்சியளிக்க அரசாங்கம் ரூபாய் 19,000 அனுமதித்தது. இந் நிதியைக் கொண்டு நமது ராஜ்யத்திலுள்ள தொழில்கல்வி நிலையங்களில் படித்துவரும் மாஜி குற்ற பரம்பரை இனத்தவர் மாணவர்களுக்கு உபகாரச் சம்பளங்கள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த ஆண்டிலும் இதே மாதிரி உபகார சம்பளங்கள் வழங்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டும் மதுரை "தமிழ் நாடு தொழிற் பள்ளியிலும்" திண்டுக்கல் தொழிற் கல்வி பள்ளியிலும் பயிற்சி பெறும் 200 பிராமலை கள்ளர் வகுப்பு, மற்றும் மாஜி குற்ற பரம்பரை மாணவர்களுக்கு உபகாரச் சம்பளங்கள் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. மேலும் ராமநாதபுரம் ஜில்லாவில் கைக்குத்தல் அரிசி தொழில் ஆரம்பிக்கவும் திட்டமிடப்பட்டிருக்கிறது. இவ் விஷயங்களுக்காக சுமார் ஒரு லட்ச ரூபாய் தனியாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. வட ஆற்காடு, சேலம் ஜில்லாக்களில் மாஜி குற்ற பரம்பரை இனத்தவர்களை கூடை முடையும் தொழிலில் ஈடுபடுத்துவதற்காக தனிப்பட்டவர்களுக்கு மான்யங்கள் வழங்க ரூபாய் 12,000 முன் பணமாகக் கொடுத்து உதவப்படும். மதுரை ஜில்லா கள்ளர் புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ், கோழி வளர்த்தல், தேனீ வளர்த்தல் முதலிய குடிசைத் தொழில்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன. இவைகள் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தின்போது மேலும் அபிவிருத்தி செய்யப்படும். இத்துறையில் ஒவ்வொரு ஆண்டும் ரூபாய் 6,000 செலவிட ஒதுக்கப்பட்டிருக்கிறது.

மேற்கண்ட திட்டங்கள் இல்லாமல், அரசாங்க உதவி பெறும் மற்றும் பிற்பட்ட இனத்தவர்கள் "எலக்டிரிக் ஒயரிங்", கொல்லு வேலை, பொம்மைகள் செய்தல், சிறிய வார்ப்பு வேலைகள், "கியாஸ் வெல்டிங்" முதலிய தொழில் பயிற்சிகள் பெற்று பிற்பாடு அவர்களே அத் தொழில்களை நடத்த முன் வருவார்களானால் அவர்களுக்குத் தக்க கடன் வசதிகள் செய்து கொடுக்கவும் அரசாங்கம் ஒரு திட்டம் வகுத்திருக்கிறது.

தீண்டாமை ஒழிக்கப்படவேண்டும் என்றும், அது எந்த வகையிலும் வழக்கத்தில் இருக்கக்கூடாது என்றும் அரசியல் சட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது. 1938-ம் ஆண்டிலேயே சமூகத் தடைகள் நீக்க சட்டம் இயற்றியும் 1947-ல் ஆலயப் பிரவேச சட்டத்தை இயற்றி எல்லா பொது ஆலயங்களிலும் ஹரிஜனங்கள் தாராளமாகச் செல்லலாம் என்று செய்ததின் மூலமாகவும், சென்னை ராஜ்யமே இந்திய அரசியற் சட்டத்திற்கு ஒரு வழி காட்டியாக அமைந்தது என்று பெருமை கொள்ளலாம். இவைகளோடு 1955-ம் ஆண்டில் இந்திய அரசாங்கம் இயற்றிய தீண்டாமை (குற்றச்) சட்டம் மூலமாக, தீண்டாமை சட்டப்படி தண்டிக்க கூடிய ஒரு குற்றம் என்று செய்யப்பட்டிருக்கிறது.

தீண்டாமை ஒழிப்புப் பிரசாரம் செய்ய அரசாங்கம், சென்னை, கன்யா குமரி தவிர மற்ற ஒவ்வொரு ஜில்லாவிலும் 3 டெபுடி சேவக்குகளையும், 3 உதவியாளர்களையும் நியமித்திருக்கிறது. இவர்கள் கிராமம் கிராமமாகச் சென்று பொதுக் கூட்டங்கள், நாடகங்கள், பஜனைகள் மூலம் தீண்டாமை ஒழிப்பு பிரச்சாரம் நடத்தி வருகின்றனர். மக்கள் மனதில் தீண்டாமை ஒழிய வேண்டும் என்ற எண்ணம் வளரும்படி செய்ய, தீண்டாமையால் ஏற்படும் கொடுமைகளை விவரித்து சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருக்கின்றன. மேலும் தீண்டாமை ஒழிப்பு பிரசாரத்தை சுவரொட்டிகள், துண்டு பிரசுரங்கள், மற்றும் இதர வழிகளில் நடத்தி வரும் ஹரிஜன சேவக் சங்கம் சென்னை தாழ்த்தப்பட்ட வகுப்பினர் லீக் சத்குரு சமரச சங்கம் முதலியவைகளுக்கு அரசாங்கம் பண உதவி செய்து வருகிறது. 1956–57-ம் ஆண்டில் விளம்பரத் துறைக்கென்று ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து ரூபாய் 48,000 செலவு செய்யப்பட்டது. இந்தத் திட்டத்திற்கு அரசாங்கத்தின் அனுமதி பெறுவதில் சிறிது கால தாமதம் ஏற்பட்டதினால் அதிகப்படியாக செலவு செய்ய முடியாமல் போயிற்று. ஆனால் ஐந்தாண்டு திட்ட காலத்தில் ஒவ்வொரு ஆண்டும் ரூபாய் 2 லட்சம் இத்துறையில் செலவிடுவது என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. தீண்டாமையை போக்கவும், ஹரிஜனங்களையும் மற்ற இனத்தவர்களையும் ஒன்றுபடுத்த வேண்டும் என்னும் கருத்துடனும், அரசாங்கம் பல வகைகளில் முயன்று வருகிறது. 1956-57-ம் ஆண்டில் ஹரிஜன மாணவர்களுடன் மற்ற ஜாதி மாணவர்களுக்கும் ஹரிஜன நலப் பள்ளிகளில் பகலுணவு சாப்பிட அனுமதிக்கலாம் என்று வட ஆற்காடு, கோயம்புத்தூர், நீலகிரி, செங்கற்பட்டு, மதுரை, திருச்சி ஆகிய ஜில்லாக்களில் அரசாங்கம் அனுமதித்திருக்கிறது. இத் திட்டத்தை 1958-59-ம் ஆண்டில் மற்ற ஜில்லாக்களிலும் பரப்புவது என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

ஹரிஜன மாணவர்களை தனியாக ஒதுக்கிவைத்தல் கூடாது என்னும் கருத்தோடு, அரசாங்க மான்யம் பெறும் ஹரிஜன மாணவர் விடுதிகளில் 10 சத விகித இடத்தை பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு ஒதுக்கி வைக்க வேண்டும் என்று அரசாங்கம் உத்திரவிட்டுள்ளது. மேலும் அரசாங்கம் நடத்தும் ஹரிஜன மாணவர் விடுதிகளில் கீழ் கண்ட விதத்தில் மாணவர்கள் அனுமதிக்கப்படவேண்டும் என்னும் விதி செய்யப்பட்டிருக்கிறது :—

தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்கள்—75 சத வீதம்
பிற்பட்ட வகுப்பு மாணவர்கள்—15 சத வீதம்.
முற்போக்கு வகுப்பு மாணவர்கள்—10 சத வீதம்.

ஹரிஜனங்களுக்கு புது காலனிகள் கட்டும்போது 10 சத வீதம் வீடுகளை அங்கு குடியிருக்க விரும்பும் மற்ற வகுப்பினர்களுக்கு ஒதுக்கலாம் என்றும் அரசாங்கம் உத்திரவிட்டிருக்கிறது. இப்படி ஒதுக்கப்பட்ட வீடுகளுக்கும், ஹரிஜனங்களுக்குள்ள வீடுகளைப் போலவே எல்லா வசதிகளும் செய்து தரப்படும்.

பொது நிதியிலிருந்து வாங்கப்பட்டு பராமரிக்கப்படுகிற எல்லா சுடுகாடுகளிலும் ஹரி ஜனங்களுக்கும் இடம் அளிக்கப்படவேண்டும் என்று அரசாங்கம் தங்கள் கொள்கையை வகுத்து இருக்கிறது. அதோடு தனிப்பட்டவர்கள் வசமுள்ள சுடுகாடுகளையும் எல்லா வகுப்பினர்களுக்கும் படிப்படியாக திறந்து விடப்பட வேண்டும் என்றும் அரசாங்கம் ஊக்குவித்து வருகிறது. எந்த தனிப்பட்ட வகுப்பாரும் தமது ஏகபோக உரிமைக்காக சுடுகாடுகள் வேண்டும் என்று கோரினால், அவர்களுக்காக பொது நிதியிலிருந்து இனி மேல் நிலம் வாங்க அனுமதிக்கப்பட மாட்டாது. அந்த இனத்தவர் நிலம் வாங்க ஏற்படும் முழு செலவையும் ஏற்றுக் கொண்டாலும் அனுமதிக்கப்பட மாட்டாது. ஆனால் ஹரிஜன நல இலாகா குறிப்பிட்டுள்ள சில வகுப்பினர்களுக்காகமட்டும் இவ் விதியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஹரிஜனங்கள் உபயோகத்திற்கு என்று ஆர்ஜிதம் செய்யப்பட்ட சுடுகாடுகளும், மற்ற இனத்தவர்களுக்கும் இனிமேல் திறந்து விடப்படும். தீண்டாமையை ஒழிப்பதில் மெச்சத்தக்க சேவை செய்துள்ள சமூக ஊழியர்களுக்கும், கிராமத் தலைவர்களுக்கும் அரசாங்கம் தங்கப் பதக்கங்கள் வழங்க தீர்மானித்திருக்கிறது. இது மற்ற சமூக ஊழியர்களுக்கும் ஊக்கம் அளிப்பதாக இருக்கும் என்றும், அவர்கள் தங்கள் சேவையை தொடர்ந்து செய்வார்கள் என்னும்





கருத்துடனும்தான் இத் தீர்மானம் செய்யப்பட்டது. ரூபாய் நூறு மதிப்புள்ள முதல் வகுப்பும், ரூபாய் 50 மதிப்புள்ள இரண்டாம் வகுப்பு தங்கப் பதக்கங்களும் வழங்கப்படும். அதாவது குடிநீர் கிணறுகளை ஹரிஜன மக்கள் உபயோகித்துக் கொள்ள திறந்து விடுவது, ஓட்டல்களில் செல்ல வசதி செய்துகொடுப்பது, ஹரிஜன யுவர்களுக்கு அல்லது யுவதிகளுக்கு மற்ற மேல்வகுப்பு இனத்தவருடன் மணம் முடிக்க ஏற்பாடு செய்தவர்கள் ஆகியோர்களுக்கு முதல் வகுப்பு தங்க பதக்கங்கள் அளிக்கப்படும். ஆலயப் பிரவேசம், ஹரிஜன காலனிகளில் சமூக வேலைகள், முதலிய பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இரண்டாம் வகுப்பு தங்கப் பதக்கங்கள் அளிக்கப்படும். ஒவ்வொரு ஜில்லாவிலும் முதல் வகுப்புத் தங்கப் பதக்கங்கள் இரண்டும், இரண்டாம் வகுப்புத் தங்கப்பதக்கங்கள் ஆறும், ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படும். இவைகளைப் பெறுவோர் விழாக்களிலும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு புனர் வாழ்வு அளிக்க நடத்தப்படும் எல்லா பொது வைபவங்களிலும், தங்கப் பதக்கங்களை அணிந்து கொள்ளலாம்.

அரசாங்க தஸ்தாவேஜிகளிலும், கடிதப் போக்கு வரத்துக்களிலும் "சேரி" என்ற பதம் நீக்கப்பட வேண்டும் என்றும் அதற்குப் பதிலாக "காலனி" அல்லது "விடுதி" என்ற பதங்கள் உபயோகப்படுத்தப்பட வேண்டும் என்றும் அரசாங்கம் உத்திரவு பிறப்பித்திருக்கிறது.

பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் அரசாங்கம் பல கல்விச் சலுகைகளை 1948–49-ம் ஆண்டு தொடங்கி அளித்து வந்திருக்கிறது. இவர்களுக்கு கல்வி நிலையங்களில் அரைச் சம்பள சலுகையும் மாணவர் விடுதிகளில் தங்க மான்யமும் தவிர, கட்டணங்கள் கட்ட நிதி வசதியும் செய்துகொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வகையில் 1948–49-ல் ஒரு லட்ச ரூபாய் செலவிடப்பட்டது, 1956–57-ல் 13 லட்சமாக உயர்ந்திருக்கிறது.

எல்லாக் கல்வி நிலையங்களிலும் ஹரி ஜனங்களுக்கும், பிற்பட்ட வகுப்பினர்களுக்கும் நியாயம் கிடைக்க வேண்டும் என்ற கருத்தோடு அரசாங்கம் சில விதிகளை வகுத்திருக்கிறது. அதன்படி அரசாங்க மான்யம் பெறும் எல்லா கல்வி நிலையங்களும், ஹரிஜனங்களுக்கு 16 சத விகிதமும் பிற்பட்ட வகுப்பினர்களுக்கு 25 சத விகிதமும் இடம் ஒதுக்க வேண்டும் என்று உத்திர விடப்பட்டிருக்கிறது.

ஹரிஜன மாணவர்களுக்கு மாணவர் விடுதிகளில் தங்கவும், சாப்பிடவும் ஏற்படும் செலவை அரசாங்கமே ஏற்றுக் கொள்வதைப்போல, பிற்பட்ட வகுப்பினர் என்று கருதப்படும் சலவைத் தொழிலாளர்களுக்கும், மருத்துவ குலத்தவர்களுக்கும் இச் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. பிற்பட்ட வகுப்பில் சேர்ந்திருக்கும் சில வகுப்பினரை, மிகவும் பிற்பட்ட வகுப்பினர்களாகக் கருதி அவர்களுக்கு தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கு கிடைக்கும் கல்விச் சலுகைகள் கிடைக்க வேண்டும் என்று 1957–58-ம் ஆண்டு முதல் அரசாங்கம் உத்திரவு பிறப்பித்திருக்கிறது.

கனம் சபாநாயகர் அவர்களே, விஷயங்களைப் புள்ளி விவரங்களாக நான் சொல்லப்போனால் கனம் அங்கத்தினர்கள் பேசுவதற்கு நேரம் இருக்காது. அந்த விவரங்களையெல்லாம் கடைசியில் சொல்லுகிறேன். இப்போது இந்த மானிய கோரிக்கையை ஏற்றுக்கொள்ளுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

**Mr. SPEAKER :** கனம் மந்திரி அவர்கள், ஹரிஜன முன்னேற்றத்திற்காக அரசாங்கத்திற்கு ரூ. 1,94,17,100-க்கு மேற்படாத தொகை கொடுக்கவேண்டும் என்று XXII-வது மானிய கோரிக்கையைப் பிரேரேபணை செய்திருக்கிறார்கள்.

எல்லா எதிர்க் கட்சி அங்கத்தினர்களும் சேர்ந்து கனம் அங்கத்தினர் ஸ்ரீமதி சத்தியாவாணிமுத்து அவர்கள் நோட்டீஸ் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரேபணையையே ஆமோதிக்கிறார்களா என்று எல்லா எதிர் கட்சியினரையும் நான் கேட்டிருக்கிறேன். அதை ஆமோதிக்கிறார்கள் என்று நம்புகிறேன். ஆகையால் இப்போது ஸ்ரீமதி சத்தியவாணிமுத்து அவர்களை அந்த வெட்டு பிரேரேபணையை பிரேரேபித்துப் பேசும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

[19th July 1957

DR. SRIMATHI SATHIYAVANIMUTHU : கனம் தலைவர் அவர்களே, I move :

"That the allotment of Rs. 1,94,17,100 under Demand No. XXII—Harijan Uplift be reduced by Rs. 100."

MR. SPEAKER : Cut Motion moved—

"That the allotment of Rs. 1,94,17,100 under Demand No. XXII—Harijan Uplift be reduced by Rs. 100."

The Demand and the Cut Motion are before the House for discussion.

-42 .m. DR. SRIMATHI SATHIYAVANIMUTHU : கனம் தலைவர் அவர்களே, ஹரிஜன முன்னேற்றத்திற்காக ஒரு கோடியே தொண்ணூற்று நான்கு லட்சத்து பதினேழாயிரத்து நூறுரூபாய் ஒதுக்கியிருப்பதாக நமது அமைச்சர் அவர்கள் எடுத்துக்கூறியிருக்கிறார்கள். நான் அந்தத் தொகையைக் குறைக்க வேண்டும் என்பதற்காக வெட்டுப் பிரேரணையைக் கொண்டு வர வில்லை. ஆனால் ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை முழுவதும் முறையான வழியில் செலவழிக்கப்படவேண்டும் என்பதற்காகத்தான் வெட்டுப் பிரே ரணையை வற்புறுத்தி என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும் புகிறேன்.

ஹரிஜன முன்னேற்றத்திற்காக சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகை யைவிட இவ்வாண்டு 60 லட்சம் ரூபாய் அதிகமாக ஒதுக்கியிருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. அதை நான் வரவேற்கிறேன். அப்படி ஒதுக் கப்பட்டிருக்கிற பணம் முழுவதும் ஹரிஜன முன்னேற்றம் என்ற பெயரால் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஹரிஜன் என்ற பெயரையே நாங்கள் ஒத்துக் கொள்ளாவிட்டாலும், சொல்வதற்குக் கூசினாலும், சர்க்காரால் அந்தப் பெயர் கொடுக்கப்பட்டதன் காரணமாகத்தான் நானும் சொன்னேன். குறிப்பாக அந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுடைய முன்னேற்றத்திற்காகவே தான் அந்தப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இந்த நாட்டில் தாழ்த்தப்பட்டவர்களுடைய பிரச்னையும், தீண்டாமை என்கிற பிரச்னையும் நீண்ட நாளாக தீர்க்கமுடியாத நிலைமையில் இருந்து கொண்டு வருகின்றன. "அது ஒரு இனப் பிரச்னை அல்ல. தேசியப் பிரச்னையாகும்" என்று நான் சொன்னாலும், நான் சார்ந்திருக்கிற கட்சி சொன்னாலும் நீங்கள் எதிர்த்தாலும் எதிர்ப்பீர்கள். ஆனால் இந்நாட்டு முடிசூடா மன்னர் என்று உங்களால் பெரிதும் போற்றப்படுகிற மதிப்பிற் குரிய நமது ஸ்ரீ நேரு அவர்களே அப்பிரச்னையை ஒரு தேசியப் பிரச்னை என்று சொல்லியிருக்கிறார்.

இப்பிரச்னை இன்று நேற்று வந்தது அல்ல. 1886-ம் ஆண்டு கல்கத்தாவில் நடந்த இரண்டாவது அகில இந்திய காங்கிரஸ் மகாநாட்டில் தாதாபாய் நவரோஜி அவர்களே "சமுதாய சீர்திருத்தம் வேண்டும், சுதந்திரம் கேட்பதோடு கூட;" என்று கூறியிருக்கிறார்கள். அன்றைய தினம் போட்ட தீர்மானம் தான் ஏறக்குறைய 71 ஆண்டுகளாக காங்கிரஸ் கட்சியின் முக்கியமான திட்டமாக அமைந்து செயல்பட்டு வருகிறது.

ஆனால் இன்றளவும் வெற்றி கிட்டவில்லை. காரணம் அந்தப் பிரச்னையை அடியோடு ஒழிப்பதற்கு காங்கிரஸ் கட்சி அணுகுகின்ற முறையே தவறு. அணுகுகின்ற முறை மாத்திரம் தவறு அல்ல. செல்லுகின்ற பாதையும் மிக மிகத் தவறு. ஆண்டுதோறும் கோடி கோடி பணத்தை ஹரிஜன முன்னேற்றத்திற்காக, தீண்டாமை ஒழிப்புக்காக இந்த அர்சாங்கம் ஒதுக்கி வைத்து செலவு செய்து வருகிறார்கள் என்றாலும் இவர்கள் அணுகு கின்ற முறையே தவறானதால், இவர்கள் செல்லுகின்ற பாதையே தவ றானதால் அந்தப் பணம் முழுவதும் பாழாக்கப்பட்டு வருகிறது என்பதை எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

19th July 1957] [Dr. Srimathi Sathiyavanimuthu]

" ஹரிஜன முன்னேற்றத்திற்காக, தீண்டாமை ஒழிப்புக்காக காங்கிரஸ் சார்பிலே நாங்கள் பல பல திட்டங்களைப் போட்டு வேலை செய்து வருகிறோம். ' சேரி ' என்ற பதத்தையே நீக்க உத்திரவு போட்டுவிட்டோம். சுவர் ஒட்டிகளைப் போட்டு மக்களுக்கு அறிவைப் புகட்டினோம் " என்பதாகவெல்லாம் அமைச்சர் அவர்கள். எடுத்துச் சொன்னார்கள்.

இவர்கள் செய்கின்ற காரியங்கள் எல்லாம் தீண்டாமை ஒழிப்புக்கு, தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்கு வழிகோலுகிறதா என்று பார்த்தால் உண்மையில் வழிகோலவில்லை என்றே சொல்ல வேண்டும். தீண்டாமை ஒழிப்புப் பிரசாரத்திற்காக இவர்கள் சுவரொட்டிகளைப் போட்டார்கள். இது மிகவும் நல்லது தான். ஆனால் போட்ட சுவரொட்டிகள் முழுவதும் ஒட்டப்பட்டனவா என்று பார்த்தால் " ஒட்டப்படவில்லை, அதனால் ஏறக்குறைய பத்தாயிரம் ரூபாய் பாழ்பட்டு இருக்கிறது " என்று ஆடிட் ரிப்போர்ட்டில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

" அப்படிப்பட்ட சுவரொட்டிகள் ஏன் ஒட்டப்படவில்லை ? அதை ஒட்டக் கூடாது என்று யார் தடுத்தார்கள் ? " என்பதற்கு விடை நாங்கள் சொன்னால் அதைச் சிலர் தவறாகப் புரிந்துக்கொள்ளலாம். அந்த ரிப்போர்ட்டிலேயே சொல்லியிருக்கிறார்கள். அதில்—' **As a result of public criticism against the motive of the poster, its display was stopped.'** என்று பொதுப்படையாக இருக்கிறது. நான் கேட்கிறேன் " பப்ளிக் " என்று சொல்லக்கூடிய அந்தப் பொதுமக்கள் யார் ? அந்தச் சுவரொட்டிகளை ஒட்டக்கூடாது என்று அவர்கள் எதற்காக எதிர்த்தார்கள் ? அதனால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதகம் என்ன ? " இதைப்பற்றி நாம் எல்லோரும் சிந்திக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சர்க்கார் செய்கின்ற காரியங்களை எல்லாம் எதிர்க்கட்சியில் இருக்கின்றவர்கள் எதிர்க்கிறார்கள் என்பதாகச் சொல்லப்படுமே! அப்படிப்பட்ட எதிர்க் கட்சியில் இருக்கின்ற நாங்கள் அதை எதிர்த்தோமா ? " சர்க்கார் நல்ல காரியத்தைச் செய்திருக்கிறார்கள். தீண்டாமை ஒழிப்புக்காகப் பாராட் டக்கூடிய நிலையில் நல்ல அறிவு விளக்கம் கொடுக்கும் போஸ்டர்களை ஒட்டச் செய்திருக்கிறார்கள் " என்று எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் எல் லாம் ஆதரிக்கும் போது அதை அவர்கள் கைவிட்டதற்குக் காரணம் என்ன? "எந்தப் பொதுமக்கள் அதை எதிர்த்தார்கள் ? சமூகத்திலுள்ள எந்தத் தரப்பாருக்கு ஆட்சேபகரமாக அது இருந்தது ? அதனால் கைவிட்டு விட்டோம். பத்தாயிரம் பாழ் " என்று சர்க்கார் சொல்வதற்கு, காரணம் என்ன என்று கேட்கிறேன்.

என்றைக்குமே ஒரு நல்ல திட்டத்தைக் கொண்டு வருவதானால் சமுதாயத்தில் இருக்கக்கூடிய ஒரு சிலர்—வைதிகத்தை கைப்பிடியாகப் பிடித்து வைத்து இருப்பவர்கள்—அந்த நல்ல முன்னேற்றத்தைக் காணச் சகியாமல் எதிர்க்கத்தான் எதிர்ப்பார்கள். ஆனால் தீண்டாமை ஒழிப்புக்கு, தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்கு அப்படிப்பட்ட நல்ல திட்டங் கள் அவசியம் தான் என்று கருதி பத்தாயிரம் ரூபாய் செலவில் சுவ ரொட்டிகள் வேறு அச்சிட்டார்கள் என்றால், அந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்படுவதை ஒரு சிலர் எதிர்க்கிறார்கள் என்று சொல்லி கைவிட்டு விட்டால் முன்னேற்றம் ஏற்படுமா? தீண்டாமை ஒழிப்புச் சாத்தியமாகுமா? வருகின்ற எதிர்ப்பை அஞ்சாமல் எதிர்த்து நின்று அந்தக் காரியத்தை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு சர்க்காருக்கு இல்லையா? " யாரோ சிலர் எதிர்த்தார்கள். அதை கைவிட்டோம் பத்தாயிரம் பாழ் " என்னும் போது நாங்கள் பரிதாபப்படுகிறோம். அப்படி எதிர்த்தவர்கள் யார் என்று நாங்கள் சொன்னால் ஆத்திரப்படலாம். அவர்கள் யார் என்று இருபது ஆண்டுகளுக்கு முன்பாகவே இந்த நாட்டின் பிதா சொல்லியிருக்கிறார். அவர்களைப் பார்த்து உத்தமர் காந்தியார் கேட்கிறார். " **Should we not the Hindus wash off our blood-stained hands before we ask the English to wash theirs ?".**

" வெள்ளையர்களைப் பார்த்து உங்கள் கையைக் கழுவிக் கொள்ளுங்கள் என்று சொல்வதற்கு முன்னர் இந்துக்களாகிய நம்முடைய இரத்தம் தோய்ந்த கைகளைக் கழுவிக்கொள்ள வேண்டாமா ? " என்று கேட்கும்

போந்தார். சுதந்திரம் பெற்று பத்து ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. இன்னமுமாவது நாம் நம்முடைய மாசு படிந்த கரங்களை, இரத்தக் கைகளை கழுவிக்கொண்டிருக்கிருேமா ?

தாழ்த்தப்பட்ட மக்களை ஒடுக்கி, தீண்டாதவர்கள் என்று வைத்திருக்கும் நிலைமையை அவர் நம்முடைய கைகளிலே படிந்துள்ள இரத்தக் கறையாக குறிப்பிடுகிருர். அந்த இரத்தக் கறை நமது கைகளிலே தோய்வதற்குக் காரணமாக இருந்தவர்கள்தான் இன்றைக்கும் இந்தச் சுவரொட்டிகளை ஒட்டக்கூடாது என்ற ஆட்சேபணையை எழுப்பியிருப்பார்கள். காந்தியார் அவர்களைத் துரத்தச் சொன்ஞர். காந்தியார் பெரிலே ஆட்சி புரிகின்ற காங்கிரஸ் கட்சியார் அடிக்கடி அவர்களை அழைத்து அடையம் தேடிக் கொள்ளு கிருர்கள். ஸ்ரீ கக்கஞர் உள்ளிட்டு எல்லோருக்கும் சொல்கிறேன். நமது இரத்தக் கைகளைக் கழுவிக்கொள்வதற்கு இடையூராக இருப்பவர்களைக் கண்டு அஞ்சாது காரியங்களைச் செய்யுங்கள் என்பதாக.

அதுமாத்திரம் அல்ல. 1954–55-ம் ஆண்டுக்கு தாழ்த்தப்பட்டவர்களின் முன்னேற்றத்திற்காக, தீண்டாமை ஒழிப்புக்காக ஒதுக்கப்பட்ட தொகை 75 ஆயிரம் என்று தெரிகிறது. ஆனால் அவ்வாண்டு செலவிடப்பட்ட தொகை 17 ஆயிரத்து 775 ரூபாய் நான் ஹரிஜன இலாகா அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. " இவ்வாண்டு ஒரு கோடியே தொண்ணூற்று நான்கு லட்சம் ரூபாய் சொச்சம் ஹரிஜன முன்னேற்றத்திற்காகவும், தீண்டாமை ஒழிப்புக்காகவும் நாங்கள் ஒதுக்கியிருக்கிருேம் " என்று அமைச்சர் சொல்வதைக் கேட்டு உள்ளம் பூரிக்கிருேம். அதை மிக்க மகிழ்ச்சியோடு வரவேற்கிருேம். " ஆனால் 1954–55-ல் 75 ஆயிரம் ரூபாயை ஒதுக்கிஞர்கள். அதில் அவ்வாண்டு 57 ஆயிரம் ரூபாய் சொச்சம் செலவழிக்கவே இல்லையே. அப்படி இவர்கள் ஒதுக்கிய பணத்தை இவ் வாண்டு தான் முழுக்கச் செலவிட்டுவிடுவார்கள் என்று எப்படிச் சொல்ல முடியும் ? " என்று நினைக்கும்போது வேதனை அடைகிருேம். கோடி கோடியாகப் பணத்தை ஒதுக்கிவிட்டால் போதாது. ஒதுக்கப்பட்ட பணத்தை அப்படியே ஹரிஜன முன்னேற்றத்திற்காகவும், தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காகவும், தீண்டாமை ஒழிப்புக்காகவும் செல விடவேண்டும் என்று வேண்டிக்கொள்ளுகிறேன்.

அதே போல இந்த நாட்டிலே சாதி வித்தியாசம் ஒழிக்கப்படவேண்டும். தீண்டாமை என்று ஒதுக்கி வைக்கும் பழக்கம் அழிக்கப்படவேண்டும். மேல் சாதியார் கீழ் சாதியார் என்கிற மனப்பான்மையே வேரோடு களைந் தெறியப்படவேண்டும் என்பதற்காகவே, மேல் சாதியாரும், கீழ் சாதி யாரும் ஒருவரோடு ஒருவர் சமமாகக் கலந்து பழகும் வாய்ப்பை உண்டாக்கிக் கொடுக்க ஒரு கோடியே தொண்ணூற்று இரண்டு ரூபாய் செலவழித்து 606 அரங்கங்கள் கட்டி இருப்பதாக இதே அறிக்கையில் காண்கிருேம். அரசாங்கத்தினுடைய நோக்கம் பொது அரங்கங்களைக் கட்டிக் கொடுத்தால் அதில் எல்லா சாதியினரும் ஒன்று சேர்ந்து பழகி கூட்டங்கள் போட்டு சாதிப் பிரிவினை மனப்பான்மையையே ஒழிக்கக்கூடும். அதனுல் தீண் டாமை ஒழிந்து போகும் என்பதாக இருக்கலாம். இந்த நல்ல நோக்கத் திற்காகவே அந்த அரங்கங்களைக் கட்டியிருக்கலாம். ஆனுல் பரிதாபப் படுகிறேன். குறைகூறவில்லை—பொது அரங்கமாக—சாதிப் பிரிவினையை ஒழிக்கும் அரங்கமாக அவை இன்று நாட்டில் காட்சி அளிக்கவில்லை. கருவாடு காயும் அரங்கமாகத்தான் காட்சி அளிக்கின்றன.

காரணம் அந்த அரங்கங்களை யாரும் நல்ல முறையில் நல்ல் நோக்கத் திற்காகப் பயன்படுத்திக்கொள்வதில்லை. மேல் சாதிக்காரர்களும், கீழ் சாதிக்காரர்களும் சேர்ந்து அங்கே இருப்பதை யாரும் பார்க்க முடியாது. அந்த அரங்கத்தை நடுநாயகமாக வைத்துக்கொண்டு ஹரிஜன தினம் என்று சொல்லி மாதத்தின் இறுதி நாளில் அதிகாரிகளும் சரி சமூக சீர்திருத்த மனப்பான்மை உடையவர்களும் சரி அங்கே கூட்டம் போட வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களையும், உயர்சாதி மக்களையும் அந்த இடத்திற்கு வரவழைக்க வேண்டும். அவர்கள் கலந்து பழக சந்தர்ப்பம் அளிக்க வேண்டும் என்றெல்லாம் அரசாங்கம் ஏற்பாடு செய்திருந்தபோதி லும்கூட, கூட்டங்கள் அங்கே நடக்கின்றன. ஆனுல் தாழ்த்தப்பட்ட மக்கள்



வேருகவும், உயர் ஜாதிக்கார மக்கள் வேருகவும் தனித்தனியாக அமர்ந்து தான் அங்கும் கூட்டங்கள் கொண்டாடப்படுகின்றன. இப்போது அதிக மாகக்கூட கொண்டாடவில்லை.

மேலும் தீண்டாமை ஒழிப்புப் பிரசாரத்திற்காக, ஹரிஜன நல இலாகா விற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் நிதியின் மூலமாகவே உதவி சேவக் என்றும், அவர்களுக்கு உதவியாக வேறு இரண்டு சேவக்குகளும் இப்படி மூன்று நான்கு பேர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்ருர்கள். கிராமங்களுக்குச் சென்று தீண்டாமை ஒழிப்புக்குப் பிரசாரம் செய்ய வேண்டும் என்பது அவர் களுடைய கடமை. அந்த நல்ல முறையை, கொள்கையை நான் வர வேற்கிறேன். ஆனுல் அந்தச் சேவகர்கள் எதைப் பிரசாரம் செய்கிருர்கள் என்று நான் சொல்லவேண்டியது இல்லை. கனம் அமைச்சர் அவர்களே சென்று பார்த்தால் தெரிந்துகொள்வார்கள். " தீண்டாமை ஒழிப்புக்காக காங்கிரஸ் சர்க்கார் கோடி கோடியாகப் பணம் ஒதுக்கி செலவிடுகிருர்கள். ஆகவே அடுத்த தேர்தலிலும் காங்கிரசுக்கே வோட்டுப் போடுங்கள் " என்று வரப்போகிற தேர்தலுக்கும் இவர்கள் இப்போது பிரசாரம் செய்து கொண்டிருக்கிருர்களே தவிர " தீண்டாமை என்பது நம் நாட்டைப் பலவகையிலும் சீர்குலைத்து வருகிறது. உயர்ந்தவன் தாழ்ந் தவன் என்கிறீர்களே, இரண்டு பேருக்கும் என்ன வித்தியாசம் ? அவன் உடம்பில் ஓடும் இரத்தம் சிவப்பு தான். நம் உடம்பிலும் சிவப்பு ரத்தம் தான் ஓடுகிறது. இதில் என்ன வித்தியாசம் இருக்கிறது ?" என்பதாக அவர்களுடைய உணர்ச்சியைத் தட்டி எழுப்பி அடிப்படை உரிமையைப் பெறும் உணர்ச்சியை வளர்க்கும் வகையில் அவர்கள் பேசி யாரும் கேட்க வில்லை. காங்கிரசுக்கு வோட்டுப்போடச் சொல்லிப் பேசிக்கொண்டே அவர்கள் சம்பளம் பெற்று வருகிருர்கள். உதவி சேவக்கும் சரி, அவர்களுக்கு உதவியாக இருக்கிற சேவக்குகளும் சரி தீண்டாமை ஒழிப்புக்கு யாதொரு வகையிலும் பயன்படவில்லை என்று சொல்ல விரும்புகிறேன்.

அதே போல் " சேரிகள் என்ற பெயர் இருக்கக்கூடாது, காலனி என்று ஆக்க வேண்டும் " என்று சட்டம் போடப்பட்டிருப்பதாக—இல்லை, தீர் மானித்திருப்பதாக—அமைச்சர் அவர்கள் சொன்ஞர்கள். என்னுடைய தொகுதியாகிய சென்னை 19-வது வட்டத்தில் இருக்கக்கூடிய காக்ஸ் ரோடு காலனியை " எலக்டொரல் ரோலில் " கூட காக்ஸ் சேரி என்று தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்னமும் கூட அதை காலனி என்று மாற்றி அழைக்கப்படவில்லை. தேர்தல் காலத்தில் கூட நாங்கள் அதைச் சுட்டிக் காட்டியிருக்கிருேம். இன்னும் அது திருத்தப்படவில்லை.

அதே போல் ஹரிஜன இலாகா என்று தனியாக ஒரு இலாகாவை பிரித்துவைத்து, அதன் மூலமாக இத்தனை கோடிப்பணம் செலவழிக்கப் படுகின்றது என்று சொல்லுகிருர்கள். இந்தப் பெயர் வைத்திருப்பதிலேயே மற்றவர்களுக்கு என்ன தோன்றுகிறது என்ருல் " ஹரிஜனங்களுக்கு என்று தனியாக ஒரு இலாகாவையும் ஏற்படுத்தி அவர்களின் முன்னேற் றத்திற்காக பல கோடி ரூபாய்கள் செலவு செய்ய ஒதுக்கியிருக்கிருர்கள், நமக்கு அம்மாதிரி ஒன்றும், செய்யப்படவில்லையே" என்கிற பொருமைக் குத்தான் உள்ளாகி யிருக்கிருர்கள். இப்படி பொருமை உணர்ச்சியை பிறரிடம் வளர்ப்பதற்காக இந்த இலாகா பயன்படுகிறதே தவிர குறிப்பிட்ட படி ஹரிஜன மக்களுக்கு நல்ல முறையில் பயன்படவில்லை என்றே சொல்ல வேண்டும்.

இதற்கு முன்னுல், " லேபர் கமிஷனர் " அவர்கள் ஹரிஜனத்துறை முன்னேற்றத்திற்காகவும், "டி.பி.ஐ." அவர்கள் பிற்பட்ட மக்களின் முன் னேற்றத்திற்காகவும் சலுகைகள் கொடுத்து வந்தனர். இப்போது இந்த இரண்டையும் ஒன்ருக சேர்த்து " ஹரிஜன் அப்லிப்ட் " என்று பெயர் வைத்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், குற்ற பரம்பரையைச் சேர்ந்தவர் களுக்கும், பிற்பட்ட வகுப்பினர்களுக்கும் " எலிஜிபில் கம்யூனிட்டி " " தகுதி உடையவர் " என்று சொல்லி தாழ்த்தப்பட்ட மக்களோடு பல சலுகைகள் காட்டப்படவேண்டும் என்றிருப்பதனுல் ஹரிஜனங்கள் வாழ்க் கையில் அடிதளத்திலேயே இருக்கிருர்கள். இவர்களுக்காக ஒதுக்கப்படு கிற தொகையையும் பிற்பட்ட சமூகங்களைச் சேர்த்து செலவு செய்யப்படுகின்றது.

[Dr. Srimathi Sathiyavanimuthu] [19th July 1957

அப்படி நான் சொல்வதன் மூலம் அந்த பிற்பட்ட வகுப்பினர்கள் " சர்க்கார் எங்களுக்கு என்ன செய்கிறது " என்று ஆத்திரப்படவேண்டாம் என்று அன்போடு கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த வகுப்பினர்களின் முன்னேற்றத்திற்காக ஒதுக்கப்படும் தொகையை தனித் தனி இனமாக பிரித்து வைத்தால் ஓர் அளவுக்கு சரியாக இருக்கும் என்று எண்ணுகிறேன். உண்மையிலேயே இம்மாதிரி செய்வதனால் ஓரளவுக்கு தீண்டாமையை ஒழிக்க முடியும்.

உதாரணமாக ஹரிஜன மாணவன் ஒருவன் பள்ளியில் சேரவேண்டுமானால் ஹரிஜன இலாகா மூலமாக தாழ்த்தப்பட்டவர்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் சலுகையைப் பெறுவதற்கு மிகவும் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. ஹரிஜன் என்று சொன்னால், கிறிஸ்தவ ஹரிஜனா அல்லது ஆதித்திராவிடனா என்று கூட கேட்கப்படுகிறது. ஆதித்திராவிடன், தாழ்த்தப்பட்டவன் என்று நிரூபிக்க " கம்யூனிட்டி சர்டிபிகேட் " வாங்க வேண்டி பல பேர்களிடம் செல்லவேண்டியிருக்கிறது. அப்படியும் உரிய காலத்தில் இவைகள் கிடைப்பதில்லை.

ஸ்காலர்ஷிப் பாரங்கள் கூட பள்ளிக்கூடங்களிலிருந்து ஒரு அணு, அல்லது இரண்டணு கொடுத்து வாங்கவேண்டியிருக்கிறது. சரியான முறையில்கூட அந்த பாரங்கள் கிடைப்பது கிடையாது.

அது மாத்திரம் அல்ல. கவர்ன்மெண்ட் ஆர்டர் ஜி.ஓ. எம்.எஸ். நெ.3763, ஐ.எல்.சி. டிபார்ட்மெண்ட், அவர்களது 8—11—55 உத்தரவு மூலமாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஸ்காலர்ஷிப்பிலிருந்து 200 ரூபாய் உபகாரச் சம்பளம் " அட்வான்ஸ் அமௌண்ட் " என்ற முறையில் முதலிலேயே கொடுக்கப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் இன்று தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இப்படிப்பட்ட உபகாரச் சம்பளம் கிடைக்காமல் அதன் காரணமாக பள்ளியிலும் கூட அனுமதிச் சீட்டு கிடைக்காமல் கஷ்டப்படுகிறவர்கள் எத்தனையோ ஆயிரம் பேர்கள். இவர்களுக்கு என்று இவ்வளவு தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது என்று பத்திரிகைகளில் விளம்பரத்தைப் பார்த்துவிட்டு மக்களும் ஏமார்ந்து, இவர்களும் இடமில்லாமல் ஏமாறவேண்டியிருக்கிறது. ஒரு கோடி ரூபாய் வரை சலுகை கொடுக்கப்படும் என்று இருக்கிறதே தவிர இதை சரியாக பயன்படுத்துவதில்லை என்பதை நிரூபிக்கமுடியும் என்பதை அமைச்சர் அவர்களுக்கு சொல்லிக்கொள்கிறேன்.

Mr. SPEAKER : The hon. Member has already taken fourteen minutes.

Dr. Srimathi SATHIYAVANIMUTHU : ஹாஸ்டலில் இடம் கூட பிற்பட்ட வகுப்பினருக்குத் தான் என்று சொல்லப்படுகிறது. தாழ்த்தப்பட்ட வகுப்பினர்கள் என்றால் அங்கு இடம் கிடைப்பது இல்லை. உதாரணமாக எட்டியப்ப நாயக்கர் ஹாஸ்டலில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இடம் கிடையாது என்கிறார்கள். இந்த ஹாஸ்டலில் பிற்பட்ட வகுப்பினர்களுக்குத் தான் இடம் கிடைக்கிறது என்று சொல்லும் போது இதைப் புகார் என்ற முறையில் எண்ணாமல் ஆராய்ச்சி செய்து பார்க்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

(The Speaker sounded the gong and the Member resumed her seat.)

Sri T. MANAVALAN : கனம் சபா நாயகர் அவர்களே, ஹரிஜன நலனுக்காகவும், பிற்பட்ட வகுப்பினர்கள் நலனுக்காகவும் கொண்டு வரப்பட்ட இந்த மான்யக் கோரிக்கையை முழு மனதுடன் ஆதரித்து சில வார்த்தைகளைப் பேச விரும்புகிறேன். ஹரிஜன முன்னேற்றத்திற்காகவும், பிற்பட்ட வகுப்பினர்களின் முன்னேற்றத்திற்காகவும், குறிப்பாக அவர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காகவும், கல்வி வசதிகளை அளிக்கவும், தீண்டாமையை ஒழிக்கவும் அரசாங்கம் பல சட்ட திட்டங்களை ஏற்படுத்தி பாடுபட்டு வந்திருக்கிறது. இதை யாரும் மறுக்க முடியாது. குறிப்பாக அரசாங்கம் கல்வி வசதிக்காக செய்த உதவியை மறுக்க முடியாது. இதற்கு ஹரிஜன மாணவர்கள் என்றென்றைக்கும் நன்றி செலுத்த



19th July 1957] [Sri T. Manavalan]

கடமைப்பட்டிருக்கிறார்கள். இப்படி படிப்பு வசதி செய்து கொடுத்ததன் மூலமாக பல கல்லூரிகளில் ஹரிஜன மாணவர்கள் படித்து " பி. ஏ., எம். ஏ." போன்ற பட்டங்களைப் பெற்று, எஞ்சினியர்களாகவும், டாக்டர்களாகவும் இருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. எனக்கு முன் பேசிய ஸ்ரீமதி சத்தியவாணிமுத்து அம்மையார் கூட இதை மறுக்க முடியாது. பல கல்லூரிகளில் 30 அல்லது 40 ஹரிஜன மாணவர்கள் படிப்பதைப் பார்க்கும் போது நாம் பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

அதே போல கிராமங்களில் இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு கடன் வசதிகளைக் கொடுத்து மாடுகள் வாங்கவும், கிணறுகள் வெட்டவும், அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. குறிப்பாக, சென்ற வருஷம், மத்திய சர்க்கார், என்னுடைய ஜில்லாவாகிய வட ஆற்காட்டிலே இருக்கக்கூடிய ஏழை ஹரிஜனங்களுக்கு மாடுகள் வாங்கி விவசாயம் செய்வதற்கு ஒவ்வொரு நபருக்கும் சுமார் 250 ரூபாய் கொடுக்க 1,25,000 ரூபாய் ஒதுக்கினார்கள். இதன் மூலமாக ஒவ்வொரு தாலூகாவிலும் சுமார் 35 ஏழை ஹரிஜனங்களுக்கு உதவி செய்து, அவர்கள் பயனடையும்படி செய்திருக்கிறார்கள். இதை நான் மிகவும் பாராட்டுகிறேன். கைத்தொழில் தெரியும் ஹரிஜனங்களுக்கு உதவவேண்டுமென்று அரசாங்கம் உணர்ந்து அவர்களுக்கு வேண்டிய கருவிகளையும் அளித்து வருகிறார்கள். அவர்களின் முன்னேற்றத்திற்காக ஒவ்வொருவருக்கும் சுமார் 200 அல்லது 300 ரூபாய் பெறுமானமுள்ள கருவிகளை வாங்கிக்கொடுக்கிறார்கள். தையல் வேலை தெரிந்தவர்களுக்கு, தையல் மிஷின் வாங்கிக்கொடுக்கிறார்கள். கருமான் வேலை செய்கிறவர்களுக்கு, அதற்கு வேண்டிய சாமான்களை வாங்கிக் கொடுக்கிறார்கள். தச்சு வேலை செய்கிறவர்களுக்கு அவர்களுக்கு வேண்டிய சாதனங்களை வாங்கிக் கொடுக்கிறார்கள். இந்த உதவியை அளித்ததற்கு அரசாங்கத்தை நான் மிகவும் பாராட்டுகிறேன். நம் கிராமங்களிலும் ஹரிஜனங்கள் மிகவும் பிற்போக்கான நிலைமையில் இருக்கிறபடியால், நம் அரசாங்கம் செய்யக்கூடிய வேலைகளை சரிவர தெரிந்து கொள்ள முடிவதில்லை. இதை எதிர் கட்சிக்காரர்கள் பயன்படுத்திக் கொண்டு அரசாங்கத்திற்கு எதிராக பொய்ப் பிரசாரம் செய்து கொண்டு...

Sri A. GOVINDASAMY : " பாயிண்ட் ஆப் ஆர்டர் ", கனம் அங்கத்தினர் " பொய் பிரசாரம் " என்று சொல்வது . . . .

Mr. SPEAKER : பொய்பிரசாரம் என்று சொல்லக்கூடாதுதான். எல்லா அங்கத்தினர்களும் அப்படி சொல்லி சொல்லி பழக்கத்தில் வந்துவிட்டது. அதை உடனே நிவர்த்திப்பது கஷ்டம் என்று தான் நினைக்கிறேன். தயவு செய்து " பொய் பிரசாரம் " என்று சொல்ல வேண்டாம்.

Sri T. MANAVALAN: எதிர் கட்சிக்காரர்கள் தவறாக பிரசாரம் செய்து அவர்களிடையே குழப்பத்தை உண்டு பண்ணுகிறார்கள். குறிப்பாக தேர்தல் காலத்தில் இவர்கள் செய்கின்ற பிரசாரம் மிகவும் கேவலமாக இருக்கிறது. " நாங்கள் மாடு வாங்கிக் கொடுக்கிறோம், ஐந்து ஏகரா நிலம் கொடுக்கிறோம் " என்றெல்லாம் தவறான முறையில் பிரசாரம் செய்து கிராம மக்களை ஏமாற்றப் பார்க்கின்றனர். நம் அரசாங்கம் ஹரிஜனங்களின் முன்னேற்றத்திற்காக வகுக்கப்பட்ட திட்டங்கள் எல்லாவற்றையும், கல்வியறிவு இல்லாத கிராம மக்கள் நன்றாக தெரிந்துக்கொள்ளுவதற்கு, இன்னும் தீவிரமாக பிரசாரம் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை கனம் அமைச்சர் செய்ய வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்பொழுது இருக்கிற " டெப்யூடி சேவக்குகள் " போதாது. ஒவ்வொரு ஜில்லாவிலும் " டெப்யூடி சேவக்குகள் " ஏற்படுத்தி நமது அரசாங்கம் ஹரிஜனங்களுக்கு என்ன செய்கிறது, ஹரிஜனங்களுக்கு எவ்வாறு உபயோகப்படுகிறது என்று ஹரிஜன மக்கள் தெரிந்துகொள்ளும்படியாக பிரசாரம் செய்தால்தான், அவர்களும் இந்த விவரங்களைத் தெரிந்துகொண்டு முன்னேறுவார்கள்.

[illegible]போல, வீட்டு மனைகள் வழங்குகின்ற விஷயத்திலே அரசாங்கம் [illegible]வும் சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். எங்களுடைய தாலூகா[illegible] வில் அதிகமாக வீட்டு மனைகளை கொடுத்து உதவி செய்திருக்கிறார்கள்.

[Sri T. Manavalan] [19th July 1957

அதுமாத்திரமல்ல. கனம் மந்திரி அவர்கள் அறிக்கை படிக்கும்பொழுது கூட்டுறவு முறையிலே அவர்களுக்கு குடிசைத் தொழிலை அமைத்துக் கொடுப்பதற்கு யோசனை இருக்கிறது என்று சொன்னார்கள். அம்மாதிரி குடிசைத் தொழில்களை கிராமங்களில் ஏற்படுத்தி அவர்களுக்கு உதவி செய்வார்களானால், ஹரிஜனங்கள் அந்த உதவியைப் பெற்று பொருளாதாரத் துறையிலே முற்போக்கு அடைவதற்கு ஒரு நல்ல வாய்ப்பு இருக்கும்.

வட ஆற்காடு ஜில்லாவில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக ஹரிஜனங்கள் பெரும்பாலும் செய்வது தோல் பதனிடும் தொழில். இது என்னுடைய ஜில்லாவில் பெரிய லாபகரமாக இருக்கிற ஒரு தொழில். அந்தத் தொழிலை செய்யும் ஹரிஜனங்கள் மிகவும் கஷ்ட நிலைமையில் இருக்கிறார்கள். அந்தத் தோல் வியாபாரத்தை நடத்தும் முதலாளிகள் அவர்களுக்கு வேண்டிய வீட்டு வசதிகளைக் கொடுத்து நல்ல ஊதியத்தையும் கொடுத்து உதவி செய்வார்களானால், அவர்களுடைய முன்னேற்றத்திற்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் ஏற்படும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தோல் பதனிடும் தொழில் அதிகமாக எங்கள் ஜில்லாவிலே இருப்பதனால் கூட்டுறவு முறையிலே உரு தொழிற்சாலையை ஏற்படுத்தினால் அவர்கள் தாங்களாகவே அந்தத் தொழிலை செய்து, வருகின்ற லாபத்தை அவர்களே அடைவார்கள் என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஜில்லாவிலுள்ள "வெல்பேர் ஆபீசர்" சரிவர நடப்பது கிடையாது. ஒவ்வொரு மாதமும் 30-ம் தேதி காந்தி சிரார்த்த தினமாக நினைத்து ஹரிஜன தின விழா கொண்டாட வேண்டுமென்று அரசாங்க உத்தரவு இருக்கிறது. இந்த உத்தரவு எங்கள் ஜில்லாவில் சரிவர அமுல் செய்யப்படவில்லை. ஹரிஜன தின விழாக்கள் கண்டிப்பாக கொண்டாடப்பட வேண்டுமென்றும், அதிகாரிகள் இதில் மிகவும் அக்கரை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் அமைச்சர் அவர்கள் உடனே உத்தரவு போட்டு அதைத் தீவிரமாக நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

உபாத்தியாயர்களுக்கு சம்பளம் மிகவும் தாமதித்து கிடைக்கிறது. அவர்களுக்கு காலாகாலத்தில் ஊதியம் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதே போல வீட்டு மனைகள் வழங்குவதிலும் மிகவும் தாமதம் ஏற்படுகிறது. ஒரு கிராமத்தில் வீட்டு மனைகள் வழங்குவதற்கு 2, 3 வருஷங்கள் ஆகின்றன. அதிலே பல சிக்கல்கள் இருப்பதாக அதிகாரிகள் கூறுகின்றனர். ஆகவே இதை வேறு முறையிலே மாற்றி சீக்கிரத்திலே ஹரிஜன மக்களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

**Dr. Srimathi SATHIYAVANIMUTHU : On a point of information** தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் பேசும்பொழுது ஏதோ நாங்கள் தவறுதலாகவும் பித்தலாட்டமாகவும் பிரசாரம் செய்வதாகச் சொல்லுகிறார். வெளியே இருந்து பேசினால் அவர்கள் அம்மாதிரி சொல்லலாம். ஆனால் சட்ட மன்றத்திலே சர்க்கார் தருகிற புள்ளிவிவரங்களை எடுத்துக்காட்டி பேசுகிறோம். அன்றுகூட அமைச்சர் கக்கன் அவர்கள் தவறான புள்ளிவிவரத்தை கொடுத்துவிட்டு, எழுதியவன் ஏட்டைக்கெடுத்ததுபோல, ஒத்துக்கொண்டார். அரசினர் பல துறை மூலமாக கொடுக்கின்ற நிர்வாக அறிக்கைகளையும், ஹரிஜன முன்னேற்றம் சம்பந்தமாக அரசினர் செய்தி இலாகாவினால் வெளியிடப்பட்ட புத்தகங்களையும் வைத்துக்கொண்டு பேசுகிறோம். ஆகையால் பொய் பிரசாரம் என்று சொல்லிவிடவேண்டாம். புத்தகங்களிலிருந்து விவரங்களை எடுத்துக்காட்ட நேரமில்லை. வெளியில் இருந்தால் இப்படிப்பட்ட தவறான பழியை எங்கள் மீது சுமத்துகிறார்கள் என்ற காரணத்தினால் இன்று சட்ட மன்றத்தில் 15 பேர்களாக நாங்கள் இங்கு அமர்ந்து, நேராக புள்ளிவிவரங்களை எடுத்துக் காட்டி பேசுகிறோம். அப்படிச் செய்தும்கூட, முழு பூசணிக்காயை சோற்றில் மறைத்தால், நான் என்ன செய்வேன், அறியேன் பராபரமே என்று சொல்லி அமர்கின்றேன்.



19th July 1957]

**Mr. SPEAKER** : இது Point of Information அல்ல, Personal Explanation.

**Sri M. JAGANNATHAN**: Point of Order, தலைவர் அவர்களே, இந்த சபையிலே "பொய் பிரசாரம்" என்ற வார்த்தை அடிக்கடி உபயோகப்படுத்தப்படுவது சாதாரண வழக்கத்தில் வந்து விட்டது என்றும், ஆகவே அதை அனுமதிக்கலாம் என்று தலைவர்கள் குறிப்பிட்டார்கள் என்று நினைக்கிறேன். இனியாவது அந்த "பொய் பிரசாரம்" என்ற வார்த்தையை, சாதாரணமாக அது பழக்கத்தில் வந்திருப்பதன் காரணத்தினாலே, அனுமதிக்கலாம் என்று கனம் சபாநாயகர் உத்தரவு இடுவார்களா ?

**Mr. SPEAKER** : சபையின் கௌரவத்தைக் குறைக்கும் எந்த வார்த்தையையும் உபயோகிக்கக்கூடாது. பொய் என்று சொல்லுவதினால் மனதில் சபையில் கௌரவம் குறைந்துவிடும் என்று நினைத்தால் அதை உபயோகிக்கக்கூடாது, அவ்வாறு சொன்னால் சபையின் கௌரவம் குறையாது என்று நினைத்தால், அப்பழக்கத்தை சீக்கிரமாக மாற்றிவிட முடியாது. பொய் பிரசாரம் என்ற வார்த்தையை அங்கத்தினர்கள் மறந்துவிட்டால் நன்றாக இருக்கும். முன்பு சொல்லியது போல் பழக்கத்தில் வந்த வார்த்தையை மறப்பது ரொம்பவும் கஷ்டம் தான். இருந்தாலும் ஒரு மாதத்திற்குள்ளாவது மறந்துவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். (சிரிப்பு).

*** Sri M. K. MARIAPPAN** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஹரிஜன மான்யத்தை வரவேற்று சிறிது நேரம் பேச ஆசைப்படுகிறேன். எல்லா வகைகளிலும் ஹரிஜனங்களுக்கு சலுகை கொடுக்கப்பட்டிருப்பது போல, இந்த ஹரிஜன மான்யத்தில் பேசும் தாழ்த்தப்பட்ட வகுப்பினரை சேர்ந்த அங்கத்தினர்களாகிய எனக்கும், ஏனைய மெம்பர்களுக்கும் சிறிது நேரம் அதிகமாகப் பேசுவதற்கு அவகாசம் கொடுக்கவேண்டுமென்று சட்ட மன்ற தலைவர் அவர்களையும், மற்ற அங்கத்தினர்களையும் மிகவும் வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனென்றால், நாதியற்ற சமுதாயமான தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் யாரிடம் போய் எங்களுடைய குறைகளைச் சொல்லுவோம் என்று ஏங்கிக் கிடக்கின்ற நேரத்திலே, நமது உலகம் போற்றும் உத்தமர் காந்திஜி அரசியல் சட்டத்திலே எங்களுக்கு ஒரு இடம் வகுத்து, பாராளு மன்றம், சட்ட மன்றங்கள், நகர சபைகள், பஞ்சாயத்து போர்டுகள் முதலிய பல துறைகளிலும் நாங்கள் அங்கத்தினர்களாக வருவதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக்கொடுத்திருக்கிறார். அவர் கொடுத்த வாக்குறுதியின் பேரில் பல அறிஞர்கள் கூடி தாழ்த்தப்பட்ட மக்களுடைய நலன்களுக்காக சட்டங்களை வகுத்து, திட்டங்களை தீட்டுகிறார்கள். அந்த முறையில் நாங்கள் அனைவரும் இங்கு வந்து அமர்ந்திருக்கிறோம். இந்த இடத்திலாவது எங்களுடைய சமூக மக்களுடைய குறைபாட்டை எடுத்துச் சொல்லி மன நிம்மதி அடையவில்லை என்றால், வேறு எந்த இடத்தில்தான் நாங்கள் சொல்லமுடியும் ? ஆகவேதான், சிறிது நேரம் எங்களுக்கு அதிகமாகக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படிக் கொடுத்தால், அது மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

சென்ற ஆண்டை விட இந்த வருஷத்தில் ஹரிஜன மான்யத்திற்கு அதிகமாக பணம் ஒதுக்கியிருப்பதை நான் வரவேற்கிறேன். ஆனால்—ஆனால் என்றால் தப்பாக நினைத்துக்கொள்ளக்கூடாது—இருப்பினும், ஹரிஜனங்களுக்கு நல்ல முறையில் பயன்படக்கூடிய அளவில் வசதிகளை செய்யவேண்டுமென்பது என்னுடைய நோக்கம். அரசாங்க சட்ட மன்றத்தில் நாம் உட்கார்ந்து சட்டத்தை இயற்றி அந்த சட்டத்தை அதிகாரிகள் கையில் கொடுத்து மக்களிடையே பரிபாலனம் செய்யச் சொல்லுகிறோமே தவிர, அதை நல்ல வகையில் அமுல் நடத்துகிறார்களா, மக்களுடைய நலன்கள் பாதுகாக்கப்படுகிறதா என்பதை நாம் ஒவ்வொருவரும் பார்க்க முடிவதில்லை. அது அதிகாரிகளுடைய பொறுப்பாக இருக்கிறது. இந்த சட்ட மன்றத்தை எப்படி அழகான கம்பங்களும், தூண்களும் தாங்கிக்கொண்டிருக்கின்றனவோ, அதுபோன்று நாம் நம்முடைய அரசியலை

[Sri M. K. Mariappan] [19th July 1957

நிலைநாட்டி, வானளாவிய மேல் நாடுகளில் நமது புகழ் ஓங்கச் செய்ய வேண்டும். மக்களுக்கு நன்மை பயக்கும்படியான முறையில் ஆட்சி முறையை திருத்தி அமைத்து அதிகாரிகள் திறமையுடன் நடந்துகொள்ளும்படிச் செய்தால்தான் நம்முடைய சட்ட மன்றத்திற்கும், நாட்டிற்கும் புகழ் உண்டாகும். அது இல்லையானால் எத்தனை சட்டங்களை தீட்டி பத்திரிகைகளில், காகிதங்களில் விளம்பரம் செய்து இந்த சட்டங்களை எல்லாம் அதிகாரிகளின் கையில் கொடுத்துவிட்டாலும் அது முடியாத காரியம். ஆகவே, அதிகாரிகள் நாட்டின் முன்னேற்றத்திற்காகவும் நாட்டு மக்களுடைய நல்வாழ்வுக்காகவும் அவர்கள் ஒத்துழைத்தால் தான் நாடும், நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் சுபிட்சமாக வாழ முடியும். அதோடு நம் பத்திரிகை ஆசிரியர்களும் ஹரிஜன மக்களின் பேரில் கருணை கொண்டு, ஏதோ மற்றவர்கள் ஒன்றிரண்டு பேசினாலும், கூடுதலாக ஒன்றிரண்டு சேர்த்து எழுதுவதை போல் இல்லாவிட்டாலும், தாழ்த்தப்பட்ட மக்களுடைய குறைகளை அப்படியே நாட்டு மக்கள் அனைவரும் அறியும்படி பத்திரிகைகளில் பத்திரிகை தர்மத்துக்கு குறையாமல் எழுதி அறியும்படி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அடுத்தப்படியாக ஹரிஜனங்களுக்கு எவ்வளவோ குறைகள் இருக்கின்றன. ஆனால் கடிகாரத்தைப்பார்த்தால் அச்சப்பட வேண்டியதாய் இருக்கிறது. சபை தலைவர்கள் கொஞ்சம் நேரம் கூடுதலாக தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அடுத்ததாக ஹரிஜனங்களின் குறைகளை கவனிப்பதற்கு இருக்கக்கூடிய அதிகாரிகளை நல்ல முறையில் நியமிக்க வேண்டும். ஹரிஜன மக்களுக்கு வேண்டி ஹரிஜன வெல்பேயர் டிபார்ட்மெண்ட் ஏற்படுத்தி அதிகாரிகளையும் நியமித்திருக்கிறார்கள். அந்த அதிகாரிகள் சர்க்காருடைய சட்டப்படி நடப்பதில்லை. ஏனென்றால் ஆட்டுக்குட்டிக்கு, ஓநாய் காவல் இருப்பது மாதிரி இருக்கிறது. அந்த முறையில் இருக்கக்கூடிய பாதுகாப்பாளர்கள் கூடாது என்பது தான் என்னுடைய அபிப்பிராயம். அதோடு ஹரிஜன மக்களுக்கு இருக்கக்கூடிய குறைகளில், அதாவது சென்ற வாரம் என்னுடைய சேலம் நகருக்கு சென்றபோது, அதாவது 13-ம் தேதி போனபோது ஸ்காலர்ஷிப்புக்காக பாரம் கேட்டபோது 15-ம் தேதிதான் வரும் என்று சொன்னார்கள். இந்த ஸ்காலர்ஷிப் பாரம் கொடுக்க வேண்டிய கடைசி தேதி 15 என்றும் தெரிந்தது. இதனால் பலர் கொடுக்க முடியவில்லை. ஆதலால் இதை 30-ம் தேதி வரை ஸ்காலர்ஷிப் பாரம் பெறுவதற்காக அதிகப்படுத்திக்கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு இந்த மாதிரி தாமதம் இல்லாமல் பாரங்கள் உடனுக்குடன் அந்த குறிப்பிட்ட தேதிக்கு முன்னால் அந்த ஸ்காலர்ஷிப் பாரங்கள் அந்தந்த வட்டார பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பிவைப்பதற்கு அந்தந்த அதிகாரிகள் வேண்டிய உத்தரவுகள் பிறப்பிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதற்காக சம்பந்தப்பட்ட டிபார்ட்மெண்டுகளுக்கு எச்சரிக்கை செய்ய வேண்டுமென்பது என்னுடைய கோரிக்கை. அடுத்தப்படியாக ஹரிஜன வெல்பேர் டிப்பார்ட்மெண்டில் அதிகாரிகளை நியமிப்பதில் நியமிக்கப்படுகிற அதிகாரிகள் தாழ்த்தப்பட்டவர்களில் உள்ள அதிகாரிகளாய் இருக்கவேண்டும். அப்படியிருந்தால்தான் நல்லது என்று நினைக்கிறேன். மற்றவர்களை நியமிப்பதினால் இந்த சமுதாயத்திற்கு, இந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேண்டிய காரியங்களை இவர்கள் செய்து கொடுக்காமல் இருக்கிறார்கள். ஒன்றிரண்டு பேர்கள் தான் உண்மையாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேண்டிய வேலை செய்து வருகிறார்கள். அதிலும் தாழ்த்தப்பட்ட மக்களின் நிலையை அறிந்துகொண்ட அதிகாரிகள் தான் ஏதாவது செய்துகொடுக்க முடியும். தாழ்த்தப்பட்டவர்களுடைய நிலையை அறியாதவர்களாக இருந்தால் அது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆபத்தாகவே முடியும். ஆகவே தாழ்த்தப்பட்ட மக்களைதான் அதிகாரிகளாக நியமிக்க வேண்டும், என்பது தான் என்னுடைய குறிக்கோள்.

(The Speaker sounded the gong and the Member resumed his seat).

SRI T. VELUCHAMI : கனம் சபாநாயகர் அவர்களே நான் இந்த வெட்டுப் பிரேரணையை ஆதரிக்கிறேன். கனம் மந்திரி அவர்கள் ஹரிஜன மக்கள், மாஜி குற்றபரம்பரையைச் சார்ந்தவர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் முதலியவர்களுடைய முன்னேற்றத்துக்காக இவ்வாண்டிலே புதிய பல திட்டங்களை தீட்டி யிருப்பதாகச் சொன்னார்கள். அதுபற்றி நாம் மிகவும்



19th July 1957] [Sri T. Veluchami]

பெருமைப் படவேண்டியதே. ஹிந்து ஹரிஜனங்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த சலுகைகள் இந்த ஆண்டில் கிருஸ்துவ ஹரிஜனங்களுக்கும் விஸ்தரிக்கபட்டிருக்கின்றன. ஆனால் அதேபோல் மாஜி குற்றப் பரம்பரையை சார்ந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த சலுகைகள் கிருஸ்துவ மாஜி குற்றப் பரம்பரையினருக்கு விஸ்தரிக்கப் படவில்லை என்பதை வருத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். கிருஸ்துவ மாஜி குற்றப் பரம்பரையைச் சார்ந்த மக்கள் பொருளாதாரத் துறையிலோ அல்லது கல்வித் துறையிலோ ஹிந்து மாஜி குற்றப் பரம்பரை மக்களை விட மிகவும் முன்னேற்றகரமான நிலையில் சமுதாயத்தில் இருக்கிறார்கள் என்று யாரும் சொல்ல முடியாது. ஆகவே அவர்களுக்கு நியாயமான முறையில் அந்த சலுகைகள் விஸ்தரிக்கப் படவேண்டும் என்று நியாய உணர்ச்சி உள்ள கனம் மந்திரி அவர்களைக் கேட்டுகொள்கிறேன். சமூகத்தில் தாழ்த்தப்பட்ட மக்களை பிற மக்கள் தாழ்த்தி மதிக்கிறார்கள் என்றால் அதற்கு மூல காரணம் என்ன என்பதை நாம் ஆராயவேண்டும். பொருளாதாரத் துறையில் அவர்கள் மிகவும் மோசமான நிலைமையில் யிருப்பதும் அன்றாடப் பிழைப்புக்கு அடுத்த மக்களை எதிர்பார்க்கக்கூடிய நிலையில் இந்த தாழ்த்தப்பட்ட மக்கள் எளிமையான நிலைமையில் இருப்பதினால்தான் அவர்கள் தாழ்த்தி மதிக்கப் படுகிறார்கள். ஆகவே இவர்கள் தாழ்த்தி மதிக்கப் படுகிற நிலைமையை மாற்ற வேண்டுமானால், உயர்வாகக் கருதப்பட வேண்டுமானால் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுதான் சரியான பரிகாரமாகும். அவர்களிடம் வேலை இல்லா திண்டாட்டம் இல்லாத நிலைமையில் அவர்கள் பிழைப்பதற்கு வழி, வகை செய்து கொடுக்க வேண்டும். இதற்கு சர்க்காருக்கு தனியாக அதிக செலவு ஏற்படாத நிலையில் வழி செய்து கொடுக்கலாம். கொள்கை அளவில் இதற்கு ஒரு மாற்றம் செய்தால் போதுமானது. அதாவது இப்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கும் கிண்டி, ஈரோடு போன்ற இடங்களில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிற தீப்பெட்டி தொழிற்சாலைகள், இன்டஸ்டிரியல் எஸ்டேட் போன்ற தொழிற்சாலைகள் மாஜி குற்ற பரம்பரையைச் சேர்ந்தவர்களும், ஹரிஜனங்களும் அதிகமாக இருக்ககூடிய பிராந்தியங்களில் ஆரம்பிக்க வேண்டும். புதியதாகத் தனிப்பட்ட முதலாளிகள் தொழிற்சாலைகள் ஆரம்பிப்பதாக இருந்தால் இந்த இடங்களில் ஆரம்பித்தால்தான் லைஸன்ஸ் கொடுக்க வேண்டும். திருநெல்வேலி ஜில்லாவில் பழங்கோட்டை பிர்க்காவில் 50, 60 சவிகிதம் இந்த ஹரிஜனங்கள் இருக்கிறார்கள். அதை அடுத்துக் கிடக்கும் நீலிதநல்லூர், சங்கரன்கோவில் போன்ற பிர்க்காக்களில் மாஜி குற்ற பரம்பரையைச் சேர்ந்தவர்கள் இதேவிகிதத்தில் சேர்ந்து வாழ்கிறார்கள். இதுபோன்ற பிராந்தியங்களில் இனிமேல் சர்க்காரால் ஆரம்பிக்கப்படவிருக்கும் தொழிற்சாலைகளை ஆரம்பித்தால் அந்த மக்கள் வாழ்வதற்கு ஒரு வழி ஏற்படும். ஆகவே அவர்கள் பிறருடைய கையை எதிர்பார்த்து நிற்கக்கூடிய நிலைமையில்லாமல் மாற்ற முடியும். அவர்கள் மற்ற மக்கள் உயர்வாகக் கருதும்படியான நிலைக்குக் கொண்டுவரமுடியும். அப்போது தான் இவர்களுக்கு சமூகத்தில் மதிப்பு ஏற்படும். இதோடு குற்றங்கள் புரிவதும் நிற்கும். ஆகவே அந்தத் துறையில் சர்க்காரோடு போராடி, இந்த விஷயத்தில் அக்கறை காட்டி ஒத்துழைப்பதற்கு என்னுடைய சகோதர ஹரிஜன மெம்பர்களையும் குற்ற பரம்பரையைச் சார்ந்த மற்ற அங்கத்தினர்கள் அனைவரையும் பிற்போக்கு வகுப்பை சேர்ந்த கனம் அமைச்சர் ராமையா அவர்களையும் கேட்டுகொள்கிறேன்.

SRI G. GOMATHISANKARA DIKSHITAR : இப்போது அரசாங்கத்தில் குற்ற பரம்பரையைச் சேர்ந்தவர்கள் ஒருவருமே இல்லை. . . .

SRI T. VELUCHAMI : மாஜி குற்ற பரம்பரையை சார்ந்தவர்கள் என்றுதான் நான் சொன்னேன். நிற்க ஹரிஜன மக்களும், பிற்போக்கு மக்களும் வாழும் இடங்களில் சமுதாய நலத்திட்ட வேலைகள் கணிசமான அளவில் நடை பெறவில்லை. ஏனென்றால், அந்த மக்கள் ஏற்கனவே வாழ்க்கை தர, பொருளாதார நிலைமையில் குறைந்த நிலையில் இருப்பதால் அவர்கள் சமுதாய திட்ட வேலைக்குக் குறிப்பிட்ட "கண்ட்ரிப்யூஷன்" தொகையைக் கொடுக்க முடியாததால் அந்த வேலைகள் நடக்கவில்லை. ஆதலால் சர்க்காரோடு அவர்கள் ஒத்துழைக்க முன் வந்திருக்கிறார்கள் என்பதற்கு அறிகுறி

யாக "டோக்கன் கன்ட்ரிப்யூஷன்" என்ற முறையில் ஒரு குறைந்த பட்ச கண்ட்ரிப்யூஷன் வாங்கிக் கொண்டு அந்தப் பிராந்தியத்தில் சமுதாய நலத் திட்ட வேலைகள் நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். கடன் திட்டங்கள், மான்ய திட்டங்கள் முதலியன மேலும் மேலும் இந்த மக்கட்கு அதிகமாக கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அது போற்றக்கூடியதே. ஆனால், ஆட்டில் பாதி ஓநாய் என்பது போல் குறிப்பாக இந்த கடன் மான்யங்கள் விநியோகிப்பதில் லஞ்சம் எங்கும் மிகவும் அதிகமாக தாண்டவ மாடுகிறது. ஆகவே, அமைச்சர் அவர்கள் நல்ல முறையில் பாதுகாப்புத் திட்டங்களைத் தீட்டி அந்தப் பணம் எதற்காக ஏற்பட்டதோ அதற்காக உபயோககரமாகக் கூடிய முறையில், அந்தப் பணம் அம்மக்களுக்கும் போய் சேரும் வகையில் தக்க பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டால்தான் அந்த திட்டம் வெற்றிபெற முடியும் என்பதை நான் இங்கு ஞாபகப் படுத்திக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய பழம் மூதாதையர்கள், நந்தனர் என்ற பெரியார் ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவராக இருந்தாலும் கூட அவருடைய பக்தி மேம்பாட்டிற்காக, அவரது பக்தி மார்க்கத்தை ஒட்டி அவரை நம் கோவில்களில் வைத்துகூட நாயனர் என்ற முறையில் பூஜிக்கும் நல்லதொரு முறையில் சம நோக்கான ஜாதி வித்தியாசத்தால் ஏற்றதாழ்வு பாராட்டாத பண்பு உடையவர்களாக இருந்தார்கள் என்பதை நாம் மனதில் வைத்துக்கொண்டு அதற்கு அந்தப் பாரம்பரை வழி வந்த நாம் அந்தப் பழம் பெருமையை நிலை நாட்டக்கூடிய நிலையில் ஜாதி வித்தியாச ஏற்ற தாழ்வை ஒழிக்க மெம்பர்கள் முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு அறிகுறியாக இந்த சட்ட சபையில் இருக்கும் ஹரிஜன மெம்பர்களான சகோதரர்கள் யாவரையும் மற்ற அங்கத்தினர்கள் அண்ணன் தம்பி என்ற முறை சொல்லிக் கூப்பிட்டு அவர்களோடு அன்போடு பழகி நமது பாரம்பரை பெருமையை நாம் நிலைநாட்டுவதோடு நாட்டில் வாழும் பெருமக்கள் உணரும்படியான நிலையில் நாம் வழிகாட்டியாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்கு பேசுவதற்கு இந்த சந்தர்ப்பத்தைக் கொடுத்த சபாநாயகர் அவர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொண்டு கனம் மந்திரியவர்கள் மாஜி குற்றப்பரம்பரையைச் சேர்ந்த கிருஸ்தவர்களுக்கும் அந்த சலுகைகளை விஸ்தரிக்க வேண்டுமென்று மீண்டும் ஞாபகப்படுத்திக்கொண்டு எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

4-23 p.m. **Sri N. M. VELAPPAN** : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த மான்யத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். கடந்த பல வருடங்களாக ஹரிஜன நலனுக்காக உறரிஜன வெல்பேர் கமிட்டி ஒன்று இருந்து வருகிறது. அப்படி இருந்து வந்தும் இன்றைய தேதி வரையில் எனது தொகுதியில் எந்தவிதமான வேலைகளும் நடைபெறவில்லை. மேலும் ஹரிஜனங்களுக்காக கொடுக்கப்படும் வீடுகள், வீடில்லாதவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பது, மயானம், நடைபாதை, குடிதண்ணீர் வசதி இவை ஒன்றும் எனது தொகுதியில் கிடையாது. என் தொகுதி கிராமங்கள் நிறைய அடங்கியுள்ளதாகும். 20, 30 வீடுகள் உள்ள சின்னச் சின்ன ஊர்கள் எனது தொகுதியில் இருக்கின்றன. அங்கு தண்ணீர் வசதி என்பதே கிடையாது. ஆகவே, அங்குள்ள மக்களுக்கு உடனடியாக தண்ணீர் வசதி செய்து கொடுக்கும்படி கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஒரு ஹரிஜன ஹாஸ்டல் என் தொகுதியில் நடந்துகொண்டு வருகிறது. அந்த ஹாஸ்டல் எந்த முறையில் நடக்கிறது என்று கேட்டால், அதை தனிப்பட்ட நபர்கள் அந்த ஹரிஜன ஹாஸ்டலை 5, 6 வருஷ காலமாக நடத்திக்கொண்டு வருகிறார்கள். அந்த ஹாஸ்டலில் பையன்களைச் சேர்க்கும்போது, அவரவர்களின் சொந்தக்காரர்களைத்தான் சேர்க்கிறார்கள். அந்த ஹாஸ்டலில் 40 பையன்கள் இருக்கிறார்கள் என்றால் அவர்களுக்கு தயார் சாப்பாட்டு முதலியவைகளை இவர்கள் தங்கள் சொந்த உபயோகத்திற்கு உபயோகித்து வருகிறார்கள். ஆகவே அந்த ஹாஸ்டலை சர்க்காரே ஏற்று எடுத்து நடத்தினால் அங்குள்ள மாணவ மாணவிகளுக்கு மிகவும் வசதியாயிருக்கும். அடுத்ததாக, கோவாப்பரேட்டிவ் சொஸைட்டிகள் இப்பொழுது மேல் ஜாதிக்காரர்களிடந்தான் இருந்து
4-26 p.m. வருகிறது. அவர்கள்தான் அதை நடத்திக்கொண்டு வருகிறார்கள்.



அப்படி நடந்து வரும் சொஸைட்டிகளை ஹறிஜனங்கள் எங்கு அதிகமாக இருக்கிறார்களோ அவர்களே அந்த சொஸைட்டியை நடத்த அனுமதி கொடுக்க அமைச்சர் அவர்களை கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**Sri R. SUBRAMANIAM** : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் மந்திரியவர்கள் கொண்டு . . . .

**Sri T. P. ELUMALAI** : சபாநாயகர் அவர்களே, இந்த ஹரிஜன மான்யக் கோரிக்கை மீது ஹரிஜனங்கள் அல்லாத ஜாதி ஹிந்துக்கள் பேசினால் ரொம்ப பிரயோஜனப்படும் என்று நினைக்கிறேன். ஆகையால் அதிகமாக ஜாதி ஹிந்துக்களும், எதிர்கட்சி தலைவர்களும் அதிகமாக பேச வாய்ப்புக் கொடுக்கவேண்டுமென்று சபாநாயகரைக் கேட்டுக்கொள்கிறேன்.

**Mr. SPEAKER** : ஹரிஜனங்கள் பேச உரிமை கொடுக்கவேண்டுமென்று அப்போது சொன்னீர்கள். நீங்களும் அவர்களும் சேர்ந்து ஒரு முடிவிற்கு வந்தால் எனக்கும் அனுகூலமாயிருக்கும்.

**Sri R. SUBRAMANIAM** : கனம் சபாநயகர் அவர்களே, கனம் மந்திரியவர்கள் கொண்டுவந்தஇந்த மான்யத்தை ஆதரித்து நான் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த மான்யத்தின் மீது பேசுவதற்கு முன் பாக நான் சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள் பேசும்போது ஏதோ காங்கிரஸ் பலஹீனமாக இருப்பதாலும், ஏதோ டெப்யூட்டி சேவக்களும் மற்றவர்களும் காங்கிரஸிற்காக பிரசாரம் செய்வது போன்று அவர்கள் பேசினார்கள். காங்கிரஸ் மகாசபை கடந்த 72 வருஷங்களுக்கு முன்பு தோற்றுவிக்கப்பட்டு படிப்படியாக வளர்ந்து இப்பொழுது அது எந்த நிலையில் இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். அதோடு, டெப்யூட்டி சேவக்குகள் காங்கிரஸைப்பற்றி பிரசாரம் செய்வதற்குத்தான் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். சாதாரணமாக, அதிகாரிகள் ஒரு இடத்திற்கு செல்லும்போது இந்த சர்க்காரால் நடத்தப்படும் வேலைகளைப் பற்றி சொல்லும்போது சர்க்கார் நடத்துகிற வேலைகளைப்பற்றித்தான் சொல் கிறார்கள். ஆனால் சர்க்கார் என்ற உடனே காங்கிரஸைப் பற்றித்தான் கூறுகிறார்கள் என்று சிலர் கோபப்படுகிறார்கள். இம்மாதிரி ஒரு சம்பவம் நடந்தது. அதை நான் இங்கு குறிப்பிட ஆசைப்படுகிறேன். ஹரிஜன வெல்பேர் டைரக்டர் அவர்கள் தஞ்சைக்கு வந்தபோது வல்லம் ஹாஸ்டலில் ஒரு ஆண்டு விழா வைத்து பேசச் சொன்னார்கள். அவர் பேசிக் கொண்டே வந்தார். சர்க்கார் இன்னின்னது செய்திருக்கிறது என்று அவர் சொல்லிக்கொண்டு வரும்போது ஒருவர் ஆத்திரத்தோடு எழுந்து நின்று நீங்கள் ஏன் காங்கிரஸ் சர்க்கார் செய்ததையே சொல்லுகிறீர்கள் என்று கேட்டார். அதற்கு அவர், நான் சர்க்கார் செய்ததையே சொல்கிறேனே தவிர காங்கிரஸ் என்ற வார்த்தையையே நான் உபயோகிக்கவில்லையே என்றார். ஆகவே, சர்க்கார் என்று சொன்னால் சொன்ன மாத்திரத்தில் அது காங்கிரஸையே குறிக்கிறது என்று சிலர் கோபப்படுகிறார்கள். இப்பொழுது கேரள ராஜ்யத்தில் கம்யூனிஸ்ட் சர்க்கார் நடக்கிறது. அங்கு நடக்கும் காரியங்களைக் குறிப்பிடும்போது கேரள ராஜ்யத்தில் என்று சொன்னால் அங்குள்ள கம்யூனிஸ்ட் சர்க்காரைத்தான் அது குறிக்கும். சர்க்கார் செய்யும் நல்ல காரியங்களைப்பற்றிச் சொல்லும்போது அவர்கள் காங்கிரசிற்கு பிரசாரம் செய்வதாக கூறுகிறார்கள். நான் சொல்லுகிறேன், காங்கிரஸ் அவ்வளவு பலஹீனம் அடைந்துவிடவில்லை. இவர்களின் தயவு எங்களுக்கு வேண்டாம் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**Sri T. IRUSAPPAN** : தலைவர் அவர்களே, எனது தொகுதியாகிய ஆத்தூர் தொகுதியில், வெல்பேர் ஆபீஸ் மூலமாக . . .

**Mr. SPEAKER** : நீங்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்கப்போகிறீர்களா அல்லது பேசப் போகிறீர்களா. தாங்கள் பேசும்போது இவைகளைப்பற்றிக் கூறலாம்.

**Sri R. SUBRAMANIAM** : கனம் சபாநாயகர் அவர்களே, நமது சென்னையின் வருமானம் ரூ. 58 கோடி இருந்தும் இன்றைக்கு ஹரிஜன வெல்பேர் டிபார்ட்மெண்டுக்காக ரூ. 194 லட்சம் ஒதுக்கப்பட்டு இருப்பதை

[Sri R. Subramaniam] [19th July 1957

நான் மிக மிக வரவேற்கிறேன். சென்ற வருஷம் ரூ. 134 லட்சம் ஒதுக்கப்பட்டது. இந்த வருஷம் ரூ. 60 லட்சம் அதிகமாக ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் சென்ற வருஷத்தை விட இந்த வருஷம் ரூ. 60 லட்சம் அதிகமாக இருந்தும்கூட ஒவ்வொரு இனங்களுக்கும் ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையை பார்க்கும்போது திருப்தியாக இல்லை. ஹரிஜனங்களுக்கு ரூ. 131 லட்சமும், பின்தங்கிய வகுப்பினருக்கு ரூ. 44 லட்சமும், எதிர்பாராத செலவு நிதியிலிருந்து எடுத்த தொகையை திருப்பிக்கொடுக்கும் வகையில் ரூ, 19 லட்சமும், ஆக மொத்தம் ரூ. 194 லட்சம் ஆகிறது. எனவே, ஹரிஜனங்களுக்கு செலவழிக்கக்கூடிய ரூ. 131 லட்சத்தில் சென்ற வருஷத்தைவிட இந்த வருஷம் ரூ. 35½ லட்சம் அதிகமாக செலவிடப்படுகிறது. இந்த ரூ. 35½ லட்சத்திலும் தீண்டாமை ஒழிப்புக்காக ரூ. 26 லட்சம் போக, ரூ. 11 லட்சம் சென்ற வருஷத்தை விட இந்த வருஷம் கல்வி இனங்களுக்கு செலவழிக்கப்பட இருக்கிறது. ஆனால் சென்ற வருஷம் இதில் ஹிந்து ஹரிஜனங்கள் மட்டும் சேர்க்கப்பட்டு இருந்தார்கள். ஆனால் இந்த வருஷம் கிருஸ்துவ ஹரிஜனங்களும் இதில் சேர்க்கப்பட்டு இருக்கிறார்கள். இந்த இனத்திலிருந்துதான் அவர்களுக்கும் செலவழிக்கப்படும் என்று நான் நினைக்கிறேன். ஆனால், ஜனத்தொகை அடிப்படையில் பார்த்தால் அவர்கள் ஹரிஜன மக்களில் நாலில் ஒரு பங்குதான். இருந்தாலுங்கூட, படிக்கக்கூடிய பிள்ளைகளின் எண்ணிக்கையைப் பார்த்தால் அவர்களுடைய எண்ணிக்கை ஹரிஜனப் பிள்ளைகளில் பாதியாக இருக்கிறது. எனவே இந்த விதத்தில் பார்க்கும்போது, கல்வி இனத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை மிகவும் சிறிய அளவாக இருக்கிறது என்று நான் நினைக்கிறேன்.

அடுத்தபடியாக, நாம் ஏராளமான பணத்தை ஒதுக்கி அதை ஹரிஜன நன்மைக்காகச் செலவிட்டுவருகிறோம். ஆனால் இதை யார் செலவழிக்கிறார்கள் என்று பார்த்தால், அது ஜில்லாவிலுள்ள ஹரிஜன் வெல்பேர் ஆபீஸர். இவ்வளவு பெரிய தொகையைக்கொடுத்து, அதே சமயத்தில் அந்த ஆபீசுக்கு வேண்டிய குமாஸ்த்தாக்களும், மற்ற சிப்பந்திகளும் கொடுக்கவில்லை என்றால் அவர்களால் சரியான முறையில் வேலை செய்ய முடியாது. ஆகவே குமாஸ்தாக்கள், மற்ற சிப்பந்திகள், Revenue Inspector-கள், Special Revenue Inspector-கள் மற்றும் இதர ஆபீஸர்களுடைய தொகையை அதிகரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பணத்தைக் கொடுத்தால் மட்டும் போதாது. அதற்கான வேலைகளைச் செய்ய ஆட்கள் இருந்தால்தான் நல்ல முறையில் செலவழிக்க முடியுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, நமது ஜில்லா வெல்பேர் ஆபிஸர், ஒரு ஜில்லா பூராவும் சுற்றுபிரயாணம் செய்யவேண்டிய நிலையில் இருக்கிறார். சாதாரணமாக ஒரு தாலூகாவில் இரண்டு Block Development Officer கள் இருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் ஒரு ஜீப் இருக்கிறது. தாலுகா பூராவும் அந்த Block Development Officer மூலை முடுக்குகளுக்கெல்லாம் சென்று பார்க்கிறார்கள். ஆனால், வெல்பேர் ஆபிஸர் ரயில் ஏறி, பஸ் ஏறி பல இடங்களுக்கு செல்லவேண்டிய நிலையில் இருக்கிறார். ஆகவே அவருக்கும் ஒரு ஜீப் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன.

அடுத்தபடியாக வீட்டுப் பிரச்னை. இதுதான் என்னுடைய ஜில்லாவில் முக்கிய பிரச்னையாக இருந்து வருகிறது. 1949-ம் வருஷத்தில் ஆரம்பித்து, இதுவரை 20,000 மனைக்கட்டுகள் acquire செய்யப்பட்டிருக்கின்றன. எங்கள் ஜில்லாவுக்கு ஒரு லட்சம் மனைக்கட்டுகள்தான் குறியளவு. ஆனால் இருபதாயிரம் மனைக்கட்டுகள்தான் acquire பண்ணியிருக்கிறது. இன்னும் 80,000 மனைக்கட்டுகள் acquire பண்ண வேண்டிய நிலையில் இருக்கின்றன. இதற்காக ஒதுக்கியிருக்கும் தொகை சென்ற வருஷத்தைவிட இந்த வருடம் குறைவாக இருக்கிறது. சென்ற வருஷம் ரூ. 5 லட்சம் ஒதுக்கப்பட்டிருந்தது. இவ்வருஷம் ரூ. 4,10,000 தான் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அதாவது சென்ற வருஷத்தைவிட இவ்வருஷம் ரூ. 90,000 குறைவு. சாதாரணமாக கிராமங்களில், குறிப்பாக தஞ்சாவூர் ஜில்லாவில் அனேகமாக எல்லா இடங்களிலும் ஹரிஜனங்கள் குடி இருக்கக்கூடிய மனைக்கட்டுகள் நில சொந்தக்காரர்களுக்குச் சொந்தம்.



19th July 1957] [Sri R. Subramaniam]

அம்மாதிரி இருப்பதால் அவர்கள் எந்தவிதமான முன்னேற்றமும் இல்லாமல் இருக்கிறார்கள். எவ்வளவு திட்டங்களை வகுத்தாலும், கல்வித் துறையிலும், பொருளாதாரத்துறையிலும், சமூகத் துறையிலும் எவ்வளவு திட்டங்கள் போட்டாலும், அவர்களுக்கு குடியிருக்க நிலம் சொந்தம் இல்லாததால், எந்த நேரத்தில் வேண்டுமானாலும் வெளியேற்றப்படலாம். சாதாரணமாக ஹரிஜனங்கள் நிலச்சுவாந்தார்களிடம் போய் குறைந்த கூலி கொடுக்கிறார்களே என்று கேட்டாலும் அல்லது தங்கள் பிள்ளைகளை வேலைக்கு வரும்படி சொல்லாமல் இருந்திருந்தாலும், "வீட்டை விட்டு வெளியே போ" என்று நிலச்சுவாந்தார்கள் சொல்லக் கூடிய பரிதாபகரமான நிலையில் அவர்கள் இன்றையதினம் இருக்கிறார்கள். எனவே வீடுகளை துரிதமாக acquire செய்யவேண்டும். ஒதுக்கியிருக்கும் தொகையை அதிகப்படுத்தி, கூடியசீக்கரத்தில், இந்த ஐந்து வருஷத்திற்குள்ளாவது பாதி அளவுக்கு மேலாவது மனைக்கட்டுகள் acquire செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

Sri N. MARUDACHALAM : கனம் சபாநாயகர் அவர்களே, சேரி ஒழிப்பு திட்டம் பற்றி சில விஷயங்களைச் சொல்ல முற்படுகிறேன். கனம், மந்திரி அவர்கள் ஹரிஜன முன்னேற்றத்திற்கு, பெயர்களை மாற்றுவதன் மூலமாகவும், பஜனை செய்வதன் மூலமாகவும் சேரியை ஒழித்து விடலாம் என்று சொன்னார்கள். சேரிகளின் பெயர்களை மாற்றுவதால் ஹரிஜனங்கள் முன்னேறுவார்கள் என்று பேசுவதும் நினைப்பதும் முழுப் பகற்கனவு. கோயம்புத்தூரில் பள்ளப்பாளையம் என்று ஒரு சேரி இருந்தது, அதைச் சேர்ந்தவன்தான் நான். அந்த ஊரின் பெயரை கோவை முனிசிபாலிடியார்கள், செல்வபுரம் என்று மாற்றினார்கள். அம்மாதிரி செல்வபுரம் என்று மாற்றப்பட்டதால் அங்குள்ளவர்கள் செல்வந்தர்களாக ஆகிவிடவில்லை. அவர்கள் தரித்திர நாராயணர்களாகவேதான் இருக்கிறார்கள். ஆகையால் பெயர்களை மாற்றுவதால் செல்வந்தராக ஆகிவிட முடியாது. 4-46 p.m.

சுடுகாட்டுக்குப் பாதை போடுவது என்ற திட்டம் காகித அளவிலே இருக்கின்றதே தவிர, நடைமுறையில் வரவில்லை என்று நான் ருஜுப்படுத்த முடியும். கோவையில் வெள்ளையங்கிரி மலைப் பகுதியில் பெரியநாயகன்பாளையத்திற்கு கிழக்கே 300 கிராமங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு கிராமத்திலும் 30, 40, 100 ஹரிஜன குடிகள் இருக்கிறார்கள். ஆனால், ஒரு கிராமத்தில் கூட ஒரு புதிய வீடு ஹரிஜனங்களுக்குக் கிடையாது. இது உண்மையா என்று அறிய ஒரு கமிட்டியைப்போட்டு பரிசீலனை செய்து பாருங்கள் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அதோடுகூட அந்த இடங்களில் குடிதண்ணீர் வசதிகள் கிடையாது. அதைப்பற்றி சென்ற மாதம் நான் ஹரிஜன் வெல்பேர் ஆபீசருக்கு ஒரு மகஜர் கொடுத்து இருந்தேன். ஆனால் அந்த மகஜருக்கு ஒருவிதமான பதிலும் இல்லை.

இப்பொழுது இந்த வீடு கட்டும் திட்டமானது வீடு பிரிக்கும் திட்டமாக மாறிவிட்டது என்று நினைக்கிறேன். சாதாரணமாக சில இடங்களில் ஹரிஜனங்கள் புறம்போக்கு நிலங்களில் வீடுகள் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அந்த வீடுகளைப் பிரிப்பதற்கு அரசாங்கத்தார் இன்றைக்கு உத்தரவு போட்டிருக்கிறார்கள். நேற்றையதினம் திருப்பூரிலிருந்து இது விஷயமாக ஒரு மகஜர் வந்து இருக்கிறது. அங்கு பத்து ஏக்கர் புறம்போக்கு நிலம் இருக்கிறது. அந்த நிலத்திலே பல ஹரிஜனங்கள் வீடு கட்டியிருக்கிறார்கள். வீடுகளைப் பிரிக்க கலெக்டர் உத்தரவு போட்டிருக்கிறார்கள். ஹரிஜன முன்னேற்றம் என்று சொல்லி, அதற்கான திட்டங்களை வகுத்து செய்வதால் மட்டும் அவர்கள் கையில் காசு வந்துவிடாது. ஹரிஜனங்கள் முன்னேற வேண்டுமானால், வாழ்க்கைக்கு தகுந்த பண வசதி ஏற்பட வேண்டும். பண வசதி ஏற்படவேண்டுமானால், ஹரிஜனங்களுக்கு அரசாங்கம் பணம் அள்ளிக் கொடுக்கிறோம் என்று சொல்வதோடல்லாமல் ஹரிஜனங்களுக்கு இன்றைக்கு வாழ்க்கைக்கு தகுந்த வேலைக்கு உத்திரவாதம் வேண்டும். அந்த வேலைக்கு உத்திரவாதம் இருந்தால்தான் வாழ்க்கையைச் சிறப்பாக நடத்த முடியும். அப்படி வேலைக்கு உத்திரவாதம் இல்லாமல் அரசாங்கத்தார் எவ்வளவு செய்தாலும் பிரயோசனப்படாது. அது சமுத்திரத்தில் கரைத்த பெருங்காயமாக முடியும்.

[Sri N. Marudachalam] [19th July 1957

கோயம்புத்தூரில் இன்றைக்கு 40 மில்கள் இருக்கின்றன. இன்னும் பல மில்கள் ஆரம்பிக்க இருக்கின்றன. அவைகளில், அந்தந்த மில் முதலாளிகளின் வகுப்பைச் சேர்ந்தவர்களே வேலைக்கு எடுத்துகொள்ளப் படுகிறார்கள். மற்ற வகுப்பினர்களை எடுத்துக்கொள்வது இல்லை. ஆகையால் அரசாங்கம் உடனடியாக அவ்வாறு புதிதாகத் திறக்கப்படும் மில்களிலாவது மூன்றில் ஒரு பங்கு ஹரிஜனங்களை வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஒரு உத்தரவு பிறப்பித்தால் அவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிந்து, அவர்களது வாழ்க்கை சீர்ப்பட்டு, அவர்கள் அந்தஸ்து உயர்ந்து, திட்டங்களும் நிறைவேறும்.

இன்றைக்கு அரசாங்கம் போட்டிருக்கும் திட்டம் நிறைவேற சந்தர்ப்பம் இருக்கிறது. இப்பொழுது அடிப்படையான பிரச்னை வேலையில்லாத் திண்டாட்டம் தான். 300 கிராமங்களில் எத்தனை தாழ்த்தப்பட்ட மக்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்று கணக்குப் பார்த்தால் 4 கிராமங்களில் மாத்திரம் 400 பேர்கள் வேலையில்லா திண்டாட்டத்தால் அவதிப்படுகிறார்கள். ஏழை ஹரிஜனங்களுக்கு வீடு கட்டி கொடுத்தோ அல்லது வேறு எந்த சலுகை செய்தாலும் பிரயோஜனப்படாது என்பது என் அபிப்பிராயம். தாசில்தாரிடம் ஹரிஜன தாழ்த்தப்பட்ட மக்கள் பண உதவிக்கு வரும்போது அவர்கள் கணக்குப்பிள்ளையை தாஜா பண்ண வேண்டியிருக்கிறது; பியூனை தாஜா பண்ணவேண்டியிருக்கிறது. கடைசியில் அவர்கள் கைக்கு பணம் கிடைக்கும்போது 100 அல்லது 150 ரூபாய்தான் கிடைக்கிறது. இதையெல்லாம் அரசாங்கம் நன்றாக கண்காணிக்கவேண்டும். அப்படியில்லாமல், திட்டம் தீட்டிவிட்டோம், ஹரிஜனங்கள் முன்னேறிவிடுவார்கள் என்று சொன்னால் அது சரியல்ல என்பது என் அபிப்பிராயம்.

அதோடுகூட இன்றைக்கு ஒவ்வொரு கிராமத்திலும் கமிட்டிகள் அமைக்கப்படுகின்றன. கமிட்டிகளில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் இருக்கிறார்கள். இதில் வேறு அரசியல் கட்சிகள் அங்கம் வகிக்ககூடாது. இது அவர்களுக்குத்தான் என்று பிரசாரம் செய்கிறார்கள். இதை உடனடியாக நிறுத்தவேண்டும். எல்லா அரசியல் கட்சிகளும் பொதுஜனங்களில் முக்கியப்பட்டவர்களும் சேர்ந்து நகர பரிபாலனம் இருக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

அத்துடன் இன்றைக்கு சுகாதாரத்தைப்பற்றி ரொம்ப விரிவாக சொல்லபடுகிறது. பார்த்தால் காலரா முதலிய தொத்து நோய்கள் உற்பத்தியாகக்கூடிய இடம் ஹரிஜனச் சேரிகளில்தான். அங்கு பார்த்தால் சாக்கடை தங்கி கிராமங்களில் தொத்து வியாதி பரவ ஏதுவாயிருக்கிறது. அதைப்போக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? குடி தண்ணீரை எடுத்துக்கொண்டால், அங்கு தங்கியிருக்கும் சாக்கடைத் தண்ணீரில் குடத்தை வைத்து சாக்கடைத் தண்ணீர் பாதியும், நல்ல தண்ணீர் பாதியும் ஆக கொண்டுபோகிறார்கள். இதைக் குடித்தால் சீக்கு வருகிறது. இவைகளைப் போக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கோவையிலே இன்றைக்கு குடிதண்ணீர் மிக முக்கியம். கோவைக்கு குடிதண்ணீர் சிறுவாணி ஆற்றிலிருந்து வருகிறது. அந்தத் தண்ணீர் பஞ்சத்தை தீர்க்க பல மகஜர்களை அனுப்பியிருக்கிறோம். மந்திரியைக் காண டெபுடேஷன்கூட வந்திருக்கிறார்கள். ஆகையால் அந்த குடி தண்ணீர் வசதியைப்பற்றி மந்திரி அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். கோயம்புத்தூர் சிறுவாணி தண்ணீர் மிக முக்கியம் என்று டாக்டர்களெல்லாம் சொல்லுகிறார்கள். சிறுவாணியில் அணைகட்டி ஜனங்களுக்கு குறைவில்லாதபடி தண்ணீர் கிடைக்க வசதி ஏற்படும் வகையில் மந்திரி அவர்கள் வழி செய்யவேண்டும்.

சாதாரண ஹரிஜனங்களிடத்திலே கிருபை காட்டி ஸ்லம் கிளியரன்ஸ் என்று போன வருஷம் முனிஸிபாலிடியால் கொண்டுவரப்பட்டது. ஒவ்வொரு கிராமத்திலும் போய்ப் பார்க்கும்போது அரசாங்கம் பணத்தை கொடுக்காததால் ஸ்லம் கிளியரன்ஸ் திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது. திட்டம் போட்டால் மட்டும் போதாது. நடைமுறைக்குக் கொண்டுவர பொறுப்பு இருக்கவேண்டும். அரசாங்கத்தின்மேல் குற்றம் குறை சொல்வதாக எடுத்துக்கொள்ளக்கூடாது. இது உண்மை. இதை நிரூபிக்க முடியும்.



[19th July ›57]

SRI G. NARAYANASWAMI NAIDU: கனம் தலைவர் அவர்களே, 4-45 p.m
இந்த ஹரிஜன மானியத்தை நான் ஆதரித்து ஒரு சில யோசனைகளை சபை முன் சமர்ப்பிக்க விரும்புகிறேன். எங்கள் ஜில்லா கொஞ்சம் பெரிய ஜில்லா. அதுவும் ஹரிஜன மக்கள் நிறைந்த ஒரு ஜில்லா. பாக்கி ஜில்லாக்களில் இருப்பதைவிட இந்த ஜில்லாவில் ஹரிஜன மக்களில் பெரும் பகுதி அடிமைகளாக நீண்ட காலமாக வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுடைய யஜமானர்கள் தயவு இல்லாமல் எந்தக் காரியத்தையும் செய்யமுடியாது. பாக்கி ஜில்லாக்களில் இருப்பது ஜாதி வித்தியாசம். இந்த ஜில்லாவில் இருப்பது அடிமை முறை. வீடு, வாழ்க்கை வசதிகளுக்கு யஜமானர்களைப் பார்த்துத்தான் இருக்கவேண்டும். இஷ்டப்பட்டால் வீடுகளைப் பிரித்து அவர்களை அப்புறப்படுத்தக்கூடிய சக்தி பாக்கி எல்லா ஜில்லாக்களையும் விட தஞ்சை ஜில்லாவில்தான் அதிகம். பாக்கி ஜில்லா வாசிகளுக்கு இந்த முறை பூர்ணமாக தெரியாததன் காரணமாக, பாக்கி இடங்களில் இருப்பதைப்போன்றுதான் இங்கும் இருக்கிறது என்று சிலர் கருத்துக்களில் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். சேரி மக்களின் சர்வ வாழ்க்கையும் முதலாளியிடத்திலே சிக்கிக்கொண்டிருப்பதால்தான் பாக்கி ஜில்லாக்களில் கூலி உயர்வு கிடைக்கும்போது தஞ்சை ஜில்லாவில் கூலி உயர்வுக்காக பெரிய போராட்டம் நடத்தவேண்டியிருக்கிறது. சட்டம் இருந்தும் வீடுகள் பிரிக்கப்படுவது நிறுத்தப்படவில்லை. பதினைந்து தினங்களுக்கு முன் கடலங்குடியில் ஐந்து வீடுகள் சோடு தெரியாமல் பிரிக்கப்பட்டு விட்டன. தேரெழந்தூர் போலீஸார் வந்து பார்த்தது. வீடுகளெல்லாம் சுத்தமாகப் பிரித்து அந்த இடத்திலே எதுவுமில்லாமல் செய்து விட்டார்கள். சேரியில் உள்ளவர்களுக்கு பண வசதியில்லை. அதிகாரிகள் எப்பொழுதுமே சேரி மக்களுக்கு சலுகை காட்டியதில்லை. போலீஸ் வசதியுள்ள பகுதியில் அதிகாரம் இல்லாத காரணத்தால், செல்வாக்கு இல்லாத காரணத்தால் பண வசதி இல்லாத காரணத்தால் அவர்களுக்கு நியாயம் கிடைப்பதில்லை. இந்த ஹரிஜன இலாகா மந்திரி அவர்கள் முக்கியமாக கவலையோடு கவனிக்கவேண்டிய பிரச்னை இது.

உரிமைக்காக போராட்டம் நடந்து துவேஷம் கடுமையாகிக்கொண்டிருப்பதால் வீடுகள் பிரிக்கப்படுகின்றன. வீடுகள் கட்ட பணம் ஒதுக்கிவிட்டு, வீடுகள் பிரிக்கப்பட்டால், கட்டுவதற்கு பணம் ஒதுக்குவதால் பயன் இருக்க முடியாது. தஞ்சை ஜில்லாவில், ஒரு அவசரச் சட்டம் மூலமாக சேரியிலுள்ள வீடுகளை பிரிக்கக்கூடாது என்று வகுத்து அந்த மனையை அவர்களுக்கு ஆர்ஜிதம் செய்தால் அது சுலபமான வேலையாக இருக்கும். வீடு எழும்பி முடிவதற்குள், அந்த நிலம் புறம்போக்கு நிலமாக இருந்தால்கூட, மாடு மேய இடம் வேண்டும், ஊருக்கு பொது இடம் என்றெல்லாம் சொல்லி வீட்டை பிறித்தாகவேண்டுமென்கிறார்கள். இம்மாதிரி பிரிக்கக்கூடாது என்கிற முறையை முதலிலேயே கொண்டுவந்து, அதற்கும் பிறகு வீடு கட்டுவதற்கு நிலத்தை ஆர்ஜிதம் செய்துவிட்டு, அதன்பின் கட்டுதற்குறிய பணத்தைக் கொடுக்கச்செய்யவேண்டும். எங்கள் ஜில்லா பெரிய ஜில்லாவாக, அதிக ஜனத்தொகையுள்ளதாக இருப்பதால், ஹரிஜன வெல்பேர் ஆபீஸர், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் எல்லா இடங்களுக்கும் செல்வது சொல்ப சாத்தியமல்ல. நானே அவர்களை பேட்டி காண்பது கடினமாக இருப்பது போக, சேரிகளில் உள்ளவர்கள் அவர்களைப் போய்ப் பார்ப்பது சிரமமான காரியம்.

மிராசுதார்களுடைய சலுகையுடன் போகிற சேரி மக்களுக்குத்தான் ஏதாகிலும் கொடுக்கப்படுமே தவிர சேரியிலிருந்து தனியாகப் போகக்கூடிய எந்த மக்களுக்கும் சலுகைகள் கிடைப்பது இல்லை. இது சம்பந்தமாக எனக்கு பத்து வருஷ அனுபவம் இருக்கிறது. இப்படி நடைபெற்று வருவது எனக்கு நன்றாகத் தெரியும். எங்களைப்போல் உள்ளவர்கள் கூட ஆபீசர்களைக் காண்பது என்பது முடியாத காரியம். அப்படி இருக்கும்போது சேரியிலுள்ள ஹரிஜனங்கள் எப்படி அதிகாரிகளைப் போய் காண

நிலத் தகராரில் முழு கவனம் செலுத்த வேண்டியதாக இருக்கிறது, அதனால் பார்க்க முடியாது என்று சொல்லி விடுகிறார்கள். இந்த முறையை மாற்றி அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சேரியிலுள்ளவர்களுக்கு சேரியில் தான் இடம் கொடுக்கவேண்டும் என்று சிலர் சொல்லுகிறார்கள். அது சரியல்ல. இதனால் ஜாதி ஒழிப்பு என்பது முடியாது. இப்படி பிரிவினை செய்துகொண்டுபோனால் ஜாதி ஒழிப்பு பிரச்னை ஒரு நாளும் தீராது. ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கவேண்டுமானால் ஜாதி ஹிந்துக்கள் இருக்கும் இடங்களில் எந்த எந்த இடங்களில் காலி மனைக்கட்டுகள் இருக்கின்றனவோ அந்த இடங்களில் ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கலாம். அவர்களுக்கு அந்த மனைக்கட்டுகளை வழங்குவதற்கு தனியான சலுகை கொடுக்கலாம். ஏற்கனவே நாம் முஸ்லீம்களுக்கு என்று தனி இடம் கொடுத்ததால் எவ்வளவோ கஷ்டங்கள் ஏற்பட்டன. அவர்கள் முதலில் இந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக்கொண்டு இதில் சேர்ந்துகொண்டு தனியாக ஜாதியைக்கொண்டு வந்து புகுத்தியிருக்கிறார்கள். அவர்கள் காங்கிரஸ் கட்சியில் சேரவேண்டும் என்று வந்தாலும் அவர்கள் ஜாதியை விட்டுவிடவில்லை. நம்முடன் சேர்ந்துகொண்டு தங்களுக்கு ஜாதி முறைப்படி தனிச் சலுகைகள் வேண்டும் என்று கேட்க ஆரம்பித்தார்கள். அதைப்போன்ற நிலைமையும் இதில் ஏற்படும். அதனால் ஜாதி என்ற அடிப்படையில் அவர்களுக்கு சலுகைகள் காட்டாமல் ஹரிஜனங்கள், தொழிலாளர்கள், ஏழை மக்கள் என்ற அடிப்படையில் அவர்களுக்குச் சலுகைகள் கொடுக்கப்படும் என்று அமைக்கவேண்டும். யார் ஏழைகள், யார் யார் தொழிலாளர்கள் என்ற அடிப்படையில் அவர்களுக்கு சலுகைகள் காட்டவேண்டும். அப்படிக் காட்டாவிட்டால் ஜாதி ஒழிப்பு என்பது நடைபெறாது. இந்த அடிப்படையில் தான் சேரிகளில் வசதிகளைச் செய்யவேண்டும், ஜாதியின் பெயரால் செய்யக் கூடாது என்பதை நன்றாக புரிந்துகொள்ளவேண்டும். இப்படிச் செய்யாவிட்டால் ஜாதி ஸ்திரமானதாகத்தான் இருக்கும்.

எங்கள் ஜில்லா பெரிதாக இருப்பதால்தான் ஒரு பகுதி பூராவிலும் ஹரிஜனங்களாகவே தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டார்கள். மற்ற பகுதியிலிருந்து ஒருவர்தான் அதாவது மேல தஞ்சையில் கனம் சுப்பிரமணியம் அவர்கள் ஒருவர் மட்டும்தான் வந்திருக்கிறார். ஒரே ஒரு ரிசர்வ் சீட் தான் அந்தப் பக்கத்தில் இருக்கிறது. அந்தப் பகுதிகளில் அதிகாரிகளை நியமித்து அந்த அந்தப் பகுதிகளிலுள்ள ஹரிஜனங்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் அதற்காக அந்த அந்த பகுதிகளிலுள்ள சட்டசபை உறுப்பினர்களைக் கலந்துகொண்டு காரியங்களைச் செய்யும்படியான ஏற்பாட்டைச் செய்யவேண்டும். அப்படிச் செய்தால் தான் காரியங்களை கொஞ்சம் சுலுவாக செய்து முடிக்கலாம்.

மாணவர்களுக்கு இப்பொழுது மத்தியான உணவு கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். மத்தியான உணவு கொடுக்கும் வேலையை சேரிகளிலுள்ளவர்களுக்கு கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். அப்படிச் செய்தால் தான் நன்றாக இருக்கும் என்றும் பல சௌகர்யங்களைச் செய்யலாம் என்றும் குறிப்பிட்டார்கள். என்னுடைய அனுபவத்தில் அது சரியல்ல. இந்த விதத்தில் நடத்தினால் சில இடங்களில் பழய சாப்பாட்டையே மாணவர்களுக்குப் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். சாப்பாடு போடும் அதிகாரம் பூராவையும் அங்கு உள்ள நாட்டாண்மைக்காரர்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதால் தங்களைக் கேட்பதற்கு ஆட்கள் கிடையாது என்று அவர்கள் இவ்விதம் மாணவர்களுக்கு சாப்பாடு போடுகிறார்கள். அது சரியல்ல என்பது என்னுடைய அபிப்பிராயம். அதனால் சாப்பாடு போடும் விஷயம் அதிகாரிகளுடைய கண்காணிப்பில் இருக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. ஜாதி ஹிந்துக்கள் சாப்பாடு போடுவது என்றால் அதில் பல ஊழல்கள்தான் வருகின்றன. அதைக் கண்காணிக்கவேண்டும். ஹரிஜனங்களை இழிவுபடுத்தியதற்காக அவர்களுக்குப் பிராயச்சித்தம் செய்வதுபோல் அனைத்து ஹிந்துக்களையே ஹரிஜன மாணவர்களுக்கு சாப்பாடு போடும்படியான ஏற்பாட்டைச் செய்யவேண்டும். இதைத்தான் நாம் பின்பற்றவேண்டு

19th July 1957] [Sri G. Narayanaswami Naidu]

படி இல்லாமல் ஹரிஜனங்களுக்கே கொடுத்துக்கொண்டு வந்தால் ஏற்கனவே பாகிஸ்தான் ஏற்பட்டதுபோல் ஆதி திராவிடஸ்தான் ஏற்படுவதற்கு வழி ஏற்படும். அந்த நிலைமைக்கு நாம் போகக்கூடாது. ஜாதி என்ற அடிப்படையில் இல்லாமல் ஏழைகள், தொழிலாளர்கள் என்ற நிலைமையில் இதை அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏற்கனவே ஹரிஜனங்கள் ஊரைவிட்டு ஒதுங்கியிருக்கிறார்கள். அவர்களை இன்னும் பிரித்து ஒதுக்குவது என்பது கூடாது. ஏற்கனவே அவர்கள் குடி தண்ணீர் வசதி இல்லாத இடங்களிலும் சுகாதார வசதிகள் இல்லாத இடங்களிலும் வசித்து வருகிறார்கள். இனிமேலாவது அவர்கள் வசிக்கும் இடத்திலேயே இடம் கொடுக்காமல் சுகாதாரமான இடங்களில் அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுபபதற்கு வழி வகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுது பார்த்தால் ஹெல்த் டிபார்ட்மெண்டில் அவர்களுக்கு வீடுகளை கட்டிக் கொடுக்க முடியாத நிலைமையை ஏற்படுத்தி இருக்கிறார்கள். அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று சொன்னால் உடனே அங்குள்ள மிராசுதார்கள் அதற்கு ஆட்சேபணையைக் கிளப்பக்கூடிய நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆகவே ஹரிஜன மாணவர்களுக்கு சாப்பாடு போடுவதையும், வீடுகள் கட்டி கொடுப்பதையும் புனராலோசனை செய்து வீடுகள் கட்டுவதற்கு மனைக்கட்டுகளை ஆர்ஜிதம் செய்து அதன் பிறகு வீடுகளைக் கட்டிக்கொள்ள ஏற்பாடு செய்யவேண்டும். மனைக்கட்டுகளை ஆர்ஜிதம் செய்வதற்கு முன்னதாக வீடுகள் கட்டிக்கொண்டிருக்கும் ஹரிஜனங்களுடைய வீடுகளை பிரிக்காமல் இருக்கும்படியான நிலைமையை உண்டாக்கவேண்டும். முதலில் அதைத் தடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும்.

பள்ளிக்கூடங்களைப் போய் பார்த்தால் அங்கு அவைகள் சரியாக நடைபெறுவது இல்லை. அதிகாரிகள் வந்தால் அவர்கள் ஏதோ எழுதி வைத்துவிட்டு போகிறார்கள். நாம் யாராவது போய் பார்த்தால் அங்குள்ள ஆசிரியர் இருக்கமாட்டார். ஹரிஜனங்களுடைய கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் பணம் இந்த விதமாக விரயம் ஆக்கப்படுகிறது. இதற்கு பரிகாரம் தேட வேண்டியது அவசியமாக இருக்கிறது. பாக்கிப் பள்ளிக்கூடங்களைப்போல் இந்தப் பள்ளிக்கூடங்களும் நடக்க ஏற்பாடு செய்ய வேண்டும். மற்ற பள்ளிக்கூடங்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகளையும் இந்தப் பள்ளிக்கூடங்களுக்கும் கொடுக்க வேண்டும். தேரழுந்தூர், அரியாமங்கலம், மார்க்கதோட்டம் முதலிய இடங்களில் நடந்த அக்கிரமங்களைப்பற்றி விசாரணை நடத்தவேண்டும். அங்கு திடீரென்று வீடுகளை பிரித்திருக்கிறார்கள். இப்பொழுது அங்கு வீடுகள் இருந்த சுவடே இல்லாமல் இருக்கிறது, அதைப்பற்றி ஹரிஜன வெல்பேர் அதிகாரிக்கு பல தந்திகள் கொடுத்தும் இன்றையதினம் வரையில் எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை. இதைப்பற்றி விசாரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த மானியத்தை ஆதரித்து என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

*SRI K. P. PALANISWAMI : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஹரிஜன மானியத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைப் பேசமுன் வந்திருக்கிறேன். நமது காங்கிரஸ் ஆட்சியில் ஹரிஜனங்கள் முன்னேற்றமடைந்து வருவதை எல்லோரும் உணர்ந்திருக்கிறார்கள். அவர்களுடைய முன்னேற்றத்திற்காக வேண்டி ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை முன்பு ஒதுக்கப்பட்ட தொகையைவிட இந்த ஆண்டில் அதிகப்படியாக 60 லட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். இதைக் கண்டு நாம் பெருமைப்பட வேண்டியதாக இருக்கிறது. இந்தப் பணத்தை எவ்வாறு செலவிடப்படவேண்டும் என்றால் ஹரிஜனங்களுக்கு எது முக்கியமாக தேவைப்படுகின்றனவோ அவைகளுக்குசெலவு செய்தால் மிகவும் நலமாக இருக்கும். வீடு கட்டும் திட்டத்திற்கு என்று 750 ரூபாய் கொடுப்பதாக இருக்கிறது. இப்பொழுது ஹரிஜனங்கள் குடியிருக்கும் இடங்கள் மிகவும் மோசமாக இருக்கிறது. டிட்சு உள்ள இடங்களாகவும், ஆற்று ஓரங்களிலும் சுகாதாரமற்ற இடங்களிலும், புறம்போக்கு இடங்களிலும் அவர்கள் குடியிருந்து வருகிறார்கள். எங்கெல்லாம் பிற்பட்ட இடங்களாக இருக்கின்றனவோ அந்த இடங்களிலெல்லாம் அவர்கள் குடியிருந்து வருகிறார்கள், அவர்களுக்கு நல்ல வசதி செய்து கொடுக்க வேண்டும் என்றால் முதலில்

அவர்கள் வசிக்கும் இடங்களை நல்ல சுகாதாரமுள்ள இடங்களாக மாற்றி அமைக்கவேண்டும். அவர்களுக்கு சுகாதாரமுள்ள இடங்களில் வீடுகளைக் கட்டிக்கொடுத்து நல்ல முறையில் அவர்கள் வாழ்வதற்கு வசதி செய்து கொடுக்கவேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் நல்ல முறையில் வாழ்வதற்கு சந்தர்ப்பம் ஏற்படும்.

ஹரிஜனங்களுடைய கல்விக்காக நாம் கொஞ்சம் பணம் ஒதுக்கியிருக்கிறோம். அந்தப் பணத்தை நல்ல முறையில் அவர்கள் பயனடையும்படியான முறையில் செலவு செய்யவேண்டும். இல்லாவிட்டால் நாம் ஒதுக்கியிருக்கும் பணம் பிரயோசனம் இல்லாமல் போய்விடும். இந்தப் பணத்தைக் கொண்டு நகரங்களில் வாழும் ஹரிஜனங்களுக்குத்தான் செலவு செய்யப்படுகிறதேயொழிய கிராமங்களில் இருக்கும் ஹரிஜனங்களுக்கு எந்த விதத்திலும் அவை பயன்படவில்லை. கிராமங்களில் இன்னும் ஆயிரக்கணக்கான ஹரிஜனங்கள் படிப்பு இல்லாமல்தான் இருக்கிறார்கள். அதனால் கல்விக்காக செலவு செய்யும் பணத்தை கிராமங்களிலுள்ள ஹரிஜனங்களுக்கு பயன் அளிக்கும் வகையில் செலவு செய்யவேண்டும் என்று அதிகாரிகளைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கோயம்பத்தூர் ஜில்லாவில் என்னுடைய பிராந்தியத்தில் வாழும் பிற்போக்கான மக்கள் அதாவது மலைஜாதியினர் வசிக்கும் இடங்களில் பள்ளிக்கூடங்கள் இல்லாமல் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். ஒரு சில ஊரில் தான் இருக்கிறது. பள்ளிக்கூடம் இல்லாத இடங்களில் ஓராசிரியர் பள்ளிக்கூடங்களை அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வீரபாண்டி, அட்டப்பாடி முதலிய இடங்களில் பள்ளிக்கூடங்களை அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதை நிறைவேற்றிக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பல பள்ளிக்கூடங்களில் மாணவர்களுக்கு மத்தியான உணவு கொடுக்கப்படுவதாகத் தெரிகிறது. அப்படி அங்குள்ளவர்களுக்கும் கொடுக்கவேண்டும் என்று பல விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. அப்படி அங்குள்ள மாணவர்களுக்கு மத்தியான உணவு கொடுக்கப்படும் என்ற திட்டம் வந்தால் இன்னும் அதிகப்படியான மாணவர்கள் பள்ளிக்கூடங்களில் சேர்ந்து படிக்க முன் வருவார்கள். அதனால் ஹரிஜன வெல்பேர் ஆபீசரிடமோ அல்லது டிஸ்ட்ரிக்ட் போர்டிடமோ அந்தப் பணத்தைக் கொடுத்து மாணவர்களுக்கு மத்தியான உணவு கொடுக்கப்படும் என்று சொன்னால் இன்னும் அதிகப்படியான மாணவர்கள் வந்து படித்து பயனடைவார்கள். அதன் மூலம் அவர்கள் முன்னேற்றமடைவார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

எப்படி மதுவிலக்குத் திட்டமானது கட்டாய முறையில் இருக்கிறதோ, அதே மாதிரி தாழ்த்தப்பட்ட ஹரிஜன மக்கள் விஷயத்தில் கட்டாயக் கல்வி முறையை ஏற்படுத்தினால் மிகவும் நலமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். மதுவிலக்குத் திட்டம் வந்ததில் மறைந்து குடித்தல் இன்னும் இதுபோன்ற ஆபாசமான நிகழ்ச்சிகள் காணப்பட்டாலும், மக்களுக்கு ஒரு பயம் இருக்கிறது. கட்டாயக் கல்வி கொண்டுவந்தால், ஏதோ கட்டாயமாகப் படிக்காவிட்டால் தண்டனை வரும் என்று பயந்து சில மக்கள் படிக்க முன்வருவார்கள். ஆகவே, ஹரிஜன மக்கள் விஷயத்தில் கட்டாயக் கல்வி முறை கொண்டுவரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஹரிஜனங்களுக்கு 4, 5 வருஷங்களாக கிணறு வெட்ட மான்யமாகத் தந்த 750 ரூபாயை திரும்பவும் வசூலிக்கவேண்டுமென்று அதிகாரிகள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். வடநாட்டைவிட தென்னாட்டில் கிணறு வெட்டும் வேலை—பாறை அதிகமாக இருப்பதால்—மிகவும் கடினமாக இருப்பதால், கொடுத்த பணம் போதாமல் கையிலிருந்தும், கடன் வாங்கியும் பணம் போட்டு செலவு செய்திருக்கின்றார்கள். அதன் காரணமாக அவர்கள் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கும் நேரத்திலே, குடிக்கவும் ஜலம் இல்லாமல் அவதிப்படும்போது, மறுபடியும் பணத்தை வசூலிக்கவேண்டுமென்று நினைத்தால் அது மிகவும் கடினமாக இருக்கும். உண்மையிலேயே கஷ்டப்படுகிறவர்கள் இம்மாதிரி ஒருபுறம் இருக்க, ஒரு சிலர் கிணறு வெட்டுவதற்காக் கொடுத்த பணத்தை ஏப்பம் விட்டிருக்கிறார்கள், அவர்கள்



விஷயத்திலே நன்றாக "இன்வெஸ்டிகேஷன்" செய்து பணத்தை வசூல் செய்யலாம். ஆனால், தாழ்த்தப்பட்ட ஹரிஜன மக்களிடமிருந்து அந்தப் பணத்தை வசூல் செய்யாமல் சலுகை அளிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்கள் அனேகம் பேர் படித்துவிட்டு அறைகுறையாக நின்றுவிடுகிறார்கள். ஆசிரியர்களுக்கும், வீவிங் இன்ஸ்ட்ரக்டர்களுக்கும் ஏதோ சலுகை இருக்கிறது. மூன்று வருஷ சர்வீஸ் இருந்தால் ப்ரைவேட்டாகப் படித்து பரீட்சை எழுதி தங்களுடைய அந்தஸ்தை உயர்த்திக் கொள்ளலாம் என்று இருக்கிறது. அதுபோல, ஐந்தாவது படிவம், எஸ்.எஸ்.எல்.ஸி. வரை படித்துவிட்டு வேலை இல்லாமல் அலைந்துகொண்டிருக்கிறார்களே, அவர்களுக்கும், குறிப்பிட்ட சர்வீஸ் போட்டால், இம்மாதிரி ப்ரைவேட்டாகப் படித்து, மேல் பரீட்சைக்குப் போவதற்கான ஏற்பாடு செய்தால், அவர்களுடைய பிற்கால வாழ்க்கை மிகவும் நல்ல முறையில் அமைவதற்கு ஏதுவாகும் என்று தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

ஹரிஜன் ஏழை எளிய மக்கள் ஒரு ஏக்கர் இரண்டு ஏக்கர் [illegible] கொண்டிருக்கிறார்கள். அதாவது புறம்போக்கு ஜாகா நிலத்தை உழுது கொண்டிருக்கிறார்கள். அதற்கு அனேகம் பேர் எதிர்ப்பு கூறுகிறார்கள். அதைக் கொடுக்க மறுக்கிறார்கள். அந்த விஷயத்திலே சர்க்கார் கவனம் செலுத்தி அவர்களுக்கு அந்த நிலங்களைப் பட்டா செய்து கொடுத்தால், அவர்கள் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ள சாதகமாக இருக்குமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

**Sri M. ANANDAN:** கனம் சபாநாயகர் அவர்களே, மக்கள் நலனைப் பக்குவமாகப் பாதுகாக்கும் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த ஹரிஜன மான்யத்தில் பேச நான் மிகவும் ஆசைப்படுகிறேன். ஹரிஜனங்கள் உண்மையிலேயே முன்னேற்றம் அடையவேண்டுமென்று அரசாங்கம் கருதினால் புதுப்புது சட்டங்களை போடவேண்டும். குறிப்பாக, அரசாங்கத்தில் ஊழியம் செய்யும் சிப்பந்திகளுக்கு எப்படி மாதா மாதம் சம்பளம் கொடுப்பது போக, தனியாக "அலவன்ஸ்" கொடுக்கப்படுகிறதோ, அதுபோன்று நாட்டுப் புறங்களிலுள்ள கிராமங்களிலே 10, 15, 20, 30 வருஷங்களாக அடிமைப்பட்டுவரும் ஹரிஜனங்களுக்கும் பணக்காரர்கள் மாதா மாதம் கொடுக்கும் சம்பளங்கள் போக, ஆள் ஒன்றுக்கு ஒரு வருஷம் 50 ரூபாய் தனியாக அலவன்ஸ் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் திடீர் சட்டங்களைப் போட வேண்டும். அதுபோன்ற சட்டங்களை போடுவார்களேயானால், ஹரிஜனங்களும் பின்தங்கிய வகுப்பினர்களும் அடிமை நிலையிலிருந்தும், வறுமை நிலையிலிருந்தும் நீங்கி நாளுக்கு நாள் முன்னேற்றம் அடைந்து வருவார்கள் என்று நான் மிகவும் தாழ்மையுடன் தெருவித்து கொள்ளுகின்றேன்.

அதுபோன்று, ஹரிஜனங்களுக்கு நவாப்புக்கள் கொடுத்த மான்யதானங்களை 1951-1952-ல் மழை இல்லாது பஞ்சம் ஏற்பட்டபோது, அவர்கள் பணக்காரர்களிடம் ஈடு, போக்கியம் வைத்து, மனைவி மைந்தர்களைக் காப்பாற்றி வந்தார்கள். அந்த நிலங்களை அவர்கள் பணத்தைத் திருப்பி கொடுத்து மீட்டுக் கொள்ள வசதி இல்லாத காரணத்தால் பணக்காரர்கள் 1க்கு $1\frac{1}{2}$ ரூபாய் வட்டியை உயர்த்தி மான்யங்களைக் கிரயம் பெற்றுக் கொண்டார்கள். திரும்பவும் அந்த மான்யங்களை அந்தப் பணகாரர்களிடமிருந்து ஹரிஜனங்களை வாங்கி கொள்ள வசதியாக, பத்திரத்தில் கண்ட தொகையை மட்டுமே வாங்கிகொண்டு மீண்டும் அந்த மான்யங்களை அவர்களுக்கே கொடுக்கவேண்டும் என்று அரசாங்கம் சட்டங்களை போட்டு, உதவி செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதுபோன்று, ஹரிஜனங்கள் 20, 30 வருஷங்களாக மேடு பள்ளங்களைத் திருத்தி, சாகுபடி செய்து, சர்க்காருக்கு தீர்வை செலுத்தி வந்தும், அனுபோகபாத்தியதை அதை மேய்ச்சல் நிலம் என்றும், [illegible] புறம்போக்கு என்றும், பாழடைப் புறம்போக்கு என்றும் சொல்லி, பழைய பாத்தியதையை [illegible] செய்து இருக்கும் திடீர் திட்டங்களை மாற்றி,

[Sri M. Anandan] [19th July 1957

ஏழை ஹரிஜனங்களுக்கு அந்த நிலங்களை பட்டா செய்துகொடுக்க வேண்டுமென்று அரசாங்கத்தை மிகவும் தாழ்மையோடு நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். அதுபோன்று, இன்னும் இருக்ககூடிய புறம்போக்கு தரிசு நிலங்களை நிலமில்லா ஏழை, பின்தங்கிய வகுப்பினர்களுக்குப் பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்றும் நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேலும், திண்டிவனம், வளவனூர், திருக்கோயிலூர், திட்டகுடி, உளுந்தூர்ப் பேட்டை, கள்ளக்குருச்சி இன்னும் இதுபோன்ற தொகுதிகளில் தங்கி வசிக்கும் ஹரிஜன மக்களுக்கு குடியிருக்கும் இடங்களுக்கு அருகாமையிலேயே புறம்போக்கு பட்டா நிலம் எதுவும் கிடையாது. பண்க்காரர்கள் பட்டா நிலம் தான் இருக்கிறது. தற்சமயம் ஹரிஜனங்களுக்கு அந்தப் பணக்காரர்கள் பட்டாக்களை வாங்கி, அங்கே வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகின்றேன். அப்படிக் கட்டிக் கொடுக்கும் வீடுகளை கிராமங்களோடு இணைத்து ஹரிஜனங்களும் பின் தங்கிய வகுப்பினர்களும் கட்டிக் கொள்ள வேண்டு மென்று அரசாங்கம் திடீர்ச் சட்டங்களைப் போட வேண்டுகின்றேன்.

குறிப்பாக, எங்கள் கள்ளக்குறிச்சி சங்கராபுரம் வட்டாரத்தில் வசிக்கும் ஹரிஜன பிள்ளைகளில் அதிகமான மாணவர்கள் உத்தியோக துறையில் இல்லை, தற்சமயம் படிக்கும் மாணவர்களுக்காக கள்ளக்குறிச்சியில் அங்கு ஒரு தொழில் முறைக் கல்விச்சாலை கட்டிக் கொடுக்க வேண்டுமென்றும் அரசாங்கத்தை நான் மிகவும் தாழ்மையோடு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

தற்சமயம் எங்கள் தாலூக்காவில் அரசாங்கம் ஹரிஜனப் பிள்ளைகளுக்காக 30 பேருக்கு "கிராண்டு" கொடுத்து வருகிறது, அந்தச் சலுகை போதாது. குறைந்தது 100 மாணவர்களுக்காவது "கிராண்டு" சலுகை கொடுக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அதுபோன்று, சின்னச் சேலம் பிர்க்காவில் ட்ரெயினிங் ஸ்கூல் இருக்கிறது. அங்கு படிக்கும் ஏழை எளிய பிள்ளைகளுக்கும் ஒரு ஹாஸ்டலும் சங்கராபுரம் ஹைஸ்கூலில் படிக்கும் ஹரிஜன ஏழை எளிய பிள்ளைகளுக்கு ஒரு ஹாஸ்டலும் கட்டிக்கொடுத்து உதவி செய்ய வேண்டு மென்றும் நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

திருக்கோவிலூரிலிருந்து வரும் பஸ் ரோட்டை சங்கராபுரம்-கள்ளக் குறிச்சி வரைக்கும் தார் டோட்டுக் கொடுக்க வேண்டும். சங்கராபுரம் பகுதியிலே உள்ள ஏழை எளிய விவசாய மக்கள் திருக்கோயிலூர். கள்ளக்குறுச்சி போன்ற இடங்களுக்கு அரசாங்க அலுவலாகப்போகும் போது "த்ரு பஸ்" ஸில் இடம் கிடைக்காமல் ஆங்காங்கே தங்கி நின்று அரசாங்க அலுவலுக்கு குறிப்பிட்ட நேரத்தில் செல்ல முடியாமல் தவிக்கிறார்கள். கள்ளக்குறுச்சியிலிருந்து சங்கராபுரம், பூட்டை, செம்பராம் பட்டு, அரசாம்பட்டு, பாலப் பட்டு ஜமீன் வரைக்கும் "டவுன் பஸ் ஸர்வீஸ்" ஒன்று ஏற்படுத்தினால் அங்குள்ள மக்களுக்கு மிகவும் வசதியாக இருக்கும் என்று அரசாங்கத்திற்கு நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். அப்படிச் செய்வதற்கு வழிவகை செய்யுமாறு நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதுபோன்று, எங்கள் சங்கராபுரம் பிர்க்காவுக்கு 15 மைல் அப்பாலுள்ள கொடியநூர், புளியங்கோட்டை, ஆனைமடுவு, மூலக்காடு, லக்கி நாய்க்கன்பட்டி, பயிஞ்சிபட்டு, புதுப்பட்டு, போன்ற கிராமங்களில் ரோடுகள் இல்லாமல் ஆங்காங்கு வசிக்கும் மக்கள் அவதிப்படுகிறார்கள். குறிப்பாக பிரசவ வேதனையால் கஷ்டப்படும் பெண்மணிகள் நகரத்திலுள்ள ஆஸ்பத்திரிக்குச் செல்லவோ, விவசாய மக்கள் நகரத்திலுள்ள போலிஸ் ஸ்டேஷனுக்கோ, தாலூகா கச்சேரிக்கோ போய்வருவதற்கு சரியான வழிகள் கிடையாது. புதுப்பட்டு அஞ்சல் இருக்கும் இடத்தில் சர்க்கார் ஒரு போலீஸ் ஸ்டேஷனும், ஒரு ஆஸ்பத்திரியும் கட்டிக்கொடுக்க வேண்டு மென்று நான் மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

பாலப்பட்டு அருகாமையில் பெருமாத்தாமலை ஓரம் வரும் மணிமுத்தார் நதி நீர்தேக்கத் திட்டத்தையும், மாயம்பாடி, பொட்டியம் அருகாமையில் வரும் கோமுகா நதி நீர்த்தேக்கத் திட்டத்தையும் அரசாங்கம் உடனடியாகச் செய்து கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகின்றேன்.



19th July 1957] [Sri M. Anandan]

அடுத்தபடியாக, துருகம் பிர்க்காவில் 20 மைல் தூரத்திலுள்ள ஜனங்கள் வசதி இல்லாமல், அங்கும் போக்குவரத்துக்கு இடம் இல்லாமல் மக்கள் கஷ்டநிலையில் இருந்து வருகிறார்கள். நாகலூரில் ஒரு ஆஸ்பத்திரியை அரசாங்கம் கட்டிக் கொடுக்கவேண்டும். பாக்கம் பிர்க்காவிலே அத்தியூர் சந்தைக்கு ஏராளமான மக்கள் வருவதால் தொத்து நோய் பரவுகிறது. ஆகவே, அத்தியூரிலும் ஒரு ஆஸ்பத்திரியை கட்டிக் கொடுக்க வேண்டு மென்று கேட்டுகொள்ளுகின்றேன்.

அந்த வட்டாரங்களில், ஹரிஜனங்கள் உள்ள இடங்களில் நல்ல பாதைகள் போக்குவரத்துக்கு சாதகமாக அமைத்து கொடுக்க வேண்டும். இவர்களுக்குச் செய்ய வேண்டிய சௌகரியங்களை, அரசியலார், கண்ணும் கருத்துமாக கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். முக்கியமாக, இந்த வட்டாரங்களில் உள்ள ஹரிஜனங்களுக்கு உடனடியாக குடியிருப்பு வசதிகளும், குடி தண்ணீர் வசதிகளும் செய்து கொடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொண்டு, என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

**MR. SPEAKER**: The House will now adjourn and meet again at 9 a.m. on Saturday the 20th July 1957.

The House then adjourned.

### III.—PAPER LAID ON THE TABLE OF THE HOUSE.

127. *Notification issued with G.O. Ms. No.* 1241, *Industries, Labour and Co-operation, dated* 30*th March* 1957, *amending sub-rule* (3) (*a*) (*i*) *of rule XIV of the rules framed under the Madras Co-operative Societies Act*, 1932 (*Madras Act VI of* 1932).

D
V211,31 N57
N58.352
61200